
# வாழ்வியற் களஞ்சியம்

**தொகுதி ஏழு**



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்



தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

# வாழ்வியற் களஞ்சியம்

# வாழ்வியற் களஞ்சியம்

## தொகுதி ஏழு

கா - கேட்டோ


தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN: 81-7090-119-7

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 53-7

திருவள்ளுவராண்டு 2022 - 1991

| | | |
|---|---|---|
| நூல் | : | வாழ்வியற் களஞ்சியம்<br>தொகுதி ஏழு |
| முதன்மைப் பதிப்பாசிரியர் | : | முனைவர் நா.பாலுசாமி |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | களஞ்சியம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு 1991 |
| | | மறுபதிப்பு 2004, 2009 |
| பக்கம் | : | 1052 |
| தாள் | : | டி.என்.பி.எல் மேப்லித்தோ 16kg |
| அளவு | : | 1/4 டெம்மி |
| நூற்கட்டுமானம் | : | முழு காலிகோ கட்டு |
| விலை | : | உரு. 800 |
| படிகள் | : | 500 |
| அச்சு | : | நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்<br>சிவகாசி. |

# வாழ்வியற் களஞ்சியம்

புரவலர்
மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர், தமிழ்நாடு

வேந்தர்
மேதகு திரு. எஸ்.எல். குரானா
ஆளுநர், தமிழ்நாடு

இணைவேந்தர்
மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
சட்டம் மற்றும் கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்
பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்
பேரா. டாக்டர் ந. பாலுசாமி

பொறுப்பாசிரியர்கள்
பேரா. தெ. பாலசுப்பிரமணியன்
திரு. சு. இராசவேலு

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu07unse

# பதிப்புக் குழு

**முதன்மைப் பதிப்பாசிரியர்:**

பேராசிரியர் டாக்டர் **நா. பாலுசாமி**, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.

**பதிப்பாசிரியர்:**

1. டாக்டர் அ.மா. பரிமணம்,
   எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. (20.9.84) — மொழி, மொழியியல்.
2. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன்,
   பி.ஏ.(ஆனர்சு), எம்.ஏ., எம்.ஏ. (விசுகான்சின்),
   (எப்.ஐ.எச்.). (5.8.86) — வரலாறு, அகழாய்வு
3. ................................... — பொருளியல், வணிகவியல்
4. ................................... — தத்துவம்
5. ................................... — அரசியல்
6. ................................... — சட்டம்

**செய்தி திரட்டுவோர்:**

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில்.
   (25.4.84) — வரலாறு, அகழாய்வு
2. திரு. சி. பக்தவச்சலு, எம்.ஏ. (4.2.85) — மானிடவியல்
3. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில்.
   (1.8.86.) — உளவியல், சமூகவியல்
4. திரு. செ.இரெ. செயச்சந்திரன்,எம்.ஏ.(வரலாறு),
   எம்.ஏ. (தமிழ்), டி.பி.ஈ.டி. (7.8.87) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்
5. திரு. சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில்.
   (25.11.87) — மொழி, மொழியியல்
6. ................................... — கல்வியியல்

**மொழி வல்லுநர் - மெய்ப்புத் திருத்துநர்:**

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

# நன்றியுரை

## ஏழாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia.

## ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; கலாட்சேத்திரம், அடையாறு; கலைக்காவேரி நாட்டியப் பள்ளி, திருச்சி; கேரள வேளாண் பல்கலைக் கழகம்; தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை; டாக்டர் ஆர். சந்திரசேகரன், பாரதியார் பல்கலைக் கழகம்; திரு. கி. ஸ்ரீதரன், சென்னை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெரு மக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழக வாழ் வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர் **ச. அகத்தியலிங்கம்** அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்க்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் அவர்களுக்கும், துணைப்பதிவாளர் திரு. இரா. சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு.தே. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர் — ***நா. பாலுசாமி***

நாள்: 27—11—87 — முதன்மைப் பதிப்பாசிரியர்

# ஏழாம் தொகுதி: கட்டுரையாளர்கள்

**அ.அ**

திரு. அ. அழகிரிசாமி, எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அரசினர் கலைக் கல்லூரி
விருத்தாசலம்
தென்னார்க்காடு மாவட்டம்.

**அ.அ.ம.**

டாக்டர் அ.அ. மணவாளன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

**அ.ஆ.**

டாக்டர். அ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**அ.இரா.**

டாக்டர் அப்பன் இராமானுசம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தத்துவத் துறை
விவேகானந்தா கல்லூரி
சென்னை.

**அ.உ.செ.**

பேரா. அ. உசுமான் செரீப், எம்.ஏ.
9 கான்வெண்ட் சாலை
செனாய் நகர்
சென்னை.

**அ.கு.சா.**

டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம், எம்.ஏ., பிஎச்.டி.
பொருளியல் இணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**அ.கோ.**

டாக்டர் அ. கோபிநாத், எம்.ஏ.,பிஎச்.டி.
80 கணபதி காலனி
மாம்பழச் சாலை
திருச்சி.

**அ.த.**

திரு. அ. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்.

**அ.பி.பொ.**

திருமதி அ.பி. பொற்கொடி, எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

**அ.ம.**

திரு. அ. மணி. எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.
தமிழ்ப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
விருத்தாசலம்
தென்னார்க்காடு மாவட்டம்.

**அ.மா.ப.**

டாக்டர் அ.மா. பரிமணம். எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
20 கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்பூச் சாவடி
தஞ்சாவூர்.

**அ.ர.ச.**

திரு. அ.ர. சனகன், பி.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
42 வெங்கடாசலம் தெரு
புரசைவாக்கம்
சென்னை.

**அர.பெ.**

டாக்டர். அர. பெரியாழ்வார், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
உதகமண்டலம்.

**அ.வி.**

டாக்டர். அ. விசுவநாதன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்

தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி.

**ஆ.கா.**

திரு. ஆ. காளிதாசன், எம்.ஓ.எல்.
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
கரந்தை
தஞ்சை மாவட்டம்.

**ஆ.ச.**

பேரா. ஆ. சந்திரசேகரன், எம்.ஏ.,எம்.எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

**ஆ.செ.**

திருமதி. ஆவுடைத்தாய் செயராமன்,எம்.ஏ.,எம்.பில்.
வரலாற்றுப் பேராசிரியர்
பெண்டிர் கலைக் கல்லூரி
கடலூர்.

**ஆ.ந.**

டாக்டர் ஆனந்த நடராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**ஆர்.ஆ.**

திரு. ஆர். ஆரோக்கியசாமி, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**ஆர்.இ.**

டாக்டர் ஆர். இளங்கோ, எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**ஆர்.ச.**

டாக்டர் ஆர். சண்முக வேலு, எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**ஆர்.சு.**

டாக்டர் ஆர். சுபாஷிணி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தத்துவத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**ஆர்.தா.**

திரு. ஆர். தாணுப்பிள்ளை. பி.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
சுசீந்திரம்
கன்னியாகுமரி மாவட்டம்.

**ஆர்.பா.**

திரு. ஆர். பாலசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
இராசப்பா நகர்
தஞ்சாவூர்.

**ஆர்.ஜா.**

டாக்டர் ஆல்பர்ட்டு ஜான்சன், எம்.ஏ.,பிஎச்.டி.
600 கே.கே. நகர்
மதுரை.

**இ.கா.**

டாக்டர் இராசு காளிதாசு, எம்.ஏ., பிஎச்.டி.
சிற்பத்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**இர.ஆ.**

பேரா. இர. ஆலாலசுந்தரம், எம்.ஏ.
முதல்வர்
திரு.வி.க. கலைக் கல்லூரி
திருவாரூர்.

**இர.கி.**

டாக்டர் இர. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎட்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
அருள்மிகு பழனியாண்டவர் கலை,பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

**இரா.அ.**

பேரா. இரா. அண்ணாமலை, எம்.ஏ.,எம்.லிட்.,
பி.எட்.

ஏ–54 அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

**இரா.க.**

டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.,பி.எஸ்.,டி.ஓ.
சி-87. பத்தாம் குறுக்குத் தெரு
தில்லைநகர் மேற்கு
திருச்சிராப்பள்ளி.

**இரா.குரு.**

பேரா. இரா. குருநாதன், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கரந்தை
தஞ்சை மாவட்டம்.

**இரா.கோ.**

டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை. எம்.ஏ.,பிஎச்.டி.
சிறப்பு ஆய்வாளர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
காஞ்சிபுரம்.

**இரா.ச.**

புலவர் அம்பை இரா. சங்கரன்,
பேரகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**இரா.சங்.**

டாக்டர் இரா. சந்திரசேகரன், எம்.ஏ.,பிஎச்.டி,
இணைப் பேராசிரியர்
தமிழ் இலக்கியத் துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

**இரா.சா.**

டாக்டர் இரா. சாரங்கபாணி, எம்.ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி.

330 குறள் இல்லம்
மாரியப்பா நகர்,
அண்ணாமலைநகர்.

**இரா.செ.**

டாக்டர் இரா. செயபால், எம்.ஏ.,பிஎச்.டி., விசாரத்து
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்

**இரா.பெ.**

திரு. இரா. பெருமாள், பி.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
இராசராசன் நகர்
தஞ்சாவூர்.

**இராம.ச.**

திரு. இராம. சண்முகம், எம்.ஏ.
4/237 பாரதியார் தெரு
சதாசிவநகர்
வண்டியூர்
மதுரை.

**இராம.பெ.**

டாக்டர் இராம. பெரியகருப்பன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**இரா.வே.**

டாக்டர் இரா. வேங்கடபதி, எம்.ஏ.,பிஎச்.டி.
நடத்தை அறிவியல்கள் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

**ஈ.ஞா.வே.**

டாக்டர் ஈ.ஞா. வேதநாயகம், எம்.ஏ.,எம்.எட்.,
பிஎச்.டி.

கல்வியியல் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**எச்.அ.**

பேரா. எச். அமீர் அலி, எம்.ஏ.
வரலாற்றுத் துறைத் தலைவர்
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

**எச்.சா.அ.**

திரு. எச். சாஹுல் அமீது, எம்.ஏ.
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
இராசா சரபோசி கல்லூரி
தஞ்சாவூர்.

**எம்.இ.**

திரு. எம். இளங்கோ, எம்.ஏ.,எம்.பில்.
உளவியல் துறை
பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர்.

**எம்.கே.ஸ்ரீ.**

டாக்டர் எம்.கே. ஸ்ரீபதி. எம்.ஏ.,பிஎச்.டி.
ஆங்கில இணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக் கழக விரிவு மையம்
பாளையங்கோட்டை.

**எம்.சீ.**

திரு. எம். சீராளன், பி.ஏ..
நூலகர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

**எம்.சு.**

டாக்டர் எம். சுசீலா, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**எம்.செ.**

திரு. எம். செல்லச்சாமி, எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

**எம்.தி.**

டாக்டர் எம். திருநாவுக்கரசு, எம்.ஏ.,பிஎச்.டி.
148, மேற்கு இராமலிங்கம் தெரு
ஆர்.எஸ்.புரம்
கோயம்புத்தூர்.

**எல்.சி.தா**

பேரா. எல்.சி. தாணு, எம்.ஏ.
முதல்வர்
எஸ்.டி. இந்துக் கல்லூரி
நாகர்கோவில்.

**எல்.பி.**

டாக்டர் எல். பிரதாப் சிங், எம்.ஏ.,பிஎச்.டி.
அரசினர் ஆண்கள் கல்லூரி
கும்பகோணம்.

**என்.இரா.**

திருமதி. என். இராசலெட்சுமி செல்வமுத்து
79, அண்ணாநகர்
சென்னை.

**என்.எஸ்.தா.**

திரு. என்.எஸ். தாத்தாச்சாரியார், சிரோமணி
1168 பாலோபா சந்து
மேல வீதி
தஞ்சாவூர்.

**என்.எஸ்.பா.**

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச்.டி.
186, முனிச்சாலை ரோடு
மதுரை.

**என்.சீ.**

திரு. என். சீனிவாசன், வித்துவான், சிரோமணி
21 ஏ.எஸ்.எம். காலனி
இராமநாதபுரம்
தஞ்சாவூர்.

**என்.சு.**

டாக்டர் என். சுரேந்திர பிரசாத், எம்,ஏ., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
பூ சா.கோ. கலை மற்றும் அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர்.

**என்.த.**

செல்வி. என். தனபாக்கியம், எம்.ஏ.,
ஆய்வாளர்
மக்கள் தொகையியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

**எஸ்.இல.**

டாக்டர் எஸ். இலட்சுமணன், எம்.ஏ., பிஎச்.டி.
44 எல்லையச் செட்டித் தெரு
கும்பகோணம்.

**எஸ்.ஐ.**

டாக்டர் எஸ். ஐதர் அலி, எம்.ஏ., பிஎச்.டி.

தமிழ்த் துறைத் தலைவர்
வகுப்பு வாரியக் கல்லூரி
மதுரை.

**எஸ்.ஓ.இரா.**

டாக்டர் எஸ்.ஓ. இராமகிருட்டிணன், எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர்
முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

**எஸ்.கி.**

திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், எம்.ஏ., பி.எல்.
ஆசிரியர்
'சுதர்சனம்'
புத்தூர் அக்கிரகாரம்
திருச்சிராப்பள்ளி.

**எஸ்.கே.**

டாக்டர் எஸ். கேசவன், எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
காந்தி கிராம ஊரகப் பல்கலைக் கழகம்
காந்தி கிராமம்.

**எஸ்.சீ.**

பேரா. எஸ். சீனிவாச சர்மா, எம் ஏ.
சமசுகிருதத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**எஸ்.செ.**

டாக்டர் எஸ். செயப்பிரகாசம், எம்.ஏ., பிஎச்.டி.
காந்தியியல், இராமலிங்கர் தத்துவத் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
நகர வளாகம்
மதுரை.

**எஸ்.சொ.**

திரு. எஸ். சொக்கலிங்கம், எம்.ஏ., எம்.பில்.
துணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

**எஸ்.த.**

டாக்டர் எஸ். தங்கசாமி, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
கோகிலாபுரம்
இராயப்பன்பட்டி (வழி)
மதுரை மாவட்டம்.

**எஸ்.ந.**

டாக்டர் எஸ். நடனசபாபதி, எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**எஸ்.மோ.**

டாக்டர் எஸ். மோகன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி.

**எஸ்.ஜெ.**

டாக்டர் எஸ். ஜெகதீசன், எம்.ஏ., பிஎச்.டி.
2 பொன்மேனி நாராயணன் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

**க.இரா.**

திரு. க. இராமச்சந்திரன், எம். ஏ., எம்.பில்.
24 சந்திர வீரசாமி கோயில் தெரு
அருப்புக் கோட்டை.

**கா.பா.**

திருமதி. கா. பாலாமணி, எம்.ஏ.
பராசக்தி கல்லூரி
குற்றாலம்.

**கி.இ.**

திரு. கி. இளங்கோ, எம்.ஏ., எம்.பில்.
துணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அமெரிக்கன் கல்லூரி
மதுரை.

**கி.இரா.**

டாக்டர் கி. இராசேந்திரன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**கி.க.**

திரு. கி. கணபதிசாமி, பி.எஸ்சி., எம்.ஏ., எம்.எட்.
3 ஏரிக்கரைத் தோட்டம்
முதல் தெரு
கே.கே. நகர்
மதுரை.

**கி.கோ.**

பேரா.கி. கோதண்டபாணி, எம்.ஏ., பி.ஓ.எல்.
11/13 திருமகள் இல்லம்
பிரதாப சிம்மபுரம்
தஞ்சாவூர்.

**கி.ஸ்ரீ.**

திரு. கி. ஸ்ரீதரன், எம்.ஏ.
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
மந்தைவெளிப்பாக்கம்
சென்னை.

**கு.அ.**

டாக்டர் கு. அண்ணாத்துரை, எம்.ஏ., பி.எச்டி.
மொழியியல் துறை
அண்ணமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**கு.சு.**

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்
தஞ்சை மாவட்டம்.

**கு.தி.**

டாக்டர் கு. திருமேனி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச்.டி.
கோவலன் இல்லம்
14, வீரேசுவரம்
ஸ்ரீரங்கம்
திருச்சி.

**குரு.கோ.**

திரு. குரு. கோவிந்தராசன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்.
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**கே.இரா.**

திரு. கே. இராஜன், எம்.ஏ.,எம்.ஏ., டிப்.இன்–ஆர்க்.
கடலாய்வு மையம்
தேசிய கடலாய்வு மைய நிறுவனம்
தோனா–பௌலா
கோவா.

**கே.என்.இரா.**

டாக்டர் கே. என்.இராமானுசம், எம்.காம்.,பிஎச்.டி
93, மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

**கே.கி.**

திரு. கே. கிருட்டிணமூர்த்தி, எம். ஏ.
வரலாற்றுத் துறை
ஈ.வே.ரா. கல்லூரி
திருச்சி.

**கே.சு.**

டாக்டர் கே. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி.
38/240 செந்திட்டைக் கிராமம்
திருவனந்தபுரம்.

**கே.சே.**

டாக்டர் கே. சேஷாத்திரி, எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**கே.பா.**

டாக்டர் கே. பாண்டுரங்கன், எம்.ஏ., பிஎச்.டி.
அரசியல் இணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**கே.ம.பி.**

திரு. கே. மகாதேவன் பிள்ளை, எம்.ஏ.
பதிவாளர்
காந்தியடிகள் பல்கலைக்கழகம்
கோட்டயம்
கேரளா.

**கே.ஜி.கி.**

திரு. கே.ஜி. கிருஷ்ணன், எம்.ஏ.
711, வைசயந்தி

16–ஆம் மெயின் ரோடு
சரசுவதிபுரம்
மைசூர்.

**கொ.இ.**

செல்வி. கொ. இந்துமதி, எம்.ஏ., எம்.பில்.
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

**கோ.க.**

திரு. கோ. கருணாநிதி, எம்.ஏ., எம்.பில்.
விரிவுரையாளர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

**கோ.கி.**

பேரா. கோ. கிருட்டிணமூர்த்தி. எம்.ஏ.,
முதல்வர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

**கோ.கோ.**

டாக்டர். கோ. கோபாலகிருஷ்ணன், எம்.காம்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**ச.க.**

பேரா. ச. கறுப்பையா, எம்.ஏ., எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அரசர் சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி
இராமநாதபுரம்.

**ச.கி.**

திருமதி. சரோஜா கிருஷ்ணன்,
எண் 21, 3வது குறுக்குத் தெரு
மகாகவி பாரதி நகர்
சென்னை.

**ச.செ.**

திரு. ச. செந்தூரரான், எம்.ஏ., எம்.எச்.எட்.,எம்,எட்.
16–பி அழகர்சாமி நாயக்கர் தெரு
தெற்கு வெளி வீதி
மதுரை.

**ச.நா.**

திரு. ச. நாராயணசாமி, எம்.ஏ., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை.

**ச.பா.**

பேரா. ச. பாலசுந்தரம்
367, மேல வீதி
தஞ்சாவூர்.

**ச.வே.**

டாக்டர். சரஸ்வதி வேணுகோபால், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**சா.இரா.**

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகள்,
பேரூர் சாந்தலிங்கர் ஆதீனம்
பேரூர் ஆதீனம்
கோவை.

**சா.கி.**

டாக்டர். சா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
பேரகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சி.இரா.**

டாக்டர். சி. இராசேந்திரன், எம்.ஏ., பிஎச்.டி.
தத்துவ விரிவுரையாளர்
அண்ணமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**சி.என்.ந.**

டாக்டர். சி.என். நடராசன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

**சி.கு.**

திரு. சி. குறிஞ்சிச் செல்வன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி

விருத்தாசலம்
தென்னார்க்காடு மாவட்டம்.

**சி.கே.சி.**

டாக்டர் சி.கே. சிவப்பிரகாசம், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத் துறை
அ. வீ. வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**சி.பா.**

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர் - மொழி
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**சி.ம.**

திரு. சி. மகேசுவரன், எம்.ஏ., எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்/மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**சீ.ப.**

திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ.
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**சீ.பா.**

திரு. சீ. பாலகிருட்டிணன், எம்.ஏ.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
மேலூர்
மதுரை மாவட்டம்.

**சீனி.நா.**

டாக்டர் சீனி. நாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

**சு.ஆ.**

திரு. சு. ஆறுமுகம், எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்.சி.
நூலக உதவியாளர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சு.இரா.**

திரு. சு. இராசவேலு, எம்.ஏ.,எம்.பில்.
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சு.ச.**

டாக்டர் சு. சக்திவேல், எம்,ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**சு.சா.**

டாக்டர் சு. சுவாமிஐயா, எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**சு.சு.**

பேரா. சு சுவர்ண காளீசுவரன்,
ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சாவூர் மாவட்டம்.

**சுப.கோ.**

டாக்டர் சுப. கோவிந்தராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**சு.மு.**

டாக்டர் சு. முத்துக்கிருட்டிணன், எம்.ஏ.,பிஎச்,டி.
அரசியல் விரிவுரையாளர்
எஸ்.எஸ். காலனி
மதுரை.

**சூ.இ.**

டாக்டர் சூ. இன்னாசி, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர் மற்றும் தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

**செ.இரா.**

புலவர் செ. இராசு, எம்.ஏ.
இணைப் பேராசிரியர்

கல்வெட்டுத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**செ.வை.**

பேரா. செ. வைத்தியலிங்கம், எம்.ஏ.,எம்.லிட்.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**சொ.ச.**

டாக்டர் சொ. சண்முகானந்தம், எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
அரசர் கல்லூரி
திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

**சொ.சா.**

திரு. சொ. சாந்தலிங்கம், எம்.ஏ.
தொல்பொருள் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை
தஞ்சாவூர்.

**ஞா.ப.**

டாக்டர் (திருமதி) ஞா. பங்கஜம்,
எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம் அஞ்சல்
அண்ணாமாவட்டம்.

**டி.ஆர்.வ.**

திரு. டி.ஆர். வடிவேலு, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்

**டி.எம்.பொ.**

திருமதி. டி.எம். பொன்னம்மாள், எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
சத்குரு சங்கீதக் கல்லூரி
இலட்சுமி சுந்தர மன்றம்
தல்லாகுளம்
மதுரை.

**டி.சு.**

திரு. டி. சுப்பிரமணியன், எம்.ஏ.
காப்பாளர்
இராசராசன் அருங்காட்சியகம்
தமிழ்நாடு தொல்பொருளாய்வுத் துறை
தஞ்சாவூர்.

**டி.த.**

திரு. டி. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

**டி.பீ.**

டாக்டர். டி. பீட்டர், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
ஸ்காட் கிறித்தவக் கல்லூரி
நாகர்கோவில்.

**தா.எ.**

டாக்டர். தா. எட்மண்ட்ஸ், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
டி.பி.எம்.எல். கல்லூரி
பொறையாறு.

**தி.ஆர்.இரா.**

பேரா. தி.ஆர். இராமச்சந்திரன், எம்.ஏ.,எம். லிட்.
37, எட்டாவது குறுக்குத் தெரு
செனாய் நகர்
சென்னை.

**தி.க.**

செல்வி. தி. கல்யாணி, எம்.ஏ.,எம்.பில்.
அரசியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**தி.கை.**

திரு. தி. கைலாசம், எம்.ஏ.
உதவிப் பேராசிரியர்
வாசவி கல்லூரி
ஈரோடு.

**தி.சு.**

திருமதி. தி. சுந்தராம்பாள், எம்.ஏ.,எம்.பில்.
வே. வ. வ. மகளிர் கல்லூரி
விருதுநகர்.

**து.சீ.**

டாக்டர் து. சீனிச்சாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
இலக்கியத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**து.ப.**

டாக்டர் து. பட்டாபிராமன், எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**துரை.பா.**

திரு. துரை. பாலசுந்தரம், எம்.ஏ.,பிஎல்.
வழக்கறிஞர்
சீனிவாசபுரம்
தஞ்சாவூர்.

**தெ.சொ.**

டாக்டர் தெ. சொக்கலிங்கம்,
எம்.ஏ.,பி.ஓ.எல்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

**தெ.ஞா.**

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
சென்னை.

**தெ.பா.**

பேரா. தெ. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ.,எம்.ஏ.,எப்.ஐ.எச்.
பதிப்பாசிரியர்/வரலாறு, தொல்லியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**தே.ஆ.**

டாக்டர் தே. ஆண்டியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
16 சவகர் சாலை
காந்தி நகர்
மதுரை.

**தே.பா.**

திருமதி. தேவிபாலகிருஷ்ணன், எம்.ஏ.,எம்.பில்.
உளவியல் துறை
பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர்.

**தே.வே.**

டாக்டர் தே. வேலப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
துணை முதல்வர்
பொருளியல் துறைத் தலைவர்
எஸ்.டி. இந்து கல்லூரி
நாகர்கோவில்.

**ந.க.ம.**

திரு. ந.க. மங்களமுருகேசன், எம்.ஏ.,
வரலாற்றுத் துறை,
அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

**ந.ச.**

திரு. ந. சண்முகம், எம்.ஏ.
19இ – சர்ச்சு ரோடு
நாகர்கோயில்.

**ந.த.**

டாக்டர் ந. தர்மாரெட்டி, எம்.ஏ.,பிஎச்டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

**ந.மெ.**

திரு. ந. மெய்ப்பொருள், எம்.ஏ.,எம்.பில்.
பேராசிரியர்
அ.வீ. வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்.

**நா.ஜெ.**

திரு. நா. ஜெயபாலன், எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

**ப.இரா.**

திரு. ப. இராசமோகன், எம்.ஏ.
அரசு அருங்காட்சியகம்

எழும்பூர்
சென்னை.

**பா.சூ.**

டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
22 ஏ கம்பர் தெரு
எஸ் எஸ். காலனி
மதுரை.

**பா.ம.**

பேரா. பா. மதுசூதனன், எம்.ஏ.,எம். லிட்.
ஓய்வு பெற்ற முதல்வர்
சாந்த பவன்
பத்மா நகர்
திருவனந்தபுரம்

**பா.வ.**

டாக்டர் பா. வளன்அரசு, எம்.ஏ.,பிஎச்.டி.
தூய யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை.

**பா.ஜ**

திரு.பா. ஜவகர், எம்.ஏ
காப்பாட்சியர்/விலங்கிய ்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**பி.ஆர்.ந.**

டாக்டர் பி.ஆர். நரசிம்மன், எம். ஏ., பிஎச்.டி.
தத்துவத் துறைப் பேராசிரியர்
அருள்மிகு பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

**பி.இ.மோ.**

டாக்டர் பி.இ. மோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**பி.இரா.**

திரு.பி. இராசகோபாலன், எம்.ஏ.,எம்.லிட்.
வணிகவியல் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**பி.சு.**

டாக்டர் பி. சுதாகரரெட்டி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
சமுதாய மானிடவியல் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

**பி.தெ.**

டாக்டர் பி. தெட்சிணாமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
முதுகலைப் பேராசிரியர்
ம.தி.தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

**பி.ம.**

டாக்டர் பி. மருதநாயகம், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
ஆங்கிலத் துறை
மத்திய பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

**பு.வே.**

திரு. புலமை வேங்கடாசலம் எம்.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
அருளானந்த நகர்
தஞ்சாவூர்.

**பூ.த**

திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில்.
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**பெ.சி.**

டாக்டர் பெ. சின்னையன், எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**பெ.சு.**

திரு. பெ. சுப்பிரமணியன், எம் ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**பொ.சா.தா.**

டாக்டர் பொ.சா. தானியல், எம்.ஏ.,பி.எச்.டி.
1015 மிஷன் மேட்டுத் தெரு
தஞ்சாவூர்.

**பொன்.சு.**

பேரா. பொன். சுப்பிரமணியன், எம்.ஏ.
பி/145வது குறுக்குத் தெரு
அண்ணாநகர்
செங்கற்பட்டு.

**பொன்.சௌ.**

டாக்டர் பொன். சௌரிராசன், எம். ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

**ம.இ.**

பேரா. ம. இராசசேகர தங்கமணி, எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

**ம.கா.**

திரு. ம. காந்தி, எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

**ம.தி.**

டாக்டர் ம. திருமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**ம.ந.பு.**

திருமதி. ம.ந. புஷ்பா, எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**ம.பெ.**

பேரா. ம. பெரோஸ்.
உளவியல் பேராசிரியர்
எஸ்.ஆர்.கே.வி. கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

**மா.இரா.**

டாக்டர் மா. இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சி.

**மா.கா.**

டாக்டர் மா. காந்திதாசன், எம்.ஏ., எம்.லிட்.,
பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
நாகமலை
மதுரை.

**மா.செ.**

டாக்டர் மா. செபஸ்தியன், எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
தூயவளனார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

**மா.தெ.**

திருமதி. மாலதி தெய்வராசன், எம்.எசி., எம்.ஏ.
எம்.பில்.
விரிவுரையாளர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**மா.பா.கு.**

டாக்டர் மா.பா. குருசாமி, எம்.ஏ., எம்.லிட்.
பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
117 சன்னதித் தெரு
திருச்செந்தூர்.

**மு.அ.**

டாக்டர் மு. அப்துல் ரகீம், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
ஈ.வே.ரா. கலைக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

**மு.இரா.**

டாக்டர் மு. இராமதாஸ், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
மையப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

**மு.கு.ஜெ.**

திரு. மு.கு. ஜெகந்நாதராசா,
தலைவர்
மணிமேகலை மன்றம்
இராசபாளையம்.

**மு.சு.**

பேரா வித்துவான் மு. சண்முகம்பிள்ளை,
61 கவிமணி இல்லம்
பாலகிருஷ்ண நாயக்கர் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை.

**மு.செ.**

திரு. மு. செல்லன், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கரந்தை
தஞ்சை மாவட்டம்.

**மு.நா.**

டாக்டர் மு. நாகநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**மு.மா.**

டாக்டர் மு. மாணிக்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பழனியாண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

**மொ.அ.து.**

டாக்டர் மொ. அ. துரையரங்கனார், எம்,ஏ.,
எம். ஓ.எல்.,பிஎச்.டி.
41 நைனியப்ப நாயக்கன் தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

**ய.ச.**

திருமதி. யசோதா சண்முக சுந்தரம்
பொருளியல் துறைத் தலைவர்
எத்திராஜ் கல்லூரி
சென்னை.

**யூ.ஆர்.கா.**

டாக்டர் யூ.ஆர். காளியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் விரிவுரையாளர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

**வி.எ.**

டாக்டர் வி. எத்திராசன், எம்.ஏ., பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**வி.மி.ஞா.**

டாக்டர் வி.மி. ஞானப்பிரகாசம், எஸ். ஜே.
தூய இருதய கல்லூரி
செண்பகனூர்
கோடைக்கானல்.

**வி.வ.**

டாக்டர் வி. வரதாச்சாரி, எம்.ஏ.,பிஎச்.டி.
ஆய்வாளர்
பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம்
பாண்டிச்சேரி.

**வீ.சே.**

திரு. வீ. சேகர், எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.
காட்டுக் கூடலூர் (அஞ்சல்)
பேர்பெரியான் குப்பம் (வழி)
பண்ருட்டி வட்டம்
தென்னார்க்காடு மாவட்டம்.

**வீ.சொ.**

புலவர். வீ. சொக்கலிங்கம்,
ஓலைச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**வே.தி.செ.**

டாக்டர் வே.தி. செல்லம், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி
திருச்சி.

**வை.ந.**

திரு. வை. நமசிவாயம், எம். காம்., எம்.லிட்.
வணிகவியல் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**வை.ப.**

திரு.வை. பஞ்சாபகேசன், எம்.ஏ.,
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

**ஜி.ஆர்.கி.**

டாக்டர். ஜி.ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்த் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**ஜி.இரா.**

டாக்டர். ஜி. இராஜமோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

**ஜி.டி.நி.**

டாக்டர். ஜி.டி. நிர்மலா, எம்,ஏ.,பிஎச்.டி.
135 ஆழ்வார் நகர்
நாகமலை புதுக்கோட்டை
மதுரை.

**ஜி.வ.**

செல்வி. ஜி. வசந்தா, எம்.ஏ.,எம்.பில்.
110, இரெயில் நகர்
அம்பிகாபுரம்
திருச்சிராப்பள்ளி.

**ஜெ.மு.**

திருமதி. ஜெயா முனிசாமி, எம்.ஏ., எம்.பில்.
துணைப் பேராசிரியர்
2 பவுல் அப்பாசாமித் தெரு
சென்னை.

**ஜே.பா.**

டாக்டர். ஜே. பார்த்தசாரதி, எம்,ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| அகம். | — அகநானூறு |
| எ–டு. | — எடுத்துக்காட்டு |
| எழுத்து. | — எழுத்ததிகாரம் |
| ஐங். | — ஐங்குறுநூறு |
| க.செ.மீ. | — கனசெண்டிமீட்டர் |
| க.பு.எ. | — கணக்குப் புத்தக எண் |
| கலி. | — கலித்தொகை |
| கள.நா. | — களவழி நாற்பது |
| கி.பி. | — கிறித்துவுக்குப் பின் |
| கி.மீ. | — கிலோ மீட்டர் |
| கி.மு. | — கிறித்துவுக்கு முன் |
| குறள். | — திருக்குறள் |
| குறுந். | — குறுந்தொகை |
| ச.கி.மீ. | — சதுரக் கிலோ மீட்டர் |
| ச.மீ. | — சதுர மீட்டர் |
| சிலம்பு. | — சிலப்பதிகாரம் |
| சிறு. | — சிறுபாணாற்றுப்படை |
| சீவக. | — சீவகசிந்தாமணி |
| செ.மீ. | — செண்டி மீட்டர் |
| சே.க. | — சேமிப்புக் கணக்கு |
| சொல். | — சொல்லதிகாரம் |
| திருநாவு. | — திருநாவுக்கரசர் தேவாரம் |
| தொல். | — தொல்காப்பியம் |
| நற். | — நற்றிணை |
| நன். | — நன்னூல் |
| நூ. | — நூற்றாண்டு |
| நூற். | — நூற்பா |
| பதி. | — பதிகம் |
| பதிற். | — பதிற்றுப்பத்து |
| பரி. | — பரிபாடல் |
| பா. | — பாடல் |
| புறம். | — புறநானூறு |
| பெயர். | — பெயரியல் |
| பொருள். | — பொருளதிகாரம் |
| மி.மீ. | — மில்லி மீட்டர் |
| மீ. | — மீட்டர் |
| உரூ. | — உரூபாய் |
| வரந். | — வரந்தருகாதை |

# வாழ்வியற் களஞ்சியம்

**கா** என்பது தமிழ் நெடுங்கணக்கில் உயிர்மெய் எழுத்துகளுள் முதலாவதாக வைக்கப்பட்ட ககரத்தின் நெடில் எழுத்து ஆகும். வாயை முழுதும் திறந்து அடக்கிவிடாமல் எழுப்பப்படும் ஒலியை இவ்வெழுத்து குறிக்கும். ககரத்திற்குக் கொடுக்கப்பட்ட ஒலிக்குறிப்புகள் எல்லாம் இந்த எழுத்திற்கும் பொருந்தும். சொல்லின் முதலிலும் இடையிலும் இவ்வெழுத்து வரும்பொழுது, ககரத்தைப் போலவே ஒலி வேறுபாட்டினைக் கொண்டதாகும். எடுத்துக் காட்டாக, **காட்சி** என்பதில் முதலில் உள்ள **கா** என்ற எழுத்தின் ஒலிக்கும் **புகார்** என்ற சொல்லில் இடையில் வரும் 'கா'வின் ஒலிக்கும் வேறுபாடு உண்டு. முன் சொன்னதைப் போல இந்த வேறுபாடு பழங்காலத்திலிருந்தே இருந்திருக்கக்கூடும்.

ஓரெழுத்துச் சொல்லாக இவ்வெழுத்து வினைச் சொல்லின் அடியாக வரும். இது காத்தல், காவல், தடுத்தல், நோற்றல், எதிர்பார்த்தல் என்னும் பொருள்களிலும் வழங்குகின்றது. பெயர்ச்சொல்லாகச் சோலை, தோளில் தாங்கப்படும் **காவு** (**காவடி** என்பதைப் போல) என்ற பொருள்களையும் துலாக் கோல், காவணம், பெட்டி என்ற பொருள்களையும் உணர்த்தும்.

இவ்வெழுத்தின் வடிவம் முதலில் **க** என்ற எழுத்தின் மேல்முனையிலிருந்து வலப்புறம் இழுக்கப்பட்ட ஒரு சிறு கோடு ஆகும். இது கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் தோன்றிய குகைக்கல்வெட்டுகளிலிருந்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை வழங்கிவந்தது ... ... ... 

பின்னர்க் 'க'வின் வடிவத்தினின்றும் இச்சிறுகோடு பிரிந்து, சிறு கீழ்நோக்கிய கோடாகத் தனித்து எழுதப்பட்டது. பல்லவ பரமேச்சுர வர்மனின் கூரம் செப்பேடுகள் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு). ... ... 

அதே காலத்தில் வட்டெழுத்தில் ககரத்தின் குறுக்குக் கோட்டில் இது நீட்டப்பட்டது. ... ... ... 

இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பராந்தக சோழனின் உத்தர மேரூர்க் கல்வெட்டுக் காலம்வரை சற்றுக் கீழே இறங்கி வரும் கோடு ஆயிற்று ... .. ... 

இக்கால் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சோழன் இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் காலத்தில் ரகரத்தோடு ஒரே வடிவத்துடன் காணப்படுகிறது. இராசராசனின் இலெய்டன் (ஆனைமங்கலச்) செப்பேடுகள். ... 

இவ்வெழுத்துகளின் இடப்புறக்கோடு கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் கீழ்நோக்கி முழுதும் இறங்கிவிட்டது. ... ... ... 

வட்டெழுத்தில் ஆகாரத்தைக் குறிக்கத் தலைக்கட்டிலிருந்தோ எழுத்தின் வா — 

நடுவில் வலப்புறத்திருந்தோ ஒரு நேர்கோடு பயன்பட்டது. ... ... நா — 

றா — 

டா — 

தா — 

வட்டெழுத்துச் சிதைவுற்றுக் கோலெழுத்தாக மாறும்பொழுது 17-ஆம் கா — 

நூற்றாண்டில் நேர்கோடு மேல்நோக்கி ஒரு சிறு கோடு பெற்றது. ணா — 

கே.ஜி.கி.

**காக்கானீ** ஒரு பாரசீகக் கவிஞர். இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்; ஈரான் நாட்டுக் கஞ்சு என்னும் நகரத்தில் பிறந்தார்; இளமையில் சிறிய தந்தை ஆதரவில் வளர்ந்தார். தாம் பிறந்த நகரில் வாழ்ந்த அபுல் உலா என்னும் கவிஞரிடம் கல்வி கற்றுப் புலமை நிறைந்து, கவிதை இயற்றும் திறம் பெற்றார். பின்னர்த் தம் ஆசிரியர் மகளையே மணந்துகொண்டார். காக்கானீ என்பது இவர்தம் புனை பெயர்; பதீல் என்பது இயற்பெயர்.

இவர் தம்கவிதைச் சிறப்பால் தம் மாமனாரை விட மிக்க புகழ் எய்தினார். அது கண்டு பொறாமை கொண்ட மாமனாருக்கும் இவருக்கும் மாறுபாடு தோன்றியது. ஒருவரை ஒருவர் கவிதையால் ஏசிக் கொள்ளும் நிலை உருவாயிற்று. இவர் பின்னர்ப் 'பாக்கூ' நகர் சென்று, இளவரசன் அச்சித்தானின் அவைக்களப் புலவரானார். அவன் இசைவுடன் மெக்கா சென்றார். திரும்பும்போது முகல் நாட்டு ஆளுநர் சமாலுதீன் இவரை நன்கு உபசரித்தார். தம் பயண அனுபவங்களை 'துக்பத்தில் இராக்சைன்' என்னும் நூலாக வரைந்து, அதனைச் சமாலுதீனுக்குப் படைத்தார். அதனால் பொறாமையுற்ற அச்சித்தான் இவரைத் துன்புறுத்திச் சிறையிலிட்டார். விடுதலை பெற்றபின் மனைவியொடு வாழ்ந்த இவர், அவள் இறப்பிற்குப்பின் தப்ரீசு சென்று வாழ்ந்தார். இவர் பாடிய பலவகைப் பாடல்களும் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. அ.மா.ப.

**காக்கிநாடா** இந்தியாவில் ஆந்திரமாநிலத்துக் கோதாவரி மாவட்டத் தலைநகர். இருப்புப்பாதை போடப்படுவதற்குமுன் மிகச் சிறப்பு வாய்ந்த ஒரு துறைமுகமாக இருந்த இப்பட்டினம் இப்பொழுது சாதாரண துறைமுகமாக விளங்குகிறது. இதைச் சுற்றியுள்ள விரிகுடாவிற்குக் காக்கிநாடா விரிகுடா என்பதுபெயர். ஒரு கால்வாய் இந்நகரையும் கோதாவரி ஆற்றையும் இணைத்துப் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கியுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன்பே, கி.பி. 1866-இல் இங்கு நகராட்சிமன்றம் அமைக்கப்பெற்றது. கரும்பு, எண்ணெய் வித்துகள், பருத்தி, அரிசி, இரும்பு முதலியன இங்குக் காணப்படும் முக்கிய வாணிகப் பொருள்களாம். இதன் மக்கள் தொகை 225,151 (1981). தெ.பா.

**காக்கேசிய இனம்** மனித இனத்தின் பெரும் பிரிவுகளுள் ஒன்று. இவ்வினத்தவர்கள் ஐரோப்பா, அமெரிக்கா, வட ஆப்பிரிக்கா, இந்தியா, நடுக்கிழக்குநாடுகள் முதலான நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். காக்கேசிய இனத்தவர்களை 'ஐரோப்பியர், என்றும் 'வெள்ளையர்' என்றும் சிலர்

குறிப்பிடுவர். இது தவறான சொல்வழக்கு என்று மானிடவியலார் உறுதிப்படுத்துவர். ஏனெனில் காக்கேசிய இனத்தவருள் கருமை நிறத் தோற்ற முடைய மக்களும் ஐரோப்பியரல்லா மக்களும் உள்ளனர்.

காக்கேசியர் (Caucasoid) என்னும் சொல்லை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் புளூமன்பேக்கு (J.F. Blumenbach) கையாண்டார். காக்கசசு (Caucasus) மலைத்தொடரில் சார்சியாப் (Georgia) பகுதிப் பெண் ஒருத்தியின் மண்டையோட்டைக் கண்டெடுத்த இவர், அம்மண்டையோடு ஐரோப்பிய மக்களின் மண்டையோட்டை ஒத்திருந்ததால் அந்த இனம் காக்கசசு மலைத்தொடரில் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதினார். காக்கேசிய இனத்தவர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, ஐரோப்பாவிற்கு அருகிலுள்ள கிழக்குப்பகுதிநாடுகள் முதலான இடங்களில் மிகுதியாக வாழ்ந்தனர். இவர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தென் அமெரிக்கா, வடஅமெரிக்கா, வட ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா (Australia), நியூசிலாந்து, ஆசியாவின் சில பகுதிகள் முதலான நிலப் பகுதிகளுக்குப் பரவினர்.

காக்கேசிய இனத்தவர்கள் வெளிரிய சிவப்புக் கலந்த வெண்மை நிறம் முதல் கரும்பழுப்பு நிறம் வரையிலான தோல் கொண்டவர்கள். தலைமயிர் மென்மையான நேரான மயிரிலிருந்து அலையலையான வளைவமைப்புடைய மயிர் வகை வரையிலானதாகும். நீக்கிரோக்களுக்கு உள்ளது போன்று அடர்ந்த குறுகிய சுருள்மயிர் இவர்களுக்கு இல்லை. ஒரு சிலரிடையே மங்கோலியரைப் போன்று சொர சொரப்பான அடர்த்தியற்ற மயிர் காணப்படும். ஆண்களுக்கு முகத்திலும் உடலிலும் மயிரின் அளவு மிகுந்திருக்கும். தலையமைப்பில் காக்கேசிய இனத்தவர்கள் பல வகையினைக் கொண்டிருந்தாலும், நீண்டு குறுகிய தலையே (Dolichocephalic Head) மிகுதியாகக் காணப்படுகின்றது. மூக்கு குறுகி நீண்டும், கன்ன எலும்புகள் பெரும்பான்மையாக எடுப்பாக இல்லாமலும், உதடுகள் நடுத்தரம் முதல் மெல்லிய வகை வரையிலும், முகம் நேராகவும் முன்நெற்றி சிறிது உயர்ந்தும் காணப்படும். ஆண்களிடையே தலை வழுக்கை விழுவது காக்கேசிய இனத்தவர்களிடம் மிகுந்திருக்கும். ஆர்.எச். எதிர் இரத்த வகையும் (Rh-) ஏ.பி.ஓ. (ABO) இரத்த வகையில் ஏ$^2$ இரத்த வகையும் மிகுந்திருக்கும்.

மனித இனங்களை மானிடவியலார் காக்கேசியர், மங்கோலியர், நீக்கிரோக்கள் என்று முப்பெரும் பிரிவாகப் பிரிக்கின்றனர். ஒவ்வொரு பிரிவிலும் அதனதன் புவிசார் இனங்களைப் (Geographical Races) பகுத்து, அவற்றிலிருந்து நுண்ணினங்கள் அல்லது வட்டார இனங்களைப் (Micro Races or Local Races) பகுக்கின்றனர்.

காக்கேசிய இனத்தின் பெரும் பிரிவில் பல புவிசார் இனத்தவர் உள்ளனர். அவர்கள் நடுநிலக்கடலின் முதுகுடிகள் (Basic Mediterrancan), அட்லாண்டிக்கு-நடுநிலக்கடல் இனத்தவர் (Atlanto-Mediterranean), ஈரான்-ஆப்கானிய நடுநிலக்கடல் இனத்தவர் (Irano-Afghan Mediterranean), நார்டிக்கு இனத்தவர் (Nordic), ஆல்பைன் இனத்தவர் (Alpine), தைனாரிக்கு இனத்தவர் (Dinaric), ஆர்மீனிய இனத்தவர் (Armenoid), அமிட்டிக்கு இனத்தவர் (Hamitic), கிழக்குப் பால்டிக்கு இனத்தவர் (East Baltic), இலாப்பு இனத்தவர் (Lapps), இந்திய-திராவிட இனத்தவர் (Indo-Dravidians), பாலினீசிய இனத்தவர் (Polynesian) எனப்படுவர்.

**நடுநிலக்கடலின் முதுகுடிகள்**: போர்ச்சுகீசியர்-இசுபெயின் நாட்டவர் (Spaniards), ஆங்கிலேயருள் சிலர், வேல்சு நாட்டவருள் (Welsh) சிலர், மொராக்கோவின் (Morocco) பெர்பர்கள் (Berbers), வட ஆப்பிரிக்காவில் எமிட்டிக்கு மொழி பேசுபவர்கள் முதலானவர்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களுள் முதன்மையானவர்கள்.

**அட்லாண்டிக்கு-நடுநிலக்கடலினத்தவர்**: ஈராக்கு இசுரேல், கிழக்குப் பால்கன் ஆகியவற்றின் மக்கள் முதலானவர்கள் இவ்வினத்தின் குறிப்பிடத்தக்கவர்களாவர். வடக்கு ஆப்பிரிக்காவிலும் போர்ச்சுகல், இசுபெயின், ஆங்கிலேயத் தீவுகளுள் சிலவற்றிலும் இவ்வகை இனத்தவர் காணப்படுகின்றனர்.

**ஈரான்-ஆப்கானிய நடுக்கடல் இனத்தவர்கள்**: இவ்வகை இனத்தவர்களின் அனைத்துக் கூறுகளையும் கொண்டவர்கள் ஈரான், ஆப்கானிசுத்தானம், துருக்கி ஆகியநாட்டு மக்களாவர். இவ்வினத்தவர்கள் இந்தியா, அரேபியா, வட ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றனர்.

**நார்டிக்கு இனத்தவர்**: இவ்வகை இனத்தவர்கள் இசுகாண்டிநேவியாவிலும், ஐசுலாந்து, பிரிசியத் தீவுகள் (Frisian Islands), ஆங்கிலேயத் தீவுகள், பெல்சியம், நெதர்லாந்து, வடமத்திய ஐரோப்பியச் சமநிலம் ஆகிய பகுதிகளிலும் உள்ளனர். மேற்கூறிய சில பகுதிகளில் இவ்வினத்தவர்கள் சில பண்புகளில் வேறுபாடு கொண்டும் காணப்படுகின்றனர்.

**ஆல்பைன் இனத்தவர்**: பிரான்சில் தொடங்கி ஆல்ப்சு மலை, பால்கன் பகுதி, சிற்றாசியா (Asia Minor), உருசியா, சைபீரியா வரையிலும் உள்ள மலைத்தொடர்ப் பகுதிகள் ஆகியவற்றில் ஆல்பைன் இனத்தவர்கள் காணப்படுகின்றனர். இந்த வகையினர் ஐரோப்பாவின் அனைத்துப் பகுதிகளிலும் மிகப் பரவலாக உள்ளனர்.

**தைனாரிக்கு இனத்தவர்**: இவ்வகையினர் கிழக்குச் சுவிட்சர்லாந்திலிருந்து ஆசுத்திரிய தைரால் (Austrian Tyrol), யூகோசுலாவியா (Yugoslaiva), அல்பேனியா வரை காணப்படுகின்றனர். இவர்களை அட்ரியாட்டிக்கு (Adriatic), இல்லிரியர் (Illyrian) என்றும் கூறுவர்.

**ஆர்மீனிய இனத்தவர்**: சிற்றாசியாவிலும் கருங்கடலின் கிழக்கிலும் தென் கிழக்கிலும் இவ்வினத்தவர்கள் உள்ளனர்.

**அமிட்டிக்கு இனத்தவர்**: அடிப்படை நடுநிலக் கடல் இனத்தவர்கள் இவ்வகையில் முதன்மையானவர்கள். இருப்பினும் வட ஆமிட்டிக்கு, தென் ஆமிட்டிக்கு இனத்தவர்களின் பரவலின் அடிப்படையில் இவர்களின் இனத்தவர்கள் பல நுண்ணினத்தவர்களைக் கொண்டுள்ளனர். வட அமிட்டிக்கு இனத்தவருள் இலிபியர்கள், சிரனெய்காவின் (Cyrenaica) நடுநிலக்கடல் பெர்பர்கள், அட்லாண்டிக்குப் பெர்பர்களான கேபில்கள் (Kabyles), மேற்குச் சகாராப் பெர்பர்கள், கிழக்குச் சகாராவின் திபு (Tibu) மக்கள், நைசீரியாவின் புலானி (Fulani) மக்கள், கனாரித் தீவின் (Canary Island) அற்றுப்போன குவான்சீ (Guanche) மக்கள், அல்சீரியா, திரிபோலிடானியா (Tripolitania), துனீசியா முதலான பகுதி மக்கள் அடங்குவர். கிழக்கு அமிட்டிக்கு இனத்தவருள் பண்டை எகிப்தியர், இக்கால எகிப்தியர், நூபியர் (Nubians), பெசா (Beja), கல்லா (Galla), சோமாலி (Somali), தனாக்கில் (Danakil), எத்தியோப்பியருள் பெரும்பாலானோர் ஆகியோர் இவ்வகையில் அடங்குவர்.

**கிழக்குப் பால்டிக்கு இனத்தவர்**: இந்த இனத்தவருள் செருமனி, போலந்து, பின்லாந்து ஆகிய நாடுகளின் மக்களும் பால்டிக்கு மக்களும் அடங்குவர்.

**இலாப்பு இனத்தவர்**: வடக்கு இசுகாண்டிநேவியா, சுவீடனின் மேட்டுநிலங்கள், வட பின்லாந்து சதுப்பு நிலப் பகுதிகள், நார்வேயின் கடற்கரை மாவட்டங்கள், உருசியாவின் கோலா முந்நீரகம் (Kola Peninsula) ஆகிய பகுதிகளில் இவர்கள் உள்ளனர்.

**இந்திய-திராவிட இனத்தவர்**: இந்தியாவிலும் சிரிலங்காவின் பல பகுதிகளிலும் இவ்வினத்தவர்கள் வாழ்கின்றனர்.

**பாலினீசிய இனத்தவர்**: வடக்கில் அவாய்த் தீவு, தென்மேற்கில் பிசித் தீவு (Fiji Island), கிழக்கில் நியூசிலாந்து, ஈசுட்டர் தீவுகள் (Easter Islands) உள்ளடக்கிய பசிபிக்குக் கடல் மக்களினத்தவர்கள் இவ்வகையில் அடங்குவர். சீ.ப.

**துணை நூல்கள்**:

**Alland**, A., Jr., Human Diversity, Anchor Doubleday, New York, 1973.

**Garn**, S.M., Human Races, Thomas, Springfield, Illinois, 1965.

**Goon**, C.S., The Origin of Races, Knopf, New York, 1962.

**Kroeber**, A.L., Anthropology, Harcourt, Brace & Co., New York, 1948.

***காக்கைபாடினியம்*** ஓர் அரிய தமிழ் இலக்கணம். யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை ஆகிய பாட்டிலக்கண நூல்களின் உரைகளிலும் இளம்பூரணர் முதலிய உரையாசிரியர் உரைகளிலும் இந் நூலின் சூத்திரங்கள் மேற்கோள் காட்டப்படுதலின், இது ஒரு பாட்டிலக்கண நூலாகும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் பெயரே நூலின் பெயராகவும் அமைவதாகிய உத்தி பற்றிக் காக்கைபாடினியார் என்பவரே இதனை இயற்றியிருத்தல் கூடும். இந்நூல் இப்போது முழு வடிவில் கிடைக்கவில்லை. சிறு காக்கைபாடினியம் என்ற பெயரில் பிறிதோர் நூலும் இருந்ததாகத் தெரிகிறது. வீ.சே.

***காக்கைபாடினியார்*** ஓர் இலக்கண நூலாசிரியர். காக்கை பாடினியம் என்ற யாப்பிலக்கண நூலை இவர் இயற்றியுள்ளார். சங்கப் புலவர்களுள் காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்றொரு புலவர் காணப்படுகிறார். அப்பெயரிலமைந்த 'காக்கைபாடினியார்' என்பது, அவர் காக்கையைச் சிறப்பித்துப் பாடியமையால் (குறுந். 210) அமைந்த அடைமொழியாகும். பின்னர்க் காக்கைபாடினியார் என்ற பெயரே இயற் பெயராகச் சில பெண் புலவர்களுக்கு அமைக்கப்பட்டிருத்தல் கூடும். காக்கைபாடினியாரின் இலக்கண நூற்பாக்கள் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகியவற்றின் உரைகள், இளம்பூரணர், பேராசிரியர், பெருந்தேவனார்

போன்ற உரையாசிரியர்களின் உரைகள் ஆகிய வற்றில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. தொல்காப்பியர் விரித்துக் கூறும் யாப்பியற் செய்தி களை இவர் தொகுத்துக் கூறினார் என்பதனை, 'நல்யாப்புக், கற்றார்மதிக்கும் கலைக் காக்கை பாடினியார், சொற்றார் தம் நூலுள் தொகுத்து' என்னும் ஒரு பழம் பாடற் பகுதி கூறுகிறது. இவர் அகத்தியர் மாணவருள் ஒருவர் என்பதும்,சிறுகாக்கை பாடினியார் என்ற பெயரில் ஒரு புலவர் சிறுகாக்கை பாடினியம் என்னும் இலக்கண நூல் இயற்றியுள்ளார் என்பதும் கூறப்பட்டுள்ளன. காக்கைபாடினியார் செய்த நூல் இக்காலத்தில் முழுவதுமாகக் கிடைக்க வில்லை. அ.மா.ப.

**காக்கை பாடினியார் நச்செள்ளையார்:** பெண்பாற் புலவர். செள்ளை என்னும் இயற்பெயர் முன் சிறப்புப் பொருள் தரும் 'ந' என்னும் இடைச் சொல்லும் பின் 'ஆர்' என்னும் இடைச்சொல்லும் பெற்று நச்செள்ளையார் என்று ஆயிற்று. பிரிந்த தலைவனின் வருகை குறித்து வருந்திய தலைவிக்கு, அவன் வருகையைக் கரைந்துணர்த்திய காக்கையைச் சிறப்பித்துப் பாடியமையின் (குறுந் 210), காக்கை பாடினியார் என்னும் பெயர் அடையாக முன் சேர்த் துக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்று இவர் அழைக்கப் பெற்றார். இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் ஒன்றும் (210), புறநானூற்றில் ஒன்றும் (278),பதிற்றுப்பத்தில் ஆறாம் பத்தும் (51-60) ஆகப் பன்னிரு பாடல்கள் உள.

தும்பைத் திணையில் உவகைக் கலுழ்ச்சி என்னுந் துறையில் மறக்குடி மகள் கூற்றாகப் புறநானூற்றுப் பாடல் (278) அமைந்துள்ளது. தன் மகன் போரில் புறங் காட்டி ஓடினன் என்று பலர் கூறக் கேட்ட வீரத்தாய், 'என் மகன் மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என் முலை அறுத்திடுவேன்' எனச் சினந்து கூறி, வாளொடு போர்க்களஞ் சென்று பிணத் தைப் புரட்டிப் பார்த்து, மார்பில் புண்பட்டு மாய்ந்து சிதைந்து கிடந்த மகனைக் கண்டு, ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தாள் என்பது அப்பாடல் தரும் செய்தி. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை இவர் பாடிய பத்துப் பாடல்களுக்குப் பரிசிலாக ஒன்பது காப் பொன்னும் நூறாயிரம் காணமும் பெற்று, அரசவைப் பொறுப்பும் ஏற்றார் (பதிற். பதிகம். 6). சேரலா தனது கொடைமையை, இரவலர் வாராராயினும் அவர்களைத் தேரிற் கொணர்ந்து நிறைய உணவு வழங்குவான் (பதிற். 55: 10, 11) என்றும், ஒண்ணு தல் மகளிர் துனித்த கண்ணினும் மிகுதியாக இரவ லர் புன்கண்ணுக்கு அஞ்சுவான் என்றும் (பதிற். 57: 13,14) கூறி அவ்வரசனைச் சிறப்பிப்பர். நள்ளியின் கானத்திலுள்ள ஆயரின் நெய்ச் சிறப்பையும் தொண்டிப்பட்டினத்து நெற்சிறப்பையும் இவர் தம் குறுந்தொகைப் பாடல் (210) உணர்த்தும். இரா.சா.

**காகசசு:** தென்கிழக்கு ஐரோப்பிய உருசியக் குடியரசில் உள்ள இம்மலைத் தொடர் 1,205 கி.மீ. நீளமுள்ளது. கருங்கடலை அடுத்துள்ள கூபன் ஆற்றின் முகத்துவாரத்திலிருந்து தொடங்கும் இம் மலை, காசுப்பியன் கடலையடுத்த அப்சிரான் (Apsheron) முந்நீரகம் வரை பரவியுள்ளது. ஐரோப் பாவையும் ஆசியாவையும் பிரிக்கும் வகையில் இம் மலைத் தொடர் வடக்குக் காகேசியா, காகேசியா என்னும் இரண்டு பெரும் பகுதிகளாக அமைந்துள் ளது. பல கணவாய்கள் மூலம் இம்மலைத் தொடர் கடக்கப்படுகிறது. இம்மலைப் பகுதியில் எண்ணெய், எஃகு, மங்கனம் முதலிய பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. அவை தொடர்பான தொழில் களை வளரச் செய்யப் பல நீர்மின்சக்தி நிலையங் கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலைச்சாரல்களில் தேவதாருவும் குறிப்பிட்ட பருவங்களில் உதிரக்கூடிய வேறு பல மரங்களும் அடர்ந்து வளர்ந்திருப்பதாலும் மரவேலைகள் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. பள்ளத்தாக்குப் பகுதிகளில் நாரத்தை, எலுமிச்சை, கிச்சிலி முதலியவை உள்ளிட்ட மரங்கள் காணப்படு கின்றன. தேயிலை, பருத்தி, தானியங்கள் ஆகியன வும் உற்பத்தியாகின்றன. கருங்கடல் ஓரப்பகுதி களில் பல தங்குமிடங்களும் கோடைக்கால இருப் பிடங்களும் அமைத்திருக்கிறார்கள்.

பண்டைய கிரேக்கக் கதைகளில் காகசசு (Caucasus) மிகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாரசீகர், காசார்கள், அரேபியர், அவுணர்கள், துருக்கிய - மங்கோலியர், உருசியர் முதலானோர் இப்பகுதியில் படையெடுத்து உட்புகுந்து குடியேறி, இங்குப் புதியதோர் இனத்தன்மையை உருவாக்கி யுள்ளனர். உருசியர் துருக்கியுடனும் பாரசீகத்துட னும் பல போர்கள் நிகழ்த்தியதின் விளைவாக, 19- ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் உருசிய ஆதிக்கம் ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் செருமனி, காகசசுப் பகுதியின் எண்ணெய் வளங் களைக் கைப்பற்றப் பல முயற்சிகள் செய்தது. உருசியா 1942, சூலை மாதத்தில் நடந்த செருமா னியப் படையெழுச்சியை 1943 அக்டோபர்த் திங்க ளில் முறியடித்து, இப்பகுதியைத் தன்னிடம் தக்க வைத்துக் கொண்டது. தெ.பா.

**காகத்தியர்** தென்னிந்தியாவில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலும் 13-ஆம் நூற்றாண்டிலும் சிறப்புற்றி

ருந்த ஒரு குலத்தவர். கல்யாணியின் மேலைச்சாளுக்கியப் பேரரசுக்கு அடங்கியிருந்த இரண்டாம் புரோவா என்ற காகத்தியத் தலைவன்(Kakatiya chieftain) அப்பேரரசு சிதைவுற்றதைப் பயன்படுத்திக் கொண்டு கிருட்டிணா, கோதாவரி ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதியில் அனுமகொண்டாவைத் தலைநகராகக் கொண்டு, ஓர் அரசை அமைத்தான். அவன் ஆட்சி 12-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உறுதியாக அமைந்தது. மக்களின் நன்மைக்காக அவன் குளங்கள் வெட்டி வேளாண்மையைப் பெருக்கினான்.

அடுத்து வந்த முதலாம் பிரதாபருத்திரன் என்ற காகத்திய மன்னன் (கி.பி. 1162-1185) வாரங்கல் எனப்படும் புதிய நகரைத் தோற்றுவித்து அதைத் தன் அரசுக்குத் தலைநகராக்கினான். இம்மன்னன் அரசியல் ஆற்றல் மிகுதியாகப் பெற்றிருந்ததுடன் கலைகளையும் நன்கு வளர்த்தான். இவன் ஆட்சிக் காலத்தில் கல்வி வளர்ந்தது; அரசு விரிவடைந்தது; பல கோயில்கள் எழுப்பப்பெற்றன. பொதுவாக இவன் ஆட்சியை மக்கள் போற்றினர். இவன் ஓர் இலக்கிய அறிஞன்; வடமொழியிலும் தெலுங்கிலும் 'நீதிசாரம்' என்ற நூலை இயற்றினான். அப்பொழுது பரவிவந்த வீரசைவ சமயத்தை ஆதரித்தான். வீர சைவத் தலைவர்களுள் ஒருவரான சோமநாதர் இம் மன்னனின் ஆதரவைப் பெற்று மகிழ்ந்தார்.

காகத்திய அரசு கணபதி என்னும் அரசன், அரசி உருத்திராம்பாள் ஆகியோரின் ஆட்சியில் உயர்நிலையில் இருந்தது. உருத்திராம்பாள் (கி.பி. 1259-1288) தன் அரசியல் ஏடுகளில் ஆண்களைப் போலவே குறிப்புகள் எழுதினாள். இரண்டாம் பிரதாபருத்திரன் (கி.பி.1291-1323)ஆட்சிக்காலத்தில் முகம்மதியப் படையெழுச்சி ஏற்பட்டுக் காகதீய அரசு நலிவுற்றது. மாலிக்காபூர்(Malik Kafur)1309-ஆம் ஆண்டில் வாரங்கலை முற்றுகையிட்டு, மன்னனை மண்டியிடச் செய்தான். ஏராளமான பொருள்களைப் பெற்றதுடன், காகதீய மன்னன் கப்பம் கட்டிவர வேண்டுமென்றும் ஆணையிட்டு விட்டு, மாலிக்காபூர் நாட்டை விட்டகன்றான். இறுதியாக கி.பி. 1323-ஆம் ஆண்டில் வாரங்கல் தன் சுதந்திரத்தை முகமதியர்களிடம் பறி கொடுத்துவிட்டது. தெ.பா.

**காகத்தியாப் பல்கலைக்கழகம்**: உசுமானியாப் பல்கலைக்கழகத்தின் வாரங்கல் (Warangal) பட்ட மேற்படிப்பு மையம் 1976-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் கல்வி, நிருவாகம் முதலியவற்றில் தன்னாட்சியுரிமை (Autonomy) பெற்றது. இம்மையத்தினை 1976-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் ஆந்திரப்பிரதேச அரசு காகத்தியாப் பல்கலைக்கழகமாக உயர்த்திற்று. காகத்தியாப் பல்கலைக்கழகம் வாரங்கல் நகரில் வித்தியாரண்யபுரி (Vidyaranyapuri) என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

காகத்தியாப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த 12 கல்லூரிகள் உள்ளன;பல்கலைக்கழகக் கல்லூரிகள் (University Colleges) 5 உள்ளன. இவற்றுள் பல்கலைக்கழக மாலைநேரக் கல்லூரி,பல்கலைக்கழகச் சட்டக்கல்லூரி, பல்கலைக்கழக மருந்தாக்கவியல் கல்லூரி (University College of Pharmaceutical Sciences) ஆகிய மூன்றும், இரண்டு கலை அறிவியற் கல்லூரியும் அடங்கும்.

பல்கலைக்கழகக் கல்லூரிகளில் தாவரவியல் வேதியியல், கணிதவியல், இயற்பியல், விலங்கியல் போன்ற அறிவியல் பாடத்துறைகளும் வணிகவியல், பொருளியல், அரசியல், பொது நிருவாகம் போன்ற கலைத்துறைகளும் உருது, தெலுங்கு, சமசுக்கிருதம், இந்தி ஆகிய மொழித்துறைகளும் உள்ளன. இளங்கலைக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை பயிலுவதற்கான வசதி இப்பல்கலைக்கழகத்திலுள்ளது. எஸ்.த.

**காகாசீமா** சப்பான் நாட்டுத் துறைமுகம். கியூசுத் தீவில், நாகசாகியிலிருந்து 144 கி.மீ. தொலைவில் உள்ள காகாசீமாப் (Kagoshima) பட்டினம் பட்டு, கண்ணாடி, பீங்கான், சிகரெட்டு, துணி முதலிய தொழில்களுக்குப் பெயர் பெற்றது, இங்குள்ள கலங்கரை விளக்கம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இது 1961-ஆம் ஆண்டிலிருந்து ஓர் ஏவுகணை (உந்து கூண்டு) மையமாக விளங்குகிறது. இதன் மக்கள் தொகை 1976-இல் 468,649. தெ.பா.

**காகிதச் செலாவணித் திட்டம்**: இது ஒரு நாட்டின் அரசுக் கருவூலம் அல்லது மைய வங்கி, பணத் தாள்களாக வெளியிடும் செலாவணி முறையினைக் (Currency System) குறிக்கும். இப் பணத்தாள்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் வண்ணம் சட்டமுறையில் வரையறுக்கப்பட்டுக் (Legal Tender) கட்டுப்பாடின்றி வழக்கத்திலிருந்தால், அது நிலையான அல்லது வரையறுக்கப்பட்ட காகிதச் செலாவணித் திட்டம் (The Paper Currency Standard) எனப்படும். இத்திட்டத்தில் காகிதச் செலாவணியுடன் அடையாளப் பணமாக (Token Money), குறைந்த மதிப்புடைய உலோகச் செலாவணி (Metallic Money), அடையாளக் காசுகளாக வழக்கத்திலிருக்கும். புற மதிப்பு (Face Value) மிகையாகவும், உள்ளுறை மதிப்புக் (Intrinsic Value) குறைவாகவும்

உள்ள செலாவணி அடையாளப் பணம் எனப்படும். இக்காலத்தில் உலக நாடுகளனைத்தும் காகிதச் செலாவணித் திட்டத்தைப் பின்பற்றுகின்றன.

**வகைகள்:** பொதுவாக, பணம் என்பது உலோகச் செலாவணி, காகிதச் செலாவணி, வங்கிப் பணம் (Bank Money) என மூவகைப்படும். உலோகச் செலாவணித் திட்டத்தில் வழக்கத்திலிருந்த தங்கம், வெள்ளி போன்ற உலோகக் காசுகளின் பற்றாக் குறை, மதிப்பு, மாற்றுத்தன்மை போன்ற பல சிக்கல் களினால் காகிதச் செலாவணி தோன்றியது. காகிதச் செலாவணியை அதில் குறிக்கப்பட்டிருக்கும் புற மதிப்பிற்கு ஈடான தங்கம் அல்லது வெள்ளி உலோ கத்திற்கு மாற்றக்கூடிய (Convertible) திட்டம் 'உருப்படிவப் பணம்' (Representative Money) எனப் படும். இம் முறை நடைமுறையில் எக்காலத்திலும் செயற்படவில்லை.

காகிதச் செலாவணியைக் குறிப்பிட்ட ஒரு விகிதத்தில் தங்கம் அல்லது வெள்ளியாக மாற்று வதற்குரிய திட்டம் 'மாற்றுரிமைச் செலாவணி' (Convertible Paper Currency) எனப்படும். இம்முறை யில் உலோகத்திற்கு மாற்றாகக் காகிதச் செலாவணி பயன்படுவதால், இதனை உருப்படிவப் பணம் என வும் கூறுவர்.

நடைமுறையிலுள்ள காகிதச் செலாவணித் திட் டம் மாற்றுரிமையற்ற செலாவணி (Inconvertible Currency) ஆகும். இதனை அதன் புற மதிப்புக்கு ஈடான தங்கமாகவோ, வெள்ளியாகவோ மாற்ற இயலாது. இத்திட்டத்தின்கீழ் வெளியிடப்படும் பண அளிப்பை அந்நாட்டுப் பணவியல் ஆணையகம் (Monetary Authority) நிருவகிக்கிறது. பணவியல் ஆணை யகம், மைய வங்கியாகவோ, அரசின் கருவூலமா கவோ, அரசாகவோ, தனி ஆணையகமாகவோ இருக் கலாம். பொதுவாக, அரசுடன் கலந்தாலோசித்து மையவங்கியின் அறிவுரையின் அடிப்படையில் அர சின் கருவூலம் காகிதப் பணத்தை அச்சிட்டு வெளி யிடும். அதன் பண அளிப்பு (Supply of Money), பொருளாதார நடவடிக்கை, நாட்டு வருமானம், விலை நிலவரம் ஆகியன நிலையாக (Stability) ஒருங் கமைத்து இயங்குவதற்குகந்த வகையில் வரையறுக்கப் படுகிறது. பணவியல் ஆணையகத்தின் கட்டுப்பாட் டின் கீழ் இத்திட்டம் நிருவகிக்கப்பட்டுச் செயற்படுவ தால், இதனை மேலாண்மைச் செலாவணித் திட்டம் (Managed Currency Standard) அல்லது நிருவாகச் செலாவணித் திட்டம் எனக் குறிப்பிடுகின்றனர்.

காகிதச் செலாவணியில் குறிக்கப்பட்டிருக்கும் புற மதிப்பு எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி சட்ட முறையில் வரையறுக்கப்பட்டதாக அதனை வெளி யிடும் ஆணையகத்தால் அதிகாரத்துடன் அறிவிக்கப் படுவதால் பொதுமக்கள் அதனை அதன் புறமதிப் புடன் ஏற்றுக்கொள்கின்றனர். அதனுள் அடங்கும் ஆணை, அதிகாரம் ஆகியவற்றின் காரணமாகக் காகிதச் செலாவணித் திட்டத்தை ஆணையச் செலாவணி (Fiat Currency) எனவும், கட்டளைச் செலாவணி எனவும் குறிப்பிடுகின்றனர். இச் செலா வணிக்கு என்று ஒரு குறியிலக்கு வரையறை (Objective Standard) இல்லை. காகிதச் செலாவணி, காகிதச் செலாவணிக்கு மட்டுமே மாற்றுரிமை உடை யது. அதனை வேறு எந்த ஒரு பொருளுடனும் மாற்ற இயலாது. அதன் மதிப்பு, அதனை உருவாக் கும் அரசின் ஆணை அதிகாரத்தைப் பொறுத்தது.

பணவியல் வரலாற்றில் காகிதச் செலாவணி முதன் முதல் சீனாவில் தோன்றியது. சங்கு அரச குலத்தைச் (Sung Dynasty) சார்ந்த மன்னர்கள் கி.பி. 970-ஆம் ஆண்டில் காகிதப் பணத்தை வெளியிட்ட னர். அதனைத் தொடர்ந்து கி.பி. 1425 வரை சீனாவில் காகிதச் செலாவணி வழக்கத்திலிருந்த தாக அர்னால்டு தாயின்பீ (Arnold Toynbee) தம் வரலாற்று நூலில் எழுதியுள்ளார். சீனா வில் உச்சப் பணவீக்கம் (Hyper Inflation) ஏற் பட்டதன் காரணமாகக் காகிதச் செலாவணித் திட்டம் கி.பி. 1425-இல் கைவிடப்பட்டு, மீண்டும் கி.பி. 1851-இல் மஞ்சு அரச குலத்தவர் (Manju Dynasty) காலத்தில் கொண்டு வரப்பட்டது. பிற உலக நாடுகளில் காகிதச் செலாவணி அரசுகளால் வெளி யிடப்பட்டுத் தோன்றவில்லை. காசுகளை இருப்பாக வும் (Stocks) பாதுகாப்பாகவும் வைத்திருந்த வங்கி களும் தனியாரும் அக்காசுகளுக்கு ஈடான ஆவணங் களை வாக்குறுதிச் சீட்டுகளாக (Promisory Notes) வெளியிட்டனர். அவற்றின் விளைவாக ஏற்பட்ட நிதிச் சிக்கல்கள், நொடிப்பு நிலைச் (Bankruptcy) சீர்கேடுகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்த அரசுகள் எடுத்த நடவடிக்கைகளினால் அரசுகள், காகிதப் பண வெளியீட்டுப் பொறுப்பைத் தங்கள் முழுக் கட்டுப் பாட்டிற்குள் வைத்துக்கொள்ளும் இன்றியமையா நிலை உண்டாயிற்று.

தங்கத்திட்டம் (Gold Standard), இரட்டை உலோகத் திட்டம் (Bimetalism) ஆகியன நடை முறையில் இருந்த காலத்தில் அரசுகள் அவ்வுலோ கங்களில் மாற்று ஒப்புறுதித் தாள்களாக (Under Writing Paper) காகிதச் செலாவணியை வெளியிட்டன. அப்பணம் எக்காலத்திலும் அதில் குறிக்கப்பட்டிருந்த உலோகத்தில் மாற்றுரிமைத் தகுதி பெற்றிருந் தது. நிதி நெருக்கடி காரணமாக இம் மாற்றுரிமைத்

தகுதியை அரசுகள் அவ்வப்போது நிறுத்தி வைக்கும் படியான சூழ்நிலைகள் உருவாயின. சான்றாக, பிரஞ்சுப் புரட்சி, அமெரிக்க உள்நாட்டுப் போர் இவை காரணமாக முறையே கி.பி. 1789-இலும் கி.பி. 1862-இலும் அந்நாடுகளின் காகிதப்பணங்கள் மாற்றுரிமைத் தகுதியை இழந்து மேலாண்மைச் செலாவணிகளாக மாறின. இரண்டு உலகப்போர்கள், உலகப் பெரு மந்தம் (Great Depression) ஆகியவற்றினால் தங்கத் திட்டமும், இரு உலோகச் செலாவணித் திட்டமும் நடைமுறையில் செயற்பட இயலாதன என நாடுகள் உணர்ந்தன. அதனைத் தொடர்ந்து 1936-ஆம் ஆண்டிலிருந்து உலக நாடுகளனைத்திலும் காகிதச் செலாவணித் திட்டம் செயற்படலாயிற்று.

**சிறப்பியல்புகள்**: செலாவணியில் விடப்படும் காகிதப் பணம் மதிப்பற்றது அல்லது மிகச் சிறிய அளவு மதிப்புப் பெறும் தகுதியுடையது. அதன் புற மதிப்புக்கு ஈடான மதிப்புடைய பொருள்களை மீட்க (Redeem) அல்லது அவற்றைப் பெறப் பயன்படும் கருவியாக அது உதவியது. அதன் வாங்கும் திறன் தங்கத்தின் தனிப்பட்ட மதிப்பிற்கு (Independently of the Value of Gold) அப்பாற்பட்டது; எனினும், தங்கத்தை அதன் விலை பெறுமான மதிப்புக் கொடுத்து வாங்கும் திறனுடையது.

**நன்மைகள்**: காகிதச்செலாவணித் திட்டம் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகிறது. இத்திட்டத்தில் பணத்தின் அளிப்பைப் பெருக்குவதும் கட்டுப்படுத்துவதும் எளிதென்பதால், பணவியல் ஆணையகம், வேலை நிறைவு (Full Employment), பொருளாதார வாணிக நடவடிக்கைகளை நிலைப்படுத்துதல், விலைவாசியைக் கட்டுப்படுத்தல் ஆகிய இலக்குகளையடையும் வண்ணம் பணவியற் கொள்கையை வகுத்துக்கொள்கிறது. தங்கத் திட்டத்தில், தங்க இருப்பின் (Reserve) பற்றாக்குறை காரணமாக, இயற்கை வளங்களையும் மனித ஆற்றல் வளத்தையும் (Man Power Resource) உச்சப் பயன்பாட்டிற்குட்படுத்த இயலாநிலை இருந்தது என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன.

உள்நாட்டில் நிலையான விலை உறுதித் தன்மையை அடைய காகிதப் பணம் உதவுகிறது. பண வீக்கம், மந்தம் ஆகியவற்றினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள், சுழற்சி காரணமாய் அடிக்கடி நிகழும் தேக்கநிலையிலிருந்து பொருளாதாரத்தைப் பாதுகாக்கின்றன. பொருளாதாரத்திற்குத் தேவையான பணத்தை மேலாண்மைச் செலாவணி அளிப்பதால், அதுவே சிறந்த திட்டம் எனக் கீன்சு(Keynes)கூறினார்.

காகிதச் செலாவணி தனி நாடுகளுக்குரியது (Nationalistic). ஒவ்வொரு நாடும் அதனதன் விருப்பு, வெறுப்பிற்கேற்றவாறு பணத்தை வெளியிடலாம். ஒரு நாட்டின் காகிதச் செலாவணிக்கும் பிறிதொரு நாட்டின் செலாவணிக்கும் நேரடித் தொடர்பின்மையால், பன்னாட்டு வாணிகச் சுழற்சித் (International Business Cycles) தாக்கங்களிலிருந்து நாடுகள் பாதுகாக்கப்படுகின்றன. நாடுகள் தனித்தனியான (Independent) பணவியற் கொள்கையினைப் பின்பற்றவும் வகை செய்கிறது.

நிதி நெருக்கடி, போர்க்கால அவசரத் தேவை போன்ற எதிர்பாராத சூழ்நிலைகளில் தேவைப்படும் செலவுகளுக்கு அரசு காகிதச் செலாவணியை அச்சிட்டு நிலைமையைச் சீர்படுத்துகிறது. பிற உதவியற்ற சூழ் நிலைகளில் நாட்டின் வளத்தின் மேல் அதிகாரம் செலுத்தவும் இத்திட்டம் உறுதுணையாயுள்ளது.

பன்னாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சாதக பாதக நிலைகளைச் சரிப்படுத்தவும், அயற் செலாவணி வீதச் (Foreign Exchange Rate) சமன்பாட்டை நிலைப்படுத்தவும் மேலாண்மைச் செலாவணி சிறந்த கருவியாக விளங்குகிறது.

காகிதச் செலாவணி பணவியல் திட்டங்களுள் மிகச் சிக்கனமானது. உலோகங்கள் கைமாறும்போது நிகழும் இழப்பு, தேய்மானம் போன்று காகிதச் செலாவணியில் நிகழ்வதில்லை. அவற்றை வெளியிடுவதற்கான அடக்கச் செலவும் மிகக் குறைவு.

காகிதச் செலாவணித் திட்டத்தினால் பணத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த தங்கம், வெள்ளி போன்ற மதிப்புயர்ந்த, கிடைப்பதற்கரிய உலோகங்கள் சேமிக்கப்பட்டுப் பிற இன்றியமையா உற்பத்தித் தேவைகளுக்குப் பயன்படுகின்றன. இதனால், தொழில் வளம் பெருகி, பொருளாதார முன்னேற்றம் உண்டாகிறது.

காகிதச் செலாவணியின் பளுவற்ற தன்மை இடமாற்ற (Transferable) எளிமையைப் புலப்படுத்துகிறது. அவை அளவிலும் தோற்றத்திலும் ஒரியல்புடையன. எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய காகிதச் செலாவணி, பல்வேறு சிறு மதிப்புகளாகப் பகுக்கக்கூடிய பகுப்புடைமையுடையது. பொதுமக்கள் பேரங்களில் முழுமையாக ஏற்றுக் கொள்ளும் ஏற்புடையது காகிதச் செலாவணி.

**குறைகள்**: காகிதச் செலாவணியின் அளிப்பு அரசுகளின் முழுக்கட்டுப் பாட்டிற்கும் அதிகாரத்

திற்கும் உட்படுவதால் அரசுகளின் கொள்கை, திட்டம், இலக்குகள் ஆகியவற்றின் குறைகளினால் அளவுக்கு மிஞ்சிய பணம் செலாவணிக்கு வந்து பணவீக்கம் தோன்ற வாய்ப்புண்டு. செருமனியில் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட பெரும் பணவீக்கத்திற்கும், விலைவாசி ஏற்றத்திற்கும் அதிகப் பணம் வழக்கில் வந்ததே காரணமாக அமைந்தது என்பதை நினைவுகூரலாம். அதனால், வருமான ஏற்றத்தாழ்வு, பொருளாதார அமைப்பு முறையில் சீர்கேடு போன்றவை நிகழ்ந்துள்ளன. காகிதச் செலாவணியை வெளியிடும் நாட்டில் மட்டுமே அப்பணம் ஏற்றுக் கொள்ளப்படுவதால், பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கலில் சிக்கல்கள் எழுகின்றன.

காகிதச் செலாவணியை வெளியிடுவதில் சில அடிப்படைக் கோட்பாடுகள் பின்பற்றப்படுன்றன. அவை செலாவணிக்கோட்பாடு (Currency Principle), வங்கியியல் கோட்பாடு (Banking Principle) என இரு வகைப்படும். செலாவணிக் கோட்பாட்டின்படி, வெளியிடப்படும் காகிதப் பணத்திற்கு ஈடான தங்கம் அல்லது வெள்ளி 100-க்கு 100 பாதுகாப்புப் பிணைய வைப்பாக (Security Deposit ) வைக்க வேண்டும் என்பதாகும். இதனால், காகிதச் செலாவணி மாற்றுரிமைத் தகுதி பெற்று மக்களிடையே உயர் மதிப்பும் ஏற்புடைமையும் பெற்றுத் திகழும் எனக் கருதப்பட்டது. ஆனால், இக் கோட்பாடு நடைமுறையில் எக்காலத்திலும் செயற்படவில்லை.

வங்கியியல் கோட்பாட்டின் பகுதியளவு வைப்பு முறையில் (Partial Deposit System) 40 விழுக்காடு அல்லது 20 விழுக்காடு வீதத்தில் குறிப்பிட்ட ஓர் உலோகத்தைப் பிணையமாக வைத்துக் காகிதச் செலாவணி வெளியிடப்படுகிறது. வங்கியியல் கோட்பாடு பல திட்ட முறைகளில் உலக நாடுகள் பலவற்றில் நடைமுறையில் உள்ளது. அவற்றுள் உச்ச நம்பக வெளியீட்டு முறை(Maximum Fiduciary Issue System), நிலையான நம்பக வெளியீட்டு முறை (Fixed Fiduciary Issue System), ஒப்புவீதக் காப்பு இருப்பு முறை (Proportional Reserve System), குறைந்த காப்பு இருப்பு முறை (Minimum Reserve System) ஆகியன குறிப்பிடத்தக்கன. காண்க: உச்சநம்பக வெளியீட்டுக் கோட்பாடு. அ.கு.சா.

**காகுத்தவர்மன்** தென்னிந்தியாவின் வடமேற்குப்பகுதியை (இப்போதைய கருநாடகா மாநிலத்தை) ஆண்ட தொடக்க காலக் கடம்பர்கள் வமிச அரசர்களுள் மிகச் சிறந்த அரசராகத் திகழ்ந்தவன். இவனைப் (கி.பி. 430–450) பற்றியும், பனவாசிக் கடம்பர்கள் எனப்படும் தொடக்க காலக் கடம்பர்களைப் பற்றியும் அறிய இவனது ஆல்சிச் செப்பேடும் (Halsi Plate) இவனது மகன் சாந்திவர்மனின் (Shantivarma) தாளகுண்டாக் கற்றூண் சாசனமும் (Talagunda Pillar Inscription) உதவுகின்றன. இவற்றின் வழிக் காகுத்தவர்மனின், பாட்டனாரின் தந்தை மயூரசர்மா (Mayura Sarma, – கி.பி 345–370) என்னும் அந்தணர் கடம்பர்களின் ஆட்சியை நிறுவினார் என்று அறிய முடிகிறது. மயூரசர்மா காஞ்சி நகருக்கு வேதங்களைக் கற்கச் சென்றபோது, அங்கு அவருக்கும் பல்லவர்களுக்கும் ஏற்பட்ட பகைமையால் அவர் சிரீபர்வதா (Sri Parvata) என்னுமிடத்தில் தனி அரசை நிறுவினார். இது கி.பி. நான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நடந்தது.

அக்காலத்தில், காஞ்சியில் விட்டுணுகோபன் என்னும் முற்காலப் பல்லவ அரசன் ஆண்டுவந்தான். சமுத்திர குப்தரின் தென்னிந்தியப் படையெடுப்பால் ஏற்பட்டகுழப்பமே பல்லவ அரசனை எதிர்த்துக் கடம்பர்கள் ஆட்சி புரிய உதவியது.

காகுத்தவர்மன் தன் உடன்பிறந்தான் இரகுவின் (Raghu - கி.பி.420–430) இறப்பிற்குப்பின் அரியணை ஏறினான். இரகுவின் ஆட்சிக் காலத்தில் இவன் வடக்குக் கடம்பர் பகுதியின் ஆளுநராகப் பலசிகா (Palesika) என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். அப்போது இவன் சதானகுந்திர் (Sathanakundir) எனப்பட்ட தலகுண்டாவில், சாதவாகன அரசர்கள் வழிபட்ட சில ஆலயங்களைப் புதுப்பித்திருக்கிறான்.

இவன் சிறந்த வீரனாகவும், தளபதியாகவும் ஆட்சியாளனாகவும் விளங்கினான். கடம்பர்களைச் சுற்றியிருந்தபல சிற்றரசர்களை வென்று, இவன் ஆட்சி நடத்தினானென்றும் அறியமுடிகிறது. இவன் தன் மகள் ஒருத்தியை நரேந்திர சேனா (Narendra Sena) என்னும் வாகாடக (Vakataka)அரசருக்குத் திருமணம் செய்வித்தான். மற்றொருமகளை குப்த இளவரசன் மணந்தான் எனத் தெரிகிறது. தலகுண்டா சாசனத்தில் அம்மகளின் பெயரோ குப்தஇளவரசரின் பெயரோ குறிப்பிடப்படவில்லை குப்த இளவரசன் கந்தகுப்தனாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இத்திருமணங்களால் கடம்பர்களுக்கும் வாகாடகர்களுக்கும் குப்தர்களுக்குமிடையே தொடர்பு மிகுந்தது. பி.இ.மோ.

**துணை நூல்கள்:**

**George M. Moeras, M.A.**, The Kadamba Kula: A History of Ancient and Mediaeval Karnataka. B.X. Furtado & Sons, Bombay, 1931.

Hayavadana Rao: C., (Ed.), Mysore Gazetteer, Vol II, Part II Bangalore, 1930.

*காங்கிரசு*: காண்க: இந்திய தேசிய காங்கிரசு

*காங்கிரா* வடமேற்கு இந்தியாவில் இமாசலப் பிரதேசத்திலுள்ளது. இந்நகர் வரலாற்றுப் புகழ் பெற்றது. இதன் அருகிலுள்ள தரும சாலையுடன் இது இருப்புப் பாதை மூலம் இணைக்கப்பட்டுள்ளது. பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் இந் நகர் நாகர்கோட்டை என்ற பெயருடன், இரசபுத்திர ரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. முகம்மது கசினி கி.பி. 1009-இல் இக்கோட்டையைத் தாக்கினார். பின்னர் கி.பி.1360-இல் பேரரசர் பிரோசு சாதுக்ளக் கினால் (Firoz Shah Tughlak) இது தாக்கப்பட்டது. முகலாயர்கள் இங்கே ஆட்சிபுரிந்தனர். இந்நகர் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் இரசபுத்திர ஓவியக் கலையின் மையமாகத் திகழ்ந்தது.இந்நகரை1905-இல் ஏற்பட்ட ஒரு நில நடுக்கம் அழித்துத் தரைமட்ட மாக்கிவிட்டது. அங்கிருந்த தேவி கோயிலும் அழிவுற் றதால் பின்னர்ப் புதிதாகக் கட்டப் பெற்றது. இந்த நகரை உடைய காங்கிரா மாவட்டம் 5,800 ச.கி. மீட்டர்கள் பரப்பை உடையது. பியாசு ஆறு இந் நகரை வளப்படுத்துகிறது. இங்குக் கோதுமை, சோளம், அரிசி, தேயிலை முதலியன மிகுதியாகப் பயிராகின்றன. இதன் காடுகளில் மரங்கள் மிகுதி. கைத்தறி நெசவு, இந்நகரமக்களின் தொழிலாகும். இம் மாவட்டத்தின் தலைநகர் முதலில் காங்கிராதான். ஆனால், கி.பி. 1855-ஆம் ஆண்டில், தருமசாலை மாவட்டத் தலை நகரா யிற்று. தெ.பா.

*காங்கிரா ஓவியங்கள்*: இமயமலையின் அடி வாரத்தில் இமாசலப் பிரதேசத்தில் அமைந்துள்ள அழகிய பள்ளத்தாக்கே காங்கிராப் பள்ளத்தாக்கு ஆகும். காங்கிராப் பள்ளத்தாக்கின் வடக்குப் பகுதி தவுலாதார் (Dhaulladhar) என்ற 16,000 அடி உயர முள்ள பனி மூடிய மலைப்பகுதியாகும்; தென்பகுதி குன்றுகளால் சூழப்பட்டுச் சமவெளிகளிலிருந்து விடுபட்டு, இயற்கை சூழ்ந்த தனிப் பகுதியாகக் காட்சியளிக்கிறது. இப்பள்ளத்தாக்கில் உலகப் புகழ் பெற்ற வண்ண ஓவியங்கள் உள்ளன. இவை காங்கிரா பாணி ஓவியங்கள் (Kangra School of Paintings) எனப் பெயர் பெறும். இந்திய ஓவியங்கள் அசந்தாக் குகைக் கோயில்களில் உருப்பெற்று, மொகலாய மன்னர்களால் வளர்ச்சியுற்று,காங்கிராப் பள்ளத்தாக்கில் முழுமையடைந்தன எனலாம்.



காங்கிரா ஓவியங்கள்

இமயமலையில் அமைந்த முதல் அரசு காங்கிரா அரசு ஆகும். இதன் அரசர்கள் முதலில் மூல்தானை (Multan) மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். பின் காங்கிராவிற்கு இடம் பெயர்ந்து, பல நூற் றாண்டுகளாக ஆட்சிபுரிந்து வந்தனர்.

காங்கிரா ஓவியங்களின் பிறப்பிடமாகக் கருதப் படுவது இப்பள்ளத்தாக்கின் நுழைவாயில் உள்ள குலூர் (Gulur) ஆகும். இது அரிச்சந்து (Raja Hari Chand) என்ற காங்கிரா மன்னரால் கி.பி. 1405-இல் உருவாக்கப்பட்டது. மொகலாய அரசர் சகாங்கீரின் கி.பி. 1620-ஆம் ஆண்டு வெற்றிக்குப் பின் காங்கிரா மன்னர்கள் மொகலாயருக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்கள் ஆயினர்.

நாதர்சா தில்லிமீது கி.பி. 1739-இல் படை யெடுத்து மொகலாயப் பேரரசை ஒடுக்கியபோது மொகலாய மன்னர்களால் அதுகாறும் ஆதரிக்கப் பட்டு வந்த ஓவியர்களும் காசுமீர் அந்தணர்களுமாகிய பண்டித சியூவின் (Pandit Seu) புதல்வர்கள் மாணக்கு (Manak), நயின் சுக்கு (Nain Sukh) ஆகியோர் இப் பள்ளத்தாக்கில் தஞ்சம் புகுந்தனர். அவர்களே காங்கிரா பாணி ஓவியங்களுக்கு அடித்தளம் அமைத் தவர்கள். மாணக்கு குலூரை ஆட்சி செய்து வந்த தலீப்சிங்கிடம் (Dalip Singh) தஞ்சம் புகுந்தார். நயின் சுக்கு (Nain Sukh) சம்மு சென்றார். மாணக்கு வரைந்த தலீப்சிங்கின் மூத்த மகன் பிசன்சிங்கின்

ஓவியங்கள் இன்றும் காங்கிராக் குகைகளில் காணப் படுகின்றன. குலூரை மையமாக வைத்து ஆட்சி புரிந்து வந்த தலீப்சிங்கிற்குப் பின்வந்த கோவர்தன சந்து (Govardhan Chand), பார்காசு சந்து (Parkash Chand), பூப்பு சிங்கு (Bhup Singh) போன்றோர் ஓவியர்களுக்கு ஆதரவு அளித்தனர். காங்கிராவை மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த காமண்டு சந்து (Ghamand Chand) இறந்துவிடவே, அவன் பேரன் சன்சார் சந்து (Sansar Chand) தன் பத்தாம் வயதில் அரியணை ஏறினான். அவன் ஆட்சி காங்கிரா பள்ளத்தாக்கின் பொற்காலம் ஆகும். அவன் காலத்து ஓவியங்கள் சிறப்பானவை.

இப்பள்ளத்தாக்கு ஓவியங்கள் இருவகைப்படும் முதல்வகை அரண்மனை வாழ் மக்கள் பற்றியன. இரண்டாம் வகை கடவுள் பற்றியன. இவற்றுள் மிகவும் புகழ்பெற்றவை பாகவத புராணக் கதை களும், கீத கோவிந்தமும், மகாபாரத கதைகளுமாம் இவற்றின் மேலாகப் பன்னிரண்டு மாதங்களைக் குறிக் கும் வகையில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஓவியங்கள் வரையப்பட்டன. இவை 'பன்னிரண்டு மாதங்கள்' எனப் பெற்றன.

இராசபுதன அரச மகளிர் ஓவியங்களும் குறிப் பிடத்தக்கவை. அவர்களின் குளியல் அறைக் காட்சி கள், காதலர்கள் சேர்ந்திருக்கும் காட்சிகள், காதலர் களின் பிரிவுநிலைக் காட்சிகள் ஆகியன அவற்றுள் சிறப்பானவை.

குலூர் ஓவியங்களைப் பிற்காலத்தில் திரோ சுசான்பூர் (Tiro Sujan Pur), பசொலி (Basohli), சம்பா (Chamba) போன்ற மலை மாநிலங்கள் வளர்த்தன. இவற்றிற்குப் பசொலியை ஆட்சிபுரிந்த அமீர்பால் (கி.பி. 1757-1776), சம்பாவை ஆட்சி புரிந்த இரான்சிங்கு போன்றோர் ஆதரவு அளித்த னர்.

சன்சார்சந்து ஆட்சிக்குப்பின் சில கலைஞர்கள் மண்டி, சுகட்டு (Suket), கார்வால் (Gharwal) போன்ற இடங்களுக்குச் சென்றனர். சன்சார்சந்தின் புதல்வியர் கார்வசுவை ஆட்சிபுரிந்து வந்த சுதர்சன் சா மன்னனுக்கு (Raja Sudarshan Shah) கி.பி. 1831-இல் மணமுடித்து வைக்கப்பட்டனர். அம்மன் னர்கள் ஆட்சியின் பிற்பகுதியில் ஆதரவு அளித்தனர். அவர்களின் மனைவியர் கொணர்ந்த ஓவியங்களும் புகழ் பெற்றவையாகும். கே.இரா.

**துணை நூல்கள்:**

**Archer, W.G.**, Kangra Painting, London, 1952.

**Gongoly, O.C.**, Master Pieces of Rajput Painting, Calcutta, 1926.

**காங்கேயம்** தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தாராபுரம் வட்டத்தில், தாராபுரத்தி லிருந்து வடக்கே ஏறக்குறைய 33 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தாராபுரம் வட்டத்திலுள்ள புகழ் பெற்ற சிவன் மலையில் உள்ள இறைவன் பெயர் காங்கேயன் என்பதாகும். இப்பெயர் மருவி இந்நக ருக்குக் காங்கேயம் என்னும் பெயர் வந்திருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது.

பண்டைக்காலத்தில் கொங்கு நாடு 24 பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு பிரிவு காங்கேய நாடு. இப்பிரிவுக்குக் காங்கேயம் தலைமை யிடமாக இருந்திருக்க வேண்டும். கொங்கு நாட்டை ஆண்ட கங்கர் என்னும் வமிசத்தைச் சேர்ந்த அரசர் களின் படைத்தளமாகவும் கங்கப்பிரதிநிதியின் இருப்பிடமாகவும் இது இருந்திருக்கின்றது. வர லாற்றுச் சிறப்புள்ள இந்நகர் வளம் மிகுந்தது. இங்கு ஒரு பழமையான சிவன் கோவில் இருக்கிறது. அக்கோவிலில் கொங்குச் சோழர்கள், பாண்டியர்கள் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் இருக்கின்றன.

இது கால்நடைச் செல்வத்திற்குப் பெயர் பெற்ற இடம். இங்கு இருக்கின்ற ஒருவகை மாடு களைத் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளில் வாழ்கின்றவர்களும் காங்கேய மாடுகள் என்று சொல்வார்கள். ஓங்கோல் இனத்தைப் போன்றே இதையும் ஓரினமாகவே கருதுகிறார்கள். காங்கேய மாடுகள் உயர்தரமானவை. இவ்வினக் காளை மாட்டின் அழகு கண்ணைக் கவரும் தன்மை வாய்ந் தது. இக்காளைகள் மிகுந்த பருமனும் உயரமும் இன்றி கட்டான உடலுடன் வலிமை மிக்கவை. எவ்வளவு கடின வேலையாயினும் எளிதில் செய்யும் ஆற்றலுடையவை. ஆ. செ.

**காங்கேயன்** முருகப்பெருமான். நிகண்டு நூல் கள் முருகன் பெயர்களுள் ஒன்றாகக் காங்கேயன் என்னும் பெயரைக் குறிப்பிட்டுள்ளன. கங்கையால் வளர்க்கப்பட்டமையால் முருகன் இப்பெயரால் அழைக்கப்படுகிறான்.

**காங்கேயன்[2]** பீசுமர். முற்பிறப்பில் பிரபாசன் என்னும் வசுவின் அமிசமாகத் தோன்றியவர். பீசுமர் சந்தனுவிற்கும் பாகீரதிக்கும் பிறந்தவர், பரசு ராமரிடம் பயிற்சி பெற்றவர். இவர்தம் பெயரே காங்கேய்ன் என்பது. தம் தந்தை மீனவ அரச குமாரியை மணந்துகொள்வதற்காகத் தாம் 'மணஞ்

செய்து கொள்வதில்லை' என்று சூளுரைத்து அவ்வாறே வாழ்ந்தவர். தாம் விரும்பும் வேளையில் தம்உயிரைப் பிரியச்செய்யும் ஆற்றலுடையவர்.

**காங்கேயன்[3]** புதுவை என்னும் ஊரில் வாழ்ந்த ஒரு வள்ளல். 'பொன்னி நதிநோக்கி வாழும் நவ புதுச்சேரி நன்னாட்டில்' என்னும் நாலாயிரக் கோவைச் செய்யுட் பகுதியால் புதுவை என்பது இப்போதுள்ள பாண்டிச்சேரி ஆகாது என்பதும், காவிரியாற்றால் வளம்பெறும் சோணாட்டு ஊர் என்பதும் தெளிவாகிறது. இந்த வள்ளல்மீது ஒட்டக்கூத்தர் கோவை நூல் ஒன்று பாடியுள்ளார்.அது காங்கேயன் நாலாயிரக்கோவை எனப்படும். அந்நூல் இப்போது கிடைக்கவில்லை. நாலாயிரம் பாடல் கொண்ட கோவை என்றும், காங்கேயனுக்குரிய நாலாயிரம் என்னும் ஊர் பற்றி அமைந்த கோவை என்றும் ஆய்வாளர்கள் 'நாலாயிரக்கோவை' பற்றி விளக்கம் கூறியுள்ளனர். தம்மீது பாடப்பெற்ற கோவைச் சிறப்பால் இவ்வள்ளல் ஒட்டக்கூத்தருக்குக் கௌடப் புலவர், கவிராட்சசன் என்னும் பட்டங்களை வழங்கினார் எனத் தெரிகிறது. ஒட்டக்கூத்தர் காலத்தவராதலால் இவர் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டாகும்.


**காங்கேயன்[4]** தமிழில் அமைந்துள்ள 'உரிச்சொல் நிகண்டு' என்னும் நூலாசிரியர். காங்கேயர் எனவும் கூறப்படுவார். 'பலகலை தேர் காங்கேயன் பட்டமுடையான், உலகறியச் சொன்ன உரிச்சொல்' என்னும் பாடற்பகுதியால், இப்புலவர் பெயரையும் இவர்தம் நூற்பெயரையும் உணரலாம். இவர் வேளாள மரபினர் என்பது கூறப்படுகிறது. கொங்கு மண்டல சதகம் (91) இவரைக் கொங்கு நாட்டவர் என்று குறிப்பிடுகிறது. சைவ சமயத்தவராகிய இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவர் என்று சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி குறிப்பிடுகிறது. இக்காலத்தே வெளியிடப்பெற்றுள்ள இந்நூல், 12 பகுதிகளில் 287 வெண்பாக்களைக் கொண்டதாக உள்ளது. செயல் பற்றிய பெயர்களைக் கூறும் இந்நூலின் இரண்டாம் பகுதியில் 'சலாம் செய்தல்' என்பதனையும் இவர் குறிப்பிட்டுள்ளார். இவர் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு முனிவராவார் என்று சிலர் கருதுகின்றனர்.

**காங்கேயன்[5]** மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலக் கல்வெட்டொன்றினால் (கி.பி. 13-ஆம் நூ.) அறியலாகும் ஓர் அரசியல் தலைவன். இவன் முழுப் பெயர் 'கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன்' என்பதாகும். இவன் திருப்புத்தூர்ச் சேகரத்துத் தேனாற்றுப் போக்கைச் சார்ந்த நியமம் என்ற ஊரின் தலைவனும், சுந்தர பாண்டிய மன்னன் தலைமை அதிகாரியுமாவான். பெரிச்சியூரைச் சேர்ந்த கொடிக்கொண்டான் பெரியான் ஆதித்த தேவன் என்னும் புலவர் இத்தலைவன்மேல் ஒரு பிள்ளைக் கவிப் பிரபந்தம் பாடியுள்ளார். 'காங்கேயன் பிள்ளைக்கவி' எனப்படும் அந்த நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை.

**காங்கேயன்[6]** சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரை ஆதரித்த வள்ளல் இப்பெயரோடு தொடர்புடையவராக உள்ளார். பொப்பண்ண காங்கேயர்கோன் என்பது அப்பெயராகும். அடியார்க்கு நல்லாருக்கு உணவுக் கவலை தோன்றாதவாறு இவர் புரந்துவந்தமையால்,முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றமுடிந்தது என்னும் கருத்தினைக் 'காற்றைப் பிடித்து' எனத் தொடங்கும் அடியார்க்கு நல்லார் உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்று புலப்படுத்துகிறது. பொப்பண்ண காங்கேயன் என்பது அவ்வள்ளலின் பெயராகும். அ.மா.ப.

**காங்கோ**: ஆப்பிரிக்கக் கண்டத்தின் நடுப்பகுதியில் காங்கோ ஆறு ஓடும் பெரிய வெளியில் இரண்டு குடியேற்ற நாடுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டன. ஒன்று பிரெஞ்சுக்காரராலும் மற்றது பெல்சியம் மன்னராலும் நிறுவப் பெற்றன. பிரெஞ்சுக் காங்கோ, இன்று (1970 முதல்) காங்கோ மக்கள் குடியரசு எனப் பெயர் பெற்றுள்ளது. அதற்கு முன்னர் 1910 முதல் இதனைப் பிரெஞ்சு நிலநடுக் கோட்டு ஆப்பிரிக்கா என அழைத்தனர். காங்கோ 1960-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15-ஆம் நாள் சுதந்திரம் அடைந்தது. இதன் தலைநகரம் பிரசாவில் (Brazaville) ஆகும்.

காங்கோ பின்தங்கிய வளரும் நாடாகும். இது விவசாயத்திலும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பதினைந்துக்கு மேற்பட்ட இனவழி (Tribe) மக்கள் இங்கு வாழ்கின்றனர். அவர்களுள் பாடிக்கி (Batike), போச்சி (Bochi), விலி (Vili) என்னும் இனமக்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பாடிக்கி மக்களின் எண்ணிக்கை அதிகம். விலி மக்கள் மீனவர்கள். நாட்டின் மக்கள் தொகையில் 40 விழுக்காடு நகர்ப்புறங்களிலும் 70 விழுக்காடு தெற்குப் பகுதிகளிலுள்ள கிராமங்களிலும் வாழ்கின்றனர். பாதிக்கு மேற்பட்ட மக்கள் கிறித்தவ மத போதகர்களின் தொடர்பில் உள்





காங்கோ

ளனர். இந்நாடு இயற்கைவளம் குறைந்தது. ஆப்பிரிக்காவை ஐரோப்பிய நாடுகள் பங்கிட்டுக் கொண்டபோது, பிரான்சு இதன் நலிந்த வளத்தையும் சுரண்டியது. இப்பொழுது இங்கு 600 தொடக்கப் பள்ளிகளும், 10 உயர்நிலைப் பள்ளிகளும், தொழிற் பள்ளிகளும் உள்ளன. பல்கலைக்கழகக் கல்விக்கு 1972 வரை மாணவர்கள் வெளிநாடு சென்றனர்.

**வரலாறு**: போர்ச்சுகீசியர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில், காங்கோவின் கடற்கரைப் பகுதியைக் கண்டறிந்தனர். பிரெஞ்சு வணிகர்கள். கி.பி. 17, 18 -ஆம் நூற்றாண்டுகளில் அடிமைகளை விலைக்கு வாங்கக் காங்கோ சென்றனர். அடிமைகள் விற்பனை தடை செய்யப்பட்ட பின்னர், இந்நாடு பிரெஞ்சுக் கப்பல்கள் தங்கிச் செல்லுமிடமாக மாறியது. வேற்று நாட்டவர் யாரும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை இந்நாட்டின் உட்பகுதிக்குச் செல்லவில்லை.

பிரெய்ரி சவர்கனன் தி பிரெசா(Prierre Savorgnan de Brazza) என்னும் பிரெஞ்சுக் குடியேற்றத் தலைவர், இந்நாட்டின் உள்நாட்டு அரசர்களுடன் (Tribal Kings) தொடர்பு கொண்டு, இதனைப் பிரான்சின் பாதுகாப்பிற்கு உட்பட்ட ஒரு நாடாக (Protectorate) மாற்றும் ஒப்பந்தங்களைச் செய்தார். காங்கோ கி.பி. 1891-இல் பிரான்சின் குடியேற்ற நாடாக மாறியது. அதனை 1903-முதல் மத்திய காங்கோ எனக் கூறினர். இரண்டாம் உலகப் போரின்போது, காங்கோவின் பிரெஞ்சு ஆளுநராக விளங்கிய பேளிக்சு இ போவு (Felix E Bou) என்பவர், காங்கோ மக்களைத் தூண்டித் தாமே முன்னின்று சுதந்திரம் பெற முயற்சி செய்தார். அக்காலம் ஆப்பிரிக்காவில் தேசிய உணர்வு வளரத் தொடங்கிய காலம். இக்காரணங்களால் பிரான்சு கி.பி.1944-இல் காங்கோவிற்குச் சிறிது சிறிதாகச் சுயாட்சி வழங்க முன் வந்தது. பிரான்சு 1946-இல் காங்கோவைத்



காங்கோ கப்பல் துறை

தன் கடல் கடந்த நிலப்பகுதியாக மாற்றி (Overseas Territory), அதற்குப் பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் உறுப்பினராகும் உயர்பதவியையும் அளித்தது. காங்கோவிலும் சட்டசபைகள் நிறுவப்பட்டன. இங்கு 1958-இல் நடைபெற்ற தேர்தலில் காங்கோ குடியரசாக விளங்க வாக்குகள் கிடைத்தன. ஆகவே கி.பி. 1960-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 15-ஆம்

நாள் இது தனிச் சுதந்திர நாடாக மாறியது. அபீ புல்பர்ட்டு யூலோயூ (Abbe Fulbert Youlou) இதன் முதல் குடியரசுத் தலைவர் ஆனார். அவரால் நாட்டில்நிலவிய பல சிக்கல்களைத் தீர்க்க முடியவில்லை பின்னர் 1963-இல் மாசாம்பா திபத்து (Massamba Debat) குடியரசுத் தலைவர் ஆனார். இவர் சீனா, கியூபா ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்; மேலை நாடுகளைப் பகைத்துக் கொண்டார். பல குழப்பங்கள் நாட்டில் நிலவின. இறுதியாகத் தொழிலாளர் கட்சி (Labour Party) ஆட்சிக்கு வந்தது. அக் கட்சி 1970-ஆம் ஆண்டு சனவரி 3-ஆம் நாள் புதிய அரசியலமைப்பைத் தயாரித்தது. அதன்படி காங்கோ 'மக்கள் குடியரசு' என்று அறிவிக்கப்பட்டது. நிகோயூபி (Ngouabi) என்பவர் இதன் தலைவரானார். இந்நாட்டின் ஆட்சி மொழி பிரெஞ்சு. இதன் பரப்பளவு 201,424 ச.கி.மீ.; கடற்கரையின் நீளம் 144 கி.மீ. இதன் ஆட்சிமன்றம் 60 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபையாகும்.

மக்கள் தொகை 795,000. உற்பத்திப் பொருள்: வாழை, கோக்கோ, காப்பி, பனைவெல்லம், தேயிலை முதலியன. தேசியக்கொடி: மஞ்சள் நிறக் குறுக்குக் கோடுகள் பச்சை, சிகப்பு நிறமுள்ள இரண்டு முக்கோணங்களைப் பிரிக்குமாறு இருத்தல், நாணயம், பிராங்கு, முக்கிய நதிகள்: காங்கோ, உபங்கி (Ubangi). தெ.பா.

**கல்வி**: காங்கோ நாட்டுக் கல்வி முறை பிரான்சு நாட்டுக் கல்வி முறையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. இது 1980-ஆம் ஆண்டுகளில் பெரிதும் மாற்றம் அடைந்துள்ளது. மழலையர் பள்ளிகள் காங்கோவில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளன. இங்கு நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயிலுகின்றனர். காங்கோவில் அடிப்படைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் கால அளவு மொத்தம் 10 ஆண்டுகள். அடிப்படைக் கல்வி இரு நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொடக்கக் கல்விக்கு (Primary Education) இணையான முதல் நிலையில் வகுப்புகள் ஒன்றிலிருந்து ஆறு வரை உள்ளன. இரண்டாம் நிலையில் வகுப்புகள் 7-இலிருந்து 10-ஆவது வரை மொத்தம் நான்கு ஆண்டுகள்.

அடிப்படைக் கல்வி முடித்தவர்கள் கல்லூரிகளில் வழங்கப்படும் பொதுக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றிலோ தொழிற்பயிற்சி மையங்களில் (Vocational Centres) வழங்கப்படும் தொழிற் கல்வியிலோ சேர்ந்து பயிலுகின்றனர். இதன் கால அளவு மூன்று ஆண்டுகள். 1972-இல் தோற்றுவிக்கப்பட்ட பிராசவில் (Brazzaville) தலைநகரிலுள்ள மேரேன் நகுவபி பல்கலைக் கழகத்தில் (Marien Ngouabi University) உயர்கல்வி வழங்கப்படுகிறது.

மக்கள் தொகையில் முப்பது விழுக்காட்டிற்கும் அதிகமானவர்கள் பள்ளியில் சேர்ந்து பயிலுகின்றனர். தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் போலவே, காங்கோ நாட்டிலும் தொடக்கப் பள்ளிகளில் மாணவர் வருகை 100 விழுக்காடு ஆகும். வயது வந்தோர் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் எழுத்தறிவற்றவர்களாக உள்ளனர். மக்களுக்கு எழுத்தறிவு புகட்டுவதே காங்கோ நாட்டின் திட்டங்களுள் முன்னுரிமை பெற்றுள்ளது.

எஸ்.த.

**காங்கோ (பெல்சியம்)**[2] புதிய பேரரசுக் கொள்கையின் தந்தை என்று புகழப்பெற்ற இரண்டாம் இலியோப்போல்டு (Leopold II) என்னும் பெல்சிய நாட்டு மன்னன், கி.பி. 1876-இல் மத்திய ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள காங்கோ ஆற்றுப் பகுதியைக் கைப்பற்றினான். இப்பெருவெளி பெல்சியம் நாட்டைப் போல் சுமார் பத்து மடங்குப் பெரியது. இப்பகுதியை 1908 வரை அவன் தன் சொந்த உடமையாகக் கருதி ஆட்சி புரிந்து வந்தான். பிணைத் தொகை பெற்றுக் கொண்டு 1908-இல் பெல்சிய அரசுக்கு அதை விற்றான். பெல்சியத்தோடு இணைக்கப்பட்ட காங்கோ பெல்சியக் காங்கோ எனப் பெயர் பெற்றது. இந்நாடு 1960-ஆம் ஆண்டு சூன் மாதம் முப்பதாம் நாள் சுதந்திரம் பெற்றது. இப்பொழுது இந்நாடு செய்ரே (Zaire) என்ற பெயருடன் விளங்குகிறது. காண்க: செய்ரே. தெ.பா.

**காங்கோ ஆறு** உலகத்திலுள்ள பெரிய ஆறுகளுள் ஒன்று. தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் (Amazon) ஆற்றுக்கு அடுத்தபடியாக மிகுந்த நீர்ப்பெருக்குடைய ஆறு ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ ஆறாகும். பெல்சியக் காங்கோவிலிருந்து இதன் மூலம் வெளிநாடுகளுக்குப் பொருள்கள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. இதன் நீளம் 46,400 கி.மீ. இது கடலில் கலக்குமிடத்தின் அகலம் 16 கி.மீ. பெல்சியக் காங்கோவின் கிழக்குப் பகுதியில் உற்பத்தியாகும் பல ஆறுகள் காங்கோ ஆற்றில் வந்து கலக்கின்றன. இந்த ஆற்றில் பல தீவுகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. கப்பல்கள் இந்த ஆற்றில் செல்கின்றன. இருப்புப் பாதைகள் நீர்வீழ்ச்சியுள்ள



காங்கோ ஆறு

இடங்களில் போக்குவரத்தை எளிதாக்குகின்றன. சில இடங்களில் இந்த ஆறு ஓர் ஏரி போலவே காணப்படுகிறது. தெ.பா.

**காங்வா ஒப்பந்தம்**: சப்பானுக்கும் ஐரோப்பாவுக்கும் முதன்முறையாகத் தொடர்பு கி.பி. 1853-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பில்மோர் (Fillmore) கி.பி. 1852-இல் மேத்யூ சி. பெரி (Commodore Mathew C. Perry) என்பவரின் தலைமையில் ஒரு கடற்படையைச் சப்பானிற்கு அனுப்பத் தீர்மானித்தார். நான்கு கப்பல்களும் 560 மாலுமிகளும் அடங்கிய ஒரு கடற்படையுடன் பெரி ஏடோகுடாவில் (இப்போதைய தோக்கியோ) வந்து இறங்கினார். திமிங்கலம் பிடிக்க வரும் பொழுது சப்பான் கடற்றுறைகளைப் பயன்படுத்திக் கொள்ளச் சப்பானிடமிருந்து அனுமதி பெறுவதே இப்பயணத்தின் நோக்கம்.

பெரியின் வருகை சப்பான் வரலாற்றின் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அவர் தம் நன்னடத்தையின் மூலம் சப்பானியச் சோகனின் நன்மதிப்பைப் பெற்றார். கனகாவா அல்லது காங்வா என்னுமிடத்தில் கி.பி. 1854-ஆம் ஆண்டு பிப்பிரவரி 13-இல் ஒரு வணிக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சப்பானியர் பெரிக்கு மட்டுமல்லாது, அனைத்து நாட்டினருக்கும் ஐந்து துறைமுகப் பட்டினங்களில் வாணிகம் செய்ய அனுமதியளித்தனர். அயல்நாட்டினர் வாணிகத்திற்கெனச் சப்பான் கடற்றுறைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும், அவர்களிடையே ஏற்படும் வழக்குகளை அவர்களே தீர்த்துக் கொள்ளலாமென்றும் சப்பானியர் அறிவித்தனர்.

பெரியின் வருகை சிறப்பு விழாவாகக் கொண்டாடப்பட்டது. சப்பானுக்குப் பல அன்பளிப்புகளும் கிடைத்தன. அவை 1000 தாலர்கள் (Dollars) மதிப்புள்ள ஒரு பொற் பெட்டியில் கொண்டுவரப்பட்டன. இவ்வுடன்பாடு சமாதானத்திற்கு அடிகோலியதுடன், சப்பானின் தனிமையையும் தகர்த்தது. பெரியின் இவ்வெற்றி அவரது ஆற்றல், கண்ணியம், பொறுமை, படைவலிமை ஆகியவற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. மேலும், இது சப்பானின் வரலாற்றில் ஒரு மாறுதலையும் உண்டுபண்ணியது. இதன் விளைவாகத் தாராள மனப்பான்மை படைத்த சப்பானியர் தம் நாட்டை உலகத்தில் நாகரிகம் மிகுந்த நாடாக ஆக்க வேண்டுமென்று எண்ணினர். சப்பானிய – அமெரிக்க ஒற்றுமையையும் நட்புறவையும் நிலைநாட்டும் ஓர் ஒப்பந்தம் என்று இது கூறப்படுகிறது. கே.சே.

**காசல்** மேற்குச் செருமனியின் மத்திய கிழக்கில் உள்ள ஒரு மாவட்டம். இதன் கிழக்கில் கிழக்குச் செருமனியும், தென்கிழக்கில் பவேரியாவும், மேற்கில் வடக்கு உரைன் வெசுட்டுபாலியாவும், வடக்கில் தெற்கு சாக்சனியும் எல்லைகளாக உள்ளன. ஏசன் மாநிலத்தில் உள்ள மூன்று மாவட்டங்களுள் இதுவே மிகப்பெரியது. இதன் பரப்பளவு 8,288 ச.கி.மீ. ஆகும். காசல் (Kassel) நீண்ட கால வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. செழிப்பான இப்பகுதியில் இனிய சாற்றைத் தரும் கிழங்கு வகைகளும் உருளைக்கிழங்கும் பருப்பு வகைகளும் மிகுதியாக விளைகின்றன. வேளாண்மை இங்கு வளர்ச்சி பெற்ற தொழில். காடுகள் மிகுதியாக உள்ளன. ஏசன் மாநிலத்தில் (Hessen) இது ஒரு சிறந்த வளமான பகுதி. பொருளாதாரம், கலைப்பண்பு, தொழில்முறை, போக்குவரத்து முதலிய எல்லாத் துறைகளிலும் இதன் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. ஆடை வகைகள் இங்கு மிகுதி. இவ்விடத்தில் பழுப்பு நிலக்கரி தோண்டி எடுக்கப்படுகிறது. அது முக்கியமாக மின்சார உற்பத்திக்காகச் செலவிடப்படுகிறது. செருமனியிலேயே மிக அதிகமாக மர உப்பு உற்பத்தி இங்கு நடைபெறுகிறது. மக்கள்தொகையில் முக்கால் பகுதியினர் சீர்திருத்தக் கிறித்தவர்கள் (Protestants); எஞ்சியோர் உரோமன் கத்தோலிக்கர்கள். காசல் பல்கலைக்கழகம் புகழ்வாய்ந்தது.

**காசல் – நகரம்**: மேற்குச் செருமனியின் கிழக்கில் உள்ள இந்நகரம், வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. இதைப்பற்றி கி.பி. 913-ஆம் ஆண்டின் அரசியல் குறிப்புகள் சுட்டுகின்றன. பிராங்கிய மன்னர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்த இந்நகர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப் பெற்று, ஊகநட்டுகள் (Huguenots) என்னும் பிரெஞ்சுச் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்குப் புகலிடமாக்கப் பெற்றது. இந்நகர் கி.பி. 1567 முதல் கி.பி. 1866 வரை எசி–காசல் மாநிலத்தின் தலைநகராக விளங்கியது; குறுகிய காலத்திற்கு (கி.பி. 1807 முதல் கி.பி. 1813 வரை) வெசுட்டுபாலியா மாநிலத்திற்கும் தலைநகராக்கப்பட்டிருந்தது. இது கி.பி. 1866 முதல் 1944 வரை பிரசிய மாநிலமான எசி – நாசாவின் (Hesse – Nassaw) தலைநகராகவும் விளங்கியது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நேச நாடுகள் இந்நகரை அழிவுக்குள்ளாக்கின. பின்னர் இது புதிதாக எழுப்பப் பெற்றது. இங்குப் பல வரலாற்றுச் சின்னங்களை இன்றும் காணலாம். இங்குள்ள பொருட்காட்சிக் கூடம் காணத்தக்கது. ஐரோப்பிய வரலாற்றில் ஆர்வம் உடையவர்களுக்கு இந்நகரம் பல வரலாற்றுச் செய்திகளை இயம்பிக் கொண்டிருக்கிறது. தெ.பா.

**காசாக்குடிச் செப்பேடுகள்** பல்லவ மன்னர் இரண்டாம் நந்தி வர்ம பல்லவன் வெளியிட்ட செப்பேடுகள். இவை பல்லவர் வரலாற்றை அறிய உதவுகின்றன. காரைக்காலுக்கு அருகில் 4 கி.மீ. தொலைவிலுள்ள காசாக்குடி என்னும் சிற்றூரில் கி.பி 1879-ஆம் ஆண்டு இச்செப்பேடுகள் நிலத்தினடியிலிருந்து கிடைத்தன. எனவே, இவை காசக்குடிச் செப்பேடுகள் எனப் பெயர் பெற்றன. இப்பகுதி அக்காலத்தில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது. பாண்டிச்சேரியைச் சார்ந்த சூல்சு தேலாபோன்(Mons Jules de la Fon) என்பவர் இச்செப்பேடுகளைப் பற்றி வெளியுலகுக்கு அறிமுகம் செய்தார். இச்செப்பேடுகளை உல்சு (Hultzsh) தென்னிந்தியச் சாசனத் தொகுதியின் இரண்டாம் தொகுதியில் மூன்றாம் பாகத்தில் வெளியிட்டார். இப்பொழுது இச்செப்பேடுகள் சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

காசாக்குடிச் செப்பேடுகள் 11ஏடுகளைக் கொண்டன. ஒரு வளையத்தில் கோக்கப்பட்டிருக்கும் இவ்வேடுகளின் முதல் ஏடும், கடைசி ஏடும் உட்புறத்தில் மட்டுமே எழுத்துகளைக் கொண்டுள்ளன. பிற ஏடுகளில் இருபக்கங்களிலும் எழுத்துப் பொறிப்புகள் உள்ளன. செப்பேட்டின் வளையத்தின் முகப்பில் உள்ள முத்திரையில் இடப்பக்கம் நோக்கிப் படுத்திருக்கும் காளை உருவமும் அதன்மேல் இலிங்கமும் காணப்படுகின்றன. இருபது பக்கங்களில் எழுத்துப் பொறிப்புகள் கொண்ட இச்செப்பேடுகளில் கடைசிப் பக்கத்தைத் தவிர மற்றப் பக்கங்களில் ஏழு ஏழு வரிகள் உள்ளன. கடைசிப் பக்கத்தில் ஐந்து

வரிகளே உள்ளன. இச்செப்பேட்டில் மொத்தம் 138 வரிகள் உள்ளன. இவற்றுள் 104 வரிகள் வடமொழியிலும் 104 முதல் 133 வரை உள்ள வரிகள் தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. 133-ஆம் வரிமுதல் 136, 138-ஆம் வரிகள் வடமொழியிலும் 137-ஆம் வரி தமிழிலும் எழுதப்பட்டுள்ளன.

வடமொழிப் பகுதி செய்யுளும் உரைநடையும் கலந்து எழுதப்பட்டது. கடவுள் வணக்கத்துடன் தொடங்கும் செப்பேடு பல்லவ குலம், நந்திவர் மனுக்கு முன்பு ஆட்சிபுரிந்த அரசர்களின் பெயர்ப் பட்டியலையும் அம்மன்னர்களின் வெற்றிகளையும் கூறி, நந்திவர்மன் புகழையும் கூறுகிறது. நந்திவர் மனின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் ஊற்றுக் காடு நாட்டில் கொடுகொள்ளி என்ற சிற்றூரின் தேவதான பிரம்மதேயங்களை நீக்கி, எஞ்சிய பகுதிக்கு ஏகதீரமங்கலம் என்று புதிய பெயரிட்டு, செட்டிரங்க சோமயாசி என்பவருக்குப் பிரம்மதேயமாக அளிக்கப் பெற்ற செய்தி இச்செப்பேடுகளில் கூறப் பட்டுள்ளது. பிரம்மதேயமாக அளிக்கப்பட்ட நில அளவுகளும் எல்லைகளும் செப்பேடுகளில் குறிக்கப் பட்டுள்ளன. சு.இரா.

**காசாபிளாங்கா** அட்லாண்டிக்குக் கடலோரத்தில் மேற்கு மொராக்கோவில் உள்ள ஒரு நகரம். மொராக்கோவில் மிகப்பெரிய நகரமாகிய காசா பிளாங்காவில் (Casablanca), அந்நாட்டின் வாணிகத்தில் மூன்றில் இரண்டு பங்கு நிகழ்கிறது. கண்ணாடி, துணிவகைகள், செங்கற்கள் ஆகியன இங்கு மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. எரியகி (Phosphates) ஏற்றுமதி இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பாறை எண்ணெய் வகைகளும் (Petrolium) வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. காசா பிளாங்காப் பகுதி இடைக்காலத்தில் அன்பா (Anfa) என்ற பெயரைப் பெற்றிருந்தது.



காசாபிளாங்கா

அன்பா கி.பி. 1468-இல் போர்ச்சுகீசியரால் அழிக்கப்பட்டது. அங்கு கி.பி. 1515-இல் காசா பிளாங்கா நிறுவப்பட்டது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இங்கு நேசநாட்டுப் படைகள் மிகுதியாக வந்து இறங்கின. அமெரிக்கத் தலைவர் எப்.டி. ரூசுவெல்ட்டும் இங்கிலாந்துப் பிரதமர் வின்சுடன் சர்ச்சிலும் 1943-ஆம் ஆண்டு நவம்பரில் போர் பற்றிய செய்திகளைக் கலந்தாலோசனை செய்ய இங்கு ஒரு மாநாட்டைக் கூட்டினர்.
தெ.பா.


**காசான்** சோவியத்து உருசியாவில் தார்த்தார் குடியரசுக்கு உட்பட்ட ஒரு நகரம். காசான் (Kazan) நகரின் அருகில் வால்கா ஆறு ஓடுகிறது. புகழ் வாய்ந்த ஒரு கிறித்தவத் திருச்சபை இவ்வூரில் உள்ளது. ஒரு பல்கலைக்கழகம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தோன்றி இங்குச் சிறப்புற்று விளங்குகிறது. இங்குள்ள மக்கள் நெசவு, எஃகு உற்பத்தி, தோல் பதனிடுதல் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

**காசான்[2]**: ஈரான் நாட்டில் காசான் (Kazhan) மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். அத்திப் பழங்கள் இங்கு மிகுதியாக உற்பத்தியாகின்றன. சமுக்காளம், செம்பு, பித்தளைப் பாத்திரங்களும் இங்குச் செய்யப் படுகின்றன. தெ.பா.

**காசி** இந்துக்களின் புனிதத்தலம். உத்தரப்பிரதேச மாநிலத்தில் கங்கை நதிக்கரையில் இது அமைந்துள்ளது. மிகப்பழமையான இத்தலம் இப்பொழுது வாரணாசி என்று சொல்லப்படுகிறது. இது கல்கத்தாவிற்கு வடமேற்கில் சுமார் 670 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள கங்கையில் நீராடுதலை இந்துக்கள் புனிதமானதெனக் கருதுகின்றனர்.

இந்திய வரலாற்றில் இதிகாசக் காலந்தொட்டே இந்நகர் சிறப்புற்றிருந்தது. கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்த 16 மகா சனபதங்கள் என்ற மக்களாட்சிப் பகுதிகளுள் காசியும் ஒன்றாயிருந்தது. குப்தர்கள், முகமதியர், மொகலாயர் ஆகிய

மரபினர் ஆட்சியின் போதும் காசி முக்கிய நகரமா யிருந்தது. இது கி.பி. 1775-இல் ஆங்கிலேயர் வசமா யிற்று.



காசி

இங்குள்ள காசி விசுவநாதர், அன்னபூரணி, விசா லாட்சி, துர்க்கை, கேதாரீசுவரர் கோயில்கள் புகழ் மிக்கவை. பண்டித மதன் மோகன் மாளவியா என்ப வர் 1915-இல் காசி இந்துப் பல்கலைக்கழகத்தை இங்கு நிறுவினார். இது மிகச் சிறந்த கல்வி நிலைய மாகும். இங்குக் கலை, அறிவியல், தொழிலியல் துறைகளில் கல்வி புகட்டப்படுகின்றது. பித்தளைப் பாத்திரங்கள் செய்தல், பொம்மை செய்தல், சரிகை வேலை, பட்டு நெசவு ஆகியன இங்குள்ள முக்கிய தொழில்களாகும்.

காசி நகரைத் தலைநகராகக் கொண்டுள்ளது வாரணாசி (Varanasi) மாவட்டமாகும். இப்பகுதியில் கோடை வெப்பம் அதிகமாக இருக்கும். இப்புனிதத் தலத்திற்கு நாடோறும் எண்ணற்ற மக்கள் வருகின் றனர். இங்கு ஒரு வானிலை ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. காண்க. வாரணாசி. மா.கா.

**காசிக்கலம்பகம்** குமரகுருபர முனிவர் இயற் றிய நூல். இவர் தமிழகத்திற்கு அப்பால் காசிவரை சென்று தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்த் தவர். சகலகலாவல்லி மாலை என்னும் நூலைப் பாடிக் கலைமகள் அருளால் இந்துத்தானி மொழியை விரைந்து கற்று, தில்லியை ஆண்ட பாதுசாவின் உள்ளத்தைக் கவர்ந்து, அம்மன்னனிடம் பெற்ற இடத்தில் குமார சுவாமி மடத்தை நிறுவியவர். காசியில் வாழ்ந்த காலத்தில் பல்வகை அறங்களைச் செய்துவந்ததுடன், தமிழையும் தமிழ்நெறியையும் இந்துத்தானிமொழி மூலம் அங்கு வாழ்ந்த மக்க ளிடத்தில் வளர்த்தவர். இம்முனிவர் காசியில் வாழ்ந்த காலத்தில் இயற்றிய நூல் காசிக் கலம்பகம் ஆகும்.

கலம்பகம் என்பதற்குப் பலவகைப்பொருள் கூறு வர். பலவகை மலர்களும் கலந்தமைத்த கலம்பக மாலையென்று பொருள் கொள்வதே பொருந்தும் என்பர் அறிஞர். ஆகவே 'பலவகைப் பொருளும் பாடல்களும் கலத்தல்' என்னும் பொருளில் புலவர்கள் ஆக்கிய ஒரு திரிசொல் என இதைக் கொள்ளலாம். இந்நூல் புதுவதாகப் புனையப் படுதலால், தொல்காப்பியர் கருத்துப்படி 'விருந்து' வகையுள் அடங்கும். கலம்பகத்தில் இடம்பெறும் உறுப்புகள் பற்றிப் பன்னிருபாட்டியல் பன்னிரண்டு என்றும், பின்தோன்றிய இலக்கணவிளக்கப்பாட்டியல் பதினெட்டு என்றும் கூறுகின்றன.

காசிக் கலம்பகம் விநாயக வணக்கப் பாடலுடன் தொடங்குகிறது. காசியில் விளங்கும் விசுவநாதப் பெருமான் அருள் திறம், பெருமை ஆகியவற்றை அடுத்துள பாடல்கள் விளக்குகின்றன. இரண்டாம் பாடலில் சிவபிரான் இயல்புகளும் காசியில் இறந்த வர்கள் முத்தியடைவர் என்னும் கருத்தும் விளக்கப் பட்டுள்ளன. தூது என்னும் உறுப்பு தலைவிக்காகத் தோழி இறைவனிடம் குருகினைத் தூதனுப்புவதாக அமைந்துள்ளது. இறைவன் திருவிளையாடல்களாக வலிமைமிக்க பல அருட்செயல்களைச் செய்த அவன் புயங்களின் பெருமை புயவகுப்பில் கூறப்பட்டுள்ளது. பிச்சியார், கொற்றியார் என்னும் உறுப்புகளில் வரும் பாடல்களில் சிவவேடம் பூண்ட பிச்சியின் தொழிலுக் குரிய செய்திகளும் வைணவ வேடம் பூண்ட கொற்றி யின் தொழிலுக்குரிய செய்திகளும் சிலேடையாக அமைந்துள்ளன. காசிநகரின் வளமையெல்லாம் கொழுத்த தமிழாற்பாடிக் கொற்றியார் ஆடியதாக ஆசிரியர் கூறியுள்ளது அவரது தமிழன்பைக் காட்டு வதாகும். ஊர் என்னும் உறுப்பில் தலைவனின் ஊராகிய காசியின் சிறப்புக் கூறப்படுகிறது. இவ் வுறுப்பு மட்டும் மூன்றுமுறை இந்நூலில் வருகிறது. இறைவன் செயல்களைச் சிலேடையாக வினாவும் விடையுமாகப் பாடிப் பெண்டிர் ஆடுவது அம்மானை.

காசிப்பெருமான் திருவருள் பெற்றுப் பெருஞ் செல்வமெய்தி வரும் பாணன் ஒருவன், அவரிடம் செல்லும்படி மற்றொரு பாணனுக்குக் கூறியது

பாணாற்றுப்படை என்னும் உறுப்பாய் அமைந்துள்ளது. இந்நூலின் இறுதியில் ஊர் என்னும் உறுப்பு மீண்டும் வருகிறது. இவ்வுறுப்பில் இருபத்து மூன்று பாடல்கள் அமைந்துள்ளன.

காசிக்கு அவிமுத்தம், ஆனந்தவனம் என்னும் பெயர்களுண்டு என்பதும், விசுவநாதர்க்கு அகிலேசர், காசிநாதர் என்னும் பெயர்களுண்டு என்பதும், விசாலாட்சியம்மைக்குப் பெருந்தடங்கண்ணம்மை, ஆனந்தவல்லியென்னும் பெயர்களுண்டென்பதும் இந்நூலில் உணர்த்தப்படுகின்றன. இந்நூல் கங்கையின் சிறப்பைக் கூறுகிறது. காசியில் பாவஞ் செய்தவருக்கு எம தண்டனையில்லையென்றும், வயிரவக் கடவுள் தண்டனை மட்டுமுண்டு என்றும் கூறும் புராணச் செய்திகளை இந்நூல் விளக்குகிறது. பெ.சு.

**காசிக்கலியன் கவிராயர்** கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; பிற்காலப் பாண்டிய மன்னர்களுள் ஒருவனான வரதுங்கராமன் என்றும், அபிராமன் என்றும் கூறப்பெறும் வீரபாண்டிய மன்னனின் அவைக்களப் புலவராக விளங்கினார். இயற்பெயர் கலியன் என்பது. இவர் கவிபாடும் திறம் பெற்றிருந்தமையால் கவிராயர் எனப்பட்டார். இப்புலவர் தென்காசி நகரைச் சேர்ந்தவர். இதனால் இப்புலவர் காசிக்கலியன் கவிராயர் என்று வழங்கப்பெற்றார். இவர் தம் புரவலரான வீரபாண்டியன் முடி சூடிய நிகழ்ச்சியைச் சிறப்பித்து 5 வெண்பாக்கள் பாடியுள்ளார். அப்பாடல்கள் பஞ்சரத்தினமாலை என்று கூறப்படுகின்றன. அவை தென்காசி விசுவநாதர் திருக்கோயிற் கோபுரத்தின் நிலைக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. முதற் பாடல் வீரபாண்டியன் முடி சூடிய சிறப்புக் கூறும் நாண் மங்கலமாகவும், அடுத்த மூன்று பாடல்கள் முறையே குடை மங்கலம், வாண்மங்கலம், நாண்மங்கலம் ஆகிய சிறப்புணர்த்துவனவாகவும் அமைய, ஐந்தாம் பாடல் அரசன் பெயர், புலவர் பெயர் ஆகியவற்றைக் குறிப்பதாக உள்ளது. இறுதிப்பாடலில் இவர் தம் பெயரையும் சிறப்பையும், 'கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்' என்று குறிப்பிட்டுள்ளார். வீரபாண்டியன் முடி சூடிய நாள் கலி ஆண்டு 4689 என்பதனைப் புலவர் நான்காம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். அதனால் அம்மன்னன் முடிசூடிய ஆண்டு கி.பி. 1588 என்பதும், அவனைப் பாராட்டிய இப்புலவர் காலம் அதனை ஒட்டி அமைந்ததாகும் என்பதும் புலனாகின்றன. அ.மா.ப.

**காசிகண்டம்**: இதனைக் காசிகாண்டம் என்றும் வழங்குவர். இந் நூலாசிரியர் அதிவீரராமபாண்டியர். இவர் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

கண்டம் என்பது துண்டு, பகுதி எனப் பொருள்படும். காசியைப் பற்றிக் கூறும் பகுதி 'காசிகண்டம்' எனப்பட்டது. தனி நூலாக வழங்கியபோது 'காசிகாண்டம்' என வழங்கிற்று. இவ்வழக்கிற்குப் பிரமோத்தர காண்டம் போன்ற பெயர் வழக்கு வழி காட்டியதாதல் கூடும்.

வடமொழிச் சிவபுராணம் பத்து. அவற்றுள் ஒன்றான சங்கர சங்கிதை பன்னிரு பிரிவினது. அச்சங்கிதையின் நான்காம்பகுதி காசிகண்டம். அதன் தமிழ் மொழி பெயர்ப்பே காசி கண்டம் என்பது. இது 41 அத்தியாயங்களையுடைய பூர்வகாண்டம், 59 அத்தியாயங்களையுடைய உத்தரகாண்டம் என இரண்டு காண்டங்களையுடையது. நூல் 2526 விருத்தங்களால் அமைந்துள்ளது.

இது காசி நகரப் பெருமையைக் கூறுவதுடன் பிரமச்சரியம், இல்லொழுக்கம், மகளிர் இலக்கணம், ஆசாரம், காலமறிதல், இம்மை மறுமை நெறிகள் முதலியன பற்றியும் எடுத்துரைக்கிறது. ஆசிரியர் வடமொழி மூலத்தையே தழுவிச் செல்வதால், இவர்தம் கற்பனை வளத்துக்கு நூலில் மிக்க இடமில்லை.

இந்நூலிலுள்ள சில பாடல்கள் தனியே தொகுக்கப்பட்டுத் தனிநூல்களாக வழங்குகின்றன. இதன் ஐந்தாம் அத்தியாயத்தில் அகத்தியர் இலக்குமியைத் துதிக்கும் ஆறு பாக்களும் (21-31) 'இலக்குமி தோத்திரம்' என்று வழங்குகிறது; பத்தாம் அத்தியாயத்தில், எட்டுப் பாடல்கள் 'சிவாட்டகம்' எனத் தொகுக்கப்பட்டு, மக்கட்பேறு விரும்புவோரால் விரும்பி ஓதப்பெறுகின்றன. எழுபத்திரண்டாம் அத்தியாயம் 'வச்சிர பஞ்சர கவசம்' எனப்படும். இதனைப் பன்னிரண்டு பாடல்களாக்கிச் 'சக்தி கவசம்' எனக் கொண்டு ஓதுவர். காசி கண்டப் பகுதிகள் தனி நூலாக வழங்கும் தன்மையன.

காசியில் இறந்தோரை விசாலாட்சி தன்னாடையால் விசிறி இளைப்பாறச் செய்ய, விசுவநாதர் அவர்கள் செவியில் தாரக மந்திரம் உபதேசித்து முத்தி வழங்குகிறார் என்பது சமய நம்பிக்கை. அதனை இந்நூல், 'இத்தல மெய்தி இறக்குநர் யாரும் இளைப்பாற, உத்தரியங் கொடு மாதுமை வீசிட உமையோர்பால், வைத்து வரும் பொருள் மேவரு தாரக மறையோதி, முத்தியளித்திடும் இப்பதி யளவிட முயல்வாரே' என்று கூறும். காசி நகரின் சிறப்பையும் பல்வேறு சமுதாய ஒழுங்குகளையும் நடைமுறைகளையும் இந்நூல் சுட்டுகிறது. தெ.சொ.

***காசி-செயந்தியா மலைகள்***: வடஇந்தியாவில் அசாம் மாநிலத்தில் 9643 ச.கி.மீ. பரப்புள்ள நிலப்பகுதியாகும். பிரமபுத்திரா, சுர்மா ஆறுகள் இதைத் சுற்றி ஓடுகின்றன. காசி மலைகளும் செயந்தியா மலைகளும் இங்கே அமைந்துள்ள காட்சி காணத்தக்கது. தெற்கில் காசி மலைகள் 4000 அடி அளவுக்கு உயர்ந்துள்ளன. இம்மலைகளிலிருந்து பல ஆறுகள் உற்பத்தியாகின்றன. இந்தியாவிலேயே மிகுதியான மழை பெய்யும் இடமான சிரபுஞ்சி காசி மலைகளை அடுத்தே உள்ளது. நெல்லும் பழ வகைகளும் இப்பகுதியில் பயிரிடப்படுகின்றன. தெ.பா.

***காசிப் பழங்குடி*** மேகாலயா, அசாம், நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநிலங்களில் வாழும் தொன்மையான குடியினர். இவர்கள் மேகாலயா மாநிலத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். ஏறக்குறைய 5 இலட்சம் மக்கள்தொகை கொண்ட காசிப் (Khasi) பழங்குடியினர் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். சில்லாங்குப் பீடபூமியில் வாழும் காசிகள் கின்ரியாம் (Khynriam) காசிகள் அல்லது மேட்டு நிலக்காசிகள் என்றும், செயிந்தியா மலையில் (Jaintia Hills) வாழ்பவர்கள் பிநார்க்(Pnar) காசிகள் என்றும், காசிமலைகளின் மேற்கு, தெற்குச் சரிவுகளில் வாழ்பவர்கள் வார்க் (War) காசிகள் என்றும், தாழ்ந்த நிலப்பகுதிகளில் வாழ்பவர்கள் போய்க்(Bhoi)காசிகள் என்றும் சொல்லப்படுகின்றனர். இவர்களைத் தவிர செயிந்தியா மலைகளில் வாழும் ஏடம்களும்(Hadems) காசி மலைகளில் வாழும் இலிங்கம் (Lyngams) பழங்குடியினரும் அண்மையில் காசிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேற்கண்ட ஆறு பிரிவினரும் தங்கள் உட்பிரிவுகளுக்குள்ளேயே மணமுடித்துக் கொள்கின்றனர். இப்பிரிவினர் மேலும் பல கால்வழியினராகப் பகுக்கப்படுகின்றனர்.

காசிகள் மான் காமர்க் (Mon-Khamer) குழுவைச் சேர்ந்த மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் பேசும் மொழி இந்திய நாட்டின் மையப் பகுதியில் வாழும் பழங்குடியினர் மொழிகளுடனும், நிக்கோபார்த்தீவுப் பழங்குடியினர் மொழியுடனும் தொடர்புடையதாக இருக்கிறது. காசிகளின் பேச்சு மொழி பற்றிச் சுவையான கதை ஒன்று அம்மக்களிடையே நிலவுகிறது. ஒரு காலத்தில் உலகத்தை வெள்ளம் சூழ்ந்தபோது காசிகளின் மொழியைக் காக்கும் பொறுப்பு ஒரு காசியிடமும் பிற மொழிகளைக் காக்கும் பொறுப்பு வேறு ஒரு மனிதனிடமும் ஒப்படைக்கப்பட்டன. பிற மொழிகளின் பொறுப்பை ஏற்ற மனிதன் கவடிகளைத் தன் தலைமுடிக் கற்றையுடன் சேர்த்துக் கட்டிக் கொண்டான். காசிப் பழங்குடி மனிதனோ தன் சுவடிகள் மிகவும் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு அவற்றை விழுங்கி விட்டான். அதனால், காசி மொழி பேச்சு மொழியாகவே உள்ளது என்பர்.

காசிகளின் வீடுகள் நீள்வட்ட வடிவில் கற்களால் அல்லது, மரக்கட்டைகளால் கட்டப்படுகின்றன; ஒரு முகப்பு அறை, ஒரு மைய அறை, ஒரு படுக்கை அறை ஆகிய மூன்று அறைகளைக் கொண்டுள்ளன. மலை முகடுகளில் வீடுகளைக் கட்டுவது தகாததாகக் கருதப்படுவதால், மலை முகடுகளுக்குச் சற்றுத் தாழ்வான பகுதிகளிலேயே இவ்வீடுகளைக் கட்டுகின்றனர்.

காசிகள் தாய் வழி மரபினைக் (Matrilineal Descent) கொண்டுள்ளனர். இவர்களது மரபுவழி முப்பாட்டி, பெரும்பாட்டி, பாட்டி என வருகிறது. உறவினர்கள் பற்றிப் பேசும்போது ஒரு தாயின் வயிற்றில் தோன்றியவர்கள், ஒரு பாட்டியின் வழியில் வந்தவர்கள் என்றே பேசப்படுகின்றனர். கால்வழிக் குழுக்களில் கா நியாப்பு (Ka Nyap) போன்ற ஆதி மூதாட்டிகளின் பெயர்கள் குடும்பப் பெயராக நிலைத்து நிற்கின்றன. மூதாட்டிகள் மிகவும் புனிதமாக மதிக்கப்படுகின்றனர். அனைத்து இடங்களிலும் பாட்டியும் அவளது மகளும் அம்மகளின் குழந்தைகளும் ஒரே குடும்பமாக வாழ்கின்றனர். பாட்டிதான் குடும்பத்தின் தலைவி. ஒவ்வொரு வீட்டிலும் ஆண் மக்கள் இடைநிலையினராகவே மதிக்கப்படுகின்றனர். மணம் முடிந்தவுடன் அவர்களின் தொடர்பு அறுந்து விடுவதாகக் கருதுகின்றனர். பல்வேறு சமய, சமுதாயச் சடங்குகளில் கணவன் ஓர் அயலானாகவே கருதப்படுகிறான். குடும்பவிழாக்களில் கணவன் கலந்து கொள்ள முடியாது. மனைவி வழியில் வந்தோர்தம் சவக் குழிகளில் சாம்பலைத் தூவ அவன் அனுமதிக்கப்படுவதில்லை. புனித நிகழ்ச்சிகள் யாவும் பெண்கள் கைகளிலேயே உள்ளன. பாரம்பரிய உரிமைகளும் பெண்களாலேயே கையாளப்பட்டு வருகின்றன. குடும்பத்தின் கடைசிப் பெண்தான் அக்குடும்பத்தின் எல்லாச் சடங்குகளையும் கவனித்துக் கொள்கிறாள். ஒரு குடும்பத்தின் வீடும் நகைகளும் சொத்துகளில் பெரும் பங்கும் கடைசிப் பெண்ணையே சேருகிறது.

காசிகள் வேளாண் தொழிலில் மேம்பட்டவர்கள். மண்ணின் தன்மைகளையும் இடத்திற்கேற்றவாறு இயற்கை உரங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் நன்கறிந்துள்ளனர். மலைச்சரிவுகளில் அடுக்கடுக்காக அமைத்துள்ள நெல்வயல்களில் மிளகாய், உருளைக்கிழங்கு, சிறு தானியங்கள் முதலான வற்றைப் பருவங்களுக்கேற்பப் பயிரிடுகின்றனர்,



காசிப் பழங்குடி ஆடவர்



காசிப் பழங்குடிப் பெண்கள்

சமுதாய அமைப்புக்கேற்ப நில உரிமைகள் அமைந்துள்ளன. காசித் தலைவனின் குடும்பத்துக்குச் சொந்தமான நிலம் காரி சியெம் (Ka Ri Siem) என்றும் மதகுருவின் நிலம் கா கி லிங்தோ (Ka Ki Lyngdoh) என்றும் சொல்லப்படுகின்றன. மத குரு நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதி சமயச் சடங்குகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. கிராம மக்களுக்குத் தேவையான விறகு, கூரைப்புற்கள் போன்றவற்றிற்காகத் தனியாக நிலம் ஒதுக்கப்படுகிறது. இந்நிலம் இரிசிநாங்கு (Ri Shnong) என்று சொல்லப்படுகிறது. புனித மரங்கள் வளர்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தைப் புனிதக்காடு என்று சொல்கின்றனர். இங்கு வளரும் மரங்களை வெட்டுவது பாவச் செயலாகக் கருதப்படுகிறது.

காசிப் பழங்குடியினர் ஒருங்கமைந்த அரசியலமைப்பைக் கொண்டுள்ளனர். அம்மக்கள் வாழும் நிலம் பல குறுநிலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குறுநிலப் பகுதியும் சியெம் (Siem) எனப்படும். ஒரு பழங்குடிப் பெருந்தலைவர் தலைமையில் அது இயங்குகிறது. சியெமின் அதிகாரங்கள் ஒரு சிற்றரசனின் அதிகாரங்களுக்கொப்பாக உள்ளன. தம் பொறுப்பில் உள்ள பகுதிகளைக் கவனிக்க அமைச்சர்களையும் பல அலுவலர்களையும் சியெம் நியமித்து ஆட்சி செலுத்துகிறார். பல கிராமங்களை உள்ளடக்கிய சில சமுதாய மன்றங்கள் ஒவ்வொரு சியெமின் கட்டுப்பாட்டின்கீழும் உள்ளன. சமுதாய மன்றத்தின் தலைவர் சிர்தார் (Sirdar) என்று சொல்லப்படுகிறார். சமுதாய மன்றங்கள் தங்களுக்குட்பட்ட பகுதிகளில் எழும் சண்டை சச்சரவுகள், எல்லைத் தகராறுகள் போன்றவற்றைக் கவனித்து நீதி வழங்குகின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் இரங்பாசினாங்கு (Rangbah Shnong)எனப்படும் ஒரு கிராமத் தலைவர் இருக்கிறார். அவரது தலைமையில் ஒரு கிராம மன்றம் இயங்குகிறது. ஆடவர் அனைவரும் அம்மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். கிராமத் தலைவர் கிராமத்தின் சாலை அமைப்பு, நீர்வசதி, சுகாதாரம், கல்விக்கூடங்கள் போன்ற அமைப்புகளையும் பிற நலன்களையும் கவனிக்கிறார். ஒவ்வொரு கிராமத்திலும் இரங்பாகுர் (Ranbahkur) என்று சொல்லப்படும் சில கால்வழித் தலைவர்கள் உள்ளனர். தத்தமது கால்வழியைச் சேர்ந்த மக்களின் ஒழுங்கு, சமயக் கட்டுப்பாடு, முன்னேற்றம் ஆகியவற்றை இரங்பாகுர் கவனித்துக் கொள்கிறார். இவ்வாறு இரங்பாகுர் முதல் சியெம் வரை படிப்படியான நிலைகளில் இப்பழங்குடியினரின் அரசியல் நிருவாகம் அமைந்துள்ளது.

காசிப் பழங்குடி வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் சமயத்துடன் தொடர்பு கொண்டதாகவே உள்ளது. காசிகளின் படைப்புக் கடவுள் ஊ பிலெய் நாங்கு (U Blei Nong) எனப்படும். முன்னொரு காலத்தில் இறைவன் உலகைப் படைத்த போது உலகம் பாவங்களற்று இன்பமயமாக விளங்கியதாகவும், மனிதன் இறைவனுடன் எளிதாகத் தொடர்பு கொள்ள முடிந்ததாகவும், பேசும் திறம் மிக்க விலங்குகள் மனிதர்களுடன் நட்புறவுடன் வாழ்ந்ததாகவும், ஆனால் மனிதர்கள் தம் சுய நலத்தால் அந்த நல்ல வாழ்க்கையை அழித்துக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

ஒரு செயலைத் தொடங்கும் முன்பு குறி பார்த்தல் காசிகளிடையே உள்ள முக்கியமான பழக்கமாகும். படைப்புத் தெய்வத்தைத் தவிர வேறு பல தேவதைகளையும் காசிகள் வழிபடுகின்றனர். அவற்றுள் சில; செல்வத் தேவதையான ஊ லெய் லாங்சுபா (U Lei Longspah), கிராமத் தேவதையான ஊ ரிங் கியு (U Ryng Kew), தண்ணீர்த் தேவதையான ஊ லெய் உம்டாங்கு (U Lei Umtong) போன்றவையாகும். ஒவ்வொரு நோய் உண்டாவதற்கும் ஒரு தேவதை காரணமாக இருப்பதாகக் கருதி, அத்தேவதைகள் சீற்றம் கொள்ளாது இருக்குமாறு ஆண்டுதோறும் அவற்றை வழிபடுகின்றனர். மூதாதையருக்கு உணவு படைத்து வழிபடுதலும் ஒரு முக்கிய சடங்காகக் கருதப்படுகிறது,

காசிகளின் மதகுரு இலிங்தோ (Lyngdoh) எனப்படுகிறார். ஆயுட்காலம் முடியும் வரை அவர் மதகுருவாக இருப்பார். சமயச் சடங்குகளை ஆற்றுவதும், சமுதாயக் கேடுகளைக் களைவதும் அவர்தம் பெரும் பணிகளாகும். சில பகுதிகளில் அவர் பழங்குடித் தலைவராகவும் இருப்பதுண்டு.

காசிப் பழங்குடிகளின் நடனம் தனிச்சிறப்பு வாய்ந்தது. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஆடலும் பாடலும் இம்மக்களிடையே இணைந்து காணப்படுவதால், காசிப்பள்ளத்தாக்கில் குழல்களின் இசையும் பறைகளின் முழக்கமும் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. காசிகளின் நடனங்களுள் நாங்ரெம் (Nongrem) என்னும் தேசிய நடனம் தலைசிறந்ததாகும். இந்நடனம் நடைபெறும் ஐந்து நாள்களிலும் சந்தை கூடுகிறது. வசந்த காலத்தில் சிற்றோடைகளின் கரைகளில் சாத்சுக் மின்சியெம் (Shad Suk Mynsiem) என்னும் மகிழ்ச்சி பொங்கும் நடனத்தை மூன்று நாள்கள் ஆடிக் களிக்கின்றனர். சமயச் சடங்குகளுடன் தொடர்புற்ற இந்நடனத்தில் கன்னியர் உள்வட்டத்திலும், காளையர் வெளிவட்-

டத்திலும் ஆடுகின்றனர். இது தவிர்த்துப் பல்வேறு நடனங்களையும் ஆடி மகிழ்கின்றனர். இந்நடனங்களில் பலவகையான இசைக்கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். இப்பழங்குடியினர் தங்கள் சமுதாய அமைப்பையும் சமயத்தையும் பாரம்பரியத்தையும் பெரிதும் மதிக்கின்றனர். எனவே மதமாற்றம், வெளிநாட்டார் தொடர்பு போன்றவற்றால் இவர்களின் பழங்குடி மரபுகள் பெரிதும் பாதிக்கப்படாமல் உறுதியாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ப.இரா.

*காசிபர்* பிரமதேவனின் புதல்வராகிய மரீசிக்கும் சுலை என்பாளுக்கும் மகனாகப் பிறந்தவர். இவருக்குத் தாட்சபர், தாரட்சியர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவர் தட்சப்பிரசாபதியின் பெண்மக்களான அதிதி, திதி, தனு, அனாயு என்னும் கலை, ஆயு என்னும் பிரதை, முனி, சுரசை என்னும் சிங்கிகை, இளை, குரோதவசை, தர்மிரை, சுரபி, வினதை, கத்துரு ஆகிய பதின்மூவரையும் மணந்தார்; அதிதியிடம் ஆதித்தியரையும், திதியிடம் தைத்தியரையும், தனுவிடம் தானவர்களையும், கலையிடம் சித்தர்களையும், பிரதையிடம் கந்தருவர்களையும், முனியிடம் அப்சரசுகளையும், சிங்கிகையிடம் இக்பக்கர்களையும் இராக்கதர்களையும், இளையிடம் மரம், செடி, கொடி, புல், பூண்டுகளையும், குரோதவசையிடம் சிங்கம், புலி, கரடி முதலான கொடிய விலங்குகளையும், தர்மிரையிடம் குதிரை, கழுதை, பறவை முதலானவற்றையும், சுரபியிடம் பசுக்களையும், வினதையிடம் அருணன், கருடன் ஆகியவற்றையும் கத்துருவிடம் நாகர்களையும் பெற்றார்.

இவர்களேயன்றி, வைசியாநரர் பெண்மக்களான காலை, புலோமை ஆகிய இருவரை மணந்து, காலையிடம் காலகேயரையும், புலோமையிடம் புலோமரையும் பெற்றார். பின்னர், பருவதன் என்னும் தேவ இருடியையும், விபாண்டகன் என்னும் பிரம இருடியையும் பெற்றார். மாயையால் மயக்கப்பட்டுச் சூரபன்மன் முதலானோரைப் பெற்றார். ஊர்வசியை மணந்து வசிட்ட முனிவரைப் பெற்றார். இவ்வாறு தேவர், மக்கள் முதல் எறும்பு ஈறாக உள்ள எல்லா உயிரினங்களையும் இவர் பெற்றார். அந்தணர்களுள் ஒரு சாரார் இவர்தம் வழித்தோன்றல்கள் என்னும் பொருள்படத் தம்மைக் 'காசிப கோத்திரம்' சார்ந்தவர் என்று சொல்லிக் கொள்வர்.

இவர் பரசுராமர் அசுவமேதயாகம் செய்யும் போது, அவரிடமிருந்து பூமியைத் தானமாகப் பெற்றவர். அதனால், பூமிக்குக் 'காசினி' என்ற பெயர் ஏற்பட்டது.

**காசிபர்[2]**: இவர் உரோமகருடனரிடமும் சுகரிடமும் கல்வி பயின்றவர்; சிற்பம் முதலான கலைகளில் வல்லவர். 'காசியப சில்பசாத்திரம்' என்னும் நூலில், தெய்வத் திருமேனிகளின் இலக்கணம், கோயில் கட்டும் இலக்கணம் முதலானவற்றைக் கூறியுள்ளார்.

**காசிபர்[3]**: பரிட்சித்து என்னும் மன்னன் பாம்பு கடித்து இறக்கப்போகிறான் என்ற மொழி கேட்டு அதனை நீக்கும்பொருட்டு வந்தபோது, வழியில் தட்சகன் என்னும் பாம்பு இவரை வழிமறித்து, ஒரு மரத்தைக் கடித்துத் தன் விடத்தினால் அதனை எரியச் செய்து, அதனைத் தளிர்க்கச் செய்யும்படி இவரிடம் சொல்லியது. இவர் தம் தவ வலிமையினால் அதனைத் தளிர்க்கச் செய்தார். அதுகண்டு தட்சகன், வியந்து, இவருக்கு வேண்டும் பொருள்களை அளித்து, பரிட்சித்திடம் செல்ல வேண்டாமென்று வேண்டிக் கொண்டதன் பேரில் திரும்பினார்.

**காசிபர்[4]**: பாரிசாத மலர் கொண்டுவரக் கண்ணபிரான் இந்திர உலகம் சென்ற போது, இந்திரனுக்கும் கண்ணனுக்கும் போர் நடந்தது. இவர் அதனை நிறுத்தி, இருவரையும் சமாதானப்படுத்தினார். இவர் வசுதேவருக்குப் புரோகிதராக விளங்கியவர். வீ.சொ.

**காசிபன் கீரன்**: சங்கப் புலவர் பெயர்களுள் பல கீரன் என்ற பெயருடன் அடைகள் சேர்த்து வழங்கப்பெறுதல் காணலாம். நக்கீரர், இளங்கீரனார், அந்தி இளங்கீரனார், இம்மென்கீரனார், கழார்க்கீரன் எயிற்றியனார், கழார்க்கீரன் எயிற்றியார், கிடங்கில் காவிரிக் கீரங்கண்ணனார், கீரங்கீரனார், குட்டுவன் கீரனார், குடவாயிற் கீரனக்கன், குறுங்கீரன். சேந்தன்கீரன், மதுரை நக்கீரர், தும்பி சேர் கீரனார், மூலங்கீரனார், மோசி கீரனார் என்பன அம்முறையில் வழங்கப்பெறும் பெயர்களாகும். காசிபன் கீரன் என்ற இப்புலவர் காசிப கோத்திரத்தைச் சேர்ந்த அந்தணராதலின் காசிபன் என்னும் அடைமொழி பெற்று அழைக்கப்பெற்றார்.

இவர் பாடியதாக நற்றிணை 248-ஆம் பாடல் ஒன்றே காணப் பெறுகிறது. கார்ப்பருவத்தே வருவேம் எனத் தலைவன் கூறிப் பிரிந்தான். மேகம் பருவமல்லாத காலத்தில் பொய்ம்மையாக இடி முழங்குகிறது. அந்த ஓசையை உண்மையான கார்ப்பருவத்து மேகஒலி எனக் கருதி, அறியாமை மிக்க மயில் கூட்டம் மகிழ்ந்து தோகை விரித்தாடுகிறது. இம் மழையைக் கண்டு இது கார்காலமென்று நான் மயங்க மாட்டேன்' என்று மழை மேல் வைத்துத் தோழிதலைவியிடம் பருவ மறுத்துக் கூறினாள். தோழிக்குத்

தலைவன் வாய்மொழியில் உள்ள நம்பிக்கையை அப் பாடல் புலப்படுத்துகிறது. இரா.சா.

**காசிம் படைப் போர்**: காசிம் என்பார் ஈராக்கு நாட்டிலுள்ள கர்பலா என்னும் ஊரில் இசுலாமியக் குடியாட்சித் தத்துவத்தைக் காப்பாற்று வதற்காக நடத்திய போரினை விளக்கும் நூல் காசிம் படைப்போர் அல்லது இமாம் காசிம் படைப் போர் எனப் பெயர் பெற்றுள்ளது.

படைப் போர் என்னும் இசுலாமியப் புத்திலக்கிய வகை போர்க்கள நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பிடம் தந்து பாடப்படுகிறது. பரணி என்னும் இலக்கிய வகை யிலுள்ள 'களம் பாடியது' என்னும் பகுதியை விரிவு படுத்திப் போர்க்கள நிகழ்ச்சிகளை விரிவாகப் பாடு கிறது இந்நூல். 'படைப்போர்' என்னும் இலக்கிய வகை மலையாள மொழியில் படைவெட்டு, படைக் களரி என்னும் பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.

இமாம் காசிம் படைப் போர் என்னும் பெயரில் வெளிவந்துள்ள படைப் போர் நூலினைப் பாடிய புலவர் அப்துல் காதிர் என்பவர் எனச் சிலர் கருது கின்றனர். ஆனால், இக்கருத்தை வலியுறுத்த வலிமை யான சான்று எதுவும் கிடைக்கவில்லை. கிடைக்கிற நூற்பதிப்புகள் யாவும் ஆசிரியர் பெயர் சுட்டாது, 'இது முன்னோர் பாடியது' எனக் கூறி அமைகின்றன. இந்நூலின் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டாகும்.

இசுலாமியப் புத்திலக்கிய வகையாகிய இமாம் காசிம்படைப்போர், ஆண்பால் படைப்போர் என்னும் பெரும் பிரிவில், வரலாற்றுப் படைப் போர் என்னும் வகையைச் சார்ந்தது. இது, 'காரணன் தூதரான அபீபுல்லா மருகரான, நேரணி அலியார் மைந்தர் நிறைந்த கண்மணியாய் வந்த, சீரணி அசனார் பாலர் செய்படைப்போர்' ஆகும்.

கர்பலா என்னும் ஊர் ஈராக்கு நாட்டின் தலை நகராகிய பாக்தாதுக்குத் தென்மேற்கே ஏறத்தாழ 100 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் முகம்மது நபியின் மகள் வயிற்றுப் பேரனாகிய உசைன் என்பாருக்கும் இசுலாமியக் குடியாட்சியை மறுத்துக் கலீபா என்னும் பெயரில் மன்னருக்குரிய தகுதியுடன் இசுலாமிய உலகினை ஆண்ட யசீது என்பாருக்கும் இடையில் இசுரி (Hijri) ஆண்டு 61-இல் (கி.பி. 680) பெரும் போர் நடைபெற்றது. அப்போர் இசுலாமிய வரலாற்றில் துன்பம் நிறைந்த கொடும் போராகும். அப்போர்க்களச் செய்திகளை இந்நூல் கூறுகிறது.

இது மூன்று விருத்தங்களும் 218 கண்ணிகளும் கொண்ட நூலாகும். வழக்குச் சொற்கள் மிகுதியாகக் கலந்துவர, நாட்டுப்பாடல் பண்புகளுடன் இந்நூல் பாடப்பட்டுள்ளது. பொதுமக்கள் படித்துப் புரிந்து கொண்டு பாடிக் களிக்க வேண்டும் என்னும் நோக் குடன் மிக எளியநடையில் இந்நூல் எழுதப்பட் டுள்ளது. இசுலாமியரிடையே வழங்கும் துனியா (உலகம்), மௌத்து (மரணம்), கபுறு (புதை குழி), சபூர் (பொறுமை) போன்ற அரபிச் சொற்கள் இந் நூலில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

காசிம் போர் நடைபெறவிருந்த அன்றே தம் பெரிய தந்தையாரின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். பின்னர்த் தம்பெரிய தந்தையாராகிய உசைனாரின் அனுமதியுடன் போர்க்களம் புகுந்தார். அவர் எதிர்த்து வந்த அசறக்கு என்னும் மாமல்ல னையும் அவன் மூன்று மக்களையும் கொன்றார்; போரில் எதிரிகள் பலரை வெட்டி வீழ்த்தினார். பின்னர் உர்வா என்பானால் வீரமரணம் எய்தினார். இச்செய்திகள் வீரச் சுவையும் துன்பச்சுவையும் ததும்ப இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றன.

காசிம் போரில் வெற்றி பெறவில்லை. எனினும் அவர் கொண்ட கொள்கை உயர்ந்தது. அக் கொள்கைக்காக அவர் உயிர்விட்ட செயல் சாலச் சிறந்தது. எனவே, அவர் பெயரால் இப்படைப் போர் பெயர் பெற்றுள்ளது. சிறந்த கொள் கைக்காக உயிர் நீத்தவர்களைக் கதைத் தலைவர் களாக ஏற்றுக் கொள்ளும் போக்கினைப் பிற்கால வரலாற்றுக் கதைப் பாடல்களில் காணலாம். இரா மப்பையன் அம்மானை, இரவிக் குட்டிப்பிள்ளை போர், கான் சாகிபு சண்டை, கட்ட பொம்மு கும்மி போல்வனவற்றில் கதைத் தலைவர்கள் கொல்லப் பட்ட போதிலும் அவர்களையே கதைத் தலைவர் களாக அவ்வந் நூல்களின் ஆசிரியர்கள் பாடி யுள்ளார். எஸ்.ஐ.

**காசிம் புலவர்**: இசுலாமியத் திருப்புகழ் நூல் களின் தந்தை எனப் போற்றப்பெறும் காசிம் புலவர் இசுலாமியத் தமிழ் இலக்கியத்தின் இசைத்தமிழ்ப் பிரிவிற்கு மிகச் சிறந்த தொண்டாற்றியவர். இவர் காயல்பட்டினத்தில் பிறந்தார்; தந்தையார் அப்துல் காதிர். இவர் பிறந்த ஆண்டு பற்றி அறிவதற்கான தெளிவான சான்று எதுவும் இல்லை. எனினும், இவர் இசுரி ஆண்டு 1177-இல் (கி.பி. 1763) காலமான தாகத் தெரிவதால், இவருடைய காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும். இவர் காயல்பட்டினத்தில் அடக் கம் செய்யப்பட்டார்.

இவர் எழுதிய 'திருப்புகழ்' என்னும் நூல் 140 பாடல்கள் கொண்டது. அதன் பாடல்கள் முகம்மது நபியின் வரலாற்றுண்மைகளையும், பண்புச் சிறப்பு களையும் விளக்குகின்றன. இவர் 40 பாடல்கள் அடங்கிய இன்னிசை என்னும் நூலினையும் எழுதி யுள்ளார்.

இறைவனையும் இசுலாமியச் சமயச் சான்றோர் களையும் பாடிப் பரவுவதில் இன்பம் காணும் இயல் புடைய இவர், பொருள் நச்சி மனிதரைப் பாடி, அவர் தலைவாசல் சென்றலைவதை இகழ்ந்து பாடி யுள்ளார். இசுலாமியக் கருத்துகளை உள்ளபடி உணர்ந்து, முகம்மது நபியின் பெருமையைப் பாடி, அவர் வழியில் நடந்து, நற்கதி பெறுவது வாழ்வின் பயனாகும் என இவர் வ்ற்புறுத்தியுள்ளார்.

திருப்புகழ் முன்னோடியாகிய அருணகிரியாரைக் காசிம் புலவர் பலவகையிலும் பின்பற்றியுள்ளார். பாடல்களின் அமைப்பு, கருத்துகளை வெளியிடும் முறை, சந்தச் சிறப்புப் போன்ற பலவகையிலும் அவரைப் பின்பற்றியுள்ளார். அருணகிரிநாதர் முருகன்மீது திருப்புகழ் பாடி, இறைவன்மீது திருப் புகழ் பாடும் மரபினைத் தோற்றுவித்துள்ளமை போன்று, இவர் முகம்மது நபியின்மீது திருப்புகழ் பாடி, சமயச் சான்றோர்கள் மீது திருப்புகழ்பாடும் இசுலாமியத் தமிழ் இலக்கிய மரபினைத் தோற்று வித்துள்ளார். இவரைப் பின்பற்றித் திருப்புகழ் பாடி யுள்ள இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் மிகப் பலரா வர்.

காசிம் புலவரின் திருப்புகழ்ப்பாடல் அனைத்தும் 'இறசூலே' என்னும் ஈறுகொண்டு முடிகின்றன. பெண்களைப் பழிக்கும் திருப்புகழ் மரபு இவர் பாடல் களிலும் காணப்படுகிறது. இசுலாமியச் சமயக் கருத்து களின் செறிவு இவருடைய திருப்புகழின் தனிச் சிறப் பாகும். தொல்காப்பியம், காரிகை போன்ற இலக் கண நூல்களிலும், சங்கத் தொகை நூல்களிலும், இசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல்களிலும் இவர் பெற்றிருந்த பயிற்சியை இவருடைய திருப்புகழ் வாயி லாக அறிய முடிகிறது. இவர் திருப்புகழின் கடைசிப் பாடலில் தம் பரம்பரையினரின் பெருமையைத் தொகுத்துச் சொல்லியுள்ளார்.

'முதலோனை உடைய காலம் நினையாத சறகின் நீதி நடவாத உறுகண் மாயம் ஒழியாத' தமக்கு, உண்மை உணர்த்தி 'வீடு பெற ஏது கனவி லோர் கை அடையாளம் அருள வேண்டும்' என இவர் முகம்மது நபியிடம் வேண்டுகிறார் (சறகு – இசுலாமியச் சமய நெறி). 'மரகத மயூர வடிவுக்கார, அளவிடவொணாத பொறுமைக்கார, மதுர கவி வாணர் புதையற்கார, புவியூடே மலரடி படாத புதுமைக்கார, அடியவர்கள் மீது கிருபைக்கார, மலை யினொடு பேசும் வலிமைக்கார' என இவர் முகம்மது நபியின் சிறப்புகளை வரிசைப்படுத்திக் காட்டுகிறார். திருப்புகழ் 43–ஆம் பாடலில் முகம்மது நபிக்கு முன் னர் வாழ்ந்த பல இறைதூதர்களின் பெருமைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். 'நினது வழியே நடக்க நினது பெயரே வழுத்த நினது புகழே படிக்க' அருள வேண்டும் என இவர் முகம்மது நபியிடம் வேண்டிப் பாடியுள்ளார்.

இவர் பிற இசுலாமியத் தமிழ்ப் புலவர்களைப் போலவே இசுலாமியப் பண்பும் தமிழ்ப் பண்பும் இணையப் பாடும் இயல்பினர். தமிழ்நாட்டு நெல்லும் பாக்கும் மக்கா நகரத்துப் பேரீச்சம் பழத்துடன் கைகோத்து உலவுவதை இவருடைய பாடல்களிற் கண்டு மகிழலாம்.

காசிம் புலவரின் 'இன்னிசை' என்னும் நூல், இவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பூவாறு என்னும் ஊருக்குச் சென்றிருந்தபோது, தம் நோய் நீங்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் முகம்மது நபியைப் புகழ்ந்து பாடப்பட்டது. அந் நூலில் இவர் காசிம் முசுதபா நபியே எனவும், நபி யுல்லாவே எனவும் முகம்மது நபியை விளித்து, அவர்தம் பெருமைகளை எடுத்துக் கூறியுள்ளார்.

எஸ்.ஐ.

**காசி மொழி**, பழைய அசாம் மாநிலத்தைச் சார்ந்த காசி-செயந்தியக் குன்றுப் பகுதிகளில் வாழும் காசிப் பழங்குடி மக்களால் பேசப்படுகிறது. ஏறத்தாழ 3 இலட்சம் பேர் இம்மொழியைப் பேசுகின்றனர். காசி மொழி ஆசுதிரிக்கு மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். இம்மொழிக் குடும்பத்திற்கு முதலில் மாக்சுமுல்லர் 'முண்டா' எனப் பெயரிட்டார். சார்சு கேம்பெல் 'கோலாரியன்' எனப் பெயரிட்டார். பின்னர் 'ஆசுதிரோ–ஆசியாடிக்கு' எனப் பெயரிடப் பட்டது. ஆசுதிரிக்கு மொழிக் குடும்பத்தை 'மான் கோமர் பிரிவு', 'முண்டா பிரிவு' என இருவகையாகப் பகுப்பர். மான்கோமர் பிரிவை மான்கோமர், பாலோங்க்-வா, காசி, நிக்கோபரி என நான்கு உட் பிரிவுகளாகப் பிரிப்பர். இக்காசி மொழி காசி உட் பிரிவைச் சார்ந்தது. இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் ஆசுதிரிக்கு மொழிக் குடும்பத்தைச் சார்ந்த இம்மொழி மட்டுமே பேசப்படுகிறது. காசிப் பழங்குடி யைச் சுற்றி வாழ்வோர் அனைவரும் திபெத்திய பர் மிய மொழி பேசுவோராவர். இம்மொழி பேசுவோர் அம்மொழிகள் பேசும் மக்களிடையே தீவில் வசிப்பது

போன்று வாழ்கின்றனர். குய்ப்பர் (Kuiper), பின்னோ (Pinnow), சய்டு (Zide) போன்ற மொழியியல் பேரறிஞர்கள் இம்மொழிக் குடும்பத்தை நன்கு ஆராய்ந்துள்ளனர். அண்மையில் இராபேல் (Rabel) காசி மொழியை ஆராய்ந்து நூலொன்று (Khasi: A language of Assam) வெளியிட்டுள்ளார். இது இம்மொழி பற்றி அறிவதற்குரிய நல்ல இலக்கண நூலாகும். எண்டர்சன் (Henderson) இம்மொழி பற்றி ஆராய்ந்து, பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இம்மொழி பேசும் படித்த மக்களே இருமொழி, மும்மொழி அகராதிகளைத் தயாரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காசி ஒரு தொனி (Tone) மொழியாகும். பெரும்பாலும் இம்மொழியில் ஓரசைச் சொற்களே மிகுதியாக உள்ளன. இம்மொழியிலுள்ள 'அ'கர ஒலி அசாம், வங்க மொழிகளைப் போன்று ஒலிப்பதில்லை. 'இ'கர ஒலியைக் கூட நீட்டியே உச்சரிக்கின்றனர். இம்மொழியில் முன்னொட்டாலும் பெயரடையாலும் பால் காட்டப்படுகிறது. துணைச்சொல் காசி மொழியில் முன்னொட்டாகப் (Prefix) பயன்படுத்தப்படுகிறது, மற்ற மொழிக் குடும்பங்களில் பின்னொட்டாகப் (Suffix) பயன்படுத்தப்படுகிறது. ன்கா 'நான்', ன்கி 'நாங்கள்' மே, பா (Pha) 'நீ', க 'அவன், அவள், அது', கி 'அவர்கள்' என்பன மூவிடப் பெயர்களாக (Pronouns) இம்மொழியில் காணப்படுகின்றன. இம்மொழியில், எழுவாய், செயப்படுபொருள், கருவி, கொடைப்பொருள், நீங்கற்பொருள், உடைமைப் பொருள், இடம் என ஏழு வேற்றுமைகள் உள்ளன. வேற்றுமை முன்னொட்டு மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. ப (Ba) என்னும் முன்னொட்டுப் பெயரடை (Adjective) உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. இம்மொழியில் எழுவாய்-பயனிலை-செயப்படுபொருள் என்ற முறையில் வாக்கியங்கள் அமைந்துள்ளன.

திபெத்தோ-பர்மிய மொழிகள் பேசும் பகுதியில் இம்மொழி பேசப்படுவதால் அம்மொழிச் சொற்கள் நிறைய இதில் கலந்துள்ளன. புதிய புதிய எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்த, வங்காளி, இந்தி மொழிகளிலிருந்தும் சொற்களைக் கடன் வாங்கியுள்ளனர். ஆனால், இம்மொழியும் புதிய கருத்துகளைக் கூறுமளவிற்குச் சொற்கோவையை வளப்படுத்தியுள்ளது.

காசி மொழியில் 1. இலிங்க்-ன்கம் (Lyng-ngam), 2. சின்டெங்கு (Synteng), 3. வார் (War) என்னும் மூன்று கிளைமொழிகள் உள்ளன.

ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே இம்மொழி அசாம்-வங்க வரிவடிவத்தில் எழுதப்பட்டது. கிறித்தவச் சமய ஊழியர்கள் உரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்தி, விவிலியம், நாட்டுப்பாடல்கள் போன்றவற்றை எழுதினர். காசிப் பழங்குடிகளின் பண்பாடு, வரலாறு பற்றிய பல நூல்கள் வெளிவந்துள்ளன.

சு.ச.

**காசியசு கயசு** பண்டைய உரோமாபுரியில் கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் அரசியல்வாதி. காசியசு கயசு (Cassius, Gaius) கவிதைகளையும் நாடகங்களையும் இயற்றியுள்ளான். அரசியலில் தந்திரமாகச் செயலாற்றுவதில் இவனுக்கு மிக்க அனுபவமுண்டு. உரோமாபுரியின் தனிப் பெருந்தலைவனாக விளங்கிய சூலியசு சீசரின் பேராசையை உணர்ந்த இவன் அவர் மீது பொறாமை கொண்டு, அவரைக் கொலை செய்யத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இவனும் வேறு சில அரசியல்வாதிகளும் சேர்ந்து கி.மு. 44-ஆம் ஆண்டில் சூழ்ச்சி செய்து சூலியசு சீசரைக் கொலை செய்தனர். இக்கொலைக்கு இவனும் புரூட்டசு, காசுக்கா என்ற வேறு இரு அரசியல்வாதிகளுமே முக்கியமான காரணமாவர். புரூட்டசின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த காசியசு, கி.மு. 43-இல் ஆசியக் கடற்படைக் கப்பல் தலைவனாக அமர்த்தப்பெற்றான். சீசரின் வளர்ப்பு மகனான ஆக்டேவியசு சீசர் பழிக்குப்பழியாக கி.மு. 30-இல் இவனைக் கொலை செய்தான்.

தெ.பா.

**காசிராம்தாசு** சிறந்த வங்கமொழிக் கவிஞர். வங்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பல மகா பாரதங்களுள் இவர் மொழிபெயர்த்துள்ள மகாபாரதமே மிகச் சிறந்தது. இம்மொழி பெயர்ப்பு வெளிவந்ததால் வங்க மொழியின் சிறப்பு பெரிதும் மேலோங்கியது. முதல் நூலின் பாவத்தையும் சுவையையும் சிறிதும் சிதைக்காமல், தமது வளமான கற்பனைத் திறத்தால் இதனை உயர்ந்த வங்கமொழி மூலகாப்பியமாகவே ஆக்கியுள்ளார் எனலாம். இவர் வங்காள அறிஞர்களால் இணையற்ற கவிஞர் எனப் போற்றப்பெறுபவர். வீ.சே.

**காசி விசுவநாத முதலியார்**, கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், சென்னையிலுள்ள சைதாப்பேட்டையில் வாழ்ந்த புலவர். இவர் தந்தையார் தியாகராச முதலியார். விசுவநாதர் கவிதையிலும் உரைநடையிலும் பல நூல்கள் செய்துள்ளார். இவர்தம் உரைநடை நூல்கள் இவர் பெற்றிருந்த பல்துறைப் புலமையைக் காட்டுவனவாக உள்ளன. அப்பாசாமி பதிகம், எடின்பர்க்கு கோமகன் வந்தபோது பாடிய கும்மிப்பாட்டு

ஆகியன இவர் தம் செய்யுள் நூல்களாம். சமூகச் செய்திகளை அங்கதமாக அமைத்துச் சில நாடகங்களையும் இவர் இயற்றியுள்ளார். இடம்பாச்சாரி விலாசம் அக்காலச் செல்வர்களின் போலி வாழ்வினையும், தாசில்தார் நாடகம் அக்கால அரசு அலுவலகங்களில் நடைபெற்ற முறைகேடுகளையும் நகைச்சுவை ததும்ப எடுத்துக்காட்டும் சமூக நாடகங்களாக அமைந்துள்ளன. சதுர்வேத தாத்பரிய சங்கிரகம், தாருகா விலாசம், வேதப்பொருள் விளக்கம் நான்கு வேத ரகசியம் போல்வன வைதிக நெறியில் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டினை விளக்கும் நூல்களாகும். கூலிக்கு மாரடிக்கும் கூத்தாடிச்சிகள் நடிப்பு, பிரம்ம சமாச நாடகம் என்ற நாடகங்களையும் இவர் இயற்றியுள்ளார். இவரது பாக சாத்திரம் பல்வேறு சமையல் முறைகளை விளக்கும் ஒரு மொழிபெயர்ப்பு நூலாகும். மேக வெள்ளைக்கு மேலான பரிகாரம் என்பது மருத்துவத் தொடர்பாகவும், தாலுகாச்சட்டம் என்பது சட்டம் பற்றிய விளக்கமாகவும் அமைந்த நூல்களாகும். இவர் கி.பி. 1871–ஆம் ஆண்டு தொடங்கிச் சிறிது காலம் 'பிரம தீபிகை' என்ற இதழை வெளியிட்டுள்ளார். அ.மா.ப.


**காசி வித்தியாபீடம்** உத்தரப் பிரதேச மாநிலத்தில் வாரணாசி (காசி) நகரில் 1921–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. புதுதில்லியிலுள்ள பல்கலைக்கழகப் பணவுதவி ஆணையகத்தின் (University Grants Commission) 1956-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, காசி வித்தியாபீடம் (Kashi Vidyapith) 1963-இலிருந்து 1974–வரை தகுதி நிலைப் பல்கலைக் கழகமாக (Deemed University) இருந்து வந்தது. உத்தரப் பிரதேச மாநிலம் இயற்றிய 1973–ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, இது முழுமையான பல்கலைக் கழகமாகச் செயலாற்றி வருகிறது.

காசி வித்தியாபீடத்தில் பொருளியல், வரலாறு, தத்துவம், அரசியல், உளவியல், சமூகப்பணி, சமூகவியல் ஆகிய கலைத்துறைப் பாடங்களும் ஆங்கிலம், சமசுகிருதம் (Sanskrit) ஆகிய மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன. இப்பாடங்களில் இளங்கலை, முதுகலை, எம்.பில்., பிஎச்.டி. போன்ற உயர்கல்விப் பட்டங்கள் பெறுவதற்கானவசதிகள் உள்ளன. எஸ்.த.

**காசுக்கனி**: பிரான்சு நாட்டின் தென் மேற்குப் பகுதியில் உள்ள ஒரு மாநிலம் காசுக்கனி (Gascony) எனப்படும். இசுபெயின் நாட்டிலிருந்து கி.பி. 6–ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கு வந்த காசுக்கனியர் தம் பெயரை இப்பகுதிக்குச் சூட்டினர். தெ.பா.

**காசுகாயன்** மேற்கு ஆசுத்திரேலியாவில் ஓடும் ஓர் ஆறு. இதன் நீளம் 764.3 கி.மீ. அக்கண்டத்தின் வட கிழக்குப் பாலைநிலப் பகுதியில் தோன்றி, கார்னார்வன் வழியாக ஓடி, இந்து மாக்கடலில் கலக்கும் காசுகாயன் (Gascoyne) ஆற்றில் எப்பொழுதும் நீர் நிறைய இருப்பதில்லை. ஆனால் வெள்ளம் வரும்பொழுது நீர்ப்பெருக்கெடுத்து ஓடும். தெ.பா.

**காசுட்டில்** இசுபெயின் நாட்டில் உள்ள ஒரு பகுதி. முன்பு இது ஒரு தனி மாநிலமாக இருந்தது. பழைய காசுட்டில் (Old Castile), புதிய காசுட்டில் என இரு பிரிவுகள் இதில் உள்ளன. வடக்கில் உள்ளது பழைய காசுட்டில்; தெற்கில் உள்ளது புதிய காசுட்டில். இரண்டுக்குமிடையில் மலைகள் உள்ளன.




காசுட்டில்

பழைய காசுட்டிலின் பரப்பு 19245 ச.மைல்கள்; புதிய நகரின் பரப்பு 27,933 ச.மைல்கள். வடக்கில் பருத்தி உற்பத்தி நார்மடி (Linen) உற்பத்தி முதலியன நடைபெறுகின்றன. தெற்கில் ஒலிவம், குங்குமப்பூ, பருப்பு ஆகியன விளைபொருள்களாகும். இசுபெயின் நாட்டின் தலைநகரான மாட்ரிடு (Madrid) புதிய காசுட்டிலில் உளது. பல இடங்களில் காடுகள் உள்ளன. மக்கள் பண்டைக்கால முறையில் வேளாண்மை செய்கின்றனர். ஆயினும் நீர்ப்பாசன வசதிகள் பெருகியுள்ளன. உரோமானியர், மூர்கள் ஆகியோர் ஏற்படுத்திய நீர்ப்பாசன முறைகள் சிறந்த

பயன்களை அளித்துள்ளன. இங்குப் பாதரசத்தைத் தவிர வேறு கனிப்பொருள் எதுவும் இல்லை. பழைய காசுட்டில் தொடக்கத்தில் இலியோன் நாட்டுக்கு அடங்கியிருந்தது.

இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் விடுதலை பெற்று, பிறகு கி.பி. 1037-ஆம் ஆண்டில் காசுட்டீலுடன் ஒன்றாக இணைந்தது. ஆனால் இந்த ஒருமைப்பாட்டுக்கு இடையூறாகக் குலப் போட்டிகளும் கலகங்களும் நடந்ததால் உண்மையான ஒற்றுமை கி.பி. 1230-இல்தான் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சாதனைக்கு உரிய பேரரசன் மூன்றாம் பெர்டினாண்டு (Ferdinand III) எனப்படுவான். காசுட்டில் மன்னர்களின் வீரச்செயல்கள் காரணமாக, இசுபெயின் நாட்டிற்குள் வந்த மூர்கள் எனப்படும் முகமதியர் தோற்கடிக்கப்பட்டனர். புதிய காசுட்டில் மூர்களிடமிருந்து பிரிக்கப்பட்டது. காசுட்டிலும் ஆரகனும் கி.பி. 1479-இல் ஒன்றாக இணைந்தன. ஆரகனின் இரண்டாம் பெர்டினாண்டும் காசுட்டிலின் இசபெல்லாவும் மணம் செய்துகொண்டதால் அவ்விரு நாடுகளும் இணைந்தன. அவர்கள் பெயரன் சார்லசு, கி.பி. 1516-இல் இசுபானிய இராச்சியங்களுக்கு அரசனாக அமர்ந்தான். அவனே பிறகு ஐந்தாம் சார்லசு என்று ஆசுத்திரிய-இசுபானியப் பேரரசுக்குப் பேரரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

தெ.பா.


**காசுட்டில்லா இராமான்** தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள பெரு நாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சிறந்த அரசியல் அறிஞர். காசுட்டில்லா இராமான் (Castilla Ramon) கி.பி. 1797-இல் பிறந்து, இசுபெயினுக்குச் சென்று, அங்கு இராணுவச் சேவை செய்தார். இவர் அப்பணியினின்று கி.பி. 1821-இல் விலகி விடுதலைப் படையில் சேர்ந்தார். சோசுதெசான் மார்ட்டின் (Jose de San Martin) என்ற சுதந்திர வீரருக்கும் இவருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அவரையே தம் தலைவராகக் கொண்டு, இராமான் விடுதலைப் பணிகள் ஆற்றினார். பெருநாடு விடுதலை அடைந்தபின் கி.பி. 1845 முதல் கி.பி. 1851 வரையிலும், பிறகு கி.பி.1855 முதல் கி.பி. 1862 வரையிலும் இரண்டு தடவைகள் இவர் அந்நாட்டின் குடியரசுத் தலைவராகப் பணி புரிந்தார். இவருடைய முற்போக்குக் கருத்துகளின் காரணமாக மக்கள் பல நன்மைகளைப் பெற்றனர். இவர் புரிந்த பணிகளுள் இருப்புப் பாதைகள் அமைத்ததும், தந்தி முறையைப் புகுத்தியதும், கைத்தொழில்களைப் பெருக்கியதும், மக்கள் யாவருக்கும் வாக்குரிமை வழங்கியதும், சிவப்பு இந்தியர்கள் கப்பம் கட்டி வந்த வழக்கத்தை ஒழித்ததும், நீக்கிரோ அடிமை முறையை ஒழித்ததும் குறிப்பிடத் தக்கவையாகும்.

தெ.பா.

**காசுட்டுரோமா:** சோவியத்து உருசியாவின் தலைநகரான மாசுக்கோவுக்கு (Moscow)வடகிழக்கில் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட காசுட்டு ரோமாப் (Kostroma) பகுதியில் காடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மக்கள் மரத்தொழிலிலும் பருத்தி, உரோமத் துணிகள் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியின் தலைநகருக்கும் காசுட்டுரோமா என்றே பெயர். இப்பெயர் கொண்ட ஆறு ஒன்று இங்கே ஓடுகிறது. இந்த ஆறு வால்கா ஆற்றுடன் இந்த இடத்தில் கூடுகிறது. இந்நகரம் பழம் பெருமை வாய்ந்தது. இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்தே பெருஞ் சிறப்புடன் விளங்கி வந்துள்ளது.

தெ.பா.

**காசுப்பியன் கடல்:** ஐரோப்பா, ஆசியாக் கண்டங்களுக்கு இடையில், உருசியா, ஈரான் நாடுகளின் அண்மையில் உள்ள பெரிய உப்பு ஏரியே காசுப்பியன் (Caspian) கடலாகும். இது உலகத்




காசுப்பியன் கடல்

திலேயே மிகப்பெரிய உள்நாட்டு நீர்ப்பகுதியாகும். இதன் பரப்பு 372,960 ச.கி.மீ. இதன் பெரும் பகுதி சோவியத்து நாட்டில் உள்ளது. இதன் தென்கோடிப் பகுதி மட்டும் ஈரான் நாட்டைச் சேர்ந்துள்ளது. காசுப்பியன் கடல், கடல் மட்டத்திற்கு 28மீ. கீழே உள்ளது. இதன் மிகுதியான ஆழம் 975 மீ. இது தெற்கில் ஆழம் மிகுந்து காணப்படுகிறது. வடக்குப் பகுதியில் சராசரி ஆழம் 5.2 மீ. வோல்கா, யூரல், எம்பா, கூரா, தெரெக்கு (Terek) ஆகிய ஆறுகள் இக் கடலில் கலக்கின்றன. வரலாற்றுப் போக்கில் இதன் எல்லை அளவுகள் மாறி மாறி வந்துள்ளன. வோல்கா ஆற்றின் நீர் மிகுதியாக இதற்குக் கிடைத்து வந்தது. ஆனால், அண்மையில் அந்த ஆற்றில் பல அணைகள் கட்டப்பட்டதாலும், ஏரிகள் அமைக்கப் பெற்றதாலும், கடலுக்கு வரும் அதன் நீரின் அளவு குறைந்துவிட்டது. தெ.பா.

**காசுமீர்ப் பல்கலைக்கழகம்**: இந்தியா சுதந்திரம் அடைந்த அடுத்த ஆண்டான 1948-இல் சம்மு மற்றும் காசுமீர்ப் பல்கலைக்கழகம்(University of Jammu and Kashmir) ஏற்படுத்தப்பட்டது. ஆனால், 1969-ஆம் ஆண்டுப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி, காசுமீர்ப் பல்கலைக்கழகம் (University of Kashmir), சம்முப் பல்கலைக்கழகம் (University of Jammu) என இரண்டு பல்கலைக்கழகங்களாகப் பிரிக்கப்பட்டன. காசுமீர்ப் பல்கலைக்கழகம் கற்பித்தலைச் செய்வதோடு, பிற கல்லூரிகளுக்கு இணைப்புத் தகுதியும் (Affiliation) வழங்கி வருகிறது.

காசுமீர்ப் பல்கலைக்கழகம், சம்மு-காசுமீர் மாநிலத்தின் கோடைகாலத் தலைநகரான சிரீநகரிலிருந்து (Srinagar) 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பல்கலைக்கழக வளாகம் 125 ஏக்கர் பரப்பளவில் இமயமலைச் சாரலில் நகின் (Nagin), தால் (Dal) ஆகிய ஏரிகளுக்கு இடையே அமைந்துள்ளது.

காசுமீர்ப் பல்கலைக்கழகத்தில் தாவரவியல், வேதியியல், கணிதவியல், இயற்பியல், விலங்கியல் போன்ற அறிவியல் துறைகளும் வணிகவியல், பொருளியல், கல்வியியல், நிலவியல், வரலாறு, சட்டம், நூலகவியல், அரசியல் போன்ற கலைத் துறைகளும் அரேபிய மொழி, ஆங்கில மொழி, பாரசீக மொழி (Persian), காசுமீர் மொழி (Kashmiri), உருது மொழி போன்ற மொழித் துறைகளும் உள்ளன. இங்கு மைய ஆசிய ஆய்வுக் கல்வித்துறையும் (Central Asian Studies) உள்ளது.

காசுமீர்ப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் (Constituent Colleges) மொத்தம் எட்டு உள்ளன. இவற்றுள் ஆசிரியர் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, கலைக்கல்லூரி ஆகியன அடங்கும். இப்பல்கலைக் கழகத்தோடிணைந்த கல்லூரிகள் மொத்தம் 12 உள்ளன.

காசுமீர்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகளில் புகுமுக வகுப்புகள் உள்ளன. பல்கலைக் கழகத்தில் இளங்கலை, முதுகலை, ஆய்வு ஆகியவற்றில் உயர்கல்விப் பட்டங்கள் பெறுவதற்கான வசதிகள் உள்ளன. காசுமீர்ப் பல்கலைக்கழகம் 1976-ஆம் ஆண்டிலிருந்து அஞ்சல் வழிப் பட்டப்படிப்புக்கான கல்வியினையும் நடத்தி வருகிறது. இப்பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வியில் தகுதியுள்ள எந்த இந்தியக் குடிமகனும் சேர்ந்து கொள்ள அனுமதியுண்டு.

பல்கலைக்கழகத்தின் பயிற்றுமொழியாகப் பெரும்பாலான பாடத்துறைகளுக்கு ஆங்கிலம் மட்டுமே இருந்து வருகிறது. பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி மற்றும் தொழில் வழி காட்டுதற்காக ஒரு மையம் செயற்படுகிறது. ஏறத்தாழ இரண்டு இலட்சம் நூல்கள் உள்ள பெரிய நூலகமும் இங்கு உள்ளது. இப்பல்கலைக் கழகம் பல்கலைக்கழக ஆய்வு (University Review) என்னும் காலாண்டிதழை வெளியிடுகிறது. எஸ்.த.

**காசுமீர சைவம்**: சைவ சமயக் கோட்பாட்டில் தோன்றிய சில நுட்பமான வேறுபாடுகளினால் அச்சமயம், சித்தாந்தசைவம், வீரசைவம் முதலான பல வகையாகப் பிரித்துப் பேணப்பட்டு வருகிறது. அப்பிரிவுகளுள் ஒன்று காசுமீர சைவம் ஆகும். காசுமீரத்தில் நிலவியதால் இச் சமயம் காசுமீர சைவம் (Kashmir Saivism) என்று குறிப்பிடப்படுகிறது. இதன் புதுமையும் சிறப்பும் பலரைக் கவர்ந்தன. இச் சமயம் உருவாவதற்கு முன்னால் காசுமீரத்தில் சிவ-சக்தியை வழிபடும் ஒரு சைவ சமயம் நிலவியது. பிற்காலத்தில் எழுந்த பௌத்தமதக் கோட்பாடுகள் சில காசுமீர மக்களின் நம்பிக்கையைப் பெற்றன. ஆகையினால், பௌத்தமும் சைவமும் சேர்ந்து, ஒரு புதிய கோட்பாட்டினை உருவாக்கின. அதில் பௌத்த மதத்தில் காணப்படும் தியானமும், தத்துவமுறையும், சைவத்தில் காணப்படும் சடங்கு முறைகளும் ஒன்று சேர்ந்து காணப்பட்டன. அதுவே, நடைமுறையில் பின்னர்க் காசுமீர சைவம் எனப்பட்டது.

காசுமீர சைவ சமயத்திலும் சிவனே முழுமுதற் கடவுள் ஆவார். அவர் வசுகுப்தர் (Vasu gupta)

கனவில் தோன்றிச் சிவசூத்திரங்களை அறிவுறுத்தினார் என்றும், அவற்றை வசுகுப்தர் சங்கரோபல் மலையில் செதுக்கி வைத்தார் என்றும் கூறுகின்றனர். வசுகுப்தர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். அவர் எழுதிய சிவசூத்திரங்களை அவருடைய சீடர்கள் மக்களுக்கு அறிமுகப்படுத்தினர். அவர்களுள் சிறந்தவர் பட்ட கல்லடர் (Bhatta Kallata) என்பவராவார். சேமராசா (Kshemaraja) என்பவரும், பட்ட பாசுகரர் (Bhatta Bhaskara) என்பவரும் சிவசூத்திரங்களுக்கு உரை எழுதியுள்ளனர். சோமானந்தா (Somananda) என்பவர் சிவதிருசுடி (Sivadristi)என்ற நூலை இயற்றியுள்ளார். சிவசூத்திரங்களும் இசுபந்த காரிகா (Spandakarika) என்ற நூலும் காசுமீர சைவத்தை விளக்குகின்றன. சிவதிருசுடி என்ற நூல் பகுத்தறிவுக் கேற்றவாறு தத்துவக் கருத்துகளைத் தெளிவுபடுத்துகின்றது. வசுகுப்தர் மகன் உத்பல தேவர் 'ஈசுவர பிரத்திய பிஞ்ஞா காரிகை' என்ற நூலையும், உரையையும் எழுதியுள்ளார். அது முதல் காசுமீர சைவம் 'பிரத்திய பிஞ்ஞா தரிசனம்' (Pratyabhijna Darsana) என்றும் சொல்லப்படுகிறது.

சிவசூத்திரங்கள் காசுமீர சைவக் கொள்கைகளை மக்களுக்கு உணர்த்துவதற்கு மட்டிலும் தோன்றியன ஆகா; அனுபவ முறையில் மனிதனுள் அடங்கியிருக்கும் ஆன்மாவே கடவுள் என்று உணர்த்துவதற்காகவும் தோன்றின. சங்கரர் கூறுகின்ற அத்துவிதக் கருத்திற்கும் இந்தக் காசுமீர சைவக் கோட்பாட்டிற்கும் உடன்பாடு அமைந்து காணப்படுகிறது. மேலும், பந்தங்களிலிருந்து விடுபட்டு இறைவனைப் போல் எல்லாம் அறியும் தன்மையை ஆன்மா அடையத் துணை புரிகின்றது. ஆகையினால், இந்தச் சிவசூத்திரங்கள் ஒரு குறிக்கோளை அடையத் துணை புரிவதல்லாமல், செயல் தன்மையுடையனவாகவும் பயனுடையனவாகவும் அமைகின்றன.

காசுமீர சைவம் திரிகா (Trika) என்றும், இசுபந்தா (Spanda) என்றும், பிரத்திய பிஞ்ஞா (Pratyabhijna) என்றும் கூறப்படுகிறது. இந்தச் சமயம் பதி, பசு, பாசம் என்னும் அடிப்படையில் அமைந்திருப்பதனால் இது திரிகா என்று சொல்லப்படுகிறது. இதில் பதி பரமசிவத்தையும், பசு சிறைப்படுத்தப்பட்ட ஆன்மாவையும், பாசம் தளை அல்லது பந்தத்தையும் குறிக்கும். சீவன் தன்னைச் சிவனிலிருந்து வேறுபட்டவன் அல்லன் என்று உணர்ந்தவுடன், தளைகள் நீங்கப்பெற்று, முத்தனாகின்றான். இசுபந்தம் (Spanda) என்பதற்கு இயக்கம் என்பது பொருள். முதற்கடவுளாகிய சிவன் அவருடைய சக்தியால் வரையறையுள்ள உலகத்தை எண்ணற்ற பல் வேறு தோற்றங்களாகக் காணப்படுமாறு செய்கின்ற இயக்கம் இசுபந்தம் எனப்படும். உலகம் இறைவனிடமிருந்து வேறுபட்டதன்று. உலகின் நடைமுறைகள் இசுபந்த சக்தியினால் அமைகின்றன. அவற்றின் வேறுபாட்டிற்குக் காரணம் இசுபந்த சக்தியின் செல்வாக்காகும். மலத்தினால் சூழப்பட்ட ஆன்மா, மலம் நீங்கியவுடன் அதுவே தன்னைப் பரமசிவம் என்று உணருகிறது. பிரத்திய பிஞ்ஞா (Pratiyabhijna) மூன்று வகைப்படும். அவை, நேர்காட்சி (Pratyaksha), அநுமானம் (Inference), சப்தம் (Sound) என்பனவாம். உலக வெளிப்பாடு இறைவனின் ஐந்து விதச் செயல்களால் நிகழ்கின்றது. அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும். சிவன் சத்து, சித்து, ஆனந்தம், இச்சை, ஞானம், கிரியை முதலிய சக்திகளை உள்ளடக்கியவன். மனிதன் தத்துவ ஆய்வு செய்து படிப்படியாகத் தன் உண்மையான தன்மையையும் மெய்யான ஞானத்தையும் உணர்கிறான். இறுதியில் தானே சிவம் என்று உணருகிறான். இவ்வாறு ஆன்மா தன்னையே சிவமாக உணர்வதற்குத் துணைபுரிவதால் காசுமீர சைவம் பிரத்திய பிஞ்ஞா தரிசனம் எனப்படுகிறது.

காசுமீர சைவம் சைவ சமயத்தைப் போலவே 36 தத்துவங்களைக் கொண்டுள்ளது. அவை சிவதத்துவம் தொடங்கி, ஐந்து தன் மாத்திரைகள், ஐந்து இந்திரியங்கள், ஐந்து பூதங்கள் ஆகியவற்றை இறுதியாகக் கொண்டு அமைகின்றன.

அத்துவித வேதாந்தக் கருத்தின்படி, காணப்படும் உலகம் உண்மையானது அன்று (Illusion). காசுமீர சைவக் கோட்பாட்டின்படி, உலகம் உண்மையானது என்று கொள்ளப்படும். இந்தக் கொள்கை ஆபாச வாதம் (Abhasa Vada) எனப்படும்.

மகேசுரன் அருளில்லாவிடில் பேரின்பம் கிட்டாது. சீவன் முத்தன் மன அமைதியுடன், எந்தவிதப் பற்றும் இல்லாமல் உலகியற் கடமையைச் செய்து கொண்டிருப்பான். இந்நிலையை அடைய முன்பே உள்ள வினைகள், நிகழ்வினை, மெய்ப்பொருள் பற்றிய ஞானம், குருவின் போதனை, சுய முயற்சி, பயிற்சி, உள்நோக்கு (Introspection) முதலியவை காரணங்களாக அமைகின்றன.

ஆன்மாக்கள் முத்தியடைய நால்வகை உபாயங்கள் கூறப்பட்டுள்ளன. அவை, ஆணவம் (Anavopaya), சாத்தம் (Saktopaya), சாம்பவம் (Sambhavopaya), அனுபாயம் (Anupaya) எனப்படும்.

இரா.கோ.

**துணை நூல்:**

**Radhakrishnan**, S., Indian Philopshy, Blackie & Son Publishers Pvt. Ltd., Madras, 1977.

***காசுமீரம்*** வடமேற்கு இந்தியாவில் இமாலய மலைத் தொடர்களுக்கிடையே இயற்கைக் காட்சிகள் மிகுதியாகக் கொண்ட ஒரு பள்ளத்தாக்குப் பகுதி. பண்டைக்காலத்தில் இது ஓர் ஏரியாக இருந்தது. அந்த பள்ளத்தாக்கின் நீளம் 140 கி.மீ; அகலம் 32 கி.மீ இப்பொழுது உள்ள நிலப்பகுதி 3659 முதல் 4877 மீ. உயரமுள்ள மலைகளால் அரண் செய்யப்பட்டுள்ளது. முசுலிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்தபோதிலும், இது இந்து சமயச்சிற்றரசர் ஆட்சியில் இருந்து வந்தது. ஆங்கிலேயர் இந்தியாவை விட்டகலும்போது, காசுமீரத்தின் (Kashmir) பிற்கால நிலைமை பெரும் சிக்கலாகி, அது ஐக்கியநாடுகள் சபையின் தீர்ப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதற்கிடையில் பாகிசுத்தான் காசுமீரத்தின் ஒரு பகுதியைத் தன் வசப்படுத்திக் கொண்டது. எஞ்சிய இந்தியப் பகுதிக்குச்சிரீநகர் (Srinagar) தலைநகராக உள்ளது. இதன் வளமான பகுதியில் நெல், பிற தானியங்கள், பழவகைகள் மிகுதியாகப் பயிராகின்றன. இங்குள்ள இயற்கைக் காட்சிகளும் ஏரிகளும் சுற்றுலாப்பயணிகளை மிகவும் கவர்வனவாக உள்ளன. இப்பகுதி கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முகலாயப் பேரரசர்கள் குறிப்பாக, சகாங்கீர் (Jahanghir) அரசரின் தங்குமிடமாக இருந்தது. அவர் மனைவி நூர்சகானின் விருப்பத்திற்கிணங்க அழகிய தோட்டங்களும் கண்கவர் மாளிகைகளும் இங்கே அமைக்கப்பட்டன. இப்பள்ளத்தாக்கு வெளி உலகினின்று பிரிக்கப்பட்டிருப்பதால், ஒரு தனிமைத் தன்மை இங்கே நிலவுகிறது.'மனமகிழ் பள்ளத்தாக்கு' (Happy Valley) என்றும் இதைக் குறிப்பிடுவர். சிவபெருமானை மேலான ஒரே கடவுளாகக் கொள்ளும் காசுமீர் சைவ சமயம் இங்கே தோன்றி வளர்ந்தது.



காசுமீரம்

காசுமீரப் போர்வை பெயர்பெற்றது. இங்கு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த ஒரு மன்னன் துருக்கித்தானத்திலிருந்து நெசவாளர்களை இங்கு வரவழைத்துக் கம்பளிப் போர்வைத் தொழிலை வளரச் செய்தான். ஆனால், கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே காசுமீரக் கம்பளிப் போர்வைகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இத்தொழிலுக்கு ஆதரவு இல்லாததால், கி.பி. 1870-இல் கம்பளி நெசவுத் தொழில் காசுமீரத்தில் அழிவுற்றது.

காசுமீரி மொழி சமசுகிருதம், பாரசீகம், பஞ்சாபு, முதலிய பல மொழிகளின் கலவையாகும். காசுமீர இலக்கியம் ஓரளவு வளர்ச்சியுற்றுள்ளது.

தெ.பா.

***காசுமீரி மொழி*** இந்தியாவிலுள்ள சம்மு-காசுமீர் மாநிலத்தில் பேசப்படுகிறது. இம்மொழியை 24,38,360 பேர் (1971) பேசுகின்றனர்.

காசுமீரி எந்த மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. இம்மொழி தார்திக்கு (Dardic) மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததென்று ஒரு பிரிவினரும், இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததென்று மற்றொரு பிரிவினரும் கூறுகின்றனர். கிரீயர்சன் (Grierson) இந்தோ-இரானிய மொழிப் பிரிவைச் சார்ந்த தார்திக்குப் பிரிவைச் சார்ந்தது என முதலில் குறிப்பிட்டார். தார்திக்கு மூன்று மொழிப் பிரிவைச் சார்ந்ததாகும். அவை கபீர்ப் பிரிவு, கோவார்ப் பிரிவு, தார்திக்குப் பிரிவு எனப்படும். இம்மொழி தார்திக்குப் பிரிவைச் சார்ந்ததாகும். சுநீதிகுமார் சட்டர்சி போன்றோர் இம்மொழி இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததென்று கூறுகின்றனர்.

காசுமீரி மொழியில் எல்லா உயிர்களும் மூக்கின ஒலிகள் (Nasalised Vowels) ஆகும். இம்மொழியில் ஒலிப்புடை மூச்சொலிகள் (Voiced Aspirates)இல்லை. இடையண்ணமானவற்றுக்கும் இடையண்ணம் ஆகாதவற்றிற்கும் வேறுபாடு உண்டு. இம்மொழியில் உடனிலை மயக்கம் இல்லை. உயிரற்ற பொருள்களின் திணையை வழக்கு மூலந்தான் அறிந்துகொள்ள வேண்டும். காசுமீரி மொழியில் சுட்டு இடப்பெயரை மூன்று வகையாகப் பிரிப்பர். அவை அண்மைச்சுட்டு,

பார்வைக்குட்பட்ட சேய்மைச்சுட்டு, பார்வைக்கு அப்பாற்பட்ட சேய்மைச் சுட்டு எனப்படும். இம்மொழியில் நான்கு வேற்றுமைகள் உள்ளன (Nominative, Dative, Genitive and Ablative). வினையமைப்பில் திணைபால் விகுதி (Pronominal Suffix) இம்மொழியில் தன்மையிலும் படர்க்கையிலும் கட்டாயமில்லை. ஆனால், முன்னிலையில் கட்டாயம் இருக்கவேண்டும். அடிப்படைப் பெயரடைக்கும் ஆக்கப் பெயரடைக்கும் இம்மொழியில் வேறுபாடு உண்டு. ஏழு வினையடிகள் மெய்யெழுத்தில் முடிகின்றன. 'உன்' என்றவிகுதியை இணைத்துத் தொழிற்பெயர் (Verbal Noun) உருவாக்கப்படுகிறது. இறந்த காலம் இம்மொழியில் சாதாரண இறப்பு பொது இறப்பு, சேய்மை இறப்பு என மூன்று வகையாக உள்ளது. இம்மொழியில் கூட்டு வினைகளும் உண்டு. எண்ணுப் பெயரமைப்பு பைசாசா மொழியைப் போன்று உள்ளது. இம்மொழியின் வாக்கிய அமைப்பு இந்தி-உருது மொழியினின்றும் வேறுபடுகிறது. எழுவாய்-பயனிலை-செயப்படு பொருள் என்ற முறையில் வாக்கியங்கள் அமைந்துள்ளன.

காசுமீரி மொழி மிகுதியான சொற்களைத் தார்திக்கு மொழிகளிடமிருந்தும், சமசுகிருதம், பாரசீகம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிடமிருந்தும், கடனாகப் பெற்றுள்ளது. இம்மொழி பெரும்பாலான சமயச் சொற்களைப் பாரசீக, அராபி மொழிகளிலிருந்து கடன் வாங்கியுள்ளது. இசுலாமியக் காசுமீரிகளின் பேச்சில் மிகுதியான பாரசீகச் சொற்களையும், இந்து காசுமீரிகளின் பேச்சில் மிகுதியான சமசுகிருதச் சொற்களையும் காணலாம். அவ்வாறு கடன் பெற்ற சொற்களனைத்தையும் காசுமீரி மொழியின் ஒலியமைப்புக்கேற்றவாறு மாற்றம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காசுமீரி மொழியில், 1. கசட்வாரி (Kashtawari), 2. போகுலி (Poguli), 3. புன்சவாலி (Bunjawali), 4. சிராசி (Siraji), 5. இராம்பனி (Rambani) ஆகிய கிளைமொழிகள் காணப்படுகின்றன. கிளைமொழி ஆய்வு அறிவியல் அடிப்படையில் முறையாக ஆராயப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இம்மொழியில் சமூக-மொழியியல் ஆய்வு செய்யப்படவே இல்லை. சிராசிக் கிளைமொழியில் தார்திக்கு மொழிக் கூறுகள் காணப்படுகின்றன. இராம்பனி கிளைமொழியில் தோகரி மொழிக் கூறுகளைக் காணலாம். காசுமீர்ப் பள்ளத்தாக்கில் பேசப்படும் காசுமீரியை மூன்று பிரிவாகப் பிரிக்கின்றனர். அவை 1. மராசு (தென் பகுதியும் தென்கிழக்குப் பகுதியும்), 2. கம்ராசு (வடக்குப் பகுதியும் வடமேற்குப் பகுதியும்), 3. சிரீநகரும் அதையொட்டிய பகுதியும் ஆகும். சிரீநகர்ப் பகுதியில் பேசப்படும் கிளைமொழிக்குத்தான் செல்வாக்கு அதிகம் எனக் கூறலாம். இலக்கியங்களும் பொது மக்கள் தொடர்பு சாதனங்களும் இக்கிளைமொழி மூலம் நடைபெறுகின்றன. கச்ரு (Kachru) என்பார் இந்து காசுமீரிக்கும், முசுலீம் காசுமீரிக்குமிடையே உள்ள மொழியியல் வேறுபாடுகளைத் தம் நூலில் மிக விளக்கமாகக் கூறிச் செல்கிறார். இப் பேச்சுகளை முறையே சமசுகிருதம் கலந்த காசுமீரி என்றும், பாரசீகக் காசுமீரி என்றும் குறிப்பிடுகிறார். மேலே குறிப்பிட்ட கிளைமொழிகளைத் தவிரக் ககானி (Kaghani), கொகிசுத்தானி (Kohistani) போன்ற கிளைமொழிகளும் உள்ளன. இக்கிளை மொழிகளில் பஞ்சாபி மொழியின் தாக்கத்தைக் காணலாம்.

காசுமீரி மொழி பல்வேறு வரிவடிவங்களில் (Scripts) எழுதப்படுகின்றது. அவை வருமாறு: 1. சாரதா (Sarada), 2. தேவநாகரி (Devanagari), 3. உரோமன் (Roman), 4. பெர்சோ-அராபிக்கு (Perso-Arabic), 5. தகரி (Tahri).

காசுமீரி மொழியில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்தே இலக்கியங்கள் காணப்படுகின்றன. பழைய காசுமீரி சாரதா வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. இப்போது காசுமீரி மொழிப் பண்டிதர்கள் சாதகம் போன்றவற்றை எழுதச் சாரதா வரிவடிவத்தைப் பயன்படுத்துகின்றனர். காசுமீரி இந்துக்கள் தேவநாகரி வரிவடிவத்தைப் பயன்படுத்துகின்றனர். காசுமீர் முசுலீம்கள் பெர்சோ-அராபிக்கு வரிவடிவத்தைப் பயன்படுத்துகின்றனர். காசுமீரி மொழியை உரோமன் வரிவடிவத்திலும் எழுதுகின்றனர். தகரி வரிவடிவத்தையும் பயன்படுத்துகின்றனர். சம்மு-காசுமீர் அரசு பெர்சோ-அராபிக்கு வரிவடிவத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இப்போது இவ்வரி வடிவத்தில்தான் நூல்கள் வெளியிடப்படுகின்றன.

காசுமீரி மொழி இன்னும் முழுமையாக ஆராயப்படவில்லை என்றே கூறலாம். இம்மொழி பயிற்று மொழியாகவோ ஆட்சி மொழியாகவோ இல்லாத காரணத்தால், ஆய்வுகள் அதிகம் நடைபெறாமல் போய்விட்டது. மேலும், அரசியலும் ஒரு காரணம் எனக் கூறலாம். அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ப் (Illinois) பல்கலைக் கழகம் காசுமீரி மொழி ஆய்வில் ஈடுபட்டுக் காசுமீரி மொழியைப் பற்றிய நூல்களை வெளியிட்டு வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது. சு.ச.

**துணை நூல்கள்:**


**Chatterjee, Suniti Kumar**, Languages and Literatures of India, Calcutta, 1963,

**Grierson, G.A.**, Standard Mannal of the Kashmiri Language, 2 Vol. Oxford, Rohtak, 1973.

**Kachri, Braj B.**, A Reference Grammar of Kashmiri, Univesity of Illinois, 1968.

**Konl, Omkar, N.**, Linguistics Studies in Kashmiri, Delhi, 1977.

**காசூத்து, லாயாசு** (உலூயி) அங்கேரி (Hungary) நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர். காசூத்து, லாயாசு (Kossuth Lajos) உலக நாடுகளின் விடுதலை வீரர்கள் வரிசையில் வைத்துப் போற்றக் கூடிய பெருமை பெற்றவர். தம் இறுதிக்காலம் வரை ஓயாது தாய்நாட்டுக்காகப் பணிபுரிந்த இவர், மன உறுதியும் சொல்வன்மையும் அஞ்சாநெஞ்சமும் படைத்திருந்தார். இவர் காலத்தில் அங்கேரியில் அண்டைப் பேரரசான ஆசுத்திரியாவின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. இந்த ஆதிக்கத்தை எதிர்த்தே இவர் பல இன்னல்களுக்குட்பட்டார்; எனினும், விடா முயற்சியுடன் செயலாற்றினார். இத்தாலிய இளைஞர் சங்க அமைப்பாளர் மாசினியுடன் இவர் நட்புக் கொண்டு தம் தாய்நாட்டின் வருங்காலத்



காசூத்து, லாயாசு

தைத் திட்டமிட்டார். தொடக்கத்தில் வழக்கறிஞராக இருந்து பின் முழுமூச்சுடன் தேசிய இயக்கத்தில் இறங்கினார். நாட்டுப்பற்று மிக்க இதழின் ஆசிரியராக கி.பி. 1841 முதல் நான்கு ஆண்டுகள் இருந்து விடுதலைக் கனலை நாட்டில்எழுப்பினார். ஐரோப்பாவில் கி.பி. 1848-ஆம் ஆண்டு பெரும் புரட்சிகள் மூண்டிருந்தன. அங்கேரியில் புரட்சிக்கு வழிவகுத்து, இடைக்கால அரசில் நிதியமைச்சராகப் பதவி ஏற்றார். ஆசுத்திரியாவை கி.பி. 1849-இல், எதிர்த்து அங்கேரி ஒரு சுதந்திர நாடு என்று முழக்கம் செய்தார். ஆனால், இவருடைய இயக்கம் நசுக்கப்பட்டது. காசூத்து நாடு கடத்தப்பட்டு, அமெரிக்காக் கண்டத்திற்கு ஓட நேர்ந்தது. அங்கு இவருக்குச் சிறப்பான வரவேற்புக் கிடைத்தது. இங்கிலாந்து, துருக்கி முதலிய நாடுகளுக்கும் சென்று தமக்கு ஆதரவை இவர் தேடினார். இத்தாலி நாட்டுக்கு கி.பி. 1859-இல் சென்று அங்கிருந்தபடியே தம் தாய்நாட்டின் விடுதலைக்காகப் பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தார். தம் 92-ஆம் வயதில் கி.பி. 1894-இல் இவர் மறைந்தார்.

தெ.பா.

**காசோலைகள்**: ஒரு வாடிக்கையாளர் தாம் வைத்திருக்கும் வங்கி நடைமுறைக் கணக்கிலிருந்து (Current Account) பணம் பெறுவதற்கு எழுதியனுப்பும் சீட்டு காசோலை (Cheque) எனப்படும். வாடிக்கையாளரிடமிருந்து தேவை வைப்புகளைப் (Demand Deposits) பெற்றுக்கொள்வதும், அதிலிருக்கும் தொகையைக் காசோலைகள் மூலமாகத் திரும்பிப் பெற அனுமதிப்பதும், வணிக வங்கிகளின் அடிப்படை நடவடிக்கைகளாகும். எனவே, காசோலைகள் மூலம் வங்கிகள் பெரும்பாலும் இயங்குகின்றன என்பது மிகையாகாது.

வங்கிகளில் வைத்திருக்கும் பணத்தைச் சீட்டுகள் மூலம் எழுதிப் பெறுவது ஆங்கில நாட்டுப் பழக்க வழக்கத்தையொட்டிப் பரவியது என வங்கியியல் வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர். தொடக்க காலங்களில் பாதுகாப்பிற்காகப் பொற்காசுகளைப் பொற்கொல்லர்களிடம் கொடுத்து வைப்பது ஆங்கில நாட்டு மக்களின் வழக்கம். பின்னர், அயலார் ஒருவருக்குப் பணம் கொடுக்க வேண்டியிருப்பின் அவருக்குத் தனது வைப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரு குறிப்பிட்ட ஆளுக்குக் கொடுக்கும்படி வங்கிக்கு வேண்டுகோள் கடிதம் எழுதி அனுப்புவார்கள். அத்தகைய கடிதங்களிலிருந்து பிறந்தது தான் காசோலை. இவ்வாறு வங்கியிலிருக்கும் வைப்புத் தொகையைக் காசோலைகள் மூலம் பிறருக்கு மாற்றிக் கொடுக்கும் நடவடிக்கை எல்லா நாடுகளிலும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு, அடுத்த நிலையில் அது சட்டமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்திய மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்படி (Negotiable Instruments Act) ஒரு வங்கியின் மீது கேட்டவுடன் கொடுக்கப்பட வேண்டிய முறையில் வரையப்படும் மாற்றுச் சீட்டே காசோலையாகும் (பிரிவு – 6).

## காசோலைப் படிவம்

**இந்தியன் வங்கி**

எண். 83 சிக இ 212085 அண்ணாமலைநகர் கிளை குறியீட்டு எண்: 446
... . ..............19 ..

திரு ... ... ... ... ... ... ... ... ... ... க்கு அல்லது கொணர்வோருக்குத் தரவும்

உரூபாய்.. ... ... ... ... ... ... ... ... ... .(உரூ.................... .. . ......)

பதிவு. ... ... ... ... ...

தேதி ... ... ... ... ...

க.பு.எ. ... ... ... ... ... சே.க.எண் ... ... ...

காசோலைப் படிவத்திலுள்ளபடி, காசோலையின் முதல் வரிசையில் வங்கியின் பெயர், அது அமைந்துள்ள கிளை, வரிசை எண், குறியீட்டு எண் ஆகியவை அச்சடிக்கப்பட்டிருக்கும். வாடிக்கையாளர் தாம் யாருக்குப் பணம் கொடுக்க விரும்புகிறாரோ, அவர் பெயரைத் 'தரவும்' என்னும் சொல்லை அடுத்துள்ள காலியிடத்தில் எழுத வேண்டும். தாமே பணத்தைப் பெற விரும்பும்போது காலியிடத்தை நிரப்பாமல் விட்டுவிடலாம்; அல்லது 'எனக்கு' (Self) என எழுதிக் கொடுக்கலாம். உரூபாயை எண்ணாலும் எழுத்தாலும் எழுத வேண்டும். கொடுக்கப்பட்டிருக்கும் காசோலைப் படிவம் சேமிப்புக் கணக்குக்குரிய காசோலையாக இருப்பதால் தமது கணக்கு எண்ணை சே. க. எண். என்ற இடத்தில் குறிக்க வேண்டும். பதிவு, தேதி, க.பு.எ. ஆகியவற்றை வங்கி அலுவலர் நிரப்பிக் கொள்வார். வாடிக்கையாளர் தேதியைக் குறித்துக் கையொப்பமிட வேண்டும். பணத்தைப் பெறுவதற்கு முன் அதனைப் பெறுபவர் காசோலையின் பின்பக்கத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

ஒரு சட்டமுறைப்படியான காசோலை ஆவணத்தின் குறிப்பிடத்தக்க சிறப்புத் தன்மைகளாவன: (1) காசோலை எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட வங்கியின் மீது வரையப்பட்டிருத்தல் வேண்டும். தனி ஆட்கள் மீதோ, நிறுவனங்கள் மீதோ வரையப்படும் சீட்டுகள், பணத்தைப் பெறுவதற்காக இருப்பினும் அவை காசோலைகளாகக் கருதப்படமாட்டா. 2) காசோலை ஒரு மாற்றுச் சீட்டாக (Bill of Exchange) இருத்தல் வேண்டும். அதன்படி காசோலைகள் எழுத்து மூலமான ஆணையாக இருத்தல் வேண்டும். ஒரு வாடிக்கையாளர் வங்கிக்குச் சென்று வாய்மொழி மூலம் வைப்புப் பணத்திலிருந்து பணத்தை எடுக்க முடியாது. பணம் பெறுவதற்கு ஆணை பிறப்பிக்கும் முறையில் காசோலை எழுதப்பட வேண்டும். வரையறுக்கப்பட்ட படிவ முறையிலிருந்து எவ்வகையிலும் வேறுபட்டு எழுதப்படும் சீட்டுகள் காசோலையாக எற்றுக்கொள்ளப்பட மாட்டா. (3) காசோலையில் எவ்வகைக் கட்டுப்பாடும் இணைத்தல் இயலாது. ஏனெனில், அது ஒரு கட்டுப்பாடற்ற ஆணையாகும். எடுத்துக்காட்டாக, ஒரு காசோலையில் 'இதைக் கொண்டு வருபவர் இதனுடன் இருக்கும் பற்றுச் சீட்டில் கையெழுத்திட்டால் மட்டுமே பணம் வழங்கவும்' என்ற கட்டுப்பாடு இருப்பின் அது காசோலையாகாது. (4) காசோலைகளில் வாடிக்கையாளர்களின் கையொப்பம் இருக்க வேண்டும். கையொப்பமில்லாத காசோலைகள், வங்கியில் கொடுத்து வைத்திருக்கும் கையொப்பங்களினின்று மாறுபடும் கையொப்பங்களுள்ள காசோலைகள் ஆகியவை மீது பணம் வழங்க மறுக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. (5) காசோலைகள் வங்கிகளிடமிருந்து பெறும் பணத்திற்காக மட்டுமே வரையப்பட வேண்டும். வங்கியில் பாதுகாப்பதற்காக வைத்திருக்கும் பொருள்களைத் திரும்பப் பெற எழுதும் ஆவணம்

காசோலையாகாது. மேலும் எவ்வளவு தொகை வேண்டும் என்பதை எண்ணாலும் எழுத்தாலும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். (6) காசோலையில் பணம் பெறுபவரின் பெயரைத் திருத்தமாகக் குறிப்பிட வேண்டும். எனினும், ஒருவரின் பெயரைக் குறிப்பிடாது அவரது பதவியைக் குறிப்பிட்டுக் காசோலை வரையலாம். எடுத்துக்காட்டாக, 'தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, புவனகிரி' என ஒரு நிறுவனத்திற்காக எழுதும் காசோலை செல்லத்தக்கதே. மேலும், பெயரைக் கூறாமல் காசோலையை வைத்திருப்போருக்கோ, அவரது ஆணையைப் பெற்றவருக்கோ பணத்தை அளித்திடுமாறும் காசோலையை வரையலாம்.

சட்டம் வகுத்துள்ள காசோலைத் தன்மைகளை மனத்தில் கொண்டு காசோலை வரைபவர்கள் சில வரன் முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். ஒரு வாடிக்கையாளர் தம் வங்கி வழங்கியுள்ள அச்சடித்த படிவங்களையே காசோலையாகப் பயன்படுத்த வேண்டும். அது மோசடிகளைத் தவிர்க்கப் பயன் படுவதுடன், வாடிக்கையாளர் ஒரு காசோலையைச் சட்டத்திற்கேற்ற முறையில் வரைவதை எளிதாக்கு கிறது. வாடிக்கையாளர் வங்கியில் தம் கணக்கில் போதுமான தொகையிருக்கிறதா எனச் சரிபார்த்துக் கொண்டு அந்த அளவிற்கு மிகையாகாமல் காசோலை வரைதல் வேண்டும். அதிக தொகைக்குக் கணக்கை மீறி எழுதும் காசோலைகள் வங்கியால் மறுக்கப் பட்டு வாடிக்கையாளரின் புகழும் நாணயமும் பாதிக்கப்படுவதில் முடியும். எனவே, இதில் வாடிக்கையாளர் கவனத்துடன் இருத்தல் மிகத் தேவையானது.

ஒரு காசோலையை வாடிக்கையாளர் தம் கைப்படவே முழுவதும் எழுத வேண்டும் என்பது விதியன்று. கையெழுத்தைத் தவிரப் பிற விவரங்களை யார் வேண்டுமாயினும் எழுதலாம். காசோலை வழங்கப்படும் நாளில் தேதியிட்டு வழங்கப்பட வேண்டும். ஆனால், வாடிக்கையாளர் காசோலையில் பிந்தைய தேதியிட்டு அதைப் பின் தேதியிட்ட காசோலையாக (Post-dated Cheque) வழங்கலாம். எடுத்துக் காட்டாக 1.1.80 நாளன்று 15. 1. 80 என்று நாளிட்டுக் காசோலை வழங்கலாம். அந்தக் காசோலை 15. 1. 80 தேதிக்குப் பிறகுதான் வங்கியில் செல்லுபடியாகும். அதுவரை காசோலையைப் பெற்றவர் பொறுத்திருக்க வேண்டும். ஒரு காசோலை அது வழங்கப்பட்ட ஆறு திங்களுக்குள் வங்கியிடம் செலுத்தப்பட்டுப் பணம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அக்கால எல்லையைக் கடந்து வரும் காசோலையை நாட்பட்ட காசோலை (Stale Cheque) என வங்கி திருப்பியனுப்பிவிடும். நாளிடாமல் வரும் காசோலையும் செல்லத்தக்கதன்று.

காசோலை எழுதப்பட்ட பிறகு அதில் பெரும் மாற்றங்களை யாரும் செய்தல் கூடாது. காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை பெறுபவர் பெயர், தேதி முதலியவற்றில் செய்யப்படும் திருத்தங்கள் கருநிலைத் திருத்தங்களாகக் (Material Alterations) கருதப்படும். இத்தகைய திருத்தங்களை வரைபவர் தம் கையெழுத்தினைத் திருத்தத்தின் அருகிலிட்டுச் சான்றொப்பம் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாவிடின் காசோலை தன் தன்மைகள் யாவும் இழந்து ஒரு வெற்றுக் காகிதமாகிவிடும்.

கோ. கோ.

**துணை நூல்கள்:**

**Radhasamy**, **M.** & **Vasudevan**, **S.V.**, A Text Book of Banking, Chand and Company, New Delhi, 1984.

**Tannan**, **M. L.**, Banking Law and Practice in India, Thacker and Company Limited, Bombay, 1954.

***காஞ்சனமாலை*** என்பவள் பெருங்கதை என்ற காப்பியக் கதைத் தலைவி வாசவதத்தையின் உயிர்த் தோழியாவாள். ஒரு சிறந்த தோழிக்கு இருக்கவேண்டிய பண்புகள் யாவும் இவளிடத்துக் காணப்பட்டன. இன்சொல் கூறல், பேரழகுடைமை, தலைவியின் குறிப்பறிந்து நடத்தல், இன்பக் காலத்தும் துன்பக் காலத்தும் தலைவியை நீங்காது நிழல் போலிருந்து துணையாதல் முதலிய தலையாய குணங்களைப் பெற்றவள். ஒருசமயம் உச்சயினி நகரம் தீயால்கருகியபோது, உதயணன் வாசவதத்தையோடு பத்திராவதி என்னும் யானை மேல் ஏறித் தம்மூர் நோக்கிச் சென்றான். அப்போது வாசவதத்தைக்குத் துணையாக இக்காஞ்சனமாலையே உடன் சென்றாள். வாசவதத்தை தாய் தந்தையரைப் பிரிந்து செல்வதை நினைந்து துயருற்றபோது தெருட்டி அமைதிப் படுத்தியவள் இக்காஞ்சனமாலையே. 'முறைப்படி பெற்றோர் உனக்குத் திருமணம் செய்யவில்லை என்ற ஒரு குறை தவிர வேறு எந்த நிலையிலும் உனக்கு ஒரு குறையுமில்லை' என்று தேறுதல் கூறினாள். ஒருசமயம் யூகி, உதயணன் வாசவதத்தைபால் மிக்க காமங்கொண்டிருப்பது கண்டு சிறிது காலம் அவளைப் பிரித்து வைத்து, உதயணனை நாட்டு நலம் பேணும் நாட்டத்தில் ஈடுபடுத்த

நினைத்தான். அதனால், வாசவதத்தை இறந்து விட்டாளென்று கூறிப் பலரும் நம்புமாறு செய்தான். அப்போது காஞ்சனமாலை அடைந்த மனக் கலக்கத்துக்கு ஓர் அளவில்லை. உடனே அவளை வாசவதத்தைபால் யூகி சேர்த்தான். ஒருசமயம் உதயணன் மனைவியராகிய பதுமாபதி, வாசவதத்தை ஆகிய இருவரும் பந்தாட்டம் ஆடினர். அப்பொழுது இக் காஞ்சனமாலை வாசவதத்தை பக்கம் இருந்து கொண்டு கண்டோர் வியக்கும்படி ஆயிரத்தைந் நூறு கை அடித்தாள் என்று தெரிகிறது. அதிலிருந்து இவள் பந்தாட்டத்திலும் வல்லவள் என்பது புலனாகிறது. நீராடல், அலங்கரித்தல் முதலிய எல்லாப் பணிகளிலும் வாசவதத்தைக்குத் துணையாயிருந்து அவளைக் கண்ணை இமைகாப்பதுபோல் காத்து வந்த தலையாய தோழி ஆவாள்.

**காஞ்சனமாலை[2]**: மதுரையை ஆண்ட மலையத்துவச பாண்டியன் மனைவியின் பெயர் காஞ்சனமாலை என்பதாகும். இவளைப் 'பானுவழி வந்தொழுகு சூரசேனன் மகள்' என்று திருவிளையாடற் புராணம் கூறும். ஆகவே, சூரிய குலத்தில் வந்துதித்த சூரசேனன் மகளாவாள். முன்னைப் பிறவியில் பார்வதியையே மகளாகப் பெறத் தவமிருந்து அதற்கேற்பத் தடாதகைப் பிராட்டியாரை மகளாகப் பெற்றெடுத்த பெருமை வாய்ந்தவள்.

**காஞ்சனமாலை[3]**: பாரதக் கதை மாந்தருள் ஒருவரான கர்ணனின் மனைவி. இரா.ச.

**காஞ்சனன்** என்பவன் வித்தியாதர நகரங்களுள் ஒன்றான காஞ்சனபுரத்து வாழ்ந்தவன். இவன் மனைவி காயசண்டிகை என்னும் பெயரினள். காஞ்சனனும் காயசண்டிகையும் பொதியமலையின் வளங்காண ஒருசமயம் சென்றனர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பழுப்பதும் உண்பவர்க்குப் பன்னிரண்டு ஆண்டுகள் பசிப்பிணி நீக்கவல்லதுமாய ஒரு பெரு நாவற்கனியை விருச்சிகன் என்னும் முனிவர் ஒருவர் தாமுண்ணவிரும்பினார். அதைப் பறித்து ஒரு தேக்கிலையில் வைத்தபின் குளித்துவரப் போனார். அவ்வமயம் அக்கனியைக் காயசண்டிகை காலால் மிதித்துவிட்டாள். அதனைக் கண்ணுற்ற முனிவர் பன்னிரண்டு ஆண்டுகள் யானைத்தீ என்னும் நோயால் துன்புறுமாறு அவளைச் சபித்தார். உடனே அவள் பசித்துன்பத்தால் வருந்துவதைக் கண்டு, காஞ்சனன் அவளைக்காவிரிப்பூம்பட்டினத்தில் விட்டுவிட்டுப் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்துவந்து அழைத்துச் செல்வதாகக் கூறிச்சென்றான். அது வளமிக்க நகராதலின் அவள் பசித் துன்பத்தை ஒருவாறு நீக்கிக் கொண்டு வந்தாள். ஆண்டுக்கொருமுறை இந்திரவிழா நிகழும்போது காஞ்சனன் வந்து காயசண்டிகையைப் பார்த்துச் செல்வது வழக்கம். மணிமேகலை அமுதசுரபியைப் பெற்றதும் அதில் சுரந்த உணவைக் காயசண்டிகை பெற்று அருந்தினாள். உடனே அவளை வருத்திய யானைத்தீ நோய் நீங்கியது. பின்னர், அவள் மணிமேகலையிடம் தன் வரலாறு கூறித் தன்னூர் சென்றாள். காஞ்சனன், குறிப்பிட்ட காலமாயிற்றாதலின் தன் மனைவியை அழைத்தேக நினைத்துக் காவிரிப்பூம்பட்டினம் வந்தான். புகார் நகர இளவரசன் உதயகுமரன் மணிமேகலையை விரும்பி அடிக்கடி அவளிருக்குமிடம் சென்று காதல்மொழி பேசித் தொல்லை கொடுத்துவந்தான். மணிமேகலை அவன் பேச்சுக்குச் செவிசாய்ப்பதில்லை. ஒருசமயம் உதயகுமரன் வந்தபோது மணிமேகலை காயசண்டிகை உருவத்தோடு உலக அறவியிலிருந்து யாவருக்கும் உணவு வழங்கிக் கொண்டிருந்தாள். அதைக் கண்ணுற்ற காஞ்சனன் அவளைத் தன் மனைவி என நினைத்துப் பேசியும் அவனை ஏறிட்டுப் பார்க்காது, உதயகுமரனிடம் யாக்கை நிலையாமை பற்றி அறிவுறுத்திக் கொண்டிருந்தாள். அது கண்டு சினந்த காஞ்சனன் அவ்வறவியில் ஒளிந்து நின்றான். அன்று இரவு உதயகுமரன் உலக அறவிக்கு வரவே, அவனை வாளால் வெட்டி வீழ்த்தினான். பின்னர் மணிமேகலை காயசண்டிகை உருவெடுத்து வந்ததையும் தன் மனைவி வித்தியாதரவுலகு சென்றதையும் கந்திற்பாவை என்னும் தெய்வத்தால் தெரிந்து தன் செயலுக்கு மிக வருந்திச் சென்றான். இக் கதைக் குறிப்புகள் மணிமேகலைக் காப்பியத்தில் காணப்படுகின்றன. புரூரவா என்பவனின் மகன் அமவசுவின் பேரன் ஒருவன் காஞ்சனன் என்ற பெயர் பெற்றிருந்தானென்று தெரிகிறது. பீமன் மகன் ஒருவனும் காஞ்சனன் என்னும் பெயரோடு விளங்கினான். இரா.ச.

**காஞ்சி**: காண்க: காஞ்சிபுரம்.

**காஞ்சிப் புராணம்** காஞ்சித் தலத்தைச் சிறப்பித்துக் கூறும் புராணம் ஆகும் காஞ்சிப்புராணத்தை இயற்றிய ஆசிரியர் சிவஞானமுனிவர். இவர் பாடியது முதற்காண்டம் என்றும், இவரையடுத்து இவர்தம் மாணவர் பாடிய காஞ்சிப் புராணம் இரண்டாம் காண்டம் என்றும் கூறுவர். ஆனால், புராணத்தின் போக்கை வைத்துப் பார்த்தால் அக்கூற்று வலிவுடையதாகத் தோன்றவில்லை. வடமொழியில் காஞ்சி மான்மியம் பலரால் செய்யப்பெற்றுள்ளது. அவற்றுள் காணப்படுகிற காஞ்சிப்பதியின் பெருமையைக் கருவாகக் கொண்டு சிவஞான முனிவர் மிக விரிவாக

இப்புராணத்தை இயற்றியுள்ளார். காஞ்சிப் புராணத்தில் 2742 பாடல்கள் காணப்படுகின்றன. சேக்கிழாரின் பெரிய புராணம் போன்றே சிவஞானமுனிவரின் காஞ்சிப்புராணமும், தமிழில் புராணத்தின் தன்மையை உயர்த்தி உள்ளது எனக் கூறலாம். வடமொழி நூல்களில் காணப்பெறாத சில பகுதிகள் தமிழ்ப் புராணங்களில் இடம்பெற்றுள்ளன. நாட்டுப் படலம், நகரப் படலம் என்ற இருகூறுகளைத் தமிழ்ப் புலவர்கள் சிறப்புற அமைத்துப் புராணங்களுக்கு இலக்கியத் தகுதியை மிகுத்துள்ளனர். காஞ்சிப் புராணத்தில் நாட்டுப்படலம் ஐந்திணை ஒழுக்கம் கூறும் நிலையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காஞ்சியின் கிழக்கே உள்ள திருநெறிக் காணாக் காடு என்ற தலம் முதற்கண் குறிக்கப்பட்டுள்ளது. அதனின்றும் வலமாக வந்து காஞ்சியிலுள்ள ஏகாம்பரர் தலம் வரை எழுபதுக்கும் மேற்பட்ட தலங்களின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்னும் கோட்பாடே இந்நூலின் அடித்தளமாக அமைந்துள்ளது. திருமாலின் பத்து அவதாரங்களும், திருமால் அவ்வவ்வவதாரங்களில் கோயில்கொண்ட இடங்களும் காஞ்சியம் பதியில் உள்ளமையை இந்நூல் சுட்டுகிறது.

சைவ சித்தாந்தக் கருத்துகளை மிக எளிமையாக முனிவர் பல இடங்களில் சொல்லிச்செல்கிறார். பதி உண்மை, பசு உண்மை, பாச உண்மை என்ற முக் கருத்துகளையும், சைவசித்தாந்த நூலான சிவஞான போதத்தில் உள்ளவாறே மூன்று பாடலில் கூறியுள்ள திறம் வியந்து போற்றுதற்குரியதாகும். தெய்வங்களின் பெயர்களாகவும், தலங்களின் பெயர்களாகவும் நூற்றொரு பெயர்களை இந்நூல் சுட்டுகிறது. இப்பெயர்களுள் திருமால், காமாட்சியம்மை போன்ற பெயர்களும் அடங்கும்.

சிவபெருமான் கண்களை விளையாட்டாக உமையம்மை பொத்தியமையால் அனைத்து உலகங்களும் இருண்டன. இது மிகச் சிறுபோதே நடைபெற்றாலும், உலகிலுள்ளாருக்குப் பல ஆண்டுகளாக முடிந்தது. அக்குற்றத்திற்குக் கழுவாய் தேட இறைவி, இறைவனைப் பூசித்தற்குத் தேர்ந்தெடுத்த தலமே இக்காஞ்சிப் பதியாகும். இவ்வரலாறு இப்புராணத்தின் தழுவக் குழைந்த படலம் என்ற பகுதியில் மிக விரிவாகப் பேசப்படுகிறது. இறைவி, இறைவனை வழிபடுகிற முறைமையைக் கூறுமுகமாகப் பூசனை முறைகளை முனிவர் தெளிவாக இப்பகுதியில் விளக்கியுள்ளார். இறைவி வழிபடுங்கால் இறைவன் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தத் தாம் தோற்றுவித்து வழிபடும் இறையுருவை வெள்ளம் அடித்துச் சென்று விடுமோ என்ற அச்சத்தால் அதனைத் தழுவிக் கொள்கிறாள். அதனால், வளைத் தழும்பும், முலைத் தழும்பும் பட இறைவன் காட்சி தருகிறான்.

இப்புராணத்தின் இறுதிப் பகுதியில் தலச் சிறப்புக் கூறப்பெறாத நிலையில் இரு படலங்கள் காணப்பெறுகின்றன. அவற்றுள் ஒன்று ஒழுக்கப்படலம்; மற்றொன்று சிவ புண்ணியப் படலம். மக்கள் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறையை ஒழுக்கப் படலத்தால் அறியலாம். இறுதிப்படலத்தில், பதி புண்ணியம், பசு புண்ணியம் என்ற இரண்டனுள் பதி புண்ணியம் எவ்வாறு சிறந்தது என்பது விளக்கப்படுவதோடு, இறைவனின் உருவத் திருமேனிகள் இருபத்துநான்கின் இயல்புகள் அழகுறக் காட்டவும் பெற்றுள்ளன.

காஞ்சிபுரத்தில் ஒற்றைமாவின்கீழ் இறைவன் கோவில் கொண்டு விளங்குகிறான். அதனால், ஏகம்பர் என்னும் பெயர் இறைவனுக்கு விளங்குகிறது. மாமரம் தலமரமாகப் போற்றப்படுகிறது. மாவின் கிளைகள் வேதங்களின் நான்கு பிரிவுகளாகவும், அவற்றின் சாகைகளாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன. கள்ளக்கம்பர், வெள்ளக்கம்பர், நல்ல கம்பர் என்று மூன்று உருவத் திருமேனிகள் இங்கே சிறப்பாகக் குறிக்கப்பெற்றுள்ளன. திருக் குறிப்புத் தொண்டர் இத்தலத்தில் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏகாம்பரேசுவரர் கோயில், அடுத்துக் குமர கோட்டம், அடுத்துக் காமாட்சியம்மன் கோயில் என்ற மூன்றும் நிரல்பட அமைந்துள்ளமை இவ்வூரின் தனிச் சிறப்பாகும். கோவில்கள் அமைந்த முறையே சோமாசுகந்த வடிவமாக விளங்குகிறது. காமாட்சியம்மன் கோவில் நடுநாயகமாக விளங்குவதால் இவ்வூரில் உள்ள கோவில்களுள் தனியே இறைவியின் திருவுருவம் காணப்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

பண்டாசுரன் என்னும் அசுரன் எல்லோர் உடம்பிலும் நுணுக்கமாக உறைந்து அவர்கள் வீரியத்தை உண்ணவேண்டும் என்னும் வரத்தைப் பிரமனிடம் பெற்றமையால், தேவர்களும் மக்களும் அசுரர்களும் இறைவனிடம் அவனை அழிக்கவேண்டும் என வேண்ட, இறைவன் எல்லோரையும் யாக குண்டத்தில் பெய்து அழித்துப் பின்னர் அவர்களின் உள்ளே உறைந்த பண்டாசுரனையும் அழித்தார். பின்னர் உலகைத் தோற்றுவிக்க, இலளிதா தேவியைத் தோற்றுவித்து உலகை உண்டாக்கினார் என்னும் வரலாறு இந்நூலில் கூறப்பெற்றுள்ளது. அவ்வாறு

அழிக்கப்பெற்ற இடம் கச்சிமயானம் என்னும் பெயருடன் விளங்குகிறது. இந்நூலுக்கும் பழைய உரை ஒன்று உள்ளது. சு.சா.

**காஞ்சிபுரம்** தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் சென்னையிலிருந்துமேற்கு-தென்மேற்காக72 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் கலை, கல்வி, சமயம்,வரலாறு, நகர அமைப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறது. இது தென்னிந்தியாவில் மிகப் பழம்பெரும் நகரங்களுள் ஒன்றாகும். அரக்கோணம்- செங்கற்பட்டு இருப்புப்பாதை இந்நகரை இந்தியாவின் மற்ற நகரங்களுடன் இணைக்கிறது.

வேகவதி என்ற சிற்றாற்றங்கரையில் அமைந்துள்ள காஞ்சிபுரம் முத்தி தரும் ஏழு நகரங்களுள் ஒன்று. காசிக்கு இணையான புண்ணிய நகரமாக இது கருதப்படுகிறது. கச்சி மாநகர் எனவும், சத்திய விரத சேத்திரம் எனவும் இது கூறப்படும். 'ஆற்றுப் பூவரசு' எனப் பொருள்படும் 'காஞ்சி' என்ற சொல்லினைப் பெயராகக் கொண்ட இந்நகரம், ஒரு புண்ணியத் தலமாகப் பிரமனால் வழிபடப்பட்டதாக ஒரு மரபுக்கதை உண்டு. கச்சி, கச்சிப்பேடு, காஞ்சிமாநகர், பிரளய சிந்து, சிவபுரம் விந்துபுரம், மும்மூர்த்திசுவரம், காமக்கோட்டம்எனப் பல்வேறு பெயர்களில் இந்நகரம் கூறப்படுகிறது. சிரீவித்யா சம்பிரதாயத்தில் அமைக்கப்பட்ட திருச்சக்கரவடிவைக் கொண்டு இந்நகரம் அமைக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. கோயில்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியுற்ற இந்நகரம், கோயில் நகரம் எனவும் கூறப்படும். பண்டைக் காலத்தில் பல சமயங்களும் கலைகளும் பண்பாடும் இங்கு வளர்ந்தன.

மகாபாரதம், மகாபாடியம், அகநானூறு, குறுந்தொகை, மணிமேகலை, மூவர் தேவாரம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், பெரிய புராணம், நந்திக்கலம்பகம் முதலிய நூல்களில் காஞ்சிபுரத்தைப் பற்றிக் குறிப்புகள் உள்ளன.

பெரும்பாணாற்றுப் படையில் காஞ்சி நகரின் படை பற்றியும் நகர அரண்கள் பற்றியும், அமைப்புப் பற்றியும், நகரத்தைச் சுற்றிப் பாதுகாப்பாக இருந்த காடுகள் பற்றியும், இந்நகரத்தின் சாலைகள், அங்காடிகள் ஆகியவை பற்றியும் குறிப்புகள் பெருமளவில் உள்ளன. காவிரிப்பூம்பட்டினம் கடலால் அழிக்கப்பட்ட பின் அறவண அடிகள் என்ற பௌத்தத் துறவி, மாதவி, சுதமதி ஆகியோர் காஞ்சிக்குச் சென்றதாக மணிமேகலையில் கச்சி மாநகர் புக்க காதை செப்புகிறது. காஞ்சியைக் கண்ட மணிமேகலை, இந்நகரம் இந்திரனின் அமராவதி நகர் போன்று இருந்ததாகக் கூறுகிறாள். தேவாரத்தில் இந்நகரம் மதில் சூழ் காஞ்சி எனக் கூறப்படுகிறது.

சிறந்த நாகரிக மக்கள் இந்நகரில் பண்டைக் காலத்தில் வாழ்ந்ததற்கான தொல்லியல் சான்றுகள் இந்நகரின் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளன. இந்தியத் தொல்லியல் துறையின் தென்னகப் பிரிவும், சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையும் வெவ்வேறு காலங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டன. காஞ்சிபுரத்தில் பல்லவமேடு, காமகோடிமடம், காமாட்சியம்மன் கோயிற் பகுதி, வைகுந்தப் பெருமாள் கோயிற் பகுதி முதலிய இடங்களில் அகழாய்வுகள் நடத்தப்பட்டன. அகழாய்வுகளில் வீடுகளின் கட்டடப் பகுதிகளும், உறைக் கிணறுகளும், கறுப்பு, சிவப்பு மட்கலன்கள், கறுப்பு மட்கலன்கள்,சீனநாட்டுச் 'செலிடன்' மட்கலன், 'உரௌலட்டட்' மட்கலன், மற்றும் அரிட்டைன் மட்கலன், உள்ளூரில் செய்யப்பட்ட ஆம்போராச் சாடிகள் போன்றவையும் கிடைத்தன. இவற்றுடன் சுடுமண் பொம்மைகள், சங்கு வளையல்கள், இரும்புப் பொருள்கள், அணிமணி வகைகள் போன்றவையும் கிடைத்தன. புத்த தூபி காஞ்சிபுரத்தில் இருந்ததற்கான எச்சங்களும் அகழாய்வுகளில் வெளிப்பட்டன. சாதவாகனர் நாணயங்களும், பல்லவர்களின் காசுகளும் முதலாம் இராசராச சோழனின் செப்பு நாணயமும் இவ்வகழாய்வுகளில்



ஐயிராவதிசுவரம்

கிடைத்தன. இங்குக் கிடைத்த மட்கலத் துண்டுகளில் பிராமி எழுத்துப் பொறிப்புகள் காணப்பட்டன.

சங்க காலத்தில் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு இளந்திரையன் என்ற அரசன் ஆட்சி செய்தான். காஞ்சிக்கு அருகில் உள்ள தென்னேரி என்ற ஏரி திரையன் ஏரி என்று பல்லவர் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது. இவ்வேரியை இளந்திரையன் வெட்டியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இந்நகரம் பல்லவர்களின் தலைநகரமாக கி. பி. 4–ஆம் நூற்றாண்டு முதல் 10–ஆம் நூற்றாண்டு வரையில் இருந்தது. எனவே, 'காஞ்சிப் பல்லவர்' எனப் பல்லவர் கூறப்பட்டனர். குப்தப் பேரரசர் சமுத்திர குப்தர் காஞ்சியின்மீது படையெடுத்தபொழுது இதன் மன்னனாக விட்டுணுகோபர் இருந்ததாக அலகாபாதுக் கற்றூண் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. சிம்மவிட்டுணு, முதலாம் மகேந்திரவர்மன் ஆகியோர் காலத்தில் இந்நகரம் தமிழக அரசியலில் மேன்மையுற்றது. முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் காஞ்சியின் மேலாண்மை தொண்டை மண்டலத்தின் வடக்கிலும், தெற்கிலும் பரவிற்று. அய்கொளே கல்வெட்டில் சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி இந்நகரை வென்றதாகக் குறிப்பு உள்ளது. இக்காலத்தில் (கி. பி. 7–ஆம் நூற்றாண்டு) காஞ்சி நகருக்கு வருகை தந்த சீனப் பயணி யுவான்–சுவாங்கு இந்நகரின் பாதுகாப்பு அரண்களையும் நகர அளவினையும் பெருமையினையும் குறிப்பிட்டுள்ளார். இந்நகரில் அசோகர் காலப் புத்த தூபி இருந்ததாகவும் இவர் குறிப்பிட்டுள்ளார். இந்நகரம் கி.பி. 7,9–ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் மேலைப் பாதாமி சாளுக்கியர்கள், இராட்டிரகூடர்களின் படையெடுப்புகளுக்குட்பட்டது.

சோழர்களின் காலத்தில் (கி.பி.9ஆம் நூ.) காஞ்சிபுரம் அரசியல் பண்பாட்டின் மாறுதல்களுக்கு ஏற்பப் பல மாற்றங்களையும் வளர்ச்சியினையும் கண்டது. சோழர்களின் பெருநகரங்களுள் ஒன்றாகக் காஞ்சி விளங்கியது. முதலாம் இராசேந்திரன் தனது தக்காணப் படையெடுப்புகளை இந்நகரிலிருந்தே தொடங்கினான். இந்நகர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஒய்சாள அரசர் நரசிம்மன், காடவர் கோப்பெருஞ்சிங்கன், தெலுங்குச் சோழன் கண்ட கோபாலன் முதலியோரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்து கி.பி. 1310–இல் இசுலாமியர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டது. விசய நகரப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் இந்நகரம் தன் பழம்பெருமையினை மீண்டும் அடைந்தது. பின்னர் கி.பி.17–ஆம் நூற்றாண்டில் மராட்டியர் மற்றும் முகலாயர் ஆதிக்கத்திற்குட்பட்டு, கி.பி. 1752-இல் ஆங்கிலேயர் ஆளுகைக்குட்பட்டது. கருநாடகப் போர்களில் தோல்வியுற்ற பிரெஞ்சுப் படை இந்நகரின் பல பகுதிகளைத் தீயிட்டுச் சூறையாடியது. ஆங்கில-மைசூர்ப் போர்களின் போது ஐதர் அலியின் படைகளால் காஞ்சிக்கு அருகில் தோற்கடிக்கப்பட்ட ஆங்கிலத் தளபதி சர் எக்டர் மன்றோ (Sir Hector Munro) தன் ஆயுதங்களைக் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் குளத்தில் போட்டு விட்டு ஓடியதாகச் சிலர் கூறுவர். ஆங்கிலேயர் ஆட்சியில் மாவட்டத் தலைநகரமாக விளங்கிய இந்நகருக்கு ஒரு தனி நகராட்சி நிறுவனம் கி.பி. 1866-இல் தோற்றுவிக்கப்பட்டது. இன்று இந்நகரம் மாவட்டத் தலைமை நகரமாகச் செயற்படுகிறது.

முற்காலத்திலிருந்தே சமணம், பௌத்தம், சைவம் வைணவம் ஆகிய சமயங்களின் வளர்ச்சிக்கு நிலைக்களமாகவும், அவற்றின் சார்புடைய கலை, கல்வி, பண்பாடு ஆகியவற்றின் பிரதிபலிப்பு மையமாகவும் இந்நகரம் தொடர்ந்து திகழ்கிறது. சிவகாஞ்சி என்றும், விட்டுணு காஞ்சி என்றும் இந்நகரத்தின் மேற்கு, கிழக்குப் பகுதிகள் இன்றும் கூறப்படுகின்றன. அறிஞர்களையும் தத்துவவாதிகளையும் தோற்றுவித்த நகரம் காஞ்சியாம். மௌரியப் பேரரசில் அமைச்சராக விளங்கிய சாணக்கியர் இந்நகரில் பிறந்ததாரெனக் கூறுகின்றனர். இந்நகரில் பிறந்து, புத்த சமயக் கல்வி கேள்வியில் சிறப்புற்று ஆந்திரம், மகாராட்டிரம் போன்ற பகுதிகளுக்குச் சென்று பிறகு நாலந்தாப் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற திக்நாகர் (தின்னாகர் - கி.பி 500) என்பவர் சிறந்த கல்வியாளராக விளங்கினார். இந்நகரின் அரச குடும்பத்தைச் சேர்ந்த போதிதருமன் (கி.பி. 520) சீனாவிற்குச் சென்று புத்த சமயத்தைப் பரப்பி இந்நகரின் புகழை உயர்த்தியவனாவான். 'மத்தவிலாசப் பிரகசனம்' என்னும் வடமொழி நூல் குறிப்பிடும் 'காஞ்சி இராச விகாரம்' இந்நகரின் புத்த சமயக் கல்விக் கூடமாக விளங்கியது. சீனப்பயணி யுவான்–சுவாங்கின் நெருங்கிய நண்பரும், நாலந்தாப் பல்கலைக்கழகத்தின் தலைவருமான தருமபாலர் காஞ்சியைச் சேர்ந்தவராவார். இந்நகரின் ஒரு பகுதியாகிய சமணக் காஞ்சியில் சமணர்கள் பள்ளிகளை நிறுவி மக்களிடையே சமயக் கொள்கையையும் கல்வியையும் பரப்பி வந்தனர். கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் சமணக் காஞ்சிப் பருத்திக் குன்றில் (திருப்பருத்திக் குன்று) வாழ்ந்த வச்சிர நந்தி என்ற சமண குரவரைப் பற்றிப் பள்ளன் கோவிற் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

காஞ்சி மன்னர் முதலாம் மகேந்திரவர்மன் வடமொழியில் மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நூலை இங்கு இயற்றினார். தண்டி (Dandi), பாரவி போன்ற

வடமொழிப் புலவர்கள் பல்லவ அரசவையை அலங்கரித்தனர். சைவத் துறவிகள் (காபாலிகரும் பாசுபதரும்) கி.பி.7-ஆம் நூற்றாண்டில் இந்நகரில் தங்களின் சமயக் கொள்கைகளைப் பரப்பினர். சைவ சமய குரவர் மூவர் இந்நகரில் பக்தி இயக்கம் வளரக் காரணமாயினர்.

காஞ்சியிலிருந்த கடிகை சிறந்த பல்கலைக்கழகமாகவும் வடமொழிச் சாத்திரங்களைக் கற்றுத் தருவதில் பெயர் பெற்றதாகவும் விளங்கியது. கதம்ப மன்னர் மயூரசர்மன் இக்கடிகையின் மாணவனாவார். காஞ்சிக் கடிகையில் 10,000 பிட்சுக்கள் 300 மடங்களில் தங்கி ஆராய்ச்சி செய்தனர். திக்நாகருடைய யோக நூல்கள் இங்கிருந்த ஒரு சங்கராமத்தில் போதிக்கப்பட்டன. இவற்றுள் சிலவற்றைப் போதிதர்மர் என்பவர் கி.பி. 527-இல் சீனா, திபெத்து ஆகிய நாடுகளுக்கு எடுத்துச் சென்று பரப்பினார். ஆதிசங்கரர் இந்நகரில் காமாட்சியம்மன் சந்நிதியில் இயந்திரப் பிரதிட்டை செய்தார். அவரால் நிறுவப்பட்ட காஞ்சி காமகோடி பீடம் அத்துவிதச் சித்தாந்தக் கொள்கையைப் பரப்புகிறது. காவியாலங்காரம் என்ற வடமொழி அணி இலக்கணத்தைத் தமிழில் தண்டியலங்காரம் என மொழி பெயர்த்த பிறிதொரு தண்டி என்ற ஆசிரியர் இந்நகரைச் சேர்ந்தவர். பாரவி தம் நூல்களை இந்நகரில்தான் அரங்கேற்றினார். வைணவப் பெரியார் இராமானுசர் சில காலம் இங்குத்தங்கி இந்நகருக்குப் பெருமையூட்டினார். இவரே இங்குப் பல மடங்களையும் நிறுவினார் என்பர். இவர் மாணவர் வேதாந்த தேசிகரும் இங்கு வைணவ மடங்கள் பல நிறுவினார்.

**கோயில்கள்**: சமய வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் கோயில்களும் சிற்பங்களும் இந்நகரினை அழகுறச் செய்கின்றன. இங்குக் காணப்படும் கலையமைப்பு திராவிடக் கலைப் பண்பின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் சான்றாகும். கோயிற் கலையில் புதிய பாணியினைக் கொணர்ந்த முதலாம் மகேந்திரவர்மனின் கோயில்கள் இந்நகரில் காணப்பட



கைலாச நாதர் கோயில்

வில்லை. ஆயினும், அவன் காலத்துக் கற்றூண்களை ஏகாம்பரநாதர் கோயிலில் காணலாம். ஏகாம்பரநாதர், திருவெஃகா திருமேற்றளி, கச்சபேசுவரம் ஆகிய திருக்கோயில்கள் கி.பி.7-ஆம் நூற்றாண்டிற்கு முன் பாகத் தோன்றியிருக்க வேண்டும். பின்பு இவை கற்றளிகளால் புதுப்பிக்கப்பட்டன. மகேந்திரவர்மனின் வழித்தோன்றல்களாகிய பல்லவ மன்னர்கள் எழுப்பிய திருக்கோயில்கள் இங்கு மிகப் பலவாம்.

இராசசிம்மனால் எழுப்பப்பெற்ற கைலாசநாதர் திருக்கோயில், விமானம், திருச்சுற்றாலை, சிறு கோபுரம் முதலியவை பல்லவர் கட்டடக் கலையின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இக்கோயிலின் சிறிய கோபுர வாயிலுக்கு முன்னணியில் எட்டுச் சிறிய தளிகள் உள்ளன. இக்கோயிலின் கருவறைக் கல்வெட்டுகளில் இராசசிம்மேசுவரக் கிருகம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. கருவறையின் உள்ளே 16 பட்டைகளைக் கொண்ட இலிங்கம் உள்ளது. கருவறையைச் சுற்றி வலம் வரும் பாதை இரண்டடி அகலம் கொண்ட புழை அமைப்புடையது. இக்கோயிலின் திருச்சுற்றாலையைச் சுற்றி 58 சிறு கோயில்கள் உள்ளன. சிறிய தளிகள் மன்னர் இராசசிம்மர் மற்றும் அரங்கபாதை போன்ற பல்லவ அரசிகளின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளன. விமானத்திற்கும் கோபுரத்திற்கும் இடையில் உள்ள தளி மூன்றாம் மகேந்திரவர்மன் காலத்ததாகும். இத்தளியின் அதிட்டானம் கருங்கல்லினாலும் மற்றப் பகுதிகள் மணற் கல்லினாலும்(Sand Stone) கட்டப்பட்டவை. இக்கோயிலின் கல்வெட்டுகள் பூ வடிவ அமைப்பில் எழுதப்பட்ட கிரந்த எழுத்துகளை உடையவை. இக்கோயிலில் பல்லவர் கால ஓவியங்கள் பல அழிந்த நிலையில் உள்ளன. ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கவை சோமாசுகந்தர்,கின்னரர், இளவரசர் ஓவியங்கள் ஆகும்.



வைகுந்தப் பெருமாள் கோயில்

பரமேசுவர விண்ணகரம் எனப்படும் வைகுந்தப் பெருமாள் கோயில், திருமாலின் இருந்த, கிடந்த, நின்ற கோலங்களைக் கொண்டு, மூன்றடுக்கு விமானத்துடன் அழகுறக் காணப்படுகிறது, கைலாசநாதர் கோயிலை விட அமைப்பில் பெரியது. இக்கோயில் நந்திவர்ம பல்லவனால் கட்டப்பட்டது. இதன் சுற்றாலைச் சுவர்களில் காணப்படும் சிற்பங்கள் பல்லவர் வரலாற்றினை அறிய உதவும் சிறந்த சான்றுகளாக உள்ளன. பல்லவமல்லனின் துணைவியார் எழுப்பிய முக்தேசுவரம், உயரமான மேடையில் கட்டப்பட்ட கருவறை, அந்தராளம், சிங்கமுகத் தூண்கள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளது. அந்தராளப் பகுதியில் இராவண அனுக்கிரகம், நிருத்த மூர்த்தி ஆகிய சிற்பங்களைக் காணலாம். இராசசிம்மன் காலத்து மாதங்கேசுவரம் முக்தேசுவர அமைப்பினைப் பெற்றதாகும். இதேகாலத்தைச் சேர்ந்தவலீச்சுரம் ஆவுடையாரின்றி 32 பட்டை கொண்ட சிவலிங்கத்தையும், கருவறையின் உட்சுவரில் உமா மகேசுவரர் உருவத்தையும் கொண்டிருப்பதாகும். நகருக்கருகாமையில் கோனேரிக்குப்பம் என்ற இடத்தில் இராசசிம்மன் காலத்து இறவாத்தானம் பிறவாத்தானம் ஆகிய திருக்கோயில்களைக் காணலாம்,இக்கோயில்களைப் பற்றிப் பெரிய புராணத்திலும், காஞ்சிப்புராணத்திலும் கூறப்பட்டுள்ளன. மற்றும் பல பல்லவர் காலத்திருக்கோயில்களான ஐயிராவதீசுவரம், திரிபுராந்தகேசுவரம், சலகண்டேசுவரம் ஆகியன இந்நகரை அலங்கரிக்கின்ற பிற கோயில்களாகும்.

சோழர் காலக் கலை வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் திருக்கோயில்களையும் காஞ்சிபுரத்தில் காணலாம். சொக்கீசுவரம், அனேகதங்காவதம், கரகரேசுரம், பாண்டவப் பெருமாள் அநந்தன் கோயில் ஆகியவை சோழர் காலத்துத் திருக்கோயில்களில் முக்கியமானவையாம். முதலாம் பராந்தகன் காலத்துச் சொக்கீசுவரம் அழிவுற்றநிலையிலும்அழகுறக் காணப்படுகிறது. சைவ குரவர்கள் சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பெற்ற அனேகதங்காவதம், முதலாம் குலோத்துங்கன் காலத்தில் புதுபிக்கப்பட்டது. பாண்டவப் பெருமாள் கோயில் வைணவ ஆழ்வார்களால் பாடல் பெற்ற கோயிலாகும். இதனை ஆழ்வார்கள் திருப்பாடகம் எனக் கூறினர். கல்வெட்டுகளில் இறைவரின் பெயர் தூத அரி எனக் குறிப்பிடப்



வரதராசப் பெருமாள் கோயில் கல்யாண மண்டபம்.

பட்டுள்ளது. இக்கோயில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். கரகரேச்சுவரமும், வரதராசப் பெருமாள் கோயிலில் காணப்படும் அனந்தாழ்வாருக் குரிய சிறிய தளியும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்தனவாம்.

காஞ்சிபுரத்தில் மிகப்புகழ்பெற்ற ஏகாம்பரநாதர், காமாட்சியம்மன், வரதராசப் பெருமாள் திருக் கோயில்கள் விசயநகர மன்னர்கள் காலத்தில் புதுப் பிக்கப்பட்டு விரிவடைந்தன. ஏகாம்பரநாதர் கோயி லின் ஏகாம்பரலிங்கம் மணற்கல்லினாலான மிகப் பழமையான ஒன்றாம். ஒன்பது நிலைகளைக் கொண்டு உயரமான தென்னிந்தியக் கோயிற் கோபு ரங்களுள் ஒன்றாக விளங்கும் ஏகாம்பரநாதர் கோயி லின் தெற்குக் கோபுரம் விசயநக்ரப் பேரரசர் கிருட் டிண தேவராயரால் (கி.பி. 1509-1529) எழுப்பப்பட் டது. வரதராசப் பெருமாள் கோயிலின் கல்யாண மண்டபம் விசய நகரப் பேரரசுக் காலத்தில் கட்டப் பட்டது. கல்யாண மண்டபத்தூண்களில் குதிரை களுடன் கூடிய வீரர்களின் சிற்பங்கள் குறிப்பிடத்தக் கவை. இக்கோயில் வடகலை, தென்கலை வைணவர் களிடையே உள்ள காழ்ப்புணர்ச்சியின் இருப்பிடமாக இன்றுள்ளது. பெரிய புராணம் காலந்தொட்டே புகழ்பெறும் காமக்கோட்டம் (காமாட்சியம்மன் கோயில்) விசயநகர மன்னர் காலத்தில் புதுப்பிக்கப் பட்டது.

ஏகாம்பரநாதர் கோயில் வெளிச்சுற்றாலையி லும், கருக்கிலமர்ந்தவன் கோயிலிலும் காணப்படும் அழகிய புத்தரின் சிற்பங்கள் அமராவதிச்சிற்பக்கலைக் காலத்திற்கும் பிற்பட்டவையாம். திருப்பருத்திக் குன்றில் (சமணக் காஞ்சி) உள்ள இரு சமணக் கோயில்களுள் சிறியதான ஒன்று பல்லவர்காலக் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) கலைக் கூறுகளைக் கொண்டு மணற்கல்லினால் எழுப்பப்பட்ட மாடக் கோயிலாகும். இரண்டாவது தளத்தில் கருவறை யைக் கொண்டிருக்கும் இக்கோயில் எட்டாம் தீர்த் தங்கரர் சந்திரப் பிரபாதேவருக்கான சந்திரப்பிர



வலீச்சுரம்

பாலயமாகும். இரண்டாம் சமணக்கோயில் தாரு மரத்தினாலான மூர்த்தத்தைக் கொண்டுள்ள வர்த்த மானர் கோயிலாகும். இதன் கருவறை, அர்த்த



முக்தேசுவரர்

மண்டபம் ஆகியவை சோழர் காலத்தவையாம். இங்குள்ள இசை மண்டபம் விசயநகரப் பேரரசின் காலத்தைச் சார்ந்தது; ஓவியங்களும் அதே காலத் தவை. ஓவியங்கள் சமணத் தொடர்புடையவை.

இந்நகரம் நெசவுத் தொழிலுக்குப் புகழ் பெற்று விளங்குகிறது. நேர்த்தியான முறையில் நெய்யப் பட்டு, நுண்ணிய சரிகை வேலைப்பாடுகள் கொண்ட பட்டுச் சேலைகளுக்கும் பருத்தி நூற் சேலைகளுக் கும் இந்நகரம் புகழ்பெற்று விளங்குகிறது. காஞ்சி புரத்தில் பச்சையப்ப முதலியார் நிறுவிய கல்விக் கூடங்களும், கிறித்தவக் கல்வி நிறுவனங்களும், அரசு, தனியார் கல்வி நிறுவனங்களும் உள்ளன. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தத்துவ மையம் ஒன்றை இந்நகரில் நிறுவியுள்ளது. தமிழகத்தின் முதல்வராக விளங்கிய அறிஞர் அண்ணா இந்நகரைச் சேர்ந்தவர். அவர் பெயரால் இங்குப் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந் நகரத்தின் மக்கள் தொகை 131,013 (1981) சி.கே.சி.

**துணை நூல்கள்:**

**Gopalan R.**, History of the Pallavas of Kanchi, Madras, 1928.

**Mahalingam, T.V.**, Kanchipuram in early South Indian History, Madras, 1969.

**Meenakshi, C.**, Administration and Social Life Under the Pallavas, University of Madras, Madras, 1938.

**காஞ்சி மகாத்மியம்**: இந்நூல் தெலுங்கு இலக்கிய வரிசையில் ஒன்றாக இடம்பெறுகிறது. காஞ்சிபுரத்துக் கோயில்கள், கோயில்களுள் குடி கொண்டுள்ள கடவுளர் பற்றிய விவரங்களைச் சொல்லுவதாகத் தெலுங்கு இலக்கிய வரலாற்றால் தெரிய வருகிறது. இதனை எழுதியவர் தக்குபல்லி துக்கன(Duggupalli Duggana) என்பவராவார்.

இவர் ஒரு வைதிக பிராமணமரபினர். தந்தை: திப்பனாரியன்; தாய்: எர்ரம்மா. போதன, எரான என்னும் சிறப்புடைய தெலுங்குப் புலவர்கள் இவர்க்கு முற்பட்டவர்கள். இவர் தெலுங்கு இலக் கியப் புலவர்களில் தலைமை இடம்பெறக்கூடிய சிலருள் ஒருவராகிய சிரீநாதரின் உறவினர் எனத் தெரிகிறது. இவரது காலம் கி.பி. 1410க்கும் 1450க்கும் இடைப்பட்டதாகும்.

இந்நூல் செந்தலூர் கங்கய்ய என்னும் அமைச்சர் மகனாகிய தேவ அமார்த்தியனுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டது என்ற செய்தி உண்டு. இந்நூல் இன்று கிடைக்கவில்லை. இந்நூலில் உள்ள ஒருசில பாடல்கள், பெதப்பாட்டி சக்கன சேகரித்த 'பிரபந்த ரத்னாகரம்' என்னும் நூலில் இடம்பெற்றிருக் கின்றன. ந.த.

**காட்கில், என்.வி. (கி.பி. 1896-1966):** இந்தியாவின் தலைசிறந்த சுதந்திரப் போராட்ட வீரர்களுள் ஒருவரும் தலைசிறந்த அரசியல் தலைவர்களுள் ஒருவரும் ஆவார். மகாராட்டிர மாநிலத்திலுள்ள மல்கரகாரில் (Malharagarh) கி.பி. 1896-இல் பிறந்த காட்கில், பூனா, பம்பாய், பரோடா முதலான நகரங்களில் கல்வி பயின்றார். இவர் 1918-இல் பட்டம் பெற்று 1920-இல் சட்டம் பயின்று வழக்குரைஞரானார். வழக்கறிஞர் தொழிலில் 1948 முடிய ஈடுபட்டிருந்த இவர் சில சிக்கலான வழக்குகளையும் வென்று புகழ் பெற்றார். மகாராட்டிர மாநிலப் பேரவைச் செயற்குழுவின் உறுப்பினராகப் பணியாற்றிய காட்கில் (Gadgil, N.V.) எட்டாண்டுக்காலம் மகாராட்டிரப் பகுதிக் காங்கிரசுக் கமிட்டியின் தலைவராகவும் பதவி வகித்தார். மாநில அளவில் காங்கிரசின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட இவர், 1926-ஆம் ஆண்டு முதல் அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டியின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரசு இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றிப் பலமுறை சிறை வாழ்க்கையையும் மேற்கொண்டார். இவர் 1920க்குப்பின் அடிக்கடி சிறை செய்யப்பட்டார். பூனா நகராட்சி உறுப்பினராகப் பணிபுரிந்த இவர் நகராட்சி மன்றத்தின் துணைத் தலைவராகவும் பதவியேற்றார். பம்பாய் மாநில இளைஞர் இயக்கத்தின் (Youth Movement in Bombay Presidency) துணைத் தலைவராகவும் பல ஆண்டுக்காலம் இவர் பதவி வகித்தார்.

மக்கள் தொண்டில் மகிழ்ச்சி கண்ட இவர் 1934-ஆம் ஆண்டிலும் 1946-ஆம் ஆண்டிலும் மத்திய சட்டமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பல்லாண்டுக் காலம் காங்கிரசுக் கட்சியின் கொறடாவாகவும், கட்சிச் செயலராகவும், சட்டமன்றத்தில் பணியாற்றினார். இவர் 1947 முதல், சுரங்கம் மற்றும் மின்துறைகளின் (Works, mine and Power) அமைச்சராக மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுப் பணியாற்றினார். பின்னர், பொதுப் பணி உற்பத்தி மற்றும் வழங்கு துறைகளின் (Works, Production and Supply) மத்திய அமைச்சராகவும் மே, 1952 வரையில் பணிபுரிந்தார். பல ஆண்டுகள் பஞ்சாபின் ஆளுநராகப் பணியாற்றிய காட்கில் 11.1.1966-இல் காலமானார். தொழிலாளர் மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட இவர், சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தார். பொருளாதாரம், அரசியல், இலக்கியம் பற்றி மராத்தி, ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். எம்.இ.

**காட்கில், தனஞ்சயா இராமச்சந்திரா (1901-1971)** சிறந்த கல்வியாளரும் கூட்டுறவுவாதியும் ஆவார். இவர் 1901-இல் பிறந்து, உயர் கல்வி கற்று, கூட்டுறவு, திட்டம், வங்கியியல், தொழில். வேளாண்மை முதலான துறைகள் வளம்பெறப் பெருந்தொண்டு ஆற்றினார். இவர் புனாவிலுள்ள கோகலே அரசியல் பொருளியல் கழகத்தின் நிறுவனர் ஆவார். இந்திய மைய இருப்பு வங்கியின் இயக்குநராகவும், இந்தியத்தேசிய வங்கிகளின் இயக்குநராகவும் விளங்கினார். தொழில் மற்றும் வேளாண்மை நிதி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றி நற்புகழ் பெற்றார். கூட்டுறவுத்துறைக்கு இவர் ஆற்றியபணி பெரியது; பாராட்டுக்குரியது. கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் தேசிய சர்க்கரைக் கூட்டுறவுக் கழகத்தின் (National Federation of Sugar Cooperatives) தலைவராகவும் பதவியேற்று அரும்பணி ஆற்றினார். இந்தியத் தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராகவும் (Chairman of the National Co-operative Union of India) இவர் பெரும் பணியாற்றினார். இவரது சீரிய பணியால் கூட்டுறவுத் துறையின் சிறப்பு இந்தியா முழுவதும் பரவியது. இவர் புதுதில்லியில், மத்திய அரசின் திட்டக்குழுவின் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றுத் திட்டமிடுதலில் புதிய கொள்கையை உருவாக்கினார். இந்திய மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் பொருட்டு. கூட்டுறவு மற்றும் திட்டமிடுதல் துறையில் தனது முத்திரையைப் பதித்த காட்கில் தில்லியிலிருந்து பூனாவிற்குச் சென்று கொண்டிருந்தபோது 3.5.1971 -இல் காலமானார். ம.இ.

**காட்சி நுனிகள்:** நுனி எனப்படுவது மனிதர் எவ்வாறு நடக்கவேண்டும் அல்லது என்ன செய்ய வேண்டும் என்பதை உணர்த்தும் ஒரு குறி. நுனிகள் பார்த்தல், கேட்டல், உணர்தல், நுகர்தல் சுவையறிதல் போன்ற ஐம்புலன்களுக்கும் உள்ளன. எல்லாப் புலன்களின் நுனிகளும் சூழ்நிலையைப் புரிந்து கொள்ள உதவினாலும், காட்சி நுனிகளே யாவற்றினும் மிக முக்கியமானவையாகும். எவை ஒரு காட்சியைக் காண்பதற்கு உதவுகின்றனவோ, அவையே நுனிகளாக வேறொரு சூழலில் பயன்படுகின்றன. இவை நல்லவற்றைக் கெட்டவற்றிலிருந்து பிரித்

தெடுத்துச் சூழ்நிலையை நன்கு புரிந்து கொள்ள உதவுகின்றன.

காட்சி நுனிகள் என்பன வருமாறு: பருமன் (Size), உருவம் (Shape), இணக்கம் (Adaptation), ஒளித்தன்மையைப் பார்த்தல் (Brightness Discrimination), மாறாத் தன்மை (Constancy), உருவமும் அதைச் சார்ந்த பரப்பும் (Figure & Ground), உருவ நிருணயக்கோடு (Contour), ஆழ நுனிகள் (Depth Cues).

**பருமனும் உருவமும்** ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது அது முதலிலேயே பார்த்த பொருள்தானா வேறு பொருளா என அறிந்து கொள்ள உதவுகின்றன.

**இணக்கம்**: கண்ணும் காண உதவும் பிற பாகங்களும் இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கும், வெளிச்சத்திலிருந்து இருட்டுக்கும் தக மாற்றிக் கொள்ளும் தன்மையே இணக்கமாகும். இது சுற்றுப்புறத்தின் இருட்டு அல்லது வெளிச்சம் பற்றி அறிய உதவுகிறது.

**ஒளித்தன்மையைப் பிரித்துப் பார்த்தல்**: ஒரு பொருளிலிருந்து வரும் ஒளியின் அளவை அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி அதை உணர்ந்து கொள்ளுதல்.

**மாறாத் தன்மை**: சில நேரங்களில் சில கோணங்களிலோ தூரத்திலிலோ இருந்து ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது அதில் மாற்றம் இருந்தாலும், அப்பொருளை அதனுடைய உண்மையான பருமன், உருவம், நிறம் போன்றவற்றில் உணர்ந்து கொள்வது மாறாத் தன்மை எனப்படுகிறது.

**உருவமும் அதைச்சார்ந்தபரப்பும்**: இந்த அமைப்பு தூண்டுதலொழுங்குக்கு (Stimulus Patterning) அடிப்படையாகும். உருவம் நன்றாக நிருணயிக்கப் பட்டதாகவும் அதிக திடமானதாகவும், அதைச் சார்ந்த பரப்பை விடச் சற்றுமுன் வந்ததாகவும் இருக்கும்.

**உருவ நிருணயக் கோடு** உருவத்தை உருவமில்லாத பரப்பிலிருந்து பிரித்துணர உதவும் எல்லைக் கோடாகும்.

**ஆழ நுனிகள்**: இவற்றை உணர்வதற்கு இரு விழிகளையும் மையத்துக்குக் கொண்டு வருதலும் குவிதலும் அவசியமாகும். ஒருகண் பார்வை ஆழ நுனிகள், இருகண் பார்வை ஆழ நுனிகள் என ஆழ நுனிகள் இருவகைப்படும். ஒருகண் பார்வை ஆழ நுனிகள் நான்கு வகைப்படும். அவை 1. ஒன்றின் மேல் ஒன்று இருக்கப் பார்த்தல்: ஒரு பொருள் இன்னொரு பொருளை மறைக்குமானால், முதல் பொருள் அருகில் இருப்பது போலவும் அடுத்த பொருள் தூரத்தில் இருப்பது போலவும் தெரியும். 2. ஒப்பிடத்தக்க பருமன்: ஒரே மாதிரியான பொருள்கள் வெவ்வேறு பருமனில் இருநதால், சிறிய பொருள்கள் தூரத்தில் இருப்பது போலவும் பெரிய பொருள்கள் அருகில் இருப்பது போலவும் தெரியும். 3. நேர்கோட்டில் உருவ உயரம்: ஒரு நேர் கோட்டில் உள்ள பொருள்களில் சில உயரமாகவும் சில குட்டையாகவும் இருக்குமானால், உயரமானவை தூரத்திலிருப்பது போலவும் குட்டையானவை அருகிலிருப்பது போலவும் தெரியும். 4. பாகங்களின் சேர்ந்த அல்லது பிரிந்த தன்மை: கடலையோ பாலை நிலத்தையோ பார்க்கும் பொழுது பாகங்கள் நேர்த்தியாகச் சேர்ந்த பகுதி தூரத்திலிருப்பது போலவும், பாகங்கள் சேராது பிரிந்திருக்கும் பகுதி அருகிலிருப்பது போலவும் தெரியும்.

இருகண் பார்வை நுனி என்பது இருகண் பார்வை வேறுபாடு என்றும் கூறப்படும். இரண்டு ஒரே மாதிரியான, ஆனால் சற்று மாறுபட்ட கோணங்களிலுள்ள இரு காட்சிகளை இணைத்து ஒரே காட்சியாக ஆழத்தோடு பார்க்க இந்த இருகண் பார்வை வேறுபாடு உதவுகிறது.

காட்சி நுனிகள், சுற்றுப்புறச் சூழ்நிலை எவ்வாறு உள்ளது என்று உணர்ந்து, அதற்கேற்பச் செயல்களை அமைத்துக் கொள்ள உதவுகின்றன. இவ்வாறு அமைத்துக் கொள்ளாவிட்டால் வாழ்வது என்பது இயலாத ஒன்றாகி விடும். ம. ஜு.

**துணை நூல்கள்**:

**Bartley**, H., Principles of Perception, Harper & Row Publishers, New York, 1969.

**Woodworth**, R.S. & Scholsberg, H., Experimental Psychology, Oxford IBH Publishing Co., New Delhi, 1971.

**காட்சுகி, காரல் (கி.பி. 1854-1938)**: மார்க்சியக் கொள்கையாளரான காட்சுகி காரல் (Kautsky, Karl) கி.பி. 1854-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 16-ஆம் நாள் பிரேகு (Prague) நகரத்தில் பிறந்தார். தந்தை செக்கோசுலோவாக்கிய நாட்டையும், தாய் செருமன் நாட்டையும் சார்ந்தவர்கள் ஆவார்

கள். வியன்னாப் பல்கலைக்கழகத்தில் வரலாறு, அறிவியல் ஆகிய துறைகளில் உயர் கல்வி கற்ற காட்சுகி ஒரு செய்தியாளர் (Journalist) ஆக மாறினார். மாணவப் பருவத்திலிருந்தே சே.எசு. மில் (J.S. Mill), எச்.டி. பக்கிள் (H.T. Buckle), தார்வின் (Darwin) ஆகியோரின் கோட்பாடுகளிலும் கொள்கைகளிலும் காட்சுகிக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டது. இவர் கி.பி. 1880-இல் வெளியிட்ட ஒரு சிறு பிரசுரத்தில் மக்கள் தொகை வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கு மிடையேயுள்ள தொடர்பைப் பற்றிய தார்வினின் கருத்தை வலியுறுத்திக் கூறினார். அதே ஆண்டு சுவிட்சர்லாந்திலுள்ள சூரிச்சு (Zurich) நகரத்திற்குச் சென்ற காட்சுகி, எட்வர்டு பேர்ன்சுடைன் (Edward Bernstein) என்ற மார்க்சியவாதியினால் ஈர்க்கப் பட்டு ஒரு முழு மார்க்சியவாதியாக மாறினார். காரல்மார்க்சையும், பிரடெரிக்கு எங்கல்சையும் இலண்டனில் கி.பி. 1881-இல் சந்தித்துத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட காட்சுகி, கி.பி. 1883-ஆம் ஆண்டு ஒரு மாத இதழைத் தொடங்கி மார்க்சியத் தைப் பரப்ப முற்பட்டார். இதற்குப் பிறகுதான் மார்க்சியம் ஒரு 'கோட்பாடு' என்ற நிலையினைப் பெற்றுப் பரவத் தொடங்கியது. 'காரல் மார்க்சின் பொருளாதாரக் கோட்பாடுகள்' (Economic Doctrines of Karl Marx) என்ற இவருடைய நூல் கி.பி. 1887-இல் வெளிவந்தது. அதே ஆண்டு மார்க்சிய அணுகுமுறையில் 'தாமசு மூரும் அவருடைய கற்பனை உலகும்' (Thomas More and his Utopia) என்ற கட்டுரையை வெளியிட்டார். முதல் மார்க்சியக் கட்சியான செருமானிய சமூக சனநாயகக் கட்சிக்கு (German Democratic Party-SPD) கி.பி. 1891-இல் தத்துவ முறையிலான கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தார். அதிலிருந்து ஏங்கல்சுக்குப் பிறகு மிகப் பெரிய மார்க்சிய தத்துவவாதி என்று காட்சுகி மதிக்கப்பட்டார்.

மார்க்சியத்தில் தீவிர ஈடுபாடும் பற்றும் கொண்டிருந்த போதிலும் மார்க்சு, இலெனின் ஆகியோரின் கருத்துகளைக் காட்சுகி முழுமையாக அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. அவற்றில் சில திருத்தங்களைப் புகுத்தினார். அதன் காரணமாக 'திரிபுவாதி' (Revisionist) எனக் காட்சுகி மார்க்சியவாதிகளால் தூற்றப்படுகிறார்.

சமூக வளர்ச்சியைப்பற்றிய மார்க்சினுடைய பொருள் முதல் வாதக் (Dialectical Materialism) கோட்பாட்டைக் காட்சுகி ஏற்றுக் கொள்ளவில்லை. புறச் சூழலுக்கு ஏற்ப மனிதன் தன்னை மாற்றிக் கொள்வதன் மூலந்தான் சமூக வளர்ச்சி ஏற்படுகிறது என்பது காட்சுகியின் கருத்தாகும். மேலும், ஒரு புரட்சியின் மூலந்தான் சமூக மாற்றத்தை உண்டு பண்ண முடியும் என்ற மார்க்சின் கருத்தையும் காட்சுகி மறுத்தார். பாராளுமன்றச் சனநாயக முறையில் சீர்திருத்தத்தின் மூலம் பரிணாம முறையில் சமதருமத்தை (Socialism) அடைய முடியும் எனக் காட்சுகி வாதிட்டார். செருமன் சமூக சனநாயகக் கட்சியின் உட்பிரிவான மார்க்சிய மையத்தின் (Marxist Centre) முக்கிய தலைவராக விளங்கிய காட்சுகி புரட்சிகளையும் வன்முறைகளையும் வேலை நிறுத்தங்களையும் கடுமையாக எதிர்த்தார். இது கட்சிக்குள் சமூக சனநாயக வாதிகள், பொதுவுடைமை வாதிகள் என இரு பிரிவுகள் தோன்றக் காரணமாயிற்று.

தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றிய முதலாளித்துவ முறைதான் ஏகாதிபத்தியத்திற்கு (Imperialism) வழி கோலுகிறது என்ற இலெனினின் கொள்கையையும் காட்சுகி ஏற்றுக் கொள்ளவில்லை. தொழிற்புரட்சிக்கு முன்பு நிலவிய சமூகத்தில் காணப்பட்ட வலுவான பிரிவினர் இக்காலச் சமூகத்திலும் வலுப்பெற்றுத் திகழ்ந்தனர். அவர்களே நாடு பிடிக்கும் ஆசையினால் உந்தப்பட்டுச் சமூகத்தில் ஏகாதிபத்தியப் போக்கை உண்டு பண்ணுகிறார்கள் என்பது அவர் கருத்தாகும்.

மேலும், 1917-ஆம் ஆண்டு உருசியாவில் இலெனின் 'போல்சுவிக்குப்' (Bolshevik) புரட்சி மூலம் பொதுவுடைமை அரசை நிறுவியபோது அதைக் காட்சுகி கடுமையாக எதிர்த்தார். ஒரு வன்முறை மூலம் சமதருமத்தைக் கொண்டு வர முயல்வது மார்க்சியக் கோட்பாட்டிற்குச் செய்யக் கூடிய துரோகம் மட்டுமன்றி, அது சருவாதிகாரத்திற்கு வித்திட்டு, இறுதியில் சுய அழிவைத் தேடிக் கொள்ளும் செயலுமாகும் என்று காட்சுகி 1918-ஆம் ஆண்டில் வெளிவந்த தம்முடைய 'பாட்டாளி வர்க்கத்தின் சருவாதிகார ஆட்சி (Dictatorship of the Proletariat) என்ற நூலில் கண்டித்தார். அதன் காரணமாக இலெனின் இவரைக் கட்சித் துரோகி (Ranegade) எனத் தூற்றினார்.

முதலாளித்துவ சமூகத்தில் சுரண்டுபவர், சுரண்டப்படுபவர்கள் என இருவருக்கங்களே உள்ளன என்ற மார்க்சின் கருத்தைக் காட்சுகி முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை, இரு சமூக வருக்கங்கள் ஒவ்வொன்றிலும் ஏராளமான பிரிவுகளும் பிளவுகளும் உள்ளன எனக் காட்சுகி கூறினார்.

முதல் உலகப் போரின்போது காட்சுகி ஒரு போரொழிப்பு வாதியாக (Pacifist) விளங்கினார்,

எனவே, அவர் கட்சி செருமன் அரசின் போர்க் கொள்கைக்குக் கொடுத்த ஆதரவைக் காட்சுகி கடுமையாக எதிர்த்தார். கட்சியின் போர்க்கொள் கையை விரும்பாதவர்கள் தொடங்கிய ‘சுதந்திர சமூக சனநாயகக் கட்சி (Independent Social Democratic Party - ISPD) யில் இவர் சேர்ந்தார். மக்களுக்குச் சுய நிருணய உரிமை (Right of Self-Determination) வழங்கப்பட வேண்டுமென இவர் போர்க் காலத்தில் பிரச்சாரம் செய்தார். போருக்குப் பிறகு சிறிது காலம் தம் கட்சியின் கூட்டு அமைச்ச ரவையில் வெளியுறவு அமைச்சராகப் பணியாற்றி னார்.

காட்சுகி தம் 70-ஆம் வயதில் வியன்னாவில் குடியேறினார். செருமனியிலும் ஆசுத்திரியாவிலும் நாசி (Nazi) ஆதிக்கம் ஏற்பட்ட பொழுது, அதை முறியடிக்கச் சமதருமவாதிகள் தந்திர முறைகளை உருவாக்க வேண்டுமென காட்சுகி அறைகூவல் விடுத்தார். ஆனால், 1938-ஆம் ஆண்டு செருமானியப் படை வியன்னாவிற்குள் நுழைந்த போது காட்சுகி அந்நகரை விட்டு வெளியேறினார். நெதர்லாந்தி லுள்ள ஆம்சுடர்டாம் (Amsterdam) நகருக்கு வந்த காட்சுகி அங்கு 1938-இல் காலமானார். சு.மு.

**துணை நூல்கள்:**

**Kautsky, John, H.**, Political Thought of Karl Kautsky, Harward University press, Harward, 1961.

Renner, Karl, Karl Kautsky, Diez, Berlin, 1929.

*காட்டகாட்டு*: சட்லாந்து முந்நீரகத்திற் கும், தென்மார்க்கின் (Danmark) சீலந்து தீவுக்கு மிடையே உள்ள நீர் இணைப்பு (Strait). சுவீடன்நாட் டிற்கு மேற்கில் விளங்கும் இப்பகுதி, வடகடலையும் பால்டிக்குக்கடலையும்இணைக்கிறது. இதன் நீளம் 225 கி.மீ. ஆழம் ஏறத்தாழ 25 மீட்டர்கள். பால்டிக்குக் கடலிலிருந்து இங்கு வரும் புதிய தண்ணீரால், காட்ட காட்டு (Kattegat) நீர் இணைப்பின் உப்புத் தன்மை குறைகிறது. இலேசோ (Laeso), ஆன்கோல்ட்டு (Anholt), சாம்சோ (Samso) ஆகிய தென்மார்க்கின் தீவுகள் இந்நீரிணைப்புக்குள் உள்ளன. இதன் முக் கிய துறைமுகங்களில் கோதன்பர்கு, ஆம்சுடாடு இரண்டும் சுவீடனிலும், ஆர்தசு என்பது தென்மார்க் கிலும் இருக்கின்றன. வாணிகம், நாவாய்ப் போக்கு வரத்து ஆகியவற்றிற்கு, இப்பகுதி புகழ்பெற்றது. கோடைக் கால வாசத்தலமாகவும் இது விளங்கு கிறது. தெ.பா.

*காட்டலான் மொழி*: இசுபெயின் நாட்டி லுள்ள காட்டலோனியா வாலன்சியா போன்ற இடங்களில் வாழும் 4,800,000 மக்களும் பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த உரோசிலோன் பகுதியில் வாழும் 200,000 மக்களும் இம்மொழி பேசுகின்றனர். இசுபெயின் நாட்டில் வாழும் காட்டலீனிய மக்களால் இசுபானிசு மொழியை நன்கு புரிந்துகொள்ளமுடியும் என்பர். 10,000 மக்கள் வாழும் அண்டோராக்குடி யரசின் அரசியல் மொழி இது. இசுபானிசு மொழிச் சொற்களை இதன்கண் ஏராளமாகக் காணலாம்.

உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின்னர்க்காட்ட லோனியாவை அடுத்த பகுதிகளில் வழங்கிய பேச்சு இலத்தீனிலிருந்து பிறந்த மொழியாகும். இது 15-ஆம் நூற்றாண்டு வரையிலும் மிக முக்கியமான மொழி களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. ஆரகான் அரசின் பதிவு மன்ற மொழியாகவும் விளங்கியது. இது இடைக் காலத்தில் மத்தியதரைக்கடல் பகுதிகள் வரையிலும் பரந்து நின்றது. ஆரகான் அரசும் காசுடீலியன் அரசும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஒன்றாக இணைந்த போது இசுபானிசு மொழியின் வளர்ச்சியில் தன் முக்கியத்துவத்தை இழந்து சாதாரண ஒரு பேச்சு மொழியாக மாறியது.

இன்றைய காட்டலோனியாவின் தோற்றத்தின் வரலாற்றைச் சார்லமென் காலம் முதலே காண லாம். முசுலீம் தாக்குதலைத் தடுக்கும் முகத்தான் சிற்றரசர்கள் பலர் கூடி இணைந்து நின்று போரிட்ட தைப் பற்றிக் கூறும் இத்தாலிய ஆசிரியர் ஒருவரின் இலத்தீன் பாடல் ஒன்றில்தான் காட்டலான் என்ற சொல் முதன்முதலாகக் காணப்படுகிறது என்பர்.

இம்மொழியின் முதல் எழுத்துச் சான்று ஆர் கானியாவில் கண்டெடுக்கப் பட்ட ஆறு துதிப்பாடல் களே. இவை கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டிருக்கலாம் என எண்ணுகின்றனர். இம்மொழி கி.பி. 10,11,12-ஆம் நூற்றாண்டுகளில் பெரும் பேச்சு மொழியாக விளங்கியது. இது கி.பி. 15-ஆம் நூற் றாண்டில் செழித்து இசுபானிசு மொழியின் வளர்ச் சியால் ஆதரவு இழந்து இன்றும் பேச்சு மொழியா கவே இருந்து வருகின்றது. கு.அ.

**துணை நூல்கள்:**

**அகத்தியலிங்கம், ச.**, உலகமொழிகள், முதல் பகுதி, பொன்னகம், அண்ணாமலைநகர், 1968.

*காட்டலோனியா* இசுபெயினின் ஒரு பகுதி. பண்டைய உரோமப் பேரரசின் ஒரு பகுதியாக

இருந்த காட்டலோனியா (Catalonia) ஏறத்தாழ 19,890 சதுர கி.மீ. பரப்பை உடையது. இசுபெயின் (Spain) நாடு வளர்ச்சியுற்றதும், இப்பகுதி அந்நாட்டின் ஒரு மாநிலமாக அமைந்தது. தாதுப்பொருள்கள் பல இங்குக் கிடைக்கின்றன. பன்றியும் வெள்ளாடுமே இங்குக் காணப்படும் முக்கிய கால்நடைகளாகும். உரோமானியர் காலத்திய பல சின்னங்களை இங்கே காணலாம். இப்பொழுது இது உள்நாட்டுச் சுதந்திரம் பெற்ற மாநிலமாக விளங்குகிறது. இங்கு உள்ள பட்டணங்களில் முக்கியமானது பார்சலோனா என்னும் துறைமுகம். தெ.பா.

**காட்டாவீசி**: போலந்து நாட்டின் தெற்கு மத்திய பகுதியில் உள்ள இம்மாநிலம் 6,650 ச.கி.மீ. பரப்புடையது. சைலீசியாவின் நிலச்சுரங்கப் பகுதியில் இது அமைந்திருப்பதால், தொழில் துறையில் இதன் சிறப்பு மிகுதியாகி உள்ளது. போலந்து நாட்டிலும், ஐரோப்பா முழுவதிலுமே நிலக்கரிச் செல்வம் மிகுதியாக உள்ள மாநிலம் காட்டாவீசிதான் (Katowice). இங்குத் துத்தநாகம், ஈயம் ஆகிய உலோகங்களும் மிகுதியாக உள்ளன. இயந்திரக் கருவிகளும், சுரங்க வேலைச் சாதனப் பொருள்களும், பல வகை இரசாயனப் பொருள்களும் இங்கு உற்பத்தியாகின்றன. பொருளாதாரச் சிறப்பு மிக்க இப்பகுதி 1975-இல் அமைக்கப் பெற்றது.

இதே பெயருள்ள, ஒரு பட்டினமும் உண்டு. ஒரு சிற்றூராக அமைந்த இப்பகுதி கி.பி. 1865 அளவில் நகராக வளர்ச்சியுற்று, நிலக்கரிச் சுரங்க வேலை காரணமாக மிக்க சீரும் சிறப்பும் பெறலாயிற்று. இது 1922-இல் போலந்து நாட்டின் ஒரு பகுதியாயிற்று. சுற்றியுள்ள முக்கிய இடங்கள் இதனுடன் இணையப் பெற்றன. தெ.பா.

**காட்டானியா**: ஐரோப்பாவில் சிசிலித் தீவில் உள்ள ஒரு மாநிலமும் அதற்குத் தலைநகராக உள்ள நகரமும் காட்டானியா (Catania) என்று சொல்லப்படும். செழிப்பு நிறைந்த மலைப் பகுதியான இங்கு அடிக்கடி எரிமலை வெடிப்புகளும், நிலநடுக்கங்களும் ஏற்பட்டுள்ளன. இந்நகரம் பலமுறை அழிவுற்றுப் பின்பு புதுப்பிக்கப் பெற்று வளர்ந்துள்ளது. இந்நகருக்கு அருகில் எட்னா எரிமலை உள்ளது. இதனால் இந்நகரம் அடிக்கடி இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாக நேரிடுகிறது. தெ.பா.

**காட்டுநாயக்கர்** நீலகிரி மாவட்டத்தில் முதுமலைப் பகுதியிலும் அம் மாவட்டத்தையொட்டிய கேரள, கருநாடக மாநிலங்களிலும் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களாவர். சேனு குறும்பர் எனினும் காட்டுநாயக்கர் எனினும் இப்பழங்குடிகளையே குறிக்கும். காட்டு நாயக்கர்கள் சோள நாயக்கர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று கருதுகின்றனர். 'காட்டுநாயக்கர்' என்ற சொல்லிற்குக் காடுகளின் தலைவன் என்ற பொருளும் உண்டு. தமிழ்நாட்டின் சமவெளிகளில் காணப்படுகின்ற காட்டு நாயக்கர்களுக்கும் (Kattunayakkan) இவர்களுக்கும் மரபுவழித் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. நீலகிரியிலேயும் அதனையொட்டிய இடங்களிலும் காணப்படுகின்ற காட்டுநாயக்கர்களை மட்டுமே தேன்குறும்பர், தேன்குறுமார், சேனுநாயக்கர், சேனு குறுவார், சேனுகுறுபரு என்ற பல பெயர்களால் குறிப்பிடுகின்றனர். அதே பகுதிகளில் காணப்படுகின்ற குள்ள நாயக்கர் அல்லது சோள நாயக்கர் எனப்படுபவர் காட்டு நாயக்கரிடமிருந்து வேறுபட்டவர். நீலகிரியில் காணப்படுகின்ற குறும்பர்கள் 1961-ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பின்படி பெட்ட குறும்பர், சேனுகுறும்பர் அல்லது தேன் குறும்பர், ஊராளி குறும்பர், பாலு அல்லது ஆலு குறும்பர், முள்ளு குறும்பர் என ஐந்து வகையினராகப் பிரிக்கப்படுகின்றனர்.

இவர்களுடைய தோற்றத்தைப் பற்றிய ஒரு குறிப்பு ஆங்கிலேயர்கள் எடுத்த கி.பி. 1891-ஆம் ஆண்டுக்குடித்தொகை மதிப்பில் குறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கி.பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டில் சோழர்களாலும் சாளுக்கியர்களாலும் நசுக்கப்பட்டனர் எனவும், அதனால் வெளி உலகத் தொடர்பைத் துண்டித்துக் கொண்டு நீலகிரி, வயநாடு, கூர்கு (Coorg), மைசூர் போன்ற இடங்களில் சென்று தங்கியவர்கள் மிகவும் பின்தங்கிய ஒரு சமூகமாக அமைந்துவிட்டார்கள் எனவும் கருதப்படுகின்றனர். காட்டுநாயக்கர்களால் பேசப்படுகின்ற மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த கன்னடத்தின் ஒரு கிளை மொழியாகவே கருதப்படுகிறது. அதிலும் குறிப்பாக, கன்னடம் தென்திராவிட மொழிக்கூட்டத்தைச் சேர்ந்தது. இது ஒரு வரிவடிவம் இல்லாத மொழி. இலக்கியங்கள் யாவும் வாய் மொழியாகவே வாழ்கின்றன. இவர்களின் இன்றைய எண்ணிக்கை 1200க்கும் மேற்பட்டதாகும்.

காட்டுநாயக்கர்கள் நடுத்தர உயரம், கரிய மேனி, சிறிது தடித்த உதடுகள் முன்புறம் சற்று நீண்டு குவிந்த நெற்றி, அலை அலையான தலைமயிர் முதலான உடற்பண்புகளைக் கொண்டவர்கள். ஆண்கள் முழங்கால் வரை வேட்டியும், தோளிலே துண்டும் அணியும் பழக்கம் கொண்டவர்கள். பழங்குடி அல்லாதாரின் தொடர்பால் பலவித உடைகளை அணிகின்றனர். ஆண்கள் சிலர் காதணியும் அணிந்

துள்ளனர். மலையாளப் பெண்களைப் போலவே காட்டுநாயக்கப் பெண்கள் மார்பகம் வரை முண்டு கட்டியுள்ளதைக் காணலாம். இளம் பெண்டிர் தமிழ் நாட்டின் சமவெளியிலுள்ள பெண்களைப் போல இரவிக்கையும் சேலையும் அணிந்துள்ளனர். கழுத்தில் பாசிமணிமாலைகளும் காசுமாலையும் உள்ளன.

ஐந்து முதல் பத்துக் குடிசைகள் அமைத்துப் 'பாடி' என்று சொல்லப்படுகின்ற குடியிருப்பைக் கொண்டுள்ளனர். காட்டிலே எளிதில் கிடைக்கக் கூடிய மூங்கில், மரம், காட்டுப்புல், வைக்கோல், மண் ஆகியவற்றை வைத்து மலைச் சரிவுகளிலே குடிசைகளைக் கட்டுகிறார்கள். சிலர் தமிழக அரசி னாலே கட்டப்பட்டுள்ள வீடுகளிலேயும் வசிக்கின்ற னர். பெரும்பாலும் அண்ணன்-தம்பி உறவு முறை யினரே ஒரு பாடியில் சேர்ந்து வசிக்கின்றனர். இவர் கள் தங்களையும் தங்கள் சுற்றுப்புறங்களையும் தூய் மையாக வைத்திருப்பதில்லை. இவர்கள் மிகவும் கனிவானவர்கள்.

இவர்கள் பெயருக்கேற்றாற்போல் காட்டில் தேன் சேகரிப்பதிலே வல்லவர்கள். தேன் சேகரிக் கின்ற முறைக்கெனவே தனிப்பாடல் ஒன்றை அமைத்து அந்தப் பாடலின் ஒவ்வொரு அடியையும் மிக இனிமையாகப் பாடும்போது ஒவ்வொரு செயலாக அடுத்தடுத்துச் செய்து தேன் சேகரிப்பதிலே அவர் களுக்கு இணை யாருமில்லை. 'சேனு பதனா' என்பது அந்தப் பாடலுக்குப் பெயர். தேனில் பலவகைகள் உண்டு என்று இவர்கள் கூறுகிறார்கள். தம்முடைய உணவுக்காக வேண்டி வேட்டையாடவும் மீன்பிடிக்க வும் செய்கிறார்கள். காட்டிலிருந்து போதிய உணவு கிடைக்காததால் காப்பித்தோட்டம், தேயிலைத் தோட்டம், நெல் வயல் ஆகியவற்றில் கூலி வேலை செய்து பிழைக்கின்றனர். சிறிதளவு நிலம் உள்ள சிலர் வேளாண்மை செய்வதில் புதிய முறைகளைக் கடைப்பிடிக்காததனால் பொருளாதாரத்தில் பின் னடைந்துள்ளனர். இயற்கைச் செல்வங்களாகிய முத்துக்கொட்டை, சீயக்காய், சந்தனக் கட்டை, யானைத் தந்தம் போன்றவற்றை வனத்துறையின ரிடம் கொண்டு சேர்ப்பது சிலர் வேலையாகும். யானைகளைப் பழக்குவதில் இவர்கள் வல்லவர்கள். சிலர் வனத்துறையில் யானைப்பாகர்களாகவும் பணி புரிகின்றனர். பெண்கள் பெரும்பாலும் வேலைக்குச் செல்வதில்லை. சமூக, பொருளாதார அடிப்படை யில் இவர்கள் ஏனைய பழங்குடியினரைக் காட் டிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

அரிசி உணவையே பெரும்பாலும் விரும்பி உண் கிறார்கள். தங்கள் நிலங்களிலிருந்து விளைவித்த தினை, கேழ்வரகு ஆகியவற்றையும் களி செய்து உண்பர். பலா இங்குப் பல்கிக் காணப்படுவதால் அதனையும் உணவாகக் கொள்கின்றனர். தேன், தினை, பலா, மீன், இறைச்சி ஆகியவற்றை மழைக் காலத்திற்காகச் சேமிப்பது உண்டு. உண்ண அரிசி, கேழ்வரகு ஒன்றும் கிடைக்காதபோது காட்டுக் கிழங்கு, மூங்கிலரிசி ஆகியவற்றைச் சமைத்து உண் பர். இப்போது சேனை, பூளை, சேம்பு முதலிய கிழங்குகளைத் தங்கள் நிலங்களில் பயிரிட்டு உண் கின்றனர். பூசணி, பூசணி இலை, வயல்சேம்பு இலை ஆகியவற்றையும் சமைத்து உண்பதுண்டு. குடிப்பழக்கமும் இவர்களிடையே உண்டு. வெற்றி லைப் பாக்கு புகையிலைப் பழக்கமும் உண்டு.

ஒரு பெண் தாயாகி இருக்கும்போது, விழா ஒன் றும் கொண்டாடுவதில்லை. குழந்தை பிறந்ததும் தாயையும் சேயையும் ஏழு நாட்களுக்கு ஒரு தனிக் குடிசை அமைத்து அதில் வைப்பார்கள். எட்டாம் நாளன்று தாய்மாமனை அழைத்து ஒரு சிறிய விழாக் கொண்டாடப்படுகிறது. ஐந்து அல்லது ஆறு மாதங்கள் சென்ற பிறகு, குழந்தைக்குப் பெயரிடு தலும் காதணி போடுதலும் முதல் உணவளிக்கின்ற விழாவும் நடைபெறும்.

ஒரு பெண் பூப்பெய்திய பதினாறாம் நாளன்று மஞ்சள் நீராட்டுவிழா நடைபெறும். அதனை 'எர் சன மதுவெ' என்று குறிப்பிடுவார்கள். திருமண விழாவிற்கு ஒப்பான இவ்விழாவில் தாய்மாமனும் அவர் மனைவியுந்தான் முக்கிய விருந்தினர். இவ் விழாவின்போது உறவினர்களும் பாடியிலுள்ளோரும் அழைக்கப்படுவர்.

பொதுவாக, திருமணங்கள் இரண்டு வகையிலே முடிவு செய்யப்படுகின்றன. பெற்றோர்களால் ஏற் பாடு செய்யப்பட்டு நடைபெறும் திருமணம் ஒரு வகை; மணமக்களாகவே தங்கள் திருமணத்தை உறுதி செய்து கொள்வது மற்றொரு வகை. பெரும் பாலும் முதல் வகையிலேயே திருமணங்கள் நடை பெறுகின்றன. தாய் மாமனும் அவர் துணை வியாரும் முன்னின்று திருமணத்தை முதலிலிருந்து இறுதிவரை முடித்து வைக்கின்றனர். தாலிகட்டும் பழக்கம் இவர்களிடையே உண்டு. இரண்டாம் வகை யில் திருமணம் செய்து கொண்ட மணமக்கள் ஓராண்டுக் காலத்திற்குப் பாடியிலே வசிப்பதற்கு அனு மதி கிடையாது. கணவனோ மனைவியோ வீட்டை விட்டு வெளியேறுவதன் மூலம் தன் மனக்கசப்பை வெளிப்படுத்தி மணமுறிவைப் பெற்றுக்கொள்கிறார் கள். பிரிந்தவர்கள் தங்கள் விருப்பப்படி மறுமணம்

செய்து கொள்ளலாம். கணவனோ மனைவியோ இயற்கையான மரணம் அடைய நேரிட்டால், ஏழு நாட்களுக்குத் துக்கத்தைக் கடைப்பிடித்துத் தன் விருப்பப்படி வேறுமணம் செய்து கொள்ளலாம். ஒரு காட்டுநாயக்கன் இருமணங்கள் செய்து கொள்ளவும் அவனுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப எத்தனை பெண்களை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளவும் இடம் உண்டு. பெண்களை மயக்கித் திருமணம் செய்யப் பல முறைகளைக் கையாளுகிறார்கள்.

மிகவும் பின்தங்கிய நிலையிலே வாழ்ந்தாலும் கலையார்வமற்ற ஒரு வறண்ட வாழ்க்கையை அவர்கள் வாழவில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அதற்குப் பொருத்தமான பாட்டுகளோடு இசைக்கருவிகளையும் இசைத்து ஆடிப்பாடி மகிழ்கின்றனர். குழந்தைகளை உறங்கவைக்கும் தொட்டில் பாட்டுகள், தேன் சேகரிக்கும்போது பாடுகின்ற பாட்டுகள், காதற்பாட்டுகள் போன்று ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஏற்ற பாட்டுகள் பாடப்படுகின்றன. 'கொளலு', 'மரா' என்ற இசைக்கருவிகளை எல்லா நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்துகிறார்கள். இவர்களுடைய பண்பாடு மரபு இவற்றை வெளிப்படுத்துகின்ற வகையிலே காதல் கதைகளும் பேய்க்கதைகளும் மந்திரவாதிக் கதைகளும் கூட உண்டு.

இவர்களுக்குள் ஏற்படும் சச்சரவுகள், திருமணப் பேச்சுகள், மணமுறிவு சம்பந்தமான சிக்கல்கள் ஆகியவற்றை அந்தப் பாடியைச் சேர்ந்த 'காரணவானு' அல்லது 'மொதலி' என்ற பஞ்சாயத்துத் தலைவரும் பஞ்சாயத்துக் குழுவினரும் சேர்ந்து தீர்த்து வைக்கின்றனர். வீட்டைப் பொறுத்தமட்டில் எந்த முடிவு எடுப்பதாயிருந்தாலும் தாய்மாமனே முதன்மையான பங்கு வகிக்கிறார். பாடிகளுக்கிடையே ஏற்படுகின்ற சச்சரவுகளைத் தீர்க்கத் தலைவர் ஒருவரும் பேய்-ஓட்டுதல், திருமணம், பிறப்பு, இறப்புச் சடங்குகள் ஆகியவற்றை ஆற்றுவதற்கு மதத்தலைவர் ஒருவரும் உள்ளனர்.

இவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்பது பற்றிய தெளிவான கருத்து இவர்களுக்கே இல்லை. இவர்களுடைய வழிபாட்டு முறைகளையும் திருவிழாக்களையும் நோக்கின், இவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடும் எனக் கொள்ளலாம். சுற்றிச் சார்ந்துள்ள இந்து மதத்தாரிடமிருந்து இவ்வழிபாட்டு முறைகளும் திருவிழாக்களும் இவர்களிடம் பரவியிருக்கக் கூடும் என ஒரு கருத்தும் நிலவுகிறது. இவர்கள் பெயர்களைக் கூர்ந்து நோக்கும்போது, இந்துக் கடவுளர்களின் பெயர்களாக இல்லாமை, இவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களா என்ற ஐயப்பாட்டை எழுப்புகிறது.

இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கம் இவர்களிடம் உள்ளது. திருமணமான பெண் இறந்தால் அவளுடைய தாலியை எடுத்து மூத்த மகளிடம் கொடுத்து விடுவார்கள். திருமணமான ஒருவன் இறந்துவிட்டால், அவனுடைய மனைவி தன்னுடைய தாலியையும் காதணிகளையும் எடுத்துவிட்டுப் பத்து நாள்கள் துக்கத்தை மேற்கொள்வாள். பொதுவாக உறவினர்கள் ஏழுநாள்களுக்குத் துக்கம் கடைப்பிடிப்பார்கள். சிறுவர்களுக்கு மூன்று நாள்களுக்கும், குழந்தைகள் இறந்தால் ஒருநாள் மட்டும் துக்கம் கடைப்பிடிக்கப் படும். சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் எவ்வித ஈமச்சடங்குகளும் கிடையாது.

தமிழக அரசு காட்டுநாயக்கர்களுக்குப் பல நலப் பள்ளிகளை அமைத்துள்ளது. இருந்தும், பெரும்பான்மையோர் கல்வியறிவற்றவர்களாகவே உள்ளனர். இலவச உணவு, உடை, உறைவிடம் அளித்தும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பத் தயங்குகிறார்கள். இவர்கள் பாரம்பரிய வாழ்க்கை முறையையே விரும்புகிறார்கள். இருப்பினும் வெளி நாகரிகத்தின் தாக்கத்தை ஓரளவு காணலாம். எஸ்.ந.

**காட்டுப்பாடி** (காட்பாடி) தமிழ் நாட்டில் வடஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம் வட்டத்தில் உள்ளதொரு நகரம். இம் மாவட்டத்தின் தலைநகரான வேலூரிலிருந்து வடக்காக 5 கி.மீ. தொலைவில் இந்நகரம் அமைந்துள்ளது. சென்னை, பெங்களூர், திருவனந்தபுரம் தொடர்வண்டிப் பாதையில் (Railway)அமைந்துள்ள காட்டுப்பாடி முக்கிய சந்திப்பு நிலையமாகவும் அமைந்துள்ளது. காட்டுப்பாடி சந்திப்பின் வழியாக விழுப்புரம் - திருப்பதி தொடர்வண்டிப் பாதைப் பிரிவும் செல்கிறது. இந்நகரத்தில் தான் தமிழகத்தில் முதன் முதலாகக் கூட்டுறவு நகர அமைப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. காட்டுப்பாடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் இக்காலத்தில் பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருகில் உள்ள திருவலம் என்ற ஊரில் வேலூர்க் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைத் தொழிற்சாலையும் முகுந்தராயன்புரம் என்ற இடத்தில் பாரத கனரகத் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டுள்ளன. காட்டுப்பாடியில் தமிழ்நாடு அரசின் வெடிமருந்து தொழிற்சாலை ஒன்றும் உள்ளது. இங்கு எந்திரத் தொழில்கள், உரம் தயாரிக்கும் தொழிற்சாலை போன்றனவும் உள்ளன.

காட்டுப்பாடியில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இடைநிலைப்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்றும், பெண்கள் கல்லூரி ஒன்றும் உள்ளன. இந்நகருக்கு அருகிலுள்ள கரிகிரி என்ற இடத்தில் தொழுநோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது. சு.இரா.

**காட்டுமன்னார் கோயில்** தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வைணவத் திருப்பதி; வைணவப் பெரியார் நாதமுனிகளும், அவர் பெயரரான இயமுனைத் துறைவர் சிரீஆளவந்தாரும் தோன்றிய தலம். வைணவர் இத்திருத்தலத்தை வீரநாராயண புரம்என்று குறிப்பிடுவர். காட்டுமன்னார்குடி எனவும் சொல்லப்படும் இப்பதி கல்வெட்டுகளில் 'வீர நாராயண சதுர்வேதிமங்கலம்' எனக் குறிக்கப்படுகிறது. வீரநாராயணன் என்னும் விருதுப் பெயரினைப் பூண்ட முதலாம் பராந்தகனால் புதிதாக அமைக்கப்பட்ட இவ்வூர், சிதம்பரத்திலிருந்து 26 கி.மீ. தொலைவிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து 13 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

இவ்வூருக்கருகில் முதுமக்கள் தாழிகள் பல கிடைத்துள்ளன. இவ்வூரில் வீரநாராயண விண்ணகரம் என்னும் திருமால் கோயில் ஒன்றுள்ளது. இங்குள்ள இறைவன், 'வீரநாராயண எம்பெருமான்' என்று கல்வெட்டில் குறிக்கப் பெறுகிறார். இக்கோயிலில் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டும், மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் கல்வெட்டும், கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டும் காணப்படுகின்றன. பாண்டியர் காலத்தில் இறைவனின் பெயர் 'மதுராபுரி எம்பெருமான்' எனவும், இவ்வூரின் பெயர் 'சுந்தரபாண்டிய சதுர்வேதி மங்கலம்' எனவும், மாற்றப்பட்டன. இவ்வூரில் உள்ள 'வீரநாராயணன் ஏரி' என்ற 'வீராணத்தேரி' புகழ் பெற்றதாகும்.

காட்டுமன்னார்குடிக்கருகில் உள்ள உடையார்குடியில் அனந்தீசுவர சுவாமி கோயில் என்னும் சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலில் கண்டராதித்தன், சுந்தரசோழன், முதலாம் இராசராசன், இரண்டாம் ஆதித்தசோழன், உத்தமசோழன், ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முதலாம் இராசேந்திர சோழன் இக்கோயில் பெருமானை 'நம் மூலதெய்வம்' என்று கொண்டாடினான் என்பது கல்வெட்டுச் செய்தி. ம.இ.

**காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற் பெயர் கண்ணன் என்பதாகும். காட்டூர் என்பது இவர் ஊர்ப் பெயரைக் குறிக்கும். தந்தையின் பெயர் காட்டூர் கிழார். ஆதலின் இவர் பெயரொடு தந்தையின் பெயரும் இணைந்து இவ்வாறு வழங்கப் பெற்றார். இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு பாடல் (85) இடம்பெற்றுள்ளது. பாலைத் திணையிலமைந்த அப்பாடல் தலைவனைப் பிரிந்ததனால் வேறுபட்ட தலைவியைத் தோழி ஆற்றுவிப்பதாக அமைந்துள்ளது. அவர் வருவதாகக் கூறிச் சென்ற பருவம் வந்தது; களிறு தன் பிடி யானைக்கும் கன்றிற்கும் மூங்கில் முளைகளைக் கொணர்ந்து அவற்றின் வாயில் ஊட்டுதற்கிடமான திரையன் என்பவனின் வேங்கட மலையில் மயில்கள் தன் பெடையை அழைத்து அகவுதற்குக் காரணமான கார்ப்பருவம் வந்தது. ஆகவே, அவர் விரைவில் வந்து விடுவார் என்று தோழி கூறித் தேற்றுவது சிறப்பாக உள்ளது. களிறு தன் பிடிக்கும் கன்றிற்கும் உணவு கொண்டு வந்து ஊட்டுவதைப் பார்த்த நம் தலைவர் நின்னை நினைந்து விரைவில் வந்து விடுவார் என்பதனையும் இவர் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். வீ.சே.

**காட்டெரிப்பு வேளாண்மை** காடுகளை அழித்துப் பயிர் செய்யும் முறை. இவ்வேளாண்மை முறை பல இடங்களில் பல்வேறு வேளாண் குடிகளால் மேற்கொள்ளப்படினும் பெரும்பான்மையாக மலைவாழ் பழங்குடியினரால் இது மேற்கொள்ளப் படுகிறது. இந்தியாவிலுள்ள பல பழங்குடியினர் காட்டெரிப்பு வேளாண்மையைச் (Slash and burn Cultivation) செய்கின்றனர். உலகில் உள்ள அனைத்துத் தட்பவெப்ப மண்டல நாடுகளிலுமுள்ள பழங்குடியினர் சிலரும் காட்டெரிப்பு வேளாண்மையைச் செய்கின்றனர்.

இந்தியாவில் திரிபுரா, மணிப்பூர், நாகலாந்து, மிசோராம் முதலான வடகிழக்கு எல்லைப் பகுதிகள் (NEFA), தெற்கு யுக்காடன் (Yucatan), விராகுரூசு (Veracruh) பகுதிகள், ஆசுத்திரேலியா, நியூகினிமையப் பகுதிகளிலுள்ள மேட்டு நிலங்கள், பர்மா, சுமத்திரா, போர்னியோ, ஆப்பிரிக்கா முதலான பகுதிகள் ஆகியவற்றிலுள்ள பழங்குடியினர் இவ் வேளாண் முறையைக் கொண்டுள்ளனர்.

**காட்டெரிப்பு வேளாண்மையின் பெயர்கள்:** இவ்வேளாண்மை பல்வேறு மாநிலங்களில் பலவாறு கூறப் படுகிறது. நாகர் பழங்குடியினர் 'சூம்' (Jhum) என்றும், மத்தியபிரதேச பெய்கர் (Baigas) பழங்குடியினர் பீவார், தகியா என்றும், கந்தர் பழங்குடியினர் பொடு என்றும், மத்தியபிரதேச பசுதர் மாவட்டத்தைச் சேர்ந்த மரியா கோண்டுகள் (Maria Gonds)

'பெண்டா'என்றும், வட ஒரிசாவின் பூயியாப் (Bhuiya) பழங்குடியினர் பமா, பிரிங்காதகி, கொமன் என்றும், தென் ஒரிசாவில் குடியா,தோங்கர்சார் (Dongarchar) என்றும் குறிப்பிடுகின்றனர். பூயியாப் பழங்குடியினர் காட்டிலுள்ள அனைத்து மரங்களையும் வெட்டி எரித்துப் பயிர் செய்யும்போது அதனைத் தகி எனவும், புதர்கள், சிறு செடிகள் ஆகியவற்றை மட்டும் எரித்துப் பயிர் செய்தால் அதனைக் கொமன் எனவும் சொல்கின்றனர்.

**வேளாண் முறை:** காட்டெரிப்பு வேளாண்மையில் பழங்குடிகளிடையே பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுவாகக் காட்டெரிப்பு வேளாண்மையின் முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காட்டு நிலங்களிலுள்ள மரங்கள் குளிர்காலத்தில் வெட்டப்படுகின்றன. வெட்டப்பட்ட மரங்கள் நன்கு காய்ந்தவுடன் எரிக்கப்படுகின்றன. காட்டின் பிற இடங்களுக்கு நெருப்புப் பரவாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கின்றனர். எரிக்கப்பட்ட மரங்களின் சாம்பல் பயிர் செய்ய வேண்டிய நிலங்களுக்குச் சிறந்த உரமாகும் என்பது இவர்களின் நம்பிக்கை. தீயின் வெப்பம் களைகளையும் அழிக்கின்றது என நம்புகின்றனர்.

எரிக்கப்பட்ட நிலங்களை ஏர் கொண்டு உழுது பயிர் செய்வதில்லை. தோண்டுகழியின் உதவியால், நிலத்தில் துளைகளையிட்டு அவற்றில் விதைகளை யிட்டு மூடிக் காலால் சமப்படுத்துகின்றனர். மழைக் காலத்தில் அவ்விதைகள் தாமாகவே முளைக்கத் தொடங்குகின்றன. இவ்வேளாண்மை முறையில் நீர்ப்பாசன வசதியோ நீர் பாய்ச்சும் முறையோ கையாளப்படுவதில்லை. தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் பயிரிட்ட பின்னர், அந்நிலத்திலுள்ள மண்வளம் குறையத் தொடங்குகிறது. எனவே, பயிர் செய்யப்பட்ட நிலங்கள் மீண்டும் வளம்பெற ஏறக்குறைய எட்டு முதல் பத்து ஆண்டுகள் பயிர் செய்யப்படாமல் அப்படியே தரிசாக விடப்படுகிறது. இப்பகுதி, நாளடைவில் காடாக மாறுகின்றது. பின்னர், பயிர் செய்வோர் வேறு ஒரு நிலத்தைத் தேர்ந்தெடுத்து முன்னர்க் குறிப்பிட்டபடி பயிர் செய்யத் தொடங்குகின்றனர். இங்ஙனம் வெவ்வேறு நிலங்களில் இவ்வேளாண்மை தொடரப்படுகிறது. இம்முறையில் வேளாண்மை செய்யப்படும் நிலங்கள் வெவ்வேறு இடங்களில் மாறினாலும், பழங்குடியினரின் குடியிருப்புகள் பெரும்பாலும் இடம் பெயர்வதில்லை. குடியிருப்புகளை மாற்றாமல் காடுகள் எரிக்கப்படும் இடம் மட்டுமே மாறுவதற்கு ஒரிசா மாநிலப் பழங்குடியினர் மரபுக்கதையொன்று கூறுவர். அதாவது, இந்திய நாடு சுதந்திரமடைந்த பின்னர் மிகுதியான எண்ணிக்கையில் வாழ்ந்த சுவாங்குப் (Jvangs) பழங்குடியினர் மக்கள் தொகை குறைவாக உள்ள இடங்களுக்குக் குடிபெயரச் செய்யப்பட்டனர். அவ்விடத்தில் எதிர்பாராது தீ விபத்தொன்று நடந்தது. தமது முந்தைய இடத்திலிருந்து புதிய இடத்திற்குக் குடிபெயர்ந்ததால் அவர்கள் கடவுளருக்குக் கோபம் உண்டாயிற்று எனவும், அக்கோபமே தீ விபத்திற்குக் காரணமெனவும் கருதி உடனே தமது முந்தைய இடத்திற்கே குடி பெயர்ந்ததாகவும் கூறுவர்.

காட்டெரிப்பு வேளாண்மையில் பயிரிடப்படும் பயிர்கள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. நாகாலாந்தில்சிறுதானியங்கள், பருத்தி முதலானவை பயிர் செய்யப்படுகின்றன. அசாம் மலைப்பகுதிகளில் பருத்தி, பப்பாளி, காய்கறி வகைகள் முதலானவை பயிர் செய்யப்படுகின்றன. ஒரிசா மாநிலத்தில் எள்ளும் சிறுதானியங்களும் பீகார் மலைப்பகுதிகளில் இராம் அர்கார் (Ram Arhar) எனப்படும் ஒருவகைச் சிறுதானியமும் பயிரிடப்படுகின்றன.

நாகாலாந்தில் நிலங்கள் ஓரிரு பருவத்தில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், மக்கள் தொகை அதிகமாக உள்ள ஒரிசாப் போன்ற மாநிலங்களில் நிலங்கள் மூன்று பருவங்கள் பயன்படுத்தப்பட்ட பின்னரே தரிசாக விடப்படுகின்றன. நிலங்கள் மீண்டும் வளமடைவதற்காக இங்ஙனம் தரிசாக விடப்படுகின்றன. சில இடங்களில் நிலங்கள் மூன்றிலிருந்து ஆறாண்டுகள் வரை தரிசாக விடப்படுகின்றன. இக்கால வரம்பு பயிரிடுவோரின் தேவையையும், மக்கள்தொகை அதிகரிப்பையும் பொறுத்தே அமைந்துள்ளது.

நியூகினியில் வாழும் செம்பகா மாரிங்குப் (Tsembaga Maring) பழங்குடியினர் காட்டெரிப்பு வேளாண்மையை மேற்கொண்டு வள்ளிக்கிழங்கு, சேனைக்கிழங்கு, கரும்பு இன்னபிற பயிர்கள் ஆகியவற்றைப் பயிர் செய்கின்றனர். இப்பழங்குடியினர் இவ்வேளாண்மை முறையில் சிறிது நேரமே உழைத்தாலும், அதிலிருந்து கிடைக்கும் விளைச்சல் அவர்களின் தேவையை நிறைவு செய்யப் போதுமானதாக உள்ளது. எனமாமோ (Yanomamo) பழங்குடியினர் காடுகளை அழித்து வாழையினைப் பயிர் செய்கின்றனர். போர்னியோவிலும் இவ்வேளாண்மை முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

**காட்டெரிப்பு வேளாண்மையும் அதன் விளைவுகளும்:** காட்டெரிப்பு வேளாண்மையை மேற்கொள்வதால் விலைமதிப்பற்ற காடுகள் அழிக்கப்படுவதும்

காட்டின் விளைபொருள்கள் மக்களுக்குப் பயன்படாமற் போவதும், மண்அரிப்பு ஏற்படுவதும், மழைகுறைவதும் ஆகிய விளைவுகள் ஏற்படுகின்றன.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைக் காலம் வரை, காட்டையும் காட்டிலிருந்து கிடைக்கப் பெறும் அனைத்து விளைபொருள்களையும் பழங்குடியினர் பயன்படுத்திக் கொண்டனர். அரசு 1952-ஆம் ஆண்டில் இயற்றிய 'புதிய காடுகள் வளத்திட்டம்' காட்டெரிப்பு வேளாண்மையைத் தடை செய்தது. இதனால் பழங்குடியினர் காடுகளை அழித்துப் பயிர் செய்ய இயலவில்லை. இதனுடன் வெளியார், காட்டு நிலங்களின் குத்தகையாளர்கள் முதலானவர்களால் இவர்களது சுதந்திரம் மேலும் பறிபோயிற்று.எனவே, பழங்குடியினரின் குறைகளை நீக்கவும் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரவும் 'பழங்குடி வனத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்', கூட்டுறவு நிதியம், மற்றும் வளர்ச்சிக் கழகம், ஆகியவற்றை 1960-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தேபார் குழு(Dhebar Commission) பரிந்துரைத்தது. ம.ந.பு.

**காட்டெருமை நடனம்**: பழங்குடியினர் வாழ்வில் நடனமும் பாட்டும் இன்றியமையாக் கூறுகள். குறிப்பாக இவை கடின உழைப்பிற்குப்பின் மனத்திற்கு உற்சாகமூட்டவோ, தெய்வங்களை வழிபடும் சடங்கின்போது நிகழ்த்தப்படும் கலையாகவோ, பொழுது போக்கிற்காகவோ நிகழ்த்தப்படுகின்றன. இன்றைய நிலையில் பழங்குடியினரிடையே பொழுது போக்கிற்காக நிகழ்த்தப்படும் சில நடனங்கள் முற்காலத்தில் சமயச் சடங்கு சார்ந்தனவாக, பொருளுடையனவாக விளங்கின என்பர் இனக்குழுவியலார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இன்றும் நிகழ்த்தப்பட்டு வரும் பழங்குடி நடனங்களுள் ஒன்றே காட்டெருமை நடனம் (Bison Dance).

**காட்டெருமை நடனத்தின் வரலாற்றுப் பின்னணி**: மலைச் சரிவுகளில் பழங்குடியினர் காட்டையழித்துப் பயிர் செய்த காலத்தில் அம்மலைச் சரிவுகளில் திடீர் திடீரெனக் கூட்டமாகத் திரிந்த காட்டெருமைகளால் தமது உணவுப் பயிர்கள் பெரிதும் அழிவுறுவதைக் கண்ணுற்ற பழங்குடியினர் அவற்றை வேட்டையாடி அழிக்கத் தலைப்பட்டனர். இத்தகைய வேட்டைத் தொழிலுக்கு முன்னர்த் தாம் வேட்டையாடவுள்ள காட்டெருமைகள் போன்று பழங்குடியினருள் ஒரு குழுவினர் வேடம் புனைந்து ஆடி, மற்றையோர் அவ்விலங்குகளின் பாய்ச்சல்களையும் அதனை எதிர்





காட்டெருமை நடனம்

கொள்ளும் திறனையும் கற்றுக் கொள்ள ஒரு வாய்ப்பாக இந்த வேட்டை நடனத்தை நிகழ்த்தினர். இது பிற்காலத்தில் சமயச் சடங்கின் ஒரு பகுதியாயிற்று. வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே விலங்குகளின் தோல் போர்த்தியாடும் இத்தகு வேட்டை நடனங்கள் வழக்கிலிருந்ததைக் குகையோவியங்கள் காட்டுகின்றன. என்றாலும், காட்டெருமைகள் பெரிதும் அழிவுற்று, எண்ணிக்கையில் குறைந்து விட்ட இன்றைய நிலையில் மரபு நடனமாக இந்தக் காட்டெருமை நடனத்தைத் திருமணம் உள்ளிட்ட அனைத்து வாழ்க்கைச் சடங்குகளிலும் இந்தியப் பழங்குடியினருள் சிலர் நிகழ்த்தி வருகின்றனர்.

இந்தியப் பழங்குடியினருள், மைய இந்தியப் பகுதியையும் வடகிழக்கு எல்லைப் பகுதியையும் (NEFA) சார்ந்த கோண்டுகள், கந்தர், சவரர், நாகர், இலாமாக்கள் (Lamas) ஆகியோரிடையே இந்நடனம் வழக்கிலுள்ளது. அதிலும் குறிப்பாக, கோண்டுகளுள் காட்டெருமைக் கொம்பு-மரியரிடையேயும் (Bison-Horn Marias), தொர்லா கொய்த்தோர் (Dorla Koitor) எனப்படும் கோயரிடையேயும், கந்தருள் தெசியாக் கந்தர் (Desia Khonds) தவிர ஏனைய இரு பெரும் கந்தரான தொங்கிரியாக் கந்தரிடையேயும் (Dongria Khonds) குட்டியாக் கந்தரிடையேயும் (Kutia Khonds) இக்காட்டெருமை நடனம் வழக்கிலுள்ளது.

இந்தியப் பழங்குடிப் பகுதிகளில் காட்டெருமை நடனம் சிதறலாகக் காணப்படினும் சற்றேறக்குறைய ஒத்த தன்மையிலேயே உள்ளன. இருப்பினும், காட்டெருமை நடனத்திற்கான ஆடை அணிகலன்கள் மேற்கூறிய பழங்குடிகளுக்கிடையே வேறுபட்டுள்ளன. ஒரு பொதுப் பண்பாட்டுக் கூறிலிருந்து தனிப்பண்பாட்டுக் கூறாகும்போது ஏற்படும் இயல்பானதொரு மாற்றமாக இதைக் கொள்ளல் வேண்டும். குறிப்பாக, காட்டெருமை நடனத்திற்கான தலைப்பாகை (Headgear) அணிகலனில் மாறுதல் காணப்படுவதைக் குறிப்பிடலாம். காட்டெருமைக் கொம்பு மரியர் தலைப்பாகையில் சோழி வரிசைகளைத் தொங்கவிட்டும், கந்தர் மயிலிறகுத் தொகுதியை முதுகில் அமைத்துக் கொண்டும், கோயர் தலைப்பாகையின் நடுவே மயிலிறகுத் தொகுதியை வைத்தும் வேறுபடுகின்றனர். இதுபோன்றே நடனமாடுவோரின் ஆடை புனைதலும் வேறுபடக் காணலாம். எடுத்துக்காட்டாக, காட்டெருமைக் கொம்பு - மரிய ஆடவரும் பெண்டிரும் இடுப்பில் கட்டும் உடை முழங்காலுக்குச் சற்றுக் கீழ்வரை உள்ளது. இது மடிப்புகள் மிகுதியாக இல்லாமல் தைக்கப்பட்டுள்ளது. கந்தப் பழங்குடியினரோ மடிப்புகள் மிகுந்த உடையைக் கட்டிக்கொள்கின்றனர்.

**மரியரின் காட்டெருமை நடனம்:** முன்னர்க் குறிப்பிட்டதுபோன்று, முகத்தை மூடும் சோழி வரிசைகளையுடைய காட்டெருமைத் தலைப்பாகையணிந்த மரிய ஆடவர் பீப்பாய் வடிவ மத்தளத்துடன் சீரான இசையொலி எழுப்புவர்; தலையில் சிறு மகுடமணிந்த மரிய மகளிரோ தம் கையிலுள்ள சிறு கோலால் தரையில் தட்டித்தட்டி, முன்னும் பின்னும் அசைந்து, தரையில் உருண்டு சரிந்து நடனமாடுவர். ஆடவர் வட்ட வடிவில் ஆட, பெண்டிர் ஒருவரோடு ஒருவர் கைகோத்து நீள் வரிசையில் ஆடிக்கொண்டே, ஆடவரின் வட்ட வடிவ அமைப்பில் நுழைந்து ஆடுவது காண்போர்க்குக் கவின் மிகு விருந்தாகும்.

**கோயரிடையே காட்டெருமை நடனம்:** கோண்டுப் பழங்குடியின் தெற்குப் பிரிவாகக் கருதப்படும் கோயர் ஆந்திராவின் கீழ்க் கோதாவரிப் பகுதியிலும் ஒரிசாவின் மல்கனகிரிப் (Malkanagiri )பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்கள் வேட்டைக்கு முன்னரும், வேட்டையில் வெற்றிக்குப் பின்னரும் காட்டெருமை நடனமாடுவதுடன் தமது திருமண விழாவின் போதுவும்மகிழ்ச்சியை வெளிக்காட்டும் நடனமாக இதை நிகழ்த்துகின்றனர்.

முதலில் காட்டெருமைத் தலைப்பாகையணிந்து ஆறு ஆடவர் பீப்பாய் வடிவ மத்தளத்துடன் குழுமுகின்றனர். பின்னர், இருவர் இருவராகப் பெண்டிர் தம் ஒரு கையால் ஒருவரோடு ஒருவர் கும்மியடித்துக் கொண்டும், மற்றொரு கையால் அடுத்த இணையின் இடுப்பு ஆடையைப் பற்றிக் கொண்டும் ஓடி வருவர். தமது மத்தளத்தில் ஒரே சீரான தாளத்துடன் காட்டெருமையின் பாய்ச்சல், வேட்டையாடுநரின் குறி வைத்தல், அம்பு எய்தல் உள்ளிட்ட அசைவுகளை நிகழ்த்திக் காட்டுவர். அதே நேரத்தில், கோயப் பெண்டிர் முன்புறமாக ஒரு தப்படியும் அதையடுத்துப் பின்புறமாக இரு தப்படிகளும் வைத்து இசைக்கேற்பப் பாடி ஆடுவர்.

**காட்டெருமை நடனம் உணர்த்தும் சில உண்மைகள்:** வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து விலங்குத்தோல் போர்த்தி ஆடப்பட்ட மந்திரவாத சமய ஆட்டங்களே இந்தக் காட்டெருமை நடனத்திற்கு முன்னோடி என்பது புலப்படும். இதற்குச் சான்றாக, பிரான்சு நாட்டின் திராய்சு பெரசுக் (Trois Freres) குகையோவியங்களில் தீட்டப்பட்டுள்ள மான்தோல் போர்த்திக் காட்டப்பட்டுள்ள சூனியக்

காரனின் உருவத்தைக் குறிப்பிடலாம். அரிசோனாவின் யாக்கூய்ப் (Yaqui) பழங்குடியினர் மான் வேட்டைக்கு முன்னர் ஆடும் மான் நடனமும், காமரூன் மேட்டு நிலப் பகுதியில் வசிக்கும் பண்டுசோன் (Bandjoun) பழங்குடியினர் நிகழ்த்தும் யானை நடனமும் நாகர், கோண்டு, கந்தர், சவரர் ஆகியோரிடையே காணப்படும் காட்டெருமை நடனமும் இன்றைய நிலையில் வரலாற்றுக்கு முந்தைய நடனத்தின் தொடர்ச்சியைக் காட்டும். சமயச் சடங்கு சார்ந்த நடனம் காலப்போக்கில் பொருளிழந்து பொழுது போக்கு நடனமாக இன்று மாறுபட்டுள்ள நிலைமையையும் காட்டெருமை நடனம் உணர்த்துகிறது. ஒரு பொதுப் பண்பாட்டுக்கூறானது தனித் தனிப் பழங்குடியினரிடையே பரவும்போது மாற்றமடைதல் இயல்பானதே என்ற உண்மையையும் பல்வேறு பழங்குடியினரிடையே காட்டெருமை நடனத்திற்குள்ள வேறுபாடுகள் நன்கு தெளிவு படுத்தும். இருப்பினும், இந்தியாவின் இரு பெரும் பகுதிகளில் (வடகிழக்கு எல்லைப் பகுதி, மைய இந்தியப் பகுதி) மட்டும் இக்காட்டெருமை நடனம் இன்றளவும் நிலவிவருகிறது. சி.ம.

**காட்டேரி** என்பது இந்து மக்களுள் ஒரு பகுதியினர் வழிபடும் பெண் சிறு தெய்வங்களுள் ஒன்று. இதனை வனதேவதையாகக் கருதும் வழக்கம் உண்டு. மக்கள் காடுகளில் வசித்த காலத்தில் அங்குத் தோன்றும் தீயிலிருந்து தங்களைக் காக்க வேண்டி வன தேவதையை வணங்கினர் என்றும், அது காட்டேரி எனப்பட்டதென்றும், அதுவே காட்டேரி என்று வழங்கலாயிற்று என்றும் கூறுகின்றனர். இக்காலத்தில் இச்சிறு தெய்வத்தினைப் பொதுவாகச் சமுதாயத்தின் கீழ்மட்டத்திலுள்ள மக்களே வழிபடுவர்.

இது மாரியம்மனுக்கு ஏவல் செய்யும் சிறு தெய்வமாகும், வழிபடும்போது மாரியம்மனுக்குச் சைவ உணவு வகைகளையும், காட்டேரிக்குப் புலால் உணவு வகைகளையும் படைத்து வழிபடுவர்.

கிராமங்களில் ஊர்க்குப் புறத்தே உள்ள சில மரங்களில் காட்டேரி குடிகொண்டுள்ளது என்று நம்பிக்கை கொண்டு அம்மரங்கள், அது நிற்கும் மன்றங்கள் ஆகியவற்றை வழிபடுவதும் உண்டு. மரங்களில் வளையல்கள், ஓலைச் சுருள்கள் முதலியவற்றைக் கட்டித் தொங்கவிடுவர். அவ்விடங்களில் காட்டேரிக்குப் பூசை செய்வர். காட்டேரிக்குப் பூசை செய்வோர் பெரும்பாலும் இரவில் அதனை மேற்கொள்வர். முட்டையிடும் பெட்டைக் கோழி, ஆடு, பன்றி முதலியவற்றின் இறைச்சி, கருவாடு போன்றவற்றைச் சமைத்துச் சோற்றுத் திரளுடன் படைப்பர். காட்டேரிக்கு உருவம் சமைத்து வழிபடுவதும் உண்டு. பெண்வடிவில் அமையும் அவ்வுருவம் காண்போர் அஞ்சத்தக்க வகையில் அமையும்,

இந்துக்களுள் சிலர் காட்டேரியைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுவதும் உண்டு. தஞ்சை மாவட்டத்திலுள்ள நடுக்காவேரி கிராமத்தில் ஒரு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. அக்கோவிலுள் அமைக்கப்பட்ட காட்டேரி அம்மன் வடக்கு நோக்கி அமர்ந்த நிலையில் உள்ளது. நான்கு கைகளோடும், கோரைப் பற்களோடும் விளங்கும் அம்மன், தன் மடியில் ஒரு அசுரனைக் கிடத்தி அவனைக் கிழித்து உண்பது போல அமைக்கப்பட்டுள்ளது. காலில் ஒரு அசுரனை மிதித்துக் கொண்டுள்ள அதன் தோற்றம் கண்டார் அஞ்சுமாறு உள்ளது. அதற்குச் சிவப்பு, வெண்மை ஆகிய நிறங்களில் ஆடை அணிவிப்பர். இந்தக்கிராமப் பகுதியில் வாழும் கள்ளர் மரபினருள் ஒருபகுதியினர் இக்காட்டேரி அம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். காட்டேரி கோயிலில் வேண்டிக்கொண்டு வழிபடுவோர் ஆட்டுக் கடாவினைப் பலியிட்டு அங்கேயே சமைத்துப் படைத்து, உண்டு திரும்பும் பழக்கமும் உண்டு. காட்டேரியைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் மேற்கொள்ளும் வழிபாட்டில் மற்றவர்கள் பொதுவாகக் கலந்துகொள்ள மாட்டார்கள்.

சிறுகுழந்தையைக் காக்கும் தெய்வமாகக் காட்டேரி அம்மனைக் கருதி வழிபடும் மரபும் உண்டு. குழந்தை பிறந்த பதினாறாம் நாள் அல்லது முப்பதாம் நாள் அக்குழந்தை நலன் வேண்டிக் காட்டேரிக்கு வழிபாடு செய்வதுண்டு. கணவனை இழந்த வயதான பெண்மணியைத் தன்னில்லத்திற்கு அழைத்துப் புலால் உணவை வயிறார உண்ணச் செய்வர். மகவு பெற்ற பெண்மணியைக் குழந்தையோடு அம்மூதாட்டியின் காலில் விழுந்து வணங்கித் திருநீறு பூசச் செய்வர். காட்டேரி தமக்கு அளிக்கப்படும் உணவை மூதாட்டியின் வாயிலாக ஏற்றுக்கொள்கிறது என்று நம்புகின்றனர்.

சிறுகுழந்தை அடிக்கடி அழுவதால் அதற்குக் காட்டேரியின் தீண்டுதல் காரணம் என்று கருதி அதற்குப் பூசை செய்யப்படுவதுண்டு. செய்வினைக் கொடுமைகளைத் தவிர்க்கவும் திருட்டுப் போன பொருள்களை மீண்டும் பெறவும் கருதி இத்தெய்வத்தை வழிபடுவதும் உண்டு. இரா.குரு.

**காட்மண்டு** நேபாளத்தின் தலைநகர். காண்டிபுரி, காத்துமாண்டு எனவும் இது வழங்கப்

பெறும். பாக்குமதி ஆறும் விட்டுணுமதி ஆறும் கலக்குமிடத்தில், கடல் மட்டத்திற்கு 1320 மீட்டர் உயரத்தில் உள்ள இந்நகரை, கி.பி. 723-ஆம் ஆண்டில் குணகாமதேவன் என்ற மன்னன் நிருமாணித்தான். மஞ்சு-பதன் என்பது இதன் ஆதிப் பெயர். காட் மண்டு என்ற சொல் மரத்தினாலாகிய கோயிலைக் குறிக்கும். காட் என்றால் மரம், மண்டு - (மண்டிர்) என்றால் கோயில். இங்கு உள்ள கோயிலை, கி.பி. 1596-இல் இராசா இலச்சுமணசிங்கு என்ற அரசர், ஒரே மரத்திலிருந்து எடுத்த பலகைகளைக் கொண்டு, கட்டியதாகக் கூறப்படுகிறது. இன்றும் நிலவும் அக்கோயிலில் அடியார்கள் தங்குகின்றனர். கூர்கா இனத்தைச் சேர்ந்த மன்னர்களால் கி.பி. 1768 முதல் இந்நகர் ஆளப்பட்டு வந்தது. இங்குக் குடி யேறிய நேவார் வாணிக மக்கள், இந்நகரை நாட்டி லேயே மிகப்பெரிய தொழில் மையமாகவும், வாணிக மையமாகவும் மாற்றியுள்ளனர். புதிய பல சாலை கள் அமைக்கப்பட்டதுடன் 1970-இல் நாட்டின் மற்றப் பகுதிகளுடன் வான ஊர்திப் போக்குவரவும் தொடங் கப்பெற்றது. திரிபுவனப் பல்கலைக் கழகம் 1959-இல் நிறுவப்பெற்றது. வேளாண்மைத் தொழிலும் பலரால் பின்பற்றப்படுகிறது. இங்கு 1934-ஆம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாகப் பழைய



காட்மண்டிலுள்ள கோயில்

கட்டடங்கள் பல அழிவுற்றன. அவை இருந்த இடங்களில் இப்பொழுது புதிய நாகரிகத்தை ஒட்டிய பல கட்டடங்களைக் காணலாம். காட்மண்டில் சிறப்பாகக் காணத்தக்கவற்றுள். மல்லா அரசர் களின் பழைய அரண்மனையும், இராசா மகீந்திர மல்லன் கட்டிய தேல்சு (Taleju) கோயிலும் குறிப் பிடத்தக்கன. அரண்மனையின் வாயிற்புறத்தில் அனு மார் உருவச்சின்னம் இருக்கிறது. காலபைரவர் கோயிலும் வேறு பல சிறிய கோயில்களும் பார்க்கத் தக்கவை. நகரின் கிழக்கில் துண்டிகேல் (Tundi Khel) இராணுவப்பயிற்சிக்கூடம் காட்சி தருகிறது. முற்கால தில் அரசியலார் இங்கே தான் முக்கிய அறிவிப்புகளை மக்களுக்குப் பறைசாற்றி வந்தனர். பீமசேன தேபா என்ற ஒரு முதலமைச்சர் நிறுவிய காவல் கோபுரம் அக்காலக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கது. நகரின் வெளிப்புறத்தில் பல 'ஓலக்க' மண்டபங்கள் உள் ளன. இவற்றைக் கட்டினவர்கள் இராணா குடும் பத்தினர். இப்பொழுது இவற்றில் அரசியற் பணி அலுவலகங்கள் செயற்பட்டு வருகின்றன. சிங்க ஓலக்கக் கட்டடத்தில், வழிவழியாக ஆட்சிபுரிந்த முதலமைச்சர்கள் தங்கியிருந்தனர். அதற்கு வட கிழக்கில் 5 கி.மீ. தொலைவில், திபெத்திய பௌத் தர்கள் வழிபடும் புத்தர் கோயில் உள்ளது. புனிதப் பயணிகள் வெளிநாடுகளிலிருந்து இங்கு வருவதுண்டு.

காட்மண்டின் திருவிழாக்களுள் மகாசிவராத் திரி விழாவும் மச்சேந்திரக் கடவுள் விழாவும் முக்கியமானவை. தவிர, பசுவுக்காகவும் இந்திரனுக் காகவும் குமாரி தேவிக்காகவும் விழாக்கள் இங்கு நிகழ்கின்றன. இரண்டரை இலட்சத்திற்கு மேற் பட்ட மக்கள் இங்கு வாழ்கின்றனர். தெ.பா.

**காட்ரிங்டன், இராபர்ட்டு என்றி (கி.பி. 1830-1922)** இங்கிலாந்து மானிடவியலாரும், ஆங்கி லிக்க சமய குருவும் (Anglican Priest) ஆவார். மெலனீசியச் சமுதாயத்தினரையும் அவர்களது பண் பாட்டையும் முறைப்படி முதன்முதலில் ஆராய்ந்த காட்ரிங்டனின் (Robert Henry Codrington) ஆய்வு இன்றும் இனக்குழுவியல் (Ethnography) துறையில் மிகச் சிறந்த தனிவரைவு நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

காட்ரிங்டன் இங்கிலாந்தில் வில்ட்டுசயர் (Wiltshire) என்னுமிடத்தில் கி.பி. 1830, செப்டம்பர் 15-ஆம் நாள் பிறந்தார். இவர் ஆக்சுபோர்டில் வாதாம் (Wadham) கல்லூரியில் கி.பி. 1855-ஆம் ஆண்டு உதவித் தொகை பெறும் ஆய்வாளராகச் சேர்ந்தார். பின்னர் கி.பி. 1857-இல் திருநிலைக் கட்ட ளையைப் (Holy Order) பெற்றுக் கொண்டார். அதன் பின்னர், கி.பி. 1860-இல் நியூசிலாந்திற்குச் சென்று மெலனீசியாவிற்குச் செல்லும் சமயப்பரப்புக் குழுவில் சேர்ந்து நார்போக்குத் தீவில் (Norfolk Island) குடியேறினார். இங்குப் பணியாற்றிய

காலத்தில் நியூ ஈப்பிரடீசு (New Hebrides), சால மன் முதலான தீவுகளிலும் மெலனீசிய தீவுகளிலும் பலமுறை சென்று அங்குள்ள பழங்குடிகளின் வாழ்க்கை முறையைக் கண்டறிந்தார். இவர்தம் தரவுகள், உறவு முறை, திருமணம், சொத்து, இரக சியச் சங்கங்கள், நாட்டுப்புறக் கலைகள், மாய வித்தை, சடங்குகள் முதலியன பற்றிச் சேகரிக்கப் பட்டவையாகும்.

மெலனீசியப் பயணத்திற்குப் பின் இங்கிலாந்து திரும்பிய இவர் சசக்சு (Sussex) மாகாணத்தில் ஒரு கிராமச் சமயகுருவாகப் (கி.பி. 1888-93) பொறுப்பேற் றார். பின்னர் (கி.பி. 1894-1901) பல மதகுரு இல்லங் களைக் கண்காணிக்கும் தலைமைக் குருவாகப் பணி யாற்றினார். இந்தக் காலத்தில் இவர் மெலனீசியத் தீவு மக்களைப் பற்றித் தொகுத்துக் கொண்டு வந்த தரவுகளைத் தனிவரைவு நூலாக எழுதினார். இந் நூலில் இம்மக்களைப் பற்றிய இனக்குழுவியல் தரவு களை மிகுதியாகச் சேகரித்துள்ளதை மானிடவியல் நோக்கில் விவரித்தது மட்டுமன்றி, ஐரோப்பியருடன் தொடர்புகள், இம்மொழியின் ஒலியியல், இலக்கணம், சொல்லியல் முதலான அனைத்துக் கூறுகளை விளக்கியுமுள்ளார். இதன் பயனாய் இவர் பல அரிய நூல்களை வெளியிட்டு உதவினார். இவர்தம் நூல் களுள் குறிப்பிடத்தக்கவை. மெலனீசியரைப் பற்றிய மானிடவியல், நாட்டுப்புறவியல் ஆய்வுகள் ஆகும். இவர் 1922, செப்டம்பர் 11-ஆம் நாள் கால மானார். சீ.ப.

**காட்வின் ஆசுட்டின்**: இது காசுமீரத்தின் வடக்குப் பகுதியில் உள்ள காரகோரம் என்னும் மலைத்தொடரில் உள்ள மிக உயரமான சிகரம். இது உலகின் இரண்டாம் உயரமான சிகரம் என்று கூறப்படுகிறது. இதன் உயரம் 28,250 அடி. மிக நீளமுள்ள பனிக்கட்டி ஆறுகள் இங்கு ஓடுகின்றன. சூரிய வெளிச்சத்தை மிக அரிதாகத்தான் இங்கே காண முடியும். தெ.பா.

**காட்வின், வில்லியம்**: மனிதனின் எதிர்கால முழுவளர்ச்சியில் நம்பிக்கை உடையவரும், பண் பாட்டு உறுதிப்பாட்டுடன் (Cultural Determinism) தனியாள் உரிமைக் கோட்பாட்டை இணைத்தவரும், ஆங்கிலச் சமூக, தத்துவ ஆசிரியரும், அரசியல் செய் தித் தாளாசிரியருமான வில்லியம் காட்வின் என் பார் (William Godwin) பிரான்சில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாராள அரசியல் சிந்தனை யாளராகிய கண்டார்சே (Condorcet) என்பாரின் காலத்தவராவர். கண்டார்சேயைப் போலக் காட்வி னும், பிரெஞ்சுப் புரட்சியும், அதன் விளைவாகத் தோன்றிய நெப்போலியனுடைய இராணுவ சருவாதி கார ஆட்சியும் பிரான்சில் நடைபெற்றபோது அவற்றைக் கண்ணுற்று, அவற்றுக்குப் பின்னணியான சமூக, அரசியல், பொருளியல் சூழ்நிலைகளையும், அவற்றின் விளைவுகளையும் அறிந்தார்.



காட்வின், வில்லியம்

**வாழ்க்கை வரலாறு**: காட்வின் கேப்பிரிட்சு சயரில் எலித் தீவில் (Isle of Ely), விசுபெக்கில் (Wisbech) கி.பி. 1756-இல் பிறந்தார். சமயத்துறையில், இவர் நிலைப்பட்ட ஆங்கிலத் திருச்சபையில் சேராத முரண் பாட்டாளர் (Dissenter) ஆவார். இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் விரைவாகப் பரவிவந்த தாராளக் கோட்பாட்டை ஏற்று, அதைத் தீவிர நிலையில் விளக்கி, கடவுள் மறுப்பு, அரசு வேண்டாக் கோட் பாடு (Anarchism), ஆள் சுதந்திர உரிமை (Personal Freedom) முதலிய கருத்துகளை ஆதரித்துப் பல நூல்களை எழுதினார். இவர், ஆங்கிலக் கற்பனை இலக்கிய வளர்ச்சி இயக்கத்துக்கு முன்னோடியாகக் கருதப்பட்டார். இவர் எழுதிய நூல்களுள், 'அரசியல் நீதி' (Political Justice, 1793) என்பது பொதுப்பண் பையும், இன்பத்தையும் அரசியல் நீதி எவ்வாறு பாதிக்கிறது என்று காட்டும் ஓர் ஆய்வு நூல் ஆகும். இதனைத் தவிர, கி.பி. 1797-இல் ஒரு கட்டுரைத் தொகுப்பையும், கி.பி. 1820-இல் தாமசு மால்த்தூசு (Thomas Malthus) என்பாரின் கி.பி. 1798ஆம் ஆண்டுக் கட்டுரைக்கு (Essay) விடையாக, 'மக்கள் தொகை' (Population) என்ற ஒரு நூலையும், கி.பி. 1831-இல் 'மனித இயல்பு, படைப்பு, கண்டுபிடிப்புகள் ஆகியவற் றைப் பற்றிய சிந்தனைகள்' (Thoughts on Man His Nature, Production, and Discoveries) என்ற நூலையும், 'காலிபு வில்லியம்சின் துணிகரச் செயல் கள்' (The Adventures of Caleb Williams,-1794) என்னும் புதினத்தையும் எழுதினார். இவர், கி.பி. 1797-இல் திருமணம் செய்து, ஒரு பெண்ணுக்குத் தந்தை ஆயினார்.

**அரசியற் கருத்துகள்**: காட்வின் வாழ்ந்து சிந்தித்த காலமாகிய கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இயற்கையின் சட்டம் என்ற அரசியற் கோட்பாடு (Natural Law) கைவிடப்பட்டுத் தனியார் சுதந்திரம் அல்லது உரிமை வலியுறுத்தப்பட்டுத் தாராள அரசியற் கோட்பாடு(Political Liberalism) வளர்ந்தது. அரசியல் துறையில் சுதந்திரம், மனித உரிமைகள், மனிதனின் உயரிய மதிப்பு ஆகியவற்றை வற்புறுத்தும் பல அரசியல் சீர்திருத்தங்களை வலியுறுத்திச் சான் இலாக்கு, செரிமி பெந்தம் முதலிய சிந்தனையாளரும், சுதந்திரத்தைப் பாதுகாக்க வல்ல அரசாங்க அமைப்பை அதிகாரப் பிரிவினை என்ற கோட்பாட்டில் அமைத்தல் வேண்டுமென்று மாண்டெசுக்யூ என்ற சிந்தனையாளரும், ஆய்வு செய்யும் சுதந்திரத்தையும், கருத்துகளை வெளியிடும் சுதந்திரத்தையும், மற்றும் குடி உரிமைகளையும் ஆதரித்து வால்டேர் என்ற அறிஞரும், ஒழுக்க இயலை (Ethics) இயற்பியல் (Physics) முதலிய எந்த அறிவியலையும் போல ஒரு செயலறிவினடிப்படையில் அமைத்துப் பயன்வழிக் கோட்பாட்டை விளக்கி ஆல்பாக்கு (Holbach) என்பாரும் பல கொள்கைகளை உருவாக்கினர். இந்தத் தாராள இயல் சூழ்நிலையில்தான் பிரான்சில் கண்டார்சேயும், இங்கிலாந்தில் காட்வினும் எண்ணிப் பல கருத்துகளைக் கூறினர்.

காட்வின் கூறிய சில அடிப்படைக் கருத்துகள் அவருடைய தராள அரசியற் கோட்பாட்டை விளக்குகின்றன. மனித அறிவு எது சரியானதென்று தீர்மானித்து, அதனைத் தேர்ந்தெடுக்கக்கூடிய அளவுக்கு முழுச் சுதந்தரமும் தகுதியும் உடையது. மனித மனம் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் நம்பிக்கை உடையது. இந்த நம்பிக்கையின் விளைவாகத் தோன்றிய செயல்களையும். அவற்றால் மனிதனுக்கு ஏற்பட்ட செயலறிவையும் (Experience) தொகுத்துக் கூறுவது வரலாறு ஆகும். இத்தொகுப்புத்தான் நாகரிகம் எனப்படும். முன்னேற்றம் என்பது அறிவு வளர்ச்சியின் வாயிலாகவும், மனித இன்பவாழ்வுக்கு உள்ள தடைகளை நீக்கும் ஆற்றலை அறிவு வளர்ச்சி மனிதனுக்கு அளிப்பதன் வாயிலாகவும் ஏற்படும்.

காட்வின், இத்தகைய முன்னேற்றத்துக்குத் தடையாக அவர் காலத்திய ஆங்கில அரசாங்கம் இருந்ததென்று கருதி, அதை ஒரு நல்ல அரசாங்கமென்று ஏற்றுக் கொள்ள மறுத்தார். அவ்வரசாங்கம் பல வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பல ஏமாற்றுச் செயல்களைச் செய்து, அது மக்களைக் கெடுக்கும் தீங்குகளைச் செய்து, கொடுங்கோலாட்சி நடத்துகிறது என்று அவர் காட்டினார். இத்தகைய ஒரே அரசாங்கத்துக்கு மாறாகத் தன்னாட்சியும், தன்னிறைவும் பெற்றுள்ள பல சிறு சமூகங்களாக நாடு பிரிக்கப்படுதல் வேண்டும் என்றும், நாட்டுடைமையாகவோ சமூக உடைமையாகவோ ஆக்கப்படாமல், எவருக்கு அது இன்றியமையாத தேவையாக இருக்கிறதோ அவரால் அது ஒரு'புனிதமான பொறுப்பாண்மைப் பொருளாகக் கருதப்படுதல்' வேண்டும் என்றும் கூறினார். அவருடைய கருத்தின்படி, சமூக நிறுவனங்கள் வெற்றியாகச் செயற்பட முடியாமல் போவதற்குக் காரணம், அவை, நிலமைகளை அவை உள்ளவாறே மக்கள் புரிந்து கொள்ள இயலாதவாறு தடுக்கிற சில எண்ணவகைகளையும்(Thought Categories), வெறுப்புக் கருத்துகளையும் (Preconceived Ideas) மக்கள் மீது புகுத்துவதே ஆகும். யாவருக்கும் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சமமான உரிமைகளும், கல்வி பெறும் வசதிகளும் அளிக்கப்பட்டுத் தடையற்ற வணிக உரிமையும், முதியோர், நோயாளிகள் காப்புறுதி, வசதி முதலியவையும் வழங்கப்பட்டுப் போர்முறையும் ஒழிக்கப்பட்டால் யாவருக்கும் சம வாய்ப்புக் கிடைக்கும்.

**மதிப்பீடு**: காட்வின் கூறிய கருத்துகளுள் சில மனித இயல்புக்கும் நோக்கத்துக்கும் பொருந்துவனவாகவும், சில முரண்பாடுகள் நிறைந்தும் காணப்படுகின்றன. தனி ஆள் சுதந்திரத்தை வரம்புமீறிய அளவுக்கு அவர் வலியுறுத்திய போக்கு அரசு வேண்டாக் கொள்கையில் அவரைக் கொண்டுபோய் விட்டது. அரசு வேண்டாக் கொள்கைக்கு நேர்மாறான பொதுவுடைமைக் கருத்தும் அவருடைய அரசியற் சிந்தனையில் காணப்படுவதை ஆசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அவர், மக்களுடைய கூட்டுறவு அல்லது ஒத்துழைப்பு என்பதில் சிறிதும் நம்பிக்கை இல்லாமல், அதை வெறுத்து, அதுவே தீங்கு பயப்பது என்று அழுத்தமான கருத்துக் கொண்டிருந்ததனாலும் அரசு வேண்டாக் கொள்கையை ஆதரித்தார்.

இவ்வாறிருப்பினும், கி.பி.17-ஆம் நூற்றாண்டில் பொதுவாக அரசியற் சிந்தனையாளர்கள் கருதியது போல, மனித நடக்கையையும், சமூக நிறுவனங்களையும் நியாயமானவையா, ஒதுக்கித் தள்ளப்படுதற்குரியவையா என்று தீர்மானித்தற்குத் தக்க, தவறாத அளவுகோலாக இருப்பது மனித அறிவு ஒன்றுதான் என்று காட்வினும் கூறிய கருத்து, அவரை அறிவு விளக்கக் காலத்தைச் சேர்ந்தவரென்று காட்டுகிறது. இக்கருத்தினடிப்படையில் அவர் கூறிய சம உரிமைக் கோட்பாடும், குடியாட்சிக் கோட்பாடும் வரவேற்கத் தக்கவையே ஆகும். பா. சு.

**துணை நூல்கள்**:

Bury, J.B., The Idea of Progress: An Inquiry in to Its Origin and Growth. New York, 1932.

**Carl L. Becher**, The Heavenly City of the Eighteenth Century Philosophers, New Haven, Conn., 1932.

**Ernest Cassirer**: The Philosophy of Enlightenment (Translation by Fritz C.A. Koelln and James P. Pettegrove), Princeton, N.J., 1951.

**காடர்** பழங்குடியினர் தமிழ்நாட்டிலும் கேரளா விலும் வாழும் முது குடியினர். கொச்சியின் கிழக்குப் பகுதியிலுள்ள ஏலமலைப்பகுதி, தென் கேரள மலைப் பகுதி ஆகியவற்றிலும் கோயம்புத்தூர் மாவட்டத்தி லுள்ள ஆனை மலையில் பிரமன்கடவு, பன்னிகுழி, சவமலை, நெடுங்குன்றம், கருங்குன்று, அயன்குளம், வாகைமலை ஆகிய இடங்களிலும் இவர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். காடர் (Kadar) பழங்குடியினர் இந்திய மக்களினங்களுள் மிகப் பழமையான பழங்குடியினர் எனக் கூறப்படுவ துண்டு. இயற்கை வளம் மிகுந்த ஆனை மலையில் காடர் பழங்குடிகளுடன் முதுவர், மலமலசர் ஆகி யோரும் வாழ்கின்றனர். 'காடன்' என்னும் சொல் காடு என்பதினின்று பிறந்ததாகும். காடர்கள் பேசு வது மலையாளம் கலந்த தமிழின் கிளைமொழி எனக் கருதப்படுகிறது. அண்மைக்கால மொழியியல் ஆய்வுகளின்படி இவர்கள் பேசுவது ஒரு தனிமொழி யாகும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. காடரின் இன்றைய மக்கள் தொகை 800க்கும் மேற்பட்டதா கும்.



காடர் ஆடவன்

காடர்களின் இனப் பண்புகளைக் கூறும்போது மானிடவியலார் இருதரப்பட்ட கருத்தினைக் கூறி யுள்ளனர். பி.எசு.குகா (B.S.Guha), கீன் (Keane ஆகியோர் காடர்களை நீக்ரிட்டோ (Negrito) இனத் தவர்களென்றும், தர்சுடன் (Thurston), எரன்பெல்சு (Ehrenfles) அய்யப்பன் ஆகியோர் தொன்மை ஆசுத் திரேலிய இனத்தவர்கள் (Proto Australoid) என்றும் கூறுவர். இவ்வகையான கூற்றுகளுக்குக் காடர்களின் உருவத்தோற்றம் காரணமாக அமைகிறது. இவர்கள் குட்டையானவர்கள்; கருமை நிறத்தவர்; தடித்த உதடுகளையும் சுருட்டையான தலை மயிரினையும் கொண்டவர்கள்.

பழங்காலத்தில் இலைதழைகளையும் மரப் பட் டைகளையும் அணிந்திருந்த இவர்கள் பண்பாட்டுப் பேற்றினால் இன்று ஆண்கள் சட்டையும் வேட்டியும் பெண்கள் சேலையும் மேற்சட்டையும் அணிகின்றனர். இவர்கள் மலைச் சரிவுகளில் குடிசைகள் அமைத்துள்ள னர். மூங்கில்களும் காட்டு மரங்களும் வீடு கட்டுவ தற்குப் பயன்படுத்தப்படுகின்றன. வேட்டையாடி உணவு சேகரிக்கும் வாழ்க்கைத் தொழிலைக் கொண் டுள்ளதால் இவர்கள் அடிக்கடி இடம் பெயர்ந்து கொண்டே இருக்கின்றனர். இதனால் நிலையான; வலுவான குடிசைகளைக் கட்டுவதில்லை. மட்பாண் டங்களையும் மூங்கில் பொருள்களையும் பெருமளவு பயன்படுத்துகின்றனர்.

காடர்களின் சமுதாய அமைப்பு தாய்வழியைச் சார்ந்ததாகும். மரபு (Descent) தாய்வழியில் அமைந் திருந்தாலும் தந்தையக உறைவிடம் (Patrilocal Residence) அல்லது தாய்மாமனக உறைவிட(Avunculocal Residence) முறையையும் தந்தைவழி மரபுரிமை யையும் (Patrilineal Inheritance) கொண்டுள்ளனர்.

வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் இவர்கள் முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ள னர். இவர்கள் கிழங்கு, காய், கனி, தேன் முதலான வற்றைப் பெருமளவு சேகரிக்கின்றனர். ஆடு, பன்றி, மான், குரங்கு முதலானவற்றின் இறைச்சியை விரும்பி உண்கின்றனர். ஆண்கள் புகையிலைச் சுருட்டுப் பிடிப்பதையும் பெண்கள் புகையிலை போட் டுக் கொள்வதையும் மிகவும் விரும்புகின்றனர். சிலர் கஞ்சாவை விரும்பிப் புகைக்கின்றனர். நீர்நிலைகளில்

நஞ்சினைக் கலந்து மீன் பிடிக்கும் முறையைக் கொண்டுள்ளனர்.

மரம் ஏறுவதிலும் தேன் சேகரிப்பதிலும் யானை பிடிப்பதிலும் இவர்கள் வல்லவர்கள். மலைப்பகுதிகளில் இவர்கள் தேன் சேகரிக்கும் முறை குறிப்பிடத் தக்கதாகும். மலைச் சரிவுகளிலும் மலை இடுக்குகளிலும் உள்ள தேனைச் சேகரிக்கும் பொருட்டு இவர்கள் மலை உச்சியிலிருந்து கயிற்றின் வழியே இறங்கித் தேன் சேகரிக்கின்றனர். இத்தொழிலில் தொழிற் பகுப்பு மிகுந்துள்ளதால் குழுவாகச் செல்கின்றனர். பெரும்பாலும் தேன் சேகரித்தலை இவர்கள் இரவில் மேற்கொள்கின்றனர். இப்போது காடர்களுள் பலர் காப்பி, தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றுகின்றனர். கூடை முடைதல், மூங்கில் சாமான்கள் செய்தல் ஆகியவை இவர்களின் பிற பணிகளாகும்.

பருவமடைந்த பெண்கள் ஏழு நாட்களுக்குத் தனிக்குடிசையில் தங்கி வீடு திரும்புவர். பூப்பெய்தித் தங்கும் இக்குடிசையை உடன் கொளுத்தி விடுவர். வீடு திரும்பும் அன்று விருந்தும் நடனமும் நடைபெறும். மாத விலக்குக் காலங்களில் பெண்கள் ஒவ்வொரு குடியிருப்பிலுமுள்ள முட்டுக் குடிசையில் தங்குவர். குழந்தை பெறும்போதும் இங்குத்தான் தங்குவர். பருவமடைந்த மக்களுக்கே திருமணம் செய்கின்றனர். தூரத்து உறவு மிகவும் விரும்பப்படுகிறது. மணமகன் மணப்பெண் வீட்டிற்குப் பணி செய்து மணம் கொள்ளும் (Marriage by Service) முறையும் உண்டு. மணப்பெண்ணுக்குப் பணம் தருவது இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. நகைகள்,துணிகள்,குறைவாகப் பணம் ஆகியவற்றை மணமகன் மணமகளுக்குத் தருவர். மணமகன் மணமகளுக்குத் திருமணத் தன்றோ அதற்கு முன்போ வேலைப்பாடு மிகுந்த சீப்பைப் பரிசாக அளிக்கிறான். இதனைத் தாலிக்குச் சமமாக மதிக்கின்றனர். திருமணமான பெண்கள் அனைவரும் இதனைத் தவறவிடாமல் பாதுகாத்து வைக்கின்றனர். பலதுணைமணம் (Polygamy), காமக் கிழத்தியர் முறை, மணவிலக்கு, விதவை மணம் ஆகிய அனைத்தும் இவர்கள் சமுதாயத்தில் உள்ளன.

காடர்களிடையே எழும் அனைத்து வகையான சிக்கல்களையும் தீர்க்க 'மூப்பன்' என்னும் தலைவர் உள்ளார்.இவர் வயதில் மூத்தவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். காடர்கள் ஆவியுலகத்தில் நம்பிக்கை உடையவர்கள். மதுரை வீரன், மாரியம்மன், வனதேவதை எனப் பலவாறான தெய்வங்களை இவர்கள் வழிபடுகின்றனர். பேய், மந்திரம், சூனியம் முதலானவற்றில் இவர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். இவர்கள் கொண்டாடும் பல விழாக்களின் போது மிகுந்த உற்சாகத்துடன் ஆண்களும் பெண்களும் நடனமாடுகின்றனர் இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கும் மரபுடையவர்கள். சீ.ப.

**காடவர்**: காண்க: பல்லவர்.

**காடவராயர்**: சம்புவராயர் என்னும் பல்லவ மரபினர் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் பல பகுதிகளில் ஆட்சி செய்து வந்தனர். அவ்வாறு அம்மரபினர் ஆட்சி புரிந்து வந்த பகுதிகளுள் மிகவும் தொன்மை வாய்ந்தன சோழநாடும் தொண்டை மண்டலமும் ஆகும். இங்ஙனம் ஆட்சிபுரிந்த சம்புவராயர் இனத்தினர் தொடக்க காலத்தில் சோழமன்னர்களிடம் படைத் தளபதிகளாகப் பணிபுரிந்து வந்தனர்.

இந்நிலையில் பிற்காலச் சோழமன்னர்களின் திறமையின்மையாலும், நிருவாகச் சீர்குலைவாலும் ஏற்பட்ட சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திச் சம்புவராயர் மரபினர் சோழ நாட்டையும் தொண்டை மண்டலத்தினையும் ஆட்சி புரியத் தொடங்கினர்.

இப்பல்லவ குலத்தின் தலைவன் கோப்பெருஞ்சிங்கன் என்பவன் மிகவும்திறமை வாய்ந்தவனாகக் கருதப்பட்டான். இக் கோப்பெருஞ்சிங்கன் கி.பி.1243-இல் பட்டத்திற்கு வந்தான். இவன் தொடக்க நிலையிலேயே சோழ மன்னர்களை வென்று, அவர்களைத் தோற்று ஓடச் செய்தான். இவன் சோழர்களை வென்று வாகை சூடியதற்குப் பல கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. அக்கல்வெட்டுகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது வடஆர்க்காடு மாவட்டத்தில்உள்ள வயலூரில் காணப்படும் கல்வெட்டு ஆகும். இவனது வெற்றியைப் பல புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். அவர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர் சொக்கசீலர் என்பவர் ஆவர்.

கோப்பெருஞ்சிங்கன் தமிழில் மிகுந்த புலமை வாய்ந்தவனாக விளங்கினான். இதனைக் கல்வெட்டுச்சான்று மூலம் அறியலாம். இவனது தமிழ்ப் புலமையைக் கோதாவரி மாவட்டத்தில் இடர்க்கரம்பை என்னும் தமிழ்ப் பெயரையுடைய திராட்சாராம் என்ற ஊரில் காணப்படும் கல்வெட்டு மூலம் அறியலாம். இக் கல்வெட்டில் காணப்படும் பாடல்கள் இவனாற் பாடப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இவன் புகழையும், இவன் மகன் ஆட்கொண்டானையும் பல கல்வெட்டுகள் புகழ்ந்து கூறுகின்றன. அவைகளுள் குறிப்பிடத் தக்கது திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலிற் காணப்படும் கல்வெட்டு ஆகும். இவர்கள்

காலத்துக் கல்வெட்டுகள் தமிழ்நாடு முழுவதும் காணப்படுகின்றன.

வீரசேகரன் என்னும் காடவராயன் மூன்றாம் குலோத்துங்கனின் படைத் தளபதியாகவும், அமைச்சனாகவும் இருந்தான். இவ்வீரசேகரனின் வெற்றிகளைத் திருவெண்ணெய் நல்லூர்ச்சிவன் கோயிற் கல்வெட்டு மூலம் அறியலாம்.

காடவரைப் பற்றிய பல குறிப்புகள் விருத்தாசலம் கோபுர வாயிலிற் காணப்படும் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். இங்ஙனம் காடவராயர் மரபினர் சோழ நாட்டையும், தொண்டை நாட்டையும் ஆட்சி செய்ததைப் பல கல்வெட்டுச் சான்று மூலம் அறியலாம். சு.ஆ.

**காடவராயனான ஆளப்பிறந்தான்**: தென்னிந்திய வரலாற்றில், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்த பல்லவகுலத் தலைவர்களுள் ஒருவனான காடவராயனான ஆளப்பிறந்தானைப் பற்றிய சில கல்வெட்டுப் பாடல்கள் திருவெண்ணெய் நல்லூரில் கிடைத்துள்ளன. வீரசேகரன் என்ற பட்டம் இவனுக்கு இருந்தது. மூன்றாம் குலோத்துங்க சோழ மன்னனுக்கு அமைச்சனாகவும் படைத் தலைவனுமாக இருந்த இவனுடைய கால்வழியினர் அரசு கட்டிலைப் பெறுவதற்குச் சோழராட்சியின் சிதைவு காரணமாக இருந்தது. இவன் தந்தை அரச நாராயணன் கச்சிராயன் எனப்படுவான். தெ.பா.

**காடிசு** இசுபெயின் நாட்டிலுள்ள ஒரு துறைமுகம். இது வரலாற்றுப் புகழும் வாணிகச் சிறப்பும் பெற்றது. பண்டைய ஓவியங்கள் முதலிய பல கலைப் பொருள்களை இங்கு இன்றும் காணமுடியும். ஈண்டுள்ள கிறித்தவக் கோயில்களும் கலங்கரை விளக்கமும் குறிப்பிடத் தக்க சிறப்பு வாய்ந்தவை. இங்கிருந்து ஏற்றுமதியாகும் முக்கிய பொருள்கள் நெட்டி, பழங்கள், மீன், உப்பு முதலியன. இது ஒரு கப்பற்படைத் தளமாக இருப்பதால் நன்கு சுவரால் சூழப்பெற்றிருக்கிறது. காடிசு (Cadiz) என்னும் மாநிலத்திற்கு இதுவே தலைநகர். இதைச் சுற்றியுள்ள விரிகுடாவிற்கும் காடிசு விரிகுடா என்று பெயர். தெ.பா.

**காடுவெட்டி** ஆந்திரப்பிரதேசம் சித்தூர் மாவட்டத்தில் உள்ளதொரு நகரம். இது திருத்தணிக்கு அருகில் உள்ளது. காடுவெட்டி இன்று கார்வெட்டு நகரம் என்று கூறப்படுகிறது. இவ்வூர் வரலாற்றுச் சிறப்புடையது. இது அக்காலத்தில் கங்க அரச மரபினருடன் தொடர்பு கொண்டதாக விளங்கியது. கங்க அரசர் துருவிநீதரின் கல்வெட்டு ஒன்று இந்நகரைப் பற்றிச் சொல்கிறது. துருவிநீதர் இந்நகரைக் கைப்பற்றி, தம் மகளுக்கு மகனை இதன் அரசராக அரியணை ஏறச் செய்ததாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இன்றும் இங்குக் கோட்டையும் அதன் அழிவுச் சின்னங்களும் காணப்படுகின்றன.

**காடுவெட்டி**[2]: காட்டை அழித்து விளை நிலமாக ஆக்கிய தமிழக மன்னர்கள் ஏற்றுக்கொண்ட சிறப்புப் பெயர். கரிகால் வளவன் காடு கொன்று நாடாக்கியமையால் இப்பெயருக்கு உரியவனாகிறான். பல்லவ மன்னர்கள் பெரும்பாலும் இச்சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளனர். பாணரும் குறுநில மன்னர்களும் இச்சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளனர். சு.இரா.

**காண்டகார்**: ஆப்கானிசுத்தானத்தின் தென் பகுதியில் மலைகள் சூழ்ந்த 'கசராப்' பிரதேசத்தில் காண்டகார் அமையப் பெற்றுள்ளது. இது பாக்கிசுத்தான் எல்லையின் வடமேற்குத் திசையிலிருக்கின்றது. 'கெல்பாண்டு' ஆற்றுப் பகுதியில் ஓரளவு சமநிலையான நிலப்பகுதியாகக் காண்டகார் வட்டாரம் அமைந்துள்ளது. பொதுவாக வறட்சியான காலநிலையுடைய காண்டகார் கோடையில் 110க்கு மேல் வெப்பம் உடையதாக விளங்கும். குளிர் காலத்தில் அதிகக் குளிராகவுமிருக்கும். சனவரி முதல் ஏப்பிரல் வரை மழை அல்லது பனி பெய்யும்.

'கெல்பாண்டின்' கிளை ஆறுகளினால் காண்டகார் நீர்வளம் பெறுகின்றது. அங்கு மக்கள் தானியங்களையும் பழங்களையும் உற்பத்தி செய்கின்றனர். மேட்டு நிலங்களில் ஆடுகளை வளர்ப்பது முக்கிய தொழிலாகும். ஆப்கானிசுத்தானத்தின் ஒவ்வொரு கிராமமும் சிறு நகரமும் தனித்தன்மை வாய்ந்த தொழில் அல்லது கலைநுட்பத்துக்குப் பெயர் பெற்று விளங்குகின்றது. காண்டகார் உலோகம் செதுக்கும் கலை நுட்பத்துக்கும் புகழ் பெற்றுள்ளது.

இன்றைய காண்டகார் நகரம் பழைய காண்டகாரிலிருந்து 3 கி.மீ. விலகியுள்ளது. பழைய காண்டகார் பழுதடைந்து கிடப்பதை இன்றும் காணலாம். அலெக்சாந்தர் கட்டியதாகக் கருதப்படும் பழைய காண்டகார் நகரம் கி.பி. 1738-இல் நாதர்சாவின் படையெடுப்புக்குப் பலியாகியது.

காண்டகாரில் இசுலாமிய சமயத்தைச் சேர்ந்த பட்டாணியர்கள் வாழுகின்றனர். இங்கே தொழில்

நுட்பம் நீங்கலாக வேறு எதற்கும் அயலார்களை அனுமதிப்பதில்லை. பாகிசுத்தானுக்கும் இப்பகுதிக்குமிடையே இருப்புப்பாதைத் தொடர்பு உண்டு.

இடைக்காலத்தில் கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையிலான ஒரு வாணிகத் தலமாகவும் இது விளங்கியது. இங்கிலாந்து நாட்டுப் பயணி ஒருவர் (Richard Steel) கி.பி. 1615-இல் எடுத்த கணக்கின்படி ஆண்டொன்றுக்கு 14 ஆயிரம் ஒட்டகங்கள் காண்டகார் வழியே பண்டமேற்றிச் சென்றன.

**வரலாறு:** காண்டகார் கி.மு. 5-ஆம் நுற்றாண்டில் பாரசீகப் பேரரசின் ஒருபகுதியாக விளங்கிவந்தது. அலெக்சாந்தர் இதை கி.மு. 326-இல் கைப்பற்றினார். அடுத்து செலூக்கசின் கைக்குச் சென்றது. பின்னர்ச் சந்திரகுப்த மௌரியன் செலூக்கசின் மகளை மணம் முடித்த வழியில் கிடைத்த பிரதேசங்களில் காண்டகாரும் அடங்கியது. மௌரியர்களுக்குப் பின், பாக்திரியர்கள்(Bactrians), பார்த்தியர்கள்(Parthians), குசாணர்கள் (Kushanas) ஆகியோரின் ஆளுகைக்குக் காண்டகார் உட்பட்டது. பின்னர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இசுலாமியரின் கைக்குச் சென்றது. அதன் பின் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் செங்கிசுக்கானின் தாக்குதலையும், 14-ஆம் நூற்றாண்டில் தைமூரின் தாக்குதலையும் சந்தித்த போர்க்களமாகக் காண்டகார் விளங்கித் துயருற்றுக் கொண்டிருந்தது. ஔரங்கசீபு கி.பி. 1652-இல் தோற்று வெளியேறியது முதல் காண்டகார் பாரசீகப் பேரரசுக்குச் சொந்த



அகமது சா துரானியின் குழந்தைகள் கல்லறை —காண்டகார்

மாகியது. இந்நகரத்தை கி.பி. 1738-இல் நாதர்சா படையெடுத்து அழித்தார். புதியகாலத்தில் ஆங்கிலேய இந்தியாவின் வடமேற்கில் ஆப்கானிசுத்தானத்துடன்காண்டகாரும் ஓர் அரசியல் எல்லைச் சிக்கலாக வளர்ந்தது. இங்கு அகமது சா துரானி என்பவர் தம் மக்களின் கல்லறை ஒன்று உள்ளது. காண்டகார் இப்பொழுது ஆப்கானிசுத்தானத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. வே.தி.செ.

**துணை நூல்கள்:**

**Sarkar.J.**, History of Aurangazeb, New Delhi, 1973.

**Stamp, Dudly**, Regional Geography Part IV: Asis, Longmans, 1964.

**Tripathi G.P**, Indo—Afgan Relations, New Delhi, 1973.

***காண்டர்பரி*** தென்கிழக்கு இங்கிலாந்தில் கென்ட்டு (Kent) மாநிலத்தில் அமைந்துள்ள பழம் பெருமை மிக்க நகரம். இலண்டன்-தோவர் (London Dower) சாலையில் இலண்டனிலிருந்து தென்கிழக்கே 85 கி.மீ. தொலைவில் இந்நகரம் உள்ளது. இச்சாலையும் இசுடூர் நதியும் (River Stour) சந்திக்கும் இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. வரலாற்றுப் புகழ்பெற்ற காண்டர்பரி (Canterbury) மாதா கோயில் இங்குத்தான் உள்ளது. இந்நகரத்தின் வாழ்விலும் தாழ்விலும் இம்மாதாகோயில் முக்கிய இடம் வகிக்கிறது. இதனைச் சுற்றி வேளாண்மைத் தொழில் சிறப்புடன் விளங்கும் பகுதிகள் உள்ளன. கிழக்குக் கென்ட்டு நகர மக்களின் முக்கியமான சுறுசுறுப்பான கடைவீதிகள் (Shopping Centres) இங்குத்தான் உள்ளன. இங்கு அதிகமாகப் பெருந்தொழில்கள் நடைபெறாவிட்டாலும், சிறு தொழில்களுக்குப் பஞ்சமில்லை. இருப்பினும், இங்கு அயல்நாட்டுப் பயணியர் பலர் வருகை புரிகின்றனர். பின்னர் கி.பி. 1200-இல் இது ஒரு பயணிகளின் மையமாக மாறிவிட்டது. ஏறத்தாழ ஒரு மிலியன் பார்வையாளர்களுக்குமேல் ஆண்டுதோறும் இங்கு வந்து இன்பப்பொழுது போக்குகின்றனர்.

காண்டர்பரி நகரம் மிகச் சிறந்த கல்வி மையமாகத் திகழ்கிறது. இங்கு 1965-இல் கென்ட்டுப்பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. இந்நகரின்கண் கிறித்து திருச்சபைக் கல்லூரி (Christ Church College -Teachers Training), காண்டர்பரி கலை மற்றும் கட்டடக் கலைக் கல்லூரி (Canterbury College of Art and Architecture), காண்டர்பரி தொழில்நுட்பக் கல்லூரி (Canterbury Technical College), கென்ட்டு கல்லூரி, புனித எட்மண்ட்சு பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் கல்வி போதித்து வருகின்றன.

காண்டர்பரி தொன்மைக்கால வரலாற்றுச் சிறப்புடையது. இங்கிலாந்தைக் கைப்பற்றிய உரோ



காண்டர்பரி - தேவாலயம்

மானியர் கி.பி. 43 அளவில் இந்நகரையும் கைப்பற்றத் தவறவில்லை. இவர்களது காலத்தில் இங்கு மூன்று மாதாகோயில்கள் எழுப்பப்பட்டன. ஆனால், கி.பி. 400-இல் இந்நகர் காட்டு இனமக்களின் பிடியில் சிக்கித் தவித்தது. எனவே, இதன் பண்பாட்டுப் பெருமையும் கிறித்தவ சமயமும் அழிந்தன. இருப்பினும் இடைக்காலத்தில் காண்டர்பரி நகரம் புத்துயிர் பெற்றது. உரோமானிய நாகரிக அழிவிற்குப் பின், தியூடானிக்கு (Tutonic) அரசு கென்டில் அமைந்தது. எதெல்பர்ட்டு (Ethelbert) மன்னரின் ஆட்சியின் போது கி.பி. 560 அளவில் அவரது சீரிய முயற்சியின் விளைவாகக் கிறித்தவ சமயம் புதிய வலிவும் பொலிவும் பெற ஆரம்பித்தது. போப்பு கிரிகரியால் (Pope Gregory the Great) கி.பி. 597-இல் அனுப்பப்பட்ட மதப்பரப்புநர் அகசுதசு (Agustus) காண்டர்பரி நகரத்தில் மிக்க ஆர்வத்துடன் கிறித்தவ சமயத்தைப் பரப்பினார்; காண்டர்பரியில் மாதாகோயிலும் கட்டினார். இந்நகரம், கி.பி.668-690 அளவில் பேராயர் தியோடர் (Theodore, Archbishop of Tarsus) காலத்தில் கல்வியில் மேம்பட்டு விளங்கியது.

இக்காலத்திலும் (Modern Age) காண்டர்பரியும் அங்குள்ள மாதா கோவிலும் பல சோதனைகளுக்கு உள்ளாயின. இவையிரண்டும் கி.பி. 1570 -இல் மீண்டும் புத்துயிர் பெற்றன. முதலாம் உலகப் போரின் போது, இங்குப் படைகள் நிறுத்தப்பட்டன. இரண்டாம் உலகப் போரின் போது, நிகழ்ந்த குண்டு வீச்சால் இக்கோயிலின் சில பகுதிகள் இடிந்தன. பின்னர் இந்த இடிபாடுகள் செப்பனிடப்பட்டன.

காண்டர்பரி இன்று சிறந்த பண்பாட்டு மையமாகவும் பொழுதுபோக்கு மையமாகவும் கல்வி மையமாகவும் விளங்குகிறது. மதத்தொடர்பான விழாக்களேயன்றி, இசை மற்றும் நாடக விழாக்களும் இங்கு ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

காண்டர்பரி மாதா கோயில் நூலகம், பல்லாயிரக்கணக்கான தரமான நூல்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், ஆவணக் காப்பகத்தையும் கொண்டு விளங்குகிறது. காண்டர்பரியின் மக்கள் தொகை 30,415 (1961) ஆகும். காண்டர்பரிப் பேராயர் மிக்க புகழ் பெற்றவர் ஆவார். கிறித்தவ உலகின் புகழ் பெற்ற, தொன்மை வாய்ந்த நகரங்களுள் காண்டர்பரியும் ஒன்றாகும். ம.இ.

**காண்டார்:** எத்தியோப்பிய நாட்டின் வடமேற்கில் உள்ள இந்நகரம், அமாரா என்னும் மாநிலத்தின் தலைநகராக விளங்குகிறது. தொழில் வளத்திற்குக் காண்டார் (Gondar) மிகவும் புகழ்பெற்றது. தெ.பா.

**காண்டு, இம்மானுவேல்** செருமானிய மெய்ப் பொருளியல் அறிஞர். இவர் கி. பி. 1724-ஆம் ஆண்டு கோனிசு பெர்கு (Konisberg) என்னும் ஊரில் பிறந்தார். இவர் வாழ்நாள் முழுவதும் அவ்வூரிலேயே கழிந்தது. இவர் அவ்வூரில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தில் கணித, அளவையியல் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் அவ்வூரிலிருந்து 64 கி.மீ.தொலைவிற்கு மேல் பயணம் செய்தறியாதவர். இவர் புவியியல், வானவியல், மானிடவியல், இயற்பியல், உயிரியல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

காண்டு இம்மானுவேல் (Kant Immanuel) திருமணமாகாதவர். இவரது அன்றாட வாழ்க்கையிலிருந்த



காண்டு, இம்மானுவேல்

ஒழுங்குமுறை வியப்பூட்டுவதாயிருக்கிறது. காலந்தவறாமைக்கு ஓர் இலக்கணமாக இவர் வாழ்ந்தார். இவர் ஆழ்ந்த சமய நம்பிக்கையுடையவர்.

இவர் கணிதத்திலும் அறிவியலிலும் சிறந்த புலமையுடையவர். இவர் முதன்முதலில் எழுதிய நூல்கள் இயற்பியலையும் வானவியலையும் பற்றியவை. வானுலக இயற்கை வரலாறு என்னும் புத்தகத்தில் முதன்முதலாகத் தாராகணக் கருதுகோளைக்(Nebular Hypothesis) கோள்களின் தோற்றத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறார். பூமிச் சுழற்சிக்கும் கடலின் ஏற்ற வற்றத்திற்கும் (Tides) இடையிலுள்ள தொடர்பையும், பூமிச் சுழற்சிக்கும் காற்று மண்டலத்திற்குமுள்ள தொடர்பையும், நிலநடுக்கத்தின் காரணங்களையும் பற்றி எழுதியுள்ளார். இவை தவிர சந்திரனிலுள்ள எரிமலைகள், சந்திரனால் ஏற்படும் தட்ப வெப்பப் பாதிப்பு, மனித குலத்திலுள்ள பல்வேறு இனப்பிரிவுகள் எனப் பல் துறை அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார்.

**மெய்ப்பொருளியல் துறையில் காண்டின் பங்கு**: காண்டு இக்கால ஐரோப்பிய மெய்ப்பொருளியலை நிறுவியவர் எனக் கருதப்படுகிறார்.இவரது கொள்கை மெய்ப்பொருளியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைகிறது. இவருக்குப் பின்னர்த் தோன்றிய தத்துவக் கொள்கைகள் அனைத்தும் காண்டினுடைய தத்துவத்தின் பின் குறிப்பு, விளக்கவுரை, திறனாய்வு அல்லது மறுப்பு என்னுமளவில் அமைந்தனவெனில் அது மிகையாகாது. காண்டின் தத்துவத்தை அறியாதவர்களுக்கு அதற்குப்பின் வந்த தத்துவம் எதுவும் புரியாது என்றும் மெய்ப்பொருளியல் மாணவர்கள் கூறுவர்.

உல்பு (Wolff), பௌம்கார்ட்டன் (Baumgarten) என்ற செருமானிய மெய்ப்பொருளியல் அறிஞர்களுடைய கொள்கை தொடக்க காலத்தில் இவரை மிகவும் கவர்ந்தது. அவர்கள் இலைப்னிசு (Leibniz) என்பவரின் அறிவுவழிக் கொள்கையைப் பரப்பியவர்கள். அதனால், காண்டும் தொடக்கத்தில் அறிவுவழிக் கொள்கை (Rationalism) உடையவராக இருந்தார். பின்னர், இவர் இலாக்கு(Locke)இயூம்(Hume)என்பவர்களின் அனுபவவழிக் கொள்கையைப் (Empiricism) படிக்க நேர்ந்தது. அனுபவவழிக் கொள்கை அறிவுவழிக் கொள்கைக்கு முரணானது. அதனால் அறிவுவழிக் கொள்கை மீது இவர் கொண்டிருந்த பிடிப்புத் தளர்ந்தது. 'ஆராயாமல் நான் மேற்கொண்ட கொள்கைத் துயிலிலிருந்து இயூம் என்னை விழிப்புறச் செய்தார்' என இவர் கூறுகிறார். எனினும், அனுபவவழிக் கொள்கையிலுள்ள குறைபாடுகளையும் இவர் அறிந்திருந்தார். அவ்விரண்டு கொள்கைகளுமே முற்றிலும் சரியானவையுமல்ல, தவறானவையுமல்ல; அவை ஒருதலைச் சார்புடையவை என்ற முடிவுக்கு வந்தார். அறிவு குறித்த சிக்கலைத் தீர்க்க அவ்விரண்டின் உண்மைகளையும் தொகுத்து உள்ளடக்கிய ஒரு புது மெய்ப்பொருளியல் (Synthetic Philosophy) தேவையென்பதை உணர்ந்தார். அவ்வாராய்ச்சியின் பயனாகத் தோன்றியதே அறிவு பற்றிய ஆய்வு முறை மெய்ப்பொருளியல் (Critical Philosophy) ஆகும். காண்டின் புதிய மெய்ப்பொருளியலுக்குக் காரணமாக அறிவுவழிக் கொள்கையும் அனுபவவழிக் கொள்கையும் விளங்கின.

**அறிவுவழிக் கொள்கை**: (Rationalism) அறிவுவழிக் கொள்கையினர் கருத்துப்படி உறுதியான (Certain), பொதுமையான (Universal) அறிவு சிந்தனை மூலமே கிடைக்கிறது. அது புலச்சார்பற்றது; அனுபவம் கடந்தது. சிந்தனை மூலம் கிடைத்த சில அடிப்படை உண்மைகளின் விரிவே அனைத்து அறிவும் என்பது தேக்கார்ட்டே என்பவரின் வாதம்.அக் கொள்கையினர் அறிவிற்கு முன்மாதிரியாகக் கணிதத்தைக் காட்டுகின்றனர்.கணிதம் சிலஅடிப்படை உண்மைகளுடன் தொடங்குகிறது. அவை மெய்பிக்கப்படாமலே ஏற்றுக்கொள்ளப்பட்டவை. ஏனெனில், அவை தம் இயல்பிலேயே உண்மையானவை (Self-evident). அவ்வுண்மைகளைப் பகுத்து ஆராய்வதன் மூலம் மற்றெல்லாக் கணித உண்மைகளையும் பெறலாம். அவ்வாறே மெய்ப் பொருளியலிலும் சில அடிப்படை உண்மைகளைக் கண்டு பிடித்தால் பிரபஞ்சம், கடவுள்,மனிதன் பற்றிய மற்றெல்லா உண்மைகளையும் அவற்றிலிருந்து உய்த்துணரலாம் என்று தேக்கார்ட்டே கருதினார். இலைப்னிசும் இத்தகைய கணித முறையைப் பின்பற்றி ஒருமைநிலைக் கொள்கையை (Monadology) நிறுவினார்.

இவர்கள் அனுபவவழிக் கொள்கையினர் வற்புறுத்தும் புலச்சார்புடைய அனுபவத்தின் மூலம் கிடைக்கும் அறிவின் ஏற்புடைமையை மறுக்கின்றனர். ஏனெனில், புலன்வழி அனுபவம் உறுதியற்றது; தெளிவற்றது. சில சமயம் பொய்யாக அல்லது திரிபுக்காட்சியாக இருக்கலாம். புலன்களில் கோளாறு இருந்தால் புலப்பதிவும் தவறானதாகவே இருக்கும். அதனால், அனுபவம் மூலம் கிடைக்கும் அறிவு நிச்சயமற்றது. மேலும், அனுபவம் எல்லைக்குட்பட்டது. இதிலிருந்து எல்லா இடத்திற்கும் எல்லாக்காலத்திற்கும் பொதுவான பேருரைகளை (Universal Propositions)அடைய வியலாது. இதற்கு மாறான சிந்தனை மூலம் பெறப்படும் கருத்துகள் உறுதியானவை; முரண்பாடற்றவை. மேலும், மனிதர்களின் உள்ளத்தில் இயல்பிலேயே பிறந்த எண்ணங்கள் (Innate ideas) இருக்கின்றன. கடவுள், நன்மை தீமை பற்றிய கருத்துகள் இத்தகையவை. இக்கருத்துகள் புலச்சார்பற்றவை என்பது அறிவுவழிக் கொள்கையினரின் வாதம்.

**அனுபவவழிக் கொள்கை** (Empiricism): அனுபவவழிக் கொள்கையினரின் வாதம் இதற்கு நேர்மாறானது. அறிவு கிடைப்பதற்கேற்ற சாதனம் புலன் காட்சி அனுபவமே தவிர, வெறும் சிந்தனையன்று. அறிவுவழிக் கொள்கையினரின் பகுப்புமுறை மூலம் புதிய அறிவைப் பெற முடியாது. மேற்கோள்களில் (Premises) பொதிந்து கிடப்பதே பகுப்புமுறை வழி முடிவுரையில் வெளிப்படையாக்கப்படுகிறது. அதனால், தொகுப்புமுறையில் தான் (Synthetic) புதிய அறிவைப் பெற முடியும். மேலும், இவர்கள் அறிவுவழிக் கொள்கையினரின் 'இயல்பிற்பிறந்த எண்ணங்கள்' என்ற கருத்தையும் எதிர்க்கின்றனர். இயல்பிற்பிறந்த எண்ணங்கள் இருக்குமென்றால் குழந்தைகள், மனவளர்ச்சியற்றவர்கள், காட்டு மிராண்டிகள், அறிவிலிகள் ஆகியோரிடம் ஏன் இவை அமையவில்லை? கடவுளைப் பற்றிய எண்ணம் இயல்பிற் பிறந்ததென்றால் சிலர் ஏன் நாத்திகர்களாக இருக்கின்றார்கள்? நன்மை, தீமை பற்றிய கருத்துகளில் ஏன் மாறுபாடிருக்கின்றது? எனவே, இக்கருத்துகள் அனுபவம் மூலம் பெறப்படுபவை என்பதை அறியலாம். பிறந்த குழந்தையின் மனத்தில் எண்ணங்கள் இல்லை. குழந்தையின் மனம் எழுதப்படாத பலகை போன்றது. அனுபவம்தான் அப்பலகையில் எழுதி அறிவை வளர்க்கிறது.

சிக்கலான கருத்துகள் (Complex Ideas) புலச்சார்பின்றிச் சிந்தனை மூலம் கிடைத்தவை என்று நினைக்கிறார்கள். ஆராய்ந்து பார்த்தால் அவையும் புலப்பதிவுகள் (Sense impressions) மூலமே அமைகின்றன என்பதை அறியலாம். புலக்காட்சிகள் மனத்தில் பதியும்பொழுது அவற்றை எளிய எண்ணங்கள் (Simple Ideas) என்கிறார்கள். எளிய எண்ணங்களைத் தொகுத்தல், பிரித்தல், நினைவு கூர்தல் மூலம் சிக்கலான எண்ணங்கள் உண்டாகின்றன. எனவே, புலப்பதிவு என்ற அனுபவமின்றி அறிவு கிட்டாது. பதிவுகளை மனம் தானே தோற்றுவிப்பதில்லை. இதுவரை கேட்காத ஒலியோ பார்க்காத வடிவமோ மனத்தில் தோன்றாது. அறிவு கிடைக்கப் புலன்கள் தொழில் புரிக்கின்றனவே தவிர மனம் அன்று. இயூமின் அனுபவவழிக் கொள்கை ஐயக் கொள்கையில் (Scepticism) முடிந்தது. கணிதவியலும் அளவையியலும் மட்டுமே நிச்சயமான, பொதுமையான அறிவைத் தர முடியும். அறிவியல் நிச்சயமான அறிவைத் தர முடியாது. அறிவியல் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதால், அது நிகழ்திறம் (Probability) உடையதே தவிர உறுதியானதன்று. புலன்கள் மூலமே அறிவு கிடைப்பதால் புலன்கடந்த மெய்ப்பொருளியல் (Metaphysics) அறிவு போலியானது என்று இயூம் அறிவியல், மெய்ப்பொருளியல் ஆகிய இரண்டின் அடிப்படைகளையும் அசைத்தார்.

**காண்டின் தொகுப்பு மெய்ப்பொருளியல்** (Kant's Synthetic Philosophy) முரண்பாடுடைய இவ்விரு கொள்கைகளும் பிடிவாதமானவை என்று காண்டு உணர்ந்தார். இயூமின் ஐயக் கொள்கை எழுப்பிய சிக்கலைத் தீர்த்து, அதற்கு முடிவு கட்ட வேண்டியதின் இன்றியமையாமையையும் இவர் உணர்ந்தார். எனவே, இவ்விரண்டு கொள்கைகளிலுமுள்ள நியாயத்தை உள்ளடக்கிய ஒரு புதிய தத்துவத்தை இவர் உருவாக்கினார். அது மேற்கூறப்பட்ட கொள்கைகளைப் போலன்றி அறிவின் ஆய்வாக அமைந்தது. அவருடைய ஆய்வுமுறை மெய்ப் பொருளியலில் தலைசிறந்ததாக விளங்குவது 'தனிநிலை அறிவு ஆய்வு' என்னும் நூல். அதன் மூலம் அறிவு, ஆய்வு இயலில் (Epistemology) புலன்கள் மூலமாகவே பொருள்கள் உணரப்படுகின்றன. ஆனால், புலப்பதிவுகள் மட்டும் அறிவு ஆகா. புலப்பதிவுகள் மேல் மனம் செயற்படுகிறது. அது புலன்தரு வரவுகளைத் தொகுத்து ஒழுங்குபெற அமைக்கிறது. தொகுத்தலும் ஒழுங்குபெற அமைத்தலும் புலனாற்றலில் இல்லை; அது மனத்தின் ஆற்றல் அல்லது அறிவாற்றல். எனவே புலனாற்றல், அறிவாற்றல் ஆகிய இரண்டும் செயற்பட்டால்தான் உண்மையான அறிவு கிடைக்கும் என்பது காண்டின் அறிவு பற்றிய கொள்கையின் சாரம். இதனால் அனுபவவழிக் கொள்கை, அறிவுவழிக் கொள்கை இரண்டிற்குமிடையிலுள்ள முரண்பாட்டைக் களைந்தார்.

**தனிநிலை அறிவு ஆய்வு**: (Critique of Pure Reason) இது, ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது

துறையைப் பற்றிய அறிவு எப்படிக் கிடைக்கிறது என்ற ஆராய்ச்சியன்று. பொதுவாக ஒருவருக்கு அறிவு எவ்வாறு கிடைக்கிறது என்ற ஆராய்ச்சியாகும். அதனால், இது 'தனிநிலை அறிவு ஆய்வு' எனப்படுகிறது. 'இதை அறிவு பற்றிய அறிவின் ஆய்வு' என்றும் கூறலாம். அனுபவவழிக் கொள்கையினர் வற்புறுத்தும் புலக் காட்சியின் இன்றியமையாமையைக் காண்டு இங்கு ஏற்றுக் கொள்கிறார். பொருள்கள் வெளியுலகத்திலிருக்கின்றன. அவற்றை மனம் உருவாக்குவதில்லை. காட்சியின் (Preception) மூலமாகவே பொருள்களைப் பற்றிய தகவல்கள் மனத்திற்குக் கிடைக்கின்றன. பொருள்கள் அப்படியே மனத்திற்குள் செல்வதில்லை. அவற்றின் புலப்பதிவுகளே (Impressions) மனத்தில் படிகின்றன. ஒரு பொருளை உணர்தல் அல்லது புலக்காட்சி என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிகழ்கிறது.

காலம், இடம் என்ற பின்னணி இல்லாத காட்சி கிடையாது. எனவே, காலமும் இடமும் காட்சியின் வடிவமைப்புகளாகும். அவை யிரண்டும் அகற்றவே முடியாமல் அணியப் பெற்ற இரு கண்ணாடிகளைப் போன்றவை. காட்சி அவற்றின் மூலமே நிகழ முடியும். அதனால், இடம், காலத்திற்கப்பாற்பட்ட நிலையில் கண்ட பொருளின் உண்மைநிலை என்ன என்பது ஒருவருக்குத் தெரியாது. எனவே, பொருள் புறவுலகில் இருப்புடையதெனினும் இடம், காலம் என்ற மனத்தின் வடிவமைப்பிற்குட்பட்டால்தான் அதைக் காண முடியும். இங்குக் காண்டல் என்பது கேட்டல், நுகர்தல், உணர்தல் முதலிய எல்லாப் புலனுணர்வுகளையும் குறிக்கும். நியூட்டன் இடமும் காலமும் ஒருவருக்குப் புறநிலையிலுள்ளவை (Objective) என்றார். ஆனால், காண்டு அதை மறுக்கிறார். புறவுலகில் இருக்கும் பொருள்களின் காட்சி, இடம் காலம் என்ற வடிவமைப்பில்லாமல் நிகழ முடியாதென்றால், காட்சிக்கு அடிப்படையான இடமும் காலமும் எப்படிப் புறப் பொருள்களாக முடியும் என்பது காண்டின் வாதம். இலைப்னிசு கூறுவது போல அவை பொருள்களுக் கிடையிலுள்ள உறவும் அல்ல. இடமும் காலமும் பொருள்களின் காட்சிக்கு முற்கோளாக விளங்குகின்றன; அவையில்லையேல் காட்சியில்லை. காட்சிக்கு ஆதாரமாக விளங்குவதைக் காட்சியிலிருந்து பெற்றதாகக் கூறுவது தவறு. எனவே, இடமும் காலமும் புலன் காட்சியின் புலச்சார்பற்ற வடிவங்கள் என்று காண்டு கருதுகிறார். பார்க்கப்படுகின்ற பொருள் புறவுலகிலுள்ளது. ஆனால், அதன் வடிவமைப்பான இடமும் காலமும் மனத்திலிருந்து வெளிப்படும் வடிவங்களாகும்.

இடம், காலம் என்ற வடிவமைப்பில் மனத்திற்குள் சென்ற புலப்பதிவுகள் குழப்பமானவை; ஓர் ஒழுங்கமைப்பிற்குட்பட்டவையல்ல. அவற்றைப் பாகுபடுத்தித்தொகுத்து ஓர் ஒழுங்கமைப்பிற்குட்படுத்தினால்தான் புலன் காட்சியில் கண்ட பொருள் என்ன என்பது புரியும். எனவே, புலப்பதிவுகள்மேல் மனத்தின் 'புரிந்து கொள்ளும் ஆற்றல்' அல்லது அறிவாற்றல் (Understanding) செயற்படுகிறது. அவ்வறிவாற்றல் கருத்தமைவுகள் (Conecpts) அல்லது பாகுபாடுகள்(Categories)என்ற நிலைகளைக்(Modes) கொண்டிருக்கிறது. அவற்றின் மூலம் புலன்வரவுகளை அளவு, பண்பு, உறவு, தீர்ப்பு என்ற பாகுபாடுகளுக்குள்ளடக்குவர். இவ்வாறு அறிவாற்றல் செயல் புரியவில்லையென்றால் புலன்வரவுகளிலிருந்து எதையும் அறிய முடியாது. ஒன்றைப் பொதுவாகப் பொருள் என்று கூடப் புரிந்து கொள்ள முடியாது. இங்குக் காண்டு அறிவுவழிக் கொள்கையினர் வற்புறுத்தும் மனத்தின் தொழிலாற்றலை ஏற்றுக் கொள்கிறார்.

காண்டின் அறிவு ஆய்வைத் தொகுத்துப் பின் வருமாறு கூறலாம். காட்சியின் போது புலன்கள் செயற்படுகின்றன. அறிவாற்றல் செயலற்றிருக்கிறது. ஆனால், புலன் தரு வரவுகளைத் தொகுத்துத் தீர்ப்புகளாக அமைக்கும் பொழுது மனத்தின் அறிவாற்றல் செயற்படுகிறது. அப்போது புலன்களுக்கு வேலையில்லை. ஆனால், அவைஇரண்டும் உடனடியாக நிகழ்கின்றன. அவற்றுக்கிடையில் இடைவெளி இல்லை. இரண்டும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. சுருங்கக் கூறின், கருத்தமைவற்ற புலக்காட்சி குருடானது; புலக் காட்சியற்ற கருத்தமைவு வெறுமையானது. எனவே, புலக்காட்சி + கருத்தமைவு = அறிவு எனலாம். பொருள் (Matter) வடிவம் (Form) என்ற இரண்டும் சேர்ந்தால்தான் அறிவு கிடைக்கும். பொருளைப் புலன் காட்சி மூலம் பெறலாம். வடிவங்கள் அறிவாற்றலின் நிலைகள் எனப்படும் கருத்தமைவுகள்; அவை மனத்திலுள்ளவை. இங்குக் காண்டு அனுபவவழிக் கொள்கை, அறிவுவழிக் கொள்கை ஆகிய இரண்டின் நியாயங்களையும் தொகுத்திருப்பதையும், அவற்றுக்கிடையிலுள்ள முரண்பாடுகளைக் களைந்திருப்பதையும் காணலாம். காலம், இடம், கருத்தமைவுகள் என்பவை புறவுலகில் இல்லை. எனவே, அவை ஒருவரின் காட்சி அல்லது அனுபவத்தின் மூலம் பெறப்படுபவையல்ல; மனத்திலுள்ளவை. ஆனால், அவற்றை மட்டும் வைத்துக் கொண்டு புறவுலகைப் பற்றிய அறிவைப் பெற முடியாது. அவை ஒரு கட்டடத்தின் வரைபடம் போன்றவை. காட்சிப் பொருள்கள் என்ற மூலப்பொருள்களும் இன்றியமையாதவை. எவ்வாறு செங்கல், மணல், சாந்து இல்லாமல்

கட்டடம் கட்ட முடியாதோ, அவ்வாறே புலப்பதிவுகள் இல்லமால் அறிவும் கிடைக்காது. எனவே, புலனாற்றல் அறிவாற்றல் இரண்டும் செயற்பட்டால் தான் அறிவு கிடைக்கும்

அறிவுக்குப் புலப்பதிவுகள் மூலப் பொருள்களாக அமைவதால் காட்சிக்கு அப்பாற்பட்ட, கடந்த நிலையிலுள்ள (Transcendental) பொருள்களைப் பற்றிய அறிவை அடைய முடியாது. அனுபவம் அல்லது காட்சிக்குட்பட்ட பொருள்களைத் 'தோற்றம்' (Phenomena) எனக் காண்டு கூறுகிறார். எனவே, ஒருவருடைய அறிவு தோற்றப் பொருள்களைப் பற்றிய அறிவேதவிர, அவற்றின் அடிநிலை உண்மைப்பொருள்களைப் (Noumenal Realities) பற்றியதன்று. தோற்றப் பொருள்கள் மனத்தின் பாகுபாடுகளுக்குள்ளடங்கியவை. அவை மனத்தால் சீரமைக்கப்பட்டவை. அதனால்தான் அனுபவம் மூலம் கிடைத்தாலும் அறிவியல் அறிவு பொதுமையானதாகவும், உறுதியானதாகவும் விளங்குகிறது. பொருள் மனத்தால் உருவாக்கப்பட்டதன்று. காட்சி மூலம் கிடைத்ததே. ஆனால், அதன் அடிநிலை உண்மைப் பொருளின் இயல்பு ஒருவருக்குத் தெரியாது. மனத்தால் வடிவமைக்கப்பட்ட தோற்றப் பொருளின் இயல்பையே அறியலாம். அறிவியல்கள் தோற்றவுலகையே ஆராய்கின்றன. இங்கு இவர் கூறும் 'தோற்றம்' என்பதை 'மாயை' (Illusion) என்பதிலிருந்து பிரித்துணர வேண்டும். மாயைக்கு இருப்பு (Existence) இல்லை. ஆனால் தோற்றம் இருப்புடைது; தோற்றவுலகுக்குக் காரணமான இடம், காலம், என்ற புலன்காட்சியின் வடிவங்களும் கருத்தமைவுகள் என்ற அறிவாற்றலின் வடிவங்களும் மனத்தைச் சேர்ந்தவையெனினும் அவை மனிதருக்கு மனிதர் மாறுபடுபவையல்ல; எல்லா மனிதருக்கும் ஒரே மாதிரியானவை; பொதுவானவை.அதனால்தான் அறிவு புலச்சார்புடையதாக இருந்தாலும் பொதுமையானதாகவும் இருக்கிறது. 'அறிவு அமையுமா?' என்று இயூம் எழுப்பிய ஐயத்தை இவர் போக்குகிறார். புறவுலகைப் பற்றிய நிலைத்த, பொதுமையான அறிவைப் பெறமுடியும் என்பது காண்டின் துணிபு.

அனுபவம் தோற்றவுலகைப் பற்றியது மட்டுமே. இதனால் தோற்றப் பொருள்களுக்கு அடிநிலையான உண்மைப் பொருள்கள் (Things-in-themselves) இருக்க வேண்டும் என்று உய்த்துணர்கின்றனர். ஒரு பொருள் புலனாற்றலுக்கும் அறிவாற்றலுக்கும் உட்படும்பொழுது தோற்றப் பொருள் எனப்படுகிறது. ஆனால் புலனாற்றலுக்கும் அறிவாற்றலுக்கும் அப்பாற்பட்ட நிலையில் அதே பொருள் வேறு இயல்புகளைக் கொண்டு விளங்கலாம். எனவே, தோற்றப் பொருளின் அடிநிலை உண்மைப் பொருள் அனுபவம் கடந்தது என்பதை உணர்கின்றனர், அறிவு எல்லைக்குட்பட்டது. அனுபவம் கடந்த உண்மைப் பொருள்கள் அதன் எல்லையாக விளங்குகின்றன.அந்த எல்லையைத் தாண்டிக்கடந்த நிலைப் பொருள்களைப் பற்றிய அறிவு கிடைக்க வழியில்லை. எனினும், அனுபவ அளவில் செயற்படுவதுடன் மனம் நிறைவடைவதில்லை. தன் எல்லையை உணர்ந்த அறிவு அதைத் தாண்டவும் விழைகிறது. அதனால் தோற்றவுலகுக்குப் பயன்படுத்திய அளவு, தன்மை, காரண காரியம், உறவு என்ற பாகுபாடுகளைப் புலக்காட்சிக்கு அப்பாற்பட்ட அடிநிலை உண்மைப் பொருள்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். இடம், காலம் என்ற மனத்தின் வடிவங்களையும் அதற்குப் பயன்படுத்துகிறார்கள். காட்சி மூலம் பொருள் கிடைக்கவில்லை. ஆனால் அறிவாற்றலின் வடிவங்கள் கற்பிதமாகக் கையாளப்படுகின்றன. அதனால், அறிவு கிடைக்க வழியில்லை. எனவே, கடந்த நிலைப் பொருள்களைப் பற்றிய முரண்பாடுகள் (Antinomies), போலிகள் (Paralogisms) தோன்றுகின்றன.

மனம் ஒருமைப்பாட்டை நாடுகிறது. தனித்தனி நிகழ்ச்சிகளை ஒரு விதிக்குள் அடக்க முயலுகிறார்கள். ஆனால் தனித்தனி விதிகளை உலகளாவிய பெரும் விதிக்குள் அடக்குகிறார்கள். எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கி விளக்குகின்ற முழுமையான விதியை அடைவதே அறிவின் குறிக்கோளாக விளங்குகிறது. அனுபவங்கள் தனித்தனியானவை. அவ்வனுபவங்களின் முழுமையாக 'ஆன்மா' என்ற பொருள் இருக்கிறது என்று கருதுகிறார்கள். அவ்வான்மாவினால் அறியப்படுகின்ற புறப் பொருள்கள் எல்லாவற்றையும் 'பிரபஞ்சம்' என்ற முழுமையான கருத்தமைவுக்குள் அடக்குகிறார்கள். ஆன்மா, பிரபஞ்சம் என்ற இரு வேறு கருத்தமைவுகளையும், 'கடவுள்' என்ற முழுமையான கருத்தமைவில் இணைக்கிறார்கள். இவ்வாறு அறிவுத் தொகுதி அனைத்தையும் ஓர் ஒருமைப்பாட்டிலும் முழுமையிலும் உள்ளடக்க விழைகிறார்கள்.

அனுபவ முழுமை (Totality of Experience) என்ற அனுபவம் சாத்தியமானதன்று. அதனால் தான் ஆன்மா, பிரபஞ்சம், கடவுள் முதலியவை பற்றிய பிடிவாதமான கொள்கைகள் முரண்பாடுகளுடன் விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக, பிரபஞ்சம் பற்றிய வாதத்தை எடுத்துக் கொள்ளலாம். பிரபஞ்சம் எல்லைக்குட்பட்டதா? எல்லையற்றதா? எல்லைக்குட்பட்டதென்றால் பிரபஞ்சப் பொருள் எதுவும் பிரபஞ்சத்தின் எல்லையாக விளங்க முடி

யாதா? பிரபஞ்சமற்ற பொருள் என்றால் அது வெறுமையாகத்தான் இருக்கும். வெறுமை(சூனியம்) எவ்வாறு ஒன்றின் எல்லையாக விளங்க முடியும்? இதற்கு மாறாகப் பிரபஞ்சம் 'எல்லையற்றது' என்று கூறினால் அது அறிவாற்றலுக்கப்பாற்பட்ட கருத்தாக விளங்குகிறது. ஏனெனில், எல்லைக்குட்பட்டவற்றையே அனுபவத்தில் காண்கிறார்கள். அவ்வாறே பிரபஞ்சத்திலிருந்து கடவுளைப் பற்றிய உண்மையை அறிவதும் இயலாது. பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் காரணமுடையவை. பிரபஞ்சம் காரணமுடையதென்றால், கடவுள் மட்டும் எவ்வாறு காரணமின்றி விளங்குபவராக – முதற்காரணமாக (First cause — uncaused) இருக்க முடியும்? இதற்கு எதிராக்க் கடவுள் பிரபஞ்சத்திற்குப் புறத்தேயுள்ளவர் என்றால், பிரபஞ்சமல்லாத பொருளிலிருந்து எவ்வாறு பிரபஞ்சம் தோன்ற முடியும் என்ற கேள்வியெழும். எனவே, அறிவு அனுபவம் என்ற வரம்பைக் கடந்தால் முரண்பாடுகளில் முடிந்துவிடும்.

**செயல்நிலை அறிவு ஆய்வு அல்லது அறவியல்**: தோற்றவுலகம் அல்லது இயற்கை அறிவியல் சட்டங்களின் ஆட்சிக்குட்பட்டது. தோற்றவுலகப் பொருள்கள் அனைத்தும் காரணகாரியத் தொடர்பு என்னும் விதிக்குட்பட்டவை. மனிதன் தோற்றவுலகின் ஒரு பகுதி. அவ்வகையில் அவனும் காரண காரியச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவன். ஆனால்,காரண காரிய நியதி மனிதனின் அற வாழ்க்கையை விளக்குவதற்குப் பயன்படாது. மனிதனின் அறவாழ்க்கை இயற்கைக் காரணங்களினால் கட்டுப்பட்டதன்று. அறச் செயல்கள் கடமை யுணர்விலிருந்து (Feeling of Obligation, Ought) தோன்றுகின்றன. அவை சூழ்நிலை, சமூகம், சமயம், பரம்பரை போன்ற புறக் காரணங்களால் தீர்மானிக்கப்படுதலில்லை; விருப்பு, வெறுப்பு போன்ற உளவியல் காரணங்களிலிருந்தும் பிறப்பதல்ல. விருப்பு, வெறுப்பு ஏதாவது ஒரு பொருளைச் சார்ந்ததாகவே இருக்கும். ஒரு பொருளை ஏற்கனவே அனுபவித்திருந்தால் அல்லது அனுபவித்தவர்களிடமிருந்து கேள்விப்பட்டிருந்தால் தான் அப்பொருளின்மேல் விருப்பு அல்லது வெறுப்பு ஏற்படக் கூடும். மேலும், விருப்பு வெறுப்பு முதலிய உணர்வுகளும் மனவெழுச்சிகளும் மனிதருக்கு மனிதர் வேறுபடும். ஆனால், கடமையுணர்வு பொதுவானது; அனுபவம் கடந்தது; மனித கட்டுப்பாடற்ற தன்மை அல்லது செயலுரிமையின் (Freedom) வெளிப்பாடு. மனித உடலில் காயம் பட்டால் இரத்தம் சிந்தும். அது இயற்கை நியதி. அங்கு அவன் காரண காரியத் தொடர்பிற்குட்பட்டவன். இரத்தம் சிந்துவதும் சிந்தாததும் அவன் எண்ணத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்டதல்ல. ஆனால், அவன் தன் கடமையைச் செய்யலாம் அல்லது செய்யாமலிருக்கலாம். இங்குப் புறக்காரணங்களின் கட்டுப்பாடு இல்லை. எனினும், கடமையைச் செய்ய வேண்டும் என்பது அறிவின் (Reason) வெளிப்பாடு. அறிவுதான் மனிதனின் உண்மையான இயல்பு. எனவே, கடமையுணர்வு அவனது இயல்பிலிருந்து அல்லது செயலுரிமையிலிருந்து பிறக்கிறது. செயலுரிமை தோற்றவுலகுக்கு அயலானது. அதனால்தான் மனிதன் தான் கடந்த நிலையிலுள்ள உண்மைப் பொருள்களின் உலகையும் சேர்ந்தவன் என்பதையும் உணர்கிறான்.

அறிவியல் முறையால் அறிய முடியாத புலன் கடந்த மெய்ப்பொருளியல் உலகை,அறிவியல் உணர்த்தும் செயலுரிமை மூலமாக மனிதன் அறிகிறான். அறவுணர்வும் செயலுரிமையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. ஒன்றில்லாமல் மற்றொன்று அமையாது. செயலுரிமையை இரண்டு விதங்களில் பொருள் கொள்ளலாம். ஒன்று எதிர் மறைமுறை; அதாவது செயலுரிமை என்பது புறக் காரணங்களற்றது; கட்டுப்பாடற்றது. மற்றொன்று உடன்பாட்டு முறை. அதாவது செயலுரிமை என்பது தூய அறிவின் கட்டுப்பாட்டிற்குட்பட்டது. தன் அறிவு பிறப்பித்த ஆணைகளுக்குத்தானே வலிந்து உட்படுவது.

**சார்பற்ற அற ஆணை** (Categorical Imperative): செயலுரிமையின் வெளிப்பாடான கடமைகள் சார்பற்ற ஆணைகளாக (Categorical Imperatives) அமைகின்றன. இதற்கு மாறான சார்புற்ற ஆணைகள் (Hypothetical Imperatives) பயனைக் கருதி வகுக்கப்படுபவை. அவை 'இந்தப் பயன் அடைய வேண்டுமென்றால் இப்படிச் செய்' என்ற அமைப்புடையவை. அதனால், அவை பொதுமையானவையல்ல; இடம், காலம், சூழ்நிலை பொறுத்து மாறுபடும் (Relatite) இயல்புடையவை. எடுத்துக் காட்டாக, உயிர் காக்கக் கொடுக்கப்படும் மருந்துகளுக்கும் உயிர் போக்கக் கொடுக்கப்படும் மருந்துகளுக்கும் வேறுபாடிருக்கிறது. வீடு கட்டும் நோக்கத்திற்காகச் செயற்படுத்தும் விதிமுறைகளுக்கும் பாலம் கட்டுவதற்காகப் பயன்படுத்தும் விதிமுறைகளுக்கும் வேறுபாடிருக்கிறது. ஆனால், சார்பற்ற ஆணைகள் என்றும் எவ்விடத்திலும் மாறாதவை (Absolute). ஏனெனில், அவை பயன் கருதாதவை; கடமை கடமைக்காக' (Duty for the Sake of Duty) என்ற அறவுணர்விலிருந்து பிறந்தவை.

சாற்பற்ற அற ஆணை முன்பின் முரணற்றது (Consistent); ஒரே சீரானது. இத்தன்மையைப் பயன்படுத்தி மேற்கொண்ட செயல் சரியானதா தவறா

னதா என்று கண்டு பிடித்துவிடலாம். சரியான (Right) செயல் தன்னிலை முரணற்றது. ஆனால், தவறான செயல் முரண்பாடுடையது. இதிலிருந்து பெறப்படும் மற்றொரு பண்பு யாதெனில் சரியான செயல் எல்லோருக்கும் பொதுவானது; விதிவிலக் கற்றது; தவறான செயல் விதிவிலக்காக அமைகிறது; பொதுவிதியாகும்தன்மையற்றது.எடுத்துக்காட்டாக, திருட்டைப் பற்றி ஆராயலாம். திருட்டை எல்லோ ரும் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவிதியாக்க முடி யாது. திருடன் ஒருவன் தன் கோட்பாடு எல்லோ ரும் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவிதியாக வேண் டும் என்று நினைத்தால் அவனுடைய சொத்துக்கே தீங்கேற்படும். அதனால், அவன் தான் மட்டும் அல் லது சிலர் மட்டும் திருடலாம்; மற்றவர்கள் எல்லோ ரும் நேர்மையானவர்களாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறான். இதிலிருந்து திருட்டின் கோட்பாடு தன்னிலே முரண்படுவதை அறியலாம். ஊருக்கெல் லாம் ஒரு நியாயம் தனக்கு மட்டும் தனி நியாயம் என்று விதி விலக்காக இருக்கத் திருடன் நினைக் கிறான். ஆனால், அறநெறி ஒழுகுபவர் இவ்வாறு அஞ்சவேண்டியதில்லை. வாய்மை பேசுபவர் உலகில் எல்லோரும் எச்சமயத்திலும் வாய்மையே பேச வேண்டும் என்று தன் கோட்பாட்டை எவ்வித முரண்பாடுமின்றிப் பொதுவிதியாக்கலாம்.

சார்பற்ற அற ஆணையின் மற்றொரு தன்மை யாக 'மனிதனின் மேன்மை' (Human Dignity) என்ற கோட்பாட்டைக் காண்டு கூறுகிறார். சார்பற்ற அற ஆணைக்குட்பட்ட செயல்கள் மனிதனின் ஆளு மையை (Personality) மதிப்பவை. தவறான செயல் கள் அக்கோட்பாட்டை அலட்சியம் செய்கின்றன. மற்றவர்களிடமிருந்து பொருள்களைக் கவர்ந்து கொள்வதால் திருடன் மற்ற மனிதர்களைத் தனக் குச் சாதகமாகப் (Means) பயன்படுத்திக் கொள் கிறான். தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக அமைந்த சடப்பொருள்களைப் போலவும் விலங்கு களைப் போலவும் மனிதர்களை நடத்துகிறான். பொய் பேசுதல், வாக்குத் தவறுதல், கொலை, தற் கொலை முதலிய எல்லாத் தவறான செயல்களும் மனிதனின் ஆளுமையை இழிவுபடுத்தும் செயல்களே என்று காண்டு கருதுகிறார். தற்கொலை செய்து கொள்ளும் மனிதன் தன் மேன்மையைத் தானே பாழாக்குகிறான். தன் உண்மையான இயல்பான அறி வுக்கு மதிப்புக் கொடுக்காது, உணர்ச்சிகளின் உந்து தலுக்குள்ளாகித் தன் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறான். உள்ளத்தில் உரமில்லாமல், உணர்ச் களை மட்டும் கொண்டு விலங்குகளின் நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுகிறான். மனிதத் துவம் தன்னுடையதாயினும், மற்றவர்களுடைய தாயினும் மதிப்புடையது.

ஒவ்வொருவரும் தம் விதிக்குத் தாமே கருத்தா ஆவார். அற விதிகள் புறவுலகிலிருந்தோ உளவியல் காரணமாகவோ வலிந்து புகுத்தப்படுபவையல்ல. அறவிதிகள் மனித அறிவிலிருந்து பிறந்தவை; உணர்ச்சிக் கலப்பற்றவை. உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கும்பொழுதுதான் ஒருவருக்கு நன்மையாகத் தெரிவது மற்றொருவருக்குத் தீமை என்று தோன்ற லாம். உணர்ச்சிக் கலப்பற்ற தூய அறிவிலிருந்து பிறக்கும் கட்டளைகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் இயல்புடையவை. எனவே, 'அறி வுலகின் உறுப்பினரைப் போன்று சட்டமியற்ற வேண்டும்' அவ்வாறு இயற்றிய சட்டம் அதை இயற்றியவரையும் கட்டுப்படுத்தும். மேற்கூறிய சார்பற்ற அற ஆணையின் மூன்று பண்புகளையும் கொண்டு ஒரு செயல் சரியானதா அல்லது தவறா னதா என்பதை அறியலாம்.

சில சமயங்களில் மனிதக் கோட்பாடுகள் அற ஆணைகளோடு இயைந்தவையாக இருக்கலாம். அதனால் மட்டும் அவ்வொழுக்கத்தைச் சரியானது என்று கூறிவிட முடியாது. எடுத்துக்காட்டாக, வணி கர்களுக்கு 'நேர்மை மிகச் சிறந்த கோட்பாடு' ஆகும். தம் வாணிகம் பெருக வேண்டும் என்ற நோக்கத்திற்காக நேர்மையைக் கடைப்பிடிக்கின்ற னர். அதனால், அவர்கள் நேர்மையைக் கடமை என்று கருதுகிறார்கள் என்பது பொருளன்று. அவர் கள் தன்னலம் என்ற பயனைக் கருதி நேர்மையுடன் செயற்படுகிறார்கள். அவ்வாறின்றி நேர்மை தங்கள் கடமை என்ற உணர்விலிருந்து பிறந்திருந்தால்தான் அவர்களின் செயல் சரியானதாகும். எனவே, சரி யான அறச் செயல்கள் கடமையுடன் இயைபுடைய வையாக இருந்தால் மட்டும் போதாது; கடமை உணர் விலிருந்து தோன்றியனவாகவும் இருக்கவேண்டும்.

**ஆன்மாவின் இறப்பின்மை** (Immortality of Soul): அறவாழ்க்கை உணர்ச்சிகளுக்கும் அறிவுக்கும் இடையில் நடைபெறும் போராட்டமாக இருக்கிறது. உணர்ச்சிகள் விலங்குகளுக்கும் பொதுவானவை. தூய அறிவு என்ற இயல்புடைய காரணத்தினால் மனிதன் தோற்றவுலகு அல்லது இயற்கையிலிருந்து வேறுபடுகிறான். அதனால், அறிவே மனிதனின் உண் மையான இயல்பு என்று காண்டு கருதுகிறார். அறிவிலிருந்து பிறந்த கட்டளைகளின்படி நடக்கும் பொழுதுதான் அவன் தன் உண்மையான இயல்பில் வாழ்கிறான். எனவே, உணர்வுகள், ஆசாபாசம், விருப்பு, வெறுப்பு, இன்ப துன்பம் முதலியவற்றின்

தூண்டுதலால் அமைந்த செயல்கள் அற நேர்மையுடையவை ஆகா. ஏனெனில், அவை மனிதனின் உண்மையான இயல்பிலிருந்து பிறந்தவையல்ல.

சிலர் அன்பு, தேசபக்தி, விசுவாசம் முதலியவற்றை நல்லுணர்வுகள் என்று கூறுவர். கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பது தவறு என்றும், நல்ல உணர்வுகளின் அடிப்படையில் செயற்படுவது தவறன்று என்றும் அவர்கள் கூறுவர். ஆனால், காண்டின் கருத்துப்படி, உணர்ச்சிகளில் 'மேன்மையான உணர்ச்சிகள்' என்று எவையுமில்லை. அறவொழுக்கம் ஆசாபாசங்களிலிருந்து பிறக்கக் கூடாது. ஆனால், உணர்ச்சிகளை அவித்துத் தூய அறிவு மயமான நிலையில் திகழ நீண்ட காலமாகும். உணர்ச்சிகளுக்கும் அறிவுக்கும் இடைப்பட்ட போராட்டத்தில் படிப்படியாகவே வெற்றியடைய முடியும். இப்பிறவியிலேயே ஒருவர் தூய அறிவு நிலையை அடைந்துவிட முடியாது. இறப்புக்குப் பிறகும் அறவாழ்க்கை தொடர்கிறது. அதனால், ஆன்மாவிற்கு இறப்பில்லை. ஆன்மா அழியாதது என்பது அறவாழ்க்கையின் ஆதார நியதி. இறப்பே ஆன்மாவின் இறுதி என்றால் அறவாழ்க்கையின் இலட்சியம் அடைய முடியாததாகி விடும். எனவே, ஆன்மா அழியாதது என்பதை உணரலாம். இவ்வுணர்வு அறவியலின்மூலம் கிடைப்பதே.

**இறையுண்மை** (Existence of God): கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையைத் தருக்க முறையிலோ (Ontological Argument) பிரபஞ்சத்தின் இன்றியமையாத முதற் காரணம் என்ற முறையிலோ (Cosmological Argument) பிரபஞ்சத்தைப் படைத்தவர் (Teleological Argument) என்ற முறையிலோ நிறுவ முடியாது என்று காண்டு கருதுகிறார். அறிவுணர்வின் மூலமாகவே (Moral Proof) கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையை நிலைநாட்ட முடியும். மனிதனின் அறவாழ்க்கை எப்பயனையும், எதிர்பார்க்காமல் 'கடமை கடமைக்காக' என்ற கொள்கையின் அடிப்படையில் நடைபெற வேண்டும். இவ்வாறு வாழ்கின்ற மனிதன்தான் இன்பத்தை அடையத் தகுதியானவன். இன்பத்தை நாடி ஒருவரின் கடமை அமையக் கூடாது. ஆனால், கடமையைச் செய்தவர்களே இன்பத்தை அடையத் தகுதி பெற்றவர்கள் என்று நேர்மையுணர்வு கூறுகிறது. இன்பம் நல்லொழுக்கத்திற்குக் காரணமாகக் கூடாது. நல்லொழுக்கமே இன்பத்திற்குக் காரணமாக வேண்டும். ஆனால், இவ்வுலகில் இந்நிலை நிலவக் காணோம். நல்லோர் துன்புறுகின்றனர்; தீயோர் இன்பமாக வாழ்கின்றனர். இவ்வுலகில் காணக் கிடக்காத நல்லொழுக்கத்திற்கும் இன்பத்திற்கும் இடையிலுள்ள சமன்பாட்டை மற்றோர் உலகில் நிறுவக் கடவுள் இருக்கிறார் என்னும் நம்பிக்கை நிலவுகிறது. ஆன்மாவின் அழிவின்மையைப் போலவே கடவுள் நம்பிக்கையும் அறவாழ்க்கையின் ஆதாரமாக அமைகிறது.

**காண்டின் அறவியல் ஆய்வு** (Criticism of Skant Ethics): காண்டின் சார்பற்ற அற ஆணை வெறும் வடிவமைப்பு (Purely Formal Law) உடையதே தவிரப் பொருள் பொதிவுடையது (Lacks Matter) அன்று என ஆய்வாளர்கள் குறை கூறுகின்றனர். அதாவது, ஒருவன் சார்பற்ற ஆணையின்படி செயற்படுகின்றானென்றால், அவனது செயலின் கோட்பாடு எல்லோராலும் தத்தம் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய பொதுமையுடையதாக இருக்க வேண்டும். இதுவே, சார்பற்ற ஆணையின் வடிவம் எனப்படுகிறது. ஆனால், இதிலிருந்து 'நான் இன்னது செய்ய வேண்டும்' என்ற சிறப்பு விதிகளைப் பெற முடியாது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எது நன்மை தீமை என்பதையும் அறிய முடியாது. துணிந்து மேற்கொள்ளும் செயல் சரியா, தவறா என்பதைத் தீர்மானிக்கும் ஓர் அளவுகோலாக (Criterion) மட்டும் இது செயற்படுகிறதே தவிர, நல்லொழுக்கத்திற்கான சிறப்பு விதிகளைத் தருவதற்குப் பயன்படவில்லை. எனவே, சார்பற்ற ஆணை மலட்டுத்தனமானது; வெறுமையானது என்று அவர்கள் குறை கூறுவர். ஆனால், அவர்கள் குறைபாடு என்று கருதுவதையே சார்பற்ற ஆணையின் சிறப்பு என்று காண்டு கருதினார்.

அறச் செயல்கள் தூய அறிவிலிருந்து மட்டும் தோன்றவேண்டும். உணர்ச்சிகளின் உந்துதலாக இருத்தலாகாது என்றும் காண்டு கூறுகிறார். இதனால், சார்பற்ற ஆணை கடுமையானது என்று அவர்கள் குறை கூறுவர். 'நண்பனுக்கு உதவ வேண்டியது என் கடமை. இதை அன்புடன் செய்வதில் என்ன தவறு உளது' என்று சேக்கோபி (Jacobi) என்னும் அறிஞர் வினவுகிறார். ஆராய்ந்து பார்த்தால் சேக்கோபி மிகைப்படுத்திக் கூறுகிறார் என்பது புரியும். அறவொழுக்கம் உணர்ச்சிகளிலிருந்து பிறக்கக்கூடாது என்றுதான் காண்டு கூறினாரே தவிர, உணர்ச்சிகளோடு அமையலாகாது என்று சொல்லவில்லை. எனவே, நண்பனுக்கு அன்போடு உதவுவது தவறில்லை; அன்பு காரணமாக உதவி செய்வதுதான் தவறு. ஆபத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. ஆனால், ஆபத்திலுள்ளோர் அனைவரும் நண்பர்களல்லர். அன்பு காரணமாக உதவி செய்தால்

ஆபத்திலிருக்கும் நண்பர்களல்லாதவர்களுக்கு உதவி செய்ய முடியாது. எனவே அன்பு, ஆசை என்ற மன வெழுச்சிகளிலிருந்து பிறந்தவை பொது விதிகளாக முடியாது. அதனால்தான் கடமைகள் அறிவிலிருந்து தோன்ற வேண்டும் என்று காண்டு கருதினார்.

நியாயம், தவறு என்பவை எந்தச் சூழ்நிலையிலும் மாறாதவை என்று காண்டு கருதினார். இக் கருத்தும் முற்றிலும் ஏற்புடையதன்று. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தவறானது மற்றொரு சூழ்நிலையில் சரியானதாக அமையலாம். எடுத்துக்காட்டாக, ஆசிரியர் வேலைக்கு ஆட்களைத் தேர்வு செய்யும் அதிகாரி தம் சொந்த விருப்பு வெறுப்புகளைப் புறக்கணித்து விட்டுத் தகுதியின் அடிப்படையிலேயே ஆசிரியரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால், அவரே தாம் திருமணம் செய்து கொள்வதற்காகப் பெண்ணைத் தேர்ந்தெடுக்கையில் தம் விருப்பு வெறுப்புகளின்படிதான் தேர்ந்தெடுக்க வேண்டும். அச்சூழ்நிலையில் உணர்ச்சிகள் மேலோங்கியும் அறிவு அவற்றுக்கு உதவியாகவுந்தான் விளங்குகிறது.

சார்பற்ற ஆணைகள் விதிவிலக்கற்றவை என்பதை ஏற்றுக் கொள்வதும் கடினமானதே. ஏனெனில், பொதுவிதிகளாகாமல் விதிவிலக்காக இருப்பதனால் சில செயல்கள் நியாயமானவை என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பிரமசாரி ஒருவன் உலகில் எல்லோரும் தன்னைப்போலப் பிரமசாரிகளாக இருக்க வேண்டும் என்று நினைத்தால் உலகம் என்ன ஆவது? ஒரு சிலர் மட்டும் பிரமசாரிகளாக இருப்பதனால்தான் அது அறமாகிறது. இதையே துறவு, உயிர்த்தியாகம் முதலியவற்றிற்கும் கூறலாம். அறவிதியை மீறலாகாது என்ற பிடிவாதமும் சில சூழ்நிலைகளில் பொருந்தாது. பயன் கருதிச் செயலாற்ற வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகளும் இருக்கின்றன. நல்லார் ஒருவரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக வாய்மையென்னும் விதியை மீறுவதினால் தவறில்லை என்றே எல்லோரும் ஏற்றுக் கொள்வர். 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்று வள்ளுவரும் கூறியிருக்கிறார். ஆனால், காண்டின் கொள்கை விதி மீறுதலை வன்மையாகக் கண்டிக்கிறது. காண்டின் சார்பற்ற அற ஆணை வளைந்து கொடுக்கும் தன்மையற்றது. 'விதிகள் மனிதனுக்காக, மனிதன் விதிகளுக்காக அல்லன்' என்று சேக்கோபி காண்டின் கொள்கையில் குற்றம் கண்டுபிடிக்கிறார். ஆராய்ந்து பார்த்தால், விதிகளைத் தளர்த்தினால் விதிவிலக்கே விதியாகி விடும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

**சார்பற்ற அற ஆணையும் நிட்காம கர்மமும்**: காண்டின் சார்பற்ற அற ஆணையைக் கீதை கூறும் பற்றற்றுப் பணிபுரிதல் என்ற நிட்காம கர்மக் கொள்கையுடன் ஒப்பிடலாம். விருப்பு, வெறுப்பு ஆகிய பற்றுகளின்றிக் கடமையைச் செய்ய வேண்டும் என்று கீதை கூறுகிறது. கடமையைச் செய்வதற்குத் தான் மனிதர்க்கு உரிமையிருக்கிறதே தவிர, அதன் பலனில் உரிமை இல்லை என்றும் கீதை கூறுகிறது. காண்டின் அறவியலும் இவ்வாறே பயன் கருதாமல் பணிபுரிவதை வற்புறுத்துகிறது. ஆனால், இவற்றிற்கிடையிலுள்ள வேறுபாடுகளை மறந்து விடலாகாது. உலகப் பொருள்களின் மேலுள்ள ஆசையைத் தான் கீதை பற்று அல்லது காமம் என்று குறிப்பிடுகிறது. வீடு பேறு (மோட்சம் அல்லது முக்தி) என்ற பேரின்பத்திற்காக உலகப் பொருள்களின் மேலுள்ள சிற்றின்பம் (காமம்) நீக்கப்படுகிறது. வீடுபேறு என்ற ஒரே பெரும் பலனுக்காக அனைத்து வினைப் (கரும) பலன்களும் தியாகம் செய்யப்படுகின்றன. இதனால் கரும நெறி வீடுபேறு அடைவதற்கான ஒரு சாதனம் என்பதை அறியலாம். இங்குக் 'கடமை கடமைக்காக' என்றில்லாமல் கடமை கடவுளுக்காகச் செய்யப்படுவது என்றாகிறது. ஆனால், காண்டின் சார்பற்ற அற ஆணை பரலோகப் பயனையும் கருதாது. கடமையைச் செய்ய வேண்டியது தான் மனிதனின் உண்மையான இயல்பு. கடமை சமயச் சார்புடையதன்று; அது கடவுளின் ஆணையுமன்று. கடமை மனிதனின் தூய அறிவிலிருந்து பிறப்பது. எனவே, கடமை கடமைக்காக ஆற்றப்பட வேண்டியது.

**தீர்ப்புப் பற்றிய ஆய்வு**: தனிநிலை அறிவு ஆய்வுக்கும் செயல்நிலை அறிவு ஆய்வுக்கும் நடுவில் ஒரு பெரிய இடைவெளி இருக்கிறது. அனுபவ உலகமும் அதைக் கடந்த உலகமும் தொடர்பற்று விளங்குகின்றன. இந்த இரண்டையும் இணைக்கும் பாலமாகக் காண்டின் மூன்றாம் நூலான 'தீர்ப்புப் பற்றிய ஆய்வு' விளங்குகிறது. அது அனுபவ உலகம் கடந்த நிலை உலகுடன் இயைபுடையது என்பதைக் காட்டுகிறது. தீர்ப்புப் பற்றிய ஆய்வு இரண்டு பிரிவுகளை உடையது. 1. எழிலியல் தீர்ப்புப் பற்றிய ஆய்வு (Critique of Aesthetic Judgement), 2. நோக்கவியல் தீர்ப்புப் பற்றிய ஆய்வு (Critique of Technological Judgement).

**எழிலியல் தீர்ப்பு பற்றிய ஆய்வு**: எழிலியல் தீர்ப்புகளிலும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. 1. அழகு குறித்தது. 2. விழுமியது (Sublime) பற்றியது.

**அழகு பற்றிய தீர்ப்பு**: அழகு பற்றிய தீர்ப்பு அகவயம் (Subjective) ஆனது. அது மனிதனின் சுவை

உணர்வின் வெளிப்பாடு. அழகான பொருள் மன மகிழ்வளிக்கிறது. அதைக் கொண்டே ஒரு பொருள் அழகானது அல்லது அழகற்றது என்று கூறுவர். அழகு அளிக்கும் மகிழ்ச்சிக்கும், பசி, தாகம் முதலிய உணர்ச்சிகளின் திருப்திக்குப் பின் கிடைக்கும் மகிழ்ச் சிக்கும் இடையில் வேறுபாடிருக்கிறது. அழகு மூலம் கிடைக்கும் மகிழ்ச்சி பொதுமை ஆனது. ஒருவரை மகிழ்விக்கும் அழகான பொருள் அதைக் காண்பவர் அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கும் தன்மை வாய்ந் தது. ஆனால், ஒருவருக்கு விருப்பமான உணவு அல் லது பானம் எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கும் என்று கூற முடியாது. மேலும், அழகுணர்வு அறிவோடி யைந்தது. மனிதர்களே அழகை அனுபவிக்க முடிந்த வர்கள். எனினும், அறிவாற்றலின் கருத்தமைவுகள் இங்குப் பயன்படுத்தப்படவில்லை. எடுத்துக்காட் டாக, ஓர் உருவத்தைப் பார்த்து, 'இது மனிதன்' என்று தீர்ப்பளிக்கையில், 'மனிதன்' என்ற கருத்தமை வைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், ஒரு பொருள் அழகானதா அழகற்றதா என்பதைத் தீர்மானிக்க ஏதுவான கருத்தமைவுகள், விதிகள், அளவுகோல்கள் எவையுமில்லை. எழிலியல் தீர்ப்பில் கருத்தமைவிற்கு மாற்றாகக் கற்பனையாற்றல் அறிவோடியைந்து தொழிற்படுகிறது. ஒருவர் பார்த்த பொருளின் வடி வமைப்பு அறிவோடியைந்த அவர்தம் கற்பனையாற் றலுடன் இசைந்து விளங்கும்போது அவருக்கு ஏற் படும் மனமகிழ்வின் வெளிப்பாடே அழகு பற்றிய தீர்ப்பு.

அழகு பற்றிய தீர்ப்பு அறச்சட்டங்களைப் போலப் பற்றற்று விளங்குகிறது. அதாவது, புறச் சார்பற்றது; பயன் கருதாதது.விருப்பு வெறுப்புக்கு அல்லது அழகுடைய பொருளினால் என்ன பயன் என்ற கேள்விக்கு அங்கு இடமில்லை. தன்னைக் கண்டவரை மகிழ்வித்தல் ஒன்றே அதன் நோக்கம். இவ்வாறு கற்பனையாற்றல் வெளிக்காரணங்கள் என்ற கட்டுப்பாடற்று (Free imagination) செயற் படுவதால் அழகுக்கும் மகிழ்ச்சிக்கும் இடையில் ஓர் இன்றியமையாத தொடர்பு நிலவுகிறது. அழகான பொருள் கட்டாயம் மகிழ்ச்சியைத் தரும். எழிலியல் தீர்ப்பின் மற்றொரு முக்கியமான தன்மை அதன் பொதுமைப்பாடு (Universality) ஆகும். ஒருவருக்கு அழகெனப்படுவது எல்லோருக்கும் அழகாகவே தோன்றும். அறவியல் தீர்ப்பு போலத் தனி நிலை யில் தோன்றிய அகவயமான தீர்ப்பு எவ்வாறு பொதுமைப்பாடுடையதாக இருக்க முடியும்? இந்தச் சிக்கலுக்கு விடையாக எல்லா மனிதர்களிடமும் ஓர் பொதுமையான உணர்வு (Common sensitiveness) இருப்பதாகக் காண்டு கூறுகிறார். எனவே, ஒருவருக்கு அழகாகத் தோன்றுவதை எல்லோரும் அழகானது என்று ஏற்றுக் கொள்வர். அவ்வாறில்லையெனில் அது அவருடைய உணர்வு மழுங்கியிருப்பதைக் காட்டுகிறதே தவிரப் பார்க்கப்பட்ட பொருளிலுள்ள குறைபாடு அன்று.

**விழுமியது பற்றிய தீர்ப்பு**: இயற்கையின் எல்லை யற்ற தன்மையையும் பேராற்றலையும் விழுமியது என்கின்றனர். புயல்,நிலநடுக்கம்,கடல் கொந்தளிப்பு, வானளர்ந்த மலைகள், பயங்கரமான அருவிகள் முத லியவற்றைக் காணும்பொழுது இவ்வுணர்வு ஏற்படு கிறது. அழகு வடிவமைப்பிற்குட்பட்டது; விழுமியது வடிவமைப்பு (Formless) அற்றது. அழகு புலனாற் றல், கற்பனையாற்றலுடன் இயைபுடையதாயிருப்ப தால் மன நிம்மதியளிக்கிறது. ஆனால், விழுமியது புலனாற்றலையும் கற்பனையாற்றலையும் விஞ்சியது. அதனால், மனம் அமைதியிழக்கிறது. மலைக்க வைக் கும் இயற்கைக்குமுன் மனிதர் மிகச் சிறியவர்களாகி விடுகின்றனர். அதனால், வேதனை அடைகின்றனர். எனினும் அதே சமயத்தில் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. ஏனெனில், மனிதரை மிகச் சிறியவர்களாகக் காட்டிய அதே இயற்கைப் பொருள்களே மனிதரின் மேன் மையை அவர்களுக்கு உணர்த்துவனவாகவும் விளங் குகின்றன. 'எல்லையற்றது' 'பேராற்றல்' என்ற எண்ணங்கள் மனத்தில் தோன்ற இவை வாய்ப்பளிக் கின்றன. எல்லையற்றது என்பது அனுபவம் கடந்த நிலை. எனவே, அந்த எண்ணம் அனுபவத்திலிருந்து பிறந்ததன்று. அது அறிவின் எண்ணம். புலனாற்ற லும் கற்பனையாற்றலும் இயற்கைமுன் தோல்வி யடையும் பொழுது அவை அறிவைச் சரணடைகின் றன. அறிவிலிருந்து பிறந்த எண்ணத்தின் மூலம் மனிதர் இயற்கையை மதிப்பிடும் சக்தியைப் பெறு கின்றனர். எனவே, உண்மையில் விழுமியது இயற்கை அன்று. அறிவு மயமான மனிதர்களே. இவ்வாறு தோற்றவுலகைக் கடந்த நிலையிலுள்ளவர்கள் என்ற உணர்வு பிறக்கக் காரணமாக அமைவதால் விழுமிய தன்மை அவற்றின்மேல் ஏற்றிக் கூறப்படு கின்றது.

**நோக்கவியல் தீர்ப்பு பற்றிய ஆய்வு**: (Critique of Teleological Judgement) இந்த ஆய்வில் நோக்கவியல் விளக்கத்தின் எல்லையையும் ஏற்புடைமையையும் காண்டு ஆராய்கிறார். பகுதிகள் (Parts) முழுப் பொருளைத் (Whole) தீர்மானிக்கின்றன என்ற எந்திரவியல் கருத்திற்கு மாறாக நோக்கவியல் விளக் கம் அமைந்துள்ளது. எந்திரவியல் விளக்கத்தின்படி பகுதிகள் காரணமாகவும் (Efficient cause) முழுப் பொருள் அதன் விளைவாகவும் அமைகின்றன. பௌதிக உலகைப் பொறுத்தவரை இவ்விளக்கம் ஏற்புடையது. ஆனால், இது உயிரியலுக்குப் பொருந்

தாது. உயிருள்ள பொருளின் பகுதிகளுக்கும் முழுப் பொருளுக்குமிடையில் உள்ளார்ந்த தொடர்பு இருக்கிறது. இரண்டும் இணைபிரிய முடியாதவை. மேலும், இயந்திரவியலின் காரண காரியத் தொடர்பிலிருந்து மாறுபட்டதாகவும் விளங்குகின்றன. இயந்திரவியலின்படி பகுதிகள் முன்னும் முழுப்பொருள் பின்னும் தோன்றுகின்றன. ஆனால் உயிர்ப் பொருளில் முழுப் பொருள் முன்னும் பகுதிகள் பின்னும் தோன்றுகின்றன. உயிர்ப் பொருள் தான் முழுமையடைவதற்கு முன்னரே தன் வளர்ச்சியைத் தானே தீர்மானித்துக் கொள்கிறது. மனிதன் வெறும் பகுதிகளின் இணைப்பு அல்லன். கரு (Embryo) முழுமையானது; பகுதிகள் நாட்போக்கில் வெளிப்படுகின்றன. மனிதன் என்ற முழுமையான பொருள் கருவிலும் அடங்கியுள்ளது. இங்கு வளர்ச்சி என்பது ஒரு நோக்கத்தினால் ஆளப்படுகிறது. எனினும், நோக்கவியல் விளக்கம் (Teleological Explanation) மனித அறிவை ஒழுங்குபடுத்தும் தத்துவமே தவிரப் புறவுலகை வரையறை செய்யும் தத்துவம் அன்று. அதனால், நோக்கவியல் விளக்கத்தை எல்லாப் பொருள்களுக்கும் பொதுவானது அல்லது பிரபஞ்ச அமைப்புப் பற்றிய விளக்கம் என்று கருதலாகாது எனக் காண்டு எச்சரிக்கிறார். காண்டு கி.பி. 1804-ஆம் ஆண்டு காலமானார். ஜெ.மு.

**துணை நூல்கள்**:

**Abbot T.K.** (Trans), Critique of Practical Reason, Longmans, London, 1909.

**Bernard**, J.H., (Trans), Citique of Judgement, Macmillan, London, 1931.

**Paton, H.J.**, (Trans) Groundwork of the Metaphysics of Morals, Hutchinson, London, 1956.

**Roger Scruton**, Kant, Oxford University Press, 1982.

**Wilkerson, T.E.**, Kant's Critique of Pure Reason, Clarendon Press, Oxford, 1976.

**காண்டேகர். வி. ச. (கி. பி. 1898-1976)** புகழ்வாய்ந்த மராத்திய எழுத்தாளர் ஆவார். புதினம், சிறுகதை, உருவகக் கதை, கட்டுரை முதலிய பல இலக்கிய வடிவங்களை இவர் கையாண்டார். எனினும், இவர்தம் புதினங்களே இவருக்குப் பெரும் புகழ் தேடித் தந்தன.

இவர் எழுதிய 'யயாதி' என்ற புதினம் சாகித்தியக் கழகத்தின் விருதைப் பெற்றது. மகாபாரதத்தின் ஆதிபருவத்தில் இடம்பெறும் ஒரு சிறிய கதையை விரிவுபடுத்தி எழுதப்பட்ட இந்நூல் ஓர் உளவியல் புதினமாக விளங்குகிறது. இவர் திரைக்கதை எழுதிய 'நிழல்' (சாயா) என்னும் படம் கோகர் பதக்கம் பெற்றது.

காண்டேகர் மனித நேயமும் தொண்டுள்ளமும் கொண்டவர். கல்லூரிப் படிப்பை முடித்த காண்டேகர் தாம்பிறந்த கொங்கணத்தின் சிற்றூர்களில் எழுத்தறிவின்மையைப் போக்க விரும்பிச் சிரோடே என்னும் சிற்றூரில் ஆங்கிலப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். சாதி வேற்றுமையின்றி அனைவருக்கும் கல்வி கற்பித்தார். அவரால் வாழ்வில் முன்னேறிய பலர் அவரது மணிவிழாவின்போது ஒரு பெருந்தொகையைத் திரட்டி அவருக்கு வழங்கினர். காண்டேகர் அத்தொகையை வெளிநாடுகளில் கல்வி பயிலும் இந்திய மாணவர்களுக்குப் பயன்படுமாறு கொடுத்துவிட்டார்.

இவர் எழுதிய பதினைந்து புதினங்களில் பதினொன்று மட்டுமே முழுமையாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவை எரிநட்சத்திரம், இரு துருவங்கள், மனோரஞ்சிதம், இரு மனம், வெறுங் கோயில், வெண்முகில், சுகம் எங்கே?, புயலும் படகும், கருகிய மொட்டு, கிரௌஞ்ச வதம், அமுதக் கொடி என்பன. இவை தவிர, யயாதியின் முதல் பாகம் மட்டும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

காண்டேகர் ஏறத்தாழ 300 சிறுகதைகளை எழுதியுள்ளார். அவற்றுள் முதல் நாள், வாயு கன்னிகை, கண்ணாடி அரண்மனை, சமீன்தார் மாப்பிள்ளை, சூன் 20, கறுப்பு ரோசா, கவியும் கனியும் முதலியன தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளன. இவர்தம் நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டமையால், தமிழ் மக்கள் பலர் அவற்றைப் படித்து மகிழ்ந்தனர்.

காண்டேகர் 'கலை மக்களுக்காகவே' என்னும் கொள்கையுடையவர். இவருடைய புதினங்களில் இவர் கால வாழ்வின் முதன்மையான சிக்கல்கள் பெரும் இடம்பெறுகின்றன. நாட்டு விடுதலை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், உப்பு அறப்போர், தொழிலாளர் இயக்கம், உழவர்களின் போராட்டங்கள், அரிசனத் தொண்டு முதலியவற்றில் பங்கு பெறும் வீரர்களாக இவர் கதை மாந்தர்கள் படைக்கப்பட்டுள்ளனர்.

புதினத்தின் நோக்கு நிலைகளில் காண்டேகர் சிறப்பான சோதனைகளைச் செய்தார். மனோ

ரஞ்சிதம், இரு மனம், இரு துருவங்கள் ஆகியவை, படர்க்கைக் கூற்றில் அமைந்தவை. எரிநட்சத்திரம், புயலும் படகும் ஆகியவை தலைமை மாந்தர் தம் வரலாற்றைக் கூறும் பாங்கில் அமைந்தவை. சுகம் எங்கே?, வெறும் கோயில், யயாதி ஆகியவற்றில் கதை மாந்தர் மாறிமாறிக் கதையைக் கூறுகின்றனர். கருகிய மொட்டு, கிரௌஞ்ச வதம் ஆகியவற்றில் கதை மாந்தரோடு ஆசிரியரும் கதை கூறுவோராக அமைகிறார். கடிதங்களையும், நாட்குறிப்பையும் பயன்படுத்திக் கதைநிகழ்ச்சியைக் கூறிச் செல்வதும் காண்டேகர் பயன்படுத்திய ஒரு சிறந்த உத்தியாகும்.

காண்டேகர் கதைப் பின்னலில் கையாண்ட உத்திகளுள் தம்மையே கதை மாந்தருள் ஒருவராகப் படைப்பதும் ஒன்று. இவரது கருகிய மொட்டில் வரும் கதைமாந்தர் பலரும் இவரிடம் வந்து தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறுவதாக அமைத்துள்ளார். வேறுசில புதினங்களில் வரும் கதைமாந்தர் இவரைப் பற்றியோ, இவர்தம் புதினங்களைப் பற்றியோ பேசுகின்றனர்.

காண்டேகரின் புதினங்கள் வெறும் கதைகளாக அமையாமல் சமூகச் சிந்தனைகளும் கருத்துகளும் நிரம்பியனவாக விளங்குகின்றன. வாழ்வு ஒரு போர்க்களம் என்னும் கருத்து இவர்தம் புதினங்கள் பலவற்றில் இடம்பெறுகிறது. 'வாழ்க்கை என்பது போராட்டம். வாழ்க்கை என்பது வேள்வி. வாழ்க்கை என்பது கடல். புண்ணில்லாத போராட்டம் இல்லை. தீயில்லாத வேள்வி இல்லை. புயல் இல்லாத கடல் இல்லை. இவற்றை எல்லாம் சிரித்த முகத்தோடு ஏற்றுக்கொள்பவனுக்குத் தான் வாழ்க்கையில் உண்மையான கருத்து விளங்கும்' என்று இரு மனத்தில் வரும் சுந்தரம் கூறுவது காண்டேகரது வாழ்க்கையைப் பற்றிய கொள்கை விளக்கம் எனலாம்.

இந்நூற்றாண்டின் இடைப்பகுதியில் (ஏறத்தாழ 1945–60) காண்டேகரின் நூல்கள் தமிழ்நாட்டில் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டன. அறிஞர் சி. என். அண்ணாதுரை 'புரட்சிகரமான மாறுதலுக்கான போர் முரசு' எனக் காண்டேகரின் கதைகளைப் பாராட்டினார்; பம்பாய்த் தமிழ்ச் சங்கம் காண்டேகரைப் பாராட்டி விழா எடுத்தது. தமிழறிஞர் மு. வரதராசனார் கோல்காப்பூர் சென்றபோது, காண்டேகரைச் சந்தித்துத் தமது அன்பையும் பாராட்டுதலையும் தெரிவித்து மகிழ்ந்தார்.

மு. வரதராசனார் தம் கட்டுரை ஒன்றில் காண்டேகரை 'உவமைக் களஞ்சியம்' என்றும், 'சிறந்த எழுத்தாளர்' என்றும், 'உயர்ந்த கற்பனைகளையும் விழுமிய உணர்ச்சிகளையும் தம் சிறந்த நாவல்களின் வாயிலாகவும் சிறுகதைகளின் வாயிலாகவும் அளித்த வள்ளல்' என்றும் பாராட்டியுள்ளார். இக்கருத்துகள் காண்டேகரின் நூல்களைப் படித்து மகிழ்ந்த தமிழ் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பனவே. ந.மெ.


**காண்டேசு** இந்தியாவில் சூர்சரத்திற்கும் பீராருக்குமிடையே உள்ள நிலப்பகுதி. இடைக்கால இந்திய வரலாற்றில் இது மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது. முகம்மதுபின் துக்ளக்குப் பேரரசில் கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் ஒரு மாகாணமாக இருந்த காண்டேசு (Kandesh), அப்பேரரசு வலிமை குன்றிய பொழுது அதன் ஆளுநரான மாலிக்கு இராசா பரூக்கி என்பவன்கீழ்ச் சுதந்திர நாடாக விளங்கியது. மாலிக்கும் அவர் மரபினரும் 'கான்'என்னும் பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டிருந்தபடியால், அவர்கள் ஆண்ட நாடு 'காண்டேசு' என்ற பெயர் பெற்றது. அம்மரபினர் ஆட்சி கி.பி. 15–ஆம் நூற்றாண்டு முழுவதும் இங்கே நிலவியது. அடுத்த நூற்றாண்டில் வலிமையற்ற அரசர்கள் காரணமாகப் பல சச்சரவுகளும் போட்டிகளும் இங்கு நிலவின. முகலாயப் பேரரசர் அக்பர் கி. பி. 1601-ஆம் ஆண்டில் காண்டேசைத் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார். இப்பகுதிக்கு முகலாயர் தாந்தேசம் என்ற புதுப் பெயரைச் சூட்டினர். தாந்தேசம் என்பது தானியேல் என்ற இளவரசனின் நினைவுக்கு அறிகுறியாக ஏற்பட்டது. இப்பகுதியில், முகலாயரை எதிர்த்துச் சென்ற சிவாசி படையெடுத்துச் சூறையாடினார்.

தபதி ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள காண்டேசில் அந்த ஆற்றங்கரையில் நிறுவப் பெற்ற பர்கான்பூரில் பழைய கால வரலாற்றுச் சின்னங்களைக் காணலாம். பரூக்கி அரசர்கள், மாளவச் சிற்பத்தைத் தழுவிக் கட்டிய கட்டடங்களின் இடிபாடுகள் இங்கு உள்ளன. இவை தவிர, பல கல்லறைகளும் மசூதிகளும் இங்குக் காணப்படுகின்றன. தெ.பா.

**காணாபத்தியம்**: காண்க: கணபதி.

**காணிக்காரர்** தமிழகத்திலும் கேரளாவிலும் வாழும் பழங்குடிகளுள் ஒரு குடியினர். தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம், தோவாளை வட்டாரத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் வட்டாரத்திலும் உள்ள மலை சார்ந்த பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். கேரளத்தில் திருவனந்தபுரம், கொல்லம்

மாவட்டங்களில் இவர்கள் பெருமளவு வாழ்கின்றனர். காணிக்காரர்கள் (Kanikkars) காணி (Kanis), கணியன், காணிக்கர், காணிக்காரன், வேலன்மார், மலை அரசன் என்று பலவாறு சொல்லப்படுகின்றனர். 'காணிக்காரர்' என்னும் சொல்லுக்கு 'நில உரிமையாளர்' என்பது பொருள். இவர்கள் பேசும் மொழியை 'மலம்பாசை' (Malampashai) எனக் கூறுகின்றனர். இது தமிழின் ஒரு கிளை மொழியாகும். இன்று தமிழ்நாட்டில் காணிக்காரர்களின் எண்ணிக்கை சற்றேறக்குறைய 2500 ஆகும். இவர்கள் தம் முன்னோர்களைப் பற்றிப் பல வாய்வழிக் கதைகளைக் கூறுவர். சிவபெருமானுக்கு ஏற்பட்ட ஒரு தீரா நோயைப் போக்க இவர்கள் தோற்றுவிக்கப் பட்டவர்களென்பதும், அகத்திய முனிவர் தென் திசை வந்தபோது அவரால் கி.மு. 1070-இல் குடியேற்றப்பட்டவர்களென்பதும், மார்த்தாண்டவர்மா எட்டு வீட்டுப் பிள்ளைமார்களுடன் ஆட்சியைப் பிடிக்கப் போரிட்டபோது அரசருக்கு வேலன்மார் பெரும் உதவி செய்ததால் 102 காணி நிலம்பெற்ற வேலன்மாரே காணிக்காரர்கள் என்பதும் அவற்றுட் சில.



காணிக்காரர்



காணிக்காரர்-நெருப்பு உண்டாக்குதல்

காணிக்காரர்கள் கருமை நிறத்தவர்; குட்டை உருவத்தினர். வட்டமான முகத்தையும் தடித்த சப்பையான மூக்கையும் கொண்ட இவர்கள் சுருண்ட தலைமயிரைக் கொண்டுள்ளனர். அக்கால ஆண்கள் தலைமயிரை நன்கு வளர்த்துப் பின்புறம் முடிந்து கொள்வர். இன்றைய ஆண்களுள் சிலரே அவ்வாறு முடிந்து கொள்கின்றனர். ஆண்களுள் சிலர் வேட்டி துண்டையும், சிலர் வேட்டி சட்டையையும் உடுத்து கின்றனர். பெண்கள் சேலையையும் மேற்சட்டையையும் அணிகின்றனர். ஆண்கள் கழுத்தில் மணிகளாலான மாலைகளையும் காதில் கடுக்கனையும், பெண்கள் பாசிமணிகள், வண்ணக் கண்ணாடி மாலைகள், காப்புகள், கடுக்கன் ஆகியவற்றையும் அணிகின்றனர். பச்சை குத்திக் கொள்ளும் பழக்கம் இவர்களிடையே உண்டு.

காணிக்காரர்கள் தங்கள் குடியிருப்புகளை மலைச் சரிவுகளில் அமைத்துக் கொள்கின்றனர். 'காணிக்குடி' என்னும் இந்தக் குடியிருப்பில் சற்றேறக்குறையப் பத்துக் குடிசைகள் இருக்கும். கடல் மட்டத்திலிருந்து 1000 அடிக்கு மேற்படாத மலைச் சரிவுகளில் இவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் குடியிருப்புகள் பயிரிடும் நிலங்களுக்கருகிலேயே உள்ளன. குடிசைகளை இவர்கள் மூங்கில்களாலும் காட்டுப் புற்களாலும் அமைக்கின்றனர். நீண்ட வடிவிலுள்ள இக்குடிசைகள் இரு பகுதிகளாக உள்ளன. சுவர்கள் ஓரடி உயரம் மண்ணாலும், அதற்குமேல் மூங்கிலாலும் அமைக்கப்படுகின்றன. முற்காலத்தில் விலங்குகளின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இவர்கள் மர உச்சிகளில் குடிசையைக் கட்டுவர். சில காணிக்காரக் குடியிருப்புகளில் மணமாகாத இளைஞர்களுக்கெனத் தனிக் குடிலும் உள்ளது. இடம் விட்டு இடம் பெயரும் வேளாண் முறையைக் கொண்டுள்ளதால் மூன்றாண்டுகளுக்கொரு முறை தங்கள் குடியிருப்புகளை மாற்றிக் கொள்கின்றனர். இப்போது அரசும் இவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்றது. வீட்டுச் சாமான்கள் எண்ணிக்கையில் குறைந்தனவாகும். மரத்தாலான உரலும் உலக்கையும் ஒவ்வொரு காணிக்காரக் குடிசையிலும் உள்ளன. உழவுக்குத் தேவையான மண்வெட்டி, கத்தி, அரிவாள், கோடரி முதலானவற்றை ஒவ்வொரு வீட்டினரும் கொண்டுள்ளனர்.

இடம்விட்டு இடம்பெயரும் வேளாண்மையே **(Shifting Cultivation)** இவர்களது முதன்மைத் தொழில். தாம் தேர்ந்தெடுக்கும் குடியிருப்புப் பகுதியிலுள்ள காட்டின் ஒரு பகுதியை அழித்துத் தீயிடுகின்றனர். பின் அவ்விடத்தில் உழாமலேயே விதைக்கின்றனர். அடுத்தடுத்த ஆண்டுகளில் நிலத்தைக்



மர உச்சிக்குடில்

கிளறிப் பயிரிடுகின்றனர். இரண்டு மூன்றாண்டுகளுக்குப்பிறகு நிலத்தின் வளம் குறைவதால், குடியிருப்புகளைப் புதிய இடத்திற்கு மாற்றி மீண்டும் காட்டை எரித்துப் பயிரிடும் நிலத்தை அமைத்துக் கொள்கின்றனர். மண்நெல், செந்நெல் போன்ற நெல் வகைகளையும், மரவள்ளியையும் பெருமளவு இவர்கள் பயிரிடுகின்றனர். தங்களது பயன்பாட்டிற்கு மட்டும் பாக்கு, புகையிலை, காப்பி, வாழை, பலா, தென்னை முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். இவர்களது உணவில் தேனும் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. காணிக்காரர்களின் துணைத் தொழில்கள், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல், வேட்டையாடல், மீன்பிடித்தல் முதலானவையாகும். மாட்டிறைச்சி, காட்டெருமை இறைச்சி நீங்கலாகப் பிற விலங்குகளின் இறைச்சியை உண்கின்றனர். இன்றும் இவர்கள் வேட்டையில் வில், அம்பு, கவண் வில் **(Pellet Bow)** முதலானவற்றைப் பயன்படுத்துகின்றனர். நெருப்பை உண்டுபண்ணச் சக்கிமுக்கிக் கற்களைப் பயன்படுத்திய இவர்கள் இன்று அம்முறையைக் கையாள்வதில்லை. இவர்கள் காடுகளில் கிடைக்கும் கிழங்குகள், பழங்கள், தேன் முதலானவற்றைச் சேகரிக்கின்றனர். இவர்கள் மீன்பிடிப்பதிலும் வல்லவர்கள். சில காணிக்காரர்கள்

சம நிலங்களிலும் தோட்டங்களிலும் கூலிகளாக வேலைசெய்கின்றனர். பல காணிக்காரப் பிள்ளைகள் கல்வி பெற்று வருவதால் அரசு அலுவலகங்களில் அடிப்படை ஊழியர்களாகவும் பணியாற்றுகின்றனர். சில பழங்குடிகளைப் போலன்றிக் காணிக்காரப் பழங்குடிக் குழந்தைகள் கல்வி பெறுவதில் மிக்க அக்கறை கொண்டுள்ளனர்.

காணிக்காரர் சமுதாய அமைப்பு இருபெரும் பிரிவுகளைக் கொண்டது. ஒன்று அண்ணன்-தம்பி இல்லங்கள்; மற்றொன்று 'மச்சாம்பி' இல்லங்கள். ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து உட்பிரிவுகள் உண்டு. அண்ணன்-தம்பி இல்லத்தைச் சேர்ந்த ஐந்து உட்பிரிவினர்களும் தத்தம் பிரிவினருக்குள் மணம் கொள்வதில்லை. இவர்கள் மச்சாம்பிக் குழுவினரோடு மண உறவு கொள்கின்றனர். காமக்கிழத்தியுடன் வாழ முற்படும்போதுகூட இம் முறையையே கடைப்பிடிக்கின்றனர். காணிக்காரர்கள் மருமக்கள் தாய முறையைக் கொண்டிருந்தனர். இப்போது இவர்கள் இம்முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். திருமணத்திற்குமுன் இருபாலாரும் கற்பு நெறியுடன் வளரவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

பருவமடைந்த பெண்கள் ஏழு அல்லது ஒன்பது நாட்களுக்குத் தனிக்குடிசையில் தங்க வேண்டும். கடைசி நாளன்று குளித்து வீடு திரும்பும்போது தாய்மாமன் (காரணவன்) புதுத் துணிகளைக் கொடுத்து வரவேற்பார். இச்சடங்கு 'திரட்டிக் கல்யாணம்' அல்லது 'சடங்குக் கல்யாணம்' எனப்படும். மணமக்களின் பெற்றோர் வெற்றிலை மாற்றிக் கொண்டு திருமணத்தை உறுதி செய்கின்றனர். காணிக்காரர்களின் திருமணத்தில் மணமகன் மணமகளுக்கு ஆடைகளைப் பரிசளித்தல் முதன்மைச் சடங்காகும். இப்போது தாலி அணிவிக்கும் முறையும் உண்டு. இச்சடங்கினைத் 'தாலிகட்டுக் கல்யாணம்' என்பர். பல்மனைவி மண முறையைக் (Polygyny) கொண்டவர்களாக இருப்பினும் பெரும்பாலும் ஒரு மனைவி மணமுறையையே இவர்கள் விரும்புகின்றனர். மணவிலக்கு, விதவை மணம் முதலானவற்றை இவர்கள் அனுமதிக்கின்றனர். சில பகுதிகளில் விதவை மணம் இல்லை.

ஒவ்வொரு காணிக்காரக் குடியிருப்புக்கும் 'மூட்டுக்காணி' (Headman) என்னும் தலைவர் உள்ளார். இவருக்கு உதவியாக 'விளிகாணி' என்பவர் நியமிக்கப்படுகிறார். குடியிருப்புகளில் எழும் சிக்கல்களைமூட்டுக்காணி தீர்த்து வைப்பார். மூட்டுக்காணியைத் தலைவராகக் கொண்ட முதியோர் மன்றமும் உண்டு. திருமணம், மணவிலக்கு, கள்ள உறவு, தண்டத் தொகை விதிப்பு, தண்டனை முறை முதலானவற்றை இக்குழுவினர் கவனிக்கின்றனர்.

முன்னோர் வழிபாட்டையும் ஆவிகளை வழிபடுதலையும் கொண்டிருந்த இவர்கள் சிவன், திருமால், சுப்பிரமணியர், அகத்திய முனிவர், எசக்கி, மாடன், சாத்தான், தம்பிரான், மூத்தாரம்மா ஆகிய தெய்வங்களையும் வழிபடுகின்றனர். இப்போது இவர்கள் ஐயப்பனையும் வழிபடுகின்றனர். அனைத்துச் சடங்குகளிலும் ஞாயிற்றை முதன்மையாக இவர்கள் வழிபடுகின்றனர். இவர்களுள் கிறித்தவர்களும் உண்டு. காட்டை எரித்துப் பயிரிடும்போது 'மீனக் கொடுதி' என்னும் விழாவையும், வேட்டைக்குச் செல்லும்போது 'குருக்கண்மார் கொடுதி' என்னும் விழாவையும் கொண்டாடுகின்றனர். இது தவிர்த்து ஆண்டிற்கொருமுறை 'கொடை' என்னும் பெரிய விழாவையும் கொண்டாடுகின்றனர். விழாக் காலங்களில் கோக்கிரா எனப்படும் இசைக் கருவியைப் பயன்படுத்துகின்றனர். இந்த இசைக் கருவி நீண்ட இரும்புக் குழலையும் ஒலியை உண்டு பண்ணுவதற்கு அதன் மேல் இரும்புக் கம்பியையும் கொண்டது. மந்திரம், சூனியம் முதலானவற்றில் இவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் இறப்பாராயின் அவர் உடலை எரிப்பர்; மற்றவர்களின் உடலைப் புதைப்பர். பிறப்பு, பூப்புச் சடங்குகளைப் போன்றே இறந்த பின்பும் தீட்டினைக் கடைப்பிடிக்கின்றனர். காணிக்காரர்கள் மறு பிறப்பில் நம்பிக்கை கொண்டவர்கள். சீ.ப.

**காத்தவராயன்**: உலகைக் காக்கும் சிவபிரானது செயலில் ஐயம் கொண்ட பார்வதிதேவி சிவனைச் சோதிக்க எண்ணி ஓர் எறும்பைப் பிடித்து அடைத்து வைத்தார். மறுநாள் அது ஓர் அரிசியை வாயில் வைத்திருக்கக் கண்டு வியந்த தேவியார், சிவபிரானிடம் தாம் செய்த செயலைக் கூற, அந்த எறும்பிற்குச் செய்த துன்பத்திற்காக ஒரு பூங்காவனம் அமைத்து அந்தப்பாவத்தைப் போக்குமாறு சிவன் தேவியைச் சபித்துவிட்டார். அந்தப் பூங்காவனத்தைக் காக்கச் சிவபிரானால் படைக்கப்பட்டவனே 'காத்தவராயன்'. இவன் ஆரியமாலை முதலிய பல பெண்களை மணம் புரிந்து கொண்டான். ஆரியமாலை, பொம்மி என்னும் இரு மனைவியருடன் மாரியம்மை சன்னிதியில் இவன் உருவத்தைக் காணலாம். தமிழகத்தில் இவனைப் பற்றிய கதை ஒன்றும், நாடகம் ஒன்றும் 'காத்தவராயன் கதை', 'காத்தவராய நாடகம்' ஆகிய பெயர்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

**காத்தவராயன் கதை**: திருச்சியைச் சுற்றியுள்ள ஊர்களில் பங்குனிப் பௌர்ணமியில் 'கழுவேற்றப் பாரிவேட்டை' என்ற விழாவில் காத்தவராயன் கதையைப் பாடி ஆடுகிறார்கள். செவிவழியே நிலைத்து வந்த இக்கதைப்பாடல் மிகப் பிற்காலத்தில்தான் எழுதப்பட்டது. இது ஒரு கூத்துப் போல் அமைந்துள்ளது. இக்கதை நடந்த காலத்திற்குச் சரியான சான்றுகள் இல்லை. ஆனால், கூறப்படும் நிகழ்ச்சிகள் விசயநகர ஆட்சிக் காலத்திற்கு முந்தியவை என்று தோன்றுகின்றன. இக்கதைப் பாடலில் மாற்று உருவங்கள் பல உள்ளன; இதில் பிற்காலச் சேர்க்கைகளும் மிகுதியாக இருக்கின்றன.

சமூகவியல் முக்கியத்துவம் கொண்ட இக்கதையின் கருப் பொருள் சாதி அமைப்பு முறையை மீறிய காத்தவராயனின் திருமணமும், அதன் விளைவுகளுமே ஆகும்.

இக்கதை, இரு பகுதிகளாக அமைந்துள்ளது. முற்பகுதியில் தாழ்ந்த சாதியில் பிறந்த காத்தவராயன், சேப்பிளையான் என்னும் நாடு காவல் அதிகாரியால் வளர்க்கப்படுகிறான். அவன் ஆரியமாலை என்னும் பார்ப்பனப் பெண்ணைக் காதலித்து, அவளைச் சிறையெடுத்துச் சென்று மணந்து கொண்டு நாட்டை விட்டு ஓடி விடுகிறான். பார்ப்பனர்கள், திருசிரபுரத்தை ஆண்ட அரசன் ஆரியப் பூராசனிடம் சென்று இதனை முறையிடுகின்றனர். அரசன் சேப்பிளையானை அழைத்துக் காத்தவராயனைப் பிடித்து வரச் செய்கிறான். 'மக்களால் வணங்கப்படும் தேவரும் தெய்வங்களும், இவ்வாறே பெண்களைக் காதலித்து மணம் செய்துகொண்டுள்ளார்கள்' என்றும், 'ஆகவே அவர்களும் தவறு செய்தவர்களே' என்றும் காத்தவராயன் அரசனிடம் வாதிடுகிறான். அரசன் மனம் மாறி அவனை விட்டுவிட எண்ணுகிறான். ஆனால், காத்தவராயனோ தன்னைக் கழுவேற்றத்தான் வேண்டும் என வேண்டுகின்றான்; கழுவேற்றப்படுகிறான். இதற்கு அவனது முற்பிறப்புக் கதை காரணமாக அமைய, கதை நீள்கிறது.

முற்பிறவியில் காத்தவராயன் கைலாயத்தில் தோன்றியதாகவும் அங்கு அவன் ஆறு தேவமாதரைக் கண்டு ஆசை கொண்டதாகவும், பூமியில் பிறந்து அவர்களை மணந்து, கழுவேறிச் சாகவேண்டுமென்று கைலைவாசன் அவனைச் சபித்ததாகவும், அச்சாபத்தை மேற்கொண்டே அவன் உலகில் வந்து பிறந்ததாகவும், அதனால் தேவனான காத்தவராயன் இவ்வுலகப் பிறப்பிலும் மனுதருமம் மாறாமல் ஆரியமாலை என்ற பார்பனப் பெண்னை மணந்ததாகவும் இக்கதையின் பிற்பகுதி கூறுகிறது.

கழுவேற்றப்பட்டவர்கள் சிறு தெய்வங்களாக மிகப் பழங்கால முதலாக வணங்கப்பட்டு வந்தனர். அதைப்போன்றே காத்தவராயனும் மக்களால் தெய்வமாக வணங்கப்பட்டிருக்கவேண்டும். எனவே, கழுவேற்றப்பட்ட செய்தியை மறைக்க முடியாத உயர் சாதியினர், காத்தவராயன் கடவுள் சாபத்தை நிறைவேற்றுவதற்காகத் தானே கழுவேற முன்வந்தான் என்ற செய்தியைப் புனைந்ததாகச் சொல்லப்படுகிறது.

இக்கதையினை மதுரைப் பல்கலைக் கழகம் நாட்டுப்பாடல் வெளியீடாக 1971-இல் பதிப்பித்துள்ளது. இச்சிறுகதைப் பாடல் நூலின் பதிப்பாசிரியர் நா. வானமாமலை.

**காத்தவராயன் நாடகம்**: 'காத்தவராய நாடகம்' என்னும் நூல் சென்னை அரசாங்க நூல் நிலையக் கையெழுத்துப் படியாக உள்ளது என்று ந.சி. கந்தையாபிள்ளையின் 'தமிழ் இலக்கிய அகராதி, குறிப்பிடுகிறது.

காத்தவராய நாடகத்தில் காத்தவராயன் என்பவன் முத்தம்மை என்னும் தேவதையின் மகன் என்றும், இவனுக்கு, நாரதர் மூன்று பெண்களின் அழகினைப் பற்றிச் சொல்லி அவர்களை மணம் புரியக் கூற, இவன் தந்திரத்தால் அவர்களை மணம் புரிந்ததாகவும் கூறப்படுகிறது. ஆரிய தேசத்துக் கன்னிமாடத்திலிருந்த ஆரியமாலையிடம் காத்தவராயன், குறத்தி முதலிய வடிவம் புனைந்து சென்று அவளை மணந்தான் என்றும், அடுத்துக் காவிரிப் பூம்பட்டினத்துக் கன்னி மாடத்திலிருந்த உகந்தாயி என்ற மங்கையிடம் நூல் வாணிகம் செய்யும் கிழச் செட்டியார் வடிவில் சென்று அவளை மணந்தான் என்றும், இறுதியாகச் செம்பு குமார்ன் வனத்திலிருந்த கறுப்பாயி என்னும் நங்கைபால் பாம்புப் பிடாரன் வடிவு கொண்டு சென்று அவளை மணந்தான் என்றும் சொல்லப்படுகிறது.

இராம. ச.

**காத்தியர்**: ஐரோப்பாவில் தியூட்டானிய (Tewtonic) இனத்தைச் சேர்ந்த ஒரு கூட்டத்தினரான காத்தியர் (Goths) தொடக்க காலத்தில் பால்டிக்குக் கடலோரத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான்யூபு (Danube) ஆற்றுப் பகுதியில் குடியேறினர். இவர்கள் அங்கே ஒரு பேரரசை நிறுவி அப்பொழுது விளங்கி வந்த உரோமானியப் பேரரசுக்கு

அடிக்கடி இடையூறுகளையும் இழைத்தனர். (காண்க: உரோமப் பேரரசு). அதற்கு எடுத்துக்காட்டுகளாகப் பின்வரும் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். (1) உரோமானிய மாநிலமான தேசியா (Dacia) கி.பி. 249-இல் படையெடுப்புக்கு உட்படுத்தப்பெற்றுச் சூறையாடப் பெற்றது. தேசியசு (Dacius) மன்னன் கொலையுண்டான். (2) சிற்றாசிய நகரங்களும் ஏதென்சு நகரமும் கி.பி. 258-259-இல் சூறையாடப்பெற்றன. (3) கிரீட்டு, உரோடுசுத் (Rhodes) தீவுகள், கி.பி. 269 -இல் தாக்குதல்களுக்கு உட்பட்டன. இச்செயல்களைக் காணப் பொறாத உரோமானியப் பேரரசன் கிளாடியசு (Claudius) வெகுண்டெழுந்து காத்தியரை வீழ்த்தினான். ஆயினும் விரைவில் அவர்கள் புத்துயிர் பெற்றுக் கிளர்ந்தெழுந்தனர். மறுபடியும் இவர்களுடன் போரிட விரும்பாத மற்றொரு உரோமானியப் பேரரசன் அரீலியன் (Aurelian) தேசிய மாநிலத்தை அவர்களுக்கு வழங்கி அமைதி உடன்பாடு செய்து கொண்டான். பிறகு காத்திய-உரோமானிய நட்பு வளர்ந்தது. காத்தியர் கிறித்தவ மதத்தையும் பின்பற்றலாயினர். காத்தியரிடையே மேற்குக் காத்தியர், கிழக்குக் காத்தியர் என இரு பிரிவுகள் ஏற்படலாயின. மேற்குக் காத்தியர் ஆசுத்திரோ காத்தியர் எனவும் அழைக்கப்படலாயினர்.

ஆசுத்திரியோ காத்தியர் கருங்கடல் பகுதியில் வாழ்ந்திருந்தனர். அவர்களுக்கு ஒரு பெரிய இடையூறு கிழக்கிலிருந்து பரவிய ஹுணர்களால் விளைந்தது. அதனால், இவர்கள் மேற்கு நோக்கிப் பரவலாயினர். இவர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உரோமப் பேரரசின் பகுதிகளான மேல்தான்யூபு சாவா ஆறுகளுக்கிடைப்பட்ட பனோனியா (Pannonia) என்னும் பகுதியில் குடியேறும் உரிமைகளைப் பெற்றனர். இவர்கள் அரசனான தியோடொரிக்கு என்பவன் தன் படையெழுச்சிகள் காரணமாக ஒரு பெரிய அரசை நிறுவினான். இத்தாலியின் மீது கி.பி. 488-இல் படையெடுத்தான். இத்தாலியில் அப்பொழுது ஆண்டு கொண்டிருந்த ஓடோயேசர் (Odoacer) என்ற மன்னனை முறியடித்துக் கொன்றான். இவ்வாறு வெற்றிக் கொடி நாட்டிய தியோடோரிக்கு இறுதியில் கி.பி. 526-ஆம் ஆண்டில் இறந்தபின் அவன் அரசு நிலை குலையத் தொடங்கியது. உரோமானியரால் கி.பி. 553-இல் அது வீழ்த்தப் பெற்றது.

மற்றொரு பிரிவினரான விசிகாத்தியருள் பலர் உரோமானியப் படையில் சேர்ந்தும், சிலர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டும் உரோமருடன் இணைந்து வாழ முற்பட்டனர். ஆனால் அடிக்கடி இருசாராருக்குமிடையே சச்சரவுகள் உண்டாயின. விசிகாத்தியர் கி.பி. 387-ஆம் ஆண்டில் உரோமானிய அதிகாரிகளின் துன்புறுத்தலை எதிர்த்துப் புரட்சி செய்தனர். உரோமானிய மன்னன் தியோடோசியசு அவர்களுடன் புது உடன்படிக்கை செய்து கொண்டான். அம்மன்னன் இறந்தபிறகு மறுபடியும் இரு சாராருக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட்டன. விசிகாத்திய மன்னன் அலாரிக்கு தன் இனமக்களுக்குத் தனி மாநிலம் வேண்டினான். அதை உரோம அரசு ஏற்றுக் கொள்ளாததால், அலாரிக்கு வெகுண்டெழுந்து, கி.பி. 410-ஆம் ஆண்டில், இத்தாலியை முற்றுகையிட்டு உரோமாபுரியைக் கைப்பற்றிக் கொண்டான். இல்லிரியா, கிரீசு, மாசிடோனியா நாடுகள் (உரோமப் பேரரசில் அடங்கியவை) தாக்கப் பெற்றுச் சூறையாடப்பட்டன. உரோம் பாழ்படுத்தப் பெற்றது. அலாரிக்கு அச்சமயம் இறந்திராவிட்டால் சிசிலித்தீவில் படையெடுத்திருப்பான். அவனது மரணம் அதைத் தடுத்தது. எனினும், அவனுக்குப் பின் அரசு கட்டிலேறிய விசிகாத்திய அரசர்கள் அவன் கொள்கையைப் பின்பற்றி, இசுபெயின் (Spain) கால் (Gaul) நாடுகளைவென்று தமது பேரரசை இசுபெயின்வரை பரப்பினர். இவர்களுக்கு எதிராக நின்று இவர்களுடைய பரவுதலைத் தடுத்தவர்கள் பிராங்கியர் (Franks) அவர்கள் மன்னன் கிளோவிசு (Clovis) கி.பி. 507 -இல் விசிகாத்தியப் பேரரசின் ஒரு பகுதியைத் தன்னடிப்படுத்தினன். பிறகு கி.பி. 711-ஆம் ஆண்டில் காத்திய அரசு முழுவதையும் வென்ற பெருமை, பின்வந்த சாரசெனியரைச் (Saracens) சாரும்.

தெ.பா.

**காதம்பரி** அர்சப் (Harsha) பேரரசரின் அவைப் புலவர். அவர் படைத்த காதற்காப்பியம் காதம்பரி என்னும் நூல்.

**கதைச்சுருக்கம்**: சூத்திரகன் என்ற அரசனிடம் சண்டாளக் கன்னி ஒருத்தி ஒரு கிளியுடன் வந்தாள். அந்தக் கிளி தனது சோகக் கதையைக் கூறியது. அதுவே காதம்பரியின் கதைச் சுருக்கமாகும். கிளி குஞ்சாக இருக்கும்போது தாய்க் கிளியையும் தந்தைக்கிளியையும் இழந்து ஆதரவற்றுக் கிடந்தது. அதை ஞாபலி என்ற துறவியின் சீடர்கள் எடுத்துத் துறவியின் குடிலுக்குக் கொண்டு சேர்த்தனர். துறவி ஒரு முறை சீடர்களுக்குக் கூறிய கதையைக் கேட்டுக் கிளி தன் முன் வரலாற்றை அறிந்தது.

உச்சயினி அரசன் தாரபீடனுக்கு ஒரு மகன் பிறந்து சந்திரபீடன் என்ற பெயருடன் வளர்ந்து வந்தான். அமைச்சனுக்கும் ஒரு மகன் பிறந்து வைசம்பாயனன் என்னும் பெயருடன் வளர்ந்து வந்

தான். இரு சிறார்களும் நெருங்கிப் பழகிவந்தனர். இருவரும் ஒரே பள்ளியில் சேர்ந்து படித்தனர்; ஆண்டு 16 நிரம்பியபோது பல்கலை வித்தைகளில் தேறிய போர் வீரர்களாக வெளிவந்தனர்.

சந்திரபீடன் இளங்கோப் பட்டம் சூட்டப் பெற்றுப் புகழுடன் வாழ்ந்தான். ஒருமுறை கின்னரர்களைத் துரத்திச் சென்று அடர்ந்த காடுகளுக்குள் புகுந்த போது காதலில் தோல்விகண்டு துறவு பூண்டிருந்த அரச குமரியாகிய ஒரு பெண் துறவியைச் சந்தித்து உதவ முனைந்தான். அத்துறவியின் தோழி காதம்பரி. சந்திர பீடனுக்கும் காதம்பரிக்குமிடையே காதல் ஏற்பட்டு நெருங்கிய காதலராயினர். ஆனால் அவன் அவளைப் பிரிய வேண்டி வந்தது. தனது தோழனும் காதல் வலையில் சிக்கிக் கிளியாகச் சபிக்கப்பட்டுள்ளான் என்பது அப்போது அவனுக்குத் தெரியாது. நண்பனைத் தேடி அக்காட்டில் அலைந்து தன் நண்பனின் நிலையை அறிந்ததும் அதிர்ச்சியால் உயிர் துறந்தான். சிறிது நேரத்தில் அங்கே வந்து சேர்ந்த காதம்பரி அதிர்ச்சி அடைந்து தற்கொலை செய்து கொண்டு காதலனுடன் இணைய முனைகிறாள். எதிர்பாரா வானொலி ஒன்று வருகிறது. அது இருவரையும் உயிருடன் இணைக்க வாக்குறுதியளிக்கின்றது.

கதையை முனிவர் இதுவரை கூறியதும் கிளி பறந்து சென்றது. தான் சபிக்கப்பட்டுக் கிளி உருவிலிருந்த புண்டரீக வைசம்பாயனன் என்பதை உணர்ந்து தனது நண்பனைக் காப்பாற்றச் செல்லும் வழியில் சண்டாளக் கன்னியின் கையில் சிக்கிச் சூத்திரகனின் அரண்மனைக்கு வந்தது.

வினைப்பயனால் எதிர்பாராத சாபம், உருமாற்றம், பிரிவு என்ற திருப்பங்களால் இரு இணைக் காதலர்கள் துன்பத்தில் அவதிப்படுகின்றனர். ஆசிரியர் இயற்கைக்குப் புறம்பான சக்திகளையும், ஆன்மா கூடுவிட்டுக்கூடுபாயும் உத்தியையும் பயன்படுத்தி இரு இணைக் காதலர்களையும் இணைத்து மங்கலமாக மணம் முடித்துப் பிரிவில்லா இல்லறத்துக்கு வாழ்த்தி, இன்பியல் காதல் காப்பியமாகக் காதம்பரி கதையை முடிக்கிறார்.

பாணர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதி முடிவு பெறாது குறையாக விட்ட காதம்பரியை அவர் புதல்வர் பூசான பட்டன் எழுதி முடித்தார். சமசுகிருதத்தில் சொற்செறிவுடன் கம்பீர உரைநடையில் எழுதப்பட்ட காதம்பரி, கதைகளும் உட்கதைகளும் நிரம்பிப் படிப்போரைக் குழப்பவல்லது. இந்நாடகம் இடையிடையே எதிர்பார்ப்பு நிலைகளையும் உச்சகட்டத்தில் மறைத்து ஆவல் பெருக்கும் நிலையையும் உருவாக்கிப் படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டி இறுதிவரை இழுத்துச் செல்வது.

காதம்பரி பிற்காலச் சமசுகிருத நூலாசிரியர் சிலருக்குக் கதைகளை வழங்கி வழிகாட்டியாக விளங்கியுள்ளது. இக்காலத்தில் இது பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது.

உச்சயினி நகரின் அழகு வருணனையும் இமய மலையின் எழிலழகு வருணனையும் நூலின் பிற சிறப்பு அமிசங்களாகும். வே.தி.செ.

**துணை நூல்கள்**:

**Aggarwal, H.R.**, A Short History of Sanskrit Literature, Delhi, 1963.

**Basham, A.L.**, Cultural History of India, Oxford, 1975.

**KunhanRaja, C.**. Kadambari (Eng-Tr), Bombay, 1963.

**காதரின்**: முதலாம் காதரின் உருசியாவை கி.பி. 1725 முதல் 1727 வரை ஆண்டு வந்த பேரரசியாவார். உலூதரன் சமயத் தலைவரிடம் வேலைக்காரியாக வாழ்க்கையைத் தொடங்கிய இவர் மகா பீட்டருக்கு இரண்டாம் மனைவியாகும் பேற்றைப் பெற்றார். மகாபீட்டர் இறந்த பிறகு பிரபுக்கள் பீட்டரின் பேரரான இரண்டாம் பீட்டரை அரசராக்க முடிவு செய்தனர். ஆனால், அரண்மனைக் காவற்படையினர் காதரினை அரசியாக்கினார்கள். ஆட்சி அதிகாரங்கள் அலெக்சாந்தர் மென்சிகோவிடம் இருந்தன. அவருடைய ஆட்சிக்காலத்தில் எல்லா அதிகாரங்களையும் கொண்ட தலைமை நீதி



மகா காதரின்

நிருவாகச் சபை ஒன்று நிறுவப்பட்டது. அக்காலத்தில் அரண்மனையில் கேளிக்கையும் வேடிக்கையும் விருந்தும் தவிர வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. நாட்டு நலன் புறக்கணிக்கப்பட்டது.

இரண்டாம் காதரின் உருசியாவை கி.பி. 1765 முதல் 1769 வரை சிறப்பாக ஆண்டு வந்தார். அதன் காரணமாக இவர் 'மகா காதரின்' என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டார். இவருடைய முதற்பெயர் சோபியா பிரெடெரிக்கு அகசுடா (Sophie Frederike Augusta). இவர் செருமனியிலுள்ள இசுடெட்டின் (Stettin) என்னும் ஊரில் கி.பி. 1729-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் கிறிசுடியன் அகசுட்டு (Christian August). இவர் தாயார் புகழ்மிக்க கோல்சுடைன் பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் தம் 14-ஆம் வயதில் உருசியப் பேரரசர் முதலாம் பீட்டருடைய பேரனும் உருசிய ஆட்சிப் பீடத்திற்கு வாரிசு என்ற முறையில் பெரும் பிரபு பீட்டர் என்ற பட்டத்துடன் விளங்கியவருமாகிய காரல் உல்ரிச்சு (Karl Ulrich) என்பவருக்கு மணஞ் செய்விக்கப்பட்டார். காரல் உல்ரிச்சு இவருடைய நெருங்கிய உறவினராவார். காதரின் கி.பி. 1744-இல் உருசியாவிற்குச் சென்றார். அங்குப் பெரும் சீமாட்டி காதரின் அலெக்சேயிவ்னா (Grand Duchess Catherine Alexseyevna) என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். இவர் கணவர் பிடிவாதக்காரரர்; எதற்கெடுத்தாலும் சண்டை போடும் மனப்பான்மையுடையவர்; எளிதில் உணர்ச்சி வசப்படுவார்; குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்; ஆண்மையற்றவரோ என்ற ஐயத்திற்கு இடமானவர். காதரினோ அவருக்கு நேர்மாறானவர்; அதிக அழகுடையவர் இல்லையென்றாலும் கவர்ச்சியான தோற்றமுடையவர்; புத்திக்கூர்மையுடையவர்; ஆற்றல் மிக்கவர். இவர் செருமனியில் இருந்து வந்தவர் என்றாலும் உருசியாவை அதிகமாக நேசித்தார்; உருசிய மொழியைக் கற்றுத் தேர்ந்தார்; உருசிய சமயத்தை ஏற்றுக் கொண்டார். இவர், தம் கணவர் ஆட்சியை நடத்துவதற்குரிய குணநலன்களைப் பெற்றிருக்கவில்லை என்பதை எளிதில் உணர்ந்து கொண்டமையால் அவரைப் பதவியிலிருந்து அகற்றி விட்டுத் தாமே ஆட்சி உரிமையைப் பெறும் அளவிற்கு இவரிடம் ஆசை கொழுந்து விட்டெரிந்தது. கணவனும் மனைவியும் இரு துருவங்களாகச் செயற்பட்டமையால் அவர்கள் மணவாழ்க்கை தோல்வி கண்டது. எனவே, இவர் பார்வை பிற ஆடவர்கள் பால் விழுந்தது. இவர் கணவர் உயிரோடு இருந்த காலத்திலேயே இவருக்குக் குறைந்தது மூன்று காதலர்கள் இருந்தனர். இவருக்குப் பிறந்த மூன்று குழந்தைகளுக்குப் பீட்டர் தந்தையாக இருந்தாரா என்பது ஐயத்திற்குரியதாகும். இவர் பேரரசியான பின்னர் இறக்கும்வரை இவருக்குப் பல அழகுள்ள இளம் காதலர்கள் இருந்தனர். அவர்களுள் ஒருவர் கிரிகோரி போடெம்கின் (Gregory Potemkin). அவர் ஒரு சிறிய பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்; அறிவும் ஆற்றலும் பெற்றவர். அரசியல் விவகாரங்களில் செல்வாக்குப் பெற்ற காதரினுடைய காதலர் அவர் ஒருவரே. அவர்களுடைய காதல் இரண்டு ஆண்டுகள் மட்டுமே நீடித்தன என்றாலும், காதரின் தாம் சாகும் வரை அவரைத் தமக்குச் சமநிலையில் வைத்துப் போற்றி வந்தார். ஏனையகாதலர்கள் அவருடைய இன்பத்தைப்பகிர்ந்துகொள்ளப்பயன்படுத்தப் பட்டனரேயன்றி அவருடைய அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

காதரினுடைய திருமணம் நடந்தபோது உருசியாவை எலிசபெத்து ஆண்டு வந்தார். அவருக்குப் பின்னர்க்காதரினுடைய கணவர் மூன்றாம் பீட்டர் அரசுரிமையைப் பெற்றார். அவர் தமது கவனத்தைக் களியாட்டங்களில் செலுத்தி வந்தார். பிரசிய நாட்டு மன்னரிடம் அளவுக்கு மீறிய பக்தி கொண்டிருந்தமையால் பட்டம் எய்தியவுடன் உருசியாவிற்கும் பிரசியாவிற்கும் இடையே நடைபெற்றுவந்த போரை நிறுத்தினார். அதற்குக் காரணம் அவருடைய சொந்த நாடான செருமனியின்பால் கொண்டிருந்த பற்றாகும். உருசியாவின் மீது கொண்டிருந்த வெறுப்பை மறைக்க அவர் முற்படவில்லை. அனைத்திற்கும் மேலாகக் காதரினை ஒழிக்கத் திட்டமிட்டார். காதரினுக்குப்பீட்டரை ஒழிப்பதை விட வேறு வழி தோன்றவில்லை. பீட்டரிடம் வெறுப்புக் கொண்டிருந்த உருசிய மக்களை அவருக்கு எதிராகச் சதி செய்யுமாறு தூண்டுவதில் காதரினுக்குத் தொல்லை ஏற்படவில்லை. அதற்கு உருசியப் படையாகிய பீட்டர்சுபர்க்குப் படைப்பிரிவு இவருக்குப் பேருதவியாக இருந்தது. அரச சபையினரும் இவரை ஆதரித்தனர். மாசுக்கோ, மற்றும் பீட்டர்சுபர்க்குப் பொதுமக்களின் ஆதரவும்,இவருக்குக் கிடைத்தது. முற்போக்குக் கருத்துகளைக் கொண்டவர் என்பதாலும், கற்றறிந்தவர் என்பதாலும் இவரை அறிவு ஆற்றல் கொண்ட பிரபுக்கள் ஆதரித்தனர். இவரை ஆதரித்த படைகளை கி.பி. 1762-ஆம் ஆண்டு சூலை மாதம் 9-ஆம் நாள் பீட்டர்சுபர்க்கு நகருக்குள் நடத்திச் சென்று தம்மைப் பேரரசியாக அறிவித்துக் கொண்டார். பீட்டர் முடிதுறந்தார். சிறையிலிடப்பட்ட பீட்டர் சில நாட்களுக்குப் பிறகு கொல்லப்பட்டார். பீட்டரைக் கொல்வதற்கான ஆணையைக் காதரின் பிறப்பிக்கவில்லை என்றாலும், அதை நிறைவேற்றியவர்கள் இவர் ஆதரவாளர்களேயாவர். காதரினே அக்

கொலைக்குப் பொறுப்பு என்பது பொதுமக்களுடைய கருத்தாகும். பீட்டரின் இறுதிச்சடங்குகளில் கூடக் காதரின் கலந்து கொள்ளவில்லை.

உருசியர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற இவர் பல வழிமுறைகளைக் கையாண்டார். இவர் உருசிய மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார்; உருசியர்களையே தமது ஆலோசகர்களாக அமர்த்தினார்; கடுமையாக உழைத்தார்; ஒருநாளில் 15 மணி நேரத்துக்குக் குறையாமல் அரச காரியங்களில் ஈடுபட்டார். உருசிய நாட்டின் வளத்திற்கும் அதனுடைய சீரும் சிறப்புக்கும் தன்னை உரிமைப் படுத்தினார்.

மாண்டெசிக்கியூ, உருசேரி போன்றவர்களுடைய அரசியல் கருத்துகளுக்கேற்ப உருசியாவிற்கு ஒரு முற்போக்குத் தன்மை பொருந்திய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கக் காதரின் விரும்பினார். அவ்விரு அறிஞர்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கொள்கை அறிவிப்பை வெளியிட்டார். அதை உருவாக்க இவருக்கு மூன்று ஆண்டுகள் பிடித்தன. வால்டேர் அதனை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் சிறந்த வரலாற்றுச் சின்னம் என்று கூறியுள்ளார். அதை விவாதிக்க ஒரு சபையை கி.பி. 1768-இல் கூட்டினார். உருசியா முழுவதிலும் இருந்து பேராளர்கள் வந்து அதில் கலந்து கொண்டனர். பண்ணை அடிமைகள் நீங்கலாக எல்லா வகுப்பினர்களும் அதில் இடம் பெற்றிருந்தனர். அச்சபையின் கூட்டங்கள் பலமுறை நடத்தப்பட்ட போதிலும் முடிவு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு வகுப்பினரும் தங்களுடைய தனிப்பட்ட நலன்களை விட்டுக் கொடுக்க முன்வாராமையே அதற்குக் காரணமாகும். இறுதியில் காதரின் அச்சபையைக் கலைத்துவிட்டார். அடிமை ஒழிப்பு, தடையிலா வாணிகம், அரசியலமைப்புத் திட்டம் போன்ற தம் நல்ல திட்டங்களைச் செயற்படுத்த இயலாது என்ற நிலை ஏற்பட்டதும், வல்லாட்சி முறையைப் பின்பற்றலானார். இவருடைய வல்லாட்சிக்கு உறுதுணையாக நின்றவர் கிரிகோரிபோடெம்கின் ஆவர். இவர் பிரபுக்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டார். உருசியப் படையின் ஆதரவையும் தேடிக் கொண்டார். நிருவாகம் திறமையாகச் செயற்படும் பொருட்டு உயர் அதிகாரம் பெற்றிருந்த ஆளவையை (Senate) ஆறு துறைகளாகப் பிரித்தார். ஒவ்வொரு துறையும் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவற்றில் தம் ஆதரவாளர்களை நியமித்தார். மாநில ஆளுநர்களுக்குப் புதிய அதிகாரங்களை வழங்கினார். நியாயத்தை நிலைநாட்ட நீதித்துறையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்.

காதரினுடைய கவனத்தை ஈர்த்த பெருஞ் சிக்கல் நாட்டுக் கருவூலத்தை நிரப்புவது பற்றியதாகும். எலிசபெத்து அரசி இறக்கும்போது கருவூலம் பொருளின்றி இருந்தது. அதனால் வல்லாட்சிக்குப் பெருத்த கேடு விளையும் போல் தோன்றியது. எனவே, கி.பி. 1762-இல் சமயகுருக்களிடமிருந்த நிலத்தையும் பண்ணை அடிமைகளையும் அரசுடைமையாக்கினார். அப்போது நாட்டின் நிலச்சொத்தில் மூன்றில் ஒரு பங்கு அவர்களுடைய கைவசம் இருந்தது. இவரது நடவடிக்கையின் காரணமாக உருசியச் சமய குருக்கள் அரசு சம்பளம் பெற்ற பணியாட்களாக மாறினர். அவர்களிடம் எஞ்சியிருந்த ஒரு சில அதிகாரமும் அப்போது பறிக்கப்பட்டுவிட்டது. நாட்டின் பொருள்வளத்தைப் பெருக்க வணிகம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றிற்கு ஊக்கமளித்தார். போக்குவரத்துச் சாதனங்களைப் பெருக்கியதோடு வெளிநாடுகளிலிருந்து உருசியாவிற்கு வந்து குடியேற விரும்பும் மக்களுக்கு இவர் பல சலுகைகளையும் வழங்கினார். தாம் பட்டம் எய்துவதற்கு முன்னர் நாட்டுப் பொருளாதார நிலை உயர வேண்டுமெனில் பண்ணை அடிமைகளை விடுதலை செய்யவேண்டும் என்று இவர் கருதினார். ஏனெனில், அது சமயம் உருசியா ஒரு வேளாண்மையை நம்பிய நாடாக இருந்தது. பண்ணை அடிமைகள் மேலாளரின் சொத்தாகக் கருதப்பட்டனர். ஒரு பிரபுவினுடைய சொத்து அவர் பெற்றிருந்த நிலத்தின் அடிப்படையில் அமையாமல் அவர் வைத்திருந்த அடிமைகளின் எண்ணிக்கையைச் சார்ந்திருந்தது. எனவே, அம்முறையை ஒழிக்கப் பிரபுக்கள் விடமாட்டார்கள் என்பதை இவர் அரசியான உடனேயே தெரிந்து கொண்டார். தமது அதிகாரத்திற்குப் பிரபுக்கள் அடித்தளமாக இருந்தமையால் அதை ஒழித்து, அவர்களுடைய வெறுப்பைத் தேடிக் கொள்ள இவர் விரும்பவில்லை. எனவே, அந்த முறையை ஒழிப்பதற்குப் பதிலாக அதைப் பலப்படுத்த முனைந்து உக்ரேனியர்கள் மீது அதனைத் திணித்தார். அதுவரை சற்றுச் சுதந்திரமாகச் செயற்பட்டு வந்தஉழவர்களின்நிலைமையைமோசமடையச் செய்தார். மக்கள் தொகையுள் 95 விழுக்காடு எண்ணிக்கை மக்கள் அடிமைகளாக இருந்தமையால் காதரினுடைய ஆட்சியின் சாதனைகளின் விளைவு பெரும்பாலான மக்களுக்குப் பயனுள்ளதாக அமையவில்லை. அந்நேரத்தில் நிதிநிலைமையைச் சமாளிக்க அடிமை முறை பயன்பட்டது. இராணுவம், பொருளாதாரம் மற்றும் பண்பாடு பற்றிய செலவுகளைக் குறைக்க அடிமைகளிடமிருந்து பெற்ற கட்டாய இலவசச் சேவை பயன் படுத்தப்பட்டது. அடிமை முறையில் காணப்பட்ட குறைகளை வெளியிட்ட இராடிசுசேவு (Radishchev) என்பவரை விசா

ரணைக்குக் கொண்டு வந்து அவரை நாட்டை விட்டு வெளியேற்றினார். பல இன்னல்களுக்கு உட்படுத்தப் பட்ட உழவர்கள் கி.பி. 1773-இல் துருக்கியருடன் நடைபெற்று வந்த போரினால் ஏற்பட்ட இன்னல் நிறைந்த சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அக்கிளர்ச்சிக்கு எமிலியன் புகசாவு (Yemelyon Pugachov) தலைமை ஏற்றார். அவர் முன்பு அரசு அதிகாரியாக இருந்தவர்; கோசக்கு இனப் பிரிவைச் சார்ந்தவர். அவர் இறந்து போன மூன்றாம் பீட்டர் போன்றவர் என்று கூறிக் கொண்டார். யாயிக்கோட்டையைக் கைப்பற்றிய பிறகு மூன்றாம் பீட்டர் என்று முடிசூட்டிக் கொண் டார். கிளர்ச்சி யூரல் பகுதியில் தொடங்கித் தென் கிழக்கு மாநிலங்கள் வழியாக உருசியா முழுவதும் பரவியது. அவரது படை கி.பி. 1774-ஆம் ஆண்டு சூன்மாதம், மாசுக்கோ நோக்கிச்செல்லத் தயாராகி யது. அந்த நேரத்தில்தான் துருக்கியருடன் உருசியா செய்து வந்த போர் உருசியாவிற்குச் சாதகமாக முடிவுற்றது. துருக்கியப் போரில் ஈடுபட்டிருந்த உருசியப் படை புரட்சியாளர்களை ஒடுக்கத் திருப்பி விடப்பட்டது. புகசாவின் படை வீரர்கள் தக்க போர்ப்பயிற்சி பெற்றவரல்லர். எனவே, அவர்களை எளிதில் அரசுப்படை தோற்கடித்தது. புகசாவு கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். இந்தப் புரட்சி காதரினுடைய மனத்தை மாற்றிவிட்டது. மக்களைப் பிணைத்திருந்த விலங்குகளை அகற்றும் எண்ணத்தை முழுமையாகக் கைவிட்டு அவற்றை மேலும் இறுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

உருசியாவில் ஒருதேசியப்பண்பாடு வளருவதற்கு வேண்டிய பணியைத் தொடக்கியவர் காதரினே ஆவர். ஐரோப்பியப் பண்பாட்டின் அடிப்படையில் அது உருவாக்கப்பட்டதெனினும் அதில் உருசிய முத் திரையைத் தெளிவாகப் பொறித்தார். உருசியர் களைப் பிரஞ்சு மொழியையும் ஏனைய கலைகளை யும் கற்றுக் கொள்ளும்படி இவர் கூறினார்; இலக் கிய வளர்ச்சிக்கு ஆதரவளித்தார். இவரே பல இலக்கியப் படைப்புகளையும் உருவாக்கியுள்ளார். இவர் காலத்தில் சிறந்து விளங்கிய இலக்கிய மேதை களுள் குறிப்பிடத்தக்கவர்இராடிசுசேவு ஆவார். இவர் அறிவியல் வளர்ச்சிக்கு உதவியதோடு பல பள்ளி களையும் பீட்டர்சுபர்க்கில் கலைக்கழகம் ஒன்றை யும் நிறுவினார். இவர் காலத்தில் ஓவியக்கலை நன்கு வளர்ந்திருந்தது. ஆந்திரபோவு (Antropov) என்ற ஓவியர் வரைந்த மூன்றாம் பீட்டரின் உருவப் படம் ஓவியக் கலைவளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டா கும். சிற்பக்கலையும் அரசின் ஆதரவைப் பெற்றிருந் தது. பிரஞ்சுச் சிற்பி பால்கேன (Falconet) செதுக்கிய மகா பீட்டரின் உருவச்சிலை மிக இயற்கையாக அமைந்துள்ளது. கட்டடக்கலையும் புத்துயிர் பெற் றது. பசனோவு (Bazhenov) என்ற கட்டடக் கலை ஞரின் முயற்சியால்தான் இலெனின் நூலகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் மாசுக்கோவின் மாளிகை உருவாகியது. கசகோவு (Kazakov) என்பவர் கிரெம் லினில் உள்ள ஆளவை மன்றம் (Senate), மாசுக்கோப் பல்கலைக்கழகம் போன்ற கட்டடங்களைக் கட்டி னார். நூற்றுக்கு மேற்பட்ட நகரங்களைக் காதரின் உருவாக்கினார்; பல பழைய நகரங்களை விரிவுபடுத் தினார்; வேறு சிலவற்றைப் புதுப்பித்துள்ளார். பிரெஞ்சு அரசர் அமைத்திருந்த சீரிய அரச அவைக் குச் சமமான ஓர் அரசவையை இவர் ஏற்படுத்தி னார்.

அயல்நாட்டு விவகாரங்களில் உருசியாவின் தென் எல்லையைக் கான்சுடாண்டிநோபிள் வரை யிலும் பரப்புவது இவர்தம் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். அந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட் டுத் துருக்கியுடன் இரண்டு போர்களை நடத்தி னார். முதற் போர் கி.பி. 1768-இல் தொடங்கி 1774-இல் முடிவுற்றது. மகாபீட்டர் காலம் முதற் கொண்டு துருக்கி உருசியாவின் பெரிய எதிரியாகக் கருதப்பட்டமையால் இப்போர் நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்றைக் கொழுந்துவிட்டெரியச் செய் தது. செசுமே (Cesme) என்னுமிடத்தில் கி.பி. 1770 -இல் துருக்கியக் கப்பற்படையினை உருசியர்கள் தோற்கடித்துக்காதரினுக்குப் புகழ்சேர்த்தனர். கிரிமி யாவை கி.பி. 1771-இல் கைப்பற்றினர். உருசியாவின் வெற்றிகளைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஆசுத்திரியா துருக்கிக்கு உதவ முன்வந்தது. தொடர்ந்து தோல்வி கண்டு வந்த துருக்கி கி.பி. 1774-இல் உருசியாவுடன் குசக்கு கைனார்ட்சி (Kuchuk Kainardji) உடன்படிக் கையைச் செய்துகொண்டது. அதன்படி அசாவு (Azov) உருசியாவிற்குத் திருப்பியளிக்கப்பட்டது. கபின்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த கிரிமியா சுதந்திர நாடாக அமைக்கப்பட்டது. அத்துடன் கருங்கடலுக் கும் காசுபியன் கடலுக்கும் இடையே துருக்கிக்குச் சொந்தமான இடங்களையும் பெற்றது. உருசியக் கப்பல்கள் பாசுபோரசு (Bhosphorus), தார்டனல்சு (Dardanelles) ஆகிய கடற்கால்கள் வழியாகச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

கிரிமியாவை கி.பி. 1783-இல் உருசியா கைப்பற் றியது. கிரிமியாத் தீபகற்பத்திற்குக் காதரின் பய ணம் செய்வதற்கான ஏற்பாட்டைப் போடெம்கின் செய்தார். புதிய மாநிலங்களைத் தம் வசம் கொண்டு வருவதற்காகக் காதரின் அங்குச் சென்

றார். அதுபோது ஆசுத்திரியப்பேரரசரும், போலந்து நாட்டு மன்னரும், பல அரச தூதர்களும் அவரைச் சிறப்பிக்கும் பொருட்டும் அந்தப் பயணத்திற்காகச் செய்யப்பட்ட பகட்டான ஏற்பாடுகளைக் கண்டு களிக்கும் பொருட்டும் அங்குச் சென்றனர். காதரினும் அவருடைய அரசவையினரும் நிலமார்க்கமாக மட்டுமன்றி நீர்வழியாகவும் சென்றமையால் அக்கூட்டத்தினரைக் 'கிளியோபாட்ராவின் கப்பற்படை' என்று குறிப்பிட்டனர். காதரின் தமது பெயரால் பல புதிய நகரங்களை அங்கு அமைத்தார். தமது நோக்கம் கான்சுடாண்டி நோபிளைக் கைப்பற்றுவதே என்றும் இவர் அறிவித்தார். இந்த நடவடிக்கைகள் துருக்கியின் சுல்தானுக்கு எரிச்சலை மூட்டின. கிரிமியாவிலிருந்து உருசியா வெளியேற வேண்டும் என்று துருக்கி வேண்டியது. அந்தக் கோரிக்கையை உருசியா ஏற்காததால் துருக்கி தனது படையை நீப்பர் (Dnieper)நதிப் பகுதியில் இறக்கியது. அதன்விளைவாக கி.பி. 1787-ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்குமிடையே மீண்டும்போர் தொடங்கியது. போரில் உருசியா பல வெற்றிகளைக் கண்டது. அதைக் கண்ணுற்ற இங்கிலாந்தும் பிரசியாவும் உருசியாவின் மீது போர் தொடுக்குமாறு சுவீடனைத் தூண்டின. 'சுவீடன் நெவாப் பகுதியில் தன் படைகளை அனுப்பியது. ஆனால், அது கப்பற்படைப்போரிலும் நிலப்போரிலும் தோற்றது. அதையடுத்து உருசியாவுடன் சுவீடன் சமாதானம் நாடியது. அதன்பிறகு உருசியா துருக்கியுடன் நடத்தி வந்த போரை மேலும் தீவிரப்படுத்தியது. சேசி (Jassey) உடன்படிக்கையின் வாயிலாகப் போர் கி.பி. 1791-ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. அதன்படி கிரிமியா உருசிய ஆதிக்கத்தில் இருக்கத் துருக்கி சம்மதித்தது. காகசசு மலைத் தொடர் இவ்விரு நாடுகளின் எல்லையாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

காதரினுடைய வெளிநாட்டுக் கொள்கையின் பிறிதொரு நோக்கம் போலந்து நாட்டில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாகும். போலந்து கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு பெரிய நாடாக இருந்தது. அந்நாட்டு மக்கள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். அதன் அரசரைப் பிரபுக்களும் நடுத்தர மக்களும் சேர்ந்து தேர்ந்தெடுத்தார்கள். சட்டமியற்றும் உரிமை அவ்விரு மக்கட் பிரிவினர்களின் பேராளர்களடங்கிய சபைக்கு அளிக்கப்பட்டிருந்தது. அச்சபை பிரபுக்களின் செல்வாக்கையும் நடுத்தர மக்களின் உரிமைகளையும் காப்பதில் தனது கவனத்தைச் செலுத்தி வந்தது. மன்னரைத் தேர்ந்தெடுக்கும் முறை போலந்து நாட்டின் அமைதியைக் குலைத்தது. அண்டை நாட்டவர்கள் போலந்து நாட்டு விவகாரங்களில் தலையிடவும் அது வழி வகுத்தது. காதரின் கி.பி. 1764-இல் அதனுடைய விவகாரங்களில் தலையிட்டு தம் அன்பைப் பெற்றவர்களுள் ஒருவரான இசுதானிசுலாசு போனியாடோவசுகி (Stanislaus Poniatowaski) என்பவரை அந்நாட்டரசராக்கினார். அவருடன் கி.பி. 1768-இல் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி போலந்து அரசு மேற்கொள்ளும் சீர்திருத்தங்கள் யாவும் காதரினுடைய ஒப்புதலைப் பெறவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. உருசியாவின் ஆதிக்க வளர்ச்சி மற்ற நாடுகளின் பொறாமையை வளர்த்து விட்டது. ஆகவே, அவற்றைச் சமாதானப்படுத்தக் காதரின் அவற்றுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திப் போலந்து நாட்டின் முதலாம் பிரிவினைக்கு வழிவகை செய்தார். கி.பி. 1772-இல் மேற்கொள்ளப்பட்ட பிரிவினை ஒப்பந்தத்தின்படி போலந்துக்குச் சொந்தமான இலிதுவேனியா (Lithuania) உருசியாவிற்கும், காலிசியாவின் (Galicia) பெரும்பகுதி ஆசுத்திரியாவிற்கும், மேற்குப் பிரசியா பிரசிய நாட்டிற்கும் வழங்கப்பட்டன. அதன் விளைவாகப் போலந்து நாடு தனக்குச் சொந்தமான நிலத்தில் நான்கில் ஒரு பங்கை இழந்தது. மேலும், போலந்து நாட்டை அண்டை நாட்டவர்கள் பகிர்ந்து கொள்வதைத் தடை செய்யும் நோக்குடன் அந்நாட்டு மக்கள் தங்களுடைய அரசை வலுப்படுத்த முயற்சி செய்தனர். அதனால் கோபமுற்ற காதரின் கி.பி. 1793-இல் மறுபடியும் பிரசியாவுடன் சேர்ந்து கொண்டு இரண்டாம் பிரிவினை உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அதன்படி பிரசியா போசனையும் (Posen) மேற்குப்போலந்தையும் பெற்றது. கிழக்குப் போலந்து தென்கிழக்குப் போலந்து ஆகியவற்றின் பெரும்பகுதி உருசியாவிற்கு அளிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையை எதிர்த்தபோலந்து மக்களைக் காதரின் தோற்கடித்தார். மூன்றாம் முறையாகப் போலந்து கி.பி. 1795-இல் பிரித்துக் கொள்ளப்பட்டது. அதன் விளைவாகப் போலந்து நாடு உருத் தெரியாமல் மறைந்துவிட்டது. காதரினுடைய வெளிநாட்டுக் கொள்கை வெற்றியுடன் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக அவருடைய ஆட்சியின் முடிவில் உருசியாவின் எல்லைகள் மேற்காகவும் தெற்காகவும் 520,000 சதுர கி.மீ. களுக்கு மேலாகப் பரவின.

பீட்டர்சுபர்க்கில் பாரிச நோய் காரணமாகக் காதரின் கி.பி. 1796-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 17-ஆம் நாள் இறந்தார். மகாபீட்டர் தொடங்கி வைத்த பணியினை முழுமை பெறச் செய்த பெருமை காதரினைச் சாரும். பீட்டர் உருசியாவிற்கு ஐரோப்பாவைக் காணுதற்குரிய சாளரங்களை அமைத்துக் கொடுத்தார். காதரின் ஐரோப்பாவை

நோக்கிய வாயிற் கதவுகளை முழு அளவு திறந்து வைத்தார். சுதந்திரமும் வலிமையும் பெற்ற நாடாக உருசியாவை ஐரோப்பிய நாடுகள் ஏற்கும்படி செய்த வர் பீட்டர். உருசியாவை ஒரு ஐரோப்பிய வல்லரசு நாடாக மாற்றியவர் காதரின் ஆவார். பழைய உருசியப் பண்பாட்டை ஒழித்து மேலை நாட்டுப் பண்பை உருசியாவிற்குள் நுழைத்தவர் பீட்டர். ஐரோப்பியப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஒரு தனிமுறையான தேசிய பண்பாடு உருசியாவில் வளருவதற்கு வழிவகுத்தவர் காதரின் ஆவார். உருசிய வரலாற்றில் இவர் வகித்திருக்கும் இடத்தை இவரே திட்டவட்டமாகத் தாம் நிறுவிய பீட்டரின் சிலையின் கீழ் 'பீட்டர் முதலாவது, காதரின் இரண்டாவது'(Peter Primo (First) Catherine Secunda(Second)என எழுதியுள்ளார். தி.ஆர்.இரா.

**துணை நூல்கள்**:


**Kaiser, R.G.**, Russia: The people and the power, London, 1976.

**Pares, Sir B.**, A History of Russia, London, 1962.

**Vernadsky, G.**, A History of Russia, Yale Univ. Press, 1954.


**காதரின்-தி-மெடிச்சி**: பிரான்சு நாட்டில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரச குல அரசியல்வாதி. இவள் தானே நேராக ஆட்சிபுரியா விட்டாலும், தன் குமாரர்கள் மூலம் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வந்தாள். இவள் கி.பி. 1519 -ஆம் ஆண்டில் பிறந்தவள்; பிரெஞ்சு மன்னன்



காதரின்-தி-மெடிச்சி

இரண்டாம் என்றியை மணந்து கொண்டாள். இவள் தந்தை மெடிச்சி மரபைச் சேர்ந்த பிரபு உலொரென்சோ பிளாரன்சு நகரில் வாழ்ந்தவன். அக்கால அரசியல் முறைகளை எல்லாம் காதரின்-டி-மெடிச்சி ஐயந்திரிபறக் கற்றிருந்தாள். இவள் மகன் இரண்டாம் பிரான்சிசு, கி.பி. 1559-இல் பிரெஞ்சு மன்னனான பிறகு, உண்மையான அதிகாரங்களை எல்லாம் தானே வைத்துக் கொண்டு, தன் மகனைப் பெயரளவுக்கே அரசனாக இருக்கும்படி செய்தாள். அவன் இறந்தபிறகு கி.பி. 1560-இல் பட்டம் பெற்ற ஒன்பதாம் சார்லசு மிக இளையவனாக இருந்தபடியால், தானே சார்பு ஆளுநராகப் பதவி வகித்து அடுத்த பத்து ஆண்டுகளில் பல சீர்திருத்தங்களைச் செய்ய முனைந்தாள். அக்காலம் சமயப் போர்கள் நிரம்பிய காலமானதால், ஓரளவு அமைதியைக் காப்பாற்ற இவள் பலவாறு முயன்றாள். இவள் விரும்பியவாறு நடுநிலை வகிக்க முடியாமையால் கத்தோலிக்கத் தீவிரவாதிகள் இவளைத் தம் பக்கத்தில் ஈர்த்துக் கொண்டனர். அதன் விளைவாக ஏற்பட்டது தான், புனித பார்த்தலோமியோ கொலை நாள் (St. Bartholomew's Day Massacre of Protestants). எண்ணற்ற சீர்திருத்தக் கிறித்தவர்கள் கி.பி. 1572-ஆம் ஆண்டு ஆகசுட்டு 23,24- ஆம் நாளன்று திடீர்த்தாக்குதல் மூலம் கொலை செய்யப் பட்டனர். இக்கொலைக்குப் பெருமளவுக்குக் காதரின்-டி-மெடிச்சியே பொறுப்பாவார். ஒன்பதாம் சார்லசு கி.பி. 1563-இல் வயது வந்தவனாக அறிவிக்கப்பட்ட போதிலும் கி.பி. 1574-இல் இறந்துவிட்டான். ஆதலால், மறுபடியும் சார்பு ஆளுநர் பதவி இவ்வம்மையாருக்குக் கிடைத்தது. அடுத்த மகன் மூன்றாம் என்றி ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை இவள் ஆட்சி நடத்தினாள். தெ.பா.

**காதா சப்த சதி**: 'சதம்' என்பது நூறு என்னும் பொருளுடையது. 'சப்த' என்பது ஏழு என்னும் பொருளுடையது. 'சப்தசதம்' என்பது எழுநூற்றைக் குறிக்கும். 'சப்தசதி' என்னும் தொடர் எழுநூறு பொருள்களை உள்ளடக்கிய ஒன்று என்னும் கருத்தினைத் தரும்.

'காதா' என்பது ஒருவகைச் செய்யுளின் பெயர். இது நான்கு அடிகளைக் கொண்டது; மாத்திரை அடியுடையது. முதலடியிலும் மூன்றாமடியிலும் பன்னிரண்டு மாத்திரைகளும், இரண்டாம் அடியில் பதினெட்டு மாத்திரைகளும், நான்காம் அடியில் பதினைந்து மாத்திரைகளும் கொண்ட செய்யுள்இது. இத்தகு 'காதா'செய்யுள்கள் எழுநூற்றினைக் கொண்டமைந்ததே 'காதா' சப்தசதி என்னும் நூலாகும்.

இந்நூலில், எழுநூறு காதற்பாடல்கள் அமைந்துள்ளன. இது ஒரு தொகுப்பு நூல். இதைத் தொகுத்தவன் ஆலன் என்னும் மன்னன். ஆலன், மன்னன் மட்டுமன்றிப் பெரும்புலவனும் ஆவன். 'கவிவத்சலன்' என்ற சிறப்புப் பெயரும் பெற்றவன். இவன் முழுப்பெயர் ஆலசாதவாகனன் என்பதாகும்.

இதனைத் தொகுத்தவன் பாலிதன் என்னும் கவிஞன் என்று கூறுவாருமுளர். இக்கவிஞனும் ஆலன் அவையில் அவன் போற்றிய ஒரு புலவனாவான். தமிழ்த்தொகை நூல்களைத் தொகுத்தார் இவர், தொகுப்பித்தார் இவர் என்று குறிப்பிடுவதைப் போல ஆலன் என்னும் மன்னன் தொகுப்பித்தவனாகவும் பாலிதன் என்பவன் தொகுத்தவனாகவும் கொள்ளலாம்.

ஆலன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு ஆகும். எனவே, இத்தொகை நூல் தோன்றிய காலமும் அதுவாகக் கொள்ளலாம். சாதவாகன மரபினர்கள் கி.மு. 230 முதல் கி.பி. 130 வரை ஆந்திர மாநிலத்தை ஆண்டுவந்துள்ளனர்.

இராக கோவிந்த பசக்குக் கருத்துப்படி சாதவாகன மரபில் ஆலன் பதினேழாம் மன்னன் ஆவான் (கி.பி. 73 முதல் 78 வரை). ஆந்திர சரித்திர வரலாறு எழுதிய கோடலி இலட்சுமி நாராயணாவும் இக்கருத்து உடையவரே.

இந்நூல் பிராகிருத மொழியில் அமைந்துள்ளது. பிராகிருத மொழியில் உள்ள நூல்களுள் இதனையே சிறந்ததாகச் சொல்வர். இதன்கண் அமைந்துள்ள பாடல்களெல்லாம் முன்னர்க் குறிப்பிட்டது போலக் காதற் பாடல்களே. ஓரளவு தமிழ் அகத்திணைப் பாடல்களோடு இவற்றை ஒப்பிடலாம். அகத்திணைத் தொகை நூல் போக்கில் அமைந்துள்ள இத்தொகுப்பையும் இதில் பயின்றுவரும் பிராகிருத மொழியையும் இது தோன்றிய காலத்தையும் கருத்தில் கொள்ளும்போது, தமிழ் அகத்திணைத் திறத்தினைப் புலப்படுத்துவதற்காகக் கபிலர் இயற்றிய குறிஞ்சிப் பாட்டு இத்தகு பிராகிருத மன்னன் எவனோ ஒருவனுக்காகத்தான் என எண்ணத் தோன்றுகிறது. இவ்வெண்ணம் மேலும் ஆராய்தற்குரியது. இவ்வாய்வு வெற்றிபெறின் கபிலர் காலம், அதாவது சங்க இலக்கியக் காலம் இந்திய வரலாற்று அடிப்படையில் மேலும் உரம்பெறும்.

இந்நூல் நூறுநூறாக ஏழுநூறு பாடல்களைக் கொண்டமைந்ததாகும்.மேலும் முதல் நூறு, இரண்டாம் நூறு, மூன்றாம் நூறுஎன்று இவ்வாறாக ஒவ்வொரு நூறு பாடல்களும் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நூலின் இறுதியிலும் பாடிய புலவர் பெயர் குறிக்கப்பெற்றுளது.

சில பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பல புலவர்கள் ஒவ்வொரு பாடலே பாடியுள்ளனர். சிலர் பல பாடல்களைப் பாடியுள்ளனர். அவர்களுள் கவிவத்சலன் ஆகிய ஆலன் பாடிய பாடல்கள் நாற்பத்தைந்திற்கு மேற்பட்டனவாகக் காணப்படுகின்றன.

தம் காலத்திய சமுதாய, குடும்ப வாழ்வின் நலங்களை மட்டுமே பாடுபொருளாகக் கொண்டு கவிச்சுவை வழங்கியவர்கள் பண்டைத் தமிழ்ப் புலவர்கள். அகத்திணை மரபும் அன்று அவ்வாறு அமைந்திருந்தது. ஆனால், 'காதா சப்த சதி'யில் அமைந்துள்ள பாடல்கள் காதல் நலன்கள் மட்டுமன்றிக் காமக்குறைகளையும் எடுத்துரைக்கின்றன. அக்காலச் சமுதாய வாழ்வைச் சிறிதும் குறைக்காமலும் பெரிதும் கூட்டாமலும் உணர்க்கின்றது.உள்ளபடியே உரைக்க அக்காலப் புலவர்கள் முயன்றமையை இந்நூல் வழி அறியலாம்.

இதற்கு, ஆங்கிலத்திலும் தெலுங்கு மொழியிலும் சில மொழிபெயர்ப்புகள் தோன்றியுள. தமிழில் தோன்றியுள்ள மொழிபெயர்ப்பு நூல்களுள் இரா. மதிவாணர்தம் 'ஆந்திரநாட்டு அகநானூறு' குறிப்பிடத்தக்கது. இவர், தமிழ் அகத்தினை மரபில் திணை துறைகளை அமைத்து இப்பாடல்களைத் தொகுத்துள்ளார். காதா பாடல்களுள் சில அன்பின் ஐந்திணைக்கு அப்பாற்பட்டு இருத்தலின் அவ்வாறு அமைந்த பாடல்களைக் கைக்கிளை, பெருந்திணை அமைப்பில், எழுதிணை அமைப்பில் உரைநடையில் அமைத்துள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் 'சிவபெருமானுக்கே மறந்துபோய்விட்டது', 'வாய்ப்புக்கொடு' 'கன்னக் கண்ணாடியில் தெரிந்த நிலவு' என்பன போன்ற பாடல் கருத்துத் தலைப்பு ஒன்று கொடுத்து இவர் அமைத்துள்ளார்.

'காதா சப்த சதி' என்னும் தலைப்பில் பன்மொழிப்புலவர் மு.கு. செகன்னாதராசா மொழிபெயர்த்துள்ள நூல் சிறப்பானதாகும். இவர் 'காதா சப்த சதி'யில் அமைந்துள்ள எழுநூறு பாடல்களுள் ஐந்நூற்றை மட்டும் எடுத்து மொழிபெயர்த்துள்ளார். 'காதா' பாடல்கள் போலவே இவருடைய பாடல்களும் நான்கடிகளைக் கொன்டு அமைந்துள்ளன. சங்க அகத்திணைப் பாடல் நெறியில் கூற்றுக்குரியோர் குறிப்பு சிற்சில இடங்களில் உள; துறைக்குறிப்பும் காணப்பெறுகின்றன. சில இடங்களில் சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களை

இவர் எடுத்துக்காட்டாகத் தந்திருப்பது ஒப்பியல் ஆய்வுக்கு மட்டுமன்றி, ஒத்த பண்பாட்டு ஒருமை உணர்வு பெறுதற்கும் துணை செய்ய வல்லன.

பொன்.செள.

**காந்தபுராணம்:** பதினெண்வகை மகா புராணங்களுள் ஒன்றான காந்தபுராணம் மிகப் பெரிது. மற்றைய மகாபுராணங்களைப் போன்று இதையும் வியாசர் எழுதியதாகக் கூறுவர். சிவபெருமானின் அருமைப்புதல்வரான கந்தனின் பெயரால் இது வழங்கப்படுவதால் இதைச் சிவமதத்தைச் சார்ந்த புராணமாகக் கருதுவர். இதில் 81,100 சுலோகங்களும், ஆறு சங்கிதைகளும், 50 கண்டங்களும் உள்ளன.

சிவபெருமான் பெருமை பற்றிய பல கதைகளும், குறிப்பாக அந்தகன் என்ற அரக்கனுடன் அவர் போர் புரிந்த கதையும் இதில் இடம் பெறுகின்றன. சில பகுதிகள் பல்வகை நரகங்களையும், இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையையும், சீர்கேட்டையும் வருணிக்கின்றன. விரிவாகச் சிவ வழிபாட்டு நெறிகளை வருணிப்பதோடு, மும்மூர்த்திகளின் அருமை பெருமைகளை வருணிக்கும் கதைகளையும் கொண்டுள்ளது இப்புராணம். அதனடிப்படையில் சிவ வழிபாட்டிற்குகந்த திருத்தலங்களையும், அவற்றின் பெயர்ப் பொருத்தத்தையும், அடியார்க்கு அருள் பாலிக்க அத்திருத்தலங்களில் அமர்ந்திருக்கும் சிவமூர்த்தங்களின் பெருமைகளையும், வருணிப்பது இப்புராணத்தின் தனிச்சிறப்பு. ஆனால்,புராணங்களின் இலக்கணப்படி, சர்கம் (ஆக்கல்), பிரதிசர்கம் (அழிந்ததைப் பின்னும் புதிப்பித்து ஆக்கல்), சூரிய சந்திர வமிசங்களைத் தொடர்ந்து வருணித்தல், மன்வந்தரம் என்ற கால அளவைக் கூறுதல், வம்சானுசரிதம் என்ற பிந்திய அரச வமிசங்களைக் கூறுதல் ஆகியவை பெரும்பாலும் இங்குக் காணலரிது.

முன்கூறியபடி 1. சனத் குமாரீயசங்கிதை, 2. சூதசங்கிதை, 3. பிராம்மீசங்கிதை, 4. வைணவீசங்கிதை, 5. சாங்கரீசங்கிதை, 6. செளரீசங்கிதை என்ற அறுவகைச் சங்கிதைகளுக்குள் சூதசங்கிதை மிகப் பெரிது. உள்ளடக்கப் பொருள் பற்றியும் அச்சங்கிதை சீரியது எனக் கருதப்படுகிறது.அது நான்கு கண்டங்களைக் கொண்டது. முதற்கண்டம் முழுதும் சிவ வழிபாட்டை வலியுறுத்திக் கூறுகிறது. ஞான யோக கண்டம் என்ற இரண்டாம் கண்டம் யோகத்தைப் பற்றி மட்டுமன்றி, நான்கு வருணத்தாரின் மாணவ நிலை, இல்லற வாழ்க்கை,தனித்த பற்றற்ற வாழ்க்கை, துறவு வாழ்க்கை ஆகிய வற்றையும் விளக்குகிறது. மூன்றாம் கண்டம் முத்திப் பேறு பெற வழிகளைக் குறிப்பிட்டுக் கூறுகிறது. நான்காம் கண்டம், பொதுவாக வைதிகச் சடங்குகளையும், தியானயோகம், ஞானயோகம், சிவபக்தி ஆகிய வற்றையும் சிறப்பித்துக் கூறுகிறது. அதன் இரண்டாம் பகுதியில் சிவபெருமானின் பெருமையை விளக்கும் பிரம்ம கீதையும், பொது வேதாந்தக் கருத்தை உள்ளடக்கிய சூத கீதையும் உள்ளன.

சனத்குமார சங்கிதையில் சிவபெருமான் பற்றிய கதைகளும், வாரணாசி என்ற காசியும், அதையடுத்த சிவத்தலங்களும் வருணிக்கப்படுகின்றன. சிரீவெங்கடேச மாகாத்மியமும், இருசியசிருங்கரின் வரலாறும் இதன் பகுதிகளாகும்.

யாஞ்ஞவல்கியருக்குச் சூரியன் அருளியதான செளரசங்கிதை இவ்வுலகப் படைப்பின் முறைகளை எடுத்துக் கூறுகிறது. சங்கர சங்கிதை, அகத்திய சங்கிதை எனவும் பெயர்பெறுகிறது. ஏனெனில்,அது கந்தப் பெருமானால் அகத்திய முனிவருக்கு அருளப்பட்டதாகும். விட்டுணுவின் அவதாரங்களுள் ஒன்றான இராமபிரானது பெருமைகளையும், அவர் வழிபாட்டு நெறிகளையும் கூறும் அகத்திய சங்கிதை இதனினும் வேறானதா வேறானது அன்றா என்று துணிய இயலவில்லை.

காசிக் கண்டத்தில் கங்கா சகசரநாமம் என்ற கங்கையாற்றைப் போற்றிப்பாடும் ஆயிரம் அரிய போற்றிப் பெயர்களைக் கொண்ட தோத்திரம் இந்தச் சங்கர சங்கிதையிற்படும். இச்சங்கர சங்கிதையைச் கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணம் என்ற பெயரில் தமிழில் ஆக்கித் தந்துள்ளார்.

பொது அறிவுக்கு எட்டிய அனைத்துச் செய்திகளும் இவ்வரிய புராணம் தன்னகத்தே கொண்டுள்ளதால் இது 'அறிவுக் கலைக் களஞ்சியம்' என வழங்கும் தகுதியுடையது. மாதவாசாரியார் என்பார் இப்புாரணத்தின் பகுதியான சூதசங்கிதைக்கு வடமொழியில் ஓர் உரை எழுதியுள்ளார். அதன் பெயர் 'தாத்பர்ய தீபிகை' என்பதாகும். எஸ்.சீ.

**காந்தருவதத்தை** திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணியில் இடம் பெற்றுள்ள கதை மாந்தர்களுள் ஒருத்தி. இவள் அக்காப்பியத் தலைவனான சீவகன் மனைவியருள் ஒருத்தியுமாவாள். இசையில் மிக்க வல்லவளாக விளங்கிய இவளைச் சீவகன் மணந்துகொண்ட வரலாறு காந்தருவதத்தையார் இலம்பகத்தில் பேசப்படுகிறது. இவள் வெள்ளிமலையிலுள்ள வித்தியாதர மன்னன் கலுழவேகன் என்பானுக்கு மகளாவாள். அழகும் இசைத்திறனும்

மிகப்பெற்ற இவளைச் 'செந்தாமரைமேல் திரு ஒப்பாள்' என்று திருத்தக்கதேவர் குறிப்பிட்டுள்ளார்.

கலுழவேகன் தன் மகள் காந்தருவதத்தைக்கு இராசமாபுரத்தில் மணம் நிகழும் என்பதனைச் சோதிடரால் அறிந்திருந்தான். வெளிநாட்டில் வணிகம் செய்து பொருளீட்டி இராசமாபுரத்திற்குத் திரும்பும் சிரீதத்தன் என்பானைத் தன்பால் அழைத்து வரும்படி கலுழவேகன் தரன் என்பவனை அனுப்ப, அவன் தன் திறமையால் கலம் கவிழ்ந்தது போன்ற மாயம் புரிந்து, சிரீதத்தனை அழைத்து வந்தான். அவனை உபசரித்துப் பன்மணிகள் நல்கித் தன் மகள் காந்தருவதத்தையையும் அளித்து, அவளை இராசமாபுரத்தில் யாழிசைப் போட்டியில் வெல்பவனுக்கு மண முடிக்குமாறு வேண்டி அனுப்பி வைத்தான்.

சிரீதத்தன், காந்தருவதத்தையை இராசமாபுரத்தே, கன்னிமாடத்தில் இருத்தி, ஆட்சியை மேற்கொண்டிருந்த கட்டியங்காரனுக்குத் தெரிவித்து யாழ்ப் போருக்கு ஏற்பாடுகள் செய்தான். அரசர்களும் மற்றவர்களும் அப்போரில் தோற்ற பின்னர், சீவகன் அதிற் கலந்துகொண்டு, யாழிசைப் போரில் வென்று காந்தருவதத்தையால் மாலை சூட்டப்பெற்றான். அதனால், பொறாமையுற்ற கட்டியங்காரன் சீவகனை வெல்வோன் காந்தருவதத்தையை மணத்தற்குரியன் என்று கூறினான். அதுகேட்ட மன்னர்கள் ஒருங்கு திரண்டு சீவகனோடு போர் புரிந்து தோல்வியுற்றனர். வென்ற சீவகன் காந்தருவதத்தையைத் தன் மனைக்கு அழைத்துச் சென்று விதிப்படி மணம் புரிந்து இன்புற்றான். அ.மா.ப.

**காந்தளூர்ச் சாலை:** முதலாம் இராசராச சோழனின் கல்வெட்டுகளின் மெய்க்கீர்த்திப் பகுதியில் 'காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளி' என்ற தொடர் இடம் பெறுகிறது. இம் மன்னனது வெற்றிகளில் முதன்மையானதாகக் கருதப்படுவது இது. இராசராசன் தவிர அவனது மகன் முதலாம் இராசேந்திரன், பெயரன் இராசாதிராசன், முதலாம் குலோத்துங்கன், பாண்டியர் மரபில் சடாவர்மன் பராந்தக பாண்டியன் ஆகியவர்களும் காந்தளூர்ச் சாலைக் கலமறுத்த செய்தியைத் தங்கள் வெற்றியாகக் கூறிக் கொள்கின்றனர். விக்கிரம சோழன் உலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், கலிங்கத்துப் பரணி முதலிய சோழர் காலத் தமிழ் இலக்கியங்களிலும் இச் செய்தி குறிப்பிடப்படுகிறது.

காந்தளூர் இன்றைய திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியான வலியசாலையே என்பது பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்து. முதலில் இவ்வூரில் இராசராசன் மணிமண்டபம் ஒன்றை எழுப்பினான் என்று கருதினர். பின்னர் இவன் காந்தளூரில் ஒரு கலத்தைத் துண்டாக்கிய செய்திதான் 'கலமறுத்தல்' எனப்பட்டது என்று கருதப்பட்டது. மேலும் காந்தளூர்த் துறைமுகத்தில் கப்பல்களை அழித்த செய்தியையே இது குறிக்கும் எனவும் கொண்டனர். திரு. கோபிநாதராவ் என்பவர் காந்தளூர், அறச்சாலையில் சோறு அட்டுவதை அரசன் நிறுத்திய செய்தியே இது என்றும் கூறினார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை காந்தளூர்ச் சாலையில் அரசன் உணவு அளிக்க வேண்டிய முறையை நிருணயித்துத் திட்டம் செய்தான் என்பதே இதன் பொருள் எனக் கருதினார். காந்தளூர்ச் சாலை என்பது ஒரு கல்விச் சாலையே என்பது பார்த்திவ சேகரபுரம் செப்பேடு மூலம் துணியப்படும். பார்த்திவ சேகரபுரம் செப்பேடு ஆய்குல மன்னன் கருநந் தடக்கன் என்பான் காந்தளூரில் உள்ள சாலையை முன் மாதிரியாகக் கொண்டு பார்த்திவ சேகரபுரத்தில் ஒரு சாலையை நிறுவினான் என்றும் கூறுகிறது. இதன் காலம் கி.பி. 868 ஆகும்.

இச் செப்பேட்டு வாசகங்களிலிருந்து பார்த்திவ சேகரபுரம் சாலையும் அதற்கு முன்மாதிரியான காந்தளூர்ச் சாலையும் ஒருவகையான பாடசாலை என்பது தெளிவாகிறது. மாணவர்களும் ஆசிரியர்களும் அவ்விடத்திலேயே தங்கி, உணவு அருந்திக் கற்றிருக்கிறார்கள். இன்றைய அரசு அதிகாரிகள் கல்லூரி அல்லது நிருவாகப் பயிற்சி நிலையத்தை ஒத்தது அன்றைய காந்தளூர்ச் சாலை எனலாம். திருவனந்தபுரத்தின் பழம் பெருமை பேசும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மலையாள நூலான அனந்த வர்ணனம், அனந்தபுரத்தின் ஒரு பகுதியான காந்தளூரில் வேதங்களில் புலமை பெற்றவர்களின் பாடசாலை இருந்தது என்றும், அவர்கள் படைக்கலப் பயிற்சியிலும் திறமை வாய்ந்தவர்களாக இருந்தனர் என்றும் கூறுகிறது.

'கலமறுத்த' என்னும் சொல்லுக்கும் மாறுபட்ட பொருள்கள் கொள்ளப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டம் கோயில் தேவராயன் பேட்டைக் கல்வெட்டு ஒன்றில் 'கலமறுத்த' என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது. இங்குக் 'கலமறுத்த' என்னும் சொல்லுக்குச் 'சாசனத்தால் அல்லது ஓலையால் நிருணயிக்கப்பட்ட' என்று பொருள் கொள்ள வேண்டும் என்பார் டி. என். சுப்பிரமணியம்.

வேறு சிலர் 'கலமறுத்த' என்பதில் உள்ள 'கலம்' என்னும் சொல்லுக்கு உண்கலம் எனப்

பொருள் கொண்டனர். இதனைக் 'கலம்' என்னும் முகத்தலளவையாகக் கொள்ள வேண்டும் என்பார் நடன காசிநாதன். இதனால் காந்தளூர்ச் சாலை என்னும் பள்ளிக்கு இத்தனை கலம் நெல் வழங்கப் பட்டது என்றும், அதில் ஆசிரியர்க்கும் மாணவர்க் கும் இத்தனை கலம் என வரையறுக்கப்பட்டது என்றும் கொள்ளலாம்.

திருச்சி மாவட்டம் காமரசவல்லியில் கிடைத்த இராசராசன் கல்வெட்டில் 'கலமறுத்த' என்னும் சொல் ஆளப்பட்ட விதத்தைச் சுட்டிக்காட்டிக் கல மறுத்த என்னும் சொல்லுக்குப் 'பிழைநீக்கி ஓதிய, எனப் பொருள் கூறுகிறார் நடன. காசிநாதன்.

மேலே சொல்லியவற்றால் காந்தளூர்ச் சாலை என்பது வேதம், போர்ப்பயிற்சி, அரசியல் ஆகியவை கற்பிக்கப்பட்ட தன்னாட்சி பெற்ற ஒரு கல்விச் சாலை என்பது புலனாகும். இராசராசன் தன் ஆட்சி யின் தொடக்கத்திலேயே சோழநாட்டு எல்லையை விரிவாக்க எண்ணினான். தொடக்கம் முதல் அரச னுக்கும் கேரளத்துக்காந்தளூர்ச் சாலை நிருவாகி களுக்கும் மனவேறுபாடுகள் இருந்தன. கன்னியா குமரிப் பகுதியில் இருந்த சிரீ வல்லபபெருஞ்சாலை என்பதை வசப்படுத்திச் சிரீ வல்லபபெருஞ்சாலை யான இராசராசப் பெருஞ்சாலை எனத் தன்பெயர் சூட்டினான். அதுபோலவே காந்தளூர்ச் சாலையை யும் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர விரும்பி னான். ஆனால், தன்னாட்சி பெற்ற அச்சாலை அடங்க மறுத்தது. எனவே தன் படை வலிமையால் அதனைத் தன் கட்டுக்குள் கொணர்ந்தான். அங்கு அரசியலை நன்கு அறிந்த பண்டிதர்களையும் தன் நிருவாகத்திற்குப் பயன்படுத்திக் கொண்டான். அது போலவே அவனுக்குப் பின்வந்த மன்னர்களும் சாலையைத் தங்களது கட்டுக்குள் வைத்துக் கொண்டு திறமை பெற்றவர்களை நிருவாகத்திற் கும் பயன்படுத்திக் கொண்டனர். சொ.சா.

**காந்தாரக் கலை** இந்தியக் கலையும் கிரேக் கக் கலையும் இணைந்த கலை. இக்கலை காந்தாரப் பகுதியில் கி. மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரை உச்ச நிலையில் பரவியது. எனவே, அது காந்தாரக் கலை எனப் பெயர் பெற்றது. மகா அலெக்சாந்தரின் மறைவிற் குப் பின் அவர் வென்ற இந்தியப் பகுதிகளை அவர் தம் படைத் தலைவர்கள் ஆண்டு வந்தனர். அவர் ளின் காலத்தில் சிந்துப் பகுதியில் கிரேக்கர்களின் கலை, பண்பாடு ஆகியவை இந்தியக் கலை,பண்பாடு ஆகியவற்றுடன் இரண்டறக் கலந்தது. குசாணர் களின் காலத்தில் குறிப்பாகக் கனிசுகரின் காலத்தில் பௌத்த மதம் ஈனயானம், மகாயானம் என இரு பிரிவுகளாகப் பிரிந்தது. மகாயானப் பிரிவினர் புத்த ரைக் கடவுளாக வழிபடத் தொடங்கினர். எனவே, புத்தரின் உருவச்சிலைகள் கிரேக்கக் கடவுளர்களின் சிலைகள் போன்று வடிவம் கொடுக்கப்பட்டன. கனிசுகரின் காலமே காந்தாரக் கலையின் பெரு வளர்ச்சிக் காலமாகத் திகழ்ந்தது. காந்தாரக் கலை பாக்டிரியர்கள், கிரேக்கர்கள், பார்த்தியர்கள், குசா ணர்கள் போன்றோரின் பேராதரவால் வளர்ச்சி யடைந்த கலையாக ஆயிற்று. காந்தாரக் கலைச் சிற்பங்கள் இன்றைய ஆப்கானிசுத்தானத்திலுள்ள சலலாபாது (Jalalabad) அட்டா (Hadda) பாமியன் (Bamiyan) போன்ற பகுதிகளிலும் சுவாத்துச் (Swat) சமவெளிப் பகுதியிலும் பெசாவர் மாவட்டத்திலும் காணப்பட்டன. இக்கலைச் சிற்பங்கள் யாவும் கருங் கல்லால் வடிக்கப்பட்டவை; மரங்களோ சுதைப் பூச்சு களோ உலோகங்களோ பயன்படுத்தப்படவில்லை. காந்தாரக் கலைச் சிற்பங்கள் பொதுவாகப் பௌத்த சமயத் தொடர்புடையவையாக விளங்கின. சமணக் கடவுள்களின் சிற்பங்களோ இந்துக் கடவுள்களின் சிற்பங்களோ இக்கலையில் இடம்பெறவில்லை.



காந்தாரக் கலைச் சிற்பம்

இச் சிற்பங்கள் யாவும் கிரேக்கக் கடவுளர்களின் சிற்பங்கள் போன்று காணப்பட்டன. புத்தரின் தலை முடி சுருள் சுருளாகச் செதுக்கப்பட்டது. சிற்பங் களில் ஆடைகள் பல மடிப்புகளைக் கொண்டு வெண்மையாக உள்ளன போன்று காட்டப்பட்டுள் ளன. நிமிர்ந்த நிலையில் புத்தரின் உருவம் செதுக்

கப்பட்டது. அப்போலோவின் உருவம் போன்று புத்தரின் உருவம் சிறு மாற்றங்களுடன் வடிவமைக்கப்பட்டது. சில புத்தச் சிற்பங்களில் புத்தர் தலைப்பாகையுடன் காணப்படுகிறார். காந்தாரக் கலைச் சிற்பங்களில் புத்தர் மிக இளமையான தோற்றத்துடன் காட்சி தருவது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். பெசாவர் அருங்காட்சியகத்திலுள்ள மாயாதேவி, அரிதி, இளவரசர் சித்தார்த்தர் பள்ளிக்குச் செல்லல் போன்ற சிற்பங்கள் இக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். காந்தாரக் கலைச் சிற்பங்களின் கண்கள் நன்றாகத் திறந்த நிலையில் வடிக்கப்பட்டன. ஆனால், இந்தியச் சிற்பங்கள் தியான நிலை போன்று பாதி மூடிய நிலையில் காணப்படுகின்றன. காந்தாரக் கலைச் சிற்பங்களில் தெய்விக இயல்பு காணப்படவில்லை. சு.இரா.

**காந்தாரம்**: தொன்மைமிகு இந்தியாவின் பதினாறு சனபதங்களுள் ஒன்று. காந்தாரம் இன்றைய வடக்குப் பாகிசுத்தானின் பெசாவர், இராவல் பிண்டி ஆகிய மாவட்டங்களைக் கொண்டு விளங்கியது. காந்தாரத்தின் வழியாக இந்திய வணிகர்கள் நடு ஆசியா, மேற்காசியா போன்ற நாடுகளுடன் வாணிகத் தொடர்பைக் கொண்டிருந்தனர். பல நாட்டு வணிகர்கள் அறிஞர்கள் கூடுகின்ற பகுதியாக இது விளங்கியது. காந்தாரம் கலைகளின் பிறப்பிடமாகவும் அக்காலத்தில் விளங்கியது. இருக்கு வேதத்தில் காந்தாரம் குறித்த செய்திகள் உள்ளன. புத்த சமய நூல்களில் காந்தாரத்தின் தலைநகரமான தட்சசீலம் ஒரு சிறந்த கல்வி நகரமாக விளங்கியமை கூறப்பட்டுள்ளது. பாரசீகர்கள் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் காந்தாரத்தைக் கைப்பற்றித் தங்களின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தனர். மகா அலெக்சாந்தர் வட இந்தியாவின் மீது படையெடுத்தபொழுது தட்சசீலத்தை அம்பி என்பவர் ஆண்டுவந்தார். காந்தாரம் மௌரியப் பேரரசர் அசோகர் காலத்தில் அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியாக விளங்கியது. அசோகரின் கல்வெட்டு இப்பகுதியில் சபாசுகார்க்கி (Shahbazgarhi) என்ற இடத்தில் உள்ளது. பௌத்த மதத்துடன் இப்பகுதி மிகுந்த தொடர்பு கொண்டு விளங்கியது. இப்பகுதியை அசோகருக்குப் பின் கிரேக்கர், சித்தியர், பார்த்தியர், குசாணர் போன்றோர் ஆட்சி செய்து வந்தனர். காந்தாரம், காசுமீரம், காம்போசம் (Kamboja) ஆகிய அண்டைப் பகுதிகளுடனும் தொடர்பு கொண்டு விளங்கியது. காந்தாரப் பகுதியைப் பின்னர் வந்த முசுலிம்களும் மொகலாயர்களும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தனர். காந்தாரம் கி.பி. 1849-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் வசமாயிற்று. அது முதல் காந்தாரம் (பெசாவர்ப் பகுதி) இந்தியாவின் எல்லைப் பகுதியாக மாறியது. சு.இரா.

**காந்தாரி**: மகாபாரதத்தில் வரும் கதைமாந்தருள் ஒருத்தி காந்தாரி. காந்தார நாட்டு அரசனாகிய சுவேதமகாராசன் என்னும் சுபலனின் மகளாகிய இவள் வசுமதி என்னும் தேவதையின் அமிசமாகப் பிறந்தவள். இவள், திருதராட்டிரனை மணந்தாள். திருதராட்டிரன் குருடனான காரணத்தால், உலகக் காட்சிகளைத் தான் கண்டு மகிழ விரும்பாமல், தன் கண்களைப் பொன்தகட்டினால் மூடிக் கட்டிக் கொண்டாள். காந்தாரி கற்பிற் சிறந்தவள். பாண்டவர்களின் தாயாகிய குந்திதேவியின் மீது பொறாமை கொண்டு, கருவுற்றிருந்த தன் வயிற்றில் குழவிக் கல்லால் இடித்துக்கொள்ள, அது கலங்கி வெளிவர, வியாசமுனிவரின் பேரருளால் அவற்றை நூற்றொரு குடங்களில் வைத்திருந்து, பின்னர்த் துரியோதனாதியர் நூற்றுவரையும், துச்சலை என்ற பெண்ணையும் பெற்றாள்.

பாரதப் போரில் துரியோதனாதியர் மாண்டனர். படுகளம் காணவந்த இவள், அது கண்டு, 'தன் வமிசமே அழியக் கண்ணபிரான்தான் காரணம் என்று எண்ணி, 'என் வமிசத்தை அழித்த உன் வமிசமும் அழியக் கடவது' எனச் சாபமிட்டாள். வீ.சொ.

**காந்தி ஆசிரமம்** சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு என்னும் ஊரில் அமைந்துள்ளது. அண்ணல் காந்தியடிகளின் புதிய இந்தியாவை உருவாக்கும் திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்கிலும், தமிழக மக்களிடையே காந்தியக் கொள்கைகளைப் பரப்பும் நோக்கிலும் 1925 பிப்பிரவரி 6-ஆம் நாள் சி.இராசகோபாலாச்சாரியாரால் உருவாக்கப்பட்டது. அன்பு வழி, அறநெறி, தூய, எளிய கூட்டுவாழ்வு ஆகிய வாழ்க்கை முறைகளை மக்கள் உணர்ந்து செயற்பட ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ உருவான நிறுவனங்களுள் இதுவும் ஒன்று. இதன் உறுப்பினர்கள் காந்தியக் கோட்பாடுகளை ஏற்று வாழ்வதுடன் அத்தூய நெறிகளைப் பரப்பும் முயற்சியிலும் ஈடுபட்டனர். மது அருந்துதலைத் தடுத்தல், தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், வேளாண்மைப் பொருளாதார மேம்பாடு ஆகிய அடிப்படை நோக்குகளுடன் இது இயங்கிவருகிறது. இது சிறுதொழில் மேம்பாட்டிற்கான வழிகளில் உற்பத்தித் திறனைப் பெருக்கித் தனிப்பட்டோர், உழைப்பின் மேன்மையை உணர்ந்து மேம்படவேண்டுமெனச் செயலாற்றுகிறது. இது ஊரக மக்களுடன் தொடர்பு

கொண்டு நெறிப்படுத்தப்பட்ட வாழ்க்கையை மக்கள் மேற்கொள்ளுமாறு செய்யப் பாடுபட்டு வருகிறது.
மா.கா.

***காந்தி-இர்வின் உடன்படிக்கை***: இந்திய விடுதலை இயக்கத்தின் முக்கியமான ஒரு கட்டத்தில் காங்கிரசு இயக்கத்தில் மிகவும் செல்வாக்குடன் விளங்கிய காந்தியடிகளும் பிரிட்டிசு இந்தியாவின் தலைமை ஆளுநராக (Governor General) விளங்கிய இர்வின் பிரபுவும் 17.2.1931-இல் செய்து கொண்ட உடன்பாடு காந்தி-இர்வின் உடன்படிக்கை ஆகும்.

**பின்னணி**: முதல் உலகப்போருக்குப்பின் இந்தியர்களின் வேண்டுதலின்பேரில் ஆங்கில ஆட்சியாளர்கள் இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சி வழங்க முன் வந்தனர். பெயரளவு பொறுப்பாட்சியை 1917-இல் அறிவித்து 1919-இல் சட்டமாகிய மாண்டுபோர்டு சட்டத்தால் இந்தியர்களுக்காக மாற்றிவைத்தனர். இதன் செயற்பாட்டைப் பத்தாண்டுகளுக்குப் பின் ஆங்கிலக்குழு வந்து மதிப்பிடும் என்றும், இந்தியர்களுக்கான அடுத்த கட்ட உரிமை தன்னாட்சித் தகுதி (Dominion) என்றும் 1917-இல் அறிவித்தனர்.

பொறுப்பாட்சி வெறும் கண்துடைப்பு என்று காங்கிரசார் மாண்டுபோர்டு சட்டம் வழங்கிய பொறுப்பாட்சித் திட்டத்தை எதிர்த்தனர். திட்டத்தை ஏற்றுக் கொண்ட நீதிக் கட்சியினர் பதவியில் அமர்ந்தனர்.

சைமன் தூதுக் குழு 1927-இல் பொறுப்பாட்சியை மதிப்பிட வந்தது. இதைக் காங்கிரசார் போராட்ட வடிவில் எதிர்த்தனர். இந்தியர்கள் பொறுப்பாட்சிக்குத் தயாராக இயலாதவர்கள் என்ற பொதுக் கருத்து ஆங்கிலேயர் வட்டாரங்களில் வளர்க்கப்பட்டிருந்தது. காங்கிரசார், இவற்றுக்கு அறைகூவலாக மோதிலால் நேருவின் தலைமையில் அனைத்துக் கட்சிக் குழுவை உருவாக்கி உண்மையான பொறுப்பாட்சிக்கு ஓர் அரசியல் அமைப்பை 1928 இல் உருவாக்கினர். அது நேரு (மோதிலால்) அறிக்கை எனப்படுகிறது. இந்த அரசியலமைப்புத் தன்னாட்சித்தகுதி (பிரிட்டனின் பேரரசுக்குட்பட்ட) சுயாட்சி ஏற்பட வழிவகுத்தது. காங்கிரசாரில் இளம் தலைமுறையினர் இத் தகுதியை எதிர்த்து முழுவிடுதலையை விரும்பினர். ஆயினும் காந்தியடிகளின் நடுநிலைமை முயற்சியால் 1928 திசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் நேரு அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதைத் தலைமை ஆளுநருக்கும் காந்தியடிகள் தெரியப்படுத்தினார்.

ஆனால், தலைமை ஆளுநர் இர்வின் பிரபு 1929-இல் இங்கிலாந்து சென்றுவிட்டுத் திரும்பிவந்து இந்தியத் தலைவர்களின் மாநாடு கூட்டிய பின்னரே தன்னாட்சித் தகுதி என்று காலம் அறிவிக்காது திட்டவட்டமாகக்கூறிவிட்டார். இந்தியர்களுக்கு இத் தகுதி வழங்கல் முறையற்றது என்று இங்கிலாந்தின் மரபு வழிக் கட்சித் (Conservative) தலைவர் சர்ச்சில் எதிர்குரல் எழுப்பினார்.

காங்கிரசார் ஆங்கிலேயர் நிலையில் ஐயங்கொண்டு தங்களது நிலையை மாற்றிக் கொண்டு முழுச் சுதந்திரம் என்ற முடிவுக்கு 1929-இல் வந்ததுடன் சட்டமறுப்பு இயக்கத்திலும்இறங்கினர்; சிறை புகுந்தனர். இந்தியச் சிக்கலுக்குத் தீர்வுகாண ஆங்கில அரசாங்கம் இலண்டனில் இந்தியத் தலைவர்கள் அடங்கிய வட்டமேசை மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தது. காங்கிரசு அதை ஏற்கவில்லை. காங்கிரசார் 1930-இல் இலண்டனில் நடைபெற்ற முதல் வட்டமேசை மாநாட்டைப் புறக்கணித்ததால் இந்தியாவின் சிக்கலுக்குத் தீர்வுகாணுவதில் தடை ஏற்பட்டது. எனவே, உடன்பாடு காணக் காந்தி-இர்வின் உடன்படிக்கை நடைபெற்றது.

**நிபந்தனைகள்**: அனைத்து அரசியல் கைதிகளும் உடனே விடுவிக்கப்பட வேண்டும்; மதுக்கடைகள், கஞ்சாக்கடைகள், வெளிநாட்டுத் துணிக்கடைகள் முன் அமைதியான முறையில் மறியல் செய்வதை அரசு தடுக்கக் கூடாது; அவ்வாறு செய்யின் சட்ட மறுப்பு இயக்கத்தைக் காங்கிரசு உடனடியாகக் கைவிடும்; காங்கிரசு இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ளும்; காவலர்களின் அத்துமீறிய தாக்குதல்களுக்குக் காங்கிரசு விசாரணை வேண்டாதிருத்தலும்; அரசு வெளிப்படுத்திய தனி அடக்குமுறைச் சட்டத்தைக் கைவிடுதலுடன் உப்புச் சட்ட விதிகளைத் தளர்த்துதலும் இவ்வுடன்பாட்டின் முக்கிய கூறுபாடுகளாகும். வே.தி.செ.

**துணை நூல்கள்**:

**Keswani, K.B.** History of Modern India 1800-1984, Delhi, 1975.

**Low. D.A.,** (Ed) Congress and the Raj, New Delhi, 1977.

***காந்திகிராம ஊரக நிறுவனம்*** 'கிராமம் உயரநாடு உயரும்' என்னும் உயர்குறிக்கோளின் அடிப்

படையில் தமிழ்நாட்டில்அண்ணாமாவட்டத்திலுள்ள காந்திராமம் என்னும் சிற்றூரில் ஊரக உயர்கல்வி (Rural Higher Education) வளர்ச்சிக்காக இயங்கி வருகிறது. இந்நிறுவனம் 250 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுமலை அடிவாரத்தில், திண்டுக்கல் நகரின் தெற்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காந்திகிராம ஊரக நிறுவனம் (Gandhigram Rural Institute) 1956-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இந்நிறுவனம் இருபது ஆண்டுகள் ஊரக உயர் கல்வியில் ஆற்றிய தொண்டுக்காகப் பல்கலைக்கழகப் பணவுதவி ஆணையத்தின் (University Grants Commission) 1956–ஆம் ஆண்டுச் சட்டப்பிரிவின்படி, பல் கலைக்கழகத் தகுதியினை (Deemed University) 1976-ஆம் ஆண்டில் பெற்றது. தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 11 பல்கலைக்கழகங்களுள் (1986), காந்தி கிராம ஊரக நிறுவனம், தமிழ்நாட்டின் ஐந்தாம் பல்கலைக்கழகமாகத் தோன்றியது. அண்ணல் காந்தியடிகள் கண்ட கிராமச் சீரமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட காந்திகிராம ஊரக நிறுவனத்தில் ஏட்டுக் கல்வியுடன் உடல் உழைப்பின் இன்றியமையாமை, உடல் உழைப்பின் மூலம் பொருள்களை உற்பத்தி செய்தல், ஊரகச் சூழல், அச்சூழ் நிலையைப் பயன்படுத்தி வாழும் முறை, ஊரகப்புறச் சமூக-பொருளாதாரச் சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் அணுகுமுறை, கிராம வருக்கப் போராட்டம் ஆகிய பல முக்கிய செய்திகள் அடங்கிய பாடத் திட்டங்கள் மூலம் கல்வி புகட்டப்படுகிறது.

இந்நிறுவனம் கிராம மேம்பாட்டிற்காகவும் வளர்ச்சிக்காகவும் சீரமைப்புத் திட்டங்களைக் கிராமங்களில் செயற்படுத்தித் தொண்டாற்றி வருகிறது. இந்நிறுவனத்தின் மாணவர்களும் ஆசிரியர்களும் எப்பொழுதும் கிராமச் சூழ்நிலையினையும் அதன் சிக்கல்களையும் தங்கள் இடைவிடாத தொடர்பினால் ஆழமாக உணர்ந்துள்ளதுடன், அவற்றை அறிவியல் அடிப்படையில் தீர்ப்பதற்கு வேண்டிய பல முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர். இந்நிறுவனம் முப்பது கிராமங்களைத் தன் சேவைக் கிராமமாக (Service Villages)எடுத்துக் கொண்டுள்ளது. இக்கிராமங்களில் மக்கள் உடல்நலம், கல்வி, சுற்றுப்புறத் தூய்மை,முதியோர் கல்வி, பெண்கள் விழிப்புணர்ச்சி, பெண்கள் பொருளாதார முன்னேற்றம், வறுமை ஒழிப்பு, குடிப்பழக்கம் ஒழிப்பு, குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைப்பு போன்றவற்றிற்காகப் பலவிதமான திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

சாதி, சமயம், உயர்ந்தோர்-தாழ்ந்தோர் இல்லாதசமுதாயத்தை ஏற்படுத்தவும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியை ஏற்படுத்தவும் தேவையான கல்வியையும் பயிற்சியினையும் இளம் தலைமுறைக்கு அளித்தல், கிராம முன்னேற்றத்திற்குத் தேவையானவற்றிற்கான ஆய்வுகளை நடத்தி அவ்வாய்வுகளின் மூலம் மெய்ச் செய்திகளைத் திரட்டி, அச்செய்திகளைப் பரப்புதல், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சிக்கான விரிவாக்கச் செயல் திட்டம் அமைத்தல் போன்றவற்றிற்கு மையமாக விளங்குவது காந்திகிராம ஊரக நிறுவனம் ஆகும். ஆராய்ச்சி விரிவாக்க மையம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மையம் ஆகிய மையங்கள் இந்நிறுவனத்தில் உள்ளன. இவை தவிர, தமிழ், இந்திய மொழிகள், கிராமியக்கலைப் புலம், ஆங்கில மற்றும் அயல்நாட்டு மொழிப்புலம், கிராமம் சார்ந்த சமூக அறிவியற் புலம், கிராமம் சார்ந்த அறிவியற் புலம், வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ச்சிப்புலம், கிராம உடல்நலம், சுற்றுப்புறச்சூழற் புலம் ஆகிய புலங்கள் உள்ளன.

காந்திகிராம ஊரக நிறுவனம் நுண்ணினத் திட்டம் (Micro–Planning), காந்தியச் சிந்தனை மற்றும் அமைதி அறிவியல் (Gandhian Thought and Peace Science) ஆகியவற்றில் ஓராண்டு எம்.பில். பட்டக் கல்வி தருகிறது. மேலும், இங்கு பட்ட மேற் படிப்பு (எ–டு: கிராம வளர்ச்சி, கிராமப் பொருளாதாரமும் விரிவாக்கக் கல்வியும், செயல் முறை ஆங்கிலம், தமிழ்–இந்திய இலக்கியங்கள் போன்ற பாடத் துறைகளில்), பட்டப்படிப்பு (எ–டு: கிராமத் தொழில்களும் அவற்றை வளர்த்தலும், கூட்டுறவு, கணிதம், மனையியல் போன்ற பாடத்துறைகளில்) ஆகியன முறையே ஈராண்டுகள், மூன்றாண்டுகள் கற்பிக்கப் படுகின்றன. வேளாண்மையில் பட்டப் படிப்பும் சுகாதார ஆய்வாளர் சான்றிதழ்ப் படிப்பும் வழங்கப்படுகின்றன.

காந்திகிராம ஊரக நிறுவனத்திற்குச் சில சிறப்புகள் உள்ளன. இங்குக் குருகுலப் பயிற்சிமுறை பழக்கத்தில் இருக்கின்றது. இதன்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் 5 மாணவர்கள் வரை ஓதுக்குவர். இந்த மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், நடைமுறை, வேறுகல்வி சார்ந்த சொந்தச் சிக்கல்கள் முதலியவற்றை ஆசிரியர்கள் கேட்டறிந்து வேண்டிய நேரங்களில் உதவுவர். இம்முறை ஆசிரியர்கள் மாணவர்கள்மீது தனிக்கவனம் செலுத்தவும் மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் வளரவும் உதவிசெய்கிறது.

மாணவர்களுக்காகக் கூட்டு-வழிபாடுகள் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் நடத்தப்படும். அப்போது பல்வேறு சமயக் கோட்பாட்டு உண்மைகள்

படித்து விளக்கம் கூறப்படும். இது மாணவர்களுக்குச் சமய வேறுபாடு பற்றிய எண்ணம் வளராது, ஒற்றுமையுடன் வாழ்வதற்குத் தரும் பயிற்சியாகும். இதில் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டும்.

மாணவர்கள் தங்கள் சமூகத்திற்கு உடல் உழைப்பு மூலம் சேவை செய்வது இன்றியமையாததாகும். அதன்படி மாணவர்கள் அனைவரும் ஆசிரியர்களுடன் சேர்ந்து சமூகப் பணியில் (Community Work) ஈடுபடுவர். அது அவர்கள் உடல் நலத்தைப் பேணுவதுடன் சேவை மனப்பான்மையினையும் வளர்க்கிறது.

இங்குத் தேசிய மாணவர் படைப் (N. C. C) பயிற்சி தரப்படுவதில்லை. ஆனால் அமைதி காக்கும் படைக்கான (Shanti Sena) பயிற்சி தரப்படுகிறது. இதில் நடைப்பழக்கம், நெருப்பணைத்தல், உடற் பயிற்சி, பாதுகாவல், முதலுதவி சிகிச்சைக்கான பயிற்சிகள் ஆகியன அடங்கும். இது மாணவர்களுக்குள் தற்கட்டுப்பாடு, அமைதியான முறையில் சிக்கலை அணுகுதல், நன்னடத்தையின் இன்றியமையாமை, இந்திய ஒற்றுமையிலும் மனிதகுல மேம்பாட்டிலும் அசைக்க முடியாத நம்பிக்கை போன்றவற்றை அவர்கள் உள்ளங்களில் வேரூன்றச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இங்கு முதியோர் கல்வி வளர்ச்சிக்காக முதியோர் கல்வி மையம் ஒன்று இயங்கி வருகிறது. முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் இந்த மையத்தின் கிளைகள் செயற்பட்டு வருகின்றன. எஸ்.கே.

**காந்தி கிராமம்** மதுரை மாநகருக்கு வடக்கே 60 கி.மீ. தொலைவில் அண்ணா மாவட்டத்திலுள்ள சிறு மலை அடிவாரத்தில், அம்பாத்துறை புகைவண்டி நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இது 1947-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் நாள் தொடங்கப்பட்டது. காந்தியடிகளின் சருவோதயத் திட்டத்தின் அடிப்படையில் கிராம மக்களின் நலன், முன்னேற்றம் போன்ற சீரமைப்புத் திட்டப்பணிகளை மேற்கொள்வதுடன், மக்களிடையே ஆதாரக் கல்வித் திட்டத்தின் பல சிறப்புகளை நிறைவேற்றுவதும் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

காந்தி கிராமம் (Gandhigram) எனக் கூறப்படும் இக்காந்திய மையம் பெண்களின் முன்னேற்றத்திற்கும் கல்விக்கும் முக்கிய இடமளித்து, பலவிதத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. இங்குக் கிராம மேம்பாட்டிற்காகவும் வளர்ச்சிக்காகவும் பலவிதமான சேவைத் திட்டங்களும் ஏட்டுக் கல்வியுடன் உடல் உழைப்பின் இன்றியமையாமை, உடல் உழைப்பின் மூலம் பொருள்களை உற்பத்தி செய்தல், ஊரகச் சூழல், அச்சூழ்நிலையைப் பயன்படுத்தி வாழும் முறை, ஊரகப் புறச் சமூகப் பொருளாதாரச் சிக்கல்கள், அவற்றைத் தீர்ப்பதற்குரிய அணுகுமுறை, கிராம வருக்கப் போராட்டம் ஆகிய பல முக்கிய தலைப்புகளைக் கொண்ட பாடத்திட்டங்களின் மூலம் கல்வியும் கற்பிக்கப்படுகின்றது.

இங்குக் கத்தூரிபா நிதி (Kasthuri Bai Fund) உதவியுடனான கிராம சேவிகா பள்ளியும் காந்தி கிராம ஆதாரப் பயிற்சிச் சாலையும் சேவிகாசிரமமும் கிராம வளர்ச்சித்திட்டமும் தொடக்க காலம் முதற்கொண்டு இயங்கி வருகின்றன. ஊரக உயர் கல்வி (Rural Higher Education) வளர்ச்சிக்காகக் காந்தி கிராம ஊரக நிறுவனம் (Gandhigram Rural Institute)என்றதொரு அமைப்பு 1956-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இவ்வமைப்பு ஊரக உயர்கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டிற்காகப் பல்கலைக் கழகப் பண உதவி ஆணையத்தின் (University Grants Commission) விதிப்படி, 1976-ஆம் ஆண்டு பல்கலைக் கழகத் தகுதியினைப் (Deemed University) பெற்றுப் பல்வேறு பணிகள் புரிந்து வருகிறது.

கிராம சேவிகா பள்ளியிலுள்ள பெண்கள் கிராமங்களுக்குச் சென்று மருத்துவம், அடிப்படை ஆதாரக் கல்வி ஆகியவற்றைக் கற்பிக்கின்றனர்; கிராமச் சுற்றுப்புற நலம், உடல் நலம், கதர் வளர்ச்சி, கிராமக் கைத்தொழில் வளர்ச்சி, முதியோர் கல்வி போன்றவற்றிற்கான பணிகளையும் செய்கின்றனர். குழந்தைகளுக்குக் கிராம சேவிகா பள்ளியின் மூலம் நூல் நூற்றல், தோட்டவேலை செய்தல் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. காந்தி கிராமத்தைச் சுற்றியுள்ள முப்பது கிராமங்களைச் சேவைக் கிராமங்களாக எடுத்துக் கொண்டு, காந்தி கிராம ஆதாரப் பயிற்சி சாலை மூலம் ஆதாரக் கல்வியைப் பரப்பும் நோக்குடன், இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சியும் இங்கு அளிக்கப்படுகிறது. சேவிகாசிரமம் மூலம் கல்வி அறிவில்லாத வயதான பெண்களுக்கு ஆதாரக்கல்வி அளிக்கப்படுகிறது.

வேளாண்மை, கால் நடை வளர்ச்சி, கிராம உடல் நலம், சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றை முன்னேற்றமடையச் செய்யப் புலங்கள் பல தொடங்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. சமூக வாழ்க்கை, வேலை மூலம் கல்வி, கிராம மனப்பான்மை போன்ற சிறந்த நோக்கங்களைக் கொண்ட கிராம வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஆசிரியர், மாணவர், குழந்தைகள், ஊழியர்கள் ஆகிய அனைத்துச் சமூகத்தினரும் இணைந்து எல்லா வசதிகளையும் வேலைகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். ஆதாரக் கல்வித் தத்து

வத்தின் அடிப்படையில் வேலையின் மூலம் கல்வி கற்பிக்கப்படுகிறது. கிராம மனப்பான்மையும் பண்பாடும் முக்கியமானவையாகக் கருதப்பட்டு, சருவோதய வாழ்க்கை பின்பற்றப்படுகிறது. அதாவது, தூய்மையில் உறுதியான நம்பிக்கை, உண்மை, அகிம்சை ஆகியவற்றின் அடிப்படையில் மனித சமூகத்தை உருவாக்குவதில் இத்திட்டம் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகிறது.

ஊரக உயர் கல்வி வளர்ச்சிக்காகக் காந்தி கிராம ஊரக நிறுவனம் நிறுவப்பட்ட பின்னர், இந்நிறுவனம் அறிவியல் அடிப்படையில் கிராமச் சூழ்நிலையினையும் சிக்கல்களையும் ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. இந்நிறுவனம் மக்கள் உடல் நலம், கல்வி, சுற்றுப்புறத் தூய்மை, முதியோர் கல்வி, பெண்கள் விழிப்புணர்ச்சி, பெண்கள் பொருளாதார முன்னேற்றம், வறுமையையும் குடிப்பழக்கத்தையும் ஒழித்தல், மக்களின் பிறப்பு-இறப்பு விகிதத்தைக் குறைத்தல் போன்றவற்றிற்கான பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. மேலும் இது சான்றிதழ், பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்புகளைக் கொண்ட புலங்கள், முதியோர் கல்வி மையம், குருகுலப் பயிற்சி முறைப் பள்ளி போன்ற பல அமைப்புகளின் மூலம் காந்தியடிகள் கண்ட கனவுகளைச் செயலில் நனவாக்கி வருகிறது. காண்க: காந்தி கிராம ஊரக நிறுவனம். பூ.த.

**காந்தி சேவா சங்கம்** காந்தியடிகளின் சர்வோதயத் தத்துவத்தின்படி மக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு, அவரால் 1923-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் மத்திய அலுவலகம் தொடக்கத்தில் மத்தியப் பிரதேசத்திலுள்ள வார்தா என்னுமிடத்திலிருந்து செயற்பட்டு வந்தது. இப்பொழுது புத்தகயாவில் உள்ளது. இச்சங்கத்தின் கிளைகள் தேசிய அளவில் பல இடங்களில் தொடங்கப்பட்டுச் செயற்படுகின்றன.

இச்சங்கத்திற்கு மாநில, மாவட்டக் கிளை நிருவாகிகள் நியமிக்கப்பட்டு, தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களிலும் உள்ள சங்க உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி அளிக்கப்பட்ட சேவா சங்க உறுப்பினர்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் வாழுகின்ற ஏழை, எளிய மக்களுக்கு அடிப்படைக் கல்வி, மருத்துவ வசதி, சாலை வசதி ஆகியவற்றையும் பிற உதவிகளையும் செய்வதுடன், காந்தியக் கொள்கைகளையும் பரப்பி வருகின்றனர். சத்தியத்தையும் அகிம்சையையும் அடிப்படையாகக்கொண்டு, உலகத்திற்குச் சேவை செய்கின்ற பரந்த நோக்கமுடைய சங்கமாக இது விளங்குகிறது.

காந்தி சேவா சங்கத்தின் நிருவாக உறுப்பினர்கள் கி.பி. 1948-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் சேவாக் கிராமத்தில் கூடி சருவோதய சங்கம் (Sarvodaya Samajam) என்றதொரு அமைப்பினை நிறுவினர். சத்தியம், அகிம்சை, ஆகிய இரண்டையும் ஆதாரமாகக் கொண்டதும் மக்களை ஏமாற்ற இடமில்லாததும் அனைவரும் முழு வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பு அளிக்கக் கூடியதுமான ஒரு சமுதாயத்தை அமைப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும். சத்தியம், அகிம்சை, அன்பு முதலியவற்றால் இணைக்கப்பட்டு, காந்தியடிகள் காட்டிய வழியைத் தங்கள் வாழ்க்கையில் உண்மையாகப் பின்பற்றி, சட்ட திட்டமின்றி, ஆன்மிக, சங்க வளர்ச்சிக்குக் குறிப்பிட்ட ஆக்க வேலைகளில் பணியாற்றும் தொண்டர்களின் கூட்டம் இச் சருவோதய சங்கமாகும். காண்க: சருவோதய சங்கம். பூ.த.

**காந்தி நிகேதனம்** மதுரை மாநகருக்குத் தென்மேற்கில் 38 கி.மீ. தொலைவிலுள்ள கல்லுப்பட்டி என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இது இந்தியாவின் முன்னேற்றத்திற்குக் கிராமங்களை வளம் பெறச் செய்ய வேண்டுமென்ற காந்தியடிகளின் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்குடன் 1940-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்குக் கதர், கிராமக் கைத்தொழில், சருவோதய சமூகத் தத்துவத்திற்கேற்பக் காந்தியடிகள் தோற்றுவித்த ஆதாரக் கல்வி, கிராம ஊழியர்கள் பயிற்சி போன்றவை பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. தேசிய விரிவாக்கத் திட்டத்தை (National Extension Scheme) நடைமுறைப்படுத்தத் தேவைப்படும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிலையம் தமிழ்நாட்டில் இங்கே தான் உள்ளது; தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் ஊழியர்களுக்கு இந்நிறுவனம் பயிற்சியளிக்கிறது. கல்லுப்பட்டியிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் அடிப்படைக் கல்வி, கைத்தொழில், மருத்துவம், வேளாண்மை, சாலைகள், குடிதண்ணீர் போன்ற வசதிகளுக்கான ஆக்கப் பணிகள் பல மேற்கொள்வதற்கு இந்நிறுவனம் பல வழிகளில் உதவி செய்கிறது.

சவர்க்காரம் செய்தல், தேனீ வளர்த்தல், காகிதம் செய்தல், பனை வெல்லம் தயாரித்தல், புகையில்லாத அடுப்புகள் செய்தல், ஒற்றை மாட்டுச் செக்கு செய்தல், செக்கு ஆட்டி எண்ணெய் பிழிதல் போன்ற கிராமக் கைத்தொழில்கள் இந்நிறுவனத்தில் நடை

பெற்று வருகின்றன. இங்குப் படித்த இளைஞர்களுக்கும் பரம்பரைத் தொழிலாளிகளுக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன; ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தோல் பதனிடுதல், தோல் சாமான்கள் செய்தல், நூல் நூற்றல், நெசவு, வேளாண்மைக் கருவிகள் உற்பத்தி செய்தல் போன்ற கைத்தொழில்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ள கிராமக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நடைபெறுகின்றன. இங்குத் தோல் தொழிலில் ஓராண்டுப் பயிற்சி வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கைத்தொழிற் பொருள்களை விற்பனை செய்வதற்காக நாடெங்கிலும் விற்பனைப் பிரிவுகள் தொடங்கப்பட்டு, குறைந்த விலையில் பொருள்கள் கிடைப்பதற்கு வகை செய்யப்படுகிறது.

கிராமங்களில் நூல் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கதர்ச் சொற்பொழிவு, சிட்டைச் சீட்டு முறை போன்றவை இந்நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு நூல் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் கிராமங்களில் உடை அணிவதில் தன்னிறைவு உண்டாகும் என்பது இதன் நம்பிக்கை. காந்தியடிகளின் கொள்கைளைப் பரப்பும் 'கிராம இராச்சியம்' என்றதொரு தமிழ் மாத இதழினை இந்நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

காந்தியடிகளின் ஆதாரக் கல்விக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் ஆதாரப்பள்ளி ஒன்று 1946-ஆம் ஆண்டு இங்குத் தொடங்கப்பட்டது. இது பின்னர் உயர்நிலை ஆதாரப் பள்ளியாக மாறி, இப்பொழுது மேல்நிலை ஆதாரப்பள்ளியாக வளர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் முதன்முதலாகத் தோன்றிய உயர்நிலை மற்றும் மேல்நிலை ஆதாரப் பள்ளி என்ற பெருமை இதனையே சாரும். பல மாவட்டங்களிலிருந்து மாணவ, மாணவிகள் இந்த ஆதாரப்பள்ளியில் கற்பதுடன், மாணவர் இல்லத்தில் தங்கிப் படிப்பு, உணவு, உடை போன்றவற்றின் தேவைகளுக்கான பணத்தைத் தங்கள் உடலுழைப்பின் மூலம் பெறுகின்றனர். இப்பள்ளியில் ஆசிரியர்களும் மாணவர்களும் சிறு சருவோதய சமுதாயத்தைப் போன்று வாழ்ந்து வருகின்றனர். அகிம்சைக் கொள்கைக்கேற்ப ஆசிரியர்களும் மாணவர்களும் அன்பு முறையில் பழகுகிறார்கள். இங்கு இறைவழிபாட்டுக்கும் ஆன்மிக வளர்ச்சிக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைவரும் உடல் உழைப்பில் ஈடுபடுகின்றனர்; இங்கு மனிதனை அகத்தும் புறத்தும் முழு வளர்ச்சி பெற்றவனாக ஆக்கும் வகையில்—வாழ்க்கையோடு இயைந்ததாக, வாழ்க்கையைச் சீராக்கும் கைத்தொழிலின் அடிப்படையில் கல்வி கற்பிக்கப்படுகிறது.

காந்தி நிகேதனம் தன்னிறைவு பெற்ற கிராமத்திற்கும் சருவோதய சமுதாய அமைப்பிற்கும் முன் மாதிரியாகத் திகழ்ந்து, காந்தியடிகளின் கோட்பாடுகளுக்குச் செயல் பட்டறையாக விளங்குகிறது.

பூ.த.

***காந்தி நினைவு நிதி***: காந்தியடிகளின் நினைவாக அவர் கற்பித்த கருத்துக்களைப் பரப்புவதற்காகவும் அவரது குறிக்கோள்கள், நிருமாணத் திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதற்காகவும் திரட்டப்பட்டதாகும். காந்தியடிகள் உயிர் நீத்த சில நாட்களுக்குப் பின்னர்த் தேசியத் தலைவர்கள் ஒன்று கூடி, அவரது நினைவாக இந் நிதியினைத் திரட்ட முடிவு செய்து நாடெங்கிலும் பணம் வசூல் செய்தனர். ஏறத்தாழ, உரூபாய் பதினொரு கோடி காந்தி நினைவு நிதியாக நாடெங்கிலுமிருந்து வசூலாயிற்று.

இந்நிதியினை நிருவகிக்கப் பல்வேறு துறைகளைச் சார்ந்த இருபத்தைந்து தேசியத் தலைவர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது; அறக்கட்டளை ஒன்றும் நிறுவப்பட்டது. தமிழ்நாடு உள்பட இந்தியாவை 25 மாநிலங்களாகப் பிரித்து இந்நிதியினைச் செலவிடுவதென்றும், அந்தந்த மாநிலங்களில் வசூலான தொகையில் முக்கால் பகுதியினை அம்மாநிலங்களுக்கே செலவு செய்து விடுவதென்றும், மீதமுள்ள தொகையினை மத்திய நிதியாக வைத்துக் கொள்வதென்றும் அக்குழுவின் மூலம் முடிவு செய்யப்பட்டது. எனவே, ஒவ்வொரு மாநிலத்திலும் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு நிருவாகி ஏற்படுத்தப்பட்டதுடன் அவருக்கு உதவி செய்வதற்காக ஏழுபேர் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. மேலும், இந்நிதியினைப் பத்து ஆண்டுகளுக்குள் செலவு செய்துவிட முடிவெடுத்து, 1951-ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மாநிலங்களிலும் பணி தொடங்கியது.

காந்தியடிகளின் முக்கிய குறிக்கோளான கிராம முன்னேற்றம், கிராம நலன் ஆகியவற்றிற்காக இந்நிதியின் பெரும்பங்கு செலவிடப்பட்டது. கிராமங்களில் பணி புரிய ஆள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் குறுகிய, நீண்ட காலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கிராமங்களில் தகுந்த பணியில் நியமிக்கப்பட்டுக் கிராமத் தன்னிறைவுக்காகத் தொண்டாற்றி வந்த

னர். தீண்டாமையைக் களைந்தெறியப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. பழங்குடி மலை வாழ் மக்கள், ஆதிதிராவிடர்கள் ஆகியோர் நலனில் அக்கறை கொண்டு திட்டங்கள் பல தீட்டப்பட்டு, இந்நிதியின் மூலம் அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. காந்தியடிகளின் ஆதாரக் கல்வியினைப் பரப்பும் நோக்கத்தில் ஆசிரியர் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, கிராம மக்களுக்கு ஆதாரக் கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவர்களிடையேயும் மக்களிடையேயும் காந்தியக் கருத்துகளைப் பரப்பும் வகையில் நூல்கள் வெளியிடுதல், கண்காட்சிகள் நடத்துதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படமும் தயாரிக்கப்பட்டுக் காட்டப்படுகிறது. காந்தியடிகளின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகள் நடந்த இடங்களில் நினைவுச் சின்னங்களும் நினைவாலயங்களும் எழுப்பப்பட்டுள்ளன. மேலும், காந்தியடிகளின் நினைவாகத் திக்கற்றோர் இல்லங்களும் சேவா சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன.

தொழுநோய் ஒழிப்பிற்கு நிதி உதவியும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவியும் வழங்கப்படுகின்றன. சப்பானிய (Japan) முறையில் சாகுபடி செய்வதற்கு நிதியும் பிற வசதிகளும் செய்து தரப்படுகின்றன. காந்தியடிகளின் கடிதங்கள், குறிப்புகள், ஆவணங்கள், அறிவுரைகள் போன்றவற்றைத் தொகுத்து, பல்வேறு மொழிகளில் வெளியிடுவதற்குத் தகுந்த திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவை செயற்படுத்தப்படுகின்றன. தில்லியிலுள்ள இராசுகாட்டு (Rajkot), அகமதாபாதிலுள்ள சபர்மதி, வார்தாவிலுள்ள சேவாசிரமம்; மதுரை ஆகிய இடங்களில் இந்நிதி உதவியுடன் காந்தி அருங்காட்சியகங்கள் (Gandhi Museum) நிறுவப்பட்டுள்ளன. இங்குக் காந்தியடிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த பொருள்கள், அவரதம் கடிதங்கள் போன்றவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்கு அவர் எழுதிய நூல்களும் அவரைப் பற்றிப் பிறர் எழுதிய நூல்களும் பிற நூல்களும் அடங்கிய நூலகம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும், அவரது வாழ்க்கையையும் அறிவுரைகளையும் விளக்கும் வகையில் அமைந்துள்ள புகைப்படங்களும் ஓவியங்களும் சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பொதுமக்களும் மாணவர்களும் இலவசமாகக் கண்டு களிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பள்ளிகளிலிருந்து மொத்தமாக வரும் மாணவர்களுக்குக் காந்தியடிகளைப்பற்றிய கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்திப் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. காந்தியடிகளின் வாழ்க்கையைப் பற்றிய திரைப்படமும் காட்டப்படுகிறது.

பத்து ஆண்டுகளுக்குள் செலவிடப்பட்டு விடுவதெனத் தீர்மானித்திருந்தாலும், இப்பொழுதும் இந்நிதியின் மூலம் தேசிய அளவில் காந்தியடிகளின் சிந்தனைகள், கருத்துகள் ஆகியவை பரப்பப்படுவதுடன், மக்களுக்குப் பல சேவைகள் செய்வதன் மூலம் அவரது குறிக்கோள்களும் நிருமாணத் திட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டும் வருகின்றன.

பூ.த.

**காந்தி பிள்ளைத் தமிழ்**: இது அண்ணல் காந்தியடிகள்மீது பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்ப் 'பிரபந்தமாகும். இதன் ஆசிரியர் காரைக்குடியில் வாழ்ந்து, 'இராய.சொ' என்றழைக்கப்பட்ட, சிவக் கவிமணி, தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் ஆவார். காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்று சிறந்த நாட்டுப் பற்றாளராக விளங்கிய இராய.சொ. காந்தியடிகள்பால் கொண்ட ஈடுபாட்டினால் அவர்மீது பிள்ளைத்தமிழ் பாட விரும்பி இந்நூலை இயற்றியுள்ளார். இப்பிள்ளைத் தமிழ் இயற்றியதன் காரணத்தை ஆசிரியர்தாமே, 'எளியேனை ஆட்கொண்ட எம்பெருமான் காந்தியடிகளார்க்கு, ஏழை பிறந்த தமிழ் மொழியில் ஒரு பிரபந்தம் ஆக்கவேண்டும் என்ற நசையெழ, அது பிள்ளைக் கவியாகவே பிறக்கவேண்டுமென்ற முடிவிற்கு வந்தேன்' என்று குறிப்பிட்டுள்ளார். காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலேயே அவர்மீது பிள்ளைத் தமிழ் பாடியதனைத் தனிச் சிறப்பாக ஆசிரியர் எண்ணியுள்ளார். மரபு வழியாகக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பத்துப் பருவங்களில், நூறு செய்யுள்கள் கொண்டமையும் இந்தப் பிள்ளைத் தமிழ், தொடக்கத்தில் ஆசிரியரே இயற்றிய பாயிரச் செய்யுள் எட்டும் அவையடக்கச் செய்யுள் இரண்டும், காப்புச் செய்யுள் ஒன்றும், இறுதியில் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் கொண்டமைந்துள்ளது. காப்புப் பருவத்திலமைந்த பத்துச் செய்யுட்களிலும், இந்து சமயத் தெய்வங்களைச் சுட்டிக் காக்குமாறு வேண்டிப் பாடும் முறைமைக்கு மாறாக, எப்பெயரும் சுட்டாது, பரம் பொருளின் பொதுப் பண்புகளைக் கூறிப் பரவியுள்ளார். அதன் காரணத்தை 'இந்து மதத்தின் பாற் பட்டாரேயன்றி, அடிகளைத் தம் குருவாகக் கொள்ளும் ஏனைத் தமிழரும் அடிகள் புகழை அன்புடன் பாடி மகிழ வேண்டுமென்ற பெரு நோக்கமே' யாகும் என்பதனைத் தம் முன்னுரையில் விளக்கியுள்ளார். இறைவனைக் குறிக்கும்போது, 'பன்னரிய பல்லுலகும், பல்லுயிரும் பல்பொருளும் பகலும் அல்லும், பல்லுரு

வும் பல்பெயரும் பல்வேறு சமயமுமாம் பரமநாதன்' என்று கூறுகிறார். காந்தியடிகளை, 'கருணையே உருவான எம்பெருமான்', 'அருள் வடிவங்கொண்டு அவனியில் வந்தவன்', 'தருமநெறி வாழவரு காந்திப் பெருந்தகை', 'அழுக்காறவா வெகுளி இன்னாச் சொல் இல்லான்', என்பன போன்ற தொடர்களால் சிறப்பித்துள்ளார். இறுதியில், 'காந்தி எனும் கருணை பொழி கவின் மேகம் வாழ்க' என்னும் வாழ்த்துப் பாடலோடு நூல் முடிகிறது. இந்நூல் 1924-ஆம் ஆண்டு, காரைக்குடியில் அச்சுப் பதித்து வெளியிடப் பட்டுள்ளது.

அ.மா.ப.

**காந்திபுராணம்**: காந்தியடிகள் வாழ்க்கையைச் செய்யுளில் பாடவேண்டும் என்ற கருத்தில் பாடப்பட்டது காந்திபுராணம். இதனைப் பாடியவர் பண்டிதை அசலாம்பிகை அம்மையார். காந்தியடிகளைத் தலைவராகக் கொண்டு அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் கொள்கைகளையும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் அவர் பெற்ற பங்கினையும் காந்திபுராணம் பாடுகிறது.

புராணம் என்ற பெயருடையதாயினும், இருபதாம் நூற்றாண்டில் நம் கண்முன் வாழ்ந்த காந்தியடிகளின் உண்மை வாழ்வை இந்நூல் உரைக்கிறது. பாட்டியல்கள், புராணத்திற்குக் கூறும் இயல்புகளிலிருந்து இந்நூல் வேறுபட்டுள்ளது.

காந்திபுராணத்தில், எட்டுக் காண்டங்கள் உள்ளன; காண்டங்களில் உட்பிரிவுகள் இல்லை. ஆனால், சிறுசிறு உள்தலைப்புகள் உள்ளன. இதில் கலிவிருத்தங்களும், ஐந்து, ஆறு, ஏழு சீர்களையுடைய விருத்தப்பாடல்களுமாக 1886 செய்யுட்கள் உள்ளன. ஆசிரியர், இடையிடையே ஆசிரியப்பாக்களைப் பாடியுள்ளார். அப்பாடல்களின் அடி எண்ணிக்கை 1415.

இந்நூலில் முதற்கண் பரம்பொருளுக்கும் பாரத மாதாவுக்கும் காப்பும், அதன்பின் நூல் செய்த நோக்கம் பயன் அவையடக்கம் ஆகியனவும் கூறப்படுகின்றன. தொடர்ந்து நாடு, நகரம் என்ற தலைப்பில் கத்தியவாரும் போர்பந்தரும் பாடப்படுகின்றன. நிலப்புனைவோ மக்கள் புனைவோ இல்லை. நூலினிறுதியில் வாழ்த்து உண்டு.

காந்தியடிகளை மையமாக்கி இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் பேசும் இந்நூல், சுயராச்சியக் கட்சித் தோற்றம் போன்ற அக்காலச் செய்திகளையும் இடையே சுட்டுகிறது. கற்பனையிலும் வரலாற்றையே இந்நூல் பேசுகிறது. இனிய ஓசை நயமும் கவிநயமும் உடைய பாடல்கள் நூலுக்கு அழகுதருகின்றன. எளிய வழக்கில் பயிலும் உவமைகளைப் பயன்படுத்திக் கருத்துகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. சத்தியாக்கிரகம், அகிம்சை, 'கவர்ன்மென்ட்டு' 'செக்சன்' போன்ற அயல்மொழிச் சொற்கள் இந்நூலில் பயில்கின்றன. தமிழகத் தொடர்பான நிகழ்ச்சிகள் பல ஆறாங்காண்டத்தில் இடம் பெற்றுள்ளன.

எத்தொண்டு செய்யினும் அத்தொண்டு தாய் நாட்டுக்கு இன்பம் பயப்பதாய் இருத்தல் வேண்டும் என்பதை 'ஈன்றதாய்நாட்டின் இன்பமே குறியாய், ஊன்றி நூல் கற்பதும் ஊழியமேற்பதும்' என்ற அடிகள் வலியுறுத்தும். இவ்வாறு காந்திபுராணம் நாட்டுப்பற்றை ஊட்டுவதாய், விடுதலை வரலாற்றைக் காட்டுவதாய் விளங்குகிறது. காந்தியடிகளின் 30 ஆண்டுக்கால வரலாறே இதில் பாடப்பட்டுள்ளது.

இந்நூலின் முதலிரு காண்டங்கள் 1923-இல் வெளியிடப்பட்டன. இந்திய விடுதலைப் போராட்டக் காலத்திலேயே, அசலாம்பிகை அம்மையார் நடந்த நிகழ்ச்சிகளை அவ்வப்போதே பாடிவைத்திருந்தார். காந்தியடிகள் மறைவுக்குப்பின் நூல் முழுமையாகப் பாடப்பெற்று அச்சாகி வெளிவந்தது.

தெ.சொ.

**காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்**: உறையூர் சிரீகாந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் என்று சொல்லப்படும் இந்நூல் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. இது கி.பி. 1851-ஆம் ஆண்டு அச்சு வடிவம் பெற்றது. உறந்தை மாநகரில் கோயில் கொண்டுள்ள காந்திமதியம்மையைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்ட பெண்பாற் பிள்ளைத் தமிழாக இது விளங்குகிறது.

பிள்ளைத் தமிழுக்குரிய இலக்கண அமைதிகளைக் கொண்ட இந்நூலின் பாயிரத்தில் விநாயகர், பரமசிவன், உமையவள், கணபதி, சுப்பிரமணியர், நந்திதேவர், திருஞான சம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரையர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாதவூரடிகள், திருத்தண்டிநாயனார் முதலியோரிடம், பதினொரு பாடல்களில் தம் தமிழ்க்கவி தழைக்க அருளுமாறு வேண்டுகிறார்.

திருமால், பஞ்சவர்ணேசுவரர், விக்கினேசுவரர், முருகக்கடவுள், பிரமதேவன், தேவேந்திரன், திருமகள், கலைமகள், காளி சப்தமாதர்கள், பல தேவர் ஆகிய தெய்வங்களிடம் பதினொரு பாடல்களில் உறந்தை வாழ் பிராட்டியைக் காக்க வேண்டு


மென இறைஞ்சுகிறார். வருகைப் பருவம், வாரானைப் பருவம் என்றும், ஊசற் பருவம், பொன்னூசற் பருவம் என்றும் இந்நூலில் குறிக்கப்படுகின்றன. அம்மை அருளாட்சி புரியும் உறையூர் 'தமிழ் மணக்கும் கோழி நகர்', 'தருமம் பொலியும் திருநகர்', 'நான்மறை கணம் முழங்கும் உறையூர்' எனப் புகழப்படுகிறது. காந்திமதியம்மையைக் 'கோழிநகர் வாழ் மயில்', 'குக்குட புகர்க்கண் வளர் அம்மை' எனக் கூறியவர், அவள் அரமகளிரெல்லாம் தலை வணங்கிடும் தகுதி பெற்றவள் என்கிறார். மேலும் அவள் இறைவனின் மேனியில் செம்பாதி கொண்டவள் என்றும், அவரைவிட்டுப் பிரியாது நின்ற பூங்கொடி என்றும், அவர்க்கு உயிரேயனைய திருத்தேவி என்றும் போற்றுகிறார்.

மல இருள் ஒழித்து இன்பம் அருளும் புனிதையாகவும், மாறாப் பாவநோய் மாற்றும் மருந்தாகவும் இவள் உள்ளாள். அன்பர்கள் நினைத்த அளவில் உள்ளிய யாவும் உவந்து அருளுபவளாகவும், பிள்ளையவர்களின் இதயத்தில் வீற்றிருந்து இயற்றமிழ் மணக்கும் சொல்லை இனிது எடுத்துத் தருபவளாகவும் விளங்குகிறாள். மேலும் காந்திமதியம்மை சத்தியாய், இந்துவாய், மனோன்மணியாய், மகேசுவரியாய், உமையாய், திருமகளாய், வாணியாய்த் திகழ்கிறாள் எனக்கூறி, அவளது அளப்பரிய ஆற்றலை வியந்து பாடுகிறார். சிவபெருமான் தம் முடியில் அணியும் நிலா 'பிஞ்சுமதியம்', 'திங்கள் கொழுந்து' எனக் கவிஞரால் வருணிக்கப்படுகிறது. அவர் 'துகிர்க் கொடி பழுத்தனைய செஞ்சடை மணாளன்', 'கானார் கொன்றை முடிக்கணிந்த கடவுள் பெருமான்' என்று கூறப்படுகிறார். நஞ்சுண்டு அமரரைக் காத்த அருஞ்செயலை வியக்கும் ஆசிரியர் பிரமனும் திருமாலும் காணரிய தம்பிரான் என்று, அவர்தம் திறனை அழகுறக் காட்டியுள்ளார்.

அமுதினும் இனிதாய தமிழுக்கு உவப்பவன் இறைவன் என்பதை, 'மூவர்கள் வாயருமைத் தமிழ்', 'நால்வர்கள் தமிழ்க்குக் காணி கொடுத்த திருச் செவிகள்' என்று போற்றுகிறார். உறையூரில் மருத நிலத்தில் வாழும் பகட்டு வாளை மீன் குதிப்பதால் தாமரைமொட்டு மலர, மாங்கனி உதிர, பலாப்பழம் சிதற, தெங்கின்பழம் மோதிக்கொண்டல் முழங்க, மதியின் உடல் பிளக்க, கற்பகத் தரு கடந்து அயிராவதத்தின் கோடு முறிய அண்ட கோளத்தின் உச்சி நாணமுறும் என்றமைந்த கற்பனை பாராட்டத்தக்கது. கோழிநகர் வாழும் அம்மையின் முறுவல் பூத்த முகமதி கண்டு சிவபெருமானின் உள்ளக் கமலம் மலர, தேவ மகளிர் கைகூப்ப, சகோரப் பறவை நில வென்று ஓடிவர, வளைக்கையிருந்த கிளி வள்ளத் தமுது என்று வாய்திறக்க, கலைமகள் தன் மேனி கருமையென நாணுவதாகக் கூறும் நயம் சிறப்புடைத்து.


இர.ஆ.

**காந்தியடிகள் (மோகனதாசு கரம்சந்து காந்தி - கி.பி. 1869-1948):** 'என் வாழ்வே என் செய்தி' எனக் கூறி, அரசியலில் அறவழியில் போராடி, பாரத நாட்டிலிருந்து ஆங்கில ஆதிக்கத்தை அகற்றுவதில் வெற்றி கண்டவர் அண்ணல் காந்தியடிகள். இவர் கி.பி.1869-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் நாள்போர்பந்தரில் காபாகாந்திக்கும் புத்திலிபாய் அம்மையாருக்கும் கடைசி மகனாகப் பிறந்தார். இவரது பெயர் மோகனதாசு கரம்சந்து காந்தி. தம் அன்னையின் தூண்டுதலினால் இவர் இளமை முதலே இறைப்பற்று, நேர்மை, உண்மை, விடாமுயற்சி ஆகிய பண்புகளை வளர்த்துக் கொண்டார். இவர்தம் பிற்கால அரசியல் வாழ்விற்கு அவை அடித்தளமாய் அமைந்தன. அரசியலில் நேர்மை, பொதுவாழ்வில் தூய்மை என்ற நோக்கில் பின்னர் வாழ்ந்து காட்டிய காந்தியடிகள், தம் 13-ஆம் வயதில் கத்தூரிபாயை மணந்தார். பின்னர், கி.பி. 1888-இல் பள்ளிப் படிப்பை முடித்து, சட்டப் படிப்பிற்காக இங்கிலாந்து சென்று, 1891-இல் வெற்றியுடன் திரும்பினார்.



காந்தியடிகள்

தென்னாப்பிரிக்காவில் கி.பி. 1893-இல் வழக்கறிஞர் தொழில் நடத்தியபோது அங்கு வெள்ளையரின் நிறவெறிக்கு ஆட்பட்ட இந்தியர், கறுப்பர் ஆகி



மகாத்மா காந்தியடிகள்



மக்களிடையே காந்தி



காந்தியும் தாகூரும்



காந்தி தங்கிய குடில்

யோரின் நிலை கண்டு மனம் வெதும்பி, சகிப்புத் தன்மை, சத்தியாக்கிரகம் ஆகியவற்றை மேற் கொண்டு, கொடுமைகளை எதிர்த்துப் போராடிய தன் மூலம் இவரது அரசியல்வாழ்வு தொடங்கியது.

இவர் தென்னாப்பிரிக்கா வாழ்க்கைக்குப் பின் 1915-இல் பாரதம் திரும்பினார். 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற கொள்கையினடிப்படையில் மனித சமத்துவத்தினை நன்குணர்ந்திருந்தார். எளிமை, கூட்டு வாழ்வு ஆகியவற்றையும் பின்பற்றி யமையால், இந்தியாவின் அரசியல் நிலையைப் புரிந்து கொள்ளுவது இவருக்கு எளிதாயிருந்தது. இவர் கோபாலகிருட்டிண கோகலேயின் மிதவாதக் கோட் பாட்டினால் ஈர்க்கப்பட்டார். பம்பாயிலும் இலக் னோவிலும் முறையே 1915, 1916-ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற காங்கிரசு மாநாடுகளில் கலந்து கொண்டு, இந்தியாவில் அயலார் ஆட்சிக் கொடு மையை அறிந்து கொண்டார்.

இவர் 1917 ஏப்பிரலில் சம்பரானிலும், 1917 நவம்பரில் கேடாவிலும், 1918 சனவரியில் ஆமதாபா திலும் இந்தியருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து, அன்பு வழியில் போராடி வெற்றி கண்டார். இவற்றின் மூலம் அறவழிப்போரில் பேச்சுவார்த்தை மூலம் விட்டுக்கொடுத்துப் போராடினால் வெற்றி கிடைக்கு மென்பதைத் தெளிவுபடுத்தினார். மேலும், தூய்மை, வாய்மை, நேர்மை, கொள்கைப்பற்று ஆகியன சத்தியாக்கிரகப் போரில் பயன்படத்தக்க வலிமைமிக்க ஆயுதங்கள் என்பதையும் கண்டு கொண்டு, அவற்றை அகில இந்திய அரசியலில் பயன் படுத்தி வெற்றி காண விழைந்தார்.

முதல் உலகப் போரில் (1914—1919) ஆங்கிலேய ருக்கு உதவினால் பாரத நாட்டுக்குத் தன்னாட்சி கிடைக்குமெனக் கருதி இவர் செயற்பட்டார். ஆனால் இவர்தம் நம்பிக்கை வீணாயிற்று. ஆங்கில அரசின் 'இரௌலட் சட்டம்' (1919) அடக்கு முறை யைக் கட்டவிழ்த்துவிட்டது. காந்தியடிகளின் வேண்டுதலின் பேரில் 1919 ஏப்பிரல் ஆறாம் நாளை இந்தியர் சத்தியாக்கிரக நாளாகக் கொண்டாடினர். இருப்பினும் அறவழியினின்றும் பிறழ்ந்து வன்முறை யில் ஈடுபட்டபோது, அடிகள் தாம் ஓர் இமாலயத் தவறு செய்துவிட்டதாகக் கூறிப் போராட்டத்தை நிறுத்தினார். அப்போதுதான் (1919, ஏப்ரல் 13-ஆம் நாள்), சாலியன் வாலாபாகுப் படுகொலைத் துயர நிகழ்ச்சி நிகழ்ந்தது. காந்தியடிகள் சொல் லொணாத் துயருக்கு ஆளானார். அதனையடுத்து 1919 நவம்பரில் கிலாபத்து இயக்கத்தினர் இவரை அவ்வியக்கத்திற்குப் பொறுப்பேற்று நடத்துமாறு வேண்டினர்.

அடிகள் 1920- ஏப்பிரலில் தன்னாட்சி இயக்கத்தின் (Home Rule Movement) தலைவரானார். இந்திய ரின் சுதந்திர உணர்வை அரசுக்கு உணர்த்தும் வகை யில் 1920 சூன் 20-ஆம் நாள் இவர் ஒத்துழையாமை இயக்கத்தைத் (Non – co – operation movement) தொடங்கினார். ஆங்கில அரசு வழங்கிய பட்டங் களையும் பதவிகளையும் துறத்தல், வரிகொடுக்க மறுத்தல் போன்ற செயல்கள் மூலம் ஆங்கில அர சுக்கு ஒத்துழைப்பு மறுக்கப்பட்டது. அயலார் துணி எரிப்பு, கள்ளுக்கடை மறியல் ஆகியனவும் மேற் கொள்ளப்பட்டன. மாணவர்கள் ஆங்கிலக் கல்வி யுடன் கல்விக் கூடங்களையும் புறக்கணித்தனர். வரிகொடா இயக்கம் 1921-நவம்பர் 23-ஆம் நாள் தொடங்கப்பட்டது. இந்திய அரசியலில் தம்மைப் பிணைத்துக் கொண்டு, வெற்றிகரமாகத் தம் எதிர்ப் புணர்வுகள் மூலம் இந்தியாவின் தேவையை ஆங்கி லேயருக்கு உணர்த்தினார்.

பர்தோலியில் 1922 பிப்பிரவரி 6-ஆம் நாள் சத்தியாக்கிரகத்துக்குத் தலைமைப் பொறுப்பேற்க முடிவு செய்தார். ஆனால், பிப்பிரவரி 5-ஆம் நாள் சௌரிசௌரா என்னுமிடத்தில் ஆத்திரமுற்ற மக் கள் கூட்டமொன்று காவல் நிலையத்தைத் தாக்கியது. அக்கூட்டம் 22 காவலர்களைத் தீயிட்டுக் கொன்றது. இந்தியரின் பக்குவமற்ற முறைகேடான இச்செய லுக்கு அண்ணல் தாமே பொறுப்பேற்றுக் கொண்டு, 'மக்களை நெறிப்படுத்தாததால் எழுந்த சிக்கல் இது' எனக் கூறி, அதன் காரணமாக ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவிட்டார். இயக்கம் தோல்வியே யாயினும், காந்தியடிகளின் தனிப்பட்ட புதுமையான அரசியல் அணுகுமுறை ஆங்கில அரசினை அச்சங் கொள்ளச் செய்தது.

இவர் 1922-இல் சிறைப்பட்டு 1924-இல் விடுதலை யான போது இந்தியரிடையே விழிப்புணர்வைக் காண முடிந்தது. இவர் 1924-இல் காங்கிரசின் தலை வரானார். கேரளத்தில் வைக்கம் என்னுமிடத்தில் 1924-ஆம் ஆண்டு நடந்த சீர்திருத்த இயக்கத்திற்கு ஆதரவளித்து, 1925 ஏப்பிரல் 25-இல் சத்தியாக் கிரகிகள், அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து, வைதீகக் கோட்பாடுகளைக் கட்டுப்பாடுகள், அடக்கு முறை ஆகியவற்றின் மூலம் நிலைநாட்டுதல் தவறு எனச் சுட்டிக் காட்டினார். இதன் மூலம் பாகு பாடின்றி மக்களைக் காப்பது அரசின் கடமை என் பதை இவர் நிலைநாட்டினார். அரசியல் தீர்வுகளுக் கான அடுத்த கட்டப் போராட்டம் 1930-இல் தொடங்கியது. உப்பு வரியை எதிர்த்தல் என்ற கொள்கை உருவாயிற்று. அடிகள் 1930 மார்ச்சு30-ஆம் நாள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தொடங்கி,

38ּ கி.மீ. தொலைவிலுள்ள தண்டிவரை நடந்து சென்று உப்புச் சட்டத்தை மீறியதால், 1930 மே 4-ஆம் நாள் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கத்தை ஆங்கில அரசு கடுமையாக ஒடுக்க முனைந்தது.

தம் நிலையைத் தங்க வைத்துக் கொள்ளச் சைமன் குழுவின் பரிந்துரைகளின் பேரில் ஆங்கில அரசு இந்தியச் சிக்கலைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முன்வந்தது. ஆனால் 1930 நவம்பர் 12 முதல் 1931 சனவரி 19 வரை நடைபெற்ற முதல் வட்ட மேசை மாநாட்டில் காங்கிரசுக் கட்சியினர் யாரும் பங்கேற்கவில்லை. தொடர்ந்து 1931 மார்ச்சில் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசு சார்பில் இவர் பண்டித மதன்மோகன் மாளவியா, சரோசினி தேவி ஆகியோருடன் கலந்து கொண்டார். அம்மாநாட்டி னால் இந்தியருக்கு எவ்விதப் பயனும் விளைய வில்லை. எனவே, மீண்டும் அடிகள் தம்வழியில் போராட்டத்தை நடத்தினார். ஆங்கில அரசு அடக்கு முறையைத் தொடர்ந்தது. அந்நிலையில் 1932 ஆக சுட்டு 17-ஆம் நாள் ஆங்கிலப் பேரமைச்சர் இராம்சே மக்டொனால்டு (Ramsay Macdonald) அறிவித்த 'வகுப்பு வாரித்தீர்வு' (Communal Award) இந்திய அரசியலில் பெருங்கொந்தளிப்பை ஏற்படுத்தியது. எனவே, 1932 செப்டம்பர் 20-இல் அடிகள் உண்ணா விரதத்தைத் தொடங்கி ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கையை எதிர்த்தார். அதன் விளைவாக 1932 செப்டம்பர் 26-இல் பூனா ஒப்பந்தம் ஏற்பட்டு, தாழ்த்தப்பட்டோர் வேண்டிய தனித்தொகுதி முறை நீக்கப்பட வகையேற்பட்டது. இருப்பினும் மூன்றாம் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசின்சார்பில் இந்தி யர் யாரும் பங்கேற்கவில்லை. இந்தியாவின் அரசியல் நிலையும் சீராகவில்லை. ஆனால், போர்க்குறிக் கோளைப் பொறுத்த வரையில் 1939 முதல் 1945 வரையிலான இரண்டாம் உலகப்போரின்போது அடிகளின் ஆதரவு ஆங்கிலேயருக்கே இருந்தது. எனவே, 1940 ஆகசுட்டு 8-ஆம் நாள் அரசப் பேரா ளர் இலின்லித்கோ பிரபு (Lord Linlithgow) 'ஆக சுட்டுக் கொடை'யை(August Offer) வெளியிட்டார். அதனால் பலனேதுமில்லையெனக் கருதிய அடிகள் தம் எதிர்ப்பினை உலகுக்குக் காட்டும் நோக்குடன், 1940 அக்டோபரில் தனி ஒருவர் செய்யும் சத்தியாக் கிரகத்தைத் தொடங்கினார். அது இந்தியர்களின் எதிர்ப்பு வேகத்தை மிகுத்ததுடன் ஆங்கில அரசின் மனத்தையும் இளகச் செய்தது. ஆனால், 1941 திசம் பர் 30-ஆம் நாள் இரண்டாம் உலகப் போரின் உச்ச நிலை காரணமாக, அச்சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட் டது.

'கிரிப்சு தூதுக்குழு' (Cripp's Mission) 1942 மார்ச்சு 22-ஆம் நாள் இந்தியாவுக்கு வந்தது. போர் முடிந்ததும் இந்தியாவின் தேவை நிறைவு செய்யப் படுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அக்குழுவின் செயலை 'மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு வங்கியின் பெயரில் பின்தேதியிட்டு வழங்கப்பட்ட காசோலை' என அடிகள் எள்ளி நகையாடினார். கிரிப்சு 1942 ஏப்பிரல் 12-இல் திடீரெனத் தாயகம் திரும்பினமை யும், உலகப் போரில் சப்பானின் வேகமான முன்னேற் றமும் காந்தியடிகளைச் சிந்திக்கத் தூண்டின. ஆங்கி லேயரை இந்தியாவை விட்டு வெளியேறச் செய்த லொன்றே இந்தியரின் உடனடித் தேவை என்பதை உணர்ந்தார். எனவே, 1942 சூலை 14-ஆம் நாள் வார்தாவில் கூடிய கூட்டத்தில், 'செய் அல்லது செத்துமடி' என அறிவித்ததுடன், 'இந்தியாவை விடு தலை பெறச் செய்ய வேண்டும். இம்முயற்சியில் உயி ரிழக்க நேரிடினும் அடிமை நிலையை நீடிக்கவிடக் கூடாது' எனக் கூறி, 'வெள்ளையனே வெளியேறு' என்ற முழக்கத்தையும் வெளியிட்டார்.

இந்தியரின் எழுச்சிக் கனல் கொழுந்து விட்டெரி யத் தொடங்கியது. ஆங்கிலேயரின் அடக்குமுறை தலைவிரித்தாடியது. அடிகளின் அன்புநெறி பயனற்ற தெனத் தோன்றியது. அடிகள் 1942 ஆகசுட்டு 8-ஆம் நாள் கைது செய்யப்பட்டார். போராட்டம் மேலும் வலுப்பெற்றது. அடிகளே இந்த எழுச்சிக்குக் காரண மென்று குற்றஞ்சாட்டப்பட்டார். நேர்மையான முறையில்நீதி கேட்டுத்தம் உரிமையைப் பெற விழை வது தவறில்லையென அடிகள் வாதாடினார். தம் 21-நாள்உண்ணாவிரதத்தை 1943 பிப்பிரவரி 10-ஆம் நாள் தொடங்கினார். உடல்நலம் மோசமாகவே அடிகள் 1944 மே 6-ஆம் நாள் விடுதலை செய்யப் பட்டார்.

அடிகள் இராசகோபாலாச்சாரியின் இந்து-முசு லீம் லீகு ஒற்றுமைக்கான 'இராசாசி திட்டத்தை' (C.R. Plan) ஏற்றுக் கொண்டார். ஆனால், முகமது அலி சின்னா அதனை ஏற்க மறுத்துவிட்டார். காந்தி-சின்னா சந்திப்பும் தோல்வியுற்றது. 'வேவல் திட்டம்' (Wavell plan) 1945 சூன் 14 முகமதியருக் குச் சாதகமானதாகவே அமைந்தது. அடிகள் முகமதி யர்களின் பிரிவினை வாதச் சிக்கலையும் சமாளிக்க வேண்டியவரானார். சிம்லா மாநாட்டில் 1945 சூன் 25 பிரிவினையைத் தவிர்க்க அடிகள் மேற்கொண்ட முயற்சிகள் சின்னாவின் பிடிவாதங் காரணமாகப் பயனற்றுப் போயின. இந்தியாவுக்கு 1946 மார்ச்சு 23-இல் வந்த 'அமைச்சரவைத் தூதுக்குழு' (Cabinet Mission) இந்தியக் கூட்டாட்சி, அரசியலமைப்பு மன் றம், இடைக்கால அரசு ஆகியவை வழங்கப்படு மென்று அறிவித்துச் சென்றது. காந்தியடிகளால்

'வாக்குறுதிப் பத்திரம்' (Promissory Note) என்று வருணிக்கப்பட்ட பரிந்துரைகளால் இந்து-முசுலீம் ஒருமைப்பாடு காக்கப்படவில்லை. சின்னா 1946 ஆகசுட்டு 16-ஆம் நாளை நேரடி நடவடிக்கை நாளாகவும், துக்க நாளாகவும் கொண்டாடும்படி முகமதியர்களைக் கேட்டுக் கொண்டார். இனக்கலவரம் மூண்டது. அடிகள் தாமே சமாதானம் செய்து வைக்க முயன்றார். ஆயினும், புதிய அரசப்பேராளர் மவுண்டுபேட்டன் பிரபு 1947 சூன் 3-ஆம் நாள் அடிகளைச் சமாதானப்படுத்திவிட்டு, இந்தியாவைத் துண்டாடும் தம் திட்டத்தை அறிவித்தார். அதன்படி, பாரதநாடு 1947 ஆகசுட்டு 15-ஆம் நாள் இந்தியா, பாகிசுத்தான் என இரண்டாக்கப்பட்டு, அவ்விரு பிரிவுகளுக்கும் விடுதலை வழங்கப்பட்டது. மீண்டும் இனக் கலவரமும் வகுப்பு வாதமும் தலை விரித்தாடின. அடிகள் 1948 சனவரி 12-ஆம் நாள் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன், தம் இறுதி உண்ணாவிரதப் போராட்டத்தினைத் தொடங்கினார். ஆனால், மக்கள் மனமாற்றம் காரணமாக ஆறு நாட்களில் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

காந்தியடிகள் 1948 சனவரி 30-ஆம் நாள் தில்லி பிர்லா மாளிகையில் மாலை வழிபாட்டுக் கூட்டத்திற்குச் செல்லுகையில் விநாயக் நாதுராம் கோபால் கோட்சே என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தம் 32 ஆண்டுக் கால அரசியல் வாழ்வில் அண்ணல் காந்தியடிகள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய போதிலும், 'சுயமரியாதை',' முழுச் சமத்துவம்' என்னும் நோக்கில் இந்தியச் சமூக நிருமாணத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் முழுமையாக ஈடுபட்டார். 'தாய் நாட்டின் சேவைக்காக என் வாழ்வு அனைத்தையும் உரிமைப்படுத்தியுள்ளேன் இந்தச் சேவை இல்லாவிடில் என் வாழ்வே எனக்குத் தாங்க முடியாத சுமையாகிவிடும்' என்று கூறிய அடிகள் 'உண்மையான தூய்மையான மனிதனிடம் பிறருக்குத் தருவதற்கு அவனுடைய உயிரைத் தவிர வேறொன்றும் இருக்காது' என்ற தியாகப் பண்புள்ள உணர்வினை அரசியலில் கலந்தார். இவர் பொய்ம்மையின் விளைவுகளான சமூக, அரசியல் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளல், தேசிய ஒற்றுமை ஆகிய தற்காப்பு ஆயுதங்களேந்திப் போராடி, அவற்றிற்குத் தம்மையே பலியாக்கிப் பிறருக்கு வழிகாட்டியானார். இவ்வாறு அடிகளின் வாழ்வே அவர்தம் செய்தியாயிற்று.

மா.கா.

**காந்தியடிகள் பல்கலைக் கழகம்:** காந்தியடிகளின் 115-ஆம் பிறந்த நாளைச் சிறப்பிக்கும் வகையில் 1983-ஆம் ஆண்டு கேரளப் பல்கலைக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கேரள மாநிலத்திலுள்ள கோட்டயம் என்னுமிடத்தில் காந்தியடிகள் பல்கலைக்கழகம் (Gandhiji University) தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி ஆகிய பணிகளோடு இதன் ஆளுகை எல்லைக்குள் வரும் கல்லூரிகளுக்கு இணைப்புரிமை வழங்கவும் செய்கிறது.

எர்ணாகுளம், இடுக்கி, கோட்டயம், குட்டநாடு, கோச்சனாசேரி, மாலப்பள்ளி, இராணி, திருவில்லா ஆகிய பகுதிகளில் அமையும் கல்லூரிகள் காந்தியடிகள் பல்கலைக்கழகத்தின் ஆளுகை எல்லைக்குள் வருகின்றன. மொத்தம் 68 கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தில் இணைந்தியங்கும் கல்லூரிகளாக உள்ளன. அவற்றுள் மருத்துவக் கல்லூரி, ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, இன முறை மருத்துவக் கல்லூரி (Homeo College), சட்டக்கல்லூரி, ஏழு கல்வியியல் கல்லூரிகள் ஆகியன அடங்கும்.

காந்தியடிகள் பல்கலைக்கழகத்தில் அடிப்படை மருத்துவ அறிவியல், காந்தியக் கல்வி (Gandhian Studies), பன்னாட்டு உறவுகள் (International Relations), செய்பொருளாக்க அறிவியல் (Material Science), மீச்சேர்ம வேதியியல் (Polymer Chemistry) ஆகிய ஐந்து கல்விப் புலங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்தியங்கும் கலைக் கல்லூரிகளில் முன்பட்டப் படிப்பு (Pre-degree), மூன்றாண்டுப் பட்டப்படிப்பு, ஈராண்டுப் பட்ட மேற்படிப்பு ஆகியவற்றுக்கான வசதிகள் உள்ளன. ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் பல கல்லூரிகள் உள்ளன.

கே.எம்.பி.

## காந்தியப் பொருளியற் கருத்துகள்

இந்திய நாட்டிற்கே உரித்தான பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு, சமயத் தனித் தன்மையினை மையமாகக் கொண்டு பொருளாதார முன்னேற்றத்திற்கான பல கோட்பாடுகள் உள்ளன. காந்தியப் பொருளியல் கருத்துகள் (Gandhian Economic Thoughts) வன்முறை இன்மையினை (Non Voilence) அடிப்படையாகக் கொண்ட ஆக்க அறிவியல்சார் பொருளியலாகும். இந்திய நாட்டுத் தந்தையென அழைக்கப்படும் மோகன்தாசு கரம் சந்து காந்தி, அவர்வாழ்ந்த கி.பி.1869-1948ஆம் ஆண்டுக் காலத்தில் நிலவிய உலக நாடுகளின் பொருளாதார அமைப்புகளை நுட்பமாகக் கற்றறிந்தும் பயணங்களின் மூலம் பட்டறிந்தும் தம் கருத்துகளை உருவாக்கினார்.

காந்தி தம் கருத்துகளைப் பொருளியல் எனத் தனிப் புலமாகப் பிரித்துக் கூறவில்லையாயினும், அவர் எழுதிய கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றி லிருந்து அவரது பொருளியல் கருத்துகள் தொகுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை நூறு விழுக்காடு தன் நாடு (Cent Percent Swadeshi), அகக் கட்டுமானத் திட்டம் (Constructive Programme), கதர்ப் பொருளாதாரம்-அதன் பொருளும் இடமும், உணவுப் பற்றாக்குறையும் வேளாண்மையும், இந்தி யாவின் தன்னாட்சி, ஊரகத் தன்னாட்சி, சருவோத யம், அகிம்சை, சமநிலை முதலியனவும்; ‘இளைய இந்தியா’ (Young India), அரிசனர் (Harijan) போன்ற கால இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளும் ஆம்.

காந்தி, சமயப் பற்று மிக்க குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தமையால், அவர்தம்பொருளியல் கருத்துகளில் அறநெறி செறிந்து காணப்படுகிறது. காந்தி இந்தியா வில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியைப் பெற்று, பின் னர்ப் பிரிட்டனில் சட்டக் கல்வியைப் பெற்றமை யால் தாய்நாட்டைப் பற்றிய அறிவையும் உலக அறி வையும் குறிப்பாக ஐரோப்பிய அரசியல் பொருளா தார, சமய, பண்பாட்டு அறிவையும் முழுமையாக அறிந்தார். தென் ஆப்பிரிக்காவில் கி.பி. 1893-ஆம் ஆண்டு முதல் 1914-ஆம் ஆண்டுவரை வாழ்ந்து, பின் தங்கிய உலக நாடுகளின் பொருளாதார நிலையை யும் அயல்நாட்டில் வாழும் இந்தியர்களின் நிலையை யும் நன்கு ஆராய்ந்தறிந்தார். இத்தகைய வாழ்க் கைப் பின்னணி காந்தியப் பொருளியல் கருத்து வளர்ச்சிக்குக் கருவூலமாக அமைந்தது.

உபநிடதங்கள் (Upanishads), கீதை, இரசுகினின் (Ruskin) ‘கடையனுக்கும் கடைத்தேற்றம்’ (Unto this Last) என்னும் நூல், தால்சுடாயின் (Tolstoy) கோட்பாடுகள் போன்றவையும் காந்தியின் பொரு ளியல் கருத்து உருவாக்கத்திற்குப் பேரளவில் உத வின. தால்சுடாயின் சமநிலையியம் (Equalitarinism), எளிமை (Simplicity), தன்னொறுப்பு வாழ்வு (Asce-ticism) ஆகியவற்றைக் காந்தி, தம் பொருளியல் கருத்துகளின் அடிப்படையாகக் கொண்டார். இரசு கினின் நூலிலிருந்து காந்தி ஏற்றுக்கொண்ட முக்கிய கருத்துகளாவன: 1) மனித நலனை முன்னேற்றுவிக் காத நடவடிக்கைகள் அறநெறிக்கு அப்பாற்பட்டன. 2) தனி மனிதனின் நலன் சமுதாய நலனைச் சார்ந் தது. 3) உழைப்பே மதிப்பில் உயர்ந்ததும் சிறந்ததும் ஆகும். ஊதியம் உடலுழைப்பை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட வேண்டும்.

காந்தியப் பொருளியல் கருத்துகளின் வளர்ச்சி, காலங்களின் அடிப்படையில் மூவகை இயக்கப்படி நிலைகளாக (Phases) வேறுபடுகிறது. அவற்றுள் முத லாம் படிநிலை 1916-ஆம் ஆண்டு வரையிலான கால மாகும். இக்காலத்தில் காந்தி ஐரோப்பிய நாகரிக முன்னேற்றம், உற்பத்தி முறை, இயந்திரங்களைப் பயன்படுத்தல் ஆகியவற்றை முழுவதுமாக வெறுத்து அவை இந்தியாவிற்குத் தகாதனவென்று விலக்கி ஒதுக்கினார். பொருள் மையமற்ற கண்ணோட்ட அணுகுமுறையைப் பின்பற்றிப் பொருளாதாரச் சிக் கல்களுக்கு முடிவு காணவேண்டும் என வலியுறுத்தி னார். அதனை எதிர்மறைப் படிநிலை (Negative Phase) எனக் குறிப்பிடுகின்றனர்.

இரண்டாம் படிநிலைக் காலமான 1919க்கும் 1934க்கும் இடைப்பட்ட காலத்தில் காந்தியப் பொருளியல் கருத்துகள், அயல்நாட்டுப் பொருள் களை விலக்கிய தன்நாட்டு இயக்கத்தை (Swadeshi Movement) அடிப்படையாகக் கொண்டிருந்தன. அதனை ஐரோப்பிய முன்னேற்றக் கோட்பாட்டிற்கு எதிரான ஆக்கப்படிநிலை (Positive Phase) எனக் குறிப்பிடுகின்றனர்.

மூன்றாம் படிநிலைக் காலமான 1934 க்கும் 1948க்கும் இடைப்பட்ட காலத்தில் நடைமுறையில் செயற்படக்கூடிய சருவோதயா (Sarvodaya) இயக்கம் தோன்றி ஊரகப் பொருளாதார மறுமலர்ச்சிக்கான கருத்துகள் சிறப்பிடம் பெற்றன. ஊரக வளர்ச்சிக் கான திட்டங்கள், ஊரகத் தொழிற்றுறையைச் சீர மைத்தல், உற்பத்திநிறுவனங்களின் முற்றுரிமையை ஒழித்து உற்பத்தியைப் பரவலாக்கல் போன்றவை காந்தியப் பொருளியல் கொள்கைக் கோட்பாடு களுள் தலையாய இடம் பெற்றன.

**நலப் பொருளியல்**: காந்தியப் பொருளியல் கருத்துகள், பொருட் செல்வத்தை விட மனிதத் தன்மைக்கு (Humanism) முதலிடம் அளிக்கின்றன. மனித வளந்தான் (Human Resources) உண்மைச் சொத்து; தங்கமும் வெள்ளியும் சொத்துகள் அல்ல எனவும், சொத்துகளின் முழு நிறைவையடைதல் என்பதுமனமகிழ்ச்சி நிறைந்த எண்ணிக்கையிலடங்கா மனிதர்களைப் படைப்பது எனவும் காந்தி கூறினார். மகிழ்ச்சி நிறைந்த பெரும்பான்மை மனிதர்களை வாழ்விக்கும் நாடே செல்வமிக்க நாடு எனவும், பிறர் நலன்களை நாடித் தன் வாழ்க்கையால் பிறரைக் கவரும் தனி மனிதன் செல்வமிக்கவன் எனவும் குறிப் பிட்டுள்ளார். இவற்றிலிருந்து காந்தியப் பொருளி யல், தொண்டு செய்து வாழும் உயர் வாழ்க்கை நிலையை உருவாக்க முயல்கிறது என்பது அறியப்படு கிறது.

காந்தி, பொருளாதார நல நோக்கங்களும் நடவடிக்கைகளும் அறத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் எனக் கருதினார். அறமும் பொருளியலும் பிரிக்க இயலாதவை. சத்தியம், வன்முறையின்மை, எளிமை ஆகியன காந்தியின் நடைமுறை வாழ்க்கையில் காணப்பட்டன. அவற்றையே தனி மனிதனும் நாடும் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் எனத் தூய்மையை வலியுறுத்தும் அறவழிப் பொருளாதார வழிமுறையினைக் காந்தி வகுத்தார். மனித நலனை உச்சப்படுத்தல் என்பது மனிதனின் மதிப்பை (Human Value) வளர்த்தல் ஆகும். மனிதனின் மதிப்பு பொருள் சார்ந்த செழிப்பு அன்று, அது மனித உறவுகளிடையே (Human Relations) உண்டாகும் அன்பு, சமநிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உச்ச மகிழ்ச்சியும் மனநிறைவுமாகும்.

**ஊரகப் பொருளியல்**: ஊரகங்கள், தொன்மை இந்தியாவில் தன்னிறைவுடையனவாயிருந்தன. இந்திய ஊரகங்கள் மீண்டும் அவ்வளர்ச்சியடையப் பொருளாதார மறுமலர்ச்சியை அங்கு உண்டாக்கவேண்டுமெனக் காந்தி விரும்பினார். உண்மையான இந்தியாவை இந்திய ஊரகங்களில்தான் காண முடிகிறது. எனவே, ஊரகங்கள் தானியங்கும் பொருளாதார நிலையை அடைய வேண்டும். ஒவ்வொரு ஊரகமும் தன்னிறைவைப் பெற்றுக் குடியரசாக(Republic) விளங்கவேண்டும். இந்திய ஊரகங்களில் காணப்படும் சுரண்டல் (Exploitation) நிலைக்கு, துணைத் தொழில், மருத்துவ வசதி, வடிகால் வசதி ஆகியன இல்லாமையும் வறுமையுமே காரணங்களாகும். சுரண்டலிலிருந்து விடுதலை காணக் குறிக்கோளுடை ஊரகத் தன்னாட்சி (Ideal Village Swaraj) என்ற கருத்தைக் (Concept) காந்தி வலியுறுத்தினார்.

காந்தியின் குறிக்கோளுடை ஊரகத் தன்னாட்சியின் குறிப்பிடத்தக்க தன்மைகளாவன: 1) ஊரக அமைப்பில் ஒழுங்குநிலை, 2) கனி தரும் மரங்கள் வளர்த்தல், 3) மருத்துவ வசதி அளித்தல், 4) அற நிலையம் நிறுவுதல், 5) உணவு உடைகளில் தன்னிறைவை அடைதல், 6) சாலைகளும் சந்து முடுக்குகளும் தூய்மையாக இருத்தல், 7) சாலைகளிலும் தெருக்களிலும் வடிகால் வசதி அமைத்தல், 8) திருடர்,கொடிய மிருகங்கள் ஆகியோரிடமிருந்துபாதுகாப்பு அளித்தல்,9) பொது அரங்கம், கலை அரங்கம், பள்ளிக்கூடம் ஆகியன நிறுவுதல், 10) குடிநீர் வசதி அளித்தல், 11) கேளிக்கை வசதிகள், விளையாட்டுக் களம் போன்றவை அமைத்தல், 12) கட்டாய அடிப்படைக் கல்வி அளித்தல், 13) கூட்டுறவு மூலம் ஊரக நடவடிக்கைகளை நிருமாணித்தல், 14) வயதுவந்த ஊரக மக்களின் மறைமுக வாக்களிப்பால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்ட ஊராட்சி மன்றத்தால் ஊரகம் ஆளப்படல், 15) ஊரகப் பஞ்சாயத்து ஆட்சி, நீதி, சட்டமியற்றல் (Executive Judicial & Legislation) ஆகிய அதிகாரங்களைக் கொண்டிருத்தல், 16) சுழற்சி முறையில் ஊரகக் காவலர் பணியாற்றல், 17) சாதி ஒழிப்பைச் செயற்படுத்தல்.

இந்திய ஊரகங்களில் காணப்படும் வறுமையைக் கல்வி, கால்நடைப் பாதுகாப்பு, மருத்துவ வசதி, சத்துணவு ஆகியவற்றால் ஒழிக்கவேண்டும். கதர் உற்பத்தி, கையினால் மாவு அரைத்தல், திரித்தல், எண்ணெய் சவர்க்காரக் கட்டி (Soap), தாள், தீப்பெட்டி முதலியன உற்பத்தி செய்தல், உணவுப் பொருள்களைப் பாதுகாத்தல், பக்குவப்படுத்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளினால் ஊரகத் தொழில் வளர்ச்சியடைவதுடன் ஊரக மக்கள் வேலை பெற்று வாழ இயலும் என ஊரகத் தொழில் முன்னேற்றத்தைக் காந்தி ஊக்குவித்தார்.

**கதர்**: ஊரகத் தொழில்களுள் கதர்த் தொழிலுக்குக் காந்தி முதலிடம் அளித்தார். கதர் உற்பத்திப் பெருக்கத்தின் இன்றியமையாத் தேவையினைப் பல வகைகளில் எடுத்துரைத்துத், தானும் கதர் உற்பத்தி செய்து அதனையே அணிந்து அதன் சிறப்பை வலியுறுத்தினார். அகக் கட்டுமானத் திட்டத்திலும் கதர்த் தொழில் தனிச் சிறப்பிடம் பெற்றது. ஒவ்வோர் இந்தியனுக்கும் ஆண்டுக்கு 13முழத் துணி ஆடைக்காகத் தேவைப்படுவதால், அத்தேவையைப் பேரளவுத் தொழிற்சாலைகளால் அளிக்க இயலாது என அத் தேவையினைக் கணக்கிட்டு ‘இளைய இந்தியா’ (Young India) கால இதழில் புள்ளிவிவரங்களுடன் ‘சுதேசி’ என்ற கட்டுரையில் காந்தி குறிப்பிட்டார்.

இந்திய நாட்டு மக்களின் ஒற்றுமை, சமநிலை, பொருளாதார விடுதலை ஆகியவற்றின் சின்னமாகக் கதர் விளங்கும் எனக் காந்தி கூறினார். காந்தியின் கதர்க் கொள்கை, உற்பத்தியில் பரவலையும் (Decentralisation) பங்கீட்டில் மனிதனின் அடிப்படைத் தேவையையும் உள்ளடக்கியது. கதர் மனித வாழ்வுக்கு நிலையான வேலையைத்தந்து, சோம்பலை ஒழிக்கும் கருவியாகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் எனக் காந்தி கூறினார். கதர்த் தொழிலில் சுரண்டல் இல்லை; பேரளவில் முதல் தேவைப்படுவதுமில்லை. நாட்டிலுள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி நாட்டு மக்களால் உள்நாட்டு அங்காடிக்கு உற்பத்தி செய்யப்படும் கதர், குடிமக்களின் ஒருங்கிணைந்த திறமை வளர்ச்சிக்கும்

உறுதுணையாயிருக்கும் எனக் காந்தி கருதினார். அனைத்திந்திய நூற்போர் கழகம், அனைத்திந்திய கதர் ஊரகத் தொழிற்கழகம் போன்றவற்றை நிறுவி அவற்றின் மூலம் ஊரகத் தொழில் வளர்ச்சியைக் காந்தி பெருக்கினார்.

கதர் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கைராட்டின் (Charka) நன்மைகளாகக் காந்தி குறிப்பிட்டவைகளாவன: 1) குறைந்த முதலீட்டில் நடைபெறும் தொழில், 2) எளிதாக இயங்கும் கருவி, 3) வேளாண்மையினருக்கு நிலையான வருமானத்தை அளிப்பது,4) ஆண்டு முழுவதிலும் வேலைவாய்ப்பினை அளிப்பது, 5) பஞ்சத்தை ஒழிக்கக்கூடியது, 6) துணைத் தொழில் வளர்ச்சியை உண்டாக்குவது, 7) செல்வப் பங்கீட்டைச் சமநிலைக்குக் கொண்டுவரச் செய்வது, 8) வேலையின்மையை ஒழிப்பது, 9) வரையறையற்ற தேவையினையும் அங்காடியையும் அளிப்பது.

இந்தியாவில் 1910-இலும் 1925-இலும் கொடிய வறட்சியும் வெள்ளப் பெருக்கமும் ஏற்பட்ட காலத்தில் கைராட்டை வருமானம் உண்டாக்கும் உடனடித் தொழிலாகப் பயன்படுத்தப்பட்டது. வன்முறை இன்மைக்குச் சின்னமாகக் காந்தி கைராட்டையைக் குறிப்பிட்டார். 'நூற்பு மூலம் தன்னாட்சி' என்ற அறைகூவலை மக்களுக்கு அளித்தார்.

**பரவலாக்கல்**: காந்தி அரசியலிலும் பொருளாதாரத்திலும் அதிகாரம் ஒருசிலரிடம் குவிவதினால் உண்டாகும் தீமைகளை நன்கறிந்து அதற்கு மாறான பரவலாக்கல் முறையை வலியுறுத்தினார். பரவலாக்கலின் இன்றியமையாமையைத் தெளிவாக்கக் குவிதலினால் விளையும் கேடுகளைச் சுட்டிக்காட்டினார். பொருளாதார அமைப்பிலும் செயல்முறையிலும் நெறி பிறழ்தலும் சிக்கல்களும் காணப்படுவதற்குக் குவிதல் தலையாய காரணமாயிருப்பதை விளக்கினார். பேரளவுத் தொழிற்சாலைகள் முற்றுரிமைகளாகச் செயற்பட்டுப் பொருளாதாரத்தையும் அங்காடியையும் தங்கள் வயப்படுத்துவதையும் அதனால் நுகர்வோர் நலன், விருப்பம் ஆகியன பாதுகாப்பில்லாமல் நலிவுறுவதையும் எடுத்துக் காட்டுகளுடன் காந்தி விளக்கினார்.

குவிதல் ஒரு சிலரின் நலனை மட்டும் கருத்தில் கொள்வதால் பிற தனியார் மட்டுமல்லாமல் நாடும், நாட்டின் இயற்கை வளமும் பாதிப்புக்குள்ளாகின்றன. மனிதத் திறமையும் பொருளாதார ஆக்கத் திறனும் நாட்டின் எல்லாத் துறைகளிலும் வலுவிழக்கின்றன. பல ஆக்க நடவடிக்கைகள் செயலிழந்து குறைந்து விடுகின்றன. நாட்டின் பொருளாதார வளம் குன்றுவது மட்டுமன்றி, அதுவே வறுமைக்கும் அடிமைத்தனத்திற்கும் நாட்டின் விடுதலை இழப்பிற்கும் அயல்நாட்டாரின் ஆட்சிக்கும் அடிப்படை எனக் காந்தி குறிப்பிட்டார்.

பரவலாக்கல் முறையின் அடிப்படையில் பொருளாதாரம் இயங்கினால் மட்டுமே நாடு செழிப்புறும்: உற்பத்தி பெருகும்; உற்பத்தித் திறன் உயரும்; மக்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வு நீங்கும்; வறுமை ஒழியும் எனக் காந்தி கூறினார். பரவல் முறையில் நுகர்வோர் நலன் பாதுகாக்கப்படும். உணவு, உறைவிடம், உடை ஆகிய வாழ்க்கைக்கு இன்றியமையாத் தேவைகள் தேவையான அளவு உற்பத்தி செய்யவும் நியாயமான முறையில் பங்கீடு செய்யவும் பரவல் முறையே சிறந்தது. வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கவும் அறம் சார்ந்த பண்பாட்டை வளர்க்கவும் பரவல் முறையிலான உற்பத்தியினால் தான் முடியும் எனக் காந்தி கருதினார்.

காந்தியின் ஊரகப் பொருளாதாரம் உருவாகவும் ஊரகங்கள் தன்னிறைவையடையவும் கதர்த் தொழில் வளர்ச்சியடையவும் நடைமுறையில் செயற்படுத்தக்கூடியது உற்பத்தி முறையைப் பரவலாக்கலாகும். இம்முறையில் காந்தி சிற்றளவுத் தொழில் (Small Scale Industries), குடிசைத் தொழில் (Cottage Industries), கதர் உற்பத்தி போன்றவற்றை உள்ளடக்கினார். இத்தொழில்கள் சிறிய அளவில் தனி இல்லங்களில் தொடங்கப்படலாம். கூட்டுறவு முறையில் ஊரகங்களிலும் நகரங்களிலும் நிறுவப்படலாம். இவற்றிற்கு உயர்ந்த தொழில் நுட்ப அறிவும் திறமையும் இயந்திரங்களும் பேரளவில் மூலதனமும் தேவையில்லை. குறிப்பாக, உடனடித் தேவைக்குப் பரவலாக்கல் முறையே உகந்ததாகும்.

காந்தி, குவிதலினால் உண்டாகும் முற்றுரிமையையும் (Monopoly) அதோடு தொடர்பான உறவுகளையும் செயற்பாட்டையும் கடுமையாக வெறுத்தார். பொது மக்களுக்கும் உழைக்கும் தொழிலாளர்களுக்கும் பங்கு அளிக்காத ஆதாயத்தைக் கொண்ட முற்றுரிமை இந்தியாவில் மக்களாட்சி செயற்படுவதற்கு உகந்ததன்று எனக் கூறினார். தனி மனிதனின் விடுதலை, தன்னாட்சி, நாட்டுடைமையாக்கல் ஆகிய மூன்றும் ஒரு நாட்டை வலுப்படுத்தும் எனக் காந்தி கூறினார்.

**எந்திரங்களைப் பயன்படுத்தல்**: காந்தி, உற்பத்தி எந்திரமயமாகுதலை எதிர்த்தார். அதனால் எந்திரப் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழிக்கவேண்டுமெனக் கருதவில்லை. எந்திரங்களைப் பயன்படுத்துவதினால்

வேலையின்மை பெருகுவதையும், ஊரகங்களில் சுரண்டல் வளர்ச்சி பெறுவதையும், தொழில் முற்று ரிமை வளர்ச்சி அடைந்து செல்வம் ஒருசிலரிடம் குவிவதையும் கருத்திற்கொண்டு, எந்திரப் பயன்பாட் டைக் கட்டுப்பாட்டுடன் வைத்துக்கொள்ள வேண்டு மென அவர் கருதினார். மக்களின் ஆக்கத்திறனை உயர்த்தவும் நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக் கவும் தேவையான தொழில் நுட்பத்தையும் கருவி களையும் காந்தி எதிர்க்கவில்லை.

அயல்நாட்டாரின் ஆட்சியாலும் மக்கள்தொகைப் பெருக்கத்தாலும் நாட்டில் நிலவிய வேலையின்மை, மூலதனப் பற்றாக்குறை, வறுமை ஆகிய சிக்கல் களுக்கு உடனடி முடிவுகள் காண, உயர்ந்த தொழில் நுட்ப அறிவு வளர்ச்சியையும், எந்திரங்களைப் பயன் படுத்தும் பேரளவுத் தொழிற்சாலைகள், மிகையான மூலதனம் ஆகியவற்றையும், அவற்றிற்கான அயல் நாட்டார் அறிவையும் உதவியையும் இறக்குமதியை யும் நாடியிராமல், இந்தியாவிலுள்ள மக்கள் வளத் தையும் அவர்கள் உடலுழைப்புத் திறனையும் இயற்கை வளத்தையும் மூலதனமாகக் கொண்டு சிறிய சிறிய தொழில்கள் மூலம் பொருளாதாரத்தை வளம்பெறச் செய்யவேண்டும் என்றார். எந்திரமய மாக்கலை நம்பியிருப்பது அக்காலச் சூழ்நிலைக் குகந்ததன்று என்பதைக் காந்தி வலியுறுத்தினார். இக்கருத்தினையே பொருளியல் அறிஞர்களான சுமேக்கர் இ.எப். (Shumacher E.F.), குன்னார் மிர் தால் (Gunnar Mirdal) போன்ற பலரும் வலியுறுத்தி யுள்ளனர்.

எந்திரங்களைப் பயன்படுத்தியதால் இந்தியக் கைத்தொழில் நசுக்கப்பட்டுள்ளதையும், பேரளவுத் தொழிற்சாலை உற்பத்தி, இரயில் போக்குவரத்து போன்ற முன்னேற்றங்கள் ஆளும் அயல்நாட்டாரின் நாட்டுப் பொருளாதார நலனையும் இராணுவப் பாதுகாப்பு நலனையும் நோக்காகக் கொண்டுள்ளன என்பதையும் காந்தி மக்களுக்குத் தெளிவாக விளக்கி னார். நாடு விடுதலை பெற்றபின் இந்தியப் பண் பாட்டிற்குகந்த தொழில் நுட்ப அறிவு, எந்திரப் பயன்பாடு, போக்குவரத்து முன்னேற்றம் ஆகியன ஏற்பட வேண்டும் எனக் கருதினார்.

மக்கள் வளப் பற்றாக்குறை நிறைந்த நாடு களுக்கு எந்திரங்கள் இன்றியமையாததாகும். காலம் சார் தொழிலினாலும் (Seasonal Employment) வேலையின்மையாலும் இந்திய ஊரக மக்கள் அல்ல லுறுகின்றனர். எனவே, பெரும்பாலும் ஓர் ஆண்டில் ஆறு திங்கள் உழைக்க வாய்ப்பின்றிச் சோம்பலுறுங் கைகளுக்கு வேலை வாய்ப்பை அளிக்க வேண்டு மானால் எந்திரங்களைத் தவிர்க்கவேண்டும்.

**அறக்கட்டளைக் கோட்பாடு**: ‘உடைமையின்மை’ (Non-possession) என்ற கருத்தின் அடிப்படையில் தனி மனிதனின் உடைமைகள் நாட்டிற்கும் சமுதாயத் திற்கும் உரியன என்பதனைக் காந்தி தம் அறக்கட்ட ளைக் கோட்பாடாக (Doctrine of Trusteeship) வெளியிட்டார். காந்தியின் கருத்துப்படி ஒருவன் தன் வாணிகம், தொழில், உழைப்பு ஆகியவற்றால் பெரும் செல்வம் ஈட்டினாலும், மரபுரிமையாகப் பெற்றா லும் அவை அவனுடைய தனிப்பட்ட சொத்துரிமை ஆகா. ஒருவனுக்குத் தேவையான செல்வம் மட்டுமே அவனுக்குரியதாகும். எஞ்சிய செல்வம் சமுதாயத் துக்குரியது. அதனை அச்சமுதாயத்தின் நலனுக் காகச் செலவு செய்யவேண்டும். இதுவே காந்தியின் அறக்கட்டளைக் கோட்பாட்டின் கருத்துருவாகும்.

அறக்கட்டளைக் கருத்துருவின் அடிப்படையில் முதலாளித்துவத்தின் (Capitalism) தீமைகளைக் காந்தி விளக்கினார். பேரளவில் செல்வத் திரட் சியை உண்டுபண்ணும் முதலாளித்துவம் (Capitalism) கொள்ளைப் பொருளுக்கு ஈடானது என வும், அப்பொருளாதார அமைப்புக் கொள்ளையடித்து வாழும் வாழ்க்கை முறை எனவும் காந்தி குறிப்பிட் டார். தன்னிச்சையாகவே மக்கள் தங்களின் உபரிச் செல்வத்தைப் பொதுமக்களின் நலனுக்காகவும் பங் கீட்டிற்காகவும் விட்டுக் கொடுக்காவிட்டால் இரத்தப் புரட்சி (Bloody Revolution) உண்டாகும் என அவர் கூறினார். அத்தகைய கொடுமையான வன்முறை யைத் தவிர்க்கவும் நிலையான பொருளாதார அமைப்பை உருவாக்கவும் அறக்கட்டளையே சிறந் தது என அவர் கருதினார். இந்தியச் சமுதாயத்தில் நிலவும் வகுப்புப் பிரிவினையைக் (Class-struggle) கட்டாய அற நெறிமுறையினால் (Ethical Force) ஒழிக்க விரும்பினார். ‘இன்பம் என்பது பொருள் களைவைத்திருப்பதால் உண்டாவதன்று; பகிர்ந்தளிப் பதில் இருக்கிறது’ என அவர் கூறினார்.

பகுத்தறிவு, பண்பாடு, கல்வி ஆகியவற்றால் முத லாளிகள், தங்களிடம் வைத்திருக்கும் மூலதனமும் ஆதாயமும் உழைக்கும் தொழிலாளரின் கனிகள் என்பதை உணரும்படி செய்ய வேண்டும். செல்வக் குவிப்பில் விளையும் தீமைகளை முதலாளிகள் உண ரும்போது தங்கள் நாட்டு மக்களுடைய பொதுநலன் கருதித் தங்களிடம் குவிந்துள்ள செல்வத்தைப் பங்கீடு செய்யத் தாமாகவே முன்வருவார்கள். அத்தகைய சூழ்நிலை உருவாகும்போது அவர்கள் அறக் காப் பாளர்களாக (Trustees) மாறிவிடுவார்கள். அத

னால் தொழிலாளர் யாவரும் தேவையான உண வும், உறைவிடமும், கல்வியும் தூய்மையான சுற்றுப் புறச் சூழ்நிலை வசதியும் மருத்துவ வசதியும் பெறு வார்கள்.

காந்தியின் அறக்கட்டளைக் கோட்பாட்டின்படி சமுதாயத்தின் சொத்து முழுவதும் அறநிலையத் துக்குச் சொந்தமானது. அச்சொத்து சமுதாயத்தி லுள்ள செல்வருக்கும் ஏழைகளுக்கும் உரியது. முத லாளிகள் அற நிலையத்தின் காப்பாளர்களாகப் பணியாற்றித் தங்கள் நலனை மட்டும் நாடாமல் பிறர் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவார் கள். தொழிலாளர்கள் தங்கள் நம்பிக்கை, முயற்சி, உழைப்பு, யாவற்றையும் அறக்காப்பாளர் மேல் வைத்து அவர்களைத் தங்களுக்கு நன்மை செய்பவர் களாகக் கருதுவர். அதனால், தொழிலாளரின் பொதுநலனும் திறமையும் உயரும். தொழிலாளி முதலாளி என்ற வகுப்புப் பிரிவினையும் ஒழியும்.

காந்தி, தம் அறக்கட்டளைக் கோட்பாடு பிற சமயக் கோட்பாடுகள் தத்துவங்கள் யாவற்றிற்கும் மேலானது, உயர்ந்தது, நிலையானது என நம்பி னார். சமுதாயச் சமநிலைக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நீங்குதற்கும் அறக்கட்டளையே சிறந்த வழி எனக் கூறினார்.

காந்தியின் அறக்கட்டளைக் கோட்பாட்டில் பின்வரும் ஆறு தலையாய கூறுகள் அடங்கும். 1) முதலாளித்துவத்தை ஒழித்து மனித நலத்துடன் அமையும் சமநிலைச் சமுதாயத்தை உருவாக்கும். 2) சமுதாய நலனுக்குரியவற்றைத் தனி மனிதன் சொத்துரிமையாகக் கொள்ள இயலாது. 3) சொத் துரிமையையும் அவற்றின் பயன்பாட்டையும் சட் டத்தின் மூலம் நெறிப்படுத்துவதைப் புறக்கணிக்க லாகாது. 4) இவ்வாறு அரசு நெறிப்படுத்தும் அறக் கட்டளையின் கீழ், தனியார் தன்னல நோக்குடன் சமுதாய நலனைப் புறக்கணித்துச் சொத்துரிமை கொள்ளவோ பயன்படுத்தவோ கூடாது. 5) கண்ணி யமான ஒரு வாழ்க்கைத்தரத்தை வரையறுப்பதில் உச்ச வருவாய்க்கும் குறைந்த வருவாய்க்கும் இடை யேயுள்ள ஏற்றத்தாழ்வு நியாயமானதாகவும் சீரான தாகவும் இருக்க வேண்டும். அது காலப்போக்கிற் கேற்றவாறு மாற்றக்கூடிய இயல்புடைய வரையறை யாகவும் இருக்க வேண்டும். 6) உற்பத்தியின் இயல்பு, தேவையை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்பட வேண்டும். அது தனி மனிதனின் விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

**தொழிலாளர் நலன்:** காந்தியப் பொருளியற் கருத்துகளின் கூறுகள் யாவற்றிலும் தொழிலாளரின் நலன் பாதுகாக்கப்பட வேண்டியதன் தேவையும் இன்றியமையாமையும் மீண்டும் மீண்டும் வலியுறுத் தப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளில் தொழிலாளர் மனிதத் தன்மையற்ற வகையில் நடத்தப்படுவதை யும் அவர்களின் உழைப்பு நியாயமற்ற முறையில் சுரண்டப்படுவதையும் காந்தி வன்மையாகக் கண்டித் தார். குழந்தைத் தொழிலாளர்கள் அனுமதிக்கப்படு வது நாட்டிற்கு இழிவு என அவர் குறிப்பிட்டார். தொழிலாளர்களின் வேலை நேரம் குறைக்கப்பட்டுத் தொழிலாளர்களுக்குத் தேவையான ஓய்வு நேரம் அளிக்கப்பட வேண்டும் எனவும், தொழிற்சாலை களில் பாதுகாப்பு வசதிகள் (Safety Measures) அளிக் கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த (Harijan) தொழிலாளரை வேறுபடுத்தாமல் அவர்களையும் கண்ணியமாக நடத்திச் சீரான தகுந்த ஊதியம் வழங்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

தொழிலாளரின் ஊதியம் உயரவேண்டும் என அவர் 1920-ஆம் ஆண்டிலிருந்தே வலியுறுத்திக் கொண்டிருந்தார். வாழ்க்கைக்கு வேண்டிய குறைந்த அளவு ஊதியம் செயற்படுத்தப்பட வேண்டும் என வும், அவ்வூதியம் தொழிலாளரின் குடும்பம், வீடு, உடல்நலம், உளம், ஆன்மா ஆகியவற்றைத் தூய்மை யாகப் பாதுகாத்துக்கொள்ளத் தேவையானவற்றை அளிப்பதாயிருக்க வேண்டும் எனவும் அவர் கூறி னார்.

தொழிலாளரிடையே எப்பொழுதும் நல்லுறவு நிலையை அவர் விரும்பினார். அவர்களிடையே ஏற்றத்தாழ்வு நிலவக்கூடாது. கூட்டுறவு முறை யில் இருசாராரும் உற்பத்தியில் ஈடுபடவேண்டும். தொழிற் கழகங்களைத் தொழிலாளர் அமைத்து ஒற்றுமையுடன் தங்கள் தேவைகளை வலியுறுத்துதல் இன்றியமையாதது எனக் கருதினார். தொழிலாள ரின் உரிமைகளும் தேவைகளும் தொடர்ந்து புறக் கணிக்கப்பட்டால் வன்முறையற்ற, உண்மை வழி முறைகளில் வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவதை அவர் வரவேற்றார்.

காந்தி, நாட்டில் ஆங்காங்கே மாநிலங்களில் உணவுப் பற்றாக்குறையினால் உண்டான பஞ்சங் களையும் அதனால் விளைந்த ஏழ்மை, வறுமை ஆகிய கொடிய நிலையையும் தம் ஆய்வுப் பயணங் கள் மூலம் நேரில் கண்டறிந்தார். தொடக்க காலத் தில் இவை செயற்கைப் பற்றாக்குறை எனவும், ஊக வாணிகத்தால் வாணிகர் உண்டாக்கும் சீர்கேடு என வும் அவர் எண்ணினார். அதற்கு மாறான உண்மை நிலையை உணர்ந்த அவர் கூறிய கருத்துகளின் சிறப்

பியல்புகளாவன: 1) ஒவ்வொருவரும் தங்கள் உணவுத் தேவையின்அளவைக் குறைத்துக் கொள்ளவேண்டும். அது தங்கள் உடல்நலனைப் பாதுகாப்பதற்குப் போதுமானதாயிருக்க வேண்டும். குறிப்பாக உணவுத் தானியங்கள்,பருப்புவகைகள் ஆகியவற்றின் நுகர்வைக் கட்டுப்படுத்தவேண்டும். 2) அழகிற்காகப் பாதுகாக்கப்படும் பூந்தோட்டங்கள் உண்ணுவதற்குரிய காய்கறி, பழத்தோட்டங்களாக மாற வேண்டும். 3) இராணுவத்திற்குப் பேரளவில் வழங்கப்படும் உணவுப்பொருள்களின் அளவும் குறைய வேண்டும்.4) கறுப்பு அங்காடி (Black Market) முற்றிலுமாக ஒழிய வேண்டும். 5)ஆழ் கிணறுகள் தோண்டப்பட வேண்டும். நீர்ப்பாசன வசதிகள் பெருகவேண்டும். 6) எண்ணெய் வித்துகள், புண்ணாக்கு ஆகியவற்றின் ஏற்றுமதி தடை செய்யப்பட வேண்டும். புண்ணாக்கு உற்பத்தியைத் தவிர்த்து அவற்றால் உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் வழிமுறைகளை ஆராயவேண்டும். நாடு விடுதலை பெற்ற பின்னர் 1947-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்களில் உணவுக் கட்டுப்பாட்டுக் கொள்கையை அரசு தளர்த்தவேண்டும் எனக் காந்தி கேட்டுக் கொண்டார். தொடக்க காலத்திலிருந்து உணவுக் கட்டுப்பாட்டைக் காந்தி வெறுத்தார். இந்திய அரசு காந்தியின் கட்டுப்பாடற்ற கொள்கையின் கீழ், நெறிப்படுத்தப்பட்ட பங்கீட்டைச் செயற்படுத்தியும், ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கியும் உணவுப் பற்றாக் குறையைத் தீர்க்க முயன்றது. இந்தியா உணவுப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உணவு உற்பத்தி 1980-ஆம் ஆண்டளவில் பெருகியுள்ளது.

**மக்கள்தொகை**: கட்டுப்பாடற்ற மக்கள் தொகைப் பெருக்கத்தால் உணவு உற்பத்தியின் தேவை அதன் அளிப்பை மிஞ்சுகிறது. மக்கள்தொகைப் பெருக்கமும் அடர்த்தியும், நகர்வாழ் மக்களுக்கும் ஊரக மக்களுக்கும் வேலையின்மை, சுற்றுப்புறச் சூழ்நிலை நலக்கேடு போன்ற பல சிக்கல்களுக்குக் காரணங்கள் என்பதனைக் காந்தி ஏற்றுக்கொண்டார். மக்கள் தொகைக் கட்டுப்பாடு தேவை என்பதை ஏற்றுக் கொண்டார் எனினும், அதற்குப் பின்பற்றப்படும் வழிமுறைகளுள் கருச்சிதைவு, கருத்தடை போன்றவற்றை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மக்கள் தன் ்ளிச்சையாகவே பின்பற்றும் புலனடக்கம், திருமணமாகாமலிருத்தல், பாலினக் கல்வி, சிறு குடும்பம் ஆகியவற்றால் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கருதினார்.

**உடல் உழைப்பு**: மக்கள் தங்கள் தேவைகளை அவரவருடைய உடல் உழைப்பால் பெறவேண்டும் எனக் காந்தி கூறினார். செல்வரும் அறிவுத்திறனைக் கொண்டு தொழில் செய்பவரும் கூட உடல் உழைப்பின்றி வாழ முனைவது சரியன்று. உடல் உழைப்பு எளிமையையும் இன்னல்களையும் தியாகத்தையும் உள்ளடக்குகிறது. எத்தகைய காரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருப்பினும் உடலுழைப்பின் மூலந்தான் உழைப்பின் மேன்மை வெளிப்படும். ஒரு சிலர் மட்டும் உடலுழைப்பால் இன்னலுற்று வாழும் போது பிறர் அவற்றினூடே செல்லாமல் உண்டு வாழ்வது நீதியன்று. சமுதாயத்தில் சமநிலை நிலவுவதற்கு யாவரும் உடலுழைப்பிற்குட்பட வேண்டும் எனக் காந்தி கருதினார்.

தீண்டாமையையும், மதுவகைகளைப் பொது மக்கள் குடிக்க அனுமதிப்பதையும் ஒழிக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார். தீண்டாமை மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகளை உண்டாக்குகிறது. அதனை முதலில் ஒழித்து மனித உறவுகளில் நெருக்கமும் அன்பும் சமநிலையும் உண்டானால்தான் சமூகப் பொருளாதார நிலையில் சமநிலை உருவாகும் என அவர் குறிப்பிட்டார்.

மதுவகைகளை மருத்துவத் தேவைக்கு மட்டுமே பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் எனக் காந்தி கூறினார். மதுவகைகளைக் குடிக்க அனுமதிப்பது மனிதனின் ஆன்மாவுக்கும் உடல்நலத்துக்கும் கேடு விளைவிப்பதுடன், குடும்பங்களிலும் சமூகத்திலும் உள்ள பொருளாதார வளம் தீமையான முதலீட்டுக்குப் பயன்பட வழிவகுக்கிறது. குடும்பத்திலும் சமுதாயத்திலும் மன வருத்தங்கள், குழப்பங்கள், பூசல்கள் முதலியன தோன்றுவதற்கு மதுக் குடிப்பழக்கம் காரணமாகிறது.

மது விற்பனையை அரசு தடை செய்வதற்குக் காந்தி குறிப்பிட்ட செயல்முறைப் படிநிலைகள் பின் வருவனவாம்.1)மது விலக்குக் குறித்த சட்டம் இயற்றுவது, 2) பொது மக்களுக்கு அதன் தீமை குறித்த கல்வியறிவை அளிப்பது, 3) மது விற்கப்பட்ட பகுதிகளில் கேடு விளைவிக்காத பானங்களை விற்பது, 4) மது விற்பனையால் பெறும் வருமானத்தை மதுவிலக்குத் திட்டத்திற்காகச் செலவுசெய்தல். அரசு, வருமானத்திற்காக மது விற்பனையை ஊக்குவிப்பதை அவர் தீவிரமாக எதிர்த்தார். காந்தியின் கருத்துப்படி, காப்பி, தேயிலைப்பானம் போன்றவைகூட இன்றியமையா உணவுப் பொருள்கள் அல்ல.

காந்தியப் பொருளியற் கருத்துகள் அவர் வாழ்ந்த காலத்தைய இந்தியப் பொருளாதாரச் சிக்கல்களுக்குகந்த சிறந்த கோட்பாடுகளைக் கொண்டன எனினும், பிற்காலத்திய பொருளாதாரச்

சிக்கல்கள் பலவற்றிற்கும் வழிகாட்டும் திட்டங்களையும் தன்னுள் அடக்கியுள்ளன. அவை பண வீக்கம், கறுப்பு அங்காடி, கறுப்புப்பணம், கலப்படம், வருமான ஏற்றத்தாழ்வு, வேலையின்மை, வன்முறை, வறுமை ஆகியவற்றிற்கு முடிவு காணத் தேவையான மனித உள்ளங்களைப் பண்படுத்தும், புரட்சிகரமான, நடைமுறைப்படுத்தக்கூடிய கொள்கைகள் பலவற்றைக் கொண்டுள்ளன எனக் கருதப்படுகிறது.

அ.கு.சா.

**காந்தியம்**: மகாத்மா காந்தியடிகள் (கி.பி. 1869-1948) ஏறக்குறைய 55 ஆண்டுகள் ஆற்றிய பணிகள், அவர் பேசியவை, எழுதியவை ஆகியவற்றின் தொகுப்பே காந்தியம் என வழங்கப்படுகிறது. காந்தியடிகள் மறைந்த பிறகும் காந்தியம் சிந்தனை, ஆராய்ச்சி, செயல் வடிவம் ஆகியவற்றில் வளர்ந்து வருகிறது. காந்தியத்தைச் 'சருவோதயம்' என்ற சொல்லால் வழங்குவதும் உண்டு. காந்தியம் என்பது அதைத் தோற்றுவித்தவரின் பெயராலும் சருவோதயம்(Sarvodaya)என்பது அதன் கருத்தாலும் அமைந்த பெயர்களாகும்.

மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் 20 ஆண்டுகள் சமூக நீதிக்காகவும், இந்தியாவில் 35 ஆண்டுகள் அரசியல் விடுதலைக்காகவும் மக்கள் இயக்கங்களைத் தலைமையேற்று நடத்திக் குறிப்பிடத் தக்க வெற்றிகள் பெற்றார். மேலும், பல்வேறு பொருளாதார, சமூக, ஆன்மிகப் பணிகளையும் அவர் மேற்கொண்டார். அகிம்சை வழிமுறையையும் சத்தியத்தையும் எல்லா நிலைகளிலும் உறுதியுடன் பின்பற்றினார்.

மகாத்மா காந்தியடிகளின் பேச்சுகளும் எழுத்துகளும் 90 பெரிய தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவர் தனித் தத்துவமாகத் தம் கருத்துகளை முறையாக ஆக்கித் தரவில்லை. தம் காலத்தில் தம்மை எதிர்நோக்கிய சிக்கல்களைப் பற்றியே அவர் மிகுதியும் குறிப்பிட்டுள்ளார். அவற்றிற்கான விளக்கங்களையும் தெளிவினையும் அவர் செயல்களில் காணலாம். அவற்றைக் கொண்டு அவர்தம் தத்துவங்களை வடித்து எடுக்க வேண்டியுள்ளது.

**அடிப்படைக் கொள்கைகள்**:

**சத்தியம்**: மனித வாழ்வின் அடிப்படைப் பண்பு சத்தியந் தேடலாகும். முடிவான முழு முதல் உண்மையைக் காண முடியாவிட்டாலும், ஒருவர் தேடலின் விளைவாக அவர் காணும் உண்மையை ஏற்று, உறுதியுடன் அவரது புற, அக வாழ்வை அதற்கு இயைய மாற்ற வேண்டும். ஒருவர் தாம் கண்ட உண்மையைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவ்வுண்மைக்கு அப்பாற் செல்லவும் இடையறாது முயலுதல் வேண்டும்.

**அகிம்சை**: எந்நிலையிலும் கொல்லாமை, போர் நீக்கம், எல்லா உயிர்களையும் போற்றல், உடலுக்கும். உள்ளத்துக்கும் துன்பம் செய்யாமை, அநீதி, ஏற்றத்தாழ்வு,சுரண்டல் முதலியன தவிர்த்தல்,அன்பு, அருள், இரக்கம், தொண்டு, பொறை, மன்னித்தல், இன்சொல், இனிய செயல், கூட்டுறவு, ஒப்புரவு, அகிம்சை வழிச் செயல் (சத்தியாக்கிரகம்) ஆகியவற்றை உள்ளடக்கும் விரிந்த பொருளில் அகிம்சை என்னும் சொல் வழங்கப்படுகிறது. வன்முறைக்கு மாற்றாகச் சத்தியாக்கிரத்தைக் காந்தியடிகள்ஆற்றல் மிக்க கருவியாகக் கையாண்டுள்ளார்.

**அனைவரின் நலனும் கடைமனித நலனும்**: காந்தியம் அனைவரின் நலன் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. 'யாவரும் கடவுளின் குழந்தைகள்; மானிடம் ஒரு குடும்பம்; அனைவரும் சகோதரரே' என்ற சத்திய ஒளியில் முகிழ்த்தது அக் கொள்கை. அன்பு அதன் உயிர்நாடியாக அமைகிறது. 'கடைமனித நலன்' என்ற அடிப்படையின்மீது 'அனைவரின் நலன்' என்ற மாளிகை அமையவேண்டும். கடைமனித நலனைத் தேடும் போக்கு மானிடத் தாய்மை உணர்வின் அற்புதமான வெளிப்பாடாகும்.

**அறவியல் அடிப்படை**: குறிக்கோள்களைப் போல வழிமுறைகளும் நேர்மையானவையாக இருக்கவேண்டும் என்பதைக் காந்தியடிகள் வற்புறுத்தினார். அறவியலே அவரது சமய நெறியாக அமைந்தது. அறம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் மிளிர வேண்டும். தனி மனிதன் எல்லாவற்றிற்கும் மையம் எனினும் பொதுநலனை மையமாகக் கொண்டே தனிப்பட்டோர் இயங்க வேண்டும். சுதேசி, தற்சார்பு, எளிமை, உடலுழைப்பு, அறங்காவலர் நெறி, சுயகட்டுப்பாடு. உடைமையின்மை, சமய ஒற்றுமை, கதர் கிராமத் தொழில்கள், மகளிர், தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம், பரவல் முறை, மக்கள் சக்தி, ஊனமுற்றோர் பணி, சமத்துவம், சுயராச்சியம் தாய்மொழி வழிக் கல்வி, கிராம ராச்சியம் முதலியன காந்தியத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

**காந்தியமும் காலமும்**: காந்தியக்கோட்ப்பாடுகாந்திக்கும்முற்பட்டது.மானிடத்தின் கடந்த காலச் சத்தியந் தேடல், அறவியல் சாதனை ஆகிய அடிப்படைகளைக் கொண்டே காந்தியத்தைக் காந்தியடிகள் அமைத்தார். காந்தியத்தின் தாக்கம் நாள்தோறும் உலகெங்கும் வளர்ந்து வருவது கண்கூடு. காந்தியத்

தின் சில அமிசங்கள் உலகின் பல பகுதிகளில் நன்கு பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. அணு ஆயுதப் போர் அச்சுறுத்தல், புறச்சூழற் கேடு, வறுமை, தனியாக்கம், வன்முறை முதலிய வளர்ந்து வரும் சிக்கல்களிலிருந்து மனிதஇனம் விடுபட வருங்காலத்தில் காந்தியம் அருமருந்தாக அமையக்கூடும்.முதலாளித்துவம், பொதுவுடைமை, சமதருமக் கொள்கை முதலிய வற்றுக்கு மாற்றாகக்காந்தியம் அமையக்கூடும். ச.செ.

**துணை நூல்கள்:**

**Misra**. K.P. and **Gangal** S.C., Gandhi and the Contemporary World, Chanakya Publications, Delhi, 1981.

**Radhakrishnan**. S. and **Muirhead** J.H., Contemporary Indian Philosophy, S. Chand and Company Ltd, New Delhi, 1966.

**காப்கா, குர்த்து (கி.பி.1886-1941)** செருமன் நாட்டைச் சேர்ந்த உளவியல் அறிஞர்; உளவியலில் முழுநிலை உளவியல் (Gestalt Psychology) என்னும் கோட்பாட்டினை உருவாக்கியமூவருள் ஒருவர்;மாக்சு வெர்தீமர் (Max Wertheimer), கூலர் (Kohler) ஆகியோருடன் சேர்ந்து முழுநிலை உளவியற் கோட்பாட்டினைப் பரப்பியவர். குழந்தைகளின் நடத்தையைச் சிறுசிறு நிகழ்ச்சிகளாக வைத்து எடைபோடாமல்,அவற்றை முழுமையாக ஒழுங்குபடுத்திப் பொருள் காண வேண்டும் என்பது இவரது கோட்பாடாகும். கூலர் என்பவர் மனிதக் குரங்குகளை வைத்து முழுநிலை உளவியற் கோட்பாட்டை ஆராய்ந்தார்;



காப்கா

ஆனால் குர்த்து காப்கா (Kurt Koffka) அக்கோட்பாட்டைப் பேச்சு மூலம் அறிஞர்களிடம் பரப்பினார்.

காப்கா 1924-ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று, அந்நாட்டு உளவியலில் பெருமளவு பேசப்பட்ட நடத்தைக் கொள்கையினையும் (Behaviorism), முயன்று தவறிக் கற்றல் முறையினையும் (Trial-and-Error-Learning) பெரிதும் குறை கூறிப் பேசினார். பின்னர், வெர்தீமர், கூலர் ஆகியோருடன் சேர்ந்து, முழுநிலை உளவியற் கோட்பாட்டு வளர்ச்சிக்காக அமெரிக்காவில் வாழ்ந்தார். இவர் 1924-இல் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில்இக்கோட்பாடு பற்றிப் பேசினார். இவர் 1927-இல் சுமித்துக் கல்லூரியில் (Smith College) உளவியற் பேராசிரியரானார். இம்மூவருடைய கோட்பாட்டினையொட்டியே இன்று பெரிதும் பேசப்படும் அறிவுசார் உளவியல்(Cognitive Psychology) கோட்பாடு தோன்றியுள்ளது. செருமன் நாட்டிலுள்ள பெர்லின் நகரில் பிறந்த இவர், அமெரிக்காவில் காலமானார். இடம் பெயர்தலை உணர்தல் (Perception of Movement), பார்த்தலிலுள்ள சிக்கல்கள்,முழுமையான ஒழுங்கமைவு (Pattern)இளம் பருவத்தில் உண்டாகுதல் ஆகியன குறித்தும் இவர் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார். முழுநிலை உளவியலின் விதிகள் (Principles of Gestalt Psychology) என்பது இவர் நூல்களுள் குறிப்பிடத்தகுந்தது.

எஸ்.த.

**துணை நூல்கள்:**

**Boring**, **E.G.**, A History of Experimental Psychology Appleton-Century-Crofts, Newyork, 1950.

**Hilgard**, **E.R**. and **Bower** G.H., Theories of Learning, Appleton-Century-Crofts, Newyork, 1966.

**காப்கா பிரான்சு (கி.பி. 1883-1924)** ஒரு செருமன் ஆசிரியர். இவர் யூத வணிகரின் மகன். காப்கா பிரான்சு (Kapka Franz) பிரேகிலுள்ள (Prague) செருமன் பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்வி பயின்று, வேலையாட்களுக்கு விபத்து ஏற்பட்டால், அவர்களுக்குக் காப்புறுதி கொடுக்கும் நிறுவனத்தில் (Worker's Accident Insurance Company) பணித் தலைவராகச் சேர்ந்தார். இவர் 1907-ஆம் ஆண்டு நூல்கள் எழுதத் தொடங்கினார். ஆனால், இவர் நூல்கள் மிகுதியாக வெளியிடப்படவில்லை.

காப்கா பிரான்சிற்குப் (Kapka Franz) பல்வேறு அனுபவங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டன. இவர் செக்கு (Czech) நகரில் செருமன் மன்றத் தலைவராகவும்,

செருமனியில் ஒரு யூதராகவும், ஐயப்படத்தக்க மனிதராகவும் விளங்கினார். இவர் பிறவிலேயே ஓர் எழுத்தாளராகவும் நோயாளியாகவும் கோழையாகவும் நரம்புத் தளர்ச்சியுடையவராகவும் காணப்பட்டார்.

காப்கா பிரான்சின் கலைத்திறமை தனித்தன்மை வாய்ந்ததாகவும், வருவதுரைப்பதாகவும், சிறுசிறு துணுக்குகளாகவும் அமைந்திருந்தது. ஆகையினால், பெரும்பாலானவை ஒன்றிற்கொன்று தொடர் பற்றனவாய்க் காணப்படுகின்றன. இவருடைய மொழி, சிற்சில சமயங்களில் பிரேக்குச் செருமன் மனப் பான்மையையும் காட்டுகிறது. இவருடைய சில கதைகளில் நடுக்கம் நிறைந்த நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. இக்கால உளவியல் தொடர்பான பொறிகளை இயக்கும் ஆற்றலும் இவருக்கு அமைந்திருந்தது. மேற்கூறியவற்றை நல்லமுறையில் இவர் தம் எழுத்துகளில் கையாண்டிருக்கிறார். மேலும், இருத்தல் கொள்கையினரின் (Existentialists) கருத்துகளான பொருத்தமில்லாத தன்மையும்(Absurdity) அச்சமும் இவர் நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

காப்கா பிரான்சின் கதைகளான முயற்சி (The Trial), கடைசித் தீர்ப்பு நாள் (The Judgement), சட்டத்தின் முன்னே (Before the Law), தண்டனைக்குரிய முடிவு (The Penal Settlement) முதலியவைகள் சட்ட முறையில் தொகுப்பட்டவை மட்டுமல்லாமல் யூத பரம்பரையிலிருந்தும் எடுத்துக் கொள்ளப்பட்டவையாகும்.

காப்காவின் நூல்களில் பிராய்டு (Freud), மார்க்சு (Marx) ஆகியோரின் கருத்துகளும், கிறித்தவ சமய விளக்கங்களும் காணப்படுகின்றன.

இரா.கோ.

**துணை நூல்கள்:**

**Anders G., Franz Kaffka,** London, 1960.

**Eisner, P., Franz Kaffka** and Prague, Newyork, 1950.

***காப்சியன் பண்பாடு*** வடஆப்பிரிக்காவில் இருந்த கற்காலப் பண்பாடு. காப்சியன் பண்பாடு (Capsian Culture) கடைப்பழங்கற்காலம், இடைக்கற்காலம் ஆகிய காலங்களை உள்ளடக்கியதாகும். இப்பண்பாட்டு மக்களே முதன்முதலில் இருபக்க அலகுகளையுடைய கத்திகளை (Blade) ஒழுங்காகச் செய்தனர். நுண்ணிய கற்கருவிகள் செய்ததே இப்பண்பாட்டின் சிறப்பாகும். இவை பளிங்கு போன்ற எரிமலைப் பாறைகளிலிருந்து செய்யப்பட்டன. எலும்பினாலும் கருவிகள் இக்காலத்தில் செய்யப்பட்டன. இப்பண்பாட்டு மக்கள் உணவைச் சேகரிப்பவர்களாக விளங்கினர். திறந்த வெளிகளிலேயே இவர்கள் தங்கினர். இயற்கையாக இருந்த மலை அடிவாரங்களே இவர்களின் குடியிருப்புகள் ஆகும். இவர்கள் தொழில் வேட்டையாடுதலாகும். எனவே, இம் மலையடிவாரச் சுவர்களில் இம்மக்கள் வேட்டையாடிய காட்சிகளை மிக மெல்லிய கோடுகளில் வரைந்துள்ளமை அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களின் சமையல் குப்பைக் குவியல்களிலிருந்து இவர்கள் ஒதுக்கிச் சென்ற நத்தை ஓட்டுச் சில்லுகள் பெருமளவில் கிடைத்துள்ளன. காப்சியன் பண்பாட்டின் பிற்பகுதியில் மக்கள் கால்நடைகளை வளர்த்தனர். செம்பும் வெண்கலமும் மட்கலன்களும் பயன்பாட்டில் இருந்தன.

இப்பண்பாடு துனிசியாவிலுள்ள காப்சா (Gafsa) என்ற கற்காலப் பகுதியின் பெயரை வைத்துக் காப்சியன் பண்பாடு எனப்படுகிறது. இப்பண்பாடு வட ஆப்பிரிக்கா முழுவதும் பரவியிருந்தது. இப்பண்பாட்டுக் கூறுகளின் தடயங்கள் கென்யா, தங்கநீகா, தென் இசுபெயின் போன்ற நாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை எங்ஙனம் இப்பண்பாட்டுடன் தொடர்பு கொண்டன என்பதை அறிய இயலவில்லை. பிற்காலக் காப்சியன் பண்பாட்டின் பகுதியாகத் துனிசியாவிலுள்ள எல்-மேக்தா (el-Mekta) விளங்குகிறது. இதன் காலம் கி.மு. 7000க்கும் முந்தியதாகும். கென்யாவில் காம்பில்சுக் குகைகளில் (Gambles Caves) காப்சியன் பண்பாட்டைச் சார்ந்த மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை கி.மு. 5000-ஆம் ஆண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவை. இக்கலக் கணிப்பிலிருந்து இம்மக்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் வசித்த காகேசிய (Caucasoid) இன மக்கள் ஆவர் என்பதும், இவர்கள் பாலசுத்தீனத்திலிருந்து வட ஆப்பிரிக்காவைக் கடந்து துனிசியாவிற்கும் பின்பு கென்யாவிற்கும் பரவினர் என்பதும் அறிய வருகின்றன.

தென் இசுபெயினில் ஆப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட காப்சியன் குகை ஓவியங்கள் போன்ற மெல்லிய கோடுகள் கொண்டு விளங்கும் ஓவியங்களும் நுண்கற்கருவிகளும் கன்டுபிடிக்கப்பட்டன. இவை காப்சியன் பண்பாட்டுக் காலத்தைவிட முந்தியவை. இசுபெயினில் ஐரோப்பாவிலிருந்து வந்த மெக்டலேனியன் பண்பாட்டுக் கூறுகளை விட இவ்வோவியங்களும் நுண்கற்கருவிகளும், ஆப்பிரிக்கக் காப்சியன் பண்பாட்டுக் கூறுகளையே பெரிதும் கொண்டுள்ளன.

எனினும், இதன் தொடர்பு குறித்து அறிஞர்களிடையே குழப்பமே மிகுந்துள்ளது. சு.இரா.

**காப்பாளர்**: இந்து உரிமை வயது அடையாமை மற்றும் காப்புச் சட்டம், 1956 (Hindu Minority and Guardianship Act, 1956) பிரிவு 4 (ஆ)-இன் படி, 'காப்பாளர்' (Guardian) என்னும் சொல், இளவர் அல்லது அவர்தம் சொத்து அல்லது இரண்டையும் காத்துவரும் ஒருவரைக் குறிக்கும்.

**காப்பாளர் வகை**: காப்பாளர்,

1. இயற்கைக் காப்பாளர் (Natural Guardian), 2. இளவரது தந்தை அல்லது தாயார் உயில்மூலம் தோற்றுவிக்கப்பட்ட காப்பாளர் (Testamentary Guardian), 3. நீதிமன்றத்தால் தோற்றுவிக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட காப்பாளர் (Court Guardian), 4. நிலைப்பு நிலைக் காப்பாளர் (De facto Guardian) என நான்கு வகைப்படுவர்.

**இயற்கைக் காப்பாளர்**: இளவர் மற்றும் அவருடைய சொத்து (பிரிவினையாகாத கூட்டுக் குடும்பச் சொத்துத் தவிர) ஆகியவற்றிற்கு,

அ. சிறுவனுக்கும் திருமணமாகாப் பெண்ணுக்கும் தந்தை காப்பாளர்; அவருக்குப்பின் தாய் காப்பாளராக இருப்பார். ஆனால், ஐந்து வயது நிறைவடையாத வரையிலும் இளவர் சாதாரணமாகத் தாயின் பாதுகாப்பிலே இருந்து வருதல் வேண்டும். தந்தை, தாய் என்பதில் மாற்றாந் தந்தை, மாற்றாந் தாய் உள்ளடங்கார்.

ஆ. முறையில்லா மணப்பிறப்பின் வழித் தோன்றிய சிறுவனுக்கும் தாயே காப்பாளர். அவருக்குப்பின் தந்தை காப்பாளராக இருப்பார்.

இ. தத்தெடுக்கப்பட்டவர்களுக்கு முதலில் தத்தெடுத்த தந்தையும், பிறகு தத்தெடுத்த தாயும் காப்பாளராவார்.

ஈ. திருமணமான பெண்ணுக்குக் கணவன் காப்பாளராவார்.

ஆனால், காப்பாளராக இருப்பவர் இந்துவாக இல்லாமல் போய் விட்டாலோ முழுமையாக உலகைத் துறந்து காட்டுக்குச் சென்று விட்டாலோ துறவியாகி விட்டாலோ அவர் இயற்கைக் காப்பாளராக இருக்க முடியாது.

**இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்கள்**: இந்து இளவர் ஒருவரின் இயற்கைக் காப்பாளர், இளவரின் நன்மைக்காகவும் சொத்தின் பாதுகாப்பிற்காகவும் அவசியமான, நியாயமான, முறையான செயல்கள் எதையும் செய்யலாம். ஆனால், அவர் இளவரை ஒரு தனிப்பட்ட உடன்பாட்டில் பிணைக்க இயலாது. இயற்கைக் காப்பாளர் நீதிமன்றத்திடமிருந்து முன் அனுமதி பெறாமல்,

அ. இளவரின் அசையாச் சொத்தின் ஏதேனும் ஒரு பகுதியை அடைமானம் வைக்கவோ பிணையம் செய்யவோ விற்பனை மூலம் உரிமை மாற்றம் செய்யவோ கொடையாக அளிக்கவோ பரிமாற்றம் செய்யவோ வேறு ஏதேனும் செய்யவோ; அல்லது

ஆ. அச் சொத்தின் எப்பகுதியையேனும் ஐந்தாண்டுக் காலத்திற்கு அல்லது இளவர் உரிமை வயது அடைந்தபின் ஓராண்டுக்கு மேலாகக் குத்தகைக்கு விட முடியாது.

இவற்றிற்கு முரணாக அவர் எதையும் செய்தால் அது தவிர்க்கத் தக்கதாகும். ஆனால், அது அவசியமென்றும் இளவருக்கு உண்மையிலேயே நன்மை அளிக்கக் கூடியதென்றும் கருதப்பட்டால் அப்போது அனுமதிக்கப்படும்.

**உயில்வழிக் காப்பாளர்களும் அதிகாரங்களும்**: இயற்கைக் காப்பாளராய் இருக்கும் ஒருவர் இளவர், சொத்து அல்லது இரண்டிற்குமாக உயில்வழிக் காப்பாளராக ஒருவரை நியமிக்கலாம். தந்தை முதலாவதாகவும் அடுத்துத்தாயும் இயற்கைக் காப்பாளர்களை நியமிக்கலாம். முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகளுக்குத்தாய் உயில் வழிக்காப்பாளரை நியமிக்கலாம்.

**அதிகாரங்கள்**: உயில் வழிக் காப்பாளர்கள் தந்தை அல்லது தாயின் மரணத்திற்குப் பின் உயிலில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அவரின் காப்பாளர்களாய்ச் செயற்படுவர். இளவர் பெண்ணாக இருக்கும் நிலையில், உயில்வழிக் காப்பாளர்களின் உரிமை பெண்ணின் திருமணத்தோடு முடிவுறும்.

**முகம்மதியர் சட்டம்**: முகம்மதியர் சட்டம் காப்பாளர்களைப் பின்வரும் மூன்று வகையாகப் பிரிக்கிறது. 1. திருமணக் காப்பாளர்கள்,2. உரிமை வயது அடையாதோர்க்கான காப்பாளர்கள், 3. உரிமை வயது அடையாதோரின் சொத்துக்கான காப்பாளர்கள்.

இவற்றுள் திருமணக் காப்பாளர்களைத் தவிர மற்றவர்களுக்குக் காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டம், (The Guardians and wards Act, 1890) 1890-ஐப் பயன்படுத்துதல் வேண்டும்.

**திருமணக் காப்பாளர்கள்:** கீழே குறிப்பிடப்படு பவர்கள் முகம்மதிய இளவர் அல்லது புத்தி சுவாதீன மற்ற ஒருவருக்குத் திருமணக் காப்பாளராக இருப் பர்.

1. தந்தை, 2. தந்தையின் தந்தை, 3. உடன் பிறந்தானும் தந்தையின் உறவினரான எச்சதாரர் களும் ஒருவர் பின் ஒருவராக, 4. தாய், 5. தாயின் உடன்பிறந்தவர்களும் திருமண உறவு கொள்ளத் தடையாயிருக்கும் தாய்வழி உறவினர்களும், 6. அர சாங்கம்.

**உரிமை வயது அடையாதோர்க்கான காப்பாளர் கள்:** இவ்வகை இளவர்களுக்குத் தாயே முதல் நிலைக் காப்பாளராவார். தாய்–தந்தையரிடை மணமுறிவு ஏற்படும்போதும், தந்தை முகம்மதியராகவும் தாய் முகம்மதியர் அல்லாதவராகவும் இருக்கும்போதும், மறுமணம் செய்துகொள்ளும்போதும் கூடத் தாயே முதல்நிலைக் காப்பாளராவர்.

ஆனால், தாய் மதம் மாறிவிடும் போதும், மாற் றாந் தந்தை குழந்தையுடன் திருமண உறவு கொள் ளத் தடையில்லாதவனாயிருக்கும்போதும், தாய் குடும்ப நெறியினின்று பிறழ்ந்து இழுக்கு ஏற்படும் படி வாழும்போதும், திருட்டு, பரத்தமை போன்ற தொழில்களில் ஈடுபட்டு வாழும் போதும் காப்பாள ராய் இருத்தல் முடியாது.

கனபி (Hanabi) சட்டப்படி ஆண் குழந்தைக்கு ஏழு வயது வரையிலும், பெண் குழந்தைக்குப் பூப் பெய்தும் பருவம் வரையிலும் தாய் காப்பாளராய் இருப்பாள். தாய் இல்லாதபோது கீழே குறிப்பிடப் படுபவர்கள் வரிசைப்படி காப்பாளர்களாக இருப் பர். 1. தாயின் தாய் எத்தனை தலைமுறை!முன்செலி னும், 2. தந்தையின் தாய் எத்தனை தலைமுறை முன்செலினும், 3. உடன்பிறந்தாள், 4. தாய்வழி உடன்பிறந்தாள் (Uterine Sister), 5. தந்தைவழி உடன்பிறந்தாள் (Consanguine Sister), 6. உடன் பிறந்தாளின் மகள், 7. தாய்வழி உடன்பிறந்தா ளின் மகள், 8. தந்தைவழி உடன்பிறந்தாளின் மகள், 9. தாயின் உடன்பிறந்த பெண்கள்: அ. தாயின் உடன்பிறந்தாள், ஆ. தாயின் தாய்வழி உடன்பிறந் தாள், இ. தாயின் தந்தைவழி உடன்பிறந்தாள். 10. தந்தையின் உடன்பிறந்த பெண்கள்: அ. தந்தை யின் உடன்பிறந்தாள், ஆ. தந்தையின் தாய்வழி உடன் பிறந்தாள், இ. தந்தையின் தந்தைவழி உடன் பிறந்தாள்.

இவர்களில் எவரும் இல்லாதபோது தந்தையும், அவரும் இல்லாதபோது தந்தையின் தந்தையும், அவ ரும் இல்லாதபோது அதற்கு அடுத்து அடுத்து வரும் தந்தையின் உறவினரும் காப்பாளராய் இருப்பர். தந்தை ஒருவர் உயில் எழுதி வைப்பதன் மூலம் இக் காப்பாளர்களை மாற்றுதல் முடியாது. ஆனால், ஆணுக்கு ஏழு வயது நிறைவடைந்ததும், பெண் பரு வம் எய்தியதும் தந்தை காப்பாளராய் இருப்பார். தந்தை இல்லாதபோது பட்டியலில் குறிப்பிட்ட தாய் வழியினரைப்போல் தந்தையின் தந்தையை முதலாகக் கொண்ட தந்தைவழியினர் வரிசைப்படி காப்பாள ராய் இருப்பர். 'சாபி', 'கனபாலி' பிரிவினரின் சட்டப் படி ஆண் குழந்தைக்கு ஏழு வயது நிறைவடைகின்ற வரை தாயே காப்பாளர். அதற்குப் பிறகும் சிறுவன் தந்தையின் பாதுகாப்பை விரும்பாது தாயிடமே வளர விரும்பும்போது தாயே தொடர்ந்து காப்பாள ராய் இருந்து வருவாள். 'சியா' சட்டப்படி ஆண் குழந்தைக்கு இரண்டு வயது வரையிலும் (அதாவது பால் குடிக்கும் பருவம் வரையிலும்), பெண் குழந் தைக்கு ஏழு வயது வரையிலும் தாய் காப்பாளராக இருப்பாள். அதன் பிறகு தந்தை காப்பாளராக இருப்பார். இருவருள் ஒருவர் இறக்கும்போது மற் றொருவர் காப்பாளராவார். இருவரும் இறந்துவிடும் போது தந்தையின் தந்தை காப்பாளராய் இருப்பார்.

**உரிமை வயது அடையாதோர்க்கான சொத்துக் காப்பாளர்கள்:** இவ்வகைக் காப்பாளர்கள் மூன்று வகைப்படுவர்: 1. சட்ட நிலைக் காப்பாளர்(De Jure Guardian), 2. நிகழ்வு நிலைக் காப்பாளர் (De Facto Guardan), 3. நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப் பாளர்கள் (Guardians appointed by the Court).

**சட்ட நிலைக் காப்பாளர்கள்:** 1. தந்தை, 2. தந்தை யால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளர், 3. தந்தையின் தந்தை, 4. தந்தையின் தந்தையால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளர் ஆகியோர் சட்ட நிலைக் காப்பா ளர் ஆவார்.

**அதிகாரம்:** சட்ட நிலைக் காப்பாளர் காப்பி லுள்ளவரின் அசையாச் சொத்தை 1. காப்பிலுள்ள வருக்குச் சொத்தை விட்டுச் சென்றவரின் கடன் அடைப்பதற்காகவும், அவரது உயில்வழி வலியுறுத் திய காரியங்கள் நிறைவேற்றுவதற்காகவும், 2. காப் பிலுள்ளோரின் பராமரிப்பு மற்றும் இன்றியமையாத தேவைக்காகவும் 3. உடைமை மாற்றம் செய்யவில் லையெனில் சொத்து அழிந்துவிடும் அல்லது பெரும் நட்டம் ஏற்பட்டு விடும் என்ற நிலையில் அதனைத் தடுத்தற்காகவும் 4. சொத்துப் பிறர் கைக்குப் பறி போகும் நிலையில் அதைத் தடுத்தற்காகவும் 5. சொத்துக்கு இரட்டிப்பு விலை கிடைக்கும்போது அதனைப் பெறும் பொருட்டும் உடைமைமாற்றம் (Alienation) செய்யலாம்.

**நீதிமன்றக் காப்பாளர்**: தந்தையோ தந்தையின் தந்தையோ சட்டநிலைக் காப்பாளர்களை நியமிக்காதபோது நீதிமன்றம் இளவர் அல்லது இளவரது சொத்து அல்லது இரண்டிற்குமாக நீதிமன்றக் காப்பாளரை நியமிக்கும்.

**அதிகாரம்**: நீதிமன்றக் காப்பாளராக நியமிக்கப்படுபவர் சாதாரண செயல்களைத் தவிர்த்து மற்றைய செயல்களுக்கு நீதிமன்றத்தின் ஆணைகளைப் பெறுதல் வேண்டும். நீதிமன்ற அனுமதியுடன் நீதிமன்றக் காப்பாளர் செயல்களைச் செய்திருக்கும் போது, இளவர் பின்னாளில் உரிமை வயது எய்தியதும் அவை தவறானவை எனத் தவிர்க்க முடியாது. ஆனால் அனுமதி, வஞ்சித்தோ ஏமாற்றியோ பெறப்பட்டிருக்கும்போது மறுக்கலாம்.

**நிகழ்வுநிலைக் காப்பாளர்**:மேலே குறிப்பிடப்பட்டவர்களைத் தவிர வேறு வகையில் உள்ள காப்பாளர் நிகழ்வுநிலைக் காப்பாளர் (De Facto-Guardian) எனப்படுவர். நிகழ்வு நிலைக் காப்பாளர் மற்றக் காப்பாளர்களைப் போன்று சட்டப்படியான காப்பாளர் அல்லர். அதனால், அவர்தம் பொறுப்பிலுள்ள இளவரின் அசையா மற்றும் அசைவியல் சொத்துகளைப் பாதுகாத்து வரமுடியுமே தவிர மற்றபடி இளவரின் நலன்களுக்காக அவற்றை விற்கவோ உரிமை மாற்றம் செய்யவோ அடகு வைக்கவோ வேறு வகையில் ஏதேனும் ஒன்றைச் செய்யவோ முடியாது. இந்துச் சட்டத்தில் நிகழ்வு நிலைக்காப்பாளர்கள் இப்போது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பு.வே.

**காப்பியக்குடி** : இது ஒரு குடியின் பெயர். சங்ககாலப் புலவர்களுள் சிலர் காப்பியக்குடித் தொடர்பான பெயர் உடையவர்களாக விளங்கியுள்ளனர். தொல்காப்பியனார், வெள்ளூர்க் காப்பியனார், பல்காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார் போன்ற பெயர்கள் காப்பியக் குடியொடு தொடர்புடையனவாக அமைந்து இயற்பெயர் போல வழங்கப் பெற்றுள்ளன. காப்பியக்குடி என்பது ஊர்ப் பெயரென்றும் கருதுகின்றனர்.

**காப்பியக்குடி–2**: இது தமிழகத்தைச் சேர்ந்த ஓர் ஊரின்பெயர். இவ்வூர் தஞ்சை மாவட்டத்திலுள்ள சீகாழிக்குத் தென்கிழக்கே சிறிது தூரத்தில் உள்ளது. சிலப்பதிகாரத்தில், கண்ணகியின் பார்ப்பனத் தோழியாகிய தேவந்தியின் கணவன், இளமையில் தன் தாயொடு இவ்வூரில் வளர்ந்தான் என்னும் செய்தியினை இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். 'பார்ப்பனி தன்னொடு பண்டைத் தாய்பால், காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து' (சிலப். வரந்.82,83) என்பது இளங்கோ வாக்கு. காப்பியத்தொல்குடி என்பதில் காப்பியம் என்பது ஊரின் பெயரென்பதும், அவ்வூர் மிக்க பழமையானது என்பதும் உய்த்துணரத் தக்கனவாகும். அ.மா.ப.

**காப்பியஞ்சேந்தனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் சேந்தன் எனபதாகும். காப்பியம் என்பது இவர் தந்தையின் பெயராகவும் அல்லது இவர் ஏதேனும் ஒரு காப்பியம் எழுதியவராகவும் இருந்தமையால் இவ்வாறு வழங்கப்பட்டிருக்கலாம். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் (246) இடம்பெற்றுள்ளது. பாலைத் திணையில் அமைந்த அப்பாடலில் தலைவனின் பிரிவை எண்ணி வருந்தும் தலைவியைத் தோழி தேற்றுவதாக அமைந்துள்ளது. தலைவன் 'வருவேம்' எனக் குறித்த பருவம் வந்துள்ளதென்றும் பல்லியும் பக்கத்தே இருந்து நம்மைத் தெளிவிக்கிறது என்றும் கூறித் தேற்றுவதாகப் பாடியுள்ளார். இவர் பாடல் வாயிலாகப் பல்லி சொல்லுக்குப் பலன் காணுதலும் கட்டுக் காணுதலும் பழங்காலத்தில் வழக்கிலிருந்தன என்பது புலனாகும். வீ.சே.

**காப்பியம்**: காப்பியம் என்னும் தமிழ்ச்சொல், மகாகாவியம் என்னும் வடமொழிச் சொல், காப்பியம் எனப் பொருள்தரும் 'Epic' என்னும் ஆங்கிலச் சொல் ஆகியன ஒரே பொருளைக் குறிப்பன. 'கதை உரைத்துச் செல்வதாக அமைக்கப்படும் ஒரு வகை இலக்கியப் படைப்பு', என்பதே இவற்றின் பொதுப் பொருளாகும். இலக்கியப் படைப்புகளில் கதை உரைத்துச் செல்வதாக (Narrative) அமைக்கப்படுவன பல. கதைப்பாடல் (Ballad), புராணம் (Myth), அற்புதக்கதை (வீரசாகசக்கதை Romance), புதினம் (Novel), சிறுகதை (Short-Story) போன்ற பல உள்ளன. காப்பியம் என்பதும், பொதுநிலையில், இவை போலக் கதை உரைத்துச் செல்வதாக அமைந்திருந்தாலும், தனி அமைப்பாலும் நோக்காலும், தனித்த வகையாகத் திகழ்கிறது எனலாம். அதுபோலவே ஒவ்வொரு வகைக்கும் தனித்த வகைத் தன்மைகள் உண்டு. மனிதனின் பண்பாட்டு வளர்ச்சி வரலாற்றின் தொல்பழங்காலத்தில் சிறுசிறு குழுத் தலைவர்களின் வீரச்செயல்களைப் பற்றிய கதைப்பாடல்கள் இருந்தன. இயற்கை பற்றிய புராணக்கதைகள் இருந்தன. காலப்போக்கில், பெரிய அரசுகள் அமையும் போது அவற்றின் கூறுகள் இணைந்து ஒரு பெருந் தலைவனின் மறப்புகழினை மையமாகக் கொண்ட நீண்ட கதைகள் தோன்றலாயின. இவை செய்யுள் வடிவிலும், உரைநடைவடிவிலும், இரண்டும் கலந்த வடிவிலும் இருந்தன. இவை மக்கள் மன்றங்களில்

மற்றும் பிற அவைகளில் வாய் மொழியாகச் சொல்லப்பட்டன. இவற்றையே பழங்காப்பியங்கள் அல்லது முதல்நிலைக் காப்பியங்கள் (Primitive or Primary Epic) என்பர். தனிமனிதனின் வீரம், கொடை, சாகசம், காதல் போன்றவை பற்றியே இவை அமைந்திருப்பன. ஓமரின் ஓடிசி, இலியாது, வடமொழியிலுள்ள மகாபாரதம் ஆகியன இவ்வகையினவே.

காலமாற்றத்தில் சமய தத்துவங்கள் மனிதரின் சமுதாய, அரசியல், பண்பாட்டு வாழ்வில் முதன்மையான இடம் பிடித்தபின், சமய தத்துவ நோக்கில் கதையை அமைப்பது என்ற நிலை ஏற்படலாயிற்று. படைத்தலைவர், மன்னர் போன்றோரின் வீரதீரம், அன்பு முதலியன் முன்புபோலவே இடம் பெற்றிருந்தாலும், இவை சார்ந்த மனித வாழ்வின் சிக்கலானது, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தத்துவத்தை உணர்த்துகிற கதை ஊடகமாக மாறி விடலாயிற்று. மக்கள் மன்றத்தில் பொழுதுபோக்குதற்கும், மன்னர் மற்றும் வீரமரபினரின் வழிவழிப் பெருமை நினைக்கப்படுவதற்கும் எனத் தோன்றிய பழங்காப்பியங்கள் இவ்வாறு மாறி, வளர்ச்சி பெற்றுப் புதிய போக்கினைப் பெறலாயிற்று. இப்புதிய காப்பிய வகையே பெருங் காப்பியம் அல்லது புலமைக் காப்பியம் அல்லது சார்புநிலைக் காப்பியம் (Literary Epic or Secondary Epic) எனப்படுவது. இது,எழுத்துமுறை வளர்ச்சி பெற்றபின், குறிப்பிட்ட படிப்பாளிகளின் சூழலுக்கேற்ப எழுத்துமொழியில் அமைந்து, ஆயினும் முன்னைய வாய்மொழியின் மொழி மரபின் சிற்சில கூறுகளை உள்ளடக்கியும் படைக்கப்படுவது.

தமிழில் பழங்காப்பியங்கள் இப்போது கிடைத்திருக்காவிட்டாலும், தகடூர் யாத்திரை, பழையபெருந்தேவனார் பாரதம், பழைய இராமாயணம் ஆகிய நூல்களிலிருந்து கிடைத்திருக்கும் உதிரிப் பாடல்கள் வாயிலாகப் பழங்காப்பிய முறையில் கதை உரைத்துச்சொல்லப்படும் மரபு தமிழ்நாட்டிலும் இருந்தது என்பதை உறுதியாகச் சொல்லலாம். தொல்காப்பியர் கூறும் உரைச்செய்யுள், 'உரையும் பாட்டும் உடையோர் சிலரே' என்ற புறநானூற்றுப்பகுதி, மற்றும் புகழ்மரபு, வீரமரபு, கொடைமரபு, சார்ந்த பொருள்களில் உரை என்ற சொல் ஆளப்பட்டிருக்கும் முறை, சங்ககாலத்தில் வாழ்ந்த அதியன், பாரி ஆகியோர் பற்றிய பழம் பாடல்களின் உள்ளடக்கங்கள் போன்ற பல்வேறு குறிப்புகள் வழியாகப் பழங்கதை இலக்கிய மரபு தமிழில் இருந்ததை அறிய முடிகிறது. தோல், தொன்மை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று பழங்காப்பியமாக இருக்கலாம். முதன்முதலில் தமிழில் தோன்றியுள்ள பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்றவை சங்ககால யாப்பு மரபிலேயே கதை உரைத்துச் செல்வதாக அமைக்கப்பட்டிருப்பதும் முன்பிருந்த ஒரு பழங்காப்பியக் கதை உரை மரபிலேயே புதிய பெருங்காப்பியம் உருவானது என்பதை நன்கு உணர்த்துகிறது எனலாம்.

வடமொழியில் பாரதம், இராமாயணம், ஆகிய நூல்களுக்குப் பின், கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இத்தகைய பெருங்காப்பியங்கள் தோன்றலாயின. காளிதாசனின் இரகுவம்சம் குமாரசம்பவம் ஆகியன குறிப்பிடத்தக்கன. வால்மீகியின் இராமாயணத்தில் பழங்காப்பியக் கூறுகளும் பெருங்காப்பியக் கூறுகளும் இணைந்துள்ளன. தமிழிலும் தொடர்ந்து பல்வேறு காப்பியங்கள் தோன்றலாயின. இவ்வாறு தோன்றிய பெருங்காப்பியங்களின் வகைத்தன்மை பற்றிய இலக்கண மரபுகளும் காலப்போக்கில் அமைக்கப்படலாயின. இவ்விலக்கண மரபுகள் பற்றி விரிவாகப் பேசும் நூல்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தோன்றின. வடமொழியிலேயே காப்பிய இலக்கண மரபுகள் பற்றி முதலில் விரிவாக எழுதப்பட்டது. தொல்காப்பியத்தில் தொன்மை, தோல், உரை ஆகிய வகைகள், பற்றிய சிறுகுறிப்புகள் காணப்பட்டாலும், காப்பியங்கள் பற்றிய ஓரளவு முழுமையான வகையியல் விளக்கங்களாகக் கூட அவை இல்லை. தொன்மை என்பது உரையோடு இணைந்த பழமை மீது வருவது. இழுமென்ற மொழியுடன் விழுமியதைக் கூறி, பரந்த மொழியால் அடிநிமிர்ந்து இயங்குவது தோல். பிற்காலத்து உரையாசிரியர்கள் தமிழ்க் காப்பியங்களை இவற்றுள் அடக்கிக் காட்ட முயன்றுள்ளார்கள். ஆயினும் அவை மிகச் சுருக்கமாக அமைந்து, 'இதுதான் காப்பியம்' என்று இவற்றை வைத்துத் தெளிவாக இனங் காட்ட முடியாத அளவிலேயே உள்ளன.

வடமொழியில் முதலாவதாகப் பாமகர் என்பவர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் காப்பிய இலக்கணம் பற்றிக் கூறுகிறார். இவரைத் தொடர்ந்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தண்டியும், கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ருத்திரரும், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் போசரும் காப்பிய இலக்கணம் பற்றி எழுதியுள்ளனர். வடமொழித் தண்டியின் நூலை ஒட்டித் தமிழில் முதலாவதாக, கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தண்டியலங்காரம் என்ற நூலில் காப்பிய இலக்கணம் பற்றிய குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. தொடர்ந்து பன்னிரு பாட்டியல் (கி.பி. 9-10-ஆம் நூற்) வெண்பாப் பாட்டியல் (கி.பி. 11-12-ஆம் நூற்.) மாறனலங்காரம் (கி.பி. 15-16-ஆம் நூற்.) நவநீதப்பாட்டியல் (கி.பி. 13, 14-ஆம் நூற்), சிதம்பரப் பாட்டியல் (கி.பி. 15-16-நூற்). ஆகிய தமிழ் நூல்களில் காப்பிய

இலக்கணம் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இக்குறிப்புகள் யாவும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய முற்காலத் தமிழ்க் காப்பியங் களடிப்படையில் எழுதப்படாமல், பிற்காலத் தமிழ்க் காப்பியங்கள், வடமொழி அணிநூல்கள் முதலியன வற்றை ஒட்டியே எழுதப்பட்டுள்ளன. இந்தப் பிற் காலப் பெருங்காப்பியங்களின் (சிறப்பாக, சமண பௌத்தக் காப்பியங்களின்) அமைப்பில் காணப் படும் கூறுகளையே இந்நூல்கள் தத்தம் இயல்பில் கூறுகின்றன.

பெருங்காப்பியம் என்பது, ஒரு தலைவனை மையமாகக் கொண்டு அவன் சார்ந்த பின்னணிகளு டன், அவனுடைய பல்வேறு அற, மற நிகழ்ச்சிகளு டன், ஒரே ஒரு முழுமையான கதையாக இயங்கி முடிவில் ஏதேனும் ஒரு தத்துவத்தை உள்ளுறுத்துவ தாக அமைவது. எனவே, இது, அத்தலைவனின் திரு மணம், அரச வாழ்வு, போகந்துய்க்கும் நிலை, போர் வெற்றி, அரசு சார்ந்த பிற செயல்கள் ஆகியவற்று டன் இயற்கை வருணனை, உணர்ச்சி நிலைகளின் வருணனை ஆகியவற்றையும் கொண்டு அமைவது. நிகழ்ச்சிகளின் முடுகலும், பாத்திரங்களின் சந்திப்பு களும் நாடகத் தன்மை பெற்றிருக்கும். ஆயினும், நிகழ்ச்சிப் பின்னல் நாடகங்களில் இருப்பதுபோலவே செறிவாக அமைந்து, படிப்படியாக உடனடி ஆர்வ நிலைகளின் பின்னலமைப்புப் பெற்று உச்சத்தை நோக்கிச் சென்று கீழிறங்கும் எனக் கூற முடியாது. உச்சம் சென்று கீழிறங்கும் அமைப்பு காப்பியத்தில் இருந்தாலும், அது வருணனைகள், கிளைக்கதைகள், உணர்ச்சி நிலைகளுடன் மெதுவாகவே இயங்கி அமையும். உச்சநிலை பெற்றுக் கீழிறங்கல் என்ற நிலையும் காப்பியங்களில் கட்டாயம் இடம் பெற வேண்டுமென்பதில்லை. இத்தகைய அமைப்புப்பாங்கு களையே சுருக்கப்படுத்தி, பாமகர், தண்டி முதலா னோர், பல கூறுகளாகப் பிரித்து தந்துள்ளனர். வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் ஆகியன காப்பியத்தைத் தொடங்குமுன் முன்னுரைபோல அமைவனவாகத் தண்டி கூறுகிறார். மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த்தோற்றும் ஆகி யன வருணனைப் பகுதிகளாக இடம்பெறும். நன் மணம் புணர்தல், பொன்முடிகவித்தல், பூம்பொழில் நுகர்தல், புனல்விளையாடல், சிறுவரைப் பெறுதல், புலத்தல், கலத்தல் ஆகியன காப்பியத் தலைவன் சூழல் தொடர்பான சிறப்புக் கூறுகள் ஆக இடம் பெறவேண்டும். இவற்றுடன், அரசுக்குத் தேவையான மந்திரம், தூது, செலவு, இகல் வென்றி ஆகியனவும் அரசச் சூழலுக்கேற்ப இடம்பெறும். இத்தகைய பொதுவான கட்டமைப்புக் கூறுகளுடன் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பான்மையில் காப்பியப் பகுதிப் பெயர்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு அமைந்துள்ள பெருங்காப்பியம் சுவைகள், பாவங்கள் ஆகியனவற்றை வெளிப்படுத்தி இயங்கும். இதன் நாயகன் தன்னேரில்லாத் தலைவனாகப் படைக்கப் பட்டிருப்பான். மேற்கண்ட கூறுகளுள் ஒன்றிரண்டு குறைந்தும் வரலாம் ஆனால், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளும் காப்பிய உட் கோளாக இடம்பெற வேண்டும். நாற்பொருளில் ஒன்று குறைந்துவந்தால் வெறும் காப்பியம் மட்டுமே ஆகும். ஆனால், எந்த ஒன்று, எப்படிக் குறைந்து வரும் என்பது பற்றித் தண்டியில் விளக்கப்பட வில்லை. பாவிகம் என்ற காப்பிய ஒருமை வடிவப் போக்கு இருக்கவேண்டும். இதுவே பெருங்காப்பியத் தின் நிலையாகும்.

தண்டிகூறும் இக்கூறுகள் முன்னரே பாமகரால் விளக்கப்பட்டவையே. இவற்றுடன், நாடகமுறை இயக்கம், கிளைக்கதைகள் முதன்மைச் செயலுடன் (Main Action) இணைவுபெறல், காப்பியக் கதையை மரபுவழியாகத் தேர்ந்தெடுத்தல், உயர்நடைபெற்றி ருத்தல், உலகியலுடன் ஒத்திருத்தல் ஆகிய பண்பு களையும் பாமகர் விளக்கியுள்ளார். பாமகர், தண்டி ஆகியோரின் கருத்துகளை ஒட்டியே பின் வந்தோர் இலக்கணம் கூறியுள்ளனர். கட்டமைப்புக் கூறுகள் மட்டும் கூடுதலாகவோ அல்லது வேறு வேறாகவோ இருக்கும். தமிழ் மாறனலங்காரம் முன்னுரைப் பகுதியில் அவையடக்கத்தையும் கொண்டுள்ளது. பன்னிரு பாட்டியல் வித்து, எண், துளி, விருத் தியல், கொடி என்று ஐவகையான கதை அமைப் புக் கூறுகளை நாடகமுறையில் விளக்குகிறது. வடமொழியில் உருத்திரர் கட்டமைப்புக் கூறுகளை மிகுதியாகக் கூறுகிறார். பொதுவாகவே, காப்பியக் கதைக்கேற்பக் கட்டமைப்புக் கூறுகள் வேறுபட்டும் கூடுதலாகவும் இருக்கும் எனலாம். வடமொழிப் போசர், பல்வேறு அணிகள் இடம்பெறும் நிலை பற் றிப் பேசுகிறார். ஒன்பான் சுவைகள் வெளிப்படுவதும் காப்பிய இயக்கத்தில் இன்றியமையாப் பண்பாகும். இவ்வாறு பல்வேறு கூறுகளையும் சுவைகளையும் பாவங்களையும் நாற்பொருள்களையும் பொதுவாகக் கூறி, அவை இடம் பெற்றிருப்பதே பெருங் காப்பிய மாகும் என்று விளக்கும் இயல்பிலேயே அணிநூல்கள் காப்பிய இலக்கணம் பற்றி விளக்குகின்றன. பாத்திரப் படைப்பின் அடிப்படைகள் காப்பியத்தின் தத்துவ நோக்கோடு அவற்றின் விளக்கக் குறிகளாக அமைந் திருத்தல், பாத்திரங்களும் நிகழ்ச்சிப் பின்னலும் நாடகமுறையில் இணைந்து செல்லுதல், இடையே பாத்திரங்களின் மனநிலைகள் உணர்ச்சிப் பாவியல் கொள்ளல், ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஒருகால கட்டத்தின்பண்பாட்டுச் சிக்கலுடன் சார்பு கொண்

டிருத்தல், போன்ற அடிப்படையான தன்மைகளைக் காப்பியங்களின் அமைப்பு, நோக்கு நிலைகளுடன் இணைத்துப் பழைய இலக்கணிகள் தெளிவாக விளக்கா விட்டாலும், பொதுவான அளவில் காப்பிய அமைப்புகளின் இயல் கூறுகளை சிறப்புற வெளிப் படுத்தியுள்ளனர். து.சீ.

**காப்பியாற்றுக் காப்பியனார்** எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தின் நான் காம் பத்தினைப் பாடிய புலவர். இவர், பதிற்றுப் பத்து நூலினால் மட்டிலும் அறியலாகும் சங்கப் புல வர் இருவருள் ஒருவராவர். பிற சங்க நூல்களுள் இவர்தம் பாடல் இடம்பெறாமையால் இவரைப் பற்றி விரிவாக அறிந்துகொள்ள இயலவில்லை. இவர் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என்னும் சேர மன்னனைப் பதிற்றுப் பத்தின் நான்காம் பத்தில் பாடினார் என்பதனையும், அதற்குப் பரிசாக அம்மன் னன் இவருக்கு நாற்பது நூறாயிரம் பொன்னும், தான் ஆள்வதனில் பாகமும் வழங்கினான் என்பதனை யும் அப்பத்தின் பதிகம் அறிவிக்கிறது.

காப்பியன் என்பது இப்புலவரின் இயற்பெய ராகும். அது ஆர் விகுதியோடு சேர்ந்து காப்பியனார் என்றாகியது. காப்பியாறு என்பது இப்புலவர்தம் ஊராக இருத்தல் கூடும். காப்பியாறு என்னும் ஆற் றின் பெயர் அதன் கரையில் அமைந்த ஓர் ஊருக்குப் பெயராகி வழங்கியதாகும். ஊர்ப் பெயரோடு சேர்ந்து காப்பியாற்றுக் காப்பியனார் என்றமைந்த இவர் பெயர், இவர் காலத்திருந்த பிற காப்பியனார் களினின்றும் இவரை வேறு பிரித்துணர வாய்ப்பாக உள்ளது. காப்பியாறு கேரளத்தைச் சேர்ந்த குட்ட நாட்டின் பகுதியான இருவழி நாட்டிலுள்ள ஊர் என்றும், அவ்வூர் இன்றைய கேரள மாநிலத்தின் கோட்டயம் வட்டத்திலுள்ளது என்றும் ஆய்வாளர் கள் குறிப்பிட்டுள்ளனர்.

இப்புலவர் பாடிய நாலாம் பத்தின் பத்துப் பாடல்களும் அந்தாதித் தொடையில் அமைந்துள் ளன. சங்க காலப் புலவர்கள் பொதுவாக அந்தாதி சிலேடை போன்ற சொல்லலங்காரத்தில் நாட்டங் கொண்டவரல்லர். ஆனால், அந்தாதி போன்ற சில யாப்பியல் விசேடங்களை அவர்களும் அறிந்திருந்த னர் என்பதற்கு இப்புலவர் பாடியுள்ள நான்காம் பத்துப் பாடல்கள் சான்றாக விளங்குகின்றன. ஐங்குறுநூறு என்னும் தொகை நூலுள் இடம்பெற் றுள்ள தொண்டிப் பத்தும் இவ்வாறு அந்தாதியாக முடிந்துள்ளது. பதிற்றுப் பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறுநூற்றுத் தொண்டிப் பத்தும் மண்டலித்து முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மண்ட லித்து முடியும் முறை யாப்பியல் வளர்ச்சியில் பிற் பட்டுத் தோன்றியதாகலாம். பதிற்றுப் பத்தின் ஒவ் வொரு பத்திலுமுள்ள பாடல்கள் அவ்வப் புலவர் களின் பாடல்களினின்றும் தொகுத்த தொகுப் பாகும் என்னும் கருத்தினை மறுத்து, அவை, அந்த அந்த அரசர்மீது ஒரே காலத்தில் பாடப்பெற்றவை யாகும் என்பதனை வலியுறுத்தும் சான்றாக, அந்தாதித் தொடையிலமைந்துள்ள பதிற்றுப் பத்தின் நான்காம் பத்து விளங்குகிறது.

இவர், தாம் சிறப்பிக்கும் மன்னனின் முழுப் பெயரையும் ‘களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்’ என்று தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார் (பதி.38-3). இப்பெயர் அம்மன்னன் சூடிய ஒரு சிறப்பு முடியி னால் அமைந்தது என்னும் கருத்தினைப் பழைய உரையாசிரியர், தம் குறிப்புரையில் புலப்படுத்தியுள் ளார். நார் முடியின் சிறப்புத் தன்மையினைக் காப்பியனார் அழகுறப் புனைந்து காட்டியுள்ளார். (பதி.39: 9-16). நார்முடிச் சேரல் நன்னன் என்னும் அரசனொடு போர் செய்து அவனது வாகை மரத் தைத் தடிந்து வென்ற தன்மையை இவர், ‘பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன், சுடர் வீ வாகை கடிமுதல் தடிந்த...சேரல்’ என்று குறிப்பிட்டுள்ளார் (பதி.40-14-15). போர்க்களத்தில் தலைகள் துணிக்கப் பட்டுக் கவந்தங்கள் கண்டார் அஞ்சுமாறு ஆடிய காட்சியினை இவர்,‘தலைதுமிந்து எஞ்சிய மெய்யாடு பறந்தலை’ எனக் காட்டியுள்ளார் (பதி.35:6). களங் காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் மனைவி அழகும் கற்பு நலனும் மிக்குத் திகழ்ந்தவள் என்பதைச் ‘செம் மீன் அனையள் நின்தொன்னகர்ச் செல்வி’ என்று இப்புலவர் பாராட்டியிருப்பது நயமிக்குத் திகழ் கிறது. அ.மா.ப.

**காப்பீட்டு நிறுவனங்களின் தணிக்கை**: காப்பீட்டு நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டு நிறுவனங் கள் (Life Insurance Corporation), பொதுக் காப் பீட்டு நிறுவனங்கள் (General Insurance Companies) என இருவகைப்படும். ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம் செய்தவர் இறப்பு அல்லது குறிப்பிட்ட காலம் முடி வுறல் ஆகிய இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ, அது நிகழ்ந்தவுடன் ஒப்பந்தத் தொகை உரியவருக் குக் (Policy holder) கொடுக்கப்படல் வேண்டும். பொதுக் காப்பீடு, தீக்காப்பீடு (Fire Insurance),கடற் காப்பீடு (Marine Insurance), பல்வகைக் காப்பீடு (Miscellaneous Insurance) என மூவகைப்படும்.

இந்தியாவில் 1956-ஆம் ஆண்டு வரை ஆயுள் காப்பீடு தனியார் துறையில் இயங்கியது. இந்திய

ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டம் (Indian Life Insurance Corporation Act) 1956-இல் இயற்றப்பட்டு நாட்டுடைமை ஆக்கப்பட்டது. இச்சட்டத்தினுள் பிற காப்பீட்டு நிறுவனங்கள் அடங்கவில்லை. அவை 1938-ஆம் ஆண்டுடைய இந்தியக் காப்பீட்டுச் சட்டத் தின்கீழ்ச் செயற்படுகின்றன.

ஆயுட் காப்பீட்டுக் கழகச் சட்டம் 1956, பிரிவு 25-இன்படி, மைய அரசால், இந்தியப் பொதுத் தணிக்கையர் (Auditor-General of India) அறிவுரை யின் பேரில் தணிக்கையர் அமர்த்தப்படுவர். அவர்கள் தணிக்கை செய்யும் அறிக்கை நிறுவனத்திற்கும், மைய அரசிற்கும் அனுப்பப்படவேண்டும். பின்னர் அது பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் ஆராயப்படும்.

**பொதுக் காப்பீடு**: காப்பீட்டு நிறுவனம் தொடங்க விரும்புபவர்கள் இந்திய அரசின் காப்பீட்டுக் கண்காணிப்பாளரிடம் (Controller of Insurance Companies) பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். இவ்வாறு சான்றிதழ் பெற்ற 104க்கும் மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கல் சட்டத்தின் மூலம் நாட்டுடைமையாக்கப்பட்டன. ஆயுள் காப்பீடு, பொதுக் காப்பீடு ஆகிய இருவகைக் காப்பீட்டு நிறுவனங்கள் இந்தியாவில் பலவாகத் தோன்றிப் பெருகின. இவற்றால் கிடைக்கும் பெரும் வருவாயை மக்கள் நலனுக்குப் பயன்படுத்தவே இவை நாட்டுடைமையாக்கப்பட்டன.

பதிவுச் சான்றிதழ் பெறப் பதிவுக் கட்டணம், பதிவு விண்ணப்பம் ஆகியவற்றுடன் அனுப்பி வைக்கவேண்டிய ஆவணங்களாவன: 1. நிறுவனத்தின் அமைப்பு முறையேடும் நடைமுறை விதிகள்பற்றிய சான்றுரைக் கப்பட்ட நகலும் (Memorandum and Articles of Association), 2. நிறுவனத்தின் இயக்குநர்களின் பெயர்கள், முகவரிகள், தொழில்கள்; 3. எவ்வகை யான காப்பீட்டுத் தொழில் செயற்பட்டு வருகிறது அல்லது செயற்படவுள்ளது என்ற பட்டியல்; 4. காப்பீட்டுச் சட்டப்படி இந்திய மைய இருப்பு (Reserve Bank of India) வங்கியிடம் வைத்துள்ள தொகையும் அதற்கான சான்றிதழும்; 5. நடைமுறை முதல் (Working Capital) பெறப்பட்டுள்ளது என்று அலுவலரால் வழங்கப்பட்ட ஆணையுறுதி ஆவணம் (Affidavit); 6. தகவலறிக்கையின் சான்றளிக்கப்பட்ட படி (Copy), கட்டண வீதங்கள் (Premium rates), பகிர்வுகள் முதலியன. கண்காணிப்பாளர் இவற்றை ஆராய்ந்து மனநிறைவு பெற்றால் பதிவுச் சான்றிதழ் அளிப்பார்.

**வைப்புகள்**: காப்பீட்டு நிறுவனங்கள் தம் தொழிலுக்கு ஏற்றவாறு கீழ்க்காணும் தொகையை இந்திய மைய இருப்பு வங்கியிடம் வைப்பாக (Deposits) வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட தொழில்களுக்கு வரையறுக்கப்பட்ட வைப்புத்தொகையாவது:

| | | |
|---|---|---|
| 1. | தீக்காப்பீட்டுத் தொழில் மட்டும் | உரூ 1,50,000 |
| 2. | கடற் காப்பீட்டுத் தொழில் மட்டும் | உரூ 1,50,000 |
| 3. | பல்வகைக் காப்பீட்டுத் தொழில் மட்டும் | உரூ 1,50,000 |
| 4. | தீ, கடல், பல்வகை அல்லது இவற்றுள் எவையேனும் இரண்டு | உரூ 2,50,000 |
| 5. | தீ, கடல், பல்வகை மூன்றும் | உரூ 3,50,000 |
| 6. | கடற் காப்பீட்டில் நாட்டுப்படகு அல்லது அதன் சரக்கு அல்லது இரண்டிற்கும் தொழில் செய்வதாயின் (Country Crafts) | உரூ 10,000 |

வரையறுக்கப்பட்ட கட்டாய வைப்புத் தொகையைப் பணம் அல்லது அனுமதிக்கப்பட்ட பிணையங்கள் (Approved Securities) அல்லது இரண்டுமாக வைக்கலாம். இந்திய மைய இருப்பு வங்கியில் வைப்பாக வைக்கும்போது அங்காடியில் அதற்குரிய மதிப்பைப் பொறுத்துப் பிணையத்தின் மொத்த மதிப்புக் கணக்கிடப்படும். அப்பிணையங்கள்மீது பற்றுப் பொறுப்பு ஏற்படுத்தவோ, அவற்றின் மீதான உரிமையை மாற்றவோ முடியாது. ஒப்பந்தம் செய்தவர் தமக்கு உரிமையாக்கப்பட்ட தொகையை, நிறுவனத்திலிருந்து வேறு எவ்வகையிலும் பெற இயலாத நிலையில், தீர்ப்பாணை (Court Order) ஒன்றின் வழி அப்பிணையங்களைப் பற்றுகை செய்து தமக்குரிய தொகையைப் பெறலாம்.

காப்பீட்டு நிறுவனம் ஒன்றின் நிதி உரூபாய் 50,00,000 ஆகவும் அதற்கு மேலாகவும் இருப்பின் அந்நிறுவனத்திற்கு முழு நேர மேலாளர் அல்லது மேலாண்மை இயக்குநர் அல்லது அலுவலர் ஒருவர் இருத்தல் வேண்டும். காப்பீட்டு நிறுவனம் பிற நிறுவனம் ஒன்றினால் மேலாண்மை செய்யப்படுதல் கூடாது. ஒவ்வொரு நிறுவனமும், ஆண்டு முடிந்தவுடன் தொடரும் மாத இறுதிக்குள் ஆண்டறிக்கையை முழுப் புள்ளிவிவரங்களுடன் காப்பீட்டுக் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

**புலனாய்வு**: காப்பீட்டு நிறுவனத்தின் செயற்பாட்டினைப் புலனாய்வு செய்து, அப்புலனாய்வு

அறிக்கையை அளிக்குமாறு, மைய அரசு, கண்காணிப்பாளர் அல்லது வேறு ஒருவரிடம் ஆணையிடலாம். புலனாய்வாளரின் நடவடிக்கைப்படி மைய அரசு நடவடிக்கை எடுக்கும். அந்த அறிக்கைப்படி நிறுவனம் செயற்பட ஒரு வாய்ப்பு அளிக்கவோ நிறுவனத்தை மூடவோ பதிவை நீக்கம் செய்யவோ மத்திய அரசு அதிகாரம் பெற்றுள்ளது.

**கணக்குகள்**: காப்பீட்டுச் சட்டத்தின்படி, காப்பீட்டு நிறுவனங்கள் தனித்தனியாகப் பலவகைக் கணக்குகள் வைத்திருக்க வேண்டும். கணக்குகள் காப்பீட்டுச் சட்டத்தில் உள்ள படிவத்தின்படி (Format) இருக்கவேண்டும்.

தீ அல்லது பல்வகைக் காப்பீடாயின் ஒரு முகவருக்கு அளிக்கப்பட வேண்டிய கழிவு அல்லது ஊதியம் ஒப்பந்தக் கட்டணத்தில் (Premium) 15 விழுக்காட்டிற்கு மிகாமலும், கடற் காப்பீடாயிருப்பின் 10 விழுக்காட்டிற்கு மிகாமலும் இருக்கவேண்டும். தீ அல்லது பல்வகைக் காப்பீட்டிற்கு ஒப்பந்தக் கட்டணத்தில் முதன்மை முகவர் (Preliminary Agent) ஒருவருக்கு அளித்துவரும் கழிவு அல்லது ஊதியம் 20 விழுக்காட்டிற்கு மிகாமலும், கடற் காப்பீட்டிற்கு 15 விழுக்காட்டிற்கு மிகாமலும் இருக்க வேண்டும். இத்தொகையைக் கணக்கிடும்போது கட்டணத்தின் மீது காப்பீட்டு முகவருக்குத் தரவேண்டிய கழிவுத் தொகை கழிக்கப்பட வேண்டும். காப்பீட்டு நிறுவனம் தன் இயக்குநர், மேலாளர், தணிக்கையர் ஆகியோருக்குக் கடனோ இடைக்கால முன்பணமோ கொடுக்கக்கூடாது.

காப்பீட்டு நிறுவனம் ஓராண்டில், தன் நிதி நிலைமைக்கு மேலாக மேலாண்மைச் செலவு செய்யக் கூடாது. அவ்வாறு செயப்பட்டால் காப்பீட்டு நிறுவனங்கள் கண்காணிப்பாளருடன் கலந்து ஆலோசித்துச் செலவான தொகைக்கு ஒப்புதல் பெற வேண்டும்.

காப்பீட்டு நிறுவனங்கள் முகவர் கணக்குகளை அதற்கென உருவாக்கப்பட்ட படிவத்தில் வைத்திருக்க வேண்டும். அவற்றை ஆண்டு தோறும் முகவர்களுக்கு அனுப்பி, அவர்களிடம் உள்ள தொகை சரியாக உள்ளதா என்று சரிபார்க்கவேண்டும். இவ்வாறு உறுதி செய்யப்பட்ட, அல்லது உறுதி செய்யப்படாத பட்டியலைத் தணிக்கையர் ஆய்வு செய்த பின் கையெழுத்திடுவார். காப்பீட்டு நிறுவனங்கள் ஓராண்டு முடிந்தவுடன் உருவாக்கவேண்டிய கணக்குகளாவன: 1. முதல் இணைப்புப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இரண்டாம் பகுதியில் உள்ள படிவத்தின் உருவாக்கப்பட்ட இருப்பு நிலை அறிக்கை 2. இரண்டாம் இணைப்பு முதற்பகுதியில் உள்ளதைப்போல் ஆதாய இழப்புக் கணக்கு 3. ஒவ்வொரு வகை அல்லது உள்வகைக் காப்பீட்டுத் தொழிலுக்கும் தனித்தனி வருவாய்க் கணக்குகள்.

ஒவ்வொரு வகைக் காப்பீட்டுத் தொழிலுக்கும் உரிய வருவாய்க் கணக்கில், கழகத்தலைவர் (Chairman), இரண்டு இயக்குநர்கள் (Directors), முதன்மை அலுவலர் (Principal Officer) தணிக்கையர் ஆகியோர் மேலாண்மைச் செலவுகள் அனைத்தும் வருவாய்க் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளன என உறுதி அளிக்கவேண்டும். மேற்கண்டவர்கள் கையெழுத்திட்ட கணக்குகளின் நான்கு படிகளைக் காப்பீட்டுக் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

காப்பீட்டு நிறுவனச் சட்டம் பிரிவு 226–இன்படி இருப்புநிலைக் குறிப்பு, ஆதாயஇழப்புக் கணக்கு, ஆதாய ஒதுக்கீட்டுக் கணக்குப் போன்றவை தகுதி பெற்ற தணிக்கையர் ஒருவரால் தணிக்கை செய்யப்பட்டுக் கையெழுத்திடப்பட வேண்டும்.

இருப்புநிலைக் குறிப்பில் காட்டுவதற்காக நிறுவனத்தின் நிலையான சொத்துகள் அங்காடி நிலவரப்படி மதிப்பிடப்பட்டு, அவை மிகையான மதிப்பிற்கு மதிப்பிடப்படவில்லை என்ற சான்றிதழ் ஒன்றையும் இருப்பு நிலைக் குறிப்புடன் இணைக்கவேண்டும். காப்பீட்டு நிறுவனத்தின் முதலீடுகள் முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தப்படல் வேண்டும். முன்னுரிமை முழுவதும் வந்தது (Fully Secured), உடன் விற்கப்படுவது (Readily Marketable), நல்ல வட்டி வீதம் தருவது (Fair rate of Interest) என வரிசைப் படுத்தப்படும்.

ஒரு நிறுவனத்தில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளையும் ஆராய்ந்து தணிக்கை செய்வது கடினம். எனவே நிறுவனத்தில் அகச் சீராய்வு மூலம் (Internal Check System) தணிக்கை செய்யவேண்டும். உரொக்க ஏட்டினைத் தணிக்கை செய்து வரத்துச் செலுத்தங்களைச் சான்றாய்வு செய்யவேண்டும். கட்டணப் பற்றுச் சீட்டுகளைச் சரிபார்த்துக் கட்டணத் தொகை எவ்வாறு பெறப்பட்டது என்பதனைக் கட்டணப் பதிவேட்டுடன் சரிபார்க்கவேண்டும். கிளை அலுவலகங்கள் மூலம் பெறப்படும் கட்டணத் தொகைக்குச் சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால், தணிக்கையரால் அவற்றின் பற்றுச் சீட்டுகளை இணைப் படிவம் (Counter Foil) மூலம் சரிபார்க்க இயலாது.

காப்பீட்டுச் சட்டம் பிரிவு 41–இன்படி கட்டணத்திற்குத் தள்ளுபடி இல்லை. முன்னதாகச் செலுத்தப்

படும் கட்டணம் வரவுப் புத்தகத்தில் வரவு வைக்கப் படாமல் அடுத்த ஆண்டில் வரவு வைத்து, அதே நேரத்தில் இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புப் பகுதியில் காட்டவேண்டும். நிலுவையாக வரும் கட்டணம் புத்தகத்தில் வரவு வைக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பைச் சொத்துப் பகுதியில் காட்டவேண்டும். அதாவது, அது வசூலிக்கப்பட்டுவிடும் என்று பொருள் படும்.

ஆண்டுதோறும் வட்டி, ஆதாயம் (Dividend) ஆகியவற்றின் வரவு எவ்வளவு வந்து சேரவில்லை என்பது கண்டறியப்பட்டு எழுதப்பட வேண்டும். ஆதாயத்தை வரவுப் புத்தகத்தில் வரவு வைக்கவேண்டும்.

முகவர்களுக்குக் கொடுக்கப்படும் கழிவுகள், தொழில், ஒப்பந்தம், பெற்ற வரவுகள் ஆகியவை காப்பீட்டுச் சட்டம் பிரிவு 40 'அ'வில் வரையப்பட்டுள்ளன. முகவர்களுக்கு அளிக்கும் கழிவுத் தொகை மிகச் சிறியதாய் இருந்தாலொழிய, அதனைக் காசோலை மூலந்தான் கொடுக்கவேண்டும்.

கோருரிமைப் (Claim) பதிவேட்டினைக் கொண்டு செலுத்திய அல்லது செலுத்தப்பட வேண்டிய கோருரிமை எவ்வளவு என்று அறியவேண்டும். நேரடியான கோருரிமைகளை ஆராயும்போது, கோருரிமைப் படிவம், ஒப்பந்த நகல், செலவுகளுக்கான ஆதாரச் சீட்டுகள், மதிப்பீட்டாளர் அறிக்கை, விடுவிப்புச் சீட்டுகள் (Discharge Voucher) ஆகியவற்றையும் சரிபார்க்க வேண்டும். இதற்கான செலவைக் கோருரிமைக் கணக்கில் பற்று வைத்தல் வேண்டும். கோருரிமை மீது செலுத்தம் செய்யும்போது மாற்றாமல் உரிமை ஏதும் செலுத்தக் காப்பீட்டு நிறுவனம் உரிமை பெற்றுள்ளதா என்பதை அறிந்து அவ்வகை மூன்றாமவர்கள் மீது தொகையினைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்றும் பார்க்க வேண்டும். மறுகாப்பீட்டுக் கோருரிமைகளைச் சரிபார்க்கத் தணிக்கையர் நிறுவனம் விடுத்த சுற்றறிக்கையினையும், மதிப்பீட்டாளர் அறிக்கையினையும் சரிபார்க்க வேண்டும். மறுகாப்பீட்டின் வழி பெறப்பட்ட தொகையினைக் கணக்கிட்டு வரவேண்டிய தொகையனைத்தும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனவா எனவும் ஆராய வேண்டும்.

**நிருவாகச் செலவுகள்**: நிருவாகச் செலவுகள் காப்பீட்டுச் சட்டம் 40 (இ)-இல் உள்ளபடி குறிப்பிட்ட வரம்புக்கு மிகாமல் உள்ளனவா என்பதைத் தணிக்கையர் பார்க்கவேண்டும். நிருவாகக் கணக்கு ஏடுகளில் நடைமுறைக் கணக்கின் கீழ் ஒரே இனமாகக் காட்டப்படும் நிருவாகச் செலவுகளாவன: 1. இயக்குநர் கட்டணம், 2. சம்பளம், 3. கொடையூதியமும், ஓய்வூதியமும், 4. சேம நிதிக்குக் 'கொடுப்பு, 5. மேலூதியம், 6. பயணச் செலவு, 7. எழுதுபொருள் அச்சுச் செலவு, 8. அஞ்சலும் தந்திச் செலவும், 9. விளம்பரச் செலவு, 10. வரவேற்பும் கேளிக்கையும், 11. முந்தைய பணி இழப்பிற்கு இயக்குநர் மேலாளர் ஆகியோருக்கு நிறைவீடு, 12. தணிக்கைக் கட்டணம், 13. சட்டச்செலவு, 14. வாடகை, 15. சில்லரைச் செலவு, 16. அயல்நாட்டு நிறுவனமாயிருப்பின் தலைமை அலுவலகச் செலவு. பொதுச் செலவுகள் பல்வேறு காப்பீடுகளிடையே பகுத்து அளிக்கப்பட்டுள்ளனவா என்பதை அறியவேண்டும். ஒவ்வோர் ஆண்டும் பங்கீடு ஒதுக்கல் ஒழுங்காக நடந்து வருகிறதா என்றும் ஆராயவேண்டும். நிருவாகச் செலவுகள் எங்கு நிகழ்ந்தாலும் நடைமுறைக் கணக்கில் பற்றுவைக்கப்படவேண்டும். இது குறித்த சான்றிதழில், கழகத்தலைவர், இரு இயக்குநர்கள், முதன்மை அலுவலர், தணிக்கையர் ஆகியோர் கையொப்பம் இடவேண்டும். இச்செலவுகள் குறிப்பிட்ட வரம்புக்கு மீறிப் போனால் காப்பீட்டாளரின் பதிவாக்கம் நீக்கம் செய்யப்படலாம். அல்லது காப்பீட்டாளரின் தொழிலை மாற்றித்தர அல்லது திருத்திச் செயற்படத் தேவையான வழிகளை ஆய்வு செய்ய அவற்றைப் பொதுக் காப்பீட்டுக் குழுவின் செயற்குழுவிற்குப் பரிந்துரைக்கலாம்.

மறுகாப்பீட்டு நிறுவனங்களைத் (Re-Insurance Companies) தணிக்கை செய்யும்போது, விட்டுக் கொடுக்கும் நிறுவனங்களுடன் (Ceding Companies) செய்யப்பட்டுள்ள ஒப்பந்தங்களை ஆராய வேண்டும். ஒப்பந்தங்களின்படி செயற்படுவதற்குப் பிணையாக நிதிகளைத் தம்மிடம் வைத்துக்கொள்ள, விட்டுக் கொடுக்கும் நிறுவனங்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளதா என்று கவனிக்கவேண்டும். நேரடியாகக் காப்பீடு செய்த நிறுவனத்திற்கு உரித்தான ஆதாயக் கழிவு (Profit Commission) கணக்கில் எடுக்கப்பட்டுள்ளதா என்பதை மறுகாப்பீட்டு நிறுவனங்களுடன் ஒத்துப் பார்க்கவேண்டும். விட்டுக் கொடுக்கும் நிறுவனம் என்பது இடர்தாங்கலைப் (Risk) பகுதியாகவோ முழுமையாகவோ மாற்றம் செய்யும் நிறுவனம் ஆகும்.

காலக்கெடுவடையாத இன்னல்களுக்குத் (Unexpired Risks) தேவையான அளவுக்குக் காப்பு ஒதுக்கப்பட்டுள்ளதா என்று ஆராயவேண்டும். இது, நிறுவனத்தின் நிகரக் கட்டண வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் காப்பீட்டு நிறுவனங்களின் முதலீடுகளைச் சரிபார்த்து, அவற்றின் அங்காடி மதிப்புக் கணக்கிடப்பட்டுள்ளதா என்

பதை அறியவேண்டும். பங்குகள், பங்குக் கொடுப்புகள் ஆகியவற்றின் மதிப்பு எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை இருப்புநிலைக் குறிப்பில் காட்டவேண்டும். வங்கிகளிடம் வைக்கப்பட்ட இருப்புகள், இந்திய மைய இருப்பு வங்கியில் (Reserve Bank of India) உள்ள வைப்புகள், கையிருப்பு, மொத்தப் பணம் ஆகியவற்றைச் சரி பார்க்க வேண்டும். இவற்றைச் சரியான முறையில் உற்று ஆராய்ந்த பின்னர்த் தொழில் விதிமுறைகள் யாவும் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும் ஆராய்ந்து தணிக்கைச் சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டும். பி.இரா.

**துணை நூல்:**

**Jandon, B.N.**, A hand book of Practical Auditing, S. Chand & Co. New Delhi, 1970.

**காப்பீடு** என்பது ஓர் ஒப்பந்தம். வாணிகம் செவ்வனே செயற்படப் பயன்படும் கருவிகளுள் காப்பீடும் (Insurance) ஒன்றாகும். திடீரென்று ஏற்படும் இழப்பை (Loss) ஈடு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் ஒழுங்கு காப்பீடாகும். மனித உடலும், உயிரும் சொத்தும் பலவகைத் தீங்குகளுக்கும் இழப்புகளுக்கும் உள்ளாகின்றன. வாணிகச் சரக்குகள் அங்காடிக்குப் போகும் வழியில் அழிந்திடலாம்; சரக்குகள் தீக்கிரையாகலாம்; ஊர்தி விபத்துகளினால் மக்கள் உடல் உறுப்புகளை இழக்கலாம். இவற்றால் பல பொருள் இழப்புகளும் உயிர் இழப்புகளும் ஏற்படுகின்றன.இவ்வாறு,ஏற்படும் இழப்புகளை அறவே தவிர்க்க இயலாது. ஆனால், அதை ஓரளவுக்குக் குறைத்திடலாம்.'அத்தகைய இழப்பை உறுதியாக ஈட்டிவிடப் பயன்படுவதே காப்பீடு. எனவே இதனை ஈட்டுறுதி (Indemnity) என்றும் கூறுகின்றனர்.

மனித இனத்திற்கும், அவர்தம் பொருளுக்கும் ஏற்படும் இழப்பைத் தவிர்ப்பது காப்பீட்டின் நோக்கமன்று. காப்பீடு செய்வதால் மனிதனின் உயிர் போகாது என்பது பொருளன்று. ஆனால், அவன் உயிர் போவதால் ஏற்படும் இழப்பை எந்த அளவிற்குப் பணத்தைக் கொண்டு ஈடுசெய்ய முடியும் என்று அறுதியிட்டுச் செய்யப்படும் ஒப்பந்தமே காப்பீடாகும்.எனவே,வருங்காலத்தில் நிகழும் உறுதியற்ற இழப்பை உறுதிப்படுத்தப்பட்ட பணமாக வரையறை செய்வதே காப்பீடு என்றும் சொல்லலாம். ஒருவரின் இழப்பைப் பலர் பகிர்வதால் ஒவ்வொருவரின் சுமையும் குறைகிறது. மேலும், ஒருவர் அடையும் இழப்பு, காப்பீடு செய்த அனைவரும் செலுத்திய 'காப்பீட்டுக் கட்டணத்தைக் கொண்டு ஈடு செய்யப்படுகிறது. இழப்பினால் ஏற்படும் துயரிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள விரும்புபவரே காப்பீட்டு ஒப்பந்தம் செய்து கொள்பவர் (Policy Holder). ஏற்படும் இழப்பை ஈடு செய்ய உறுதி கொடுப்பதே காப்பீட்டு நிறுவனம். எடுத்துக்காட்டாக, காப்பீட்டு நிறுவனம் பல வணிகர்களிடமிருந்து காப்பீட்டுக் கட்டணத்தை (Premium) வசூல் செய்து அதிலிருந்து உண்மையிலே இழப்பு நிலை அடைந்தவரின் இழப்பை ஈடு செய்கிறது. இழப்பை இவ்வாறு பரவலாகச் செய்வதால் இழப்பின் கடுமை குறைகிறது. இம்முறையில் வாணிகம் தங்குதடையின்றி வளர்கிறது. காப்பீட்டு முறை இல்லையென்றால் ஒவ்வொரு வணிகரும் தாமே ஏற்படும் இழப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் நிலை ஏற்படும்.

**இலக்கணம்**: காப்பீடு என்று சொல்லப்படும் ஒரு சிறிய தொகைக்கெதிராகக் குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒன்று நிகழ்வதால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யக் காப்பீட்டு ஒப்பந்தம் செய்து கொள்பவருக்குக் காப்பீடு செய்பவர் அளிக்கின்ற உறுதியே காப்பீடாகும். காப்பீட்டு ஒப்பந்தம் செய்து கொள்பவர் காப்பீட்டு நிறுவனத்திடம் கட்டணம் என்ற பண உருவில் உள்ள ஒரு மறுபயனுக்காக அவருடைய வாழ்வையோ சொத்தையோ, அவர் அக்கறைகொண்ட மற்றவரின் வாழ்வையோ சொத்தையோ ஒரு விபத்துக்கு அல்லது பொறுப்புக்கு எதிராகக் காப்பீடு செய்வது காப்பீடு என்று காப்பீட்டுச் சட்டம்கூறுகிறது. ஒப்பந்தம் செய்யத் தகுதி வாய்ந்த, ஒருவரோ கூட்டுவாணிக நிறுவனமோ காப்பீட்டுத் தொழிலைத் தொடங்கலாம். சட்டமுறையில் செல்லக்கூடிய ஒரு ஒப்பந்தத்தின் மூலக்கூறுகள் காப்பீட்டு ஒப்பந்தத்திலும் காணப்பட வேண்டும். காப்பீட்டுக் கட்டணத்தை ஏற்றுக்கொள்வதும் காப்பீடு செய்ய விண்ணப்பம் செய்தலும் காப்பீட்டு ஒப்பந்தம் தோன்றுவதற்குப் போதுமானதாகும்.

**காப்பீட்டின் வகைகள்**: ஆயுள் காப்பீடு, தீக் காப்பீடு, கடல் காப்பீடு, தனி ஒருவர் விபத்துக் காப்பீடு, நம்பிக்கைக் காப்பீடு, கொள்ளைக்கெதிரான காப்பீடு, தொழிலாளர் இழப்பு ஈட்டுக் காப்பீடு, மோட்டார் விபத்துக் காப்பீடு எனக்காப்பீடுகள் பல வகைப்படுகின்றன.

**ஆயுள்காப்பீடு**: ஒருவர் ஒழுங்காகச் செலுத்தும் ஒரு சிறு தொகையின் மறுபயன் கருதி அவருடைய ஆயுட்காலத்தில் ஏற்படும் நிகழ்ச்சியின்போது ஒரு குறிப்பிட்ட தொகையைத் தருவதாக ஒத்துக்கொள்ளும் ஓர் ஒப்பந்தந்தான் ஆயுட்காப்பீடு (Life

Insurance) எனப் பன்யான் (Bunyon) கூறியுள்ளார். ஆயுட்காப்பீடு இறப்பு நிகழும்போது ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கிடும் ஓர் ஒப்பந்தமாகும். அதன்படி மனித வாழ்வை அல்லது ஆயுளைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கட்டணம் செலுத்த வேண்டும். இவ்வொப்பந்தத்தின்படி முதிர் வயதில் வழங்கப்படும் பணத்தொகை, ஆயுளைப் பொறுத்து வழங்கப்படும் பணம், விபத்து ஏற்படும் போது வழங்கப்படும் பணம், இரண்டு அல்லது மூன்று மடங்கு ஈட்டுறுதித் தொகை போன்ற பயன்களை அளிக்க வேண்டும். ஆயுட் காப்பீட்டு ஒப்பந்தம் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகாது. ஏனெனில், காப்பீடு செய்தவர் இறந்து விட்டால் அதனால் ஏற்படும் நட்டம் இவ்வளவுதான் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. எனவேதான் ஆயுட்காப்பீடு ஒப்பந்தத்தில் காப்பீடு செய்த ஒருவரின் வாழ்வில் ஏதேனும் ஒரு குறிப்பிட்டநிகழ்ச்சி ஏற்பட்டால் குறிப்பிட்ட ஒரு தொகையை அளிப்பதாகக் காப்பீடு அளிப்பவர் உறுதி கூறுகிறார். காண்க: ஆயுட் காப்பீடு.

**தீக் காப்பீடு**: தீக் காப்பீட்டு ஒப்பந்தம் என்பது காப்பீட்டு நிறுவனம் பாதுகாப்புப் பெறுபவருக்குத் தீ மூலம் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட நியாயமான தொகையை மறு பயனாகப் பெறச் செய்திடும் ஓர் ஒப்பந்தமாகும். இதில் தீ என்பது பெருமளவிற்குப் பரவிக் கட்டுக்கடங்காமலிருக்கும் தீயைக் குறிக்கும். காப்பீடு செய்யப்பட்ட பொருள் தீப்பற்றி எரிந்து அதனால் ஏற்படும் இழப்பும் அல்லது ஒரு கட்டடத்தின் ஒரு பகுதியில் அப்பொருள் இருந்து தீயினால் அடைந்த இழப்பும் தீயினால் ஏற்படும் இழப்பாகும். தீயணைப்பு ஏற்பாடு செய்தும் ஏற்படும் இழப்புகளையும் தீயைத் தடுத்து ஏற்படும் இழப்புகளையும் தீக்காப்பீடு ஒப்பந்த ஆவணம்(Fire Insurance Corporation) ஏற்றுக் கொள்ளும். அவ்விழப்புகளுக்கு ஈட்டுத் தொகையும் தரப்படும். இயற்கையாகத் தீயினால் ஏற்படக் கூடிய இழப்புகளும் தீ விபத்தால் ஏற்படும் இழப்புகளாக ஏற்றுக் கொள்ளப்படும். வெளிச்சம், மின்சாரம், வெடிபொருள் என்பவை நெருப்பல் பொருள் என்றாலும் அவைகளால் விபத்து ஏற்பட்டபோதும் அது தீ விபத்தாகக் கருதப்படும். வெடிபொருள்கள் பொதுவாக இவ்வகையில் வாராவிட்டாலும் தீயினால் வெடித்து இழப்பு ஏற்பட்டால் இவ்வகையைச் சாரும். ஒளியினால் தீ ஏற்பட்டு இழப்படைந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும். மின்சாரம் என்பது தீ அன்று. தீ அல்லாத வெப்பத்தால் ஏற்படும் இழப்பை இவ்வகைக் காப்பீட்டில்பெற முடியாது. ஆனால் தீ பரவுவதைத் தடுப்பதற்காகப் பிடுங்கி எறியப்படும் வீடுகள் போன்றவைகளுக்கு இழப்பு ஈடு பெற்றிடலாம். காப்பீடு செய்பவர் அல்லது அவருடைய பணியாள் போன்றோரின் புறக்கணிப்பால் ஏற்படும் விபத்து தீ விபத்தாகக் கருதப்படும்.

தீக் காப்பீட்டில் குறிப்பிட்ட ஒப்பந்த ஆவணம் (Specific Policy), மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த ஆவணம் (Valued Policy), சராசரி ஒப்பந்த ஆவணம் (Average Policy), பதிலமர்த்திடும் ஒப்பந்த ஆவணம் (Replacement Policy), இழப்பு விளைவு பின் தொடர் ஒப்பந்த ஆவணம் (Consequential Loss Policy), கடந்த கால விபத்தையும் உள்ளடக்கிய ஒப்பந்த ஆவணம் (Retrospective Policy) போன்ற பல்வகை ஒப்பந்த ஆவணங்கள் உள்ளன.

தீக் காப்பீடு செய்தவர் இழப்பீடு பெறுவதற்குத் தீ விபத்து ஏற்பட்டவுடன் காப்பீடு செய்தவரோ அல்லது அவரின் சார்பாக யாராவது ஒருவரோ காப்பீட்டு நிருவனத்திற்கு எழுத்து மூலம் அறிக்கை அனுப்பவேண்டும். ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப் பட்டுள்ள காலத்திற்குள் ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்பட்ட இழப்பையும் சேதத்தையும் தோராய மதிப்புடன் எழுதிய பட்டியல் ஒன்றைக் காப்பீட்டு நிருவனத்திற்கு அனுப்ப வேண்டும். இழப்பீட்டை விளக்கும் சான்று ஒன்றையும் அனுப்ப வேண்டும். இவற்றை உடனடியாகக் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்யத் தவறினால் இழப்பீடு கிடைக்காது.

**கடற் காப்பீடு** ஒரு குறிப்பிட்ட கடற் பயணத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் கப்பல் மூலம் சரக்கு அனுப்பும்போது கடல் ஆபத்துகளால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட ஒருவர் செய்யும் ஒப்பந்தந்தான் கடற் காப்பீடு (Marine Insurance) ஆகும். கடற் காப்பீட்டு ஒப்பந்த ஆவணம் கடல் அபாயத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு ஈட்டுறுதி அளிக்கிறது. இதுவும் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். காப்பீடு செய்பவருக்கு ஏற்படும் உண்மையான இழப்பைக் காப்பீட்டு நிறுவனம் ஏற்க வேண்டும். ஒப்பந்த ஆவணத்தின் தன்மை எப்படியிருந்தாலும் இழப்புகளின் அளவு உறுதி செய்யப்பட்டாலொழியக் காப்பீட்டு நிறுவனம் இழப்பை ஏற்காது. பல காலங்களில் விபத்தின் அளவு முன் கூட்டியே ஒத்துக்கொள்ளப் படுகிறது.

கடற் காப்பீட்டு ஒப்பந்தத்தில், சாதாரண ஒப்பந்தத்தில் இருக்க வேண்டிய உடன்பாடு, இசைவு, மறுபயன் போன்றசெய்திகள் அனைத்தும் இருக்க வேண்டும். ஒப்பந்த ஆவணம் எழுத்தால் எழுதப் பட்டு முத்திரை பெற்றிருக்க வேண்டும். காப்பீடு ஒரே சமயத்தில் பன்னிரண்டு மாதங்களுக்கு மேல்

செய்யக் கூடாது.காப்பீடு செய்யத்தக்க நலன் இருக்க வேண்டும். காப்பீடு செய்பவர் முழு நன்னம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும்.

மதிப்பிடப்பட்ட ஒப்பந்த ஆவணம், பயண ஒப்பந்த ஆவணம் (Voyage Policy), காலவரையுள்ள ஒப்பந்த ஆவணம் (Time Policy), கலப்பு ஒப்பந்த ஆவணம் (Mixed Policy), மிதக்கும் ஒப்பந்த ஆவணம் (Floating Policy), மதிப்பிடா ஒப்பந்த ஆவணம் (Unvalued or Open Policy) என்று பலவகையான ஒப்பந்த ஆவணங்கள் கடற் காப்பீட்டில் எடுக்கப்படுகின்றன.

**தனியாள் விபத்துக் காப்பீடு**: விபத்தினால் இறப்பு அல்லது உறுப்பிழப்பு ஏற்பட்டால் காப்பீடு செய்பவருக்கோ அவரின் வாரிசுக்கோ ஒரு குறிப்பிட்ட தொகை அளிப்பதாகக் காப்பீட்டு நிறுவனம் அளிக்கும் உறுதிமொழிதான் தனிஆள் விபத்துக் காப்பீடு (Personal or Individual Accident Insurance) ஆகும். இது ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமன்று.

**நம்பிக்கைக் காப்பீடு** (Fidelity Insurance): இக் காப்பீட்டின் மூலம் தொழிலாளர்கள், பணியாளர் ஆகியோர் செய்திடும் மோசடிகளிலிருந்து ஏற்படும் இழப்பிற்கெதிராகக் காப்பீட்டு நிறுவனம் காப்பீடு செய்வோருக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

**கொள்கைக்கெதிரான காப்பீடு**: இத்தகைய காப்பீடு கொள்ளை, வீட்டை உடைத்தல், திருடு போன்றவைகளால் ஏற்படும் இழப்பிற்குப் பாதுகாப்பு அளிக்கிறது. இதற்கான கொள்கைக்கெதிரான காப்பீட்டு (Burglary Insurance) ஒப்பந்த ஆவணத்தில் இப்பொருள்களின் விவரம் தெளிவாகக் கொடுக்கப்பட வேண்டும்.

**தொழிலாளர் இழப்புக் காப்பீடு**: காயம்பட்ட தொழிலாளர்களுக்கு இழப்பீடு அளிப்பதற்காக வேலைக்கு அமர்த்துவோரால் எடுக்கப்படுவது இக் காப்பீடாகும். பணிபுரியும்போதும் ஏற்படும் நோய்களிலிருந்து பாதுகாப்பு வேண்டுவதற்கும் தொழிலாளர் இழப்புக் காப்பீடு (Workman's Compensative Insurance) உதவுகிறது.

**மோட்டார் விபத்துக் காப்பீடு**: கார் விபத்துகளில் காருக்குச் சேதம் ஏற்படலாம்; பயணிக்குக் காயம் ஏற்படலாம்; பயணி இறந்துவிடலாம்; தனியாளோ பலரோ காயமடையலாம்; இறந்திடலாம். எனவே, காரின் உரிமையாளர் இத்தகைய இழப்புகள் அனைத்தும் அடங்கிய ஒப்பந்த ஆவணத்தை எடுக்க வேண்டும்.

**எல்லாம் அடங்கிய ஒரே ஆவணம்**: பல இழப்புகளையும் காத்திடும் ஒரே ஒப்பந்த ஆவணம் எடுத்துக் காப்பீடு செய்திடலாம். அத்தகைய எல்லாம் ஒரே ஆவணம் (All in one Policy) தீ, திருடு, விபத்து, நம்பிக்கை இன்மை போன்றவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

இக்காலத்தில் காப்பீட்டின் வளர்ச்சி நாளுக்கு நாள் பெருகுகிறது. பயிர்ப் பாதுகாப்புக் காப்பீடு, கால்நடைக் காப்பீடு போன்றவையும் உள்ளன. எல்லாவகைக் காப்பீடுகளின் பொது நோக்கமும் இழப்பை ஈடு செய்வதாகும்.

ஆயுள், கடல், தீ விபத்துக் காப்பீடுகளைத் தொழிலாகக் கொண்டுள்ள நிறுவனங்களின் செயற்களைக் கட்டுப்படுத்திட இந்தியக் காப்பீட்டுச் சட்டம் 1938-இல் (Insurance Act 1938) நிறைவேற்றப்பட்டது. ஆயுட் காப்பீடு 19.1.1956-இல் அரசுடைமையாக்கப்பட்டு ஆயுட் காப்பீட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. இக்கழகம் 1938-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படியுள்ள நிறுவனங்களின் வைப்புகள், முதலீடு மேற்பார்வை போன்ற கட்டுப்பாடுகளைப் பின்பற்றவில்லை. ஆயுட் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation) ஆயுட் காப்பீட்டுத் தொழிலை மட்டும் முழுமையாகச் செய்துவருகிறது. ஆயுட் காப்பீட்டுச் சட்டத்தின் 1956-ஆம் ஆண்டின் சட்டக் கூறுகளின்படி செயற்பட்டு வருகிறது. இந்தியக் கடல் காப்பீட்டுச் சட்டம் 1963-இல் நிறைவேற்றப்பட்டுக் கடற் காப்பீட்டு நிறுவனங்களின் அலுவல்கள் ஒழுங்குமுறை செய்யப்பட்டுள்ளன.

**காப்பீட்டுக் கட்டணம்**: இழப்பை ஏற்பதற்காகக் காப்பீடு அளிப்பவருக்குக் காப்பீடு பெறுபவர் செலுத்தும் தொகைதான் காப்பீட்டுக் கட்டணத் (Premium) தொகையாகும். இத்தொகையைப் பெரும்பாலும் பணமாகத்தான் செலுத்த வேண்டும். முன்கூட்டியே இதைச் செலுத்துவது காப்பீட்டு ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகளைப் பொறுத்துள்ளது. இக் கட்டண வரையறையை இழப்பு, வழங்குமிடம், அமைப்பு, சொத்தின் பயன் ஆகியவற்றைப் பாதிக்கும் சூழ்நிலையை ஆராய்ந்து கணக்கிடுகின்றனர். ஆயுட் காப்பீட்டுக் கட்டணத் தொகை வாழ்நாள் அல்லது ஆயுட் கால அடிப்படையில் வரையறை செய்யப்படுகிறது.

**சலுகை நாட்கள்**: காப்பீட்டு நிறுவனம் முதலில் கட்டணம் செலுத்தக் குறிக்கப்பட்ட தவணை நாள் சென்ற பிறகு கட்டணம் செலுத்திப் புதுப்பிக்கவோ தொடரவோ சில சலுகை நாள்கள் வழங்குகிறது. ஆயுட் காப்பீட்டுக் கழகம் திங்கள்தோறும் கட்டும்

கட்டணத்திற்கு 30 நாள் சலுகை வழங்குகிறது. தீக் காப்பீடு, ஊர்திக் காப்பீடு போன்றவைகளில் ஆண்டொன்றுக்குள் ஆவணம் புதுப்பிக்கப்படாதபோது ஏற்படும் இழப்பிற்குக் காப்பீட்டு நிறுவனம் பொறுப்புடையதன்று. ஆயுட்காப்பீட்டில் சலுகை நாட்களில் ஒருவர் இறந்துவிட்டால்கூட அவருக்குச் சேர வேண்டிய தொகையைக் காப்பீட்டு நிறுவனம் வழங்க வேண்டும்.

**ஒப்பந்த ஆவணம்**: காப்பீட்டு ஒப்பந்தத்தில் காணப்படும் கூறுகள் அடங்கிய எழுத்துமூலம் உள்ள ஓர் ஆவணந்தான் காப்பீட்டு ஒப்பந்த ஆவணம் (Policy) எனப்படுவது. காப்பீட்டு நிறுவனத்தால் முத்திரையிட்டுக் கையொப்பமிட்டு இது வழங்கப்படுகிறது. கடற் காப்பீட்டைத் தவிரப் பிற காப்பீடுகளுக்கான ஆவணங்கள் குறிப்பிட்ட ஒரு படிவ முறையில் இருக்க வேண்டுமென்ற வரையறையில்லை. மேலும் இவ் ஆவணம் இருந்தால்தான் காப்பீட்டு ஒப்பந்தம் செல்லுபடியாகும்என்ற கட்டாயமுமில்லை. ஒப்பந்த ஆவணத்தில் காப்பீடு பெறுபவர் கையெழுத்திடாவிட்டாலும் அவர் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. முதன் முதலில் கட்ட வேண்டிய கட்டணம் கட்டிவிட்டால் போதுமானதாகும். ஒப்பந்த ஆவணம் ஒப்படைக்கப்படாவிட்டாலும் காப்பீட்டு ஒப்பந்தம் காப்பீடு பெறுபவரைக் கட்டுப்படுத்தும். அதேபோல் ஒப்பந்த ஆவணம் முதிர்வடையும்போதும் தகுந்த காரணம் காட்டினால் அதைக் கொடுக்க வேண்டிய தேவையில்லை.

**மறு காப்பீடு**: தான் எளிதாக ஏற்கும் பொறுப்பைவிட மிகையான பொறுப்பேற்ற ஒரு காப்பீட்டு நிறுவனம் ஏற்கனவே தான் எடுத்துள்ள காப்பீட்டை அல்லது அதன் இழப்பைப் பிற காப்பீட்டு நிறுவனங்களுக்கு முழுதும் அல்லது அதன் ஒரு பகுதியை மாற்றிக் காப்பீடு செய்வதே மறு காப்பீடு (Re-insurance) ஆகும். எனவே, மறு காப்பீட்டில் ஒரு காப்பீட்டு நிறுவனம் தான் ஏற்றுக்கொண்ட இழப்பைப் பிற நிறுவனங்களிடம் காப்பீடு செய்கிறது. இதனால் அது ஏற்கும் இறுதிப் பொறுப்புக் குறைகிறது. தான் செய்துகொண்ட மூல ஒப்பந்தத்தின் இழப்பைப் பரவலாக்கவும் குறைந்த கட்டணம் கட்டி ஆதாயம் ஈட்டவும் மறு காப்பீடு செய்யப்படுகிறது. மிகையான காப்பீட்டுக் கணக்குகள் ஏற்பட்டு மேலாண்மைச் சிக்கல்கள் ஏற்படும்போதும் மறு காப்பீட்டு மூலம் அவை பிற நிறுவனங்களுக்கு மாற்றப்படுகின்றன. மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தினால் முதலில் ஏற்பட்ட காப்பீட்டு ஒப்பந்தக் கூறுகளில் மாற்றங்கள் நிகழா. காப்பீட்டு ஒப்பந்தத்தின் எல்லாக் கோட்பாடுகளும் மறு காப்பீட்டு ஒப்பந்தத்தில் பாதுகாக்கப்படுகின்றன. மறு காப்பீடு ஒப்பந்தத்திற்கு முதலில் காப்பீடு பெற்றவர் தொடர்புடையவர் அல்லர். எனினும், மறு காப்பீட்டு ஒப்பந்தத்தின் செல்லுபடித்தன்மை பற்றி அறிந்து கொள்ள அவருக்கு உரிமை உண்டு.

**இரட்டைக் காப்பீடு**: ஒரே சொத்தினை அல்லது பொருளினை இரண்டு காப்பீட்டு நிறுவனங்களிடமோ,ஒரு நிறுவனத்திலேயே இரண்டு காப்பீட்டு ஆவணங்கள் எடுத்தோ காப்பீடு செய்வது இரட்டைக் காப்பீடு (Double Insurance) எனப்படும். இத்தகைய காப்பீடுகள் ஆயுட் காப்பீட்டில் ஆதாயம் ஈட்டுவதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், ஒவ்வோர் ஆவணத்திலும் முழுத் தொகையைக் காப்பீடு பெறுகிறவர் அடையலாம். ஆயுட் காப்பீட்டில் ஒருவர் எத்தனை ஆவணங்கள் வேண்டுமானாலும் காப்பீடு செய்யலாம். ஆவணம் முதிர்வடைந்ததும் எல்லா ஆவணங்களிலும் குறிப்பிட்ட தொகையை அவர் பெறலாம். தீ, கடற் காப்பீடு ஆகியவற்றிலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் எடுக்கலாம். ஆனால், இழப்பு ஏற்படும்போது உண்மை இழப்போ காப்பீடு செய்யப்பட்ட மொத்த மதிப்போ எது குறைவாக இருக்கிறதோ அதை மட்டும் பெறலாம். காப்பீட்டு நிறுவனங்கள் இழப்பை விகிதாசாரப்படி பகிர்ந்து கொள்கின்றன.

**காப்பீட்டின் அடிப்படைக் கூறுகள்**: எல்லா வகையான காப்பீடும் பொதுவான சில கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படுகின்றன. அவையாவன:

**ஈட்டுறுதி**: ஒருவருக்கு ஏற்படும் இழப்பைக் காக்கும் அல்லது ஈடுகட்டும் செயற்பாடு ஈட்டுறுதியாகும் (Indemnity). இதன் அடிப்படையில்தான் காப்பீட்டு ஒப்பந்தம் ஏற்படுகிறது. காப்பீடு செய்தவருக்கு எந்த அளவிற்கு இழப்பு ஏற்படுகிறதோ அந்த அளவிற்கு ஈட்டுறுதி வழங்கப்படும்.காப்பீடுசெய்தவர் தம்பழைய நிலையை அடைவதற்கு இவ்வீட்டுறுதி வழங்கப்படுகிறது. ஒருவருக்கு ஏற்படும் இழப்பை மட்டும் இது ஈடுகட்டும். அதுவும் விகிதாச்சாரத்தில்தான் வழங்கப்படும். ஆயுட் காப்பீடு, தனிஆள் விபத்துக் காப்பீடு போன்றவைகளைத் தவிர ஏனைய காப்பீட்டு ஆவணங்கள் எல்லாம் ஈட்டுறுதியை அடிப்படையாகக் கொண்டவை.தீ, கடல் காப்பீடுகளில் இழப்பு முழுமையாகக் கணக்கிடப்பட்டுப் பணமாக வழங்கப்படுகிறது அல்லது பழுதுபார்க்கத் தேவையான செலவு மட்டும் வழங்கப்படுகிறது. அசையும் பொருள்களாக இருந்தால் புதிய பொருள்கள் வாங்கி ஈடுசெய்யலாம். அசையாப் பொருள்களாக இருந்தால் புதுப்பித்து அல்லது பழைய நிலையில் இருக்கச் செய்து

வழங்கிடலாம். எல்லா நிலைகளிலும் இழப்பு ஈடு பெறுவோர் அவர்தம் பொருளை இழந்தவராக இருக்க வேண்டும்.

**இழப்புக் குறைப்பு:** விபத்து ஏற்பட்டு இழப்பு ஏற்படும்போது காப்பீடு செய்தவர் ஒரு பொறுப்பானவர். தம் பொருளைப் பாதுகாக்க எந்த அளவு நடவடிக்கை எடுப்பாரோ அந்த அளவு கவனத்துடனும் பொறுப்புடனும் இழப்பைக் குறைக்க அவர் பாடுபட வேண்டும். எவ்வகையிலும் விபத்து ஏற்படும் வண்ணம் அவர் நடந்து கொள்ளக்கூடாது.ஒவ்வொரு காப்பீட்டு ஒப்பந்தத்திலும் இடர் தாங்கலான (Risk) ஆபத்து இருக்க வேண்டும். அந்த இடர்தாங்கலை ஏற்றிடக் கட்டணம் செலுத்தப்படுகிறது.இடர் தாங்கல் இல்லா' விட்டால் மறுபயனில்லாமல் ஒப்பந்தம் முறிந்துவிடும். அதனால், காப்பீட்டு நிறுவனம் அது பெற்ற கட்டணத்தைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும்.

**முழு நன்னம்பிக்கை:** 'வாங்குவோர் கவனிக்க (Caveat Emptor) என்றிடும் சாதாரண வாணிக ஒப்பந்தம் போலல்லாமல் காப்பீட்டு ஒப்பந்தம் முழு நன்னம்பிக்கையின் அடிப்படையில் எழவேண்டும். காப்பீடு செய்பவர் பொருள் அல்லது உயிர் பற்றிய முக்கியமான உண்மைத் தகவல்களைக் காப்பீட்டு நிறுவனத்திற்கு முழுமையாக அளிக்க வேண்டும்; எதையும் மறைக்கக் கூடாது. நேர்மையான முக்கிய செய்திகள் இடர்தாங்கலின் தன்மையையும் அல்லது அது நிகழும் வாய்ப்பையும் காப்பீடு செய்வோரின் நடத்தையையும் பற்றியதாயிருக்கும்.

**காப்பீட்டு நலன்:** ஒவ்வொரு காப்பீட்டு ஒப்பந்தத்திலும் காப்பீட்டு நலன் அல்லது அக்கறை (Insurable Interest) இருக்க வேண்டும். இல்லை எனில், அது மேலும் ஒரு சூதாட்ட ஒப்பந்தம் போலாகிவிடும். காப்பீடு செய்பவருக்குக் காப்பீடு செய்யப்படுகிற பொருள் மீது ஒரு உரிமையுடன் கூடிய தொடர்பு இருக்க வேண்டும்.அப்பொருள் நல்ல நிலையில் இருந்தால் அவருக்கு நன்மையும், அது அழிந்து போனால் அவருக்குஇழப்பும் ஏற்பட வேண்டும். பாசமும் நேசமும் காப்பீட்டு நலனாக எடுத்துக்கொள்ள முடியாது. காப்பீட்டு நலன் ஏற்படப் பொருள் மீது உரிமை, அக்கறை, பொறுப்பு ஆகியவை ஏற்பட வேண்டும்.

ஆயுட் காப்பீட்டு ஒப்பந்த ஆவணம் (Policy) எடுக்கும்போது யாருடைய ஆயுள் மீது காப்பீடு செய்யப்படுகிறதோ அவர் மீது காப்பீட்டு நிறுவனம் அக்கறை கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் அவர் உயிர்மீது அக்கறை உண்டு. மனைவி கணவனின் ஆயுளிலும், கணவன் மனைவி ஆயுளிலும், மகன் தகப்பனாரின் ஆயுளிலும், தந்தை மகனின் ஆயுளிலும், கடனீந்தோர் கடனாளி ஆயுளிலும் முதலாளி வேலையாட்கள் ஆயுளிலும், கூட்டாளி, உடன் கூட்டாளியின் ஆயுளிலும், முதல்வர் முகவர் ஆயுளிலும் அக்கறை கொண்டுள்ளனர். தீக் காப்பீட்டில் காப்பீடு செய்யப்பட்ட சொத்தின் மீது, காப்பீடு செய்பவர் ஒப்பந்தத் தொடக்கத்திலும் இழப்பு ஈடு வேண்டும் போதும் அக்கறை கொண்டிருக்க வேண்டும். ஆனால், கடற் காப்பீட்டு ஒப்பந்த ஆவணம் எடுக்கும்போது இந்நலன் இருக்க வேண்டிய தேவையில்லை. இழப்பு ஈடு வேண்டும் போது இந்நலன் இருந்தால் போதுமானதாகும்.

**அண்மைக்காரணம்:** காப்பீடு செய்யப்பட்ட அபாயம், காப்பீடு செய்யாத அபாயம் ஆகிய இரு காரணங்களால் இழப்பு ஏற்படுவதுண்டு. காப்பீடு செய்யாத அபாயத்தினால் ஏற்படும் இழப்பைக் காப்பீட்டு நிறுவனம் ஏற்றுக்கொள்ளாது. ஆனால், காப்பீட்டு நிறுவனம் காப்பீடு செய்யப்பட்ட அபாயத்தினால் ஏற்படும் இழப்பையும் அண்மைக் காரணத்தினால் ஏற்படும் இழப்பையும் ஏற்றிடும். எந்தக் காரணத்தினால் இழப்பு ஏற்படுகிறதோ அதனால் ஏற்படும் இழப்பை மட்டும் அது ஏற்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மோட்டார் சைக்கிளுக்கு விபத்துக் காப்பீடு செய்யப்படுகிறது. வன்முறையால் அதற்குச் சேதம் ஏற்பட்டால் காப்பீட்டு நிறுவனம் இழப்பு ஈடு வழங்காது. இழப்பின் காரணம் அண்மைக் காரணம் (Cansa Proxima) அ று. எனவே, எந்தக் காரணத்தால் காப்பீடு செய்யப்பட்ட பொருளுக்கு நேரடியாகத் தீங்கு ஏற்படுகிறதோ அதுவே அண்மைக் காரணமாகும். மேலும், எந்தக் காரணத்தால் காப்பீடு செய்தவரைப் பாதிக்கும் உண்மையான இழப்பு ஏற்படுகிறதோ அக்காரணத்தை அண்மைக் காரணம் எனக் கூறலாம். காரணத்திற்கும் முடிவிற்கும் இடையேயுள்ள காலம் நீண்டிருக்கலாம் அல்லது குறைந்திருக்கலாம். இதனால், அண்மைக் காரணக் கோட்பாடு பாதிக்கப்படமாட்டாது. உண்மையிலே அண்மைக் காரணம் என்றால் திறமையின் அடிப்படையில் அது இருக்க வேண்டும். நேரான, செயலாற்றக் கூடிய, திறமையுள்ள காரணத்தைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**இடர்தாங்கல்:** இடர்தாங்கல் இல்லையென்றால் காப்பீட்டு நிறுவனம் காப்பீட்டுக் கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். எடுத்துக்காட்டாக, காப்பீடு செய்தவர் காப்பீடு தொடங்குவதற்கு முன்னரே இறந்துவிட்டார் என்றால், அவர் கட்டியுள்ள காப்பீட்டுக் கட்டணத்தைத் திருப்பிக்கொடுத்து

விட வேண்டும். மேலும் இழப்பு அல்லது விபத்து இல்லாத ஒப்பந்த ஆவணம் செயலற்றதாகி விடுகிறது. ஆயுட் காப்பீட்டில் சலுகை நாட்களுக்குள் கட்டணம் கட்டாத நிலையில் ஒருவர் இறந்து விட்டால் காப்பீட்டு நிறுவனம் அத்தொகையைக் கழித்து எஞ்சும் காப்பீட்டு ஒப்பந்த ஆவணத்தொகையைச் செலுத்த வேண்டும். ஏனைய வகைக் காப்பீடுகளில் காப்பீடு செய்தவர் தவணைத் தேதிக்கு முன்னர் ஒப்பந்த ஆவணத்தைப் புதுப்பிக்க இசைந்தாலொழியச் சலுகை நாட்களில் ஏற்படும் இழப்பைக் காப்பீட்டு நிறுவனம் ஏற்காது.

**மாற்றமர் அடைமான உரிமை**: காப்பீட்டு ஒப்பந்தத்தின் கோட்பாடுகளில் ஒருவர் மீது மற்றொருவர் கொண்டுள்ள உரிமைகளையும், பெறும் தீர்வு வழிகளையும், பிறிதொருவர் பெறுவதற்கான உரிமை, மாற்றமர் அடைமான உரிமை (Subrogation) எனக் கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு பார உந்தும் (Lorry) இரண்டு சக்கர ஊர்தியும் மோதி இரண்டு சக்கர ஊர்தி சேதமடைந்துவிட்டால், காப்பீட்டு நிறுவனம் இரண்டு சக்கர ஊர்தியின் உரிமையாளருக்கு இழப்பு ஈடு செலுத்தி விடுகிறது. இரண்டு சக்கர ஊர்தியின் உரிமையாளருக்கு அவ்வூர்தியின் மேலுள்ள எல்லா உரிமைகளும் காப்பீட்டு நிறுவனத்திற்கும் உண்டு. காப்பீட்டு நிறுவனம் சேதமடைந்த இரண்டு சக்கர ஊர்தியை விற்றுப் பணம் பெறும். பார உந்து ஓட்டுநர் தவறாக வண்டி ஓட்டியிருந்தால் அப் பார உந்தின் உரிமையாளர் மீது வழக்குத் தொடர்ந்து இழப்பு ஈடு பெறும் உரிமையும் காப்பீட்டு நிறுவனத்திற்குண்டு. ஈட்டுறுதியின் கிளையாக இவ்வுரிமை திகழ்கிறது. தீ, கடற் காப்பீட்டு ஒப்பந்த ஆவணங்களுக்கு மட்டுந்தான் இது பொருந்தும்.

**பங்களிப்பு**: காப்பீடு செய்தவர் காப்பீடு செய்யப்பட்ட பொருளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களிடம் காப்பீடு செய்திருந்தால் ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும், விகிதாச்சார அடிப்படையில் இழப்பு ஈட்டைப் பெறலாம். அதற்குமேல் பெற முடியாது. மாற்றமர் அடைமான உரிமையைப் போல் இதுவும் ஈட்டுறுதிக் கோட்பாட்டைப் பயன்படுத்திச் செயற்படுகிறது. இதற்கான கட்டுப்பாடுகளாவன:காப்பீடு செய்தவர் ஒருவராக இருக்க வேண்டும்; இழப்பைக் காட்டும் எல்லா ஒப்பந்த ஆவணங்களும் ஒரே விபத்தைக் குறிக்க வேண்டும்; இழப்பு ஏற்படும்போது அவை செல்லக்கூடியனவாக இருக்க வேண்டும்.

**ஒப்பந்த ஆவணத்தின் காலம்**: தீக்காப்பீட்டு ஒப்பந்த ஆவணத்தின் காலம் (Terms of Policy) ஓர் ஆண்டிற்குப் பின் காப்பீட்டு நிறுவனத்தின்பொறுப்புத் தானாகவே நின்று விடும். கடற் காப்பீடு ஓராண்டிற்கு அல்லது ஒரு பயணத்திற்கு எடுக்கப்படுகிறது. எனவே, காப்பீட்டு நிறுவனத்தின் பொறுப்பு அக்கால வரையறைக்கு மட்டும் செல்லுபடியாகும். ஆயுட் காப்பீட்டு ஒப்பந்தம் ஒரு தொடர்ச்சியான ஒப்பந்தம். அது ஒரு குறிப்பிட்ட ஆண்டு அல்லது காப்பீடு செய்தவரின் எஞ்சியுள்ள ஆண்டுகளுக்கான ஒப்பந்தமாகும். அதில் இடர்தாங்கல் தொடர்ந்து இருப்பதால் அதன் காப்பீட்டுக் கட்டணத்தை அவ்வப்பொழுது செலுத்தி, ஒப்பந்த ஆவணத்தை எப்பொழுதும் செல்லுபடியாகும் நிலையில் வைத்திருக்க வேண்டும். சலுகையளிக்கப்பட்ட தவணைத் தேதிக்குள் கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் ஒப்பந்த ஆவணம் செல்லாமற் போய்விடும்.

கே.என்.இரா.

**துணை நூல்**:

**Kuchhal**, M.C., Mercantile Law, Vikas Publishing House Private Limited, New Delhi, 1981.

**காப்புத் தீர்வைக் கொள்கை**: உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கும் நோக்கில், அயல் நாட்டுப் பொருள்களின் மீது விதிக்கப்படும் தீர்வைகளே காப்புத் தீர்வைகள் (Protective Tariffs) எனப்படும். பன்னாட்டு வாணிகத்தின் போக்கைக் கட்டுப்படுத்துவதும் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தையடைவதும் காப்புத் தீர்வைக் கொள்கையின் சிறப்புக் கூறுகளாகும்.

இறக்குமதிகள்மீது தீர்வை விதிப்பது தொன்று தொட்டே நிகழ்ந்து வரும் செயலாகும். 'உல்கு பொருள்' பற்றியும், 'புலி பொறித்துப் புறம்போக்கு' வது பற்றியும் சங்க நூல்களில் சான்றுகள் உள்ளன. இறக்குமதித் தீர்வைகளை அரசு விரும்புவதற்கான முதன்மைக் காரணம் அவற்றைச் செலுத்துபவன் அயல்நாட்டான் என்பதும், அது ஒரு வருவாய் மூலம் (Source of Revenue) என்பதும் ஆகும். இறக்குமதித் தீர்வைகள் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் விதிக்கப்படும்போது, அவை காப்புத் தீர்வைகள் ஆகின்றன. நாடுகளிடையே வாணிகத்திற்குத் தடையில்லை எனில், உள்நாட்டில் உற்பத்தியாகும் ஒரு பொருளின் இறுதிநிலை உற்பத்திச் செலவு உயர்வாக இருந்தால், இயல்பாகவே அப்பொருள் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும். அதனால், உள்நாட்டுத் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும். அந்த இறக்குமதிகளின் மீது தீர்வை விதிக்கப்

பட்டால், அவற்றின் விற்பனை விலை உயரும். இவ் விலை உயர்வின் விளைவாக, உள்நாட்டிலேயே, கூடுதல் உற்பத்திச் செலவுடன், அப்பொருளை உற்பத்தி செய்ய இயலும். இவ்வாறு அயல்நாட்டுப் போட்டியிலிருந்து உள்நாட்டுத் தொழிலைப் பாதுகாக்க இறக்குமதித் தீர்வைகள் பயன்படும் காரணத்தால் இவை காப்புத் தீர்வைகள் எனக் கூறப்படுகின்றன.

அனைத்து வரிக் கொள்கைகளின் அடிப்படைக் கோட்பாடுகளான வரியின் அளவு, யார் அதைச் செலுத்துவது, எதற்காக வரி விதிக்கப்படுகிறது என்பன போன்ற திட்ட வரையறைகள் காப்புத் தீர்வைக்கும் இன்றியமையாதனவாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் இறக்குமதிகள் அறவே நிற்கும்போதுதான், உள்நாட்டுத் தொழில்கள் முற்றிலும் பாதுகாக்கப் பட்டனவாகும். எனவே, அப்பொருள்களின் இறக்குமதிகள் எந்தத் தீர்வை மட்டத்தில் அறவே நின்று விடுகின்றனவோ, அந்நிலை வரை தீர்வை விதிக்கப்பட வேண்டும். இறக்குமதிகளே இல்லாத நிலையில், காப்புத் தீர்வை மூலம் பெறும் வருவாய் வெறுமையாக இருக்கும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. வருவாய் நோக்கில் காப்புத்தீர்வை செயற்படாது.

இறக்குமதித் தீர்வைகளின் பளுவைச் சுமப்பவர் ஏற்றுமதியாளராகிய அயல்நாட்டவரே என்ற பொதுக் கருத்து முற்றிலும் உண்மையன்று. அது தீர்வைக்கு ஆளாகும் பொருள்களுடைய தேவை-அளிப்பு ஆகிய வற்றின் நெழ்ச்சியைப் பொறுத்தது. அயல்நாட்டு ஏற்றுமதியாளரின் அளிப்பு நெகிழ்ச்சி குறைவாகவோ, உள்நாட்டு நுகர்வோரின் தேவை நெகிழ்ச்சி மிகையாகவோ இருக்கும்போதுதான், இறக்குமதித் தீர்வையினை அயல்நாட்டு ஏற்றுமதியாளர் செலுத்த நேரிடும். இறக்குமதி மதிப்பை விடப் பன்மடங்கு மிகையாக இறக்குமதித் தீர்வையை விதித்தும் வாங்குவோரின் தேவை நெகிழ்ச்சி குறைவாக இருந்தால், இக்காலத்தில் அயல்நாட்டுப்பட ஒளி பதிவுப் பெட்டி (Video) போன்றவற்றை நுகர்வோர் தொடர்ந்து வாங்க விரும்புவதுபோல் தீர்வைப் பளுவை இறுதியில் தாங்கிக் கொள்பவர் இறக்குமதியாளராயிருப்பர். காப்புத் தீர்வையின் அளவை வரையறுக்கும்போது, வரி செலுத்தப்படும் பொருள்களின் தேவை-அளிப்பு நெகிழ்ச்சிகளை ஆய்ந்தறிந்துகொள்ள வேண்டும் என்பது இன்றியமையாததாகும்.

இறக்குமதியாகும் பொருளின் அளவு அடிப்படையில் விதிக்கப்படும் காப்புத் தீர்வைகள் அளவு வீதத் தீர்வைகள் (Specific Duties) என்றும், பொருளுடைய மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படும் காப்புத் தீர்வைகள் மதிப்புவீதத் தீர்வைகள் (Ad Valorem Duties) என்றும் வழங்கப்படுகின்றன. மதிப்பு வீதத் தீர்வைகள் பொருளின் தன்மையையும் கருத்தில் கொள்வதால் மிகச் சிறந்தன எனக் கருதப்படுகிறது. இவ்விரு முறைகளையும் இணைத்து, அவற்றில் எது குறைந்ததோ அதனையே செலுத்த வரையறுக்கும் முறை, இணைக்கப்பெற்ற தீர்வைகள் (Combined Duties) எனப்படும். உள்நாட்டுப் பொருளின் விலைக்குச் சீராக இறக்குமதிப் பொருளின் விலையை உயர்த்தும் அளவுக்கு விதிக்கப்படுகிற தீர்வை சரியீட்டுத் தீர்வை (Equalising Duties) எனப்படுகிறது. உதவித் தொகை (Subsidy) பெற்ற இறக்குமதிப் பொருள், குறைந்த விலைக்கு விற்கப்படும்போது, அவ் விலையைக் கூட்டுவதற்காக விதிக்கப்படும் தீர்வை எதிரீடு செய் தீர்வை (Countervailing Duties) எனப்படுகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, சுவீடன் போன்ற நாடுகள் ஒவ்வொரு பொருளினத்திற்கும் அடிப்படைத் தீர்வை ஒன்றினை மட்டும் விதித்து வருகின்றன. இது மரபுவழித் தீர்வை (Conventional Duties) எனப்படுகிறது. இறக்குமதிப் பொருள்கள், தோன்றிய நாட்டின் அடிப்படையிலும் தீர்வை வீதங்கள் வரையறுக்கப் படுகின்றன. இறக்குமதிப் பொருள்கள் தோன்றிய நாடு எதுவாயினும், குறிப்பிட்ட பொருளுக்குக் குறிப்பிட்ட அளவு தீர்வை என்று விதிப்பது ஒருமுனைத் தீர்வை (Single Column Duty) எனப்படுகிறது. பொருள்கள் உற்பத்தியாகியுள்ள நாடுகளைப் பொறுத்துப் பல்முனைத் தீர்வை (Multiple Column Duties) விதிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஆசுத்திரேலியாவில் பொது, இடைப்பட்டது, சலுகை பெற்றது என்ற மூவகைத் தீர்வைக் கொள்கை பின்பற்றப்படுகிறது. அங்கு, இங்கிலாந்து நாட்டிலிருந்து வரும் பொருள்களுக்குச் சலுகை வீதமும், வாணிக ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள நாடுகளிலிருந்து வரும் பொருள்களுக்கு ஓர் இடைப்பட்ட வீதமும், பிற நாட்டுப் பொருள்களுக்கு ஒரு பொது வீதமும் விதிக்கப்படுகின்றன. இத்தீர்வைக் கொள்கையில் நாடுகளிடையே வேறுபாடுகள் காட்டப்படுவது வெளிப்படையாக உள்ளது. இதற்கு அடிப்படையாக அரசியல், பொருளாதாரக் காரணங்கள் சுட்டிக்காட்டப் படுகின்றன.

இங்கிலாந்து நாட்டிலிருந்து வரும் பொருள்களுக்கு ஆசுத்திரேலியா சலுகைவீதம் விதிக்கக் காரணம், அந்நாட்டுடன் ஆசுத்திரேலியா தொன்று தொட்டுக் கொண்டிருக்கும் நெருங்கிய அரசியல் உறவே ஆகும். முற்காலத்தில் இங்கிலாந்து, தன்

னுடைய குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் பொருள்களுக்குச் சலுகை அளித்தது. பேரரசு நாடுகள் அனைத்தும் தமக்குள் இச்சலுகையை வழங்கிய காரணத்தால் இதனைப் 'பேரரசுச் சலுகை'(Imperial Preference) என்றும் குறிப்பிட்டனர். ஒப்பந்தக் கூலிகள் (Indentured Labourers), போர்க் கைதிகள் (Prisoners of War-POW), கட்டாய உழைப்பாளர் (Forced Labourers) போன்றவர்களைக் கொண்டு மிக மலிவாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அறவே தடுத்த அமெரிக்க நாட்டு ஆலி-இசுமூட்டு (Hawley-Smoot) சுங்கத் தீர்வைகள், பொருளாதார சமூகக் காரணங்களால் வேறுபடும் காப்புத் தீர்வைகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

ஒவ்வொரு நாடும், இறக்குமதிகளின்மீது தீர்வை விதிக்கும் போது நாடுகளிடையே நடக்கும் பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சி குன்றுகிறது. தொடர்ந்து உலக வாணிகத்தில் தேக்கநிலை நீடிப்பது நாடுகளின் பொது நலனுக்குகந்ததன்று என்று எல்லா நாடுகளுமே ஆராய்ந்தறிந்துள்ளன. மிக இறுக்கமான காப்புத் தீர்வைக் கொள்கைகளைத் தொடர்ந்து பல காலமாகக் கடைப்பிடித்து வரும் அமெரிக்கா, இப்போது அயல்நாடொன்று அமெரிக்கப் பொருள்களுக்குத் தீர்வைக் குறைப்புச் சலுகை வழங்குமானால், தானும் குறிப்பிட்ட அளவு தீர்வைக் குறைப்பு வழங்க அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. முதல், இரண்டாம் உலகப்போர்கள், உலகப் பெருமந்தம் (Great Depression) ஆகியவற்றால் உலக வாணிகம் வீழ்ச்சி அடைந்த நிலையில் போருக்குப் பிற்காலத்தில், உலக வாணிகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான உடனடித் தேவையை உலக நாடுகள் நன்குணர்ந்தன. ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கு இணையாக ஒரு பன்னாட்டு வாணிக நிறுவனத்தை அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுச் சுங்கவரிகள், வாணிகம் பற்றிய பொது உடன்பாட்டு அமைப்பு (General Agreement on Tariff & Trade-GATT) நிறுவப்பட்டது.

சுங்கத் தீர்வைகள், வாணிகம் பற்றிய பொது உடன்பாட்டில் அல்லது ஒப்பந்தத்தில் 23 நாடுகள் 1947-இல் கையெழுத்திட்டன. 'அதிகச் சலுகையுறும் நாடுகள் விதி' (Most Favoured Nations Clause), எதிரீட்டு முறை (Reciprocity) ஆகியனவற்றின் அடிப்படையான வாணிக ஒப்பந்தங்கள் இவ் வமைப்பின் பெருந்தூண்கள். மிகையான தீர்வைச் சலுகைகளைக் குறிப்பிட்ட நாட்டுக்கு அளித்தால் அச் சலுகைகள் இயல்பாகவே பிற நாடுகளுக்கும் வழங்கப்படும் என்பது அதிகச் சலுகையுறும் நாடுகள் விதியாகும். அதனால், நாடுகளிடையே வேறுபாடுகள் காட்டுவது தவிர்க்கப்படுகிறது. 'ஏ' என்ற ஒரு நாடு 'உ' என்ற பிறநாட்டுப் பொருள்களுக்குத் தீர்வைக் குறைப்பு நல்கினால் 'உ' நாடும் 'ஏ' நாட்டுக்குத் தீர்வைக் குறைப்பு வழங்க வேண்டும் என்பது எதிரீட்டு முறைக் கொள்கை. இவற்றால் பொதுவான சுங்கத் தீர்வைக் குறைப்பு ஏற்பட்டதுடன் தீர்வைக் குறைப்பால் தனியொரு நாடு பாதிக்கப்படுவதும் தவிர்க்கப்படுகிறது.

இதனிடையே வட்டார அளவில், நாடுகள் பல தம் வாணிகத்தைப் பெருக்கும் வகையில் பல புதிய அமைப்புகளை உருவாக்க முனைந்தன. இவ் வமைப்புகள் சுங்கத் தீர்வை ஒன்றியம் (Customs Union), தடையிலா வாணிக மண்டலங்கள் (Free Trade Areas) என இரு வகைகளில் அமைந்தன. சுங்கத் தீர்வை ஒன்றியத்தில் சேரும் நாடுகள் தமக்குள் நடக்கும் வாணிகத்தைத் தடையற்றதாக்கி, ஒன்றிய உறுப்பினர் அல்லாத அயல்நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிகளுக்கு ஒரே பொதுவான வீதத்தில் தீர்வைகளை விதிக்க இணங்குகின்றன. ஐரோப்பிய நாடுகள் 1958-இல் உருவாக்கிய ஆறு நாட்டுக்குழு ஒன்றியம், 1970-இல் ஒரு முழுமையான பொருளாதார ஒன்றியமாக - ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயமாக (European Economic Community) உருவெடுத்தது. தடையிலா வாணிக மண்டல நாடுகள், தமக்குள் நடக்கும் வாணிகத்தைக் கட்டுப்பாடற்றதாக்கி, மண்டல உறுப்பினரல்லாத அயல்நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிகளைத் தங்கள் விருப்பம்போல் நடத்திக் கொள்ள இசைகின்றன. ஐரோப்பியத் தடையிலா வாணிகச் சங்கம், இலத்தீன் அமெரிக்கத் தடையிலா வாணிகச் சங்கம் ஆகியன இம்மண்டல அமைப்புக்கு எடுத்துக்காட்டுகள்.

பொது உடன்பாட்டின் சார்பில் தொடர்ந்து பல மாநாடுகள் 1947, 1950, 1951, 1956, 1960, 1962, 1964, 1968, 1973, 1979 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றுப் பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அவற்றுள் 1964-இலும், 1968-இலும் பிரசெல்சில் நடந்த மாநாடுகள், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடி முனைந்து நின்று பங்குகொண்ட காரணத்தால் 'கென்னடிச் சுற்று' (Kennedy Round) என்று சொல்லப்படுகின்றன. ஐம்பது நாடுகள் கலந்துகொண்ட இம்மாநாடுகளில் இறக்குமதிகளில் மூன்றிலொரு பங்கின் மீதுள்ள தீர்வையைச் சராசரி 35 விழுக்காடாகக் குறைக்க அமெரிக்கா இணங்கியது; சில இனங்களில் 50 விழுக்காட்டுக்கும் கூடுதலாகக் குறைத்துக் கொள்ள முன்வந்தது. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் 35 விழுக்காடும். இங்கிலாந்து 36 விழுக்

காடும், சப்பான் 30 விழுக்காடும், கனடா 24 விழுக்காடும் தீர்வைக் குறைப்புக்கு ஒப்புக்கொண்டன.பின்னர் 1973–இலும் 1979–இலும் கையெழுத்தான 'தோக்கியோச் சுற்று' (Tokyo Round) ஒப்பந்தங்களின் மூலம் 38 விழுக்காடு தீர்வைச் சலுகைகளை வழங்குவதாகத் தொழில்மய நாடுகள் அறிவித்தன.

பொது உடன்பாட்டு ஒப்பந்தங்கள் பொதுவான தீர்வைக் குறைப்புக்கு வகை செய்தபோதிலும், வளரும் நாடுகளின் நலன்களுக்கு உதவுவனவாக அமையவில்லை என்பது தொடர்ந்தசிக்கலாகவே இருந்து வருகிறது. இந்த ஒப்பந்தத்தில் விதித்துள்ள நல்லெண்ண உறவு முறைப்படி ஒரு நாடு மற்றொரு நாட்டிலிருந்து தீர்வைக் குறைப்பைப் பெறவேண்டுமெனில், தானும் அத்தகைய தீர்வைக் குறைப்புச் செய்தாக வேண்டும். வளரும் நாடுகள் இவ்வாறு தீர்வைக் குறைப்புச் செய்யும்போது, வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து இறக்குமதிகள் பெருகி நாட்டுப் பொருளாதார வளர்ச்சி அதனால் பாதிக்கப்படும். மேலும், கென்னடிச் சுற்றின்போது, வளரும் நாடுகளின் முக்கியமான ஏற்றுமதிகளாகிய காப்பி, கொக்கோ, சர்க்கரை, சணற்பொருள்கள், துணி முதலிய வெப்பமண்டலப் பொருள்கள் மிகக் குறைந்த அளவே தீர்வைக் குறைப்புச் சலுகைகள் பெற்றன. எனவே, வளரும் நாடுகள் போதுமான சலுகைகளை வேண்டி வலியுறுத்தின. தொடர்ந்து 1972–இல் வளர்ச்சியடைந்த நாடுகள், அதிகச் சலுகை பெற்ற நாடுகள் விதியைச் செயற்படுத்தாமல் வளரும் நாடுகளிலிருந்து வரும் பொருள்களுக்கு அடுத்த பத்தாண்டுக் காலத் தீர்வையில் சலுகைகள் வழங்கும் விதியைச் செயற்படுத்தின. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் இச்சலுகையை முதன்முதல் வழங்க முன்வந்தது. இச்சலுகை முறை பொது முறைப்படுத்தப்பெற்ற சலுகை முறை (Generalised System of Preferences) எனக் கூறப்படுகிறது.இச்சலுகை மேலெழுந்த வாரியாகவே செயற்படுகிறது என்பதைத் தோக்கியோச் சுற்று ஒப்பந்தங்களில் வளரும் நாடுகளின் வழக்கமான ஏற்றுமதிகளில் கைத்தொழில் பொருள்களுக்கு 25 விழுக்காடு தீர்வைக் குறைவும், வேளாண்மைப் பொருள்களுக்கு 7 விழுக்காடு மட்டிலுமே தீர்வைக் குறைவும் அளிக்கப்பட்டதிலிருந்து அறியலாம்.

ஒரு நூற்றாண்டுக்கும் மேல் இந்தியா அயல் நாட்டவரின் ஆட்சியின் கீழிருந்தது. அவ்வரசு தடையிலா வாணிகத்தையே கொள்கையாகக் கொண்டிருந்தது. வருவாய் நோக்கில் கி.பி.19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சில சிறு சுங்கத் தீர்வைகள் விதிக்கப்பெற்றன. முதல் சுங்கத் தீர்வைச் சட்டம் கி.பி. 1871–இல் நிறைவேற்றப்பட்டு நூல், பருத்தி, துணி, இரும்புச் சாமான்கள், சர்க்கரை, புகையிலை ஆகியவற்றின் மீது 3.5 முதல் 10 விழுக்காடு வரை தீர்வைகள் விதிக்கப்பட்டன. இத்தீர்வைகள் காப்புத் தீர்வைகளாகச் செயற்படாத நிலையில், இறக்குமதித் தீர்வையை ஈடுகட்டும் வகையில் உள்நாட்டுப் பொருள்கள் மீதும் ஆயத்தீர்வைகள் விதிக்கப்பட்டன. செருமானிய இறக்குமதியால் பாதிக்கப்பட்டிருந்த சர்க்கரைத் தொழிலுக்கு உதவும் வகையில் சர்க்கரை இறக்குமதித் தீர்வையை உயர்த்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் நிறைவேறாமலேயே தடுக்கப்பட்டது. இச்சூழ்நிலையில் அரசின் கொள்கைக்கு எதிரான விடுதலை இயக்கம் உருவானது.

மாண்டேகு-செம்சுபோர்டு சீர்திருத்தங்கள்(Montegu Chelmsford Reforms) 1919–ஆம் ஆண்டில் இந்திய அரசுக்கு நிதித்துறைத் தன்னாட்சியை நல்கியது. செருமனி, சப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளின் போட்டியில் திணறிக் கொண்டிருக்கும் இந்தியத் தொழில்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியதன் தேவையை அரசு உணர்ந்தது. பொது இறக்குமதித் தீர்வை 1921–இல் 11 விழுக்காடாக உயர்த்தப்பட்டது; சர்க்கரை மீது 15 விழுக்காடு தீர்வை விதிக்கப்பட்டது.அந்த ஆண்டிலேயே முதல் இந்திய அரசிறை ஆணைக்குழு (Indian Fiscal Commission) நிறுவப்பட்டது.

அரசிறை ஆணைக்குழு, 1922–இல் வெளியிட்ட அறிக்கையில் புதிய தொழில்களை நிறுவவும், இருக்கிற தொழில்களை வளர்க்கவும், பேதங் காட்டும் காப்பு (Discriminating Protection) இன்றியமையாதது என்பதனை வலியுறுத்தியது. தகுதியுள்ள தொழில்களுக்கு மட்டும் பேதங்காட்டிக் காப்புத் தர வேண்டும் என்பது இக்குழுவின் அடிப்படைப் பரிந்துரை. காப்பளிக்கப்பெறத் தகுதியுள்ள தொழில்களுக்கு வரையறுக்கப்பட்ட தகுதிகளாவன:1)தேவையான மூலப் பொருள் தடையின்றி உள்நாட்டில் கிடைத்தல்; மலிவு விலையில் விற்றல், போதுமான அளவு உழைப்பு, பரந்த உள்நாட்டு அங்காடி ஆகியவற்றைக் குறிப்பிட்ட தொழில் கொண்டிருத்தல்; 2) காப்பு இல்லையேல் நாட்டு நலனுக்குகந்த நிலையில் அது வளர இயலாததாயிருத்தல்; 3) ஒரு குறுகிய காலத்திற்குப் பின்னர்க் காப்பு இன்றியே அயல்நாட்டுப் போட்டியை எதிரிடத்தக்கதான வளர்ச்சித் தன்மையை யுடைத்தாயிருத்தல். மேலும், குறைந்த செலவில் உற்பத்தி செய்யமுடிகிற தொழில்கள், அகக் கட்டுமானம் (Infrastructure), நாட்டுப் பாதுகாப்புச் சார்பான தொழில்கள், அயல்நாட்டு மலிவுப் பொருள் திணிப்பால் அவதியுறும் தொழில்கள் ஆகியவற்றுக்குக் காப்பு வழங்குவதில் முதலிடம் தர

வேண்டுமென்றும், தகுதியான தொழில்களை ஆய்ந்து தேர்ந்தெடுத்துக் காப்பு நல்க ஒரு நிலையான காப்புத் தீர்வை வாரியம் (Tariff Board) அமைக்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரை செய்யப்பட்டது.

காப்புத் தீர்வை வாரியம் 1923-இல் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியம் 1923க்கும் 39க்கும் இடையே 51 ஆய்வுகளை நடத்தி அரசுக்கு அளித்த அறிக்கைகளின் விளைவாக, அரசு 13 தொழில்களுக்குக் காப்பு வழங்கியது.இக்காலத்தில் காப்புப் பெற்ற தொழில்களின் உற்பத்தி இரும்பு, எஃகில் 8 மடங்கும், சர்க்கரையில் 3 மடங்கும், பருத்தித் துணியில் 1½ மடங்கும், காகிதத்தில் 1 4/5 மடங்கும் உயர்ந்தது. இத்தொழில்களில் வேலைவாய்ப்பும் 47 விழுக்காடு பெருகியது. வேளாண்மைக் கருவிகள், பொறியியல் தொழில்கள், தகரத் தகடுகள், இரசாயனம், சாயம் முதலிய புதிய தொழில்கள் நாட்டில் தோன்றிவளர்ந்தன. உலகப் பொருளாதாரப் பெருமந்தத்தின் (Great Depression) காரணமாக, 1930-ஆம் ஆண்டளவில் இந்தியத் தொழில்களும் நலிவுற்றனவெனினும், தொழிற் காப்பு தொடர்ந்து வழங்கப்பட்டமையால், தொழிற்றுறை முற்றிலுமாய் அழியாமல் பாதுகாக்கப்பட்டது.

அரசின் காப்புத் தீர்வைக் கொள்கை இங்கிலாந்து அரசின் பேரரசுச் சலுகையின் அடிப்படையைக் கொண்டதன்று. இங்கிலாந்து நாட்டு இறக்குமதிகள், தீர்வையின்றியோ, மிகக் குறைந்த தீர்வையுடனோ தொடர்ந்தன. மேலும், குறிப்பிட்ட சில தொழில்களுக்கு இயல்பான வசதிகளைக் கொண்டுள்ளவைகளுக்குக் குறுகியதொரு காலத்துக்கு மட்டுமே காப்பு வழங்கப்பட்ட நிலையிலும், அயல் நாட்டாரின் அரசு அரை மனத்துடன் அனைத்தையும் செயற்படுத்திய நிலையிலும், பேதங்காட்டும் காப்புத் தீர்வைக் கொள்கை பெருமளவில் எதனையும் சாதிக்கத் தவறியது இயல்பே.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், போரின் போது தோன்றி வளர்ந்த தொழில்களின் எதிர்காலத்தைப் பற்றி ஆராய ஓர் இடைக்காலக் காப்புத் தீர்வை வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. அவ்வாரியம் வளங்களை உச்ச வகையில் பயன்படுத்தவும், நாட்டு வருமானத்தைப் பெருக்கவும், தொழிற் காப்பு வழிவகுக்க வேண்டும் என்றும், நாட்டுப் பாதுகாப்புக் கண்ணோட்டத்தில் நாடு மிகவும் வலிமை அடைய வேண்டுமென்றும், நாட்டு மக்கள் முழு வேலைவாய்ப்புப் பெற வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தது. அது 49 தொழில்களுக்குக் காப்புத் தருமாறு பரிந்துரைத்தது. அவற்றுள் 42 க்கு அரசு காப்பளித்தது.

நாடு விடுதலையடைந்ததும் நாட்டின் தொழில் வளர்ச்சி மிக முக்கியமான குறிக்கோள் ஆகியது. இந்திய அரசு வெளியிட்ட 1948-ஆம் ஆண்டைய தொழிற்கொள்கை, பொதுத்துறை, தனியார் துறை இரண்டையும் வரையறுத்து, அரசின் கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றின் பங்கைச் சுட்டிக் காட்டியது. இது தொடர்பான காப்புத் தீர்வைக் கொள்கையை வகுப்பதற்காக 1949-இல் இரண்டாம் அரசிறை ஆணைக்குழு அமர்த்தப்பட்டது.

இக்குழு, வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் தொழிற் காப்பு அளிக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தித் தொழில்களை மூன்றாக வகைப்படுத்தியது அவையாவன: 1) நாட்டுப் பாதுகாப்புத் தொழில்கள், உற்பத்திச் செலவுகள் உயர்வாயிருந்தாலும், காக்கப்பட்டாக வேண்டும். 2) போக்குவரத்துக் கருவிகள், கப்பல் கட்டுமானம்,புகைவண்டிப் பெட்டிகள்' இழுவை இயந்திரங்கள் உற்பத்தி போன்ற அகக் கட்டுமானத் தொழில்கள் எந்த அளவுக்கு, எந்த வகையில் காக்கப்பட வேண்டுமென்பதை வரையறுக்க ஒரு தனிக் காப்புத் தீர்வை ஆணைக்குழு நிறுவ வேண்டும். 3) அக் குழுவே எஞ்சிய மூன்றாம் வகைத் தொழில்களுக்குக் காப்பு வழங்குவது பற்றிய முடிவுகளை எடுக்க வேண்டும். தனியொரு தொழிலின் பொருளாதார நன்மைகள், உற்பத்திச் செலவுகள். நாட்டு நலனுக்கு அத்தொழிலின் இன்றியமையாமை ஆகியவற்றை ஆராய்ந்து அதற்கான காப்பின் அளவும் முறையும் வரையறுக்கப்பட வேண்டும்.

நிலையான காப்புத் தீர்வை ஆணைக்குழு 1952-இல் நிறுவப்பட்டது. அக்குழு 1965 முடியு முன்னரே காப்புப் பெற்றிருந்த 9 தொழில்கள் உட்பட 57 தொழில்களுக்குக் காப்பு வழங்கப் பரிந்துரைத்தது. ஆனால், அடுத்த பத்தாண்டிற்குள் இவற்றில் 42 தொழில்கள் காப்பிலிருந்து மீட்கப்பட்டு விட்டன. உண்மையில் 1958-க்குப் பின் எந்தப் புதிய தொழிலும் காப்பு வேண்டி ஆணைக் குழுவை அணுகவில்லை.

அண்மைக் காலத்தில் காப்புத் தீர்வைகளின் இன்றியமையாமை குறைந்துகொண்டே வருகிறது. அரசின் 1956-ஆம் ஆண்டைய தொழிற் கொள்கைக் குறிப்பில் காப்புத் தீர்வைகள் பற்றிய குறிப்பு எதுவுமில்லை. பங்கீடுகள் (Quotas), ஏற்றுமதி உதவித் தொகை (Export Subsidies), இருதரப்பு வாணிக ஒப்பந்தம் (Bilateral Trade Agreement), அயற்

செலாவணிக் கட்டுப்பாடுகள், அரசு வாணிகம் போன்ற பல முறைகளைக் கொண்டு இப்போது இறக்குமதிக் குறைப்பு எளிதிற் செயற்படுகிறது. உலகளாவிய நிலையிலும் நோக்கியோச் சுற்றின் போதும் காப்புத்தீர்வைகள் அல்லாத வாணிகத் தடைகளை நீக்குவது பற்றிய கருத்து மேலோங்கி யிருந்தது. மேலும், உரிமங்கள் (Licences) வழங்கு வதன் மூலமும், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் மூலமும் அரசு உள்நாட் டில் தொழில்களைப் பேணி வளர்த்து வருகிறது. இந் நிலையில் காப்புத் தீர்வை வேண்டுதல் வலுவிழந்து விட்டது. இந்திய அரசு, நிருவாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் (Administrative Reforms Commission) பரிந்துரைப்படி 1976-இல் காப்புத் தீர்வை ஆணைக் குழுவைக் கலைத்துவிட்டது. தே.வே.

**துணை நூல்கள்:**

**Chopra**, The Gazettee of India, Ministry of Education and Social Welfare, New Delhi, 1975.

**Sodersten**, International Economics, Harper & Row, New York, 1970.

World Development Report - 1980, The World Bank, Washington, 1980.

**காப்புப் பொருளியல்** என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அயல்நாட்டு வாணிகம், முதலீடு, பிற பொருளாதார நடவடிககைகள் ஆகிய வற்றால் இடையூறு ஏற்படாவண்ணம் பாதுகாப்பு அளிக்கும் கொள்கையாகும். தன்னாட்டுணர்வே காப்புப் பொருளியலின் (Protectionism) அடிப்படை. ஒரு நாட்டின் வலிமை, பொருளாதாரச் செல்வச் செழிப்பைச் சார்ந்துள்ளது என வலியுறுத்திய வணிக வியலார் (Mercantalists) ஏற்றுமதிகளைப் பெருக்க வும் இறக்குமதிகளைக் குறைக்கவும் பரிந்துரைத் தனர். இறக்குமதிகளைக் குறைக்க அவற்றின் மீது உயர் வீதங்களில் வரி விதிக்கத் தூண்டினர். இவ் வகை வரிகளின் விளைவாக, உலக வாணிகம் இயல் பாகவே தடைப்பட்டது. இச்சூழ்நிலையில், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சியும் அதனைத் தொடர்ந்து உற்பத்திப் பெருக்கமும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டன. பேரளவில் பெருகிய உற்பத் தியை விற்பனை செய்ய உலகளாவிய அங்காடிகள் இன்றியமையாதவையாயின. ஆனால், அன்று நிலவிய வாணிகத்தடைகள் அங்காடிகளின் தோற்றத்துக்குத் தடைக்கற்களாக இருந்தன. எனவே, இயல்பாகவே ஆடம் சுமித்து (Adam Smith) போன்ற தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் தடையிலா வாணிகத்தைச் (Laissez Faire) சாலப் பரிந்துரைத்தனர்; காப்புப் பொருளியலைத் தீயதென ஒதுக்கினர்.

தடையிலா வாணிகக் கொள்கையினால் இங்கி லாந்து, ஆலைத்தொழில் வளர்ச்சியில் முன்னோடி யாக முன்னேறியது. வரலாற்றுப் பழமையும் சிறப்பும் செழுமையும் மிக்க செருமனி, பிரான்சு போன்ற பிற ஐரோப்பிய நாடுகள் ஒப்பீட்டடிப்படையில் பின் தங்கியிருப்பதை உணர முற்பட்டன. தங்கள் நாட்டை யும் தொழில்மயமாக்க முடிவெடுத்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டபொழுது, இங்கிலாந்து நாட்டுப் பொருள்களுடன் தங்களுடைய பொருள்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் போட்டியிட்டு அங்காடிகளைப் பிடிக்கவேண்டிய நிலையை உணர்ந் தன. அயல் நாட்டுப் பொருள்களின் போட்டியி லிருந்து,ஒவ்வொரு நாடும் தன்னாட்டுத் தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்ற தேவை அறிவுறுத்தப் பட்டது. அதனைத் தொடர்ந்து காப்புப் பொருளி யல் புத்துயிர் பெற்று வளர்ச்சி அடையலாயிற்று.

பிரடெரிக்கு லிசுட்டு (Friedrich List) என்ற செரு மானியப் பேரறிஞர் காப்புப் பொருளியல் கோட் பாட்டினை மிக அழுத்தமாகத் தம் ஆய்வுக் கட்டுரை களில் வலியுறுத்தி வந்ததால் அவரைக் காப்புப் பொருளியலின் தந்தை என அழைக்கின்றனர். ஒரு நாட்டின் வளர்ச்சிக் கட்டங்களில் ஆலைத்தொழில் வளர்ச்சிக் கட்டம் மிகவும் முக்கியமானது என்பது அவருடைய அடிப்படைக் கருத்து. ஆலைத்தொழில் செழிக்கும்போது கப்பல் போக்குவரத்து, உள்நாட்டு அயல்நாட்டு வாணிகம், வேளாண்மை ஆகியவை செழித்து வளர முடியும். வேளாண்மையை மட்டும் சார்ந்திருக்கும் நாட்டைப் பிரடெரிக்கு லிசுட்டு ஒற் றைக் கையை இழந்துவிட்ட மனிதனுடன் ஒப்பிட் டார். பின்தங்கிய நாடுகள் (Backward Countries). வளரும் நாடுகள் (Developing Countries) ஆகியவற் றின் பொருளாதார வளர்ச்சிக்கு, முன்னமே தொழில் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளின் போட்டி பெருந் தடையாயுள்ளது. அப்போட்டியிலிருந்து குறிப்பாக இளந் தொழில்கள் (Infant Industries) பாதுகாப்புப் பெறவேண்டும்.

இளந்தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் கோட்பாட்டை முதன்முதலில் அமெரிக்க நாட்டைச் சார்ந்த அலெக்சாண்டர் ஆமில்டன்(Alexander Hamilton) வலியுறுத்தினார். காலங் கடந்து தொடங்கப் பெற்ற முதிர்ச்சியுறாத் தொழிலே இளந்தொழில். அது ஏற்கனவே முன்னேற்றமடைந்துள்ள அயல் நாட்டுத் தொழில்களுடன் போட்டியிடும் வலிமை பெற்றிருக்க வழியில்லை. இளந்தொழில்கள் கட்டு மானக் காலத்தைக் (Gestation Period) கடந்து,

தொழில் நுட்ப அறிவையும் பட்டறிவையும் பெற்று அயல்நாட்டுப் போட்டிக்குச் சரியாக ஈடுகொடுக்கும் காலம் வரை பாதுகாப்புப் பெறவேண்டும். வளரும் நாடுகளின் தொழில் வளர்ச்சிக்குப் பாதுகாப்பு இன்றியமையாததாகும். தடையிலா வாணிகத்தில், அயல்நாட்டுப் போட்டியை மேற்கொள்ள இயலாத நிலையில், இந்நாடுகளின் இளந்தொழில்கள் அழிந்து போவதுண்டு. இந்திய மசுலின் தொழில், கிளாசுகோ மல் இறக்குமதியால் அழிந்துபோன வரலாறு இதற் கோர் எடுத்துக்காட்டாகும். காப்பினால், வளரும் நாடுகளில் தொழில்கள் வளர முடியும் என்பதற்கு இந்திய நாட்டு இரும்பு-எஃகுத் தொழிலின் வளர்ச்சி ஒரு சான்றாகத் திகழ்கிறது.

பிற்காலத்தில் காப்புப் பொருளியலுக்கு ஆதர வாக வேறுபல வாதங்களும் எழுப்பப்பட்டுள்ளன. உலகப் பெருமந்தத்தின்போது (World Depression) 1930-இல் வேலையின்மையை ஒழிக்கக்காப்புப் பொரு ளியல் உதவும் என்று எதிர்பாக்கப்பட்டது. காப்பு நல்கி இறக்குமதிகளைத் தடைசெய்யும்போது, மாற் றுத் தொழில்களும், அவற்றுக்கு ஆதாரமான பிற தொழில்களும் உள்நாட்டில் வளர வாய்ப்பு ஏற்படு கிறது. மேலும், பாதுகாப்பான சூழ்நிலையில் தோன் றும் பல வாய்ப்புகளைப் பயன்படுத்தி அயல்நாட் டாரும் குறிப்பிட்ட நாடுகளில் முதலீடு செய்து தொழில்களைத் தொடங்க முன்வருவர். இவற்றால் வேலைவாய்ப்புகள் பெருகி வேலையின்மைச் சிக்கல் குறையும்.

ஒரு நாடு பல்வகைத் தொழில்களைப் பேணவும் அவற்றினை வளர்க்கவும் தொழிற்காப்புக் காரண மாகிறது. குறிப்பிட்ட சில தொழில்களில் மட்டுமே ஒரு நாடு சிறப்புத் தேர்ச்சி (Specialisation) பெற்று ஈடுபட்டு வருவது பாதுகாப்பானதன்று. குறிப்பிட்ட பொருள்களின் மொத்தத் தேவை சுருங்கும்போதும், போர்க்காலம் போன்ற நெருக்கடி நிலைகளிலும் நாடு அல்லலுற நேரிடும். எனவே, ஒரு நாடு, பல் வகைத் தொழில்களையும் அயல்நாட்டுப் போட்டி களால் அச்சுறுத்தப்படுகிற தொழில்களையுங் கூடப் பேண வேண்டும். இதற்குக் காப்புப் பொருளியல் கொள்கையைப் பின்பற்றியாக வேண்டும்.

அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சாதகமாக்கிக் கொள்ளவும் காப்புப் பொருளியல் உதவுகிறது. இறக்குமதிகளைக் குறைக்கும்போது, அவற்றிற் கீடான உள்நாட்டுப் பொருள்களின் உற்பத்தி உயர்ந்துவிடும். இறக்குமதிச் செலவு குறைவதால், அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சாதக நிலை உரு வாகும்.

உலக அங்காடிகளில் முற்றுரிமை (Monopoly) பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தம் நாட்டில் விற்கின்ற விலையைவிடக் குறைந்த விலையில் பொருள்களை வெளிநாடுகளில் விற்க முனைவர். இதனால், இவ்வாறு மலிவாகப் பொருள்கள் திணிக் கப்பெறும் நாடுகளின் தொழில்கள் பாதிக்கப்படும். இத்தீங்கைத் தவிர்க்க இறக்குமதிகளின் மேல் வரி விதித்து அவற்றைக் கட்டுப்படுத்துவது காப்புப் பொருளியலின் ஒரு முக்கிய கூறாகும். செருமனி, சப்பான் போன்ற நாடுகளின் குறைந்த விலையுடைய உற்பத்திப் பொருள்களின் போட்டிகளிலிருந்து தற் காத்துக் கொள்வதற்காக, இந்தியா போன்ற நாடு கள் காப்புப் பொருளியல் கொள்கையைப் பின்பற்றி வருவதைக் கடந்தகால வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

காப்புப் பொருளியல் ஒரு நாட்டின் பாதுகாப்புக் கண்ணோட்டத்திலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. பாதுகாப்புக்குத் தேவையான போர்க் கருவிகளைப் பிற நாடுகளிலிருந்து பெறுவது அறிவுடைமையாகாது. நெருக்கடிக் காலங்களில் அக்கருவிகளைப் பெறுவதில் தடை ஏற்படலாம். அவற்றின் உதிரிப் பாகங்களைப் பெறுவதிலும் சிக்கல்கள் உண்டாகும். இவற்றால் குறிப்பிட்ட நாடு தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள இயலாத நிலை நேரிடும். எனவே, உற்பத் திச் செலவைக் கருதாமல், பாதுகாப்புக்குத் தேவை யான தொழில்களைக் காத்து வளர்ப்பது மிகவும் இன்றியமையாதது. இரண்டாம் இந்தியக் கருவூலக் குழு இதனை வலியுறுத்தியுள்ளது.

காப்புப் பொருளியல் கொள்கையைச் செயற் படுத்தப் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றுள் இறக்குமதி வரிகள், கிடைப்புப் பங்குகள் (Import quota) இறக்குமதி உரிமங்கள், இறக்குமதித் தடை கள், செலாவணி மாற்றுக் கட்டுப்பாடுகள், வாங்கு தலில் அரசின் விருப்பத் தேர்வுகள், உள்நாட்டு உற் பத்தியாளர்களுக்கு உதவிக் கொடைகள் மானியங் கள், விலைபேதங்காட்டுதல்கள், விற்பனை உடன் பாடுகள், அரசு வாணிகம் போன்றவை குறிப்பிடத் தக்கவையாகும்.

உள்நாட்டு உற்பத்திப் பொருள்களுடன் போட்டி யிடும் அயல்நாட்டுப் பொருள்கள் மீது விதிக்கப்படும் வரிகளே இறக்குமதி வரிகள். தொழிற்காப்பு முறை களில் மிகவும் அறிமுகமான முறை இது. இவ்வரிகள், இறக்குமதிப் பொருள்களின் விலையை உயர்த்தி உள்நாட்டுப் பொருள்களை ஒப்பீட்டடிப்படையில் மலிவாக்குகின்றன. இதனால் உள்நாட்டுப் பொருள் களின் தேவையும், தொடர்ந்து உற்பத்தியும் பெருக வாய்ப்பு உண்டாகிறது.

பொருள்களின் இறக்குமதி அளவை வரையறுப்பதே கிடைப்புப் பங்கு எனப்படும். இன்றியமையாத் தேவைக்கு மட்டும் இறக்குமதி செய்வதற்கு உரிமங்கள் வழங்குவதன் மூலமாக இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. சில பொருள்களின் இறக்குமதியை அறவே தடைசெய்வது மற்றொரு காப்பு முறையாகும்.

செலாவணி மாற்றுக் கட்டுப்பாட்டின் அடிப்படை நோக்கம் செலாவணி மாற்று வீதங்களைக் கட்டுப்படுத்துவதே ஆகும். பன்னாட்டு வாணிகத்தில் ஏற்றுமதிகளின் மூலம் ஈட்டப்படும் அயற் செலாவணி அனைத்தும் ஒரு மைய நிருவாக அமைப்பிடம் ஒப்படைக்கப்படும். பொருள்களை இறக்குமதி செய்ய அயற் செலாவணி தேவைப்படும். இறக்குமதியாளர், தம்முடைய தேவைக்கு மேற்குறித்த மைய நிருவாக அமைப்பிடம் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வமைப்பு குறிப்பிட்ட இறக்குமதிகளின் தேவையையும் அவற்றின் விளைவுகளையும் நன்கு ஆராய்ந்த பின்னர் அவ்விண்ணப்பத்தின் மீது முடிவெடுக்கும். உள்நாட்டுத் தொழில்களைப் பாதிக்கும் இறக்குமதிகளுக்கு அயற் செலாவணி ஒதுக்கீட்டை மறுப்பதும் செலாவணி மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதும் தொழிற்காப்புக்கு வழிசெய்யும். ஒரு நாடு விதிக்கும் இறக்குமதி வரிகள் அவற்றால் பாதிக்கப்படுகிற பிற நாடுகளில் எதிர் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதுண்டு. ஆனால், செலாவணி மாற்றுக் கட்டுப்பாடுகள் இத்தகைய எதிர் விளைவுகளை ஏற்படுத்தாமல் இறக்குமதிகளைக் குறைக்க உதவுகின்றன.

உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிப்பதற்கு அரசு பல வழிகளைக் கையாளலாம். போர்க் கருவிகள், எந்திரங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு மாறாக அவற்றை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து அரசு வாங்க முன் வந்தால், அரசின் இவ்விருப்பத் தெரிவு தொழிற்காப்புக்கு உதவுகிறது. வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்தும், வரிக்குறைப்புச் செய்தும், உதவிக்கொடைகள் நல்கியும் அரசு உள்நாட்டுத் தொழில்களுக்கு ஊக்கமளிக்கலாம். இக்கால அரசுகள் உள்நாட்டு உற்பத்திச் செலவின் ஒரு பகுதியைத் தாம் ஏற்று உள்நாட்டுத் தொழிலை அயல்நாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாக்கின்றன. ஏற்றுமதி ஊக்கக் கொடைகளும் இவ் விளைவினைத் தரத் தக்கவையாகும்.

வெவ்வேறு அங்காடிகளில் வெவ்வேறு விலைகளில் ஒரு பொருளை விற்பதே விலைபேதங்காட்டுதல் (Price Discrimination) ஆகும். உள்நாட்டு விலையை விடவும் குறைவான விலையில் தம்முடைய பொருளை அயல்நாட்டில் விற்பதால், அங்காடி விரிவடைவதுடன் நில்லாது, அயல்நாட்டுத் தொழில்களுடன் வெற்றிகரமாகப் போட்டியிடவும் முடிகிறது.

குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்யும் பல்வேறு நாடுகளிடையே, அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்கள் அப்பொருள் விற்பனையில் தமக்கிடையே உடன்பாடு செய்து கொள்கின்றன. பெரும்பாலும் வேளாண் விளைபொருள் விற்பனையில் இத்தகைய உடன்பாடுகள் வழக்கத்திலுள்ளன. காப்பி, சர்க்கரை, கோதுமை போன்ற விளை பொருள்களில் இவ்வகை உடன்பாடுகள் பலமுறை செயற்படுத்தப்பட்டுள்ளன. பெட்ரோலியப் பொருள்களில் இவ்வகை உடன்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றின் விளைவாகப் போட்டி ஒழிக்கப்படுகிறது. இத்தகைய உடன்பாடுகள் உலக அளவில் வாணிகம் நடத்தும் தனியார் கூட்டு அமைப்புகளிடையேயும் ஏற்படுவதுண்டு.

அரசு அயல்நாட்டு வாணிகத்தை மேற்கொள்வதும் ஒரு காப்பு முறையாகும். இதன் வழியாக அரசு இறக்குமதி வாணிகத்தை நேரடியாகக் கட்டுப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் செய்கிறது. உள்நாட்டுத் தொழிலுக்கு ஊறு விளைவிக்கும் என அரசு கருதும் இறக்குமதிகளில் அரசு தலையிட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்துகிறது.

காப்புப் பொருளியலில் குறைபாடுகள் சில உள்ளன. திறமையின்மைக்கு அது பாதுகாப்பு அளிக்கிறது என்பது காப்புக்கு எதிரான கருத்தாகும். போட்டி நிலவும்போது உற்பத்தியாளர் பொருள்களின் தரத்தை உயர்த்தவும் உற்பத்திச் செலவைக் குறைக்கவும் போட்டியுடன் முன்வருவர். காப்பு இப்போட்டியைத் தவிர்த்து விடுகிறது. இதனால் புதிய பொருள்கள், புதிய உற்பத்தி முறைகள் போன்றவை உருவாக வழியில்லாமல் போய்விடுகிறது.

நுகர்வோர் நலமும் காப்புக் கொள்கையினால் பாதிக்கப்படுகிறது. அயல்நாடுகளிலிருந்தும் பொருள்களைப் பெற்று நுகர வாய்ப்பு இருந்தால், நுகர்வோர் பல்வேறு பொருள்களை விரும்பித் தேர்ந்தெடுக்க வாய்ப்புப் பெறுகிறார்கள். ஆனால், காப்புப் பொருளியலில் நுகர்வோரின் தேர்வு மண்டலம் உள்நாட்டுப் பொருள்கள் அடங்கிய வட்டத்திற்குள் சுருக்கப்பட்டு விடுகிறது. காப்பு வரிகளே தொழிற்கூட்டுகளாகிய முற்றுரிமைகளுக்குத் தோற்றுவாய் என்பது அமெரிக்கா போன்ற நாடுகளின் வரலாற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகிற உண்மை. இம் முற்றுரிமைகளின் தோற்றமும் வளர்ச்சியும் நுகர்வோரை மேலும் நலமிழக்க வைக்கின்றன.

காப்புப் பொருளியலை நடைமுறைப்படுத்துவதிலும் பல இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன. இளந்தொழிற் காப்பு, அத்தொழில்கள் வளர்ச்சியடைந்ததும் சுதந்திரமாக விட்டுவிடப் பணிக்கிறது. ஆனால் காப்பை ஒரு முறை அனுபவித்த தொழில்கள், நிலையாக அதன் நிழலில் தங்கிவிடத்தான் விரும்புகின்றன. இறக்குமதித் தடைகள், உரிமம் வழங்குதல் முதலிய முறைகள் அரசின் நிருவாகத்தில் ஊழல்கள் ஊடுருவக் காரணமாகி விடுகின்றன. எனினும், அண்மைக் காலங்களில் காப்புப் பொருளியல் பொதுவாகப் பல நாடுகளாலும், குறிப்பாக வளரும் நாடுகளாலும் ஆதரிக்கப்பட்டு வருகிறது. வளரும் நாடுகள் திட்டப் பொருளாதாரத்தை மேற்கொண்டிருப்பது இதற்கொரு முக்கியமான காரணம். திட்டங்களின் முதன்மையான நோக்கம் இந்நாடுகளைத் தொழில்மயமாக்குவதாகவே இருப்பதால், அதற்கு ஒரு நம்பகமான வழி என்ற வகையில், திட்டப் பொருளியலில் காப்புப் பொருளியல் குறிப்பிடத்தக்கதொரு இடத்தைப் பெற்றுள்ளது. அன்றைய இளந்தொழில் காப்புக் கருத்து, இன்று இளம்நாடுகள், வளரும் நாடுகள் என்ற அளவில் ஆய்வுக்குட்பட்டு நிற்கிறது என்று கூறலாம். எல்.சி.தா.

**துணை நூல்கள்:**

**Ellsworth, P.T, & Clark Leith, J.,** International Economy, Macmillan, New York, 1975.

**Sodersten, B.,** International Economics, Harpet and Row, New York, 1970.

***காப்லான் மோர்டி சை மேனாஏம்:*** இவர் யூதமதத்தினை மறு சீராக்கம் செய்தவர். காப்லான் மோர்டிசை மேனாஏம் (Kaplan, Mordecai Menahem) கி.பி. 1881-ஆம் ஆண்டு இலிதுவேனியாவில் (Lithuania) உள்ள ஒரு சிறிய நகரத்தில் பிறந்தார். இவர் ஒன்பதாம் வயதில் தம் பெற்றோரால் ஐக்கிய நாடுகளுக்குக் (United States) கொண்டு செல்லப் பெற்றார். அங்கே இவர் யூதமொழிக்குரிய கல்வியும், பொதுக் கல்வியும் பயின்றார். இவர் யூத சமய சித்தாந்த கல்விச் சாலையில் பட்டம் பெற்று ஓராண்டு முடிந்தவுடன், தம் 22-ஆம் வயதில் யூத மத குருவானார். பரம்பரைக் கொள்கைகளிலிருந்து இவர் மாறுபட்டு, ஒரு புதிய கொள்கைக்கு வழி வகுத்தார். இத்தகைய நிலையை மறுசீராக்கம் என்று கூறினார். இவர் அரை நூற்றாண்டுக்காலமாக மேற்கூறிய பணியைச் செய்தார். நிகழ் காலத்துக்குரிய சரித்திர, சமூக, உளவியல் சம்பந்தமான ஆராய்ச்சிகளையும் மாற்றங்களையும் காலத்திற்கேற்றவாறு அமைத்தார்.

'கடவுள் அனுபவம்' என்ற மாத்யூ ஆர்னால்டு கொள்கையினால் இவர் பெரிதும் கவரப்பட்டார். மனிதனின் சிறப்பு இயல்புகளைப் புரிந்து கொள்ள இது பெரிதும் துணை செய்தது. காப்லான் வேறு இரண்டு முக்கியமான யூதக் கொள்கைகளை மறு சீராக்கம் செய்தார். இவர் இறைவனின் திருவுள்ள வெளிப்பாட்டின் இயற்கைத் தன்மையான (Nature of the Torah) யூத குருமார்களின் கருத்துகளையும் சட்டத்தினையும் சமயக் கொள்கைகளையும் இசுரேல் மக்களின் குணநலன்களையும் மாற்றினார். இசுரேல் மக்கள்தாம் யூத உரையாடல்களில் இடம் பெறுகிறார்கள். கடவுளைப் பற்றிய கருத்தும், இறைவன் திருவுள்ள வெளிப்பாட்டின் கருத்தும் இசுரேலியர்களோடு தொடர்புபடுத்திச் சிந்திக்கத் தகுந்தவை. யூதமதத்தில் கடவுளும், இறைவன் திருவுள்ள வெளிப்பாடும் சிறப்பான கருத்துகள். யூத மதத்தினைப் புத்துயிர் ஊட்டுவதென்பது மக்களின் நலன்களையும் சமயச் சார்பற்ற கருத்துகளையும் கவனிப்பதாகும்.

காப்லானின் (Kaplan) சமயத் தொடர்பான கருத்துகள், எமிலி தர்க்கீம் கொள்கையான சமுதாயப் பொறுப்பு, கட்டுப்பாடு (Emile Durkheims Theory of Totemic Solidarity) ஆகியவைகளைக் குலமரபுச் சின்ன அடிப்படையில் கொள்ளுதல் என்னும் வாழ்க்கை முறையிலிருந்து எடுக்கப்பட்டன. அது ஒரு குழுவினைச் சார்ந்ததேயொழிய ஒயிட்டு எடு (White Head) கூறியது போல தனி மனிதனைச் சார்ந்ததன்று. சமயம் என்பது நல்ல பழக்கவழக்கங்களும், நல்ல மதிப்பீடுகளும் சேர்ந்து மனிதனை ஒற்றுமையாகச் சிறப்புடன் வாழத் துணை செய்வது என்றும், யூதசமயத்தினைப் பலப்படுத்த, யூதர்களின் கருத்துகளை ஒன்று சேர்ப்பது இன்றியமையாதது என்றும், யூதமதம் என்றால் யூதர்களின் நாகரிகக் கொள்கைகளை ஒன்று சேர்த்து ஒற்றுமையை நிலைநாட்டுவதென்றும் காப்லான் கூறினார். இவர் யூதர்வழிபாட்டுத் திருக்கூட்டம் அமைத்து, அதன் மூலமாக யூதர்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டினார்.

இவர் யூத சமய சித்தாந்தக் கழகத்தில் யூதக் குருக்களின் ஆசிரியராக இருந்து பழமையைப் பேணும் கட்சியினரிடமும் (Conservative Movement) செல்வாக்குடன் விளங்கிச் சீர்திருத்த இயக்கத்திலும் சிறந்த தொண்டாற்றியவர். காப்லானும், அவரைச் சார்ந்தவர்களும் திருத்திய, யூதர்களின் புதிய கருத்துகளடங்கிய, ஒரு வழிபாட்டு நூலை வெளியிட்டவுடன், யூதமதக் குழுவினர் இவரைச் சமயவிலக்குச் செய்தனர். காப்லான் ஒரு சிறந்த சமய தத்துவ ஞானி; ஒரு பயனுள்ள இயற்கையான நோக்குடன்

சமயக் கருத்துகளை ஆராய்ந்தார். இவர் யூதர்கல்வி, யூதர்சமூக நலன்கள், பண்பாடு முதலியவைகளை நல்ல முறையில் சீர்படுத்தினார். இரா.கோ.

**துணை நூல்கள்:**


**Agus Jacob, B.,** Modern Philosophies of Judaism, New York, 1941.

**Blau, Joseph, L.,** The Story of Jewish Philosophy, New York, 1962.

**Kaplan,** The Purpose and Meaning of Jewish Existence, Philadelphia, 1964.


***காபட்டு சான்*** **(கி.பி. 1450-1499)**: கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பிய நாட்டு மன்னர்கள் புதிய புதிய கடல்வழிகளும் புதிய புதிய நாடுகளும் கண்டுபிடிப்பதில் முனைந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு இத்தாலி நாட்டு மாலுமிகள் துணை புரிந்தனர். கடல் வழிதேடிய மாலுமிகளுள் காபட்டு ஒருவராவார். போர்ச்சுகீசியர் கி.பி. 1488-இல் பர்த்தலோமியோதயசின் உதவியுடன் ஆப்பிரிக்கா சுற்றிய கடல்வழியும் இசுபானிய (Spain) நாட்டவர் கொலம்பசின் உதவியுடன் கி.பி. 1492-இல் மேற்குத்திசைக் கடல் வழியும் கண்டுபிடித்த பின், புதியதோர் கடல் வழி கண்டுபிடிக்க இங்கிலாந்து நாட்டார் மிக்க ஆவல் கொண்டிருந்தனர். அவர்களுக்குக் காபட்டு (Cabot) உதவினார்.



காபட்டு, பிரிசுட்டலிலிருந்து வட அமெரிக்காவிற்குப் புறப்பட்டுச் செல்லுதல்

காபட்டு கி.பி. 1450-இல் செனீவாநகரில் (Geneva) பிறந்தார். மாலுமிப் பயிற்சி பெற்ற பின்னர் இவர் கடற் பயணத்தில் தேர்ந்து விளங்கினார். புவியியல், வானியல் அறிவையும் சேமித்துக் கொண்டு கி.பி. 1476-இல் வெனிசு நாட்டுக் குடியுரிமையும் பெற்றார். இவர் வெனிசு வணிகர்கள் வாயிலாகக் கீழ்த்திசை வாணிக நுட்பங்களை அறிந்தார். அரேபிய வணிகர்களைப் பற்றியும் அரேபிய வாணிக நகரங்களைப் பற்றியும் இவர் விரிவான விளக்கங்களைத் தந்தார்.

மார்க்கோபோலோ கீழ்த்திசை நாடுகளைப் பற்றி விளக்கியிருந்த பயணக்கட்டுரைகளால் கவரப்பட்ட இவருக்குக் கீழ்த்திசை நாடுகளுக்கான புதிய வழி கண்டு பிடிப்பதில் ஆர்வம் எழுந்தது. கொலம்பசு அச்சுக்கோடு 30° வழியாக மேற்குத்திசையில் பயணம் செய்து புதிய நாடு கண்டுபிடித்தார். அதிலிருந்து வடக்கே விலகி 60° அச்சுக்கோட்டுப் பகுதி வழி மேற்கில் சென்றால் கீழ்த்திசை நாடுகளுக்குச் (ஆசியா) செல்ல மேலும் எளிதான குறுகிய பாதையைக் கண்டுபிடிக்கலாம் என்ற கொள்கையை வகுத்தார். இவர்தம் திட்டத்தைச் செயற்படுத்தும் நோக்குடன் கி.பி. 1484-இல் குடும்பத்துடன் இலண்டன் நகரில் குடியேறினார். இவர் இங்கிலாந்து நாட்டரசர் ஏழாம் சார்சு மன்னரை அணுகி உதவி பெற்றார். அதன்படி காபட்டு இங்கிலாந்தின் அரசருக்காகப் புதிய கடல்வழி கண்டுபிடிக்கவும், புதிய நாடுகள் கண்டுபிடித்து வழங்கவும், அந்நாடுகளிலுள்ள சிறந்த செல்வங்களைப் பிரிசுடல் (Bristol) துறைமுக வழி இறக்கி, அதனால் பிரிசுடல் வணிகர்களிடமிருந்து வரும் உதவிகளைப் பெறவும் சம்மதித்துப் புதிய கடல்வழி காணும் தீரச் செயலுக்கு ஆயத்தமானார்.

காபட்டு கி.பி. 1497 மே மாதம் இரண்டாம் நாள் 'மாத்தியூ' என்ற சிறிய கப்பலில் 18 உதவி ஆட்களுடன் அயர்லாந்தின் வடபுற வழியாகக் கிழக்கு நாடுகளை அடைய மேற்காகப் பயணமானார். கரை கி.பி. 1497 சூன் 24-ஆம் நாள் தென்பட்டது. ஆசியாவை அடைந்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தார். கரையில் இறங்கி அப்பகுதியை இங்கிலாந்து நாட்டரசருக்காகக் கைப்பற்றிய அடையாளத்துக்காக இங்கிலாந்து நாட்டின் கொடியை அங்கே நாட்டினார். பின்னர் நாடு திரும்பிய இவர் கி.பி. 1497-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் பிரிசுடல் (Bristol) துறைமுகத்தில் வந்து இறங்கினார். ஆர்வத்துடன் அங்கே குழுமிய வணிகக் கூட்டத்தில் தாம் கண்டுபிடித்த நாட்டின் செல்வங்களைப் பற்றி விளக்கினார். தாம் சென்றிறங்கிய நாடு இனிய காலநிலையுடையது என்றும், பிரசில் மரங்கள் (Brezil Wood)


நிரம்பியது என்றும், அங்குள்ள கடலில் மீன் நிரம்ப வாழ்கின்றது என்றும், அதைப்பிடிக்க வலை தேவை யில்லை என்றும், அகன்றவாயுடைய வாளியைக்(Bucket)கடல் நீரினுள் அமிழ்த்தி எடுக்க வேண்டியதுதான் என்றும் ஆர்வத்துடன் கேட்போரிடத்தில் மகிழ்ச்சி பொங்கக் கூறினார். தாம் மறுமுறையும் அங்கே சென்று சப்பானுக்கான வழி கண்டுபிடிக்கப் போவ தாகவும் முத்துக்களும் கறி முதலிய நறுமணப் பொருள்களும் கொண்டுவரப் போவதாகவும் உற் சாகம் மிகுந்தவராய்ப் பிரிசுடல் துறைமுகத்தில் அறிவித்தார். இங்கிலாந்து நாட்டரசர் அவருக்கு 10 பவுன் பரிசளித்தார். மேலும், ஆண்டுதோறும் 20 பவுன் மானியம் வழங்குவதாகவும் கூறினார். காபட்டு கண்டுபிடித்த இடம் எது எனத் திட்டவட்ட மாக அறிய முடியவில்லை. இவர் சென்றிறங்கியது இலாப்ரடார் பகுதி அல்லது நியூபவுண்டுலாந்து அல் லது கேப்பிரட்டன் தீவாக இருக்கலாம் எனக் கருதப் படுகிறது.

காபட்டு கி.பி. 1498 பிப்பிரவரியில் இரண்டாம் பயணத்துக்குத் தயாரானார். இவர் இலிசுபன் (Lisbon), செவில் (Sevelle) ஆகிய நகரங்களுக்குச் சென்று, தேர்ச்சியுடைய உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்து, கி.பி. 1498-மே மாதத்தில் ஐந்து கப்பல்களில் 200 உதவி ஆட்களுடன் பிரிசுடல் துறைமுகத்திலிருந்து பயணமானார். அயர்லாந்து பகுதியில் எதிரிட்ட புய லில் ஒரு கப்பல் பழுதடைந்தது. அதை அயர்லாந்துக் கரையில் நங்கூரம் போட்டு நிறுத்திவிட்டு நாலு கப் பல்களில் வடமேற்குத் திசையில் பயணமாயினார். இவர் கி.பி. 1498-சூன் மாதத் தொடக்கத்தில் கிரீன் லாந்துக் கரையை நெருங்கினார். ஆசிய நாட்டை அடைய இவர் வடமேற்குத் திசையில் கலங்களைச் செலுத்தினார். பனிக்கட்டி, பாறைகள் மாதிரி மிதந்து அபாய அறிகுறிகளைக் காட்டின. எனவே பின்வாங்கி வேறு திசை திரும்பிக் கிரீன்லாந்து ஓர மாகத் தென்திசையில் பயணமாயினார். இவர் தேவிசு கடலிடுக்கு வழியாகப் பயணம் செய்ததாகத் தெரி கிறது.

கடினமான கடலிடுக்குகள், குறுக்கிடும் நிலப்பகு திகள், பனிக்கட்டிகள் அடர்ந்த கடல்கள் ஆகிய சூழ் நிலைகளுக்கு இடையே தேவையான பண்டங்களின் பற்றாக்குறையும் ஏற்படவே, இரண்டாம் பய ணத்தை இடையில் முடக்கிக் கொண்டு காபட்டு இங்கிலாந்து திரும்பினார். காபட்டின் முயற்சிகள் தோல்வி அடைந்தன. என்றாலும், மேற்கு வழியில் ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையில் ஒரு பூகண் டம் குறுக்கே கிடக்கிறது என்ற உண்மையை உணர்த் தினார். ஆங்கிலேயர் கனடாவில் குடியேறுவதற்கு முதல் அடி எடுத்து வைத்தவர் காபட்டு ஆவார். இவர் கி.பி. 1499-க்கான மானியம் 20 பவுனைப் பெற்றுள்ளார். பின் இவர் வரலாற்றிலிருந்து மறைந் தார்.

வே.தி.செ.

**காபா** இசுலாமியர்களின் புனித கோயில். இது மெக்காவில் பெரிய பள்ளிவாசலின் நடுவில் அமைந் துள்ள சிறிய கட்டடம் ஆகும். ஆறு சமசதுரப் பக் கங்களைக் கொண்ட இக்கட்டடம் தட்டையான கூரையை உடையது. இசுலாமியர் இங்கு வழிபடும் பொழுது காபாவை (Kaaba) நோக்கியவாறு தொழு வர். காபாவின் கிழக்கு மூலையில் புகழ்பெற்ற கருங் கல் உள்ளது. அதனைச் சுற்றி வெள்ளி வளையம் போடப்பட்டுள்ளது. காபாவை ஆபிரகாம், இசுமா யில் என்னும் இருவர் கட்டியதாக இசுலாமிய மரபுக் கதைகள் கூறுகின்றன. கருங்கல்லை ஆபிரகாமிற்கு கேப்ரியல் (Gabriel) என்னும் தேவதூதர் அளித்த தாகவும் இம்மரபுக் கதை கூறுகிறது.



காபா

இசுலாமியர்கள் காபாவைக் காணும் குறிக்கோ ளுடன் உலகெங்கிலும் இருந்து மெக்காவிற்கு ஒவ் வொரு ஆண்டும் புனிதப் பயணம் மேற்கொள்கின்ற னர். புனிதப்பயணம் மேற்கொண்டோர் காபாவை 7 முறை சுற்றி வலம் வந்து தொழுது குரானை ஓது கின்றனர். இறுதியில் கருங்கல்லினைத் தொட்டோ முத்தமிட்டோ செல்கின்றனர்.

சு.இரா.

**காபிகான்**: முகலாய வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களுள் முன்தகப்–உல்–லூபாப் (Muntakhab–ul-Lubab) என்ற வரலாற்று நூல் குறிப்பிடத்தக்கது. அதை எழுதியவர் காபிகான் (Khafi-khan). இவர் முகலாயப் பேரரசன் ஔரங்கசீபின் அவைக்களத்தில் சிறந்துவிளங்கினார். ஔரங்கசீபைப் போலவே இவருக்கும் இந்துக்களிடம் வெறுப்பு உண்டு. தொடக்க காலம் முதல் முகலாயப் பேரரசின் வரலாறு எழுதப் பெற்ற இந்நூல் கி.பி. 1733 –ஆம் ஆண்டில் முடிவுற்றது. ஔரங்கசீபின் குறைகளையும் சிவாசியின் பெருமையையும் இவர் தமது நூலில் குறிப்பிட்டிருப்பது பாராட்டுதற்குரியது. மராட்டிய நாட்டில் ஆட்சி புரிந்த தாராபாயின் அரசியலைப் பற்றியும் இவ்வாசிரியர் புகழ்ந்து கூறுவதும் குறிப்பிடத்தக்கது. இவர் நேரில் அறிந்த பல செய்திகளையும் தமது நூலில் குறிப்பிடுவதால் வரலாற்றறிஞர்களுக்கு இவர் நூல் பயனுள்ளதாக இருக்கிறது. அக்காலத்திய அரசியல், கலை, நாகரிகம் முதலியவற்றை அறிய இவரது நூல் ஒரு சிறந்த மூலாதாரமாகக் கருதப்படுகிறது. தெ.பா.

**காபிரிசுத்தான்**: ஆப்கானிசுத்தானத்தின் வடகிழக்கில் உள்ள ஒரு மாநிலம் காபிரிசுத்தான் (Kafi-ristan) எனப்படும். இதன் பரப்பு 8000 ச.கி.மீ. மலைப் பாங்கான இப்பகுதியை ஆப்கானிய மன்னர் அமீர்அப்துர் இரகுமான் கி.பி. 1895–ஆம் ஆண்டில் கைப்பற்றித் தம் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டார். தெ.பா.

**காபூர், மாலிக்கு**: தில்லி சுல்தானான அலாவுதீன் கில்சி, குசராத்து அரசைக் கைப்பற்றுமாறு தம் தம்பி உலுக்கானைப் (Ulugh Khan) பெரும் படையுடன் அனுப்பினார். உலுக்கான், கி.பி. 1297 -இல் குசராத்து அரசை வென்று, இராணி கமலா தேவியையும் காபூர் (Kafur) என்னும் இளம் அலியையும் சுல்தானிடம் கொண்டு போய்ச் சேர்த்தார். காபூரை 1000 தினார் (நாணயம்) கொடுத்து வாங்கியதால் அசர்தினாரி (Hazar Dinari) என்று காபூர் அழைக்கப்பட்டார். காபூர் தம்முடைய உண்மை அன்பாலும், தளராத உழைப்பாலும் அலாவுதீன் கில்சியின் உள்ளத்தில் இடம் பெற்று மிகவும் செல்வாக்குடைய பிரபுவானார். இவர் தில்லி அரசின் அரசியல் அரங்கில் முதலிடமும் பெற்றார்.

அலாவுதீன் கில்சி கி.பி. 1306-இல் காபூருக்கு மாலிக்கு நெய்பு (Naib) என்னும் பதவியளித்துச் சிறப்பித்தார். மாலிக் தாச்-உல், மாலிக் காபூரி (Malik Taj-ul, Malik Kaburi) என்ற பட்டப் பெயர்களும் பிறகு இவருக்குக் கிடைத்தன.

தக்காணத்திலிருந்த யாதவ அரசின் தலைநகராகிய தேவகிரியில் ஆட்சி செய்து வந்த இராமச்சந்திர தேவர் தில்லிப் பேரரசுக்குச் செலுத்த ஒப்புக் கொண்டபடி அவர் மகன் சங்கர தேவர் திறை செலுத்தாததோடு, கூர்ச்சர அரசின் அரசரான கர்ண தேவருக்கும், அவர் மகள் தேவலா தேவிக்கும் தேவகிரியில் தஞ்சம் அளிக்க இசைந்தார். சங்கர தேவரின் இச்செயல்கள் தில்லி சுல்தானான அலாவுதீன் கில்சிக்குக் கோபமூட்டின. அலாவுதீன் கில்சி கி.பி. 1307 -இல் ஒரு படையை மாலிக் காபூரின் தலைமையில் தேவகிரியைப் பணிய வைக்க அனுப்பினார். மாலிக் காபூர் முதன்முதலாகத் தக்காணத்தின் மீது படையெடுத்துச் சென்று சங்கர தேவரைத் தேவகிரிக்கருகில் தோல்வியுறச் செய்தார். சங்கரதேவர் தப்பியோடினார். மாலிக் காபூர் தேவகிரியைச் சூறையாடி இராமச்சந்திர தேவரைக் கைது செய்து தில்லிக்குக் கொண்டு சென்றார். அலாவுதீன் கில்சி, இராமச்சந்திர தேவரைக் கண்ணியமாக நடத்திச் சிறிது காலம் அவரைத் தம் அரண்மனையில் விருந்தினராக வைத்திருந்து, பின் அன்பளிப்புகளுடன் திருப்பி அனுப்பினார்.

மாலிக் காபூர் கி.பி. 1308-இல் இரண்டாம் முறையாகத் தக்காணத்தின் மீது படையெடுத்தார். தேவகிரி வழியாக இவர் வாரங்கலை அடைந்தார். வாரங்கலை ஆண்டு வந்த இரண்டாம் பிரதாபருத்திரர், இரு மதில்கள் கொண்ட தம் வலிய கோட்டைக்குள்ளிருந்து கொண்டு மாலிக் காபூரை எதிர்த்தார். ஆயினும் காபூர், வாரங்கலை ஒரு மாத காலம் முற்றுகையிட்டுப் பிரதாபருத்திரரைப் பணியச் செய்தார். அவர் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அளவற்ற பொருள்களையும், யானைகளையும், குதிரைகளையும் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டார். திறை செலுத்தவும் ஒப்புக் கொண்டார். மாலிக் காபூர், அப் பொருள்களுடன் தில்லி திரும்பிய போது அலாவுதீன் கில்சி, இவருக்கு நல்ல வரவேற்பளித்தார்.

மாலிக்காபூர், கி.பி. 1310–இல் தக்காணத்தின் மீது மூன்றாம் முறையாகப் படையெடுத்தார். ஒய்சளர் நாட்டையும் மாபார் (Mabar) என்று முகம்மதியர்களால் அழைக்கப்பட்ட பாண்டிய நாட்டையும் தாக்கும் திட்டத்தோடு இம்முறை தில்லியிலிருந்து புறப்பட்டார். அப்போது ஒய்சள அரசரான மூன்றாம் பல்லாளர் பாண்டிய நாட்டுடன் போரில் ஈடுபட்டிருந்தார். காபூர், ஒய்சள அரசின் தலைநகரான துவார சமுத்திரத்தை எளிதில் கைப்பற்றிக் கொண்டார். மூன்றாம் பல்லாளர், தம் நிலைமையை

உணர்ந்து காபூருக்கு மிகுந்த பொருள் அளித்துச் சமாதானம் செய்து கொண்டார்.

துவார சமுத்திரத்தில் சில நாட்களைக் கழித்து விட்டு, மாலிக்காபூர் பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றார். அப்போது பாண்டிய நாட்டில், குலசேகர பாண்டியனின் மக்களான வீரபாண்டியரும் சுந்தரபாண்டியரும் அரச பதவிக்காகப் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் ஒற்றுமையின்மையால் மாலிக் காபூரின் படையெடுப்பு எளிமையாயிற்று. மாலிக் காபூர் பாண்டியர் தலைநகரான மதுரையைத் தாக்கினார். ஆனால், பாண்டிய மன்னர் சுற்றத்தாருடன் செல்வத்தைத் திரட்டிக் கொண்டு, தாக்குதலுக்கு முன் தப்பித்துக் கொண்டார். மாலிக் காபூர் மதுரை நகரத்தைச்சூறையாடினார்; கிடைத்த செல்வங்களைக் கைக்கொண்டு சென்றார்.

அலாவுதீன் கில்சியின் அரசவையிலிருந்த அமீர் குசுரு தம் நூலில் மாலிக் காபூரின் தென்னிந்தியப் படையெடுப்புகளைப் பற்றி விரிவாகக் கூறுகிறார். மாலிக்காபூர், மதுரைப் படையெடுப்போடு நின்று விடாது, தெற்கே இராமேசுவரம் வரை படையெடுத்துச் சென்று, இராமநாதர் சிலையை உடைத்தெறிந்தாரென்றும்,இராமேசுவரத்தில் அலாவுதீன் கில்சியின் பெயரில் ஒரு பெரிய மசூதியை அமைத்தார் என்றும் அமீர் குசுரு எழுதியுள்ளார். மாலிக்காபூர், கி.பி. 1311-இல் நூற்றுக்கணக்கான யானைகள், ஆயிரக் கணக்கான குதிரைகள், பல ஆயிரம் மணங்கு எடையுள்ள பொன்னும் முத்தும் மணியும் கொண்ட பல பெட்டிகள் ஆகியவற்றுடன் தில்லிக்குத் திரும்பினார். மாலிக் காபூரின் தென்னிந்தியப் படையெடுப்பினால் தென்னிந்தியா தன் செல்வத்தையும் செல்வாக்கையும் இழந்தது.

நான்காம் முறையாக, மாலிக் காபூர் கி.பி. 1312 இல் தக்காணத்தைத் தாக்கினார். தேவகிரி அரசின் அரசர் சங்கர தேவர் கப்பம் கட்டுவதை நிறுத்தியதே இதற்குக் காரணமாகும். சங்கர தேவர், போரில் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். தேவகிரி தௌலதாபாது என்று பெயரிடப்பட்டது. மாலிக் காபூர் அதனுடன் நில்லாது தேவகிரியிலுள்ள இந்துக் கோயிலை இடித்து அங்கு ஒரு பெரிய மசூதியைக் கட்டுவித்தார். பின்னர், தேவகிரியிலிருந்து துங்கபத்திரா ஆற்றங்கரை வரை படையெடுத்துச் சென்று தில்லி திரும்பினார். மாலிக் காபூர், அலாவுதீன் கில்சியின் இறுதிக்காலத்தில், அலாவுதீன் கில்சியைத் தம் கைப்பாவையாக ஆட்டி வைத்தார். மாலிக் காபூர் தாமே அரசராவதற்குத் திட்டமிட்டு அலாவுதீன் கில்சியின் மனத்தை மாற்றி அவர்தம் மனைவியையும் கிசர்கான் என்ற மகனையும் வெறுக்கச் செய்தார்.

அலாவுதீன் கில்சி உடல் நலம் குன்றிப் படுக்கையில் இருந்தபோது மாலிக் காபூர் அவருக்கு நஞ்சு கொடுத்துக் கொன்றதாகக் கூறப்படுகிறது. அலாவுதீன் கில்சி கி.பி. 1316-இல் இறந்தவுடன், அவர் மனைவியைத் துன்புறுத்தியதுடன் கிசர்கான், சாடிகான் என்ற அவர் இரு மைந்தர்களின் கண்களையும் மாலிக்காபூர் குருடாக்கினார். மற்றொரு மகனான மாலிக்-இ-சகான் என்பவரைச் சிறையிலடைத்தார். வேறொரு மகனான ஆல்புகானைக் கொன்றார். மேலும் மாலிக்காபூர், அலாவுதீன் கில்சியின் ஆறு வயது மகனான சைகப் உத்தின் உமரை அரியணையேற்றித் தாமே அரசாட்சியை நடத்தினார். முபாரக்கு என்ற அலாவுதீனின் மற்றொரு மகனையும் சிறையிலடைத்துக் கண்களைக் குருடாக்கத் திட்டமிட்டார். ஆனால், முபாரக்கு இதையறிந்து சிறையிலிருந்து தப்பினார். முபாரக்கு அலாவுதீன் கில்சியின் அன்புக்குரிய வேலையாள்களைக் கொண்டு மாலிக் காபூரைக் கொன்றார். மாலிக்காபூர் முப்பத்து ஆறு நாட்கள் கொடுங்கோல் ஆட்சி புரிந்து அழிந்தார்.

டி.த.

**காபூல்** ஆப்கானிசுத்தானத்தின் ஒரு மாநிலம். 7333 ச.கி.மீ பரப்புள்ள காபூல் மாநிலம் மலைகளை அடுத்துள்ள ஒரு பகுதி. இப் பெயரைக் கொண்ட நகரம் இம்மாகாணத்தின் தலைநகராக உள்ளது. காபூல் நகரம் தேசிய தலைநகராகவும் அமைந்திருக்கிறது. இதற்கு வடக்கில், 80 கி.மீ. நீளமுள்ள குகே தாமன் **(Kuhe Daman)** பள்ளத்தாக்கு, பண்டைய வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்பைப் பெற்றிருந்தது. இசுலாமிய சமயம் தோன்றுவதற்கு முன்னரே அங்குக் கலைகள் வளர்ந்தன. அலெக்சாந்திரியா, காபீசம், ஊபியான் கட்ரூசி முதலிய அப்பகுதியின் நகரங்கள் மிகவும் செழிப்புடன் விளங்கின.

சோவியத்து உருசியாவின் படைகள் 1979-இல் ஆப்கானிசுத்தானத்தில் புகுந்த பிறகு காபூலில் அடிக்கடி கலவரங்களும் போர்களும் நிகழலாயின. தலைநகரான காபூல், ஆப்கானிசுத்தானத்தின் மிகப் பெரிய நகரம். காபூல் என்ற பெயரையுடைய ஆற்றின் கரையில் அந்நகர் உளது. அது, ஆப்கானிசுத்தானம், பாகிசுத்தான், சோவியத்து ஐக்கியநாடு முதலிய நாடுகளுடன் சாலைகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. காபூல் நகரம் 3000 ஆண்டுகளுக்கு முன்பே தோற்றம் பெற்றது. ஏறக்குறைய கி.மு. 1500-க்கு உரிய இருக்கு வேதத்திலும் அதைப் பற்றிய குறிப்புகள் உள. அலெக்சாந்திரியாவின் கணித வல்லுநர் தாலமி. கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் காபூலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்நகர் முக்கியமான ஓர் இடத்தில் அமைந்திருப்பதால் இதன் பெருமை ஓங்கி



காபூல்

வளர்ந்தது. இந்துகுசு வழியாக வடக்கே உள்ள கணவாயும், தெற்கில் கசினியும், கைபர் கணவாயும் காபூலின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தமைக்கு நில அமைப்பே காரணமாகும். மங்கோலிய வீரன் செங்கிசுக்கான், கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் காபூலுக்குப் பல இன்னல்களை விளைவித்தான்.

முகலாயப் பேரரசன் பாபர் காலத்தில் (கி.பி. 1504 முதல் 1526 வரை) காபூல் நகரம் முகலாயப் பேரரசின் தலைநகராக விளங்கியது. ஈரானின் நாதிர்சா (Nadir Shah) கி.பி. 1738-ஆம் ஆண்டில் அதைக் கைப்பற்றும் வரையில் காபூல் முகலாயர் ஆட்சியின் கீழ் இருந்தது. அது கி.பி. 1776-இல் ஆப்கானிசுத்தானத்தின் தலைநகராகியது. முதலாம் ஆங்கில-ஆப்கானியப் போரில் (கி.பி. 1842) ஆங்கிலேயரின் காபூல் கோட்டைக் காவற்படையினர் கொலை செய்யப்பட்டனர். சோவியத்து உருசியா 1979-இல் தலையிட்டதாலும், பொது உடைமை ஆட்சியை அங்கே நிறுவ முயற்சிகள் செய்யப்பட்டதாலும் காபூலில் இராணுவ நடவடிக்கைகளும் கொரில்லாப் போர் முறைகளும் தொடர்ந்து நடைபெறலாயின. உருசியர் தமது நன்மைக்காகக் காபூல் விமான நிலையத்தைத் துரித வளர்ச்சி அடையச் செய்தனர்.

இக்காலத்திய காபூலில் பழைய கட்டடங்களும் புதிய கட்டடங்களும் கலந்து காணப்படுகின்றன. சிறிது சிறிதாகப் பழையவற்றை அழித்துவிட்டுப் புதிய முறைக் கட்டடங்களைக் கட்டும் முயற்சி நடைபெற்று வருகிறது. அங்குப் பல வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. அங்கு ஆட்சி புரிந்தவர்களின் கல்லறைகளையும் தோட்டங்களையும் மிகுதியாகக் காணலாம். பாபரின் தோட்டம், பல சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது. பழைய அரண்மனையில் சட்டசபையும் அரசியல் அலுவல் நிலையங்களும் செயலாற்றி வருகின்றன. காபூல் பல்கலைக்கழகம் 1931-இல் தோன்றியது.

உணவு வகைகளைப்பதனஞ் செய்தல், மரஇழைப் பட்டு, கம்பளி, மரச்சாமான்கள் முதலியன செய்தல், சலவைக்கல் உற்பத்தி ஆகிய பல்வேறு தொழில்கள் வளர்ந்துள்ளன. மக்களுள், பெரும்பான்மையினர் பாரசீக மொழியே பேசுகின்றனர். மக்கள் ஓர் இலட்சத்திற்கு மேல் இந்நகரில் வாழ்கின்றனர். தெ.பா.

**காபூன்**: மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள காபூன் (Gabun) மாவட்டம் ஏறத்தாழ 1,49,149 ச.கி.மீ. பரப்பைக் கொண்டது. ஆப்பிரிக்கரும் ஐரோப்பியரும் இங்கு வாழ்கின்றனர். இப் பகுதியின் தலைநகர் இலீப்ரவில் (Liberewille). கோக்கோ, காபி, புகையிலை முதலியன விளைகின்றன. தெ.பா.

**காபெட்டு, வில்லியம்** (கி.பி. 1763-கி.பி. 1835): இவர் ஆங்கில அரசியல் கட்டுரையாளராகவும் இதழியலாளராகவும் புகழ் பெற்றவர். இவர் எளிய உழைப்பாளி ஒருவர் மகனாகப் பிறந்து, தம் முயற்சியால் கல்வி கற்றார். படைவீரராக கி.பி. 1784 முதல் கி.பி. 1791 வரை பணியாற்றிய இவர் படையிலிருந்து விலக்கப்பட்டார். மேலதிகாரிகள் சிலர்மீது ஊழல் குற்றச்சாட்டுகளை எழுப்பிய காபெட்டு வழக்கிற்கஞ்சி அமெரிக்கா சென்றார். அங்குப் பீட்டர் பார்க்குப்பைன் என்ற புனைபெயரில் அரசியல் பற்றிச் சிறுகட்டுரைகளை வெளியிட்டார்.

இவர் கி.பி. 1800-இல் இங்கிலாந்துக்குச் சென்று மிதவாதக் கட்சியை (Conservative Party) ஆதரித்து, கி.பி. 1802 முதல் 'காபெட்டின் அரசியற் பதிவேடு' (Cobbet's Political Register) என்னும் வாரஇதழை நடத்தி வரலானார். இவரது மறைவு வரை தொடர்ந்து வெளிவந்த அவ்விதழ் நல்ல விற்பனை பெற்றிருந்தது. விரைவில் பெரும்பான்மை மக்கள் போக்கினையொட்டி இவர் தீவிரவாதக் கட்சி (Radical Party) ஆதரவாளராக மாறினார்.

காபெட்டு வெளியிட்ட நூல்களுள் 'பாராளுமன்ற விவாதங்கள்' (Parliamentary Debates), 'அர

சாங்க விசாரணைகள்' (State Trials), இளைஞருக்கு அறிவுரை (Advice to Young Men) ஆகியன குறிப்பிடத்தக்கன. இவரது ஆங்கில இலக்கண நூல் இன்றும் படிக்கத் தக்கதாக விளங்குகிறது.

வேளாண்மைத் துறையில் ஈடுபாடு மிக்க காபெட்டு, ஆம்புசயர், சர்ரே ஆகிய இடங்களில் வேளாண் பண்ணைகளை நடத்தினார். நகர வாழ்வை வெறுத்த இவர், இங்கிலாந்து நாட்டுச் சிற்றூர்களின் வேளாண்மை மற்றும் அரசியல் நிலையை விளக்கும் வகையில் பல கட்டுரைகளை எழுதினார். உழவர்களின் துயர் களைய கி.பி. 1821-இல் அரசால் அமைக்கப்பட்ட குழுவிடம் நிலப்பிரபுக்கள் கூறிய கருத்துகளுக்கு மறுப்பாக எழுதப்பட்ட அக்கட்டுரைகள், கி.பி. 1830-இல்'சிற்றூர்ப் பயணங்கள்' (Rural Rides) என்ற பெயருடன் நூலாக வந்தன. அந்நூல் இன்றும் சுவை பயப்பதாக விளங்குகிறது.

படைவீரர்களைக் கசையாலடிக்கும் வழக்கத்தை எதிர்த்து இழிந்த மொழிநடையில் எழுதிய குற்றத்திற்காகக் காபெட்டு கி.பி. 1810-இல் இரண்டாண்டுக் காலச் சிறைத்தண்டனை பெற்றார். எனினும் இங்கிலாந்து மக்களின் அரசியல் கருத்துகளை உருவாக்கும் தலைவருள் ஒருவராக இவர் விளங்கினார்.

பத்திரிக்கைச்சுதந்திரத்திற்குப் பாடுபட்டவர்களுள் காபெட்டு குறிப்பிடத்தக்கவர். இவரது மறைவுக்கு இருபதாண்டுகளுக்குப் பின் செய்தித்தாள்களின் மீதான வரியை ஆங்கில அரசு நீக்கியமைக்கு இவர் தொடங்கி வைத்த பணிகளும் காரணமாயமைந்தன. இவர் கி.பி. 1830-இல் பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். இறக்கும் வரையில் இவர் அப்பொறுப்பில் நீடித்தார்.

காபெட்டின் பல்வேறு கட்டுரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட தன்வரலாறு கி.பி. 1833-இல் 'ஏர் பிடிக்கும் சிறுவன் முதல் பாராளுமன்ற உறுப்பினர் வரை' (The Progress of a Plough to a Seat in Parliament) என்ற பெயருடன் வெளிவந்தது. இந்நூல் ஆங்கிலத் தன்வரலாற்றிலக்கியத் துறையின் முன்னோடி நூல்களுள் ஒன்றாக விளங்குகிறது.

இவரது மொழிநடை இவரது நேர்மையையும் அறிவுக் கூர்மையையும் வெளிப்படுத்துகிறது என்றும், அந்த வேளையிலேயே இவர்தம் செருக்கும் போராடும் இயல்பும் அம்மொழிநடையின் அழகுக்கு ஊறு விளைவிக்கின்றன என்றும் கூறுவர். அரசியல் இதழியலாளராகவும், பத்திரிகைச் சுதந்திரத்திற்குப் பாடுபட்டவராகவும், ஆங்கில இலக்கியவரலாற்றில் இடம் பெறும் இவர் கி.பி.1835-ஆம் ஆண்டில் காலமானார்.

ந.மெ.


**காம்டன்** இங்கிலாந்தின்பெருநகர்ப் பகுதியில் உள்ள அரசுரிமைப் பத்திரத்தின்படி நகராண்மைச் சலுகைகளுள்ள ஒரு பேரூர். அந்நாட்டின் தென் கிழக்குப் பகுதியில் சில ஊர்களை இணைத்து 1965-இல் இந்தப் பேரூர் அமைக்கப் பெற்றது. காம்டனில் (Camden) பல சிறந்த எழுத்தாளர்கள் வாழ்ந்துள்ளனர். முக்கியமாக, சான் கீட்சு (John Keats), சான் கான்சுடபிள் (John Constable), சார்சு டு மௌரியர் (George Du Maurier), கேட் கிரீனவே (Kate Greenaway),காரல் மார்க்சு (Karl Marx) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இசைப்பெட்டி வகைகள் செய்வதில் இப்பகுதி பெயர் பெற்றது. பிரித்தானிய பொருட்காட்சிச் சாலையும் இலண்டன் பல்கலைக் கழகமும் இங்கு உள்ளன. வழக்குரைஞர்கள் நுழைவு இசைவு தரத்தனியுரிமையுடைய நாற்பெருஞ் சங்கங்களுக்குரிய கட்டடமும் இங்கு உள்ளது. அறுவை மருத்துவர் அரசர் கல்லூரி இங்கு இயங்கிவருகிறது. காம்டன் என்ற பெயரையுடைய பல கோட்டங்களும் நகரங்களும் அமெரிக்காவில் உள்ளன.

தெ.பா.

**காம்பன் சூல்சு** பிரான்சு நாட்டின் அரசியல் வாதிகளில் சிறப்பான ஒருவர். பாரிசு மாநகரத்தில் கி.பி. 1845-இல் பிறந்த காம்பன்சூல்சு (Kampon Jules) அரசியலில் சிறந்த பயிற்சி பெற்றார். அதன் விளைவாகப் பிரான்சின் மாநிலமாக இருந்த அல்சீரியாவில் கி.பி.1891-இல் தலைமை ஆளுநராக அமர்த்தப் பெற்றார். பிறகு 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவுக்கும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுபெயின்(Spain) நாட்டுக்கும் அரசியல் தூதராக விளங்கிப் பணியாற்றினார். முதல் உலகப் போர்க் காலத்தில், செருமனியில் பிரஞ்சு அரசியல் தூதராகவும், பிறகு பிரெஞ்சு வெளிநாட்டு இலாகாவின் தலைமைச் செயலாளராகவும் பணியாற்றி, 1935-இல் இவ்வுலகை நீத்தார்.

தெ.பா.

**காம்பியா** மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு குடியரசு. இதை முதலில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்கள் கண்டுபிடித்தார்கள். ஆனால் அவர்கள் அங்கே நிலையாகத் தங்கவில்லை. காம்பியாவின் (Gambia) பரப்பளவு 11,295 ச.கி.மீ. இதன் தலைநகர் பஞ்சுல் (Banjul). ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளுள் மிகச் சிறியது காம்பியாவே. இதன் வழியாகக் காம்பியா ஆறு ஓடுகிறது. புனித மேரித் தீவு (St. Mary'Island) இந்த குடியரசுக்கு உட்பட்டது. நிலக்கடலையும் எண்ணெய்ப் பனங்கொட்டையும் தோலும் இங்கிருந்து ஏற்றுமதி ஆகின்றன. ஆடுமாடுகள் மிகுதியாக வளர்க்கப்படுகின்றன.




காம்பியா

போர்ச்சுகீசியரிடமிருந்த இப்பகுதியில் கி.பி. 1588-இல் ஆங்கிலேயருக்கு வாணிக உரிமைகள் கிடைத்தன. ஆங்கிலேயரின் ஆதிக்கம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கு மேலோங்கத் தொடங்கியது. பாதர்சுட்டு (Bathurst - 1973 வரை தலைநகர் பஞ்சுலுக்கு இருந்த பெயர்) நகரத்தில் ஆங்கிலேயர் தம் ஆட்சியை வலுப்படுத்திக் கொண்ட துடன், உள்நாட்டுத் தலைவன் ஒருவனிடமிருந்து புனித மேரித் தீவை விலைக்கு வாங்கித் தம் ஆட்சியை விரிவுபடுத்தினர். காம்பியா கி.பி. 1894-இல் ஓர் ஆங்கிலேயக் காப்பரசு (Protectorate) என்று அறிவிக்கப்பட்டது. உள்நாட்டு உரிமை இயக்கம் வளர்ச்சியடையவே, 1963-இல் தன்னாட்சி உரிமை காம்பியாவுக்கு வழங்கப்பெற்றது. பிறகு 1965-இல் இந்நாடு முழுமையான சுதந்திரத்தை அடைந்தது. இந்நாடு 1970-இல் நடைபெற்ற பொதுமக்கள் வாக்கெடுப்பு முடிவுப்படி(Referendum) ஒரு குடியரசாயிற்று. புதிய அரசியல் அமைப்புப்படி, குடியரசுத் தலைவரும் சட்ட சபை உறுப்பினர்கள் பலரும் மக்களால் தேந்தெடுக் கப் பெறுவர். சுதந்திர இயக்கத் தலைவரான சர் தௌதா கெய்ராபா சவாரா (Sir Dawda Kairaba Jawara)முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். மக்கள் முன்னேற்றக் கட்சி முதலில் சுதந்திர ஆட்சியை அமைத்தது. இந்நாடு ஐக்கிய நாடுகள் சபையிலும் ஆப்பிரிக்க ஐக்கிய அமைப்பிலும் பொது நல அரசிலும் (Commonwealth) உறுப்பு நாடாக உள்ளது. இந்நாட்டின் மக்கள் தொகை 592,000 (1980). தெ.பா.

**கல்வி:** காம்பியாவின் தலைநகரான பாஞ்சுல் (Banjul) நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் வாழும் பெரும்பாலான குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றனர். ஆனால் காம்பியாவின் பிற பகுதிகளில் மூன்றில் ஒரு குழந்தையே பள்ளிக்குச் செல்லுகின்றது. பெரும்பாலான பள்ளிகள் ஊர்ப்புறங்களிலேயே கட்டப்பட்டுள்ளன. பெரும்பான்மையான குழந்தைகள் ஆறாண்டுக் காலக் கல்வியான தொடக்கக் கல்வியை முடிக்கின்றனர். மிகக் குறைந்த மாணவர்களே இடைநிலைப் பள்ளிகளில் (Secondary School) சேருகின்றனர்.

தொடக்கக் கல்விக்கு முன்னர்க் குழந்தைகள் 3 வயதில் மழலையர் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர். இப்பள்ளிகள் தனியாரால் நடத்தப்படுகின்றன. இவை நகர்ப்புறத்திலேயே பெரும்பாலும் அமைந்துள்ளன. முன்னர்த் தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் சேரும் வயது ஆறு. இப்போது அதை எட்டு வயதாக உயர்த்தியுள்ளனர். தொடக்கப் பள்ளிக் கல்வி 1978-இலிருந்து இலவசமாக்கப்பட்டுள்ளது. இந்நாட்டிலுள்ள தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 132 (1982).

தொடக்கப் பள்ளிக் கல்விக்குப் பின்னர் உள்ள இடைநிலைப் பள்ளிக் கல்வியின் கால அளவு 5 ஆண்டுகள். இடைநிலைப் பள்ளிக்கு இணையானதாக 16 வகைத் தொழில் மற்றும் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. பள்ளிப் பின்கல்வி நிறுவனங்கள் (Post-Secondary Institutions) மொத்தம் 5 உள்ளன. பிரிக்காமா நகரிலுள்ள கல்லூரி (Brikama College) தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கிறது. இக்கல்லூரி வேளாண்மை, குடும்பப் பொருளியல் போன்ற துறைகளிலும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப்பயிற்சியினைத் தருகிறது.

காம்பியாவில் பல்கலைக்கழகம் ஏதும் இல்லை. இச்சிறிய நாட்டின் பொருளாதார வசதிக்குப் பல்கலைக்கழகம் வைத்துக் கொள்வது சிக்கனமற்றது எனக் கருதப்படுவதால் இன்னும் இந்நாட்டில் பல்கலைக்கழகம் ஏற்படவில்லை. எனினும், மற்ற ஆப்பிரிக்க நாடுகள், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றுக்குக் காம்பியா மாணவர்கள் உயர்கல்விக்காகச் செல்லுவது வழக்காக உள்ளது.

ஆங்கிலமே இங்கு அலுவலக மொழியாக உள்ளது. பிரெஞ்சு, ஆங்கிலம் அல்லது ஏதாவதோர் ஆப்பிரிக்க மொழி ஆகியன பள்ளிகளில் பயிற்று மொழியாக உள்ளன. காம்பியாவில் ஏறத்தாழ 18 விழுக்காடு மக்கள் (1980) எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக உள்ளனர். ஆண்களில் 27 விழுக்காடு எழுதப்படிக்கத்

தெரிந்தவர்கள்; ஆனால் பெண்களில் 3 விழுக்காட்டினர் மட்டுமே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். மகளிர் கல்வி கற்றல் என்பது பொழுதை வீணடிப்பதாகும் என்று கருதுவதே இதற்குக் காரணமாகும். எஸ்.த.

**காம்பியா ஆறு**: மேற்கு ஆப்பிரிக்காவில் காம்பியா நாட்டின் வழியாக ஓடும் இந்த ஆறு 1,125கி.மீ. நீளமுள்ளது. வடக்குக் கினிப் பகுதியில் இது தோன்றி செனீகல் நாட்டின் தென்கிழக்குப் பகுதி வழியாக ஓடி காம்பியாத் தலைநகர் பஞ்சுல் (Banjul)நகரருகில் அட்லாண்டிக்கு மாக்கடலில் கலக்கிறது. இந்த ஆறு காம்பியாவை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறது. இந்த ஆறு முழுவதும் கப்பல் போக்குவரத்துக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. தெ.பா.

**காம்பிரே**: வடக்குப் பிரான்சில் உள்ள துறைமுகப்பட்டினம். எசுகாட்டு ஆறு இதனருகே ஓடுகிறது. ஆடை வகைகள் உற்பத்திக்கு இது புகழ் பெற்றது. காம்பிரே ஆடை என்று வழங்கப்படும் துணி வகைகள், மக்களால் மிகவும் விரும்பப்படலாயின. மரவேலை, உலோகவேலை, களிமண் வேலை முதலியனவும் இங்கு வளர்ச்சியடைந்துள்ளன. காம்பிரே (Cambrai) கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கிறித்தவத் திருச்சபையின் நேர் ஆதிக்கத்திற்கு உட்பட்டுப் பேராயரின் ஆட்சிமுறையின் கீழ் இருந்து வந்தது. இசுபெயின் கி.பி. 1595-இல் இதைக் கைப்பற்றியது. பின், 1677-இல் பிரான்சு இதைத் திரும்பப் பெற்றது. முதல் உலகப் போர்க்காலத்தில், 1917, 1918 ஆகிய ஆண்டுகளில் இங்குப் போர்கள் நிகழ்ந்தன. தெ.பா.

**காம்பெட்டா**: பிரான்சு நாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முடியாட்சிச் சார்பாளர்களுக்கும் குடியாட்சிச் சார்பானவர்களுக்கும் அடிக்கடி போராட்டம் ஏற்பட்டு வந்தது. விடாமுயற்சியுடன், வலிமைமிக்க வல்லாட்சியாளரையும் எதிர்த்து நின்று நாட்டில் குடியாட்சியை நிலைபெறச் செய்த தலைவர்களுள் காம்பெட்டாவும் (Gambetta) ஒருவர். பிரான்சில் கி.பி. 1848 முதல் 1871 வரை மூன்றாம் நெப்போலியனின் பேரரசு ஆட்சி ஏற்பட்டிருந்தது. வழக்கறிஞராக இருந்த காம்பெட்டா தம் குடியாட்சிப் பற்றுக் காரணமாக, பேரரசனையே எதிர்த்தார். செருமனிக்கும் மூன்றாம் நெப்போலியனுக்குமிடையே கி.பி.1870-இல் நடந்த போரில, பிரெஞ்சுப் பேரரசன் தோல்வியுற்றவுடன் காம்பெட்டா நாட்டில் குடியரசை நிலைநாட்டும் முயற்சிகளில் இறங்கினார். இவருடைய உதவியால் ஏற்பட்ட பிரெஞ்சுக் குடியரசில் உள்நாட்டு அமைச்சர் பதவி இவருக்குக் கிடைத்தது. செருமெனி, பிரான்சிடமிருந்து மெட்சு (Metz) என்னும் இடத்தைப் பெற்றுக்கொள்வதில் தீவிரமாக இருந்தது. ஆனால், தாய்நாட்டுப் பற்றுக் கொண்ட காம்பெட்டா அதைச் செருமனிக்கு அளிக்க மறுத்துவிட்டார். அதனால் சீற்றமடைந்த செருமனி மீண்டும் போரைத் தொடங்கி கி.பி. 1871-இல் பிரான்சை முறியடித்தது. காம்பெட்டாவின் எண்ணம் தோல்வியுற்றது. பிரான்சில் கி.பி. 1875-இல் மீண்டும் ஏற்பட்ட குடியரசு அரசியலமைப்புக்குக் காம்பெட்டாவின் ஆதரவு முழுமையாகக் கிடைத்தது. இவரே கி.பி. 1881-இல் நாட்டின் முதலமைச்சரானார். ஆனால், நாட்டில் ஏற்பட்டிருந்த பல குழப்பமான நிலைகள் காரணமாக, மூன்று மாதங்களுக்குப் பிறகு காம்பெட்டா பதவியை விட்டு விலக நேர்ந்தது. குடியரசுக் கோட்பாட்டினர் வரிசையில் இவருக்கு நிலையான இடமுண்டு. தெ.பா.

**காம்பே விரிகுடா**: மாகி, தபதி, நருமதை ஆகிய ஆறுகள் கலக்கும் இப்பகுதி, மேற்கு இந்தியாவில் பம்பாய்க்கு அருகில் உள்ளது. இதன் தலைப்பில் உள்ள காம்பே துறைமுகம் தொழில் வளச் சிறப்புப் பெற்றது. துணி நெசவு, சமக்காள உற்பத்தி, எண்ணெய்த் தொழில், எண்ணெய்த் தூய்மைப்படுத்துதல் முதலியன மிகுதியாக இங்கு நடைபெறுகின்றன. இப்பட்டினம் வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. குசராத்துப் பகுதியில் கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் முகம்மதியர் ஆட்சி நிலவியபொழுது காம்பே, சிறப்பு, வாய்ந்த துறைமுகமாகவிளங்கியது. பிறகு மணல் அரிப்பினால் இதன் சிறப்புக் குன்றலாயிற்று. மிகமிகப் பழங்காலத்திலேயே இது இருந்ததற்கான குறிப்புகள் கிடைத்துள்ளன. தெ.பா.

**காம்பேனியா**: இத்தாலியில் உள்ளதொரு மாநிலம். இது வால்டர்னா என்னும் ஆறு ஓடுவதால் செழிப்புடன் விளங்குகிறது. வெசூவியசு என்னும் எரிமலை இங்கு உள்ளது. இங்குத் திராட்சை, சோளம், கோதுமை முதலியன விளைகின்றன. இதன் பரப்பு 13,595 ச.கி.மீ. மேற்கு அப்பினைன் மலைத்தொடருக்கும் திர்ரேனியன் கடலுக்குமிடையே உள்ள இப்பகுதி, காப்பிரி, இசியா, புரோகிதா முதலிய தீவுகளையும் தன்னுள் அடக்கியுள்ளது. இதன் தலைநகர் நேபிள்சு. காம்பேனியாவின் (Campania) நடுப்பகுதி உயரமாகவும் மலைப்பாங்காகவும் உள்ளது. தெற்கு. வடக்கு கடற்கரைப் பகுதிகள் செழிப்பானவையாகவும், வரலாற்றின் மிகப் பழங்காலத்திலேயே வேளாண்மைச் சிறப்புப் பெற்றனவாகவும் உள்ளன. சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வருகை தந்து, அரசுக்கு வருமானம் கிடைக்குமாறு செய்து வருகின்

றனர். இப்பகுதியில் பல பண்டைய இத்தாலிய இனக் கூட்டத்தினரும், கிரேக்கக் குடியேற்ற மக்களும், எட் ரசுக்கர்களும், சாம்நித்தியர்களும் கி.மு. 4-ஆம் நூற் றாண்டு முதல் கி.மு. 2-ஆம் நூற்றாண்டு வரை தங்கியிருந்தனர்.

பின்னர், உரோமானியர் காம்பேனியா முழுவதை யும் கைப்பற்றிக் கொண்டனர். உரோமின் வீழ்ச்சிக் குப்பிறகு காதியரும் பைசாண்டியரும் இப்பகுதியை வென்று தம்மடிப்படுத்தினர். பிற்காலத்தில் பெனெ வெண்ட்டோவின் இலம்பார்டிக் கோமக நாட்டின் ஒரு பகுதியாக இது அமையப்பெற்றது. இதை கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் நார்மானியர் வென்றனர். இது 12-ஆம் நூற்றாண்டில், சிசிலி அரசின் ஒரு பகுதி யாகியது. நேபிள்சின் சிறப்பு உயரலாயிற்று. புதிய இராச்சியத்தின் தலைநகராக அது வளர்ச்சியுற்றது. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் நேப்பிள்சில் மிகுந்த அளவில் போர் நிகழ்ந்தது. தெ.பா.


**காம்போசம்**: வடமேற்கு இந்தியாவில் பண்டைக் காலத்தில் குதிரைகளுக்கும் போர் வீரர் களுக்கும் பெயர் போன பகுதி காம்போசம் (Kamboja). இது பஞ்சாபுப் பகுதிக்கும் பால்க்கு (Balkh) அல்லது பாக்டிரியாவுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். இதன் தென்கிழக்கில் பாஞ்சால நாடும் வடமேற்கில் முகம்மதிய நாடுகளும் இருந்தன. இங்குக் குடியேறிய வர்கள், ஆரிய இனத்தவராக இருந்த போதிலும், பிற ஆரிய இனத்தவர் பேசிய மொழிக்கும் இவர் களது மொழிக்கும் வேறுபாடு காணப்பட்டது. இம் மக்கள் பிற்காலத்தில் சிந்து நதியின் வடமேற்குப் பகுதியில் குடியேறினர். அப்பகுதி கம்பூசியா (Kambujiya) எனப் பெயர் பெற்றது. காம்போசத்தில் சிறந்த குதிரைகள் இருந்ததாக அர்த்தசாத்திரம் குறிப்பிடுகிறது. கல்கணர் என்பவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இங்கு இருந்த சிறப்பான குதிரை களைப்பற்றிக் குறிப்பிடுகிறார். காம்போசத்தைப் பற்றிய பல செய்திகளைக் கௌடிலியர் குறிப்பிட் டுள்ளார். தெ.பா.

**காமக்கணிப் பசலையார்**: இவர் சங்காலப் புலவருள் ஒருவர்; மதுரைக் காமக்கணி நப்பசலை யார் எனவும், நப்பசலையார் எனவும் வழங்கப்பெறு வர். குமுழி ஞாழலார் நப்பசலையார், மாறோக்கத்து நப்பசலையார் என வேறு நப்பசலையார்களும் சங்க காலத்தே இருந்தனர் என அறியக்கிடக்கிறது. இவர் பெண்பாற் புலவர். காமக்கணி என்பது, 'காமாட்சி' என்ற வடசொல்லின் மொழிபெயர்ப்பு என்றும், மகளிர்க் குண்டாம் பசலையைப் பாராட்டிப் பாடிய மையால் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்றும், ஆனால், அத்தகைய பாடல் இப்பொழுது கிடைக்க வில்லை என்றும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுவர். இவர் நற்றிணை 243-ஆம் பாடலின் ஆசிரி யர். குமுழி ஞாழலார் நப்பசலையார் பாடிய அக நானூறு 160-ஆம் பாடலும் இவர் பாடியதே என்பது நாராயணசாமி ஐயர் கருத்தாகும்.

மாஞ்சோலைதோறும் ஆணும் பெண்ணுமாகச் சேர இருந்த குயில்கள், 'சூதாடுகருவி பெயர்ந்து விழு மாறு போன்ற நிலையில்லாத வாழ்க்கையை ஏது வாகக் கொண்டு, அறிவுடையீர், நீங்கள் உங்கள் துணைவியரைப் பிரியாது கூடியிருங்கள்' என்று பிரிந்த தலைவரை இடித்துரைப்பன போலக் கூவுகின்றன. அத்தகு இளவேனிலில் பொருள்வயிற் பிரிவது ஆட வர்க்கு இயல்பாகும் என்னில், 'அடைந்தவரைக் கைவிடேம் என்று கூறிக் காக்கும் அறத்தைக் காட்டி லும் பொருள் அரியதுபோலும்' எனத் தலைவி பிரி விடை மெலிந்து கூறியதாக அந்த நற்றிணைப் பாடல் அமைந்துள்ளது.

அகநானூற்றுப் பாடலில் (160) கடற்கரையில் யாமை ஈன்று புதைத்த முட்டைகளை அவை குஞ்சாக வெளிப்படும்வரை ஆண் யாமை காக்கும் என்ற செய்தி உள்ளுறையமையக் கூறப்பட்டுள்ளது. பாம் பின் தூக்கிய தலை போல், தேராழி அறுத்த நெய்தற் கொடி வாடி மேலெழுந்தது என அப்பாடலில் அழகிய உவமை அமைந்துள்ளது. இரா.சா.

**காமச்சட்கா**: உருசிய ஐக்கியத்தின் கிழக்குக் கோடியில் உள்ள ஒரு முந்நீரகம். இதன் பரப்பு 269,878 ச.கி.மீ. மேற்கில் இது ஓகோடசுக் (Okhotsk) கடலிலிருந்து பேரிங்குக் கடலையும், கிழக்கில் பசிபிக் குப் பெருங்கடலையும் பிரிக்கிறது. இம்முந்நீரகத்தின் நடுப்பள்ளத்தாக்குப் பகுதியில் காமச்சட்கா (Kamachatka) ஆறு பாய்கிறது. இப்பள்ளத்தாக்கின் இரு மருங்கிலும் எரிமலைத் தொடர்கள் உள்ளன. இத் தொடர்களில் 22 எரிமலைகள் இன்றும் உயிர்ப்புடன் உள்ளன. மலைப்பாங்கான இப்பகுதியில் மலைப்பகுதி சார்ந்த தாவரங்கள் இருக்கின்றன. பல காடுகளும், தாதுப்பொருள் ஊற்றுக்களும், வெந்நீரூற்றுகளும் இங்கு உண்டு. இங்குக் கிடைக்கும் தாதுப் பொருள் களுள் முக்கியமாக, எண்ணெய், நிலக்கரி, தங்கம், அப்பிரகம், திமிளை (கந்தகக்கல்) கந்தகம், வான்பரல், அழற் பாறை வகைகள் (Tufa) முதலியன குறிப்பிடத் தக்கவை. இங்கு வாழும் மக்கள், மீன்பிடித்தல், வேட்டையாடுதல், கடல்நாய் வேட்டையாடுதல், மரங்கள் வெட்டுதல் முதலிய தொழில்களை மேற்




காமச்சட்கா

கொண்டுள்ளனர். தெற்குப் பகுதியில் ஆடுமாடு வளர்த்தலும் புல்லரிசிக் கூலவகை, கம்புவகை, உருளைக்கிழங்கு காய்கறிகள் முதலியன பயிரிடுதலும் காணப்படுகின்றன. கலைமான்கள் வளர்த்தலும் சிறப்பாக இங்கு நடைபெறுகிறது. இங்குள்ள தொழில்களில் மீன் பதனிடுதல், கப்பல் கட்டுதல், மரவேலை முதலியனவும் குறிப்பிடத்தக்கவை.


**வரலாறு**: இம்முந்நீரகம் கி.பி. 1697-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. சிறிதுசிறிதாக இங்குக் குடியேறும் முயற்சிகள் தொடர்ந்து, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் முழு வளர்ச்சி அடைந்தன. உருசியப் பேரரசன் முதலாம் பீட்டர் இம்முயற்சியில் சிறப்பான பங்கைப் பெற்றான். உருசிய ஆதிக்கம் கி.பி. 1732-ஆம் ஆண்டில் இங்கு முழுமை அடைந்தது. இப்பொழுது இது உருசிய ஐக்கியக் கூட்டமைப்பின் பகுதியாக அமைந்துள்ளது. இங்கு உருசியர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். உள்நாட்டுக்குரிய வகுப்பினருள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க மக்கள் கோரியக்கர், சக்சியர், ஐதல் மென்கள் (Heidelmen) ஆவர். தெ.பா.

**காமஞ்சேர் குளத்தார்**: சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரேபாடல் (4) இடம்பெற்றுள்ளது. தலைவி கூற்றாக அமைந்த அப்பாடல், பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, தன் தலைவனின் பிரிவிற்குத் தான் வருந்தவில்லை எனவும், அவரைச் சால்பிலர் என்று கூறியதற்காகவே தன் நெஞ்சு வருந்துகின்றது எனவும் தலைவி கூறித் தலைவன்மீது கொண்டிருக்கிற உள்ளன்பினைப் புலப்படுத்துவதாக உள்ளது.

வீ.சே.

**காமதேவன்**: திருமாலின் உள்ளத்தில் பிறந்தவன். மனத்திற்குக் கிளர்ச்சியைக் கொடுப்பதால் இவன் மன்மதன் என்று பெயர் பெற்றான். இவனை நான்முகனின் மகனாய்க் கொள்வாரும் உளர். இவன் அழகோடு கூடிய இளமையை அதிகப்படுத்தி ஆன்மாக்களுக்குக் காமத்தை விளைத்து மக்களுற்பத்தியைச் செய்விப்பவன். இவன் தேவி இரதி. காமனின் தம்பி சாமன் எனப்படுவான். கரும்பு வில்லைக் கொண்ட இவன் மலரம்புகள் அரவிந்தம், அசோகம், மாம்பூ, முல்லை, நீலம் ஆகியனவாம். இவன் வில்லின் நாண் வண்டு. இவன் கொடி மீனக்கொடி. தென்னம்பாளை இவன் கவரியாகும். மல்லிகை காளாஞ்சி, தாழை மடல் முதலியன படைக்கலன்கள். இவன் ஊர்தி கிளி; தேர் செதறல்; யானை இருள்; கடலின் ஓங்காரமே இவன் முரசொலி; எக்காளம் குயிலின் குரல். இவன் வெண்கொற்றக் குடை நிலா. வசந்தகாலம், நிலா, மணி மேடை, மணற்குன்று, பூஞ்சோலை, மலர், நறுமணம், அழகு முதலியன இவன் பரிவாரங்கள்.

மன்மதனின் மலரம்புகள் ஐந்து விதமான கிளர்ச்சிகளை உண்டாக்கவல்லன. அவை, சொல்லும் நினைவும் தடுமாறல் (சுப்பிரயோகம்), வெய்து உயிர்த்து இரங்கல் (விப்பிரயோகம்), வெதுப்பும், துய்ப்பன தெவிட்டலும் (சோகம்) அழுங்கலும், மொழி பல பிதற்றலும் (மோகம்), அயர்ப்பும் இறப்பும் (மரணம்) ஆகியனவாகும்.



காமன்

காமவேளுக்குக் கோட்டம் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறும். மன்மதன் விழா கொண்டாடப் பட்டதைப் பெருங்கதையால் அறியலாம். இம் மன்மதன் சிவபெருமானால் எரிக்கப்பட்ட கதையைச் சிவ மகாபுராணம் கூறும். அப்புராணத்தில் பின்வரும் கதை கூறப்பட்டுள்ளது. தாரகாசுரன் நான்முகனிடம் பெற்ற பெருவரங்களால் அசுரர்க்கு அரசனாகித் தேவர்களைப் பெரிதும் கொடுமைப்படுத்தினான். துன்பந்தீர்க்கத் தேவர்கள் நான்முகன் இந்திரன் ஆகியோரை நாடினர். தேவர்களின் வற்புறுத்தலுக்கும் வேண்டலுக்கும் இணங்கி மன்மதன் யோக மூர்த்தியாய்த் தவத்திலிருக்கும் சிவபெருமான் மீது காமக் கணைகளைத் தொடுத்தான். மலரம்புகள் பட்ட அவ்வளவில் இறைவன் தவம் கலைந்தது. இறைவன் சினங்கொண்டு நெற்றிக் கண்ணைத் திறந்தார். அக்கண்ணில் இருந்து புறப்பட்ட தீயில் காமன் எரிந்து சாம்பலானான்.காமனின் மனைவி இரதி கதறியழுது சிவபெருமானை அணுகிக் கணவனை மீட்டுத் தர வேண்டினாள். சிவபெருமான்'இவன் உனக்கு மட்டும் உருவத்துடனும், மற்ற தேவாதி தேவர்க்கு அருவமாகவும் இருப்பான்' என வரம் தந்தார். அருவமான நிலையில் அங்கமற்றவன் என்பதால் அனங்கன் என்றும் மன்மதனுக்கு ஒரு பெயர் ஏற்பட்டது. காம வேளை எரித்த இறைவனின் இந்தத் திருக்கோலத்திற்குக் காமதகன மூர்த்தி என்பது பெயர்.

தன் கணவனை மீண்டும் பார்க்க விரும்பிய இரதிக்கு, மன்மதனின் அடுத்த பிறப்புப் பற்றிச் சிவ பெருமான் கூறியதைச் சிவமகாபுராணம் காணுமாறு விரித்துரைக்கிறது. 'துவாரகையில் கிருட்டிணருக்கும் உருக்குமணிக்கும் மன்மதன் பிரத்யும்னன் என்ற பெயரில் மகனாய்ப் பிறப்பான். இவனைச் சம்பராசுரன் என்னும் அரக்கன் தூக்கிச் சென்று கடலுக் கப்பாலுள்ள தன் தலைநகரில் வைப்பான். அதுநாள் வரை இரதி சம்பராசுரன் நாடு சென்று அங்கிருக் கட்டும். அதே நகரில் மன்மதனை அவள் அடைவாள். சம்பராசுரனை மன்மதன் போரில் வென்று பொன்னும் பொருளும் கொண்டுஇரதியுடன் துவாரகையடைந்து சிறக்க வாழ்வான்' என்று சிவமகா புராணம் கூறுகிறது.

சிலப்பதிகாரத்தில் கடலாடுகாதையில் காம தேவனைப் பற்றிய சில செய்திகள் காணக்கிடக்கின்றன. வாணாசுரன் தன் மகள் உஷைகாரணமாகக் காமனின் மகன் அநிருத்தனைத் தன் தலைநகரான சோவில் கொண்டு போய்ச் சிறை வைக்க, அவனை மீட்கும் பொருட்டு, அத்தலைநகர் வந்த மாயோன் அந்நகர வீதிகளில் குடக்கூத்து நிகழ்த்தினாராம் அதே நகரில் காமன் தன் மகனைச் சிறை மீட்டு ஆண்தன்மை திரிந்த பெண்மைக் கோலத்தோடு 'பேடி'யாக இருந்து பேடு என்னும் கூத்தை நிகழ்த்தியதையும் சிலம்பு குறிக்கிறது.



வடஇந்தியாவில் காமனுக்குக் கோயில்கள் இருந்ததாக இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன. குசாணர் காலத்தைச் சார்ந்த காமதேவன் சிற்பமே மிகத் தொன்மையானது.புவனேசுவரம்,அவந்திப்பூர், ஆபாநேரி ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் உள்ள காமதேவன் சிற்பங்கள் சிறப்புடையவை.

கிரேக்கர்கள் காமனை இராசு எனக் கூறுவர். இவன் போர்க்கடவுளாகிய மார்சுக்கும் காதற் கடவுளான வீனசுக்கும் பிறந்தான். இவனது அம்பு பட்டவர் காதல் கொள்வர். ஆடையற்ற பொற்சிறகுடைய அழகான சிறுவனாகக் காமனது உருவம் அமைக்கப்படும். புன்முறுவல் கொண்ட முகத்துடன் வில்லும் அம்பறாத்தூணியும் இவன் பெற்றிருப்பான். இவனது அம்பினால் இவனே ஒருமுறை தாக்கப்பட்டதால் சைக்கி என்னும் இளவரசியின் மீது இவன் காதல் வயப்பட்டான்.

இன்றும் தமிழகத்துத் திருக்கோயில்கள் பலவற்றில் மன்மதனுக்கும் இரதிக்கும் அழகிய சிற்ப உருவங்கள் இருப்பதைப் பார்க்கலாம். இவற்றுள் குறிப்பிடத்தக்க அழகுடையவை,தென்காசிக் கோயிலிலும் தாடிக் கொம்பு அழகிய பெருமாள் கோயிலிலும்,திருமெய்யம் சத்தியகிரீசுவரர் திருக்கோயிலிலும் ஆவுடையார் கோயிலிலும் காணப்படுகின்றன.
காண்க: இரதி. இரா.க.

**காமதேனு**: வேண்டுவோருக்கு வேண்டியவைகளைத் தரும் தேவலோகப் பசு. இது வசிட்ட முனிவரிடம் இருந்ததால் இதனை வசிட்டரின் காமதேனு என்றே புராணங்கள் கூறுகின்றன. அறியாமையை வெல்லும் அறிவின் சின்னமாக இக்காமதேனு கருதப்படுகிறது. விசுவாமித்திரர் மன்னராக இருந்த சமயத்தில் தம் படைகளுடன் வசிட்ட முனியின் குடிலுக்கு வந்தார். வசிட்டர் அவர் விருப்பத்திற்கு இணங்க, அவர்தம் படைகளுக்கு இப்பசுவிடமிருந்து உணவு வரச்செய்து அருளினார். விசுவாமித்திரர் காமதேனுவைத்தம் வயப்படுத்த நினைத்து இழுத்த போது காமதேனு அவருடன் செல்ல மறுத்து, தன்னிடமிருந்து பல படைவீரர்களை உருவாக்கி விசுவாமித்திரருடன் போராடி வெற்றியும் கொண்டது. இப்போரில் விசுவாமித்திரரின் 100 மக்களில் ஒருவனைத் தவிர அனைவரும் மாண்டனர்.



காமதேனு

சத்தியவரதன் என்னும் பெயரைக் கொண்ட திரிசங்கு வேறு ஒருவன் மனைவியை மணந்து கொண்ட போது அவனது தந்தை திரியோருணன் அதற்குஎதிர்ப்பு தெரிவித்ததோடுஅவனை வீட்டினின்றும் வெளியேற்றினான். அவன் வசிட்ட முனிவர் ஆதரவை நாடிய போது வசிட்டர் ஆதரவு அளிக்க மறுத்தார். இதனால் அவர் மீது சத்தியவரதன் கோபங்கொண்டான். விசுவாமித்திரர் தன் மனைவியுடன் காடு சென்று தவம் மேற்கொண்டார். அவர்களின் இளைய மகனை விற்றுத் தங்கள் பசியைப் போக்க முயன்ற பொழுது, சத்தியவரதன் என்ற பெயர் கொண்ட திரிசங்கு அதனைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்குத் தேவையான உணவைத்தான் வழங்குவதாகஉறுதியளித்தான். வசிட்டர் மேல் கொண்ட கோபம் காரணமாக வசிட்டரின் காமதேனுவை வெட்டி அதன் மாமிசத்தை விசுவாமித்திரனின் மனைவிக்கு வழங்கித் தானும் உண்டான். பின்னர் விசுவாமித்திரர் பாராட்டைப் பெற்றபோது, காமதேனுவைக் கொன்ற பாவத்திற்கு உள்ளானான்.

தமிழகக் கோவில்களில் காமதேனு கடவுளர்களின் வாகனமாகக் கருதப்படுகிறது. திருவிழாக் காலங்களில் கடவுளர் உருவங்களை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பயன்படுகிறது. காமதேனு, பெண்ணின் தலையும், மார்பகமும், பால் சுரக்கும் மடியுடன் கூடிய பசுவின் உடலும் கொண்ட அமைப்புடையது.

இ.கா.

**காமரச மஞ்சரி**: இது, வேங்கடேசுர ரெட்டப்பன் மீது பாடப்பட்டது. அவர்,எட்டையபுரம் ஜமீன் தாராவர். இதனைப் பாடியவர் கடிகை முத்துப் புலவர். இந்நூல், இன்பச் சுவை நிரம்பப் பெற்றது; சொல்லணி மிக்குடையது; கலி வெண்பாவாலானது; 445 கண்ணிகளையும், இறுதியில் வாழ்த்து வெண் பாவையும் கொண்டது.

இந்நூலின் காப்புச்செய்யுள், 'இந்நிலங்கொண் டாடுவேங்க டேசுரெட் டேந்திரன்மேல், மன்னிவளர் காமரச மஞ்சரிக்கு' என்று தொடங்கும் நேரிசை வெண்பாவாலானது. நூல் 'பார்பூத்த பேருதரத் தெய்வப் பரந்தாமன், கார்பூத்த வேலை கடைந்த நாள்–சீர்பூத்த என்று தொடங்கி, 'மக்கள் மருமக்களுடன் வாழி யரசுரிமை ஒக்கலுடன் வாழி யுவந்து' என்று முடிகின்றது. வாழ்த்து வெண்பா, நித்திய கலியாணம் நிறைவேறக் கூடினான்' என்று தொடங்கி, 'பகருஞ் சுபசோ பனம்' என்று முடிகின்றது.

இந்நூல், தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்திலும், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நிலையத்திலும், சென்னை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்திலும் சுவடி வடிவில் காணப்படுகின்றது.அச்சு நூல் காண்பது அரிதாக உள்ளது. சுடிவகளில் பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. இந்நூல் சிலேடையுடன் சந்த நலமும் பொருட் செறிவும் கொண்டுள்ளது.

வீ.சொ.

**காமராசர், கு: (1903–1975)**: காமராசர் 1903–ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15–ஆம் நாள் விருதுபட்டியில் (விருதுநகர்) 'நாட்டாண்மைக்காரர் சுலோசன நாடார்' வீட்டில் பிறந்தார். குமாரசாமி, சிவகாமியம்மாள் ஆகியோர் இவர்தம் பெற்றோர்.



காமராசர்

காமாட்சி என்ற நாகம்மாள் இவர்தம் ஒரே இளைய சகோதரி.

வேலாயுதம் என்ற நொண்டி ஆசிரியரின் திண்ணைப் பள்ளியிலும், முருகையா என்ற ஆசிரியர் நடத்திய ஏநாதி நாயனார் வித்தியா சாலையிலும், பிடிஅரிசிப்பள்ளி என்றழைக்கப்பட்ட சத்திரிய வித்தியா சாலையிலும் 1908 முதல் 1914 வரை பயின்று, ஆறாம் வகுப்புடன் தம்முடைய பள்ளிக் கல்வியை நிறுத்திக் கொண்டார். உலகம் என்னும் பல்கலைக் கழகத்தில், அனுபவம் என்னும் கல்வியைப் பெற விழைந்து உலக வாழ்க்கைப் பாடத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு இறுதிவரை அனுபவசாலி யெனத் திகழ்ந்தார்.

இவர் 1909-இல் தன் தந்தையை இழந்தார்; 1969-இல் தாயையும் இழந்தார். தந்தையின் மறைவுக்குப்பின் திருவனந்தபுரம், போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் கடைப் பணியாளராகப் பணியாற்றிய போதிலும் அவரது எண்ணம் இந்திய விடுதலை, காங்கிரசு மகாசபை ஆகியவற்றையே நாடிச் சென்றது.

அண்ணல் காந்தியடிகள் 1919 ஏப்ரல் 6-ஆம் நாள் மக்களுக்கு விடுத்த விடுதலைப் போராட்ட அழைப்பினைத் தமக்கிட்ட பணியாக ஏற்றுக்கொண்டு முழு நேர அரசியல்வாதியானார். உழைப்பால், உண்மைத் தியாகத்தால், ஒப்புயர்வற்ற தொண்டனாய்த் தொடங்கிய அவரது அரசியல் வாழ்வு இறுதி மூச்சு வரை தொடர்ந்தது. காங்கிரசுப் பேரியக்கத்துடன் தம்மை ஒன்றித்துக் கொண்டு 1920-இல் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். கிராமங்களில் பொதுக்கூட்டங்களில் நாட்டின் நிலைபற்றிப் பேசலானார். பெற்ற தாயைவிட, பிறந்த பொன்னாட்டின் பெருமையைக் காக்கப் பேரவாக் கொண்ட இவர் திருமணப் பேச்சுகளை அறவே ஒதுக்கிவிட்டு, அண்ணல் காந்தியடிகளின் அடிச்சுவட்டில் செல்லலானார்.

கள்ளுக்கடை மறியல் (1923), நாகபுரிக் கொடிப் போராட்டம் ஆகியவற்றில் பங்கேற்றார். சத்தியமூர்த்தி, சீனிவாச ஐயங்கார் ஆகியோருடன் 1926-இல் சட்டசபைத் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டார். காந்தியடிகள் ஆசியுடன் சென்னையில் 1927-இல் கர்னல் நீல் என்பவரின் சிலையை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இவர் சைமன் தூதுக்குழுவுக்கு (1928) மதுரையில் கறுப்புக்கொடி காட்டிச் சைமனே திரும்பிப்போ என முழங்கினார். வேதாரணியம் உப்புச்சத்தியாக்கிரகத்தில் (1930) பங்கேற்றதனால் இரண்டு ஆண்டுகள் அலிப்பூர் சிறையில் அடைக்கப் பட்டார். சென்னை மாகாணக் காங்கிரசின் செயற் குழுவில் 1931-இல் காமராசர் உறுப்பினரானார். தொடர்ந்து அகில இந்திய காங்கிரசுப் பேரவைக் குத் தேர்வு செய்யப்பட்டார்.

உதகமண்டல ஆளுநரைக் கொல்லச்சதி செய்த தாகச் சதிவழக்கு ஒன்று (1933) காமராசர் மீது தொடரப்பட்டது. அன்றியும் சிரீவில்லிபுத்தூர், விருதுநகர் காவல் நிலைய வெடிகுண்டு வழக்கும் இவர்மீது போடப்பட்டது. இவர் 1936-இல் சென்னை மாகாண காங்கிரசின் செயலரானார். விருதுநகர் தொகுதி மூலம் 1937-இல் சட்டமன்ற உறுப்பினரானார். பின்னர் 1940-இல் தமிழகக் காங்கிரசின் தலைவரானார். காந்தியடிகளின் தனிப்பட்ட சத்யாக்கிரகத்தில் பங்கேற்று வேலூர்ச்சிறையில் 1941-இல் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தவாறே விருதுநகர் நகர சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பாட்டார். இவர் 1942 மார்ச்சுத் திங்களில் விடுதலையடைந்ததும், 1942 மார்ச்சு 16-ஆம் நாள் நகர்மன்றத் தலைவர் இருக்கையில் அமர்ந்து 91-ஆவது தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, அரசியல் அலுவல்கள் காரணமாகத் தமது பதவியைவிட்டு விலகினார். 1942 முதல் 1946 வரை ஆகசுட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக அமராவதி, வேலூர்ச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டார். அப்போது அவர் ஏறத்தாழ மொத்தம் 9 ஆண்டுகள் சிறைவாசத்தினை முடித்திருந்தார்.

இவர் 1946-மே 16-ஆம் நாள் தமிழகக் காங்கிரசின் தலைவரான பின் சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராவும் ஆனார். மூன்றாம் முறையாக 1948-இல் தமிழகக் காங்கிரசின் தலைவரானார். இவர் 1952-வரை தமிழகக் காங்கிரசின் தலைவராகப் பணியாற்றினார்.

இவர் 1954 ஏப்ரல் 13-ஆம் நாள் சென்னை மாநில முதல்வரானார். குடியாத்தம் தொகுதி இடைத்தேர்தலில் வென்று தமது பதவியைத் தக்க வைத்துக் கொண்டார். ஒன்பது ஆண்டுகள் முதலமைச்சராயிருந்து 1963 ஆக்டோபர் 2-இல் காமராசர் திட்டம் என்ற கட்சியைப் பலப்படுத்தும் திட்டம் மூலம் முதலமைச்சர் பதவியைத் துறந்தார். தமிழகத்தில் அவர் முதலமைச்சராக இருந்தபோது பொருளாதார முன்னேற்றம் விரிவடைந்தது. மாணவர்களுக்கு 11-ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்பட்டது. நடுநிலை தவறான நேர்மையான முடிவுகளால் அரசியல் பணிகளைத் தீர்க்கமாகச் செய்து முடித்தார். ஆரம்பக்கல்வி, மின்சார விநியோகம்

ஆகியவற்றில் தமிழகம் தன்னிறைவு பெற்றது. இலவச மதிய உணவுத்திட்டத்தை 1956-இல் நடைமுறைப் படுத்தினார். வேளாண்மை முன்னேற்றத்திற்கென அரசு பல வசதிகளைச் செய்து தந்தது.

இவர் 1964-இல் அனைத்திந்திய காங்கிரசின் தலைவரானார். 1964-மே 27-இல் நேரு மறைந்தபின் லால்பகதூர் சாத்திரி அவர்களை 1964 சூன் 2-இல் பாரதப் பிரதமராகப் போட்டியின்றித் தேர்வு செய்தார். பின்னர் 1966-இல் லால்பகதூர் மறைந்த போது இந்திராகாந்தி அம்மையாரை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துப் பிரதமராக்கினார்.

இவர் 1966-இல் உருசியா, கிழக்குச் செருமனி, செக்கோசுலோவாக்கியா, அங்கேரி, பல்கேரியா, யுகோசுலாவியா ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து சமதருமக் கோட்பாடுகளின் செயல்திட்டங்களை நேரடியாகக் கண்டு தெளிந்தார். பின்னர் 1967-இல் நடந்த பொதுத் தேர்தலில் தோல்வியுற்றார். மக்களாட்சி அரசில் இத்தோல்வி சாதாரணமென மக்கள் தீர்ப்பினை ஏற்றுக் கொண்டார். பின்னர், 1968,1971 ஆகிய தேர்தல்களில் வென்று நாடாளுமன்ற உறுப்பினரானார். அன்றியும் 1971-இல் இவரது சேவைக்கெனத் 'தாமிரபத்திரவிருது' வழங்கப்பட்டது. இவர் 1975 அக்டோபர் 2-இல் காலமானார்.

காமராசரின் ஆற்றல்மிக்க பணிகள் அருந்தொண்டு ஆகியவற்றுக்காக விருதுநகரிலும், சென்னையிலும் அவர் இல்லங்கள், நினைவு இல்லங்களாக ஆக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள கிண்டியில் அவரது சடலம் எரியூட்டப்பட்ட இடம் காமராசர் நினைவாலயமாக மாற்றப்பட்டுள்ளது. 1976-இல் அவரது நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்டதுடன், 'பாரத ரத்னா' பட்டமும் வழங்கப்பட்டது. அவரது நினைவாக இராமநாதபுர மாவட்டம் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி காமராசர் மாவட்டமாக 1984 சூலை 15 முதல் செயற்பட்டு வருகிறது. மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகமென பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

எளிய வாழ்க்கை, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, கறைபடியாக் கரங்கள், அடக்கப் பண்பு ஆகியவற்றால் தனிப் பெரும் சக்தியாக விளங்கிய காமராசரைக் 'கறுப்புக்காந்தி' என மக்கள் போற்றுகின்றனர்.

மா.கா.

**காமராசர் மாவட்டம்**: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள்

**காமன் பண்டிகை** இந்து சமயத்தவருள் ஒரு பகுதியினரால் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். இவ்விழா இந்தியாவின் பல பகுதிகளிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. காமன், மன்மதன், காமவேள், மாரன், அனங்கன் எனப் பலப் பெயர்களில் கூறப்படுகிறான். உயிர்களுக்குக் காமத்தைத் தோற்றுவித்து, உற்பத்திச் செயல் நிகழ்த்து வதற்குரிய தெய்வமாகக் கருதப்படுகிறான். காமனைப் பற்றிய குறிப்பு பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. தமிழகத்தில் பழங்காலத்தில், காமவேளுக்கெனத் தனிக்கோயில், காமவேள் கோட்டம் என்னும் பெயரில் இருந்ததைச் சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய இலக்கியங்கள் காட்டுகின்றன. அழகுக் கடவுளான காமனுக்கு அழகே வடிவான இரதி மனைவியாவாள்.

நகரங்களிலும், சிற்றூர்களிலும் காமதேவன் வழிபாடு காமன் பண்டிகை என்னும் பெயரில் நடைபெற்று வருகிறது. காமனுக்குத் தனிக்கோயில் அமைந்திருக்கும் இடங்களில் உள்ள விளக்கு மாடம்போன்று அமைப்பினுள் மன்மதன் உருவம் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கும். கோவிலின் முன்பு கொடிமரம் நடப்பட்டிருக்கும். அம்மரத்தின்மீது உயர்த்தப்பட்ட வெள்ளைக் கொடியில் மன்மதன் இரதி ஓவியம் வரையப்பட்டிருக்கும். கொடி ஏற்றிய ஒரு மாதத்திற்குப்பின் காமன் பண்டிகை நிகழும். அந்நாள்களில் கோயிலில் ஒருவேளை பூசை, பொரி கடலை முதலியன படைத்து நடத்தப்படும். தனிக்கோயில் இல்லாத இடங்களில் தெருமுனைகள், தெருச் சந்திகள் ஆகிய இடங்களில் அப்போதைக்கான மேடை அமைத்து, அதில் கரும்பு முதலியவற்றை நட்டு வைக்கோற் பிரியினால் அதன் அடியினைச் சுற்றி வைத்து விழாக்கெண்டாடி விழாவிற்குப்பின் அதனை எரித்து விடுவர். தமிழகத்தில் பங்குனிமாதம் பௌர்ணமி நாளில் விழாவிற்குக் கால்கோள் செய்வர். விழா பொதுவாக ஏழு நாட்கள் நடைபெறுவது உண்டு. ஒரு திங்களும், அதற்கு மேலும் அது தொடர்வது உண்டு. விழாவின் பின்னர் மழைபெய்யும் என்ற நம்பிக்கை இருந்துவருகிறது.

விழாக் காலத்தில் தெருக்கூத்து நடத்தப்படும். மன்மதன் இரதியின் உருவம் வரைந்த ஓவியம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். இரதி மன்மதனாக இருவர் வேடம் புனைந்து ஊர்வலத்தோடு வருவர். கோயிலாக அமைந்த இடங்களில் விழாக் கொண்டாடும்போது வேடம் பூண்டோர் ஓவியத்தின் முன்னர் அழுவதுபோல நிற்பர். இது மன்மதன் இறந்தமைக்காக வருந்தும் குறிப்பினைக் கொண்டதாகும். விழா இறுதியில் தெருச்சந்தி மேடையில் நடப்பட்ட கரும்பு

வடிவில் நிற்கும் மன்மதனைத் தீயிட்டு எரித்துச் சாம்பலை ஆற்றில் கரைத்து நீராடி மீள்வர்.

காமக்கடவுளாகிய காமதேவன், கரும்பை வில்லாகவும், வண்டுகளை நாணாகவும், மலர்களை அம்புகளாகவும், மங்கையரைப் படையாகவும், தென்றலைத் தேராகவும் கொண்டுவிளங்கும் அழகனாவான். இவன் சிவபெருமானால்எரிக்கப்பட்டது பற்றிப் பின்வருமாறு புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

முருகப்பெருமானின் தோற்றத்தின் பொருட்டு யோக நிலையிலிருந்த சிவபெருமான்மீது மலர்க்கணையினை எய்திக் காமத்தைத் தோற்றுவிக்குமாறு தேவர்கள் மன்மதனை வேண்டி ஏவினர். இதனைச் சிவபெருமான் சக்தியோடு மாறுபட்டுத் தனித்து யோகத்திலிருக்க, அவர்தம் மாறுபாட்டினைத் தவிர்ப்பதற்காகத் தேவர்கள் மன்மதனை அனுப்பினார்கள் என்றும் சிலநூல்கள் கூறுகின்றன. மன்மதன் யோகத்தில் இருந்த சிவபெருமான்மீது மலர்க்கணைகளை ஏவ, யோகம் கலைந்த சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணை விழித்துச் சினந்துநோக்க மன்மதன் எரிந்து நீறாயினான். இரதியின் வேண்டுகோளுக்கு இணங்கச் சிவபெருமான் அவளுக்கு மட்டும் மன்மதனின் உருவம் தெரியவும், மற்றவர்களுக்குத் தெரியாதிருக்கவும் வரமளித்தார். மற்றவர் கண்ணிற்குப் புலப்படாமை கொண்டு மன்மதனுக்கு அனங்கன் என்ற பெயரும் உண்டு.

இப்புராணச் செய்தியின் அடிப்படையில் காமன் இறந்தான் என்றும், இறக்கவில்லை என்றும் கூறும் இரு கொள்கைகள் உருவாயின. அதன் அடிப்படையில் வாதமிடுவோர், எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று இருவகைப்பட்டனர். இவ்விருசாராரும் தம் வாதங்களை, 'டேப்பு' முதலிய இசைக்கருவிகளுடன் அவ்வப்போதே இடத்திற்கேற்பப் பாடும் இசைப் புலமையுடன் இசை பாடி வாதிடுவர். வாதிடும் பாங்கில் அமையும் இப் பாடல்கள் இசை வகை சார்ந்த ஒரு இலக்கியமாகவே திகழ்கிறது. வாய்ப் பாடலாக விளங்கிய இந்த இலாவணிப் பாடல்கள் அண்மையில் அச்சு வடிவமும் பெற்றுத் திகழ்கின்றன. இரு கட்சியிலும் வாதிடுவோர் புராணம், இதிகாசம், சமயம், தத்துவம், சாத்திரம் போன்ற புலமைத் துறையில் வல்லவர்களாக இருந்ததோடு இசையோடு தாமே கவிதை இயற்றிப் பாடும் கவிஞர்களாகவும் இருந்துள்ளனர். சிற்சில இடங்களில் தெருவின் ஒரு பகுதியில் குறிப்பாகச் சந்திகளில் மேடை அமைத்து வைத்து அதற்கு முன்பு பெருக்கிக் கோலமிட்டு வைப்பர். பயிறு போன்ற தானியங்களை அவித்துப் படையலாக அமைப்பர். பூசையின் பின்னர்ச் சுற்றுகளை கொளுத்தி எரிப்பர். பிறகு இப்படையற் பொருளை மக்களுக்கு வழங்குவர். இவ்வாறு எளிய முறையில் இப்பண்டிகையைக் கொண்டாடுதலும் உண்டு.

**கடன் வழிபாடு** நல்ல கணவனைப் பெறுவதற்கும் நல்ல இல்லறம் அமைவதற்கும் பெண்களால் மேற்கொள்ளப்படும். கோடை மழை வேண்டியும் கொண்டாடப்பெறும். விழாவில் மன்மதன் இரதியாக இளைஞர்களே வேடம் புனைவர். அவ்வாறு வேடம் புனைந்து கொள்ளும் இளைஞர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும் என்னும் நம்பிக்கையும் நிலவுகிறது. விழாவில் ஈடுபடுவோர் இந்நாளில் விரதம் மேற்கொள்ளும் மரபுண்டு. இப்பொழுது இவ் விழாவைக் கொண்டாடுவதில் நகரத்தைப் போலவே கிராமங்களிலும் ஆர்வம் குறைந்து வருகிறது.

இரா.குரு.

**காமாட்சி**: தென்னிந்தியாவிலும் அசாமிலும் வழிபடும் தெய்வம். குறிப்பாகத் தமிழ் நாட்டில் காமாட்சி வழிபாடு சிறந்து விளங்குகின்றது. அசாமில் காமாட்சியைக் 'காமாக்யா' (Kamakhya) என்று கூறுகின்றனர். காமாட்சி இந்து மதத்தைச் சார்ந்த சைவப் பெண் தெய்வங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறாள். அசாமில் காமாட்சி கோயில் அமைந்துள்ள இடம் காமாக்யாதீர்த்தம் எனப்படுகிறது. இவ்வூர் கௌகாத்தி நகருக்கு வெகு அருகிலமைந்துள்ளது. தமிழகத்தில் காமாட்சி அம்மனின் கோயிலுக்குப் புகழ்பெற்றது காஞ்சிபுரம் ஆகும். காமாட்சி அம்மனின் சக்கரமும், பீடமும் புனிதமானதாகக் கருதப்படுகின்றன. பல ஊர்களில் காமாட்சி அம்மனின் கோயில்கள் உள்ளன. காமாட்சி அம்மனின் கோயில்கள் விசயநகர, நாயக்க அரச மரபினர்களின் காலத்தில் தென்னிந்தியாவில் அதிகமாகக்கட்டப்பட்டன.

சு.இரா.

**காமா, வாசுகோட**: இவர் ஒரு போர்ச்சுக்கீசிய மாலுமி. கி.பி. 15–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 16–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் நன்னம்பிக்கை முனைவழியாகக் கடல் வழியைத்தொடங்கி வைத்த பெருமை இவரைச் சார்ந்ததாகும்.

இவர் தந்தையின் பெயர் எசுடேவோ ட காமா என்பது (Estevao). இவர் பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்தவர். போர்ச்சுக்கல் நாட்டின் தென்மேற்குப் பகுதியிலுள்ள அலென்டேசோ (Alentejo) மாநிலத்தின் கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த சினெசு (Sines) கோட்டையின் தளபதியாக எசுடேவோ பணியாற்றி வந்தார். வாசுகோவின் இளமை பற்றிய தக



காமா, வாசுகோட

வல்கள் கிடைத்தில. இவர் கி.பி. 1492-இல் தமது சேவையை முதன்முதல் போர்ச்சுகல் மன்னரான இரண்டாம் சானுக்கு அளித்தார். அந்த நேரத்தில் போர் ஏதும் நிகழவில்லை என்றாலும், பிரெஞ்சுக் கப்பல்கள் போர்ச்சீசியக் கப்பல்களைத் தாக்கி அவற்றைப் பல இன்னல்களுக்கு உட்படுத்திவந்தன. அவற்றிற்குப் பழி வாங்கும் நோக்குடன் பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்றும் பணியினை மன்னர் வாசுகோவிற்கு அளித்தார். அதன் பொருட்டு இலிசுபனுக்குத் (Lisbon) தெற்கில் அமைந்துள்ள சேடுபல் (Setubal) துறைமுகத்திற்கும் அல்கார்வேக்கும் (Algarve) வாசுகோ சென்றார். கொடுத்த பணியினை விரைவாகவும் செம்மையாகவும் செய்து முடித்தார் வாசுகோட காமா (Vascoda Gama).

அதன்பின்னர்ச்சான் மன்னர் இந்தியாவிற்கு ஒரு போர்ச்சுக்கீசியக் கப்பற்படையை அனுப்பி, அதன் வாயிலாக இந்தியாவிற்கும் ஏனைய ஆசிய நாடுகளுக்குமிடையே ஒரு புதிய கடல் வழியை அமைக்கத் திட்டமிட்டார். அத்திட்டத்தை நிறைவேற்றும் பணியினை எசிடேவோ ட காமாவிற்கு அளித்தார். எசுடேவோ இறந்துவிட்டமையால் இந்தியாவிற்குச் செல்லவிருந்த கப்பற் பயணத்திற்கு வாசுகோவைத் தலைவராக நியமித்தார். பயணம் தொடங்குவதற்கு முன்பே சான் இறந்துவிட்டார். ஆயினும், அவருக்குப் பின்னர்ப்பட்டம் எய்திய மானுவேல் (Manuel) வாசுகோவின் நியமனத்தை உறுதிப்படுத்தினார். ஒரு சிலர் மன்னர் மானுவேல்தான் வாசுகோவைப் பயணத் தலைவராக நியமித்தார் என்று கூறுகின்றனர். மற்றும் சிலர் இந்தப் பொறுப்பு முதலில் வாசுகோவின் மூத்த சகோதரரான பாலோவிற்குத் (Paulo) தான் அளிக்கப்பட்டது என்றும், அவர் உடல்நிலை காரணமாக மறுத்துவிட்டார் என்றும், அதற்குப் பின்னரே வாசுகோவிற்கு அப்பொறுப்பளிக்கப்பட்டதென்றும் கூறுகின்றனர்.

வாசுகோ கி.பி. 1497-ஆம் ஆண்டு சூன் மாதம் 8-ஆம் நாள் இலிசுபனை விட்டு நான்கு கப்பல்களுடன் புறப்பட்டார். அவருடன் கூட மூன்று மொழி பெயர்ப்பாளர்களை அழைத்துச் சென்றார். இருவர் அரபு மொழியைப் பேசுவோர். மூன்றாமவர் பலவகைப் பட்ட பாண்டு (Pantu) மொழிகளைப் பேசத் தெரிந்தவர். போகும் இடங்களில் எல்லாம் தமது கண்டுபிடிப்பையும் மேல் ஆதிக்கத்தையும் உணர்த்தும் வகையில் நடுவதற்காகப் 'பட்ராவோ' (Padrao) என்றழைக்கப்பட்ட கற்றூண்களை எடுத்துச் சென்றார்.

இலிசுபனில் இருந்து புறப்பட்ட வாசுகோ சூலை 15-ஆம் நாள் வடமேற்கு ஆப்பிரிக்காக் கரையில் உள்ள கானரித்(Canary)தீவுகளைச் சென்றடைந்தார்; சூலை 26-ஆம் நாள் வெர்தே (Verde) முனைத் தீவுகளில் ஒன்றான சவோ தியாகோ (Sao Tiago)வை அவருடைய கப்பற் கூட்டம் சென்றடைந்தது. அதுவரை பார்த்தலோமியூ தயசு (Bartholomew Dias) நடத்தி வந்த ஒரு கப்பலும் காமாவுடன் சென்றது. அச்சமயம் மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள சாவோ சோர்சு ட மைனா (Sao Jorge Da Mina) கோட்டைக்குத்தயசு பயணம் மேற்கொண்டிருந்தார். சவோதியாகோவில் காமா ஆகசுட்டு, 3-ஆம் நாள் வரை தங்கியிருந்தார். அங்கிருந்து நன்னம்பிக்கை முனை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார். கினிவளைகுடாவின் நீர் ஓட்டங்களைத் தவிர்க்கும் நோக்கத்துடன் கடற்கரை ஓரமாகச் செல்வதற்குப் பதிலாக தென் அட்லாண்டிக் கடல் வழியாக நன்னம்பிக்கை முனைக்குச் சுற்றுவழியாகச் சென்றார். நவம்பர் 7-ஆம் நாள் தென் ஆப்பிரிக்காவில் உள்ள சாண்டா எலினா விரிகுடாவை (Santa Helena Bay) அடைந்தார். நவம்பர் 16-ஆம் நாள் மீண்டும் பயணத்தைத் தொடங்கினார். காற்று சாதமாக இல்லாமையால் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச் செல்வதில் தாமதம் ஏற்பட்டது. நவம்பர் 22-ஆம் நாள் நன்னம்பிக்கை முனையைக் கடந்து சென்றார். மூன்று நாள் பயணத்திற்குப் பின்னர், இவர் மோசெல் விரிகுடாவை (Mossel Bay) அடைந்தார். அங்குள்ள ஒரு தீவில் இவர் கொண்டு சென்ற நினைவுக் கல ஒன்றை நாட்டினார். அங்கு சாமான்கள் கொண்டு செல்லப்

பட்ட கப்பலை உடைத்துவிட்டார். திசம்பர்த்திங்கள் 8-ஆம் நாள் மீண்டும் பயணம் தொடங்கியது. நேட்டால் (Netal) கடற்கரையை 25-ஆம் நாள் அடைந்தார். கி.பி. 1498-ஆம் ஆண்டு சனவரி மாதம் 11-ஆம் நாள் நேட்டாலுக்கும் (Netal) மொசாம்பிக் குக்கும் (Mosambique) இடையே ஒரு சிறிய ஆற்றின் புகுமுகத்தை அடைந்து அங்கு ஐந்து நாள்கள் தங்கினார். அந்த ஆற்றிற்கு இரியோ தோ காப்ரே (Riodo Cobre) என்ற பெயரை அவர்கள் சூட்டினார் கள். சனவரி மாதம் 25-ஆம் நாள் மொசாம்பிக்கில் உள்ள குவலிமேன் (Quelimane) ஆற்றை அடைந்தனர். அவ்வாற்றிற்கு இரியோடோசு பான்சு சினெய்சு (Rio Dos Bons Sinais) என்று பெயரிட்டனர். நற்சகுன (River Good of Omens) ஆறு என்பது அதற்குப் பொருள். அங்கும் ஒரு கற்றூணை நட்டார்கள். அங்கு வந்து சேருவதற்குள் பலர் நோய்க்கு இலக்கானார் கள். எனவே, ஒரு மாத காலம் அங்கே தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ள நேர்ந்தது. கப்பல்களும் பழுது பார்க்கப்பட்டன.

இவர் மீண்டும் பயணத்தைத் தொடங்கி மார்ச்சு மாதம் இரண்டாம் நாள் மொசாம்பிக் தீவை அடைந் தார். அங்கு வசித்து வந்தவர்கள் போர்ச்சுக்கீசியரை இசுலாமியர் என்று தவறாக எண்ணிவிட்டனர். அதன் காரணமாகத்தான் மொசாம்பிக்கின் சுல்தான் காமாவிற்கு இரண்டு வழிகாட்டிகளைக் கொடுத்து உதவினார். போர்ச்சுக்கீசியர் கிறித்தவர்கள் என்று அறிந்து கொண்டபோது அவர்களுள் ஒருவர் காமா வின் கூட்டத்திலிருந்து விலகிவிட்டார். மொசாம் பிக்கில் இருந்தபோது அத்தீவு மக்கள் அரபு வணிகர்களுடன் வியாபாரத் தொடர்பு கொண் டிருப்பதையும், தங்கம், வெள்ளி, அணிகலன்கள் மற்றும் வாசனைப் பொருள்கள் அடங்கிய நான்கு கப்பல்கள் மொசாம்பிக்குத் துறைமுகத்தில் இருப்பதை யும் அறிந்தார். அது மட்டுமன்றி, அத்தீவின் உட் பகுதியில் பிரெசுடர்சான் (Prester John) என்ற கிறித்தவ ஆட்சியாளர் வசித்து வருவதையும் அறிந்து கொண்டார்.

பின்னர், கெனியாவில் உள்ள மொம்பாசாவை ஏப்ரல் மாதம் 7-ஆம் நாள் காமா சென்றடைந்தார். 14-ஆம் நாள் மாலிண்டி (Malindi) யை அடைந்தார். இந்தியாவின் தென்மேற்குக் கரையிலுள்ள கோழிக் கோடு என்றழைக்கப்படும் கள்ளிக்கோட்டைக்கு(Calicut) வழியறிந்த ஒருவரை தமது கப்பலில் ஏற்றிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார்; 23 நாட்கள் இந்தியக் கடலில் பயணம் செய்த பின்னர், மேற்கு மலைத் தொடர்ச்சியிலுள்ள மலைகள் இவருக்குத் தென்பட்டன. மே மாதம் 20-ஆம் நாள் கள்ளிக் கோட்டையை அடைந்தார். தாம் இந்தியாவை அடைந்துவிட்டதை அறிவிக்கும் வகையில் அங்கும் ஒரு கற்றூணை நட்டார். அச்சமயத்தில் கள்ளிக் கோட்டையை ஓர் இந்து அரசர் ஆண்டுவந்தார். அவரைச்சாமோரின் (Zamorin) என்றழைத்து வந்த னர். அவர் காமாவிற்கு நல்லமுறையில் வரவேற்பு அளித்தார். ஆயினும், அவருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இயலவில்லை. அதற்கு இரு காரணங் கள் உண்டு. முதலாவதாக, இசுலாமிய வியாபாரிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இரண்டாவதாகப் பயனுள்ள பரிசுகளையும், விலையுயர்ந்த வாணிபப் பொருட்களையும் இவர் உடன் எடுத்துச் செல்ல வில்லை. மேலும், இவர் கொண்டு சென்ற பொருள் கள் இந்திய மக்களுக்குத் தேவைப்படவில்லை.

சிறிது காலத்திற்குள் சாமோரினுக்கும் காமாவிற் கும் இடையே கசப்புணர்ச்சி வளர்ந்தது. எனவே, காமா கள்ளிக்கோட்டையை விட்டு நீங்கினார். போகும்போது தம்முடன் ஐந்தாறு இந்துக்களை அழைத்துச் சென்றார். இந்துக்களின் பழக்க வழக்கங் களைத்தம் மன்னர் நேரடியாக அறிந்து கொள்ளவே அவர்களை அழைத்துச் சென்றார். கள்ளிக் கோட்டையைவிட்டு நீங்கிய காமா வடக்கு நோக்கிப் பயணம் செய்து கோவாவிற்கு அருகிலுள்ள அஞ்சி தீவிற்குச்(Anjidiv) சென்றார். அங்கிருந்து மாலிண்டிக் குப் புறப்பட்டார். கி.பி. 1499-ஆம் ஆண்டு சனவரி மாதம் 8-ஆம் நாள் அதை அடைந்தார். சாதகமாகக் காற்று வீசாமையால் அரபிக் கடலைக் கடக்க அவருக்கு ஏறத்தாழ மூன்று மாதங்கள் பிடித்தன. நோயினால் பீடிக்கப்பட்ட இவர்தம் கப்பலாட்களுள் பலர் உயிர்நீத்தனர். ஆள்களின் எண்ணிக்கை குறைந்துவிடவே 'சவாரபேல்' கப்பலைக் கொளுத்தி விடுமாறு கட்டளையிட்டார். மாலிண்டியில் ஒரு கற் றூணை நட்டார். அங்கிருந்து புறப்பட்டு மொசாம் பிக்கை பிப்ரவரி மாதம் முதல் தேதி அடைந்தார். தமது கடைசிக்கற்றூணை அங்கு நட்டு விட்டுப்பயணத் தைத் தொடர்ந்தார். மார்ச்சுத்திங்கள் 20-ஆம் நாள் கப்பல்கள் நன்னம்பிக்கை முனையை ஒன்றாகச் சேர்ந்து கடந்து சென்றன. ஒரு மாதத்திற்குப் பிறகு புயல் ஒன்று அக்கப்பல்களைத் தாக்கியபோது, அவை தனித்தனியாகப் பிரிந்து பயணம் செய்யலாயின. சூலை 10-ஆம் நாள் 'பெர்ரியோ' என்ற கப்பல் போர்ச்சுக்கலில் உள்ள தாகசு(Tagus) ஆற்றை அடைந் தது. காமாவை ஏற்றிச் சென்ற சவோகாப்ரியல் தெர்சீரா தீவைச் சென்றடைந்தது. அங்கிருந்து புறப் பட்டுச் சென்று இலிசுபனை செப்டம்பர் 9-ஆம் நாள் அடைந்தார். வெற்றியுடன் நாடு திரும்பிய வாசு கோவிற்கு 'தோம்' (Dom) பட்டம் வழங்கப்பட்டது.

நிலமும், கணிசமான ஓய்வு ஊதியமும் அளிக்கப்பட்டது.

வாசுகோ 1502-ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாக இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டார். அது சமயம் இவர் கடற்படைத் தலைவராக நியமிக்கப்பட்டார். இவருடைய தலைமையின்கீழ் 10 கப்பல்கள் செயற்பட்டன. ஒவ்வொரு கப்பலுக்கும் உதவியாக ஐந்து கப்பல் கொண்ட இரண்டு சிறு கப்பற் கூட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இப்பயணத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று, இந்தியக் கடலில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாகும். மற்றொன்று, வாசுகோவின் முதல் பயணத்தைத் தொடர்ந்து காப்ராலின் (Cabral) கீழ் இந்தியாவிற்குச் சென்று அங்கேயே தங்கிவிட்ட போர்ச்சுக்கீசியரை இசுலாமியரின் தூண்டுதலால் இந்துக்கள் கொன்று குவித்ததற்காக அவர்களைப் பழிவாங்குவதாகும். பயணம் கி.பி. 1502-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கியது. வாசுகோடகாமாவின் படை 'வெர்டே' முனையைக் கடந்து, சூன் மாதம் 14-ஆம் நாள் கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள சோபாலா (Sofala) துறைமுகத்தை அடைந்தது; பின்னர், மொசாம்பிக்குசென்றது;அங்கிருந்து தான்சானியாவில் (Tanzania) உள்ள கில்வாவிற்குச் (Kilwa) சென்றது. அதன் அமீர்இப்ராகீம் போர்ச்சுக்கீசியருக்கு அடிபணியுமாறும், மானுவேல் மன்னருக்கு அடங்கி இருப்பதாக உறுதிமொழி எடுக்கும்படியும் வாசுகோ வற்புறுத்தினார். இல்லையெனில், கில்வாவை எரித்துவிடுவதாகப் பயமுறுத்தினார். காப்ராலை முன்பு இப்ராகீம் பயமுறுத்தியதன் விளைவாகத்தான் வாசுகோ இத்தகைய முடிவை மேற்கொண்டார். இப்ராகீம் வாசுகோவின் நிபந்தனைகளை ஏற்றார். பயணத்தை மேலும் தொடர்ந்து, வாசுகோ அரேபியாவின் தெற்குக் கடற்கரையை அடைந்தார். அங்கிருந்து கோவாவைச் சென்றடைந்தார். பின்னர்க் கண்ணனூருக்குச் சென்றார். இவர் அராபியக் கப்பல்களின் வருகைக்காகக் கண்ணனூரில் காத்திருந்தார். பல நாட்கள் கழித்து ஒரு அரபுக் கப்பல் சரக்குகளுடனும் 200 க்கும் மேற்பட்ட பயணிகளுடனும் வந்தது. அக்கப்பலிலிருந்து சரக்குகளைக் கைப்பற்றிய பிறகு, அக்கப்பலை அதன் பயணிகளுடன் கொளுத்திவிட்டார். பயணிகள் அனைவரும் மாண்டனர். வாசுகோவின் வாழ்க்கையில் இவர் இழைத்த கொடூரச் செயல்களுள் இந்த நடவடிக்கை மிக மிக மோசமானதாகும்.

பின்னர், கள்ளிக்கோட்டை சாமோரினுடைய பரம எதிரியான கண்ணனூர் அரசருடன் வாசுகோ உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார். அதையடுத்து இவர் கள்ளிக்கோட்டைக்குச் சென்றார். இவர் வருகையை அறிந்த சாமோரின் இவருடன் நட்பு நாடினார். ஆனால், வாசுகோ அதை நிராகரித்தார். இசுலாமியரைத் தம் நாட்டிலிருந்து உடனே வெளியேற்ற வேண்டும் என்றும், தவறினால் போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும், சாமோரினுக்குச் செய்தி அனுப்பினார். அது வெறும் மிரட்டல் அன்று என்பதை மெய்ப்பிக்க, துறைமுகத்தை வெடிகுண்டு கொண்டு தாக்கினார். தங்களுடைய பொருள்களைப்போர்ச்சுக்கீசியருக்கு விற்க, காமாவின் கப்பல்களுக்கு வந்த 38 இந்து மீனவர்களைக் கொன்று, அவர்களுடைய உடல்களைக் கரையில் ஒதுங்குமாறு தூக்கியெறியும்படி வாசுகோ ஆணையிட்டார். பின்னர், காமா கொச்சித் துறைமுகத்திற்குச் சென்றார். கொச்சி அரசர் சாமோரினின் பகைவர். எனவே, அவருடனும் வாசுகோ உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டார். அதன்பின்னர், மீண்டும் சாமோரின் தம்முடன் நட்புக் கொள்ளுமாறு காமாவிற்கு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பு காமாவைப் பிடிப்பதற்காக என்பது தெளிவாயிற்று. ஆகவே, பகைமை தொடர்ந்து நீடித்தது. அரபுக் கப்பல்களுடன் வாசுகோ கள்ளிக்கோட்டைக்கு அருகே போரிட்டார். போரில் அராபியர் தோற்றனர். கி.பி. 1503-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ஆம் நாள் வாசுகோ கண்ணனூரில் இருந்து மொசாம்பிக்குக்குப் புறப்பட்டார். அந்த ஆண்டு அக்டோபர் மாதம் 11-ஆம் நாள் தாயகம் திரும்பினார். அப்போது இவருக்கு எந்த வகையான வரவேற்பு அளிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. தமக்குப்போதிய பரிசுகள் வழங்கப்படவில்லை என்று காமா வருத்தமுற்றதாகத் தெரிகிறது. சினெசு நகரத்தை அவருக்கு அளிப்பதாக வாக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், சவாதியாகோவின் சமய நிறுவனத்தார், அந்நகரத்தைத் தமக்குக் சொந்தமென உரிமை கொண்டாடினார். இறுதியில் காமா விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. அதன் பிறகு இவர் இவோரா (Evora) நகரத்திற்குச் சென்று விட்டார். இவரை அமைதிப்படுத்துவதற்காக அரசு இவருக்குக் கூடுதல் உரிமைகளையும் பணத்தையும் கொடுத்தது. இந்திய விவகாரங்களைப் பொறுத்த அளவில் கி.பி. 1505-ஆம் ஆண்டு வரை மன்னருக்கு இவர் முக்கிய ஆலோசகராக இருந்து வந்தார். இவர் கி.பி. 1519-ஆம் ஆண்டில் விடிகூராவின் பிரபுவாக (Caterina de Ataide) நியமிக்கப்பட்டார் மூன்றாம் சான் இவரை கி.பி. 1524-ஆம் ஆண்டில் இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அரசப் பேராளராக நியமித்தார்.

மூன்றாம் முறையாக இவர் கி.பி. 1524-ஆம் ஆண்டில்இந்தியாவிற்குப் புறப்பட்டார்;செப்டம்பர் மாதம்

கோவாவை அடைந்தார். விரைவில் ஆட்சி முறையில் ஊடுருவியிருந்த குறைபாடுகளைக் களையத் தீவிர முயற்சி மேற்கொண்டார். அதனால், இவர் நோய் வாய்ப்பட்டார். இவர் கி.பி. 1524–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 24–ஆம் நாள் கொச்சியில் உயிர்நீத்தார்.

இவருக்கு ஆறு மக்கள் இருந்தனர். வாசுகோட காமாவின் புகழுக்குக் காரணமாக இருப்பது இவருடைய முதல் இந்திய கப்பற் பயணமாகும். அதன் விளைவாகக் கீழை நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் இடையே நேரடியான கடல்வழி ஏற்படுத்தப்பட்டது. மேலும், ஐரோப்பிய நாடுகள், கிழக்கு நாடுகளில் தம் பேரரசுகளை நிறுவி, உலக வரலாற்றிலே சிறப்பிடம் பெற்றன. தி.ஆர்.இரா

**காமிகாகமம்**: சைவ சமயக் கொள்கைகளுக்கு அடிப்படையாக உள்ள மூலாகமங்கள் 28 ஆகும். அவற்றுள் சைவம் என்ற பெயரில் 10 ஆகமங்களும் இரெளத்திரம் என்ற பெயரில் 18 ஆகமங்களும் உள்ளன. அவையனைத்தும் சிவபெருமானால் மற்றவர்கட்குக் கூறப்பட்டவை என்று கருதப்படுகின்றன.

சைவாகமங்களில் முதல் ஆகமம் காமிகம். இந்த ஆகமம் பூருவம் உத்தரம் என்ற இரண்டு பகுதிகளாக உள்ளது. பூருவபாகத்தில் 75 படலங்கள் உள்ளன. தந்திரம் என்றபெயராலும் குறிக்கப்படும் இந்நூலில், மற்ற மூலாகமங்களின் பெயர், ஒவ்வொன்றிலும் உள்ள செய்யுள்களின் எண்ணிக்கை கூறப்பட்டுள்ளன. இதில் மந்திரங்களின் தத்துவம், அவற்றின் வகைகள் ஆகியன காணப்படுகின்றன.

ஆகமம் முக்கியமாகக் கோயில்கள் கட்டுவது, இலிங்கம், சிலை, பிரதிமை ஆகியவற்றைச் செய்வது மந்திரங்களைக் கொண்டு அவற்றைத் தக்க இடத்தில் பிரதிட்டை செய்வது முதலியவற்றைப் பற்றிய விவரங்களைத் தருகின்றது. இவை காமிகாகமப் பூருவபாகத்தில் 10–வது முதல் 75–வது வரை உள்ள படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. கிராமங்களை அமைத்து அங்குத் தக்க இடத்தில் பூமியைத் தேர்ந்து கோயிலைக் கட்ட வேண்டும். நிலம், கல், மரம், உலோகம், மண்டபம், கோபுரம் முதலியவற்றை அளவிட்டுச் செய்ய வேண்டி இருப்பதால்,அளவைகளைப் பற்றிப் 16–ஆம் படலத்தில் விவரங்கள் கூறப்பட்டு உள்ளன. மேலும் இங்கு,24–ஆம் படலத்தில் 12 விதமான கிராமங்களின் பெயர்களும், அவற்றின் இலக்கணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. கிராமத்தில் வீதிகளின் அமைப்பு, சிவபிரானைத் தவிர, பிற தெய்வங்களைப் பிரதிட்டை செய்ய வேண்டிய இடங்கள் முதலியவை நன்கு விளக்கப்பட்டுள்ளன. கோயிலில் கருவறை கட்டுவதற்கு முன்பே, பாலாலயம் என்ற பெயரில் சிறிய அளவில் ஒரு கோயிலைக் கட்டி, அதில் பாலலிங்கத்தைப் பிரதிட்டை செய்ய வேண்டும். மக்கள் வசிப்பதற்கு, வெவ்வேறு வித இடங்களை அமைக்க வேண்டிய செய்தி 35–ஆம் படலத்தில் கூறப்பட்டுள்ளது. மாளிகை அமைப்பு வகை அதன் இலக்கணங்கள் ஆகியன 48–ஆம் படலத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. திருக் கோயில்களில் அமைக்கப்படும் அதிட்டானம், உபபீடம், பிரதிபந்தம், பலம் முதலியவை 52-முதல் 58 வரையில் உள்ள படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. பரம்மக்ராந்தா முதலிய 9 பெயர்களால் விளங்கும் பாதங்களும், தூபிகை, கீலகம் போன்றவைகளும் விளக்கப்பட்டுள்ளன. 60--ஆம் படலத்தில் 1 முதல் 16 வரையிலான தளங்கள் கொண்ட கோயில்களின் சொரூபம் வருணிக்கப்பட்டுள்ளது. 62–ஆம் படலத்தில் இலிங்கத்தின் இலக்கணம் அதனுடைய அளவு, அதன் வகைகள் ஆகியன வருணிக்கப்பட்டுள்ளன. இலிங்கத்தின் பிரதிட்டை, பிரதிமைகளின் அளவுகள், அவற்றைப் பிரதிட்டை செய்யும் வகை போன்ற செய்திகள் 64, 65–ஆம் படலங்களில் காணப்படுகின்றன. மண்டபங்களின் வகைகள், திருச்சுற்று அமைக்கும் முறைகள், பரிவார தேவதைகளைப் பிரதிட்டை செய்யும் முறைகள் முதலியன 70–72–ஆம் படலங்களில் கூறப்பட்டுள்ளன. இறுதிப் படலத்தில் கோபுரத்தைக் கட்டுவது, அதன் நிலைகள், போன்றன காணப்படுகின்றன.

உத்தர காமிகாகமத்தில் 94 படலங்கள் உள்ளன. அருச்சனை செய்யும் முறை, நீராட்டும் முறை முதலியன முதல் நான்கு படலங்களில் வருணிக்கப்பட்டுள்ளன. கொடியேற்றுவது முதல் தேரில் உலா வருதல், நீரில் தீர்த்தமாடுதல், கொடியை இறக்குவது வரையிலான திருவிழா பற்றிய விவரங்கள் 6–ஆம் படலத்தில் 466 செய்யுட்களில் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதத்திலும் செய்ய வேண்டிய உற்சவங்களை 8 முதல் 10 வரையிலுள்ள படலங்கள் வருணிக்கின்றன. தக்க குருவிடமிருந்து தீக்கை பெற்றவர்தாம் பூசை செய்யவேண்டும் என்பதையும், தீக்கை பலவிதப்படும் என்பதையும் 20 முதல் 25–வது வரை உள்ள படலங்கள் கூறுகின்றன. ஈமக்கிரியைகளைச் செய்யும் விதங்கள் 27–ஆம் படலத்தில் விளக்கப்பட்டுள்ளன. பூசை செய்யும் போதும், ஏனைய செயல்களில் ஈடுபடும் போதும் பல தவறுகள் நேரிடலாம். அவற்றால் உண்டாகும் கெடுதல்களைப் போக்கச் செய்யும் கழுவாய் பற்றிய செய்திகள் 30–ஆம் படலத்தில் 904 செய்யுட்களில் விளக்கப்பெற்றுள்ளன. பீடங்களைப் பிரதிட்டை செய்தல், பாணலிங்கம், காமியலிங்கம், ஆர்சலிங்கம், பௌருசலிங்கம், சார்வ தேசிக

இலிங்கம், அங்கலிங்கம், ஆகியவற்றைப் பிர திட்டை செய்யும் முறைகள் 35 முதல் 42 வரை யிலுள்ள படலங்களில் கூறப்பட்டுள்ளன. சதாசிவன், தேவி, விநாயகர், நிருத்தமூர்த்தி போன்ற பதினெட்டு மூர்த்திகள், அடியார்களின் பிரதிமைகள் ஆகியன 43 முதல் 66 வரை உள்ள படலங்களில் விவரிக்கப்பட் டுள்ளன. துர்க்கை பூசை 67-வது படலத்தில் விவரிக் கப்பட்டுள்ளது. இறுதிப் படலங்களில் சிலதானங் களைப் பற்றிய விளக்கம் கிடைக்கின்றது.

ஆகம நூலில் வித்தியா, யோக, கிரியை, சரியை என்ற பெயருடன் நான்கு பாதங்கள் உண்டு. சில மூலாகம நூல்களில்தான் இந்த நான்கும் காணப்படு கின்றன. காமிகாகமத்தின் பூர்வபாகம் கிரியையைப் பற்றியும் உத்தர பாகம் சர்வமாயை பற்றியும் விளக் கங்களைக் கொண்டுள்ளன. வித்யாபாதமும் கிடைக் கின்றது. ஆனால் அது அச்சிடப்படவில்லை. இந்தப் பாதத்தில் 17 படலங்கள் உள்ளன. வி.வ.

**காமியோ, மானுவேல்** மெக்சிகோ நாட்டைச் சார்ந்த மானிடவியல், தொல்லியல் அறிஞர். அந் நாட்டு மானிடவியல் தந்தை எனவும் இவர் கூறப்படு கிறார். அமெரிக்க இந்தியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இவர் பாடுபட்டார். மெக்சிகோ நகரில் கி.பி. 1883-ஆம் ஆண்டு பிறந்த காமியோ மானுவேல் (Gamio, Manuel) தனது கல் லூரிப் படிப்பை சான் இல்டிபான்சோவிலுள்ள (San Ildefonso) தேசிய ஆயத்தப் பள்ளியில் முடித்தார். இவர் மெக்சிகோவில், தியோடுதுகன் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை, சுற்றுப்புறச்சூழல், ஆகியவற்றை 1918 முதல் 1921 முடிய ஆய்வு



காமியோ, மானுவேல்

செய்து, தொன்மைப் பழங்குடிமக்கள், சுற்றுப்புறச் சூழல், தட்பவெப்ப நிலை, நிலவியல் கூறுபாடு களுக்கு ஏற்பத் தங்கள் சமூக அமைப்பை மாற்றி அமைத்துக் கொண்டனர் எனபதைக் கண்டறிந்தார். இவரது ஆய்வு பல்வேறுபட்ட சமுதாயத்தை ஒரே முழு அமைப்பாக வகுத்தமைக்கும் நிலையில் இருந் தது. இவர் தியோடுதுகன் சமவெளியின் மக்கள் தொகை (The population of the valley of Teotihuacan) என்ற நூலை எழுதியுள்ளார். சு.இரா.

**காயத்திரி மந்திரம்:** தெய்வங்களை மனத் தால் நினைத்து வாக்கினால் உச்சரித்து வழிபடுவதற் குப் பயன்படும் மறை மொழி மந்திரம் எனப்படும். அந்த 'மந்திரம்' பலவகைப்படும். பரம்பொருளின் அமிசங்களாகிய ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு மந் திரம் உள்ளது. மந்திரத்தின் பொருள் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், அதனை, ஒலி முறைக்கேற்ப உயர்த்தியும்,தாழ்த்தியும் வரைமுறை தவறாது உச்ச ரிப்பது இன்றியமையாததாகும். அந்த வரைமுறை யைத்தமிழில் 'சீர்' என்று கூறுவர். அப்படி உச்சரிக்குங் கால், அது உச்சரிக்கின்றவர்களைப் பக்குவப்படுத்து கூறது.அந்த வல்லமையைத்தான் 'மந்திர சக்தி' என்று கூறுகின்றனர். வடமொழியில் பலவகைப்பட்ட 'சீர்' களில் (Metre) காயத்திரி என்பது ஒரு சீரினைக் குறிக் கிறது.இந்தக் காயத்திரி சீரில், ஒவ்வொரு தெய்வத்திற் கும்,ஒவ்வொரு மந்திரம் அமைந்திருக்கிறது. எடுத்துக் காட்டாக, கணேச காயத்திரி, விட்டுணு காயத்திரி, உருத்திர காயத்திரி எனப் பலவகைக் காயத்திரிமந்தி ரங்கள் அமைந்துள்ளன. ஆனால், எல்லாவற்றிற்கும் பொதுவாக இருப்பது 'பிரம்ம காயத்திரி' ஆகும். அதைச் 'சூரிய காயத்திரி' என்றும் சொல்லுவர். ஆகவே, பொதுவாகக் 'காயத்திரி மந்திரம்' என்றால், அது பிரம்ம அல்லது சூரிய காயத்திரியைத் தான் குறிக்கும்.

காயத்திரி என்பதற்குக் 'காயந்தம் திராயதே இதி காயத்திரி' என்று வடமொழியில் சொல் இலக் கணம் சொல்லுவர். அதன்படி, 'காயத்திரி' என்ற சொல்லை, 'காய+த்ரி' என்று பிரிக்கலாம். 'காய' என்றால் கானத்திற்குரியது. எந்த ஒரு மேலான கருத் தையும் உரைநடையில் உரைப்பதை விட, இசை வடி வமாக வழங்குவது சாலச் சிறந்தது. ஏனெனில், கானத்திற்கு மனிதனை மேம்படுத்தும் திறமை உண்டு. 'திரி' என்பது 'திராயதே' என்று விரிவுபட்டு, பயத்தினின்று காப்பாற்றுகின்றது என்று பொருள் படுகிறது. ஆகவே, இசை வடிவத்தில் உச்சரிப்பவ ரைப் பிறப்பு-இறப்பு ஆகிய பயத்தினின்று, அதாவது

பிறவிப் பெருங்கடலிலிருந்து காப்பாற்றுவது 'காயத்திரி மந்திரம்' ஆகும்.

சீவாத்மாவைப் பண்படுத்திப் பரமாத்மாவுடன். இணைக்க வழிகாட்டுவதுதான் வேதத்தின் குறிக்கோள். அந்தக் குறிக்கோளைக் காயத்திரி மந்திரம் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதால், இது வேதத்தின் சாரம் என்று கூறத்தக்க சிறப்புடையதாகும். 'யார் நம்முடைய அறிவைத்தூண்டுகிறாரோ, அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக' என்பது சூரிய காயத்திரி மந்திரத்தின் தின் கருத்தாகும். இந்தக் காயத்திரி மந்திரத்தின் தனிச்சிறப்பு, இது பன்மையில் 'நம்முடைய அறிவை .. என்று தொடங்கிப் பன்மையில், 'தியானிப்போமாக' என்று முடிவதாகும். 'மனிதனே, நீ தனியே உனக்காக வாழ்பவன் அல்லன், உலகு அனைத்திற்குமே உன்னை உரியவனாக்குக' என்னும் கோட்பாட்டை வலியுறுத்தவே, இந்த மந்திரம் பன்மையில் அமைந்துள்ளதாக அறிஞர் கருத்துரைப்பர். இது பன்மையில் அமைந்திருப்பது, இந்த மந்திரம் எல்லா மக்களுக்கும், எவ்வித வேறுபாடுமின்றிப் பொதுவாக அமைந்தது என்பதைக் குறிப்பதற்காகவேயாகும். இதனைக் காலை, மாலை, நண்பகல் ஆகிய மூன்று நேரங்களிலும் முறையே 108, 32, 64 முறை ஓதுவது சிறந்ததாகும். இந்த மந்திரம், மனித மனத்தைப் பண்படுத்தி, எல்லாவித நன்மைகளையும் அளித்து அவன் தன்னைத்தானே மேம்படுத்திக் கொள்ள உதவுகிறது.

எஸ்.ஒ.இ.

**காயம்** ஒருவருக்கு உடல்வலி, நோய் அல்லது பலவீனம் விளைவித்தல் காயம் (Hurt) எனப்படும். அது இரு வகைப்படும். அவை, 1) சாதாரண காயம் (Simple hurt) 2) கொடுங் காயம் (Grevious Hurt) என்பன.

**சாதாரண காயம்**: இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 320-இல் விளக்கியுரைக்கப்பட்ட காயங்களைத் தவிர மற்றப்படி உள்ள காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்களாகும்.

**கொடுங்காயம்**: இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 320-இன்படி. 1) ஆண்மையை இழக்கச் செய்தல், 2) கண்கள் இரண்டில் ஒன்றின் பார்வையை நிலையாக இழக்கச் செய்தல், 3) காதுகள் இரண்டில் ஒன்றைச் செவிடுபடுத்தல், 4) உடலுறுப்பு அல்லது மூட்டு எதனையும் சிதைத்தல், 5) உறுப்பு அல்லது மூட்டு எதனின் வலிமையையும் அழித்தல் அல்லது நிலையாகப் பாழ்படுத்தல், 6) தலை அல்லது முகத்தை நிலையாக அலங்கோலப்படுத்துதல், 7) எலும்பு அல்லது பல் எதையும் முறித்தல் அல்லது நிலைபெயரச் செய்தல், 8) உயிருக்கு ஆபத்து விளைவிக்கிற அல்லது வேதனைப்படுபவரை இருபது நாள்கள் கொண்ட காலம் வரை கடுமையான உடல்வலியுடன் அல்லது அவரது வழக்கமான அலுவல்களைச் செய்ய முடியாதபடி செய்தல்ஆகிய காயம் எதுவும் கொடுங் காயம் எனப்படும்.

**தண்டனைகள்**: எவருக்கேனும் செய்கை எதன் மூலமேனும் காயம் விளைவிக்கும் உட்கருத்துடன் அல்லது அதனால் தாம் எவருக்கேனும் அநேகமாகக் காயம் விளைவிக்கக்கூடும் என்று அறிந்து, அச் செய்கையைச் செய்து, அதன் மூலம் தம்மிச்சையாகக் காயம் விளைவித்தலுக்கு, ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்பு அல்லது ஆயிரம் உருபாய் வரை ஒறுப்புக் கட்டணம் அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும். தம்மிச்சையாகக் கொடுங்காயம் விளைவித்தலுக்கு ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்பு தண்டனையாகும். மேலும் ஒருவரை ஒறுப்புக் கட்டணத்திற்கு (Fine) உள்ளாக்கவும் செய்யலாம்.

சுடுவதற்கு, குத்துவதற்கு, வெட்டுவதற்குப் பயன்படும் கருவி எதன் மூலமேனும்; எந்தக் கருவியைத் தாக்கும் கருவியாகப் பயன்படுத்தினால் அநேகமாக மரணம் விளைவிக்கக்கூடுமோ அத்தகைய கருவி மூலமேனும்; நஞ்சு அல்லது அரிக்கும் தன்மையுள்ள பொருள், வெடிக்கும்பொருள், மூச்சிழுத்தால்,விழுங்கினால் அல்லது இரத்தத்தில் ஏற்றால் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கிற பொருள் எதன் மூலமேனும்; விலங்கு எதன் மூலமேனும் தம்மிச்சையாகக் காயம் விளைவித்தலுக்கு, மூன்றாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்பு அல்லது ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும். இதே செய்கையின் அடிப்படையில் கொடுங்காயம் விளைவித்தலுக்கு, ஆயுட்சிறை அல்லது பத்தாண்டுவரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்புத் தண்டனையாகும். மற்றும் ஒருவரை ஒறுப்புத்தொகைக்கு உள்ளாக்கவும் செய்யலாம்.

சொத்தை அச்சுறுததிப் பறித்தல், சட்ட முரணான செயலைச் செய்யும்படி கட்டாயப்படுத்துதல் போன்றவற்றிற்காகத் தம்மிச்சையாகக் காயம் விளைவித்தலுக்குப் பத்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்புத் தண்டனையாகும். மற்றும் ஒருவரை ஒறுப்புத்தொகை விதித்துத் தண்டிக்கவும் செய்யலாம். இதே செய்கையின் அடிப்படையில் கொடுங்காயம் விளைவித்தலுக்கு,

ஆயுள்சிறை அல்லது பததாண்டுகள் சிறைவைப்பு தண்டனையாகும்; மேலும் ஒருவரை ஒறுப்புத் தொகை செலுத்துமாறும் செய்யலாம்.

ஒரு குற்றத்தைச் செய்யும் உட்கருத்துடன் நஞ்சு, போதைப் பொருள் மற்றும் உடல்நலனை அழிக்கும் பொருள் எதன் மூலமேனும் காயம் விளை வித்தலுக்கு, பத்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைத்தல் தண்டனையாகும்; மற்றும் ஒருவரை ஒறுப்புத்தொகை செலுத்துமாறும் செய்யலாம்.

ஒப்புதல் வாக்குமூலத்தை அச்சுறுத்திப் பெறு வதற்கு அல்லது சொத்தைக் கட்டாயப்படுத்தி மீட் பதற்குத் தம்மிச்சையாகக் காயம் விளைவித்தலுக்கு ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக் குச்சிறை வைப்பு தண்டனையாகும்; மேலும் ஒரு வரை ஒறுப்புக்கட்டணத்திற்கு உள்ளாக்கவும் செய்ய லாம்.

பொது ஊழியரை அவரது கடமையிலிருந்து தடுக்கத்தம்மிச்சையாகக் காயம் விளைவித்தலுக்கு மூன்றாண்டுகள் வரை சிறை அல்லது ஒறுப்புத் தொகை அல்லது அவை இரண்டும் தண்டனை களாகும். கொடுங்காயம் விளைவித்தலுக்குப் பத் தாண்டுகள் சிறைவைப்பு தண்டனையாகும்; மற் றும் ஒருவரை ஒறுப்புத்தொகைக்கு, உள்ளாக்கவும் செய்யலாம்.

ஆத்திரம் மூட்டப்பட்டதன் பேரில் தம்மிச்சை யாகக் காயம் விளைவித்தலுக்கு ஒரு மாதம் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது ஐந்நூறு உரூபாய் வரை ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும். இதே செய்கை யின் அடிப்படையில் கொடுங்காயம் விளைவித்த லுக்கு, நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது இரண்டாயிரம் உரூபாய் வரை ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும்.

உயிருக்கு அல்லது மற்றவர்களின் உடற்பாதுகாப் பிற்கு அபாயம் விளைவிக்கிற செய்கையால் காயம் விளைவித்தலுக்கு, ஆறு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது ஐந்நூறு உரூ பாய் வரை ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண் டும் தண்டனைகளாகும். இதே செய்கையின் அடிப் படையில் கொடுங்காயம் விளைவித்தலுக்கு, இரண் டாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது ஓராயிரம் உரூபாய் வரை ஒறுப்புத் தொகை அல்லது அவை இரண்டும் தண்டனைகளா கும்.

**காயல்:** சிதம்பரனார் மாவட்டத்தில் சிரீவை குண்டம் வட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் வடகரை யில் கடலின் அருகில் உள்ள சிற்றூர். தொன்மைக் காலத்தில் தாமிரபரணி கடலில் சேருமிடத்தில் காயல்கள் என்ற பெயர் கொண்ட ஊர்கள் பல இருந்தன. காயல் என்பதற்குக்'கழி' எனப் பொருள். இக் காயல்களின் அருகிலிருந்த ஊரும் காயல் எனக் கூறப்பட்டது.

பாண்டியர்களின் துறைமுகமாக விளங்கிய கொற்கைநகரம் மண்மேடாகிவிட்டதால் காயல் என்னும் துறைமுகம் ஏற்படுத்தப்பட்டது. மார்க்கோ போலோ கி.பி. 1292–இல் இந்நகருக்கு வந்த பொழுது இது மிகப் பெரிய நகரமாக விளங்கியது. இரசித் உத்தின், வார்சாபு என்னும் பாரசீக வணி கர்கள், இந்நகரம் சீனா, அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டி ருந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

இநநகரம் 'பழைய காயல்' என்றும் 'புன்னைக் காயல்' என்றும் கூறப்படுகிறது. இங்கு முத்துக் குளித் தல் வெகு சிறப்பாக நடந்ததாக மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளார். கடல் பின்வாங்கியதால் இந்நக ரம் இன்று ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது. கால்டுவெல் பாதிரியார் இங்குக் கி.பி. 1861–இல் சீன நாட்டுப் பித்தளைநாணயத்தையும்சில உடைந்த அராபிய மட்கலத் துண்டுகளையும் கண்டெடுத்தார். இங்குப் பழைய கோயில்கள் இரண்டு உள்ளன. இக் கோயில்களில் கல்வெட்டுகளும் உள்ளன. காயல் என் னும் இவ்வூரும் காயல்பட்டினமும் வெவ்வேறானவை.

சு. இரா.

**காயல் பட்டினம்** பாண்டியர்களின் துறை முகமாக விளங்கிய நகரம். கொற்கைக்கு அருகில் அமைந்துள்ளது. இன்றைய காயல்பட்டினம் முக்கிய மீன்பிடி துறைமுகமாகும். சிதம்பரனார் மாவட்டத் தில் திருச்செந்தூருக்கு வடக்கே இவ்வூர் உள்ளது. காயல் என்றால் கழிமுகம் என்று பொருள்படும். தாமிரபருணி நதி இவ்வூரின் அருகில் கடலுடன் கலப்பதால் இப்பெயர் பெற்றது. அக்காலத்தில் இந் நகரத்தில் குதிரை வாணிகமும் உப்பு வாணிகமும் சிறந்து விளங்கியன. அரேபியக் குதிரைகளை அரேபிய வணிகர்கள் இத்துறைமுகத்தில் கொண்டு வந்து இறக்கினர். பாண்டிய அரசர்கள் அரேபியக் குதிரை களை இங்கு வந்தே வாங்குவர். இவ்வூரைச் 'சோனகர் பட்டினம்' என்றும் கூறுவர். கி.பி. 14–ஆம் நூற்றாண் டளவில் இந்நகரம் கீழைநாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. கி.பி. 16–17–ஆம் நூற் றாண்டுகளில் இப்பட்டினம் போர்ச்சுக்கீசியர்களுடன்

வணிக உறவுகளை வைத்திருந்தது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தேனியர்கள் இங்கு ஒரு குடியிருப்பை ஏற்படுத்தி, கோட்டை ஒன்றைக் கட்டினர். அதன் மூலம் தமிழகத்து அரசியலிலும், வணிகத்திலும் பங்கு கொண்டனர். இவ்வூரில்தான் முசுலீம் வள்ளலாகிய சீதக்காதி இருந்தார். இவர் ‘காயல் துரை சீதக்காதி’ எனச் சிறப்பாகக் கூறப்பட்டார். இப்பொழுது இவ்வூரில் முசுலிம்களும், இந்துக்களும், கிறித்தவர்களும் வாழ்கின்றனர். சு. இரா.

**காயன் பழங்குடி** போர்னியோத் தீவில் வாழும் முதுகுடியினர். நடு போர்னியோவில் பாயும் பரம் (Baram), பிந்துலு (Bintulu), இராசங்கு (Rajang) ஆகிய ஆற்றுப் படுகையில் இவர்கள் வாழ்கின்றனர். இந்தோனேசியப் போர்னியோ தீவில் மகாரம் (Maharam), கப்புவாசு (Kapuas) ஆகிய ஆற்றுப் பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். காயன் (Kayan) பழங்குடியினரின் எண்ணிக்கை 8,000 க்கும் மேற்பட்டது.

இவர்கள் ஒரே கூரையையுடைய மிக நீண்ட வீட்டில் வசிக்கின்றனர். ஒவ்வொரு வீடும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 50 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு தலைவன் உண்டு. பல வீடுகளைச் சேர்த்து ஒரு கிராமமாகக் கணக்கிட்டு அனைத்து வீடுகளுக்கும் ஒரு தலைவன் நியமிக்கப்படுகிறான். கிராமத் தலைவனது வீடு ஏனைய வீடுகளைக் காட்டிலும் வேலைப்பாடுகளோடு கட்டப்படுகிறது. வீட்டுத் தலைவனின் உதவியுடன் வீட்டினரிடையே எழும் சிக்கல்களைக் கிராமத் தலைவன் தீர்த்து வைக்கிறான்.

காயன் பழங்குடியினருள் வகுப்பு அடிப்படையிலான சமுதாய அமைப்புக் காணப்படுகிறது. உயர் குடியினர் தம் குழுவினருள் மணம் கொள்ளும் அக மண முறையைக் (Endogamous Marrige) கொண்டுள்ளனர்.

காயன் மக்கள் இடம்விட்டு இடம் பெயரும் வேளாண் முறையைக் கொண்டவர்கள். மலைப்பகுதிகளில் காடுகளை வெட்டி நெல்லைப் பயிரிடுகின்றனர். இதுவே இவர்களது முக்கிய உணவு. சவ்வரிசியை இவர்கள் துணைப் பயிராகப் பயிரிடுகின்றனர். காட்டுப் பொருள்களைச் சேகரித்தலும், வேட்டையாடுதலும், மீன்பிடித்தலும் இவர்களது பிற துணைத் தொழில்களாகும். இரப்பர், கற்பூரம், சவ்வரிசி, காட்டுப்பொருள்கள் முதலானவற்றைச் சீன, மலாய் வியாபாரிகளுக்கு இவர்கள் விற்கின்றனர். இரும்பு வேலை, தச்சு வேலை, கூடை முடைதல், கலைப் பொருள்கள் செய்தல் ஆகியவற்றிலும் காயன் பழங்குடியினர் வல்லவர்கள்.

போர்ப்பயிற்சி மிக்க இவர்கள் முற்காலத்தில் மனிதத்தலைவேட்டை (Head-hunting) செய்தலில் விருப்பங்கொண்டிருந்தனர். இவர்கள் பிறரோடு இணக்கமாக வாழ விரும்பாதவர்கள். தம் அண்டையப் பழங்குடியினரான இபான் (Iban), தயாக்கு (Dyak) ஆகிய பழங்குடியினரோடு அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வதுண்டு.

இவர்களது சமய வாழ்க்கையில் பல தேவதைகளையும் ஆவிகளையும் வழிபடும் முறை காணப்படுகிறது. குறி கேட்டல் இவர்களது முதன்மையான நம்பிக்கை. சிலர் கிறித்தவ மதத்தைத் தழுவியுள்ளனர். சீ.ப.

**கார் எட்டு**: பதினொன்றாம் திருமுறைக்கண் விளங்கும் நாற்பது நூல்களுள் ஒன்று. இது நக்கீர தேவ நாயனாரால் இயற்றப்பெற்றது. பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள கபிலரின் எட்டு நூல்களுள் இது ஏழாம் நூலாகும்.

கார்கால வரவினைக் கூறுகின்ற பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றான கார் நாற்பதினைப் போன்று, இக்கார் எட்டும் அமைந்துள்ளது. நாற்பது செய்யுட்களில் கார்வரவினைக் கூறுவதால் அதற்குக் கார் நாற்பது என்றும், எட்டுச்செய்யுட்களிற் கார் வரவினைக் கூறுவதால் இதற்குக் கார் எட்டு என்றும் பெயர்களமைந்தன. காரெட்டு என்னும் இந்நூல், கார் என்னும் மழையின் சிறப்பினைக் கூறுமுகத்தான் அம்மழைக்குக் காரணமாகிய இறைவனுடைய திருவருள் திறத்தை முதன்மைப் படுத்திச் சிறப்பிக்கின்றது.

உலகமும் அதற்கு உறுதிபயக்கும் அறம்பொருள் இன்பங்களும் நடப்பதற்குக் காரணமாகிய மழையினை ஒவ்வொரு செய்யுளிலும் குறிப்பிட்டு, இத்தகைய மழையின் அருள் தன்மை இது என்று, அதனை இறைவனுடைய அருள் தன்மையோடு ஒப்பிட்டுக் காட்டும் இயல்பு கொண்டது இந்நூல்.

இந்நூலினுள் காரின் பண்பும் செயலும் பயனும் விளக்கம் பெறுகின்றன. காரின் கருமையும், அது மின்னுதல் முழங்குதல் ஆகியனவும், சிவபெருமானின் அங்கங்களுக்கும் அவன் அணிந்திருக்கும் அணிகலன்களுக்கும் உவமைப்படுத்திப் பேசப்படுகின்றன. இந்நூலின் ஒரு செய்யுள் மழைமேகம் அரவு அணிந்துள்ள அண்ணலின் சடைபோலப் பரவி, எங்கும் மின்னி அரவினங்கள் அச்சங் கொண்டு அடங்கிட,

அவன் கையில் சங்கு போன்று முழங்கிற்று என்று இறைவனின் சங்க முழக்கினைச் சிறப்பித்துக் காட்டுகின்றது. மற்றொரு செய்யுள், அவன் மிடறுபோல் கருநிறம் பெற்றும், ஒளிபெற்ற சடைபோல் மின்னியும் அவனுடைய கழலின் ஆரவாரத்தினைக்கார் காட்டியது என்கிறது.

சிவபெருமானின் செழுஞ்சடை போல் மின்னி, களவு ஒழுக்கத்தில் அழுந்தியுள்ள பெண்டிரைப் பற்றிய அலர் எழுதுவதைப் போன்று எங்கும் உயர்ந்து பரவி, கற்பொழுக்கத்தில் தம் தலைவரைப் பிரிந்து ஆவி சோர்ந்த நிலையில் உள்ள தலைவியரை அன்போடு ஆற்றியிருக்கச் செய்தது அக்கார் என்று ஒரு பாடல் கூறுகிறது. இந்நூலின் எட்டுச் செய்யுட்களும் காரின் சிறப்பினைக் கூறுமுகத்தான் சிவபிரானின் சிறப்பினையே வெளிப்படுத்துவனவாக உள்ளன.

சுப.கோ.

**கார்க்கி**:கிழக்கு ஐரோப்பிய சோவியத்துஐக்கிய உருசியாவில் உள்ள நகரம். நிசினிநாவ்கொராடு (Nizhninovgorad) என்று முன்னர்ப்பெயர் பெற்றிருந்தது. இதே பெயரை உடைய மாவட்டத்திற்கு இது தலைநகராகவும் இருக்கிறது. உருசியாவின் மிக முக்கிய தொழில் நகரங்களில் இதுவும் ஒன்று. விளாடிமிர் சிற்றரசன் ஒருவனால் கார்க்கி (Gorky) கி.பி. 1221-இல் நிறுவப்பெற்றது. மாசுக்கோ அரசு கி.பி. 1392-இல் இதைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. உருசியர்கள் கி.பி. 1608 முதல் கி.பி. 1612வரை இந்நகரில் இருந்து கொண்டே, போலிசு, இலிதுவேனியா, காசேக்குப் படைகளை முறியடித்தனர். பெரும் வாணிகச் சந்தைகள் கி.பி. 1817 முதல் 1930 முடிய ஒவ்வொரு ஆண்டும் (புரட்சிக்காலம் நீங்கலாக) இங்குக் கூடுவதுண்டு. மாக்சிம் கார்க்கி இங்கே பிறந்த காரணத்தால் அவர் பெயர் இந்நகருக்குச் சூட்டப்பட்டது. வால்கா ஆறு இங்கே ஓடுகிறது. சுண்ணாம்புக்கல் மலைகளும் இங்கே உண்டு. பல இருப்புப் பாதைகள் இதன் வழியாகச் செல்கின்றன. இங்கு, சணல், பழவகைகள், தானியவகைகள் முதலியன உற்பத்தி ஆகின்றன. கப்பல் கட்டுதல், இயந்திரத் தொழில், தோல் பதனிடுதல், மரத்தொழில், உந்து வண்டி (Motors), நீராவிப்படகு, வானூர்தி தயாரித்தல் முதலியன இந்நகரில் நடைபெறுகின்றன. இந்நகரின் மக்கள் தொகை 1367,000 (1981). தெ.பா.

**கார்க்கி மாக்சிம் (கி.பி. 1868-1936)**: உருசிய எழுத்தாளர்களுள் சிறந்த ஒருவராக விளங்கிய மாக்சிம் கார்க்கியின்(Gorky Maxim)இயற்பெயர் அலெக்சி மாக்சிமோவிச் பெசுகோவ் என்பதாகும். இவருடைய சிறுகதைகள், நவீனங்கள், நாடகங்கள் இவருக்குப் பன்னாட்டுப் புகழைத் தேடித் தந்தன. இவருடைய படைப்புகள் உருசியப் புரட்சிக்கு முற்பட்ட, பிற்பட்ட காலத்தினை விளக்கிக் காட்டுவனவாக அமைந்துள்ளன. இவருடைய படைப்புகளின் தரம் தால்சுடாய், ஆண்டன் செக்காவ் முதலியோரின் படைப்புகளின் தரத்தினை எட்டுவதாக அமையவில்லை என்று கருதப் பெறுகின்றது.



கார்க்கி, மாக்சிம்

நிட்னி நாவ்கொராடு என்னுமிடத்தில் கி.பி. 1868-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28-ஆம் நாள் கார்க்கி மாக்சிம் பிறந்தார். அந்நகரம் இவர்தம் பெயரால் கார்க்கி நகரம் என்று அழைக்கப் பெறுகிறது. கார்க்கியின் இளமைக்கால வாழ்க்கை வறுமையில் கழிந்தது. இவர் தந்தை தச்சு வேலை செய்பவராகவும், கப்பல் முகவராகவும் பணியாற்றியவர். ஐந்து வயதில் தந்தையை இழந்தபின், சாயம் தோய்க்கும் தொழிலைச் செய்த பாட்டனாரால் வளர்க்கப்பெற்றார். பாட்டனாரால் கொடுமையாக நடத்தப் பெற்றார். வாழ்க்கையில் பெற்ற கசப்பான அனுபவங்களின் பயனால், கசப்பு என்ற பொருளைத் தரும் 'கார்க்கி' என்ற பெயரைச் சூடிக் கொண்டார்.

பாட்டனாரின் கொடுமைகளும், வறுமையும் பள்ளிப்படிப்பைத் தொடரவிடாமல் செய்தன. எட்டு வயதிலேயே சிற்பங்களுக்கு வண்ணம் தீட்டுதல், தட்டுக் கழுவுதல், அப்பக் கடையில், கப்பல் தளத்தில் இரவுக் காவல் என்று பல்வேறு பணிகளை மேற்கொண்டு உழைக்கும் இனத்தின் மத்தியில் வாழ்க்கைப் பட்டறிவு பெற்றார்.

சார் அரசுக்கு எதிராக 1905-ஆம் ஆண்டுப் புரட்சியில் ஈடுபட்டார். மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று புரட்சி இயக்கக் கருத்துகளைப் பரப்பினார். இவர் 1919-இல் இலெனினுடன் இணைந்தார். 1934-இல் சோவியத்து ஒன்றிய எழுத்தாளர்களின் முதல் தலைவரானார். கார்க்கி பாசிச எதிர்ப்புக் கொள்கையாளராக விளங்கினார். இவர்தம் மறைவு 1936-ல் இயற்கையானதா, இல்லையா என்பதனைக் கூற இயலவில்லை. காவல், துறைத் தலைவர் எகோடா என்பவரின் ஆணையின் பேரில், வலது சாரிப் பிரிவினரும், திராட்சுகீயவாதிகளும் மருத்துவச் சிகிச்சையின் போது கொலை செய்தனர் என்று கூறப்படுகிறது.

இவருடைய முதல் கதை மேக்கர் சுதரா கி.பி. 1892-இல் வெளியாயிற்று. இவர் வெளியிட்ட செல்காசு (கி.பி.1895)புகழ் பெற்றஒன்று. 'இருபத்தி ஆறு மனிதர்களும் ஒரு பெண்ணும்' என்ற நூல் 1902-இல் வெளியாயிற்று. இவருடைய சமூக நாவல் போமா கார்டயெவ் கி.பி. 1899-இல் வெளியாயிற்று. அன்னை என்ற நாவலை இவர் 1906-இல் எழுதினார். இந்நாவல் உலகின் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது.

உருசியாவின் வழியே, குழந்தைப் பருவம், உலகில் முதலிய நூல்களை 1905-க்கும் 1917-க்கும் இடையில் வெளியிட்டார். 'என் பல்கலைக்கழகங்கள்' என்ற நூல் இத்தாலியில் வெளியிடப் பெற்றது. ஆட்டமோனோவசு தொழில், கிளிம் சாம்சினின் வாழ்க்கை முதலியன இவர்தம் புகழ் பெற்ற படைப்புகள். நாடக ஆசிரியராகவும் விளங்கிய இவர் மாசுக்கோ கலை அரங்கத்திற்காக, பிலிசுடைன்சு, அடியாழம் முதலிய நாடகங்களை எழுதினார். ஐரோப்பாவில் பல இடங்களில் நடிக்கப் பெற்ற அடியாழம், பெர்லினில் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடிக்கப் பெற்று உலகப் புகழை இவருக்குப் பெற்றுத் தந்தது.

உழைக்கும் வகுப்பினருடன் வாழ்ந்தமையால், அவர்கள் வாழ்க்கையைத் தம் படைப்புகளில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். இவருடைய படைப்புகளில் நகைச் சுவை உணர்வு குறைவு என்று கூறப் பெறுகிறது.

ந.க.ம.

**கார்க்கிமிசு** தொன்மையான நகர அரசு. துருக்கியில் அலிப்போ (Aleppo) நகரத்திற்கு 96 கி.மீ. தொலைவில் இன்றைய கார்க்கிமிசு நகர அரசு அமைந்துள்ளது. கார்கிமிசுவைச் (Charchemish)சுற்றி நகர மதில்கள் இருந்தன. மத்திய தரைக்கடலிலிருந்து வடக்கு மெசபடோமியாவிற்குச் செல்லும் வழியில் இந்நகரம் அமைந்திருந்தமையால் ஒரு பெரும் வாணிக நகரமாக இது விளங்கியது. இந்நகரத்தில் புதிய கற்காலத்திலிருந்தே மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். இதன் முதல் அரசராக விளங்கியவர் அப்ளகந்தா (Aplahanda) என்பவர் ஆவார். இவரைப் பற்றி அறிந்து கொள்ள மாரி (Mari) என்ற இடத்தில் கிடைத்த எழுத்துப் பொறிப்புகள் உதவிபுரிந்தன. இந்நகரத்தைப் பற்றி கி.மு. 1470-ஆம் ஆண்டைச் சார்ந்த எழுத்துப் பொறிப்புகள் உதவியாக உள்ளன. அப்ளகந்தா அரசர் காலத்தில் இந்நகரம் முக்கிய வாணிக மையமாகவும், கப்பல்கள் கட்டப் பயன்பட்ட மூங்கில்கள் கிடைக்கும் பகுதியாகவும் விளங்கியது.

மிடானிய அரசு கார்கிமிசுவைச் சுற்றி ஓர் அரண் அமைத்தது. இந்நகரத்தை கி.மு. 1340-இல் இட்டைட்டு அரசர் சுப்பிலுலிமசு (Suppilulimas) கைப்பற்றினார். இவர் தம் மைந்தர்களுள் ஒருவரை இந்நகரத்தின் அரசராக்கினார். இந்நகரத்தை இடையரசாக (Buffer State) இவர் மாற்றினார். இந்நகரம் கி.மு. 1190-இல் அழிக்கப்பட்டது. இருப்பினும் சிறிது காலத்தில் ஒரு புதிய நகரம் இங்கு உருவாக்கப்பட்டது. இது புதிய இட்டைட்டு அரசின் தலைமை நகரமாக விளங்கியது. அசிரியர்கள் இந்நகரத்தின் மீது படிப்படியாகத் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினர். அசிரியர்களுக்கு கி.மு. 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து இந்நகரம் திறை செலுத்தி வந்தது. இவர்கள் இந்நகரைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கி.மு. 717-இல் கொண்டுவந்தனர். பாபிலோனிய அரசர் இரண்டாம் நெபுகாத்நேசர், பாரோ இரண்டாம் நிகோ வை(Necho II) கார்க்கிமிசுவில் கி.மு. 605-இல் தோற்கடித்தார். சிரியாவிலிருந்த அசிரியர்களின் ஆதிக்கத்தை இவர் ஒழித்தார். உரோமானியர் காலத்தில் இந்நகரம் ஈரோபசு (Europus) எனக் கூறப்பட்டது. பிரிட்டன் அருங்காட்சியகம் இங்கு கி.பி. 1878 முதல் 1881 வரையிலும், 1911 முதல் 1914 வரையிலும் அகழாய்வுகள பல மேற்கொண்டது. தாவீது. சி. கோகர்த்து (David G. Hogarth) என்பவரும் சர் இலியானர்டு உல்லியும் அகழாய்வுகளில் பங்கு கொண்டனர். அகழாய்வுகளில் கோட்டைப் பகுதிகளும், அரண்மனையும், கோயிலும், பல சிற்பத் தொகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. நகரத்தின் உட்புறப் பகுதியும் வெளிப்புறப் பகுதியும் கோபுரங்களுடன் இருந்த வாயில்களும் அகழாய்வுகளில் வெளிப்பட்டன. அசிரியர்களின் கலை அறிவை இங்கு நடந்த அகழாய்வுகளின் மூலம் அறிய முடிகிறது.

சு.இரா.

**கார்க்கு**: இது அயர்லாந்துக் குடியரசின் தென் மேற்கில் உள்ள ஒரு வட்டம். இப்பெயரையுடைய நகரமும் அங்கே உள்ளது. கார்க்குப்பகுதியின் (Cork) பரப்பு 7,461,8 ச.கி.மீ. அயர்லாந்தின் வட்டப் பிரிவுகள் யாவற்றிலும் இதுவே மிகப்பெரியது. மலைப்பாங்கான இப்பகுதியின் கடலோரம் மிகுதியாக அரிக்கப்பட்



கார்க்குநகரம்

டுள்ளது. பள்ளத்தாக்குப் பகுதிகள் மிகவும் செழிப்பானவை. மக்களின் முக்கிய தொழில்கள் வேளாண்மையும் மீன்பிடித்தலுமாகும். வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பல சின்னங்களை இங்கே காணலாம். இடைக்காலத்துக்குரிய திருச்சபைகளும், மடாலயங்களும் அழிபாடுற்ற நிலையில் இங்கே காணக்கிடக்கின்றன. தேனர்கள் (Danes) கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில், கார்க்குப் பகுதியைக் கைப்பற்றிக் காவல் சுவர்களை எழுப்பினர். தெர்மாட்டு மெக்கார்த்தி (Dermat MacCarthy) என்பான் தேனியர்களை விரட்டிவிட்டு, கி.பி. 1172-இல், ஆங்கிலேய மன்னன் இரண்டாம் என்றியிடம் சரணடைந்தான். பிறகு கி.பி. 1649-இல் ஆலிவர் கிராம்வெலின் படை கார்க்கை முற்றுகையிட்டுக் கைப்பற்றியது. மாரல் பரோ கோமகன் கி.பி. 1690-இல் இப்பகுதியை வென்றார். பிறகு 1920-இல் ஏற்பட்ட தேசிய புரட்சிக் கலகங்களின் பொழுது பல பொதுக் கட்டடங்கள் பாழாயின.

தெ.பா.

**கார்கோடர்கள்**: காசுமீரப் பகுதியை ஆண்டு வந்த வலிமை மிக்க, அரச மரபினருள் கார்கோடர்கள் குறிப்பிடத்தக்கவராவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில், இம்மரபினரின் ஆட்சி ஏற்பட்ட பின்னர், காசுமீரப் பகுதியில் அயலவரின் படையெழுச்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. கார்கோடர் அரச மரபினரின் ஆட்சியைத் தோற்றுவித்த பெருமை துர்லப வர்த்தனரைச் (கி.பி. 626-662) சாரும். ஏறத்தாழ 230 ஆண்டுக் காலம் நீடித்த இப் பேரரசு, கலை-இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டதுடன், தனது ஆதிக்கத்தை இந்தியாவிற்கு வெளியிலும் விரிவுபடுத்துவதில் வெற்றியும் கண்டது.

இவர்களின் வெற்றிகளைப் பற்றியும், ஆட்சி பற்றியும் அறிந்து கொள்ளச் சீனப் பயணியின் குறிப்புகளும், கல்கணரின் இராசதரங்கினியும், இசுலாமிய வரலாற்றாசிரியரின் குறிப்புகளும், நாணயங்களும் வரலாற்றுச் சின்னங்களும் பயன்படுகின்றன. கல்கணர் சில இடங்களில் உயர்வு நவிற்சியாகச் சில செய்திகளைக் கூறுகின்ற போதிலும், பல இடங்களில் ஒரு வரலாற்றாசிரியர் போன்றே செய்திகளை விவரிக்கிறார்.

**துர்லப வர்த்தனர்** (கி.பி. 626-662) கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முன் காசுமீரப் பகுதிகள் மௌரியர், குசாணர், ஊனர் (Huns) முதலானோரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. கார்கோடர் மரபின் முதல் வேந்தரான துர்லப வர்த்தனர், தென்னிந்தியாவின் கார்கோட நாகர்களின் கால்வழியினர் ஆவார். இவ் வேந்தரது ஆட்சிக் காலத்தில் காசுமீரில் அயலவரின் ஆட்சி அழிக்கப்பட்டது. இவரது ஆட்சிக் காலத்தில் தான் யுவான்சுவாங்கு காசுமீருக்கு வருகை புரிந்தார். அப்பயணியின் கூற்றுப்படி, தட்சசீலம் முதலான வேறு சில பகுதிகளும் காசுமீரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. துர்லபன் புத்த சமயத் துறவிகளுக்கு ஆதரவளித்த போதிலும், நாட்டில் பிராமணீய சமயம் உச்ச நிலையில் இருந்தது; பிராமணீய சமயக் கோயில்களும் நினைவுச் சின்னங்களும் அதிக அளவில் கட்டுவிக்கப்பட்டன. இதனால், இவ்வேந்தரது சமயப் பொறையும் அறியப்படுகின்றது. இவ் வேந்தரது ஆட்சிக் காலத்தில் தட்சசீலம், உப்பு மலைத்தொடர் (Salt range) வரையில் காசுமீரப் பேரரசு விரிவுபடுத்தப்பட்டதால், சாகி மரபினர் தமது கோநகரை ஓகிந்திலிருந்து காபூலுக்கு மாற்றிக் கொண்டனர். துர்லபன் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, மக்களுக்கு நல்லாட்சியை நல்கினார். இஃவேந்தரை அடுத்துப்பிரதாபாதித்தியன் (துர்லபகன், கி.பி. 662-712) என்பான் அரியணையேறி, நெடிதுநாள் அரசாண்

டான். இவன் பல நாணயங்களை வெளியிட்டுள்ளான். இவன் பிரதாபபுரம் என்னும் நகரத்தையும் நிறுவினான். இதனால் இவ்வேந்தனது ஆட்சிச் சிறப்பு உணரப்படுகின்றது. துர்லபகனுக்குப் பின்பு சந்திரபிடன் (கி.பி. 712–720) என்னும் நேர்மை மிக்க வேந்தனும், அடுத்துத் தரபிடன் (கி.பி. 720–724) என்னும் கொடிய அரசனும் ஆண்டு வந்தனர்.

**முக்தபிட லலிதாதித்யன்** (கி.பி. 724–760) இம்மரபின் ஆற்றல் மிக்க வேந்தன் இவனேயாவான். இவனது வீரமும் வெற்றியும் கல்கணரால் நன்கு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. இவன் கன்னோசி நாட்டு யசோவர்மனை இருமுறை தோற்கடித்து, அவனது பெருமையினைக் குறைத்தான். பதக்சான் (இந்துகுசிற்கு வடக்கில்), திபெத்து ஆகியவற்றின் மீதும் இவன் தாக்குதல் நிகழ்த்தி வெற்றி கண்டான். காபூல் பகுதியை ஆண்டு வந்த சாகி அரச மரபினருடன் நட்புறவு கொண்டிருந்த இவன், சிந்து அராபியரைத் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது. இவன் சீனாவுடனும் நட்புறவு கொண்டான். வெற்றி வீரனான இவன் அயல்நாட்டுப் படையெழுச்சியில் ஈடுபட்டிருந்தபோது இறந்துபட்டான். ஆற்றல் மறவனான இவன் தனது படைபலத்தால் பல வேந்தரை வென்று தனது பேரரசினை விரிவுபடுத்தினான். முக்தபிடாவின் மேலாண்மைக்கு அனைத்து இந்து அரசர்களும் அடிபணிந்ததாகவும் கூறப்படுகின்றது. மாபெரும் நாடுபிடிப்பாளனாகத் திகழ்ந்த இவன், கட்டடப் பிரியனாகவும் விளங்கினான்; சூரியனுக்காக அமைக்கப்பட்ட மார்த்தாண்டா கோயில் மிகவும் புகழ் பெற்றது. பரிகசபுரம் என்னும் நகரம் ஒன்றினையும் இவன் உருவாக்கினான். அதன் அழிவுகள் இன்றும் காணப்படுகின்றன. இவன் புத்தமதத்திற்குப் பேராதரவு அளித்துப் பல புத்த விகாரங்களையும் தூபிகளையும் நிறுவினான் என்பதனைக் காசுமீருக்கு வந்த சீனப் பயணியின் (கி.பி. 759–763) குறிப்பால் அறியலாம்

**சயபிட வினயாதித்தியன்** (கி.பி. 775–806) முக்தபிட லலிதாதித்தியனுக்குப் பின்னர்க் காசுமீரைக் ஆண்ட வேந்தருள் சயபிட வினயாதித்தியன் மிகவும் குறிப்பிடத் தக்கவன் ஆவான். இலலிதாதித்தியனின் பேரனான இவன், கன்னோசியின் வச்சிராயுதனை வென்றடிப்படுத்தினான். மாவீரனான இவன் வங்காளம் வரை படையெடுத்துச் சென்று, தனது மேலாண்மையை நிறுவினான். வங்காளத் தலைநகரான பௌத்தவர்தன் என்னும் நகரத்தையும் பார்வையிட்டதாகக் கூறப்படுகிறது. பேராசையால் உந்தப்பட்ட இவன், மக்களிடம் மிகையான வரிகளைப் பெற்று, அவர்கள் வெறுப்புக்குரியவனானான். இலக்கியத்தில் நாட்டம் கொண்ட இவன் பல பகுதிகளிலிருந்தும் புலவர் பெருமக்களை வரவழைத்து, அவர்களுக்கு நல்லாதரவு தந்தான். இவனது அவைக்களப் புலவர்களுள், இவன் முதலமைச்சரும் 'குட்டணிமதா' என்னும் நூலின் ஆசிரியருமான தாமோதர குப்தாவும், உத்படர் (Udbhata), வாமனன், சீரசுவாமின் (Kshirasvamin) போன்ற மற்றும் பல அறிஞர்களும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். பதஞ்சலியின் மகாபாடியம் இவன் காலத்தில் புலவர்கள் மத்தியில் பரப்பப்பட்டது. கார்கோடர் மரபின் புகழ்மிக்க இறுதி வேந்தன் வினயாதித்தியனேயாவான். இவ்வேந்தனையடுத்து ஆட்சிக்கு வந்தவர்கள் திறமையற்றவர்கள். எனவே, காசுமீரப் பேரரசில் உட்பட்டிருந்த அயலவர் பகுதிகள் பல சுதந்திரம் பெற்றன. மத்திய ஆட்சி வலுவிழந்தது. காசுமீர அரசும் தனது பெருமையினை இழந்தது. கார்கோடகர் மரபும் வீழ்ச்சியுற்றது. கார்கோடக மரபினை அடுத்துக் காசுமீர், உத்பாலர்கள் என்னும் அரச மரபினரின் ஆட்சியின்கீழ் வந்தது. உத்பாலர்கள் கார்கோடர்களுடன் திருமண உறவால் பிணைக்கப்பட்ட உறவினர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

காசுமீரை 230 ஆண்டுகள் ஆண்ட புகழ்மிக்க கார்கோடர் மரபு, இந்தியக் கலை இலக்கிய வரலாற்றில் தனது பெயரைப் பதித்துச் சென்றுள்ளது.


ம.இ.

**கார்கோவு**: உக்ரேனியச் சோவியத்துச் சம உடைமைக் குடியரசில் உள்ள நகரம். உதி, உலோபன், கார்கோவு ஆகிய மூன்று ஆறுகள் கலக்குமிடத்தில் உள்ள கார்கோவு (Kharkov) கி.பி. 1656–இல் உருசியாவின் தென்பகுதிப் பாதுகாவல் நகராக இராணுவக் கருவிகளுடன் அமைக்கப் பெற்றது. செழிப்பான நிலத்தின் காரணமாக கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேற்றங்கள் ஏற்பட்டு வாணிகம் பெருகியது. இந்நகரம் கி.பி. 1732–இல் மாநில அரசின் தலைநகராக ஆக்கப்பட்டது. இதன் பரப்பு விரிவாக்கப்பட்டதன் விளைவாக நிலக்கரிச் சுரங்கங்கள் இதனுடன் இணைக்கப் பெற்றன. தொழில் வளம் பெருகியது.

அக்டோபர்ப் புரட்சிக்குப்பின் (1917) உக்ரேனிய சோவியத்துச் சம உடைமைக் குடியரசு அமைந்தவுடன் அதன் முதல் தலைநகராகக் கார்கோவு உயர்த்தப்பட்டது. கீவ் (Kiev) 1934–இல் தலைநகராக்கப்படும் வரை இந்நகரமே தலைநகராக இருந்தது. இரண்டாம் உலகப் போரில் இது பல கொடிய அழிபாடுகளுக்கு உள்ளாகியது. பின்னர்ப் புதிதாக நிருமாணிக்கப் பெற்ற இந்நகர் இப்பொழுது ஒரு

சிறந்த இருப்புப் பாதை மையமாக விளங்குகிறது. மாசுக்கோவுக்கும் இலெனின் கிராடுக்கும் அடுத்தபடியாக மூன்றாம் இடத்தைப் பெற்று, சோவியத்து இருப்புப் பாதைத் தலைநகர் இணைப்பாக இந்நகரம் இன்று சிறப்புற்றிருக்கிறது. இங்கே எட்டு இருப்புப் பாதைத் தொடர்கள் கூடுகின்றன. உருசியாவின் முக்கிய நகரங்களுடன் இது பெருஞ்சாலைத் தொடர்பு கொண்டுள்ளது.சோவியத்துஒன்றியத்தில் இது ஆறாம் பெரும் நகராகும். தொழில் வளத்தில் இது மிகவும் முன்னேறியுள்ளது. பண்பாட்டுத் துறையிலும் இதன் இக்காலச் சிறப்பு வியப்புக்குரியது. பல வரலாற்றுச் சின்னங்களையும் இங்கே காண முடியும். தே.பா.

**கார்சிகா**: மத்தியதரைக்கடலில் உள்ள ஒரு தீவு. இதன் பரப்பு, 87205 ச.கி.மீ. அக்கடலில் உள்ள தீவுகளுள் இதுவே நான்காம் பெரிய தீவாகும். பரந்த பிரான்சு நாட்டின் ஒரு மாகாணமான இது பிரான்சுக்குத் தென்கிழக்கிலும் சார்டினியாவுக்கு வடக்கிலும் உள்ளது. இதன் தலைநகர் ஆயாட்சோ (Ajaccio). ஒலிவ எண்ணெய், மது, மரம், கோதுமை, பால்கட்டி முதலியன இங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. சுற்றுலா வளர்ச்சித் தொழிலும் இங்கே காணப்படுகிறது. மலைப்பாங்காகவும், மண்வளம் நிறைந்ததாயுமுள்ள இத்தீவில்தான் நெப்போலியன் போனபார்ட்டு பிறந்தார் . இத்தீவு கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை உரோமானியருக்கு உரியதாக இருந்தது. பின் வாண்டலர், பைசாண்டியர், இலம்பார்டியர் முதலியோர் இதைக் கைப்பற்றியிருந்தனர். பிறகு பிராங்கியர், கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இதைப் போப்பாண்டவருக்கு வழங்கினர். இத்தீவினருக்கு கி.பி. 800 முதல் 1100 வரை அரேபியரின் தாக்குதல் பற்றிய அச்சம் இருந்து வந்தது. போப்பு ஏழாம் கிரிகரி இத்தீவைப் பிசா நாட்டுக்குவழங்கினார். பிசாவுக்கு எதிராகச் சினோவாவும் (Genoa), பிறகு சினோவாவுக்குப் பகையாக அரகனும் இத்தீவுக்காகப் போட்டியிட்டுப் போர்கள் செய்தனர். சினோவாவின் ஆட்சி ஏற்பட்டிருந்தபொழுது கார்சிகா மக்கள் துயருற்றனர். ஆதலால் கி.பி. 1755-ஆம் ஆண்டில் பாவோலி என்பவன் தலைமையில் புரட்சிக் கலகம் ஏற்பட்டது. கலகத் தலைவர் வெற்றி பெற்ற போதிலும், தீவு பிரான்சுக்கு வழங்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு இது, பிரான்சுக்குக் கொடுக்கப்பட்ட காரணத்தினால்தான், இங்குப் பிறந்த நெப்போலியனுக்குப் பிரெஞ்சுக் குடியுரிமை கிடைத்தது. பிரான்சில் உயர்பதவி எய்த வாய்ப்புக் கிடைத்தது. ஆங்கிலேயர் உதவியுடன் பாவோலி, கி.பி. 1793-இல் பிரெஞ்சுப் படைகளைக் கார்சிகாவிலிருந்து வெளியேற்றினான். அடுத்த ஆண்டில் கார்




கார்சிகா

சிகா மக்கள் இங்கிலாந்துடன் இணைந்து கொள்ளச் சம்மதித்தனர். ஆனால் நெப்போலியன் அதை மீட்டுக் கொண்டான். கார்சிகா கி.பி. 1815-ஆம் ஆண்டு அமைதி உடன்படிக்கைப்படி பிரான்சுக்கு உரியது என்பது உறுதி செய்யப்பட்டது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இத்தீவில் இத்தாலிய, செர்மானியப் படைகள் புகுந்தன. அதை எதிர்த்து 1943-இல் மக்கள் புரட்சி செய்தனர். இறுதியில் பிரெஞ்சுப் படைகள், அயலாரின் படைகளை விரட்டி வெற்றி பெற்றன. தே.பா.

**கார்ட்டர், ஓவர்டு** இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த தொல்லியல் அறிஞர். கார்ட்டர் ஓவர்டு (Carter, Howard) எகிப்து நாட்டின் தொன்மைக் கல்லறைகளை அகழாய்வுகள் செய்து புகழ் பெற்றார். கார்ட்டர் ஓவர்டு கி.பி. 1873-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சுவாப்கம் (Swaffham) என்ற இடத்தில் பிறந்தார். இவர் 1922-இல் துதங்கமன் அரசரின் கல்லறையை அகழாய்வு செய்து மூன்று தொகுதிகளாக நூல்களை வெளியிட்டார். அவை துதங்கமனின் கல்லறை (The Tomb of Tutankhhamen, 1923-1933) என்று கூறப்படுகின்றன. இவர் புதிதாகக் கண்டுபிடித்தவற்றைப் பல நூல்களில் எழுதியுள்ளார். எகிப்துச் சமவெளியில் பல ஆண்டுகள் தங்கி அரசர்களின் கல்லறைகளை இவர் அகழாய்வு செய்தார். எகிப்திய நாகரிகத்தின் தொன்மைச் சின்னங்களைப் பாதுகாக்க எகிப்திய அரசின் ஆலோசகராகவும் இவர் விளங்கினார்.

சிறுவயதில் இவரது உடல்நலக் குறைவின் காரணமாக இவர் பாட சாலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே கற்றார். இவர் தொல்லியல் பயிற்சியைப் புகழ் பெற்ற தொல்லியல் அறிஞர் சர். பிளிண்டர்சு பெட்ரி (Sir Flinders Petrie) யிடம் பெற்றார். எகிப்திற்கு

பெட்ரி தலைமையிலான குழு ஒன்று தொல்லியல் பயணம் கி.பி. 1890-இல் சென்றபொழுது கார்ட்டர் அதில் இடம்பெற்றார். கார்ட்டர் 1939-ஆம் ஆண்டு இறந்தார். சு.இரா.

**கார்ட்டியே சாக்குவிசு**: (கி.பி. 1491-1557) புதிய உலகம் என்று சொல்லப்படும் அமெரிக்காக் கண்டத்திற்கு மக்கள் வாழக்கூடிய பகுதிகளை ஆராய்ந்து அறிய அனுப்பப்பட்ட ஐரோப்பிய மாலுமிகளுள் கார்ட்டியே சாக்குவிசும் (Cartier Jacques) ஒருவர். இவர் பிரான்சு நாட்டவர்; கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அப்பொழுது பிரான்சின் மன்னனான முதலாம் பிரான்சிசு, இவரை வடஅமெரிக்காவிற்கு அனுப்பிப் புதிய இடங்களைப் பற்றிய குறிப்புகளைத் தருமாறு பணித்திருந்தார். கார்ட்டியே தமது ஆற்றலினாலும் அயரா உழைப்பினாலும் புதிய உலக நிலப்பகுதிகள் சிலவற்றைப் பிரான்சு நாட்டுடன் சேர்த்தார். அமெரிக்காவின் வடக்குப் பகுதிக்கு கி.பி. 1534-இல் சென்ற இவர், தம் கப்பலில் காசுபே (Gaspe) முந்நீரகத்துக்குச் சென்று, அதைத் தம் நாட்டுடன் இணைத்துக்கொள்ள வழிவகுத்தார். இவர் நியூபௌண்டுலாந்திலிருந்து புனித இலாரன்சு (Saint Lawerence) வளைகுடாவைக் கடந்தே காசுபே வரை சென்றார். அப்பகுதியில் இருந்த குன்றில் தான் பிற்காலத்தில் புகழ் பெற்ற மாண்டிரியால் (Montrieal) நகரம் தோன்றியது. கார்ட்டியே மும்முறை புதிய உலகிற்குச் சென்று அருஞ்சாதனைகளை நிகழ்த்தினார். தெ.பா.

**கார்ட்டீசிய இருமைக்கொள்கை** தேகார்ட்டே (Descartes) என்ற மேலைநாட்டுத் தத்துவ அறிஞரின் பெயரால் விளங்கும் கொள்கையே கார்ட்டீசிய இருமைக் கொள்கையாகும் (Cartesian dualism). இக்கொள்கை ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரு பொருள்களின் தன்மை மற்றும் தொடர்பை விளக்குகிறது. திடப்பொருள் (Matter), மனம் (Mind) என்ற இருபொருள்களைப் பற்றியதே கார்ட்டீசிய இருமைக் கொள்கையாகும்.

**திடப்பொருள்**: திடப்பொருளின் (Matter) முக்கியமான தன்மை நீளம், அகலம், உயரம் என்று வியாபித்தல் (Extension in Space) ஆகும். திடப்பொருள் இல்லாமல் வியாபித்தல் இருக்க முடியாது. வியாபித்தலின்றித் திடப்பொருள் இல்லை. எனவே, வெற்றிடம் (Vacuum) என்ற ஒன்று இல்லை. தேகார்ட்டே அணுக் கொள்கையை ஒத்துக் கொள்ளவில்லை. இப்போதைய விஞ்ஞானம் ஒத்துக்கொள்ளும் புவிஈர்ப்புத் தன்மையையும் ஒத்துக்கொள்ளவில்லை. வெற்றிடம் இருப்பதை அவர் நிராகரிப்பதால் திடப்பொருள் தொடர்ச்சியாக முடிவின்றி வியாபித்திருக்கிறது என்கிறார். அது ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு நகரும் (Motion) தன்மை வாய்ந்தது. நகர்ச்சி, அசைவற்ற தன்மையைப் (Rest) போன்று திடப்பொருளின் ஒரு நிலையைக் (State) குறிக்கும். எல்லா நிகழ்ச்சிகளும், நகர்ச்சி ஓரிடத்தில் இருந்து பிறிதோர் இடத்திற்கு மாறுவதன் மூலம் நடக்கின்றன. ஒவ்வொரு நகர்ச்சியும் மற்றத் திடப்பொருள்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. அ - ஆனது ஆ-வை இடப்பெயர்ச்சி செய்தால், ஆ-ஆனது, இ-யை இடப்பெயர்ச்சி செய்கிறது. ஈ-ஆனது அ-விட்டுச் 'சென்ற இடத்தை நிரப்புகிறது. எனவே, ஒவ்வொரு நகர்ச்சியும் ஒருதொடர் வட்டத்தைப் போன்று மற்றப் பொருள்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. திடப்பொருளுக்கு நகர்ச்சி என்ற தன்மை அதன்மீது பிறிதொரு சக்தி இயங்குவதில்தான் கிடைக்கிறது.

கடவுள் திடப் பொருளோடு நகர்ச்சியினையும் அசைவற்ற தன்மையையும் படைத்தார். நகர்ச்சி என்பது பொருளினின்றும் வேறுபட்டது. பொருள்கள் நகர்வதற்கு இரு காரணங்களைக் கூறலாம். 1) கடவுள் 2) நகர்ச்சி விதிகள். இப்பேரண்டத்தில் உள்ள அனைத்துப் பொருள்களும் நகர்ச்சியும் மாறாதன. ஏனெனில், இவ்விரண்டிற்கும் காரணமாக விளங்கும் கடவுள் அழிவற்றவர்; மாற்றமில்லாதவர். எந்த ஒரு நிகழ்ச்சியும் மறைந்து போவதில்லை. நகர்ச்சி பரவலாகப் பிரிந்து விடுகிறது.

**மனம்**: மனம் திடப்பொருளினின்றும் வேறுபட்டது. திடப்பொருள் வியாபிக்கும் (Extension) தன்மையைப் பெற்றிருக்கிறது என்றால் மனம் எண்ணும் (Thought) தன்மையைப் பெற்றுள்ளது. இரண்டிற்கும் இடையே பொதுவானதென்ற ஒன்று இல்லை. எண்ணம் இன்றி மனம் இல்லை. வியாபித்தலின்றித் திடப்பொருள் இல்லை. மனம் பொருளினின்றும் மாறுபட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், தனித்து இருக்கக்கூடியதுமாகும். எனவே, மனம், பொருள் அல்லது உடல் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. தனித்து இருக்கவல்லவை. இதனைத் தேகார்ட்டேயின் இருமைக் கொள்கை என்று கூறலாம்.

மேற்கண்டபடி மனத்திற்கும் திடப்பொருளுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்று தோன்றுகிறது. எனினும், இவ்விரண்டிற்கும் இடையே ஒருவகைச் சேர்க்கை இருக்கின்றது என்று தேகார்ட்டே (Descartes) கருதுகிறார். இச்சேர்க்கை இவ்விரண்டின்

(Matter & Mind) தன்மைகளால் ஏற்படுவதன்று. கடவுளின் விருப்பத்தினால் இச்சேர்க்கை ஏற்படுகிறது. 'இச்சேர்க்கை (Interaction) எங்கு ஏற்படுகிறது?' என்ற கேள்விக்குத் தேகார்ட்டே வியாபிக்கமுடியாத ஒரு புள்ளியில், மூளையில், முதுகுத்தண்டு (Spinal cord) இரண்டாகப் பிரியும் ஒரு சுரப்பியில் (Pineal Gland) ஏற்படுகிறது என்கிறார். மனத்திற்கும் திடப் பொருளுக்கும் இடையே சேர்க்கை இருப்பினும், இவ்விரண்டும் வெவ்வேறு விதிகளால் கட்டுப்படுத்தப் படுகின்றன. திடப்பொருள் எந்திரவிதிகள் (Mechanical laws) மற்றும் கணிதக்கட்டாயங்களுக்கு (Mathematical necessity) உட்பட்டது. மனம் வியாபிக்க முடியாத தன்மையைப் (incorporeal) பெற்றிருப்ப தால், திடப் பொருளைக் கட்டுப்படுத்தும் விதிகள் மனத்தையும் கட்டுப்படுத்தும் என்று கூறுவதற் கில்லை. மனம் மற்றும் அதன் செயற்பாடுகள் மன நிலைகளைப் (Mental states) பொறுத்து அமையும். அவையாவன: புலன்களால் உணர்தல் (Cognition) ஞாபகம் (Memory), கற்பனை (Imagination), விருப், பம் (Volition), உணர்ச்சிகள் (Passions). மனிதர் களுக்கு இருப்பது போன்ற மனம் விலங்குகளுக்குக் கிடையாது. எனவே, அவை பெரும்பாலும் எந்திர விதிகளுக்குக் கட்டுப்படும் எந்திரங்களே (Automata). மக்களுக்கு இருப்பது போன்ற விருப்பங்கள், உணர்ச் சிகள் போன்றவை அவைகளுக்குக் கிடையா.

மனத்திற்கும் திடப்பொருளுக்கும் கீழ்க்காணுமாறு சேர்க்கை நிகழ்கிறது என்று தேகார்ட்டே கூறுகிறார். ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் வெப்பமான இரத்தத்துடன் சுறுசுறுப்பான 'விலங்கு இயக்கங்கள்' (Animal Spirits) உள்ளன. பொருள்களை நுகரும் இவ்வியக்கங்கள் சலனமடைந்து மூளையில் உள்ள சுரப்பியை (Pineal Gland) அடைகின்றன. இவ்வாறு உணர்வுகள் (Sensations) ஏற்படுகின்றன. மனம் தன் பங்கிற்கு இச் சுரப்பியை இயக்குகின்றது. இச்செயல் நரம்பு மற்றும் தசை மண்டலங்கள் மூலமாக உட லின் புறப்பகுதிகளைச் சென்றடைகின்றது. இவ் வாறு உடலின் வெளிச் செயல்கள் தேகார்ட்டே யினால் விளக்கப்படுகின்றன. அ.இரா.

**துணை நூல்கள்:**

**Bertrand Russell,** History of Western Philosophy, George Allen & Unwin Ltd, London, 1969.

**Ratnaker Pati,** History of Modern European Philosophy, Dwadash Shreni & Co, Aligarh, 1976.

**கார்ட்டூம்** சூடான் நாட்டின் தலைநகர். கார்ட்டூம் (Khartoum) மாநிலத்திற்கும் இதுவே தலைநகராகும். வெள்ளை நைல் ஆறும் நீலநிற நைல் நதியும் கலக்குமிடத்திற்குத் தெற்கில் இது அமைந்துள்ளது. இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு சிறிய எகிப்தியப் படைத்தளமாக இருந்து, பின்னர் இராணுவச் சிறப்பு மிக்க ஒரு நக ராக வளர்ந்தது. சூடான் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபொழுது கி.பி. 1885-ஆம் ஆண்டில் மாதிப் புரட்சியினர், கார்ட்டூமை முற்றுகையிட்டுத் தாக்கி, அங்கு வந்த ஆங்கிலேயத் தலைமைத் தளபதி சார்சு கோர்டான் என்பவரைக் கொன்றனர். பின் வந்த தலைமை ஆளுநர் கிச்சனர் பிரபு கார்ட்டூ மைப் புதுப்பித்து மீண்டும் அதை இராணுவத் தலை நகராக்கினார். இந்நகர் 1956-ஆம் ஆண்டு வரை ஆங்கில-எகிப்திய சூடானியக் கூட்டரசின் தலைநக ராகவும் விளங்கியது. இது பிறகு சுதந்திரம் பெற்ற சூடானிய குடியரசுத் தலைநகராகவும் ஆக்கப் பெற் றது.

போக்குவரத்து, வாணிகம் முதலிய எல்லாத் துறைகளிலும் ஒரு சிறந்த மையத்தலமாக விளங்கும் இந்நகரில் பன்னாட்டு வானூர்தி நிலையமும் சூடான் தேசிய கண்காட்சிச் சாலையும் கார்ட்டூம் பல்கலைக் கழகமும், பாராளுமன்றக் கட்டடங்களும் காட்சி அளிக்கின்றன. சூடான் துறைமுகத்துடன், கார்ட்டுமுக்கு ஒரு பெரும் எண்ணெய்க் குழாய் இணைப்பு அண்மையில் அமைக்கப் பெற்றுள்ளது. மேற்கு ஆப்பிக்காவிலிருந்து பலர் இந்நகரில் குடியேறி யுள்ளதால், இந்நகர், ஒரு முழு அரேபிய நகர் என்று கூறுவதற்கில்லை. ஆனால், இதன் மக்களுள் பெரும் பான்மையினர் அரேபிய மொழியையே பேசுகின்ற னர். தெ.பா.

**கார்ட்டெசு,கொர்னாண்டோ:** புதியஉலகம் என்கிற கண்டத்தின் நடுப்பகுதியில் வடஅமெரிக் காவைச் சேர்ந்த மெக்சிகோ நாட்டை வென்று வெற்றிமாலை சூடிய வீரன் கார்ட்டெசு கொர் னாண்டோ (Cortes Hornando). இவன் இசுபெயின் நாட்டில் கி.பி. 1485-இல் பிறந்தான்; அந்நாட்டி லேயே இராணுவப் பயிற்சி பெற்றான்; தனது இளம் வயதிலேயே போரில் நாட்டம் மிக்கவனாயிருந்தான். இவன் கி.பி. 1518-ஆம் ஆண்டில், மெக்சிகோவைக் கைப்பற்றப் புறப்பட்டான். அந்நாட்டு மன்னனை எளிதில் முறியடிக்க, அவன் பகைவர்களுடன் கூட்டுறவு அமைத்துக் கொண்டான். உள்நாட்டு மக்கட்படை ஒன்றைத் தயாரித்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட உள் நாட்டுவீரர்களுடனும் தன்னுடைய நாட்டுப் போர் வீரர்களுடனும் மெக்சிகோ நாட்டின் தலைநகரைத் தாக்கி, அரசனுடைய செல்வத்தைக் கைப்பற்றிக் கொண்டு அவனை இசுபெயின் நாட்டுப் பேரரச



கார்ட்டெசு, எர்னாண்டோ

ரான ஐந்தாம் சார்லசின் சிற்றரசன் என்று ஒப்புக் கொள்ளுமாறு செய்தான். பிறகு மெக்சிகோவில் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியின் விளைவாகக் கார்ட்டெசு தோற்கடிக்கப்பட்டான். எனினும்,விடாமுயற்சியுடன் அடுத்த ஆண்டில் மறுபடியும் படையெடுத்து மெக் சிகோ நகரைக் கைப்பற்றிக் கொண்டு, ஆளுநர் என்ற முறையில் அங்கு ஆட்சி நடத்தினான். இசுபெயின் அரசு கி.பி. 1540-இல் இவனைப் பதவியினின்று விலக்கியது. இவன் கி.பி. 1547-இல் இறப்பதற்கு முன்பு பல சாதனைகளைப் புரிந்தான். கலிபோர்னி யாவின் கீழ்ப்பகுதியைக் கண்டுபிடித்ததும், மெக் சிகோக் கடலோரத்தில் ஆய்வுகள் செய்ததும் இவ னுடைய அருஞ்செயல்களுள் குறிப்பிடத்தக்கவை.

தெ.பா.

**கார்ட்டெல்**: உற்பத்தியாளர்கள் அல்லது விற் பனையாளர்கள் மிகை ஆதாயம் பெறும் நோக்குடன் விற்பனையில் போட்டியைத் தவிர்த்துக் கூட்டாக வாணிகம் நடத்தும் கழகம் கார்ட்டெல் (Cartel) எனப்படுகிறது. இத்தகைய கழகத்தில் அரசுகள் பங்கு பெறுவதும் உண்டு. விலையை ஒழுங்குபடுத்துதல், அங்காடிகளைத் தங்கள் முற்றுரிமைக் (Monopoly) கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல், போட்டிக்கான காரணத்தை அறிந்து அதனை அடியோடு அழித்தல் ஆகியவற்றுக்குத் திட்டமிட்டு, பன்னாட்டுத் தொழில் முனைவோர் தங்களிடையே ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தமே இக்கூட்டணி உருவாகக் காரணமாகிறது. தொழில் துறைகளில் நிறைவுப் போட்டி (Perfect Competition) குறைவாக உள்ள நிலையில் இது பரவ லாகக் காணப்படுகிறது. கார்ட்டெல் முதன் முதல் செருமனியில் (Germany) தோன்றியதாகக் கூறப் படுகிறது.

பன்னாட்டு வாணிகக் கழகமாகச் செயற்படும் கார்ட்டெல் பல நாடுகளிலுள்ள ஒரே வகைப்பட்ட தொழில்துறை உற்பத்தியாளர்களை ஒன்றுதிரட்டி, உலக நாடுகளின் விற்பனை, அங்காடி, மூலப்பொருள் வளம் ஆகியவற்றை ஒப்புதல்களின் மூலம் தங்களுக் குள் பங்கிட்டுக் கொண்டு உலகம் முழுமைக்கும் ஒரே விலையினை வரையறுக்கிறது. இவ்வகை ஒப்புதல்கள் சட்டமுறையில் அமையாவிடினும் நடைமுறையில் செயற்படுவனவாகவும், சில அரசுகளின் ஆதரவைப் (Patronage) பெற்று, மரபுவழித் தொடர்புடைய வையாகவும் அமைகின்றன. இக்கூட்டணி மிகையான ஆதாயம்பெறும் வண்ணம் விலையை வரையறுப்பது மட்டுமல்லாமல், உற்பத்தியின் அளவு, அங்காடிகளில் தங்கள் பங்கு ஆகியவற்றையும் முடிவு செய்கிறது.

பெரும்பான்மையான உற்பத்தியாளர்களைக் கொண்ட வேளாண்மைத் துறையில் கார்ட்டெல்கள் வெற்றி பெறுவதில்லை. ஏனெனில், வெற்றிக்குத் தேவையான கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும் மிகக் குறைந்த அளவிலான உற்பத்தியாளர்களைக் கொண்ட துறையில் மட்டுமே காண வாய்ப்புள்ளது.

மூலதன வளத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலில், வெளியார் தலையீட்டைத் தடை செய்து கட்டுப்படுத்த முடியுமாதலால், கந்தகம், துத்தநாகம், தாமிரம் போன்றவைகளின் உற்பத்தித் துறைகளில் மட்டுமே கார்ட்டெல்கள் பரவலாகச் செயற்படுகின்றன. கண்டுபிடிப்புத் தனியுரிமை (Patent)உள்ள தொழில்களிலும் இக்கூட்டணி செயற் படுகிறது. பேரளவு உற்பத்தித் துறைகளில் உற்பத்தி யின் அளவுக் குவிப்பினால் கார்ட்டெல்கள் தவிர்க்க முடியாத நிலைகளில் வளர்ந்து விடுகின்றன. பன் னாட்டு வாணிகக் கழகங்கள் சுங்கவரிச் சுமையைத் தவிர்த்து நுகர்வோரின் பளுவைக் குறைக்கின்றன.

கார்ட்டெல்கள் தாம் கட்டுப்படுத்தும் துறைப் பொருளின் தேவையற்ற விளம்பரச் செலவுகளையும், தீவிரப் போட்டியினால் (Cut Throat Competition) ஏற்படும் வெறுப்பு, தீங்குகள் ஆகியவற்றையும் தவிர்த்து, அப்பொருளுக்கு நிலையான விலையை வரையறுக்கின்றன. மேலும், அருமைப் பண்டங்கள் (Scarce Goods), அரிதான நுண்ணியல் அறிவு, நுண் ணியல் பொருள்கள் ஆகியவற்றை மலிவாக ஒன்று திரட்டி உச்சநிலைப் பயன் நிறைவைப் பெறச் செய் கின்றன. பன்னாட்டுத் தொழில் வல்லுநர்கள், வணி கர்கள் ஆகியோரிடையே ஒருவருக்கொருவர் நல்ல உறவு மனப்பான்மை வளரவும் கார்ட்டெல்கள் வழி வகுக்கின்றன. ஆனால், பொருளியல் வல்லுநர்களும் தொழில் அறிஞர்களும் கார்ட்டெல்களின் தீமைகளை ஆராய்ந்துள்ளனர்.

கார்ட்டெல் உறுப்பினர், உற்பத்தியாளர்களின் போட்டிகளைத் தவிர்ப்பதால், தரம் குறைந்த பொருள்களை வழங்குவது மட்டுமல்லாமல், உயர்ந்த விலையை வரையறுப்பதன் மூலம் நியாயமற்ற முறையில் மிகையான ஆதாயம் தேட வாய்ப்புப் பெறுகின்றனர். எடுத்துக்காட்டாக, உலகப் பண வீக்கம் 1970–ஆம் ஆண்டுக் காலங்களில் (1970's) உச்சக் கட்டத்தையடைய எண்ணெய் உற்பத்தியாளர்களின் கார்ட்டெல் எனப்படும் 'ஒபெக்' (OPEC) காரணம் என்று கூறப்படுகிறது. 'ஒபெக்' என்பது எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் (Organisation of Petrol Exporting Countries).

கார்ட்டெல்கள் வாணிகக் கழகங்களாகச் செயற்பட்டு முற்றுரிமைக்கு வழி வகுக்கின்றன. நுகர்வோரின் விருப்பத்தையும் தேவையையும் கணக்கிடாமல் அவை புறக்கணிப்புச் செய்கின்றன. பன்னாட்டு வணிகக் கூட்டணிகள் நாட்டுப் பற்றைத் தாழ்வடையச் செய்கின்றன. சட்டப்படி அல்லாத ஒப்பந்தங்களின்மீது எழுப்பப்படும் கார்ட்டெல்கள் பல சிக்கல்களும் இழப்புகளும் எளிதில் ஏற்பட இடம் கொடுக்கின்றன. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம், அதன் இடைக்காலச் செயற்பாட்டால் நுகர்வோரிடையே மனக்குறையை ஏற்படுத்தியுள்ளது மட்டுமல்லாமல், தன் நிலையில்லாத் தன்மையையும் வெளிப்படுத்துகிறது. காண்க: எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம். அ.கு.சா.

**கார்டன், சார்லசு சார்சு** இங்கிலாந்தின் சிறந்த போர்த் தளபதிகளுள் குறிப்பிடத்தக்க பெருமை பெற்றவர். இவர் கி. பி. 1833–இல் இலண்டன் மாநகரின் அண்மையில் உள்ள உல்விச்சு (Woolwich) என்னுமிடத்தில் பிறந்தார். சீனாவில் இவர் ஆற்றிய அருஞ்செயல்கள் காரணமாக இங்கிலாந்தின் தேசிய வீரன் என்ற புகழ் இவருக்குக் கிடைத்தது. இங்கிலாந்துக்கும் உருசியாவுக்குமிடையே நடந்த கிரிமியாப் போரில் (1853–56) சார்லசு சார்சு கார்டன் (Charles George Gordon) தமது திறமையால் செபசுதபூல் முற்றுகையை வெற்றியுடன் நிறைவேற்றினார். இவர் ஆற்றலைப் போற்றி ஆங்கிலேய அரசு கி.பி. 1859–இல் இவருக்குஇராணுவத்தில் தலைமைப் பதவி அளித்துச் சிறப்பித்தது. அடுத்த ஆண்டில் சீனாவுக்கும் ஆங்கிலேயருக்கும் போர் மூண்டதால், கார்டன் தாமே வலிய வந்து போர் முனைக்குச் செல்ல அனுமதி பெற்றுச் சீனாவில் தீவிரமாகப் போரிட்டு வெற்றிபெற்றார். சீனப் பேரரசனின் கோடைக் கால மாளிகையைத் தாமே முன்னின்று தீக்கிரையாக்கினார் (1860). ஐரோப்பிய வாணிகத் தலமான சாங்கை (Shanghai) உள்நாட்டுப் புரட்சிக்காரர்களால் தாக்கப்பட்டபொழுது, கார்டனின் படை அங்கே சென்று அந்நகரின் பாதுகாப்பை வலிமைப்படுத்தியது (1862). அடுத்த ஆண்டில் 3500 உழவர்களைக் கொண்ட ஒரு புதிய படை இவரால் அமைக்கப்பெற்றது. 'என்றும் வெற்றியே பெறும் படை' (Ever Victorious Army) என அது சொல்லப்பட்டது. சீனாவின் தாய்பிங்குக் கலகத்தை அடக்கியதில் கார்டனின் பங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவர் கி.பி. 1865–இல் இங்கிலாந்து திரும்பியவுடன் மக்கள் இவரைச் 'சீனாவின் கார்டனே வருக வருக' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இவர் கென்ட்டுப் பகுதியில் இராணுவப் பணியுடன், பொறியியற் பணிகளையும், கிறித்தவ சமயத் தொண்டுகளையும் புரிந்துவந்தார். எகிப்து நாட்டுக் கேடிவ் இசுமெயில் பாசா (Kedive Ismail Pasha)சூடான் மாநிலத்தில் உள்ள ஒரு பகுதியில் ஆளுநராகும்படி கி.பி. 1873–இல் கார்டனை அழைத்தார். பிறகு சூடானுக்கே இவர் தலைமை ஆளுநரானார். அப்பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகங்களை இவர் அடக்கி வெற்றி பெற்றார். அங்கு அடிமை வாணிகத்தை ஒழித்த பெருமை இவருக்கு உண்டு. ஓயாது உழைத்ததால் இவர் உடல் நலம் குன்றியது. பதவியிலிருந்து விலகி. கி.பி. 1880–இல் இங்கிலாந்துக்குத் திரும்பினார். உடல்நலம் தேறியவுடன், அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்தியா, சீனா, மொரீசியசு கேப் குடியேற்ற நாடு, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் பணிபுரிந்தார். மீண்டும் இவரை கி.பி. 1884–இல் சூடானுக்கு அனுப்ப அரசு ஆணை பிறப்பித்தது. கார்ட்டூம் பகுதியில் எகிப்தியப் படைகள் புகுந்திருந்ததால், இவர் சேவை அங்குத் தேவைப்பட்டது.



கார்டன், சார்லசு சார்சு

சூடானில் தோன்றியிருந்த மாதி என்ற புதிய தலைவன், கார்ட்டூனைத் தாக்க முற்பட்டான். மீண்டும் தலைமை ஆளுநராகப் பதவி பெற்ற கார்டன், கார்ட்டுமில் தங்கியிருந்தபொழுது புரட்சிக்காரர்கள் கி.பி. 1885-இல் கார்டனையும் அவர்தம் படையினரையும் கொலை செய்தனர். ஆங்கிலேய மக்கள் இதனால் ஆற்றொணாத் துயருற்று, கார்ட்டூம் கார்டன் ஒரு சிறந்த தியாகி என்று புகழஞ்சலி செலுத்தினர். கார்டனுக்கு மற்றய ஆங்கிலேய வீரர்கள் ஒழுங்கான ஒத்துழைப்பைத் தரவில்லை என்று மற்றவர்மீது சிலர் பழியைச் சுமத்தினர். ஆனால், சமாளிக்க இயலாத நிலைமையை உணராமல், அரசாங்க உத்தரவுகளை மீறிப் பிடிவாதமாகக் கார்டன் கார்ட்டுமிலேயே தங்கியிருந்ததால்தான் இவரைப் பகைவர்கள் சூழ்ந்து கொண்டனர் என்ற கருத்தும் நிலவுகிறது. தெ.பா.

**கார்டா ஏரி** இத்தாலிய நாட்டின் மிகப்பெரிய ஏரி. கார்டா ஏரியின் (Garda Lake) பரப்பு 370.4 ச. கி.மீ. இது இலம்பார்டி-வெனீசியா (Lambardy-Venetia) பகுதிகளுக்கு இடையே உள்ளது. இந்த ஏரியின் நீளம் 52 கி.மீ. அதிகப்படியான அகலம் 18 கி.மீ. இதன் ஓரப்பகுதிகளில் திராட்சைத் தோட்டங்களும் மக்கள் வசதிக்காகத் தங்குமிடங்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன. தெ.பா.

**கார்டிபு** வேல்சு நாட்டின் தெற்கில் உள்ள ஒரு பெரிய நகரம். பிரிசுடல் (Bristol) கால்வாயின் அருகில் தாபு (Taff) ஆற்றங்கரையில் விளங்கும் இத்துறைமுகம், மிகுதியான அளவுக்கு நிலக்கரியை ஏற்றுமதி செய்து வருகிறது. கப்பல் கட்டுந்தொழில், உலோக வார்ப்பு வேலை, பொறியியல் தொடர்பான தொழில்கள், எண்ணெய் உற்பத்தித் தொழில் முதலியன இங்கு நடைபெறுகின்றன. கார்டிபுக் (Cardiff) கோட்டை கி.பி. 1090-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது; வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. நிலக்கரியும் இரும்பும் இதற்கு அருகில் கிடைப்பதால் இந்தத் துறைமுகம் சிறப்பு வாய்ந்தது. இந்த நகரம் கி. மு. 55-ஆம் ஆண்டுக்கு முன்பே நிறுவப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. தெ.பா.



கார்டிபு

**கார்டியன் முடிச்சு**: கிரேக்கக் கதைகளின் படி ஆசியா மைனர்ப் பகுதியில் பிரிசியா (Phrigia) நாட்டு மன்னனாகக் கார்டியசு என்ற உழவன் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், அவன் தன்னுடைய வண்டியையும் நுகத்தடியையும் செயூசு (Zeus) கடவுளுக்கு உரிமைப்படுத்தி ஒருவராலும் அவிழ்க்க முடியாத ஒரு முடிச்சைப் போட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. அம்முடிச்சினால் அவனுடைய வண்டியும் நுகத்தடியும் இறுகக் கட்டப்பட்டிருந்தது. இந்த முடிச்சை அவிழ்ப்பவன் உலகை ஆட்சிபுரிவான் என்ற ஒரு நம்பிக்கை மக்களிடையே பரவியது. ஒருவராலும் அம்முடிச்சை அவிழ்க்க இயலவில்லை. மகா அலெக்சாந்தர் இந்நாட்டுக்கு வந்து தமது கத்தியால் அந்த முடிச்சை வெட்டி அவிழ்த்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து விடுவிக்க முடியாத சிக்கலுக்குக் கார்டியன் முடிச்சு (Gordian Knot) என்ற பெயரும், அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு அறுத்தல் (Cutting) என்ற பொருளும் வழக்குக்கு வந்துள்ளன. தெ.பா.

**கார்டிலியர் கழகம்**: பிரஞ்சுப் புரட்சி நடைபெற்ற காலத்தில் தோன்றியதும், குடிமக்கள் உரிமைகள் காப்பதுமான நண்பர்களுடைய கழகம் (Society of the Friends of the Rights of Man and of the Citizen) என்று சொல்லப்பட்டதுமான ஒரு கூட்டம் கார்டிலியர் கழகம் (Club of the Cordeliers) எனப்படும்.

**கழகம் நிறுவப்படுதலும் அதனுடைய செயல்களும்**: பிரஞ்சுத்தேசிய மன்றம் கி.பி.1789-இல் மக்கள் இறைமைக் கோட்பாட்டையும், மக்களுடைய சுதந்திர உரிமைகளையும், சமத்துவத்தையும் (சம உரிமைகளையும்), மக்களுக்கு அரசாங்கம் பொறுப்புடனிருத்தல் வேண்டுமென்ற கருத்தையும், மனித உரிமைகள் அறிக்கையாக (Declaration of the Rights of Man) வெளியிட்டது. அரசாங்கம் அதிகாரத்தைத் தவறாகக் கையாளாமல் அதைத் தடுக்கவும், மனித உரிமை

களை எவரும் மீறாமல் தடுக்கவும் பல சிறு குழுக்கள் பாரிசு நகரத்தில் தோன்றின. அவற்றுள் ஒன்று கார்டிலியர் கழகம் ஆகும். இது கி.பி. 1790-இல் நிறுவப்பட்டது. இது தொடக்கத்தில் பாரிசு நகரத்தில்பிரான்சிசுவழித் துறவிகளுக்கு(Franciscans)உரிய கார்டிலியர் மடத்தில் (Cordeliers) தன் கூட்டங்களை நடத்தியதனால், இது கார்டிலியர் கழகமெனச் சொல்லப்படலாயிற்று. பிரஞ்சுப் புரட்சியை நடத்திய சீன் பால் மாரட்டு (Jean Paul Marat), சியார்சு தாண்டன் George Danton) முதலியோர் இக்கழகத்தின் தலைவர்களாவர். புரட்சியாளர்களின் வன்செயல்களினால் பெரும் அச்சத்துக்குள்ளான பிரஞ்சு அரசர் பதினாறாம் உலூயி, கி.பி. 1791-இல் வாரன்னசு (Varennes) என்ற இடத்துக்குத் தப்பிச் செல்ல, கார்டிலியக் கழகத்தார் கி.பி. 1792-இல் அரசர் ஆட்சியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டுமென்று கோரி, ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தினர். சாம்பு டி மார்சு (Champ-de-Mars) என்ற இடத்தில் அவர்கள் திரண்டு தம் விண்ணப்பத்தை அரசாங்கத்துக்கு அளிக்க முயன்றனர். ஆனால், அந்த ஆர்ப்பாட்டம் அரசாங்கத்தின் தேசிய காவற்படையால் (National Guard) கலைக்கப்பட்டது; வன்செயலின் விளைவாக ஆர்ப்பரித்தோரில் 50 பேர் கொல்லப்பட்டுப் போயினர்; கார்டிலியர் கழகமும் அப்போது கலைக்கப்பட்டது. அவ்வாறிருந்தும்கி.பி. 1792-இல் புரட்சி அரசாங்கம் பிரஞ்சு முடியாட்சியை ஒழித்துவிட்டுப் பிரான்சை ஒரு குடியரசாகநிறுவிய நிகழ்ச்சி, கார்டிலியர் கழகம் மீண்டும்தோன்றுதற்கு வாய்ப்பைத் தோற்றுவித்தது. கழகத் தலைமையைத் தாண்டனும், அவருடைய நண்பர்களும், துறந்து, அதனை மொமோரோ, எர்பர்ட்டு (Momoro, Herbert) முதலியவர்களுக்கு அளித்தனர். முன்னரே பிரஞ்சுக் குடியரசு அரசாங்கத்தை நடத்தி வந்த சிராண்டின் கட்சியாரை (Girondins), ஆட்சியிலிருந்து அகற்றுவதில் எர்பர்ட்டும், மொமோரோவும் பெரும்பங்கு கொண்டனர். புதிய தலைவர்கள் தங்களுடைய நோக்கங்களுக்காக அரசாங்கத்தை எதிர்த்து, கி.பி. 1794-இல் வலிய கலகம் செய்தனர்; ஆனால், அவர்களுடைய முயற்சி வெற்றி அளிக்கவில்லை. எர்பர்ட்டும் அவருடைய நண்பர்களும் சிறை பிடிக்கப்பட்டு மரண தண்டனை அளிக்கப் பெற்றனர். அதற்குப்பிறகு கார்டிலியர் கழகம் மறைந்து விட்டது.

**அரசியற் குறிக்கோள்கள்:** கார்டிலியர் கழகம் தன் ஐந்தாண்டுக் கால வாழ்வில் ஓர் ஆற்றல்மிக்க அரசியற்கட்சியாகச் செயற்பட்டது. அதன் தொடக்கக் காலத் தலைவர்கள் மாரட்டும் தாண்டனும், பிரஞ்சுப் புரட்சித் தலைவர்களாகவும், அரசாங்கத்தின் மேலாளர்களாகவும் இருந்தனர். இக்கழகம் (1) உள்ளாட்சியில் சுதந்திரம் என்ற கொள்கையை ஆதரித்தது. (2) மக்களே சட்டங்களை நேரடியாகச் செய்வதில் ஈடுபடுதல் வேண்டும்; அவர்கள் இப்பணியைச் சட்டமன்றத்துக்கு அளித்தல் கூடாது, அரசாங்கத்தின் பணி மக்கள் இயற்றும் சட்டங்களை நிறைவேற்றுதல் என்ற அளவுக்குத்தான் இருத்தல் வேண்டும். இந்தக் கருத்து உரூசோ கூறிய மக்கள் இறைமைக் கோட்பாட்டிலிருந்து வருவிக்கப்பட்டதாகும். (3) பாரிசு நகர அரசாங்கம் (Paris Commune) தீவிரப் புரட்சிக் கருத்துகளைப் பின்பற்றிக் கடவுள் மறுப்புத் திட்டத்தைச் செயற்படுத்த முனைந்தது. கார்டிலியர் கழகமும் இத்திட்டத்தை ஆதரித்தது. (4) மக்கள் இயக்கத்தை ஆதரிக்கும்பொருட்டுப் 'புரட்சியாளர் படை' (Revolutionary Army) ஒன்று அமைக்கப்படுதல் வேண்டுமென்றும் கார்டிலியர் கழகம் கூறிற்று. இவ்வாறு கார்டிலியர் கழகம் இருந்தாலும், அதனுடைய வரம்பற்ற புரட்சிக் கருத்துகளும், முறைகளும், வல்லந்தச் செயல்களுமே அதற்கு முடிவை அளித்தன. பா.சு.

**கார்டினர், ஏ.சி.** (கி.பி. 1865-1946): இவர் புகழ்வாய்ந்த ஆங்கிலக் கட்டுரை எழுத்தாளர்களுள் ஒருவர். இவருடைய கட்டுரைகள் எளிமையும் கருத்தாழமும் அமைந்தவை.

இவர் 'தினச் செய்தி' (Daily News) என்னும் இதழின் ஆசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். அவ்விதழில் 'ஆல்பா ஆப் தி பிளோ'(Alpha of the Plough) என்னும் புனைபெயரில் பல கட்டுரைகள் எழுதினார்.

இவர்தம் கட்டுரைகள் புகழ்மிக்க கட்டுரையாளர்களான கோல்டுசுமித்து, அடிசன் ஆகியோரின் கட்டுரைகளை நினைவூட்டுவன; அறிவார்ந்த சிந்தனைகளும் மென்மையான நகைச்சுவையும் விரவியன.

இவர் மிக அற்பமான பொருளையும் கருவாய்க் கொண்டு சிறந்த கட்டுரைகளை வரையும் திறன் படைத்தவர். சுவையான நிகழ்ச்சி ஒன்றைச் சொலத் தொடங்கி, அரிய உண்மை ஒன்றைக் கூறி முடிப்பதை இவர்தம் கட்டுரைகளில் காணலாம். சட்டங்களைச் செயற்படுத்துவோர் சூழ்நிலைக்கேற்ப நெளிவு சுளிவுடன் செயற்படுத்தவேண்டும் என்னும்கருத்தைப் பேருந்தில் நாயுடன் பயணம் செய்யும் ஒரு பெண்ணை வைத்து ஒரு கட்டுரையில் (All about a dog) விளக்குகிறார். சிறுசிறு தவறுகள் செய்து, அத்தவறுகளை நியாயப்படுத்த முயலுதல் பெரியவர்களிடமும் காணப்படும் ஓர் இயல்பு என்பதனைத் தம் 'குடை நியாயம்

(On Umbrella Morals) என்னும் கட்டுரையில் எடுத்துக் காட்டுகிறார். தனி மனித சுதந்திரம் எல்லை மீறு மானால் அது சமூகத்தின் சீரான இயக்கத்திற்கு இடையூறாகும் என்பதைச் சாலையில் விருப்பம் போல நடக்க உரிமையில்லையா எனக் கேட்ட ஒரு பெண்மணியின் செயலை வைத்துச் 'சாலை விதி' (On the Rule of the Road) என்னும் கட்டுரையில் விளக்குகிறார். இவ்வகையில் இவருடைய கட்டுரை கள் அரிய கருத்துகளை எளிய முறையில் சொல்லு வனவாக உள்ளன.

தம் காலத்தில் வாழ்ந்த பெருமக்களைக் குறித்த சொற் சித்திரங்களையும் இவர் தீட்டினார். சர் வில் லியம் கார்கோர்ட்டு, சார்சு காட்பரி, சான் பென் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளையும் இவர் எழுதியுள்ளார்.

இவருடைய கட்டுரைகள் 'கடற்கரையில் கூழாங் கற்கள்' (Pebbles on the Shore), 'காற்றில் இலை கள்' (Leaves in the Wind), 'பல சுவடுகள்' (Many Furrows) என்னும் தொகுதிகளாக வெளி வந்துள் ளன. 'மகான்களும் மதகுருக்களும் மன்னர்களும்' (Prophets, Priests and Kings), 'சமுதாயத்தின் தூண்கள்' (Pillars of Society) என்பன இவருடைய புகழ் வாய்ந்த நூல்களுள் சிலவாகும். ந.மெ.

**கார்டோபா** : இசுபெயின் (Spain) நாட்டின் தெற்கில் உள்ள கார்டோபா (Cardoba) என்ற நகர் அம் மாநிலத்தின் தலைநகர். இது குவாடல்குவிர் என்னும் ஆற்றங்கரையில் உள்ளது. பல தொழில்கள் இங்கு வளர்ந்துள்ளன. சிறப்பாக மதுவடித்திறக்கு தல், ஆடை உற்பத்தி, உலோகத்தொழில் முதலி யவை குறிப்பிடத்தக்கன.

இந்நகர் வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஒன் றாகும். ஐபீரியர்களால் தோற்றுவிக்கப்பட்ட இது, உரோமப் பேரரசுக் காலத்திலேயே சிறப்புற்றோங்கி யது. விசிகாதியர், கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இதைத் தம் வசப்படுத்தினர். முகம்மதிய மூரியரின் ஆதிக்கம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கு ஏற்பட்டது. உமையாதுகுல ஆட்சியின் கீழ் இது ஒரு சுதந்திரமான எமிரேட்டின் மையத்தலமாக அறிவிக்கப்பட்டு, கி.பி. 756 முதல் 1031 வரை சிறப் புற்றிருந்தது. அக்கால ஐரோப்பாவிலேயே மிகவும் செல்வச் செழிப்பும் பெருமையும் வாய்ந்த பெரு நகரங்களுள் இதுவும் ஒன்றாக இருந்தது. இங்கு இருந்த கட்டடங்கள் கலைநுட்பம் பொருந்தியவை. இங்குத் தங்கம், வெள்ளி, பட்டு, தோல் முதலிய பொருள்கள் சம்பந்தமான தொழில்கள் நடைபெற்று வந்தன. மூன்றாம் அப்துர் இரகுமான் என்ற அரச னின் கீழ்க் கார்டோபாவின் சிறப்பு அதன் உச்ச நிலையை எய்தியிருந்தது. ஆனால், உமையாதுகுல ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முடிவில் கார்டோபாவின் சிறப்பு குன்றலாயிற்று. கிறித்தவ மன்னர்களின் படை யெழுச்சி அவ்வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும். முகம் மதிய மசூதிகள் கிறித்தவத் திருச்சபைகளாயின. காசுட்டில் மன்னன் மூன்றாம் பெர்டினாண்டு(Ferdinand III of Castile) கி.பி. 1236-இல் இந்நகரை வென் றான். பிறகு கிறித்தவத் திருச்சபைகள் அங்குக் கட் டப் படலாயின.

**கார்டோபா[2]** தென்னமெரிக்காவில் அர்சண் டைனா நாட்டில் உள்ள கார்டோபா மாநிலத்தின் தலைநகருக்குக் கார்டோபா(Cardoba) என்று பெயர். வாணிகத்திற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் இது புகழ்பெற்றது. புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் இந்நகரம் வளர்ச்சி அடைந்துள்ளது. உடல்நலத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், சுற்றுலாப் பொருட்டும் மக்கள் மிகுதியாக இங்கு வந்து போகின்றனர். இந் நகரம் கி.பி. 1573-இல் நிறுவப்பெற்றது. இருப்புப் பாதை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இங்கு அமைக்கப் பட்ட பிறகு இதன் சிறப்பு ஓங்கியது. கார்டோபாப் பல்கலைக்கழகம் (கி.பி. 1613-ஆம் ஆண்டில் நிறுவப் பெற்றது) தென்னமெரிக்காவிலேயே அறிவுத்துறை யில் நிகரில்லாப் பெருமை பெற்று விளங்கிற்று.

**கார்டோபா[3]** மெக்சிகோ நாட்டின் மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள வீரகுருசு (Veracruz) மாநிலத்தின் தலைநகர். சிறந்த வாணிக மையம். காப்பி, கரும்பு, பழவகைகள் முதலியன மிகுதியாக உற்பத்தி ஆகின்றன. சருக்கரை உற்பத்தி சிறப்பான தொழில். இந்நகரம் கி.பி. 1617-இல் நிறுவப்பெற் றது. மெக்சிகோ சுதந்திர உடன்படிக்கை (கி.பி. 1821) இந்நகரில் கையெழுத்திடப்பட்டது. தெ.பா.

**கார்த்த வீரியார்ச்சுனன்** என்பவன் ஆயிரங் கைகளை உடைய புராணத் தலைவன். இவன் வர லாறு மச்சியபுராணம், சிவமகாபுராணம், பாகவதம் ஆகிய புராணங்களில் கூறப்பட்டுள்ளன. இவன் தந்தை கிருதவீரியன்; தாய் சுநந்தை. சூரிய குலத்து ஏகய நாட்டைச் சேர்ந்த கிருதவீரியனின் அருமைப் புதல்வனாகிய கார்த்த வீரியார்ச்சுனன் பிறந்த பொழுது காலில்லாமல் பிறந்தான். இவன்றன் பன் னிரண்டாம் வயதிற்குமேல் தத்திராத்திரேயர் என் பவரால் உபதேசம் பெற்ற பின்னர் இவனுக்கு இரு கால்களும் ஆயிரம் கைகளும் அமைந்தன. இவன் ஆண்ட நகர் மாகிசுமதி ஆகும். இவன் 85000 ஆண்டு

கள் அட்ட சித்திகளும் பெற்று அரசாண்டவன். கார்த்தவீரியன் மிகச் சிறந்த பலமுடையவன். இவன் தன் ஆற்றலால் 'சாம்ராட்' என்ற பட்டத்தையும் பெற்றிருந்தவன்; தேவர் வேண்டத் திருப்பாற்கடல் கடைந்தவன்; பார்க்கவர் என்பவரைக் கோபமூட்டிய தன் விளைவாக இவன்றன் ஆயிரம் கைகளும் அறு படச் சாபம் பெற்றவன்; முப்பத்து முக்கோடி வாழ் நாளும், எக்கோடி யாவராலும் வெல்ல முடியாத வரமும் பெற்ற இராவணனையும் அடக்கியவன்.

இராவணன் இவனை வென்றால் தன் ஆற்றல் சிறக்குமெனக் கருதி, இவனிருந்த இடம் நோக்கிச் சென்றான். அவ்விடத்தில் இவனைக் காணாத இராவணன், ஆற்றங் கரையருகே சிவ பூசை மேற் கொள்ளக் கருதி, அதற்காகப் பூசைப் பொருள்களைப் பரப்பி வழிபாட்டிற்கமர்ந்தான்.

கார்த்தவீரியன் அவ்வேளையில் தன் மனைவிய ருடன் நீராடல் மேற்கொண்டு, பல்வேறு நீர் விளை யாட்டுகளை விளையாடிய வண்ணம் இருந்தான். அவ்விளையாடல்களுள் ஒன்றாகத் தன்னுடைய ஆயி ரம் கரங்களால் நீரைக் கட்டி அணைபோலத் தேக்கி வைத்தான். சற்று நேரம் கழித்துத் தேக்கி யிருந்த அணை போன்ற நீரைவிட்டு விட்டவுடன், அந்நீர் இராவணன் பூசை செய்யும் இடத்தை அடைந்து அவன் பூசைப் பொருள்களை அடித்துச் சென்றது. அதனைக் கண்டு வெகுண்ட இராவணன் கார்த்தவீரியார்ச்சுனனுடன் போர்புரிய வந்தான். கார்த்தவீரியன் அவனைப் பிடித்துச் சிறையிலிட்டான். பின்பு புலத்தியர் வேண்டுகோளின்படி இராவணனைக் கார்த்தவீரியன் சிறைவிடுத்தான்.

திருட்சிதர் என்னும் முனிவர் அருளால் நெருப்புக் கடவுளை ஆயுதமாகப் பெற்ற கார்த்தவீரியார்ச் சுனன் பல முனிவர்களின் ஆசிரமங்களை அழித்து வந்தான். இறுதியாக ஆபசுத்தம்ப முனிவர் தம் ஆசிரமத்தை அடைந்து அவருக்குத் துன்பம் விளை விக்க, அவர் பரசுராமரால் இவன் கழுத்து அற்றுப் போகும்படி சாபமளித்தனர் எனச் சிவமகா புராணம் கூறுகின்றது.

கார்த்தவீரியன் பின்பொரு முறை, சமதக்கினி முனிவரின் பசுவான காமதேனுவைக் கவர்ந்து சென் றான். அதனால், சீற்றமுற்ற சமதக்கினி முனிவர் இவனைக் கொன்றார். முன்பு முனிவர் இட்ட சாபம் இவ்வாறு பலித்தது. இவன் மாண்ட பின்னர், பரசு ராமன் இல்லாதபோழ்து, கார்த்தவீரியன் மக்கள் சமதக்கினி முனிவரைக் கொலை செய்தனர். பரசு ராமன் திரும்பி வருகையில் சமதக்கினி முனிவர் தம் பத்தினி இருபத்தொருமுறை மார்பில் அறைந்து அழுதார். அதன் காரணமாகப் பரசுராமன் கார்த்த வீரியனின் குலமாகிய சூரியகுலத்தை இருபத்தொரு தலைமுறை கருவறுத்தனன். கார்த்தவீரியன் மக்கள் பதினாயிரவரில் இப்போரில் தப்பியவர் சயத்துல சன், வீரசேனன், விருடணன், மதுசூரன் அல்லது ஊர்ச்சிதன் என்னும் நால்வரே ஆவர்.

சிறந்த பேறுகளையும் உயர் வரங்களையும் பெற்றிருந்த கார்த்த வீரியன் என்னும் கார்த்தவீரி யார்ச்சுனன், தன்னுடைய ஆசையினாலும், முனிவரி டம் செருக்குற்று நடந்தமையாலும் வீணாக அழிவுற் றான். அ.கோ.

**கார்த்திகேய முதலியார், மாகறல்**: இவர் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; மாகறல் என்னும் ஊர்ப்பெயரோடு சேர்த்து வழங்கப்பெற்றுள் ளார். செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த வெட்டூர் இவரது ஊராகும் என்று குறிப்பிட்டுள்ள னர். தமிழ்ப்புலமை மிக்க இவர் கிண்டி இறையியற் கல்லூரியில் (Theological College) தமிழாசிரியராகப் பணியாற்றினார். இவர் மொழிநூல் என்னும் மொழி யாராய்ச்சி நூலினை எழுதியுள்ளார். மேலைநாட்டு மொழிகளில் சிறந்து விளங்கிய மொழிநூலாராய்ச்சி, தமிழில் வளர்ச்சியுறாத காலத்தில் அத்துறையில் ஈடு பட்டு நூல் இயற்றியிருப்பது இவர்தம் புலமைத் திறனுக்குச் சான்றாகத் திகழ்கிறது. இவர் எழுதிய மொழி நூல் 1913-இல் எம். எசு. பூரணலிங்கம் பிள்ளையின் ஆங்கில அறிமுகத்துடன் வேப்பேரி விவேகானந்த அச்சகத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. இந்நூலின் மறு அச்சினைத் தஞ்சைத் தமிழ்ப் பல் கலைக் கழகம் வெளியிட்டிருக்கிறது.

இவர்தம் மொழிநூலில் பாயிரவியல், இலக்கண வியல், முதனிலையியல் என்ற மூன்றியல்கள்உள்ளன. மூன்றியல்களிலும் 110 உட்பிரிவுகள் இருக்கின்றன. பாயிரவியல் தமிழின் தொன்மையை விளக்குகிறது. 'தமிழ், உலகில் முதல் முதலுண்டான இயற்கை முதன் மொழி' என்று இவ்வியலில் ஆசிரியர் தெளிவு படுத்தியுள்ளார். இலக்கணவியல் ஒலி, எழுத்துகளின் வரலாறு, இயைபு, சூரியன், மூங்கில் முதலிய சொற் களினின்று உண்டாய சொற்கள் போன்ற பல்வகைக் கருத்துகளை விளக்குகிறது. முதனிலையியல், சொற் பிறப்பைச் செவ்வனே கூறுகிறது. 'சொல்லின் முத னிலையை ஆராய்ந்தால், காரணத்தைக் காண முடி யும்; அதனை ஆராய்ந்து உணர்வதோ அரிது; அதற்கு நாள்கள் பலவாகும்; ஆயினும் ஆராய்ந்து கண்டால் அடையும் இன்பமோ பெரிது' என்றிவ்வாறு முத

னிலையியலின் முதற்கண் இவ்வாசிரியர் ஆசிரியப் பாவில் கூறுகிறார்.

இவர் மேற்கொண்ட மரபைப் பெரிதும் பின்பற்றியே தேவநேயப் பாவாணரின் சொல்லாராய்ச்சி அமைந்தது எனலாம். மாகறல் கார்த்திகேய முதலியாரின் மொழிநூல், தமிழில் மொழியியலாராய்ச்சிக்குப் புதுவழிகாட்டியாகவும் தமிழ்ச் சொற்களின் பொருளை அறிய உதவும் துணையாகவும் விளங்குகிறது. தெ.சொ.

**கார்த்திகை** என்பது நாண்மீனுக்கும், மாதத்திற்கும், விழாவிற்கும் உரிய பெயர். கார்த்திகை என்னும் நாண்மீன் ஆறு நட்சத்திரங்களின் கூட்டம். மேடத்தில் கால் பகுதியும்,இடபத்தில் முக்கால் பகுதியும் அமைந்துள்ள இவ்விண்மீன்கூட்டம் குத்து விளக்குப்போல் காட்சிதரும். மாதத்தில் ஒருமுறை சந்திரன் இம்மீனுக்குப் பக்கத்தில் வரும்பொழுது அந்நாளைக் கார்த்திகை என்றபெயரால் குறிப்பர்.கார்த்திகை நாள் முருகப் பெருமானுக்கு உகந்ததாகக் கூறப்பெறும். முருகன் கோயில் கொண்டு விளங்குகிற இடங்களில் இந்நாளைச் சிறப்புறக் கொண்டாடுவர். அன்று முருகனுக்காக விரதம் இருந்து வணங்கி மகிழ்வர்.

பன்னிரண்டு தமிழ் மாதங்களுள் ஒரு மாதத்தின் பெயராகக் கார்த்திகை குறிப்பிடப்பெறுகிறது. இம் மாதத்தில் முப்பது நாள்களும் சூரியன் விருச்சிக ராசியில் சஞ்சரிப்பார்.இம்மாதத்தில் முழுமதி கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடுகிற நாளைப் பெரிய கார்த்திகை எனக் கூறுவர். கார்த்திகை என்பதற்கு அழல் என்றும் எரி என்றும் ஆரல் என்றும் பெயர்கள் உண்டு. 'அழல்சேர்குட்டம்'எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. 'எரிகடை எழில் வேழம்' (பரி. 11.2) என்னும் இடத்தில் எரி என்பதன் பொருள் கார்த்திகை எனப் பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.ஆரல் மீன் எனக் கார்த்திகைகுறிப்பிடப்படுகிறது.திருவண்ணாமலையில் மலையின் மீது விளக்கேற்றி இந்நாளை மிகச் சிறப்பாகப் போற்றுகின்றனர். இறைவன் ஒளிப்பிழம்பாக நின்று அருளினான் என்பது வழக்கு. அந்நாளில் மலையின் உச்சியில் விளக்கைக் கண்டு வழிபட்ட பின்னரே உணவு கொள்ளுகிற வழக்கமுடையவர்கள் பலர் உள்ளனர். மலை உச்சிகளில் கார்த்திகை விளக்கேற்றும் வழக்கம் உண்டு என்பதைக் 'குன்றத்துச்சிச் சுடர்' (சீவக. 262) என்பதால் அறியலாம். தமிழகத்தில் இவ்வழக்குத் தொன்றுதொட்டு வருகின்றது என்பதனைக் 'கார்த்திகை விளக்கிட்டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்' எனவும். 'நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கில்' எனவும், பண்டை நூல்கள் கூறுவதால் அறியலாம். இந்நாளில் முப்புரத்தவரைச் சிவபெருமான் அழித்த நினைவினைக் கோயில்களில் கொண்டாடுகின்றனர். பனை மட்டைகளால் கட்டப்பெற்ற கூண்டு வடிவமான சொக்கப்பனையைக் கொளுத்தி மக்கள் வழிபடுவது பண்டுதொட்டு இன்று வரை வழக்கமாக இருந்து வருகிறது.

அறுமீன் என்று கூறப்படுகிற கார்த்திகைப் பெண்கள் வளர்த்தமையால் முருகனுக்குக் கார்த்திகேயன் என்று பெயர் வந்தது. சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாகத் தோன்றிய முருகனுக்குக் கார்த்திகைப் பெண்கள் பால்கொடுத்தனர் என்றுபுராணம் கூறுகிறது. சு.சா.

**கார்த்திகை விரதம்**: கார்த்திகை நாளன்று நோற்கப்படும்விரதம் கார்த்திகை விரதம் எனப்படும். இவ்விரதம் பெரும்பாலும் தென்னிந்திய மக்களால் மேற்கொள்ளப்படுகிறது. காரணம்,இது கார்த்திகைப் பெண்கள் அறுவரால் வளர்க்கப்பட்ட முருகனைப் பற்றியது என்பதாகும்.

கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகையில் இவ்விரதத்தை முதன் முதலில் தொடங்கவேண்டும். பின்னர் ஒவ்வொரு கார்த்திகை நாளன்றும் விரதம் மேற்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அனுட்டித்து வரவேண்டும். சிலர் மூன்றாண்டுகள் வரை இருந்து முடித்துக் கொள்வதுமுண்டு.கார்த்திகையின் முதல் நாள் நண்பகல் மட்டும் உண்டு கார்த்திகையன்று, முழுவதும் உண்ணாமல் இருந்து மறுநாள் காலை ஒன்பது நாழிகைக்குள் உணவு உட்கொள்ள வேண்டும்.

இவ்விரத காலத்தில் மேற்கொள்ளவேண்டிய முறை பற்றி ஆகமங்கள் கூறுகின்றன. அவற்றுட் சில பின்வருவன: ஒருகைத் தண்ணீரை மட்டும் உணவாக அருந்துதல் வேண்டும். பாய் முதலியவற்றில் படுக்காமல் தருப்பைப் புல்லைப் பாய் போல் அமைத்து அதில் படுக்கவேண்டும். அதில் துணியோ வேறு எதுவோ இட்டுப் படுக்கக்கூடாது. எக்காரணங் கொண்டும் புணர்ச்சி கூடாது.தொடுதலும் மனத்தால் அவ்வித எண்ணங்களை எண்ணுதலும் கூடாது. கந்த புராணத்தைப் பாராயணம் செய்தல் வேண்டும். கார்த்திகையன்று இரவில் தூங்காமல் கண்விழிக்க வேண்டும்.முருகனைப் பற்றிய தியானத்துடன் இருக்க வேண்டும்.

இவ்விரதத்தை மேற்கொண்டோர் எய்தும் பயன்களைப் புராணங்கள் கூறுகின்றன. நாரதமுனி

வர் இதைப் பன்னிரண்டாண்டுகள் நோற்று,வெள்ளிக் கிழமை விரதத்துக்குக் கூறியது போன்ற விதிமுறை களை மேற்கொண்டு பூசனை செய்து மற்ற எல்லா முனிவர்களுக்கும் மேலான பதவியைப் பெற்றார். அந்தணன் ஒருவன் கார்த்திகை விரதம் நோற்று மனு வேந்தனாகப் பிறந்து உலகத்தை ஆண்டான். மற் றொரு வேதியன் இவ்விரதத்தை நோற்றுத்தான் எண்ணியன யாவும் எய்தப் பெற்றான். இன்றும் இதனைத் தென்னாட்டில் எண்ணற்ற மக்கள் மேற் கொண்டு பயன்பெற்று வருகின்றனர். ஆ.ந.

**கார்த்திகை விளக்கு**: கார்த்திகை என்பது இருபத்தேழு விண்மீன் (நட்சத்திரம்) களுள் ஒன்றின் பெயர். இது ஆறுசிறு மீன் கூடிய தொகுதியாக வானில் தோன்றுவதால் அறுமீன் எனவும் பெயர் பெறும். இது புராண வழக்கில் மிகவும் புகழ் பெற்றது. கார்த்திகை விண்மீன் ஆறையும் மகளிராக உருவகம் செய்து அவர்களால் வளர்க்கப்பட்டவன் முருகன் எனப் புனைந்துரைப்பர். 'அறுவர் பயந்த ஆறமர் செல்வ' என்பது திருமுருகாற்றுப்படை (255). கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் இவன் 'கார்த்திகேயன்' எனப் பெயர் பெற்றான்.

வான்மதி நிறைந்து கார்த்திகை விண்மீனோடு கூடும் நாள் கார்த்திகை என்ற பெயரால் வழங்கப் பட்டது. 'மதிநிறைந்து அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள் மறுகு விளக்குறுத்து' என்பது அகநானூறு.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலந் தொட்டே, கார்த்திகைத் திங்களின் கார்த்திகை நாளன்று வீடுகளிலும் வீதிகளிலும் வரிசை வரிசை யாக எண்ணற்ற விளக்குகளை ஏற்றி வைத்து விழாக் கொண்டாடுதல் தமிழர் மரபாக உள்ளது. அது இன்னமும் தொடர்ந்து வருகிறது. அன்று வீடுகளும் தெருக்களும் ஒளிமயமாகத் திகழும். இதனை, 'இலை யில மலர்ந்த முகையில் இலவம், கலிகொள் ஆயம் மலிபுதொகு பெடுத்த, அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி' (அகம்-11) என அகநானூறும், 'கார்த்திகை சாற்றிற் கழிவிளக்குப் போன்றனவே' (களவழி நா. 17) எனக் களவழி நாற்பதும் சுட்டு கின்றன.

கார்த்திகை நாள் விழா பெண்களுக்கான விழா. அன்று மகளிர் நீராடி, அணிபல புனைந்து கோலமிட்டு, இல்லங்களை அழகுறுத்தி விழா எடுப் பர்; அவலும் வெல்லங்கலந்த பொரியும் வைத்துப் படைப்பர்; கார்த்திகை விரதம் இருந்து முருகனை வழிபடுவர். சிறுவர்கள் கார்த்திகைப் பைகளைச் சுழற்றி வீதிகளில் தீப்பொறிகளைச் சிதறி ஆரவாரித்து மகிழ்வர்; பட்டாசு வெடிகள் வெடிப்பது முண்டு.

தமிழ் மக்களின் பண்டைய விழாவான இது பிற் காலத்தில்புராணத்தோடு தொடர்புபடுத்தப்பட்டது. மாவலிச் சக்கரவர்த்தி சீரும் சிறப்புமாக,இந்திர உல கையும் விஞ்சுமாறு தன் நாட்டை ஆண்டனன். அத னால், தன் உலகின் புகழ் கெடுவதைக் கண்டு வருந் திய இந்திரன் திருமாலை வேண்ட அவர் வாமன வடி வுடன் சென்று மாவலியிடம் மூன்றடி மண் இரந் தார். யார் எது கேட்டாலும், இல்லையென்று மறுக் காத வள்ளல்களுள் ஒருவனான மாவலி 'தந்தேன்' என்றான். திருமால் பேருருக் (விசுபரூபம்) கொண்டு வானுற வளர்ந்து ஓரடியால் விண்ணையும் மற்றோ ரடியால் மண்ணையும் அளந்து, மூன்றாம் அடிக்கு இடம் எங்கே என வினவ, அவன் அதைத் தன் தலை மேல் வைக்குமாறு வேண்டினான். அவ்வாறே அவர் தம் திருவடியை வைத்து அவனைப் பாதலத்தில் அழுத்தினார். மாவலி சாகாவரம் பெற்றவன். 'ஆண்டுக்கு ஒரு முறை ஒளிமயமான என் வள நாட்டை நான்வந்து, கண்ணால் பார்க்க அருள் செய்யவேண்டும்' என அவன் வேண்டத் திருமால் அதற்கிணங்கி அவ்வரத்தைத் தந்தருளினார். கார்த் திகை நாள் அவன்வரும் நாளாகும் என்ற நம்பிக்கை யின் காரணமாக உலகம் விளக்குகளால் ஒளியூட்டப் படுகிறது. அதுவே கார்த்திகை நாள். ஆ.ந.

**கார்த்தேசு** தொன்மை மிக்க நகரம். ஆப் பிரிக்காவின் வடக்குப் பகுதியில் துனிசு(Tunis) வளை குடாவின் கடற்கரையில் இந்நகரம் உள்ளது. இன்று துனிசு நகரத்தின் ஒரு பகுதியாகக் கார்த்தேசு (Carthage) உள்ளது. தையரை (Tyre) மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த பினீசியர் (Phoenician) இந் நகரை மிகச் சிறந்த நகரமாக அமைத்தனர். இந்நக ரத்தின் தெய்வமாகக் கருதப்படும் இளவரசி திதோ (Dido) என்பவள். இந்நகரை கி.மு. 814-இல் நிரு மாணித்ததாக உரோமானிய மரபு வழிக் கதைகள் கூறுகின்றன. திதோ, தையர் அரசர் பிக்மாலின் (Pygmalin) என்பவரின் சகோதரி ஆவள். கார்த்தேசு என்பதற்குப் பினீசிய மொழியில் 'புதிய நகரம்' என் பது பொருள்.

கிரேக்கர்கள் இந்நகரைக் கார்சிதோன் (Karche-don) எனக் கூறினர். உரோமானியர் இந்நகரில் வாழ்ந்த மக்களைப் புயினி (Poeni) என அழைத் தனர். இது பினீசியர் என்பதிலிருந்து மருவி வந்த பெயராகும். இம்மக்கள் பியுனிக்கு (Punic) மொழி யைப் பேசினர்.




கார்த்தேசு

துனிசு வளைகுடாவின் கடற்கரையில் அமைந்திருந்ததால் இந்நகரம் மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்தது. முக்கோண வடிவமுள்ள முந்நீரகப் பகுதியில் சிறிய குன்றுகளுக்கு நடுவில் கார்த்தேசு அமைந்திருந்தது. ஆழமான கடலைப் பெற்றிருந்ததால் கப்பல்கள் நிற்கவும் மீன்களைப் பெருமளவில் பிடிக்கவும் இந்நகரம் வசதியாக அமைந்தது.


கார்த்தேசில் பைர்சா (Byrsa) எனக் கூறப்படும் தொன்மைமிக்க நகர அரணும் பல கல்லறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வரணுக்குத் தென்கிழக்கில் கார்த்தேசிய வளமைக் கடவுளான தானிட்டு (Tanit) என்ற பெண் தெய்வத்திற்குப் பலியாக எரிக்கப்பட்ட குழந்தைகளின் சாம்பல் கிடைத்தது. பினீசிய மக்கள் பயன்படுத்திய பொருள்கள் பலவும் கிடைத்தன. இம்மக்கள் கலை ஆர்வம் குறைந்தவர்களாகவே விளங்கினர்.

இந்நகரம் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் ஆப்பிரிக்கா, சிசிலி, சார்தினியா போன்ற நாடுகளுடன் போரிட்டது. கார்த்தேசின் கடல் ஆதிக்கம் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் விரிவடைந்தது. இந்நகரத்தின் புகழ் மத்திய தரைக் கடலிலிருந்து சிப்ரால்டர் நீர்ப்பிரிவு வரை பரவியது. இக்காலத்தில் வாணிகத்தில் இந்நகரம் சிறந்து விளங்கியது. மேலும், வட ஆப்பிரிக்கா, தெற்கு இசுபெயின் போன்ற இடங்களில் இருந்த வெள்ளிச் சுரங்கங்களின் மூலமும் இந்நகரம் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்தது.

கார்த்தேசு உரோமாபுரியுடன் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து போரிடத் தொடங்கியது.கார்த்தேசிற்கும் உரோமாபுரிக்கும் இடையில் நடந்த முதலாம் பியுனிக்குப் போரில் (Punic wars- கி.மு. 262-242)பலவெற்றிகளும் தோல்விகளும் மாறி மாறிக் கிட்டின. இப்போரில் கார்த்தேசிய வீரன் ஆமில்கார் பார்க்கா (Hamilcar Barca) என்பவன் மிகத் தீரத்துடன் போரிட்டான். இறுதியில் உரோமானியக் கப்பற்படையே வெற்றி பெற்றது. அதனால், இருநாடுகளுக்கும் இடையில் போர் உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வுடன்படிக்கையின் விளைவாகக் கார்த்தேசு உரோமிற்குச் சிசிலியைத் (Sicily) தந்ததுடன் 3200 எடைப் பணத்தைத் (Talent) திறையாகவும் கொடுத்தது.

இரண்டாம் பியுனிக்குப்போரிலும்(கி.மு.218-202) கார்த்தேசு, ஆசுதுருபல் (Hosdrubel), ஆனிபால் (Hannibal) என்ற அரசர்களின் தலைமையில் கலந்து கொண்டது. மிகத் தீவிரமாகப் போரிட்டும் இறுதியில் உரோமானியர் வெற்றி பெற்றனர். கார்த்தேசு நகரம் இறுதியாக மூன்றாம் பியுனிக்குப் போரில் (கி.மு.149-146) முழுவதுமாக உரோமானியர்களால் அழிக்கப்பட்டது.

இந்நகரத்தை மீண்டும் நிருமாணிக்கும்படி உரோமானிய ஆளவை (Senate) கி.மு. 122-இல் கையசு கிராசசு (Gaius Gracchus) என்பவரையும் மார்கசு புல் வியசு பிளாகசு (Marcus Fulvius Flaccus) என்பவரையும் நியமித்தது. ஆனால், இம்முயற்சி வெற்றி பெறவில்லை. சூலியசு சீசர் (Julies Caesar) உரோம் நகரில் நிலமற்றிருந்த மக்களைக் கார்த்தேசில் குடியமரச் செய்தார். அகசுடசு சீசரின்(Augustus Caesar) காலத்தில் கார்த்தேசு, ஆப்பிரிக்காவிலிருந்த உரோமானியப் பகுதிகளுக்குத் தலைமையகமாக விளங்கியது. இவர் காலத்தில் இந்நகரம் கலோனியா சூலியா கார்த்தகோ (Colonia Julia Carthago) எனப் பெயரிடப்பட்டது.



கார்த்தேசு நகரம்

அகசுடசு சீசர் காலத்தில் கார்த்தேசு, அலெக்சாந்திரியா, ஆண்டியோக்கு (Antiock) ஆகிய நகரங்களுக்கு இணையான பெருவளர்ச்சியை அடைந்தது. உரோமானியப் பேரரசர்கள் பலரும் இந்நகரைப் பெரிதும் விரும்பினர். இப்பேரரசின் பிற்காலத்தில் தனது சிறப்பைக் கார்த்தேசு இழக்கத் தொடங்கியது.

கிறித்தவ மதம் கார்த்தேசில் பரவத் தொடங்கியபின் ஆயர் (Bishop) ஒருவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நியமிக்கப்பட்டார். இந்நகரத்தின் கிறித்தவ ஆன்மிக வழிகாட்டிகளாகவும், திருச்சபைகளின் தந்தையராகவும் தெர்துல்லியன் (Tertullian), சைப்ரியன் (Cyprian) போன்றோர் விளங்கினர்.

கெய்சரிக்கு (Gaiseric) என்ற வண்டால்(Vandal) அரசர் கி.பி. 439-இல் இந்நகரத்தின் மீது படையெடுத்து அழித்தார். வண்டாலின் இறுதிஅரசர் செலிமர் (Gelimer) என்பவரைக் கார்த்தேசிற்கு அருகில் உள்ள தெசிமம் (Decimum) என்ற இடத்தில் பிலிசரியசு (Belisarius) என்பவர் தோற்கடித்தார். அரேபியர்கள் கார்த்தேசை கி.பி.698-இல் பைசாண்டியர்களிடமிருந்து கைப்பற்றி அழித்தனர்.

கார்த்தேசில் உரோமானியச் சின்னங்கள் பல அழிந்திருப்பினும் அவற்றின் எச்சங்கள் பல இன்றளவும் உள்ளன. பைர்சா அரண் பகுதியில் உரோமானியத் தெய்வங்களின் (Juno, Jupiter & Minerva) கோயில் ஒன்று உள்ளது. அதன் அருகில் அசிலிபியசு (Asclepius) என்ற தெய்வத்தின் கோயிலும் உள்ளது. இங்கு உரோமானிய வெற்றிச் சிலைகள் பல கண்டெடுக்கப்பட்டன. சு.இரா.

**கார்நாக்கு** மேலை எகிப்திலுள்ள சிற்றூர்; தொன்மைச் சிறப்புடையது. இது அல் கார்நாக்கு (Al-Karnak) என்றும் கூறப்படும். பண்டைய தீப்சு (Thebes) நகரின் வடக்கிலுள்ள இப்பகுதி தொன்மையான அழிபாடுகளைக் கொண்டுள்ளது. இங்கு ஆமோன் (Amon) என்ற தெய்வத்திற்குக் கோயில் உள்ளது. கார்நாக்கில் கி.மு. 3200-ஆம் ஆண்டளவில் இருந்த நாகரிகம் செர்சியன் காலம் (Gerzean Period) எனப்படுகிறது. இங்குப் பல அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வூரின் வடக்குப் பகுதி அக்காலத்தில் நோவி (Nowe) நகரம் எனக் கூறப்பட்டது. இங்குப் பல தொன்மையான கோயில்கள் உள்ளன. இவை எப்டிசோவி (Eptesowe) எனக் கூறப்படுகின்றன. இதற்கு 'இடத்தைத் தேர்ந்தெடு' என்பது பொருளாகும். இவ்வூரின் வடக்குக் கோடியில் 'மான்ட்' (Mant)என்னும் போர்க் கடவுளின் கோயில் அழிபாடுகள் உற்று உள்ளது. தெற்கிலுள்ள கோயில் இலாட வடிவ அமைப்புடைய புனித ஏரி ஒன்றைப் பெற்றுள்ளது. இது 'முத்' (Mut) என்ற பெண் கடவுளுக்காக அமைக்கப்பட்டது. இக்கோயிலும் மிக அழிந்த நிலையில் உள்ளது. இங்குள்ள எகிப்தியர் கோயில்கள் உலகிலேயே மிகப்பெரியனவாக விளங்குகின்றன. இக்கோயில்கள் பல்வேறு காலங்களில் கட்டப்பட்டன. இவை வரலாற்றுக் கருவூலமாகவும் கருதப்படுகின்றன. எகிப்தியப் பேரரசின் வரலாற்றை அறியவும் இவை உதவுகின்றன.



ஆமோன் கோயில்-கார்நாக்கு

கார்நாக்கில் ஏறக்குறைய 10 கோபுர வாயில்கள் உள்ளன. இவை மேற்கிலிருந்து கிழக்காக, வரிசை எண்கள் இடப்பட்டுள்ளன. ஏழு, எட்டாம் கோபுர வாயில்களை மூன்றாம் துட்மோசு (Thutmose III) என்ற அரசரும் அவர் மனைவி ஆட்சிப்சூட்டு, (Hatshepsut) என்பவரும் கட்டினர். ஒன்பது, பத்தாம் கோபுர வாயில்கள் ஓர்ம்கெப்பு (Horemhep) அரசர் காலத்தில் கட்டப்பட்டன.

கார்நாக்கிலுள்ள கோயிலில் மிகச் சிறப்பானது தூண்மண்டபம் ஆகும். இம்மண்டபம் இரண்டாம் கோபுர நுழைவாயிலுக்கும் மூன்றாம் நுழைவாயிலுக்கும் இடையில் முதலாம் இராமசெசுவினால் கட்டப்பட்டது. இம்மண்டபத்தின் பரப்பளவு உலகமக்களை அதிசயத்துக்குள்ளாக்கியது. இம்மண்டபம் முதலாம் செதியினாலும் (Seti I) இரண்டாம் இராமசெசுவி



கார்நாக்கு நடுகற்கள்

னாலும் அழகுபடுத்தப்பட்டது. இம்மண்டபத்தில் மிகப் பெரும் தூண்கள் 14 உள்ளன. அவை ஒவ்வொன்றும் 78 அடி உயரம் உடையவை. இவற்றின் பக்கச் சிறைகளில் 7 வரிசையில் தூண்கள் உள்ளன.

இம்மண்டபத்தின் வெளிப்புறச் சுவரில் வரலாற்றுச் செய்திகள் செதுக்கப்பட்டுள்ளன. செதியின் பாலத்தீன வெற்றியும் இரண்டாம் இராமசெசுவின் காதேசுப் (Kadesh) படையெடுப்பும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கார்நாக்கில் பலநடுகற்கள் உள்ளன.

கார் நாக்குப் பகுதி ஒவ்வோர் ஆண்டும் ஏற்படும் நைல் நதியின் வெள்ளப் பெருக்கினால் அழிந்து கொண்டு வருகிறது. இங்குள்ள கோயில்களைப் பாதுகாக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல புதிய கண்டுபிடிப்புகளும் தொன்மைச் சின்னங்களைச் சீர்செய்யும் பணியும் இங்குத் தொடர்ந்து நடைபெறுகின்றன. சு.இரா.

**கார்நாற்பது**: கடைச் சங்க காலத்து எழுந்த நாலடி நான்மணி முதலான பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் கார் நாற்பதும் ஒன்று. கார் காலத்தில் நிகழும் முல்லை நிலத்தின் உரிப்பொருளை விளக்கி நிற்கும் நாற்பது செய்யுட்களைக் கொண்ட சிறு நூலே இது. ‘அறம் பொருள் இன்பம் அடுக்கித் திறம்பட உரைப்பது கீழ்க்கணக்கு’ என்ற பன்னிரு பாட்டியலின் இலக்கணப்படி திகழ்வது இந்நூல். இன்பத்தைப் பெரிதும் கூறும் இந்நூல் சிறிதே அறத்தையும் பொருளையும் கூறுகின்றது.

இந்நூலை இயற்றியவர் மதுரைக் கண்ணங்கூத்தனார். கூத்தன் என்னும் பெயருடைய இவர் கண்ணன் என்பவருக்கு மகனாதல் வேண்டுமென்றும், மதுரையில் பிறந்ததாலோ வாழ்ந்ததாலோ இறந்ததாலோ இவர் மதுரைக் கண்ணங்கூத்தனார் எனப் பெயர் பெற்றிருக்க வேண்டுமென்றும் கூறுவர். இவரது காலம் கி.பி. 200க்கும் முற்பட்டதென்பர். இந்நூலின் வெண்பாக்கள் ஒரூஉ, எதுகை முதலியன மிகுந்து இன்னிசையாகவும் இருக்கின்றன. பாவின் வகையையும் தன்மையையும் கொண்டு இந்நூல் கி.பி. 5–ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம் என்னும் கருத்தும் நிலவுகின்றது. இந்நூலாசிரியர் கடைச் சங்கப் புலவரெனக் கொண்டால் இவரது காலத்தைக் கி.பி. 2–ஆம் நூற்றாண்டெனக் கொள்ளலாம்.

‘பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்’ என்றும் ‘நாஞ்சில் வலவன் நிறம்போல’

என்றும் இரு உவமைகளை இந்நூலாசிரியர் கையாளுவதா இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் எனக் கொள்ளல் தகுவதாகும். இவர் சமண சமயத்தையோ பௌத்த சமயத்தையோ சார்ந்தவர் என்பதற்குச் சான்றுகள் இல்லை.

இந்நூலின் நாற்பது செய்யுள்களும் அகப்பொருளின் பகுதியாகிய முல்லைத் திணையின் பாற்பட்டன. காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லையாம். இம்முல்லைத் திணைக்கு உரிய பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமுமாகும். ஓதல், பகை, தூது, பொருள் ஆகிய ஒன்றின் நிமித்தத்தால் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைமகன் கார்காலத்து வருவேன் எனச் சொல்லிச் சென்றான். அவ்வாறு சொல்லிய கார்காலமும் வர அவன் வந்தானில்லை. அதுகாறும் ஆற்றியிருந்த தலைவிக்கு ஆற்றாமை மிக்கது. அவ்வாறு ஆற்றுதலும் ஆற்றாமையும் ஒன்றையொன்று விஞ்சி நிற்கும் நிலைமையே தலைமகளின் அன்பின் பெருமையையும் கற்பின் திண்மையையும் விளக்கி நிற்கும் கருவியாம். இத்தகு ஆற்றுதலும் ஆற்றாமையுமாகிய பண்புகள் தலைவியின்பால் கார்காலத்தே நிகழ்வதாலும், நூலின் ஒவ்வொரு செய்யுளும் கார் வரவைக் கூறுவதாலும் இந்நூலுக்கு இப்பெயர் வந்தது. கார்காலச் சிறப்பினைத் தனிப்படக் கூறினால் நலம் பயப்பதாகாது என நினைத்த கண்ணங்கூத்தனார் முல்லைநில ஒழுக்கமாகிய ஆற்றியிருத்தலை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சி ஒன்றின்மேல் காரின் சிறப்பை அமைத்துச் சுவைபடப் பாடினார் எனலாம்.

இந்நூலின் நாற்பது செய்யுள்களும் தோழி கூற்றாகவும் தலைவன் கூற்றாகவுமே அமைந்துள்ளன. தோழி, தலை மகட்குப் பருவங் காட்டி வற்புறுத்தது என்னும் துறையில் நான்கு செய்யுள்களும், பருவங் கண்டு அழிந்த தலைமகள் ஆற்றல் வேண்டித் தோழி தனது ஆற்றாமை தோன்ற உரைத்தது என்னும் துறையில் நான்கு செய்யுள்களும், தோழி பருவங் காட்டித் தலைமகளை வற்புறுத்தது என்னும் துறையில் பதினாறு செய்யுள்களும், வினைமுற்றிய தலைவன் பாகற்குச் சொல்லியது என்னும் துறையில் எட்டுச் செய்யுள்களும், வினை முற்றிய தலைவன் நெஞ்சொடு சொல்லியது என்னும் துறையில் நான்கு செய்யுள்களும், ஊடுதலால் பசலை மிகும் எனத் தோழி தலைமகட்குக் கூறி வற்புறுத்தது என்னும் துறையில் ஒரு செய்யுளும், தலைவர் பொய்த்தாரெனக் கூறித் தோழி தலைவியை ஆற்றுவித்தது என்னும் துறையில் இரண்டு செய்யுள்களும், பருவம் வந்தமையால் தலைவர் வருதல் ஒரு தலையெனக் கூறித் தோழி தலைமைகளை ஆற்றுவித்தது என்னும் துறையில் ஒரு செய்யுளும் ஆக நாற்பது செய்யுள்களும் எட்டுத் துறைகளில் அமைந்துள்ளன.

தலைவன் தலைவியைப் பிரிதலும், பிரியப்பட்டவள் ஆற்றியிருந்து பின்னர்ப் பேதுறுதலும், கார் காலம் வருதலும் தலைவி ஆற்றாமையுற்றுக் கண்ணீர் வடித்தலும், அவளைத் தோழி தேற்றி ஆற்றியிருக்கச் செய்தலும், வினைமுற்றிய தலைவன் கார் காலம் வந்துவிட்டதெனக் கருதித் தலைவியின் நினைவோடு விரைந்து திரும்புதலும், உறுதியாகத் தலைவன் வந்துவிடுவான் எனத் தோழி தலைவிக்கு நம்பிக்கையூட்டுவதும் ஆகிய அகப்பொருள் நிகழ்ச்சிகள் ஓர் இனிய நாடகம் போன்று அமைந்து கற்பார்க்கு இன்பத்தை ஊட்டுகின்றன.

ஞாயிற்றின் வெம்மை குறைவதும் மழை பொழிவதும் காடெல்லாம் அரும்புகள் தோன்றுவதும் எழில் வானம் மின்னுவதும் ஆகியவெல்லாம் கார்கால நிகழ்ச்சிகள். ஆனால், ஆற்றாது துன்புற்றிருக்கும் தலைவிக்கு அவ்வெழில் வானம் மின்னி மழையைக் கொட்டுவது பிரிந்து சென்றவர் இப்போதே வருவார் என்று தூது உரைப்பது போன்று அமைந்துள்ளது என்பது நயமிக்க பகுதியாகும்.

தலைவனின் தேர் திரும்பி வரும் வழியெல்லாம் முல்லையின் அரும்புகள் கூர்மையுற்றுத் திகழ்கின்றன. இக்காட்சி அழகிய நறுநுதலையும் மழைத் தடங்கண்களையும் சின்மொழியினையும் கொண்ட தன் தலைவியின் வாயின் கண்ணுள்ள கூரிய பற்களை அவனுக்கு நினைவூட்டுகின்றன. எனவே, இயல்பாகவே விரைந்து திரும்பும் தலைவனுக்கு முல்லை அரும்பி நிற்கும் காட்சி மேலும் விரைவினைத் தந்து அவளை அடைய உதவுகின்றது.

இந்திர கோபம் பரந்திருக்கும் காட்சி பவளம் சிதறியதைப் போன்றுள்ளதென்பதும், காயாமலர் அஞ்சனம் தோய்த்தாற் போலும் என்பதும், கருவிளம் பூக்கள் கண்மலர் பூத்தன போலும் என்பதும், இருங் கொண்மூ நெய்யணி குஞ்சரம் போன்றது என்பதும் காடுகவின் பெற்றது செல்வர் மனம்போல என்பதும், காடு பூத்தது நல்லார் இளநலம் போன்றும் வளமுடையார் ஆக்கம்போன்றும் உள்ளது என்பதும் போன்ற உவமைகள் எண்ணி இன்புறற்பாலன. முல்லை நிலக் கருப்பொருள்கள் பாடல்தோறும் பயன்பட்டுள்ளன. கார்த்திகையில் விளக்கேற்றும் வழக்கம் உண்டென்பதை இந்நூலால் அறியலாம். மாயோன், பலராமன் ஆகியோரைப் பற்றிய செய்திகளும், வேள்வித் தீ பற்றிய குறிப்பும் இந்நூலுள் உள்ளன. சுருங்கக் கூறின், கார்காலச் சிறப்புகளையெல்

லாம் நயத்துடன் பாட்டில் இணைத்துக் கூறியிருப்பது சிறப்புடைத்தாகும். சு.ப.கோ.

**கார்பண்டேரியா வளைகுடா:** பசிபிக்குமாக் கடலைச் சேர்ந்த அரபுராக் கடலின் ஓர் உட்பகுதியாக உள்ள இந்த வளைகுடா ஆசுத்திரேலியாக் கண்டத்தின் வடகிழக்கில் உள்ளது. இதன் அகலம் 490.7கி.மீ; நீளம் 595.3 கி.மீ. இதனால் ஏற்படுத்தப் பட்டுள்ள கரையோர உள்வளைவு 310,000 சதுர கி.மீ. பரப்பை உடையதாக இருக்கிறது. பல நூற்றாண்டுகளாகக் கார்பண்டேரியா வளைகுடா (Carpentaria, Gulf of) கவனிப்பாரற்றுக் கிடந்தது. அறுபதுகளிலும் எழுபதுகளிலும் (1960-69, 1970-79) இங்கு அலுமினியத்திற்குரிய மண் பெருமளவில் இருப்பதாக அறியப்பட்டதால், உலகின் பல நாடுகள் இப்பகுதிக்குச் சிறப்பு அளிக்கத் தொடங்கின. மேலும், கண்ணாடி செய்வதில் பயன்படும் கருநிறக் கனிப்பொருளான மங்கனமும் இங்குக் கிடைக்கிறது. இதன் காரணமாக இங்கு அறிவியல் ஆராய்ச்சிக்கு மிகுதியான ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. தெ.பா.

**கார்பூ:** இது கிரீசு நாட்டுக்கு வடமேற்கில் உள்ள மலைப்பாங்கான ஒரு தீவு. இதன் பரப்பளவு 1 ச.கி.மீ. அயோனியன் கடலில் உள்ள இது அயோனியத் தீவுகள் யாவற்றிலும் இரண்டாம் பெரிய தீவு. ஒரு குறுகிய கால்வாய் இதை அயபானிய, கிரேக்கக் கடற்கரைகளின்று பிரிக்கிறது. ஒலிவ எண்ணெய், அத்திப்பழம், மது முதலியன இங்கு மிகுதி. மீன்பிடித்தல் மக்களின் முக்கிய தொழில், இத்தீவின் தலைநகரின் பெயரும் கார்பூ (Corfu). காரிந்தியக் குடியேற்ற மக்கள் கி.மு. 730-இல் இங்கே தங்கிக் கொண்டு, தாய்நாடான காரிந்துடனேயே போரிட்டு ஆதிரயாடிக் கடலில் ஆதிக்கம் பெற முற்பட்டனர். அவர்களிடையே கி.மு. 665-இல் ஒரு பெரும் கடற்போர் நடந்தது. ஏதென்சு அரசுடன் கார்பூ கி.மு. 433-இல் உடன்படிக்கை செய்து கொண்டது. இந்த உடன்படிக்கை கி.மு. 431-இல் ஏற்பட்ட பெலப்பொனீயப் போருக்கு ஒரு காரணமாயிற்று. இத்தீவு கி.மு. 229-இல் உரோமானியர் வசமாகியது. இது கி.பி. 336-இல் பைசாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாயிற்று. இதனை கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சிசிலிய நார்மானியர் கைப்பற்றிக் கொண்டனர். வெனிசு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இதை வென்றது. பிறகு எபிரசு நாட்டின் ஆட்சி இங்கு ஏற்பட்டது. வெனிசு மீண்டும் கி.பி. 1386-இல் இதைக் கைப்பற்றிக் கொண்டது. வெனிசு நாட்டு ஆட்சியின் கீழ், இத்தீவில் ஏற்பட்ட துருக்கியப் படையெழுச்சிகளைக் கார்பூ மக்கள் முறியடித்து வெற்றி கொண்டனர். இத்தீவு கி.பி. 1815-முதல் 1864 வரை, பிரிட்டனின் காப்பாட்சிக்கு உட்பட்டிருந்தது. இது கி.பி. 1864-இல் கிரீசுக்கு வழங்கப்பெற்றது. தெ.பா.

**கார்பேத்தியன் மலைகள்:** மத்திய கிழக்கு ஐரோப்பாவில் பிறை வடிவமாக உள்ள மலைத் தொடருக்குக் கார்பேத்தியன் (Carpathian) மலைகள் என்று பெயர். இது அண்மைக்கால மண்ணியல் அமைப்பு என்று கருதப்படுகிறது. இம்மலைகளில் மிகவும் உயரமானது கெர்லாக்கு (Gerlach) என்று கூறப்படும் 8,711 அடி உயரமுள்ள மலையாகும். இம் மலைத் தொடர், செகோசுலோவாகியா, போலந்து, அங்கேரி, உருமேனியா, உருசிய சோவியத்து ஒன்றியம் ஆகிய நாடுகளின் சில பகுதிகளில் படர்ந்துள்ளது. கார்பேத்தியன் மலை மக்களும் மேற்கூறிய பல்வேறு இனங்களின் கலப்பாகவும் பல்வேறு மொழிகள் பேசுவோராகவும் உள்ளனர். இம்மலைவாழ் மக்கள், பொருளாதாரத் துறையில் சிறப்புப் பெற்றிருப்பதுடன் சுற்றுலா வளர்ச்சித் தொழில், தாதுப் பொருள்கள் தொழில் முதலியவற்றிலும் ஈடுபட்டுள்ளனர். தெ.பா.

**கார்மண்டலசதகம்.** அவிநாசி ஆறைகிழார் பாடியது. இவர் ஊர், அவிநாசியைச் சூழ்ந்திருந்த ஆறை என்னும் பகுதியிலுள்ள ஆறைநாடெனும் ஊராகும். இவர் ஆசிரியர், மேல்கோட்டை நாராயண புரத்தைச் சார்ந்த மாதவயோகி என்பவராவார். இந்நூல், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சதக இலக்கியங்களுள் முதல் நூலாகத் தோன்றியது. இதில் காப்பும் கடவுள் வாழ்த்தும் அவையடக்கமாக ஐந்து பாடல்களும் அமையச் சதகம் என்பதற்கேற்ப நூறு பாடல்கள் உள்ளன. இதற்குக் காழி வித்துவான் ப.அ. முத்துத் தாண்டவராயபிள்ளை உரையெழுதியுள்ளார்.

கார்மண்டலம், காவிரி பிறக்கும் இடத்திலிருந்து சோழ நாட்டின் உய்யக்கொண்டான் வளநாடு வரை தன்னகத்தே கொண்டது. இதனைக் 'கருநாடு', 'கருநாடகம்' என்றும் கூறுப. கிழக்கெல்லை மாபலிவாணர் நாடும் தொண்டைநாடும் என்றும், மேற்கெல்லை குடகடல் என்றும், தெற்கெல்லை கொங்குநாடு என்றும், வடக்கெல்லை பல்லவ நாடும் கடம்ப நாடும் என்றும் இந்நூல் கார்மண்டலத்தின் எல்லையை வரையறுக்கிறது.

கார்மண்டல சதகம், தன் பெயருக்குப் பொருந்துமாறு வேளாளர்களையும் அவர்களின் வகைகளையும் அவர்கள் உழவினால் உலகம் பேணுதலையும் பாடுகிறது. இந்நிலப்பகுதியில் வாழ்ந்த கண்மூரக் கோப்

பெருநற்கிள்ளி, எவ்வி, நன்னன், வேண்மான், எருமையூரன் போன்ற தலைவர்களையும் அரிசில் கிழார், கூடலூர்கிழார், உமட்டூர்க்கிழார், வெள்ளி வீதியார், பொதும்பில் கிழான் வெண்கண்ணனார் போன்ற புலவர்களையும் குடகுமலை, சிவசமுத்திரம் அருவி, திருவேரகம், குவளாலபுரம் ஆகியனவற்றை யும் இந்நூல் புகழ்ந்துரைக்கின்றது.

இச்சதகம் ஆசிரியவிருத்தப்பாவால் அமைந்தது. ஒவ்வொரு பாடலும் 'காராளர் மண்டலமே' என்ற மகுடத்துடன் முடியும். இந்நூலைப் பின்பற்றி நிலப் பகுதிகளைப் புகழும் கொங்குமண்டல சதகம், தொண்டைமண்டல சதகம் போன்றவை எழுந்தன. இவற்றையெல்லாம் 'மண்டலசதகம்' என்று வகைப் படுத்தலாம்.

இப்போக்கிலிருந்து மாறுபட்டு அறக்கருத்து களையோ பழமொழிகளையோ புராணக் கதை களையோ இறைவனைப் போற்றியோ பாடப்பெற்ற சதகங்கள் பிற்காலத்தில் தமிழில் மிகுதியாகத் தோன்றின.

தெ.சொ.

**கார்மண்டலம்**: பழங் காலத்திலிருந்தே மக்க ளின் நலத்திற்காகத் தமிழ்நாடு சில பெரும் பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு, மன்னராட்சிக்குட்பட்டிருந் தது என்பது வரலாறு. தொல்காப்பியப் பொருளதி காரச் செய்யுளியலில் தமிழ்நாடு 'நாற்பெய ரெல்லை யகம்' எனக் குறிக்கப்பெறுகிறது. நச்சினார்க்கினி யர் தரும் உரைவிளக்கத்தால், நாற்பெயரென்பது மலைமண்டலம், சோழமண்டலம், பாண்டியமண்ட லம், தொண்டைமண்டலம் ஆகியவற்றைக் குறிக்கும் என்பது பெறப்படும். நச்சினார்க்கினியர் உரைக் கின்ற மலைமண்டலத்துள்ளே கார்மண்டலம் அடங் கும். இந்நாட்டில் மலைநாடு என்றும் வெளிநாடு என்றும் இருபகுதிகள் முறையே மேற்கிலும் கிழக் கிலுமாக உள்ளன. கார்மண்டலத்தின் எல்லையைத் தம் 'கார்மண்டல சதகத்'தில் வரையறுத்துப் பாடு கிற புலவர் ஆறைகிழார், இதில் மலைநாடு, கரு நாடகம் என்னும் இரு பிரிவுகள் உள்ளமை பற்றிக் குறிக்கிறார். மேலுமவர் நாட்டின் கிழக்கெல்லை யாக மாபலிவாணர் நாடும் தொண்டைநாடும், தெற்கெல்லையாகக் கொங்கு நாடும், மேற்கெல்லை யாகக் குட கடலும், வடக்கெல்லையாகப் பல்லவ நாடும் கடம்ப நாடும் அமைந்துள்ளதையுங் கூறு கிறார். இதன் ஒரு பகுதியே 'கருநாடு', 'கருநாடகம்' என்று பிற்காலத்தில் வழங்கப்படுவதாகும்.

கார்மண்டலத்திலுள்ள குடகு, நந்தி முதலிய மலைகளில் தோன்றும் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வடபெண்ணை என்னும் ஆறுகள் பிற நாடு களிலும் பாய்ந்து அவற்றையும் வளம்பெறச் செய் கின்றன. 'சாற்றானவிர் சிவசாகரம்' என்று பாராட் டப்படும் சிவசமுத்திர நீர்வீழ்ச்சியையும் இம்மண்ட லத்தில் காணலாம். இப்பகுதியிலே காணப்பெறும் திருவேரகமலையே திருமுருகனது படைவீடாகும் என்றும், சுவாமிமலையைத் திருவேரகமெனக் குறிப் பது சரியன்று என்றும் சிலர் கருதுவர். இயற்கை வளமுள்ள இம்மண்டலத்தில் தாவரங்கள் செழித்துக் காணப்படுகின்றன. இங்குச் சிறப்பாகச் சந்தனம் தேக்கு நூக்கு முதலிய உயர்ந்த மரங்கள் மிகுதியாக உள்ளன. தொன்றுதொட்டே இம்மண்டலம் வேளாண்மைக்குப் பெயர்பெற்று வந்துள்ளது. பொன், மங்கனம், (Manganese) முதலிய கனிமப்பொருள் களும் இங்குக் கிடைக்கின்றன.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மக்களின் வாழ்க்கையடையாளங்கள் சந்திரவல்லி பிரம்மகிரி முதலிய இடங்களில் கிடைக்கின்றன என்பர். கற் காலம், வெண்கலக்காலம், செப்புக்காலம் ஆகியவற் றின் அறிகுறிகளான படிகக்கல், தீக்கல் முதலியவற் றாலான கருவிகளும் மட்பாண்டங்களும் கிடைக் கின்றன. தொதவர், புலையர், முதுவர் முதலிய ஆதி வாசிகள் இன்றும் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

வரலாற்றுக் காலத்தில் இந்நாடு பல அரச பரம் பரைகளின் ஆட்சிக்குட்பட்டு வந்துள்ளது. துவாபர யுகத்தில் கண்ணன் வழிவந்த மன்னர்களையும் பதி னெண்குடி வேளிரையும் வடநாட்டிலிருந்து கார் மண்டலப் பகுதியிலுள்ள துவராபதிக்கு அகத்தியர் அழைத்து வந்து பல இடங்களில் குடியமர்த்தினார் என்ற வரலாற்றுக் குறிப்பினை நச்சினார்க்கினியர் தந்துள்ளார். அவர்களுள், இலக்கியத்தில் வரும் இருங்கோவேளும் ஒருவன் என்பர். மௌரிய மன்னன் சந்திரகுப்தன், பத்திரபாகு என்னும் முனிவருடன் வெண்குளமாகிய சிரவணபௌகொள எனுமிடத் திற்கு வந்து தம் இறுதிக்காலத்தைக் கழித்தானெனச் சமணர்கள் கூறுகின்றனர். கார்மண்டலத்தைச் சேர்ந்தவர்களாகவே தகடூர் அதிகன் என்னும் மன்ன னும், தோட்டிமலையை யாண்ட கண்டீரக் கோப் பெரு நற்கிள்ளியும் கருதப்படுகின்றனர். அசோகன் காலத்தில் இம்மண்டலம் சத்தியபுத்திரர் என்னும் வாய்மொழிக் கோசரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அசோகனுடைய விளம்பரங்களைச் சித்தாபுரம் என்னுமிடத்தில் காணலாம். தகடூர், தழைக்காடு, குவளாலபுரம் முதலிய வரலாற்றுச் சிறப்புடைய ஊர்கள் இம்மண்டலத்தில் உள்ளன.

கார்மண்டலத்தில் வாழ்ந்த பெரும்புலவர்களுள் அரிசில்கிழார், உமட்டூர்க் கிழார், உம்பற்காட்டிளங்

கண்ணனார், குன்றம்பூதனார், கூடலூர் கிழார், நல்லூர் கிழார், பெருங்குன்றூர்க்கிழார், பொதும்பிற் புல்லாளங் கண்ணியார், நொச்சிநியமங்கிழார், வெள்ளிவீதியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் என்பது கூறப்படுகிறது.

வரலாற்று ஏடுகளால் பாண்டியர், சோழர், கங்கர், பல்லவர், ஆந்திரர் (சாதவாகனர்), கடம்பர், சாளுக்கியர், இராட்டிரகூடர், ஒய்சளர், மகாராட்டிரர், இசுலாமியர், விசயநகர மரபினர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய பலர் இந்நாட்டின் பகுதிகளில் ஆண்டு வந்தனர் என்பதை யறியலாம். பல அரசாங்கங்களால் அழகுக் கலைகள் சிறப்பாகப் போற்றப்பெற்றன. ஒய்சளர் காலத்தில் பேலூர், அளெபீடு ஆகிய இடங்களிலுள்ள கோயிற் சிற்பக் கலைச்செல்வங்கள் கார்மண்டலமாகிய நாட்டுக்கு உலகப் புகழ் தேடித்தந்துள்ளன. செ.வை.

**கார்மேகக் கோனார், ஆ**: இவர் இராமநாதபுரம் மாவட்டம் அகத்தாரிருப்பு என்னும் ஊரில் ஆயர்பாடிக் கோனாருக்கும் இருளாயி அம்மாளுக்கும் கி.பி. 1889-இல் மகனாகப் பிறந்தார். இவர் உடன் பிறந்த ஆடவர் இருவர்; பெண்டிர் நால்வர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கல்வி கற்றார். தமிழார்வம் மிக்கவரான இவர் நூல்களிலுள்ள மிக நுட்பமான கருத்துகளை உணர்ந்து பயிலும் இயல்புடையவராக விளங்கினார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவர் இவரை ஆதரித்தார்.



கார்மேகக் கோனார்

இவர் 1912-இல் பத்மாசினியம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு மூன்று ஆண்மக்களும் நான்கு பெண்மக்களும் பிறந்தனர்.



இவர் ஆழ்ந்த சங்க நூற்பயிற்சி, சொல்வன்மை, அஞ்சாது உண்மை உரைக்கும் நெஞ்சத்துணிவு ஆகிய பண்புகளைப் பெற்றிருந்தார். இளம் வயதிலேயே இவர் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். இவர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் 37 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் கறுப்பு மேலங்கியணிந்து, நெற்றியில் திருமண் இட்டு, எடுப்பான மீசையுடன் தோற்றமளிப்பார். இவர் பணியேற்ற காலத்தில் தமிழ்மொழி என்றாலும் தமிழாசிரியர் என்றாலும் மாணவர்களும் மற்றவர்களும் மதிக்காத காலமாக இருந்தது. அந்தக் காலத்திலேயே அனைத்து மாணவர்களும் இவருடைய வகுப்பில் அமைதியாகவும் ஆர்வமாகவும் பாடம் கேட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் 1920-இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 'மலைபடு கடாம்' என்னும் நூல் பற்றி ஓர் ஆராய்ச்சிச் சொற்பொழிவை நிகழ்த்தினார். அவ்விழாவில் கலந்துகொண்ட டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் 'இந்த இளைஞரான தமிழாசிரியர் கடினமான சங்கச் செய்யுள்களில் புகுந்து இத்தகைய ஆராய்ச்சித் திறன் நிறைந்த சொற்பொழிவு நிகழ்த்தியது மிக உவப்பும் வியப்பும் பயப்பதாயுள்ளது; இவரது சொற்பொழிவை இவர்தம் தந்தையார் இங்கிருந்து கேட்பின் பெரிதும் உவப்புறுவர்' என்று பாராட்டினார்.

இவர் கண்ணகிதேவி, ஆபுத்திரன் வரலாறு, காப்பியக் கதைகள், பாண்டியன் நெடுஞ்செழியன், மலைபடுகடாம் ஆராய்ச்சி, மதுரைக் காஞ்சி ஆராய்ச்சி, புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி, ஒட்டக்கூத்தர் மூவருலாவைப் பற்றிய ஆராய்ச்சி, கூலவாணிகன் சாத்தனார் ஆராய்ச்சிக் கட்டுரை, நளவெண்பாவின் முதற்பகுதிக்கு விருத்தியுரை, களவழியிற் குறித்த கழுமலம் ஆராய்ச்சி, குறுந்தொகையில் ஒரு பாட்டின் உரை ஆராய்ச்சி, திருவள்ளுவரும் திருக்குறளும் ஆராய்ச்சி, தமிழ்மொழியின் மறுமலர்ச்சி முதலிய நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய 'நல்லிசைப் புலவர்கள்' என்ற நூல் இவரது ஆராய்ச்சி வன்மைக்கும் திறனாய்வுத் திறமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவருக்கு மதுரைத் திருவள்ளுவர் கழகம் செந்நாப்புலவர் என்ற சிறப்புப் பட்டம் அளித்துப் பாராட்டியது. இவர் 1957-இல் மதுரையில் காலமானார். கி.ஓ.

**கார்லசுருகே**: மேற்குச் செருமனியின் தென் மேற்குப் பகுதியில் உள்ள இந்நகரம், பொருளாதாரத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் சிறப்புப் பெற்று விளங்

குகிறது. இதைச் சுற்றியுள்ள மாநிலத்தின் பெயர் பேடன் வெர்ட்டன்பர்கு. இதற்குத் தெற்கில் கருங் கானகம் (Black Forest) காணப்படுகிறது. அண்மை யில் உள்ள இரைன் ஆற்றுடன் ஒரு துறைமுகம் மூல மாகவும், கால்வாய் மூலமாகவும் இந்நகரம் இணைக் கப்படுகிறது. செருமானியக் கூட்டாட்சி அரசின் அர சியல் அமைப்புச் சட்ட நீதிமன்றம் இந்நகரில்தான் விளங்குகிறது. இங்கு உற்பத்தியாகும் பொருள்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை, ஆடை வகைகள், அணிகலன்கள், மருத்துவப் பொருள்கள், இயந்திர வகைகள், சுத்தம் செய்யப்பட்ட எண்ணெய் ஆகிய னவாம்.

கார்லசுருகே (Karls-Ru-He) கி.பி. 1715-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பெற்றது. இது கி.பி. 1771க் குப்பிறகு ஒரு குறுநிலப்பகுதியின் தலைநகராயிற்று. பிறகு பேடன் மாநிலத்தின் சிறப்புத் தலைநகரா யிற்று. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் இப் பழைய நகரம் பல அழிபாடுகளுக்கு உட்பட்டது. இந் நகரம் 1945க்குப் பிறகு மீண்டும் சீர்திருத்தி அமைக் கப்பெற்றது. தெ.பா.

**கார்லிசுட்டுப் போர்கள்**: ஐரோப்பிய வரலாற் றில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில், ஆசுத்திரியப் பேரரசின் பெருந் தலைவனாக ஐந்தாம் சார்லசு என்பவன் அமர்ந்திருந்தான். அவனுடைய ஐரோப் பியப் பேரரசு பரந்து விரிந்திருந்தது. பல நாடுகள் அதற்கு உட்பட்டன. அவனுக்குப் பகையாக பிரான்சு நாட்டின் மன்னன் முதலாம் பிரான்சிசு என்பவன் தன்னுடைய ஆதிக்கத்தை இயன்றவரை ஐரோப்பாவில் பரப்ப முயன்றான். இப் போட்டியின் விளைவாக, இரு பேரரசர்களுக்கு மிடையே பல போர்கள் நிகழ்ந்தன. இந்த மரபு உரிமைப் போர் களுக்குக் கார்லிசுட்டுப் போர்கள் (Charlist Wars) என்று பெயர். இப் போர்களினால் மிகவும் சலிப்படைந்த சார்லசு தன் பதவியையே துறந்து விட்டான். இந்த நிகழ்ச்சி நடந்த கி.பி. 1555-ஆம் ஆண்டில் கார்லி சுட்டுப் போர்களும் ஒருவாறு முடிந்தன. தெ.பா.

**கார்லே** என்பது மகாராட்டிர மாநிலத்தில் பம்பாய்-பூனா சாலையில் பூனாவிலிருந்து 56 கி.மீ. தொலைவில் உள்ளதோர் ஊர். பௌத்த மதக் குடை வரைகளுக்கு இவ்வூர் புகழ்பெற்றது. இங்குள்ள மலை யில் ஈனயானப் (Hinayana) பிரிவைச் சார்ந்த நான்கு குடைவரைகள் உள்ளன. இக்குடைவரைகள் யாவும் சாதவாகன மரபினரின் கலைத்திறனுக்குச் சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. கார்லே (Karle) குடைவரைகளுள் முதல் குடைவரை பெரிய சைத்தி யத்தைக் (Chaitya) கொண்டுள்ளது. இக்குடைவரை யில் பல அழகிய சிற்பங்களும் உள்ளன. குடைவரை யின் நுழைவாயிலுக்கு இடப்பக்கம் ஒரு பெரிய தூண் காணப்படுகிறது. இத்தூணின் உச்சியில் சாரநாத்துக் கற்றூணில் உள்ள சிங்கச் சிற்பங்களைப் போல் நான்கு சிங்கங்கள் அமர்ந்த நிலையில் உள்ளன. இத்தூணில் உள்ள கல்வெட்டு இக்கற்றூணை மகாரதி (Maharathi) என்பவர் அமைத்தாகக் கூறுகிறது. மகாரதி சாத வாகன அரசர்களுடன் தொடர்புடையவர் என அறி ஞர்கள் கூறுகின்றனர். மேற்கு இந்தியாவில் காணப் படும் குடைவரைகளிலேயே இக்குடைவரையின் முகப்பு மிகச் சிறந்ததும் அழகுடையதும் ஆகும் என அறிஞர்கள் கூறுகின்றனர். குடைவரையின் முன்பகுதி யிலிருந்த மண்டபம் இப்பொழுது அழிந்துவிட்டது. இருப்பினும், எஞ்சியுள்ள சுவர்களில் தூண்கள் போன்று செதுக்கப்பட்ட யானைகளின் சிற்பங்கள் வரிசையாகக் காணப்படுகின்றன. இதுபோன்ற வரிசை மேல்மண்டபத்திலும் தொடர்ந்து செல்கிறது. இந்த யானைத் தூண்களுக்கு இடையில் பல நிலையி லுள்ள புத்தரின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. குடைவரையின் முகப்புச் சுவர்களிலும் புத்தர், போதி சத்துவர் உருவங்கள் உள்ளன. இம்மண்டபத்தை அடுத்துள்ள பெரிய சுவரின் மேற்பகுதியில் இலாட வடிவச் சாளர அமைப்புக் காணப்படுகிறது. இந்தச் சாளரம் மரத்தால் செய்யப்பட்டது போன்று குறுக் குச் சட்டங்களைக் கொண்டு விளங்குகிறது. பாறை யைக் குடைந்து மிக நேர்த்தியான முறையில் இதனை அமைத்துள்ளனர். குறுக்குச் சட்டங்களின் மேற்பகுதி வளைந்து காணப்படுகிறது. வளைவுகளின் உச்சியில் 'கூடு' (Kudu) அமைப்புகள் உள்ளன. மூன்று நுழைவாயில்களைக் கொண்டு விளங்கும் முதல் குடை வரையின் நடுவாயில் இலாட வடிவ அமைப்பை உடையது. இந்நுழை வாயிலை அடுத்து ஒரு பெரிய இலாட வடிவ அறை உள்ளது.

இவ்வறையின் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு 15 தூண்கள் வீதம் முப்பது தூண்கள் உள்ளன. இவ் வறையில் மொத்தம் 34 தூண்கள் காணப்படுகின் றன. இத்தூண்கள் எண்கோணப் பக்கங்களைக் கொண் டும், செங்குத்தான வரிப்பள்ளங்களினால் ஒப்பனை செய்யப்பட்டும், தலைப்பகுதியில் மண்டியிட்ட நிலை யில் யானைச் சிற்பங்களைக் கொண்டும் விளங்கு கின்றன. இந்த யானைகளின் மேல் ஆணும் பெண் ணும் அமர்ந்துள்ளனர். பக்கச் சிறைகளை நோக்கிய வாறு இரு குதிரைகள் தூண்களின் தலைப்பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன. இக்குதிரைகளின் மேல் வீரர் கள் அமர்ந்துள்ளனர். இச் சைத்தியம் மிக அழகாகக் குடையப்பட்டுள்ளது. சைத்தியத்தின் இறுதியில் படிக்



கார்லே சைத்தியம்



கார்லே குடைவரையின் முகப்பு

கட்டுகளுடன் உள்ள கார்மிகம் (Karmika) காணப்படுகிறது.

இங்குள்ள கல்வெட்டுகளின் மூலம் இக்குடைவரைக்குப் பல வெளிநாட்டினரும் பல பணிகள் செய்துள்ளமை நன்கு தெரிகிறது. சத்தரப அரசர் நாகபானா(Nagapana) என்பவரின் உறவினர் உசவதாடா (Ushavadata) என்பவர் இங்கு வாழ்ந்த பௌத்த துறவிகளுக்குப் பல கொடைகள் அளித்தமையும், கார்லே முற்காலத்தில் வலூரகா (Valuraka) என்ற பெயர் கொண்டிருந்தமையும் இங்குள்ள கல்வெட்டுகளின் மூலம் புலப்படுகின்றன.

இரண்டாம் குடைவரை 3 அடுக்குகளை உடையது; அழிந்த நிலையில் காணப்படுகிறது. இது ஒரு விகாரம் ஆகும். குடைவரையின் உள்ளே துறவிகள் தங்கப் பல சிறு அறைகள் உள்ளன. மூன்றாம் குடைவரையும் பௌத்தத் துறவிகள் தங்கும் சிறு அறைகளைக் கொண்ட விகாரமாகும். இவ்விகாரத்தின் உள்ளே ஒரு சைத்தியமும் உள்ளது. மூன்றாம் குடைவரையைச் சாதவாகன அரசர் புலுமாயி காலத்திலிருந்த அரபர்னர் (Harapharna) என்பவர் கொடையாக அளித்தார் என இங்குள்ள கல்வெட்டுக் குறிப்

பிடுகிறது. கார்லே குடைவரைகள் கி.பி. 100-ஆம் ஆண்டைச் சார்ந்தனவாகும். சு.இரா.

**கார்லைல், தாமசு (கி.பி. 1795-1881):** இசுகாட்லாந்தில், கொத்தனார் ஒருவரின் மகனான கார்லைல் கி.பி. 1795-ஆம் ஆண்டு திசம்பர் 4-ஆம் நாள் பிறந்தார். இவர் எடின்பரோப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றார். சில ஆண்டுகள் பள்ளியாசிரியராகப் பணியாற்றியபின், அப்போது சேமித்த நிதியை வைத்துக்கொண்டு எழுத்தாளராக வாழ்வை நடத்தத் தொடங்கினார். இவர், தாம் அடைந்த உடல், உள்ளத் தொல்லைகளை அச்சமயத்தில் வெளியிட்ட 'சார்ட்டர் ரிசார்ட்டசு' (Sartor Resartus-1818) என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். தம் முப்பத்தோராம் வயதில் சேன்வெல்சு (Jane Welsh) என்ற மங்கையை மணந்தார். இருவரும் ஏழ்மை காரணமாக மகிழ்வற்ற வாழ்க்கையையே நடத்தினர். இலண்டனில் செல்சி என்னும் இடத்தில் கி.பி. 1834-இல் குடியேறினர். வருமானத்திற்காக இவர் பேருரைகள் ஆற்றத் தொடங்கினார். இவருடைய நூல்களுக்குத் தொடக்கக்காலத்தில் எந்த விதமான வரவேற்பும் இல்லை. கடைசி இருபதாண்டு வாழ்க்கையில்தான் ஒரு பேரறிஞராக இவர் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இருப்பினும், இவர் பிணியால் பீடிக்கப்பட்டு, மக்களின் வாழ்வுமுறை மாறவில்லையே என்ற மனத்தளர்ச்சியால் தாக்குண்டு கவலை நிறைந்தவராக வாழ்ந்து செல்சியில் மரணமடைந்தார்.

இவர் நூல்களில் மொழிபெயர்ப்புகளும் கட்டுரைகளும் வாழ்க்கை வரலாறுகளும் அடங்கும். கதே (Goethe) எழுதிய 'வில்கெல்ம் மேய்சுடெரின். தொழிற்பயிற்சி' (Wilhelm Meister's Apprenticeship, 1824) என்ற நூலின் மொழிபெயர்ப்பு, 'சில்லரின் வாழ்க்கை' (The Life of Sehiller, 1825), 'பர்ன்சு' (Burns), 'இசுகாட்டு' ஆகியோர் பற்றிய கட்டுரைகள் ஆகியவை இவருடைய குறிப்பிடத்தக்க முதல் பணிகளாகும். 'தூபல்சுதிராக்கின் வாழ்க்கையும் கொள்கைகளும்' (The Life and Opinions of Herr Teufels drockh-1833-34) என்பது ஒரு புதுமையான நூலாகும். தம் ஆன்மப் போராட்டங்களை ஆற்றலுடைய நடையில் விவரிக்கிறார். பலவிடங்களில் சொல் மழை பொருளைத் தெளிவுபடுத்தாமல் போகிறது. இவர் தம் வரலாற்று நூல்களும் தனித்தன்மை வாய்ந்தவை. பிரெஞ்சுப் புரட்சி (The French Revolution, 1837), சொல்லோவியங்கள் நிறைந்ததாயினும், வரலாற்றைக் காய்தல் உவத்தல் இன்றிக் கூறும் நூலாகாது. ஆலிவர் கிராம்வெல்லின் கடிதங்களும் பேச்சுகளும் (Oliver Cromwell's Letters and Speeches, 1845) வாசகர்களுக்குச் சலிப்பை உண்டாக்கக்கூடிய ஒரு பெரிய முயற்சியாகும். சான் இசுடெர்லிங்கின் வாழ்க்கை (Life of John Sterling, 1851) இவர்தம் மற்றைய நூல்களினின்றும் மாறுபட்டுப் பொருட்செறிவு குறைந்ததாகவும் மனிதாபிமானம் மிகுந்ததாகவும் காணப்படுகிறது. 'பிரசியாவின் இரண்டாம் பிரெடரிக்கு வரலாறு' (The History of Frederich II of Prussia, 1858-65), பல விளக்கங்களை உள்ளடக்கிய பெரு நூலாகும். 'சார்டிசம்' (Chartism, 1840), 'இறப்பும் நிகழ்வும்' (Past and Present, 1843) ஆகியவை இவர் காலத்திய நிகழ்ச்சிகள் பற்றிய நூல்களாகும். இவர், கி.பி. 1837-இல் நிகழ்த்திய சொற்பொழிவுகள் 'வீரர்களும் வீரவணக்கமும் வரலாற்றில் வீரத்தன்மையும்' (On Heroes, Hero-Worship and the Heroic in History, 1841) என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டன.

இவர் வாழ்ந்த காலத்தில் நீதி, அரசியல் பற்றிய துறைகளில் மதிப்பிற்குரிய ஒரு பெரும் முனிவராகவே கருதப்பட்டார். அப்பொழுதைய சிக்கல் பற்றித் தம் கருத்துகளை முடிந்த முடிபுகளாக இடியென முழங்கினார். கொடுமைகளையும் பித்தலாட்டங்களையும் அச்சமில்லாமல் சாடினார். வரலாற்று நூல்களில் தம் கதாநாயகர்களை அதி ஆற்றல் பெற்ற உன்னத மனிதர்களாகக் (Supermen) காட்டினார். ஆயினும், வரலாறுகளை உயிருள்ள நடையில் எழுதினார். இவரது நடை முதலில் கடுமையானதாக இருந்தாலும் இறுதியில் கவித்துவ ஆற்றல் பெற்றதாக அமைந்தது. இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு பிப்பிரவரி 5-ஆம் நாள் காலமானார். பி.ம.

**கார்வே, ஐராவதி (1905-1970)** தலைசிறந்த இந்தியப் பெண் மானிடவியலார். இவர் பண்பாட்டு மானிடவியல், முன்வரலாற்று மானிடவியல், உடல் சார் மானிடவியல் (Physical Anthropology) ஆகிய முப்பெரும் பிரிவில் சிறந்த ஆய்வுகளை மேற்கொண்டவர். ஐராவதி கார்வே (Iravati Karve) 15.12.1905-இல் பர்மாவில் மயின்கியான் (Myingyan) என்னுமிடத்தில் பிறந்தார். பள்ளிக் கல்வியை இவர் பூனாவிலும் முதுகலைப் படிப்பைப் பம்பாய்ப் பல்கலைக் கழகத்திலும் டாக்டர் பட்டத்தைப் பெர்லினிலும் (Berlin) பெற்றார்.

பேராசிரியை கார்வே மானிடவியலின் நான்கு பெரும் பிரிவுகளுள் மூன்றில் தேர்ச்சி பெற்றது காசியர் வில்கெம் மானிடவியல் நிறுவனத்தில் (Kasier Wilhelm Institute for Anthropology) ஆகும். டாக்டர் யூசின் பிசர் (Eugene Fisher) என்பவரின் கீழ் டாக்டர் பட்டம் பெற்றது முதலே இவர் மேற்கூறிய மூன்று பிரிவுகளிலும் ஆய்வில் ஈடுபட்டார். இந்திய

மானிடவியலில் இவர் ஆய்வுப் பணிகள் குறிப்பிடத்தக்கன. இந்தியா முழுவதிலுமுள்ள பல்வேறு சமூகத்தினரின் உறவுமுறை அமைப்பை (Kinship System) ஆராய்ந்து வெளியிட்ட இவரது ஆய்வுநூல் தென்னிந்திய உறவு முறை அமைப்பிற்கும் வடஇந்திய உறவு முறை அமைப்பிற்கும் உள்ள தொடர்புகளையும் வேறுபாடுகளையும் நன்கு விளக்குகிறது. சாதி, இந்தியக் கிராமங்கள், பழங்காலப் பண்பாடு, மானிட உடலளவையியல் (Anthropometry) முதலான பல பரப்புகளில் இவர் ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளார்.

இவரது கல்விசார் வாழ்க்கை பூனாப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த எசு.டபிள்யு.டி.கல்லூரியின் (S.W.D.College) பதிவாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டது (1937-38) முதல் தொடங்கியது. கார்வே 1939-இல் தொல்லியலிலும் மானிடவியலிலும் சிறப்பிடம் பெற்ற பூனா தெக்கான் கல்லூரியில் (Decan College) சமூகவியல், மானிடவியல் துறையில் இணைப் பேராசிரியராகச் சேர்ந்தார். இங்குச் சேர்ந்தது முதல் இறக்கும் வரை இங்கேயே பணியாற்றினார். இவர் ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் 120 வரையில் வெளியிட்டுள்ளார். இவர் நூல், நூல்களுள் குறிப்பிடத்தக்க சில: மராத்திய மக்களின் மானிட உடலளவை (Anthropometric Measurements of the Marathas - 1948), இந்தியாவில் உறவுமுறை அமைப்பு (Kinship Organization in India - 1953), இந்துச் சமுதாயம்: ஒரு விளக்கப் பொருள் (Hindu Society: An Interpretation - 1961). இவர் 1970-இல் காலமானார். சீ.ப.

***கார்னிசு மொழி***: பிரிட்டனில் கார்ன்வால் பகுதியில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு வரையிலும் வழக்கிலிருந்த மொழி இது. கார்னிசுப்பெயர்கள் பல கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்தே கிடைத்திருக்கின்றன. இம்மொழி பேசப்பட்ட நிலப்பரப்பினைப் போன்றே இம்மொழியும் வெல்சு (Welsh), பிரிட்டன் மொழிகளுக்கு இடைப்பட்ட பிரிட்டானிக்கு மொழியிலிருந்தும், பிரிட்டன் கார்னிசு தென் பகுதிக் கிளைமொழியிலிருந்தும் உருவானது என எண்ணுவர் மொழியியலார். இம்மொழியின் வரலாற்றுப் பகுதியை மூன்று காலங்களாகப் பிரிப்பர். முதற் காலப் பகுதியில் ஒருசில கையெழுத்து இலக்கியப் பிரதிகளே கிடைத்துள்ளன. கார்னிசு, வெல்சுப் பாதிரிகளின் வாழ்க்கை வரலாறுகளும் நாட்குறிப்பும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுகின்றன. இவை கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டபோதிலும் 10-ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் எழுதப்பட்டிருந்த மூலத்தின் படிவமாகும் எனக் கருதுகின்றனர் சிலர். இது போன்றே இடைக்காலத்தைச் சார்ந்தனவாக ஓரிரு கவிதைகளும் சில உரைநடைப் பகுதிகளும் உள்ளன. இக்கவிதைகள் அனைத்தும் சமயச் சார்பானவைகளே. இவை போன்றே இக்காலத்தில் தோன்றிய நாடகங்களும் உலகத் தோற்றம், மனிதனின் வீழ்ச்சி போன்ற பல சமயச் சார்பான செய்திகளை மையமாகக் கொண்டவையே. கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதற் பகுதியை இக்காலம் எனக் குறிப்பிடுகின்றனர். இக்காலத்தில் வேதாகமம், கார்ன்வால் பற்றிய செய்திகள் போன்ற பல துறைகளைப் பற்றி எழுதிய நூல்களைக் காணலாம். இக்காலத்தில் எழுதப்பட்ட அறிவின் அறிமுக நூல் (Book of the Introduction of Knowledge- 1542) என்பதே முதல் அச்சு நூல். இது கி.பி.17-ஆம் நூற்றாண்டு முதலே வழக்கறுகின்ற நிலையில் காணப்பட்டது. எனினும், 19-ஆம் நூற்றாண்டு வரையிலும் ஆங்காங்கே வழங்கி வந்து, பின்னர்ப் பேச்சு வழக்கற்றுவிட்டது.

இதன்கண் 14 உயிர்களும் பல சந்தியக்கரங்களும் உள்ளன. தமிழ் உயிர்களைப் போன்று இம்மொழி உயிர்களும் குறில், நெடில் வேற்றுமை காட்டும். ஆங்கில மொழியைப் போன்று சிறப்புச் சுட்டு காணப்படினும், பொதுச்சுட்டு இதில் இல்லாதிருப்பது ஆங்கிலத்திற்கும் இதற்குமிடையே காணப்படும் வேற்றுமையாகும். கார்னிசு ஆண், பெண் பால்களையும், ஒருமை, பன்மை எண்களையும் கொண்டுள்ளது. வினைச்சொற்கள் காலம், இடம், எண் போன்ற இலக்கணக் கூறுகளைக் காட்டும். தமிழ் மொழியைப் போலவே இம்மொழி வேர்ச் சொற்கள் ஏவல் வினைகளாக வருதலைக் காணலாம். ஆங்கில மொழியைப் போலல்லாமல் படர்க்கை ஒருமை எந்தவித மான ஒட்டினையும் ஏற்காது இருத்தல் இதன் சிறப்புத் தன்மையாகும். கு.அ.

**துணை நூல்:**

**அகத்தியலிங்கம் ச.**, உலக மொழிகள் முதற் பகுதி, பொன்னகம், அண்ணாமலைநகர், 1968.

***கார்னியாடிசு***: கிரேக்க தத்துவ ஆசிரியர்களுள் பிளேட்டோவுக்கு அடுத்தபடியாகப் புகழ் பெற்றவரும், கிரேக்க இன்ப-துன்ப நடுநிலைக் கோட்பாட்டை (Stoicism) எதிர்த்து, ஐயக் கோட்பாட்டை (Skepticism) நிறுவியவரும், எதனையும் அறுதியிட்டுக் கூற இயலாது, ஊகமாகத்தான் கூறுதல் இயலும் என்ற கொள்கையை வகுத்தவரும் ஆகிய கார்னியாடிசு என்பவர், பிளேட்டோவின் கல்விக் கழகத்தில் (Academy) அவருக்குப் பிற்பட்ட காலத்தில் இருந்த சிறப்பான தலைவராவார்.

கார்னியாடிசு (Carneades) கி.மு. 214-ஆம் ஆண்டிற்கும் கி.மு. 128 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவரென்று எண்ணுகின்றனர். இவர் கி.மு. 155 இல் ஏதென்சு நகரரசிலிருந்து உரோம் நகரத்துக்கு அரச தூதராகச் சென்ற போது, அங்குப் பொதுமக்கள் முன்பு உரையாற்றினார். ஒரு நாள் இவர் 'நீதி' என்பது பற்றியும், அது மிகவும் இன்றியமையாதது என்பது பற்றியும் ஓர் உரை ஆற்றினார். அதற்கு அடுத்த நாளே இவர் நீதி தேவை இல்லை என்று எடுத்துக் காட்டி, அதற்கு எதிராக ஒரு நீண்ட உரை ஆற்றினார். இவ்விரு சொற்பொழிவுகளும் இவரை ஓர் அரிய தத்துவ ஆசிரியராக எடுத்துக்காட்டின. இவ்வாறு இவர் எந்தக் கேள்விக்கும் சார்பாகவும், மாறாகவும் ஆய்வு செய்யும் திறமையின் காரணமாக, உரோமானியர்களிடையே கிரேக்கத் தத்துவக் கருத்துகளில் ஓர் ஈடுபாடும், அதே சமயத்தில் அவற்றில் நம்பிக்கை இன்மையும் தோன்றின. கார்னியாடிசு ஒரு 'புதிய கல்விக் கழகத்தை' (New Academy) நிறுவி, அதில் பிளேட்டோவின் கருத்துகளை எல்லாம் மறு ஆய்வு செய்து, பல கொள்கைகள் கலந்த ஐயக் கோட்பாடு அரசியலில் தோன்றுதற்கு வழி காட்டினார். இவர், தம் கருத்துகளை நூல் வடிவத்தில் வெளியிடாமல் வாய்மொழியாகவே கற்றுக்கொடுத்து வந்தார். ஆனால், இவருடைய கருத்துகளை இவர் தம் மாணவர்கள் கவனமாகக் குறித்து வைத்து, மற்றவருக்கு அறிவித்தனர். உரோமானிய அரசியற் சிந்தனையாளரான சிசரோ (Cicero, கி.மு. முதலாம் நூற்றாண்டு) எழுதிய 'குடியரசு', 'கடவுளரின் இயல்பு', 'விதியைப் பற்றி' முதலிய நூல்களிலுள்ள கருத்துகள் கார்னியாடிசு கொண்ட கருத்துகளின் சாயலைக் காட்டுகின்றன.

**அரசியற் கொள்கைகள்**: கிரேக்க இன்பதுன்பச் சமநோக்காளர் அறுதியிட்டு முடிவு கூறிய முறையை கார்னியாடிசு வன்மையாக மறுத்தார். எக்கருத்துமே ஓரளவுக்கே உண்மையாக இருத்தல் கூடுமென்று இவர் எடுத்துக்காட்டி, எவரும் ஒரு தீர்ப்பை அல்லது ஒரு முடிவான கருத்தை வழங்குதலை நிறுத்துதல் வேண்டும் என்றார். இந்த அடிப்படையில் கடவுள் உண்டு என்றும், தெய்விக அருள், அருட்காட்சி (Divination), முழுமையாகத் தீர்மானித்தல் முதலியவை உண்மையே என்றும் கூறிய அவர்கள் கருத்துகளை இவர் மறுத்தார். எல்லாம் தொடர்ந்து காரண காரிய வகையாக என்றும் நடைபெறுகிறது என்ற கருத்தையும் இவர் மறுத்து, ஒருவர் தம் மீது விதிக்கப்பட்ட புறச்சூழ்நிலைகளைத் தன் முயற்சியின் வாயிலாக மாற்றுதல் இயலுமென்றும், மனித வழக்கங்கள் பலவகைப்பட்டுக் காணப்படுகிற படியால், அரசியலில் இயற்கையின் சட்டம் என்ற ஒன்று இருப்பதாகக் கூறுதற்கு இடமில்லை என்றும் கூறினார்.

நன்மை என்பது ஒருவர் தன்னளவில் துய்க்கும் உணர்வே ஆகும். ஆகையால் ஒவ்வொருவருக்கும் மிகவும் கூடுதலான அளவில் தனி நன்மை கிடைக்குமாறு செய்யும்போதுதான் சமூக ஏற்பாடுகளும் நியாயமானவை ஆகின்றன. ஒவ்வொருவருக்கும் மற்றவருடைய கொள்ளைச் செயலிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும் பொருட்டே அரசுகள் அமைக்கப் படுகின்றன. ஒழுக்கத்திலும் நம்பிக்கையிலும் செயல் முறையிலும் உண்மையில் பெருத்த வேறுபாடுகள் இருப்பதால், உலகளாவிய நீதியின் சட்டம் (Universal Law of Justice) தோன்றுவதற்கு இடமில்லை. நடைமுறையில் மக்கள் தந்நல நோக்கத்தோடும் கட்டுப்பாட்டுணர்வோடும் செயற்படுகிறார்கள். இவையே மதிப்பாக நீதி என்ற பெயரில் குறிப்பிடப் படுகின்றன. ஆகையால், சட்டம் என்பது ஒரு சமூக வழக்கந்தான் (A Social Convention): அது பெரும்பாலும் நன்மையே செய்கிறது; அதற்கு ஆதாரமாக இருப்பது மக்களுடைய கட்டுப்பாட்டுணர்வே தவிர நீதி உணர்வு அன்று.

இன்ப-துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர் மனிதனின் தன்னடக்கம், கடமை உணர்வு, பொது நல உணர்வு முதலிய பண்புகளை வற்புறுத்தி, அவற்றுக்காகவே அரசு தோன்றிற்று என்று கூறினர். கார்னியாடிசு இத்தகைய பண்புகள் மனிதனை இரக்க மற்றவனாக ஆக்குகின்றன என்றும், உண்மையில் அரசும், நீதியும் மனிதனுடைய தன்னல உணர்வைப் பாதுகாத்தற்கே தோன்றிய சமூக வழக்கங்கள் என்றும் கூறினார். பா.ரு.

**துணை நூல்கள்:**

Hicks, R.D., Stoic and Epicurean, London, 1911.

Margaret E. Reason, The Political Theory of the Old and Middle Stoa, New York, 1951.

Mary Mills Patrick, The Greek Sceptics, New York, 1929.

***காரகல்லாவின் ஆணை***: உரோமானியப் பேரரசில் வாழ்ந்த எல்லா மக்களுக்கும் உரோமானியக் குடிஉரிமையை வழங்கி, கி.பி. 211 முதல் கி.பி. 217 வரை உரோமானியப் பேரரசராக இருந்த மார்க்கசு அரேலியசு அண்டோனைனசு (Marcus Aurelius Antoninus) என்பவரால் விடுக்கப்பட்ட ஆணை கார

கல்லாவின் ஆணை (Caracalla's Edict) எனப்படும். காரகல்லா என்பது இவருக்கு இடப்பட்ட கேலிப் பெயர்.

இவர் கி.பி. 188–இல் பிரான்சில் இப்பொழுது இலியான் எனப்படும் ஊரில் பிறந்தார். இவருடைய பண்புகளில் அஞ்சத்தக்க, வெறுக்கத்தக்க பகுதிகளும், விரும்பத்தக்க பகுதிகளும் காணப்படுகின்றன. இவர் உரமிக்க ஒரு போர் வீரரும், தாராள இயல்போடு குடியுரிமைகளை வழங்கியவருமாவர். இவர் இளமையில் நல்ல கல்விப் பயிற்சி பெற்றார். தாம் பேரரசராக வந்ததும் இவர் செய்த பாராட்டத்தக்க செயல் உரோமானியப் பேரரசில் வாழ்ந்த எல்லா மக்களுக்கும் குடியுரிமைகளை வழங்கும் பொருட்டுப் புகழ்மிக்க ஓர் ஆணையை (Consitutio Antoniniana de Civitate) கி.பி. 212–இல் விடுத்ததேயாகும். இவர், கி.பி. 212, 213–ஆம் ஆண்டுகளில் செருமானியக் கூட்டத்தார்களை எதிர்த்துப் போரிட்டார். பார்த்திய மக்களோடு கி.பி. 216-217–இல் போரிட்டார். இவர் கி.பி. 217–இல் மெசொபொடோமியாவில் பார்த்தியர்களுக்கெதிராக இரண்டாம் முறையாகப் படையெடுத்துச் செல்லுகையில் கொலை செய்யப்பட்டார்.

இக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் ஆளுரிமை என்னும் கோட்பாடு வளருவதற்குப் பண்டைக்காலக் கிரேக்கக் கருத்துகளும், உரோமானியச் சட்டமுறையும் உதவி செய்தன. பண்டைய கிரேக்க நகரரசுகளிலும், உரோம் நகரரசிலும், அவற்றில் குடியாட்கள் சமூகத்தில் பிறந்தவர்களுக்கே குடியுரிமைகள் இருந்தன. அவற்றில் வாழ்ந்த அடிமைகளுக்கும், அயலவருக்கும் அவ்வுரிமைகள் இல்லை. உரோமானியராகப் பிறவாமல், உரோமில் வந்து தங்கி இருந்தவர்களுக்கு உரோமானிய நாட்டுச் சட்டம் கையாளப்படுதல் கூடாது. நாளாவட்டத்தில் உரோமானியர் தம் இனத்தைச் சாராத அயலாரோடு வாணிகம் செய்து தொடர்பு கொள்ள வேண்டியதாயிற்று. மேலும், உரோம் முதலில் ஒரு சிறிய நகரரசாக இருந்து, கி.மு. 2-ஆம் நூற்றாண்டிற்குள் இத்தாலி நாடு முழுவதையும், சிசிலி, கார்சிகா, சார்டினியாத் தீவுகளையும், இசுபெயின், பிரான்சு, பிரிட்டன், வட ஆப்பிரிக்கக் கார்த்தேசு, சைரின், எகிப்து, கிரீசு, சிறிய ஆசியா முதலிய நாடுகளையும் வென்று, ஒரு பேரரசாக இணைத்துத் தன்னாட்சிக்குள் கொண்டுவந்தபோது, உரோமில் குடியேறிய உரோமானியரல்லாதாரையும் ஆளவேண்டிய பொறுப்பும், அவர்களுடைய செயல்களை உரோமானியருடைய சட்டப்படி ஆய்ந்து தீர்க்க வேண்டிய பொறுப்பும் தோன்றின. உரோம அரசாங்கத்தில் பிரீட்டர் (Praetor) என்ற ஒரு புதிய அலுவலர் அயலவர் பற்றிய வழக்குகளை ஆய்ந்து தீர்ப்புக் கூறினார். இதில் பொது அறிவுக்கும் நீதிக்கும் பொருத்தமான செயல்களெல்லாம் விதிகளாகப் பின்பற்றப்பட்டன. உரோமானியர், உரோமானியரல்லாதார் ஆகியோருடைய பொதுநலனுக்கு உகந்த, நேர்மையோடு பொருந்திய செயல்முறைகளை விதிகளாக உடைய ஒரு சட்டவகை உரோமானியருக்கு அயலவரோடு ஏற்பட்ட தொடர்பின் காரணமாகத் தோன்றிற்று. இதுவே, எல்லா நாட்டினருக்கும் பொதுவான சட்டம் அல்லது நாடுகளின் சட்டம் (Ius Gentium) எனப்பட்டது. அது இரக்க உணர்வுக்கும் அறிவுக்கும் பொருத்தமாக இருந்ததால் நாளடைவில் உரோமானியச் சட்டத்தின் ஒரு பெரும் பகுதியாக ஆயிற்று.

பேரரசர் காரகல்லாவின் ஆட்சிக் காலத்தில் நல்ல பண்புகளெல்லாம் பொருந்திய இயற்கையின் சட்டமே பேரரசிலுள்ள எல்லா மக்களையும் ஆளுதற்குரிய சட்டமாக நடைமுறையிலிருந்தது. சட்டத்தின் முன்னர் யாவரும் சமம் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டும், நாட்டின் சட்டத் தொகுப்பில் மனிதப்பண்புக்கு ஏற்ற விதிகளை சேர்க்கப்பட்டும், சமயச் சடங்கு பற்றிய விதிமுறைகளும், மனித அறிவுக்குப் பொருந்தாத கடுமையான செயல்முறைகளும் நீக்கப்பட்டும், உலக முழுவதிலுமுள்ள மனிதக் குடும்பம் நீதி என்ற பிணைப்பின் வாயிலாக ஒன்றுபடுத்தப்பட்டிருப்பது ஒத்துக் கொள்ளப்பட்டும் இயற்கையின் சட்டம் உருவாயிற்று.

நகரரசை மட்டுமே மையமாகக் கொண்டு வளர்ந்திருந்த நாட்டுப்பற்று என்ற உணர்வும், உள்நாட்டு வழக்கங்களுக்கு இருந்த மதிப்பும், குடிமக்கள் அயலவர் என்ற பாகுபாடுகளும், ஆட்சி அலுவலில் பங்கு உடையவருக்கே குடியாள் உரிமை என்ற முறையும் மறைந்து விட்டன. நகரரசு முறையை ஒட்டி வளர்ந்த குடியாள் உரிமைக் கருத்து கைவிடப்பட்டுப் பேரரசு முழுவதற்கும் உரிய உரோமானியக் குடியாள் உரிமைக் கருத்துத் (Roman Citizenship) தோன்றிற்று.

உரோமானியப் பேரரசைச் சேர்ந்த மக்கள் யாவரும் வேறுபாடற்ற, சமத்துவமான குடியாள் உரிமை உடையவரென்ற நிலைமையை உறுதிப்படுத்தியதுதான் பேரரசர் காரகல்லாவின் கி.பி. 212-ஆம் ஆண்டைய ஆணையில் காணப்படும் சிறப்பாகும்.

பா.கு.

துணை நூல்கள்:

**Bareer Ernest.,** From Alexander to Constautine Passages and Documents Illustrating the History of Social and Political Ideas. 336 B C-A D. oxford, 1956.

**Beyce James.,** Studies in History and Jurisprudence, New York. 1901.

***காரகோரம்***: சீனாவின் வடக்குப் பகுதியில் உள்ள மங்கோலியக் கூட்டமைப்பின் புகழ்மிக்க தலைநகரம் காரகோரம் எனப்படும். அக் கூட்டமைப்பின் சிதைந்த பகுதிகளை வடக்கு அல்லது வெளி மஙகோலியாப் பகுதிகளில் இன்றும் நாம் காணலாம்.

தெற்கே கோபி பாலைவனத்திற்கும், வடக்கே சைபீரியப் பகுதிகளில் உள்ள காட்டிற்கும் இடையில் அமைந்துள்ள சிறந்த புல்வெளிப் பிரதேசம் காரகோரம் என இப்போது சொல்லப்படுகிறது. இப் பகுதியில் கால்நடைகளை வளர்த்துக் கொண்டு மேய்ச்சலைத் தொழிலாகக் கொண்ட மக்கள் பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்தனர். செங்கிசுகான் எனபவர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மங்கோலியப் பகுதிகளைக் கைப்பற்றினார். அவர் மங்கோலியக் கூட்டமைப்பின் தலைநகரை இவ்வளமான புல்வெளிப் பகுதியில் நிறுவினார்.

செங்கிசுகான் இவ்வாறு நிறுவிய தலைநகரமே காரகோரம் என்ற நகர் ஆகும். ஆர்கான் நதிக்கரையில் இந்நகர் அமைந்துள்ளது. ஆர்கான் ஆறு வடக்காக ஓடிப் பைக்கால் ஏரியில் கலக்கிறது. ஆர்கான் நதியின் கிளை நதிக் கரையில் உர்கா என்ற இடம் அமைந்துள்ளது. உர்கா என்ற நகர் வெளி மங்கோலியாவின் புதிய தலைநகரமாகும்.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டிற்கு முன், உகூர் (Uighur) தலைநகருக்கு 25 மைல் தொலைவில் அமைந்துள்ள பகுதியும் காரகோரம் என்று தான் குறிக்கப்பட்டது.

இவ்வாறு அடுத்தடுத்துத் தோன்றிய தலைநகரங்கள், ஆர்கான் நதியின் மேட்டுச் சமவெளிப் பகுதியில் இருந்தன. 'மங்கோலிய இசுடெப்பிசு' என்று சொல்லப்பட்ட புல்வெளிப் பகுதியாகும் இது. இப் புல்வெளிப் பகுதியை ஆதாரமாகக் கொண்டு, சீனாவிலிருந்து கிழக்கு ஐரோப்பா வரை உள்ள பகுதிகளை மங்கோலியர்கள் கைப்பற்றினர். செங்கிசுகான் முதல் அவர் பேரன் குப்ளைகான் வரை மங்கோலியவரசுப் படையெடுப்புத் தொடர்ந்து இருந்த கால கட்டங்களில் காரகோரம் என்ற இடமே அவர்களது தலைநகராகத் தொடர்ந்து இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

மங்கோலியர்கள் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகள் மிகவும் செழிப்பாக இருந்தன. ஆனால், இசுடெப்பிசுப் புல்வெளிப் பகுதிகள் அவ்வாறு இல்லை. எனவே, மங்கோலியர்கள் செழிப்பான பகுதியில் அதிக அளவில் குடியேறினர். நிருவாக வசதிக்காக மங்கோலிய அரசு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

குப்ளைகான் கி.பி. 1267-இல் தலைநகரைக் காரகோரத்திலிருந்து சீனாவின் தாழ்ந்த நிலப்பரப்பாகிய கேம்பாலக்கு என்ற இடத்திற்கு மாற்றினார். அது மிகச் செழிப்பான பகுதி. எனவே, அப்பகுதி மங்கோலியர் வசம் நீண்ட காலமாக இருந்தது. இந்த நிலைமையினால் காரகோரம் ஒரு சிறிய மாநிலப் பகுதியின் தலைநகரம் என்ற அளவிற்குச் செல்வாக்குக் குறைந்தது. அப்போது அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டன. காரகோரத்தில் இருந்த ஆளுநர் 'கான்' செய்த கிளர்ச்சியினால் காரகோரம் தரைமட்டமாக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அது பழைய உன்னத நிலைக்கு வரமுடியவில்லை.

ஒகடைகான் என்ற மங்கோலிய ஆட்சியாளர் கி.பி. 1235 இல் காரகோரத்தைச் சுற்றி மதில்கள் எழுப்பினார். கருங்கற்களை அடித்தளமாகக் கொண்டு. 64 தூண்களோடு கூடிய, செவ்வக வடிவமான ஓர் அரண்மனையையும் அங்குக் கம்பீரமாகக் கட்டினார். செங்கற்களால் கட்டப்பட்ட பல அழகிய கட்டடங்களும் கோவில்களும் மசூதிகளும் அங்கு இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சிற்பக் கலைக்குச் சிறந்த இடமாகவும் காரகோரம் விளங்கியது. கல்லில் செதுக்கப்பட்ட ஆமை உருவங்கள் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கின.

பூரிநார் என்ற இடத்தில் கி.பி. 1388-இல் நடந்த போரில் புத்தமதச் சார்புடைய சு யுவான் சாங்கும் பேரரசன் அங் ஊ என்பவரும், 70,000 மங்கோலியர்களைக் கைது செய்து மங்கோலியாவை வென்றனர். காரகோரம் அவர்களால் அடியோடு அழிக்கப்பட்டது. புகழ் பெற்ற புத்த மடாலயமான ஏர்டெனிட்சு (Erdeni Dzu) காரகோரத்தின் முன்பு நிறுவப்பட்டிருந்தது. அது அப்பகுதியில் அருங்காட்சியகமாக இன்றும் நிலைத்து நிற்கிறது. தா.எ,

***காரகோர மலைத் தொடர்***: இம் மலைத் தொடர், தென் மத்திய ஆசியாவில், இந்துக்குசு மலைகளின் தொடர்ச்சியாக, வடக்குக் காசுமீரப் பகுதியில் சிந்து நதி, யார்கந்த ஆறுகளுக்கு இடை

யில் உள்ளது. இதன் பரப்பு 485 கி.மீ. பல உயர்ந்த மலை முகடுகளை இது பெற்றுள்ளது. காட்வின்-ஆசுத்தன் அவைகளில் ஒன்று. உலகில் மிகப்பெரிய பனிக்கட்டிப் படலங்களையும் இங்குக் காணலாம். காரகோரக் கணவாய், 5,578.5 மீ. உயரத்தில் உள்ளது.

தெ.பா.

**காரடையான் நோன்பு**: இது இந்துக்களுள் ஒருசாரார் மேற்கொள்ளும் ஒரு நோன்பாகும். இந்நோன்பினைப் பங்குனி மாதப் பிறப்பன்று, மங்கலப் பெண்டிர் தம் தாலி வலிமைபெறும்பொருட்டு நோற்பர். இந்நோன்பில், பயறு போன்றவற்றை இட்டுச் செய்த கார அடையினைத் தெய்வத்திற்குப் படைத்து வழிபடுவார்களாதலால் இது 'காரடையான் நோன்பு' என்னும் பெயர்பெற்றது. நோன்பியற்றும் மங்கல மகளிர் புதுமஞ்சள் நூலணிந்து தம் கணவரை வணங்கப் பின் அனைவரும் காரடை உண்பர். இந்நோன்பு, 'சௌபாக்கிய விரதம்' என்றும் கூறப்படும்.

சத்தியவான் மனைவி சாவித்திரி தன் கணவனின் ஆயுள் பலம் குறைவதை எண்ணி, அவன் ஆயுள் வளரும் பொருட்டுத் தானிருந்த காட்டில் கிடைத்த புல்லிய தானியப் பொருள்களை ஒன்று சேர்த்து அடை செய்து வைத்து இந்நோன்பு நோற்றாள் என்பது கூறப்படுகிறது. இந்நோன்பின்போது பல தானியங்கள் இட்டுக் காரடை தட்டிப் படைப்பது இந்த நிகழ்ச்சியின் அடிப்படையில் அமைந்ததாகலாம். காரடையை ஏற்கும் தெய்வம், காரடையான் எனப்பட்டு, நோன்பின் பெயரும் காரடையான் நோன்பு எனவழங்கப்பட்டது. இந்நோன்பினை மங்கல மகளிர் பலரும் கொண்டாடுவர் எனினும், அந்தண மரபில் ஒரு பகுதியினர் சிறப்பாகக் கொண்டாடுவர். பதி பக்திச் சிறப்பினை உணர்த்துவதாக இந்நோன்பு அமைந்துள்ளது.

இந்நோன்பிற்காக அமைக்கப்படும் காரடை அரிசி மாவு, காராமணி (பருப்பு வகை), வெல்லம் முதலியவற்றை ஒன்றாகச் சேர்த்துச் சுட்டு அமைக்கப்படும்.

மாசித் திங்களின் முடிவும், பங்குனி மாதத் தொடக்கமும் பொருந்த அமையும் நேரத்தில் இந்நோன்பு நோற்பது சிறப்பாகக் கருதப்படும். நோன்பு மேற்கொள்வோர், 'உருகாத வெண்ணெயும், ஓரடையும் நோற்று வைத்தேன் ஒருகாலும் என் கணவன் எனை விட்டுப் பிரியாது இருக்க வேண்டும்' என்று சொல்லி நோற்பர். நோன்பின் இறுதியில் புது மஞ்சள் கயிறு அணியும் வரை, நோன்பிருந்து, பின்னரே உணவுண்பர். இந்நோன்பினை மேற்கொள்ளும் சிறுமியர்களும் பெரியவர்களும் விடியற் காலையில் நீராடிப் புத்தாடையணிந்து மேற்கொள்வது மரபு.

இரா.குரு.

**காரண-காரிய நியதி**: 'காரணம்' என்ற சொல் 'மாற்றம்' (Change) என்ற சொல்லுடன் சம்பந்தப்பட்டதாகும். ஏதாவதொன்று மாற்றமடைகிறதென்றால் அதற்குக் காரணமான ஒன்று இருக்க வேண்டும். எனவே, அரிசுடாட்டில் (Aristotle) 'காரணம்' என்பது மாற்றத்திற்கு மூலாதாரம் என்கிறார். மாற்றத்திற்கு ஒரு நோக்கம் இருப்பதால் மாற்றமும் அதன் அடிப்படைக் காரணமும், அந்நோக்கத்தை அடைய முற்படுகின்றன. எனவே, எல்லா மாற்றங்களும் அளவை இயலின்படி (Logic) அடிப்படை (Ground), விளைவு(Consequence) என்ற இவ்விரண்டு கூறுகளைப் பெற்றிருக்கின்றன. காரண-காரிய நியதியை ஒரு கொள்கையாகவோ (Axiom), புலன்களால் நுகர்ந்தறியக் கூடிய ஓர் உண்மையாகவோ (Empirical truth) கொள்ள முடியாது. அது நாமே கற்பித்துக் கொள்ளும் ஓர் ஏற்பாடாகும் (Postulate). காரண-காரிய நியதி தோற்றத்தைப் பற்றியதாக (Appearance) இருக்க முடியுமே தவிர, உண்மை நிலையைப் (Reality) பற்றியதாக இருக்க முடியாது.

காரண-காரியத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது மூன்று வகையான விளக்கங்கள் தரப்படுகின்றன: (1) நியதி பிறழாக் கொள்கை (Regularity Theory), (2)பின்நிகழ்வை முன் நிகழ்வு உள்ளடக்கும் கொள்கை (Entailment Theory), (3) செயற்பாட்டுக் கொள்கை (Activity Theory). முதலாம் கொள்கை நியதி பிறழாக் கொள்கை: 'அ' என்ற நிகழ்ச்சியைத் தொடர்ந்து 'ஆ' நிகழ்ந்தால் 'அ' என்பது காரணமாகவும் 'ஆ' என்பது விளைவாகவும் கொள்ளப்படும். இவ்விரு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து பல முறை பலரால் காணப்பட்டால் அவைகளுக்கிடையே ஒரு பிறழா நியதி உண்டு என்று கொள்ளப்படும். இதில் 'அ' என்பது எப்போதும்,'ஆ' விற்கு முந்திய நிகழ்ச்சியாகும். 'ஆ' எப்போதும் 'அ' விற்கு முந்திய நிகழ்ச்சியாக இருக்க முடியாது. இக்கொள்கையில் பல குறைகள் உள்ளன. 'ஆ' என்ற நிகழ்ச்சிக்கு முந்தைய நிகழ்ச்சியாக 'அ' என்ற நிகழ்ச்சி மட்டும் நிகழவில்லை. பல நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. எல்லா நிகழ்ச்சிகளையும் 'ஆ'விற்குக் காரணமாகக் கூற முடியாது. மேலும், சில சமயம் 'அ' நிகழும்போது 'ஆ' நிகழாமற் போகலாம். காட்டாக, நாம் தீக்குச்சியை உரசும்போதெல்லாம் அது பற்றி எரிவதில்லை.இரண்டாம் கொள்கை பின் நிகழ்வை-முன் நிகழ்வு உள்ளடக்கும் கொள்கை. இந்தக் கொள்கையின்படி விளை

வானது காரணத்தில் உள்ளடங்கியுள்ளது. தயிர் பாலில் உள்ளடங்கியுள்ளது. துணி நூலில் உள்ளடங்கியுள்ளது. ஆனால், இக்கொள்கையும் தவறானதே. உள்ளடக்கம் (Entailment)என்பது அளவையியலில் இரு வாக்கியங்களுக்கிடையே உண்மையாக இருக்கலாம். அதாவது, இயற்கை நிகழ்ச்சிகளைத் தருக்க முறையில் விவரித்துக் காரண-காரிய நியதியை விளக்க முடியாது. ஏனெனில்,தருக்க முறை உண்மைகள் மாறுவதில்லை. ஆனால், இயற்கை நிகழ்ச்சிகள் சில சமயம் மாறும்.

மூன்றாம் கொள்கை – செயற் பாட்டுக் கொள்கை: இக்கொள்கை காரணத்திற்கும் விளைவிற்கும் ஏதோ ஒரு தன்னியல்பான (Mechanical) தொடர்பு இருக்கிறது என்ற கருத்தை எதிர்க்கிறது. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு முன்னரும் ஒரு ஆன்ம விருப்பம்(Will) உள்ளது. எந்த ஒரு நிகழ்ச்சியும் தானாக நிகழ்வதில்லை. இக்கொள்கையை பெர்க்லி என்ற தத்துவ அறிஞர் விளக்குகிறார். காரண காரியத்தைப் பற்றிய மேலும்சில உண்மைகள் யாவர்க்கும் வியப்பை அளிக்கின்றன. காரணம் என்பது எவ்வாறு ஒவ்வொரு நிகழ்ச்சியுடனும் தொடர்ச்சி கொண்டுள்ளது?எல்லா நிகழ்ச்சிகளும் ஒன்றோடொன்று தொடர்புடையன. ஒரு நிகழ்ச்சிக்குக் காரணமாக ஒரே ஒரு நிகழ்ச்சி தான் இருக்கமுடியும் என்று கூறுவதற்கில்லை. ஒரே நிகழ்ச்சிக்குப் பல காரணங்களைக் கூறலாம். காட்டாக, தீ எரிவதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒரு நிகழ்ச்சிக்குக் காரணமாக மற்றொரு நிகழ்ச்சியைக் கருதினால், அவ்விரண்டாம் நிகழ்ச்சிக்குக் காரணமாக மூன்றாம் நிகழ்ச்சியைக் கொள்ள வேண்டும். இவ்வாறே சென்றால், முடிவில்லாமல் நிகழ்ச்சிகள் இருந்து கொண்டே இருக்கும்.

கியூம் (Hume) என்ற அறிஞர் காரண-காரிய நியதி என்ற ஒன்று இல்லை என்று கூறுகிறார். காட்டாக, மின்னல், இடி என்ற இரு நிகழ்ச்சிகளை ஒருவர் உணரும்போது, மின்னல்தான் இடிக்குக் காரணம் என்கிறார்; தரை ஈரமாக இருக்கும்போது மழை காரணமாக இருக்கும் என்று நினைக்கிறார். இதை கியூம் ஒத்துக் கொள்ளவில்லை. இரு நிகழ்ச்சிகளை வெவ்வேறு சமயங்களில் ஒருவர் காண்கிறார் என்பது தான் உண்மை. ஒன்றுக்கு மற்றொன்று காரணம் என்று கூறுவது பொருத்தமற்றது என்று கூறி ஐயக் கோட்பாட்டைத் தழுவுகிறார். மில் (J.S. Mill)என்ற அறிஞர் ஒரு நிகழ்ச்சிக்குக் காரணமாகப் பல்வேறு சூழ்நிலைகள் இருக்கவேண்டும் என்று கூறுகிறார். பல சூழ்நிலைகளின் சேர்க்கையே ஒரு காரணமாக அமையும். அக்காரணத்தினால் ஒரே ஒரு நிகழ்ச்சி தான் நிகழும் என்றும் கூறுவதற்கில்லை. அந்நிகழ்ச்சியுடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளும் நிகழலாம்.

காரண-காரிய நியதியைக்கூறும்போது, இயற்கையின் மாறாத் தன்மையைக் கூறாமல் இருக்க முடியாது. இயற்கை நிகழ்ச்சிகள் தொடர்ந்து மாறாமல் நிகழ்வதால், ஒரு நிகழ்ச்சிக்கு மற்றொரு நிகழ்ச்சி காரணம் என்று கூற முடிகிறது. இயற்கையில் மாற்றம் ஏற்பட்டால் இது சாத்தியமில்லை. பல்வேறு விஞ்ஞானக் (அறிவியல்) கொள்கைகளும் இயற்கையின் மாறாத் தன்மையின் அடிப்படையிலேயே உண்மை என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விஞ்ஞான (அறிவியல்) அடிப்படையிலான பரிணாமக் கொள்கை (உயிர்களின் படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு) காரண-காரிய நியதியின்படி விளக்கப்படுகின்றது. விஞ்ஞானக் (அறிவியல்) கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாத சமய வாதிகள் கூட எல்லா இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் கடவுள்தான் காரணம் என்கின்றனர். . அக்கடவுளுக்குக் காரணம் யார் என்று கேட்டால் கடவுள் காரணமற்ற காரணம் (Uncaused Cause) என்று கூறுவர். அ.இரா.

**துணை நூல்கள்:**

**Clifford Bareett**, Philosophy, The Macmillan Company, New York, 1956.

**Hoernale, R.F.A.**, Studies in Contemporary Metaphysics, Harcourt, Brace & Co., 1920.

**Lloyd Morgan, C.**, The Emergence of Novelty, Williams, Northgate, London, 1933.

***காரணங் கற்பித்தல்***: ஒருவர் தம் விருப்பப்படி நடப்பதற்குத் தகுந்த காரணங்களைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் வகையில் கூறுதல் காரணங் கற்பித்தல் (Rationalization) எனப்படும். இது உளவியலில் தற்காப்பு வழிகளில்(Defence Mechanisms) ஒன்றாகக் கருதப்படுகின்றது. இது இரு வகைகளில் செயற்படுகின்றது. அவை 1. ஒருவர் தம் குறிக்கோள்களை அடைய இயலாது தோல்வியுறும் போதும் இது செயற்படுகிறது. 2. இது தம் நடத்தைக்குத் தகுந்த, ஏற்றுக் கொள்ளத் தக்க ஊக்கிகளைத் (Motives) தருவதாக அமைகின்றது.

விருந்திற்கு அழைக்கப்படாத பெண்ணொருத்தி, 'விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தாலும் சென்றிருக்க மாட்டேன்; ஏனெனில் நான் விரும்பாத சிலர் அதில் பங்கேற்றிருக்கின்றனர்' என்று கூறித் தன் விருப்பு வெறுப்புகளை மறைத்துக் கொள்கின்றாள். நல்ல

முறையில் தேர்வெழுதாததற்கு அல்லது ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்காததற்கு ஒரு மாணவன், 'என் தாய் என்னை அதிகாலையில் எழுப்பவில்லை' என்றும் 'எனக்கு வேறு பல முக்கிய அலுவல்கள் இருந்தமையால் கவனம் செலுத்த இயலவில்லை' என்றும் கூறித் தன் உள்ளத்தையும் பிறரையும் சமாதானம் செய்து கொள்கின்றான்.

இளம்பெண்ணொருத்தியால் மறுக்கப்பட்ட ஒருவன் அவளிடம் ஆயிரம் குறைகளைக் கண்டுபிடித்து, 'நல்ல வேளை நான் தப்பித்தேன்' என்று கூறிக் கொள்வதும், 'வலிய வந்தது விரைந்து ஏகியது' (Easy come easy go), 'அழகி ஆனால் ஊமை' (Beautiful but dumb)என்று கூறுவதும் காரணங்கற்பித்தல் முறையின் பாட்பட்டதேயாகும்.

காரணங்கற்பித்தல் என்ற முறையில் ஒருவன் பெற்றுள்ள குறையே அவனுக்குப் பெரிய நிறையாக அமைந்துவிடுகிறது. பிறவியிலேயே பெரிய காதுகளைப் பெற்றதால், 'கழுதைக் காதன்' என்று பிறரால் எள்ளி நகையாடப்பட்ட ஒருவன், மற்றவர்கள் கேட்க இயலாத ஒலிகளையும் தன்னால் கேட்க முடிகின்றது என்பதை உணர்ந்து, அதை நன்கு பயன்படுத்தி ஓர் இசை வல்லுநனாகத் திகழ முடிகின்றது.

காரணங்கற்பித்தல் முறை தனிமனிதர்களுக்கு மட்டுமன்றி, நாடுகளுக்கும் அரசாங்கங்களுக்கும் பயன்படுகின்றது. தாங்க முடியாத கடன் சுமை, வறுமை, தொழில் வளர்ச்சிக் குறைவு ஆகியவற்றால் துன்புறும் நாடுகள் தங்கள் தோல்விகளை மறைக்கச் 'சமாதானப் பெருவாழ்வுச் சமுதாயம் அமைப்போம்', 'புனிதப் போரில் இறங்குவோம்' எனறெல்லாம் கூறித் தங்கள் மக்களைத் திசை திருப்பி, தாங்கள் சொல்வதையும் செய்வதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் செய்வதும் காரணங் கற்பித்தல் முறையே.

உளவியலில் தற்காப்பு வழிகளில் ஒன்றான காரணங் கற்பித்தல் தனிமனிதன், சமுதாயம், நாடு என்ற எல்லா நிலைகளிலும் பயன்பட்டு, மனிதன் மனச் சோர்வின்றி உழைக்க வழிகோலுகின்றது இதைப் பயன்படுத்துபவர் நல்லவரானால் உளநலத்துக்கும், தீயவரானால் பிறரையும் தம்மைத் தாமே யும் ஏமாற்றிக் கொள்வதற்கும் பல உளப்பிணிகளுக்கும் காரணமாக அமையும். என்.சு.

**காரணப்பெயர்(மொழியியல்)**: ஒரு செயல் நிகழ்வதற்கு அடிப்படைக் காரணமாய் இருக்கும் பெயர்ச்சொல் காரணப்பெயர் (Agent-Noun) எனப்படும். வினையின் எழுச்சிக்குக் காரணமாக அமையும் பெயரே எழுவாய் எனவும், வினைக்கு முதற் காரணமாய் அமைவதால் அதுவே வினை முதல் எனவும் மரபு இலக்கண அறிஞர்கள் கூறினர். எனினும், இன்றைய மொழியியல் அறிஞர்கள் எழுவாயை இருவகையாகப் பிரித்து, புதைநிலை அமைப்பில் காணப்படும் எழுவாயே வினைக்கு அடிப்படைக் காரணமாய் அமைவதால் அதனையே காரணப்பெயர் என்றும், புறநிலையில் காணப்படுவனவற்றை எழுவாய் எனவும் கொள்வர். எடுத்துக்காட்டாக, செயப்பாட்டு வினை வாக்கியங்களில் காணப்படும் கருவி வேற்றுமைப் பெயர்கள் அனைத்தும் காரணப்பெயர்களே.

'இராவணன் இராமனால் கொல்லப்பட்டான்' என்னும் செயப்பாட்டு வினை வாக்கியம் 'இராமன் இராவணனைக் கொன்றான்' என்னும் புதைநிலை அமைப்பிலிருந்து பெறப்படுவது. ஆகவே, இவ்வாக்கியத்தில் இராவணன் என்னும் பெயர் எழுவாயாக இருப்பினும், இராமனால் என்றும் கருவி வேற்றுமைப்பெயர் புதைநிலையில் எழுவாயாக, அதாவது, காரணப்பெயராக அமைந்திருத்தல் தெளிவு. ஆகவே, காரணப்பெயர்கள் அனைத்தும் எழுவாய்களே. ஆனால், எழுவாய்கள் அனைத்தும் காரணப் பெயர்கள் அல்ல. புறநிலை எழுவாய் காரணப் பெயராகவும் இருக்கலாம். ஆனால், புதைநிலை எழுவாய் காரணப்பெயராகத்தான் இருக்கவேண்டும். அதாவது, எல்லாப் புதைநிலை எழுவாய்களும் காரணப்பெயராக வரும். ஆனால், புறநிலை எழுவாய்கள் காரணப்பெயராகவும் வரலாம்: வாராமலும் இருக்கலாம். அவ்வாறு எழுவாயாக மட்டும் புறநிலைத் தொடரில் வருமாயின், அதன் புதைநிலைத் தொடர் எழுவாய் காரணப்பெயராக இருக்கவேண்டும். ஆக, புற நிலையில் எல்லா எழுவாயும் காரணப்பெயராக இருப்பதில்லை.

ஒரு காரியம் செய்வதற்குக் காரணமாக இருப்பது புறநிலை எழுவாயாகவோ, புதைநிலை எழுவாயாகவோ இருக்கலாம். புறநிலை எழுவாய் காரணியாக இல்லாவிட்டால், அதன் புதைநிலைத் தொடரில் உள்ள எழுவாய் காரணியாக வந்திருக்கும். அவ்வாறு வருகின்ற எழுவாய்ப் பெயரினைக் காரணப்பெயர் என்று கருதுகின்றனர். 'நான் வந்தேன்' என்பதில் வருதல் என்ற தொழிலைச் செய்வது நான் என்ற எழுவாய். அதுவே காரணியாகவும் இருக்கிறது. எனவே, இந்தத் தொடரில் எழுவாயும் காரணியும் ஒன்றே. அப்படியென்றால், காரணிகள் இல்லாமல் தொடர்கள் அமைவதுண்டா? இல்லை எனலாம். சில தொடர்களின்

காரணிகள் வெளிப்படையாக இல்லை; மறைந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கதவு திறந்தது என்ற தொடரில் கதவு எழுவாய் மட்டுமே; காரணியன்று. 'காற்று கதவைத் திறந்தது'– கதவு திறந்தது. இதில் செயப்படுப்பொருள் எழுவாயாக நின்றது. ஆகவே, உயிர்ப் பெயர்கள் (Animate Nouns) அனைத்தும் காரணியாகப் புறநிலைத் தொடர்களில் வரும். உயிரற்ற பெயர்கள் (Inanimate Nouns) அனைத்தும் புறநிலைத் தொடரில் எழுவாயாக மட்டுமே வரும்; காரணப் பெயராக வாரா. எடுத்துக்காட்டாக, முள் குத்திவிட்டது என்ற தொடர், நான் சென்றேன் முள் குத்திவிட்டது என்ற தொடரில் இருந்து வருவிக்கப்பட்டது. எனவே, புதைநிலையில் நான் என்பது காரணி (Agent). காரணப்பெயர்கள் எல்லாம் மூன்றாம் வேற்றுமையை ஏற்று நிற்கும். எடுத்துக்காட்டுகள்: காற்றால் கதவு திறந்தது; முள்ளால் குத்திக்கொண்டேன் போன்றனவாகும். இதிலிருந்து உயிரற்ற காரணப் பெயர்கள் புதைநிலையில் மட்டுமே வரும்; உயிருள்ள காரணப் பெயர்கள் இருநிலையிலும் வரும் என்பது தெளிவாகிறது. உயிருள்ள காரணப்பெயர்கள் வரும் வாக்கியங்களில் காரணியும் எழுவாயும் ஒன்றாக இருந்தபோதிலும், செயப்பாட்டு வாக்கியங்களாக மாற்றப்படும்போது காரணி எழுவாயாகவோ, பிறிதாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாக இராமன் இராவணனைக் கொன்றான் என்பதில் இராமன் காரணியாகவும் எழுவாயாகவும் வருகிறது. அதே தொடரை மாற்றி 'இராவணன் இராமனால் கொல்லப்பட்டான்' என்று எழுதும்போது இராமனால் என்ற காரணி மூன்றாம் வேற்றுமையாகக் கருவிப்பொருளில் வருவதால் இராவணனைக் கொன்றது, இராமனாகவோ இராமனுடைய ஆளாகவோ இருக்கலாம். எனவே, இது போன்ற செயப்படுபொருள் வாக்கியங்களில் காரணியும் எழுவாயும் ஒன்றாகவோ வேறாகவோ இருக்கும்.

இதேபோன்று சொல்லாக்கத்தில் காரணப்பெயர் பெருகி வருவதைக் காணலாம். காரண ஒட்டுகளைச் சேர்த்து (Agentive Suffix) காரணப்பெயரை உருவாக்கலாம். அதாவது, ஒட்டுநர், நடத்துநர் போன்றனவாகும். ஒரு வினை செய்தற்குக் காரணமாக இருக்கின்ற காரணப் பெயரின் விகுதியாகிய – 'நர்' அவ்வினைகளுடன் சேர்ந்து காரணப் பெயர்களாகப் பெறப்படுகிறது. இன்னும் – காரன், – காரி போன்ற விகுதிகளும் பெயர்களுடன் சேர்ந்து காரணப் பெயர்கள் ஆகின்றன. வீட்டுக்காரன், வேலைக்காரன் போன்றவை.

கு.அ.

**காரணப்பெயர் (மரபிலக்கணம்)**: பொருளைச் சுட்டுவதற்கு அமைந்த சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல்லின் இலக்கணம் கூறவந்த இலக்கண ஆசிரியர்கள், அச்சொல் உணர்த்தும் பொருள்களின் வகை நோக்கி இடப்பெயர், காலப்பெயர் முதலிய பல வாறாகப் பகுத்துக் கூறினர். மேலும் ஒரு பொருளுக்கு அப்பெயர் அமைந்த காரணம் பற்றி, அப்பெயர் காரணப்பெயர் அல்லது இடுகுறிப்பெயர் என்று வகைப் படுத்தியும் விளக்கியுள்ளார்கள். பெயரமைந்த காரணம் புலப்படுமாறு அமைந்தன காரணப்பெயர் என்றும், அவ்வாறு காரணம் விளங்கப் புலப்படாதன இடுகுறிப் பெயர் என்றும் கூறப்பட்டன. தொல்காப்பியர் பெயர்களை இவ்வாறு பகுத்துக்கூறவில்லையேனும், ஒரு பொருளுக்கு ஒரு பெயர் அமைந்த காரணம் வெளிப்படப் புலப்படாமல் இருப்பதுண்டு என்று கூறுவதன் வாயிலாகப் பெயர்களை இவ்வகையாகப் பகுத்துக் காண்பது அவருக்கு உடன்பாடே என்பதனை, 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல். சொல். பெயர்.1), 'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' (தொல். சொல். உரி. 98) ஆகிய நூற்பாக்களை நுட்பமாக ஆராய்வோர் உணரக்கூடும்.

நன்னூலார் பெயர்ச் சொற்களை இடுகுறிப் பெயர், காரணப்பெயர் என்று இருவகைப் படுத்தியும், அவற்றை மேலும் பொதுவும் சிறப்புமாக வகைப்படுத்தியும், 'இடுகுறி காரணப்பெயர் பொதுச் சிறப்பின' (நன்.எழுத்து. பெயர்.1) என்று நூற்பா இயற்றியுள்ளார். அவ்வகையில், யாதானும் ஒரு காரணம் பற்றி ஒரு பொருளுக்கு அமையும் பெயர் காரணப்பெயர் எனப்படும். காரணம் கண்டு கூறக்கூடிய பெயர் எல்லாம் காரணப்பெயர் எனவும் அதனை விளக்கலாம். அவை காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப் பெயர் என்று இருவகைப்படும். அணி என்பது அணியப்படும் கலன்கள் அனைத்திற்கும் பொதுவாய் நிற்றலின் அது காரணப்பொதுப் பெயர் எனப்படும். முடி என்பது, தலையில் சூட்டிக் கொள்ளப்படும் ஒரு கலனை மட்டும் குறிப்பதனால் அது காரணச் சிறப்புப் பெயர் எனப்படும்.

சில பெயர்களைக் காரண இடுகுறிப்பெயர் என்று இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். முக்கண்ணன் என்பது காரண இடுகுறிப் பெயராகும். மூன்று கண் உடையவன் என்னும் காரணத்தைக் கருதும்போது அப்பெயர், விநாயகன் முதலிய முக்கண்ணர் பலரையும் குறிக்கும். ஆனால், காரணம் கருதாத நிலையில், இடுகுறியாய்ச் சிவனை மட்டுமே குறிப்பதாக அமையும். காரண இடுகுறிப்பெயர் என நன்னூலார் பகுத்துக் கூறுவது, தமிழ் இலக்கணச் சிந்தனையில் ஒரு வளர்ச்சி நிலையினைக் குறிப்பதாகும்.

அ.மா.ப.

**காரணாகமம்** சிவாகமங்களில் நான்காவதாக உள்ளது. இதில் பூர்வ, உத்தர என்ற இரு பகுதிகள் உண்டு. பூர்வ பாகத்தில் 147 படலங்கள் உள்ளன. இதில் காமிகத்தைப் போன்று தந்திரத்தின் வரலாறும் மந்திரங்களின் உற்பத்தியும் கூறப்பட்டுள்ளன. 3 முதல் 101 வரையுள்ள படலங்கள் கிரியை பற்றிக் கூறுகின்றன. இதன் 18-ஆம் படலத்தில் 84 கரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. கரணம் என்பது தோரணம், பவுத்திரம், சிவகும்பம், திவசம் போன்றவற்றில் விளக்கப்பெற்றுள்ளது. ஆசிரியன் பற்றியும், முத்திரை பற்றியும் 26,28 ஆகிய படலங்கள் விவரிக்கின்றன. பூசை செய்யும் முறைகளும் ஓமம் செய்யும் வகைகளும் 55,56 ஆகிய படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. இறைவன் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்யும்போது கவனிக்கப்பட வேண்டிய விதிகள் 58-ஆம் படலத்தில் காணப்படுகின்றன. விக்கினேசுவரர், இலிங்கம், பரிவார தேவதைகள், பலிபீடம் முதலியவற்றைப் பிரதிட்டை செய்யும் முறைகள் 59 முதல் 61 வரையிலான படலங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இரத்தினலிங்கம், சூலம், பாசுபதம், விமானம், இலிங்கோற்பவர் முதலிய 13 மூர்த்திகளைப் பிரதிட்டை செய்யும் முறைகளும், சகளம், நிட்களம் என்பவற்றின் வேறுபாடுகளும், கௌரி, தேவி முதலியவர்களைப் பிரதிட்டை செய்யும் முறையும் 62 முதல் 101 வரையுள்ள படலங்களில் கூறப்பட்டுள்ளன.

பூசை விதிகள், வார பூசை, திதி பூசை, மாத பூசை பற்றியன 127 வரையுள்ள படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. சிவராத்திரி பூசை 118-ஆம் படலத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

கோயில்களில் சில பாகங்கள் சிதைவுற்று விழுந்து விட்டால் அவற்றைப் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்ய வேண்டும். அச்சமயத்தில் 'பாலாலயம்' என்ற பெயரில் சிறிய ஒரு கோயிலை அமைத்து, அங்கு உற்சவ மூர்த்தியை எழுந்தருளப் பண்ணி,நாடோறும் பூசைகளைச் செய்ய வேண்டும். திருப்பணிமுடிந்தவுடன் அட்டபந்தனம் செய்து குடமுழுக்குச் செய்ய வேண்டும். இவை யாவும் 134முதல் 137 வரையுள்ள படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

உற்சவங்களின் வகைகளுள் நித்திய உற்சவம், மகோற்சவம் ஆகிய இரண்டும் 140 முதல் 143 வரையுள்ள படலங்களில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பலவகைப்பட்ட சாந்தி ஓமங்களும் கழுவாய் செய்ய வேண்டிய முறைகளும் 144 முதல் 147 வரையுள்ள படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

காரணாகமத்தின் உத்தரபாகத்தில் 105 படலங்கள் உள்ளன. பூர்வபாகத்தில் கூறப்பட்டுள்ள செயல்களைச் செய்யும் முறைகளே இப்பாகத்தில் உள்ளன. சிவபிரானுடைய 29 மூர்த்திகளைப் பிரதிட்டை செய்ய வேண்டிய முறைகள் தனித்தனியே கூறப்பட்டுள்ளன.

காமிகாகமம், காரணாகமம் ஆகிய இரண்டிலும் விவரிக்கப்பட்டுள்ள கோயில்கள் கட்டும் முறைகள், சிற்ப சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள வழிகளை ஒத்துள்ளன. பிராகாரங்கள், விமானங்கள்,மண்டபங்கள் கோபுரங்கள் உருவங்களைச் செய்வதற்குரிய மரம், கல், உலோகம் ஆகியவற்றின் குற்றமற்ற இயல்புகள் முதலியன மானசாரம், சில்பரத்னம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ள முறைகளைத் தழுவி எழுதப்பட்டுள்ளன. பரமசிவன், தேவி ஆகியோரின் பலவித வடிவங்களும், அவற்றை அமைக்கும் முறைகளும் சிற்ப சாத்திரத்தை ஒட்டியே உள்ளன. சிற்சில இடங்களில் சைவ சமயத்திற்கு ஏற்றவாறு மாறுதல்களையும் இடம்பெற வைத்து இவ்வாகமம் இயற்றப்பட்டுள்ளது. சிற்சில செய்திகள் காமிகாகமத்தைக் காட்டிலும் இந்த ஆகமத்தில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. வி.வ.

**காரணிப் பகுப்பாய்வு**: சோதனை உளவியலில் மிகுதியான சோதனைகள் பலதரப்பட்டனவாக, பல மனித இயல்புகளை அளவிடுவனவாக இருக்கின்றன. அவை தகுதியுடையோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குத் தரப்பட்டு மதிப்பெண்கள் பெறப்படுகின்றன. இம் மதிப்பெண்கள் மற்றச் சோதனை மதிப்பெண்களுடன் ஒட்டுறவு (Correlation) கொண்டனவாக அமைந்திருக்கின்றன. இந்த ஒட்டுறவுக் கெழு (Coefficient of correlation) எந்த அளவில் அவற்றிடையே இருக்கின்றது, எந்த அளவு அது தனித்தன்மையுடன் திகழ இயலும் என்று கண்டுபிடிக்கும் புள்ளியல் முறைக்குக் காரணிப் பகுப்பாய்வு (Factor Analysis) என்பது பெயர்.

காரணிப் பகுப்பாய்வு என்ற இந்தப் புள்ளியல் முறையை உளவியல் சோதனைகளில் பயன்படுத்த இயலும் என்ற உறுதி இசுப்பியர்மன் (Spearman), தர்சுட்டோன் (Thurstone), தாம்சன் (Thompson), பர்ட்டு (Burt) ஆகியோரின் இடைவிடா முயற்சியால் ஏற்பட்டது. பலர் பல முறைகளில் காரணிப் பகுப்பாய்வு முறையினை விளக்கினாலும், இப்பகுப்பாய்வின் முக்கிய நோக்கம் புல்வேறு மாறிகளுக்கிடையே (Variables) உள்ள ஒட்டுறவை அவற்றுக்கு உள்ளடங்கிய ஒரு சில குறிப்பிட்ட காரணிகள் மூலம் ஊகிப்பதேயாகும்.

காரணிப் பகுப்பாய்வு முறை இருகாரணிக் கொள்கை (Two Factor Theory), குழுக் காரணிக் கொள்கை (Group Factor Theory) என்னும் இரு கொள்கைகளையுடையது. இருகாரணிக் கொள்கை என்பது இசுப்பியர்மனால் தோற்றுவிக்கப்பட்டது. இதை விளக்க அவர் பொதுக் காரணி (Common Factor), சிறப்புக்காரணி (Specific Factor) என்ற இரு வகைக் கருத்துகளைப் பயன்படுத்தினார்.

பலவித கணிதப் பகுப்பாய்வுகளுக்குப் பின்னர், இசுப்பியர்மனும் அவருடன் பணிபுரிந்தோரும் இரு சோதனைகளுக்கிடையே உள்ள ஒட்டுறவின் அளவு அவற்றுக்கிடையுள்ள பொதுமைக் காரணிகளைப் ('G' Factors) பொறுத்தே அமைகின்றது என்பதைக் கண்டறிந்தனர். தொடர்ந்து நடந்த ஆய்வுகள் ஒரு சில சோதனைகளின் கலப்பு ஒட்டுறவு (Inter correlation) அவற்றுக்கு மட்டுமே உரிய ஒருசில சிறப்புக் காரணிகளையும் பொதுக் காரணிகளாக ஏற்றுக் கொள்ளும் இயல்புடையதாக இருக்கின்றது என்பதையும், அது அவற்றுக்கிடையே மட்டும் தனித்திருந்தாலும், பொதுமையாக இருப்பதால் பிற பொதுமைக் காரணியுடன் சேர்த்து எண்ணப்படுகின்றது என்பதையும் கண்டறிந்தன. இத்தகைய சிறப்புக்காரணிகள் எண்ணிக்கைத்திறன், வாய்ச்சொற்றிறன், வேகத்திறன், இயந்திரவியல் திறன், கற்பனைத் திறன், கவனிக்கும் திறன் ஆகியன. இவற்றுடன் நுண்ணறிவுச் சோதனையின்பாற்படாத திறன்களான தொடர்ந்து நிற்கும் தூண்டல் (Perseveration), அலைவு மனப்பாங்கு, இயற்றி நிலை (Will) ஆகியவற்றையும் இசுப்பியர்மன் கண்டுபிடித்தார்.

இசுப்பியர்மனின் இரு காரணிக் கொள்கை ஒத்த பண்புகளையுடையபல சோதனைகள் ஒருங்கிணைந்து ஓர் அளவையினைத் திட்டவட்டமாக முடிவு செய்ய வழி கோலுகின்றது. இந்த ஓர் அளவை சிதறிக் காணும் பல சிறப்புக் காரணிகளினால் பாதிக்கப் படாதிருக்கின்றது. எவ்வாறெனில், ஒரு சில சோதனையின் மதிப்பெண்கள் ஒட்டுறவு முறையின் (Correlation Method) மூலம் ஆய்வு செய்யப்படுகையில், சிறப்புக் காரணிகள் ஒன்றையொன்று அழித்துக் கொள்கின்றன. இதன் காரணமாக எவ்வித இடையூறுமின்றிப் பொருள் பொதிந்த, நம்பத் தகுந்த ஓர் அளவை கிடைக்கிறது.

குழுக்காரணிக் கொள்கை என்பது தர்சுட்டோனால் உருவாக்கப்பட்டது. குறிப்பிட்ட அளவுள்ள ஒரு சோதனைத் தொகுப்பினிடையே காணும் ஒட்டுறவே இந்தக் குழுக் காரணிக் கொள்கையின் அடித்தளமாக விளங்குகிறது. சான்றாக, பல சோதனைகளில் குறிப்பிட்ட இரு குழுக் காரணிகள் உள்ள சோதனைகளை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். ஒருவன் இந்த இருகுழுக் காரணிகளிலும் ஓரளவு அதிக மதிப்பெண்களைப் பெற்று அதிகத் திறனை இரண்டிலும் காட்டலாம்; அல்லது ஒரு குழுக் காரணியில் மிக அதிக மதிப்பெண்ணும் மற்றதில் ஓரளவு மதிப்பெண்ணும் பெறலாம். இதில் குறிப்பிட்ட ஒரு குழுக் காரணிக்கு மிக அதிக மதிப்பு இருந்தால், அதில் மிக அதிக மதிப்பெண்ணும் மற்றதில் சாதாரண மதிப்பெண்ணும் பெற்றவன் இரு குழுக் காரணிகளிலும் ஓரளவு அதிக மதிப்பெண் பெற்றவனை விடச் சிறந்தவனாகக் கருதப்படுவான். ஆகவே தர்சுட்டோன் முறை மிக அவசியமான அடிப்படை உளத்திறன்களைக் கண்டறிந்து, அவற்றை அவை சார்ந்த துணைச் சோதனைகளையும் ஆய்வு செய்து, ஒவ்வொரு காரணியின் சக்தியினையும் பாதிப்பினையும் ஆய்வு செய்வதில் அக்கறை காட்டுகிறது.

காரணிப் பகுப்பாய்வு முறைகளும் தரப்படும் விளக்கங்களும் காரணிப் பகுபாய்வாளர்களின் அணுகு முறைகளும் வேறுபட்டாலும், அடிப்படையில் காரணிப் பகுப்பு முறையின் பலன்களும் முடிவுகளும் மிகுந்த வேறுபாட்டிற்கு உள்ளாகா. எல்லாக் காரணிக் கொள்கைகளும் குழுக் காரணிகள் இருப்பதை ஒப்புக் கொண்டாலும், எல்லாக் குழுக்களும் ஒன்று போலவே ஒரே காரணியை வற்புறுத்துவனவாகவோ அமைதலில்லை. ஏறக்குறைய எல்லாக் கொள்கைகளும் ஒரு பொதுமைக் காரணியை ஒப்புக் கொண்டாலும், அதை வலியுறுத்துவதில் வேறுபடுகின்றன.

எல்லாக் கொள்கைகளும் ஒரு தனிமனிதனின் உளத்திறன், அவனுடைய பொதுமைக் காரணிகள், குழுக்காரணிகள் முதலியவற்றின் கூட்டமைப்பையும் பல்வேறு உளச் சோதனைகளில் அவன் பெறும் மதிப்பெண்களையும் பொறுத்தே அமைகின்றது என்பதை ஒத்துக் கொள்கின்றன.

காரணிப் பகுப்பாய்வு முறையில் பல்வேறு கொள்கைகளும் அணுகுமுறைகளும் தனி மனிதனின் உளப்பாங்கைக் கணிக்க உதவினாலும், அம்முறை பெரும்பாலும் உளவியல் கொள்கைகள் மீதும் கருத்துகள் மீதும் விளக்கங்களின் மீதும் எழுப்பப்பட வேண்டுமேயல்லாது, புள்ளியியல் முறைகளில் அதிக ஆர்வம் காட்டிவிடலாகாது. பெறப்பட்ட காரணிகளை மாறாத் தன்மையுடைய, முன் நிருணயம் செய்யப்பட்ட உளப்பதிவுகள் என்று எண்ணலாகாது. இக்காரணிகள் தனிமனிதனின் வயது, விருப்பு வெறுப்புகள், பயிற்சி, அனுபவம், இத[illegible] சோதனைகளில் பெற்ற

அறிவு ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இருப்பினும் இப்புள்ளியியல் முறை உளவியல் சோதனைகளை உருவாக்குவதிலும், சோதனையில் கிடைத்த மதிப்பெண்களை முறைப்படுத்துவதிலும் பெரிதும் பயன்படுகின்றது. என்.சு.

**துணை நூல்கள்:**

**Frank. S, Freeman,** Theory and Practice of Psychological Testing, Oxford & IBH Publishing Co New Delhi, 1965.

**Guilbford, J.P.,** Psychometric Methods, McGraw Hill Book Company Inc., New York, 1954.

**Varma, M.,** An Introduction to Educational and Psychological Research, Asia Publishing House, Bombay, 1965.

***காரணி வருமான அணுகுமுறை*** உற்பத்திக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் ஆய்வுமுறையைக் குறிக்கும். ஒரு நாடு ஓராண்டில் உற்பத்தி செய்யும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்த அங்காடி மதிப்பு (Market Value) அந்நாட்டின் மொத்த உற்பத்தி ஆகும். நாட்டின் ஒவ்வொரு செலாவணி அலகு (Currency Unit) மதிப்புள்ள உற்பத்தியும் ஒவ்வொரு செலாவணி வருமானத்தை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டாக, ஓர் உரூபாய் செலாவணி ஓர் இந்தியச் செலாவணி அலகாகும். இவ்வருமானங்கள் அனைத்தையும் சேர்த்துக் கூட்டிக் கிடைக்கும் மொத்தத் தொகை நாட்டின் மொத்த வருமானமாகும். இதனை நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் காரணி வருமான அணுகு முறை (Factor Income Approach in Measuring National Income) எனக் கூறுகின்றனர்.

நாட்டு வருமான வரையறையின் முக்கிய கூறுகளாவன: 1) நாட்டு வருமானம் என்பது ஓர் ஆண்டுக் காலத்தில் உற்பத்தியாகும் பொருள்களின் அங்காடி மதிப்பீடு. 2) நாட்டு வருமானத்தைத் துல்லியமாக மதிப்பிட, உற்பத்தியாகும் பொருள்களும் பணிகளும் ஒரு தடவை மட்டும் கணக்கிடப்பட வேண்டும். ஒரு முறைக்கு மேல் ஒரு பொருளைக் கணக்கிடக் கூடாது. எனவே, கணக்கிடப்படும் உற்பத்திப் பொருள்களும் பணிகளும் நடுத்தரப் பொருள்களாக (Intermediate Products) இல்லாமல், முழுமையாக உற்பத்தி செய்து முடிக்கப்பட்டவையாக (Final Products) இருக்கவேண்டும்.



ஒரு நாட்டின் வருமானத்தை மூன்று முறைகளில் கணக்கிடலாம். அவையாவன: 1) உற்பத்தி முறை; இம்முறையில் உற்பத்திகளின் மதிப்பை மொத்தமாகக் கூட்டுதல். 2) வருமான முறை: இம்முறையில் பொருள்கள், பணிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும்போது உற்பத்திக் காரணிகளுக்கு (Factors of Production) வழங்கப்படும் ஊதியத்தை மொத்தமாகக் கூட்டுதல். 3) செலவுமுறை: இம்முறையில் நாட்டின் எல்லாத் துறைகளின் (Sectors) செலவுகளையும் மொத்தமாகக் கூட்டுதல்.

ஒரு நாட்டில் நிறுவனங்கள் (Firms), இல்லத் துறை (Household Sector) ஆகிய இரண்டு துறைகள் மட்டுமேஉள்ளன என்று வைத்துக்கொண்டால், உற்பத்திக்காரணிகளைக் கொண்டு நிறுவனங்கள்பொருள்களை உற்பத்தி செய்கின்றன. உற்பத்தியின் இன்றியமையாக் காரணிகளான நிலம், உழைப்பு, முதலீடு, அமைப்பு ஆகியவற்றின் பணிக்கு ஊதியம் அளிக்கப்படுகிறது. இவ்வாறு பொருள் உற்பத்தியாகும்போது, காரணிகளின் வருமானம் உருவாகிறது. அவை உழைப்பவருக்கு அளிக்கப்படும் கூலி, நிலம் பெறும் வாரம், முதலீட்டிற்கு அளிக்கப்படும் வட்டி, நிறுவன அமைப்பு ஈட்டும் ஆதாயம் ஆகியனவாகும். எனவே, நிகர உற்பத்தியின் (Net Products) விற்பனை மதிப்பீடு, காரணிகளுக்கு அளிக்கப்படும் ஊதிய மதிப்பீடுகளுக்குச் சமமாக இருக்கும். உற்பத்திக் காரணிகளின் வருமானம் திரும்பவும் செலவு செய்வதற்கான மூலதனமாகலாம். நிறுவனங்கள் இல்லத்துறையிலிருந்து உற்பத்திக் காரணிகளை உற்பத்திக்காகப் பெறுகின்றன. இதனால் நிறுவனங்களிலிருந்து இல்லத்துறைக்கு வருமான ஓட்டம் (Income Flow) ஏற்படுறது. இவ்வருமானத்தை இல்லத்துறை செலவிடுகிறது. இல்லத்துறை நிறுவனங்களிடமிருந்து நுகர்வுப் பொருள்கள் (Consumntion Goods) வாங்குவதனால் திரும்பவும் நிறுவனங்களுக்கு வருமானமாக அது வந்து சேருகிறது. எனவே, நாட்டின் வருமானம் = நாட்டின் உற்பத்தி = நாட்டின் செலவீடு. இவற்றிலிருந்து நாட்டின் வருமானத்தை இம்மூன்று வழிகளிலும் அளவிட முடியும் என்பது தெளிவாகிறது. இம்முக்கோணக் கண்ணோட்டத்தின் தனிச் சிறப்பு யாதெனில், இவற்றுள் ஒவ்வொன்றும் நாட்டுப் பொருளாதாரத்தின் அடிப்படைச் செயற்பாடுகளான உற்பத்தி (Production), பகிர்வு (Distribution), செலவீடு (Expenditure) ஆகியவற்றைக் குறிக்கிறது என்பதாம்.

உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கப்படும் கூலி, வாரம், வட்டி, ஆதாயம் ஆகியவை அனைத்தும்

சமுதாயச் சூழ்நிலையில், சமுதாயத்திலுள்ளவர்களுக்குக் கிடைக்கும் வருமானங்களானவையாம், இவை சமூக வருமானங்கள் (Social Income) என்று சொல்லப்படுகின்றன. இதனைப் பேராசிரியர் கிக்சு என்பவர், ஒரு சமுதாயத்தின் நிகரச் சமூக உற்பத்தியின் மதிப்பும், அச்சமுதாயத்தின் உறுப்பினர்களின் மொத்த வருமானங்களும் சமமானவை என்றும், உபரி சமூக உற்பத்தியும் சமூக வருமானமும் ஒன்றே என்றும் கூறியிருகிறார்.

பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் மூலம் காரணி வருமானங்கள் தோன்றுவதனாலும் உற்பத்தியாகும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றைப் பெறுவதற்காக அந்த வருமானங்கள் செலவிடப்படுவதாலும், நாட்டு வருமானத்தை அளவிட மேற்கூறிய மூன்று முறைகள் உள்ளன. அவற்றுள் காரணி வருமான முறை தலையானதாகக் கருதப்படுகிறது.

**காரணி வருமான முறை**: இம்முறையில் உற்பத்தி செலவீடுகளைக் கணக்கிடுவதற்குப் பதிலாக, வருமானப் பகிர்வு பயன்படுத்தப்படுகிறது. வருமானம் காரணிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பின், அது தனி ஆட்களின் ஊதியமாகிறது. நாட்டின் எல்லாத் தனி ஆட்களின் வருமானங்களையும் கூட்டிச் சேர்க்கும் போது, நாட்டின் வருமானம் கிடைக்கிறது. நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தம்முடைய உழைப்பைச் செலவிட்டு அதற்கான ஊதியத்தை வருமானமாகப் பெறுகின்றனர். தங்கள் சொத்துகளாகிய நிலம், மூலதனம், அமைப்புத் திறமை போன்றவற்றை உற்பத்திக் காரணிகளாக வழங்கி அவற்றிற்கான ஊதியத்தை வாரம்,வட்டி ஆதாயம் என வருமானமாகப் பெறுகின்றனர்.

காரணி வருமான முறையில் மொத்த வருமானத்தைக் கணக்கிடப் பின்பற்றவேண்டிய முறையாவன: 1) உழைப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் என்ற வருமானம்; 2) உற்பத்திக்காக நிலம், பொருள்கள், அவைகளின் பணிக்காக அளிக்கப்படும் வாரம் (வாடகை) என்ற வருமானம்; 3) தொழில் முதலீட்டு மூலதனத்திற்காகக் கொடுக்கப்படும் வட்டி என்ற வருமானம்; 4) தொழில் முனைபவர்களுக்குக் கிடைக்கும் ஆதாயமும் கூட்டு இருப்பு நிறுவனங்களின் (Joint Stock Companies) பகிர்ந்தளிக்கப்படாத ஆதாயமும் சேர்த்து வரும் வருமானம்; 5) சொந்தத் தொழிலில் ஈடுபடுவதனால் கிடைக்கும் ஊதியமாகிய வருமானம். இவையனைத்தையும் கூட்டிச் சேர்ப்பதினால் கிடைப்பது நாட்டு வருமானம், காரணி வருமான அணுகுமுறையில் பெறப்படும் நாட்டு வருமான முறையின் வாயிலாகச் சமுதாயத்தில் பல நிலைகளிலுள்ளவர்களின் வருமானங்களை அறிய முடிகிறது. தொழிலாளர், பணியாளர், முதலாளி ஆகிய வகுப்பினரின் வருமானத்தைத் தனித்தனியாகப் பகுத்து அறியலாம். நாட்டு வருமானத்தில் உற்பத்திக் காரணிகளுக்குக் கிடைக்கும் பங்கு என்ன என்றும் அறியமுடிகிறது.


**உற்பத்தி முறை**: பொருளாதாரத்தை வேளாண்மை, சுரங்கத்தொழில், கைத்தொழில், சிறுதொழில், வாணிகம், போக்குவரத்துப் போன்ற பல துறைகளாகப் பிரித்து,ஒவ்வொரு துறைத் தொழிலின் வருமானத்தைச் சேர்த்துக் கூட்டிப் பெறும் மதிப்பீடு மொத்த வருமானமாகும். இதிலிருந்து தேய்மான விகிதத்தைக் (Depreciation Rate) கழித்துவிட்டால் உண்மையான நிகர வருமானம் (Real Net Income) கிடைக்கும்.

**செலவீட்டு முறை**: ஓர் ஆண்டுக்குள் உற்பத்தி செய்து முடிக்கப்பட்ட பொருள்களுக்கும், பணிகளுக்கும் ஆன செலவுகளையெல்லாம் சேர்த்துக் கூட்டி நாட்டின் வருமானத்தை அளவிடலாம். நாட்டின் மொத்தச் செலவீடுகளுள் சொந்த நுகர்வுச் செலவீடு, உள்நாட்டில் தனியாரின் மொத்த முதலீடு, அரசாங்கத்தின் கொள்முதல், நிகர ஏற்றுமதி ஆகியன அடங்கும்.

மூவகை வருமான அணுகுமுறைகளும் நாட்டின் ஒரே வருமானத்தையே அளவிடுகின்றன. இம் முறைகளை வருமானச் சுழல் ஓட்ட (Circular Income Flow) வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.

வரைபடம் மூன்று அணுகுமுறைகளையும் அவைகளிடையே உள்ள உறவுகளையும் எடுத்துக்காட்டுகின்றன. உற்பத்தி,செலவீடு, அணுகுமுறைகள் ஆகியவை வருமான ஓட்டத்தின் அளவைக் (Size) கணக்கிட உதவுகின்றன. படத்தின் மேற் பகுதி இதைக் காட்டுகிறது. காரணி அணுகுமுறையைப் படத்தின் கீழ்ப் பகுதியில் காணலாம்.

இந்தியாவில் அண்மைக்காலத்தில்தான் துல்லியமாக நாட்டு வருமானத்தை அளவிடும் முறைக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதற்கென இந்திய அரசு 1949-இல் நாட்டு வருமானக் குழு ஒன்றை நிறுவியது. நாட்டின் வருமானத்தை ஆய்ந்து கணக்கிடவும் அதற்குகந்த வழிமுறையை வகுத்திடவும் அக் குழுவிற்கு ஆணையிடப்பட்டது.அக்குழுவின் பரிந்துரையின்படி 1954-இல் மையப் புள்ளியியல் அமைப்பின் (Central Statistical Organisation) ஒரு பிரிவாக நாட்டின் வருமானக் குழு(National Income




Committee) அமைக்கப்பட்டுச் செயற்படத் தொடங்கியது.இது ஆண்டுதோறும் நாட்டின் வருமானத்தை அளவிட்டு வெளியிடும் பணியில் முனைந்துள்ளது.

நாட்டு வருமானக் குழு, உற்பத்தி அணுகு முறையையும் காரணி வருமான அணுகுமுறையையும் பின்பற்றுகிறது. வேளாண்மை,சுரங்கத்தொழில் போன்ற முக்கியமான முதல் நிலைத் துறைத் (Primary Sector) தொழில்களுக்கு உற்பத்தி அணுகு முறையைப் பயன்படுத்துகிறது. பிற துறைத் தொழில்களுக்கெல்லாம் காரணி அணுகுமுறையைக் கையாண்டு வருகிறது. சிறிய தொழில் நிறுவனங்கள் போன்றவைகளுக்கு இரண்டு அணுகுமுறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

காரணி வருமானங்களில் கூலி, வாடகை, வட்டி, ஆதாயம் ஆகியவை சேர்க்கப்படுகின்றன. ஆனால் இந்திய மையப் புள்ளியியல் அமைப்பின் 1978-ஆம் ஆண்டு வெளியீட்டில் சொந்தத் தொழில் செய்பவர்களின் கலப்பு வருமானமும் (Mixed Income) சேர்க்கப்பட்டுள்ளது.அதற்குச் செயல்முறையின் உழைப்பவர்களின் வருமானத்திலிருந்து, இல்லத் துறைக்குக் கிடைக்கும் மிகுதி வருமானத்தைப் பிரிக்கமுடியாத நிலை உள்ளது என்பது காரணமாகக் கூறப்பட்

டுள்ளது. இம் மதிப்பீட்டின்படி, நாட்டின் பொருளாதாரம் முழுவதிலும் சொந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களின் கலப்பு வருமானம் 1970–'71–இல் மொத்த வருமானத்தில் 45.6 விழுக்காட்டிலிருந்து, 1975–'76–இல் 42.9 விழுக்காடாகக் குறைந்தது. வட்டியின் பங்கு அதே காலத்தில் 5.4 விழுக்காட்டிலிருந்து 6.4 விழுக்காடாகவும், ஆதாயத்தின் பங்கு 4.5 விழுக்காட்டிலிருந்து 5.9 விழுக்காடாகவும் கூடியது.

ஒழுங்கமைந்த துறைகளில் (Organised Sector) ஆதாயமும், ஆதாய ஈவுகளின் (Dividends) பங்கும் 1970–76–இல் 18.8 விழுக்காடாக உயர்ந்தது. உழைப்பாளிகளின் ஊதியத்தின் பங்கு 1970–71–இல் 71.7 விழுக்காட்டிலிருந்து 1975–'76–இல் 69.7 விழுக்காடாகக் குறைந்தது. 1970–71–இல் வட்டி, வாரம், ஆதாயம், ஆதாய ஈவு போன்ற காரணிகளின் பங்கு மொத்த வருமானத்தில் 23.3 விழுக்காட்டிலிருந்து, 1975–76–இல் 30.3 விழுக்காடாகக் கூடியது. ஒழுங்கமையாத் துறையை (Unorganised Sector) ஆராய்ந்தால், உற்பத்திக் காரணிகளின் அளிப்புப் பங்கில் 1970–71–இலிருந்து 1975–'76 வரையில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை; 1970–71–இல் இருந்த 37.8 விழுக்காடு, 1975–76–இல் 37.4 விழுக்காடாக உள்ளது.

பொதுவாக நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதற்குக் காரணி வருமான அணுகுமுறையே இந்தியாவில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மா.செ.

**துணை நூல்கள்:**

**Abraham**, **W. I.**, National Income and Economic Accounting, Prentice-Hall, 1969.

**Ackley**, **G.**, Macro Economic Theory, Macmillan, New York, 1962.

**Adams**, **F, G.**, National Accounts and Structure of the U.S. Economy, General Koning Press, New York, 1973.

**காரணை விழுப்பரையர்**: இவர் கி. பி. 13–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர். பிற்காலப் பாண்டியர் காலத்தில் வாழ்ந்தவர். கல்வெட்டின் மூலம் இவரது வாழ்க்கை வரலாறு ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்ததாக(இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டம்) பெரிச்சி கோயிலில் இவரைப் பற்றிய ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. பெரிச்சி கோயில் ஒரு சிவன்கோயில். பாண்டி நாட்டில் கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன் என்னும் அதிகாரிக்கு இப்புலவர் நண்பரானார். மற்றொரு நண்பர் பெரியன் ஆதிச்சதேவன் என்பாராவர். இப்புலவர் பெயரால் 'காரணை விழுப்பரையன் மடல்' என்னும் நூல் இருந்ததாகத் தெரிகிறது. காரணை என்னும் ஊர் தென்னார்க்காடு மாவட்டத்துத் திண்டிவனம் வட்டத்திலுள்ள அண்ணமங்கலத்தைச் சார்ந்ததாகலாம் என்பர். காரணையில் பிறந்து வளர்ந்த இப்புலவர் பாண்டிய நாட்டுப்புலவராக இருந்துள்ளார். இவர், கல்வெட்டில் பெயர் பொறிக்கப்படும் அளவுக்கு மாறவர்மன் சுந்தர பாண்டியன் அவைக் களத்தில் புலவராக இருந்து பணி செய்தவர்போலும்.

அ.ம.

**காரல்** கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உருமேனியா நாட்டை ஆண்ட அரசர். இவர் கி. பி. 1839–இல் பிறந்தார். சார்லசு என்றும் இவர் அழைக்கப்பட்டார். இவர் தந்தையின் பெயர் சார்லசு ஆண்டன். காரல் கி. பி. 1878–இல் பெர்லின் மாநாட்டு உடன்படிக்கைப்படி உருமேனியா சுதந்திரம் அடைந்த பிறகு அந்நாட்டின் முதல் சுதந்திர அரசரானார். முதல் உலகப் போரில் உருமேனியா நடுநிலை வகித்தது. எனினும், இவர் செருமனிக்கு அனுதாபம் காட்டினார்.

தெ.பா.

**காரல் மார்க்சின் பொருளியற் கோட்பாடுகள்**: காரல் மார்க்சின் பொருளியற் கோட்பாடுகள் (Economic Concepts of Karl Marx) தனித்தன்மை வாய்ந்தன. ஆடம் சுமித்து, இரிக்கார்டோ (Ricardo), மால்தூசு போன்ற பொருளியல் அறிஞர்கள் ஐரோப்பியச் சூழ்நிலையில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார மாற்றங்களை ஒட்டித் தங்கள் பொருளியற் கோட்பாடுகளை நிலைநாட்டினர். பிரான்சு நாட்டு அறிஞர்கள் உருவாக்கிய இயற்கைப் பொருளியற் கோட்பாடும் (Physiocracy) இங்கிலாந்து நாட்டின் வணிகர்கள் உருவாக்கிய வணிகவியற் கோட்பாடும் (Mercantalism), கி. பி. 18, 19–ஆம் நூற்றாண்டுகளில் புகழ்பெற்றவையாயிருந்தன. செருமனியின் புகழ்பெற்ற தத்துவ இயல் அறிஞரான எகலின் (Hegel) கருத்துகள் அக்கால நிலையில் புகழ் பெற்றவையாகக் கருதப்பட்டன. இவ்வாறு, பொருளியற் கருத்துகளை உருவாக்கிய அறிஞர்கள் உலகத்தின் நடைமுறைகளைத் தங்களுடைய கோட்பாடுகளினால் விளக்கிக் காட்டினார்கள். ஆனால், காரல் மார்க்சு உலகை எப்படி மாற்றுவது என்ற ஆய்வில் கவனம் செலுத்தினார்.

காரல் மார்க்சு பொருளியல் கோட்பாடுகளுக்கு முதன் முதலாக அறிவியல் அணுகுமுறையைக் கொணர்ந்தார். மார்க்சினுடைய பொருளியற் கோட்பாடுகள், சமூகவியல், அரசியல், வரலாறு, தத்துவம், மானிடவியல் போன்ற அறிவியல் துறைகளைப் பகுத்தாராய்ந்து, சமூகப் பொருளியல் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட கொள்கைகளாகும். சும்பீட்டர் (Schumpeter) என்ற பொருளியல் மேதை குறிப்பிட்டது போல், காரல் மார்க்சின் கருத்துகள் மனித சமூகத்தின் மீது நிலையான செல்வாக்கை உருவாக்கியுள்ளன. மார்க்சியக் கோட்பாடு அணுகுமுறை உண்மையாக இருப்பதனால் அது மிகவும் வலிமையானதாகும் என இலெனின் (Lenin) கூறியுள்ளார். மேலும், அது முழுமையானதாகவும், ஒருமையானதாகவும் அமைந்திருப்பதுடன் மூட நம்பிக்கை, பிற்போக்குவாதம் (Reactionary ideas), முதலாளித்துவ அடக்குமுறை ஆகியவற்றுக்கு ஒத்துப் போகாத, ஒருங்கிணைக்கப்பட்ட உலகக் கண்ணோட்டத்தை மனித சமுதாயத்திற்கு வழங்குகிறது என்கிறார்.

காரல் மார்க்சின் பொருளியல் சார்ந்த கட்டுரைகள் கி. பி. 1847-இல் முதன்முதல் வெளிவந்தன. பிரௌதானின் (Proudhon) கற்பனை சார்ந்த சமத்துவக் கோட்பாட்டியலுக்குக் கொடுத்த மறுப்புரையே முதலில் வெளிவந்த பொருளியற் கருத்தாகும். அதே ஆண்டில் எங்கல்சுடன் (Engels) சேர்ந்து பொதுவுடைமை என்ற அறிக்கையையும் (Communist Manifesto) உருவாக்கினார். பின்னர்க் காரல் மார்க்சு பிரிட்டன் நூலகத்தில் அமர்ந்து பல்லாண்டு கற்று ஆராய்ந்த உழைப்பின் விளைவால் உருவானதுதான் புகழ்பெற்ற 'மூலதனம்' (Capital) என்ற நூலாகும். இந்நூல் கி.பி. 1867-ஆம் ஆண்டு வெளிவந்தது. அதன் பிற தொகுதிகள் மார்க்சின் மறைவுக்குப் பின்னர் வெளிவந்தன. மார்க்சு குறிப்பிட்டது போல், மார்க்சின் பொருளியற் கருத்துகள் 'அரசியல் பொருளாதாரத் தத்துவத்தின் மீது எழுப்பப்பட்ட கருத்தாய்வுகளாகும் (Critique of Political Economy). தொன்மைக்கால அரசியல் பொருளாதாரக் கருத்துகளில் (Classical Political Economy) உள்ள குறைபாடுகளைப் பகுத்தாய்ந்து புதிய பொருளாதாரக் கருத்துகளை உலகத்திற்கு அளித்தவை மார்க்சின் கோட்பாடேயாகும்.

உலக மனித வரலாறு பொருளியல் அடிப்படைத் தன்மையில் நடந்த போராட்டம் என்பதும், வரலாறு என்பது வகுப்புப் போராட்டத்தின் (Class conflict) தொடர் விளைவு என்பதும் மார்க்சின் கருத்தாகும். பொருளாதார அடிப்படையில் அமைந்த வரலாறும் வகுப்புப் போராட்டமுந்தான் மார்க்சின் சமுதாயக் கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இக்கருத்துகளின் அடிப்படையில்தான் மார்க்சின் பொருளியற் கருத்துகள் எழுதப்பட்டன.

**உழைப்பு**: மார்க்சின் உழைப்பு மதிப்புக் கோட்பாட்டின்படி (Labour theory of Value)மனிதன் தன் அடிப்படைத் தேவைக்குப் பல பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுகிறான். அப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக அமைவது உழைப்பாகும். எல்லாப் பொருள் உற்பத்தியிலும் உழைப்பு நிறைந்திருக்கிறது. உழைப்பு மனித வாழ்விற்குத் தேவையான இயற்கை விதியாகும். மனிதனின் இவ் உழைப்புத்தான் விலங்குகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்துகிறது. விலங்கு, புற இயற்கையை வெறுமனே பயன்படுத்திக் கொண்டு, தான் அங்கு இருப்பதன் மூலம் இயற்கையில் மாற்றங்களைக் கொண்டு வருகிறது. மனிதன் தான் ஏற்படுத்தும் மாற்றங்கள் மூலமாக இயற்கையைத் தன் இலக்குகளுக்குப் பணிய வைக்கிறான். அதுவே, மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையேயுள்ள இறுதியான சாரமான வேறுபாடாகும். அதனை அடைவதும் உழைப்புதான். மார்க்சின் கருத்துப்படி கருவி (Instrument) கூட உழைப்பின் விலைப் பொருளேயாகும். ஏற்கனவே, உழைப்பால் உருவாக்கப்பட்ட விலைப் பொருள் தான் உற்பத்தி செய்வதற்கான கருவியாகும். உழைப்புக் கருவி என்பது ஒரு பொருள் அல்லது பல பொருள்களின் சேர்க்கையாகும். அதனை உழைப்பினால் தனக்கும், தன் உழைப்புக்குட்பட்ட பொருள்களுக்கும் இடையில் வைக்கிறான். அது அவன் செயற்பாட்டை வழிநடத்திச் செல்லப் பயன்படுத்தும் வழிமுறையாகும்.

உழைப்பவன் சில பொருள்களில் உள்ள இயந்திர, இயற்பியல் இரசாயனத் தன்மைகளைப் பயன்படுத்திப் பிற பொருள்களை அவன் தேவைகளுக்குப் பணியுமாறு செய்கிறான். உற்பத்திக்கான உழைப்பிலிருந்து மனிதன், இயற்கையின் நிகழ்ச்சிப் போக்குகள், தனக்கும் இயற்கைக்கும் உள்ள உறவுகள், தனக்கும் தன் உடன் மனிதர்களுக்கும் இடையேயுள்ள உறவுகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவைப் பெறுகிறான். மார்க்சின் கருத்துப்படி, உற்பத்திச் செயலிலிருந்து விலக மனிதன் இவ்வறிவைப் பெற முடியாது.

உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு மனிதன் மேற்கொள்ளும் உறவுக்குச் சில சிறப்புப் பண்புகள் உள்ளன. அப்பண்புகள் சமூக உறவாகக் காட்சியளிக்கின்றன. இவ் உற்பத்தி உறவுகளே மனித வரலாற்றின் பல்வேறு கட்டங்களை இனம் பிரித்துக்

காட்டுகின்றன. அவையாவன: தொன்மைச் சமுதாயம், நிலக்கிழார் சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம், சமூக உற்பத்தி உறவுகள், பொருள் உற்பத்திக் காரணிகளின் உற்பத்தி, ஆற்றலில் ஏற்படும் மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றுக்கேற்ப மாறி உருமாற்றம் பெறுகின்றன. உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தந்தான் (Aggregate) சமுதாயத்தை உருவாக்குகிறது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பிறிதொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் இயல்பு கொண்ட சமுதாயமாக உருவாக்குகிறது. தொன்மைச் சமுதாயம், நிலக்கிழார் சமுதாயம் என்பவை உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தம் எனலாம்.

நாகரிகச் சமுதாயத்தில் வளர்ச்சியின் சிறப்பு நிலைப்பாடு 'சரக்கு உற்பத்திதான்' (Commodity Production). சரக்கு உற்பத்தியின் வளர்ச்சி கொடுக்கல் வாங்கல் (Exchange) செய்யப்படும் வாணிக உற்பத்திக்கு வழி கோலியது. தொன்மைச் சமுதாயத்தில் வாணிக உற்பத்தி செய்யப்பட.வில்லை. பயன்பாட்டுக்காக மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. உற்பத்தி, நுகர்வு இரண்டுமே தொடக்க காலத்தில் கூட்டுத்தன்மை வாய்ந்தவையாக இருந்தன. உழைப்பின் உற்பத்தித் திறன் மிகத்தாழ்ந்த நிலையில் இருந்தது. மிகை உற்பத்தி ஏதும் இருக்கவில்லை. எனவே, சுரண்டலும் இருக்கவில்லை.

நாகரிக வளர்ச்சி ஏற்பட்ட பிறகு சரக்கு உற்பத்தியிலும் வளர்ச்சி ஏற்பட்டது. பயன் மதிப்பு என்பது பயன்படுத்துவதற்காக மட்டும் உற்பத்தி செய்யப்பட்ட உழைப்பின் விலைப் பொருளாகும். இவ்வாறு உழைப்பின் பல்வேறு தன்மைகளைக் காரல் மார்க்சு ஆராய்ந்து தம் உழைப்புக் கோட்பாட்டை வரையறுத்தார்.

**மிகை மதிப்பு**: உழைப்பாளி தன் உழைப்பாற்றலை விற்கிறான். அதனை விற்கும்போது அதன் மிகை மதிப்பை (Surplus Value) முதலாளி எடுத்துக் கொள்கிறார். முதலாளி உழைப்புக்கு ஈடான கூலியை வழங்குவதில்லை. இக்கூலி விகிதத்திற்கும் தொழிலாளி செலுத்தும் உழைப்பிற்கும் உள்ள வேறுபாட்டைத்தான் மார்க்சு 'மிகை மதிப்பு' என்று கூறினார். இம்மிகை மதிப்பை முதலாளி எடுத்துக் கொண்டு, சுரண்டல் அமைப்பு முறையை உருவாக்குகிறார். இச்சுரண்டல் அமைப்பு முறை வகுப்புப் போராட்டத்தை ஊக்குவித்து உழைப்பை உறிஞ்சும் முதலாளி, உழைப்பைப் படைக்கும் தொழிலாளி என இரண்டு பிரிவுகளை உருவாக்குகிறது. இவ்விரண்டு கூறுகள்தாம் மார்க்சிய கொள்கைக் கோட்பாட்டுக்கு மையமாக விளங்குகின்றன.

மார்க்சு மிகை மதிப்புக் கோட்பாட்டை விளக்கும்போது மூலதனத்தைப் பல்வேறு கோணங்களில் பகுத்தாராய்ந்தார். பயன்மதிப்பும் செலாவணி மதிப்பும் பற்றிய வேறுபாடுகளை எடுத்துக்கூறிச் சரக்குகளின் சுழற்சியை விளக்குகிறார். பணம் எப்படி உருவாகியது என்பதைப் பற்றியும் கூறுகிறார். வாங்குவதற்காகவே உழவன் விற்கிறான். அவன் ஒரு சரக்கைப் பணமாக மாற்றிப் பணத்தை மற்றொரு சரக்காக மாற்றுகிறான். (சரக்கு-பணம்-சரக்கு-ச-ப-ச; (C.M.C: Commodity–Money–Commodity). ஆனால், வணிகனோ விற்பதற்காகவே வாங்குகிறான். அவன் பணத்தை ஒரு சரக்காக மாற்றி சரக்கை மீண்டும் பணமாக மாற்றுகிறான். அதாவது பணம்-சரக்கு-பணம்-ப-ச-ப (M–C–M: Money-Commodity-Money). மூலதனம் என்ற வகையில் பணப்புழக்கத்திற்கான சூத்திரம் இதுதான். எனவே, இரண்டாம் சுழற்சியில் ஏற்படும் மாற்றம் வெறும் அளவு வகை மாற்றமாகும். ஒரு பணத்தொகைக்குப் பதிலாகக் கூடுதலான பணத்தொகை வருகிறது. இதுவே, ப-ச-ப என்பது. மேலும், தொடக்கத்தில், புழக்கத்தில் ஈடுபடுத்தப்பட்ட பணத்தைக் காட்டிலும் அதிகமான பணம் புழக்கத்தில் கூடுதலாக உள்ளதை அதன் பெருக்கத்தைக் கார்ல் மார்க்சு, மிகை மதிப்பு எனக் குறிப்பிட்டார். எனவே, தொடக்கத்தில் வைக்கப்படும் மதிப்பு புழக்கத்தின்போது அப்படியே இருப்பது மட்டுமல்லாமல், தனக்கு ஒரு மிகை மதிப்பினையும் கூட்டிக்கொள்கிறது. அதை மூலதனமாக மாற்றும் இயக்கம் இதுதான்.

மார்க்சு சரக்கு உற்பத்தி முறையில் சரக்கு வழிபாடு காணப்படுகிறது (Fetishism of Commodities) என்கிறார். பதிலாக உற்பத்தி இயக்கத்தால் மனிதன் கட்டுப்படுத்துகின்ற நிலையே இச் சூழல் ஆகும். இது சமூகத்தால் தோற்றுவிக்கப்பட்ட பொய்யுணர்வு (Mythical) என்றும் காரல் மார்க்சு கூறுகிறார்.

**முதலாளித்துவப் போட்டிக் கோட்பாடு**: கட்டுப்படுத்தப்பட முடியாத அளவில் மூலதனப் பசி ஏற்படும் பொழுது எல்லா நிலையிலும், எல்லா வகையிலும் மிகை மதிப்பு மிகுதியாகும். மிகை மதிப்பு மிகுதியாகும் நேரத்தில் சுரண்டலும், அதன் காரணமாக வறுமையும் ஏற்படும். இக் காரணங்களால் உழைக்கும் பாட்டாளி மக்கள் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டு மிகப் பெரிய அளவில் வேலையற்றோர் உருவாவர். இப்போட்டியில் பெரும் முதலாளிகள் சிறு முதலாளிகளை விழுங்குவர். அதன் விளைவாக உழைப்புக் காரணிகள் சிலர் கையில் குவியும். எனவே, அங்காடியில் பெரும் குழப்பம் ஏற்படும். முடிவில் முதலாளித்

துவ வீழ்ச்சி ஏற்படும். இதனை மிகை உற்பத்தி நெருக்கடி என (Over Production Crisis) குறிப்பிட்டார்.

காரல் மார்க்சு தமது மூலதன நூலின் முதல் பக்கத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை விளைவிக்கும் சுரண்டல் முறைகளை விளக்கும்போது ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் (Englsih East India Company) வணிகச் சுரண்டலால் இந்தியாவில் வறுமை, வரலாறு காணாத அளவுக்கு இருந்தது என்றும், பஞ்சு நெசவாளர்களுடைய எலும்புகள் இந்திய மண்ணைச் சலவை செய்து கொண்டிருக்கின்றன என்றும் கூறியிருக்கிறார்.

காரல் மார்க்சின் பொருளியற் கருத்துகள் உலகம் தழுவிய கருத்துகள். அவர் மறைந்து ஒரு நூற்றாண்டாகியும் அவருடைய பொருளியல் சமூக ஆய்வுக் கருத்துகள் மீது தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காரல் மார்க்சினுடைய பொருளியற் கோட்பாடுகளின் அடிப்படையில் இலெனின் உருவாக்கிய சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சியினால் அக்டோபர்ப் புரட்சி நடைபெற்று, அதன் பின்னர் உருசிய நாடு 1917-ஆம் ஆண்டு சோவியத்து ஒன்றியமாகவும் சமத்துவ நாடாகவும் மாறியது. மார்க்சினுடைய அடிப்படைப் பொருளாதாரக் கொள்கைகளின்படி சோவியத்து நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்களும், சுரண்டலற்ற பொருளாதார அமைப்பும் உருவாக்கப்பட்டன. மார்க்சியம் எனப்படும் சமூகப் பொருளியலின் அடித்தளத்தில் 'இலெனினியம்' எனப்படும் சமத்துவக் கட்டுமானம் அமைக்கப்பட்டது. பாசிசப் (Fascism)பொருளியற் கருத்துகளுடன் எங்கல்சின் கருத்துகள் ஒன்றிப் போயுள்ளன. எங்கல்சு, மார்க்சின் உற்றநண்பராகவும், சமத்துவக் கோட்பாட்டினராகவும் விளங்கினார். மார்க்சும் எங்கல்சும் கூட்டாகச் சேர்ந்து இயங்கியதனால்தான் புத்தக வடிவில் மார்க்சின் பொருளியல் கோட்பாடுகளும், பிற சமூக, அரசியல், பொருளியற் கோட்பாடுகளும் வெளி வந்தன. மார்க்சு இல்லாமல் எங்கல்சு இல்லை, எங்கல்சு இல்லாமல் மார்க்சு இல்லை. இந்த இருவரும் இல்லாமல் பொதுவுடைமைக் கருத்துகளும் இல்லை என்று வல்லுநர் பலராலும் கூறப்பட்டுள்ள உலகமறிந்த பொது சொற்றொடர்களே, அவர்களுடைய ஒருங்கிணைந்த கருத்துணர்வுக்கும் கூட்டுச் செயலாக்கத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

மார்க்சின் கருத்துகளை நெறியாகப் பின்பற்றுகிற நாடுகள் சமத்துவ நாடுகளென்று சொல்லப்படுகின்றன. சோவியத்து உருசியா, உருமேனியா, போலந்து, யுகோசுலோவியா, கிழக்குச் செருமனி, கியூபா, வியட்நாம், மக்கள் சீனா போன்ற நாடுகள் சமத்துவப் பொருளியல் நெறியினைக் கடைப்பிடிக்கிற நாடுகளாகும்.

மாசேதுங்கு மார்க்சின் பொருளியற் கோட்பாடுகள் மூன்றாம் உலக நாடுகளுக்குகந்தன எனஅவற்றைத் தொகுத்து 'மார்க்சிய லெனினிய-மாவோ கருத்துகள்' என வெளியிட்டார். மார்க்சிய நெறி அடிப்படையில் சமத்துவ அரசை 1949-ஆம் ஆண்டு சீனாவில் உருவாக்கி வறுமையை ஒழிக்க முயன்றார். மார்க்சியப் பொருளியல் கொள்கைகள் இக்கால நடைமுறைக்குப் பொருந்தா என்று கருதும் பொருளியல் ஆய்வாளர் பலர் உள்ளனர். மார்க்சின் பொருளியற் கருத்துகள் சமுதாயத்தின் அடிப்படை மாறுதல்களை விளக்குகின்றன. மக்களுடைய சக்தியையும் குறிப்பாகத் தொழிலாளர்களுடைய உழைப்புச் சக்தியினையும் உலகிற்கு எடுத்துக்காட்டிச் சமுதாய மாறுதல் தேவை என அவை வலியுறுத்துகின்றன. பொருளாதாரத்தில் அடிப்படை மாற்றங்களைச் செய்யும் உந்துதலாகவும் தூண்டுதலாகவும் மார்க்சிசப் பொருளியற் கருத்து இருந்து வருகின்றது. காரல் மார்க்சு பிறந்து ஒரு நூற்றாண்டிற்குப் பின்னரும் அவருடையகருத்துகள் உயிரோட்டம் மிக்கவையாகவும், கருத்து வளத்தைப் பெருக்கும் அடித்தளமாகவும் இருந்து வருகின்றன. மு.நா.


**துணை நூல்கள்:**

**Karl Marx**, Das Capital, Progress Publishers, Moscow, 1977.

**Sin Alexander Gray**, The Development of Economic Doctrine, An Introductory Survey, Longmans Green and Company Limited, London, 1967.

**Devid McLellan**, Marx-The First 100 Yearss Frances Pinter Publishers, London, 1983.

***காரல் மார்க்சு* (கி.பி. 1818-1883)**: உலக மக்களின் கவனத்தை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து பெரிதும் ஈர்த்து, உலக வரலாற்றின் போக்கைப் பெருமளவு மாற்றியமைத்த பெருமை காரல் மார்க்சைச் (Karl Marx) சாரும். அறிவியலடிப்படையிலான சமதருமக் (Scientific Socialism) கோட்பாட்டின் தந்தையெனக் கருதப்படும் காரல் மார்க்சு கி.பி. 1818-ஆம் ஆண்டு மே மாதம் செருமனியில் யூதப் பெற்றோர்களுக்குப் பிறந்தார். இவர் பான் (Bonn), பெர்லின் (Berlin) ஆகிய பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி கற்றார். பிரடெரிக்கு எகல்



காரல் மார்க்சு

(Friedrich Hegal) எழுதியநூல்கள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. எபிகூரசு (Epicurus) என்ற கிரேக்க அறிஞரின் தத்துவத்தை ஆய்வு செய்து கி.பி. 1841-ஆம் ஆண்டு சேனாப் (Jena) பல்கலைக்கழகத்திலிருந்து ‘டாக்டர்’ பட்டம் பெற்றார். செய்தித்தாள் ஒன்றின் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய மார்க்சு, புரட்சிகரமான எழுத்தின் காரணமாகச் செருமனியிலிருந்து நாடுகடத்தப்பட்டார். பிரான்சுக்கு வந்த மார்க்சு கி.பி. 1844-ஆம் ஆண்டு தம் வாழ்நாள் முழுதும் உயிர் நண்பராகவும், உடனுழைப்பவர் (Collaborator) ஆகவும் செயற்பட்ட பிரடெரிக்கு ஏங்கல்சைச் (Friedrich Engels) சந்தித்தார். இவர் கி.பி. 1847-ஆம் ஆண்டு பொதுவுடைமைச் சங்கத்தின் (Communist League) முதல் மாநாட்டை இலண்டனில் நடத்தினார். அதன் இரண்டாம் மாநாட்டிற்கு அறிக்கையாகப் பயன்பட மார்க்சும் ஏங்கல்சும் கூட்டாகச் சேர்ந்து தீட்டிய ஆவணம் கி.பி. 1848-ஆம் ஆண்டு ‘பொதுவுடைமை அறிக்கை (Communist Manifesto)என்ற நூலாக வெளிவந்தது. உலக மக்களினால் அதிகமாகப் படிக்கப்பட்ட, விவாதிக்கப்பட்ட, போற்றப்பட்ட, தூற்றப்பட்ட, மொழிபெயர்க்கப்பட்ட நூல்களுள் இதுவும் ஒன்றாகும். மார்க்சின் பொதுவுடைமைக் கோட்பாட்டின் விரிவான விளக்கங்களை இதில் காணலாம். வாழ்நாள் முழுதும் உலகப்பாட்டாளிவருக்கத்திற்காக அயராது பாடுபட்ட காரல்மார்க்சு, மனைவியை இழந்து, செல்வ மகனை இழந்து, கடும் வறுமையில் வாடி கி.பி. 1883-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 14-ஆம் நாள் மறைந்தார். அவருடைய உடல் இலண்டனிலுள்ள ‘ஐகேட்’ கல்லறையில் (High Gate Cemetry) அடக்கம் செய்யப்பட்டது.

காரல் மார்க்சு மிகப்பல நூல்களை எழுதியுள்ளார். முற்கூறிய ‘பொதுவுடைமை அறிக்கையைத்’ தவிர, அவர் எழுதிய முக்கிய நூல்கள்: புனித குடும்பம் (The Holy Family), தத்துவ வறுமை (Poverty of Philosophy), மூலதனம் (Das Capital), மதிப்பு (Value).

காரல் மார்க்சின் கோட்பாட்டில் அரசியல் சிந்தனைகளைவிடப் பொருளாதாரச் சிந்தனைகள் அதிகமாக மிளிர்வதைக் காணலாம். அவருடைய பொதுவுடைமைக் (Communism) கோட்பாட்டில் காணக்கூடிய பல கருத்துகளையும் அவருக்கு முன்பே பல சிந்தனையாளர்களும் கூறியுள்ளனர். ஆனால், அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்த அக்கருத்துகளை ஒன்றாக இணைத்து அறிவியலான ஒரு கோட்பாடாக உருவாக்கி, முதலாளித்துவ முறையை நசுக்குவதற்காக அதை வலுவான ஒரு கருவியாக மாற்றிய பெருமை காரல் மார்க்சையே சாரும்.

மார்க்சின் சிந்தனைகளை நன்கறிய வேண்டுமெனில் அவர் வாழ்ந்த காலத்தை ஆராயவேண்டும். அவர்காலத்தில் அறிவியல், தொழில் நுட்பச்சாதனைகள் ஏராளமாக ஏற்பட்டிருந்தன. சமயம், முன்னர்ப் பெற்றிருந்த மதிப்பை இழந்து கொண்டிருந்தது. தொழில் வளத்தின் பலன்கள் முறையாகப் பகிர்ந்தளிக்கப்படாமல் ஒருசிலரிடம் செல்வம் குவிந்து, பெரும்பான்மையோர் வறுமையில் உழன்று கொண்டிருந்தனர். தொழில் நுட்ப வளர்ச்சியின் அளவிற்கு நாகரிகம் வளரவில்லை. மரபுவழி(Bourgeois) நாகரிகம் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த எல்லாத் தொடர்புகளையும் துண்டித்து விட்டது. நாட்டிற்குள்ளே வருக்கப் போராட்டமும், நாடுகளுக்கிடையே போட்டியும் பூசல்களும் பெருகிக் கொண்டிருந்தன. எனவே, மார்க்சின் பணி, அக்காலச் சமூகத்தில் தொழிலாளர்களின் நிலையையும், முதலாளித்துவ முறையில் அவர்களின் பங்கினையும் அவர்களுக்கு உணர்த்துவதாக அமைந்தது. அத்தகைய பொருளாதார முறையினைத் தகர்த்தெறிய வேண்டிய இன்றியமையாமையினையும் வழிமுறைகளையும் அவர் சுட்டிக் காட்ட விரும்பினார்.

மார்க்சு தம் மார்க்சீயக் கோட்பாட்டு விளக்கங்களை எகலின் வாதமுறை (Dialectic) யிலிருந்து தொடங்குகிறார். எகலின் வாதமுறையிலுள்ள முரண்

பாடுகள் (Contradictions) என்ற நியதியைச் சமூகம் எப்படி வளர்ச்சியடைகிறது என்பதை விளக்குவதற்கு மார்க்சு பயன்படுத்துகிறார். சமூக வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் முரண்பாடான சக்திகள் உண்டு. அச்சக்திகளின் செயற்பாட்டின் மூலந்தான் சமூகம் உயர்கட்ட வளர்ச்சி அடைகிறது என்பது மார்க்சின் கருத்தாகும். முதலாளித்துவ சமூகம் (Capitalist Society) முற்கோள் (Thesis) ஆகும். அதன் செயற்பாட்டின் மூலம் அதற்கு நேர் எதிரான சக்தியை—பாட்டாளி வருக்கத்தை உருவாக்குகிறது. அச்சக்தி முரண்கோள் (Anti Thesis) ஆகும்; அவ்விரு கோள்களுக்குமிடையே நடைபெறும் போராட்டத்தின் விளைவாகப் பொதுவுடைமைச் சமூகம் (Communist Society) உருவாகிறது இது முற்றுக்கோள் (Synthesis) ஆகும். இவ்வாறு சமூகம் வளரும் நியதிக்குப் 'பொருள் முதல் வாதம்' (Dialectical Materialism) என்ற பெயரைச் சூட்டினார்.

மார்க்சியக் கோட்பாட்டின் அடுத்த முதன்மைக் கருத்து 'பொருளாதார அடிப்படையில் வரலாற்றாய்வு' (Economic or Materialistic Interpretation of History) ஆகும். மனிதனுடைய சிந்தனை, செயல், வரலாறு ஆகியவை பொருளாதாரச் சக்தியினால் நிருணயிக்கப்படுகின்றன என்பது இக்கருத்தின் பொருளாகும். மனிதன் அவனுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யப் பொருள் உற்பத்தி செய்தே ஆக வேண்டும். அப்பொருள்களை உற்பத்தி செய்யும் முறை (Mode of Production) அவனுடைய சமூக, அரசியல், ஆன்மிக வாழ்க்கை முறை, நிறுவனங்கள் ஆகியவற்றின் தன்மையை நிருணயிக்கிறது; பொருள் உற்பத்தி செய்யும் முறையில் ஏற்படும் மாற்றம் சமூக, அரசியல் வாழ்க்கை, நிறுவனங்கள் ஆகியவற்றிலும் மாற்றங்களை உண்டுபண்ணும். கையினால் இயங்கக்கூடிய ஆலைமுறை நிலமானியப் பிரபுக்களைக்கொண்ட சமூகத்தை உருவாக்கும்; நீராவியினால் இயங்கக்கூடிய ஆலைமுறை தொழில் முதலாளிகளைக் (Industrial Capitalists) கொண்ட சமூகத்தைத் தோற்றுவிக்கும் என்பது மார்க்சின் வாதமாகும்.

மார்க்சு, பொருள் உற்பத்தி முறைகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட சமூக வளர்ச்சியை நான்கு கட்டங்களாகப் பிரிக்கிறார். முதற்கட்டமான 'தொடக்கநிலைப் பொதுவுடைமைக் கட்டத்தில்' (Primitive Communist Stage) உற்பத்திக் கருவிகள் அனைத்தும் சமூக உடைமைகளாக இருந்தன. அக்கட்டத்தில் சமூகத்தில் ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் இல்லை. இரண்டாம் கட்டமான 'பண்டைக் கால'த்தில் (Ancient Stage) அடிமைகள், உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றின் மீது ஆதிக்கம் உடையவர்கள் எல்லாவற்றையும் பெற்று ஏழைகளையும், அடிமைகளையும் சுரண்டத் தொடங்கினர். சமூகத்தில் ஏற்றத் தாழ்வு ஏற்படத் தொடங்கியது. மூன்றாம் கட்டமான 'நிலமானிய முறையில்' (Feudal Stage) அடிப்படை உற்பத்திக் கருவியான நிலத்தின் மீது நிலமானியப் பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்தியமையினால் அவர்கள் நிலக்கூலிகளைச் சுரண்டி வாழ்ந்தார்கள். நான்காம் கட்டமான 'முதலாளித்துவ முறையில்' (Capitalist Stage) முதலாளிகள் எல்லா உற்பத்திக் கருவிகளையும் கட்டுப்படுத்தி, உழைப்பாளிகளை வெறும் ஊதியம் பெறும் அடிமைகளாக மாற்றி விட்டார்கள். அதாவது, ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்படும் உற்பத்தி முறை அதற்கேற்ற சமூக, அரசியல் உறவுகள், நிறுவனங்கள், சட்டம், சமயம் ஆகியவற்றை உண்டு பண்ணுகிறது.

மார்க்சின் கருத்துப்படி, முதலாளித்துவம் (Capitalism) சுரண்டும் தன்மையும், ஏற்றத்தாழ்வுமுடைய அமைப்பாகும். அறிவியல் தொழில் நுட்பங்களில் ஏற்படும் வளர்ச்சியின் காரணமாக முதலாளித்துவ முறை அடிக்கடி மாற்றங்களுக்குள்ளாகிறது. தன்னால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு அங்காடியைத் தேடியலைவதே அதன் முதன்மைக் குறிக்கோளாகும். இதனால், உலகமெங்கிலும் வாணிகம் பரவி, பிற்பட்ட பகுதிகளின் மேல் ஆதிக்கம், குடியேற்ற நாடுகளை அமைத்தல், நகர மயமாக்கல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. முற்றுரிமை (Monopoly) தோன்றி உற்பத்திக் கருவிகள் ஒருசிலரிடம் குவியத் தொடங்குகின்றன. பொருளாதார அதிகாரக் குவியல் அரசியல் அதிகாரக் குவியலுக்கு வழி கோலுகிறது. எனவே, முதலாளித்துவ சமூகத்தில் அரசு முதலாளிகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு வருக்க நிறுவனமேயாகும். அதை அவர்கள் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவதற்கும், அடக்கியாளுவதற்குமுள்ள ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்தில் சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள் என இரு வருக்கங்கள் இருப்பதைக் காணலாம். அவ்விரு வருக்கங்களிடையே நிகழும் போராட்டங்களின் தொகுப்பே வரலாறு ஆகும் என்பது மார்க்சின் கருத்தாகும்.

முதலாளித்துவ முறையில் எந்த அளவிற்குத் தொழிலாளி கொண்டாடப்படுகிறான் என்பதை 'மிகை மதிப்புக் கோட்பாட்டின் (Theory of Surplus Value) மூலம் மார்க்சு சுட்டிக் காட்டுகிறார். இரிக்கார்டோ (Ricardo) என்ற பொருளாதார மேதையினால் உருவாக்கப்பட்ட 'மதிப்புக்

கோட்பாடு' (Theory of Value) என்பதன் விரிவாக்கமே இக்கோட்பாடு. தொழிலாளியின் உழைப்பால் உருவாக்கப்பட்ட ஒரு பொருளின் மதிப்பு, அந்த மதிப்பை உருவாக்கிய தொழிலாளிக்கு அளிக்கப்படும் ஊதியம் ஆகிய இரண்டிற்கு மிடையேயுள்ள வேறுபாட்டைத்தான் 'மிகை மதிப்பு' என மார்க்சு கூறுகிறார். இக்கோட்பாட்டின்படி, ஒரு பொருளின் மதிப்பை அந்தப் பொருளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பின் வாயிலாக அவன் உருவாக்குகிறான். ஆயினும், முதலாளி தொழிலாளிக்கு அவன் உற்பத்தி செய்த பொருளின் மதிப்பை முழுவதையும் அவனுக்கு ஊதியமாகக் கொடுப்பதில்லை. ஒரு சிறு பகுதியை மட்டும் தொழிலாளிக்கு ஊதியமாகக் கொடுத்துவிட்டுப் பெரும் பகுதியை இலாபம் (Profit) என்ற பெயரில் முதலாளி வைத்துக் கொள்கிறான். இது வெளிப்படையான சுரண்டல் ஆகும் என மார்க்சு பறைசாற்றுகிறார். எடுத்துக்காட்டாக 'ஏ' என்பவர் ரூ. 25000/– செலவில் ஒரு வீட்டைக் கட்டுகிறார் எனக் கொண்டால் இத்தொகையில் ரூ. 20,000/– பொருள்களாகவும், ரூ. 5000/– தொழிலாளிக்கு ஊதியமாகவும் செலவிடப்படுகிறது என வைத்துக் கொள்ளலாம். வீட்டைக் கட்டி முடித்த பின்னர் அவர் அதை ரூ. 50000/–க்கு விற்கிறார். இதனால் முதலாளிக்கு அதிகமாகக் கிடைப்பது ரூ. 25000/–ஆகும். இந்த இலாப மதிப்பு–தொழிலாளி தன் உழைப்பால் உருவாக்கியதாகும். ஆனால் அவனுக்கு ஊதியமாகக் கிடைத்தது வெறும் ரூ.5000/– மட்டுமேயாகும்; இந்த எடுத்துக்காட்டில் மிகை மதிப்பு 55 விழுக்காடு ஆகும்.

மார்க்சீயக் கோட்பாட்டில் இன்னொரு முக்கிய கருத்து 'வருக்கப் போராட்ட' (Class War) மாகும். அகசுடின் தயரி(Augustine Thierry) என்ற பிரெஞ்சுச் சிந்தனையாளரால் உருவாக்கப்பட்ட இக்கருத்திற்கு மார்க்சு விரிவான விளக்கத்தைக் கொடுத்துத் தம் கோட்பாட்டின் ஒரு முதன்மை அமிசமாக மாற்றினார்.

மார்க்சின் கருத்துப்படி, வரலாறு என்பது நாடுகளுக்கிடையே நடைபெற்ற போர்களின் தொகுப்பு அன்று; மாறாக ஒவ்வொரு சமூகத்திலுமுள்ள சுரண்டும் வருக்கம், சுரண்டப்பட்ட வருக்கம் ஆகிய இரண்டிற்குமிடையே நடைபெற்ற ஒரு தொடர் போராட்டமாகும். வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் இவ்வருக்கப் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருந்தது. முதலாளித்துவ முறையும் இவ்வருக்க விரோதத்தை (Class Antagonism) அகற்றிவிடவில்லை. மாறாக, முதலாளித்துவ முறை புது வருக்கங்களையும், புதுவிதமான சுரண்டல் முறைகளையும், புதுவிதமான போராட்ட முறைகளையும் உருவாக்கியுள்ளது.

முதலாளித்துவ முறை எவ்வாறு வருக்கப் போராட்டத்திற்கு வழி கோலுகிறது? தன் அழிவை அதே முதலாளித்துவ முறை எவ்வாறு தேடிக் கொள்கிறது என்பதை விளக்க மார்க்சு முதலாளித்துவ முறை செயற்படும் விதத்தை ஆராய்கிறார். முதலாளித்துவ முறையில் ஆலைமுறை (Factory System) தவிர்க்க முடியாதது. ஆலைகளின் தோற்றம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒரே இடத்தில் வேலை செய்ய வாய்ப்பளிக்கிறது. இதன்மூலம் தொழிலாளர்கள் தினமும் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்ளவும், அவர்களின் சிக்கல்களைப் பற்றி விவாதித்துக் கொள்ளவும், அவர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதன் விளைவாக அவர்கள் அரசியல் மயமாக்கப் (Politicization) படுகிறார்கள். அரசியல் அறிவு வளர வளரத் தொழிலாளர்களின் உள்ளத்தில் 'வருக்க பேதம்' (Class Consciousness) – முதலாளி சுரண்டும் வருக்கம், தொழிலாளர்கள் சுரண்டப்படும் வருக்கம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. வருக்க பேதம் ஏற்பட்ட தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் (Trade Unions) அமைத்து, அதன் மூலம் தங்களுடைய நிலையை வலுப்படுத்தியதும், வருக்க விரோதிக்கு (Class Enemy) எதிராக வருக்கப் போராட்டத்தைத் தொடங்குகிறார்கள்.

மேலும், முதலாளித்துவ முறையில் இலாபத்திற்காக முதலாளிகளுக்கிடையே கடும்போட்டி நிலவுகிறது. போட்டி வலுக்கும் பொழுது அவர்களின் இலாபம் குறைகிறது. இந்த இலாப இழப்பை ஈடுகட்ட முதலாளி தொழிலாளியின் ஊதியத்தைக் குறைத்துத் தொழிலாளியைச் சுரண்டத் தொடங்குகிறான். இச்சுரண்டல் தொழிலாளியின் வாழ்க்கை நிலையை நாளுக்கு நாள் இழிவடையச் செய்து அவனைப் புரட்சிக் கருத்துகளில் ஈடுபடத்தூண்டுகிறது. இறுதியாக, முதலாளித்துவ முறையில் பொருளாதார வீழ்ச்சி அடிக்கடி ஏற்பட்டே தீரும். இவ்வீழ்ச்சியின் விளைவாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழக்கிறார்கள். நாளுக்கு நாள் அவல நிலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் தொழிலாளி, அந்நிலைக்குக் காரணமான முதலாளித்துவ முறையை ஒழித்துக் கட்டப் புரட்சி இயக்கங்களில் ஈடுபடுகிறான். வருக்கப் போர் தொடங்குகிறது. முதலாளித்துவத்திற்கு முடிவு கட்டப்படுகிறது. இவ்வாறு மார்க்சு கூறுகிறார்.

வன்முறைகளை மேற்கொண்டு நடத்தப்படும் ஒரு வருக்கப் போராட்டத்தின்மூலந்தான் முத

லாளித்துவ முறையை அடியோடு ஒழித்துக் கட்டுவது என்ற பாட்டாளி வருக்கத்தின் நோக்கத்தை அடைய முடியும் என மார்க்சு கூறுகிறார். இக்கருத்துக்கேற்ப கி.பி. 1848–ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சி இயக்கங்களிலும், கி.பி. 1877–ஆம் ஆண்டு 'பாரிசு கம்யூன்' (Paris Commune) கழகத்திலும் மார்க்சு பங்கு கொண்டார்.

முதலாளி-பாட்டாளி வருக்கப் போராட்டம் பன்னாட்டுத் தன்மை உடையதாக இருக்க வேண்டுமென்பது மார்க்சின் கருத்தாகும். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தேசிய முதலாளிகளை நசுக்கிய பிறகு, பாட்டாளி வர்க்கம் உலகளாவிய தொழிலாளி இயக்கத்தை உருவாக்க அயராது பாடுபட வேண்டுமென மார்க்சு வற்புறுத்துகிறார். 'உலகத் தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்; நீங்கள் இழப்பதற்கு ஒன்றுமில்லை, உங்கள் விலங்குகளைத் தவிர' என மார்க்சு உலகப் பாட்டாளி வருக்கத்திற்கு அறை கூவல் விடுக்கிறார்.

வருக்கப் போராட்டம் பாட்டாளியின் வெற்றியில் முடிகிறது. அரசையும், அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்றி வெற்றி பெற்ற பாட்டாளிகள் 'பாட்டாளி வருக்கத்தின் சருவாதிகார ஆட்சியை (Dictatorship of the Proletarit) நிறுவுகின்றனர்; இந்தச் சருவாதிகார ஆட்சி சில பணிகளைச் செய்து முடிப்பதற்குள்ள ஓர் இடைக்கால நிறுவனமேயாகும். இந்த ஆட்சி புரட்சி நடவடிக்கை மூலம் முதலாளித்துவ முறையை அடியோடு ஒழித்துக் கட்டி, நடுத்தர வகுப்பாரை (Bourgeoisie) அழித்து, உற்பத்திக் கருவிகள், இயற்கை வளங்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்கி, ஏற்றத்தாழ்வு இல்லாத, சுரண்டல் இல்லாத ஒரு சமதருமச் சமூகத்தை (Socialist Society) உருவாக்குகிறது.

பாட்டாளி வருக்கத்தின் சருவாதிகார ஆட்சி மேற்கூறிய பணிகளைச் செய்து முடித்ததும் சமதருமச் சமூகம் பொதுவுடைமைச் சமூகமாக (Communist Society) மலருகிறது. அப்பொதுவுடைமைச் சமூகத்தில் மக்களிடம் சுயநலம் இருக்காது; நல்லெண்ணம், கூட்டுறவு ஆகிய பண்புகள் மூலம் மக்கள் அவர்களுக்கிடையேயுள்ள உறவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வர்; 'சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்' (From each according to his ability, to each according to his needs) என்ற தத்துவத்தின் அடிப்படையில் மக்கள் அச்சமூகத்தில் செயற்படுவர்; எனவே, மக்களின் சமூக உறவுகளைக் கட்டுப்படுத்த அரசும், அதன் நிறுவனங்களும் தேவையற்றனவாய்ப் போய் விடுகின்றன. ஆகையினால், பொதுவுடைமைச் சமூகத்தில் அரசு மறைந்து விடும் (The State will wither away) என மார்க்சு கருதுகிறார்.

மார்க்சு சமயத்தை (Religion) கடுமையாகக் கண்டிக்கிறார். அது மனித குலத்தின் போதைப் பொருள் (Opium of Mankind) ஆகும் என வருணிக்கும் மார்க்சு அதை முதலாளித்துவச் சுரண்டலோடு தொடர்புபடுத்துகிறார்; தமது சுரண்டல் முறைகளை மறைப்பதற்காக முதலாளித்துவச் சுரண்டல் வாதிகள் சமயத்தை ஒரு போர்வையாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்; சமூக அநீதி, சமத்துவமின்மை ஆகியவற்றின் அடிப்படைக் காரணம் சமயமேயாகும். மனிதன் அரசியல், பொருளாதாரத் துறைகளில் முன்னேற வேண்டுமாயின் அவன் சமயத்தின் இரும்புப் பிடியிலிருந்து முதலில் விடுதலை பெற்றாக வேண்டும் என மார்க்சு கூறுகிறார். ஆனால், அவர் நாத்திகத்தை அல்லது ஒழுக்கமின்மையை வலியுறுத்துவதாகக் கொள்ளக் கூடாது; சமூகத்தில் சமயம் அதன் உண்மையான பங்கையும், இடத்தையும் தெளிவாக அறிந்து செயற்பட வேண்டுமென வலியுறுத்துகிறார்.

மார்க்சின் சமயம் பற்றிய கருத்தோடு நெருங்கிய தொடர்புடையது, அவருடைய 'வேற்றாக்கம்' (Theory of Alienation) என்ற கருத்து. அக்கருத்துப்படி, மனிதன் அவன் உற்பத்தி செய்யும் பொருளினின்றும் முழுமையாக வேறுபடுத்தப்பட்டுள்ளான், பொருளை வாங்குவோர் அதை உற்பத்தி செய்தவனைப் பற்றி நினைப்பதும் இல்லை, அறிவதும் இல்லை; இவ்வேற்றாக்கத்தின் காரணம் 'வேலைப் பங்கீட்டு முறை' (Division of Labour) மூலமாக வேலைகள் பிரிக்கப்படுவதாகும் என மார்க்சு கூறுகிறார். இதனால், வேலைப் பங்கீட்டு முறை இல்லாத இடைக்கால உற்பத்தி முறைகளை மார்க்சு ஆதரிக்கிறார் என்பது பொருளன்று. இலாபமீட்டல் கொடுமையினின்றும் இக்கால உற்பத்திமுறை விடுபட்டால்தான் மனிதன் சுதந்திரம் பெறுவான் என்பதைத்தான் அவர் இதன்மூலம் வலியுறுத்துகிறார்.

உலகச் சிந்தனையாளர்களின் வரிசையில் காரல் மார்க்சு ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்று விளங்குகிறார். உலக வரலாற்றில் மார்க்சைத் தவிர, வேறு எந்தச் சிந்தனையாளரும் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு அதிகமாக மக்களைத் தம் கோட்பாட்டின்பால் ஈர்க்கவில்லை என்று கூறினால் அது மிகையாகாது. திக்கற்ற உலகப் பாட்டாளி வருக்கத்திற்கு ஒரு கோட்பாட்டை வழங்கிப் போராடுவதற்கான வழிமுறைகளை உருவாக்கி, உலக அரங்

கில் பாட்டாளி வருக்கத்தைப் புறக்கணிக்க முடியாத ஒரு சக்தியாக மாற்றி அவர்களுக்குத் திசைகாட்டிய பெருமை மார்க்சையே சாரும். அரசியல் பொருளாதாரம் சிறப்பிடம் பெற்று வருவதை எல்லோரையும் விட முன்கூட்டி உணர்ந்தவா மார்க்சு ஆவார்.

சு.மு.

**துணை நூல்கள்:**

**Cole, G.D.H.,** A History of Socialist Thought, Vol. 1, New York, St. Martin, 1953.

**Ebenstein, William,** Modern Political Thought, The Great Issues, Bombay: Oxford University Press, 1970.

**Marx, Karl and Engels, Friedrich,** The Communist Manifesto, New York: Washington Square Press, 1964.

**Sabine G.H. and Thorson Thomas London,** A History of Political Theory, Oxford University Press, 4th Edn., Bombay, 1973.

*காரல்மார்க்சு இசுடாட்டு:* செம்னிட்சு (Chemnitz) என்று முன்பு சொல்லப்பட்ட காரல் மார்க்சு இசுடாட்டு (Karl Marx Stadt) கிழக்குச் செருமனியின் தெற்கில் உள்ள நகரம். இதே பெயரையுடைய மாவட்டத்திற்கு இது தலைநகராகவும் விளங்குகிறது. செம்நிட்சு (Chemnitz) ஆறு இப்பகுதியை வளமுறச் செய்கிறது. இந்நகரம் சிறப்பு வாய்ந்த ஒரு பெரிய தொழில் மையம். பல சாலைகளும் இருப்புப் பாதைகளும் இங்குக் கூடுகின்றன. இயந்திர உறுப்புக்களும் பல்வேறு இயந்திரக் கருவிகளும், இரசாயனப் பொருள்களும், கண் மருத்துவக் கண்ணாடி வகைகளும், மரச் சாமான்களும், ஆடை வகைகளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. நிலக்கரிச் சுரங்கமும் இதன் அருகே உளது. இந்நகரம் வெண்டிசு மக்களால் (Wendish) கி.பி. 1143-இல் மிக அழகுற அமைக்கப்பெற்றது. ஐரோப்பாவில் கி.பி. 1618 முதல் 1648 வரை நடைபெற்ற முப்பதாண்டுப் போர்க்காலத்தில் இந்நகரம் அழிவுற்றுப் பின்னர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பருத்தி ஆலைகள் தோற்றுவிக்கப்பட்டமையால் மீண்டும் வளர்ச்சி பெற்றது. இதன் மக்கள்தொகை 303,811 (1974).

தெ.பா.

*காரவேலன்:* அசோகரின் இறப்புக்குப் பின்னர் மௌரியப் பேரரசரிடமிருந்து கலிங்கம் விடுதலை பெற்றது. சிறிது காலம் கழித்து மகாமேகவாகனர் என்னும் புதிய அரச பரம்பரை ஒன்று கலிங்கத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. புகழ்மிக்க அதிகும்பா கல்வெட்டு கலிங்க இராச வம்சத்தின் மூன்றாம் மன்னனான காரவேலன் ஆட்சிக்காலச் செய்திகளைக் கூறுகிறது. அங்கு ஆட்சி புரிந்த அரசர்கள் 'சேடி' என்ற இனத்தினர். வரலாற்று நோக்கில் மகா மேகவாணன் என்பவன் இவ்வினத்தின் முதல் அரசன் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். காரவேலன் முன்னோர் பற்றிய செய்திகள் தெளிவாக இல்லாத நிலையில் மகாமேகவாணன் வழித்தோன்றலான மகாராசா வக்கர தேவன்தான் காரவேலனின் தந்தையாக இருக்கக்கூடும் என்பர்.

காரவேலன் தன் முதல் ஆட்சி ஆண்டுக் காலத்தில் சில பொதுச் சீரமைப்புத் திட்டங்களை மேற்கொண்டு, இரண்டாம் ஆண்டுத் தொடக்கத்தில் போர் நடவடிக்கைகளைத் தொடங்கினான். அவன் மேற்கத்திய திசையில் தனது முதல் படையெடுப்பை மேற்கொண்டு கிருட்டிணா நதியை அடைந்து சாதவாகனர்களின் எல்லையைக் கடந்தான்; தனது நான்காம் ஆட்சி ஆண்டில் வித்தியாதரன் என்ற இளவரசனைத் தோற்கடித்தான். அதே ஆண்டில் நாதிரர்களையும், போசகர்களையும் வென்றான்; எட்டாம் ஆண்டில் கோரதகிரி என்ற மலைப்பகுதியினைக் கைப்பற்றி இராசகிருகம் என்ற நகரத்தைப் பிடித்தான். தனது பதினோராம் ஆட்சி ஆண்டில் மசூலிப்பட்டினம் அரசனின் தலைநகரான பிருநுடா என்ற நகரைக் கைப்பற்றினான். அடுத்த ஆண்டில் மகத மன்னனையும் உத்தரபாத மன்னனையும் வெற்றி கொண்டான். நந்த மன்னனால் கலிங்கத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சமண முனிவரின் சிலையை மகத நாட்டிலிருந்து மீட்டு வந்தான். காரவேலன் தனது படையைத் தமிழகத்தை நோக்கியும் செலுத்தி அங்கு நிலவிய கூட்டணியை முறியடித்ததாகவும் குறிப்பு உளது. காரவேலனும் அவன் மனைவி சின்சியாவும் சமணத் துறவிகளுக்குப் பல பரிசுகளும் நன்கொடைகளும் வழங்கினர். காரவேலன் காலத்தைக் கணிப்பதில் மாறுபட்ட கருத்துகள் இருந்தபோதும் கி.மு. முதலாம் நூற்றாண்டு என்று வரையறுக்கப்படுகிறது. காரவேலனுக்குப் பின் கலிங்க வரலாறு மங்கிப் போனது. கலிங்கம் சிறுசிறு அரசுகளாகச் சிதறுண்டது. இக்காலப்புவனேசுவரத்திற்கு அருகே உள்ள கண்டகிரி-உதயகிரி என்னும் மலைப்பகுதிகளில் காரவேலன் காலத்திய குகைக் கோவில்கள் காணப்படுகின்றன. அவற்றின் முகப்பு (Facade) யானை, புலி, பாம்பு போன்ற அமைப்புகளுடன் கூடியதாய், 'கும்பா' (குகை) எனப்படுகிறது. அவை அதிகும்பா, 'யானைக்குகை', சர்ப்ப கும்பா 'பாம்புக்குகை' எனப்படுகின்றன. இவ்விடத்தில்

சமணர் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர்.
இ.கா.

**துணை நூல்கள்:**

**தங்கவேலு, G.,** கலிங்க நாட்டுக் காரவேலன், பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1979.

**Dharmanarayan Das**, The Early History of Kalinga, Punthipustak, Calcutta, 1977.

**காரன்வால்**: தென்மேற்கு இங்கிலாந்தில் உள்ள மாவட்டம். முந்நீரகமாக உள்ள இப்பகுதி ஆங்கிலக் கால்வாயினாலும் அட்லாண்டிக்கு மாக்கடலாலும் சூழப் பெற்றுள்ளது. இங்கு வேளாண்மையும் மீன் பிடித்தலும் சிறப்பான தொழில்கள்; பொறியியல் வேலைகள், கப்பல் பழுது பார்த்தல், கற்சுரங்க வேலை ஆகிய தொழில்களும் நடைபெறுகின்றன. இப்பகுதியின் தகரமும் செம்புச் சுரங்கங்களும், பண்டைய கிரேக்க வணிகர்களால் அறியப்பட்டிருந்தன. இரண்டாம் உலகப் போரின்போது அந்தச் சுரங்கங்களில் மறுபடியும் வேலைகள் தொடங்கப் பெற்றன. இம் மாவட்டத்தின் தட்பவெப்ப நிலை காரணமாகவும், அழகிய இயற்கைக் காட்சிகள் காரணமாகவும் இங்குச் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

**காரன்வால்**[2] கனடாவில் காரன்வால் என்னும் பெயரையுடைய பிறிதொரு நகரம். இது ஆண்டேரியோ மாநிலத்தின் தென்கிழக்கே உள்ளது; தூய இலாரன்சு ஆற்றங்கரையில் அமைந்துள்ள இந்நகரில் பருத்தி, மரவிழைப்பட்டு, காகிதம், இரசாயனப் பொருள்கள் மின்சாரப் பொருள்கள் முதலியவை உற்பத்திசெய்யப்படுகின்றன. தெ.பா.

**காரன்வாலிசு, சார்லசு (பிரபு)** ஒரு சிறந்த போர் வீரர்; அரசியல்மேதை. இந்தியாவில் ஆங்கில அரசை நிறுவுவதற்கு முக்கிய காரணமாக இருந்த ஒருசில தலைமை ஆளுநர்களுள் (Governor General) இவர் ஒருவர். உள்நாட்டுத் துறையில் இவரைப் போல் நிலையான பணியை வேறெந்தத் தலைமை ஆளுநரும் செய்யவில்லை என்றால் அது மிகையாகாது.

இவர் கி.பி. 1738-ஆம் ஆண்டு இலண்டனில் பிறந்தார். ஈட்டன் (Eton) பள்ளியிலும், கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கிளேர் (Clare) கல்லூரியிலும் இவர் கல்வி கற்றார். இராணுவச் சேவையை மேற்கொண்ட இவர் கி.பி. 1775-இல் தலைமைத் தளபதியாக (Major - General) நியமனம் பெற்று அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டார். அச்சமயம் அமெரிக்கச் சுதந்திரப் போர் நடைபெற்று வந்தது. பிரித்தானிய வடஅமெரிக்கக் குடியேற்றங்களுடைய வெறுப்பிற்குக் காரணமாக இருந்த இங்கிலாந்தின் அரசுக் கொள்கைகளை இவர் வன்மையாகக் கண்டித்து வந்த போதிலும் அக்குடியேற்ற நாடுகளின் கிளர்ச்சியை ஒடுக்குவதில் முழுமனத்துடன் ஈடுபட்டார். சார்சு வாசிங்டனுடைய படைகளை கி.பி. 1776-இல் நியூசெரிசியிலிருந்து (New Jersey) விரட்டினார். தென்பகுதிப் பிரித்தானியத் தளபதியாக இவர் 1980-ஆம் ஆண்டு செயற்பட்டார். தெற்குக் கரோலினாவிலுள்ள காம்டென் (Camden) என்னுமிடத்தில் அந்த ஆண்டு அமெரிக்கத் தளபதியான ஒரேசியோ கேட்சைத் (Horatio gates) தோற்கடித்தார். அமெரிக்காவில் நடத்திய இறுதிப் போராட்டத்தில் யார்க்குடவுன் என்னுமிடத்தில் இவர் தோற்கடிக்கப்பட்டார்.



காரன்வாலிசு, சார்லசு

இவர் இந்தியாவின் தலைமை ஆளுநராக கி.பி. 1786-ஆம் ஆண்டில் பொறுப்பேற்றார். அப்போதைய கட்டுப்பாட்டுக் குழுவின் (Board of Control) தலைவரான துண்டாசு (Dundas), ஆங்கிலப் பிரதமர் வில்லியம் பிட்டு ஆகியோருடைய நெருங்கிய நண்பராக இருந்தமையால் அவர்களுடைய முழு ஆதரவு இவருக்குக் கிடைத்தது. மேலும் தம் சொந்தப் பொறுப்பில் சட்டத்தை இயற்றவும், இடைக்காலத்தில் சட்டத்தை நிறுத்தி வைக்கவும், சட்டத்தை நீக்கவும் அதிகாரம் பெற்றார். மேலும் இவர் தலைமை ஆளுநர் பதவியுடன் படைத்தலைமைப் பதவியையும் பெற்றார்.

இவர் தம் பதவிக் காலத்தில் மூன்று முக்கியமான சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். அவற்

றுள் முதலாவது ஒப்பந்த ஊழியர்களைப்(Covenanted Service) பற்றியதாகும். அவர் பதவியேற்ற போது கம்பெனியின் ஒப்பந்த ஊழியர்கள் குறைவான சம்பளத்துடன் வங்காளத்தில் வசூலித்த நிலவரியில் தரகு (Commission) பெற்று வந்தனர். மேலும் அவர்கள் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்தனர். அதனால் கம்பெனியின் நலன்கள் பாதிக்கப் பட்டன. காரன்வாலிசு தரகு முறையை ஒழித்து அதற்குப் பதிலாகச் சம்பளத்தை உயர்த்தினார். இரண்டாவதாக அவர் பதவியேற்றபோது கம்பெனி தனது வரிவசூலிக்கும் உரிமையை ஒவ்வொரு ஆண்டிலும் ஏலத்திற்கு விட்டது. காரன்வாலிசு அந்த முறைக்குப் பதிலாக நிலையான நிலவரி ஏற்பாட்டினைக் கொண்டு வந்தார். ஒருசிலர் இதை அறிவார்ந்த திட்டமெனக் கூறினார்கள். வேறு சிலர் இதைப் பெருந்தவறெனக் கூறினார்கள். இந்தத் திட்டம் ஆங்கில அரசின் செல்வாக்கை அதிகப்படுத்திய தோடு அது நிலையாக அமையவும் உதவி செய்தது. வங்காளம் மிகச் செழிப்பான மாநிலமாக அமையவும் அது துணை நின்றது. அந்த நேரத்தில் அது உழவர்களுக்குப் பெருந்துன்பத்தை உண்டாக்கியது. ஏனெனில் அந்த ஏற்பாட்டை அரசு சமீன்தார்களுடன் செய்து கொண்டதேயன்றி உழவர்களுடன் செய்து கொள்ளவில்லை. மூன்றாவதாக அவர் நீதித் துறையைத் திருத்தியமைத்தார். வரிவசூலிக்கும் அதிகாரிகளிடமிருந்த நிதி வழங்கு அதிகாரத்தைப் பிரித்துவிட்டார். நீதிபதிகளுக்கு உதவியாக இருக்கும் பொருட்டுப் புதியதொரு சட்டத் தொகுதியைத் தயாரித்தார்.உரிமைமற்றும் குற்றச்சார்பான வழக்குகளை விசாரிக்கத் தனித்தனி நீதிமன்றங்களை அமைத்தார். மேற்கூறிய சீர்திருத்தங்கள் வாயிலாக பிரித்தானிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார் என்று கூறுவது மிகையாகாது.

அயல்நாட்டுச் செய்திகளில் இவர் நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றினார். இந்திய அரசுகளுடன் சமாதானமாக இருக்க வேண்டும் என்பதே இவரது நோக்கமாகும். அதற்கேற்ப கி.பி. 1788-இல் சா ஆலமினுடைய (Shah Alam) மகன் தில்லி அரியணையைக் கைப்பற்றுவதற்கு ஆங்கிலேயருடைய துணையை நாடியபோது காரன்வாலிசு அதற்கு இசைய மறுத்தார். ஆனால், மைசூர் அரசருடன் போர் செய்வதை இவரால் தவிர்க்க இயலவில்லை. அதற்கு இரு காரணங்கள் இருந்தன. ஒன்று சுதேச அரசர்களின் வழக்கமான துரோகச் செயல்கள். மற்றொன்று சென்னை அரசாங்கத்தின் அறிவற்ற உடன்படிக்கைகள். பேசுவா, நைசாம் ஆகியோருடன் காரன் வாலிசு ஒப்பந்தம் செய்து கொண்டு மைசூருடன் போர்புரிந்தார். போரில் இவர் வென்றார். மைசூரின் பாதிப்பகுதி ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. போரின் முடிவில் தமது எதிரியை வலுக்குறைவடையச் செய்ததோடல்லாமல் தமது நட்பு அரசுகளைப் பலமடையாதவாறும் பார்த்துக் கொண்டார். ஆங்கில அரசுக்கு ஆற்றிய தொண்டின் காரணமாக அவரைப் பெருமகன் நிலைக்குப் பிரித்தானிய அரசு உயர்த்தியது. இவர் கி.பி. 1793-இல் பதவியை விட்டு விலகினார்.

இவர் கி.பி.1798-ஆம் ஆண்டு மே மாதம் முதல் கி.பி.1801-ஆம்ஆண்டுமே மாதம் வரை அயர்லாந்தின் அரசப்பேராளராகப் பணியாற்றினார். போர்க்கொடி உயர்த்திய சீர்திருத்தக் கிறித்தவர்கள் உரோமன் கத்தோலிக்கர்கள் ஆகிய இரு சாரார்களின் நம்பிக்கைக்கும் உரியவராக விளங்கினார். இவர் கி.பி. 1798-இல் ஏற்பட்ட அயர்லாந்து கலகத்தை ஒடுக்கினார். ஆங்கில அதிகாரிகளின் ஊழல்களைப் போக்கினார். இங்கிலாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் நாடாளுமன்றங்கள் இணையவேண்டும் என்ற கொள்கையை ஆதரித்தார். இந்த ஐக்கியம் கி.பி. 1801-இல் நிறைவேற்றப் பட்டது. உரோமன் கத்தோலிக்கர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்க வேண்டும் என்று இவர் வாதாடினார். அதற்கு ஆங்கில அரசர் இசையவில்லை.

பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையேயான ஆமியேன் (Amiens) உடன்படிக்கையை கி.பி. 1802 -இல் உருவாக்குவதில் இவர் பெரிதும் ஈடுபட்டார்.

இவர் மீண்டும் கி.பி. 1805-இல் இந்தியாவின் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். சூலை மாதம் இந்தியாவிற்கு வந்த இவர் நோய் காரணமாக கி.பி. 1805-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 -ஆம் நாளன்று காசிபூர் என்ற இடத்தில் உயிர் துறந்தார். தி.ஆர்.இ.

**காராகாசு** கரிபியன் கடலுக்கருகில் வெனிசூலா நாட்டின் மிகப் பெரிய நகரம். வெனிசூலாவின் தலைநகராகவும் உள்ளது. வாணிகம், தொழில்கள், பண்பாடு யாவற்றிலும் இந்நகரம் சிறப்புப் பெற்று விளங்குகிறது. எண்ணெய் சுத்தம் செய்யும் தொழில் இங்குச் சிறப்புற நடைபெறுகிறது. எண்ணெய் மதிப்பு உயர்வடைந்ததால் 1950-ஆம் ஆண்டுகளில் திடீரென இந்நகரம் மிக விரைவில் முன்னேறியது. மேலும், இறைச்சியைக் கலன்களில் அடைத்தல், நெய்ப்பொருள் உற்பத்தித் தொழில், சர்க்கரை சுத்தம் செய்தல் முதலியனவும் இங்குப் பெருவாரியாக நடைபெறுகின்றன.



காராகாசு நகரம்

காராகாசு (Caracas) நகரம், கி.பி. 1567-இல் நிறுவப்பெற்றது. இதை கி.பி. 1595-இல் ஆங்கிலேயரும், கி.பி. 1766-இல் பிரெஞ்சியரும் தாக்கினர். இந்நகரில், தென்னமெரிக்காவின் பெரிய புரட்சி வீரர்களான பிரான்சிசுகோ பிராண்டாவும், சைமன் பொலிவரும் பிறந்தனர். புரட்சித் தலைவர்கள் கி.பி. 1811-ஆம் ஆண்டு சூலை மாதம்இசுபெயின் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து இந்நகரம் விடுதலை பெற்று விட்டதாக, அறிக்கை வெளியிட்டனர். ஆனால் அடுத்த ஆண்டில் ஏற்பட்ட ஒருநிலநடுக்கத்தினால் இந்நகர் பேரழிவுக்கு உட்பட்டது. புரட்சித் தலைவர் சைமன்பொலிவர் கி.பி. 1813-இல் இதைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் கி.பி. 1814 அவர் போரில் தோல்வியுற்றதால் இதைக்கைவிட நேர்ந்தது. இறுதியாகக் காரடோபா என்னுமிடத்தில் வெற்றி பெற்றுப் பொலிவர், மீண்டும் நகருக்குள் சுதந்திர வீரர் என்ற முறையில் சிறப்புடன் சென்றார். தெ.பா.

**காராபுரி**: காண்க: எலிபெண்டா.

**காரி** கடையெழு வள்ளல்களுள் ஒருவன். இவன் மலையமான் திருமுடிக்காரி, மலையன், முள்ளூர் மன்னன், கோவற்கோமான், தேர்வண் மலையன் என்றெல்லாம் வழங்கப்பெறுவன். இவனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், கபிலர், பரணர், கல்லாடனார், வடமவண்ணக்கன் பெருந்தலைச்சாத்தனார், மாறோக்கத்து நப்பசலையார், பெருஞ்சித்திரனார், வன்பரணர், அம்மூவனார் ஆகிய புலவர்கள் பாடியுள்ளனர்.

சிறுபாணாற்றுப்படை நூலில் நத்தத்தனார், அஞ்சத்தக்க நெடுவேலையும் கழல்தொடித் தடக்கையினையுமுடைய காரி புரவியொடு தன் நாட்டினையும் ஈர, நன்மொழியினையும் ஏனையோர் கேட்டு வியக்குமாறு இரவலர்க்களித்தான் என்று இவனைப் பாராட்டுவர். காரி தன் நாட்டை அந்தணர்க்கு வழங்கினான் என்றும், போரில் பெற்ற பொருளை இரவலர்க்கு நல்கினான் என்றும், தனக்கெனப் பிறிதொரு பொருளை உரிமையாகப் பெறாமல் தன் மனைவியின் தோளை மட்டும் பெற்றிருந்தும் கொடைப் பெருமிதத்துடன் வாழ்ந்தான் என்றும், இவன் கள்ளுண்டு மயங்காமல் ஈந்த நெடுந்தேர்கள் முள்ளூர் மலையிற் பெய்த மழைத் துளியினும் பல என்றும், நாளல்லா நாளிற் சென்றாலும் புள் இடையே தடுத்தாலும் செவ்வியறியாமற் சென்று திறனல்ல மொழிந்தாலும் மலையனைப் பாடியோர் வறிதே திரும்பார் என்றும் கபிலர் இவனது கைவண்மையை ஏத்துவர். இவன் காரிக் குதிரை ஊர்ந்து பேரமர்க் கடந்தவன். வல்வில் ஓரியைக் கொன்று கொல்லி மலையைச் சேரனுக்குரியதாக்கியவன். பகைவரது யானையின் ஓடைப் பொன் கொண்டு பாணர் சென்னி பொலியப் பொற்றாமரை மலரைச் சூட்டினான். மலையமான் பகைவர் ஊர் சென்று வில்லாற்றலால் ஆனிரை கவர்ந்தான். முள்ளூர்ப் போர்க்களத்தில் தன்னொடு பொரவந்த ஆரியரைத் தன் வாளாற்றலால் புறங்காட்டி ஓடச்செய்தான். ஓரியைக் கொன்ற காரி பின் அவனைக் கொன்ற தெருவிற்குச் சென்றபோது ஓரியைச் சார்ந்தோர் ஒருங்கு கூடிப் பேரிரைச்சலிட்டனர். கிள்ளி வளவன் மலையமான் மக்களை யானையடியிலிட்டுக் கொல்ல முயன்றபோது, கோவூர்கிழார் அம்மன்னனைப்பாடி அம்மக்களை உய்யக் கொண்டார். மலையனின் கானம் நறுமணம் மிக்கது என்பதைக் கபிலர் தம் குறுந்தொகைப் பாடல்களில் சுட்டுவர். இரா.சா.

**காரி**[2] தமிழில் கணக்கதிகாரம் என்னும் நூலைச் செய்தவர். அந்நூல் கணிதவியல் பற்றிய செய்திகளை, வெண்பா, கட்டளைக் கலித்துறை விருத்தம் ஆகிய செய்யுட்களால் கூறுகிறது. இவரே அந்

நூலுக்கு உரையும் செய்திருப்பார் என்று தெரிகிறது. இவர் காரியார், காரிநாதன் என்றும் கூறப்படுவார். இவர் சோழநாட்டைச் சார்ந்தவர்; முகரி நகரில் வாழ்ந்தவர்; கொறுக்கையர் குடியில் தோன்றியவர் என்பதனை நூலுள் ஒரு செய்யுளிற் குறிப்பிட்டுள்ளார். தந்தையார் பெயர் புத்தன் என்பது. இவர் காலம் கி.பி. 15–ஆம் நூற்றாண்டாகலாம் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். நிலம், பொன், நெல், அரிசி, கல், கால் ஆகிய ஆறு வழிகளில் வரும் கணக்கினையும் வேறு பல சிந்தனைக் கணக்குகளையும் இந்நூல் விளக்குகிறது. இது, 17 பாயிரச் செய்யுட்களோடு 110 செய்யுள்களையும் கொண்டுள்ளது. நூலின் தொடக்கத்தில் இவர் பிள்ளையார் சுப்பிரமணியர், திருமால், கலைமகள், சபாநாயகர், பராசக்தி ஆகிய தெய்வங்களுக்கு வணக்கங் கூறியுள்ளார். பெரிய புராணத்துள் இடம்பெறும் காரி நாயனார் இவரின் வேறாவார். 'பாரின் முழுதும் பரந்த புகழ்க் கொறுக்கைக் காரி தான் சொன்ன கணக்கு' என்னும் பாடற்பகுதி இவரையும் இவர்தம் நூலையும் குறிப்பிட்டுச் சிறப்பிக்கிறது.

**காரி[3]** இவர் வைணவ ஆழ்வார்களுள் ஒருவரும், திருவாய்மொழி இயற்றியவருமான நம்மாழ்வாருக்குத் தந்தை. கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

**காரி[4]** பெரிய புராணத்தில் இடம்பெறும் காரி நாயனார். கோவைப் பிரபந்தம் ஒன்று இயற்றியவர். இவரைச் சுந்தரர் 'காரிக்கும் அடியேன்' என்று போற்றியுள்ளார். காண்க: காரி நாயனார்.

**காரி[5]** ஐயனார், திருமால், இந்திரன் ஆகியவர்களைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று.

**காரி[6]** கடையெழு வள்ளல்களுள் ஒருவனான காரி என்பவனுக்குரிய குதிரையின் பெயர் காரி என்பதாகும். அ.மா.ப.

**காரி கிழார்**: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கிழார் என்னும் பெயரை நோக்குங்கால் இவர் வேளாண் மரபில் தோன்றியவர் என்பது புலனாகிறது. காரி என்பது இவரது பிறந்த ஊர் என்று கருதுகின்றனர். அவ்வூர் தொண்டை நாட்டிலுள்ளதென்றும், இக்காலத்தில் அது இராமகிரி என்று வழங்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. இவரின் ஒரே பாடல் புறநானூற்றில் ஆறாம் பாடலாக அமைந்துள்ளது. பாடாண்டிணையில் செவியறிவுறுஉவாக அமைந்த அப்பாடலில் இவர், பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். (புறம்.6). அம்மன்னனுக்கு அறிவுரை கூறுகையில், 'அம்மன்னன் முக்கட் செல்வராகிய சிவபெருமான் திருக்கோயிலை வலம் வரும் பொருட்டு அவனது வெண்கொற்றக்குடை தாழ்வதாக' என்று குறிப்பிட்டுள்ளதனை நோக்குங்கால், அம்மன்னனேயன்றி இப்புலவரும் சிவவழிபாட்டில் ஈடுபாடுடையவர் என்பது புலனாகிறது. இவர், தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர் ஒண்கதிர் ஞாயிறு போலவும் இவ்வுலகில் நிலைத்து வாழ்வாயாக என்று அப்பாண்டிய மன்னனை வாழ்த்துவது சிறப்பாக உள்ளது. அ.மா.ப.

**காரிசன் வில்லியம் இலாயிடு (கி.பி. 1805–1879)** அமெரிக்காவில் வாழ்ந்த பொதுநலத் தொண்டர். புகழ்பெற்ற பத்திரிகை ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் விளங்கியவர். தனது உயிரையும் துச்சமென எண்ணி, பொதுமக்கள் நலன் கருதிக் கொடுமைகளை, எதிர்த்துப் போராடியவர். அமெரிக்காவில் அடிமைத் தளையை அறுக்க ஓய்வின்றிப் பத்திரிகைகளில் தம் கருத்துக்களை எழுதி வெளியிட்டவர்.



காரிசன், வில்லியம் இலாயிடு

அடிமை ஒழிப்புக் குறித்து இலாயிடு எழுதிய எழுத்துகள் தீவிரப் போக்குடையனவாகவும் காரசாரமாகவும் இருந்தன. துடிப்பு மிக்க இவரது எழுத்தாற்றல் படிப்போரை மிகவும் கவர்ந்தது. இதன் விளைவாக இவர் வழக்குமன்றத்தில் பல வழக்குகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. இவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்காக இவர் வழக்குமன்றத்தில் பதில் சொல்ல வேண்டியிருந்தது. அவதூறாக எழுதியதற்கு, இவருக்குச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. இருப்பினும், இவர் நண்பர்கள் இவருக்காக ஒறுப்புத் தொகையைக் கட்டியதால், இவர் தப்பினார். அடிமை ஒழிப்புக் குறித்து இவர் நியூயார்க்கிலும்

வேறு பல இடங்களிலும் தொடர் சொற்பொழிவு களை நிகழ்த்தினார்.

அமெரிக்காவில் அடிமை ஒழிப்பு நடைமுறைப் படுத்தப்படும் வரையில் இவர் 'இலிபரேட்டர்' பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தினார். பல ஆண்டுகள் வரை இவர் தனிப்பட்ட சிலராலும், பொதுமக்களாலும் மிரட்டப்பட்டார். பல ஆபத்துகளையும் இவர் சந்திக்க வேண்டியிருந்தது. எவ்வளவோ இன்னல்களையும் தாங்கிக் கொண்டார்.

ஆற்றல்மிக்க பத்திரிகை ஆசிரியரான இவர் கி.பி. 1833, 1840, 1848 ஆகிய ஆண்டுகளில் இங்கிலாந்திற்குப் பயணம் மேற்கொண்டு, பல புதிய அனுபவங்களையும் அறிவையும் பெற்றார். கி.பி. 1833-ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து திரும்பிய இலாயிடு, அடிமை முறை எதிர்ப்புக் கழகம் (Anti Slavery Organization) ஒன்றினை நிறுவி, அதன் தலைவராகவும் சீரிய பணிபுரிந்தார். சமயச் சீர் திருத்தவாதிகள் பலர் இவ்வியக்கத்திற்கு ஆதரவு காட்டியதுடன், திருச்சபைகளிலும் அடிமை முறை ஒழிப்புப் பற்றி விளக்கிப் பேசினர். இவ்வியக்கம் அரசியலில் தலையிடக்கூடாது என்பது இலாயிடின் கண்டிப்பான கொள்கையாகும். சமூகச் சீர்திருத்தச் செம்மலாகவும், மனிதாபிமான மிக்க பொதுநல ஊழியராகவும், ஆற்றல்மிகு பத்திரிகை ஆசிரியராகவும் திகழ்ந்த காரிசன் இலாயிடு கி.பி. 1879-இல் நியூயார்க்கில் காலமானார். ம.இ.

**காரிந்து (கொரிந்தோசு)** ஐரோப்பாவில் தெற்குக்கிரீசிலுள்ள ஒரு வரலாற்றுப் புகழ் வாய்ந்த நகரம். இங்கிருந்து புகையிலை, உலர்ந்த திராட்சை, மது முதலியன வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. பழைய காரிந்து கி.பி. 1858-இல் நில நடுக்கத்தால் அழிவுற்றதால், புதிய நகரம் அமைக்கப் பெற்றது. மறுபடியும் 1928-இல் நில நடுக்கத்தால் அது அழிவுற்றுப் புதிய நகர் அங்கு உருவாகியது.

பண்டைய கிரேக்க நகரங்களுள் மிகவும் பெரியதாகவும், வலிமை வாய்ந்ததாகவும், பழமையும் பெருமையும் வாய்ந்ததாகவும் உள்ள சிலவற்றில் காரிந்தும் (Corinth) ஒன்று. ஓமர் (Homer) காலத்திலேயே தோரியப் பிரிவினரான (Dorians) கிரேக்கர் இந்நகரைக் கைப்பற்றினர். கி.மு. 7, 6-ஆம் நூற்றாண்டுகளில் காரிந்து ஒரு செழிப்பான, கடல் வலிமை வாய்ந்த அரசாகத் திகழ்ந்தது. மற்றொரு சிறப்பு வாய்ந்த கிரேக்க நகரம் ஏதென்சு (Athens). காரிந்தும் ஏதென்சும் கடுமையான போட்டியிலிறங்கின. காரிந்தும் இசுபார்ட்டாவும் (Sparta) பொதுவாக நட்புப் பூண்டிருந்தன. காரிந்தின் குடியேற்றப் பகுதிகள், அதற்கு எதிராகக் கலகங்கள் செய்த பொழுது, அவற்றிற்கு ஏதென்சு உதவி புரிந்தது. இதன் விளைவாக, கிரீசில் ஒரு பெரிய போர் மூண்டது. கி.மு. 431 முதல் 404 வரை நடைபெற்ற இப் போருக்குப் பெலப்பொனிசியப் போர்(Peloponnesian War) என்று பெயர். இதில் ஏதென்சு தோல்வியுற்றது. இசுபார்ட்டா (Sparta) வெற்றி பெற்றதால் கிரீசில் அதன் ஆதிக்கம் மேலோங்கியது. அதன் கொடுங்கோலாட்சியை வெறுத்த காரிந்து ஏதென்சுடன் இணைந்து இசுபார்ட்டாவுடன் போரிட்டது. இக்காரிந்தியப் போர் கி.மு. 395 முதல் கி.மு. 387வரை நடைபெற்றது. பிறகு கிரீசில் மாசிடோனியாவின் ஆதிக்கம் ஏற்பட்டபொழுது (கி.மு. 338 க்குப் பிறகு) மாசிடோனியப் படைவீரர்கள் காரிந்தை முற்றுகையிட்டனர். காரிந்துக்கு, கிரேக்க உலகத் தலைமைப் பதவி கிடைக்கவில்லை. கிரீசில் அக்கேயக் கூட்டமைப்பு (Achaean League) ஏற்பட்டபொழுது கி.மு. 224-இல் காரிந்து அதன் தலையாய உறுப்பு அரசாகச் சேர்ந்தது. உரோமாபுரியின் ஆதிக்கம் பரவி வந்த பொழுது கி.மு. 146-இல் இந்தக் கூட்டமைப்பு அழிவுற்றது. உரோமப் பேரரசைத் தாக்கிய கோதியர் (Goths) கி.பி. 395-இல் காரிந்தையும் தாக்கி அழிவுறச் செய்தனர். கி.பி. 521-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நில நடுக்கத்தாலும் கொரிந்தியர் துன்பமுற்றனர். இடைக்காலத்தில் ஐரோப்பாவில் நடைபெற்ற சிலுவைப் போர்களின் பொழுது, கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மீண்டும் காரிந்து தாக்குதல்களுக்கு உட்பட்டது. இந்நிகழ்ச்சி, நான்காம் சிலுவைப் போருடன் தொடர்புடையதாகும். உதுமானியத் துருக்கியர்



காரிந்துவிலுள்ள தொன்மைச் சின்னங்கள்

வலிமைபெற்று ஐரோப்பாவில் பரவி வந்தபொழுது கி.பி. 1458-இல் காரிந்து அவர்கள் ஆட்சிக்கு உட்பட்டது. கிரீசில் ஏற்பட்ட விடுதலை இயக்கத்தின் விளைவாக, கி.பி. 1822-இல் கிரேக்கப் புரட்சித் தலைவர்கள் காரிந்தையும் கைப்பற்றிக் கொண்டனர். சுதந்திர கிரீசு ஏற்பட்டபின், காரிந்து அதனுடன் இணைந்தது. அமெரிக்கத் தொல்லியலறிஞர்கள் இங்கு கி.பி. 1896-ஆம் ஆண்டு அகழாய்வுகள் மேற்கொண்டனர். தெ.பா.

**காரிநாயனார்** சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவர்; திருக்கடவூரில் அந்தணர் மரபில் தோன்றியவர். இவர், வண்தமிழின் துறைகள் அனைத்தையும் நன்கு கற்றுத் துறைபோகித் தம் பெயர் விளங்குமாறு கோவை முதலிய நூல்கள் பல தொகுத்தார். தாம் கற்றவற்றையும், இயற்றியனவற்றையும் தமிழ்நாட்டு மூவேந்தர்களுக்கும் பயிற்றினார். அம்மன்னர்கள் வழங்கிய நிறைந்த செல்வங்களையெல்லாம் பல சிவாலயங்கள் எடுப்பதில் செலவிட்டார். எஞ்சிய செல்வத்தைத் தெய்வங்களுக்கும் அடியார்களுக்கும் வழங்கினார். சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலாயத்தை மறவாத மனத்தினராய், இறைவன்பால் இடையறாத அன்புடையவராக விளங்கி, நாடெலாம் புகழ வாழ்ந்து, இறையருள் பெற்றுத் தம் மனம்போல உடம்பும் கயிலாயம் சேரப் பெற்றார். அ.மா.ப.

**காரியாசான்** சிறுபஞ்சமூலம் என்னும் நீதி நூலை இயற்றியவர். குறைந்த அடிகளையுடைய செய்யுட்களால் அறம், பொருள், இன்பம் பற்றிப் பாடுவது கீழ்க்கணக்கு நூல்களின் பொது இயல்பாகும். இந்த வகையில் பாடப்பெற்ற பதினெட்டு நூல்களுள் சிறுபஞ்சமூலமும் ஒன்றாகும். இந்நூல் பாயிரச் செய்யுள் உட்பட 100 வெண்பாக்களை உடையது; 1800 ஆண்டுகட்கு முன்னர் எழுதப் பெற்றது.

மண்ணுலக மக்களுக்கு நன்மையுண்டாகுமாறு சிறு பஞ்சமூலத்தை உரைப்பேன் என்று காரியாசான் கடவுள் வாழ்த்துப் பாட்டில் குறிப்பிடுகிறார். இதனால், மக்கள் அனைவரும் நற்பண்பும் நல்லொழுக்கமும் நிறைந்த உண்மையான மனித வாழ்க்கைக்கு உரியவர்களாக உயர்ந்தோங்க அவர் விரும்பினார் என்பது புலனாகிறது. காரியாசான் காலத்து வாழ்ந்த புலவர் ஒருவர் பாடியதாகக் கருதப்படும் பாயிரச்செய்யுளில், 'மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக் காரியாசான்' என்று இப்புலவர் பெருமகனார் பாராட்டப்படுகிறார். இந்தப் பாராட்டுரையால் காரியாசான் மழையைப் போல் ஈகைப் பண்புமிக்கவர் என்பது புலனாகிறது.

சிறுபஞ்சமூலம் என்பது 'சிறிய ஐந்துவேர்கள்' என்று பொருள்படும். கண்டங்கத்தரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர் ஆகிய ஐந்து வேர்களும் மக்களின் உடற்பிணிகளைப் போக்குகின்றன. இதேபோன்று காரியாசான் பாடல் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள ஐந்து கருத்துகளும் மனிதனின் உள்ளத்தில் மண்டிக்கிடக்கும் அறியாமை முதலியவற்றை அகற்றிப் பிறவிப்பிணியை நீக்கவல்லன. எனவே, இந்நூலும் 'சிறுபஞ்சமூலம்' என்று பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

ஒழுக்கம் காத்தல், உயிர்க்கொலைபுரியா திருத்தல், பொய் பேசாதிருத்தல், புலால் உண்ணா திருத்தல், களவு செய்யாதிருத்தல் ஆகிய ஐந்து அறங்களையும் தம்முடைய நூல் முழுதும் வலியுறுத்தி விளக்கிச் செல்கிறார் காரியாசான்.

தன் நாக்கை அடக்காது பழிமொழிகள் கூறித் திரியும் மனிதனை அந்த நாவே எமனாகி அழித்திடும். இவ்வுண்மையை, முட்டையிட்டவுடன் சாகும் சிலந்திப்பூச்சி - நீண்ட கொம்புகளால் துன்புறும் விலங்கு - தன்மயிர் ஒன்று உதிர்ந்தாலும் உயிரை விட்டுவிடும் கவரிமான் - குஞ்சுகளை ஈன்றவுடன் அழிந்துபோகும் நண்டு முதலியவற்றின் வாழ்வியல் வாயிலாக எடுத்துக்காட்டி விளக்கிடும் அருமை படித்தின்புறத்தக்கதாகும்.

'பொன்பெற்றாலும் பொய் பேசக்கூடாது; பிறர் பொருளைக் களவு செய்தல்கூடாது; எளியவரை ஏசக்கூடாது; பெண்டிர் வலியவந்து விரும்பினும் மனந்தளரக்கூடாது; தன்னுடலை வளர்க்கப் பிறிதொன்றன் ஊனை உண்ணக்கூடாது' என்று பிறவிப்பிணியை முற்றிலும் போக்கிடும் வழிகளை அமைத்துத்தருகிறார் காரியாசான். பொருளினால் போகமும் அருளினால் அறமும் வந்தடையும் என்கிறார். பிறர் பழி பொறுத்தும் பிறர் பொருளை ஓடுபோல மதித்து ஒதுக்கியும் மற்றவன் மனைவியைத் தன்னை ஈன்ற தாயாகப் போற்றியும் வாழும் மனித நெறிகளை நூலின் பலவிடங்களில் காணலாம். 'சான்றோரால் பல் யாண்டும் வாழ்கவென வாழ்தல் நன்று' என்பதே கவிஞர் காரியாசானின் உறுதிப்பாடுடைய உயர்ந்த கொள்கையாகும். சி.கு.

**காரியார்**: இவர், மதுரையிலிருந்து ஆட்சி புரிந்த ஒரு பாண்டிய மன்னனிடம் பரிசில் பெற

வந்தவர்களாகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் கூறும் இரு புலவர்களுள் ஒருவர். மற்றவர் பெயர் நாரியார். இவ்விருவரும் பாண்டி மன்னன்பால் பாடிப பரிசு பெறும் பொருட்டு மதுரை வந்தனர். மதுரைக்கருகேயிருந்த காட்டு வழியில் வருகையில் வழிமயங்கித் தடுமாற்றமெய்தினர். மதுரைச் சொக்கநாதப் பெருமான் ஒரு இடையன் உருவில் அவர்கள் முன் தோன்றி, நிலைமை அறிந்து, தம்மைப் பாடுமாறு வேண்டினார். அப்புலவர்கள் பாடிய பாடலைக் கேட்டுகந்து, அவர்கள் மதுரை செல்லும் வழியினைக் காட்டியதோடு பாண்டியன் புகழ்பற்றியும் கூறிப் பின்னர் மறைந்தார். தம்முன் வந்தவர் இறைவன் எனவுணர்ந்த அப்புலவர்கள் இருவரும் மதுரையினை அடைந்து இறைவனைப் பாடிப் பரவினர். இறைவன் இடையர் வடிவில் வந்த போது, சுந்தரக்கோன் எனப்பட்டார்.

**காரியார்[2]** கணக்கதிகாரம் என்னும் நூலை இயற்றியவர். இவர், காரி, காரிநாயன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார். காண்க: காரி[2] அ.மா.ப.

**காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி**: சங்க காலத்துச் சோழ மன்னர்களுள் ஒரு தாயத் துரிமையுடையோர் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் ஆவர். இவ்விருவரையும் புலவர் கோவூர்கிழார் பாடியுள்ளார். இருவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து சோழ நாட்டை அமைதியாக ஆண்டுவர வழி காட்டியவர் கோவூர்கிழார். ஆவூரிலும் உறையூரிலும் நெடுங்கிள்ளியின் கோட்டைகள் இருந்தன. எக்காரணத்தாலோ நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பகையுணர்வு கொண்டனர். ஆவூரில் நெடுங்கிள்ளி தங்கியிருந்த போது நலங்கிள்ளியின் தம்பி ஆவூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். அதனை அறிந்த கோவூர்கிழார் நெடுங்கிள்ளியைக் கண்டார். 'கோட்டையுள் அடைத்து இனிதிருத்தல் நல்லதன்று. அறமுடையோன் என்றால் கோட்டையைத் திறந்து அவனுக்குக் கொடு. மறமுடையோன் என்றால் போர் செய்யத் திறந்திடு. இரண்டும் இல்லாமல் மதிலகத்துள் ஒடுங்கிக்கிடத்தல் நாணத்தக்கது' என்றார். புலவரின் அறிவுரை அம்மன்னனது உள்ளக்கதவைக் திறந்தது போலும். நெடுங்கிள்ளி கோட்டையிலிருந்து வெளியேறி உறையூர்க் கோட்டையில் புகுந்தான். அங்குச் சென்று நலங்கிள்ளி முற்றுகையிட்டான். சோழர் குடிக்குரிய இரு மன்னரும் பகை கொண்டு போர்செய்திடல் நன்றன்று என்பதாகக் கோவூர்கிழார் அங்கும் அறிவுறை கூறினார். 'இருவர் கண்ணியும் (மாலையும்) ஆத்திமாலை. ஒருவர் தோற்றாலும் தோற்பது சோழர்குடியே. இருவரும் வெற்றிபெறல் இயலாது. இப்போர்ச் செய்கை சோழர் குடிக்குத் தக்கதன்று. உம்போன்ற மன்னர்க்கு இச்செயல் பேருவகை அளிக்கும்' என்றார்.

ஒருசமயம் சோழன் நலங்கிள்ளியிடமிருந்து வந்த இளந்தத்தன் என்னும் புலவரை அம்மன்னரின் ஒற்றன் என நெடுங்கிள்ளி கருதினான். அப்புலவரைக் கொலை செய்யவும் முற்பட்டான். இளந்தத்தனைக் காப்பாற்ற நல்லுள்ளம் கொண்ட கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் சென்றார்.

'புரவலரைக்காணப் பறவைபோல் பாலைபல கடந்து வந்த புலவர், வடியா நாவினால் தமது வல்லமை காட்டிப்பாடுவர். அவர் கொடுப்பதைப் பெற்று மகிழ்ந்து தம் சுற்றத்தாருடன் பகிர்ந்துண்டு வாழும் புலவர் வாழ்க்கை எவர்க்கும் கொடுமை செய்யும் வாழ்க்கையன்று. வாதிடுவோர் நாணக் கல்விச் செருக்குடன் நடக்கும் புலவர் வாழ்க்கை மன்னர்க்கு ஒப்பான தலைமையுடையது' என்றார். நெடுங்கிள்ளியும் அவர் கருத்தை ஏற்றுப் புலவரை விடுவித்தான். இவற்றால் புலவர் அறிவுரையைப் பொன்போல் போற்றி நடந்தவன் நெடுங்கிள்ளி எனலாம். இம்மன்னன் காரியாறு என்னும் இடத்தில் இறந்தான்போலும். எனவே, புறநானூறு 47–ஆம் பாடல் குறிப்புரையில், 'காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். அ.ம.

**காரி ரத்தினக்கவிராயர்**: இவர் வைணவ சமயப் புலவர்; கி.பி. 17–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்து ஆழ்வார் திருநகரிக்கருகில் உள்ள தென் திருப்பேரையில் வேளாண்மரபில் பிறந்தார். காரிரத்தினம், நம்மாழ்வாரின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். இவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயரிடம் கல்வி பயின்றார். தம் ஆசிரியர் இயற்றிய மாறனலங்காரம் என்னும் நூலுக்கு உரை எழுதினார். திருக்குறளுக்கு 'நுண்பொருள்மாலை' என ஓர் உரை எழுதினார். 'தொல்காப்பிய நுண்பொருள்மாலை' என ஒரு நூல் எழுதியதாகவும் கூறுவர். நம்மாழ்வார் மீது பெரும் பற்றுக் கொண்டு வாழ்ந்தவர் காரிரத்தினக்கவிராயர். இவர், இலக்கண–இலக்கிய நுண்புலமை பெற்றவர். இவர் புதல்வர் 'திருப்பேரைத் திருப்பணி மாலை' என்னும் நூலை இயற்றினார். அவரும் தமது கவிப்பெருமையால் திருமேனிக் கவிராயர் எனப்பட்டார். அ.ம.

**காருகுறிச்சி அருணாசலம், ப**: புகழ்மிக்க நாதசுரக் கலைஞராகத் திகழ்ந்தவர். திருக்கோயில்

விழாக்களிலும் திருமண விழாக்களிலும் நாதசுரம் என்னும் இன்னிசைக் கருவி வாசிக்கப்பெறும். இதன் ஓசை மங்கல ஓசையாகப் போற்றப்படுகிறது. தமிழகத்தின் சிறந்த கலைகளில் நாதசுரக் கலை ஒன்றாகும். உதட்டின் பிடிப்பால் அரை, சுரம், கமகம் என்பன வாசிக்கப்பெறும். இத்தகு நாதசுரக் கலையில் ப. அருணாசலம் திறன்மிக்கவராக விளங்கினார்.

இவர் நெல்லை மாவட்டத்தில் காருகுறிச்சி என்னும் ஊரில் பிறந்தார். தந்தையார் பலவேசம்; தாயார் செல்லம்மாள் ஆவர். தம் ஏழாம் ஆண்டிலிருந்து தந்தையாரிடம் நாதசுரக் கலையில் பயிற்சி பெற்றார். சுத்தமல்லி துரைசாமிப் பிள்ளை அவர்களிடம் நையாண்டி மேளம் என்னும் கலையிலும் சிலகாலம் பயிற்சி பெற்றார்.

காருகுறிச்சியில் நடைபெற்ற ஒரு திருமண விழாவில் இவரது நாதசுரக் கலைத் திறனைக் கண்டு வியந்த காலஞ்சென்ற நாதசுரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி.என். இராசரத்தினம், இவரைத் தம் மாணாக்கராக ஏற்றார். இவர் பல்லாண்டுகள் தம் குருவிடம் பயிற்சி பெற்றார். மேலும், தம் குருவுடன் இணைந்து பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தம் திறமையைக் காட்டிப் புகழ்பெற்றார்.

முருகபக்தராகிய இவர் திருச்செந்தூர் செந்திலாண்டவன் திருக்கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் மாசித் திருவிழா, ஆனித் திருவிழா ஆகியவற்றில் சுவாமி புறப்பாட்டின்பொழுது நீண்டநேரம் நாதசுரம் வாசித்து மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியுள்ளார். இலங்கையைச் சேர்ந்த கண்டி என்னும் ஊரில் முருகனுக்குரிய ஆடிவேல் விழாவில் இவரது நாதசுர நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

இருசிகேசத்தில் 1955–ஆம் ஆண்டில் நடைபெற்ற இவரது இசை நிகழ்ச்சியைக் கேட்டு இன்புற்ற சுவாமி சிவானந்த சரசுவதி, இவரது கலைத் திறனைப் பாராட்டும் வகையில் ‘நாதசுர கலாநிதி’ என்ற பட்டத்தை வழங்கினார். தமிழக முன்னாள் முதல்வர் பேரறிஞர்அண்ணாதுரை, ‘நாகரத்தினம்’ என்ற பட்டத்தை அளித்து இவரைப் பாராட்டினார்.

கொஞ்சும் சலங்கை என்னும் திரைப்படத்தில் ‘சிங்கார வேலனே’ என்னும் பாடலைத் தம் நாதசுரத்தின்மூலம் வாசித்து மக்கள் மனத்தைக் கவர்ந்துள்ளார். இவர் தமிழிசையைப் பரப்புவதில் ஆர்வம் உடையவராய் விளங்கினார். தமக்கென ஒரு பாணியை நாதசுரக் கலையில் இவர் படைத்துக் கொண்டார். இவரது நாதசுர இசை வெள்ளம் தமிழகமெங்கும் பரவியது எனலாம். இங்கிலாந்து அரசியார் மேன்மைதங்கிய எலிசபெத் அவர்களும் அவர்தம் கணவரும் சென்னைக்கு வருகைபுரிந்தபோது தமிழக ஆளுநர் மாளிகையில் அளிக்கப்பெற்ற வரவேற்பில் இவரது இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இவரது நாதசுர இசையினைக் கேட்டு அவ்விருந்தினர்கள் மகிழ்ந்து பாராட்டினர். இந்தியத் தலைநகர் தில்லியில் தேசியப் பண்பாட்டு அமைப்பின் சார்பில் விஞ்ஞான பவனத்தில் நடந்த இவரது இசை நிகழ்ச்சியைக் கேட்டு இன்புற்ற காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் சவகர்லால் நேரு தங்கக் கோபுரச் சின்னத்தை இவருக்கு வழங்கிப் பாராட்டியுள்ளார். முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் இராதாகிருட்டிணன் இவருக்குப் பரிசளித்துச் சிறப்பித்துள்ளார். மூதறிஞர் இராசாசி அவர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றுள்ளார். உருசிய மகளிர் நாட்டியக் குழுவினர் இவரது நாதசுரக் கலைத் திறனைக் கண்டு மகிழ்ந்தனர்.

இவர், 1964–ஆம் ஆண்டில் இயற்கையெய்தினார். தம் கலைத்திறனால் பொன்றாப் புகழ்பெற்றுள்ள இவரது பாணி ‘காருகுறிச்சியார் பாணி’ என்று போற்றப்படுகிறது. அழியாப் புகழ் பெற்ற இவர்தம் பாணியை இன்றைய நாதசுரக் கலைஞர்கள் பொன்னேபோல் போற்றி வருகின்றனர். இர.கி.

**காரூ**: தென்னாப்பிரிக்காவில் நன்னம்பிக்கை முனை மாநிலத்தில் உள்ள மேட்டு நிலப்பகுதி (பீடபூமி) 160,000 சதுரகி.மீ. பரப்புள்ளது. இப்பகுதியின் நிலைமை இங்குப் பெய்யக்கூடிய மழையையே பொறுத்தது. மழை பெய்யுங்காலத்தில் புல் வளர்ந்து ஆடுமாடுகள் மேய்வதற்கு ஏற்ற நில அமைப்பு இங்குக் காணப்படும். மழையில்லாத காலத்தில், மணற்காடாக காரு (Karroo) மாறிவிடும். தெ.பா.

**காரெகிடோர்**: பசிபிக்குப் பெருங்கடலில் உள்ள பிலிப்பைன் தீவுகளைச் சேர்ந்த ஒரு தீவுக் கூட்டத்திற்குக் காரெகிடோர் (Coregidor) என்று பெயர். இவை, மணிலா வளைகுடாவின் வாயிலில் உள்ளவை. காரெகிடோரின் பரப்பு 3.6 ச.கி.மீ. வேறு இரண்டு தீவுகளும் இதில் அடங்கியுள்ளன. தெ.பா.

**காரைக்கால்** இந்திய அரசின் நேராட்சிப் பகுதிகளுள் ஒன்றான புதுச்சேரி (பாண்டிச்சேரி) யின் பகுதியாகும்.இது காவிரி ஆற்றின் கிளை ஆறான அரிசில் ஆற்றின் கழிமுகத்தில் உள்ளதொரு சிறு துறைமுகம். தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்கில் சோழ மண்டலக் கடற்கரையில் காரைக்கால் (Karaikal) அமைந்துள்ளது. காரைக்காலைச் சுற்றிலும் தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளே உள்ளன,

காரைக்கால் முன்னாள் பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதிகளுள் ஒன்று. வங்காள விரிகுடாவில் தஞ்சாவூர் மாவட்டத்தின் வட்டங்களான மயிலாடுதுறை, நன்னிலம், நாகப்பட்டினம் போன்ற வட்டங்களுக்கு இடையில் இந்நகரம் அமைந்துள்ளது. இப்பகுதி மிகச் செழுமையானது. ஏனெனில், காவிரியின் ஏழு கிளையாறுகளான நந்தலாறு, நாட்டாறு, அரசலாறு, திருமலைராயனாறு, முடிகொண்டானாறு, வாஞ்சிலாறு, நூலாறு ஆகியவற்றின் நீர்ப்பாசன வசதியை இது பெற்றுள்ளது. இந்த ஆறுகளைத் தவிர ஏனைய சிறு கால்வாய்களும் காரைக்கால் பகுதிக்கு உதவுகின்றன.

காரைக்கால் பகுதியில் விளையும் நெல்லும், அரிசியும் இலங்கைக்கு அனுப்பப்பட்டதால், நல்ல வாணிபம் நடைபெற்று வந்தது. இத்தகைய அரிசி வாணிபம் ஓரளவு மலேயா - சிங்கப்பூர் பகுதிகளுடனும் நடைபெற்றது. காலப்போக்கில் இவ்வாணிபம் குறையலாயிற்று. பிரான்சு நாட்டுடனிருந்த வாணிபப் போக்குவரத்து 1904-ஆம் ஆண்டிலிருந்தே நலியலாயிற்று. காரைக்கால் கி. பி. 1899-ஆம் ஆண்டு பேரளம் இரயில் நிலையத்துடன் தொடர்பு பெற்றது.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னருள் ஒருவரான சாயாசி (Sayaji) பிரெஞ்சுக்காரர்களிடம் பெற்ற உதவிக்காகக் காரைக்காலைக் கொடுப்பதாக கி. பி. 1738-ஆம் ஆண்டு வாக்குக் கொடுத்தார். எனினும், மராட்டிய மன்னர் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார். அப்போது சாயாசி சாந்தாசாகிபு (Chanda Sahib) என்பாருடன் போரில் ஈடுபட்டிருந்தார். சாந்தாசாகிபின் உதவியுடன் காரைக்கால் கி.பி. 1739-ஆம் ஆண்டு பிரெஞ்சுக்காரர்களின் கைவசமாயிற்று. மேலும் 81 சிற்றூர்கள் கி. பி. 1749-ஆம் ஆண்டு கிடைத்தன. அத்தருணத்தில் பிரெஞ்சுக்காரரும் சாந்தாசாகிபும் தஞ்சாவூரை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தனர். இச்சிற்றூர்களைப்பிரெஞ்சுக்காரர்வலுக்கட்டாயமாகமராட்டிய மன்னரிடமிருந்து கொடையாகப் பெற்றனர். இக்கொடையை கி. பி. 1754-இல் செய்து கொண்ட உடன்படிக்கை உறுதிப்படுத்தியது. காரைக்கால் கி.பி. 1760-ஆம் ஆண்டு ஆங்கிலப் படைத் தலைவர் மான்சன் (Monson) என்பவரால் முற்றுகையிடப் பெற்றது. ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினாலும், பிரெஞ்சுக்காரரால் தாக்குப் பிடிக்க முடியாமல் கி. பி.1760- ஏப்பிரல் மாதம் 15-ஆம் நாள் சரணடைந்தது. மேலும் மும்முறை காரைக்கால் ஆங்கிலேயர் கை மாறி, இறுதியாக கி. பி. 1817-ஆம் ஆண்டு சனவரி மாதம் 14-ஆம் நாள் பிரான்சு வசம் வந்தது. காரைக்கால் 1954-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் நாள் விடுதலை பெற்றது.

காரைக்கால் 160 சதுர கி. மீ. பரப்புடையது. மக்கள் தொகை 1, 20, 010 (1981).

சிவனடியார்களான 63 நாயன்மார்களுள் ஒருவரான காரைக்காலம்மையார் காரைக்காலில் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இரா.அ.

**காரைக்காலம்மையார்**: 'புனிதவதி' என்ற இயற்பெயருடைய காரைக்கால் அம்மையார் காரைக்காலில், வணிகர் குலத்தலைவர் தனதத்தரின் மகளாகத் தோன்றினார். இவரைச் சைவப் பெருமக்கள், 'பேயார்' என்று போற்றுகின்றார்கள். இவர் பெரிய புராணம் புகழும் 63 நாயன்மார்களுள் ஒருவராகத் திகழ்கிறார். ஏனைய நாயன்மார்கள் ஆலயங்களில் நின்ற கோலத்தில் இருக்க இவர் மட்டும் அமர்ந்த கோலத்தில் காணப்படுவது இவர் பெருமையை உணர்த்துவதாக உள்ளது. அம்மையாரின் வரலாற்றை அறியத் துணை நிற்கும் ஆதார நூல்கள் அவர் இயற்றிய அற்புதத்திருவந்தாதி,திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகியனவும், சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத் தொகையும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியும் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணமும் ஆகும்.

இவர் சைவ சமய குரவர் நால்வர்க்கும் காலத்தால் முற்பட்டவர். சம்பந்தர், இவ்வம்மையார் தலையால் நடந்து சென்று வழிபட்ட திருவாலங்காட்டில், தாம் அடிவைத்து நடக்க விரும்பாது ஊர்ப்புறத்தேயே தங்கினார் என்று சேக்கிழார் கூறுவதால், இவர் சம்பந்தருக்கு முற்பட்டவர் என்பது தெளிவு. எனவே, இவர் காலம், கி. பி. 6-ஆம் நூற்றாண்டு எனல் பொருந்தும்.

அம்மையார் தளர்நடைப் பருவந்தொட்டே சிவனடிக்கு அடிமை பழகிவரும் பண்புடன் சிவநாமமே உச்சரித்தார். சிவனடியார் வரின் அன்போடு தொழுவார். மங்கைப் பருவம் எய்தி நாகைப்பட்டினத்துப் பெருவணிகர் நிதிபதியின் மைந்தன் பரமதத்தனைத் திருமணம் புரிந்து கணவனாரின் வாழ்க்கைத் துணைவியாய் அமைந்த காலத்திலும் சிவனிடத்தும் சிவனடியாரிடத்தும் அன்பு பூண்டு ஒழுகினார். சிவனடியார்களுக்குத் திருவமுதும் நவமணிகளும் ஆடையும் அன்புடன் தகுதிப்படி தந்து சிவபக்தி கொண்டிருந்தார். ஒருநாள் தம் வீட்டிற்குப் பசியுடன் வந்த சிவனடியாருக்குத் திருவமுதூட்டுவதற்குக் கறிஅமுது ஆக்கப்படாத நிலையில், தம் கணவர் பணியாள்

மூலம் அனுப்பியிருந்த இரு மாங்கனிகளில் ஒன்றைக் கறியமுதாகப் படைத்தார். கணவர் வந்து அக் கனியை உண்ணக் கேட்டபோது இறையருளால் தெய்வ மாங்கனியொன்று பெற்றுக்கொடுத் தார். அதையறிந்த கணவர் மீண்டும் ஒன்று வரவழைத்துக் கொடுக்கும்படி கேட்க, இறைவனை மீண்டும் வேண்டி மேலுமொருகனி பெற்றுக் கொடுத் தார். கணவர் கையில் வைத்த கனி மறைய, பரம தத்தன் அம்மையாரின் தெய்விகத் தன்மையை உணர்ந்து அம்மையாரைத் ‘தெய்வத் தொழுகுலம்’ எனத் துணிந்து அவரை விட்டு நீங்கினார்.

கணவர் கருத்தறிந்த அம்மையார் கணவனுக் காகத் தாங்கிய ‘ஊனுடைய வனப்பை உதறி எற் புடம்பேயாக, வானமும் நிலனுமெல்லாம் வணங்கு பேய்வடிவு’ இறைவனிடம் வேண்டிப் பெற்றார்.

சிவபிரானது கயிலைக் காட்சியைக் காணும் விருப்புடன் கயிலையை நெருங்கிய அம்மையார் அதனைப் பாதத்தால் மிதிக்க அஞ்சித் தலையால் நடந்து சென்றார். இறைவனால் ‘அம்மையே’ என்று அழைக்கப்பட்டார். ‘பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண் டும், உன் திருவடிக்கீழ் இருந்து பாடிக் கொண்டி ருக்கவேண்டும்’ என்னும் வரம் வேண்டினார். அவ் வரம் அளித்த இறைவன் அம்மையாரைத் திருவா லங் காட்டிற்குச் செல்லும்படி பணித்தார்.

திருவாலங்காட்டிற்கும் அம்மையார் தலையால் நடந்து சென்று அங்குக் கூத்தப் பெருமானது சுட லைக் கூத்தாகிய ஞானதரிசனம் கண்டு மூத்த திருப் பதிகம் பாடினார்.

அம்மையாரின் வாழ்வில் நிகழ்ந்தனவாக அறி யப்படும் மாங்கனி பெற்றமை, பேயுடம்பு வேண்டிப் பெற்றமை, இறைவனால் அம்மை என்று அழைக் கப்பட்டமை ஆகிய இம்மூன்று அற்புத நிகழ்ச்சி களும் அவரது வாழ்க்கையில் திருப்புமையங்களாக அமைந்து அவரது தெய்விகத் தன்மையை உலகுக் குப் புலப்படுத்துகின்றன.

**அம்மையார் பாடிய நூல்கள் வருமாறு:** அற்புதத் திருவந்தாதி – 101 பாடல்கள், திருவிரட்டை மணி மாலை – 20 பாடல்கள், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு பதிகங்கள், 22 பாடல்கள். இந்நான்கு நூல்களும் 11–ஆம் திருமுறையில் சேர்க் கப்பட்டுள்ளன.

சிவனைக் குறித்துத் திருப்பதிகம் பாடியவர்களுள் இவரே முதலாவார் எனவும் தோன்றுகிறது. மூவர் முதலிகளுக்கும் அம்மையார் முற்பட்டவராதலின் இவர் பதிகம் மூத்த திருப்பதிகம் எனப்பட்டது. அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை ஆகிய இரு நூல்களும் முறையே அந்தாதி, மாலை என்னும் சிற்றிலக்கியப் படைப்புகளுக்கு முன்னோடி யாகத் திகழ்கின்றன.

சுருங்கக் கூறின் அம்மையார் இல்லற நெறி நின்று இறைநெறிக்கு உயர்ந்து சிறந்தவர்; சிவம் என்னும் செம்பொருளின் நுணுக்கத்தை உணர்ந்து அதனை, இயலாயும் இசையாயும் தந்தவர். தி.சு.

**காரைக்குடி** பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் வட்டத்தில், திருப்பத்தூருக்குப் பதின்மூன்று கல் கிழக்கில் சென்னை – தனுசுகோடிப் பாதையில் அமைந்துள்ளது. முன்னர் இவ்வூர் பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தில் அடங்கியிருந்தது. ‘காரை’ என்ற முட் செடி பண்டைய நாளில் இவ்வூரில் நிறைந்து காணப் பெற்றமையால் இவ்வூர் இப்பெயர் பெற்றது என் பர். காரீக்குடி என இலக்கியங்களில் வழங்கப்பெற் றது.

இவ்வூரில் கி.பி. 1885–இல் பஞ்சாயத்து ஒன்றியக் கழகம் அமைந்தது. இது 1928–இல் நகராட்சியாக மாறியது. இவ்வூர் 14 ச.கி.மீ. பரப்புடையது. மக்கள் தொகை 55, 450 (1971). இந்நகராட்சியின் வெள்ளி விழா 1955–இல் கொண்டாடப் பெற்றது.

இவ்வூர் பழமைச் சிறப்பு உடையது.பண்டைய பாண்டியர் – சோழர் போரின் போது ஏழகப் படை என்னும் படை காரைக்குடிப் பகுதிக் கழனி வாசலி லிருந்து சென்றுள்ளது எனப் பட்டயங்கள் புலப் படுத்துகின்றன.

பழம் பெருமை உடைய ஆலயங்களும் இவ்வூரில் உள்ளன. கொப்புடையம்மன் கோயிலும் அக்கோயி லின் வைகாசிமாத விழாக்களும் சிறப்பாகக் கூறத் தக்கன. சிவன் கோயிலில் ஆடியில் விழாவும், பெரு மாள், கிருட்டிணன் கோயில்களில் பங்குனியில் விழா வும், கழனி வாசல் பெருமாள் கோயில், முத்தாலம் மன் கோயில்களில் வைகாசி விழாக்களும் சிறப்புடன் நிகழ்த்தப் பெறுகின்றன. கிறித்தவர் வழிபாட்டிற்கு இரு கிறித்தவ தேவாலயங்களும், இசுலாமியர் தொழுகைக்கு மசூதியும் உள்ளன. தமிழகக் கல்வி வளர்ச்சியில் காரைக்குடி குறிப்பிடத்தக்கபங்கு வகிக் கிறது. இதற்குக் காரணமாக விளங்கியவர் டாக்டர்.

அழகப்ப செட்டியார்ஆவார். கல்வி அறப்பணிகளை மேற்கொண்டஇவர், அழகப்பர் கலை அறிவியல் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றைக் கொடையாக வழங்கியுள்ளார்.

டாக்டர் அழகப்பர் அளித்த கொடையின் பயனாய் மையமின் வேதியியல் ஆராய்ச்சி நிலையம் (Central Electro Chemical Research Centre) இங்கு எழுந்தது. இந்நிலையம் அமைந்திட 15 இலட்சம் உரூபாயும், வேண்டும் நிலப்பரப்பினையும் அழகப்பர் 1944-இல் கொடையாக வழங்கினார். இவர் பெயரில் அழகப்பா பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றுச் செயலாற்றி வருகிறது.

காரைக்குடி தமிழ் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. இங்கு 1939-இல் அமைக்கப் பெற்ற கம்பன் கழகம் ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் கம்பன் விழாவை நிகழ்த்தி வருகிறது. இங்குக் கவிச்சக்ரவர்த்தி கம்பனுக்கு மண்டபம் ஒன்று எழுந்துள்ளது. சேந்தணியார் இராமசாமி தமிழ்க் கல்லூரியும், இந்து மதாபிமான சங்கமும் (1917) புகழ் பெற்றவை. மேலும், தமிழ்ச் சங்கம் ஒன்றும் திருக்குறள் கழகம் ஒன்றும் உள்ளன.

ந.க.ம.

**கால், இசுடேன்லி கிரான்விலே(கி.பி.1844-1924)** அமெரிக்க நாட்டுக் கல்வியாளர்; உளவியலறிஞர்; குழந்தைக் கல்வி குறித்து ஆராய்ந்தவர்களுள் முதன்மையான வல்லுநர்; குழந்தை உளவியலின் அடிப்படையில் எழுந்த சோதனை முடிவுகளை



இசுடேன்லி, கால்

(Child-Psychology Experiments) முதன் முதலில் கற்பித்தலுக்குப் பயன்படுத்தியவர்.

மசாசூசட்சிலுள்ள (Massachusetts) ஆசுபீல்டு (Ashfield) என்னும் இடத்தில் பிறந்த கிரான்விலே இசுடேன்லி கால் (Granville Stanley Hall) கி.பி. 1867-இல் வில்லியம்சு கல்லூரியில் பட்டம் பெற்றார். பின்னர், ஐரோப்பிய நாடுகளில் சென்று மேற்கல்வி பயின்றார். இவர் கி.பி. 1872-இலிருந்து 1876 வரை ஆண்டியாக்குக் கல்லூரியில் (Antioch College) உளவியல் பேராசிரியராகப் பணிசெய்தார். இவர் கி.பி. 1881-இலிருந்து 1888-வரை சான்சுஆப்கின்சுப் பல்கலைக் கழகத்தில் (Johns Hopkins University) பேராசிரியராகவும் பின்னர், கிளார்க்குப் பல்கலைக் கழகத்தின் (Clark University) முதல் தலைவராகவும் பணிபுரிந்தார். இவர் அங்கு உளவியல் மற்றும் கல்வியாராய்ச்சிக்கு மிகுந்த ஊக்கம் அளித்தார். இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை: குமரப் பருவம் (Adolescence), இளைஞர் (Youth), கல்விச் சிக்கல்கள் (Educational Problems), இக்கால உளவியல் நிறுவனர்கள் (Founders of Modern Psychology) ஆகியன. இவர் அமெரிக்க உளவியல் ஆய்விதழ் (American Journal of Psychology) என்னும் ஆராய்ச்சி ஏட்டினைத்தொடங்கி அதன் ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

எஸ்.த.

**கால்சா** சீக்கிய சமயத்தில் ஆதிக்கம் பெற்றுள்ள ஒரு அமைப்பு. தூய்மை என்று பொருள்படும் கால்சா அமைப்பில், குறிப்பிட்ட சில சடங்குகளை மேற்கொள்ளும் சீக்கிய இனத்தவர் அனுமதிக்கப் படுகிறார்கள். வயது வந்த சீக்கிய ஆடவரும் பெண்டிரும் இந்த அமைப்பில் சேர வேண்டியது இன்றியமையாதது. ஆனால், சிலர் சேராமலும் இருக்கிறார்கள். அப்படியுள்ளவர்களுக்குச் சகசதாரியர் (Sahajdhari) என்பது பெயர். இச்சொல் 'தாமதாகப் பின்பற்றுகிறவர்கள்' என்று பொருள்படும். சமய நுழைவுச் சடங்கின் தொடக்கத்தில், கால்சாவைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள், வழிபாடு நடக்கும் பொழுது இருபக்கங்களிலும் கூர்மையுள்ள பட்டர்க் கத்தியை இனிப்பு நீரில் தோயச் செய்து அந்த புனித நீரை ஒரு கிண்ணத்தில் ஊற்றுவர். நுழைவுச் சடங்கை மேற்கொள்பவர்கள் யாவரும் இணைந்து அந்த ஒரே கிண்ண நீரைப் பருகுவர். சாதி வேறுபாடுகளை அறவே விட்டொழித்தமைக்கு அது ஒரு அடையாளமாகும். பிறகு சிறுவர்களுக்கு 'சிங்' என்ற சிறப்புப் பெயரும் (பட்டப் பெயரும்) பெண்களுக்கு 'கௌர்' என்ற பெயரும் வழங்கப்படும். 'சிங்' என்ற சொல் ஆண்சிங்கத்தையும் 'கௌர்', பெண்சிங்கத்தையும் குறிக்கும். சீக்கிய ஆடவர் ஐந்து கட்டுப்பாடு

களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். கால்சாவின் சின்னம் அந்த ஐந்தும் ஆகும். அவை (1) முடியை வெட்டாமல் தாடி வைத்திருத்தல். (2) சீப்பு வைத் திருத்தல். (3) குட்டையான காற்சட்டைகள் அணி தல். (4) எஃகுக் கடகம் அணிதல். (5) இருபுறமும் கூர்மையுள்ள பட்டாக்கத்தி வைத்திருத்தல்.

மேலும், இவர்கள் புகையிலையையும், போதைப் பொருளையும் விலக்கிவிட சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரே அடியில் கொல்லப்பட்ட விலங்கின் புலாலை மட்டும்தான் இவர்கள் உண்ண அனுமதிக் கப்படுவர். கூடா ஒழுக்கத்தை, (பிறர்மனை நயத் தலை) இவர்கள் கைவிட வேண்டும்.

கால்சா உடன்பிறப்பு இயக்கம், கி.பி. 1699-இல் ஆனந்தபுரியில் குரு கோவிந்தசிங்கினால் ஏற்படுத்தப் பெற்றது. அவர் அதைத் தொடங்கிய சில நாட்களுக் குள்ளேயே, 80,000 மக்கள் கால்சா உறுப்பினர்களாயி னர். சீக்கிய சமயத்தில் இந்த அமைப்பு ஆதிக்கம் பெறலாயிற்று. தெ.பா.

**கால்சிடன்**: இது சிற்றாசியாவிலுள்ள ஒரு பண்டைய கிரேக்க நகரம். பாசுபரசு நீர் இணைப் பில் உள்ள இந்நகர் சிறப்புற்று விளங்கிய பகுதியில் இன்று இசுத்தான்புல் உள்ளது. கால்சிடன் (Chalcedon) கி.மு. 685-இல் தோற்றுவிக்கப் பெற்றது. கி.பி. 74-இல் உரோமாபுரியின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. மிலேச்சர் படையெழுச்சிகள் இங்கு அடிக்கடி நடந் தன. இங்கு நான்காம், கிறித்தவ உலக முழுமைக்கு முரிய திருச்சபைக் கொள்கை நடைமுறைச் சீரமைப் புக்குழு (Fourth Ecumenical Council) கி.பி. 451-இல் கூடியது. உரோமப் பேரரசர் மார்சியன் இதைக் கூட்டுவித்தார். பேராயர்கள் 520 பேர் கூடிச் சமய நெறிகளை விவாதித்தனர். திருச்சபைக்கு வலிமை தருவதற்காகவே அது கூட்டப் பெற்றது. தெ.பா.

**கால்டர்-இக்சுவின் நலப் பொருளியற் கோட்பாடு** என்பது மரபியல் வழி விளக்கப்பட்டு வந்த வருமானப் பகிர்வு அடிப்படையைத் தவிர்த்துக் கால்டரும் இக்சுவும் உருவாக்கிய நலப்பொருளியல் கோட்பாடு (Kaldor-Hicks Welfare Criterion) ஆகும். இது பொருளாதார அமைப்புகளில் உண்டாகும் மாற்றங்களினால் விளையும் நன்மை தீமைகளையும் அவற்றை ஈடு செய்யும் முறைகளையும் ஆராய்கிறது. பிகு (Pigou) எழுதிய 'நலப் பொருளியல்' என்னும் நூல், மரபான நலப் பொருளியலுக்குத் துல்லியமான விளக்கத்தை அளிக்கிறது. பயன்பாடுகளின் அள வுடைத் தன்மை, ஒப்பீட்டுத் தன்மை ஆகிய இவ் விரண்டையும் ஏற்றுக்கொண்ட பிகுவின் நலப் பொருளியலுக்குப் பிற்காலப்பொருளியல் வல்லுநர்கள் மறுப்புத் தெரிவித்தனர். பாரிட்டோவின் கோட்பாடு (Pareto's Criterion) சமூக உகந்த அளவையடைதல் (Special Optimization) என்னும் கருத்தின் தொடர்ச்சி யாகும். அக்கருத்தினை ஆய்ந்த இலெர்னர் (Lerner) உகந்த அளவு உற்பத்திக்குரிய விதிகளை (Conditions) வகுத்தார். இருவகைப் பொருள்களுக்கான பதிலீட்டு வீதங்கள் (Rate of Substitution) தனிப்பட்டவர்களுக் கும் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதத்திற்கும் (Rate of Technical Substitution) சமமாக இருக்கும் போது உற்பத்தி உகந்த அளவு நிலையில் இருப்பதாகக் கொள்ளலாம். இறுதிநிலை அடக்கவிலைக்குச் (Marginal Factor Cost) சமமாகவிலை இருக்கும்போது இவ் விதி நிறைவு பெறுகிறது. இவ்விரு விலைகளும் மாறு படும்போது முற்றுரிமை அங்காடி நிலைமை உருவா கிறது.

இலெர்னரும் ஒட்டலிங்கும் (Hotelling) பிகுவின் மரபுவழி நலப் பொருளியல் அணுகுமுறையிலிருந்து மாறுபட்டனர். நுகர்வோர் உபரி, உற்பத்தியாளர்கள் உபரி என்பனவற்றை (Consumer Surplus, Producer Surplus) ஒட்டலிங்கு தம் நலப் பொருளியல் ஆய் வில் விளக்கியுள்ளார். ஒரே வருமானத்தைக் கொடுக் கும் நேர்முக வரி தனிப்பட்டவர்களின் பொருள் நலத்தைப் பாதிக்காமலிருப்பதனால், அதே வரு மானத்தைக் கொடுக்கும் மறைமுக வரியைவிடச் சிறந்ததெனத் தெளிவுபடுத்தினார். இதுவே, கால் டரின் விதிக்கு மூலமாகும். முதலீடு அல்லது பொது நன்மை கருதி ஏற்படும் செலவு, அதனோடு தொடர் பான ஒவ்வொருவரும் பயனடையும் வகையில் ஒருவகைப் பளுப்பகிர்வை (Distribution of Burden) ஏற்படுத்துமானால், அம்முதலீடு அல்லது செலவினம் இன்றியமையாததாகும். ஆனால், நடைமுறையில் நன்மைகள் பரவலாக இருந்தாலும் ஒரு சிலருக்கு ஊறு நேரவும் வாய்ப்பிருக்கிறது. பாரிட்டோவின் சமூக உகந்த அளவு நிலைப் பகுப்பாய்வில் இத் தகைய செலவினங்களும் முதலீடுகளும் ஒவ்வாதவை யாகும். ஒரு சிலருக்கு ஊறு ஏற்படுமானால் உகந்த அளவடைதலின் விதிகள் நிறைவு பெறுவதில்லை. எனினும் சமூக நன்மைக்காக ஒரு சிலருக்கு ஊறு நேர்ந்தாலும் சில செலவினங்கள் தேவையினிமித் தம் தவிர்க்கஇயலாததாகின்றன.அத்தகைய ஊறுகள் ஈடுசெய்யப்படுமானால், செலவினத்திற்கு மறுப்பு இருக்காது. ஒட்டலிங்கின் இக்கருத்தை இக்சும், கால் டரும் ஏற்றுக்கொண்டு அதனை மேலும் தெளிவு படுத்தி நலப்பொருளியல் இழப்பீட்டுக் கோட்பாட் டினை (Theory of Compensation Principle) உரு வாக்கினர். இதனையே கால்டர் இக்சு ஆகியோரின்


நலப் பொருளியல் கோட்பாடு எனவும் கூறுகின்றனர்.

இழப்பீட்டுக் கோட்பாடு மூன்று கொள்கைகளின் அடிப்படையில் மூன்று குழுவினரால் வளர்ச்சி பெற்றது. முதல் குழுவினர் பொருள்நலத்தை முற்றிலும் அறிவியல் கோட்பாடாக ஆராய்ந்தனர். இரண்டாம் குழுவினர் அறிவியல் தன்மையை ஏற்றுக் கொள்ளாமல் மனநிறைவின் காரணங்களைத்தான் நலப்பொருளியல் ஆராய்கிறது எனக் கருதினர். மூன்றாம் குழுவினர் சிறிது சிறிதான திட்டமுறையைக் கையாண்டனர். இவர்கள் யாவருக்கும் பொதுவான அடிப்படைக் கருத்து பாரிட்டோவின் உகந்த அளவையடைதல் பற்றியதாகும்.

மூன்றாம் குழுவினைச் சேர்ந்தவர்கள் இக்சு (Hicks), கால்டர் (Kaldor), சைட்டோவ்சுகி (Scitovsky) ஆகிய மூவரும் ஆவர். பாரிட்டோவின் கோட்பாடுகளையும் ஆய்வு முறையையும் இவர்கள் அடிப்படையாகக் கொண்டனர். இவர்கள் வருமானப் பகிர்வைத் தவிர்த்துக் கோட்பாடுகளை விளக்கினர். குறிப்பாக 'வருமானப் பகிர்வும் செல்வப் பகிர்வும்(Distribution of Income and Wealth) ஆகியவற்றுள் ஒன்றினைத் தேர்வு செய்ய வேண்டியிருந்தால் திறமையின் (Efficiency) அடிப்படையில் எதனைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு எடுக்கலாம்' என்று கால்டர் கருதினார். கற்பனையான ஓர் இலட்சிய நிலையை அடைய விதிகளையும் தேற்றங்களையும் வகுப்பதை விடுத்து முன்னேற்றத்திற்குத் தேவையான கோட்பாடுகளை இப்பொருளியல் வல்லுநர்கள் ஆராய்ந்தனர். புரட்சியான புதியதை உருவாக்குவதற்குப் பதிலாக ஏற்கனவே கூறப்பட்ட கோட்பாடுகளைச் சீர்திருத்திச் சரிப்படுத்துவதையே விரும்பினர்.

உகந்த அளவடைதல் நிலையைப் பற்றிய விதிகளின் அடிப்படையில் இருவர், இருநுகர்பொருள்களைப் பண்டப் பரிமாற்றம் செய்யுங்கால் இருவரும் மனநிறைவை எவ்வாறு அடைய இயலும்? ஒருவரின் மனநிறைவு குறைவுபடாமல் மற்றவரின் மனநிறைவை எவ்வகையில் உண்டாக்கலாம் என்பனவற்றைப் பற்றி அடுத்துவரும் வரைபடம் விளக்குகிறது.

எட்சுவொர்த்தின் பெட்டிப்படம்(Edgeworth's Box Diagram) எனப்படும் அந்தப் படத்தின் X,Y என்ற இரு நுகர்பொருள்கள் OX,OY அச்சுகளில் Aஎன்பவருக்கும், O'X, O'Y என்ற எதிர்மறையான அச்சுகளில் B என்பவருக்குமாக அமைந்துள்ளன. R என்ற புள்ளி




யில் A $O_A$ $X_A$ அளவுக்கு X பொருளையும், $O_A$ $Y_A$ அளவுக்கு Y பொருளையும் நுகர்ந்து, இரண்டாவது (II) சமநோக்குக் கோடு (Isoquantx) காட்டும் மனநிறைவு அல்லது பயன்பாட்டு அளவில் உள்ளார். மீதமுள்ள X, Y நுகர் பொருள்களை நுகர்ந்து B என்பவர் II' என்னும் சமநோக்குக் கோட்டளவுப் பயன்பாட்டினைப் பெறுகிறார். R-இல் நிகழும் பரிமாற்றத்திற்குப் பதிலாக Q-இல் பரிமாற்றம் நிகழ்ந்தால் சமநோக்குக் கோட்டுக் கோட்பாட்டின்படி A என்பவர் முன்பிருந்த அதே II-ஆம் சமநோக்குக் கோட்டிற்கும், B என்பவர் முன்பிருந்ததற்கு மேலான III'-ஆம் சமநோக்குக் கோட்டிற்கும் முன்னேறிச் செல்கின்றார். எனவே Q-வில், காணும் பரிமாற்றம் R பரிமாற்றத்தைவிட உகந்தது. அது போன்றே $Q_2$-வும், R-ஐ விட உகந்தது. $Q_1$ $Q_2$ போன்ற புள்ளிகள் அமையும் cc' என்னும் ஒப்பந்தக்கோடு (Contract Curve) நலக் கண்ணோட்டத்துடன் ஒப்பிடக் கூடிய புள்ளிகளின் இணைப்புப்பாதை (Locus) ஆகும். cc'-க்கு வெளியிலுள்ள எந்த ஒரு புள்ளிக்கும், நலத்தைப் பொறுத்தவரையில் உயர்வான ஒரு புள்ளியை cc' மீது காணமுடியும். மேலும் cc' மீதான எந்த ஒரு புள்ளியும், உச்சநலத்துடன் ஒத்ததாக இருக்கும்.

பண்டப் பரிமாற்றத்தில் உச்சநலம் அடைவது போன்று பண்ட உற்பத்தியிலும் உச்சநலம் அடைய முடியும். உச்சநலத்தை அடையத் தேவையான ஏழு வகை இறுதிநிலை விதிகளாவன: 1) இரு உற்பத்திப் பொருள்களின் இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் (Mar-

ginal Rate of Substitution) அவற்றை நுகரும் ஒவ்வொரு தனி மனிதருக்கும் ஒரே அளவில் இருக்க வேண்டும். 2) இரு உற்பத்திப் பொருள்களின் இறுதி நிலைச் செலவு, அவற்றை உற்பத்தி செய்யும் இரு நிறுவனங்களுக்கும் ஒரே அளவாக இருத்தல் வேண்டும். 3) காரணிக்கும், பொருளுக்குமான இறுதி நிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதம் (Marginal Rate of Technical Transformation) அப்பொருளை உற்பத்தி செய்வதற்கு அதே காரணிகளைப் பயன்படுத்தும் இரு நிறுவனங்களுக்கும் ஒரே அளவில் இருத்தல் வேண்டும். 4) இருகாரணிகளின் இறுதி நிலைச் செலவு அதே காரணியைப் பயன்படுத்தும் அதே பொருளை உற்பத்தி செய்யும் இரு நிறுவனங்களுக்கும் ஒரே அளவில் இருத்தல் வேண்டும். 5) இரு பொருள்களின் பதிலீட்டு இறுதிநிலை அவ்விரு பொருள்களையும் நுகர்பவர்கள் பெறும் இறுதி நிலைப் பயன்பாட்டுக்குச் சரிசமமானதாக இருத்தல் வேண்டும். 6) உற்பத்திக்கு உதவியாக ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்குக் கிடைத்த X என்ற பொருளின் அளவுக்கும், அவ்வுதவியை அளப்பதற்குச் செலவாகிய நேரத்திற்குமான பதிலீட்டு இறுதிநிலைக் கட்டணம், ஒவ்வொரு காரணி உரிமையாளருக்கும் உற்பத்திக்கு உதவுவதில் அவருடைய காரணி செலவிட்ட நேரத்திற்கும், X என்ற பொருளுக்குமான இறுதிநிலைக்குச் சமமானதாக இருக்க வேண்டும். 7) இறுதியாக எந்த இரு காலகட்டங்களிலும் $(t_1, t_2)$ கட்டுப்பாட்டுக்குட்படும் செல்வர்களின் இறுதிநிலை வீதம், ஆட்கள் அல்லது நிறுவனங்களுக்கு ஒரே அளவாக இருத்தல் வேண்டும். உச்சநிலையை அடைவதற்கு இந்த ஏழு விதிகளையும் ஒரே காலத்தில் கண்டிப்பாகச் செயற்படுத்த இயலாது. மொத்தத்தில் இவை தேவையான விதிகளேயன்றி முற்றிலும் போதுமான விதிகள் அல்ல.

உகந்த அளவையடைய மேல் குறிப்பிடப்பட்ட விதிகளைப் பின்பற்றி நல முன்னேற்றங்களை ஆய்வு செய்தல் செயல் முறையில் முடியாத ஒன்றாகும். ஏனெனில் எவ்வித மாற்றமும் சிலருக்கு நன்மை பயந்தாலும் சிலருக்குத் தீமையாகவே இருக்கும். இதனை மனத்திற் கொண்டு கால்டர் இழப்பீட்டுக் கோட்பாட்டை உருவாக்கினார். ஒரு பொருளாதார மாற்றத்தினால் பொதுப் பொருளாதார நிலைமையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. மாற்றத்தின் பின் சிலர் பயனடைகின்றனர்; சிலர் அதனால் பாதிக்கப்படுகின்றனர். மாற்றத்தால் பயனடைகின்றவர் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பு ஈடு கொடுக்கக் கூடிய அளவில் ஆதாயம் பெற்றிருந்தால் அல்லது பெற்ற பயன்கள் பாதிப்பை விட உயர்வாக இருந்தால் இம்மாற்றம் நல முன்னேற்றத்தைப் பெருக்கும் மாற்றம் எனக் கொள்ளலாம். இதனையே, இக்சு, ஒரு மாற்றத்தினால் பாதிக்கப் பட்டவர்களும் பயனடைந்தவர்களும் ஈடுகட்டி அம்மாற்றம் ஏற்படாமல் செய்ய முடியுமென்றால், அதனை நல முன்னேற்றத்தைப் பெருக்கும் மாற்றம் என்று கொள்ளலாம் எனக் கூறினார்.

இழப்பீட்டுக் கோட்பாட்டிற்கு நடைமுறை எடுத்துக்காட்டு ஒன்றை இங்குக் குறிப்பிடலாம். வரி கொடுப்போரிடமிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து தேவையானவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் போது வருமான மறுபகிர்வு (Redistribution) ஏற்படுகிறது. பொருள்நலமும் மறுபகிர்வு செய்யப்படுகிறது. அதிக வருமானம் உள்ளவரிடமிருந்து வரிமூலம் பெற்ற பணம் குறைந்த வருமானமுள்ளவருக்குக் கொடுக்கப்படும்போது இவ்விரு சாராரும் அவர்களின் ஒப்பந்தக் கோட்டின் வழியாக முன்னேறிச் செல்கின்றனர்.

A என்ற நிலையிலிருந்து E நிலைக்குச் செல்லும் வரையறையைக் கால்டரும் இக்சுவும் தங்களுடைய இழப்பீட்டுக் கோட்பாட்டின் மூலம் வகுத்துள்ளனர். இரண்டு ஆள்கள் கொண்ட ஆய்வு படிவத்தில் A-இலிருந்து E-க்கு மாறும்போது முதல் ஆள் (X)-க்கு ஏற்படும் பலன் UX எனலாம். மாற்றத்தினால் பாதிக்கப்பட்ட Y ஆளுக்கு ஏற்படும் நட்டம் $U_y$ எனலாம். $U_x$-ஆனது $U_y$-ஐவிட அதிகமானால் கால்டரின் கருத்துப்படி X, Y-க்கு வேண்டிய இழப்பு ஈட்டைத் தரமுடியும் என்றும்; இக்சுவின் கருத்துப்படி Y, X-க்கு கொடுக்கக்கூடிய ஈட்டுத் தொகையினால் மாற்றம் ஏற்படாமல் தடுக்க முடியாது என்றும் தெளிவாகிறது. எனவே இரண்டாம் நிலைமை E, முதல் நிலைமை A-ஐவிட உயர்வானது என்பதாகும்.

இவ் வாய்வுப் படிவத்தில் ஒரு சிக்கல் எழுகிறது. அது, இழப்பீடு உண்மையிலேயே கொடுக்கப்பட வேண்டும் அல்லது கொடுக்கக்கூடிய நிலை உள்ளது என்று கண்டுபிடித்தல் மட்டும் போதுமானதா என்பதாகும். பிற்கால நலப் பொருளியற் கோட்பாடுகளில் இழப்பீடு கொடாமையின் சிக்கல்கள் அடியோடு புறக்கணிக்கப்பட்டுவிட்டன. இக்சு-கால்டரின் வரையறை சமச் சீரற்றது (Asymmetrical) இழப்பீடு செய்யும் மாறுதலுக்கு முன்னரும் பின்னரும் பகிர்வு ஒரே மாதிரியாக இருந்தால் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளலாம். எந்த மாற்றமும் வருமானப்பகிர்வை மாற்றாதிருக்கும் எனக் கொள்ளுதல் தவறு. எனவே கால்டர் – இக்சுவின் கோட்பாட்டின்படி இரண்டாம் நிலை முதலாம் நிலையை விடச்

சிறந்தது என்றும், அதுபோலவே முதலாம் நிலை இரண்டாம் நிலையைவிடச் சிறந்ததெனவும் காட்ட வாய்ப்பு உள்ளது. இத்தகைய முடிவுகள் கால்டர் -இக்சுவின் ஆய்வில் கேள்விக்குறிகளை உண்டாக்கு கின்றன. இதனைத் தவிர்க்கச் சைட்டோவ்சுகி (Scitovsky) இரட்டைக் கோட்பாடுஒன்றை விளக்கி னார்.

மிகக் குறுகிய எல்லைக்குள் அமைந்த பாரிட் டோவின் உச்சநல விதிகளைத் தளர்த்தி, உயர்ந்த தும் தாழ்ந்ததுமான நிலைமைகளை மதிப்பிட ஏது வாகச் செய்த கால்டர் இக்சு வழங்கிய இழப்பீட்டுக் கோட்பாடு நலப் பொருளியல் ஆய்வில் பெரிய மாற் றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் ஒப்பீட்டு ஆய் வுக் கூற்றினை முழுமையாக ஒப்புக் கொள்ள முடி யாது. அத்தகைய மதிப்பீடுகள் இங்கு மறைந்திருக் கின்றன. பண வருமானத்தின் சரி சமமான ஆதாய இழப்பை ஒப்பீடுகள் புலப்படுத்துகின்றன.

கால்டர்-இக்சு கோட்பாட்டிற்குச் சைட்டோவ் சுகி இரு காரணங்களைக் காட்டி மறுப்புத் தெரிவித் தார். 1) இழப்பீட்டுக் கோட்பாடு பொருளியல் வல்லுநர்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட்ட உப ரிக் கோட்பாட்டைப் பயன்படுத்துகிறது. 2) மாற்று நிலைமைகள் இரண்டில் எது உச்சநன்மை பயப்பது அல்லது திறமையானது என்பதை முடிவு செய்ய இய லாது. ஒன்று மற்றதைவிடச் சிறந்ததாகத் தோன்றக் கூடிய நிலைமை ஏற்படக்கூடும். இரண்டாம் நிலைமை முதலாம் நிலைமையை விட உயர்ந்தது அன்று என்று திட்டவட்டமாகக் கண்டுபிடிக்க வேண் டும். அப்போது தான் இரண்டாம் நிலைமை முத லாம் நிலமையை விடச் சிறந்தது என்பது தெளிவு படும். இதனையே சைட்டோவ்சுகியின் இரட்டைக் கோட்பாடு உள்ளடக்குகிறது.

இழப்பு ஈட்டுக் கோட்பாடும் இரட்டைக் கோட் பாடும் உள்ளடக்கியுள்ள (Implicit) ஏற்றுக்கொள்ள முடியாத மதிப்பு முடிவுகளை (Value Judgement) எல்லா நிலைமைகளிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. பாரிட்டோ முறையின் அடிப்படையில் 'சீரமைப்பை யும்'(Reorganization) 'இழப்பீட்டையும்' (Compensation) கால்டரும் இக்சும் வலியுறுத்துகின்றனர். பிகோவின் முறையிலிருந்து புதிய நலப் பொருளி யல் அறிஞர்கள் மாறுபடுகின்றனர். மொத்த நலம் (Total Welfare) பற்றிய சிக்கலை, அதிகத் திறமையான உற்பத்தி பற்றிய அடிப்படைச் சிக்க லாகப் பிகு கருதுகிறார். ஆனால் மொத்த நலத்திற் கான சிறப்புப் பகிர்வு பற்றிய அடிப்படைச் சிக்கலே மொத்த நலம் என்று புதிய நலப் பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

வெளிப்படையான உண்மைகளிலிருந்து தொடங்கி, நடப்பு நிலைமைகளின் வடிவாக நலப் பொருளி யலைப் பிகு உருவாக்குகிறார். சிக்கல் நிறைந்த பொருளாதாரத்தைச் சீர்படுத்துவதிலேயே அவர் அதிக அக்கறை செலுத்தினார். இதற்கு மாறாக மேலும் அதிகத் திறமையான உற்பத்தி முறைகளி னால் நிகரச் செல்வமும், அதன் மூலம் நலமும் பெருகுவதற்கு வழி வகுக்கும் ஒரு சீரிய பொருளியல் முறையை உருவாக்குவதில் கால்டரும் இக்சுவும் கவ னம் செலுத்தினர். தனியார் ஒருவரின் நிலை மோச மடைந்து விடக் கூடாது; ஒவ்வொருவரும் தன் னால் இயன்ற அளவுக்கு முன்னேற வேண்டும் என் பது அவர்களின் மூலக் கருத்தாகும். கால்டர்-இக்சின் குறிக்கோள் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் அடிப் படையில் உற்பத்திச் செலவுப் பயன்பாட்டு ஆய்வு (Cost-Benefit Analysis), உற்பத்திச் செலவின் தாக்க ஆய்வு (Cost-Effectiveness Analysis) போன் றவை பேரளவில் வளர்ச்சியடைந்தன. நலப் பொரு ளியல் ஆய்வின் அணுகு முறைகள் வேறுபடுகின்றன வெனினும் அவையனைத்தும் மொத்த நலத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தை உடை யன. பொருள்நலம் சார்ந்த சிக்கல்கள் பொருளியல் ஆய்வுகளுக்கு அப்பாற்பட்டன என்ற கருத்துக்கு மாறாக நலப் பொருளியலை பொருளியல் கோட் பாட்டின் மிக முக்கிய அங்கமாகவும் ஆக்கப் பொரு ளியலுக்குச் சமமான பொருளியலாகவும் நிலைநிறுத் திய பெருமை கால்டர் இக்சுவைச் சாரும் எனக் கருதப்படுகிறது.

ய.ச.

**துணை நூல்கள்**

**Bergdon, A.**, 'A Reformulation of Welfare Economics', Quarterly Journal of Economics, Vol III, John Wiley and Sons, NewYork, 1937-38.

**Hicks. J. R.**, 'Foundations of Welfare Economics', Economic Journal, British Economic Association, London, 1939.

**Hicks, J. R.**, 'The Rehabilitation of Consumers' Surplus Review of Economic Studies, Vol II No. 4, Cambridge Univesity Press, Cambridge, 1941.

**Little, I.M.D.**, 'Foundations of Welfare Economics' Oxford Economic Papers, N.S., Vol I, No 2 Clarendon Press, Oxford, 1949.

## கால்டன், சர் பிரான்சிசு (கி.பி. 1822-1911)

சிறந்த ஆங்கிலேய மானிடவியல் அறிஞருள் ஒருவர்; பல புத்தாய்வுகளை மேற்கொண்டவர். சர் பிரான்சிசு கால்டன் (Sir Francis Galton) பர்மிங்காமில் இசுபார்க்புரூக்கு (Sparkbrook) என்னுமிடத்தில் 16.2.1822-இல் பிறந்தார். பள்ளிக் கல்விற்குப்பின் தந்தையின் விருப்பத்திற்கிணங்க இவர் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் திரினிட்டிக் (Trinity) கல்லூரியில் மருத்துவக் கல்வி பயிலச் சேர்ந்தார். உடல்நலக் குறைவால் மூன்றாம் ஆண்டில் கல்லூரியிலிருந்து விலகி இலண்டனில் தனிப்பட்ட முறையில் மருத்துவம் பயின்றார். இக்காலத்தில் தந்தை இறந்ததால் இப்படிப்பினை நிறுத்திவிட்டுப் பல இடங்களுக்குச் சென்று புத்தாய்வுகளை மேற்கொண்டு சிறப்புற வேண்டுமென எண்ணினார்.

இவர் கி.பி. 1845-46 ஆண்டுகளில் தென் மேற்கு ஆப்பிரிக்கப் பகுதிகளுக்குச் சென்று வந்தார். பின் பேரரசுப் புவியியற் கழகத்தின் (Royal Geographical Society) ஆலோசனையைப் பெற்றுக் கலகாரிப் பாலைவனத்திற்கு 550 மைலுக்கு அப்பாலுள்ள இன்காமி (Ngami) என்னும் ஏரிப்பகுதிக்குச் சென்று வந்தார். இப்பயணம் இவர் காலத்தில் எவரும் மேற்கொள்ளாததாகும். இதனால் இவர் கி.பி. 1853-ஆம் ஆண்டில் தம் 31-ஆம் வயதில் பேரரசுப் புவியியற் கழகத்தின் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அப்போது இவர் ஒன்பது நூல்களையும் இருநூறு கட்டுரைகளையும் எழுதியிருந்தார். இவை பல்வேறு துறைகளைப் பற்றி எழுதப்பட்டனவாகும்.

கால்டன் தம் வாழ்க்கையின் இடைக்காலத்திலிருந்து இனமேம்பாட்டியல் (Eugenics) துறை பற்றியே முழுக் கவனத்தையும் செலுத்தினார். சிறந்த தம்பதியினரைத் தேர்வு செய்து உடலாலும் உள்ளத்தாலும் மனவளமுடைய மனித சமுதாயத்தை உருவாக்குவதில் பல அணுகு முறைகளை ஏற்படுத்த இவர் பல ஆய்வுகளைத் தொடர்ந்து செய்தார். இவர் சார்லசு தார்வினின் உறவினராதலால் அவரது சிந்தனைத் தாக்கத்தையும் பெரிதும் பெற்றிருந்தார். 'இனமேம்பாட்டியல்' என்னும் சொல்லை இவர் பயன்படுத்தியது முதற்கொண்டு மனித சமுதாய முன்னேற்றம் பற்றி இவர் பல கருத்துகளை உருவாக்கினார்.

'மரபுவழி நுண்ணறிவு' (Hereditary Genius, 1869) என்னும் நூலில் இவர் 'நுண்ணறிவு' பற்றிப் பல கருத்துகளைக் கூறியுள்ளார். நுண்ணறிவு ஒருவன் பிறப்பிலேயே அமைகிறது. அதனால் உடல் வலிமையும் மனவலிமையும் நுண்ணறிவும் மரபுவழியே செல்கின்றன என்பதை உறுதிப்படுத்தினார். இக்கருத்து இந்நூல் வெளியிட்ட காலத்திற்கு மாறுபட்டதாகும். இருப்பினும் இவர் கருத்துகள் தார்வினின் மனிதப் படிமலர்ச்சி (Evolution) பற்றிய கொள்கைக்கு உதவின.

கால்டன் தம் கருத்துகளை மேலும் பல பரிமாணங்களில் வெளியிடும் வகையில் கி.பி.1883-இல், 'மனிதப் புலங்களைப் பற்றிய ஆய்வு' (Inquiries into Human Faculty) என்னும் நூலில் 40 க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். இதன் பின்னர் இவரது விருப்பத்திற்கிணங்க இலண்டன் பல்கலைக்கழகத்தில் இனமேம்பாட்டியல் பிரிவிற்கென்று தனி ஆய்வுக் கட்டிலை ஏற்படுத்தினர்.

இருபதாம் நூற்றாண்டில் இவரது பணி முழுவதுமாக இன மேம்பாட்டியல் பற்றியதாக இருந்தது. மனிதர்களுக்கிடையே காணப்பட்ட பல்வேறு வேறுபாடுகள் பண்பாடு சார்ந்தனவாகவும், கல்வி சார்ந்தனவாகவும், வகுப்புச் சார்பெண்ணம் சார்ந்தனவாகவும் இருந்ததால் கால்டனின் கருத்துகளுக்கு ஒரு சாரார் மிகுந்த ஊக்கமளித்தனர். ஆனால், மற்றொரு சாரார் இனமேம்பாட்டியல் என்பது வகுப்புச் சார்பெண்ணத்தைச் சார்ந்ததாக உள்ளது என்று கூறினர். சிறந்த உடலமைப்பையும், உளவளத்தையும் கொண்டவர்களைத் தேர்ந்தெடுத்துச் சிறந்த மனித சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதனைக் கொள்கை நிலையிலேயே கால்டன் உறுதிப்படுத்த இயலவில்லை. இந்த நடைமுறை வெற்றி பெறாது எனப் பிற்காலத்திய அறிஞர்கள் கருதினர். இவருக்கு 1909-இல் இங்கிலாந்து அரசு பெருந்தகைப் பட்டம் (Knight) அளித்துச் சிறப்பித்தது. கால்டன் 1911-இல் சனவரி 17-ஆம் நாள் இங்கிலாந்தில் சர்ரே மாநிலத்திலுள்ள ஆல்சுமியர் (Halsmere) என்னுமிடத்தில் காலமானார்.

சீ.ப.

## கால்டாரின் பேரியல் பகிர்வுக் கோட்பாடு

**கால்டாரின் பேரியல் பகிர்வுக் கோட்பாடு**: பகிர்வுக் கோட்பாடுகள் நுண்ணினப் பகிர்வுக் கோட்பாடுகள் (Micro Theories of Distribution), பேரியல் (Macro) பகிர்வுக் கோட்டுபாடுகள் என இருவகைப்படும். உற்பத்திக் காரணிகளான நிலம்,உழைப்பு, முதல், அமைப்பு ஆகியவற்றின் உரிமையாளர்களான நிலக்கிழார், உழைப்பாளி, முதலாளி, தொழில் முயல்வோன் ஆகியோரிடையே உற்பத்தியை முறையே வாரம்,கூலி, வட்டி,ஆதாயம் எனப் பகிர்வதை நுண்ணினப் பகிர்வுக் கோட்பாடுகள் ஆய்கின்றன. பொருள்களின் விலை வரையறுக்கப்படுவது போன்று உற்பத்திக் காரணிகளின் பணிக்காகத் தரப்படும் ஊதியமும் வரையறுக்கப்படுகிறது.

பேரியல் பகிர்வுக் கோட்பாடுகள், நாட்டு வருமானம், (National Income) அல்லது மொத்த உற்பத்தி (Total Output), நில உரிமையாளர்கள், உழைக்கும் மக்கள், முதலாளிகள், தொழில் அமைப்பாளர் ஆகியோரிடையே எந்த அடிப்படையில் பகிர்வு செய்யப்படுகிறது என்பதை ஆய்கின்றன. பேரியல் பகிர்வுக் கோட்பாடுகளை வழங்கியுள்ள வல்லுநர்களுள் தேவிடு இரிக்கார்டோ (David Ricardo), காரல் மார்க்சு(Karl Marx), நிக்கோலசு கால்டார் (Nicolous Kaldor) ஆகியோரின் கோட்பாடுகள் குறிப்பிடத்தக்கவை. அவற்றுள், கால்டாரின் பேரியல் பகிர்வுக் கோட்பாடு(Kaldor's Macro Theory of Distribution) சிறந்த இடத்தைப் பெற்று விளங்குகிறது. கீன்சின் (Keynes) பேரியல் பகிர்வுக் கோட்பாடு என்றும் இதனைக் கூறுவதுண்டு.

தமது கருத்தினையொத்த கோட்பாட்டைக் கீன்சும் உருவாக்கியுள்ளார் எனப் 'பகிர்வுக் கோட்பாடுகளின் மாற்று' (Alternative Theories of Distribution) என்ற கட்டுரையில் கால்டர் குறிப்பிடுகின்றார். ஆதாயப் பங்கையும் (Profit Share) கூலிப் பங்கையும் (Wages Share) விளக்குவதற்குக் கால்டார் கீன்சினுடைய ஆய்வுக் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளார்.

ஆராய்ச்சி நுணுக்கத்திற்காகக் கால்டார், நாட்டு வருவாயைக் கூலி என்றும், ஆதாயம் என்றும் இரண்டாகப் பிரித்துள்ளார். கூலி என்பது உழைக்கும் மக்கள் அனைவரும் தங்கள் உழைப்பிற்கு மட்டும் பெறும் கூலி, ஊதியம் போன்றவற்றை அடக்கும். ஆதாயம் என்பது சொத்து வைத்திருப்போர் பெறும் வாரம், வட்டி, ஆதாயம் போன்றவற்றை அடக்கும். கீன்சும் நாட்டு வருவாயைக் கூலி, ஆதாயம் என இரண்டாகப் பிரித்தார். கால்டாரின் கோட்பாட்டின் முக்கியக் கருத்து நாட்டு வருவாயில் ஆதாயத்தின் பங்கு, முதலீடு-வருவாய் விகிதத்தைச் (Investment-Income Ratio) சார்ந்ததாகும் என்பதாம். முதலீடு-வருவாய் விகிதம் உயரும்போது ஆதாயப் பங்கும் உயரும். முன்னது, இறங்கினால் பின்னதும் இறங்கும். அதாவது, முதலீடு-வருவாய்விகிதமும் ஆதாயப் பங்கும் நேரிடைத் தொடர்பு (Direct Relationship) உடையனவாகும்.

இக்கோட்பாடு சில எடுகோள்களின் (Assumptions) அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவையாவன: 1) பொருளாதாரம் முழு வேலைவாய்ப்பு நிலை (Full Employment) பெற்றுள்ளது. 2) கூலி பெறுவோரும் ஆதாயம் பெறுவோரும் நிலையான சேமிப்பு அல்லது நுகர்வு இறுதிநிலை நாட்டம் (Marginal Propensity to save or consume) உடையவராக இருப்பர். 3) கூலி பெறுவோரின் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டத்தைவிட ஆதாயம் பெறுவோரின் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் கூடுதலாக இருக்கும். இவை தவிர, வேறு சில எடுகோள்களும் உள்ளன.

கால்டாரின் கோட்பாட்டைச் சமன்பாடுகளின் (Equations) துணை கொண்டு விளக்குவதே சாலச் சிறந்தது. Y என்பது நாட்டு வருவாயாகவும் W என்பது கூலிப் பங்காகவும் P என்பது ஆதாயப் பங்காகவும் கொண்டால்,

$$Y=W+P \qquad \dots (i)$$

முழு வேலைவாய்ப்பு பெற்ற சமநிலைப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கும் முதலீடு (I) எதிர்பார்க்கும் சேமிப்பு (S)-க்குச் சமமாக இருக்க வேண்டும். அதாவது,

$$I=S \qquad \dots (ii)$$

S என்பதில் கூலி பெறுவோருடைய சேமிப்பும் (Sw) ஆதாயம் பெறுவோரின் சேமிப்பும் (Sp) அடங்கும். அதாவது,

$$S=Sw+Sp \qquad \dots (iii)$$

மொத்த முதலீடு (I) கொடுக்கப்பட்டால் கூலி பெறுவோரின் சராசரி சேமிப்பு நாட்டம் Sw என்றும், ஆதாயம் பெறுவோரின் சராசரி சேமிப்பு நாட்டம் Sp என்றும் கொண்டால்,

$$Sw=Sw \times W$$

$$SP = Sp\times P$$

இரண்டும் மூன்றும் சமன்பாடுகளைத் தொடர்ந்து

$I=Sw \times W + SP \times P$ எனக் கொள்ளலாம். முதல் சமன்பாட்டிலிருந்து

$W=Y-P$ எனக் கொள்ளலாம்.

W-க்குப் பதிலாக Y-P -யை பயன்படுத்தினால்

$$I = Sp\ P + Sw\ (Y-P)$$

$$I = SP; + Sw\ Y-Sw\ P;$$

$I = SP-Sw)\ P + Sw\ Y$ சமன்பாட்டின் இரு பக்கங்களையும் நாட்டு வருவாய் (Y) கொண்டு வகுக்கும்போது,

$$\frac{I}{Y} \quad (Sp-Sw) \quad \frac{P}{Y} + Sw$$

இச்சமன்பாட்டை (SP—Sw) கொண்டு வரும்போது,

$$\frac{I}{Y}\ \frac{1}{Sp-Sw} = \frac{(Sp-Sw)}{(Sp-Sw)}\ \frac{P}{Y} + \frac{Sw}{(Sp-Sw)}$$

$$\frac{P}{Y} = \frac{I}{Y}\ \frac{1}{Sp-Sw} - \frac{S}{Sp-Sw}$$

ஆதாயத்தின் விகிதம் $\left(\frac{P}{Y}\right)$ கூடவேண்டுமாயின் முதலீட்டின்விகிதம் $\left(\frac{I}{Y}\right)$ கூட வேண்டும் என்பது மேற்குறிப்பிட்ட சமன்பாட்டிலிருந்து புலனாகிறது. அதாவது $\frac{I}{Y}$ கூடும்போது $\frac{P}{Y}$-ம் கூடும். அதற்குத் தகுந்தாற்போல $\frac{W}{Y}$ குறையும்.

Sp எப்போதும் Sw-ஐவிடக் கூடுதலாக இருக்க வேண்டுமென்பது கால்டாருடைய எடுகோள்களுள் ஒன்று. Sp குறைவாகவும் Sw கூடுதலாகவும் இருந்தால் முதலீடு குறைகிறது. தொடர்ந்து விலையிலும் தேவையிலும் வீழ்ச்சி ஏற்படுகின்றன. எனவே கால்டாரின் அமைப்பு நிலையற்றதாகிவிடுகிறது. எனவே கால்டாரின் அமைப்பில் Sp Sw என்பது ஒரு கட்டாயமான விதி. $\frac{1}{Sp-Sw}$ என்பதுவருவாய் பகிர்வின் உணர்வுக் கெழு (Coefficient of Sensitivity of income distrubution) எனப்படுகிறது.

ஆதாயம் பெறுவோர் எவ்வாறு நன்மைஅடைகின்றனர்? முழு வேலைவாய்ப்பு நிலையில் முதலீட்டுச் செலவினம் (Investment Expenditure) பெருகும் போது விலைநிலவரம் உயருகிறது. கூலியில் ஏற்படும் உயர்வு விலையில் ஏற்படும் உயர்வுக்குப் பின்தங்கிய நிலையில் உள்ளது. எனவே, விலையில் ஏற்படும் உயர்வு ஆதாயப் பங்கை உயர்த்துகிறது. அப்போது நாட்டு வருமானத்தில் கூலிப்பங்கு குறைகிறது. ஆதாயம் பெறுவோருடைய சேமிப்பு நாட்டம் கூடுதலாகவும், கூலி பெறுவோருடைய சேமிப்பு நாட்டம் குறைவாகவும் உள்ளதால் பொருளாதாரத்தின் மொத்த சேமிப்பு-வருவாய் விகிதமும் உயர்ந்து கொண்டே செல்கிறது. அதன் காரணமாக முதலீட்டு-வருவாய் விகிதமும் கூடி ஒரு புதிய சமநிலையைப் பொருளாதாரம் அடைகிறது.

கால்டாரின் பகிர்வுக் கோட்பாட்டின் உயிர்நாடி மறுபகிர்வுச் செயற்பாடு (Redistributive Mechanism) என்பதாகும். இது இரண்டு தடங்கல்களை மேற்கொள்ள வேண்டும். 1) கூலி நிரக்கு, ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவுக் கூலியைவிடச் சற்றுக் கூடுதலாகவே இருக்க வேண்டும். எனினும், அது விலையில் ஏற்படும் சிறியதொரு உயர்வைத் தாங்கி வருமான மறுபகிர்வுக்கு வழிவிட்டு ஆதாயம் பெறுவோருக்கு நன்மை பயக்கும். 2) ஆதாயம், மிகக் குறைந்த அளவு ஆதாயத்திற்குச் சற்று உயர்வாகவே இருக்க வேண்டும். எனினும், தேவையை முன்னிட்டு தொழில் முயல்வோன் விலையைக்குறைக்காமல் இருக்க வேண்டும். இவ்விரண்டு இடையூறுகளையும் தன்னகத்தே கொண்டது கால்டாரின் கோட்பாடு.

கால்டாரின் கோட்பாட்டில் பல நிறைகள் உள்ளன. முதலீடும் சேமிப்பும் சேர்ந்து வருமானப் பகிர்வை வரையறுக்கின்றன. பகிர்வின் தன்மைதான் முடிவில் நாட்டு வருவாயின் அளவை வரையறுக்கிறது. சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் செயற்பாடு வருமானத்தின் அளவால் அன்றி, அதன் பகிர்வால் தான் கட்டுப்படுத்தப்படுகிறது. தொழில் முயல்வோரின் முதலீட்டுக்குப் பின்னரே சேமிப்பு வரையறுக்கப்படுகிறது. சேமிப்பு முதலீட்டுக்குக் காரணமாக அமையவில்லை. உண்மைக்கு ஒவ்வக் கூடியதும் ஆய்வுக்குத் தகுந்ததுமான ஒரு கோட்பாட்டைக்கால்டார் வழங்கியிருந்தாலும் அதிலும் குறைபாடுகள் இல்லாமலில்லை.

தொழிற்சங்கங்களின் ஆற்றல் ஓங்கிய இக்காலத்தில் விலையில் ஏற்படும் சிறிதளவு உயர்வைக் கூலி பெறுவோர் தாங்கிக் கொள்வர் என்ற எடுகோள் முற்றிலும் பொருந்தாது. உண்மைக் கூலி குறைவது என்பது நடைமுறைக்குப் பொருந்தாது. எனவே கூலி பெறுவோருடைய வாங்கும் ஆற்றலும் கூடவே செய்யும்.

தொழில் முயல்வோர் விலை வீழ்ச்சியையோ தேவை வீழ்ச்சியையோ விரும்புவதில்லை. பொதுவாக, உற்பத்தியின் அளவைக் குறைத்து விலை வீழ்ச்சியைத் தடுக்க முயல்வர். அன்றியும், தொழில் முயல்வோரின் தன்னிச்சையான முற்றுரிமைப் போக்கு முழு வேலை வாய்ப்புக்குரிய செயற்பாட்டையே நிலைபெறச் செய்துவிடும்.

தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் முன்னேற்றம் உற்பத்தியைப் பெருக்குவதால், விலை ஏற்றத்தினால் ஏற்படும் உண்மைக் கூலி வீழ்ச்சியைத் தொழிலாளர்கள் ஈடுகட்டிக் கொள்ளலாம். தொழில்

முயல்வோர் விலை வீழ்ச்சியால் ஏற்படும் ஆதாய இழப்பை உற்பத்திச் செலவு குறைவதால் சரிக்கட்டிக் கொள்வர். எனவே, தொழில் நுட்பத் துறையில் ஏற்படும் மாற்றம் கால்டாரின் எதிர்பார்ப்புக்கு மாறாக உள்ளது.

கால்டாரின் கோட்பாடு நெகிழ்ச்சியற்றது. அவருடைய கோட்பாட்டில் செயற்படுவதற்கு ஆதாய-வருவாய் விகிதமும், கூலி-வருவாய் விகிதமும் எவ்வளவு தேவை எனக் குறிப்பிடப்படவில்லை. எனவே, இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாட்டிற்குக் கால்டாரின் கோட்பாடு ஒரு சிறந்த மாற்று எனக் கருதுவதற்கில்லை. முதலீடு ஒரு தானியங்கியாக இல்லாமலிருந்தால் இக் கோட்பாடு செயற்படுவதில்லை என்று கால்டாரே குறிப்பிடுகிறார். முதலீடு சேமிப்பு விகிதம், சேமிப்பு நாட்டம் ஆகியவற்றோடு தொடர்புடையது. கீன்சின் வடிவமைப்பின் துணை கொண்டு தொன்மைப் பொருளாதாரக் கருத்தையே கால்டார் விளக்கியுள்ளார் என்றாலும் அது மிகையாகாது.

கால்டார், மானிடமூலதன (Human Capital) வளர்ச்சியை முற்றிலும் ஒதுக்கிவிட்டார் எனலாம். பருப்பொருள் உற்பத்திச் சாதனங்களுக்கே முதலிடம் அளித்துள்ளார். உழைப்புக்கு அளிக்கப்படும் உண்மை ஊதியம் குறைந்தால் அறிவியல் அறிஞர்கள், பொறியியல் வல்லுநர்கள், தொழில் அமைப்போர் ஆகியோரின் உண்மைக் கூலி குறைந்து உற்பத்தி குறைந்துவிடும். டி.பீ.

**கால்டீயா**: பண்டைய நாகரிகப் பகுதிகளில் கால்டீயா (Chaldea)வும் ஒன்று. கல்தேயா என்றும் இது குறிக்கப்படும். இங்கு வாழ்ந்த பண்டைய மக்கள், செமித்திய இனத்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இப்பகுதி பாரசீக வளைகுடாவுக்கு அண்மையில், பாபிலோனியாவுக்குத் தெற்கே உள்ளது. இம்மக்கள் பேசிய மொழி அராபிய மொழி என்று கூறப்படுகிறது. இவர்கள் நாகரிகச் சிறப்புப் பெற்றிருந்த காலம் கி.மு. 8-ஆம் நூற்றாண்டு என்பர். சிறப்பு வாய்ந்த பல மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைத்துள்ளன. கால்டீய அரசர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள், மெரோதாக் பலதான் (Merodachbaladan), நெபோபொலசார்(Nebopolassar), நெபுகாத்நேசர்(Nebuchadnezzar) முதலியவர்கள். நேபுகாத்நேசர் காலத்தில், உலகின் பண்டைய அற்புதங்களில் ஒன்றான தொங்கும் தோட்டம் (Hanging Garden) பாபிலோனியாவில் அமைக்கப் பெற்றது. தெ.பா.

**கால்டுவெல், இராபர்ட்டு**: திராவிட மொழிகளின் சிறப்பையும் அவற்றுள் தமிழின் தொன்மையையும் உலகிற்கு எடுத்துக் காட்டியவருள் தலைமையிடம் பெறத்தக்கவர் இராபர்ட்டு கால்டுவெல் (Rev. Dr. Robert Caldwell) ஆவர். அயர்லாந்து நாட்டைச் சார்ந்த இவர் கி.பி. 1814-ஆம் ஆண்டில் பிறந்தார்; கிளாசுகோக் கல்லூரியில் கல்வி பயின்றார். இவர் தம் இருபதாம் வயதில் இலண்டன் சமயப் பரப்புக் கழகத்தில் (London Missionary Society) சேர்ந்தார். சமயப் பணிக்காக கி.பி. 1838-இல் சென்னை வந்தார். இவர் கி.பி. 1841-இல் குருவாகித் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இடையன்குடிக்குச் சென்று அங்கு 50 ஆண்டுகள் சமயப் பணி ஆற்றினார்; தம் இருபத்தொன்பதாம் வயதில் எலிசா என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்தம் மக்களுள் ஆண்கள் இருவர்; பெண்கள் இருவர்.

இவர், திருநெல்வேலி ஆயராக (Bishop) கி.பி. 1877-இல் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் கி.பி. 1891-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31-ஆம் நாள், தம் பதவியினின்று ஓய்வு பெற்றுக் கொடைக்கானல் சென்று தங்கினார். அவ்வாண்டில் ஆகசுட்டுத்திங்கள் 28-ஆம் நாள் காலமானார். இவர்தம் திருவுடல், பணியாற்றிய இடையன்குடிக்கே கொண்டுவரப்பட்டு இவரால் கட்டப்பட்ட ஆலயத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

சமயப் பரப்புநராகிய கால்டுவெல் செய்துள்ள பணிகள் பலப்பல. பனை மரங்கள் நிறைந்த வறண்ட நிலமாகக் காட்சியளித்த இடையன் குடியை மக்கள் வாழ்வதற்கு ஏற்ற வளமான இடமாக மாற்றினார். நிழல் தரும் மரங்கள் நடப்பட்டன; கிணறுகள் தோண்டப்பட்டன. சாலைகள் போடப்பட்டன. சிறு சிறு வீடுகள் கட்டி மக்கள் வாழ வழிவகுக்கப்பட்டது. பள்ளிகள் தொடங்கப்பட்டன. பெண்களுக்கென்றே ஒருபள்ளி நிறுவப்பட்டது. உயர்நிலைக்கல்விக்கென்று சாயர்புரத்தில் ஒரு கல்விக்கூடம் இவர் காலத்தில் தொடங்கப்பட்டது. இவர் கி.பி. 1847 முதல் கி.பி. 1880 வரை 32 ஆண்டுகள் பாடுபட்டு ஒரு கோவிலைக் கட்டி முடித்தார். தாம் பணி செய்த பகுதியில் கி.பி. 1877-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தில் வாடிய ஏழைகளுக்குப் பேருதவி புரிந்தார்.

'நற்கருணைத் தியானமாலை' (கி.பி. 1853), 'தாமரைத் தடாகம்' (கி.பி. 1871) ஆகிய நூல்கள் இவரால் தமிழில் எழுதப்பட்ட சமய நூல்களாகும். 'ஞானசுதானம்' 'நற்கருணை' என்பவை இவர் எழுதிய நீண்ட கட்டுரைகளாகும். இக்கட்டுரைகள்

என்றிபவரால் (Henry Bower) கி.பி. 1841-இல் எழுதி வெளிவந்த 'வேத அகராதி'யில் இணைக்கப்பட்டுள்ளன. தியான மாலை, பாரத கண்ட புராதனம் போன்ற நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

தமிழ், தமிழ்க் கலைகள், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. மேனாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த பழங்காலத் தொடர்புக்குப் பல்வேறு சொற்களைச் சான்றுகளாகக் காட்டியுள்ளார். தமிழ் மொழியில் உள்ள 'தோகை' எபிரேயத்தில் 'துகி' என வழங்குவதாகவும், 'அரிசி' என்னும் சொல் கிரேக்கத்தில் 'அருசா' என வழங்குவதாகவும் எடுத்துக் காட்டினார்.

வரலாற்றுப் புகழ் படைத்த புன்னைக்காயல், கொற்கை ஆகிய இடங்களைத் தோண்டி அகழ்வாராய்ச்சி செய்து பழந்தமிழகப் பெருமையை உலகிற்கு அறிவிக்க முற்பட்டார்.

இவர் பதினெட்டு மொழிகளை அறிந்தவர். இராயல் ஆசியக் கழகத்தில் (Royal Asiatic Society) உறுப்பினராக இருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் 22-ஆம் பட்டமளிப்புச் சொற்பொழிவு இவரால் நிகழ்த்தப்பட்டது. எல்.எல்.டி. (L.L.D.) டி.டி. (D.D.) முதலிய பட்டங்களும் இவருக்குக் கிடைத்துள்ளன. இவருடைய நிலைத்த புகழுக்கு அடிப்படை 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (A Comparative Grammer of the Dravidian Languages) என்னும் நூலேயாகும். திருநெல்வேலிச் சரித்திரம் (History of Thirunelvelly) என்னும் நூலையும் இவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

கு.இ.

**கால், பிரான்சு சோசபு: (கி.பி.1758-1828)** செருமானிய அறிஞர் மண்டையோட்டியல் என்னும் துறையைத் தோற்றுவித்தவர். பள்ளிக் கல்விக்குப் பின் இவர் மருத்துவக் கல்வியைஇசுட்ராசுபர்க்கிலும் (Strasburg) வியன்னாவிலும் பயின்றார். படிப்பை முடித்தபின் இவர் மருத்துவத் தொழிலை வியன்னாவில் தொடங்கினார். மருத்துவத் தொழிலின் போதே பலவற்றைப் பற்றிச் சிந்திப்பதிலும் ஆய்வு செய்வதிலும் கால் (Franz Joseph Gall) ஈடுபாடு கொண்டார். இவர் 9-3-1758-இல் செருமனியில் பிறந்தார்.

மனித உடலுக்கும் ஆவிக்கும் இடையே உள்ள தொடர்பு எத்தன்மையது என்பது இவரது தொடக்க கால ஆய்வாகும். மூளையே பல கருத்துகளின் பிறப்பிடம் என அறிந்து மூளையைப் பல புலங்களாகப் பாகுபடுத்தி ஒவ்வொன்றிற்கும் உள்ள தொடர்புகளை அறிய முற்பட்டார். உடலின் வெளிப்புற அமைப்பிற்கும் ஒருவரின் பண்புகளுக்கும் தொடர்புண்டு என்று முடிவு செய்து அதை ஆராய்வதற்காக மண்டையோட்டியல் (Cranioscopy) என்னும் முறையை இவர் ஏற்படுத்தினார். ஒருவனது வெளிப்புற உடலமைப்பிற்கும் மூளையின் உட்புலங்களுக்கும் உள்ள இடைவினையை ஆராய்வதில் இவர் தொடர்ந்து பல அணுகுமுறைகளை ஏற்படுத்தினார். இவரது இடைவிடா ஆய்வின் மூலம் மூளையில் பல பகுதிகள் (Areas) உண்டு என்றும் பகுதிகளில் பல திசுத் தொகுதிகள் உள்ளன என்றும் நம்பினார். இவை மனிதனின் பண்புகளை நிருணயிக்கின்றன. இவ்வாறாக மூளையின் மேற்பரப்பில் 27 திசுத் தொகுதிகள் உள்ளன என்றும், இவையே ஒருவரின் அனைத்து உடலமைப்பிற்கும், நடத்தை முறைகளுக்கும் வடிவம் கொடுக்கின்றன என்றும் முடிவு செய்தார்.

வியன்னாவில் மண்டையோட்டியல் பற்றி கி.பி. 1796-இல் இவர் பல விரிவுரைகளை நிகழ்த்தினார். இதன் பின்னர் காசுபர் இசுபர்கீம் (Gaspar Spurzheim என்பவர் இவருடன் பணியாற்ற விரும்பிச் சேர்ந்தார். செருமனியில் இவர்களின் சொற்பொழிவுகளுக்கு எதிர்ப்பு மிகுந்ததால் இருவரும் பாரிசுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர்.

பல்வேறு வகையான நோயாளிகளுக்கு மருத்துவம் செய்யும் வாய்ப்புக் கிடைத்ததால் இவர் ஆய்வுகளுக்கு அவை உதவியாக அமைந்தன. கி.பி. 1810-இல் நரம்புசார் உடற்கூற்றமைப்பியல்(Neuroanatomy) பற்றிய பல நூல்களை வெளியிட்டார். இசுபுர்சீம் கி.பி. 1813-இல் பிரான்சிலிருந்து பல நாடுகளுக்குச் சென்று 'தலையமைப்பியல்' (Phrenology) பற்றிப் பரப்புவதில் ஈடுபட்டார். ஆனால், கால் மட்டும் இத்துறையை மண்டையோட்டியல் என்றே குறிப்பிட்டு வந்தார்.

மண்டையோட்டியல் பற்றிய கால் அவர்களின் ஆய்வு முறைகள் மானிடவியலில் மிகுந்த தர்க்கத்தினை ஏற்படுத்தின. தலையமைப்பியல் அணுகுமுறைகள் உளவியல், மானிடவியல், குற்றவியல் முதலான துறைகளுக்கு உதவியாக இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு உதவின.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முழுவதும் தலையமைப்பியல் மிகவும் வளர்ச்சியுற்றது. பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் இத்துறையின் செல்வாக்கினைச் சமுதாய மறுமலர்ச்சி பற்றிய கருத்துகளி

லும் அரசியல் குழுவினரிடையேயும், சமயம், தத்துவம் முதலான துறைகளிலும் காண முடிந்தது. இவர் கி.பி. 1828-ஆம் ஆண்டு இறந்தார். சீ.ப.

**கால்பெர், சான்-பா தீசித்து** பிரஞ்சு நாட்டு அரசியல் வல்லுநர். பிரான்சை ஆண்டுவந்த பதினான்காம் உலூயி மன்னரின் நிதி அமைச்சராக (கி.பி. 17,18 நூ) அவர் சிறப்புடன் பணியாற்றினார். அம் மன்னர் காலத்தில் பிரஞ்சு அரசவை பகட்டான நிலையையெய்தியது.ஐரோப்பியப்பண்பாட்டின் தாயகமாகப் பிரான்சு விளங்கியது. அச்சிறப்புக்குக் காரணமாக அமைந்தது அந்நாட்டின் செல்வச் செழிப்பேயாகும். அச் செல்வச் செழிப்பிற்குக் காரணவாக விளங்கியது கால்பெரின் நிதி மற்றும் தொழில் பற்றிய சீர்திருத்தங்களேயாகும். மேலும், ஐரோப்பிய நாடுகளுள் தலை சிறந்த நாடாக அக்காலத்தில் மதிக்கப்படக் காரணமாக இருந்து, பிரஞ்சு இராணுவ வலிமைக்கு அடிக்கல்லாக விளங்கியதும் அச்சீர்திருத்தங்களேயாகும். ஆகவேதான், இன்றும் பிரஞ்சுக்காரர்கள் தங்களது நினைவில் கால்பெரை வைத்துப் போற்றி வருகிறார்கள்.

கால்பெர் (Colbert, Jean Baptiste), கி.பி. 1619-இல் இரீம்சு (Reims) நகரில் ஒரு நடுத்தர வணிகக் குடும்பத்தில் பிறந்தார். அரசுப் பணியில் சேர்ந்து பல பொறுப்புகளை வகித்தார். கி.பி. 1651-இல் கார்டினல் மாசரினுடைய (Cardinal Mazarin) பேராளாகச் (Agent) செயற்படத் தொடங்கினார். மாசரின் அப்போது பிரான்சை ஆண்டுவந்து பதினான்காம் உலூயி உரிய வயதை அடையாத காரணத்தால் அவர் சார்பில் ஆட்சி நடத்தி வந்தார். அரசருடைய சருவாதிகார ஆட்சியை எதிர்த்து ஒரு இயக்கம் நாட்டில் தோன்றியது. அதனை பிரான்ட் (Fronde) என்று கூறுவர். அந்த இயக்கத்தின் காரணமாகப் பாரிசை விட்டு நீங்கி மாநில நகர் ஒன்றில் புகலிடம் தேட வேண்டிய நிலை மாசரினுக்கு ஏற்பட்டது. பாரிசு நகரில் மாசரின் இல்லாதபோது அவருடைய தனிப்பட்ட விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பை கால்பெர் ஏற்றுக்கொண்டார். அது மட்டுமன்றி நகரில் நடைபெற்ற செய்திகளை அவ்வப்போது மாசரினுக்கு கால்பெர் அறிவித்து வந்தார். கி.பி. 1653-இல் அவ்வியக்கம் ஒடுக்கப்பட்டமையால் மாசரின் பாரிசு திரும்பி மீண்டும் பிரஞ்சு அரசியலில் செல்வாக்கு நிலை எய்தினார். அதுபோது கால்பெரைத் தம் அந்தரங்க உதவியாளராக நியமித்தார். தமக்கும் தமது குடும்பத்தாருக்கும் இலாபகரமான பதவிகளைக் கால்பெர் விலைகொடுத்து வாங்குவதற்கு மாசரின் பேருதவி செய்தார்.சீனெலே



பெருமகனாட்சிப் பகுதியை (Barony of Seignelay) வாங்கினார். மாசரின் இறக்கும் தறுவாயில் கால்பெருக்கு ஆதரவளிக்கும்படி மன்னரை வேண்டினார். மன்னரும் கால்பெரைத் தமது நம்பிக்கைக்குரியவராக ஏற்றுக் கொண்டார். அது முதல் மன்னருக்கு உழைப்பதில் தமது ஆற்றல் முழுவதையும் செலுத்தி வந்தார். மன்னருடைய சொந்தக் காரியங்களில் மட்டுமன்றி, ஆட்சி முறை சார்ந்த செய்திகளிலும் கால்பெர் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

அச் சமயத்தில் நாட்டின் பொருளாதாரம் மிகவும் சீர்கெட்ட நிலையில் இருந்தது. அதனைச் சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்பது அவருடைய பேரவா. அதை நிறைவேற்ற முதலில் பிரஞ்சு நிதி நிருவாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டுவது அவசியமாகத் தோன்றியது. நிதி நிருவாகம் அப்போது நிகலசு பூகே (Nicholas Foquet) யின் பொறுப்பில் இருந்தது. அவர் வைத்திருந்த வரவு செலவுக் கணக்குகளில் முறைகேடுகள் பல இருப்பதை கால்பெர் கண்டறிந்து அவற்றை மன்னரிடம் கூறினார். பூகேயின் நிதி பற்றிய நடவடிக்கைகளின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார். அவற்றின் காரணமாக பூகே பெரும் பொருள் சம்பாதித்துவிட்டார் என்றும் மன்னருக்கு விளக்கினார். அதனால் மன்னர் பூகேயிடம் கொண்டிருந்த நம்பிக்கை குலைந்தது. அந்த நேரத்தில் பூகே மன்னரை வா லெ விகாம்டி (Vauy le Vicomte) யிலிருந்து தமது இல்லத்திற்கு வரும்படி அழைத்தார். அங்கே மன்னருக்கு ஆடம்பரமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு நடைபெற்ற விழாக்கள் பூகே சேர்த்து வைத்த பெரும் பொருளின் மதிப்பைஉணர்த்துவனவாக அமைந்தன. பூகேயைப் பற்றிக் கால்பெர் கூறிய செய்திகளை மெய்ப்பித்துக் காட்டுவனவாக அவை அமைந்திருந்தன.பொதுப் பணத்தைக்கொள்ளையடித்துப்பெரும் பொருள் சேர்த்துவிட்ட பூகே மீது மன்னருக்கு எரிச்சல் ஏற்பட்டது. உடனே அவரைக் கைது செய்யும்படி மன்னர் ஆணையிட்டார். அதையடுத்து அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கு மூன்று ஆண்டுகள் நடைபெற்றது. அவ்வழக்கிற்கும் கால்பெருக்குக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்றாலும் கால்பெர் அதில் தலையிட்டார்.அவ்வழக்கை தமது சொந்த விவகாரமாகக் கருதினார். பூகே வகித்திருந்த நிதியமைச்சர் பதவியைப் பெறவே கால்பெர் அவ்வாறு நடந்து கொண்டார். அதன் காரணமாக வழக்கு நியாயமான முறையில் நடத்தப் பெறவில்லை. பூகே குற்றவாளி என முடிவு செய்யப்பட்டது. தமது வாழ்நாளின் இறுதி 15 ஆண்டுகளை அவர் சிறையில் கழித்தார். பூகேயின் வீழ்ச்சிக்குப்

பிறகு நிதி நிருவாகம் ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. கால்பெர் அக்குழுவில் இடம் பெற்றார். அவர் கி.பி.1665-இல் நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

கால்பெர் தமது கவனத்தை வரி வசூலிப்புப் பற்றிய சிந்தனையில் செலவிட்டார்.வரி வசூல் செய்யும் உரிமை பெற்றவர்கள் அனைவரும் நேர்மையற்றவர்களாக இருப்பதை அவர் உணர்ந்தார். அதன் விளைவாக அவர்கள் மன்னருக்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தாமல் ஏமாற்றி வந்தனர் என்பதையும் அறிந்தார். ஆகவே, முதல் வேலையாக அவர்களை மிகக் கவனமாகக் கண்காணித்து வருவதற்கான திட்டத்தை ஏற்படுத்தினார். ஊழல் செய்து வந்த வரி வசூலிப்பாளர்களை அவர் இரக்கமின்றித் தண்டித்தார்.குறைந்த செலவில் வரி வசூல் செய்து வந்த அதிகாரிகளுக்குப் பரிசு அளித்தார். அதிகமாகச் செலவிட்டு வரி வசூல் செய்தவர்களைத் தண்டித்தார். சரியான கணக்குகளை வைத்திருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் முறையைப் புகுத்தினார்.வரவுக்கேற்ற செலவு செய்ய வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தினார். வரி வசூலிப்பாளர்களும், அரசுக்குக் கடன் கொடுத்தவர்களும் நாட்டுக் கருவூலத்திற்கு முன்பணம் செலுத்துவதன் வாயிலாகவும் கடன் கொடுப்பதன் வாயிலாகவும் கொள்ளை இலாபத்தை அடித்து வந்தனர். அவற்றை விசாரிக்க நீதிமன்றங்களை அமைத்தார். அவர்களுடைய கொள்ளை இலாபத்தில் ஒரு பங்கை அரசுக்குச் செலுத்துமாறு செய்தார். அதன் விளைவாக அரசினுடைய பொதுக் கடன் சுமை குறைந்தது. அரசு கொடுக்க வேண்டிய சில கடன்கள் நிராகரிக்கப்பட்டன. சில கடன்களை வட்டியின்றித் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் காரணமாகவும் அரசின் கடன் சுமை குறைந்தது.

நாட்டில் நெடுங்காலமாகப் பழக்கத்தில் இருந்த, சீர்கேடான நிலையில் இருந்த, வரி விதிப்பு முறையைச் சீர்செய்வதிலும் அவர் கவனத்தைச் செலுத்தினார். அரசருடைய வருவாயின் பெரும்பகுதி தெயில் (Taille) என்ற வரியின் வாயிலாகப் பெறப்பட்டது. தெயிலின் தன்மை இடத்திற்கு இடம் மாறுபட்டது. சில இடங்களில் அது நிலத்தின் மீது விதிக்கப்பட்டது. வேறு இடங்களில் உள்ளூர்ப் பேராளர் சபை அதனை வரையறுத்தது. பிரபுக்கள் மற்றும் குருமார்கள் உட்படப் பலர் அதைச் செலுத்துவதிலிருந்து விலக்குப் பெற்றிருந்தனர். நாளடைவில் விலக்கு உரிமை பெறாதவர்களும் விலக்குரிமையைப் பெற்றதாகக் கூறி, அவ்வரி செலுத்தாமல் அரசாங்கத்தை ஏமாற்றி வந்தனர். அதன் காரணமாக அரசாங்கத்தின் வருவாய் குறைந்து விட்டது. சாதாரண மக்கள் அவ்வரிச் சுமையை ஏற்க வேண்டியதாகி விட்டது. அவ்வரி கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் அனைவரிடமிருந்தும் அவ்வரியை வசூலிக்கக் கால்பெர் முனைந்தார். விலக்குரிமையைப் பெறத் தகுதியுள்ளவர்கள் யார் யார் என்பதைக் கண்டறிய ஒரு ஆய்வை நடத்தினார். பெருவாரியான பிரபுக்கள் தங்களுடைய உரிமையைத் தக்க சான்றுகளுடன் நிலைநாட்ட இயலவில்லை. அத்தகையோருடைய உரிமை நீக்கப்பட்டது. அவ்வரியை நல்லமுறையில் பங்கிட்டு அதனுடைய கடுமையைக் குறைத்தார். அந்த வரியின் வாயிலாகப் பெற வேண்டிய தொகையினைக் குறைத்தார். அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதனை முழுமையாகச் செலுத்துவதற்கான ஏற்பாட்டினையும் அவர் செய்தார். ஏனைய வரிகளை உயர்த்தினார். சுங்க வரியைத் திருத்தியமைத்தார். வரிவசூல் செய்வதில் காணப்பட்ட குறைகள் பல வற்றை நீக்கினார். வரி நிலுவையின் பொருட்டு ஒருவருடைய சொத்தைப் பறிமுதல் செய்வதையும், உழவர்களின் ஆடு மாடுகளையும், படுக்கைகளையும் பறிமுதல் செய்வதையும், வசூல் செய்த வரிப் பணத்தைக் குறித்த காலத்தில் செலுத்தாத அதிகாரிகளைச் சிறையில் இடுவதையும் அவர் நிறுத்தினார். மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளின் பயனாக அரசாங்க வருவாய் பெருகியது.

பிரஞ்சு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் கால்பெர் அரும்பாடுபட்டார். அவர் நிதி நிருவாகப் பொறுப்பேற்ற காலத்தில் பிரான்சு தொழில் வளம் நிறைந்த நாடாக விளங்கவில்லை. மக்களுக்கு வேண்டிய செயற்கைப் பொருள்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அதன் காரணமாகப் பன்னாட்டு வாணிகத்தில் பிரான்சின் பங்கு மிகமிகக் குறைவாக இருந்தது. அதன் விளைவாகப் பிரான்சின் ஆதிக்கமும் குறைந்திருந்தது. பிரான்சின் வலிமை உயர வேண்டுமெனில் பன்னாட்டு வாணிகத்தில் அதற்கிருந்த பங்கு பெருக வேண்டும் என்றும் பிரான்சிற்குப் போட்டியாக இருந்த ஆலந்து நாட்டின் வாணிகம் குறைய வேண்டும் என்றும் கால்பெர் அறிந்தார். ஆகவே, அவர் பிரஞ்சு மக்களை அவர்களுக்கு வேண்டிய பொருள்களை அவர்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்றும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கெனத் தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்யும்படியும் கேட்டுக் கொண்டார். பிரான்சு நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்களின் பட்டியல் ஒன்றை கி.பி. 1663-இல் வெளியிட்டார். நசித்துப் போன தொழில்களுக்குப் புத்

துயிர் ஊட்டினார். புதிய தொழில்களைத் தொடங்க முன்வருபவர்களுக்கு அரசு உதவித் தொகை அளித்தது. தனியார் தொழில்களுக்குச் சலுகைகளை அளித்தது. சில தொழில்களை அரசே ஏற்று நடத்தியது. வெளிநாடுகளிலிருந்து பிரான்சுக்கு வந்து தங்கித் தொழில் தொடங்க முன் வருபவர்களுக்கு அரசாங்கம் பரிசு வழங்கியது. தொழில் துறையில் ஈடுபட்டிருந்த பிரஞ்சுக்காரர்கள் வெளிநாடு செல்வதைக் கால்பெர் தடுத்தார். பிரெஞ்சு நாட்டின் தொழில் நுணுக்கங்களை அந்நிய நாட்டிற்கு விற்கும் பிரெஞ்சுக்காரர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளானார்கள். பிரெஞ்சு மக்கள் சோம்பேறிகளாக வாழ்வதைத் தடுத்தார். தொழில் வளம் பெருக விடுமுறை நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. அந்நிய நாட்டினர் பிரெஞ்சுப் பொருள்களை விரும்பி வாங்க வேண்டும் என்பதற்காகத் தரமான பொருள்களை உற்பத்தி செய்யப் பல விதிமுறைகளைக் கொண்டுவந்தார். அவற்றைச் செயலாற்றாத பல மேற்பார்வையாளர்களைத் தண்டித்தார். உள்நாட்டுத் தொழில்களைக் காப்பாற்றும் நோக்குடன் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் மீது அவர் காப்பு வரியை விதித்தார். பிரான்சிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களின் மீதான சுங்க வரியைக் குறைத்து ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியை ஊக்குவித்தார். இவ்வாறாக மற்ற நாடுகளின் வாணிகத்தைக் குறைத்துத் தம் நாட்டினுடைய பன்னாட்டு வாணிகத்தைக் கால்பெர் பெருக்க முற்பட்டார். ஆகவேதான், அத்தகைய பொருளாதாரக் கொள்கை அவர் பெயரால் 'கால்பெரியம்' எனச் சொல்லப்பட்டது.

பிரெஞ்சு நாட்டின் பன்னாட்டு வாணிகப் பெருக்கத்திற்கு ஏனைய வழிமுறைகளையும் கையாண்டார். இங்கிலாந்து, மற்றும் ஆலந்து நாடுகள் வாணிகக் குழுக்களை ஏற்படுத்தியிருந்தது போலக் கால்பெரும் பல குழுக்களை நிறுவினார். பால்டிக்குக் கடல், மத்திய தரைக்கடல், இந்தியக் கடல், அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் வாணிகம் செய்வதற்காக வாணிகக் கழகங்கள் தொடங்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானது பிரஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழுவும் மேற்கு இந்தியக் குழுவும் ஆகும். அயல்நாடுகளில் பிரெஞ்சுக் குடியேற்றங்களை அமைப்பதற்கும் திட்டம் வகுத்தார். இவர் காலத்தில்தான் கனடாவில் பிரெஞ்சுக் குடியேற்றங்களை அமைப்பதில் அதிக அக்கறை காட்டப்பட்டது. அந்த நாட்டிற்குக் காலாட்படை வீரர்களை அனுப்பி, நிலமானிய முறை அடிப்படையில் அங்குக் குடியேறச் செய்தார். பெண்களையும் ஒரு கப்பலில் ஏற்றி அனுப்பி அங்குக் குடியேறிய திருமணமாகாப் படைவீரர்களை மணம் செய்து கொள்ளச் செய்தார். இக்குடியேற்றங்கள் பிரஞ்சு நாட்டில் உற்பத்தி செய்த பொருள்களுக்குச் சிறந்த அங்காடிகளாகவும், பிரெஞ்சுத் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தந்துதவும் இடங்களாகவும் விளங்கலாயின.

வாணிகப் பெருக்கத்திற்குக் கப்பல்கள் இன்றியமையாதனவெனக் கால்பெர் உணர்ந்தார். கப்பல் கட்டுவதற்கான நிறுவனங்கள் ஏற்பட அவர் ஊக்கமளித்தார். உள்நாட்டில் கட்டப்பட்ட கப்பல்களுக்குப் பரிசுகள் அளித்தார். அயல் நாட்டில் கட்டப்பட்ட கப்பல் மீது வரி விதித்தார். பிரஞ்சுக்காரர்களின் அயல் நாட்டு வாணிகத்தையும், குடியேற்றங்களையும் தக்கவாறு பாதுகாக்கப் பலம் பொருந்திய கடற்படை அவசியம் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். ஆகவே, அத்தகைய கடற்படையை உருவாக்க முயற்சி மேற்கொண்டார். கடற்படை அமைச்சர் என்ற வகையில் பிரான்சின் கடலாதிக்கத்தைப் பெருக்க முற்பட்டார். அவர் போர்க் கப்பல்களைக் கட்டுவித்தார்; துறைமுகங்களுக்குப் பாதுகாப்பளித்தார். பாய்மரம் கொண்ட கப்பல்கள் அடங்கிய அட்லாண்டிக்குக் கப்பற்படையும், குட்டையான சிறைக் கப்பல்களைக் (Galleys) கொண்ட மத்தியதரைக் கப்பற்படையும் உருவாக்கப்பட்டன. அட்லாண்டிக்குப் படையை நடத்தக் கப்பலோட்டுவதையே தொழிலாகக் கொண்ட மாலுமிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் யாவரும் அரசருடைய சேவையை ஏற்றுக் கொண்டதாக ஒப்பந்தம் செய்து கொடுத்தனர். மத்திய தரைக் கடற்படை தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைக் கொண்டு நடத்தப்பட்டது. சாதாரணக் குற்றவாளிக்குக் கப்பற்படைச் சேவையைத் தண்டனையாக வழங்கும்படி நீதிபதிகளைக் கால்பெர் கேட்டுக் கொண்டார். அயல்நாட்டுக் கப்பல்களில் பிரஞ்சு மாலுமிகள் பணி செய்வது தடை செய்யப்பட்டது. அதை மீறுபவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது. முதன் முதல் இருபதே கப்பல்கள் கொண்டிருந்த கப்பற் படை கி.பி. 1667-இல் 270 கப்பல்களைக் கொண்டதாயிற்று. கப்பற் படைப் பயிற்சிப் பள்ளிகளையும் படைக் கொட்டில்களையும் அமைத்தார். தூலோன் (Toulon) படைக்கலச் சாலையைத் திருத்தியமைத்தார். இராக்கு போர்ட்டில் (Rockefort) துறைமுகத்தையும், படைக்கலச் சாலையையும் அமைத்தார். பயிற்சிப் பள்ளிகளை இராக்போர்ட்டு, தியெப்பு (Dieppe), புனித மாலோ (St. Malo) ஆகிய இடங்களில் அமைத்தார். கலே (Calai), தன்கர்க்கு (Dunkirk), பிரசுட்டு (Brest) ஆகியவற்றில் அரண் அமைத்தார். கப்பல் கட்டுதற்கு மரம் அவசியம் என்பதை அறிந்த கால்பெர் காடுகளைப் பராமரிப்பதிலும் தமது கவனத்தைச் செலுத்தினார்,

உள்நாட்டு வாணிகத்தைப் பெருக்குவதிலும் கால்பெர் கவனம் செலுத்தினார். சாலைகளைத் திருத்தியமைத்தார். உரோமானியர்களுக்குப் பிறகு சாலைகளை அமைப்பதிலும் பராமரிப்பதிலும் அக்கறை கொண்டவர் அவரே. கால்வாய்கள் பல வெட்டும்படி அவர் ஆணையிட்டார். அவற்றுள் முக்கியமானது இலாங்யூடாக்குக் கால்வாய் (Canal Longuedoc) ஆகும். உள்நாட்டு வாணிக வளர்ச்சிக்குத் தடையாக இருந்த பலதிறப்பட்ட சுங்க வரிமுறைகளைத் திருத்தி ஒரே சீரான முறையைப் புகுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.

வேளாண்மை வளர்ச்சியிலும் கால்பெர் மிகுந்த கவனத்தைச் செலுத்தினார். குறிப்பாக, குதிரை வளர்ப்பில் மிக்க ஆர்வத்தைக் காட்டினார். புதிய பயிர்களைப் பயிர் செய்யும்படி மக்களைத் தூண்டினார்.

கால்பெரினுடைய நிதி மற்றும் பொருளாதாரம் பற்றிய நடவடிக்கைகள் சிலவற்றை வணிகர்களும் ஒப்பந்தக்காரர்களும் எதிர்த்தனர். அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட விரும்பியமையால் கால்பெரின் கட்டுப்பாடுகளை விரும்பவில்லை. ஒரு சில மக்கள் தங்களுடைய மூலதனத்தைத் தைரியமாகப் புதிய தொழில்களில் போட விரும்பவில்லை. அதற்கு மாறாக வட்டிக்குக் கொடுத்தல், நிலத்தில் முதலீடு செய்தல் போன்ற பழைய முறைகளைப் பின்பற்றினர். கால்பெரின் காலத்தில் உலக முழுவதிலும் விலைவாசி குறைந்து வந்தது. அதன் காரணமாக கால்பெரின் நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. மேலும் அவருடைய சீர்திருத்தங்கள் முழுமையான பலனை அளிக்க வேண்டுமெனில் நாட்டில் அமைதி நிலவ வேண்டுவது அவசியமாக இருந்தது. ஆனால், பதினான்காம் உலூயி பல போர்களில் நாட்டை ஈடுபடுத்தினார். தேசிய வருவாயின் பெரும் பகுதி போர்களுக்குச் செலவிடப்பட்டது. இத்துணை இடர்ப்பாடுகளுக்கிடையே நாட்டின் பொருள் உற்பத்தியைப் பெருக்கினார். புதிய நிரந்தரமான தொழில்களை ஏற்படுத்தினார். போக்குவரத்துச் சாதனங்களான சாலைகளையும் கால்வாய்களையும் பெருக்கினார் என்றால், அது அவருடைய பொருளாதாரத் திட்டங்களின் மேன்மைக் காரணமேயன்றி வேறன்று.

வேறு துறைகளிலும் கால்பெர் சீரிய பணியாற்றியுள்ளார். நீதிச் சிக்கல்கள் தொடங்கி உலூயியினுடைய சட்டமுறையற்ற குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் பணிவரை எல்லாத் துறைகளிலும் கால்பெர் ஈடுபட்டிருந்தார். நீதித் துறையில் மலிந்திருந்த குறைகளை நீக்கினார். நாட்டு அமைதியைக் குலைக்க முற்பட்டவர்களைக் கடுமையாகத் தண்டித்தார். வழக்கு விசாரணை நல்ல முறையில் நடக்கப் பல அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்தார். அவற்றை உலூயி சட்டத் தொகுதி (Code Louis) என்பர். நெப்போலியனுடைய சட்டத் தொகுதி நடைமுறைக்கு வரும் வரை இத்தொகுதி ஏற்படுத்திய நடைமுறைகளையே பிரஞ்சு நீதிமன்றங்கள் கடைப்பிடித்து வந்தன.

கால்பெர் கி.பி. 1669-இல் அரசருடைய அரண்மனை அமைச்சர் பொறுப்பேற்றார். அதன் காரணமாக நாட்டின் கலை மற்றும் அறிவுத்துறை வளர்ச்சிக்கும் அவர் பொறுப்பு வகிக்க நேர்ந்தது. அப்பொறுப்பை நிறைவேற்றும்போது பிரான்சின் பலம் மற்றும் பெருமை ஆகியவற்றின் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டார். பிரஞ்சுக் கழகத்தின் (French Academy) உறுப்பினராக இருந்த கால்பெர் அரசருடைய வெற்றிகளைக் கொண்டாடும் வகையில் கட்டப்படவிருந்த கட்டடங்கள், வெளியிடப்பட்டிருந்த பதக்கங்கள் ஆகியவற்றில் பொறிக்கப்பட வேண்டிய செய்திகளைத் தேர்ந்தெடுக்க ஒரு கழகத்தை கி.பி. 1663-இல் நிறுவினார். அறிவியல் பாடங்களைப் பயன்படுத்துவதற்கு கி.பி. 1666-இல் அறிவியல் கழகத்தைத் (Academy of Sciences) தோற்றுவித்தார். கட்டடம் எழுப்புவதற்குரிய விதிகளை வரையறுக்க அரசு கட்டடக் கழகத்தை (Royal Academy of Architecture) கி.பி. 1671-இல் நிறுவினார். உரோமாபுரியில் பிரான்சு நாட்டுக் கழகம் (Academy of France) ஒன்றை நிறுவினார். அக்கழகத்திலும் அது போன்ற வேறு பல பள்ளிகளிலும் கலைஞர்களுக்குத் திறமையுள்ள ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. கீழை நாட்டு மொழிகளைக் கற்றுத்தர பள்ளி ஒன்று நிறுவப்பட்டது. கால்பெரின் தூண்டுதலின் பேரில்தான் வானியல் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று பாரிசில் (Observatory of Paris) அமைக்கப்பட்டது. இத்தாலிய நாட்டு வானியல் வல்லுநரான கியோவன்னி காசினி (Giovanni Cassini) அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கால்பெர் கி.பி. 1683-இல் பாரிசில் இறந்தார். அவர் பெருஞ் செல்வத்தை ஈட்டியிருந்தமையால் குடும்பத்தினருக்கு யாதொரு குறையும் ஏற்படவில்லை. மூத்த மகன் சான்-ப-திசு கப்பற்படை அமைச்சராக நியமிக்கப்பட்டார். இரண்டாம் மகன் சாக்கே நிகலசு (Jacques Nicholas) உரூவன் நகரின் தலைமை மதக் குருவாக நியமிக்கப்பட்டார். நான்காம் மகன் சூலே அர்மண்டு (Jules Armand) கட்டுமானப் பணி அமைச்சராக (Minister of Construction)

அமர்த்தப்பட்டார் அவர்தம் மூன்று பெண்மக்களும் பிரபுக்களுக்கு மணமுடித்து வைக்கப்பட்டனர். மன்னரைப் பொறுத்த அளவில் அடக்குமுறை வழிகளைக் கையாண்டும், நடுநிலையுடன் கூடிய ஆட்சியை நடத்தியும் அவரை மேலும் வலிமையுள்ள அரசராக விளங்கச் செய்தார். தி.ஆர்.இரா.

**கால்மார்** சுவீடன் நாட்டிலுள்ள துறைமுகம். கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்தே வாணிகத்திற்குப் பெயர் பெற்ற கால்மார் (Kalmar) 1975-ஆம் ஆண்டு முதல் புதிய அமைப்பைப் பெற்று ஒரு தலைசிறந்த தொழில் மையமாகவும் வாணிக நிலையமாகவும் விளங்குகிறது. நெருப்புக் குச்சிகள், கண்ணாடி, பதனம் செய்யப்பட்ட உணவு வகைகள் முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. கப்பல் கட்டும் தொழிலும் நடைபெறுகிறது. சுற்றுலாப் பயணிகள் இங்கு மிகுதியாக வருகின்றனர். இது சுவீடனின் தென்கிழக்குப் பகுதியில் உள்ளது. தெ.பா.

**கால்மார் ஐக்கியம்**: ஐரோப்பாவில், நார்வே சுவீடன், தென்மார்க்கு (Denmark) ஆகிய மூன்று நாடுகளையும் ஒற்றுமைப்படுத்தி ஓர் ஐக்கிய உடன்பாடு கி.பி. 1397-இல் சுவீடனைச் சேர்ந்த துறைமுகப்பட்டினமான கால்மார் என்னுமிடத்தில் செய்து கொள்ளப்பட்டது. இதுவே கால்மார் ஐக்கியம் எனப்படும். இது கி.பி. 1523-ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது. மேலே கூறிய மூன்று நாடுகளின் அரசியல் ஆலோசனைச் சபைகளும் இதை ஒரு மனமாக ஏற்றுக் கொண்டு ஆதரித்தன. ஒரு கிறித்தவத் திருச்சபையில் இது கையெழுத்திடப்பட்டதால் இதற்குச் சிறப்பு மிகுதியாக இருந்தது. இந்தக் கால்மார் ஐக்கியத்தின் ஆட்சியாளராகத் தென்மார்க்கின் அரசி மார்கரெட்டும், பிறகு அவளுடைய குலவழியினரும் இருப்பர் என்று முடிவு செய்யப் பெற்றது. மார்கரெட்டு முன்னமேயே நார்வே மன்னனை மணந்திருந்ததாலும், சுவீடனின் அரசனை மார்கரெட்டு தோற்கடித்திருந்ததாலும் இந்த ஐக்கிய உடன்படிக்கை சாத்தியமாயிற்று. சுவீடன் நாட்டில் பெண் அரசுரிமையைப் பெறலாகாது என்ற சட்டம் நிலவி வந்ததால், அந்த இடையூற்றைக் களைய, மார்கரெட்டு தன்னுடைய குலவழியைச் சேர்ந்த எரிக்கு (Eric) என்ற சிறுவனைச் சுவீடனின் மன்னனாக முடிசூட்டுவித்தாள். ஐக்கியம் பாதிக்கப்படவில்லை. இந்த ஐக்கியத்திற்கு மூல காரணமாக இருந்த ஒரு கோட்பாடு, இசுகாண்டிநேவிய (Scandinavia) நாடுகளான, நார்வே, சுவீடன், தென்மார்க்கு ஆகிய மூன்றும் ஒன்றுபட வேண்டுமென்பதே. ஆனால், சுவீடன் நாட்டு மக்கள் யாவருக்கும் இந்த ஐக்கியம் மகிழ்ச்சி அளிக்கவில்லை. தம்முடைய சுதந்திரத்திற்கு ஐக்கிய ஆட்சி தீமை விளைவிக்கக் கூடுமென்று அவர்கள் அஞ்சினர். பல கலகங்களையும் அவர்கள் செய்தனர். ஆனால், அவை அடக்கப்பட்டு விட்டன. பிறகு கி.பி. 1523-இல் சுவீடனின் வாசாகுலத்தைச் சேர்ந்த கசுதாவசு என்பானின் புரட்சிக் கலகம் வெற்றி பெற்றுவிட்டது. ஐக்கிய ஆட்சியை முடிவுறச் செய்து அவன், தன்னைச் சுவீடனின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். தெ.பா.

**கால்மிக்கு** மக்கள் சோவியத்து ஒன்றியத்தில் வாழும் தொன்மையான இனத்தவர்களுள் ஒரு குடியினர். இவர்கள் மங்கோலியர். வால்கா ஆற்றின் வடகரையிலுள்ள காசுபியன் (Caspian), தாழ்நிலப் பகுதிகளில் கால்மிக்கு (Kalmyk) இனத்தவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் கி.பி 17-ஆம் நூற்றாண்டில் நடு ஆசியாவிலிருந்து வால்கா ஆற்றங்கரைப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மங்கோலிய இனத்தவர்களின் வழிவந்தவர்கள்.

துருக்கியச் சொல்லான கால்மிக்கு என்பதற்கு 'எஞ்சியுள்ள சிலர்' என்பது பொருளாகும். இவர்கள் கால்மக்கு (Kalmuck) என்றும் கூறப்படுவர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வால்கா ஆற்றின் இரு கரைகளிலும் வந்து சேர்ந்த மங்கோலியர்களுள் இடக்கரையில் இருந்தவர்கள் மீண்டும் நடு ஆசியாவிற்குத் திரும்பிவிட்டனர். வடகரையில் எஞ்சியிருந்தவர்கள் (கால்மிக்கு) அங்கேயே தங்கிவிட்டனர். ஆதலின் எஞ்சியுள்ள சிலர் என்னும் பொருளில் இவர்கள் கால்மிக்கு எனப்பட்டனர்.

கால்மிக்கு இனத்தவர்கள் புத்த சமயத்தைச் சேர்ந்த சிறுபான்மையினராக இருந்ததால் அப்போதைய உருசிய அரசுபிற சிறுபான்மையினருக்குஅளித்திருந்த சலுகைகளைக் கொடுத்துத்தன்னாட்சிஉரிமையையும் அளித்தது. இரண்டாம் உலகப் போரின் போது கால்மிக்குகள் செருமானியருடன் தொடர்புற்றிருந்த காரணத்தால் இவர்களின் தன்னாட்சி உரிமையை இசுடாலின்(Stalin) 1943-இல் நீக்கினார். அதன் பின்னர் இசுடாலினால் இவர்கள் சோவியத்து நடு ஆசியப் பகுதிக்கு நாடு கடத்தப்பட்டனர். இசுடாலினுக்குப் பின் வந்தவர்கள் தாராள மனப்பான்மையுடன் இவர்களை மீண்டும் அவர்களது பகுதிகளுக்கு 1957 சனவரியில் குடியேற்றினர். சீ.ப.

**கால்வழி** என்பது ஆண், பெண் ஆகியோருள் ஏதேனும் ஒருவரைக் கொண்டு தங்கள் குடிவழியைக் குறிப்பிடும் உறவுக் கூட்டமாகும். ஒரு குழுவினர் தங்கள் குடிவழி உறவைத் தந்தை மூலம் குறிப்பிடுவார்களேயானால் அக்குழுவினர் தந்தை கால்வழி

யினர் (Patrilineage) எனவும், தாய் மூலம் குறிப்பிடு வார்களேயானால் அவர்கள் தாய்க் கால்வழியினர் (Matrilineage) எனவும் கூறப்படுவர். ஒவ்வொரு கால்வழியினரும் தெரிந்த மூதாதையரிடமிருந்து தோன்றியவர்கள்.

தந்தை கால்வழிக் குழுவினர் தம் குடிவழியை முப்பாட்டன், பாட்டன், தந்தை, மகன், பேரன் கொள்ளுப்பேரன் ஆகியவழியில் தம் உறவினைத் தொடர்புபடுத்துவர். இதில் ஒருவனின் சகோதரர்கள், சகோதரிகள், சகோதரனின் மக்கள், தன்மக்கள் ஆகியோரும் அடங்குவர். சகோதரியின் மக்கள் இக் குழுவில் இடம் பெறமாட்டார்கள்.

தந்தை கால்வழி மரபினைச் சேர்ந்தவர்களிடம் மரபுரிமை ஆண்கள் வழிமட்டுமே செல்லக் கூடியது. ஒரு சில கால கட்டத்தில் பெண்களுக்கும் மரபுரிமை கொடுக்கப்படுகிறது. தந்தை கால்வழி மரபில் பொதுவாக ஆண்மக்கள் அவர் மனைவி, மக்கள் ஆகியோர் மீது அதிகாரம் செலுத்தும் நிலையைக் கொண்டிருப்பர். திருமணத்திற்குப்பின் மணமக்கள் தந்தையகத்தில் வாழும் முறையைப் பெரும்பாலாகக் கொண்டிருப்பர். அதனால் மணப்பெண் புதிய மக்களிடம் வாழ வேண்டியுள்ளதால் பெண்களிடையே அதிகாரத் தன்மை வளர வாய்ப்பில்லை. குடும்பத்தின் பெயரும் ஆண்வழியிலேயே அமையும்.

தாய் கால்வழியினர் முப்பாட்டி, பாட்டி, தாய் ஆகியோருடன் ஒருத்தியின் சகோதரர்கள், சகோதரிகள், சகோதரியின் மக்கள் எனப் பெண்வழியை முதன்மையாகக் கொண்டு அடுத்தடுத்த பெண்வழித் தலைமுறையினரோடு தமது குடிவழியைக் குறிப்பிடுவர். சகோதரர்களின் மக்கள் தாய்க் கால்வழியில் இடம்பெறுவதில்லை. இவ்வகைச் சமுதாய அமைப்பில் தாய் அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருப்பாள். ஆண்களுக்கும் அதிகாரமில்லை. ஒரு சில கால கட்டத்தில் குறைந்த அளவு அதிகாரம் ஆண்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தாய் வழியிலேயே மரபுரிமையும் செல்கிறது. ஒரு குடும்பத்தில்தாயின் அனைத்து அதிகாரங்களையும் தாய் மாமன் செயற்படுத்தும் உரிமையுடையவர். மணமான தம்பதியினர் தாயக உறைவிடத்தைப் பெரும்பாலாகக் கொண்டிருப்பர்.

கால்வழி அமைப்பினைச் சமுதாய அமைப்பின் ஒரு சிறு கூறு என்று கூறலாம். ஒரு கால்வழியில் பல கிளைக் கால்வழிக் குழுக்களும் (Segmentary Lineges) இருக்கலாம். இந்த அமைப்பு சமுதாயத்தில் நெருக்கமான உறவுடைய உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கூட்டமைந்து வாழ வகை செய்கிறது; திருமண உறவையும் நெறிப்படுத்துகிறது. ஆட்சியமைப்பில் எளிய முறையினைக் கொண்டுள்ள பழங்குடிகளிடையே கால்வழி அமைப்பானது சமுதாயத்தின் அனைத்து அமைப்பிலும்தனித்துக் கூட்டமாகச் செயற்படுகிறது. தலைவன் இல்லாத பழங்குடிகளிடையே அரசியல் முறையானது அந்தந்த வட்டார மக்களால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த வட்டார மக்கள் பொதுவாக ஒரு கால்வழியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். சீ.ப.

**கால்வின் கோட்பாடு**:சான் கால்வின் என்ற பிரெஞ்சு இறை இயலார்(Theologian)வகுத்த ஒழுக்க, சமூகக் கருத்துகளின் தொகுப்பு கால்வின் கோட்பாடு அல்லது கால்வின் நெறி (Calvinism) என்று கூறப்படுகிறது.



கால்வின், சான்

சான் கால்வின் (John Calvin) பிரான்சில் ஓர் உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவக் குடும்பத்தில் காவின் சீயேன் தம்பதிகளுக்கு மகனாக கி. பி. 1509 -இல் பிறந்தார்.இளமையில் பலபிரெஞ்சுப் பிரபுக்களுடைய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களோடு பள்ளியில் படித்தபின், கி.பி. 1523-இல் பாரிசுப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து இறை இயல், தருக்கம் முதலியன பயின்றார். இவர் மிகவும் கடுமையான வாழ்க்கை முறைகளைப் பின்பற்றினாலும், இவருக்கு நல்ல பல நண்பர்கள் கிடைத்தனர். பின்னர் ஆர்லியன்சு நகரத்தில் தம் தகப்பனார் விரும்பியவாறு சட்டக் கல்வி பெற்றார். அங்குக் கிரேக்க மொழியும், மனிதப்பற்று நெறியையும் கற்றறிந்து, இலத்தீனில் ஒரு கட்டுரை எழுதி அதில் பிரஞ்சுச் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்குச் சமய உரிமை வழங்குதல் வேண்டுமென்று வற்புறுத்தி, 'இரக்கம்' (De Clementia) என்ற தலைப்பில் பிரெஞ்சு அரசர் முதலாம்

பிரான்சிசுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதில் இவர் பண்டைய உரோமானிய இன்ப-துன்ப நடுநிலைக் கோட்பாட்டைப் (Stoicism) புகழ்ந்து, கிறித்தவ நெறிமீது தமக்கு உள்ள இயல்பான விருப்பத்தை வெளிப்படுத்தினார். கலை மறுமலர்ச்சியினால் தோற்றுவிக்கப்பட்ட மனிதப்பற்றுடன், சமய, ஒழுக்கக் கோட்பாடுகளை ஆராயும் போக்கு இவரிடம் வளர்ந்தது. போப்பினுடைய தலைமையை ஒருமூடப் பழக்கமென இவர் வெறுத்து, மறுத்து, கி.பி. 1534-இல் இவர் பிறழாத, சீர்திருத்தக் கிறித்தவரா யினார். சமயச் சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கிய மார்ட்டின் உலூதருடைய கோட்பாடுகளை ஆதரித்த கால்வினும், இவர் நண்பர்களும் பாரிசுச் சார்போர்ன் பல்கலைக்கழகத்தில் எதிர்ப்புக்குள்ளாகவே, பிரஞ்சுக் கிறித்தவக் திருச்சபையைச் சீர்திருத்தும் நோக்கத்தை விடுத்துப் பாரிசை விட்டு நீங்கினர். நொயோனில் கால்வின் தமக்கு அளிக்கப்பட்டிருந்த மானியங்களைத் துறந்துவிட்டுப் போப்பின் நிலையை மறுத்து, விவிலிய நூலொன்றையே மேற்கொண்ட கிறித்தவ நெறியினரை அரசின் தண்டனைகளிலிருந்து மீட்கும் பொருட்டு உழைத்தார். இவர் மக்களுக்குத் தலைமை ஏற்காமல், கிறித்தவ மறையைக் கற்றுணர்ந்து தூய சமயக் கோட்பாடுகளைப் பரப்புவதில் முனைந்தார். எனவே, சமயப் போர்களினால் துன்புற்றோர் பலரும் பல நாடுகளிலிருந்து இவரை நாடி வந்தனர். புதிய, சீர்திருத்தம் செய்யப் பெற்ற கிறித்தவ நெறியாளருக்காகப் பிரெஞ்சில் மொழி பெயர்க்கப்பட்ட விவிலிய நூலுக்குக் கால்வின் முன்னுரை எழுதினார். சீர்திருத்தக் கிறித்தவர்மீது இரக்கம் காட்டுதல் வேண்டுமென்று பிரெஞ்சு அரசர் முதலாம் பிரான்சிசுக்குக் காணிக்கையாக இலத்தீனில் கி.பி. 1536-இல் கிறித்தவ நெறிக் கோட்பாடுகள் (Institutes of Christian Religion) என்ற நூலை எழுதினார். பாரிசில் இவர் தம் தாய உரிமைச் சொத்துகளை ஒழுங்கு செய்துவிட்டு, நூலெழுதும் பணியைத் தொடங்குதற்காக, இசுடிராசுபர்கு (Strasburg) நகரத்துக்குப் புறப்படுகையில் பிரெஞ்சு அரசர் முதலாம் பிரான்சிசுக்கும், பேரரசர் ஐந்தாம் சார்லசுக்குமிடையே போர் தொடங்கவே, கால்வின் தாம் செல்ல எண்ணிய நேர்வழியை விடுத்துச் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள செனிவா (Geneva) நகரத்துக்கு வந்தார். அங்குச் சீர்திருத்த இயக்கத்தை நடத்தியோர் கால்வினைத் தம் இயக்கத் தலைவராக ஏற்று அங்கேயே தங்குமாறு செய்தனர். அவர்கள் விவிலியம் ஒன்றையே பின்பற்றி, பாரல் என்பாருடைய (Farel) தலைமையில் செனிவாவில் தம் நெறியைப் பரப்பிப் போப்பின் தலைமையை மீண்டும் நிறுவ முயன்ற செனிவா ஆயரை நாட்டைவிட்டு நீங்கச் செய்தனர். அங்குள்ள கோவில்களெல்லாம் விவிலிய மறையை மட்டுமே கற்பித்தன. விவிலிய நெறிப்படி வாழவும், சிலை வழிபாட்டை விடுக்கவும், எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரு பள்ளிக் கூடத்தை நிறுவவும் அந்நகர மக்கள் முடிவுசெய்தனர். அங்கு வந்த கால்வின் புனித பாலின் கருத்துகளைப் பற்றி ஓர் அரிய உரையாற்றி, மக்களுடைய ஆதரவைப் பெற்றார். அந்நகரத்தை கி. பி. 1537-இல் ஆண்ட சிறுமன்றம் (Little Council) கால்வினும், பாரலும், சமயச் சீர்திருத்தத்துக்காகத் தொகுத்த விதிகளையெல்லாம் ஏற்று, ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மேற்பார்வை செய்தற்காக மேலாளர்களை (Supervisors) அமர்த்திற்று, யாவரும் இந்நெறியில் நம்பிக்கை உடையவர்களாக உறுதி கூறவும், குழந்தைகள் துதிப்பாடல்களைப் பாடுதற்கும், திருமணங்களை முறைப்படுத்துதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. செனிவாவில் எதிர்ப்புத் தோன்றிய போது சிறிதுகாலம் கால்வினும் பாரலும் இசுடிராசுபர்கில் சீர்திருத்த இயக்கப் பணி செய்தனர். கால்வின் கி.பி. 1540-இல் இடெலட் என்ற மணமுறிவு பெற்ற ஒரு பெண்ணை மணந்து, ஒரு குழந்தைக்குத் தந்தை ஆனார். அக்குழந்தை இறந்தது. செனிவாவில் மக்களை மீண்டும் உரோமானியக் கிறித்தவ நெறிக்குத் திரும்பி வருமாறு கேட்டு உயர்குரு (Cardinal) சடலெட்டோ என்பவர் அழைப்பு விடுக்க அதற்கு விடை கூறுமாறு மக்கள் கால்வினை மீண்டும் அழைத்து வந்தனர். கால்வின் கி.பி. 1541-இல் திரும்பி வந்து, ஒழுக்க விதிகளும், சமய உரையாற்றலும், வழிபாடும், செய்யப்படுதற்கான முறைகளைத் 'திருச்சபை ஆணைகளாக' (Ecclesiastical Ordinances) வகுக்க, அவற்றைச் சிறுமன்றம் ஆய்ந்தபின் செயற்படுத்துதற்கு ஆசிரியர்களையும் குருமாரையும் பெரியோரையும் அமர்த்திற்று. பெரியோர்களும் (Elders) குருமாரும் நகர மன்றத்தில் ஒரு கட்டுப்பாட்டு நீதிமன்றமாகக் கூடி, ஒழுக்க விதிகளை மீறியோருக்குத் தண்டனைகள் வழங்கினர். தலைமை நீதிபதி தலைமை தாங்கினாலும், கால்வினின் கருத்துகளுக்குக் கட்டுப்பட்டே, செனிவாத் திருச்சபையும், நகரமக்களும் இருந்தனர். குற்றவாளிகள் முதலில் எச்சரிக்கப்பட்டனர். ஒழுக்க விதிகள் கடுமையாகக் கையாளப்பட்டுச் சூதாட்டம், கள்ளுண்ணல், நடனங்கள், பொருளற்ற பாடல்கள் ஆகியன தண்டனைக்குள்ளாயின. பல எதிர்ப்புகளுக்கிடையே கால்வின் தம் கருத்துகளைப் பரப்பினார். நகரமன்றத்திலும் சிறு மன்றத்திலும் ஆண்டுதோறும் நடைபெறும் தேர்தல்களிலும், அரசாங்கத்திலும் பங்கு எடுத்துக் கொள்ளாமல், கால்வின் அங்கு வந்து குடியேறிய பிரெஞ்சுச் சீர்திருத்தக் கிறித்தவ அகதிகளின் துணையினால் தம் நிலையைப் பாதுகாத்துக் கொண்டு தம் எதிரிகளை நாடு கடத்தியும்,

கொலைத் தண்டனை பெறச் செய்தும் ஒழித்தார். செவரட்டசு என்பவரை ஒழிப்பதில் கால்வின் ஈடு பட்டது அவருடைய புகழுக்கு மாசு ஆகும். எழுதியும் உரையாற்றியும் செனிவாத் திருச்சபைக்காகவும் நகரத்துக்காகவும் கால்வின் இடையறாது உழைத்து, கி.பி. 1564-இல் செனிவாவில் மறைந்தார்.

**சமயக் கருத்துகளும் அரசியற் கோட்பாடும்:** கால்வின் கிறித்தவ மறையின் புதிய ஏற்பாட்டின் (New Testament) முதல் நான்கு சமய நல்லுரைகளையே (Four Gospels) ஒவ்வொரு கிறித்தவரும் முழு உண்மைகளாக ஏற்றுக் கொண்டு, நம்பி, அவற்றில் கூறப்பட்ட அறவிதிகளின்படியே சிறிதும் வழுவாமல் அக வாழ்க்கையையும் புற வாழ்க்கையையும் நடத்துதல் வேண்டுமென்று, கடுமையான தண்டனைகளை விதிகளாக உடைய நெறிமுறைகளை வகுத்தார். விவிலிய சமய நல்லுரைகளில் பற்றுடன் இருத்தல்தான் ஒவ்வொருவருக்குமுள்ள சுதந்திரம் ஆகும். இந்த நெறிமுறைகளினின்றும் சிறிது வழுவியோருக்கும் செனிவா மறுப்புத் திருச்சபையும்(Protestant Church), நகரமன்றமும் கடுந்தண்டனைகள் விதித்தன. ஒவ்வொரு சீர்திருத்தக் கிறித்தவருடைய நடவடிக்கைகளும் நகர அரசாங்க ஒற்றர்களால் கண்காணிக்கப்பட்டு, நகர அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டன; ஆகையால், கால்வினிய நெறிகளைச் செயற்படுத்துவதில் கால்வினியக் கோயிலதிகாரிகள் நகர அரசாங்க மன்றத்திலும்(Consistory) இடம் பெற்றிருந்தனர். இவ்வாறு, சமய நெறிமுறையோடிணைந்த ஆட்சிமுறையைக் கால்வின் செனிவாவில் சீர்திருத்தக் கிறித்தவ மக்களுடைய முழு ஒத்துழைப்போடு நிறுவிய காரணத்தால், இவருடைய இறைநெறி சட்டஇயல்போடும், அதிகார உணர்வுமிக்கும் இருந்தது. இதனால், ஒவ்வொரு குடியாளுக்கும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பின்றிக் கீழ்ப்படியும் கடமை இருக்கிறது என்று இவர் வற்புறுத்தினார்.(காண்க:எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கோட்பாடு).

ஆயினும் ஆலந்து, இசுகாட்லாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளால் நிறுவப்பட்ட கால்வினியக் கிறித்தவக் கோயில்கள், அரசாங்கம் கால்வினியருடைய சமய உரிமைகளில் தலையிடுமானால் அதை எதிர்த்தல் வேண்டும் என்ற கோட்பாட்டை உருவாக்கிச் செயற்படுத்தின.

மேலும் கால்வினிய நெறியானது தாராள இயல்போ (Liberalism) அரசியலமைப்புக்குட்பட்ட இயல்போ (Constitutionalism) சார்பாளிக் கொள்கைகளோ (Representative Principles) உடையது அன்று. ஆகையால், அது அளவில் சிறிய எண்ணிக்கையிலுள்ள பிரபுக்களாட்சியையே ஆதரிக்கும் (Aristocracy) போக்கில் அமைந்தது. எந்த இடத்தில் அது எதிர்ப்பின்றிச் சுதந்திரமாகப் பரவ இயலுமோ, அந்த இடத்தில் அது ஒரு சமயச் சார்பான அரசாக (Theocracy) ஆயிற்று. அவ்வாட்சியிலும் கால்வினியக் குருமாரும் பிரபுக்களும் இணைந்து பங்கு கொண்டனர்; சாதாரண மக்கள் பங்கு இன்றி விலக்கப்பட்டனர். ஆட்சி, கட்டுப்பாடுகள் நிறைந்தும், அடக்குமுறை இயல்பு கொண்டும், வளர்ச்சிக்குகந்ததாக இல்லாமல் பிற்போக்கு இயல்பு கொண்டும் இருந்தது. கால்வின் செனிவாவில் அமைத்த அரசாங்கமும், அமெரிக்காவில் ஆங்கிலத் தூய்மையாளர் (Puritans) அமைத்த மாசசுசெட்சுக் (Massachussetts) குடியேற்றநாட்டு அரசாங்கமும் இத்தகைய இயல்புகளைஉடையன. அவற்றில் கிறித்தவத் திருச்சபைகள் (கால்வினிய) – சமயக் கோட்பாடுகளையும், ஒழுக்க விதிகளையும் பொறுத்தவரை தாம் சரியென்று கருதிய நிலைகளைத் தாங்களே வகுத்துக் கொள்ளுதற்கும், அவற்றை ஏற்க மறுப்போரின்மீது தம் கட்டுப்பாட்டை நிறுவுதற்கு உலகியலரசாங்கத்தின் முழு ஆதரவைப் பெறுதற்குமான சுதந்திரத்தோடிருந்தன. செனிவாவில் கால்வினியத் திருச்சபையால் சமயத்துக்குப் புறம்பாக்கப்பட்ட குடியாளுக்கு அரசாங்கப் பதவி எதனையும் ஏற்கும் உரிமை இல்லை. மாசசுசெட்சில் கால்வினிய நெறியாளருக்கே குடிமை உரிமைகள் அளிக்கப்பட்டிருந்தன. கால்வினிய அரசாங்கம் இயன்றவரை குருமார்களால் கையாளப்பட வேண்டிய ஆன்மிக அதிகாரத்தையும், அமைதி, ஒழுங்கு, நீதி முதலியவற்றைக் காக்க வேண்டிய குடிமை அரசாங்க அதிகாரத்தையும் திருச்சபைக்கே அளித்து, உலகியலதிகாரிகளை இயக்கும் அதிகாரத்தை உலகியலாட்சியாளர்களுக்கு அளிக்காமல், சமயக்குருமாருக்கே அளித்தது. இதனால் எங்கும் பரவிய ஒற்றர்களின் வாயிலாக ஒவ்வொருவருடைய தனிவாழ்வும் கவனமாகக் கட்டுப்படுத்தப்படுதலும், பொதுவாழ்வு அமைதியும் தனி வாழ்வு ஒழுக்க முறையும் ஒன்றாகக் கருதப்பட்டுக் கட்டுப்பாட்டுக்குள்ளாகும் நிலையும் உண்டாயின. மேலும், சிறிதும் மாறுதல் இல்லாத ஒரே வகையான வழிபாட்டு முறையும் சமயக் கோட்பாடும் தோன்றின. இவ்வகை ஆட்சி தாங்க இயலாத கடுமை நிறைந்த ‘ஞானிகளின் ஆட்சி’ (‘Rule of the Saints’) ஆகும்.

ஒவ்வொருவரும் எவ்வளவுக்கு இறைவழிபாட்டிலும், ஒழுக்க நெறியிலும் தவறாமல் இருக்கிறாரென்று இறைவரே தேர்ந்தெடுத்து, அவரவருக்குரிய என்றுமுள துறக்க வாழ்வையும், நிரயவாழ்வையும் தீர்மானித்து விடுவதால், அரசாங்கத்தின் முதற்கட

மையானது, தூயமுறை இறைவழிபாட்டை நிறுவி, சிலை வணக்கமுறையையும், புனிதமானவற்றைக் கெடுத்தலையும், கடவுள் மறுப்பையும், நிறுவப்பட்ட கோட்பாடு மறுப்பையும் ஒழித்தலே ஆகும். இவ்வாறு கால்வின் கூறி, கால்வினியக் கோயில்களைச் சீர்திருத்தக் கிறித்தவ நெறியில் இராணுவ இயல்புள்ள பகுதிகளாக ஆக்கினார். மேலும் இவர் கட்டுப்பாடு, ஒழுங்கு, ஒருவருக்கொருவர் மதிப்புக் காட்டுதல் முதலியவற்றை வற்புறுத்தினாரே தவிர, ஒருவர்மீது ஒருவர் அன்பு செலுத்துதல் வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. ஒவ்வொருவரும் கடமை உணர்வுடன் வாழ்தலை இவர் வற்புறுத்தினார்.

கால்வின் வலியுறுத்திய இறைவர் தேர்வுமுறைக் கோட்பாடும், முன்தீர்ப்பும் தவிர இவர் வலியுறுத்திய சமய, ஆன்மிகத் துறையில், தனியார் சுதந்திரம் என்ற கருத்து, அரசியலில் முழு அளவில் குடியாட்சிக் கோட்பாட்டை ஆதரிக்காவிட்டாலும், ஓரளவில் குடியாட்சிக் கோட்பாடு வளருதற்கு ஏற்றதாக இருந்தது. பா.சு.

**துணை நூல்கள்:**

**Muellet, William A.**, Church and State in Luther and Calvin, Nashville, Jenn, 1954.

**McNeill J.T.**, The History and Character of Calvinism, New York, 1954.

**கால்வெசுட்டன்** அமெரிக்காவின் தெக்சாசு (Texas) மாநிலத்தின் தென்கிழக்குப் பகுதியில் கால்வெசுட்டன் (Galveston) தீவில் உள்ள ஒரு நகரம். இந்நகரம் சிறப்புவாய்ந்த துறைமுகப் பட்டினமாக வளர்ந்துள்ளது. எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிலும் கப்பற்கட்டும் தொழிலும் இங்கு நடைபெறுகின்றன. பலவகை இயந்திரங்களையும், இரசாயனப் பொருள்களையும் இங்கு வாங்கமுடியும். மீன்பிடித்தல் தொழில் வளர்ச்சி அடைந்துள்ளது.

கால்வெசுட்டன் தீவு முதலில் இசுபானியரால் (Spaniards) கண்டுபிடிக்கப்பெற்றது. இசுபானிய மாலுமி காபெசா-டி-வாசா (Cabeza-de-Vaca) கி.பி. 1528-ஆம் ஆண்டில் இங்கு வந்தபோது புயற் காற்றினால் அவன் கப்பல் கவிழ்ந்தது. இப்பகுதியில் கி.பி. 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் செவ்விந்தியர்கள் (Red Indians) தங்கியிருந்தனர். இந்நகரம் 1900-ஆம் ஆண்டில் இயற்கையின் சீற்றத்தால் அழிவுற்றது. இது பின்னர்ப் புதுப்பிக்கப் பெற்ற பொழுது கடலினின்று இதனைப் பாதுகாக்க, 16 கி.மீ. நீளமுள்ள வலிமையான சுவர் எழுப்பப்பெற்றது. ஆயினும் 1961-இல் மற்றொரு புயற்காற்றினால் மறுபடியும் நகரம் சிதைவுற்றது. இப்பொழுது அமெரிக்க அரசியலாரின் முயற்சிகளின் விளைவாக இயற்கையின் எதிர்ப்புகளைச் சமாளிக்கப் பல புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தெக்சாசின் கடல்சார்ந்த கலைக்கழகம் (Maritime Academy) கால்வெசுட்டனில் அமைந்துள்ளது. மக்கள்தொகை 61,601 (1980). தெ.பா.

**கால்வே:** அயர்லாந்துக் குடியரசின் மேற்குப் பகுதியில் கால்வே (Galway) என்னும் மாவட்டமும், அதே பெயரையுடைய ஒரு நகரமும் உள்ளன. மாவட்டம், 5,939 சதுர கி.மீ. பரப்பை உடையது. இதன் மேற்கில் உள்ள பகுதி மலைப்பாங்கானது. கன்னிமாரா மலைத்தொடர்கள் இதிலடங்கும். கிழக்குப் பகுதியில் சமவெளியைக் காணலாம். சதுப்பு நிலங்களும் இங்கே மிகுந்துள்ளன.

கால்வே மாவட்டம், முதன் முதலில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் மன்னன் இரண்டாம் இரிச்சர்டினால் இணைத்துக் கொள்ளப்பட்டது. அம்மாவட்டத்தைப் பாராளுமன்றக் கட்சியினர் கி.பி. 1651-ஆம் ஆண்டில், தம் அடிப்படுத்தினர். மன்னன் மூன்றாம் வில்லியம், கி.பி. 1691-இல் மீண்டும் இப்பகுதியைத் தன் அரசுடன் இணைத்துக் கொண்டான். இதற்கு உதவியாக இருந்தது அவன் அக்ரிம் (Aughrim) போரில் பெற்ற வெற்றியே. தெ.பா.

**கால இயக்க ஆய்வுகள்:** தொழிலாளர்களின் வேலை செய்யும் திறனை அதிகரிக்கச் செய்வது நிருவாக உளவியலாரின் பல்வேறு பணிகளுள் குறிப்பிடத்தக்கதாகும். தொழிற்சாலைகளில் வேலை செய்யும்பொழுது, சிக்கலான வேலைகளைப் பலவாறாகப் பிரித்துச் செய்வது வேலை செய்யும் திறனை எளிதாக்குகிறது. ஒரு சிக்கலான வேலையைப் பல எளிதான பகுதிகளாகப் பிரித்துத் திரும்பத் திரும்ப ஒருவர் ஒரே பகுதியை மட்டும் செய்யும் வகையில் செயற்படுவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவது, கால இயக்க ஆய்வுகளின் (Time and Motion Study) ஒரு சிறப்புக் கூறாகும்.

ஒரு வேலையைச் சிறந்த முறையில் செய்யும் வழியை நிருணயிப்பதும், மக்களை அந்த வழியிலேயே தொடர்ந்து செயற்பட வைப்பதும் கால இயக்க ஆய்வுகளின் மற்றொரு பணியாகும். ஒரு செயல்முறையை ஒருவர் நன்கு அறிந்து கொண்டாரெனில், அதிலிருந்து மற்றொரு வழிமுறைக்கு மாறுவதை முன்பு அறிந்துகொண்ட செயல்முறை தடை செய்கிறது. ஒருவர் ஒரு வேலையின் முடிவில் அடையும்

திறமையானது அவர் எந்த வழியில் இயங்குகிறார் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

கருவிகளைத் தேடுவதிலும் அவற்றைக் கையாளுவதிலும் ஏற்படக் கூடிய அதிகமான முயற்சிகளைக் குறைப்பதற்காக, வேலை நடைபெறும் இடங்களைப் பற்றியும் கால இயக்க ஆய்வுகள் ஆராய்கின்றன. வேலை செய்யும் இடங்களை மாற்றியமைத்து, ஒவ்வொரு கருவியையும் வசதியான ஓர் இடத்தில் வைப்பது செய்யும் வேலையை எளிதாக்கும். ஒவ்வொரு கருவியையும் எளிதாக எடுக்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைப்பதும், அடிக்கடி அதிகமாகப் பயன்படுத்தும் கருவிகளை எளிதாகக் கண்டுபிடிக்கும் வகையில் வைப்பதும் மிகவும் எடையுள்ள கருவிகளை வேலை செய்பவரின் மிக அருகாமையிலேயே வைத்துக் கொள்வதும் நன்மை பயக்கும். ஓர் இடத்தில் வழக்கமாக எப்பொழுதும் ஒரே கருவியை வைப்பதால், வேலை செய்பவர் ஒரே இயக்கத்தைப் பயன்படுத்தி, அதை எடுத்துப் பயன்படுத்துவதன் மூலம் தன்னிச்சையான பழக்கம் அவருக்கு ஏற்படுகிறது. வேலையில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும் போது ஒரு குறிப்பிட்ட கருவி தேவைப்படுமேயானால், அது எங்கிருக்கிறது என்பதைப் பற்றிச் சிந்தனை செய்யாமல், பழக்கத்தின் காரணமாகக் குறிப்பிட்ட இயக்கத்தைப் பயன்படுத்தி, அக்கருவியை எடுத்துத் தம் தேவையை நிறைவேற்றி விடுவார். இதனால் நேரத்தை வீணாக்குவது குறைக்கப்படுகிறது.

ஒரு கருவியை ஒரு முறை எடுத்துப் பயன்படுத்தும் பொழுது அதன் மூலம் எவ்வளவு வேலையைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து முடித்த பின்னர், அடுத்த கருவியை எடுத்துக் கையாளுவது நேரத்தையும் சக்தியையும் மிச்சப்படுத்தும். எடுத்துக்காட்டாக, இரண்டு இரும்புப் பட்டைகளை அதிகமான திருகு ஆணிகளைப் பயன்படுத்தி ஒன்றாக இணைக்க வேண்டுமெனில், ஒவ்வொரு முறையும் ஓர் இடத்தை அடையாளமிடுதல், பின்னர்த் துளையிடுதல், அடுத்துத் திருகு ஆணியை அந்தத் துளையில் கையால் செலுத்துதல், இறுதியாகக் கருவியைப் பயன்படுத்தி அதனைத் திருகுதல் முதலியவற்றைச் செய்துவிட்டு, அதே இரும்புப் பட்டையில் பிறிதோர் இடத்தில் முன்பு சொன்னவற்றை முறையாகச் செய்வதை விட, ஒரே முறையில் தேவைப்படும் இடங்கள் எல்லாவற்றிலும் அடையாளமிட்டுவிட்டு, பின்னர் அடையாளமிட்ட எல்லா இடங்களிலும் துளை செய்து, திருகு ஆணியைக் கையால் செலுத்தி, இறுதியாகக் கருவியால் அதனை உறுதிபெறச் செய்வதன் மூலம் செய்யும் வேலை எளிதாகிறது.

ஒவ்வொரு வேலைக்கும் அதற்கேற்றாற் போல் கருவிகளை வடிவமைத்துத் தயாரித்துப் பயன்படுத்துவது உற்பத்தியையும் திறனையும் மேம்பாடு அடையச் செய்யும். ஒரு பொருளை அருகில் எடுத்துச் செல்லவும் நகர்த்தவும் இயந்திரங்களின் உதவியால் இயங்கும் நாடாக்களைப் பயன்படுத்துவதன் மூலம் மனித சக்தி பெருமளவு சேமிக்கப்படுகிறது.

நின்று செய்யும் மிக நுண்ணிய வேலைகளை உட்கார்ந்து செய்வது போன்று மாற்றி அமைத்தலால் நிறைந்த சக்தி சேமிக்கப்படுகிறது. அந்தச் சக்தி அதிக உற்பத்திக்குப் பயன்படும். மேலும், வேலை செய்பவருக்கு ஏற்படக்கூடிய தேவையற்ற தொல்லைகளும் நீங்கும். ஒரு பொருளை எடுக்கும் முறைக்கேற்ப வேலை செய்யும் மேசையும் சரியான உயரத்தில் அமைக்கப்பட்டால் உற்பத்தி அதிகமாகும். எச்சரிக்கையுடன் வடிவமைக்கப்பட்ட மேசையும் நாற்காலியும் களைப்பு ஏற்படாமல் தடுப்பதுடன், தொழிலாளி தன் வேலையை இயற்கையுடனும் திறமையுடனும் செய்ய ஏதுவாகும்.

அலுவலகமும் தொழிற்சாலையும் ஒரு தொழிலாளி ஒவ்வொரு செயலுக்கும் அதிகமான நடமாட்டங்களை மேற்கொள்ளாமல் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். போதுமான வெளிச்சம், காற்றோட்டம், வேலை நேரம் முடியும்போது நெரிசல் இன்மை, சாப்பிடுவதற்குரிய இடம், ஓய்வு அறை, மருத்துவ வசதி போன்றவையும் கருத்தில் கொண்டு தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும்.

கில்பிரத்து (Gilbreth) என்ற அறிஞர் (1932) கால இயக்க ஆய்வுகள் தொடர்பாக 16 வேறுபட்ட விதிகளை முதன்முதலாக உருவாக்கினார். பார்னசு (Barnes)என்ற அறிஞர்(1944) வேலை செய்யும் இடம், கருவியின் வடிவமைப்பு, உடல் இயக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் 22 முறைமைகளை உருவாக்கினார்.

மனித உடலின் சமச் சீரான இயக்கங்களை நோக்கும்பொழுது, உடலின் இடப்பாதியும் வலப்பாதியும் கண்ணாடியின் பிம்பம் போன்றன. அதாவது இரு கைகளின் இயக்கங்களும் ஒன்றுபோன்றே எளிதானவை. அதனால் இடக் கை ஏற்படுத்தும் இடப்பக்க இயக்கமும், வலக் கை ஏற்படுத்தும் வலப்பக்க இயக்கமும் இயற்கையாகவே ஒரே நேரத்தில் நிகழக்கூடியவை. அதே நேரத்தில் இரு கைகளும் ஒரே நேரத்தில் அதன் பக்கங்களால் ஏற்படுத்தும் இயக்கங்களினால் உடலின் நடுநிலைமை பாதிக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, வலக் கையால் ஒரு

திருகை வலப்புறம் திருப்புதலும், அதே நேரத்தில் இடக் கையால் ஒரு திருகை இடப்புறம் திருப்புதலும் சமச்சீர் முறையாகும். இந்தச் சமச்சீர் இயக்கங்களால் கைகளுடன் காலும் சேர்ந்து, ஒரே நேரத்தில் இடக் கையால் ஒரு திருகை இடப்புறம் திருப்புதலும் சமச்சீர் முறையாகும். இந்தச் சமச்சீர் இயக்கங்களில் கைகளுடன் காலும் சேர்ந்து ஒரே நேரத்தில் இயங்குமாறு ஒரு வேலை வடிவமைக்கப்பட்டால், கால்களின் இயக்கம் கட்டுப்படுத்தப்படுவதோ களைப்படைவதோ இல்லை. மேலும், மற்ற எல்லாத் திசுக்களும் இறுக்கமாவதால் கையானது ஒரு பொருளை இறுக்கமாகப் பற்றிக் கொள்ள முடிகிறது.


ஒரு மனிதனை மேசையின்முன் உட்கார வைத்து இடக் கையால் ஓர் அரை வட்டமும் வலக் கையால் ஓர் அரை வட்டமும் ஒரு சுண்ணக் கட்டியால் வரையச் செய்யவும். இடப் பக்கம் உள்ள அரைவட்டத்தில் அவன் ஒரு வேலையைத் தன் நிலையிலிருந்து மாறாமல் இடக் கையால் எளிதாகச் செய்யமுடியும். அதே போன்று வலப் பக்கம் உள்ள அரை வட்டத்தில் வலக் கையால் ஒரு வேலையை எளிதாகத் தன் நிலையில் இருந்து மாறாமல் செய்ய முடியும். இரண்டு அரை வட்டங்களும் ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளும் இடத்தில் இரு கைகளாலும் ஒரு வேலையை எளிதாகச் செய்ய முடியும்.

முன் கைக்கு மட்டும் இயக்கத்திற்குத் தனியாக அரை வட்டமும் கையை முழுமையாக இயக்கத் தனியாக அரைவட்டமும் அமைத்துக் கொள்ளலாம். பல மின் அணுப் பொருள்களைப் பொருத்துதல், வானொலியில் நுண்ணிய பொருள்களைப் பொருத்தி உருவாக்குதல் போன்றவற்றிற்கு இம்முறை பெரிதும் பயன்படும்.

ஒரு கைக்குக் கொடுக்கப்படும் வேலை அதன் சக்திக்குத் தகுந்தவாறு இருத்தல் வேண்டும். கால்களின் திசுக்கள் வலிமையானவையாக இருப்பதால் அவற்றிற்குக் கடினமான வேலைகள் கொடுக்கலாம். பலருக்கு ஏதாவது ஒரு கை மற்றதை விடப் பலம் பொருந்தியதாக இருக்கும். எனவே, வலிமையான கைக்கு நிறைய வேலைகள் கொடுக்கலாம்.

நேர்க்கோட்டு இயக்கங்களைத் தவிர்த்து வளைவு முறை இயக்கங்களை மேற்கொள்வதால் சிறந்த இயக்க முறைகளைப் பெறமுடியும். இரண்டு புள்ளிகளுக்கு இடையே கையினால் வளைவான இயக்கத்தை மேற்கொள்வது நேர்க்கோட்டு இயக்கத்தை மேற்கொள்ளுவதை விட எளிதானது. குறிப்பாக வேகமாக ஒரு செயலைச் செய்யும்போது வளைவு இயக்கமே நல்ல பலனைத் தரும்.

ஒரு பொருளை எடுக்கும்போதும் அதனைக் கையாளும் போதும் முறையான வழிகளைக் கடைப்பிடித்தால் வேலை செய்வது எளிதாகிறது. ஒரு குழந்தை முதன்முதலில் சிறிய பந்து ஒன்றை எடுப்




படம் 1. பொருத்துதல் வேலைக்கு ஏற்ற மேசை அமைப்பு.

பதற்கு அதனை இரண்டு கைகளாலும் பிடித்துச் சில நேரங்களில் காலைத் தூக்கி, தலையைக் கீழ்நோக்கிச் சாய்த்து, சில சமயங்களில் பந்தைச் சுற்றி உடலை வளைத்துச் சூழ்ந்து கொள்கிறது. அதே போன்று ஒரு வேலை செய்யும்போது நுண்ணிய இயக்கங்களைக் கற்றுக்கொள்வது செய்யும் வேலையை எளிதாக்கும். கால இயக்க ஆய்வுகள் இத்தகைய நுண்ணிய இயக்கங்களைப் பற்றியும் ஆராய்கின்றன. சீனி.நா.

**துணை நூல்கள்**:

**Barnes, R.M.**, Work Methods Manual, Wiley, New York, 1944

**Maier, R.F.**, Psychology in Industry, Oxford and I B H Publishing Co., New Delhi, 1976.

***காலக் கணிப்பு முறைகள்***: காலம் என்பது யுகம், ஆண்டு, மாதம், நாள் போன்ற பிரிவுகளால் அளக்கப்படுகிறது. காலக்கணிப்பில் பல முறைகள் உள. தன் அச்சில் தன்னைத்தானே ஒருமுறை பூமி சுற்றிக் கொள்ளும் காலம் ஒரு நாள். நிலா ஒருமுறை பூமியைச் சுற்ற ஆகும் காலம் ஒரு திங்கள். பூமி சூரியனை ஒருமுறை சுற்றக் கழியும் காலம் ஓர் ஆண்டு. ஒரு நாள் என்பது நிலையான ஒரு கால அளவு. திங்கள் ஒன்றின் நீளமும் ஆண்டு ஒன்றின் நீளமும் முழு நாள்களின் அளவில் அமைந்திருக்கவில்லை.

ஒரு திங்கள் என்பதில் 29.53059 நாள்களும் ஓர் ஆண்டு என்பதில் 365.2422 நாள்களும் அடங்கியுள்ளன. அதாவது, சுமார் $29\frac{1}{2}$ நாள்கள் கொண்டது ஒரு திங்களும், $365\frac{1}{4}$ நாள்கள் கொண்டது ஓர் ஆண்டும் ஆகும். நாள் ஒன்றில் அடங்கிய மணிகளின் எண்ணிக்கை 24. ஒரு நாளில் உள்ள நாழிகைகளின் எண்ணிக்கை 60. நாழிகை என்னும் அளவுமுறை பண்டைய இந்தியாவில் பயன்படுத்தப்பட்ட ஓர் அளவு முறையாகும்.

கதிரவனைப் போலன்றி, நிலவு திங்கள்தோறும் வளர்வது போலவும் தேய்வது போலவும் காட்சி அளிக்கிறது. இதனைத் திதிகள் எனச் சொல்கின்றனர். வளர்பிறை, தேய்பிறை ஒவ்வொன்றிலும் பிரதமை, துதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சட்டி, சப்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி திரியோதசி, சதுர்த்தசி என்னும் பதினான்கு திதிகள் அடங்கியுள்ளன. அமாவாசை முதற்கொண்டு பௌர்ணமி வரையிலும் வளர்பிறையானது சுக்கிலபட்சம் என்றும், பௌர்ணமி முதல்அமாவாசை வரை தேய்பிறையானது கிருட்டிணபட்சம் என்றும் குறிக்கப்படுகிறது.

கிழக்கு மேற்காக வானில் கதிரவனும் திங்களும் பயணமாகும் பாதை கிரகணப்பாதை (Ecliptic)என்று குறிக்கப்படுகிறது. இப்பாதையில் உலகைச் சுற்றிலும் காணப்படும் விண்மீன் குழுக்களின் (Constellations) எண்ணிக்கை 27. அவையாவன: அசுவினி, பரணி, கார்த்திகை, உரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி.

இக்கிரகணப் பாதை 12 இராசிகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. சூரியன் ஒவ்வோர் இராசியிலும் ஒரு மாதம் சஞ்சரிக்கிறான்.ஆக, ஓர்ஆண்டில் உள்ள மாதங்களின் எண்ணிக்கை 12. சனவரி, பிப்பிரவரி, மார்ச்சு, ஏப்பிரல், மே, சூன், சூலை, ஆகசுட்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், திசம்பர் என்னும் மாதங்கள் இன்று உலகெங்கும் பின்பற்றப்படுகின்றன. தமிழ் மாதங்கள் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை,மாசி, பங்குனி என்பன.கேரளத்தில் மாதங்களை 12 இராசிகளின் பெயராலேயே வழங்குகின்றனர். இராசிகளின் பெயர்களாவன: மேடம், இரிடபம், மிதுனம்,கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம் கும்பம், மீனம்.

ஒரு நாளின் நட்சத்திரமாகக் கருதப்படுவது கிரகணப் பாதையில் ஒவ்வொரு நாளும் நிலா 27 நட்சத்திரக் குழுக்களில் எந்நட்சத்திரத்திற்கு அருகில் நகர்ந்து கொண்டுள்ளதோ அதுவே ஆகும். ஒரு நாளின் நட்சத்திரம் இந்தியக் காலக்கணிப்பு முறையில் ஒரு சிறப்பு அங்கத்தை வகிக்கிறது.

இந்தியக் காலக்கணிப்பு முறையில் ஆண்டின் நாள்கள் நிலையாய் இராமல் ஆண்டுக்கு ஆண்டு வேறுபடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மாதம் ஒன்றின் ஏதோ ஒரு தேதி முதல், அடுத்த ஆண்டு அதே மாதத்தின் அதே தேதி வரை,ஓர் ஆண்டு என்பதற்குப் பதிலாக, மாதம் ஒன்றின் தேதியில் எந்த நட்சத்திரமோ அன்று முதல் அடுத்த ஆண்டு அதே மாதத்தின் எந்த நாளில் அதே நட்சத்திரம் மீண்டும் வருகிறதோ அந்த நாள் வரை ஒரு ஆண்டு எனக் கொள்ளப்படுகிறது. எனவே, ஆண்டுக்கு ஆண்டு நாள்களின் எண்ணிக்கை வேறுபட்டு இருக்கும். எனினும், பல ஆண்டுகளின் சராசரி நாள்களின் எண்ணிக்கை $365\frac{1}{4}$ என்பதே உண்மையாகும்.

காலக்கணிப்பு முறைகள் மூன்று வகைப்பட்டவை. கதிரவன் வானில் மேற்கிலிருந்து கிழக்காகப் பன்னிரண்டு இராசிகளையும் கடந்து வரும் காலமே கதிரவ ஆண்டு என்பது. அவ்வாறே வெண்ணிலாவும் மேற்கிலிருந்து கிழக்காகப் பன்னிரண்டு இராசிகளையும் கடந்து வரும் காலம் ஒரு திங்கள் என்பது. சூரியன், சந்திரன் இரண்டும் கிரகணப் பாதையில் எங்குக் காணப்படுகின்றன என்பதைக் கொண்டு கணக்கிடப்படும் காலக்கணிப்பு முறை மூன்றாம் வகையாகும்.

நாள் என்பது இப்போது நள்ளிரவு முதல் அடுத்த நாள் நள்ளிரவு வரை உள்ளகாலமாகக் கொள்ளப்படுகிறது. நாள் ஒன்றில் 24 மணிகள் என்னும் பிரிவுமுறை அண்மைக் கால முறையே ஆகும். 10 மணிகளைக் கொண்ட நாள் அமைப்பும் சிலகாலம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. நாள் ஒன்றில் 20 மணிகள் உள்ள முறை கூட ஒருவேளை எதிர்காலத்தில் வழக்கில் கொண்டுவரப்படலாம்.

விடியலின்போது நாள் தொடங்குவதாகவும் சில நாடுகளில் கொண்டுள்ளனர். வானியல் வல்லுநர்கள் நண்பகல் முதல் அடுத்தநாள் நண்பகல் வரை நாளைக் கணக்கிடுவதன் மூலம் இரவு ஒன்றில் ஒரு நாள் மட்டுமே வருமாறு வசதி செய்து கொண்டுள்ளார்கள். மாலையில் நாள் தொடங்கும் முறை ஒன்றும் இசுரேல் நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டது.

பூமி சூரியனுக்கு அருகில் உள்ளபோது இரண்டுக்கும் இடையில் உள்ள தூரம் 147 மிலியன் கி.மீ. சூரியனுக்கு வெகு தொலைவில் பூமி உள்ளபோது இத்தூரம் 152 மிலியன் கி.மீ. இத்தூர வேறுபாடுகளின் காரணம் பூமி சூரியனை ஒரு நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவதே ஆகும். சூரியனுக்கு அருகில் வரும்போது விரைந்தும், அதற்குத் தொலைவில் செல்கையில் மெதுவாகவும் பூமி தனது பாதையில் சூரியனைச் சுற்றி வருவதால் பருவங்கள் நீளத்தில் வேறுபடுகின்றன.

வெப்ப மண்டல நாடுகளில் குளிர்ப்பருவம், கோடைப்பருவம், மழைப்பருவம் ஆகியவை காணப்படுகின்றன. மிதவெப்பமண்டல நாடுகளில் மூன்று மாத இடைவெளிகளில் இளவேனில், கோடை, இலையுதிர்காலம், குளிர்காலம் என்னும் தெள்ளிய நான்கு பருவங்கள் வருகின்றன.

இளவேனிற் காலமானது இரவும் பகலும் சமமாக உள்ள மார்ச்சு 21-ஆம் தேதி முதல் மிக நீண்ட பகல் கொண்ட சூன் 21-ஆம் தேதி வரை வட உருளப்பாதியில் (Northern Hemisphere) நீடிக்கிறது. மிக நீண்ட பகல் கொண்ட சூன் 21-ஆம் தேதி முதல் இரவும் பகலும் மீண்டும் சமமாக உள்ள செப்டம்பர் 21-ஆம் நாள் வரை வட உருளப் பாதியில் நீண்ட இரவு காணப்படும். திசம்பர் 22-ஆம் தேதி வரை இலையுதிர் காலமும் காணப்படுகின்றது. திசம்பர் 22 முதல் மார்ச்சு 21 வரை குளிர்காலம் வட உருளப் பாதியில் வருகிறது.

வட உருளப் பாதியில் கோடை என்றால், தென் உருளப் பாதியில் குளிர்காலமாக இருக்கும். தென் உருளப் பாதியின் கோடையில் வட உருளப் பாதியின் குளிர்ப்பருவம் காணப்படும். அவ்வாறே, வட உருளப் பாதியின் இளவேனிற் பருவத்தில் தென் உருளப்பாதியில் இலையுதிர் பருவம் காணப்படும். சமராப்பகல் நாள்களான மார்ச்சு 21 அன்றும். செப்டம்பர் 23 அன்றும் சூரியன் புவியிடைக் கோட்டின் (Equator) மீது தலைக்கு நேராய்ப் பிரகாசிக்கும். சூன் 21 அன்று சூரியன் கடகக் கோட்டின் ($23\frac{1}{2}°$ வடக்கு) மீதும், திசம்பர் 22 அன்று அது மகரக் கோட்டின் ($23\frac{1}{2}°$ தெற்கு) மீதும் தலைக்கு நேராய்ப் பிரகாசிக்கும்.

இளவேனிற் காலத்தில் 92 நாள்களும், கோடைக் காலத்தில் 94 நாள்களும், இலையுதிர் காலத்தில் 90 நாள்களும், குளிர் காலத்தில் 89 நாள்களும் உள்ளன.

சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து நாட்டில் தோத்து (Thoth) என்பவர் சூரியனைப் பூமி சுற்றிவரும் காலமான 365 நாள்கள் கொண்ட ஆண்டு முறையை ஏற்படுத்தினார். அவருடைய முறையில் ஆண்டானது இலையுதிர்கால சமராப்பகல் நாளான செப்டம்பர் 23-ஆம் நாள் தொடங்கியது. அதன்பின்னர் 180 நாள்கள் கழித்து இளவேனிற்கால சமராப்பகல் நாளான மார்ச்சு 21 வருகிறது. இளவேனிற் சமராப்பகல் நாள் முதல் அடுத்து வரும் இலையுதிர் காலச் சமராப்பகல் நாள் வரையுள்ள கால இடைவெளி சற்றே நீண்டது. இதில் 185 நாள்கள் அடங்கியுள்ளன.

இலையுதிர் சமராப்பகல் நாளுக்கு அடுத்துவரும் அரையாண்டில் உள்ள 180 நாள்கள், ஒவ்வொன்றிலும் 30 நாட்கள் கொண்ட ஆறு மாதங்களாய்ப் பிரிக்கப்படுகின்றன. மற்றொரு அரையாண்டில் உள்ள 180க்கு மேற்பட்ட நாள்கள் ஆறு 30 நாட்களாலான மாதங்களாகவும், தொடர்ந்தாற்போல் வருகின்ற 5 கூடுதல் நாள்களாகவும் பிரித்துக் காட்டப்படுகின்றன. தோத்தின் காலக்கணிப்பு முறையில் மாதங்களுக்கு எண்கள் அளிக்கப்படுகின்றன. பெயர்

கள் கூட்டப்படவில்லை. கூடுதல் 5 நாட்களுக்குப் பெயர்கள் இடப்படுகின்றன. அவற்றுக்குஎண்ணிக்கை தரப்படுவதில்லை. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை சேர்க்கப்படும் கூடுதல் நாளுக்குத் தோத்து பெயர் தந்தாரா என்பது சரிவரத் தெரியவில்லை.

தோத்து மாதத்தைப் பத்துநாட்கள் கொண்ட மூன்று பகுதிகளாய்ப் பிரித்தார். ஒவ்வொரு நாளும் 10 மணிகளாகவும், ஒவ்வொரு மணியும் 100 நிமிடங்களாகவும், ஒவ்வொரு நிமிடமும் 100 நொடிகளாகவும் பிரிக்கப்பட்டன. நள்ளிரவு ஒன்றிலிருந்து அடுத்த நள்ளிரவு வரை 100,000 நொடிகள் இருந்தன. இன்றைய முறைப்படி இத்தகைய நாள் ஒன்றில் 86,400 நொடிகள் உள்ளன.

தோத்தின் எளிய காலக்கணிப்பு முறை மீண்டும் ஒருமுறை பிரான்சு நாட்டில் கி.பி. 1795–ஆம் ஆண்டு ஏப்பிரல் 7–ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்ட அரசு சட்டத்தின்படி புதிய பிரெஞ்சு காலக்கணிப்பு முறையாகவும் நேரக்கணிப்பு முறையாகவும் உருவெடுத்தது. இதன்படி ஆண்டு ஒன்றின் தொடக்கம் இலையுதிர் காலச் சமராப்பகல் நாளில் அமைந்திருந்தது. ஒவ்வோர் ஆண்டிலும் 30 நாள்கள் அடங்கிய மாதங்கள் 12 இருந்தன. எண்களால் குறிக்கப்பட்ட நாள்கள் தவிர, பெயர்களால் குறிக்கப்பட்ட கூடுதல் நாள்கள் ஐந்து இருந்தன. இவை ஆண்டின் இறுதியில் இலையுதிர் காலச் சமராப்பகல் நாளுக்கு முன்னர் வைக்கப்பட்டிருந்தன.

தோத்தின் தசாம்ச நேரமுறையும் இம்முறையில் பின்பற்றப்பட்டது. 30 நாள்களாலான மாதம் ஒவ்வொன்றும் மூன்று 10 நாள் தொகுதிகளாய்ப் பகுக்கப்பட்டது. நாள் ஒவ்வொன்றும் 10 புதிய மணிகளாகவும், புதிய மணி ஒவ்வொன்றும் 100 புதிய நிமிடங்களாகவும், புதிய நிமிடம் ஒவ்வொன்றும் 100 புதிய நொடிகளாகவும் பிரிக்கப்பட்டன.

இப்புதிய, ஆனால் மிகப் பழமையான, காலக் கணிப்பு முறையும் நேரக்கணிப்பு முறையும் 12 ஆண்டுகட்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. சட்டம் மீண்டும் கி.பி. 1805–ஆம் ஆண்டு திசம்பர் 31–ஆம் நாள் திருத்தி அமைக்கப்பட்டுவிட்டது. சட்டத்தின் மூலம் ஏழுநாள்வாரம் என மாற்றப்பட்டு, மாதமொன்றில் பத்து நாள்களைக் கொண்ட பிரிவுகள் உருவாக்கப்பட்டமையால் பெரும் குழப்பம் உண்டாகிவிட்டது. அதற்கு முன்னர் பற்பல மதத்தவரின் சந்தை நாள்கள், விழாநாள்கள், விடுமுறை நாள்கள் எல்லாம் ஏழு நாள்கள் கொண்ட வாரத்தின் அடிப்படையில் அமைந்திருந்தன. 12 ஆண்டுக் காலத்தில் இவை எல்லாமே மாறுபட்டு விளங்கின.

தோத்தின் காலக்கணிப்பு முறை கி.மு. 46–ஆம் ஆண்டில் மாற்றம் பெற்றுச் சூலியசு சீசர் என்ற உரோமானியப் பேரரசரால் மீண்டும் வழக்கில் கொண்டுவரப்பட்டது. தோத்து 5 அல்லது 6 கூடுதல் நாள்களை 12 மாதங்களின் நாள்களுக்குள் அடக்கவில்லை. ஆனால், சீசர் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாதத்தில் ஒரு நாளைக் கூட்டி 31 நாட்கள் வருமாறு திருத்தம் செய்தார். சாதாரண ஆண்டு வருகையில் சீசரின் காலக்கணிப்பு முறைப்படி பிப்பிரவரி மாதத்தில் ஒரு நாளைக் குறைத்து 29 நாள்கள் வருமாறு செய்தார். சீசரின் காலத்துக்கு முன்பு, காலக்கணிப்பு முறையில் மார்ச்சுமாதம் ஆண்டின் முதல் மாதமாகவும் பிப்பிரவரி மாதம் ஆண்டின் இறுதி மாதமாகவும் திகழ்ந்தது. தமது காலக்கணிப்பு முறையில் சீசர் சனவரியை முதல் மாதமாக்கினார்.

தோத்தின் காலக்கணிப்பு முறைப்படி ஆண்டுத் தொடக்கம் இலையுதிர் காலச்சமராப்பகல் நாளன்று அமைந்திருந்தது. ஆனால், சீசரின் முறையில் குளிர்ப் பருவச் சூரியநிற்பு நாள் அன்று(December 22) ஆண்டு தொடங்கியது. எந்த ஒரு மாதமும் அமாவாசை அன்றுதான் தொடங்க வேண்டும் என்ற பழைய நம்பிக்கையின்படி ஆண்டுத் தொடக்கம் குளிர்ப்பருவச் சூரிய நிற்பு நாளுக்குப் பத்து நாள்கள் கழித்துச் சனவரி முதல் நாளன்று அமைந்திருந்தது. இதன்படி நான்காம் மாதமான ஏப்பிரல் இளவேனிற் காலச் சமராப்பகல் நாளுக்குப் பத்து நாட்கள் தள்ளியும், ஏழாம் மாதமான சூலை கோடை சூரிய நிற்பு நாளுக்குப் பத்து நாள்கள் தள்ளியும், பத்தாம் மாதமான அக்டோபர் இலையுதிர் காலச் சமராப்பகல் நாளுக்குப் பத்து நாள்கள் தள்ளியும் தொடங்கும்.

சீசர் கி.மு. 44–இல் கொல்லப்பட்ட பிறகு, குவின்டிலிசு (Quintilis) எனப்பட்ட மாதம், சீசரைப் பெருமைப்படுத்தும்படியாகச் சூலியசு(சூலை)என்னும் பெயர் மாற்றத்தைப் பெற்றது. சீசருக்குப் பின் உரோமானியப் பேரரசராக அரியணை ஏறியவர் அகசுடசு என்பவர். இவர் ஆட்சியின் போது செக்சுடிலிசு (Sextilis) என்னும் மற்றொரு மாதத்தின் பெயர் அகசுடசு (August) என மாற்றி அமைக்கப்பட்டது. அம்மாதத்தில் நாள் ஒன்றும் கூட்டப்பட்டது. இதற்குப் பதிலாகப் பிப்பிரவரி மாதத்தில் நாள் ஒன்று குறைக்கப்பட்டது. ஆகசுட்டுக்குப் பின்வரும் மாதங்களின் நாள்கள் பின்வருமாறு திருத்தப்பட்டன.

| | சீசரின் அமைப்புப்படி | அகசுடசின் அமைப்புப்படி |
|---|---|---|
| சூலை | 31 | 31 |
| ஆகசுட்டு | 30 | 31 |
| செப்டம்பர் | 31 | 30 |
| அக்டோபர் | 30 | 31 |
| நவம்பர் | 31 | 30 |
| திசம்பர் | 30 | 31 |

உரோமானியர்களின் சந்தை நாள்கள் மாதமொன்றுக்கு நான்காக அமைந்திருந்தன. 28 நாட்களைக் கொண்ட பிப்பிரவரியில் சந்தை நாள்களுக்கு இடையில் இருந்த இடைவெளி 7,7,7,7 ஆகவும், 29 நாள்கள் கொண்ட பிப்பிரவரியில் 8,7,7,7 ஆகவும், 30 நாள்களைக் கொண்ட மாதங்களில் 8,7,8,7, ஆகவும், 31 நாள்களைக் கொண்ட மாதங்களில் 8,8,8,7 ஆகவும் அமைந்திருந்தது. இவ்வாறாக, சந்தை நாள்களுக்கு இடையில் 7 அல்லது 8 நாள்கள் இருந்தன.

பின்னர் கி.பி. 321-இல் கிறித்துவ மதத்தைத் தழுவிய கான்சுடன்டின் (Constantine) என்னும் உரோமானியப் பேரரசர் சந்தை நாள்களுக்கு இடையில் எட்டு நாள்கள் வாராதபடி அவற்றுக்கு இடையில் ஏழு நாள்களே வரும்படியான மாறுதலைக் கொணர்ந்தார். இவ்வாறாக யூதர்களின் ஏழு நாள்களாலான வாரம் கிறித்தவர்களால் பின்பற்றப்பட்டது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் கணக்குகளைப் பரிசீலித்ததில் 125 ஆண்டுகட்கு ஒருமுறை 'லீப்' (Leap) ஆண்டு நாள் ஒன்றை விடவேண்டும் என்பது எகிப்தியர்களால் கண்டறியப்பட்டது. ஆண்டின் சரியான நீளம் $365\frac{1}{4}$ நாட்களுக்குப் பதில் 365.2422 நாள்களாக இருப்பதுவே இதற்கான காரணம் ஆகும். இவ்விரண்டுக்கும் இடையில் உள்ள வேறுபாடு ஆண்டொன்றுக்கு 11 நிமிடம் 14 நொடி மட்டுமே. எனினும் 125 ஆண்டுகளில் இவ்வேறுபாடு ஒரு முழு நாளாகி விடுகிறது. இதன்மூலம் ஆயிரம் ஆண்டுகளில் 8 நாள் வேறுபாடு ஏற்படுகிறது.

ஆசியா மைனரிலிருந்த நிகயீயா (Nicaea) என்னும் நகரில் கி.பி. 325-இல் முக்கிய தேவாலய சபை ஒன்று கூடி, இளவேனிற் காலச் சமராப்பகல் நாளுக்கும், இளவேனிலில் வரும் ஈசுடர் பண்டிகை (Easter) நாளுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்தது. அதற்குப் பின் 1,220 ஆண்டுகள் கழித்து இத்தாலி நாட்டின் திரெண்டு (Trent) நகரில் கூடிய தேவாலய சபை ஒன்று இளவேனிற்காலச் சமராப்பகல் நாள் வரும் காலம் குறித்து விவாதித்தது.

இளவேனிற்காலச் சமராப்பகல் நாள் கி.பி. 325-இல் மார்ச்சு 21-ஆம் நாள் வந்திருந்தது. ஆனால், கி.பி. 1257-ஆம் ஆண்டுகட்குப் பின்னர், கி.பி. 1582-இல் இளவேனிற்காலச் சமராப்பகல் நாள் மார்ச்சு 11-ஆம் தேதி வந்தது. இதன் காரணமாகக் காலக் கணிப்பு முறையில் ஒரு திருத்தம் தேவைப்பட்டது. போப்பாண்டவர் பதின்மூன்றாம்கிரிகரி (Gregory XIII) என்பவர் காலக்கணிப்பு முறையைச் சரிசெய்யும் பொருட்டு அப்பத்து நாள்களைத் தள்ளிவிட முடிவெடுத்தார்.

அவர் முடிவின்படி கி.பி. 1582-ஆம் ஆண்டு அக்டோபர் 4-ஆம் நாளுக்கு அடுத்த நாளாக அக்டோபர் 15-ஆம் நாள் வந்தது. நூற்றாண்டு ஆண்டுகளின்போது, ஆண்டு எண் 4-ஆல் மீதமின்றி வகுபட்டால் 'லீப்' ஆண்டு என எடுத்துக்கொள்வதற்குப் பதில் 400 ஆல் மீதமின்றி வகுபட்டால் மட்டுமே 'லீப்' ஆண்டாகக் கொள்ளப்படும் என்னும் திருத்தம் புகுத்தப்பட்டது. பிரிட்டனும் அதன் அமெரிக்கக் குடியேற்றங்களும் போப்பு கிரிகரி கொண்டுவந்த திருத்தத்தை கி.பி. 1752-ஆம் ஆண்டில்தான் ஏற்றுக் கொண்டன.

காலக்கணிப்பு முறையை எளிமை ஆக்கும் முயற்சி கி.பி. 1887-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதன் நோக்கம் நான்காக உள்ள பருவங்கள் ஒவ்வொன்றிலும் 91 நாள்கள் இருக்குமாறு செய்தல். இத்திட்டத்தின் அடிப்படையில் 1930-ஆம் ஆண்டளவில் புதிய காலக்கணிப்பு முறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

இப்புதிய காலக்கணிப்பு முறைக்கும் இப்போதுள்ள காலக்கணிப்பு முறைக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள்: 1. ஒவ்வொரு பருவத்திலும் 91 நாள்கள் ஆக ஆண்டின் நான்கு பருவங்களிலும் 364 நாள்கள்; 2. ஒவ்வொரு பருவத்தின் முதல் மாதத்தில் 31 நாள்களும் அடுத்த இருமாதங்கள் ஒவ்வொன்றிலும் 30 நாள்களும் வருதல்;3. சாதாரண ஆண்டில் மாதத்தையோ வாரத்தையோ சாராமல் கூடுதலாய் ஒரு நாளையும், 'லீப்' ஆண்டாயின் கூடுதலாய் இரு நாள்களையும் இணைத்தல்; 4. ஒரு நாள் கூடுதலானால் அது ஆண்டு இறுதியில் சேர்க்கப்படல்; இரு நாள்கள் கூடுதலானால் ஒரு நாள் ஆண்டு இறுதியிலும், மற்றொரு நாள் அரையாண்டு இறுதியிலும் வைக்கப்

படல்; 5. அரையாண்டு இறுதியில் கூடுதல் நாள் சேர்க்கப்பட்டால் அதனை 'லீப்-ஆண்டு-நாள்' எனல்; 6. பருவம் ஒவ்வொன்றிலும் முதல் மாதம் ஞாயிற்றுக்கிழமைகளிலும், இரண்டாம் மாதம் புதன் கிழமைகளிலும், மூன்றாம் மாதம் வெள்ளிக்கிழமைகளிலும் தொடங்குதல்.

இப்புதிய திட்டத்தை உலகக் காலக்கணிப்புச் சங்கம் (World Calendar Association) ஆதரித்தது. இச்சங்க உறுப்பினர்கள் மேற்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்கக் கண்டங்களின் நாடுகள் அனைத்திலும் இருப்பவர் ஆவர். இத்திட்டம் உலகம் முழுவதும் பின்பற்றப்பட வேண்டும் என்னும் கருத்தில் இது ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இத்திட்டத்தைப் பரிசீலித்த இச்சபையைச் சார்ந்த ஒரு குழு (Committee) இதனை ஏற்க மறுத்தது. இதனால், இச்சபையின் பொதுச்சங்கம்(General Assembly) இதனை விவாதிக்க எடுத்துக்கொள்ளவில்லை.

இப்புதிய காலக் கணிப்பு முறையிலும் இப்போதுள்ள காலக் கணிப்பு முறையிலும் உள்ள சில குறைகளை நீக்குவதன் மூலம் 21-ஆம் நூற்றாண்டுக்கான புதிய காலக்கணிப்பு முறையொன்றை உருவாக்கலாம்.

இளவேனிற் காலம் மார்ச்சு 21 முதல் சூன் 21 வரை 92 நாள்களையும், கோடைக் காலம் சூன் 21 முதல் செப்டம்பர் 23 வரை 94 நாள்களையும்,இலையுதிர் காலம் செப்டம்பர் 23 முதல் திசம்பர் 22வரை 90 நாள்களையும், குளிர்காலம் திசம்பர் 22 முதல் மார்ச் 21 வரை 89 நாள்களையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு மாதத்தின் நாள்களைத் திருத்தியமைப்பதன் மூலம் காலாண்டுகள் ஒவ்வொன்றிலும் இதே அளவு நாள்கள் வருமாறு காலக்கணிப்பு முறையில் சீர்திருத்தம் கொண்டுவருவது சிறப்புடையதாக இருக்கும்.

இப்புதிய காலக்கணிப்பு முறைப்படி இனிமேல் சமராப்பகல் நாள்களும் சூரியநிற்பு நாள்களும் பின்வரும் பட்டியலில் மூன்றாம் கலத்தில் கண்டவாறு வரும்:

| நாள் | இப்போது | 2001 முதல் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சமராப்பகல் நாள் | மார்ச்சு 21 | மார்ச்சு 21 |
| சூரியநிற்பு நாள் | சூன் 21 | சூன் 21 |
| சமராப்பகல் நாள் | செப்டம்பர் 23 | செப்டம்பர் 22 |
| சூரிய நிற்பு நாள் | திசம்பர் 22 | திசம்பர் 21 |

வாரம் ஒன்றில் ஏழு நாள்கள் இருப்பது கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்துதான் நடைமுறையில் உள்ளது. வாரத்தில் நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, பத்து நாள்கள்கூட பழங்காலத்தில் உலகின் பல்வேறு பாகங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இயந்திர காலத்தில் வாழும் மக்கள் ஐந்து வேலை நாள்களையும் ஒரு விடுமுறை நாளையும் கொண்ட ஆறு நாள்கள் கொண்ட வாரமுறையைப் பின்பற்றுவது இனிவரும் ஆண்டுகளில் பொருத்தமாக இருக்கும்.

இப்போதைய வார நாள்களில் ஒருநாள் சூரியனின் பேராலும் மற்றொரு நாள் சந்திரனின் பேராலும் மற்ற ஐந்து நாள்களும் வானில் கண்ணால் காணக்கூடிய ஐந்து கிரகங்களின் பேராலும் குறிக்கப்படுகின்றன. புதிய கால முறைப்படி ஐந்து அல்லது ஆறு வாரங்கள் தவிர, மற்ற வாரங்கள் அனைத்திலும் ஞாயிற்றுக்கிழமை விடப்படும். ஒவ்வொரு மாதமும் திங்கட்கிழமையில் தொடங்கி, சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் முடிவடையும். சனி, ஞாயிறுகள் அனைத்தும் விடுமுறை நாள்களாக இருக்கும்.

இப்புதிய காலக் கணிப்பு முறையில் மாதம் ஒவ்வொன்றிலும் ஐந்து வாரங்கள் வீதம், ஆண்டு ஒன்றில் அறுபது வாரங்கள் இருக்கும். மாதம் ஒவ்வொன்றிலும் 25 வேலைநாள்கள் இருக்கும். முதல் காலாண்டிலும் (சனவரி முதல் மார்ச்சு முடிய) இறுதிக் காலாண்டிலும் (அக்டோபர் முதல் திசம்பர் முடிய) ஞாயிற்றுக்கிழமைகளே வாரா. இரண்டாம் காலாண்டின் முதல் இரு மாதங்களிலும், மூன்றாம் காலாண்டின் முதல் இரு மாதங்களிலும், மூன்றாம் காலாண்டின் அனைத்து மாதங்களிலும் 31-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமைகளில் வரும். இரண்டாம் காலாண்டின் மூன்றாம் மாதமான சூனில் 'லீப்' ஆண்டுகளில் மட்டும் 31-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையில் வரும்.

ஐக்கிய நாடுகள் சபை இப்புதிய காலக் கணிப்பு முறையைப் பரிசீலித்து, இதனை கி.பி. 2001-ஆம் ஆண்டு சனவரி முதல் நாளான திங்கட்கிழமையிலிருந்து உலகெங்கும் பின்பற்றுவதற்கான ஏற்பாடுளைச் செய்தல் நன்று. கோ.கி.

**துணை நூல்கள்:**

**Keith Gordor Irwin,** The 365 Days, Thomas Y. Crowell Company, 201 Park Avenue South, New York, N.Y. 10003, 1963.


**Rio V.** Angara, Timequest (Calendar Systems for all ages), 156, Mineral Springs Are, Passaic, New Jersey 07055, U.S.A. 1983.

***கால கார மூர்த்தி*** காலனை வதைத்த சிவன். இவர் காலாரி மூர்த்தி, காலசம்கார மூர்த்தி எனவும் கூறப்பெறுகிறார். மிருகண்டு முனிவர் என்பார் நீண்ட நாள்களாக மகப்பேறு இல்லாமையால் வரம் வேண்டி இறைவனிடம் இறைஞ்சினார். இறைவனும் அவருக்கு வேண்டும் வரமளிக்கும் வாயிலாகப் பயனற்ற பல மக்கள் வேண்டுமா? அறிவுள்ள பதினாறு வயது வரை மட்டுமே வாழக்கூடிய ஒரே மகன் வேண்டுமா? எனக் கேட்டார். மிருகண்டு முனிவர் பதினாறு வயதுவரை மட்டுமே வாழக்கூடிய அறிவு மிக்க மகன் ஒருவனே தனக்குப் போதும் என விடையிறுத்தார். அவ்வாறே இறைவன் வரமளிக்க, முனிவரின்துணைவியார் மனசுவினி என்பார் ஆண்மகவு ஒன்றைப் பெற்றெடுத்தார். அம்மகனின் பெயர் மார்க்கண்டேயன் என்பது.

மார்க்கண்டேயன் தனது பதினாறாம் வயதில் தனது வாழ்க்கை முடியப்போகிறது என்பதை அறிந்து வாழ்க்கையைத் தொடரும் வரம் வேண்டித் திருக்கடவூரில் இறைவனை வழிபட்டான். ஆனால், அவன் உயிரைக் கவர்ந்து செல்ல எமனின் ஏவலர் வந்தனர். ஆயினும், அவர்களது முயற்சி பலனளிக்கவில்லை. அவர்கள் எமனிடம் சென்று முறையிட, எமனே நேரில் வந்து தன் கடமையில் ஈடுபட்டான். எமன் மார்க்கண்டேயனைப் பிடித்துக் கொண்டு செல்ல முயன்றபோது இறைவன் இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு எமனை மார்பில் உதைத்துக் கொன்று மார்க்கண்டேயனைக் காத்தார் என்பது பழங்கதை. தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் திருக்கடவூரில் இச்செயல் நிகழ்ந்ததாகக் கூறுவர்.

காலாரி மூர்த்தி தாமரைப் பீடத்தில் வலக்காலை ஊன்றி நின்று கொண்டு, இடக் காலைத் தூக்கி எமனின் மார்பில் உதைப்பது போல் சிற்பங்களில் காணப்படுவார். சிவனுக்கு மூன்று கண்களும், கோரைப் பற்களும், அனல் மகுடமும், நான்கு அல்லது எட்டுக் கைகளும் காட்டப்பட்டிருக்கும். நான்கு கைகள் பெற்றிருக்கும் திருவுருவில் இருவலக் கைகளில் சூலமும் பரசும் ஆயுதங்களாகவும், இரு இடக்கைகளில் வியப்பு, சுட்டு முத்திரைகளாகவும் காட்டப்படும். எட்டுக் கைகள், இருப்பின் வலக் கைகள் நான்கிலும் சூலம், அங்குசம், வச்சிரம், நண்டு முத்திரை ஆகியவையும், இடக் கைகள் நான்கிலும் கேடயம், பாசம் (கயிறு), வியப்பு, சுட்டு முத்திரையும் இடம் பெற்றிருக்கும். இத்திருவுருவில் இறைவன் செவ்வண்ணம் கொண்டவராய் இருப்பார்.

எமன் (காலன்) இருகரங்களுடன் கரண்ட மகுடம் தாங்கி இருப்பான். மார்க்கண்டேயன் இலிங்கத்தின் அருகில் அமர்ந்து இறைவனை மலர்களால் அருச்சித்துக் கொண்டிருப்பது போலக் காட்டப்பட்டிருப்பான். மார்க்கண்டேயன் எமனுக்கு அஞ்சி இலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டுள்ள நிலையிலும் திருவுருக்கள் உண்டு.



காலகார மூர்த்தி – எல்லோரா குகைச்சிற்பம்

இத்தகு திருவுருவில் கலைச்சிறப்பு மிக்கவைகளுக்குச் சான்றாக எல்லோராவிலுள்ள தசாவதாரக் குகைச் சிற்பத்தையும், எல்லோரா கைலாசநாதர் ஆலயச் சிற்பத்தையும், தமிழகத்தில் பட்டீசுரம், திருச்செங்காட்டங்குடிச்சிற்பங்களையும் கூறுவர்.

சொ.சா.

**துணை நூல்:**

**Gobinath Rao T.A.**, Elements of Hindu Iconography Vol. III Part I. Indological Book House, Varanasi, 1971.

***காலகேசி*** யாப்பருங்கல உரையால் அறியப்படுவதும், இக்காலத்தில் இறந்துபட்டதுமான ஒரு நூல். 'மாலை மாற்றே' எனத் தொடங்கும் யாப்பருங்கல ஒழிபியல் நூற்பாவில் (யாப்பருங்.96) இடம்பெறும் தருக்கம் என்பதனை விளக்கும் பழைய உரையாசிரியர்,'தருக்கமாவன ஏகாந்த வாதமும், அநேகாந்த வாதமும் என்பன. அவை குண்டலம், நீலம், பிங்கலம், அஞ்சனம், தத்துவ தரிசனம், காலகேசி முத

லிய செய்யுள்களுள்ளும், சாங்கியம் முதலிய ஆறு தரிசனங்களுள்ளும் காண்க' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த விளக்கத்திலிருந்து இங்குக் குறிப்பிடப், பட்டுள்ள நூல்கள் அளவை இயல் தொடர்பான தருக்க நெறிகளை உணர்த்தும் கருத்துகளைக் கொண்ட நூல்கள் என்பது புலனாகிறது. அவற்றுள் குண்டலம், நீலம் என்பன குண்டலகேசி, நீலகேசி ஆகிய இரு காப்பியங்களைக் குறிக்கும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்விரு நூல்களும் காப்பியத் தலைவியின் பெயரால் அமைந்தன. அவை முறையே புத்த சமண சமய நெறிகளை வலியுறுத்தும் பாங்கில் அமைந்த காப்பியங்களாகும். இக்கேசி நூல்கள், பிற சமயக் கொள்கைகளை மறுத்துத் தம் சமயக் கொள்கைகளை நிறுவும் நோக்கில் அமைந்தன. குண்டலகேசியிற் கூறப்படும் சமயக் கருத்துகளை மறுத்து நிறுவும் வகையில் நீலகேசி எழுந்தது. நீலகேசியின் கருத்துகளை மறுத்து நிறுவும் வகையில் அமைந்ததுவே காலகேசி என்றும், இது சமணம் முதலிய சமயத்தை மறுத்துப் புத்த சமயத்தை நிறுவும் நூலாகும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். காப்பிய வகையிலான இந்நூல் பிற சமயக் கருத்துகளை மறுத்துரைத்தற்கும், தன் சமயக் கருத்துகளை நிறுவுவதற்கும் தேவையான தருக்க நூற் செய்திகளைக் கொண்டிருந்தமையினை யாப்பருங்கல உரையாசிரியர்தம் மேற்கோள் ஆட்சியினால் உணரமுடிகிறது. பெயர் சுட்டிய அளவில் அறிந்துகொள்ளக் கூடிய செல்வாக்குப் பெற்று விளங்கிய இந்தக் காலகேசி என்னும் நூல் பிற்காலத்தில் அழிந்துபட்டது. அதனால், இதன் ஆசிரியர் பெயர், காலம் முதலிய பிற விவரங்கள் ஒன்றினையும் அறியக் கூடவில்லை. யாப்பருங்கல உரை தோன்றிய காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இந்நூல் வழக்கிறந்தது என்பதும் 'காலகேசி முதலிய செய்யுள்களுள்ளும்' என்பதனால், இந்நூல் செய்யுளால் இயற்றப்பட்டது என்பதும் புலனாகின்றன. அ.மா.ப.

**காலச்சூரி ஆண்டு**: இது காலச்சூரி மரபினர் பயன்படுத்திய ஆண்டு. காலச்சூரி மரபினர் தொன்மை மிக்க சேதிப் (Cedi) பகுதியை ஆண்டு வந்தனர். இவர்களின் தலைநகரம் சபல்பூருக்கு (Jabalpur) அருகிலுள்ள திரிபுரி ஆகும். காலச்சூரி ஆண்டை முதன் முதல் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வடக்குக் கொங்கணப்பகுதியிலிருந்த திரிகூடகர்கள் பயன்படுத்தினர். பின்னர், கி.பி. 6,7-ஆம் நூற்றாண்டுகளில் மராத்தி மொழியைப் பேசும் மக்களும், மாளவ மக்களும் பயன்படுத்தினர். குசராத்தை ஆண்டுவந்த கூர்சரர்களாலும் இவ்வாண்டு பயன்படுத்தப்பட்டது. காலச்சூரி ஆண்டு சேதி ஆண்டு (Cedi Era) எனவும் கூறப்படுகிறது. அகின ஈசுவர சேனர் என்ற அரசர் காலச்சூரி ஆண்டைப் பயன்படுத்தியதாக நாசிக்குக் கல்வெட்டு கூறுகிறது. சு.இரா.

**காலச்சூரியர்** மத்திய இந்தியாவில் கி.பி 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செய்த அரச மரபுகளுள் ஒன்றைச் சார்ந்தவர்கள். இவர்கள் 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அரசோச்சினர்.

இதிகாசங்களும் புராணங்களும் காலச்சூரிய அரசர்கள் கைகயசந்திரிய மரபின் வழித்தோன்றல்கள் என்று கூறுகின்றன. காலச்சூரியர்களின் சிறப்பான கிளைகளில் ஒன்று திரிபுரா (Tripura) அல்லது தகலாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தியது. இக்கிளையில் தோன்றியவர்கள் தங்களைத் திருமாலின் (விட்டுணு) வழியில் வந்தவர்களாகக் கூறிக் கொண்டனர். இவர்களும் இராசபுத்திர இனத்தைச் சார்ந்தவர்களே. திரிபுராவிற்குச் சேடி (Chedi) என்றும் ஒரு பெயருண்டு. எனவே, காலச்சூரிய அரசர்களைச் சேடி அல்லது திரிபுராவைச் சார்ந்த காலச்சூரிகள் என்றும் கூறுவர்.

காலச்சூரிய மரபினைத் தோற்றுவித்தவர் முதலாம் கோக்கல்லர் ஆவார். அவர் கி.பி. 875 முதல் 925 வரை ஆண்டார். இன்றைய மத்திய பிரதேசத்தைச் சார்ந்த சபல்பூர் (Jabalpur) பிரிவை இவர் ஆட்சிசெய்தார். சந்தேலர்களுடனும் இராட்டிர கூடர்களுடனும் இவர் திருமண உறவு கொண்டிருந்தார். கூர்ச்சர பிரதிகரர இராசபுத்திரர்களிடம் இவர் நெருக்கமான உறவு கொண்டார்.

மத்திய பிரதேசத்தைக் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இலட்சுமணராசா என்பவர் ஆட்சி செய்து வந்தார். அவர் பல பகுதிகளை வெற்றி கொண்ட விறல் வீரர். வங்காளம், கோசலம் குசராத்து, காசுமீரம் போன்றவற்றை வெற்றிகண்ட இவர், பாண்டியப் பேரரசையும் வென்றார். இவர் காலத்தில் வாழ்ந்த பிறிதொரு இராசபுத்திர மரபினர் பரமாரர்களாவர். இரண்டாம் இலக்பத்முன்சா என்னும் பெயர்கொண்ட பரமார அரசர், காலச்சூரிகளின் அரசரான இரண்டாம் யுவராசன் என்பாரைத் தோற்கடித்துத் திரிபுராவைக் கைப்பற்றினார் என்றும், ஆனால், விரைவில் முயற்சி செய்து யுவராசன் திரிபுராவைப் பரமாரரிடமிருந்து மீட்டார் என்றும் தெரிகிறது. அப்போது தக்காணத்தில் அரசாண்ட சாளுக்கியரில் ஒரு பிரிவினர் கல்யாணியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தமையால் இவர்களைக் கல்யாணிச் சாளுக்கியர் என்பர். கல்யாணி,

சாளுக்கிய அரசரான இரண்டாம் தைலர் திரிபுராவை யுவராசரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

காலச்சூரிய மரபில் புகழ்பெற்ற அரசராகத் திகழ்ந்தவர் காங்கேயத் தேவர் என்பவராவர். இவர் கி.பி. 1030 முதல் 1041 வரை அரசாண்டவர். திறல் வீரரான இவரை விக்கிரமாதித்தியர் என்றும் அழைப்பர். விக்கிரமாதித்தியர் என்ற விருதுக்கு உலகை ஆண்டவர் என்பது பொருள். இவர் பல போர்களில் ஈடுபட்டார். காங்கராப் பள்ளத்தாக்கிலுள்ள சீராவை யும், கோசலை, உத்தலை போன்ற நாடுகளையும் வெற்றி கண்டார். இவர் கல்யாணிச் சாளுக்கியரைத் தோற்கடித்தார். திரிலிங்காதிபதி என்னும் பட்டத்தை யும் சூட்டிக் கொண்டார். கூர்ச்சரப் பிரதிகாரர்களிட மிருந்து அலகாபாத்தையும், பாலர்களிடமிருந்து காசியையும் கைப்பற்றினார். ஆனால், பரமார மன்ன ரான முதலாம் போசரிடத்தில் (Bhoja I) இவர் தோற்றுப்போனார்.

காலச்சூரிய மரபில் நாணயங்களை வெளியிட்ட வர் இந்தக் காங்கேயத் தேவரே. இச் செயல் இம் மரபின் சிறப்பான சாதனைகளுள் ஒன்றாகும். தங்கம், வெள்ளி, செம்பு, போன்ற உலோகங்களில் இந்நாணயங்கள் வெளியிடப்பட்டன. இந்நாணயங்கள் காங்கேயத் தேவரின் பெயருடன் இலக்குமியின் உருவத்தையும் கொண்டு விளங்குகின்றன.

காங்கேயத் தேவர் காலத்தில் சிவாலயம் ஒன்றும் கட்டப்பட்டது. காங்கேயத் தேவர் காலமானபோது இவருடைய மகன் இலக்குமிகர்ணன் என்பார் முடி சூட்டிக் கொண்டார்.

இலக்குமிகர்ணன் கி.பி. 1073 முதல் 1125 வரை அரசாண்ட காலச்சூரிய மன்னராவார். இவரும் தலை சிறந்த போர்வீரராகக் கருதப்படுகிறார். கல்யாணி, அனிசில்வாடா போன்ற அரசர்களைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு பரமார மன்னன் போசனை இவர் வெற்றி கண்டது சிறப்புச் செய்தியாகும். பாலரும், சந்தேலர்களும் இவரால் வெற்றி கொள்ளப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இலக்குமி கர்ணனைக் குறித்த கல்வெட்டுகள் வங்காளத்திலும் உத்திரப்பிரதேசத்திலும் கிடைத்துள்ளன. கூர்ச்சரத் திலிருந்து வங்காளம் வரை இவருடைய பேரரசு பரவியிருந்ததெனக் கூறலாம். இவரும் திரிலிங்காதிபதி என்னும் விருதினைச் சூட்டிக்கொண்டார். இவர் கர்ணமேடு என்றழைக்கப்பட்ட கோயில் ஒன்றையும், புதியதொரு நகரத்தையும் உருவாக்கினார் என்று கூறலாம். இவர் ஐரோப்பாவில் பிரஞ்சு மாமன்ன ராக ஆண்ட நெப்போலியனுடன் ஒப்பிடப்படுகிறார். தொடக்கத்தில் வெற்றி பெற்ற இவர் இறுதிக் காலத் தில் தோற்கடிக்கப்பட்டார். பாலர், சந்தேலர், பரமாரர், சோலங்கியர், கல்யாணிச் சாளுக்கியர் போன்ற பலரால் இவர் தோற்கடிக்கப்பட்டு முடிவில் முறியடிக்கப்பட்டார்.

இலக்குமிகர்ணனின் மகன் யசகர்ணனும் தந்தை யைப் போன்றே புகழுடன் அரசாண்டார். இவரும் வேங்கி நாடு, வடக்குப் பீகார் போன்ற பகுதிகளை வெற்றி கண்டதாக அறிகிறோம். இத்தருணத்தில் எழுச்சியுற்ற ககடவாலர்கள் காலச்சூரியரின் வச மிருந்த கங்கைப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்ட தால் காலச்சூரியரின் புகழ் மங்கலாயிற்று. இத்துடன் சந்தேலரும் பரமாரரும் காலச்சூரிய அரசின் பகுதி களைக் கைப்பற்றலாயினர் இத்தகைய சூழ்நிலையில் யசகர்ணனுக்குப் பின்னர் அரசு கட்டிலேறிய சுய கர்ணன் வீரமற்றவனாக இருந்தான். எனவே, காலச் சூரிய மரபு மேலும் மெலியலாயிற்று. அவருக் குப் பின்னர்ப் பட்டத்திற்கு வந்த அரசர் சந்தேலர் களிடமிருந்து இழந்த பகுதிகள் சிலவற்றைப் பெற் றார் எனினும், நலிவை அவரால் தடுத்து நிறுத்த இயலவில்லை.

காலச்சூரிய மரபின் இறுதிக்கட்ட அரசர்களான விசயசிம்மன் (கி.பி. 1180 முதல் 1195), நரசிம்மன் (கி.பி. 1155–1195), அசயசிம்மன் போன்றவர்கள் சிறப்பானவர்கள். தில்லியை கி.பி. 1125க்கும் கி.பி. 1309–ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத் தில் தில்லி சுல்தானிய அரசர்கள் ஆண்டனர். இவர் கள் காலச்சூரியரை வெற்றிகண்டனர். எனினும், திரி புராவுக்கு அண்மையில் கி.பி. 15–ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை காலச்சூரியர் குறுநில மன்னர் களாக ஆட்சி நடத்தினர். கோண்டு இனமக்கள் அவர்களை இறுதியாக வெற்றி கண்டார்கள்.

இரா.அ.

**காலசோகர்** அசாதசத்துருவிற்குப்பின் மகத நாட்டை ஆண்ட அரசர். சிசுநாகரின் மகன் என்று புத்தசமய இலக்கியங்கள் கூறுகின்றன. கால சோகர் கி.மு. 395 முதல் 367 வரை ஆண்டார். காலசோகருக்குக் காகவருணர் (Kakavarnin) என்ற வொரு பெயரும் இருந்ததாகத் தெரிகிறது. அவர் செய்தபணிகளுள் ஒன்று அரசர் வாழ்ந்த அரண்மனை யைக் கிரிவிராசம் (Girivraja) என்னுமிடத்திலிருந்து பாடலிபுத்திரத்திற்கு மாற்றியதாகும். இருப்பினும், அரசர் அவ்வப்போது வைசாலியிலும் தங்கியிருந்தார்.

வைசாலி என்னும் நகரில்தான் இரண்டாம் புத்த சமயக்குழு காலசோகரின் ஆட்சியின் பத்தாம் ஆண் டில் கூட்டப்பட்டதாகத் தெரிகிறது. காலசோகர் பாடலிபுத்திரம் அல்லது வைசாலி நகரத்தில் தொண்டையில் கத்தியால் குத்தப்பட்டு மாண்டார் என்பது மரபு வழிச் செய்தியாகும். இரா.அ.

**காலட்சேபம்** காண்க:அரிகதை காலட்சேபம்.

**காலடி** என்னும் ஊர் கேரளத்திலுள்ள எர்ணா குளம் என்னும் ஊருக்குக் கிழக்கே 40 கி.மீ. தூரத் திலும், திருச்சூர் என்னும் நகரின் தெற்கே 50 கி.மீ. தூரத்திலும் அமைந்திருக்கின்றது. வடக்கே இருந்து புகை வண்டியில் வரும் பயணிகள் ஆல்வாய் அல்லது அங்கமாலி என்னும் நிலையங்களில் இறங்கி, 16 கி.மீ தொலைவிலுள்ள இவ்வூருக்குச் செல்லலாம். காலடி (Kalady) மிகவும் செழிப்பான ஊராகும். பெரியாறு என்னும் நதியின் வலப்பக்கக் கரையில் அமைந்திருக் கின்றது. காலடி மிகச் சிறந்த இந்துத் தலங்களுள் ஒன்று. இங்கே தான், ஏறத்தாழ ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன் சிவகுரு என்ற பெரியாருக் கும், ஆரியம்பா என்ற அம்மையாருக்கும் மக னாக ஆதி சங்கராச்சாரியார் பிறந்தார். இவர் பதினாறு வயதாயிருக்கும் பொழுதே வேதங்களை நன்றாகக் கற்றுத் தெளிந்தார், பிறகு துறவியா னார். காலடியின் சிறப்பை மக்களுக்கு நன்குணர்த்தி யவர் சுவாமி ஆகமானந்தா என்பவர். இவர் காலடியில் இராமகிருட்டிண சங்கத்தின் கிளை ஒன்றை அமைத்தார். இங்கே சங்கரர் பெயரால் ஒரு கல்லூரி நிறுவினார். இயேசுவின் சீடரான புனித தாமசு என்பவர் காலடியின் அருகிலுள்ள மலையின் மேல் சிலுவையை நாட்டிச் செபம் செய்ததாகக் கூறுகின்றார்கள். இரா.கோ.

**காலத் தொடர் ஆய்வு**: காலத் தொடர் என்பது தொடர்ந்து வருகின்ற காலநிலையில் அல் லது கால இடைவெளியில் அளக்கக்கூடிய மாறியின் வரிசைப்படுத்தப்பட்ட புள்ளிவிவரங்களின் தொகுப் பாகும். குறிப்பிட்ட காலநிலை என்பது ஆண்டுகள், திங்கள், வாரங்கள், நாள்கள், மணித்துளிகள் ஆகியன வாயிருக்கலாம். எடுத்துக்காட்டாக 1951-ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரையிலும் உள்ள காலத் தில் நாட்டின் உணவு உற்பத்தி, நாட்டின் மக்கள் தொகை, வேலையின்மை, தொழில் நிறுவனத்தின் உற்பத்தி அளவு, நாட்டு வருமானம் ஆகியன பற் றிய புள்ளி விவரங்கள் அக்காலப் புள்ளிவிவரங்க ளாகும். இவற்றைப் பல்வேறு காலநிலைகளாகப் பல ஆண்டுகளில் பிரித்துக் கொடுக்கப்படுவது காலத் தொடரைக் (Time Series) குறிப்பதாகும். போக்கு வரத்துத் தொடர்பான விவரங்கள், திங்கள், வாரங் கள், நாள்கள், மணித்துளிகள் போன்ற கால நிலை களில் அடங்கும். ஆடை, சர்க்கரை போன்ற பொருள் களின் விற்பனை, ஆதாயம், இழப்புப் பற்றிய விவரங் கள் பல ஆண்டுகளுக்கு எல்லாத் திங்களிலும் தரப் படலாம்.

காலத் தொடர் காரணிகள், அவற்றில் ஏற் படும் மாறுதல்களின் அடிப்படையில் வகைப்படுத்தப் படுகின்றன. அவை நெடுங்காலப் போக்கு (Secular Trend), பருவ கால மாற்றங்கள் (Seasonal Variations), சுழலும் மாறுதல்கள் (Cyclical Fluctuations), ஒழுங்கற்ற மாற்றங்கள் (Irregular or Random Variations) என நான்கு வகைப்படும். காலத் தொடர் ஆய்வில் (Time Series Analysis) அடங்கும் நடை முறைக் கூறுகளாவன: (அ) நீண்டகாலப் போக்கின் அலகும் திசையும் அறிதல், (ஆ) பருவகால வேறுபாடு களின் தன்மையும் அலகும் அறிதல், (இ) சுழற்சியின் பல்வகைப் பிரிவுகளையும், அவற்றின் கால இடை வெளிகளையும் அறிதல், (ஈ) ஒழுங்கற்ற அல்லது நிலையற்ற மாற்றங்களின் விளைவுகளை அறிதல்.

**படிவம்**: காலத் தொடர் காரணிகள் ஒன்றுக் கொன்று தொடர்பற்றவையல்ல. இவைகளுக் கிடையே உள்ள தொடர்பு கூட்டல் படிவமாகவோ, பெருக்கல் படிவமாகவோ இருக்கும். கூட்டல் படிவ முறையில், காலத் தொடர் புள்ளிவிவரங்கள் நான்கு பிரிவுகளின் கூட்டல் தொகையாக எடுத்துக்கொள் ளப்படுகின்றன.

அதாவது,

$$Y_t = T_t + S_t + C_t + I_t$$

$Y_t$ = காலத்தொடரில் 't' என்ற கால நிலையில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரம்

$T_t$ = நீண்டகாலப் போக்கின் மதிப்பு

$S_t$ = பருவகால வேறுபாடுகளின் மதிப்பு

$C_t$ = சுழற்சி மாறுதல்களின் அளவு

$I_t$ = ஒழுங்கற்ற (அ) நிலையற்ற மாற்றங் களின் அளவு. எடுத்துக்காட்டாக, $Y_t = 576$ என்ற மதிப்பானது

$T_t = 400, S_t = 120, C_t = 20, I_t = 36$

ஆகியவற்றைக் கூட்டினால் பெறப்படும்

பெருக்கல் படிவ முறையில், காலத் தொடர் புள்ளி விவரங்கள், நான்கு பிரிவுகளின் பெருக்குத் தொகையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அதாவது,

$Y_t = T_t \times S_t \times C_t \times I_t$ படிவத்தில் தரப் பட்ட குறியீடுகள் மேலே கூறப்பட்டுள்ளவற்றைக் குறிக்கும்.

எடுத்துக்காட்டாக $Y_t = 576$ என்ற மதிப்பானது,

$T_t = 400, S_t = 1.5, C_t = 1.2, I_t = 0.8$

ஆகியவற்றைப் பெருக்கினால் பெறப்படும்.

இவ்விரு வே றுபட்ட படிவங்களுள் பெருக்கல் படிவமே கூட்டல் படிவத்தைவிடப் பெரும்பான்மை யான சூழ்நிலைகளில் பயன்படுத்தப் படுகிறது. நடை முறையில் எந்த ஒரு காரணியிலும் உருவாகும் பருவ கால வேறுபாடுகள் சுழற்சியின் காரணமாகப் பெருக லாம். அதாவது $S_t$, $C_t$ என்ற இரண்டுமே ஒன்றோ டொன்று தொடர்புடையன. கூட்டல் படிவ முறை யில், நான்கு காரணிகளின் புள்ளி விவரங்களும் அலகுகளில் தரப்படும். இக் காரணிகளிடையே தொடர்பு இல்லையென எடுத்துக்கொள்ளப்படுகிற பெருக்கல் படிவமுறையில் நீண்டகாலப்போக்கு ($T_t$) மட்டுமே தானாக இயங்கும் அலகுகளில் தரப்படு கிறது. பிற காரணிகள், நீண்டகாலப் போக்கின் விழுக்காடாகக் கொடுக்கப்படும். அதாவது $S_t$, $C_t$ என்ற இரண்டுமே $T_t$ – ஐச் சார்ந்திருக்கும்.

காலத்தொடரின் புள்ளி விவரங்கள் கால வேறு பாட்டினால் ஏற்படும் மாற்றங்களின் மதிப்பைத் தருகின்றன. மதிப்பு மாறுபடக் காரணமாக இருக் கின்ற காரணிகளை இரண்டு வகையாகப் பிரிக்க லாம். (1) திரும்பத் திரும்பத் தோன்றுபவை அல் லது திரும்பத் திரும்ப தோன்றாதவை (Recurring or Non Recurring). எடுத்துக்காட்டாக, பருவகால வேறுபாடுகள் ஒவ்வோர் ஆண்டும் திரும்பத் திரும்ப உருவாகிக் கொண்டேயிருக்கும். இடைக்காலத்தில் நிலையற்றதாக உருவாகும் மாற்றங்கள் திரும்பத் திரும்பத் தோன்றுவதில்லை. 2) ஒழுங்கான கால இடைவெளியில் தோன்றுபவை அல்லது இடைக் காலத்தில் நிலையற்றதாகத் தோன்றுபவை எடுத் துக்காட்டாக, பருவகால வேறுபாடுகளில் தோன்றும் கால இடைவெளிகள் எல்லா ஆண்டுகளிலும் மாறா மல் ஒரே மாதிரியாக ஒழுங்காக இருக்கும். ஆனால் சுழற்சி வேறுபாடுகளின் கால இடைவெளியானது ஒழுங்கற்றதாக இருக்கும்.

இவற்றின் அடிப்படையில் காலத்தொடரில் தோன்றும் மாற்றங்களின் காரணங்களை ஆராய்ச்சி யாளர்கள் பின்வரும் நான்கு படிவங்களில் ஆய்வு செய்கின்றனர்.

**அ) நீண்டகாலப் போக்கு** இலிங்கன் லெ. சௌவ் (Lincoln L. Chow) என்பவரின் கூற்றுப்படி இது தொடர்ச்சியான வளர்ச்சி அல்லது வீழ்ச்சியைக் குறிப்பதாகும். அதை வெளிப்படுத்துகின்ற காலம் 10 முதல் 50 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட தாக இருத்தல் இன்றியமையாததாகும். ஏனெனில் சில காரணிகள் குறுகிய காலத்தில் வெளிப்படையாக மாறாமலிருக்கும் அல்லது மிகவும் மெதுவாக மாறு படும்.

பொருளியல் வல்லுநரான கீன்சு (Keynes) மக்கள் நீண்ட காலத்தில் இறந்துவிடுவார்கள் எனக் கூறினா லும், பொருளியல், வாணிக அங்காடி ஆய்வுகளில் சிறப் பிடம் பெறுவது நீண்டகாலப் போக்கு ஆகும். நீண்ட காலத்தில் பண்டத்தின் விலை குறையும்; ஆனால் உற்பத்தி, தொழில் நுணுக்க வளர்ச்சி, குறைந்த ஆதாய நோக்கு ஆகியவை பெருகும். மக்கள் தொகைப் பெருக்கம், தனிஆள் வருவாய் (Per capita Income) உயர்வு, மக்களின் நுகர்ச்சிப் பழக்க வழக் கங்களில் தோன்றும் மாற்றங்கள் போன்றவை விலை ஏற்றத்திற்கான காரணிகளாகும். பெருகிவரும் மக்கள்தொகை, தொழில்நுட்ப வளர்ச்சி, தொழிற் றுறை உற்பத்தித் திறனில் முன்னேற்றங்கள், நிரு வாகம் விற்பனைத் துறையில் முன்னேற்றங்கள் ஆகி யன நீண்டகால வளர்ச்சிக்கான காரணிகளாகும். பண்டத்தின் தேவையில் ஏற்படும் வீழ்ச்சி, மூலப் பொருள்களின் பற்றாக்குறை, சிறந்த மருத்துவ வசதி கள் காரணமாகக் குறையும் இறப்பு விகிதம் முதலி யன நீண்டகால வீழ்ச்சிக்கான காரணிகளாகும்.

இத்தகைய நீண்ட காலப் போக்கின் தன்மை யினையும் அலகினையும் பின்வரும் முறைகளில் கணக்கிடலாம். i) வரைபட முறை: இம்முறையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் X அச்சில் ஆண்டுகளும் Y அச்சில் காரணியின் மதிப்பும் கணக் கிடப்பட்ட புள்ளிகளாகக் குறிக்கப்படுகின்றன. இந்தப் புள்ளிகளின் அருகில் அவற்றில் பெரும்பான் மையானவற்றை இணைத்துச் செல்லும் நேர்கோடு அல்லது வளைந்த கோடு நீண்டகாலப் போக்கினைத் தருகிறது. ii) நகரும் சராசரி முறை (Moving Ave-

rage Method): இம்முறையில் சுழற்சியின் கால அளவினைக் குறிக்கும் கால இடைவெளியில் நகரும் புள்ளிவிவரங்கள் சாராசரிகள் மூலம் கணக்கிடப்படுகின்றன. இவையே நீண்டகாலப் போக்கினைக் குறிப்பதாகும். காலத்தொடர் மதிப்பிற்கும், இதற்குமிடையே உள்ள வேறுபாடு குறுகியகால மாற்றங்களைக் குறிப்பதாகும். iii) சிறும வேறுபாடு வர்க்க முறை (Method of Least Squares): இம்முறையில் வரையப்படும் நீண்டகாலப் போக்குக்கோட்டிற்கும், காலத் தொடர் வரைபடத்தில் குறிக்கப்பட்ட புள்ளிகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு மிகக் குறைந்த அளவே இருக்குமாறு $Y_t = a + bt$ என்ற சமன்பாட்டில் உள்ள 'a' மற்றும் 'b'-இன் மதிப்புகள் பெறப்படுகின்றன. a-யும், b-யும் மாறிலிகளைக் (Constants) குறிக்கும்.

எடுத்துக்காட்டு: 1

அட்டவணை:

| ஆண்டுகள் | $Y_t$ | t | $tY_t$ | $t^2$ |
|---|---|---|---|---|
| 1980 | 8 | -2 | -16 | 4 |
| 1981 | 10 | -1 | -10 | 1 |
| 1982 | 15 | 0 | 0 | 0 |
| 1983 | 25 | 1 | 25 | 1 |
| 1984 | 40 | 2 | 80 | 4 |
| | 98 | | 79 | 10 |

சிறும வேறுபாடு வர்க்க முறைப்படி,

$$b = \frac{\Sigma Y_t}{\Sigma t^2} \quad \frac{79}{10} = 7.9$$

$$a = \frac{\Sigma Y}{n} \quad \frac{98}{5} = 19.6$$

எனவே நீண்டகாலப் போக்குக் கோட்டின் சமன்பாடு


$$Y_t = 19.6 + 7.9 \quad t$$

't' என்பது காலத்தைக் குறிக்கும். b = 7.9 என்பது ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக உள்ள நிலையான மாற்றத்தைக் குறிக்கும். மேற்கூறிய சமன்பாட்டின்படி நீண்டகால மதிப்புகள் ($T_t$) அட்டவணை 2-இல் காட்டப்பட்டுள்ளது போல் கணக்கிடலாம்.

அட்டவணை: 2.

| ஆண்டுகள் | $Y_t$ | $T_t$ |
|---|---|---|
| 1980 | 8 | 3.8 |
| 1981 | 10 | 11.7 |
| 1982 | 15 | 19.6 |
| 1983 | 25 | 27.5 |
| 1984 | 40 | 35.4 |

வரைபடம் 1.





$Y_t$ = காலத்தொடர் வளைகோடு

$T_t$ = நீண்டகாலப் போக்குக் கோடு

**(ஆ) பருவகால மாறுபாடுகள்** (Seasonal Variations) ஓர் ஆண்டுக் காலத்திற்குள் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒழுங்காகவும் திரும்பத் திரும்பவும் தோன்றுவதாகும். இவை வாரம் அல்லது திங்கள் அல்லது மூன்று மாதங்களுக்கிடையே உள்ள இடைவெளிகளில் தோன்றும் மாறுதல்களாயிருக்கும். தட்பவெப்ப நிலை, மழையளவு மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகியன இவை உருவாவதற்கான காரணிகளாகும். எடுத்துக்காட்டாக, குளிர்காலத்தில் சூடான பானங்கள், கம்பளித் துணி ஆகியவற்றின் தேவை மிகுதியாக இருக்கும். கோடைக் காலத்தில் பருத்தித் துணிகள், குளிர் பானங்கள் ஆகியவற்றின் தேவை மிகும். மக்களின் பழக்க வழக்கங்கள் காரணமாகக் குறிப்பிட்ட திங்கள்களில் விழாக்கள் பண்டிகைகள் போன்றவை நடைபெறும்.

பருவகால வேறுபாடுகளைக் கணக்கிட எளிய சராசரி முறை, நீண்டகாலப் போக்கு விகித முறை போன்றவை பின்பற்றப் படுகின்றன. இவைகளிலிருந்து பெறப்படும் பருவகால மாறுதல்களின் மதிப்பு சராசரியாக 100 எனவும், சாதகமான சூழ்நிலைகளில் 100-க்கு மேற்பட்டும், பாதகமான சூழ்நிலைகளில் 100-ஐவிடக் குறைவாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக, நெல் உற்பத்தியின் பருவகாலக் குறியீடு நெல் அறுவடை மாதங்களான தை, மார்கழி போன்றவற்றில் 100-க்கு மேற்பட்ட எண்ணான 110, 125 என்பனவாக இருக்கும். ஏனைய மாதங்களில் 100-ஐவிடக் குறைவான 95, 80 என்பனவாக இருக்கும்.

வரைபடம்: 2




**(இ) சுழலும் மாறுதல்கள்** உயர்வு, தாழ்வு அசைவுகளை அடிப்படையாகக் கொண்டன. இவற்றிற்கான கால இடைவெளி 2 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருக்கும். இவை பருவகால வேறுபாடுகள்போலச் சமமான கால இடைவெளியில் திரும்பத் திரும்பத் தோன்றுவதால் இத்தகைய சுழற்சி ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கிடுவதற்குக் காலத்தொடர் மதிப்பிலிருந்து, நீண்டகாலப் போக்கின் மதிப்பு நீக்கிய பின்னர்க் குறுகிய கால வேறுபாடுகள் பெறப்படுகின்றன. இவற்றின் நகரும் சராசரிகள் கண்டுபிடிக்கப்படுவதன் மூலம் சுழற்சி வேறுபாடுகளின் தன்மையும் அளவும் கணக்கிடப்படுகின்றன.

**(ஈ) ஒழுங்கற்ற மாற்றங்கள்:** இத்தகைய வேறுபாடுகள் முன்கூட்டியே சொல்லமுடியாத நெறிக்குட்படாத நிகழ்ச்சிகளால் உருவாவனவாகும். அவை பஞ்சம், போர், வெள்ளம், நில அதிர்வு ஆகிய இயற்கைக் காரணிகளாகவோ வேலைநிறுத்தம், கதவடைப்பு போன்றவைகளாகவோ இருக்கலாம். இவற்றின் பாதிப்பை அளவிடுவதன் வாயிலாக இவற்றைக் கட்டுப்படுத்துவதன் இன்றியமையாமையை உணரலாம்.

**சிறப்பியல்புகள்:** (1) இக்கால வணிகத்தின் தலையாய சிக்கல் வருங்காலத்தில் வணிக நிலையில் உருவாக்கக்கூடிய மாற்றங்களைச் சரியாக அல்லது சிறப்பாகக் கணக்கீடு செய்வதேயாகும். இத்தகைய சிக்கல்களைத் தீர்க்கப் பல்வேறு பட்ட காலங்களின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்வது தேவையாகும். தொழிலின் விரிவாக்கத் திட்டங்களுக்கும் வருங்காலத் தேவை பற்றிய கணிப்பிற்கும் காலத்தொடர் ஆய்வு பயன்தருகிறது. (2) பொருள்களின் விற்பனையில் பருவகால மாறுதல்கள் நிலவுங்கால் அதனை மதிப்பீடு செய்தல் நிருவாகக் கட்டுப்பாட்டிற்குத் தேவையாகிறது. உற்பத்தி அட்டவணையை உருவாக்குவதன் மூலமும் பருவகாலக் குறியீட்டெண்களைக் கணக்கிடுவதன் மூலமும் திங்கள் தோறும், கையிருப்பைத் தேவைக்கேற்றாற்போல் மாற்ற முடிவு செய்ய இயலும். இத்தகைய கணிப்பு தேவையற்ற முதலீடுகளைத் தவிர்ப்பதற்கு உகந்த நெறிமுறையாகும். (3) வேளாண்மை விலை வரையறைக் குழுவின் (Agricultural Price Commission-APC) விலை வரையறை முறைக்கு உறுதுணையாக அமைவது காலத் தொடர்பு ஆய்வாகும். இந்திய உணவுக் கழகத்தின் (Food Corporation of India-FCI) விலை நிலை நிறுத்தக் கொள்கையானது இத்தகைய ஆய்வின் மூலம் பின்பற்றப்படுகிறது. (4) வங்கிகளும் அரசுகளும் தங்களுடைய கடன் கட்டுப்பாடு, பணவீக்கக் கட்டுப்பாடு - கொள்கைகளை வரையறுப்பதற்குப்

புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளவு, விலை நில வரம் பற்றிய புள்ளி விவரங்கள் ஆகியவை தேவைப் படுகின்றன. (5) அரசுகளின் பொருளாதாரத் திட் டங்கள் காலத்தொடர்ப்புள்ளி விவரங்களை அடிப் படையாகக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, அரசின் நிதி ஒதுக்கீடானது, பெற வேண்டிய வேலை வாய்ப்பு, உணவுப் பண்டங்களின் உற்பத்தி, மக் களின் சேமிப்பு ஆகியவற்றின் மூலம் முடிவு செய்யப் படுகிறது. மா. தெ.

**துணை நூல்கள்**:

Croxton, F. E., & Cowden, D. J., Practical Business Statistics, Prentice Hall Inc., Englewood Cliffs, 1948.

Ferber, R., & Verdoon, P. J., Research Methods in Economics and Business, The Macmillan Company, New York, 1962.

Gupta, S.P., Statistical Methods, Sultan Chand and Sons, New Delhi, 1978.

Lewis, E.E., Methods of Statistical Analysis in Economics and Business, Hawghton Miffin Company, Boston, 1953.

***காலப்பாணி***: சமூகத்தின் முக்கிய சக்திகளால் பரவலாக ஒத்துக் கொள்ளப்பட்ட உடை, பேச்சு, இசை, ஓவியம் போன்றவற்றின் பழக்கங்கள் காலப் பாணி (Fashion) எனப்படும். இப் பழக்கங்கள் காலத் திற்குக் காலம் மாறுபடுகின்றன.

காலப்பாணி என்பது ஆடை, குறிப்பிட்ட வகை யான அலங்காரம் ஆகியவற்றை மட்டும் குறிப்பிடுவ தில்லை. வண்ணம் தீட்டுதல், இசை, நாடகம், வீட்டு அலங்கரிப்பு, விழா நிகழ்ச்சி, இலக்கியம், மருத்துவப் பயிற்சி, வேலையினை நிருவகித்தல், அரசியல் கோட் பாடுகள், தத்துவம், உளவியல், சமூக அறிவியல், இயற்கை அறிவியல், கணிதம் போன்றவற்றிலும் கூடக் காலப்பாணியின் தாக்கத்தைக் காணலாம். எதையும் ஒரு குறிப்பிட்ட முறையில் செய்வது, பேசுவது போன்றவற்றில் இது காணப்படுகின்றது. இது ஒரு புதிய பொருள் அல்லது புதுமையின் மூலம் கவரும் மூலப் பொருளைத் தனக்குள் கொண் டுள்ளது. மேலும், இப்பொழுது உலக வழக்கில் இருக்கும் ஒரு வழக்கம் அல்லது பரம்பரைப் பழக்கம் என்றும் இது கூறப்படுகின்றது.

பொதுவாக, காலப்பாணி ஒரு கூட்டு நடத்தை யாக வகைப்படுத்தப்படுகின்றது; ஏனெனில், இது எண் ணற்றவர்களைக் கவரும் தன்மையினையும், இடைக் காலத் தன்மையினையும் கொண்டுள்ளது. இது மிக வும் முக்கியத்துவம் இல்லாததாகக் கருதப்படுகின் றது; ஆனால் சமூக வாழ்வில் காலப்பாணி குறிப் பிடத்தக்க விளைவுகளைக் கொண்டிருக்க முடியும் என இரால்பு மேயர்சன் (Rolf Meyershon), எலிகு காட்சு (Elihu Kartz) போன்ற அறிஞர்கள் கூறுகின்ற னர். இது ஒரு தகுதியின் அடையாளச் சின்னமாக இருக்கலாம். எனவே, சமூக அடுக்கமைப்பில் இது ஓர் ஒருங்கிணைக்கும் பகுதியாகச் செயற்படுகின்றது. மேலும், தோர்சுட்டைன் வெப்லன் (Thorstein Veblan) என்னும் அறிஞர் காலப்பாணி சமூக மதிப்பீடு கள், நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு ஓர் அகராதி யாக விளங்குகிறது எனக் கூறுகிறார். இது ஒரு பழக்க வழக்கத்தில் ஏற்படும் புதிய மாறுபாட்டு வழக்கம் ஆகும். அதாவது, வாடிக்கையான ஒன்றி லிருந்து புதிய, மாறுபட்ட வழக்கத்திற்குச் செல்வ தற்கான முயற்சியாகும். ஆனால், அதே நேரத்தில், மறுபடியும் ஏற்றுக் கொள்ளக்கூடிய எல்லைகளுக்குள் உள்ள ஆடைகளையே அணிந்து கொள்வது என எட் வர்டு சபீர் (Edward Sapir) சமூக அறிவியல் களஞ் சியத்தில் கூறுகின்றார்.

பல உளவியல் அறிஞர்களும் சமூகச் சிந்தனை யாளர்களும் காலப்பாணியைப் பற்றிப் பலவழிகளில் விளக்குகின்றனர். எடுத்துக்காட்டாக, காலப்பாணி யின் மூலம் மக்கள் ஒரு வழக்கத்தில் உள்ள பேசப் படும் அல்லது எழுதப்படும் கருத்துப் பற்றிய சமூகத் தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொடர் உறவினைக் குறிப்பிடுகின்றனர் என மெக்ஈவர் (Mac Iver), பேசு (Page) ஆகியோர் கூறுகின்றனர். இப்போது பொது வாக உள்ள வழக்கம், முறை அல்லது தனிப் பண் பினைத் தெரிவித்தல், அறிமுகம் செய்தல் அல்லது எந்த வழக்கம் தனக்குள் மாற்றத்தை அனுமதிக் கின்றதோ, அந்தக் குறிப்பிட்ட சிறப்புத் தன்மையின் எண்ணமே காலப்பாணியாகும் எனக் கிம்பால் யங்கு (Kimball Young) என்ற அறிஞர் கூறுகின்றார்.

**சிறப்பியல்புகள்**: பொதுவாக, காலப்பாணி பிற ரைப் பின்பற்றுவதன் மூலம் கற்கப்படுகின்றது. சில மக்கள் இதைப் பின்பற்றுகின்றார்கள். பிறர்அதைப் போன்று நடிக்கின்றனர். இப்பொழுது ஆடையைப் பொறுத்தவரை இது மிக அதிகமாகக் காணப்படு கிறது. எடுத்துக்காட்டாக, சில குறிப்பிட்ட திரைப் படங்களில் நடிக்கின்ற கதாநாயகர்களும் கதாநாயகி களும் அணிகின்ற ஆடைகளைப்போன்று பல இளை ஞர்களும் இளம் பெண்களும் ஆடை அணிகின்றனர். காலப்பாணி சமூகத்தாலும் குறிப்பிட்ட பாணியைப் பின்பற்றும் குழுவினராலும் ஒத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில், பிறருடைய

கவனத்தை அதனால் கவரமுடியாது. மேலும், சமூகத்தின் ஆதரவு கிடைக்கவில்லையெனில் காலப்பாணி தானாக அழிந்து விடும். காலப்பாணி நிலையானதன்று. இது மாறும் தன்மையுடையது; சில நேரங்களில் மிக விரைவிலேயே மாறுகின்றது. புதிய பொருள்கள், சுயமான எண்ணங்கள், புதுமை போன்றவற்றை அடைவதற்காகத் தனிப்பட்டவர்களின் விருப்பத்திற்கேற்ப இது மாறுகின்றது.

தங்கள் சொந்த எண்ணங்களுக்காகவும் விருப்பங்களுக்காகவும் மக்கள் காலப்பாணியின் மூலம் வெளிப்பாடுகளைக் கண்டுபிடிக்கின்றனர். இதனால், தங்களையும் இப்போதைய தங்கள் ஆளுமையையும் ஒரு கவர்ச்சி அமைப்பின் மூலம் வெளிக்காட்ட முடிகின்றது. காலப்பாணி மிக வேகமாகப் பரவும், எனினும் இதனுடன் தொடர்புள்ளவை பயனுள்ள மூலப் பொருள்களைக் கொண்டிருக்கும் எனக் கூறமுடியாது. சில காலப்பாணிகள் பயனற்றதாகவும் சமூகத்தைப் பாதிப்பதாகவும் இருக்கும். ஆனால் இவை கொடிய தீயினைப் போன்று பரவும் தன்மை உடையன காலப்பாணி ஓர் எல்லைக்குள் அடங்கியதன்று. இது மிக விரிவாக எங்கும் பரவுகிறது. உடைகள், அணிகலன்கள், கலை, இலக்கியம் உட்பட அனைத்துப் பொருட்களும் காலப் பாணியினால் கவரப்படுகின்றன.

காலப்பாணி மற்றவற்றைப் பார்த்துச் செய்வதன் மூலம் பரவுகிறது. ஆனால் எந்தவிதக் காரணம் அல்லது நியாயத்தின் அடிப்படையிலும் இது கற்கப்படுவதில்லை. எனவே, பகுத்தறிவு, தருக்க விளக்கம் போன்றவற்றில் காலப்பாணி பின் தங்கி உள்ளது. மற்றவரைக் காட்டிலும் 'தான் மேலானவன்' என்ற எண்ணத்தைத் திருப்திப்படுத்துவதற்காக அனைவரும் வழக்கமாகக் காலப்பாணியின் மூலம் பிறரைப் போன்று செய்கின்றனர். உயர்வான நிலையினை வெளிக்காட்டுவதாக உள்ள காலப்பாணிகள் மட்டுமே, பொதுவாக மக்களால் மாதிரியாகப் பின்பற்றப்படுகின்றன. எனவேதான் தாழ்ந்த வகுப்பினைச் சார்ந்த மக்கள், உயர் வகுப்பினைச் சார்ந்தவர்களிடையே சாதாரணமாகக் காணப்படும் காலப்பாணியினை மாதிரியாகக் கொள்கின்றனர். சமூக ஆதரவுடன் கூடிய காலப்பாணி பயனையோ மேலான தகுதியினையோ மெய்ப்பித்துக் காட்டுவதன் மூலம் வருவதில்லை. இது உணர்வுகள், அனுபவிக்கும் ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் மாறுகின்றது.

சுறுசுறுப்பான வாழ்க்கையை நடத்துபவர்களும் போதிய பணவசதி இல்லாதவர்களும் பழமையான தரத்திலேயே வாழ்வார்கள். அவர்கள் புதிய காலப்பாணியை ஏற்க மாட்டார்கள். பழங்குடியினர், விவசாயச் சமூகங்கள், சாதிச் சமூகங்கள் போன்ற நிலையான சமூகங்களில் காலப்பாணி மிக அரிதாகக் காணப்படுகின்றது.

மனிதன் ஒரு சமூக விலங்கு என்ற காரணத்தால் அவன் குறிப்பிட்ட காலப்பாணியை மாதிரியாகக் கொள்ளும் பொழுது, எதையும் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் அவனுக்குள் வளர்கிறது. மேலும், தீவிர உணர்ச்சியின் காரணமாகக் காலப்பாணி விரைவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

காலப்பாணியைப் பொறுத்தவரை மாற்றங்கள் ஒரு சக்கரத்தின் நிலையிலேயே நடைபெறுகின்றன. உடையைப் பொறுத்தவரை இதை மிக நன்றாகக் காணலாம். எடுத்துக்காட்டாக, மக்கள் தொடக்க காலங்களில் மிக இறுக்கமான கால்சட்டை (Pant) அணிந்து, பின்பு தளர்ந்த கால்சட்டை அணிந்தனர். இன்று மீண்டும் இறுக்கமான கால்சட்டையே அணிகின்றனர். இதைத்தான் கிம்பால்யங்கு என்ற அறிஞர் மனிதஉடலின் தன்மை ஓர் அளவான எண்ணிக்கையுள்ள மாறுதல்களை மட்டுமே அனுமதிக்கின்றது; எனவே புதுமையை மாதிரியாகக் கொள்கின்ற விருப்பம்அடிக்கடி பழைய முறையினைப் பின்பற்றுகின்றது எனக் கூறுகிறார். சொத்துரிமை,உடைகள், பாலுறவு ஆகியவற்றின் நடவடிக்கைகளே இடைக் காலத்தில் மாற்றமடைந்து மீண்டும் தொடக்க காலப் பண்புகளை ஏற்கின்றன என மசும்தார் (Majumdar), மதன் (Madan) ஆகிய இந்திய அறிஞர்களும் கூறுகின்றனர். இவ்விருவரும் இக் கருத்தைப் பின்வரும் படத்தின் மூலம் விளக்குகின்றனர்.

1. அரசின்மூலம் அமைக்கப்பட்ட பொதுவுடைமை
2. பண்பாட்டு இயக்கப் பெயரில் அரைகுறை ஆடை அணிதல் (நிருவாணக் கொள்கை)
3. நியாயப்படுத்தும் முறையில் கட்டுப்பாடற்ற பாலுறவு நடத்தை

1. தனியார் உடைமை
2. முழுமையான ஆடை அலங்காரம்.
3. ஒரு துணை மணம்

1. சொத்தில் பொதுவுடைமை (திட்ட நோக்க மற்று)
2. அரைகுறை ஆடை. அணிதல்
3. வரன்முறையற்ற பாலுறவு நடத்தை

**உளவியல் காரணங்கள்**: மக்களின் தனித்தன்மை. ஒத்துப்போகும் தன்மை, மாற்றத்தை விரும்புகின்ற ஆசை, பிற மாதிரியையும் கருத்தேற்றத்தையும் பின்பற்றும் பொதுவான தன்மைகள், பாலினக் கவர்ச்சி, வசதியாக வாழ்வதற்கான விருப்பம், சுய மதிப்பு, அழகை விரும்புதல், வேறுபாட்டை விரும்புதல், குறைகளை மறைத்தல், வருத்தத்தைச் சரிக்கட்டுதல் போன்ற பல உளவியல் காரணங்களால் காலப்பாணி பின்பற்றப்படலாம்,

ஒரு பரம்பரையிலிருந்து மறு பரம்பரைக்கு இடம் பெயர்தல், ஒரு குழுவிலிருந்து மற்றக் குழுவிற்குப் பெரும்பேறாகப் பெறுதல், தாழ்ந்த குழுவினர் உயர்குழுவினரைச் சார்ந்த மக்களைப் போன்று வாழ நினைத்தல், புதுமையான பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் அல்லது தயாரிப்பாளர்கள் பிறரைப் பின்பற்றுதல், கருத்தேற்றம் போன்றவற்றால் காலப்பாணி பரவுகின்றது.

**ஆர்வக் கொள்கை**: வேறுபட்ட அல்லது புதுமையான நல்லநடத்தைமூலம்மதிப்பு, தகுதிஆகியவற்றை அடையலாம் எனப் பெரும்பாலான மக்கள் நம்புகின்றனர். மிகக் குறைந்த கால அளவில் நடத்தையில் சில மாதிரியான மாற்றங்கள் ஏற்படுவதே ஆர்வக் கொள்கை (Fad) எனப்படுகின்றது. இக் கொள்கை என்பது காலப்பாணிக்கும் வெறி அல்லது மிகுந்த ஆசைக்கும் இடைப்பட்ட நிலை ஆகும். அதாவது, மெய்ப்பாடுகளுடைய எண்ணத்துடன் பின்பற்றப்படுகின்ற காலப்பாணி ஆர்வக் கொள்கை எனப்படுகின்றது. எனவே, ஆர்வக் கொள்கை காலப்பாணியைப் போன்றல்லாது, மிக வேகமாக வளர்கிறது; உச்சநிலையை அடைகின்றது; பின் வேகமாக அழிந்து போகின்றது. பொதுவாக ஆர்வக் கொள்கை குறிப்பிட்ட சில பொருள்களுடன் தொடர்புள்ளதாக இருக்கும். எடுத்துக் காட்டாக, புல்கானின்(Bulganin) என்பவர் இந்தியாவிற்கு வந்த பின்னர், பலர் அவருடைய பாணியில் தாடி வளர்க்கத் தொடங்கினர் ஆனால், இந்த வழக்கம் அதிக நாட்கள் நீடிக்கவில்லை.

காலப் பாணியைப் போன்று ஆர்வக் கொள்கையும் பரவலாகக் குழு வாழ்க்கையின் பல வேறுபட்ட பகுதிகளில் விளையாட்டுகள், பொழுது போக்கு, விழா, சாப்பாட்டுப் பழக்கம், உடல்நலம், மருத்துவப் பயிற்சி, உடை, அணி அலங்காரங்கள், மொழி, நம்பிக்கைகள் போன்றவற்றில் ஆதிக்கம் செலுத்துகின்றது. இது ஒப்புதலைப் பெறுவதற்காக மதிப்புள்ள குழுவின் ஆதரவை நாடுவதில்லை. மேலும், இது அடுக்கமைப்புச் சமூகத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் பரவலாம். இக் கொள்கை, உடனே தோன்றி மறையக் கூடிய தன்மையுடையதாக இருந்தாலும், சமூகப் பண்பாட்டிலிருந்து பிரிக்க இயலாதவாறு அவ்வப் போது தோன்றும். காலப்பாணியினைப் போலன்றி, இது எக்காலச் சமூகத்திலும் தோன்றக் கூடியது.

பூ.த.

**துணை நூல்கள்**:

**Blumer, Herbert, Fashion**, From Class Differentiation to Collective Selection, Sociological Quarterly, 1969.

**Horton, Paul B., Chester L. Hunt.**, Sociology, Mc Graw Hill International Book Company Tokyo, 1981.

**Konig, Rene, A La Mode**, On the Social Psychology of Fashion, Seabury Press, Inc., New York, 1974.

**Majumdar, K.N. and T.N. Nadan**, An Introduction to Social Anthropology, Asia Publishing House, Bombay, 1956.

**காலப் பெட்டகம்**: பன்னெடுங்காலம் கழிந்த பின்னரும், வரலாற்றினை எதிர்காலத்திற்கு உணர்த்த மேற்கொள்ளப் பெறும் முயற்சியே காலப் பெட்டகமாகும். வரலாற்றினைச் சுருக்க வடிவில் எழுதிப் பெட்டகம் ஒன்றில் வைத்துப் புதைத்து வைப்பர்.

உலக நாடுகள் பலவற்றிலும் இம்முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. அமெரிக்க நாட்டில் காலப்பெட்டகத்தை (Time Capsule) 1938-ஆம் ஆண்டில் செப்டம்பர் 23-ஆம் நாள் நியூயார்க்கு உலகக் கண்காட்சி அரங்கில் புதைத்தனர். இந்தக் காலப்பெட்டகத்தினை 5000 ஆண்டுகள் கழித்து கி.பி. 6939-ஆம் ஆண்டில் வெளியே எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். இக்காலப் பெட்டகத்தினுள் ஆறு அடி நீளமுள்ள உருண்டை வடிவக் கண்ணாடிக் குடுவை வைக்கப் பெற்றது. அதனுள் சமூக, அறிவியல், தொழில் பற்றி விளக்கும் பொருள்கள் வைக்கப் பெற்றன. 10,000 மில்லியன் வார்த்தைகளுக்கு மேற்பட்ட சமகால வரலாற்றுச் செய்திகள் அங்கிய நுண்படச் சுருளும், 15 நிமிடச் செய்திப் படச் சுருளும், விவிலிய நூலும், இப்பெட்டகப் பொருள்கள் பற்றிய பதிவுநூலும் இதனுள் வைக்கப் பெற்றன.

கண்ணாடிக் குடுவையினை மேலே குறிப்பிட்ட பொருள்களால் நிரப்பி, உட்புறக் காற்றை வெளியேற்றி, உள்ளே உள்ள பொருள்களைப் பாதுகாக்க வெடிய வாயு (Nitrogen) நிரப்பப் பெற்றது. அதற்கெனத் தனியே அமையப்பெற்ற கிணற்றினுள் இயற்கையினால் எளிதில் கரைந்திடாத உலோகங்களால் அமைக்கப் பெற்ற பெட்டியினைப் புதைத்தனர்.

இதனைப் போன்ற இக்கால வரலாற்றுச் சுருக்கம் அடங்கிய காலப்பெட்டகம் ஒன்று மே மாதம் 28-ஆம் நாள், 1940-இல் அட்லாண்டாவிற்கு அருகே ஒக்லே தோப்பேப் பல்கலைக்கழகத்தில் புதைக்கப்பெற்றது.

இந்தியாவில் காலப்பெட்டகம் புதைக்கும் முயற்சி முதன்முதலில் 1973-ஆம் ஆண்டு சனவரி 30-இல் மேற்கொள்ளப்பெற்றது. அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கையும் பணியும் கூறும் காலப்பெட்டகம் அது. அப்பெட்டகம் காந்தி சுமிருதியினுள் (பிர்லா பவன்) புதைக்கப் பெற்றது.


இந்தியா விடுதலை பெற்ற இருபத்தைந்தாம் ஆண்டின் வெற்றி விழா நினைவாக ஆகசுட்டு 15, 1973-இல் தில்லிச் செங்கோட்டையில், வெளிப்புறத்தே காலப்பெட்டகம் ஒன்று புதைக்கப்பெற்றது.

இக்காலப்பெட்டகத்தினுள் உள்ள வரலாற்றுச் செய்திகள் பற்றிக் கருத்து மாறுபாடு எழுந்தது. மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர், செய்தி ஏடுகளில் இப்பெட்டகத்தினுள் உள்ள வரலாறு, சரிவர எழுதப்பெற்ற வரலாறு அன்று எனக் கருத்துகள் எழுந்தமையால், அப்போது ஆட்சியிலிருந்த சனதா அரசின் கல்வி அமைச்சர் சூலை 20, 1977-இல் காலப்பெட்டகம் தோண்டியெடுக்கப் பெறும் என இந்திய நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இவ்வறிப்பினைத் தொடர்ந்து திசம்பர் 8, 1977-இல் காலப்பெட்டகம் வெளியே தோண்டியெடுக்கப் பெற்று, மீண்டும் புதைக்கப் பெற்றது. ந.க.ம.

**காலப்புலன் காட்சி**: இதனை இருவகையாகக் கொள்ளலாம். அவையாவன: 1. மூளையிலிருந்து எடுத்துச் செல்லும் செய்தியைப் புலன்கள் மூலம் உணர்வதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம், 2. கால வேறுபாட்டினால் புலன்காட்சியில் உண்டாகும் மாற்றம்.

**நேரம்**: எந்த ஒரு சூழ்நிலையிலும் புலன்காட்சி தொடர்பு கொள்ளும் நிகழ்ச்சியின் நேரப் பரிமாணத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரு குறுகிய கால கட்டத்தில் ஒரு பொருளை மனிதன் நோக்கும் பொழுது, புலன் காட்சி மாறுபட்டுக் காணப்படுகிறது. அதே உந்துதலை அதிக நேரம் ஆராயும் போது புலன்காட்சியும் வேறுபடுகிறது.



மேற்கண்ட படத்தைப் பார்த்தவுடன் இதில் 16 சதுரங்கள் இருத்தலை அறியலாம். ஆனால், இதே படத்தை இன்னும் அதிக நேரம் கவனிக்கும் பொழுது, இதில் அதிக அளவு 30 சதுரங்களை ஒருவர் புலன்காட்சி மூலம் அறியலாம்.

காலப் புலன் காட்சி வெவ்வேறு வகையான நிகழ்ச்சிகளாலும் செயற்பாடுகளாலும் பாதிக்கப்படுகிறது. புலன்காட்சி நிமிட நேர உய்த்துணர்தல் முதல் தலைமுறை தலைமுறை செயற்பாடுகள் வரை வேறுபடும். இவ்வாறு வேறுபடுவதற்கு இடம், காலம், புலன்காட்சிக்கு உட்பட்ட காரணம் ஆகியவை அனைத்தும் காரணிகள் ஆகும்.

முப்பரிமாணப் படங்களையோ இடங்களையோ காணும்போது புலன்காட்சி ஒவ்வொரு பரிமாணத்திற்குத் தகுந்ததாகவும் அதற்கு ஒதுக்கப்படும் காலத்திற்கு ஒத்ததாகவும் வேறுபடும் வாய்ப்புகள் உள்ளன. எந்த ஒரு பொருளையும் குறுகிய காலம் புலன்கள் மூலம் ஆய்வதற்கும், நீண்ட காலம் புலன்கள் மூலம் ஆய்வதற்கும் உள்ள வேறுபாடு மனிதனின் புலன் காட்சியைப் பெருமளவு பாதிக்கக்கூடும்.

காலப் புலன் காட்சியும் மனநிலைகளும் ஒருவரின் தீர்மானங்களைப் பெருமளவு பாதிக்கும் தன்மை பெற்றுள்ளன. அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெளிவான பல உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளன. புலன்காட்சிக்கு எடுத்துக்கொள்ளும் காலம் மனிதர்

கள் மகிழ்ச்சியாக இருக்கும் போது குறைவாகவும், சோகமாக இருக்கும்போது அதிகமாகவும் உள்ளது.

காலப்புலன் காட்சிக்கு கீழ்வருவனவற்றை எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். மனிதனின் புலன் காட்சி வெளி உலகத்தில் உள்ள பல்வேறு நிகழ்ச்சிகளை வேகமாக உணர்வதால், அவற்றின் தன்மை என்ன என்றே அறிந்து கொள்ள இயலாமற் போகிறது. அறிவியலறிஞர் நியூட்டன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த உலகத்தைப் பற்றிய செய்தி அறிந்த மக்களிடம் புவிஈர்ப்பு விசை என்ற ஓர் உண்மையைக் கூறினார். புவிஈர்ப்பு விசை உலகம் தோன்றிய காலத்திலேயே இருந்திருக்கக்கூடும். ஆனால், மனிதன் புலன் காட்சியின் மாறுபாடுகளினால் அதை அறிந்து கொள்ளாமல் இருந்திருக்கின்றான். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு, மிக நீண்டகாலம் இந்த பூமியைப் பற்றி ஆராய்ந்த தன் விளைவாகப் புவிஈர்ப்பு விசை என்ற அறிவியல் உண்மையை நியூட்டன் கண்டறிந்து உலகிற்கு உணர்த்தினார்.

சூரியனைப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் வழிபட்டு வருகின்றனர். சூரியனை ஓரிரு மணித்துளிகளே பார்க்கும் அவர்களுக்கும் அதனை மணிக்கணக்காகப் பார்த்த கோபர்நிகசு என்ற அறிஞருக்கும் புலன் காட்சியில் மாறுபாடு தோன்றியது. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதுடன், சூரியனையும் சுற்றி வருகிறது என்ற அறிவியல் உண்மையை அவர் புலன்காட்சி மூலம் அறிந்து உலகிற்கு உணர்த்தினார். காலவேறுபாடு புலன்காட்சியில் ஏற்பட்டதன் காரணமாக இந்த அறிவியல் உண்மையினை உணர முடிந்தது.

காலப் புலன் காட்சி, கருத்துச் செய்திப் பரிமாற்றத்தில் பெரும் பங்கு வகிக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு கூட்டத்தில் ஒரு பேச்சாளர் மிகவும் வேகமாகப் பேசும் பொழுது, அங்குள்ள கூட்டத்தினரால் பேச்சாளரின் உரையைச் சரியாகக் கவனிக்க முடியாது. எனவே, அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கூட்டத்தினர் உணர்ந்து கொள்ள இயலாமற் போய் விடுகிறது. அதனால், அரிய புதிய கருத்துகளை எவ்வளவுதான் முயன்றாலும் பேச்சாளரால் புரிய வைக்க முடியாது. அதே போன்று, கூட்டத்தினராலும் அதைப் புரிந்து கொள்ள முடியாது.

**கால வேறுபாட்டினால் புலன் காட்சியில் உண்டாகும் மாற்றங்கள்:**

**மொழி வழக்கு மாறுபாடு**: தென் இந்தியா முழுமையும் ‘மதராசு’ என்று கூறப்பட்ட காலத்தில் வட இந்தியர்கள் தென்னிந்தியர்களை ‘மதராசி’ என்று அழைத்தார்கள். இப்போது மொழிவாரி மாநிலங்களின் பெயரில் அந்தந்த மாநில மக்களை அழைக்கிறார்கள். இதில் இருவகைப்பட்ட நிலைகள் உள்ளன. பெரும்பாலான வடஇந்திய முதியவர்கள் இன்னமும் ‘மதராசி’ என்றே தென் இந்தியரை அழைக்கிறார்கள். ஆனால், மாறிவரும் சமூக, பொருளாதார, அரசியல் நோக்குக் காரணமாக இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரையும் பிரித்துத் தனித்தனியாக மொழிவாரியாக அழைக்கிறார்கள். காலப் புலன் காட்சியை வேறுபடுத்துவதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது ‘ஆப்பிரிக்க – அமெரிக்கர்’ என்ற சொல்வழக்குக் கறுப்பர்களைக் குறிப்பதாக வழங்கி வந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு, கறுப்பர்கள் என்ற சொல் மரியாதைக் குறைவானதாகவும் அமெரிக்க நீக்கிரோக்களை இழிவு செய்வதாகவும் கருதப்பட்டது. ஆனால், இப்போது அமெரிக்க நீக்கிரோக்கள் அல்லது ஆப்பிரிக்க அமெரிக்கர்களுள் பெரும்பாலோர் தாங்கள் கறுப்பர்கள் என்று அழைக்கப்படுவதையே விரும்புகின்றார்கள். ஆயினும், அமெரிக்க நீக்கிரோக்கள் என்ற பெயரைக் காட்டிலும் ஆப்பிரிக்க–அமெரிக்கர் என்ற பெயரையே பெரும்பாலோர் விரும்புவதாக ‘மெக்சில்’ என்ற உளவியலார் குறிப்பிடுகிறார். இது காலப் புலன் காட்சியின் விளைவே ஆகும் என்றும் குறிப்பிடுகிறார்.


**தலைமுறை வேறுபாடு**: முற்காலத்தவர்களுக்குப் புதுமையானவையாகவும் தெரியாதவையாகவும் உள்ள கருத்துகளும் இக்காலத்தவரால் புலன்காட்சி மூலம் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. சில ஆண்டுகளுக்கு முன் மாணவர்களுக்குப் பருவமுறைத் தேர்வுகள் விளங்காத, உணர்ந்து கொள்ள முடியாத முறையாக இருந்தன. ஆனால் இன்று அவர்கள் மிக எளிதாக அவற்றை உணர்ந்து கொள்கிறார்கள். கிருமிகள் மூலம் நோய் பரவுவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத செய்தியாக முன்னர் இருந்தது. ஆனால், இன்று அது சாதாரணமாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இரா.வே.

**காலம்**: காலம் (Time), வெளி (Space) இவையிரண்டும் விஞ்ஞானிகளுக்கும், தத்துவ அறிஞர்களுக்கும் புதிராக இருக்கின்றன. இவையிரண்டையும் நிகழ்ச்சிகளிலிருந்து (Events) பிரிக்க முடியுமா என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்பினால் இருவித கருத்துகள் கிடைக்கும். அவை: 1) காலம், வெளி ஆகிய இரண்டும் நிகழ்ச்சிகளின் தொடர்பின்றித்

தனித்து இருக்கமுடியும். 2) காலம், வெளி ஆகிய இரண்டும் நிகழ்ச்சிகளாலேயே இருக்கின்றன. காலம் ஒரே திசையிலேயே கடந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் என்று நகர முடியும். இந்த மூன்று வரையறைகளும், மக்கள் தங்களுக்காக ஏற்படுத்திக் கொண்டனவேயன்றி இயல்பாக அமைந்தவை அல்ல. காலம் ஒரு தொடர்ச்சியானது ஆகும் (Continuous Flow). காலத்தை நுகர்ச்சிக்குட்பட்டது (Perceptual Time) என்றும், எண்ணத்திற்குட்பட்டது (Conceptual Time) என்றும் பிரிக்கலாம். நுகரும் காலம் புலன்களுடன் தொடர்புடைய தொடர்ச்சியாக உணரக்கூடிய ஒன்றாகும் (Sensibly Continuous); பல பகுதிகளாய்ப் பிரித்து அறியமுடியும் (Quantitative). எனவே, அதற்கு ஒரு வரையறை (Limit) உண்டு. தன்மையடிப்படையிலும் (Qualitative) வெவ்வேறு காலங்களாகப் பிரிக்க முடியும். ஆனால், எண்ணத்திற்குட்பட்ட காலத்திற்கு ஒருவரையறை கிடையாது (Infinite); தன்மை மற்றும் அளவு என்று பிரித்துணரவும் முடியாது.

காலம் தொடக்கமும் (Beginning) முடிவும் (End) அற்ற ஒன்றாகும். எனவே, காலத்திற்கு வரையறை கிடையாது (Infinite). காலத்தையும் வெளியையும் தொடர்பு படுத்தியே அறிஞர்கள் பேசுகின்றனர். விஞ்ஞானிகளும் தத்துவ அறிஞர்களும் வெளி, காலம் ஆகிய இரண்டையும் பற்றிப் பலவாறாகச் சிந்தித்துக் கருத்து வெளியிட்டாலும்,விஞ்ஞானிகள் காலம்,வெளி என்னுமிரண்டையும் வெளி உலகத்தோடு தொடர்புள்ளதென்ற கருத்தை மட்டும் ஏற்றுக்கொள்கிறார்கள். புற உலகத்தின் தன்மை அடிப்படையில் காலம் வரையறுக்கப்படுகிறது. ஆனால், தத்துவ அறிஞர்கள் உலகத்தின் தன்மையோடு மனிதனின் தன்மையையும் இணைத்துக் காலத்தை அறிய முற்படுகின்றனர். எனவே காலம், வெளி என்னுமிரண்டும் மனிதனின் அறிவுக் கொள்கையோடு தொடர்புடையன என்கின்றனர்.

காலம், வெளி ஆகிய இரண்டும் மனத்தோடு மட்டுமே தொடர்புடையன என்ற கொள்கையை (Idealistic view of space and time) கியூம், காண்டு என்ற இரு அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். எண்ணங்களைப் பிணைக்கும் ஒருதன்மையால் மனம் அனுபவங்களைக் காலம், வெளி போன்றவற்றோடு தொடர்புபடுத்திப் பிணைக்கின்றது என்று கியூம் கூறுகிறார். எனவே காலம், வெளி என்னுமிரண்டும் மனத்திற்கு வெளியில் உலகத்தில் இல்லை. காண்டு காலம், வெளி ஆகிய இரண்டும் மனத்தினால் வெளிப் பொருட்களின்மீது திணிக்கப்படுகின்றன என்கிறார். அவை மக்களுக்குத்தான் தவிர்க்க முடியாததே தவிர உலகத்திற்கன்று. அவை நுண்ணறிவின் தோற்றங்கள் (Forms of intuition)ஆகும். அனுபவத்தை நல் வழிப்படுத்தக் காரணத்தால் கையாளப்படும் சாதனங்களாகும் (Regulative ideas of reason). மனத்தினோடு தொடர்பின்றி வெளி உலகச் சுதந்திரத்தை வலியுறுத்துவோர் (Realists) காலம், வெளி ஆகிய இரண்டும் மனத்தைச் சார்ந்தவையல்லவென்றும், வெளி உலகத்தோடு தொடர்பு கொண்டும், சுதந்திரமாகவும் இருக்கவல்லவை என்றும் கூறுகின்றனர். சாமுவெல் அலெக்சாண்டர் (Samuel Alexander) என்பார் வெளி, காலம் ஆகிய இரண்டும் சேர்ந்து தனியாக இயங்கவல்லவையென்றும், இவ்விரண்டின் சேர்க்கையால்தான் உலகம் பரிணாம வளர்ச்சியடைந்தது என்றும் கூறுகின்றார். இவ்விரண்டின் சேர்க்கை சிக்கலாக ஆகப் பல்வேறு குணங்கள் தோன்றி, இறுதியில் கடவுள் பரிணாம வளர்ச்சியின் இறுதிக் கட்டமாக விளங்குகிறார் என்கிறார். இதனைக் கீழ்க்காணும் பிரமிடு (Pyramid) மூலம் விளக்குகிறார்.




காலத்தையும் உயிரையும் தொடர்புபடுத்திப் பரிணாம வளர்ச்சியை விளக்குகிறார் என்றி பெர்க்குசன் (Henri Bergson) என்பார். வில்லியம் சேம்சு (William James) என்பாரும் பெர்க்குசன் கருத்தை உடன்படுகிறார். காலத்தைக் கணித வல்லுநர்கள் கணக்கிடுவதுபோல் உயிரற்ற ஒன்றாகப், பல கூறுகளாகப் பிரித்து அறிய முற்படக் கூடாது என்றும், உயிரோட்டத்தோடு தொடர்புபடுத்தியே அதனை அறிய முற்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார் பெர்க்குசன். ஏனெனில், காலம் என்பதும் மாற்றம் என்பதும் ஒன்றோடொன்று பிணைந்தவை. மாற்றம் நிகழ்கிறது என்றால் காலத்தின் அடிப்படையிலேயே அது நிகழ வேண்டும். பரிணாம வளர்ச்சி காலத்தின் தொடர்ச்சி

யான இயக்கத்தால் நிகழ்கிறது. இவ்வளர்ச்சியைப் பற்றி முன் கூட்டியே எதுவும் சொல்ல முடியாததாலும், புதுமைகள் இவ்வளர்ச்சியின் அமிசங்களாக இருப்பதாலும் இப்பரிணாம வளர்ச்சியைப் படைப்புப் பரிணாமவளர்ச்சி (Creative Evolution) என்று பெர்க்குசன் கூறுகிறார்.

இக்கால அறிவியல் உலகில் காலத்தைப் பற்றி மிகுதியும் ஆய்ந்தறிந்த மேதை ஐன்சுட்டின்(Einstein) ஆவார். அவர் தம் ஒப்புமைக்கொள்கையில் (Theory of Relativity), வெளி, காலம் ஆகிய இரண்டும் சேர்ந்த ஒரு தொடர்ச்சி (Space-time continuum) என்றும் ஒன்றினின்றும் மற்றொன்றைப் பிரிக்க இயலாது என்றும் கூறி, நியூட்டன் (Newton) இவ்விரண்டையும் பிரித்ததை மறுக்கிறார். உண்மையில் வெளியும் காலமும் (Space and Time) என்றே குறிப்பிடவேண்டும் என்கின்றார். நியூட்டன் வெளியிட்ட வெளி-காலம் ஆகியவற்றின் முடிவான கொள்கையை (Absolute theory of Space & Time) மறுத்து ஒப்புமைக் கொள்கையை (Relativity theory) வலியுறுத்துகிறார். ஏனெனில், இப்பேரண்டத்தில் எல்லாக் கோள்களும் நகர்ந்து கொண்டேயிருக்கின்றன. எந்த ஒரு இடத்தையும் முடிவாகத் தொடர்பு படுத்தக் கூடியது என்று கூறமுடியாது. எடுத்துக்காட்டாக இந்தியாவில் இப்போது இருக்கும் காலம் அமெரிக்காவில் இருப்பதைவிட வேறுபட்டது என்பதனைக் காட்டலாம். மேலும், பூமியில் இருக்கும் கால அளவுகள் எல்லாக் கோள்களுக்கும் பொருந்தும் என்று கூறமுடியாது. அ.இரா.

**துணை நூல்கள்:**


**Bernard Bosauquet**, The Principle of Individuality and Value, The Macmillan Company, New York, 1912.

**Clifford Barrett**, Philosophy, The Macmillan company, NewYork, 1956.

**Eddington**. A.S., The Nature of the Physical world, The Macmillan Company, NewYork, 1928.

**Taylor**, A.E., Elements of Mataphysics, Methuen & Co., London, 1961.


***காலம்சார் தொழில்*** என்பது ஆண்டு முழுவதிலும் தொடர் உற்பத்தி வேலையின்றிக் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் உற்பத்தி வேலை வாய்ப்புகளை அளிக்கும் தொழில்களைக் குறிக்கும். இத்தொழிலுக்கான (Seasonal Employment) காரணிகளுள் இயற்கையின் தன்மை, உற்பத்திப் பொருள்கள், உற்பத்தி முறை ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். இத்தொழில் சிறப்பாக வேளாண்மைத் துறையையும், கட்டடத் துறையையும் (Building Construction) சார்ந்ததாகும்.

பனிக்கட்டித் தொழில், குளிர்பானத் தொழில் போன்றவை கோடைக் காலத்தில் செழிப்புற்று விளங்கும். நிலக்கரித் தொழில் குளிர் காலத்தில் வளர்ச்சியுறும். இத்தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் தேவையின் அடிப்படையில் காலம் சார் தொழில் (Seasonal Employment) அமைகிறது. பொருள்களின் பாணிகள், மக்களின் விருப்பு வெறுப்புகள், பழக்கவழக்கங்கள், வாணிக நடைமுறைகள், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றில் உண்டாகும் மாற்றங்கள் காரணமாகக் குறிப்பிட்ட, காலங்களில் சில பொருள்களின் தேவையில் உயர்வும் தாழ்வும் ஏற்படும். தேவை குறையும்போது அப்பொருள் அங்காடியில் தேக்கம் ஏற்பட்டு உற்பத்தி கீழிறங்கும். அவற்றால் அப்பொருளின் உற்பத்தி நிலையிலும் அங்காடி நிலையிலும் உழைக்கும் பணியாளர்களின் வேலைவாய்ப்புகள் காலம் சார்ந்தனவாக அமையும்.

திருவிழாக்கள், பண்டிகைக் காலங்களில் மட்டும் வேலைவாய்ப்பினை அளிக்கும் தொழில்கள் பல உண்டு. ஐரோப்பிய நாடுகளில் புத்தாண்டு நாள்களை யொட்டிய நவம்பர், திசம்பர் திங்களில் பொருள்களின் உற்பத்தி, விற்பனை, பொது வாணிக நடவடிக்கைகள் ஆகியன உச்ச கட்டத்தையடைகின்றன. அத்துறைகளும் அஞ்சல்துறை, போக்குவரத்துத் துறை போன்ற பணித் துறைகளிலும் அக்காலத்தில் வேலைவாய்ப்பு மிகுந்து காணப்படும். புத்தாண்டிற்குப் பின் மந்தநிலை காணப்படும். இந்தியாவிலும் திருவிழாக்கள், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளை ஒட்டிய காலங்களில் பொருளாதார வாணிக நடவடிக்கைகள் மிகுந்து காலம்சார் தொழிலும் வேலைவாய்ப்புகளும் பெருகுகின்றன.

இந்தியாவின் வேளாண்மைத் துறையில் நிலவும் காலம்சார் தொழில், பொருளியல் ஆய்வுகளில் தனிச் சிறப்பிடம் பெற்றுள்ள கருவுருவாகும் (Concept). இந்திய வேளாண்மை காலம்சார் தொழிலை அடிப்படையாகக் கொண்டுள்ளது எனப் பொருளியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தியா வேளாண்மைப் பொருளாதாரத்தை முதன்மையானதாகக் கொண்டிருந்தாலும், இந்திய வேளாண்மை பருவ மழையைச் சார்ந்துள்ளது. இந்தியத் தொழிலாளர்களுள் 70 விழுக்காட்டினர் வேளாண்மையை வாழ்க்

கைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். எனினும், பருவ மழையின் ஒழுங்கற்ற (Irregular) பண்பியல்புகளின் காரணமாக வேளாண்மைத் தொழிலில் உற்பத்தியும் வேலைவாய்ப்புகளும் ஆண்டு முழுவதிலும் சீராக அமைவதில்லை.

மழையின் காலமும் அளவும் வேலைவாய்ப்பினையும் உற்பத்தியையும் வரையறுக்கின்றன. பருவக் காற்று இந்தியா முழுவதிலும் ஒரே அளவாக இருப்பதில்லை. பொதுவாக, ஐந்தாண்டு மழைச் சுழற்சி உள்ளது எனக் கருதப்படுகிறது. ஓர் ஆண்டில் நல்ல மழையும், பிறிதோர் ஆண்டில் மிகக் குறைவான மழையும், எஞ்சிய மூவாண்டுகளிலும் சராசரி மழையும் பெய்வதாகவும் அறியப்படுகிறது. ஆகையினால், இந்திய வேளாண்மை மழையின் சூதாட்டம் என்று வருணிக்கப்பட்டுள்ளது. இவற்றால் நாடு முழுவதிலும் வேளாண்மையினர் திட்டமிட இயலா வேளாண்மைத் தொழில்முறையினைப் பின்பற்றிச் சில காலங்களில் வேலையின்றி அல்லலுறுகின்றனர்.

தென்மேற்குப் பருவக்காற்று நாட்டின் மொத்த மழையில் 75 விழுக்காட்டை அளிக்கிறது. இதுவும் நாட்டின் ஓரிடத்தில் மிகையாகவும் வேறுசில இடங்களில் மிகக் குறைவாகவும் பெய்கிறது. இப்பருவக் காற்று மழையினால் நாடு முழுவதிலும் உள்ள வேளாண்மையினர் சூன் திங்களிலிருந்து ஆகசுட்டுத் திங்கள் வரை வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர். வடகிழக்குப் பருவக்காற்றினால் பயனடையும் தமிழ்நாடு, ஆந்திரக் கடலோரப் பகுதியைச் சார்ந்த வேளாண்மையினர் அக்டோபர், நவம்பர் முதற்பகுதி வரை வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர்.

தட்பவெப்பக் காலநிலை, பருவமழை ஆகியவற்றின் பண்பியல்புகளைச் சார்ந்தனவாகப் பயிர்வகைகளும் வேலைவாய்ப்புகளும் அமைகின்றன. மழை, காலம் கடந்து பெய்வது, நீண்டகாலம் பெய்வது, வழக்கத்திற்கு மாறாகக் கூடுதலாகவும் குறைவாகவும் பெய்வது, பெரும் புயலுடன் பெய்வது போன்ற பல நிலையற்ற இயற்கைக் காரணங்களால் திட்டமிட்ட வேலை அமைப்பை (Employment Structure) இந்திய வேளாண்மைப் பொருளாதாரத்தில் உருவாக்க இயலவில்லை. அதனால், நிலையற்ற வருவாயையும் எதிர்காலத்தையுமுடைய காலம்சார் தொழிலாளர்களால் இயங்கும் துறையாக இந்திய வேளாண்மை உள்ளது.

இயற்கையின் மாறுபாடுகளினால் ஏற்படும் உறுதியற்ற தன்மையை நீர்ப்பாசன வசதிகளின் மூலம் மேற்கொள்ளலாம் எனினும், இந்தியாவிலுள்ள நீர்ப்பாசன வசதிகள் தேவைக்குக் குறைவாகவே முன்னேற்றமடைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் உள்ள பயிரிடும் நிலங்களில் 68 விழுக்காடு நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி இல்லை. இந்தியா வேளாண்மைப் பொருளாதாரமாக உள்ளதால், நாடு முழுவதிலும் நீர்ப்பாசனத்தின் தேவை மிகுந்து காணப்படுகிறது. மழை பெய்கின்ற பகுதிகளில் தொடங்கப்பட்ட வேளாண்மைப் பணி முடிவுற நீர்ப்பாசனம் இன்றியமையாததாயுள்ளது. வறட்சிப் பகுதிகள் நாடெங்கிலும் பரவலாக உள்ளன. அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தொழிலுக்கு நீர்ப்பாசனம் உயிர்நாடியாயுள்ளது. செழிப்பான பகுதிகளிலும் பல பயிர்ச் சாகுபடிக்கும், கோடைக்காலச் சாகுபடிக்கும் நீர்ப்பாசனம் தேவையாயுள்ளது. எனவே, அரசும் பல நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

இந்திய வேளாண்மையினர் மழையின்றியும், நீர்ப்பாசன வசதிகள் இன்றியும் உள்ளமையால் ஓர் ஆண்டின் பெரும்பாலான நாள்கள் வேலையின்றியுள்ளனர். குறிப்பாக, நாட்டின் முக்கிய பயிர்களான நெல், கோதுமை ஆகியவற்றின் அறுவடைக்குப் பிந்திய காலத்திலும், விதை தெளித்த காலத்திற்கும் அறுவடைக்கும் இடைப்பட்ட காலத்திலும், வேலைவாய்ப்புகளின்றி உள்ளனர். துணைத் தொழில்கள், கைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், ஊரகத்தொழில்கள், கம்மியம் போன்ற கைவினைத் தொழில்கள் முதலியன காலம்சார் தொழிற் சிக்கலை ஒழிக்கும் அளவிற்கு முன்னேற்றமடையவில்லை.

காலம்சார் தொழிலைச் சார்ந்த சிக்கலை முற்றிலுமாக ஒழிப்பது இயலாது எனினும், திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் ஓரளவிற்கு அதனைக் கட்டுப்படுத்தலாம். காலம்சார் தொழில், வேளாண்மையில் இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகளவில் பல நாடுகளில் காணப்படுகிறது. தொழிற்றுறையிலும் உள்ளது. மின்சார அளிப்பு, பற்றாக்குறை, வாணிகச் சுழற்சி, கால வேறுபாட்டால் நுகர்வோரின் தேவை மாற்றம் ஆகியவற்றால் பணித்துறைத் தொழிற்றுறையிலும் காலம்சார் தொழிற் சிக்கல்கள் வேலைவாய்ப்புகளில் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்குகின்றன. திட்டமிடுதல், அங்காடிக் கொள்கை, நிலையான ஆண்டு ஊதியம் வழங்கும் முறை (Fixed Annual Wages), பற்பல பணியாற்றும் தொழில்நுட்பம் பெறுதல் போன்றவை மூலம் காலம்சார் தொழிற் சிக்கல்களை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தலாம்.

அ.கு.சா.

**காலவரையறை**: குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகளில் சட்ட நடவடிக்கைகள், மேல் முறையீடுகள் முதலியவற்றில் காலவரையறை (Limitation) கடைப்பிடிக்கப்படுகிறது. அந்தக் காலவரையறையைக் கடந்து எவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அது நீதிமன்றத்தால் புறக்கணிக்கப்படும். காலவரையறைத் தொடர்புடைய செய்திகளைக் காலவரையறைச் சட்டம், 1963-இல் காணலாம். பு.வே.

**காலா இனத்தவர்**: எத்தியோப்பியாவில் பெரும் எண்ணிக்கையில் வாழும் இரு மக்களினத்தவர்களுள் ஓர் இனம் காலா (Galla) எனப்படும். இவர்களின் எண்ணிக்கை 3,500,000 - க்கும் மேலாகும். வரலாற்றியலார் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே இம்மக்களைக் காலா என்று குறிப்பிட்டுவரினும், இப்பெயரின் தோற்றம் பற்றித் தெளிவாக அறிய முடியவில்லை. காலா மக்கள் தங்களை ஒரோமோ (Oromo) என்றே சிறப்பாகக் கூறிக் கொள்வர்.

எத்தியோப்பியாவின் நிலப்பரப்பில் இவர்கள் சற்றேறக்குறையப் பாதிப் பரப்பில் பரந்து வாழ்கின்றனர். இவர்கள் அந்த நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர். இவர்கள் வாழும்பகுதி மத்திய எத்தியோப்பியா, அடிசுஅபாபா (Addis Ababa) ஆகிய பகுதிகளாகும். ஒரு சில குழுவினர் வடகென்யா, கிழக்குக் கென்யா வரையிலும் பரவிக் காணப்படுகின்றனர். இவர்கள் வாழும் பகுதிகள் உயரமான மேட்டு நிலங்களையும் வெப்பம் மிகுந்த தாழ்நிலப் பகுதிகளையும் கொண்டவை. இப்பகுதிகள் அனைத்தும் வளைந்தோடும் ஆற்றினால் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவர்கள் 200 தனித்தனி கூட்டத்தினராக வாழ்ந்து வருகின்றனர்.

காலா மக்கள் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சற்று உயரமானவர்கள்; ஆப்பிரிக்கக் கறுப்பர்களைக் காட்டிலும் சற்று வெளிர் நிறமானவர்கள்; மூக்கு குறுகியது. இவர்கள் பேசும் மொழி ஆப்பிரிக்க - ஆசிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மேற்குக் குசுட்டிக்குக் (Western Gushitic) குழுவைச் சேர்ந்தது. இம்மொழி பரவலாகப் பேசப்பட்டாலும் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அம்காரிக்கு (Amharic) மொழியை ஆட்சி மொழியாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இன்று சோமாலியா என்று கூறப்படும் நிலப் பகுதியில் ஆயர் குடிகளாக வாழ்ந்த இவர்கள் கி.பி. 15,16-ஆம் நூற்றாண்டுகளில் எத்தியோப்பியாவிற்குள் நுழைந்தனர். இங்குக் குடியேறிய பின்னர் வேளாண் தொழிலில் ஈடுபட்டனர்; பின்னர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் எத்தியோப்பியாவின் பெரும்பான்மையான நிலப்பகுதிகளைத் தம்வசப்படுத்தினர்; ஆனால், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எத்தியோப்பிய அரசர்களால் அதிகாரம் பறிக்கப்பட்டவராயினர். சீ.ப.

**காலாட்சு** ஐரோப்பாவில் தான்யூபு ஆற்றுக்குத் தெற்குப் பகுதியில் கிழக்கு உருமேனியா நாட்டில் உள்ள ஒரு நகரம். பொருளாதாரச் செயற்பாட்டில் இது ஒரு சிறந்த மையமாகவும் பெருமை சால் உள்நாட்டுத் துறைமுகமாகவும் விளங்குகிறது. காலடி என்ற பெயரும் இதற்கு உண்டு. இரும்பு எஃகு தொழிற்சாலைகளும் இங்கு உள்ளன. காலாட்சு (Galatz) நகரம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பன்னாட்டு வாணிக நிலையமாக வளர்ச்சியுற்றது. இது கி.பி. 1834 முதல் 1883 வரை ஒரு சுங்கமற்ற துறைமுகமாக இருந்தது. தெ.பா.

**காலாட்படை** படைகளுள் ஒன்று. இது மற்றப் படைகளுக்கு முதுகெலும்பு போன்றது. காலாட் படையினர் (Infantry) மிகவும் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். போர் முனையில் வீரத்துடன் செயலாற்றத் தேவைப்படும் சில பண்புகளை உடையவர்களே இதில் சேரமுடியும். போர்க் கருவிகளைச் சுமந்து கொண்டு நடந்து சென்று பலப்பல போர் உத்திகளைக் கையாண்டு போர்புரியும் இவர்களுக்குக் காலாட்படையினர் என்று பெயரிட்டுள்ளனர். இக்காலத்தில் பல்வேறு துறைகளின் வளர்ச்சி காரணமாக இவர்கள் முன்பு போல முழுவதும் நடந்து செல்ல வேண்டியதில்லை. பலவகையான ஊர்திகளில் இவர்கள் போர்க்களங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றனர். தெ.பா.

**காலி**: இது இலங்கைத்தீவின் தென் பகுதியில் உள்ள ஒரு துறைமுகப் பட்டினம். இங்குகி.மு. 100-ஆம் ஆண்டிலேயே, சீனர்களும் அரேபியர்களும் வாணிகத்திற்காகக் கூடினர். பிறகு இங்கு ஏற்பட்ட போர்ச்சுகீசிய ஆதிக்கம் கி.பி. 1057 முதல் 1640வரை நீடித்தது. காலி (Galle) கி.பி. 1640 முதல் 1656 வரை தச்சுக்காரரின் (The Dutch) ஆட்சி இலங்கையில் நிலவியபொழுது, முக்கிய தலைநகராகவும் துறைமுகமாகவும் விளங்கியது. இங்கிருந்து தேயிலை, இரப்பர், தேங்காயெண்ணெய், கிராம்பு முதலியன ஏற்றுமதியாகின்றன. ஒரு காலத்தில் இங்குப் பௌத்த சமயம் தழைத்தோங்கியது. அதன்

சின்னங்களை இன்றும் இங்குக் காணலாம். இதன் மக்கள்தொகை 77,183 (1981). தெ.பா.

**காலிக்குப் போர்கள்**: உரோமாபுரியின் சூலியசுசீசர் 'கால்' (Gaul) நாட்டை வெல்லுவதற்கு நிகழ்த்திய போர்கள் காலிக்குக் போர்கள் எனப் பெறும். இவை கி.மு 58 முதல் 51 வரை நிகழ்ந்தன. இப்போர்களை நடத்திய முறைகள் காரணமாகவும், இவற்றின் விளைவுகள் காரணமாகவும், சீசர் வரலாற்றில் தமக்கு அழியாத ஒரு பெயரை ஏற்படுத்திக் கொண்டார். கால்நாடு அவரால் நில அமைப்பைப் பொறுத்து முப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அவை யாவன: 1) கரோன் (Garonne) ஆற்றுக்குத் தெற்கில் உள்ள அக்விதானியா (Aquitania),2) கெல்ட்டிக் கால் (இக்கால மத்திய பிரான்சு), 3) பெல்சிகா (Belgica) (பெரும்பான்மையில் இக்காலப் பெல்சியம்).அக்விதானியாவில் பாசுக்கு மக்களின் மூதாதையர்கள் வாழ்ந்திருந்தனர். சூலியசுசீசர் அமைத்த அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு பின்வந்த அகசுதசு சீசர், கி.மு. 27-இல் ஆட்சி முறைப் பிரிவுகளை ஏற்படுத்தினார். அப்பிரிவுகளின்படி, நார்போனீய மக்கள், உரோமானிய ஆளவை மன்றத்தின் நேர் ஆட்சியின் கீழ் வந்தனர். பிரனீசு மலை முதல் உலோயர் ஆறு வரை' அக்விதானியா அமையப் பெற்றது. உலோயர் ஆற்றுக்கும் சீனே ஆற்றுக்குமிடைப்பட்ட பகுதி கெல்ட்டிக் கால் அல்லது உலூக்து-நேசியர் பகுதி என வழங்கப்பட்டது. மற்றப் பகுதிகள் பெல்சிகா எனப் பெற்றன. கால் விரைவில் உரோமானியப் பண்பாட்டிற்கு உட்படலாயிற்று. உரோமர் ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்த ஒரே ஒரு நிகழ்ச்சி கி.பி. 257-இல் தோன்றிய போசுத்துமசுக் கலகந்தான். அது தோல்வியுற்றது. கால் - உரோம நாகரிகம் வலிமை பெற்று வளர்ந்து இறுதியில் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளில் செருமானியர் படையெழுச்சியின் பொழுது வீழ்ச்சியுற்றது. தெ.பா.

**காலிங்கர்கோன்**: இவன் முதற்குலோத்துங்கன், அவன் மகன் விக்கிரமசோழன் ஆகிய இரண்டு சோழமன்னர்களுக்கும் படைத்தலைவனாக விளங்கிய அரசியல் தலைவனாவான். இவனைப் பற்றிக் கூறும் கல்வெட்டுகள் கி.பி. 1098 முதல் கி.பி. 1124 வரையிலான காலத்தில் தோன்றியனவாக உள்ளன. இவனுடைய முழுப்பெயர் அரும்பாக்கிழான் மணவிற் கூத்தனான காலிங்கர்கோன் என்பதாகும். இவன் கல்வெட்டுகளில் கூத்தன், மணவிற் கூத்தன், அரும்பாக்கிழான், பொன்னம்பலக் கூத்தன், காலிங்கர் கோன், காலிங்கராயன் தொண்டைமான், அருளாகரன்,நரலோகவீரன், மானாவதாரன் முதலிய சிறப்புப் பெயர்களாற் குறிக்கப்பெற்றுள்ளான்.'வேளாண் குடிமுதலான்' என்று இவனைத் திருவதிகைக் கல்வெட்டுக் குறிப்பிடுவதனால் இவன் வேளாள மரபில் வந்தவன் என்பது புலனாகிறது. இவன் பெயரில் காணப்படும் அரும்பை, மணவில் என்னும் இரண்டு பெயர்களினால் இவன் அவ்விரண்டு ஊர்களுடனும் தொடர்புகொண்டவன் என்பது தெரிகிறது. இவ்வூர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரும்பாக்கம், மணப்பாக்கம் என்ற ஊர்களாகும் என்றும், அவை அடங்கிய நாட்டுப் பகுதியை இவன் அரசமானியமாகப் பெற்றிருக்கக்கூடும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். குலோத்துங்கன், வேணாடு, மலைநாடு, வடநாடு முதலிய நாடுகளில் படையெடுத்துச் சென்று நிகழ்த்திய போர்களில் இவன் படைத்தலைவனாக விளங்கியுள்ளான்.ஒட்டக்கூத்தர் இயற்றிய விக்கிரம சோழன் உலா இவனுடைய பேராற்றல், திருப்பணிகள் முதலியவற்றைப் பலவாறாகச் சிறப்பித்துக் கூறுகிறது. வேங்கை, விழிஞம், கொல்லம், கொங்கு, இரட்டம், ஒட்டம் ஆகிய நாடுகளில் படையொடு சென்று போர் செய்து, அவ்வரசர்களைத் தோற்று ஓடச்செய்து, அங்கெல்லாம் தன்னரசன் கொடியினைப் பறக்கச் செய்தான் என்று அவ்வுலா குறிப்பிடுகிறது.

இவன் மிகுந்த சிவபக்தி உடையவன். தில்லைப் பெருமானிடத்தில் பேரன்பு பூண்டு, அவற்குப் பல திருப்பணிகள் செய்துள்ளான். இவன் சிதம்பரத்திலும் திருவதிகையிலும் மண்டபங்களும் மாடங்களும் அமைத்து அறம் பல செய்தமையினை அக்கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் விளக்குகின்றன. மேலும், சித்தலிங்க மடம், நெய்வணை, திருப்புலிவனம், திருபுவனி, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் இவன் அவ்விடங்களிற் செய்த அறச்செயல்களைச் சுட்டுகின்றன.

இவன் சிதம்பரத்தின்மீது கொண்டுள்ள பற்றினை இவனுடைய சிறப்புப் பெயர்களாகிய நர்த்தகன், சபாநர்த்தகன், பொற்கோயில் தொண்டைமான் முதலியன நன்கு காட்டுகின்றன. விக்கிரம சோழன் ஆற்றிய தில்லைத் திருப்பணிகளுக்கு இவன் துணையாக இருந்துள்ளான். தில்லைப்பெருமான் மாசி மகநாளில் கடலாடி வீற்றிருப்பதற்காக மண்டபமும், அதற்குச் செல்லப் பெருவழியும், அரசன் வேண்டுகோளின்படி அமைத்தான். அந்த மண்டபம் இந்நாளில் சிதம்பரத்திற் கருகிலுள்ள கிள்ளை என்னுமிடத்தில் உள்ளது என்று ஆய்வாளர் கூறுகின்றனர். தில்லையில் விக்கிரமசோழன் மண்டபம் என்ற மண்டபத்தையும் அமைத்துள்ளான். அங்குள்ள நூற்றுக்

கால் மண்டபத்தின் பல தூண்களில் விக்கிரம சோழன் மண்டபம் என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. தில்லையில் இவன் அமைத்த திருச்சுற்று மதிலுக்கு நரலோக வீரன் மதில் என்ற பெயர் வழங்கியது. இவன் தேவார ஆசிரியர்கள் எழுதிய திருமுறைப் பதிகங்களைச் செப்பேடுகளில் பொறித்துத் தில்லையில் சேமித்து வைத்தான் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். அ.மா.ப.

**காலிங்கராயன் கால்வாய்**: காலிங்கராயர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கோவை மாவட்டம் (பெரியார் மாவட்டம்) பெருந்துறை வட்டம் வெள்ளோடு அருகில் உள்ள கனகபுரம் என்னும் சிற்றூரில் பிறந்தார். தந்தையார் பெயர் நஞ்சையன். காலிங்கராயரின் இயற்பெயர் இலிங்கையன். அவர் கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்த வீரபாண்டியனின் படையில் சேர்ந்து 'காலிங்கராயன்' என்னும் உயர்பட்டம் பெற்றார். பட்டப் பெயரே இயற்பெயராக இறுதி வரை நின்று நிலவியது. 'உத்தர மந்திரி', 'சுந்தர பாண்டியக் காலிங்கராயன்' போன்ற பட்டங்களையும் அவர் பெற்றார்.

'காலிங்கராயன்' என்ற பட்டப்பெயர் அரசியல் அலுவலர்கட்குத் தமிழக அரசர்களால் அளிக்கப்பட்ட உயர்பட்டமாகும். முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்க வெற்றிக்குப் பின், அரசியல் அலுவலர்கள் இப்பட்டப் பெயரைப் பெற்றனர்.

நாட்டு மக்கள் நலன் பெற்று வாழக் காவிரியோடு பவானியாறு கலக்கும் இடத்தில் பவானியைத் தடுத்து அவர் ஓர் அணை கட்டினார். அணைகட்ட அருகில் உள்ள ஊராட்சிக்கோட்டை மலையில் கற்களை உடைத்துக் கொண்டு வந்தார். அவர் 12 ஆண்டுகள் அரும்பாடுபட்டு அணையைக் கட்டிக் கால்வாயையும் வெட்டினார். இன்றும் இக்கால்வாய் அவர் பெயரால் 'காலிங்கராயன் கால்வாய்' என்று சொல்லப்படுகிறது. அணை உள்ள இடத்தில் உள்ள ஊரும் காலிங்கராயன் பாளையம் என்று அவர் பெயரால் வழங்கப்படுகிறது.

பவானியாற்றில் உள்ள தொன்மையான கால்வாய் இதுவேயாகும். இது 90.2 கி.மீ. தொலைவு சென்று 21,143 ஏக்கர் நிலங்களை நன்செய் ஆக்குகிறது. இக்கால்வாயின் கழிவுநீர் நொய்யலாற்றில் கலக்கிறது. இக்கால்வாயில் விளையும் நெல்லுக்கும் 'காலிங்க நெல்லு' என்பது பெயர்.

ஏறத்தாழப் பத்து மாதங்கள் நீர் பாய்ந்து மூன்று போகமும் விளைவிக்கக்கூடிய இந்தக் கால்வாயில் 1840 மதகுகள் இருந்தன. பின்னர், அவை 769 மதகுகளாகக் குறைக்கப்பட்டன. அதிகமான மதகுகளால் தண்ணீர் வீணாவதைத் தடுக்க மதகுகளைக் குறைத்துக் கிளைக்கால்வாய்கள் அமைக்க வேண்டும் என்ற கருத்தும் உண்டு.

காலிங்கராயர் அணை கட்டிக் கால்வாய் வெட்டியதுடன் பல கோயில்களையும் கட்டினார்; குளங்களை வெட்டினார்; பழைய குளங்களைத் திருப்பணி செய்தார்; உரிமையற்ற மக்களுக்குச் சமுதாயத்தில் சமமதிப்புடன் வாழ உரிமைகள் அளித்தார்; சாலைகள் அமைத்தார்; காடழித்து நாடாக்கி மக்களைக் குடியேற்றினார். அதனால், பிற்கால மக்கள் காலிங்கராயரைத் தெய்வமாக ஆக்கி வழிபட்டனர்.

காலிங்கராயரைப் பற்றிப் புலவர்கள் பாடல்கள் பாடியுள்ளனர். ஒரு புலவர் கடலில் சேது அணை கட்டிய இராமனுடனும், காவிரிக்குக் கரை எடுத்துக் கல்லணைகட்டிய கரிகாலனுடனும் காலிங்கராயரை ஒப்பிட்டுப் பாடியுள்ளார்.

இச்சிறப்புமிகு கால்வாயைத் தனிப்பட்ட முறையில் வெட்டி நாட்டுடைமை ஆக்கிய காலிங்கராயரின் வழியினர் இன்றும் பொள்ளாச்சி சமீன் ஊத்துக்குழியில் வாழ்கின்றனர். அவர் வழிவரும் மக்கள் அக்கால்வாயின் தண்ணீரைக் குடிக்க மாட்டார்கள்.

இன்று அக்கால்வாய் தமிழக அரசின் பொதுப் பணித்துறையின்கீழ் உள்ளது. செ.இரா.

**காலிடான்**: கிரீசு நாட்டின் பண்டைய பட்டணமாகிய காலிடான் (Calydon) வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. ஈட்டோலியப் பகுதியில் எவனெசு ஆற்றங்கரையில் இது அமைந்துள்ளது. இக்காலத்திய மெசோலோங்கியன் நகருக்குக் கிழக்கே ஏறத்தாழ 9½ கி.மீ. தொலைவில் இது சிறப்புற்று விளங்கியது. மரபுக் கூற்றின்படி காலிடன் (எய்தோலசின் மகன்) என்பானால் இந்நகர் தோற்றுவிக்கப் பெற்றது. புகழ் பெற்ற துரோசன் போரில் (Trojan War) காலிடான் மக்கள் பங்கு கொண்டனர். ஏக்கிய கிரேக்கர், கி.மு. 391-இல் இந்நகரைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். ஆனால் கி.மு. 371-இல் இலியூக்ட்ரா (Leuctra) போருக்குப் பிறகு, தீப்சு அரசுத் தலைவன் எபாமினாண்டாசு இதை ஈட்டோலியரிடம் திரும்ப அளித்தான். பின்னர், உரோமாபுரி வளர்ச்சியுற்று வந்த காலத்தில் உரோமப் பேரரசர் அகசுடசு, தாம் புதிதாகத் தோற்றுவித்த நிகோபோலிசுக்குக் காலிடான் மக்களைக் குடியேறச் செய்தார் (கி.மு.31). இந்நகரைச் சுற்றி 3.1கி.மீ. நீளமுள்ள சுவரும் அதில்

ஒரு பெரிய வாயிலும் 6 சிறு வாயில்களும் ஒரு காலத்தில் இருந்தன. அவற்றின் சிதைவுகளை இன்றும் காணலாம். அங்கு விளங்கிய திருக்கோயில் ஒன்றில் புதைபொருள் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. தெ.பா.

**காலிடோனியா**: இங்கிலாந்தின் வடக்கில் கிளைடு, போர்த்து ஆற்றுக் கழிமுகங்களுக்கு வடக்கில் உள்ள பகுதிக்கு உரோமானியர் காலிடோனியா (Caledonia) என்று பெயரிட்டிருந்தனர். இப்பெயர் கி.பி. முதல் நூற்றாண்டுக்குரிய உலூகான் நூல்களில் முதன்முதலாகக் காணப்பட்டது. இப்பெயர் இக்காலத்தில் கவிதைகளிலும், சொல்லாட்சிக் கலையிலும் இசுகாட்லாந்து முழுவதையும் குறிப்பிடுவதாக வழங்குகிறது.

**காலிடோனியா[2]** அமெரிக்காவில் வெர்மாண்டு மாநிலத்தின் வடகிழக்கில் உள்ள ஒரு மாவட்டத்திற்குக் காலிடோனியா என்று பெயர். இம்மாவட்டத்தின் ஓர் ஒர எல்லையாக, கனக்டிகட்டு ஆறு அமைந்துள்ளது. இது கி.பி. 1792-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பெற்றது. பசும்சிக்கு, மூசு, இலாமொயில், வெல்சு முதலிய ஆறுகள் இங்குப் பாய்கின்றன. மரம் வெட்டுதல், பால்பண்ணை, காகிதத் தொழில், இயந்திரத்தொழில் முதலியன இங்கு நடைபெறுகின்றன. கட்டடங்களுக்காகக் கருங்கல் எடுக்கும் தொழிலும் இங்கு நடைபெறுகிறது.

**காலிடோனியா[3]** அமெரிக்காவில் மின்னசோட்டா மாநிலத்தின் தென்கிழக்கில் உள்ள ஒரு கிராமத்திற்குக் காலிடோனியா என்று பெயர். இங்கு கி.பி. 1855-இல் மக்கள் குடியேறினர். தெ.பா.

**காலிபங்கன்** சிந்து சமவெளி நாகரிகச் சின்னங்களைக் கொண்ட நகரம். இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பின்பு அகழாய்வு மிகப் பெரிய அளவில் இங்குச் செய்யப்பட்டது. தில்லியினின்று 300 கி.மீ. தொலைவில் இராசசுத்தான் மாநிலத்தில் கங்காநகர் (Ganga Nagar) மாவட்டத்தில் அமைந்துள்ள இச்சிற்றூர் கக்கர் (Ghagger) ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. இப்போது வறண்ட நிலையில் உள்ள இந்த ஆறு முற்காலத்தில் சரசுவதி என்று சொல்லப்பட்டது.

இந்த ஊருக்கு அண்மையில் சிந்துச் சமவெளி நாகரிகச் சின்னங்கள் மிகுதியாக வெளிப்பட்டன. கறுப்பு வளையல்கள் இங்கு மிகுதியாக அகழாய்வில் கிட்டியமையால் இது காலிபங்கன் என்று பெயர் பெற்றது ('காலி' - கறுப்பு. 'பங்கன்' - வளையல்).



சிந்துச் சமவெளி நாகரிகச் சின்னங்களைக் கொண்ட ஊர்களான மொகஞ்சதாரோ, அரப்பா போன்று இந்நகரமும் இரண்டு ஊர் இருக்கைப் பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. மேற்புறம் உள்ள ஊரிருக்கை சிறியதாகவும், கீழ்ப்புறம் உள்ள ஊரிருக்கை பெரியதாகவும் உள்ளன. இவை தவிர, இவற்றிற்கு இன்னும் சற்றுக் கீழ்ப்புறம் மற்றுமொரு சிறிய ஊரிருக்கைப் பகுதி உண்டு. இவ்வாழ்விடங்களின் உயரம் சுமார் 2 கி. மீ.

மைய அரசு தொல்லியல் பரப்பளவு ஆய்வுத் துறை பி.பி. இலால் (B.B.Lal), பி.கே. தாபர் (B.K. Thapar) சே.பி. சோசி (J.P.Joshi) ஆகியோர் தலைமையில் 1961-ஆம் ஆண்டு தொடங்கி 1969 -ஆம் ஆண்டு வரை ஒன்பது பருவக் காலத்தில் அகழாய்வு செய்தது. இரண்டு காலநிலைகளை வெளிக்கொணர்ந்து முதற்காலத்திற்கு, அரப்பாப் பண்பாட்டுக்கு முற்பட்ட காலம் (Pre-Harappan) என்றும், இரண்டாம் காலத்திற்கு அரப்பாப் பண்பாடு எனவும் பெயரிட்டனர். எனினும், இவ்விரு காலத்திற்கும் இடையே பண்பாட்டுத் தொடர்ச்சி விடுபட்டு இருந்தது.

**முதற்காலம்**:அரப்பாப் பண்பாட்டுக்குமுந்திய நிலை (Period I : Pre - Harappen)-இக்காலத்தில் சுடப்படாத செங்கற்களால்(அளவு 30 × 20 × 10 செ.மீ.) கட்டப்பட்ட கோட்டைச் சுவர் செவ்வக வடிவில் இருந்தபோதிலும், கீழ்ப்புறம் 250 மீ. நீளமும், மேற்புறம் 240 மீ. நீளமும், தென்புறம் 170 மீ. நீளமும் கொண்டிருந்தது. வடக்குப் புற மதிற்சுவர் நேராகச் செல்லாது தென்கிழக்காக 50 மீ. சென்று பின் வடகிழக்காக 45 மீ. சென்று பின் கிழக்காகத் திரும்பி கிழக்கு மதிற்சுவரின் வடக்கு முனையில் இணையும். இம்மதிற்சுவரின் மொத்த நீளம் 115மீ. ஆகும். இதன் வடக்குக் கோட்டைச் சுவரில் வாயில் இருந்த போதிலும் மற்றத் திசைகளில் இருந்த வாயில்கள் அழிந்துள்ளன. இக்கோட்டைச் சுவர் இருநிலைகளில் கட்டப்பட்டது. முதலில் 1.90 மீ. கனமுள்ள கோட்டைச் சுவர் கட்டப்பட்டுப் பின்னர் அது மேலும் உட்பக்கமாகக் கனப்படுத்தப்பட்டு அதன் அகலம் 3 முதல் 4 மீட்டர் ஆக்கப்பட்டது. இம்மதிற்சுவர் பூச்சுப் பெற்றதற்கான சான்றுகள் உள்ளன. இதன் வடவாயில் 6 மீட்டர் அகலம் கொண்டது. இது ஆற்றில் முடிவடைகின்றது. இவ்வாயிலின் அகலம் அக்காலத்தில் பயன்படுத்திய போக்குவரத்து வாகனங்களைத் தெளிவுபடுத்துகின்றது. மேலும் இங்குக் கிடைத்த சுடுமண்ணில் செய்யப்பட்ட மாட்டு வண்டியினைக் கொண்டு அக்காலப் போக்குவரத்து வாகனங்களை ஊகிக்க இயலும். இதற்கு மேல்

அரப்பாக் காலப் பண்பாட்டுச் சின்னங்கள் இருந்தமையால் இதன் முழு வடிவத்தைக் காணமுடியவில்லை.

**வீடுகள்**: பொதுவாக வீடுகள் தெற்கு வடக்காக அமைக்கப்பட்டன. சுடாத செங்கற்களைக்(Mudbricks) கொண்டு வீடுகளை எழுப்பினர். சுவர்கள்பூச்சுப் பெற்றிருந்தன. இவர்கள் சுட்ட செங்கற்களைத் தங்களின் சாக்கடைப் பகுதியில் பயன் படுத்தினர். பொதுவாக இவர்கள் வீடுகள் நான்கு அறைகளையும், ஒரு முற்றத்தையும் கொண்டிருந்தன. பொதுவாக அடுப்புகள் தரைக்கு மேலேயும் தரைக்குள்ளேயும் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. முற்றத்தில் சுண்ணாம்புப் பூச்சுப் பெற்ற வட்ட வடிவக் குழிகள் இருந்தன. ஒருகால் இவற்றைத் தானியங்களைச் சேகரித்து வைக்கப் பயன்படுத்தியிருக்கக் கூடும். இத்தானியச் சேகரிப்புக் குழிகளில் எவ்வித தானியங்கள் கிட்டாத போதிலும், இவர்கள் வேளாண்மையில் சிறப்புற்று விளங்கியமை, இதற்குத் தெற்கே 100மீ. தொலைவில் அகழ்ந்த குழியில் உழவு செய்து பயிர் செய்தமையை விளக்கும் உழவுக் கருவிகளின் கீறல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையால் புலனாகும்.

இவர்கள் அரிய மணிக் கல்வகைகளில் இருபக்க முனைக் கருவிகள் செய்தும், சில சமயங்களில் இவைகளை வரிசையாக மரத்துண்டில் இணைத்து அல்லது செருகி அரிவாளாகவும், அறுவடை செய்யும் கருவிகளாகவும் பயன்படுத்தினர். இவற்றுடன் செம்புக் கருவிகளையும் பயன்படுத்தியதால் இவர்களின் காலம் கல்செப்புக் கால கட்டத்தின் கீழ் வரும் என்பர். இவர்கள் வேளாண்மையைத் தவிர, ஆடுமாடுகள் மேய்த்தும் வேட்டையாடியும் வந்தனர். இவர்களால் ஓடுகள் மீது தீட்டப்பட்ட வண்ணக் கலவைகளான வாழை மர இலைகள்,மீன் போன்ற வகைகளிலிருந்து இவர்களின் உணவு வகைகளை ஓரளவு உய்த்துணரலாம்.

இவர்கள் சுடுமண், செம்பு, சங்கு போன்றவற்றில் வளையல்களும், அரைமணிக் கற்களினால் மணிகளும் செய்தனர். இவர்கள் எங்ஙனம் இறந்தவர்களை அடக்கம் செய்தனர், ஈமச்சடங்குகளை எங்ஙனம் ஆற்றினர் என்பதற்கான தெளிவான சான்று கிடைக்கவில்லை.

இங்கு நடத்திய அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகளை அறிஞர்கள் ஆறு வகைகளாகப் பிரித்துள்ளனர்.

முதல் வகை மட்பாண்டங்கள் மிகுதியாகக் கிடைத்தன. இவை குயவன் சக்கரத்தில் மெதுவாக வைத்துச் சுற்றப்பட்டவையாகும். சிவப்பான இம்மட்பாண்டத்தின்மீது வெள்ளை நிறத்திலும் கறுப்பிலும் வண்ணங்கள் தீட்டப்பட்டிருந்தன. இதற்குப் பின் வந்த அரப்பாக்காலத்தில் கறுப்பு வண்ணம் மட்டுமே தீட்டப்பட்ட மட்கலன்கள் கிடைத்தன. பொதுவாக வண்ணங்கள் மட்பாண்டத்தின் தோள் பகுதிக்கு உட்பட்ட நிலையில் முக்கோண வடிவங்கள், சாய்வுக் கோடுகள், அரைவட்ட வடிவக் கோடுகள் வரையப்பட்டிருந்தன. மீன் செதில்கள் போன்றும் தீட்டப்பட்டிருந்தன.இவ்வகை மட்பாண்டங்கள் பொதுவாகக் குவளை, தட்டு, சிறு பானைகளாக இருந்தன. இரண்டாம் வகை மட்பாண்டங்கள் பொதுவாகப் பெரிய பானைகளாகும். இப்பானைகளின் கீழ்ப்பாதி மணற் பூச்சுப் பெற்றிருந்தது. ஒருகால் இவை பானையில் உள்ள நீரைக் குளிர்ச்சியுடன் வைக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும். இவற்றின் மீது கறுப்பு வண்ணத்தில் மான்,எருது,வாத்து,தேள் போன்றவைகள் தீட்டப்பட்டிருந்தன. மூன்றாம் வகை மட்பாண்டங்கள் நேர்த்தியாகவும் அழகாகவும் செய்யப்பட்டுப் பொதுவாக ஊதா நிறப் பூச்சுப் பூசப்பட்டிருந்தன. நான்காம் வகை மட்பாண்டங்கள் கடினமாகவும் உட்பக்கம் ஆழமான கீறலுடனும் இருக்கும். ஐந்தாம் வகை மட்பாண்டங்கள் சாம்பல் நிறத்திலும், ஆறாம் வகை பழுப்பு நிறத்திலும் காணப்படும். பொதுவாகத் தாங்கியுடன் கூடிய தட்டுகளும், குவளைகளும் கிடைத்தன. இப் பண்பாட்டுக் காலம் பூமி அதிர்ச்சியினால் முடிவுற்றது என பி.பி. இலால் கருதுகின்றார்.

**இரண்டாம் காலம்**:(அரப்பாப் பண்பாட்டுக் காலம்-Period II: Harrappan) அரப்பாப் பண்பாட்டுக் கூறுகள் இக்காலத்தின் தனித்தன்மையாக இருந்த போதிலும், இவர்களுக்கு இதற்கு முன் வாழ்ந்தவர்களுடன் எவ்வித தொடர்பும் இல்லையென அறுதியிட்டுக் கூறமுடியாது. ஏனெனில், நில அதிர்ச்சியால் முன்பு இருந்தவர்கள் உயர்குடி மக்கள் வாழ்ந்த பகுதியில் இடம்பெயர்ந்தனர் எனினும், இவர்கள் சாதாரண மக்கள் பகுதியில் குடிபெயர்ந்தனர் எனலாம். ஏனெனில், அங்கு இரு பண்பாட்டு மக்களின் கூறுகளும் ஒரு சேரக் கிடைக்கின்றன.

இப்பண்பாட்டுக் காலத்தில் ஏனைய இடங்களில் இருப்பது போன்றே உயர்குடி மக்கள் வாழும் இடம் தனியாக மேற்புறமும், பின் ஏனைய மக்கள் வாழும் இடம் கீழ்ப்புறமும் உள்ளன.

**உயர்குடி மக்கள் வாழ்ந்த இடம்**: இவ்விடம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுச் சுற்றிலும் கோட்டை மதிற் சுவர் எழுபப்பட்டிருந்தது. இது செவ்வக வடிவில்



காலிபங்கன் தெருவின் அமைப்பு.

240 மீ. நீளமும் 120 மீ. அகலமும் கொண்டிருந்தது. செங்கற்கள் 40×20×10 செ.மீ., 30×10×7.5 செ.மீ. என்ற அளவு விகிதத்தில் இருந்தன. இக் கோட்டை யின் தென்பாதியில் நான்கு மூலைகளிலும் பாதுகாப்புக் காக உயர் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ் வரண் அமைப்பை நோக்குமிடத்துத் தென்பாதியே மிக முக்கிய பங்கு வகித்தது எனலாம். இதற்கு இரண்டு வாயில்கள் தென்புறமும், வடபுறமும் விடப்பட்டன. இவைகள் படிக்கட்டுகளுடன் இருந்தமையால் இதனுள் எவ்வித வாகனங்களும் நுழைய அனு மதிக்கப்படவில்லை எனத் தெரிகின்றது. மேலும் இதில் கிடைத்த கட்டடங்களையும், அதன் அமைப்பை யும் நோக்குமிடத்து இது மத சம்பந்தமான ஒரு புனித இடமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், சுடாத செங்கற்களால் எழுப்பப்பட்ட தளங்கள் வடக்குத் தெற்காக அமைக்கப்பட்டு இருந்தன. இதில் ஒரு தளத்தின்மீது ஏழு வேள்விக்குண்டங்கள் இருந்தன. இதில் கரியும் சாம்பலும் இருந்தமை இதை மேலும் உறுதிப்படுத்தியது.

பி.பி. இலால், இங்குக் கிடைத்த வேள்விக் குண்டம் அதன் அருகில் காணப்பட்ட கிணறு, தண் ணீர் செல்லும் வழி, ஒரு குழியில் கிடைத்த மான் கொம்பு, விலங்கின் எலும்புகள் ஆகியவற்றால் இவர் கள் விலங்கினைப் பலியிட்டு வந்திருக்கலாம் எனக் கருதுகின்றார். மேலும், இதை உறுதிப்படுத்தும் வகை யில் சுடுமண்ணால் செய்யப்பட்ட முக்கோண வடிவ வில்லையின் ஒருபுறம் மனிதன் ஒருவன் விலங்கு ஒன் றினைக் கயிற்றால் கட்டி இழுத்து வருவது போலவும், மறுபுறம் கடவுள் போன்ற தோற்றமுடைய வடிவம் ஒன்று கொம்புடனும், இறக்கை தைத்த தலையுட னும் காட்சியளிப்பது போலவும் உள்ளன.

கோட்டையின் வடபாதி வேறுமாதிரியான அமைப்பைக் கொண்டிருந்தது. இது வெறும் உயர்குடி மக்கள் வாழும் பகுதியாகும். இப்பகுதியும் நகர்ப்புற மக்கள் வாழும் இடமும் ஒன்றுடன் ஒன்று இணைக் கப்படும் விதத்தில் கீழ்ப்புற மதிற்சுவரில் வாயில் ஒன்று இருந்தது.

**நகரம்**: உயர்குடி மக்கள் அல்லாது சாதாரண மக்கள் வாழும் இப்பகுதியும் கோட்டையினுள்ளே அமைக்கப்பட்டிருந்தது. இதில் வடமேற்கிலும், மேற் கிலும் வாயில்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. வீதிகள் நல்ல அமைப்புடன் கீழ் மேலாகவும், தெற்கு வடக்காகவும் பிரிக்கப்பட்டு, ஒன்றையொன்று செங் குத்தாக வெட்டும் விதத்தில் ஒரே நேர்க்கோட்டில் அமைக்கப்பட்டு இருந்தன. வீதிகள் மொத்தம் எட்டு கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் நான்கு தெற்கு வடக்காகவும், நான்கு கிழக்கு மேற்காகவும் இருந்தன. பொதுவாக வீடுகள் இரண்டு மூன்றுஅறை கள் கொண்டு ஒரு முற்றத்துடன் காணப்பட்டன. முற்றத்துடன் ஒட்டிய அறை சமையல் அறையாகத் திகழ்ந்தது. முற்றத்தில் ஆடுமாடுகளுக்குத் தீவனம் வைப்பதற்கும் நீருக்கும் சிறுதொட்டி கட்டப்பட்டு இருந்தது. முற்றத்தில் கிணறும் காணப்பட்டது. வீட் டின் கூரை மீது செல்ல மாடிப்படிகளும் இருந்தன. தளங்கள் குச்சிகளால் பாவப்பட்டுக் களிமண் கொண்டு பூசப்பட்டிருந்தன. தரைகள் பொதுவாக மண்பூச்சுப் பெற்று அல்லது செங்கற் பரப்பில் அல்லது ஓடுகள் கொண்டு பரப்பப்பட்டுச் சமதளம் ஆக்கப்பட்டன. சுட்ட செங்கற்கள் பொதுவாகக் கிணறு, குளியல் அறை, கழிவறை போன்ற நீர் அதிகமாகப் பயன் படுத்தப்படும் இடங்களில் அமைக்கப்பட்டன. கழி வறை நீர் பெரிய பானைகள் வழியாக வீதிகளுக்கு அனுப்பப்பட்டது. பின் கழிவுநீர் குறிப்பிட்ட இடை வெளிகளில் சுத்தப்படுத்தப்பட்டது.இறந்தவர்களைப் பொதுவாக இவர்கள் புதைத்தனர். செவ்வகக் குழி களை வெட்டித் தெற்கு வடக்காக இறந்தவரைப் புதைத்தனர். இவர்கள் பயன்படுத்திய மணிகள், மட் பாண்டங்கள் ஆகியவைகளும் இடப்பட்டு இருந்தன.

சிந்துச் சமவெளி மக்கள் பெரிதும் வேளாண்மை யை நம்பி வாழ்ந்தனர்.கோதுமையைப் பற்றி அறிந்தி ருந்த போதிலும் அரிசியைப் பற்றி அறிந்திருந்தனரா என்பது ஐயப்பாடாய் உள்ளது. இதைத்தவிரவாணி கத்திலும், பிறதொழிலிலும் சிறந்து விளங்கினர் என் பது இங்குக் கிடைத்த எடைகற்கள், முத்திரைகள், முத்திரை பொதிந்த மாதிரிகள் மூலம் அறியமுடி

கிறது. பொதுவாகப் பொருள்கள் நன்கு கட்டப்பட்டு முடிச்சு இடப்பட்டு அதன்மேல் களிமண் வைத்து அதன்மீது முத்திரை பதிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தமுத்திரைக் குத்திகள் எல்லாம் மாவுக் கல்லால் செய்யப்பட்டன. இம்முத்திரைக் குத்திகளில் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. பொதுவாக முத்திரைக் குத்திகள் செவ்வக வடிவில் இருந்தபோதிலும் ஒரு முத்திரைக் குத்தி உருளைவடிவில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வகை முத்திரைக் குத்திகள் மெசபடோமியாவில் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவர்கள் எழுத்துகளை வலமிருந்து இடமாக எழுதினர்.

இங்ஙனம் சிறப்புடன் விளங்கிய சிந்துச் சமவெளி நாகரிகம் கக்கர் நதியின் வறட்சியால் பாதிக்கப்பட்டுப் பொழிவிழந்தது. இவற்றின் காலத்தினைக் கணித்த ஆய்வாளர்கள் முதற்காலத்தை கி.மு. 2400–2250க்கும், இரண்டாம் காலத்தை கி.மு. 2200–1700க்கும் இடைப்பட்ட காலம் எனப் பகர்கின்றனர். கே.இரா.

**துணை நூல்கள்**:

**Allchin**, **Bridget** and **Raymond**, The Birth of Indian Civilization, Penguin Books Ltd, Harmondsnorth, Middlesex, England, 1968.


**Fairservis**, **Jr.**, **W.A.**, The Roots of Ancient India, George Allen & Uniwn Ltd., London, 1971.

**Gupta**, **S.P.**, Disposal of the Dead and Physical types in Ancient India, New Delhi, 1972.

**Lal B.B.** and **Thapar B.K.**, 'Excavation at Kalibangan: New Light on the Indian Civilization', Cultural Forum, Vol. IX, No.4, Ministry of Education, Govt. of India, 1972.

***காலிபோலி***: (1) ஒரு முந்நீரகம். இது துருக்கி நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது; 80கி.மீ. நீளமுள்ளது. ஏசியன் கடலுக்கும் தார்டநலீசுக்கும் (Dardanells) இடையே காலிபோலி (Gallipoli) உள்ளது. முதலாம் உலகப் போர்க்காலத்தில் இங்குக் கடும்போர் நடந்தது.

**காலிபோலி** (நகர்): காலிபோலி முந்நீரகத்தின் நிலஇணைப்புப் பகுதியில் உள்ள ஒரு நகரின் பெயர். இது ஒரு சிறப்பு வாய்ந்த துறைமுகமாக வளர்ச்சியடைந்துள்ளது. கான்சுடாண்டிநோபிள் அல்லது இசுத்தான்புல்லின் பாதுகாப்பிற்காக இந்நகர் கேந்திர நிலையாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பல பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் ஈண்டு எழுந்துள்ளன. உதுமானியத் துருக்கியர் கி.பி. 1354–இல் இதனைக் கைப்பற்றினர். தெ.பா.




காலிபோலி முந்நீரகத்தின் இருப்பிடம்.

***காலிக் கடல்*** இசுரேல் நாட்டின் வடகிழக்கில் உள்ள ஒரு பெரிய ஏரி. காலிலீக்கடல் என வழங்கப்பெறும் இந்நீர்ப்பகுதி (Sea of Galilea) 165.8 ச.கி.மீ. பரப்பும், 22.5 கி.மீ. நீளமும், 4.8கி.மீ. முதல் 11.3 கி.மீ. வரை அகலமும் கொண்டது. இதன் மேற்புறம் கடல் மட்டத்திற்கு 700 அடி கீழே உள்ளது. யோர்தான் ஆறு இந்த ஏரியுடன் இணைக்கப்பட்டுள்ளது. தாதுப் பொருள்கள், ஊற்றுக்கள் மூலம் இந்த ஏரித் தண்ணீருக்கு உப்புத்தன்மை ஏற்பட்டுள்ளது.

ஏசுநாதர் காலத்தில், இந்த ஏரியில் விரிவான மீன்பிடித்தல் நடைபெற்று வந்தது. இன்றும் ஓரளவு அத்தொழில் தொடர்ந்து வந்துள்ளது. இந்த ஏரிக்குக் கிறித்தவ வேத ஆகமத்தில் கெனேசரேத்துக் கடல் என்ற பெயர் அளிக்கப்பட்டிருந்தது. இதன் கரையில் அக்காலத்தில் விளங்கிய மக்தலா, கப்பர் நகூர், பெத்சாயிதா என்னும் நகரங்கள் இப்பொழுது அழிவுற்றுக் கிடக்கின்றன. விவிலிய நூல், இயேசுநாதர் இக்கடற்கரையில் செய்த அற்புதங்களைக் குறிப்பிடுகிறது. தெ.பா.

***காலின்சு, மைக்கேல்*** என்பார் அயர்லாந்தின் புகழ் மிக்க நாட்டுப் பற்றாளர்; அயர்லாந்து சுதந்திரப் போராட்டத்தில் அரும்பணி புரிந்தவர்; சுதந்திர அயர்லாந்து அரசை நிறுவியோருள் ஒருவர். மைக்கேல் காலின்சு (Callins Michael) கி.பி. 1890–1922) அயர்லாந்தின் கோர்க்கு வட்டத்தில் கிளோ

கில்ட்டி (Clonakilty) என்னும் ஊரில் ஒரு குடும்பத்தில் எட்டாம் குழந்தையாகப் பிறந்தார். அவர் தம் 17-ஆம் வயதில் அஞ்சல் அலுவலகத்தில் எழுத்தராகப் பதவி பெற்று இலண்டன் நகரத்தில் பணிபுரியச் சென்றிருக்கும்போது, சுதந்திர அயர்லாந்து அரசை நிறுவுவதற்காகப் புரட்சி நடத்தும் பொருட்டு நிறுவப்பட்ட அயர்லாந்துக் குடியரசு உடன்பிறப்பாளர் கழகம் (Irish Republican Brotherhood) என்ற அமைப்பில் சேர்ந்தார்.

**ஆங்கில ஆட்சியில் அயர்லாந்து**: அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நெடுங்காலமாக இன, சமய, பொருளாதார, அரசியலடிப்படையில் வேறுபாடும் பூசலும் இருந்துவந்தன. பெரும்பாலான அயர்லாந்தினர் உரோமன் கத்தோலிக்க நெறியைச் சேர்ந்த ஏழைக்குடியானவர்கள். அவர்கள் சீர்திருத்தக் கிறித்தவ (Protestant) நெறியைச் சேர்ந்த ஆங்கில நிலவுடைமையாளர்களை நம்பியே பிழைக்க வேண்டியிருந்தது. ஆங்கில அரசாங்கம் ஆங்கில நிலவுடைமையாளர்களுக்குப் பாதுகாப்பான சட்டங்களைச் செய்து அயர்லாந்து குடிகளை ஒடுக்கிற்று. இந்த அவல நிலையை நீக்கவும், அயர்லாந்துக் குடிமக்களின் சமய, பொருளாதார அரசியலுரிமைகளை மீட்டுப் பாதுகாக்கவும் பல தடவைகள் அயர்லாந்தில் ஆங்கில ஆட்சிக்கு எதிராகப் புரட்சிகள் நடந்தன. அவை ஆங்கில அரசாங்கத்தால் கடுமையாக ஒடுக்கப்பட்டன. இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் வில்லியம் கிளாட்சுடன் அயர்லாந்து நிலச்சட்டங்களின் வாயிலாகஅந்நாட்டுக் குடியானவர்களுக்கு நிலஉரிமைப் பாதுகாப்புச் செய்யவும் சமயசுதந்திரம் வழங்கவும் பல சட்டங்களைச் செய்தார்.

**காலின்சு ஆற்றிய பணிகள்**: முதல் உலகப் போர் கி.பி. 1914-இல் தொடங்கியதும்,காலின்சு அயர்லாந்துக்குத் திரும்பி வந்து, அந்நாட்டுப் படையில் சேர்ந்து, ஆங்கில அரசாங்கத்துக்கு எதிராக 1916-இல் கலகம் நடந்தபோது அதில் பங்கு கொண்டார். அக்கலகம் வெற்றிபெறவில்லை. ஆங்கில அரசாங்கம் அவரைப் பிடித்து வேல்சு மாகாணத்தில் 8 மாதங்களுக்குச் சிறையிலடைத்தது. ஆயினும், அவரை அயர்லாந்து மக்கள் ஒரு தேசிய தலைவராக மதித்தனர். அம்மக்களின் கட்சியாகிய சின்பீன் **(Sinnfein)** என்ற அமைப்பின் சார்பாக மேற்கு கோர்க்குத் தொகுதியில் காலின்சு போட்டியிட்டு 1918 தேர்தலில் வென்றார்; சுதந்திரக் குடியரசை நிறுவுதற்குப் பெரும் பொருளீட்டினார்; ஒற்றர் பணித்துறையை நிறுவிச் சுதந்திர இயக்கத்தை வலுவுடையதாக ஆக்கினார். ஆகையால், அவரைக் கொடிய பகைவராகக் கருதி, உயிருடனோ கொன்றோ கொண்டு வருபவருக்கு 10,000 பவுன் பரிசாக அளிக்க இங்கிலாந்து முன்வந்தது. சின்பீனர்களுடைய குடியரசுப் படைகளுக்கும், ஆங்கிலப் படைகளுக்கு மிடையே நடைபெற்ற பல தாக்குதல்களில் (1919-1921) காலின்சு மயிரிழையில் தப்பினார். அவருடைய வீரச் செயல்களும் துணிவும் அவரை ஒரு வரலாற்றுத் தலைவராக்கின. இரு தரப்பாருக்கு மிடையே 1921-இல் போர் நிறுத்தம் ஏற்பாடு செய்யப்பட்டு, இலண்டனில் ஆங்கில அரசாங்கத்தோடு உடன்படிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் காலின்சு, சின்பீனிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட ஆர்தர் கிரிபித்து (Arthur Griffth), மற்றும் மூவருடன் லண்டனுக்குச் சென்று பேச்சுக்களில் கலந்து கொண்டு உடன்படிக்கை செய்யப்பட்டதும், அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களைத் தூண்டினார். அவ்வுடன்படிக்கையின் விளைவாக வடகிழக்கு அல்சுடர் பகுதி நீங்கலாக, அயர்லாந்தின் மற்றப் பகுதியெல்லாம் பிரிட்டனின் தன்னாட்சிக் கழகத்தில் (British Common wealth) அயர்லாந்துச் சுதந்திர அரசு என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அவ்வுடன்படிக்கை அயர்லாந்துப் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படுதற்கும் காலின்சு பெருமுயற்சி செய்தார். தீவிரவாதிகளின் எதிர்ப்பையும்மீறி, காலின்சின் முயற்சியால் தெயில்மன்றம் (Dail) 1922 இல் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது. இடைக்கால அரசாங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலின்சு, தீவிரவாதிகளுக்கும் சுதந்திர அயர்லாந்து அரசாங்கத்துக்கும் இடையே நடந்த உள்நாட்டுப் போரில் அரசாங்கப் படையின் தளபதி ஆயினார். இங்கிலாந்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை எதிர்த்தே தீவிரவாதிகள் அரசாங்கத்தோடு போரிட்டனர். இப்போரை நிறுத்துதற்குக் காலின்சு நடவடிக்கை எடுத்தார். அவருடைய முயற்சி வெற்றி பெறும் காலத்தில் 1922-இல் கோர்க்கு வட்டத்தில் பியால்னாபிளாத்து (Beal na Blath) என்னுமிடத்தில் தீவிரவாதிகள் நடத்திய மறைவான தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார். பா.சு.

***காலினின்கிராடு***: ஐக்கிய சோவியத்து உருசியக் குடியரசில் உள்ள பிரேகல்யா ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் காலினின்கிரேடின் (Kalinin Grad) முற்காலப் பெயர் கானிக்சுபர்கு. இது 1976-ஆம் ஆண்டு முதல் இப்புதிய பெயருடன் விளங்குகிறது. பால்டிக்குக்கடல் துறைமுகமான இப்பகுதியில் பனிப்படலம் மிகக் குறைவு. ஆதலால் வாணிகமும், கப்பல் கட்டும் தொழிலும் பெருகியுள்ளன. இயந்திரப் பொருள்கள், உணவு வகைகள், உலோகங்கள், ஆடை வகைகள் முதலிய பல பொருள்களும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. கானிக்சுபர்கு எனக் குறிக்கப்

பட்ட இந்நகர் கி.பி. 1255–ஆம் ஆண்டில் பொகிமியா நாட்டு மன்னனால் தோற்றுவிக்கப் பெற்றது. படையெடுப்பாளரை எதிர்ப்பதற்காக இங்குக் கோட்டைகளும் கட்டப்பட்டிருந்தன. இந்நகர் கி.பி. 1340–இல் ஏன்சியாடிக் சங்கத்தைச் (Hanseatic League) சேர்ந்தது; கி.பி. 1457 முதல் துயூதானியத் தலைவரின் இருப்பிடமாகியது. இந்நகரையே கி.பி. 1525 முதல் 1618 வரை பிரசியாவின் குறுநிலத் தலைவர்கள் தமது இருப்பிடமாக்கிக் கொண்டிருந்தனர். பிறகு பிரசியா வளர்ச்சியடைந்ததும் அந்நாட்டு மன்னர்கள் இங்கே தான் முடிசூட்டிக் கொண்டனர். இங்கு கி.பி. 1544 –இல் தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக்கழகம், பிற்காலத்தில் மிகுந்த புகழ் பெற்று விளங்கலாயிற்று. இக்கழகத்தில், பேரறிஞர் இம்மானுவல் காண்ட்டு (Immanuel Kant) கல்வி போதித்து வந்தார். கானிக்சுபர்கு 1945–இல் உருசியாவுக்குக் கொடுக்கப் பெற்றது. அதற்குப் பிறகு அது சோவியத்து நகராக வளரலாயிற்று. தெ.பா.

**காலினின், மிக்கேல் இவனோவிச்சு (கி.பி. 1875–1946)** உருசியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவராகவும், நாட்டின் தலைவராகவும் 1919 முதல் 1946 ஆம் ஆண்டு வரை இருந்தவர். இவர் ஒரு குடியானவர். இவர் கி.பி. 1893–இல் இலெனின் கிராடுக்குச் சென்று ஆலைத்தொழிலாளியாக வேலை செய்தார். அப்போது இவர் உருசியச் சமநிலைக் குடியாட்சித் தொழிலாளர் கட்சியில் சேர்ந்து, இலெனின் அமைத்த போல்சுவிக்குப் பிரிவை ஆதரித்தார். இலெனினை முதன் முதல் ஆதரித்தவருள் மிக்கேல் இவனோவிச்சு காலினின் (Mikhail Ivanovich Kalinin) முக்கியமானவர். இவர் இக்கட்சியின் புரட்சிச் செயல்களில் தீவிரமாக ஈடுபட்டார். இதன் காரணமாக கி.பி. 1899, 1903 ஆகிய ஆண்டுகளில் சிறைப்படுத்தப்பட்டார். புனித பீட்டர்சுபர்கு நகரத்தில் 1905 –இல் நடைபெற்ற உருசியப்புரட்சியில் கலந்து கொண்டார். போல்சுவிக்குகளின் மத்திய குழுவின் உறுப்பினர் ஆகவும் (1912), உருசிய நிறுவனத்தின் உறுப்பினராகவும் ஆனார். ‘உண்மை’ எனப்பொருள்படும் ‘பிராவ்டா’(Pravda) நாளேட்டினைச் சிலருடன் சேர்ந்து இவர் நிறுவினார்.

**ஆற்றிய பணிகள்**: போல்சுவிக்குகள் 1917–அக்டோபரில் நடத்திய திடீர்ப்புரட்சியில் இவரும் பங்கு கொண்டார். பின்னர் இலெனின்கிராடின் நகராட்சித் தலைவரானார். இவர் 1919-இல் சோவியத்து அரசின் தலைவரானார். அப்பதவியின் காரணமாக இவர் அனைத்து உருசியச் சோவியத்துக் காங்கிரசின் மத்திய செயற்குழுவின் தலைவராக (Chairman) ஆனார்.

சோவியத்து அரசாங்கம் செயற்படுத்திய தொழிற் கொள்கைகளைப் பற்றியும் வேளாண்மைக் கொள்கைகளைப் பற்றியும் உருசியப் பொதுவுடைமைக் கட்சியின் பல்வேறு கிளைகளுக்கிடையேயும் பல கருத்து முரண்பாடுகள் தோன்றியபோது, காலினின் பொதுவுடைமைக் கட்சியின் வலதுசாரியினரை ஆதரித்தார்; ஆயினும் சோவியத்துத் தலைவர் சோசப்பு இசுடாலின் (Joseph stalin) முடிவுகளையே இவர் ஆதரித்து வாக்களித்தார். இவர் புதிய உருசியாவை உருவாக்கியோருள் ஒருவர். இவர் பெயர் பல நகரங்களுக்கும் மாநிலங்களுக்கும் சூட்டப்பட்டுள்ளது. பா.சு.

**காலுப்பி பாசுகுவேல் (கி.பி. 1770-1846):** இவர் இத்தாலியில் அறிவுத்துறை ஆராய்ச்சி வல்லுநராகவும் அறிவியல் தத்துவஞானியாகவும் விளங்கினார்; நேப்பிள்சில் சட்டம் படித்தபின் சமய சித்தாந்தமும் தத்துவமும் படித்தார். கிறிசுதியன் ஊல்பு (Christian Wolf) என்பவரால் இவர் பெரிதும் கவரப்பட்டார். காலுப்பி பாசுகுவேல் (Gallupi Pasquel) காண்ட்டின் கொள்கையால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். காலுப்பியன் தத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகள் (Philosophical Essays on the Critique of Knowledge) இவருக்குப் பெருமையளித்தன. இவர் கி.பி. 1831-இல் நேப்பிள்சுப்பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகப் பதவி ஏற்றார். விக்டர் கசின் (Victor Cousin) என்பவரோடு தொடர்பு கொண்டு, அவரது நூலின் இரண்டு தொகுதிகளை இத்தாலிய மொழியில் மொழி பெயர்த்தார்.

காலுப்பியின் கருத்துப்படி தத்துவத்தில் சிறந்த முறை பகுப்பாராய்ச்சியாகும் (Analysis). அதன் முதல் தொடக்கம் உணர்ச்சி விழிப்புள்ள நிலையாகும் (Conciuosness). உணர்வுள்ள தன் முனைப்பு (Ego) ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். இத்தகைய நிலை, பொருளை உணர்ந்து கொள்ளவும், தன்னை உணர்ந்து கொள்ளவும் துணை புரியும். உணர்தல் என்பது மேற்கூறிய தன்னை உணரும் தன்மையையும், பொருள்களை உணரும் தன்மையையும் குறிப்பிடும். இதன் அடிப்படையில்தான் காலுப்பி, பெர்க்லியின் (Berkeley) கொள்கையையும், கியூமின் (Hume) பகுப்பாராய்ச்சியையும் (analysis) எதிர்த்துத் தன்முனைப்பும் (Ego) பொருள்களும் (Objects) வேறுபட்டவை என்று குறிப்பிட்டார்.

பயன்வழிக் கொள்கையினர் மறுத்த எல்லாவற்றையும் உட்படுத்திய கருத்துகளை (Universal Ideas) தன்முனைப்பில் இருக்கக் கண்டார். இந்த எண்ணங்கள் உள் அனுபவத்தினால் நிரூபிக்கப்பட்

டன. இறைவனின் இருத்தல் தன்மையை வலியுறுத்துவதுடன், உணர்வுள்ள தன் முனைப்பானது காரியமாகவும், இறைவன் காரணமாகவும் அமைய ஏதுவாகின்றது. இரா.கோ.

**துணை நூல்கள்:**


**Gentile Giovanni**, Dal Genovesial Gulluppi, Naples, 1903.

**Guzzo, Augusto**, Idealistic empiricist, Florence, 1937.


***காவெலின், கான்சுடாண்டின் திமிட்டிரிவிச்சு*** **(கி.பி.1818-1885)** உருசிய நாட்டில் ஒரு சிறந்த வரலாற்று அறிஞரும், தத்துவ ஞானியுமாவார். இவர் மாசுக்கோ (Moscow) பல்கலைக்கழகத்தில் பயின்று வரலாற்றுப் பேராசிரியரானார். இவர் வரலாற்று நூல்கள் பல எழுதியிருக்கிறார். மேலும், உளவியலிலும் சமூக இயலிலும் அற இயலிலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இவர் கி.பி. 1870-ஆம் ஆண்டு நேர்காட்சி வாதத்திற்கு (Positivism) ஆதரவாகச் சோலோவியோவை (Solovyov) எதிர்த்து வாதம் செய்தார்.

காவெலின் கான்சுடாண்டின் திமிட்டிரிவிச்சு (Kavelin, Konstantin Dimitrievich) அரசியலில் மிதவாதியாகவும், மதத் தொடர்பான செயல்களில் ஆத்திகவாதியாகவும் இருந்தார். இவரது சிறப்பான நூல் 'அற இயலின் சிக்கல்கள்' (Problems of Ethics). இது கி.பி.1884-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் ஒருமுகப் புறப்பொருள் மெய்ம்மையை (Objectivism) வற்புறுத்தும் கருத்துப் பாங்கினைக் குறை கூறினார். இரா.கோ.

***காலெறி கடிகையார்*** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் தெரியவில்லை. எட்டுத்தொகை நூல்களுள் ஆசிரியர் பெயர் தெரியாத பாடல்களுக்கு அப்பாடல்களில் உள்ள சிறப்புத் தொடர் ஒன்றினைத் தேர்ந்து, அதனுடன் ஆர் என்னும் சிறப்பு விகுதி சேர்த்து அதனை அப்பாடலின் ஆசிரியர் பெயராக்கி வழங்கி வந்தனர். அவ்வகையில் பெயர் பெறும் செம்புலப் பெயல்நீரார், ஓரேருழவர், கல்பொருசிறுநுரையார், அணிலாடு முன்றிலார் போன்றோருள் காலெறி கடிகையாரும் ஒருவராவார். இவர் பாடிய பாடல் குறுந்தொகையில் 267-ஆம் பாடலாக அமைந்துள்ளது. தலைவன் கூற்றாக அமைந்த அப்பாடல் பழங்காலத்தே தமக்கு முற்பட்ட சான்றோர் போலத்தலைவியைப் பிரிந்து சென்று பொருள் தேட முற்படுவோம் என்று எண்ணிய நெஞ்சிற்குத்தலைவன் கூறிய கூற்றாக அமைந்துள்ளது. நாள்தோறும் நிகழும் கூற்றவனின் கொலைத்தொழிலை நினைவு கூர்ந்து உலக நிலையாமையையும், மிக்க பொருள் ஒரு பொழுதில் கிடைப்பதாயினும் இளையளாகிய தலைவியைப் பிரிந்து செல்ல எவரும் முற்படாத அருமையையும் கூறித் தலைவன் தலைவியைப் பிரிய மறுக்கும் செய்தி சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. வீ.சே.

***காவட்டனார்*** சங்க காலப்புலவர்களுள் ஒருவர். இவர் புறநானூற்று 359-ஆம் செய்யுளையும் அகநானூற்று 378-ஆம் செய்யுளையும் பாடியுள்ளார். இவரால் பாடப்பெற்றோன் அந்துவன் கீரன் என்னும் சிற்றரசன் ஆவான். 'ஆசிரியர் காவிட்டனாரைக் கானட்டரென்றும் சில ஏடுகள் குறிக்கின்றன. காவிட்டன் என்ற இப்பெயர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில், கோயில்பட்டர்களிடையே பயில வழங்கியிருந்தது என்று சோழவந்தானுக்கு அண்மையிலுள்ள தென்கரைக் கல்வெட்டுகள் கூறுகின்றன' என்பது ஔவை. சு.துரைசாமிப் பிள்ளை அவர்களின் கருத்து. சங்கச் சான்றோராகிய இவரைப் பற்றி வேறு செய்திகள் கிடைக்கவில்லை.

காவட்டனார் இயற்றிய புறப்பாடலின் கருத்து பின்வருமாறு: பல நாடுகளை வென்று அடிமைப் படுத்தி அரசாண்ட முடிவேந்தரும் முடிவில் சுடுகாட்டினை அடைந்தார்களேயன்றி, நிலைபெற ஒருவரும் இருந்தாரிலர். உனக்கும் அவ்வாறு ஒருநாள் வந்தே தீரும். இவ்வுலகில் பழியும் புகழுமே நிலைத்து நிற்பன. ஆதலால், வசை நீக்கிப் புகழைத் தேடுதலும், ஒருபால் கோடாது நீதி வழங்குதலும், இரவலர்க்குக் களிறும், மாவும், தேரும் பிறவும் கொள்ளெனக் கொடுத்தலும் செய்வாயாக; அவ்வாறு செய்வாயானால், நீ மேலுலகம் சென்றபோதும் நீ அடையும் புகழ் இவ்வுலகம் உள்ளவரை நிற்குமென அப்பாட்டில் அறிவுறுத்தியுள்ளார். (புறம் 359).

இவர் பாடிய அகநானூற்று 378-ஆம் பாடல், குறிஞ்சித் திணையில் களவின்பமே காமுற்று வந்து மீளும் தலைவன் இரவுக்குறியிடத்து ஒரு பக்கமாக வந்து நிற்றலைக் கண்ட தோழி, அவனைக் காணாதவள் போலத் தலைவியின் ஆற்றாமை கூறித் திருமணம் செய்துகொள்ள வற்புறுத்தும் பாங்கில் சொல்லியது என்று இதன் துறை அமைந்துள்ளது. அன்னையின் கொடிய பார்வையும், துன்பம் மிகும் மாலைப்பொழுதும் ஆகிய இவையெல்லாம் ஒன்றுகூடி உன்னை வருத்தவும், இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு நீ எப்படித்தான் உயிர் வாழ்கின்றாயோ என நீ என்னை வினவுகிறாய். பிரியமாட்டேன் என்று

நம்மிடம் சூளுரைத்துச் சென்ற நம் தலைவர் நம்மை நினையாராகிலும், அவர் நாட்டு நெடும் பெரும் குன்றத்து வானத்தைத் தீண்டுமளவு உயர்ந்த கொடுமுடி என் கண்களுக்குத் தோன்றுவதால் நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன் என்று தலைவி தோழிக்குப் பதில் கூறினாள். ச.க.

**காவடிச் சிந்து**: சிந்து என்பது இசைப்பாட்டு. பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய மூன்று உறுப்புகளைக் கொண்டு சிந்துப்பாடல்கள் பாடப்பெறும். சரணம் என்னும் உறுப்பு, மூன்று கண்ணிகள் கொண்டு அமையும். மூன்றிற்கு மேற்பட்ட சரணங்கள் கொண்ட சிந்துப்பாடல்களும் உண்டு. இவற்றுள் பல்லவியும் அனுபல்லவியும் இன்றிச் சரணங்களுக்குரிய கண்ணிகளை மட்டும் பெற்று வரும் பாடல்களும் சிந்து என்றே பெயர் பெற்றன. இதில் பலவகையான இசையமைதிகளும் சந்தங்களும் கலந்து வரும். எனவே, சிந்துப் பாடல்களைப் பண்ணுடைக் கவிதை என்று சொல்லலாம். இக்கவிதைகளாலான இலக்கியம் ‘சிந்து’ என்றே பெயர் பெறும். ‘காவடிச் சிந்து’ நூல், கண்ணிகளால் அமைந்த சிந்துப் பிரபந்தமாகும். காவடி எடுத்துச் செல்லும்போது பாடப்படுவது பற்றிக் ‘காவடிச்சிந்து’ என்று வழங்கலாயினர்.

காவடிச்சிந்து நூல் வகையை முதன் முதலில் பாடியவர் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் தான் என்று பலரும் கூறுகின்றனர். அவருடைய காலம் கி.பி. 1851–1891 ஆகும். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கழுகுமலையில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றது. ஊற்று மலைச்சமீன்தார் இருதயாலய மருதப்ப தேவர் கழுகுமலை முருகனுக்குக் காவடி எடுத்தபோது வழியில் பாடும்பொருட்டு இந்த நூலை அண்ணாமலைரெட்டியார் பாடினார் என்பர்.

அண்ணாமலை ரெட்டியாருக்குமுன் காவடிச் சிந்து என்ற யாப்பு வடிவம் இல்லையென்றாலும் முருகனைக் குறித்துப் பாடிய இசைப்பாட்டுகள் இருந்தன. கந்தன்பாட்டு என்று அடியார்க்கு நல்லார் குறிப்பது முருகனைக் குறித்துப்பாடிய இசைப் பாட்டாக இருக்கலாம். முருக பக்தர்கள் கி.பி. 18,19–ஆம் நூற்றாண்டுகளில் பாடி வந்த சிந்துப் பாடல்களில் ஈடுபாடு கொண்டு அண்ணாமலை ரெட்டியார் அந்தச் சிந்து மெட்டுகளைச் செம்மைப் படுத்திக் காவடிச்சிந்தை உருவாக்கியிருக்கலாம். அருணகிரிநாதர் முதல் இராமலிங்க சுவாமிகள் வரை நிலவிய பெரியார்களை அண்ணாமலைரெட்டியார் பின்பற்றினார் என்று கூறலாம். அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்தின் அமைப்பைக் கவனித்தால் இதுவும் நாட்டுப் பாடல்களினின்றும் சற்றே மாறுபட்ட ஒருவகைப் புதுச் சிந்து என்றே சொல்லத் தோன்றுகிறது.

சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் பாடிய காவடிச் சிந்தில் 22 இசைப்பாடல்கள் உள்ளன. கு.அழகிரிசாமி பதிப்பில் 24 பாடல்கள் உள்ளன.விநாயகர் துதி, முருகன்துதி என்பவற்றை முதலிலே பெற்றுப் பின்பு கழுகுமலை நகர்வளம், வாவி வளம் என்னும் வருணனைகளை உடையதாய்,அப்பால் முருகன் துதிகளாகச் சில பாடல்களையும், நாயக நாயகி பாவத்தில் அமைந்த அகத்துறைப் பாடல்கள் சிலவற்றையும் கொண்டதாய் அமைந்தது இந்நூல்.

தமிழ் நாட்டு மக்கள் இந்த நூலைப் பெரிதும் போற்றிப் பாடி மகிழ்ந்தனர். இசைப் புலவர்களும் இசையரங்குகளில் காவடிச் சிந்துப் பாடல்களைப் பாடினர். அண்ணாமலை ரெட்டியார் காலத்திலேயே அவருடைய காவடிச் சிந்துப் பாடல்களை முன்மாதிரியாக வைத்து ஐயநேரிக் கிராமத்தில் வாழ்ந்த சீனி ஆச்சாரி என்பவரும் கரிவலம் வந்த நல்லூரில் வாழ்ந்த உத்தண்டம்பிள்ளை என்பவரும் காவடிச் சிந்துகள் பாடினர் என்பர். பாண்டித்துரைத் தேவர் சிவஞானபுரத்து முருகன் மீது காவடிச் சிந்து நூல் ஒன்று பாடியுள்ளார். அந்நூல் அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து நூலை முன் மாதிரியாகக் கொண்டுள்ளது. பாரதியார் ஒரு காவடிச் சிந்து நூல் பாடியதாகக் கூறப்படுகிறது. ஆனால், அந்நூல் கிடைக்கவில்லை. இருப்பினும் அவர் காவடிச் சிந்து மெட்டில் பாடிய சில பாடல்கள் கிடைத்துள்ளன.

முருகன் துதி பாடத் தோன்றிய காவடிச்சிந்து என்னும் இசைப்பாடல் வடிவைப் பாரதியார் நாட்டுப் பற்றைப் பாடப் பயன் படுத்தினார். பாரதியாரைப் போலவே பாரதிதாசனும் காவடிச்சிந்தில் ஈடுபாடு கொண்டு காடு, ஆலய தரிசனம், மாடியில் நிலவு முதலிய தலைப்பில் பாடியுள்ளார். அவற்றில் இயற்கை வளம், காதல், ஆலயத்தில் நுழைய உரிமை வேண்டுதல் பற்றிப் பாடியுள்ளார். கண்ணதாசன் பல காவடிச் சிந்துப் பாடல்கள் பாடியுள்ளார். அவற்றில் பொதுவுடைமைக் கருத்துகளும் தத்துவக் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன.

இராமாயணத் திருப்புகழ்க் காவடிச் சிந்து, பாரதத் திருப்புகழ்க் காவடிச் சிந்து, அரிச்சந்திரன் திருப்புகழ்க் காவடிச் சிந்து, தேவடிச் சிந்து, பூவடிச் சிந்து என்று பிறபொருள்களிலும் காவடிச் சிந்து நூல்கள்

தோன்றின. பழைய புராணக் கதைகளைக் காவடிச் சிந்து நூல்களாக விரகாலூர்ச்சுப்பையா பிள்ளையும் சு. துரைசாமி படையாச்சியாரும் பாடியுள்ளனர். அசன் அலிப் புலவர் என்பார் முசுலிம் பெரியார் நால்வரின் புகழைத் தமது பூவடிச் சிந்தில் பாடியுள்ளார்.

பிற்காலப் புலவர்கள் அண்ணாமலைரெட்டியாரின் காவடிச் சிந்தின் முறையைப் பின்பற்றி முருகனையும் காவடியையும் விட்டுப் பல்வேறு பொருள்களைப் பாடியுள்ளனர். முருகன் மீதும் பலர் பாடியுள்ளனர். ஆனால், அவையெல்லாம் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்துபோல் சிறக்கவில்லை.

மு.மா.

**துணை நூல்கள்:**

**செ. அன்னகாமு**, ஏட்டில் எழுதாக் கவிதைகள், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-1, 1966.

**கு. அழகிரிசாமி**, சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச் சிந்து, சக்தி காரியாலயம், ஆயிரம் விளக்கு, சென்னை-6, 1960.

**மு. சண்முகம் பிள்ளை**, சிற்றிலக்கிய வகைகள், மணிவாசகர் நூலகம், சென்னை, 1982.

**யோகி சுத்தானந்த பாரதியார்**, காவடிச் சிந்து அண்ணாமலை ரெட்டியார், அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி மாவட்டம், 1943.

**காவல் துறை:** காவல் சட்டம், 1861, பிரிவு 1-இன்படி பெயர்ப் பட்டியலில் பதிவு பெற்றவர் காவல்துறையினர் (Police) ஆவர்.

**காவற்படை அமைப்பு**: காவற்படையில் காவலர் மற்றும் காவல் அலுவலர்கள் எண்ணிக்கை எவ்வளவாக இருக்க வேண்டுமென்பதை மாநில அரசு முடிவு செய்யும். காவல் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் காவல்துறையின் உறுப்பினர்கள் எப்போதும் கடமையில் உள்ளவராகவேகருதப்படுவர். அவர்கள் இச்சட்டத்தின்படியான கடமைகளைத் தவிர்த்து வேறு எந்தப் பணிகளிலும் ஈடுபடுதல் கூடாது. அப்படி அவர்கள் ஈடுபடுவதற்கு விரும்பும் போது, அதற்கு எழுத்து மூலமாக வெளிப்படையான கட்டளையைப் பெறுதல் வேண்டும்.

**காவற்படை நிருவாகம்**: ஒரு மாநிலக் காவற்படையின் பொது நிருவாகமானது, காவல்துறைத் தலைமை அலுவலர்; அல்லது மாநில அரசுக்குப் பொருத்தமெனத் தோன்றும் அத்தகைய காவல் துறைத் துணைத் தலைமை அலுவலர்; அல்லது காவல் துறை உதவித் தலைமை அலுவலரிடத்தில் இருக்கும். ஒரு மாவட்டக் காவல்துறையின் பொது நிருவாகமானது, மாவட்ட நடுவருடைய பொதுவான ஆளுமைக்கும் ஏவலுக்கும் உட்பட்டு ஒரு மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரிடம் இருக்கும்; மற்றும் மாநில அரசாங்கம் அவசியமென்று கருதும்போது அது ஒரு மாவட்டக் காவல் துறை உதவிக் கண்காணிப்பாளரிடமும் இருக்கும்.

**காவல்துறைத் தலைமை அலுவலருக்கு விதி செய்வதற்குள்ள அதிகாரம்**: காவல்துறைத் தலைமை அலுவலர், மாநில அரசின் இசைவுக்கு உட்பட்டுக் காவற்படையின் அமைப்பு, பாகுபாடு, பங்கீடு, படை உறுப்பினர்கள் தங்குமிடம், அவர்களது பணிகள், அவர்களுக்குக் கொடுக்கப்படும் உடைகள், ஆயுதங்கள் மற்றும் காவற்படைத் தொடர்புடைய மற்ற எல்லாக் கட்டளைகளையும் விதிகளையும் இயற்றுவார்.

**காவல் அலுவலர்களுக்குள்ள அதிகாரம்**: காவல் சட்டத்தின்படியும் மற்றும் குற்றவியல் நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் எந்தச் சட்டத்தின்படியும், ஒரு காவல் அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் அனைத்தையும் காவல் அலுவலர் செலுத்துவார்.

**காவல் அலுவலர்களின் கடமைகள்**: உயர் அலுவலர்களால் அனுப்பப்படும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவைகளை நிறைவேற்றுவது; பொது அமைதியை நிலைநாட்டத்தகவலைச் சேகரிப்பது; பொதுத் தொல்லைகளை நீக்குவது; குற்றங்களைத் தடுப்பது; குற்றவாளிகளைக் கைது செய்து நீதி விசாரணைக்குக் கொணர்வது போன்றவை ஒரு காவல் அலுவலருக்குள்ள கடமைகளாகும்.

காவல் அலுவலர் ஒருவர் தம்முடைய கடமைகளினின்று தவறும்போது, அவர் ஒரு நடுவர் முன்பு குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டால் மூன்று மாத ஊதியத்திற்கு மேற்படாத ஒறுப்புத் தொகை அல்லது கடுமையான உழைப்புடனோ இல்லாமலோ மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவர்.

**கடமையில் தவறும் கீழ்நிலை அலுவலர்களுக்குத் தண்டனை**: அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 311, மற்றும் காவல் சட்டத்தின்படி அவ்வப்போது மாநில

அரசு இயற்றலாகும் விதிகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, காவல் துறைத் தலைமை அலுவலர், காவல் துறைத் துணைத்தலைமை அலுவலர் மற்றும் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், கீழ்நிலையிலுள்ள காவல் அலுவலர் ஒருவர் தமது கடமையை நிறைவேற்றுவதில் தவறுகிறார் அல்லது அசட்டையாக இருக்கிறார் அல்லது அதற்குத் தகுதி அற்றவராய் இருக்கிறார் என்று கருதுகின்றபோது, அவரை எந்த நேரத்திலும் பதவியிலிருந்து நீக்கவோ தற்காலிகமாக நிறுத்திவைக்கவோ கீழ்நிலைக்குத்தள்ளவோ செய்யலாம்; அல்லது பின்வரும் தண்டனைகளுள் ஏதேனும் ஒன்றையோ மேற்பட்டதையோ அளிக்கச் செய்யலாம். அவை; 1) ஒரு மாதச் சம்பளத்திற்கு மேற்படாத எந்தத் தொகையையும் ஒறுப்புத் தொகையாக விதித்தல்; 2) கடும் உழைப்புடனோ இல்லாமலோ பதினைந்து நாட்களுக்கு மேற்படாத ஒரு கால அளவுக்குத் தண்டனையளித்துச் குடியிருக்குமிடத்தில் அடைத்து வைத்தல்; 3) நன்னடத்தைச் சம்பளத்தை இழக்கச் செய்தல்; 4) சிறப்புடைய அல்லது தனி ஊதியங்கொண்ட எந்தப் பதவியிலிருந்தும் நீக்குதல். பு.வே.

**காவல் வைப்பு**: நீதித்துறை நடுவர் அல்லது நீதிபதியின் முன்புள்ள குற்றவியல் நடைமுறை ஒன்றை வேறொரு தேதிக்கு மாற்றி வைத்து, அந்நடைமுறையில் தொடர்புள்ள குற்றவாளியைப் பிணை (Bail) யில் வெளியேற அனுமதிக்கின்றவரை, சிறையில் வைக்கக் கட்டளை பிறப்பிப்பது காவல் வைப்பு (Remand) எனப்படும். குற்றவாளிகள், குழந்தைகளாக அல்லது இளங்குற்றவாளிகளாக இருக்கும் போது, அவர்கள் இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி (Approved School) யில் வைக்கப்படுதல் வேண்டும். குற்றவாளி ஒருவரைக் காவலில் வைக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு மட்டுமே உண்டு.

**இருபத்துநான்குமணி நேர விதி**: காவல் துறையினர், ஒருவரைக் கைது செய்ததும் இருபத்துநான்கு மணி நேரத்திற்குள்ளாக, உரிய நடுவர் அல்லது காவல் நிலையத்திற்கு அடுத்து அருகிலுள்ள நடுவரிடம் கொண்டு வருதல் வேண்டும். குற்றவாளி ஒருவரை மேலும், காவல்நிலையக் காப்பில் (Police Custody) இருத்தி வைக்கக் காவல் துறையினர் விரும்பும் போது, உரிய நடுவரிடத்து விண்ணப்பித்து அதற்கான கட்டளையைப் பெறுதல் வேண்டும். ஈண்டு, இருபத்து நான்கு மணிநேரம் என்பது காவல்துறையினர் ஒருவரைக் கைது செய்ததிலிருந்து தொடங்கும்.

**காவல்நிலையக் காவல்வைப்பு**: காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட ஒருவரை, அவர்தம் வழக்குத் தொடர்புடைய வழக்குக் குறிப்பேட்டுடன் (Case Diary) நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தும்போது, நடுவர் அவரைப் பிணையில் விடுவிக்கவோ காவலில் வைக்கவோ செய்யலாம்.

நடுவர், குற்றவாளி ஒருவரைக் காவல் நிலையக் காவல் வைப்பிற்கு அனுப்புவது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும்:

1) அத்தகைய காவல்வைப்புப் பதினைந்து நாள்களுக்கு மேற்பட்டதாய் இருத்தல் கூடாது.

2) அத்தகைய கட்டளையைப் பிறப்பிப்பதற்கான காரணம் எழுத்து வடிவில் இருத்தல் வேண்டும்.

3) அக் கட்டளையின் நகலையும் காரணங்களையும் தலைமை நீதித்துறை நடுவருக்கு அனுப்புதல் வேண்டும்.

காவல்நிலையக் காவல் வைப்பிற்குக் கைதி ஒருவரை அனுப்புவதற்கான அதிகமான கால அளவு பதினைந்து நாள்கள் ஆகும். எனினும், நடுவர், குற்றவாளியைத் தேவைப்படும் கால அளவுக்கு மட்டுமே காவல்நிலையக் காவல்வைப்புக்கு அனுப்புதல் வேண்டும். அதுவும் உண்மைத் தேவையின் அடிப்படையிலேயே அனுப்புதல் வேண்டும்.

பின்வரும் காரணங்களின் அடிப்படையில் நடுவர் குற்றவாளி ஒருவரைக் காவல்நிலையக் காவல்வைப்புக்கு அனுப்பிவைப்பது நியாயமானதாகும்.

1) சிறையிலிருக்கும் குற்றவாளியை அடையாளங் காட்டுவதற்குச்சாட்சிகளை வெகுதொலைவிலிருந்து கொண்டு வருவது கடினம் என்று தெளிவுற்றநிலையில், குற்றவாளியை அடையாளங் கண்டறிவதற்குச் சாட்சிகள் இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்வது தேவையென்றிருக்கும்போது;

2) குற்றம் நடந்த இடத்தில் அல்லது அதற்கு அருகாமையில் பதிவாகியுள்ள கால்ரேகைகளுடன் குற்றவாளியின் கால்ரேகையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு, அவரது கால்ரேகையைப் பதிவு செய்வது அவசியமாக இருக்கும்போது;

3) குற்றவாளி விசாரிக்கப்படும்போது வழக்குத் தொடர்புடைய திருட்டுப்பொருள் அல்லது ஆயுதங்கள் அல்லது மற்றைய பொருள்களைக் காட்டுவதாக உறுதியளித்திருக்கும்போது;

4) குற்றத்திற்குப் பயன்படுத்திய ஆயுதங்கள்

குற்றவாளி எவ்விடங்களில் வாங்கினார் என்பதைக் காட்டுதல் இயலும் என்றிருக்கும்போது.

**பின்வரும் காரணங்களின் அடிப்படையில் காவல் துறையினர் காவல் நிலையக் காவல்வைப்புக்கு நடுவரிடம் விண்ணப்பித்தல் கூடாது:**

1. குற்றவாளி ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதற்கு;
2. குற்றவாளி விசாரிக்கப்படுவதற்கு;
3. குற்றவாளி குற்றத்திற்குத் தடயமொன்றைக் கொடுப்பதற்கு;
4. காவல்நிலையக் காவல்வைப்பை நியாயப்படுத்தும் முறையில், மேலும், குற்றந்தொடர்புடைய பொதுவான வாக்குமூலத்தைக் குற்றவாளி அளிப்பதற்கு.

நடுவர், குற்றவாளி ஒருவரைக் காவல் வைப்புக்கு அனுப்புமுன், அவர்மீது குற்றம் சரியான முறையில் சாட்டப்பட்டுள்ளதா என்பதில் உளநிறைவு அடைந்திருத்தல்வேண்டும். இதன்பொருட்டு, அவர் வழக்குக் குறிப்பேட்டையும் குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 161-இன்படி பதிவுசெய்யப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலத்தையும் பார்ப்பதுடன், அப்பதிவாவணங்களில் (Records) குறித்துரைக்கப்பட்ட பாங்கில் வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும் பார்த்தல் வேண்டும்.

குற்றவாளியை ஒரு முறைக்கு மறுமுறை காவல் நிலையக் காவல் வைப்புக்கு அனுப்புவது நீதியின் நலனுக்கு உகந்தது என்று நடுவர் உளநிறைவடைகின்றபோது மட்டுமே அவ்வாறு அனுப்புதல் வேண்டும். ஆனால், அவர் அவ்வாறு அனுப்பும்போது, குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 167 (3) மற்றும் குற்றவியல் நடைமுறைகள் விதிகள் (Criminal Rules of Practice), விதி 86 (1)-(4)-ஆகியவைகளின் படி அதற்குரிய காரணங்களை எழுத்தில் பதித்தல் வேண்டும்.

உயர்நீதிமன்றத்தால் சிறப்பு வகையில் அதிகாரமளிக்கப்படாத ஓர் இரண்டாம் வகுப்பு நடுவர் இவ்வாறு ஒருவரைக் காவல் நிலையக் காவல் வைப்புக்கு அனுப்புதல் முடியாது.

**நீதிமன்றக் காவல்வைப்பு**: குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 309, குற்றவாளி ஒருவரை நடுவர் நீதிமன்றக் காவல்வைப்பிற்கு அனுப்புவதற்கான நடைமுறையை உரைக்கின்றது.

குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 167 இன் கீழ்க் குற்றவாளி ஒருவரை, நடுவர் காவல்நிலையக் காவல்வைப்புக்கும் நீதிமன்றக் காவல்வைப்புக்கும் அனுப்பலாம். ஆனால், பிரிவு 309-இன் கீழ்க் குற்றவாளி ஒருவரை, நடுவர் நீதிமன்றக் காவல் வைப்புக்கு (Remand to Judicial Custody) மட்டுமே அனுப்புதல் முடியும். இதன் நோக்கம், விசாரணை தொடங்கியபின் குற்றவாளி ஒருவரைத் தொடர்ந்து காவல் துறையினரின் செல்வாக்கின் கீழ் வைப்பது முறையற்றது என்பதேயாகும்.

குற்றவாளி ஒருவரை, நடுவர் காவல்வைப்புக்கு அனுப்புமுன் அவரை நேரடியாகப் பார்த்தல் வேண்டும். குற்றவாளியைக் காணாமலேயே காவல்வைப்புக்குக் கட்டளை இடுதல் கூடாது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 33-இன் படி குற்றவாளி ஒருவர் சட்டமுறையாகக் காவல் வைப்பில் இருக்கும் போது மட்டுமே பிணை (Bail) கேட்டல் முடியும்.

**காவல் வைப்புக்கு அதிகமான காலவரையறை**: குற்றவாளி ஒருவரைக் காவல்துறையினர் குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 57 இன் கீழ் அதிகபட்சம் இருபத்துநான்கு மணி நேரமும் நீதித்துறை நடுவர் பிரிவு 167-இன்கீழ் ஒவ்வொரு முறையும் அதிகமாகப் பதினைந்து நாள்கள் கால அளவுக்குப் மட்டுமே காவலில் வைக்கலாம்.

**காவல்வைப்பு, குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவுகள் 167, 309 ஆகியவைகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள்**:

1) குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 167 இன் கீழ்க் காவல்வைப்புக்கான கட்டளை, காவல் துறையினரின் புலனாய்வின்போதும் அதன் ஒரு பகுதியாக வசதியளிக்கும் நிலையிலும் பிறப்பிக்கப்படுகிறது. பிரிவு 309-இன் கீழ்க் காவல்வைப்புக்கான கட்டளை, புலனாய்வின் ஓரளவு முன்னேற்றத்திற்குப் பிறகும் குற்றவாளி குற்றம் புரிந்திருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதற்கான சந்தேகம் போதிய நிலையில் முன்கூட்டித் தெரியவந்திருக்கும்போதும் காவல் வைப்பின் பலனாக மேலும் சான்றுகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்ற நிலையிலும் பிறப்பிக்கப்படு படுகிறது.

2) பிரிவு 167-இன் கீழ்க் காவல்வைப்புக்கான கட்டளையை எந்த நடுவரும் பிறப்பிக்கலாம். ஆனால், பிரிவு 309-இன் கீழ்க் காவல் வைப்புக்கான கட்டளையை, அவ்வழக்கை விசாரிக்கும் ஆள்வரை

(Jurisdiction) யுள்ள நடுவர் மட்டுமே பிறப்பிக்க முடியும்.

3) பிரிவு 167-இன் கீழ் மொத்த அளவாகக் குற்றவாளி ஒருவரைப் பதினைந்து நாள்கள் மட்டுமே காவலில் வைக்கமுடியும்; ஆனால், பிரிவு 309-இன் கீழ்க் குற்றவாளி ஒருவரை ஒவ்வொரு முறையும் பதினைந்து நாள்களுக்கு மிகாத அளவில் எந்தக் கால அளவுக்கும் காவலில் வைக்கலாம்.

4) பிரிவு 167-இன் கீழ்க் காவல்வைப்பு, காவல் துறையினரின் விண்ணப்பத்தின்பேரில் பிறப்பிக்கப்படுகிறது; பிரிவு 309-இல் அத்தகைய விண்ணப்பம் எதுவும் தேவையில்லை.

5) பிரிவு 167-இன் கீழ்க் குற்றவாளி ஒருவரை, நடுவர் காவல் நிலையக் காவல்வைப்புக்கு அனுப்பி வைக்கலாம்; ஆனால், பிரிவு 309-இன் கீழ் அவ்வாறு அனுப்பிவைக்கப்படுவதில்லை.

**அறுபது நாள் விதி**: நடுவர், குற்றவாளி ஒருவரை உயர் அளவாகப் பதினைந்து நாள்கள் மட்டுமே காவலில் வைக்க முடியுமெனினும் குற்றவாளியைக் காவல்நிலையக் காவல் வைப்புக்கு அல்லாமல், வேறு விதமாகப் பதினைந்து நாள் கால அளவிற்கு மேற்பட்டும் காவலில் வைப்பதற்குப் போதிய சான்றுகள் இருப்பதாக நடுவர் உளநிறைவடைகின்றபோது, ஒவ்வொரு முறையும் பதினைந்து நாள்களுக்கு மேற்படாத நிலையில் அறுபது நாள் வரையில் அவரைக் காவலில் வைக்கலாம். அதன் பிறகு அவர் பிணை கொடுக்க முன்வரும்போது, அவரைப் பிணையில் விடுவித்தல் வேண்டும். இது தவிரக் குற்றவாளிக்கு எதிரான வழக்கில் புலனாய்வு முடிவுற்ற போதும் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கும்போதும் அவரைப் பிணையில் விடுவிப்பது அவசியமாகும்.

**சட்டமுரணான காவல் வைப்பு**: கைது செய்யப்பட்ட ஒருவரை எக்காரணங்கொண்டும் இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மேல் காவல் துறையினர் காவலில் வைத்திருத்தல் கூடாது. அவ்வாறு எவரையும் சட்டமுரணான வகையில் காவலில் வைப்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டபடி, அவர்தம் அடிப்படை உரிமைக்கு ஊறுவிளைவிப்பதாகும். ஒருவர் சட்ட முரணான முறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும்போது, காவலில் வைத்திருப்பவருக்கு எதிராக ஆள் கொணர்விக்கும் நீதிப் பேராணை (Writ of Habeas Corpus)யை வழங்கிட உயர்நீதிமன்றத்தை அணுகலாம். ஒருவர், காவல் துறையினரால் சட்ட முரணான வகையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும்போது தப்பிச் சென்றால், அது சட்ட முறையான காவல் வைப்பினின்று தப்பிச் சென்றதாகாது.

பு.வே.

**துணை நூல்**:

Krishnamurthi K, Police Diaries & Statements, Etc, Law Book Company, Allahabad, 1980.

**காவற் கப்பல்** மிக விரைவாகக் கடலைக் கடக்கும் கப்பல். கடற்போர்க் காலங்களில் இக்கப்பல் (Cruiser) மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது. வாணிகக் கப்பல்களைக் காப்பாற்றவும், வேறுபல பாதுகாப்புக் காரியங்களுக்காகவும் இது பயன்படுத்தப்படுகிறது. செருமனியில், இரண்டாம் உலகப் போருக்கு முன்பு இந்த வகையான கப்பல்கள் தயாரிக்கப்பட்டன. பின்னர்ப்பிற நாடுகளும் இம்முறையைப் பின்பற்றலாயின.

தெ.பா.

**காவற்பெண்டு** சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். காவற்பெண்டு என்பதற்குச் செவிலித்தாய் எனப் பொருள் கூறியுள்ளார் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர். (சிலப். வாழ்த்து). சில ஏடுகளில் இப்பெயர் காதற்பெண்டு என்றும் காணப்படுகிறது. இவற்றை நோக்கும்போது இவர் ஒரு பெண்புலவர் என்பது தெளிவாகிறது. இவரைப் பற்றிக் கூறும்போது, டாக்டர் உ.வே. சாமிநாதையர், 'இவர் சோழன் போர்வைக் கோப் பெருநற் கிள்ளியின் செவிலித் தாய் என்று தெரிகிறது' எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்தம் ஒரே பாடல் புறநானூற்றில் 86-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அப்பாடலுக்கு முன்னர்ச் சில பாடல்கள் (80-85) போர்வைக் கோப் பெருநற்கிள்ளியைச் சிறப்பிப்பனவாக உள்ளமை கொண்டு ஐயரவர்கள் அவ்வாறு கருதியிருத்தல் கூடும். வாகைத் திணை ஏறாண் முல்லையில் அமைந்துள்ள இவர்தம் பாடல், மறக்குடியிற்பிறந்த ஒரு தாய் தன் வயிற்றிற் பிறந்த மறக்குடி மைந்தனின் இயல்பையும், போர் வீரனாகத் திகழும் அவனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பையும் மிகவும் அழகாகக் காட்டுவதாக உள்ளது. அதனைக் கொண்டு, இப்புலவர் மறக்குடியிற் பிறந்த ஒரு வீர மகளாவார் என்று கருதுவாருமுளர். நின் மகன் எங்குள்ளான் எனக் கேட்ட ஒரு பெண்ணிடம், 'புலி தங்கிப் போகிக் கற்குகை போல ஈன்ற வயிறு இதுவாகும், அவன் போர்க்களத்தில் காணப்படுவான்' என்று கூறுவது நயமிக்கதாக உள்ளது.

அ.மா.ப.

**காவன் முல்லைப் பூதனார்**: சங்கப் புலவராகிய இவர்தம் இயற்பெயர் பூதனார். காவன்

முல்லை என்பது புறத்திணைகளுள் ஒன்று. அவர் அத் துறையைப் பாடி அச்சிறப்புப் பெற்றார் என்று குறுந்தொகைக்கு உரை எழுதிய உ.வே. சாமிநாதையரும், நற்றிணைக்கு உரை எழுதிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்களும் கூறியுள்ளனர். 'காவன் முல்லை புறத்திணைகளுள் ஒன்றெனப் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் கூறுவர். அவர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாகும். ஆகவே, பூதனார் காவன்முல்லைத் துறையைப் பாடி அச்சிறப்புப் பெற்றார் என்பது வரலாற்று நெறிக்குப் பொருத்தமாக இல்லை. முல்லையூர் பாண்டி நாட்டு ஊர்களுள் ஒன்று. காவன் என்பது தந்தை பெயராகவோ குடிமுதல்வன் பெயராகவோ இருத்தல் வேண்டும். எனவே, பூதனார் காவன் என்பாருக்கு மகனாரும், முல்லையூரைச் சேர்ந்தவருமாவர் எனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது' என ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் தாம் எழுதிய நற்றிணை உரையில் குறிப்பிட்டுள்ளார்.

குறுந்தொகையில் 104, 211 ஆகிய இரு பாடல்களும், நற்றிணையில் 274-ஆம் பாடலும், அகநானூற்றில் 21, 241, 251, 293, 391 ஆகிய ஐந்து பாடல்களும் பூதனார் இயற்றியவை. இவர் பாலைத் திணையைச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

தலைவன் தன்னைக் காலமல்லாத காலத்தில் அதாவது பனிக்காலத்தில் பிரிந்ததோடு அல்லாமல் பல நாள்களாகியும் திரும்பினானிலன் எனத் தலைவி வருந்துவதாகப் பாடியுள்ளார். அப்பாடலில் பூதனார் ஒன்றோடொன்று தொடர்பின்றி விழுகின்ற பனித் துளிகளுக்கு நூலற்ற முத்து வடத்திலிருந்து தனித்து உதிர்கின்ற முத்துகளை உவமை கூறுகின்றார் (குறுந் 104).

சோதிடம் கூறும் வாயையுடைய பல்லிகளை என்னும் கருத்தில் 'கணிவாய்ப்பல்லி' என்று இவர் கூறுகிறார் (அகம். 151).

மற்றொரு பாடலில் (அகம். 293) தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு இவர் சிறப்பானதோர் உவமையைக் கையாண்டுள்ளார் அது, 'பண்பில் கோவலர் தாய்பிரித்து யாத்த, நெஞ்சமர் குழவி போல நொந்து நொந்து, இன்னா மொழிதும் என்ப...' (அகம்.293) என்பதாகும். இரக்கம் இல்லாத கோவலர் தாயைப் பிரித்துக் கட்டிய, நெஞ்சத்து அதனை விரும்பிய கன்று, பலதடவை விரும்பிக் கதறுவதுபோலத் தலைவனைப் பிரிந்த தலைவி மிக நொந்து இன்னாதவற்றை மொழிந்தாள் என்று இவர் குறிப்பிட்டுள்ளார். ச.க.

***காவாகுச்சி*** சப்பான் நாட்டிலுள்ள ஒரு நகரம். அசிகாவா, கீசகாவா ஆறுகளின் ஓரத்தில் உள்ள, காவாகுச்சி (Kawaguchi), தோக்கியோ நகரின் ஒருபுறநகர்ப் பகுதியாக அமைந்துள்ளது. நெசவுத் தொழிலுக்கும் இரும்பு வேலைகளுக்கும் இது பெயர் பெற்றது. இதன் மக்கள்தொகை 351,802 (1976).

தெ.பா.

***காவிரி***: தமிழகத்துப் பேராறுகளில் மிகப் பழமையானது காவிரியாறாகும். இதனைக் காவேரி என்றும் குறிப்பர். இந்த ஆறு நில வளத்திலும் கலை வளத்திலும் இலக்கிய வளத்திலும் வரலாற்று வளத்திலும் கனிவுமாறாத் தன்மையுடையது. பட்டினப் பாலை பாடிய புலவர் முதல் பாரதியார் வரை இவ் வாற்றின் பெருமையைப் பாடியுள்ளனர்.

காவிரியின் பெயர்க்காரணம் குறித்துக் கந்த புராணம் ஒரு கதையைக் கூறுகிறது. ஆக்னேய புராணமோ, காவேரி என்ற பெயர் வந்ததற்கான காரணக் கதையை விளக்குகிறது. விந்தமலையின் ஆணவத்தை அடக்குதற்குச் சிவ வழிபாடு செய்தார் அகத்தியர். அம்முனிவர்க்குக் காவிரி பேருதவி செய்ததால் சிவதவத்தில் வெற்றிபெற்றார். வறட்சி நீங்கி வளம் பெருக இந்திரன் சிவதவம் செய்தான். அப்போது நாரத முனிவன் அறிவுரைக்கேற்ப அகத்திய முனிவரின் கமண்டல நீரைக் காக்கை வடிவிற் சென்ற பிள்ளையார் கவிழ்த்தார். காகம் விரித்த நீராதலின் காவிரியானது என்பர். கா-பூஞ்சோலை, சோலை செழிக்க விரிந்தமையால் அப்பெயர் பெற்றதாகவும் கூறுவர். கவேரமன்னர் இமயமலைச் சாரலில் பிரமனை நோக்கித் தவமிருந்தபோது அவன் பாவம் போக்கப் பிரமன் மனத்திலிருந்து உதித்தவள் காவேரி என்றும் கதை கூறுவர். இக்கதைகள் 'காவிரி' 'காவேரி' என்றிரு சொற்களுக்கும் விளக்கம் தருவனவாக அமைந்துள. பொன் அணுக்கள் கலந்து வரும் நீராதலின் காவிரிக்குப் பொன்னியென்னும் மற்றொரு பெயருமுண்டு. ஆற்றைத் தெய்வமாக வழிபட்டமையால் ஆற்றுடன் தெய்வக் கதைகள் இணைந்தன. புண்ணிய நன்னீர் உடையதாகக் காவிரி மதிக்கப் பெறுகின்றது.

1. 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத் தலைய கடற்காவிரி' என்று பத்துப்பாட்டுள் ஒன்றான பட்டினப்பாலை காவிரியின் தோற்றத்தையும் அதன் சங்கமத்தையும் கூறுகின்றது. நறுமணப் பொருள்களைத் துறை தோறும் சுமந்துசென்று காவிரி நீர் கொட்டுவதாகப் பொருநராற்றுப் படை காவிரியின் செல்வ வளத்தைப் பாடுகிறது. காவிரி கடலொடு



காவிரி

கலக்கும் சங்கமத் துறையைக்காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் அகநானூற்றுப் பாடலில் (பா.123) சுட்டியுள்ளார். கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தத்தை (அக.நா.6), கரும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்றை (அக.நா. 62), அதன் வடகரையை (அக.நா. 177), கடற்கரையை மெலிக்கும் தன்மையை (அக.நா. 126), காவிரிப் படப்பையை (326) காவிரி நீத்தம் கரை அழித்த செய்தியை (341) நெடுநீர்க் காவிரியை (396) அகநானூற்றுப் பாடல்களில் காண லாம். 15 இடங்களில் காவிரியாறு பற்றிய செய்தி வருகின்றது.

புறநானூற்றில், 'இன்னீர்க் காவிரி எக்கரிட்ட மணலினும் பலவே' (43) என்ற வாழ்த்துக் காணப் படுகிறது. மரம் கொல் மலி நீர் உடையது காவிரி (68) என்றும் சோழனைக் காவிரிக் கிழவன் என்றும் புறநானூறு காவிரி பற்றி 10 இடங்களில் குறிப்பு உளது. ஐங்குறு நூற்றில் (42) காவிரியாறு உவமை யாகக் கையாளப்பட்டிருப்பது அதன் பழமையைப் பறைசாற்றும். காவிரிப் பெருந் துறையில் பலர் நீரா டும் செய்தியைக் குறுந்தொகை (25) குறிக்கின்றது. பதிற்றுப்பத்து என்ற இலக்கியத்தில் நீரோட்டமும் (50) வளப்பமும் (73) கூறப்பட்டுள. காவிரியாறு உவ மையாகவும் (90) எடுத்தாளப்பட்டுளது.

சமதளத்தில் ஓடிவரும் காவிரி, மணல் பரந்துள்ள இடத்தில் பாயும் காவிரி, கரையுள்ள காவிரி, நீராட்டத்திற்கேற்ற காவிரி, பேரியாற்று நிலை, (அகன்ற–அகண்ட காவிரி) கடல்மண்டும் பெருந் துறைக் காவிரி, கரைபுரண்டோடும் நீருடைய காவிரி, தோட்டங்களைக் கொண்ட காவிரியாறு ஓடும் உறையூர் ஆகிய செய்திகளை எட்டுத்தொகை எடுத் தியம்பும்.

'காவிரி நாடன்' என்று சோழன் நதியால் பெயர் பெறும்நிலையைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. உழ வர்களின் ஆரவார ஒலி இருகரைகளிலும் கேட்கும்படிக் காவேரியாறு சோழநாட்டில் நடந்து செல்வதைக் கானல்வரிப் பாட்டில் காணலாம். சோழநாடு செழிக்க மகவாய் வளர்க்குந் தாயாகி ஊழி உய்க்கும் பேருதவி செய்யும் ஆறு காவேரி என்று கூறுகிறார் இளங்கோ. கோள்நிலை திரிந்து கோடைக்காலம் நீட்டித்தாலும் தான் நிலை திரியாதது தண்தமிழ்ப்பாவையான காவிரி என்று மணிமேகலைப் பதிகம் பகரும்.

சம்பந்தர் தேவாரத்தில் காவிரிக் கரையோரச் சிவத்தலங்கள் காணப்படுகின்றன. ஐயாறு வட கரை குரங்காடுதுறை, காழி, சக்கரப் பள்ளி, துருத்தி கண்டி யூர், பொன்னி நிலவுந்திருநல்லூர், காவிரித் தென்

கரை நாகேச்சுரம், நெய்த்தானம், பாண்டிக் கொடுமுடி, பழமை, புள்ளமங்கை, மயிலாடுதுறை, மாந்துறை, வலஞ்சுழி, குடந்தை முதலிய பல ஊர்களைத் தேவாரம் காவிரியாற்றுடன் இணைத்துப் பாடுகிறது.

தொண்டரடிப் பொடியாழ்வார் பொன்னியின் நடுவே புயல் வண்ணன் கிடந்த திருக்கோலத்தைக் காட்டும்போது, 'கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டுப், பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கத்தில்' என்று காவிரியாற்றின் புகழையும் சேர்த்தே பாடுகிறார். தேசிய மகாகவி பாரதியார், 'காவிரி தென்பெண்ணை பாலாறு எனத் தமிழ்நாட்டு ஆறுகளை அடுக்கிக் கூறும்போது காவிரியை முதற் கண் வைத்துப் போற்றுகிறார். நாட்டுப்புறப் பாடல்களிலும், தாலாட்டுப் பாடல்களிலும் காவிரி ஆறு பாடப்பட்டுள்ளது.

காவிரி ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையில் குடகு நாட்டில் சைய மலையில் தோற்றம் கண்டுள்ளது. இவ்விடம் கடல் மட்டத்திலிருந்து 1320 மீட்டர் உயரத்திலுள்ளது. மெர்க்காரா எனப்படும் அப்பகுதி கருநாடக மாநிலத்தில் உள்ளது. காவிரி ஊற்றெடுக்கும் பகுதியில் ஒன்பது மீட்டர் அளவில் சதுரக் குளம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக்குளத்தில் 75 செ.மீ. ஆழத்திற்கு நீர் எப்போதும் நிரம்பியிருக்கும். எஞ்சிய நீர் மடை வழியே வெளியேறும். இந்த இடத்திற்குத் தான் தலைக் காவிரி என்று பெயர்.

தலைக் காவிரி இயற்கை வளமுடையது. காவிரியாறு 768 கி.மீ. நீளமுள்ளது. இப்பேரியாற்றின் பிறப்பிடம் கருநாடக மாநிலமாயினும், அம்மாநிலத்தில் 280 கி.மீ. ஓடிப்பாய்ந்தாலும் எஞ்சிய தூரத்தைத் தமிழ்நாட்டில் கோவை, சேலம், திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் ஓடிக் கடலில் கலக்கிறது.

வற்றாத நீர்சுரக்கும் காவிரியின் தோற்றப் பகுதியைப் புண்ணிய தீர்த்தமாக மக்கள் போற்றி வருகின்றனர். இயற்கைச் செல்வம் கொழிக்கும் காடு மலைகளில் ஓடி வந்து ஆறு என்னும் வடிவத்தைக் காவிரி பெறுமிடம் 'பாக மண்டலம்' என்று அழைக்கப்படுகிறது.

காவிரியாற்றுப் படுகைப்பகுதி 94,400 சதுரக் கி.மீ. பாரத நாட்டின் ஆற்றுப் படுகை வரிசையில் பரப்பளவில் எட்டாம் இடத்தைப் பெறுகிறது. கருநாடக மாநிலத்தில் காவிரி பாயும்போது 'திப்பூர்' என்ற இடத்தில் 'ஏமாவதி' என்ற சிற்றாறும் 'பைரபூர்' என்ற இடத்தின் 'இலட்சுமண தீர்த்தம்' என்ற சிற்றாறும் இணைகின்றன. மூன்று மடங்கு நீர் வெள்ளம் நிரம்பி வரும் காவிரியைத் தடுத்து நிறுத்துவது 'கிருட்டிண ராசசாகரம்' என்ற நீர்தேக்கமாகும். அது 'கண்ணம்பாடி' என்ற இடத்தில் அமைந்தமையால் 'கண்ணம்பாடி' அணை எனவும் கூறப்படும்.

கண்ணம்பாடியை அடுத்த 'கௌதம ஆசிரமம்' என்ற இடத்தில் காவிரி இரண்டாகப் பிரிகிறது. அது 12.8 கி.மீ. தூரம் இரு பிரிவுகளாக ஓடி ஒன்று சேருகிறது. நடுவிலுள்ள திட்டுக்கு 'அரங்கம்' என்றும் 'ஆற்றிடைக்குறை' என்றும், 'துருத்தி' என்றும் பெயர் கூறுவதுண்டு.

காவிரிப் போக்கில் அமைந்த முதல் அரங்கமான இங்குதான் வரலாற்றுப்புகழ் பெற்ற 'சீரங்கப் பட்டணம்' உள்ளது. இதனை 'ஆதிரங்கம்' என்றும் அழைப்பர்.

பாக மண்டலத்திலிருந்து கிழக்குநோக்கி வரும் காவிரியாறு 'சித்திரபுரம்', 'பிரேசப்பேட்டை' ஆகிய ஊர்களைக் கடந்து செல்கிறது. பின் வரலாற்றுப் புகழ்மிக்க 'தழைக்காடு' என்னும் ஊரைக் கடந்து பாய்ந்து 'சிவசமுத்திரம்' வருகின்றது. இங்குக் காவிரி இரு பிரிவுகளாகப் பிரிகிறது. இரண்டு அருவிகளாய் 96 மீட்டர் உயரத்திலிருந்து விழுகிறது. இதுவே 'சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சி' ஆகும். காவிரியின் போக்கில் இயற்கையழகு பொலிகின்ற இடம் இந்நீர் வீழ்ச்சி அமைந்துள்ள இடமாகும். 'இதைப் போன்ற அழகுமிக்க அருவியை உலகில் வேறெங்கும் கண்டதில்லை' என்று 'புக்கனன்' என்ற மேனாட்டுப் பயணி பாராட்டுகிறார். இந்நீர் வீழ்ச்சியின் துணையால் 67,000 குதிரை வேக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் 'கோலார்' தங்கச் சுரங்கமும் பெங்களூர் நகரத் தொழிற்சாலைகளும் பயன்பெறுகின்றன.

சிவசமுத்திரத்தைத் தாண்டிய பின்னர்க் காவிரியின் போக்கில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. இரண்டு மாநிங்களுக்கும் எல்லையாக அமைகின்ற இவ்வாறு இரண்டு மலைச் சரிவுகளுக்கிடையே 3.6மீட்டர் அகலத்தில் பாய்ந்தோடுகிறது. இந்த அகலத்தை ஓர் ஆடு தாண்டுமாதலால் இதனை 'மேகத்தாட்டு' காவிரி (ஆடுதாண்டும் காவிரி) என்று கூறுகின்றனர்.

மைசூர் எல்லையை விட்டுக் கொங்கு நாடு வந்தடையும் காவிரி, 15 மீட்டர் கீழே பாய்ந்து விழுந்து 1.6 கி.மீ. தூரம் ஓடி வருகின்றது. பிறகு கிழக்கு நோக்கித் திரும்புகிறது. அதன்பின் தென் கிழக்கே திரும்பி 'ஒகேனக்கல்' என்ற இடத்தில் அருவியாக வீழ்கின்றது. 'ஒகெ' என்ற கன்னடச் சொல்லுக்குப் புகை

யென்பது பொருளாகும். புகை விடும்-கல் என்ற உருவகப் பெயர் உடையதாக இவ்வருவி விளங்குகின்றது. அருவி கற்பாறையில் மோதும்போது நீர்த்துளிகள் புகை போல் மேலே செல்கின்றன. அதனால், இப்பெயர் பெற்றது. பழங்காலத்தில் இவ்விடத்தில் ஒரு 'குண்டம்' இருந்ததாகவும் அதில் விழுந்த ஆறு மீண்டும் வெளிப்படாமையால் அதனைக் கண்ட சோழ மன்னன் ஒருவன் தன்னுயிரை வழங்கிக் காவிரியை வெளிப்படுத்தினான் எனவும் கதை கூறப்படுகின்றது. சோழ நாட்டிற்குக் காவிரியின் போக்கு மாறியதற்குரிய கதையிது. அதன்பின் 'சனத் குமார நதி' எனப்படும் சிற்றாறு இணைகிறது. பின்னர்க் காவிரி மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குள் நுழைகிறது. தென்மேற்காகத் திசை திரும்பும் நிலை இங்குதான் முடிவடைகின்றது.

மேட்டூர்த் தேக்கத்திலிருந்து விடுபட்ட காவிரி திருச்செங்கோடு, நாமக்கல், பவானி, ஈரோடு ஆகிய ஊர்களின் வழியாக ஓடித் தென்கிழக்காகச் செல்கிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கிழக்கு நோக்கிப் பாய்கிறது.

ஈரோட்டிற்கு அருகே கொரங்கன் பள்ளம், காளிங்கராயன், புகலூர் கால்வாய்களுடன் ஊஞ்சலூருக்கருகே கலக்கிறது. ஈரோட்டிற்கு வரும்வரை கற்பாறைகள் நிறைந்து காணப்படுவதால் நீரின் வேகம் அதிகம். ஈரோட்டைத் தாண்டிய பின் மணல் பாங்கான பகுதியில் மெதுவாகச் செல்கிறது ஆறு.

திருச்சி மாவட்டத்தில் காவிரி நுழைந்ததும் 'கரூர்' அருகே 'அமராவதி' என்னும் ஆறு இணைகிறது. காவிரியின் அகலம் விரிவாகிறது. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 14.4 கி.மீ. தொலைவில் (திருப்பராய்த்துறை) முக்கொம்பு என்னும் இடத்தில் 'கொள்ளிடம்' என்னும் கிளையாறு பிரிகிறது. பிரிவில்லாத ஆற்றுப் பகுதியை 'அகண்ட காவிரி' என்று அழைக்கின்றனர். இங்கு ஆறு 1.6 கி.மீ. அகலம் உள்ளமையால் 'அகண்ட காவிரி' எனப்படுகிறது. கொள்ளிடத்தின் குறுக்கே மேலணை கட்டப்பட்டுள்ளது. தென்கிளையாக ஓடிவரும் காவிரி 27.2. கி.மீ. தொலைவில் ஓடிவந்த பின் வடகிளையாக ஓடிவரும் கொள்ளிடத்தை நெருங்குகிறது. இவ்விரண்டையும் இணைப்பது உள்ளாறு என்னும் வாய்க்காலாகும். இங்கு அமைந்த ஆற்றிடைக்குறை வைணவப் பெரும் பதியாகிய 'திருவரங்கமாகும்'. சிவப்பதியான திருவானைக்காவும் இதனுள் அடங்கும்.

உள்ளாறு காவிரியையும் கொள்ளிடத்தையும் இணைக்கும் இடத்தில் அமைந்ததே வரலாற்றுப் புகழ் பெற்ற 'கல்லணை' யாகும். கல்லணையைக் கடந்தபின் காவிரி பற்பல சிற்றாறுகளாகப் பிரிகிறது. இவற்றுள் ஒன்று 'வெண்ணாறு'. தஞ்சை மாவட்டத்தில் நீர் வளத்திற்குத் துணைபுரிவது இவ்வாறு. 'குடமுருட்டி', வெட்டாறு, அரிசிலாறு, வீரசோழனாறு, திருமலை வடவாறு, பாமணியாறு, திருமலைராயனாறு முதலிய பல்வேறு சிற்றாறுகளாகக் காவிரி பிரிகின்றது. சோழநாட்டில் காவிரியாறு சமவெளியில் பாய்வதால் உருவம் மட்டும் மாறி வருகிறது. திருவையாறு, கும்பகோணம் வழியாக மயிலாடுதுறை வரும்போது காவிரியின் உருவம் 20 மீட்டர் அளவில் சுருங்கியோடுகிறது. 'தரங்கம்பாடி'க்கு 16 கி.மீ. வடக்கே 'காவிரிப்பூம்பட்டின'த்தில் வங்கக் கடலில் கலக்கிறது காவிரி. பி.தெ.

## காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்

கந்தரத்தனார் என்னும் இயற்பெயரையுடைய சங்கப் புலவர் தம் ஊரோடு சேர்த்துக் காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் என்று வழங்கப்பெற்றார். பண்டைக் காலத்துப் புலவர்கள் ஊரொடு சேர்ந்து வழங்கப்பெற்றமையை ஆலங்குடி வங்கனார், ஆவூர் மூலங்கிழார் முதலிய பெயர்களால் அறியலாம். காவிரிப் பூம்பட்டினத்தில் கந்தரத்தனாரேயன்றிக் காரிக்கண்ணனார், செங்கண்ணனார், சேந்தங்கண்ணனார்,பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆகிய புலவர்கள் சங்க காலத்தே இருந்தனர். அடையின்றிக் கந்தரத்தனார் எனும் பெயரொடு வாழ்ந்த சங்கப்புலவர் பாடியனவாக நற்றிணையில் மூன்று பாக்கள் (116, 146, 238) காணப்பெறுகின்றன. உரோடகத்துக் கந்தரத்தனார் என்னும் வேறொரு சங்கப் புலவர் பாடியனவாக எட்டுத் தொகையுள் ஐந்து பாடல்கள் உள்ளன (குறுந்தொகை 1, நற்றிணை 1, அகநானூறு 3) காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் பாடியதாகக் கிடைப்பது குறுந்தொகை 342-ஆம் பாடல் ஒன்றேயாம். தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லி வரைவு கடாயது என்னும் துறையில் இவர் அப்பாடலை அமைத்துள்ளார். நயந்தோரின் துன்பத்தைத் தீர்க்கும் பண்பு தலைவன்பால் இல்லாதது கண்டு அவனை நோக்கிக், 'குன்ற நாட இது தகுமோ எனத் தோழி வினவுகிறாள்.

காவல் காக்கும் கானவனின் சோர்வறிந்து கடுவன் பலாப்பழத்தைக் கவர்ந்து சென்றதறிந்து பின் அவன் காவல் மரந்தோறும் வலையிட்டுக் காவல் காக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது. கானவனது சோர்வறிந்து குரங்கு தொட்ட பழம் அவன் வலை கட்டிய பின்னர்ப் பெறுதற்கு அரிதாதல் போலக் காப்போரில்லாத நிலையில் தலைவன் கண்டு அளவளாவிய தலைவி

இற்செறிக்கப்பட்ட பின் அவனால் அணுகுதற்கு அரியளாவாள் என்னுங் கருத்தை உள்ளுறையாக இப்பாடல் உணர்த்தும். இரா.சா.

**காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்** சங்க காலப் புலவர். புலவர்கள் பெயரோடு அவர்தம் ஊர்ப் பெயரினையும் சேர்த்து வழங்குதல் சங்க கால மரபாகும். இப்புலவர் பெயர் அவ்வாறமைந்ததாகும். இவர், 'மழைமருள் பஃறோல் மாவண் சோழர்/கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை' (அகம். 123) என்று காவிரி கடலொடு கலக்கும் காவிரிப்பூம்பட்டினத்துக் காட்சியினை விளக்கியுள்ளார். காரி என்னும் சொல்லிற்குக் காரிக்குருவி என்னும் பொருள் கூறப்படுவது கொண்டு, காரிக் குருவியின் கண்களைப் போன்ற விழிகளைப் பெற்றிருந்தமையால் இவர் காரிக்கண்ணனார் என்று பெயர் பெற்றார் எனச் சிலர் கூறுவர். இவர் வாணிக மரபினர் என்பது தொல்காப்பியப் பேராசிரியர் உரையால் அறியப்படுகிறது.

தம் பாடல்களில், பால்நிறப் பனைக் கொடியோனாகிய பலதேவனையும், நீலவண்ணத் திருமாலையும் (புறம். 58) சிறப்பித்துப் பாடியிருப்பதால் இப்புலவர் இறை ஈடுபாடுடையவர் என்பதும், திருமால் வழிபாட்டினர் என்பதும் தெளிவாகின்றன. இவர் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் பகைமறந்து ஒருங்கே அமர்ந்திருந்த காட்சியினைக் கண்டு மகிழ்ந்து பாராட்டி, 'இன்றே போல்கநும் புணர்ச்சி.வென்று வென்று அடுகளத்து உயர்கநும் வேலே' என்று வாழ்த்துவது, தமிழக வேந்தர்களின் ஒற்றுமையில் இவர்க்கிருந்த அளப்பரிய வேட்கையைக் காட்டுகிறது. பேரரசர்களையேயன்றி ஆய்அண்டிரனையும், கோசர், வடுகர் ஆகிய குடியினரையும் இவர் புகழ்ந்துரைத்துள்ளார்.

இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கையில் வேறுபாடு காணப்படுகிறது. உ.வே. சாமிநாதையர் இவருடைய பாடல்கள் 9 என்று குறிப்பிட்டுள்ளார். (அகம். 107, 123, புறம். 57, 58, 169, 171, 353, குறு 297, திருவள்ளுவமாலை 23). அகநானூறு 235, நற்றிணை 237 ஆகிய பாடல்களின் ஆசிரியர் பெயர்களால் அவ்வேறுபாடு அமைந்துள்ளது.

அகனைந்திணைகளுள் இவர் பாலையையும், குறிஞ்சியையும் பாடியுள்ளார். கோவூர் கிழார், கருவூர்க் கந்தப்பிள்ளை, ஆவூர் மூலங்கிழார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், மருதனிள நாகனார், நக்கீரர் போன்ற புலவர்கள் பாடிய புரவலர்களை இவரும் பாடியிருப்பதால், அவர்களுடைய காலத்தவராக இவரையும் கூறலாம். இப்புலவரின் பெயர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்றும், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணன் என்றும், காரிக்கண்ணனார் என்றும் சில ஏடுகளில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இவர் பெயரில் அமைந்த பாடல் ஒன்று திருவள்ளுவமாலையில் இடம்பெற்றுள்ளது. டி.ஆர்.வ.

**காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்** ஒரு சங்க காலப் புலவர். குறுந்தொகை 347-ஆம் பாடலைப் பாடிய காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தங்கண்ணனாரையும் காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனாரையும் ஒருவராகக் கருதிச் செங்கண்ணனார் பாடியவை மொத்தம் 4 பாடல்கள் என பி. நாராயணசாமி ஐயர் கூறுவர். ஆனால், உ.வே.சாமிநாதையர் பதிப்பும் மர்ரே பதிப்பும் சேந்தங்கண்ணனாரைச் செங்கண்ணனாரின் வேறாகக் கருதும். இப்பதிப்புகளின் கருத்துப்படி இவர் பாடியவை அகநானூற்றில் இரண்டும் (103, 271) நற்றிணையில் ஒன்றும் (389) ஆக மூன்று பாக்களேயாம்.

சேவற்கோழி தன் பெடையுடன் கிளைத்த புழுதியிடையே பொன் மிளிரும் நாடன் தலைவன் என அவன் செல்வ வளம் குறிக்கப்பெறும் (நற்.389). இப்பாடலில் வேங்கைமரம் பூத்ததை 'வேங்கையும் புலி ஈன்றன' என இப்புலவர் நயம்பட மொழிந்துள்ளார். இவர்தம் அகநானூற்றுப் பாடல் இரண்டும் பாலைத்திணை குறித்தன. வல்லூறு தாக்குவதற்கு அஞ்சிய குறும்பூழ்ப் பறவை பாதுகாப்புக் கருதிப் புதரினை விடுத்து ஓடி, ஆறலைப்போர் தங்கும் சிற்றூரில் உறைவோர் விட்டுச்சென்ற மனையின் இறப்பு நிழலில் தங்கிப் பெருமூச்செறியும் என்று பாலை வழியை இப்புலவர் சித்திரிப்பர். 'கதிர்த்த சென்னி நுணங்கு செந்நாவின் விதிர்த்த போலும் அந்நுண் பல்பொறிக் காமர் சேவல்' எனக் குறும்பூழ்ப் பறவை அழகுறப் புனையப்பட்டுள்ளது (அகம். 103).

இவர் பிறிதொரு அகப்பாடலில் (271) 'களிமலி கள்ளில் நற்றேர் அவியன்' என அவியனைப் பற்றிய செய்தியைப் புலப்படுத்தியுள்ளார். தலைவியின் தோளணியாகிய தொடி நெகிழ்ந்தால், தலைவன் பிரிந்துறையும் நாட்டில் அவள் உற்ற நோய்க்கு மருந்துமுண்டோ எனக் கேட்கும் தோழி கூற்றில், (அகம். 271). பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை தன்னோய்க்குத் தானே மருந்து என்னும் குறளின் (குறள். 1102) கருத்துச் செறிவாக அமைந்துள்ளது. இரா.சா.

**காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்** சங்க காலப் புலவருள் ஒருவர். இவர்

தம் ஒரேபாடல் குறுந்தொகை 347-ஆம் பாடலாக அமைந்துள்ளது. காவிரிப்பூம்பட்டினம் இவருடைய ஊர். சேந்தன் கண்ணன் என்னும் பெயரை நோக்குங்கால் இவர் சேந்தனுக்கு மகன் ஆவார் என்பதும், இவர் இயற்பெயர் கண்ணன் என்பதும் புலனாகின்றன. இவர்தம் குறுந்தொகைப் பாடல் பாலைத்திணையில் தலைவன் கூற்றாக அமைந்துள்ளது. பொருள் தேடும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லுமாறு தூண்டிய நெஞ்சினை விளித்துத் தலைவன், 'நெஞ்சமே நம் தலைவியும் நாம் செல்லும் பாலை நிலத்தின் நீண்ட வழியிடத்தே நம்மோடு வருவாளாயின் நினது கருத்து நன்றேயாம்' என்று கூறுகின்றான். இவர், வாகைப்பூ மயிலின் உச்சிக் கொண்டையைப் போல் தோன்றும் மாட்சியது என்று அழகுறக் குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் இளவாகையைக் குமரிவாகை என்கிறார். டி.ஆர்.வ.

**காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்**: காவிரிப்பூம்பட்டினத்தில் பொன் வாணிகம் செய்த ஒரு வணிகரின் மகனான இவர் பெயர் பூதன் என்பதாகும். 'ந' எனும் சிறப்படையைப் பெயர் முன் பெற்று நப்பூதனார் என்றுவழங்கப் பெற்றார். நப்பெண்ணனார், நச்செள்ளையார் என்ற பிற சங்கப் புலவர் பெயர்களையும் ஒப்பு நோக்குக.

பத்துப்பாட்டில் ஐந்தாவதான முல்லைப்பாட்டின் ஆசிரியர் இவரே. இவர் பாடியதாக எட்டுத்தொகையில் ஒரு பாடல் காணப்படுகிறது. நற்றிணை 29-ஆம் பாடல் ஆசிரியராய பூதனாரும் இவரும் ஒருவராகலாம் என உ.வே.சாமிநாதையர் கருதுவர். முதல், கரு, உரிப்பொருள்கள் சிறப்புற அமைய இவர் முல்லைப்பாட்டினை இயற்றியுள்ளார்.

தலைவன் மீள்வதாகக் குறித்த கார் காலத்து மாலைப்பொழுதில் பெருமுதுபெண்டிர் நெல்லும் முல்லையும் தூவி விரிச்சி (நற்சொல்) கேட்டு நின்றபோது, தாய்ப் பசுவின் வருகையை எதிர்நோக்கி வருந்தி அலமரும் கன்றினை நோக்கி ஆயமகள், 'நின் தாயர் விரைந்து வருகுவர்' என மொழிந்தது நல்வாய்ப்பானதைத் தலைவியிடம் கூறி ஆற்றுவித்தனர். பாசறைப் பள்ளியில் தலைவன், வேல் பாய்ந்து புண்பட்டுப் பிடிக்கணத்தை மறந்த களிறுகளையும், யானைகளின் கைகளை வெட்டி வீழ்த்திச் செஞ்சோற்றுக் கடன் கழித்த மறவர்களையும், அம்பு பட்டுச் செவி சாய்த்துப் புல்லுண்ணாது வருந்தும் குதிரைகளையும் எண்ணித் துயிலாது கிடந்தான். தலைவி அரண்மனையில் தனிமையுடன் நீடுநினைந்து தேற்றியும், ஒடுவளை திருத்தியும், மையல்கொண்டு மெய்யென உயிர்த்தும், அம்பு தைத்த மயில்போல நடுக்கமுற்று அணிகலம் நெகிழத் துயில் பெறாதும் கவன்றனள். இவ்வாறு தலைவன் தலைவியின் நிலைகளை இப்புலவர் படம் பிடித்துக் காட்டுவர்.

மாவலி வார்த்த நீர் தன் கையில் பட்ட அளவில் வானுற ஓங்கி எழுந்த திருமால் போல, மேகங்கள் கடல் நீரைப் பருகி உலகினை வளைத்து மேலெழுந்தன என்று முல்லைத்திணைக்கேற்பத் திருமாலை உவமைப்படுத்துவர். காடு செழித்த செந்நிலத்தே பல்வகை மலர்கள் பூத்திருத்தலைச் 'செறியிலைக் காயா அஞ்சனம் மலர, முறியிணர்க் கொன்றை நன்பொன் கால, கோடற் குவிமுகை அங்கை அவிழ, தோடார் தோன்றி குருதி கூப்ப' எனப் புனைந்திருத்தல் நயம் வாய்ந்தது. இரா.சா.

**காவிரிப்பூம்பட்டினம்**: காவிரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் சோழர்களின் தலை நகராக



காவிரிப்பூம்பட்டினம் அகழாய்வு

வும் சிறந்த துறைமுகப்பட்டினமாகவும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விளங்கிய பேரூர் காவிரிப்பூம்பட்டினமாகும். உள்நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் பல பண்டங்கள் கொணரப் பெற்றுப் புகார்த் துறைமுகத்தில் மலைபோல் குவிந்திருந்த தோற்றத்தினைப் பட்டினப்பாலை (185-193) சிறப்பாகக் கூறும். கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் பௌத்த அறிஞன் புத்த தத்தன் பாலி மொழியில் எழுதிய 'அபிதம்மாவதாரம்' எனும் நூலின் இறுதிப் பகுதியில் புகாரிலுள்ள அரண்மனைகளையும் பூஞ் சோலைகளையும் செல்வ வளம் நிறைந்த வணிகர்களையும் குறிப்பிட்டிருப்பது ஈண்டுச் சிந்திக்கத்தகும்.

**ஊரின் பல பெயர்கள்**: காவிரி கடலில் புகும் பட்டினம் என்பது 'காவிரிப்புகும்பட்டினம்' என்று அமைந்து, அது மருவிக் காவிரிப்பூம்பட்டினம் ஆயிற்று என்பர். இருமருங்கும் பூங்காக்கள் விரிந்து பரந்து நிற்குங்காவிரி பூப்பொலிவுடன் கடலொடு கலத்தலால் காவிரிப்பூம்பட்டினம் என ஆயிற்று என்றுங் கூறுவர். காவிரியாகிய பொன்னி கடலுடன் சங்கமமாகுந் துறையாதலின் இதனைப் 'பொன்னித் துறை' என்றும், 'சங்கமுகத்துறை' என்றும், வழங்கியுள்ளனர். அன்றியும் இப்பொருளையொட்டியே புகார்ப்பட்டினம்' என்றும், 'புகார்' என்றும், 'பூம்புகார்' என்றும் மொழிவர். 'தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும், மலியோதத்து ஒலிகூடல்' எனப் பட்டினப்பாலை மொழிவது கொண்டு, நச்சினார்க்கினியர், 'தெளிந்த கடலில் திரையோடே காவிரி தலைகலக்கும் ஓதத்தினால் ஒலிமலிந்த புகார்முகம்' என உரைவரைவதால் 'புகார்முகம்' என்பதும் இதன் பெயர் எனலாம். புகார் எனும் சொல்லாட்சியைக் கொண்டு, 'இந்தப் பேரூர் மக்கள் வளம் நிறைந்தவர்களாய் விளங்குதலின் எந்தப் பொருளையும் நாடி வேற்றூர் புகார்' என்றும், 'இவ்வூர்க் காவல் மிகுதி கண்டு மாற்றார் அஞ்சியவராய் இங்கே புகார்' என்றும் சொல்நயங் கூறிக் காட்டுவர் புலமைச் சான்றோர். பொதுவாகத் தமிழ்நாட்டுக் கடற்கரையில் காவிரிப்பூம் பட்டினம் போன்ற துறைமுகங்கள் பலவாக இருந்தும், பட்டினம் என்றாலே முற்காலத்தில் இந்தத் துறைமுகநகரையே குறித்தனர். இப்பொருளை மனத்துட் கொண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனார் 'பட்டினப்பாலை' என்னும் நூலினை எழுதியுள்ளமை காண்க. காவிரிப்பூம்பட்டினத்தின் மேற்கே அமைந்த காவிரித்துறையைக் 'கழாஅர் முன்றுறை' (அகநா. 376), 'கழாஅர்ப் பெருந்துறை' (அகநா. 222) என்றனர். அக்காலத்தில் புனலாட்டிற்குரிய இப்பகுதி, இக்காலத்தில் 'கழுதகாரன்துறை' என மரூஉப் பெயருடன் வழங்கப்படுகிறது.

நாவலந் தீவின் காவல் தெய்வமாகிய சம்பு, முற்காலத்தில் அரக்கர்களால் இந்நிலத்திற்குத் தீங்கு நேராவண்ணம் தென்திசை போந்து, இவ்வூரில் தவஞ் செய்தமையால் இதற்குச் சம்பாபதி என்று பெயருண்டாயிற்று என்பர்.

காந்தன் எனும் மன்னன் மகன் ககந்தன் என்பவன், சம்பாபதி எனும் தெய்வத்தின் சொற்படி இந் நகரை அரசாண்டான்; அவனால் பாதுகாக்கப்பட்ட நகராதலின் இது 'காகந்தி' என்று அழைக்கப்பட்டது என்பது மணிமேகலை நூல் தருஞ் செய்தி.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்நகர் தமிழ்நாட்டுக் கிழக்குக் கரையில் மிகச் சிறந்த துறைமுகமாக விளங்கியதை அலெக்சாந்திரியா நகர வணிகர் ஒருவரின் பயணக் குறிப்பாகிய 'பெரிப்புளூசு, (Periplus) என்ற நூலிலிருந்தும், அதே நகர அறிஞர் தாலமியின் பூகோளக் குறிப்புகளிலிருந்தும் அறியலாம். பெரிப்புளூசு எனும் நூல், பூம்புகாரைச் சபரிசு' (Chabaris) என்றும், தாலமி எனும் யவன ஆசிரியர் அதனைக் 'கமர' (Kamara) என்றுங் குறித்துள்ளமை நினைவுகூரத்தக்கது. காஞ்சிநகருக்கு கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வந்த சீனப் பயணி யுவான் சுவாங்கு பூம்புகாரைச் 'சரித்ரபுரம்' என்கிறார்; பாலி மொழியில் எழுதப்பெற்ற பௌத்த நூல்களுள் சில, அதனைக் 'கவீரப்பட்டினம்' எனக் குறிப்பிடுகின்றன.

**நகர அமைப்பு**: காவிரிப்பூம்பட்டினம், தொன்மைக் காலத்தில் சங்கமுகத் துறையையொட்டிய உள் நிலப்பரப்பில் காவிரியின் தெற்கும் வடக்குமாக அமைந்த நிலப்பகுதியைக் குறித்தது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் இந்நகர், கடல் கொந்தளிப்பாலும் பெருவெள்ளத்தாலும் பெருஞ் சிதைவிற்குள்ளாயிற்று; இதனைக் கடற்கோள் என்றே குறிப்பர். மீண்டும் இந்நகரம், வளத்துடனும் புதுப்பொலிவுடனும் தலைநிமிர்ந்து பெருமை எய்தியது என்பர், எனினும் அதன் கீழெல்லையிலே அமைந்திருந்த பல கட்டடங்களும் சோலைகளும் கடலடியில் அமிழ்ந்துபோயின என்பது மறத்தற்கில்லை.

புராணநோக்கிலும் இலக்கியப் பார்வையிலும் வரலாற்று அடிப்படையிலும் காவிரிப்பூம்பட்டினம் பற்றிப் பல செய்திகள் உண்டு; ஓரளவு தொகுத்துச் சில செய்திகளைக் காணலாம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை, புறநானூறு, அகநானூறு, நற்றிணை ஆகிய இலக்கியங்கள் காவிரிப்பூம்பட்டினத்தைக் குறித்துள்ளன. அந்நகரின் நீள அகலங்களோ பரப்போ தெளிவாகக் கூறுதற்கில்லை, எனினும், சிலப்பதிகாரத்தில், 'காதம்

நான்கும் கடுங்குரல் எடுப்பிப், பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்' (5-ஆம் காதை) என வருவது கொண்டு அது நாற்காத வட்டகை என்பர். சிலர் பன்னிரண்டு சதுர மைல் பரப்பு என்றும், முப்பது சதுர மைல் பரப்பு என்றும், நாற்பது சதுர மைல் பரப்பு என்றும் பலவிதமாகக் கூறுவர். இக்காலத்தில் 'கருவேந்தநாதபுரம், கடாரங்கொண்டான் என வழங்கும் ஊர்கள் இந்நகரத்தின் மேற்புறவெல்லையாகவும், திருக்கடவூர் தெற்கெல்லையாகவும், கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை) வடக்கெல்லையாகவும், கடல் கிழக்கெல்லையாகவும் அமைய, இந்நாற் பேரெல்லைக்குட்பட்ட சிற்றூர்கள் அனைத்தையும் தன் அங்கமாகக கொண்ட நிலப்பகுதியே முற்காலத்தில் காவிரிப்பூம்பட்டினமென ஒரு பெருநகராக விளங்கியது' என்று கல்வெட்டறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் கருதுகிறார். டாக்டர் உ.வே. சாமிநாதையர் சிலப்பதிகாரம் மனையறம்படுத்த காதைத் தொடக்கத்தில் இருக்கவேண்டிய அடிகள் எனக் கருதப்பெறும் செய்யுட் பகுதியை அடிக் குறிப்பாகத் தந்துள்ளார்; அதனைக் காண்கையில் காவிரிப்பூம்பட்டினத்தே அறுபதினாயிரங் குடும்பங்கள் (சுமார் முந்நூறாயிரம் மக்கள்) வாழ்ந்திருக்கவேண்டுமெனச் சிலர் கருதுவர்.

பொதுவாகக் கடற்கரையூர்களைப் பட்டினம் என்றும் பாக்கம் என்றுங் கூறுவர். ஆனால், காவிரிப்பூம்பட்டினத்தின் பெரும்பகுதிகளாகிய புறநகர், அகநகர் ஆகிய இரண்டற்கும் முறையே 'மருவூர்ப்பாக்கம்', 'பட்டினப்பாக்கம்' என்ற பெயர்களையிட்டுள்ளனர். மணல் பரந்த கடற்கரைப் பக்கத்தினை 'நெய்தலங்கானல்' என்று அழைத்தனர். அந்த நெய்தலங் கானலுக்கு மேற்கே மருவூர்ப்பாக்கம் இருந்தது; அதற்கு மேற்கேயமைந்த இடைநகராகிய 'நாளங்காடி' யென்பது மரச்சோலையுடன் கூடிய நிலப்பகுதியாகும். அதற்கு மேற்கே பட்டினப்பாக்கம் அமைந்திருந்தது. துறைமுகமும் பண்டசாலையும் மருவூர்ப்பாக்கத்திற்குத் தெற்கே காவிரியாற்றின் வடகரையில் இருந்தன. இவை சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றால் அறியலாகும் செய்திகளாகும்.

சங்கமுகத் துறையில் இயற்கையாக அமைந்த துறைமுகம் வணிக வளத்திற்குப் பேருதவியாய் இருந்தது.அங்கே மரக்கலங்களை நங்கூரமிட்டு நிறுத்தியிருந்தனர் என்பது பற்றியும், துறைமுகத்தருகே சுங்கம் (வரி) பெற்ற பொருள்களுக்குச் சோழருடைய புலியிலச்சினை பொறிக்கப்பட்டமை பற்றியும் இலக்கியக் குறிப்புகளால் அறியலாம். கடற்கரையில் இரவில் மரக்கலங்களுக்கு உதவியாகக் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டிருந்தது.

**நெய்தலங்கானல்**: கடற்கரையைச் சார்ந்த இப் பகுதியில் சோமகுண்டம் சூரியகுண்டம் எனும் இரு குளங்களும் காமவேள் கோட்டமும் இருந்தன. இவ்விரு குளங்களையும் 'இரு காமத்து இணை ஏரி' என்று பட்டினப்பாலை குறிக்கிறது. இந்திர விழாவின் கடைசி நாளிலே நகர மக்கள் இங்கு ஆர்வத்துடன் வந்து கடலில் நீராடிப் பொழுதை இன்பமாகக் கழிப்பர்; கோவலனும் மாதவியும் கடலாட்டுக் காண வந்து கலையின்பத்திற்காகக் கானல்வரி பாடிய இடம் இதுவேயென்பர்.

**மருவூர்ப்பாக்கம்**: புறநகராகிய இங்கே கப்பல் வாயிலாக வணிகம் புரியும் வெளிநாட்டு வணிகர்கள் தம்முள் வேறுபாடின்றித் தங்கி வாழ்ந்த மாளிகைகள் முதலிய இருப்பிடங்கள் இருந்தன. வண்ணம், சுண்ணம், சந்தனம், நறும்புகைக்குரிய மணப்பொருள்கள் நறுமலர்கள் முதலியவற்றை விற்பவர்கள் தெருக்கள். இருந்தன. பெருங்குடி வணிகர்கள் பொன்னையும் மணிகளையும் அணிகலன்களையும் விற்பனைக்கெனக் கொணர்ந்து வைத்திருந்தனர். சாலியர் வீதியில் பட்டினாலும் பருத்தியாலும் எலி மயிராலும் சித்திர ஆடைகள் நெய்து விற்றனர். கூலக்கடைத்தெருவில் எண்வகை தானியங்களைக் குவித்து விற்றனர். பிட்டு. அப்பம் முதலிய சிற்றுண்டி விற்போர்களும், கள், மீன் உப்பு, இறைச்சி விற்பவர்களும் காணப்பட்டனர். வெண்கலத் தொழில் புரியுங் கன்னார், மரவேலை செய்யும் தச்சர், இரும்புவேலை செய்யுங் கொல்லர், ஓவியர், சிற்பியர், பொற்கொல்லர், மணிகளிழைப்போர், தையற்காரர்கள், நெட்டி வேலைக்காரர்கள். பாணர்கள் முதலியவர்கள் வாழுமிடங்களும் அங்கே இருந்தன. பொதுவாக, வணிகமும் தொழிலும் பெருமளவில் நடைபெற்றனவெனினும்சீமான்களும் பெருங்குடி மக்களும் மருவூர்ப்பாக்கத்தில் வாழுமிடங்களை அமைத்துக்கொள்ளவில்லையெனலாம்.

**பட்டினப்பாக்கம்**: அகநகராகிய இங்கே அரசர் வீதியும் வணிகர் வீதியும் ஆவண வீதியும் பொலிவுடன் விளங்கின. அந்தணர்களும் உழுவித்துண்ணும் வேளாளர்களும், மருத்துவ வல்லோர்களும், சோதிடர்களும், இசைக்கருவிகள் வாசிப்போரும், ஆடற் கூத்தியரும், பூவிலை மடந்தையரும், நகைச்சுவைக் கலைஞர்களும் வாழுந் தெருக்கள் இருந்தன. முத்தினைக் கோப்பவர், சங்குவளையல் செய்வோர் வாழுந் தெருக்கள் இருந்தன. குதிரைகளைப் பழக்குபவர், யானைப் பாகர், தேர்த் தொழிலாளர், போர் வீரர் வாழுமிடங்களும் இருந்தன. உயர்ந்த மதிற் சுவருடைய கோட்டைக்குள் புகார் நகரம் இருந்தது என்பதனை, 'மகர நெற்றி வான்தோய் புரிசைச்

சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லில், புகாஅர்நன் னாடு' (அகம். 181) எனப் பரணர் கூறுவர். அந்தப் புகார் என்பது சிறப்பாகப் பட்டினப் பாக்கத்தையே குறிக்கும் என்பர். சீத்தலைச் சாத்தனாரும் இக்கருத் தினை வலியுறுத்தும் வகையில், பட்டினப்பாக்கம் கோட்டை மதிலையும் அகழியையும் உடையதாய் உயரமான அரண்மனையையும், அதற்கருகில் தரு நிலைக் கோட்டம், வச்சிரக்கோட்டம் எனும் இரு கோயில்களையும் உடையதாய், ஓர் எழில் மங்கை போல விளங்கிற்று (மணிமேகலை. 5,109–118) என வருணித்துச் செல்வது இயைபுடன் சிந்திக்கத்தக்கு

**நாளங்காடி**: மருவூர்ப்பாக்கத்திற்கும் பட்டினப் பாக்கத்திற்குமிடையேயமைந்த நாளங்காடிச் சோலை யில் இருபகுதி மக்களும் பொருள்களை வாங்கிக் கொள்ளும் வகையில் பல்வேறு அங்காடிக் கடைகள் அமைந்திருந்தன. இந்த நாளங்காடியின் நடுவிடத்தே காவல் பூதத்திற்குரிய பலிபீடம் அமைந்திருந்தது.

**ஐவகை மன்றங்கள்**: காவிரிப்பூம்பட்டினத்திற்குப் பெருமை சேர்ப்பதில் ஐவகை மன்றங்கள் துணைநின் றன. முன்னொரு காலத்தில் தேவர் கோனாகிய இந்திரனுக்குச் சோழன் முசுகுந்த சக்கரவர்த்தி போர்த் துணையாகச் சென்று அசுரர்களுடன் போர் புரிந்துள்ளான். அவ்வுதவியைப் போற்றி, இந்திரன் சோழமன்னனுக்குக் காவிரிப்பூம்பட்டினத்தின் பெரு மைக்குரிய வகையில் ஐவகை மன்றங்களையும் காவல் பூதத்தினையும் வழங்கினான் என்பர்.

வியத்தகு ஆற்றலுடைய ஐவகை மன்றங்களாக வெள்ளிடைமன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன் றம், பூதசதுக்கம், பாவை மன்றம் என்பவை கூறப் படும். வெள்ளிடைமன்றம் என்பது, பிறர் பொருளைக் களவாடினவர்களின் தலையில் களவுப் பொருளை வைத்து அழுத்திக் கழுத்து கடுக்க ஊரைச் சுற்றிவ ரச் செய்யும் ஆற்றலுடையதாகும். இலஞ்சி மன்றம் என்பது, தன் அருகில் ஒரு மடுவினைக் கொண்டது; அதில் மூழ்கி இம்மன்றத்துத் தெய்வத்தை வழிபட்ட வர் குட்டம், ஊமை, செவிடு, கூன் முதலிய உடற் குறைபாடுகள் நீங்கப் பெறுவர். நெடுங்கல் மன்றம் என்பது, தன்னிடம் வந்து வழிபடுபவரின் மூளைக் கோளாறு, பாம்புக்கடி, பேய்பிடித்த துன்பம், நஞ்சு உண்ட தீங்கு முதலியவற்றைப் போக்கும் ஆற்ற லுடையதாகும். பூதசதுக்கம் என்பது, நாற்சந்தியில் அமைந்திருந்தது. அங்கிருந்த பூதம், கூடாவொழுக்கங் கொண்ட துறவியர், பிறர் மனை விரும்புங் கொடிய வர், கற்பு நெறி தவறிய பெண்டிர், இரண்டக அமைச்சர், பொய்ச்சான்று கூறுவோர் ஆகியோரைக் கயிற்றினால் கட்டியிழுத்து நிலத்திலறைந்து கொல் லும் ஆற்றலுடையதாகும். பாவை மன்றம் என்பது, தன்னகத்தே ஒரு தெய்வப் பாவையினைக் கொண் டது; அது நாட்டில் அரசன் நேர்மை தவறினாலும், நீதிமன்றத்தில் நடுவர்கள் பிழைபட்ட தீர்ப்பினை வழங்கினாலும், அநீதிக்காகக் கண்ணீர் உகுத்து உலகத்தார்க்கு நிலையை வெளிப்படுத்துந் தன்மை யது. ஆக, இந்த ஐவகை மன்றம் பற்றிய செய்தி களைச் சிலப்பதிகாரத்தில் (5:111–140) காணலாம்.

**ஐவகை வனங்கள்**: ஐவகைப் பூங்காக்கள் காவிரிப் பூம்பட்டினத்திற்குப் பெருமை சேர்த்தன. அவை இலவந்திகை, உவவனம், உய்யானம், சம்பாதிவனம், கவேரவனம் என்பவையாகும். இலவந்திகையை நீராவிச் சோலையென்றுங் குறித்தனர். இது அரண் மனையைச் சேர்ந்த வனமாக அரச குடும்பத்தினர்க்கு மட்டும் உரிமையுடையதாக இருந்தது. உவவனம் என்பது பௌத்தர்களுக்குரியது; இங்குப் புத்தரின் பாத பீடிகை அமைந்த பளிக்கறை மண்டபம் இருந் தது. உய்யானம் எனும் சோலை பட்டினப்பாக்கத் தில் பூத சதுக்கத்தின் அருகில் இருந்திருக்கவேண்டும் என்பது, 'கைபெய் பாசத்துப் பூதங்காக்கு மென்று உய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார்' என்று மணிமேகலை நூல் குறிப்பிடுவதால் தெளியலாம். 'சம்பாதிவனமும் கவேரவனமும்' தொன்மையான வனங்களாக இருந்தாலும், அங்கே தாக்கணங்கு (வருத்துந்தெய்வம்) இருந்தமையின் மக்கள் செல்வ தில்லை. 'வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த, சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்' என்ற மணி மேகலை நூற் குறிப்பிற்கேற்ற வகையில் சம்பாதி வனம் என்ற பெயரில் வைத்தீசுவரன் கோயில் ஆலய வளாகத்தில் ஓர் இடம் உள்ளது; அது கொண்டு, புகார் எல்லை வைத்தீசுவரன் கோயில் வரையில் இருந்திருக்கலாமென்று சிலர் கருதுகின்றனர். உவ வனத்திற்கும் சக்கரவாளக் கோட்டத்திற்கும் இடையே 'உலக அறவி' எனும் பொது அம்பலம் இருந்தது என்பதும், அதன்கண் சம்பாபதி கோயிலும், அம்பலத்திலுள்ள தூணொன்றில் கந்திற்பாவை என்ற தெய்வ வடிவமும் இருந்தன என்பதும் மணிமேகலை நூலால் அறியலாகும்.

**கோயில்கள்**: காவிரிப்பூம்பட்டினத்தில் பல்வேறு பகுதிகளிலே கற்பகத்தருக்கோட்டம், வெள்ளானைக் கோட்டம், பலதேவன் கோயில், சோழர்தம் குலமுதல் வனாகிய சூரியனை வழிபடும் வகையிலமைந்த உச்சிக் கிழான்கோயில், முருகனுக்குரிய வேற்கோட்டம் இந்திரன் படைக்கலமாகிய வச்சிராயுதத்தை வழி படும் வச்சிரக்கோட்டம், அய்யனார்கோயில், அருக தேவன்கோயில், சந்திர வழிபாடு நிகழும் நிலாக் கோட்டம் முதலிய கோயில்கள் அமைந்திருந்தன.

புகார் நகரத்தை அடுத்திருந்த சுடுகாட்டிற்கருகில் சக்கரவாளக்கோட்டம் இருந்தது. இங்கே துர்க்கைக் கோயிலும் இருந்தமை பற்றிய குறிப்பு மணிமேகலை நூலால் அறியலாம்.

இவ்வாறெல்லாம் தெய்வநல ஆற்றலைப் புலப் படுத்தும் செய்திகள் ஒரு புறமிருக்க, மற்றொரு புறத்தில் திருமாவளவன் (கரிகாலன்) தன் தோளாற்ற லால் பிற மன்னரிடமிருந்து பெற்ற அருங்கலைப் படைப்புக்களான கொற்றப்பந்தர், பட்டிமண்டபம், தோரணவாயில் ஆகியவையும் காவிரிப்பூம்பட்டினத் திற்கு எழிலூட்டின. காலக் கொடுமையாலும் அரசி யல் மாறுபாடுகளாலும் எத்தனையோ அமைப்புகள் சிதையலாயின. பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குச் சோழன் அளித்த பதி னாறு கால் மண்டபம் (சித்திரமண்டபம்) கி.பி.13–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்ட முதல் மாறவர் மன் சுந்தரபாண்டியன் படையெடுப்பிலும் சிதைக்கப் பெறாமலிருந்மையைத் திருவெள்ளறைக் கல்வெட் டுப் பாட்டால் அறியலாம். அந்தக் கலைப்படைப்பும் எவ்வாறு சிதைந்து அழிந்தது என்பது புரியவில்லை.

**புரவலரும் புலவரும்**: சங்க காலந் தொட்டுச் சிறப்புடைய நகராகக் காவிரிப் பூம்பட்டினம் இருந்த மையின் மன்னர்கள் பலர் தம் ஆட்சியில் இதற்குத் தம்மாலியன்ற பெருமை சேர்த்துள்ளனர். அவர்களுள் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி, கரிகால்வள வன், சேட்சென்னி நளங்கிள்ளி, கிள்ளிவளவன் ஆகி யோர் குறிப்பிடத்தக்கவர். முத்தமிழுக்கும் ஆதரவு கிடைத்த சூழலில் இயற்புலவர்களும் இசைப்புலவர் களும் நாடகப் புலவர்களும் கலைஞர்களுமாகப் பலர் இங்கு இருந்திருத்தல் வேண்டும். அவர்களுள் இயற் புலவர்களான காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்த னார், காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார், காவிரிப்பூம்பட் டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் (முல்லைப்பாட்டு ஆசிரியர்) ஆகியோர்குறிப்பிடத்தக்க வர். இந்நகர மருவூர்ப் பாக்கத்தில் இருந்தவர்களாக மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன்குமரனார், மருங் கூர் கிழார் பெருங்கண்ணனார், மருங்கூர்ப் பாகை சாத்தன்பூதனார் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்.

கலைநலமிக்க ஆதிமந்தி (ஆதிமருதி), ஆட்டனத்தி, மாதவி முதலியோர் பூம்புகாருக்கு ஆடற்பெருமை சேர்த்தவர்களாவர். கற்பின் செல்வி கண்ணகியும் பிற கற்புடை நங்கையரும் பெண்ணின் பெருமையை இந்நகரத்திற்கு வழங்கியவர்களாவர்.

**சமயப் பெருமை**: சங்ககாலந்தொட்டே ஆத்திகத் திற்கும் சமண, பௌத்த கொள்கைகளுக்கும் இடந் தந்து வந்த பெருமையையுடையது காவிரிப்பூம்பட்டின மாகும். கோயில்களும், பௌத்த பள்ளிகளும், சமணக் கோயில்களும் இங்கு அமைந்திருந்தன. திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும், காவிரிப்பூம்பட்டினப் பகுதியில் அமைந்துள்ள பல்லவனீச்சரம், திருச்சாய்க் காடு, திருவலம்புரம், திருக்கலிக்காமூர் முதலிய திருக் கோயில்களுக்குத் தலப்பயணமாக வந்து கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் தேவாரப் பதிகங்கள் பாடியுள்ளனர். அவர்களுக்குப் பிறகு, நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராகிய இயற்பகை நாயனார் இந்தக் காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகராயும் திருத்தொண்டராயும் வாழ்ந்துள்ளார். வணிக மேம்பாடுடைய நகரத்தார் பெருமக்கள், திருவெண்காடராகிய பட்டினத் தாரு டன் இந்நகரம் தொடர்பு கொண்டிருந்தமை கருதி 19–ஆம் நூற்றாண்டிலிருந்து திருப்பல்லவனீச்சுரத்தில் ஒவ்வொரு ஆடிப் பௌர்ணமி நாளிலும் ‘பட்டினத் தார் உற்சவம்’ மிகச் சிறப்பாகக் கொண்டாடி வரு கின்றனர்.

**இந்நாளைய பெருமை**: பிற்காலச் சோழராட்சி யிலும் சிறந்து விளங்கிய காவிரிப்பூம்பட்டினம் மூன் றாம் இராசராசன் காலத்திற்குப் பிறகு சீர்குன்றலா யிற்று; கல்வெட்டுப் பெருமையால் காவிரிப்பூம்பட்டி னம் ‘ராசாதிராச வளநாட்டு நாங்கூர் நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம்’ (மூன்றாம் குலோத்துங்கன் கல் வெட்டு) என அழைக்கப்பெற்ற சிறப்பினையெல்லாம் மனத்துட் கொண்டு, தமிழ்நாடு அரசு காவிரிப்பூம் பட்டினத்தைப் ‘பூம்புகார்’ எனச் சிறப்பாகச் சுட்டி வழங்கும் வகையில் – அதன் எழில் மீளவும் தழைக் கும் வகையில் – எழுநிலை மாடமும் மன்றங்களும் தொழில்நிலையங்களும் அமைத்துள்ளது. சிற்றூராக இக்காலத்தில் காட்சியளிப்பினும் படிப்படியே பல சிறப்புகளுடன் மீண்டும் பேரூராகப் பூம்புகார் விளங்குதற்குரிய சூழல் உள்ளது. செ.வை.

**தொல்லியல்**: இலக்கியங்களில் விவரிக்கப்பட் டுள்ள காவிரிப்பூம்பட்டினத்தின் தொன்மையை மேலும் நன்கு அறிவதற்காக இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறை இங்குப் பல்வேறு இடங்களில் அக ழாய்வுகள் மேற்கொண்டது. இவ்வகழாய்வுகள் இந் நகரின் சிறப்பைப் பெரிதும் வெளிப்படுத்தின. கப்பல் கள் நிற்கும் துறை ஒன்று அகழாய்வில் கண்டுபிடிக்கப் பட்டது. இத்துறை செங்கற்களால் கட்டப்பட்டு மரத் தூண்கள் நடப்பட்டிருந்தது. இம்மரத்தூண்கள் சரக்கு களை ஏற்றிவரும் கப்பல்களையும் படகுகளையும் கயிற்றால் கட்டி நங்கூரம் இடப் பயன்பட்டது. இன் றைய காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் உள்ள பல்லவனீசுவரம், மேலையூர் போன்ற இடங்களில்

அகழாய்வுகள் செய்ததில் பௌத்த விகாரங்கள், சைத்தியங்கள் போன்றவற்றின் அழிபாடுகளும், புத்தரின் படிமம், சுண்ணாம்புக் கல்லால் செய்யப்பட்ட புத்தரின் காலடி போன்றவையும் கிடைத்தன. யவன நாட்டு மட்கலன்களின் சிதைவுகள் பல வனகிரி, வெள்ளையன் இருப்பு ஆகிய இடங்களில் கிடைத்தன. யவனர்கள் வாழ்ந்த பகுதி வெள்ளையன் இருப்பு என இக்காலத்தில் கூறப்படுகிறது. கீழையூர் மேலையூர் என்னும் இக்காலப்பகுதி முற்காலத்தில் மருவூர்ப் பாக்கம் பட்டினப்பாக்கமாக இருந்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். சு.இரா.

**காவேரிப்பாக்கம்** தமிழ்நாட்டில் வடார்க்காடு மாவட்டத்தில் வாலாசாப்பேட்டை வட்டத்தில் உள்ளதொரு சிறு நகரம். இது வேலூர் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது; வேளாண்மைக்குப் பெயர் பெற்ற நகரமாகும். காவேரிப்பாக்கம் என்னும் பெயர் கொண்ட பெரிய ஏரியின் தென்கரையில் அமைந்துள்ளதால், இந்த ஊர் காவேரிப்பாக்கம் என்னும் பெயரைப் பெற்றுள்ளது. இது உழுதொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் நிரம்பிய நகரம் ஆகும்.

காவேரிப்பாக்க ஏரி வடார்க்காடு மாவட்டத்திலேயே பெரிய ஏரியாகும். தென்வடலாக நீண்டுள்ள இவ்வேரியின் கரை $6\frac{1}{2}$ கி.மீ. நீளமுடையது. இவ்வேரியைப் பல்லவ அரசர் தெள்ளாறு எறிந்த நந்திப் போத்தரையர் தோண்டினார். காவேரிப்பாக்கம் பல்லவர்கள் காலத்திலிருந்தே சிறப்புப் பெற்ற நகரமாக விளங்கியது. இங்குள்ள கோயிலில் பல்லவர் கல்வெட்டுகளும் பாணர் கல்வெட்டுகளும் சோழர் கல்வெட்டுகளும் உள்ளன. காவேரிப்பாக்கம் பல்லவ மன்னர் நிருபதுங்கவர்மன் கல்வெட்டில் அவனி நாராயண சதுர்வேதிமங்கலம் எனக் கூறப்பட்டுள்ளது. முதலாம் பராந்தகசோழன் காலத்தில் காவேரிப்பாக்கம் ஏரியைக் கவனிக்க ஏரி வாரியம் ஒன்று இருந்தது. இரா.அ.

**காழித்தாண்டவராயர்** திருவாசக அனுபூதிஉரை என்னும் திருவாசக வியாக்கியானம் எழுதியவர். இவர்தம் ஆசிரியர் திருவாரூரைச் சேர்ந்த சிவகுருநாதரான குருசுவாமியடிகள் என்னும் பெரியார் ஆவர். இவ்வுரை 'கலியுகம் 4945, சாலி வாகனம் 1756, செய ஆண்டு தைத் திங்கள் பூசநாளில் அம்பலவாணர் திருமுன் தொடங்கப்பெற்று அதற்கு அடுத்த மன்மத ஆண்டு மார்கழித் திங்கள் 26-ஆம் நாள் அப்பெருமான் திருமுன்பே அரங்கேற்றப் பெற்றது' என்று இந்நூலின் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது.

'குரவரான குருசுவாமி, தம் சீடர் தாண்டவராயருக்குத் திருவாசகத்துக்குரிய அகத்தியச் சூத்திரங்களுக்குச் சம்பிரதாய உபதேச முறைப்படி பொழிப்புரையும், திருவாசகத்துக்கு விளக்கமும் உபதேசித்தார் என்றும், அவற்றைக் கொண்டு தாண்டவராயர் பத வியாக்கியானம், நுட்பம், விரிவு முதலியவற்றை எழுதினார்' என்றும் உரைப்பாயிரம் கூறுகிறது.

இவ்வுரையின் நோக்கம் சைவ சித்தாந்த சிவஞான போதத் திருவருள் உண்மை, ஞானத் திருவாசகத்தின் பெரும்பயன் என்பதேயாகும். மெய்கண்டார் அருளிய சிவஞானபோத உண்மை அனாதி என்பதையும், அவ்வுண்மையையே சமயாச்சாரியார்களும் நாயன்மார்களும் தத்தம் நூல்களில் வெளியிட்டுள்ளனர் என்பதையும் வலியுறுத்தவே காழித்தாண்டவராயர் தம் திருவாசக உரையில் பல தேவாரச் செய்யுட்களுக்கும் அகலவுரை எழுதினார். நாயன்மார்களின் அருளிச் செயல்களிலிருந்தும், சைவ சித்தாந்த சாத்திரங்கள், புராணங்கள் ஆகியவற்றிலிருந்தும் பல மேற்கோள்கள் காட்டி விளக்கியுள்ளார்.

தாண்டவராயர் செய்த அனுபூதிஉரை இரு பகுதிகளாக 1954-ஆம் ஆண்டு, தமிழக அரசினரால் வெளியிடப்பட்டுள்ளது.

**உரையின் சிறப்பியல்பு**: தாண்டவராயர் எளிதில் விளங்குமாறு உரை வகுத்துச் சென்றுள்ளார். ஆசிரியர் இவ்வுரையினைச் சாமானிய மக்களுக்கு என எழுதவில்லை. இருப்பினும் இவ்வுரையைக் கற்போருக்குச் சித்தாந்த அறிவும், சிவ பக்தியும், பரஞானமும், கலையறிவும் வாய்க்கும் என்பது உறுதி. பல நூல்களிலிருந்து மேற்கோள்களைத் தம் உரையில் தெளித்துச் செல்லும் தாண்டவராயர் இன்ன நூலிலிருந்து இன்ன மேற்கோள் எடுத்தாளப்பெற்றது எனக் குறிப்பிடாமலே சென்றுவிடுகிறார்.

திருக்கோத்தும்பி என்னும் பகுதியில், தும்பி பறக்கும் விளையாட்டுப் பற்றி, '(தேன்) எனக்கும் கிடைத்தது, உனக்கும் கிடைத்தது என்று ஒருவர்க்கு ஒருவர் மடிபிடித்துக் காண வண்டு சுழல்கிறதுபோலச் சுற்றும் ஆனந்த விளையாட்டு' என்று கூறுகிறார். ச.சு.

**காளத்தி** தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. திருக்காளத்தி எனப்படும் இவ்வூர், ஆந்திர மாநிலத்திலுள்ள இரேணுகுண்டா - கூடூர் இருப்பூர்தி வழியில் காளகத்தி நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து பேருந்து வழியாகவும், புகைவண்டி வழியாகவும் இவ்வூருக்குச் செல்லலாம். சிலந்தியும் (சிரீ), பாம்பும் (காளம்), யானையும் (அத்தி) வழிபட்டுப் பேறுபெற்ற தலம் என்று இவ்வூர்த் தலபுராணம் இதன் சிறப்பினைப் பேசுகிறது. மலையின்மீதுள்ள குடுமித் தேவரை வழி

பட்டுக் கண்ணப்ப நாயனார் சிவப்பேறு பெற்றார் என்று பெரிய புராணம் கூறுகிறது. தேவார மூவர் களும் இங்குள்ள மலைமீதேறிச் சென்று பதிகம் பாடி வழிபாடு செய்தனர் என்று அவர்கள் தம் வரலாறு கள் கூறுகின்றன. இக்காலத்தில் மக்கள், தரைமட்டத் தில் உள்ள திருக்கோயிலுள் வீற்றிருக்கும் மூர்த்தி யினையே வழிபடுகிறார்கள். அருகே பொன்முகலி ஆற்றிலிருந்து சில படிகள் ஏறி, ஆலயத்தை அடைய வேண்டியிருப்பதால் இக்காலத் திருக்கோயில் பழங் காலத்தில் மலைமீது இருந்திருக்கலாம் என்று ஆய் வாளர் கருதுகின்றனர்.

இங்குள்ள இறைவன் பெயர் காளத்தீசுவரர்; இறைவி பெயர் ஞானப்பூங்கோதை ஆகும். தீர்த்தம் பொன்முகலி, பஞ்சபூத தலங்களுள் இது வாயுத்தலம் எனப்படுகிறது. அதற்கேற்பக் கருவறையில் ஏற்றப் பட்டுள்ள விளக்குகளின் சுடர் காற்றால் அசைந்து கொண்டுள்ளது எனக் கூறப்படுகிறது. இத்தலம் தேவார மூவர்களாலும் பாடப்பட்டுள்ளது. இங்குள்ள இலிங்கத் திருமேனி சுயம்பு மேனியாகும். மூலமூர்த்தி யின் திருவுருவில் சிலந்தி, பாம்பு, யானை ஆகியவற் றின் தோற்றம் அமைந்துள்ளது என்று கூறுகின்றனர். பச்சைக் கருப்பூரம் கலந்த நீர் திருமஞ்சனம் செய்யப் பெற்றுப் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. தென்கயி லாயம் எனக் கூறும் சிறப்புப் பெற்ற இத்தலத்தினை, நக்கீரர் முசுகுந்தன் முதலியோர் வழிபட்டுள்ளனர். கருவறையின் வாயில் அருகில் கண்ணப்ப தேவர் திரு மேனி அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மலையின் மீது ஏறித் திருநாவுக்கரசர் வடக்கு நோக்கி இறை வனை வழிபட்ட போது வடக்கே திருக்கயிலாயம் சென்று சிவபெருமானை வழிபடவேண்டும் என்ற வேட்கை எழுந்து, சென்று வழிபட்டு மீண்டார். இத் தலப் பதிகப் பாடலொன்றில் 'கனத்தகத்தான் கயி லாயத் துச்சியுள்ளான், காளத்தியான் அவன் என் கண்ணுளானே (திருநாவு. 6-8-5) என்று கூறியிருப்ப தில் இக்குறிப்பு வெளிப்படுகிறது. இத்தலம் பற்றித் தமிழில் தல புராணம், உலா, கைலைபாதி காளத்தி பாதி அந்தாதி, திருக்கண்ணப்ப தேவர் மறம் முதலிய இலக்கியங்கள் தோன்றியுள்ளன. தெலுங்கு மொழியி லும் இத்தலம் பற்றிய நூல்கள் உள்ளன. திருக் கோயில் சுவர்களில் பல பழங்காலக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அ.மா.ப.

**காளமேகம்**: இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர்தம் இயற்பெயர் வரதர் என்பதாம். இக்காலத்தே கும்ப கோணம் என்றழைக்கப்படும் திருக்குடந்தைக்கு அரு கிலுள்ள நந்திபுரம் இவர் பிறந்த ஊர். திருவரங்கம் திருக்கோவில் மடைப்பள்ளியில் சமைக்கும் தொழில் புரிந்து வந்த இவர் தாசி மோகனாங்கி என்பாள்பால் காதல் கொண்டு வைணவத்திலிருந்து சைவத்திற்கு மாறினார் என்பர். இவர் தம் பாடலொன்றில் தம்மை ஆதரித்த சாளுவத் திருமலைராயனைக் குறிப்பிட் டிருக்கிறார். திருமலைராயன் விசயநகர மன்னனின் முகவராக (பிரதிநிதியாக) இருந்தவன் என்பதும், அவன் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு என்பதும் தஞ்சை இராசராசேச்சரத்துக் கல்வெட்டு ஒன் றால் உறுதிப்படுகின்றன. வசைபாடும் திறல்மிக்க வராக விளங்கிய இவர்தம் வசைக் கவியால் திரு மலைராயன் பட்டினத்தை மண்மூடிப் போகுமாறு சபித்தாராம். பாம்புக்கும் எள்ளுக்கும், பாம்புக்கும் எலுமிச்சம் பழத்துக்கும் என்றிவ்வாறு இவர் பாடிய சிலேடைப் பாடல்கள் நயமிக்குக் கற்போரைப் பிணிக்க வல்லன. இவர்தம் படைப்புகள் தமிழ் நாவ லர் சரிதை, தனிப்பாடல் திரட்டு, தனிச்செய்யுட் சிந் தாமணி, பெருந்தொகை ஆகிய தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன. சரசுவதி மாலை, பரப்பிரம்ம விளக்கம், சித்திர மடல் ஆகிய நூல்களையும் இவர் பாடினார் என்பது கூறப்படுகிறது. திருவானைக்கா வில் கோயில் கொண்டுள்ள அகிலாண்டேசுவரி மீது எல்லையற்ற பக்தி பூண்டிருந்த இவர் 'திருவா னைக்கா உலா' என்னும் பிரபந்தம் ஒன்றையும் பாடி யிருக்கிறார். மா.இரா.

**காளி** மகாசக்தியின் பல்வேறு தோற்றங்களில் ஒன்று. தேவிவழிபாடு தெய்வ வழிபாட்டிலேயே மிகப் பழமையானது. சிந்துவெளி நாகரிக நகரமான மொகேஞ்-ச -தாரோவில் தாய்த் தெய்வ வழிபாடு இருந்தமைக்கான எச்சங்கள் கிடைத்துள்ளன. வேத காலத்திலும் தேவி வழிபாடு இருந்தது. மகாபாரத புராணங்களும் சக்திவழிபாட்டைப் பற்றிக் கூறுகின் றன. தேவிகளுள் காளி தெய்வத்தின் வழிபாடு இந்தி யாவில் புகழ் பெற்று விளங்குகிறது.

காளியின் தோற்ற வரலாற்றைப் புராணங்கள் பல்வேறு விதமாகக் கூறுகின்றன. சும்பன், நிசும்பன் என்ற அசுர உடன்பிறப்புகள் நான்முகனை நோக்கிப் பல்லாயிரமாண்டு தவமியற்றி, பெண்களைத் தவிர வேறு யாராலும் தங்களுக்கு இறப்பு நேரக்கூடாது என்ற வரம் பெற்றனர். நான்முகன் தந்த வரத்தால் நெஞ்சுரமேறி அரசாட்சி அமைத்தனர். இவர்கள் தேவர்களுடன் போராடி அவர்களையும் வென்றனர். இரத்தபீசன், தாம்பரன் போன்ற அசுரர்களும் இவர் களுடன் இணைந்து கொண்டனர். இவர்களுள் இரத்த பீசன் அதிசயமான சக்தி உடையவன். இவனுடைய உடலில் இருந்து சொட்டும் ஒவ்வொரு துளி இரத்த

மும் பல அசுர வீரர்களைத் தோற்றுவிக்கும் வல்லமை கொண்டிருந்ததால் அழிக்க முடியாதபெரு வீரனாய் இவன் கருதப்பட்டான். இவன் துணையும் கிடைக்கவே சும்ப நிசும்பர்களின் தொல்லை அதிகமானது. கதிரவனும் நிலவும் கூட இவர்கள் ஆணை வழி நடக்க நேரிட்டது. பலவாறாய்த் துன்பமுற்ற தேவர்கள் தங்கள் குருவான பிரகசுபதியிடம் முறையிட ,அவர் தேவியை நினைந்து தவமியற்றுவதே வழியென்று அவர்களிடம் கூறினார். தேவர்கள் அனைவரும் இமயமலைச் சாரலையடைந்து மகாதேவியை நினைந்துருகி மந்திர உச்சரிப்புகளுடன் கடுந்தவம் இயற்ற, தேவி தோன்றிக் குறை கேட்டாள். தேவர்கள் சும்ப நிசும்பர்களின் தொல்லைகளை விளக்கி, தங்களைக் காப்பாற்ற வேண்டினர்.

தேவர்களின் நிலை கண்டு இரங்கிய தேவி சும்ப நிசும்பர்களை அழிக்கத் தன் உடலினின்றும் ஒருசக்தியைத் தோற்றுவித்தாள். பராசக்தியின் உடலில் இருந்து தோன்றியதால் கௌசிகையென்றும், கருமை நிறத்தோடு பார்க்க அஞ்சும் கோலத்தில் விளங்கியதால் பத்திரகாளி என்றும், அசுரர்களுக்கு அளவற்ற அச்சத்தைத் தருபவளாய் இருந்ததால் காளராத்திரி என்றும் பெயர் பெற்றாள்.

சும்பனின் ஆட்சிக்குட்பட்ட காடொன்றில் தங்கியிருந்த காளியின் குரலினிமை, அழகு இவற்றைத் தன் காவலர்கள் வாயிலாய்க் கேள்வியுற்ற சும்பன் காளியை மணக்க விரும்பித் தூதனுப்பினான். தன்னைப் போரில் வென்றால் மணப்பதாகக் காளி மறுமொழியிறுக்க, சும்பன் அதை ஏற்றுப் படையனுப்ப, சும்பனின் படைத் தலைவர்கள் ஒவ்வொருவராய்ப் போருக்கு வந்து தோற்றனர். இரத்தபீசனின் இரத்தம் கீழே சொட்டு முன்னே காளி உறிஞ்சிக் குடித்தமையால் புது அசுரர்கள் தோன்றுவது இயலாது போனதுடன், இரத்தபீசனும் விழுந்து மாண்டான். சண்டன், முண்டன் என்ற இரு படைத் தலைவர்களின் தலைகளையும் அறுத்து அவர்தம் குருதியைக் குடித்தமையால் காளி 'சாமுண்டி' என்னும் பெயர் பெற்றாள். பின்னர், நிசும்பனும், சும்பனும் போர்க்களம் புகுந்து காளியால் தாக்குண்டு மடிந்து போனார்கள் என்று சிரீ தேவி பாகவதம் என்னும் நூல் கூறுகிறது.

இப்படித் தோன்றிய காளி தன் சினக்குறிப்பு அடங்காமல் ஆலங்காட்டில் தங்கியிருந்ததாகவும், காளியின் சினம் தீர்க்க வேண்டி, தேவர்களின் வேண்டுகோளேற்று சிவபெருமான் ஆலங்காடு வந்து காளியுடன் ஆடற்போட்டியொன்று மேற்கொண்டதாகவும், அதில் ஆட்ட வேகத்தில் வலச் செவியிலிருந்து நழுவி விழுந்த காதணியை ஆட்டத்தை நிறுத்தாமலேயே வலக்காலால் தூக்கி இறைவன் தன் செவியில் அணிந்து கொண்டதாகவும், வலக்காலை வானோக்கி உயர்த்தி ஆடற்குறிப்பு காட்டமுடியாத காளி தோல்வியுற்று, வெட்கிச் சினம் தவிர்த்ததாகவும் மற்றொரு புராணம் கூறுகிறது. இந்தத் தாண்டவக் கோலத்தை ஊர்த்துவ தாண்டவம் என்றும், சண்ட தாண்டவம் என்றும் புராணங்கள் கூறும்.

தாருகாசுரனுடன் முருகப் பெருமான் போர் செய்யும் போது முருகனின் படைக்கலங்கள் அசுரர்களைத் தாக்க, காயம்பட்ட இடத்தினின்று குருதி ஒழுக, கீழே சிந்திய குருதித் துளிகளிலிருந்து பல அசுரர்கள் முளைக்க, முருகப் பெருமான் செய்வதறியாது தன் தாய் உமையன்னையை நினைத்து வணங்கினார். உடன் அன்னை தன் அம்சமான கரிய நிறங்கொண்ட காளியைத் தோன்றச் செய்து போர்க்களம் அனுப்பினாள். சிவந்து நீண்டு தொங்கிய நாக்குடனும், அனல் பறக்கும் சிவந்த கண்களுடனும், கூரிய பற்களுடனும், தலைவிரி கோலமாய், செவ்வாடையுடுத்தி, எட்டுத் திருக்கைகளிலும் படைக்கலங்கள் கொண்டு போர்க்களம் புகுந்த காளிதேவி அசுரர்களுடன் போரிட்டாள். அடிபட்டவர் உடலிலிருந்து குருதி சிந்தும் முன்பாகவே, காளிதேவி விரைந்து அவ்விதம் கொட்டும் குருதியை ஒவ்வொரு அசுரனின் உடம்பிலிருந்தும் முற்றிலுமாய்க் குடித்துவிடவே அசுரப்படை பெருக வழியின்றி மடிந்து அழிந்தது. இது காளியின் தோற்றம் குறித்து மற்றொரு புராணம் காட்டும் கதை.

தில்லை மான்மியக் கதையில் தில்லையிலிருந்த காளி மிகவும் கொடுஞ் செயல்களைச் செய்ததாகவும், சிவபெருமான் காளியுடன் நடனமாடி அவளை வென்று எல்லையைக் காக்கும் தெய்வமாக்கியதாகவும், அத்தெய்வம் ஒரு தீர்த்தத்தில் மூழ்கிக் கோர வடிவம் நீங்கிச் சாந்த வடிவம் பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

மகிசாசூரமர்த்தினி எனக் கூறப்படும் காளியைச் சிலப்பதிகாரம் கொற்றவை என்றும், ஆடல் கண்டருளிய அணங்கு என்றும் கூறுகிறது. இந்நூலில் கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லும் வழியில் வேட்டுவர் ஊரிலிருந்த கொற்றவை கோயிலில் தங்கினர் என்றும் அத்தருணத்தில் ஆவேசம் கொண்ட சாலினி, கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடப் போவதை முன் கூட்டியே தெரிவித்தாள் என்றும் கூறப்பட்டுள்ளது. வழக்குரை காதையில் இளங்கோ வடிகள் கொற்றவை வேறு, காளி வேறு என்று குறிப்பிட்டுள்ளார். துர்க்கை கண்ணகியாகப் பிறந்தாள்

என்று சிலப்பதிகார உரையாசிரியர்கள் குறிப்பிடு கின்றனர். பிற்காலத்தில் கண்ணகியைக் காளியின் வடிவமாகவே கருதினர்.

கோவலன் கதை என்னும் அம்மானைப் பாட லில் கண்ணகி இறுதியாக திருவொற்றியூருக்கு வந்து வட்ட புரியம்மன் என்ற பெயருடன் வழிபடப்பட்டாள் என்று கூறப்பட்டுள்ளது. இன்றளவும் திருவொற்றி யூர் சிவன் கோவிலில் உள்ள துர்க்கை அம்மனைக் கண்ணகித் தெய்வமாகவே கருதி விழா எடுக்கின்ற னர்.



காளி

காளி வழிபாடு தமிழகத்தில் மிக ஆழமாக வேர் கொண்ட வழிபாட்டு முறையாகும். சங்க காலத்தில் பாலை நிலத்தின் தெய்வமாக மக்கள் காளியை வழி பட்டனர். காடுகிழாள், காடு கிழவோள், காடுகாள் என்று சங்க கால மக்கள் காளியைக் குறிப்பிட்டனர். வெற்றி அல்லது கொற்றத்தைத் தருபவள் கொற் றவை அல்லது கொற்றி எனக் கூறப்படுகிறாள். கொற்றவை கோட்டவி என்று சிதைந்து வடமொழி யில் காளி என்ற பொருளைத் தருகிறது. கொற்றவை முருகனுடைய தாய் என்றும் கூறப்படுகிறாள். இடைக் காலத் தமிழ்ப்புலவர் மகிசாசூரமர்த்தினியின் உருவ அமைப்பைப் பற்றிப் பாடியுள்ளார். இமயக் கிழவி என்றும் கடும்போர் கடந்த குமரி என்றும் காளியை இவர் குறிப்பிட்டுள்ளார். தட்சயாக அழிவின்போது இறைவியின் சினத்தீயிலிருந்து பிறந்து யாகத்தை அழித்து வென்றதாகக் கந்தபுராணம் கூறும்.



காளி

காளிக்கு நவராத்திரி விழா என்னும் விழாவை மக்கள் கொண்டாடுவர். முற்காலத்தில் தமிழக மன்னர்களும், குறுநில மன்னர்களும் இத்தெய்வத்தை வழிபட்டனர். சோழ அரசர் விசயாலயன் தஞ்சை யில் நிசும்ப சூதனியான காளிக்குத் தனிக் கோயி லெழுப்பிச் சோழர் குலதெய்வமாய்க் காளியைக் கொண்டாடியவன். காளியின் முகத்தில் சினக்குறிப்பு காட்டப்படும். கடைவாய்ப்புறம் கோரைப் பற்கள் இருக்கும். தலை சுடர்முடி அமைப்பில் காட்டப்படும். பெரும்பாலும் மகிழ்விருக்கைக் கோலத்தில் காட்டப் படும். அன்னையின் திருக்கைகளில் கேடயம், தலை யோடு கூடிய முத்தலை ஈட்டி, கத்தி, உடுக்கை, தொங்கும் மனிதத் தலை, பாசம், மணி, இருபுற முத்தலை ஈட்டி (வஜ்ரம்), அங்குசம் போன்ற படைக் கலங்களுள் சிலவோ பலவோ கைகளின் எண்ணிக்கைக் கேற்ப அமையும். சில திருமேனிகள் சங்கும் சக்கரமும் கொண்டமைவதும் உண்டு. காளியின் ஊர்தி சிங்கம்; கொடி அலகை; படை சூலம்.

ஊர்த் தெய்வங்களுள் ஒன்றாகவும் காளி கருதப் படுகிறாள். காளியாத்தாள் என்று கூறப்படும் இவள்,



காளி

தில்லைக் காளி, காஞ்சிபுரம்-மகாபலிபுரம் கருக்கிலமர்ந்தாள் என்ற கொற்றவை, திருவாரூர் இராச துர்க்கை, திருவொற்றியூர்த் துர்க்கை, கோவைக் கோனமாகாளி என்ற கோணியம்மன், பாரியூர் அம்மன் என்னும் குண்டத்துக் காளி, பெரிய பாளையத்து அம்மன், கீரனூர்ச் செல்வி, திருச்செங்கோட்டுக் காளி, காரைக்குடிக் கொப்புடையம்மன், நாட்டரசன் கோட்டைக் கண்ணாத்தாள், திருநெல்வேலி மாவட்ட குரங்கணியம்மன், தஞ்சை உக்கிர மாகாளி அம்மன், திருச்சி உச்சயினி மாகாளியம்மன் முதலான தேவதைகள், தமிழ்நாட்டின் புகழ்வாய்ந்த காளி தெய்வங்களாகும். மாரியம்மன், மாரிஆய் என்றும் தமிழர்கள் காளியை வழிபடுகின்றனர். காளியின் போர்க்கோல உருவம் துர்க்கை என்றும், சாந்தமான உருவம் பவானி (பார்வதி) என்றும் கூறப்படுகிறது.

காளிக்கு உயிர்ப்பலியிடும் வழக்கம் இந்தியாவில் நிலவுகிறது. சிலப்பதிகாரத்திலேயே கொற்றவைக்குப் பலியிடும் வழக்கம் இருந்தமை கூறப்பட்டுள்ளது. கலிங்கத்துப் பரணியில் வீரர்கள் வரம்வேண்டி, தங்களின் தலையைத் தவிர பிற உறுப்புகளை அரிந்து குருதிக் காணிக்கை இத்தெய்வத்திற்கு அளித்தமையும் கூறப்பட்டுள்ளது. ஆடு, சேவல் முதலியன பலியாக இடப்படும். நரபலிஇடும் வழக்கம் நவகண்டம் என்று அழைக்கப் படுகிறது. தஞ்சைக்கு அருகில் உள்ள புள்ளமங்கை என்னும் ஊரில் உள்ள முற்காலச் சோழர் காலத்திய கோயிலில் காளிக்கு நவ கண்டம் கொடுக்கும் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தெய்வத்திற்கு நரபலி இடும் வழக்கமும் முன்பு இருந்தது. சில ஊர்களில் தீமிதி விழாவும் காளி விழாவின் பொழுது நடத்தப்படும். காளி, எல்லைகளைக் காக்கும் கடவுளாகக் கருதப்பட்டதால் எல்லையம்மன், எல்லைப்பிடாரி என்றும் கூறப்படுகிறாள். வங்காளப் பகுதியில் காளி வழிபாடு சிறந்து விளங்குகிறது.

வடஇந்தியாவில் விக்கிரமாதித்தனின் தலைநகரமாக விளங்கிய உச்சயினியில் இருந்த காளி தெய்வம், உச்சயினி மாகாளி எனக் கூறப்பட்டது. மகாபாரதத்தில் வரும் பாஞ்சாலியும், திரௌபதியம்மன் என்ற பெயரால் காளி வடிவம் தரித்துக் கொண்டாள். சமதக்கினி முனிவரின் மனைவியும் பரசுராமரின் தாயுமான இரேணுகை, இரேணுகா தேவியம்மன் என்னும் பெயரில் உள்ள காளி அறந்தாங்கி, பட்டுக்கோட்டைப் பகுதிகளில் உள்ள வணிகர்களுக்குக் குல தெய்வமாகக் கருதப்படுகிறாள். திருவாரூரில் இவ்வம்மனை எல்லையம்மனாக வழிபடுகிறார்கள். சேரன் செங்குட்டுவன் காலத்தில் இருந்த பத்தினித் தெய்வ வழிபாடும் பிற்காலத்தில் காளி வழிபாட்டுடன் கலந்துவிட்டது.



காளி

கேரளப் பகுதிகளில் காளியைப் பகவதியாக வணங்குகின்றனர். கொடிய பேய், பிசாசு போன்றவைகளை இக்காளி விரட்டும் சக்தி வாய்ந்ததாக எண்ணுகின்றனர். இரா.க.

***காளிகா தாண்டவம்***: சிவபெருமானை ஆடற்கலைக்கு அரசனாக, ஆடல் வல்லானாக ஏற்றிருக்கும் கலைமரபு, ஆடலைத் தாண்டவம் என்றும், இலாசியம் என்றும் இரண்டு வகையாகப் பிரித்துள்ளது. தாண்டவம் ஆடவர்க்குரியது; இலாசியம் மகளிர்க்குரியது; என்றாலும், இரண்டையும் இருபாலாரும் ஆடுவதுண்டு. தாண்டவத்தைச் சிவபெருமான் கற்றுத் தந்ததாகவும், இலாசியம் பார்வதி தேவியால் சொல்லித் தரப்பட்டதாகவும் புராணங்கள் பேசும். சிவபெருமான் நூற்றெட்டுத் தாண்டவங்களை ஆடியதாக நூல்களில் கூறப்பட்டாலும், பதினோரு தாண்டவங்களே சிறப்பாகப் பேசப்படுகின்றன. அவற்றுள்ளும் ஒன்பது தாண்டவங்களே விளக்கப் பெறுகின்றன. சிரீதத்துவநிதி ஏழுவகையான தாண்டவங்களைப் பெயரிட்டு விளக்குகிறது. அவை ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், உமா தாண்டவம், கௌரி தாண்டவம், காளிகா தாண்டவம், திரிபுர தாண்டவம், சம்கார தாண்டவம் என்பன.

காளிகா தாண்டவக் கோலத்தில் சிவபெருமான் எட்டுத் திருக்கைகளுடன் இருப்பார். சடை, தலையை முழுவதுமாய் மறைப்பது போல் மேலே தூக்கி முடியப்பட்டிருக்கும். எட்டுத் திருக்கைகளில் வலப்புறக் கைகளில் முத்தலை ஈட்டி, பாசம், துடி முதலியன இருக்க வலமுன்கை,காக்கும் குறிப்பு காட்டி (அபயம்) அமைக்கப்பெறும். இடக்கைகளில் தலையோடு, மணி, தீச்சுடர் முதலியவையிருக்க இடமுன்கை, வேழ முத்திரையில் மார்புக்குக் குறுக்காய் நீட்டப்பட்டிருக்கும். இக் கையின் குறிப்பு, கீழ்நோக்கிக் காட்டியபடி, அதாவது பாதத்தைச் சுட்டுவது போல் அமைக்கப்படும். இறைவனின் வலக்கால் உயரத் தூக்கிய நிலையில் இருக்க இடக்கால் முயலகன் என்னும் குறளரக்கனின் மீது குஞ்சிதமாய்ப் பொருத்தப்பட்டிருக்கும்.

சடையின் இடப்புறம் ஊமத்தம்பூவும், பிறைநிலாவும் இருக்க வலப்புறம் கங்கை இருக்கும். இடச்செவியில் பனையோலைக் குண்டலமும், வலச்செவியில் மகரகுண்டலமும் அழகு செய்யும். இடையில் புலித்தோலாடை ஆடலுக்கேற்ப மடித்துக் கட்டப்பட்டிருக்கும். மார்பில் முப்புரிநூலும், மார்புக் கட்டும் காணப்படும். கால்களில் சதங்கையும், சிலம்பும் இருக்கும். இத்தாண்டவத்திற்குக் காளிகா தாண்டவம் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது என்பது குறித்து ஆகமங்களில் விளக்கம் இல்லை. இது படைத்தல் தொழிலைக் குறிக்கும் தாண்டவம் என்று மட்டும் திருப்பத்தூர்ப் புராணம் கூறுகிறது. இரா.க.

***காளிங்கர்*** திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் ஒருவர். காலிங்கர் என்ற பெயர் காளிங்கர் என்றும் வழங்கும். இப்பெயருடையார் பலர் சோழப் பேரரசில் பெரும் தகுதியுள் இருந்துள்ளனர். வேளாண் குலத்துள் காலிங்கராயர் என்னும் கோத்திரமுடையார் என்று இருத்தலானும் இவர் வேளாண் மரபினராய் இருத்தல் வேண்டும்' என்று சிலர் கருதுகின்றனர். இவர் சமண சமயத்தவர். 'நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' (580) என்ற தொடருக்குக் காளிங்கர் உரை எழுதும்போது 'பெரியோரால் விரும்பத்தக்க உம்பர் உலகினுள் சிறப்புடைய உத்தரகுருவினைத் தாம் எய்தி இனிது வாழ்ந்திருக்கவேண்டுபவர்' என்று குறிப்பிடுகிறார். உத்தரகுரு – போகம் துய்க்கும் பூமி என்பது சைன நூற்கொள்கையாகும். காளிங்கர் கூறிய உரையையும் கொண்ட பாடத்தையும் பரிமேலழகர் சில இடங்களிற் குறிப்பிடுவதால், இவர் பரிமேலழகருக்குக் காலத்தால் முற்பட்டவர். காளிங்கர் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கருதலாம்.

காளிங்கரின் உரை பொழிப்புரையாக இருந்த போதிலும் மிகவும் விளக்கமாக உள்ளது. அது செறிந்த நடையும் தூய தமிழ்ச் சொற்களும் அமைந்த உரையாகும். பால் தொடர்பும், அதிகாரத் தொடர்பும், எழுதிச் செல்வது இவர்தம் உரையின் சிறப்பாகும். பெரும்பாலான குறட்பாக்களுக்கு வினா விடை முறையில் அதாவது மாணாக்கன் ஒருவன் வினாத் தொடுக்க அதற்கு ஆசிரியர் விடையிருப்பதுபோல அமைந்துள்ளது காளிங்கர் உரையின் மற்றொரு தனித்தன்மையாகும். அதிகாரப் பெயர்கள் சில, இவர் உரையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. சான்றாகக் காமத்துப் பாலிலுள்ள குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், கண்விதுப்பழிதல், அவர்வயின் விதும்பல் என்னும் அதிகாரப் பெயர்கள் காளிங்கர் உரையில் முறையே குறிப்புணர்தல், புணர்ச்சியின், மகிழ்தல், கண்விதுப்பழித்தல், அவர்வயின் விரும்பல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

காளிங்கர் உரையில், குறட்பாக்களின் சில சொற்களுக்கும், தொடர்களுக்கும் புதிய பொருளும் விளக்கமும் காணக்கிடக்கின்றன.

ஒருவந்தம் (593) என்ற சொல்லுக்குப் பெருஞ்செல்வம் என்றும், பேடிகைவாள் (614) என்ற தொடருக்கு உறையகத்து இருந்த வாள் என்றும், கழிபெருங்காரிகை (571) என்ற தொடருக்குப் பெரிய நன்மை என்றும், மட்பகை (883) என்ற சொல்லுக்கு வெள்ளம் என்றும், உள்ளம் (595) என்பதறகு நெஞ்சு ஒருப்பாடு என்றும் பொருள் கூறியுள்ளார் காளிங்கர்.

இவர்தம் உரை சிலவிடங்களில் கவிதைநடையில் அமைந்து இலக்கியச் சுவை நல்கும். அறத்துப்பாலின் இறுதியில், 'வள்ளுவக் கடவுள் வகுத்தமைத்துரைத்த எள்ளறு சிறப்பின் அறத்துப்பால் முற்றும்' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பாரதத்துள் நூற்றுவரையும், இராமாயணத்தில் இராவணனையும் பிறரையும் எண்ணிக்கொள்க' (539) என இவர் குறிப்பிடுவதால் புராணங்களில் இவருக்கிருந்த ஈடுபாடு புலப்படுகிறது.

ச.க.

**காளிதாசன்**: இவர் வடமொழிப்புலவர்களுள் மிகச் சிறந்தவர்; முதன்மையானவர்; உலகப் புகழ் பெற்றவர். அந்தணர் குலத்தில் பிறந்து, இடையர் குலத்தில் வளர்ந்து, அந்நாட்டு மந்திரிகளின் சூழ்ச்சிகளினால் அவர்கள் வலையில் சிக்கி, அந்நாட்டு அரசகுமாரியைத் திருமணம் செய்துகொண்டார். பிறகு அரச குமாரியின் ஆணைப்படி காளிதேவியைத் துதித்து அவள் அருளினால் மிகச்சிறந்த புலவனாகத் திகழ்ந்தார். ஆகவே, காளிதாசன் என்ற பெயரையும் அடைந்தார் என்று நன்கு நிறுவ முடியாத கதை வழங்கிவருகின்றது. இவருடைய் பெற்றோர்களைக் குறித்தோ, பிறந்து வளர்ந்த நாட்டைப் பற்றியோ இன்றுவரை உறுதியாக ஒன்றும் அறியமுடியவில்லை. இவருடைய காலத்தைப் பற்றியும் ஆராய்ச்சியாளர்களால் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. இவருடைய கால ஆராய்ச்சி இன்றும் பல ஆராய்ச்சியாளர்களால் ஆராயப்பட்டு வருகிறது. மேல்நாட்டு அறிஞர்கள் இவர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும், குப்தமன்னர்களின் காலத்தில் இருந்தார். எனவும் கூறுகிறார்கள். விக்கிரம சகாப்தத்தை கி.மு. 56-இல் தொடங்கிய விக்கிரமாதித்ய மன்னனால் போற்றப்பட்டு அவன் அவையை அலங்கரித்த 'நவரத்தினம்' என்ற புகழுடன் விளங்கிய ஒன்பது மிகச் சிறந்த அவைப்புலவர்களுள் ஒருவர் காளிதாசன் ஆவார் என்று இந் நாட்டறிஞர்கள் கூறுவர். ஆகவே அவருடைய காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என்று இந்திய அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தன்னுடைய நூல்களுள் ஒன்றான 'மேகசந்தேசத்தில் காரணமின்றி உச்சயினி நகரத்தை மிகுதியாகப் புகழ்ந்து வருணித்திருப்பதனால் இவர் உச்சயினி நாட்டைச் சேர்ந்தவராகவோ, தம் வாழ்க்கையின் பெரும்பகுதியை அந்நாட்டில் கழித்தவராகவோ இருத்தல் கூடும். அந்நூலில் மேகத்திற்கு வழியைக் கூறும்பொழுது வடஇந்தியாவில் உள்ள முக்கிய நதிகள், இடங்கள், மலைகள் போன்றவைகளைக் கூறுவதனாலும், தம் மகாகாவியமாகிய இரகுவம்சத்தின் 4-வது சருக்கத்தில் இரகுவினுடைய திக்குவிசயத்தை வருணிப்பதின் மூலம் இந்திய நாட்டின் பல பகுதிகளைக் கூறுவதினாலும், காளிதாசன் நாடு முழுவதும் பயணம் செய்துள்ளான் என்று ஊகிக்கமுடிகின்றது.

பெருங்காப்பியங்களான இரகுவம்சம், குமாரசம்பவம் ஆகியனவும், சிறுகாப்பியங்களான இருதுசம்காரம், மேகசந்தேசம் ஆகியனவும், நாடகங்களான மாளவிகாக்னிமித்ரம், விக்ரமூர்வசீயம், அபிக்ஞான சாகுந்தலம் ஆகியனவும் இவர்தம் நூல்கள் என்று ஐயமின்றி எல்லா அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர இவர் சியாமளா தண்டகம், சிருங்காரதிலகம், புட்பபான விலாசம், இராட்சசகாவியம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார் என்று சொல்லப்படுகிறது.

**இரகுவம்சம்**, திலீபன் என்ற அரசன் முதல் அக்னிவர்ணன் என்ற அரசன் முடிய சூரியவமிசத்து அரசர்களின் சரித்திரத்தைக் கூறுகிறது. இந்நூல் திலீபன், இரகு, அசன், தசரதன் போன்றவர்களை முதல் 9 சருக்கத்தில் கூறி 10 முதல் 14-வது சருக்கம் வரை இராமாயணக் கதையையும், 15-வது சருக்கத்தில் உத்தர ராமாயணக் கதையையும் அதற்குப் பிறகு 4 சருக்கங்களில் மற்றும் சில அரசர்களையும் பற்றிக் கூறி இறுதியாக, 19-வது சருக்கத்தில் அக்னிவர்ணன் என்பவனின் சரித்திரத்தினைக் கூறுவதோடு முடிகிறது. இது வால்மீகி முனிவரின் இராமாயணத்தை ஆதாரமாகக் கொண்டு மிகவும் எளிய நடையில் 19 சருக்கங்களில் எழுதப்பட்டுள்ளது.

**குமாரசம்பவம்**, 17 சருக்கங்களில் முருகக் கடவுளின் பிறப்பையும், பிறகு அவர் தேவர்களின் சேனைத் தலைவனாக இருந்துகொண்டு தாரகாசுரன் என்ற அரக்கனைக் கொன்ற வரலாற்றையும் வருணிப்பது. தட்சனுடைய வேள்வியில் உயிர் துறந்த தாட்சாயணி மலையரசனாகிய இமவானுக்குப் பார்வதியாகப் பிறத்தல், பார்வதியின் இளமைப்பருவம், தாரகாசுரனின் இன்னல்களைப் பொறுக்கமுடியாமல் தேவர்கள் பிரம்மனிடம் முறையிடுதல், மன்மதனின் உதவியினால் தவத்தில் ஈடுபட்டிருக்கும் சிவபெருமானின் மனத்தைக் கலைக்க முயலல், சிவபெருமானால் மன்மதன் எரிக்கப்படல், இரதிதேவியின் புலம்பல், சிவபெருமானையே அடையவேண்டும் என்று பார்வதி கடுந் தவம் புரிதல், சிவபெருமான் பிரும்மச்சாரி உருவில் பார்வதியின் மனத்தைச் சோதித்து முடிவில் அவளைத் திருமணம் செய்துகொள்ள வாக்களித்தல் முதலியவைகளை இந்நூல் முதல் 5 சருக்கத்தில் கூறுகின்றது. பிறகு சப்தஇருடிகள் மூலம் இமவானிடம் பார்வதியின் கரத்தை வேண்டல்; பார்வதி சிவபெரு

மான் திருமணம், அவர்களுடைய உல்லாச வாழ்க்கை முதலியவற்றை 6,7,8 சருக்கங்களில் கூறிவிட்டு, 9 முதல் 17 சருக்கம் வரை முருகக் கடவுளின் பிறப்பு, தேவர்களின் சேனைத் தலைவன் பதவியை ஏற்றுத் தாரகாசுரனைக் கொல்வது ஆகியன கூறப்பட்டுள் ளன.

**மேகசந்தேசம்**, பூர்வமேகம், உத்தரமேகம் என்ற பெயருடன் இரு சருக்கங்களில் 144 செய்யுள்களில் எழுதப்பட்ட மிகச் சிறந்த கற்பனைச் சிறுகாப்பியம். இது 'மந்தாக்ராந்தா' என்ற தூது காவியத்திற்கே உகந்த விருத்தத்தில் எழுதப்பட்டுள்ளது. காளிதாச னின் கற்பனைத் திறன், இயற்கை வருணனைத் திறன் போன்றவற்றிற்கு இது சிறந்த எடுத்துக் காட்டு. இராமாயணத்தில் சீதையிடமிருந்து பிரிக்கப் பட்ட இராமன் அனுமன் மூலம் தூது அனுப்புவதை மனத்தில் கொண்டு திசையை மட்டும் மாற்றிய மைத்து எழுதப்பட்டுள்ளது. தன் கடமையிலிருந்து நழுவிய யட்சன் ஒருவன் தன் தலைவனாகிய குபேர னுடைய சாபத்தினால் ஒரு வருட காலம் மனைவி யிடமிருந்து பிரிக்கப்பட்டு இராமகிரி என்ற காட் டுப் பிரதேசத்தில் இருந்துவருகிறான். சிலமாதங் கள் தனிமையில் கழித்துவிட்டு, மழைக்காலத்தில் மனைவியின் பிரிவைப் பொறுக்க முடியாதவனாக மனைவியும் பிரிவினால் உயிர்துறக்க நேரிடும் என்று பயந்து, அவள் உயிரைக் காப்பாற்றுவதற்காக வடக்குத் திசையை நோக்கிச் செல்கின்ற ஒரு மேகத்தின்மூலம் தூது அனுப்புகின்றான். முதல் சருக்கத்தில் மேகத்தினிடம், இமயமலைக்கு வடக் கில் இருக்கும் அளகாபுரி என்ற தன்னுடைய நாட் டிற்குச் செல்லும் பாதையைக் குறிப்பிடுகின்றான். இரண்டாவது சருக்கத்தில் அளகாபுரியையும், பிரிவி னால் தவிக்கும் மனைவியின் நிலையையும் வரு ணித்துத் தன்னுடைய தூதையும் அனுப்புகின் றான்.

**இருதுசம்காரம்** என்னும் நூல் 144 செய்யுள் கொண்ட 6 சருக்கங்களில் ஆறு காலங்களை வரு ணிப்பதின் மூலம்,காளிதாசனின் இயற்கைவருணனைத் திறனைப் புலப்படுத்துகின்றது.மனிதனையும் இயற்கை யையும் ஒன்றாகப் பிணைத்து எழுதியுள்ள காளி தாசனின் கற்பனைத் திறனுக்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மாளவிகாக்னிமித்ரம் என்னும் நாடகம் அக்னி மித்ரன் என்ற சுங்க வம்சத்து அரசனுக்கும் மாள விகா என்ற அரசகுமாரிக்கும் உள்ள காதலை வரு ணித்து முடிவில் தாரிணி, இராவதி என்ற அவ னுடைய இரண்டு மூத்த மனைவிகளின் சம்மதத்துடன் அவ்விருவரின் திருமணத்தைக் கூறுவது. இது 5 அங் கங்களுடன் கூடியது. அரசனின் நண்பனாகிய மாடவி யன் என்ற விதூடகனின் அறிவுக்கூர்மை சிறப்பாகக் கூறப்படுகின்றது. விக்ரம ஊர்வசீயம் என்னும் நாட கம் மானிட உலக அரசனாகிய புரூரவசிற்கும், தேவ லோக கன்னிகையாகிய ஊர்வசிக்கும் எதிர்பாரா மல் ஏற்படும் காதலையும் பிறகு இந்திரனுடைய சாபத்தினால் ஊர்வசி மானிட உலகில் சிறிதுகாலம் புரூரவசுடன் வாழ்க்கையை நடத்துவதையும், ஐந்து அங்கங்களில் கூறுகிறது. இது மகாபாரதத்தை ஆதாரமாகக் கொண்டது.

**அபிக்ஞான சாகுந்தலம்**: மகாபாரத வன பருவத் தில் உள்ள சகுந்தலோபாக்கியானத்தை ஆதார மாகக் கொண்டு 7 அங்கங்களில் எழுதப்பட்ட உலகப் புகழ் பெற்ற நாடகமாகும். துருவாச முனிவரின் சாபத்தைப் புகுத்தி மிகச் சிறப்பாக எழுதியுள்ளார். அடையாளத் (அபிக்ஞானம்)தின் மூலம் துசியந்தன் சகுந்தலையைத் தன் மனைவி என்று புரிந்து கொள் வதினால் அபிக்ஞான சாகுந்தலம் (அடையாளத்தின் மூலம் அறிந்து கொள்ளப்படும் சகுந்தலை) என்ற பெயரைக் கொடுத்துள்ளார்.

காளிதாசரின் நடை எளியநடை. இவர் உவமை அணியை மிகச் சிறப்பாகத் தம்முடைய எல்லா நூல் களிலும் கையாண்டுள்ளார். ஆகவேதான் 'உவமை யில் சிறந்தவர் காளிதாசன்' என்ற புகழையும் அடைந்துள்ளார். எஸ்.ஜெ.

**காளியமர்த்தனர்**: திருமால் எடுத்த பத்து அவதாரங்களுள் கண்ணன் அவதாரமும் ஒன்று. கண்ணன், காளியன் என்ற பாம்பினை அடக்கியதால் காளியமர்த்தனர் என்று அழைக்கப்படுகிறார்.

காளியமர்த்தனர் கோலத்தில் கண்ணன் காளியன் (காளிங்கன்) என்ற அரவின் மீது நடனமாடுவார். இவர் தன் இடக் கையால் பாம்பின் வாலைப் பிடித்துக் கொண்டு, வலக்கையால் அபய முத்திரை யைப் பெற்றிருப்பார். இடக் காலைச் சிறிது வளைத்துப் பாம்பின் தலையில் உறுதியாக வைத்தும், வலக் காலைச் சிறிது உயரே தூக்கிப் பாம்பினை உதைக்கப் போகும் கோலத்திலும் இருப்பார்.

காளியன் என்ற அரவு யமுனை நதிக்கரையின் அருகில் உள்ள ஒரு குளத்தில் இருந்து கொண்டு, அக் குளத்திற்கு வரும் கோகுலத்துக் கால்நடைகளுக்கும், யாதவர்களுக்கும் துன்பம் தந்து வந்தது. எனவே அப்பாம்பினைக் கண்ணன் அடக்கி விரட்டியதாகப் புராணவரலாறு கூறுகிறது.



காளியமர்த்தனர் சோழர் காலச் செப்புத் திருமேனி

காளியமர்த்தனர் வடிவத்தைச் செப்புத் திருமேனி யாகவும், சிற்ப வடிவத்திலும் காணலாம். பல்லவர் காலம் முதல் பின்னர் வந்த நாயக்க மன்னர் காலம் வரை, கலைச்சிறப்பில் இத்திருவுருவம் ஒரு தனியிடத் தைப் பெற்று விளங்குவதைக் காண்கிறோம்.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலிலும், தரு மராசரதம் என அழைக்கப்படும் ஒற்றைக்கல் கோயிலிலும் காளியமர்த்தனரின் சிற்பங்கள் வடிக்கப் பட்டுள்ளன. சோழ மன்னர்கள் காலத்திலே தான் காளியமர்த்தனரின் செப்புத் திருமேனி வடிவங்களை அதிக அளவில் காணலாம். இத்தகைய அழகான செப்புத் திருமேனி ஒன்று புதுதில்லி தேசிய அருங் காட்சியகத்தில் உள்ளது. ஐந்து தலை அரவின் மீது நின்று கண்ணன் ஆடுகின்றார். ஐந்து தலைக்கு உள்ளே காளியன் மனித உருவில் இறைவனைக் கை கூப்பி வணங்கும் தோற்றத்துடனும் காணப்படுகின் றது.

ஓவியங்களிலும் இவ்வரலாறு சித்திரிக்கப்படு கிறது. தஞ்சை மாவட்டம் திருவீழிமிழலைக் கோயிலில் உள்ள கி.பி. 16-ஆம் நூற்றாண்டு ஓவியத் தில் ஒரு புறத்தில் கண்ணன் தன் இடக்கரத்தால் ஐந்து தலை அரவின் வாலைப் பிடித்து, இடக்காலை அவ்வரவத்தின் மகுடத்தில் ஊன்றி, வலக்காலை மேலே தூக்கி நடனமாடும் காட்சி தீட்டப்பட்டுள்ளது. கண்ணனின் இருபுறமும் உருக்மணியும் சத்யபாமா வும் தத்தம் கரங்களில் தாமரையும் அல்லியும் தாங்கி நிற்கின்றனர். தேவியர்களின் இருபுறமும் சேடிப் பெண்கள் இருவர் பசுங்கொடியைத் தாங்கி நிற்கின்ற னர். இவ்வோவியம்,

'காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு-அவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடஞ்செய்து
மீள அவனுக்கருள் செய்த வித்தகன்'

என்ற பாசுரத்திற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது.

கி.ஸ்ரீ.

**துணைநூல்:**

**Gopinatha Rao, T.A.,** Elements of Hindu Iconography, Indological Book House, Varanasi, 1971.

**காளையார்கோயில்:** இவ்வூர் பசும்பொன் முத்து இராமலிங்கம் மாவட்டத்தில் சிவகங்கை யிலிருந்து 16 கி.மீ. தொலைவில் இருக்கின்றது. இவ் வூர் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்க் 'கானப் பேரூர்' என்னும் பெயர் பெற்றிருந்தது. அக்காலத் தில் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகக் 'கானல் நாடு' விளங்கியது. கானல் நாட்டிற்குத் தலைநகர மாக இவ்வூர் அமைந்ததால் கானப்பேரூர் என்னும் பெயர் பெற்றது. இக்கானல் நாட்டின் காவற்படை அமைந்த இடமே 'கானல் நாடு காத்தான்' என்னும் ஊராக விளங்குகின்றது.

இந்த நாட்டைச் சங்க காலத்தில் ஆண்ட மன்னன் வேங்கை மார்பன். இங்கிருந்த எயில் (கோட்டை) கானப்பேரெயில் என்பதாகும். இவ் வெயிலை வென்றமையால் 'கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி' என்ற பெயரை உக்கிரப் பெரு வழுதி என்னும் பாண்டியன் பெற்ற வரலாற்றை ஐயூர் மூலங்கிழார் பாடிய புறநானூற்றுப் பாடலால் அறியலாம். இக்கானப் பேரெயிலின் சுவடுகளை இப் பொழுதும் காணலாம். இப்பகுதியை மக்கள் இப்

பொழுது பாண்டியன் கோட்டை என வழங்கு கின்றனர்.

இவ்வூர் கி.பி. 7, 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் சைவ சமய குரவர்களால் திருக்கானப்பேர் என வழங்கலாயிற்று. திருஞானசம்பந்தர் இவ்வூரிலுள்ள யானைமடு என்னும் திருக்குளம் குறித்துக் குறிப்பா கப் பாடுகின்றார். திருச்சுழியிலிருந்து இறைவன் சுந்தரருக்குக் கனவில் காளை வடிவத்துடன் (இளமை) காட்சியளித்தமையால் சுந்தரர் 'கானப்பேருறை காளையே' எனப் பாடினார்.

சுந்தரர் காலத்திலிருந்து கோவிலுக்குக் காளை யார் கோவில் என்ற பெயரும் ஊருக்குத் திருக்கானப் பேருர் எனப் பெயரும் வழங்கலாயிற்று.

இராசராசன் தான் கட்டிய பெருவுடையார் கோவிலுக்குச் சீகாரியக் கண்காணி நாயகமாக கானப் பேருர் கூற்றத்தைச் சார்ந்த 'மாலரிகோசன்' என்ப வரை நியமித்திருந்தார். இலங்கை மகாவமிசத்திலும் இவ்வூர் இடம்பெறுகின்றது.

இவ்வூர் கல்லாடதேவர், கபிலதேவர், பரண தேவர், சேக்கிழார், பெரும்பற்றப் புலியூர் நம்பி உமாபதி சிவாச்சாரியார், அருணகிரியார், இராமலிங் கர் உள்ளிட்ட பெருமக்களால் பாராட்டப்பெற்றது.

மாலிக்காபூர் சீரங்கத்தின் மீது படையெடுத்த போது இரங்கநாதரையும் நாச்சியாரையும் பிள்ளை லோகாச்சாரியர் இவ்வூருக்குக் கொண்டு வந்து, பின்பு கலவரம் நீங்கியபின் விசயதளகர்த்தரான கோபன்னா என்னும் வேதியர் மீண்டும் திருவரங்கத்திற்குக் கொண்டு சென்றார். பொய்யாமொழிப்புலவர், கமலைஞானப்பிரகாசர் உள்ளிட்டோரும் இத்தலத் திற்கு வந்து சிறப்புற்றனர். திருவாரூரில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அகோர மாதவர் என்னும் பெரியாரால் இவ்வூரைக் குறித்த 'காளை நாயகர் புராணம்' என்னும் நூல் இயற்றப்பெற்றது.

கோயிலின் பெயரே கி.பி. 17-ஆம் நூற்றாண்டி லிருந்து ஊருக்கு அமைந்து, காளையார் கோயிலென வழங்கி வருகின்றது. பாண்டியர் காலத்தில் இத்திருக் கோவிலுக்குச் சிறிய கோபுரம் அமைக்கப்பெற்றது. பெரியமருது, சின்னமருது என வழங்கிய மருது சகோதரர்களால் பெரிய கோபுரம் அமைக்கப்பெற் றது.

மருது சகோதரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்து, பிறரது வஞ்சனையால் தோற்கடிக்கப்பட்டுத் தலை மறைவாய் இருந்திருக்கின்றார்கள். இதைக்கண்ட ஆங்கிலத் தளகர்த்தன் அக்கினியூ, இன்றைக்குப் பத்தாவது நாள் இந்தப் பெரிய மருது வந்து அடி பணியாவிட்டால் இவர் கட்டிய கோபுரம் தரைமட்ட மாக்கப்படும் என்று எங்கணும் தெரிவிக்கச் செய் தான். கட்டிய கோபுரம் தரைமட்டமாக்கப்படுவதை விடத் தன் தலையையே கொடுப்பதுதான் சரி என்று சரண் அடைந்தான் மாவீரன் மருது. சு.சு.


**கான், அக்கீம் அசுமல்:** கி.பி. 1865 முதல் 1927 வரை வாழ்ந்த ஒரு இந்திய தேசியவாதி. முகம் மதிய மதத்தினராயினும் அகில இந்திய காங்கிரசு மகா சபையின் வளர்ச்சிக்குப் பேருதவியாய் இருந் தார். அந்த இயக்கத்தில் ஈடுபாடுடையவரான அக் கீம் அசுமல் கான் (Hakkim Ajmal Khan) அகமதா பாத்தில் நடந்த 36-ஆவது காங்கிரசு மாநாட்டின் தலைவராகப் பணிபுரிந்தார். மா.கா.

**கான் கானன் அப்துல்ரகீம் (கி.பி. 1556 -1627):** அப்துல்ரகீம் மொகலாய மாமன்னன் அக்ப ரின் அரசியல் ஆசானான பைராம்கான் என்பவரின் மகன். இவர் தந்தை கி.பி. 1561-ஆம் ஆண்டில் இறந்தபொழுது நான்கு வயதுச் சிறுவனாக இருந்த அப்துல்ரகீமை, அக்பர் தாமே வளர்த்துக் கல்வி கேள் விகளிலும், போர்ப் பயிற்சியிலும் வல்லுநராக ஆக்கி னார். அப்துல்ரகீம் வெகு விரைவில் அக்பரது அவை யில் மிக உயர்ந்த நிலையை அடைந்தார். துருக்கிய மொழியில் பாபரால் எழுதப்பட்ட அவரது தன் வரலாறான 'பாபர் நாமாவை' அக்பரின் ஆணைக்கு இணங்க இவர் பாரசீக மொழியில் மொழி பெயர்த் தார். அறிவிற் சிறந்த அப்துல்ரகீம் பேராற்றல் மிக்கவராகவுமிருந்தார். குசராத்து, சிந்து, தக்கா ணம், முதலிய பகுதிகளை வென்று, பகைவர்களை ஒடுக்கி அமைதியை நிலைநாட்டினார்; சிறிது காலம் இவர் குசராத்தின் ஆளுநராகவுமிருந்தார். பேரரசர் அக்பர் இவர்தம் அறிவையும் ஆற்றலையும் மெச்சி இவருக்குக் கான் ஈகான் அல்லது பெரும் தலைவர் என்ற விருதை வழங்கினார்; தம் மூன்றாம் மகன் தனியால் (Daniyal) என்பவருக்கு அப்துல் ரகீமுடைய மகளைத் திருமணம் செய்து வைத்தார். அக்பரின் காலத்திற்குப் பிறகு அவர் மகன் சகாங்கீரின் ஆட்சிக் காலத்திலும் அப்துல்ரகீம் சிறப்புடனிருந்தார். ஆனால் சகாங்கீருக்கும் அவர் மகன் குர்ரம் (சாச கான்) என்பவருக்குமிடையே வழக்கு ஏற்பட்ட பொழுது அப்துல்ரகீம் குர்ரத்தை ஆதரித்துச் சகாங் கீரின் நன்மதிப்பை இழந்தார். இவரைப் பற்றிக் குறிப்பிடும் வின்செண்டு சுமித்து என்ற வரலாற்று ஆசிரியர், இவரை உரோமானிய அரசர் அகசுடசு (Agustus) காலத்தில் அவரது அவையில், செல்வமும்

செல்வாக்கும் பெற்று விளங்கிய மாசினாசுடன் (Malcenas) ஒப்பிடுகிறார். மு.அ.

**கான்சாசு** அமெரிக்காவின் நடுப்பகுதியில் உள்ள ஒரு மாநிலம். இதன் தலைநகரம் தோபெகா (Topeka). கான்சாசுக்கு (Kansas) வடக்கில் நெப்ராசுகாவும், கிழக்கில் மிசாவுரியும், தெற்கில் ஒக்லகாமாவும், மேற்கில் கொலராடோவும் எல்லைகளாக உள்ளன. இம்மாநிலம் செழிப்பான சமவெளிப்பகுதியாகவும் உயர்தரமான கோதுமை உற்பத்தி செய்யுமிடமாகவும் உள்ளது. கான்சாசு ஆறும் ஆர்கான்சு ஆறும் மேற்கிலிருந்து கிழக்குத் திக்கில் ஓடுகின்றன. கோடையில் மிகவும் வெப்பமாகவும் குளிர்காலத்தில் மிகவும் குளிராகவும், கான்சாசின் தட்பவெப்ப நிலை அமைந்துள்ளது. ஆறுகளில் வெள்ளங்கள் ஏற்படுவதுமுண்டு. இம்மாநிலம் 105 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கோதுமையுடன் சோள வகைப் பயிரும் இம்மாநிலத்தின் முக்கிய விளைபொருள்கள். ஆடுமாடுகள் வளர்த்தல், இறைச்சி பதனிடுதல், பால்பண்ணைகள் அமைத்தல் முதலிய பல தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. உணவு வகைகள் பதனஞ் செய்வதில் இம்மாநிலம் மிகவும் பெயர் பெற்றது. இரசாயனப் பொருள்கள், வானவூர்திப் பகுதிகள் பாறை எண்ணெய் (Petrol), நிலக்கரிப் பொருள்கள், இயந்திர சாமான்கள், எரிவாய்வு முதலியன பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**வரலாறு**: ஐரோப்பியரின் வருகைக்கு முன்பு பல செவ்விந்தியக் கூட்டத்தினர் இங்கே வாழ்ந்தனர். கான்சா கூட்டத்தினர் அவர்களுள் ஒரு பிரிவினர். முதன் முதலாக இப்பகுதிக்கு வந்த ஐரோப்பியன், கொரனாடோ என்னும் இசுபெயின் நாட்டு ஆய்வுப் பயணியாவான். கி.பி.18-ஆம்நூற்றாண்டில் பிரெஞ்சு வணிகர்கள் கான்சாசு மாநிலத்தில் இந்தியர்களுடன் வாணிக உறவு கொண்டிருந்தனர். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே நடந்த ஏழாண்டுப் போர், 1763-இல் முடிவுற்றபின், பிரான்சுதனக்குச் சொந்தமாக இருந்த மேற்கு உலுசியானாவை (அதில் கான்சாசு உட்பட்டது) இசுபெயினுக்கு வழங்க நேரிட்டது. கி.பி. 1800-இல், இசுபெயின், பிரான்சுக்கே அதை மீண்டும் இரகசியமாகத்திருப்பிக் கொடுக்கவே, அமெரிக்கா, கி.பி.1803-இல் அதைப்பிரான்சிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டது. அக்காலத்தில் கான்சாசுப் பகுதியில் மக்கள் வாழ இயலுமா என்ற ஐயம் நிலவியது. அத்தகைய பகுதியில், பிற்காலத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டமைக்கு அமெரிக்கர் காரணம். அது செவ்விந்தியர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு மண்டல ஆட்சிப் பிரிவாக அமைக்கப்பட்டிருந்தது. உள்நாட்டினரின் பாதுகாப்புக்காக எல்லைகளில் கோட்டைகள் கட்டப்பெற்றன. கான்சாசு அமெரிக்க 'முழு உரிமை பெறாத மண்டல ஆட்சிப்பிரிவு' (American Territory) என்று சட்டபூர்வமாக அறிவிக்கப் பெற்றது. அக்காலத்தில்




கான்சாசு

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அடிமை முறை ஒழிப்பு ஒரு பெரும் சிக்கலாக இருந்து வந்தது. புதிதாக அமெரிக்காவில் இணையும் நிலப்பகுதிகளில் அடிமை முறை இருப்பதா, இல்லையா என்ற வாக்குவாதம் தொடர்ந்து நீடித்து வந்தது. அந்தச் சிக்கலை அந்த அந்த மாநில மக்களே முடிவு செய்துகொள்ள வேண்டுமென்ற கருத்துப் பரவியதால், கான்சாசுப் பகுதியில் பெருவாரியாக மக்கள் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் குடிபுகலாயினர். அடிமை ஒழிப் பாளர்களும் அடிமை விரும்பிகளும் தத்தம் கொள்கை வெற்றிக்காகத் தங்கள் ஆதரவாளர்களை அங்கே கட்டாயமாகக் குடிபுகச் செய்தனர். இதனால், இரு சாராருக்குமிடையே பெரும் போராட்டம் விளைந் தது; கொலைகள் நிகழ்ந்தன; குருதி ஓடியது. 'குருதி வடிப்புக் கான்சாசு' என்ற பெயர் அப்பகுதிக்கு ஏற் பட்டது. கான்சாசின் சிறப்புற்ற நகரான இலாரன் சில் (Lawrence) அடிமை விரும்பிகள் சூறையாடினர். அடிமை ஒழிப்புக் கட்சித் தலைவர் சான் பிரவுன் (John Brown) அடிமை விரும்பிகள் ஐவரைக் கொன் றார். போராட்டம் வலிமையுற்றது. போதுமான மக்கள் தொகை இருந்ததால் கி.பி. 1861-இல் கான் சாசு ஓர் அமெரிக்க மாநிலமாக அறிவிக்கப்பட்டது. தோபேகா அதன் தலைநகராக்கப்பட்டது. உள் நாட்டுப் போரில் கான்சாசு வடமாநிலங்களுடன் இணைந்து அடிமை ஒழிப்புக்காகப் போரிட்டது. அத னால். அளவற்ற கொலைகள் அங்கு நடந்தன. மற்றப் பகுதிகளை விட அதிகமான அளவுக்குத் துய ருற்ற மாநிலம் கான்சாசு.



விசிதா நகரம்

போருக்குப் பிறகு கான்சாசில் அமைதிப் பணி மிக விரைவில் முன்னேறியது. இருப்புப் பாதைகள் போடப்பட்டன. அனைத்துத் துறைகளிலும், அங்கு வளர்ச்சி மிளிர்ந்தது. புதிய முறை வேளாண்மை பெருகியது. சிறிது சிறிதாகப் பல்வேறு தொழில்கள் செழிப்புற்றன. பல கல்வி நிலையங்கள் நிறுவப் பெற்றன. முக்கியமாக, தோபெகாவின் வாசுபர்ன் (Washburn) பல்கலைக்கழகமும், விசிதாவில்(Wichita) விசிதா அரசுப் பல்கலைக்கழகமும், இலாரன்சில் கான்சாசுப் பல்கலைக்கழகமும், மான்காட்டனில் (Manhattan) கான்சாசு அரசுப் பல்கலைக்கழகமும் புகழ்வாய்ந்தவை.

**கான்சாசு நகரம்[1]** கான்சாசு மாநிலத்தின் வட கிழக்கில் உள்ளது. மக்கள் தொகை 166,800 (1978).



கான்சாசு நகரம்

**கான்சாசு நகரம்[2]** மிசாவுரி மாநிலத்தின் வட மேற்கில் உள்ளது. மக்கள்தொகை, 454000. (1798). இவ்விரண்டு நகரங்களும் தொழில், கலை வளர்ச்சி, வேளாண்மை முதலியவற்றுக்குப் பெயர் போனவை.

தெ.பா.

**கான்சாசு ஆறு** அமெரிக்காவில் கான்சாசு மாநிலத்தின் வடகிழக்கில் ஓடுகிறது. இதன் நீளம் 273.5 கி.மீ. இது கான்சாசு நகரில் (Kansas) மிசா வுரி ஆற்றுடன் கலக்கிறது. இவ்வாற்றில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு. இதனால் விளை யும் சேதங்களும் மிகுதி.

தெ.பா.

**கான்சு** சீனாவின் வடமேற்கில் உள்ள ஒரு மாநிலம். இது வடக்கில் மங்கோலிய மக்கள் குடியரசினால் சூழப்பட்டுள்ளது. இதன் முக்கிய நகரமான இலான் சூ (Lan Chou) மாநிலத் தலைநகராக விளங்குகிறது. இங்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு முகம்மதியரின் செல்வாக்கு ஏற்பட்டது. அடிக்கடி அவர்கள் நிகழ்த்திய போர்களின் விளைவாகக் கான்சுவின் (Kansu) எல்லைகள் அடிக்கடி மாறுதல்களுக்கு உட்பட்டன. சீனாவின் ஆட்சிக்கு உட்பட்ட இப்பகுதியின் இன்றையபரப்பு 1,37,104 சதுர மைல்கள். இங்குக் கிடைக்கும் முக்கிய பொருள்களாவன:- நிலக்கரி, உப்பு, சோடா, இரும்பு, தங்கம், செம்பு, எண்ணெய் முதலியன. எண்ணெய்ச் சுத்திகரிப்பு வேலையும் இங்கு நடைபெறுகிறது. இங்கு 1939-ஆம் ஆண்டு முதல் எண்ணெய் உற்பத்தி மிகுதியாக்கப் பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் சீனாவுக்குத் தேவைப்பட்ட எண்ணெய் வகைகள் இப்பகுதியிலிருந்துதான் அனுப்பப்பெற்றன. பொது உடைமைக் கட்சியினரின் முயற்சிகள் கான்சுவின் எண்ணெய் வளப் பெருக்கத்திற்கு முக்கிய காரணமாகும். மக்கள்தொகையில் பெரும்பான்மையினர் சீனர்கள். சிறுபான்மையினருள் குறிப்பிடத்தக்கவர்கள் சீன முசுலிம்கள், திபெத்தியர், மங்கோலியர், காசக்கியர் முதலியோராவர். சிறுபான்மையினர் ஓரளவு உள்நாட்டுச் சுதந்திரத்துடன் பல ஆட்சிப் பிரிவுகளைப் பெற்றுச் சீனப் பொதுவுடைமை ஆட்சிக்கு உட்பட்டு வாழ்கின்றனர். மக்கள்தொகை 12,928,102 (1958). தெ.பா.

**கான்சுடண்டைன்**: பேரரசர் முதலாம் கான்சுடண்டைன் கி.பி. நான்காம் நூற்றாண்டில் உரோமப் பேரரசை ஆண்ட மன்னர். கிறித்தவ சமயத்தைத் தழுவிய முதல் உரோமப் பேரரசர் இவரே. இவருடைய ஆட்சியின்போது கிறித்தவர்களுக்கு வழிபாட்டு உரிமைகளும் கிறித்தவ தேவாலயத்துக்கு அங்கீகாரமும் தரப்பட்டன.

நைசா என்னுமிடத்தில் கி.பி. 280-ஆம் ஆண்டில் கான்சன்டியசு என்னும் பேரரசரின் மகனாகக் கான்சுடண்டைன் பிறந்தார். தந்தையின் மரணத்துக்குப் பிறகுகி.பி.306-இல் கான்சுடண்டைன் பேரரசரானார். கி.பி. 312-ஆம் ஆண்டில் மேக்சென்டியசு என்னும் மன்னருடன் கான்சுடண்டைன் போர்புரிந்த போது சிலுவைச் சின்னத்தின்கீழ்ப் போரிட்டால் அவருக்கு வெற்றி கிட்டுமென விண்ணொலி ஒன்று கூற, அவ்வாறே போரிட்டுக் கான்சுடண்டைன் வென்றார். அவ்வெற்றியின் நினைவாக கி.பி. 315-இல் உரோமாபுரியில் கான்சுடண்டைன் வளைவைக் கட்டினார். அதன் பிறகு கான்சுடண்டைன் கத்தோலிக்க சமயத்தின் தீவிர ஆதரவாளர் ஆனார்.

கி.பி. 313-ஆம் ஆண்டில் கான்சுடண்டைனும் இலிசினியசு என்னும் பேரரசரும் மிலான் என்னுமிடத்தில் சந்தித்து அனைத்துச் சமயத்தினருக்கும் வழிபாட்டு உரிமைகளையும் சமத்துவ உரிமைகளையும் வழங்கினர். கான்சுடண்டைனும் இலிசினியசும் இணைந்து உரோமப் பேரரசை ஆண்டனர். கி.பி. 324-ஆம் ஆண்டு முதல் கான்சுடண்டைன் உரோமப் பேரரசைத் தனித்து ஆளத் தொடங்கினார்.

பைசான்டியம் (Byzantium) என்னும் நகரைக் கான்சுடண்டைன் புதுப்பித்து அதை கி.பி. 330-இல் உரோமப் பேரரசின் தலைநகராக்கினார். அந்நகர் கான்சுடாண்டிநோபிள் என வழங்கப்பட்டது. அந்நகரே இந்நாளைய துருக்கியில் முக்கிய நகராக விளங்கும் இசுதான்புல் ஆகும். அந்நகரில் பல புதிய கட்டிடங்களையும், தேவாலயங்களையும் கான்சுடண்டைன் கட்டுவித்தார். கான்சுடாண்டிநோபிள் உரோமப் பேரரசின் மையமாகவும் நிரந்தரத் தலைநகராகவும் மாறியது. உரோமாபுரி, சிரியா எருசலேம் ஆகிய இடங்களிலும் பல புதிய தேவாலயங்களைக் கான்சுடண்டைன் கட்டுவித்தார்.

கிறித்தவ சமயத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட பேரரசர் கான்சுடண்டைன் தன் வெற்றிகள் அனைத்துக்கும் கிறித்தவ சமயமே காரணம் என நம்பினார். கி.பி. 325-ஆம் ஆண்டில் நைசியா (Nicaea) என்னுமிடத்தில் ஒருசி சமயச் சபையைக் கான்சுடன்டைன் கட்டினார். அச்சபையில் கிறித்தவ சமயக் கோட்பாடுகள் நிறுவப்பட்டன. கான்சுடண்டைன் கிறித்தவ சமயத்தைப் பேரரசின் சமயங்களுள் ஒன்றாக அனுமதித்தார். இவர் கி.பி. 337-ஆம் ஆண்டு மறைந்தார். வை.ப.

**கான்சுடண்டைன் கொடை**: கிழக்குப்பகுதி உரோமானியப் பேரரசராகிய கான்சுடண்டைன் என்பவர் தம் பகைவரை வென்று உரோம் நகரத்துக்கு வந்த ஆண்டாகிய கி.பி. 313-இல், அங்கு முன்னரே பண்டைய உரோமானியப் பேரரசர்களுடைய உடைமையாக இருந்து வந்த இலேட்டரன் நிலப்பகுதியை (Lateran), உரோம் நகரத்தின் ஆயராக இருந்தவருக்கு (Bishop of Rome or Pope) ஒரு கிறித்தவக் கோயில் கட்டுதற்கு நன்கொடையாக வழங்கினார். அது கான்சுடண்டைன் கொடை (Donation of Constantine) என்று கூறப்படுகிறது. கான்சுடண்டைன் கொடை என்ற கருத்து, பேரரசர் கான்சுடண்டைன் பேரரசரின் ஆட்சி (Imperial Power) அதிகாரம் அனைத்தையும் போப்பிற்கே கொடையாக அளித்து விட்டாரென்று

பொருள்படுமாறு விளக்கப்பட்டு, இவ்வாறு போலியாக ஒரு பத்திரம் எழுதப்பட்டு கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் போப்பின் தனிச்சிறு கோயிலில் வைக்கப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்டதன் நோக்கம் அக்காலத்தில் இத்தாலி நாட்டில் போப்புக்கு ஆளும் உரிமைகள் உண்டென்று ஆதாரம் காட்டுதலே ஆகும்.

உரோமானியப் பேரரசர்களுள் கிறித்தவ சமயத்தை ஏற்ற முதல் உரோமானியப் பேரரசரும், கிறித்தவ சமயத்தையே உரோமானியப் பேரரசின் ஆட்சி நிலைச் சமயமாகத் தம் ஆணையின் வாயிலாக ஆக்கியவரும், மேலைநாட்டு இடைக்காலக் கிறித்தவ நாகரிகம் உருவாவதற்கு அடித்தளம் அமைத்தவருமான பேரரசர் கான்சுடண்டைன் ஏறக்குறைய கி.பி. 280-இல் ஊகோசுலேவியா நாட்டில் நயிசசு (Naissus) அல்லது நிசு (Nis) என்னும் ஊரில் பிளேவியசு வலீரியசு கான்சுடான்சியசு (Flairus Valerius Constantius) என்ற இராணுவ அதிகாரிக்கும் எலினா (Helene) என்பாருக்கும் பிறந்தாரென்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இளமையில் இவர் பல படையெழுச்சிகளில் வெற்றியாகப் பங்கு கொண்டார். மேற்பகுதி உரோமானியப்பேரரசரின் சார்பாளராக இவர் கிழக்குப்பகுதி மாகாணங்களில் கல்வி பயின்று, இலத்தீனிலும் கிரேக்கத்திலும் கிறித்தவ சமயக் கருத்துகளை விளக்கி உரையாற்றி, அந்நெறியைப் பரப்புதலில் பேரார்வம் கொண்டார்.

கிறித்தவத் திருச்சபைக் குருமார்களை அவர்களுக்குரிய பதவிச் சின்னங்களோடு பதவியிலமர்த்துதல் போப்பின் உரிமை ஆகும் என்று கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் போப்பு ஏழாம் கிரிகரியும், போப்பின் ஆதரவாளரும் கூற, பேரரசர் நான்காம் என்றியும், பேரரசரின் ஆதரவாளரும் அதை எதிர்த்தனர். அதிலிருந்து போப்பினுடைய ஆன்மிக அதிகாரம் உயர்ந்ததா, பேரரசரின் அரசியலதிகாரம் உயர்ந்ததா என்ற கேள்விகளும் எழுந்தன. செருமனியிலுள்ள ஆக்சுபர்க்கு நகரத்தைச் சேர்ந்த ஒனோரியசு (Honorius of Augsburg) என்பவரே. கி.பி. 1123-இல் தம் நூல் ஒன்றில் போப்பின் ஆன்மிக அதிகாரமே உயர்ந்த தென்றும், உலகியல் அல்லது அரசியலதிகாரம் (Temporal Authority) ஆன்மிக அதிகாரத்தினின்று தோன்றியதென்றும் முதன் முதலில் கூறியவராவர். அதற்கு அவர் தரும் சான்றுகள் இரண்டு; சால் (Saul) என்ற யூதர் சாமுவல் (Samuel) என்ற சமய குருவினால் அரசராக முடிசூட்டப்பட்ட முதல் அரசரென்றும், சாலுக்கு முற்பட்ட காலத்தில் அரச அதிகாரம் இல்லை என்றும், மோசசின் காலத்திலிருந்து (Moses) யூதர்கள் குருமார்களால்தான் ஆளப்பட்டனரென்றும் கூறும் யூதர் வரலாற்றிலிருந்து கிடைக்கும் செய்திக்குக் கொடுக்கப்படும் விளக்கம் ஒரு சான்று. கான்சுடண்டைன் கொடை என்பது இரண்டாம் சான்று. ஒனோரியசு 'கான்சுடன்டைன் கொடை' என்ற சான்றை விளக்கும்போது கிறித்துதான் திருச்சபையில் குருமார் அதிகாரத்தை நிறுவினாரென்றும், உரோமானியப் பேரரசர் கான்சுடண்டைன் கிறித்தவராகச் சமய மாற்றம் செய்யப்படுதற்கு முற்பட்ட காலத்தில் உலகில் கிறித்தவ அரசரே இல்லை என்றும், ஆகையால், கிறித்தவத் திருச்சபைதான் தன்னைத் தன் பகைவர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுக் கிறித்தவ அரச பதவியைத் தொடங்கி வைத்ததென்றும், பேரரசர் கான்சுடண்டைன்தாம் நடு இத்தாலியின் நிலப்பகுதிகளைப்போப்புக்கு கி.பி. 313-இல் கொடையாக வழங்கிய செயலுக்கு, அவர் தமது உலகியல் - அரசியலதிகாரங்களையெல்லாம் போப்பிடத்திலேயே ஒப்படைத்துவிட்டார் என்றுதான் பொருளென்றும், ஆகையால் பேரரசர் கான்சுடண்டைனிடமிருந்து பிற்காலத்தில் வந்த உரோமானியப் பேரரசர்களெல்லாம் போப்பினுடைய இசைவின் பேரில்தான் தங்களுடைய பேரரசதிகாரங்களையெல்லாம் கையாண்டு வருகிறார்களென்றும், ஆகையால் பேரரசர்களைச் சிற்றரசர்களுடைய ஒப்புதலின் பேரில் போப்புதான் தேர்ந்தெடுத்தல் வேண்டுமென்றும் நீண்ட விளக்கம் கொடுத்தார். ஒனோரியசு போப்புக்குப் பேரரசரின் அதிகாரம் முழுவதும் மாற்றப்பட்டது என்று தரும் விளக்கமானது, கொடைச் செயலைக் குறிப்பிடும் பத்திரத்தின் பொருளைப் புதிய முறையில் கூறுவதாகுமென்றும், பத்திரச் செய்தியைத் தவறாக அறிந்து கொண்ட செயல்என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். மேலும் போப்பின் உலகியலதிகாரம் பேரரசர் கான்சுடண்டைனிடமிருந்து கொடையாகப் பெறப்பட்டது என்னும் ஒனோரியசின் கருத்து போப்புக்கு எதிராகவும் கூறப்பட இடம் தருகிறது. எவ்வாறெனில், போப்பினுடைய அரசியலதிகாரம் அவருக்கு வழங்கப்பட்ட ஒன்று எனில், பேரரசர் தம் மாலளிக்கப்பட்ட அதிகாரத்தைக் தாம் திரும்பப் பெற்றுக் கொள்ளுதலும் கூடும்.

தம் 'முடியாட்சி' என்ற நூலில் கி.பி.14 -ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலியக் கவிஞர் தாந்தே கிறித்தவ விவிலிய நூலே திருச்சபைக்கும் மேற்பட்ட அதிகாரி என்றும், அதற்கடுத்தபடியான ஆற்றலுடையவை திருச்சபை மன்றங்களென்றும், கூறினார். பின்னர்த் திருச்சபைக்கு உலகியலரசர்களின் மீதுள்ள அதிகாரத்துக்கு விவிலிய நூலிலிருந்து காட்டப்படும் சான்றுகளையும், உலகியல் வரலாற்றில் கூறப்படும் கான்சுடண்டைன் கொடையையும்,

பேரரசைச் சார்லமேக்கு(Charlemagne) மாற்றப்பட்ட நிகழ்ச்சியையும் ஆராய்ந்தார். அவருடைய கருத்தின் படி கான்சுடண்டைன் தன் பேரரசை மாற்றியது சட்டத்துக்கு மாறானதென்றும், தன் பேரரசை வேறொருவருக்கு அளித்தற்குப் பேரரசருக்குச் சட்டப்படி அதிகாரம் இல்லை என்றும் கூறினார். அதே கருத்தையே எல்லாச் சட்ட அறிஞர்களும் கொண்டிருந்தனர். பிற்பட்ட காலத்தில் போப்புக்குக் கான்சுடண்டைன் பேரரசதிகாரம் முழுவதையும் மாற்றினாரென்று கூறும் பத்திரம் பொய்யென்று கூறப்பட்டது. இவ்வாறு தம் அதிகாரத்தை வேறொருவருக்கு வழங்குதற்குப் பேரரசருக்குச் சட்டப்படி அதிகாரம் இல்லையென்றால், போப்பினால் பேரரசதிகாரத்தைச் சார்லமேக்கு வழங்குதலும் இயலாது.

எகிடியசு கொலன்னா (Egidius Golonna) என்பவர் கி.பி. 1302–இல் தம் நூலொன்றில், போப்பின் தலைமை அதிகாரமே உயர்ந்ததென்று கூறினார். ஆன்மிக அதிகாரி உலகியலதிகாரியை அமர்த்தவும், அவரைச் சரியான ஆட்சியாளரா என்று தீர்ப்புக் கூறவும் கூடிய தகுதியும் உடையவர். அதற்கு ஆதாரமாகக் கான்சுடண்டைன் கொடையையும், பேரரசைப் போப்பு சார்லமேக்கு அளித்ததையும் குறிப்பிடுகிறார்.

பாரிசைச் சேர்ந்தசான் என்பவர் (John of Paris) தாம் கி.பி. 1302–3–இல் எழுதிய நூலொன்றில் அரசருடைய அதிகாரம் உயர்ந்ததென்று பல சான்றுகளுடன் கூறினார். இதற்காக அவர் விவிலிய நூல், கான்சுடண்டைன் கொடை பற்றிக் கூறும் பத்திரம், போப்பு சார்லமேக்குப் பேரரசை மாற்றியது முதலியவற்றை ஆராய்ந்தார். அவர் கொடை பற்றிய பத்திரத்தை முற்றிலும் மறுத்தார். அதில் கூறப்பட்ட போப்பின் அதிகாரம் இத்தாலியின் சில பகுதிகளுக்கே பொருந்தும்; பேரரசு முழுவதற்கும் மற்ற நாடுகளுக்கும் பொருந்தாது. மேலும் பேரரசர் தம் பேரரசின் எப்பகுதியையும் வேறொருவருக்கு வழங்குதற்குச் சட்டப்படி இயலாது. அவ்வாறு அவர் செய்திருத்தலும் இயலாது. பா.சூ.

**கான்சுடன்சு அவை**: உரோமன் கதோலிக்கத் திருச்சபையின் வரலாற்றில் வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் பலவற்றைக் காணலாம். இத்திருச்சபை கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகியது. அவற்றை ஆராய்ந்து முடிவுகள் எடுக்கக் கான்சுடன்சு (Constance) என்னுமிடத்தில் கூட்டப்பட்ட சபை கான்சுடன்சு அவை எனப்பட்டது. இது கி.பி. 1414–ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகள் நீடித்தது. இவ்வவை கூடிய கான்சுடன்சு நகரம் தென்மேற்குச் செருமனியில் உள்ளது. கத்தோலிக்கத் தலைமைப் பீடத்திலேற்பட்ட பெரிய குழப்பங்களைத் தீர்க்கும் பொறுப்பு இச்சபைக்கு ஏற்பட்டது. போப்பின் பீடத்திற்கு மூன்றுபேர் போட்டியிட்டனர். 23–ஆம் சான், பதின்மூன்றாம் பெனடிக்ட்டு, பன்னிரண்டாம் கிரிகரி ஆகிய மூன்று போப்புகளுக்கிடையே, யார் போப்பாக நிலைபெறுவது என்பது பற்றி ஏற்பட்ட போட்டியில், ஒவ்வொருவருக்கும் சிற்சில ஆதரவாளர்கள் இருந்தனர். ஐரோப்பாக் கண்டமே சமயத்துறையில் நிலைகுலைந்திருந்தது. உரோமானியப் பேரரசர் சிகிசுமண்டும் (Sigismund) போப்பாண்டவர் சானும் மேற்கூறிய அவையில் இடம் பெற்றிருந்தனர். இந்தக் குழப்பத்தை நீக்குவதற்காக, மேற்கூறிய 3 போப்புகளையும் விலக்கிவிட்டு, நான்காவதாக ஒரு போப்பைப் பதவியில் அமர்த்த வேண்டுமென அவை முடிவெடுத்தது. அம்முடிவின்படி, ஐந்தாம் மார்ட்டின் என்பவர் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தெ.பா.

**கான்சுடன்சு ஏரி** ஐரோப்பாக் கண்டத்தில் ஆல்ப்சு மலைத் தொடரின் வடக்கே இரைன் (Rhine) ஆறு ஓடும் வழியில் உள்ளது. ஆசுத்திரியா, சுவிட்சர்லாந்து, செருமனி ஆகிய நாடுகள் இதைச் சுற்றி உள்ளன. இந்த ஏரி 1300 அடி உயரத்தில் இருக்கிறது. இதன் நீர்மட்டம் அடிக்கடி மாறி வருகிறது. இதன் கரையில் பல ஊர்கள் உள்ளன. திராட்சை இப்பகுதியில் மிகுதியாகப் பயிராகிறது. தெ.பா.

**கான்சுடாண்டிநோபிள்** பண்டைய பைசாண்டியப் பேரரசின் (அல்லது) கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகராக கி.பி. 330–இல் உரோமப் பேரரசன் கான்சுடண்டைனால் (காண்க; கான்சுடண்டைன்) நிறுவப் பெற்ற வரலாற்றுப் பெருமை வாய்ந்த நகரம். கான்சுடாண்டிநோபிள், (Constanti nople) இடைக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுப் பைசாண்டியப் பேரரசை நீண்டகாலம் காப்பாற்றி வந்தது. கிறித்தவமையமான இந்நகர் பல தாக்குதல்களுக்குப் பல காலங்களில்உட்பட்டது. இறுதியாக கி.பி. 1453–ஆம் ஆண்டில் உதுமானிய சுல்தான் இரண்டாம் முகம்மது இதைக் கைப்பற்றிக் கொண்டான். அதன் விளைவாக இங்குத் தங்கியிருந்த கலைஞர்களும் இலக்கிய வல்லுநர்களும் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்குப் புகலிடம் நாடிச் சென்றனர். ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குஅந்நிகழ்ச்சி மிகவும் உதவியது. மனத்தைக் கவரும் பல கட்டடங்களை இந்நகரில் காணலாம். முதலாம் உலகப் போருக்குப் பிறகு, இந்நகரம், இங்கிலாந்து

முதலிய நேச நாடுகளின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பெற்றது. சுல்தானிய ஆட்சி 1922-இல் அங்கு முடிவுற்றது. அங்காராநகர் 1923 முதல் துருக்கியின் தலைநகராயிற்று. கான்சுடாண்டிநோபிள் 1930-ஆம் ஆண்டு முதல் இசுத்தான்புல் என்ற புதிய பெயரைப் பெற்றுத் திகழ்கிறது. தெ.பா.

***கான் செப்சியான்*** தென்னமெரிக்காவில் சிலி நாட்டின் நடுப்பகுதியில் உள்ள ஒரு நகரம். இது பீவோ பீவோ (Bio-Bio) ஆற்றின் முகத்துவாரத்தி னருகில் உள்ள தொழில் வளமும் வாணிகச் சிறப்பும் பெற்ற இடம். தால்காவுவானோ (Talcahuano) என் னும் பெரிய துறைமுகம் இந்நகருக்கு வடக்கில் இருக் கிறது. அப்பகுதியின் விளைபொருள்கள் இத்துறை முகத்தின் வழியாகக் கப்பல்களில் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கண்ணாடி, துணி வகைகள், சர்க்கரை, தோல், எஃகு முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரம் கி.பி. 1550-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இது கி.பி. 1554-55 -இல் பகைவர்களின் முற்றுகையின் விளைவாக அழி வுற்றது. பிறகு நிலநடுக்கத்தால் கி.பி. 1570, 1730, 1751, 1835, 1939, 1960 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் அழிவுற்றதுஎனினும் நகரஅமைப்பு மீண்டும், மீண்டும் ஒழுங்கான முறையில் கண்காணிக்கப்படு கிறது. இங்கு ஒரு பல்கலைக்கழகமும், பழமையான திருச்சபையும் உள்ளன.

இப்பெயரையே கொண்ட மற்றொரு நகரம் (கான்செப்சியான்-Concepcion). பராகுவே நாட்டின் வடக்குப் பகுதியில் பராகுவே ஆற்றங்கரையில் உள்ளது. தெ.பா.

***கான்பூர்*** உத்தரப்பிரதேச மாநிலத்தின் மிகப் பெரிய நகரம். இதை இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நகரங்களுள் ஒன்று என்று கூறலாம். ஆனால் ஆங்கிலேயர், கி.பி. 1801-ஆம் ஆண்டில் இதைத் தம் முடன் இணைத்துக் கொள்ளும் பொழுது இது ஒரு சிற்றூராகவே இருந்தது. இதனுடைய இட அமைப் பைக் கருதி, ஆங்கிலேயர் இதை ஒரு பெரிய எல்லைப் புற நகராக வளர்த்துவிட்டனர். இது இப்பொழுது சுற்றியுள்ள கான்பூர் மாவட்டத்தின் தலைநகராகத் திகழ்கிறது. இதற்கு அருகிலுள்ள கங்கை ஆறும், இலக்னோ நகரமும், கான்பூரின் வளர்ச்சிக்குக் காரண மாயின என்றும் கூறலாம். இந்தியப் படையினர் கி.பி. 1857-இல் கலகம் செய்தபோது, கான்பூர் மக்கள் நாட்டுப்பற்றுக் காரணமாக, அவ்வூரில் இருந்த ஆங்கிலேயத் துருப்புக்களைக்கொலை செய்து விட்டனர். சில ஆங்கிலேயரைக் கிணற்றில் தள்ளிக் கொன்றனர். அந்தக் குறிப்பிட்ட இடத்தில் இன்று ஒரு நினைவுச் சின்னம் கட்டப்பட்டிருக்கிறது.

கான்பூர் 260 ச.கி.மீ. பரப்புடையதாய் இன்று, வாணிகத்திலும், தொழில்துறையிலும் மிகவும் சிறப் புப் பெற்று விளங்குகிறது. ஒரு பல்கலைக்கழகமும் பல கல்லூரிகளும் அரிய சேவைகளைப் புரிந்து வரு கின்றன. இங்கு உள்ள 'கண்ணாடிக் கோயில்' முக்கி யத்துவம் வாய்ந்தது. பல கண்காட்சிச் சாலைகளை யும் இங்கே காணலாம். கங்கை ஆற்றுக்கும் யமுனை ஆற்றுக்கும் இடையே உள்ள இந்நகரம், அந்த இரு ஆறுகளின் உபநதிகளால் செழிப்பைப் பெறுகிறது. கோதுமை, கடலைப்பருப்பு, வாற்கோதுமை முதலி யன மிகுதியாக இங்கு விளைகின்றன. மாமரங்களும் அதிகம். கான்பூரில் கி.பி. 6, 7, 8, 9-ஆம் நூற்றாண்டு களில் கட்டப்பெற்ற பல சிறிய கோயில்களும் உண்டு. இங்கு 1.5 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ் கின்றனர். தெ.பா.

***கான்பூர்ப் பல்கலைக்கழகம்***: இது உத்தரப் பிரதேச மாநிறத்திலுள்ள கான்பூர் மாவட்டத்தில் கல்யாண்பூர் (Kalyanpur) என்னுமிடத்தில்1966-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. கல்லூரிகளுக்கு ஒப்பு தலளிக்கும் (Affiliation) பணியை மட்டும் இப்பல் கலைக்கழகம் 1981-ஆம் ஆண்டு வரை செய்து வந் தது. இது 1982-ஆம் ஆண்டிலிருந்துதான் வணிக வியல் கல்வியியல், ஆங்கிலம் ஆகியவற்றில் கற்பித் தல் பணியை எம்.பில். அளவில் மேற்கொண்டுள்ளது. இவற்றில் ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்கான வசதியும் இங்கு உண்டு. இப்பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக (Constituent College) ஒரு மருத்துவக் கல்லூரி உள்ளது.

கான்பூர்ப் பல்கலைக்கழகத்தின் ஆளுகையில் கான்பூர், அலகாபாது, சான்சி (Jhansi), இலக்னோ (Lucknow), பதேப்பூர் (Fatepur), இரேபரலி (Rai-Bareli), சித்தாப்பூர் (Sitapur) போன்ற இடங்களி லுள்ள 70 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இங்குக் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை ஆகியவற்றில் உயர்கல்விப் பட்டங்கள் பெறுவதற்கான வசதிகள் உள்ளன. எஸ்.த.

***கான்யூட்டு***: இங்கிலாந்தின் ஆதி வரலாறு சுவை பொருந்தியது. அவ்வரலாற்றை அணி செய்த பல மன்னர்களுள் கான்யூட்டு (Canute கி.பி. 1016-1035)சிறப்பான ஒருவர். ஐரோப்பாவில் உள்ள தென் மார்க்கு (Denmark) அரசனாக இருந்த இவர் இங்கி லாந்தையும் கைப்பற்ற எண்ணி, எட்மண்டு அயர்ன் சைடு என்ற ஆங்கிலேய மன்னனை, கி.பி. 1016-இல்

அசண்டன் (Assandune) போர்க்களத்தில் தோற்கடித்துவிட்டு, தேனியர் (Danes) ஆட்சியை இங்கிலாந்தில் ஏற்படுத்திய பெருமை இவருக்குரியது. இங்கிலாந்தின் விட்டன் சபை, வேறு வழியின்றிக் கான்யூட்டையே அரசராக ஒப்புக் கொண்டது. இவர் ஆட்சியின் தொடக்கத்தில் பல கொலைகள் நாட்டிலேற்பட்டன. முரட்டுத்தனத்தின் உறைவிடமாக இருந்த கான்யூட்டு காலப்போக்கில் இறை அன்பு கொண்டவராக மாறிக்கிறித்தவ மதத்தில் சேர்ந்து உரோமாபுரிக்குப் புனிதப் பயணத்தையும் மேற்கொண்டார். முன்பு, மடாலயங்களை அழித்து வந்தவர், பிறகு புதிய மடாலயங்களைக் கட்டி மகிழ்ந்தார். அதிமேற்றிராணி அல்பேகா (Alphage) காலமானபோது அவருடைய சடலத்தைப் புனித பவுல் திருச்சபையிலிருந்து சுகண்டர்பரிக்கு எடுத்துச் செல்லும் போது, தானும் உடனிருந்து மரியாதை செலுத்தியதும் குறிப்பிடத்தக்கது. இதே அல்பேகாவை, பதினோரு ஆண்டுகட்டு முன்னர்த் தேனியர்கள் மிகவும் கேவலப்படுத்தியதுடன் சிறையிலும் அடைத்தனர். கான்யூட்டு அதற்கு வருத்தம் தெரிவித்தார். இவர் ஓர் அரச தந்திரி. இங்கிலாந்தில் தமது ஆட்சியை வேரூன்றச் செய்ய, முன்பு ஆங்கிலேய மன்னனாக இருந்த எதெல்ரெட்டின் மனைவி எம்மாவைத் திருமணம் செய்து கொண்டார். இங்கிலாந்து, தென்மார்க்கு ஆகிய நாடுகளின் அரசனாக இருந்த கான்யூட்டு நார்வேயையும் தமது ஆட்சிக்கு உட்படுத்தினார். இவரது ஆட்சியை ஆங்கிலேயர்களும் விரும்பினர். இவர் வலிமை மிக்கவராக இருந்ததுடன் மக்களின் நலத்திலும் கருத்துடையவராக இருந்ததே அதற்குக் காரணமாகும். இங்கிலாந்து, தென்மார்க்கு, நார்வே ஆகிய நாடுகளின் மன்னராக இருந்த கான்யூட்டின் வழிவந்தவர்கள் இவரைப் போலவே ஆற்றல் பெற்றவர்களாக இருந்திருப்பின், இங்கிலாந்தின் வரலாறே வேறு விதமாக அமைந்திருக்கும். ஆனால், அவ்வாறு இல்லை. இவர் இறந்தபின் இவர்தம் மூத்த மகன் சுவெயின் தென்மார்க்கு அரசரானார். மற்ற இரு குமாரர்களான, எரால்டு ஏர்புட்டு (Harold Harefoot), ஆர்டிகான்யூட்டு (Hardi Canute) ஆகியோர் இங்கிலாந்தைத் தமக்கிடையே பங்கு போட்டுக் கொண்டனர். தேனியரின் ஆட்சி இங்கிலாந்தில் சிறிது சிறிதாக வலுவிழந்து அடியோடு முடிவுற்றது. தெ.பா.

**துணை நூல்கள்:**

**Green, J.R.** Conquest of England, (OUP) 1955.

**Larson L.M.**, Canute the great, (OUP) 1955.

**Stenton, F.M**, Anglo-Saxon England, (OUP), 1955.

**Stenton, F.M.** The Danes in England, Oxford, 1927.

**கான்வாப்போர்** (**கி. பி. 1527**): இப்போர் இந்தியாவில் ஆண்ட மொகலாய வம்சத்தின் முதல் அரசரான பாபருக்கும், இராசபுதனத்திலுள்ள மேவார்ப் பகுதியை அரசாண்ட இராசபுத்திர அரசர் இராணா சங்கா என்பவருக்கும் கி. பி. 1527-ஆம் ஆண்டு நடந்தது. இப்போர்க்களம் ஆக்ராவிலிருந்து மேற்கே ஏறத்தாழ நாற்பது மைல் தொலைவில் உள்ளது. தில்லியில் அரசாண்ட சுல்தான் இபுராகீம் உலோடியை கி.பி. 1526-ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிப்பட்டுப் போரில் முறியடித்துக் கொன்று தில்லியைக் கைப்பற்றிய பாபர் அவர்தம் மூதாதையரான தைமூரைப் போன்றே தம் தாய்நாடு திரும்பிவிடுவார் என்று நினைத்த இராணாசங்கா ஏமாற்றமடைந்தார். பாபர் இராசபுத்திர அரசர்களையும் ஒடுக்கி இந்தியாவை அரசாள நினைத்தார். எனவே போர் மூண்டது. இராணாசங்கா ஒரு இராசபுத்திர கூட்டணியை ஏற்படுத்திப் பாபரைக் களத்தில் சந்தித்தார். இப்போரைப் பற்றிப் பாபர் தம் தன்வரலாறாகிய 'பாபர் நாமா'வில் குறிப்பிடுகிறார். பானிப்பட்டுப் போரைவிடக் கான்வாப் போரே தமக்குக் கடுமையானதாக இருந்தது என்றும், இபுராகீம் உலோடியைவிட இராணாசங்காவே தமக்குக் கடுமையான எதிரி என்றும் பாபர் குறிப்பிடுகிறார். இராணாசங்காவைவிடப் பாபரிடம் குறைவான படைவீரர்களிருந்தும் பாபரின் பீரங்கிப்படை பாபர் வெற்றிபெற உதவியது. இப்போர் இராசபுத்திர எதிர்ப்பை நலிவடையச் செய்து பாபர் இந்தியாவில் மொகலாய அரசை ஏற்படுத்தத் துணையாக இருந்தது. மு.அ.

**கானக்கிரி**: மேற்கு ஆப்பிரிக்கக் கடலோரத்திலுள்ள தாம்போ (Tombo) தீவில் உள்ள இத்துறைமுகம் (Conakry) பிரெஞ்சுக் கயானாவின் தலைநகராகவும் விளங்குகிறது. இதனருகே வெப்பமண்டலச் செடிகளை வளர்க்கப்பிரெஞ்சுஅரசு ஒரு ஆராய்ச்சிக் கூடத்தை அமைத்துள்ளது. அட்லாண்டிக்குக் கடலின் ஒரு முக்கிய துறைமுகமாக இது வளர்ந்துள்ளது. இங்கு உள்ள இரும்புக்கனிகள் பெயர் பெற்றவை. பிரெஞ்சுப் படைகள் கி.பி. 1887-இல் இதைக் கைப்பற்றிக் கொண்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகே இதன் வளர்ச்சி மிக விரைவுற்றது.

**கானல்வரி**: சிலப்பதிகாரத்திலுள்ள முப்பது காதைகளுள் ஒன்றாகக் 'கானல்வரி' அமைந்துள்ளது. இந்திர விழாக்காலத்தில் கோவலனும் மாதவியும் புகார்க் கடற்கரைச் சோலையில் பாடிய நெய்தல்

திணைப் பாடல்களின் தொகுப்பு இப்பகுதியில் அமைந்துள்ளது. நாட்டுப்புறவியலில் தொன்மைத் தமிழிசைக் கூறுகளையறிய இதுவும் ஒருவகையில் கருவியாகவுள்ளது.

பண்டைத் தமிழகத்தே வழக்கத்திலிருந்த இசைப் பாடல்களுள் ஒரு வகையைச் சார்ந்தவையே வரிப் பாடல்கள். 'வரிப்பாடலாவது பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒருநெறியன்றி மயங்கச்சொல்லப்பட்ட எட்டனியல்பும், ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும்கெட்டுஇயல்பும் முடமுமாக முடிந்து, கருதப் பட்ட சந்தியும் சார்தலும் பெற்றும் பெறாதும் வரும்'. அதுதான் தெய்வஞ்சுட்டியும் மக்களைப் பழிச்சியும் வரும்' என்று விளக்கங் காண்பார் அரும்பதவுரைகாரர். பலவகை இராகங்களும் பலவகைக் கதைப் பகுதிகளும் கலந்துவரும் கலவையான இசைப்பாட்டே வரிப்பாடல் எனச் சுருங்கக் கூறலாம். ஈண்டுக் கானல் வரி மக்களைச் சுட்டியது.

கானல்வரியினை இளங்கோவடிகள், கானற்பாணி, கடற்கானல் வரிப்பாணி, கானல்வரிப் பாடல் ஆகிய சொற்களால் உணர்த்துகிறார். தமிழ்நாட்டுப் பண் பாட்டில் கிளைத்த கானல்வரியிலே அகத்திணை மரபு ஏதோ வேண்டுமெனப் பாடல்களில் புகுத்தியதுபோல் தோன்றாமல், காப்பியக் கதைப் போக்கிலே எதிர் பாராத வகையில் பின்னிப் பிணைந்துள்ளதெனக் கற்பார்க்குத் தோன்றுமாறு அமைத்துள்ள கவிஞரின் திறம் போற்றுதற்குரியதாகும்.

கோவலன் கவின்கலை வேட்கையினனாக வாழ்ந் தமையின், குலமகள் கண்ணகியிடம் கிடைக்காத கலையின்பச் சுவையை, ஆடல் பாடல் அழகுநிறை கலைநங்கை மாதவியிடம் பெற முற்படுகின்றான். அவனது உள்ளத்தினையுணர்ந்த மாதவியும் அவனுக்கு வேளையுணர்ந்து கலைச் சுவையையும் காதலின்பத்தையும் ஊட்டி வருகிறாள். அந்நிலையில் கூடலுடன் ஊடலும் தவிர்க்கவியலாததாகிறது; சுவையான காப்பிய நிகழ்ச்சியோட்டத்தில் ஊழ்வினையும் சிறந்த பங்கு கொள்ள வேண்டியதாகிறது. இந்தச் சூழலில், மாதவி ஏதோ விளையாட்டாகப் பாடத் தொடங்கிய கானல்வரி வினையாய் முடிகிறது. அது காரணமாகத் தொடர்ச்சியான காப்பிய நிகழ்ச்சிகள் இயைபுடன் அமையச் சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த திருப்பு மையமாகவே கானல்வரி கருதப்படுகிறது. இதனை மக்களுக்கு நன்கு உணர்த்த எண்ணிய இளங்கோவடிகள் மாடலன் வாயிலாக, 'மாதவி மடந்தை, கானற் பாணி கனக விசயர்தம், முடித் தலை நெரித்தது' (நீர்ப்படைக்காதை. 49-51) எனக் கூறிச் செல்கிறார்.

கானல்வரி தொல்காப்பியர் காலத்துக்கு முன்னிருந்து சங்ககாலத்தில் வழங்கி வந்த கவிமரபைப் பின்பற்றிப் பாடுகிறது என்பது தெளிவு' என்பர் டாக்டர் தெ.பொ.மீ. பண்டைக் கால முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றின் பின்புலம் கானல்வரிக்கு நேர்த்தியாக அமைந்துள்ளமை சிந்திக் கத்தக்கது.

கானல்வரிக்கு அமைந்த களம் நெய்தற்பாங்கான கடற்கரைச் சோலையாகும். அதற்குரிய காலமாக எற்பாடு – கதிரவன் மறையும் மாலை – பொருத்தமாக அமைகிறது; அதாவது, கதைப் போக்கில் கானல் வரி பாடப்படும் பொழுது எற்பாடாக அமைகிறது. முதற் பொருளாகிய இடமும் காலமும் நெய்தற் பாங்குடன் அமைதற்கேற்பக் கருப்பொருள்கள் பலவும் நெய்தல் திணையைப் புலப்படுத்துகின்றன. கடல் தெய்வமாகிய வருணனுக்குத் தொடக்கத்தில் கோவலனும் கடைசியில் மாதவியும் பரவுதல் புரிகின்றனர். பரதவர் வாழ்க்கைச் சூழலைச் சித்திரிக்கையில் கானல்வரிக் கருப்பொருட் பின்புலமாகக் கைதை வேலி, கடல், கடல்திரை, கடலருகேயுள்ள கழி, சங்கு, முத்து, ஆம்பல், புன்னை, நீலம், ஞாழல் முதலியவை கூறப்படுகின்றன. உரிப்பொருளாகிய இரங்கலும் இரங்கல் நிமித்தமும் மிகப் பொருத்தமுடன் சித்திரிக் கப்படுகின்றன.

கானல்வரியின் உட்பிரிவுகளாகச் சில வரிப்பாடல்கள் உள்ளன. ஆற்றுவரி, சார்த்துவரி (முகச் சார்த்து), முகமில் வரி, கானல் வரி, நிலைவரி, முரிவரி, திணை நிலைவரி, சாயல்வரி ஆகிய தலைப்புகளில் வரும் இசைப்பாடல்கள் பெரிதும் ஆராய்ச்சிக்குரியவையாகும். ஆற்றுவரி ஒழுகுவண்ணத்தில் அமைகிறது. மக்களைச் சுட்டிய வரிப்பாட்டின் பாற்படும் இதனைக் கோவலனும் பாடுகிறான்; தனக்கு வாய்ப்பு வருகையில் மாதவியும் பாடுகிறாள். கோவலன் பாடிய ஆற்றுவரியானது, பாட்டுக்கு முகமாக நிற்றலின் முக முடைவரி யெனவும் குறிப்பிடப்படுகின்றது. அதனை யடுத்துவரும் சார்த்துவரி என்பது 'பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடும், சார்த்திப் பாடுதல்' ஆகும். சார்த்து என்பதன் வகையாக முகச் சார்த்து முரிச்சார்த்து கொச்சகச் சார்த்து ஆகியவை உண்டு; அவற்றுள் ஈண்டு முகச் சார்த்துப் பாடல்கள் பாடப்பட்டன என்பது நினைவில் கொள்ளத்தகும். அடுத்து, முகமில்வரி என்னும் தலைப்பில் மூன்று பாடல்கள் உள்ளன; முதற் பாடல், 'குறியிடத்துச் சென்ற பாங்கன் தலைமகளது காதன்மிகுதி குறிப்பினான் அறிந்து கூறியது' என்ற துறையில் உள்ளது; அதனையடுத்த இருபாடல்கள் 'கழற்றெதிர்மறை, என்ற துறையில் அமைந்துள்ளன. மேலும் சிறப்பாகக்

கானல்வரி என்றும் இந்த இரு பாடல்களும் கருதப் படுகின்றன. 'இயலிடங்கூறல்' அமைப்பிலே அஃறிணையை உயர்திணை வாய்பாட்டாற் கூறுந் தொல்காப்பிய உத்தி ஈண்டுக் கையாளப்படுகிறது. இதனையடுத்து 'நிலைவரி' காணப்படுகிறது. 'முகமு முரியுந் தன்னொடு முடியும், நிலையை யுடையது நிலையெனப்படும்' எனும் இலக்கணத்திற்கேற்ப அமைந்த மூன்று பாடல்களில், 'தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைமகன் கூறியவை, எனும் அகத்துறையைக் காணலாம். நிலைவரியையடுத்து வரும் முரிவரி யென்பது 'எடுத்த வியலுமிசையுந் தம்மில், முரித்துப் பாடுதன் முரியெனப் படுமே' எனும் இலக்கணங் கொண்டது. மூன்று பாடல்களைக் கொண்ட இப்பகுதியில், 'தலைமகன் பாங்கன் கேட்ப உற்ற துரைத்தவை' எனும் அகத்துறையைக் காணலாம். தொடர்ந்து வருவது 'திணை நிலைவரி' எனப்படும்; 'சாயல்வரி' என்னும் பெயருள்ள இப்பகுதியில் ஏழு பாடல்கள் உள்ளன. அவற்றுள் முதல் மூன்றும் 'புணர்ச்சிநீட இடந்தலைப் பாட்டிற் புணர்தலுறுவான் ஆற்றாமற் கூறியவை' எனும் அகத்துறையிலும், அடுத்த மூன்றும் 'குறியிடத்துக் கண்ட பாங்கன் சொல்லியவை; புணர்ந்து நீங்குவான் விடுத்தலருமையான் ஆற்றானாய்த் தன்னெஞ்சிற்குச் சொல்லியவை' எனும் அகத்துறையிலும், ஏழாம் பாடல், 'காமஞ்சாலா இளமையோள்வயின் ஏமஞ்சாலா இடும்பையெய்தியோன் சொல்லியது' எனும் அகத்துறையிலும் அமைந்துள்ளன. இவ்வாறெல்லாம், கோவலன் வாசித்த உருக்கள் களவில் தலைமகன் கூற்றாக அமைந்தமையால், இவன் தன்மேல் அன்பிலன் என மாதவி (ஊழ்வினையால் பிறழ்ந்து) உட்கொண்டு, புலந்த உள்ளத்தினளாய் அது தோன்றாமல் மனமகிழ்ந்தாள் போலத் தன் பக்கல் வேறு குறிப்பில்லா திருந்தும் வேறு குறிப்புடையாள்போலக் கோவலனுக்குத் தோன்றத் தானும் கானல்வரிப் பாடல் பாடத் தொடங்குகிறாள்; அந்நிலையில் ஆற்றுவரி, சார்த்துவரி, திணைநிலைவரி, மயங்குதிணை நிலைவரி, சாயல்வரி, முகமில்வரி ஆகியவை அவளால் பாடப்படுகின்றன.

மாதவி பாடுஞ் சார்த்துவரியில் முதல்பாடல் 'கையுறை மறை' எனும் அகத்துறையும், அடுத்துவரும் இருபாடல்கள் 'தோழியிற் கூட்டங்கூடிப் பின்பு வாரா வரைவலென்றாற்குத் தோழி கூறியவை' எனும் அகத்துறையும் அமைந்துள்ளன. அடுத்து வருபவை 'திணைநிலைவரி'ப் பாடல்களாக ஆறு உள்ளன; முதல் பாடல் 'அறியேனென்று வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தது' எனுந் துறையும், தொடர்ந்து வரும் ஐந்து பாடல்கள் 'காமமிக்க கழிபடர்கிளவி' எனுந் துறையும் பற்றி அமைந்தவை. அடுத்து வருபவை மயங்குதிணைநிலைவரிப் பாடல்கள்; ஆறு பாடல்களாகவுள்ள அப்பகுதியில் முதல் மூன்றும், 'அலரறிவுறீஇ வரைவு கடாவியவை' என்னுந் துறையையும், அடுத்துள்ள மூன்றும் 'பொழுதுகண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்கு உரைத்தவை' என்னுந் துறையையும் சார்ந்தவை. தொடர்ந்து வரும் 'சாயல் வரி'யைச் சார்ந்த மூன்று பாடல்களும் 'மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்; ஆற்றுவித்தற் பொருட்டுத் தோழி இயற்பழிக்கத் தலைமகள் இயற்பட மொழிந்ததூஉமாம்' எனுந் துறை பற்றியவை. அவற்றைத் தொடர்ந்து 'முகமில்வரி'ப் பாடல்களைப் பாட முற்படுகிறாள் மாதவி; முதற்பாடற்கண் 'காமமிக்க கழிபடர்கிளவி' எனுந் துறையில் குருகை விளித்து 'எம் கானலில் வந்தடையாதே' என்கிறாள். பிறகு ஊழ்வினை பெரிதும் தொழிற்படவே, இளிக்கு ஆறாவதாகிய கைக்கிளையில்–பகை நரம்பில்– தங்கண் மயக்கத்தாலே கைசென்று தடவ முகமில் வரியைத் தொடர்ந்து பாடிக் கொண்டே யாழ் வாசிக்கிறாள்; அவ்வேளையில் முதல் மூன்று பாடல்கள் 'மாலைப் பொழுதுகண்டு தலைவி கூறியவை' எனுந் துறையிலும், கடைப்பாடல், 'வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாகக் கூறியது' எனுந் துறையிலும் அமைகின்றன. அவை இரங்கற் குறிப்புடைய விளரிப் பண்ணில் அமைகின்றன. அக்கடைசிப் பாடலிலே, பூமணங் கமழ்கின்ற கடற்கரைச் சோலையில் முதற்கண் தன்னைக் கூடிக் கலந்தபோது, 'நின்னைப் பிரியேன்; பிரியினுந் தரியேன்' என்று தன் தலைவன் கூறிய சூள் பொய்த்துவிட்டதாகவும், அது காரணமாக மாக்கடல் தெய்வம் சினங்கொள்ளாமல் பொறுத்தருள வேண்டுமென்பதாகவும் குறிப்பிடுகிறாள். இத்தகைய பாடல்களைக் கலைவண்ணத்துடன் பாடிய மாதவி, தவிர்க்கவியலாத ஊழ்வினையின் கொடிய பிடியில் சிக்கிக் கொள்கிறாள்; தன் உயிரனைய காதலன் கோவலனையும் அப்பிடியில் சிக்குமாறு அவளே யறியாமல் செய்துவிடுகிறாள்!

மாதவியின் பாடல்களை யாழிசையில் வைத்துக் கேட்ட கலைச் சுவைஞன் கோவலன் திரிபான கற்பனைக்கு ஆட்படுகிறான். அகவொழுகலாற்றில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஆணும் பெண்ணும் ஒத்த உரிமையுடன் நடந்து கொள்ளலாம் என்பது கோவலனளவில் ஏனோ தோல்வியுறுகிறது. ஆடலரசியாகிய மாதவியின் கலைமாட்சி தனக்கே முழு உரிமையுடையது என்ற எண்ணத்தில், அதனைப் பிறர் எட்டியிருந்தும் துய்க்கலாகாது என்று கருதுகிறான். தன்னலம் வேரோடியிருக்குஞ் சூழலிலே, மாதவி விளையாட்டாக அகத்துறைப் பாடலைக் கற்பித்துப் பாடியதையும் புரிந்து கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ இயலாதவனாகக் கோவலன் மாறி

விடுகிறான்; வெறுப்புள்ளத்துடன் நெளியும் கோவல னுக்கு ஊழ்வினையும் யாழிசையாக வந்து தன் நோக் கத்தை நிறைவேற்றிக் கொள்கிறது. கலைச் செல்வர் களாகிய கோவலனும் மாதவியும் ஒருவரையொரு வர் பிரிந்துவிடுவதே கலைப்பெட்டகமாகிய கானல் வரியின் முடிவாக அமைகிறது.

கானல்வரி பாடுங் கலைஞர்கள் தாம் வாழும் ஊர்ப் பெருமையையும், தம் நாட்டையாளும் மன்னன் பெருமையையும் தமிழ்ப் பண்பாட்டுடன் நினைவுகூர் கின்றனர். ஆற்றுவரியில் கோவலன் தன் மன்னன் சோழனது பேராற்றலை எடுத்துப் பேசுவதும், கானல்வரியின் முடிவிலே மனைபுக்க மாதவி தன் நாட்டுச் சோழ மன்னனை வாழ்த்தியவாறு தங்கு தலும் 'மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்' எனும் தொன்மைத் தமிழ் மரபு அடிப்படையில் சிந்திக்கத் தக்கவை. கானல்வரியில் நெய்தல் நிலப் பரதவர் வாழ்க்கை நன்கு நாட்டுப்புறவியலுடன் சித்திரிக்கப் படுகிறது.

சிலப்பதிகாரம் வணிகர் குலத் தோன்றல்களைத் தலைமக்களாகக் கொண்ட காப்பியம்; இதனை மனத்துட் கொண்ட இளங்கோவடிகள் அக்கால வணி கர்க்குரிய 'பண்டமாற்று'த் தொடர்பிலும் வருணனை யைக் கையாள்கிறார். கடலலைகள் நன்முத்துக்களைக் கடற்கரையில் கொணர்ந்து ஒதுக்கிவிட்டு, அதற்கு மாற்றாக அங்குக் கிடக்கும் பூமாலைகளைக் கொண்டு செல்கின்றனவாம். இத்தகைய பண்டமாற்றினை, 'வீங்கோதந் தந்து விளங்கொளிய வெண்முத்தம் விரைசூழ் கானற், பூங்கோதை கொண்டு விலைஞர் போல் மீளும் புகாரே எம்மூர் (கானல்வரி 28. சார்த்து துவரி.க) என வருதலால் காண்க.

அகத்துறைகள் பலவும் தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு கூறுகளைச் சித்திரிக்கின்றன; சிறப்பாகக் 'காமமிக்க கழிபடர் கிளவி' யாக வரும் பாடல்கள் அனைத்துயிர்களிடமும் நேயமாகப் பழகிய அக்கால மக்களின் நெஞ்சப் பாங்கினையும் உயர் பண்பாட்டி னையும், காப்பியப் புலவரின் கற்பனைத் திறத்தை யும் உணர்ந்துகொள்ளத் துணை நிற்கின்றன.

செ.வை.

**கானா** ஒரு மேற்கு ஆப்பிரிக்கக் குடியரசு நாடு. கினி வளைகுடாவை ஒட்டி அமைந்துள்ள கானாவின் பரப்பளவு 238,305 ச.கி.மீ. கானாவின் மக்கள் தொகை 12,205,574 (1984). இந்நாட்டின் கடற்கரைப் பகுதியிலும், தென் மத்திய பகுதியிலும் மக்கள் நெருக்கமாக வாழ்கின்றனர். இதன் தலைநகர், அக்ரா. (Accra) இந்நாட்டின் ஆட்சிமொழி ஆங்கிலம். பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் சிறிய நாடாக இருந்தாலும், இயற்கை வளச் செழிப்பால் ஆப்பிரிக் காவின் முதன்மை பெற்ற நாடுகளுள் ஒன்றாக இது விளங்குகிறது.




கானா

**வரலாறு**: 113 ஆண்டுகள் ஆங்கில ஆட்சியின்கீழ்க் குடியேற்ற நாடாக இருந்த கோல்டு கோசுட்டு (Gold Coast) 6.3.1957-இல் விடுதலை அடைந்து கானா என்னும் பெயரைப் பெற்றது. இந்நாட்டிற்கு கி.பி 4-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை வலிமை பெற்றிருந்த பழைமையான அரசின் நினைவாகக் கானா என்னும் பெயர் சூட்டப்பட்டது. சகாராவுக்குத் தெற்கே ஆங்கில ஆட்சியிலிருந்து விடு தலை பெற்ற முதல் கறுப்பு ஆப்பிரிக்க நாடு இதுவே.

கானா 1.7.1960-இல் குடியரசு நாடாகியது. முனைவர் குவாமி நிக்குருமா (Dr. Kwami Nkrumah) இந்நாட்டின் முதல் குடியரசுத் தலைவர். இதன் அர சியல் அமைப்புச் சட்டம் 1.10.1969-இல் செயல்

முறைக்கு வந்தது. அது பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு வழி வகுத்தது. சுமார் 150 பாராளுமன்ற உறுப்பினர்கள் 21 வயது நிரம்பியவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும்.

கானாவில் 1972-ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக இராணுவ ஆட்சி பதவிக்கு வந்தது. ஆனால் 1979-ஆம் ஆண்டில் அந்த ஆட்சி முடிவுக்கு வந்து மீண்டும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. முனைவர் இல்லா இலீமென் (Dr. Hilla Limenn)தலைமையிலான மக்கள் தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. இராலிங்சு என்பார் 31.12.1982 -இல் தலைமை ஏற்று நடத்திய புரட்சி பாராளுமன்ற ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இடைக்காலத் தேசிய பாதுகாப்புக் குழு (Provisional National Defence Council) ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. இராலிங்சு அக் குழுவின் தலைவராகவும் (Chairman) ஓபெங்கு (Obeng) தலைமை அமைச்சராகவும் பொறுப்பு வகித்தனர்.

**இயற்கை அமைப்பு**: மேற்கில் ஐவரி கோசுட்டும் (Ivory Coast) கிழக்கில் தோகோவும், வடக்கில் மேல் வோல்டாவும், தெற்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் கானாவின் எல்லைகளாகும். இங்குள்ள அக்வாபிம் தோகோ மலைத்தொடர் சுமார் 3000 அடி உயரமுள்ளது. அபாட்டுசாடோ, திருசூபோடோ தோரோக்பானி என்னும் உயர்ந்த சிகரங்கள் இம் மலைத் தொடரில் உள்ளன. இந்நாட்டில் பாயும் முக்கிய ஆறான வோல்டாவின் குறுக்கே அகோசோம்போ அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையில் இரு நீர் மின்சக்தித் திட்டங்கள் செயற்படுகின்றன. அங்கோப்ரா, தானோ, பிரா ஆகியவை இங்கு ஓடும் பிற முக்கிய ஆறுகள்.

**தலைநகர்**: அக்ராவின் (Accra) பரப்பளவு 2577 ச.கி.மீ. மக்கள் தொகை: 998,000 (1980). ஆங்கில ஆட்சியின்கீழ்க் குடியேற்ற நாடாக இருந்த காலத்திலிருந்தே இந்நாட்டின் தலைநகராக அக்ரா இருந்து வருகிறது. ஆங்கிலேயர், போர்த்துகீசியர் தச்சுக்காரர்கள் ஆகியோர் கட்டிய கோட்டைகள் இங்குண்டு. துறைமுக நகரான அக்ரா இருப்புப் பாதைகளாலும் நெடுஞ்சாலைகளாலும் நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இங்குப் பன்னாட்டு விமான நிலையமும் ஒலிபரப்பு நிலையமும் உண்டு. குமாசி தேமா, தார்க்வா, ஓடா, வின்னெசா, கேடா ஆகியன கானாவின் பிற முக்கிய நகரங்களாகும். அக்ராவிலும் குமாசியிலும் மக்கள் அடர்த்தி அதிகம். உள்ளாட்சிக்காகத் தலைநகரைத்



அக்ரா

தவிர, நாடு எட்டு முக்கியப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**விளைபொருள்கள்**: கானாவின் விளைபொருள்களுள் முதலிடம் பெறுவது கோக்கோ. சுமார் இரண்டு மிலியன் ஏக்கர்களில் கோக்கோ பயிரிடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4,00,000 கண்டி கோக்கோ விளைகிறது. இங்கிருந்து 1980-ஆம் ஆண்டில் 2,25,000 கண்டி கோக்கோ வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. உலகக் கோக்கோ ஏற்றுமதியில் இது ஐந்தில் ஒரு பங்காகும். இந்நாட்டின் வருவாயில் மூன்றில் இரண்டு பகுதி கோக்கோ ஏற்றுமதியின் மூலமாகக் கிடைக்கிறது. மிளகு, இஞ்சி, அன்னாசி ஆகியவை ஏற்றுமதிக்காக மிக அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. காப்பி, தேங்காய், எண்ணெய், வாழைப்பழம், பனை எண்ணெய், புகையிலை ஆகியவை கானாவின் பிற ஏற்றுமதிப் பொருள்கள். நெல், மக்காச் சோளம் ஆகியவையும் இங்குப் பயிரிடப்படுகின்றன.

**கனிவளம்**: கானா கனிவளம்மிகுந்த நாடு. இங்குத் தங்கம், வெள்ளி, இரும்பு, மங்கனம், பாக்சைட்டு, வைரம் ஆகியவை வெட்டி எடுக்கப்படுகின்றன. இங்கு 1982-ஆம் ஆண்டில் 10, 300 கிலோ கிராம் தங்கமும் 684,000 காரட்டு வைரமும்,1,60,000 கண்டி மங்கனமும், 64,000 கண்டி பாக்சைட்டும் வெட்டி எடுக்கப்பட்டன. தங்கமும் வைரமும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நாட்டில் 1970-ஆம் ஆண்டில் பெட்ரோலியம் கண்டுபிடிக்கப்பட்டது.

**தட்பவெப்ப நிலை**: கானாவில் ஆண்டு முழுவதும் வெப்பம் சற்றுக் கூடுதலாக இருக்கும். நாட்டின் வட

பகுதியில் மார்ச்சு மாதம் முதல் ஆகசுட்டு மாதம் வரையிலும், தென் பகுதியில் மார்ச்சு முதல் அக்டோபர் வரையிலும் மழைக்காலம். தலைநகரான அக்ராவில் சராசரி ஆண்டு மழையளவு 29 அங்குலம்.குமாசியில் நாட்டின் மிக அதிக அளவாக 58 அங்குல சராசரி ஆண்டு மழை பெய்கிறது.

**நாணய முறை**: கானாவின் நாணயம் சேடி(Cedi). இங்கு 1, 2, 5, 10, 50 சேடி நோட்டுகள் அச்சிடப்படுகின்றன. 2, 5, 10, 20 பெசீவா (Pesiva) நாணயங்களும் பழக்கத்தில் உள்ளன. இந்நாட்டின் தேசிய வங்கி (Bank of Ghana) இந்நாணயங்களை அச்சிட்டு வெளியிடுகிறது. ஓர் அமெரிக்கத் தாலரின் மதிப்பு 50 சேடிகள்; ஒரு பவுண்டின் மதிப்பு 64 சேடிகள் (1985 மார்ச்சு) இங்குத் தனிஆள் ஆண்டு வருமானம் 400 அமெரிக்கத் தாலர்கள் (1981).

**வெளிநாட்டு வாணிகம்**: கானாவில் கோக்கோ, தங்கம், மரம், வைரம், பாக்சைட்டு, மங்கனம் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. முக்கிய இறக்குமதிப் பொருள்கள் கச்சாப் பொருள்கள். பெட்ரோலியம், உணவுப் பொருள்கள் ஆகியன 2402 மிலியன் சேடி மதிப்புள்ள பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன; 1939 மிலியன் சேடி மதிப்புள்ள பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன(1982). பெரும்பான்மையான வாணிகம் கானாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் நடைபெறுகிறது.

**சமயம்**: கானாவின் மொத்த மக்கள் தொகையில் 52 விழுக்காடு கிறித்தவச் சமயத்தினராகவும் 13 விழுக்காடு முசுலிம்களாகவும் உள்ளனர்.

ஐக்கிய நாட்டு நிறுவனம், பொதுநல அமைப்பு, ஆப்பிரிக்க ஒற்றுமைக் கூட்டமைப்பு ஆகியவற்றில் கானா உறுப்பு நாடாகும். சிறியதாயினும், இது பொருளாதார வளர்ச்சியில் முன்னேறி வரும் நாடாகும். வை.ப.

**கல்வி**: கானா நாட்டில் மக்களுக்குக் கல்வியளிக்கும் பொறுப்பினை அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் ஏற்றுள்ளன. மழலையர் பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை இந்நாட்டில் வழங்கப்படுகிறது. மூன்றிலிருந்து ஐந்து வரையிலான குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் மூன்றாண்டுகள் பயிலுகின்றனர். இவர்கள் பின்னர்த் தொடக்கக்கல்வியினை 6 ஆண்டுகள் பெறுகின்றனர். இது அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் 6–11 வயதுள்ள மாணவர்கள் சேர்ந்து பயிலுகின்றனர்,

கானா நாட்டில் இடைநிலைப் பள்ளிக் கல்வி இருவகையாக உள்ளது. ஐந்து ஆண்டுகள் இடைநிலைக் கல்வி ஒரு வகை; நான்காண்டு நடுநிலைக் கல்வியுடன் (Middle School Education) ஓராண்டு இடைநிலைக் கல்வி மற்றொருவகை. ஆறாண்டு தொடக்கக் கல்வி பயின்றவர்கள் தொழிற் கல்வியிலோ இடைநிலை அல்லது நடுநிலைக் கல்வியிலோ சேரலாம்.ஐந்தாண்டு இடைநிலைக் கல்வி முடித்தவர்கள் ஈராண்டு ஆசிரியர் பயிற்சியிலோ, ஈராண்டு மேனிலைப் பள்ளியிலோ சேர்ந்து பயிலுகின்றனர். இக்கல்வி முடித்தவர் பல்கலைக்கழகத்திலோ, உயர் ஆசிரியர் கல்வி வகுப்புகளிலோ சேருகின்றனர்.

கானா நாட்டில் உயர் கல்வி மூன்று நிறுவனங்களில் வழங்கப்படுகிறது. அக்ரா நகரிலுள்ள கானாப் பல்கலைக்கழகம் (University of Ghana), குமாசி (Kumasi) நகரிலுள்ள அறிவியல் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் (University of Science and Technology), கடற்கரை முனைப் பல்கலைக்கழகக் கல்லூரி (University College of Cape Coast) ஆகியவற்றில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர். கானாவில், 20-இலிருந்து 24-வயதுக்குட்பட்ட இளைஞர்களுள் ஒரு விழுக்காடு இளைஞர்களே உயர்கல்வி பயிலுகின்றனர்.

இந்நாட்டில் முறைசாராக் கல்வியினைக் கானாப் பல்கலைக்கழகத்திலுள்ள வயதுவந்தோர் கல்வி நிறுவனம் (Institute of Adult Education) நடத்தி வருகிறது. இந்நிறுவனம் தொழில் சார்பான கல்வியினை வகுப்பறைச் சூழலிலும், அஞ்சல் வழியிலும் நடத்தி வருகிறது. எழுத்தறிவு இயக்கத்தின் வழியே கானா நாட்டு மக்கள் தாய் மொழியிலும் ஆங்கிலத்திலும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்கின்றனர். தொழிலாளர் மற்றும் சமூக நலத்துறை எழுத்தறிவு வகுப்புகளையும் தொழிற் பயிற்சிக் கல்வியினையும் நடத்தும் பொறுப்பேற்றுள்ளது.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகக் கல்வி ஆகியவற்றை கானா நாட்டுக் கல்வி அமைச்சகம் கவனித்து வருகிறது. இந்நாட்டில் தொடக்கப் பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை மாணவர்களிடம் பயிற்சிக் கட்டணம் ஏதும் பெறுவதில்லை. கானா அரசு கல்விக்காக ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 25 விழுக்காடு ஒதுக்குகிறது. எஸ்.த.

**துணை நூல்கள்**:

Holmes, B., (ed), International Guide to Education Systems unesco, Paris, 1979.


**Kabwasa, A.,** and **Kaunda, M.M.,** (eds), Correspondence Education in Africa Routledge and Kegan Paul, London, 1973.

***கானாசாவா*** சப்பான் நாட்டின் ஆன்சூத் தீவின் மேற்குக் கடற்கரையிலுள்ள ஒரு பட்டினம். பீங்கான், பட்டு முதலியன இங்கு உற்பத்தி செய்யப் படுகின்றன. கானாசாவா (Kanazawa) கி.பி. 16–ஆம் நூற்றாண்டிலிருந்து 19–ஆம் நூற்றாண்டு வரை மேய்தா (Maeda) என்று சொல்லப்படும் கூட்டத்தின் தலைமைப் பீடமாக இருந்தது. சப்பானியர் ஆளுகைக்கு உட்பட்ட இந்நகரில் இப்பொழுது பருத்தி, இயந்திரங்கள், இரும்பு முதலியன பெருமள வில் கிடைக்கின்றன. சிறிது சிறிதாக முன்னேறிப் பெரிய தொழில் நகரமாக விளங்கும் இங்கு 4 இலட்சத்திற்கு மேல் மக்கள் வாழ்கின்றனர். தெ.பா.

***கானாட்டு*** அயர்லாந்தின் மேற்கில் உள்ள ஒரு குடியரசு மாநிலப்பகுதி; அந்நாட்டின் பண்டைய இராச்சியங்களில் ஒன்று. அதன் பரப்பு 17,122 கி.மீ. (1,712,172 எக்டேர்கள், அதை கி.பி. 13–ஆம் நூற்றாண்டு வரை ஆண்டுகொண்டிருந்த ஓ–கானர் கள் என்போரை முறியடித்துவிட்டு ஆங்கில–நார் மானிய தி–பர்குகள் தம் ஆதிக்கத்தை அங்கு நிறுவி னர். இதன் பெரும் பகுதி சமவெளி. கானாட்டின் (Connacht) வடக்கிலும் மேற்கிலும் மலைகள் உள்ளன. இங்கு உள்ள ஏரிகள் சிறப்பு வாய்ந்தவை. இதன்மக்கள் தொகை 424410 (1981). தெ.பா.

***கானிக்சுபர்கு***: காண்க: காலீனன்கிராடு.

***கானிங்கு பிரபு***: ஆங்கில இந்தியாவின் தலைமை ஆளுநராக, தல்கௌசிக்குப் (Dalhousie) பிறகு கி.பி. 1856–ஆம் ஆண்டில் பதவி ஏற்றவர் கானிங்கு பிரபு (Lord Canning). இந்தியாவுக்கு வருவ தற்கு முன்பு, இவர் இங்கிலாந்தில் பல உயர் பதவி களை வகித்தவர். இவர் கி.பி. 1812–ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தந்தை கானிங்கு பிரபு கி.பி. 1827 –இல் இங்கிலாந்துப் பிரதமராகஇருந்தவர். இவர் தம் மகன் சார்சு கானிங்கை (George Canning) ஈட்டன், ஆக்சுபோர்டு முதலிய கலாசாலைகளுக்கு அனுப்பிச் சிறந்த கல்வி பெறுமாறு செய்தார். தல்கௌசியும் கானிங்கும் சிறந்த நண்பர்களாயினர். இவர் கி.பி. 1836–இல் ஆங்கிலப் பாராளுமன்றத்தின் உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின் கி.பி. 1852 –இல் இங்கிலாந்தின் அஞ்சல் நிலையத் தலைவரா னார். ஒவ்வொரு பதவியிலும் இவருடைய நற்செயல் கள் காரணமாக நற்பெயர் பெற்றார். இந்தியாவைப் பற்றிய அக்கறை இவருக்கு அப்பொழுதே இருந்தது. சில காரணங்களால் இந்தியாவில் பெருங்கலகம் ஏற் படக் கூடும் என்ற கருத்தையும் இவர் முன்கூட்டியே குறிப்பிட்டது நோக்கத்தக்கது.



கானிங்கு பிரபு

இந்தியாவில் கானிங்கு பிரபு பதவி ஏற்றபின், கி.பி. 1857–இல் பெருங் கலகம் ஏற்பட்டது. அது அடக்கப்பட்ட பிறகு ஆங்கிலேயர் கலகக்காரர்களைப் பழிக்குப் பழி வாங்க விரும்பியதைத் தடுத்தவர் கானிங்கு. இதனால், ஏளனமாக இவரைக் 'கருணை யுள்ள' கானிங்கு என்று ஆங்கிலேயர்கள் பரிகசித்த னர். அதை இவர் பொருட்படுத்தவில்லை.

கொடுமையான முறையில் அரசாள இவர் விரும்ப வில்லை. சட்டங்களின்படி நடந்து மக்களின் நல் லெண்ணத்தைப் பெறவே இவர் விரும்பினார். கலகத் திற்குப் பிறகு ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுவின் ஆட்சி முடிந்து, இந்திய அரசியலை ஆங்கில அரசும் பாராளு மன்றமும் தம் நேர் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தன. ஆங்கில அரசின் பேராளராகக் கானிங்கு பிரபு அமர்த் தப் பெற்றார். இவரே முதல் பேராளர். விக்டோ ரியா மகாராணியின் பிரகடனப்படி கானிங்கு செய லாற்றி நற்பெயர் பெற்றார். இவரது ஆட்சியில் மூன்று முக்கிய சட்டங்கள் உருவாயின. அவற்றில் மிகவும் முக்கியமானது கி.பி. 1861–ஆம் ஆண்டில் இயற்றப் பெற்ற சட்டசபை பற்றியதாகும். இது, பின்னர் வந்த 1892, 1909–ஆம் ஆண்டுகளின் சட்ட சபைச் சட்டங்களுக்கு வழி வகுத்தது. இவை யாவும் இந்தியாவில் ஒரு புதிய ஆட்சி முறைக்கு அடிகோலின. முன்பு தலைமை ஆளுநருடைய நிருவாக சபை உறுப் பினர்களே சட்டங்கள் இயற்றிவந்தனர். புதிய சட்

டங்களின்படி இந்திய மக்களின் தலைவர்கள் சிலரைக் கலந்து செயலாற்ற வேண்டும் என்ற கருத்து மேலோங்கத் தொடங்கியது. அரசப் பேராளரின் நிருவாகக் குழுவின் உறுப்பினர்களிடையே கி.பி.1861-ஆம் ஆண்டு முதல் அரசியல் அலுவல்கள் பங்கிடப்பெற்றன. தலைமை ஆளுநர், வெளி உறவுச் செய்திகளையும் இந்தியச் சிற்றரசர்கள் அலுவல்களையும் தம்மிடம் வைத்துக் கொண்டு, மற்றவற்றைத் தம் சபை உறுப்பினர்களிடம் ஒப்படைத்தார். விக்டோரியா பேரரசியின் அறிக்கையும் (1858) அவகாசியிலிக் கொள்கை (1859) ஒழிக்கப் பெற்றதும் இந்தியச் சிற்றரசர்களுக்கு மகிழ்ச்சியளித்தன. நடந்து முடிந்த பெருங் கலகத்தை அடக்கத் துணைபுரிந்த சிற்றரசர்களுக்குப் பலவகையான சலுகைகள் வழங்கப்பெற்றன. வங்காள உழவர்களின் குத்தகைச் சட்டத்தின்படி 12 ஆண்டுகளுக்கு மேல் பயிரிட்டு வந்த குடியானவர்களிடமிருந்து நிலங்களை மாற்றுவதும் குத்தகையை மிகுதியாக்குவதும் குற்றங்கள் என அறிவிக்கப்பட்டது. படைக் கலகத்தினால் இந்திய அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்ய இராணுவச் செலவுகளும் அரசியற் செலவுகளும் குறைக்கப் பெற்றன. வருமானவரி புதிதாக இந்தியாவில் வசூலிக்கப் பெற்றது. மெக்காலே பிரபுவால் கி.பி. 1837-இல் வகுக்கப்பட்ட வழக்கு முறைகள் சட்டங்களாக இயற்றப்பெற்றன. வங்காளத்தில் முன்னர் நிகழ்ந்தது போல், ஆங்கிலேயர் இந்தியரைக் கொடுமை செய்யாமலிருக்க வழிகள் வகுக்கப் பெற்றன. பொதுவாக, கானிங்கு பிரபுவின் பதவிக் காலம் இங்கிலாந்து-இந்திய வரலாற்றில் ஒரு நற்காலம் என்றே கூறவேண்டும். தெ.பா.

**கானோசி ஆங்கிரே**: இந்தியாவில் கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் சிறப்புற்றோங்கியிருந்த மராட்டியரின் பெருமைக்குக் காரணமாக இருந்த பலருள் கானோசி ஆங்கிரேயும் (Kanhoji Angria) ஒருவர். இவர் தந்தை துக்கோசி மராட்டியக் கப்பற் படைத் தலைவராக இருந்தவர். துக்கோசி கி.பி. 1690-இல் பார்த்து வந்த பொறுப்பு வாய்ந்த அப்பணியைக் கானோசி ஆங்கிரே ஏற்றுக் கொண்டு அரும்பணி ஆற்றினார். மராட்டியக் கடற்படையை நிறுவியவர்களுள் இவர் இரண்டாமவர். அப்படை இவரால் மிகவும் வலிமை பெற்றது. அதைக் கண்டு மராட்டியரின் பகைவர்கள் அஞ்சினர். இந்தியப் பகைவர்கள் மட்டுமன்றி ஆங்கிலேயரும் போர்ச்சுகீசியரும் தச்சுக்காரரும் கூட ஆங்கிரேயைக் கண்டு அஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. அரசி தாராபாய் ஆங்கிரேயுடன் மிகவும் ஒத்துழைத்து இவரை ஆதரித்தாள். ஆனால் பிறகு கி.பி. 1712-இல் மராட்டிய மன்னன் சாகு, ஆங்கிரேயைச் சந்தேகித்ததுடன் அவருடன் பகைமையும் கொண்டான். அதனால் ஏற்படக் கூடிய விளைவை உணர்ந்த பேசுவா (Peshwa) பாலாசி விசுவநாத்து என்பவர் இவ்விருவரையும் சமாதானப்படுத்தி இவர்களிடையே ஓர் ஒற்றுமை உடன்படிக்கையைச் செய்வித்தார். இது கி.பி. 1714-இல் ஏற்பட்டது. இதன் விளைவாகச் சாகுவின் வலிமை மிகுந்தது. கானோசியை எதிர்த்து வந்த ஆங்கிலேயர் கி.பி. 1717க்கும் கி.பி. 1722க்குமிடையே மும்முறைகள் தோற்றனர். இத்தகைய சிறப்புப் பெற்ற ஆங்கிரே கி.பி. 1729-இல் இறந்தார். தெ.பா.

கி தமிழ் நெடுங்கணக்கில் உயிர் மெய் எழுத்துகளில் முதலாவதாக வைக்கப்பட்ட **க** என்ற எழுத்து வாயை இளித்த நிலையில் வெளிப்படும் எழுத்து ஆகும். அங்காந்த நிலையில் 'க' என்ற ஒலியுடன் வெளிப்படுமுன் வாயை இளித்துப் பின் வரும் ஒலியாகும். இந்த ஒலியும் 'க' என்ற எழுத்துக்கு முன் கூறப்பட்டதுபோல் **உகிர், போகி, துகில்** என்ற சொற்களில் ஒலிப்பதுபோல் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் ஒலிக்கப்பட்ட வடமொழி வல்லின வகையில் இடையில் உள்ள மூன்று ஒலிகளோடு ஒப்ப ஒலியை உடையதாகும். ('க' என்ற எழுத்துக்கு உரிய குறிப்பைப் பார்க்கவும்).

'கி' தனிப்பட்ட முறையில் தனிச்சொல்லாக இயங்கி வரவில்லை.

**இதன் வடிவம்**: இந்தியாவில் 'க' என்ற எழுத்துக்கு உரிய பொது வடிவத்தில் தலையில் வலப்புறமாக ஒரு சிறு கோடும் அதனைத் தொடர்ந்து மேல் நோக்கி ஒரு கோடும் இடப்பட்டன. இவ்வுருவம் கி.பி. 6–ஆம் நூற்றாண்டுக்கு முன் வளைந்த கோடாக மாறும் வரை இப்படியே இருந்தது.

குகைக் கல்வெட்டுகள் முதல் பல்லவன் மகேந்திரவர்மனின் கல்வெட்டுகள் அதாவது கி.மு. 3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6–ஆம் நூற்றாண்டு வரை ... ... ... 

மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டில் இது **ளி, யி, டி** என்ற மற்ற எழுத்துகளில் வளைந்து காணப்படுகிறது. 'கி' என்ற எழுத்துக்கும் இது பொருந்தலாம்.

கி.பி. 7–ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இந்த வளைந்த உருவம் எழுத்துக்கு மேல் தனியாக எழுதப்பட்டது. சிலவற்றில் வலப்புறம் தொடங்கிய தைப் போன்ற தோற்றமும் காணப்படுகிறது. ... ... 

இவ்வாறே கி.பி. 14–ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட இந்த வடிவம் அதற்குப் பிறகு குன்றத்தூர் இராசநாராயண சம்புவரையன் கல்வெட்டில் காணப்படுவதைப் போல எழுத்தின் தலையில் தொடங்கி வளைந்து கீழ்நோக்கி வரலாயிற்று. இந்த நிலையில் இக்குறி இடமிருந்து வலமாக எழுதப் பட்டிருக்க வேண்டும். ... ... ... 

வட்டெழுத்தில் 'கி' என்ற எழுத்து தமிழில் உள்ளது போல் இல்லாமல் 'கி' என்பதன் குறுக்குக் கோட்டிலிருந்து இகரம் இணைத்து எழுதப்பட்டது. 

கே.ஜி.கி.

**கிங்குத் தீவுகள்**: ஆசுத்திரேலியாவின் தென் மாநிலமான தாசுமானியாத் (Tasmania) தீவைச் சுற்றிப் பல சிறு தீவுகள் அமைந்துள்ளன. அவற்றுள் கிங்குத்தீவு, அண்டர்த்தீவு, பிரூனித்தீவு, மரியாத்தீவு, பிலிண்டெர்சுத்தீவு, மெக்குயரித்தீவு ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கிங்குத்தீவு தாசுமானியாவுக்கு வட மேற்கில் 88 கி.மீ. தொலைவில் பாசுக் கடற்காலின் (Bass Strait) மேற்கு முனையில் அமைந்துள்ளது. சுமார் 60 கி.மீ. நீளமும் 20 கி.மீ. அகலமும் உள்ள இத் தீவு 39° 50. தெற்கு அட்சரேகைக்கும் 144° கிழக்குத் தீர்க்க ரேகைக்குமிடையில் அமைந்துள்ளது. இத்தீவின் மொத்தப் பரப்பளவு 1101 ச.கி.மீ. மக்கள் தொகை 2801 (1971). இத்தீவின் பெரும் பகுதி வளம் மிக்கது.

கப்பல் தலைவர் இரீடு (Reed) கி.பி.1798-ஆம் ஆண்டில் இத் தீவைக் கண்டுபிடித்தார். நியூ சவுத்து வேல்சின் மூன்றாம் ஆளுநரான பிலிப்பு கிட்லே கிங்கு (Philip Gidley King) என்பவரின் நினைவாக இத்தீவுக்குக் கிங்குத்தீவு எனப் பெயரிடப்பட்டது. பிரிட்டன் கி.பி. 1802-ஆம் ஆண்டில் தனதாக்கிக் கொண்டு, பிரான்சு இத்தீவைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாமல் தடுத்தது. மக்கள் கி.பி.1855-ஆம் ஆண்டில் இங்குக் குடியேறி வசிக்கத் தொடங்கினர். இத் தீவின் முக்கிய நகரங்கள் குர்ரி கிராசி, நாகூபா ஆகியவை. 213 மீ. உயரமுள்ள இசுடான்லி மலை இத்தீவில் உள்ளது.

கிங்குத்தீவில் வசிக்கும் மக்களின் முக்கிய தொழில் மாடு வளர்த்தல். பாலுக்காகவும் இறைச்சிக்காகவும் மாடுகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. தீவின் வட பகுதியிலும் மத்திய பகுதியிலும் பட்டாணி பயிரிடப்படுகின்றது. இத் தீவில் கி.பி. 1917-ஆம் ஆண்டில் கிராசி என்னுமிடத்தில் மின்னிழைமம் (Tungsten) இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மின்னிழைமமும் வெள்ளீயமும் இத் தீவின் முக்கிய கனிப் பொருள்கள். மின்னிழைமம் வெட்டி யெடுக்கப்பட்டுத் துறைமுக நகரான குர்ரிக்கு அனுப்பப்படுகிறது. இத்தீவின் நிருவாகத்தைக் கவனிக்க ஒரு நகராட்சி செயற்படுகிறது.

அந்தமான் கடலில் பர்மாவின் தென்முனைக்கு மேற்கே அமைந்துள்ள மார்குய்த் தீவுக் கூட்டத்தில் உள்ள ஒரு பெரிய தீவும் கிங்குத் தீவுகளுள் ஒன்றாகும். சுமார் 65 கி.மீ. நீளமுள்ள இத்தீவில் இரப்பர்த் தோட்டங்கள் மிகுதியாக உண்டு. இத்தீவில் மாங்கனீசு கிடைக்கிறது.

பிரிட்டிசு கொலம்பியாவில் ஓசியன் பால்சு (Ocean Falls) என்னும் நகருக்குத் தெற்கிலுள்ள 60 கி.மீ. நீளமும் 15 கி.மீ. அகலமும் உடைய ஒரு தீவும் கிங்குத் தீவுகளுள் ஒன்றாகும். இத்தீவு ஆங்கிலேயக் கொலம்பியாவிலிருந்து தீன், பர்கு கால்வாய்களால் பிரிக்கப்பட்டுள்ளது.

அலாசுக்காவின் தெற்கே பேரிங்குக் கடற்காலின் தென்கோடியில் சீவர்ட்டு முந்நீரகத்திற்கு மேற்கே உள்ள ஒரு சிறு தீவும் இத்தீவுகளில் அடங்கும். இது கி.பி. 1778-ஆம் ஆண்டு கப்பல் தலைவர் குக்கு (Cook) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தீவில் நூற்றுக்கணக்கான எசுக்கிமோக்கள் வால்ரசு என்னும் கடல் விலங்கை வேட்டையாடி வாழ்கின்றனர்.

வை.ப.

**கிங்கு மார்ட்டின் லூதர் (1929-1968)** உலகப் புகழ் பெற்ற அமெரிக்கக் கறுப்பர் தலைவர்; நீக்கிரோ இனத்தைச் சேர்ந்த திருச்சபைச் சமய குரு. சமுதாயத்திற்குரிய உரிமைகள் இயக்கத்தைத் (Civil Rights Movement) தொடங்கித் தேசிய, இனக் கலவரங்களையும் வேறுபாடுகளையும் ஒழிக்கப் பாடுபட்டு, நோபல் அமைதிப் பரிசைப் பெற்றவர்; காந்தி அடிகளின் இன்னா செய்யாமை வழியைப் பின்பற்றிப் போராட்டங்கள் நடத்தியவர்; நல்ல பேச்சாளர்; எழுத்தாளர்; சமுதாயத்திற்குரிய உரிமைகளைப் பெறுதற்காகத் தம் வாழ்வை ஈந்தவர்.

அமெரிக்காவில் உள்ள சார்சியா (Georgia) மாநிலத்தைச் சேர்ந்த அட்லாண்டாவில் தீக்கை செய்விக்கும் மதகுருவின் (Baptist Minister) மகனாக 1929-இல் பிறந்தார். இவர் 'மோர் கவுசு' (More house) கல்லூரியில் பயின்று, தம் 19-ஆம் வயதில் பட்டம் பெற்று, மூன்றாண்டுகளில் பி.டி. (Bachelor of Divinity) பட்டத்தைக் கிரோசர் சமய சித்தாந்தக் கல்வி நிலையத்தில் (Crozer Theological Seminary) பயின்று பெற்றார். இவர் கிரோசரில் பயின்றபோது நல்ல பல தத்துவ அறிவுசார்ந்த நூல்களைக் கற்றுக் தேர்ந்தார். இவற்றுள், என்றி தாவீது தோரியூ (Henry David Thoreau), உரூசோ, சான் லாக்கு ஆகியோர் எழுதிய தத்துவ நூல்களையும், காந்தியடிகளின் நூல்களையும் விரிவாகப் படித்தார். காந்தியடிகளின் வன்முறைசாராக் கொள்கை (Non-violence) இவரை மிகவும் கவர்ந்தது. இக் கொள்கையே சிறந்தது என்றும் கிங்கு கருதினார். மாண்டுகோமரியில் உள்ள தெக்சுடர் சாலை தீக்கைசெய் மாதா கோயிலில் (Dexter Avenue Baptist Church) 1954-இல் முதன் முதலாகக் குருவாகச் செயற்பட்டார். பாசுட்டனில் 1955-ஆம் ஆண்டு ஆராய்ச்சி செய்து, பாசுட்டன் பல்கலைக் கழகத்தாரால் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டார். பாசுட்டனில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த





கிங்கு மார்ட்டின் லூதர்

போது, கோரட்டா சுகாட்டு (Coretta Scott) என்னும் மங்கையை மணந்தார். இவர்கட்கு நான்கு குழந்தைகள் பிறந்தன.

இவர் கல்வி பயில்கின்ற காலங்களிலும், கறுப்பர்-வெள்ளையர் கலவரங்கள் நடந்து கொண்டுதான் இருந்தன. இருப்பினும் இவர் 1955 வரையில் அவற்றில் தலையிடவில்லை. அதற்கான சமயமும் வந்தது. ஒரு நாள் திருமதி உரோசா பார்க்சு என்னும் நீக்கிரோ மாது நகரப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது, வெள்ளையர் ஒருவருக்குத் தான் எழுந்து இடம் தர மறுத்தார். அதனால் இனக் கலவரம் மூண்டது. மாண்டகமரியைச் சேர்ந்த கறுப்பர்கள், மார்ட்டின் லூதரின் தலைமையில் ஒன்று பட்டுப் பேருந்து வண்டியைப் புறக்கணித்தனர். பேருந்து உரிமையாளர் வழக்குத் தொடர்ந்தார். மாண்டகமரியில் நிலவிய சட்டப்படி, மார்ட்டின் லூதர் சிறை செய்யப்பட்டார். ஆனால், அமெரிக்க உச்ச நீதிமன்றம், பேருந்து வண்டிகளில் வேறுபாடு பாராட்டுதல் அரசியலமைப்புச் சட்டத்தின்படி செல்லாது என்று 13.11.1956-இல் தீர்ப்புக் கூறியது.

மார்ட்டின் லூதர் தம் ஆதரவாளர்களையும் சீடர்களையும் எக்காரணத்தாலும் எச்சூழலிலும் வன்முறையில் ஈடுபடுதல் கூடாது என்று அறிவுரை கூறினார். காந்தியடிகளின் வன்முறை சாரா வழியை அவர்கட்கு அடிக்கடி நினைவு படுத்தினார். 'உங்களது எதிரியின் மீதும் அன்பு காட்டு' என்பதே இவர் விடுத்த செய்தி. இவர் தென் கிறித்தவத் தலைமை மாநாட்டை (Southern Christian Leadership Conference) 1957-இல் கூட்டி எல்லோருக்கும் இனவேறுபாடின்றிச் சமநீதி வேண்டினார். கறுப்பருக்கும் பொது ஊழியத் துறையில் ஒரே தன்மையாக நீதி அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். கறுப்பருக்கும் சமஉரிமைகள் தரப்பட வேண்டுமென்று இவர் அரசாங்கத்தை வற்புறுத்தினார். அதனால் இவர் நாடு முழுவதும் நல்ல புகழ் பெற்றார்.

இவரது போராட்டம் 1963-இல் உச்ச கட்டத்தை எட்டியது. வெள்ளையரும் கறுப்பருமாக 250,000 பேர் ஒன்று சேர்ந்து வாசிங்டன் பயணத்திற்காகக் (March on Washington) கூடினர். வாசிங்டன் நினைவுச் சின்னத்திலிருந்து இலிங்கன் நினைவுக் கட்டடம் வரையில் குழுமியிருந்த மக்கள் வெள்ளத்தில் மார்ட்டின் லூதர், 'எனக்கோர் கனவுண்டு' (I have a Dream) என்னும் தலைப்பில் வரலாற்றுப் புகழ் மிக்கதோர் உரையை நிகழ்த்தினார். கறுப்பர்கள் அனுபவித்த, அனுபவித்து வருகின்ற சொல்லொணாத் துயர் பற்றியும், அமெரிக்க அரசின் உறுதிமொழிகள் காற்றில் பறக்க விடப்பட்டமை பற்றியும் கடுமையாகப் பேசினார். இவரது பேச்சு வானொலியிலும் தொலைக் காட்சியிலும் ஒலிபரப்பப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களால் கேட்கப்பட்டது.

ஏல் பல்கலைக் கழகம் 1964-இல் மார்ட்டின் லூதர் கிங்கிற்குக் மதிப்புறு டாக்டர் பட்டம் வழங்

கிச் சிறப்பித்தது; கென்னடி அமைதிப் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டது. அந்த ஆண்டிலேயே நோபல் அமைதிப் பரிசும் இவருக்கு அளிக்கப்பட்டது. மக்களின் சமுதாய உரிமைகளுக்காக வன்முறை சாரா வழியில் போராட்டங்கள் நடத்திவரும் இவரது புகழ் உலக முழுவதும் பரவியது.

சிகாகோ நகரக் குடிசைவாழ் மக்களின் நலனுக்காக 1966-இல் முதன் முதலாக இவரால் மேற்கொள்ளப்பட்ட வடக்கு இயக்கம் (Northern Campaign) வெற்றி பெறும் வாய்ப்பை இழந்தது. மார்ட்டின் லூதரின் கனவுகள் நனவாகா என்றும், வன்முறைசாரா வழியிலான (Non-violence) போராட்டங்கள் வெற்றிபெறா என்றும் 1966-ஆம் ஆண்டு இவர் ஆதரவாளர்கள் பலர் கருதினர். இருப்பினும் கிங்கு வன்முறை சாரா நெறிதான் நேர்மையானது; உரியது; அதுதான் வெற்றியைத் தரும் என்று மீண்டும் மீண்டும் உறுதியுடன் வலியுறுத்தினார். வியட்நாம் போரில், அமெரிக்காவின் செயற்பாட்டைக் கிங்கு கண்டித்துப் பேசினார். அதன் விளைவாக இவர் ஆதரவாளர்களான வெள்ளையர் சிலரும் வெளியேறினர்.

'ஏழை மக்களின் இயக்கம்' (Poor People's Campaign) ஒன்றினை 1968-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வாசிங்டனில் நடத்தப்போவதாக இவர் அறிவித்தார். அமெரிக்காவைச் சேர்ந்த அனைத்துப் பிரிவு ஏழை மக்களின் இரங்கத்தக்க நிலையினை அரசுக்குப் படம் பிடித்துக் காட்டத் திட்டமிட்டார். அதற்கான முன் ஏற்பாடுகள் அனைத்தையும் செய்துவிட்டு, 1968-இல் மெம்பிசில் (Memphis) வேலை நிறுத்தம் செய்திருந்த துப்புரவுத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்த மெம்பிசிற்குப் பறந்து சென்றார். இவர் இம்மறியலில் கலந்து கொள்ளச் சென்றபோது, தென்னசி மாகாண மெம்பிசில் உள்ள சிற்றுண்டிச் சாலையில் (Motel) சுட்டுக் கொல்லப்பட்டார். இச் செய்தி கேட்டு உலகே அதிர்ச்சியுற்றது. தியாக விளக்கு 1968-இல் அணைந்தது.

ஏழை எளியவர்களின் நலனிற்காகவும், கறுப்பர்களின் உரிமைகளுக்காகவும் பாடுபட்ட மார்ட்டின் லூதர் கிங்கு ஆற்றல் மிக்க எழுத்தாளராகவும் திகழ்ந்தார். 'நமது போராட்டம்' (Our Struggle), 'மாண்டகமரியின் வரலாறு' (The Story of Montgomery), 'அன்பின் வலிமை' (Strength of Love), 'நாம் எங்கே செல்கிறோம்' (Where Do We go from here) 'நாம் ஏன் காத்திருக்க முடிவதில்லை' (Why we can't wait) ஆகியவை இவரது படைப்புகளாகும். தம் 35-ஆம் வயதிலேயே நோபல் பரிசு பெற்ற, துடிப்புமிக்க இவர்தம் சேவை பாராட்டுக்குரியதே.

தம் அயராத உழைப்பாலும் உறுதி குலையாச் செயல் திறனாலும், வன்முறை சாரா வழியைப் பின்பற்றி, 1964-இல் சமுதாயம் சார்ந்த உரிமைகள் சட்டமும் (Civil Rights Act-1964) 1965-இல் ஓட்டளிப்பு உரிமைகள் சட்டமும் (The Voting Rights Act of 1965) கொண்டு வரப்பாடுபட்ட, இவர் உலகச் சமூக உரிமைகள் இயக்கத்தின் வரலாற்றில் குறிப்பிடத் தக்கதோர் இடத்தினைப் பெற்றுள்ளார்.


ம.இ.

**கிங்சுட்டன்** சமைக்காத் தீவின் தலைநகர். அத்தீவின் தென்கிழக்கில் நீலமலைகளை அடுத்துள்ள கிங்சுட்டன் (Kingston) துறைமுகம், சுற்றுலாப் பயணிகளின் கருத்தைக் கவரும் வகையில் சிறப்புற வளர்ச்சி பெற்றுள்ளது. இயற்கைக் காட்சி நிறைந்த இப்பகுதி மனமகிழ்ச்சி ஊட்டவல்லது. சமைக்காவில் முன்னர் இருந்த துறைமுகம் நிலநடுக்கத்தால் அழிவுற்றபின் கி.பி. 1692-இல் கிங்சுட்டன் நிறுவப்பெற்றது. இதன் வாணிகச் சிறப்பு கி.பி. 1703-இல் பெருகியது. இது கி.பி. 1872-இல் தலைநகராக அமைந்தது. அடிக்கடி இங்குத் தீ விபத்துகள் ஏற்பட்டன. பெரும் நிலநடுக்கம் ஒன்று 1907-இல் இதை நலிவுறச் செய்தது. இந்நகரின் தெருக்களில் பல புதிய கட்டடங்களையும், வரலாற்றுச் சின்னங்களாக உள்ள பழைய கட்டடங்களையும் காணலாம். முக்கிய சாலையான அரச வீதியில் புனித தாமசின் திருச்சபை காட்சியளிக்கிறது. மேற்கு இந்தியத் தீவுகள் பல்கலைக்கழகம் கிங்சுட்டனிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள மோனா நகரில் 1962 முதல் செயலாற்றி வருகிறது. புகழ் பெற்ற அரசு (Royal) தாவரத் தோட்டங்கள் அண்மையில் உள்ள ஒப்பு (Hope) என்னுமிடத்தில் எழிலுடன் விளங்குகின்றன. கிங்சுட்டனின் மக்கட்டொகை 100,637 (1982).

கிங்சுட்டன் என்னும் பெயரையுடைய ஒரு பட்டணம் ஆசுத்திரேலியக் கண்டத்தில் தென்கிழக்குத் தாசுமேனியாவில் உள்ளது. மற்றொரு கிங்சுட்டன் நகரம் கனடா நாட்டில் தென்கிழக்கு ஒண்டேரியா மாநிலத்தில் இருக்கிறது. கிங்சுட்டன் கிராமம் ஒன்று அமெரிக்காவில் தெற்கு உரோடுத் தீவில் வாசிங்டன் மாவட்டத்தில் இருக்கிறது. மேலும், இங்கிலாந்தின் தேம்சு ஆற்றங்கரையில் கிங்சுட்டன், அல் (Hull) துறைமுகக் கிங்சுடன் என்னும் இரு இடங்கள் இருப்பதும் ஈண்டுக் குறிக்கத்தக்கது. தெ.பா.

**கிச்சனர் பிரபு**: ஆங்கிலேய இராணுவ உயர் தரப் பணியாளர் எர்பர்ட்டு கிச்சனர் (Herbert Kitchener) 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல

அரசியல் பணிகளில் ஈடுபட்டு ஆங்கிலேயப் பேரரசின் காப்பாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1850 முதல் 1916 வரையிலாகும். சூடான் நிலப்பகுதியை ஆங்கிலப் பேரரசுடன் இணைத்த பெருமை இவருக்கு உரியது. தென்னாப்பிரிக்காவில் பிரிட்டன் போர்கள் நடத்திய பொழுது, இவர் ஆங்கிலப் படைத் தலைவராக இருந்து வெற்றிகளடைந்தார். முதலாம் உலகப் போர் தொடங்கிய பொழுது பிரிட்டனின் போர்த்துறை அமைச்சராகச் செயலாற்றினார். அக்காலத்தில் இவர் படைகளை அமைத்து அணிவகுத்த மாபெருஞ்செயல், எந்த ஆங்கிலேய அமைச்சராலும் அதுகாறும் செய்யப்படாத ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.



கிச்சனர் பிரபு

இளமையிலேயே இவர் திறமையை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலைகள் பல இருந்தன. இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஊல்விச்சு இராணுவப் பள்ளியிலே இவர் பயிற்சி பெற்றார். மத்திய கிழக்கில் கி.பி. 1874-இல் ஆங்கிலப் படையின் தலைமை அதிகாரியாக அமர்ந்து, பின்னர் கி.பி. 1886-இல் சூடானில் உள்ள சுவாகின் பகுதி ஆளுநராகவும், பின்னர் எகிப்தில் துணைத் தளபதியாகவும் திறமையுடன் செயலாற்றிப் புகழ் பெற்றார். இவர் ஆற்றலைப் பாராட்டி கி.பி. 1892-இல் அரசியலார் இவரை எகிப்தியப் படையின் தலைமை அதிகாரியாக்கினர். இவர் கி.பி. 1898-இல் மாதி என்ற தலைவரின் கீழ்ச் சூடான் மக்கள் எழுப்பிய புரட்சிக் கலகத்தை அடக்கி, ஓம்டர்மேன் என்ற இடத்தில் வெற்றிக் கொடி நாட்டி, கார்ட்டூம் நகரைக் கைப்பற்றி, பின்னர் அந்த இடத்தை, ஆங்கில-எகிப்திய அரசாங்கத்தின் தலைமைப் பீடமாக்கி, ஆங்கிலேயப் பேரரசு மேலும் விரிவடைய வழிகள் வகுத்தார். சூடானில், பிரெஞ்சியரின் ஆதிக்கத்தை ஏற்படுத்த விரும்பிய மார்ச்சாண்டு என்ற தலைவரின் நோக்கம் நிறைவேறாத வகையில் அவருடன் பேச்சு வார்த்தைகள் மூலம் முயன்று ஆங்கிலேயரின் செல்வாக்கைச் சூடானில் நிலைநிறுத்திய பெருமை இவரைச் சேரும். இவ்வரிய செயல் இவர் கி.பி. 1898-இல் ஒரு குறுநிலக் கோமகன் (Baron) பதவியை எய்தும்படி உதவியது.

சூடானின் தலைமை ஆளுநராக ஓராண்டுக் காலம் இருந்தபின் தென்னாப்பிரிக்கப் போரில் (போயர் போர்) ஆங்கிலப் படைத் தலைவராகப் பணியாற்றி வெற்றி கண்டார். உள்நாட்டு மக்களின் முறைசாராப் போர் முறையை (Guerrilla Warfare) மிகவும் திறமையுடன் எதிர்த்து ஆங்கில ஆதிக்கத்தை அங்கே நிலை நிறுத்தினார். ஆங்கில அரசு இவரது திறமையைப் பாராட்டி, 1902-இல் இவரை இளங்கோ' (Viscount) பதவிக்கு உயர்த்தியது.

அவ்வமயம் இந்தியாவில் உள்நாட்டுச் சிக்கலை விட அயல்நாட்டுப் படையெடுப்பு அச்சுறுத்தல் மிகுதியாக இருந்ததால், அதைச் சமாளிக்கக் கூடியவர் கிச்சனர் பிரபுவே என்று கருதிய ஆங்கில அரசு அவரை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தது.

இந்தியாவில் அவ்வமயம் அரசப் பிரதிநிதியாக இருந்த கர்சான் பிரபுவுக்கும் (Lord Curzon) கிச்சனருக்குமிடையே படை ஆதிக்க முறையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. ஆங்கில அரசு கிச்சனரையே ஆதரித்தது. கர்சான் பதவியினின்று விலகிக் கொண்டார். கிச்சனர் கி.பி. 1909 வரை இந்தியாவிலேயே இருந்தார். தாம் ஓர் அரசப் பிரதிநிதியாக அமர்த்தப்படக் கூடுமென்று எண்ணியிருந்த இவர் ஏமாற்றமடைந்தார். ஆனால், ஆங்கில அரசு இவரை எகிப்துக்கு அனுப்பி எகிப்து-சூடான் நாடுகளின் உயர் தலைவராக (1911-14) அமர்த்தியது. இவர்தம் ஆட்சிக் காலத்தில் கடன் காரணமாக உழவர்களின் நிலங்கள் பறிக்கப்படுவதைத் தடுக்கவும், பருத்தி உற்பத்தியைப் பெருக்கவும் முயன்றார்.

முதல் உலகப் போர் (1914) தொடங்கியதும் கிச்சனர் இங்கிலாந்து அமைச்சர் குழுவில் போர்த்துறை அமைச்சராக அமர்த்தப்பட்டுச் செயலாற்றினார். முதல் உலகப் போர் விரைவில் முடிந்து விடுமென்று பலர் கருதினர். ஆனால் கிச்சனர் தமது அறிக்கையில் அது ஒரு மாபெரும் போராக விரிவடையும் என்று முன்கூட்டியே குறிப்பிட்டிருந்தார். இவர் பெரும்படை ஒன்றைத் தயாரிப்பதில் முனைந்து

வெற்றியும் பெற்றார். 'கிச்சனர் படை' என்றே அதற்குப் பெயர் அமைந்தது. கட்டாயமாக மக்களைப் போர்ப்பணியில் ஈடுபடுத்துவதை இவர் விரும்பினார். ஆனால்,அது செயல்முறையில் கடினமானது என்று தலைமை அமைச்சர் ஆசுகுவித்து (Asquith) கருதியபடியால், கிச்சனர் தம் கருத்தை வலியுறுத்த விரும்பவில்லை. கிச்சனருக்கு மேலும் மேலும் புகழ் வந்து குவிவதையும், பொது மக்கள் அவரைப் புகழ்வதையும் விரும்பாத மற்ற அமைச்சர்கள் அவரை அமைச்சரவையினின்று விலக்கி, வேறு துறைகளுக்கு அனுப்ப முயன்றனர். ஆனால், கிச்சனர் தம் பதவியை விட்டு விலக மறுத்துவிட்டார். எதிர்பாராது ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி அவரை இவ்வுலகிலிருந்தே வெளியேற்றிவிட்டது. ஏம்ப்சைர் (Hampshire) என்ற படைக் கப்பலில் உருசியாவுக்கு இவர் சென்று கொண்டிருந்தபோது செருமானியர் அக்கப்பலை மூழ்கடித்தனர். கிச்சனரும் இறந்தார். (1916).

தெ.பா.

**கிசிர்கான் (கி.பி. 1414-1421)**: சையது மரபினை நிறுவிய கிசிர்கான் தில்லிச் சுல்தானிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தினைப் பெற்றுள்ளான். வரலாற்றில் தைமூரின்(கி.பி.1336-1405) படையெழுச்சி ஒரு க்றை படிந்த நிகழ்ச்சியாகும். தில்லியைத் தைமூர் சுடுகாடாக்கிய பின்பு, அதன் ஆட்சியை மேற்கொண்டவன் கிசிர்கான். சுல்தான் பிரோச்சா துக்ளக்கு (கி.பி.1351-88) கிசிர்கானை முல்தானின் (Multan) தலைவனாக அமர்த்தினார். கிசிர்கான் முல்தானைச் சிறப்பாக ஆண்டு கொண்டிருந்த போது கி.பி. 1395-இல் இக்பல்கானின் சகோதரன் இவனைத் தாக்கிச் சிறையினின்றும் வெளிப்பட்டுத் தைமூருடன் சேர்ந்து கொண்டு, அவனுக்கு உதவி, அவனது நம்பிக்கைக்கு உரியவனானான். தைமூர் இந்தியாவை விட்டுவெளியேறும் போது, கிசிர்கானை முல்தான், இலாகூர், தீலாப்பூர்-ஆகிய அரசுகளுக்குத் தலைவனாக அமர்த்தினான். தைமூரின் அதிகாரம் பெற்ற தலைவனாக ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய கிசிர் கி.பி. 1414-இல் தௌலத்கான் லோடியை வென்று, அவனைச் சிறை வைத்து விட்டுத் தில்லியைக் கைப்பற்றிக் கொண்டான்.

இக்பல்கான் கி.பி. 1405-இல் கிசிர்கானால் தோற்கடிக்கப்பட்டான். தில்லியின் ஆட்சியாளனாக கி.பி. 1414-இல் அமர்ந்த கிசிர்கான், சையது என்னும் பட்டத்தினைப் பெருமையுடன் சூட்டிக் கொண்டான். கிசிர் பெரிய திறமைசாலியாகவும் வீரனாகவும் இருந்தபோதிலும் தில்லியில் நிலையான ஆட்சியை ஏற்படுத்துவது எளிதாக இல்லை. காரணம், எங்குப் பார்த்தாலும் கலகங்களும் புரட்சிகளும் மூண்டன. அவற்றை அடக்குவதிலேயே கிசிர் தனது நேரத்தையும் முயற்சியையும் செலவிட வேண்டியதாயிற்று. இவன் ஆண்டுதோறும் படையெடுத்துப் பஞ்சாபிலிருந்து தோவாபு (Doab) வரையில் பரவியிருந்த பகுதிகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொணர்ந்தான். இப்படையெடுப்புகளால் இவன் பெரும் பொருள் சேர்த்தான்.

கிசிர் கி.பி. 1421-இல் இறந்தான். இவனுக்குப் பின்னர் இவன் மகன் முபாரக்சா பதவியேற்று சையது மரபின் ஆட்சியைத்தொடர்ந்தான். ம.இ.

**கிட்சின் சுழற்சி**: ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளை (Fluctuations) பகுத்தாராய்ந்து, ஒரு குறிப்பிட்ட கால வரையறையில் அவை சுழற்சியாக (Cyclical) மீண்டும் மீண்டும் நிகழ்வதை விளக்கும் கோட்பாடுகளுள் குறுகிய கால வாணிகச் சுழற்சியைத் (Business Cycle) தனிப்படுத்தி ஆராய்வது கிட்சின் சுழற்சி (Kitchin Cycle) எனப்படுகிறது. புள்ளியியல் வல்லுநரான சோசபு கிட்சின் (Joseph Kitchin) 1923-ஆம் ஆண்டில் இக் கோட்பாட்டை வெளியிட்டார். அவர் வாணிகச் சுழற்சியைச் சிறிய சுழற்சிகள்(Moinr Cycles), பெரிய சுழற்சிகள் (Major Cycles) என இருவகைப்படுத்தினார். ஒரு சிறிய சுழற்சியின் காலம் 40 திங்கள் அல்லது 3½ ஆண்டுக் காலமாகும். பெரிய சுழற்சி இரண்டு, மூன்று சிறிய சுழற்சிகளின் தொகுப்புக் காலத்தைக் (Aggregate Period) கொண்டிருக்கும்.

சோசபு சும்பீட்டர் (Joseph A.Schumpeter) சக்லர் சுழற்சி (Juglar Cycle), கிட்சின் சுழற்சி, கோண்டிராடிப்பின் சுழற்சி (Kondratieff Cycle)ஆகிய சுழற்சிக் கோட்பாடுகளை ஒருங்கிணைத்து ஒரு மூவகைச் சுழற்சிக் கருதுகோள்களை (A Three-Cycle Hypothesis) அடிப்படையாகக்கொண்ட வாணிகச் சுழற்சிக் கோட்பாட்டை 1935-இல் உருவாக்கினர்ர். அக் கோட்பாட்டின்படி 9அல்லது10ஆண்டுக் காலத்தையுடைய ஒரு சக்லர் சுழற்சி மூன்று கிட்சின் சுழற்சியையும், 50 ஆண்டுக்காலத்தை உள்ளடக்கும் ஒரு கோண்டிராடிப்பின் சுழற்சி 6 சக்லர் சுழற்சியையும் கொண்டிருக்கும். இம் மூவகைச் சுழற்சிகளும் தொடர்ந்து நிகழ்வதால் இவை ஒன்றிற்கொன்று இடை விளைவுகளை உண்டாக்கும். சும்பீட்டர் தம் கோட்பாட்டைப் பொருளாதார வரலாற்றுப் புள்ளிவிவர ஆய்வுகளுடன் தெளிவாக்க முயன்று அதனை மறு ஆய்வு முடிவுகளுடன் (Reviewed Research Findings) 1944-இல் வெளியிட்டார்.

கிட்சின் தம் கோட்பாட்டை உருவாக்க ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட காலம் கி.பி. 1890 முதல் 1922 வரையினதாகும். இக்காலத்தில் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணமாக இயங்கும் வலிமைகள் (Dynamic Forces) அனைத்தையும் கிட்சின் ஆராய்ந்தார். குறிப்பாக, பொருள்களின் விலை நிலவரம் (Commodity price Label), வங்கித் தொழில் நடவடிக்கைகளின் வெளியீடு (Output), வட்டி வீதம் (Interest Rate) ஆகியவற்றின் ஏற்ற இறக்கங்களைத் தம் ஆராய்ச்சியில் முழுமையாகப் பயன்படுத்தினார்.

சிறிய வாணிகச் சுழற்சி நிகழ்வதற்குப் பொருளாதார வாணிக நடவடிக்கைகளின் ஏற்றத்தாழ்வுகளில் காணப்படும் ஒழுங்கு இயல்பு (Rhythmical) இடைமாறி வருவது காரணமாகும். மேலும், உளவியல் (Psychological) காரணிகளாலும் சிறிய வாணிகச் சுழற்சிகள் நிகழ்கின்றன. இவற்றைக் கிட்சின் தம் கோட்பாட்டின் கருவுருவாகத் (Concept) தெளிவுபடுத்தினார்.

கிட்சின் வாணிகச் சுழற்சிக் கருத்துகள் நடைமுறையில் செயற்படுவனவாக இரண்டாம் உலகப்போர்க் காலத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவை பொருளியல் ஆய்வுகளில் தனிச் சிறப்பிடம் பெற்றன. கிட்சின் பயன்படுத்திய ஆய்வுமுறை (Methodology) கடினமானது எனவும், புள்ளிவிவரம் போதுமானதன்று எனவும் கருதப்பட்டது. எனவே, அவரது அடிப்படை அணுகுமுறை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டதால் பிற ஆய்வு முறைகளில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அமெரிக்க நாட்டின் பொருளியல் ஆய்வு ஆணையகம் (National Bureou of Economic Research), நூற்றுக்கணக்கான காலத்தொடர் ஆய்வுகளை (Time Series Analysis) வாணிகச் சுழற்சியின் தன்மைகளைப் பகுத்தாய்வதற்கென நடத்தி வருகிறது.

வாணிகச் சுழற்சிக்கு நாட்டின் மொத்த உற்பத்தி (Gross National Product-G N P), தொழிற்றுறை வளர்ச்சி, முதலீட்டின் நிலை (Trend of Investment), வேலைவாய்ப்பு ஆகியன போன்ற பல காரணிகளின் தாக்கங்கள் காரணமாகின்றன. எனினும், சுழற்சிகளின் வரலாற்றுப் புள்ளி விவரங்களிலிருந்து (Historical Cyclical Data) முதலீட்டுத் திட்டங்களுக்கு (Inventory Investment) மிகையான சிறப்பிடம் வழங்கப்படுவதுவே வாணிகச் சுழற்சிக்கான தலையாய காரணம் எனப் பிற்காலப் பொருளியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். உலகப்போருக்குப் பின் வாணிகச் சுழற்சிகள் முதலீட்டுத் திட்டங்களை மையமாகக்கொண்டே நிகழ்ந்துள்ளன. அதற்கு அடுத்த முக்கிய காரணி புதிய கண்டுபிடிப்புகள் (Inventions) எனக் கருதப்படுகிறது. அ. கு. சா.

**துணை நூல்கள்**:

**Dauter Carl A & Lloyd M.**, Valentine, Business Cycles & Forecasting, South Western, Cincinnati, 1978.

**Schumpeter Joseph A.**, Business Cycles, Mc Graw-Hill International Book Company, New York, 1939.

***கிட்டப்பா, எஸ்.ஜி***. இவர் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழக நாடக மேடையில் தம் நடிப்புத் திறனாலும் இசை நலத்தாலும் புகழ்மிக்கு விளங்கிய நாடகக் கலைஞர்களுள் சிறந்த ஒருவர். இவர் தென்காசிக்கு அருகில் உள்ள செங்கோட்டை என்னும் ஊரில் வாழ்ந்த கங்காதர அய்யருக்குப் பத்தாம் குழந்தையாக 1906-ஆம் ஆண்டில் பிறந்தார்.

இவர்தம் தமையன்மார்களான, சுப்பையா, செல்லப்பா, காசி ஆகியோர் சங்கரதாசு சுவாமிகளின் நாடகங்களில் பாடியும் நடித்தும் வந்தனர். நடிப்புத் துறையில் ஆர்வம் மிக்கவராக விளங்கிய கிட்டப்பா பள்ளி சென்று பயில முற்படாது, தம் 5-ஆம் வயதிலேயே நடிக்க முற்பட்டார். தம் எட்டாம் வயதில் (1914) இலங்கை, சிங்கப்பூர், மலாயா ஆகிய நாடுகளுக்குச் சென்று நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இக்காலத்தைப் போலத் திரையுலகச் செல்வாக்கின்றிக் கடல் கடந்த நாடுகளுக்கும் சென்று புகழ்பெறும் அளவிற்கு இவர்தம் நடிப்பும் பாட்டும் அமைந்திருந்தன. நாடகத் துறையில் சிறந்து விளங்கிய கன்னையா நாடகக் குழுவில் சேர்ந்து நடிக்கலானார். அக்குழுவில் இருந்து பிரிந்து இவர் 1926-ஆம் ஆண்டு முதல் தனி நாடகங்கள் நடத்தத் தொடங்கினார்.

தம் 18-ஆம் வயதில் இவர் திருநெல்வேலி விசுவநாத அய்யரின் மகளைத் திருமணம் செய்துகொண்டார். நாடகங்களில் தாம் பாடும் பாடல்களுக்குத்தம் அண்ணன் காசியை, பின்னிசைக் கருவியை (ஆர்மோனியம்) வாசிக்க அமர்த்திக்கொண்டார். காசியின் இசைப்புலமையும், கிட்டப்பாவின் குரல்வளமும் தமிழ்நாடக உலகில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தின.

அந்தண குலத்தில் தோன்றிய கிட்டப்பா தம்மோடு நாடகத்தில் நடித்த இசைச் செல்வி கே.பி.

சுந்தராம்பாளைக் காதலித்துக் கலப்பு மணம் புரிந்து கொண்டார். வள்ளித் திருமண நாடகத்தில் வள்ளியாகப் பெண்வேடமிட்டுக் கிட்டப்பாவும், முருகனாக கே.பி. சுந்தராம்பாளும் நடிப்பர். இருவருடைய வளமான குரலும், உணர்வுமிக்க உரையாடலும் ஒலி பெருக்கி இல்லாத அக்காலத்தில் ஆயிரக்கணக்கான மக்களைக் கவர்வனவாக அமைந்தன.

முறையான இசைப்பயிற்சி இல்லாவிட்டாலும் எவ்வளவு நெருடான, நுணுக்கமிக்க இசையாயினும் ஒருமுறை கேட்டால் அதை அப்படியே பாடும் ஆற்றல் படைத்தவராகக் கிட்டப்பா விளங்கினார். ஐந்தரைக் கட்டைச் சுருதியில் இவர் பாடும் பாடல்கள் கேட்பவரை மெய்ம்மறக்கச் செய்யும் ஆற்றல் உடையனவாகும். பெண் வேடம் இவருக்கு மிகவும் பொருந்தி இருந்தது. நாடகத்தின் இடையினிலே இசை நலமிக்க கீர்த்தனையாக அன்றி விருத்தமாக இவர் பாடுவது மிகமிக இன்பூட்டுவதாக அமையும். அவ்வகையில் அமைந்த 'கோடையிலே இளைப்பாற்றி', 'காயாத கானகத்தே' முதலிய பாடல்கள் இன்றும் இசைப்பிரியர் உள்ளங்களைப் பிணிக்கும் தன்மையவாய் விளங்குகின்றன.

நாதசுரக் கருவியால் சொல்லும் இசைநுணுக்கங்களை எல்லாம் குரலால் வெளிப்படுத்தும் ஆற்றலுடைய இவர் பல இசை அரங்குகளிலும் பாடியுள்ளார். நாட்டுப்பற்று மிக்கவராக விளங்கிய கிட்டப்பா 1934-ஆம் ஆண்டு தம் இருபத்தெட்டாம் வயதில் காலமானார். இரா.குரு.

**கிட்டர், ஆல்பிரடு** அமெரிக்க நாட்டுத் தொல்லியல் அறிஞர். இவர் மெக்சிகோ, நடு அமெரிக்கப் பகுதிகளில் இருந்த 'மாயா'ப் பேரரசு பற்றியும் தென்மேற்கு அமெரிக்கப் பகுதியில் நிலவிய பண்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்து புகழ் பெற்றார். கிட்டர் ஆல்பிரடு(Kidder, Alfred)மிச்சிகன் (Michigan) முந்நீரகப் பகுதியில் மார்குயிட்டி (Marquette) என்ற இடத்தில் கி.பி. 1885-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையார் ஆல்பிரடு கிட்டர். கிட்டர் தமது கல்வியை ஆர்வர்டில் முடித்தார்; முனைவர் பட்டத்தை 1914-இல் பெற்றார். இவர் தமது தொல்லியல் கள ஆய்வை நியூமெக்சிகோவிலுள்ள சான் சோன் (San Juan) கழிவுநீர்ப் பகுதியில் மேற்கொண்டார். பின்னர்க் கொலராடோ, உட்டா ஆகிய பகுதிகளிலும் ஆய்வு செய்தார். அமெரிக்கத் தொல்லியலை நெறி முறைபடுத்திய பெருமை கிட்டரையேசாரும். அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதிகளின் தொல்லியல் ஓர் அறிமுகம் (An Introduction to the Study of Southwestern Archaeology) என்ற நூலை 1924-ஆம் ஆண்டு வெளியிட்டார். பின்னர்ப் பீகாசு (Pecos) என்ற இடத்தில் பல ஆய்வுகளை இவர் மேற்கொண்டார்.

கிட்டர் 1910-ஆம் ஆண்டு பாசுடனைச் சார்ந்த மெதலின் அப்பிலிதன் (Madeline Appleton) என்பவரை மணந்தார். இவருக்கு இவர் துணைவியார் ஆய்வுகளில் உதவி புரிந்தார். இவர் மாயா நாகரிகப் பகுதியான கமினல்சூயூ (Kaminaljuyu) என்ற இடத்தில் அகழாய்வுகளை மேற்கொண்டார். இவர் 1937-ஆம் ஆண்டில் அமெரிக்கத் தொல்லியல் கழகத்தின் தலைவராகவும், 1942-இல் மானிடவியற் கழகத்தின் தலைவராகவும் விளங்கினார். பென்சில்வேனியாப் பல்கலைக் கழகம் இவருக்குத் தொல்லியல் ஆய்விற்காகச் சிறப்பு விருதுகள் வழங்கிற்று. இவரது பெயரால், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அமெரிக்கத் தொல்லியலில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆல்பிரடு வின்செண்டு கிட்டர் பதக்கம் (Alfred Vincent Kidder Medal) வழங்கப்படுகிறது. இவர் 1963-ஆம் ஆண்டு இறந்தார். சு.இரா.

**கிட்டிங்சு, பிராங்கிலின் என்றி (கி.பி. 1855-1931)** அமெரிக்காவில் உள்ள செருமான் என்ற இடத்தில் கி.பி. 1855-இல் பிறந்தார். இவர் அமெரிக்கச் சமூகவியற் கோட்பாடுகளையும் ஆய்வுகளையும் தோற்றுவித்தவர்களுள் முதன்மையானவர்.

இவர் யூனியன் கல்லூரியில் கி.பி. 1877-ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்தவுடன், பத்து ஆண்டுகள் பத்திரிகைத் துறையில் பணியாற்றினார். பின்னர், பிரைன் மவுர் கல்லூரியில் (Bryn Maur College) கி.பி. 1888 முதல் 1894 வரையிலும், கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் கி.பி. 1891 முதல் 1894 வரையிலும் அரசியல் அறிவியலும் சமூகவியலும் கற்பித்தார். ஐக்கிய நாடுகளில் முதன் முதலாக முழு நேரச் சமூகவியற் பேராசிரியராகப் பணியாற்றியவர் இவரே.

ஒழுக்க நெறித் தத்துவத்திலிருந்து சமூகவியலையும், வரலாற்றுத் தத்துவத்திலிருந்து முறைப்படியான ஆய்வினையும் தொடர்புபடுத்தி, அமெரிக்கச் சமூகவியலைத் தோற்றுவித்தவர்களுள் கிட்டிங்சு (Hiddings, Franklin Henry) குறிப்பிடத் தக்கவர். இவர் புள்ளியியல் ஆய்வில் குறிப்பிடத் தக்க எதையும் படைக்கவில்லையென்றாலும், தம் உரையின் மூலமாகவும் புத்தகங்களின் மூலமாகவும் நூற்றுக் கணக்கான மாணவர்களையும் ஐம்பதுக்கும் மேற்பட்ட முனைவர்பட்ட (Ph.D) ஆய்வாளர்களையும்

உருவாக்கி, அவர்கள் சமுதாய வாழ்வின் அனைத்துத் தோற்றங்களையும் படிப்பதற்குச் சக்தி வாய்ந்த தூண்டுகோலாக விளங்கினார்.

கோம்டின் (Comte) நேர்க்காட்சிக் கொள்கையும் (Positivism) இசுபென்சரின் படிமலர்ச்சிக் கொள்கையுமே (Evolutionism) கிட்டிங்சின் அடிப்படைத் தத்துவங்களாகும். வேறுபடுத்தி உணர்தல், ஒருமைப் படுத்துதல் போன்றவற்றின் விளைவுகளினால் தனி மனிதர்களுக்கும் குழுவினர்களுக்கும் அடிப்படையில் சமநிலையான சக்தி உள்ளது என இவர் அறிந்தார். எனவே, இவர் சமூகப் படிமலர்ச்சியை அனைத்துலகங்களுக்குமுரிய படிமலர்ச்சியின் ஒரு பகுதியாகவே பார்த்தார். இவர் சமூக அமைப்பு எப்பொழுதும் சமநிலையில் நகரும் தன்மை உடையது என்றும், சமநிலையில் உள்ள அதிகாரமும் தகுதியும் நீதி, கட்டளை, உலக அமைதி ஆகியவற்றிற்கு அவசியமானவை என்றும் கூறினார். இவர் இயற்கை அறிவியலையும் சமூக அறிவியலின் அடிப்படைத் தனிமத்தையும் சமூகவியலாகக் கருதி, இயற்பியல், உயிரியல், உளவியல் ஆகியவற்றின் உந்துதல்களைச் செயற்படுத்தி, மனித உறவுகளின் (Human Association) தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, நடவடிக்கைகள் ஆகியன பற்றி விளக்கினார்.

'உறவுக்குழு உணர்வு' (Consciousness of Kind) பரிமாற்ற உணர்வு (Mutual awareness), தாராளமான செய்தித் தொடர்பு (Inter Communication) ஆகியவை சமூக உறவுகள் ஏற்படுவதற்கு மிக இன்றியமையாதனவாகும். இவற்றுள் 'உறவுக்குழு உணர்வு' என்ற சொல்லைச் சமூகவியலில் முதன் முதலாகக் குறிப்பிட்டவர் இவரே.

உள்ளத்தில் உறைந்திருப்பவைகளையும் வெளிஉலகத்துச் செயற்பாங்கு, அழிவாற்றல், பிற உயிரொடு ஒத்துப்போதல், இயற்கையாகத் தேர்ந்தெடுக்கும் முறை, சக்தியினை அழியாமல் பாதுகாத்தல் போன்ற பொதுக் கருத்துகளையும் ஒருங்கிணைப்பது சமூகவியலின் கடமை என்று இவர் கூறினார். மனித உறவுகளின் அனைத்து வடிவங்களும் சிந்தனை, உணர்ச்சி ஆகியன போன்று முக்கியமானவை என்பதைக் கண்டார். எனவே, விலங்கின் தொடக்க நிலையிலிருந்து அதற்கு முந்தைய தோற்றம் வரையுள்ள சமூகப் படிமலர்ச்சி நிலைகளை ஆராயும் பொழுதும், சமூக அரசியல் அமைப்பையும் சமூக எண்ணங்களையும் ஆராயும்பொழுதும் உளச் சமூகச் சொற்களை இவர் பயன்படுத்தினார்.

இவர் 'சமூகவியலின் விதிகள்' (The Principles of Sociology-1896) என்னும் நூலில் பிறப்பு, அடிப்படைத் தனிம உண்மை ஆகியவற்றைக் கொண்டுள்ள சமூகம் 'உணர்வுள்ள வகை'யைச் சார்ந்தது எனக் கூறுகிறார். மேலும் 'மனிதச் சமூகக் கோட்பாடு' (Studies in the Theories of Human Society-1922) என்னும் நூலில் 'பன்மை நடத்தை முறை' (Pluralistic Behaviour) என்பது உளவியற் பொருள் வடிவம் கொண்ட சமூகம் அல்லது சமூகவியல் என்னும் புதிய விளக்கமும் தருகிறார். தம் 'விளக்க வரலாற்றுச் சமூகவியல்' (Descriptive and Historical Sociology-1906) என்னும் நூலில் இடைத் தூண்டுதலும் அதன் பிரதிபலிப்பின் கடந்தகால விளைபொருள்களுமே புதிய சமூக வாழ்க்கையில் உடனடி முக்கிய தூண்டுதல்களாகக் கருதப்படுகின்றன எனவும் கூறுகிறார். ஆனால், இவர் பண்பாட்டுச் சொல்லாட்சியில் இந்த விதிகளைச் செயற்படுத்தும் முறையினை வளர்க்கவில்லை.

அமெரிக்கச் சமூகவியலில் பெரும்புகழுடன் விளங்கிய கிட்டிங்சு 1931-ஆம் ஆண்டு காலமானார். பூ.த.

**கிட்டூர்ராணி சென்னம்மா (கி.பி. 1788-1829)** இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியவர்களுள் ஒருவர்; கருநாடக மாநிலத்திலுள்ள கிட்டூரை ஆண்டு வந்த இராணி; சான்சி இராணி இலட்சுமிபாய்க்கு முன்பே புகழ் பெற்று விளங்கி வீரம் விளைவித்த வீராங்கனை.

கருநாடக மாநிலத்தில்,புனே-பெங்களூர் நெடுஞ்சாலையில், பெல்காமிற்கும் தார்வாருக்கும் இடையில் அமைந்துள்ள சிறுநகரம் கிட்டூர். சென்னம்மா கி.பி. 1788-ஆம் ஆண்டு பெல்காம் மாவட்டத்திலுள்ள ககத்தியில் (Kakati) தூலப்ப கௌட தேசாய் என்னும் சிற்றரசனுக்கும் பத்மாவதிக்கும் குழந்தையாகப் பிறந்தார். இளமையிலேயே போர்ப்பயிற்சியிலும்,வில் வித்தையிலும் இவர் நல்ல தேர்ச்சி பெற்றார். கிட்டூர் வேந்தனான மல்லசராசா இவரைத் திருமணம் செய்து கொண்டான். தன் கணவனின் முதல் மனைவியான உருத்திரம்மாவைச் சென்னம்மா தம் சொந்தத் தமக்கையாகவே நேசித்தார். தம் கணவனுக்கு அரசியல் விவகாரங்களில் உதவிபுரிந்து, ஆட்சிக்கலையில் நன்கு தேர்ச்சி பெற்றார். மகன் சிவபசவராசு என்ற பாலாசாகேபு இளம்வயதிலேயே இறந்துவிட்டான். தம் கணவனின் இறப்பிற்குப் பின் எட்டு ஆண்டுகள் சிவலிங்க உருத்திர சர்சாவைப் (Shivalnga rudra Sarja) பெயரளவில் அரசனாக்கித் (Nominal Head) தாமே அரசாட்சியை நடத்திவந்தார்.

சில காலம் சென்ற பின்னர், சிவலிங்க சர்சா உடல்நிலை பாதிக்கப்பட்டுப் படுக்கையில் கிடந்த

போது, கி.பி. 1824-இல் தமக்கு ஆண் வாரிசு இல்லாததால் அரசர் வாரிசு நியமன விழாவைக் கோலாகலமாக நடத்தினார்; இவரால் அரசராக நியமனம் பெற்ற சவாய் மல்லசராசா அரசுப் பொறுப்பை ஏற்றார். ஆங்கிலத் தலைமை அரசியல் முகவரும், (Agent) தார்வார் மாவட்ட ஆட்சித் தலைவருமான தேக்கரேயின் அறிவுரையின் பேரில் ஆங்கிலேய அரசு இவ்வாரிசு நியமனத்தை அங்கீகரிக்காதது மட்டுமன்றிக் கிட்டூர் அரசை ஆங்கில அரசுடன் இணைக்கவும் முற்பட்டது.

அதனால் சினங்கொண்ட கிட்டூர்ராணி சென்னம்மா கி.பி. 1824-இல் சர்தார்கள் அனைவரையும் அரசு அதிகாரிகளையும் வரவழைத்து, ஆங்கிலேயரின் அகங்காரப் போக்கை எடுத்துக்கூறிப் போர் அறிவிப்புச் செய்தார். கிட்டூரைச் சார்ந்த எட்டுக் கிராமங்களும் தயார் நிலையில் இருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன; படையுதவி கேட்டுக்கோலாப்பூர் அரசருக்கும் தூது அனுப்பப்பட்டது. இராணுவத்தைத் தயார் நிலையில் வைத்திருந்த சென்னம்மா படைப்பிரிவுகளையும் நேரில் பார்வையிட்டார். சிறப்புப் பயிற்சி பெற்ற 6000 பேர்கொண்ட தனிப்படையும், 7000 வீரர்களும், 2000 குதிரைகளும், 1000 ஒட்டகங்களும், 50 யானைகளும் அணிவகுக்கப்பட்டன. 14 துப்பாக்கிகளும், 24 பவுண்டு எடையுள்ள பித்தளைப் பெருந்துப்பாக்கிகளும் தாக்குதலுக்குத் தயாராக வைக்கப்பட்டன. கெம்மனமார்டி, கடத்துமார்டி ஆகிய கோட்டைகளும் தக்கபாதுகாப்பு நிலையில் வைக்கப்பட அரசியார் உத்தரவிட்டார்.

ஆங்கிலப்படை கி.பி. 1824-இல் கிட்டூரை நெருங்கியது. ஐந்தாம் படைப்பிரிவையும் 500 வீரர்களையும் 100 குதிரை வீரர்களையும் கொண்ட ஆங்கிலப் படை கிட்டூர் மீது குண்டு மாரி பொழிந்தது. அஞ்சா நெஞ்சினரான கிட்டூர் வீரர்கள் ஆங்கிலேயப் படையை வீரத்துடன் தாக்கி விரட்டியடித்தனர். கோட்டை உச்சியில் குதிரை மீதமர்ந்து படைகளுக்கு உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்த சென்னம்மா, கைதான எதிரிகளைப் பெருந்தன்மையுடன் நடத்தினார். கைதான பெண்களையும், குழந்தைகளையும் மீட்டுச் செல்லும்படி ஆங்கிலப் படைத் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பினார். இவரது உயர்ந்த குணத்தை ஆங்கிலேயர் பாராட்டினர். போரில் கைதான இரு முக்கிய அதிகாரிகளை விடுவிக்க வேண்டினர் ஆங்கிலேயர். அவ்வாறே சென்னமா விடுதலையும் செய்தார்.

தோல்வி கண்ட ஆங்கிலேயர் தம் படைகளை விரிவுபடுத்தி கி.பி. 1824-இல் மீண்டும் கிட்டூர் மீது தாக்குதல் நடத்தினர். இரண்டாம் கிட்டூர்ப் போரும் தொடங்கியது. மேக்ளியோடு (Lt. Col. Mc. Leod), தீக்கன் (Col. Deacon), வாக்கர் முதலான ஆங்கிலப் படைத் தலைவர்கள் 25000 வீரர்கள் கொண்ட படைகளுடன், கிட்டூர் அரசின் முக்கிய கோட்டையான கெம்மனமார்டியின் மீது தாக்குதல் நடத்தினார்கள். போர் மும்முரமாக நடந்தது. சர்தார் குருசிதப்பா தலைமையில் கிட்டூர்ப் படைகள் வீரத்துடன் போர்புரிந்தன. கடத்துமார்டிக் கோட்டையும் தாக்கப்பட்டது. சென்னம்மா குதிரை மீதமர்ந்து. போர் செய்துகொண்டு, படைத்தலைவர்களுக்குத் தக்க உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

ஆங்கிலேயரின் தொடர்ந்த குண்டு வீச்சுகளால் இராணியின் கோட்டைகள் தகர்க்கப்பட்டன. தமது இறுதிச் சொட்டு இரத்தம் உள்ளவரை போரிட்டு, போர்க்களத்தில் வீரச்சாவு மேற்கொள்ள அரசியார் துணிந்தார். ஆனால், இராணி ஆங்கிலேயர் கைக்கு அகப்படாமல் தப்பிச் செல்வதுதான் உசிதமானது என்று சர்தார்கள் அறிவுரை பகர்ந்தனர். ஆங்கிலேயரது கொடி கி.பி. 1824-இல் கிட்டூர்க் கோட்டையில் ஏற்றப்பட்டது. சென்னம்மா, மருமகள் வீரவ்வா, மருமகள் சானகிபாய் ஆகிய மூன்று கைம்பெண்களும் கோட்டையின் வடகிழக்கு வாயில் வழியாக வெளியேறினர். ஆனால், செல்லும் வழியில் ஆங்கில வீரர்களால் கைது செய்யப்பட்டுப் பெயில்கோங்கல் (Bail Hongal) கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். இராணி தமது அரசை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கவும், ஓய்வூதியம் பெறவும் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டார். ஆண்டொன்றிற்கு இராணிக்கு 4000 ரூபாய் வழங்கப்பட்டது.

சிறையிலே அடைக்கப்பட்ட போதிலும், ஆங்கிலேயரிடமிருந்து மீண்டும் கிட்டூரைக் கைப்பற்ற அந்தரங்க நடவடிக்கைகளை இராணி மேற்கொண்டார். கனவிலும் கிட்டூரின் சுதந்திரமே இவரது எண்ணத்தில் எதிரொலித்தது. இவரது முயற்சி கனவாயிற்று. சோழப் பேரரசி செம்பியின் மாதேவி போன்று இறையன்பில் மூழ்கினார்; பூசையில் வாழ்வைக் கழித்தார்; பூசையிலும் கிட்டூர் விடுதலை பெற வேண்டினார். ஐந்து ஆண்டுச் சிறைவாழ்க்கை பெரும் சுமையாக அமைந்தது. வேட்டையாடுவதிலும் போர் புரிவதிலும் ஆட்சியை நடத்துவதிலும் சுறுசுறுப்பாக விளங்கிய இந்த வீரத்திருமகளுக்குச் சிறை வாழ்க்கை என்பது காட்டில் சுதந்திரமாகத் திரிந்த சிங்கத்தைக் கூட்டில் அடைத்தது போல இருந்தது. பக்திப் பரவசத்தில் ஆழ்ந்த இவர் கி.பி. 1829-இல் கால

மானார். இவரது சுதந்திர உணர்வு மட்டும் மறைய வில்லை. இராணுவ மரியாதையுடன் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. பெயில்கோங்கலில் உள்ள சமாதியின்மீது கல்லறை ஒன்று கட்டப்பட்டது. இக் கல்லறையின் மீது அண்மையில் கருங்கற்சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது; அமர்ந்து பூசை செய்யும் நிலை யில் இச்சிலை வடிக்கப்பட்டுள்ளது. சுதந்திரமே உயிர் மூச்சாகக் கொண்டு, ஆங்கில ஏகாதிபத்தியத்தை அகற்றப் பாடுபட்ட இவ்வீராங்கனையின் நினைவா கத் தார்வாரில் 'சென்னம்மா பூங்கா' அமைக்கப்பட் டுள்ளது.

சென்னம்மாவின் இறப்பிற்குப் பின்னரும், இவ ரது வீராவேசச் சுதந்திரப் போரினால் உந்தப்பட்ட பல கருநாடகச் சிற்றரசுகள் ஆங்கிலேயருக்கெதிரா கப் புரட்சிக்கொடி உயர்த்தின தென்னகத்தின் சான்சி இராணியாகப் போற்றப்படும் சென்னம்மா, இன்றும் கருநாடகப் பகுதியின் நாட்டுப் பாடல்களில் பாடப்பட்டு வருகிறார். ம.இ.

**துணை நூல்:**

Sadashiva Wodayar 'Rani Chennamma' National Book Trust, India, New Delhi, 1977.

***கிடங்கில்***: இது சங்க இலக்கியங்களால் அறி யப்பெறும் ஊர்களுள் ஒன்றாகும். பண்டு நடு நாட் டைச் சேர்ந்தது எனப்படும் இவ்வூர் இன்று தென் னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திண்டிவனம் என்னும் நகரமே யாகும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சிறுபாணாற்றுப்படைத் தலை வனான ஒய்மாநாட்டு நல்லியக் கோடனின் ஆட்சிக் குட்பட்டதாக அன்று இவ்வூர் விளங்கியது. கிடங் கில் என்னும் பெயரை நோக்குங்கால், இவ்வூர் அகழ் சூழ்ந்ததாக இருந்திருக்கலாம் என்பது புலனாகும். சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் நல்லியக்கோட னைக் குறிப்பிடும்போது, 'கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்' (சிறு:160) என்று குறிப்பிடுள் ளார். இதனால் கிடங்கில் என்னும் ஊர் மலர்கள் நிறைந்த வளமான படப்பைகள் சூழ்ந்தது என்பதும் தெரிகிறது. பொய்கையாழ்வார் இவ்வூரைச் சிறப் பித்துப் பாடியுள்ளார் என்று கூறி, 'கிடங்கிற் கிடங் கிற் கிடந்த கயலை' எனத் தொடங்கும் ஒரு செய் யுளை அபிதான சிந்தாமணி ஆசிரியரும், நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐய ரும் காட்டியுள்ளார்கள். ஆனால், அப்பாடல் நாலா யிரத் திவ்வியப் பிரபந்தத்திலுள்ள பொய்கையாழ் வார் பாடல்களுள் இடம்பெறவில்லை. கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார், கிடங்கில் காவிதிப் பெருங் கொற்றனார், கிடங்கில் குலபதி நக்கண்ண னார் என்று மூன்று புலவர்கள் இவ்வூர்ப் பெய ரோடு சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர் என்ப தனைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. கபிலர் தம் நற்றிணைப் பாடலொன்றில் இவ்வூரைக் குறிப் பிட்டுள்ளார் (நற்.65).அதில், அவர் தலைவனை எதிர் பார்த்து ஏங்கி இருக்கும் தலைவி மகிழுமாறு, மற்ற வர்கள் விரிச்சி மொழியாகக் கூறும் சொற்கள் தலை வியிடம் உண்டாக்கும் இன்பத்திற்கு உவமையாக இவ்வூரினைக் காட்டியுள்ளார். அ.மா.ப.

***கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்*** என்பார் சங்க காலப் புலவர் பெருமக்களுள் ஒருவர். கிடங்கில் இவர் ஊராகும். அவ்வூர் இக்காலத்தில் திண்டிவனம் என்று வழங்கப்படுகிறது என்று ஆய் வாளர்கள் கூறுகின்றார்கள். இவர் பாடியதாக நற் றிணையில் ஒரு பாட்டு (218) உண்டு. இவர்தம் இயற் பெயர் கண்ணனார் என்பதாகும். கீரன் என்பது தந்தையாரின் பெயர் ஆதல் வேண்டும். காவிதி என் னும் பட்டம் இவர்க்கு அரசன் தந்ததாகும். இவர் உழுவித்துண்ணும் வேளாண் மரபினைச் சேர்ந்தவர். இவர்தம் பாடல் நெய்தல் திணையில் தலைவி கூற் றாக அமைந்துள்ளது. பிரிந்து சென்ற தலைவன் வாராமையால் வருந்தும் தலைவி, 'தமியேன் கேட்கு வென்கொல்லோ, பரியரைப் பெண்ணை அன்றிற் குரலே' என்று இரங்கிக் கூறுவது நயமிக்கதாக உள் ளது. மா.இரா.

***கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்*** சங்க காலப் புலவரான இவர், நற்றிணையின் 364 –ஆம் பாடலைப் பாடியவர். அது முல்லைத் திணை யில் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. கிடங்கில், தொண்டை நாட்டின் தென்பகுதியான ஒய்மாநாட் டின் தலைநகர். இங்கு வாழ்ந்தவர் பெருங்கொற்ற னார். கீரங்கண்ணனாரும் குலபதி நக்கண்ணனாரும் இவ்வூரினர். வழக்கியல் துறையில் சிறப்புப் பெற்றுக் காவிதிப் பட்டம் பெற்றவர் பெருங்கொற்றனார். 'செம்மை சான்ற காவிதி மக்கள்' (499) என்று இத் தகையோரை மதுரைக் காஞ்சி சிறப்பிக்கிறது. கொற்றனார் என்ற பெயரில் பலர் இருந்தமையால், காவிதி, பெரு என்ற அடைகளோடு ஊர்ப் பெயரை யும் சேர்த்து இவரை வேறுபடுத்தினர்.

இவர் பாட்டுக்குத் 'தலைமகள் பிரிவிடை மெலிந் தது' 'என்றும், 'வரைவிடை மெலிந்தது' என்றும் துறைக் குறிப்புள்ளது. பிரிவிடை மெலிந்தது கற்புக்கு உரியது; வரைவிடை மெலிந்தது களவுக்கு உரியது. பாடலில், பகற் பொழுதும் நடு இரவு போல இருண்டு மேகம் இடிமுழக்கத்தோடு திசைகள் தெரியாமல்

மழை பொழிகிறது. நடுக்கம் தரும் இளவாடை மனத்தில் வெறுப்புத் தோன்ற வீசுகிறது; மின்னலும் இடியும் வருவது அறிந்து கழுத்து மணி ஒலிக்கப் பசுக் கூட்டங்களோடு கோவலர் கொன்றையங்குழலை ஊதிக்கொண்டு மாலைக் காலத்தில், ஊருட் புகுகின்றனர் என்று கார்காலச்சூழல் அழகுறச் சித்திரிக்கப் பட்டுள்ளது.

கார்காலமும் மாலைப் பொழுதும் சிறப்புறப் புனையப்பெற்றுள்ள இப்பாடல் முல்லைத் திணைக் கருப்பொருள் நலஞ்சிறந்த இலக்கியமாக விளங்குகிறது. தெ.சொ.

**கிடங்கில் குலபதி நக்கண்ணனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கிடங்கில் இவர் ஊர் ஆகும். நக்கண்ணன் என்பது இவர் இயற்பெயர். இவர்தம் ஒரே பாடல் (குறு. 252) ‘குறுந்தொகை’யில் இடம் பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையிலமைந்த இப் பாடல் ‘தலைமகன் வரவறிந்த தோழி, அவர் நம்மை வலிந்து போயினார்க்கு எம்பெருமாட்டி தீயன கடிந்து நன்கு ஆற்றினாய்’ என்றாட்குக் கிழத்தி உரைத்தது’ என்ற துறையில் அமைந்துள்ளதாகும். வளை நெகிழ்த்த கொடியன்ஆகிய குன்று கெழு நாடன்பால் தலைவி கடவுள் கற்பினோடு தீமை மறந்து நன்றாற்றிய செயல் நினைந்து தோழி, நீ அறியாதவளாக உள்ளாய் என்று கூறினாள். அதற்குத் தலைவி ‘சான்றோர் புகழ்வதற்கு முன்னரே நாணிநிற்கும்இயல்பினர். அவர்கள் பழியைப் பொறுப்பாரோ’ தலைவன் அத்தகையனாதலின், தீயன மறந்து நல்லன செய்ய முற்பட்டேன் என்னும் கருத்தில் கூறிய கூற்றிலிருந்து அவளுடைய உயர்ந்த பண்பும், அவள் தலைவன்மீது வைத்துள்ள நம்பிக்கையும் புலனாகின்றன. இது உயர்ந்த கருத்தமைந்த ஒரு விழுமிய பாடலாகும். ‘சான்றோர் புகழும் முன்னர் நாணுப’ என்ற கருத்து எக்காலத்தும் எவ்விடத்தும் பொருந்திய நிலைபேற்றுப் பொன்மொழியாகும். கி.கோ.

**கிடாம்பி ஆச்சான்**: இராமாநுசர் வகுத்த சிரீவைணவ சமயத்திலே தோன்றிய மாபெரும் அறிஞரும், பக்தருமானவர் கிடாம்பி ஆச்சான் என்பவர். சண்டாமிசரான இவர், ஏவிளம்பி ஆண்டு சித்திரை வெள்ளியில் திருவரங்கத்தில் அவதரித்தவர். இவர் பெரிய திருமலை நம்பி என்பவரின் மருமகனார். இவரது புதல்வர் இராமாநுசப் பிள்ளான் என்ற பிள்ளான். இராமாநுசரது திருமடைப்பள்ளியில் அவருக்குத் துறவிகளுக்கு அளிக்க வேண்டிய ‘பிட்சை’ அளித்தவர். அதனால், இவருக்குச் சேனை முதலியாரின் திருப்பெயரான திருமேனிப்பரிவர் எனத் திருப்பெயர் ஏற்பட்டது. இவருக்கு மடைப் பள்ளி ஆச்சான் வேதாந்த உதயணர் பிரணதார்த்திகரர் என்ற பெயரும் உண்டு. இராமாநுசர் திருவரங்கத்தில் மடமேறி எழுந்தருளி இருக்கையில், 74 முதலிகள் என்ற இராமாநுசரின் சீடர்கள் ஆன சிம்மாசனாதிபதிகளும் 700 துறவிகளும், 12 ஆயிரம் சாத்தின சாத்தாத சிரீவைணவர்களும், 300 கொற்றி அம்மையர்களும்(இவர்களைச் சைவம் பிணாப்பிள்ளைகள் என அழைக்கும்) சில வைணவக் கட்டுவிச்சிமார்களும் இருந்தனர். கிடாம்பி ஆச்சான் இராமாநுசரது அணுக்கச்சீடர். இவருடைய திருமகனார் இராமாநுசப் பிள்ளான். இவர் குமாரர் பத்மநாபர். அப் பிள்ளார் என்ற இவருக்கு இராமாநுசப்பிள்ளான் என்ற திருக்குமாரர் இருந்தார். இவருடைய திருமகள் தோதாரம்பை. இவருடைய திருக்குமாரரே, சிரீவேதாந்த தேசிகர். ஒருநாள் திருக்கோட்டியூர் நம்பி என்ற இராமாநுசரது ஆசாரியர் சீடனைக் காணத் திருவரங்கம் வந்தார். இராமாநுசர் குருவைக் கண்டு, கொடிய மிகவும் சூடான கொள்ளிட மணலில் பல தடவை கீழ் விழுந்து வணங்கியும், ‘போதும்’ என நம்பி கூறவில்லை. அப்பொழுது அருகில் இருந்த ஆச்சான் தனது குருவின் திருமேனி வாட வதங்கத் தண்டனிடுவதைக் கண்டு, நம்பியை நோக்கிச் சினம் கொண்டு, இதுவா ஆசார்யன் பரிவு? எனக் கூறினார். உடனே மகிழ்ந்த நம்பி அன்று முதல் ஆச்சானையே இராமாநுசருக்குப் பிட்சை இடச் செய்தார். அது முதல் இவருக்குத் திருமேனிப்பரிவர் என்ற திருநாமம் ஏற்பட்டது. ஆச்சான் சிரீவைணவ சமயப் பேரறிஞர் என்பது சிரீதேசிகன் அருளிய ‘மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையில் மன்னியதே’ என்னும் சிரீசூக்தியால் அறியலாம். என்.எஸ்.தா.

**கிடினியா** ஐரோப்பியத்துறைமுகப் பட்டினங்களில் ஒன்று. இது 1920-ஆம் ஆண்டு அமைக்கப் பெற்றது. இது போலந்து நாட்டில் உள்ளது. பால்டிக்குக் கடற்கரையில் தான்சிகு நகருக்கு (Danzig) வடமேற்கே உள்ள கிடினியாப் பட்டினம் (Gdynia) ஒரு சிறந்த கப்பற் படைத்தளமாகவும் விளங்குகிறது. மிகப் பெரிய துறைமுகங்களுள் இதுவும் ஒன்று. தெ.பா.

**கிப்சன் பாலைவனம்**: ஆசுத்திரேலியா கண்டத்தின் மத்திய மேற்குப் பகுதியில் உள்ள கிப்சன் பாலைவனம் (Gibson) வடக்கில் சாந்தி (Sandy) பாலைவனத்தாலும் தெற்கில் விக்டோரியா பாலைவனத்தாலும் சூழப்பெற்றுள்ளது. இங்கே உப்பேரிகளும் மணற்குன்றுகளும் புதர்களும் நிறைந்துள்ளன. தெ.பா.

**கிப்பன், எட்வர்டு (கி.பி. 1737-1794)** ஆங்கிலேய வரலாற்றாளர்களுள் தலைசிறந்தவர். இவர் இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டன் பகுதியில் புட்னே (Putney) என்னுமிடத்தில் கி.பி. 1737-இல் பிறந்தார்; இளமையிலேயே தாயை இழந்தார். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து, தமது தொடக்கக் கல்வியைப் புட்னேயில் முடித்துக் கொண்டு, உயர் கல்வியை ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் தொடர்ந்த இவர், பின்னர்ச் சுவிட்சர்லாந்தில் உள்ள இலாசேனிலும் பயின்றார்; இலத்தீன், பிரெஞ்சு மொழிகளையும் கற்றார்.



கிப்பன், எட்வர்டு

இவர்தம் அத்தையான காதரீன் போர்டென், இவர் ஞானத்தாயாக இருந்து, இவரை அறிவுத்துறையில் ஆற்றுப்படுத்தினார். அதன் விளைவாக இவர் இளமைக் காலத்திலேயே இலக்கியத்தையும் தொல்வரலாற்றையும் நன்கு பயின்றார். தமது பதினான்காம் வயதிலேயே, இவர் வரலாற்றின் கால வரையறையைத் தெளிவாக அறிந்து, வரலாற்று நூல்களை இயற்றும் பக்குவத்தைப் பெற்றிருந்தார். தொடக்கத்தில் சீர்திருத்தக் கிறித்தவராக (Protestant) இருந்த இவர் உரோமன் கத்தோலிக்க மதத்திற்கு மாறினார்; பின்னர், சமயத் தெளிவு பெற்று மீண்டும் பழைய சமயத்திற்குத் திரும்பினார். தாம் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள, இவர் தந்தை எதிர்த்ததால், திருமணத்தையே வெறுத்து ஒதுக்கினார். இவர் வால்டேரின் தத்துவக் கருத்துகளாலும்,மாண்டெசுக்கியூவின் (Montesquie) கவின்மிகு மொழி நடையாலும் பெரிதும் கவரப்பட்டார்.

ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போரின் போது இவர் படைத்தளபதியாகப் பணிபுரிந்ததால், போர் முகாம்களைப் பற்றித் தாம் அறிந்து கொள்ள முடிந்தது என்றும், அந்த அனுபவம் தம்மை ஒரு வரலாற்றாசிரியராக ஆக்கியது என்றும் கிப்பன் குறிப்பிடுகிறார். இவர் கி.பி. 1776-இல் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அங்குத்தான் எட்மண்டு பர்க்கு, பாக்சு (Fox) முதலானோரின் ஆற்றல்மிகு பேச்சுகளைக் கேட்டுக் கிப்பன் மகிழ்ந்தார். அமெரிக்க விடுதலைப்போரில் இங்கிலாந்தின் உண்மைநிலை பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றை இவர் அருமையாகத் தீட்டினார். அதன் விளைவாகக் கிப்பன், நார்த்பிரபுவின் அமைச்சரவையில் வணிகத் துறையின் ஆணையராக (Commissioner of Trade and Plantations) அமர்த்தப்பட்டார். பின்னர் இவர் வரலாறு படைக்கும் பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

இளமைக் காலத்திலேயே நல்ல, தரமான வரலாற்று நூல்களைப் படைக்க வேண்டுமென்ற தணியாத ஆர்வம் கொண்ட கிப்பன், பல வரலாற்று நிகழ்ச்சிகளைப் பற்றி விவரித்தெழுத எண்ணினார். அவற்றுள் (1) இங்கிலாந்து நாட்டு முதலாம் இரிச்சர்டின் சிலுவைப்போர், (2) பிரான்சு நாட்டு எட்டாம் சார்லசின் படையெழுச்சி, (3) சுவிட்சர்லாந்தியரின் விடுதலைப் போராட்டம் ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். இவர் தம் வரலாற்று நூல்களைப் பிரெஞ்சு மொழியில்தான் எழுதவேண்டுமென்று எண்ணினார்; ஆனால் கியூமின் (Hume) அறிவுரையின் பேரில் இவர் ஆங்கிலத்திலேயே எழுதவும் முடிவெடுத்தார். இவர் கி.பி. 1764-இல் ஏற்றமிக்க உரோம் நகரைப் பார்வையிட்டார்; உரொமூலசு நின்ற இடம், சல்லி உரையாற்றிய சதுக்கம், மாமன்னன் சீசர் வீழ்ந்த இடம் முதலான வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களில் இவர் நடந்து சென்றபோது, இவருக்குப் புத்துணர்ச்சி தோன்றியது. உரோம் நகரத்தில் கி.பி. 1764-இல் அதன் வரலாற்றுப் புகழ்மிக்க, அழிந்துபட்ட வியத்தகு வரலாற்றுச் சுவடுகளின் அருகே அமர்ந்திருந்தபோது, 'உரோமானியப் பேரரசின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்' (Decline and Fall of the Roman Empire) என்னும் பொருள்பற்றி வரலாறு படைக்க வேண்டுமென்று கிப்பன் முடிவெடுத்தார்; அயராது பாடுபட்டார்; எண்ணிறந்த செய்திகளைச் சேகரித்தார்; அந்த அருமையான வரலாற்று நூலின் முதற்பகுதி கி.பி. 1776-இல் வெளிவந்தது. இந்நூல் வெளியான உடனேயே, உலக வரலாற்றறிஞர்களின் வரிசையில் முதலிடம் வகிக்கத் தகுதியுடைவர் கிப்பன் என்பது உறுதியாயிற்று. இருப்பினும் இந்நூலின் மீது கண்டனக் கணைகள்

சிலரால் தொடுக்கப்பட்டன. எனவே, இவர் கி.பி. 1779-இல் 'உரோமானியப் பேரரசின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்' என்ற நூலின் 15, 16-ஆம் அத்தியாயங் களுக்குச் சில விளக்கங்கள்' (A vindication of some passages in the XVth and XVIth chapters of the Decline and Fall of the Roman Empire) என்னும் தலைப்பில் மறுப்பு நூல் ஒன்றினையும் வெளியிட் டார்.

இம்மாபெரும் வரலாற்று நூலின் இரண்டாம் மூன்றாம் பகுதிகள் கி.பி. 1781-இல் வெளியிடப் பட்டன. இந்நூலின் இறுதித் தொகுதியின் (ஆறாவது தொகுதி) இறுதி வாக்கியத்தை எழுதி முடித்து, கி.பி. 1788-இல் கிப்பன் கடைசித் தொகுதியை வெளியிட்டார்; வரலாற்றுலகில் அழியாப் புகழ் பெற்றார். இவரது முதல் படைப்பு இலக்கியக் கட்டுரைகள் (L. Essai Sur L'e'tude de la literature என்னும் தலைப்பில் பிரெஞ்சு மொழியில் வெளி வந்தது. 'கட்டுரைகள்' (Essai) என்னும் நூலை கி.பி. 1791-இல் பிரெஞ்சு மொழியில் வெளியிட்ட இவர், பின்னர் 1794-இல் அதனையே ஆங்கிலத்திலும் வெளியிட்டார். இவர் கி.பி. 1770-இல் ஏனியட்டின் (Aeneid) ஆறாம் நூலைப் பற்றிய திறனாய்வு (Critical Observations on the Sixth Book of the Aeneid) ஒன்றினை எழுதி வெளிட்டுப் புகழ் பெற் றார். இறுதியாக, இவர் தமது வாழ்வின் நினைவு களை ஒரு சுயசரிதையாக (Memoirs) வெளியிட்டுப் புகழின் உச்சியை அடைந்தார்.

இவர்தம் நூல்கள் கவர்ச்சியான மொழி நடையை யும், கருத்துச் செறிவையும், உயிரோட்டத்தையும், மாறுபடாத ஆதாரங்களையும், சரியான தீர்ப்பை யும் (முடிவு) கொண்டவை என்று அறிஞர்கள் பலர் பாராட்டுகின்றனர். பகுத்தறிவு இயக்க வரலாற்றறி ஞர் குழுவினருள் ஒருவராகத் திகழும் கிப்பன், சமய மூடநம்பிக்கை, அறியாமை ஆகியவற்றை அகற்றி உண்மையான, பகுத்தறிவான வரலாற்றைப் படைத் துத் தந்தார். இவர் கி.பி. 1794-இல் மறைந்தார்.

ம.இ.

**துணை நூல்:**

Rajayyan,, K. 'History in Theory and Method,' Raj, Publishers, Maduari, 1982.

**கிப்போர்டு, எட்வர்டு வின்சுலோ (கி.பி. 1887-1959)** அமெரிக்க மானிடவியல் அறிஞர்; தொல் லியல் ஆய்வுகளையும் இனக்குழுவியல் (Ethnography) ஆய்வுகளையும் மிகுதியான எண்ணிக்கையில் மேற் கொண்டவர். கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் பெருமளவு மானிடவியற் பொருள்களைக் கொண்ட அருங்காட்சியகத்தைத் தோற்றுவித்தவர் இவர். கிப் போர்டு (Edward Winslow Gifford) கலிபோர்னியா வில் ஓக்லாந்து (Oakland) என்னுமிடத்தில் 14.8.1887 -இல் பிறந்தார்.

பள்ளிக் கல்விக்குப்பின் 1904 முதல் 1912 வரை கலிபோர்னியா அறிவியற் கழகத்தில் பறவையியல் பிரிவிற்கு உதவிக் காப்பாட்சியராகப் பணியாற்றி னார். அங்குப் பணியாற்றிய காலத்தில் இவர் பல புத்தாய்வுப் பயணங்களில் பங்குகொண்டார். பின்னர், இவர் 1912-இல் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் அருங்காட்சியகத்தின் உத விக் காப்பாட்சியாளராகப் பொறுப்பேற்று, படிப் படியாக அந்த அருங்காட்சியகத்தின் இயக்குநராகிப் பின்னர் அப்பணியினின்றும் விலகினார். இவர் 1920-இல் அப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாள ராகச் சேர்ந்து 1938-இல் இணைப் பேராசிரிய ராகவும், 1945-இல் பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்றார்.


தொடக்க காலத்தில் இயற்கை அறிவியலில் பெரி தும் நாட்டங் கொண்டிருந்த இவர், பின்னர் மானிட வியலின் அனைத்துப் பிரிவுகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றார். தொல்லியல், நாட்டுப்புறவியல், உறவு முறை (Kinship), சமுதாய அமைப்பு, பொருள்சார் பண்பாடு (Material culture), சமயம், உடல்சார் மானிடவியல்(Physical Anthropology)ஆகிய உட்பிரிவு களில் இவர் பெருமளவு ஆய்வுகளை மேற்கொண் டார்.

கிப்போர்டு ஆய்வுகளுள் தலையாயது கலிபோர் னிய இந்தியர்களைப் பற்றியதாகும். இப்பழங்குடி களைப் பற்றிய ஆய்வுகளைத் தனி நூல்களாகவும் பல ஆய்வுக் கட்டுரைகளாகவும் இவர் வெளியிட்டார். கலிபோர்னியப் பகுதிப் பழங்குடிகளைப் பற்றி மிகுதி யான அளவில் ஆய்வு செய்த பெருமை இவரைச் சாரும். கிப்போர்டின் இனக்குழுவியல் ஆய்வுகள் மிகச்சிறந்த தரமுடையவை எனப் பலரால் பாராட் டப்பட்டன. பழங்குடிகளின் , அனைத்து வாழ்க்கை நிரலையும் பற்றிய இவர் தரவுகளின் தன்மை இச் சிறப்பிற்குக் காரணமாயிற்று. ஐரோப்பிய அமெரிக் கர்களின் பண்பாட்டுத் தொடர்பை ஆராய்ந்தபோது 'பண்பாட்டுப்பேறு' (Acculturation) என்னும் சொல் லைக் கையாண்ட முதல் அமெரிக்க மானிடவியலார் இவர் என்னும் சிறப்பைப் பெற்றார். இதைப் போன்றே 'கால்வழி' (Lineage) என்னும் சொல்லை யும் முதலில் கையாண்டவர் இவரே.

மானிடவியலிற்கடுத்துத் தொல்லியல் இவரது விருப்பத் துறையாகும். இவரது இறுதிக் காலத்தில் பிசித் தீவு, நியூகலிடோனியா முதலான பகுதிகளில் பல அகழாய்வுகளை மேற்கொண்டு அப்பகுதியின் வரலாற்றைப் பெருமளவு முழுமை பெறச் செய்வதற்கு இவர் உதவினார். இவர் 1945, 46–இல் வட மேற்கு மெக்சிகோப் பகுதியில் செய்த ஆய்வுகள் தொல்லியல் துறையில் சிறப்பிடம் பெறுவனவாகும்.


மானிடவியல், தொல்லியல் துறைகள் மட்டுமல்லாமல் அருங்காட்சியகவியலிலும் கிப்போர்டு மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் அமெரிக்காவில் பெருமளவு மானிடவியற் காட்சிப் பொருள்களைக் கொண்டுள்ள கலிபோர்னியாப் பல்கலைக் கழக மானிடவியல் அருங்காட்சியகத்தின் வளர்ச்சிக்காக 44 ஆண்டுகள் சீரிய பணிபுரிந்தார். இவர் எழுதிய நூல்களுள் முதன்மையானவை கலிபோர்னிய உறவு முறைச் சொல் வழக்குகள் (California Kinship Terminologies, 1922), கலிபோர்னிய மானிட உடலளவை (California Anthropometry, 1926), தோங்காத் தீவுகள் (Tonga Islands, 1921), தோங்காச் சமுதாயம் (Tonga Society, 1929) முதலானவை. கிப்போர்டு கலிபோர்னியாவில் பெர்க்கிலி என்னுமிடத்தில் 1959–இல் மே மாதம் 16–ஆம் நாள் காலமானார். சீ.ப.

**கிபன் முரணுரை**, தேவைக் கோட்பாடுகளுள் தனித்தன்மை வாய்ந்ததாகப் பொதுத்தேவைக்கோட்பாடுகளினின்று மாறுபட்டுக் காணப்படும் நிலையைக் குறிக்கும். கிபன் முரணுரையைத் (Giffen Paradox) தேவையின் கிபன் விளைவு (Effect) எனவும் கூறுவர். இதனை முதன் முதலாக கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் கிபன் இராபர்ட்டு (Giffen Robert) என்பவர் விளக்கினார்.




வரைபடம்—1

ஒரு பொருளின் விலை உயரும்போது அப்பொருளின் தேவை (Demand) குறையும் என்ற பொதுத் தேவை விதிக்கு (Law of Demand) விலக்காகச் சில குறிப்பிட்ட பொருளின் விலை உயரும் போது, அவற்றின் நுகர்வும் பெருகித் தேவை கூடும் என்பதைக் கிபன் முரணுரை விளக்குகிறது. தேவை விதிகளின் படி தேவை வளைகோடு (Demand Curve) படம் 1–இல் வரையப்பட்டுள்ளபடி இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் செல்லும். ஆனால், கிபன் முரணுரையின்படி தேவைக்கோடு படம்–2–இல் வரையப்பட்டுள்ளதுபோல் இடமிருந்து வலமாகக் கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும்.




வரைபடம்–2

கிபன் முரணுரையில் அடங்கும் பொருளின் விலை OP–இலிருந்து $OP^1$–க்கு உயருப்போது அவற்றின் தேவை OQ–விலிருந்து $OQ_1$–க்குப் பெருகுவதைப் படம் 2 தெளிவாக விளக்குகிறது.

கிபன் முரணுரையில் பெரும்பாலும் தரம் குறைந்த பொருள்களும் (Inferior Goods), பெருமைக்குரிய பொருள்களும் (Prestigious Goods) அடங்கும். குறிப்பிட்ட, சில தரம் குறைந்த பொருள்களின் விலை உயருங்கால் நுகர்வு பெருகித் தேவை கூடுதலாகும். அவற்றின் விலை கீழிறங்கும்போது நுகர்வு குறைந்து, தேவையும் கீழிறங்கும். இதனைக் கிபன் இராபர்ட்டு கி.பி.19–ஆம் நூற்றாண்டு அயர்லாந்துத் தொழிலாளரிடையே நிகழ்வதை ஆய்ந்தறிந்துவெளியிட்டார். அயர்லாந்துத் தொழிலாளர்கள் தங்கள்வருமானத்தின் பெரும்பகுதியை இன்றியமையா அடிப்

படை உணவுப் பொருளான அப்பத்துக்குச் (Bread) செலவு செய்தனர். அதன் விலை கூடியபொழுது, அதன் இன்றியமையா அடிப்படைத் தேவையின் காரணமாக விலை உயர்ந்த இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றின் நுகர்வைக் குறைத்து அப்பத்தை மேலும் கூடுதலாக நுகர்ந்தனர். அதன் விலை உயர்வால் தொழிலாளரின் உண்மை வருமானம் (Real Income) வீழ்ச்சியுற்றது. எனவே, விலையுயர்ந்த பிற, பொருள்களின் நுகர்வைக் குறைத்து அப்பத்தைக் கூடுதலாகப் பயன்படுத்தும்படியான நிலைக்குள்ளாயினர். அதே தொழிலாளர் அப்பத்தின் விலை குறைந்தால், அதன் நுகர்வைக் குறைத்து, அதனால் தங்களிடம் எஞ்சிய கூடுதல் வருமானத்தை விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவதற்குச் செலவு செய்வார்கள். இவ்வாறு விலை குறையும்போது தேவை குறைந்து, விலை உயரும்போது தேவை கூடுவது கிபன் முரணுரையாகும். இந்தியாவின் வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும், பணித் துறையிலும் பணியாற்றும் அடிப்படைத் தொழிலாளரிடையே அவர்களின் அடிப்படைத் தேவைகளின் நுகர்வில் இத்தகைய கிபன் முரணுரை செயற்படுவதைப் பல ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

பெருமைக்குரிய பொருள்களான விலையுயர்ந்த முத்துகள் (Pearl), வைரம், ஓவியம், பழமையான பொருள்கள் (Antique Articles) போன்றவற்றை உயர்குடி மக்கள் (Aristocrats) அவர்களின் உயர் நிலைச்சமூக அடையாளச் சின்னமாக (Social Status Symbol) அணிந்துகொள்ளவோ வைத்துக்கொள்ளவோ விரும்புவர். அத்தகைய பொருள்கள் அவற்றின் உள்ளார்ந்த மதிப்பின் (Intrinsic Value)அடிப்படையில் நுகரப்படாமல், சமுதாயப் பெருமைக்காகத் தனிப்பட்ட ஒருசில உயர்குடி மக்களால் மட்டும் வாங்கப்படுவதால், அவற்றின் விலை கூடினால் தேவை பெருகும். விலை குறைந்து அவற்றை எல்லா வகுப்பு மக்களும் வாங்கும் நிலை உண்டானால் நுகர்வு குறையும். அதனால், இத்தகைய பெருமைக்குரிய பொருள்களின் தேவை நுகர்விலும் கிபன் முரணுரை செயற்படும்.

அறியாமையில் செயற்படுதல், ஊக வாணிகம், (Speculation), பண அங்காடி (Money Market) போன்ற நடவடிக்கைகளிலும் கிபன் முரணுரையைக் காணலாம். நுகர்வோர் தங்கள் அறியாமையினால் (Ignorance) தரமான பொருள் என்பதால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது எனக் கருதி விலையுயர்ந்த பொருளைக் கூடுதலாக வாங்குவர். அதனால், விலை உயர்விலும் தேவை கூடும். கிபன் முரணுரை செயற்படும்.

ஊக வாணிகத்திலும் இருப்பு அங்காடிகளிலும் (Stock Market) பணவீக்கக் (Inflation) காலத்திலும் குறிப்பிட்ட சில பொருள்களின் விலை உயரும்போது மேலும் விலை உயரும் என அவற்றை மிகுதியாக வாங்கி இருப்பாக வைப்பார்கள். அதனால், விலை உயரும்போது தேவை பெருகும். விலை குறையும் போது மேலும் விலை குறையும் என எதிர்பார்த்துக் காத்திருப்பர். அதனால், விலை வீழ்ச்சியுற்றாலும் தேவை குறைவாக இருக்கும். ஊக வாணிகம், பண அங்காடி நடவடிக்கைகளில் இத்தகைய கிபன் முரணுரை அடிக்கடி நிகழும்.

பொதுவான தேவை விதிக்கு மாறான கிபன் முரணுரை ஒரு சில பொருள்களில் மட்டும் செயற்படுகிறது. அதனை விளக்கும் வளைகோடு (படம் 2.) எதிர்மறைத் தேவை வளைகோடு (Negative Demand Curve) எனப்படுகிறது. அ.கு.சா.

**துணை நூல்கள்:**

**Alfred Marshall**, Principles of Economics, Macmillan, New York, 1961.

**Osker Lange**, Introduction to Econometrics, Macmillan, New York, 1963.

**கிபு** சப்பான் நாட்டில் மத்திய ஒன்சு (Honshu) பகுதியில் உள்ள ஒரு நகரம். இங்கு ஆடை வகைகள், காகிதம் முதலிய உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பல உள. பெரிய புகைவண்டி நிலையமும் உள்ளது. மூன்று பல்கலைக்கழகங்கள் இங்கு இருக்கின்றன. நாவா (Nawa) பூச்சி நூல் ஆய்வுக்கூடம் கிபுவில் (Gifu) இயங்குகிறது. கி.பி.1891–ஆம் ஆண்டில் ஒரு



கிபு வீடுகள்

நிலநடுக்கத்தின் விளைவாக இந்த ஊர் எரிந்து சாம்பலாயிற்று. பின்னர்ப் புதிய வளர்ச்சி பெற்றுள்ளது.
தெ.பா.

**கிம்பர்லி** தென்னாப்பிரிக்காவின் தென்மத்திய பகுதியில் உள்ள நகரம். வைரச் சுரங்கங்கள் இங்கு இருப்பதால் கிம்பர்லி (Kimberley) சிறப்புப் பெற்றுள்ளது. இது கி.பி. 1871-இல் நிறுவப்பெற்றது. செசில் உரோடுசு (Cecil Rhodes) என்ற ஆங்கில வீரன் தன் முயற்சிகளின் விளைவாக கி.பி. 1888-ஆம் ஆண்டில் வைரச் சுரங்கங்கள், அவனுடைய கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஒரு குழுவின் கீழ் கொண்டு வரப் பெற்றன.



கிம்பர்லி வைரச்சுரங்கம்

அமெரிக்காவில் விசுகான்சின் மாநிலத்தில் கிம்பர்லி என்ற ஒரு சிற்றூரும் உள்ளது. காகிதப் பொருள்கள் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

**கிம்புருடர்** என்பார் பதினெட்டுத் தேவ கூட்டத்தில் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவராவார். இப்பதினெட்டுக் கூட்டத்தினரையும் பதினெண் தேவ கணங்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. பிரமாவினுடைய மானச குமாரர்கள் மரிசி, அத்திரி, ஆங்கிரசு, புலத்தியர், புலகர், கிருது, பிருகு, நாரதர், தக்கன், உருசி, கசபதி, தருமதேவதை என்போாவார். இவர்களுள் ஒருவராகிய புலத்தியரின் குமாரர்கள் கிம்புருடர், சின்னரர், கருத்தமர் எனப்படுவர். கிம்புருடர் மரபில் வந்தோர் கிம்புருடர் எனப்படுவர். கிம்புருடர் வசிக்குமிடம் இமயமலை தாண்டி ஏமகூடத்திற்குச் செல்லும் வழியில் உள்ள கிம்புருட வருடம் ஆகும். மனித வடிவமும் குதிரை முகமும் உடையவர்களாதலால், (கிம்+புருடர்) வேறுபட்ட மனித வடிவினர் எனப் பொருள்படும் கிம்புருடர் என்னும் பெயர்பெற்றனர்.

இவர்களுக்கும் இயக்கர்களுக்கும் அரசன் குபேரன். குபேரன் வடக்குத் திக்கிற்கு அதிபதியாகிய திக்குப் பாலகராவார். கிம்புருடர்கள் குதிரை முகமுடையவர்களாதலால் இவர்களில் ஆண்களுக்கு அசுவமுகர் என்றும் பெண்களுக்கு அசுவமுகி என்றும் பெயர்கள் புராணங்களில் வழங்கப்பெறுகின்றன.

சிற்ப நூல்களில் இவர்கள்தம் வடிவங்களின் இலக்கணம் கூறப் பெறுகின்றது. திருக்கோயில் தூண்களிலும் மேல்விதானங்களிலும் கிம்புருடர் வடிவங்களின் அமைப்புகளைக் காணலாம். பௌத்த கோயில்களிலும் இவர்கள் வடிவங்களின் அமைப்புகளைக் காணலாம். தேவகணங்களில் இசையையே தம் தொழிலாகக் கொள்பவர்களுள் கிம்புருடரும் ஒருவராவார். காளிதாசன் தம் காவியங்களில் இவர்களைக் குறிப்பிடுகிறார். பத்ம புராணத்தில் இவர்கள் பிரமனுடைய எதிரொளியாகத் தோன்றியவர்கள் என்று கூறப் பெறுகிறார்கள்.
சு.சு.

**கியாசுதீன் துக்ளக்கு**: சுல்தான் பால்பனின் துருக்கிய அடிமையான மாலிக் துக்ளக்கு என்பவருக்கும் மனைவியான சாடு இனப் பெண்ணுக்கும் பிறந்தவர் காசி மாலிக்கு. இவர் அலாவுதீன் கில்சியின் காலத்தில் கடுமையான மங்கோலியப் படையெடுப்புகளை முறியடிக்கும் பணியில் உதவினார். இவர் தீபால்பூரின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். குசுரூ சா நசிருதீன் கொடுங்கோலாட்சி நடத்தினார். இது 'அலயி' பிரபுக்களின் மனத்தைப் புண்படுத்தப் போதுமானதாயிருந்தது. அவர்கள் காசி மாலிக்கைப் புதிய தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். காசி மாலிக்கு கி.பி. 1320-இல் குசுரூவைத் தோற்கடித்தார்; வெற்றிபெற்ற போதிலும், அரியணை ஏறுவதில் தயக்கம் காட்டினார். கில்சி வமிசத்தில் ஆண் வாரிசு யாரும் இல்லையாதலால், பிரபுக்களின் வற்புறுத்தலினால் கியாசுதீன் துக்ளக்கு என்ற பெயருடன் இவர் அரியணையேறினார்.

இவர் பட்டமெய்திய காலத்தில் சூழ்நிலை துன்பம் நிறைந்ததாக இருந்தது. இவரிடம் வலிமையும் மேலான குணங்களும் பொருந்தியிருந்தன. இளமையில் ஏற்பட்ட பல துன்பங்கள் இவருக்கு நல்ல பயிற்சியை அளித்திருந்தன. ஆழ்ந்த கடவுள் பக்தி உடைய இவரிடம் சாந்தமும் தயாள குணமும் நிறைந்திருந்தன. இவர் எதிலும் நிதானத்துடனும் அறிவுடனும் நடந்து கொண்டார். 'தம்முடைய முடியின் கீழ் நூறு அறிவாளிகளின் மேலுடைமையைத் தரித்திருந்தார்' என அமீர்குசுரூ இவரது பெருமையைக் குறிப்பிடுகிறார்.

பதவி ஏற்பதற்கு முன் ஏற்பட்டிருந்த குறைகளை நீக்க இவர் பல முயற்சிகள் எடுத்தார். பொருளாதார நிலையை மேம்படுத்தச் சட்டப்படி இல்லாத இனாம்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் இவர் நேர்மையான ஆளுநர்களை நியமித்தார்; வேளாண்மைக்குத் தனிப்பட்ட ஊக்கம் காட்டினார்; நீதித்துறை, காவல் துறையில் புதிய சீர்திருத்தங்களைப் புகுத்தினார். நாட்டின் அஞ்சல் முறை சீர்திருத்தி அமைக்கப்பட்டது. இவர் மக்கள் நலம், மத நிலையங்களுக்கு ஆதரவு, அறிஞர்களைப் பேணல் போன்ற திட்டங்களை நிறைவேற்றினார். இராணுவத்துறை திறமையாகவும் ஒழுங்காகவும் விளங்கும்படி செய்யப்பட்டது. கில்சிக்களின் இராணுவ ஆதிக்கம், அரசியல் ஆதிக்கம் ஆகியவற்றை இவரும் பின்பற்றினார்.

அலாவுதீன் கில்சி இறந்தபின் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்தி, வாரங்கல் நாட்டுக் காகதீய மன்னர் இரண்டாம் பிரதாப ருத்திர தேவன் கப்பத்தைக் கட்ட மறுத்தார். எனவே, இவர் கி.பி. 1322–இல் இளவரசன் சூனாகான் தலைமையில் படையை அனுப்பினார். வாரங்கல் மண் கோட்டை முற்றுகையிடப்பட்ட போதிலும், இந்துக்களின் வலிமையினாலும் உறுதியினாலும், படையில் ஏற்பட்ட சதித் திட்டங்களினாலும், கொள்ளை நோயினாலும் சூனாகான் படையெடுப்பைக் கைவிட்டுத் தில்லி திரும்பினார்; நான்கு மாதங்கள் கழித்த பின் மீண்டும் வாரங்கல் மீது படையெடுத்தார். போரில் தோல்வியுற்ற மன்னன் பிரதாபருத்திர தேவர் கைது செய்யப்பட்டுத் தில்லி அனுப்பப்பட்டார். வாரங்கலுக்குச் சுல்தான்பூர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வங்காளத்தில் ஏற்பட்ட வாரிசுரிமைப் போரில் கியாசுதீன் தலையிட்டு, அதனைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வர முனைந்தார். கியாசுதீன் கி.பி. 324–இல் இலக்நாடி சென்று பகதூரை வென்று அவரைச் சிறைப்படுத்தினார். அங்கு நாசிருத்தீனைச் சிற்றரசராக நியமித்தார்; பீகாரை வென்றார். வரும் வழியில் தில்லியிலிருந்து வருந்தத்தக்க செய்திகளைக் கேள்வியுற்றுத் தில்லி திரும்பினார். ஆப்கான் பூரில் பரிதாபாத்து என்னுமிடத்தில் சுல்தானுக்கு வரவேற்பு அளிக்க அமைக்கப்பட்ட மரத்தாலான கட்டடத்தில் சூனாகான் திட்டமிட்டபடி யானைகளை நடத்தக் கட்டடம் முழுவதும் சரிந்து விழுந்ததனால் சுல்தான் மரணமடைந்தார். பின்னர் துக்ளதாபாத்தில் கட்டப்பட்ட சமாதியில் கியாசுதீன் அடக்கம் செய்யப்பட்டார். பி.சி.

**கியாதி வாதம்** கியாதி என்ற சொல் அறிவு எனவும் கியாதிவாதம் என்பது பிழை பற்றிய கோட்பாடு எனவும் பொருள்படும். பிழை பற்றிய கோட்பாடு பிழையறிவு, அது தோன்றுகின்ற நிலை, பிழையறிவில் தோன்றிய பொருளின் உண்மைத் தன்மை ஆகியவற்றை விளக்குகின்றது. பிழைகள் காட்சி, கருதல், உரை ஆகிய அளவைகளில் நிகழ்பவையாயினும், பிழை பற்றிய கோட்பாடாகிய கியாதி வாதம் (Khyate vada) காட்சியளவில் ஏற்படுகின்ற பிழையாகிய திரிபுக்காட்சியை (Illusion) மட்டுமே கருதுகின்றது. திரிபுக்காட்சி என்பது புறவொளியும் காட்சித் தெளிவும் அற்ற நிலையில் கயிற்றைப் பாம்பு எனக் கண்டு அச்சப்படுவதாகும். அதைப் போன்றே, இப்பியை வெள்ளியாகவும், தொலைவில் உள்ள தூணை மனிதனாகவும் கண்டு மயங்குவது திரிபுக் காட்சிகள் ஆகும். கயிற்றைப் பாம்பாகக் காண்கின்ற திரிபுக் காட்சியில் பாம்பின் தோற்றத்தைப் பற்றிய உண்மைத் தன்மையை விளக்குவதே கியாதி வாதத்தின் நோக்கமாகும்.

இந்திய மெய்ப் பொருளியலாரின் பல்வேறு பிழை பற்றிய கோட்பாடுகளைத் (Theory of error) திரிபுக் காட்சியில் தோன்றும் பொருளின் உண்மைத்தன்மையின் அடிப்படையில், பின்வரும் மூன்றுபெரும் பிரிவுகளாகக் குறிப்பிடலாம். அவை, அசத் கியாதி, அநிர்வசனீய கியாதி, சத் கியாதி எனப்படும்.

**அசத் கியாதி**: இது பௌத்த சமயத்தின் ஒரு பிரிவினராகிய மாத்யாமிகர்களின் (Madhyamikas) பிழைக் கோட்பாடாகும். மாத்யாமிகர்கள் உள்பொருள் என்று எதுவும் உண்மையில் இல்லை என்று கருதுவதால், அவர்களைச் சூனியவாதிகள் (Sunyavadins) அல்லது வெறுமைவாதிகள் (Nihilists) என்றும் கூறுவர். அவர்களின் கருத்துப்படி உண்மையிலேயே இல்பொருளாயினும் அது உண்மைப் பொருள் (Real object) என்று திரிபுக் காட்சியில் உணரப்படுகிறது. திரிபுக் காட்சியின் பொருளான பாம்பு உண்மையில் இல்லாதது (அசத்) என்பதால் அவர்களின் பிழை பற்றிய கோட்பாடு அசத் கியாதி என வழங்கப்படுகிறது.

**அநிர்வசனீய கியாதி**: இது அத்துவித வேதாந்திகள்பிழைபடும் அறிவு குறித்துத் தந்த விளக்கமாகும். அவர்களின் கருத்துப்படி உண்மை (Real) எவ்விடத்தும் எக்காலத்தும் நிலைத்து இருப்பதாகும். இல்பொருள் (Unreal) எவ்விடத்தும் எக்காலத்தும் தோன்றாததாகும். அதன் அடிப்படையில் திரிபுக் காட்சியின் பொருளாகிய பாம்பு உண்மைப் பொருள் எனில், புறவொளியும் காட்சியில் தெளிவும் தோன்றுமிடத்து நீங்காது நிலைத்திருக்கும். ஆனால், அந்நிலையில் பாம்பின் தோற்றம் நீங்கியதால் அது

உண்மையன்று. அது இல்பொருள் எனில் தோன்றியிருக்காது. ஆனால், திரிபுக்காட்சியில் பாம்பு தோன்றியுள்ளதால் அது இல்பொருள் அன்று. பாம்பு உள் பொருளுமன்று, இல்பொருளுமன்று எனில் இரண்டு தன்மைகளும் சேர்ந்ததோவெனில், ஒரே பொருள் முரண்பட்டதன்மைகளை உடையதாயிருக்க முடியாததால் அது இரண்டும் சேர்ந்ததன்று. எனவே, திரிபுக் காட்சியின் பொருளான பாம்பின் உண்மைத் தன்மை இத்தன்மையது என வரையறை செய்ய வொண்ணாதது என்பதனை, அத்துவித வேதாந்திகள் அநிர்வசனீயம் என்ற சொல்லால் குறிப்பிடுவதால், அவர்களின் பிழைபற்றிய கோட்பாடு அநிர்வசனீய கியாதி என்று கூறப்படுகிறது.

**சத் கியாதி**: இது, திரிபுக் காட்சியின் பொருளை உண்மையில் இருப்பதாகக் (சத்) கருதுகிறது. இக் கோட்பாட்டை விசிட்டாத்துவைதிகள் ஏற்கிறார்கள்.

இராமானுசரின் கருத்துப்படி இயலுலகப் பருப் பொருள்கள் அனைத்தும் பஞ்சீகரணம் (Pancikarana) எனப்படும். ஐவகை நிலை மாறுபாடுகளினால் சூக்குமநிலைப் பொருள்களிலிருந்து தன்மாத்திரைகள் உண்டானவையாதலின், எந்தவொரு பொருளிலும் பிற பொருள்களின் கூறுகள் அடங்கியனவாகவேயிருக்கும். கயிற்றைத் திரிபுக் காட்சியில் பாம்பாகக் காண்கின்றபொழுது கயிற்றின் மேலோங்கிய தன்மையை விடுத்து, அதனுள் அடங்கியிருந்த பாம்பின் சிறு கூற்றினை மேலோங்கிய நிலையில் மன, புறச் சூழ் நிலைகளின் காரணமாக உணர்வதே பிழையாகும் கயிற்றில் பாம்பின் கூறுகள் சிறு அளவிலேனும் உள்ளதால் பாம்பு இல்பொருளன்று; உண்மைப் பொருளே என விசிட்டாத்துவைதிகள் கருதுவதால், இவர்களின் பிழைக்கோட்பாடு சத் கியாதி எனப்படுகிறது.

திரிபுக் காட்சிப் பொருளின் உண்மைத் தன்மை பற்றிய மேற்குறிப்பிட்ட விளக்கங்களன்றிப் பின்வரும் விளக்கங்களும் இந்திய மெய்ப் பொருளியலில் காணப்படுகின்றன. இவையனைத்தும் திரிபுக் காட்சிப் பொருளின் உண்மையை ஏதாவதொரு நிலையில் ஏற்பவையாகும்.

**ஆத்ம கியாதி**: பௌத்த சமயத்தின் கருத்துக் கொள்கையினர் (Idealists) எனவும், அறிவியல் கொள்கையினர் (Vijnanavadins) எனவும் சொல்லப் பெறும் யோகசாரர்கள் உண்மையில் புறவுலகம் என்று எதுவும் இல்லையென்றும், அகத்தே தொடர்ந்து நிகழும் உணர்வுகளின் (Stream of Consciousness) தொகுதியே இயலுலகம் என உணர்கின்றனர் என்றும் கூறுகின்றனர். மேலும், அவர்கள் ஒவ்வோர் உணர்வும் ஒரு நொடிப் பொழுதே (Doictrine of Monentariness) நிகழ்கின்றது என்னும் கொள்கையையும் உடையவராவர். எனவே, புறப்பொருள் என்பது, அகஉணர்வுகளின் விரைவான தொடர் நிகழ்வுகளேயாகும். அவர்கள் கருத்துப்படி, பிழையறிவு (கியாதி) என்பது தொடர்ந்து அகத்தே (ஆத்மா) நிகழும் உணர்வைப் புறத்தே இருக்கும் பொருளாகக் கருதுவதேயாகும்.

**அக்கியாதி**: இது விவேக கியாதி எனவும் பெயர் பெறும். மீமாம்சகர்களின் ஒரு பிரிவினராகிய பிரபாகரர்கள் திரிபுக் காட்சியைப் பின்வருமாறு விளக்குகின்றனர். கயிறு–பாம்பு திரிபுக் காட்சியில், கயிறு புலனுக்குத் தரப்பட்டது; பாம்பு நினைவுகூரப்பட்டது. கயிற்றைப் பாம்பாகக் காண்பது புலனுக்குத் தரப்பட்டதையும் நினைவுகூரப்பட்டதையும் தனித் தனியாகப் பிரித்து அறியாமையினால் அக்கியாதி ஆகும்.

**விபரீத கியாதி**: மீமாம்சகர்களின் மற்றொரு பிரிவினராகிய பாட்டர்களின் கருத்துப்படி திரிபுக் காட்சியில் தரப்பட்ட பொருளான கயிற்றிற்கு அயலாக நினைவுகூரப்பட்ட ஒன்றையும் சேர்த்து அறிவது விபரீத கியாதி ஆகும். பிரபாகர்களின் கருத்துப்படி காட்சிப் பொருளையும் நினைவுப் பொருளையும் பிரித்தறியத் தவறுதலால் பிழை ஏற்படுகின்றது. பாட்டர்களின் கருத்துப்படி உள்ளதற்கு அயலாக அவ்விடத்து இல்லாததையும் சேர்த்துக் காணுதலால் பிழை ஏற்படுகின்றது.

**அன்யத கியாதி**: இது நியாய வைசேடிகர்களின் பிழை பற்றிய கோட்பாடாகும். அவர்களின் கருத்துப்படி கயிற்றிற்கும் பாம்பிற்குமிடையே உள்ள வடிவ ஒற்றுமையினால் காட்சிக்குத் தரப்பட்ட கயிறு மனத்தில் பாம்பின் நினைவைத் தருகிறது. நினைவு கூரப்பட்ட பாம்பையறியாது காட்சிக்குக் கொடுக்கப் பட்ட கயிற்றையே மாறான (அன்யத) பொருளான பாம்பாகக் காண்பதே பிழையாகும்.

**அபிநவ அன்யத கியாதி**: காட்சிப் பிழை பற்றிய மத்துவரின் கோட்பாடு. அவர் கயிற்றைத் திரிபுக் காட்சியில் அதற்கு மாறான (அன்யத) பாம்பாகக் காண்பதில், பாம்பு நினைவு கூரப்பட்டது என்பதனை ஏற்கிறார். ஆனால் காட்சிக்குக் கொடுக்கப்பட்ட கயிற்றின் அளவிற்கு அதே வடிவிலான பாம்பு எப்பொழுதும் எவ்விடத்தும் இல்லை என்பதும் நினைவு கூரப்பட்டது. பாம்புத் தன்மையேயன்றி, முன்னர் எங்கோ பார்த்த பாம்பு அன்று என்பதும் இப்பொழுது

நினைவு கூரப்பட்ட அத்தன்மை அடிப்படையில் கயிற்றின் வடிவுக்கேற்ற புதிய ஒன்று (அபிநவ) என் பதும் கருதப்படுவதாலேயே அவரது பிழைக்கோட் பாடு இப் பெயர் பெறுகிறது. இவ்வாறு இயலுலகச் சார்பற்ற ஒரு பொருளைத் திரிபுக் காட்சியில் காண் பதை அலெளகீக கியாதி (Alaukika Khyati) என மீமாம்சகர்களில் ஒரு பிரிவினர் கருதுகின்றனர்.

**சதசத் கியாதி**: சாங்கியர்களின் கருத்துப்படி திரிபுக் காட்சியில் கயிறு பாம்பாகத் தோன்றினாலும், காட் சித் தெளிவில் பாம்பின் இருப்பு மறுக்கப்படுவதால் அசத் ஆகும். திரிபுக் காட்சியில் உள்பொருள் சத் ஆகும். இரண்டையும் இணைத்து 'இது பாம்பு' என்று உணரப்படுவதால், இவர்களின் பிழை பற்றிய கோட்பாடு சதசத் கியாதி எனப்படுகிறது.

**அசிந்திய பேதாபேதக் கியாதி**: சைதனியரைப் பின்பற்றும் சீவகோசுவாமி என்பவர் திரிபுக் காட்சி யைப் பின்வருமாறு விளக்குகிறார். திரிபுக் காட்சியின் பொருளான பாம்பு சிறு கூறுகளினால் கயிற்றுடன் இயைந்தும், அதன் இயல்பான தன்மைகளினால் வேறுபட்டும் உள்ளது. எனவே, இவ்வாறு கயிற்றி லிருந்து வேறுபட்டும் இணைந்தும் காணப்படும் திரிபுக் காட்சியின் பொருளான பாம்பின் உண்மையியல்பு சிந்திக்க வொண்ணாததாகையால், இக்கோட்பாடு அசிந்திய (சிந்திக்கவொண்ணாத) பேதாபேதக் (வேறு பட்டும் இணைந்துமுள்ள) கியாதி எனப்படுகிறது.

பி.ஆர்.ந.

**துணைநூல்**:

Ponniah, V., The Saiva Siddhanta Theory of Know ledge, Annamalai University, 1952.

**கியூசு**: ஆசியாக் கண்டத்தின் கிழக்கில் பசி பிக்கு மாக்கடலில் உள்ள ஒரு தீவு. மலைப்பாங்கான இத்தீவு சப்பானுக்கு உரியது. கியூசுத் (Kiushu) தீவின் பரப்பு 24,384 ச.கி.மீ. பல மலைகள் இங்கு உள் ளன. அவற்றின் உயரம் 5,000 முதல் 6,500 அடி வரை உள்ளது. இங்குள்ள பல துறைமுகங்களுள் நாகசாகி (Nagasaki) காகொசீமா (Kagoshima) மொசீ (Moiji) ஆகியன குறிப்பிடத்தக்கன. புகையிலை, தேயிலை, கோதுமை, நெல் முதலியன இங்கு விளை யும் முக்கிய பொருள்களாகும். செம்பு, நிலக்கரிச் சுரங்கங்களும் இங்கே உள்ளன.

தெ.பா.

**கியூபா** மேற்கிந்தியத் தீவுகளுள் மிகப் பெரி யது; சர்க்கரை உற்பத்தியில் உலக அரங்கில் முன் னணியில் உள்ளது; வட அமெரிக்காவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் இடையில் உள்ள அட்லாண்டிக்கு மாக்கடலிலுள்ளது. இத்தீவு கி.பி. 1492-இல் கிறித் தோபர் கொலம்பசால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் தலைநகரம் அவானா (Havana). கியூபா (Cuba) ஓர் இயற்கை வனப்பு மிக்க தீவு.




கியூபா அமைவிடம்

இத்தீவு 114,524 கி.மீ. பரப்பளவு கொண்டது. இதன் மக்கள் தொகை 10,000,000 ஆகும். பெரும் பாலான மக்கள் இசுபானிய (Spanish) மொழி பேசு கின்றனர். இங்குப் பல இன மக்கள் வாழ்கின்றனர். இவர்களுள் 73 விழுக்காட்டினர் வெள்ளையர்; 26 விழுக்காட்டினர் கலப்பினத்தவர்; 1 விழுக்காட்டினர் சீனர். இத்தீவின் பெரும்பகுதி செழுமை மிக்க சம வெளிகளாகும். எஞ்சியவற்றுள் கால்பகுதியில் மூன்று மலைத் தொடர்கள் உள்ளன. தென் பகுதியிலுள்ள சீறா மெய் சத்ரா மலைத்தொடர் 2000மீ. உயரமும், மத்தியில் உள்ள திரினிடாடு மலைத்தொடர் 1,1156மீ. உயரமும், வடமேற்கில் உள்ள சீறா திலாசு ஆர்க னோசு மலைத் தொடர் 830மீ. உயரமும் உடையன. இங்குள்ள மலைகளில் சீமைநூக்கு (Mahogany) மரங் களும் பைன் மரங்களும் நிறைந்துள்ள காடுகளே அதிகம். கியூபாவில் சிறிதும் பெரிதுமான 3700க்கு மேற்பட்ட தீவுகள் அடங்கியுள்ளன.

தொடக்க காலங்களில் கியூபாத் தீவில் வாழ்ந்து வந்த இந்தியர்கள் ஐரோப்பியக் கொடு நோய்களால் தாக்கப்பட்டு இறந்திருக்க வேண்டும்; அல்லது பின் னர் இத்தீவில் குடியேறியவர்களால் விரட்டப்பட்



கியூபா தலைநகரம் அவானா

டிருக்க வேண்டும். இங்குச் சர்க்கரை உற்பத்தித் தொழில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டளவில் வளர்ச்சி யடைந்ததால், ஆப்பிரிக்கத் தொழிலாளர் பலர் குடி யேற்றப்பட்டனர். ஆப்பிரிக்கர்களுக்குப் பின்னர் இசு பானியர் இங்குக் குடியேறினர். இங்கு 60 விழுக்காடு மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர். கிராமங்களும் அரசு உதவியால் முன்னேற்றம் அடைந்து வருகின் றன. இங்குள்ள அனைவரும் (100 விழுக்காடு) படித் தவர்களே.பொதுச் சுகாதாரமும் மருத்துவமும் நன்கு பராமரிக்கப்படுவதால் சராசரியாக இங்கு 72 வயது வரை மக்கள் உயிர் வாழ்கின்றனர்.

இத் தீவை கி.பி. 1511-இல் இசுபானியர்கள் கைப் பற்றினர். இத்தீவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் இசுபானியர் ஆட்சி செய்த போதி லும், இது கி.பி. 1762-63 ஆண்டுகளில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கும் உட்பட்டிருந்தது. இத்தீவின் பொருளாதார வளர்ச்சியும் பொது முன்னேற்றமும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அமெரிக்கரை ஈர்த்தன. எனவே, கி.பி. 1898-இல் அமெரிக்கர்கள் அவானாத் துறைமுகத்தில் இறங்கி, இசுபானியர்களைத் தோற் கடித்தனர். அவர்கள் கியூபாவிற்குச் சுதந்திரம் அளித்த போதிலும், தேவைப்பட்டால் கியூபாவின் நலத்திற்காக அந்நாட்டின் சிக்கல்களில் தலை யிடும் உரிமையையும் பெற்றிருந்தனர். ஏறத்தாழ 1934 முடிய இந்நிலையே நீடித்தது. அதன் பின்னரும் கூட அமெரிக்கா கியூபாவில் குவாண்ட நாமோக் கடற்படைத் தளத்தை வைத்துக் கொண்டு, கியூபா வின் பொருளாதாரத்தை ஆட்டிப்படைக்கவும் தலைப்பட்டது.

பல காலம் இத்தீவில் சருவாதிகாரிகளின் ஆட்சியே நடைபெற்றது. இறுதியாகப் புல்சென்சியோ படிசுட்டா (Fulgencio Batista) என்னும் கொடிய வனின் ஆட்சியும் (1935-1959) நடைபெற்றது. கியூபா வின் விடிவெள்ளியாகவும் அதற்குப் புதுவாழ்வு தந்தவராகவும் விளங்கிய பிடல் காசுட்ரோ (Fidel Castro) 1959-இல் ஆட்சியைக் கைப்பற்றினார். இவர்தம் ஆட்சியில் கியூபா நல்லாட்சியைக் கண்ட துடன் வெளிநாட்டுறவில் துணிச்சலான நடவடிக்கை களையும் மேற்கொண்டது. கியூபா அமெரிக்காவுடன் தன் அரச தந்திர உறவுகளை (Diplomatic Relations) 1961-இல் துண்டித்துக் கொண்டது. அதன் விளைவாகக் கியூபா தன் அண்டை நாடு களின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காயிற்று. இந்நாடு பொதுவுடைமை நாடுகளின் பொருளாதார உதவிக் குழு (Comecon) உறுப்பு நாடாகியது; பொது வுடைமைக் கொள்கையைப் பின்பற்றிப் பொது உடைமை நாடுகளின் அரவணைப்பில் இருந்தது.

இந்நாட்டின் பொருட்டு 1961,62-ஆம் ஆண்டு களில் ஏற்பட இருந்த வல்லரசுப் போர்கள் தடுக்கப் பட்டன. அங்கோலாவிலும் எத்தியோப்பியாவிலும் பிற ஆப்பிரிக்க நாடுகளிலும் 1977-இல் கியூபாவின் படைகள் இறக்கப்பட்டதை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்தது. இச்சிக்கலின் போதும் உலகப் போர் மூளும் நிலை தவிர்க்கப் பட்டது. கியூபாவின் பாது காப்பிற்குச் சோவியத்து உருசியா பெருந்துணை புரிந் தது. கியூபாவும் அமெரிக்காவும் 1978-ஆம் ஆண் டிற்குப் பின்னர்த் தூதர்களைப் பரிமாற்றம் செய்து கொண்டு வேறுபாடுகளை மறந்தன. இருப்பினும்,

இன்றளவும் இருநாடுகளுக்குமிடையே உறவுநிலை சீராக இல்லை.



கியூபாவின் முக்கிய பயிரான கரும்பை வெட்டுதல்

கியூபாவின் முக்கிய தொழில் வேளாண்மை ஆகும். ஆண்டு முழுவதும் வேளாண்மை நடைபெறும், முக்கிய பயிர் கரும்பாகும். புகையிலை, வாழை, அன்னாசி ஆகியனவும் இங்குப் பயிராகின்றன. சர்க்கரைத் தயாரிக்கும் தொழிலும் புகையிலையாலான பொருள்கள் தயார் செய்யும் தொழிலும் இங்கு முன்னேற்றமாக மேற்கொள்ளப்படுகின்றன. உலகிலேயே சர்க்கரை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடு இதுவே. கியூபாவின் ஏற்றுமதிப் பொருள்களுள் சர்க்கரையும் அதன் துணைப்பொருள்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. இவை 1975-ஆம் ஆண்டின் மொத்த ஏற்றுமதியில் 87 விழுக்காடு ஆகும். ஆயினும், 1976க்குப்பின் உலகச் சந்தைகளில் சர்க்கரையின் விலை வீழ்ச்சியுற்றதால் இதன் பொருளாதாரம் சீர்கேடுற்றது. இதன் விளைவாக இத்தீவு கடன்பட்டது. வடமேற்குப் பகுதியிலும் மத்திய பகுதியிலும் புகையிலை அதிகம் பயிராவதால், இது வெளிநாட்டு ஏற்றுமதியில் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்நாட்டுச் சுருட்டுகள் உலகப் புகழ் பெற்றவை. கிச்சிலிப் பழங்களும் (Citrus) இங்கிருந்து மிகுதியாக ஏற்றுமதியாகின்றன. கியூபாவில் உள்ள அவானாத் துறைமுகம் உலகின் தலைசிறந்த துறைமுகங்களுள் ஒன்றாகும்.


மத்திய பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் ஏறத்தாழ 4,500,000 உயிரினங்கள் வளர்க்கப்படுகின்றன. இங்குக் காப்பியும் கொக்கோவும் அதிகம் விளைகின்றபோதிலும், அவை உள்நாட்டுத் தேவையையே நிறைவு செய்கின்றன. மக்கள் தொகை பெருகிக் கொண்டிருப்பதனால் அயல் நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. வேதியல் பொருள்களையும் எந்திரங்களையும் போக்குவரத்துச் சாதனங்களையும் இவர்கள் இறக்குமதி செய்கின்றனர்.

கியூபாவில் செர்மன் வெள்ளி (Nickel), பித்தளை, இரும்பு, பாறை எண்ணெய்(Petrol) ஆகியன கிடைக்கின்றன. ஏற்றுமதியில் செர்மன் வெள்ளி இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. மட்டன்சாசுக்கு அருகில் எண்ணெய் கிடைக்கின்ற போதிலும், சோவியத்து நாடு இந்நாட்டின் 95 விழுக்காடு எண்ணெய்த் தேவையை நிறைவு செய்கிறது. சிமிண்டு, உரங்கள், காகிதம் முதலியன தயாரித்தல், எண்ணெய்ச் சுத்திகரிப்பு, வேதியற் பொருள் தயாரிப்பு, நெசவு, இரும்பு உற்பத்தி, கப்பல் கட்டுதல் முதலான தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன.

கியூபாவின் முக்கிய நகரங்களுள் சாண்டியாகோ தி கியூபா, காமகுவே, சாந்தா கிளாரா, குவாண்டநாமோ ஆகியன குறிப்பிடத்தக்கன. அவானாவில் உள்ள எழிலார்ந்த துறைமுகமும் குடியேற்றக் கட்டடங்களும் (Colonial Buildings) குவாண பேக்கு போவாவிலுள்ள அருங்காட்சியகமும் மடாலயமும் சாண்டியாகோவிலுள்ள அருங்காட்சியகமும் இத்தீவில் கண்டுகளிக்கத் தக்க முக்கிய இடங்களாகும்.

ம.இ.

**கல்வி**: கியூபா நாட்டுச் சட்டத்தின்படி, 6 வயதிலிருந்து 14 வயது நிறைந்த குழந்தைகளுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளையும் அரசு நிருவகிக்கிறது. கல்வி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. ஏறத்தாழ $1\frac{1}{2}$ மிலியன் மாணவர்கள் தொடக்கப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பயிலுகின்றனர். இந்நாட்டுப் பள்ளிகளில் பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு இலவசமாக நாள்தோறும் அரிசி, பயறு, இறைச்சி ஆகியவற்றாலான நண்பகல் உணவு வழங்கப்படுகிறது.



பள்ளியில் நண்பகல் உணவு உண்ணும் கியூபா நாட்டுக் குழந்தைகள்.

ஏறத்தாழ 35,000 மாணவர்கள் கியூபாவின் மூன்று தேசிய பல்கலைக்கழகங்களில் சேர்ந்து பயிலுகின்றனர். இப்பல்கலைக்கழகங்கள் அவானா (Havana), சாந்த கிளாரா (Santa Clara), சாந்தியாகோ தி கியூபா (Santiago de Cuba) என்னுமிடங்களில் அமைந்துள்ளன.

கியூபா அரசு பல்வகையான வயது வந்தோர் கல்வித் திட்டங்களை நடத்தி வந்துள்ளது. அது 1960-இல் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கு எழுதவும் வாசிக்கவும் கற்றுத் தருமாறு செய்தது; பின்னர், வயது வந்தோர் கல்வித் திட்டங்களையும் நடத்தியது. இத்திட்டங்களின் உதவியால், அளவற்ற வயது வந்தோர் தொடக்கக்கல்வியில் தேர்ச்சி பெற முடிந்தது. வயது வந்தோருள்பலர் இரவுப் பள்ளிகள் (Night Schools). தொழிற் பயிற்சி வகுப்புகள் (Job-training Classes) ஆகியவற்றில் சேர்ந்து பயிலுகின்றனர். எஸ்.த.

**கியூம், ஆலன் ஆக்டேவியன் (கி. பி, 1829-1912)** இந்தியத் தேசிய காங்கிரசின் தந்தை எனப் போற்றப்படுபவர்; ஆங்கிலேயர். இவர் கி.பி. 1829-இல் பிறந்தார். இந்திய ஆட்சிப் பணியில் சேர்க்கப்பட்ட இவர், பல்வேறு வகைகளில் இந்தியாவுக்காகச் சேவை செய்தார்.

இந்தியாவில் கி.பி. 1857-ஆம் ஆண்டுக் கலகத்தின் பொழுது எடாவா என்னுமிடத்தில் மாவட்ட அதிகாரியாக அமர்த்தப் பெற்றார். பிறகு, மத்திய அரசுப் பணியாளராக வருவாய்-வேளாண்மைத்துறையின் செயலாளராகப் பதவி வகித்தார். அச்சமயத்தில் 'இந்த வருமானம் எல்லாம் பாவத்தின் கூலி' என்று மனம் திறந்து கூறியது இவர்தம் பெருமாண்பைக் காட்டுகிறது. இவர் கி.பி. 1879-இல் இந்தியாவில் வேளாண்மை வளர்ச்சிக்காக ஒரு திட்டம் தீட்டினார். இவர் கி.பி. 1859-ஆம் ஆண்டில் 'மக்களின் நண்பன்' (Peoples' Friend) என்ற விடுதலை வேட்கை இதழ் வெளிவருவதற்குத் தம் ஒத்துழைப்பை அளித்துள்ளார்.

இவர் கி.பி. 1879-இல் இந்திய அரசின் செயலாளராக நியமிக்கப்பட்டார்; ஆனால், விரைவில் அதனின்று விலக்கப்பெற்றார். அதற்குக் காரணம் இவர் சுதந்திரமாகத் தம் கருத்துகளை அச்சமின்றி வெளியிட்டதே ஆகும். இவர் 1883-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முதல் நாள் கல்கத்தாப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கை விடுத்ததில் பின்வருமாறு எழுதியிருந்தார். 'தனிப்பட்டவர் நலனை விடுத்து உங்கள் உரிமைகளுக்காகவும், இந்திய நாட்டின் விடுதலைக்காகவும் உறுதியுடன் போராடுங்கள்' என்பது அது. இவர் இங்கிலாந்துக்குச் சென்று அங்கும் தம் திட்டத்திற்கு உதவி செய்யக் கூடியவர்களைக் கூட்டிக் கலந்து ஆலோசனைகள் செய்தார். இந்தியா திரும்பியபிறகு, கி.பி. 1885 திசம்பர் திங்களில் தம் பெயரிலும், சுரேந்திரநாத பானர்சி என்னும் இந்தியத் தலைவர் பேரிலும் விடுத்த ஓர் அறிக்கையின் விளைவாக இந்தியத் தேசிய காங்கிரசு தோன்றியது. இவர் கி. பி. 1894-இல் இந்தியாவை விட்டுச் செல்லும்வரை காங்கிரசு நிறுவனத்திற்காக உழைத்தார். அதற்காக இங்கிலாந்திலும் இறக்கும் வரை உழைத்தார். இப்பெருமகனார் 1912-ஆம் ஆண்டுக் காலமானார். தெ.பா.

**கியூம், தாவீது**: ஒரு வரலாற்றாசிரியராகவும், பொருளியலாசிரியராகவும், கட்டுரையாளராகவும் இருந்த தாவிது கியூம் என்பவர் (David Hume) தத்துவம் என்பது, பகுப்பாய்வுத் துறையில் மனித இயல்பைப் பரிசோதனை முறையில் அறியத்தக்க ஓர் அறிவியல் (Science) என்று கூறிய செயலறிவு இயல்புடைய தத்துவ ஆசிரியர் (Empirical Philosopher) ஆவர்.

**வாழ்க்கை**: கியூம் இசுகாட்லாந்து நாட்டினராவார். இவர், எடின்பரோ நகரத்தில் கி.பி. 1711-இல் பிறந்தார். இவருடைய இளமைக் காலத்தில் இவர்

எடின்பரோவிலும் பிரிசுடலிலும் இருந்தார். பின்னர், கி.பி. 1734–இல் இவர் இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து ஒழுக்க, அரசியல் கட்டுரைகளை எழுதினார். எடின் பரோவில் ஒழுக்கத் தத்துவப் பேராசிரியர் பதவியைப் பெறுதற்கு இவர் முயன்றார். சில நூல்களை எழுதிய பின் கி.பி. 1751 முதல் 1763 வரை இவர் எடின்பரோ விலும் இலண்டனிலும் சிலகாலம் இருந்தார். இவர் கி. பி. 1763–இல் பாரிசிலிருந்த ஆங்கிலேயத் தூது வருக்குச் செயலாளராக இருந்தார். இவர் கி. பி. 1766–இல் இலண்டனுக்குத் திரும்பி வரும்போது, புகழ்மிக்க பிரஞ்சு அரசியற் சிந்தனையாளர் உரூ சோவை (Rousseau) அழைத்து வந்தார். ஆயினும் உரூசோ அங்கு நம்பிக்கை யற்றவராக மாறித் தனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யப்படுவதாக ஐயப்பாடு கொண்டு, பிரான்சுக்குத் திரும்பிச் சென்று விட்டார். (காண்க:உரூசோ). கியூம், பின்னர் கி. பி. 1769–இல் எடின்பரோவுக்குத் திரும்பி வந்து, கி. பி. 1776–இல் அந்நகரத்தில் இறந்தார். கியூம் எழுதிய நூல்கள் 1. மனித இயல்பைப் பற்றிய கட்டுரை (A Treatise of Human Nature–1740), 2. ஒழுக்க, அரசியற் கட்டு ரைகள்(Essays,–Moral and Political–1742), 3. மனித அறிவாற்றலைப் பற்றிய ஓர் ஆய்வு (An Enquiry Concerning Human Understanding 1748), 4. ஒழுக்க விதிகளைப் பற்றிய ஓர் ஆய்வு (An Enquiry Concerning the Principles of Morals–1751), 5. இங்கிலாந் தின் வரலாறு (The History of England–1751)முதலி யவை ஆகும்.

**உரிமைகள் மற்றும் ஒப்பந்தக் கோட்பாடுகளை மறுத்தல்**: ஓர் ஒப்பந்தத்தின் விளைவாகவே சமூக மும் அல்லது ஓர் அரசாங்கமும் அல்லது இரண்டும் தோன்றின என்பதும், அவை இரண்டினின்றும் தனித்து வேறுபட்டு இயற்கைநிலை(State of Nature) என்ற ஒன்று இருந்தது என்பதும் இயற்கையின் சட்டம் (Natural Law or Law of Nature) என்பதன் சார மாகும். இயற்கைச் சட்டத்தின் ஆதாரக் கொள்கை கள் மனிதஇயல்பிலிருந்து வருவிக்கப்படுகின்றன. மனித இயல்பைப் பற்றிய கருத்திலிருந்து சிலவிதிகள் வருவிக்கப்பட்டன. இவ்விதிகளையே சட்டமும் (Law), அரசாங்கமும் (Government) வழிகாட்டிகளாகவும், ஆதாரங்களாகவும் கொள்ளுதல் வேண்டுமென்று இயற்கைச் சட்டம் கூறிற்று. அரிசுடாட்டில் கூறியது போல, இரக்க உணர்வும் நாகரிக வாழ்வும் ஏற்படு தற்குத் தேவையான ஆதாரச் சூழ்நிலைகளைப் பற்றி யும் இயற்கையின் சட்டம் கூறுகிறது. இயற்கையின் சட்டம் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் மனிதனை ஒரு பருப்பொருளாகவும், சமூகத்தை ஓர் உறவு வடிவ மாகவும் கருதி, மனிதனே சமூகத்தைவிடத் தோற் றத்தில் (காலத்தில்) முற்பட்டவனாகையால் அவனையே முக்கியமாகக் கருதுதல் வேண்டுமென்று கூறிற்று. இயற்கைச் சட்டத்திலிருந்து இயற்கை உரி மைகள் (Natural Rights) என்னும் ஆய்வு முறை (Methodology) தோன்றிற்று.

இயற்கைச் சட்டத்தைக் கியூம் ஆராய்ந்து, அதி லுள்ள குறைபாடுகளையும், இருவகை வேறுபட்ட பொருளுக்கு இடந்தரும் அதன் கொள்கைகளையும் பாகுபாடு செய்து காட்டினார். இயற்கையின் உரிமை ஆய்வு முறையையும் இவர் மறுத்தார். 'அடிப்படைக் கொள்கைகள்' என்றோ, 'மனிதரின் மனத்தில் இயல் பாக உள்ள கருத்துகள்' (Innate Ideas) என்றோ, எவையும் இல்லை; இவ்வகையில் காணும்போது இயற்கை உரிமை என்னும் கொள்கை மறுப்புக்கு உள்ளாகிறது. இலாக்கு (Locke) என்னும் அரசியற் சிந்தனையாளர் செயலறிவு முறையைக் (Method of Empiricism) கையாண்டார். செயலறிவு என்பது மனிதன் தன் பொறிகளின் வாயிலாகப் பெறும் (Sense) உணர்வு ஆகும். மனிதனுடைய அறிவும், மனிதனுடைய நடக்கையும் (Human Behaviour) மனிதனுடைய செயலறிவை ஆதாரமாக வைத்துத் தான் விளக்கப்படுதல் வேண்டுமென்று செயலறிவுக் கோட்பாடு (Empiricism) கூறுகிறது. செயலறிவின் அல்லது அநுபவத்தின் வாயிலாகப் (Experience) பெறக் கூடிய அறிவை விதியாகத் தொகுத்தால், நடக்கைக்குக் காரணமாகிய விளக்கத்தைக் காண லாம். இவ்வகையாகப் பார்க்கும்போது 'இயற்கை உரிமைகள்' (Natural Rights) என்பதாக உள்ளார்ந்த கருத்து ஏதும் இல்லை என்று தெரிகிறது. இயற்கை உரிமைகளைத் தன்னிலே தெளிவுள்ளவைகளாக ஏற்றுக் கொள்ளுதலும் இயலாது. இவ்வாறு இலாக்கு கூறிய செயலறிவுக் கருத்தை ஆதாரமாக வைத்து, செரிமி பெந்தம் (Jeremy Bentham), இன்ப துன்பங் களை (Pleasure and Pain) அளவு கோல்களாக வைத்து, மனிதனுடைய இன்ப நாட்ட உணர்வை அதனுடைய நடக்கையைத் தூண்டும் கவர்ச்சியான ஆற்றலாகவும், அவனுடைய துன்பம் தவிர்க்கும் உணர்வை ஒதுக்கும் ஆற்றலாகவும் குறிப்பிட்டு, ஒரு நடக்கைக் கொள்கையை உருவாக்கினார். இக்கருத்து களை கியூம் தருக்க முறையாக வைத்து, இலாக்கு கூறிய இயற்கை உரிமைகள், இயற்கை நிலை, ஒப் பந்தம் முதலியனவெல்லாம் 'கற்பனைகள்' என்று கூறி ஒதுக்கிவிட்டார். பெந்தம், தனியார் சுதந்திரம் என்பது, மிகவும் கூடுதலான அளவில் சமூக (அல்லது பொது) நன்மையோடு இயைபு உடையது என்றும், துன்பம் எல்லாம் நீக்கப்பட்ட மிகக் கூடுதலான அள விலுள்ள நன்மை என்பதுதான் மதிப்பீடு பற்றிய கொள்கை என்றும்,இத்தகைய நன்மையை அடையும் செயல்தான் நடக்கையின் (அல்லது செயலின்) சமூக

இயல்புடைய மதிப்பீடுமிக்க நோக்கம் ஆகும் என்றும் (Socially Valuable end of conduct)கூறி, 'பயன்வழிக் கோட்பாட்டை' (Utilitarian Theory) வகுத்தார். இயற்கைச் சட்டம் என்பது உள்ளார்ந்த நன்மை எது என்பதைக் காட்டும் அளவுகோலாக அமைந்தது. பெந்தம் வகுத்த பயன்வழிக் கோட்பாடோ, ஒழுக்க இயலான, அரசியற் சார்பான, பொருளியற் சார் பான மதிப்பீடுகளே இருக்கின்றன; உள்ளார்ந்த நன்மை என்பது இல்லை என்று காட்டிற்று. இயற் கையின் சட்டம், பயன் வழிக்கோட்பாடு ஆகிய இரண் டிற்குமிடையேயுள்ள முரண்பாடுகளைக் கியூம் சுட்டிக் காட்டி, இயற்கையின் உரிமைகள் என்ற கருத்தையே மறுத்தார். இவ்வாறு இலாக்கு கூறிய சமூக ஒப்பந் தக் கொள்கைக்கு ஆதாரமாக இருந்த இயற்கை உரிமைகள் என்ற கருத்து மறுக்கப்பட்டது. கியூம், இயற்கைச் சட்டத்தை நுணுகி ஆராய்ந்து, அதில் தொன்றுதொட்டே ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துகள் காரணம் அல்லது பகுத்தறிவு (Reason) என்ற பெயரில் காணப்பட்டன என்று எடுத்துக்காட் டவே, இயற்கைச் சட்டம் என்ற கருத்து மறைந்தது. இயற்கைச் சட்டத்திலிருந்து தோன்றிய தத்துவ இய லான அறிவுக் கோட்பாடே (Philosophical Rationalism) அச்சட்டத்தை மறையச் செய்யக்கூடிய கருத்து களைத் தோற்றுவித்தது.

இயற்கைச் சட்டத்தின் மூன்று கூறுகளாகிய அறிவுக்கொத்த சமயநெறி (Rational Religion), அறி வுக்கொத்த ஒழுக்க நெறி (Rational Ethics) ஒப்பந்த இயலான அரசியல் (Contractual Politics) ஆகிய வற்றைக் கியூம் மறுத்தார். இயற்கையின் சட்டத்தை அறிவியல் முறையில் சரியானதென்று காட்டுதல் இயலாது. அறிவியலான சமயநெறி என்பதே (Scientific Religion) ஒரு கற்பனை. கடவுள் இருக்கிறா ரென்று பரிசோதனை வாயிலாகக் காட்டுதல் இய லாது. சமய உண்மைகளை அறிவியற் பொது விதி களாக ஆக்குதலும் இயலாது. ஏனெனில், சமய உண்மைகளெல்லாம் உணர்வு என்ற துறையைச் சேர்ந்தவை. அவை நம்பிக்கைகளையும், செயல்முறை களையும் காட்டுகின்றனவே தவிர, அவையெல்லாம் உண்மையானவையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதேபோல ஒழுக்க இயலிலும், அரசியலிலும் மனி தர் ஒன்றைச் செய்யும் இயல்போடு இருக்கும்போது தான், அந்த மனிதச் செயலுக்கு மதிப்பு ஏற்படு கிறதே தவிர, அறிவு என்பது மட்டுமே ஒரு கடமை யைத் தோற்றுவித்து விடாது. ஆகையால், நற்பண்பு (Virtue) என்பதும் பொதுவாக யாவராலும் ஒப்புக் கொள்ளப்படுகிற மனித மனத்தின் செயல் அல்லது தன்மையே ஆகும்.

**பிற கருத்துகள்:** இயற்கைச் சட்டத்தில் கூறப் படும் காரணம் என்ற கருத்து (Reason) சில தவறான முடிபுகளுக்கு இடம் தருகிறது. சில புதுக் கருத்து களை (Propositions) உண்மைகள் (Truth) அல்லது மாற்ற இயலாத இயற்கை விதிகள் அல்லது ஒழுக்க விதிகள் என்று எண்ணுமாறு அது தூண்டுகிறது; காரணம் என்பது சில 'எண்ணங்களைப் பற்றிய ஒப் பீடு' (Comparison of Ideas) என்ற பொருளில்தான் கூறப்படுகிறது. 'எண்ணங்களைப் பற்றிய ஒப்பீடு' என்பது கணித இயலில் ஒரு சில பகுதிகளில் காணப் படுகிறது; ஒப்பிடக்கூடிய இத்தகைய எண்ணங்களின் ஓர் ஆதாரக் கருத்து (Premise) உண்மையென்று ஒப் புக் கொள்ளப்படுமாயின், அதிலிருந்து ஒரு முடிபு வருவிக்கப்படுகிறது. ஆதாரக் கருத்து உண்மையா என்று அறியப்படாமலிருத்தலும் கூடும்; ஆதாரக் கருத்து உண்மையென ஒப்புக்கொள்ளப்படுமாயின், அதிலிருந்து பெறப்படும் முடிபும் உண்மையென ஒப் புக் கொள்ளப்படுதல் வேண்டும். இவ்வாறு இரு கருத்துகளினிடையே தான் தொடர்பு இருக்கிறது. இவ்வாறு கியூம் கணித இயல்பான ஓர் உண்மை யையே (Mathematical Truth) காரண இயல்பான உண்மையென்று (Rational Truth) கூறினார். ஆகை யால், கருத்துகளின் ஒப்பீடு என்பது ஓர் உண் மையை நிறுவுதற்கு உதவாது. ஆகையால், இரு உண்மைகளுக்கு இடையேயுள்ள தொடர்பை வைத்து, அவற்றைப் பகுப்பாய்வு முறையில் காரண,காரியமாக இணைத்தல் இயலாது. அவ்வாறு இணைத்தாலும், அவற்றைப் பற்றி எவரும் அறிவதெல்லாம், அவை ஓர் ஒழுங்கான முறையில் ஒன்றாக நடைபெறுகின்றன என்பது மட்டுமே. அதைத் தவிர ஒன்றிலிருந்து மற் றொன்றை முடிபாக வருவித்தல் இயலாது. ஆகை யால், இவ்வாறு ஒன்றாக நடைபெறும் இரு உண்மை களை (Facts) காரண-காரியமாக இணைத்தல் (Cause and Effeet) என்பது தருக்க அளவையாகப் பார்த் தால் அது வெறும் கற்பனையான கருத்தே ஆகும். அது போலவே காரண அறிவுதான் சரியான மனித நடக்கை பற்றிய விதிகளை உருவாக்குகிறது என்று இயற்கையின் சட்டம் கூறும் கருத்தும் சரியன்று. காரண அறிவு, சரியானவை பற்றிய விதியையும், நீதிபற்றிய விதியையும், சுதந்திரம் பற்றிய விதியை யும் உருவாக்குகிறது என்பதும் தவறாகும். எவ்வா றெனில், ஒருசெயல்முறையானது சரியானது அல்லது நல்லது என்று கூறப்படும்போது, அங்கு அச்செயல் காரண அறிவைக் (Reason) காட்டவில்லை. அச் செயல் மனித விருப்பத்தையே காட்டுகிறது. எப் பொழுது மனித நடக்கைக்கு காரண அறிவு வழி காட்டியாக அமைகிறதென்றால், அந்த அறிவு ஒரு வர் விரும்பும் விளைவை அடைதற்கு எந்த வழிகள்

உகந்தவை என்று காட்டும்போது, அல்லது அவருக்கு விருப்பமில்லாத விளைவை எந்தச் செயல்முறை தடுக்கவல்லது என்று காட்டும்போது அது மனித நடக்கைக்கு வழிகாட்டியாக இருக்கிறது. ஆகையால், காரண அறிவு என்ற ஆற்றல் மட்டுமே ஒரு மனிதரைக் குறிப்பிட்ட வழியில் செயற்படுமாறு தூண்டவில்லை. ஆகையால், காரண-காரிய அடிப்படையிலமைந்துள்ள நடைமுறை அறிவியல்களுக்கும் (Factual Sciences), ஒழுக்க இயல், அரசியல் முதலிய சமூக இயல்களிலுள்ள மதிப்பீட்டுக் கருத்துகளுக்கும் வேறுபாடு உண்டு. ஆகையால், காரணக் கொள்கையாகிய அறிவு (Reason), காரண-காரியத் தொடர்பாகிய அநுபவம் அல்லது பட்டறிவு (Fact), சரியானது அல்லது முறையானது அல்லது பயனுள்ளது எனப்படும் மதிப்பீடு (Value) ஆகிய மூன்றும் வெவ்வேறானவை என்று அறிந்து கொண்டால், இவை மூன்றையும் ஒன்றாகக் குறிப்பிடும்இயற்கைச் சட்டம் மறைந்து விடுகிறது. இம்மூன்றில், பட்டறிவு என்னும் உண்மையும், மதிப்பீடும் மெய்ப்பிக்க இயலாத காரணிகளடங்கியவை, ஆகையால், அவற்றை 'வழக்கங்கள்' (Conventions) எனக் கூறுதல் பொருந்தும். சமூக மதிப்பீடுகளாகிய (Social Value) நீதி அல்லது முறைமை (Justice), சுதந்திரம் ஆகியவை எல்லாம், வழக்கங்களே என்றும் (Conventions) அவற்றுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பதுஅவற்றின் பயன்தான் (Utility) என்றும் கியூம் கூறுகிறார். அவற்றை மனிதருடைய செயலைத் தூண்டும் மனித நோக்கங்களோடும் இயல்போடும் பொருந்தக் கூறலாம். இவ்வழக்கங்களை மனிதர் எப்போதும் கையாளுதலால், அவை செல்லுபடியாகும் இயல்புடையவை போலத் தோன்றுகின்றன. அவை மனித வாழ்க்கை நடைமுறைக்குத் தேவையே ஆகும்.

**கியூமும் பெந்தமும்**: கியூம், செரிமி பெந்தத்தின் பயன்வழிக் கோட்பாட்டை மறுத்தார். பெந்தம் கூறுவதுபோல் மனிதர் யாவரும் துன்பத்தை விலக்கி, இன்பத்தைத் தேடும் நோக்கத்தோடு எப்போதும் செயலிலீடுபடுதல் இல்லை. இவ்வாறு பெந்தம் கூறுதல் அந்த நோக்கத்தைப் பொய்யெனக் கருதுமளவுக்கு அதை மிகவும் சுருக்கிவிடுதல் ஆகும். அவர் கூறுவது போல் மனிதருடைய செயல் நோக்கம் மிகவும் எளியது (Simple) அன்று. அவர்கள் பெற்றோர் அன்பு (Parental affection) போலப் பிறர்நலத்தோடும் செயற்படுகின்றனர்; அவர்களுடைய பல செயல்களில் தன்னலமும் இல்லை, பிறர்நலமும் இல்லை. ஆகையால் மனிதருடைய தன்னல நோக்கங்கள் காரண அறிவின் பாற்பட்டவை (Reasonable) என்பது தவறே ஆகும். மனிதர் தன்னலம் பேணுதலில் கருத்தோடும், கவனத்தோடும் இருக்கின்றன ரென்றோ அவர்கள் எதிர்கால நோக்கில் செயற்படுகின்றனரென்றோ கூற இயலாது. அவர்களுடைய உணர்ச்சிகள் தன்னலத்தோடு குறுக்கிடாதவரை அவர்கள் எதிர்கால நோக்கில் செயற்படுவர். இவ்வாறு கியூம், சான் இசுடுவர்ட்டுமில்லைப் போல, மனிதருடைய அறிவுத் திறனுக்கோ அவருடைய தன்னுணர்வு இயல்புக்கோ (Egoism) முக்கியத்துவம் அளிக்கவில்லை.

கியூம் அரசியலிற் கூறப்படும் ஒப்புதல் கொள்கையையும் (Theory of Consent) அறிவியல் நோக்கில் மறுத்தார். (காண்க: ஒப்புதல் கொள்கை). கியூம் பயன்வழிக் கொள்கையை மறுத்த போதிலும், பெந்தம் எழுதிய ஒழுக்க இயல்பான நூல்களைக் கற்றறிந்தார். பின்னரே, இவர், 'எந்த ஒரு செயலும் அல்லது சட்டமும் சரியானது அல்லது தவறானது என்று அறிதற்கு உதவும் அளவுகோலாக இருப்பது எது என்றால், மிகக்கூடுதலான எண்ணிக்கையுள்ள மக்களுக்கு மிகக் கூடுதலளவான இன்பம் அல்லது நற்பயன் என்ற விளைவு தான்', என்று தம் 'அரசாங்கம் பற்றிய துணுக்குகள்' (Fragments on Government) என்ற நூலில் கி.பி. 1776-இல் எழுதினார். இவர் இங்கிலாந்தின் சட்ட அமைப்பைச் சீர்திருத்தம் செய்தல் இன்றியமையாத உடனடித் தேவை என்றும், அத்தகைய சீர்திருத்தத்தை மதிப்பீடு செய்தற்கு உதவுவது அதன் நற்பயனே என்றும் கூறினார். மீற இயலாத உரிமைகள், அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு ஒப்பந்தத்தின் வாயிலாக இருக்கும் வரம்புகள் முதலியவற்றைக் கியூம் மறுத்து, அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருப்பது, ஒப்பந்தம் அன்று, மனிதரின் தேவையே என்று வலியுறுத்தினார். மேலும் இவர், சட்டப்படியான அதிகாரம் என்பது சட்டப்படியாக வரம்புபடுத்தப்பட இயலாத ஒன்று என்றும், ஒவ்வோர் அரசியற் சமூகத்திலும் (அதாவது அரசிலும்) தலைமை அதிகாரம் என்பது, எங்காவது, எல்லோருடைய வழக்கமான கீழ்ப்படிதலையும் பெறுகிற ஒருவரிடத்திலோ பலரிடத்திலோ இருக்கத்தான் செய்கிறது என்றும் கூறினார். கியூமின் இந்தக் கருத்து எதேச்சாதிகார அரசாங்கங்களுக்கும், சுதந்திர உரிமைகள் உள்ள அரசாங்கங்களுக்கும் பொருந்துவதாகுமென்று பெந்தம் ஒப்புக்கொண்டார்.

**கியூமும் எட்மண்டு பர்க்கும்**: கியூம், ஓர் உணர்ச்சியற்ற, இடித்து உரைத்துத் தெளிவாக விளக்கும் இயல்புடைய இசுகாட்லாந்திய தத்துவ ஆசிரியர்; இவர் காலத்தவரான எட்மண்டு பர்க்கோ (Edmund Burke கி.பி. 1729-1797) கியூமுக்கு நேர்மாறான இயல்புடைய - அதாவது ஆர்வம் மிக்க கற்பனைத்

திறனும், உள்ளார்ந்த பத்தி உணர்வுடைய ஓர் அயர்லாந்து நாட்டு அரசியல் அறிஞர் ஆவர். ஆகையால், பர்க்கு அரசின் தோற்றம், அதிகாரம், பணிகள் ஆகியவைபற்றி ஆராயும் அணுகுமுறை, கியூமின் அணுகுமுறையை ஓரளவு ஒட்டியும், அதினின்றும பெருமளவு வேறுபட்டும் இருக்கிறது. அரசியலாய்வு முறையில் காரண அறிவு (Reason), இயற்கைச் சட்டம் முதலியவற்றைக் கையாளுதலாகாது என்று கியூம் அக்கருத்துகளை மறுத்துள்ளதைப் பர்க்கு ஏற்றுக்கொண்டு, அரசு, காரண அறிவினாலோ இயற்கைச் சட்டத்தினாலோ தோற்றுவிக்கப்பட்டது அன்று என்று கூறி, அதற்கும் மேலாகவும் கற்பனை உணர்வைப் பயன்படுத்திச் சில கருத்துகளைக் கூறுகிறார். 'அரசு என்பது செயற்கையாக உருவாக்கப் பட்டது, அது இயற்கையாகத் தோன்றிய ஒன்று அன்று, அதனை உருவாக்கியது காரண அறிவு மட்டு மன்று, வழக்காறுகளும் அல்லது மரபுகளும், மனிதனுடைய நுட்பமான உணர்ச்சிகளும், இயல்புகளும், அதனை உருவாக்கியுள்ளன. இவ்வாறு மனிதன் ஒன்றை உருவாக்குதல் என்பது அவனுடைய கலை உணர்வைக் காட்டுகிறது. இத்தகைய இயல்புகளும், அதிலிருந்து தோன்றிய அரசும் இல்லாமல் எவரும் உயிர்வாழ்தல் இயலாது. ஒரு நாட்டினரின் வாழ் விலடங்கியுள்ள மரபுகளெல்லாம் பயனுடையவை ஆகும். சில வழக்கங்களை மக்கள் பயன்படுத்துகிற காரணத்தினாலும், அவை நடைமுறையிலிருக்கிற காரணத்தினாலும் அவையே அரசில் செயற்படுகிற ஏற்பாடுகளாகி விட்டன என்று கியூம் கூறும் கருத்துகளைப் பர்க்கு முழுவதும் ஏற்றுக் கொள்கிறார். மேலும், இயற்கை உரிமைகளைப் பர்க்கு ஒப்புக்கொண்டு, சமூக அல்லது சமுதாய ஒப்பந்தம் என்பது ஒரு அனுமான இயல்புடைய வரலாற்றுச் செய்தி (A hypothetical history) என்றும் கூறுகிறார். கியூமும் இவ்வாறே கருதுகிறார். கியூம், சொத்துரிமை, சமய நெறி, அரசியலமைப்பின் ஆதாரக் கொள்கைகள் முதலியவற்றை எவராலும் மீறப்படாத வழக்கங்கள் என்று கருதியதைப் பர்க்கும் ஏற்றுக் கொள்கிறார். பர்க்கும் கியூம் கூறியதைப் போலவே, சமூக நிறுவனங்களெல்லாம் காரண அறிவையோ, இயற்கையையோ சார்ந்திருக்கவில்லை என்றும், வழக்கம், மரபு, சமூகத்தில் உறுப்பினராயிருத்தல் முதலியனவே மனித இயல்புக்கு ஓர் ஒழுக்கப் பண்பை ஏற்படுத்துகின்றன என்றும் கூறினார். 'அரசு' என்ற சமூக நிறுவனத்தைக் கியூமும், பர்க்கும் நோக்கிய வகையில் ஒரு வேறுபாடு காணப்படுகிறது கியூமும் பெந்தம் போன்ற பயன் வழிக் கோட்பாட்டாளரும், அரசு என்பதை எவ்விதத் தன்னுணர்வு நோக்கிலும் (Subjetcive) கருதாமல், அது எவ்வாறு மனித வாழ்வுக்கு உகந்த இயல்புடையது என்ற பயன்வழி நோக்கங்களில்தான் (Matter - of - fact) கருதி ஆராய்ந்தனர். ஆனால், பர்க்கோ, இதற்கு நேர்மாறாக, அரசு என்பதைப் பாராட்டுக்கும் மரியாதைக்குமுரிய நோக்கிலேயே ஆராய்ந்து, இவ்வழியில் அரசியலைச் சமயநெறியோடு இணைத்துவிட்டார். பர்க்கு சூழ்நிலை வாதம் என்ற முறையைக் (Expediency) கையாண்டாலும், அதற்குப் பயன்தரும் இயல்பு என்று பொருள் கொள்ளவில்லை.

**கியூமும் தருக்க இயலும்**: கியூமின் சில கருத்துகள் ஓரளவு அவருடைய காலத்தவரான செருமனியத் தத்துவ ஆசிரியரான எகல் (கி.பி. 1770-கி.பி. 1831 என்பாரின் தருக்க இயல் கருத்துக்களுக்கு வழிகாட்டியாக இருந்தன. கியூம், 'காரண அறிவு' (Reason) என்ற தொடர் பல தெளிவற்ற கருத்துகளை உணர்த்துகிறது என்று ஆய்ந்து கூறி, இயற்கைச் சட்டம் என்பது ஐயப்பாட்டிற்கு உரியது என்று காட்டினார். இவருடைய இக்கருத்துகளையும், சமய நெறியும் ஒழுக்க இயலும் உணர்ச்சியின் பாற்பட்ட பொருள்களே என்று உரூசோ கூறிய கருத்தையும் அறிவியலும் ஒழுக்க இயலும் அதனதன் எல்லையில் தலைமையானவையே என்று எடுத்துக் காட்டிய தத்துவ ஆசிரியர் காண்டின்(Kant) கருத்தையும் எகல் பின்பற்றி, இணைப்பு விதி ஒன்றை (Principle of Synthesis) உருவாக்கினார். அதன்படி. ஒன்றுக் கொன்று முரணான இரண்டு இயல்புகள் மோதும் போது, அவற்றின் குறைகளை அகற்றி, நிறைகளை இணைத்து மூன்றாவது ஓர் இயல்பு தோன்றுகிறது. ஆகையால், கியூம் 'காரண அறிவு' பற்றிக் கூறிய கருத்தை, காண்டு கூறிய கருத்தோடும் இணைத்து, ஒரு புதிய தருக்க முறையை(A new logic or dialectic) உருவாக்கினார். மற்ற இருவரும் கூறாத ஒரு புதிய கருத்தை, - அதாவது, அவர் கூறிய காரண அறிவு என்ற புதிய, விரிந்த பொருளுள்ள தருக்கமுறையானது, உண்மை என்ற கருத்துக்கும் (Fact), மதிப்பீடு (Value) என்ற கருத்துக்கும் உள்ள தருக்க இயலான தொடர்பை எடுத்துக்காட்டுகிறது என்ற கருத்தை - எகல் கூறினார்.

**கியூமும் இயல்புடைமைத் தத்துவமும்**: நாகரிகத்தின் வளர்ச்சியை மூன்று நிலைகளில் ஆய்ந்து அகசுட்டே கோம்ட்டே (Auguste Comte) என்பவர் இயல்புடைமைத் தத்துவத்தை (Theory of Positivism) வகுத்தார். வெறும் உயிர்மட்டும் உள்ள நிலை, ஊகநிலை, அறிவியல் நிலை(Animistic stage), Speculative stage, Scientific stage) முதலியவையே அவை. கியூம் இயற்கைச் சட்டம் என்பதனையும் அதனோடு பொருத்திக் கூறப்படுகிற காரண அறிவை

யும் மறுத்து, அநுபவ இயல்பான இயல்புடைமைத் தத்துவத்தை (Empirical Positivism) வகுத்தார். அதில் தத்துவமோ (Metaphysics) சமயக் கொள்கையோ, ஒழுக்க இயலோ இல்லை. இவற்றை, கியூம் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், இவற்றுக்கு மற்றவர்களுடைய ஒப்புதல் உறுதியாக இருந்தது.

**கியூமும் ஐயக் கொள்கையும்:** ஐயத்தைக் கொள்கையாகக் கொள்ளுதல் வியப்பாக இருக்கிறது. எந்த முடிவும் ஐயத்திற்கு இடமளிக்கக்கூடாது. இந்தியாவிலும், மேல்நாட்டிலும் உண்மையைக் கடைப்பிடிப்பவர் ஐயத்திற்கு இடம் அளித்திருக்கிறார்கள். எந்த முடிவையும் ஏற்குமுன் அதை நன்றாக ஆராய்ந்து பார்ப்பது நல்லது. காட்சிக்குப் புலனாகும் உண்மைகளை ஐயப்படுதல், 'தொன்னைக்கு நெய் ஆதாரமா நெய்க்குத் தொன்னை ஆதாரமா' என்று பேசி நெய்யை ஊற்றிக் கெடுத்தவன் செயலை ஒக்கும்.

உலக வாழ்க்கையில் அளவுகடந்த ஐயம் இருக்கக் கூடாது. அறிவாராய்ச்சிக்காக அளவாக ஐயங்கொள்வது நல்லது. மேனாட்டில் கிரேக்கத் தத்துவ ஞானிகள் சிலர் ஐயக் கொள்கையை (Scepticism) மேற்கொண்டனர். பிர்ரோ (Pyrrho) என்னும் கிரேக்கரே ஐயக் கொள்கையை மேற்கொண்டவர்களுள் அனைவர்க்கும் முற்பட்டவராகக் கருதப்பட்டார்.

இவர் ஒரு நாள் உலாவச் சென்று திரும்பும் பொழுது, இவர்தம் ஆசிரியர் சேற்றில் தலை கீழாகச் சிக்கிக் கிடப்பதைப் பார்த்து சிறிது சிந்தித்து விட்டு ஒன்றும் செய்யாமல் போய்விட்டாராம். அவ்வழி வந்த வேறொருவர் ஆசிரியரைத் தூக்கிவிட்டு, அவர் மாணவர் நடந்து கொண்ட முறையைக் குறை கூற, ஆசிரியர் தம் மாணவர் நடந்து கொண்ட முறை சரி என்றார். சேற்றில் விழுந்தவரை வெளியேற்றுவதால் நன்மை உண்டு என்பதைத் திட்டமாகக் கூற முடியாத நிலையில் வெளியேற்ற வேண்டிய கட்டாயம் இல்லை. இது வாழ்கையில் முழுவதும் கடைப்பிடிக்க முடியாத கொள்கை.

கண், காது போன்ற பொறிகள் செயற்படுவதில் வேற்றுமை இருக்கிறது. மக்களுக்கும் விலங்குகளுக்கும் வேற்றுமை, மக்களுக்குள்ளே வேற்றுமை இருக்கின்றன. ஐம்புல அறிவை ஐயமற்றதாக ஏற்கமுடியாது. புறவுலகப் பொருள் மட்டுமன்று, மக்களுடைய நம்பிக்கைகளும் ஒழுக்கக் கொள்கைகளும் ஐயுறத்தக்கவையாயுள்ளன. அறம், அறம் அல்லாதது முதலியவை காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம் வேறுபடுதலைக் காணலாம். இந்நிலையில் எது அறம், எது அறம் அல்லாதது என்று கூற முடியும்.

புறவுலகப் பொருள்கள் மட்டுமல்ல, மக்களுடைய நம்பிக்கைகளும் ஒழுக்கக் கொள்கைகளும் ஐயுறத் தக்கனவாயுள்ளன. நன்மை, தீமை, அறம், அறம் அல்லாதது முதலியவை இடத்துக்கிடம், காலத்துக்குக் காலம் வேறுபடக் காணலாம். இந்நிலையில் எதை அறம், எதை அறம் இல்லை என்று முடிவாகக் கொள்வது?

ஐயக் கொள்கை, ஐயத்தில் முடிவதாகவும், ஐயத்தில் தோன்றி உறுதியில் முடிவதாகவும் இருவகைப்படும். இரண்டாவது வகையைச் சேர்ந்தது தெக்கார்ட்டு என்னும் பிரெஞ்சு தத்துவ அறிஞரின் கொள்கை. இந்த நூற்றாண்டில் ஐயக் கொள்கையை வற்புறுத்துபவர் பெர்ட்டிராண்டு இரசல் என்பவர்.

பிறர் கொள்கையில் நிறைவுகளையும், தம்முடையவை பற்றிய குறைகளையும் உணர்ந்து கொள்ளவும் வேண்டிய அளவுக்கு ஐயம் நம் வாழ்க்கையில் இடம் பெற்றால் உலகத்தில் அமைதி ஏற்படும்.

காண்டு என்பவர் ஐயக் கொள்கை மனிதனுடைய ஆராய்ச்சியின் முடிவான நிலையன்று, ஆனால், இடைப்பட்ட, கடக்க வேண்டிய நிலையேயாகும் என்று கூறுகிறார். பா.சு.

**துணை நூல்கள்:**


Francis P. Canavan, The Political Reason of Edmund Burke, Durham, N.C., 1960.

Laing, B.M. David Hume, London, 1932.

Macnabb, D.G.C., David Hume: His Theory of Knowledge and Morality, London, 1951.


**கியூளிக்கு உலூதர் கேல்சே (கி.பி. 1865–1918)** அமெரிக்க நாட்டுக் கல்வியாளர்; உடற் பயிற்சிக் கல்வியின் ஆதரவாளர்; இளைஞர்களின் பள்ளிப் புற அனுபவத்திற்கு முதலிடம் தந்தவர். கூடைப்பந்து விளையாட்டினைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்த சேம்சு நைசுமித்து (James Naismith) என்பவரை ஊக்கப்படுத்தக் காரணமாயிருந்தவர் இவரே. உலூதர் கேல்சே கியூளிக்கு (Luther Halsey Gulick) தம் மனைவியுடன் சேர்ந்து, 1910-ஆம் ஆண்டு 'மகளிர் பாடி வீடு' (The Camp Fire Girls) என்னும் இளைஞர் கழகத்தைத் தொடங்கினார். இவர் பன்னாட்டு ஒய்.எம்.சி.ஏ. பயிற்சிப் பள்ளியில் (International

YMCA Training School) உடற்கல்விப் பயிற்சியை உருவாக்கி வைத்தார். ஒய்.எம்.சி.ஏ. நிறுவனத்தின் முத்திரையினை (Emblem) உருவாக்கியவரும் இவரே. கியூளிக்கு நியூயார்க்கு நகரிலுள்ள பள்ளிகளில் உடற் பயிற்சிக் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார்.

எஸ்.த.

**கியோட்டோ**: சப்பான் நாட்டில் அண்சு தீவின் நடுப்பகுதியில் உள்ள இந்த நகர், அரக்கு வேலை, ஓவியத் தையல் வேலை, உலோக வேலை, இரசாயனப் பொருள்கள் தயாரித்தல் முதலியவற் றிற்குப் பெயர் பெற்றது. கலைகள் பல இங்கு வளர்ந் துள்ளன. ஒரு பல்கலைக் கழகம் கல்வியைப் பரப்பி வருகிறது. பழைய காலத்து அரண்மனைகளையும் புத்த சமயக் கோயில்களையும் இங்கே காணலாம்.



கியோட்டோ

விமானப் பகுதிகள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து வளர்ந்து வந்துள்ளது. கி.பி. 1868 வரை நாட்டின் தலைநகராக இருந்த கியோட்டோ (Kyoto) இப் பொழுது மாநிலத் தலைநகராக விளங்குகிறது.

தெ.பா.

**கியோவா இந்தியர்** அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் ஒரு குடியினர். போர்ச் செயல்களை மிகுதியாகக் கொண்டிருந்த அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் இவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இரியோ கிராந்தே (Rio Grande) பகுதியில் வாழும் பியூப்லோ (Pueblo) பழங்குடியினர் பேசும் மொழி யான தனோவிய (Tanoan) மொழியுடன் தொடர் புற்ற மொழியைக் கியோவா இந்தியர்கள் (Kiowa Indians) பேசுகின்றனர். இவர்கள் பேசும் மொழி ஒரு தனி மொழியென்று முற்காலத்தில் கருதப்பட் டது. இவர்களின் மொழி பியூப்லோவினரின் மொழி யோடு தொடர்புற்றிருப்பதால் இவர்களின் தொன்மை இடம் மான்டனா (Montana) பகுதி வழியே பாயும் மிசவுரி (Missouri) ஆற்றுப் பகுதியைச் சேர்ந்தது என மதிப்பிடுவர். இப்போது இவர்கள் தென் சமவெளிப் பகுதிகளில் வாழ்கின்றனர். இவர் களின் எண்ணிக்கை 3,500க்கும் மேற்பட்டதாகும்.



கியோவா இந்தியர்

கியோவா இந்தியர்கள் கி.பி. 1800-க்கு முன் கருங்குன்றுகளிலிருந்து (Black Hills) தெற்குத் தக் கோட்டா (Dakota) பகுதிக்குச் சியோக்சு (Sioux) மக்களால் துரத்தப்பட்டனர். தென்பகுதியிற் சென்று குடியேறிய இவர்கள் கொமான்சி (Comanche) அரபாகோ (Arapaho), செயன்னி (Cheyenne) ஆகிய பழங்குடியினரோடு நட்புக் கொண்டு வாழ்ந்தனர் பின்னர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இப்பழங்குடி யினர் மேற்கு ஆக்லகாமா (Oklahama), தென்கிழக்குக் கொலராடோ முதலான பகுதிகளுக்குச் சென்று குடி யேறினர். கொமான்சி பழங்குடியினருடன் ஒன்று சேர்ந்து கியோவா மக்கள் தங்கள் பகுதியின் அருகி லிருந்த வெள்ளையர் குடியேற்றங்களைத் தீவிரமாக எதிர்த்தனர். மெக்சிகோ வரையிருந்த வெள்ளையர் குடியேற்றப் பகுதியிலிருந்து அவர்கள் குதிரைகளை யும் அவர்கள் சிறைப்படுத்தியிருந்த மெக்சிகோ மக் களையும் கொண்டுவந்தனர். பின்னர் கி.பி. 1867-இல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி கியோவா இந்தியர் தென்மேற்கு ஆக்லகாமாப் பகுதியில் இவர் களுக்குகென்று ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பில் குடியேறி னர். போர்ச் செயலுடன் கூடிய வாழ்க்கையை கி.பி.

1875 வரையில் கொண்டிருந்த போதிலும் அதற்குப் பின் அத்தன்மையை விடுத்து அமைதியானவர்களாய் வாழ முற்பட்டனர். எருமைகளை வேட்டையாடும் நாடோடிகளாகவே வாழ்ந்த இவர்கள் இப்போது எண்ணற்ற குதிரைகளை வளர்க்கின்றனர். சீ.ப.

**கிர்கிசு சோவியத்துப் பொதுவுடைமைக் குடியரசு** சோவியத்து ஒன்றியத்தின் பொதுவுடைமைக் கூட்டரசு அமைப்பில் தெற்குப் பகுதியிலிருக்கும் உட்பகுதிக் குடியரசுகளுள் ஒன்று. சோவியத்து ஒன்றியத்தில் 1924-இல் இணைக்கப்பட்ட ஓர் உறுப்பு மாநிலம். பெரும் நிலப்பரப்பைக் கொண்ட சோவியத்து ஒன்றியத்தில் இது ஆசியப் பகுதியைச் சார்ந்தது. கிர்கிசு தாசுகண்டிற்குக் கிழக்கே அமைந்துள்ளது. இது தியேன்சான் மலைத் தொடரின் வடக்கு, வடமேற்குப் பகுதியாகும். சோவியத்து உருசியாவின் மற்றொரு மாநிலமான கசக்கிசுத்தானுக்குத் தென்கிழக்கில் அமைந்துள்ளது. இது வடநேர்நிலக்கோடு 70°-இலிருந்து 80°-வரையிலும், குறுக்கு நிலக் கோடு 43.24°-இலிருந்து 45° வரையிலும் அமைந்துள்ளது. இது ஒரு குடியரசாகும். இதன் மேற்கே உசுபெக்கிசுதான் உள்ளது. இதன் நிலப்பரப்பு 1939-ஆம் ஆண்டிற்கு முன்பாக 78,809 ச. மைலாக இருந்தது. மாற்றங்களுக்குப் பிறகு இன்று இதன் மொத்தப் பரப்பு 76,600 ச. மைலாகும்.

அலெக்சாந்தர் மலைத்தொடரின் முக்கிய பகுதிகள் இதனுள் அடங்கியுள்ளன. ஐசிக்குல் ஏரி இங்குள்ள முக்கிய ஏரியாகும். 5,000 அடி உயரத்தில் இருக்கும் சோன்குல் ஏரியும் குறிப்பிடத்தக்கது. இக்குடியரசின் பீடபூமி பனிப்பாறை வகையைச் சார்ந்தது. சாதாரணமாக 13,000 அடியிலிருந்து 16,000 அடிவரை உயரத்தில் உள்ளது. இங்குப் பனிப்பள்ளத் தாக்குகளும் பனிப்பாறைகளும் நிறைந்துள்ளன. மலைத்தொடரின் பல பகுதிகள் பனியால் மூடப் பட்டிருக்கின்றன. இங்குள்ள இனில்சக்குப் பனிப் பாறை (Inylcheck Glacier) உலகின் பெரும் பனிப் பாறைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. மலைத் தொடரின் முகடுகள் நிலையான பனியால் போர்த்தப் பட்டிருக்கின்றன. இவ்வாறு மூடப்பட்டிருந்தாலும் இதன் மொத்தப் பகுதி 250 ச. மைலுக்கும் அதிகமாகவே உள்ளது.

இங்குப் பசுமையான தாவரங்கள் நிறைந்து காணப்படுகின்றன; ஆனால், அடர்த்தியான காடுகள் கிடையா. சாதாரணமாக ஆப்பிள், ஆப்ரிகாட்டு, பிளம் ஆகிய பழங்கள் மிக அதிகமாகக் கிடைக்கின்றன. இவை 7000 அடி உயரத்தில் உள்ள பள்ளத் தாக்குகளில் நிறைந்து வளர்கின்றன. ஐசிக்குல் (Isykkul) ஏரியின் கிழக்குப் பகுதிகளில் பூக்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இதனால், இங்குத் தேனீ வளர்ப்புத் தொழிலும் நடைபெறுகிறது.

உயர்ந்த மலைகளுக்கும் அழகிய பள்ளத்தாக்குகளுக்கும் இடையில் வாழும் கிரிகிசு மக்கள் துருக்கிய இனத்தைச் சார்ந்தவர்கள்; தார்தார் (Tartar) மொழியைப் பேசுபவர்கள். கிர்கிசு, தார்தார், உசுபெக்கு, உகுர் ஆகிய இன மக்களும் வாழ்கின்றனர். யூதர்கள் இங்குச் சிறுபான்மையோராக உள்ளனர். 3,294,000 மக்கள் 1975-ஆம் ஆண்டின் கணக்குப்படி வாழ்கின்றனர். இங்கு வாழும் மக்கள் மேய்ச்சல் தொழிலை மேற்கொள்கின்றனர். இங்குப் புல்தரைகளும் மேய்ச்சல் நிலங்களும் நிறைந்துள்ளன. இதனால் கிர்கிசு மக்கள் பசு, எருமை, குதிரை, மான் ஆகியவற்றை அதிகமாக வளர்க்கின்றனர். எனவே கம்பளி, தோல் ஆகிய பொருள்களும் அதிகமாக உள்ளன. பாலும் இறைச்சியும் இப்பகுதி மக்களின் முக்கிய உணவுப் பொருள்களாகும். சிலர் பாலை அதிகமாகப் புளிக்க வைத்துச் சாப்பிடுகின்றனர். இதற்கு 'குமிசு' (Kumiss) என்பது பெயர். சிலர் குதிரை இறைச்சியைச் சாப்பிடுகின்றனர்.

இங்கு 18 முக்கிய நகரங்கள் உள்ளன. அவற்றுள் தாசுகுமிர், சோக்யாங்தாக்கு, ஓசு, கைசில்கியா ஆகியன குறிப்பிடத்தக்கன. முதல் மூன்று நகரங்களைச் சுற்றி நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. ஓசு நகரத்தில் பட்டு வளர்ப்பும் நெசவுத் தொழிலும் நடைபெறுகின்றன. இறைச்சி, பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் புட்டிகளில் அடைத்தலும், கம்பளி, பட்டு நெசவுத் தொழில்களும் நடைபெறுகின்றன. கிர்கிசு 1970-இலிருந்து தொழில் மையமாகி வருகிறது. உக்ரேசியா-கிர்கிசு வடக்குப் பகுதிகளில் இசுலாமியர் அதிகமாக வாழ்கின்றனர். இவர்கள் 'துசுகர்கள்' (Dusgans) அல்லது 'ஊயி' or (Hui) என்று அழைக்கப்படுகின்றனர்.

சோல்யுக்தா - சோக்யாங்செக்குப் பகுதிகளுக்கு இடையே 1930-ஆம் ஆண்டு வரை குறுகிய இரயில் பாதை போடப்பட்டிருந்தது. இப்போது இரிபாகை, தாசுகுமிர், கைசில்கியா ஆகிய இருப்புப்பாதைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஏரிகளில் எந்திரப் படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது. இக்குடியரசின் தலைநகரம் புரூன்சே (Brunze). இங்கு விமான நிலையம் உள்ளது. இந்நகரம் உருசியாவின் பிற பகுதிகளுடன் வான்வழியில் இணைக்கப்பட்டுள்ளது.


கிர்கிசுக் குடியரசுப் பல்கலைக்கழகம் (Kirgiz State University) தலைநகரில் உள்ளது. 9 உயர்

கல்வி நிலையங்கள் உள்ளன. பல கல்லூரிகளும் உள்ளன. இங்கு உயர்கல்வி வரை இலவசப் படிப்பு உள்ளது.

பொதுவுடைமைக் கோட்பாட்டைப் பரப்புவதற்கு அரசின் 'காம்சோமோல்' என்னும் இளைஞர் அணி ஒன்று இயங்கி வருகின்றது. கிர்கிசின் புகழ் பெற்ற எழுத்தாளரான செங்கிசு இடமடோவு **(Chengiz Itamatov)** 'மலைக்கதைகள்' **(Tales of Mountains)** 'பூசி மலை ஏற்றம்' **(Ascent of Mount Fuji)** போன்ற நூல்களை எழுதியுள்ளார். எச்.அ.

**கிர்தார்** பாகிசுத்தானில் உள்ள ஒரு மலைத் தொடர். அந்த நாட்டின் வட மேற்குப் பகுதியில் சிந்து மாநிலத்திற்கும் ஆப்கானிசுத்தானத்திற்கு மிடையே உள்ள கிர்தார்(Kirthar)மலைத் தொடரின் சில பகுதிகள் மிக உயரமாக உள்ளன. 7000 அடி வரை இதன் உயரம் உள்ளது. தெ.பா.

**கிர்னார்** கத்தியவாரிலுள்ள சிகரத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கொண்டது. கிர்னார் மௌரியர் காலத்திலிருந்து அரசியல் வரலாற்றுப் புகழ் பெற்று விளங்கியது. அசோகரின் கல்வெட்டுகள் இங்கு உள்ளன. கிர்னாரின் பழைய பெயர்கள் ஊர்சயத்து, ஊர்சந்தா, உச்சந்தகிரி, இரேவதா என்பனவாகும். இப்பகுதியில் பௌத்தமதம் அக்காலத்தில் தழைத்திருந்தது. சந்திரகுப்த மௌரியர் காலத்தில் இங்கு ஓர் ஏரி வெட்டப்பட்டது: இதனைப் பின்னர் வந்த அசோகர் புனரமைத்தார். அசோகரின் கல்வெட்டேயன்றி இங்கு உருத்திரதாமனுடைய கல்வெட்டும் காணப்படுகிறது. உருத்திரதாமன் மேலைச் சத்திரபமரபைச் சார்ந்தவர். இவர் சிவ பக்தர் ஆவார். இவரது காலத்தில் இங்குச் சிவ வழிபாடு இருந்திருக்க வேண்டும். இந்தியாவில் கிடைக்கின்ற பழமையான கல்வெட்டுகளில் ஆண்டைக் குறிக்கும் முதல் கல்வெட்டாக இக்கல்வெட்டுத் திகழ்கிறது.



அசோகரின் கல்வெட்டு - கிர்னார்

கிர்னாரில் சமணசமயத்தின் தாக்கமும் ஏற்பட்டது. இக்காலமே கிர்னாரின் பெருவளர்ச்சிக் காலம் ஆகும். சோலங்கி மரபு அரசர் குமாரபாலன் என்பவர் இங்கு, சமணக் கோயிலொன்றைக் கட்டினார். சோலங்கி மரபினர் குசராத்துப் பகுதியில் சமணசமய கோயில்களையும், சிற்பங்களையும் உண்டாக்கினர். குப்தப் பேரரசின் அரசர் கந்த குப்தரின் கல்வெட்டும் இங்கு உள்ளது. குப்தர்கள் காலத்தில் அந்தணர்கள் இங்குச் சிறப்பாக வாழ்ந்தனர்.

இங்குள்ள நேமிநாதர் கோயிலும் மல்லிநாதர் கோயிலும் சமணக் கோயில்களாகும். நேமிநாதர் கோயில் 22-ஆம் தீர்த்தங்கரர் நேமிநாதருக்காகவும், மல்லிநாதர் கோயில் 19-ஆம் தீர்த்தங்கரர் மல்லிநாதருக்காகவும் கட்டப்பட்டது. கிர்னார் மலைச் சிகரத்தில் உள்ள கோயில்களிலேயே நேமிநாதர் கோயில் மிகப் பெரியது ஆகும். இக்கோயில் கி.பி. 1278-ஆம் ஆண்டு பழுது பார்க்கப்பட்டது. மல்லிநாதர் கோயில் வாசுத்து பாலனால் கி.பி. 1231இல் கட்டப்பட்டது. இது மூன்று கோயில்களை ஒருங்கே கொண்டது. சு.இரா.

**கிரகடாவோத் தீவு** இந்தோனேசியாவில் சாவாவுக்கும் **(Java)** சுமத்திராவுக்கும் இடையேயுள்ள எரிமலைத்தீவு ஆகும். இங்குள்ள எரிமலை 792 மீ. உயரமானது. இவ்வெரிமலை கி.பி. 1883-இல் வரலாறு காணாத வகையில் புகைந்து வெடித்தது. இதனால் விளைந்த தீமைகள் சொல்லொண்ணாதவை. இத்தீவின் பெரும்பாலான பகுதி மறைந்துவிட்டது. இதன் விளிம்பிலிருந்த மூன்று சிறிய தீவுகள் மட்டுமே எஞ்சிநின்றன. எரிமலை கக்கிய சாம்பல், தூசு ஆகியவை இப்பகுதியின் சுற்றுப்புறங்களைக் காரிருளில் ஆழ்த்தின. படேயாவில் பல நாள்கள் வரை பகலிலும் விளக்குகளை ஏற்றிவைக்க நேர்ந்தது. எரிமலையிலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்ட பாறைத் துண்டுகளும் பிற பொருள்களும் 5 ச.மைல் பரப்பளவிற்குப் பரவிக் கிடந்தன. வெடிப் பின்காரணமாக வெளியான சாம்பல், தூசு ஆகியவை வானோக்கிப் பறந்து சென்று, சுமார் 300,000 ச. மைல் பரப்பளவில் பரவிப் படிந்துகிடந்தன. எரி

மலைக்கு அருகில் இருந்த கடற்பகுதிகளில் மிதந்து கொண்டிருந்த மெழுகு மாக்கலவை, அதைக் கப்பல்கள் கிழித்துக் கொண்டு செல்லாத அளவுக்கு உறைந்திருந்தது. காற்றில் பறந்து சென்ற மென்மையான தூசு உலகைப் பலமுறை சுற்றிவந்து கொண்டிருந்தது.



கிரகடாவோ எரிமலை

எரிமலையின் வெடிநிலை தணிந்தபோதிலும், வெடியினால் உண்டான சேதம் காண்பதற்குப் பயங்கரமானதாக இருந்தது. பெரும்பாலான பகுதி அழிந்துபோனது. இந்த மாபெரும் சேதத்தை கி.பி. 79-இல் வெசுவியசு எரிமலை புகைந்ததனால் விளைந்த சேதத்துடன் ஒப்பிடலாம்.

எரிமலை வெடித்ததனால் துசுமானி (Tsumani) எனக் கூறப்படுகின்ற பயங்கரக் கடல் அலைகள் எழுந்தன. அவற்றின் வேகத்தை நீண்ட தொலைவிலுள்ள தென் அமெரிக்காவிலும் அவாயிலும் (Hawai) உணர முடிந்தது. அவற்றுள் ஆகசுட்டு 27-ஆம் நாள் அடித்த அலையே மிகப்பெரிய அலையாகும். 120 அடி உயரத்திற்குக் கொந்தளித்துக் கொண்டு எழுந்த அந்த அலை பெருஞ் சேதத்தை விளைவித்தது. அதன் நாசவேலைக்கு 36,000 பேர் பலியாயினர். எரிமலை வெடித்ததன் காரணமாகக் கிரகடாவோவின் (Krakatao) உயிரினங்கள் அனைத்தும் இறந்தன. எங்குப் பார்த்தாலும் சாம்பலும் தூசும் படர்ந்திருந்தன. எனினும், உயிரினங்கள் மறுவாழ்க்கை பெற்று வளர்வதற்கான வாய்ப்புகளை ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்திக்கொள்வதில் மிக விரைவாக முனைந்தனர்.

அப்பெருஞ்சேதத்திற்குப் பிறகு அத்தீவு அடுத்த 44 ஆண்டுக் காலம் வரை அமைதியில் மூழ்கிக் கிடந்தது. ஆனால் 1927 திசம்பர் மாதம் 29-ஆம் நாள் முன்னர் ஏற்பட்ட அதே திசைகளில் வெடிப்புகள் ஏற்பட்டன. கடல் மட்டத்திலிருந்து தணல், கரி, சாம்பல் ஆகியவை வெளிவரத் தொடங்கின. அவற்றுடன் நீராவியும் வரத் தொடங்கியது. வளர்ந்து கொண்டிருந்த கூம்பு 1928 சனவரி 26-ஆம் நாளுக்குள்ளாகக் கடல் மட்டத்தை அடைந்து, மீண்டும் ஒரு தீவாக உருவெடுத்தது. அதற்குக் 'கிரகடாவோவின் குழந்தை' அல்லது சிறிய கிரகடாவோ' என்று பெயர் சூட்டப்பட்டது. அது 1953-இல் கடல் மட்டத்திலிருந்து 360 அடி வரை உயரமாகிவிட்டது. அது 1960-ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் புகைந்து கொண்டே இருந்தது. அ.உ.செ.

**கிரகவர்மன்** வட இந்தியாவில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சிறப்பு வாய்ந்த ஒருபேரரசை நிறுவிய அர்சப் (Harsha) பேரரசரின் மைத்துனன்; மௌரிய குலத்தவன். இவன் மனைவி இராச்சியசிரீ (Rajyasri) அர்சரின் சகோதரி. மௌகாரி (Maukharis) குலத்தவர் கன்னோசியில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தம் ஆட்சியை அமைத்திருந்தனர். இவன் தந்தை அவந்திவர்மன். மாளவ நாட்டு மன்னனும் வங்காள நாட்டு அரசனும் சேர்ந்து சதி செய்து, கிரகவர்மனைக் கொலை செய்தனர். இவன் மனைவி இராச்சியசிரீயைச் சிறைப்படுத்தினர். ஆனால், அர்சப் பேரரசர் போர் செய்து தம் சகோதரியை மீட்டார். அவள் தற்கொலை செய்து கொள்ளுந்தருவாயில் அவளைக் கண்டுபிடித்து, அவளை உயிர்வாழச் செய்த பெருமை அர்சருக்கு உண்டு. கிரகவர்மனின் அரியணையையும் அர்சர் கைப்பற்றிக் கொண்டார். தெ.பா.

**கிரசெம்சு விதி**: கிரசெம்சு என்பவர் இங்கிலாந்து நாட்டு எலிசபெத்து அரசியின் பொருளியல் அறிவுரையாளராகத் திகழ்ந்தவர். அவர் ஏற்படுத்திய விதியே கிரசம்சு விதி (Gresham's Law) எனப்படுகிறது. மதிப்புக் கூடிய நாணயங்களும் மதிப்புக் குறைந்த நாணயங்களும் ஒரே காலத்தில் பழக்கத்தில் இருந்தால் மதிப்புக் குறைந்த நாணயங்கள் மதிப்புக் கூடிய நாணயங்களைப் பழக்கத்திலிருந்து அகற்றிவிடும் என்பதே அவ்விதியாகும்.

முற்காலத்தில் நாணயங்கள் பழக்கத்திற்கு வருவதற்கு முன் பொருள்களைக் கொடுத்துப் பொருள்களை வாங்கும் பண்டமாற்று முறை (Barter System) நிலவி இருந்தது. இம்முறையில் சில வசதிக் குறைவுகள் இருந்தன. ஒருவன் ஒரு பொருளை மாற்ற

வேண்டுமென்றால், அந்தப் பொருளை வாங்குபவனிடமுள்ள பொருளை மற்றவன் வாங்க முன்வர வேண்டும். சான்றாக, கண்ணன் தன் தோட்டத்தில் விளைந்த ஆரஞ்சுப் பழங்களை விலைக்குக் கொடுக்க விரும்புகின்றான். அதுபோல் இராமன் தன் தோட்டத்தில் விளைந்த ஆப்பிள்களை விற்க வேண்டும் என்று விரும்பினால் அவ்விற்பனை நடக்கக் கண்ணன் இராமனின் ஆப்பிள்களையும் இராமன் கண்ணனின் ஆரஞ்சுகளையும் வாங்க முன்வர வேண்டும். இவ்வாறு இருவருடைய தேவைகளும் ஒன்றுபட்டால்தான் பண்டமாற்றுமுறை செயற்பட முடியும். இக்குறைபாடுகளை அகற்றவே நாணயங்கள் புகுத்தப்பட்டன. நாணய முறையில் ஒருவன் ஒரு பொருளை விற்கும்போது, அதனைப் பெறுவோனது பொருளை வாங்க வேண்டிய கட்டாயம் இல்லை. அப்பொருளுக்குரிய விலையை நாணயங்களாகப் பெற்றுக் கொள்ளலாம். எனவே, நாணய முறையில் பண்டமாற்றங்கள் சிக்கலின்றி எளிதாக நடைபெற்றன.

நாணய முறையின் தொடக்க காலத்தில் ஒரு பொருளை அளவுகோலாக வைத்தே பிற பொருள்களின் விலை மதிப்பிடப்பட்டது. அக்காலத்தில் ஆடுகள் நாணயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனவே ஒவ்வொரு பொருளின் விலையும், ஆடுகளை வைத்தே வரையறுக்கப்பட்டது. அதாவது, ஒரு மேசையின் விலை இரண்டு ஆடுகள் என்பது போன்ற நிலைகள் இருந்தன. இம்முறையிலும் பல குறைபாடுகள் காணப்பட்டன. ஆடுகளின் உருவங்களுள்–சில சிறியனவாகவும், சில பெரியனவாகவும் இருந்ததால் இவற்றில் எதை நாணய அளவுகோலாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற சிக்கல் எழுந்தது. அதனால் இம்முறை மாறி உலோக நாணய முறை நடைமுறையில் வந்தது. சிறந்த உலோகங்களாகிய தங்கமும் வெள்ளியும் நாணயம் செய்யப்பயன்படுத்தப்பட்டன. இதற்குச் சில முக்கிய காரணங்கள் உண்டு. அவையாவன:1) ஒரு பொருள் நாணயமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால் அதற்கு ஒரு தனி மதிப்பு வேண்டும். தங்கத்திற்கும், வெள்ளிக்கும் இத்தகைய அரிய விலை மதிப்பு உள்ளதால் அவை நாணயங்கள் செய்யப்பயன்படுத்தப்பட்டன. 2) நாணயப் பொருள்களின் உற்பத்தி மிகுதியாக இருத்தல் கூடாது. அவ்வாறு இருந்தால் அதன் விலை மதிப்புக் குறைந்துவிடும். எனவேதான் இரும்பு போன்ற உலோகங்களை நாணயம் செய்யப்பயன்படுத்தவில்லை. 3) மக்கள் மனத்திலும், இந்நாணயப் பொருள்களைப் பற்றிய மதிப்பும் நம்பிக்கையும் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும். தங்கமும் வெள்ளியும் மக்கள் மனத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தன.

உலோகங்களை நாணயங்களாக்கி வெளியிடும் உரிமை அக்காலத்தில் அரசுக்கு மட்டுமே இருந்தது. அன்று மன்னராட்சி நிலவியதால் அவர்களே உலோகங்களை உருக்கி நாணயங்களாக்கி அவற்றில் தத்தம் முத்திரைகளைப் பொறித்து வெளியிட்டனர். மேலும், நாணயங்களை அரசாங்கம் அளவின்றி வெளியிட முடியாது. அரசாங்கத்தின் கையிலுள்ள உலோகங்களின் அளவைப் பொறுத்தே நாணயங்கள் வெளியிடப்பட்டன. அன்றியும் நாணயத்தின் மதிப்பையும் அரசாங்கமே நிருணயித்தது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டு நாணயத்தின் பெயர் இசுடெர்லிங்கு **(Sterling)** ஆகும். ஒரு பவுண்டு இசுடெர்லிங்கு நாணயம் செய்ய ஒரு பவுண்டு இசுடெர்லிங்கு மதிப்புள்ள தங்கம் பயன்படுத்தப்பட்டது. அதாவது ஒரு நாணயத்தில் பொறித்துள்ள விலை மதிப்பும், அதைச் செய்யப் பயன்படுத்தப்பட்ட உலோகத்தின் மதிப்பும் ஒன்றாகவே இருந்தன. காலப்போக்கில் இம்முறையிலும் மாற்றம் ஏற்பட்டது.இங்கிலாந்தில் எட்டாம் என்றி என்ற மன்னனுக்குப் பணம் மிகுதியாகத் தேவைப்பட்டது. அப்பொழுது அங்குக் கூடுதல் நாணயங்களை வெளியிடுவதற்குத் தேவையான உலோகப் பொருள்கள் வேண்டிய அளவு கிடைக்கவில்லை. எனவே, பணத்தைப் பெருக்க – கூடுதல் நாணயங்கள் அடிக்க ஒரு எளிய வழி கண்டுபிடிக்கப்பட்டது. நாணயங்களின் முத்திரை விலையைக் குறைக்காமல் அவற்றை உருவாக்கப் பயன்படுத்தும் உலோகங்களின் அளவு குறைக்கப்பட்டது. இம்முறையால் குறைந்த அளவு உலோகங்களைப் பயன்படுத்திக் கூடுதல் நாணயங்களை உண்டுபண்ண முடிந்தது. இம்முறையில் நாணயங்களின் அளவு கூடியது. ஆனால் மதிப்புக் குறைந்தது. சான்றாக ஒரு கிலோ தங்கத்தின் விலை 10 பவுண்டு இசுடெர்லிங்கு என்றால் ஒரு கிலோ தங்கத்தில் 10 பவுண்டு இசுடெர்லிங்கு நாணயங்களைத்தான் அரசாங்கம் வெளியிட வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு நாணயத்தின் விலையும் 1 பவுண்டு இசுடெர்லிங்கு; அதை உண்டுபண்ணப் பயன்படுத்திய உலோகத்தின் மதிப்பும் 1 பவுண்டு இசுடெர்லிங்கு என்றாகும். ஆனால் எட்டாம் என்றி மன்னன் ஒரு கிலோ தங்கத்தில் 1 பவுண்டு இசுடெர்லிங்கு முத்திரை பதிந்த 20 நாணயங்களைச் செய்து வெளியிட்டான். இவ்வாறு செய்வதைத்தான் நாணய உள்மதிப்புக் குறைவு முறை என்பர். இம்முறையால் என்றி மன்னனுக்குக் கையிலுள்ள தங்கத்தைப் பயன்படுத்தித் தேவையான பணத்தை ஈட்ட முடிந்தது.

எட்டாம் என்றி மன்னனுக்குப் பிறகு ஆட்சியில் அமர்ந்த முதல் எலிசபெத்து அரசி நாணய உள் மதிப்புக் குறைவு முறையை மாற்றியமைத்தார். அதாவது, அவர் நாணத்தின் முத்திரை விலையும், அது செய்யப் பயன்படுத்தப்படும் உலோக விலையும், வேறுபாடில்லாதபடி நாணயங்களை வெளியிட்டார். ஆனால், இந்தப் புதிய நாணயங்களை மக்கள் பயன்படுத்தாமல் பதுக்கி வைத்துப் பழைய நாணயங்களையே பயன்படுத்தி வந்தனர். இது கண்டு வியப்படைந்த அரசி தன் பொருளாதார ஆலோசகரான கிரசெம்சிடம் இதற்குரிய விளக்கத்தைக் கேட்டார். அவர் மதிப்புக் கூடிய நாணயங்களும், மதிப்புக் குறைந்த நாணயங்களும் ஒரே காலத்தில் பழக்கத்தில் இருந்தால் மதிப்புக் குறைந்த நாணயங்கள் மதிப்புக் கூடிய நாணயங்களைப் பழக்கத்திலிருந்து அகற்றும் என்னும் விளக்கத்தைக் கொடுத்தார். இதனை நடைமுறைச்சான்று ஒன்றால் விளக்கலாம். இப்பொழுது இந்தியாவில் பழக்கத்தில் உள்ள நாணயங்களோடு இந்திய அரசு ஒரு உரூபாய் மதிப்புள்ள வெள்ளி நாணயங்களைப் பழக்கத்தில் கொண்டு வந்தாலும், இவ்வெள்ளி நாணயம் செய்யப் பயன்படுத்தப்பட்ட வெள்ளியின் மதிப்பு ஒரு உரூபாயாக இருந்தாலும் அவை பழக்கத்தில் வந்தவுடன் மக்கள் அவற்றைப் பணமாகப் பயன்படுத்தாமல் பதுக்கி வைக்கத் தொடங்கிவிடுவர். ஏனெனில், வெள்ளியின் விலை உயரும்போது அந் நாணயத்தின் மதிப்பு உயரும் என்று எதிர்பார்ப்பர்.

பல சூழ்நிலைகளிலும் இந்த விதியின் உண்மையை உணர முடியும். அக்காலத்தில் தங்கத்தாலும் வெள்ளியாலும் நாணயங்கள் செய்யப்பட்டன. இதற்கு இரு உலோக நாணய முறை (Bimetalism) என்பது பெயர். இரு உலோக நாணயங்கள் பழக்கத்தில் இருக்கும்போதும் கிரசெம்சு விதி செயற்பட்டது. தங்க நாணயத்திற்கும் வெள்ளி நாணயத்திற்கும் உரிய மாற்று மதிப்பை அரசாங்கம் வரையறுத்தாலும் அவற்றின் உண்மையான விலை மதிப்பு நாணயத்தின் விலையைப் பொறுத்துத்தான் அமையும், சான்றாக தங்கம், வெள்ளி நாணயங்களின் பணமதிப்பு 1 :15 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது என்றால், உலோக மதிப்பின் மாற்றத்தால் தங்கத்தின் விலை வெள்ளியை விடக் கூடும்போது இந் நாணயங்களின் மதிப்பிலும் மாற்றம் ஏற்படும். தங்கம் வெள்ளி நாணயங்களின் மாற்று மதிப்பு 1 : 16 என்ற விகிதத்தில் கூடினால், மக்கள் விலை மதிப்புக் கூடிய தங்க நாணயங்களைப் பயன்படுத்தாமல் பதுக்கி வைப்பார்கள். இதிலிருந்தும் மதிப்புக் குறைந்த நாணயங்கள் மதிப்பு மிக்க நாணயங்களைப் பழக்கத்திலிருந்து அகற்றும் என்ற உண்மை புலனாகிறது.

இவ்விதிக்குச் சில விதிவிலக்குகளும் உண்டு. சில சூழ்நிலைகளில் இந்த விதியின் முறைகளில் மாற்றம் ஏற்படலாம். (1) மதிப்புக் குறைந்த நாணயங்களை மிகக் குறைந்த அளவில் வெளியிட்டால், அவை தேவைக்குக் குறைவாக இருந்தால், இருவகை நாணயங்களும் ஒரே சமயத்தில் பழக்கத்தில் இருக்கும். (2) மதிப்புக் குறைந்த நாணயங்களை அரசாங்கம் புகுத்தினாலும், அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்ளாவிடில் இவ்விதிக்கு விலக்கு ஏற்படும். (3) இருவகை நாணயங்களும் சில காலமாகப் பழக்கத்தில் இருந்து வந்தாலும் மக்கள் இதனைக் கவனத்தில் கொள்ளாமலிருக்கலாம். இக்காரணங்களால் கிரசெம்சுவிதி ஒரு பொதுவான நடைமுறையைக் குறிக்கும் விதி என்றும், அது அனைத்துச் சூழ்நிலைகளிலும் இயங்காது என்றும் கொள்ளவேண்டும். பா.ம.

**துணை நூல்கள்:**

**Crowther**, G., An outline of Money, Thomas Nelson and Sons Limited, London, 1948.

**Halm**, G.N., Monetary Theory, Asia Publishing House, New Delhi, 1963.

**Hanson**, J.L., Monetary theory and Practice, The English Language Book Society & Mac Donald and Evans Limited, London, 1970.

**கிரணியம்** மறைந்துபோன தமிழ் நூல்களுள் ஒன்று. இந்நூல் யாப்பருங்கல உரையாசிரியரால் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. சித்திரக் கவிகளுள் ஒன்றான சக்கரம் என்பதனை ஆராரச் சக்கரம் எட்டாரச் சக்கரம் என்று அதன் வகை கூறி விளக்கிய பின்னர், வேறு வகையாக அமைக்கப்படும் பூமிச் சக்கரம், ஆகாயச் சக்கரம், பூமியாகாயச் சக்கரம், வட்டச் சக்கரம் முதலிய பல சக்கர பந்தங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகைச் சக்கரங்கள் அமைந்துள்ள நூல்களைக் குறிப்பிடும்போது அவற்றுள் ஒன்றாகக் கிரணியம் குறிப்பிடப்பட்டுள்ளது. யாப்பிலக்கண உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டுமளவிற்குச் செல்வாக்குப் பெற்றிருந்த இந்நூல், பிற்காலத்தில் முற்றிலும் அழிந்துபட்டது. கிரணியம் என்பது சக்கர வகை சார்ந்த சித்திரக கவிகள் கொண்ட ஒரு நூல் என்பதும், அப்பாடல் வகை ஒருவனைச் சாவவும் கெடவும் பாடுதற்குரியது என்பதும் தவிர வேறொன்றும் இக்காலத்தில் அறியக் கூடவில்லை. அ.மா.ப.

**கிரந்தம்**: கிரந்தம் என்ற சொல்லுக்குப் புத்தகம் அல்லது நூல் என்பது பொருள். தமிழ் மொழி பேசப்

பட்ட பகுதிகளில் பழங்காலத்தில் வடமொழி நூல்களை எழுதுவதற்காக உபயோகப் படுத்தப்பட்ட எழுத்துகள் கிரந்த எழுத்துகள் என்று சொல்லப்பட்டன. அவை வடமொழி எழுத்துகளின் உச்சரிப்புகளுக்கும், தமிழ் மொழி எழுத்துகளின் உச்சரிப்புகளுக்குமிடையே பல வேறுபாடுகள் காணப்படுவதனாலும், தமிழ் மொழியிலுள்ள எழுத்துகளைக் காட்டிலும் அதிகமான எழுத்துகள் வடமொழியில் காணப்படுவதனாலும், தமிழ் மொழி பேசப்பட்ட இடங்களில் வடமொழிகளை எழுதுவதன் பொருட்டுக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துகளாக இருத்தல் வேண்டும். இவ்வெழுத்துக்களுள் பெரும்பாலன தோற்றத்தில் தமிழ் எழுத்துகளைப் போன்று காணப்படும். ‘பிராமி’ எழுத்துகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு இவ்வெழுத்துகள் தோன்றியிருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது. உ,ஊ,க,ண,த, ந,ய,வ போன்ற எழுத்துகள் உச்சரிப்பிலும், வடிவத்திலும் கிரந்தம், தமிழ் எழுத்துகளுக்குப் பொதுவாகவும், அ,ஆ,ஈ,ஒ,ஔ,ட,ர,ள் ஆகிய எழுத்துகளுக்குள் உள்ள வேறுபாடு மிகக் குறைவாகவும் காணப்படுகிறது. எல்லிசு என்ற ஓர் அறிஞர் பின்வருமாறு கூறுகிறார்: ‘அந்தணர்கள் தமிழ் மொழி பேசப்படுகிற பகுதிகளுக்கு வந்த பொழுது, தமிழ் எழுத்துகள் தோன்றி வழக்கத்தில் இருந்ததைக் கண்டு, வடமொழியைப் பரப்பும் நோக்கத்துடன், தமிழ் எழுத்துகளுடன், அம்மொழியில் இல்லாத வடமொழிக்குத் தேவையான புதிய சில எழுத்துகளைச் சேர்த்து கிரந்த எழுத்துகளை ஏற்படுத்தினர்’.


இதே கிரந்த எழுத்துகளே சில மாறுபாடுகளுடன் ‘ஆரிய எழுத்து’ என்ற பெயரில் மலையாள எழுத்துகளாக அமைந்தன. ‘துளு’ என்று அழைக்கப்படும். கருநாடக மாநிலத்தின் சில பகுதியினரால் பேசப்படும் மொழியின். எழுத்துகள் கிரந்த எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டவை. மலையாளமும், துளுவும் தனிஎழுத்துகளாக அமைந்த பின் தமிழ் நாட்டில் மட்டும் கிரந்த எழுத்துகள் வழக்கத்தில் இருந்து வந்தன. தேவநாகரி எழுத்துகள் தோன்றி வழக்கில் வரவர கிரந்த எழுத்துகள் மறையத் தொடங்கி விட்டன.

பழைய காலங்களில் எழுத்துகள் ஓலைச் சுவடிகளில் கூரிய இரும்பினால் ஆன எழுத்தாணியைக் கொண்டு எழுதப்பட்டு வந்தன. தேவநாகரி எழுத்துகளில் காணப்படுவது போல் நேர் கோடுகள் இருப்பின் ஓலைச் சுவடிகளில் சுலபமாக எழுத முடியாதென்பதனால் தமிழ் மற்றும் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழி எழுத்துகளில் காணப்படுவதுபோல் வளைவு கோடுகள் காணப்படுகின்றன. இடப்புறத்திலிருந்து வலப்புறம் செல்லும் ஒரே நேர்கோட்டால் எழுதப்பெறும் கிரந்த எழுத்துகளும் தமிழ் எழுத்துகளைப் போன்று வலமாகச் செல்கின்றன.


தமிழ்நாட்டில் கிரந்த எழுத்துகளினால் பொறிக்கப்பட்டுள்ள சாசனங்கள் பல்லவ அரசனாகிய மகேந்திர வர்மன் காலத்திலிருந்து அதாவது, கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் கிடைத்துள்ளன. அதற்கு முற்பட்டனவாகத் தமிழ் நாட்டில் கிடைப்பவை அசோக மன்னன் கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளைப் போன்ற பிராமி எழுத்துக்களில் உள்ளவை. இடைப்பட்ட காலத்தில் பிராமியிலிருந்து கிரந்தம் பிரிந்து, தனிவகையாக வளர்ந்த வரலாற்றை ஆந்திரப் பகுதியான வேங்கட நாட்டில் கிடைக்கும் சாசனங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனாலும், அவற்றைக் கிரந்தம் என்று குறிப்பிடுவதில்லை.

**கிரந்த எழுத்துகள்**

**உயிர் எழுத்துகள்**:



**மெய் எழுத்துகள்**:



எஸ்.ஜெ.

**கிரந்தம்[2]**: செய்யுள் அல்லது உரைநடையில், எழுத்தெண்ணுங்கால் ஒற்றெழுத்து நீக்கி எண்ணுவது மரபு. அவ்வகையில், ஒற்றெழுத்தினை நீக்கி, உயிர் எழுத்தும் உயிர்மெய் எழுத்துமாக எண்ணிக் கொள்ளப்படும் 32 எழுத்துகளின் கூட்டத்தினை வடமொழியார் ஒரு கிரந்தம் என்று கூறுவர். ஒரு செய்யுள் அல்லது நூலினைக் கிரந்த வகையால் எண்ணிக் காட்டும் மரபினை வடமொழி நூல்கள் பலவற்றில்

காணலாம். அம்முறையினைப் பின்பற்றி யாப்பருங் கலக் காரிகை உரையாசிரியர் அந்நூலுள் எத்துணை கிரந்தங்கள் அமைந்துள்ளன என்பதனை எண்ணிக் காட்டியுள்ளார். கிரந்த வகையால் செய்யுள் அல்லது உரைநடையினை எண்ணி வரையறை செய்வதால் அச்செய்யுள் அல்லது உரைநடையில் இடைச்செருகல் நிகழ்வதற்கு வாய்ப்பு குறைந்துவிடும். அ.மா.ப.

**கிரநோபிள்** தென்கிழக்குப் பிரான்சு நாட்டின் முன்னாள் மாநிலமான தௌபினின் பழைய தலைநகரம் (Ancient Capital of Dauphine). இது இலியான்சு (Lyons) நகரிலிருந்து தென்கிழக்கில் 115 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஐசரா துறையின் ஆட்சியரங்கத்தலைவரின் பணி மனையாக (Prefec tur of the Department of Isera)உள்ளது. ஐரோப்பாவில் அமைந்துள்ள மிகவும் வலிமை மிக்க கோட்டை நகரங்களுள் கிரநோபிளும் (Grenoble) ஒன்று. ஐசரே (Isera) நதியின் இடக் கரையில் அமைந்துள்ள புதியநகரக் கட்டடங்கள் 702 அடி உயரம் கொண்டனவாகக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. பொதுச் செல்வழி (Thorough fare) கொண்ட இந்நகரம் பல கவின்மிகு புதிய கட்டடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் மூலநகரம், முன்பு ஐசரே நதியின் வலக் கரையில், இரேச்சைசு மலையின் அடிவாரத்தின் தென்பகுதியில் அமைந்திருந்தது.

கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட சமய வட்டத் தலைவரின் ஆட்சி அலுவலகம் கிரநோபிளில் அமைந்திருந்தது. முன்பு வியன்னாவின் மேனிலைச் சமயத்தலைவர்க்குத் துணையாதரவாளரான சமய மாவட்டத் தலைமையிடமாகத் (Suffragam) திகழ்ந்த கிரநோபிள் இன்று இலியான்சின் மத குருசார்ந்த மாகாணமாகத் (Ecclesiastical Province) திகழ்கிறது. இந்நகரின்கண் 'பேலசு டி சசுடிசு' (Palis de Justice)என்னும் கட்டடம் கண்கவர் வனப்போடு உள்ளது. இது கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெருமைக்குரியது. இக்கட்டடத்தின் எதிரில்தான் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட புனித ஆன்ட்ரூசு மாதாகோயில் செம்மாந்து நிற்கிறது. நாட்ரே டாமின் மாவட்டத் தலைமைக் கிறித்துவக் கோயில் இங்கு அமைந்துள்ளது. கிரநோபிள் நகரத்தில் காணப்படும் மாதாகோயில்களுள் மிகவும் பழைமையானது புனித இலாரன்சு கோயில் ஆகும். இக் கோயிலில் உள்ள கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட நில அறை (Crypt-திருக் கோயில்களுக்கு அடியில் உள்ள புதையிடம்) மெரோவின்சியன் காலத்துப் பழைமை கொண்டது. நகர நூலகம் எண்ணிறந்த சுவடிகளையும், கையெழுத்துப் படிகளையும், சமயம் சார்ந்த நூல்களையும், சுடெந்தலின் (Stendhal's) படைப்புகளையும், ஆயிரக்கணக்கான அச்சிடப்பட்ட புத்தகங்களையும் தன்னகத்தே கொண்டு புகழ்பெற்றுள்ளது. புகழ்பெற்ற சுடெந்தல் என்னும் அறிஞர் கிரநோபிளைச் சேர்ந்தவர் என்பதும், இவர் கி.பி. 1783-இல் பிறந்தவர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. சுடெந்தல் அருங்காட்சியகம், இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (Natural History Museum), புதிய காலத்திய கவின்மிகு வண்ண வண்ண ஓவியங்களுக்குப் புகழ்பெற்ற கலைக் கூடம் (Art Gallery) ஆகியவை இங்குள்ளன. கி.பி. 1339-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கீர்த்திமிகு பல்கலைக்கழகம் ஒன்று இங்குளது. இப் பல்கலைக்கழகத்தில் சட்டம், மருத்துவம், அறிவியல், கணிதம், கலை போன்ற பல துறைகள் உள்ளன. இந்நகரத்தின்கண் தொழிற் பள்ளிகளும், தொழில்நுட்பக் கல்லூரிகளும் (Poly-technical College), மின்னியக்கப் பொறியியல் (Electronic Engineering) பள்ளிகள் ஆகியனவும் இயற்பியல் சம்பந்தமான ஆய்வு நிறுவனங்களும் செயற்படுகின்றன. இந் நகரின்கண் அணு ஆராய்ச்சி மையமும் (Nuclear Research Centre) 1959-இல் தொடங்கப்பட்டுள்ளது.

சமயத்துறையிலும் கல்வித்துறையிலும் ஆராய்ச்சித் துறையிலும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ள கிரநோபிள் புதிய தொழில் வளர்ச்சியிலும் முன்னேறியுள்ளது. இங்கு விசையாழிகளும் (Turbines) நீர்மின்னாற்றல் வாய்ந்த சக்தித் தொழிற் சாலைகளுக்குத் தேவையான மின்சார இயந்திரங்களும் (Electrical machinery for hydroelectric power plants) பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. முன்பு இங்குக் கையுறைகளும் பெருமளவில் உற்பத்தியாயின. சிமெண்டு, நார்மடி, தோற் பொருள்கள், மணமும் இன்சுவையும் ஊட்டப்பட்ட கடுந்தேறல் (Liquor) ஆகியனவும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. இதன் மக்கள் தொகை ஏறத்தாழ 389,088 (1975) ஆகும்.

கலை, பண்பாட்டுத் துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளதால் கிரநோபிள் உலக அரங்கில் புகழ் பெற்றுள்ளது. ம.இ.

**கிரனடா[1]** தென் அமெரிக்காவின் நிகாரகுவாவில் உள்ள நகரமாகும். இது 866 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டது. வடக்கில் மனகுவா, தெற்கில் நிவாசு, மேற்கில் மசாயா, கிழக்கில் நிகரகுவா ஏரி - எல்லைகளாக அமைந்துள்ளன. பசிபிக்கு இருப்புப் பாதையும், அமெரிக்கப் பெருவழியும் இதன் ஊடே செல்கின்றன.

**கிரனடா[2]** தெற்கு இசுபெயினில் உள்ள அன்டலூசியாவில் அமைந்துள்ள ஒரு பகுதியாகும். மாட்

ரிட்டின் (Madrid) தெற்கில் 430 கி.மீ. தொலைவில் செனில் (Genil) நதிக்கரையில் அமைந்துள்ளது. இதன் கிளையாறுகள் தார்ரோவும் (Darro), அதன் பிரிவுகளுமாகும். தார்ரோ நதி, கிரனடாவின் கிழக்கு மேற்காக ஒருமைல் பாய்ந்து சென்று கடலோடு கலக்கிறது. இதன் தண்ணீர் பாசனத்திற்கு முழுமையாகப் பயன்படுகிறது.




தெற்கு இசுபெயினிலுள்ள கிரனடா

இதில் மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன. அவை அன்டெகொரெல்லா, அல்பைசின், கிரனடா. முதலாம் பகுதி கி.பி. 1410-இல் அன்டெகொரெல்லாவிலிருந்து வந்த அகதிகளால் நிறுவப்பட்டது. கிழக்கில் தோட்டங்கள் நிரம்பிய அழகான அலகம்பரா மலை அமைந்துள்ளது. இது மூர் மக்களால் விட்டுச் செல்லப்பட்ட நினைவுச் சின்னங்களுள் முக்கியமானதாகும்.

அல்பைசின் அன்டெகொரெல்லாவின் தென்மேற்கில் அமைந்துள்ளது. 'கிரனடா' என்று முறையாக வழங்கப்படும் பகுதி அன்டெகொரெல்லாவின் வடக்கிலும், அல்பைசினின் மேற்கிலும்அமைந்துள்ளது. கிரனடாவின் அடிப்படைப் பெயர் புதிராக உள்ளது. நகரில் பெருமளவு காணப்படும் மாதுளை மரங்களின் அடிப்படையில் இப் பெயர் வழங்கப்படுகிறது.

**கிரனடா[3]** பேராயரின் (Arch Bishop) தலைமையிடமாகும். இது திசியோடி சிலோ என்பவரால் கி.பி. 1529-இல் தொடங்கப்பட்டு, கி.பி. 1703-இல் முடிக்கப்பட்டது. சலவைக் கற்களும் மரகதக் கற்களும் 'இவ்வாலயத்தின் அழகை மிளிரச் செய்கின்றன. உட்பகுதியில் பல அழகிய வண்ண வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இதனுடைய சிற்பக்கலை கண்கொள்ளாக் காட்சியாகும். பிளவுபடாத இசுபெயினை ஆட்சி புரிந்த பெர்டினாண்டு-இசபெல்லாவின் நினைவுச் சின்னங்கள் இங்குள்ளன. நகரின் வடக்கில் உள்ள காத்துசியன் மடாலயம் கி.பி. 1516-இல் புகழ்பெற்ற படைத் தளபதி கான்சலோடி - கர்டோபா என்பவரின் நினைவாகக் கட்டப்பட்டது. அவருடைய நினைவாலயம் சான்செரோனிமோவில் உள்ளது. அது கி.பி. 1531-இல் செயற்பட ஆரம்பித்தது; இப்போது முன்னாள் இயேசு கல்லூரியில் செயற்படுகிறது. மூர்களின் தொன்மையான நினைவுச் சின்னங்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. மூர்களின் அரசிகளுக்காக கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அரண்மனைக்கு 'அல்கசா-டி-செனில்' என்பது பெயர். அதே காலத்தில் முதலாம் யூசுப்பால் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக் கழகத்திற்கு 'கசா டெல் கபில்டொ அன்டிகுகா' என்பது பெயர். இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டு முதல் விளைபொருள் சேமிப்புக் கிடங்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கே.கி.

**கிராசசு மார்கசு லைசீனியசு** (கி.மு. 112-53) உரோமானியப் படைத்தலைவர். இவர் உரோமானிய வரலாற்றில் சல்லா (Sulla), மேரியசு (Marius) சூலியசு சீசர், பாம்பே (Pompey) போன்றவர்களின் காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த புரட்சியின்போது படைத் தலைவராக விளங்கியவர். இவர் தந்தை உரோமாபுரியில் புகழ்மிக்க சொற்பொழிவாளராக விளங்கியவர்; பாதுகாவலராகவும் (Consul) தணிக்கையாளராகவும் (Censor) பதவி வகித்தவர்; சல்லாவின் சார்பில் போர்புரிந்து, மேரியசு என்பவருக்கு அடிபணிய விரும்பாமல் தற்கொலை புரிந்து கொண்டவர்.

கிராசசு(Crassus Marcus Lisinius) அக்காலத்திய உரோமானிய உயர்குடி மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்; எனினும் இவர் பழக்க வழக்கங்களிலும் பண்புகளிலும் அக்குடியினரினும் முற்றிலும் வேறுபட்டிருந்தார். இவர் மனம்திறந்து பேசுபவர் அல்லர்; நேர்மையற்றவர்; செல்வத்தைத் திரட்டுவதில் எந்தப் பழிபாவத்திற்கும் அஞ்சாதவர்.

இவர் இளமையில் இலக்கியத்திலும் தத்துவத்திலும் நாட்டங் கொண்டிருந்தார் காலப் போக்கில் பெருஞ் செல்வத்தையும், அதனைக்கொண்டு உயர் அரசுப் பதவிகளையும் பெறுவதற்காகப் பல மானக் கேடான முறைகளைக் கையாண்டு, தம் வருமானத்தைக் கருவூலத்திற்கு வரும் தொகைக்குச் சமமான அளவிற்குப் பெருக்கிக் கொண்டார். பணம் தேவைப்பட்டவர்களுக்கு வட்டியில்லாமல் கடன்களைக் கொடுத்துத் தம் செல்வாக்கினை மேலும் வளர்த்துக் கொண்டார். ஓர் இராணுவப் படைத் தலைவராக வேண்டும் என்று விருப்பங் கொண்டு, பெரும்படை ஒன்றையும் திரட்டிக் கொண்டார்.

முதலாளிகளின் கொடுமைகளைப் பொறுக்க முடியாது அக்காலத்திய அடிமைகள் இசுபார்டகசு (Spartacus) என்பவரின் தலைமையில் கிளர்ந்தெழுந்தனர். நிலை கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கையில் கிராசசு அவர்களைத் தோற்கடித்து, இசுபார்டகசை உருவ அடையாளம் தெரிந்து கொள்ளாத அளவிற்கு வெட்டிச் சிதைத்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு (கி.மு. 70-இல்)பாம்பே என்பவருடன் அவ்வாண்டுக்குரிய அரசுத் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உரோமப் பேரரசில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலையின்போது பாம்பேயின் அதிகாரமும் ஆற்றலும் வளர்ந்து கொண்டிருக்கையில், அவரைச் சூலியசு சீசரும் (Julius Caesar) கிராசசும் கவிழ்த்துத் தம் நிலையை உயர்த்திக் கொள்ள வீண் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டனர். பாதுகாவலர் பதவிக்காக கி.மு. 66-இல் நிகழ்ந்த தேர்தலில் தோல்வியுற்ற காட்டிலைன் (Catiline) என்பவருடன் கிராசசு சேர்ந்து கொண்டு சதி வேலைகளில் ஈடுபட்டார். கிராசசு கி.மு. 65-இல் தணிக்கையாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சீசரின் பதவி உயர்வதற்கு வழி வகுத்துக் கொடுத்தார். இவர் கி.மு. 60-இல் நிறுவப்பட்ட முதல் மூவர் ஆட்சிக் குழுவில் சீசருடனும் பாம்பேயுடனும் சேர்ந்துக் கொண்டார். இவர் கி.மு. 55-இல் மீண்டும் பாதுகாவலராகப் பதவியேற்றுச் சிரியாவை (Syria) ஆட்சி புரிந்து வந்தார். பார்த்தியாவை (Parthia) அடக்குவதற்காகத் திரட்டப்பட்ட மாபெரும் படைக்குக் கிராசசு தலைமை தாங்கி,அப்பகுதிக்குச் சென்று போர் புரிந்தார். இவர் கார்ரேயில் (Carrhae) நிகழ்ந்த மிகக் கடுமையான போரில் தோற்கடிக்கப்பட்டார். பார்த்தியத் தலைவரின் அழைப்பினை ஏற்று அவரிடம் சென்ற கிராசசு வஞ்சகமான முறையில் பிடிக்கப்பட்டுக் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டார் (கி.மு. 53). இவர் தலை துண்டிக்கப்பட்டதுடன் வாயில் உருக்கப்பட்ட தங்கம் வெற்றியாளர்களால் ஊற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அ.உசெ.

**துணை நூல்கள்:**

**Man, A.**, Pompeii, New York, 1902.

**Merivale, C.**, History of the Romans Under the Empire, London, 1865.


**Will Durant**, Story of Civilization. Vol. III, Caesar and Christ, New York, 1944.

**கிராசினோயார்சுக்கு:** ஆசியாக் கண்டத்தில் நடுச் சைபீரியாவில் உள்ள இப்பகுதி சோவியத்து உருசியாவுக்குச் சொந்தமானது. இதன் பரப்பு 2,403,520 கி.மீ. சைபீரிய நெடிய இருப்புப் பாதை இதன் வழியாகச் செல்கிறது. இதன் தலைநகர்ப் பெயரும் கிராசினோயார்சுக்கு (Krasnoyarsk) என்பதே. இதனருகில் எனிசே (Yeneisei) என்னும் ஆறு ஓடுகிறது. தொழில் வளத்திற்கும் வாணிகத்திற்கும் இது பெயர் பெற்றது. பொன்சுரங்கங்கள் இங்கே உள்ளன. இந்நகரம் கி.பி. 1628-ஆம் ஆண்டு முதல் வளர்ச்சியுற்று வந்துள்ளது. இதன் மக்கள் தொகை 63000 (1983)

தெ.பா.

## கிராண்டு உலிசசு சிம்சன்(கி.பி. 1822-1885)

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பதினெட்டாம் குடியரசுத் தலைவர். அமெரிக்க உள்நாட்டுப் போரில் முக்கிய பங்கு வகித்த இவர் இராணுவ சேவையில் தீவிரமாக ஈடுபட்டு, அமெரிக்க இராணுவத்தின் படைத் துறைப் பணித் தலைவர் பதவியைப் பெற்றார். இறுதியாக அனைத்து அமெரிக்கப் படைகளின் தலைமைத் தளபதியாகவும் (அணுக்க முதன்மையர்) அமர்த்தப்பட்டார். இரண்டு முறை அமெரிக்கக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு(கி.பி. 1869 முதல் 1877 வரை), இரண்டு காலப்பகுதிகளில் நிருவாகம் செய்தார். இவர்தம் நிருவாகம் போற்றத்தக்க அளவிற்கு இல்லை. இவர் சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்து, தம் இராணுவ அனுபவங்களை நூல் வடிவில் வெளியிட்டுள்ளார்.



கிராண்டு உலிசசு சிம்சன்

கிராண்டு உலிசசு சிம்சன் (Grant Ulysses Simpson)கி.பி. 1822-இல் ஒகியோ மாநிலத்தில் உள்ள பாயிண்டு பிளசண்டு என்னுமிடத்தில் செசி ரூட் கிராண்டிற்கும் கண்ணா சிம்மன் கிராண்டிற்கும் மகனாகப் பிறந்தார். தொடக்கக் கல்வியை உள்ளூரில் முடித்த இவர், மேற்படிப்பை அமெரிக்க இராணுவக் கழகத்தில் முடித்தார். (கி.பி. 1839-1843). இவர் இளமைக் காலத்திலேயே முரட்டுக் குதிரைகளை அடக்கும் வல்லமை பெற்றிருந்தார். ஒழுங்குமுறை (Methodist) மதப்பிரிவைச் சேர்ந்த இவர் கி.பி. 1848-இல் சூலியா போக்சு தெண்டு (Julia Boggs Dent) என்னும் மங்கையை மணந்தார்.

இவர் மெக்சிகன் போரில் (கி.பி. 1846-1848) பங்கு கொண்டு, தம் இராணுவத் திறமையை வெளிக்காட்டினார். மேலும், பல போர்களில் பங்கு கொண்டு, கி.பி. 1845-இல் இரண்டாம் முழு அணுக்க முதன்மையராகப் (2nd Lieutenant) பதவி உயர்வு பெற்றார். இவர் பாலோ ஆல்டோ, இரெசாகா டி லா பால்மா, மாண்டெரே முதலான போர்களிலும் ஈடுபட்டார். மெக்சிகன் போர் இவருக்குப் பல படிப்பினைகளைத் தந்தது. போர்த்திறன் மிக்க இவர் படைத் துறைத் தலைவர் (Captain) பதவி வரை உயர்த்தப்பட்டார். இந்நிலையில் இவர் தம் மனைவியை இழந்தார். இராணுவத் தலைவர் புக்கானனுடன் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக கி.பி. 1854-இல் இராணுவத்திலிருந்து விலகினார். பதவி விலகிய இவர் மிசௌரிக்குத் திரும்பிச் சென்று 4 ஆண்டுக் காலம் வேளாண்மை செய்தார். அந்தத் தொழிலில் களைப்படைந்த பின்னர்ப் புனித உலூயிசுக்குச் சென்று, சில காலம் வீடு, நிலம், மனை வாங்கி விற்கும் தொழிலை மேற்கொண்டார். இல்லினாயில் உள்ள கலேனாவிற்கு 1860-இல் சென்று தம் தந்தையின் தோல்கடையில் பணிபுரிந்தார். அவையனைத்தும் இவருக்கு மனநிறைவளிக்கவில்லை. எனவே, மீண்டும் இராணுவத்தில் சேர்ந்தார். இல்லினாய்ப் படையின் 21-ஆம் பிரிவின் தளபதியாகப் பணியேற்று, ஆபிரகாம் லிங்கன் பாராட்டும் வகையில் இராணுவப் பணி புரிந்தார். விக்சுபர்குப் படையெடுப்பில் (1862-63) தீவிரப்பங்கேற்றுப் பெருவெற்றி பெற்றார். அதன் விளைவாக 1866-இல் அனைத்து அமெரிக்கப் படைகளின் தலைமைத் தளபதியாக (Lieutenant General) அமர்த்தப்பட்டார்.

இராணுவத் துறையில் புகழ் பெற்று விளங்கிய இவர், கி.பி. 1868-இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்குக் குடியரசுக் கட்சியின் (Republican Party) வேட்பாளராகப் போட்டியிட்டுச் சனநாயகக் கட்சியின் வேட்பாளர் கொரேசியா சேய்முரை (Horatio Seymour) 80 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். தம் கட்சியின் முக்கிய தலைவர்களைப் புறக்கணித்துத் தம் நெருங்கிய நண்பர்களுக்கும் பணக்காரர்களுக்கும் அமைச்சரவையில் இவர் இடமளித்தார். சமாதானத்தை நிலை நாட்டுவோம் (Let us have peace) என்பதே இவர்தம் முழக்கமாக இருந்தது.

உள்நாட்டு நிருவாகத்தைப் பொறுத்தமட்டில் இவர் புதுமையாக எதையும் சாதித்ததாகக் கூறவியலாது. தென்பகுதி மறுஅமைப்புத் திட்ட மேம்பாட்டில் இவர் தீவிரவாதிகளின் (Radicals) கருத்தைப் பின்பற்றி, நீக்கிரோக்களுக்கு வாக்குரிமை அளிக்க இசைந்தார். இவரால் மேற்கொள்ளப்பட்ட 14, 15 -ஆம் சட்டத்திருத்த மசோதாக்கள் தோல்வியடைந்தன. சீரான நிதிக் கொள்கையைப் பின்பற்றாத காரணத்தால், இவரது நிதிக் கொள்கையும் வெற்றி பெறவில்லை. நிதிநிலை சீர்கெட்டது. சாண்டோ தொமிங்கோவைக் (Santo Domingo) கைப்பற்றும் இவரது முயற்சியும் தோல்வி அடைந்தது.

வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தமட்டில், இவர் அறிவுசான்ற அரசுத்துறைச் செயலரான ஏமில்டன் பிசு (Hamilton Fish) என்பாரின் அறிவுரையை ஏற்றுச் செயற்பட்டார். கியூபாச் சிக்கலிலும் பிசின் எச்சரிக்கையை மனத்திற் கொண்டு,கியூபாக் கிளர்ச்சியாளர்கள் நிறுவிய குடியரசை ஏற்றுக் கொள்ள மறுத்தார். வெர்சீனியாவின் சிக்கலிலும் இவர் இசுபெயினுடன் கி.பி. 1873-இல் சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இங்கிலாந்துடனும் இவர் சமாதானத்தைப் பின்பற்றினார்.

கிராண்டு கி.பி. 1872-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் 286 வாக்குகள் பெற்று ஒரேசு கிரீலியை (Horace Greeley) வென்று, இரண்டாம் தடவையாகப் பதவியேற்றார். இரண்டாம் காலப்பகுதி இவருக்குச் சோதனைக் காலமாக முடிந்தது. இவரது அரசின் உயர்நிலை அதிகாரிகள் கையூட்டு ஊழல்களில் ஈடுபட்டனர். போர்ச் செயலர் வில்லியம் ஓர்த் பெல்க்னேப்பு (William Worth Belknap), குடியரசுத் தலைவரின் அந்தரங்கச் செயலர் ஆர்விலி ஈ பேப்காக்கு (Orville E Babcock) ஆகியோர் மீது கையூட்டுப் புகார்கள் கூறப்பட்டன. அவர்கள் மீது குற்றப் பத்திரிகைகள் வாசிக்கப்பட்டபோதும், இவர் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார். அதன் விளைவாக இவரது பெயரும் புகழும் கெட்டன.

இவர் பதவிக்காலம் முடிந்த பின்பு அமைதியாகக் காலத்தைக் கழிக்க விரும்பினார்; உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். இவர்தம் அரசியல் வாழ்வு கி.பி. 1880-இல் முடிவுற்றது. இவருக்குப் பணத்தேவை அதிகம் ஏற்பட்டது. இவர்தம் ஆதர வாளர்கள் 250,000 தாலர்கள் நிதியுதவியளித்தபோதி லும் வறுமையில் வாடினார். இராணுவச் சாதனை யின் நினைவுச் சின்னங்களாகத் தாம் வைத்திருந்த போர்க்கத்திகளையும் நினைவுப் பொருள்களையும் விற்றார். இந்நிலையில் இவரைத் தொண்டைப் புற்றுநோயும் வாட்டியது.

இவர் கி.பி. 1884-இல் 'சீலோச்சண்டை' (Battle of Shiloh) என்னும் கட்டுரையை 'நூற்றாண்டு சஞ்சி கைக்கு' (Century Magazine) எழுதினார். சாரடாகா விற்கு அருகிலுள்ள மேக்ரேகர் மலையில் (Mount McGregor) அமர்ந்து, தம் போர்க்கால அனுபவங் களைத் 'தம் வாழ்க்கை நினைவுகள்' (Personal Memoirs 1855-56) என்னும் தலைப்பில் இரு பகுதிக ளாக எழுதினார். அதனால் இவருக்குப் புகழும் பண மும் கிடைத்தன. நூல் விற்பனைப் பணமாக (Royalty)இவருக்கு $ 450,000 கிடைத்தது. இவர் கி.பி. 1885-இல் நியூயார்க்கு மாநிலத்திலுள்ள மேக்ரேகர் மலையில் காலமானார். இவர்தம் 50 மீட்டர் உயரம் கொண்ட அழகிய கல்லறையில் 'சமா தானத்தை நிலை நாட்டுவோம்' (Let us have Peace) என்னும் பொன்மொழி பொறிக்கப்பட்டுள்ளது.

ம.இ.

**கிராண்டு கால்வாய்**: காண்க: நெடும்பழங் கால்வாய்.

**கிராண்டு சர் சேம்சு ஒப்பு** புகழ்பெற்ற ஆங் கிலேயப் படைத் தளபதி. இவர் சீக்கியப் போர்களில் ஈடுபட்டுப் புகழ் பெற்றார். சர் சேம்சு ஒப்பு கிராண்டு (Sir James Hope, Grand) சீக்கியர்களின் போர் வலி மையைப்பற்றிப் புகழ்ந்து கூறி, ஆங்கிலப் படை தோல்வியை நெருங்குமளவு சீக்கியர்கள் போர் புரிந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். இவர்தம் திற மையினால் ஆங்கிலப் படை வெற்றி பெற்றது என் பது குறிப்பிடத்தக்கது.

இவர் முதல் இந்திய சுதந்திரப் போர் என்று குறிப்பிடப்படும் சிப்பாய்க் கலகத்தின்போது தளபதி யாக விளங்கினார். சிப்பாய்க் கலகத்தின்போது கான்பூர், இலக்னோ போன்ற பகுதிகளைக் கலகக் காரர்களிடமிருந்து திரும்பப் பெறுவதில் இவர்பெறும் பங்கு வகித்தார்; கலகத்திற்குப்பின் அமைதி ஏற்படுத் துவதில் முக்கிய இடம் பெற்றார். இவர் கி.பி. 1858 நவம்பரில் வெளியிடப்பட்ட இங்கிலாந்துப் பேரரசி யின் அறிக்கையைச் செயற்படுத்துவதற்குப் பல படைத் தளபதிகளுடன் பாடுபட்டார். புகழ் பெற்ற விடுதலைப் போர்த் தளபதி நானா இவரிடம் சரண டைந்தார். இவர் அவரைக் கைது செய்து விசார ணைக்காக அனுப்பினார். இவர் அப்போது அயோத் தியில் இருந்த ஆங்கிலப் படைக்குத் தளபதியாக இருந்தார். சிராசுகாட்டு என்னுமிடத்தில் நடந்த போரில் புரட்சிப் படைகளை எதிர்த்து வீரத்துடன் போரிட்டார். அப்போரில் படுகாயமுற்றார். மேலும். புரட்சிப் படைகளின் போர் நடவடிக்கைகளை அறி யாது இவர் படை பித்தூரை அடைந்தபோது, புரட் சிப் படைகள் அரண்மனைகளையும் கோவில்களை யும் மசூதிகளையும் காலி செய்துவிட்டு முன்னேறிச் சென்றன. இவர் படை பின் தொடர்ந்து சங்கர் பூரைச் சென்றடைந்தது. அங்குப் புரட்சிப் படைத் தலைவர் இராணா என்பவர் 2000 குதிரைப் படைக ளையும் 4000 காலாட்படைகளையும், 40 பீரங்கிக ளையும் கொண்டு கோட்டையைப் பாதுகாத்த ர். இவர் கிளைடின் பிரபு உதவியுடன் கி.பி. 1858-ஆம் ஆண்டு நவம்பர், 15-ஆம் நாள் கோட்டையை முற் றுகை இட்டார். தீரமுடன் போரிட்டுப்புரட்சிப்படை களைக் கோட்டையிலிருந்து விரட்டினார். ஆங்கில அரசு இவ்வெற்றியைக் கேள்வியுற்று இவரைப் பாராட்டியது. பின்னர் இவர் தளபதி காம்பெல்லு டன் இணைந்து பிரகம்காட்டுக்கு அருகில் உள்ள செக்ரோராப் பகுதியை நோக்கிப்படையை ஏவினார். இராணா ஆங்கிலப் படையின் முற்றுகையைத் தாங் காமல் தம் படைகள், குடும்பம், சொத்து ஆகியவற் றுடன் விடியற்காலை 2-மணிக்குக் கோட்டையை விட்டு வெளியேறினார். இவர் விடியற்காலையில் கோட்டையைக் கைப்பற்றினார்.

இவர் இந்தியா ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக் குள் வந்த பிறகும், நாட்டில் அமைதி ஏற்படுத்துவ தில் தம் படையை வழி நடத்தினார். இவர்தம் வீரத்தைக் கண்ட ஆங்கில அரசு இவரை கி.பி. 1860-61-இல் நடந்த மூன்றாம் சீனப் போருக்குரிய தளபதியாக நியமித்தது. சீனப் போரில் வெற்றிகண்டு திரும்பிய கிராண்டு ஒப்பு கி.பி. 1861-இல் சென்னை மாநிலத்தின் முதன்மைப் படைத் தளபதியாக நிய மிக்கப்பட்டு அப்பதவியில் கி.பி. 1865 வரை பணி புரிந்தார்.

பெ.சி.

**கிராப்னர், இராபர்ட்டு பிரிட்சு (கி.பி. 1877-1934)** செருமானிய இனக்குழு ஒப்பாய்விய லார்; பண்பாட்டுப் பரவல் பற்றிப் புதுக் கொள் கையை உருவாக்கிய ஆசுத்திரிய-செருமானியக்

கொள்கைக் குழுவினருள் (Austro-German School) ஒருவர். இவர் வகுத்த பண்பாட்டுத் தொகுதி (Kulturkreise or Culture Complex) என்னும் கோட்பாடு மூலம் தொன்மைப் பண்பாடுகளின் பரவல் நிகழ்ச்சி பற்றிப் புதுவிளக்கம் கொடுத்தார்.

கிராப்னர் (Robert Fritz Graebner) கி.பி. 1877, மார்ச்சு 4-ஆம் நாள் பெர்லினில் பிறந்தார். முதுகலைப் படிப்புக்குப் பின் பெர்லினிலுள்ள பேரரசு இனக்குழு ஒப்பாய்வியல் அருங்காட்சியகத்தில் (Royal Museum of Ethnology) ஆய்வாளராகச் சேர்ந்து பசிபிக்குக் கடற் பகுதி நாடுகளின் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு இப்பகுதியின் வரலாற்றை ஆராய்ந்தார். பசிபிக்குப் பகுதியின் பண்பாட்டுக் கூறுகள் பிற நிலப்பகுதிகளோடு கொண்டிருந்த தொடர்புகளை அறுதியிட்டு, ஒவ்வொரு பண்பாட்டுக் கூறின் பரவலையும் மதிப்பிட்டார்.

இன்றுள்ள உலகப் பண்பாடுகள் அனைத்தும் எகிப்துப் பண்பாட்டிலிருந்தே தோன்றின என்ற ஆங்கிலக் கொள்கைக் குழுவினரின் கொள்கையை ஆசுத்திரிய செருமானியக் குழுவினர் மறுத்தனர். இதற்குக் கிராப்னர் வகுத்த பண்பாட்டுத் தொகுதிக் கோட்பாடு துணை நின்றது. இவரது கருத்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல பண்பாட்டுத் தொகுதிகள் பல காலகட்டங்களில் தோன்றின என்பதாகும். இருபண்பாடுகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமைத் தன்மை கொண்டு ஒன்றிலிருந்து மற்றது தோன்றியது என்று கருதலாகாது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். மனிதனின் ஒத்த மனவளமும் ஒத்த செயல்களும் ஒரே வகையான செயல்களைச் செய்யத் தூண்டுகின்றன. அதனால், ஒருமித்த கூறுகளைக் கொண்ட பல பண்பாட்டுத் தொகுதிகள், உலகின் பல்வேறு பகுதிகளில் தோன்றிப் பிற பகுதிகளுக்கும் பரவின எனக் குறிப்பிட்டார்.

இவர் இராவ்தன் இசுட்ராக்கு சோயத்து (Rauten Strauch-Joest) அருங்காட்சியகத்தில் 1906-இல் சேர்ந்து இனக்குழு ஒப்பாய்வியலில் பண்பாட்டு, வரலாற்று அணுகுமுறையை வலுப்படுத்திப் பல ஆய்வுகளில் பயன்படுத்தினார். அதன் மூலம் பல பண்பாடுகளுக்கிடையிலுள்ள பிணைப்புகளுக்கான காரணங்களைக் கண்டறிந்தார்.

முதல் உலகப் போரின்போது ஆசுத்திரேலியாவில் வாழ்ந்த கிராப்னர் இந்திய ஐரோப்பியத் தொன்மங்கள் (Myths), அமிட்டிக்கு-செமிட்டிக்கு (Hamitic-Semitic) மொழியினரின் தொன்மங்கள், மங்கோலியர், பாலினீசியர் ஆகியோரின் தொன்மங்கள் ஆகியவற்றிற்கிடையேயுள்ள தொடர்புகளை விரிவாக ஆராய்ந்தார். அதனைத் தொகுத்து 'உலகத்தைப் பற்றி ஆதிக்குடிகளின் கருத்து' (The World View of the Primitives, 1924) என்னும் நூலாக வெளியிட்டார். இந்நூலில் கிராப்னர் தொன்மையான வளமான பண்பாடு பண்டைக் காலத்தில் பரவியது பற்றிய வரலாற்றியல் சார்ந்த கோட்பாட்டினைக் குறிப்பிடுகிறார். கிராப்னர் 1934-இல் பெர்லினில் காலமானார். சீ.ப.

## கிராம்வெல், ஆலிவர் (கி.பி. 1599-1658)

இக்கால ஐரோப்பிய வரலாற்றில் காணப்பெறும் மிகச்சிறந்த அரசியல் தலைவர்களுள் ஒருவர். இவர் இங்கிலாந்தைச் சார்ந்தவர்; சிறந்த போர் வீரர்; இங்கிலாந்து நாட்டில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் முடியாட்சியை ஒழிப்பதில் பெரும் பங்கு கொண்டவர்; இங்கிலாந்து, இசுகாட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றை உள்ளடக்கிய குடியரசு அமைப்பின் தலைவராக விளங்கியவர்.



கிராம்வெல், ஆலிவர்

இவர் கிழக்கு இங்கிலாந்தில் உள்ள அண்டிங்கடன் (Huntingdon) என்னுமிடத்தில் கி.பி. 1599-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தை பெயர் இராபர்ட்டு கிராம்வெல். இராபர்ட்டு ஒரு நிலவுடைமையாளர்; நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். கிராம்வெல் (Oliver Gromwell) உள்ளூர் இலக்கணப் பள்ளியில் கற்கத் தொடங்கினார். கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த சிட்னி சசக்சுக் (Sidney Sussex) கல்லூரியில் ஓராண்டு கல்வி பயின்றார். தம் 18-ஆம் வயதில் இவர் தந்தையை இழந்தமையால், கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டு, விதவைத் தாயாரையும் சகோதரிகளையும் கவனிக்கலானார். எலிசபெத்து அம்மையாரை கி.பி. 1620-இல் மணம் புரிந்தார்.

கிராம்வெல் கி.பி. 1628-இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கி.பி. 1640-இல் கூட்டப்பெற்ற குறுகிய நீண்ட நாடாளுமன்றங்களுக்கு உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். நாடாளுமன்றத்திற்கும் அரசருக் கும் இடையே கி.பி. 1624-இல் போர் தொடங்கியது. கிராம்வெல் நாடாளுமன்றத்தின் சார்பில் அதில் கலந்து கொண்டார். முதல் தரமான குதிரைப் படையொன்றை இவர் உருவாக்கினார். நாடாளு மன்றப் படைத் தலைவர்கள் முழுமனத்துடன் செய லாற்றாது இருப்பதைக் கண்டு, இவர் கி.பி. 1644 -இல் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். அதன் படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் படைத்தளபதி களாக இருக்கக்கூடாது என்று அறிவிக்கப்பட்டது. அதன் விளைவாக இவர்தம் மதிப்பைப் பெற்ற திறமை வாய்ந்த பார்பாக்சு (Fair fox) படைத் தலைவரானார். அவர் மட்டும் இவருடைய உதவி யாளராக இருக்க அனுமதிக்கப்பட்டார். இவ்விரு வரும் கலந்து படை அமைப்பில் ஒரு புரட்சியை உண்டாக்கினர். அதன் விளைவாகப் புதிய மாதிரிப் படை உருவாகியது. நோசுபிப் (Naseby) போரில் அப்படை தன் செயல்திறனை வெளிப்படுத்தியது. உள்நாட்டுப் போரில் மன்னர் தோல்வியுற்றார்.

நாடாளுமன்றத்திற்கும் புதிய மாதிரிப் படைக் கும் இடையே பின்னர்த் தகராறு ஏற்பட்டது. அதன் விளைவாக ஏற்பட்ட இரண்டாம் உள்நாட்டுப் போரில் இவர் புதிய மாதிரிப் படையின் சார்பில் போர் செய்தார். தம்மை எதிர்த்த உறுப்பினர் களை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றினார். எஞ்சி இருந்த உறுப்பினர்கள் இவர்தம் கருத்திற் கேற்ப அரசரை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை அமைத்தனர். அரசர் குற்றவாளியென அக்குழு முடிவு செய்தது. அதனால் அரசர் கொலையுண் டார். பின்னர் இவரே நாட்டின் அரசியல் தலைவ ரானார்.

இவர் ஆட்சி 9 ஆண்டுகள் நடைபெற்றது. முத லில் இவர் எஞ்சிய நாடாளுமன்றத்தின் (Rump Parlia ment) உதவியுடன் ஆட்சி செய்ய முற்பட்டார். பிர புக்கள் சபை ஒழிக்கப்பட்டது. ஆட்சி அதிகாரங்கள் அரசுச் சபையிடம் (Council of State) ஒப்படைக்கப் பட்டன. அதில் 41 உறுப்பினர்கள் இருந்தனர். இவர் அதன் தலைவராக இருந்தார். இவர்தம் ஆட்சியை ஏற்காத இசுகாட்லாந்தையும் அயர்லாந்தையும் வென்று, தம் ஆட்சிக்குட்படுத்தினார். குடியரசு கப்பற் படையொன்றை உருவாக்கி, அதன் உதவி யால் தம் ஆட்சியை ஏற்காத வெர்சீனியாவையும் Virginia) சில மேற்கிந்தியத் தீவுகளையும் வென் றார். இங்கிலாந்துடன் வாணிகப் போட்டியில் ஈடு பட்ட ஆலந்துடன் போர் செய்து, இங்கிலாந்தின் கடலாதிக்கத்தை ஆலந்து ஒப்புக் கொள்ளுமாறு செய்தார்.

இவர் கி.பி. 1653-இல் எஞ்சிய நாடாளுமன்றத் தைக் கலைத்து விட்டுப் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டினார். அதன் உறுப்பினர்கள் அனைவரும் கிராம்வெல்லால் நியமிக்கப்பட்டனர். அவர்கள் யாவரும் தூய்மையாளர் (Puritan) சமயத்தைச் சார்ந்தவர்கள். அந்நாடாளுமன்றம் அதிக நாள் நீடிக்கவில்லை. புதியதொரு அரசியலமைப்புச் சட்டம் கி.பி. 1653-இல் நிறைவேற்றப்பட்டது. ஆட்சி அதி காரங்களைக் காப்பாளரிடம் (Protector) ஒப்படைக்க அது ஏற்பாடு செய்தது. இவர் காப்பாளராகப் பொறுப்பேற்றார். இவருக்கு உதவியாக ஒரு நிரு வாக சபையும் (Council) நாடாளுமன்றமும் அமைக் கப்பட்டன. ஆனால் இராணுவமே இவருடைய ஆட்சியின் அடித்தளமாக இருந்தது. விரைவில் நாடாளுமன்றத்திற்கும் காப்பாளருக்கும் இடையே கருத்து வேறுபாடு தோன்றியது. எனவே, நாடாளு மன்றத்தைக் கலைத்துவிட்டு இராணுவ ஆட்சியை கி.பி. 1655-இல் ஏற்படுத்தினார். நாடு 12 இராணுவ மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றும் ஒரு தலைமைத் தளபதியிடம் (Major General) ஒப்ப டைக்கப்பட்டது. தலைமைத் தளபதி நாட்டு மக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்தப் பல விதிமுறைகள் வகுக் கப் பட்டன. எனவே, நாட்டில் கிளர்ச்சிகள் தோன் றின. ஆகவே, இராணுவ ஆட்சியைக் கைவிட்டு விட்டு கி.பி. 1656-இல் மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட் டினார். அந்த நாடாளுமன்றம் கி.பி. 1657-இல் காப்பாளருக்கு ஒரு முறையீட்டை அளித்தது. இவரை அரசப் பட்டம் ஏற்கும்படியும் அதிகமான அதிகாரங்களைக் கொள்ளும்படியும் அது கூறியது. ஆனால், இவர் அரசப் பட்டம் ஏற்க மறுத்துவிட் டார்; எனினும், தம் அதிகாரங்களைப் பெருக்கிக் கொண்டார்; தம் மகனைத் தமக்குப் பின் ஆட்சி செய்வதற்கான ஏற்பாட்டினைச் செய்தார். இந்த நாடாளுமன்றமும் கி.பி. 1658-இல் கலைக்கப்பட்டது.

இவர் இசுபெயினிடமிருந்து சமைக்காவைக் (Jamaica) கைப்பற்றினார்; பிரான்சுடன் சேர்ந்து தன்கர்க்கை (Dunkirk) வென்றார்.

இவர்தம் மகள் எலிசபெத்து கி.பி. 1658-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் இறந்தார். அதையடுத்து இவர் மலேரியா நோயால் தாக்குண்டு சாவுப் படுக் கையில் கிடந்தார்; செப்டம்பர் மாதம் ஒயிட்காலில்

White Hall) உயிர் நீத்தார். இவர் பிணம்இரகசியமாக வெசுட்டு மினிசுட்டர் மடாலயத்தில் (West Minster Abbey) புதைக்கப்பட்டது. மன்னராட்சி மீண்டும் ஏற்பட்ட பிறகு கி.பி. 1661-இல் அது தோண்டியெடுக்கப்பட்டுக் குற்றவாளிகள் கொலை செய்யப்படும் தைபர்னில் (Tyburn) தூக்கில் மாட்டப்பட்டது. பிறகு தூக்கு மேடையின்கீழ் அவ்வுடல் புதைக்கப்பட்டது. ஆனால் தலை வெசுட்டுமினிசுட்டர் மண்டப உச்சியில் ஒரு கோல் நாட்டப்பட்டு, அதில் குத்தி வைக்கப்பட்டது. பல ஆண்டுகள் அங்கேயே அது இருந்ததாகக் கூறப்படுகிறது.


கிராம்வெல் நாடாளுமன்றத்தின் உதவியால் அதிகாரத்தைப் பெற்றார்; ஆனால் விரைவில் நாடாளுமன்றத்தைப் பயனற்ற ஒரு சபையாகக் கருதினார்; நாட்டிற்குத் தேவை திறமையான நிருவாகம் என்று எண்ணினார். அத்திறமையான நிருவாகத்தை அமைக்க இவர் நாடாளு மன்றத்தின் துணையை நாடுவதற்குப் பதிலாக இராணுவத்தின் உதவியை நாடினார்; முதலாம் சார்லசு மன்னரின் சருவாதிகாரப் போக்கை எதிர்த்தார்; ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு, தாமும் ஒரு சருவாதிகாரி போல நடந்துகொண்டார்; நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி வரி விதித்தார்; எதிர்ப்போரை விசாரணையின்றிச் சிறையிலடைத்தார்; நாடாளுமன்றத்தை அடிக்கடி கலைத்தார். ஆயினும் இங்கிலாந்து, இசுகாட்லாந்து, அயர்லாந்து ஆகிய மூன்று பகுதிகளுக்கும் உரியதாக ஒரே நாடாளுமன்றத்தை முதல்முதலில் அமைத்த பெருமை இவரையேசாரும். இவர் தூய்மை மதத்தைச் சார்ந்தவர்; எனினும், பிறமதத்தவருடனும் சகிப்புத் தன்மையைக் கையாண்டார்; நாட்டு மக்களை நல்வழிப்படுத்தப் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்; எல்லாவற்றிற்கும் மேலாகப் பன்னாட்டு அரங்கில்இங்கிலாந்தின் பெருமையை உயர்த்தினார். இவர் அயல்நாட்டுச் செய்திகளில் தேடிக் கொண்ட நிலையான புகழின் நிழலே, உள்நாட்டுச் செய்திகளில் பெற்ற புகழ் ஆகும். இதிலிருந்து இவர் தம் வெளிநாட்டுக் கொள்கையின் மேன்மையை அறியலாம். தி.ஆர்.இரா.

**கிராம்வெல் இரிச்சர்டு** இங்கிலாந்தில் காப்பாளர் பிரபுவாக (Lord Protector) கி.பி. 1658 செப்டம்பர் முதல் 1659 மே வரை பணிபுரிந்தவர். இவர் ஆலிவர் கிராம்வெல்லின் புதல்வர். இவர் தம் நாட்டைச் சூழ்ந்துள்ள சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றலற்றவராகவும் தம் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளும் தகுதியற்றவராகவும் இருந்தார். இவருக்குச் சிறந்த ஆலோசகர்கள் அமையவில்லை. இவர் காலத்தில் பொதுமக்களுக்கும் படைகளுக்கும் இடையே கலகம் ஏற்பட்டது. இரிச்சர்டு கிராம்வெல் (Richard Cromwell) பொதுமக்கள் ஆதரவினைப் பெற்றுத் தாமும் படைகளை எதிர்ப்பதாகக் காட்டிக் கொண்டார். அதனால் இரிச்சர்டுக்கும் படைகளுக்கும் இடையே பிளவு அதிகரித்தது. எனவே, இரிச்சர்டு பாராளுமன்றத்தை கி.பி. 1659-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நாள் கூட்டினார். பாராளுமன்றம் இரிச்சர்டை ஆதரித்தது. அதுவரை இரிச்சர்டுபடைத் தளபதியாக யாரையும் நியமிக்கவில்லை. எனவே, புதிய பாராளுமன்றம் இரிச்சர்டைப் படைத்தலைவராக்க விருப்பம் தெரிவித்தது. ஆனால், படையினர் பிளிட்வுட்டு (Flit Wood) என்பவரை நிலையான படைத்தலைவராக்க விரும்பினர். அதற்குத் தடையாகப் படையினர் பாராளுமன்றச் செயற்பாடுகளில் தலையிடலாகாதென்று பொதுமக்கள் சபை தீர்மானம் இயற்றியது. இரிச்சர்டு அதற்கிணங்கிப் பிளிட்வுட்டு என்பவரைப் படைத் தலைவராக்கினார். ஆயினும், அவர் இரிச்சர்டுவின் அதிகாரத்திற்குட்பட்டே செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டார். அதனைப் பாராளுமன்றம் வரவேற்றது. அதனால் படையினர் வெகுண்டு, பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு அச்சுறுத்தினர்.

அதன்பின், நீடித்த பாராளுமன்றத்தின் ஒரு பகுதியான எஞ்சிய பாராளுமன்றத்தை கி.பி. 1659–ஆம் ஆண்டு மே மாதத்தில் படையினர் கூட்டினர். 'படை அதிகாரிகள் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது' என்று இயற்றப்பட்ட சட்டங்களை அடியோடு விரும்பாத படையினர், அச்சட்டங்களை விலக்கக் கோரினர். அப்பாராளுமன்றம் கிராம்வெல் இரிச்சர்டின்சட்டங்களையும் நடவடிக்கைகளையும் செல்லாதென்று அறிவித்தது. பொதுமக்கள் சபை ஒன்று மட்டும் போதாதென்றும், மூதறிஞர் சபை ஒன்றும் தேவை என்றும் படையினரும் மற்றவர்களும் வலியுறுத்தினர். படையும் பாராளுமன்றமும் மோதிக்கொள்வதைக் கண்டு வருந்திய, இரிச்சர்டு கி.பி. 1659–ஆம் ஆண்டு மே மாதம் பதவி விலகினார். பதவி விலகியதும் பாரிசு நகரில் சென்று தங்கினார். இங்கிலாந்துக்கு கி.பி. 1680–இல் திரும்பிய இவர், கி.பி. 1712–இல் காலமானார். பெ.சி.

**கிராமதானம்**: வேளாண்மையை அடிப்படைத் தொழிலாகக் கொண்டுள்ள கிராமங்கள் நிறைந்த நாடு இந்தியா. நாட்டின் வருவாயில் ஏறக்குறையப் பாதிப் பங்கு வேளாண்மையின் மூலமே கிடைக்கின்றது. கிராமத்தில் வாழுகின்ற மக்கள் பொருளாதாரத் தேவை, படிப்பின்மை, இன்ன பிற குறைகளிலிருந்தும் சுதந்திரம் பெற்று, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் பொழுதே இந்த நாட்டில்

உண்மையான முன்னேற்றம் ஏற்படும். எனவே தான், காந்திய வழியில் மறுபடியும் ஊரகச் சமூகத்தை உருவாக்க ஆச்சாரிய வினோபாபாவே (Acharya Vinoba Bhave) பூமிதானம் (Bhoodan), கிராமதானம் (Gramdan) போன்ற திட்டங்களைச் செயல் வடிவில் கொண்டு வந்தார்.



வினோபாபாவே

இந்தியாவில் வேற்றுநாட்டினரின் ஆட்சி ஏற்பட்ட பின்னர், ஊரகச் சமூகம் பல இன்னல்களை அடைந்தது மட்டுமல்லாமல், ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமலும் போயிற்று. கிராமங்கள் ஏழ்மையின் இருப்பிடமாகவும் மக்களின் அழிவு மையமாகவும் மாறின. பெரும்பான்மையான மக்கள் வேளாண்மையை நம்பி இருக்கும்பொழுது, வேளாண்மைத் தொழில் பின்னடையத் தொடங்கியது. அவர்களுக்கு முறையான வசதி எதுவும் கிடைக்கவில்லை. நாடு தொழில்மயமாகவும் இயந்திர மயமாகவும் மாறி வருவதால், கிராமத்தவர்களின் வாழ்க்கைத்தரம் மேலும் சீர்கேடடைந்தது. தொழில் மயம் பெருகியதால் குடிசைத் தொழிலும் கிராமத் தொழிலும் அழியத் தொடங்கின. நாளடைவில் நகர மயமாதலும் மிகுதியாகத் தொடங்கியது. மக்கள் நகரத்தில் குவிந்ததோடு, அவர்களது வசதிகளும் நகரத்தில் மிகுதியாயின. ஆனால், கிராம மக்களின் குறைகள் தீர்க்கப்பட வழியில்லாமல் போயிற்று. இச்சூழ்நிலையிலேயே மகாத்மா காந்தி ஊரகச் சமூகத்தின் உண்மைநிலையினை அறிந்து, கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபட முன்வந்தார்.

**காந்தியத்தில் கிராமதான இயக்கம்**: கிராமதானம் என்ற இயக்கம் காந்தியத் தத்துவத்தின் அடிப்படையில் உருவானது. இயந்திரமயமாதலினாலும் தொழில் மயமாதலினாலும் ஊரகச் சமூகத்தினருக்கு ஏற்படும் தீமைகளை மகாத்மா காந்தி கண்டறிந்தார். கிராமத் தொழில்கள் புத்துயிர் அளிக்கப்பட்டு, அவை சிக்கல்களிலிருந்து விடுவிக்கப்படவில்லையெனின் நாடு முன்னேற்றமடையாது என்பதை அவர் உணர்ந்தார்; எனவே, கதர் (Khadi), இராட்டை (Charka), சர்வோதயம் (Sarvodaya) போன்ற கிராம நலன்களுக்கான திட்டங்களைக் கொண்டு வந்தார். கிராமத் தொழிலுக்குப் புத்துயிரளிக்க வேண்டுமென்ற கொள்கையின்படி, சுதேசி இயக்கத்தையும் (Swedeshi Movement) தொடங்கினார்; கிராம, குடிசைத் தொழில்கள் முன்னேற்றமடைய விரும்பியதோடு மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரம், நிருவாகம், தொழிற் சாலைகள் போன்றவை பரவலாக்கப்படுவதையும் (Decentralisation) விரும்பினார். குடிசைத் தொழிலின் மூலம் வேளாண்மையை வளர்ச்சியுறச் செய்யலாம் என்பதை அவர் அறிந்திருந்தார். கிராமங்கள் தன்னிறைவு அல்லது தானாக முன்னேறுவதை அவர் விரும்பினார். கல்வி கற்றவர் ஒவ்வொருவரும் கிராமத்தை விட்டு வெளியேறும் பொழுது, தம் ஒவ்வொரு குழந்தையையும் கிராமம் இழப்பதாக இலாலா அரிதயாள் (Lala Hardayal) என்ற புரட்சியாளர் கூறுகிறார். ஆனால், மகாத்மா காந்தியடிகள் கிராமத்தில் உள்ள அனைவரும் கல்வி கற்க வேண்டும்; கற்ற கல்வியைக் கிராம முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தவேண்டுமெனக் கூறி, அதைச் செயல்வடிவமாக்கவும் முனைந்தார். இந்நோக்கத்தை நிறைவாக்கும் திட்டங்களும் கொள்கைகளுமே கிராமதானம் ஆகும்.

ஊரகம் மாற்றி அமைக்கப்படுவதற்கான திட்டங்களை நிறைவேற்றக் கிராம மக்கள் தங்களைத் தாங்களே பொதுநலனுக்காகக் காந்திய வழியில் தியாகம் செய்து கொள்வதே கிராமதானமாகும். கிராமதானம் என்பது சர்வோதயம் என்பதன் ஒரு பகுதியே. அனைத்துச் சமூக முன்னேற்றம் என்ற தத்துவத்தின்படி, மக்கள் வன்முறையின்மை என்ற சபதம் கொண்டு இரக்கம், அன்பு, கூட்டுறவு போன்ற பண்புகளுடன் பிறமக்களோடு வாழ முயற்சி செய்ய வேண்டும். சர்வோதயத்தைப் பின்பற்றி மக்கள் தங்களுக்குள் உள்ள சண்டை-சச்சரவுகளையும் வழக்குத் தொடுத்தலையும் விட்டு விடவேண்டும். இக்கொள்கைகளுக்காகக் கிராமமக்கள் தங்களைத் தியாகம் செய்ய முடிவு செய்யும்பொழுது கிராமதானம் தானே தோன்றும்.

**வினோபாபாவேயும் கிராமதானமும்**: காந்தியடிகளின் கிராம முன்னேற்றத் திட்டங்களை அவரது வழியில் நனவாக்கப் பூமிதானம் கிராமதானம்

போன்ற திட்டங்களை வினோபாபாவே கொண்டு வந்தார். ஐதராபாத்திலுள்ள (Hyderabad) தெலிங் கானா (Telengana) மாவட்டங்களில் 1951-ஆம் ஆண்டு சுற்றுப்பயணம் செய்யும்பொழுது, நிலமற் றோரும் நிலம் பெறுகின்ற பூமிதானம் என்ற திட்டம் பற்றிய எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. பொதுவுடை மைக்கட்சியாளர்களால் சில நிலவுடைமையாளர் கள் தங்கள் உயிரையும் நிலங்களையும் இழக்க நேரிட்டதை அவர் நேரில் கண்டு வருத்தமுற்றார். எனவே, இந்தப் பொதுவுடைமைத் திட்டத்திற்கு (Communist Programme) மாற்றாக ஒரு பயனளிக்கக் கூடிய திட்டம் கொண்டு வர நினைத்துப் பூமிதான இயக்கத்தைத் தொடங்கினார். அதற்கு நல்ல பலனும் கிடைத்தது. பூமிதான இயக்கத்தின் வளர்ச்சி நிலையே கிராமதானம் ஆகும்.

தனியார் தம் நிலங்களையும் சொத்துகளையும் தாமே முன்வந்து பொதுவுடைமையாக்குவதே கிராம தான இயக்கம். இது 1952-ஆம் ஆண்டு வினோபாபா வேயால் தொடங்கப்பட்டது. இந்த இயக்கம் 1956-ஆம் ஆண்டின் முடிவில் இந்தியாவிலுள்ள 11 மாநிலங் களில் பரவியது. கிராமதானம் செய்யத் தொடங்கிய கிராமத்தவர்கள் 'கிராம சங்கல்பா' (Gram Sankalpa) என்ற சபதத்தை எடுத்துக் கொண்டு, 1) நிலமற்ற வருக்கு நிலமளித்தல், 2) தீண்டாமையையும் சாதிக் கொள்கையையும் ஒழித்தல், 3) குறிப்பிட்ட காலத் திற்குள் கதர், கிராமத் தொழில்களைப் பின்பற்று தல், 4) கிராமங்கள் அடிப்படைக் கல்வியைப் பெறு தல் போன்ற நான்கு உறுதிமொழிகளை ஏற்றுக் கொள்கின்றனர்.

கிராமதானத்தின் மூலம் கிராம மக்கள் சர்வோ தயத்தின் தத்துவத்தைக் கடைப்பிடிக்கவும் காந்திய வழியில் ஊரகச் சமூகம் அனைத்து முன்னேற்ற மடையவும் பாவே விரும்பினார்; கிராம மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினர் போல அன்புடன் சேர்ந்து வாழ எண்ணினார். அனைத்து நிலங்களும் சொத்துகளும் சமூகத்திற்கே சொந்தம், தாங்கள் அவற்றுக்கு வெறும் பொறுப்பாளிகளே என்று மக் கள் உணரவேண்டுமெனக் கருதினார். எனவே, தமக் குத் தேவையான நிலம் போக, மீதி உள்ளவற்றை நிலமற்றவர்களுக்குக் கொடுக்கும்படி பெருநிலக் கிழார்களை வேண்டினார். கிராமதானம் என்பது தன் கிராமத்தையே தானம் செய்வது என்று பொருள்படாது.

**கிராமாதனத்தின் செயல்கள்:** கிராமதானம் கடைப்பிடிக்கப்பட்டால் அந்தக் கிராம சமூகமே மாறுதல் அடையும். முதலாவதாக, தனியாருக்குச் சொந்தமான நில உரிமைகள் ஒழியும். அந்தக் கிரா மத்தின் நிலங்கள் முழுவதும் சமூகத்தைச் சார்ந்த தாகி விடும். உழவர்கள் வெறும் பொறுப்பாளி களாக மட்டும் இருப்பர். அவர்கள் தங்களால் இயன்ற அளவு விளைச்சல் செய்து, தங்களுக்குத் தேவையானவற்றை மட்டும் வைத்துக் கொள்ளவேண் டும். தேவைக்கு அதிகமானவற்றைப் பகிர்ந்தளிக்க வேண்டும். கிராமங்களில் மக்கள் ஒற்றுமையாகக் கூட்டுறவுடன் வேலை செய்ய வேண்டும். இது ஓர் உயர்ந்த கூட்டுறவுப் பயிரிடுதல் முறை ஆகும். இவ் வாறு கூட்டுறவு முறையில் உற்பத்தியும் கிராம வளர்ச்சியும் ஏற்படுகிறது.

இரண்டாவதாக, கிராமதானம் செயற்படுத்தப் பட்ட பின்னர், கிராம மக்களுக்குச் சமூகமே பொறுப் பேற்கின்றது. சமூகம் பிற சுரண்டல்காரர்களிட மிருந்து அவர்களைக் காக்கின்றது. கூட்டுறவுச் சமூகத்தின் மூலமே இந்த நிலையினை அடைய முடி யும். கூட்டுறவுச் சமூகமும் கடைகளும் மக்களுக்குச் சரியான விலையில் அனைத்துப் பொருள்களையும் கிடைக்கும்படி செய்கிறது. கிராமதானத்திற்குப் பின்னர்க் கிராமத்தாரின் அனைத்து வாழ்க்கையும் கூட்டுறவு வழியிலேயே செல்லும்.

மூன்றாவதாக, கிராமதானத்திற்குப் பின்னர்ப் பல குடிசைத்தொழில்களும் சிறு தொழிற்சாலை களும் கிராமங்களில் ஏற்படுத்தப்படும். கிராமங்கள் தற்சார்புள்ளதாக இருக்க வேண்டுமென்ற எண்ணத் தில் இவை ஏற்படுத்தப்படும். கிராமதானம் என்பது கிராமத்தை நாட்டில் ஒரு தற்சார்புள்ள பொருளா தாரப் பிரிவாக மாற்றுவதாகும். மேலும், கிராமத் தவர் தம் கிராமத்தில் உற்பத்தியாகும் பொருளை மட்டுமே வாங்கவேண்டுமென்ற உறுதி மொழியை இது ஏற்கச் செய்கிறது.

நான்காவதாக, சமுதாயக் கல்வி கிராமங் களில் விரிவாக்கப்படுகின்றது. சாதாரணக் கல்வி முறை மாற்றப்பட்டுச் சமூகக் கல்வியும் பிற பய னுள்ள முறையினாலான கல்வியும் கற்பிக்கப்படு கின்றன.

ஐந்தாவதாக, கிராமதானத்தால் மக்களாட்சி வாழ்க்கை முறை கிராமங்களில் மலருகின்றது. அத னால் மக்கள் தங்களுக்குள் தவறான எண்ணம் கொள்ளாது, ஒற்றுமையாக வாழ்க்கை நடத்துவர். கிராமத்தில் எந்த முடிவும் மக்களாட்சி முறையில் எடுக்கப்படும். கிராம சமூகத்தின் முன்னேற்றத் திட் டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

**கிராமதான இயக்கத்தின் நன்மைகளும் குறை களும்:** அதிக நிலங்கள் மற்றும் சொத்துகளை வைத்

துள்ள செல்வர்களின் மனத்தினை நீதியைப் புகட்டுவதன் மூலம் மாற்றி, ஒரு சமத்துவச் சமூகத்தைக் கொண்டு வருதல் என்பது இயலாததாகும். எடுத்துக்காட்டாக, இயேசு, புத்தர், காந்தி போன்றவர்கள் நீதிநெறியின் மூலம் ஏழ்மை, பொளாதார ஏற்றத்தாழ்வு போன்றவற்றைக் குறைப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்விகளைத் தழுவியுள்ளன என்பதே வரலாற்றின் கூற்று. குறைந்த, பொருளாதார வசதியின்மை போன்ற குறையினால் கூட்டுறவுமுறையில் நிலத்தில் பயிரிடக்கூடிய வாய்ப்பு இல்லாமற் போய்விட்டது. கிராமதானம் செய்யப்பட்ட பெரும்பாலான கிராமங்களின் நிலங்கள் திரும்பவும் அவர்களுக்கே திருப்பி அளிக்கப்பட்டுள்ளன. கிராம சமூகத்தினரே நில உடைமையாளர்களாக இருப்பதால் அதிக அளவில் நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே, இதில் அதிக பலன்கள் கிடைப்பதில்லை. பெரும்பாலும் தாழ்ந்த வகுப்பினருக்குச் சொந்தமான கிராமங்களே கிராமதானம் செய்யப்பட்டதாக இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் பழங்குடியினரே அதிகம் வாழ்கின்றனர். பழங்குடியினர் பொதுவாக இடம் விட்டு இடம் சென்று பயிரிடும் தொழிலைச் செய்வதால், அவர்களுக்கு அதிக நிலங்கள் சொந்தமாக இருப்பதில்லை. அதிக நிலங்கள் வைத்திருக்கும் செல்வர்களை இந்தத் திட்டம் போய் அடைவதில்லை. இவை எல்லாம் இத்திட்டத்தின் குறைகளாகக் கூறப்படுகின்றன.

கிராமதான இயக்கத்தினால் பொருளாதாரம் முன்னேற்றமடையும். தனியார் நிலஉரிமைகளும் சொத்துகளும் பொதுவுடைமையாகும். கூட்டுறவின் மூலம் வேளாண்மை வளர்ச்சியுற வாய்ப்புள்ளது. கடன், சுரண்டல்கள் போன்ற சிக்கல்களிலிருந்து ஏழைகள் விடுதலை பெற வாய்ப்புள்ளது. குடிசைத் தொழிலும் கிராமத்தொழிலும் முன்னேறும். அன்றாடத் தேவைகளைக் கூட்டுறவுக் கடைகளிலும் சமூகத்திலும் சரியான விலையிற் பெறலாம். கிராமதானத்தால் சமூகத்திலும் உயர்ந்த ஒழுக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனைத்தும் பொதுச் சொத்துகளாக இருப்பதால் கொலை, கொள்ளை, திருட்டுப் போன்ற குற்றங்கள் குறையும். குவிந்து கிடக்கும் உரிமையும் அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்படும். ஏழைகளுக்கு அதிகார வருக்கத்திலிருந்து விடுதலை கிடைக்கும். எனவே, மக்களாட்சி மலர்வதற்கும் சமூகத்தில் மக்கள் முன்னேறுவதற்கும் அனைத்து வசதிகளும் கிடைக்கும். இதனால் தீண்டாமைக்கும் கிராமத்தில் அதிகம் பரவியிருக்கும் சாதி முறைக்கும் ஒரு முடிவு ஏற்படலாம். அனைவரும் சமம் என்ற கொள்கையால் சமூகச் சிக்கல்கள் குறைய வாய்ப்பிருக்கிறது. பூ.த.

**கிராம தேவதைகள்** கிராமத்தின் பாது காவல் தெய்வங்கள். பயிர்களையும் கால்நடைகளையும் காக்கவும், மக்களை நோய்களில் இருந்து மீட்கவும் இத் தெய்வங்களை மக்கள் வழிபடுகின்றனர். இத் தேவதைகள் கிராமங்களில் பேய், பிசாசுகள் நுழையாதபடி கிராம எல்லைகளில் இருந்து காத்து வருவதாக மக்கள் நம்புகின்றனர். மாரியம்மன், பிடாரி, கங்கையம்மன், ஐயனார், காத்தவராயன், சங்கிலிக் கருப்பன் போன்ற பல தெய்வங்கள் கிராம தேவதைகள்.



ஐயனார்

மிகப் பழங்காலந் தொட்டுக் கிராம தெய்வங்களை மக்கள் வணங்கி வந்துள்ளனர். தமிழகத்தில் கிராம தேவதைகளுக்கு ஊருக்கு வெளியில் கோயில்கள் எடுக்கப்படும். கருங்கல், செங்கல் ஆகியவற்றின் உதவியால் நான்கு பக்கங்களிலும் சுவர் எடுத்து அதில் கிராம தேவதையின் உருவத்தைச் சுடுமண்ணால் செய்துவைத்தனர். அதன் கருவறை வட்டமாகவும் சதுரமாகவும் அமைக்கப்பட்டிருக்கும்; கூரை கூம்பு அமைப்புடையது; பனை ஓலை, புல் போன்றவைகளைக் கொண்டு வேயப்பட்டது. இந்த அமைப்பே பிற்காலத்தில் கோயில்கள் எழுப்ப முன்னோடியாக இருந்ததென்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இக்கோயிலுக்கு முன் காவல்காரன், ஐயனார் உருவங்கள் ஆகியவற்றைச் சுதையால்

செய்துவைத்தனர். நேர்த்திக் கடனாக மண் குதிரைகளைச் சிறியஅளவில் செய்து கோயிலின் முன் வைத்தனர். இவை இரவில் உயிர்பெற்றுக் காவல்காரர்களுக்கு வாகனமாகப் பயன்பட்டதாக நம்பினர். கிராம தேவதைகளை அரசமரங்களின் அடியிலும் வைத்து வழிபட்டனர்.

கிராமதேவதைகளுக்கு ஒரு நாள் முதல் ஏழு நாள்கள் வரை விழா எடுத்தனர். இத்தகைய விழா நாள்களில் ஆடு, கோழி, எருமை, பன்றி முதலியவற்றைப் பலியிடுவது வழக்கமாக இருந்தது. இன்றும் பல இடங்களில் இத்தகைய பலி கொடுப்பதைக் காணலாம். இக்காலத்தில் கோயில்களில் பலியிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. இத்தெய்வங்களுக்கு மனிதனைப் பலியிடும் வழக்கமும் முன்பு இருந்தது. திருவிழாக்களில் கரகம் எடுத்தல், உடுக்கையடித்தல், பறையறைதல், பாட்டுப் பாடுதல், தெருக்கூத்து போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

கிராமதேவதைகளை ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான பெயரிட்டு அழைக்கின்றனர். எல்லா இடங்களிலும் பரவலாகக் காணப்படுகின்ற பெயர்கள் சில. அவை மாரியம்மன், எல்லையம்மன், கன்னியம்மன், ஊரம்மன், காளியம்மன், ஏழுகன்னிகள், கங்கையம்மன், ஐயனார், முனியாண்டி, நாட்டன்கல், கூத்தாண்டவர் போன்றவை ஆகும். பெண் தெய்வங்களின் உருவ அமைதியில் அதிக வேறுபாடுகள் காண்பது அரிது. மாரியம்மன் கோபத்தினால் வருவது அம்மை போன்ற நோய்கள். இதற்குப் பொங்கலிட்டுச் சாந்தப்படுத்தினால் நோய் தீரும் என்று நம்பினர். முத்துமாரியம்மன், பெரியமாரியம்மன். கந்தல்மாரியம்மன் என்று பல பெயர்களில் மாரியம்மன் வணங்கப்படுகிறது. கிராமத்தின் எல்லையில் இருந்து காவல் செய்யும் அம்மன் எல்லையம்மன் என்று கூறப்படுகிறது. ஏழுகன்னியர்கள் என்ற தெய்வங்களைக் குறிக்க ஏழு கற்களை அல்லது செங்கற்களை வைத்து வணங்குவர். ஏழு மாதர்கள் என்றும் வணங்கினர். காளியம்மன் கிராமத்தில் கொடிய நோய் வாராமல் பாதுகாத்து வருகின்றது என்பது நம்பிக்கை.

திருச்சி, தஞ்சைப் பகுதிகளில் பிடாரி என்று இதை அழைக்கின்றனர். இதற்கு நான்கு கைகள் முதல் எட்டுக் கைகள் வரை உள்ளன. அங்காளம்மன் என்னும் தெய்வம் கோவை, சேலம், தருமபுரிப் பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றது. இத்தெய்வம் அமர்ந்த நிலையிலும் படுத்த நிலையிலும் காணப்படுகிறது. இத்தெய்வத்தின் திருவிழா நாள்களில் சூலம், கத்தி, ஊசி போன்றவைகளை வாய், உடல் முதலிய பாகங்களில் குத்திக் கொண்டு பக்தர்கள் செல்வர். இது நேர்த்திக்கடனாகச் செய்யப்படுகின்றது. இத்தெய்வத்திற்கு உயிர்ப்பலி இன்றி யமையாத ஒன்றாகும். இதனுடன் திரௌபதியம்மன், சென்னம்மாள், அண்ணன்மார் ஆகியவைகளும் இப்பகுதிகளில் வழிபாட்டில் உள்ளன.

கேரளத்தில் உள்ள பகவதி வழிபாடும் கிராம தேவதை வழிபாடேயாகும். பகவதி என்ற பெண் தெய்வம் ஒரு தாய்த்தெய்வமாகும். வடமலையாளம், கொடுங்களூர் ஆகிய இடங்களில் இத்தெய்வம் சிறப்பாக வழிபடப்படுகிறது. பகவதியின் உருவமாகச் செக்கிப்பூ என்ற ஒருவகைச் சிவப்புப் பூவினால் ஆன மாலையைக் கொண்ட கொடுவாளை வைத்து வழிபடுகின்றனர். இதற்கு விழாக் காலங்களில் ஆடுகளைப் பலியிடுகின்றனர். இரவில் இது நடைபெறுகின்றது. ஆட்டுக்குருதியும் சோறும் சேர்த்துப் பகவதிக்கு இடுவர்.

ஐயனார் சங்க காலம் தொட்டே காணப்படுகின்ற தெய்வமாகும். ஐயனாரைப் பாசண்ட சாத்தன், புறம்பணையான், காரி என்று இலக்கியங்கள் குறிக்கின்றன. குடகு நாட்டில் வாழும் கொடவர்களுக்கு ஐயனார் வேட்டைத் தெய்வமாக இருப்பதைக் காணலாம். இரவு நேரங்களில் கொடிய வேட்டை நாய்களுடன் இவர் காடுகளில் உலவுவதாக நம்புகின்றனர். வேட்டை தொடங்குமுன் ஐயனாருக்குப் பூசை செய்கின்றனர். எனவே, ஐயனார் முதலில் வேட்டைத் தெய்வமாக விளங்கினார். குதிரை வாகனமுடைய ஐயனாரைப் பௌத்தர்களும், யானை வாகனமுடைய ஐயனாரைச் சமணர்களும் வணங்கினர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சூரம்பேட்டை ஐயனாரே கிடைத்துள்ள ஐயனார் சிற்பங்களில் காலத்தால் முற்பட்டது. ஐயனார் அர்த்தபரியங்காசனத்தில் அமர்ந்து இரண்டு கைகளுள் ஒன்றில் பூச்செண்டு வைத்திருப்பார். இரண்டு பக்கங்களிலும் இரண்டு நாய்கள் காணப்படும். பிற்காலத்தில் ஐயனாருக்குத் தனிக்கோயில்கள் எடுக்கப்பட்டன.

பாண்டிய நாட்டில் வழிபாட்டில் உள்ள கிராம தேவதைகளில் மீனாட்சி, மதுரைவீரன், கூத்தாண்டவர், கருப்பசாமி போன்றவைகள் குறிப்பிடத்தக்கவை. மீனவர்கள் வணங்கும் தெய்வம் மீனாட்சி. கோயிலின்முன் கல்லாகவோ, மனித உருவிலோ மதுரை வீரனை வழிபட்டனர். கருப்பசாமியின் தலையில் உருமாலையும், முறுக்கிய மீசையும்,



மதுரைவீரன்

ஓங்கிய கையில் வீச்சரிவாளும், தொங்கவிட்ட கையில் கதையும் காணப்படுகின்றன. இதனைப் பதினெட்டாம் படி கருப்பசாமி என்றும் அழைக்கின்றனர். இத்தெய்வம் கேரளாவில் இருந்து வந்த மந்திர வாதியைக் கொன்றதாகக் கூறப்படுகின்றது.

நாக வழிபாடு பழங்காலத்தில் இருந்தே காணப் படுகின்றது. நாகத்தின் உருவத்தைக் கல்லில் செய்து ஆற்றங்கரை, அரசமரம் போன்ற இடங்களில் வைத்து வழிபடுகின்றனர். இதற்குப் பஞ்சால் செய்யப்பட்ட மாலையை அணிவிப்பது வழக்கம். புற்றில் பால் ஊற்றி வழிபடும் முறையும் உள்ளது. கிராம தேவதைக்கோயில்களில் சத்திரியர்களே பூசாரிகளாக உள்ளனர்.

தமிழகத்தில் ஆரியக் கடவுள்களான சிவன், திருமால் ஆகியவற்றின் வருகையால், கிராம தேவதைகள் துணைக்கடவுளாக மாறின என்பர். ஆனால், இவற்றின் வழிபாட்டில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆக்கல், காத்தல் ஆகியவை ஆரியக் கடவுள்களின் தொழில். ஆனால், கிராமதேவதையின் நோக்கம் கிராமத்தையும் கால்நடைகளையும் காப்பதேயாகும். இறந்தவர்களை வழிபடுதலும் கிராம தேவதை வழிபாட்டோடு தொடர்புடையதாகும். மரணமடைந்த கன்னிப் பெண்கள், கொலையுண்டவர் போன்றோருக்கும் கோயில் எழுப்பி வழிபடுகின்றனர். திராவிடர் பெண்மையை வழிபடுவதைக் காணலாம். தி.சு.

**துணை நூல்கள்:**

**இராமகிருஷ்ணன், எஸ்.,** சமய வாழ்வில் வடக்கும் தெற்கும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-1979.

**கைலாசபதி, க.,** பண்டைத் தமிழர் வாழ்வும் வழி பாடும், மக்கள் வெளியீடு, சென்னை-1978.

**சாமி, பி.எல்.,** தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை-1986.

**Balasubrahmanyan,S.R.,** Early Chola Temple-Part I, Asia Publishing House, Madras, 1966.

**Debiprasad Chattopadhyaya,** Lokayata, People's Publiing House, New Delhi, 1981.

**Henry White Head,** The Village Gods of South India, Sumit Publications, Delhi, 1976.

**கிரான்மர், தாமசு (கி.பி. 1489-1556)** இங்கிலாந்தில் காண்டர்பரியின் முதல் அதிமேற்றிராணியாக இருந்தார். இவர் நாட்டிங்காம்சயரில் (Nottinghamshire) உள்ள அசலக்டன் என்னுமிடத்தில் கி.பி. 1489-இல் பிறந்தார். இளமைக் கல்வி முடித்தபின் கி.பி. 1503-இல் கேம்பிரிட்சுப் (Cambridge) பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். பின்னர்ப் பக்கிங்காம் கல்லூரியில் பணியாற்றினார். அவ்வமயம் திருமணமாகி ஓர் ஆண்டே நிரம்பப் பெற்றிருந்த தம் மனைவி சோனை (Jone) இழந்தார். பின்னர்க் கிரான்மர் (Thomas Cranmer) ஏசு கல்லூரியில் பணியில் சேர்ந்தார். இறையியல் தத்துவங்களில் உலூதரின் கொள்கை அடிப்படையில் புதிய கொள்கைகளை உருவாக்கினார். போப்பாண்டவர்களின் வேண்டாத கருத்துகளுக்கு முடிவு கட்டுதல் இவர்தம் நோக்கமாயிருந்தது. இவர் கி.பி.1556-இல் காலமானார். மா.கா.

**கிரி, வி.வி. (கி.பி. 1894-1980)** இந்தியாவின் நான்காம் குடியரசுத் தலைவர்; தொழிலாளர் நலனுக்குப் பாடுபட்டவர். இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவராகவும், மாநில ஆளுநராகவும் குடியரசுத் தலைவராகவும் பணிபுரிந்தவர். 'பாரத இரத்தினா' விருது பெற்றவர். இவரது முழுப் பெயர் வராககிரி வேங்கடகிரி என்பதாகும்.

இவர் கி.பி. 1894-இல் பெர்காம்பூரில் பிறந்தார்; சட்டப்படிப்புப் (Bar at law) படித்தார்; தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றினார். இவர்



வி.வி. கிரி

அனைத்திந்திய இயில்வே ஊழியர்கள் மன்றத்தின் தலைவராகவும், பொதுச் செயலராகவும் பல கால கட்டங்களில் இருந்தார்; இருமுறை அனைத்திந்தியத் தொழிற்சங்கத்தின் (A.I.T.U.C.) தலைவராகப் பணிபுரிந்தார். செனீவாவில் 1927-இல் நடைபெற்ற பன்னாட்டுத் தொழிலாளர் மாநாட்டில் இந்தியத் தொழிலாளர்களின் பேராளராகக் கலந்து கொண்டார். இலண்டனில் 1931-இல் நடைபெற்ற இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் தொழிலாளர்களின் பேராளராகக் கலந்து கொண்டார். மத்திய சட்டசபையின் அங்கத்தினராகவும் (1934-37), பிரிக்கப்படாத சென்னை மாநில அரசாங்கத்தில் கூட்டுறவு, தொழில், தொழிலாளர் அமைச்சராகவும் (1939,1946-47) பணிபுரிந்தார். இலங்கையில் 1947-51-ஆம் ஆண்டுகளில் மேல்நிலை ஆணையாளராகவும் (High-commissioner) மத்திய அரசில் தொழிலாளர் அமைச்சராகவும், (1952-54) பணியாற்றினார். இவர் 1958-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியச் சமூகப் பணியாளர் மாநாட்டின் தலைவராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஆளுநராக 1959-1960-ஆம் ஆண்டுகளிலும், கேரள மாநில ஆளுநராக 1960-65 ஆண்டுகளிலும், கருநாடக மாநில ஆளுநராக 1965-67-ஆண்டுகளிலும் இந்தியக்குடியரசுத் துணைத் தலைவராக 1967 முதல் 1969 வரையிலும் கிரி பதவி வகித்தார். இவர் இந்தியத் தொழிலாளர் பொருளியல் மன்றத்தின் (Indian Society of Labour Economics) நிறுவனத் தலைவராகவும் (Founder President) விளங்கினார்.

இவர் 1969 மே மாதம் முதல் சூலை மாதம் வரை இந்தியக் குடியரசுத் தலைவராக இடைக்காலப் பதவி வகித்தார். பின்னர் இவர் இந்தியக் குடியரசுத் தலைவராக 1969 முதல் 1974 வரை பதவி வகித்தார். இவர் 1980-ஆம் ஆண்டு தமது 85-ஆம் வயதில் சென்னையில் காலமானார். ம.இ.

*கிரிகரி (ஏழாம்)* (கி.பி. 1021-1085) இவர் தம் இயற்பெயர் இல்டே பிராண்டு (Hildebrand) என்பதாகும். இவர் கி.பி. 1021-ஆம் ஆண்டு இத்தாலியின் வட பகுதியில் உள்ள தசுகனியில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். பின்னர் உரோம் நகரில் இருந்த சண்ட மரியா (Santa Maria) மடாலயத்தில் கல்வி கற்றார். அங்கு இவர் கிறித்தவ மதக் கொள்கைகளை அறிந்தார். பின்னர்ப் பெனிடிக்டைன் (St. Benedictine) கிறித்தவ மதத் துறவியின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டுப் பல மத குருமாரிடம் பயிற்சி பெற்றார்.

இவர் முதலில் சான் கிரேசியன் (John Gratian) என்பாரின் செயலராக நியமிக்கப்பட்டார். பின்னர்ப் போப்பு ஒன்பதாம் இலியோ இவரை இரண்டாம் குருவாக (Cardinal) அமர்த்தினார். ஒன்பதாம் இலியோவும் இல்டே பிராண்டும் கி.பி. 1054-இல் கிறித்தவ மாநாட்டிற்குப் பிரான்சு சென்றனர். அங்கு ஒன்பதாம் இலியோ இறந்தார். எல்லா இரண்டாம் குருமார்களும் மத குருமார்களும் இவரைப் போப்பாகப் பதவி ஏற்கும்படி வற்புறுத்தினர். ஆனால், இவர் மறுத்துவிட்டுத் தொடர்ந்து இரண்டாம் குருவாகவே திருச்சபைக்குப் பணி புரிந்தார். இரண்டாம் அலெக்சாந்தர் கி.பி. 1073-இல் இறந்த போது மக்களின் அவாவை நிறைவேற்றும் வகையில் இவர் போப்பாகப் பதவி ஏற்றார்.

போப்பாகப் பதவி ஏற்றவுடன் இவர் தம் பெயரை ஏழாம் கிரிகரி என மாற்றிக் கொண்டார். திருச்சபையிலும் மத குருமார்களிடமும் இருந்த குறைகளை நீக்க முயன்றார். கிறித்தவக்குருமார்கள் கட்டாயம் திருமணம் செய்து கொள்ளக் கூடாது எனவும், தங்களைக் கிறித்தவ மதத்தைப் பரப்பும் தொண்டர்களாகவே கருத வேண்டும் எனவும் கி.பி. 1074-இல் ஆணையிட்டார். மத குருமார்கள் அரசர்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர் என்றும், ஆண்டவனின் தெய்விகச் சின்னம் திருச்சபையே;அரசர்களுக்குக் கிறித்தவ மத குருமார்களை நியமிக்கும் உரிமையும் அவர்களுக்குக் கணையாழியையும் புனிதச் செங்கோலையும் கொடுத்துப் பதவி ஏற்பு நிகழ்ச்சியை நடத்தும் உரிமையும் இல்லை என்றும் கி.பி. 1075-இல் ஆணை வெளியிட்டார். இவ்வாணையை மதித்து நடக்காதவர் யாவரும் மத விலக்குச் செய்யப்படுவர் எனவும் அறிவித்தார்.

கிரிகரி (Gregory) எவ்வித இன்னல் வந்தாலும் தாம் மேற் கொண்ட செயலை நிறைவேற்றும் ஊக்கம் உடையவர்; தந்திரமிக்கவர்; எந்நிலை கண்டும் அஞ்சாதவர்; அசைக்க முடியாத உறுதியும், பிறரால் வெல்ல முடியாத அறிவும், ஆற்றலும் உள்ள சிந்தனையாளர். இவர் வாழ்ந்த கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா முதலாளித்துவம் நிறைந்ததாய் இருந்தது. ஆனால், இவர் பொது உடைமைக் கொள்கையைப் பரப்பினார். மடாலயங்களுக்குரிய உடைமைகள், பண்ணைகள், அரண்மனைகள், கால் நடைகள் யாவும் போப்பாண்டவருடைய ஆட்சிக்கு உட்பட்டவை. அவர்தம் நாடுகள் எல்லாம் பிற மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த போதிலும் போப்பாண்டவரின் இராச்சியமே உயர்வானது. ஏனெனில், இது ஆன்மிக உணர்வினை ஊட்டி வளர்க்கக் கூடியது எனக் கூறினார். இவர் எந்தச் செயலையும் சிந்தித்துப் படிப்படியாக நடவடிக்கை எடுப்பார். முடி ஆட்சிக்கு எதிராக எடுக்கப்பட்ட இவர் தம் கொள்கைகள் இவருக்குப்பின் இரண்டு நூற்றாண்டுகள் புகழ் பெற்று விளங்கின.

கிரிகரியின் ஆணைகளைச் செருமனி மன்னர் நான்காம் என்றி (Henry IV) மதித்து நடக்கவில்லை. எனவே, இவர் என்றி தொடர்ந்து இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் 'மத விலக்கு'ச் செய்யப் படுவார் என அறிவித்தார். என்றி, ஓம்சு நகரில் தம் ஆதரவாளர்களைக் கூட்டினார். இதற்கு எதிராகச் செருமானிய பிரபுக்கள் ஆக்சுபர்க்கில் மாநாடு கூட்டிப் போப்பு ஏழாம் கிரிகரியை அழைத்தனர். இத்தாலியில் போப்புக்கு ஆதரவு இருந்தது. செருமனியில் அரசர்க்கு எதிர்ப்பு இருந்தது. எனவே, என்றி இனிமேல் போப்பிடம் சரண்அடைவதே சரியானவழி எனக் கருதி, கனோசாவில் (Canossa) தங்கியிருந்த போப்பைச் சந்திக்க விரைந்தார். ஆனால், பல முறை முயன்றும் முடியவில்லை. இறுதியில் அப்பகுதியின் சீமாட்டி மாடில்டா (Countess Matilda) தலையிட்டு, மன்னரை மன்னிக்க வேண்டினார். இறுதியாகக் கிரிகரி என்றியை மன்னித்தார். இந்நிகழ்ச்சி ஐரோப்பிய வரலாற்றில் குறிப்பாக திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் மிக முக்கியமானதாக விளங்குகிறது.

என்றி மன்னிக்கப்பட்டாலும், பிரபுக்கள் வேறொரு மன்னரைத் தேர்ந்தெடுத்துக் கலகம் செய்தனர். என்றி அவர்களை அடக்கினார். உரோம் மீது படை எடுத்துக் கிரிகரியைத் தோற்கடித்துப் பதவி நீக்கம் செய்தார். கிரிகரி கைது செய்யப்பட்டுச் சாலர்னோவுக்கு (Salerno) அனுப்பப்பட்டார். அங்கு கி.பி. 1085-இல் காலமானார். பெ.சி.

காண்க: கிறித்தவத் திருச்சபை.

**கிரிகரி ஆண்டுக் குறிப்பேடு**: இது ஆண்டு விவரக் குறிப்பாகும். ஆண்டுகள் கணக்கிடப் படும் முறை, ஓர் ஆண்டில் இருக்க வேண்டிய நாள்களின் எண்ணிக்கை ஆகியனபற்றி வரலாற்றில் பல முயற்சிகள் காணக்கிடக்கின்றன. மேனாடுகளைப் பொறுத்தவரை உரோமானியர் இது பற்றி நிறைவேற்றிய சீர்திருத்தங்கள் மிகவும் சிறப்பானவை. உரோமப் பேரரசர் சூலியசு சீசர், கிரேக்க வான நூல் அறிஞரின் உதவியுடன் ஆண்டுக் கணிப்பு முறையில் ஒரு சீர்திருத்தத்தை கி.மு. 46-இல் கொணர்ந்தார். அவ்வாறு தொடங்கிய ஆண்டுக் குறிப்பேடு சூலியன் ஆண்டு விவரக் குறிப்பு எனப் பெயர் பெற்றது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் போப்பாக அமர்ந்திருந்த பதின்மூன்றாம் கிரிகரி சூலியன் ஆண்டுக் குறிப்பினாலேற்பட்ட சில குழப்பங்களைத் தவிர்ப்பதற்காக, கி.பி. 1582-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் காலக்கணிப்பு முறையில் ஒரு சீர்திருத்தத்தைப் புகுத்தினார். அவர் ஆணையின்படி புதிய ஆண்டுக் கணக்கு முறை உருவாகியது. அது, கிரிகரி காலக் கணிப்பு முறை (Gregorian Calendar) என்று பெயர் பெற்றுள்ளது. அதன்படி, சரா்சரி ஒரு ஆண்டுக்கு 365.2425 நாள்கள் எனத் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது. உரோமில் அவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட அதேநேரத்தில் இசுபெயினும் (Spain) பேர்ர்ச்சுகலும் அதை ஏற்றுக் கொண்டன. அவ்வாண்டு திசம்பரில் பிரான்சும் நெதர்லாந்தும் அதை ஏற்றுக் கொண்டன. செருமனியின் கத்தோலிக்க நாடுகள் கி.பி. 1584-இல் ஏற்றுக் கொண்டன. கி.பி. 1586-இல் போலந்தும், கி.பி. 1700-ஆம் ஆண்டில் செருமனியின் சீர்திருத்தக் கிறித்தவ நாடுகளும், சுவிட்சர்லாந்தும் ஏற்றன. இங்கிலாந்தும் அதன் குடியேற்ற நாடுகளும் சுவீடனும் கி.பி. 1752-ஆம் ஆண்டில்தான் அதைப் பின் பற்றத் தொடங்கின. பழைமையை மாற்ற விரும்பாத வேறு சில நாடுகள் 20-ஆம் நூற்றாண்டுவரை பழைய சூலியன் காலக் கணிப்பு முறையையே பின்பற்றின. காண்க சூலியன் ஆண்டுக் கணிப்பு முறை. தெ.பா.

**கிரிசிப்பசு**: இவர் கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர். இவரது வரலாறு பற்றி வேறு எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. இவர்தம் கருத்துகளின் சுருக்கம் பின்வருமாறு: மனிதர் தம் பகுத்தறிவுக்கும் இயல்புக்கும் ஏற்ப வாழ்வை

அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இயற்கையில் காணப்படும் அமைப்புகளெல்லாம் காரண காரிய அடிப்படையில் அமைந்ததாகவும், நன்மை தருபவை யாகவும் இருக்கின்றன. ஆகையால் அறிவுள்ளவர் இயற்கையின் வழியைப் பின்பற்றி, நடைமுறைச் செயல்களுக்கேற்பத் தம் விருப்பங்களையும், நோக்கங்களையும் உருவாக்குகிறார். இதனை உணர்ந்து கொண்டால் வாழ்க்கையின் இடர்ப்பாடுகளைக் கண்டு எவரும் மனக்கவலை கொள்ள மாட்டார். மாறாக, அவர் தன்னிறைவு உடையவராக இருப்பார். ஆகையால், இந்த மனநிலையில் விருப்பம், துன்பம் முதலியவற்றினின்றும் யாவரும் விடுபட்டும், தெய்விகக் குறிக்கோளுக்கேற்பச் செயல்களைச் செய்தும் வந்தால், துன்பம் நீங்கி, இன்பம் கிடைக்கும். நல்லொழுக்கப் பண்புதான் வாழ்வின் இன்பத்துக்கு ஏற்ற நெறி ஆகும். இதை வளர்ப்பதுதான் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். நல்லொழுக்கப் பண்பைத் தவிர, உடைமை, திருமணம், குடும்ப வாழ்க்கை, குடி உரிமை, கல்விப் பயிற்சி, நற்பெயர் முதலியவையெல்லாம் தம்மிலே நல்லனவுமல்ல, தீயனவுமல்ல; யாவரும் சமத்துவம் உடையவர்; கிரேக்கருக்கும் கிரேக்கரல்லாதவருக்கும், சுதந்திரக் குடிமக்களுக்கும் அடிமைகளுக்கும் இடையே எந்த விதமான வேறுபாடும் இல்லை; யாவரும் சமத்துவம் உடையவரே. கிரிசிப்பசு உருவாக்கிய 'சட்டங்கள்' (On the Laws) என்ற நூலில் பின்வரும் கோட்பாடுகள் காணப்படுகின்றன:

1. **தன்னிறைவு**: மனிதர் தன்னிறைவு (Self - Sufficiency) என்ற இயல்பைப் பெறுதல்வேண்டுமானால், மன உறுதி வளர்வதற்குரிய பயிற்சியைச் செய்தல் வேண்டும். அதாவது உறுதி, பொறுமை, கடமை உணர்வு, இன்ப நாட்ட உணர்வினைப் புறக்கணித்தல் முதலியவற்றைப் பழக்கப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். கடமை உணர்ச்சி என்பதை ஒரு சமய நெறியாகக் கொள்ளுதல் வேண்டும்.

2. **மனிதரும் சமுதாய வாழ்வும்**: கடவுளைப் போல் மனிதரும் அறிவுடையவர். விலங்குகளினின்றும், மனிதரை வேறுபடுத்திக் காட்டுவது அவர்களிடமுள்ள அறிவே ஆதலாலும், அதன் உதவி கொண்டு அவர்கள் பேசுவதற்கும், சரியானது எது, தவறானது எது என்று உணர்ந்து கொள்ளுவதற்கும் தகுதி பெறுகின்றனராகையாலும், உயிர்களெல்லாவற்றுள்ளும் மனிதர்களே வெறும் குடும்பமாக அதாவது சமூகமாக வாழ்வதற்குத் தகுதி உடையவர் ஆவர். அவர்கள் யாவரும் கடவுளின் குழந்தைகளாகையால், அவர்கள் யாவரும் தம்முள் உடன்பிறந்தாரென்ற உணர்வோடிருத்தல் வேண்டும். சமூக வாழ்வில் சில நோக்கங்கள் நிறைவேறும் பொருட்டு நல்லவர்கள் அரசாங்கத்தில் பங்கு கொள்ளுதல் வேண்டும். இயற்கை என்பது முழுமையான, உண்மையான ஒழுக்க நெறியாகையால், இயற்கையோடு ஒத்த வாழ்வு வாழ்பவன் கடவுளின் தீர்ப்புக்கு உடன்பட்டவனாகிறான்.

3. **உலக அரசு**: மனித சமூகம் முழுவதையும் கொண்ட அமைப்பை ஓர் அரசு அல்லது உலக அரசு (The City of the World) என்று கூறலாம். இதில் கடவுளரும் மனிதரும் குடிகள் ஆவர். இந்த உலக அரசுக்கு ஓர் அரசியலமைப்பும் இருக்கிறது. இந்த அரசியலமைப்புத்தான் சரியான அறிவு (Right Reason) ஆகும்.

4. **இயற்கைச் சட்டம்**: சரியான அறிவே இயற்கையின் சட்டம் ஆகும். எந்த இடத்தையும் எதனையும் நியாயமானதா, சரியானதா என்று அறிந்து கொள்ளுதற்கு ஓர் உரை கல்லாக அல்லது அளவுகோலாக இந்த இயற்கைச் சட்டம் (Law of Nature) அமைந்திருக்கிறது. மனிதரிடம் இயற்கையில் அமைந்திருக்கிற நியாய உணர்வே சரியான அறிவும், இயற்கைச் சட்டமும் ஆகும். இதன் கொள்கைகளுள் எதுவும் மாற்றப்பட இயலாதவாறு நிலையாக அமைந்திருக்கிறது. இது அரசர், குடிகள் ஆகிய யாவரையும் கட்டுப்படுத்த வல்லது. இதுவே கடவுளின் சட்டமும் ஆகும்.

5. **சமூக வேறுபாடுகள்**: உலகச் சமுதாயத்தில் உள்ள பல்வேறு நாடுகளிலும் ஒன்றை மற்றவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிற வேறுபாடுகள் அல்லது வழக்கங்கள் (Conventions) இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய சில தனிப்பட்ட வழக்கங்கள் அல்லது வேறுபாடுகள் (Social Distinctions) மேலே குறிப்பிட்ட உலக நாட்டுக்கு அல்லது உலக அரசுக்குப் பொருந்தாது.

6. **சமத்துவக் கோட்பாடு**: உலக அரசில் யாவரும் சமத்துவம் உடையவர். அதன் குடிமை உரிமையைப் பெறுதற்கு அறிவுடையோர் யாவரும் தகுதி உடையவர். சிலரை மட்டும் அறிவிற் சிறந்தோரெனவும், சிலரை அறிவிலிகளெனவும் கொள்ளுதல் சரியன்று. சிலரைக் கடவுள் தலைமை தாங்கி நடத்திச் செல்ல, சிலர் கடவுள் கட்டாயப்படுத்தி ஒரு நெறியில் செலுத்தும் நிலையில் உள்ளார்கள். இதைத் தவிர அறிவுடையோர், அறிவிலி என்ற வேறுபாடு இல்லை; மேலும், அடிமைகள் என்போரும் மனித இனத்தில் இல்லை.

பா.கூ.

**துணை நூல்கள்:**

**Hicks, R.D. Stoic and Epicurean London, 1911.**

**Margaret, E. Reasor, The Political Theory of the Old and Middle Stoa, New York, 1951.**

***கிரிசுபி, பிரான்செசுகோ:*** இத்தாலியில் கி.பி. 1819 முதல் 1901 வரை வாழ்ந்த ஓர் அரசியல் அறிஞர். சிசிலியில் உள்ள இரிபரா என்னுமிடத்தில் பிறந்த இவர் சிறந்த தேசியவாதியாகத் திகழ்ந்தார். நேப்பிள்சில் கி.பி. 1846-இல் வழக்கறிஞராகப் பணி புரிந்த இவர் கி.பி. 1848-இல் தொடங்கிய சிசிலிப் புரட்சியில் பங்கேற்றார். பூர்பான் வம்சத்தினரின் ஆட்சி கி.பி. 1849-இல் அங்குத் தொடங்கியபோது பொது மன்னிப்புப் பெற இயலாமையால் பீட்மாண்டுக்குச் செல்ல வேண்டியவரானார். அங்கு மாசினி என்ற விடுதலை வீரரின் இயக்கம் வலுவடைந்த போது பீட்மாண்ட்டை விட்டு மால்டாவிற்குச் சென்றார். இவர் கொண்டிருந்த பத்திரிகைத் தொடர்பு காரணமாக ஏற்பட்ட சிக்கலால் அங்கும் இருக்க இயலாமல் இலண்டனைச் சென்றடைந்தார். மாசினியுடன் தொடர்பு கொண்டு அங்கிருந்து கொண்டே இத்தாலிய விடுதலைக்குப் பாடுபட்டார். மீண்டும் கி.பி. 1859-சூன் 15-இல் பீட்மாண்டுக்குத் திரும்பினார். நேப்பிள்சில் அரசோச்சிய பூர்பான் ஆட்சியாளர்களுக்கு எதிராகச் செயற்பட்ட மக்களாட்சிப் பிரிவினராகத் திகழ்ந்தார். அவ்வமயம் இத்தாலியைச் சேர்ந்த மற்றொரு விடுதலை வீரரான கரிபால்டியுடன் இணைந்து செயற்பட்டு அவரை இத்தாலியச் சருவாதிகாரியாக அறிவித்தார். பின்னர் இவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் உருவாயின.

கிரிசுபி, பிரான்செசுகோ (Grisbi Fransisco) கி.பி. 1861-இல் குடியரசுக் கட்சி உறுப்பினராக இத்தாலியப் பாராளுமன்றத்திற்குச் சென்றார். ஆயினும் மக்களாட்சிக் கோட்பாடுகள் மூலம் இத்தாலிய இணைவை உருவாக்க முடியாதென இவர் உணர்ந்து கொண்டார். வயதுவந்தோர் வாக்குரிமை போன்ற பொது நலன்களுக்குப் பாடுபட்டார். ஆங்கிலப் பேரமைச்சர் கிளாட்சுடன், செருமனியின் தலைவர் ஆட்டோவான் பிசுமார்க்கு ஆகியோருடன் கி.பி. 1877-இல் தொடர்பு கொண்டபோது பின்னவரால் பெரிதும் கவரப்பட்டார். 1877 திசம்பரில் இத்தாலிய உள்துறை அமைச்சர் தெப்பிரிடிசு (Deprides) மரணமடைந்த பின் இவர் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார்; நீதித்துறை, வாணிகத்துறை போன்றவற்றைச் சீர்படுத்தக்கூடிய சட்டங்கள் பல வற்றை உருவாக்கினார். ஆனால், இவருக்கேற்பட்ட எதிர்ப்புகள் காரணமாக கி.பி. 1891-இல் தமது பதவியைத் துறந்தார். இவருக்கு அரசியலில் எதிர்ப்புகள் கடுமையாக வளர்ந்தன. பல தவறுகளை அரசியலில் செய்தார் என இவர் குற்றஞ்சாட்டப்பட்டதால் அரசியலிலிருந்தே விலகிக் கொண்டார். நேப்பிள்சில் 1901-இல் காலமானார்.

இவர் அரசியற் கோட்பாடுகள் பெரிதும் பிசுமார்க்கின் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவர் அரசியல் தத்துவங்கள் பின்னர்ப் பெனிட்டோ முசோலினியின் பாசிசக் கொள்கைகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன. மா.கா.

***கிரிப்சு, சர் இசுடாபோர்டு*** **(கி.பி.1889-1952)** என்ற ஆங்கில அரசியலறிஞர் இந்தியச் சுதந்திர வரலாற்றோடு தொடர்புடையவர். இளமையில் வேதியலும் சட்டமும் பயின்றபின், சிறிது காலம் வழக்கறிஞராகப் பணி செய்தார். இவர் ஆங்கில அரசியலில் தொழிற் கட்சி வாயிலாகப் பங்கேற்றார். சிறிது காலம் பாராளுமன்ற உறுப்பினராகவும், உருசிய நாட்டில் ஆங்கிலத் தூதுவராகவும், பாராளுமன்றக் கீழ்ச்சபைத் தலைவராகவும், இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோது 3 ஆண்டுகள் வின்சுடன் சர்ச்சிலின் (Sir Winston Churchill) தேசிய அமைச்சரவையில் விமான உற்பத்தித் துறை அமைச்சராகவும் இருந்தார். இவர் இரண்டாம் உலகப்போருக்கு இந்தியர்களுடைய ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு இந்தியாவுக்குத் தூதுவராக வந்தார். இவருடைய முயற்சி வெற்றி பெறாவிடினும், இவர் கொண்டு வந்த அரசியல் திட்டத்தை இந்தியத் தேசிய காங்கிரசும், முசுலிம் கழகமும் (Muslim League) ஏற்றுக் கொள்ளாவிடினும், பொதுவாக இவர் இந்திய விடுதலை இயக்கத்துக்கு நண்பராக இருந்தார். எனவே, 1945-இல் இங்கிலாந்தில் தேர்தல்களில் வெற்றி பெற்ற தொழிற் கட்சி அரசாங்கத்தை அமைத்தபோது, இவர் அவ்வரசாங்கத்தால் 1946-இல் அனுப்பப்பட்ட மூவரடங்கிய அமைச்சர் தூதுக் குழுவில் (Cabinet Mission) ஓர் உறுப்பினராக அமர்த்தப்பட்டார். இவர் இந்தியாவுக்கு வந்து அரசியற் சிக்கலை நல்ல முறையில் தீர்த்தற்காகப் பல இந்தியத் தலைவர்களுடன் பயனுள்ள பேச்சுகளை நடத்தினார். இவர், சில காலம் பொருளாதார அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் பணி ஆற்றினார். கிரிப்சின் முயற்சிகள் (Cripps, Sir Stafford) இந்தியாவின் இருபெரும் அரசியற் கட்சிகளை ஒற்றுமைப்படுத்துதல் என்பதைப் பொறுத்தவரையில் வெற்றி அளிக்கவில்லையாயி

னும், இவர் இந்தியருடைய சுதந்திர ஆர்வத்தைப் பரிவுடனும் மதிப்புடனும் நோக்கிய ஓர் எதிர்கால நோக்குடைய அரசியலறிஞர் என்று கருதப்படுகிறார்.

**கிரிப்சு 1942-இல் கொண்டு வந்த திட்டம்:** இரண்டாம் உலகப் போரில் (1939–45) சப்பான் செருமனியோடும் இத்தாலியோடும் கூட்டுச் சேர்ந்து ஆசியாவில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் ஆலந்துக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இருந்த குடியேற்ற நாடுகளையெல்லாம் வென்று, 1942-இல் பர்மாவையும் தாக்கி, இந்தியாவையும் அச்சுறுத்தியது. ஆங்கிலேயர் 1942, மார்ச்சு மாதத்தில் இரங்கூன் நகரத்தைவிட்டு வெளியேறினர்; இச்சூழ்நிலையில் ஆங்கிலத் தலைமை அமைச்சர் தம் உடன் அமைச்சரான கிரிப்சை இந்தியாவுக்குத் தூதுவராக விடுத்து, இந்தியத் தேசிய காங்கிரசு, முசுலிம் தலைவர்களுடைய ஒத்துழைப்பை ஆங்கிலேய அரசாங்கத்தின் போர் முயற்சிகளுக்குப் பெறுதற்கு முயன்றார். முதல் உலகப் போரில் பிரிட்டனுக்கு உதவி செய்த காங்கிரசு, இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு நிலையும் தேசிய தன்னுரிமையும் (National Self-determination) வழங்கப்படும் என்று எதிர்பார்த்து ஏமாற்றத்துக்குள்ளாகி இருந்ததனால், இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனின் பேரரசு முறையைப் பாதுகாத்தற்கு உதவி செய்ய மனமில்லாமலிருந்தது. கிரிப்சு கொண்டுவந்த திட்டத்தை, இந்தியாவுக்குச் சுதந்திரம் உடனே கிடைக்கக்கூடுமோ என்ற நோக்கில் காங்கிரசு ஆராய்ந்தது. அதற்குக் கிரிப்சு திட்டத்தில் யாதொருவகையும் செய்யப்படாத காரணத்தால், அது அத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தது. முசுலிம் கழகத் தலைவர் சின்னாவும் (Jinnah) தாம் வேண்டிநின்ற பாகிசுத்தான் என்ற தனி நாட்டிற்குக் கிரிப்சுத் திட்டத்தில் வழி செய்யப்படாததால் அவரும் அதைத் தள்ளிவிட்டார். இவ்வாறு கிரிப்சின் தூது தோல்வியடையவே, அவர் திரும்பிச் சென்றார். திட்டத்தில் கூறப்பட்டிருந்தன வருமாறு:

போருக்குப் பின்னர் இந்தியாவுக்குக் கனடா போன்றநாடுகளுக்கு இருப்பது போன்ற தன்னாட்சி உரிமையுடைய குடியேற்ற நாட்டு நிலை வழங்கப்படும்.

போருக்குப் பின்னர் இந்தியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை உடைய இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றம் (Constituent Assembly) நிறுவப்படும். இம்மன்றம் வரையும் அரசியலமைப்பை ஆங்கில மாகாணங்களின் ஒப்புதலுடன் செயற்படுத்துதல் வேண்டும். இந்த அமைப்பை ஏற்றுக்கொள்ள விரும்பாத எந்த மாகாணமும் தாம் இப்போதுள்ள நிலையிலேயே (Status Quo) தொடர்ந்து இருக்கலாம், அல்லது ஆங்கில அரசாங்கத்தோடு தனியாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம்.

போர் முடிவடையும்வரை, இந்திய அரசாங்கமானது 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி தொடர்ந்து இருந்தாலும், அது சில தாராள இயல்புகளுடன் இருக்கும். ஆனால், இந்தியாவின் பாதுகாப்பை ஆங்கில அரசாங்கமே தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும்.

**கிரிப்சு 1946-இல் அமைச்சரவைக் குழு உறுப்பினராகக் கொண்டு வந்த திட்டம்:** கிரிப்சின் 1942-ஆம் ஆண்டுத் திட்டத்தைத் தள்ளியபின் காங்கிரசு 1942, ஆகசுட்டு 8-இல் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு (Quit India) ஆங்கிலேயரைக் கேட்டுக் கொண்டும், உடனே சுதந்திரம் வழங்கப்படாவிட்டால் அகிம்சை முறையில் சுதந்திரப் போராட்டத்தை நடத்துமாறு இந்தியரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்களைச் செய்ய, அரசாங்கம் காந்தியடிகள் உள்ளிட்ட காங்கிரசுத் தலைவர்களைச் சிறைப்படுத்த, நாடு முழுவதிலும் கிளர்ச்சியும் வன்செயலும் நடந்தன. ஆங்கிலேய அரசாங்கம் கிளர்ச்சியை அடக்கி, இந்தியப் பேரரசை விடமுடியாதென்று கூறிற்று. முசுலிம் கழகமோ நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிட்டு வெளியேறுமாறு ஆங்கிலேயரைக் கேட்டுக் கொண்டது. இரு கட்சியின் பிரதிநிதிகளுமடங்கிய ஒரு நிருவாகக் குழுவை (இதில் அரசப் பிரதிநிதியும் (Viceroy) தலைமைத் தளபதியும் தவிர மற்றவர் இந்தியராக இருப்பர்) நிறுவும் வேவல் திட்டத்தை (Wavell Plan), முசுலிம் தலைவரே ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். இங்கிலாந்துத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்லியின் (Atley) தலைமையில் பதவி ஏற்ற புதிய தொழிற் கட்சி அரசாங்கம்,இந்தியத் தலைவர்களெல்லோரையும் விடுதலை செய்து (காந்தி 1944-இலேயே விடுவிக்கப்பட்டார்), இந்திய மத்திய மாகாணச் சட்டமன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்படவும், அமைச்சரவைகள் அமைக்கப்படவும் வழி செய்து,இந்தியாவுக்குத் தன்னாட்சி உரிமை உண்டு என்று அறிவித்து, பெதிக்கு லாரன்சு பிரபு, சர் இசுடாபோர்டு கிரிப்சு, ஏ.வி. அலக்சாண்டர் ஆகிய மூன்று அமைச்சர்களடங்கிய தூதுக் குழுவை இந்திய அரசியல் சிக்கலைத் தீர்த்தற்கு அனுப்பிற்று. இந்த அமைச்சரவைத் தூதுக்குழு 1946 மார்ச்சில் இந்தியாவுக்கு வந்து ஒரு திட்டத்தை விளக்கிக் கூறிற்று. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட மன்றம் கூடி, இந்திய

மாகாணங்களும், இந்திய அரசுகளுமடங்கிய ஓர் இந்திய இணையத்துக்கான (Union of India) அரசியலமைப்பை வரைதல் வேண்டும்; மாகாணங்களெல்லாம் ஓர் அடுக்காக அல்லது கூறாக அமைந்து, அதற்கென்று அரசியலமைப்பு வரையப்படுதல் வேண்டும்; இவ்வாறு மூன்றடுக்கு அரசியலமைப்பு ஏற்படுத்தப்படுதல் வேண்டும்; இவ்வரசியலமைப்பு வரையப்பட்டு நடைமுறைக்கு வரும்வரை, இந்திய முக்கிய அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளடங்கிய ஓர் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் என்று கூறிற்று.

**அமைச்சர் குழுத் திட்டம்** (Cabinet Plan) **செயற்படுதல்**: இத்திட்டத்தின்படி தேர்தல் வாயிலாக அமைக்கப்பட்ட அரசியலமைப்பு மன்றத்தில் பெருமளவு எண்ணிக்கையிலிருந்த காங்கிரசு உறுப்பினரோடு, சிறுபான்மை உறுப்பினராகிய முசுலிம் கழகத்தினர் ஒத்துழைக்க மறுத்து, பாகிசுத்தானுக்கெனத் தனி அரசியலமைப்பு மன்றம் அமைக்கப்படுதல் வேண்டுமென்று கேட்டு, சவகர்லால் நேருவைத் துணைத் தலைவராகக் கொண்டு புதிதாக 1946-இல் அமைக்கப்பட்ட இந்திய நிருவாகக் குழுவில் முதலில் சேர மறுத்து, வங்காளத்திலும் பீகாரிலும் கடுமையான இந்து - முசுலிம் வகுப்புக் கலகங்கள் நடத்தற்கு வேண்டிய சூழ்நிலைகளைத் தோற்றுவித்தனர். ஆங்கில அரசாங்கம் 1948, சூன் மாதத்திற்குள் பொறுப்புள்ள இந்தியரிடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறிவிடப் போவதாகத் திட்டவட்டமாக அறிவிக்க, இந்தியாவின் புதிய அரசப்பிரதிநிதி மவுண்டுபாட்டன் பிரபு (Lord Mountbaten) 1947-ஆம் ஆண்டு மார்ச்சில் வந்து பொறுப்பேற்று, இந்தியருக்கு அதிகாரமாற்றம் செய்யப்படுதற்கு முன்னோடியாக நாட்டுப் பிரிவினை செய்தல் (அதாவது இந்தியாவை இந்தியா, பாகிசுத்தான் என்று பிரித்தல்) தவிர்க்க இயலாததென்று 1947-சூனில் தெளிவாக அறிவித்து, பிரிவினைத் திட்டத்தைக் காங்கிரசு ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். இதனால், முட்டுக்கட்டை நீங்க, இந்தியா என்றும், பாகிசுத்தான் என்றும் இரு சுதந்திர நாடுகளை நிறுவி, இந்தியச் சுதந்திரச் சட்டத்தை ஆங்கிலப் பாராளுமன்றம் நிறைவேற்றியதும், 1947, ஆகசுட்டு 15-ஆம் நாள் அந்த இரு சுதந்திர நாடுகளும் தோன்றின. பா.சு.

**துணை நூல்கள்:**

Cambridge History of India, Vols. V and VI, 1929, 1932.

Sathianathaier, R., A Political and Cultural History of India, Vol. III, S. Viswanathan, Madras, 1972.

**கிரிப்பன்பெல்டு** (**கி.பி. 1635-1699**) தென்மார்க்கு (Denmark) நாட்டில் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசியல் வல்லுநர். இவருடைய இயற்கைப் பெயர் சூமாக்கர் Schumacher). கிரிப்பன்பெல்டு (Griffenfeld) என்பது இவரது பட்டப்பெயர். இவர் பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததால் அரசியல் அனுபவம் நிரம்பப் பெற்றிருந்தார். தென்மார்க்கு மன்னனின் ஆதரவும் இவருக்குக் கிடைத்தது. பல பதவிகளை இவர் பெற்றார். பல துறைகளின் பொறுப்புகளை இவரிடம் மன்னர் வழங்கியிருந்தார். இவர் தம் திறமையால் நிருவாகத்தை மிகவும் பொறுப்புடன் கவனித்து வந்தார். இவரது சீர்திருத்தங்களால் நாட்டில் கைத்தொழில்கள் பெருகின; வாணிகம் வளர்ச்சியுற்றது. அண்டைநாடுகளுடன் நட்புக் கொண்டால்தான் தென்மார்க்கு நன்கு வளர்ச்சியுற முடியும் என்று நம்பியதால், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். சுவீடனும் பிரான்சும் தென்மார்க்குடன் நட்புப் பூண்டிருந்தமைக்கு பெல்டு முக்கிய காரணமாயினார். ஆயினும், இவருடைய கொள்கைகளை விரும்பாத சிலர் இவர் மீது காழ்ப்புணர்ச்சியை வளர்த்துக் கொண்டு பல குற்றச்சாட்டுகளை சுமத்தினர். இவர் சிறைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலைகளையும் உருவாக்கினர். இறுதியில் இவரது முடிவு சிறையிலேயே ஏற்பட்டது. தெ.பா.



கிரிப்பன்பெல்டு

**கிரிமால்டி மனிதன்**: இக்கால மனித இனத்தின் பல்வேறு வகைகளைக் காட்டும் புதைபடிவங்

கள் உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு காலங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கண்டெடுக்கப்பட்ட புதைபடிவ வகையில் ஒன்றைச் சேர்ந்ததே கிரிமால்டி மனிதன் (Grimaldi Man). கிரிமால்டி மனிதனைப் பற்றி விரிவாக அறிய உதவியாக இருந்தது குரோட்தெசு இன்பேண்சு (Grotte Des Enfants) என்னும் குகையில் கண்டெடுக்கப்பட்ட இரு எலும்புக்கூடுகளே ஆகும். இக்குகை பிரான்சு நாட்டில் மெண்டோன் (Mentone) மாவட்டத்தில் கிரிமால்டி (Grimaldi) என்னுமிடத்திலுள்ளது. இதனாலேயே இந்த எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட இடத்தின் பெயர் அவ்வெலும்புகளுக்குரிய மனித இனத்திற்குச் சூட்டப்பட்டுள்ளது.

கிரிமால்டி மனித எலும்புக்கூடுகள் 1901-இல், எம்.டி.வில்லினூவி (M. De Villeneuve) என்பவரால் தோண்டியெடுக்கப்பட்டுப் பேராசிரியர் வெர்னு (Verneau) என்பவரால் ஆராயப்பட்டன. மேற்கூறிய குகையிலிருந்து இந்த எலும்புக் கூடுகள் மூன்று நிலைகளிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டன. மேல் மட்டத்தில் இருந்த இரு எலும்புக்கூடுகள், கிரிமால்டியில் மற்றக் குகையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளைப் போன்றே குரோ மாக்னன் (Cro-Magnon) வகையைச் சேர்ந்தவை என்று கூறப்படுகிறது. கிரிமால்டி இனத்தைச் சேர்ந்த மற்ற இரு எலும்புக்கூடுகள் கீழ் மட்டத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்டன. அக்குகையிலிருந்த எலும்புக்கூடுகளுடன் கற்கருவிகளும், கல் பாத்திரங்களும் வேறு பல பொருள்களும் காணப்பட்டன.இவையனைத்தும் இடிந்துபோன குகையின் பாறைகளாலும், பாறைத் துண்டுகளுடன் அரைகுறையாக எரிந்த நிலக்கரிச் சாம்பலாலும் சுமார் 30 அடி ஆழத்திற்குக் கீழ்ப் புதையுண்டிருந்தன. இந்த எலும்புக்கூடுகளும் பிற படிமங்களும் புத்துயிரூழியின் (Pleistocene) ஈற்றயற் பகுதிசார்ந்த காலத்தைச் சேர்ந்ததெனக் கருதுகின்றனர். இந்த மனித எலும்புக்கூடுகள் நியாண்டர்தால் (Neanderthal) மனிதனின் எலும்புக்கூடுகளிலிருந்து வேறுபட்டுள்ளனவாகவும் பல பண்புகளில்இவை ஆப்பிரிக்க நீக்கிரோ மனிதனை ஒத்துள்ளனவாகவும் ஊகித்தனர்.

கிரிமால்டி குகையில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளுள் ஒன்று ஏறக்குறைய 15 முதல் 17 வயதுடைய இளைஞனுடையதென்றும், மற்றொன்று ஏறக்குறைய 30 முதல் 40 வயதுடைய ஒரு பெண்ணினுடையதென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எலும்புக்கூடுகளின் கால்கள் மடக்கப்பட்டுப்பதப்படுத்தப்பட்ட உயிரற்ற பெருவியன் உடல்களைப் (Peruvian Mummies) போன்று அருகருகே வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் அருகில் தலை அலங்காரப் பொருள்களும், சிப்பிகளாலான காப்புகளும் காணப்பட்டன. இந்த எலும்புக்கூடுகளை ஆராய்ந்ததிலிருந்து பெண் 5 அடி 3 அங்குலமும் இளைஞன் 5 அடி 1.4 அங்குலமும் இருந்திருக்கலாமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்விருவரும் இன்றைய பிரெஞ்சு மக்களின் சராசரி உயரத்தைவிட மிகுந்த உயரமுடையவர்களாக இருந்திருக்க வேண்டும் என்றும் மதிப்பிடப்பட்டது. இந்த இரு எலும்புக்கூடுகளும் இந்தக் குகையிலேயே கிடைத்த குரோமாக்னன் எலும்புக்கூடுகளுடன் வியக்குமளவிற்கு ஒத்திருந்தாலும், பல பண்புகளில் அவை வேறுபட்டிருந்தன என்று பேராசிரியர் வெர்னு கூறுகிறார்.

இந்த எலும்புக்கூடுகளின் கை, கால் எலும்புகளை ஒப்பமைத்துப் பார்த்தபோது, கால் எலும்புகள் தொடை எலும்புகளைவிட நீளமாகவும் முன்கை எலும்புகள் மிகவும் நீண்டனவாகவும்இருந்தன. கால் எலும்புகள், கை எலும்புகளைவிட மிகவும் நீண்டிருந்தன. இந்தப் பண்புகள் இக்காலத்திய நீக்கிரோ இனத்தின் பண்புகளை ஒத்ததாகும். எனவே, கிரிமால்டி மனிதன் இக்கால நீக்கிரோ மக்களின் பண்புகளைப் பெற்றிருந்தான் என்பதில் ஐயமில்லை. இக்கால நீக்கிரோ மக்களின் மண்டை ஓடுகளில் காணப்படும் பண்புகள், கிரிமால்டி மனித மண்டையோடுகளிலும் காணப்பட்டன. கிரிமால்டி மனிதனின் மண்டை ஓடுகள் முன்புறத்திலிருந்து பின்புறமாக மிகவும் நீண்டுபெரியனவாக இருந்ததால் அவை மிக நீண்டு குறுகிய தலையமைப்பு (Hyperdolichocephalic) வகையைச் சேர்ந்தவை எனவும் கூறப்படுகிறது. கிரிமால்டி மனிதனின் முகம் அகலமானது; நெற்றி நன்கு வளர்ச்சி பெற்றது; நேரானது; கண்குழிகள் பெரியவை; கண்குழி விளிம்புகள் இலேசானதும் திண்மையானதுமாகும்; மூக்கு அகன்றதும், மூக்கடி பள்ளமானதுமாகும். தாடைகள் வலிவானதும் பருமனானதுமாகும். மேல்தாடையும் கீழ்த்தாடையும் முற்புறத்தில் நீண்டிருந்தன. கீய்த்து (Keith) என்பாரின் ஆய்வுப்படி பெண்ணின் மண்டை ஓட்டின் கொள்ளளவு 1265 க.செ.மீ. அளவும், இளைஞனின் மண்டை ஓட்டின் கொள்ளளவு 1455 க.செ.மீ. அளவும் இருந்தன. மண்டை ஓட்டின் இந்தக் கொள்ளளவு இன்றைய சராசரி பிரெஞ்சு மனிதனின் கொள்ளளவிற்குச் சமமாகும். மேற் கூறியவாறு கிரிமால்டி மனிதனின் முக அமைப்பும் மண்டையோட்டின் பண்புகளும் நீக்கிரோ இன மனிதப் பண்புகளை ஒத்திருந்தன.

பிரான்சு, இத்தாலி நாடுகளின் எல்லைப்புறங்களில் கிடைத்த மேலும் சில கிரிமால்டி இன மனித எலும்புக்கூடுகளைப் பேராசிரியர் வெர்னு ஆராய்ச்சி செய்தார். கிரிமால்டி மனித எலும்புக்கூடுகளைக் குரோ மாக்னன் எலும்புக்கூடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த வெர்னு, இரு இனங்களும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டது போன்று தோற்றமளித்தாலும் புத்துயிரூழிக் காலத்தில் இரு மனித இனங்களும் ஒன்றாகப் பழகி இருக்க வேண்டும் என்றும், இரு இனத்தவர்களிடையே உறவு ஏற்பட்டு, அவர்களுக்குள் கலப்பினங்கள் தோன்றியிருக்கலாம் என்றும் கூறியுள்ளார். மேலும், அவர் கிரிமால்டி இன மனிதர்கள், கலைமான் காலத்தில் (Reindeer Age) வாழ்ந்த மனிதர்களின் முன்னோர்களாக இருக்கலாம் என்ற கருத்தையும் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த கிரிமால்டி மனித இனம் இக்காலத்திலும் காணப்படுகிறது என்பார் வெர்னு. கிரிமால்டி மனித இனப் பண்புகள் இக்கால மண்டை ஓடுகளிலும் காணப்படுகின்றன. பைட்மாண்டு (Piedmont), இலம்பார்டி (Lombardy) எமிலியா (Emilia), தசுகனி (Tuscany), உரோன் பள்ளத்தாக்கு (Rhone Valley) ஆகிய இடங்களில் வாழும் மக்களும் கிரிமால்டி இன மனிதப் பண்புகளைப் பெற்றுள்ளனர். எனவே, இந்த மனித இனங்கள் கிரிமால்டி மனிதனின் பண்புகளை நினைவுபடுத்துகின்றன. காரணம், கிரிமால்டி இனத்தினர் புத்துயிரூழியின் ஈற்றயற் பகுதி சார்ந்த காலத்தில் பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளில் வாழ்ந்ததேயாகும்; மேலும் பிற்காலத்தில் வாழ்ந்த கிரிமால்டி மனிதன் தென்மேற்கு ஐரோப்பாவிலிருந்து ஆப்பிரிக்கா போன்ற வேறு நாடுகளுக்குச் சென்றிருக்கலாம் எனவும் இவர் கருதுகிறார்.


புரோகா (Proca)என்பவர் கிரிமால்டி குகை மனிதனின் உயரம் 5 அடி 10.8 அங்குலம் இருக்கலாமென மதிப்பிட்டார். இரிவியர் (Riviere) புரோகா ஆகிய ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்த மூன்று எலும்புக்கூடுகளை அடிப்படையாகக் கொண்டு கிரிமால்டி மனிதர்களின் உயரம் 6 அடி 0.7 அங்குலம் முதல் 6 அடி 8.7 அங்குலம் வரை வேறுபட்டுள்ளதாக மதிப்பிட்டனர். இதனை அடிப்படையாக வைத்துக் கிரிமால்டிமனிதர்கள் பெருத்த உருவமுடையவர்கள் என்றும், அவர்களின் சராசரி உயரம் 6 அடி 1.5 அங்குலம் என்றும் தெளிவாக்கினர். பா.ஜ.

**துணை நூல்கள்**:

**Gavan, J.A.**, (ed.) The Non-Human Primates and Human Evolution, Wayne University Press. Detroit, 1955.

**Clark, W.E., LeGros**, The Fossil Evidence for Human Evolution, University of Chicago Press, Chicago, 1955.

***கிரிமியா*** ஐரோப்பிய-உருசியாவிலிருந்து கருங்கடற் பகுதியில் உள்ளடங்கி மூன்று பக்கமும் நீரால் சூழப்பட்டுள்ள ஒரு முந்நீரகம் (Peninsula) ஆகும். ஆனால், பெரிகோப்பு (Perekop) என்ற கால்வாய் மூலம் கிரிமியா துண்டிக்கப்பட்டுத்தனிநிலமாக உள்ளதால் இதனை ஒரு செயற்கைத் தீவு எனக் கூறுவதிலும் தவறில்லை. இது 23,300 சதுரமைல் பரப்பளவு உடையது.




கிரிமியா

கோதுமை அதிகம் பயிராகின்றது. ஆடு மாடுகள் வளர்த்தல், இரும்பு மற்றும் உப்பு தயாரித்தல் ஆகியன முக்கிய தொழில்களாகும். கி.பி. 1475 முதல் 1792 வரை துருக்கியப் பகுதியாகத் திகழ்ந்த கிரிமியா உருசியாவின் பகுதியாக்கப்பட்டது. இது 1917-இல் தன்னாட்சி நாடாக ஆயிற்று. இது 1920-இல் போல்சுவிக்குகளின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்டு உருசியச் சோவியத்துக் கூட்டாட்சிச் சமதருமக் குடியரசுப் பகுதியாயிற்று. இரண்டாம் உலகப் போரின் போது 1941 முதல் 1943 வரை பல இன்னல்களை அனுபவித்த பின்பு 1954-இல் உக்ரெயின் சோவியத்துச் சமதருமக் குடியரசுப் பகுதியாயிற்று. சிம்பரோபோல் (Simferopol) என்னும் நகரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள கிரிமியாவில் ஓய்வு நாளைக் கழிப்பதற்கான சூழல்கள் காணப்படுகின்றன. செபசுடபூல்,

**(Sebastapol)** யால்டா போன்றவை சில முக்கிய இடங்களாகும். மா.கா.

***கிரிமியாப் போர்***: கிரிமியாப் போர் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். ஐரோப்பிய வல்லரசுகளின் மோதலின் காரணமாகவே கிரிமியாப் போர் ஏற்பட்டது. இப்போர் (Crimean War), குறிப்பாக உருசியாவின் முதலாம் சார் நிக்கோலசின் வலித் தாக்குதல் கொள்கையால் ஏற்பட்டதே ஆகும். இவர் 'ஐரோப்பாவின் நோயாளி' எனத் துருக்கியை நினைத்ததால், தென்கிழக்கு ஐரோப்பா முழுவதும் உருசியப் பேரரசை நிறுவவும், கான்சுடாண்டிநோபிளைக் கைப்பற்றவும் எண்ணம் கொண்டார். துருக்கியின் உடைமைகளைப் பிரிவினை செய்ய வேண்டுமென்பது இன்றியமையாதது எனக் கருதினார். பால்கன் பகுதிகளில் உருசியாவின் ஊடுருவலுக்கெதிராகத் துருக்கியை எதிர் சக்தியாக அமைப்பதின் மூலம் அண்மைக் கிழக்குப் பகுதியில் வல்லமைச் சமநிலையை (Balance of Power) நிலை நிறுத்தலாம் எனப் பிரிட்டன் விரும்பியது. இவ்விருவருக்குமிடையே இருந்த முரண்பட்ட கருத்துகளின் காரணமாகக் கிரிமியாப்போர் மூண்டது.

உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும், கிரேக்க வைதிக திருச்சபைக்குமிடையே, பாலத்தீனத்திலிருந்த புனித இடங்களை நிருவகிப்பதில் ஏற்பட்ட சமயச் சிக்கல் கிரிமியாப் போரின் முக்கிய காரணங்களுள் ஒன்றாகும். கத்தோலிக்கர்களின் நல்லெண்ணத்தைப் பெறும் பொருட்டுப் பிரான்சின் மூன்றாம் நெப்போலியன், துருக்கிச் சுல்தானை வற்புறுத்திக் கிழக்குப் பகுதியில் கிறித்தவருக்குக் காப்பாளராக இருக்கும் உரிமையினைப் பெற்றுக் கொண்டார். இவ்வாறு பிரான்சிற்கு அளித்த உரிமைக்கு முதலாம் நிக்கோலசு எதிர்ப்புத் தெரிவித்தார். தம்முடைய குறிக்கோள் வெற்றிபெற மென்சிகோவ் என்ற தூதுவரை அனுப்பிச் சுல்தானிடம் அனைத்து வைதிக கிறித்தவக் குடிகளுக்கும் தாமே பாதுகாப்பாளர் என்ற உரிமையைக் கேட்டுவரும்படி அனுப்பினார். பால்கன் பகுதிகளில் உருசியாவின் செல்வாக்கு ஏற்பட்டு விடுமோ எனப்பிரிட்டன் அஞ்சியது. எனவே, பிரிட்டன் பிரான்சின் போக்குக்கு ஆதரவளித்ததோடு துருக்கிச் சுல்தானை உருசியாவின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காது இருக்கும்படி தூண்டியது.

உருசிய கோரிக்கை மறுக்கப்பட்டது. சுல்தான் கிறித்தவர்களுக்குச் சலுகைகளையும், மத உரிமைகளையும் அளிப்பதாக உறுதிமொழி அளித்துப் பிரிட்டனையும் பிரான்சையும் தீம் உதவிக்கு அழைத்தார். இரண்டு வல்லரசுகளும் அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்டன. பிரான்சு மாசுக்கோவைப் பழி வாங்கும் எண்ணத்துடன் தலையிட்டது.

உருசிய கோரிக்கை மறுக்கப்பட்டதால் மால்டேவியா, வாலேச்சியா ஆகிய துருக்கியின் நிலப்பகுதிகளை உருசியப் படைகள் கைப்பற்றின. துருக்கி கி.பி. 1853-ஆம் ஆண்டில் உருசியா மீது போர் தொடுத்தது. சினோப் பகுதியில் நடந்த நாவாய்ச் சண்டையில் துருக்கியின் கப்பற்படை உருசியாவின் படைகளால் அழிக்கப்பட்டது. ஆங்கில, பிரெஞ்சுக் கப்பற் படைகள் கருங்கடலை நோக்கிச் சென்றன. உருசியாவினால் கைப்பற்றப்பட்ட சிற்றரசு நாடுகளிலிருந்து வெளியேற வேண்டுமென உருசிய படைகளுக்குப் பிரெஞ்சு, ஆங்கிலப் படைகள் கி.பி.1854-இல் எச்சரிக்கை விடுத்தன. பதிலுரை எதுவும் தெரிவிக்காததாலும், தான்யூபு ஆற்றைக் கடந்ததாலும், உருசியா மீது அந்நாடுகள் போர் தொடுத்தன. நேச நாட்டுப் படைகள் வார்னாவை நோக்கி முன்னேறிச் சார்டினியா நேச நாட்டுப் படைகளுடன் சேர்ந்தன. மேலும், ஆசுத்திரியா ஒரு தாக்குதலை மேற்கொள்ளும் என அஞ்சிய உருசியா சிற்றரசுகளிலிருந்து செபசுட்டபூலுக்குப் (Sebostapole) பின்வாங்கியது. ஆல்மா ஆற்றங்கரை, பாலக்கிலாவா (Balaclava), இன்கர்மேன் (Inkarman) ஆகிய போர் முனைகளில் உருசியா தோற்கடிக்கப்பட்டது. செபசுட்டபூல் கி.பி. 1854-ஆம் ஆண்டில் தாக்கப்பட்ட போதிலும் நேச நாடுகள் முன்னேற முடியவில்லை. முற்றுகை கி.பி. 1855-இல் தொடங்கப்பட்டது. கடும் போருக்கும் கடுந்துயருக்கும் உள்ளான பிறகு செபசுட்டபூலை உருசியா கைவிட்டது. நேச நாடுகள் செபசுட்டபூலைக் கைப்பற்றின. முதலாம் சார் நிக்கோலசு கி.பி. 1885-ஆம் ஆண்டில் இறந்த பின் இரண்டாம் அலெக்சாந்தர் ஆட்சிக்கு வந்தார். சமாதானத்தை வேண்டியதால் கி.பி. 1856-இல் நடைபெற்ற பாரிசு ஒப்பந்தப்படி போர் முடிவுற்றது.

**பாரிசு ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனைகள்:** 1) துருக்கியின் நிலப் பகுதிகள் மேலும் உருக்குலைக்கப்படமாட்டாது. 2) பால்கன் பகுதிக் கிறித்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் உரிமையினை உருசியப் பேரரசர் 'சார்' கைவிடவேண்டும். 3) மால்டேவியாவிற்கும், வாலேச்சியாவிற்கும் சுயாட்சி வழங்கப்பட வேண்டும். 4) கருங்கடலில் வணிகக் கலங்கள் மட்டும் செல்லலாம்; போர்க் கலங்கள் செல்லக் கூடாது.

இப்போரின் மூலம் முக்கியமான விளைவுகள் ஏதும் ஏற்படவில்லை. ஆயினும் முதன் முறையாகச்

செஞ்சிலுவைச் சங்கம் தோன்றியது. கிரிமியாப போரில் பிளாரன்சு நைட்டிங்கேல், செவிலியராகப் படை வீரர்களுக்குப் பணிபுரிந்து சிறந்த தொண்டாற்றி வரலாற்றுப் புகழ் பெற்றார். பெ.சி.

**கிரீசசு** மேற்கு ஆசியப் பகுதியில் விளங்கிய இலிடியா நாட்டின் அரசன். இவன் ஆட்சிக் காலம் கி.மு. 560 முதல் 546 வரை. கிரீசசுவின் (Croesus) தந்தை அல்யாட்சின் என்பவர். இவர் மெர்மினாக் குலத்தைச் சேர்ந்தவர். கிரீசசின் பகை நாடுகள் பல இவருக்கு அடிபணிந்தன. முக்கியமாக ஈயோனியா (Ionia) குறிப்பிடத்தக்கது. பரந்து விரிந்த பேரரசை ஆட்சிபுரிந்த இம்மன்னனிடம் குபேரச் செல்வம் இருந்ததாகக் கூறப்படுகிறது. பல வெற்றிகள் பெற்ற இம்மன்னன் சார்டிசுக்கு அண்மையில் நடந்த போரில் தோல்வியுற்றுச் சிறைப்படுத்தப்பட்டு மரணமடைந்தார். தெ.பா.

**கிரீசு** தென்கிழக்கு ஐரோப்பாவில் பால்கன் முந்நீரகத்தின் தெற்கில் அமைந்துள்ள நாடு. இந்நாட்டின் பரப்பளவு 131,945 ச.கி.மீ. கிரீசின் (Greece) மேற்கு எல்லையாக அயோனியசன் கடலும், தெற்கு எல்லையாக மத்தியதரைக்கடலும். கிழக்கு எல்லையாக ஈசியன் கடலும், வடகிழக்கு எல்லையாகத் துருக்கி, பல்கேரியா நாடுகளும், வடக்கு எல்லையாக யூகோசுலோவியாவும், வடமேற்கு எல்லையாக அல்பேனியாவும் அமைந்துள்ளன. இந்நாட்டின் தலைநகர் ஏதென்சு.




கிரீசு

இந்நாட்டின் பரப்பில் 75 விழுக்காடு மலைப் பாங்காக இருப்பதால் எஞ்சிய 25 விழுக்காட்டுப் பகுதியில்தான் வேளாண்மை நடைபெறுகிறது. வரலாற்றுப் புகழ்பெற்ற எபிரசு (Epirus), மாசிடோனியா, திரேசு முதலிய பண்டைய நகர அரசுகள் வடகிரீசில் உள்ளன. பிண்டசு (Pindus) மலைத் தொடர் வடக்கிலிருந்து மத்திய கிரீசுக்குப் பரவியுள்ளது. கோரிந்து வளைகுடாவுக்கு வடக்கில் உள்ள நடு கிரீசில் தெசலி, அட்டிகா, பொயோசியா முதலிய பகுதிகள் அடங்கும். பெலப்போனிசசு தென் கிரீசில் உள்ளது. மத்திய தரைக்கடல், அயோனியன் கடல், ஏசியன் கடல் ஆகியவற்றில் உள்ள பல தீவுகள் கிரீசின் ஏனைய பகுதியாகும்.

பொதுவாக, கிரீசு வேளாண்மையில் பிற்பட்ட ஒரு நாடாகும். உழவுத் தொழில் மூலம் கிடைத்தது 1970-ஆம் ஆண்டுகளில், இந்நாட்டின்மொத்த ஆண்டு உற்பத்தியில் இருபது விழுக்காடுதான். நாட்டின் முக்கிய வருமானம் சுற்றுலாப் பயணிகளின் மூலம் தான் கிடைக்கிறது. அண்மைக் காலத்தில் கிழக்குக் கடலோரப் பகுதிகளில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளதால், எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பொதுவாக உற்பத்திப் பொருள்களைப் பொறுத்தவரை, இந்நாட்டின் ஏற்றுமதியை விட இறக்குமதிதான் மிகுதியாகும்.

**பண்டைய வரலாறு**: பண்டைய கிரீசின் வரலாறு பல கால கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புதிய கற்காலம் (கி.மு. 6000 முதல் கி.மு. 2800 முடிய): கிரீசில் மனிதன் புதிய கற்காலத் தொடக்கத்திலிருந்து வாழ்ந்து வருகிறான். மாசிடோனியா, தெசலிப் பகுதியில் கி.மு. 7000-இல் வாழ்ந்த மக்கள் மட்கலன்களைப் பயன்படுத்தலில்லை. நிலையான வாழ்க்கையைப் புதிய கற்கால வேளாண்மைக் குடி மக்களே மேற்கொண்டனர். கிரீசு, கிரீட்டு மற்றும் ஈசியத்தீவுகளில் கி.மு. 6000த்திற்குப் பின் வாழ்ந்த மக்களே மட்கலன்களை அறிந்திருந்தனர். வேளாண் மக்கள் கோதுமை, வாற்கோதுமை ஆகியவற்றைப் பயிரிட்டும் நாய், ஆடு போன்ற விலங்குகளை வளர்த்தும் வாழ்ந்து வந்தனர்.

**முதற் செப்புக்காலம்** (கி.மு. 2800–2000): முதற் செப்புக் காலப் பண்பாடு அண்மைக் கிழக்குப் பகுதிகளில் வளர்ந்த அளவிற்குக் கிரீசில் வளரவில்லை. இலெம்னாசுத் தீவிலும் (Lemnos Island) திராய்ப் (Troy) பகுதியிலும் வாழ்ந்த மக்கள் செம்புப் பொருள்களை இக்கால கட்டத்தில் பயன்படுத்தினர். முதற் சைக்லேடிக்(Cycladic) பண்பாட்டுக் காலத்தில் சலவைக் கல்லால் செய்யப்பட்ட பெண் உருவங்

களும் யாழ் வாசிக்கும் உருவங்களும் செய்யப்பட்டன. இவ்வகை உருவங்கள் மேற்கு மத்திய தரைக் கடற் பகுதிகளில் கிடைக்கின்றன. கிரீசின் முக்கிய பகுதிகளில் இருந்த பல்வேறு இடங்களில் எலடிக் **(Helladic)** பண்பாட்டின் எச்சங்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக ஆர்கோசுக்கு **(Argos)** அருகில் இலேர்னாவில் **(Lerna)** பெருமளவில் கிடைத்தன. இக்காலத்தில், நன்றாகச் சுடப்பட்ட மட்கலன்கள் பயன்படுத்தப்பட்டன. முதல் எலடிக் காலம் முடிவுறும் தருணத்திற்குள்ளாகவே வடக்கிலிருந்து படையெடுத்த மக்களால் பெரும் பகுதிகள் அழிக்கப்பட்டன.

**இடைச் செப்புக்காலம்**: (கி.மு. 2000–கி.மு. 1570) கிரீசின் மீது படையெடுத்த அயலவர்கள் மலைப்பகுதிகளில் வாழ்ந்தனர். அங்குக் கரடுமுருடான கற்களைக் கொண்டு அரண்களை அமைத்தனர். கிரீட்டுப் பகுதியில் அவர்கள் படையெடுப்புகளை நிகழ்த்தவில்லை. இப்பகுதியில் பல சுதந்திர அரசுகள் தோன்றின. ஒவ்வோர் அர்சுக்கும் தனித்தனியாக அரசமாளிகைகள் இருந்தன. கிரீட்டு அரண்மனை பல குடியிருப்புப் பகுதிகளையும், நடுவில் பெரும் முற்றத்தையும் கொண்டு விளங்கியது. குடியிருப்புப் பகுதிகள் கலை அமைப்புகள் கொண்டும் குளியலறைகள் ஆகியவற்றைக் கொண்டும் விளங்கின. கடலாற் சூழப்பட்ட தீவுகளில் இருந்த அரண்மனைகளில் பாதுகாப்பு அரண்கள் காணப்படவில்லை.

கிரீட்டின் கிழக்குப் பகுதிகளில் மினோவா நாகரிகத்தின் கலை வேலைப்பாடுகள் மிகுந்து காணப்பட்டன. பல கைவினைப் பொருள்கள் அருமணிக் கற்களால் செய்யப்பட்டன. மட்கலன்களின் மீது பல வண்ண அமைப்புகள் பூசப்பட்டன. கிரீட்டில் வாழ்ந்த மக்களுள் பெரும்பாலோர் வேளாண் குடிகளாவர். வணிகர்கள் எகிப்து, சிரியா, சிசிலி போன்ற நாடுகளில் வாணிகம் செய்தனர். இக்காலத்தில் நோசசு, கௌர்னியா **(Gournia)** பகுதிகளில் நகர நாகரிகங்கள் வளர்ச்சியடைந்தன. இக்காலத்தைச் சார்ந்த அரச ஆவணங்களில் அசை எழுத்துகள் காணப்படுகின்றன. அவை வரிவடிவ வகை அ **(Linear A)**எனக் கருதப்படுகின்றன.

**கடைச்செப்புக்காலம்** (கி.மு. 1570–கி.மு. 1000): கிரீசின் முக்கிய பகுதிகளில் கி.மு. 16–ஆம் நூற்றாண்டில் கடைச்செப்புக் காலம் தோன்றியது. கிரீசின் கடை எலடிக் காலம் மைசீனியன் காலம் **(Mycenaean age)** என்றே கூறப்படுகிறது. இந்நாகரிகம் மைசீனியப் பகுதியில் தலைசிறந்து விளங்கியதால் இப்பெயர் பெற்றது. இடை எலடிக் காலத்தில் வாழ்ந்த பிரபுக்களின் மலைக் கோட்டைகளில் மினோவாப் பண்பாட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இடை எலடிக் காலத்திற்குப்பின் மினோவாப் பண்பாடு இங்கு வேரூன்றியிருந்தது. இங்கு என்றிச் சிலிமேன் **(Heinrich Chliemann)** புதை குழி வட்டங்களை கி.பி. 1876–இல் கண்டுபிடித்தார். இக்




கிரீசு



தங்க முகமூடி

குழிகளில் பல தங்கமுகமூடிகளும் காப்புகளும் தந்தத்தால் செய்யப்பட்ட விளையாடும் பலகைகளும், உறையிலிடப்பட்ட குத்துவாள்களும் கிடைத்தன. மைசீனிய நாகரிகத்தில் பல கட்டடங்களும் கட்டப்பட்டன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை தோலோசுக் (Tholos) கல்லறைகளாகும். கிரீசு இக்காலத்தில் பல சுதந்திர அரசுகளைக் கொண்டிருந்தது. மைசீனிய அரசர்கள் நாகரிகத்தில் சிறந்து விளங்கினர். அவர்கள், எழுத்து முறையைத் தங்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்காகக் கண்டறிய முனைந்தனர். களிமண் வரைபட்டிகைகளில் எழுத்துகள் காணப்படுகின்றன. இவ்வரைபடத் தொகுதிகள் வைக்கப்பட்ட சேமிப்பு அறையைப் பைலோசு (Pylos) என்ற இடத்தில் இரண்டாம் உலகப் போர் நடப்பதற்குமுன்பு கண்டுபிடித்தனர். இப்பட்டிகைகளில் அசை எழுத்துக்கள் காணப்படுகின்றன. வரிவடிவ வகை ஆ (Linear B) என இவ்வெழுத்து முறை கூறப்படுகிறது. இவ்வரிவடிவ எழுத்து வகைப்பட்டிகைகள் நோசசு, மைசீனே, தீப்சு போன்ற நகரங்களிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டன. மைசீனிய நாகரிகத்தைப் பெரிதும் அறிவதற்கு அவர்கள் பயன்படுத்திய மட்கலன்களும் ஆதாரங்களாக உள்ளன. இம்மட்கலன்கள் எகிப்திலும் சிரியாக் கடற்கரைப்பகுதிகளிலும் கிடைத்துள்ளன. வேளாண் மக்கள் கைவினைஞர்கள் ஆகியோரைத் தவிர மைசீனிய நாகரிகத்தில் படை வீரர்களும் சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தனர். இவர்கள் பல நாடுகளுக்கும் சென்று செல்வத்தைக் கொள்ளையடித்தலைப் பெருமையாகக் கருதினர். ஓமர் கவிதைகளில் திராய் நகர முற்றுகை பெருமையாகக் கூறப்படுவது இதற்கு ஒரு சான்றாகும். மைசீனிய நாகரிகம் கி.பி. 1300க்குப்பின் அழியத் தொடங்கியது. கிரேக்க மொழி பேசும் நாடோடி மக்களின் தாக்குதலால் மைசீனிய நாகரிகம் அழிவுறத் தொடங்கியது. நகர அரண்கள் பல அழிவுற்றன.

சு.இரா.


கிரீசில் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் பெரும்பான்மைப் பகுதிகளில் முடியாட்சி மெலிவுற்றுப் பிரபுக்களாட்சி நிலவத் தொடங்கியது. உரிமை கட்டுப்படுத்தப்படுவதை விரும்பாத மக்கள் சிலர் வேறு நாடுகளுக்குச் சென்று குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர். கிரேக்க நாகரிகம் பரவ அக்குடியேற்றங்கள் மிகவும் உதவின. குடியேற்றத்தை விரும்பாத சில நகரமக்கள் பிரபுக்களாட்சியைக் கவிழ்க்க முற்பட்டனர். இதன் விளைவாக வீரம்மிக்க சில தலைவர்கள் தோன்றி வலுக்கட்டாய முறையில் தம்மை ஆட்சியாளராகச் செய்து கொண்டனர். கிரேக்க வரலாற்றில் அவர்களுக்குக் 'கொடுங்கோலர்' என்று பெயர். ஆனால் அவர்தம் ஆட்சி முறை கொடுமையானதன்று. ஆட்சியைப் பெற இயல்பான உரிமை பெற்றிராத அவர்கள், தமது படை வலிமை காரணமாக ஆட்சிப்பீடத்திலமர்ந்ததால் அம்முறையை ஒட்டி அச்சொல் பயன்படுத்தப்பெற்றது. அவர்கள் ஆட்சியின்கீழ் மக்கள் ஒவ்வொரு துறையிலும் பல நலங்களைப் பெற்றனர். சுருங்கக்கூறின் குடியாட்சிக்கு அடிப்படையாக உள்ள பல சீர்திருத்தங்களை அவர்கள் ஏற்படுத்தினர். இக்காலச் சருவாதிகார முறைக்கும் கிரேக்கக் கொடுங்கோன்மைக்கும் சில ஒற்றுமைப் பண்புகளிருப்பது நோக்கற்பாலது. உரிமை உணர்ச்சியும், சட்ட முறை ஆட்சியில் விருப்பமும் கொண்ட கிரேக்கர், 'கொடுங்கோன்மையை' நீண்ட காலம் ஆதரிக்கவில்லை. சிறந்த கிரேக்க நகர அரசரான இசுபார்ட்டா (Sparta) கொடுங்கோன்மையை அழிக்க முயன்று வெற்றி பெற்றது.

கிரீசின் சிறப்பான நகர அரசுகளாக இசுபார்ட்டா (Sparta), ஏதென்சு (Athens) தீப்சு, மாசிடோனியா என்ற நான்கு பகுதிகள் விளங்கின.

**இசுபார்ட்டா:** ஏறக்குறைய கி.மு. 1100-இல் பெலப்பொனீசசு என்ற பகுதியில் புகுந்த தோரிய (Dorian) இனத்தியக் கிரேக்கர், இசுபார்ட்டா நகரை அமைத்துச் சிறிது சிறிதாக அதன் ஆதிக்கத்தைப் பெருக்கலாயினர். கி.மு. 6-ஆம் நூற்றாண்டுக்குள் அந்நகர் பெலப்பொனீசசின் தலைமைப் பதவியை எய்தியவுடன் கிரேக்க உலகிலேயே தலைசிறந்த

இராணுவ வலிமை பெற்ற நாடு என்ற புகழையு மடைந்தது. இணையான அதிகாரங்களைப் பெற்ற இருமன்னரும், ஆலோசனைக்குழு ஒன்றும், மக்கட் சபை ஒன்றும், ஆண்டுதோறும் அச்சபையில் தேர்ந் தெடுக்கப்பட்ட ஐவர்குழு ஒன்றும் இசுபார்ட்டாவின் ஆட்சி அமைப்பு உறுப்புகளாம். ஆனால், உண்மையில் பிரபுக்கள் ஆதிக்கமே அங்கு நிலவியது. இசுபார்ட்டா வின் சிறப்பான குறிக்கோள் வலிமை வாய்ந்த வீரரைத் தோற்றுவிப்பதேயாகும். ஒரு குழந்தை பிறந்தவுடன் அரசியலாரால் சோதிக்கப்பட்டு அது வலிமை வாய்ந்ததாக இராவிட்டால் உடனே கொல்லப்படும். ஒவ்வொருவரும் தனது ஏழாம் வயது வரையில் தான் பெற்றோரிடம் வாழ முடி யும். பின்னர்க் கட்டாயப் போர்ப்பயிற்சியை மேற் கொள்ள வேண்டும். கடுமையான போர்ப்பயிற்சி முறை காரணமாகச் சிலர் இறந்து போவதுமுண்டு. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியதைத் தாமே தயாரித்துக்கொள்வர். பெண்டிரும் போர்ப்பயிற்சி பெற்றனர். நாட்டுக்கு வலிமை வாய்ந்த மக்களை அளிக்கும் குறிக்கோளுடன் ஆண்மகன் அவனது முப்பதாம் ஆண்டுக்குமேல் மணம்புரிந்துகொள்ள அனுமதிக்கப்படுவான். இத்தகைய ஒழுக்க முறை காரணமாக இசுபார்ட்டா இணையற்ற படை வலிமையுடன் விளங்கியது. அங்குக் கலைஞர் களையோ அறிஞர்களையோ காண இயலாது. பல போர்கள் நடத்தி வெற்றிகள் பெற்று, இசுபார்ட்டா பெலப்பொனீசிய நாடுகளின் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி, கி.மு. 550 முதல் 370 வரை அதன் தலை வியாகத் திகழ்ந்தது.

**ஏதென்சு**: ஏதென்சு நகர அரசின் வரலாறு இசு பார்ட்டாவினுடையதைப் போலன்றிப் பலதுறை களிலும் சிறப்பு வாய்ந்ததாகும். குடியாட்சியை மிகப் பண்டைக் காலத்திலேயே அமைத்து வழி



ஏதென்சு நகரம்



ஏதென்சு நகரம்

காட்டிய தனிப்பெரும் புகழ் அந்நகருக்கு உரியது. கி.மு. 11-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு அங்குக் கோனாட்சி மறைந்து மேன்மக்கள் அதிகாரம் ஓங்கியது. அவர்களுடைய ஆட்சி கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் கொடுமையாக மாறியதால் கிளர்ச்சிகள் ஏற்படவே, மக்களை மகிழ்விக்கப் புதிய சட்டங்கள் இயற்றப்பெற்றன. சோலன் என்ற அறிஞன், கி.மு. 594-இல் சட்டமியற்றும் பேரதிகாரத்தைப் பெற்று, நாட்டில் குடியாட்சி முறைக்கு அடிகோலினான். அதுகாறும் கடன் வாங்கித் திரும்பச் செலுத்த இயலாதோர் அடிமைகளாக்கப்பட்டு வந்தனர். அவர்தம் பெண்டிரும் விற்கப்பட்டனர். சோலன் அம்முறைகளை அடியோடு ஒழித்தான். பெற்றோர் தம் மக்களுக்கு யாதேனும் ஒரு தொழிலைக் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டுமென வற்புறுத்தப் பெற்றனர். ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ளக்கூடிய நிலத்தின் அளவு வரையறுக்கப்பட்டது. அரசியலில் பிரபுக்கள் சபையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரையுடைய சபை, சிறப்பான அதிகாரங்களைப் பெற்றது. ஆனால் மேன்மக்களின் செல்வாக்கு அடியோடு மறைந்து விடவில்லை. பொதுமக்களால் தெரிந்தெடுக்கப்பெற்ற அதிகாரிகளைக் கொண்ட ஈலியா (Heliaea) என்ற நீதிசபை தோற்றுவிக்கப் பெற்றது. பின்னர் கி.மு. 509-இல் கிளெய்சுதனீசு என்ற மற்றொரு தலைவன் தனது புதிய சீர்திருத்தங்களால் நாட்டில் குடியாட்சியை உறுதி அடையச் செய்தான். மக்களிடையே பிரிவினை மனப்பான்மை ஒழிந்து ஒற்றுமையும் சமநிலையும் ஏற்படும் வகையில் சட்டங்கள் பிறந்தன. நாட்டில் தனிப்பட்டோர் கொடுங்கோன்மையை நிறுவ முயற்சி செய்வதைத் தடுக்க, ஒரு புதிய சட்டம் கொண்டுவரப்பெற்றது. அதன்படி ஆண்டுதோறும் எந்த ஒரு குறிப்பிட்டவனை பெரும்பான்மையான மக்கள் நாட்டுக்கு இடையூறு தரக்கூடியவனாகக் கருதுகின்றனரோ அவன் நாடு கடத்தப்படுவான்.

இவ்வாறு வளர்ச்சி அடைந்த ஏதென்சுக் குடியரசுக்கு ஒரு பெரும் சோதனை விளைந்தது. தேரியசின் கீழ்ப் (Darius) பெருக்கமுற்று வந்த பாரசீகப் பேரரசு ஏதென்சுடன் போர் தொடுத்தது. அதீனியர் (ஏதென்சு மக்கள்) தளர்ச்சியுறாது பகைவருடன் பல போர்கள் நிகழ்த்தி இறுதியில் வெற்றி பெற்றனர். மராத்தன் (கி.மு. 490) தர்மாபிலே (480) சலாமிசு பிளாட்டியா (479) மைக்கேல் முதலிய இடங்களில் பாரசீகர் முறியடிக்கப்பெற்றனர். ஏதென்சின் அவ்வரிய சேவைகளால் கிரீசும் கிரேக்க நாகரிகமும் பாதுகாக்கப் பெற்றன. அந்நகரை வாழ்த்திப் போற்றிப்பல கிரேக்க அரசுகள் அதனுடைய தலைமையின் கீழ் கி.மு. 478-இல் ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்திக் கொள்ள முன்வந்தன. அக்கூட்டமைப்பு அதீனியப் பேரரசாக மாறியது.

**கிரீசின் பொற்காலம்**: பாரசீகப் போருக்குப்பின் கி.மு. 429 வரை ஏதென்சின் புகழ் அதன் உச்ச நிலையில் இருந்தது. கிரீசின் பொற்காலம் நிலவியது. ஏதென்சில் கி.மு. 442 முதல் 429 வரை முடிசூடா மன்னனாக இருந்த தனிப் பெருந்தலைவனான பெரிக்கிளீசு, மக்களாதரவைப் பெற்று நாட்டின் உயர்வுக்காக ஓயாது உழைத்து வந்தான். அவன் காலத்தில் ஏதென்சில் குடியாட்சி நிறைவுற்ற நிலையிலிருந்தது. அதற்கேற்பப் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அக்காலத்திய சிறப்புகள் பலப்பல.

**இலக்கியம்**: **கல்வியறிவு**; அக்காலத்திய கல்வி உயர்வுக்குச் சான்றாகப் பல நாடகாசிரியர்கள் விளங்கினர். ஆசுகிலசு (Aeschyles, கி.மு. 525-456). சோபாகிளீசு (Sophocles, கி.மு.496-406), யூரிபிடீசு (Euripides, கி.மு.480-406), என்னும் மூவரும் துன்பியல் நாடகங்கள் இயற்றுவதில் சிறந்தவர்களாக விளங்கினர். அவர்கள் இயற்றிய 300 நாடகங்களில் 32 மட்டுமே கிடைத்துள்ளன. இன்பியல் நாடகாசிரியரான அரிட்டோபான்சு (Aritophones, கி.மு. 448-385) அக்காலத்திய குறைபாடுகளை நயமாகக் கண்டிப்பதில் புகழ் வாய்ந்தவர். மேலும், வரலாற்றின் தந்தை எனப் புகழப்பெறும் எரடோட்டசு (Herodotus - 484-425) நீண்ட காலம் ஏதென்சில் வாழ்ந்தவர். (காண்க: எரடோட்டசு). தூசிடிடீசு (Thucydides, கி.மு.471-401) என்னும் மற்றோர் வரலாற்றறிஞரும் ஏதென்சைச் சேர்ந்தவர். பெரிக்ளீசு (Pericles) காலத்திய மக்களிடையே மூடநம்பிக்கைகள் மறைந்து யாவற்றுக்கும் காரணங்களை அறியும் ஆர்வம் காணப்பெற்றது. மெய் விளக்கியலார்' (Sophiots என்ற குழுவினர் முன்னேற்றக் கருத்துகளைப் பரப்பி வந்தனர். காரணங்களை ஆராயும் திறமையும், தலைசிறந்த பண்பாடும் பெற்று விளங்கிய சாக்கிரட்டீசு (Socrates கி.மு.469-399) என்ற பெரியார் அழியாப் புகழ் பெற்றவர். (காண்க: சாக்ரட்டீசு) ஒருவன் முதலில் தன்னை உணர்தல் இன்றியமையாததென அவர் வற்புறுத்தினார். ஆடவர், பெண்டிர் யாவரையும் நற்குண, நற்செய்கையுடையவர்களாகச் செய்வதே அவர் நோக்கமாயிருந்தது. நூலெதுவும் அவர் ஆக்கவில்லையாயினும் அவர் உரைகள் மக்களைக் காந்தம் போல ஈர்த்தன. உரையாடலும் காரணங் காட்டி வாதிப்பதும் அவரது சொற்பொழிவு முறைகளாம். இதையொட்டியே 'சாக்கிரட்டீசு முறை'

என்ற சொற்றொடர் வழக்கிலிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தகும். அச்சத்தை அகற்றி மக்களின் உரிமைக்காக உழைத்து இறுதியில் தன்னுயிரையும் தன் கொள்கைக்காகத் தியாகம் செய்த பெரியார் அவர். ஆனால், அவர் பெருமை உணராத தன்னலக்காரர்கள் அவர்மீது குற்றங்களைச் சுமத்தி அவரைக் கொலைத் தண்டனைக் குள்ளாக்கினர். சிறையிலிருந்து தப்புவதற்குச் சில வழிகளை அவர் நண்பர்கள் கூறியதைப் புறக்கணித்து உண்மைக்குப் போராடிய அவ்வுத்தமர் கி.மு.399-இல் தம் எழுபதாம் வயதில், நஞ்சையுண்டு உயிர் நீத்தார். கடமையினின்று வழுவுதல் தீது என்ற கொள்கையைக் கடைசிவரை கடைப்பிடித்த அவரது அரிய அறவுரைகளை அவர் மாணாக்கரான பிளேட்டோ தம் நூல்கள் மூலம் பிற்காலத்தவர் அறியச் செய்தார்.

**கலைகள்**: கிரேக்கரின் கலைத்திறன் மிகவும் போற்றற்குரியது. பல உருவச் சிலைகளும் கோயில்களும் நீண்ட அரண்களும் பல்வேறு சிற்ப வேலைகளும் அவர்கள் திறமைக்குச் சான்றுகளாக உள்ளன. கட்டடக் கலை மிகவும் போற்றற்குரிய சிறப்பெய்தியது. அழகும் எளிமையும் வாய்ந்த வீடுகள் கட்டப்பெற்றன. அதீனாக் கடவுளின் கோயில் இணையற்ற புகழ் வாய்ந்தது. ஏதென்சின் கோயில்களின் அழகு யாவும் கிரேக்கரின் கட்டடக் கலை உயர்வுக்குத் தக்க சான்றுகளாம். பைடியசு (Phedeis, கி.மு. 490–432) என்ற கிரேக்கச் சிற்பி பொன்னாலும் தந்தத்தாலும் 60 அடி உயரமுள்ள கடவுட் சிலை ஒன்றைச் செய்தான். கிரேக்கக் கடவுளான சியசு (Zeus) என்பாரின் உருவச்சிலை அது. ஒலிம்பியா என்னுமிடத்தில் பலராலும் வியந்து போற்றப்படும் நிலையில் அது வீற்றிருந்தது. பண்டைப் பெருவிந்தைகளில் இதுவும் ஒன்றாகும். சிற்பத்துறையில் ஏதென்சு ஈடுஇணையற்ற நிலையில் விளங்கி வந்ததுடன், கலைஞர்களையும் அறிஞர்களையும் கொண்டு தன்னால் இயன்றதனைத்தையும் உலகிற்குச் செய்துவந்தது. அற்புதமான அக்காலக் கட்டடங்களைக் கண்டு யாவரும் விம்மிதமடைவர். உள்நாட்டில், ஆடை உற்பத்தி, தோல் பதனிடுதல், அணிகலன்கள் செய்தல், மரவேலை மட்பாண்ட வேலை முதலிய பல தொழில்கள் சிறப்புற விளங்கின. வாணிகம் பெருக்கமுற்றிருந்தது.

**பண்பாடு**: அனைத்திற்கும் மேலாக அதீனிய மக்களின் பண்பாட்டையறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். பெரிக்ளீசு கி.மு. 431-இல் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவு அதீனியரின் குறிக்கோளை நன்கு விளக்கி நிற்கும். அது வருமாறு:-

'எங்கள் நகரம், போர்க்காலத்திலும் அமைதிக் காலத்திலும் ஒரே நிலையாக, போற்றற்குரிய மேன்மை பொருந்தியுளது. ஏனெனின் அழகு பொருந்திய யாவற்றையும் நாங்கள் விரும்புவதுடன் ஊக்கமும் வீரமும் இழக்காமல் மனத்தைப் பண்படுத்துகிறோம். ஏழ்மை நிலையை ஒப்புக்கொள்வதை நாங்கள் சிறுமையாகக் கருதுவதில்லை. ஆனால், அந்நிலையை ஒழிக்க முயற்சி செய்யாதிருத்தலையே, யாம் உண்மையான சிறுமை என்று கருதுகிறோம். பொதுக்காரியங்களில் கருத்தைச் செலுத்தாதிருக்கும் ஒருவன் தீதற்றவன் என்று நாங்கள் கருதுவதில்லை; அவன் பயனற்றவன் என்பதே எங்கள் எண்ணம். இப்பெருமை எங்களுக்கே உரியதாகும். தனித்த கற்பனைத்திறம் வாய்ந்தோர் மிகுதியாக எங்களிடம் இல்லையெனினும், நாங்கள் யாவரும் நுண்மாண் நுழைபுலம் பெற்றவர்கள். எத்துறையிலும் தனித்து நிற்கும் குறுகிய மனப்பான்மை எம்மிடமில்லை. எங்கள் அரசின் பெருமை காரணமாகப் பிறநாடுகளின் நலன்களை, எம்முடையன போலவே பயன்படுத்திக் கொள்கிறோம். அது போலவே எங்கள் நகரமும் உலகினருக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. எமது நாட்டு மறைச் செய்திகளைப் பகைவர்களறிந்து அவற்றால் அவர்கள் நன்மையடையக் கூடும் என அஞ்சி, அயலாரை, எம்மிடமிருந்து எதையும் கற்றுக் கொள்ளலாகாது என்று வெளியேற்றும் பழக்கம் எம்மிடமில்லை. ஒவ்வொரு நாட்டையும் கடலையும் எமது பேராண்மைக்கு இடமளிக்குமாறு கட்டுப்படுத்தியுள்ளோம். எங்கள் நட்புக்கும் பகைமைக்கும் ஏற்ற நிலையான நினைவுச் சின்னங்களை எங்கும் ஏற்படுத்தியுள்ளோம்,'

இவ்வாறு விளக்கப்படும் குறிக்கோள்களில் பெரும்பாலும் உண்மையுள்ளதெனவே கூறவேண்டும். பெரிக்ளீசின்கீழ் ஏதென்சு, கடல் வலிமையுள்ள ஒரு பேரரசின் நடுநாயகமாகவும், வாணிகம் தொழிற் சிறப்புப் பொருந்திய நகராகவும், சிறந்த குடியரசாகவும், அறிவு அழகுக் கலைகளின் தலைநகராகவும் திகழ்ந்தது. அக்காலத்திய ஏதென்சின் பொற்காலம் கிரீசின் பொற்காலம் என்றே கூறலாம்.

**கிரீசில் உள்நாட்டுப்போர்**: ஒற்றுமையின்மை சீர்குலைவுக்குக் காரணமாகுமென்பதை வரலாற்று நிகழ்ச்சிகள் பல தெளிவாக அறிவுறுத்துகின்றன. கிரேக்கர் வரலாறு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும். பல்வேறு துறைகளில் உயர்ந்த நாகரிகப் பண்புகளை உலகுக்கு அளித்த கிரேக்கர், தம்மிடையே ஒற்றுமையான வாழ்க்கையை மேற்

கொள்ளாததால் சிறப்பிழக்கலாயினர். பெரிக்கிளீசு காலத்திய மேன்மைக்குப்பிறகு கிரீசில் பெருங்குழப் பங்களேற்பட்டன. தலைமைப் பதவிக்காக, ஒரு நகர அரசு மற்றதை அழிக்க முற்பட்டது. இவ்வாறு தமக் குள் புரிந்து கொண்ட போர், அயல்நாட்டுப் படை யெடுப்பாளருக்கு மிகவும் ஏற்ற நிலையை அளித் தது. அதீனியர், குடியாட்சியைத் தம் நாட்டில் ஏற் படுத்தியிருந்த போதிலும், தாம் தலைமை வகித்த பேரரசுக்குட்பட்ட இராச்சியங்களில் அத்தகைய ஆட்சி ஏற்படுவதை விரும்பவில்லை. அவைகள் தம் உரிமைகளை இழந்து ஏதென்சுக்குக் கட்டுப்பட் டிருக்குமாறு செய்யப்பெற்றிருந்தன. ஒரு குடியரசு பேரரசாக மாறிப் பிறநாடுகள்மீது ஆதிக்கம் செலுத் திய அந்நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். ஒருசில பிரபுக்களின் ஆட்சியைப் பெற்றிருந்த இசுபார்ட்டா ஏதென்சுடன் நீண்டகாலமாகப் பகைமை பூண்டிருந் தது. அதீனிய ஆட்சிமுறைக்குறைபாடுகளைப் பயன் படுத்திக் கொண்டு, இசுபார்ட்டா ஏதென்சின் பகை வருக்கு உதவி செய்து வந்தது. அதனால் இரு அரசு களுக்குமிடையே பெரும் போர் கி.மு. 431 முதல் 404 வரை நிகழ்ந்தது. இது பெலப்பொனீசியப் போர் எனப்படும். பெரிக்கிளீசு கி.மு.429-இல் இறந்துவிட்ட படியால் பின்போந்த தலைவர்கள் அவர்தம் சிறப் பான போர் முறைகளைப் பின்பற்றாது மனம் போனவாறு கொள்கைகளை மாற்றிக் கொண்ட னர். முடிவில் அகுசுப்பாட்டமி என்ற இடத் தில் ஏதென்சு, இசுபார்ட்டாவுக்கு அடிபணிந் தது. இசுபார்ட்டா, கிரீசின் தலைமைப் பதவி யைப் பெற்று கி.மு. 371 வரை கொடுங் கோலாட்சி புரிந்தது. குடியாட்சிச் சின்னங்கள் அழி வுற்றன. ஆசிய கிரேக்கர் மீண்டும் பாரசீகராட்சிக்கு உட்பட்டனர். இசுபார்ட்டியர், தாம் மிகுதியாகப் பெற்ற செல்வச்செருக்கினாலும், படை வலிமைப் பெருமையினாலும் வலுக்கட்டாய முறைகளைக் கையாண்டு கிரேக்க நகரங்கள் பலவற்றின் உரிமை களை அழித்துச் சருவாதிகாரம் செலுத்தலாயினர். இசுபார்ட்டாவை எதிர்த்து, தீப்சு (Thebes) என்ற அரசு போர் புரியத் தொடங்கியது. பெலோபிடாசு, எபாமினாண்டாசு என்ற இரு பெரும் தீப்சு வீரர் களின் விடாமுயற்சிகளின் விளைவாக, கி.மு. 371-இல் இலியூக்ட்ரா(Leuctra) என்ற இடத்தில் இசுபார்ட்டா முறியடிக்கப்பட்டது. பின்னர் ஏற்பட்ட தீப்சின் தலைமைப் பதவி பத்து ஆண்டுகளே நீடித்தது.மேற் கூறிய இரு தலைவர்களுக்குப்பின் ஆற்றல் வாய்ந்த வீரரெவரும் தீப்சில் தோன்றவில்லை. ஆகவே, தீப் சின் வீழ்ச்சிக்குப் பிறகு கிரீசில் அரசியல் குழப்பங்கள் மிகுந்தன. இந்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு வடக்கிலிருந்து மாசிடோனியா என்ற நாட்டின் மன் னன் இரண்டாம் பிலிப்பு கிரீசில் படையெடுத்து கி.மு. 338-இல் கெரோனியா என்ற இடத்தில் வெற் றிக் கொடி நாட்டினான். கிரீசு உரிமை இழந்து மாசிடோனியாவுக்கு அடிபணிந்தது. ஒற்றுமையின் மைக்குத் தகுந்த தண்டனையே அது. ஆனால் கிரேக்க நாகரிகத்தை மாசிடோனியர் போற்றி வளர்த்தனர். கிரீசை வென்ற பிலிப்பு அந்நாட்டை நீண்ட காலம் ஆட்சி புரியவில்லை. அவன் கி. மு. 336-இல் தன் மனைவியின் சதி காரணமாகக் கொலையுண்டான். பிலிப்பின் மகன் அலெக்சாந்தர் வட மேற்கு இந்தியா வரை விரிந்த பேரரசை ஏற் படுத்திவிட்டு இறந்தான். காண்க: அலெக்சாந்தர்.

**அலெக்சாந்தருக்குப்பின்:** அலெக்சாந்தருக்குப் பின் அவனுடைய தானைத் தலைவர்கள் தமக்குள் கிரேக்கப் பேரரசைப் பிரித்துக் கொண்டனர். பேர ரசு மூன்று பெரும் பிரிவுகளாகியது. அப்பிரிவுகளா வன: மாசிடோனியாவும், கிரீசும் அடங்கிய ஐரோப் பியப் பகுதி, எகிப்து, ஆசியப் பகுதிகள்.

கிரீசிலும் மாசிடோனியாவிலும் பண்டைய ஒற்று மையின்மை மீண்டும் வளர்ந்தது. இறுதியில் அவை உரோமாபுரிக்கு அடிபணிந்தன.

அலெக்சாந்தரின் இறப்பிற்குப் பிற்பட்ட மூன்று நூற்றாண்டுகளில் எல்லென்னியப் பண்புகள் (பரந்த கிரேக்கப் பண்புகள்) பரவி வந்ததின் காரணமாகப் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. அக்காலப் பகுதியை 'எல்லெனிய காலம்' (Hellenistic) என்று குறிப்பிடு வர். அக்காலத்தில் முன்னேற்றமடைந்த பல பொரு ளாதாரக் கருத்துகள் நிலவின. மிகவும் சிறப்பாகச் சமூகப் பொதுஉடைமைக் கொள்கை, மக்கட்டொ கைக் குறைப்பு வழிகள், பெண்டிருக்கு உரிமை அளித் தல், வேலை நிறுத்தங்கள் முதலியன குறிப்பிடத்தக் கன. மேலும் அக்கால அறிவியல் உயர்வு போற்றற் குரியது. தியோகிரிதசு என்ற சிறந்த கிரேக்கக் கவி (கி.மு. 300-245) அலெக்சாந்தரியாவில் (எகிப்து) நீண்ட காலம் வாழ்ந்தார். கி.பி. 50 முதல் 120வரை வாழ்ந்த புளூடார்க்கு (Plutarch) கிரேக்க நகரான கெரோனியாவின் சிறந்த எழுத்தாளர். புகழ்வாய்ந்த யூக்ளிட்டு (Euclid) ஏறத்தாழ கி.மு. 300-இல் தம் வடிவக் கணித நூலை இயற்றினார். அலெக்சாந்திரி யாவில் கல்வி பயின்ற ஆர்கிமிடீசு (கி. மு. 287-212) என்ற சிறந்த கணித நூலறிஞர் பல புதிய செய்தி களைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளார். கி.மு. இரண் டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த இப்பாரீ சுசு (Hipparchus) என்ற வானநூலறிஞரும் குறிப் பிடத்தக்க பெருமை வாய்ந்தவரே. மருத்துவத் துறையில் வல்ல பெரும் பெரியோரும் அக்காலத்தில் விளங்கினர். அலெக்சாந்திரியா (கிரேக்கர் தொடர்பு காரணமாக) அத்துறையில் அரிய தொண்டுகளாற்றி

யுள்ளது. காலன் என்ற அறிஞர் கி. மு. 150-இல் அது காறும் காணப்பெற்ற மருத்துவச் செய்திகளை ஒன்று திரட்டி எழுதி வைத்தார். ஆயிரம் ஆண்டுகட்கு மேலாக இவரே மருத்துவத்துறையில் தலை சிறந்த மேற்கோளாக விளங்கினார். மக்களின் நில நூலறிவும் அக்காலத்தில் பெருகி வந்தது. அலெக் சாந்திரியா நூல்நிலையத் தலைவர் எரதோசுத்த னீசு என்பார் புதிய நூலாராய்ச்சிகளைப் பற்றிய செய்திகளை ஒன்று சேர்த்துப் பிறருக்குப் பயன்பெறச் செய்தது போற்றற்குரியது. பூமியின் சுற்றளவை (சில ஆயிரம் மைல்கள் வேறுபாட்டுடன்) இவர் அறிந்து கூறினார். கி. மு. 63 முதல் கி. பி. 24 வரை வாழ்ந்த இசுடிராபோ (Strabo) எழுதிய நில நூல் பல சிறப்பான செய்திகளைக் கூறும். பூமி, ஞாயிற்றைச் சுற்றி வருகிறதென்ற உண்மையை, கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், சமாசுத்தீவின் (Samos) அரிசுடார்க்கசு என்ற அறிஞர் அறி வித்ததும் ஈண்டு நோக்கற்பாலது. எல்லெனியக் காலத்தில் பல தத்துவச் செய்திகளும் அறியப்பட் டிருந்தன. ஏதென்சைச் சேர்ந்த எபிகூரசு என்ற மெய்யறிஞர் (கி.மு. 341-270) எளிய வாழ்க்கையின் இன்றியமையாமையைப் பற்றியும் அச்சமற்ற வாழ்க்கையின் சிறப்பைப் பற்றியும் கற்பித்தார். அவர் மாணாக்கரால் எபிகூரிய தத்துவம் மாறுதல டைந்தது. சினிகர் என்ற குழுவினர் மக்களின் சீலத் தைப் பற்றி அரிய விரிவுரைகளாற்றி வந்தனர். இன்ப துன்பத்தைப் பாராட்டாது நேர்மை வாழ்வை மேற் கொள்ளுமாறு இன்ப துன்பச் சம நோக்காளர் (Stoics) என்னும் கொள்கையினர் வற்புறுத்தினர்.

எல்லெனிய உலகில் பல சிறப்புக்களுடன் பல கேடுகளும் காணப்பெற்றன. சிறப்பாக ஒற்றுமை யின்மை குறிப்பிடத்தக்கது. அதன் விளைவாக ஒன்றன்பின் ஒன்றாகக் கிரீசு முதலிய பல நாடுகள் உரோமாபுரிக்கு அடிபணிய நேரிட்டன.

ஐரோப்பாவில், பைசாண்டியப் பேரரசு தோன் றியபின், கிரேக்க நாகரிகமும் பண்பாடும், கிரீசி லிருந்து கான்சுடாண்டிநோபிளுக்குப் பரவின. துருக் கியர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் மத்தியில் கிரேக்கப் பகுதிகளைத் தம்மடிப்படுத்தினர். கிரேக் கர்களுக்குச் சமயத்துறையில் சுதந்திரம் வழங்கப் பட்ட போதிலும் துருக்கிய ஆட்சி கிரேக்கர்களுக்குக் கொடுமையானதாகவே இருந்தது. கிரேக்கர் கி.மு. 182-இல் தமது சுதந்திரத்திற்காகக் கிளர்ச்சி செய் தனர். அச்சுதந்திரப் போருக்குத் தெமட்ரியசு இப்சி லாண்டி (Demetrios Ypsilanti) என்பவர் தலைமை தாங்கினார். இறுதியில், ஆங்கிலேயர், பிரெஞ்சியர், உருசியர் ஆகியோர்களின் உதவி கிடைத்ததால் கிரீசு கி.பி. 1832-இல் சுதந்திரம் பெற்றது. ஒரு பவேரிய இளவரசன் முதலாம் ஆட்டோ (Otto) சுதந்திரக்கிரீசின் முதல் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். கி.பி. 1862 முதல் 1913 வரை ஒரு தேனிய இளவரசன் முதலாம் சார்சு ஆட்சி நடத்தி னான். அவன் கி.பி.1864-இல் ஒரே அவையை உடைய ஒரு சட்டசபையைக் கொண்ட புதிய அரசியல் அமைப்பைக் கிரீசுக்கு வழங்கினான். முதலாம் உலகப் போர்க் காலத்தில் கிரீசில் ஆட்சிபுரிந்த மன்னன் முதலாம் கான்சுடண்டைன், நொதுமல் கொள்கை யைப் பின்பற்றினான். உள் நாட்டில் ஒரு கட்சி யினர் அதை விரும்பாமல், இங்கிலாந்து முதலிய நேச நாடுகளுக்கு உதவ வேண்டுமென்று விரும்பி னர். இந்தக் கட்சியினர் முயற்சியால் 1917-இல் கிரேக்க மன்னன் பதவியினின்று அகற்றப் பட்டான். உலகப்போரின் முடிவில் கிரீசு புரிந்த உதவிக்காகப் பல்கேரியாவிலிருந்தும் துருக்கியிலிருந்தும் சில பகுதி கள் அதற்குக் கிடைத்தன. இரு உலகப் போர் களுக்குமிடைப்பட்ட காலத்தில் கிரீசில் பொருளா தார நெருக்கடியும் அரசியற் குழப்பமும் மிகுந்திருந் தன. கிரீசு 1924-இல் முடியாட்சியைவிட்டுக் குடியாட் சியாக மாறியது. ஆனால், 1935 வரைதான் அந்த அரசியலமைப்பும் நீடித்தது. அந்த ஆண்டில் இரண் டாம் சார்சு மன்னன் (George II) திரும்பி வந்து மன்னனாக அமர்ந்தான். பிரதம அமைச்சராக இருந்த அயோன்னிசு மெடாக்சசு (Ioannis Metaxas) 1936 -இல் அரசனின் உதவியுடன் ஒரு சருவாதிகார ஆட்சியைக் கிரீசில் அமைத்தான்.

இரண்டாம் உலகப் போரில் இத்தாலியப் படை யும் செருமனிப் படையும் கிரீசில் புகுந்து ஆதிக் கம் செலுத்தலாயின. கிரீசின் நிலை 1941 மே மாதம் முதல் 1944அக்டோபர் மாதம் வரை வருந்தத் தக்கதாயிற்று. ஆங்கிலேயரின் உதவியையும், கொரில் லாப் போர்வீரர்களின் உதவியையும் அக்டோபர், 1944-இல் பெற்ற கிரேக்கர், அயல் நாட்டுப் படை களை வெளியேற்றினர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, கிரீசில் நிலையற்ற கூட்டு அரசாங்கங்கள் அமைந்திருந்தன. பொது உடைமைக் கொள்கையாளரின் தலைமையில் கொரில்லாப் போர் வீரர்கள், ஓர் உள்நாட்டுப் போரைநடத்தினர். உள்நாட்டுச் சீர்கேடுகளை அர சியலாரால் ஒழுங்கு படுத்த இயலவில்லை. அமெரிக் கக் குடியரசுத் தலைவர் துரூமன் (Truman) அறி வித்த 'துரூமன் கொள்கை' ப்படி கிரீசுக்கு இராணுவ உதவியும் பொருளாதார உதவியும் கிடைத்தன. அதனால், 1949-இல் உள்நாட்டுக் கலகக்காரர்கள் தோற்கடிக்கப்பெற்றனர். தெ.பா,

**பண்டைக்காலக் கிரேக்கக் கூட்டாட்சியும் அதன் இயல்பும்:** பண்டைக் காலத்தில் இசுரேலிய மக்களுக்கு அடுத்தபடியாகக் கூட்டாட்சி முறையில் சில பரிசோதனைகளைச் செய்தவர்கள் கிரேக்கர்களே. கிரேக்கர்கள் நிறுவிய சமூக அமைப்பு, இக்காலத்திய அளவிற் பெரிய அரசுகளைப் போலல்லாமல், பரப்பளவில் சிறிய, குறைந்த எண்ணிக்கையுடைய குடிமக்களையுடையதாயும், மக்கள் வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றின் செயல்களையும் கட்டுப்படுத்தக் கூடிய வரம்பில்லா முழு அதிகாரம் படைத்த அரசாங்கத்தையுடையதாயும் அடிமை வகுப்பாரைக் கொண்டதாயும் உள்ள நகரரசு என்னும் சமூக அமைப்பு ஆகும். ஏதென்சு, இசுபார்ட்டா, தீப்சு' போன்ற எல்லாக் கிரேக்க நகரரசுகளும், இத்தகைய இயல்புடையவையே, இத்தகைய சமூக அமைப்பினால் குடிமக்கள் யாவரும், பொதுப்பணிகளைக் கலந்து ஆராய்தல், நேரடியாக ஆட்சியில் பங்குபெறுதல்,பலவகை அரசியற் கருத்துகளையும் எண்ணி உருவாக்குதல் முதலிய பல நன்மைகளைப் பெற்றிருந்தபோதிலும் வரம்பற்ற சுதந்திரப்பற்று, நகரரசுகளுக்கிடையே ஒத்துழைப்பு இல்லாமை, போட்டி பொறாமை, பூசல் முதலிய தீங்குகளும் விளைந்தன. சாக்கிரட்டீசு, பிளேட்டோ, அரிசுடாட்டில் முதலிய அரசியலறிஞர்கள் ஏதென்சு நகரரசு என்ற சமூக அமைப்பிலே வாழ்ந்து, சிந்தித்து, அரிய பல அரசியற் கருத்துகளை உருவாக்கினாலும், நகரரசுகளுக்கிடையேதொடக்கமுதல்வளர்ந்து வந்த உட்பூசலின் (Stasis)விளைவாக அவற்றை இணைத்துக் கொள்ள மாசிடோனியாவின் அரசர்கள் பிலிப்பும், அலெக்சாந்தரும் பெரும்படைகளுடன் வந்து நகர அரசுகளைக் கைப்பற்றினர். அவர்களுக்குப் பின் உரோமும் கிரேக்க நகரரசுகளைக் பிடித்தன. நகர அரசுகள் மாசிடோனியாவுக்கு எதிராக அமைத்த கூட்டு கி.மு. 338-இல் மாசிடோனிய அரசர் அலெக்சாந்தரால் தகர்க்கப்பட்டது. பிற்பட்டகாலத்தில் உரோமானியப் படை எழுச்சிக் கெதிராகக் கிரேக்க நாடுகள் அக்கேயன் கழகம் (Achaean League) என ஒரு கூட்டமைப்பை கி.மு. 280க்கும், கி.மு. 146க்கும் இடைப்பட்ட காலத்தில் அமைந்திருந்தன. இக் கூட்டில் சேர்ந்திருந்த நகரரசுகள் ஒரு பொதுவான படையையும், பொதுப்படைத் தலைவரையும், வேறு சில பொது அமைப்புகளையும் ஏற்படுத்தியிருந்தன. ஆயினும், இதில் இக்காலக் கூட்டாட்சி இயல்புகள் எவையும் இல்லை; ஆகையால், இதனைக் கூட்டாட்சி என்று கூறுதலைவிட, இணைப்பாட்சி (Confederation), அல்லது நகரரசுகளின் கழகம் (Association of City-States) என்று கூறுதலே பொருந்தும்.

**கிரேக்கக் கூட்டாட்சி இயல்பைப் பற்றிய மதிப்பீடு:** பொதுவாகக் கிரேக்கர்களுக்கு ஓர் ஈடுபாட்டை அளித்த வாழ்க்கை, நகரரசிலே பங்கு கொண்டு ஆட்சியாளருக்காகப் பணி செய்து வாழும் வாழ்க்கையே ஆகும்;இவ்வாழ்க்கை வாழும்சமூகமே உயர்ந்த சமூகமென்றும், இத்தகைய சமூகம் வாழுதற்கேற்ற சமூக அமைப்பு நகரரசே என்றும் அவர்கள் கருதியதால், அவர்கள் கூட்டாட்சி என்ற அமைப்பையும் கோட்பாட்டையும் தங்களுடைய நகரரசு வாழ்க்கையை அழிப்பதாக எண்ணி, அதை அச்சத்துடனும் வெறுப்புடனும் ஒதுக்கினர். எந்தச் சூழ்நிலையிலும் தங்களுடைய நகரரசுச் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காத அவர்களுடைய மனப்பான்மையின் காரணமாகக் கூட்டாட்சி என்ற அரசியலமைப்பு தோன்ற வழி ஏற்படவில்லை; தற்காப்புக்காக மட்டும் அவர்கள் ஏற்படுத்திய இணைப்பு அல்லது கழகம் வலுவற்ற ஒன்றாகும். நகரரசு என்ற சமூக அமைப்பு தன்னிறைவு உள்ள கூறு என்று (Self-Sufficing) அவர்கள் எண்ணினர். அது அதைவிட அளவிற் பெரிய தன்னிறைவுத் தகுதியுடைய அரசியற் கூற்றில் இணைக்கப்படுதல் வேண்டுமென்று சூழ்நிலைகள் உணர்த்தியதை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தவறிவிட்டனர். அறிஞர்களான பிளேட்டோவும் அரிசுடாட்டிலும்கூட நகரரசு ஒன்றையே தங்களுடைய ஒழுக்க வளர்ச்சிக்குரிய அமைப்பாகக் கருதியதனால், அவர்கள் உருவாக்கிய அரசியற் கருத்துகளும் நகரரசு என்ற எல்லைக்கு உட்பட்டவையே ஆகும். கிரேக்க நகரரசுகள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் தன்னிறைவு பெற்று, நாகரிகத்தில் வளருதல் வேண்டுமாயின், அவை தனித்து வாழ்தல் கூடாது. அவை அரசியல் நோக்கத்துக்காகக் கூட்டுச் சேர்ந்த போதும், அவை ஒவ்வொன்றும் தத்தம் சுதந்திரத்தை இழக்காமல், அவை அமைத்த கூட்டு வெற்றி பெறுதல் இயலாது என்பதும் தெளிவாயிற்று. ஆகையால் அவர்கள் அமைத்த கூட்டமைப்பு நிலையான கூட்டாட்சி நாடாக இல்லை. கிரேக்க நகரரசுகளை மாசிடோனியா, உரோம் போன்ற பெரிய நாடுகள் தாக்கிக் கைப்பற்றாமல், அவற்றைச் சுதந்திரமாக விட்டிருந்தாலும், கிரேக்க நகரரசுகளால் ஒரு திறமான கூட்டாட்சி அரசாங்கத்தை நிறுவ இயலாது என்று அரசியலாசிரியர்கள் கருதுகின்றனர். பா.சூ.

**இன்றைய வரலாறு** கிரீசு உலக அரசியலில் மேற்குக் கூட்டணி நாடுகளைச் சேர்ந்தது. ஐரோப்பியக் குழுவிலும், வடக்கு அட்லாண்டிக்கு உடன்பாட்டு அமைப்பிலும் (1952 முதல்) ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்திலும் (E.E.C) (1962 முதல்) இது உறுப்புநாடாக உள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கிரீசு, (Greece) அதைச் சுற்றியுள்ள நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளை நோக்குங்

கால், இந்நாடு மிகுந்த இடையூறுகளுக்கு உட்பட்டது என்றே கூறவேண்டும். இந்நாட்டின் வடக்கில் உள்ள மூன்று அண்டை நாடுகள் பொதுஉடைமை நாடுகள். அம் மூன்று நாடுகளும் 1944 முதல் 1949 வரை கிரீசில் நடந்த உள்நாட்டுப் போரில் கிரேக்கப் பொதுஉடைமைக் கட்சியினருக்கு உதவின. மேலும், கிரீசின் எல்லைகள் தொடர்பாகவும் அயல்நாடுகளுடன் சச்சரவுகள் செய்து கொண்டிருக்கும் நிலையில் இந்நாடு உள்ளது. யூகோசுலேவியா, பல்கேரியா முதலிய நாடுகளுடன் நிலப்பகுதி உரிமைச் சச்சரவுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சைப்ரசின் நிலை பற்றித் துருக்கிக்கும் கிரீசுக்கும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. மத்தியகிழக்கில் பல கிரேக்கர்கள் இருப்பதாலும், கிரேக்க வைதிகத் திருச்சபையின் தாக்கத்தாலும், இசுரேலுடனும் அரேபிய நாடுகளுடனும் கிரீசு நல்லுறவு பூண்டுள்ளது.

கலைப்பண்புகளைப் பொறுத்தவரை கிரேக்கர்கள் எப்பொழுதுமே தனித்து நிற்க விரும்பியதில்லை. நில அமைப்பும் மரபுமே இதற்குச்சிறப்பானகாரணங்களாகும். அயலவர் நாகரிகப் பண்புகளின் சிறப்பியல்புகளைக் கிரேக்கர்கள் தம்மிடம் நிலைக்கச் செய்தமை பற்றி இந்நாட்டு வரலாறு பேசுகிறது. அது போலவே தமது பண்பாட்டைப் பிறருக்குப் பயனுறச் செய்வதிலும் இவர்கள் தவறியதில்லை. பண்டைக் காலத்தில் கிரீசை அடிமைப்படுத்திய உரோமானியர், கிரேக்கப் பண்பாட்டுக்கு அடிபணிந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கிறித்துவ சமயத்தின் தோற்றத்திற்குப் பிறகு அச்சமயப் பண்பாட்டை ஏற்றுக் கொண்ட கிரேக்கர், தமது தனித்தன்மையை அதில் புகுத்தி, கிரேக்க வைதீக கிறித்தவ சமயத்தை நீண்டகாலம் விளங்கும்படி நிறுவியதையும் வரலாற்றில் காணலாம்.

துருக்கியர் 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் கிழக்கிலிருந்து கிரீசை வென்றனர். அப்பொழுது மேற்கே ஓடிய கிரேக்கர்கள் ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு உதவினர். உதுமானியர் ஆதிக்கம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தொடர்ந்து வந்தபோதும் கிரீசில் புத்துணர்ச்சி பரிணமித்தது. ஆதிக்க மனப்பான்மையை எதிர்த்துப் புரட்சிக் கலகங்கள் ஏற்பட்டன. தேசிய விடுதலைக் கிளர்ச்சி ஏற்பட்டது. கிரீசு 10 ஆண்டுப் புரட்சிக்குப் பிறகு கி.பி. 1830-இல் சுதந்திரம் பெற்றது. ஆனால், இப்பொழுது உள்ள கிரீசில் மூன்றில் ஒரு பங்குதான் விடுதலை பெற்றது. எஞ்சிய பகுதிகள் உதுமானியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. இயற்கை வளங்களை மிகுதியாகப் பெறாத கிரேக்கர்கள் பல இன்னல்களை ஏற்க வேண்டியவராயினர். அரசியலில் ஒற்றுமையின்மை, பொருளாதாரச் சிக்கல்கள் முதலியன இடையூறுகளைப் பெருக்கின. முடியாட்சியைப் பெற்றிருந்த இந்நாடு கி.பி. 1862-இல் மன்னனை இழந்தது. முதல் அரசகுலம் முடிவுற்றது. பின்னர் அமைந்த கோனாட்சிக் காலத்தில் மூன்று மன்னர்கள் நாடுகடத்தப் பெற்றனர். அரசனைக் கவிழ்க்கும் முயற்சிகள் அடிக்கடி இங்கு ஏற்பட்டன. இந்நாட்டின் புதியகால வரலாற்றைக் காணும்போது கிரேக்கர்களுக்காக வருந்தவேண்டிய நிலையுள்ளது. கிரீசு 1912 முதல் 1923 வரையிலும், பின்பு, 1940 முதல் 1949 வரையிலும் தொடர்ந்து போர்களில் ஈடுபட்டிருந்தது. இரண்டு உலகப் போர்க் காலங்களிலும் இந்நாடு இங்கிலாந்து முதலிய நேச நாடுகளுக்கு உதவியாக அவைகளுடன் சேர்ந்து போரில் இறங்கியது. இருபோர்களுக்குமிடைப்பட்ட காலத்தில் இந்நாடு நிலையற்ற தன்மையைப் பெற்றிருந்தது. இந்நாடு 1944 முதல் 1949 வரை நீடித்த உள்நாட்டுப் போரில் மிகுந்த இன்னல்களைப் பெற்று, பொதுஉடைமைக் கட்சி ஆதிக்கத்தை எதிர்த்து நின்று அதனின்றும் தப்பியது. மக்கள்தொகைப் பெருக்கத்தால் பொருளாதாரக் கேடுகள் மிகுந்தன. கிரேக்கர்கள் 1950-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் ஒருவாறு அமைதியையும் செழிப்பையும் பெற்றனர்.

இங்கு 1967 ஏப்பிரலில் பொதுஉடைமை ஆட்சியை அமைக்கக் கடும் முயற்சி நடந்தது. அதைத் தடுக்க ஓர் இராணுவத் திடீர்த் தாக்குதல் ஏற்பட்டு இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டது. அந்த அரசு, 1952-இல் ஏற்பட்டிருந்த அரசியலமைப்பை அகற்றியது. மன்னன் கான்சுடன்டைன் (Constantine) வெளிநாட்டுக்கு ஏக வேண்டியதாயிற்று. கிரீசில் 1973-இல் மக்களின் நேர்முகத் தீர்ப்பின்படி (Referendum) முடியாட்சி நீங்கிக் குடியரசு ஏற்பட்டது. குடியரசுக்கு 77.2 விழுக்காட்டினர் ஆதரவு அளித்தனர். இராணுவ ஆட்சி 1974-இல் முடிவுற்றது. சில மாறுதல்களுடன் 1952-ஆம் ஆண்டு அரசியல் சட்டம் கொண்டுவரப் பெற்றது. சட்டசபைத் தேர்தல்கள் 1974 நவம்பரில் நடைபெற்றன. புதிய அரசியலமைப்பு 1975-இல் செயல்முறைக்கு வந்தது. மறுபடியும் 1974-இல் மக்கள் வாக்கெடுப்பு நடைபெற்றது. அதில் 61.2 விழுக்காட்டினர் மன்னரில்லாத குடியாட்சிக்கே உடன்பாடு தெரிவித்தனர். புதிய மக்களாட்சிக்கட்சி 1981-ஆம் ஆண்டுத் தேர்தல்களின்படி 115 இடங்களையும், அகண்ட எல்லெனிய சமஉடைமை இயக்கக் கட்சி 172 இடங்களையும், பொதுஉடைமை வாதிகள் 13 இடங்களையும் பெற்றனர். இவ்வாறு அமைந்துள்ள இக்காலக் கிரீசுக்கு அலுவலக முறையில் எல்லெனியக் குடியரசு (Hellenic) என்பது பெயர். தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் குடியரசுத் தலைவராவர். அவருக்கு ஆலோசனை கூறப் பிரதம அமைச்சர்

தேர்ந்தெடுக்கப்படுகிறார். மக்களின் முக்கிய மொழி கிரேக்கம். கிழக்கு வைதீகக் கிறித்தவ சமயத்தவர் 97 விழுக்காட்டினர். முகம்மதியர் 1.3 விழுக்காட்டினர்.
தெ.பா.

**கல்வி**: கிரீசு நாட்டுச் சட்டப்படி 6 வயதிலிருந்து 11 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடக்கக் கல்வியும் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் தனித்தனியே ஆறாண்டுகள் ஆகும். பல்கலைக்கழகக் கல்வி பொதுவாக நாலாண்டுகள் அளிக்கப்படுகிறது. இந்த அடிப்படையான 6+6+4 என்னும் கல்வியமைப்போடு மழலையர் பள்ளிக் கல்வி ஒன்று முதல் ஈராண்டுவரை வழங்கப்படுகிறது. எல்லா நிலைகளிலும் 1963-இலிருந்து கல்வி இலவசமாக்கப்பட்டுள்ளது. கல்விப் பொறுப்பை அரசே ஏற்றுள்ளது.

கிரீசு நாட்டில் தொழிற் கல்வி முறை குறிப்பிடத்தக்கது. தொழிற் கல்வி 1976-ஆம் ஆண்டுக் கல்விச் சீர்திருத்தத்தின்படி, தொடக்கப் பள்ளிகளில் வழங்கப்படுவது இல்லை; உயர்நிலைப் பள்ளிகளில் முதல் ஈராண்டுகள் கழித்து மூன்றாண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வகைத் தொழிற் பயிற்சி பெற்ற மாணவர்கள் உயர் தொழில் நுட்பம் மற்றும் தொழிற் பயிற்சி மையங்களில் (Centres for Advanced Technical and Vocational Training) இரண்டு அல்லது மூன்றாண்டுகள் பயிலுகின்றனர். இவ்வகையான மையங்களுக்குப் பல்கலைக்கழகத் தகுதி ஏதும் இல்லை.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி கற்பித்தலியல் நிறுவனங்களில் (Pedagogical Academies) ஈராண்டுகள் வழங்கப்படுகின்றது. உயர்நிலைப் பள்ளிக் கல்வித் தகுதியுடைய மாணவர்கள் ஆசிரியர் பயிற்சியில் சேரலாம். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி ஏதும் வரையறுக்கப்படவில்லை. எனினும், எந்தப் பாடத்தில் ஆசிரியர் கற்பிக்கின்றாரோ, அந்தப் பாடத்தில் அவர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் இன்றியமையாதது.

கிரீசு நாட்டில் (1980-81) பல்கலைக்கழகங்கள் ஏதென்சு, கிரீட்டு (Crete), தெசாலோனிகி (Thessaloniki), தெராசு (Thrace), பத்ராசு (Patras), அயோனியா ஆகிய இடங்களில் உள்ளன. இந்நாட்டின் மிகப் பெரிய பல்கலைக்கழகமான சாலனிகாப் பல்கலைக்கழகம் (University of Salonika) 1925-இல் தோற்றுவிக்கப்பட்டது.

கிரேக்க மொழி இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. கதாரேவவுசா (Katharevousa) என்னும் பழைய இலக்கிய நூல்களின் மொழி அலுவலகப் பணிகளுக்கும் செய்தித்தாள்களுக்கும் பயன்படுத்தப் படுகிறது. 'தெமோடிகி' என்பது பேச்சு மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. கற்பித்தல், பாட நூல் எழுதுதல் ஆகியனவற்றுக்கும் அறிவியல், கணிதவியல் மற்றும் தொழில் நுட்பப் பாடங்களை அறிமுகப் படுத்துவதற்கும் 'தெமோடிகி' மொழியைப் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படுகிறது.
எஸ்.த.

**கிரேக்கமொழி**: உலகிலுள்ள மொழிகளை அவற்றின் அமைப்புக்களை யொட்டிப் பல மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்துவர். கிரேக்க மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். பாப்பு போன்ற மொழியியல் அறிஞர்கள் இம்மொழிக் குடும்பத்தை 'இந்தோ-செருமானிக்' என்று குறிப்பிட்டனர். இம்மொழிக் குடும்பத்திற்குத் தாமசு யெங்கு என்னும் அறிஞர்தான் 'இந்தோ-ஐரோப்பிய' என்னும் பெயரைச் சூட்டினார். இம் மொழிகளைக் 'கென்றம்' என்றும், 'சதம்' என்றும் இரு வகையாகப் பகுப்பர். இதனையே மேற்கு மொழிகள், கிழக்கு மொழிகள் எனக் கூறுவர். சதம் மொழிகளை பால்டோ-சிலாவிக்கு, இந்தோ-இரானியன், அல்பேனியன், ஆர்மேனியன் என மேலும் நான்கு பிரிவுகளாகப் பிரிப்பர். கிரேக்க மொழி 'கென்றம்' என்ற பிரிவில் அடங்கும்.

இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த கிரேக்க மொழி உலக மொழிகளுள் மிகப் பழமையான மொழியாகும். இது மிகப் பழமையான இலக்கியங்களைக் கொண்ட மொழி; தத்துவம், இன்பியல், உணர்ச்சிக் கவிதைகள் போன்ற பல்துறைகளிலும் தலைசிறந்த அறிஞர் பெருமக்களைப் பெற்ற மொழி. இம்மொழி பேசும் மக்களுள் எண்பது விழுக்காட்டினர் கிரீசு நாட்டிலும், சைப்ரசுத் தீவிலும் மற்றையோர் துருக்கிக் கரையோரப் பகுதியிலும் அலெக்சாந்திரியா, இத்தாலி, யூகோசுலேவியா உருமேனியா, பல்கேரியா போன்ற பல இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். கிரேக்க நாட்டிலும் சைப்ரசுத் தீவிலும் இதுவே அரசியல் மொழியாகும்.

கிரேக்க மொழியில் ஐந்து உயிர்களும் பத்தொன்பது மெய்களும் உள்ளன. இம்மொழியில் மூவகைப் பால்களும், மூவகை எண்களும் ஐந்து வேற்றுமைகளும் உள்ளன.

கிரேக்க மொழிக்கும் இலத்தீன் மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு

இம்மொழியில் கி.மு. 8–ஆம் நூற்றாண்டு முதலே கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கி.மு 14 –ஆம் நூற்றாண்டு இட்டைட்டுக் கல்வெட்டுக்களில் கிரேக்க மக்களைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

கிரேக்க மொழியில் பல கிளைமொழிகளைக் (Dialects) காணலாம். அவர்களிடையே தொடர் பின்மையால், அக்காலத்தில் பொது மொழி உருவாக வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. பேரரசன் பிலிப்புக் காலத்தில்தான் பொதுமொழி உருவாயிற்று. கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த இசுட்டிராபோ (Strabo) போன்றவர்கள் அயோலிக்கு (Aeolic), அயோனிக்கு (Ionic), தோரிக்கு (Doric), அட்டிக்கு (Attic) போன்ற நான்கு கிளைமொழிகள் இருந்தன வெனக் குறிப்பிடுகிறார்கள். வாக்கர்நாகல் (Wacker-nagel) போன்றோர் முப்பதுக்கு மேற்பட்ட கிளை மொழிகள் இருந்தனவெனக் குறிப்பிடுகின்றனர். இன்னும் சிலர் கிழக்கு, மேற்கு எனப் பிரித்துப் பல கிளை மொழிகளை இவற்றின்கீழ் வகைப்படுத்துவர். செமனோவு (Semenov) போன்றோர் நான்கு கிளை மொழிகள் இருந்தன வென்றும், அவற்றில் இலக்கியங்களும் இருந்தன வென்றும் குறிப்பிடுகின்றனர். நிலை மொழி ஒன்று உருவாவதற்கு முன் கிளை மொழிகள் பல இருந்தனவென்பதும், அக்கிளை மொழிகள் அந்தந்தப் பகுதிகளில் பேசப்பட்டு வந்தன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.ஏதென்சு நகரப் பெருமையால் மக்களிடையே அட்டிக்கு செல்வாக்குப் பெறத் தொடங்கியது. உரைநடை வளர்ச்சியிலும் அட்டிக்கு மிகுந்த வளர்ச்சியை அடைந்தது.அட்டிக்கு இவ்வாறு வளர்ந்ததில் பிலிப்புக்கும் அலெக்சாந்தருக்கும் பெருமை உண்டு. அட்டிக்கு கி.மு.3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6–ஆம் நூற்றாண்டு வரை கிரேக்க நாடுகளின் பொதுமொழியாக விளங்கியது குறிப்பிடத்தக்கது.பிற கிளைமொழிகள் கி.மு. 4–ஆம் நூற்றாண்டிலே அழிந்துவிட, பரந்து கிடந்த பேரரசில் இலக்கிய அட்டிக்கு மொழிக்கும் பேச்சு அட்டிக்கு மொழிக்கும் இடையே வேறுபாடு பெருகியது. வளரும் மொழியில் இரட்டை வழக்கு (Diglossia) காணப்படுவது இயல்பாகும். அயோனிக்கு, தோரிக்குப் போன்ற கிளைமொழிகள் எழுத்து வழக்கில் மறைந்தாலும், பேச்சு வழக்கில் தொடர்ந்து இருந்தன. பொதுமொழியாக இருந்த 'கொய்னி' (Koine) இலக்கியக் கொய்னி, பேச்சுக்கொய்னி என இரு வழக்குகளாக வளர்ந்தது. பிற கிளைமொழிகளின் அழிவில் இவ்விரண்டும் வளர்ந்தனஎன்பர்.இலக்கியக் கொய்னியை விடப் பேச்சுக்கொய்னி மிகவேகமாக வளர்ந்து கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் இன்றைய கிரேக்க மொழியின் பிறப்பிற்கு அடிகோலியது என்பர். இலக்கியங்கள், நூல்கள் எழுத இலக்கியக் கொய்னியே பயன் பட்டது. இம் மொழியிலேயே கி.பி. 6–ஆம் நூற்றாண்டு முதல் 15–ஆம் நூற்றாண்டு வரை எழுதிவந்தனர்.எனினும், பேச்சுமொழியின் வளர்ச்சியின் வேகத்தால் அது கி.பி. 12–ஆம் நூற்றாண்டிலேயே இலக்கியத்திலும் புகலாயிற்று என்பர். பேச்சுக் கொய்னி மொழியிலிருந்தே இன்றைய கிரேக்கமொழி தோன்றியது என்பர். இதன்கண் காணப்படும் கிளைமொழிகளில் கத்தரவொசா (Katharvausa), திமோதிகி (Dhimotik) என்பவை மிகவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

துருக்கியரிடமிருந்து குடியரசு பெற்றவுடன் மொழித் தூய்மையில் ஈடுபடலாயினர்.இதன் விளைவாகக் கத்தரவொசா நன்கு வளர்ச்சிபெறலாயிற்று. இக்கிளைமொழி மக்கள்மொழி என்னும் அளவிற்கு வளர்ச்சி அடையலாயிற்று. முன்னொட்டு, பின்னொட்டு மூலம் பல சொற்கள் படைக்கப் பெற்றுக் கிரேக்க மொழியில் புகுந்தன. ஆங்கில மொழி பல கலைச்சொற்களைக் கிரேக்க மொழியிலிருந்து பெற்றுள்ளது.

உலகிலே சிறந்த இலக்கியங்களைப் பெற்ற மொழி கிரேக்கமொழி. 'இலியது', 'ஒதிசி' போன்ற காப்பியங்களைப் பெற்ற மொழி கிரேக்க மொழி. அரிசுடாட்டில், பிளாட்டோ போன்ற அறிஞர்கள் தத்துவ மேதைகளாக விளங்கியதோடு உரைநடை வளர்ச்சிக்கும் பேருதவி புரிந்துள்ளார்கள்.

கிரேக்க மொழியில் கி.மு. 8–ஆம் நூற்றாண்டிலிருந்தே எழுத்துச் சான்றுகள் உள்ளன. திப்ளான் கல்வெட்டு கி.மு. 8–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர். கிரேக்கர் எழுத்துமுறையைச் செமிட்டிக்கு மக்களிடமிருந்தே பெற்றனர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. கிரேக்க எழுத்துக்களின் பெயர்,வரிசை முறை, அவற்றின் உருவம் முதலியவற்றை நோக்கின் இக்கருத்தின் உண்மை விளங்கும். கிரேக்க எழுத்து முறை உருவான காலத்தைப்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. மெண்ட்சு என்பார் அதன்காலம் கி.மு. 1400 என்று கூறுகிறார். உல்மன் என்பார் மைசீனியன் கால இறுதி என்கிறார். கார்பண்டர் என்பார் கி.மு. 8–ஆம் நூற்றாண்டு என்கிறார். பழைய கல்வெட்டுக்களில் சில மேற்கு முறையிலும் (Chalcidic) சில கிழக்குமுறையிலும் (Ionic) உள்ளன என்பர். மேற்கு முறை மறைந்து கிழக்கு முறையே நிலைபெற்றது. மறைந்து விட்ட மேற்குமுறையிலிருந்தே இலத்தீன் எழுத்து முறை உருவாயிற்று என்பர். சில கல்வெட்டுகள் வலமிருந்து தொடங்குகின்றன. சில கல்வெட்டுகள்

இடமிருந்து தொடங்குகின்றன. காலப்போக்கில் இட மிருந்து தொடங்குவனவே நிலைபெற்றன எனலாம். உயிர் எழுத்துக்களைப் பொறுத்தவரை செமிட்டிக்கு முறைக்கும் கிரேக்க முறைக்கும் அவற்றைக் கையாளு வதில் வேற்றுமை உண்டு. செமிட்டிக்கு மொழிகளில் மெய்யை அடுத்துத் தொடரும் உயிரினை விளக்க மாக எழுதுதல் இல்லை. கிரேக்க மொழியில் உண்டு. தங்கள் மொழியில் இல்லாத சில செமிட்டிக்கு ஒலி களைக் குறிக்கும் எழுத்துக்களைக் கிரேக்கர்கள் உயிர் எழுத்துகளாகப் பயன்படுத்தினர். சு.ச.

**கிரேக்க இலக்கியம்**: கிரீசு, பழைய மாக்னா கிரீசியா (சிசிலியும் தெற்கு இத்தாலியும்), ஆசியா மைனர் ஆகிய நாடுகளில் வாழ்ந்த மக்களின் மொழி யில் எழுதப்பட்ட நூல்கள் யாவும் இதில் அடங்கும். அதன் வரலாறு தொன்மைக்காலம் (கி.மு. 4-ஆம் நூற்றாண்டுக்கு முன்னிருந்து), பைசாண்டியக் காலம் (கி.மு. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1453 வரை), புதிய காலம் (கி.பி. 1453 க்குப் பிறகு) ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டது.

**தொன்மைக் காலம்**: புதிய மேலைநாட்டு இலக் கிய வகைகள் பலவற்றை உருவாக்கியவர்கள் கிரேக்கர்களே. பெருங்காப்பியம், தன்னுணர்ச்சிப்பா, நாடகம், முல்லைப்பாடல் (The Pastoral), இலக்கியத் தரமுடைய வரலாறு, சொற்பொழிவு (Oratory), புலப்பாட்டியல் (Rhetoric) ஆகிய யாவும் அவர்கள் வளர்த்தவையே.

ஓமரின் இலியது(The Iliad), ஒதிசி (The Odyssey) ஆகிய இரண்டு காப்பியங்களும் வாய்மொழிப் பாடல்களாக வளர்ச்சி பெற்றவையே. அவை எப் பொழுது எழுதப்பட்டனவென்பதும் ஓமர் என்ற தனி மனிதரால் எழுதப்பட்டவைகளாவென்பதும் உறுதி யாகச் சொல்வதற்கில்லை. கிரேக்க மூலத்தில் இசை நயத்தோடு அமைந்த இப்பாடல்கள் வருணனைச் சிறப்பால் மொழிபெயர்ப்பிலும் சிறப்புப் பெற்றுள் ளன. எசியாது (Hesiod) எழுதிய நீதிக்காப்பியங்கள், கடவுளர்களின் வரலாறு கூறும் தியாகனி (Theogony), உழவு பற்றிய செய்திகள், உபதேசம், பஞ்சாங்கம் ஆகிய மூன்றும் கலந்த வேலைகளும் நாட்களும் (Works and Days) என்பவை குறிப்பிடத்தக்கவை.

கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து வீரம், காதல் பற்றிய தன்னுணர்ச்சிப்பாக்கள் எழுதப் பட்டன. இத்துறையில் மூன்று பெரும்புலவர்கள் தோன்றினர். திர்தேயசு (Tyrtaeus) கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரரும் அரசியல்வாதியும் ஆவார்; மிம்னெர்மசு (Mimnermus – கி.மு. 630?) இரங்கல் தோய்ந்த இன்பப் பாடல்களைப் பாடினார்; தியாகினிசு (Theognis – கி.மு. 540) ஒரு மரபினைப் போற்றும் பிரபுவாவார். பல புலவர்கள் தன்னுணர்ச் சிப்பாக்கள் எழுதியிருந்தபோதும் மிகச் சிலவே இப் பொழுது கிடைத்துள்ளன. கவித்துவ ஆற்றல் மிகுந்த சாபோ (Sappho – கி.மு. 600) இவர்களுள் போற்றத்தக்கவர். பிண்டார் (Pindar – கி.மு. 518–446?) எழுதியவற்றுள் ஒலிம்பியத்சு(Olympiads) ஒலிம் பிக்கு விளையாட்டு வீரர்களைப் பாராட்ட எழுந்த தாகும்.

அகைலசு (Aeschylus – கி.மு. 525–456/455) எழு திய துன்பியல் நாடகங்கள் பொருட்செறிவும் கவிதைச் சிறப்பும் கொண்டவை. ஆரெசுதியா (Oresteia) என்னும் பெயருடைய மூன்று தொடர் நாடகங்கள் கடவுளரோடு மனிதனுக்குரிய தொடர்பை ஆராய்கின்றன. சாபக்லீசு (Sophocles – கி.மு. 496–406) தனி மனிதப் போராட்டங்களில் கவனம் செலுத்தினார். குடும்பக் கடமைக்கும் அரசு அதிகாரத்துக்கும் இடையே சிக்கித் தவிக்கின்ற பெண்ணின் போராட்டத்தை ஆண்டிகனி (Antigone) சித்திரிக்கின்றது. யூரிபிடீசு (Euripides – கி.மு. 480–406) அவரது காலத்திலேயே சிக்கலுக்குரிய எழுத் தாளராக விளங்கினார். அவர் காதல் தோல்வியால் ஏற்படும் சிதைந்த உள்ளத்தை இப்போலிதசு (Hippolytus) நாடகத்தில் அழகாகக் காட்டுகிறார். இன்பியல் நாடகம் அரிசுதோபேனிசின் (Aristophanes – கி.மு. 450–385) கைவண்ணத்தில் உயர்வு பெற்றது. அவர் ஏதென்சு மக்களின் வாழ்க்கையை மனிதவுணர்வோடு தம் நாடகங்களில் அங்கதத் தன்மை மிளிரப் படைத்துக் காட்டினார். தவளைகள் (The Frogs), மேகங்கள் (The Clouds), பறவைகள் (The Birds), இலிசிசுதிரேதா (Lysistrata) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மெனாந்தர் (Menander – கி.மு. 342–292) எழுதிய குடும்ப இன்பியல் நாடகங்கள் பின்னால் வந்தவை. அவற்றில் பல பொதுப்பாத்தி ரங்களைக் (Stock Characters) காணலாம்.

தியாகிரிதசு (Theocritus – கி.மு. 310 – 250), இடையர்கள் பற்றிய பலவகைப்பட்ட சிறுசிறு வருணனைப் பாடல்களை இயற்றினார். ஆதாரங் களை அலசிப்பார்த்துத் தொகுத்துத்தரும் வரலாற்று முறைக்கு ஏரடோட்டசு (Herodotus – 484?–420) தந்தையாவார். அவர் பயண அனுபவமும் கதை சொல்லும் ஆற்றலும் கொண்டவர். அவர் கூறும் வரலாற்று நிகழ்ச்சிகளில் நம்பமுடியாதனவென்று கருதப்பட்ட சில நிகழ்ச்சிகள் உண்மையானவை யென்று தொல்பொருள் ஆய்வினர் இப்பொழுது ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏதென்சுக்கும் இசுபார்ட்டா

விற்கும் நிகழ்ந்த போர்களைப் பற்றி விருப்பு வெறுப்பின்றி ஆதாரங்களுடன் நல்ல வரலாற்று நூலைத் தூசிடைடுசு (Thucydides – ஏறத்தாழ கி.மு 460?–400?) தந்துள்ளார். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையை அவர் நடையில் காணலாம். சில வரலாற்றுப் பாத்திரங்கள் பேசுவதாக உணர்ச்சி மிகுதியான பேச்சுகளையும் சேர்த்துள்ளார். செனோபான் (Xenophon – கி.மு. 431–350?) பெலொபனீசியன் போர் (கி.மு. 404 க்குமுன்னால்) விளைவுகளால் நாடு பாதிக்கப்பட்டபொழுது பல நூல்களை எழுதினார். அவரது அனபாசிசு (Anabasis) என்னும் நூல் பெருஞ்சிறப்புடையது. அவர்தம் நூல்களில் புனைவியல் சார்பினைக் காணலாம்.

தெமாசுதனீசு (Demosthenes) தம் சொல்லாற்றலுக்காக இன்றும் மதிக்கப்படுகின்றார். அவருடைய பேச்சுகள் முன் மாதிரிகளாகப் பலகாலும் பலராலும் பயிலப்பட்டன. மாசிடோனியாவின் இரண்டாம் பிலிப்பைத் தாக்கி அவர் பேசியவை புகழுடையவையாகும்.

பிளாட்டோ (Plato–கி.மு. 428–348–347) எழுதிய தத்துவ நூல்கள் உயர்ந்த கவிதைநடையில் அரிய கருத்துக்களைக்கூறுவன. அவரது தலைமாணாக்கரான அரிசுடாட்டில் (Aristotle–கி.மு. 384–322) இலக்கியத் திறனாய்வு, தத்துவம், அறிவியல் ஆகிய மூன்று துறைகளிலும் வலுவான அடித்தளமிட்டார்.

**பைசாண்டியக் காலம்**: இக்காலத்து எழுதப்பட்ட கிரேக்க நூல்கள் பைசாண்டிய நாகரிகத்தின் வெளிப்பாடுகள். கான்சுடாண்டிநோபிள் (பைசாண்டியம்) நகரைச் சார்ந்த மக்களின் அரசியல், அரசவை வாழ்வு ஆகியவற்றின் தாக்கத்தை இவ்விலக்கியத்தில் காணலாம். பேரரசின் வீரச் செயல்களைப் பற்றியும் அவரது குடும்பத்தினரின் சிறப்புப் பற்றியும் பல பாடல்கள் எழுதப்பட்டன. இந்நகர மக்கள் கிரேக்க மொழியில் எல்லா மனித அறிவையும் கடவுள் தந்துள்ளதாகக் எண்ணினார்கள். கிரேக்க மொழியின் தூய்மையைக் காக்க வேண்டுமென்ற நோக்கில் வாய்மொழியை வரைமொழியாகப் பயன்படுத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே, இரண்டிற்கும் இடையே மிகுந்த வேறுபாடுகள் வளர்ந்தன.

**புதிய காலம்**: கான்சுடாண்டிநோபிள் கி.பி. 1453–இல் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டது. கிரேக்க அறிஞர்கள் வேறு நாடுகள் சென்று அம்மொழிகளிலும் கிரேக்கத்திலும் நூல்கள் எழுதினார்கள். புதிய கிரேக்க மொழியில் இரு வேறு நடைகள் கையாளப்பட்டன. அவை கதரவுசா (Katharevusa), தீமாடிக்கு (Demotic) என்பவையாகும். இவ்விரண்டுமே இத்தாலி, பிரெஞ்சு, இலக்கியத் தாக்கத்தினால் பெரும் பயன் அடைந்தன. தீமாடிக்கு இயக்கம் காசுதிசுபலமசு (Kostis Palamas–கி.பி. 1859–1943) என்பவர் தலைமையில் கி.பி. 1880–ஆம் ஆண்டுகளில் ஒரு திருப்புமுனையை அடைந்தது. இறந்துபோன பழைய கிரேக்க மொழிக்கும் கிரேக்கப் புனைவியலாளர்க்கும் எதிரான இயக்கமாக அது வளர்ந்தது.

இயோனெசு சிகாரிசு (Ioannes Psicharis–கி.பி. 1854–1929) என்பவர் கி.பி. 1888–இல் அவ்வியக்கத்தின் தலைவரானார். கிரேக்கர்களின் மொழியுணர்வைத் தூண்டும் நூலொன்றை எழுதினார். இருதரப் பார்க்கும் பெரும்போர் மூண்டது. பல திறனாய்வாளர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள் இதில் கலந்துகொண்டனர். செவ்வியல் மரபுக்கு எதிரான கருத்து வலுப்பெற்றது. கிரேக்கக் கலையும் இலக்கியமும் புத்துயிர் அளிக்கப்பட வேண்டும் என்ற குரல் ஓங்கியது. கிரேக்க நாட்டு வாலாறும் நாட்டுப் பாடல்களும் முக்கியத்துவம் பெற்றன. மக்களின் மொழியான தீமாடிக்கு வெற்றிபெற்றது. கற்பனை நூல்களிலும் அறிவியல் நூல்களிலும், அரசு அலுவலகக் குறிப்புகளிலும் இதன் செல்வாக்கு அதிகரித்தது. கிரெகோரியசு செனோபுலோசு (Gregorios Xenopoulos–கி.பி. 1867–1951) இம்மொழியைக் கையாண்டு கிரேக்க நாடகத்திற்குப் புத்துயிர் அளித்தார்.

கிரேக்க இலக்கியம் கி.பி. 16, 17–ஆம் நூற்றாண்டுகளில் கிரீட்டுத்தீவில் (Crete) சிறப்படையத் தொடங்கியது. கவிதை நடையில் இம்மொழி பெற்ற ஏற்றத்தைச் சார்சியசு சோமிசு (Georgios Choumis) கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் செனசிசு, எக்சோடசு (Genesis and Exodus) ஆகியவற்றின் சாரத்தைக் கொடுத்துள்ள நூலிலும், விகெண்டியோசு கார்னரோசு (Vikentios Kornaros) எழுதிய எரோதோகிரிதாசு (Erotokritos) என்ற புனைவியல் நூலிலும் காணலாம்.

கிரேக்கக் கதைப்பாடல்கள் (Ballads) கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் மிகுதியாக எழுதப்பட்டன. பாமர மொழியில் எழுதப்பட்ட உயிர்த்துடிப்புள்ள கவிதைகளாக இவை காணப்படுகின்றன. புதிய கிரேக்கக் கவிதைக்கு இவை மூலாதாரமாக அமைந்தன. கிரேக்கப் புனைவியல் இயக்கம் அலெக்சாண்டிராசு சூடோசு (Alexandros Soutsos–கி.பி. 1803–63) என்பவரால் தோற்றம் பெற்றது. அவர் கவிதைகளின் தாக்கம் பல ஆண்டுகள் நிலைபெற்று நின்றது. இவ்வியக்கத்தில் அகிலெப்சு பராசுகாசு (Akhillefs Paraskhos–1838-95) தலைசிறந்தவராவார். தியோனி

சியோசு சாலாமசு (Dhionisios Solomos–கி.பி. 1798–1857) தீமாடிக்கு மொழி நடையில் பல மேலை இலக்கிய யாப்பு வகைகளைப் புகுத்தினார்.

முதலாம் உலகப் போருக்குப் பின் கவிதை எழுதியவர்களுள் காசுதாசு கரியோதகிசு (Kostas Karyotakis–கி.பி. 1897–1928), சார்சு செபெரிசு (George Seferis–கி.பி. 1900-71), நிகோசு காஸாண்ட்சாகிசு (Nikos Kazantzakis–கி.பி. 1885–1957) குறிப்பிடத்தக்கவராவர். காசாண்ட்சாகிசு எழுதிய ஒதீசி (Odyssey), 33, 333 வரிகளைக் கொண்ட காப்பியமாகும். இரண்டாம் உலகப் போருக்குப்பின் குறியீட்டுக் கவிதையாளர் (Symbolists), அதிஎதார்த்த வாதத்தினர் (Surrealists) ஆகிய பலரும் தோன்றினர். அவர்களில் சார்சியோசு தெமெலிசு (Georgios Themelis), மில்தோசா சக்தோரிசு (Miltos Sachtouris) சாயி கரேலி (Zoi Karelli), திமிட்ரியோசு பாபாதித்சசு (Dimitrios Papaditsas) ஆகியோர் மதிப்பிற்குரியோராவர்.

கிரேக்க நாட்டு விடுதலைக்குப் பின்னும் பல ஆண்டுகள் இதழ்களிலும் ஆய்வு நூல்களிலும் உரை நடை கையாளப்பட்டது. மேலை இலக்கியத் தாக்கத்தால் வரலாற்று நாவல்கள் எழுதப்பட்டன. சிறுகதை எழுத்தாளர்களுள் சார்சியோசு விசியினோசு (Georgios Vizyinos–கி.பி. 1848–94) இயோனிசு காண்டிலாகிசு (Ioannis Kondylakis–கி.பி. 1861–1920) ஆகியோர் சிறப்புடையவர். இக்காலச் சிறுகதை எழுத்தாளர்களுள் அலெக்சாண்டிரோசு பாபடியா மண்டிசு (Alexandros Papadiamantis–கி.பி 1851–1911) தலைசிறந்தவராவார். ஆண்டிரியாசு கார்க்க விட்சாசு (Andreas Karkavitsas–கி.பி. 1866–1923) எழுதிய சிறுகதைகளும் உணர்ச்சியூட்டும் ஆற்றல் பெற்றவை.

முதல் நகர நாவலை (The Urban Novel) அளித்த பெருமை சோனசு சிகாரிசு (Joannes Psicharis) என்பவரைச் சாரும். முதல் குறியீட்டு நாவலான பிதினோபோரோவை (Fthinoporo) எழுதியவர் காசுதாசு சாத்சோபோலோசு (Kostas Chatzopoulos–கி.பி. 1871–1920). சார்சியோசு தெயோதோகாசு (Gorgios Theotokas–கி.பி. 1905–66) எழுதிய நீண்ட நாவலான ஆர்கோ (Argo), கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், பயண நூல்கள் ஆகியவை அவரது பலமுனை ஆற்றலைக் காட்டுகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் இளைய தலைமுறை எழுத்தாளர்கள் இந்த நூற்றாண்டின் அறுபதுகளில் தலையெடுத்தனர். வாசிலிசு வாசிலிகோசு (Vasilis Vassilikos), உரோடிசு புரோ வெலிங்கியோசு (Rodis Provellengios), நிகாசு காசுதாக்லிசு (Nikos Kazdaglis) ஆகியோரின் உரைநடை பெருமைக்குரியதாகும். பி.ம.

**கிரேக்கத் தத்துவம்**: மிகப் பழமையான மக்களுள் சிலர் இல்பொருட்கற்பனை (Mythological) நிலையிலிருந்து முன்னேறி இருந்தாலும் கிரேக்கர்கள் மட்டுமே தனித்த மெய்ப்பொருளியலை வளர்த்துள்ளனர் எனலாம். அத் தத்துவ மேதைகள் பின்னாளில் வளர்ந்த மெய்ப்பொருள் சார்ந்த அனைத்துச் சிந்தனை முறைகளுக்கும் அடிப்படை இட்டதோடல்லாமல் ஐரோப்பிய நாகரிகத்தில் கடந்த இருபது நூற்றாண்டுகளில் இடம்பெற்ற அனைத்துச் சிக்கல்களையும் முறைப்படுத்தியவர்கள்; அவற்றிற்குரிய தீர்வுகளையும் கண்டவர்கள்.

பண்டைய கிரேக்கர்கள் இயலுலகப் பொருள்களுக்கும் ஒலிம்பியாவில் (Olympia) இருந்த பெரும் கடவுளுக்கும், மனித இயல்பை ஏற்றி (Anthropomorphism) வந்துள்ளனர். இத்தகைய கிரேக்க சமயம் தான் கி.மு. 6–ஆம் நூற்றாண்டில் தனித்துத் தோன்றிய கிரேக்க மெய்ப்பொருளியலுக்கு அடிப்படையாக விளங்கியது. அயர்லாந்து நாட்டில் தோன்றிய இயற்கைவாத மெய்ப் பொருளியலாரே (Milesian natural Philosphers) கிரேக்கத்தில் முதன்மையானவர். ஓமரின் (Homer) காவியத்தில் பெரும் கடவுளாகக் குறிக்கப்படும் சீயசு (Zeus) தொடக்கத்தில் விதிக் கோட்பாட்டிற்கு உட்பட்டவராகக் காட்சியளித்தாலும், பின்னாளில் விதிக் கோட்பாடு சீயசு கடவுளின் மேலான எண்ணமாக (Supreme will) வளர்ந்து இயற்கைவாத மெய்ப்பொருளியலாரின் அடிப்படையாய் அமைந்தது. ஆனால், சமயத்தில் வழங்கிய இல்பொருட் கற்பனை மரபைவிட மெய்ப்பொருளியலாரின் கருத்து அறிவியல்தன்மை பெற்றிருந்தது. கிரேக்க மெய்ப்பொருளியல், இயலுலகின் தோற்றுவாயைப் பற்றிய ஆய்வில் தொடங்கி, படிப்படியாக மனித மனத்தின் மீதும், அவனது நடத்தை மீதும் கவனம் செலுத்தியது. இவ்வாய்வு, அளவையியல், உளவியல், அரசியல், அறவியல் ஆகிய துறைகளாக விரிந்தது. வாழ்க்கையில் உயர்ந்த நன்மையையும் (Highest good) குறிக்கோளையும், அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக, உள்பொருள் இயலும் (Metaphysics), அறிவு ஆய்வியலும் (Epistemology) தோன்றின. இறுதியில், கடவுளைப் பற்றிய சிக்கலும், மனிதனுக்கு அவரிடத்தில் உள்ள தொடர்பும், இறையியல் (Theology) பற்றிய சிக்கலும் முன்னோடியாக அமைந்தன. இவ்வாறு, கிரேக்க மெய்ப்பொருளியல் சமயத்தில் தொடங்கி அங்கேயே முடிந்தது எனலாம். கிரேக்க மெய்ப்

பொருளியலைப் பின்வரும் நான்கு நிலைகளில் விளக்கலாம்.

கிரேக்க மெய்ப்பொருளியல் தொடக்கநிலையில் இயலுலகப் பொருள்களைப் பற்றி ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரு சிக்கல்களைக் கருதியது. அவற்றுள் ஒன்று பொருளைப் பற்றியது. இயற்கைப் பொருள்கள் எதனால் ஆக்கப்பட்டவை? அவை எதிலிருந்து தோன்றியவை? அவற்றின் அடிப்படைப் பொருள் எது என்பதாகும். மற்றொன்று, மாற்றத்தைப் பற்றியது. அடிப்படைப் பொருள் எவ்வாறு புலனுக்குரிய பொருள் ஆகின்றது என்பதாகும். அயர்லாந்து நாட்டைச் சார்ந்த தேல்சு(Thales), அனாக்சிமாண்டர் (Anaximander), அனாக்சிமெனசு (Anaximenes),பித்தகோரசு (Pythagoras) ஆகியோரைப்பின் பற்றியவர்களிடையே சில வேற்றுமைகளும் இருந்தன. அனாக்சிமாண்டர் இயலுலக அடிப்படையில் உள்ள ஒரே பொருளை வரம்பற்றது எனவும் தெய்விகமானது எனவும் கருதினார். தேல்சு, அடிப்படைப் பொருள் மட்டுமன்றி இயலுலகப் பொருள்களனைத்திலும் கடவுள் இருக்கிறார் என்று கருதினார். இவ்வகைச் சிந்தனை, கிரேக்க சமயத்தில் ஓமர்காலக் கடவுள்களின் வளர்நிலையைக் காட்டுகிறதேயன்றி, முதிர்ந்த அறிவியற் சிந்தனையைக் குறிக்கவில்லை. எராக்ளிட்டசு (Heraclitus) என்பவர் மாற்றம் பற்றிய சிக்கலை அதன் அடிப்படை வடிவத்தில் ஏற்றார்; பர்மனிடசு (Permenides) என்பவர் அக்கருத்தின் சிறந்த வல்லுநராகவும் விளங்கினார். இவர்கள். மாற்றமே முடிந்தமுடிவு; நிலைப்பு வெறும் புலன் தோற்றமே என்றனர். இக்கருத்துகள் அடிப்படைப் பொருளைப் பற்றிய சிக்கலை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிட்டன.

கிரேக்க மெய்ப்பொருளியலின் இரண்டாம் நிலையில் மெய்விளக்கியலாரும் (Sophists), சாக்ரட்டீசும் இயலுலகத் தோற்றம், அதன் அமைப்புப் பற்றிய உலகியல் (Cosmology), இருப்பியல் (Ontology) ஆகியவற்றின் ஆய்வுகளிலிருந்து தங்களின் கவனத்தை மனித நடத்தை, அறிவு பற்றிய ஆய்வுகளில் திருப்பினர். கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மெய்விளக்கியலாரின் இயக்கம் மெய்ப்பொருளியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஆகும். ஏனெனில், உலகச் சிக்கலைத் தீர்ப்பதில் மனித ஆற்றலில் நம்பிக்கையின்மையை அது காட்டியது. இவ்வியக்கம் ஐயப்பாடு (Scepticism), எதிர்ப்பு, புரட்சி, புலன் கடந்த ஆய்வில் மனித கவனத்தை ஈர்த்தல் ஆகிய தன்மைகள்கொண்டதாக விளங்கியது.

இதற்கு அடுத்த நிலையில், சாக்ரட்டீசின் மாணவர்களான பிளேட்டோவும், அரிசுடாட்டிலும் மனித அறிவு, நடத்தை, இயலுலகில் அவனது இடம் ஆகிய மனித சிக்கல்களை ஆராய்ந்தனர். கிரேக்க மெய்ப்பொருளியலின் இறுதிநிலை கி.மு. 320 முதல் கி.பி. 529 வரையிலான காலமாகும். இக்காலத்தில் மெய்ப்பொருளியல் ஏதென்சு, அலெக்சாண்டிரியா, உரோம் ஆகியநகரங்களில் மையம் கொண்டிருந்தது. பி.ஆர்.ந.

**அகழாய்வு**: கிரீசு நாட்டில் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்து வந்தான். இதன் வரலாறு ஏறக்குறைய 1,00,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்நாட்டில் பல 'அகழாய்வுகளும் தொல்லியல் நடவடிக்கைகளும் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாகக் கிரிசின் தொன்மையான நாகரிகம் வெளிப்படலாயிற்று.

கிரேக்க மொழி பேசும் மக்கள் கி.மு. 2,000-இல் இங்குக் குடியேறினர். மத்தியதரைக்கடல் பகுதிகளில் இவர்கள் வாணிகம் செய்தனர். இவர்கள் தங்கள் குடியிருப்புகளைக் கடற்கரைப் பகுதிகளில் அமைத்துக்கொண்டனர். கிரேக்க நகர அரசுகள் கி.மு. 1000-ஆம் ஆண்டளவில் தோன்றத் தொடங்கின. இக்காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டதுடன் கடவுள் வழிபாடும், விளையாட்டு ஆர்வமும் மக்களிடம் மலிந்திருந்தன. ஒலிம்பியா என்னும் இடத்தில் வீர விளையாட்டுகள் நடைபெற்றன. தங்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இம்மக்கள் நாணயங்களை வெளியிட்டனர்.

கிரேக்க வரலாற்றைப் பல அகழாய்வுகளில் கிடைத்த எழுத்து ஆவணங்கள், கல்வெட்டுகள், சடங்குச் செய்திகளைக் கூறும் ஆவணங்கள் ஆகியவற்றின் மூலம் அறியமுடிகிறது.

தொல்லியல் பற்றிய அறிவு இருநூறு ஆண்டுகளுக்குள்ளானது என்ற கருத்தைப் பொய்யாக்கும் வகையில் கிரீசில் கிரேக்க நாகரிக காலத்திலேயே சிந்தனையாளர்கள் தொல்லியலைப் பற்றி அறிந்திருந்தனர். கிரேக்க வரலாற்று அறிஞர் தூசிடைடுசு (Thucydides-கி.மு. 485-400) திலோசுத் (Delos) தீவில் சில கருவிகள் கண்டுபிடித்ததைக் குறிப்பிட்டுள்ளார். உரோமானியர்கள் கிரேக்கத்தில் இருந்து பல அரும் பொருள்களைச் சேகரித்தனர்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தைச் சார்ந்த எல்சின் பிரபு என்பவர் பார்த்தனானிலிருந்து பல சலவைக்கல் சிற்பங்களை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றார். கிரேக்கத் தொல்லியல் சங்கம் கி.பி. 1837-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்கால கட்டத்தில் பல வெளிநாட்டு அறிஞர்களும் கிரேக்கத் தொல்லியலில் ஆர்வம் காட்டினர். பிரான்

சுத் தொல்லியலார் கி.பி. 1846-ஆம் ஆண்டில் ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். செருமனி கி.பி, 1874-ஆம்ஆண்டிலும் அமெரிக்கா கி.பி. 1886-ஆம் ஆண்டிலும் ஆசுத்திரியா கி.பி. 1898 ஆம் ஆண்டிலும் தொல்லியல்நிறுவனங்களை கிரீசில் நிறுவி கிரேக்கத் தொல்லியலில் ஆர்வம் காட்டின. இத்தாலி, சுவிடன் போன்றநாடுகளும் இந்நாட்டில் தொல்லியல் அமைப்புகளை நிறுவின. பல புகழ்பெற்ற அகழாய்வுகள் இக்காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. ஒலிம்பியா, திலோசு, தெல்பி, எபிடரசு, கோரிந்து, அக்கராபாவிசு போன்ற இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகளின் மூலம் கிரேக்க நாகரிகத்தை அறியமுடிந்தது. ஓமர் குறித்த பண்டைய பகுதிகளில் என்றிச் சிலிமேன் (Henrich Schlieman) என்பவர் அகழாய்வுகளை மேற்கொண்டு பெரும் புகழ் பெற்றார். இவர் மைசீனியா, திராய் நகரங்களை அகழாய்வின் மூலம் கண்டுபிடித்தார். சர் ஆர்தர் இவான்சு என்பவர் நோசசு என்ற இடத்தில் அகழாய்வுகளை மேற்கொண்டு புகழ்பெற்றார்.


**திராய்**: என்றிச் சிலிமேன் செருமானிய வணிகர் ஆவார். இவர் தொல்லியல் படித்த அறிஞரும் அல்லர்; தாமே முயன்று பண்டைய கிரேக்க இலக்கியங்களைக் கற்றறிந்தார். இலியது, ஒதிசியில் கூறப்பட்டுள்ள நகரங்களைக் கண்டுபிடிக்கும் ஆர்வத்துடன் சிலிமேன் தமது வணிகத்தை நிறுத்திவிட்டு கி.பி. 1868-இல் இதூகா பகுதியில் கள ஆய்வுகளை மேற்கொண்டார். இக்கள ஆவ்வுகளில் சில மட்கல ஓடுகளே இவருக்குக் கிடைத்தன. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் கிசார்லிக்குப் (Hissarlik) பகுதியில் (துருக்கி) அகழாய்வுகள் மேற்கொண்டார். இதையே இவர் திராய் நகரமெனக் கருதினார். இப்பகுதி தார்டனல்சுக்கு (Dardanalles) அருகில் கடலிலிருந்து 4.8 கி.மீ. தொலைவிலமைந்திருந்தது.

இங்கு 150 வேலையாட்களுடன் அகழாய்வுகளைச் சிலிமேன் மேற்கொண்டார். மூன்று ஆண்டுகளுக்குள் நகர அரண்களையும் கட்டடங்களையும் காசுகளையும் மட்கலத் துண்டுகளையும் பொன், வெள்ளி அணிகலன்களையும் பாண்டங்களையும் கண்டுபிடித்தார். பின்னர்ச் செய்யப்பட்ட அகழாய்வுகளில்,ஒன்பது பண்டைய நகரங்கள் வெளிப்பட்டன. இவற்றுள் திராய் நகரம் எதுவென்று அறிய இயலவில்லை. எனவே திராய் I, திராய் II, என இவை குறிக்கப்பட்டன.

**மைசீனியா**: சிலிமேன் திராய் நகரை அகழ்ந்தபொழுது மைசீனியாவிலும் அகழாய்வுகள் செய்ய முடிவுசெய்தார். இதனை ஓமர், பொன் நிறைந்த பகுதி எனத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். சிலிமேன் கி.பி. 1870-ஆம் ஆண்டு மிகப்பெரும் அளவில் அகழாய்வுகளை இங்கு மேற்கொண்டார். இவர் புதைமேடு வட்டப்பகுதிகளை அகழ்ந்தபொழுது பொன்னால் செய்யப்பட்ட முகமூடிகளையும், உறையிலிருந்த வாள்களையும், அணிகலன்கள் கொண்ட பெட்டிகளையும், தங்கத்தால் ஆன கிண்ணங்கள், வாய் அகன்ற பாத்திரங்கள், அணிகலன்கள் ஆகிய வற்றையும் கண்டெடுத்தார். இவற்றுடன் திரோசன் போருக்கு அரசர் அகமன்னன் தன் படைகளுடன் நுழைந்த சிங்கவாயில் பகுதியையும், அரண்மனையையும், புதைகுழிகளையும் கண்டுபிடித்தார். இதற்குப் பின்னர் திரின்சு, (Tiryns), ஆர்கோமினசு (Orchomenos), பைலோசு (Pylos) தீப்சு, ஏதன்சு, ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளின் விளைவாக கிரீசில், நிலவிய மைசீனிய நாகரிகத்தைப் பற்றிப் பெரிதும் அறியமுடிந்தது.

மைசீனிய நாகரிகத்தைச் சார்ந்த எழுத்துகள் கொண்ட வரைபடப் பெட்டிகளில் இருந்த எழுத்தமைதியை 1950-ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த மைக்கேல் வெண்டிரிசு (Michael Ventris) என்பவர் கண்டுபிடித்துப் படித்தார்.

**வரலாற்று நகரங்கள்**: செருமானியத் தொல்லியலறிஞர்கள் கி.பி. 1868 ஆம் ஆண்டு பெர்காமம் (Pergamum) என்ற இடத்தில் அகழாய்வுகளை மேற்கொண்டனர். இவர்கள் எலனியக் கால எச்சங்களை இங்குக் கண்டுபிடித்தனர். பிரெஞ்சுத் தொல்லியலார் குசுதவ் போசர்சு (Gustave Fougers) என்பவர் தலைமையில் ஆர்கேடியாவிலுள்ள மாண்டினியாவை (Mantinea) கி.பி. 1880-ஆம் ஆண்டில்அகழாய்வுகள் செய்தார். எபிசசு (Ephesus) என்ற இடத்தில் அர்திமிசு (Artemis) கோயிலை கி.பி. 1869- ஆம் ஆண்டில் ஆங்கிலத் தொல்லியலறிஞர்கள் அகழாய்வு செய்தனர். சமோத்ரேசுவில் ஆசுத்திரிய தொல்லியல் அறிஞர்கள் அலெக்சாந்தர்சி. கோன்சு (Alexander C. Conze) தலைமையில் கள ஆய்வுகளை மேற்கொண்டனர். ஒலிம்பியாவை கி.பி. 1875-இல் எர்னசுட்டு கர்டியசு (Ernst Curtius) என்பவர் அகழாய்வு செய்தார். ஒலிம்பியா அகழாய்வில் அரும்பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. சீயசு கடவுளின் கோயில், பொன்னாலும் தங்கத்தாலும் செய்யப்பட்ட 400அடி உயரமுடைய சிலை போன்றவை இவ்வகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாக இக்கோயில் கருதப்பட்டது. ஒலிம்பிக்கு விளையாட்டு நடைபெற்ற திடல் பகுதியும், சிலைகள் பலவும் கடவுளுக்குப் படைக்கப்பட்ட பொருள்களும் இவ்வகழாய்வில் கிடைத்தன.




கிரீசு நாட்டின் தொன்மை நகரங்கள்

அப்போலோவின் புனிதத் தீவாகக் கருதப்பட்ட திலோசு (Delos) பகுதியில் கி.பி. 1879-ஆம் ஆண்டு பிரான்சின் தொல்லியல் அறிஞர்கள் அகழாய்வுகளை மேற்கொண்டனர். இக் காலகட்டத்திலேயே எபிட ரசுவிலும் கிரேக்க அறிஞர்கள் பல தொன்மையான கட்டடங்களைக் கண்டுபிடித்தனர், இவற்றுள் குறிப் பிடத்தக்கவை கிரேக்கத் திறந்தவெளி அரங்கங் களாகும். இவ்வரங்குகளில் 12,000 மக்கள் முதல் 18,000 மக்கள்வரை அமர்ந்திருக்கும் அமைப்புகள் இருந்தன. ஏதென்சு நகரில் உள்ள அக்கராபாலிசை பனயி டோசு கவ்வாடியசு (Panayiotes Kavvadias) என்பவர் அகழாய்வு செய்தார். கோரிந்து நகரை அமெரிக்கத் தொல்லியலறிஞர்கள் அகழாய்வுகள் செய்தனர். தெல்பி (Delphi) நகரிலுள்ள அப்பாலோ கோயிலைப் பிரெஞ்சுக்காரர்கள் கண்டுபிடித்தனர். செரிசுடோசு சௌண்டாசு (Chrestos Tsountas) என்ற கிரீசுத் தொல்லியல் அறிஞர் வரலாற்றுக்கு முற்பட்ட கல் லறைகள் பலவற்றை அகழாய்வுகள் செய்தார். மிலா சுத் (Melos) தீவிலுள்ள பைலகோபிப் (Phylakopi) பகுதியைத் தாமசு.டி. அட்கின்சன் என்ற பிரெஞ்சுத் தொல்லியறிஞர் அகழாய்வு செய்தார். இல்லர் வோன் கிர்திரின்சியன் (Hiller Von Gaertringen) என் பவர் தேரா (Thera) நகரையும், செருமானிய அறி ஞர்கள் மிலிடசு (Miletus), பிரினி (Prine) ஆகிய பகுதிகளையும் அகழாய்வுகள் செய்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரீசு நாட்டில் தொல்லியல் நடவடிக்கைகள் பெருமளவில் நடைபெற்றன. சர் ஆர்தர் இவான்சு நோசசுவை அகழாய்வு செய்தார். இவர் மினாசு நகர அரண் மனையையும் கண்டுபிடித்தார். இத்தாலிய அறிஞர் கள் 1900-ஆம் ஆண்டில் பைசுடோசுவில் அகழாய்வு களை மேற்கொண்டனர். ஆங்கிலத் தொல்லியலறி ஞர்கள் இசுபார்டாவை அகழாய்வு செய்தனர். இக் காலத்தில் அறிவியல் சார்ந்த அகழாய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

கீட்டி கோல்டுமேன் (Hetty Goldman) என்ற பெண் தொல்லியலறிஞர் எட்ரீசிசு (Eutresis) என்ற செப்புக் கால நகரத்தை அகழாய்வு செய்தார். இரண்டாவது உலகப்போருக்கு முன் ஏதென்சு நகரை அறிஞர்கள் அகழாய்வு செய்தனர். செரு மானிய அகழாய்வினர் 1927-இல் இங்கு அகழாய்வை மேற்கொண்டனர். அகோரா என்ற இடத்தை அமெரிக்க அறிஞர்கள் தோண்டினர். அமெரிக்கத் தொல்லியல் அறிஞர்கள் 1950க்கும் 1960க்கும் இடை யில் பைலோசு,இலெர்னா,கீழ்ப்பகுதிகளில் அகழாய்வு களை மேற்கொண்டனர். பைலோசு நகரம் நெசுதர் (Nestor) என்னும் மன்னரின் தலைநகரமாகும். இங்குப் பல அழிவுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட் டன. நெசுதரின் அரண்மனை 40 அறைகளைக் கீழ்ப்

பகுதியில் கொண்டிருந்தது. இங்கு அகழாய்வுகள் மேற்கொண்ட பிளிசின் (Blegen) என்ற அமெரிக்க அறிஞர் பெருமளவில் மட்கல ஒடுகளை அகழாய்வில் கண்டெடுத்தார். இந்நகரத்தில் கி.மு. 1900-இல் இருந்து கி.மு. 1200 வரை மக்கள் வாழ்ந்திருக்கின்ற னர். அதன்பின்னர் இந்நகரம் நெருப்பால் அழிந் திருந்தமை அகழாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட் டது. பைலோசில், பிளிசின் வரிவடிவ எழுத்து களையுடைய களிமண் வரைபடப் பட்டிகைகளைக் கண்டுபிடித்ததார். இதுபோன்ற எழுத்துகள் கொண்ட தொகுதிகள் இவான்சு, நோசசு அகழாய்வு களில் கண்டுபிடித்தார். இவ்வரி வடிவ எழுத்து களை மைக்கேல் வென்டிரிசு படித்தறிந்தார். இதன் மூலம் கிரேக்க மக்களின் நாகரிகம், தொழில்கள், சமய நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறியமுடிந்தது. கிரீசு அரசும் இக்காலத்தில் பல தொல்லியல் அறிஞர்களை நியமித்துக் கிரேக்க நாட்டின் தொன்மையை அறிய ஊக்கம் அளித்து வருகிறது. சு.இரா.

**துணை நூல்கள்:**


J.B. Bury, A History of Greece to the Death of Alexander The Great, Macmillan, London, 1914.

Young, K., The Greek Passion, London, 1967.

Xydis, S.G., Greece and the Great Powers. 1944-47 Thessaloniki, Greece, 1963.

Woodhouse, C.M., The Struggle for Greece 1941-49, London, 1976.

Spring, J.T., The Oxford Dictionary of Modern Greek, O.U.P., 1967.

Mouzelis, N.P., Modern Greece, London, 1978.


## கிரீட்டு

**கிரீட்டு** மத்திய தரைக்கடலில் உள்ளதொரு தீவு. ஐரோப்பாவின் தலைசிறந்த முதல் நாகரிக மான மினோவா நாகரிகம் இத்தீவில் ஏறக்குறைய 5,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. இத்தீவு கிரீசின் தெற்கு முந்நீரகமான பெலப்பொனீசசுவி லிருந்து தெற்காக 96 கி.மீ. தொலைவில் அமைந் துள்ளது. இத்தீவு 8,332 சதுர கி.மீ. பரப்பளவை உடையது. கிரீசின் மிகப்பெரிய தீவு இதுவே ஆகும். இதன் தலைநகரம் கானியா (Khania) ஆகும். இத் தீவின் மிகப்பெரிய நகரமாகவும் துறைமுகப் பட்டின மாகவும் இராக்லைன் (Iraklion) என்ற நகரம் விளங்குகிறது.




கிரீட்டு

**மக்கள்:** கிரீட்டில் கிரேக்க மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் கிழக்கு வைதிக திருச் சபைக் கிறித்தவர்கள் ஆவர். கிரீட்டு மக்கள் தொன்மையான பண்பாட்டில் நம்பிக்கை கொண்ட வர்கள் ஆவர். திருமணம் மற்றும் இதர விழாக்களில் இவர்கள் பழைய வழக்கங்களை இன்றளவும் பின் பற்றி வருகின்றனர்.

**நிலமும் தட்பவெப்பமும்:** கிரீட்டுத் தீவின் நடு வில் தொடர்ச்சியான மலைகள் உள்ளன. இவை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்கின்றன. இதா (Ida) மலையே உயரமான மலையுச்சியை உடையது. இதன் உயரம் 2,456 மீட்டர் ஆகும். மலைத்தொட ருக்கு அருகில் வளமான சமவெளிகளும் பள்ளத் தாக்குகளும் காணப்படுகின்றன. கிரீட்டு மிதமான தும், வறண்டதுமான தட்ப வெப்பநிலையைக் கொண்டிலங்குகிறது. குளிர்காலத்தில் 53° பாரன்கீட் (12° செ.கி) கோடை காலத்தில் 75° பாரன்கீட்டும் (24° செ.கி) வெப்பநிலையைக் கொண்டுள்ளது. இங்கு அக்டோபரிலிருந்து மார்ச்சு முடிய மழை பொழிகிறது. மலைப் பகுதிகளில் அதிகமாகவும், சம வெளிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் குறைவாகவும் மழையை இத்தீவு பெறுகிறது. சமவெளிகளில் மழை குறைந்து காணப்படுவதால் வேளாண்மைக்கு நீர்ப் பாசன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பல நீர் இறைக்கும் காற்றுவிசைகள் இங்கு உள்ளன,

**பொருளாதாரம்**: கிரீட்டு மக்கள் சிறுசிறு பண்ணைகளில் வேலை செய்கின்றனர். வேளாண்மை இயந்திர உதவியின்றி நடைபெறுகின்றது. பழவகைகள், காய்கறிகள் போன்றவை இத்தீவில் முதன்மையாகப் பயிரிடப்படும் பயிர்கள் ஆகும். இத்தீவின் வடக்குக் கடற்கரை நகரங்களில் தொழிற்சாலைகள் உள்ளன. கட்டடப் பொருள்கள், உணவுப் பொருள்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இராக்லைனில் தோல்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கைவினைப் பொருள்கள் செய்வதில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டுள்ளனர். கூடை முடைதல், உலோகத் தொழில் போன்றவை சிறந்த கைத்தொழில்களாக விளங்குகின்றன. கிரீட்டின் பொருளாதாரம் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் மூலம் உயர்ந்துள்ளது. இராக்லைன் அருங்காட்சியகத்தில் மினோவா நாகரிகத்தின் சின்னங்களும், அரும்பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் இத்தீவிலுள்ள நோசசு (Knossos), பயிசுடோசு (Phaestos) போன்ற பண்டைய நகரங்களைக் காண நாளும் இத்தீவிற்கு வருகைபுரிகின்றனர். இத்தீவிலுள்ள நகரங்களில் இவர்கள் தங்க உணவு விடுதிகளும் உள்ளன.

**அரசு**: ஏதென்சிலுள்ள கிரேக்க அரசே கிரீட்டின் நிருவாகத்தைக் கவனிக்கின்றது. இத்தீவு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆளுநர்களால் ஆளப்படுகிறது.

**வரலாறு**: கிரீட்டிற்கு ஆசியாமைனர் பகுதியிலிருந்து முதன்முதலாக மக்கள் கி.மு. 6000-ம் ஆண்டளவில் குடியேறினர். கிரீட்டு கி.மு. 3,000-இல் ஒரு சிறந்த நாகரிகத்தின் உச்சியில் இருந்தது. மைனாசு (Minos) என்ற மரபு அரசரின் பெயரால் மினோவா பண்பாடு (ஈசிய நாகரிகம்) என இது கூறப்பட்டது. இந்நாகரிக காலத்தில் கிரீட்டு, கலை, கட்டடக் கலை ஆகியவற்றில் தலைசிறந்து விளங்கியது இம்மக்கள் மிக அழகான அரண்மனைகளைக் கட்டினர். எழுத்துமுறையையும், அணிகல வேலைப்பாடுகள் செய்யும் கலையையும் இவர்கள் அறிந்திருந்தனர். நிலநடுக்கம், தீ ஆகியவற்றால் கிரீட்டிலிருந்த பண்டைய நகரங்கள் கி.மு. 1400-இல் அழிவுற்றன. ஈசிய நாகரிகமும் படிப்படியாக அழிந்தது. உரோமானியர்கள் கி.மு. 68-இல் இத்தீவின் மீது படையெடுத்தனர். பைசான்டியப் பேரரசின் ஒரு பகுதியாகக் கிரேக்கர்களின் வசம் இத்தீவு பின்னர் வந்தது. உதுமானியத் துருக்கியர்கள் இத்தீவை கி.பி. 1669-முதல் கி.பி. 1898 வரை ஆண்டனர். கிரீசின் ஒருபகுதியாக 1918-இல் மாற்றப்பட்ட கிரீட்டைச்செருமானியர்கள் 1941-ஆம் ஆண்டு கைப்பற்றினர். இரண்டாம் உலகப்போர் 1945-இல் முடிவுறும் வரை இத்தீவு செருமானியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருந்தது. இரண்டாம் உலகப்போர் முடிந்தபின் கிரீட்டு, சுற்றுலாத் துறையில் பெரிதும் வளர்ச்சியடைந்து இன்று கிரீசின் தலைசிறந்த சுற்றுலாமையமாக விளங்குகிறது. காண்க: ஈசிய நாகரிகம். சு.இரா.

***கிரீவ்இசுகி இவான் வாசிலிவிச்சு*** **(கி.பி. 1806-1856)** இலக்கியத்தில் விருப்பமுடையவர். இவரும் இவர்தம் நண்பர்களும் உருசியா, தத்துவத் தொடர்பான கல்வியில் பின்தங்கிய நிலையில் இருப்பதை நினைத்து வருத்தம் அடைந்தார்கள். கிரீவ்இசுகி இவான் (Kireevsky, Ivan Vasilievich) கி.பி. 1830-ஆம் ஆண்டு செருமானிய நாட்டிற்குச் சென்று, ஏகெல் (Hegel) முதலியவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டார். இவர் வைதிகக் கொள்கையைக் கடைப்பிடித்தார். உருசிய தத்துவத்தை விரிவாக்குவதை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டார். இசுலாவிய இனத்தவரிடையே இவர் பெரிய தத்துவ ஞானியாகப் பாராட்டப்பெற்றார்.

கிரீவ்இசுகியின் கொள்கையானது இசுலாவிய இனத்தவர்களுக்குச் (Slavophile) சாதகமானது என்று கூறலாம். மேலும், அக்கொள்கை தத்துவ, சமயக் கருத்துக்கள் அடங்கியதாகவும், உளவியல், சமூக, அரசியல் கருத்துக்கள் உடையதாகவும் அமைந்திருந்தது. அவை உருசிய தத்துவ ஞானிகளையும், சமய சித்தாந்திகளையும் கவர்ந்தன. இரா.கோ.

**துணை நூல்கள்**:

Losiky, N.O., History of Russian Philosophy, New York, 1951.

Zenkovsky, V.V., Istoriia Russkoi Filosofii, Vol.2 Paris, 1948-1950.

***கிரீன், டி. எச்*** **(1836-1882)**: செருமானிய சிந்தனையாளரான பிரடெரிக் எகலின்(Fredrich Hegel) இலட்சியக் கோட்பாட்டை (Idealist Theory) இங்கிலாந்தில் அறிமுகப்படுத்திய பெருமை டி. எச். கிரீனைச் (T.H. Green) சாரும். இவர் காலத்தில் இங்கிலாந்தில் நிலவிய சமூக, பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு காண அரசு தலையிட வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால், தனிமனித சுதந்திரத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த அன்றைய ஆங்கில மக்கள் தனிமனித வாழ்க்கையில் அரசின் தலையீட்டை ஆதரிக்கும் எகலின் கோட்பாட்டை ஏற்க

மறுத்தனர். அக்கோட்பாட்டில் ஆங்கில மக்கள் கண்ட குறைபாடுகளை அகற்றி, அதனை அவர்களுக்கு ஏற்புடைய ஒரு கோட்பாடாக மாற்றும் முயற்சியில் கிரீன் ஈடுபட்டு, அதில் வெற்றியும் பெற்றார்.

இவர் கி.பி. 1836–ஆம் ஆண்டில் யார்க்சயர் (Yorkshire) என்னுமிடத்தில் ஒரு போதகரின் மகனாய்ப் பிறந்தார். தமது வாழ்நாளின் பெரும் பகுதியை ஆக்சுபோர்டு (Oxford) பல்கலைக் கழகத்தில் கழித்த கிரீன் தொடக்கத்தில் பேலியல் கல்லூரி (Balliol College) யில் உதவி ஆசிரியராகவும்,பின்னர் தத்துவப் பேராசிரியராகவும் பணியாற்றினார். அமைதித் தன்மை கொண்ட இவர் தத்துவ மேதையாக விளங்கியதோடல்லாமல், அன்றாட அரசியலிலும் தீவிர அக்கறை கொண்டிருந்தார். அரசாங்கத்தின் நோக்கம், அதன் செயல் வரம்பு ஆகியவற்றைப் பற்றிய இவருடைய கருத்துகள் கி.பி. 1880–ஆம் ஆண்டில் இவர் நிகழ்த்திய 'தாராள இயல்புடைச் சட்டமும், ஒப்பந்தச் சுதந்திரமும்' (Liberal Legislation and Freedom of Contract) என்னும் விரிவுரையில் காணப்படுகின்றன. அரசியல் கட்டுப்பாடு (Political obligation) பற்றிய தம் கருத்துகளை 'அரசியல் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் பற்றிய விரிவுரைகள்' (Lectures on the Principles of Political obligation) என்ற நூலில் இவர் விரிவாக விவாதிக்கிறார்.

கிரீன், சுதந்திரத்திற்கு முதன்மை கொடுத்துள்ளார். மனிதன் பெற்றுள்ள பேறுகளில் மிகப் பெரிய பேறு சுதந்திரம் ஆகும். அதனை அடைவதே குடி மக்களின் அனைத்து முயற்சியின் குறிக்கோளாகும். ஏனெனில், மனித உணர்வின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் சுதந்திரம் இன்றியமையாததாகும். சுதந்திரம் என்பது பல உரிமைகளைக் கொண்டது. அவ்வுரிமைகளைத் துய்க்கவும், பாதுகாக்கவும் அரசு தேவை. எனவே, அரசின்றிச் சுதந்திரத்தை அடையவும் முடியாது, துய்க்கவும் முடியாது. இவையே கிரீனின் கருத்துகளாகும். ஒரு மனிதனின் சுதந்திரம் அரசு உருவில் கைகூடுகிறது என்ற எகலின் கருத்தைக் கிரீன் ஏற்றுக் கொள்ளவில்லை. சுதந்திரம் பற்றி விவாதிக்கையில் கிரீன் 'ஆக்க முறைச் சுதந்திரம்' (Positive Freedom) என்ற கருத்தை உருவாக்கினார். 'பிறரோடு சேர்ந்து செய்யக் கூடிய அல்லது துய்க்கக்கூடியவற்றைச் செய்யும் அல்லது துய்க்கும் திறன்' என அதற்குப் பொருள் விளக்கம் கொடுத்தார். எந்த ஒரு சமூகத்தில் பொது நலனுக்காகத் தம் திறன்களை வளர்த்துக் கொள்ளக் கூடிய நிலையில் அதன் உறுப்பினர்கள் உள்ளனரோ, எந்த ஒரு சமூகத்தில் அவர்கள் கூட்டாகத் தங்களுடைய முழுச் சிறப்புகளையும் அடையக் கூடியவர்களாக உள்ளனரோ அந்தச் சமூகம்தான் சுதந்திரத்தில் வளருவதாகக் கருதப்பட முடியும் என்று இவர் கூறுகிறார். ஒரு சிலரின் உயர்வுக்காகப் பலர் கீழ் நிலைக்குத் தள்ளப்படும் சமூகம் சுதந்திரத்தில் வளருவதாய்க் கொள்ள முடியாது என்பது இவரது வாதமாகும்.

அரசை ஓர் இயற்கையான அமைப்பு எனக் கிரீன் கருதுகிறார். 'எல்லோருக்கும் பொதுவான உரிமைகளைச் செயற்படுத்த வல்லதோர் அரசு இருந்தால் தான், ஒவ்வொரு மனிதனும் தன்னை முழுமையாக வளர்த்துக் கொள்ள முடியும்; தனிமனித மேம்பாட்டிற்கு உரிமைகள் தேவை; அவ்வுரிமைகளில் அடிப்படைச் சட்ட இயலான ஒப்புதல் மட்டுமல்ல, பொது அற உணர்வுதான் அதன் முக்கிய அடிப்படையாகும். ஆகையினால் உரிமைகள் சட்டத்தை விட அறத்துடன் தான் அதிகத் தொடர்புடையவை' என கிரீன் நம்புகிறார். ஒரு மனிதனின் உரிமையைச் சமூகம் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்; இல்லையேல் அது உரிமையாகாது. எனவே, உரிமைகள் சமூகத்திலிருந்து தோன்றியவையாதலால் கிரீன் 'இயற்கை உரிமைக் கோட்பாட்டை' (Theory of Natural Rights) ஏற்க மறுத்தார். அவர் கருத்துப்படி ஒரு சமூகத்திலுள்ள மக்களிடையே பொது நல உணர்வு இல்லையேல் அங்கு உரிமைகள் இருக்க முடியாது.

கிரீன், சில சூழ்நிலைகளினால் அரசை எதிர்ப்பதற்குள்ள உரிமையைத் தனிமனிதர்களுக்கு வழங்கியுள்ளார். அரசின் ஆணைகள் சட்டத்திற்குப் புறம்பாக இருந்தாலோ, அரசாங்கம் கொடுங்கோல் தன்மையுடையதாக இருந்தாலோ, பொது நலனுக்கு மாறாகச் செயற்பட்டாலோ அரசை எதிர்ப்பது என்பது ஒரு உரிமை மட்டுமன்று, ஒரு கடமையும் ஆகும் எனக் கிரீன் கூறுகிறார். இவர் இயற்கைச் சட்டம்(Natural Law) என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இயற்கைச் சட்டம் சமூக உணர்வு இன்றித் தனித்துச் செயற்படுவதனால்தான் அதை இவர் ஏற்க மறுத்தார்.

கிரீனின் கருத்துப்படி, ஒவ்வொரு சமூகத்திலும் உரிமைகளைச் செயற்படுத்த ஒரு சக்தி அல்லது ஆற்றல் இருக்க வேண்டும்; இல்லையெனில் உரிமைகள் பயனற்றனவாகப் போய்விடும். அச்சக்தி 'இறைமை' (Sovereignty) என அறியப்படுகிறது

'பொது விருப்பத்தின்' (General Will) பிரதிநிதியாகச் செயற்பட்டுச் சட்டங்களை உண்டு பண்ணிச் செயற்படுத்தும் 'சட்ட இயலான இறைமை' அதிகாரியிடம்தான் (Legal Sovereign) அவ்விறைமை குடிகொண்டுள்ளது. சட்ட இயலான இறைமை அதிகாரி வரம்பிலா அதிகாரமுடைய மன்னராக இருக்கலாம். ஆனால், அவருடைய ஆட்சி சமூக நலனைப் பேணக் கூடியதாக இருப்பின் அவ்வாட்சியை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவை கிரீனின் கருத்தாகும்.

அரசின் சட்டங்களுக்கு மக்கள் ஏன் கீழ்ப்படிய வேண்டும்? அரசு பொது நன்மைக்காகச் செயற்படுகிறது; எனவே, தனிமனிதன் பொது நன்மையின் பொருட்டு அரசின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது கிரீனின் விளக்கம் ஆகும்.

கிரீன் பொது விருப்பத்தைப் பற்றிக் கூறுகையில் பொது நலனைப் பேண வேண்டுமென்ற மக்களின் பொது உணர்வுதான் 'பொது விருப்பம்' எனக் கூறுகிறார். அரசு தோன்றுவதற்கு முன்பே பொது நல நாட்டம் மக்களிடம் இருந்தமையினால் அவர்களிடம் பொதுவிருப்பம் இருந்தது; அரசு தோன்றியதும் அப்பொது விருப்பம் முழுமையாகக் கைகூடியது என்று கிரீன் கருதுகிறார்.

அரசு செய்ய வேண்டிய பணிகளைக் கிரீன் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். தனிமனிதனின் அறநெறி உணர்வின் மேம்பாட்டிற்காக அரசு செயற்பட வேண்டும் அதற்காகத் தனிமனிதனுடைய உரிமைகளையும், நல்வாழ்விற்குத் தேவையான சூழல்களையும் அரசு பெற்றுத்தர வேண்டும். தனிமனித உரிமையைச் செயற்படுத்த வல்லந்தத்தைப் பயன்படுத்த அரசுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், அரசு முழுவல்லமை படைத்த நிறுவனமாகச் செயற்படக் கூடாது எனக் கூறி, கிரீன் அரசின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகிறார்.

உலக சகோதரத்துவம் என்ற இலட்சியத்தில் கிரீன் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார். அந்த இலட்சியத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடனுள்ள அதன் உறவைச் சரி செய்து கொள்ள வேண்டுமென்று கிரீன் விரும்பினார்.

இவர் போரை அடியோடு வெறுத்தார். காரணம், அது மனித உரிமைகளை மீறுகிறது. இவர் சொத்துரிமையை ஆதரித்தார். சுதந்திரமான வாழ்விற்குச் சொத்துரிமை வேண்டும் என்றார். ஆனால், ஒரு சிலரது சொத்துரிமை பலரது நலனுக்குத் தடையாக இருப்பின், அரசு அங்குத் தலையிட வேண்டுமென்று இவர் கூறுகிறார். தனிமனிதனின் உரிமைகளையும் கடமைகளையும் பேணுவதற்காகக் குற்றவாளியைத் தண்டிக்கும் உரிமையை அரசுக்கு கிரீன் வழங்கினார்.

கிரீனின் அரசியல் கருத்துகளை ஆராய்ந்தால், இவர் ஒரு மிதமான இலட்சியக் கோட்பாட்டாளர் (Sober Idealist) என்பது புலனாகும். இவருடைய அரசியல் தத்துவம், எகலின் கருத்துகள், தனியுரிமைக் கோட்பாட்டின் கருத்துகள் ஆகியவற்றின் ஒரு கலப்பே ஆகும். சு.மு.


**துணை நூல்கள்:**

**Fair Brother, W.H.,** The Philosophy of Thomas Hill Green, Methuen, 2nd ed., London, 1980.

**Milne, A.J.M.** The Social Philosophy of English. Idealism, London Allen & Unwin, 1962.

**Richter, Melvin,** The Politics of Conscience: T.H. Green and Hoi Age, Harward, Harward Uni Press, 1964.

**கிரீன் நதானியல் (கி.பி. 1742–1786)** சார்சு வாசிங்கடன் காலத்தில் புகழ்பெற்ற அமெரிக்க இராணுவத் தளபதியாகப் பணிபுரிந்தார். இவர் உரோடுத்தீவில் வார்விக்கு நகரத்தில் உள்ள பாடோவோமுடு என்னும் ஊரில் கி.பி.1742–இல் பிறந்தார். மக்கள் படையில் கி.பி.1775–இல் சேர்ந்து ஓர் ஆண்டு பணிபுரிந்தார். உரோடுத் தீவின் படைக்குத் தளபதியாக அமர்த்தப்பட்டார். பின்னர் கேம்பிரிட்சில் இருந்த அமெரிக்கப் படையில் சேர்ந்தார். இவர் போர்த் திறமை வாசிங்டனைக்(George Washington) கவர்ந்தது. இவர்தம் வலிமையையும் வீரத்தையும்



கிரீன் நதானியல்

நாட்டுப்பற்றையும் கண்டு, இவருக்குப் பதவி உயர்வு விரைவில் அளிக்கப்பட்டது. அமெரிக்கப் படை கி.பி. 1780-இல் கடவோ போரிலும், கில்பர்ட்டு கோர்ட்டு அவுசு கால்கிர்டு போரிலும் தோல்வியுற்றது. எனினும் கி.பி. 1781 ஏப்பிரல் மாதம் ஆங்கிலேயப் படைகளை ஈடாசுபிரிங்சுப் போரில் இவர் வெற்றி கண்டார். இவர் ஆங்கிலேயப் படைகளைத் தென் கரோலினாவிருந்து விரட்டினார். கரோலினாப் போரில் இவர் திறமை முழுதும் வெளிப்பட்டது. திறந்த வெளிப்போரில் பின்தங்கி, படைகளைப்பிரித்து, விரைவில் முன்னேறச் செய்து, காரன்வாலிசு தலைமையில் இருந்த ஆங்கிலேயப் படையை முறியடித்தார். காவ்பென்சுப் போரில் மிகப் பெரிய வெற்றி இவருக்குக் கிடைத்தது. எதிரிப் படையின் தலைவரான காரன்வாலிசே இவரைப் பாராட்டினார். வடக்கு கரோலினாவிலும் தம் படைகளை ஒன்றுதிரட்டி எதிரிப் படைகளை முறியடித்து, வடக்குக் கரோலினாவிலிருந்து விரட்டினார். எதிரிப் படைகள் பெருஞ்சேதமடைந்தன. காரன்வாலிசு வடக்குக் கரோலினா முற்றுகையை இவருக்குப் பயந்து முழுமையாக நிறுத்திக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாசிங்டனிலிருந்து செய்தித் தாள்களுக்கு எழுதும்போது தளபதி நதானியல், 'வீரத்துடன் போரிடுங்கள்; இல்லையேல் அமெரிக்கக் குறிக்கோள்களுக்கு அடிமையாக இருங்கள்' என்று அறைகூவல் விடுத்தார். ஆங்கிலேயர்களுடன் நடத்தும் போர் பற்றி, 'இப்போர், பழிவாங்கும் போர்' என்று குறிப்பிட்டார். தளபதி கிரீன் நதானியல் (Greene Nathaniel), அமெரிக்க நாடு சுதந்திரம் அடைய வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டிருந்தார்.

இவர் மக்களாட்சிக் கொள்கைகளின் தத்துவத்தின் அடிப்படையில் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். தேசிய சட்டமியற்றும் மாநாட்டில், இராணுவத்துறை உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல் வேண்டும்; சட்டமியற்றும் அதிகாரம் மக்களிடத்து இருக்க வேண்டும்; ஒவ்வொரு மாநிலமும் தானே உயர்வடையும் வகையில் அமைக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

பல சாதனைகளைப் புரிந்த மாவீரன் கிரீன் நதானியல் கி.பி. 1786-இல் வெயில் கொடுமைக்காளாகிக் காலமானார். இவர்தம் வீரச்செயல்களும் நாட்டுப் பற்றும் உயர்ந்த குடியரசுக் கொள்கைகளும் மக்களுக்கு வழி காட்டும் வகையில் வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. பெ.சி.

**கிரீன்லாந்து**: உலகிலுள்ள தீவுகளில் மிகவும் பெரியதான கிரீன்லாந்து 2,175,600 சதுர கி.மீ.




கிரீன்லாந்து அமைவிடம்




கிரீன்லாந்து

பரப்பளவு கொண்டது. நிலவியல் அடிப்படையில் ஏறத்தாழ வட அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியினை ஒத்துள்ள இம்மாபெரும் தீவு, வட அமெரிக்காவிற்கும் ஐரோப்பாக் கண்டத்திற்கு மிடையே வட துருவத்தையொட்டி அமைந்துள்ளது.

இத்தீவின் பெரும்பகுதி (85 விழுக்காடு) பனிப் படலங்களால் மூடப்பட்டுள்ளது. தென் பகுதியின் கடலோரங்களில் மட்டும் பனி உறைவதில்லை. கடற்கரையோரங்களில் செங்குத்தான மலைப் பாறைகளுக்கிடையே இருக்கமான கடற்கால்கள் (deep fiords) உள்ளன. கடலின் தென் பகுதியில் மிதக்கும் பனிப்பரப்புத் துண்டுகள் காணப்படுவதால் கடற் போக்கு வரத்து வசதிகள் இல்லை. கி.பி. 960-இல் ஐரிக் ரெட் என்பார் (Eirik the Red) இங்கு முதல் குடியேற்றத்தை நிறுவியதுடன் கிரீன்லாந்து எனும் பெயரையும் இட்டார். முதன் முதலில் நிறுவப்பட்ட இக்குடியேற்றத்தின் மக்கள் தொகை 4000 ஆக உயர்ந்தது. பின்னர் 1380-இல் இது தேனிசுக்காரரின் உடைமையாயிற்று. கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இங்குள்ள குடியேற்றங்கள் அனைத்தும் அழிந்தன. ஏறத்தாழ கி.பி. 1721 அளவில் இங்குத் திமிங்கில வேட்டையும்,சீல் வேட்டையும் பெருகவே, மீண்டும் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன.

கிரீன்லாந்தின் தலைநகரம் காட்தப் (Godthab) ஆகும். இந்நகரின் மக்கள் தொகை 1000 ஆகும். இத்தீவின் மொத்த மக்கள் தொகை 54000 ஆகும். தென் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ளது. இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் கலப்பினத்தவரே ஆவர்; இவர்கள் ஐரோப்பியருக்கும் எசுக்கிமோக்களுக்கும் இடையே ஏற்பட்ட இரத்தக் கலப்பில் பிறந்தவர்கள். தென் மார்க்கு நாட்டினர் சிலரும் இங்கு வாழ்கின்றனர்.

கிரீன்லாந்தில் தேனிசு (Danish) மொழியும், கிரீன்லாந்தியர் மொழியும் இணை ஆட்சி மொழிகளாக உள்ளன. தேனிசுக்காரர்கள் 1815-இல் கிரீன் லாந்தில் தமது செல்வாக்கினை விரிவுபடுத்தினர். எனவே, 1953-இல் கிரீன்லாந்து தென்மார்க்கின் முக்கிய பகுதியாக மாறியது. 1979-இல் இத்தீவின் உள்ளாட்சி கிரீன்லாந்தியரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், வெளிநாட்டுறவும், பாதுகாப்பும் தென் மார்க்கிடம் தொடர்ந்து இருந்தன.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் கிரீன்லாந்தின் சோன்ரே, சுட்ராம்சோர்டு, துலே (Sondre, Stromfjord, Thule) ஆகிய இடங்களில் தமது கடற் படைத் தளங்களை அமைத்துள்ளது.இதனால் கிரீன் லாந்து போர்த்திற நடவடிக்கைக்குப் பயன்படத்தக்க (Strategic importance) முக்கியத்துவம் உடையது என்பது புலனாகும்.

இங்குக் கண்ணாடி, அலுமினியத் தொழில்களுக்குத் தேவையான கிரையோலைட் (பனிக்கல் படிவம்) என்றதாதுப் பொருள் அதிக அளவில் கிடைக்கிறது. கிரைபைட், இரும்பு, நிலக்கரி, யுரேனியம், முறி வெள்ளி (Molybdenum) - முதலான கனிப்பொருள்களும் இங்குக் கிடைக்கின்றன. பனி உறைந்து கிடக்கும் குறுகிய தலங்களில் இங்கு விமானங்கள் பாது காப்பாக இறங்க முடிகிறது.

கிரீன்லாந்தின் சில பகுதிகளில் ஆடு மேய்க்கும் தொழில் பிரபலமடைந்துள்ளது. துருவக்கரடி, எசுகிமோ நாய், கலைமான், பனிப்பிரதேச முயல், நரி - ஆகிய விலங்குகளும் இங்குக் காணப்படுகின்றன. கடலில் சீல், வால்ரசு, திமிங்கிலம், மீன் ஆகியன நிறைந்து காணப்படுகின்றன. எனவே, மீன்பிடித்தலும், வேட்டையாடுதலும் இங்கு முக்கிய தொழில். மீன் பக்குவப்படுத்தும் தொழிலும், சுரங்க வேலையும் இங்குப் பலருக்கு வேலை வாய்ப்புகளை அளித்துள்ளன. தென் கடலோரப் பகுதிகளிலுள்ள சமவெளியில் முள்ளங்கி, கிழங்கு வகைகள் ஆகியன பயிராகின்றன. வாட்கின்சு பெர்கே (Watkins Bjerge) முதலான உயரமான மலைத்தொடர்களும் இங்குள்ளன.

கிரீன்லாந்து பனிப்பிரதேசமாக உள்ளதால், பெரிய அளவில் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. எனவே, உலக அளவில் சிறப்பான வாணிகத்தை மேற்கொள்ளஇயலவில்லை. ம.இ.

***கிரீன்விச்சு*** இலண்டனில் உள்ள ஆட்சித் துறைப் பிரிவுகளுள் (Boroughs) ஒன்று. இது தேம்சு நதியின் தென்கரையில் அமைந்துள்ளது. இது 49 ச.கி.மீ. பரப்புடையது.இதில் மூன்று பாராளுமன்றத் தொகுதிகள் உள்ளன. இங்குள்ள புனிதர் அல்பெகி தேவாலயம் மிகப் பழமையானது. இங்கு 1937-இல் ஆங்கில தேசியக் கடல்துறை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. இங்கு 1675-இல் உருவாக்கப்பட்ட வானிலை ஆய்வு நிலையத்தின் நேரக் கணிப்பைக் கொண்டே உலகின் பிற பகுதிகளுக்குரிய நேரம் கணக்கிடப் படுகின்றது.

கிரீன்விச்சு என்ற பெயரில் அமெரிக்காவின் கனெக்டிகட்டு மாநிலத்தில் ஒரு நகர் உள்ளது. நியூயார்க்கிலிருந்து சுமார் 55 கி.மீ. தொலைவில் உள்ளது.இது இந்நகர் கி.பி. 1650-இல் கனெக்டிகட்டு



கிரீன்விச் நகரம்

மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. பலவிதமான மின்னியக்கச் சாதனங்கள் இங்கு உருவாக்கப்படுகின்றன. மா.கா.

**கிருகிய சூத்திரங்கள்**: கி.மு. 2-ஆம் நூற்றாண்டிற்கு முன்பாக வடமொழியில் உருவாக்கப்பட்ட சூத்திரங்களுள் கிருகிய சூத்திரங்களும் அடங்கும். மக்களின் வாழ்வு முறையைப் பற்றி அவை குறிப்பிடுகின்றன.குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருப்போர் இயற்ற வேண்டிய கடமைகள், சடங்குகள் வேள்விகள் ஆகியவற்றை இவை எடுத்தியம்பும். அவற்றுள் பிறப்பு முதல் இறப்புவரை வாழ்க்கையில் மக்கள் மேற்கொள்ள வேண்டிய தொடர்ச்சியான கடமைகள் உணர்த்தப்பட்டுள்ளன.

பிரம்ம, பிரசாபத்ய, அரச, தைவ, காந்தர்வ, அசுர, இராட்சச, பைசாச மணம் என எண்வகைத் திருமணங்களைக் குறிப்பிட்டுள்ள கிருகிய சூத்திரங்களுள் முதல் நான்கு முறையான மணங்கள் மட்டுமே முறையானவையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

பிரம்ம, பத்ரி, தேவ, பூத, அத்ரியக்ஞும் என்ற ஐவகை வேள்விகளை ஒவ்வொரு குடும்பத்தாரும் செய்ய வேண்டுமென அது வலியுறுத்துகின்றது. மேலும், பாக யக்ஞும் என்ற குறிப்பிட்ட ஏழு வகை வேள்விகள் குறிப்பிட்ட இடைவெளிகளுக்குள் செய்து முடிக்கப்பட வேண்டுமெனவும் கூறுகின்றது.

தருமத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள், சமூக வாழ்வியலில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நால்வகைப் பிரிவினரின் கடமைகள் விளக்கப்பட்டு வர்ணாசிரம அடிப்படையில் சாதி முறைகள் சீராக்கப்பட வேண்டுமென கிருகிய சூத்திரங்கள் குறிப்பிட்டுள்ளன.

மா.கா.

**கிருட்டிணகிரி** தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒருநகரம்; வரலாற்றுப் புகழ்மிக்க, இயற்கை அரண் கொண்ட மலைக்கோட்டையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பாராமகால் என்று கூறப்படும் பன்னிரண்டு கோட்டைகளுள் கிருட்டிணகிரிக் கோட்டையும் ஒன்று. பண்டு கிருட்டிணகிரி வட்டத்தில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. பெனுகொண்டாவிலிருந்து இப்பகுதிக்கு வந்த செகதேவராயனின் மரபைச் சேர்ந்த, கிருட்டிணராயன் என்பான் இக்கோட்டையையும், இதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஆண்டதால் இவ்வூர் கிருட்டிணகிரி எனப்பெயர் பெற்றது.

கிருட்டிணகிரிக் கோட்டை மூன்று பக்கம் செங்குத்தாகவும், மேற்குப் பக்கம் பெரிய பெரிய குன்றுகள் கொண்டதாகவும் அமைந்துள்ளது. முன்பு இது இராணுவ இன்றியமையாமை மிக்க பகுதியாகத் திகழ்ந்தது. துர்க்கத்திற்கு அருகிலுள்ள பழைய பேட்டை பார்ப்பதற்கு மிகப்பழைமை உடையதாகத் தோன்றுகிறது. முன்பு இப் பகுதியில் பல அலுவலர்கள் தம் குடியிருப்புகளை அமைத்திருந்தனர். ஆனால், இப்போது சின்ன ஏரிக்கு அண்மையில் உள்ள பயணியர் மாளிகையைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை. வெடிவிபத்தில் கி.பி. 1801-ஆம் ஆண்டில் இறந்துபட்ட ஆங்கிலப் படைத்தளபதியான என்றி சுமித்து (**Captain Henry Smith**) முதலில் இம் மாளிகையில் வாழ்ந்தானாம். இன்று மாவட்ட முன்சிப் வழக்கு மன்றம் இடம் பெற்றுள்ள கட்டடமும் கூட, முன்னாளில் படை அதிகாரி ஒருவனின் இருப்பிடமாகத் திகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

கிருட்டிணகிரியின் பழைய வரலாறு பற்றி ஒன்றும் அறியமுடியவில்லை. இருப்பினும், ஆங்கில-மைசூர்ப் போர்களின் போது இது முக்கியத்துவம் பெற்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இக்கோட்டையைப் பிடிப்பதற்கு ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகள் தொடக்க காலத்தில் தோல்வியைத் தழுவின. முதல் மூன்று ஆங்கில-மைசூர்ப் போர்களிலும் முக்கிய பங்கு வகித்தஇக்கோட்டை, கி.பி. 1792-இல் திப்புவிற்கும் ஆங்கிலேயருக்கும் ஏற்

பட்ட உடன்படிக்கையின் விளைவாக ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் நாற்பது ஆண்டுகள் (1834 முடிய) இக்கோட்டையில் படை நிறுத்தப்பட்டிருந்தது. மலையின் உச்சியில் பல மண்டபங்கள் குளங்கள், வெடி மருந்துக் கிடங்குகள், தானியக் களஞ்சியங்கள், சையது பாட்சா, சையது அக்பர்-கல்லறைகள் ஆகியன அமைந்துள்ளன. இன்றும் இந்நகர் இராணுவ முக்கியத்துவம் குறைந்ததாகத் தெரியவில்லை. பழைய பேட்டையில் இன்றும் பழைய முகம்மதியச் சிப்பாய்களின் மரபினரும் மராத்திய வீரர்களின் மரபினரும் வாழ்ந்து வருகின்றனர். மீர்குலாம் அலி என்பவரின் பேரனான மீர் முகம்மது கபிபுல்லா சாகிபு என்பவரிடம் பதினாறாம் லூயி மன்னரால் வழங்கப்பட்ட பதக்கம் ஒன்று உள்ளது. ஒருபக்கம் பதினாறாம் லூயியின் தலையும், மறுபக்கம் அரசி மேரி அண்டாய்னெட்டின் உருவமும் பொறிக்கப்பட்ட இப்பதக்கம் கி.பி. 1781-இல் லூயியின் அரண்மனைக்குத் தூது சென்ற திப்புவின் பேராளரான முகம்மது உசுமானுடன் சென்ற மீர்குலாம் அலிக்கு வழங்கப்பட்டதாம்.

கிருட்டிணகிரி வட்டம் பண்டைய நாகரிகத்திற்குப் புகழ்பெற்றது. இவ்வட்டத்தில் உள்ள பர்கூரில் புரூசுபுட்டு **(Bruce Foote)** என்பவர் 1916-இல் புதிய கற்காலக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினைக் கண்டுபிடித்தார். கொல்லப் பள்ளியிலும், தோகரப் பள்ளியிலும் புதிய கற்காலக் கற்கோடாரிகள் **(Neolithic celts)** கண்டெடுக்கப்பட்டுள்ளன. கிருட்டிணகிரி-ஊத்தங்கரை சாலையில் 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தோகரப் பள்ளி மலையடிவாரத்தில், கண்டெடுக்கப்பட்ட புதிய கற்காலக் கருவிகள் சேலம் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. கிருட்டிணகிரி – மகாராசா கடை சாலையில் கிருட்டிண கிரியிலிருந்து வடக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள (கொல்லப்பள்ளி) தேஞ்சேரிமலைத்தட்டை மேட்டுச்சியில் **(Terrace)** புதிய கற்கால மக்களின் கறுப்பு-சிவப்புப் பானை ஓடுகள் கிடைத்துள்ளன. டாக்டர். பி. நரசிம்மையா அவர்களால் தோகரப்பள்ளியிலும், கொல்லப் பள்ளியிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்வின் விளைவாகத் தோண்டியெடுக்கப்பட்ட மட்பாண்டங்கள், இவர்களது கலையுணர்ச்சியைப் பெரிதும் வெளிப்படுத்துகின்றன. இவ்வட்டத்தில் உள்ள கப்பலவாடியிலும் வரகூரிலும் பலவகையான புதிய கற்காலக் கற்கருவிகள் பெரிய அளவில் கிடைத்துள்ளதால், இவ்விடங்களிலும் கற்கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன என்பது புலனாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துத் தமிழக வரலாற்றில் கிருட்டிணகிரி வட்டம் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளது.

கிருட்டிணகிரிக்கு 10 கி. மீ. தொலைவில் 'கிருட்டிணகிரி நீர்த்தேக்கம்' பொன்னையார் ஆற்றில் கட்டப்பட்டுள்ளது. இந்நீர்த் தேக்கத்திலிருந்து இரண்டு கால்வாய்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இத்தேக்கத்தின் நீளம் 3,250 அடி ஆகும். இது 2339 அடி மண்ணாலும், 911 அடி கல்லாலும் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் 1957-இல் தொடங்கப்பட்டாலும், கி.பி. 1875-ஆம் ஆண்டிலேயே சேலம் ஆட்சித் தலைவராக **(District Collector)** இருந்த தாமசு அவர்கள் இதற்கான கருத்துருவைத் தீட்டினார். இதற்கான ஏற்பாடுகள் 1948-49-இல் மேற்கொள்ளப்பட்டன. இந்நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு 2,410 எம்.சி.அடி**(M.C.ft)**. கிருட்டிணகிரி வட்டத்தில் பரூர் ஏரித்திட்டம் **(Barur Tank Project)** ஒன்று 4 இலட்ச உருபாய் செலவில் கி.பி. 1887-இல் மேற்கொள்ளப்பட்டு கி.பி. 1891-இல் கட்டிமுடிக்கப்பட்டது.

கிருட்டிணகிரியில் சுவாமி சிலைகள் செதுக்கும் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. இங்குச்செதுக்கப்படும் கற்சிலைகள் நேர்த்தியானவை. எண்ணெய் பிழிதலும், கயிறு தயாரிப்பதும், சரிகை நெசவும், வெல்லம் தயாரித்தலும் இங்குள்ள முக்கியத் தொழில்கள் ஆகும். புஞ்சைப் பயிர்களே இங்கு மிகுதி. பர்கூரில் வடநாட்டில் தயாராகும் துணிகள் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன.

கிருட்டிணகிரியில் அரசினர் கலைக்கல்லூரி ஒன்றும் பல மேல்நிலைப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் உள. இங்கு ஊராட்சி ஒன்றியத் தலைமையகமும், துணை மாவட்ட ஆட்சியாளர், வட்ட ஆட்சியாளர் **(Tahsildar)** துணைக் கண்காணிப்பாளர், கூட்டுறவுச் சங்கங்களுக்கான துணைப் பதிவாளர், மாவட்ட வேளாண்மை அலுவலர் அலுவலங்களும், பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும், தொழிற்பள்ளியும், அரசு மருத்துவமனையும் காவல் நிலையங்களும் உள்ளன. முன்னாள் இராணுவ வீரர்கள் சங்கத்தை **(Soldiers Club)** நிறுவி, கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலையும் நிறுவியுள்ளனர்.

இங்கு மலைப்பகுதியின் குளிரும், சமவெளியின் வெப்பமும் இன்றிச் சம தட்பவெப்ப நிலை உள்ளது. சேலம்-பெங்களூர் நெடுஞ்சாலையில் இந்நகரம் அமைந்துள்ளதால் நன்கு வளர்ந்து வருகிறது. இங்கிருந்து அதிக அளவில் பீடியும், புளியும் கட்டுக்கட்டாகச் சரக்கு வண்டிகளில் பிற பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. பாராமகால் கோட்டைகளிலேயே மிகுந்த வேலைப்பாடுகொண்ட கோட்டை கிருட்டிண கிரியே ஆகும். இக்கோட்டையின் சிறப்பையும் அழகிய தோற்றத்தையும் பற்றி இலே பானு **(Le Fanu)** மிகு

அழகாக விவரித்துள்ளார். தமிழ்நாட்டின் வரலாற்றுப் புகழ் மிக்க கோட்டை நகரங்களுள் கிருட்டிண கிரியும் ஒன்று. ம.இ.

**துணை நூல்கள்:**


**இராசசேகரதங்கமணி, ம.,** தருமபுரி மாவட்டத்தில் புதிய கற்காலப் பண்பாடு, கொங்கு ஆய்வகக் கருத்தரங்க மலர், 1984.

Gazetteer of India, Madras, Salem, 1967.


**கிருட்டிண சயந்தி**: சயந்தி என்பது 'பிறந்த நாள்' என்ற பொருளில் வழங்குகிறது. திருமாலின் அவதாரமான கண்ணன் பிறந்த நாள் 'கிருட்டிண சயந்தி' எனக் கொண்டாடப்படுகிறது. சிரீ சயந்தி எனவும் இது வழங்கும். கண்ணனின் பிறப்பு பாகவதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

துவாபர யுகத்தின் இறுதியில் கம்சன் என்ற கொடுங்கோல் மன்னன் வடமதுராபுரியை ஆண்டு வந்தான். அவன் தன் தந்தை உக்கிர சேனரிடமிருந்து பலவந்தமாக ஆட்சியைப் பறித்து அரியணை ஏறினான். அவன் இட்டதே சட்டமாயிற்று. மக்களைப் பலவாறு வதைத்தான். அவனது கொடுமை தாங்காத பூமாதேவி நான்முகனிடம் முறையிட, நான்முகன் நாராயணனை வேண்ட அவர் கம்சனது கொடுமையை ஒழிப்பதற்குத் தாமே அவதாரம் செய்வதாகக் கூறியருளினார்.

கம்சனின் தங்கை தேவகி. கம்சன் அவளை வசுதேவருக்கு மணம் செய்து கொடுத்தான். ஒருநாள் இருவரையும் வைத்துத் தேரோட்டி வந்தான். அப்போது அசரீரி 'தேவகி வயிற்றில் பிறக்கும் எட்டாவது குழந்தை உன்னை அழிக்கும்' என்றது. கம்சன் சினங்கொண்டு இருவரையும் சிறையில் வைத்தான். அவர்களுக்குப் பிறந்த ஆறு குழந்தைகளையும் ஒவ்வொன்றாகக் கொன்றான். ஏழாவது குழந்தை அவனை எச்சரித்துவிட்டுப் பறந்து சென்றது. உடனே காலில் விலங்கு பூட்டி இருவரையும் கடுங்காவலில் வைத்தான் அக்கொடியவன்.

எட்டாவது முறை தேவகி வயிறு வாய்த்தாள். தேவதேவனான நாராயணனே அக்கருவாகத் தங்கியிருந்தான். தேவன் அவதாரம் செய்யும் வேளை தேவகிக்கு அணுகியது. அப்பொழுது ஒரு பேரொளிப் பிழம்பு அவர்களின் கண்முன் தோன்றியது. சங்கு சக்கரம் ஏந்திய கைகளோடு நாராயணன் அதில் காட்சியளித்தார். பெற்றோரின் விலங்குகள் தாமாகவே தெறித்து வீழ்ந்தன.

மறுகணம் நாராயணன் மறைய அவ்விடத்தில் அழகிய குழந்தையாகக் கண்ணன் கிடந்தான். தேவகி தன் துன்பத்தை எல்லாம் மறந்து குழந்தையை வாரியணைத்தாள். துன்பங்களை எல்லாம் மறந்து முத்தமிட்டு மகிழ்ந்தாள்.

ஆவணி மாதம், கிருட்டிண பட்சம் அட்டமிதிதி உரோகிணி நட்சத்திரம் கூடிய நன்னாளில் கிருட்டிணன் பிறந்தான். இன்று காசி முதல் கன்னியா குமரி வரை இந்நாள் 'கிருட்டிணன் சயந்தி' எனக் கொண்டாடப்படுகிறது. கிருட்டிணன் பிறக்குமுன் பஞ்சாயுதத்தோடு பெற்றோருக்குத் தரிசனம் தந்து அவர்களின் முதற்பிறப்பை உணர்த்திய நாளாதலின் இது மிகச்சிறந்த புனித நாளாக வைணவர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

வடஇந்தியாவில் கிருட்டிண சயந்தி இந்நாளிலும் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியர்களுக்கு ஒரு பெரும் பண்டிகையாகக் கிருட்டிண சயந்தி விளங்குகிறது. அ.ஆ.

**கிருட்டிணசாமி அய்யங்கார், எஸ்.**: இவர் தென்னிந்திய வரலாற்றைச் சிறப்பான முறையில் எழுதிப் புகழ் பெற்ற வரலாற்றறிஞர்களுள் சிறந்தவர். இவர் தென்னிந்தியாவைப் பற்றிய வரலாறு அருகியிருந்த காலத்தில் பல ஆய்வு நூல்கள் மூலம் அதனை நண்குணர்ந்து தென்னிந்திய வரலாற்று உண்மைகள் பலவற்றை உலகம் அறியச் செய்தார். விருப்பு வெறுப்பு இன்றி நடுநிலையோடு வரலாற்று உண்மைகளை இவர் ஆய்ந்தார். விசயநகர வரலாறு, வாகாடகர் வரலாறு, பல்லவர் வரலாறு முதலியவற்றுக்குப் புத்துயிர் அளித்த பெருமை இவருக்கு உரியது. பல நூல்களையும் 120க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். வருங்கால மக்களை வரலாற்று ஆராய்ச்சியில் ஊக்குவிக்க வேண்டுமென்பது இவருடைய விருப்பம். அதற்கு உதவும் வகையில் 1923-ஆம் ஆண்டுவரை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த கல்வெட்டுகளைத் தொகுத்து உதவினார். விசயநகர வரலாற்றின் பல சிக்கல்கள் இப்பொழுது தீர்க்கப்பட்டிருப்பதற்கு இவர் அந்நாட்டு வரலாற்றுக்குரிய மூலச் சான்றுகளைத் தொகுத்து வெளியிட்டது ஒரு சிறந்த காரணமாகும். இசுலாமியர், தென்னிந்தியாவுடன் கொண்டிருந்த உறவுகளை விளக்கும் இவருடைய ஒரு நூல், தென்னகம் எவ்வாறு பல படையெழுச்சிகட்கு உட்பட்டது என்பதைத் தெளிவுற விளக்குகிறது.

இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினைந்தாம் நாள் தமிழ்நாட்டில் கும்பகோணத்துக்கு



கிருட்டிணசாமி அய்யங்கார்

அருகிலுள்ள சாக்கோட்டை என்னுமிடத்தில் வைணவ அந்தணர் குலத்தில் பிறந்தார். பெங்களூர் சென்று கல்வி கற்றார். தொடக்கத்தில் இவர் விரும்பிக் கற்றவை கணிதமும் இயற்பியலுமே. எனினும், வரலாற்றில் இவருக்கு இருந்த ஆர்வம் காரணமாக ஓய்வு நேரங்களில் எல்லாம் வரலாற்று நூல்களைப் படித்ததன் விளைவாக, அதில் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற பேராவல் இவரை வரலாற்றுத் துறைக்குத் திருப்பியது.

இவர் கி.பி. 1899-ஆம் ஆண்டில் வரலாற்றில் முதுகலைப் பட்டம் பெற்றார். முதலில் உயர்நிலைப் பள்ளிகளிலும், பிறகு பெங்களூர் நடுக்கல்லூரியிலும் வரலாறு கற்பித்தார். அதே கல்லூரியில் 1904-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பேராசிரியரானார். சென்னைப் பல்கலைக்கழகம் 1914-இல் இந்திய வரலாற்று ஆராய்ச்சித்துறையை ஏற்படுத்தி இவரையே அதன் முதல் பேராசிரியராக அமர்த்தியது. அங்கு இவர் பணியாற்றிய 15 ஆண்டுகளில், பல கீழ்நாட்டுக்கலை மாநாடுகளிலும், இந்திய வரலாற்று ஆணைக்குழுத் தொண்டுகளிலும், இந்தியத் தொல்பொருள் ஆய்வு வேலைகளிலும் பங்கு கொண்டு அருஞ்செயல்களாற்றினார். பம்பாய் நகரில் 1931-இல் நடைபெற்ற முதல் இந்திய வரலாற்று மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் பெருமை இவருக்குக் கிடைத்தது.

வரலாற்றுப் பேரறிஞரான இவர், 1. பண்டைய இந்தியா (Ancient India-1911); 2. தென்னிந்திய வரலாறும் பண்பாடும் (South Indian History and Culture); 3. சேரன் வஞ்சி (Seran vanji-1940); 4. தென்னிந்திய வரலாற்றின் தொடக்கம். 5. தென்னிந்தியாவும் முகமதியப் படையெடுப்பாளர்களும் (South India and Her Muhammadan Invaders-1921); 6. இந்தியப் பண்பாட்டில் தென்னிந்தியாவின் பங்கு (Some Contributions of South India to Indian Culture-1923); 7. வாலாற்றுப் பின்னணியில் மணிமேகலை (Manimekalai In Its Historical Setting-1928) 8. விசயநகர வரலாற்றுச் சான்றுகள் (The Sources of Vijayanagar History-1919); 9. தென்னகத்தில் இந்து ஆட்சிமுறையின் வளர்ச்சி (Hindu Administrative Institutions in South India-1930); 10. திருப்பதியின் வரலாறு - இரண்டு பகுதிகள் (A History of Tirupati - 2 Volumes-1941); 11. தென்னிந்தியாவின் வரலாற்றுப்புகழ் மிக்க கல்வெட்டுகள் (Historical Inscriptions of Southern India-1932); 12. பண்டைய இந்தியாவும் தென்னிந்திய வரலாறும் பண்பாடும் (Ancient India and South Indian History and Culture - 1941). ஆகிய ஆங்கில நூல்களை இயற்றியுள்ளார்.

மேற்கூறப்பட்ட தரமான வரலாற்று நூல்கள் மட்டுமின்றிப் பல ஆய்வுக் கட்டுரைகளையும் அவ்வப்போது பல தரமான ஆய்வேடுகளில் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது நினைவாக 1936-இல் பல வரலாற்றுக் கட்டுரைகளைத் தாங்கிய மலர் ஒன்று வெளியிடப்பட்டது. சங்கத் தமிழ் இலக்கியங்களை நன்கு கற்றுணர்ந்து, தொடக்ககாலத் தமிழ் வரலாற்றினை எழுதும் மரபினைத் தொடங்கி வைத்த பெருமை இவரையே சாரும். பல வரலாற்றுக் கட்டுரைகளைத் தமிழில் எழுதி, 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டார். பல்லவர், பாண்டியர், சோழர் ஆகிய மரபினரின் வரலாற்று வரையறைகளை நிறுவினார். தமிழ் வரலாற்றை உருவாக்கும் பணியில் இவரது முயற்சி பாராட்டத்தக்கதாக இருந்தது. இவர்தம் ஆய்வுக் கட்டுரைகளுள் கீழ்க்கண்டவை மிகவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

1. விசயநகரப் பேரரசின் தோற்றம் (Foundation of Vijayanagar - Q.J.M.S. Vol.XI) 2. மைசூரும் விசயநகரப் பேரரசின் வீழ்ச்சியும் (Mysore and the Decline of the Vijayanagar Empire - Ibid. Vol.13. 1923); 3. விசயநகர வரலாற்றில் குறைவாகத் தெரிந்த பகுதி கி.பி. 1450 முதல் 1509 முடிய (A Little Known chapter of Vijayanagar History from 1450 to 1509 - Hindustan Review-1911); 4. முன்பே மறந்துபட்ட பேரரசின் இன்றும் நினைவில் உள்ள வேந்தன் (The Yet remembered ruler of a Long - Forgotten empire, Proceedings of I.H.R.C. Poona 1925); 5. விசயநகர சிரீரங்கராயலு (Srirangarayalu of Vijayanagar, I.H.R.C. Vol. 18) 6. தஞ்சாவூரின் அறிஞர் மன்னன் (The Scholar King of Tanjore -

தென்னிந்தியப் பேரவையில் நிகழ்த்திய உரை); 7. வேலூர் வேந்தன் (The King of Vellore J.I.H. Vol. XI Part II); 8. தென்னிந்தியாவில் மராட்டியரின் எழுச்சி (Rise of the Maratha Power in the South J.I.H. Vol.9 Part II); 9. அபுல் அசன் குதுப் சாவும் அவனது அமைச்சர்களான மாதன்னாவும் அக்கன்னாவும் (Abul Hasan Qutb Shah and his ministers Madanna and Akkanna (Ibid Vol.X Part II); 10. செஞ்சியின் இராசாதேசிங்கு(Raja Desing of Gingee J.I.H. Vol.9); 11. விசயநகரத்து இராமராயர் (Ramaraya of Vijayanagar- சர் தேசாய் நினைவு மலர். 1938).

இவர் 1947-ஆம் ஆண்டில் காலமானார்.

ம.இரா.த. & தெ.பா.

**துணை நூல்கள்:**

**சுப்பிரமணியன்,ந.,** வரலாறு வரைவியல்,தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை 1980.

**Krishnaswami, A.,** The Tamil Country Under Vijayanagar Annamalai University, 1964.

## கிருட்டிணசாமி அய்யர், அல்லாடி,

நெல்லூர் மாவட்டம் நாயுடு பேட்டைக்கு அருகில் புதூர் என்னும் கிராமத்தில் கி.பி. 1883-இல் பிறந்தார். இவர் ஏகாம்பர ஐயரின் மகனாவார். கோயில் குருக்களாகப் பணியாற்றிய அந்த ஏழைக் குடும்பத்தினர் கிருட்டிணசாமியின் கல்விக்காகச் சென்னையில் குடியேறினர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்த கிருட்டிணசாமி அதே கல்லூரியில் வரலாற்றுப் பயிற்றுநராகக் பணியில் அமர்ந்தார்.

இவர் 1907-இல் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். மூன்றே ஆண்டுகளில், 'திறமையான வழக்கறிஞர்' எனப் புகழ் பெற்ற அல்லாடி மிக முக்கிய வழக்குகளில் வாதிட்டார். இவர் 1902-ஆம் ஆண்டின் இறுதியில் சென்னை உயர்நீதிமன்றத்தின் மிகச் சிறந்த வழக்கறிஞர்களுள் ஒருவரானார். இந்திய விற்பனைச் சட்ட முன் வரைவுக்கான வல்லுநர் குழுவிலும், கூட்டாண்மைச் சட்ட முன்வரைவுக்கான குழுவிலும் அல்லாடி உறுப்பினராக இருந்தார். இவர் 1919-ஆம் ஆண்டுச் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சியில் இருந்து, 1937-இல் அமைக்கப் பட்ட இடைக்கால அமைச்சரவை வரை சட்ட ஆலோசகராகச் செயலாற்றினார்.

சென்னை மாகாணத்தில் ஆங்கில அரசின் தலைமை வழக்கறிஞராக நீண்ட காலம் பணியாற்றியவர் அல்லாடி கிருட்டிணசாமி அய்யர் ஒருவரே. நீர் உரிமை வழக்கு, எல்லை உரிமை வழக்கு என மாநிலங்களுக்கு இடைப்பட்ட பல வழக்குகளில் அல்லாடி வாதிட்டார். இவர் 1933-இல் இங்கிலாந்துக்குச் சென்று ஆங்கில சட்டத்துறை எவ்வாறு செயல்படுகிறதென்பதை நேரிடையாகக் கண்டறிந்து வந்தார். இந்திய, ஆங்கிலச் சட்டங்களில் இவருக்கு மிகுந்த பயிற்சி உண்டு. பல விருதுகளும் பட்டங்களும் இவருக்கு வழங்கப்பட்டன.

இவர் 1938-ஆம் ஆண்டில் காங்கிரசு கட்சியில் சேர்ந்தார். ஆங்கில அரசு இந்திய நாட்டுக்கு விடுதலை தரத் தயங்குவதில் எந்த நியாயமும் இல்லை என்பதை அல்லாடி எடுத்துரைத்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் சமூகக் கண்ணோட்டத்துடன் செயல்பட வேண்டுமெனக் கூறினார். இவர் பழமைவாதியாக இருந்தபோதிலும் இந்துச் சட்டத்தில் பெரும் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென எண்ணினார்.

இவர் சென்னைப் பல்கலைக் கழகப் பேரவையில் 13 ஆண்டுகள் தொடர்பு கொண்டிருந்தார்; ஆட்சிக் குழுவிலும் பல ஆண்டுகள் உறுப்பினராக இருந்தார். வாரணாசிபல்கலைக்கழகத்திலும் அவருக்குத் தொடர்பு உண்டு. பல கல்வி நிறுவனங்கள் அல்லாடியின் உதவியைப் பெற்றன. நாடு விடுதலை பெற்ற பின் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வரையும் குழுவில் இவர் இடம் பெற்றார். இந்து சமயத்திலும் இந்தியப் பண்பாட்டிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த அல்லாடி ஒரு நல்ல எழுத்தாளராகவும் விளங்கினார். பல பத்திரிகைகளில் கட்டுரைகள் பலவற்றை எழுதினார். சென்னை சட்ட இதழின் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றுச் சட்ட இதழில் பல கட்டுரைகளை எழுதினார்.

வெற்றியும், புகழும், பணமும் அல்லாடியிடமிருந்த மனிதத் தன்மையை மாற்றவில்லை. மிகச் சிறந்த மனிதராக வாழ்ந்த அல்லாடி 1953-இல் காலமானார்.

வை.ப.

## கிருட்டிண சாமி ஐயர்(திருப்புகழ்மணி):

திருப்புகழ்மணி என்று போற்றப்பட்ட டி.எம். கிருட்டிணசாமி ஐயர் அவர்கள் திருவையாற்றுக்கருகில் உள்ள அகிலாண்டபுரத்தில் கி.பி. 1885-ஆம் ஆண்டு பிறந்தார். இவரது ஆரம்பக் கல்வி திருவையாற்றில் தொடங்கியது. மன்னார்குடி, பின்லே உயர் நிலைப் பள்ளியில் கல்வி கற்றார். இவரது கல்லூரி வாழ்வு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும், தாம்பரம் கிறித்தவக் கல்லூரியிலும் அமைந்தது. சட்டக் கல்வி பயின்றபின் 1907-ஆம் ஆண்டு

வழக்கறிஞர் வாழ்வைத் தொடங்கினார். நடுநிலை யாளர், பேச்சுவன்மை கொண்டவர், நல்லவர் என் னும் பாராட்டுகள் இவரை அடைந்தன.

இளமை முதலே இவர்க்கு இசையில் ஈடுபாடு உண்டு. இவர் இசையை முறையாக யாரிடமும் பயிலவில்லை. எனினும், இயற்கையாகவே இனிமை யான குரல் வாய்க்கப்பெற்ற இவர் தாள அமைதி யுடன் பாடிப் பிற்காலத்தில் சிறந்துவிளங்கினார்.

இவர்தம் வாழ்க்கைத் துணைவியார் தெய்வ பக்தி கொண்டவர். அருள் அனுபவங்கள் பெற்றவர். அவர் 1933-ஆம் ஆண்டு காலமானார். திருப் புகழில் கிருட்டிணசாமி ஐயர் அவர்கள் ஈடுபாடு கொண்டதற்கு வள்ளிமலை சுவாமிகளே காரண மாவார். இவர் 1922-ஆம்-ஆண்டுசுவாமிகளைச்சந்தித் தது முதல், திருப்புகழில் விருப்பமும், திருப்புகழ்ப் பாடல்களை இசையோடு பாடிப் பாமரர்களை அதில் ஈடுபடுத்தும் விழைவும் உண்டாயின.

திருப்புகழ்ப் பாடல்களை இசையோடு பாடி எல்லோரையும் மெய்ம்மறக்க வைக்கும் திறனை நேரில் கண்டு வியந்த காஞ்சி சங்கராசாரிய சுவாமி கள் 1928-ஆம் ஆண்டு 'திருப்புகழ்மணி' என்னும் பட்டம் தந்து ஆசி கூறினார். இவர் திருப்புகழில் மட்டுமன்றித் தாயுமானவர் பாடல்களிலும் மிக்க ஈடு பாடு கொண்டவர். ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் புலமைமிக்கவர். ஆண்டுதோறும் திருத்தணியில் திசம்பர் 31-ஆம் நாள் நடைபெறும் படிவிழாவில் பங்கு கொண்டு, திருப்புகழ்த் தேனை அனைவரும் பருகச் செய்தவர்.

வழக்கறிஞர் தொழிலிலும் இவரது உழைப்பை யும் நேர்மையையும் மதித்த திருவிதாங்கூர் அரசு இவரை அரசு நீதிபதியாகப் பணியாற்றும்படி வேண்டி யது. சில ஆண்டுகளே அப்பதவியை வகித்தாலும், இவர் மன்னராலும், மக்களாலும் பாராட்டப்பட் டார். திருவிதாங்கூர் அரசர் 1945-ஆம் ஆண்டு 'இராச்ய சேவாபிரவீண' என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தார்.

இவர் 1963 முதல் வழக்கறிஞர் தொழிலைத் துறந்து முழுநேரத் தொண்டராகப் பணியாற்றினார். மயிலைத் திருப்புகழ்ச் சங்கம் இவரால் தொடங்கப் பட்டது. பி.எசு. உயர்நிலைப்பள்ளியின் நிருவாகக் குழுவில் இடம்பெற்றுக் கல்விப் பணி செய்தார். இவ ரது உள்ளம் தெய்வ பக்தியோடு தேச பக்தியும் நிரம்பியது. புகழ்பெற்ற 'ஆசு', கொலை வழக்கில் தேச பக்தர்கள் சார்பில் இவர் வாதாடினார். இளம் வக்கீல்களை ஊக்கப்படுத்துவதில் இவர் சமர்த்தர். பெரிய பதவிகளை வகிக்கும் காலத்தும் எளிய மனித ராகத் தெருவில் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி வந்த இவரது தன்மை எல்லோருடைய வியப்பிற்கும் பாராட்டுக்கும் உரியதாக இருந்தது.

சுவாமி சிவானந்த சரசுவதி அவர்கள் இவரது திருப்புகழ்ப் பசனையைக் கேட்டு மகிழ்ந்து 'திருப் புகழ்ச்சோதி' என்னும் பட்டமளித்தார்.

எளிமை, இரக்கம், அன்பு, நேர்மை ஆகியவற் றின் நிலைக்களமாக வாழ்ந்த திருப்புகழ்மணி அவர் கள் 1966-ஆம் ஆண்டு காலமானார். ஜி.ஆர்.கி.

**கிருட்டிணசாமி: நாயுடு, ரா.:** இவர் காம ராசர் மாவட்டம் சிரீவில்லிபுத்தூருக்கு அண்மை யிலுள்ள இராமச்சந்திரபுரத்தில் 1901-இல் பிறந்தார். தந்தையார் இராமசாமி நாயுடு; தாயார் அழகம் மாள். இவர் மனைவி பெயர் ஆண்டாளம்மாள். இவருக்கு 4 ஆண் மக்களும், 4 பெண் மக்களும் உள்ளனர். இவர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவர். ஆனால், கம்பராமாயணத்திலும் வில்லி பாரதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். கவிதை புனையும் ஆற்றலும் உடையவர். தாமே முயன்று ஆங்கிலத்தையும் கற்றுக் கொண்டார். இசையிலும் வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டவர்.



கிருட்டிணசாமி நாயுடு

இவர் வேளாண்மையிலும் பஞ்சு வணிகத்திலும் நல்ல பழக்கமுடையவர். தேச விடுதலைக்குப் பாடு பட்ட காங்கிரசுப் பேரியக்கத்தில் 1922-இல் சேர்ந் தார். தேசபக்தர் சுப்பிரமணிய சிவா, குமாரசாமி ராசா, காமராசர் முதலியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இவர் 1930-இல் காந்தியடி

கள் தலைமையில் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கு கொண்டு சிறைத் தண்டனை பெற்றார். பின்னர் 1941-இல் நடைபெற்ற தனிப்பட்ட சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டும் சிறைப்பட்டார். மேலும் 1942-இல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டார். தமிழகச் சட்டமன்ற உறுப்பினராக 1952 முதல் 1967 வரையும், மேலவை உறுப்பினராக 1968 முதல் 1973 வரையும் பணியாற்றினார். இவரது தேசத் தொண்டை மதித்துத் தமிழ்நாடு காங்கிரசின் தலைமைப் பதவியை 1962 முதல் 68 வரை அளித்தனர். இவர் கூட்டுறவு இயக்கங்களிலும் ஈடுபாடு கொண்டார். உழைப்பு, எளிமை, சிக்கனம், நேர்மை ஆகியவற்றின் சின்னமாக இவர் திகழ்ந்தார். பல இளைஞர்கள் இவரது ஆதரவில் வேலைவாய்ப்பும் உயர் பதவியும் பெற்றனர். இறுதி வரை காந்திய வாதியாக வாழ்ந்த இவர் 1973-இல் காலமானர். கி.க.

**கிருட்டிணதாசு கவிராசு** வங்காள நூலாசிரியர்களுள் ஒருவர். புலமைமிக்க இவர் வைணவ சமய ஈடுபாடு மிக்கவராகவும் விளங்கினார். வங்காளத்தில், கி.பி. 1486 முதல் கி.பி. 1534-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் சிரீ சைதன்யர் தோன்றி வைணவ சமயத்திற்கும், பக்தி நெறிக்கும் பெருந்தொண்டாற்றினார். அதனால், வங்கமொழியில் அவர் வரலாற்றினைப் பலரும் எழுதியுள்ளனர். அவற்றுள், கிருட்டிணதாசு கவிராசு 'சைதன்னிய சரித்திராமிருதம்' என்னும் பெயரில் எழுதிய சைதன்யர் பற்றிய வரலாறு மிக்க சிறப்புடையதாகும். சிரீ சைதன்னியர் இறந்தபின், ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள் அந்நூல் இயற்றப்பட்டது. இவர், அந்நூலில் வங்கமும் இந்தியும் கலந்த மணிப்பிரவாள நடையினை மேற்கொண்டுள்ளார். இவர் தம் எண்பதாம் வயதில் சைதன்யர் வரலாற்றை எழுதத் தொடங்கினார் என்றும், அந்நூலின் ஏடுகளைத் திருடர் கவர்ந்து சென்றனர் என்றும் இவர் காலமான பின்னர் அவை மீண்டும் கிடைத்தன என்றும் கூறப்படுகிறது. அ.மா.ப.

**கிருட்டிண தேவராயர் (கி.பி. 1509-1530):** விசயநகர வேந்தருள் தலைசிறந்தவராகத் திகழ்பவர்; தென்னிந்தியப் பேரரசர்களுள் வெற்றியிலும், ஆட்சித் திறனிலும், கலைகளைப் போற்றி வளர்த்திலும், சமயப்பொறையிலும் முன்னணியில் நிற்பவர். துளு வமிசத்தைச் சேர்ந்த இவரது ஆட்சிக் காலத்தில் விசயநகரப் பேரரசு, சிறப்பிலும் புகழிலும் மிகவுயர்ந்த நிலையை அடைந்தது. தென்னிந்திய இலக்கிய வரலாற்றில், இவரது ஆட்சிக் காலம் புதியதொரு காலத்தை உருவாக்கியது. தெலுங்கிலும், வடமொழியிலும் தாமே சிறந்த கவிஞராகத் திகழ்ந்து, இலக்கியப் புலவர்களுக்குப் பொருளை வரையாது வழங்கி 'ஆந்திரபோசர்' எனும் பட்டத்தைப் பெற்ற இவர், கலை வளர்ச்சியில் 'அகசுடசு காலம்' ஒன்றினை உருவாக்கிய பெருமைக்குரியவர். கல்வெட்டுகளும், இலக்கியங்களும், வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளும் கிருட்டிணதேவராயரின் வெற்றிச் சிறப்புப் பற்றியும் ஆட்சியின் மாட்சி பற்றியும் அறிந்து கொள்ளப்பயன்படுகின்றன.

நரச நாயக்கரின் இரண்டாவது மகனும், வீரநரசிம்மரின் மாற்றாந்தாய் வழிச் சகோதரருமான கிருட்டிண தேவராயர் கி.பி. 1487-இல் பிறந்தார்; கி.பி. 1509-இல், கிருட்டிண பரமாத்மாவின் பிறந்த நாளில் முடிசூட்டிக் கொண்டார். வீரநரசிம்மருக்குப் பின்னர் அரியணையேறிய இவர், தம் முன்னோர் இழந்த பகுதிகளை மீட்கவும், தம் அரசினைப் புதிய படையெடுப்புகளினால் விரிவுபடுத்தி, வலிமைமிக்க இந்துப் பேரரசை உருவாக்கவும் உறுதிபூண்டார். காஞ்சிப் பகுதியை ஆண்டுவந்த காடவக் குறுநில மன்னர்களின் கொட்டத்தை அடக்கினார். முதலாம் ஆட்சியாண்டில், விசயநகரப் புறச்சமயத்தினர் மீது புனிதப்போர் முழக்கமிட்ட பாமினி சுல்தான் யூசுப் அடில்கான் மீது படையெடுத்து, 1509-இல் அவனைத் தோற்கடித்துக் கொன்றார். பீசப்பூர் சுல்தான் இறந்ததால், பீசப்பூரின் குழப்ப நிலையைப் பயன்படுத்தி, 1512-இல் இரெய்ச்சூர் தோவாப்பைக் கைப்பற்றினார். முட்கல், இரெய்ச்சூர் ஆகியன இவர் வசமாயின. குல்பர்க்கா, பீடார் அரண்களைக் கைப்பற்றித் தம் வெற்றிகளைப் பெருக்கினார். தேவராயரின் அடுத்த இலக்கு உம்மத்தூர் ஆகும். தமக்கு முன்பு ஆட்சிபுரிந்த அரசருக்கு உம்மத்தூர் பாளையக்காரர் தீங்கிழைத்ததால், அவரைப் பழிவாங்க விரும்பினார். உம்மத்தூர்ப் பாளையக்காரரான கங்கராசன் மீது போர் தொடுத்து, சீரங்கப்பட்டணத்தையும் சிவ சமுத்திரத்தையும் கைப்பற்றினார். சீரங்கப்பட்டணத்தை அதன் தலைநகராக்கினார்.

ஒரிசாவுடன் தேவராயர் மேற்கொண்ட போர் வரலாற்றுப் புகழ் மிக்கது. தமக்கு முன்பு ஆண்ட வேந்தரின் காலத்தில் உதயகிரி, கொண்டவீடு ஆகியன விசயநகரத்தாரிடமிருந்து பறிபோயிற்று. இவற்றை மீட்க இவர் ஒரிசா நாட்டுக் கசபதி வேந்தனான பிரதாபருத்திர தேவன் மீது 1513-1518-ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஐந்து கட்டமாகத் தாக்குதல் நிகழ்த்தினார். ஐந்தாம் கட்டப் படையெடுப்பில் தேவராயர் ஒரிசாவின் தலைநகரான கட்டாக்கைக் கைப்பற்ற முனைந்தார்; கசபதி மன்னன் புணிந்


தான். இருவேந்தருக்குமிடையே கி.பி. 1518-இல் உடன்பாடு ஏற்பட்டது. பிரதாபருத்திரன் தன் மகள் துக்கா என்ற சகன் மோகினியைத் தேவராய ருக்கு மணமுடித்தான். தேவராயரோ தான் கிருட்டிணை ஆற்றிற்கு வடக்கே பிடித்த இடங்களைக் கச பதி வேந்தனிடம் திரும்ப அளித்தார்.

விசயநகர வேந்தர் ஒரிசா படையெடுப்பில் மூழ்கி யிருந்தபோது, கோல்கொண்டா சுல்தானான கூலி குதுப்சா, விசயநகர எல்லைப்புறங்களில் தொல்லை கொடுக்க ஆரம்பித்துக் குண்டூர், வாரங்கல், கொண்டபள்ளி முதலான இடங்களையும் கைப்பற்றிக் கொண்டான். இதனையறிந்த தேவராயர் சாளுவதிம்மரின் கீழ் 200,000 படைவீரர்களை அனுப்பிக் கோல்கொண்டா படையினை முறியடித்து, அதன் படைத்தலைவனான மதருள்-முல்க் என்பானையும் மற்ற அதிகாரிகளையும் கைது செய்து, கி.பி. 1520-இல் விசயநகரத்திற்குக் கொண்டுவந்தார். தேவராயரின் வரலாற்றுப் புகழ்மிக்க இறுதிப் படையெழுச்சி கி.பி. 1520-இல் பீசப்பூர் சுல்தானான இசுமாயில் ஆடின் கான் மீது நிகழ்த்தப்பட்டதாகும். இப்போரில் இசுமாயில் போர்க்களத்தினின்றும் உயிர்தப்பி ஓடினார்; முசுலிம் வீரர்கள் நூற்றுக்கணக்கில் கிருட்டிணை ஆற்றில் மூழ்கினர். போர்க்கருவிகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன. இரெய்ச்சூர்க் கோட்டை பிடிபட்டது. சாகர், சோராபூர், கெம்பா, போர்க்களங்களிலும் தேவராயர் பெருவெற்றி பெற்றார். குல்பர்க்காவும் விசயநகரப் பேரரசர் வசமாயிற்று. இவ்வாறு வீரமும் செயல்திறனும் மிக்க கிருட்டிண தேவராயர், தம் எதிரிகளின் கொட்டத்தை அடக்கியதுடன், பாமினி சுல்தான்களைத் தம் மேலாண்மைக்கு உட்படுத்தி, தமது பேரரசின் எல்லைகளை விரிவு படுத்தினார்.

கல்வெட்டுச் சான்றுகளை ஆய்ந்து பார்க்குங்கால், இவர் கி.பி. 1530-முடிய அரசுபுரிந்தார் என்பது உறுதியாகத் தெரிகிறது. இவர் தமது இறுதிக் காலத்தில் தம் தம்பியான அச்சுதராயரைத் தம் அடுத்த வாரிசாக அமர்த்தினார். நோய்வாய்ப்பட்ட பேரரசர் தம்43-ஆம் வயதில் காலமானார். இவரது இறுதிக்காலத்தில் விசயநகரப் பேரரசு புகழிலும் பெருமையிலும் உச்சநிலையில் இருந்தது.

இவர் சமரச சமயக் கொள்கையைப் பின்பற்றியவர். தாம் வைணவ சமயத்தினராக இருந்தபோதிலும் சிவன் மீது பக்தி கொண்டவர்; சைவ, மத்துவ, சமண சமயங்களுக்கும் ஆதரவளித்தார். இவர் திருப்பதி வேங்கடாசலபதியை விரும்பி வணங்கினார் என்பதனை பெத்தண்ணாவின் கூற்றால் அறியலாம். இவர் ஏழு தடவைகள் திருப்பதிக்குச் சென்று வேங்கடாசலபதியை வணங்கி, பல அரிய தானங்களையும் அன்பளிப்புகளையும் வழங்கினார். திருப்பதிக் கோயிலில் தாமும் தம்மிரு தேவியரும் வேங்கடேசரை வணங்கும் நிலையில் வடிக்கப்பட்டுள்ள செப்புத் திருமேனி இவர் வேங்கடேசர் மீது கொண்டுள்ள பக்திப் பெருக்கை விளக்குகிறது. தென் மராத்தியப் பகுதிகளில் புகழ் பெற்றிருந்த விட்டோபா அல்லது வித்தலா வணக்கத்தைத் தமது பேரரசில் அறிமுகப்படுத்திய இவர், விசயநகரத்தில் விட்டல சாமிக் கோயிலையும் அமைத்தார். சோணாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சென்று வணங்கி, அக்கோயில்களுக்குப் பத்தாயிரம் பகோடாக்களுக்கு மேற்பட்ட தொகையைத் தானமளித்தார். காஞ்சிமாநகரிலுள்ள சைவ, வைணவத் திருக்கோயில்களுக்குப் பல கிராமங்களையும், தானங்களையும் அறக்கொடையாக நல்கினார். சேந்தமங்கலத்தில் காணப்படும் கல்வெட்டொன்று இவர் கடிலம் ஆற்றிற்கும் தென்வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட சோணாட்டில் உள்ள தீர்த்தநகரி, திட்டைக்குடி, திருமாணிக்குழி, பெண்ணாடம், உடையார்கோயில், பந்தநல்லூர், திருவயிந்திரபுரம், திருக்காட்டுப்பள்ளி, திருச்சிராப்பள்ளி, திருவரங்கம் ஆகிய திருக்கோயில்களுக்குத் தானங்கள் அளித்த செய்தியைக் கூறுகின்றது. இக்கோயில்கள் சிலவற்றுள் சில சோடனைப் பணிகளையும் மேற்கொண்டார்.

கிருட்டிணதேவராயரின் ஆட்சிக்காலத்தில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, ஆடற்கலை, இலக்கியக்கலை ஆகியன பெருவளர்ச்சி பெற்றன. தமிழ்நாட்டிலுள்ள இராய கோபுரங்கள் இவரது கட்டடக்கலை ஆர்வத்தின் எடுத்துக்காட்டே ஆகும். கட்டடப் பிரியரான இவர், விசயநகரத்தில் புகழ்மிக்க கிருட்டிணசாமி கோயிலையும், அசாரா ராமசாமிக் கோயிலையும் **(Hazara Ramasamy)** விட்டலசாமிக்கோயிலையும் கட்டினார். திருவண்ணா மலையில் பதினொரு நிலை கொண்ட கோபுரத்தையும், ஆயிரக்கால் மண்டபத்தையும், தீர்த்தக்குளத்தையும் கட்டிக் கருவறையின் உச்சியைப் பொன்னால் வேய்ந்தும் புகழ் பெற்றார். சிதம்பரம் கோயிலின் வடக்குக் கோபுரத்தில் இவரது உருவச்சிலை ஒன்றும் காணப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டில், இவர் தமது கலிங்க வெற்றிக்குப் பின் இக்கோபுரத்தை அமைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதன் காலப் பாணியைப் பார்த்தால் சோழரது கைவண்ணம் தெரிகின்றது. எனவே, ஒருவேளை இக்கோபுரத்தின் ஒரு சில பகுதிகளைச் செப்பனிட்டிருக்கலாம். இவர் தம் தாயார் நாகலாம்பாவின் நினைவாக நாகலாபுரம் என்னும் நகரினை அமைத்தார்; அந்நகரில் சில



விட்டலர்கோயில்–அம்பி

கோயில்களையும் கட்டடங்களையும் கட்டினார். தம் ஒரிசா வெற்றிக்குப் பின் இவர் கி.பி. 1513–இல் விசயநகரக் கோட்டையைக் கட்டினார். சோடனை யிலும் ஒப்பனையிலும் விட்டலர் கோயில் தலை சிறந்தது.

இலக்கியப் புரவலரான தேவராயரது அவையில் வடமொழி, தெலுங்கு, கன்னட, தமிழ்ப் புலவர்கள் ஆதரிக்கப்பட்டனர். அட்டதிக்கசங்கள் (எட்டு யானைகள்) என்று அழைக்கப்பட்ட எட்டுப் புலவர் கள் இவரது அவையை அலங்கரித்தனர். அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, இராமபத்திரர், துர்சதி, மல்லண்ணா, சூரண்ணா, இராமராச புசண்ணா, தென்னாலி இராமகிருட்டிணன் ஆகி யோரே இந்த எண்மராவர். இவர்களுள் ஈற்றில் கூறப்பட்டுள்ள மூவரும் தேவராயரின் சமகாலத்தவர் அல்லர். இவர்களுள் தலைசிறந்தவர் அல்லசானி பெத்தண்ணா ஆவார். ஆந்திர கவிதா பிதா மகன் **(Andhrakavita-Pitamaha)** என்றழைக்கப்படும் இவர் மனுசரித்ரமு, அரிகதாசாராம்சமு என்னும் புகழ் மிக்க நூல்களை இயற்றினார். நந்திதிம்மண்ணா, பாரிசாதா பகரணமு, திரித்தலித் தாண்டகம் **(Thris-thali Dandakam)** என்னும் நூல்களையும், மல் லண்ணா என்பார் இராசசேகரசரிதத்தையும் இயற் றினார். துர்சதி என்னும் கவி காளகசுதி மகாத்மியம், காளகத்தீச்சுவர சதகம் என்னும் நூல்களையும் அய்யலராசு இராமச்சந்திரகவி சகலமத சார சங்கி ரகம், இராமபியூதயம் ஆகிய நூல்களையும் இயற்றி னார். மிகச் சிறந்த தெலுங்குக் கவிஞர்களுள் ஒருவ ரான நரசிம்மகவி என்பார் ‘கவிகர்ணராசயனா என்னும் நூலைப் பேரரசருக்குப் படைத்தார். மேற் கூறப்பட்ட புலவர்களேயன்றிப் பத்துமூர்த்தி, அப்ப ளாச்சார்யா, பிரேகதா, கன்னட பாரதத்தை இயற்றிய திம்மண கவி ஆகியோரும் இவரது காலத் தில் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். குமார வியாசரால் (நாரணப்பா) தொடங்கப்பட்டு முடிவு றாத கன்னட பாரதத்தை, திம்மண்ணகவி நிறைவு செய்து கிருட்டிண தேவராயருக்குப் படையலாக்கி னார். இவரது ஆட்சிக்காலத்தில் வடமொழி இலக் கிய வளர்ச்சியும் போற்றத்தக்க அளவில் இருந்தது. கொண்டவீட்டு லட்சுமிதரர் தைவஞான விலாசத் தையும், லட்சுமிநாராயணர், சங்கீத சூர்யோதத்தை யும் (இசைநூல்) இயற்றினர். சாளுவதிம்மரும் அவ ரது உறவினர் கோபரும் வடமொழித் தேர்ச்சி பெற் றனர். கோபர், கிருட்டிண மிசிரரின் பிரபோத சந்தி ரோதயத்திற்குப் பாடியம் எழுதினார். வியாயம்ருதா **(Vyayamrta)** இயற்றிய வியாசராயரும் இம்மன்ன ரால் ஆதரிக்கப்பட்டார்.

கிருட்டிணதேவராயர் காலத்தில் தமிழ்ப் புலவர் களும் ஆதரிக்கப்பட்டனர்; தமிழிலக்கியமும் வளர்ந் தது. இவர் காலத்திய தமிழ்ப் புலவர்களுள் ‘இருசமய

விளக்கம்' என்னும் நூலினை இயற்றிய அரிதாசர் மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். குமார சரசுவதி, மண்டல புருடர், காஞ்சி ஞானப் பிரகாசர், நல்லூர் வீரகவி, பரஞ்சோதியார், செவ்வைச் சூடுவார், தத்துவப் பிரகாசர், அருளாளதாசர் முதலான தமிழறிஞர்களும் புலவர்களும் கிருட்டிணதேவராயர் காலத்தவர்களேயாவர். குமாரசரசுவதி தமிழில் மட்டுமன்றி, வடமொழி, தெலுங்கு, கன்னட மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் தேவராயரின் கலிங்கப்போர் பற்றியும், கலிங்க நாட்டு இளவரசியை இவர் மணந்த நிகழ்ச்சி பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மண்டலபுருடர் தமிழ் அகராதியையும், ஞானப்பிரகாசர் பேரரசர் மீது மஞ்சரிப்பாவும், கச்சிக் கலம்பகமும் பாடினார். ஞானப்பிரகாசருக்கு, பேரரசர் தங்கப் பல்லக்கும், உயர்ந்த உடைகளும், 18 வகையான இசைக்கருவிகளையும் அளித்துச் சிறப்பித்தார். நல்லூர் வீரகவி அரிச்சந்திர புராணத்தையும், செவ்வைச் சூடுவார் பாகவத புராணத்தையும், அருளாளதாசர் பாகவதத்தையும் இயற்றினார். மேற்கூறியவற்றால் கிருட்டிணதேவராயரது ஆட்சிக்காலத்தில் கன்னடம், தெலுங்கு, வடமொழி, தமிழ் இலக்கியங்கள் வளர்ச்சிபெறப் பேராதரவு நல்கினார் என்பதும், தெலுங்கு இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் இது ஓர் 'அகசுடசு காலம்' (Augustus) என்பதனையும் அறியலாம்.

இலக்கியப் புலவர்களைப் பேணிப் பாதுகாத்த, இவர் தாமே தெலுங்குமொழியிலும், வடமொழியிலும் நூல்கள் இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார் என்பது பொன்மலர் நாற்றம் பெற்றது போன்றதாகும். தெலுங்கு மொழியில், இவர் இயற்றிய 'ஆமுக்தமால்யதா' அல்லது 'விட்டுணுசித்தியமு' என்னும் பக்தி நூல், தெலுங்குப் பிரபந்தங்களுள் சிறந்ததாகக் கருதப்படுகிறது. வடமொழியில் தேர்ச்சி பெற்ற பேரரசர், 'சாம்பவதி கல்யாணம்,' 'உசாபரிணயம்' என்னும் இரு நாடகங்களையும் வடமொழியில் இயற்றிப் புகழ் பெற்றார். சிறந்த இலக்கிய வித்தகராகவும், அறிஞராகவும் திகழ்ந்த கிருட்டிணதேவராயர், வடநாட்டு அர்சச்சக்கரவர்த்தியுடன் (Harsha) ஒப்பிட்டு உணரத்தக்கவர் ஆவார்.

இவர் சிறந்த வெற்றி வீரராகவும், நல்லாட்சியாளராகவும், சிறந்த இராசதந்திரியாகவும், கலைப் புரவலராகவும், இலக்கிய வித்தகராகவும், தம்மிடம் தோல்வி கண்டவர்களிடம் கருணை உள்ளம் கொண்டவராகவும் திகழ்ந்தார். தம் இருபதாண்டு ஆட்சிக்காலத்தில் விசயநகரப் பேரரசின் புகழைத் தம் செயல்திறனால் உயர்நிலைக்கு உயர்த்திய இவர், பல அயல்நாட்டு அறிஞர்களால் பாராட்டப் பட்டுள்ளார்.

ம. இ.

## கிருட்டிணப்ப நாயக்கர், (முதலாம், செஞ்சி)

**கிருட்டிணப்ப நாயக்கர், (முதலாம், செஞ்சி)**: துபாக்கி கிருட்டிணப்ப நாயக்கரின் மகனான கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1567–78) தமது ஒன்றுவிட்ட அண்ணன் சூரப்ப நாயக்கருக்குப் பின் செஞ்சி அரியணையேறினார். சூரப்பநாயக்கரும் (ஏறத்தாழ கி.பி. 1544–1567) முதலாம் கிருட்டிணப்ப நாயக்கரும் விசயநகர வேந்தர்களான திருமலை ராயருக்கும் முதலாம் சீரங்கருக்கும் உண்மையானவர்களாக நடந்து கொண்டனர்.

அறிஞர் சிலர் கருதுவது போன்று தலைக்கோட்டைப் போருக்குப் பின்னர்ச் செஞ்சி நாயக்கர்கள், சுதந்திரமான ஆட்சியை நிறுவவில்லை. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருநாவலூர்க் கல்வெட்டில் கிருட்டிணப்ப நாயக்கர், செஞ்சி, படைவீடு, திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு முதலாம் சீரங்கராயனின் ஆளுநராகப் (Agent) பணியாற்றினார் என்று குறிக்கப்பட்டுள்ளது. திப்பசமுத்திரம், திருக்கோயிலூர்க் கல்வெட்டுகளும் இவர் முதலாம் சீரங்கருக்கு உட்பட்டே செஞ்சியை ஆண்டார் எனத் தெரிவிக்கின்றன. கி.பி. 1546 முதல் கி.பி. 1575 முடியக் காணப்படும் கல்வெட்டுகளில் முதலாம் கிருட்டிணப்பநாயக்கரின் பெயர் இடம்பெற்றிருப்பதால், இவர் இவ்வாண்டுகளுக்கிடையில் ஆட்சிபுரிந்தார் எனக் கொள்ளலாம். புகழ்மிக்க வையப்ப கிருட்டிணப்ப கொண்டம நாயக்கரைப் பெற்றெடுத்த பெருமை முதலாம் கிருட்டிணப்ப நாயக்கரைச் சாரும்.

**இரண்டாம் (செஞ்சி)** : செஞ்சியை ஆண்ட நாயக்க மரபினருள் தலைசிறந்தவர்; புகழ்மிக்கவர். முதலாம் கிருட்டிணப்ப நாயக்கரின் பேரரும், வையப்ப கிருட்டிணப்ப கொண்டம நாயக்கரின் மகனாருமான இவர் (கி.பி. 1570–1601) சமயப் பொறை மிக்கவராகத் திகழ்ந்தார். இவரது ஆட்சி பற்றி அறிந்து கொள்ள, கிறித்தவப் பாதிரிமார்களின் கடிதங்கள் சிறந்த சான்றுகளாகப் பயன்படுகின்றன. இவரது காலத்திய கல்வெட்டுச் சான்றுகள் நமக்குப் போதிய அளவு கிடைக்கவில்லை. நிக்கலசு பிமெண்டா பாதிரியார், சீசர் பிரடரிக்கு, ஆன்குவெடில் டு பெர்ரன் (Anquetil du perron) முதலான அயல்நாட்டுப் பயணிகளின் குறிப்புகளே இவ்வகையில் துணைபுரிகின்றன.

இவர் கல்வெட்டுகளில் வெங்கடப்ப நாயக்கர் எனவும், கிருட்டிணப்ப நாயக்கர் அல்லது

முத்துகிருட்டிணப்ப நாயக்கர் எனக் கிறித்தவ சமயப் போதகர்களின் கடிதங்களிலும் தெலுங்கு இலக்கியத்திலும் குறிக்கப் பெற்றுள்ளார். இவர் தம் ஆட்சியின் தொடக்க காலத்தில் விசயநகர வேந்தரான முதலாம் வேங்கடருக்கு உட்பட்டே ஆண்டுவந்தார். தஞ்சை நாயக்கரான இரகுநாதர் இவரது உடன் காலத்தவராவார். கி.பி. 1586-இல் இவர் வேங்கடபதிக்கு எதிராகக் கலகம் செய்தார். விசயநகரப் பேரரசின் வலிமையின்மையைப் பயன் படுத்திக் கொண்டு விடுதலை பெற முயன்றார். இருப்பினும் பேரரசரால் தோற்கடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இரகுநாத நாயக்கர் தலையீட்டினால் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். நன்றி மறவாக் கிருட்டிணப்பர் தம் மகளை இரகுநாதருக்கு மணம் செய்வித்தார்.

கிறித்தவ சமயப் போதகர் ஒருவரின் 1606-ஆம் ஆண்டுக் கடிதம் ஒன்று தமிழ்நாட்டு நாயக்க அரசர்களுள் (தஞ்சை, மதுரை, செஞ்சி) இவரே வலிமை மிக்கவராகத் திகழ்ந்தார் என்று குறிப்பிடுகிறது. வேலூர், திருவாடி (கடிலம் ஆற்றங்கரையில்) தேவகோட்டை அரசர்கள் இவர் தம் சிற்றரசர்களாக இருந்தனர் என்றும் அக்கடிதம் கூறுகிறது. தம் நிலைமையை வலுப்படுத்திக் கொண்ட கிருட்டிணப்பர் விசயநகரப் பேரரசருக்குக் கப்பம் கட்டுவதை நிறுத்தினார்; பேரரசுக்கெதிராகப் புரட்சிக் கொடியை உயர்த்தினார்; சுதந்திர அரசராகப் பறைசாற்றினார். கி.பி. 1604-இல் வேலூரைக் கைப்பற்றித் தம் தனியதிகாரத்தை வெளிப் படுத்தினார். செஞ்சி மன்னனின் போக்கைக் கண்டு கோபம் கொண்ட பேரரசர், செஞ்சியைக் கைப்பற்ற வேலுகோட்டி யாச்சமர் என்னும் படைத்தலைவனின் தலைமையில் பெரும் படையினை அனுப்பினார். கிருட்டிணப்பர் கி.பி. 1607-ஆம் ஆண்டு இறுதியில் தோற்கடிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இதற்கிடையில் பேரரசர் வேங்கடபதிராயர் வேலூரைக் கைப்பற்றிக் கொண்டு, செஞ்சியின் மீது படையெடுத்தார். கிருட்டிணப்பர் தம் மனைவி மக்களுடன் பேரரசர் காலில் விழுந்து வணங்கினார். பெருந்தொகையைத் (ஆறு இலட்சம் குருசேடோக்) தண்டத் தொகையாகக் கட்டவேண்டுமெனக் கிருட்டிணப்பர் பணிக்கப்பட்டார். தஞ்சை, மதுரை நாயக்கர்கள் இதில் தலையிட்ட பின்னரே, கிருட்டிணப்பர் மீண்டும் செஞ்சியை அடையப் பேரரசரால் அனுமதிக்கப்பட்டார். அவமானம் தாங்க முடியாமல், மனம் நொந்து அரச பதவியைத் துறந்து சீரங்கத்தில் அமைதியாக வாழவும் முடிவெடுத்தார். ஆனால், விசயநகரப் பேரரசில் தொடர்ந்து நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் புரட்சிக்காரரான சக்கதேவருக்கு இவர் உதவ முன் வந்தார். மதுரை நாயக்கர், திருவதியின் அரசர் ஆகியோரின் உதவியுடன் பேரரசுப் படையுடன் மோதினார். கல்லணைக்கருகிலுள்ள தோகூரில் நடைபெற்ற போரில் (கி.பி. 1616-17) தோற்கடிக்கப்பட்டார். பின்பும் இவர் கலகக்காரர்களுக்கு ஆதரவு தெரிவித்தார்; வெள்ளாற்றங்கரைப் போரிலும் தோல்வியையே தழுவினார். சக்கதேவராயரின் இறப்பிற்குப்பின் கிருட்டிணப்பர் முழுமனதுடன் பேரரசரை ஆதரித்தார்; திறையை முறையாகச் செலுத்தினார்.

இவரது நிருவாகம் மிகவும் சிறப்பாக இருந்தது என்பதனைப் போதகர்களின் குறிப்புகள் மூலம் அறியலாம். வைணவ சமயப் பற்றாளரான இவர் பிற சமயத்தவருக்கும் பல சலுகைகளையும் உதவிகளையும் வழங்கினார். கிறித்தவ சமயப் போதகர்கள் மாதாகோயில் கட்டிக் கொள்ளவும், சித்தனூரில் சமணர்கள் பள்ளி அமைத்துக் கொள்ளவும், சைவர்கள் திண்டிவனத்தில் கோயில் கட்டிக் கொள்ளவும் அனுமதி வழங்கினார். வைணவ பக்தரான இவர் சிதம்பரத்தில் கோவிந்தராசர் கோயிலைக் கட்டி முடிக்கும் பணியில் ஈடுபட்டார். பல குடியிருப்புகளை நிறுவி மக்களைக் குடியேற்றினார். வெள்ளாற்றின் முகத்துவாரத்தில் தம் பெயரால் கிருட்டிணபட்டினம் என்னும் அழகிய நகரை அமைத்து மக்களைக் குடியேற்றினார். இந்நகர் இன்று பரங்கிப்பேட்டை என்று அழைக்கப் பெறுகிறது. மக்கள் நலம்பேணிய இவர் வாணிகத்தையும் வேளாண்மையையும் பெருக்கினார்.

போர்ச்சுகீசியருடனும் தச்சுக்காரருடனும் நட்புறவு கொண்ட இவர், தச்சுக்காரர்கள் தேவனாம் பட்டினத்தில் கோட்டை ஒன்றினைக் கட்டிக் கொள்ள அனுமதித்தார். தச்சுக்காரர்களின் பகைவரான போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் கோட்டை கட்டுவதைத் தடுக்கும்படி விசயநகர அரசர் மூலம் செஞ்சி அரசருக்குப் பரிந்துரை செய்தனர். கடலூரில் கட்டப்பட்ட கோட்டை பின்னாளில் புனித தேவிடு கோட்டையின் மையமாகியது. தச்சுக்காரர்களைத் தேவனாம் பட்டினத்திலிருந்து விரட்டியடிக்க வேண்டுமென்றும் விசயநகரப் பேரரசருக்குப் போர்ச்சுகீசியர் முறையிட்டனர். இதன் விளைவாகப் பெருமுயற்சிகள் செய்து தச்சுக்காரர்கள் திருப்பாப்புலியூர், பழவேற்காடு (Pulicat) முதலான இடங்களில் தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.

இவ்வேந்தன் ஆட்சிக்காலத்தில் செஞ்சியைப் பார்வையிட்ட போர்ச்சுகீசியப் பயணியான மிமண்டா

அடிகள் செஞ்சி, இந்தியாவின் சிறப்பு மிக்க நகரம் என்றும், இலிசுபனைத் தவிர்த்து, போர்ச்சுக்கல்லில் உள்ள மற்றெல்லா நகரங்களைக் காட்டிலும் பெரியது என்றும் பாராட்டியுள்ளார்.

**முதலாம்(மதுரை)**:மதுரை நாயக்க மரபின் இரண்டாவது வேந்தரான இவர் (கி.பி. 1564–1572) தம் தந்தையான விசுவநாத நாயக்கருக்குப் பின் மதுரை அரியணையேறினார். மாபெரும் வீரராகவும், நல்லாட்சியாளராகவும்,சமரச சமயக் கொள்கையினராகவும் விளங்கியவர். தம் ஒன்பதாண்டு ஆட்சிக்காலத்தில் சில நகரங்களை நிறுவி, திருக்கோயில்களைக் கட்டி, கலைத்தொண்டு புரிந்தவர். இவர் குமார கிருட்டிணப்பர், பெரிய கிருட்டிணப்பர், முதலாம் கிருட்டிணப்பர் – முதலான பெயர்களாலும் குறிக்கப்பட்டுள்ளார். கிருட்டிண வீரப்ப நாயக்கர் என்று மதுரை மீனாட்சியம்மன் கோயில் திருப்பணிமாலை இவரைக் குறிப்பிடுகிறது.

கி.பி.1564–இல் அரியணையேறிய இவர், தம்ஆட்சிக்கெதிராகக் கலகம் செய்த பரமக்குடி தும்பிச்சி நாயக்கன் என்னும் பாளையக்காரனை வென்று, அவனைக் கொன்று பரமக்குடிக் கோட்டையைக் கைப்பற்றினார். தும்பிச்சி நாயக்கனின் இரு புதல்வர்களையும் மன்னித்து, பரமக்குடியையும், பறம்பூரையும் மற்றும் சில கிராமங்களையும் அவர்களிடம் ஒப்படைத்தார். பாளையக்காரர்காரர் எழுபத்திருவரையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். தும்பிச்சி கொல்லப்பட்ட செய்தி கேட்ட அவனது நண்பனான கண்டி மன்னன் (இலங்கை), கிருட்டிணப்பரை இகழ்ந்தான். எனவே, கிருட்டிணப்பர் இலங்கை மீதுத் தாக்குதல் நிகழ்த்தினார். புட்டளம் என்னுமிடத்தில் நடந்த போரில் கண்டி மன்னன் தோல்வியடைந்தான். கண்டி மன்னன் மதுரை நாயக்கருக்குக் கப்பம் கட்ட மறுத்ததால், கிருட்டிணப்பரும் சின்னக் கேசவப்பரும் மீண்டும் கண்டி மன்னன் மீது போர் தொடுத்தனர். இலங்கைப் படையும் போர்ச்சுகீசிய வீரர்களும் தோல்வியுற்றனர். கண்டி வேந்தன் தற்கொலை புரிந்து கொண்டான். கிருட்டிணப்பர், தம் மைத்துனனான விசய கோபால நாயக்கரை இலங்கை அரசப் பிரதிநிதியாக அமர்த்தி விட்டு, மீண்டார். பின்னர், கி.பி. 1565–இல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில், விசயநகரப் பேரரசருக்கு ஆதரவாகப் படையொன்றினை, இவர் தளவாய் அரியநாதர், திருமல நாயக்கன், பசவராசன் ஆகியோர் தலைமையில் அனுப்பி வைத்தார்.

இவர் மதுரை மீனாட்சியம்மை, சொக்கநாதர் ஆலயத்தில் பல திருப்பணிகளைச் செய்தார். அன்னை மீனாட்சிக்குப் பொற்கவசம் செய்து அளித்தார்: மீனாட்சி கோயில் மண்டபத் தூண்களைப் பொன்னால் வேய்ந்தார்; வெள்ளியம்பலம் அமைத்ததுடன் வீரப்பர் மண்டபம் எனும் மண்டபமும் கட்டினார். இரண்டாம் பிரகாரத் திருச்சுற்று மண்டபமும் இவரால் கட்டப்பட்டது; வடக்குக் கோபுரத்தையும் மூர்த்தியம்மன் மண்டபத்தையும் கட்டிப் பெரும்புகழ் பெற்றார். பாளையங்கோட்டைக்குக் (திருநெல்வேலி மாவட்டம்) கிழக்கே தம் பெயரால் கிருட்டிணாபுரம் என்னும் நகரினை நிறுவி, கோயில் கட்டி, பேரெழில் வாய்ந்த, கண்ணைக் கவரும் சிற்பங்களையும் வடிக்க ஏற்பாடு செய்தார். கோயிலுக்குச் சில ஊர்களையும் தானமளித்தார். மரத்தேர் ஒன்றினையும் செய்து அளித்தார். இக் கிருட்டிணாபுரம் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. திருநெல்வேலிக்கு மேற்கே கடையம் கிருட்டிணாபுரம் என்னும் நகரம் ஒன்றும் இவரால் அமைக்கப்பட்டது; அங்குச் சிவன் கோயில் ஒன்று கட்டப்பட்டு, தெப்பக்குளமும் அமைக்கப்பட்டது. திருப்பணிகளும் கலைப்பணிகளும் புரிந்த இவர் கி.பி. 1572–இல் காலமானார். இவரது ஆட்சி சிறக்கத் தளவாய் அரியநாதர் பெருந்தொண்டு புரிந்தார்.

**இரண்டாம்(மதுரை)** : வீரப்ப நாயக்கரின் (கி.பி. 1572–1595) மகனான குமார கிருட்டிணப்பர் (கி.பி. 1595–1601) தம் தந்தைக்குப் பின் மதுரை நாயக்க மன்னரானார். வீரப்ப நாயக்கரின் மூத்த மகனாகக் குமாரகிருட்டிணப்பர், வீர கிருட்டிணப்பர், இரண்டாம் கிருட்டிணப்பர் முதலான பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். இவரது ஆட்சிக்காலத்தில் அமைதி நிலவியது.

விசயநகரப் பேரரசரானமுதலாம் வேங்கடருக்கு உட்பட்டு, மதுரைப் பகுதியை ஆண்டு வந்த இவர், தம் முன்னோரைப் போன்று விசயநகரப் பேரரசருக்கு மிகவும் உண்மையாக நடந்து கொண்டார் என்பதனை மதுரை, திருவரங்கம், வெள்ளான்குடி, பத்மநேரி, திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டுகளால் அறியலாம். ஈராசுப் பாதிரியாரும் (Fr. Heras), பிமெண்டா பாதிரியாரும் (**Fr. Pimenta**) கருதியது போன்று இவன் பேரரசுக்குக் கப்பம் கட்டாமல் இருந்ததில்லை. இரண்டாம் கிருட்டிணப்பரின் ஆட்சிக் காலத்திலும் தளவாய் அரியநாதர், தளவாயாகப் பணிபுரிந்தார். வேந்தரின் தம்பியான விசுவப்பர் இளவரசராக இருந்து ஆட்சியைக் கவனித்து வந்ததாகத் தெரிகிறது. தம் எண்பதாவது வயதில் கி.பி. 1600–இல் தளவாய் அரியநாதர் இறந்தமை, கிருட்டிணப்பர் ஆட்சிக் காலத்தில் நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

இவ்வேந்தர் ஆட்சிக் காலத்தில் நாயக்கர் அரசு கிழக்கே வங்காள விரிகுடா முதல் மேற்கே அரபிக்

கடல் வரையிலும், தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே வாலிகண்டபுரம் வரையிலும் விரிவடைந்திருந்தது. இவர் தம் அரசினை விரிவுபடுத்தாவிட்டாலும், இவரது ஆட்சிக்காலத்தில் யாங்கணும் அமைதியும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட்டன. வளர்ந்து கொண்டிருந்த பாண்டியருடன் இவர் நட்புறவு கொண்டிருந்தார். கி.பி. 1595-ஆம் ஆண்டில் மதுரை அரியணையேறிய இவர், கி.பி. 1601-இல் இயற்கை எய்தினார். இவரது ஆட்சிக் காலத்தில் தென்காசிப் பகுதியில் பாண்டியர் வலிமை பெற்று வந்தனர். இவர் வேதங்களில் தேர்ச்சி பெற்ற அந்தணர்களுக்குச் சில ஊர்களைத் தானமாக வழங்கினார். ம.இ.

**துணை நூல்கள்**:

**பரந்தாமனார், அ.கி.,** மதுரை நாயக்கர் வரலாறு பாரி நிலையம், சென்னை, 1971.

**Krishnaswami, A.,** The Tamil Country Under Vijayanagar - Annamalai University-1964.

**Sathianatha Aiyar** - History of the Nayaks of Madura - Madras University, Historical Series. II, 1924.

**கிருட்டிணப்பர், துபாக்கி** செஞ்சி நாயக்க மன்னர். வையப்ப நாயக்கரின் (கி.பி. 1526-1541) மகனான இவர் தம் தந்தைக்குப் பின் அரியணையேறினார். இவர் பெத்தகிருட்டிணப்பர் என்று கல் வெட்டுகளிலும், துபாக்கி கிருட்டிணப்பர் என்று மெக்கன்சி குறிப்புகளிலும், கிருட்டிணப்பர் என்று செஞ்சி வரலாற்றுப் பாடல்களிலும் குறிப்பிடப்படுகிறார். துபாக்கி, பெத்த ஆகியன அடைமொழிகளே யாகும். இவர் போத்த பூபாலர் (Pota Bhupala) எனவும் அழைக்கப் பெற்றார்.

இவருக்கு இலக்குமாம்பா, வெங்கலாம்பா என இரு மனைவியர் இருந்தனர். வெங்கலாம்பாவிற்குப் பிறந்தவர்தான் சூரப்ப நாயக்கர் (சுமார் கி.பி. 1544 -1567); இலக்குமாம்பாவிற்குப் பிறந்தவர் முதலாம் கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1567-1575). துபாக்கி கிருட்டிணப்பரின் தாயார் கொண்டசம்பா ஆவார்.

விசயநகரப் பேரரசரான கிருட்டிண தேவராயர் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்தபோது, துபாக்கி கிருட்டிணப்பர் அவருக்கு உதவியாக வந்தார். பேரரசரிடம் தோல்வி கண்ட தமிழக மன்னர்கள் செலுத்த வேண்டிய திறைப்பணத்தை நிருணயிப்பதிலும், வாங்குவதிலும் இவர் வையப்பருக்கு உதவி புரிந்தார்.

துபாக்கி கிருட்டிணப்பரே செஞ்சி நாயக்க மரபினைத் தோற்றுவித்தவர் என்று கருதப்படுகிறார். தெற்கே கிருட்டிணதேவராயரின் ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட்டு, வையப்பர் என்னும் படைத்தலைவர் தமக்கு உதவிபுரிந்த துபாக்கி கிருட்டிணப்பரை செஞ்சிப் பகுதியின் ஆட்சியாளராக அமர்த்திச் சென்றார் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். எனவே, துபாக்கி கிருட்டிணப்பரே செஞ்சி அரசின் நிறுவனர் என்றும், இவரே முதல் சுதந்திர மன்னர் என்று கொள்ளலாம். ஆனால், அண்மையில் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் வையப்பரே செஞ்சி நாயக்க மரபின் உண்மையான நிறுவனர் என்று தெளிவு படுத்துகின்றன.

துபாக்கி கிருட்டிணப்பர் தமது ஆட்சிக் காலத்தில் விசயநகரப் பேரரசருக்கு உண்மையுடன் நடந்து கொண்டார்; தம் தந்தையாருக்கு நிருவாகத்தில் பேருதவி புரிந்து வந்தார். இவர் வையப்ப நாயக்கருடன் இணைந்து தென்னார்க்காடு மாவட்டத்தில் சிரீமுசுணம், திருக்கோவிலூர் ஆகிய ஊர்களில் கோயில்கள் எடுப்பித்து, இறைவழிபாடு குறைவற நடைபெற நில தானங்களும் செய்துள்ளார். இவர் மிகப்பெரிய தானியக் களஞ்சியங்கள், திருமண மண்டபம், உயர்ந்த கோட்டைச்சுவர் ஆகியவற்றை அமைத்தனரெனக் கூறப்படுகிறது. 'ஆனந்தகிரி' என்றழைக்கப்பட்ட மலையின் பெயரை இவர் 'இராசகிரி' என்று மாற்றியதுடன், இம்மலையின் முகப்பைச் சுற்றிலும் பெருஞ்சுவர்களை எழுப்பினார். செஞ்சி நகரம் விரிவாக்கம் பெறவும், அழகுடன் திகழவும், பேட்டைகள் வளரவும், சுற்றுப் புறங்கள் மேன்மையுறவும் பாடுபட்டவர் இவரே. இவர் ஏறத்தாழ கி.பி. 1541 முதல் 1544 முடிய ஆண்டிருக்கக் கூடும் என்று கருத இடமுண்டு.

நாட்டை அமைதியுடன் ஆட்சிபுரிந்த இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவராயினும், பிற சமயக் கோயில்களுக்கும் அறக்கொடைகள் வழங்கினார்.

ம.இ.

**கிருட்டிணபாகவதர்:** தஞ்சையில் கதா காலட்சேபக் கலையில் வல்லுநராக விளங்கியவர். இவர் கையாண்ட முறையால் மகாராட்டிரத்திலிருந்து தமிழகம் வந்த சுதாகாலட்சேபக் கலை தனிச் சிறப்புற்றுத் திகழ்ந்தது. இவர் அக்கலையில் பல புதுமைகள் செய்தார்.

இவர் கி.பி. 1847-ஆம் ஆண்டில் பிறந்தார். இவரைப் பற்றி வேறு செய்திகள் அறிய இயலவில்லை. தஞ்சையில் தெலுங்கு மன்னர் ஆட்சிக் காலத்திலும்

மராட்டிய மன்னர் ஆட்சிகாலத்திலும் அமைச்சராக இருந்து, பெரியண்ணா என்று அழைக்கப்பெற்ற வேங்கடசாமி என்பவர் இவரை அடைக்கலச் சிறுவனாக ஏற்றார். பன்மொழிப் புலமைபெற்ற பெரியண்ணா அடைக்கலமாகப் பெற்ற இவருக்குப் பல்வேறு கலைகளைக் கற்பிக்க ஏற்பாடுகள் செய்தார். திறமையுடன் கலைகள் பல கற்றுத் தெளிந்த கிருட்டிண பாகவதர் மராட்டியக்கலையான கதாகாலட்சேபக் கலையைத் தமிழில் நடத்துமாறு ஊக்குவித்தார். இவருக்குப் பின்வந்த பாகவதர்கள் அனைவரும் இவர் முறையைப் பின்பற்றினர். இவர் மேற்கொண்ட முறையால் கிடைத்த வெற்றியையும், புகழையும் கண்ட பலர், கதாகாலட்சேபத் துறையில் ஈடுபடலாயினர்.

மராட்டிய முறையில் கதாகாலட்சேபக் கலையினை நடத்திய பாகவதர்கள், பக்க வாத்தியக்காரர்களோடு முன்னும் பின்னும் நடந்த வண்ணம் கதை சொல்லி வந்தனர். கிருட்டிண பாகவதர் அம்முறையை மாற்றி ஓரிடத்தில் நின்றவண்ணம் கதை சொல்லும் மரபினை உருவாக்கினார்.

காலட்சேபப் பாகவதர்கள் நிகழ்ச்சியின்போது காலில் சலங்கை கட்டி இருப்பர்; ஆனால் ஆடுவதில்லை. இவர் ஆடற் கலையிலும் பயிற்சி பெற்றவராதலின் ஆடியும் நடித்தும் கதைசொல்லி வந்தார். இவர்தம் கதை நிகழ்ச்சியைக் கேட்டின்புறுவதோடு பார்த்தும் மகிழவேண்டும் என்று மக்கள் சொல்லுவர்.

இவர் தமிழ், தெலுங்கு, மராட்டி, கன்னடம் ஆகிய மொழிகளைக் கலந்தே கதை சொல்லிவந்தார். கோபால கிருட்டிண பாரதியாரின் நந்தன் சரித்திரத்தையும், பெரிய புராண நாயன்மார்கள் வரலாற்றினையும் முதன்முறையாகக் கதாகாலட்சேபமாக அமைத்து நடத்திய பெருமை இவரைச் சேரும்.

இவர் சீதாகல்யாணம், வத்சலாகல்யாணம் திரௌபதி மானசம்ரட்சணம் முதலிய கதைகளை மராட்டியக் கதாகாலட்சேப முறையிலிருந்து சற்று மாற்றி அமைத்து நடத்தி அதனால் தமிழ் மக்களின் மனத்தில் நிறைந்தார்.

இவருக்குப் பின்பாட்டுப் பாடியவர்களுள் தஞ்சாவூர்ப் பஞ்சாபகேச பாகவதர் குறிப்பிடத்தக்கவர். நாராயணசாமி அப்பா என்பவர் மிருதங்கம் வாசித்துள்ளார்.

கிருட்டிண பாகவதர் இரவு முழுவதும் கதாகாலட்சேபம் செய்யும் ஆற்றல் பெற்றவர். இப்பாகவதரின் அழகுத் தோற்றம் காண்பவரைக் கவரும் ஆற்றல் கொண்டு விளங்கியது. தம் தொண்டினால் கதாகாலட்சேபக் கலைக்கும் தஞ்சை நகருக்கும் பெருமை சேர்த்த இவர் 1903-ஆம் ஆண்டில் காலமானார்.

இரா.குரு.

**கிருட்டிணபிள்ளை, ஈ. வீ.** சிறந்த மலையாள எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் கேரள மாநிலத்திலுள்ள கொட்டாரக்கரைக்கு அருகிலுள்ள அடூர் என்னும் ஊரில் கி.பி. 1895-ஆம் ஆண்டு பிறந்தார். பி.ஏ., பி.எல். பட்டம் பெற்ற இவர் தொடக்க காலத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்னர் அந்நாட்டு அரசியலிற் பங்கு கொண்ட இவர், இலக்கியம், அரசியல் சார்பான இதழ்களுக்கு ஆசிரியராகத் திகழ்ந்தார். மலையாள மொழியில் சிறுகதை, புதினம், நாடகம் ஆகியன எழுதிச் சிறப்படைந்ததோடு, 'சீவித இசுமாணைகள்' என்னும் பெயரில் தன் வரலாற்று நூலையும்இயற்றியுள்ளார்.

மலையாளச் சிறுகதை இலக்கியத்திற்கு அதன் தொடக்க காலத்திலேயே, நல்லதொரு திருப்பம் கொடுத்து வளர்த்த சிறப்பு இவருக்கு உண்டு. இவர் காலத்தில் விளங்கிய மலையாளச் சிறுகதை எழுத்தாளர்களுள் இவர் தலை சிறந்தவராகத் திகழ்ந்தார். இவர் பல திங்கள் இதழ்களில் அவ்வப்போது எழுதிய சிறுகதைகளைக் 'கேளீ சௌதம்' என்னும் பெயரில் நான்கு பாகங்களாக வெளியிட்டார். மனித இதயத்தின் கழிந்த உணர்ச்சிகளைத் தூண்டிவிடும், பாவம் நிறைந்தவனாக இவர்தம் கதைகள் விளங்கின. 'பிரேமதாசியம்' என்னும் கதை ஆழ்ந்த உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் ஒன்றாகும். விவாகக் கம்மடம், கள்ளப் பிரமாணம், விசுமிருதி, பி.ஏ., மாயாவி, பிரணயக் கமிசன் முதலியன இவர் எழுதிய சமூக நாடகங்களாகும். இவற்றில் பாத்திரங்களின் பேச்சுகள் பொதுமக்கள் பேச்சை ஒத்திருப்பதோடு நல்ல நகைச்சுவை கலந்தனவாகவும் உள்ளன. சீதாலக்குமி இராசா, கேசவ தாசா ஆகியன, திருவாங்கூர் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டு எழுதப்பட்ட நூல்களாகும். இவர் நாடகாசிரியராக விளங்கியதோடு, நடிகருமாக இருந்துள்ளார். இவர் 1938-ஆம் ஆண்டில் காலமானார்.

அ.மா.ப.

**கிருட்டிண பிள்ளை, எச்.ஏ.** 'கிறித்தவக் கம்பர்' எனப் போற்றப்படும் எச்.ஏ. கிருட்டிண பிள்ளை கி.பி. 1827ஏப்பிரல்23-ஆம் நாள் பாளையங் கோட்டை அருகேயுள்ள கரையிருப்பு என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர்தம் பெற்றோர் சங்கர நாராயணர், தெய்வநாயகியம்மையார் ஆவர்.

கிருட்டிண பிள்ளை கி.பி. 1845 நவம்பர் திங்களில் பாளையங்கோட்டையில் குடியேறினார். திருப்பாற்கடல்நாத கவிராயரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றார்.

டாக்டர் கால்டுவெல் கி.பி. 1853 மே 27-ஆம் நாள் சாயர்புரம் திருமுறைக் கல்லூரியில் இவரைத் தமிழாசிரியராய் நியமித்தார். அப்பணியினைப் புரிந்து வரும் நாளில் கிறித்தவ சமயஞ் சாரும் நாட்டம் கொண்டு, திருமுழுக்குப் (Baptism) பெறும் நோக்குடன் கி.பி. 1857-இல் சென்னை சென்றார். இவரது தமிழ்ப் புலமையறிந்து, சென்னை மாநில உயர்நிலைப் பள்ளியின் பதிவாளராய் விளங்கிய பீட்டர் பெர்சிவல், தாம் நடத்தி வந்த 'தினவர்த்தமானி' இதழுக்குத் துணையாசிரியராகவும், உயர்நிலைப் பள்ளியின் துணைத் தமிழ்ப் பண்டிதராகவும் இவரை அமர்த்தினார். பின்னர், என்றி பவர் என்பவருக்குத் தமிழாசிரியரானார்.

அதனால், கி.பி. 1858ஏப்பிரல்18-ஆம் நாள் மயிலாப்பூரிலுள்ள 'தூய தாமசு திருச்சபை'யில் திருமுழுக்குப் பெற்றார். அதுமுதல் தாம் தமிழ் கற்பித்து வந்த என்றி பவரின் நினைவாக 'என்றி' என்றபெயரையும் திருமுழுக்குப் பெறும்போதுசெய்தி வழங்கிய ஆல்பிரடு ஆர் சிமாண்டசு நினைவாக 'ஆல்பிரடு' என்றபெயரையும் தம்பெயருக்கு முன் இணைத்துக் கொண்டார். தம் பெயர் குறிப்பிடும் இடங்களில் எச்.ஏ. கிருட்டிண பிள்ளை என்றே குறித்துள்ளார்.

சாயர்புரக் கல்விச்சாலையில் கிருட்டிண பிள்ளை கி.பி. 1864 முதல் 1875 வரை மீண்டும் பணியாற்றினார். இவர் கி.பி. 1876-இல் பாளையங்கோட்டைத் திருச்சபைத் திருத்தொண்டர் கழகத்தினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியரானார். பின்னர், கி.பி.1887-இல் திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரானார். அதன் பின்னர், கி.பி. 1890-இல் குலசேகரன் பட்டினம் வந்து, தம் நண்பர் தனுகோடி இராசுவுக்காக உப்பு உற்பத்தித் தொழிலின் மேற்பார்வையாளரானார். பின் கி.பி. 1892 முதல் தம் வாழ்நாளின் இறுதிவரை கிறித்தவ இலக்கிய சங்கத்தின் ஆசிரியராய்த் தொண்டாற்றி 1900 பிப்பிரவரி 3-ஆம் நாள், தம் 73-ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவர் வேதமாணிக்க நாடார் இயற்றிய 'வேதப் பொருள் அம்மானை' என்ற நூலை கி.பி. 1865-இல் பதிப்பித்தார். டாக்டர் கால்டுவெல் இயற்றிய 'பரத கண்ட புராதனம்' என்ற நூலை அச்சேற்றினார். தமிழ் இலக்கியங்களில் தாம் சுவைத்துப் போற்றிய பாடல்களைக் 'காவிய தரும சங்கிரகம்' என்ற நூலாகத் தொகுத்தார். 1926-இல் இதன் முதற்பதிப்பு வெளிவந்தது.

**இவர்தம் உரைநடைநூல்கள்**: 1. இலக்கண சூடாமணி: மாணவர்கட்குத் தமிழ் இலக்கணங்களை எளிமையாகக் கற்பித்தல் வேண்டி எழுதப்பட்டது. இது கி.பி. 1883-இல் வெளிவந்தது. 2. பாளையங்கோட்டை எச்.ஏ. கிருட்டிண பிள்ளை கிறித்தவரான வரலாறு: தாம் கிறித்தவறான வரலாற்றை எழுதுமாறு தூண்டிய டி. உவாக்கர் என்பாரின்ஆர்வத்தை நிறைவு செய்யும் வகையில் கி.பி. 1893-இல் இதனை எழுதினார். 3. இரட்சணிய சமயநிருணயம்: ஆன்ம ஈடேற்றத்தை அருளத்தக்க மெய்ச்சமயம் எது என்று ஆராய்ந்து அறியும் நோக்குடன்இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**இவர்தம் கவிதை நூல்கள்**: 1. இரட்சணிய யாத்திரிகம்: இது சான் பனியன் என்பவரால் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட 'திருப்பயணியின் முன்னேற்றம்' என்ற நூலின் வழிநூல்.2. இரட்சணிய மனோகரம்: அவ்வப்போது இறையுணர்வு வயப்பட்டு அருளிய பாடல்களின் தொகுப்பு இந்நூல். 3. போற்றித் திரு அகவல்: இது இரட்சணிய யாத்திரிகம் எழுதப்பட்டுள்ள கையெழுத்துச் சுவடியின் இறுதியில் காணப்படுகிறது. இவர்தம் இரட்சணியக் குறள், இரட்சணிய பால போதனைஆகிய நூல்கள் கிடைக்கவில்லை. இர.ஆ.

**கிருட்டிணபிள்ளை, சங்கம் புழ (1914-1917)**: இவர் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மலையாள எழுத்தாளர்களுள் ஒருவர்; சிறந்த கவிஞருமாவார். இவர் கேரள மாநிலத்தில் எர்ணாகுளத்திற்கு அருகிலுள்ள, இடைப்பள்ளி என்னும் ஊரில் 1914-ஆம் ஆண்டில் பிறந்தார். தம்மூர்ப் பகுதியில் தொடக்கக் கல்வி பெற்ற இவர், எர்ணாகுளம் மன்னர் கல்லூரியிலும் பின்னர்த் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியிலும் பயின்று தம் 27-ஆம் ஆண்டில் முதுகலைப் பட்டம் பெற்றார். தொடக்கத்தில் சிறிது காலம்இராணுவத்தில் தொண்டாற்றிய பின்னர்ச் சென்னைச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பயின்றார். உடல்நலக் குறைவால், அக்கல்வியை இடையில் விடவேண்டியதாயிற்று.

இவர் உயிர் வாழ்ந்த காலம் சிறிதேயாயினும், அதற்குள் மலையாள எழுத்தாளர் உலகில் பலரும் போற்றும் சிறந்த இடம் பெற்று விளங்கினார். இவர்

தம் கவிதைகள் அவற்றுட் பொதிந்து விளங்கிய உணர்ச்சிச் சிறப்பு முதலியவற்றால் பலரையும் கவர்ந்தன; உழைப்பாளி மக்களும் உவந்துபாடும் வகையில் அமைந்தன.


இவர்தம் கவிதைகள் மலையாள மொழியில் ஒரு புதுநெறியைத் தோற்றுவித்தன என்று திறனாய்வாளர் கூறுகின்றனர். தொடக்கத்தில் காதல் உணர்வினைப் புலப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு காதற் கவிதைகள் புனைந்தார்.வாழ்க்கையில் கண்ட வறுமை உணர்வு இவர்தம் கவிதைகளின் கருவாகியது. ஆற்றல் மிக்க காதல், அவலம் ஆகிய சுவைகளில் படைக்கப்பட்ட இவர்தம் கவிதைகள், வாழ்க்கையின் பல நிலைகளில் உள்ளவர்களையும் கவர்வனவாக அமைந்தன.

இடைப்பள்ளி இராகவன்பிள்ளை என்னும் கவிஞர் இறந்தபோது 'இரமணன்' என்னும் பெயரில் ஓர் இரங்கற்பா இயற்றினார்.அந்நூல் மக்களிடையே மிக்க,செல்வாக்குப் பெற்றது.ஆசிரியர் காலத்திலேயே அந்நூல் 35 முறை பதிப்பிக்கப்பட்டது என்றும், இன்றும்கூட அப்பகுதியில் அப்பாடல்கள் வயல்களில் பணிபுரியும் உழவர் மக்களால் பாடப்படுகின்றன என்றும் கூறுகின்றனர்.

கவிஞராக விளங்கிய இவர், காலத்தின் தேவையை உணர்ந்து புதுயுக எழுத்தாளர்களுள் ஒருவராக எழுதத் தொடங்கினார்; அரசியல் தொடர்பான பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர்களின் கருத்துகளை நன்குணர்ந்த இவர், மலையாள மொழியிலமைந்த இக்காலக் கவிதைகளைத் திறனாய்ந்து அவற்றின் போக்கினை விளக்கியுள்ளார். அதன் பயனாக மலையாள மொழிக் கவிதைகள் புதிய வனப்பும் வளமும் பெற்றுத் திகழ்வனவாயின.தம் எழுத்தாற்றலாலும், கவித்திறனாலும் பொதுமக்களின் ஆதரவையும் அன்பையும் அதிக அளவில் பெற்றுத் திகழ்ந்த இவர் 1947–ஆம் ஆண்டு காச நோயால் காலமானார். அ.மா.ப.

**கிருட்டிணமாச்சாரி, டி.டி:** இவர் கி.பி. 1899-இல் பிறந்தார். இவர் தந்தை திவான் பகதூர் அரங்கனாதன்; தாய் இராசலட்சுமி; உடன் பிறந்த பெண்டிர் மூவர்.இவர் தந்தை உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றினார். இவர் திருவள்ளூரிலுள்ள கலவல கண்ணன் செட்டி பள்ளியில் கல்வி பயின்றார்.சட்டவகுப்பில்சேர்ந்து இடையிலேயே படிப்பை நிறுத்திவிட்டார்.

முதலில் இவர் அரசு அலுவலராகப் பணியாற்றினார், பின்னர் துரைசாமி அய்யங்கார் என்பவரிடம் ஓர் உதவியாளராகச் சேர்ந்தார்.துரைசாமி அய்யங்கார் 'லீவர்' சகோதரர்கள் சோப்புக் கம்பெனியின் தமிழகச் சார்பாளராகப் பணியாற்றி வந்தார். இவர் 1928–இல் இறந்ததின் விளைவாக கிருட்டிணமாச்சாரியே அதன் சார்பாளராக நியமிக்கப்பட்டார். பல புதிய வணிக உத்திகளைக் கையாண்டு வணிகத்தை பெருக்கினார். இவர் நாளடைவில் சமூகத் தொண்டராகவும் ஆனார்.



கிருட்டிணமாச்சாரி நேருவுடன்

இவர் அரசியலில் 1937–இல் ஈடுபட்டார்; 1942–இல் மத்திய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 1946–இல் நிருவாகக் குழு உறுப்பினர் என்ற முறையில்இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதில் டாக்டர் அம்பேத்காருக்கு உறுதுணையாக இருந்தார். இவர் 1952–முதல் 1967 வரை இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகவும் 1964 வரை மத்திய அமைச்சராகவும் இருந்தார்; வணிகத் துறை அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் பணியாற்றினார். பின்னர் 1969–இல் காங்கிரசுக் கட்சி பிளவடைந்தபோது இவர் இந்திராகாங்கிரசுக்கட்சிக்கு தமது முழு ஆதரவையும் நல்கினார். நாளடைவில் காமராசரையும் இந்திரா காந்தியையும் ஒன்றாகச் சேர்ப்பதில் முயன்று அதில் வெற்றியும் பெற்றார். இவர் வணிகத் துறை அமைச்சராக இருந்தபோது நாட்டின் தொழில், மற்றும் வர்த்தக முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டார். இவர் 1967 வரை நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்தார். இவர் கொள்கையில் இடதுசாரியாக இருந்தபோதிலும் பொது உடைமைக் கோட்பாட்டின்பகைவர் எனத் தம்மை அறிவித்துக் கொண்டார்.

இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்டார். இவரது பெருமுயற்சியினால்தான் பொதுத்துறையில் மூன்று எஃகுத்தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. கனரகம், பொறியியல், மின்சாரம், இரசாயன, அலுமினிய, போக்குவரத்துத் துறைகள்

இந்தியாவில் பெரிதும் முன்னேறுவதற்கு இவர்தாம் காரணமாகயிருந்தார். தொழில், நிதிச் சங்கங்கள் உருவாவதற்கும் இவரே காரணமாகவிருந்தார். பல புதிய தொழில்கள் முன்னேறுவதற்கு இவர் அயல் நாட்டு நிதி உதவியும் பெற்றுத் தந்தார். அரசு வணிகக் கழகம் (State Trading Corporation) உருவாவதற்கும் இவர்தான் காரணம். நாட்டில் பல தொழில் மையங்களை நிறுவிச் சிறுசிறு தொழிலதிபர்களை உருவாக்கினார். இவரது பதவிக் காலத்தில் கைத்தறித் தொழிலும் முன்னேறியது.

கிருட்டிணமாச்சாரிக்குப் பலதரப்பட்ட நூல்களைப் படிப்பதில் ஆர்வமிருந்தது. இருப்பினும் இலெபனான் நாட்டுத் தத்துவ மேதையான கலில் கிப்ரான் அவர்களின் நூலைப் படிப்பதில் இவர் மிக்க ஆர்வம் காட்டினார். இவர் தமது வீட்டில் ஒரு நூலகத்தையே வைத்திருந்தார்.


கிருட்டிணமாச்சாரி கருநாடக இசையிலும் ஆர்வம் காட்டினார். பல இசை மேதைகள் இவரது ஆதரவைப் பெற்றனர். இவரது நினைவாகச் சென்னையில் ஓர் இசை அரங்கம் கட்டப்பட்டுள்ளது. இவர் தம் 74-ஆம் வயதில் காலமானார். கே.சே.

**கிருட்டிணமாச்சாரி, வி.டி.**: இவர் கி.பி. 1881 முதல் 1964 வரை வாழ்ந்த இந்தியப் பொருளியல் வல்லுநர். இவர் 1927 முதல் 1945 வரை பரோடாவின் திவானாகப் பணியேற்றிருந்ததால் ஆட்சித் துறையில் நல்ல திறமை பெற்றிருந்தார். இவர் இந்தியச்சுதந்திரப் போராட்டத்தில் பெருந்தொண்டாற்றினார். இலண்டனில் 1929, 1930, 1931 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று வட்டமேசை மாநாடுகளிலும் இவர் பங்கேற்றார். இவர் விடுதலை பெற்ற இந்தியாவின் பாராளுமன்ற இணைக்குழுவின் தலைவராயிருந்தார். இவர் சுதந்திர இந்தியாவின் திட்டக்குழுவின் முதல் துணைத் தலைவராகச் செயற்பட்டார். மா.கா.

**கிருட்டிணமூர்த்தி, ரா.**: காண்க: கல்கி.

**கிருட்டிணமூர்த்தி, ஜே,** கி.பி. 1895-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையார் நாராயணய்யா; தாயார் சஞ்சீவம்மா. இவர் தந்தையார் பிரம்மஞான சங்கத்தைச் (Theosophical Society) சேர்ந்தவர். எனவே, அச் சங்கத்தின் தலைவராக இருந்த அன்னிபெசண்டு அம்மையாரால் சங்கத் தொண்டில் ஈடுபட இவர் அழைக்கப்பட்டார். அன்னிபெசண்டு (Dr.Annie Besant) அம்மையாரும் இலெட்பீட்டரும் (C.W. Leadbeater) கிருட்டிணமூர்த்தியிடமும் இவர் சகோதரர் நித்தியானந்தாவிடமும் மறைந்து கிடக்கும் ஆற்றல்களைக் கண்டறிந்து, இவ்விரு சகோதரர்களையும் தங்கள் ஆதரவில் வைத்துக்கொள்ள முற்பட்டனர். இவ்வாறு சகோதரர் இருவரும் பிரம்மஞான சங்கத்தினரின் அரவணைப்புக்குள் வந்தனர்.

கிருட்டிணமூர்த்தி தம் சகோதரருடன் 1911-ஆம் ஆண்டு ஐரோப்பாவுக்கு அழைத்துச்செல்லப்பெற்றுச் சினராசதாசா (C. Sinarajadasa), அருண்டேல் (George Arundale), ஓடவுசு (A.E. Wodehouse) போன்ற அறிஞர்களிடம் கல்வி புகட்டப்பெற்றார்



கிருட்டிணமூர்த்தி இயற்றிய 'தலைவனின் காலடிகளில்' (At the Feet of the Master) என்னும் சிறு நூல் வெளியாயிற்று.அந் நூலில் ஒரு மனிதன் நிறைநிலையினை அடைவதற்கு நான்கு வித தகுதிகளைக் கூறுகிறார். அவை பகுத்தறிதல், சூழல் தொடர்பற்ற தன்மை, நல்லொழுக்கம், அன்பு என்பனவாம். இவர் இந்து சமயத்தின் 'சாதனை' என்ற கோட்பாட்டை உடையவர். ஆயினும் இவர் எந்தச் சமயத்தையும் சார்ந்தவர் அல்லர்.

**மெய்ப்பொருளியற் கருத்துகள்**: வாழ்வில் அறியாமையின் விளைவாக அமைவதே தனித்துவம் (Individuality) ஆகும். அறியாமை அகற்றப்பட்ட தனியன தூய வாழ்வில் ஒன்றி விடுகின்றான்; இறையோடு ஒன்றிவிட முனைகின்றான். 'நான்' என்ற மாயையாம் இருவேறு (துவைத) நிலை குறைய, அவன் மெய்ப் பொருளாம் இறையோடு ஒன்றி விடுகின்றான். தன்னுணர்வு வழியினால் இந்நிலையைக் கடந்து விடலாம். இவ்வாறு கிருட்டிணமூர்த்தி மரபு வழிகளுக்கு எதிராகச் சிந்தித்து, ஒரு மரபு முரண் வாதியாகத் திகழ்ந்தார்.

இவர் ஒரு வியப்புக்குரிய தனிமனிதத்துவவாதியாகத் திகழ்ந்தார். இவர் தன்னுணர்வின் அடித்தளத்திலோடு ஆழ்ந்த சிந்தனையில் வாழ்வியல் சிக்கல்களைத் தேடுவதற்கு மூழ்குவார். இவர் தம் கொள்கையின் தெளிவு நிலையைப் பாதுகாக்க வெளிப்படையாக வழிகாட்டுதலை மறுத்தார். இவர் இறந்த காலத்திலிருந்து முழுமையாக விலகி நிற்கும் கோட்பாட்டினர்; எதிர்காலத்தைப் புறக்கணித்து நிகழ்காலத்தில் ஈடுபடுபவர். இவர் மனிதனுக்குப் புறத்தே ஒரு தெய்வம் உளது என்பது பற்றி எவ்வித சிந்தனையும் கொள்வதில்லை. மாறாக, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உள்ளுயிராக விளங்கும் பேராற்றலைப் பற்றியே பெரிதும் விளக்குவார்; அவ்வாற்றலையே கடவுள் எனக் குறிப்பிடுகின்றார். 'நீங்களே கடவுளர்களாக இருங்கள்; கடவுளர்களாக ஆகுங்கள்' என்பதுவே இவர்தம் போதனைகளின் சாரமாகும்.

கிருட்டிணமூர்த்தி தம்மைப் புரட்சியின் மகன் என்று சொல்லிக் கொள்வதோடு, மக்களையும் அறிவுப்புரட்சி (Intelligent revolt) மேற்கொள்ளுமாறு வற்புறுத்துகின்றார். செருக்கு அழியும்போது விடுதலை தோன்றுகிறது; இன்ப ஆட்சியின் கதவுகள் திறக்கப்படுகின்றன. கூர்தல் அறம் (Evolution) என்பது ஒரு படிநிலை வளர்ச்சி. அதை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கும், ஒரு கருத்திலிருந்து மற்றொரு கருத்துக்கும், ஒரு நோக்கிலிருந்து பிறிதொரு நோக்கிற்கும் நிகழும் தொடர் மாற்றம் எனலாம். கூர்தல் அறம் என்பது ஒரு புரட்சி நிலையாகும். அறிவு என்பது அனுபவங்களின் விளைவாகும். எனவே, ஒருவன் அனுபவப் படிநிலைகளைக் கடக்காவிட்டால் விடுதலை பெறவியலாது என்கிறார் இவர்.

விழிப்பு நிலை என்பது இவர்தம் போதனைகளின் மெய்க் கருத்தாகும். இவர் அதனை வெறுப்பின்றியும் காரணமின்றியும் ஈடுபாடின்றியும்காணும் ஒரு காட்சியாகக் கருதுகின்றார். எனவே, விழிப்பு நிலையைக் காணுகின்ற ஒருவனை, அவன் கொந்தளிப்புக் குழப்பங்களின் வெளியேயிருந்து அவற்றைக் கடந்து நிற்கும் நிலையில் இருப்பதாகக் கொள்ளலாம். பல நிலைகளிலும் இத்தகைய மேலோங்கிய நிலை விழிப்பு நிலையின் அறிகுறியாக விளங்குவதாகும். இத்தகைய மனமாற்ற நிலை ஒருவித தன் விருப்பு நிலையாகும். ஆனால், அது அந்நிலையின் வளர்ச்சியன்று; அது ஒரு குறிக்கோள் நிலை அன்று; விரும்பி அடையத்தக்க ஒரு முடிவு நிலை. அது ஓர் உளநிலைப் புரட்சியாகும். அது சுற்றுச்சூழலால் பாதிக்கப்படாதது; மனவுணர்வினால் கட்டுப்படுத்தப்படுவதுமன்று. இவர்தம் கோட்பாடுகளுள் மனநிலைப் புரட்சி அடிப்படையான ஒன்றாகும். உணர்வினால் மனத்தைத் திருத்துவதற்கு அது ஓர் எல்லை வகுக்கவில்லை. மனத்தில் புரட்சி இல்லாத சூழ்நிலைத் திருத்தம் என்பது உண்மையானதும் நிலையானதும் ஆகாது.

அமைதியான மனத்தினின்றே உண்மைப் பொருளைக் காணுதல் இயலும். அத்தகைய மனமே உண்மைப்பொருள் அல்லது கடவுள் என்பதன் ஒளியைப் பெறவியலும். ஒவ்வொருவரும் அத்தகைய மன அமைதியைப் பெறுதல் வேண்டும்.

மனத்தின் உயர் அறிவுநிலை 'இது இல்லை, இது இல்லை' என்பதனை உணர்வதாகும் ஏனெனில், உண்மை என்பது எது என்று மனத்தினால் சொல்ல இயலாதது. எது உண்மை இல்லை என்று வேண்டுமானால்சொல்லவியலும். மனம் ஒவ்வொரு பிம்பத்தினின்றும் விலக விலக, அது உண்மை இல்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. இப்படி உண்மையை நாடித் தேடும்போது உண்மையின் பிம்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பின்தங்கி விடுகின்றன. இந்தப் பிம்பங்களைக் கழிக்கும் நெறியே 'இது இல்லை, இது இல்லை' என்னும் நெறியாம். இந்நெறி பற்றிய உணர்வே இவருடைய அணுகுமுறையின் தொடக்கமாகும்.

சமய ஆன்மிகங்களில் காணப்படும் பற்றுறுதிக் கோட்பாட்டின் மறு உரையே கிருட்டிணமூர்த்தியின் போதனை எனலாம். சமய நெறிகளையும் கோட்பாடுகளையும் சூழ்ந்து வளர்ந்த அனைத்தையும் சேர்த்து அமைக்கப்பட்ட ஒரு புதிய கொள்கையே இவரதாகும். பிரமம் அல்லது முடிந்த உண்மை என்பது தொலைவில் இல்லை. அது எங்கும் உளது. அதனை இங்கேயே இப்பொழுதே அணுகலாம். எனவே, விடுதலை அல்லது வீடுபேறு என்பது இங்கேயே இப்பொழுதே அமைவதாகும்; நெடுந்தொலைவினதன்று. 'வாழ்வில் ஒன்றி உறவாடு; வாழ்வை நேசி' என்று இவர் கூறுகிறார்.

பண்டைய மேலை, கீழை நாடுகளின் தத்துவக் கோட்பாடுகளில் காணப்படும் முரண்பாடுகளின் விளைவாக உருவாகிய புதிய இந்தியக் கோட்பாட்டு நெறியின் ஓர் உறுப்பாகவே இவர் தம்மைக் கருதினார். இவர்தம் எண்ணங்கள் இந்தியத் தத்துவத்தில் முளைத்தெழுந்தனவாயினும்,மேலைநாட்டுக் கருத்துகளாலும் பண்பாடுகளாலும் பாதிக்கப்பட்டனவாகும். இவரை ஒரு மேலைநாட்டுப் பின்னணியில் தோன்றிய இந்தியத் தத்துவ அறிஞர் எனலாம். ஆசி

யாவுக்கு இவர்தம் தத்துவம் முழுவதுமாகப் புதிய தன்று. உண்மையில் இவர்தம் தத்துவம் பல தத்துவக் கோட்பாடுகளின் உயர் நெறிகள் சேர்ந்து இணைந்த ஒரு கலவையாகும்.

இவர் கொள்கைகளை வீணே பேசித் திரிவதை விரும்பவில்லை; அவற்றை வாழ்வில் நடைமுறைப் படுத்துவதையே வலியுறுத்துகிறார். இவர்தம் ஆன்ம ஒளித் தத்துவம் ஒருவித உளவியல் புரட்சிக்கு (Psychological revolution) மனித சமுதாயத்தை அழைத்துச் செல்கின்றது. அதன் வாயிலாகத் தனியொருவன் தனக்குத்தானே தலைவனாக உருவாவதற்கும், அதன்வழிப் புதியதோர் உலகம் உருவாவதற்கும் இவர் வழி வகுக்கின்றார். கிருட்டிணமூர்த்தி 1986-ஆம் ஆண்டு சென்னையில் காலமானார்.

இரா.சு.

**துணை நூல்கள்:**

**Krishnamurthi, J.**, Commentaries on Living, I,II & III Series, Victor Gollanez Ltd., London, 1972.

**Shringy R.K.**, Philosophy of J. Krishnamurti, A Systematic Study, Munshiram Manoharlal Publication, New Delhi, 1977.

**கிருட்டிணமேனன், வி.கே. (கி.பி. 1897-1974)**: இவர் இந்தியாவின் மிகச் சிறந்த அரசியல் தலைவர்களுள் ஒருவர். வெங்கலில் கிருட்டிணன் கிருட்டிண மேனன் என்பது இவரது முழுப்பெயர். இவர் சிறந்த நாவன்மை படைத்தவர்; உலக அரங்கில் இந்தியாவின் அரசியல் கொள்கைகளை விளக்கிக் கூறி, இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தவர்.

இவர் கி.பி. 1897-இல் கேரள மாநிலத்திலுள்ள கள்ளிக்கோட்டை வட்டம் பண்ணியங்கரா என்னும் கிராமத்தில் வளமிக்க நாயர் குடும்பத்தில் பிறந்தார். கோமத்து கிருட்டிணன்குரூப்பு,இலட்சுமிகுட்டி-ஆகிய இருவரும் இவர்தம் பெற்றோர் ஆவர். இவருக்கு ஆறு சகோதரிகளும் ஒரு சகோதரனும் இருந்தனர். கள்ளிக்கோட்டை சாமரின் கல்லூரியிலும் (1915) சென்னை மாநிலக் கல்லூரியிலும் (1918) படித்து பி.ஏ. பட்டம் பெற்ற இவர் சென்னைச் சட்டக் கல்லூரியிலும், அடையாற்றிலுள்ள தேசிய பல்கலைக்கழகத்திலும் சில காலம் பயின்றார். இவர் இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் (1924-27) பயின்று பட்டம் பெற்றார். பின்னர் 1930-இல் இலண்டனில் பல்கலைக்கழகக் கல்லூரியின் மூலம் எம்.ஏ. பட்டமும் 1934-இல் இலண்டன் பொருளாதாரப் பள்ளியின் மூலம் எம்.எச்.சி. பட்டமும் பெற்ற இவர் ஆங்கிலச் சட்ட அவையில் (The English Bar) அனுமதிக்கப்பட்டார். இவர் 1929-முதல் 1947 வரை இலண்டனில் இந்திய அணியில் செயலராகப் பணி புரிந்தார்; இந்திய விடுதலைக்காகப் பெரிதும் பாடுபட்டார். பின்னர் 1930-களில் இலண்டனில் சவகர்லால் நேருவைச் சந்தித்து, அவருடன் நெருக்கம் கொண்டார்.



ஆங்கில நீதிமன்றங்களிலும், 'பிரிவி கவுன்சிலிலும்' (Privy Council) இவர் பணியாற்றியுள்ளார். மேனன் புனித பான்கிரீசு நகர்மன்ற (பரோ) உறுப்பினராகவும் பரோவின் நூலகக் குழுவின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் 1936 முதல் பல அனைத்துலகக் காங்கிரசு மாநாடுகளில்,இந்தியத் தேசிய காங்கிரசின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளத் தொடங்கியது முதல் இவரது அரசியல் வாழ்வு ஆரம்பமாயிற்று. இவரது முற்போக்கு எண்ணங்களுக்கு வித்திட்டவர்கள் இவர் தந்தையார் கிருட்டிணன் குரூப்பும் சகோதரி சான்சியம்மாவும் ஆவர். கல்லூரிப் பருவத்தில் அன்னிபெசண்டு அம்மையாரின் தத்துவங்களால் கவரப்பட்ட இவர் ஞானசபையினராகவும் (Theosophist) ஆனார்.

மேனன் இந்தியப் பாராளுமன்றத்தின் மேல்சபை உறுப்பினராக 1953 முதல் 1957 முடியவும், மக்கள் சபை உறுப்பினராக 1957 முதல் 1962 வரையும் பணியாற்றினார். மீண்டும் 1969-இல் மேற்கு வங்காளத்திலுள்ள மிதுனபுரித்(Midnapore) தொகுதியில் போட்டியிட்டார்; 1971-இல் திருவனந்தபுரம் தொகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சவகர்லால் நேரு 1946-இல் இடைக்கால அரசின் முதல்வராக விளங்கிய போது, மேனனைத் தம்

அந்தரங்கப் பிரதிநிதியாக அமர்த்தினார். நேருவின் ஆட்சிக்காலம் முழுவதும் (1947-1964) இவர் உலக விவகாரங்களில் அவர்தம் அந்தரங்க அறிவுரையாள ராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா 1947-இல் விடுதலை பெற்றவுடன், மேனன் இலண்டனில் இந்தி யாவின் உயர் அதிகாரியாக (High Commissioner) அமர்த்தப்பட்டார்.

அரசியல் மேதையாகிய இவர், 1956-1957-ஆம் ஆண்டுகளில் துறைப்பொறுப்பில்லா மத்திய அமைச்ச ராகவும் 1957 முதல் 1962 முடிய மத்திய பாதுகாப்பு அமைச்சராகவும் நற்பணி புரிந்தார். 1956-இல் சூயசுக்கால்வாயைத்தேசிய மயமாக்கும் சிக்கல் முதன் முதலில் எழுந்தபோது, மேனன் அதனைச் சுமுக மாகத் தீர்க்கத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து அளித்ததுடன், கொரியாச் சிக்கலுக்குத் தீர்வு காண் பதிலும் பெரும் பங்கு வகித்தார். ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளிடையே ஒற்றுமையை வளர்க்கவும் இவர் சீரிய முயற்சிகள் மேற்கொண்டார். கிருட்டிண மேனன் 1952-1953-இலும் 1954 முதல் 1962 முடிய உள்ள ஆண்டுகளிலும், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கு (General Assembly) அனுப்பப் பட்ட இந்தியக் குழுவின் தலைவராக இருந்து அரும் பணி ஆற்றியுள்ளார். இந்திய நாட்டின் உயிர்க் கொள்கைகளான கூட்டுச் சேராமை, சமாதான சக வாழ்வு மற்றும் குடியேற்ற ஆதிக்க எதிர்ப்பு-ஆகிய வற்றின் சீரிய அம்சங்களை ஐக்கிய நாடுகள் அவை யில் தக்க ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார். அமெ ரிக்க ஆதிக்கக் கொள்கைகளைக் கண்டித்தும், சோவி யத்து உருசியாவின் அரசியற் கொள்கைகளை ஆத ரித்தும் இவர் ஐ.நா. சபையில் உறுதியுடன் பேசி னார். இனவெறி பற்றியும், புதிய ஆதிக்கக் கொள்கை பற்றியும் ஐ.நா. சபையில் இவர் நிகழ்த் திய உரை போற்றத்தக்கது. இவர்தம் உரைகளுக் கெல்லாம் முடி மணியாகத் திகழ்வது, ஐ.நா. சபை யில் இவர் காசுமீரச் சிக்கல் பற்றித் தெளிவான வாதங்களை 1961இல் எடுத்துரைத்ததேயாகும். இந்தியாவிற்குக் காசுமீரின் மீதுள்ள நியாயமான உரிமையை வலியுறுத்தி, இவர் பத்து மணிக்கும் மேலாக முழங்கிய முழக்கம் இவரது மாபெரும் சாத னையாகும். பிரதமர் நேருவின் அரசியல் கொள்கை களை உலகஅரங்கில் விளம்பரப்படுத்திய பெருமை கிருட்டிண மேனனுக்கு உண்டு. எரால்டு லாசுகியின் (Harold Laski) நண்பராகவும் இவர் இருந்தார்.

மத்திய பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், இந்திய இராணுவத்தை நவீனமயமாக்கு வதிலும், வலிமைப்படுத்துவதிலும் இவர் பெரும் பங்கு வகித்தார்; 1961-இல் கோவாவைக் கைப்பற்றி இந்திய நாட்டுடன் இணைப்பதில் வெற்றி கண்டார். 1962-இல் நிகழ்ந்த சீன ஆக்கிரமிப்பிற்குப் பின் மேன னின் அரசியற் செல்வாக்கும் மங்க ஆரம்பித்தது. சீன ஆக்கிரமிப்பு இவரது பதவி விலகலுக்குக் காரண மாக அமைந்தது.

பதவியைத் துறந்த இவர், உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் நடத்துவதிலும், தேசிய, அகில உலக நிறுவனங்களில் பணிபுரிவதிலும் இன்பம் கண்டார். பன்னாட்டுச் சட்டத்திற்கான இந்திய மன்றம் (The Indian Society of International Law), பன்னாட்டுச் சட்டம் மற்றும் அரசியற் செயலாட்சி நயக் கழகம் (Academy of International Law and Diplomacy), உலகச்சமாதான மன்றம் (World council of Peace) சமாதானத்திற்கான இந்திய வழக்கறிஞர்கள் மன் றம் (Indian Society of Lawyers for Peace), சன நாயக வழக்கறிஞர்கள் சங்கம் (Association of Democratic Lawyers)-ஆகியவற்றில் இவர் பொறுப் புள்ள பதவிகளை மேற்கொண்டு சீரிய பணியாற்றி னார்.

இவரது திறமையைப் பாராட்டு முகத்தான், இந்திய அரசு 1954-இல் இவருக்கு, 'பத்ம விபூசன்' விருதினை வழங்கியது; இலண்டன் பொருளாதாரப் பள்ளி இவருக்கு மதிப்புசார் உறுப்பினர் பதவியை வழங்கியது; இந்தியப் பல்கலைக்கழகங்களும், அயல் நாட்டுப் பல்கலைக்கழகங்களும் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தின.

நாட்டுப்பற்று மிக்கவராகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும், ஆற்றல் மிக்க பேச்சாளரா கவும், சிறந்த மந்திரியாகவும் தந்திரியாகவும், உலகப் புகழ்பெற்றவராகவும் திகழ்ந்த இவர், நல்ல எழுத் தாளராகவும் கீர்த்திமிக்க பதிப்பாசிரியராகவும் விளங்கினார். உலக அரசியல் நிகழ்ச்சிகள் பற்றி, பல பத்திரிகைகளில் இவர் பல சமயங்களில் திறம்பட எழுதியுள்ளார். 1937 முதல் 1940 வரை பண்டித நேருவின் நூல்களைப் பதிப்பித்துள்ளார். 1932-இல் இலண்டனில் பதிப்பாசிரியராகப் பணிபுரிந்துள்ளார். வாசகர்களுக்கு மலிவு விலையில் மிகச் சிறந்த நூல் களை வழங்குவதே இவரது குறிக்கோள். எனவே, காகித அட்டை கொண்ட மலிவுப் பதிப்பு நூல்களைப் பெருமளவில் வெளியிட்டார். சமுதாயம், மற்றும் நாகரிகம் பற்றிய நூல்களை 'இருபதாம் நூற் றாண்டு நூலகம்' (The 20th Century Library) என் னும் தலைப்பில் வெளியிட்டார். சிறந்த பல நூல் களைப் பதிப்பித்தும், வெளிப்படுத்தியும் அரிய பணி யாற்றினார். இவர் 1974-இல் காலமானார். ம.இ.

**கிருட்டிணராச சாகரம்** கருநாடக மாநில மைசூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் காவிரியாற்றின் குறுக்கே, கண்ணம்பாடி என்னுமிடத்தில் கட்டப் பட்டுள்ள பெரிய அணை. புகழ்பெற்ற பிருந்தாவனப் பூங்கா இதன் அடிவாரத்தில் உள்ளது. கிருட்டிண ராச சாகர் நீர்த்தேக்கத்திலிருந்து மின்சாரம் எடுக் கப்படுகிறது. நீர்ப்பாசனத்திற்கும் இந்நீர்த்தேக்கம் பயன்படுகிறது.




கருநாடக மாநிலத்தில், காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகளுள் இதுவே பெரி யது. மைசூர் மன்னர் கிருட்டிணராசேந்திர உடை யார் இதனைக் கட்டத் தொடங்கியதால், அவரது பெயராலேயே, கிருட்டிணராச சாகரம் (Krishnaraja Sakar) எனப் பெயர் பெற்றது. இதனைக் கட்டி முடிக்க ஏறத்தாழ 16 ஆண்டுகள் ஆயின. இந்த அணை 1932-இல் கட்டப்பட்டது. இந்த அணையின் நீளம் 8600 அடி, உயரம் 134 அடி. தேக்கத்தின் பரப் பளவு 80 கி.மீ. இப்பேரணையின் கொள்ளளவு 48,335 மிலியன் கன அடி தண்ணீர். இதற்கு மேல் தண் ணீரைத் தேக்கினால் அணைக்கு அபாயம் நேரிடும். ஏறத்தாழ மூன்று இலட்சம் ஏக்கர் நிலங்கள் இத னால் பாசனம் பெறுகின்றன. இங்கே 61000 கி.வா. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த அணை 2.6 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுப் பார்ப் பதற்குக் கடல் போன்று காட்சி தருகிறது. உலகின் மிகப் பெரிய செயற்கை ஏரிகளுள் இதுவும் ஒன்றா கும். இந்த அணையிலிருந்து 'இர்வின் கால்வாய், என்ற தனிக்கால்வாய் பிரிக்கப்பட்டுப் பாசனத்திற்குப பயன்படுத்தப்படுகிறது. இதன் அடிவாரத்திலுள்ள பிருந்தாவனப் பூங்கா பேரழகுமிக்கது; பல பார்வை யாளர்களை நாள்தோறும் அங்கு ஈர்க்கின்றது. அழகிய, வசதியான உணவு விடுதிகளும் பூங்காவின் அருகில் உள்ளன. இரவு நேரங்களில் வண்ண வண்ணத் தொடர் விளக்குகள் அழகிற்கு மேலும் அழகூட்டுகின்றன. ம.இ.

**கிருட்டிணன்** திருமாலின் பத்து அவதாரங் களுள் எட்டாவது அவதாரம். கிருட்டிணன் என்ற சொல்லுக்குக் கருமை நிறத்தவன் என்று பொருள் கூறுவர். கிருட்டிணன் குந்தி நாட்டின் அரசரான சூரசேனன் மகன் வசுதேவனுக்கும் போசகுலத் தலைவன் தேவன் என்பவரின் மகள் தேவகிக்கும் எட்டாம் மகனாக ஆவணித் திங்கள் அட்டமித் திதியில் உரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தார். இவர் யாதவ குலத்தைச் சார்ந்தவர். இவர்கள் பிருந்தா வனத்தில் வசித்து வந்தனர். திருவாய்ப்பாடியில் நந்தகோபன் மனையில் யசோதை என்பவளிடம்



கிருட்டிணன் வளர்ந்து வந்தார். குழந்தைப் பருவத் திலேயே தேவகியின் தமயனான கம்சன் என்பவன் ஏவிய பூதனை என்னும் அரக்கியையும், சகடன், திருணாவர்த்தன் முதலிய அசுரர்களையும் கிருட்டி ணன் கொன்றார். குழந்தை கிருட்டிணன் மண்ணைத் தின்பதைக் கண்டித்த யசோதைக்குத் தம் வாயைத் திறந்து உலகத்தையே அதனுள் காட்டி, தாம் திரு மாலின் மறுவடிவம் என்பதை உணர்த்தினார். குழந்தை கிருட்டிணனின் துடுக்குத்தனத்தைக் கண்



டித்து யசோதை அவரை உரலிற்கட்ட, உரலுடன் தவழ்ந்து சென்ற கிருட்டிணன், சாபத்திற்கு உட்பட்ட மருத மரங்கள் இரண்டை வீழ்த்தி, அவற்றில் இருந்தவர்களுக்கு சாப நீக்கம் அளித்தார்; ஆயர் பாடியில் உள்ள வீடுகளில் வெண்ணெய் திருடியும் ஆயர் பெண்களுடன் விளையாடியும் திருவிளையாடல்கள் பல செய்தார்; இடைச்சிறுவர்களுடன் கன்றுகள் மேய்த்தார்; அப்பொழுது வற்கன், பகன், அகன், கேசி முதலிய அசுரர்களைக் கொன்று, யமுனை ஆற்றிலே இருந்த காளிங்கன் என்னும் பாம்பைப் பற்றி அதன்மீது ஏறி நடனம் புரிந்தார்; பிரமன், இந்திரன் ஆகியோர் செய்த மாயைகளை வென்று ஆயர்மக்களை மகிழ்ச்சியடையச் செய்தார்; காந்தவக் காட்டை அழித்த அக்கினியை விழுங்கி ஆநிரைகளையும் இடையர்களையும் காப்பாற்றினார்; வடமதுரையில் கம்சன் ஏவிய குவலயாபீடமென்னும் யானையையும் மல்லர்களையும் வென்றார்; கம்சனை அழித்தார். சாந்தீப முனிவரிடம் கல்வி கற்ற கிருட்டிணன், குசேலரின் நண்பரானார். மகாபாரதத்தில் கிருட்டிணன் பலவாறாகப் போற்றப்படுகிறார். இவர் பாண்டவர்களின் உற்ற நண்பரானார்; திரௌபதியைத் துகிலுரிந்த பொழுது துகில் வளர அருள்புரிந்து திரௌபதியின் மானத்தைக் காத்தார்; பாண்டவர்களுக்காகத் துரியோதனன் அவைக்குத் தூது சென்றார்; பாரதப் போரில் அருச்சுனனின் சாரதியாகச் சென்று பார்த்தசாரதி எனப் பெயர் பெற்றார். அப்பொழுது பார்த்தனுக்குக் கூறிய அறிவுரையே பகவத்கீதை எனக் கூறப்படுகிறது. கர்ணனின் கவசகுண்டலங்களை இந்திரன் மூலம் வாங்கி வரச்செய்தார்; போரில் கர்ணன் எய்த நாகக் கணை அருச்சுனன் மார்பில் படாதவாறு தேரைத் தரையிலழுத்தி அவனைக் காப்பாற்றினார்; கர்ணன் செய்த எல்லாக் கொடைகளையும் தானமாகப் பெற்றார்; பாரதப் போரில் அருச்சுனனைக் காக்கச் சூரியனைச் சக்கரத்தால் மறைத்தார்; துரோணர் உயிர்விடுவதற்காகத் தருமனைப் பொய் சொல்லச் செய்தார்; பாண்டவர்களுக்காக இவ்வாறு பல சூழ்ச்சிகள் செய்து அவர்களைக் காப்பாற்றினார்.

போர் முடிந்தபின் துவாரகைக்குத் திரும்பினார். தம்தமையனார்பலராமனைத்துவாரகையின் அரசராக்கினார். இவர்தம் பகைவர்கள் பிரளம்பன், நரகன், சம்பாவான், பிதா, முரன், சராசந்தன், சிசுபாலன், சுனாமன் ஆகியோர் ஆவர். இவர்களுள் சராசந்தன் என்பவன் பிற அரசர்களைக் கைதிகளாக்கிச்சிறையிலிட்டிருந்தான். வீமன் மூலம் சராசந்தனைக் கொன்று, பிற அரசர்களை விடுவித்தார். அநிருத்தன் என்பவனைச்சிறைசெய்த வாணாசுரனை எதிர்த்து அவனது செருக்கை அடக்கி, அவன் மகள் உசையை அநிருத்தனுக்கு மணம் புரிவித்தார்; தம் நண்பரான குசேலருக்கு நிறைந்த செல்வம் கொடுத்து அவரது வறுமையை நீக்கினார்; தம் மனைவி சத்தியபாமாவிற்காக இந்திரன் தலைநகரான அமராவதியிலிருந்து பாரிசாத மரத்தைக் கொண்டு வந்தார்; கரடியரசனான சாம்பவானுடன் போர் செய்து, அவனை வென்று சியமந்தக மணியைப் பெற்றார்.



இவர், இராம அவதாரத்தில் வாலியை மறைந்திருந்து கொன்றதால் கிருட்டிண அவதாரத்தில் ஒரு

மரத்தின்மீது இருக்கும் பொழுது இவரது கால் பெரு விரலின் அசைவைப் புறாவின் அசைவாகக் கருதிய வேடன் ஒருவன்அதன்மீது அம்பெய்ததால் இவ்வுலக வாழ்வை நீத்தார் எனக் கூறுவர்.

கிருட்டிணரைக் குறித்துஅரிவம்சம்,விட்டுணுபுரா ணம், பாகவதம் போன்ற நூல்கள் விரிவாகக் குறிப் பிடுகின்றன. இவர் பெருவீரராகவும், சிறந்த ஆசா னாகவும், ஞானியாகவும் கருதப்படுகிறார். சிற்ப வடிவில் கிருட்டிணன் நிறைந்த அணிமணிகளை அணிந்து மகுடத்துடன் இருப்பார்; சிவந்த ஆடையை அணிந்திருப்பார். இருகைகளைக் கொண்டு விளங்கும் கிருட்டிணரின் ஒருபுறம் உருக்குமணியும் மற்றொரு புறம் சத்தியபாமாவும் இருப்பர். கிருட்டிணர் பல்வேறுபெயர்களால் அழைக்கப்படுகிறார். யசோதை யின் கையில் உள்ளவாறு இருக்கும் குழந்தை சாந்த கோபாலன் என்றும், காலின் கட்டை விரலைச் சப்பியவாறு ஆலிலைமேல் படுத்திருக்கும் கிருட்டிணன் வடபத்திரசாயி என்றும், வெண்ணெ யைத் திருடி உண்ணும் கிருட்டிணன் பாலகிருட்டி ணன் என்றும் கூறப்படுகிறார்.

பிருந்தாவனத்தில் கோபிகளுடன் இணைந்து விளை யாடும்பொழுது இராதையுடன் நெருங்கிப் பழகின னார். எனவே, இராதாகிருட்டிணர் எனக் கூறப்படுகி கிறார். குழல் ஊதும் கிருட்டிணன், வேணுகோபாலன் எனக் கூறப்படுகிறார். கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தமையால் கோவர்த்தனன் என வும், கோவர்த்தன கிருட்டிணன் எனவும் கூறப்படு கிறார். கோபாலன், கோபாலகிருட்டிணன், நந்தகோ பாலன், கண்ணன் எனவும் கிருட்டிணன் கூறப்படு கிறார். காண்க: அவதாரங்கள். சு.இரா.

## கிருட்டிணன், என்.எசு. (கலைவாணர்):

இவர் நாகர்கோவிலை அடுத்த ஒழுகினசேரியில் 1908 -ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29-ஆம் நாள் சுடலையாண்டிப்பிள்ளை, இசக்கியம்மாள் ஆகி யோர்க்குப் பிறந்தார்; நான்காம் வகுப்பு வரை தமிழும், மலையாளமும் பயின்றார், குடும்ப வறுமை யின் காரணமாகப் படிப்பைவிட்டு விட்டுக் கடை ஒன் றில் வேலைபார்த்தார். இவர் 1925-இல் டி.கே.எசு சகோதரர்களின் நாடகக்குழுவில் சேர்ந்தார். இவர் 1931-ஆம் ஆண்டு நாகம்மையை மணந்தார். மதுரம் அம்மையாரை 1935-ஆம் ஆண்டு மணந்த இவர் அதன்பின் அவர் தங்கை வேம்புவையும் மணம் செய் தார்.

இளம் பருவத்திலேயே சிறுவர் பலரோடு 'மார்க் கண்டேயன்', 'அரிச்சந்திரன்' போன்ற நாடகங்களை



கிருட்டிணன், என்.எசு.

நடித்தார். இவர் நாடகக் கொட்டகையில் 'சோடா' பானம் விற்கும்பொழுது நாடகத்துறையின்மீது அதிக நாட்டம் கொண்டார்; அதனால் தம் 17-ஆம் வய தில் டி.கே.எசு சகோதரர்களின் சிரீபாலசண்முகா னந்த சபா என்ற நாடகக்குழுவில் சேர்ந்தார்; சத்திய வான் சாவித்திரியில் தீமத்சேனனாகவும், கோவலனில் பாண்டியனாகவும்' நடித்தார்; மனோகரா நாடகத் தில் 'வசந்தன்' பாத்திரத்தில் நகைச்சுவை நடிகராக முதலில் அறிமுகமானார்; சகந்நாத ஐயரின் சிரீபால மீனரஞ்சனி சங்கீத சபையில் 1928-ஆம் ஆண்டு நகைச் சுவை நடிகராகப் பணிபுரிந்தார்; பின்னர் என்.எசு. கே. நாடகக்குழுவினை ஏற்படுத்தினார்.

**திரையுலகம்**: இவர் 'சதிலீலாவதி' என்ற திரைப் படத்தில் முதல் முதலாக நடித்தார்; இறுதியாக 'யார் பையன்?' என்ற படத்தில் நடித்தார். இவர் 1939-இல் அசோக பிலிம்சு மூலம் 'புத்திமான் பல வான் ஆவான்', 'நவீன விக்கிரமாதித்தன்' போன்ற படங்களையும், பின் என்னெசுகே படநிறுவனம் பிலிம் மூலம் பைத்தியக்காரன், நல்லதம்பி, மணமகள் முதலிய படங்களையும் தயாரித்தார். தமிழ், மலை யாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழி களில் 110 படங்களில் நடித்துள்ளார்.

நாடகம், சினிமாத் துறையில் இயக்குநர்கள், பாத்திரங்களை அறிமுகப்படுத்திய பின் இவர் பாத்திரத்திற்கு ஏற்ப வசனங்களைப் பேசி நடிக்கும் இயல்புடையவர்; எந்தப்பெரிய பாத்திரங்களையும் ஏற்று நடிப்பவர்; காட்சியில் சிறிது பெரிது, வேடத் தில் சிறிது, பெரிது என்ற வேறுபாடு இல்லாமல் நடிப்பவர்; பிறர் மனம் புண்படாத வகையில் நகைச் சுவையை வெளிப்படுத்துவதில் வல்லவர்; நகைச்

சுவைக் கலையிலே நல்ல கருத்துகளைக் கொடுப்பது இவரது தனிச் சிறப்பு.

நடிகராகக் கலை வாழ்வைத் தொடங்கிய இவர் நாடக ஆசிரியராகவும், பாடல் ஆசிரியராகவும், நடன ஆசிரியராகவும், திரைப்பட இயக்குநராகவும், படாதிபதியாகவும், திரைப்படத் தொடர்பான எல்லாப் பகுதியிலும் பணிபுரிந்தார். எதிர்கால நிகழ்ச்சிகளை இக்காலத்தில் கற்பனையாக உணர்த்தும் ஆற்றல் உடையவர். இவரது நாடகம், திரைப்படம் ஆகியவற்றைப் பார்ப்பவர்களுக்கு நாட்டின் எதிர்காலச் சூழலை அறியமுடிந்தது. காட்டு 'அம்பது அறுவது' என்ற நாடகமாகும். இவரது திறமையைக் கண்ட தமிழுலகம் இவர்க்குக் 'கலைவாணர்' என்ற பட்டத்தை வழங்கியது.

வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம் போன்றன இவர்தம் பிற கலைகளாகும். தேசிய உணர்ச்சியை வெளிக்காட்டத் திரைப்பட இயக்குநர் பி. சுப்பிரமணியத்தின் தூண்டுதலால் 'காந்திமகான் சரித்திரம்' என்ற வில்லுப்பாடலை மலையாளமொழியில் எழுதினார். அவ்வில்லுப்பாட்டு திருவனந்தபுரம் மாநகராடசிப் பொருட்காட்சிக் கட்டிடத்தில் அரங்கேற்றப்பட்டது.

சமூகத்தின் மூட நம்பிக்கையை எதிர்த்துக் 'கிந்தனார்' என்ற கதாகாலட்சேபம் நடத்தினார்: மக்கள் உள்ளத்தைப் புண்படுத்தக்கூடாது என்பதற்காக முதலில் 'கிந்தன் சரித்திரம் கிண்டல் அல்லவே அல்ல' என்று கூறிக் கதையை ஆரம்பிக்கும் பெற்றி இவரது இயல்பைக் காட்டுகின்றது.

வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபத்தைத் திரைப்படங்களில் புகுத்திப் பலதரப்பட்ட மக்கள், பல இடங்களிலும் பார்ப்பதற்கு வகைசெய்தார். சங்கரதாசு சுவாமிகளைப் பற்றி 'நாடக உலகில் இமயம்' என்ற கட்டுரை எழுதினார். மேலும் 'தமிழ்த் திரைப்படங்கள்', 'கலையும் களையும்' என்பன அவர் வரைந்த கட்டுரைகளாகும். 'நாடகமும் சினிமாவும்' என்ற தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்தியுள்ளார். பல திரைப்படப் பாடல்களைத் தம் குரலில் பாடியுள்ளார்.

இவர் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர். கலைத்துறையில் இவரை வைத்து வாழ்ந்தவர்கள் பலர்; சுதந்திர உணர்ச்சி, தேசிய உணர்ச்சி, தமிழ்மொழிப் பற்று ஆகியன மிகுதியாக உடையவர்; காந்தி மகானைக் கடவுளாக எண்ணியவர்; காந்தி மகானின் நினைவாக ரூ. 40,000/- செலவில் தூபி ஒன்று இவர் கட்டினார். அரசியல் தலைவர்களோடு தொடர்புடையவர்; எனினும், அவர்களுக்கு இழுக்கு வாராதவகையில் நடந்துகொள்ளும் பண்பாளர். காட்டாக முதல் பொதுத் தேர்தலில் என்.எசு. கிருட்டிணனைப் போட்டியிட விரும்பினார் நேரு. அதனால், மக்கள் மத்தியிலும் கட்சியினிடையேயும் குழப்பம் ஏற்படும் என்பதை அறிந்த கலைவாணர் நேருவைச் சந்திக்கவில்லை. உருசியச் சுற்றுப் பயணத்தை 1951-இல் மேற்கொண்ட இவர், 1952-இல் நாடகக் கழகத் தலைவராகவும், 1956-இல் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலட்சுமிகாந்தன் கொலை வழக்குக் காரணமாக இரண்டு ஆண்டு சிறைப்பட்டிருந்த இவர், குற்றமற்றவராக வெளிவந்தார். இவர் 1957-ஆம் ஆண்டு ஆகசுட்டு 30-ஆம் நாள் காலமானார். இவரது நினைவாகத் தமிழகத்தில் பல கலையரங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவரது பிறந்த நாளை அரசு கொண்டாடுகிறது. இவர்தம் உருவச் சிலைகள் நாகர் கோவிலிலும் மற்றும் பல இடங்களிலும் உள்ளன.

ந.ச.

**கிருட்டிணன், முதலாம் (கி.பி. 756-775):** இராட்டிரகூட குலத்தின் புகழ்மிக்க வேந்தருள் முதலாம் கிருட்டிணனும் ஒருவன். 'இராட்டிரகூடரின் மேலாண்மையை யாங்கணும் பரப்புவதில் இவன் பெரும்பங்கு வகித்தான். இவ்வேந்தனது 'ஆட்சிக் காலம் இராட்டிரகூடரின் கலை வளர்ச்சி வரலாற்றில் மங்காத இடத்தைப் பெற்றுள்ளது.

இராட்டிரகூட வேந்தனான தந்திதுர்க்கன் கி.பி. 756-இல் இறந்ததால், முதலாம் கிருட்டிணன் அரியணையேறினான். தந்திதுர்க்கனின் சிற்றப்பனாகிய இவன் இராட்டிரகூட அரசை விரிவுபடுத்துவதில் நாட்டம் கொண்டான்; எஞ்சியிருந்த சாளுக்கிய ஆட்சியைத் தகர்த்தெறிந்து தனது வமிசத்தின் மேலாட்சியை அங்கு நிறுவினான். தென்கொங்கணத்தை அடிப்படுத்தி, ஆங்குச் சிலார குலத்தைத் தோற்றுவித்த சனபுல்லா (Sanaphulla) என்பானைத் தன் மேலாண்மைக்குட்பட்ட அரசப் பிரதிநிதியாக அமர்த்தினான். கங்க நாட்டின் மீது கி.பி. 768-இல் தாக்குதல் நடத்தி, சீபுருடனை வென்றடிப்படுத்தித் தன் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்தான். பின்னர்த் தன் மகன் இரண்டாம் கோவிந்தனின் தலைமையில் பெரும்படை ஒன்றினைக் கீழைச் சாளுக்கிய நாட்டின் மீது ஏவி. கி.பி. 769-இல் விசயாதித்தனைத் தோற்கடித்தான். இவ்வெற்றிகளின் விளைவாகச் சாளுக்கிய நாட்டின் தென் பகுதியும், கீழைச் சாளுக்கிய அரசின் ஒரு பகுதியும் இராட்டிரகூடருக்கு உட்பட்டன.

மாபெரும் வீரனாகவும் நாடுபிடிப்பாளனாகவும் திகழ்ந்த இவன், கலைப் புரவலனாகவும் திகழ்ந்தான். எல்லோராவில் உள்ள புகழ்மிக்க கைலாசநாதர் குடைவரை, இவ்வேந்தன் ஆட்சிக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டது. சிவனுக்காகப் படைக்கப்பட்ட இக்கோயில் கண்ணேசுவர் கோவில் எனவும் சொல்லப்பட்டது.

'இந்தியாவின் தலைசிறந்த கலைப்படைப்பு இதுவென்றும், உலக அதிசயங்களுள் இதுவும் ஒன்று' என்றும் வின்செண்ட்டு சுமித்து இக்கோயிலைப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

இராட்டிரகூட மரபின் இரண்டாம் வேந்தனாகத் திகழ்ந்த இவன் சுபதுங்கன்' அகாலவர்சன் -என்னும் சிறப்புப் பெயர்களையும் பெற்றுள்ளான். 19 ஆண்டுகள் நல்லாட்சி புரிந்த இவன் மான்யகேட இராட்டிரகூட வேந்தருள் புகழ் மிக்கவனாகக் கருதப்படுகிறான்.

**கிருட்டிணன், இரண்டாம்** (கி.பி.880-914) மான்யகேடத்தைத் (மால்கெட்) தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த இராட்டிரகூட வேந்தருள் இரண்டாம் கிருட்டிணனும் ஒருவன். இவன் கி.பி. 880-இல் தன் தந்தை முதலாம் அமோக வருச நிருபதுங்கனுக்குப் (கி.பி. 814-878) பின் அரியணை யேறினான்; திறமையற்ற வேந்தன்.

இவன் முதலில் தன் நாட்டின் மீது படையெடுத்து வந்த கூர்ச்சரப் பிரதிகார வேந்தனான முதலாம் போசனை வென்றான்; பின்னர் இலட்டர அரசப் பிரதிநிதியை நீக்கி விட்டுத் தன் நேராட்சியின் கீழ் அதனைக் கொணர்ந்தான்; அடுத்துக் கீழைச்சாளுக்கிய வேந்தனான மூன்றாம் குணக விசயாதித்தனால் இவன் தோற்கடிக்கப்பட்டுத் தன் தலைநகரையும் இழந்து, மாமனாரின் சேதி நாட்டில் அடைக்கலம் புகுந்தான்.

கிருட்டிணன் விசயாதித்தனின் இறப்பிற்குப்பின் கி.பி. 892-இல் அரியணையேறிய முதலாம் பீமனுடன் போரிட்டு, அவனை வென்று அவனைச் சிறையில் இட்டான். இருப்பினும் சிறையிலிருந்து தப்பிய பீமன் கிருட்டிணனை நிரவத்தியபுரம், பெருவங்கூறு -முதலான இடங்களில் தோற்கடித்துத் தன் நாட்டை விட்டு விரட்டியடித்தான்.

இவ்வேந்தன் தன் மகளை முதலாம் ஆதித்த சோழனுக்கு மணம் செய்வித்தான். இவ் வரசிக்குச் சோழன்பால் பிறந்தவனே கன்னரதேவன் ஆவான். ஆதித்தனின் இறப்பிற்குப்பின் தன் பேரனான கன்னரதேவன் சோழ அரியணையேறும் வாய்ப்பை இழந்ததால், கிருட்டிணன் முதலாம் பராந்தக சோழனைப் பழிவாங்க 910-இல் சோணாட்டின்மீது படையெடுத்துத் திருவல்லத்தில் தோல்வியடைந்தான்.

மேற்கூறியவற்றால் இரண்டாம் கிருட்டிணன் ஆட்சிக் காலம் இராட்டிரகூடர் வரலாற்றின் சோதனைக் காலம் என்பது அறியப்படுகின்றது.

**கிருட்டிணன், மூன்றாம்** (கி.பி.939-966) இராட்டிரகூட மரபின் புகழ்மிக்க வேந்தன்; தமிழகத்தில் இராட்டிரகூடரின் மேலாண்மையைப் பரப்பியவன்; மாபெரும் வெற்றிவீரனாகவும், நல்ல ஆட்சியாளனாகவும், கலையார்வம் மிக்கவனாகவும், கன்னட இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தவனாகவும், பல பட்டங்களைப் புனைந்து கொண்டவனாகவும் விளங்குபவன்; புகழ் மங்கிக் கிடந்த இராட்டிரகூட அரசிற்குப் புதுப்பொலிவும் புத்துணர்ச்சியும் அளித்தவன் இவனே.

மூன்றாம் அமோக வருசனின் (கி.பி. 935-939) மகன் மூன்றாம் கிருட்டிணன் தன் தந்தையின் இறப்பிற்குப் பின் கி.பி. 939-இல் இராட்டிரகூட அரியணையேறினான். தன் குலத்தினர் இழந்த பெருமையை மீட்கத் துடித்த இவன், தன் மைத்துனன் இரண்டாம் பூதுகனின் துணையுடன் சோழரைப் பழிவாங்கச்சோணாட்டின் மீது படையெடுத்தான்; அரக்கோணத்திற்கு அருகில் உள்ள தக்கோலம் என்னுமிடத்தில் சோழர் படையைச் சந்தித்தான். இப்போரில் சோழ இளவரசனான இராசாதித்தன் கொல்லப்பட்டான். சோழர் படையும் தோற்கடிக்கப்பட்டது. சில ஆண்டுகளில் மூன்றாம் கிருட்டிணன் இராட்டிரகூடரது மேலாண்மையைத் தென்னகத்தில் நிறுவினான். சோணாட்டின் வட பகுதியில் பெரும் பகுதியைக் கைக் கொண்ட இவன் 'கச்சியும் தஞ்சையும் கொண்டான்' என்னும் சிறப்புப் பெயரையும் பூண்டான். இப்பகுதியில் இவன் இராட்டிரகூட அதிகாரிகளின் துணை கொண்டு, நல்லாட்சியை நிறுவினான் என்பது குறிப்பிடத்தக்கது.

சோழப் பெரு வேந்தர்களுள் ஒருவனாகத் திகழ்ந்த முதலாம் பராந்தக சோழனை வென்றதால், தென்னிந்திய வரலாற்றில் இவன் சிறப்பானதோர் இடத்தினைப் பெற்றுள்ளான்.

இவன் கீழைச்சாளுக்கிய நாட்டில் இரண்டாம் அம்மனுக்கு எதிராகக் கலகங்களைத் தூண்டிவிடுவதில் வெற்றி பெற்றான். இவன் கி.பி. 963-இல் மாளவத்தின் மீது போர் தொடுத்துப் பரமார வேந்தன் கர்சசீயகனைத் தோற்கடித்து, இராட்டிரகூடரின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்தான்,

இவன் சேரனையும், பாண்டியனையும் வென்று இராமேசுவரம் வரையில் தனது வெற்றிப் படையை நடத்திச் சென்றான் என்றும், தனது வெற்றியின் நினைவாக இராமேசுவரத்தில் வெற்றித்தூண் ஒன்றினை நட்டான் என்றும் கூறப்படுகின்றது. இலங்கை வேந்தனும் தானாகவே இவனுக்குப் பணிந்தான்.

இராட்டிரகூட அரசினை ஆட்சிபுரிந்த பிற்கால வேந்தருள் மூன்றாம் கிருட்டிணன் சிறந்த வெற்றி வீரனாகவும் ஆட்சியாளனாகவும் விளங்கினான். அடுத்து இவனது ஆட்சிக் காலத்தில் இலக்கியம் பெரு வளர்ச்சி பெற்றது. பம்பா, பொன்னா, சாவுண்ரா முதலான கன்னடப் புலவர்கள் இவனது அவையை அலங்கரித்தனர். பம்பா எனும் புகழ்மிக்க புலவர் ஆதிபுராணம், பம்ப பாரதம் எனும் நூல்களைக் கன்னட மொழியில் இயற்றினார். சாந்தி புராணம் எனும் நூலினை இயற்றிய புலவர்திலகம் பொன்னாவிற்கு இவ்வேந்தன் உபய கவிச்சக்கரவர்த்தி எனும் விருதுப் பெயரினை வழங்கிப் பாராட்டினான். சாவுண்டராய புராணம் எனும் உரைநடை நூலை இயற்றிய சாவுண்டராயனும் இவரால் ஆதரிக்கப் பட்டவனேயாவான். கன்னட இலக்கியம் மட்டுமன்றி வடமொழி இலக்கியமும் இவ்வேந்தன் காலத்தில் நல்ல வளர்ச்சி பெற்றது.

இவன் மாபெரும் இலக்கியப் புரவலனாகத் திகழ்ந்ததால் கன்னட மொழி நன்கு வளர்ச்சி பெற்றது. இறைவர்க்குக் கோயில்கள் பல கட்டுவதிலும் இவன் நாட்டம் கொண்டிருந்தான். இவ்வேந்தன் காலப் பிரியருக்கும், கங்க மார்த்தாண்டருக்கும், கிருட்டிணேசுவரருக்கும் கோயில்கள் கட்டியதனை இவனது கர்காடு செப்பேடுகளால் அறியலாம். மேலும், பாண்டிச்சேரி அருகே உள்ள பாகூரில் மூலத்தானம் உடையார் கோயில், பெண்ணையாற்றின் தென்கரையில் கிராமம் (முடியூர்) என்னும் ஊரில் சிவலோக நாத சுவாமி கோயில், வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர்க்கருகில் பகவதிமலையில் பன்னப் பேசுவரம் – முதலான கோயில்கள் இவன் காலத்தில் கட்டப்பட்டன. கி.பி. 958–இல் சைவ சித்தாந்தங்களில் வல்லுநராகத் திகழ்ந்த கங்கணசிவா என்னும் துறவிக்கு இவன் கான்கம் எனும் ஊரைத் தானமளித்துள்ளான்.

இராட்டிரகூட மரபின் புகழ்மிக்க வேந்தனாகத் திகழ்ந்து, தொண்டை மண்டலம் முழுமையும் தன்னடிப்படுத்தித் தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலம் வரையில் தனது மேலாண்மையை நிறுவிய மூன்றாம் கிருட்டிணன் ‘இராசாதிராச பரமவிடங்கன்’ ‘அச்சள குலோத்தமன்’, காஞ்சிகன்’,‘அனைவிதங்கன்’, ‘சிரீ மத் கன்னர தேவர்’ – முதலான விருதுப் பெயர்களைக் கொண்டிருந்தான் என்பதனை விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் கோயிலில் காணப்படும் கிரந்தத் தமிழ்க் கல்வெட்டால் அறியலாம். இவ்வேந்தனது கல்வெட்டுகள் குரங்கணில் முற்றம், திருக்கழுக்குன்றம், உத்திரமேரூர், திருவொற்றியூர் – முதலான காஞ்சியைச் சூழ்ந்த இடங்களிலும் (செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்கள்), தென்னார்க்காடு மாவட்டத்திலும் காணப்பட்டாலும், தஞ்சை மாவட்டத்தில் இவன் கல்வெட்டுகள் காணப் பெறாமையால் இவன் ‘தஞ்சை கொண்டான்’ எனக் கூறிக் கொள்வது பொருத்தமற்றதாகும்.

மாபெரும் வீரனாகவும், நல்லாட்சியாளனாகவும் கோயில் எடுப்பித்தவனாகவும், கன்னட இலக்கியப் புரவலனாகவும், பல விருதுப் பெயர்களைப் புனைந்து கொண்டவனாகவும், இராட்டிரகூட மரபின் தலைசிறந்த வேந்தனாகவும் திகழ்ந்த மூன்றாம் கிருட்டிணன் தென்னிந்தியாவை ஆண்ட புகழ்மிக்க வேந்தர் பட்டியலில் ஒருவனாக இடம் பெறுகிறான். தக்காணம் முழுமையையும் தன்னடிப் படுத்திய இவன் ‘சகல தக்சிண திக் அதிபதி’ எனப் போற்றப்படுவது பொருத்தமே.　ம.இ.

**துணை நூல்கள்:**

**Desai, P.B.**, A History of Karnataka Dharwar, 1970.

**Krishnaswami, Dr. A.**, Topics in South Indian History, (From early times upto 1565 A.D.) Annamalainagar, 1972.

**கிருட்டிணா ஆறு** இந்தியாவில் மராட்டிய மாநிலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் மகாபலேசுவரம் என்ற இடத்திற்கு அண்மையில் உற்பத்தியாகிறது. இது கிழக்கு நோக்கிப் பாய்ந்து, தென்கிழக்காகக் கருநாடக மாநிலத்தின் எல்லைப்புறத்துக்கு ஓடி, மறுபடியும் கிழக்கு நோக்கிப் பாய்ந்து, கருநாடக, ஆந்திர மாநிலங்களுள் புகுகிறது. இதன் கழிமுக நடுவரங்கம் விசயவாடாவில் உள்ளது. அங்கிருந்து இது வங்காளக் குடாக்கடலில் கலக்கிறது. இதன் மொத்த நீளம் 1,300 கி.மீ. இந்த ஆறு காரவேலனின் அதிகும்பாக் கல்வெட்டில் கண்ண–பெம்னா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது நாசிக் குகைக் கல்வெட்டில் காரபீனா என்றும், மேலைச் சாளுக்கிய மன்னன் வினயாதித்தியனின் கி.பி. 692–ஆம் ஆண்டுக் கல்வெட்டில் கிருட்டிண–பென்னா என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

கிருட்டிணாவும் கோதாவரி ஆற்றைப் போலவே மிகப்பெரிய வளமான கழிமுகப் பகுதியைக் கொண்டுள்ளது. இவ்வாற்றில் கப்பல் போகமுடியாத போதிலும், நீர்ப்பாசனத்திற்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. பல கால்வாய்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் நீர்வளம் பருவக்காற்றையே பெரிதும் சார்ந்திருக்கிறது. இதன் பெரிய கிளை ஆறுகள் இரண்டு உள. அவை வடக்கிலுள்ள பீமா ஆறும் தெற்கிலுள்ள துங்கபத்திரையுமாகும். துங்கபத்திரையில் 1957-இல் ஆசுப்பெட்டு என்னுமிடத்தில் ஒரு பெரிய அணை கட்டப்பட்டு முடிவுற்றது. அதன் மூலம் நீர்மின்னாற்றல் பெறப்படுகிறது. கிருட்டிணா ஆற்றின் நீரைச் சென்னைக்குக் கொண்டுவரும் திட்டம் செயற்பட்டு வருகிறது. இவ்வாற்றங்கரையில் உள்ள முக்கிய நகரங்கள் தரணிக்கோட்டையும், அமராவதியுமாம்.



கிருட்டிணா ஆறு

கிருட்டிணா என்னும் பெயரில் காசுமீரத்திலும் ஓர் ஆறு ஓடுகிறது. தெ.பா.

**கிருட்டிணாட்டமி** என்ற தொடர் கிருட்டிண + அட்டமி எனப் பிரிந்து, 'கிருட்டிணன் பிறந்த அட்டமி நாள்' எனப் பொருள்படும். கிருட்டிணன் பிறந்தது வட மதுரையில். வளர்ந்தது கோகுலம் எனப்படும் ஆயர்பாடியில்.

கிருட்டிணன் பிறந்தது அட்டமி நாள். கம்சனது சிறைக்கோட்டத்தில் ஆவணி மாதம் கிருட்டிண பட்சம், அட்டமி திதி உரோகிணி நட்சத்திரம் கூடிய நள்ளிரவில் தேவகியின் திருக்குமாரனாகக் கண்ணன் பிறந்தான். அதன் முன் சங்கு சக்கரத்துடன் கூடிய தமது திருக்கோலத்துடன் தரிசனம் தந்து இருமுது குரவரின் முற்பிறப்பை உணர்த்தி அவர்தம் பிறவிப் பிணியை ஒழித்தான். அன்றே கம்சனின் கொடுங்கோலுக்கு அழிவுக்காலமும் தொடங்கியது.

தன்னைக் கொண்டு போய் ஆயர்பாடியில் நந்த கோபர் மனைவி யசோதையிடம் விட்டுவிட்டு, அங்கே அவள் பெற்றிருக்கும் பெண் குழந்தையைத் தூக்கி வந்து இங்கே சேர்க்கும்படி கண்ணன் வசுதேவருக்குக் கூறினான்.

அதன்படி நள்ளிரவில் கண்ணனை எடுத்துத் தோளில் அணைத்தபடி வசுதேவர் புறப்பட்டார். அவரது கால் விலங்குகள் தெறித்தன. காவலர் உறங்கினர். சிறைக் கதவுகள் தாமே திறந்தன. சோவென்று பெய்த மழையில் நள்ளிரவில் குழந்தை நனையாதவாறு ஆதிசேடன் குடைபிடித்து வந்தான். ஆற்றுவெள்ளம் தானாகவே விலகி வசுதேவர்க்கு வழி விட்டது. கண்ணன் கூறியபடி அவனைக் கொண்டு போய் யாரும் அறியாவண்ணம் ஆயர்பாடியில் யசோதையின் பக்கத்தில் சேர்த்துவிட்டு, அவள் பெற்ற பெண் குழந்தையொடு வசுதேவர் மீண்டார்.

யசோதை மயக்கம் தெளிந்தவுடன் தான் பெற்ற குழந்தையைக் கண்டாள். அது ஆண் குழந்தை என்பதை அறிந்து பேருவகை கொண்டாள். அனைவரும் மகிழ்ந்தனர். கோகுலத்தில் வாழ்ந்த ஆயரும் ஆய்ச்சியரும் மகிழ்ந்து கொண்டாடினர். நந்தகோபன் நாடெங்கிலும் இதனைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்தான்.

அதுமுதல் இன்றுவரை அவ்விழா 'கோகுலாட்டமி' என்ற பெயரால் பாரத நாடு முழுமையும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நன்னாளில் கிருட்டிணன் அவதரித்ததை எண்ணிக் குழந்தைகளுக்கான பலகாரங்களைச் செய்து படைத்து அனைவருக்கும் வழங்குவர்; விரதம் காப்பர்; கிருட்டிணனுக்குப் பூசைகள் செய்வர்.

சில இடங்களில் உறிகளைக் கட்டி அவற்றில் தயிர், வெண்ணெய் நிறைந்த பானைகளை வைத்துச் சிறுவர்கள் அவற்றை உடைத்து உண்ணச் செய்து ஆரவாரித்து மகிழ்வர். இது உறியடி விழா எனப்படும். சைவர்களும் வேற்றுமையின்றி இவ்விழாவில் கலந்துகொள்வதுண்டு. நாடெங்கும் உள்ள வைணவ ஆலயங்களில் கிருட்டிணாட்டமி சிறப்பாக நடைபெறுகிறது. கிருட்டிணாட்டமி, கிருட்டிண சயந்தி சிரீசயந்தி ஆகிய மூன்றும் ஒன்றே. அ.ஆ.

**கிருபளானி, ஜே.பி. ஆசாரிய (கி.பி. 1888-1982):** ஆசாரிய கிருபளானி என்று அன்புடன் மக்களால் அழைக்கப்பட்ட ஜே.பி. கிருபளானி (J.B,

Kripalani) இன்றைய பாகிசுத்தானில் உள்ள சிந்து மாநிலத்தில் ஐதராபாத்து நகரில் கி.பி. 1888-இல் பிறந்தார். நடுத்தர உயர் வகுப்பைச் சேர்ந்த இந்து சத்திரிய அமீல் (Amil) குடும்பத்தைச் சேர்ந்த காகா பகவன் தாசு என்பவர் இவர் தந்தை ஆவார். பகவன் தாசு அரசியலில் ஒரு வருவாய் வட்ட அதிகாரியாகப் (Tahsildar) பணியாற்றி வந்த போதிலும், மிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டு ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு தீவிரமான வைணவர். அவருக்கு ஏழு ஆண்மக்களும் ஒரு மகளும் பிறந்தனர். கிருபளானி ஆறாவது குழந்தை. இவருடைய இரண்டாவது, மூன்றாவது சகோதரர்கள் இசுலாமிய சமயத்திற்கு மாறிவிட்டனர்; மற்றொரு சகோதரர், கிலாபத்து இயக்கத்தின்போது இறந்துவிட்டார்; ஏழாவது சகோதரர் துறவியாகிவிட்டார். இந்தத் துறவியிடம் கிருபளானிக்கு மிகவும் அன்பும் அச்சமும் உண்டு. இவர் சகோதரி கிகிபென் (Kikiben) தேச நலனுக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஆகவே, கிருபளானியின் குடும்பத்தவர் ஒவ்வொருவரும் தீவிரமான மனப்போக்கைப் பெற்றிருந்தனர்.



கிருபளானி

கிருபளானி சிந்து மாநிலத்தில் தனது பள்ளிக் கல்வியை முடித்துக் கொண்டு, உயர்கல்விக்காகப் பம்பாய் வில்சன் கல்லூரிக்குச் சென்றார். கல்லூரியில் இவர் ஆங்கிலச் செய்யுட்களைத் தவிர வேறு எதிலும் விருப்பம் காட்டவில்லை. பிற்காலத்தில் ஆங்கிலேய ஆட்சியாளரை வெறுத்த இவர் ஆதிகாலத்தில் ஆங்கிலக் கவிகளை மிகவும் நேசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் வங்காளப் பிரிவினை காரணமாக மாணவர்கள் கிளர்ச்சியிலீடுபட்டிருந்தனர். கிருபளானி அவர்களுடன் இணைந்து, கல்லூரி அதிகாரிகளுக்கு இடர்ப்பாடுகள் கொடுத்ததால் வில்சன் கல்லூரியை விட்டு நீங்கி, கராச்சியிலுள்ள தி.சே. சிந்து கல்லூரிக்குப் போக வேண்டியதாயிற்று. அங்கும் இவர் வாளாவிருக்கவில்லை. வகுப்பில் ஒரு நாள் கல்லூரித் தலைவர் இந்தியர்கள் பொய் உரைக்க அஞ்சாதவர்கள் என்று கூறியவுடன் கிருபளானி கொதித்தெழுந்து, மற்ற மாணவர்களையும் இணைத்துக்கொண்டு வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கினார் (1907). இத்தகைய செயல்கள் காரணமாக இவருக்குப் பம்பாயில் எந்தக் கல்லூரியிலும் இடம் கிடைக்கவில்லை. மனம் சலிக்காத கிருபளானி, பூனாவுக்குச் சென்று பெர்கூசன்(Fergusson) கல்லூரியில் சேர்ந்தார். அக்கல்லூரி அப்பொழுது தேசியவாதிகளால் நடத்தப்பட்டு வந்தது. அக்கல்லூரி இவருக்கு பி.ஏ. பட்டமும் (1908) பின்னர் வரலாறு மற்றும் பொருளாதாரத்தில் எம்.ஏ. பட்டமும் வழங்கியது.

முதலில் கிருபளானி ஆசிரியப் பணியை மேற்கொண்டார். பீகார், முசாபர்பூர் கல்லூரியில் 1912 முதல் 1917 வரை ஆங்கிலம் மற்றும் வரலாற்றுத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார். வாரணாசி இந்து கல்லூரியில் 1919 முதல் 1920 வரை ஆசிரியராக இருந்தார். பிறகு 1920 முதல் 1927 வரை மகாத்மா காந்தியால் நிறுவப்பெற்ற குசராத்து வித்தியா பீடத்தின் முதல்வராகத் தொண்டாற்றினார். இவர் 1927 முதல் ஆசிரம அலுவல்களிலும் அரசியல் இயக்கங்களிலும் மிகவும் ஈடுபடலானார். இந்திய தேசிய காங்கிரசுடன் ஒத்துழைக்க முற்பட்டார். இவருக்கும் மகாத்மா காந்திக்கும் நேரடித்தொடர்பு 1917-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அப்பொழுது நடைபெற்ற சம்பரான் சத்தியாக்கிரகம் கிருபளானியின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியது. அன்று முதல் இவர் ஒரு தீவிர காந்தியவாதி ஆனார்.

சுசேதா (Sucheta) என்ற பெண்ணை 1936-இல் கிருபளானி திருமணம் செய்து கொண்டது அவருடைய வாழ்க்கையில் மற்றொரு திருப்பத்தை அளித்தது. ஏறத்தாழ 40 ஆண்டுகள் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து நாட்டுத் தொண்டாற்றினர். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகே அவர்களிடையே நாட்டு நலன் பற்றிக் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. எனினும், அவ்வேறுபாடுகள் அவர்களுடைய இல்லற வாழ்க்கையைச் சிறிதும் பாதிக்கவில்லை.

கிருபளானி 1934 முதல் 1945 வரை காங்கிரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார்.

எப்பொழுதும் இவர் அடக்கத்துடன் செயலாற்று வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். அக்கட்சியில் சுபாசு சந்திரபோசு தொடர்பாகப் பிளவு ஏற்பட்டபொழுது கிருபளானி காந்தியடிகளையே ஆதரித்தார். பல முறை சிறைக்குச் செல்லவும் இவர் அஞ்சியதில்லை. கட்சி அமைப்பு முறையில் இவருக் கும் சவகர்லால் நேருவுக்குமிடையே 1947-இல் கருத்து வேற்றுமை ஏற்பட்டவுடன் கட்சியின் தலை மைப் பதவியினின்று விலகிக் கொண்டு இராசேந்திர பிரசாத்து தலைவராக அமர வழிவகுத்தார். பிறகு 1951-இல் அக்கட்சியினின்றே விலகிவிட்டார். கிருசக் மசுதூர் பிரசா கட்சி (Krishak Mazdoor Praja Party) என்ற பெயருடன் புதிய கட்சி இவரால் தொடங்கப்பெற்றது. காலப் போக்கில் அது பிரசா சம உடைமைக் கட்சியுடன் (Praja Socialist) இணைந் தது. அக்கட்சியினின்றும் இவர் 1954-இல் கருத்து வேற்றுமை காரணமாக விலகித் தனிப்பட்ட முறை யில், கட்சிச் சார்பற்று நாட்டுத் தொண்டாற்றி வர லானார். பொதுவாக, கட்சிக் கட்டுப்பாடுகளை இவர் வெறுத்தார்.

கிருபளானி பல நூல்களை இயற்றியுள்ளார். காந்திய தத்துவம் அவற்றில் விளக்கப்படுகிறது. சிறப் பாகப் பின்வரும் நூல்கள் குறிப்பிடத்தக்கவை: 1. அகிம்சைப் புரட்சி (Non-Violent Revolution), 2. காந்திய வழி (The Gandhian Way), 3. இந்திய தேசிய காங்கிரசு (The Indian National Congress), 4. சர்க்காவின் அரசியல் (The Politics of Charka), 5. காங்கிரசின் எதிர்காலம்(The Future of the Congress). இவர் 1982-ஆம் ஆண்டில் காலமானார்.

தெ.பா.

**கிரெட்னகிரீன்** இசுகாட்லாந்து நாட்டில் கிரெட்னா மாவட்டத்தில் (Gretna District) உள்ள கிராமம். இங்கிலாந்தின் எல்லையும் இசுகாட்லாந்து எல்லையும் சேரும் இடத்தில் கிரெட்னகிரீன் (Gretnagreen) உள்ளது. காதலர்களின் வசந்தபூமி யாக இக்கிராமம் திகழ்ந்தது. திருமணம் புரிந்து கொள்ள விரும்பும் இளம் காதலர்களுக்கு ஒரு புகலி டமாகவும், உல்லாசபுரியாகவும் இது பலகாலம் திகழ்ந்தது. திருட்டுத் திருமணக்கூடமான இக்கிரா மத்தில் தடையேதுமின்றி எண்ணிறந்த திருமணங்கள் நடந்துள்ளன.

ஆர்டு விக்சு பிரபு (Lord Hardwickes) கி.பி. 1754-இல் சீர்திருத்தச்சட்டம் கொண்டு வருவதற்கு முன்பு, இத்தகைய திருமணங்கள் இலண்டனில் உள்ள பிளீடு சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாதிரியார்களால் (Clergymen) நடத்தி வைக்கப்பட்டன. தொடக்க காலத்தில் இவற்றின் சடங்குகளைக் கொல்லர்களே நடத்தி வந்தனர். இங்குள்ள கிரேட்டா மன்றத்தில் ஒரே நேரத்தில் பல திருமணங்கள் நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும். ஆண்டுதோறும் சுங் கத்தண்டலகத்தில் (Toll House) இருநூற்றுக்கும் மேற்பட்ட இளஞ்சோடிகள் திருமணம் செய்துவைக் கப்படுவர்.

இளங் காதலர்களில் ஒருவரேனும் திருமண நாளுக்கு முன்பு, குறைந்தது 21 நாட்களாவது இசு காட்லாந்தில் வசித்திருக்க வேண்டுமென்று கி.பி. 1856-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தச் சட்டம் விதித்தது. இத்தகைய திருமணம் 1940-க்குப் பின் சட்டப்படி செல்லாது என்று வலியுறுத்தப்பட் டது. முதலாம் உலகப் பெரும்போரின்போது கிரேட்டா கிரீனை மையமாகக் கொண்ட பரந்த நிலப்பரப்பில் பெருநகரம் ஒன்று நிறுவப்பட்டது. இம் மாபெரும் நிலப்பகுதி 16 கி.மீ. நீளமும் ஒன்றரை முதல் மூன்று கி.மீ. வரை அகலமும் கொண்டதாக இருந்தது. ஆனால் இந்நிலம் 1924-இல் விற்கப்பட்டு விட்டது. இப்பகுதிக்கு வடகிழக்கே 5 கி.மீ. தொலை வில்தான் வரலாற்றுப் புகழ்மிக்க சால்வே மாசு (Solway Moss) என்னும் போர்க்களம் உள்ளது. இங்குத் தான் ஆங்கிலேயர்கள் இசுகாட்லாந்து நாட்டின் படைகளை கி.பி. 1542-இல் வெற்றி கொண்டனர்.

ம.இ.

**கிரெம்ளின்** சோவியத்து நாட்டில் நோவ் கிராடு மாவட்டம், நோவ்கிராடு நகரில் அமைந்துள்ள சுவர்களால் சூழப்பட்டுள்ள கோட்டை நகரம். கிரெம்ளின் (Kremlin) மாசுக்கோவா ஆற்றின் இடது கரையில் உள்ளது. இது கிரம்மிக்கு (Kremmik) என் றும் கிரமில் (Kreml) என்றும் சொல்லப்பட்டது. இடைக்காலத்தில் கட்டப்பட்ட இக்கோட்டை நகரம், இராணுவ நடவடிக்கைகளுக்காக மிக்க பாதுகாப்புக் கொண்டதாக அமைக்கப்பட்டது. இக்கோட்டை கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது; செந் நிறச் சுவர்களைக் கொண்டது; இப்போது 7200 அடி நீளம் உடையதாக உள்ளது; இதில் சிறியதும் பெரிய துமான 20 கோபுரங்களும் பல மாவட்டக் கிறித்தவக் கோயில்களும் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பெரியது உசுப்பென்சுகி கோயில் (Uspensky Cathedral) ஆகும். இம்மாதா கோயில் கி.பி. 1475-1479 -ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது; இத்தாலியக் கட் டடக்கலை வல்லுநரான அரிசுட்டாடில் பீராவந்தி (Aristotle Fieravanti) என்பாரால் உருவாக்கப்பட் டது. மூன்றாம் ஐவான் மன்னர் காலத்தில் (கி.பி 16-ஆம் நூற்றாண்டு) கட்டப்பட்ட 266 அடி உயரம் கொண்ட மணிக்கோபுரம் ஒன்றும் இங்குள்ளது. இம்

மணிக்கூண்டின் அருகே உலகின் மிகப்பெரிய மணியான சார் மணி (Czar Bell) உள்ளது. 20 அடி உயரமும் 200 கண்டி (Tonnes) எடையும் கொண்ட இம்மணி, கி.பி. 1735-இல் வார்க்கப்பட்டது. இதனருகிலேயே கி.பி. 1586-இல் வார்க்கப்பட்ட 40 கண்டி எடையும் 40 அங்குல அளவு துளையும் கொண்ட மாபெரும் சார் பீரங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிரெம்ளின் கோட்டையில் பல அரண்மனைகளும் உள்ளன. முன்பு இக்கோட்டையின் உள்புறம் உள்ள மாளிகைகளில் இளவரசர்கள், மதகுருமார்கள், பெரிய அரசு அலுவலர்கள் ஆகியோர் தங்கியிருந்த னர். மிக முக்கியமான அரசு அலுவலகங்களும் இங்கு இருந்தன. இக் கோட்டை முற்றுகையிடப்படும் காலங் களில் படைகளுக்குத் தேவையான உணவுப் பொருள் களையும் ஆயுதங்களையும் சேமித்து வைக்கப் பெரிய அறைகளும் மருந்துக் கிடங்குகளும் இதனுள் அமைக் கப்பட்டிருந்தன. இக்கோட்டையின் வெளியே ஒரு பக்கத்தில் வோல்கா நதி பாய்கிறது. இது அந்நாளில் இக்கோட்டையின் இயற்கை அகழியாகப் பயன்பட் டது.



கிரெம்ளின் நகரம்


உருசிய நாட்டுப் பேரரசரான பீட்டர் கி.பி. 1712-இல் தம் தலைநகரைப் பீட்டர்சுபர்கிற்கு மாற் றும் வரையில் கிரெம்ளின் சார் மன்னர்களின் தலைமையகமாகவும் இருப்பிடமாகவும் அமைந் திருந்தது. மாநிலப் பகுதிகளின் தலைமையிடங்களா கத் திகழ்ந்த மாசுக்கோ, (Mascow) நோவ்கிராடு, (Novgrad) சுமோலென்சுக்கு (Smolensk) உரோசுடோவ், (Rostov) சுச்தல், (Suzdal) யரோசுலவல், (Yaroslavl) விளாதிமீர், (Vladimir) நிச்னி நோவோ கிராடு (Nihzhni Novogard) முதலான மற்ற முக்கிய நகரங் கள் பலவும் கிரெம்ளினைச் சுற்றிலும் கட்டப்பட்டிருந் தன. எனவே இடைக்காலத்தில் இது ஒரு பாதுகாப்பு மிக்க மத்திய கோட்டையாக விளங்கியது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இது முன்னாளில் அரசி யல், சமுதாயம், பண்பாடு ஆகியவற்றின் மையமாகத் திகழ்ந்தது.

தலைநகரம் 1918-இல் மாசுக்கோவிற்குப் போல்சு விக்குகளால் மாற்றப்பட்ட போதிலும் கிரெம்ளி னின் முக்கியத்துவம் குறையவில்லை. இசுடாலின் (Stalin) ஆட்சிக் காலத்தில் கிரெம்ளின் சோவியத்துச் சக்தியின் சின்னமாக விளங்கியது. இக்கோட்டை மாநகர் 1955-ஆம் ஆண்டு சூலைதிங்கள் பொது மக் களுக்குத் திறந்து விடப்பட்டது. இங்கு 1849-51ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட 'ஒருசெய்னயா படாலா' (Oruzheinaya Patala) என்னும் கட்டடம் உள்ளது. இதில் பழைமை மிக்க போராயுதங்களும், கலைத் திறன் மிக்க பொருள்களும், சார் காலத்திய அரும் பொருட்களும் வைக்கப்பட்டுள்ளன. இது ஓர் அருங் காட்சியகமாகச் செயற்படுகிறது. படைக்கலச்சாலை யும் சார் காலத்திய ஆளவைகட்டடமும் நீதிமன்றக் கட்டடங்களும் மாபெரும் கிரெம்ளின் அரண்மனையும் இங்கு அமைந்துள்ளன. இன்றும் இங்குப் பல அரசு சார்ந்த அலுவலகங்களும் பொதுவுடைமைக் கட்சிச் செயலகமும் விழா அரங்குகளும் பொழுது போக் கிடங்களும் அமைந்துள்ளன. 800 ஆண்டுப் பெருமை கொண்ட இந்நகரம் இன்றும் பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கிறது. ம.இ.

**கிரென்வில் சர் இரிச்சர்டு** (கி.பி. 1542-1591) இங்கிலாந்தில் வாழ்ந்த கப்பற்படைத் தளபதி களில் சிறப்பு வாய்ந்தவர். இவர் ஆங்கிலக் கப்பற் படைத் தளபதியாகப் பதவி ஏற்று அருஞ் செயல்கள் பல ஆற்றினார். இசுபானியக் (Spanish) கப்பற் படை யைத் தாக்கி வெற்றி பெற்று அதனால் பெரும் புகழ் பெற்றார். தெ.பா.

**கிரென்வில், சார்சு,** (கி.பி 1712-1770) இங் கிலாந்து நாட்டின் பிரதமர். அமெரிக்கக் குடியேற் றங்கள் மீது இவர் விதித்த வரிகளின் விளைவாக அமெரிக்கப் புரட்சி ஏற்பட்டது.

சார்சு கிரென்வில் (George Grenville) கி.பி. 1741-இல் பாராளுமன்ற உறுப்பினரானார். இங்கி லாந்தில் 1721 முதல் 1742 வரை தலைமை அமைச்



கிரென்வில், சார்சு

சராக இருந்த சர் இராபர்ட்டு வால்போலை எதிர்த் தவர்களுள் இவரும் ஒருவர். இவர் பல அமைச்சுப் பதவிகளை வகித்தபின்னர், கி.பி. 1763-இல் தலைமை அமைச்சராகித் தம் அமைச்சரவையை அமைத்தார். அப்பொழுது நாட்டில் மன்னனாக இருந்தவர் மூன் றாம் சார்சு (கி.பி. 1760–1820). கிரென்வில், ஆற்றல் மிக்கவர், சிறந்த பொருளாதார வல்லுநர் என்றெல் லாம் கூறப்பட்ட போதிலும் கி.பி. 1763 முதல் கி.பி. 1765 வரை நீடித்த இவரது அமைச்சரவை போற்றத் தக்க வகையில் செயலாற்றவில்லை.

இங்கிலாந்துப் பாராளுமன்றம் கி.பி. 1733-ஆம் ஆண்டு சர்க்கரைக் கழிவுப் பாகுச் சட்டம் (Molasses Act) கொண்டு வந்தது. அதன்படி ஒரு காலனுக்கு 6 பென்னிகள் வரி விதிக்கப்பட்டது. பின்னர் கி.பி. 1764-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டப்படி 6 பென்னி வரி 3 பென்னியாகக் குறைக்கப்பட்டது. பிரிட்டன் பிரதமர் கிரன்வில்லின் நிருவாக நட வடிக்கைகளுக்கு மேற்கண்டவை அடிப்படையாக அமைந்தன.

அமெரிக்கப் புரட்சி கி.பி. 1765-ஆம் ஆண்டு ஏற் பட்டது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற் றுள், கிரன்வில்லின் நிருவாக நடவடிக்கைகள் மிக முக்கியமானவையாகும், முத்திரைச் சட்டம் (Stamp Act) கி.பி. 1765-ஆம் ஆண்டு இவரால் கொண்டு வரப்பட்டது. அதன்படி, அனைத்துச் செய்தித்தாள் களுக்கும், சட்டப் பதிவேடுகளுக்கும், வணிகப் பதி வேடுகளுக்கும் முத்திரைத்தாள் கட்டணம் செலுத்த வேண்டும். அமெரிக்காவில் உள்ள ஆங்கிலப் படை களுக்குச் செலவிடப்படும் தொகையில் மூன்றிலொரு பங்கு இதன்மூலம் கிடைக்குமென கிரன்வில் கருதி னார் வாணிகத்தை ஒழுங்குபடுத்த, ஆங்கிலேயரால், மறைமுக வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. ஆனால் முதன்முதலாக, முத்திரைச் சட்டம் மூலமாகத்தான் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு ஆங்கிலேய ரால் நேர்முகவரி (Direct Tax) விதிக்கப்பட்டது.

ஆங்கிலேயரின் முத்திரைச் சட்ட நடவடிக்கையை அமெரிக்கக் குடியேற்ற மக்கள் ஒருமனமாகக் கண்டித் தனர். அமெரிக்காவில் உள்ள ஆங்கிலேயக் காவற் படைகள் (Garrisons) தேவையற்ற, விரும்பத் தகாத அமைப்பு என அமெரிக்கர்கள் கருதினர். முன்னரே அமெரிக்க மக்கள், காகித நாணயப் (Currency) பற் றாக்குறையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர். போரின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார மந் தம் அவர்களை மிகவும் பாதித்தது.

எனவே, முத்திரைத்தாள் சட்டம் தங்களின் வரு வாயைச் சுரண்டிவிடும்; ஆங்கில வணிகர்களிட மிருந்து மீளமுடியாத கடனாளியாக மாற்றிவிடு மென அஞ்சினர். பணக்கட்டுப்பாட்டைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த ஆங்கில ஆளுநர்களின் நோக்கத்தை அமெரிக்கர் மறக்கவில்லை.


பேராளர் முறை இல்லாமல் வரி செலுத்துவதை (Taxation without Representation) மாபெரும் கொடுமையாகக் கருதினர். ஆங்கிலப் பாராளுமன்றத் திற்கு, வாணிகத்தை ஒழுங்குபடுத்தும் உரிமையை ஏற்றுக்கொள்ளும் அதேசமயத்தில், தங்கள்மீது நேர் முக வரியை விதித்தது பாராளுமன்றச் சட்டமுறைக்கு முரணானது எனக் கூறினர். 1976-இல் 9 குடியேற்ற மாநிலங்கள் நியூயார்க்கில் கூடி, தங்களின் ஒன்று பட்ட எதிர்ப்பைத் தெரிவித்தன. இதற்கு மூலகாரண மாக விளங்கியவர் பாட்ரிக்கு என்றி (Patrick Henry) ஆவார். பாசுட்டனில் (Boston), தாமசு அட்சின்சனின் இல்லம் தீக்கிரையாக்கப்பட்டது. இவர் மசாசுசெட் சின் தலைமை நீதிபதியாவார். 'விடுதலையின் மைந் தர்கள்' என்றழைக்கப்பட்ட சிலரும், பாசுட்டனின் சலம் ஆதாமும், நியூயார்க்கின் சான் லேம்பும், பில டெல்பியாவின் சார்லசு தாம்சனும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுள் முக்கியமானவர்கள் ஆவர்.

கிரன்வில்லிற்கு அடுத்தபடி மார்க்யூசு இராக்கிங் காம், ஆங்கிலப் பிரதமரானார். இராக்கிங்காம் அரசு கி.பி. 1766-ஆம் ஆண்டு முத்திரைத்தாள் சட்டத்தை விலக்கிக்கொண்டது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, சர்க்கரைக் கழிவுப்பாகின் வரி 6 பென்னி யிலிருந்து ஒரு பென்னியாகக் குறைக்கப்பட்டது எனி னும், பிரகடனச் சட்டப்படி (Declaratory Act) தனக் குள்ள மேலாண்மையை (Supremacy) ஆங்கிலப்

பாராளுமன்றம் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் மீது நிலைநிறுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்கர் மீது வரி விதித்தது மட்டுமன்றி, வேறு சில முறையற்ற செயல்களையும் நிறைவேற்றியதால், அதற்கு வலிமையான எதிர்ப்பு ஏற்பட்டு, கி.பி. 1765-இல் அது அரசனால் நீக்கப்பெற்றது. அதன்பிறகும், கிரென்வில், தாம் எவ்வித தவற்றையும் செய்யவில்லை என்றே வாதாடினார். அமெரிக்கர்கள் மீது வரி விதிப்பதை எதிர்ப்பவர்கள் தாம், குற்றவாளிகள் என்பது இவர் கருத்து. கே.கி.

**கிரென்வில் பிரபு**, சார்சு கிரென்வில்லின் மகன். இங்கிலாந்தில் உள்ள ஈட்டனில் கி.பி. 1759-இல்



கிரென்வில் பிரபு

பிறந்த கிரென்வில் (Lord Grenville) பிரபு பல்வேறு துறைகளில் பணியாற்றிவிட்டு, கி.பி. 1789-இல் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அச்சபையின் (கீழ்சபை) தலைவராகவும் தேர்வு பெற்றார். உள்நாட்டு, வெளிநாட்டு இலாகாக்கள் பலவற்றில் பணிபுரிந்த கிரென்வில் பிரபு கி.பி. 1806-ஆம் ஆண்டிலேற்பட்ட கூட்டு,அமைச்சரவையின் முதல்வரானார்.அக்காலத்தில் இவர் புரிந்த சாதனைகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது, அடிமை வாணிகத்தை ஒழிக்கச் சட்டமியற்றியது. இவர் கி.பி. 1807-இல் பதவியினின்று விலகினார். கத்தோலிக்கர்களின் குறைகளை நீக்க இவர் முற்பட்டதால் பதவியையே இழக்க நேரிட்டது. இவர் கி.பி. 1834-இல் காலமானார். தெ.பா.

**கிரேக்கசு, கையசு**: மக்களாட்சிக் காலத்தில் உரோமானிய சீர்திருத்தவாதியும், அரசியல் தலைவருமான கையசு கிரேக்கசு கி.மு. 154-இல் பிறந்தார். இவர் கி.மு. 133-இல் தோற்றுவிக்கப்பட்ட நிலக்குழுவின் உறுப்பினராயிருந்தார். மக்கள் காவலர்களுள் (Tribunes) ஒருவரான இவர் சீர்திருத்தங்கள் பலவற்றை நடைமுறைப் படுத்தி உரோமானிய நாட்டின் நலனுக்குத் தொண்டாற்றினார்.

சட்டங்களின் மூலமாகக் கையசு கிரேக்கசு (Gaius Graccks) மக்களிடம் ஆளவை மன்ற அதிகாரத்துக்கு எதிராக ஒரு அணியைத் திரட்டினார். இவரது தானியச் சட்டமானது, தானியங்களைச் சந்தை விலையைவிடக் குறைவாக நிருணயிக்கப்பட்ட விலையில் மக்கள் பெற வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தியது. இவர் ஏழை மக்களின் உதவி பெற்று மீண்டும் காவலராக கி.மு. 132-இல் பதவி பெற்றார்.

ஆசியப் பகுதிகளில் வரி வசூலிக்கும் உரிமையையும், ஆளவை மன்ற உறுப்பினர்களிடமிருந்து பணம் வாங்கும் உரிமையையும் தொழிலதிபர்களிடம் விட்டதன் மூலம் அவர்களது ஆதரவைப் பெற்றார். மேலும், கையசு கிரேக்கசு அறிமுகப்படுத்திய கட்டடத் திட்டம் புதிய சாலைகள், களஞ்சியங்கள் அமைக்க வழியமைத்தது. இதனால், தொழிலதிபர்கள் பயனடையவும், வேலையின்மை குறையவும் வழி ஏற்பட்டது. இவர் தேர்ந்தெடுத்த குடியேற்றங்களான கார்தேசு போன்றவை தொழிலதிபர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தின. பெ.சி

**துணை நூல்கள்:**

Venkataraman, T.K., A Manual of Roman History, S. Viswanathan Publications, Madras, 1953,

Wells, J., A Short History of Rome, Methuen & Co, Ltd., London 1916.

**கிரேக்கசு, தைபீரியசு** கி.மு. 163-இல் பிறந்தார். இவர் தம் தாயாரால் மிகக் கவனமாகக் கல்வி போதிக்கப்பட்டுப்பழமையான உரோமானியக் கல்வி, கிரேக்கக் கல்வி ஆகியவற்றில் நல்ல அறிவினைப் பெற்றார். இவர் கார்த்தேசு (Carthage) முற்றுகையிலும், 'நுமன்சியா' முற்றுகையிலும் வெற்றி பெற்ற வீரராய்த் திகழ்ந்தார். இவர் மிகச் சிறந்த பேச்சாளராயும், உயர்ந்த தன்மை கொண்டவராயுமிருந்தார். இவர் மக்களாட்சிக் கருத்துகளைக் கிரேக்க இலக்கியங்கள் வாயிலாகப் பெற்றார். இவரது உயர்ந்த கொள்கை இவரைச் சமுதாய, பொருளாதார சீர்திருத்தவாதியாக ஆக்கியது. இவர் உழவரிடமும், ஒடுக்கப்பட்ட மக்களிடமும் கருணை காட்டினார்.

**மக்கள் சபையில் இவர் பின்வரும் தீர்மானங்கள் கொண்டுவந்தார்**: (1) மக்களில் யாரும் 500 சுகராக்


களுக்கு (333 ஏக்கர்) மேற்பட்ட நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது. (2) ஒவ்வொருவருக்கும் 250 சுக ராக்கள் ஒதுக்கப்பட்ட பின்,1000 சுகராக்களுக்குமேல் யாரும் நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது.(3) யாரும் 100 கால்நடைகள் அல்லது 500 ஆடுகளுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது. (4) பறிக்கப்பட்ட நிலங்கள் யாவும் ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். (5) அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங் களுக்குக் குறைந்த வாடகையே பெற வேண்டும். (6) பண்ணை வேலையாள்கள் சுதந்திரம் பெற்றவர் களாகக் கருதப்பட வேண்டும்.

இவர்தம் தீர்மானங்கள் நடைமுறைபடுத்தப் பட்டபோது நீண்ட வாக்குவாதம் எழுந்தது. ஆளவை மன்றம் தொடக்கத்திலிருந்தே நிலங்களை ஒருசேரக் கொண்டிருந்த நிலச்சுவான்தார்களின் நலன்களுக்குச் செவிசாய்ப்பதாக விளங்கியது. தங்களது உரிமையில் தலையிடும் எவரையும் நிலச்சுவான்தார்கள் எதிர்த்த னர். தைபீரியசு நிலச்சுவான்தாரர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களுக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்கவில்லை.

தங்கள் நிலங்கள் நிலக்குழுவினரால் பறிமுதல் செய்யப்படும் எனப் பயந்தனர். எனவே, ஆளவை (Senate) இந்தச் சட்டங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தது. எனினும், கிரேக்கசு வெற்றி பெற்றார். பெர்காம் மன்னர் மூன்றாம் அதாலசு தம் அரசினை யும், சொத்துக்களையும், உரோமானிய மக்களுக்கு விட்டுச் சென்றார். கிரேக்கசின் தீர்மானங்களின் பல னாக இச்சொத்துக்கள் யாவும் ஏழை மக்களுக்குப் பிரிக்கப்பட்டு உழவுக் கருவிகளுக்கும் பிறதேவைகளுக் கும் அளிக்கப்பட்டன.

இவர் கி.மு. 133-ஆம் ஆண்டு மறுதேர்தலுக்குப் போட்டியிட்டபோது நகரின் முக்கியமான இடத்தில் இவரைக் கொலை செய்தனர். ஏழை மக்களின் பங் காளனான இவர் வரலாற்றில் அழியா இடம் பெற் றார். பெ.சி.

**கிரேக்கப் பொருளியற் கருத்துகள்**, மிகப் பழைமையான பொருளியல் கருத்துகளுள் தலை சிறந்த கோட்பாடுகளையுடையன. ஓமர் (Homer) காலத்தைய கிரேக்கப் பொருளியல் கருத்துகள் தன்னிறைவையடையும் பொருளாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தன. கிரேக்கக் கவிஞர் ஏசியாடு (Hesiod) கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் எழுதியகவிதைகளில் வேளாண்மையினர் அறிந்திருக்க வேண்டிய வேளாண்மைப் பொருளியற் கோட்பாடு களைக் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய குறிப்புகள் அக்காலத்திலேயே கிரேக்கப் பொருளியல், கோட் பாட்டளவில் வளர்ச்சியடைந் திருந்தது எனச் சான்று பகர்கின்றன.



அரிசுடாட்டில்

ஆதி கிரேக்கக் குடிமக்கள், இனம் இனமாகக் கூடி வாழ்ந்தனர். அத்தகைய கூட்டு வாழ்க்கை முறை சிதறுண்டபின்னர், சமுதாயத்தில் மக்களிடையே பல படிநிலை வகுப்புகள் (Classes) உருவாயின. கீழ் நிலை, நடுநிலை மக்கள், உயர்குடி மக்களால் ஆளப் பட்டனர். வேளாண்மை விளைபொருள்களின் ஏற்று மதிப் பெருக்கத்தினால் வேளாண்மை வகுப்பினரைச் சார்ந்த உழவர் வறுமைக்குட்பட்டனர். வணிகர், பெருநிலக்கிழார் ஆகியோரின் இலக்குகளில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டமையால், இருசாராரிடை யேயும் பூசல்கள் நிலவின. கிரேக்கப் பொருளியல் ஒரு தனிப் புலமாகக் கருதப்படாமல் அரசியல் அறிவியலுடனும், அறவியலுடனும் இரண்டறக் கலந்து வளர்ச்சியடைந்தது. சமயம், அரசியல் அமைப்பை இயக்கும் கருவியாக விளங்கியது.

கிரேக்கச் சமுதாயமும் அரசியல் அமைப்பும் அடிமைத்தனத்தை அடித்தளமாகக்கொண்டு கட்டப் பட்டிருந்தமையால் பொருளியல் கருத்து வளர்ச்சி முறையில் முறையான நீண்ட தொடர்ச்சி காணப் படவில்லை. கைவினைத் தொழிலாளரின் உழைப்பு அவர்களின் அற வாழ்க்கைக்கு மாறுபாடானதாகக் கருதப்பட்டது. வேளாண்மைத் தொழிலைத் தவிர, பிற தொழில்கள், வாணிக நடவடிக்கைகள் போன்றவை இழிவானவையாகப் புறக்கணிக்கப்

பட்டன. கிரேக்கத் தத்துவ அறிஞர்களான பிளேட்டோ (Plato)அரிசுட்டாட்டில் (Aristotle) வரலாற்று ஆசிரியர்களான செனோபோன் (Xenophon) ஆகியோர் கற்பித்த கோட்பாடுகளுள் மிகப் பழைய கிரேக்கப் பொருளியல் கருத்துகள் அடங்கியுள்ளன.

பிளேட்டோவும் அரிசுட்டாட்டிலும் அறிவியல் அடிப்படையில் ஒருங்கிணைந்த சமுதாயத்தை உருவாக்க முனைந்தனர். அக்காலத்தைய பொருளியற் கருத்துகள் நிறுவனங்களின் அமைப்பை நெறிப்படுத்துவதில் செறிந்த கவனம் செலுத்தின. அவை 18, 19, 20-ஆம் நூற்றாண்டுகளின் கருத்துருகள் (Concepts) பலவற்றிற்கான திறவுகோலாகவும் விளங்கின.

**பிளாட்டோ:** அத்தீனியா (Athens) பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் உலகம் போற்றும் கிரேக்கத் தத்துவ அறிஞர். இவர் சாக்கிரட்டீசின் (Socrates) மாணவராகக் கல்வி கற்று, கி.மு. 427க்கும் 347க்கும் இடைப்பட்ட காலத்தில் வட ஆப்பிரிக்கா, தெற்கு இத்தாலி, சிசிலி(Sicily) போன்ற நாடுகளுக்கு ஆய்வுப்பயணம் மேற்கொண்டு 'குடியரசு (The Republic), 'சட்டங்கள்' (The Laws) ஆகிய நூல்களின் வாயிலாக வேலைப்பகுப்பு (Division of Labour), மக்கள் தொகையை ஒழுங்கமைத்தல், சமுதாயப் பாகுபாடு (Division of Society),அடிமைத்தனம், பொதுவுடைமை போன்ற அரிய பல பொருளியற் கருத்துகளை வெளியிட்டார்.

**நாட்டின் தோற்றம்:** பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையில் கிரேக்க நகரங்கள் உருவாக வேண்டும் என்பதை 'நாட்டின தோற்றம்' (Origin of State) எனப் பிளேட்டோ குறிப்பிட்டார். மனிதனின் தேவைகள் பல, அவற்றை நிறைவு செய்யப் பல மனிதர்கள் தேவை. தேவைக்கேற்ற அளிப்பை (Supply) உண்டாக்க மக்கள் ஓரிடத்தில் வாழ்கின்றனர். அத்தகைய பொருளாதார இலக்குடன் தோன்றும் கூட்டு வாழ்க்கையே நாடு எனப்படுவது.

**மக்கள் தொகை:** ஓர் இலட்சிய ாட்டின் (Ideal State) மக்கள்தொகை, திறமையான நிருவாகத்திற்கு உகந்ததாகவும், குடிமக்கள் ஒருவருக்கொருவர் நன்கு அறிந்துகொள்வதற்குகந்ததாகவும் இருக்கவேண்டும். எனவே ஒரு நகர நாடு (City State) என்பதில் 5040 குடிமக்கள் வாழலாம் என்பது பிளேட்டோவின் மக்கள் இலட்சியத் தொகை வரையறையாகும். இவ்வெண்ணிக்கையிலிருந்து மக்கள்தொகைப் பெருக்கத்திற்கெனப் பரிசுகள் வழங்கி ஊக்கம் ஊட்டவேண்டும் எனவும், இலட்சிய மக்கள்தொகையை விட மக்கள் தொகை எண்ணிக்கை பெருகினால் புதிய குடியிருப்புகள் அமைக்கவேண்டும் எனவும் பிளேட்டோ கூறினார்.

**சமுதாயப் பாகுபாடு:** பிளேட்டோ மக்களாட்சி அரசை (Democratic Government) விரும்பவில்லை. இலட்சிய நகர நாட்டை அறிவாற்றலுள்ள ஒருவர் திட்டமிட்ட அரசியல் அமைப்புடன் ஆளவேண்டும் எனக் கூறினார். ஆளும் வகுப்பினருள் தத்துவ அறிஞர்கள், பண்பாட்டில் சிறந்த உயர்குடி மக்கள், அஞ்சா நெஞ்சுடைய போர்வீரர் ஆகியோர் அடங்குவர். இவ் வாளும் வகுப்பினர் (Ruling Class),நாட்டின் சொத்துகளுக்குப் பொது உரிமையுடையவராவர். அடிப்படை ஊழியர் தொழிலாளர், வேளாண்மைத் தொழிலாளர்,கைவினைஞர் ஆகியோர் ஆளும் வகுப்பினருக்கு அடங்கிச் சொத்துரிமையின்றி வாழவேண்டும். எல்லா வகுப்பினரும் மகிழ்ச்சியுடனும் நீதி நியாயத்துடனும் வாழ்வதே இலட்சிய நகர நாட்டின் குறிக்கோளாகும். என்று பிளேட்டோ கூறினார்.

**சொத்துகள்:** கிரேக்கச் சமுதாயத்தின் ஒவ்வொரு வகுப்பினரின் சொத்துகளும் வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்கான வரையறைகளைப் பிளேட்டோ தெளிவுபடுத்தினார். உழவர்களும் கைவினைஞர்களும் மட்டுமே ஆதாயத்திற்கென உழைக்கவும் சொத்துகளைப் பெருக்கவும் அனுமதிக்கப்பட்டனர். ஆளும் வகுப்பினர் எவ்வகையிலும் தனிச் சொத்துரிமை பெறக்கூடாது. நகரம் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவை செல்வர்களின் நகர்ப்பகுதி,ஏழைகளின் நகர்ப் பகுதி எனப்பட்டன. இரு பகுதிகளும் எக்காலத்திலும் ஒன்றோடொன்று மோதிக்கொள்பவையாயிருந்தன. பிளேட்டோ மக்களாட்சியை எதிர்த்ததற்கான காரணம் ஆட்சிசெய்யத் தேவையான தனிச் சிறப்புப் பயிற்சியை அவர்கள் எல்லோரும் பெற்றிருக்க இயலாது என்பதுவே. நாட்டை ஆளும் திறமை தனிச் சிறப்புப் பயிற்சியும் முழு ஈடுபாடும் கொண்ட வகுப்பினருக்கேயுரியதாகும். இத்தகைய மேலாண்மைத் தகுதிகள் வேளாண்மை, வணிகம் ஆகிய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடம் இராது. அவர்களால் அரசியலில் முழு நேரத்தையும் செலவிட முடியாது. இலட்சிய நாட்டை ஆளும் தலைவர்கள் பிறப்பில் உயர்குடி இனத்தவராயும் நுட்பப் பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர்த் தகுதி ஆய்வுக்குட்பட வேண்டும்,

**மாற்றுத்தேவைகள்:** பிளேட்டோ தனிமனிதன் எக்காலத்திலும் தன்னிறைவையடைய இயலாது எனக் கூறினார். பணிகளையும் பண்டங்களையும் ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்குவதனால் (Exchange) தேவைகள் நிறைவு பெறுகின்றன. உணவு உற்பத்தி செய்யும் வேளாண்மையினர் ஆடை, உறைவிடம், கருவிகள் போன்ற தேவைகளைப் பிறரிடமிருந்து பெறுகின்றனர். கொடுக்கல் வாங்கலினால்

சமுதாயத்தில் மனநிறைவு உண்டாகிறது. சமுதாயத்தி லுள்ள ஒவ்வொரு மனிதனும் கொடுக்கல் வாங்கல் பணிமுறையில் ஈடுபடுகிறான். அப் பணியில் சமு தாயம் சிறப்புடன், உச்ச மனநிறைவை அடைய உத வும் வகையில் அரசு செயற்படுகிறது. சமுதாயத்தில் ஒரு தனிமனிதனின் சிறப்பு, அவன் செய்யும் பணி களின் மதிப்பைச் சார்ந்துள்ளது. அம்மதிப்பு உயரும் வகையில் தனிமனிதன் பாடுபடத் தேவையான காரணிகளை அளிப்பது அரசின் கடமையாகும்.

**வேலைப்பகுப்பு**: பிளேட்டோவின் வேலைப்பகுப் பும், தனிச் சிறப்புப் பயிற்சியும் இயற்கையின் பல் வகைமையையும் அதன் திறமையையும் அடிப்படை யாகக் கொண்டன. மனிதர் அவரவருக்கு இயற்கை யாகக் கொடுக்கப்பட்டுள்ள பணிகளைக் குறிப்பிட்ட காலங்களில் செய்துமுடித்தால் சமுதாயத்தின் எல் லாக் கூறுகளும் அழகுற விளங்குவதுடன், தேவையான எல்லாப் பணிகளும் பொருள்களும் உயர் தரத்தில் எளிதாகக் கிடைக்கும். இதன் மூலக்கருத்து துறை வாரியான வாணிகத் தொழிற் பகுப்பாகும். தேவை யின் அடிப்படையில் எழுந்த இப்பகுப்பாய்வு பிற் காலத்தில் ஆடம் சுமித்து, தாவீது கியூம் (David Hume), கட்ச்சிசன் (Hutcheson) போன்றோர் வேலைப் பகுப்பை மிக நுட்பமாக விளக்கிட அடிகோலியது எனலாம்.

**அடிமைத்தனமும் பொதுவுடைமையும்**: பிளேட்டோ அடிமைத்தனத்தை மனித நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சியின் நிலையான ஒரு காரணியாகக் கருதி னார். 'சட்டங்கள்' என்ற நூலில் அடிமைகளுள் சிறந்தவர் யாவர், அவர்களை எவ்வாறு நடத்தவேண் டும் என்பனவற்றை எழுதியுள்ளார். போரில் வீழ்ச்சி யுற்ற அயல்நாட்டு மக்கள், போர்க் கைதிகள் ஆகி யோர் அடிமைகளாகக் கருதப்பட வேண்டும். அடிமை களின் வாழ்க்கைநிலை எப்போதும் கடின உழைப் பிற்கும் வறுமைக்கும் உட்பட்டிருக்கலாகாது என் பதனையும் பிளேட்டோ வலியுறுத்தினார்.

**பொதுவுடைமை**: பிளேட்டோவின் பொது வுடைமைக்கருத்துகள் குறிப்பிடத்தக்கன. உயர்குடி மக்களும் அறிஞர்களும் கூட்டுக் குடும்பமாக உண்டு, ஒரே சிறிய இல்லத்தில் வாழவேண்டும். அவர் களிடையே முழுமையான பொதுவுடைமை நடை முறையிற் செயற்படவேண்டும். அவர்களிடையே தனிப்பட்ட உரிமைப் பொருள்கள் மிகச் சிலவே அனுமதிக்கப்பட்டன. அவர்கள் தங்கம், வெள்ளி போன்றவற்றையும் வைத்திருக்கலாகாது. ஆண்களுக் கும் பெண்களுக்கும் ஒரே வகையான கல்வி கற்பிக்க வேண்டும் எனவும் பிளேட்டோ கூறினார்.

**அரிசுட்டாட்டில்**: அரசியல் முறையிலானபொருளா தார அமைப்பொன்றின் தேவைக்கான உள்ளுணர்வு மனித குலத்தின் உடன்பிறந்த ஒன்று என்கிற பொருளியல்கருத்துக்கு வேரூன்றியவர் அரிசுட்டாட்டில் (Aristotle) ஆவார். இவரது காலம் கி.மு. 384 முதல் 322 வரையாகும். இவர்தம் கருத்துப்படி மனிதன் தனித்து வாழ இயலாமல் குடும்ப வாழ்க்கையினை மேற்கொண்டும், அரசு முறைகளைப் படிப்படியாக அமைத்தும் வாழ்ந்துவந்தான். பின்னர் இம்முறை யின் காரணமாக அடிமைத்தனமும் ஏற்றத்தாழ்வு களும் உண்டாயின. அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இயற்கையில் அமையும் அடிப்படைக் கூட்டு வாழ்க்கையே குடும்பம் எனப்படுவது. அதி லிருந்து ஊரக நாட்டுப்புற வாழ்க்கையும் பின்னர்ச் சமுதாயம், அரசியல், நகரியல் வாழ்க்கை ஆகியன வும் தோன்றின. இத்தகைய வாழ்க்கைமுறையே நாட்டுப்பற்று என்னும் உணர்வை வளர்க்கிறது.

பிளேட்டோவின் பொருளாதாரப் பொதுவுடை மைக் கொள்கைக்கு மாறுபட்ட கருத்துகளைஅரிசுட் டாட்டில் வலியுறுத்தினார். பொதுவுடைமைத் தத்து வத்தின் அடிப்படையில் மனைவி குழந்தைகளையும் கூடப் பொதுச்சொத்தாகப் பிளேட்டோ கருதியதை அரிசுடாட்டில் வன்மையாகக் கண்டித்தார். கிரேக்க நாட்டவரின் தீவிர தனியுரிமைக் கோட்பாட்டுத் தன்மையை வெறுத்தார். அடிப்படை உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக மக்கள் ஒன்றுபடுவதை ஆதரித் தார். மரபுவழி வந்த பொதுநில உரிமையையும் ஓரளவிற்குத் தனியார் சொத்து உரிமையையும் இவர் ஆதரித்தார். இவர் வருமான ஏற்றத் தாழ்வு ஓரளவிற்குத் தேவை எனக்கருதினார். அதன் இடை வெளி பெருகும்போது உண்டாகக்கூடிய தீங்கினை விளக்கும் முறையிலிருந்து இவர் தீவிரப் பொது வுடைமையையும் தீவிரமுதலாளித்துவத்தையும்விரும் பவில்லை என்பது தெளிவாகிறது.

இவர் பொருளாதாரச் சிக்கல்களை அரசியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்தார். அரசு வறுமையை ஒழிக்கப் பாடுபடவேண்டும். வறுமையே புரட்சிக்கும் தீவினைக்கும் வித்தாக உள்ளது எனக் கூறினார். அரசு உயர்ந்த அறநெறியைப் பின்பற்றும் அரசியல் அமைப்பைக் கொண்டிருந்தால் நாடு பொருளாதாரச் செழிப்பை அடைய இயலும் எனக் கருதினார். நாட்டு மக்களிடையே காணப்படும் செல்வர், வறியர், நடுத்தர வகுப்பினர் ஆகிய மூவகைப் பிரிவினருள் நடுத்தர வகுப்பினர் பிற இரு வகுப்பினரையும் ஆளும் வலிமை பெற்றிருப்பது அரசுக்குச் சிறந்தது எனவும் இவர் கூறியுள்ளார். ஒவ்வொரு நகரத்திலும் ஒரே

வகை வகுப்பினர் வாழ்வது இன்றியமையாதது எனவும் இவர் கருதினார்.

இவர் கருத்துப்படி அரசு, ஆளும் வகுப்பினருக்கும் சமய அறிஞர்களுக்கும் வீரர்களுக்கும் மட்டுமே குடியுரிமை (Citizenship) வழங்கவேண்டும். நாட்டு மக்கள் யாவரும் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏதாவது ஒரு காலத்தில் வீரர்களாகவும் சமய அறிஞர்களாகவும் ஆளும் வகுப்பினராகவும் கடமையாற்ற வேண்டும். அரிசுடாட்டில் கைவினைஞர்கள், வணிகர்கள், எந்திர இயக்குநர்கள் (Mechanics) ஆகியோர் குடியுரிமை பெறத் தகுதியற்றவர்கள் எனக் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை அரிசுடாட்டில் இயற்கைப் பொருளாதாரம் (Natural Economy), செல்வம் பெருக்கும் பொருளாதாரம் (Wealth Getting Economy) என இருவகைப்படுத்தினார். இயற்கைப் பொருளாதாரம் நாடு, குடும்பம் ஆகியவற்றிற்கான செல்வத்தை அளிக்கும் கருவிகள் பலவற்றைக் கொண்டது. எனவே, அதனைக் குடும்பப் பொருளாதார மேலாண்மை எனவும் குறிப்பிட்டார். செல்வம் பெருக்கும் பொருளாதாரமும் இயற்கை, செயற்கை என இருவகைப்படும். எளிமையான பண்டமாற்றத்தின் அடிப்படையில் இயங்கும் பொருளாதாரம் இயற்கையின்பாற்படும் செல்வம் பெருக்கும் பொருளாதாரமாகும். சில்லறை வாணிகம் (Retail Trade) செயற்கை வகையினைச் சாரும். சிறந்த பொருளாதார அமைப்பிற்கு அரிசுடாட்டில் குடும்பப் பொருளாதார மேலாண்மையை இன்றியமையாததாகக் கருதினார். இவர் செல்வம் பெருக்கும் பொருளாதார அமைப்பை வெறுத்தார்.

அரிசுடாட்டிலின் பணத்தைப் பற்றிய பொருளியற் கருத்துகள் அவர்தம் அறநெறி (Ethics), அரசியல் (The Politics) ஆகிய நூல்களில் விளக்கமாகக் காணப்படுகின்றன. இவரது கருத்துப்படி பணம் மனிதனின் ஓர் அரிய கண்டுபிடிப்பு. அது பண்டங்களை மாற்றஞ் செய்வதற்கான செலாவணியாகவும் மதிப்பினை அளவிடும் கருவியாகவும், உற்பத்திக் காரணியாகவும் செயற்படுகிறது. மேலும் மதிப்பின் நிலைக்களனாகவும் (Store of Value)பணம் விளங்குகிறது. இரும்பு, வெள்ளி போன்று பணம் உள்ளார்ந்த பயன்பாட்டை உடையது. வாணிக வளர்ச்சிக்குப் பணம் பெருமளவில் உதவுகிறது. அரிசுடாட்டிலின் பணவியற் கருத்துகள் 'பணத்தின் உலோகக் கோட்பாடு'(Metal-list theory of money) எனக் கூறப்படுகிறது. பணத்தை வட்டியின் மூலம் பெருக்குவதை அரிசுடாட்டில் வன்மையாகக் கண்டித்தார். இத்தகாவட்டி (Usury) இயற்கைக்கு எதிரான முறையில் செல்வம் திரட்ட முயலும் வன்முறை எனக் கருதினார்.

அடிமைத்தனத்தை அக்காலச் சூழ்நிலை அமைப்புக்கு இன்றியமையாதது என அரிசுடாட்டில் கருதினார். ஆளுமைக் கோட்பாடும் அடிமைப்படுதலும் சமுதாயத்துக்கும் ஆளும் வகுப்பினருக்கும் அடிமைகளுக்கும் நன்மை பயக்கும் எனக் கூறினார். அடிமைகளை இயற்கை அடிமைகள் எனவும், சட்ட முறைப்படியான அடிமைகள் எனவும் இருவகைப்படுத்தினார். இயற்கை அடிமைகள் மனித இனத்துள் மிகக் கீழ் மட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் எனவும் விலங்கினங்களுக்கு ஒப்பானவர்கள் எனவும் இவர் குறிப்பிட்டுள்ளார். போர்க் கால வெற்றியின் கராணமாகச் சிறைபிடித்துக் கொண்டுவரப்படுபவர்கள் சட்ட முறைப்படியான அடிமைகள் என வகைப்படுத்தப் பட்டனர்.

பொருளாதார நிதிவளத்தையும் அரிசுடாட்டில் இயற்கை நிதி, செயற்கை நிதி என இருவகைப்படுத்தினார். வேளாண்மை, தேனீ வளர்த்தல், விலங்கினப் பாதுகாப்பு ஆகிய தொழிற்களின் மூலம் பெருகும் நிதி இயற்கை நிதி எனவும், அது மட்டுமே உள்நாட்டுப் பொருளாதார வளத்திற்குகந்தது எனவும் இவர் கூறினார். வாணிகம், வாடகைத் தொழிலாளரின் உழைப்பு,தகாவட்டி ஆகியவற்றின் மூலம் பெருகும் நிதிவளம் செயற்கைநிதி எனவும் அது அறநெறிக்குகந்ததாகாது எனவும் குறிப்பிட்டார்.

**செனோபோன்**: சாக்கிரட்டீசின் (Socrates)மாணவரான செனோபோன் எழுதிய பல நூல்களுள் 'பொருளியல்', 'அத்தீனியாவின் (Athens) வருமானத்தைப்பெருக்கும் வழிமுறைகள்', 'சைரோபீடியா' (Cyropaedia) ஆகிய நூல்கள் கிரேக்கப் பொருளியற் கருத்துத் தொகுப்புகளாகும். செனோபோன் கி. மு. 440க்கும் 335க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்த கிரேக்க வரலாற்று ஆசிரியரும் போர் வீரரும் ஆவர். இராணுவம், போர், வரலாறு, சமயம் ஆகியன பற்றிய நூல்கள் பலவும் இவர் எழுதியுள்ளார். சைரோபீடியா என்னும் நூலில் வேலைப் பகுப்புப் பற்றிய ஆராய்ச்சி காணப்படுகிறது. அத்தீனியாவின் வருமானத்தைப் பெருக்குவதற்கு வாணிகம் தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபடுதல், பொருளாதாரம் செழிப்புறத் தேவையான திட்ட வரைவுகள் (Plan Designs) ஆகியவற்றைக் சைரோபீடியா விளக்குகிறது.

செனோபோன், அரசின் மேலாண்மையை நடைமுறைப் பாணியில் ஆராய்ந்தும், வேளாண்மையை மையமாகக் கொண்ட பொருளாதாரச் வாழ்க்கை

யினை ஆராய்ந்து பொருளாதாரச் சிக்கல்களை விளக்கினார். வேளாண்மைத் துறையைத் தலையாய முதன்மைத் தொழிலாக இவர் கருதினார். இவரது வேளாண்மைப் பொருளியல் கருத்துகள் பிற்காலத்தைய இயற்கைக் கோட்பாட்டினரின் கருத்துகளை ஒத்திருந்தன. வேளாண்மை செழிப்புற்றால் தானாகவே பிற துறைகள் வளர்ச்சியுறும் என இவர் கூறினார். 'வேளாண்மை எளிதாகக் கற்றுக்கொள்ளக் கூடியது, உழைப்பாளர் விரும்புவது, மனைவிக்கு இனிமையானது, குழந்தைகளின் மகிழ்ச்சிக்குரியது, நண்பர்கள் இணைந்து இசைவுடன் செயற்படுவது, வாழ்க்கைக்குத் தேவையான யாவற்றையும் வழங்குவது' எனக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து இவர் வேளாண்மைக்கு அளித்திருக்கும் சிறப்புத்தன்மை விளங்குகிறது.

வேளாண்மைக்கு அடுத்த இரண்டாம் இடத்தை இவர் வெள்ளிச் சுரங்கத் தொழிலுக்கு அளித்தார். வெள்ளிச் சுரங்கத் தொழில் அரசுக்குச் சொந்தமானதாயிருக்க வேண்டும் எனவும், அது எக்காலத்திலும் வளர்ந்து செல் விளைவு விதிக்கு உட்பட்டது. எனவும் கூறினார். தொழிலாளர்களை உயர்ந்த எண்ணிக்கையில் நம்பிக்கையுடன் வெள்ளிச் சுரங்கங்களுக்குள் அனுப்பவேண்டும் எனவும், அங்குத் தொடர்ந்து அவர்கள் பணியாற்ற வேண்டும் எனவும் கூறினார். வெள்ளி ஒருகாலத்திலும் தோல்வியுறாது, அது தன் மதிப்பை இழக்காது என்ற உறுதியில் நிலையாயிருக்க வேண்டும் எனவும் கூறினார். பொது அடிமைகளை வெள்ளிச் சுரங்கங்களில் பணியாற்ற ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும் எனவும் அதனால் அரசு செழிப்புறும் எனவும், வெள்ளிச் சுரங்கங்கள் மூலம் நாட்டு மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கான பணத்தைப் பெறுவர் எனவும் இவர் கூறினார்.

வாணிக வளர்ச்சியையும் பெருக்கத்தையும் ஊக்குவிக்க அயல் நாட்டாருக்குச்சிறப்புச் சலுகைகள் வழங்குவது சிறந்தது எனச் செனோபோன் கருதினார். நகரங்களில் அயல்நாட்டார் தங்குவதற்கான வசதிகள் அளித்தல், கேளிக்கைகள் வழங்குதல் போன்றவற்றை இவர் ஆதரித்தார். ஏற்றுமதிப் பெருக்கத்திற்கான கப்பல்களைக் கட்டுதல், அவற்றை வாடகைக்கு வழங்குதல் போன்றவற்றை அரசு ஏற்று நடத்த வேண்டும் எனவும் உள்நாட்டு வணிகர்களுக்கும் கடல் கடந்து வாணிகம் செய்பவர்களுக்கும் அரசு குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கவேண்டும் எனவும் இவர் கூறினார்.

வணிகர்கள், கப்பல் உரிமையாளர்கள் ஆகியோர் நாட்டின் உயர்ந்த மதிப்பிற்குரியவர்களாவர். அவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சியுடையதாயிருக்கத் தேவையானவற்றை அரசு அளிக்கவேண்டுவது மட்டுமன்றி அவர்களுக்கு அவ்வப்போது விருதுகள் வழங்கியும் சிறப்பித்தல் வேண்டும் எனவும், அவர்களை அரசின் பொது நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கச் செய்யவேண்டும் எனவும் அவர்களிடையே எழும் பூசல்கள், கருத்து வேறுபாடுகள் போன்றவற்றை உடனுக்குடன் சமாதானமாகத் தீர்க்கவேண்டும் எனவும் செனோபோன் கூறினார்.

குடிமக்களிடையே காணப்படும் வறுமையை ஒழிக்க இவர் பல வழிமுறைகளைக் குறிப்பிட்டார். அத்தீனியாவின் வருமானத்தைப் பெருக்க அயல்நாட்டாரின் இடப்பெயர்வை (Immigration) ஊக்குவித்து அவர்களின் நிலையான குடியமர்வுக்குத் (Settlement) தேவையான வசதிகள் அனைத்தையும் அரசு அளிக்க வேண்டும். அயல்நாட்டார் வரி கொடுப்பதாலும், ஒய்வூதியம் எதிர்பாராததாலும் அவர்களால் அரசுக்கு வருமானம் பெருகும் என இவர் கூறினார்.

பொருளாதார வளத்திற்கும் செழிப்பிற்கும் முன்னோடியாக நாட்டில் சமாதானம் நிலவும் சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும் என இவர் கருதினார். சமாதான காலத்தில் செல்வத்திரட்சி ஏற்பட்டுப் போர்க்காலத்தில் அவை சூறையாடப்படுகிறது எனவும், மக்கள்தொகை வளர்ச்சியும் பெருக்கமும் நாட்டுப் பொருளாதாரச்செழிப்புக்குத் தேவையான வேலைப்பகுப்புக்கு இன்றியமையாதன எனவும் செனோபோன் கூறினார்.

கிரேக்கப் பொருளியல் கருத்துகள் தத்துவ நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு முறையைப் பின்பற்றியவை. ஆயினும் கிரேக்கப் பொருளியல் ஆய்வு முடிவுகள் பிற்காலப் பொருளியல் கருத்தாய்வுமுன்னேற்றத்திற்கு ஒரு பெரும் கருவூலமாக இன்றும் போற்றப்பட்டு வருகின்றன. அ.கு.சா.

**கிரேக்கோ** ஐரோப்பாவில் போலந்து நாட்டில் விசுத்திலா (Vistula) ஆற்றங்கரையில் உள்ள ஒரு கைத்தொழில் நகரம். இதன் வரலாற்றுச்சிறப்பு குறிப்பிடத்தக்கது. 14, 15, 16-ஆம்நூற்றாண்டுகளில் போலந்து நாட்டின் தலைநகராயிருந்து புகழ்பெற்றது. கலைச் சிறப்பு கொண்ட பல கட்டடங்கள் - முக்கியமாகக் கோபுரங்கள், கோயில்கள், வரலாற்றுக் காலத்திற்கு முன்பு அமைந்த மேடைகள் - முதலியனவற்றை இந்நகரில் காணலாம். இதற்கு அண்மையில் பெரும் உப்புக்கனிகள் உள்ளன. கிரேக்கோ (Cracow) பல்கலைக் கழகம் கல்வித் தொடர்பான பல சேவைகளைச் செய்து வருகிறது. தெ.பா.

**கிரேசி** என்ற கிராமம் பிரான்சு நாட்டின் வட பகுதியில் உள்ளது. இது காடுகள் நிறைந்த ஊராகும். இங்கு ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரர்களுக்கும் இடையில் போர் நடந்ததால் இவ்விடம் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது. இவ்விரு நாடுகளுக்கு மிடையே கி.பி. 1343 முதல் கி.பி. 1453 வரை 11 ஆண்டுக் காலம் பல இடங்களில், பற்பல ஆண்டு களில் போர்கள் நடைபெற்றன. இப்போர்களை 'நூறாண்டுப் போர்' என வரலாறு கூறுகிறது.

இங்கிலாந்து அரசர் இரண்டாம் என்றி (Henry II) காலத்தில் பிரான்சு நாட்டின் பல பகுதி கள் அவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. ஆனால், அப்பகுதிகளில் சிலவற்றைப் பிரான்சு அரசர் இரண்டாம் பிலிப்பு கைப்பற்றிக் கொண்டார். இவ்வாறு இருக்கும்போது, இங்கிலாந்தில் இரண் டாம் என்றிக்குப் பின் மூன்றாம் எட்வர்டு கி.பி. 1327-இல் பட்டத்திற்கு வந்தார். அவர் பிரான்சில் இழந்த பகுதிகளைக் கைப்பற்ற முனைந்தார். பல காரணங்களைக் காட்டிப் பிரான்சு நாடு முழுவதும் தமக்கே உரியது என்றார். எனவே, இங்கிலாந்து பிரான்சுடன் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக எட்வர்டு தம் படைபலத்தை மேலும் மிகுதியாக்கிக் கொண்டார். அவருக்கு இங்கி லாந்து மக்கள் முழு ஆதரவு அளித்தனர். குறிப்பாக வணிகப் பெருமக்கள் இப்போரில் அதிக அக்கறை காட்டினர். எட்வர்டு பிரான்சின் வடமேற்குப் பகுதி களில் பெரும் படைகளைக் கொண்டு வந்து இறக்கி னார். பிரான்சு அரசர் ஆறாம் பிலிப்பும் படைகளை அனுப்பினார். இப்படைகள் கிரேசி (Grecy) நகரத் திற்கு அருகில் சந்தித்துக் கொண்டன. ஆங்கிலேயப் படையை எட்வர்டு மூன்று பகுதிகளாகப் பிரித்தார். ஒரு பகுதிக்கு தம் மூத்த மகன் கறுத்த இளவரசரை யும் (Black Prince) மற்றொரு பகுதிக்கு நார்த்தாம் டன் கோமகனையும் (Earl of Northampton) மூன் றாம் பகுதிக்குத் தாமேயும் தலைவராக இருக்கு மாறு அமைத்துக் கொண்டார். இவர்களுக்குக் கிரேசி காடுகளில் மறைந்திருந்து தாக்குவது மிகவும் வசதி யாக இருந்தது.

இங்கிலாந்து மன்னர் மூன்றாம் எட்வர்டு கி.பி. 1346-ஆம் ஆண்டு ஆகசுட்டு திங்கள் 24-ஆம் நாள் படையுடன் அப்வில்லி என்ற இடத்திற்கு வந்தார். ஆகசுட்டு 26-ஆம் நாள் கிரேசியில் போர் தொடங்கி யது. ஆங்கிலப் படை மிகச் சிறந்த முறையில் அணி வகுத்து நிறுத்தப்பட்டது. அதில் 14,000 போர் வீரர்கள் இருந்தனர். அவர்களுள் 10,000 வீரர் கள் வில்லாளிகள். பிரெஞ்சுப் படையில் 12,000 போர் வீரர்களும் நூற்றுக்கணக்கான வில்லாளிகளும் இருந்தனர். ஆங்கிலப்படை ஆகசுட்டு 26-ஆம் நாள் மாலைக்குள் வெற்றியுடன் முன்னேறியது. பிரெஞ்சுப் படை வீரத்துடன் போரிட்டாலும் வெற்றிபெற இயலவில்லை. பிரான்சு நாட்டு அரசரான பிலிப்பின் படைகள் பெரும்பாலும் பிரபுக்களால் அப்போது திரட்டப்பட்டவை ஆகும். அவை கட்டுப்பாடு அற் றவை. கிரேசிப் போர்க்களத்தில் 1,500 க்கும் மேற் பட்ட பிரெஞ்சுப் போர் வீரர்கள் இறந்தனர். போரில் ஆங்கிலேயர் வென்றனர்.

இப்போரில் பிரெஞ்சுப் படை தோற்றதற்குக் காரணம் அப்படை வலிமை பெற்றிருக்கவில்லை என்பதன்று. பிரெஞ்சுப் படையினும் ஆங்கிலேயர் படை சிறப்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டு, சிறந்த புதிய அணி வகுப்பு முறைகளைக் கையாண்டு, பிரெஞ்சுப்படை முன்னேற முடியாதபடி போர் செய்ததே காரணம் என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இப்போரில் பிரெஞ்சுப் படைக்கே அதிக அழிவு ஏற்பட்டது. பெ.சி.

**துணை நூல்கள்:**

**Fisher**, H.A.L., A History of Europe, Surjeet Publications, Delhi, 1981.

**Henri Pirenne**, A History of Europe, George Allen & Unwin Ltd., London, 1967.

**கிரேட்சு** என்பவர் கிரேக்க தத்துவ ஆசிரியர் களுள் ஒருவரும், கிரேக்கக் குறைகாணும் தத்துவத் தைப் (Greek Philosophy of Cynicism) பரப்பியவரும் ஆவார்.

கிரேட்சு (Grates) கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியின் தீப்சு நகரரசில் (Thebes) வாழ்ந்தவ ரென்று கூறப்படுகிறது. இவர் தியாகினசு என்ற தத் துவ ஆசிரியருடைய (Diogenes) மாணவராவர். குறை காணும் தத்துவத்துக்குச் சில அடிப்படைக் கருத்து களைத் தியாசினசே அளித்தார்.இவர் உலக வாழ்க்கை யினின்றும் விலகிக் கந்தை ஆடை உடுத்தி, தம் வாழ் நாள் முழுவதும் ஒரு தொட்டியில் இருந்தாராம். இவருக்கு ஆசிரியராக இருந்த அண்டிசுதேனசு (Antisthenes) என்பவர்தாம் குறைகாணும் தத்துவக் கோட்பாட்டை நிறுவியவர். கிரேட்சின் மாணவருள் ஒருவரே இசுடாயிக்குக் கோட்பாட்டை வகுத்த சீனோ ஆவர். கிரேட்சும் தம் ஆசிரியர் தியாசினசைப் போல, தம் செல்வங்களை எல்லாம் துறந்துவிட்டு, தீய பண்புகளையும், போலியான வாழ்வையும் எதிர்த்து உரையாற்றி வந்தார். இவருடைய கருத்து களினாலும், உரையினாலும் கவரப்பட்ட, திரேசு

நாட்டின் (Thrace) செல்வர் ஒருவருடைய மகளான கிப்பார்க்கியா (Hipparchia) என்பவள், தான் கிரேட்சின் துறவு வாழ்க்கையிலும், தொண்டு வாழ்க்கையிலும் சேர்ந்து கொள்ளுவதற்குத் தன்னை விடுவிக்கும்படி பெற்றோர்களைக் கட்டாயப்படுத்திச் சேர்ந்தாள்; இவள் முதலில் இவருடைய மாணவராகிப் பின் இவருடன் துணைவியாகப் பல இடங்களுக்கும் சென்றாள். இவர் குறைகாணும் நோக்கில் மற்ற தத்துவ ஆசிரியர்களின் கருத்துகளை இடித்துரைத்தார். கடுமையான தன்னடக்க வாழ்வு பற்றிய கருத்துகளை இவர் விளக்கினார். இவர் தம் தத்துவக் கருத்துகளை வெளியிடுகிற பல நாடகங்களையும் கடிதங்களையும் எழுதினார். இவருடைய பெயரால் காணப்படுகின்ற பல கடிதங்கள் இவரால் எழுதப் பட்டவை அல்ல. இவருடைய வாழ்க்கை வரலாற்றை புளூடார்க்கு (Plutarch) எழுதினார் என்று கூறப்படுகிறது; ஆனால், அது இப்போது கிடைக்கவில்லை.

கிரேட்சு வாழ்ந்து, சிந்தித்த காலம் பண்டைய கிரீசில் நகரரசு என்ற சமூக அமைப்பு மறைந்து இராணுவப் பேரரசு (Military Empires) முறை தோன்றிய காலம். மாவீரர் அலக்சாண்டரின் வெற்றிகளினாலும், அவருடைய காலத்துக்குப் பின்னர் உரோமானியப் படைகள் பெற்ற வெற்றிகளினாலும், கிரேக்க நகரரசு முறைகள் தனித்து இயங்க இயலாமல் கூட்டாட்சியாகவே இயங்கின. இச்சூழ்நிலையில் பிளேட்டோவும், அரிசுடாட்டிலும் சிந்தித்த வகையில் அரசியல் சிந்தனையில் வளர்ச்சி ஏற்படவில்லை. ஏனென்றால், கிரேக்க நகரரசுகள் முன்பு போல் தனி அரசுகளாக இல்லாமல் பேரரசின் பாகங்களாக இருந்தன. இவ்வாறு அரசியல் நிலை கிரேக்கருடைய கட்டுப்பாட்டுக்குள் இல்லாமற் போய்விடவே, அவர்கள் நல்வாழ்வுக்கு உகந்த நிலைமை ஏற்பட இயலுமா, என்று ஆராயலாயினர். அவர்களுள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எப்பிக்கியூரசும்,சீனேவும், கிரேட்சும் முக்கியமானவர்களாவர். எப்பிக்கியூரசு மனிதனுடைய தன்னலன் ஒன்றையே ஆதாரமாக வைத்து, அரசு, நாகரிகம் ஆகியவற்றின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் விளக்கிக் கோட்பாடுகளை வகுத்தார். வாழ்க்கையில் குறைகளைக் காணும் சிந்தனையாளர்களோ (Cynics), இன்ப வாழ்க்கை வாழ்வதற்கு ஒவ்வொருவரும் தம் இயல்பான பண்புகளையும், அறிவாற்றல்களையும் அறிந்து உணர்ந்து, தம் இயல்புக்கேற்ற வாழ்க்கையை நடத்துதல் வேண்டுமென்று கூறினர். இவர்களுடைய கருத்து நம்பிக்கையை மட்டும் ஆதாரமாகக் கொள்ளாமல், இருக்கும் சூழ்நிலையை மட்டும் ஆதாரமாகக் கொண்டிருந்தது.

இத்தத்துவக் கூட்டத்தவருடைய கருத்துகள் பெரும்பாலும் ஏழைமக்களை மனத்தில் வைத்தே வகுத்து உரைக்கப்பட்டன. சமூகப் பழக்க வழக்கங்களெல்லாம் வெறுக்கத்தக்கவையே என்று அவர்கள் கூறி வந்தனர். அவர்களுடைய நடத்தையில் யாவருக்கும் அதிர்ச்சி அளிக்கும் ஒரு முரட்டுத் தன்மையும், சமூக மரியாதைகளின் புறக்கணிப்பும் காணப்பட்டன. பண்டைக்கால உலகிலே இத்தகையதொரு வளர்ச்சி காணப்பட்ட காரணத்தால், இவற்றைத் தோற்றுவித்த குறைகாண்போரே (Cynics) பண்டைக் காலத்தில் முதன் முதலில் தோன்றிய தொழிலாளத் தத்துவ ஆசிரியர் (Proletarian Philosopher) எனப்படுகின்றனர் அவர்கள் கூறிய கருத்துகள்: அறிவுடையவர் ஒவ்வொருவரும் முழுவதும் தன்னிறைவு உடையவராக (Self-sufficing) இருத்தல் வேண்டும். மனிதர் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிற அவருடைய சொந்த எண்ணமும், பண்பும் ஆகிய ஆற்றலே நல்லதொரு வாழ்வுக்கு இன்றியமையாதது. நல்லொழுக்கப் பண்பைத் தவிர, மற்ற சொத்து, திருமணம், குடும்பம், குடிஉரிமை, கல்விப் பயிற்சி, நற்பெயர், நாகரிக வாழ்வின் நம்பிக்கைகள், வழக்கங்கள் ஆகியவை எல்லாம் தம்மிலே நல்லனவுமல்ல, தீயனவுமல்ல. இவ்வாறு காணும்போது, செல்வர்-வறியர், கிரேக்கர்-காட்டுமிராண்டி, குடியாள்-அயலாள், சுதந்திரர்-அடிமை, உயர் பிறப்பாளர்-தாழ்ந்த பிறப்பாளர் என்றெல்லாம் கிரேக்க சமூக வாழ்வில் காணப்படுகிற வழக்கமான வேறுபாடுகளுக்கெல்லாம் ஆதாரமே இல்லை; அவையெல்லாம் நீக்கப்பட வேண்டியனவே. வறுமையும், அடிமை நிலையும் பொருளற்றவையே. சுதந்திர ஆள் அடிமையை விட உயர்ந்தவனன்று; இவருள் எவரும் தன் நிலையில் எந்த மதிப்பும் உடையவரல்லர். அடிமை நிலை தீயதுமன்று, சுதந்திர நிலை நல்லதுமன்று. ஒரு உண்மையான சமூக அமைப்பு (அல்லது அரசு) என்பது அறிவுடையாருக்காக மட்டுமே இருக்கிறது. அவருக்கு வீடும் வேண்டுவதில்லை, நாடும் வேண்டுவதில்லை. எங்கும் தம் வீடு போல் இருக்கலாம், எவ்விடத்தும் அவர் இருத்தலும் வேண்டுவதில்லை. அவருக்கு நகரரசோ, சட்டமோ தேவை இல்லை; ஏனெனில் அவருடைய சொந்தப் பண்பே அவருக்குச் சட்டமாக இருக்கிறது. தத்துவ ஞானியைப் பொறுத்தவரை எல்லா அரசியல் நிறுவனங்களும் செயற்கையானவையே எவ்வாறெனில், ஒழுக்கத் துறையில் தன்னிறைவு அல்லது முழு வளர்ச்சி பெற்றோருக்கு இந் நிறுவனங்கள் தேவை இல்லை. எந்த அரசில் குடியாள் நிலைக்கு அறிவு ஒன்றுதான் தகுதியாக இருக்கிறதோ, அதுதான் உண்மையான அரசு ஆகும். அதற்கு இட, சட்டவரையறைகள் இல்லை. எந்த இடத்திலும் காணப்படுகிற அறிவாளிகளெல்லாரும் ஒரே சமூகமாக, உலக நகரமாக, அமைகின்றனர்.

அறிவாளி என்போர் 'உலக நண்பனாக' (Cosmopolitan) உலகக் குடியாளாக இருப்பவராவர் என்று தியாசினசு கூறினார்.

குறைகாணுவோரின் அரசியற் கருத்து, கருத்தளவிலான ஒருவகைப் பொதுவுடைமை (Idealized Communism) அல்லது ஒரு வகை அரசு வேண்டாக் கோட்பாடு (Anarchy) என்று பேராசிரியர் எச். சபைன் கூறுகிறார். அவர்கள் குறிப்பிடும் உலக அரசில் சொத்தோ, திருமணமோ, அரசாங்கமோ இல்லை. அவர்கள் பெரும்பாலான மக்களுக்கு நல்வாழ்வு பற்றிய கருத்து வகுக்காமல் அறிவாளிகளுக்குமட்டுமே அத்தகைய நல்வாழ்வு உரியதென்று எண்ணினர். நடைமுறையிலிருந்த சமூக வேறுபாடுகளை அவர்கள் வெறுத்தாராயினும், சமத்துவமின்மையை (Inequality) அவர்கள் வெறுக்காமல், இதற்குத் தப்ப ஆன்மிகத் துறையில் புகுதல் வேண்டுமென்று ஒரு தத்துவம் கூறினார். ஆகையால் அவர்கள் வகுத்தது, துறவியாளரும், இல்லை என்போரும் (Ascetic and Nihilist) கையாண்ட துறவுச் செயலே (Renunciation) ஆகும்.

வறுமைவாழ்வை ஒரு கொள்கையாக ஏற்று, இடைக் காலத்தில் பிச்சை எடுத்து வாழ்ந்த கிறித்தவத் துறவிகளைப் போல (Mendicant Friars), பண்டைக் காலக் குறைகாணுவோரும் ஊரூராய்த் திரிந்த ஆசிரியர்களும், மக்களுடைய தத்துவ அறிஞர்களாக இருந்தனர்.

அவர்கள் வகுத்த உலகளாவிய குடிமை உரிமை என்னும் கருத்தை விரிவாக இசுடாயிக்குகள் விளக்கினர். அவர்கள் பழங்கால வேறுபாடுகள், குடிமைச் சமூகக் கட்டுப்பாடுகள் முதலியவற்றை ஒதுக்கியதனால், அவர்கள் சுட்டிய உலகக் குடிமை உரிமை என்னும் குறிக்கோளுக்கு இசுடாயிக்குகளால் நல்ல வடிவம் கொடுக்க முடிந்தது. ஆகையால், இசுடாயிக்குக் கோட்பாடுகளுக்குப் பின்னணிக் கருத்துகளை அமைத்து அளித்தவர்கள் கிரேட்சு போன்ற குறைகாணுவோரே ஆவர். பா.கு.

**துணை நூல்கள்:**


**Donald R. Dudley**, A History of Cynicism from Diogenes to the 6th Century A.D. London, 1937.

**Farrand Sayre**, The Greek Cynics, Baltimore, 1948.


***கிரே நோபிள்*** ஐரோப்பாவில் பிரான்சு நாட்டின் தென்கிழககில் உள்ள ஒரு நகரம். ஆல்ப்சுமலை அடிவாரத்தில் இசரோ(Isero) ஆற்றங்கரையில் உள்ள கிரேநோபிள் (Gre noble) அறிவியல் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சேவைகள் செய்து வருகிறது. நீர் மின் சார உற்பத்தியும் அணுசக்தி ஆராய்ச்சியும் இங்கு நடைபெறுகின்றன. பல உலோகங்கள், மின்சாரப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், உணவு வகைகள் முதலியன இங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. இந் நகர வரலாறு மிகப் பழமையானது. இது பண்டைய உரோமானிய நகரமாயிருந்து, பிறகு, கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் பர்கண்டியர் கீழும், 6–ஆம் நூற்றாண்டில் பிராங்கியர் கீழும், 9 முதல் 11–ஆம் நூற்றாண்டு வரை புராவென்சு (Provence) அரசின் கீழும் வந்தது. இது மீண்டும் கி.பி. 1349–இல் பிரான்சு நாட்டின் ஆட்சிக்குட்பட்டது. இங்கு ஒரு பல்கலைக் கழகம் கி.பி. 1339–இல் நிறுவப்பெற்றது. இடைக்கால வரலாற்றை நினைவுபடுத்தும் பல கட்டடங்கள் இங்கு உள்ளன. மறுமலர்ச்சி மாளிகை, திருச்சபைகள்,அருங்காட்சியகம் முதலியன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. சுற்றுலாப் பயணிகள் மிகுதியாக இங்கே வந்து போகின்றனர். குளிர்கால ஒலிம்பிக்கு ஆட்டங்கள் 1968–இல் இங்கே நடைபெற்றன.


தெ.பா.

***கிரபெல்ட்டு*** செருமனியின் வடக்கு உரைன்–வெசுட்டு பேனியா பகுதியிலுள்ள துறைமுக நகரம் இது உரைன் நதியின் தென்கரையில் உள்ளது. ஐரோப்பாவில் கி.பி. 1756 முதல் 1763 வரை நடைபெற்ற ஏழாண்டுப்போரின் போது இங்கு நடைபெற்ற போரில் பிரெஞ்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பட்டு மற்றும் வெல்வெட்டுத் துணிகள் உற்பத்திக்கு இந்நகர் பெயர் பெற்றது. இது இரண்டாம் உலகப் போரின்போது குண்டுத்தாக்குதலால் பலத்த சேதத்திற்குள்ளாயிற்று. இதன் மக்கள் தொகை இன்று ஏறத்தாழ 2,30,000 ஆகும். மா.கா.

***கிரேனடா*** கிழக்குக் கரீபியன் கடலில் காற்றுத் திசைத் தீவுகளின் தென்கோடியில் அமைந்துள்ளது. இங்கிருந்து 150 கி.மீ. தெற்கில் திரினிடாடும் (Trinidad), 110 கி.மீ. வடக்கில் புனித வின்செண்டும் (St. Vincent) அமைந்துள்ளன. இந்நாட்டின் பரப்பளவு 334 சதுர கி.மீ. மக்கள் தொகை 1,15,000. மக்கள் தொகையில் 84 விழுக்காடு கறுப்பர்களும் 11 விழுக்காடு கலப்பினத்தவர்களும் ஆவர். ஆண்டுதோறும் சராசரியாக 0.4 விழுக்காடு மக்கள் தொகை உயர்கின்றது. இந்நாடு நீள்வட்ட வடிவில் (Oval Shape) அமைந்துள்ளது.

கிரேனடாவிற்கும் (Grenada), புனித வின்செண்டிற்கும் இடையில் அமைந்துள்ள சிறு தீவுகள் இந்




கிரேனடா

நாட்டில் அடங்கியுள்ளன. தென் கிரனடைன் சுவைச் சார்ந்துள்ள தீவுகளுள் மிகப்பெரியது கரிய கூத் (Island of Carriacou) தீவாகும். இந்நாட்டின் வடக்கிலிருந்து தெற்காக உடைபட்ட பெரிய மலைத் தொடர் ஒன்று செல்கிறது. புனித கேதரின் சிகரமே (Mount Saint Catherine) இங்குள்ள உயர் பகுதியாகும் (2756 அடி). இங்கு எரிமலைகள் உள்ளன. நாட்டின் நடுவில் பெரிய எடாங்கு (Grand Etang) என்னும் வட்டவடிவான ஏரி உளது. இதன் பரப்பளவு 36 ஏக்கர். வடகிழக்குச் சமவெளிப் பகுதியில் அண்டோயின் பேரேரி (Lake Antoine) உள்ளது. இங்குப் பல ஏரிகளும் நீரூற்றுகளும் உள்ள தால், நீர்ப்பாசனத்திற்குக் குறைவில்லை. ஆண்டின் சராசரி மழைப்பொழிவு 75".கிராண்டு எடாங்குப்பகுதியில் சில சமயம் 164"க்கும் அதிகமாகவே பொழிகிறது. தெற்குக் கடற்கரைப் பகுதியில் 40" மழைப் பொழிவுள்ளது. கிரேனடாவில் மழைக்காலம் மே மாதம் முதல் திசம்பர் வரை நீடிக்கிறது. இங்கு 1955-இல் ஒரு பெரும்புயல் வீசியது. வெப்பமண்டலப் பகுதிக்கேயுரிய பழங்களும் (Tropical fruits) பூக்களும் இங்கே விளைகின்றன. இங்கு 10,000 ஏக்கர் பரப்பள்வு கொண்ட காடுகள் உள்ளன. புனித சார்சு (St. George's) இந்நாட்டின் மிகப்பெரிய நகரும் தலைநகரும் ஆகும். மக்கள் தொகை 32,000.



புனித சார்சு நகரம்

இத்தீவைக் கிறித்தோபர் கொலம்பசு(Christopher Columbus) முதன்முதலில் கண்டுபிடித்துக் கன்செப்சியான் (Concepcion) எனப் பெயரிட்டார். கரீப்பு இந்தியர்கள் கி.பி. 1498-இல் இங்கு வாழ்ந்தனர். மார்டினிக்கின் ஆளுநரான தூ பார்குவெட்டு என்பார் (Du Parquet, the governor of Martinique) கி.பி. 1650-இல் இதனை விலைக்குவாங்கினார். பின்னர்ப் பிரெஞ்சுக்காரர்கள் கரீபியர்களை இத்தீவினின்றும் துரத்திவிட்டனர்; 1665-இல் பிரெஞ்சு மேற்கிந்தியக்கம்பெனியின் கைக்கு மாறியது. ஆங்கிலேயர் கி.பி.1762-இல் கிரேனடாவைக் கைப்பற்றிக் கொண்டனர்; ஆனால், கி.பி. 1779-இல் பிரெஞ்சுக்காரர்கள் இதனை மீட்டுக் கொண்டனர். பிரெஞ்சுக்காரரும் தொடர்ந்து இதனைத் தம் வசம் வைத்துக் கொள்ள இயலவில்லை. வெர்சே (Versailles) உடன்படிக்கையின் நிபந்தனைப்படி கிரேனடா கி.பி. 1783-இல் ஆங்கியேர்களுக்கு வழங்கப்பட்டது. பிரெஞ்சுக்காரர்களின் தூண்டுதலால் கி.பி. 1795-96-ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயருக்கெதிராகக் கிளர்ச்சிகள் நடைபெற்றன. இருப்பினும் அவை சர் ரால்பு ஆபர்கிராம்பியால் (Sir Ralph Abercromby) தீவிரமாக ஒடுக்கப்பட்டன. அடிமைகள் கி.பி. 1838-இல் விடுதலை செய்யப்பட்டமை ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். காற்றுத் திசைத் தீவுகள் (Windward Islands) ஆங்கிலேய அரசின் தலைமை மையமாக கி.பி. 1885-ஆம் ஆண்டு முதல் திகழ்ந்தன. கிரேனடா 1958-இல் மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டாட்சியில் (West Indies Federation) இணைந்தது. இக்கூட்டாட்சி 1962-இல் முறிந்ததால், மற்றக்காற்றுத் திசைத் தீவுக

ளுடனும் பார்படோசு,லீவர்டு (Lee Weard) தீவுகளுடனும், புதியதோர் கூட்டாட்சி அரசை அமைக்கும் நோக்கத்துடன் கிரேனடா சேர்ந்தது. பொது நலக் காப்பரசு நாடுகளுள் கிரேனடாவும் ஒன்றாகத் திகழ்கிறது. கிரனடா 1974-இல் சுதந்திரம் பெற்றது. இப்போது சர் பால்சுகூன் (Sir Paul Scoon) தலைமை ஆளுநராகவும், எர்பெர்ட்டு பிளைசு (Herbert Blaize) பிரதமராகவும் உள்ளார்.

தலைநகரான புனித சார்சுக்கு அடுத்தபடியாக இங்குக் கௌயவே (Gouyave) விக்டோரியா, சாடியர்சு (Sauteurs), கிரென்வில்லி (Grenville) ஆகிய சிறு நகரங்கள் உள்ளன. புனித சார்சு சிறந்த துறைமுகமாகத் திகழ்வதுடன் பிறநாட்டின் துறைமுகங்களுடன் வாணிகத் தொடர்பும் கொண்டுள்ளது. பேர்ல்சு என்னுமிடத்தில் (Pearls) இந்நாட்டின் விமான நிலையம் அமைந்துள்ளது.

பொதுவாக இங்கு மக்களால் ஆங்கிலமொழி பேசப்படுகிறது: கிராம மக்களும் உழவர்களும் பிரெஞ்சு மொழி பேசுகின்றனர். கரீபிய இந்தியர்களும் இங்கு வாழ்கின்றனர். பெரும்பாலோர் நீக்கிரோக்களாகவும் உள்ளனர்: முலட்டோர்சுகளும் சிறிதளவு வெள்ளையர்களும் கூட இங்கு வாழ்கின்றனர். மதத்தைப் பொறுத்தவரையில், 64 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கர்களாகவும், 22 விழுக்காட்டினர் ஆங்கிலிகன்களாகவும் (Anglican) உள்ளனர்.

இந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 44 விழுக்காடு பயிர் செய்யும் நிலங்களாக உள்ளன. இந்நாட்டில் மண்ணரிப்பு (Soil erosion) ஒரு முக்கிய சிக்கலாகும். மொத்த மக்கள் தொகையில் 55 விழுக்காட்டினர் உழு தொழிலை மேற்கொண்டுள்ளனர்; 40 விழுக்காட்டினர் தொழிலாளர்களாக உள்ளனர். இந்நாட்டின் மொத்த உற்பத்தியின் மதிப்பு 110 மிலியன் தாலராகும் (Dollar–1982). ஆண்டுதோறும் உற்பத்தி 3.8 விழுக்காடு உயருகிறது. தனிமனிதனின் சராசரி ஆண்டு வருமானம் 690 தாலர். இங்குச் சாதிக்காய், வாழை, பருத்தி, தேங்காய், பழங்கள், கரும்பு ஆகியன அதிக அளவில் பயிராகின்றன. கோகோவும் வாசனைத் திரவியங்களும் கூட இங்கு மிகுதியாக விளைகின்றன. சாதிக்காய், கோகோ, பீன்சு, வாழைப்பழம், சாதிபத்திரி ஆகியன இங்கிருந்து ஏற்றுமதி ஆகின்றன. உணவுப் பொருள்கள், எந்திரங்கள், கட்டுமானப் பொருள்கள் ஆகியன இறக்குமதி செய்யப்படுகின்றன. இங்கிலாந்து, மேற்குச் செருமனி, அமெரிக்கா, நெதர்லாந்து ஆகிய நாடுகளுடன் இது வணிகத் தொடர்பு கொண்டுள்ளது.

ம.இ.

**கில்சிட்டு** இந்தியத் துணைக்கண்டத்தின் வடமேற்கு எல்லையிலுள்ள மாவட்டம். கில்சிட்டு (Gilgit) நகர் இதன் தலைநகர். ஆங்கிலேயர் காலம் முதல் படைத்துறையில் இது முக்கிய மையமாக இயங்கி வந்தது. கடல்மட்டத்திலிருந்து 4890 அடி உயரத்திலுள்ளது. இம்மலைப்பகுதி நகர மக்கள் பௌத்த சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

மா.கா.

**கில்லட்டின்** என்பது பிரஞ்சுப் புரட்சி நடைபெற்ற காலத்தில் (கி.பி.1789–கி.பி.1799), பிரஞ்சுக் குடியரசின் பகைவர்களெனக் குற்றம் சாட்டப்பட்டோருக்கு அளிக்கப்பட்ட கொலைத்தண்டனையை நிறைவேற்றும்போது குற்றவாளிக்குத் துன்பம் விளைவிக்காமலும், விரைவாகவும் அவருடைய தலையை வெட்டி விடுதற்காகக் கையாளப்பட்ட ஒரு கொலைக் கருவி ஆகும். இக்கருவி ஒரு கூரிய கத்தி; இது ஒரு புறம் கனமான பகுதியாக ஆக்கப்பட்டு, இரு மரத் தூண்களினுச்சியில் குறுக்காக இணைக்கும் ஒரு விட்டத்தின் நடுவில் பொருத்தப்பட்டிருந்தது; கீழே குப்புறப் படுக்க வைக்கப்பட்ட குற்றவாளியின் கழுத்தில் விழுமாறு மேலே உள்ள கத்தி கீழே இறக்கப்பட்டதும் கழுத்து துண்டிக்கப்பட்டது. இந்தக் கருவி முற்காலத்தில் இசுகாட்லாந்து, இத்தாலி, செருமனி முதலியவற்றில் கையாளப்பட்டது. பிரஞ்சுப் புரட்சிக் காலத்தில் புரட்சி அரசாங்கத்தால் கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டவர்களை, அவர்களுக்கு வலி தெரியாமல், கழுத்தைத் துண்டித்தற்கு இக்கருவியைக் கையாளலாமென்று, பிரஞ்சு தேசிய மன்ற உறுப்பினரும், ஒரு மருத்துவருமான சோசப்பு இக்னேசு கில்லட்டின் (Joseph Ignace Guillotin கி.பி. 1738–1814) என்பவர் கூறியதால், இக்கொலைக்கருவி கில்லட்டீன் (Guillotine) என்று சொல்லப்பட்டது. பிரான்சில் புரட்சியாளர்கள் நடத்திய பயங்கர ஆட்சியின் (Reign of Terror) ஒரு சின்னமாகவே இக்கருவி ஆயிற்று. இக்கருவி கி.பி. 1792–இலிருந்து பிரஞ்சுப் புரட்சி அரசாங்கத்தால் கையாளப்பட்டது. பின்னர்க் கொலைத்தண்டனையை நிறைவேற்றுதற்குரிய ஒரு வழியாக இக்கருவி கையாளப்படும் வழக்கம் பிரான்சில் நின்றுவிட்டது.

இக்கொலைக் கருவியின் பெயரே நூல்களின் ஏடுகளை ஒழுங்குபட வெட்டும் ஓர் இயந்திரத்துக்கும், அறுவை மருத்துவர்கள் கையாளுகிற ஒருவகை அறுவைக் கத்திக்கும் வழங்குவதாயிற்று.

ஆங்கில நாட்டின் பாராளுமன்றத்தின் கீழவையாகிய பொதுமக்கள் மன்றத்தில் ஏதேனுமொரு மசோதா மூன்று வாசிப்பு நிலைகளிலும் (Three

Readings) புகுந்து வரும்போது, சட்டமாக அம்மசோதாவை நிறைவேற்றுதலை விரைவுபடுத்தும்பொருட்டு, அம்மசோதாவை மன்றம் இறுதி வாக்கெடுப்புக்குத் திடீரென்று எடுக்குமானால், அச்செயலைக் கில்லட்டீன் செய்தல் என்று பேச்சு வழக்கில் குறிப்பிடுவர். இதேபோல எந்த ஒரு மசோதாவின் மீதும் வாக்கெடுப்பு நடத்துதற்குரிய நாளையும் காலத்தையும் வரையறுத்துப் பொதுமக்கள் மன்றம் செய்யும் தீர்மானமும் கில்லட்டீன் எனப்படும். இத்தீர்மானத்தின்படி குறிப்பிட்ட நேரத்தில் எடுக்கப்படும் வாக்கெடுப்பும் கில்லட்டீன் எனப்படும். இதுவே இறுதி வாக்கெடுப்பையும் குறித்தற்குக் கையாளப்பட்டது. எடுத்துக்காட்டாக, 'இரவு 11 மணிக்குக் கில்லட்டீன் விழுந்தது, மன்றத்தவரிடையே வாக்கெடுப்பும் நடந்தது 'என்று கூறும்பொழுது' இரவு 11 மணிக்கு மசோதாவின் மீது மன்றம் தன் இறுதித் தீர்ப்பை அளித்தது என்று பொருள்படும். கில்லட்டீன் விழுந்து விட்டால் மசோதாவின் மீது மன்ற உறுப்பினர்கள் தாங்கள் நடத்தும் உரைகளை உடனே நிறுத்திக்கொள்ளுதலும், உடனடியாக மசோதாவின் மீது நடைபெறும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளுதலும் வேண்டும். எனவே, மன்ற உறுப்பினரின் பேச்சின் மீது விடுக்கப்படும் 'நிறுத்தாணை' என்றும் கில்லட்டீன் பொருள்படும். பா.சு.

**கிலாபத்து இயக்கம்**: இந்திய முகம்மதியர்களிடையே இசுலாமிய இன ஒற்றுமை பற்றி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஒரு பேரச்சம் ஏற்பட்டது. அதன் விளைவே கிலாபத்து இயக்கம். துருக்கிச் சுல்தான் உலக இசுலாமிய இனத்திற்குத் தலைவராக நீண்ட காலம் இருந்து வந்தார். அத்தலைவருடைய இராச்சியம் 1911-இல் இத்தாலியாலும் 1912-13-இல் பால்கன் நாடுகளாலும் தாக்கப்பட்டதுடன் முதலாம் உலகப் போரில் தோல்வியும் கண்டது. அப் போருக்குப்பின் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி துருக்கிப் பேரரசு, தனது இராச்சியங்கள் பலவற்றை இழக்க நேரிட்டது. சில பகுதிகள் இசுலாமியரல்லாதோருக்கும் வழங்கப் பெற்றன. இந்நிலையில், இசுலாமிய கலீபாவான துருக்கி மன்னருக்கு ஆதரவாக இந்தியாவில் ஓர் இயக்கம் தோன்றியது. கலீபா தொடர்பான இயக்கமாதலால் கிலாபத்து என்று அதற்குப் பெயர் அமைந்தது. முகம்மது அலி, சௌகத்து அலி என்ற உடன்பிறப்பாளர் இருவரும், அபுல்கலாம் அசாத்து என்பவரும் இந்த இயக்கத்தைத் தொடங்கினார்கள். அவ்வமயம் ஒத்துழையாமை இயக்கத்திலீடுபட்டிருந்த மகாத்மா காந்தியுடன் அத்தலைவர்கள் உடன்பாடு செய்து கொண்டனர். அதன்படி மகாத்மா விரும்பியது இன்னா செய்யாமை. இசுலாமியத் தலைவர்கள் நாடியது தங்கள் கிலாபத்து இயக்கத்திற்கு மகாத்மாவின் உதவி. இவ்வாறு உடன்பாடு செய்து கொண்டதால் மகாத்மா காந்தி கிலாபத்து இயக்கத்திற்கு ஆதரவு அறிவித்தார். ஆனால் நிலைமைகள் வேறுவிதமாக மாறிவிட்டன. இயக்கம், இன்னா செய்யாமைக் கொள்கை அடிப்படையில் நடைபெற இயலவில்லை. ஏறத்தாழ 18,000 இசுலாமிய உழவர்கள், இந்தியாவை விட்டு ஆப்கானிசுத்தானத்திற்கு ஓடிவிட்டனர். இந்தியா, இசுலாமின் பகைநாடு என்று அவர்கள் கூக்குரலிட்டனர். தென்னிந்தியாவில் 1921-இல் இசுலாமியக் கலகத்தினரின் சில தீவிரச் செயல்கள், இந்திய இந்துக்களுக்கு அச்சமளிப்பதாக இருந்தன. காந்தி இவற்றைக் கண்டவுடன், தம் இயக்கத்தை அப்போதைக்கு நிறுத்தி வைத்தார். ஆங்கில அரசு 1922-இல் மகாத்மாவைக் கைது செய்தது. இக்காரணங்களால் இந்திய கிலாபத்து இயக்கம் வலுவிழந்தது. இதற்கிடையில் புதிய துருக்கித் தலைவர், முசுதாபா கெமால் ஆடாடர்க்கு துருக்கிச் சுல்தானைப் பதவியினின்று விலக்கியதுடன் 1924-இல் கலீபா பதவியையே ஒழித்து விட்டார். கலீபாவே மறைந்தவுடன் அவர் சம்பந்தமான கிலாபத்து இயக்கமும் அழிந்தது. அவ்வியக்கத் தலைவர்கள் திணையாட்சி உரிமைக் கோட்பாட்டை (Communalism) ஆதரிக்கத் தொடங்கினர். அந்த இயக்கம், பாகிசுத்தானிய இயக்கத்துடன் இரண்டறக் கலந்து விட்டது. தெ.பா.

**கிலி** என்பது பொருளாலோ சூழ்நிலையாலோ பாதிக்கப்படுவதால் ஏற்படும் வீண் அச்சமாகும். கிலி மனவெழுச்சியும் அதற்குக் காரணமான செயலும் ஒன்றியுள்ள ஒரு நிலையாகக் கருதப்படுகிறது

மருத்துவத் துறையிலும் உளமருத்துவத்திலும் கிலி (Phobia) என்னும் சொல், கிலியை ஏற்படுத்தும் பொருள் அல்லது சூழ்நிலை குறித்த சொல்லுடன் சேர்த்துக் குறிப்பிடப்படுகிறது. கிலியால் பீடிக்கப்பட்டவன் கிலி ஏற்படக்காரணமான பொருள் அல்லது சூழ்நிலையை அனுகுவதைத் தவிர்க்கவே விரும்புவான். அப்பொருள் அல்லது சூழ்நிலையை அவன் அணுகும் போது அவனுக்கு அச்சமும் இனம்புரியாத கவலையும் பெருகி, இதயத் துடிப்பு மிகுதியாகும். அதனால் மயக்க உணர்வும் ஏற்படக்கூடும். தெருக் கிலியால் பீடிக்கப்பட்ட ஒருவன் தெருவில் தனித்துச் செல்ல அஞ்சி, வீட்டினுள்ளே அடைந்து கிடப்பான்.

கிலி என்ற சொல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே அறிவியலிலும் மருத்துவத் துறையிலும் வழக்கில் வந்தது. வெசுட்டுபால் (Westphal) என்பவர்

கி.பி. 1871-இல் எழுதிய ஆய்வுக்கட்டுரை ஒன்றில் (Die Agora Phobia)தெருக்கிலி பற்றிய கருத்துகளை விளக்கியிருந்தார். வெசுட்டுபாலின் கருத்துகள் நாளடைவில் உயர்ந்த இடத்தைக் கண்டால் ஏற்படும் கிலி (Acoro Phobia), வலியினால் ஏற்படும் கிலி (Algophobia), இரத்தத்தைக் கண்டால் ஏற்படும் கிலி (Homolophobia), தனிமையில் இருப்பதால் ஏற்படும் கிலி (Monophobia) போன்ற பல வகைக் கிலிகளை இனங்கண்டு, அவற்றைக் குணப்படுத்துவதற்கான முறைகளை அறிவதற்குத் துணையாக அமைந்தன.

இசுடேன்லி (Stanley. G., 1914) 136 கிலி வகைகளை எடுத்துரைத்தார். கிலி என்பது விடுபடமுடியாத கவலையாகக் கருதப்பட்டு வந்தது. உளநல மருத்துவர்கள் பொதுவாகக் கிலியினை மற்ற நரம்புடி பிறழ்வு (Neuroses) போன்ற உள நோயிலிருந்து வேறுபடுத்த முடியாத நிலையிலிருந்தனர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிலியினை மற்ற உளநோய்களிலிருந்து வேறுபடுத்தினர். நரம்புப் பிறழ்வு என்பது நரம்புத் தளர்ச்சியினாலும் தலைமுறை தலைமுறையாக உள்ளார்ந்த நரம்பு மண்டலத்தில் ஏற்படும் குறைவினாலும் ஏற்படுவது என்ற முடிவுக்கும் அவர்கள் வந்தனர்.

கிலியினைப் போக்கும் வழிகளாகக் கீழ்க்காணும் இரண்டு முறைகளைக் கூறலாம். முதலாவதாக, கிலி என்பது ஒரு மனிதனின் கவலைகளின் மாதிரி வெளிப்பாடு என்ற நோக்கில், கிலியுடையவனைக் கிலியினை உணரச் செய்து, அவனுக்குக் கிலியினை ஏற்படுத்தும் சூழ்நிலையிலிருந்து விடுபடும் வழிகளைக் கூறுவது. இரண்டாவதாக, நடத்தை மாற்றுமுறை மூலம் நேரடியாகக் கிலியை ஏற்படுத்தும் நடத்தையிலிருந்து கிலியுடையவனை மாற்றுவது சீனி.நா., கொ.இ.

**துணை நூல்கள்:**


**Menninger, Karl**, et al, The Vital Balance: The Life Process in Mental Health and Illness, Viking, New York, 1963.

**Nicholi, A.M.**, The Harvard Guide to Modern Psychiatry, The Belknap Press of Harvard University Press, England, 1978.


***கிலிமன்சாரோ*** ஆப்பிரிக்காக் கண்டத்திலேயே மிக உயரமான மலையான கிலிமன்சாரோ (Kilimanjaro), தான்சானியாப் பகுதியின் வடகிழக்கில் உள்ளது. இது ஒரு காலத்தில் எரிமலையாக இருந்தது. இதன் இரண்டு குன்றுகள் கிபோ (உயரம் 5898.7 மீட்டர்), மாவேன்சி (உயரம் 5,357 மீட்டர்) என்னும் இரண்டு இடங்களில் உள்ளன. காப்பியும் தேயிலையும் அவற்றின் அடிவாரத்தில் மிகுதியாக விளைகின்றன. குன்றுகளில் பனிக்கட்டி உறைந்திருத்தலால் பனிக்கட்டி ஆறுகள் இங்கு ஓடும். இம் மலையைச் சோன்னசுரெப்மான் மற்றும் இலட்விக் கிராப்பு என்ற இரண்டு செருமானியச் சமயப் பரப்புநர்கள் கி.பி. 1848-இல் கண்டுபிடித்தனர். அக்காலந் தொட்டுப் பிரமுகர்கள் பலர் இதன் மீது ஏறியுள்ளனர். இது, தென் ஆப்பிரிக்க நாடான தான்சானியாவில் உள்ளது; கெனிய எல்லையைத் தொடுவது; அவ்வப்பொழுது எரிமலையாகப் புகைகின்ற சிகரங்களைக் கொண்டது. இது ஆப்பிரிக்காவிலேயே மிக உயரமான மலையாகும். இதன் மையக் கூம்புவான கிபோ (Kibo), கெய்சர் வில்கெல்ம் இசுபிட்டேய் (Keiser Wilhelm Spitai) என்னும் ஆப்பிரிக்காவின் மிக்க உயரமான இடத்தில், 3,000 அடி உயரத்திலுள்ள மேட்டு நிலத்திலிருந்து 19,340 அடி உயரத்திற்கு ஓங்கி நிற்கின்றது. கெனிய மலையைப் போலவே இதுவும் இடை முறிவுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. மாபெரும் பிளவுப் பள்ளத்தாக்குக்கு (Great Rift Valley) ஏறக்குறைய 200 மைல் கிழக்கில் அமைந்துள்ளது. அதன் இடைமுறிவுகள், மேற்கு-தென்மேற்கு-கிழக்கு-வடகிழக்குத் திசையில் செல்லும் எரிமலைக் கூம்புகளையும் மேருமலையையும் கடந்து செல்கின்றன.



கிலிமன்சாரோ

ஐம்பது மைல் தூரம் வரை கிழக்கு-மேற்காக ஓடுகின்ற மலை முகட்டுத் திரளில் மூன்று எரிமலைகள் அடங்கியுள்ளன. மிகவும் சிறியதான கிபோ ஓர் எரிமலை வாயிலின் வடிவத்தை இன்றும் பெற்றுள்ளது. உயரம் 17,654 அடியுள்ள மாவென்சி (Mawenzi) என்னும் மலையுடன் 15,000 அடி மட்டத்தில் குவடு

ஒன்றன் மூலமாக இணைகிறது. பனிமூடப்பட்ட குவிமாடத்தைப் போன்று கிபோ சமவெளிகளிலிருந்து காட்சியளிக்கிறது. ஆனாலும், அதன் அமிழ்வின் காரணமாகக் குறுக்கில் $1\frac{1}{2}$ மைல் நீளமானதும் 600 அடி ஆழமானதுமான முகட்டுவாய் ஒன்று தெற்கில் உருவாகியுள்ளது. இவ்விடத்தில் அதன் விளிம்பு மிக உயரமானதாக உள்ளது. இதன் உட்பகுதி, எரிமலையாகப் புகைவதற்கான தன்மைகளை இன்றும் பெற்றுள்ளது.

குவடுக்கு அடியில் உள்ள மலைச்சரிவுப் பகுதிகள் கீழேயுள்ள சமவெளிகளை நோக்கித் தாழ்கின்றன. ஒப்புநோக்கில் மாவென்சி கிபோவுக்கு முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. அதில் பல்வேறு பகுதிகளிலும் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. சரிவுகள் மிகவும் பயங்கரமானதாக உள்ளன.

இதர ஆப்பிரிக்க மலைகளைப் போன்றே கிலிமன்சாரோவும் தாவரங்கள் வளரும் பகுதிகளைத் தெளிவான, திட்டவட்டமான வகையில் பெற்றுள்ளது. ஓரளவு வறண்ட பகுதிகளாக 4,000 அடிக்கும், 6,000 அடிக்கும் இடையே இருக்கும் மேட்டு நிலங்களின் மேற்பகுதிகளில் உள்ள, சிறந்த நீர்வளங்களைக் கொண்ட, தென் சரிவுப் பகுதிகளில் வாழை, காப்பி, காய்கறிகள் ஆகியவை வளர்கின்றன. தென் சரிவுப் பகுதிகளில் அடர்த்தியான மேகங்களால் மூடப்பட்டிருக்கும் காடுகள் 6,000 அடிக்கும் 9,000 அடிக்கும் இடையிலுள்ள பகுதிகளில் பரவியுள்ளன. ஆனாலும் அவை வடபகுதிகளில் மேலும் குறுகலாகிக் கொண்டு இறுதியில் கண்ணுக்குத் தெரிவதில்லை. காடுகளுக்கு மேற்புறத்திலுள்ள பகுதிகளில் மழை சற்று அரிதாகவே பொழிகிறது. ஆல்ப்சு மலைப் பகுதிகளுக்குரிய வறண்ட நிலங்களில் விளையும் தாவரங்கள் 13,000 அடிக்கு மேலுள்ள பகுதிகளில் ஆங்காங்கே விளைகின்றன. கிலிமன்சாரோ மலைமுகட்டில் யானை, காண்டாமிருகம், எருமைகள் போன்ற வேட்டையாடுவதற்கான விலங்குகள் காணப்படுகின்றன.

இம்மலையைத் தெற்கில் மோழி (Mozhi) என்ற இடத்திலிருந்து நிலமார்க்கமாகவே மிக எளிதாக அடையலாம். மொம்பாசாவுக்கு (Mombaza) மேற்கில் 228 மைல் தூரத்திலும் நைரோபி (Nairobi) மற்றும் கெனியாவின் தெற்கில் 225 மைல் தூரத்திலும் இது அமைந்துள்ளது. மலை மேல் ஏறிச் செல்வதற்கான வசதிகளைக் கிழக்கு ஆப்பிரிக்க மலைச் சங்கம் செய்து கொடுக்கிறது. கிபோ மலைமீது ஏறுவது மிகக் கடினமானதாக இருப்பினும் மலைமீது ஏறுவதற்கான வசதிகள் எதுவுமின்றியே ஏறக்கூடியதாய் அது அமைந்துள்ளது. ஆனால், மாவென்சியின் மீது ஏறுவதற்குப் பெரும் அனுபவம் வேண்டும்.

அ.உ.செ.

**துணை நூல்:**

Dundas, D., Kilimanjaro and its people, London, 1924.

**கிழக்கிந்தியத் தீவுகள்**: சுமத்திரா, சாவா, போர்னியோ, செலிபசு ஆகிய தீவுகள் கிழக்கிந்தியத் தீவுகள் எனப்படுகின்றன. இவை 1949-இல் தச்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டன. இவை தவிர வேறு பல சிறு தீவுகளும் இப்பெயரில் கூறப்படுகின்றன. மலேயா முந்நீரகமும் இப்பகுதியில் ஒன்றாக உள்ளது.

மிளகு, இலவங்கம், சின்கோனா, காப்பி, தேயிலை, இரப்பர் போன்றவை இங்குள்ள முக்கிய விளைபொருள்கள். தகரம் இங்கு அதிக அளவில் உண்டு. எண்ணெய், மங்கனம், நிலக்கரி போன்ற பொருள்களும் இப்பகுதியில் கிடைக்கின்றன.

இந்தோனேசியா என இப்போது கூறப்படும் இத்தீவுகள் முன்பு ‘நறுமணத் தீவுகள்’ என்ற பெயரிற் கூறப்பட்டன. இங்கு மலாயர், இந்தியர் சீனர் போன்ற பல இனத்தவர்கள் வாழ்கின்றனர். பண்பாட்டு அடிப்படையில் இந்து சமயக் கருத்துகள் வலுப்பெற்றுள்ளன. இப்போது பாலித்தீவு தவிரப் பிறவற்றில் இசுலாமியச் சமயம் செல்வாக்குப் பெற்றுள்ளது. அந்நியர் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள அவர்கள் மேற்கொண்ட பல முயற்சிகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. மா.கா.

**கிழக்கிந்திய வணிகக்குழு**: கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, ஆலந்து, பிரான்சு, தென்மார்க்கு (Denmark) இசுகாட்லாந்து, இசுபெயின், ஆசுத்திரியா, சுவீடன் நாடுகளில் இந்தியாவுடனும் தூரகிழக்கு நாடுகளுடன் வாணிகம் செய்யக் கிழக்கிந்திய வணிகக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளுள் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவே (East India Company) சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்ந்தது. இலண்டன் வியாபாரக் குழு ஒன்று கி.பி. 1599-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தச்சுக்காரர்களுக்கு (The Dutch) எதிராகக் கிழக்கிந்திய நாடுகளுடன் நேரடியாக வாணிகம் செய்வதற்காக அமைக்கப்பட்டது. மேலும், வாசனைத் திரவியங்கள், மிளகு, ஏலம் போன்ற பொருள்களின் மீது தச்சுக்காரர்கள் கொண்டிருந்த ஏகபோக உரிமையை

அழிப்பதே இக் குழுவின் நோக்கமாயிருந்தது. இதற்காக 30,000 பவுன் சேகரிக்கப்பட்டது. தொடக்கத்தில் கிடைத்த ஊதியத்தை (Profit) அதன் பங்குதாரர்களே பகிர்ந்து கொண்டனர். இந்தியாவில் மசூலிப்பட்டினத்தில் கி.பி. 1610-இல் தொழில் நிலையங்களை (Factories) அமைத்தனர். இக்குழு கி.பி. 1612-க்குப்பிறகு சப்பான் வரை சென்றது. தச்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இடையே போட்டிகள் இருப்பினும் சர் தாமசு ரோ என்பவரின் முயற்சியால் ஆங்கிலேயர்கள் மொகலாயப் பேரரசர்களுடன் நல்ல தொடர்பு வைத்திருந்தனர். கி.பி. 1600-இல் இலண்டனைச் சேர்ந்த நூறு ஆங்கில வணிகர்கள் இந்தியாவுடன் நேரடி வாணிகம் செய்யத் துணிந்தார்கள். ஆகவே, அவர்களனைவரும் சேர்ந்து ஒரு வணிகக் குழுவினை ஆரம்பித்து அதற்கு, 'ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு' (The East India Company) எனப் பெயரிட்டனர். அக்குழு இங்கிலாந்து நாட்டு அரசியான எலிசபெத்திடம் இந்தியாவுக்குக் கப்பல் விட அனுமதி பெற்றது. அப்போது அக்பர் மொகலாயப் பேரரசராய் இருந்தார். இக்குழு கி.பி. 1612-இல் தம் சரக்குகளை வைப்பதற்காகச் சரக்கு அறை (Store-house) ஒன்றை மேற்குக் கரையில் உள்ள சூரத்தில் கட்டினர். அதுவே அப்போது முகலாயர்களின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. ஆங்கிலேயர் கி.பி. 1639-இல் சென்னை என்னும் சிறிய ஊரைச் சந்திரகிரிஅரசரிடம்விலைக்கு வாங்கித் தூய சார்சுக் கோட்டையினைக் (Fort St. George) கட்டினர். பம்பாய் கி.பி. 1662-இல் ஆங்கில மன்னருக்குப் போர்ச்சுகல் நாட்டினரால் திருமணப் பரிசாக அளிக்கப்பட்டது. அதுபோல் கி.பி. 1640-இல் சாசகான் (Shajahan) கல்கத்தாவை ஆங்கிலேயருக்கு அளிக்க, அவர்கள் கங்கை ஆற்றின் கரையில் ஊப்ளிக்கு (Hubly) அருகில் ஒரு கோட்டை கட்டிக் கொண்டனர். மேலும், கி.பி. 1700-இல் ஔரங்கசீபின் அனுமதியுடன் கல்கத்தாவில் வில்லியம் கோட்டையைக் (Fort William) கட்டிக் கொண்டனர். இந்நிலையில் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியா வந்தனர். ஆங்கிலேயர், சென்னை,மசூலிப்பட்டினம், வங்காளம் ஆகிய இடங்களில் கோட்டைகட்டி இருந்தனர். பிரெஞ்சுக்காரர்கள் மாகி,பாண்டிச்சேரி,சந்திரநாகூர் ஆகிய இடங்களில்கோட்டைகளை அமைத்துக் கொண்டனர். இந்நிலையில் கி.பி. 1661-இல் இரண்டாம் சார்லசின் சில சலுகைகள் ஆங்கிலேயருக்குப் பயனளித்தன. முகலாயப் பேரரசின் அழிவுக்குப்பின் நாட்டில் அமைதி குறைந்தது. வாணிகத்தில் பாதுகாப்பின்மை ஏற்பட்டது. இக்குழுவினரே உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டியதாயிற்று.

ஐரோப்பாவில் கி.பி. 1746-இல் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையில் போர் ஏற்பட்டது. எனவே, இந்தியாவிலும் இரு சாராருக்கும் போர் ஏற்படும் நிலை உண்டாயிற்று.ஆர்க்காட்டு நவாபு பதவிக்கு முகமதலியும், சந்தா சாகிபும் போட்டியிட்டனர். ஆங்கிலேயர் முகமதலியையும், பிரெஞ்சுக்காரர்கள் சந்தா சாகிபையும் ஆதரித்தனர். இறுதியில் இராபர்ட்டு கிளைவு (Robert Clive) என்னும் ஆங்கிலத் தளபதி திருச்சி மலைக்கோட்டையில் பிரெஞ்சுக்காரரை முறியடித்து முகமதலியைக் காப்பாற்றினார். அதனால், கருநாடகத்தில் ஆங்கிலேயரின் செல்வாக்கு உயர்ந்தது. சிராசு-உத்-தௌலா என்பவர் கி.பி. 1756-இல் வங்காளத்தின் நவாபு ஆகி ஆங்கிலேயருடன் போரிடத் தொடங்கினார். அப்போது கப்பலில் தப்பிச் சென்ற ஆங்கில வீரர்கள் போக, மீதி இருந்த 146 பேரைக் கைதிகளாக்கி ஒரு சிறிய அறையிலடைத்தார். மறுநாள் காலையில் கதவு திறக்கப்பட்டபோது 123 பேர் இறந்து காணப்பட்டனர். இதனைக் 'கல்கத்தா இருட்டறை' (Black Hole of Calcutta) நிகழ்ச்சி என்பர். இதன் பிறகு கி.பி. 1757-இல் பிளாசி என்னும் இடத்தில் போர் நடந்தது. இதில் ஆங்கிலேயர்களுக்குக் கல்கத்தாவைச் சுற்றியுள்ள பகுதிகள் கிடைத்தன. இது ஆங்கில ஆட்சியின் ஆரம்ப வெற்றி ஆகும். கி.பி. 1744 முதல் ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடந்த 20 போர்களும், கி.பி. 1763-இல் ஏற்பட்ட ஒப்பந்தமும் பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தன. பிரெஞ்சியர் பாண்டிச்சேரி, சந்திர நாகூர் ஆகிய இரண்டுமட்டுமே பெறமுடிந்தது. இராபர்ட்டு கிளைவு கி.பி. 1765-இல் வங்காளத்தில் ஆங்கில ஆட்சிக்கு அடிகோலினார்.அவ்வாட்சியினைமுறைப்படுத்த கி.பி. 1773-இல் 'ஒழுங்கு முறைச் சட்டம்' (Regulation Act) கொண்டு வரப்பட்டது. கி.பி. 1784-இல் ஆங்கில அமைச்சர் வில்லியம் பிட்டு (Willaim Pitt) ஒரு சட்டம் இயற்றி ஒழுங்கு முறைச் சட்டத்தில் இருந்த குறைகளை நீக்கினார். பின்பு கி.பி. 1813-இல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதன் மூலம் கிழக்கிந்திய வணிகக் குழுவின் தன்னுரிமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கி.பி. 1833-இல் இயற்றப்பெற்ற சட்டத்தினால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுவின் அதிகாரங்கள் முழுதும் குறைக்கப்பட்டன. எனினும், கி.பி. 1857-இல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்துக்குப் பின் கி.பி. 1858-இல்'விக்டோரியா மகாராணியின்சாசனம்' (Queen's Proclamation) வெளியிடப்பட்டது. இதன் மூலம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுவின் ஆட்சி முழுதும் நீக்கப்பட்டு ஆங்கில அரசின் நேரடி ஆட்சியின் கீழ் இந்தியா வந்தது. பெ.சி.

**கிழக்கு ஆப்பிரிக்க உயர் ஆணையம்:** பிரிட்டனின் கட்டுப்பாட்டிலிருந்த கெனியா,

உகாண்டா, தங்கனீகா ஆகிய கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளின் ஆளுநர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டதே இவ்வமைப்பு. இது 1948-ஆம் ஆண்டு சனவரி முதல் நாளில் தோற்றுவிக்கப்பட்டது. அப்பகுதிகளின் வருவாய், சுங்கவரி, ஆராய்ச்சி போன்ற பொதுத்துறைகளின் வளர்ச்சிக்கென இவ்வமைப்புச் செயற்பட்டது. இது தனிப்பட்ட அரசு அன்று. கிழக்கு ஆப்பிரிக்க உயர் ஆணையம் (East Africa High Commission) இருபத்துமூன்று உறுப்பினர்கள் அடங்கிய கிழக்கு ஆப்பிரிக்க மத்திய சட்ட சபையின் உதவியுடன் இயங்கியது. மா.கா.

**கிழக்கு ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கி**: கிழக்கு ஆப்பிரிக்கச் சமூகத்தின் (East African Community-EAC) அமைப்பு ஆவணத்தில் இவ்வங்கி நிறுவப்படுவதற்கான ஒப்பந்தம் 1967-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் சேர்க்கப்பட்டது. கிழக்கு ஆப்பிரிக்கச் சமூகத்தின் உறுப்பு நாடுகளான கெனியா, தான்சானியா (Tanzania), உகாண்டா (Uganda) ஆகியவற்றினிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் கிழக்கு ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கி (East African Development Bank)1977-ஆம் ஆண்டிலிருந்து தனி வங்கியாகச் செயற்படத் தொடங்கியது.

இவ்வங்கியின் தலைமை அலுவலகம் உகாண்டா நாட்டுக் கம்பாலாவில் (Kampala) செயற்படுகிறது. கிழக்கு ஆப்பிரிக்கச் சமூகம் 1977-இல் செயலிழந்தது எனினும், அதன் சொத்தைப் பங்கீடு செய்வதில் உறுப்பு நாடுகளிடையே பூசல்கள் நிகழ்ந்தமையால், கிழக்கு ஆப்பிரிக்க வங்கி தனி நிதி அமைத்துச் செயற்படுவதில் இடையூறுகளும் காலதாமதமும் ஏற்பட்டன. வங்கியின் பணிகளுக்கான புதிய ஒப்பந்தம் 1979-இல் எழுதப்பட்டது. புதிய ஒப்பந்தத்தின்படி இவ்வங்கி கெனியா, தான்சானியா, உகாண்டா ஆகிய மூன்று உறுப்பு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான நிதியைத் திரட்டுதல், கடன் வழங்குதல், திட்டமிடல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

கிழக்கு ஆப்பிரிக்க வங்கி உறுப்பு நாடுகளின் தொழிற்றுறைத் திட்டங்கள், வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள், அகக் கட்டுமானப் பணிகள், தொழில்நுட்ப அறிவைப் பெருக்குதல், அறிவுரை வழங்கல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்துப் பணியாற்றவேண்டும் என 1980-இல் தன் இலக்குகளை வரையறுத்தது. இசுவீடன் (Sweden) நாடு 1981-இல் இவ்வங்கிக்கு 2.2. மிலியன் குரோனோ கடன்களை வழங்கியது.

இசுவீடன் நாட்டு வங்கித் தொழிலர் இலார்சு ஏகென்கிரென் (Lars Ekengren) கிழக்கு ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கியின் பொது இயக்குநராகப் பணியாற்றுகிறார். வங்கி இயக்குநரின் குழு 1982-இல் 75 மிலியன் கடன்களை வழங்க முடிவுசெய்து திட்டங்களை வகுத்தது. வங்கி, வேளாண்மைத் துறை முன்னேற்றத்திற்கும், ஊரகத் தொழிற்றுறை வளர்ச்சிக்கும், நீர்ப்பாசனம் போக்குவரத்து போன்றவற்றின் முன்னேற்றத் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து நிதி உதவிகளை வழங்குகிறது. கருத்தரங்குகள், கலந்தாலோசனைகள், ஆய்வுகள் ஆகியவற்றின் மூலம் உறுப்பு நாடுகளுக்கு அறிவுரைகளை இவ்வங்கி வழங்குகிறது. அ.கு.சா.

**கிழக்குத் தொடர்ச்சி மலைகள்**: தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாக் கரைப் பகுதிக்கு இணையாகச் செல்லும் மலைத் தொடர் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் எனப்படும். இவை உயரங் குறைந்தனவாய் இடைவெளிகளுடன் குன்றுகளாகக் காட்சியளிக்கின்றன. இவற்றுள் பவளமலை, கொல்லி மலை, பச்சை மலை, சிறுமலை ஆகியன முக்கியமானவை. இம்மலைத் தொடர்கள் தமிழகத்தின் வடக்கில் தென்மேற்காகத் திரும்பி நீலிமலையுடன் தொட்டபெட்டா என்னுமிடத்தில் இணைகின்றன. மா.கா.

**கிள்ளி** சோழர்களைக் குறிக்கும் பொதுப்பெயர்களுள் ஒன்று. சோழ மன்னர்களைக் குறிக்கும் பட்டப் பெயர்களைச் சூடாமணி முதலிய நிகண்டுகள் தொகுத்துக் கூறுகின்றன. அப்பெயர்களுள் கிள்ளி இடம்பெற்றுள்ளது. கிள்ளி என்ற பெயர் சோழப் பெருங்குடியின் ஒரு பிரிவினைக் குறிக்க அமைந்தது என்று சிலர் கருதுகின்றனர். இப்பெயர்க் காரணம் கூறமுற்பட்டோர், சிலர் 'பகைவர்களைத் தொடக்கத்திலேயே கிள்ளி எறியும் வீரச் செயலோடு இணைத்தும், கிளை (கிள்ளை) அல்லது கிளி இப்பிரிவினருக்குச் சின்னமாக இருந்தது' என்று கூறப்படுவதோடு இணைத்தும் சோழமன்னர்களுக்கு இப்பெயர் அமைந்திருத்தல் கூடும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

கிள்ளி என்னும் சொல் புறநானூறு, அகநானூறு, மணிமேகலை, முத்தொள்ளாயிரம் ஆகிய நூல்களில் பொதுவாகச் சோழ மன்னனைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனாதி திருக்கிள்ளி, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி முதலியனவாக முன் அடையடுத்தும், கிள்ளிவளவன் எனப் பின் அடையடுத்தும் தனித்தனியே வெவ்வேறு சோழமன்னனைச் சுட்டும் பெயராகவும் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.

கிள்ளி என்னும் மன்னன் பெயரால், கிள்ளி மங்கலம் என்றோர் ஊர்ப் பெயர் சங்க காலத்தில் வழங்கி வந்தமையினைக் கிள்ளி மங்கலங் கிழார் என்னும்சங்க இலக்கியப் புலவர் வரலாற்றால் அறிய முடிகிறது. அ.மா.ப.

***கிள்ளி மங்கலங்கிழார்*** சங்கப் புலவர்களுள் ஒருவர். கிள்ளி மங்கலம் இவர்தம் ஊராகும். இவருடைய நான்கு பாடல்கள் குறுந்தொகை என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன. அவை முறையே குறிஞ்சி (குறு. 76, 152). முல்லை (குறு. 110), மருதம் (குறு. 181) ஆகிய திணைகளில் அமைந்துள்ளமையால் இவர் பலவகைத் திணைகளிலும் பாடல் இயற்றும் ஆற்றல் பெற்று விளங்கினார் என்பது புலனாகிறது. இவர் பாடல்கள் உவமை, பாநயம் முதலிய நலங்கள் பெற்றுக் கற்போர்க்குச் சுவையளிப்பனவாய் விளங்குகின்றன. ‘சிலம்பில் சேம்பின் அலங்கல் வல்இலை, பெருங் களிற்றுச் செவியின் மான’ என்ற அடிகளில் யானையின் அகன்ற காதிற்குச் சேம்பின் இலை உவமையாகக் கூறப்பட்டிருப்பது மிகப் பொருத்தமாக உள்ளது. தண்வரல் வாடை தூக்கும் கடும்பனி அற்சிரம் நடுக்கும் துன்பம் நீக்க நம் தலைவர் வரவில்லை ஆகலின், அவர் கல்வரை மார்பர் என இடித்துரைப்பதாக அமைந்த குறிஞ்சித் திணைப்பாடல் இவர்தம் புலமைத் திறத்தினை வெளிப்படுத்தும் வாயிலாகும். மேலும், இவரியற்றிய முல்லைத் திணைப்பாடல், இன்னாது எறிதரும் வாடையின் நிலையினை விளக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. இவர்தம் பிறிதொரு குறிஞ்சிப் பாடலில் உவமையினை எடுத்தாண்டுள்ள திறம் போற்றுதற்குரியதாகும். தாயில்லாத ஆமை முட்டையைப்போல என்ற உவமையைக் காதலர் பிரிந்து செல்லத் தனித்துள்ள தலைவியின் நிலையினை உணர்த்தக் காட்டியுள்ளார். அடுத்து, ‘யாமைப் பார்ப்பின் அன்ன’ என்ற உவமையால் காதலரைக் காண்பதால் வளர்ந்து சிறக்கும் காமத்தின் இயல்பினை அழகுற விளக்கியுள்ளார்.

பரத்தையிற் பிரிந்தான் எனத் தலைவனைத் தோழி பழித்தவழி, அவனது குறைகளைப் பொறுத்து அவனை இயற்பட மொழியும் திறனுடைய தலைவியின் கூற்றாக இவர்தம் மருதப் பாடல் அமைந்துள்ளது (குறு, 181). அதன்கண் ‘ஈன்றணிக்காரான் உழவன் யாத்த குழவியின் அகலாது பாற்பெய்பைம் பயிர் ஆரும்’ எனவும், ‘துனியிடை இன்னர் என்னும் இன்னாக் கிளவி’ எனவும் குறிப்பிட்டுள்ள பகுதிகள் இலக்கியச் சுவை மிக்கனவாய் ஒளிர்கின்றன. கி.கோ.

***கிள்ளி மங்கலங்கிழார் மகனார் சேரகோவனார்*** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் கோவன் என்பதாகும். பாண்டிநாட்டிலுள்ள கிள்ளிமங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். கிள்ளி மங்கலங்கிழார் என்னும் தந்தையார் பெயரோடு இவர் பெயரும் சேர்ந்து இவ்வாறு வழங்கப்பெற்றார். இவர் பெயரில் அமைந்துள்ள சே என்னும் அடைமொழியைப் பெற்ற வேறு புலவர் சிலரும் உள்ளனர். ஆனால், அவ்வடைமொழி பெற்ற காரணமும் அதன் பொருளும் விளங்கவில்லை. அவ்வடைமொழி கோ என்னும் சொல் திரிந்தமைந்த வடிவம் எனக் கருதுவாருமுளர். வேளாளர் மரபினைச் சேர்ந்த இவர் பாடியதாக நற்றிணையில் ஒரே பாடல் (365) இடம்பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையிலமைந்த அப்பாடல், தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைவியிடம் இயற்பழித்துக் கூறுவதாக உள்ளது. அப்பாடலில் தலைவன் சிறைப்புறமாக இருப்பதைத் தோழி அறியாள்போலத் தலைவியிடம் ‘நமக்குள்ள காவல்களைக் கடந்து, ஊர்ப் பொதுமன்றத்திடத்துச் சென்று பகற்பொழுதில் அனைவரும் காணும்படி தலைவன் ஊரைக் கேட்டறிந்து செல்வோமா’ என்பதைப் ‘பெருங்கடை இறந்து மன்றம் போகிப், பகலே பலரும் காண வாய்விட்டு, அகல்வயிற் படப்பை அவனூர் வினவிச் சென்மோ வாழி’ என்று கூறும் வாயிலாகத் தலைவன் விரைவில் மணமுடிக்க வேண்டும் என்பதையும் அவன்பால் கொண்டுள்ள அன்பின் ஆழத்தையும் குறிப்பால் வெளிப்படுத்தியிருப்பது சிறப்பாக உள்ளது. வீ.சே.

***கிள்ளி வளவன்***: கரிகால் வளவனுக்குப் பின் அவன் மகன் வேற்பஃறொடைப் பெருவிறல் கிள்ளி என்பவன் புகாரை ஆண்டான். அவனுக்கு மூன்று மக்கள் இருந்தனர். அவர்கள் 1. கிள்ளி வளவன், 2. நலங்கிள்ளி, 3. மாவளத்தான். இக் கிள்ளிவளவன் குள முற்றத்து துஞ்சிய கிள்ளிவளவன் என அழைக்கப்படுகிறான். இவனை ஆடுதுறை மாசாத்தனார், ஆலத்தூர் கிழார், ஆவூர் கிழார், இடைக் காடனார், ஏறக்காட்டூர் தாயம் கண்ணனார், ஐயூர் முடவனார், கோவூர் கிழார், நக்கீரர், நல்லிறையனார், மாறோக்கத்து நப்பசலையார், வெள்ளைக்குடி நாகனார் போன்ற பெரும் புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். இவனே, ஒரு சிறந்த கவிஞன். இவன் கொடைத் திறனைப் பற்றி வெள்ளைக்குடி நாகனார் பாடியுள்ளார். மேலும், இவன் கருப்பூரில் சேரமானோடு பொருது வென்றதைப் பாராட்டி மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவர் பாடியுள்ளார். ஒரு முறை மலையமான் திருமுடிக்காரியுடன் இவன் தொடுத்த போரில் மலையமான் தோற்கடிக்கப்பட்டான். அவன்

பச்சிளங் குழந்தைகள் இருவரையும் கொண்டு வரச் செய்து யானைக்காலில் இட்டுக் கொல்ல ஏற்பாடு செய்தான். அதனை அறிந்த கோவூர்கிழார் அரசனுக்கு அறிவுரைகளைக் கூறி அக்குழந்தைகளைக் காப்பாற்றினார். இவன் நாகர் அரசர் வளைவணன் என்பவனின் மகளாகிய பீலிவளை என்பவளை மணந்தான். மேலும், மாவலி அரசனின் பரம்பரையில் வந்த அரசர் ஒருவரின் மகளாகிய சீர்த்தி என்ற வேறொரு பெண்ணையும் மனைவியாகக் கொண்டிருந்தான். இவன் சேர மன்னனுடன் ஏற்பட்ட போரில் குளமுற்றம் என்ற இடத்தில் இறந்ததால் 'குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்' என்று அழைக்கப்படுகிறான். இவனது இறப்பினையும் கொடைச் சிறப்பினையும் சிறப்பித்து நப்பசலையார் என்ற புலவர் பாடுகின்றார். மேலும் நக்கீரர் இவன் பெருமாள் காசர்களோடு போரிட்டு வென்றதைப் பாடுகின்றார். மேலும், பாண்டிய மன்னனாகிய பழையன் மாறன் என்பவன் இவனால் தோற்கடிக்கப்பட்டான். அதை அறிந்து சேர மன்னன் கோக்கோதை மார்பன் மகிழ்ந்தான்.

கிள்ளி வளவன், தொடுகழற்கள்ளி, நெடுமுடிக் கிள்ளி, மாவண்கிள்ளி, வடிவேற்கிள்ளி, வென்வேற் கிள்ளி என்ற பெயர்களுடைய சோழன் ஒருவன் வரலாறு மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது. அவன் மனைவி மாவலி மரபினரால் பாண அரசர் குடியில் வந்த சீர்த்தி என்பவள் ஆவாள். அவள் மகனே மணிமேகலை மீது கொண்ட விருப்பால் அவளைத் தொடர்ந்ததால் பின்னர் வித்தியாதரனால் கொலை செய்யப்பட்ட உதயகுமாரன் ஆவான். இக்கிள்ளி காவிரியாற்றில் தன்னை வந்தெதிர்த்த சேர, பாண்டியரைத் தன் தம்பி இளங்கிள்ளியை அனுப்பி வென்றான். மேலும், இவன் ஒரு நாள் புகார்க் கடற்கரையில் நாக நாட்டுப் பெண் பீலிவளையைப் பார்த்துக் காதல் கொண்டு அவளுடன் ஒரு திங்கள் வரை இருந்தான். பின் அவள் மறைந்து விட்டதை அறிந்து அதே நினைவில் இருந்ததால், பிற செயல்களை மறந்தான். அவ்வாறே ஆண்டுதோறும் செய்யவேண்டிய இந்திர விழாவினை மறந்தான். அதனால் மணிமேகலா தெய்வத்தின் ஏவலால் புகாரைக் கடல் கொண்டது.

பொதுவாக, சிலப்பதிகாரம் கூறும் வளவன் கிள்ளியும், மணிமேகலை கூறும் மாவண் கிள்ளியும், கோவூர் கிழார் போன்ற பெரும் புலவர் பலரால் பாடப் பெற்ற கிள்ளி வளவனும் ஒருவனே என்பாரும், ஒருவனல்லன் வேறு வேறானவன் என்பாரும் உளர். கிள்ளி வளவன் என்ற பெயருடைய வரலாறுகள் ஒன்றிற்கொண்டு வேறுபட்டு இருத்தலால், இக்கருத்தினை அறுதியிட்டு கூறுதல் இயலாது. பெ.சி.

**கிளமெண்டு** என்ற பெயரில் மொத்தம் 14 போப்பாண்டவர்கள் பல காலகட்டங்களில் இருந்தனர். அதே பெயரில் மூன்று போட்டிப் போப்புகளும் இருந்தார்கள். உண்மையான போப்புகளாக ஏற்கப்பட்டுக் கிறித்தவத் தேவாலயத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரித்தவர்கள் கீழ்க்காணுபவர்களே யாவர்:

**கிளமெண்டு, முதலாம்**: புனிதர் பீட்டரால் கிறித்தவப் புனிதப் பணிக்கென நியமிக்கப்பட்ட இவர் கி.பி. 92 முதல் 101 வரை போப்பாக விளங்கினார். இவரும் பிலிப்பியன்சின் கிளமெண்டும் ஒருவரேயென வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். தொடக்கக் காலப் போப்புகளுள் முக்கியமான இவர்தம் படைப்புகள் புகழ் வாய்ந்தனவாகும்.

**கிளமெண்டு, இரண்டாம்** பாம்பெர்க்கு என்னுமிடத்தில் அதிமேற்றி இராசராகத் திகழ்ந்த இவரை மூன்றாம் என்றி மன்னர் கி.பி. 1046 திசம்பர் 24-இல் போப்பாண்டவராக ஆக்கினார். இவர் காலத்தில் சமயத் துறையில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தம் கருத்துகளை ஆணைகளாக அறிவித்தலின் பொருட்டு உரோம் நகரில் ஒரு கிறித்தவச் சபைக் கூட்டத்தை இவர் கி.பி. 1047-இல் கூட்டினார்.

**கிளமெண்டு, மூன்றாம்** கி.பி. 1181 முதல் 1191 வரை போப்பாகச் செயற்பட்ட இவர் காலத்தில் கடுமையான சமயப் பூசல்கள் கிறித்தவத் திருச்சபையில் ஏற்பட்டன. இவர் காலத்தில்தான் இசுகாட்லாந்து தேவாலயம் உரோமானியத் திருச்சபையின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இவர் கி.பி. 1191-இல் காலமானார்.



கிளமெண்டு, நான்காம்

**கிளமெண்டு, நான்காம்**: அதிமேற்றி இராசராக வும் குருவாகவும் பணியாற்றிய இவர் கி.பி. 1265 முதல் 1268 வரை போப்பாண்டவராகச் செயற்பட் டார். இவர் காலத்தில் கிறித்தவத் தேவாலயத் தலைமைப்பீடம் கடுமையான அரசியல் அச்சுறுத்தல் களால் நெருக்கடிக்குள்ளாயிற்று. இவர் கி.பி. 1268 -இல் காலமானார்.

**கிளமெண்டு, ஐந்தாம்**: அவிக்னான் பகுதியிலிருந்து போப்பாக ஆன முதல்வர் இவர்தான். இவர் கி.பி. 1305 முதல் 1314 வரை போப்பாகச் செயற்பட்டார்; சிறந்த கல்விமான்; ஆற்றல் வாய்ந்த அறிஞர்.



கிளமெண்டு, ஐந்தாம்

பல மொழிகளின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட இவர் தேவாலயம் திருச்சபை ஆகியவற்றின் மதிப்பினை உயர்த்தக்கூடிய வகையில் நிலையான சட்டங்களை உருவாக்குதில் ஈடுபாடு காட்டினார். இவர் கி.பி. 1314-இல் இயற்கையெய்தினார்.


**கிளமெண்டு, ஆறாம்**: பிரான்சு நாட்டவரான இவர் கி.பி. 1342 முதல் 1352 வரை போப்பாகத் திகழ்ந்தார். இவர் படிப்படியாகத் தேவாலயத்தில் பல பதவிகள் வகித்துப் போப்பானவர்; கலையுணர் வுடன் அறிவாற்றலும் நிரம்பப் பெற்றவர். இவர் அவிக்னான் பட்டணத்திலுள்ள அரண்மனையைச் சீராக்கிப் புதுப்பித்தார். இவர் தம் காலத்தில் ஏற் பட்ட கருங்கொள்ளைநோயின்போது இன்னலுற்ற வர்களுக்குப் பேருதவியாய் இருந்தார்.

**கிளமெண்டு, ஏழாம்**: கி.பி. 1523 முதல் 1534 வரை போப்பாகச் செயற்பட்டார். இவர் காலத்தில் முதலாம் ப்ரான்சிசு, ஐந்தாம் சார்லசு ஆகிய



கிளமெண்டு, ஏழாம்

மன்னர்களுக்கிடையில் எழுந்த சமயப் போட்டி களால் இவர் தம் பணிதனைச் செவ்வனே ஆற்ற முடியாதவராயிருந்தார். திடமான கொள்கையற்ற வராயிருந்ததால் திட்டவட்டமான முடிவுகளை இவர் எடுக்க இயலவில்லை. உலூதரன் பிரிவினரைப் பற்றி முடிவெடுப்பது இவரது பெருங்கடமையாயிருந் தது. இங்கிலாந்தின் மன்னரான எட்டாம் என்றி யின் மணவினைச் சிக்கலையும் இவர் தீர்க்க வேண் டியவராயிருந்தார்.




கிளமெண்டு, எட்டாம்

**கிளமெண்டு, எட்டாம்**: கி.பி. 1592 முதல் 1595 வரை போப்பாண்டவராயிருந்தார். அரசியல் போன்ற துறைகளில் இவர் கவனம் செலுத்தாமல் இறையியல் பணிக்கு மட்டும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட வர். இசுபானியக் கட்டுப்பாடுகளிலிருந்து போப்பு களை விடுவிக்க இவர் பல வழிகளை மேற்கொண் டார். ஏசு சங்கத்தினருக்கும் தோமினிகன் பிரிவின ருக்கு மிடையில் இவர் காலத்தில் பிளவுகள் ஏற் பட்டன.

**கிளமெண்டு, ஒன்பதாம்**: கி.பி. 1667 முதல் 1669 வரை போப்பாக விளங்கினார். பிரான்சின் மன்னர் பதினான்காம் உலூயியின் சமயக் கொள்கைகள்

இவர் கருத்துகளைப் பாதிப்பனவாய் இருந்தன. சேன்சேனியப் பிரிவினரிடையே இவர் அமைதியை உருவாக்கினார்.

**கிளமெண்டு, பத்தாம்**: கி.பி. 1670 முதல் 1676 வரை போப்பாண்டவராகச் செயற்பட்டவர்.



கிளமெண்டு, பத்தாம்

உரோமில் பிறந்த இவர் தம் எண்பதாம் வயதில் போப்பு ஆனார்.

**கிளமெண்டு, பதினோராம்**: கி.பி. 1700 முதல் 1721 வரை போப்பாக விளங்கினார். இசுபானிய வாரிசுரிமைப் போர் இவர் காலத்தில்தான் நிகழ்ந்தது. சேன்சேனியர்களின் சிக்கல் இவரது பதவிக் காலத்தில் மீண்டும் தலைதூக்கியது. இவர் நடவடிக்கைகள் கத்தோலிக்கர்களிடையே வெறுப்பைத் தூண்டின.



கிளமெண்டு, பதினோராம்


**கிளமெண்டு, பன்னிரண்டாம்** கி.பி. 1730 முதல் 1740 வரை அப்பணியில் இருந்தார். இவர் உடல்நலம் குன்றியவர்; கடும் உழைப்பாளி; போப்புகளின் செல்வாக்கை உயர்த்த விழைந்தார்; தேவாலயங்களின் உரிமைகளைக் காக்கப் போராடினார். இவர் கி.பி. 1732க்குப் பின் தனது பார்வையினை இழந்து வருந்தியிருந்தார்.

**கிளமெண்டு, பதின்மூன்றாம்**: கி.பி. 1758 வரை போப்பாக விளங்கிய இவர் காலத்தில் ஏசு சங்கத்தினர் கடுஞ் சோதனைகளுக்கு உள்ளாயினர்.



கிளமெண்டு, பதின்மூன்றாம்

**கிளமெண்டு, பதினான்காம்** கி.பி. 1768 முதல் 1774 வரை போப்பாக விளங்கியபோது ஏசு சங்கத்தினருக்கும் கத்தோலிக்க அதிகாரப் பிரிவினருக்குமிடையிலான பிளவுகளைத் தீர்க்க முனைந்தார்.



கிளமெண்டு, பதினான்காம்

மா.கா.

**கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி** ஒருவகை செயல்சார் உளப்பிணி (Functional Psychosis) ஆகும். இப்பிணியால் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையும் (Mood) மனவெழுச்சிகளும் (Emotions) சாதாரண

மாக இருப்பதைவிட மாறுபட்டுக் கொண்டிருக்கும். கிரெப்ளின் என்பவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இதனை விவரித்து, இப்பெயரினை அளித்தார். இப்பிணியால் பாதிக்கப்பட்டவர்களுள் சிலர் கிளர்ச்சியூட்டப்பட்ட நிலையில் (Manic State) இருப்பர்; மற்றும் சிலர் உளச்சோர்வு நிலையில் (Depression State) இருப்பர்; ஏனையோர் இவை இரண்டும் கலந்த ஒரு நிலையிலோ (Mixed State) இவற்றுள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறிக் கொண்டோ இருப்பர். எனவே, இது 1. கிளர்ச்சி நிலைமை, 2. உளச்சோர்வு நிலைமை 3. இரண்டும் மாறிமாறியோ கலந்துமோ வருகின்ற நிலைமை என மூன்று வகைப்படும்.

இது பெரும்பாலும் ஒருவரைச் சுமார் 44 வயதுக்கு மேலேயே தாக்குகிறது. பெரும்பான்மையான நோயாளிகள் 25 வயதிலிருந்து 65 வயதுக்குட்பட்டவராக இருக்கின்றனர். இது பின் குமரப்பருவத்திலிருந்து வயோதிகப்பருவம் வரை எந்தப் பருவத்திலும் தோன்றலாம். இது ஆண்களை விடப் பெண்களிடம் அதிகம் காணப்படுகிறது.

கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி (Manic Depressive Psychosis) மிகவும் குறைந்த நேரமே இருக்கும். அடிக்கடி ஒருவரைத் தாக்கும்; அதன்பின் அந்நோயாளி இயல்பு நிலைக்குத் திரும்பிவிடுவான்; அவனிடம் எந்தக் குறைபாடும் காணப்படாது. ஆனால் மறுபடியும் இப்பிணி அவனுக்கு ஏற்படக்கூடும். ஒவ்வொருமுறை இந்நோய் ஏற்படும்பொழுதும் இது சில நாள்களுக்கோ தொடர்ந்து ஓராண்டு வரையிலுமோ கூட நீடிக்கலாம்.

**பிணியின் பொதுவான அறிகுறிகள்: கிளர்ச்சி நிலைமையில்**கிளர்ச்சி பொருந்திய மனவெழுச்சிகளும் மனநிலையும் காணப்படும். இந் நிலையில் உள்ள நோயாளிகளின் உளம், நடத்தை ஆகியவற்றின் அறிகுறிகள் இவற்றைப் பொறுத்தே அமைந்திருக்கும். இவர்கள் எண்ணத்திலும் செயலிலும் அதிக வேகம் கொண்டவர்களாய் இருப்பார்கள். அதிக உற்சாகமும் நம்பிக்கையும் இவர்களிடம் காணப்படுகின்றன. இவர்களுக்குத் தொடர்ந்து கவனம் செலுத்துவது சிரமமாக இருக்கும். கவனம் எளிதில் சிதைந்துவிடும். தீர்ப்புத் திறனும் பாலுணர்வு நெறிகளும் குறைந்து காணப்படும். தாங்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்பது போன்ற மேன்மைத் திரிபுணர்வுகள் இந்நோயாளிகளிடம் காணப்படும். இவர்கள் மிகுந்த சுறுசுறுப்புடையவர்களாக இருப்பர்; உரத்துப் பேசுவார்கள் தங்களுக்கு அளவில்லாத சக்தி இருப்பதாக எண்ணிக் கொண்டு, எல்லாவிதமான செயல்களிலும் ஈடுபடுவார்கள். ஓர் எண்ணத்திலும் செயலிலுமிருந்து மற்றொன்றுக்கு எளிதில் மாறுவார்கள். இவர்களுடைய உற்சாகமும், உள இயக்கச் (Pychomotor) செயல்களும் பல்வேறு அளவுகளில் காணப்படும். இவற்றைப் பொறுத்து இந்நிலையை மிதமான கிளர்ச்சி நிலைமை (Hypomania), கடுங் கிளர்ச்சி நிலைமை (Acutemania), மிகக்கடுங் கிளர்ச்சி நிலைமை (Hyperacutemania) என மூன்றாகப் பிரிக்கலாம்.

**மிதமான கிளர்ச்சி நிலைமையில்** உள்ளவர்கள் இயல்பு நிலையில் உள்ளவர்களைவிடச் சற்று அதிகமான உற்சாகமும் செயல்களில் விரைவும் கொண்டிருப்பதால், இவர்களை இனம் கண்டு கொள்வது கடினம். எப்பொழுதும் அலைந்து கொண்டும், ஏதாவது செய்து கொண்டும் இருக்கும் இவர்கள், தங்கள் சொந்தக் கடமைகளையும் பொறுப்புகளையும் கூடப் புறக்கணிக்கும் பொழுதுதான் இவர்களிடமுள்ள உளப்பிணி புலனாகிறது.

இவர்கள் தங்கள் வாழ்க்கையில் இதுவரை அடைந்திராத மகிழ்ச்சியை இப்பொழுது அனுபவிப்பதாக எண்ணுவார்கள்; தம் திறமையில் மிகுந்த நம்பிக்கையும், நகைச்சுவை உணர்வும் கொண்டவராக இருப்பார்கள். பேச்சு வேகமாகவும் கோர்வையாகவும் இருக்கும். ஆனால் பேச்சில் கவனம் அடிக்கடி தடைப்படும். பேச்சின் சாராம்சம் விரைவில் மாறும். வேகமாக நடத்தல், தொலைபேசியில் அதிக நேரம் பேசுதல், மற்றவர்களுக்கு இடைவிடாது கடிதம் எழுதுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள் பால் உணர்ச்சி மிகுதியால் எதிர் பாலாருடன் அதிகம் உறவு கொள்கின்றனர். இவர்கள் பொய்த்தோற்றங்கள் (Hallucinations) காண்பதில்லை. திரிபுணர்வுகளும் (Delusions) இவர்களிடம் ஏற்படுவதில்லை. ஏதாவது வேலையில் ஈடுபடும் பொழுது, சாதாரண மனிதர்களைவிட இவர்களின் உற்பத்தித்திறன் அதிகமாக இருக்கும். ஆனால், இவர்களால் எந்த ஒரு வேலையிலும் நிலைத்துநிற்க முடிவதில்லை. பொதுவாகத் தங்கள் நிலையை அறிந்து கொள்வது குறைவதால், மற்றவர்கள் இவர்களிடமுள்ள உளப்பிணியைச் சுட்டிக் காண்பிக்கும்பொழுது இவர்கள் கோபமும் எரிச்சலும் கொள்கின்றனர்.

**கடுங் கிளர்ச்சி நிலைமையில்** எண்ண ஓட்டங்கள் அதிகமாகின்றன. பேச்சில் வேகம் அதிகமாக இருக்கும். பேச்சில் கோர்வு இருப்பதில்லை. மகிழ்ச்சியான மனநிலையிலிருந்து விரைவில் கோபமும் எரிச்சலும் கொள்வர். திரிபு எண்ணங்களும் பொய்த்தோற்றங்களும் சில சமயங்களில் காணப்படும். இவர்

கள் தங்களைக் கடவுளின் தூதுவர்கள், நாட்டின் தலைவர் என்றெல்லாம் எண்ணிக் கொண்டுபெருமை பேசிக் கொள்வார்கள்; அதனால் மற்றவர்களை அதிகாரம் செய்யவும் முயல்வார்கள்; இல்லாத ஒலியைக் கேட்பார்கள்; கற்பனையில் மனிதர்களிடம்பேசுவார்கள். பாலுணர்வுகள் சார்ந்த ஒழுக்கக் குறைபாடுகளும் இவர்களிடம் காணப்படும். நிலை கொள்ளாமல் எந்நேரமும் அலைந்து கொண்டிருப்பதால், இந் நிலையில் எந்தச்செயலையும் இவர்களால் செய்ய முடிவதில்லை. இவர்கள் பொது இடங்களில் உரக்கக் கூச்சலிடுவார்கள்; பேசுவார்கள்; அதனால் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையூறு ஏற்படுத்துவார்கள்; மேலும், பொருள்களை உடைத்தல், மற்றவர்களை அடித்தல் முதலிய வன்முறைச் செயல்களிலும் ஈடுபடுவார்கள். இடம், காலம், தாம் யார் என்பன பற்றிய ஒழுங்கு குலைதலும் (Disorientation) காணப்படும்.

**மிகக் கடுமையான கிளர்ச்சி நிலைமை:** பார்வை வெறித்தும், பேச்சுச் சோர்வின்றியும் காணப்படும். இந்நிலையில் உள்ளவர்கள் மிகவும் நிலை குலைந்தும், ஒழுங்கு குலைந்தும் காணப்படுவார்கள். காட்சி, கேள்விப்புலன் சார்ந்த பொய்த் தோற்றங்கள் இவர்களிடம் அதிகம் ஏற்படுகின்றன. இடைவிடாத அசைவில் ஈடுபடுவதால் எளிதில் சோர்ந்து விடுவார்கள். இவர்களின் உடல் எடைகுறைந்து நோய் தாக்கக் கூடிய நிலைமையை அடைகிறது.இவர்களின் நடத்தை கேடாகவும் வெட்கமற்றும் இருக்கும். இவர்கள் மற்றவர்களுக்கும் தங்களுக்கும் ஆபத்தைவிளைவிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள்.

**சோர்வு நிலைமை** உள்ளவர்களின் எண்ணத்திலும் பேச்சிலும் செயலிலும் வேகம் குறைந்து காணப்படும். இவர்கள் தனிமையை அதிகம் நாடுவார்கள். மன்னிக்க முடியாத தவறுகள் செய்துவிட்டதாகக் கருதி, அதனால் குற்ற உணர்ச்சி கொள்கிற சோர்வுடைமைத் திரிபுணர்வுகள் இவர்களிடம் காணப்படும். தீர்க்க முடியாத நோய் தங்களுக்கு இருப்பதாக எண்ணும் திரிபுணர்வும் இவர்களிடம் ஏற்படும். இவர்கள் பொய்த் தோற்றங்களையும் காண்பார்கள்.இவர்கள் வாழ்க்கை பயனற்றது; வெறுமை நிறைந்தது; கெட்டவையே இனி நடைபெறும் என்று எண்ணுவார்கள். உற்சாகமின்மையும் அளவு கடந்த வருத்தமும் இவர்களிடம் வெளிப்படும். அதனால் எதைப் பற்றியும் சிந்திக்கவோ வாழ்வின் சிறு தேவைகளைக் கூட நிறைவேற்றவோ இயலாதவர்களாவார்கள். இவர்களுள் 75 விழுக்காட்டினர் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தை மேற்கொள்வார்கள். இவர்களின் உள்ளம், செயல் ஆகியவற்றின் நிலையைப் பொறுத்துச் சோர்வு நிலைமையை மித உளச்சோர்வு நிலைமை (Simple Depression), கடும் உளச் சோர்வு நிலைமை (Acute Depression), மிகக்கடும் உளச் சோர்வுநிலைமை (Hyperacute Depression) எனமூன்றாகப் பிரிக்கலாம்.

**மித உளச் சோர்வு நிலைமை** உள்ளவர்கள் ஓரளவு வருத்தமும் சோர்வும் உற்சாக மின்மையும் உடையவர்களாக இருப்பார்கள்; தாங்கள் வாழத் தகுதியற்றவர்கள் என எண்ணுவார்கள். மன்னிக்க முடியாத பாவம் செய்தது போன்ற பொய்யான எண்ணமும், அதனால் குற்ற மனப் பான்மையும் இவர்களிடம் காணப்படும். இத்தகைய எண்ணங்களுடன் இவர்கள் தனிமையில் வெறுமனே இருக்க விரும்புவார்கள். இவர்களிடம் பொய்த் தோற்றங்களும் திரிபுணர்வுகளும் அவ்வளவாகக் காணப்படுவதில்லை. நினைவு நல்ல நிலையில் இருப்பதால் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிப்பார்கள்.ஆனால், பேச்சு மிகக் குறைவாகவும் பதில்கள் ஒரு சொல்லாகவும் இருக்கும். இவர்களிடம் தற்கொலை நோக்கம் எண்ணத்திலும் செயலிலும் காணப்படும்.

**கடும் உளச் சோர்வு நிலைமை** உடையோரிடம் வருத்தம் சற்று அதிகமாகக் காணப்படும். இவர்கள் தங்கள் மேலேயே கோபமும் வெறுப்பும் கொள்வார்கள். பாவம் செய்துவிட்டாற் போன்ற திரிபுணர்வுகளும், தீர்க்க முடியாத நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது போன்ற அச்சம் தரும் மனநோய் திரிபுணர்வுகளும் இவர்களிடம் காணப்படும்; கேள்விப்புலன் சார்ந்த பொய்த் தோற்றங்களும் தோன்றும். ஆனால், இவை தெளிவில்லாமலும் நிலையற்றதாகவும் இருக்கும்.

**மிகக் கடும் உளச் சோர்வு நிலைமையில்** எல்லை மீறிய வருத்தமும் செயல்களின் வேகக் குறைவும் இருக்கும். இந்நிலையில் உள்ளவர்கள் எந்நேரமும் படுக்கையில் அசைவற்றுக் கிடப்பார்கள். தங்கள் தேவைகளைக் கூட இவர்களால் கவனிக்க இயலாது. இந்நிலையில் எவரேனும் கவனிக்காவிடில் இறந்து விடுவார்கள். தாங்கள் வருத்தத்தில் ஆழ்ந்து விடுவதால், தங்களைச் சுற்றி நடப்பதோ பேசுவதோ எதுவும் இவர்களுக்குத் தெரிவதில்லை.இவர்கள் முழுவதுமாகப் பேச மறுத்து விடுவார்கள். அவ்வப்பொழுது சிறு முனகல் ஒலி மட்டுமே இவர்களிடமிருந்து எழும்பும். உடல் எடை குறைவதால் எளிதாக நோய் தாக்கக்கூடிய நிலையை இவர்கள் அடைவார்கள்.

**கிளர்ச்சியும் உளச் சோர்வும் கலந்த நிலைமை:** கிளர்ச்சியும் சோர்வும் கலந்த நிலைமையில் உள்ளத்தில் வருத்தமும் செயல்களில் வேகமும் இருக்கலாம்.

இல்லையெனில் உள்ளத்தில் கிளர்ச்சியும் செயல்களில் வேகம் குறைதலும் காணப்படலாம். இவை இரண்டும் மாறி வரும் நிலைமையில் கிளர்ச்சியும் உளச் சோர்வும் மாறி மாறி ஏற்படலாம்.

இவ்வாறு எந்த ஒரு நிலைமையிலும் இந்தப் பிணியின் அறிகுறிகள் ஒருவரை அவரது இயல்பு நிலையில் செயலாற்றும் திறமையைப் பாதிக்கின்றன. அவரது பொருத்தப்பாட்டினையும் (Adjustment) நடைமுறை வாழ்க்கையின் தேவைகளை நிறைவேற்றுவதையும் இது பெருமளவில் பாதிக்கிறது.

இப்பிணிக்கு மரபுவழிக் காரணம் இருப்பதாகச் சொல்லப்படவில்லை. உளவியற் கோட்பாடுகள் மனிதன் வளர்கின்ற பருவத்தில் ஏற்படும் கோளாறுகளும், சூழ்நிலை சரிவர அமையாததும் இப்பிணிக்குக் காரணமெனக் கூறுகின்றன. இப்பிணியால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சையினால் முற்றிலும் குணம் அடைகின்றார்கள். கிளர்ச்சி நிலைமையில் செயலின் வேகம் அதிகமாகும்பொழுது அவற்றைக் குறைக்கத் தூக்க மாத்திரைகள் உதவுகின்றன. உளச்சோர்வு அதிகமாகும்பொழுது அதிர்ச்சி மருத்துவமும் (Shock Therapy) நல்ல பயனளிக்கும். உளக்குணமுறை (Psycho Therapy) பெருமளவில் பயன்படுகிறது.
தே.பா.

**துணைநூல்கள்:**


**Coleman, J.C.**, Abnormal Psychology and Modern Life, D.B. Tarap orerala Sons & Co. Pvt. Ltd, Bombay, 1969.

**Shanmugam, T.E.**, Abnormal Psychology, Tata Mc. Graw-Hill Publishing Co. Ltd, New Delhi,. 1981.

**Shanmugam N.**, Psychology Vol. II,. The South India Saiva Siddhantha Works Publishing Society, Madras, 1960.


***கிளவு, ஆன் செமினா*** **(கி.பி. 1820-1892)** இங்கிலாந்தில் மகளிரின் உயர்கல்விக்காகப் பாடுபட்ட ஆசிரியை; கேம்பிரிட்சு நகரிலுள்ள நியூகாம் (Newnham) கல்லூரியில் முதன்முதலாக முதல்வர் பொறுப்பினை ஏற்றவர். இவர் ஆர்தர் கது கிளவ் (Arthur Hugh Clough) என்னும் கவிஞரின் சகோதரி.

இலண்டனில் கி.பி. 1849-இல் கல்வியை முடித்த ஆன் செமினா கிளவு (Anne Jemina Clough) சிறிது காலம் ஆசிரியையாகப் பள்ளிகளில் பணியாற்றி



கிளவு

னார். இவர் வெசுட்டு மார்லாந்துவில்(Westmorland) உள்ள ஆம்பிள்சைடு (Ambleside) என்னும் இடத்தில் கி.பி 1852-இல் ஒரு பள்ளியை நிறுவினார். மகளிரின் உயர்கல்விக்காகப் பாடுபட்ட எமிலி தேவிசு (Emily Davis), பிரான்சசு மேரி பசு (Frances Mary Buss), என்றி சிடுவிக்கு (Henry Sidwick) போன்ற கல்வியாளர்களுடன் கிளவும் உழைத்தார். மகளிர் உயர் கல்வி வளர்ச்சிக்கான வடக்கு இங்கிலாந்துக் கழகம் (North of England Council for Promoting the Higher Education of Women) தொடங்கப்படுவதற்குக் கிளவு முக்கிய காரணமாவார். கிளவு இக் கழகத்தில் சில ஆண்டுகள் செயலாளராகவும் தலைவராகவும் இருந்திருக்கிறார். இக்கழகத்தின் செயற்பாடுகளினாலேயே மான்செசுட்டர் (Manchester), நியூகாசெல் (Newcastle) ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகள் பெண்களைச் சேர்த்துக் கொள்ளத் தொடங்கின. கேம்பிரிட்சு நகரில் பயிலும் மகளிர்க்காக மகளிர் விடுதி ஒன்றை என்றி சிடுவிக்கு திட்டமிடுகையில், அவ்விடுதிக்கு முதல்வராகக் கிளவு தான் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்விடுதி கி.பி. 1871-இல் ஐந்து மாணவிகளுடன் தொடங்கப்பட்டது. இதன் வெற்றி கி.பி. 1875-இல் நியூகாம் கூடமும் (Newnham Hall), கி.பி. 1880-இல் நியூகாம் கல்லூரியும் ஏற்படுவதற்கு வழிவகுத்தது. இலிவர்ப்பூல் (Liverpool) நகரில் பிறந்த கிளவு கேம்பிரிட்சில் இறந்தார்.
எஸ். த.

***கிளாசுகோ*** பிரிட்டனில் உள்ள ஒரு பெயர் பெற்ற நகரம். இசுகாட்லாந்தின் (Scotland) தெற்கு மத்திய பகுதியில் உள்ள இத்துறைமுகம் கிளைடு (Clyde) ஆற்றங்கரையில், கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து சிறிது சிறிதாக வளர்ந்து வந்துள்ளது. இதன் தொழிலும் வர்த்தகச் சிறப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கன. இங்குள்ள ஈரப்பசை மிகுந்த இயற்கைச் சூழல் பருத்தி ஆலைத் தொழிலுக்கு உகந்ததாயுள்ளது. இந்நகருக்கு அருகில் உள்ள பகுதி

களில் இரும்பு மற்றும் நிலக்கரி போன்ற தாதுப் பொருள்கள் கிடைத்ததால் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முதல் இந்நகரின் தொழில் வளர்ச்சி சிறக்கலாயிற்று. இவ்வூரின் இடையில் ஓடக்கூடிய ஆறு ஆழப்படுத்தப்பட்டுக் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாக ஆக்கப்பட்டுள்ளது. கப்பல் கட்டுதல், இரும்பிலான பொருள்களைச் செய்தல் ஆகியன முக்கிய தொழில்களாகும். இங்கு 200க்கு மேற்பட்ட பல தொழிற்சாலைகள் உண்டு. இந்நகரினைச் சுற்றிலும் எண்ணிறந்த தொழிற்பேட்டைகள் உள்ளன. இந்நகரின் மக்கள் தொகை ஏறத்தாழ 11 இலட்சமாகும்.

கிளாசுகோ (Glasgow) நகரில் பல பழம்பெருமை வாய்ந்த கட்டடங்கள் உள்ளன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டினதான தேவாலயம், கில்மோர்கில் என்னும் பகுதியில் அமைந்துள்ள பல்கலைக் கழகம், நகராண்மைக் கழகம் அமைந்துள்ள சியார்சு சதுக்கம் ஆகியன இப்பகுதியின் முக்கிய இடங்களாகும். இங்கு 1759-இல் ஓர் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. 'நான் ஒரு கிளாசுகோ நகரத்தினன்' எனப் பெருமைப்பட அந்நகரத்தவர் கூறிக்கொள்ளுமளவிற்கு அந்நகர் சிறப்புடையது. மா.கா.

**கிளாசுட்டர்** இங்கிலாந்திலுள்ள கிளாசுட்டர் (Gloucester) பிரிவிலுள்ள ஒரு முக்கிய பட்டினம். இது மரபுவழிப் புகழ் வாய்ந்தது. புல்வெளிகள் நிறைந்த இப்பகுதியில் தானியங்கள், பழமரங்கள் வளர்த்தல் ஆடுமாடு வளர்த்தல் முதலியன முக்கிய தொழில்களாகும். உரோமானியர் காலந்தொட்டே இது செழிப்புற்றிருந்தது. இங்குள்ள கி.பி. 11-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த தேவாலயம் புகழ்மிக்கதாகும். உரோமானியர் காலத்திய பழைய சின்னங்களும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய நீண்ட மணற்குன்றுகளும் இப்பகுதியின் வரலாற்றுச் சிறப்புகளாகும். இங்கிலாந்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களுள் இதுவும் ஒன்று. இன்று இந்நகரில் வானவூர்திகள் உருவாக்கப்படுகின்றன. மா.கா.

**கிளாட்சுட்டன், வில்லியம் ஈவார்ட்டு**: வில்லியம் ஈவார்ட்டு கிளாட்சுட்டன் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கில அரசியல் வல்லுநர். இவர் நான்கு முறை பிரதமராக இருந்தவர். இவர் கி.பி. 1809-ஆம் ஆண்டு இலிவர்ப்பூலில் சான் (John) கிளாட்சுட்டனுக்கும் ஆனுக்கும் (Anne) ஐந்தாம் பிள்ளையாகப் பிறந்தார். சான் ஒரு பெரிய வணிகர்; நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர். எனவே, தம்மகன் வில்லியம் ஈவார்ட்டு கிளாட்சுட்டனைப்(William Evart Gladstone) புகழ் வாய்ந்த ஈடன் (Eton)



கிளாட்சுட்டன், வில்லியம் ஈவார்ட்டு

பள்ளியில் படிக்க வைத்தார். பின்னர்க் கிளாட்சுட்டன் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் படித்தார்; மாணவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நண்பர் ஒருவரின் தந்தையான நியூகாசில் பிரபுவின் ஆதரவைப் பெற்று கி.பி. 1832-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நியூவார்க்குத் (Newark) தொகுதியில் தோரிக் கட்சியின் சார்பில் (Tory) போட்டியிட்டு வென்றார். அன்று தொடங்கிய அவருடைய நாடாளுமன்ற வாழ்க்கை அறுபது ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது.

இவர் கி.பி. 1834-35 இல் அமைக்கப்பட்ட இராபர்ட்டுபீல்(Robert Peel) அமைச்சரவையில் சிறு பதவியொன்றைப் பெற்றார். பின்னர் (1841-46) வணிக வாரியத்தின் (Board of Trade) துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். பழமைப் பற்றுக் கட்சி (Conservative or Tory)இரண்டாகப் பிளவுற்றபோது, இவர் மிதவாதிகள் (Liberal) கட்சியை ஆதரித்தார். கி.பி. 1852-இல் வரவு செலவுத் திட்டத்தின் மீது தாம் நிகழ்த்திய நாடாளுமன்றப் பேச்சின் வாயிலாகத் தார்பி (Derby) அமைச்சரவையைக் கவிழ்த்தார். அதன் பிறகு அமைக்கப்பட்ட ஆபர்டீன் (Aberdeen) கூட்டு அமைச்சரவையில் இவர் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றார். அடுத்து அமைக்கப்பட்ட பால்மர்சுட்டனுடைய (Palmerston) கூட்டு அமைச்சரவையில் இடம் பெற்றார். மூன்று வாரங்களுக்குப் பிறகு கிரிமியாப் போர் காரணமாக இவர் பதவி விலகினார்,

பின்னர் கி.பி. 1868–ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இவருடைய கட்சி பெரும் வெற்றி பெற்றது. அதனால் கி.பி. 1868–இல் இவர் பிரதமரானார். அயர்லாந்துப் பல்கலைக் கழக மசோதா பொதுச் சபையில் தோற்கடிக்கப்பட்டமையால் இவர் கி.பி. 1873–இல் பதவியைத் துறந்தார். திசுரேலி (Disraeli) மாற்று அமைச்சரவை அமைக்க முன் வாராமையால் இவர் மீண்டும் பிரதமரானார். எனினும்,கி.பி. 1874–இல்நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் என்று பரிந்துரை செய்தார். அடுத்து நடந்த பொதுத் தேர்தலில் இவரது கட்சி தோற்றது. இவர் அரசியலில் இருந்து விலகினார். கட்சித் தலைமைப் பொறுப்பையும் விட்டு விட்டார். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டும் தொடர்ந்து வகித்தார்.

பால்கன் மக்களைத் துருக்கிய அரசு கி.பி. 1875–76 இல் பலவாறு துன்புறுத்தியபோது திசுரேலி அரசு வாளா விருப்பதை யறிந்து கிளாட்சுட்டன் மனம் நொந்தார். எனவே, மீண்டும் அரசியலில் புகுந்தார். தமது பேச்சு வன்மையால் திசுரேலி அரசை கி.பி. 1880–ஆம் ஆண்டுத் தேர்தலில் தோற்கடித்தார். கி.பி. 1880 முதல் 1885 வரை இவர் மீண்டும் பிரதமர் பதவியை வகித்தார். இவர் கி.பி. 1884 ஆம் ஆண்டில் மூன்றாம் நாடாளுமன்றச் சீர்திருத்த மசோதாவைக் கொண்டு வந்தார். இவரது வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப் பட்டமையால் பதவியைத் துறந்தார். காலிசு பிரபுவின் அமைச்சரவை கி.பி. 1886–இல் தோற்கடிக்கப்பட்டது. கிளாட்சுட்டன் மூன்றாவது முறையாக கி.பி. 1886–இல் அமைச்சரவையை அமைத்தார். அப்போது அயர்லாந்து சுயாட்சி மசோதாவைக் கொண்டு வந்தார். அதை நாடாளு மன்றம் நிராகரித்தது. இவரது அரசு கி.பி. 1886–இல் நடந்த பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டது. ஆனால், இவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புதிய நாடாளுமன்றத்தில் இவர்தம் ஆதரவாளர்கள் 190 பேர் இருந்தனர். இவர் அடுத்த ஆறு ஆண்டுகள் தம் நேரத்தை அயர்லாந்துக்குச் சுயாட்சி அளிக்க வேண்டுவதன் அவசியத்தை இங்கிலாந்து வாக்காளர்களுக்கு எடுத்துரைப்பதில் செலவிட்டார். அதன் விளைவாக ஒவ்வொரு கட்சியிலும் பாமர மக்கள் கிளாட்சுட்டனை ஆதரித்தனர்; உயர்குடியாளர்கள் இவரை எதிர்த்தனர்.

இவர் கி.பி. 1892–இல் நான்காம் முறையாகப் பிரதமரானார். அப்போது மற்றுமொரு அயர்லாந்து சுயாட்சி மசோதாவைக் கொண்டு வந்தார். பிரபுக்கள் சபை அதை நிராகரித்தது. ஆகவே, நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்கள் ஆதரவைத் திரட்ட முற்பட்டார். அதற்கு அமைச்சரவை இணங்கவில்லை. இறுதியில் இவர் பதவி விலகினார். அதன் பிறகு, தமது நேரத்தை இலக்கியப் பணிக்குச் செலவிட்டார். இவர் கி.பி. 1898–ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

இயற்கை இவருக்கு அரிய உடலாற்றலையும், மனவலிமையையும் அளித்திருந்தது. இவரது உடல் எஃகுப் போன்றது. 82 வயதில் கூடக் கடுமையான உழைப்பை மேற்கொள்ளும் வகையில் இவருடைய உடற்கட்டு இருந்தது. இவர் எதையும் தாங்க வல்லவர்; தம்மைத் தாமே கட்டுப் படுத்திக் கொள்ளக் கூடியவர். இவருடைய எண்ணங்கள் சிக்கலானவை. ஆனால், இவர் மிகச் சாதாரணமானவர், மிகவும் கண்ணியமானவர். இவர் காலத்தில் வாழ்ந்தவர்களுள் இவர் மிகச் சிறந்த நிருவாகி; மிகுந்த நினைவாற்றல் கொண்டவர்; நாவன்மையுடையவர்; எழுத்தாற்றல் கொண்டவர்; எளிதில் புரிந்து கொள்ளும் திறமையுடையவர்; கொள்கைப் பற்றுடையவர்; எளிதில் விட்டுக் கொடுக்காதவர். இவருக்குச் சமமாக வைத்து எண்ணக்கூடிய அரசியல் மேதை அக்காலத்தில் எவரும் இல்லை என்றே கூறலாம். தி.ஆர்.இரா.

**கிளாரெண்டன், எட்வர்டு ஐடு (கி.பி. 1609-1674)**: இங்கிலாந்து நாட்டின் அரசியல்வாதிகளுள் ஒருவரும் சிறந்த வரலாற்றறிஞருமாகிய இவர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். அக்காலத்து அரசியல் குழப்பங்களில் பெரும்பங்கு கொண்டு பல திட்டங்களை வகுத்ததுடன் அந்நாட்டின் வரலாற்றை எழுதியும் வைத்துள்ளார் கிளாரெண்டன். (Edward Hyde, Clarendon). மக்களாட்சி வளர்ச்சியை விரும்பாத இங்கிலாந்தின் மன்னன் முதலாம் சார்லசின் முறையற்ற செயல்களை எதிர்த்து நீண்டகாலப் பாராளுமன்றம் ஒன்று கி.பி. 1640–இல் கூடியது. அதில் சிறப்பான பங்கைப் பெற்ற பல தலைவர்களுள் இவரும் ஒருவர். சட்ட வல்லுநரான இவர் மன்னனின் வரம்பற்ற செயல்களைக் கண்டித்தாரே அன்றி, வேறு சிலரைப் போல மன்னனையே ஒழித்துவிட விரும்பினாரில்லை. இவருடன் இணைந்து சார்லசு மன்னன் தீவிரவாதிகளுடன் போரிட்டிருந்தால் மன்னனின் வரலாறே மாறியிருக்கும். உள்நாட்டுப் போர் ஏற்பட்டு அரசனே மடியவேண்டியிருந்திருக்காது. ஆனால் மன்னன், தீவிரவாதிகளையும், எட்வர்டு ஐடு போன்ற மிதவாதிகளையும் பகைத்துக்கொண்டு கொடுங்கோலோச்சினான். மன்னனைக் கைவிட மனமில்லாத எட்வர்டு ஐடு அவன் கட்சியில் இருந்துகொண்டே சட்டமுறை ஆட்சிக்காகப் பாடுபட்டார். இவர் ஆங்கிலப் பழமைப் பண்பின் பேராளராக விளங்கி

னார். ஆனால், அரசியாரும் இவருக்குப் பகையாக சூழ்ச்சிக்காரர்களுக்கு ஆதரவு அளித்தார். எனினும் ஐடு, தம் மனச்சாட்சிக்கும் கொள்கைக்கும் எதிராகச் செயலாற்றி வந்த தூயவாதத் திருச்சபையினருக்கு (Puritans) ஆதரவு அளிக்க மறுத்தார். தூயவாதத் திருச்சபையினர் முடியாட்சியையே அழிக்க முற்பட்டதை ஐடு அறவே வெறுத்தார். இறுதியில் அத் தீவிரவாதிகளின் முயற்சிகளால் மன்னன் கொலையுண்டான். அவனுக்குப் பிறகு மீண்டும் முடியாட்சியைக் கொண்டு வர ஐடு முனைந்தார்.

இரண்டாம் சார்லசுக்கு முதன்மை அமைச்சராக அமர்ந்த இவர், தமது அறிவுக்கூர்மையினால் முன்னிலை மீட்சிக்குப் (Restoration) பெரிதும் உதவியது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இந்தச் சேவைக்காக இங்கிலாந்து இவருக்கு மிகவும் கடமைப்பட்டது. கி.பி. 1660-இல் முன்னிலை மீட்சிக்குப் பிறகு பகைவர்களைப் பழிவாங்க முற்படுவது அறிவற்ற செயல் என்பதை இவர் விளக்கினார். வன்முறையை வெறுத்த இவர் சட்டத்தையும் கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டுமென வற்புறுத்தினார். இவருடைய சேவைகளைப் பாராட்டிய இரண்டாம் சார்லசு மன்னன், எட்வர்டு ஐடு என்ற பெயரையுடைய அவ்வமைச்சரை கிளாரெண்டன் கோமகனாகவும் (Earl of Glarendon), மேல்மன்றத் தலைவராகவும் (Lord Chancellor) உயர்த்தினான். இவரது ஆதிக்க வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்ட பலர் இவருக்கு இடையூறுகளை விளைவித்தனர். இவர் மீது பல குறைகளை மன்னனிடம் கூறினர். இறுதியில் கிளாரெண்டனின் அயல்நாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட ஒரு தோல்வி கி.பி. 1667-இல் இவருடைய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாயிற்று. பதவி விலகிய கிளாரெண்டன் நாட்டை விட்டு வெளியேறி கி.பி. 1674-இல் தாம் இறக்கும்வரை வெளிநாட்டிலேயே வாழ்ந்தார். அக்காலத்தில் இங்கிலாந்தின் வரலாறு ஒன்றை எழுதி முடித்தார். முன்னிலை மீட்சியைப் பற்றிய தமது கருத்துகளை அதில் விளக்கியுள்ளார். புரட்சியின் வரலாறு (History of the Rebellion) என்னும் அந்நூல் கி.பி. 1702-இல் வெளியிடப்பட்டது. தெ.பா.

**கிளியோபாத்திரா** என்பது பல பண்டைய எகிப்திய இளவரசிகளின் பெயராகும். அவர்களுள் மிகவும் புகழ் வாய்ந்தவர் ஏழாம் கிளியோபாத்திரா ஆவார். இவர் அலெக்சாண்டிரியாவை ஆட்சி புரிந்தார். எனினும் மாசிடோனியா, கிரேக்கம், ஈரான் ஆகிய நாடுகளுடனும் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். இவரே தாலமி வமிசத்தின் இறுதி அரசி ஆவார். இவர் புகழ் உரோமாபுரியினால் வளர்ந்தது. மார்க்கு அந்தோனி (Mark Antony) என்ற உரோமாபுரி வீரனின் மனைவியாக விளங்கி, உரோமின் வரலாற்றையும் ஐரோப்பிய வரலாற்றையும் மாற்றியமைக்கக் காரணமாய் இருந்தார்.



கிளியோபாத்திரா - எகிப்தியச் சிற்பம்

**கிளியோபாத்திராவும் சூலியசு சீசரும்**: கிளியோபாத்திரா கி.மு. 51-ஆம் ஆண்டு தம் தந்தை பன்னிரண்டாம் தாலமி ஆலட்டிசு (Ptolomy XII Auletes) விருப்பப்படியும் பண்டைய எகிப்திய மரபுப்படியும், தம் இளைய சகோதரர் பதின்மூன்றாம் தாலமியை மணந்து, எகிப்திய ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆனால் தம் சகோதரர்களின் பாதுகாவலர்களால் அடக்கப்பட்டு, எகிப்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அங்கிருந்து இவர் சிரியா சென்று, அங்குத் தம் அரசை மீண்டும் கைப்பற்றப் படை திரட்டினார். சூலியசு சீசர் (Julius Caesar) எகிப்தின் வாரிசு உரிமையை நிருணயிக்கவும், அதன் மூலம் உரோமாபுரி பயனடையவும் உரோமிலிருந்து எகிப்து வந்தார். கிளியோபாத்திரா (Cleopatra) இரகசியமாகத் தலைநகர் வந்து சீசரின் ஒத்துழைப்பையும் பெற்றார். சீசர் நடத்திய அலெக்சாண்டிரியாப் போரில் (கி.மு. 47) பதின்மூன்றாம் தாலமி கொல்லப்பட்டு, அவர் வெற்றி பெற்றார். அதனால் கிளியோபாத்திராவின் நிலை எகிப்தில் நிலைபேறுற்றது.

இவர் பண்டைய எகிப்திய மரபுப்படி தம் சகோதரர் பதினான்காம் தாலமியைக் கணவராகவும் அரசியல் துணைவராகவும் ஏற்றுக் கொண்டார். இப்பொழுது அரசு முழுமையாக இவரிடம் வந்தது. உரோமானியப் படை எகிப்தில் தங்கியிருந்தபோது அவர்களுக்குப்பலவசதிகளையும்செய்துகொடுத்தார்; சீசரை மகிழ்ச்சியடையச் செய்தார். இக்காலத்தில் இவர் தம் அதிகாரத்தை உரோமாபுரிவரை பரப்பத் திட்டம் தீட்டியதாகக் கருத வாய்ப்புள்ளது. தம் நிலை எகிப்தில் நிரந்தரமானவுடன் இவருக்கும் சீசருக்கும் தாலமிசீசர் அல்லது சீசரியோன் என்ற மகன் பிறந்தான். இதன் பின்னர் இவர் சீசருடன் உரோமாபுரி சென்றார். ஆனால் சீசர் கொல்லப்பட்ட செய்தி கேட்டுக் கிளியோபாத்திரா அலெக்சாண்டிரியாவுக்குத் தப்பியோடினார். பதினான்காம் தாலமி இறந்ததால், தம் மகனை அரியணையில் ஏற்றினார்.

**கிளியோபாத்திராவும் அந்தோனியும்**: பிலிப்பி (Philippi) போருக்குப்பின் (கி.மு. 42), மார்க்கு அந்தோனி கிளியோபாத்திராவையும் ஏனைய கீழை நாட்டு அரசர்களையும் தார்சசு (Tarsus) என்னுமிடத்திற்கு வந்து, தம்மைச் சந்திக்கும்படி கட்டளையிட்டார். ஆனால் கிளியோபாத்திரா தம் திறமையால் அந்தோனியைத் தம் விருப்பப்படி செயற்படச் செய்தார். கிளியோபாத்திராவின் விருப்பப்படி அந்தோனி அவளுடைய சகோதரி அரிசினோவைத் (Arsinoe) தூக்கிலிடும்படி கட்டளையிட்டார். அதனால் எகிப்திய அரசப் பதவிக்கு வேறு ஒருவரும் இல்லாத நிலை ஆயிற்று. சில காலம் சென்ற பின், கி.மு. 37-இல் கிளியோபாத்திரா அந்தோனியை மணந்தார். அந்தோனி உரோமப் பேரரசின் பல மாநிலங்களை இவர்தம் பொறுப்புக்கு மாற்றினார். பார்த்தியாமீது படையெடுக்கவும் இருவரும் திட்டங்கள் தீட்டினர். ஆனால், இவர்களின் செயல்களை உரோம் விரும்பவில்லை. சூலியசு சீசரின் புதல்வரான ஆக்டேவியசு கி.மு. 32-இல் இவ்விருவர்மீதும் போர் தொடுத்தார். அந்தோனியும் ஆக்டேவியசும் ஆக்டிம் (Actium) என்ற இடத்தில் சந்தித்துப் பொருதனர். இந்தப் போர் உரோமாபுரியை யார் ஆள்வது என்று முடிவு செய்ய நடைபெற்றது. அந்தோனி இதில் தோல்வியுற்றுத் தப்பியோடித் தற்கொலை செய்து கொண்டார். அந்தோனியின் இறப்பால் இவர் உண்ணாதிருந்து இறக்க முயன்றார். ஆனால், ஆக்டேவியசு இவரைத் தம் வெற்றியின் மகுடமாக உரோமிற்குக் கைதிகளுடன் அழைத்துச் செல்லத் தீர்மானித்தார். இதைக் கேள்வியுற்றுக் கிளியோபாத்திரா கி.பி. 30-இல் தற்கொலை செய்து கொண்டார். இவர் விருப்பப்படி அந்தோனியின் உடலும் இவருக்குப் பக்கத்தில் புதைக்கப்பட்டது. இவரோடு எகிப்தில் தாலமி மரபின் ஆட்சி முடிவடைந்தது. எகிப்து உரோமப் பேரரசின் மாநிலமாயிற்று. இவரைப் பற்றிய புளூடார்க்கு (Plutarch) என்னும் கிரேக்க வரலாற்று ஆசிரியருடைய குறிப்புகள், வில்லியம் சேக்சுபியருக்கும் பெர்னாட்சாவுக்கும் நாடகங்கள் எழுத உதவின. சேக்சுபியர் 'அந்தோனியும் கிளியோபாத்திராவும்' (Antony and Cleopatra) என்னும் நாடகத்தையும், பெர்னாட்சா, 'சீசரும் கிளியோபாத்திராவும்' (Caesar and Cleopatra) என்னும் நாடகத்தையும் எழுதியுள்ளனர். பி.இ.மோ.


**கிளெசவிட்சு கார்ல், வான்** கி.பி. 1780-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பிரசியாவின் (Prussia) படைத்தலைவராகவும், வரலாற்று ஆசிரியராகவும், தரைப்படைப் போர்களில் புதிய உத்திகளை உருவாக்கியவராகவும்திகழ்ந்தார்.இவர்கி.பி.1792-இல்இரைன் படையெடுப்பில் பங்கேற்றார்; செனாப் படையெடுப்பில்கி.பி.1806-இல்பங்கேற்றுக்கைது செய்யப்பட்டார்; விடுதலை பெற்றுத் தாயகம் திரும்பி கி.பி. 1812-இல் நெப்போலியனின் மாசுக்கோ படையெடுப்பின்போது உருசியப் படையில் சேர்ந்தார்; பின் கி.பி. 1814-இல் பிரசியாவுக்குத் திரும்பினார். வாட்டர்லூப் போரில் (Battle of Waterloo) பிரசியப்படையில் பங்கேற்ற இவர் கி.பி. 1818-இல் அப்படைகளின் தலைவரானார். அதே ஆண்டில் இவர் போர்ப் பயிற்சிக் கல்லூரியை நடத்தும் பொறுப்பையும் ஏற்றார்.

கிளெசவிட்சு, காரல், வான் (Klessawitz, Karl, Von) புத்திக்கூர்மை, அறிவாற்றல் நிரம்பப் பெற்றிருந்தார். இவர் செருமானியத் தத்துவங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றினால் ஈர்க்கப்பட்டார்; எனவே, எழுத்துத் துறையில் ஈடுபட்டார். போர் பற்றிய இவரது படைப்புப் போற்றற்பாலது. இவர் தம் கருத்துகளைப் பிறர் புரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்தியம்பினார். போர் என்பது அரசியலடிப்படையில் எழுந்த சிக்கல்களின் இறுதி வடிவமே என்பது இவர் கருத்து. பன்னாட்டுப் படைத் தலைவர்களும் இவர் தம் கருத்துகளை ஒப்புக் கொண்டனர். பிரெஞ்சு, ஆங்கில, உருசிய, இசுபானிய, செருமானிய மொழிகளில் இவரது படைப்பு மொழி பெயர்க்கப்பட்டது.

வெட்கப்படும் தன்மை, ஒதுக்க நிலையில் விருப்பம், போர்த்திறம், பேராற்றல் ஆகியவற்றைப் பெற்றிருந்த இவர் கி.பி. 1831-இல் காலமானார். மா.கா.

**கிளெமென்சோ, சார்சு**: முதல் உலகப் போரின்போது பிரெஞ்சுநாட்டு அரசியலில் பெரியதொரு பங்கை வகித்தவர். இவர் (George Clemen-

ceau) மூன்றாம் பிரெஞ்சுக் குடியரசை ஆதரித்த வர்; மக்களாட்சிக் கொள்கையில் அளவு மீறிய பற்றுக் கொண்டவர்; செயல் வீரர்; முதல் உலகப் போரில் நேச நாடுகளின் வெற்றிக்கு அடிகோலியவர்; 'வெற்றியின் தந்தை' என்று புகழப் பெற்றவர்.



கிளெமென்சோ, சார்சு

இவர் கி.பி. 1841-ஆம் ஆண்டு மேற்குப் பிரான்சிலுள்ள வெண்டி (Vendee) என்ற மாநிலத்தில் மௌலெரான்-ஏன்-பரேத்து (Maulleron-en-Pards) என்ற ஊரில், ஆறு குழந்தைகள் அடங்கிய ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தை பென்சமின் பிரெஞ்சு அறிஞரான வால்டேரின் கொள்கையில் பற்றுக் கொண்டவர்; கி.பி. 1789-ஆம் ஆண்டுப் புரட்சியின் ஆதரவாளர்; கிளெமென்சோவிற்கு வழிகாட்டியாக விளங்கியவர்.

கிளெமென்சோ தமது இளமைப்பருவத்தை வேளாண் மக்களிடையில் கழித்தார். பள்ளிப்படிப்பு முடிந்ததும் இவர் கி.பி. 1861-இல் மருத்துவம் பயிலப் பாரிசு சென்றார்; அங்குக் குடியரசுவாதிகளுடன் நட்பு கொண்டார்; சில நண்பர்களுடன் சேர்ந்து 'வேலை' என்ற பத்திரிகையைத் தொடங்கினார்; பாரிசுத் தொழிலாளிகளை கி.பி. 1848-ஆம் ஆண்டுப் புரட்சியின் 14-ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும்படி ஒரு விளம்பரத்தை அதில் வெளியிட்டார். அதன் காரணமாக இவர் சிறையிலிடப்பட்டார். சிறையிலிருந்து வெளியேறிய பிறகு இவர் 'காலை' என்ற பத்திரிகையைத் தொடங்கினார்; பின்னர் அமெரிக்கா சென்று அங்கு நான்கு ஆண்டுகளைக் கழித்தார்; அமெரிக்கர்கள் அனுபவித்துவந்த பேச்சுச் சுதந்திரத்தைக் கண்டு வியப்படைந்தார். இவர் கி.பி. 1869-இல் மேரி பிளம்மர் (Mary Plummer) என்ற அமெரிக்கப் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டு மூன்று பிள்ளைகளைப் பெற்றார். இத்திருமணம் 7 ஆண்டுகள் நீடித்தது.

திருமணம் ஆன சில நாள்களுக்குள் இவர் பிரான்சுக்குத் திரும்பி மருத்துவத் தொழிலை மேற்கொண்டார். இவர் பாரிசு நகரின் ஒரு பிரிவுக்கு கி.பி. 1870-இல் நகரத் தந்தை (Mayor) ஆனார். இவர் கி.பி. 1871-இல்தேசிய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அப்போது நடந்த பாரிசு நகர மக்கள் கிளர்ச்சியில் கலந்து கொண்டார்; கி.பி. 1876-இல் மக்கள் சபை (Chamber of Deputies) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்குத் தீவிரவாதிகள்(Radicals) கட்சிக்கு இவர் தலைவரானார். மேல்சபையில் (Senate) இவருக்குப் போதிய ஆதரவு இல்லாமையால் அமைச்சரவையை அமைக்க இவர் மறுத்து விட்டார். ஆயினும், அமைச்சரவைகளை அழிப்பதிலும் ஆக்குவதிலும் இவர் பெரும் பங்கு வகித்தார். அதன் விளைவாக இவருக்கு எதிரிகள் பலர் தோன்றினர். அதனால் கி.பி. 1893-இல் நடந்த தேர்தலில் எதிரிகள் இவரைத் தோற்கடித்தனர். ஆயினும், இவர் மனம் தளரவில்லை.

பின்னர் இவர் பத்திரிகைத் தொழிலில் தமது ஆர்வத்தைக் காட்டினார்; அக்கால அரசியல் எழுத்தாளர்களுள் தலைசிறந்தவராகக் கருதப்பட்டார். அரசியல் சமுதாயம் பற்றிய நூல்கள் பலவற்றை இவர் எழுதலானார். தமது அரசியல் வாழ்க்கைக்கு 1920-இல் முற்றுப்புள்ளி வைத்தார். அதன் பின் இவர் நூல்களைப் படிப்பதிலும் எழுதுவதிலும் தோட்ட வேலையிலும் தமதுகாலத்தைக் கழித்தார். இவர் தம் தந்தையின் சவக்குழியின் பக்கத்தில் தமது உடலைப் புதைக்கும்படியும் சவ ஊர்வலம், சமயச் சடங்கு, அரசு மரியாதை ஏதும் நடத்தக்கூடாதென்றும், கல்லறையைச் சுற்றி இரும்பு வேலி தவிர வேறெதுவும் கட்டக்கூடாதென்றும், எந்தவிதமான பொறிப்பும் அக்கல்லறையில் செதுக்கக்கூடாதென்றும், தமது இறுதிவிருப்பமாக வேண்டிக் கொண்டார். இவர் 1929-இல் பாரிசில் இறந்தார். தி.ஆர்.இரா.

**கிளைக் கணக்குகள்**: ஒரு நிறுவனத்தின் தொழில் அல்லது வணிகம் வளர்ச்சியுறும்போது அந் நிறுவனம் பல்வேறு இடங்களில் கிளைகள் நிறுவி வாணிகத்தைப் பெருக்குவது வழக்கம். இக்கிளைகளின் கணக்குகள் கிளைக் கணக்குகள் (Branch

Accounts) எனப்படும். இக்கிளைகள் அவற்றின் தன்மைக்கேற்றவாறு ஐவகைப்படும். 1. சில கிளைகள் தலைமையகம் அனுப்பும் பொருள்களைப் பணத்திற்கு மட்டும் விற்கின்றன. கடனுக்கு விற்பதில்லை. அவை பெறும் பணத்தினைத் தலைமையகத்துக்கு அனுப்பி விட்டுக் கிளையின் செலவுகளுக்கு அங்கிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கின்றன. 2. சில கிளைகள் தலைமையகம் அனுப்பும் பொருள்களைப் பணத்திற்கும் கடனுக்கும் விற்பனை செய்கின்றன. இவையும் பணத்தைத் தலைமையகத்திற்கு அனுப்பிவிட்டுச் செலவுகளுக்கு அங்கிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கின்றன. 3. சிலவகைக் கிளைகள் மேற்கூறிய வாறே இயங்குகின்றன. எனினும், இவை பொருள்களை விற்பனை விலைக்குத் தலைமையகத்திலிருந்து பெறும். 4. தனித்தியங்கும் கிளைகள். இவை தேவையான பொருள்களை வெளியிலும் வாங்கிக் கொள்ளலாம். கடனுக்கும் பணத்திற்கும் விற்பனை செய்யும் உரிமை இக்கிளைகளுக்கு உண்டு. 5. அயல் நாட்டுக் கிளைகள். இவை தனித்தியங்கும் தன்மை பெற்று இயங்குகின்றன.

**பதிவு செய்யும்முறை:** பணத்தொகைக்கு மட்டும் விற்கும் விற்பனையில் ஈடுபடும் கிளைகள் சில்லறைப் பண ஏடு ஒன்றை மட்டும் வைத்திருக்கும். வாரமொரு முறையோ திங்கள் ஒரு முறையோ சரக்கிருப்பு அறிக்கையைத் தயார் செய்து தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கும். தலைமையகத்தின் ஏடுகளில் கிளைக் கணக்குகள் முறையாகப் பதிவு செய்யப்படும். கிளையில் ஏற்படும் ஆதாய இழப்பை அறியக் கிளைக் கணக்கு எழுதப்படும். கிளைக்கு அனுப்பிய சரக்குக் கணக்கும், கிளைச் சரக்கிருப்புக் கணக்கும், கிளைப் பணக் கணக்கும் தயாரிக்கப்படும். கீழ்க்காணும் பதிவுகள் பேரேட்டில் எழுதப்படும்.

1. கிளைக் கணக்கு ப.
   கிளைக்கு அனுப்பியசரக்கு க/கு
   (கிளைக்குச் சரக்கு அனுப்பியது)
2. கிளைக் கணக்கு ப
   பணத்தொகை க/கு அல்லது
   வங்கி க/கு
   (கிளைச் செலவுகளுக்குப் பணம் அனுப்பியது)
3. பணத்தொகை க/கு அல்லது வங்கி க/கு ப
   கிளைக் கணக்கு
   (கிளையிலிருந்து பணம் பெறும்போது)
4. கிளைச் சரக்கிருப்பு க/கு ப
   கிளைப் பணத்தொகை க/கு ப
   கிளைக் கணக்கு
   (கிளையிலுள்ள சரக்கு, பணத்தொகையிருப்பைப் பதிவு செய்தல்)
5. கிளைக் கணக்கு
   பொது ஆதாய இழப்புக் க/கு
   (ஆதாயத்தை மாற்றுதல்)

   அல்லது

   பொது ஆதாய இழப்பு க/கு ப
   கிளைக் கணக்கு
   (இழப்பை மாற்றுதல்)

கிளைக்கு அனுப்பிய சரக்குக் கணக்கை வாணிகக் கணக்குக்கு எடுத்துச் சென்று அக்கணக்கு முடிக்கப்படும். நிறுவனம் வாணிக அமைப்பாயின், இக்கணக்கைக் கொள்முதல் கணக்கிற்கு மாற்றுவர். தலைமையகத்தின் ஏடுகளில் கிளைக் கணக்கு கீழ்க்காணுமாறு தோன்றும். (கற்பனைத் தொகைகளுடன்)

**தலைமையக ஏடுகளில்**

**தஞ்சைக் கிளைக் கணக்கு**

| ப 1986 ஜூன் 1 | | | வ | | |
|---|---|---|---|---|---|
| கிளைக்கு அனுப்பிய சரக்கு | ... | 20000 | வங்கி க/கு | .. | 30000 |
| வங்கி வாடகை ... | 1200 | | கிளைச் சரக்கிருப்பு | ... | 7000 |
| ஊதியம் ... | 800 | | கிளைப்பணத் தொகை | ... | 500 |
| பிற செலவுகள் ... | 400 | 2400 | | | 37500 |
| பொது ஆதாய இழப்புக் கணக்கு | | 15100 | | | |
| | | 37500 | | | |

பணத் தொகைக்கும் கடனுக்கும் விற்கும் கிளைகளின் கணக்குகள் தலைமையகத்தில் இருக்கும். ஆண்டு இறுதியில் கிளைக் கடனாளிகளிடமிருந்து வரவேண்டிய தொகைகிளைச் கடனாளிகள் கணக்குகளில் பற்று வைக்கப்பட்டுக் கிளைக் கணக்கில் வரவு வைக்கப்படும். கிளைகளில் சில்லறைப் பணத்தொகை ஏடு, சரக்கிருப்பு அறிக்கை ஆகியவற்றுடன் கடனாளிகளின் கணக்கும் தயாரிக்கப்படும்.

தலைமையகம் கிளைக்கு அடக்கவிலையில் சரக்குகள், அனுப்புவது வழக்கம். எனினும் விற்பனை விலையிலும் தலைமையகம் கிளைகளுக்குச் சரக்குகளை அனுப்பலாம். கிளை எவ்வளவு ஆதாயம் ஈட்டுகிறது என்பதைக் கிளையில் உள்ளோர் உணரக் கூடாது எனத் தலைமையகம் விரும்பலாம். இந்நோக்கம் கருதியும், கிளைச் சரக்கிருப்பை நன்கு கண்காணித்தல் கருதியும் சரக்குகள் கிளைக்கு அனுப்பப்படும். கிளைக்குச் சரக்கு அனுப்பும்போது விலைப்பட்டியில் கொடுக்கப்பட்ட விலையில் கிளைக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும். பின்னர்ச் சரக்கின் மதிப்பை அடக்க விலைக்குக் கொண்டு வரத் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்ய வேண்டும்.

எடுத்துக்காட்டாக ரூ. 5,000- உள்ள சரக்கை அடக்கவிலை மீது 20 சதவீதம் கூட்டித் தலைமையகம் கிளைக்கு அனுப்பினால் கீழ்க்காணும் பதிவுகள் அவசியமாகின்றன.

1. கிளைக் கணக்கு ப. 6,000
   கிளைக்கு அனுப்பிய சரக்கு க/கு 6,000
   (கிளைக்கு விற்பனை விலையில் சரக்கு அனுப்பியது)

2. கிளைக்கு அனுப்பிய சரக்கு க/கு ப 1,000
   கிளைக் கணக்கு 1,000

(விற்பனை விலைக்கும், அடக்க விலைக்கும் உள்ள வேற்றுமையைக் கணக்கில் கொண்டு வரவேண்டும். இதுபோன்றே கிளைச் சரக்கிருப்பை விற்னை விலையில் மதிப்பிட்டு, பின்னர் அதை விலைக்குக் கொண்டு வர கீழ்க்காணும் சரிக் கட்டுதலைச் செய்ய வேண்டும்.

கிளைக் கணக்கு ப
கிளைச் சரக்கிருப்புக் காப்பு க/கு

(இறுதிச் சரக்கு விலையில் ஏற்றிய கூடுதல் விலையைச் சரிக்கட்ட)

தலைமையகம் கிளைக் கணக்கின் மூலம் கிளையில் ஏற்படும் ஆதாய இழப்பை அறிய முடிகிறது. கிளைக் கணக்கு அல்லாது சரக்கிருப்பு, கடனாளி முறை ஆகியவற்றிலும் ஆதாய இழப்பை அறிய முடியும். இம்முறையில் தலைமையகம் கிளை நடவடிக்கைகளைப் பற்றிய கீழ்க்காணும் கணக்குகளை வைத்திருக்கும். அவையாவன:

அ) கிளைச் சரக்கிருப்புக் கணக்கு, ஆ) கிளைக் கடனாளிகள் கணக்கு, இ) கிளைச் செலவுக் கணக்கு, ஈ) கிளைச் சரிக்கட்டுக் கணக்கு, உ) கிளைக்கு அனுப்பிய சரக்குக் கணக்கு. இக்கணக்குகளில் கிளைச் சரிக்கட்டுக் கணக்கே கிளையின் ஆதாய இழப்பை உணர்த்தும். கணக்குப் பதிவு முறையும் தக்கவாறு மாறியிருக்கும.

தனித்தியங்கும் கிளைகள் தம் கணக்குகளைத் தாமே பதிவு செய்கின்றன: இருப்பாய்வினைத் தயாரித்து ஆதாய இழப்புக் கணக்குகளைத் தயாரிக்கின்றன. ஆண்டு இறுதியில் அவற்றைத் தலைமையகம் தனது கணக்குகளுடன் சேர்த்து, எல்லாக் கிளைகளுக்கும், தலைமையகத்துக்கும் பொதுவான இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்கிறது.

தலைமையகமும் தனது ஏடுகளில் ஒவ்வொரு கிளைக்கும் ஒரு கிளைக் கணக்கு வைத்திருக்கும். இக் கிளைக் கணக்கு ஆள்சார் கணக்குப் போன்று எழுதப் படுகிறது. கிளைக்கு அனுப்பப்படும் சரக்கும் கிளைக்காகத் தலைமையகம் ஏற்கும் செலவும் இக்கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன. கிளையிலிருந்து பெறும் பணத்தொகை வரவு வைக்கப்படுகிறது. ஆண்டிறுதியில் கிளையிலிருந்து பெற வேண்டிய தொகை யாது என்பதைக் கிளைக் கணக்கின் இருப்பு உணர்த்தும். தலைமையகத்தின் கிளைக் கணக்குப் போன்றே கிளையின் தலைமையகக் கணக்கும் கிளை, தலைமையகத்துக்குச் செலுத்த வேண்டிய தொகையைக் காட்டும். இவ்விரு இருப்புகளும் ஒத்து அமைதல் வேண்டும். ஆயினும் கீழ்க்காணும் காரணங்களால் இத்தொகைகள் மாறுபடுகின்றன.

(அ) தலைமையகம் அனுப்பிய சரக்கு கிளைக்குச் சென்று சேராதிருத்தல். (ஆ) கிளை அனுப்பிய பணம் தலைமையகம் சென்று சேராதிருத்தல்.

இதற்கான சரிக்கட்டுதல்களாவன: தலைமையகம் அனுப்பிய சரக்கு கிளைக்குச் சென்று சேராதபோது தலைமையகத்தின் ஏடுகளில்

வழியுடைச் சரக்கு க/கு ப
(Goods-in-transit)
கிளைக் கணக்கு

என்னும் சரிக்கட்டுதல் எழுதப்படும். இது போன்றே கிளை அனுப்பிய பணம் தலைமையகம் வந்து சேராதபோது கிளையின் ஏடுகளில்

வழியிடை பணம் க/கு ப
(Cash-in-transit)
கிளைக் கணக்கு

என்னும் சரிக்கட்டுதல் எழுதப்படும்.

இச் சரிக்கட்டுதல்களைத் தவிர்த்து இன்னும் பல பதிவுகளைத் தலைமையகமும் கிளைகளும் மேற்கொள்கின்றன. அப் பதிவுகள் வருமாறு:

1) கிளையிலிருக்கும் கிளைச் சொத்துகளின் கணக்குகளைத் தலைமையகம் வைத்திருக்கும்போது

| | தலைமையகம் | | கிளை |
|---|---|---|---|
| அ) | கிளைச் சொத்து க/கு ப கிளை க/கு (கிளை பணத்தொகை கொடுத்து வாங்கிய சொத்தைப் பதிவு செய்ய) | அ) | தலைமையகக்க/கு ப வங்கி க/கு (கிளைக்கான சொத்தைக் கிளை வாங்கும்போது) |
| ஆ) | கிளைச் சொத்து க/கு வங்கி க/கு ப (கிறைக்கான சொத்தைத் தலைமையகம் வாங்கும்போது) | ஆ) | பதிவு ஏதும் கிடையாது. |
| இ) | கிளை க/கு ப கிளைச் சொத்துக் க/கு (கிளைச்சொத்தின் மீதுள்ள தேய்மானத்தை நீக்க) | இ) | தேய்மானக் க/கு ப தலைமையகக் க/கு (தேய்மானம் நீக்கியது) |
| 2) | கிளைக்கான பணிகளைத் தலைமையகம் ஆற்றும்போது | | |
| ஈ) | கிளைக் க/கு ப ஊதியக் க/கு (ஊழியர்களுக்குக் கொடுத்த ஊழியத்தின் ஒரு பகுதியை கிளைக் கணக்கிற்கு மாற்ற) | ஈ) | தலைமையகச் செலவு க/கு ப தலைமையகக் க/கு (தலைமையகப் பணியாளர்களுக்குக் கிளைப் பணிக்காக ஊதியம் நல்கியது) |

கிளைகள் தமக்கிடையே சரக்குகளை மாற்றம் செய்யும்போது தலைமையகக் கணக்கிலேயே பற்றும் வரவும் வைக்கின்றன. எடுத்துக்காட்டாக, சிதம்பரம் கிளை மதுரைக் கிளைக்கு அனுப்புமானால் சிதம்பரம் கிளை.

தலைமையகக் க/கு ப
தலைமையகத்திலிருந்து பெற்ற சரக்கு க/கு

எனப் பதிவு செய்யும். தலைமையகம் தனது ஏடுகளில் மதுரைக் கிளையைப் பற்று வைத்துச் சிதம்பரம் கிளையை வரவு வைக்கும்.

ஆண்டிறுதியில் தலைமையகம், எல்லாக் கிளைகளின் இருப்பாய்வு ஆய்வுகளையும், தனது இருப்பு ஆய்வுடன் இணைத்து, நிறுவனம் முழுமைக்கும் பொதுவான வாணிக ஆதாய இழப்புக் கணக்கையும், இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யும். இவ்வாறு கிளையின் இருப்பைத் தமது ஏடுகளில் சேர்த்துக் கொள்ளத் தலைமையகம் செய்யும் பதிவுகள் தலைமையக ஏடுகளின் கிளைக் கணக்கையும் முடித்து வைக்கின்றன. அயல்நாட்டுக் கிளைகளும் தனித்தியங்கும் கிளைகள் போன்றே வணிக நடவடிக்கைகளைத் தமது ஏடுகளில் முழுமையாகப் பதிவு செய்கின்றன. அயல்நாட்டுக் கிளை ஒன்று தனது இருப்பாய்வினைத் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கும்போது, தொகைகள் அனைத்தும் அயல்நாட்டு நாணயத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும். தலைமையகம் இவற்றை இந்திய நாட்டு நாணயத்திற்கு மாற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக, ஓமன் நாட்டுக் கிளை அனுப்பும் இருப்பாய்வு இரீயாவில் (Ria) எழுதப்பட்டிருக்கும். அத் தொகைகளைச் சென்னையிலுள்ள தலைமையகம் இந்திய உரூபாய் நாணயத்திற்கு மாற்றித் தலைமையகக் கணக்குகளுடன் இணைக்கும் பதிவுகளைச் செய்ய வேண்டும்.

இரு நாடுகளுக்கிடையே நிலவும் நாணயமாற்று விகிதத்துக்கேற்றவாறு நாணயமாற்றம் செய்யப்படுகிறது. கிளையிலுள்ள நிலைச் சொத்துகளை சொத்து வாங்கியுள்ள நாளில் உள்ள விகிதத்தில் நாணயமாற்றுச் செய்தல் வேண்டும். நிலைப் பொறுப்புகளை, பொறுப்பு ஏற்கப்பட்ட நாளிலுள்ள நாணய விகிதத்தில் மாற்றல் வேண்டும். நடப்புச் சொத்துகளும், பொறுப்புகளும் ஆண்டு இறுதி நாளில் நிலவும் மாற்று விகிதத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். வணிகக் கணக்கிலும் ஆதாய-இழப்புக் கணக்கிலும் இடம்பெறும் ஏனைய நடைமுறைக் கணக்குகள் அவ் ஆண்டில் நிலவிய சராசரி நாணய மாற்று விகிதத்திலேயே மாற்றப்பெற வேண்டும். வை.ந.

**துணை நூல்கள்:**

**Chakraborty, M.,** Advanced Accountancy, Oxford University Press, Calcutta, 1978.

Gupta, R.L., Advanced Accountancy, Sultan and Sons, New Delhi, 1986,

Shukla, M.C., & Grewal, T.S., Advanced Accounts, S. Chand and Company, New Delhi, 1986.

**கிளைசுதனிசு அரசியலமைப்பு**: பண்டைய கிரேக்க நகரரசாகிய ஏதென்சில் (Athens) கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த அரசியலமைப்பாளராகிய கிளைசுதனிசு (Cleisthenes) என்பவரால் அந்த நகரரசுக்கு வரைந்தளிக்கப்பட்ட நேர்முகக் குடியாட்சி அரசியலமைப்பே (Direct Democracy) கிளைசுதனிசு அரசியலமைப்பு (Constitution of Cleisthenes) எனப்படும்.

**அரசியலமைப்பை வரைந்த சூழ்நிலை**: ஏதென்சு நகரரசு, அக்கால மற்ற எல்லாக் கிரேக்க நகரரசுகளையும் போலவே, சிறிய பரப்பளவையும், சிறிய மக்கள் தொகையையும், குடிமக்கள் வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தவல்ல முழு அதிகாரத்தை உடைய அரசாங்கத்தையும், வேளாண்மை, தொழில் முதலிய வாழ்க்கைக்குத் தேவையான செயல்களைச் செய்வதற்கு அரசியல் உரிமைகள் இல்லாத ஓர் அடிமைகள் வகுப்பையும் கொண்டிருந்தது. அது தொடக்கத்தில் அரசர்களுடைய முடியாட்சியிலும், பின்னர் உயர்குடிப் பிரபுக்களாட்சியிலும் (Aristocracy), பின்னர்ச் செல்வச் சிறுகுடியாட்சியிலும் (Oligarachy) இருந்தது குடிமக்கள் உரிமையுடைய சமூகத்தில் பிறப்பில் கிரேக்கர்களாக இருந்தவர்கள் மட்டுமே அடங்கி இருந்தனர். செல்வராட்சியின் விளைவாகச் சமூகத்தில் அரசியலில் பங்குடைய, அளவிற் சிறிய செல்வர் வகுப்பும், பங்கு ஏதும் இல்லாத அளவிற் பெரிய சாதாரண மக்கள் அடங்கிய வகுப்பும் இருந்தன. சாதாரண மக்கள் வறுமையினாலும், கொடிய சட்டங்களினாலும் துன்புற்றனர். சொலோன் என்ற (Solon) ஓர் அரசியலறிஞர் சாதாரண மக்களுக்கு அரசியலுரிமைகளை வழங்கியும், முறையற்ற கடன்களைத் தள்ளுபடி செய்தும், நில உடைமை உரிமையைப் பாதுகாத்துச் சட்டங்கள் செய்தும், குடிஉரிமை உடைய அதீனியர்களுக்கு ஆட்சியில் பங்கு இருக்கத்தக்க ஒரு குடியாட்சி அரசியலமைப்பை உருவாக்கிச் செயற்படுத்தியும் அரும்பணி செய்தார். அவருடைய அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள், ஓரளவு சாதாரண மக்களுக்கு நன்மை அளிப்பனவாகவும், குடியாட்சி இயல்புடையனவாகவும் இருந்தன. செல்வருக்கும் வறியோருக்கும் இடையே இருந்த பெரும் வேறுபாடு ஓரளவு குறைக்கப்பட்டது. ஆயினும், சமூக சமத்துவம் (Social Equality) முழு அளவில் ஏற்படவில்லை. செல்வர் அவருடைய சீர்திருத்தங்களை வெறுத்தனர். சொலோன் 4 அதீனியக் கிளையினர்களுள் (Tribes) அடங்கியிருந்த குடும்பக் குழுக்களுக்கே (Phratries அல்லது Brotherhoods) குடியுரிமை (Citizenship Rights) வழங்கியிருந்தார். பிறப்பின் அடிப்படையில் அரசியலுரிமைகளை வழங்கியிருந்த இவருடைய அரசியலமைப்புச் சீர்திருத்தம் நெடுநாள் நீடித்திருக்கவில்லை; இவர் ஆட்சியாளர் பதவியிலிருந்து (Archonship) விலகிய சில காலத்தில், செல்வர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்ட ஏழை அதீனிய மக்களின் சார்பாகப் பிசிசுட்டிரேட்டசு (Peisistratus) என்பார் கிளர்ச்சி செய்து, ஆட்சியைக் கைப்பற்றிச் சருவாதிகார ஆட்சியை நிறுவினார். இவர் ஒரு சருவாதிகார ஆட்சியாளர் என்பதைத்தவிர, இவருடைய ஆட்சியில் பல நல்ல சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டு, ஏதென்சின் வளமும் புகழும் ஓங்கின. செல்வர் வறியோர் என்ற வேறுபாடு நீங்கி, நாடு குடியாட்சியை ஏற்றுக்கொள்ளத்தக்க சமூகச் சமத்துவத்தை அடைந்தது. ஆனால், கிரேக்கர்கள் பொதுவாக நன்கு மதித்த, சட்டத்துக்கு ஒத்த வகையாக அல்லாமல், – அதாவது, முறையான தேர்தலின் வழியாக நகரரசு மக்களால் ஆட்சியாளராகத் தேர்ந்து எடுக்கப்படாமல் – மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, ஆதரவைப் பெற்று, ஒற்றையாளாட்சியை நிறுவிய காரணத்தால், இவருடைய ஆட்சியைக் கொடுங்கோலாட்சி (Tyranny) என்று, அதற்கு உரிய இக்காலப் பொருளில் இல்லாமல் சருவாதிகார ஆட்சி என்ற பொருளில் குறிப்பிட்டனர். இவர் காலத்துக்குப் பின்னர் ஏதென்சில் ஒற்றையாளின் சருவாதிகார ஆட்சி நீக்கப்பட, இந்தச் சூழ்நிலையில் கி.மு. 507-இல் கிளைசுதனிசு தம் குடியாட்சிச் சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார்.

**அரசியலமைப்பின் சிறப்புகள்**: கிளைசுதனிசு, மெகக்கிளிசு (Megacles) என்னும் பெயருடை ஒரு நற்குடிப்பிறந்த அதீனியரின் மகன்; பிசிசுட்டிரேட்டசின் ஆட்சியில் பல இடர்ப்பாடுகளுக்கு ஆளானவர். இவர் நாடு கடத்தப்பட்டுப் பின்னர்த் திரும்பி வந்து சட்ட ஆட்சியாளர் பதவியில் (Archon) இருந்தபோது, சொலொனின் அரசியலமைப்பிலிருந்த குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்கி, ஒரு நேர்முகக் குடியாட்சி அரசியலமைப்பை வரைந்து செயற்படுத்தினார். முதலில் அவர் அதீனியக் குடிஉரிமைக்கு முன்பு ஆதாரமாக இருந்த பிறப்புத் தகுதியை மாற்றி, மக்கள் வாழ்ந்த நிலப்பகுதியை ஆதாரமாக வைத்துக் குடி உரிமை வழங்கினார். ஏதென்சும், அது அமைந்திருந்த ஆட்டிக்கா (Attica) நாடும் 150 நிலப்பகுதிகளாகப் (Demes) பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலும் வாழ்ந்த மக்கள் அதற்குரிய

குடியுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். நிலப் பகுதி அடிப்படையில் குடிமக்களை அவர் 10 கிளைகளாகப் பிரித்து (Tribes) அவர்கள் ஆண்டுதோறும் கிளை ஒன்றுக்கு 50 பேர் உறுப்பினர்களாக நாட்டின் உயர் தர நிருவாக மன்றமாகிய ஐந்நூற்றுவர் மன்றத்துக்கு (Conucil of Five Hundred) தேர்ந்தெடுக்கப்படச் செய்தார். இந்த 500 உறுப்பினருள் 50, 50 பேர் அடங்கிய ஒரு சிறு குழு சுழல் முறையின்படி (Turn System), ஒவ்வொரு மாதத்துக்கு உயர்தர நிருவாகக் குழுவாக ஆட்சியிலிருந்தது; அதீனியர்கள் ஆண்டை 360 நாள்களாகவும், 10 மாதங்களாகவும், மாதத்தை 36 நாள்களாகவும் பிரித்திருந்தனர். ஒவ்வொரு மாதத்திலும் உயர்தர நிருவாகக் குழுவாக இருக்க வேண்டிய 50 உறுப்பினர் குழு எது என்பதும், அவருள்ளும் எவரொருவர் மாதத்தின் ஒவ்வொரு நாளுக்கும் நாட்டின் உயர்தர நிருவாக அதிகாரியாக இருத்தல் வேண்டுமென்பதும், திருவுளச் சீட்டு, சுழல்முறை ஆகியவற்றின் வாயிலாகத் தீர்மானிக்கப்பட்டன. பிற்காலத்தில் ஆட்சிப் பணியாளர்களுக்கு அரசாங்கக் கருவூலத்திலிருந்து ஊதியமும் வழங்கப்பட்டது. ஐந்நூற்றுவர் மன்றமே, நாட்டில் எல்லா வயது வந்த ஆண் (கிரேக்க) மக்களையும் உறுப்பினராக உடைய சட்டமன்றம் (Ecclesia) கவனிக்க வேண்டிய பணிகளை ஆயத்தம் செய்தும், சட்ட மன்றம் நிறைவேற்றும் சட்டங்களைச் செயற்படுத்தியும் வந்தது. நாட்டின் தலைமையான அதிகாரி, அதன் எல்லா வயது வந்த ஆண்களுமடங்கிய சட்டமன்றமே. இது சட்டங்களைச் செய்தும், அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தும் பணி செய்தது. அதிகாரிகளெல்லாம் குறித்த காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திருவுளச் சீட்டு முறையின் வழியாகத் தகாதவர் பொறுப்புகளுக்கு வருவதைத் தடுத்தற்கும், ஆட்சிக் காலத்தில் தவறு செய்யாமல் தடுத்தற்கும், பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவரும், பதவி ஏற்குமுன்னரும், பதவி முடிவடைந்த பின்னரும் தாம் செய்துள்ள செயல்களைப் பற்றிய முழு விவரங்களையும் அரசாங்கத்துக்கு அறிவித்தல் வேண்டும். நாட்டின் உயர் நீதிமன்றமாகிய பெருமன்றத்தில் (Heliaea) திருவுளச்சீட்டு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 6000 குடிமக்கள் நீதிபதிகளாக இருந்தனர். அறிஞர் சாக்கிரட்டிசுக்குக் கொலைத்தண்டனை வழங்கிய நீதிமன்றம் இதுதான்.

**மதிப்பீடு**: கிளைசுதனிசு நிறுவிய இந்த நேர்முகக்குடியாட்சி முறை எந்த மாறுபாடும் இல்லாமல், தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக ஏதென்சில் நடைமுறையிலிருந்தது. இந்த அதீனியக் குடியாட்சி முறையை மற்றக் கிரேக்கக் குடியாட்சிகளும் பின்பற்றின. பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் இக்குடியாட்சி முறை ஏற்படுத்திய சூழ்நிலைகளில்தான் சுதந்திர ஆய்வு அறிவாளர்களாக வாழ்ந்தனர். எந்தச் சட்டமும், அல்லது எந்த அரசியல் நிறுவனமும் சுதந்திரக் குடிமக்கள் யாவருடைய ஆய்வுக்கும் உட்படுத்தப்படும் தகுதி பெற்றிருத்தல் வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் அறிவுக்கொத்த ஆய்வு செய்திடுதல் வேண்டுமென்றும், ஒவ்வொருவரும் தன்னோடொத்த குடியாளோடு ஆய்வு செய்வதிலும், தாம் கண்ட உண்மையைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதிலும் பிறர் கண்ட உண்மையைத் தாம் அறிவதிலுந்தான் குடியாளின் உண்மையான சுதந்திரம் இருக்கிறதென்றும், தாங்களே இத்தகைய ஆய்வுத்திறனைப் பெற்ற சுதந்திரமக்களென்றும் இத்தகைய சுதந்திரத்தோடு வாழுதற்கேற்ற சமூக அமைப்பு நகரரசுதான் என்றும் அரிசுடாட்டில் உள்ளிட்ட ஒவ்வொருவரும் நம்பினர். மேலும், நல்ல அரசாங்கத்துக்கு இன்றியமையாத இரு கூறுகளாக இருப்பவை சுதந்திரமும் (Freedom), சட்டத்துக்கு மதிப்பும் அல்லது சட்டத்தின் ஆட்சியும் (Rule of Law) என்றும், இவை இரண்டுமுடைய ஏதென்சு தான் 'கிரேக்கத்தின் பள்ளிக்கூடம்' (School of Hellas) என்றும், கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் ஏதென்சின் ஆட்சித் தலைவராக விளங்கிய பெரிக்கிளிசு (Pericles) பெருமையோடு கூறினார். பா.சு.

**துணை நூல்கள்**:

Hignett, C., A History of the Athenian Constitution to the End of the Fifth Century, B. C., Oxford, 1952.

Jones, A.H.M., Athenian Democracy, Oxford, 1957.

Larsen, J.A. O., Cleisthenes and the Development of the Theory of Democracy at Athens, New York, 1948.

**கிளைடு** இசுகாட்லாந்தில் (Scotland) உள்ள ஓர் ஆறு. அந்நாட்டின் தென்மேற்கில் உள்ள கிளைடு (Clyde) ஆற்றின் நீளம் 170.6 கி.மீ. புகழ்பெற்ற கிளாசுகோ (Glasgow) நகரின் வழியாக இது ஓடுவதால் இதன் வாணிகச் சிறப்பு,சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மாக்கடலிலிருந்து கிளாசுகோவுக்கு இதன்மூலம் கப்பல்கள் செல்லுவதற்குப் பயன்படும் வகையில் இந்த ஆறு ஆழப்படுத்தப் பெற்றும் அகலப் படுத்தப்பெற்றும் உள்ளது. மிகப்பெரிய கப்பல்களும் இதன் வழியாகச் செல்கின்றன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே முதல் ஐரோப்பிய நீராவிக் கப்பல் இதன் வழியாகச் சென்றது. இதில் போக்குவரத்து பெருகிக் கொண்டே வரு

கிறது. கப்பல் கட்டும் தொழில் இதன் துறைமுகங்களில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. உலகின் முக்கிய உள்நாட்டு நீர்வழிகளில் இதுவும் ஒன்று. இந்த ஆற்றின் போக்கில் இலானார் என்னுமிடத்தில் நான்கு அழகிய நீர்வீழ்ச்சிகள் உள்ளன. நீர்ப்பாசனத்திற்கும் இந்த ஆறு மிகவும் பயன் தருவதாக உள்ளது. தெ.பா.

**கிளைமொழி அகராதி** என்பது ஒரு மொழியின் பல கிளைமொழிகளில் உள்ள சொற்களை, அவற்றின் வடிவம், பொருள் ஆகிய ஒப்புமை அடிப்படையில் முறையாகத் தொகுத்தளிக்கும் அகராதி நூல். ஒரு மொழியில் பல வட்டாரக் கிளைமொழிகள், சமுதாயக் கிளைமொழிகள். தொழில் கிளைமொழிகள், சாதிக் கிளைமொழிகள் ஆகியன உள்ளன. கிளைமொழி அகராதி(Dialect Dictionary) அச்சொற்களைப் பொருள் அடிப்படையில், ஒரு கிளை மொழியிலுள்ள சொல்லுக்கு இணையான பிற கிளை மொழிச் சொற்கள் யாவை என்பதையும், ஒரு சொல் எந்தெந்தப் பொருளில் வேறு கிளைமொழிகளில் வழங்கிவருகின்றது என்பதையும் விளக்கும். கிளைமொழி அகராதிகளை, வட்டாரம், சாதி, சமூகம் போன்ற அடிப்படையிலும் கொண்டுவரலாம்.

முதியோர் கல்வி. முறைசாராக் கல்வி, ஆரம்பக் கல்வி போன்றனவற்றில் வட்டாரச் சொற்களின் மூலம், பாட முறைகளை அமைத்துக் கல்வி புகட்டினால், கற்போர் பெரிதும் விரும்பிக் கற்பர். அதனால், அவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றனர். கருத்துப் பரிமாற்றமும் எளிதாக ஏற்படுகிறது. இந்த வகையான அகராதி தமிழ் மொழியின் சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு வலுவூட்டும்; வழிவகுக்கும்.

கிளைமொழி அகராதி என்பது தமிழ்மொழிக்குப் புதிய துறையாகும். அகராதி என்பதனை ‘அகரமுதலி’ எனவும் கூறுவர். ஆயினும், அகராதி என்ற சொல்லே பெருவழக்கில் உள்ளது. ஓர் அகராதியில் அகரவரிசையில் சொற்கள் அமைக்கப்பட்டு அச்சொல்லின் பொருள் கொடுக்கப்படும்.

பொருள் அடிப்படையில் அமையும் கிளைமொழி அகராதியின் அமைப்புமுறையினைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. பொருள் அடிப்படையில் கிளைமொழிச் சொற்கள் வகைப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு வகைப்படுத்தப்பட்டன, அகரவரிசைப்படுத்தப்பட்டு, வரிசை எண் கொடுக்கப்படல் வேண்டும்.

2. அகராதியில் இடம்பெற்றுள்ள கிளைமொழிச் சொற்கள் அனைத்திற்கும், அகரவரிசைத் தொகுப்பு அமைத்து, அத்தொகுப்பு நூலின் இறுதியில் கொடுக்கப்படவேண்டும். அதில் அமைந்துள்ள சொற்கள் ஒவ்வொன்றும் எவ்வெவ் வட்டாரங்களில் வழங்குகின்றன என்பதனை, வட்டாரங்களுக்குரிய எண்களை அடுத்துக் குறிப்பிடுவதன் மூலம் காட்டுதல் வேண்டும்.

3. கிளைமொழிச் சொற்களைத் திரட்டுதற்கான களப் பணியில் திரட்டப்பெற்ற எல்லாச் சொற்களும் அகராதியில் இடம் பெறவேண்டும்.

4. ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள், அச்சொற்கள் ஒவ்வொன்றும் வழங்குமிடங்கள் ஆகியவற்றைத் தொடர்புபடுத்தும் வகையில் மேற்கோள் காட்டி விளக்கம் தரவேண்டும்.

5. கிளைமொழி வழங்கும் வட்டாரங்கள் வரிசைப்படுத்தப்பட்டு வட்டாரம் ஒவ்வொன்றிற்கும் ஓர் எண் தரப்படவேண்டும். ஒரு சொல் வழங்கும் வட்டாரங்களின் எண்கள் அச்சொல்லின் முன்னர்க் குறிக்கப்படவேண்டும்.

6. சொல் வகையின் வரிசை எண் சொல், வகையின் பெயர், சொல்லின் வரிசை எண், அதன் கருத்து, எழுத்து மொழி, வழக்குச் சொல், சொல்லுக்கு முன் அது வழங்கும் வட்டாரங்களின் எண்ணிக்கை என்ற அமைப்பில் அகராதியில் சொற்கள் அமைக்கப்படவேண்டும்.

அகராதியின் சிறப்பு, அதன் அமைப்பு. சொற்களின் வடிவம், அவை வழங்கும் இடங்கள், ‘குறிக்கும் பொருள்கள் ஆகிய செய்திகளைத் தருவதில்தான் உள்ளது. மேலும், ஒரே வடிவத்தை உடைய சொல் வெவ்வேறு பொருளிலும் வழங்கும். அதனையும் அகராதி விளக்கும்.

பொருள் அடிப்படையில் அமையும் கிளைமொழி அகராதியின், எடுத்துக்காட்டுப் படிவம் வருமாறு:

**கிளைமொழி வழங்கும் வட்டாரங்களைக் குறிக்கும் எண்கள்;**

1. கன்னியாகுமரி
2. கோவை
3. செங்கற்பட்டு
4. திருச்சி
5. தென்னார்க்காடு
6. மதுரை

**1. உறவுமுறைப் பெயர்களும் மனிதர்களைக் குறிக்கும் சொற்களும்**

**1. அண்ணனின் மனைவி – அண்ணி**

1. மைனி

2, 6. அண்ணி

5. மச்சா

**2. அம்மா – அம்மா**

1. அம்மெ

2, 6. அம்மா

5. ஆயி – அம்மா – ஆத்தா

**3. அம்மாவின் தங்கை–சித்தப்பாவின் மனைவி–சித்தி**

1. சித்தி

2, 4, 6 சின்னம்மா

5. சித்தி – ஆச்சி – சின்னாயி – சின்னம்மா

3. சின்னம்மா – தொத்தா

**4. தங்கை – இளைய சகோதரி**

1. தொங்கச்சி

3, 6. தங்கச்சி

5. தங்கச்சி – பாப்பா

3. தங்கெ

கு.அ.

**துணை நூல்:**

**சீனிவாசவர்மா, கோ.** கிளைமொழியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1986.


**கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடு** (Isogloss) என்பது மொழியியல் வரைபடத்தில் (Linguistic Atlas) ஒரு குறிப்பிட்ட உச்சரிப்பு, இலக்கணம் அல்லது சொல் வழங்கும் இடத்தைச் சுற்றி வரையப்படும் கோடாகும். கிளைமொழி எல்லைகளை வரையறுக்கக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றைகள் (Bundle of Isoglosses) பயன்படுகின்றன. இவற்றைக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கூறுகள், பண்பு வளையங்கள், வழக்கெல்லை ஆகிய மாற்றுப் பெயர்களைக் கொண்டும் குறிப்பிடுகின்றனர். ஒரு பொருளைக் குறிக்கும் பல்வேறு வழக்குகளின் அடிப்படையில் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளை அல்லது வழக்கெல்லைகளை வரையறுக்கலாம். முழுமையாக வரையப்பட்ட வரைபடங்களில் காணப்படும் ஒலிப் பாகுபாட்டுக் கோடு, தொனிப்பாகுபாட்டுக் கோடு, சொல் பாகுபாட்டுக் கோடு, சொற்றொடர்ப் பாகுபாட்டுக் கோடு, பொருள் பாகுபாட்டுக் கோடு ஆகியவற்றிலிருந்து முறையே ஒலி, தொனி, சொல், சொற்றொடர், பொருள் பாகுபாடுகள் அவற்றின் அமைப்புகள் ஆகியவற்றை நுணுக்கமாகப் பிரித்தறியலாம்.

கூட்டுச் சராசரிக் கால நிலை (Mean Temperature) நிலவும் இடங்களைப் புள்ளியிட்டுக் காட்டக் காலப் பாகுபாட்டுக் கோடுகள் (Isotherm) பயன்படுவதுபோல ஒரே வகைக் கிளைமொழி வழக்குகள் வழங்கும் இடங்களைப் புள்ளியிட்டு இணைக்கக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் பயன்படுகின்றன. கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் ஒரே வழக்குக் கிளைமொழிகளை இணைக்கும் பாலமாக அமைவதோடு நில்லாமல், அவற்றை வளைத்து ஒன்று சேர்த்து ஒரு கூட்டு இடமாக (Zone) உருவாக்குகின்றன. இவ்வகைக் கிளைமொழி வழக்குகள் ஒரு குறிப்பிட்ட விரிவு மையத்தில் (Focal point) தோன்றி, அங்கு நிலையாகச் சில காலம் வழக்கிலிருந்து, காலப்போக்கில் அதனருகிலுள்ள இடங்களுக்கும் முறையாகப் பரவி, அங்கும் நிலைகொண்டு ஞாபக இடத்தை (Relic Area) உருவாக்கி, வணிகம், போக்குவரத்துப் போன்றவற்றால் மாற்றமடையாமல் தொடர்ந்து மற்றொரு மாற்றமடையும் இடத்திற்கும் (Transitier Area) விரிந்து அங்குப் பிறகிளைமொழிகளின் சேர்க்கையால் மாற்றங்களைத் தழுவுகின்றன.

அரசியல், வாணிகம், சமயம், சட்டத்தொழில், கல்வி முதலியவற்றின் சமுதாய மையங்களை விரிவு மையங்கள் எனக் கூறுகின்றனர். சமுதாய அமைப்பின் அடிப்படையில் அங்கு அமையும் கிளைமொழி வழக்குகளில் எந்த அளவிற்குப் பிறமொழிகளின் நேரான ஊடுருவல் ஏற்படுமோ அதற்குத் தக்கவாறு அதன் அமைப்பில் மாற்றங்கள் ஏற்படும். நிலையான பேச்சுத் தொடர்பு கிளைமொழிகளின் தனிமொழிக் கூறுகளைக் குறைக்கும். பொதுவாக மாநகரங்கள் விரிவுமையங்களாக அமைகின்றன. பேச்சுத் தொடர்புகள் மாநகரங்களிலும் நகரங்களிலும் எளிதில் ஏற்படும் வாய்ப்புகளைக் கொண்டுள்ளன. ஆனால், நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு நினலயான பேச்சுத் தொடர்பு ஏற்படத் தடைகள் காணப்படுவதால் கிளைமொழியில் பாகுபாடுகள் ஏற்படுகின்றன. எனவே மாநகரங்கள், தீவுகள், பாலைவனத் தீவுகள், மலைகள் ஆகிய இடங்களில் ஞாபக இடங்கள் நெடுநாள் நிலவும் நிலை காணப்படுகிறது.


கிளைமொழிப் பாகுபாட்டுக்கோடுகள் கச்சைகள் (Belts) கட்டுகள் (Bands) அல்லது மடிப்புகள் (Seams) போல் அமையாமல் வரிவடிவ எல்லைக் கோடுகளாக (Linear Boundaries) அமையும். அவை நிலையாக இல்லாமல் அடுத்தடுத்து அமையும் கிளைமொழிகளின் சொற்றொடர்களின் (Contiguous Forms) அடிப்படையில் அடிக்கடி மாறுநிலையில் உள்ளன. இவற்றின் தோற்றத்தைப் பல வண்ணப்படிகத்தில் வண்ணங்கள் ஒன்றை ஒன்று ஒட்டியிருத்தலுக்கு ஒப்பிடலாம். கிளைமொழிகளின் கூறுகளை (Linguistic Features) ஒப்பிட்டு ஆராயும்போது அக்கிளைமொழிகளின் தனிக் கூறுகளைவிட அவற்றிற்கிடையே சிறப்பாக அமையும் ஒற்றுமைக் கூறுகளை அதிகமாகக் காணலாம். இக்காரணங்களால் கிளைமொழி வரைபடங்களில் கிளைமொழிகளைச் சரிவர வரைந்து காட்ட இயலவில்லை. ஒரு தனிக் கூற்றை வரையும்போது கூடக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடு போதியதாகச் செயற்படவில்லை. இவ்வகை வரைபடம், சமுதாயக் காரணிகளை (Social Factors) நிலையாகக் கொண்டு கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றைகளின் அடிப்படையில் வரைந்தால், அது சிறப்பாக அமையும். வரைபடங்களில் எல்லைகளை வரையறுக்கும்போது எல்லையின் இருமருங்கும் வெவ்வேறு கிளைமொழிகள் தொடங்குகின்றன அல்லது அவை வழக்கில் உள்ளன எனக் கொள்ளல் வேண்டும். அங்கு அந்தக் கிளைமொழிகள் திடீர் என்று தோன்றிவிடுவதில்லை. இரண்டு வட்டாரக் கிளைமொழிகளும் தொடர்பற்றுத் துண்டிக்கப்பட்டுத் தனித்தனியாக வழங்குவதுமில்லை. கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளின் அருகில் வாழும் மக்களுக்குத் தங்கள் அயலாரின் வட்டாரக் கிளைமொழியை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளும் திறன் இருக்கும். அவர்களின் பேச்சு இரு கிளைமொழிகளின் தன்மைகளையும் கலந்து பெற்றிருக்கும். எனவே, அத்தகையோர் வாழும் இடத்தைக் கிளைமொழி மாற்றமடையும் இடம் எனக் கூறலாம். ஒரு கிளைமொழி அது வழங்கும் எல்லையின் ஓரப்பகுதியை நெருங்க நெருங்க அக்கிளைமொழியின் சில கூறுகள் குறைதல் புலனாகும். அக் கிளைமொழியின் பெரும்பான்மையான தனிக்கூறுகளையும் அது வழங்கும் மையப் பகுதியில் காணலாம். அது அக்கிளை மொழி மையம் எனப்படும். எனவே, ஒவ்வொரு கிளைமொழியும் அது வழங்கும் வட்டாரம் முழுவதும் சீராக விரிந்து அமைவதில்லை. மையப்பகுதியில் அக்கிளைமொழியின் பெரும்பாலான கூறுகளும், எல்லைப்பகுதியில் அக்கூறுகள் சில சிதறிப் பக்கத்துக் கிளைமொழியின் கூறுகளுடன் கலந்தும் காணப்படும். கிளைமொழி ஆய்வின் பலனால் கிடைக்கும் புதிய கிளைமொழிக் கூறுகளை எளிதில் புரிந்துகொள்ளும் முறையில், ஒரு நாட்டுப் படத்தில் அக்கூறுகளைக் குறியீடுகள் மூலமோ பாகுபாட்டுக் கோடுகள் மூலமோ வரைந்து விளக்குவது கிளைமொழி வரைபடம் (Dixlect Atlas) எனப்படுகிறது.

கிளைமொழிப் பாகுபாட்டுக்கோடுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக அமையாமல் அவை ஒன்றை ஒன்று குறுக்கு வெட்டாகச் (Criss Cross செல்வதோடு மாறுபட்ட வகைகளிலும் செயற்படும். படம் 1-இல் அ என்ற மொழியின் கிளைமொழியாக $அ_1$ குறிப்பிடப்பட்டுள்ளது. $அ_1$ கிளைமொழி பேசும் மக்கள் அ மொழியின் ஏனைய கிளைமொழிகளிற் காணப்படாத பாங்குகள் (Traits) சிலவற்றை வழங்குவர். $அ_1$ கிளைமொழியையும், $அ_2$ கிளை மொழியையும் பிரிக்கும் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளின் கற்றையாக அமைகின்றன. $அ_1$ கிளைமொழி பேசும் மக்கள் தங்களுக்குள் தனிமொழிகள் கொண்டிருந்தாலும் அவர்கள் ஒரு குழுவாக மற்றக் கிளைமொழி பேசும் குழுக்களின் மொழியியற் பாங்குகளிலிருந்து மாறுபட்ட ஒரு மொழியியற் பாங்கைக் கொண்டிருப்பார்கள்.




கிளைமொழி எல்லைகளை (Linguistic Boundaries) வரையறுக்கும்போது கிளைமொழிப் பாகுபாட்டுக்கோடுகளுக்குப் பதிலாகக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றைகளைப் பயன்படுத்துவது சாலச் சிறந்தது. கிளைமொழி வரைபடம் 1, ஒரு மொழியினுள் காணப்படும் கிளைமொழிகளின் எல்லைக்

கோடுகளை எளிதாகப் பிரித்துக் காட்டும். வரைபடம் 2-இல் எண் குறித்த ஒவ்வொரு கோடும் வெவ்வேறு பாகுபாட்டுக் கோட்டினைக் குறிக்கின்றது. கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் 7 முதல் 10 ஈறாக ஒரு கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றையாகக் காணப்படுகின்றன.




இக்கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றை ஒருகிளைமொழி எல்லைக்கோடாக அமைந்து, இரு பக்கங்களிலும் வெவ்வேறு கூறுகளுடன் கூடிய கிளைமொழிகள் இருப்பதைக் காட்டுகின்றது. அதுபோல் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் 3 முதல் 6 ஈறாகப் பிறிதொரு கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றையாகக் காணப்படுகின்றன. ஒன்றோடொன்று கலந்து காணப்படும் கிளைமொழிகளைப் பிரித்து அறியக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றைகளை அளவைகளாகப் (Critevia) பயன்படுத்தலாம். எல்லாக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளையும் அளவைகளாகக் கருதினால் அவை பல சிறிய கிளைமொழிகளுக்கு வழிவகுக்கும். இது மிகச் சிக்கலானது. அதனுடன் மொழியியற் கோட்பாடுகளும் வட்டார எல்லைகளும் வட்டாரக் கிளைமொழிகளைச் (Regional Dialects) சரிவர அறிந்து கொள்ள உதவுவதில்லை. எந்த ஒரு கோட்பாட்டைக் கடைப்பிடித்தாலும் விளைவுகள் சில உண்மைகளை மறைத்து ஒருமுகமாகத் தன்னலப்போக்கிற் செயற்படுவதை அறியலாம். அதனுடன் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் 1-உம் 2-உம் கலைந்துபோன கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளாகக் காணப்படுகின்றன. இவை சிக்கலை மிகைப்படுத்தும். எனவே, கிளைமொழிகள் மொழியியல் அறிஞர்களின் (மக்களின்) சிந்தனைக்கும் தேவைகளுக்கும் ஏற்ப அவர்களாகவே சுருக்கி அமைத்துக் கொள்வதாகும். அவை இயற்கையாக அமையும் மொழியியற் கருவுருத் தோற்றம் (Linguistic Phenomenon) அல்ல.

நிலநூல் எல்லைகளுக்குள் (Geographical Terms) மொழியியல் வேற்றுமைகளை (Linguistic Diversities) முழுமையாக விவரிக்க இயலாது. மேற்கூறிய பாகுபாடுகளுக்கு மேலாக மற்றும் இரு உருவளவைகள் (அகற்சிகள்) (Dimensions) உண்டு. ஒன்று ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் ஒரு நகரத்தில் சமுதாய ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்றவாறு பேச்சில் வேற்றுமை காண்பது. உயர்குடி மக்களும் பாமர மக்களும் அவர்தம் பேச்சுகளில் வேற்றுமைகள் காண்பது இயல்பு. பல்கலை நகர்களில் (University Towns) வேற்றிடங்களிலிருந்து வந்த பெரும்பாலான ஆசிரியர், மாணவர்களின் பேச்சிற்கும் அந்நகரின் மரபுவழி மக்களின் பேச்சிற்கும் மாறுபாடுகள் பல காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட தொழில் செய்பவர்கள் செய்தொழிலுக்குரிய கலைச் சொற்களைப் பயன்படுத்துவர். அவர்கள் பேச்சு நகரின் மற்ற மக்களின் பேச்சிலிருந்து மாறுபட்டு அமையும். எடுத்துக்காட்டாக, வழக்கறிஞர்கள் அவர்களுக்கான கலைச்சொற்களையும், கிரிக்கட்டுப் பற்று மிக்கவர் (Cricket Fans) அவ்வாட்டத்திற்குரிய சொற்களையும் அவர்களுக்குள் பயன்படுத்துவதைக் காணலாம். இரண்டாவதாக, ஒரு தனி மனிதன் தனக்கென்று ஒரு தனி மொழியைக் கடைப்பிடிப்பதோடு நில்லாமல் தன் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன் பேச்சு நடையையும் மாற்றிக் கொள்கிறான். அவன் தன் அலுவலகத்தில் மேலதிகாரியிடம் பேசும் நடைக்கும் வீட்டில் மனைவி மக்களிடம் பேசும் நடைக்கும் வேறுபாடுகள் உண்டு. இவ்வாறு சூழ்நிலைகளுக்கு ஏற்றுவாறு மொழியைப் பயன்படுத்தப் பழகியிருப்பதால் மொழிக்கூறுகள் அனைத்தையும் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளால் வரைந்து காட்டுவது செயல் முறைக்கு அப்பாற்பட்டதாக மொழி அறிஞர்கள் கருதுகின்றனர். பொ.சா.தா.

**கிளை மொழியியல்** என்பது காலம், இனம், நாடு, வட்டாரம், சமுதாயம் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும் மொழிப் பாகுபாடுகளை ஆராய்ந்து அவற்றின் உச்சரிப்பு, இலக்கணம், சொற்

களின் நிலவியற் கூறுகளால் (Geographic Distribution) ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றை விரிவாக விளக்கும் ஒரு மொழியியற் பிரிவாகும். கிளை மொழியியல் (Dialectology) பல்வேறு கிளைமொழி களினிடையே நிலவும் உறவு முறைகளையும் ஒற்றுமை வேற்றுமைகளையும் விளக்கும் தன்மை யுடையதாகும். மொழியியலில் வரைபடம்(Linguistic Atlas) முதல்முதலாக 1900-ஆம் ஆண்டில் தொகுக்கப் பட்டபொழுது கிளைமொழி நிலவியலில் (Dialect Geography) பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு, மொழி யின் சமுதாயப் படிமநிலை (Social Stratification) தலையாய சிறப்பிடம் பெற்றது. கிளைமொழி ஆய்வு களில் வினா ஏடுகளுக்கு மாறாக நேர்முகப் பேட்டி யும் மாதிரிப் படிவ ஆய்வுகளும் பயன்படலாயின. ஆராய்ச்சிகளின் விளைவாகக் கிளைமொழிகள் நிலை பேற்று மொழியைவிடத் (Standard Language) தரத்தில் குறைந்தவை, மாறுபட்டவை என்பன போன்ற கருத்துகள் நீங்கி, அவை தனிப்பட்ட தனி மொழி முறைகளைக் கொண்டவை என்ற கருத்து உருவா கியது.

ஒரு மனிதன் மற்றொருவனைப் போல் தோற்ற மளிப்பதில்லை. அவ்வண்ணமே ஒவ்வொருவருடைய பேச்சும் எழுத்தும் மாறுபட்டே அமைகின்றன. தமிழ் மொழி, எழுத்துத் தமிழ், பேச்சுத் தமிழ் என வகைப் படுத்தப்படுகிறது. எழுத்துத் தமிழ், பத்திரிகைத் தமிழ், ஆட்சித்தமிழ், கடிதத் தமிழ், இன்றைய உரை நடைத் தமிழ், பழைய இலக்கியத் தமிழ் என வகைப் படுத்தப்படுகிறது. அவ்வாறே பேச்சுத்தமிழும் நாட்டுக்கு நாடு, மாவட்டத்திற்கு மாவட்டம். ஊருக்கு ஊர், இனத்துக்கு இனம் வேறுபடுகிறது. தஞ்சைப் பகுதித் தமிழும்,நாஞ்சில் நாட்டுத் தமிழும் ஓரளவு வேறுபட்டவையே.ஒரேகுடும்பத்தில் பல்வேறு இடங்களில் பயின்று வீட்டிற்குத் திரும்பும் கணவ ருடைய பேச்சிலும், சுற்றத்தாருடன் பயின்று வீட்டோடு வாழும் மனைவியின் பேச்சிலும், வயதிற் கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு கல்வி கற்று வரும் பிள்ளைகளின் பேச்சிலும் பல வேறுபாடுகளைக் காணலாம்.

நினைவில்லாக் குறை, தவறுபட ஒலிக்கும் குறை நா வழு முதலிய காரணங்களால் ஒரு மொழியே பல வாறு திரியவும் நேர்கிறது. ஒருவர் பயன்படுத்தும் மொழி ஒரே நிலையில் நெடுநாள் தொடர்ந்து இருக்க இயலாது என்பது மொழியியல் அறிஞர்களின் கருத்து. அதற்கான முக்கிய காரணங்கள்: 1) ஒருவர் ஒரே தொடரை முதல் முறை சொல்வதிலும், மறுமுறை சொல்வதிலும் வேறுபாடு. நிகழ்தல்(திரும்பத் திரும்ப ஒரே தொடரைப் பேசும்போது உளமொழியியல் காரணங்களால் (Psycholinguistic reasons) பேச்சுச் சிறிதளவு திரிபடைதல், 2) பேசுபவரின் எண்ணத் திலும் பேச்சிலும் படைப்பாற்றலின் அல்லது உரு வாக்குத் திறனின் (Creativity) அடிப்படையில் படிப் படியே வளர்ச்சியும் மாறுதலும் உண்டாதல், 3) ஒருவர் செவியில் விழும் பிறருடைய சொற்களும் தொடர்களும், அவர் பேசிப்பழகும் மொழியுடன் சேரும்போதும் மாறுதல் அடைதல் என்பனவாகும். இக்காரணங்களால் ஒரே மொழியில் பேசும் மக்களி டையேயும் கருத்துச் சிதைவு ஏற்படுகிறது. மொழி யில், இவ்வாறு கருத்துச் சிதைவுகளால் ஏற்படும் வேறுபட்ட வழக்குகளைக் கிளைமொழி வழக்குகள் என்று கூறுகின்றனர். ஒரு மொழியில் கருத்துச் செறிவு தடைபடும் வன்மை மென்மைக்கேற்ப அவற் றின் தரமும் அமையும். இவை முதலில் பேச்சு மொழியில் தோன்றி நாளடைவில் எழுத்து வடி விலும் காணப்படும். ஒரு மொழி வழங்கும் இடத் தின் பரப்பளவு, பேசும் மக்களின் எண்ணிக்கை, வழங்கி வரும் கால அளவு முதலியவற்றிற்கேற்ப அம்மொழியின் கிளைமொழிகளின் எண்ணிக்கை அமைகிறது. ஒரே மனிதன் அலுவலகத்தில் பேசும் மொழி வழக்கு வேறாகவும், கடைத்தெருவில் பேசும் மொழி வழக்கு வேறாகவும், விளையாட்டுக் கூடத்தில் பேசும் மொழி வழக்கு வேறாகவும் சிறுவரிடம் பேசும் மொழி வழக்கு வேறாகவும், மேடையில் பேசும் மொழி வழக்கு வேறாகவும், கடிதத்தில் எழுதும் மொழி வழக்கு வேறாகவும், கட்டுரையில் எழுதும் மொழி வழக்கு வேறாகவும் இருப்பதால், மக்களின் குழுத் தொகையைவிட, மொழி பலவகைகளில் மிகவும் வேறுபடுகின்றது எனக் கூறலாம்.

கிளைமொழி (Dialect) என்பது ஒரு மொழி யினுள் அடங்கி, அம்மொழியின் கூறுகள் அனைத்தை யும் பெற்று, ஒரு குறிப்பிட்ட குழுவினரால் பேசப் படுவதாகும். அது ஒரு மொழியிலிருந்து பிரிந்த அல் லது கிளைத்த மொழி என்ற பொருள் தருவதன்று. ஒரு மொழியை முழுமையாக அறியவேண்டுமானால் அம்மொழியிலுள்ள பண்டைய இலக்கண இலக்கியங் களை ஆராய்ந்து அறிதல் மட்டும் போதாது; அம் மொழியின் நடைமுறையில் வழங்கும் பேச்சுமொழி யினையும் ஆய்ந்து அறிதல் வேண்டும். பேச்சுமொழி யில் வழங்கும் அருஞ்சொற்கள், அவற்றின் அகப் பொருள்கள், இலக்கண அமைப்புகள் ஆகியன அம் மொழியைச் சரிவர அறிய உதவும். ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட நேரத் தில் பேசும் பேச்சினைத் தனிஒருவர்மொழி (Idiolect) எனலாம். பலர் பேசும் தனி ஒருவர் மொழிகளின் தொகுப்பைக் கிளைமொழி எனலாம். தனி ஒருவர் மொழிகளின் சில வேறுபாடுகள் கருத்துச் செறிவிற்

குத் தடையின்றி அல்லது அறிதிறன் மாறாமல், ஒருங்கிணைந்து பல மக்களால் வழங்கப்படும்போது கிளைமொழியாகிறது. கிளைமொழிகளின் தொகுப்பே ஒருமொழி.

மொழிகளின் வளர்ச்சியில் இருவகை இயல்புகள் இருத்தலைக் காணலாம். பலவகைக் கூறுகளையும் ஒன்றுபடுத்த முயலும் ஒற்றுமைப் பாங்கினை ஒரு புறமும், ஒன்றுபட்ட மொழியையே பலவாறு வேறு படுத்தும் வேற்றுமைப்பாங்கினை மற்றொருபுறமும் காணலாம். இவ்விரு இயல்புகளுக்கும் இடையே மொழி காலம் கடந்து நிலைத்து வாழும் தன்மை பெறுகிறது. மொழி, அளவு கடந்து வேறுபடுமாயின் அறிதிறன் அற்றுப் போகிறது. ஒரே தன்மையதாய் வேறுபாடின்றிக் கிடந்தாலும் மனித இனத்தின் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் அமையும் தகுதியை இழந்துவிடுகிறது. எனவே, இவ்விருவகைப் பாங்கு களும் மொழிக்கு இன்றியமையாதனவாக உள்ளன. இவ்விரண்டும் கலந்து உருவேற்பனவே கிளைமொழி, குறுமொழி (Slang), நிலைமொழி (Standard Language), சிறப்புமொழி (Special Language) என்பன.

கிளைமொழிக்கு வரிவடிவம் கொடுப்பதில் பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. பேச்சு மொழியில் காணப்படும் எல்லா மொழிக்கூறுகளுக்கும் வரிவடி வம் அளிப்பது அரிது. ஏனெனில், ஒரு மொழியின் வரிவடிவம் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கும் நிலையில் இல்லை. அம்மொழிக்கு வரிவடிவம் கொடுத்த காலத்தில் இருந்த ஒலிகளின் எண்ணிக் கைக்கு ஏற்ப எழுத்துகள் உருவாக்கப்பட்டன. நாள டைவில் ஏற்பட்ட எல்லா ஒலி மாற்றங்களையும் எழுத்து வடிவில் எடுத்துக்காட்டுவது இயலாததாகும். ஒரு மொழி வளர்ச்சியடையும்பொழுது அதன் ஒலி களும் வரிவடிவங்களும் மாற்றம் அடையும் வேகம் ஒரே நிலையில் இருப்பதில்லை. பேச்சு மொழியின் வேகம் வரிவடிவில் காணும் வேகத்தை மிஞ்சியதாகக் காணப்படுகிறது. பேச்சு மொழிக்கு வரிவடிவம் கொடுக்கும்போது அதனை எழுத்து வழக்குக் கிளை மொழி என்று கூறுவர்.

கிளைமொழியை அது வழங்கும் இடம், காலம், சமுதாயம், சாதி ஆகியவற்றிற்கேற்ப முறையே வட் டாரக் கிளைமொழி (Regional Dialect), காலக் கிளைமொழி (Temporal Dialect), சமுதாயக் கிளை மொழி (Social Dialect), சாதிக்கிளைமொழி, (Caste Dialect) என்று நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றுடன் ஒரே காலத்தை ஒத்த கிளைமொழிகளை ஒத்த காலக் கிளைமொழிகள் (Contemporary Dialects) எனலாம். இடம், காலம், சமுதாயம், சாதி என்பவற்றைக் கடந்து வரிவடிவ மொழியின் கூறுகளைப் பெற்றுப் பொது வழக்கு டன் வழங்கும் மொழியை நிலை பேறடைந்த பேச்சு மொழி (Standard Spoken Language) அல்லது நிலை பேறடைந்த கிளைமொழி (Standard Dialect) எனக் கூறலாம். இப்பொதுத்தன்மைதான் மொழி என்ற தனித்தன்மையை உருவாக்குகிறது. எழுத்து மொழி பேச்சு மொழியைவிடத் தரத்தால் சிறந்தது என்று சிலர் கருதுவர். ஆனால், பேச்சு மொழியே எழுத்து மொழிக்கு அடிப்படை. இவ்விரண்டும் ஒன்றை ஒன்று தழுவிப் பிரிக்க முடியாதனவாகக் காணப்படுகின்றன. பேச்சுமொழி ஒழிந்து எழுத்துமொழி மாத்திரம் நடைமுறையில் நிலவும் நிலை ஒரு மொழிக்கு ஏற் படும்போது அம்மொழி இறந்த மொழி (Dead Language) எனக் கருதப்படும். சமசுகிருதம், இலத்தீன், கிரேக்கம் என்பன இதற்கு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

கிளைமொழிகளைக் கண்டறியக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள்/கிளைமொழிப் பாகுபாட்டுக் கூறுகள் (Isoglosses) உதவுகின்றன. ஒரு மொழியில் உள்ள கிளைமொழிகளின் ஒற்றுமை வேற்றுமை களுக்கு ஏற்ப ஒருவருக்கொருவர் செய்தித் தொடர்பு ஏற்படுத்த இயலும். செய்தித் தொடர்புக்கு அறி திறன் இன்றியமையாதது. இருகிளை மொழிகள் வழங்கப்படும் இடங்களின் அமைப்பு, அவை வழங்கி வரும் காலம் போன்றவை அக்கிளை மொழிகளின் அறிதிறனை முடிவு செய்ய உதவும். அடுத்தடுத்து அமையும் வட்டாரக் கிளைமொழிகளில் அறிதிறன் உயர்வாக அமையும். இதற்கு மாறாக நெடுந்தூரங் களில் வழங்கும் கிளை மொழிகளின் அறிதிறன் குறைந்து காணப்படும். நெடுங்காலம் வெவ்வேறு இடங்களில் வழங்கப்படும் கிளைமொழிகளில் அறி திறனில் அதிகச் சிதறல் நிகழும். பிறமொழித் தொடர்புடன் பல்வேறு இடங்களில் வழங்கப்படும் கிளைமொழிகளில் அறிதிறன் ஓரளவுக்கு அற்றுக் கூடப்போகலாம். சான்றாகக் கன்னியாகுமரி மாவட் டத்தில் கேரளத்தை ஒட்டிய விளவங்கோடு தாலுக் காவில் வழங்கும் தமிழ்க் கிளைமொழியும், ஆந்திர மாநிலத்தை ஒட்டிய திருத்தணியில் வழங்கும் தமிழ்க் கிளைமொழியும் இவ்விரு இடங்களின் ஊரக மக்க ளால் பேசப்படும்பொழுது அவர்களுக்குள் அறிதிற னில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. விளவங் கோட்டுத் தமிழை மலையாளம் என்றும், திருத்தணித் தமிழைத் தெலுங்கு என்றும் கூறி நகைப்பர். இயற் கைச் சூழ்நிலைகளால் ஏற்படும் பிரிவுகளால் ஒரே மொழி பேசும் மக்கள் மாறுபட்ட சூழ்நிலைகளில் வாழ்கின்றனர், கடல், மலை, பாலைவனம், காடுகள் முதலியன மக்களைப் பலவகையாகப் பிரிக்கின்றன.

நீண்ட காலமாக மிகுந்த தொடர்பின்றி வாழும் போது மக்களிடையே செய்தித் தொடர்பில் தடை ஏற்படுகிறது. அதனால், கிளைமொழிகளும் தோன்று கின்றன. செய்தொழில், வாழும் சூழ்நிலை, பிற, மொழிக் கலப்பு, பண்பாடு, அரசியல் ஆதிக்கம் பொருளாதாரம் ஆகியன பல கிளைமொழிகளை உருவாக்குகின்றன. ஒரு நாட்டில் பலமொழிகள் பேசப்படுமானால் அந்நாட்டு மக்களின் சமூக, பண் பாட்டுத் தொடர்புகளின் அடிப்படையில் மொழிக் குறுக்கீடுகளும் (Interference) மாற்றங்களும் ஏற் பட்டு, அவர்கள் பேசும் கிளைமொழிகளின் அமைப் பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மொழிகளின் உள் ளடங்கிய கிளைமொழிகளை ஆய்வுசெய்து அறிந்து புதிய மொழிக் கூறுகளைக் குறியீடுகளாலோ பாகு பாட்டுக் கோடுகளாலோ எளிதாக வரைந்து விளக்கு வதைக் கிளைமொழி வரைபடம் (Dialect Atlas) எனக் கூறுகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் கிளைமொழிகளின் வழக்கு வரவரக் குறுகி வருவதைக் காணலாம். அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ள துரித மான பயண வசதிகள், செய்தித்தாள்கள், திரைப் படம், வானொலி, தொலைக்காட்சி முதலியன பொதுமொழி ஆற்றலுடன் செயற்படத் துணைபுரி கின்றன. மக்களின் வாழ்விலும் பொதுத் தேவைகள் மிகுதியாகிக் கொண்டே வருகின்றன. குடிசைத் தொழில்கள் குறைந்து, பெரிய தொழிற்சாலைகள் பெருகி, மக்கள் சிறுசிறு கூட்டமாகப் பிரிந்து வாழும் நிலை மாறிப் பலர் சேர்ந்து வாழும் நிலையினைக் காணமுடிகிறது. சிற்றூர்கள் பட்டணங்களாக உரு வெடுக்கின்றன. பழமைக்கு மாறாக, இன்று ஒருவன் குடும்பத்தோடு பழகும் நேரம் குறைந்து, பலருடன் வாழும் நேரம் மிகுந்து வேற்றுமைப்பாங்கிற்கு உரிய வாய்ப்புகள் மிகுந்து போவதால், கிளைமொழிகள் வளர்வதற்கான வாய்ப்புகள் குறைந்துவருகின்றன.

பொ.சா.தா.

**துணை நூல்கள்:**

**கருணாகரன், கி.**, சமுதாய மொழியியல், பாரிநிலை யம், சென்னை, 1975.

**சீனிவாச வர்மா, கோ.**, கிளைமொழியியல், அண்ணா மலைநகர், 1977.

**John T. Platt and Heidi K.Platt**, The Social Significance of Speech, North-Holland,1975.

**Peter Trudgill**, Socio-linguistics, Pelican Books, Middlesex, England, 1972.

**Ronald W. Langacker**, Language and Its Structure, New York, 1968.

***கிளை வங்கி முறை***, வளர்ச்சியடைந்து வேரூன்றிய பெரிய வங்கிகள் நாடெங்கிலும் தம் கிளைகளை நிறுவிச் செயற்படும் அமைப்பினைக் குறிக்கும். வங்கிகளின் அமைப்பு நாட்டுக்கு நாடு வேறு படுகிறது. ஒரு நாட்டின் வங்கி அமைப்பு அந்நாட்டின் மரபியல் பழக்கவழக்கங்கள், பொருளாதார நட வடிக்கைகள், அரசியல் அமைப்பு ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. பெரும்பாலான உலக நாடுகளில் தனி வங்கி (Unit Bank), கிளை வங்கி முறை (Branch Banking), குழு வங்கி முறை(Group Banking) ஆகிய மூவகை அமைப்புகள் ஒரே காலத்தில் செயற்படுகின் றன. அவை தனியார் துறையிலும் பொதுத் துறை யிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் சில நாடு களில் அயல் நாட்டாரின் வணிக வங்கிகளும்(Foreign Commercial Banks) இயங்குகின்றன. பலவகை வங்கி களையுடைய அமைப்பில் ஒருங்கிணைந்த வணிகவியல் கொள்கையைச் (Integrated Monetary Policy)செயற் படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள்பல எழுகின்றன. ஒருங்கமைந்த நிதிக் கொள்கையினை (Organised Monetary Policy) நிறுவுவதற்குப் பொதுத்துறைக் கட்டுப்பாட்டில் அமையும் கிளைவங்கி முறை சிறந் தது எனக் கருதப்படுகிறது. கிளை வங்கி முறை அமைப்பில், அதன் தலையாய முதன்மை வங்கி, ஒரு தலைமை அலுவலகத்தை நிறுவி, அதன் கட்டுப்பாட் டின்கீழ் நாடெங்கிலும் கிளை வங்கிகளை நிறுவி அவற்றைக்கண்காணித்து நெறிப்படுத்தி இயக்கும். தலைமை அலுவலகம் பொதுவாக ஒரு மாநகரத்தில் நிறுவப்படும். நாட்டின் நிதித்துறை அமைப்பு, தொழில், வாணிகம், வேளாண்மை, பணி ஆகிய துறைகளின் நிதித் தேவையை ஒட்டிக் கிளைகள் தோன்றி வளர்ச்சி அடையும். வங்கியின் கிளைகள் உட்பட்ட பொது மேலாண்மைப் பொறுப்பை இயக்கு நர் குழு ஏற்று நடத்தும். பங்குரிமையாளர்கள் இயக்குநர் குழுவில் இருப்பர்.

கிளைவங்கி முறை அமைப்பிற்கு இங்கிலாந்து வங்கி முறை சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்தியா, தென் ஆப்பிரிக்கா, பிரான்சு (France) செருமனி, கனடா (Canada) போன்ற நாடுகளிலும் கிளைவங்கி முறை தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன. வங்கித் தொழிலின் வரலாற்றுப் பின்புலம் குறிப்பிட்டதொரு வங்கி அமைப்பு உருவாகக் காரணமாக அமைகிறது எனலாம். அமெரிக்காவில் முற்றுரிமை நிறுவனங் களும் அவற்றின் இணைப்புகளும் நாட்டின் பொருளா தார நிதி வளத்தில் மேல் அதிகாரம் கொண்டிருந்த மையால், அதனைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும்

நோக்கத்துடன் அரசு, வங்கிகள் பெருமளவில் வளர்ச்சியடையாவண்ணம் சட்டம் இயற்றியது. அதனால் அமெரிக்காவில் கிளைவங்கிகள் வளர்ச்சியடையவில்லை. கிளைவங்கி முறை வளர்ச்சியினால் ஒருசில இயக்குநர்களிடம் பொருளாதார வளம் குவிவதை அமெரிக்க அரசு சட்ட மூலம் கட்டுப்படுத்தியது.

இங்கிலாந்தில் முற்றுரிமை, இணைப்பு ஆகிய நிறுவனங்களில் சிக்கல்கள் எழவில்லை. தொழிற்புரட்சிக் காலத்தில் உற்பத்திக்கும் வாணிகத் தேவைக்கும் வங்கிகள் உறுதுணையாயிருந்தன. நாடு முழுமையிலும் பெருகிய நிதித் தேவையினை நிறைவேற்றக் கிளைகள் அமைக்கும்படி வளர்ச்சியடைந்த தனி வங்கிகளை அரசு ஊக்குவித்தது. எனவே, இங்கிலாந்தில் கிளை வங்கி முறை, கூட்டு இருப்பு வங்கி அமைப்பிலிருந்து (Joint Stock Bank) தோன்றி வளர்ச்சியடைந்தது.

கிளை வங்கி முறைக்கு முன்னோடியாக இங்கிலாந்துக் கிளைவங்கி விளங்கியதால் கிளைவங்கி முறையைப் பிரிட்டனின் முறை (British System) என்றும் கூறுகின்றனர். பிரிட்டனின் 20-ஆம் நூற்றாண்டைய வங்கித்தொழில், ஐம்பெரும் வங்கிகள் (The Big Five) எனக்கூறப்படும் இலாயிட்சு (Lloyds), 'நேசனல் புரோவின்சியல்' (National Provincial), வெசுட்டு மினிசுட்டர் (West Minister), பார்க்லேசு (Barclays), மிட்லாந்து (Midland) ஆகிய வங்கிகளின் கட்டுப்பாட்டிற்குள் இயங்குகிறது. இவை நாடு முழுவதிலும் 80,000க்கும் மேலான கிளைகளை நிறுவிச் செயற்படுகின்றன.

கனடாவில் தனியுரிமை ஆவணம் (Chartered) பெற்ற நான்கு வங்கிகள் 6000க்கும் மேலான கிளைகளை நிறுவி வங்கித்தொழிலை நடத்துகின்றன. கனடா நாட்டின் மொத்த வங்கித்தொழிலுள் 80 விழுக்காடு இவ்வங்கிகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளன. செருமனியிலும் (Germany) நான்கு பெரிய வங்கிகள் நாட்டின் 90 விழுக்காட்டு வங்கித்தொழிற் பொறுப்பை ஏற்று நடத்துகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் கிளைவங்கி முறை தலையாய இடத்தைப் பெறவில்லை எனினும், அவை முற்றிலும் நடைமுறையிற் செயற்படாமலில்லை. நாட்டில் 1900-இல் செயற்பட்ட 8736 வணிக வங்கிகளுள் 87 வங்கிகள் 119 கிளைகளை அமைத்துச் செயற்பட்டன. அதுவே 1920-இல் 29,087 மொத்த வணிக வங்கிகளுள் 530 வங்கிகள், 1281 கிளை வங்கிகளாகப் பெருகின. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்க் கிளைவங்கிகள் மேலும் பெருகி, 1950 முதல் 1966-ஆம் ஆண்டுக் காலங்களில் கிளை வங்கிகளை அமைக்கும் வங்கிகளின் எண்ணிக்கை 1291-இலிருந்து 3313 ஆக உயர்ந்தது. அவைகளின் கிளைகள் முறையே 4721,16,648ஆகச் செயற்பட்டன. கிளைவங்கிகள் எண்ணிக்கையில் பெருகியுள்ளன எனினும், அமெரிக்காவில் தனி வங்கி முறை தலைமையான முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. சிறப்பியல்புகள்: கிளை வங்கி முறை பெருமளவுத் தொழில் நிறுவனத்தையொத்துச் (Large Scale Industry) செயற்படுவதால் பல அக, புறச் சிக்கன (Internal & External Economics of Scale) நன்மைகளைப் பெறுகிறது. கிளை வங்கி முறையில் வங்கித்தொழில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தொழில்நுணுக்கத் திறமையுடன் நடைபெறுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் நுட்பம் சிறந்த பணியாளர்களை அமர்த்த வாய்ப்பு இருக்கிறது. இதனால் பணியாளருடைய திறமையும் அறிவும் வங்கியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. அதனால், தனிச் சிறப்புப் பயிற்சியும் வேலைப் பகுப்பும் (Specialisation & Division of Labour) வளர்ச்சியடைகின்றன. வங்கியின் நடைமுறைத் திறமை வளர்ந்து, ஆதாயம் அதிகம் பெற இந்த வேலைப் பகுப்பு வழி செய்கிறது. வங்கித்தொழிலின் மேலாண்மைத் திறமை உயர்கிறது. இவ்விளைவுகள் ஓரிடத்தில் மட்டும் செறிந்து காணப்படாமல் நாடெங்கிலும் நிறுவப்பட்டிருக்கும் கிளை வங்கிகளிலும் எளிதில் புகுத்தப்பட்டு நாட்டின் பொருளாதார நிதி, வாணிகத் தொழில் நடவடிக்கைகள் பயனடைகின்றன.

கிளைவங்கி முறையில் கடன் வழங்கலைப் பன்முகப்படுத்த இயலும். அதனால் இடர்தாங்கல் (Risks), பல தொழிலுக்கும் நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவலாக்கப்படுகிறது. வங்கித்தொழில், கிளைகள் மூலம் விரிவாக்கப்பட்டு வளர்ச்சியடைவதால், வங்கி நொடிப்புகளும் (Bankruptcy) குறைகின்றன.

கிளை வங்கிகள் நாட்டின் மூலை முடுக்குகளிலும், ஒதுக்கப்பட்ட சமுதாயங்களிலும் வங்கித் தொழில் பரவவும், பொருளாதார நடவடிக்கைகள் பெருகவும் உதவுகின்றன. நாட்டின் எல்லாப் பகுதிச் சேமிப்பும் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படவும் கிளைவங்கிகள் உதவுகின்றன.

நாட்டின் நிதிவளம் ஒரு பகுதியிலிருந்து பிற பகுதிகளுக்கு முதலீடாக (Capital) மாற்றம் செய்யப்படுவதற்குக் கிளைவங்கி முறை உதவுகிறது. செல்வமிக்க பகுதிகளிலிருந்து பின்தங்கிய பகுதிகளுக்கு உபரி மூலதனம் மாற்றம் செய்யவும் கிளைவங்கிகள் உதவுகின்றன. நிதி மூல வளத்தை மிகைஉற்பத்தித் திறன் வாய்ந்த பயன்பாட்டிற்கு முதலீடு செய்யவும்

நாடு முழுவதிலும் ஒரே வட்டிவீதம் நிலவவும் கிளை வங்கி முறை வழி வகுக்கிறது.

கிளை வங்கி முறையினால் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து பிற பகுதிகளுக்குச் சிக்கனமான முறையில் பணம் அனுப்பமுடிகிறது. வங்கிச் செய்திகள் மூலம் குறிப்பிட்ட ஆட்களிடையே கொடுக்கலும் வாங்கலும் எளிதில் குறைந்த கட்டணத்தில் நடைபெறுகின்றன. உண்டியல்களை மாற்றுதல் (Discounting Bills), மறு கழிவு செய்தல் (Re Discounting), காசோலைகளைப் பணமாக மாற்றுதல் போன்ற நடவடிக்கைகளைக் கிளைவங்கிகள் குறைந்த செலவில் காலதாமதமின்றி விரைவில் செய்து முடிக்கின்றன.

கிளைவங்கிகள் குறைந்த காப்பு இருப்புப் பணநிதியுடன் (Cash Reserve Fund) சிக்கனமாகத் தொழிலை நடத்தலாம். எக்காலத்திலும் பணத் தொகையினை உயர்ந்த அளவில் கையிருப்பாக வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. அவசரத் தேவைகளுக்குப் பிற கிளை வங்கிகளிடமிருந்தோ, தலைமை அலுவலகத்திலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம். இதனால், கையிருப்புப் பணத்தைத் திறமையாக உயர் பயன்பாட்டு இலக்குடன் முதலீடு செய்ய இயலும். கிளைவங்கி முறை மிகுந்த ஆதாயத்தை ஈட்டுகிறது. எக்கிளையிலும் பணம் முடங்கி இழப்பு ஏற்படாமலிருக்கிறது.

கிளைவங்கி முறையில் வங்கிகள் நாட்டின் பொருளாதார வாணிக நடவடிக்கைகளையும் போக்கையும் அறிந்து செயற்பட இயலும். ஒரு பகுதியில் மந்தநிலை (Depression) நிலவினாலும் அதற்கேற்ற நடவடிக்கையினை எடுக்க இயலும். உலகப் பெரு மந்தத்தால் (Great Depression) 1930-ஆம் ஆண்டளவில் அமெரிக்காவில் வங்கி நொடிப்பு மிகுதியாகக் காணப்பட்டது. கிளைவங்கி முறை செழிப்புற்றிருந்த பிரிட்டனில் அந்நிலை ஏற்படவில்லை. பெருமந்தத்தால் இலங்காசயர் (Lankashire) ஆடைத் தொழிலும் பிற தொழில்களும் பாதிக்கப்பட்டன. ஆனால், அப்பகுதி கிளை வங்கிகளின் பணிகள் சிறிது காலத்திற்கு முடங்கின எனினும், பிற கிளை வங்கிகளின் சிறப்புத் தொழிலினால் மொத்த ஆதாயம் இழப்பை மிஞ்சின. வங்கி நொடிப்புகள் என்ற சிக்கல் குறிப்பிடத்தக்க அளவில் எழவில்லை.

அரசும் நாட்டின் மைய வங்கியும் குறிப்பிட்ட இலக்குடன் பணவியற் கொள்கையைச் செயற்படுத்தவும் நிதி நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தவும் கிளை வங்கி முறை இன்றியமையாச் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது. மைய வங்கி நாட்டின் வங்கித் தொழிலைத் தன் கட்டுப்பாட்டிற்குள் நெறிப்படுத்தி இயக்குதற்குக் கிளைவங்கி முறையே சிறந்ததாக விளங்குகிறது.

இவ்வளவு நன்மைகள் இருந்தபோதிலும், கிளை வங்கி முறையிலும் சில இடையூறுகளும் சிக்கல்களும் உள்ளன. இம் முறையில் மிகப் பெரிய அளவில் வங்கிகள் வளர்ச்சியடைவதினால் காலதாமதமும் திறமையின்மையும் காணப்படுகின்றன. கிளைவங்கி அலுவலர்கள் முழு அதிகாரமில்லாதவர்களாக இருப்பதால் பொறுப்பைக் களைந்து செயற்பட ஏதுவாகின்றனர். அவசரக் கடன் வழங்கல் தேவைகளுக்கும் உடனடி முடிவு எடுக்க இயலாதவர்களாய்த் தலைமையலுவலகத்தின் அனுமதியையும் அறிவுரையையும் ஆணையையும் எதிர்பார்த்துக் காலதாமதத்தை உண்டாக்குகின்றனர்.

கிளைவங்கிகள் தாங்கள் செயற்படும் பகுதியின் தனி ஆள்தேவை, சமுதாயத் தேவை ஆகியவற்றின் தனிப்பட்ட இயல்புக்கேற்றவாறு செயற்பட இயலவில்லை. நாடு முழுமைக்கும் ஒரேவகையான ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படவேண்டும் எனத் தலைமை வங்கி வலியுறுத்துவதாலும், கிளைவங்கி அலுவலர்களும் மேலாண்மையினரும் அடிக்கடி பணி இடமாற்றம் செய்யப்படுவதாலும், வாடிக்கையாளரின் விருப்பு வெறுப்பு, தகுதி ஆகியவற்றை அறியாமலும் அவர்கள் உண்மை நிலையை உணராமலும் நெருங்கிய உறவுகள் ஏற்படாமலும் வங்கிப் பணி நடக்க வாய்ப்பு ஏற்படுகிறது. ஒரு பகுதியின் நிதி வளமும் சேமிப்பும் அப்பகுதியின் தேவை புறக்கணிக்கப்பட்டு அப்பகுதியின் முன்னேற்றத்திற்குப் பயன்படாமல் பிற பகுதிகளுக்குச் சென்றிடக் கிளைவங்கி முறையில் வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

கிளைவங்கிகள் மிகையாக வளர்ச்சியடையும் போது பொருளாதாரச் சிதைவு (Dis Economy) உண்டாகும். கிளைவங்கிகள் பல ஆக்கமற்ற (Un-Productive) சூழ்நிலைகளில் தொழில் நடத்துவதால் வங்கியில் மொத்தச் செலவு மிகும்.

கிளைவங்கி முறையில் நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் யாவற்றையும் கிளைவங்கிகள் ஒருங்கிணைத்துச் செயற்படுகின்றன. அதனால், வங்கி நொடிப்பு ஏற்பட்டால் பொருளாதாரம்பெருமளவில் பாதிப்புக்குட்படும். வங்கித்தொழில், கிளைவங்கி முறையில் முற்றுரிமை நிலையையடைந்து செல்வமும் பொருளாதார மூலவளமும் ஒருசிலர் கட்டுப்பாட்டின் கீழ்க் குவிய நேரிடலாம். அதனால், சமூக நலனும் பொருளாதார முன்னேற்றமும் புறக்கணிக்கப்படும்.


கிளைவங்கி முறையில் ஒருசில குறைகள் இருப்பினும் மைய வங்கியின் கட்டுப்பாட்டினாலும் அரசின் கொள்கையினாலும் கிளைவங்கி முறையை மேற்கொள்ளலாம். பிற வங்கி முறைகளைவிட வளரும் நாடுகளுக்குக் கிளைவங்கி முறையே சிறந்தது எனக் கூறப்படுகிறது. நாட்டின் பின்தங்கிய பகுதிகளிலும் ஊரகங்களிலும் தனி வங்கிகள் செயற்பட இயலா. கிளைவங்கிகள், செழிப்புற்ற பிற கிளை வங்கிகளாலும் தலைமை வங்கியாலும் ஆளப்படுவதால், வங்கித்தொழில் நாடு முழுமையும் செயற்படக் கிளைவங்கி முறையே சிறந்தது எனக் கருதப்படுகிறது. இந்திய அரசும் இந் நன்மைகளைக் கருத்தில் கொண்டு கிளைவங்கி முறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. 14 பெரிய தனியார் வங்கிகள் 1969-ஆம் ஆண்டில் நாட்டுடைமையாக்கப்பட்டபோது அரசு கிளைவங்கி முறையை ஒரு முக்கிய குறிக்கோளாகக் கருதி, வங்கிகளை நாட்டின் பின் தங்கிய பகுதிகளிலும் ஊரகங்களிலும் கிளைவங்கிகளை நிறுவ ஆணை பிறப்பித்தது. அதன்படி இன்று இந்தியாவின் கணிசமான பகுதிகளில் கிளைவங்கிகள் செயற்பட்டு வருகின்றன. அதனால் ஏழை எளிய சிறிய வேளாண்மையினர், நிலமற்றோர், மீனவர்கள், கைவினைஞர்கள், அட்டவணை இனத்தவர்கள், ஏனைய நலிவடைந்தவர்கள் பயன்பெற்றுத் தங்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றமடையச் செய்கின்றனர்.

அ.கு.சா.

**கிளைவழி உறவு முறை**: உறவுமுறையைப் பொதுவாக இருவகையாகப் பிரிக்கலாம், அவை: 1. இரத்தவழி உறவு (Consanguinity), 2. மணவழி உறவு (**Affinity**) என்பன. பொது மூதாதையரிலிருந்து இறங்கி வரும் இருவர், இரத்தவழி உறவுக் கொண்டவர் ஆவர். இரத்தவழி உறவினரைப் பின்வருமாறு இருவகையாகப் பிரிக்கலாம்: 1. நேர்வழி உறவு (Lineal), 2. கிளைவழி உறவு (Collateral). இரத்தவழி உறவு முறை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 24, 25, 26 ஆகிய பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளது. நேர்வழி உறவு, நேரடியாக ஏறு முறையிலோ இறங்கு முறையிலோ இருப்பது. தந்தை, பாட்டன், கொள்ளுப் பாட்டன் என்று ஏறுமுறையிலோ மகன், பேரன், கொள்ளுப்பேரன் என்ற இறங்குமுறையிலோ இருப்பது. கிளைவழி உறவு (Collateral relationship) அவ்வாறு பொது மூதாதையரிடமிருந்து இறங்கிவரும் உறவு முறை எனினும், நேரடியாக இல்லாமல் பக்கவாட்டில் அதாவது கிளைவழியாக எழும் உறவாகும். எ.கா.: அண்ணன், தம்பி, தமக்கையர், அண்ணன் மகன். அண்ணன், தம்பி நேர்வழித் தோன்றல்கள் அல்லர். இருவரும் தந்தை மூலந்தான் உறவு கொண்டவர். வாரிசு உரிமை வழங்கப்படுவதற்கு, யார் முன்னுரிமை பெறுபவர் என்பதற்கு இந்தப் பிரிவு முறை தேவைப்படுகிறது.

ஆ.ச.

**கிளைவு, இராபர்ட்டு** இந்தியாவில் ஆங்கில ஆட்சியை ஏற்படுத்துவதற்கு அடிக்கல் நாட்டியவர்; சிறந்த படைத் தலைவர்; அரசியல் வல்லுநர்.



கிளைவு, இராபர்ட்டு

இவர் கி.பி. 1725-ஆம் ஆண்டு இசுராப்பு மாவட்டத்தில் (Shrop shire) உள்ள தமது குடும்பப் பண்ணையில் பிறந்தார். இவர் தந்தையார் நாடாளுமன்ற உறுப்பினராகப் பல ஆண்டுகள் செயலாற்றி வந்தார். கிளைவு சிறுபிள்ளையாக இருந்த போது, இவரைக் கட்டுபடுத்துவதென்பது மிகக் கடினமான செயலாக இருந்தது. பல பள்ளிக்கூடங்களுக்கு இவர் அனுப்பப்பட்ட போதிலும் பயன் ஏதும் ஏற்படவில்லை. ஆகவே, கி.பி. 1743-இல் இவரைச் சென்னைக்கு அனுப்பி வைத்துக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் பணியில் ஓர் எழுத்தராகச் சேர்த்துவிட்டார்.

சென்னையில் இவர் எல்லோரிடமும் சண்டை போடுவார்; சிடு சிடுப்பாக இருப்பார். மனச்சாந்திக்காக அடிக்கடி ஆளுநருடைய நூலகத்திற்குச் சென்று படிக்கத் தலைப்பட்டார். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரர்களுக்கும் இடையே கருநாடகப் போர் தொடங்கியபோது கிளைவு எழுத்தர் பணியைத் துறந்து படைப் பணியில் சேர்ந்துவிட்டார்.

இரண்டாம் கருநாடகப் போரின்போது ஆர்க்காட்டைத் தாக்கும் பணி கிளைவிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் 200 ஐரோப்பியர்களையும் 300 வீரர்

களையும் கொண்ட ஒரு சிறு படையைக் கொண்டு ஆர்க்காட்டைக் கைப்பற்றித் தமது படை நடத்தும் திறனை வெளிப்படுத்தினார். பின்னர், நவாபின் படைகள் ஆர்க்காட்டைக் கைப்பற்ற முனைந்தபோது, ஆர்க்காட்டுக்கோட்டை முற்றுகையை 50 நாளளவும் சமாளித்தார். அதையடுத்து ஆரணி, காவேரிப்பாக்கம் ஆகிய இடங்களில் நடந்த போர்களில் வெற்றி பெற்றார். பின்னர்த் திருச்சிராப்பள்ளி சென்று கோட்டை முற்றுகையை முறியடித்தார். அவ்வெற்றிகள் இவர் புனித தாவீது கோட்டையின் (Fort. St. David) ஆளுநராக அமர்த்தப்படுவதற்குத் துணைசெய்தன.

இதற்கிடையில் வங்காள நவாபிற்கும் ஆங்கிலேயருக்கும் இடையே தகராறுகள் முற்றின. வில்லியம் கோட்டையை நவாபு கைப்பற்றினார். ஆனால் கிளைவு கி. பி. 1757-இல் வில்லியம் கோட்டையை மீட்டார். அதே ஆண்டில் ஏழாண்டுப் போர் ஐரோப்பாவில் தொடங்கிற்று. அதன் காரணமாக இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் மீண்டும் போரில் ஈடுபட்டனர். கிளைவு 1757-இல் சந்திரநாகூரை வென்றார். அதையடுத்து இவர் இந்து குறுநிலமன்னர்கள் (Zamindars) மற்றும் நவாபின் அதிகாரிகள் ஆகியோருடன் சேர்ந்து நவாபை ஒழிக்கச் சதித் திட்டம் தீட்டினார். கடைசி நேரத்தில் அமீன்சந்து என்பவர் அச்சதியை அம்பலப் படுத்தாதிருக்க 30 இலட்ச ரூபாய் கேட்டார். மற்றொரு ஆங்கில அதிகாரியான வாட்சன் என்பவரின் கையெழுத்தைத் தாமே போட்டு அமீன்சந்தைக் கிளைவு ஏமாற்றிச் சதித் திட்டத்தை வெளியிடாதவாறு செய்தார். பின்னர், நவாபைப் பிளாசி என்னுமிடத்தில் தோற்கடித்துச் சதிதிட்டத்தில் சேர்ந்து கொண்ட மீர் சாபர் என்பவரை நவாபாக நியமித்தார். அவரிடமிருந்து ஆங்கிலக் குழு (Company) 24 பர்கானாக்களில் வரி வாங்கும் உரிமையைப் (diwani) பெற்றது. கிளைவு தக்க பரிசுகளை மீர்சாபரிடமிருந்து பெற்றார். வங்காளத்தில் கிளைவு தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியம் அப்போது ஏற்பட்டது. ஆகவே, கி.பி. 1757-ஆம் ஆண்டு இவர், வில்லியம் கோட்டையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

கிளைவு கி.பி. 1760-இல் இங்கிலாந்துக்குச் சென்றார். வணிகக் குழுவும் அரசரும் இவரை மரியாதையுடன் வரவேற்றனர். குழுவின் 200 பங்குகளை இவர் வாங்கினார்; பொதுமக்கள்சபை (House of Commons) யின் உறுப்பினரானார். பின்னர் இவரைப் பிரபு நிலைக்கு உயர்த்தினார்கள். அது முதல் இவரைப் பிளாசிப் பிரபு கிளைவு (Baron Clive of Plassey) என்று அழைக்கலானார்கள்.

இதற்கிடையில் வங்காளத்தில் ஆங்கில ஆட்சி ஒழுங்காக நடைபெறவில்லை. அதிகாரிகளிடம ஊழல்கள் மலிந்தன. நிருவாகத்தைச் சீர்திருத்தக் கிளைவு ஒருவரால்தான் இயலும் என்று குழுவினர் எண்ணினர். எனவே கி. பி. 1765-ஆம் ஆண்டில் இவர் வங்காள ஆளுநராக (Governor) நியமிக்கப்பட்டார். வணிகக் குழுவின் படைகளுக்கும் இவரே தளபதியாகவும் நியமிக்கப்பட்டார். வங்காள நிருவாக சபையை ஒதுக்கிவிடவும் இவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இந்தியா வந்ததும் முதல் வேலையாக இவர் அவுத்தினுடைய (Oudh) நவாபுடனும் முகலாயப் பேரரசருடனும் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன் படி வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய இடங்களில் வரிவாங்கும் உரிமையை வணிகக்குழு பெற்றது. வட சர்க்கார்ப் பகுதியிலும், ஆர்க்காட்டிலும் ஏற்படுத்தப்பட்ட குழுவின் ஆதிக்கத்தைப் பேரரசர் ஏற்றுக் கொண்டார். இந்திய ஆட்சியாளர்களுள் ஆங்கிலேயரும் ஒருவர் என்று அப்போது சட்ட முறையில் ஏற்கப்பட்டது.

அதன் பிறகு குழுவின் நிருவாகத்தில் பல சீர்திருத்தங்களைக் கிளைவு கொண்டுவந்தார். உள்ளூர் ஆட்சியாளர்களிடமிருந்து பரிசுகளைக் குழு ஊழியர்கள் பெறுவது தடை செய்யப்பட்டது. பணியாளர்கள் ஊதியத்தை உயர்த்தி, ஒவ்வொருவரும் சொந்தமாக நடத்திவந்த வாணிகத்தைக் குறைக்க முற்பட்டார். சம்பள உயர்விற்குக் குழு இயக்குநர்கள் ஒப்புதல் அளிக்காமையால், உப்பு வாணிகம் முழுவதையும் குழுப் பணியாளர்களுக்கு அளித்துத் தனிப்பட்ட வாணிகத்தின் தீமைகளைக் குறைத்தார். படைத்துறையில் நடைமுறையில் இருந்த இரட்டைப் படிப்பண (double batta) முறையை ஒழித்தார். ‘கிளைவு பிரபுவின் நிதி’ (Lord Clive’s Fund) ஒன்றை நிறுவிப்போரில் ஊனமுற்றவர்களுக்கும் இறந்துபோன வீரர்களின் குடும்பத்தினர்களுக்கும் உதவி செய்தார். அதற்குத் தாம் நவாபிடம் பெற்ற பணத்தின் பெரும் பகுதியை அளித்தார். நாளடையில் வணிகக் குழுவே உண்மையான ஆட்சியாளராக மாறியது. ஆயினும், அப்பொறுப்பை நேரடியாக ஏற்று நடத்துவது மிகக் கடினமாகக் காணப்பட்டதால், வரிவாங்கல், அமைதி, நீதி ஆகியவற்றை நிலைநாட்டல் ஆகிய பணிகளை இந்தியர்களுக்கு அளிக்கக் கிளைவு ஏற்பாடு செய்தார். அதன்படி இரண்டு இந்திய உதவி திவான்களை (Diwan) நியமித்தார். அயல் நாட்டுக் கொள்கையை வரையறுப்பது, அயல்நாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்துவது ஆகிய பொறுப்புகளை மட்டுமே குழு தன் கைவசம் வைத்துக் கொண்டது. இவ்வாறாக அதிகாரமும் பொறுப்பும் தனித்

தனியாகப் பிரிக்கப்பட்டன. அதனால், பல துன்பங்கள் மக்களுக்கு ஏற்பட்டன.

கிளைவு கி.பி. 1767-இல் இங்கிலாந்து சென்றார். சாதனைகள் பல புரிந்தபோதிலும் தமக்கு எதிராகப் பகைவர்கள் தோன்றுவதை இவரால் தடுக்க இயலவில்லை. நாடாளுமன்றத்தில் இவர் மீது ஊழல்குற்றங்கள் சாட்டப்பட்டன. ஆயினும், இவருக்கே உரிய ஆற்றலுடன் திறமையாக எதிர் வாதாடினார். எவ்வளவோ ஊழல்கள் செய்ய வாய்ப்பிருந்தும் அளவோடு தாம் நடந்து கொண்டதற்காகத் தாம் வியப்படைவதாக அதுபோது கூறினார். அந்தக் காலத்து மனிதர்களுடன் ஒப்பிடும்போது இவர் மற்றவர்களை விட அதிகமாக நெறி தவறி நடந்து விட்டார் என்று கூற முடியாது. ஆகவே, நாடாளுமன்றம் இறுதியில் தவறுகள் பல செய்திருப்பினும் நாட்டிற்கு அரிய தொண்டுகளை ஆற்றியுள்ளார் என்று முடிவு கட்டியது. அது இவருக்குப் பெரும் வெற்றியை அளித்தது. எனினும், அதனால் இவருக்கு ஏற்பட்ட மனவேதனை தாங்கொணாது கி.பி. 1774-ஆம் ஆண்டு இவர் தற்கொலை செய்துகொண்டார். தி.ஆர்.இரா.

**கிளோவிசு (கி.பி. 466-511)** பிராங்குப் பிரிவு மன்னர்; மேற்கு ஐரோப்பாவில் மெரோவிஞ்சியர் ஆட்சியை உருவாக்கியவர்; முதலாம் சில்டெரிக்கு என்பவரின் மகன்; சியாகிரியசு என்ற மன்னரை வென்று தம் ஆட்சியை நிறுவினார்; கிளோடில்டா என்ற பர்கண்டிய இளவரசியை மணந்திருந்தார்.

இவர் பல போர்களில் ஈடுபட்டவர்; முரட்டுத்தனமும் கொடூரத்தன்மையும் உடையவர். இவர் தமக்குப் பிடிக்காத எதிரிகளைக் கொன்று குவித்தார். விசிகோத்துகள் என்ற பிரிவினரின் மன்னரான இரண்டாம் அலரிக்கை கி.பி. 507-இல் ஒய்லி என்ற போர்க்களத்தில் வென்றார். இவர் பல கடுமையான தண்டனைச் சட்டங்களை இயற்றினார்; அச்சவுணர்வு அற்றவர்; கொடுமைகளுக்கு அஞ்சாதவர்; எடுத்த செயலை நிறைவேற்ற வேண்டுவென்ற வெறிமிக்கவர். இவர் கி.பி. 511 சூலையில் ஆர்லியன்சு என்னுமிடத்தில் முதன்முறையாகக் கிறித்தவத் தேவாலயக் குழுவைக் கூட்டினார்; அதே ஆண்டில் காலமானார். மா.கா.

**கிறிசுதியன், முதலாம்** தென்மார்க்கு (Denmark) மன்னனான கிறிசுதியன் (Christian), கி.பி. 1426-இல் பிறந்தார்; கி.பி. 1448-இல் தென்மார்க்கு, நார்வே ஆகிய பகுதிகளின் ஆட்சியாளரானார். தோரோதியா என்னும் விதவையை கி.பி. 1449-இல் மணந்து கொண்டார். தேனிய (Danish) மற்றும் சுவீடன் குழுக்கள் இவரை கி.பி. 1450-இல் மன்னராக அங்கீகரித்தன. ஆட்சியுரிமைச் சிக்கல்கள், பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் அவதிப்பட்ட இவரால் பொருளாதாரத் திட்டங்களைச் சீராகச் செயற்படுத்த இயலவில்லை. அப்போதைய போப்பாண்டவருடன் 1469-இல் செய்து கொண்ட நல்லுறவு உடன்படிக்கை காரணமாகத் தேனியத் திருச்சபையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இவர் கி.பி. 1479-இல் கோபன்கேகன் பல்கலைக் கழகத்தை நிறுவினார்.

மறுமலர்ச்சிச் சிந்தனையாளரான இவர் புதிய கருத்துகளை உடையவராயிருந்தார்; முன்னோக்குத் திறம் உடையவராயினும் அவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலற்றவராயிருந்தார். இவர் கி.பி. 1481-இல் இயற்கையெய்தினார்.

**கிறிசுதியன், இரண்டாம்** (Christian II) சான், கிறிசுதியானா ஆகியோரின் மகனாக கி.பி. 1481-இல் பிறந்தார். இவர் கி.பி. 1515-இல் தென்மார்க்கு, நார்வே ஆகியவற்றின் மன்னரானார்; கி.பி. 1515-இல் எலிசபெத்து என்பவளை மணந்தார். தமது பதவியைத் தக்க வைத்துக்கொள்ளும் பொருட்டுத் தமது நாட்டு மேட்டுக் குடியினருக்கும் அரசியல் செல்வாக்குப் பிரிவினருக்கும் ஒரு பத்திரத்தை வழங்கினார். ஆனால், படிப்படியாக அதில் கூறப்பட்டிருந்த விதிகளை மீறினமையாலும், ஆட்சியில் இவர் செய்த தவறுகளாலும் வெறுப்புகளுக்காளானார். இவர் தம் எதிர்ப்பாளர்கள் கி.பி. 1523-இல் இவரைப் பதவி நீக்கம் செய்திருப்பதாக அறிவித்துவிட்டு, இவர் தம் உறவினரான பிரடரிக்கு என்பவரை ஆட்சியாளரெனக் குறிப்பிட்டனர். எனவே, கிறிசுதியன் கி.பி. 1523-இல் தலைநகரை விட்டு வெளியேறி அயல் நாடுகளில் தமக்கு ஆதரவு தேடலானார். தம் மைத்துனர் பேரரசர் ஐந்தாம் சார்லசின் உதவியுடன் மீண்டும் தலைநகருக்குத் திரும்பினார். அவர்தம் எதிரி பிரடெரிக்கு அவ்வமயம் கிறிசுதியனைக் கைது செய்து சிறைப்படுத்தினார். இவர் கி.பி. 1559-இல் காலமானார்.

**கிறிசுதியன், மூன்றாம்** முதலாம் பிரடரிக்கு, ஆன் ஆகியோரின் மகனாக கி.பி. 1503-இல் பிறந்தார். இவர் தந்தை கி.பி. 1523-இல் தென்மார்க்கு மன்னரான பின்பு இவரும் மன்னராக வாய்ப்பிருந்தது. ஆனால், இவரைக் கத்தோலிக்கப் பிரிவினர் எதிர்த்தனர். இவர் தந்தை கி.பி. 1533-இல் மரணம் அடைந்தபோது இவர் இளவல் சான் என்பவரை அரசராக்க அவர்கள் முயன்றனர். ஆயினும், கி.பி. 1534-இல் இவரே மன்னரானார். பின்பு, சமயத் துறையில் பல

மாற்றங்களைச் செய்ய விழைந்தார். உலூதரனீயம் கி.பி. 1536–இல் தென்மார்க்கின் ஒப்புக் கொள்ளப் பட்ட மதமாயிற்று. மன்னரே அம்மதத் தலைவராக வும் ஏற்கப்பட்டார். தென்மார்க்குத் தேவாலயத் திருச்சபையில் கி.பி. 1537–இல் விட்டன்பர்க்குப் பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த சான் புகென் காகென் என்பவரின் ஆலோசனைகளின்படி பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

செருமனியின் உதவியுடன் தம் வெளிநாட்டுக் கொள்கைகளை அமைத்துக் கொண்டிருந்த இவர் கி.பி. 1542–இல் சில மாற்றங்களைச் செய்தார். அதனால், செருமானியப் பேரரசுடன் போரிட வேண்டியவரானார். இவர் கி.பி. 1559–இல் காலமா னார்.

தென்மார்க்கு இவரது ஆட்சியின்போது சிறப் பாக முன்னேறியது. ஐரோப்பியத் தன்மை அங்கு வேரூன்றியது. கடவுள்தன்மை, கடமைப்பற்று ஆகி யவை இவர்தம் சிறப்புக்களுக்குக் காரணமாயிருந் தன.

**கிறிசுதியன், நான்காம்** இரண்டாம் பிரடரிக்கு, சோபியா ஆகியோரின் மகனாக கி.பி. 1577–இல் பிறந்தார். இவர் கி.பி. 1588–இல் தென்மார்க்கு அரச ரானார். ஆனால், இவரது இளமை காரணமாக கி.பி. 1596 வரை நால்வரடங்கிய குழு ஒன்று செயற் பட்டது.

இவரது ஆட்சியில் உள்நாட்டு வாணிகமும், பொரு ளாதாரமும் பெருகின. தச்சுப் பொறியாளர்கள் (The Dutch Engineers), கட்டடக்கலை வல்லுநர்கள் ஆகியோரின் துணையுடன் புதிய நகரங்கள் பல உரு வாக்கப்பட்டன. தரைப்படைத்துறை, மற்றும் கப் பற்படை ஆகியவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டன. இவர் காலத்தில் நடைபெற்ற முப்பதாண்டுப் போரின் போது சீர்திருத்தக் கிறித்தவர்களை (Protestants) ஆதரித்தார். கத்தோலிக்கக் கூட்டிற்கு எதிராக கி.பி. 1625–இல் இவர் செய்த முயற்சிகள் பலனளிக்க வில்லை. இவர் கி.பி. 1648–இல் காலமானார்.

**கிறிசுதியன், ஐந்தாம்**: மூன்றாம் பிரடரிக்கு, சோபியா அமலியா ஆகியோரின் மகனாக இவர் கி.பி. 1646–இல் பிறந்தார்; கி..பி 1670-இல் தென் மார்க்கு அரசரானார்; நாட்டு மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மக்கள் செல்வாக்கு இருந்ததால் இவர் அமைதியான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார்; கி.பி.1683–இல் புதிய சட்டத் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டார். தன் னாதிக்கக் கோட்பாட்டில் பற்றுடைய இவர் கி.பி. 1699–இல் மரணமடைந்தார்.

**கிறிசுதியன், ஆறாம்** நான்காம் பிரடரிக்கு, லூசி ஆகியோரின் மகனாக கி.பி. 1699–இல் பிறந்தார். இவர் கி.பி. 1730–இல் தென்மார்க்கின் அரசரானார். அடக்கமும் அமைதியும் உள்ள இவர் திறமையான வர்களை அமைச்சர்களாக்கினார்; சோபியா மக்த லீனா என்பவளை மணந்து கொண்டார். இருவரும் பக்திமான்கள். இவர் கல்வி, வாணிகம், நலிந்தோர் நலம் பேணல் ஆகியவற்றில் பெருவிருப்பங் கொண்டி ருந்தார். அமைதியான வெளிநாட்டுக் கொள்கை யைப் பின்பற்றிய இவர் கி.பி. 1746-இல் உயிர்நீத்தார்.

**கிறிசுதியன், ஏழாம்** ஐந்தாம் பிரடரிக்கு, லூசி ஆகியோரின் மகனாக கி.பி1749–இல் பிறந்தார். இவர் கி.பி. 1766–இல் தென்மார்க்கின் மன்னரானார். இவர் படிப்பற்றவர்; கொடுமை மிக்கவர்; திறமையோ வலிமையோ இல்லாதவர். பிறர் கைப்பாவையெனச் செயற்பட்ட இவர் கி.பி. 1808–இல் உயிரிழந்தார்.

**கிறிசுதியன், எட்டாம்** ஐந்தாம் பிரடரிக்கின் இளைய மகனாக கி.பி. 1786–இல் பிறந்தார். இவர் கி.பி. 1839 முதல் கி.பி. 1848 வரை தென்மார்க்கின் மன்னராயிருந்தார். தாராளக் கோட்பாட்டில் இவர் நம்பிக்கையற்றவர். அரசியலமைப்புக்குட்பட்ட சீர் திருத்தங்கள் இவருக்கு ஏற்புடையனவல்ல. ஆயினும் தேசிய கடன்கள் குறைக்கப்பட்டன. சிறைச்சாலைகள் சீராக்கப்பட்டன. இவர் கி.பி. 1848–இல் காலமா னார்.

**கிறிசுதியன், ஒன்பதாம்** கி.பி. 1818–இல் பிறந் தார்; கி.பி. 1863–இல் தென்மார்க்கின் அரசரானார் எளிமை, நேர்மை ஆகியன இவர்தம் பண்புகள். மக்க ளிடம் நெருங்கிப் பழகாத இவர் 1906–இல் மரண மடைந்தார்.

**கிறிசுதியன், பத்தாம்** கி.பி.1870–இல் பிறந்தார். இவர் 1918 முதல் 1942 வரை ஐசுலாந்தின் அரசரா கவும் செயற்பட்டார். இவர் 1915–இல் அரசியலமைப் புத் திருத்த மூலம் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கி னார். இரண்டாம் உலகப் போரின்போது 1940–இல் தென்மார்க்கு வசமான போதிலும் கிறிசுதியன் அந் நாட்டின் அதிபதியெனவே செயற்பட்டார். இவர் 1945–இல் சுதந்திரமான தென்மார்க்குப் பாராளு மன்றத்தினை ஒப்புக் கொண்டார்; 1947–இல் கால மானார். மா.கா.

**கிறித்தவ இலக்கியங்கள்**: இயேசு கிறித் துவின் இயல்பையும் சமயக் கொள்கைச் சால்பையும்

எடுத்துரைக்கும் இலக்கியங்கள் பலவகையாகும். இயேசுவின் அன்பு நெறியினைப் பரப்ப வந்த அயல் நாட்டவரும், ஏற்று மகிழ்ந்த இந்நாட்டவரும் சிற்றிலக்கியம் முதல் பேரிலக்கியம் வரை பல்வேறு பனுவல்களை யாத்துத் தமிழ்த்தாய்க்கு அணிவித்துள்ளனர். அவை காப்பியம், கலம்பகம், அந்தாதி, அம்மானை, நாடகம், உரைநடை, புதினம், சிறுகதை, வரலாறு முதலியனவாக அமைந்துள்ளன.

**காப்பியங்கள்**: கிறித்தவ இலக்கியங்களுள் தேவ அருள் வேதபுராணம் முதல் இயேசு காவியம் வரை பத்தொன்பது காப்பியங்கள் தோன்றியுள்ளன. விவிலியத் திருநூலை அடிப்படையாகக் கொண்டு இயேசுவின் வாழ்வியலையும் திருத்தொண்டர்தம் வாழ்வையும் இவை எடுத்துரைக்கின்றன. கிறித்தவக் காப்பியங்களுள் முதலில் தோன்றியதாகக் கருதப்படும் தேவ அருள் வேதபுராணம் கி.பி. 1725–ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து யாகோம் கொன்சால்வசு அடிகளார் அருளியதாகும். புரந்திமா காண்டம், பாக்சிமா காண்டம் என இரு பகுப்புகளைக் கொண்ட இந்நூலை வீரமாமுனிவர் தம் வேத விளக்கத்துள் குறிப்பிட்டுள்ளார்.

**தேம்பாவணி**: வளன் என்பவர் இயேசுவின் வளர்ப்புத் தந்தை. அவரது வாழ்வை வனப்புற வழங்கும் காப்பியமே தேம்பாவணி. வீரமாமுனிவர் யாத்த இக்காப்பியம் 36 படலங்களும் 3615 பாக்களும் உடையது. வீரமாமுனிவரின் மாணவரால் உரை வரையப்பெற்றது. 'நீதிமான்' எனவும் 'தச்சன்' எனவும் விவிலியம் விளம்பும் வளனது வாழ்வை விரித்துரைக்கும் தேம்பாவணி, சீவகசிந்தாமணி போன்று காப்பியத்தலைவன் பெயருடன் திகழ்கிறது. 'வேரியங் கொடியோன்' ஆகிய சூசைக்கு வளன் என்னும் தமிழ்ப் பெயர் தந்து, வாடாத மாலையாக இறைவன் மார்பில் அவர் விளங்குவதால் அவருக்குத் 'தேம்பாவணி' என்னும் சிறப்புப் பெயர் சூட்டியுள்ளார் வீரமாமுனிவர். தேம்பாவணி அச்சேறிய முதல் தமிழ்க் காப்பியம் என்னும் பெருமை பொருந்தியது. ஆகிர்த மரியிடம் அன்னை மரியாள் விளம்பிய தன் வரலாறு இசுபானிய மொழியில் 'கடவுளின் நகரம்' என உருவாயிற்று. அந்நூலை முதனூலாக வைத்து வீரமாமுனிவர் வண்டமிழில் யாத்த வழிநூலே தேம்பாவணி

வளன் கருவில் உருவாய காலம் முதல் வியன்னா நகரில் சிலையாக நிலைபெறும் வரையில் அனைத்து நிகழ்ச்சிகளும் காப்பியக் கதையில் இடம்பெற்றுள்ளன. வளன் காடு சென்று மீண்டு வருவது தொடக்கம் எனலாம். அவன் மரிமயாளின் மணவாளன் ஆவது திருப்பம் ஆகும். மேலும் அவன் இயேசுவின் தந்தை ஆவது மறுதிருப்பம் ஆகும். எகிப்து நாட்டில் அறப்பணியாற்றிச் சிறந்து விளங்குவது உச்சநிலையாம்; திருமகன் கூறும் வருங்காலச் செய்தி கேட்டு மகிழ்வது பேரின்ப நாட்டம் நல்கும் விளைவு ஆகும். பிணிதோற்று படலம் முதல் முடிசூட்டும் நிகழ்ச்சி முடிய உள்ளவை துய்த்தல் என்னும் நன்முடிவு ஆகும்.

சூதேயக் காண்டம் எனப்படும் முதற்பகுதியில் விவிலியத் திருநூலின் புதிய ஏற்பாட்டுச் செய்தியும் வீடுபேற்றுக் காண்டம் எனப்படும் மூன்றாம் பகுதியில் இறையியல் கோட்பாடுகளும் நிறைந்து விவிலிய விளக்கப் பனுவலாகத் தேம்பாவணி திகழ்கிறது.

**திருச்செல்வர் காவியம்**: தெல்லிசேரி பூலோக சிங்க அருளப்ப நாவலர் கி.பி. 1741–ஆம் ஆண்டு எழுதிய திருச்செல்வர் காவியம் சோசபாத்துக் கதையினை இருபத்து மூன்று படலங்களும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தாறு விருத்தங்களும் கொண்டதாக அமைந்துள்ளது. இது இலங்கையில் கி.பி. 1896–ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது.

**யோசேப்புப் புராணம்**: கூழங்கைத் தம்பிரான் கி.பி. 1765–ஆம் ஆண்டு உருவாக்கிய யோசேப்புப் புராணம் 1203 விருத்தங்களுடன் விளங்குகிறது.

**கிறிசுதாயணம்**: திருவனந்தபுரம் சான் பால்மர் (கி.பி. 1812–1883) இயேசுவின் வரலாற்றையே 'கிறிசுதாயணம்' என்று எழுதி கி.பி. 1865–இல் வெளியிட்டார். பால காண்டம், கிரியா காண்டம், அவசுதா காண்டம், ஆரோகண காண்டம் என நான்கு காண்டங்களும் 842 விருத்தங்களும் இக்காப்பியத்தில் உள்ளன.

**திருவாக்குப் புராணம்**: யாழ்ப்பாணத்துக் கனக சபைப் புலவர் பாடிய திருவாக்குப் புராணம் கி.பி. 1866–ஆம் ஆண்டு வெளிவந்தது. பதிகத்தில் 111 விருத்தங்களும், முதற் பகுதியில் பழைய ஏற்பாட்டுச் செய்தியை உள்ளடக்கிய இரு காண்டங்களும், இரண்டாம் பகுதியில் புதிய ஏற்பாட்டுச் செய்தியை உள்ளடக்கிய எட்டுக் காண்டங்களும் இடம் பெற்றுள்ளன.

**ஆதிநந்தவனப் பிரளயம்**: வேதக்கண் என்பார் கி.பி. 1868–ஆம் ஆண்டு வழங்கிய ஆதிநந்தவனப் பிரளயம் ஆறு காண்டங்களுடன் அமைந்துள்ளது. மில்டனின் 'வீடுபேறு இழப்பு' (Paradise Lost) என்னும் ஆங்கிலப் பனுவலின் தமிழாக்கமே இந்நூலாகும்.

**ஆதிநந்தவனப் பிரளய மீட்சி**: வேதக்கண் தொடர்ந்து வழங்கிய மற்றொருகாப்பியம் ஆதிநந்த வனப் பிரளய மீட்சியாகும். ஆங்கிலப் பாவலர் மில் டன் எழுதிய வீடுபேறு மீட்சி என்னும் நூலே இவ் வாறு தமிழாக்கம் பெற்றுள்ளது. இக்காப்பியம் நான்கு காண்டங்கள் கொண்டது.

**பூங்காவனப் பிரளயம்**: மில்டன் ஆங்கிலத்தில் வழங்கிய வீடுபேறு இழப்பு என்னும் நூலின் முதலிரு சாண்டங்களையே கி.பி. 1872-ஆம் ஆண்டு சாமு வேல் வேதநாயகம் தாமசு 'பூங்காவனப் பிரளயம் என வெண் செந்துறை யாப்பில் பாடியுள்ளார். பாதாள காண்டம், யாத்திரை காண்டம் என வரும் இரு காண்டங்களும், 2626 அடிகளும் கொண்டு இந் நூல் அமைந்துள்ளது.

**ஞானானந்த புராணம்**: ஈழத்துத் தொம்மைப் பிலிப்பு கி.பி. 1874-ஆம் ஆண்டு விவிலியத் திருநூலின் விளக்கமாக 'ஞானானந்தபுராணம்' என்னும் காப்பி யத்தை விருத்தப்பா யாப்பில் வழங்கியுள்ளார். உற் பத்தி, உபத்திரவம், உத்தானம் ஆகியமூன்று காண் டங்களும், இருபத்து நான்கு சருக்கங்களும் உடைய தாக இக்காப்பியம் இலங்குகிறது.

**ஞானாதிக்கராயர் காப்பியம்**: சாமிநாதர் கி.பி. 1876-ஆம் ஆண்டு அருளிய ஞானாதிக்கராயர் காப் பியம் ஞானாதிக்கன் வரலாற்றை 2222 பாடல் கள் கொண்ட முப்பது படலங்களில் கூறுகிறது. இக் காப்பியத்தின் மாரி வாழ்த்துப் பாக்களை எல்லீசர் எடுத்துத் தம் திருக்குறள் மொழி பெயர்ப்பில் மேற் கோள் காட்டியுள்ளார்.

**இரட்சணிய யாத்திரிகம்**: கிருட்டிணபிள்ளை, எச்.ஏ. என்பார் பதினான்கு ஆண்டுகள் (கி.பி. 1878-1892) 'நற்போதகம்' இதழில் தொடர்ந்து எழுதி வந்த இரட்சணிய யாத்திரிகம், ஆசிரியராலேயே பதிப்பிக்கப் பட்ட சிறப்பு வாய்ந்த முற்றுருவகக் காப்பியமாகும். நாற்பத்தேழு படலங்களும் 3776 பாக்களும் கொண்ட இரட்சணிய யாத்திரிகம் திருப்பயணியான கிறித்தி யானைக் காப்பியத் தலைவனாகப் பெற்றுள்ளது. அவன் நாச நாட்டிலிருந்து பேரின்ப நாட்டுக்குச் செல்லும் செய்தியைச் செப்புவதே காப்பியப் பொரு ளாகும்.

**கிறித்து மான்மியம்**: சுதோச ஜயர் கி.பி. 1891-இல் தரங்கம்பாடி உலுத்தரன் திருச்சங்க அச்சகத் தில் பதிப்பித்த கிறித்து மான்மியம் முப்பத்தொன்பது சருக்கங்களுடன் திகழ்கிறது. இது கிறித்து பெருமா னின் மாட்சியைப் புகழ்கிறது.

**சுவர்க்க நீக்கம்**: வெள்ளக்கால் ப. சுப்பிர மணிய முதலியார் மில்டனின் வீடுபேறு இழப்பு என் னும் ஆங்கில நூலை மொழி பெயர்த்து இருகாண் டங்கள் கொண்ட செய்யுள் நூலாகச் 'சுவர்க்க நீக் கம்'என்னும் பெயரில் கி.பி. 1895-ஆம் ஆண்டு வெளி யிட்டார். விருத்தப் பாக்களாலாகிய இந்நூலுக்கு அவரே அருமையான விளக்கவுரையும் தந்துள்ளார்.

**சுவிசேடப்புராணம்**: மதுரையில் அரசுப்பணி புரிந்த சுகாத்தியர் (Scott) புதிய ஏற்பாட்டு நிகழ்ச் சிகளை 3360 விருத்தப்பாக்களாக எழுதியுள்ளார். இக்காப்பியம் கி.பி. 1896-இல் வெளிவந்தது. மத்திய, மாற்க, உலூக்கா, யோவா, அப்போசுதலக் காண் டங்கள் என ஐந்து பெரும்பிரிவுகள் கொண்ட இந் நூல் காண்டந்தோறும் பன்னிரு பகுதிகளும், பகு திக்கு ஏழு படலங்களும், படலத்திற்கு எட்டுப் பாக்களும் கொண்டுள்ளது.

**திருஅவதாரம்**: மாணிக்கம் ஆசீர்வாதம் 'நற் போதகம்' இதழில் ஒன்பது (1936-1944) ஆண்டுகளா கத் தொடர்ந்து எழுதிவந்த விழுமிய காப்பியம் திரு அவதாரம் ஆகும். இது பாலகாண்டம், உத்தி யோக காண்டம், செய காண்டம், ஆதிராகண காண்டம் என்னும் நான்கு பகுதிகளும், 2367 பாக்க ளும் கொண்டுள்ளது.

**சுடர்மணி**: இயேசு பெருமான் முழங்கிய நற்செய்தி யினையும், நிறுவிய இறையரசினையும் பற்றி இனிய எளிய தமிழ் நடையில் 'சருவ வியாபி' வார இதழ் வாயிலாக ஆரோக்கியசாமி வழங்கிய காப்பி யம் 'சுடர்மணி' ஆகும். இது1976-இல் வெளிவந்தது. இப்பனுவல் நான்கு காண்டங்களும், 47 படலங்களும் 1201 பாடல்களும் கொண்டுள்ளது. 'சேசு கிறித்து நாதரின் சீவிய சரித்திரம்' என்னும் உரைநடை நூலை அடியொற்றி விருத்தப்பாவால் இந்நூல் உரு வாகியுள்ளது.

**கிறித்து வெண்பா**: புலவர் மரியந்தோணி என் பவர் நற்செய்தியின் அருள் மொழிகளைப் பன்னிரு பகுதிகளும், 1006 வெண்பாக்களும் கொண்ட காப்பி யமாக உருவாக்கியுள்ளார். அரிய பல உண்மைகளை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் வெண்பா யாப்பில், 1978 ஆம் ஆண்டு வெளிவந்த இக்காப்பி யம் இயேசுவின் புகழ்பாடுகிறது. தோமையார், சவேரியார் ஆகிய அருளாளர்தம் வாழ்வியலும் இக் காப்பியத்தின் இறுதிப்பகுதியில் இணைந்துள்ளது.

**இயேசு காவியம்**: கவிஞர் கண்ணதாசன் பதி னைந்து நாட்களில் ஒன்பதாயிரம் அடிகள் கொண்ட

இயேசு காவியத்தை 1981-ஆம் ஆண்டு உருவாக்கியுள்ளார், நால்வர் அருளிய நற்செய்தியின் அடிப்படையில் இயேசு பெருமான் வாழ்வுடன் தொடர்புடைய 148 நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன. பாயிரமும் மங்களமும் முறையே முதலிலும் முடிவிலும் விளங்க நூற்றைம்பது பகுதிகள் ஐந்து பாகங்களாக அமைந்துள்ளன. இயேசுவின் மலைப் பொழிவை 'மக்கள் உயிர்காக்கும் அமுதம்' எனப் போற்றியுள்ளார். வருணனைத் திறமும் உவமை வளமும் சொல் நயமும் விளங்க விவிலியத் திருநூலை மக்கள் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் வகையில் எளிமையும் தெளிவும் கொண்டதாகக் காப்பியம் துலங்குகிறது 'அறிவின் புதுப்புனல்' ஆகிய இயேசுவின் அருளுரையால் இவ்வுலகம் நிலைபெற்றுள்ளது என்று பாவலர் முடிவாக மொழிவது கருதத்தக்கது.

**சிற்றிலக்கியங்கள்**: தமிழ் மொழியின் புகழுக்குப் பெருமை சேர்க்கும் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்பர். பாட்டியல் நூல்களுள் பிரபந்த மரபியலும் பிரபந்த தீபிகையும் இச்சிற்றிலக்கியங்கள் அனைத்துக்கும் இலக்கணம் விளம்புகின்றன. படிக்காசுப் புலவர் (கி.பி. 1682–1723) 'தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்' என்று சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில் குறிப்பிடுவார். வீரமாமுனிவரின் சதுரகராதி (கி.பி. 1732) சிற்றிலக்கியங்கள் அனைத்தையும் பட்டியலிட்டுள்ளது. அந்தாதி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், மாலை, அம்மானை, கீர்த்தனை, குறவஞ்சி என்னும் பல்வேறு சிற்றிலக்கியச் செல்வங்கள் கிறித்தவச் சமயக் கொள்கை விளக்கப் பனுவல்களாகத் தோன்றித் திகழ்கின்றன.

**கலம்பகம்**: 'பல்பூமியடைந்த படலைக் கண்ணி' என்னும் பெரும்பாணாற்றுப் படைத் தொடருக்கு உரைவரையும் நச்சினார்க்கினியர் அதனைக் 'கலம்பகம்' எனக் குறிப்பர். பூக்களின் கோவை கதம்பம்; பாக்களின் கோவை கலம்பகம் ஆகும். அகப்பொருளும் புறப் பொருளும் கலந்த நலங் கருதியே கலம்பகம் ஆயிற்று என்பாரும் உளர். இயற்கை வருணனை, கற்பனைத் திறம், அணிநலம், நடைநலம், இறை மணம் ஆகிய சிறப்புக் கூறுகளுடன் விளங்குவது கலம்பகம் எனலாம். ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவரும் கலம்பக வரலாற்றில் வீரமாமுனிவரின் திருக்காவலூர்க் கலம்பகம் சிறப்புடன் மிளிர்கிறது. இது கன்னியும் தாயுமாகத் திகழும் மரியாளின் மாண்பைப் புலப்படுத்துவதாக உள்ளது. ஏலாக்குறிச்சியில் எழுந்தருளிய அடைக்கல அன்னையின் அருட்காவல் குறித்து அகமிக மகிழும் வீரமாமுனிவர் அவ்வூரையே திருக்காவலூர் ஆக்கினார்; திருக்காவலூர்க் கலம்பகத்துள் 'சமூக உல்லாசம்' என்னும் உறுப்பு புதுமைச் சிறப்பாகும். அன்னை மரியாளின் திருவுருவத் தேர் உலா வரும்போது கூறப்பட்டுள்ள வருணனை, இவ்வுறுப்பில் இயல்பான சித்திரமாக விளங்குகிறது. அருளப்பநாவலர் நல்கிய உரையும், குடந்தை வேதநாயகர் இலக்கிய மன்றம் வெளியிட்டுள்ள மூவர் உரையும் இந்நூலுக்கு எழில் சேர்க்கின்றன. ஆன்மிக நலம் பரப்பும் திருக்காவலூர்க் கலம்பகம் திருமறை விளக்க நூலாகவும் திகழ்கிறது; 'மூவுலகும் மூவிரலால் முகந்து ஏந்தும் முதலோன்' என்று இறைவன் பெருமை பாடுகிறது. ஏழாவது பாடலாகிய புய வகுப்பு 48 சீர் ஆசிரிய வண்ண விருத்தமாக விளங்குகிறது. பவுல் இராமகிருட்டிணன் எழுதிய 'ஆதிக்கலம்பகம்' இயேசுபெருமானைப் பற்றிய அழகிய கலம்பகமாகும்.

**குறவஞ்சி**: குறவர்தம் வாழ்வியலை விளம்பும் வகையில் விழுமிய கொள்கைகளை வழங்கும் இலக்கியம் குறவஞ்சி எனப்படும். நாடகப் பாங்கில் நயமுற நவிலும் பெத்தலேகம் குறவஞ்சி வேத நாயக சாத்திரியார் அருளிய திருமறைத் தமிழ்க் கொடையாகும். தன் மனைவியாகிய சிங்கி வீட்டுக்கு வந்துசேராதது கண்ட சிங்கன் அவள் திருவிருந்து அருந்திய மகிழ்ச்சியில் தன்னை மறந்து நிற்கிறாளோ என எண்ணுகிறான். அக்குறத்தியின் அணிகலன்கள், தொடர்ந்து முழந்தாளிட்டுச் செபித்ததால் ஏற்பட்டதழும்புகளே என்பர். முத்தொழில் புரியும் இறைவனை 'அம்புவி படைத்தோன்', 'கிருபாகரன்', 'பாவநாசன்' என்னும் அழகிய தொடர்களால் புகழுந் திறம் வேதநாயகரின் தனிச் சிறப்பு ஆகும். ஈழநாட்டுப் பிலிப்பு தேமெல்லோ எழுதிய 'மருதப்பக் குறவஞ்சி' குறிப்பிடத்தக்க மற்றொரு நூலாகும்.

**பிள்ளைத்தமிழ்**: தெய்வத்தையோ மக்களையோ குழந்தையாக வைத்துக் காப்பு முதலாகிய பத்துப் பருவங்களில் பத்துப் பாடல்களாகப் பாடுவது பிள்ளைத் தமிழாகும். வேளை மரியன்னை பிள்ளைத் தமிழைத் தஞ்சைப் புலவர் தாமசு சந்தநயத்துடன் தந்துள்ளார். சேசுநாதர் பிள்ளைத்தமிழ் புதுவை சாமிநாதர் ஈந்த இனிய நூலாம். தஞ்சை அருளப்ப நாவலர் கி.பி. 1864-ஆம் ஆண்டு இவ்விலக்கியத்தை வெளிட்டுள்ளார். தேசிகவிநாயகம் பிள்ளையின் பேரன் குற்றாலம் என்பவர் ஏசுநாதர் பிள்ளைத் தமிழ் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்துப் பிரான்சிசு நல்கிய இயேசுநாதர் பிள்ளைத்தமிழ் சிறப்புமிக்க சிற்றிலக்கியமாம். மனுவேல் தீட்டிய தேவமாதா பிள்ளைத்தமிழ், மாமரியின் பெயர் மொழிந்த கிளியைப் பருந்திடமிருந்து அன்னை காத்த வியத்தகு செய்தியை விரிந்துரைக்கிறது.

**அந்தாதி**: யாப்புச் சிறப்பு வாய்ந்த அந்தாதி இலக்கியத்துள் வீரமா முனிவர் வழங்கிய அன்னை அழுங்கல் அந்தாதி இயேசுநாதரின் சிலுவைப் பாடு களைக் கண்ணுற்று உள்ளம் நைந்து வருந்தும் தாய் மரியாளின் துன்பப் பெருக்கத்தை உருக்கமாக உணர்த்துகிறது. மயிலாடுதுறை வேதநாயகர், திரு வருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி ஆகியவற்றை அருளியுள்ளார். குடந்தைத் துரைசாமியார் வேதபுரி அன்னைமீது வேதபுரி அந்தாதி எழுதியுள்ளார். தஞ்சைப்புலவர் தாமசு ஈந்துள்ள வேளை யந்தாதி ஆரோக்கிய அன்னையின் புகழ்பாடுகிறது. இவரது கோட்டூர் அந்தாதியும், தேவராசனின் 'கருணை வழக்கமும்' பிற குறிப்பிடத்தக்க அந்தாதிகளாகும்.

**அம்மானை**: பொம்பேரு மலையில் மறைமணி யாக உயிர்துறந்த கித்தேரியம்மாள் பற்றுறுதியோடு வாழ்ந்த பெருவாழ்வை நினைவூட்டும் வகையில் கித் தேரியம்மாள் அம்மானையினை வீரமாமுனிவர் நாட்டுப்புறப் பனுவலாக நல்கியுள்ளார். இச்சிற்றி லக்கியம் 2342 அடிகள் கொண்டு மதிப்புடன் மிளிர் கிறது. தமிழகத்தில், கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் கிறித்தவர் அடைந்த துன்பம் இவ்விலக்கியத்தில் சித்திரிக்கப்படுகிறது. போர்ச்சுகல் அரசன் காயனது (கி.பி. 2–ஆம் நூ.) கொடுமையை எதிர்த்து நின்ற கித்தேரியோள் போன்று அனைவரும் துணிவுடன் வாழ இந்நூல் துணை புரிகிறது. தஞ்சைப் புலவர் தாமசு தந்தருளிய மூவர் அம்மானை சேசு, மரி, சூசை ஆகியோர்தம் வாழ்வுச் சிறப்பை விரித்துரைக் கிறது.

பேதுருப்புலவரின் சந்தியோகுமையூர் அம்மானை, பூலோக சிங்க அருளப்பரின் திருச்செல்வர் அம் மானை, சூசைப் பிள்ளையின் ஞான சவுந்தரி அம் மானை, ஆழ்வார்தோப்புச் சுவீகரனாரின் முத்திவழி அம்மானை, சுந்தரத்தின் சிலுவை வழி அம்மானை ஆகியவை கிறித்தவர்தம் சமூகக் கதைப்பாடல் இலக்கியங்களாகும். தோமைப்பிள்ளை பட்டங்கட்டி யார் அந்தோணியார் அம்மானை அருளியுள்ளார்.

**மாலை**: வீரமாமுனிவரின் அடைக்கலமாலை, கலி வெண்பா யாப்பில் இயேசுவின் அன்னை மரியாளின் மாண்பினைப் புலப்படுத்துகிறது. மேலும் தஞ்சைப் புலவர் தாமசு வேளை நவமணிமாலை, மரியன்னை மாலை, நற்செய்தி நங்கையர் மாலை, நசராபுரி நங்கையர் மாலை, நசரை நான்மணிமாலை, திரு வெல்லை மாலை, வேளைச் சகாய மாலை ஆகிய பல பாமாலைகளைத் தொடுத்துள்ளார். வேதநாயக சாத்திரியாரின் பராபரன்மாலை, வேதநாயகரின் திருவருள்மாலை ஆகியவை சிறப்பு மிக்கவை. மரிய பூரணம் மசுகரனேசு தேவஅன்னையின் அருள்பற்றித் தமது 'தோத்திரப் பாமாலை' யில் தெளிவுறுத்து கிறார். மேலும், அவர் பலசந்த மாலை, பூரணப் பாமாலை, மாலைப் பாக்கள் ஆகியவற்றின் வாயி லாகக் கிறித்தவ சமயக் கருத்துகளை வழங்கியுள் ளார்.

பவுல் இராமகிருட்டிணன் இயேசு திரு இரட்டை மணிமாலை, இயேசு நான்மணிமாலை ஆகிய பாமா லைகளால் இறைமகன் இயேசுவின் மாட்சியைப் பறைசாற்றுகிறார். சாலமோனின் இறையருள் பாமாலை, போதகர் வேத நாயகத்தின் பரலோக இராச்சியப் பாமாலை, மு. நல்லசுவாமியின் சிலு வைத் தியானமாலை, பவுல் இராமகிருட்டிணனது 'திருவடி மாலை', சாமுவேலின் வேதாகம மாலை ஆகியவை குறிப்பிடத்தக்க பிற மாலை நூல்களாம்.

**குறள் நூல்கள்**: யாக்கோபு கொன்சால்வசு எழு திய சுகிர்தக் குறள், வீ.ப.கா. சுந்தரம் தந்த அருட் குறள், திரு.வி.க. நல்கிய கிறித்து மொழிக் குறள் ஆகியவை கிறித்தவக் கொள்கை முழங்கும் இலக்கிய ஏடுகளாகும். இயேசுவின் அருளறம் யாண்டும் பரவ விழைந்த திரு.வி.க. சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வழங்கிய கிறித்து மொழிக்குறள் இயேசுவின் புகழ் பரப்புகிறது. இயேசுவின் மலைப் பொழிவை யும் பிறவற்றையும் பொலிவான தமிழில் வழங்கும் திரு.வி.க. வின் பிறிதொரு நூல் 'கிறித்துவின் அருள் வேட்டல்' ஆகும்.

**பிற சிறுபனுவல்கள்**: அந்தோணியாரைப் புகழ்ந் தேத்தும் சூசை மாணிக்கம் புனித அந்தோணியார் ஆற்றுப்படையைப் பத்திச் சுவை பொலியப் பாடி யுள்ளார். அந்தோணிக் குட்டி அண்ணாவியார் ஞானத் திருப்புகழ், பேரின்பக் காதல் முதலாய பல நூல்களை உருக்கமாக அமைத்துள்ளார். வேதநாய கர் பெரியநாயகி அம்மன் பதிகத்தையும், சேவியர் என்றி லியோன் பனிமய ஆத்தாள் பதிகத்தையும் இயற்றியுள்ளனர்.

**நாடகங்கள்**: சமயக் கொள்கைகளை மக்க ளிடையே பரப்புவதற்கு மறைபொருள் நாடகம், அற் புத நாடகம் ஆகிய இருவகை நாடகங்களும் திருக் கோவில்களில் நடிக்கப்பட்டன. வேதநாயக சாத்திரி யாரின் ஞானத்தச்சன் நாடகம் இறைவனது படைப்பை வியந்து பாராட்டுகிறது.இன்பகவியின் குற வஞ்சி நாடகம், முத்துநாயகரின் ஞான சவுந்தரியம் மாள் நாடகம், தம்பிமுத்துவின் எசுதாக்கியர் நாட கம் ஆகியவை பெருஞ் சிறப்பு வாய்ந்தவை. 'நீல மலைச் சாரலிலே' என்னும் நூல் கிறித்தவக் கோட் பாடுகளைக் கூறும் நல்ல நெடுங்கதையாகும்.

**குழந்தைப் பனுவல்கள்**: குழந்தை இலக்கியம் 20-ஆம் நூற்றாண்டில் வளர்ந்து வரும் புத்திலக்கியத் துறையில் சிறந்த பகுதியாகும். 'பாடி விளையாடு பாப்பா', 'திருவசனக் கதைகள் ', 'மீண்டும் வருக' ஆகியவை கிறித்தவக் குழந்தை இலக்கியங்களாகும்.

**உரைநடை**: தத்துவ போதகர் இராபர்ட்டு தே நோபிலி தமிழ் உரைநடையின் தந்தையாகத் திகழ் கிறார். ஞானோபதேசக் காண்டம், ஆத்தும நிருண யம், அஞ்ஞான நிவாரணம், சேசுநாதர் சரித்திரம், தேவமாதா சரித்திரம், புனர்சென்ம ஆட்சேபம் ஆகிய உரைநடை நூல்களின் வாயிலாகச் சமயக் கருத்துகளைப் பரப்பியுள்ளார். வீரமாமுனிவர் வள மான தமிழில் வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், உலுத்தேரினத்தியல்பு, வாமன் சரித்திரம், பேதக மறுத்தல் ஆகிய நூல்களை எழுதி மறுமலர்ச்சி உரை நடையின் தந்தையாகப் போற்றப்படுகிறார். சீகன் பால்கு நால்வர் அருளிய நற்செய்தியினையும், நற் றமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். சின்ன சவேரியார் என்னும் சேம்சு தெராசி, அர்ச்சியசிட்டர் களின் சரித்திரம், கிழமைப் புதுமைகள் ஆகிய வற்றை வழங்கியுள்ளார்.

தமிழ் மொழி வழியாகத் திருமறை பரப்பும் விருப்புடைய கால்டுவெல், கிறித்தவமும் இந்து மத மும், சமயப் பள்ளிகளில் பயிலும் பிறருக்குச் சமய அறிவு புகட்டும் முறை, தாமரைத் தடாகம், நற் கருணைமாலை முதலிய பல நூல்களை நல்கியுள் ளார். மேலுமவர் 243 வினாக்களுக்கு விடை வழங் கும் பாங்குடன் குழந்தைகளும்கூடப் புரிந்துகொள்ளும் வகையில் வேதவிளக்கம் தந்துள்ளார்.

அயல்நாட்டவரும் இந்நாட்டவரும் கிறித்தவக் கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்ட பிற தமிழ் அறி ஞர் பெருமக்களும் கிறித்தவ இலக்கியத்தை வளப் படுத்தியுள்ளனர். எழுத்து வன்மை வாய்ந்த எழுத் தாளர் பலர் தமிழ் மொழிக்கும் திருமறைக்கும் தமிழ கத்துக்கும் இந்திய நாட்டுக்கும் நலம்கூட்டும் இலக் கியங்கள் பலவற்றை உருவாக்கி வருகின்றனர். பா.வ.

**துணை நூல்கள்**:

**சேதுபிள்ளை, ரா.பி.**, கிறித்தவத் தமிழ்த் தொண்டர், எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி, 1956.

**வேங்கடசாமி, சீனி.**, மயிலை, கிறித்தவமும் தமிழும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நெல்லை, 1948.

**Meenakshisundaram, K.**, The Contribution of European Scholars to Tamil, University of Madras, 1974.

**Rajamanickam, S.**, The First Oriental Scholar, De Nobili Research Institute, Palayamkottai, 1972.

**Thaninayagam Xavier, S.**, 'Tamil Manuscripts in European Libraries, Tamil Cultures Vol. III, 1953.

***கிறித்தவத் தத்துவம்*** கிறித்தவத் தத்துவம் அல்லது மெய்யியல் என்ற தொடர் புனித அகசுட்டி னால் (St. Augustine) உருவாக்கப்பட்டது என்பர். பழைய மெய்யியல் கொள்கையிலிருந்து வேறுபட்ட கிறித்தவச் சபையின் உண்மைகளைச் சுட்டிக் காட்ட இத்தொடர் தேவைப்பட்டது. மனிதன் தன் சொந்த அறிவால் தெரிந்து கொள்ளக்கூடிய உண்மைகளின் தொகுப்பு மெய்யியல் எனப்படும். கிறித்துபெரு மான் வழியாக மனிதனுக்கு வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளைக் கொடுப்பது கிறித்தவம் ஆகும். இவை இரண்டும் இணைகின்ற முறையில் பல்வேறு கருத்துகள் தோன்றின.

மனிதனின் பகுத்தறிவு, பொதுவாகக் கூறின், தனித்தியங்கத் தனக்குத் தேவையான உண்மை களைக் கண்டுணர முடியும். என்றாலும், இன்றைய மனித நிலையில், அது, தன் தோற்றம், தன் கதி, உலகின் இயல்பு, இறை இயல்பு போன்றவற்றின் மெய்ப்பொருளை உணர ஆற்றலற்றிருக்கிறது. அதற்கு இறையருள் தேவை என்பது கிறித்தவக் கொள்கை. மனித இயல்பு தனித்தியங்கினாலும் இறையருளின் ஒளி வழிகாட்டல் வேண்டும்.

முதலில் பிளேட்டோவியல் அல்லது புதிய-பிளேட்டோவியல் (Neoplatonism) ஆதிக்கம் செலுத் தியபோதும், அடுத்து அரிசுட்டாட்டிலின் (Aristotle) மெய்யியல் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலும் புனித அகசுட்டின், புனித ஆன்செல்ம், (St. Anselm) புனித பெரிய ஆல்பர்ட்டு, புனித அக்குவினாசு (St. Aquinas Thomas) போன்ற சிந்தனையாளர்களிடம் மெய்யியல், கிறித்தவ மதக் கொள்கைகளை விளக் கும் கருவியாக வளர்ந்தது.

பிற்காலத்தில் தேக்கார்ட்டே (Descartes) போன் றோரின் சிந்தனையில் மெய்யியல் தனித்தியங்கத் தொடங்கியது; கிறித்தவம் ஒதுக்கப்பட்டது. இன்று கில்சோன், மாரிட்டேன், பிளாண்டல் முதலிய மெய் யியலார் முயற்சியால், கிறித்தவ இறையியலும் மெய் யியலும் இணைந்து இயங்குகின்றன. கிறித்தவ இறை

யியல், மனித அறிவை ஆற்றுப்படுத்தும் விண்மீனாக விளங்குகிறது; உடுக்கை இழந்தவன் கைபோல உதவும் நண்பனாக நற்பணி புரிகிறது.

கிறித்தவ இறையியல், இறைவன் கிறித்து வழியாக வெளிப்படுத்திய (விவிலியம் கூறும்) உண்மைகள், கிறித்தவத் திருச்சபையின் சங்க ஏடுகளின் கொள்கைகள், முதல் தந்தையரின் கூற்றுகள் முதலியவற்றைப் பயன்படுத்தி மனித வாழ்வுக்கு வழிகாட்டும். மெய்யியல் மனித அநுபவத்தைப் பற்றிச் சொந்தமாகச் சிந்தித்து, நீண்ட நெடும் பயணம் செய்து, மெதுவாக உண்மையை நோக்கி ஊர்ந்து செல்லும். இறையியல் தருவது புனித ஞானம்; மெய்யியல் தருவது உலக ஞானம்.

இறையியல், மெய்யியலின் முழுமையை, தனித்தியங்கும் தன்மையைக் குலைக்காமல் செயல்புரியத் தூண்டும்; விரைவுபடுத்தும்.ஒருவன் ஓடுவது காலால் தான்; எனினும், நன்றாக ஓட அவன் இதயமும் நுரையீரலும் நல் நிலையில் இயங்கி உதவ வேண்டும். அதுபோல், மெய்யியல் மனித அறிவால்தான் உருவாகின்றது. ஆனால், இன்றைய நிலையில் அதற்கு இறையருள் வழிகாட்டும் உள்ளமும் ஆன்மாவும் தேவை. மனித அறிவு, இன்றைய நிலையில் காயப்பட்டுள்ளது; குற்றுயிராய்க்கிடக்கின்றது. அதன் காயங்களைக் கட்டிக் குணப்படுத்தக் கிறித்துவின் காயங்கள் பொழியும் அருள் மருந்து வேண்டும்.

எடுத்துக் காட்டாக, விவிலியத்தில் இறைவன் 'நாமே இருப்பவர்' என்று (யாத்.3:14) மோயீசனுக்கு வெளிப்படுத்தினார். மனித அறிவு இறை இயல்பைத் தவறின்றி விரைவில் கண்டுணர இக்கூற்று உதவுகிறது.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அதில் மெய்ப் பொருளைத் தேடும் மெய்யியல்,'உண்மையை அறிவீர்கள், அவ்வுண்மையும் உங்களுக்கு விடுதலையளிக்கும்' (அரு.8:32), 'நானே வழியும் உண்மையும் உயிரும்' (அரு.18:37) 'உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே எனது பணி' (அரு.18:37) என்று உரைத்த கிறித்து வழிகாட்ட, உண்மையை நோக்கி, இம்மைக்கும் மறுமைக்கும் நிலைக்கும் முழு உண்மையை நோக்கி விரைந்து செல்கிறது. வி.மி.ஞா.

**கிறித்தவத் திருச்சபை**: கிறித்துவைக் கடவுளாக ஏற்றுக் கொண்டு, நம்பி வழிபட்டு, அவருடைய நல்லுரைகளின்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழும் மக்களைக் கொண்டு, ஒழுங்குபட அமைக்கப்பட்ட சமய நெறியே கிறித்தவத் திருச்சபை (Christian Church) எனப்படும். கிறித்தவ மக்களடங்கிய ஓர் அமைப்பு (Organization) அல்லது நிறுவனம் (Institution) என்று பொதுவான ஒரு பொருளை இத்தொடர் குறிப்பிடுகிறது. உரோமானியப் பேரரசர் அகசுடசு சீசருடைய (Augustus Caesar) ஆட்சிக் காலத்தில் இயேசு கிறித்துவினால் உரோமானியக் கீழை மாநிலமாகிய பாலசுத்தீனில் நிறுவப்பட்ட இந்நிறுவனம், ஐரோப்பிய வரலாற்றில் அரசியல் துறையைப் பொறுத்தவரை ஒரு புரட்சி இயல்பான, அல்லது பெரும் மாறுதலை விளைவித்த ஒரு நிகழ்ச்சி ஆகும். அரசாங்கத்தைச் சாராமல்,தனித்து நின்று மனித குலத்தாரின் ஆன்மிக நலன்களைக் காப்பாற்றுவதற்கு நிறுவப்பட்ட ஓர் அமைப்பாக இது கருதப்பட்டது.

**கட்டுப்படுத்தும் அதிகாரங்கள்**: கிறித்தவத் திருச்சபையின் தோற்றத்துக்கு ஆதாரமாக இருந்த நோக்கங்களெல்லாம் சமய நெறி இயல்புடையவையே. அதாவது, கிறித்தவ நெறி என்பது மனிதருக்குகந்த ஓர் உய்யு நெறியாகவே (A doctrine of salvation) கருதி ஏற்றுக் கொள்ளப்பட்டதே தவிர, அதை ஓர் அரசியற் கோட்பாடாக எவரும் கருதவில்லை. ஆகையால், மற்றப் பழைய நெறியாளர்களைப் போலக் கிறித்தவரும் இயற்கைக் கோட்பாடுகளை (அதாவது இயற்கையின் சட்டம், உலகத்தின் மீது இறைவனின் அரசாங்கம் நடைபெறுகிறது, அரசாங்கமும் சட்டமும் நீதி செய்தல் வேண்டும், கடவுளின் முன்னர் யாவரும் சமம்–என்ற விதிகளை) ஏற்றுக்கொண்டனர். இத்தகைய பல கருத்துகள் கிறித்தவம் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்திலேயே இருந்தன என்பதை விவிலியத்தில் புதிய ஏற்பாடு(New Testament) காட்டுகிறது. பண்டைய அதீனியர் போன்ற அறிவு வளர்ச்சி பெற்ற மக்களுக்குக் கிறித்தவம் புகட்டிய புதிய சமயக் கருத்து என்னவெனில், 'இறந்தோரெல்லாரும் கடவுளால் மீண்டும் எழுப்பப்படுவார்கள் (Resurrection)' என்பதே ஆகும். மனிதரனைவரும் இன, பால், சமூக நிலை முதலிய வேறுபாடுகள் எதுவும் இன்றி, இயேசு கிறித்துவினிடம் ஒருவரே ஆவார் என்று புனித பால் கலேசியர்களுக்கு உரைத்தார். இத்தகைய மனித சமத்துவக் கருத்து, கிறித்துவினால் வெளிப்படுத்தப்பட்ட சட்டத்திலே(Revealed Law) கூறப்படுதற்கு முற்பட்டகாலத்திலேயே சிசரோ, செனக்கா (Seneca) முதலிய உரோமானியருடைய கருத்துகளில் கூறப்பட்டது. ஆகையால், கிறித்துவை இறைவனின் அருள் வெளிப்பாடாக (Divine Revelation) நம்பி ஏற்றுக் கொண்ட கிறித்தவ மக்கள் இயற்கையின் சட்டத்தையும் கடவுளின் சட்டமாகவே கருதி ஏற்றுக்கொண்ட

னர். கிறித்தவர் ஒவ்வொருவரும் சமூகத்தில் நிறுவப் பட்ட அரசியலதிகாரிக்குக் கீழ்ப்படிதல் வேண்டு மென்று இயேசு அருளினார்.

இயேசுவும் புனித பாலும் கூறிய அருள் வாக்கு களிலிருந்து சில அரசியற் சார்பான விதிகள் பெறப் படுகின்றன. அரசாங்கத்துக்கு மக்கள் கீழ்ப்படிதல் என்பது இறைவனால் விதிக்கப்பட்ட கடமை ஆகும். இவ்வகையாகப் பார்க்கும்போது ஆட்சி அதிகாரம் என்பது தெய்விக உரிமையாக ஆகிறது. ஒருவர் நிறைவேற்ற வேண்டிய அரசியற் கடமைகளுக்கும், இறையியற் கடமைகளுக்குமிடையே மோதல் தோன்றினால், அவர் மனிதனைவிட இறைவனுக்கே கீழ்ப்படிதல் வேண்டும். ஒரு கிறித்தவர் இறை வனுக்கு நிறைவேற்ற வேண்டிய பண்புகளினின்றும் அவரை எந்தப் பேரரசராலும் விடுவித்தல் இயலாது. மேலும், கிறித்தவ சமய நிறுவனம் ஒரு சுதந்திரமான நிறுவனமாக வளர வளர, அதனுடைய ஆதரவும் உலகப் பேரரசாகிய உரோமானியப் பேரரசுக்கு இன்றியமையாததாயிற்று. மேலும், சமய நிறு வனத்தை அரசின் சார்பு நிறுவனமாகக் கருதிய பழைய மரபும் மறைந்தது. கிறித்தவ சமய நிறு வனம் எந்த உலகியலரசாங்கத்தையும் சார்ந்திராத தனித்த, சுதந்திரமான ஒரு நிறுவனமென்று யாவரும் அறிந்தனர். கிறித்தவ நெறியை கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் ஏற்ற முதல் உரோமானியப் பேரரசர் கான்சுடண்டைன். கிறித்தவ நெறியையே பேரரசின் ஒப்புதலுக்குட்பட்ட நெறியாக இவர் வெளியிடவே, கிறித்தவத் திருச்சபை சட்ட அடிப்படையில் நிறுவப் பட்ட ஒரு நிறுவனமாக ஆயிற்று.

**அதிகாரம் பற்றிய கோட்பாடுகள்:** முதலில் கிறித்தவத் திருச்சபை மக்களுடைய சமய சுதந்திர உரிமையை மதித்துச் சமயப் பொறையை (Religious Toleration) ஒத்துக் கொண்டது.

இவ்வாறு சுதந்திரமான ஒரு நிறுவனமாகத் திருச்சபை தோன்றினாலும், அதனுள் தோன்றிய மறுப்பு இயக்கத்தை ஒடுக்குதற்கு அது உலகியலர சின் உதவியையே சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. ஆயினும், திருச்சபையும் உலகியலரசும், இருவேறு பட்ட ஒன்றுக்கொன்று முரணான துறைகளைச் சேர்ந்தவையாதலால், இரண்டிற்குமுள்ள அதிகார எல்லை நுட்பமாக வரையறுக்கப்படுதல் வேண்டு மென்று ஒரு கருத்துத்தோன்றி, இடைக்காலம் முழு வதும் (Middle Ages, கி.பி. 1000 – கி.பி. 1500) அதனால் பல மோதல்கள் அரசுக்கும் திருச்சபைக்கு மிடையே அவ்வப்போது தோன்றின. கிறித்தவ நெறிக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்ட காலத்தில் வாழ்ந்த மூன்று திருச்சபைத் தலைவர்களுள் (Fathers of the Church) காலத்தால் முற்பட்டவரான புனித அம்புரோசு (St. Ambrose கி.பி. 4-ஆம் நூற்றாண் டின் பிற்பகுதி) என்பவர் கூறிய கருத்துகளின்படி, கிறித்தவர் அனைவரும், பேரரசரும் கிறித்தவராகை யினால் அவரும், ஆன்மிகத் துறைகளைப் பொறுத்த மட்டில், திருச்சபையின் ஆணைகளுக்கும் (அதாவது திருச்சபை ஆயர், போப்பு, குரு முதலியோருடைய) ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவர்களே. பேரரசருக்கு உலகவருடைய உடைமைகளின் மீதும் திருச்சபையின் நிலங்களின் மீதுமே அதிகாரம் உண்டு: திருச்சபைக் கட்டடங்கள் மீது அதிகாரம் இல்லை. திருச்சபையின் ஆன்மிகத்துறை சுதந்திர உரிமை களெல்லாம் ஆன்மிக முறையினால்தான் காப்பாற் றப்படுதல் வேண்டுமே தவிர, உலகியலரசருடைய ஆணைகளை வல்லந்தத்தின் வாயிலாக எதிர்த்தற்கு உரிமை இல்லை. அம்புரோசின் மாணவரான புனித அகசுட்டின் (Saint Augustine, கி.பி. 5-ஆம் நூற் றாண்டு) தம் 'கடவுளின் நகரம்' என்ற நூலில் சில கருத்துகளைக் கூறினார். (காண்க: கடவுளின் நகரம்).

கிறித்தவப் பொது அரசில் (Christian Common-wealth) யாவரும் கிறித்தவ நெறியாளராகவே இருத் தல் வேண்டும். கிறித்தவத் திருச்சபையே கடவுள் நகரத்தின் பிரதிநிதியாக இருக்கிறது. ஒரு நீதியான அரசில் உண்மையான சமயமாகிய கிறித்தவமே அர சின் சட்டத்தாலும் அதிகாரத்தாலும் பாதுகாக்கப் படுதல் வேண்டும். அரசாங்க அதிகாரம் அரச அதி காரிகளாலும், திருச்சபைக் குருமாராலும் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். திருச்சபை ஆன்மிகத் துறையில் சுதந்திரம் உடையது. அது போலவே உலகியலரசாங்கமும் தனக்குரிய அதிகார எல்லைக் குள் செயற்படும்வரை அதுவும் சுதந்திரமுடையது. அவர் கூறிய கருத்தின்படி உலகியலாட்சியர்களாகிய புனிதத் தன்மை (Sanctity) உடையவர் யாவரும் உலகியலரசருக்கு, அவர் தீயவராயினும் எதிர்ப் பின்றிக் கீழ்ப்படிதல் வேண்டும். (காண்க: எதிர் பின்றிக் கீழ்ப்படிதல்). நீதியும், நல்லாட்சியும் யாவ ருக்கும் கிடைக்குமாறு செய்தலும், யாவரும் உலகிய லரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் வாயிலாகவே நடை பெற இயலும்.

**திருச்சபையின் சுதந்திரம்:** திருச்சபையின் மூன்று தலைவர்களும் (அம்புரோசு, அகசுட்டின், கிரி கரி) கூறிய கருத்துகளின்படி ஆன்மிக நல னும், மனித உய்தியும் திருச்சபையின் அதி காரத்துக்கு உட்பட்டவை. அவை திருச்சபை யின் குருமார் ஆற்றும் நல்லுரைகளின் வாயிலாக நடத்தப்படுகின்றன. உலகியல் நலன்களும், அமைதி,

ஒழுங்கு, நீதி முதலியவற்றை நிறுவுதலும், குடிமை அரசாங்கத்தின் அதிகார எல்லையிடலங்கும். அவற்றை அடைதலே உலகியலதிகாரிகளின் நோக்கங்களாகும். இருவகை அதிகார எல்லைகளும், (குருமார், அரசாங்க அதிகாரங்கள்) ஒன்றையொன்று அழிக்காமலும், எவரும் மீறாமலும் இருத்தல் வேண்டும். இந்தக் கருத்துகளைப் பின்னணியாகக் கொண்டு, போப்பு முதலாம் கெலேசியசு (Pope Geliasius,I –கி.பி. 5–ஆம் நூற்றாண்டின் இறுதி) இருவகை அதிகாரங்களின் எல்லைகளைப் பற்றிச் சில விதிகளை வகுத்தார்.

சமய, ஆன்மிகத் துறைகளில் திருச்சபை ஒரு தன்னாட்சியுடைய நிறுவனமாகையால், இத்துறைகளில் குற்றம் செய்யும் திருச்சபைக் குருமார்களை விசாரித்துத் தீர்ப்பு வழங்குதற்குத் திருச்சபை நீதிமன்றங்களுக்கு (Ecclesiastical Courts) அதிகாரம் இருத்தல் வேண்டுமே தவிர, உலகியலரசு நீதிமன்றங்களுக்கு அக்குற்றங்களை விசாரித்தற்கு அதிகாரம் இருத்தல் கூடாது. ஆன்மிக அதிகாரத்தையும், உலகியலதிகாரத்தையும் ஓர் ஆளே கையாளுதலும், அல்லது ஓர் ஆளிடத்திலேயே இணைத்தலும் கிறித்தவ சமய விதிக்கு முரணானதாகும். எல்லாக் கிறித்தவர்களின் ஆன்ம நலத்துக்கும் கிறித்தவ குரு இறுதித் திர்ப்பு நாளன்று இறைவனுக்குப் பொறுப்புடையவராகையால், குருவின் கடமை அரசருடைய கடமையைவிட உயர்ந்தது. உலகியலரசின் கடமை நீதி வழங்குதல் மட்டுமன்று; மனித உய்திக்கு உகந்த தூய வழிபாட்டு முறையைத் திருச்சபை நடத்துதலால், அதனைக் காப்பதும் ஆகும்.

ஒவ்வொரு கிறித்தவரும் இருவகையான சட்டங்களுக்கும், இருவகையான அரசாங்கங்களுக்கும் கட்டுப்பட்டிருக்குமாறு வைக்கப்பட்டுள்ளார். புனித அகசுட்டின் கூறிய கிறித்தவத் திருச்சபையின் தலைமைக் கருத்துகளைச் செயற்படுத்துதற்குத் தக்க சூழ்நிலைகள் கி.பி. 9, 10–ஆம் நூற்றாண்டுகளில் தோன்றின. கிறித்தவர்களடங்கிய சமூகத்தில் இருக்கும் அரசு கிறித்தவ அரசாகவே இருத்தல் வேண்டும். கிறித்தவத் திருச்சபை கிறித்தவ அரசை இயக்க வல்ல ஓர் ஆற்றலாக இருத்தல் வேண்டும். திருச்சபை அரசாங்க அமைப்பானது முழுவடிவம் பெற்றது. அதன் கீழ் மட்டத்தில் சாதாரணக் குருமாரும், அடுத்தடுத்த உயர்நிலைகளில், ஆயரும், பேராயரும் உயர்குருமார்கள் அடங்கிய கழகமும் (Collage of Cardinals), எல்லாவற்றுக்கும் மேலாகப் போப்பும் இருந்தனர்; போப்பினிடமே எல்லாத் திருச்சபை அரசாங்கத்தின் இறைமை அதிகாரமும் குவிக்கப்பட்டது.

கிறித்தவத் துறவிகளின்மடங்களுள் ஒவ்வொன்றும் தத்தம் செயல்களைத் தாமே நிருவாகம் செய்யக் கூடிய முழு உரிமை பெறலாயிற்று. இத்தகைய நிலை கி.பி. 910–இல் பிரான்சில் குளூனி (Cluny) என்ற இடத்தில் புதிய அமைப்போடு கிறித்தவத் துறவிகள் மடம் (Monastery) நிறுவப்பட்டதால் தோன்றிற்று. இம்மடங்களின் தலைவர்களை (Abbot) அவ்வவற்றின் துறவிகளே தேர்ந்தெடுத்தனர். தலைவர்களிடமே அதிகாரங்கள் குவிந்திருந்தன. போப்புகள், மடத்துத் தலைவர்கள், ஆயர்கள், பேராயர்கள் முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட திருச்சபை அதிகாரிகளாவர். தேர்வு முறையின் வழியாக உயர் திருச்சபைப் பதவிகளை விற்றுப் பெறும் ஊழலும் (Simony), உலகியலரசாங்கப் பணிகளில் திருச்சபைக் குருமார்களை அவர்களே சமூகத்தில் உயர் கல்வி பெற்றவராகையால் அமர்த்தும் ஊழலும் தோன்றின. திருச்சபைக்குரிய நிலங்களை நிருவாகம் செய்தவர்கள் திருச்சபை அதிகாரிகளாகையால், அப்பதவிகளைப் பெறக் கையூட்டளித்தல் என்பது ஒரு வழியாக ஆயிற்று. இவ்வாறு திருச்சபையின் உயர்குருமார் நிலமானியப் பிரபுக்களாகவும், அரசாங்க அதிகாரிகளாகவும் இருக்கவே அவர்களிடத்தில் இருவகை வேறுபட்ட அதிகாரங்களும் இணைந்தன. இவற்றைப் பிரிக்க புனித உரோமானியப் பேரரசர் நான்காம் என்றி முயல, அவருக்கும் அவருடைய காலத்திய போப்பு ஏழாம் கிரிகரிக்கும் மோதல் தவிர்க்க இயலாததாயிற்று.

ஆயர்களைத் தேர்ந்தெடுக்கவும், அவர்களுடைய பதவிச் சின்னங்களை அவர்களுக்களிக்கவும் அரசர் என்றி தமக்கு உரிமை உண்டென்று கூற (கி.பி. 1073), போப்பு கிரிகரி உலகியலதிகாரி திருச்சபை அதிகாரிக்குப் பதவிச் சின்னங்களளிக்கும் உரிமை இல்லை என்று (கி.பி. 1075) மறுக்க, என்றி போப்பைப் பதவி நீக்கம் செய்ய (கி.பி. 1076) முயல, என்றிக்கு அவருடைய நிலமானியப் பிரபுக்கள் கீழ்ப்படியும் வாக்குறுதியினின்றும் அவர்களைப் போப்பு விடுவிக்க, மோதல் கடுமையாயிற்று. ஓர் உடன்படிக்கையின் வழியாக (கி.பி. 1122) பதவிச் சின்னங்களை வழங்கும் உரிமையை அரசர் விட்டுக் கொடுத்து, ஆயர்கள் ஏற்கும் அரசாங்கப் பதவிகளுக்குரிய அதிகாரச் சின்னங்களை அவர்களுக்கு வழங்கவும், அவர்களைத் தேர்ந்தெடுத்தலில் ஓரளவு பங்கும் பெற்றார். கிரிகரியின் கருத்து வருமாறு, போப்பு திருச்சபை முழுவதனுடைய இறைமை அதிகாரியே ஆவார். அவரே ஆயர்களைத் தோற்றுவித்தற்கும், பதவி இறக்கம் செய்தற்கும் அதிகாரம் உடையவர். அவருடைய தூதுவர்களே, மற்றெல்லாத் திருச்சபை அதிகாரிகளை விட முன்னுரிமை (Precedence) உடையவர்கள். திருச்சபைப் பொதுமன்றத்தைக் கூட்டுதற்கும், அதனுடைய ஆணைகளை நிறைவேற்றுதற்கும் அவருக்கே

அதிகாரம் உண்டு. போப்பின் ஆணைகள் வேறெவராலும் தள்ளிவிடப்படுதற்கு உரியவை அல்ல. போப்பின் நீதிமன்றத்தில் ஆய்வு செய்யப்படும் எந்த ஒரு வழக்கும் வேறெந்த அதிகாரியின் தீர்ப்புக்கும் உட்பட்டதன்று. ஆன்மிக ஒழுக்கத்துறைச் செயல்களில் யாவர் மீதும் திருச்சபைக்கு முழு அதிகாரமும் இருக்கிறபடியால், போப்புக்கு எவரையும் ஒழுக்க அடிப்படையில் சமய நீக்கம் செய்ய அதிகாரம் இருக்கிறது. ஆதலின் அவரைப் பதவி நீக்கம் செய்தற்கும் அவருக்கு அதிகாரம் இருக்கிறது.

உலகியலதிகாரத்தைவிட ஆன்மிக அதிகாரமே உயர்ந்தது. நிலமானிய முறையானது, நடுவண் அரசாங்கத்தை (Central Authority) வலுவற்ற ஒன்றாக ஆக்கி, பல நிலமானியப் பிரபுக்கள் வலுவடையவும், அதனால் குழப்பம் தோன்றவும் காரணமாக இருந்த இடைக் காலத்தில், சமூகத்தில் பொது அதிகாரி இருத்தல்வேண்டுமென்ற கருத்தைத் திருச்சபை ஒன்றுதான் மக்களுக்கு நினைவூட்டியது. இந்த அளவில்தான் கிரிகரி கூறிய திருச்சபையின் தலைமை அதிகாரக் கருத்துக்கு மதிப்பு இருக்கிறது. ஆனால், அவர் கருத்து, குருமாரின் ஆணவத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளதாகவும், 'அரசாங்கமானது தீவினையின் காரணமாகவே தோன்றுகிறது' என்ற அக்காலத்தில் நிலவிய பொதுவான ஓர் நம்பிக்கையை எதிரொலிப்பதாகவும் பிற்காலத்தவரால் கருதப்பட்டது. 'உயர்வானது எதுவோ அதனை, அதைவிடத் தாழ்வானது சார்ந்திருத்தலும், உயர்வானதால் தாழ்வானது ஆளப்படுதலும் வேண்டும்' என்று இயற்கையின் பொதுவிதி கூறுவதாக அரிசுட்டாட்டில் கூறிய கருத்து பிற்காலத்தில் அறியப்பட்ட போது, ஆன்மிக அதிகாரத்தின் உயர்ந்த முக்கியத்துவத்தின் காரணமாக, அதுவே அதைவிடத் தாழ்ந்த உலகியலதிகாரத்தைக் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்ற கருத்தும் கூறப்பட்டது. உலகியலதிகாரம் ஆன்மிக அதிகாரத்தினின்றே வருவிக்கப்பட்டதென்ற கருத்தை ஆக்சுபர்க்கின் ஒனோரியசு (Honorius of Augsburg) என்பவர் கி.பி. 1123-இல் குறிப்பிட்டார். (காண்க: கான்சுடண்டைன் கொடை).

கிரிகரியின் கருத்துகளுக்கெதிராக உலகியலதிகாரியான புனித உரோமானியப் பேரரசரின் அதிகாரத்தின் தலைமைக்கு ஆதரவாகச் சில கருத்துகள் கூறப்பட்டன. பேரரசர், போப்பு ஆகியோரின் அதிகாரங்கள் உள்ளிட்ட எல்லா அதிகாரங்களும் கடவுளுடையவையே. ஆகையால், அரசர் கடவுளுக்கே பொறுப்புடையவர். அவர் சமயக் கோட்பாடு மறுப்பு என்ற குற்றத்துக்காக (Heresy) அல்லாமல், பதவி நீக்கம் செய்யப்படுதற்கு உரியரல்லர். போப்பு கிரிகரி ஆன்மிக அதிகாரத்தையும் உலகியலதிகாரத்தையும் இணைத்து, அவற்றைத் தாமே கையாள முயலுதலால் இறைவன் ஏற்படுத்திய மனித சமூக அமைப்பை உருக்குலைத்துக் குழப்பத்திலாழ்த்துகிறார். இந்தக் கருத்துகளுக்கு ஆதரவாக, பீட்டர் கிராசசு (Peter Crassus) என்பார் கி.பி. 1084-இல், நான்காம் என்றி அரசாட்சியின் சார்பாக என்ற நூலில், அரசர் தம் மூதாதையரிடமிருந்து நாட்டைப் பரம்பரைத் தாய வழியில் (Hereditary Succession) பெற்றுள்ளபடியால் அவ்வுரிமையில் தலையிடுதற்குப் போப்புக்கோ, கலகம் செய்ய அவருடைய குடிகளுக்கோ உரிமையில்லை என்று கூறினார். அதேபோல், கி.பி. 1100-இல் இங்கிலாந்தில் வெளியான 'யார்க்கு வெளியீடுகள்' (York Tracts) என்ற சிறு வெளியீடுகளின் ஆசிரியர் சில கருத்துகளைக் கூறினார். அரசருடைய அதிகாரம் திருச்சபை ஆயருடையதை விட உயர்ந்தது. ஆயர்களையும் ஆளுதற்கும், திருச்சபை மன்றத்தைக் கூட்டுதற்கும், அதற்குத் தலைமை தாங்குதற்கும், அரசருக்கு அதிகாரங்கள் உண்டு. போப்புக்கு மற்ற ஆயர்களைக் கட்டுப்படுத்துதற்கு அதிகாரம் இல்லை. எல்லா ஆயர்களின் அதிகாரங்களும் சமமானவையே. எல்லோருடைய அதிகாரங்களும் கடவுளிடமிருந்தே பெறப்படுவன; கடவுளின் தீர்ப்புக்கே அவர்கள் உட்பட்டவர்கள்; யாவரும் திருச்சபைக்குக் கட்டுப்படுதல் வேண்டுமே தவிர, உரோமிலுள்ள போப்புக்கு அன்று. இக்கருத்தின் விளைவாகச் சட்டம், அரசியல் துறைகளில் உலகியலதிகாரியின் அதிகாரம் வரம்பற்றது என்ற இடைக்காலக் கருத்து வலுவாயிற்று. சுருங்கச் சொல்லில், போப்பின் ஆதரவாளர்கள் ஆன்மிக அதிகாரத்தின் ஒழுக்க இயலான உயர்வை வற்புறுத்திக் கூற, பேரரசு ஆதரவாளர்கள், இருவகை அதிகாரங்களும் ஒன்றைஒன்று சாராமலிருக்கின்றன என்று கூறினர். போப்பின் கருத்துக்குச் சட்ட அடிப்படையில் வடிவம் கொடுக்கப்பட வேண்டியதாயிற்று. அதேபோல உலகியலதிகாரியும் கடவுளுக்கே நேராகப் பொறுப்போடிருத்தல் வேண்டுமென்னும் கருத்தும், ஒவ்வொரு உலகியல் சமூகமும் தனக்கு ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதற்கு உரிமை உண்டென்னும் கருத்தும் தோன்றின.

**உயர்குருமார் கழகம்**: திருச்சபை அரசாங்க அமைப்பில் அடுக்காட்சி முறையின்படி (Hierarchy) அடிநிலையில் குருமாரும், அதற்கடுத்த மேல்நிலைகளில் ஆயரும், பேராயரும், உயர்குருமார் கழகமும் எல்லாவற்றுக்கும் மேலாகப் போப்பாண்டவரும் இருக்கின்றனர். இடைக்காலத்தில் ஆயர்களை அரசியல் பணிகளிலீடுபடுத்துதல், தேர்வுக்குரிய பதவிகளைக் கையூட்டின் வாயிலாகப் பெறுதல் (Simony) போப்புகளின் தவறுகள் முதலிய குறைபாடுகள் தோன்றவே,

இக்குறைபாடுகளை நீக்கித் திருச்சபையைச் சீர்திருத்தம் செய்தல் வேண்டுமென்ற நோக்கத்துடன் பல கருத்துகள் கூறப்பட்டன. போப்பைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தது உயர்குருமார் கழகமாகும். இத்தேர்வு முறையும் ஒழுங்காக அமைதல் வேண்டுமென்று கி.பி. 1059-இல் கூடிய இலேட்டரன் திருக்கூட்டத்தில் (Lateran Synod of 1059) தீர்மானிக்கப்பட்டது. திருச்சபையானது தன்னாட்சியுடைய ஒரு சமூகமாக அமைதல் வேண்டுமென்றும், அப்பொழுது திருச்சபையின் கொள்கையும் ஆட்சியும் குருமார்களாலேயே வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுதல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. கி.பி 14-ஆம் நூற்றாண்டில் பாரிசைச் சேர்ந்த சான் என்பவர் (John of Paris) திருச்சபைச் சீர்திருத்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், போப்பாண்டவரைப் பதவி நீக்கம் செய்தற்கு உயர்குருமார் கழகத்துக்கு அதிகாரம் சட்டப்படி இருக்கிறதென்று கூறினார். போப்பினுடைய கட்டுப்பாட்டினின்றும் விடுபட்ட ஒரு தனித்த நிறுவனமாக உயர்குருமார் கழகத்தை ஆக்குதல் வேண்டுமென்ற ஒரு கருத்திற்கு கி.பி. 1432-இல் பேசல் நகரத்தில் கூடிய மன்றத்தில் ஒரு முயற்சியும் செய்யப்பட்டது.

**கிறித்தவத் திருச்சபையும் நிலமானிய முறையும்:** நிலமானிய முறை புகுத்தப்பட்டதும், கிறித்தவத் திருச்சபையும் நிலவுடைமையாளராக மாறிற்று. அரசரிடமிருந்து திருச்சபையாளர்கள் பெற்ற மானியங்களுக்கீடாக, அரசருக்கு அரசியல் துறையில் பல ஆட்சிப்பணிகளை அவர்கள் செய்ய வேண்டியவர்களாயினர். மேலும் பண்டைய உரோமானியப் பேரரசு வீழ்ந்த காலத்திலிருந்து, அரசியலதிகாரம், குடிமைச் சமூக ஒழுங்கு முதலியவற்றைப் பற்றிய பண்டைய உரோமானியருடைய கருத்துகளைத் திருச்சபையாளர்கள் அறிந்து வைத்திருந்த காரணத்தினாலும், கல்விப் பயிற்சியில் திருச்சபையாளர்களே உலகியலாரைவிட உயர்ந்தவராக இருந்த காரணத்தினாலும், அவர்களையே இடைக்கால நிலமானிய அரசுகளின் அரசர்கள் தங்களுடைய ஆட்சிக் கொள்கைகளை நிறைவேற்றுதற்குரிய அலுவலர்களாக அமர்த்தினர். இவ்வாறு திருச்சபையாளர்கள் அரசியலில் ஈடுபட்ட சூழ்நிலை தோன்றிற்று. இவ்வாறு திருச்சபையாளர்களிடம் அரசியலதிகாரமும் சமய (ஆன்மிக) அதிகாரமும் இணைந்தன. இக்காரணத்தாலும் திருச்சபைக்கும் பேரரசருக்கும் மோதல் தோன்றிற்று.

**சான் கூறிய கருத்து:** உலகியலதிகாரம் சட்டத்துக்கு ஒத்ததாக ஆக்கப்படுதல் வேண்டுமெனில், அது திருச்சபையின் ஒப்புதல் வாயிலாகப் புனிதமாக்கப்படுதல் வேண்டுமென்று எசிடியசு கொலன்னா கூறிய கருத்தையும், 'உயர்ந்தது எதுவோ, அது தாழ்ந்ததைக் கட்டுப்படுத்துதல் வேண்டு' மென்ற அரிசுடாட்டிலின் விதியை ஒட்டிப் போப்பு ஏழாம் கிரிகரி, 'உயர்ந்த அதிகாரமாகிய ஆன்மிக அதிகாரம் தாழ்ந்த அதிகாரமாகிய அரசியலதிகாரத்தைக் கட்டுப்படுத்துதல் வேண்டு' மென்று கூறிய கருத்தையும் மறுத்து, பாரிசைச் சேர்ந்த சான் என்ற ஒரு துறவி (John of Paris, a Dominical Friar) கி.பி. 1302-இல் ஒரு நூல் எழுதினார். அவருடைய கருத்தின்படி, உலகியலதிகாரம், குருவினதிகாரத்தைவிடக் காலத்தால் முந்தியது; எனவே அது திருச்சபையினின்றும் பெறப்பட்ட ஒன்று அன்று; அதற்குத் திருச்சபையினால் புனிதம் பெற வேண்டிய தேவையும் இல்லை. ஏனெனில் அதனியல்பிலேயே அது ஒரு நல்ல வாழ்வுக்கும், ஒழுக்க இயலான நலன்களுக்கும் மிகவும் உறுதுணையான தேவையான ஒன்று ஆகும். ஆகையால், ஆன்மிக அதிகாரம் எல்லாவகையிலும் உலகியலதிகாரத்தைவிட உயர்ந்ததென்றும், அது உலகியலதிகாரியைக் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்றும் கூறுதல்அரிசுட்டாட்டிலின் கருத்தைத் தவறாகக் கையாளுதலே ஆகும். ஆன்மிக அதிகாரம் பெருமதிப்புடையதே. அரிசுடாட்டில் கூறுவது போல், எல்லா வகையிலும் தன்னிறைவுடைய சமூகமாக இருப்பது உலகியலரசுதான். அத்தகைய அரசு என்ற சமூக அமைப்பிலே பல தன்னாட்சியுடைய கூறுகள் (Autonomous Units) இருத்தற்குத் தடையேதும் இல்லை. ஆன்மிக நோக்கங்களுக்காகச் சொத்து தேவைப்படுகிறதென்ற காரணத்தினால், ஆன்மிக அதிகாரம் சொத்தைக் கட்டுப்படுத்துதற்கும் உரியது என்ற கருத்துத் தவறாகும். சமய நிறுவனத்தின் சொத்தின் மீதுள்ள உரிமை போப்பினிடமோ வேறெந்த தனிப்பட்டவரிடமோ இல்லாமல், ஒரு கழகமென்ற வகையில் கிறித்தவ சமூகத்திடம் இருக்கிறது. அரசர் தனியார் சொத்து உரிமையை மதித்து, அதைப் பொதுத் தேவைக்கு இணங்கவே ஒழுங்கு படுத்துதல் வேண்டும். திருச்சபையின் மீது போப்புக்கு இறைமை அதிகாரம் உண்டென்ற கருத்தைச் சான் மறுத்தது போலவே, கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மார்சிலியோ என்ற சிந்தனையாளரும் மறுத்தார். திருச்சபை அதிகாரிகளிடையே தர வேறுபாடுகள் கிடையாது என்று சானும் பிறரும் உறுதியாகக் கூறினர். அவர்கள் கூறிய அக் கருத்துகளை அதாவது, திருச்சபை என்பது உலகியலிலும் துறவறத்திலும் உள்ள எல்லாக் கிறித்தவ மக்களைத்தான் குறிப்பிடுகிறது என்ற கருத்தை ஏற்றுக் கொண்ட பாரிசுப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிவாளர்கள் திருச்சபை,அரசாங்கத்தைப் பற்றிய மன்றக் கோட்பாட்டை வரைந்தது.

**மன்றக் கோட்பாடு**: போப்பின் இறைமை அதிகாரக் கோட்பாடு என்ற அடிப்படையில் போப்புக்கும் புனித உரோமானியப் பேரரசருக்கும் இடையே ஏற்பட்ட பெரும் பூசலில், இறுதியில் பிரஞ்சு அரசருடைய உதவியினால் போப்பே வெற்றி பெற்றார்; ஆயினும், போப்பின் மீது பிரஞ்சு அரசர்களுடைய கட்டுப்பாட்டதிகாரம் ஓங்கி, அதன் விளைவாகப் போப்பு உரோமைவிட்டு நீங்கித் தென்பிரான்சில் அவிக்னோன் என்ற இடத்தில் 75 ஆண்டுகள் இருக்க வேண்டியதாயிற்று. அதனாலும், போட்டிப் போப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பெருங் குழப்பம் தோன்றியதனாலும் இக் குழப்பங்களை நீக்குதற்குப் பல மன்றங்கள் முயற்சி செய்ததனாலும், போப்பின் தலைமையான ஆன்மிக அதிகாரக் கோட்பாட்டிற்கு மறுப்பும் எதிர்ப்பும் தோன்றி, இறுதியில் திருச்சபை பற்றிய மன்றக் கோட்பாடு தோன்றிற்று. போப்பின் இறைமை அதிகாரக் கொள்கையில் இயங்கிய திருச்சபை அரசாங்க முறையையும், திருச்சபையில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களையும் பற்றி ஆராய்ந்து எழுதிய இருவர் பாடுவா நகரத்தை சேர்ந்த மார்சிலியோ என்பவரும் (Marsilio of Padua), ஆக்காம் நகரத்தைச் சேர்ந்த வில்லியம் என்பவரும் (William of Occam) ஆவர். மார்சிலியோ ஓர் இத்தாலியர் (கி.பி. 1275, கி.பி. 1342-ஆம் ஆண்டுகளுக்கிடையே). அவர் பாடுவாப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றபின், போப்பின் இறைமை அதிகாரத்தை ஆராய்ந்தார். ஆக்காமின் ஆயராக இருந்த வில்லியம் ஓர் ஆங்கிலேயர். அவா (கி.பி. 1324–கி.பி. 1404) ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் பயின்றபின், 'போப்பு உள்ளிட்ட சமயக் குருமாரெல்லாம் தம் வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளுக்கு வேண்டிய உடைமைகளைத் தவிர மற்றவைகளைத் துறந்து இருந்தால்தான் தங்களுடைய ஆன்மிகப் பணிகளைச் சரிவரச் செய்தல் இயலும்' என்று பிரான்சிசுக்கன் துறவியர் சபையில் ஒரு சாரார் கூறிய கருத்தை ஆதரித்தார். அதனால், போப்பு 22-ஆம் சான் நடவடிக்கை எடுக்க, வில்லியம் பதவி துறந்து பேரரசரின் அதிகாரக் கொள்கையை ஆதரித்தார்.

**மார்சிலியோவின் கருத்துகள்**: மார்சிலியோ தம் கருத்துகளை 'அமைதியின் காவலன்' (Defensor Pacies) என்ற நூலில் எழுதினார். மார்சிலியோவின் நோக்கம், போப்பு மூன்றாம் இன்ன செண்டின் செயல்களினாலும், திருச்சபைச் சட்டத்தினாலும் உருவாக்கப்பட்ட போப்பின் பேரரசு அதிகாரக் கொள்கையை (Papal Imperialism) மறுத்தலே ஆகும். போப்பின் பேரரசு அதிகாரக் கொள்கை உலகியலரசாங்கங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ கட்டுப் படுத்துமளவுக்கு விரிவாகக் கையாளப்பட்டது. அதன் விளைவாக, ஐரோப்பாவில், முக்கியமாக இத்தாலியில், உட்பூசல்கள் தோன்றின. மார்சிலியோவின் கருத்துப்படி, தம்பொருளியல் தேவைகளையும், ஒழுக்க இயல் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ளும் தகுதியுடைய தன் நிறைவுச் சமூகம் (A Self-Sufficiency Community) என்ற அரிசுட்டாட்டிலின் கொள்கையே ஏற்புடைய ஒன்று ஆகும். கிறித்தவ வெளிப்பாட்டின் முழு உண்மை என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதேயாயினும், அதனை மெய்விளக்க இயல் அல்லது தத்துவ இயலோடு (Philosophy) இணைத்தல் சரி அன்று. பகுத்தறிவு (Reason) வேறு; வெளிப்பாடு என்ற சமய நம்பிக்கை (Faith in Revelation) வேறு; ஒழுக்க இயலான வாழ்க்கையே மனித உய்திக்கு உகந்ததாகும். ஆகையால், திருச்சபை அதிகாரத்தைச் சாராமல் பொருளியலிலும், ஒழுக்க இயலிலும் தன்னிறைவுடையதாக மனித சமூகம் இருக்கிறது. சமய நெறி கூறும் ஆன்மிக நலனும் மறுமை வாழ்வும் அரசியல் துறைக்குப் புறம்பானவை. ஆனால், சமய நெறி இம்மை வாழ்வைப் பாதிக்கும்போது, அது மனித சமூகத்தின் அதாவது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகிறது. ஆகையால், உலகியல் பற்றிய துறைகளைத் திருச்சபையின் செயல்கள் பாதிக்கும் போது திருச்சபையானது உலகியலரசின் ஒரு பகுதியாக (A part of the Secular State) இருக்கிறது. (காண்க: மார்சிலியோ). அரிசுட்டாட்டில் கூறிய தன்னிறைவு இயல்புடைய சமூகம் என்ற கருத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, மார்சிலியோ அரசு, சட்டம், சட்டம் இயற்றுவோரின் பணிகள், திருச்சபை, குருமார் பணிகள், அவர்களுக்குக் குடிமை அரசாங்கத்தோடு உள்ள தொடர்பு ஆகியவை பற்றிய தம் கொள்கைகளைக் கூறினார். திருச்சபை கிறித்தவ சமயக் கொள்கைகளைப் பற்றித் தன் கருத்துகளை வெளியிடுதற்கு ஒரு மனித நிறுவனம் இருத்தல் வேண்டும். அந்த மனித நிறுவனமே ஒரு பொது மன்றம் (A General Council) ஆகும். விவிலிய மறையின் ஒரு பாகமாகிய புதிய ஏற்பாடு ஒன்றுதான் (New Testament) கிறித்தவ நெறியின் வெளிப்பாட்டைக் காட்டும் ஆதாரமாகவும், தெய்விகச் சட்டத்தின் வடிவமாகவும் இருக்கிறது. ஆகையால், அச்சமய நூலே மனித உய்திக்கு உறுதுணையாக அமையும். அச்சமய நூலில் கூறப்பட்ட தெய்விகச் சட்டத்தைப் பற்றி (Divine Law) ஏதேனும் கருத்து வேறுபாடோ முரண்பாடோ பூசலோ தோன்றுமானால், அவற்றைத் தீர்ப்பதற்கு, மனிதச் செயலிகளாகிய (Human Agents) போப்பும், அவருக்குக் கீழே உள்ள அடுக்காட்சி அதிகாரிகளும் சிறிதும் தகுதி உடையவரல்லர். அவரையும், அவருடைய அதிகாரிகளையும் விட, கிறித்தவ நெறியில் நம்பிக்கையுடைய அனைத்துக் கிறித்தவமக்களுமடங்கிய ஓர் இணையம்

(A Corporation) அல்லது அதனுடைய ஆணை பெற்ற ஒரு பொதுமன்றம் (A General Council) ஓரளவேனும் தவறு செய்யாத தன்மை (Infallibility) உடையது. எவ்வாறெனில், அம்மன்றத்தவரிடம் கிறித்தவ நெறியில் உள்ள நம்பிக்கையும் (Faith) அதைக் காரண வகையாக ஆராயும் அறிவும் இணைந்து காணப்படுகின்றன. இந்த மன்றத்தில் கிறித்தவ நாடுகளின் நிலப்பகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருப்பர். அவர்கள் திருச்சபையாளராகவும் (Churchmen) உலகியல் துறையாளராகவும் இருப்பர். அவர்கள் நல்வாழ்க்கையும், தெய்விகச் சட்டத்தில் பயிற்சி பெற்றும் இருப்பர். அவர்கள் ஒரு வசதியான இடத்தில் கூடிக் கிறித்தவர்களிடையே பூசலை விளைவிக்கக்கூடிய கருத்துகளை விவிலிய மறையை ஆதாரமாக வைத்துத் தீர்த்து முடிவெடுப்பர். அவர்களுடைய முடிவுகள், யாவரையும், சிறப்பாகக் குருமாரையும் கட்டுப்படுத்தவல்லது. அவர்களுடைய முடிவுகள் உலகியலரசாங்கங்களினுதவியால் செயற்படுத்தப்படுதல் கூடும். ஆகையால், மார்சிலியோ கூறும் பொதுமன்றம் உலகியலரசாங்கத்தைச் சார்ந்து இருப்பதாகும். ஆனால், மார்சிலியோ குறிப்பிடும் ஐரோப்பிய சமூகம் திருச்சபையைப் போன்று ஓர் அனைத்துலக அமைப்புக்கு அடித்தளமாக அமையவில்லை. ஆயினும், சமய நெறி என்பது ஒரு வலுவற்ற தனி வாழ்க்கையின்பாற்பட்ட நம்பிக்கை என்ற இக்காலக் கருத்தை நோக்கியதாக மார்சிலியோவின் கருத்து அமைந்துள்ளது. அவர் அரிசுடாட்டிலின் இயற்கைத் தத்துவத்தை தூயவடிவத்தில் ஆக்கியதனால், அது இத்தாலிய மறுமலர்ச்சியிலே கிறித்தவமல்லாத பண்டைய நெறி புத்துயிர் பெற்றதைக் காட்டிற்று. அவர் குறிப்பிட்ட அரசும் திருச்சபையும், ஒன்றை ஒன்று சாராமல் தனித்து இருக்கவில்லை. அவர் குறிப்பிட்டதுபோல் பிற்காலத்தில் போப்பின் வரம்பற்ற அதிகாரம் என்ற கருத்து ஒரு கற்பனை என்று ஒதுக்கப்பட்டது. ஆனால், மார்சிலியோ குறிப்பிடாமல் விட்டுவிட்ட சமயப் பொறை அல்லது சமய உரிமை என்ற கருத்தும் (Religious Toleration) பிற்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ஆக்காமின் வில்லியம் கூறிய கருத்து**: சமய நம்பிக்கை பற்றிய கருத்துகளிலெல்லாம் பொதுமன்றமும் போப்பைவிட உயர்ந்த தவறில்லாத நிறுவனமாக இருத்தல் இயலாது. ஏனென்றால், பொதுமன்றமும் போப்பைப் போலவே ஒரு மனித நிறுவனந்தான். போப்பினுடைய பேரரசதிகாரக் கோட்பாடு திருச்சபைக்கும் ஐரோப்பாவுக்கும் தீய விளைவுகளை அளித்ததனால் அதைக் கிறித்தவருள் பெரும்பாலோரே எதிர்த்தனர். வில்லியம், போப்பினால் சமய நீக்கம் செய்யப்பட்ட பிரரன்சிசுக்கன் துறவிகளின் சார்பாகக் கருத்து உரைத்தார்: அவருடைய விவாத முறையானது சமய வேறுபாடு காரணமாக ஒடுக்கப்பட்ட சிறுபான்மையோர், நிறுவப்பட்ட அரசியலதிகாரிக்கு எதிராக, உரிமையின் அடிப்படையில் அறிவு வளர்ச்சியுள்ள பொதுமக்கள் கருத்துக்கு மேல்முறையீடு செய்தற்கு ஓர் முன்னோடியாக அல்லது எடுத்துக்காட்டாக அமைந்தது. போப்புக்கு சமயத்துறையில் வரம்பற்ற அதிகாரம் இல்லை. சிறுபான்மையோருக்கு வல்லந்தத்தை (Coercion) எதிர்த்தற்கு உரிமை உண்டு. போப்பின் இறைமை அதிகாரம் என்பது, கிறித்தவரின் சுதந்திரத்தையும், உலகியலரசர்களின் உரிமைகளையும் ஒழித்துவிட்டபடியால், மறுக்கப்படவேண்டிய ஒரு கொள்கையே (Heresy) ஆகும். பகுத்தறிவும் நம்பிக்கையும் வெவ்வேறானவை. புனித தாமசு அக்குவினாசு அறிவையும் நம்பிக்கையையும் இணைத்து அறிவியலையும், இறையியலையும் (Theology) ஒன்றுபடுத்தியிருந்தார். அவற்றைப் பிற்காலத்தவர் பிரித்துவிட்டனர். வில்லியம், இறையியல் இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருளைப்பற்றிக் கூற, மெய்யறிவியல் அல்லது தத்துவமோ இயற்கை அறிவின் ஆற்றலுக்கு உட்பட்ட உண்மைகளைப் பற்றிக் கூறுகிறது. இறையியல் கூறும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருள் வெளிப்பாட்டின் வாயிலாக நம்பிக்கைக்குத் தெரியவருகிறது. இப்பொருளுக்கு ஒழுக்க இயலான பயன்கள் இருக்கின்றன. அறிவுக்குப் புலனாகாத ஒரு நிலையை நம்பிக்கையுடையது என்று அறிவு எடுத்துக் கூறுவதனால், அறிவு நம்பிக்கையினின்றும் விடுபட்ட ஒன்று. ஆன்மிக அதிகாரிகளும் உலகியலதிகாரிகளும் வெவ்வேறானவர். ஒருசாரார் மற்றவருடைய தவறுகளைத் திருத்துமளவுக்கு உரிமையோடிருந்தாலும், இருசாராரும் சுதந்திரமாக இருத்தல் இயலும். எதேச்சாதிகாரமாகச் சட்டத்துக்குப் புறம்பாகக் கையாளப்படும் அதிகாரம் வெறுக்கத்தக்கது. சட்டம் என்பதில் கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட விருப்பமும், இயற்கை அறிவின் விதிகளும் அடங்கியுள்ளன. அதிகாரம் கையாளப்படும்போது, அது பொதுநலனுக்கு உகந்ததாகவும், இயற்கை நீதிக்கும் ஒழுக்க இயலுக்கும் ஒத்ததாகவும் இருத்தல் வேண்டும். இவ்வகையான் சட்டமே முழு வல்லமையுடையது.

**மன்றக் கோட்பாடு**: வில்லியமும் மார்சிலியோவைப் போலக் கிறித்தவ சமய விதிகளைப் பற்றி எழும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மன்றமுறையைக் குறிப்பிடுகிறார். திருச்சபையில் கி.பி. 1378, கி.பி. 1417 ஆகிய ஆண்டுகளுக்கிடையே போட்டிப் போப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டும் பல ஊழல் முறைகளும், தவறான அதிகாரம் போப்பினாலும், திருச்சபை அதிகாரிகளாலும் கையாளப்பட்டும் பெரும்

பிளவு (Great Schism) தோன்றிற்று. அதனால், குருமாரைப் பற்றி ஒரு காலத்திலிருந்த உயர்வான எண்ணம் மறைந்தது. அத்தகைய சூழ்நிலையில் திருச்சபையின் சமயம் (Religion of the Church) மக்களுக்கு நிறைவளிக்க வில்லை. அதனை ஆராய்ந்த வில்லியம், திருச்சபை அதிகாரிகளுடைய அதிகாரத்துக்கு ஒரு தடையாக அமைந்து, அவ்வதிகாரத்தை ஓர் அரசியலமைப்பு விதிக்கு உட்பட்டதாக ஆக்கக்கூடியது ஒரு பொது மன்றமே என்று கூறினார். மன்றமும் போப்பைப் போலத் தவறு செய்யக் கூடியதாயினும் அது எல்லாக் கிறித்தவ மக்களின் பிரதிநிதியாகவும் விளங்குவதால், அது செய்யும் தவறு சிறியதே ஆகும். கிறித்தவ சமயம் தன் உள்ளார்ந்த அதிகாரத்தின் பேரிலேயே தன் உண்மைத் தன்மையை நிறுவுதல் இயலும். ஆகையால், சமயக் கொள்கை பற்றிய கருத்துகளில் இறுதியான தீர்ப்பு வழங்கக் கூடிய அதிகாரம் திருச்சபையின் உயிராகவுள்ள கிறித்தவ மக்களிடமே உள்ளது. தெய்விக வெளிப்பாட்டைக் காட்டும் ஆதாரமாக இருப்பது கிறித்தவ மறை நூலாகிய விவிவியமே (Scripture) ஆகும். இதனை நேர்மையாக ஆராய்தல் ஒவ்வொருவருடைய உரிமையும் கடமையும் ஆகும். ஆராயும் உரிமையோடு, சீர்தூக்கித் தீர்ப்புக்கூறும் உரிமையும் இணைந்தது. போப்பின் வரம்பற்ற அதிகாரத்துக்கு நியாயமான வரம்புகளை விதித்துப் போப்புக்கும் கிறித்தவ நாட்டிற்குமிடையே நல்லுறவு ஏற்படுத்துதற்காகக் கிறித்தவக் குருமாரும், உலகியலாரும் ஒன்று சேரவேண்டும். இவ்வாறு கட்டுப்படுத்துவதற்கு உகந்த சிறந்த வழி, கிறித்தவ மறையைக் கற்ற, அதில் நம்பிக்கையுடைய மக்களின் பிரதிநிதியாக ஒரு பொது மன்றத்தை அமைத்து, அதன் வழியாகத் திருச்சபை அரசாங்கத்துக்கு ஓர் அரசியலமைப்பு வடிவத்தை அமைப்பதுதான். திருச்சபையைச் சேர்ந்தோர் பங்குகள் (Parishes), குருமார் மடங்கள் (Monasteries), கோயில் சபைகள் (Cathedral Chapters) முதலிய இணையங்களில் வாழ்வதால் இந்த இணையங்களின் பிரதிநிதிகளாகவே (Representatives of Corporation) பொது மன்றத்தார் இருத்தல் வேண்டும். வில்லியம் இவ்வாறு கூறிய கோட்பாடு, அக்காலத்திலிருந்த குருமார் அதிகாரம், பேரரசதிகாரம் ஆகியவற்றின் தொடர்பு பற்றிய ஆராய்ச்சியினடிப்படையிலமைந்திருந்தது; ஆனால், உலகியலரசுகளின் மீது போப்பின் கட்டுப்பாட்டதிகாரம் என்ற கொள்கை மறைந்துவிட்டது. இந்த நிலையில்தான் கிறித்தவ சமய உரிமையின் காரணமாக அரசாங்க அதிகாரியைக் குடிகள் எதிர்க்கும் உரிமை உண்டு என்னும் கருத்தும் தோன்றிற்று. இவ்வாறு பொது மன்றக் கோட்பாடானது இறைமை அதிகாரக் கொள்கைக்கும், அரசியலமைப்புக்கு உட்பட்ட பிரதிநிதித்துவ முறை அரசாங்கமென்னும் கொள்கைக்குமிடையே ஒரு முரண்பாட்டைத் தோற்றுவித்தது.

**கிறித்தவத் திருச்சபையும் இத்தாலிய ஒற்றுமையும்:** கிறித்தவத் திருச்சபையில் காணப்பட்ட போப்பின் வரம்பற்ற அதிகாரம், எவ்வாறு இத்தாலிய நாடுகள் ஒரே அரசரின் கீழ் ஒரே நாடாக இணைவதற்குப் பேரிடையூறாகவும் தடையாகவும் இருந்ததென்று, கி. பி. 1469, கி. பி. 1527-ஆண்டுகளுக்கிடையே வாழ்ந்த இத்தாலிய அரசியற் சிந்தனையாளர் நிக்கோலோ மாக்கியவெல்லி (Niccolo Machiavelli) என்பார், தம் 'டைட்டசு இலிவியசின் முதல் பத்து நூல்களைப் பற்றிய மதிப்புரைகள்' (Discourses on the First Ten Books of Titus Livius) என்ற நூலில் கூறுகிறார். இத்தாலியில் முன்பு இருந்து வந்த பழைய குடிமை அரசாங்க நிறுவனங்கள் செயலற்று மறைந்துவிட்டன. அதற்குக் காரணம் ஒரு புதிய வணிக, தொழில் முறை அமைப்பு இத்தாலியில் தோன்றியதே ஆகும். அரசாங்கம் கொலை, கடுமை முதலிய முறைகளைக் கையாளலாயிற்று. நன்னம்பிக்கையும் நாணயமும் கைவிடப்பட்டன. வல்லந்தமும் சூழ்ச்சியுமே வெற்றிக்கு வழிகாட்டியாக அமைந்தன. தீயொழுக்கமும் தன்னலமுமே கையாளப்பட்டன. போப்புகளும் இத்தகைய முறைகளுக்கு விதிவிலக்கு அல்லர். இத்தாலி ஐந்து பெரிய அரசுகளாகப் பிளவுண்டிருந்தது. தெற்கே நேப்பிள்சு அரசும், வடமேற்கே மிலான் அரசும், வடகிழக்கே உயர்குடியினருடைய குடியரசு நாடாகிய வெனிசும், நடு இத்தாலியில் பிளாரன்சுக் குடியரசும், போப்பின் அரசும் இருந்தன. இவற்றுள் போப்பின் அரசுதான், ஒரு சிறந்த முறையில் இணைக்கப்பட்ட, இத்தாலியிலேயே மிகவும் நிலையான அரசாக இருந்தது. அதன் காரணமாகப் போப்பினால் இத்தாலிய முந்நீரகத்திலுள்ள நாடுகளனைத்தையும் ஒரு நாடாக இணைக்க இயலாவிட்டாலும். இத்தாலியிலிருந்த வேறெந்த அரசரும் இத்தாலியை இணைத்துவிடாமல் அவரைத் தடுத்தற்கும், அதன்பொருட்டு அயலரசர்களின் தலையீட்டைத் தூண்டிவிடுவதற்கும் கூடிய அளவுக்குப் போப்பு அதிகாரமும் செல்வாக்கும் பெற்றிருந்தார். இந்நிலையைக் கவனித்த மாக்கியவெல்லி,

> 'இத்தாலியராகிய நாமெல்லாரும் சமய நெறியற்றவராகவும் தீயவராகவும் ஆகிவிட்டதற்கு முழுக்காரணம், உரோமானியக் கிறித்தவத் திருச்சபையும், அதன் குருமாருமே ஆவர். ஆயினும் அதைவிட ஒரு பெரிய செயலை, நமக்கெல்லாம் அழிவைத் தருஞ் செயலைத் திருச்சபை செய்துள்ளது. அதுதான் அது நம் நாட்டைப்

பிளவு படுத்தி வைத்துவிட்டதே ஆகும்; இப்போதும் அது நம் நாட்டைப் பிளவு படுத்தியே வைத்து வருகிறது ...... இத்தாலி முழுவதையும் தன்னாட்சி வாயிலாக இணைப்பதற்கு வலிமை இல்லாத கிறித்தவத் திருச்சபை, வேறெந்த அரசரும் அவ்வாறு செய்ய உடன்படாமலிருக்கிற காரணத்தினால், இத்தாலி ஒரே அரசரின் கீழ் இணைக்கப்படாமலே இருந்து வருகிறது .........' என்று கூறினார்.

செருமனியில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் மார்ட்டின் லூதரும், செனிவாவில் சான் கால்வினும் தோன்றிப் போப்பின் தலைமை அதிகாரத்தை மறுத்து, விவிலிய மறையின் புதிய ஏற்பாட்டின் கொள்கைகளும், அவற்றில் நம்பிக்கை கொண்ட கிறித்தவர் ஒவ்வொருவருடைய மதிப்பீடும் ஆற்றலுமே (Individual Power of Judgement) தலைமையான அதிகாரி என்று கூறி, கிறித்தவ சீர்திருத்த இயக்கத்தை வெற்றியாக நடத்தினர். (காண்க: எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கோட்பாடு). அதன் விளைவாகத் தேசிய அரசாங்கங்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தேசிய திருச்சபைகள் (National Churches) தோன்றின. அவ்வாறு முன்பு இருந்து வந்த ஒரே திருச்சபை (Universal Church) என்ற அமைப்பும், துறவிகளின் மடங்களும், திருச்சபையார் இணையங்களும், (Ecclesiastical Corporations), திருச்சபைச் சட்டமும் (Canon Law) கைவிடப்பட்டு மறைந்துவிடவே, பழங்காலத்தில் உலகியலாட்சியாளர்களுக்கு இருந்து வந்த தடைகளும் நீங்கின. ஆகையால், கிறித்தவ சீர்திருத்த இயக்கத்தின் விளைவாக உலகியலரசின் அதிகாரம் ஓங்கிற்று. சமய மறுப்பு என்ற குற்றமும் (Heresy), மற்றக் குற்றங்களைப் போலவே அரசருடைய நீதிமன்றங்களில் விசாரிக்கப்படலாயிற்று. இரிச்சர்டு ஊக்கர் என்பவர் திருச்சபை அரசாங்கத்தைக் குடிமை அரசாங்கத்தின் ஒரு பாகமாகவே கருதினார். (காண்க: எதிப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கோட்பாடு). பா.கு.

**துணை நூல்கள்:**

**Brian, Tierney**, Foundations of the Conciliar Theory, Cambridge, 1955.

**Carlyle, R.W. & Carlyle, A. J.**, A History of Mediaeval Political Theory in the West, Vol. I. London, 1909.

**Sabine, G. H.**, A History of Political Theory, Oxford and I. B. H. Publishing Company, Calcutta, 1961.

**William A. Mueller**, Church and State in Luther and Calvin, Nashville, Tern, 1954.

**கிறித்துச்சர்ச்சு** நியூசிலாந்துத் தீவின் தென் கிழக்குப் பகுதியில், பாங்குசு முந்நீரகத்தின் (Banks Penensula) அடிப்பகுதியில் உள்ள ஒரு தொழில் நகரம். இத்தீவிலேயே மிகப்பெரிய நகரம் கிறிசுத்துச்சர்ச்சுதான் (Christchurch). தோல் பதனிடுதல், இறைச்சியைப் பெட்டிகளில் அடைத்தல், கம்பளி உற்பத்தி, கோதுமை உற்பத்தி முதலியன நடைபெறுகின்றன. இங்குப் பல பூங்காக்கள் இருப்பதால் 'தோட்ட நகரம்' என்றே இது கூறப்படுகிறது. இந்நகரில் கி.பி. 1873-ஆம் ஆண்டில் காண்டர்பரி பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றது. இங்குள்ள பொருட்காட்சிச் சாலை சிறப்பானது. காண்டர்பரி மாவட்டத்தின் தலைநகரும் இதுவே. கிறிசுத்துச்சர்ச்சின் மக்கள் தொகை, 321,720. (1981).



கிறித்துச்சர்ச்சு நகரம்

இப்பெயரையுடைய மற்றொரு நகரம் இங்கிலாந்தின் தெற்குப்பகுதியில் உள்ளது. அங்கு, ஏவன் (Avon) ஆறும் இசுடூர் (Stour) ஆறும் கலக்கின்றன. அங்கு வானஊர்திகள் உருவாக்கப்படுகின்றன. அந்நகரம், மிகப்பழைய ஆங்கிலச் சாக்சானியர் காலத்திலேயே நிறுவப்பெற்றது. வஞ்சன மீன்கள் இங்கு பிடிக்கப்படுகின்றன. தெ.பா.

**கின்னரர்** என்போர் தேவகணங்கள் பதினெட்டனுள் ஒரு கணத்தினர். இவர்கள் குதிரை முகமும் மனித உடலும் உடையவர்கள்; நான்முகனின் பிரதிபிம்பத்தில் பிறந்தவர்கள்.

கிம்-நரர் என்பது வேறுபட்ட மனித வடிவமுடையவர் என்னும் பொருளில் கின்னரர் என வழங்கப்படுகிறது. இவர்கள் குச்சிதநரர் எனவும் வழங்கப்பெறுவர். விகாரமடைந்த மனித உருவங் கொண்டவரென்பது குச்சிதநரர் என்பதன் பொருளாகும். ஆண்-பெண் இணைந்த கின்னரர் கின்னர மிதுனம் எனப்படுவர். கின்னரப் பறவைகளின் இணையும் இப்பெயர் பெறும்.

இயக்கர், கிம்புருடர்களுக்கு மன்னனான குபேரனே கின்னரர்களுக்கும் மன்னனெனப் பேசப் பெறுகிறான். இவன் கின்னரேசன், கின்னரர் பிரான் எனவும் குறிக்கப்படுகிறான். கிம்புருடர் போலவே இவர்களுக்கும் குதிரைத் தலையுடைய நிலை உண்டென்று சில புராணங்களும், இவர்கள் இரு வேறு வடிவங்களை யுடையவர் என்று சில புராணங்களும் கூறுகின்றன.

சிற்ப நூல்கள் கின்னரருக்கும் கிம்புருடருக்கும் உள்ள உருவ வேறுபாடுகளை விளக்குகின்றன. மனித உடலும் குதிரை முகமும் இருந்தால் கிம்புருடர் எனவும், மனித முகமும் பறவையின் கால்களும் அமையப் பெற்றிருந்தால் கின்னரர் எனவும் கூறப்படும்.




கின்னரர்

இத்தகைய வேறுபாட்டுச் சிற்பங்களை இந்தியக் கோவில்களின் தூண்களில் பதும பாகத்தின் கீழும் விதானங்களிலும் காணலாம். கின்னரப் பறவையின் கால்களின் அமைப்பில் இவர் வடிவம் அமையப் பெற்றதால் கின்னரர் எனப்படுவர். பௌத்த திருக் கோவில்களில் பறவையின் காலும் மனித முகமும் கலந்த கின்னரர் வடிவங்களைக் காணலாம். மாமல்லைப் பாறைச்சிற்பத்திலும் இவர்களைக் காணலாம். இதில் இவர்கள் யாழ் வாசித்துக் கொண்டும் தாளம் வைத்துக் கொண்டும் இருப்பதைக் காணலாம். குடைவரைச் சிற்பங்களிலும் கோயிற் சிற்பங்களிலும் இவர்கள் தேவலோகத்தில் இருப்பது போன்ற தன்மையைக் காட்டப் பறப்பதுபோன்றும் கால்களை மடித்த நிலையிலும் காட்டப்பட்டுள்ளனர்.

காளிதாசர் தம் காவியங்களில் கிம்புருடர் வடிவம் போலக் கின்னரர்களையும் குதிரை முகமுடையவர்களாகவே வருணிக்கிறார். கின்னர-கின்னரர்கள் இசைவாணர்களாகவே எப்பொழுதும் வருணிக்கப் பெறுகின்றனர். இவர்களின் இசை கின்னர கீதம் எனப்படும். இவர்களுடைய இனிய குரல் காரணமாகக் காளிதாசர் கின்னரியை இரக்தகண்டி எனப் பாராட்டுகிறார். இவர்களை யாழ் வல்லோர் என்று நிகண்டு குறிக்கிறது. சு.சு.,இரா.க.

**கினி** மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு குடியரசு நாடு. கினியின்(Guinea) பரப்பு 2,45,857 ச.கி.மீ. இதற்கு வடக்கில் கினிபிசா, செனீகல், மாலி ஆகிய நாடுகளும், கிழக்கில் தந்தக் கடற்கரையும் (Ivory Coast), தெற்கில் சீவிலியோனும் இலியோனும் (Leon), மேற்கில் அட்லாண்டிக்கு மாக்கடலும் எல்லைகளாக உள்ளன. இதன் தலைநகர் கானக்ரி (Conakry). இக்கடலோர நாடு, 1958-ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் சுதந்திரக் குடியரசாக அறிவிக்கப்படுதற்கு முன்பு பிரெஞ்சுக்காரரின் குடியேற்ற நாடாக இருந்தது.




கினி

வேளாண்மையே இந்நாட்டினரின் முக்கிய தொழில். அரிசி, வாழைப்பழம், எண்ணெய்ப்பனை, எண்ணெய்விதை, கோந்து, இரப்பர், காப்பி முதலி

யன இங்கு உள்ள முக்கிய விளைபொருள்கள். இரும்பு, தங்கம், வைரம் முதலிய சுரங்கங்களும் உள்ளன. அலுமினியமும் இங்குக் கிடைக்கிறது. தொழில் வளம் ஓரளவு இங்குக் காணப்பட்ட போதிலும், போக்குவரத்து வசதிக்குறைவு காரணமாகத் தொழில் வளர்ச்சி மிக விரைவாக இல்லை.

**அரசியலமைப்பு**: 1958-ஆம் ஆண்டு அமைக்கப் பட்ட அரசியல் சட்டப்படி இந்நாட்டில் குடியரசுத் தலைவர் ஒருவர், மக்களால் நேரடியாக ஏழு ஆண்டு கட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இவர் தமக்கு உதவியாக ஓர் ஆலோசனைக் குழுவை அமைத்துக் கொள்கிறார். ஒரு சட்டசபை 210 உறுப் பினர்களைக் கொண்டு சட்டமியற்றும் அதிகாரங் களைப் பெற்றுள்ளது. இதுவும் ஏழு ஆண்டுகட்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. பிரெஞ்சு மொழியைத் தவிர வேறு எட்டு மொழிகள் பள்ளிக் கூடங்களில் கற்பிக்கப்படுகின்றன.

**வரலாறு**: இந்நாட்டின் கடலோரப் பகுதியில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர் நிலக் கண்டுபிடிப்பிற்கான ஆய்வு செய்து வந்தனர். ஐரோப்பிய வணிகர்கள், அடிமை வாணிகத்திற்காக இப்பகுதிக்கு வந்து, அடிமைகளைக் கொண்டு செல் வதற்காக கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தமக்கிடையே போட்டியிட்டுவரலாயினர். பிறகு கி.பி. 19-ஆம் நூற் றாண்டில், இவர்கள் நிலக்கடலை, எண்ணெய் முதலிய பொருள்களைப் பெறுவதற்காகப் போட்டியிட்டனர். பல போர்கள் நிகழ்ந்த பிறகு முடிவாகப் பிரெஞ்சுக் காரரின் ஆதிக்கம் கினியின் பெரும்பகுதியில் ஏற் பட்டது. இது ஒரு பிரெஞ்சுக் குடியேற்ற நாடு என் பது கி.பி. 1891-இல் அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டது. உள் நாட்டு மக்களின் எதிர்ப்பு, அயல்நாட் டினரை விரட்ட இயலவில்லை. ஆகவே, 1958-இல் சுதந்திரம் பெறும் வரை இது ஒரு பிரெஞ்சுக் குடி யேற்ற நாடாகவே விளங்கிற்று. தெ.பா.

**கல்வி**: கினி நாட்டில் கல்வி அரசு நிருவாகத் தில் உள்ளது. கட்டாயக்கல்வி1959-ஆம் ஆண்டிலிருந்து 7 முதல் 15வயது வரையிலான குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிறது. ஏறத்தாழ 80 விழுக்காடு குழந் தைகள் தொடக்கப் பள்ளிகளில் பயிலுகின்றனர். இளைஞர்களிடம் கல்வியறிவை ஓங்கச் செய்யும் நோக்குடன், 1970-ஆம் ஆண்டிலிருந்து தொடக்கப் பள்ளிகளில் நாட்டு மொழிகள் (Indigenous Languages) கற்பிக்கப்படுகின்றன. இங்குப்பிரெஞ்சு மொழி அலுவலக மொழியாக உள்ளது.

தொடக்கப் பள்ளி, இடைநிலைப் பள்ளி (Lower Secondary School),மேனிலைப் பள்ளி(Upper-Secondary School) என்ற முறையில் பள்ளிக் கல்வி அமைந் துள்ளது. இந்நாட்டில் உயர் கல்வி கொனாக்கிரி (Conakry) நகரிலுள்ள கேமல் அபதல் நாசர் தொழிற் பயிற்சி நிறுவனத்திலும் (The Gamal Abdel Nasser Polytechnic) காங்கன் (Kankan) நகரிலுள்ள சூலியசு நைரேரா தொழிற் பயிற்சி நிறுவனத்திலும் (Julius Nyerera Polytechnic) வழங்கப்படுகிறது. இந்நிறு வனங்கள் சோவியத்து நாட்டின் உதவியால் 1960 -இல் தொடங்கப்பட்டவை. இந்நிறுவனங்களில் 13 துறைகளும் புலங்களும் உள்ளன. தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இந்நாட்டில் நான்கு இடங்களில் உள்ளன. இடைநிலை மற்றும் மேனி லைப் பள்ளி ஆசிரியர் பயிற்சி சூலியசு நைரேரோ தொழிற் பயிற்சி நிறுவனத்தில் வழங்கப்படுகிறது. இங்குப் பல்கலைக்கழகம் ஏதும் இல்லை. ஆதலின், அயல்நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களிற் சென்று பயிலும் மாணவர்களுக்கு அரசு பணவுதவி செய் கிறது.

கினி நாட்டில் வயது வந்தோர் கல்வித் திட்டம் 1968-ஆம் ஆண்டில் தொடங்கியது. ஒவ்வொரு நகர்ப் புற மற்றும் ஊர்ப்புறப் பள்ளி வகுப்பறைகளிலும் கட்டாயமாக வயது வந்தோர் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்என்று 1973-இல் உயர் கல்விக் கழகம் சட்ட மியற்றியுள்ளது. இந்நாட்டில் 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 5-இலிருந்து 10 விழுக்காடு மக்களே கல்வியறிவு பெற்றவர்கள். எஸ்.த.

**துணை நூல்**:

**Davidson, B.,Growing from the Grass Roots,London, 1974.**

***கினி கெழு***: இது வருமானப் பங்கீட்டு ஆய் வில் பயன்படுத்தப்படும் ஓர் அளவு முறையாகும். கினி கெழுவைக் (Gini Co-efficient) கொண்டு வரு மானப் பங்கீடு, எந்த அளவிற்குச் சமநிலை வருமானப் பங்கீட்டிலிருந்து (Equal Distribution of Income) விலகி, வருமான ஏற்றத்தாழ்வுகளுக்கு இடம்கொடுக் கிறது எனக் கணக்கிடுகின்றனர். இந்த அளவு முறையை உருவாக்கிய அறிஞர் கேரோடோ கினி (Corrado Gini) என்பவரின் பெயரில் இதனைக் குறிப் பிடுகின்றனர்.

வருமானப் பங்கீட்டை விளக்கும் இலாரென்சு வளைகோட்டின் (Lorenz Curve) 45° க்கும் முக் கோணப் பகுதிக்கும் இடையேயுள்ள விகிதம் கினி கெழு எனப்படும். கினி கெழு சூனியமாயிருந்தால் வருமானப் பங்கீடு சமநிலை என்பதாகும். கினி கெழு

1 என இருந்தால் வருமானப் பங்கீடு சமனற்ற நிலையிலுள்ளது (In Equality) என்பதனைக் குறிக்கும்.

வரி விதிப்பினால் மக்களின் வருமானப் பங்கீட்டில் உண்டாகும் தாக்கத்தைக் கணக்கிடக் கினி கெழு பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, வரி விதிப்பில் செயற்படுத்தப்படும் மாற்றம் கினி கெழுவைக் குறைக்குமானால் அது சமநிலை வருமானப் பங்கீட்டிற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குகிறது என்பதனைச் சுட்டிக்காட்டும். அத்தகைய வரிவிதிப்பைத் தொடர்ந்து செயற்படுத்துவது நன்மை பயக்கும். சமநிலை வருமானப் பொருளியல் ஆய்வுகளுக்குக் கினி கெழு பயன்படுத்தப்படுகிறது. அ.கு.சா.

**கினிபிசௌ** மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சுதந்திர நாடு. அட்லாண்டிக்கு மாக்கடலை ஒட்டி உள்ள கினிபிசௌவுக்கு (Guinea-Bissau) வடக்கில் செனீகலும், தெற்கிலும் கிழக்கிலும் கினிக் குடியரசும் எல்லைகளாக உள்ளன. அட்லாண்டிக்கு மாக்கடலில் உள்ள சில தீவுகளும் இந்நாட்டில் அடங்கும். இதன் தலைநகர் பிசௌ (Bissau). கினிபிசௌ நாட்டில் பல ஆறுகள் ஓடுகின்றன. பயிர்செய்தலே இந்நாட்டு மக்களின் முக்கிய தொழில். எண்ணெய்ப் பனை, நிலக்கடலை, அரிசி, தேங்காய் முதலியன முக்கிய விளைபொருள்கள். அலுமினியப் பொருள்கள் செய்வதற்குரிய மண் சுரங்கங்கள் இங்கு உள்ளன.

இந்நாட்டு மக்களில் ஐந்து முக்கிய இனங்கள் காணப்படுகின்றன. அவையாவன:- பலந்தே (Balante) 32 விழுக்காடு, மாலிங்கே (Malinke) 13 விழுக்காடு, புலானி (Fulani) 22 விழுக்காடு, மஞ்சாகோ (Mand jako) 14 விழுக்காடு, பெபல் (Pepel) 7 விழுக்காடு. நாட்டின் மக்கள் தொகை 810,000 (1982).

**அரசியலமைப்பு**: 1980-ஆம் ஆண்டு நவம்பர் பத்தாம் நாள் இங்கு அமைக்கப்பெற்ற அரசியலமைப்புப்படி 150 உறுப்பினர்களடங்கிய ஒரு சட்டசபையும், நிருவாகத் தலைவராக ஒரு குடியாட்சித் தலைவரும் அமர்த்தப்பட்டுள்ளனர். ஒரே கட்சி ஆட்சிதான் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இங்கு நடந்த ஒரு திடீர் இராணுவத் தாக்குதல் காரணமாகச் சட்டசபை நீக்கப்பெற்று ஒரு புரட்சிக்குழு அதனிடத்தில் அமைக்கப்பெற்றது. இக்குழு, அமைச்சரவையும் அதன் தலைவரும் செய்யும் வேலைகளை மேற்பார்வை செய்யும்.

**வரலாறு**: கினிப் பகுதியில் கி.பி. 1446-47-இல் முதன்முதல் போர்ச்சுகீசியர் குடியேறினர். அவர்கள் தங்கிய பகுதி போர்ச்சுகீசிய கினி எனப் பெயர் பெற்றது. இங்கிருந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நீக்கிரோ அடிமைகளைத் தென்னமெரிக்காவிற்கு அனுப்பி வந்தனர். தாய் நாடான போர்ச்சுகலின் கடல்கடந்த மாகாணமாக கி.பி. 1951-இல் இப்பகுதி அமையப்பெற்றது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கினியின் சுதந்திரத்திற்காக ஆப்பிரிக்கக் கட்சி ஒன்று தோற்றுவிக்கப்பெற்றது. அதைத் தலைமை தாங்கி நடத்திய அமில்கார் கெப்ரால் (Amilcar Cabral) 1973-இல் கொலையுண்டார். சுதந்திர இயக்கத்தினர், 1973-இல் ஏறத்தாழ 35,000 போர் வீரர்களைக் கொண்டிருந்தனர். அவர்கள் 1973-இல் கினி பிசௌவை ஒரு சுதந்திர நாடாக அறிவித்தனர். அதன் விளைவாக, அடுத்த ஆண்டில் திடீர் இராணுவப் புரட்சி போர்ச்சுகீசிய கினியில் ஏற்பட்டது. புதிதாக அமைந்த அரசு, கிளர்ச்சிக்காரர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வந்தது. இறுதியில் 1974-ஆம் ஆண்டு செப்டம்பர் பத்தாம் நாள் கினிபிசௌ சுதந்திரம் பெற்றது. சுதந்திர இயக்கத் தலைவர் உலூயி-டி-அல்மெய்டா கெப்ரால் அந்நாட்டின் முதல் குடியரசுத் தலைவரானார். சுதந்திரம் கிடைத்த பிறகு அடுத்த ஆண்டிலே போர்க் காலத்தில் கைப்பற்றப்பட்டிருந்த சுமார் இலட்சம் அகதிகள் கினிபிசௌவில் திரும்ப நுழைந்தனர். அதனால், அரசுக்குப் புதிய சுமை ஏற்பட்டது; நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. தெ.பா.

**துணை நூல்**:


Cabral, A., Revolution in Guinea, London, 1969.

**கினி வளைகுடா** அட்லாண்டிக்கு மாக்கடலில் மேற்கு ஆப்பிரிக்காவை அடுத்து உள்ள ஒரு பெரிய நீர்ப்பகுதி. இது (Gulf of Guinea) மேற்கு ஆப்பிரிக்காவில் தந்தக் கடற்கரைக் (Ivory coast) குடியரசின் மேற் புறத்திலிருந்து கேபன் (Gabon) கழிமுகம் வரை பரவியுள்ளது. தெற்கில் நிலநடுக்கோடு (Equator) இதன் எல்லையாக அமைந்துள்ளது. தெ.பா.

கீ கி என்ற எழுத்தின் முதற்குறிப்பு இதற்கும் பொருந்தும். இதன் வடிவம் குகைக் கல்வெட்டுகளில் வலப்புறம் இழுக்கப்பட்ட கோட்டில் மேல் நோக்கி இரண்டு கோடுகளால் சுட்டப்பட்டது. கி.மு. 3-ஆம் நூற்றாண்டு... ... ...



இது வளைகோடாக மாறும்பொழுது ஒரு சுழியுடன் முடியத் தொடங்கிற்று. ஒரு கால் நெடிலாகவும் ஒருகால் குறிலாகவும் வாசிக்கப்படுகிறது. குறிலாக வாசிக்கும் பொழுது இதனை ஓர் அழகுக் குறியாகக் கொள்ளவேண்டும். இது மொழி அமைப்பினை ஒட்டிக் குறிலாகவோ நெடிலாகவோ கொள்ளத்தக்கது. இச்சுழி காணப்படவில்லை ஆயினும் இவ்வெழுத்தை நெடிலாகவே வாசிக்கச் சந்தர்ப்பமே உதவுகிறது. இது எழுத்தின் தலையிலும் தனித்தும் எழுதப்பட்டு வந்தது. வலமிருந்து இடமாகவே இது எழுதப் பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.... ... ...



அடுத்த நிலையில் தனித்து எழுதப்பட்டபொழுது இடமிருந்து வலமாக எழுதி ஒரு சுழியுடன் முடியலாயிற்று. முதலாம் இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டில் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு) இவ்வடிவம் காணப்படுகிறது.... ...



'க' வளர்ச்சி அடைந்த பிறகும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை ஈ நெடிலுக்கு உரிய குறி இவ்வாறே எழுதப்பட்டது. அதன்பிறகு விசயநகர மன்னர்களின் கி.பி. 15-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலிருந்து தலைக்கட்டிலிருந்து எழுதப்பட்டது. ...



கீ

கே.ஜி.கி.

**கீசு மரபினர்** பிரான்சு நாட்டின் பிரபுக்கள் குலத்தினராவர். சமயப் புரட்சியின் விளைவாக, மற்ற நாடுகளைப் போலவே பிரான்சிலும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மதப்பூசல்கள் விளைந்தன. மன்னர் குடும்பத்தினரைத் தவிரப் பிரபுக்கள் குலங்களும் அச் சமயச் சண்டைகளில் முக்கிய பங்கு கொண்டன. அதன் விளைவாக, அந்நாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. இது பல ஆண்டுகள் தொடர்ந்தும் விட்டுவிட்டும் நடைபெற்றது. சீர்திருத்தப் புரட்சியாளர்களுக்கு (Protestants) எதிராகக் கத்தோலிக்கத் தலைவர்கள் கூட்டமைப்புகள் ஏற்படுத்திக் கொண்டு எதிர்க்கலாயினர். கீசு (Guise) மரபினர், பிரான்சின் முக்கியமான ஒரு பிரிவினர். இவர்கள் ஆதரவு கத்தோலிக்கர்களுக்குக் கிடைத்தது. பிரான்சிசு கோமகன், (கீசு குடும்பத்தைச் சேர்ந்தவன்) கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கத்தோலிக்கர்களின் தலைவனாகவும் ஆயினான். அவனுடைய இளவல் சார்லசு, உரீம்சு நகரின் பேராயராக இருந்ததால், அவர் மூலம் கீசுகளுக்குப் போப்பாண்டவரின் ஆதரவு கிடைத்தது. கீசு கோமகனாக இருந்த பிரான்சிசு தன் தலைமையில் கத்தோலிக்கச் சங்கத்தை வலிமைப்படுத்திக் கொண்டான். இம் மரபினருக்கும், ஊக்கோக்கள் எனப்பட்ட பிரெஞ்சுச் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்கும் அடிக்கடி போர்கள்

நிகழ்ந்தன. பல போர்களில் கீசுகள் வெற்றி பெற்றனர். சிறிது காலம் மன்னனையும் இவர்கள் கைப்பாவையாக்கித் தம் விருப்பம்போல் நடக்கச் செய்தனர். இவர்களுடைய வரம்பு மீறிய செயல்களால் வெகுண்டெழுந்த பிரெஞ்சு மன்னன் கீசுகுலத்தலைவனைக் கொலை செய்தான். எவ்வகையிலாவது அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்ற மன்னனின் முடிவுதான், கீசு குலத்தலைவனின் கொலைக்கு முக்கிய காரணமாகும். தெ.பா.

**கீசெர்லிங்கு எர்மான் அலெக்சாண்டர் கிராப்வான் (கி.பி. 1880-1946)** ஒரு செருமானியத் தத்துவஞானி. இவர் கோன்னோ என்னுமிடத்தில் பிறந்தார். இவர் செனீவா, வியன்னா முதலிய பல்கலைக்கழகங்களில் படித்தார்; வியன்னாப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். பின்னர் அவுசுட்டன் (Houston), சேம்பர்லேன் (Chamberlain) முதலானவர்களின் தூண்டுதலால் தத்துவத்தில் கவனம் செலுத்தினார். இவர் சில ஆண்டுகள் பாரிசில் (Paris) தங்கினார்; இடையிடையே இங்கிலாந்திற்குச் சென்றார். இவர் 1912-ஆம் ஆண்டு உலகப் பயணம் மேற்கொண்டார். உருசியப் புரட்சிக்குப் பிறகு இவர் தம் சொத்தை இழந்தார்; பிறகு செருமானிய நாட்டிற்குச் சென்றார்; அங்கு மெய்யறிவு (Wisdom) போதிக்கும் பள்ளியைத் தொடங்கினார்; பிறகு வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்றார்; கடைசிக் காலத்தை ஆசுடிரியன் தைரோல் (Austrian Tyrol) என்னுமிடத்தில் கழித்தார்.


கீசெர்லிங்கு (Keyserling, Herman Alexander Grafvon) ஒரு முறையான தத்துவஞானியல்லர். ஆனால், சிறந்த உற்று நோக்கலுடன் இவர் பொதுக் கருத்துகளைக் கூறுபவராகவும் மனிதத் தன்மையுடைவராகவும் காணப்பட்டார். பழமையான தத்துவத்தை வைத்துக் கொண்டு இவர் நூல்களை மதிப்பீடு செய்வது, இவர்தம் புதுமையான கருத்துகளை மறுப்பது போலாகும்.

இவர் வழிவழி வந்த தத்துவஞானிகளை மாற்றிச் செயலறிவு மிக்கவர்களையும், திறனாய்வு சார்ந்த சோதனைகளை மாற்றி அவற்றிற்குப் பதிலாக உடனடியாகப் பாராட்டப்படுவனவற்றையும், பல்கலைக் கழகத்தை மாற்றி மெய்யறிவு போதிக்கும் பள்ளியையும் அமைக்க நினைத்தார். பிறரைக் குற்றங்கூறுவதைவிட அவருடைய ஆளுமையிற் புகுந்து கற்பனையாக அவர் அனுபவத்தைப் பெறுதல் சாலச் சிறந்தது என்றார். இவர் கையேட்டில் இத்தகைய குறிப்புகளைக் காணலாம். இவர் பிறருடைய எண்ணங்களையும், பண்பாடுகளையும் ஆராய்ந்து அவர்களுடன் தொடர்புகொண்டு உண்மையான உணர்வைக் கண்டறிந்தார்.

இவர் தத்துவத்தை அணுகுமுறையானது, மனிதனைப் புரிந்து கொள்ளச் செய்யும் முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். சோபன்ஹவர் (Schopenhauer), நிச்சே (Nietzche) முதலியோர் கீழைநாட்டுத் தத்துவக் கருத்து, அறிவு ஆகியவற்றிற்கு முதன்மை தரும் இந்தக் காலத்தில், வாழ்க்கைக்கு முதன்மை கொடுக்க வேண்டுமென்றுஇவர்வற்புறுத்தினர்.அடிக்கடி மாறுகிற மனிதத் தன்மையை இவர் வலியுறுத்தும்போது, இருத்தல் கொள்கையினரின் உள்ளுறைத் (Existence) தன்மை, எப்படி உள்ளுறு தன்மையை (Essence) முந்தி நிற்கிறதென்பதனை அறியலாம்.

இவர் ஒவ்வொருவரிடமும், இருக்கின்ற ஊக்கம் சரியான முறையில் வெளிப்படவில்லை என்று கருதினார். இவர் திறனாய்வு சார்ந்த தத்துவத்தை ஒப்புக்கொள்ளவில்லை. முதலாம் உலகப் போருக்குப் பிறகு இவர் நூல்கள் புகழ்பெற்றன. அவற்றுள் 'பயண நாட் குறிப்பு' (Travel Diary) என்ற நூல் முக்கியமானது. இவர், மனிதன் ஒரு பயணி (Traveller) என்னும் கருத்துடையவராக விளங்கினார். இரா.கோ.


**கீசோ பிராங்காய்**: பிரான்சு நாட்டு அரசியல்வாதியும் வரலாற்றறிஞரும் ஆவார். நீம்(Nimes) என்ற இடத்தில் கி.பி. 1787-ஆம் ஆண்டு பிறந்த இவர் பிரான்சின் பழமைப்பற்று மிக்க வரம்புக்குட்பட்ட முடியாட்சியின் தலைவராகவும்,சூலைமுடியாட்சிக் காலத்தில் (கி.பி. 1830-கி.பி. 1848) புகழ்பெற்ற அமைச்சராகவும் விளங்கினார். கீசோவின் தந்தை கி.பி. 1774-இல் பிரான்சின் அப்போதைய அவையினால் (Convention) தூக்கிலிடப்பட்டார். கீசோ (Guizot, Francois Pierre Guillanme) தம் தாயுடன் நாடு கடத்தப்பட்டார். கீசோ ஆறாண்டுகள் கழிந்தபின் கி.பி. 1805-இல் பாரிசுக்குத் திரும்பி அங்குச்



கீசோ பிராங்காய்

சட்டக்கல்வி பயின்றார். இவர் கி.பி. 1812-இல் பாரிசுப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியரானார். கீசோ கி.பி. 1815 முதல் கி.பி. 1821 முடிய அரசாங்க அலுவலராக இருந்தார். இவர் கி.பி. 1830-இல் அமைச்சரான பின் கி.பி. 1840-இல் இங்கிலாந்தின் தூதராகச் சென்றார். அமைச்சரான பின் இவர் தம் திட்டங்களை விடாப்பிடியாக நிறைவேற்ற முயன்றதால் கி.பி. 1848-இல் புரட்சி ஒன்று தோன்றியது. எனவே, அவ்வாண்டே இவர் தம் பதவியை விட்டு நீங்கினார். இவர் பல வரலாற்று நூல்களை எழுதி உள்ளார். கிப்பன் எழுதிய நூலை மொழிபெயர்த்ததுடன் ஆங்கிலப் புரட்சியின் வரலாறு, ஐரோப்பிய நாகரிக வரலாறு, பிரெஞ்சு நாகரிக வரலாறு ஆகிய சிறந்த நூல்களையும் இவர் எழுதினார். சு.இரா.

**கீட்சு, சான் (கி.பி. 1795-1821)** புகழ்மிக்க ஆங்கிலக் கவிஞருள் ஒருவர். குறைந்த காலமே வாழ்ந்தபோதிலும், இவர் தம் சிறந்த இசைப்பாடல்களாலும், இனிய கதைப் பாடல்களாலும் அழியாப் புகழ் பெற்றார்.



கீட்சு, சான்

கீட்சு குதிரைலாயக்காரர் ஒருவரின் மூத்த மகனாக கி.பி.1795-ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது சிறுவயதிலேயே பெற்றோர் இறந்தனர். சிறிதளவு பொதுக்கல்விக்குப்பின் மருத்துவமும் பின்னர் அறுவை மருத்துவமும் பயின்ற இவர், இலக்கிய ஈடுபாட்டால் அவற்றைக் கைவிட்டார்.

இதழியலாளர் இலே அண்ட்டுடன் இவருக்கு நட்பு ஏற்பட்டது. அவரை ஆசிரியராகக் கொண்ட 'ஆராய்பவர்' (Examiner) என்னும் இதழில் இவரது முதல் கவிதை கி.பி. 1816-இல் வெளிவந்தது. அவ்வாண்டு திசம்பர் மாதத்தில் 'சாப்மனின் ஓமரை முதன்முதலாகப் படித்தபோது' (On First Looking into Chapman's Homer) என்னும் இவரது பாடல் (Sonnet) வெளிவந்தது.

இலேஅண்ட்டின் இல்லத்தில் கீட்சு கவிஞர் செல்லியைச் சந்தித்து நட்புக் கொண்டார். செல்லியின் உதவியோடு கி.பி. 1817-இல் 'கீட்சின் கவிதைகள்' என்னும் நூலை வெளியிட்டார். இது பொருள் இழப்பையே ஏற்படுத்திற்று. இவர் கி.பி. 1818-இல் 'எண்டிமியான்' (Endymion) என்னும் நீண்ட கவிதையை வெளியிட்டார். இது இவர் மீது அரசியல் காழ்ப்புக் கொண்ட இதழ்களால் கடுமையாகத் தாக்கப் பட்டது. கவிதை எழுதுவதை விடுத்து மருத்துவத் தொழிலுக்குத் திரும்புமாறும், அப்போதும் அளவாகத் தூக்க மருந்து கொடுக்குமாறும், இல்லையெனில் 'எண்டிமியான்' படித்தவர்களைப் போல நோயாளிகள் துன்புற நேருமென்றும் எழுதப்பட்ட அத்திறனாய்வுகள், ஆங்கிலத் திறனாய்வு வரலாற்றில் அழியாக் கறைகளாகவே நிற்கின்றன.

இவரது 'புனித ஆக்னசின் விழா' (The Eve of St. Agnes) என்னும் காதல் கவிதை கி.பி. 1818-இல் வெளிவந்தது. அதையடுத்து இவர் சிறப்பான பாடல்கள் பல வெளிவந்தன. 'கருணையற்ற அழகி' (La Belle Dame Sans Merci) என்னும் கதைப்பாடலும், 'வானம்பாடி' (To a Nightingale), 'கிரேக்கச் சாம்பல் தாழி' (On a Grecian Urn), 'இலையுதிர் காலம்' (To Autumn) முதலிய இவர்தம் மிகச் சிறந்த இசைப்பாக்களும் (Odes) இவ்வாண்டில் வெளிவந்தன.

இவர் தம்பி தாமசு கி.பி. 1818-இலேயே என்புருக்கி நோயால் இறந்தார். தம்பிக்குப் பணிவிடை செய்த கீட்சையும் அந்நோய் பற்றிக் கொண்டது. கீட்சு பானி பிரான் (Fanny Brawne) என்னும் பெண் மீது ஆழ்ந்த காதல் கொண்டார். ஆயினும், அவரால் அவளை மணந்து கொள்ள இயலவில்லை. அவர் நண்பரும் நல்லாசிரியருமாக விளங்கிய மற்றொரு தம்பி சார்சு அமெரிக்கா சென்றார். இச் சூழ்நிலைகள் கீட்சின் உடலையும் உள்ளத்தையும் நலிவுறச் செய்தன. மாற்றாரின் கடுந்திறனாய்வு இவரது கவிதையாற்றலைக் குலைக்க வில்லையெனினும், உடல் நலிவை விரைவுபடுத்திற்று.

'இலாமியாவும் பிற கவிதைகளும்' (Lamia and Other Poems) என்னும் பெயரொடு கி.பி. 1820-இல் வெளிவந்த இவரது நூல் எடின்பரோ ஆய்விதழில்

(Edinburgh Review) பாராட்டப்பட்டது. அவ்வாண்டின் இறுதியில் உடல்நலம் கருதி இவர் இத்தாலிக்குப் பயணமானார். நேப்பிள்சில் சிறிதுகாலம் தங்கிவிட்டு, உரோம் நகரை அடைந்தார்.

கீட்சு கிரேக்கமொழி பயிலாதவர். எனினும், கிரேக்கப் புராணங்களிடத்தும் கலைகளிடத்தும் இவருக்கு அளவற்ற ஈடுபாடு இருந்தது. அழகு வழிபாடு கீட்சின் கவிதைக் கொள்கையாக அமைகிறது. அழகைப் போற்றிய பிற கவிஞர்கள் காதல், விடுதலை, இயற்கை போன்றவற்றுக்கு முதன்மை தந்து பாடினர். ஆனால் கீட்சு அழகை அதன் தூய தனி நிலையில் போற்றினார். இவரது 'எண்டிமியா'னின் முதல் அடி 'அழகுப்பொருள் அழியா இன்பம்' (A thing of Beauty is a joy for ever) என்னும் பேருண்மையை எடுத்துரைக்கிறது. இவரது கிரேக்கச் சாம்பல் தாழிப் பாட்டில் 'அழகே உண்மை; உண்மையே அழகு' (Beauty is truth Truth Beauty) என்னும் தொடர் இடம் பெறுகிறது.

கீட்சின் பாடல்களின் ஒரு பெரும் சிறப்பு அவற்றில் இடம்பெறும் படிமங்களாகும். படிமங்கள் அவர் பாடல்களில் மிகுந்த இடம்பெறுகின்றன. அறிவு முதிரமுதிர இப்படிமங்கள் அவர் பாடல்களில் குறையலாயினவெனினும் மறையவில்லை. வானம்பாடி என்னும் பாட்டின் ஐந்தாம் பகுதியில், இருளில் மலர்ந்திருக்கும் மலர்களை மணம் கொண்டு ஊகித்துணருவதாகப் பாடுமிடம் நுகர் புலப்படிவத்தைப் படைக்கும் அவரதுநுட்பத்தைக் காட்டுகிறது. தேர்ந்த சொல்லாட்சியும் இசைப்பண்பும் படைத்த கீட்சின் பாடல்கள் அவருக்கு இலக்கிய உலகில் சிறப்பிடத்தைத் தருகின்றன.

ஆங்கிலமொழியின் மிகச் சிறந்த கவிஞருள் ஒருவராகிய கீட்சு கி.பி.1821 பிப்பிரவரியில் அயல்நாட்டு மண்ணில் நொந்த உள்ளத்தோடு இறந்தார். 'தனது பெயர் தண்ணீரில் எழுதப்பட்ட ஒருவன் இங்கே புதைக்கப்பட்டிருக்கிறான்' எனத் தம் கல்லறையில் செதுக்குமாறு இவர் விரும்பினார் என்னும் செய்தி அப்போதைய இவரது மனநிலையை வெளிப்படுத்துவதாகும்.

கீட்சின் மறைவு குறித்து, 'அடோனேய்சு' (Adonais) என்னும் இரங்கற்பாவைக் கவிஞர் செல்லி எழுதினார். இப்பாட்டு கீட்சு காலத்தால் அழியாத கவிஞன் எனக் குறிப்பிடுகிறது. கீட்சின்மறைவுக்குப் பின், அவர் தம் காதலிக்கும் தம்பிக்கும் நண்பர்களுக்கும் எழுதிய கடிதங்கள் வெளிவந்தன. அவை கீட்சின் கவியுள்ளம் பெற்ற படிநிலை வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவரது வாழ்க்கை வரலாற்று நூல்களைவிட இக்கடிதங்களே சிறந்த வரலாறாக அமைகின்றன என்பர்.

ந.மெ.

**கீட்டோ** தென் அமெரிக்க நாட்டிலுள்ள ஈக்வடார் மாநிலத்தின் தலைநகரம். இது பிச்சின்சாப் (Pichincha) பகுதியில் உள்ளது. கீட்டோ(Quito) நகரம் கல்வி பண்பாட்டு அரசியல் நடவடிக்கைகளின் நகரமாக விளங்கி வருகிறது. இந்நகரம் வளம்மிக்க தட்பவெப்ப நிலையைப் பெற்றுத் திகழ்கிறது. நிலநடுக்கோட்டிற்கு அருகில் இந்நகரம் உள்ளது. அடிக்கடி இங்கு நில நடுக்கம் ஏற்படுகிறது. சிறுதொழிற்சாலைகளும், நூற்பாலைகளும் கைவினைப் பொருள் தயாரிப்பு நிலையங்களும் இந்நகரத்தில் உள்ளன. இந்நகரத்தில் கீட்டோ இந்தியர்கள் முதன் முதலில் வசித்தனர். இன்கா மக்கள் இதனைக் கைப்பற்றித் தங்கள் ஆதிக்கத்தை நாட்டினர். இசுபானியர்கள் கி.பி. 1534-இல் கீட்டோவிற்கு வந்து அதனைக் கைப்பற்றினர். இசுபானிய பண்பாட்டுக் கூறுகளை இன்றளவும் இந்நகரத்தில் காணலாம்.

சு.இரா.

**கீதம்** என்பது பாட்டு என்று பொருள்படும். ஆனால், இது குறிப்பாக 'இசைப்பாடல்களில் காணப்படும் ஒருவகைப் பாட்டையே குறிக்கும்' என்று வேங்கடமகி தமது நூலான 'சதுர்தண்டிப் பிரகாசிகா' என்னும் நூலில் குறித்துள்ளார்.

இவ்வகைப் பாட்டில் பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற பிரிவுகள் இரா. இராகங்களில் கமகங்கள் மிகுதியாக விரவாமலும், பெரும்பாலான இடங்களில் பாடலின் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு சுரம் வருமாறும் அமைந்திருக்கும். சங்கதிகள் இருக்கமாட்டா. காலப் பிரமாணம் ஒரே சீராகப் பாடுதற்கேற்ப 10 அல்லது 12 ஆவர்த்தங்கள் வருமாறு அமைந்திருக்கும். இசைப்பாடல்களின் வடிவங்களில் கீதங்களே மிகமிக எளிமையான நடை யுடையன. இது இசை மரபு வழியில் இறைவனுடைய புகழைப் பாடுவதாகவே அமைக்கப் பெற்று வந்துள்ளது. ஆனால், இக்காலத்தில் இயற்றப்பெற்றுள்ள கீதங்கள் ஒழுக்கத்தைப் பற்றியும், அடியார் பெருமையைப் பற்றியும், இயற்கையைப் பற்றியும் பாடுகின்றன. நாகர்கோவில் அருணாசல அண்ணாவி தாம் இயற்றியுள்ள கீதங்களை அறிவுரை கூறும் பாங்கில் அமைத்துள்ளார்.

கருநாடக இசைப்பயிற்சியில் முதன்முதலாக இசைப்பாடலுடன் (சாகித்தியத்துடன்) பயில்விக்கப்படுவது இவ்வகைப் பாடல்களேயாகும். இதனால்,

இசைப்பயிற்சிக்கும், சுரப்பயிற்சிக்கும் கீதங்களே அடிப்படையானவை என்பது தெளிவாகிறது. அலங்காரம் எனப்படும் ஒருவகை இசைப்பயிற்சிக்குப்பின் கீதங்களைப் பாடுவதால் சுருதி, சுர, தாள அறிவு பயிற்சிபெறும் மாணவர்களுக்கு ஏற்படுகிறது. இதனால், உருப்படிகளைக் கமகத்துடனும், இராகபாவத்துடனும் பாடுந் திறமை ஏற்படுகிறது. மேலும் இராகங்களின் இனிய சீவசுரங்களைத் தொகுத்து மந்திர, மத்யம, தாரஇசுதாயிகளில் அமைத்திருப்பதால் எளிதில் இராக பாவங்களுடன் சுரங்களைக் கையாளும் முறையும் பயிற்சியும் ஏற்படுகின்றன.

தமிழ், தெலுங்கு, கன்னடம், சமசுகிருதம் ஆகிய மொழிகளில் பலர் பல கீதங்களை இயற்றியுள்ளனர். இவற்றுள் மிகத் தொன்மையானவையாகக் கருதப்படுவன புரந்தரதாசர் இயற்றிய கீதங்களே. அவர் இயற்றிய சூளாதிகளும் கீதங்களே என்று வேங்கடமகி தமது நூலில் குறித்துள்ளார். புரந்தரதாசரைப் பின்பற்றிப் பாடியவர்களுள் இராமாமாத்தியர், கோவிந்த தீட்சிதர், வேங்கடமகி, பைடால குருமூர்த்திசாத்திரி, இசைப்புலிவரதாச்சாரியார், பொன்னையா பிள்ளை, டி.என். சுவாமிநாத பிள்ளை, மு. அருணாசலம்பிள்ளை, பெரியசாமிதூரன், பிடில் சுப்பிரமணிய அய்யர், கோமதி சங்கர அய்யர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கீதங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படும். 1. சஞ்சாரி கீதம், 2. இலக்கண கீதம் என அவை சொல்லப்படுகின்றன. கனராக கீதம், இராகமாலிகா கீதம் என்பவைகளையும் கீதத்தின் பிரிவாகக் கொண்டு நான்கு வகைகளாகக் கொள்வாருமுளர்.

சஞ்சாரி கீதத்தைச் சாமானிய கீதம் அல்லது சாதாரண கீதம் என்பர். இந்த வகைக் கீதங்களே இசைப் பயிற்சியில் பெரிதும் வழங்கி வருபவை. பக்திச் சுவையுடையஇந்தக் கீதங்களுக்கிடையிடையே அஇய, திஇய, அம்போ, அயியம், வாசியம் போன்ற சொற்கள் (வடமொழி திரிந்ததாலேற்பட்ட பிராகிருதச் சொற்கள்) கீதங்களுக்குரிய இலக்கணங்களின்படி அமைந்திருக்கும்.

இலக்கணகீதம் என்பது சனக சனிய இராகங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுவது. கீதம் அமைந்துள்ள இராகத்தின் ஆரோகணம், அவரோகணம். மற்றும் மேளகர்த்தா, அதன் சுரங்களின் அமைப்பு முதலிய செய்திகள் சாகித்தியத்திலேயே அமைக்கப்பெற்றிருக்கும். எடுத்துக்காட்டாக, ‘வாரணமுகனே வரதனே’ என்னும் பிலகரி இராகத்திலமைந்த இலக்கண கீதத்தில் பிலகரி இராகத்துக்குரிய இலக்கணம்,பாடலுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.இதனால் இச்சாகித்தியம் உள்ள நாள் வரை இதன் இலக்கணமும் அழியாமல் பாதுகாக்கப்படும். பயில்வோருடைய மனத்தில் இராக இலக்கணம் பாடலாகி மனனமாகி விடுவதால் மேளகர்த்தா, ஆரோகண, அவரோகண'சுரங்கள், வர்சசுரங்கள், வக்கிர சுரங்கள், கம்பித சுரங்கள் ஆகியவை என்றுமே ஞாபகத்திலிருக்கும். இத்தகைய பயிற்சிக்காக இயற்றப்பட்டவைகளே இலக்கண கீதங்கள். இதனால் மரபு வழி இராக சுரங்கள் பேணப்படுவதுடன், இசை வரலாற்றுக்கும் முக்கியமாக இருந்து உதவி செய்யும். இத்தகைய இலக்கண கீதங்களை இயற்றிய இசைப் புலவர்களுள் சிலர் – இராமாமாத்தியர், கோவிந்த தீட்சிதர், வேங்கடமகி, பைடால குருமூர்த்தி சாத்திரி ஆவர். நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, சிரீராகம் போன்ற கன ராகங்களில் உள்ள கீதங்கள் கனராக கீதம் என்று சொல்லப்படுகின்றன.

இராகமாலிகா கீதத்தில் ஒவ்வொரு கண்டமும் ஒவ்வொரு இராகத்தில் கீதங்களுக்குரிய இலக்கணப்படி அமைக்கப்பட்டிருக்கும். இதுஇராகத்தாலமைந்த மாலையைப் போல் அமைக்கப்பட்டிருப்பதால் இப்பெயர் பெறுகிறது. இது இராகப் பயிற்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். என்.சீ.

**கீதாஞ்சலி**, இரவீந்திரநாத தாகூரால் எழுதப்பட்ட பாடல்களின் தொகுதியாகும். இந்நூலே தாகூருக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. இந்நூல் உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சில மொழிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகள் வந்துள்ளன.

கீதாஞ்சலி 1909–10–ஆம் ஆண்டுகளில் தாகூரால் வங்க மொழியில் எழுதப்பட்டது. பின் அவர் அதைத் தாமே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவர் இங்கிலாந்து சென்றபோது, அவரது நண்பர் உரோதென்சுடீனும், கவிஞர் ஏட்சும் அதனைப் பயின்று பெரிதும் பாராட்டினர். இந்நூல் 1912–இல் இங்கிலாந்திலுள்ள இந்தியச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. வெளிவந்த உடனேயே உலகநாடுகளின் ஒருமித்த பாராட்டைப் பெற்றது. கீதாஞ்சலி 1913 –இல் மாக்மில்லன் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டது. அதே ஆண்டின் இறுதியில் இலக்கியத்துக்கான நோபல் பரிசு ஆங்கிலக் கீதாஞ்சலிக்காகத் தாகூருக்கு வழங்கப்பட்டது.

வங்க மொழிக் கீதாஞ்சலி இசைப் பாடல்களால் ஆகியது. ஆங்கில மொழி பெயர்ப்பு வசன கவிதை நடையிலானது. இவ்வசன கவிதை மந்திரம் போன்ற

ஓசைநயமும் இசைப்பண்பும் வாய்ந்தது; இனிய எளிய சொற்களால் அமைந்தது. எளிமையும், உணர்ச்சியும், உரையாடற் பாங்கும் அமைந்த கீதாஞ்சலிப் பாடல்கள் கற்பார்க்குப் புத்துணர்வு ஊட்டுவன. வங்கக் கீதாஞ்சலியின் பாடல்கள் பலவும், தாகூரின் பிற நூற் பாடல்கள் சிலவுமாக 103 பாடல்கள் ஆங்கில நூலில் இடம் பெற்றன.

கீதாஞ்சலிப் பாடல்கள் இறையன்பைப் பொருளாகக் கொண்டவை. உபநிடதங்கள், வங்காளத்து வைணவ பக்திப் பாடல்கள், காளிதாசரின் நூல்கள், பௌத்தத்தின் மனிதநேயம், சூபி இயக்கத்தின் பக்தி நெறி ஆகியவற்றின் தாக்கத்தை இவற்றில் காணலாம். எனினும், இவை புதுமையும் தனித் தன்மையும் கொண்டு விளங்குகின்றன. இறையன்போடு, காதலும் மனிதநேயமும் நாட்டுப் பற்றும் இயற்கை ஈடுபாடும் கீதாஞ்சலியில் விரவிக் கிடக்கின்றன. தாகூரின் தொடக்ககாலப் பாடல்களில் பெரும்பங்கு பெற்ற மானிடக் காதல் கீதாஞ்சலியின் பல பாடல்களில் சிறைக் காதலாய் வெளிப்படுகிறது. இறைவனாகிய காதலன் மலரின் சில இதழ்களை விட்டுச் சென்றிருக்க மாட்டானா எனத் தேடும் காதலியாகவும், (பாடல் 52) இறைவனது வருகைக்காக ஏங்கிக் காத்திருக்கும் பூக்காரியாகவும் (பாடல் 41) கவிஞர் தம்மை உருவகிக்கும் பாடல்களில் இப்பாங்கைக் காணலாம்.

தாகூரின் ஆழ்ந்த மனிதநேயம் கீதாஞ்சலியில் வெளிப்படுகிறது. ஏழை, எளியோர் மத்தியில் இறைவன் இருக்கிறார் என்றும், அவர்களை விட்டு விலகுவோர் இறைவனை அணுக முடியாது என்றும் பத்தாம் பாடல் கூறுகிறது. மந்திரங்களை முணுமுணுப்பதாலோ செபமாலைகளை உருட்டுவதாலோ இறைவனைக் காண முடியாது என்றும், இறைவன் கோயிலின் இருண்ட மூலையில் இல்லை என்றும், மழையிலும் வெயிலிலும் வயலை உழுவோருடனும், கல்லுடைத்துப் பாதை அமைப்போருடனும் அவர் வாழ்கிறார் என்றும் பதினோராம் பாடல் கூறுகிறது.

'எங்கே மனம் அச்சமற்றுத் தலைநிமிர்ந்திருக்கிறதோ, எங்கே அறிவு விடுதலைபெற்றிருக்கிறதோ' எனத் தொடங்கும் 35-ஆம் பாடலில், இறைவனை வழிபடும் போதும் தாகூரின் நாட்டுப்பற்று வெளிப்படுகிறது. தாகூர் காணவிரும்பிய 'சுதந்திரச் சொர்க்கம்' இப்பாடலில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. கீதாஞ்சலியின் சமயம் வாழ்க்கை உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. துறவினால் இறைவனை அடைய முடியாது என்றும், இறைவன் நிரப்பித் தந்துள்ள உலக இன்பத் தேனை ஆர நுகர்தலே இறைவனுக்குச் செலுத்தும் நன்றி என்றும் 73-ஆம் பாடல் பேசுகிறது.

கீதாஞ்சலியின் பிற்பகுதியில் பத்துககு மேற்பட்ட பாடல்கள் சாவைப் பற்றியன. சாவு அஞ்சத்தக்கதன்று. அது பேருண்மையை உணர உதவுவது. ஆதலின் மணமகனைத் தேடிச் செல்லும் மணமகளைப் போலக் கவிஞர் மணமாலையுடன் சாவைத் தேடிச் செல்கிறார் (பாடல் 91). வாழ்வும் சாவும் தாயின் இருமார்பகங்கள் போன்றவை(பாடல் 95). ஒரு மார்பிலிருந்து எடுத்ததும் அழும் குழந்தை மறுமார்பில் அமைந்து ஆறுதல் பெறுதல் போல், மனிதனும் சாவில் இறையருளின் மற்றொரு வெளிப்பாட்டையே காண்பான். . கீதாஞ்சலியின் இறுதிப்பாடல் இறைவனிடம் முற்றாகச் சரண் அடைதலைப் பேசுகிறது.

மலர்கள், . தென்றல், வசந்தம், இலையுதிர் காலம், தேனீக்கள், கண்ணீர், சிரிப்பு முதலிய சில மீண்டும் மீண்டும் இடம் பெறுதல் ஒரு குறையெனத் திறனாய்வாளர் சிலர் கருதினாலும், அவற்றால் உயிர்த்துடிப்பு மிக்க இந்நூலின் சிறப்புக் குறையாமல் ஒளி வீசித் திகழ்கின்றது. 'பல தலைமுறைகளுக்குப் பின்னும் படகோட்டிகளும் பயணிகளும் இப்பாடல்களை இசைப்பர். காத்திருக்கும் காதலர்கள் இக்கடவுட் காதல் இசையைப் பாடித் தம் துயரை மறந்து புத்துணர்ச்சி பெறுவர்' என்று ஆங்கிலக் கவிஞர் ஏட்சு கீதாஞ்சலியின் முன்னுரையில் கூறியிருப்பது இந்நூலின் சிறப்புக்குத் தக்க சான்றாகும். இவ்வரிய நூலினை, காரைக்குடி, வி. ஆர். எம். செட்டியார் தமிழில் வசன கவிதை நடையில் மொழி பெயர்த்துள்ளார். ந.மெ.

**கீ தீவு** ஈசியன் கடலில் கிரீசுநாட்டின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள கீ (KEA) தீவின் பரப்பு 160 சதுர கி.மீ. மக்கட்தொகை 1666 (1971). பழங்கள், பார்லி, பட்டு முதலியன இங்கு மிகுதியாக உற்பத்தியாகின்றன. தெ.பா.

**கீதை** என்னும் சொல்லுக்குப் பாடப்பட்டது என்பது பொருள். இது ஆன்ம தத்துவத்தைப் போதிக்கும் சிறந்த நூல். இந்திய இதிகாசங்களிலொன்றான மகாபாரத பீஷ்மபருவத்தில், கண்ணன் அர்ச்சுனனுக்குப் போர்க்களத்தில் அறிவுரை கூறும் நிலையில் அமைந்த நூல் இதுவாகும். இந்நூல் 18 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.இந்தநூலின் பொருள் இறைவனால் (கண்ணன்) உபதேசிக்கப்பட்டதாக இருப்பதால் இந்நூல் 'பகவத்கீதை' எனப் பெயர் பெற்று விளங்குகிறது.

விலங்குத் தன்மைக்கும், தெய்வத் தன்மைக்கும் இடையிலான மனிதத் தன்மையே அர்ச்சுனன் நிலை. நலமும் கேடும் மனிதன்பால் கலந்துள்ளன.கேட்டைக் களைந்து நலத்தில் நிலைபெற்றிருப்பதே மனித வாழ்க்கையின் குறிக்கோள்.இதனை மக்கள் உணர்ந்து மேற்கொள்வதற்குக் கீதா சாத்திரம் உற்ற துணையாக அமைந்துள்ளது.

பண்டைக் காலந்தொட்டே கீதையை உபநிடதங்களுக்கெல்லாம் மேலான உபநிடதமாகக் கொண்டனர். 'உபநிடதங்கள் அனைத்தையும் பசுவாக்கி, அதனிடமிருந்து கீதையென்னும் பாலைக் கறந்து, கண்ணன் என்னும் இடையன், அர்ச்சுனனுக்குக் கொடுக்கு முகமாக இவ்வுலகிற்குக் கொடுத்துள்ளான்' என்று கூறும் ஒரு சுலோகமுண்டு. வாழ்வின் மலர்ச்சிக்குத் தேவையான எல்லாக் கருத்துகளும் கீதையில் இடம்பெற்றுள்ளன. இதனால், கீதையைத் தரும ஞானக் கருவூலம் என்று ஆன்றோர் கூறுவர். இது அளவில் சிறிதாயினும் கூறப்படும் கருத்தாழம் மிக்க செய்திகளால் மிகவும் சிறப்புடையதாகும்.

**கீதை வேதாந்தத்தின் விளக்க நூல்**:கீதையிலுள்ள 18 அத்தியாயங்களும் 18 யோகங்களாகக் கூறப்பட்டுள்ளன.இப் பதினெட்டு யோகங்களையும் நான்கு யோகத்திற்குள் அடக்கிவிடலாம். இந்த நான்கும் கருமயோகம், இராசயோகம், பக்தியோகம், ஞான போகம் என்று பெயர் பெறுகின்றன. இந்த நான்கினுள் தொடக்க நிலையிலிருப்பது கருமயோகமென்றும், பிறகு அது இராசயோகமாக வளர்ந்து பக்தியோகமாக ஓங்கி இறுதியில் ஞானயோகமாக முற்றுப்பெறுகிறது என்றும்ஆன்றோர் கூறுவர். மேலும், வேதங்களின் சாரம் உபநிடதங்கள்.உபநிடதங்களின் சாரம் பிரம்ம சூத்திரங்கள். இந்தப் பிரம்ம சூத்திரங்களிலேயே மிகவும் போற்றப்படுவன நான்கு மகாவாக்கியங்கள்.அவற்றுள்ளும் மிகச்சிறப்புடையது(தத்துவமசி) 'தத் த்வம் அசி' என்னும் மூன்று சொற்கள் கொண்ட மகா வாக்கியம். த்வம் – நீ;. தத் – அதுவாக; அசி– இருக்கிறாய் என்பது அதன் பொருள். 'சீவான்மாவாகிய நீ பரமான்மாவாகிய அதற்கு அன்னியமானவன் அல்லன்'என்று இதனை விளக்கிடுவர். இக்கோட்பாட்டை எல்லாச் சாத்திரங்களும் (தரிசனங்களும்) ஏதேனும் ஒரு விதத்தில் இயம்புகின்றன. இருந்தாலும் 'தத் த்வம் அசி' என்ற மகா வாக்கியத்திற்கு உற்ற உயர்ந்த விளக்கமான நூலாகக் கீதையைக் கூறலாம். இதிலுள்ள பதினெட்டு அத்தியாயங்களும் மூன்று ஆறு அத்தியாயங்களாகப் (3 x 6) பிரிக்கப்படுகின்றன. முதல் ஆறு அத்தியாயங்கள் முதல் சட்கம் எனப்படும். இதில் துவம் (நீ) என்னும் பதத்துக்கு இலக்காக இருக்கிற சீவ தத்துவம் விரிவாக விளக்கப்படுகிறது.சீவனிடத்திலுள்ள குறைபாடு,சீவன் அடைய வேண்டிய நிறை நிலை, இந்த நிறை நிலையையடையச் சீவனது முயற்சி ஆகியன முதல் ஆறு அத்தியாயங்களில் விளக்கப்படுகின்றன. ஏழாம் அத்தியாயம் முதல் பன்னிரண்டாம் அத்தியாயம் வரையுள்ளவை இரண்டாம் சட்கம். இப் பகுதியில் மகாவாக்கியத்தின் தத்(அது)என்னும் பதத்திற்கு இலக்காக வருகின்ற பரமான்மாவைப்பற்றிய விளக்கங்கள் கூறப்படுகின்றன. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமறப் பரமன் எங்ஙனம் உறைகிறார் என்பது விளக்கமாக இந்தப் பகுதியில் உணர்த்தப்படுகிறது.பதின்மூன்றாம் அத்தியாயம் முதல் பதினெட்டாம் அத்தியாயம் வரையுள்ள பகுதி மூன்றாம் சட்கம் எனப்படும். இதில் மகாவாக்கியத்திலுள்ள அசி (இருக்கிறாய்) என்னும் சொல்லுக்கு இலக்காகியுள்ள பரமாத்ம – சீவாத்ம ஐக்கியம் நன்றாகத் தெளிவுபடுத்துகிறது. 'தத் துவம் அசி' என்ற மூன்று பகுதிகளுக்கும் ஒத்த இடம் கொடுத்திருப்பது பகவத் கீதையே. ஆக, மகாவாக்கியத்துக்கு முறையான விளக்க நூலாகப் பகவத்கீதை இருப்பதால் வேதாந்த சாத்திரத்துக்கு அடிப்படையான நூல்களுள் (பிரத்தானத் திரையங்கள் = உபநிடதங்கள் + பிரமசூத்திரம் + கீதை) பகவத் கீதையும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்தப் பகவத் கீதை உலகம் முழுதிலுமுள்ள சிறந்த மொழிகளில் மொழியாக்கம் செய்யப் பெற்றுள்ளது. இது உலக அரங்கில் மக்களால் விரும்பிப் பயிலப்படுகிறது. கீதையின் தன்மை, பயன், சிறப்பு ஆகியவற்றை மகான் மதுசூதன சரசுவதி சுவாமிகள் 'கீதா கூடார்த்த தீபிகா' என்னும் நூலில் விளக்கியுள்ளார். கருடபுராணத்தின் 233–ஆம் அத்தியாயம் தொடங்கி 236–ஆம் அத்தியாயம் வரை கீதையின் சாரம் விளக்கப்பட்டுள்ளது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இப்புனித நூலை இந்து சமயத்தினர் தினமும் பாராயணம் செய்வர்.

இதனால், இந்நூல் தினசரிப் பாராயணத்துக் கேற்பச்சுருக்கமாகப் பதினெட்டுச் சுலோகங்களாகவும் (அட்டாதச சுலோகீ) ஏழு (சப்த) சுலோகங்களாகவும் சுருக்கப்பட்டுள்ளது. மேலும், இது மகாத்மியங்களாகவும், மந்திரங்களாகவும், பிரயோகங்களுக்குரிய மாலா மந்திரங்களாகவும், தோத்திரமாகவும், கவசமாகவும் மக்களிடையே பரவிப் புழக்கத்திலிருந்து வருகிறது.

**கீதையின் வழிநூல்கள்**: இந்திய இலக்கிய வரலாற்றில் முக்கிய மரபாக ஒன்றைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். ஒரு இலக்கியம் மக்களிடையே புக

முடைந்தால் அதனைப் பின்பற்றிப் பல நூல்கள் தோன்றும். எடுத்துக்காட்டாகத் தமிழ் மொழிச் சிற்றிலக்கியங்களுள் உலா, தூது, குறவஞ்சி, கோவை போன்றவற்றைக் கூறலாம். இவைபோலவே பகவத் கீதை மக்களிடையே செல்வாக்கைப் பெற்றதால் இதனைப் பின்பற்றிப் பல வழிநூல்கள் தோன்றின. பகவத் கீதையில் காண்பது போல வேதாந்த விளக்கமாகவும், உரையாடல்களாகவும், பகவத் கீதைக்குரிய அனுட்டுப்பு முதலிய சுலோகங்களாலும் எழுதப்பெற்றமையால் அவற்றையும் 'கீதை' என்றே குறிக்கலாயினர். அட்டாவக்கிரகீதை, அவதூத கீதை, இராம கீதை, சுருதி கீதை, சிவ கீதை, குரு கீதை போன்று இருபத்தேழு கீதைகளுள்ளன. மகாபாரதத்தில் உத்தர கீதையும், அசுவமேத பருவத்தில் கண்ணன் பார்த்தனுக்கு மீண்டும் கூறும் 'அனுகீதை'யும் காணப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து பல புராணங்களில் கண்ணன் உபதேசித்ததைப்போல் வேறு பல தெய்வங்கள் உபதேசித்தவைகளாகப் பல கீதைகளும் காணப்படுகின்றன. கூர்ம புராணத்தில் ஈசுவரன் உபதேசித்த ஈசுவர கீதை; தேவி பாகவதத்தில் தேவியருளிய தேவிகீதை; வடமொழிக் கந்த புராணத்திலுள்ள குருகீதை, இரிபு கீதை; சூதசம்கிதையில் காணும் சூதகீதை; பத்ம புராணத்திலுள்ள கபில கீதை, கர்ம கீதை; பாகவதத்திலுள்ள சுருதி கீதை; வராக புராணத்திலுள்ள அகத்திய கீதை ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்

பிற்காலத்தில் பிற சமயங்களிலும் 'பகவத் கீதை'யின் தாக்கத்தால் பல கீதைகள் தோன்றின. சீக்கிய சமயத்தில் நானக்குக் கீதை, கிறித்தவ சமயத்தில் கிறித்து கீதை, தாயூத கீதை போன்ற நூல்களுண்டு. அரசியலிலும் 'கீதை' நூல் தோன்றலாயிற்று. சூரத்துக் காங்கிரசை ஏளனம் செய்து 'காங்கிரசு கீதா' என்றொரு நூல் வெளிவந்தது.* காந்தியடிகளின் வாழ்க்கையையும் அவரது உபதேசங்களையும் கொண்டு 'சத்தியாக்கிரக கீதா', 'காந்தி கீதா' என்ற பெயர்களில் நூல்கள் வெளி வந்துள்ளன.

**கீதையின் விரிவுரைகள்**: பண்டைய சாத்திரீயச் சொற்களைப் புதிய பொருளில் கையாளுதல் கீதையின் தன்மை. இதனால், கீதைக்கும் விரிந்த பொருள் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும், அச்சொற்கள் புதுமைக்குப் புதுமையாகவும் சிந்தனையாளர்கள் தங்களின் தேவையையும் அனுபவத்தையும் ஒட்டிப் பல பொருள் கொள்ளுமாறும் அமைகின்றன. இதனால், பகவத் கீதைக்கு முநூறுக்கும் மேற்பட்ட விரிவுரைகள் (பாடியங்கள்) தோன்றின. இந்த உரை நூல்கள் அனைத்தையும் குருட்சேத்திர பூமியில் (கண்ணன் பார்த்தனுக்கு உபதேசித்த இடமாக ஆய்வாளர்கள் கூறுமிடத்தில்) கட்டியுள்ள 'கீதா மந்திரத்தில்' தொகுத்து வைத்துள்ளனர். இந்த உரைகளுள் சிறந்த உரைகளாகப் போற்றப்படும் உரைகளின் ஆசிரியர்களுள் சங்கரர், இராமானுசர், மத்துவர், ஞானேசுவரர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். என்.சீ.

**கீர்க்ககார்டு (கி.பி. 1813-1855)**: பழங்காலத் தத்துவ அறிஞர்கள், முனிவர்கள் ஆகியோர் எண்ணங்களில் இருப்பு உள்ளது என்ற கருத்து இருந்து வந்தது. இக்காலத் தத்துவ அறிஞர்களும் 'இருப்பு' என்ற கருத்துப் பற்றிய சிக்கலில் ஈடுபட்டனர். எனவே, சுருங்கக் கூறினால் எல்லாத் தத்துவங்களும் 'இருப்புக் கொள்கை'யைத் (Existentialism) தொடக்கத்தில் அறிந்திருந்தன எனலாம். அவ்வாறாயின் எவ்வாறு இக்கால இருப்புக் கொள்கையினர் முன்னுள்ளவர்களினின்றும் மாறுபடுகின்றனர் என்று ஆராய வேண்டும். கீர்க்ககார்டு (Kierkegard) போன்ற இருப்புக் கொள்கையினர், 'உள்ளது' என்பதைக் காட்டிலும், 'உளது ஆதல்' என்பதில் மிகுந்த கவனம் செலுத்தினர். பொதுத் தன்மைகளைக் காட்டிலும் தனிப்பட்ட தன்மைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அந்த வகையில் மற்றத் தத்துவங்களினின்றும் வேறுபட்டு இருப்புக் கொள்கையானது விளங்குகிறது. கிறித்துவத்தின் விதிகள், கொள்கைகள் ஆகியவற்றை ஒரு கிறித்துவ இருப்புக் கொள்கையாளன் முக்கியமாகக் கருதுவதில்லை. தான் கிறித்துவனாவதற்கு எப்படி இருக்கவேண்டும் என்பதே அவனது கருத்தாகும். வழக்கமாக வலியுறுத்தப்படும் அறிவு, விளக்கம் ஆகியவற்றிற்கு மாற்றாகச் 'செயல்' 'தேர்வு' ஆகியவற்றுக்கு இருத்தல் கொள்கையினர் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அதன் பின்னணியில் கீர்க்ககார்டின் சமயம் பற்றிய கருத்தும், அறஇயலுக்கு அவர் கூறும் வரையறையும், உண்மை, தேர்வு பற்றிய கொள்கைகளும் இக்கட்டுரையில் விரித்துரைக்கப்படுகின்றன.

தென்மார்க்கு நாட்டுத் தத்துவமேதை கீர்க்ககார்டு, கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாம் உலகப்போருக்கு முன், செருமானியத் தத்துவத்தில் ஆழ்ந்த மாறுதல் ஏற்படுத்துவதில் ஈடுபட்டார். இவர் ஏற்படுத்திய மாறுதல், இரண்டு உலகப் போர்களின் இடைப்பட்ட ஆண்டுகளில் மிக விரைவாக வளர்ந்து, செருமன் நாட்டுக்கப்பால் பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளிலும் 'இருத்தல் கொள்கை' என்ற தத்துவம் தோன்றுவதற்கு உதவியாக இருந்தது.

கீர்க்ககார்டு நாட்டின் அறிஞர்கள் வாழ்க்கை ஏகலியர்களின் எண்ணங்களால் ஆதிக்கம் செய்யப்

பட்டு வந்தது. ஏகல் (Hegel), 'உண்மை புறநிலை யானது' என்ற கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத் தார். அதற்கு மாறாகக் கீர்க்ககார்டு 'உண்மை அக நிலையானது' என்ற கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அதனை இவர் குறிப்பிடும்பொழுது தனி யார் கொள்கை என்றோ அகநிலைக் கொள்கை என்றோ' குறிப்பிடவில்லை. அதனைப் 'பயன்வழிக் கொள்கையின்' ஒருவகை எனவும் இவர் கருதவில்லை. கீர்க்ககார்டு ஓர் இறைஇயல் வல்லுநர். எனவே, இறையியலின் அடிப்படையில் இவரது கூற்றை விளங் கிக் கொள்ளலாம். கிறித்தவ இறையியலில் 'உண் மையே கடவுள்' என்பது பொதுவான கருத்தாகும். கடவுள் ஒரு புறநிலைப்பொருள் என்ற கருத்தைக் கீர்க்ககார்டு ஒத்துக்கொள்ளவில்லை. எனவே, 'உண் மையே கடவுள்' என்ற முடிவுக்கு வரும்போது, அக நிலையே உண்மை என்று ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஏகலின் கொள்கை, ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு உண்மையான சுதந்திரத்தைக் கொடுக்கவில்லை. இவ்வுலகில் மனிதனுக்குச் சிறப்பில்லாத ஒரு நிலையை அளிக்கின்றது என்பதனால் ஏகலின் கொள்கையை இவர் வெறுக்கின்றார். கீர்க்ககார்டின் கொள்கை தனிமனிதன் என்பவன் தனித்தன்மை வாய்ந்தவன் என்பதாகும்.

தேர்வு, முடிவு என்ற எண்ணங்கள் கீர்க்ககார்டின் சிந்தனையில் அடிப்படை முக்கியத்துவம் பெற்றன. 'உயிர் என்றும் இருப்பது' என்னும் கொள்கை, கருத்து முதற் கொள்கைக்கும், இயற்கை நிலைக் கொள்கைக்கும் மாறுபடத் தோன்றியதாம்.

**உண்மை அகநிலையானது**: கீர்க்ககார்டின் கருத்து உண்மை, உள்ளுணர்வால் அறியப்படுவது என்ப தாகும். அகநிலையானது, மனத்தினுள் உள்ளது. உண்மை என்பது உள்ளுணர்வால் அறியப்படுவது. உண்மை என்பது புறநிலை அன்று. அகநிலை சார்ந்த நன்னெறி உணர்வே உண்மையாகும். கோபர்னிகசு (Copernicus)என்பவர் எவ்வாறு தாலமியின் (Ptolemy) கொள்கையை மாற்றிப்பூமி சூரியனைச் சுற்றுகிறது என நிலைநிறுத்தினாரோ, அதுபோலவே கீர்க்க கார்டு உண்மை புறநிலையானது என்பதை மாற்றி, உண்மை அகநிலையானது என நிலை நிறுத்தினார். உண்மையின் புறநிலைக் கொள்கையில், உண்மை யானது தனி மனிதனை நிறைவுபடுத்த முடியாமல் போகலாம். உண்மை தனி மனிதனின் புறத்தே உள் ளது என ஒத்துக்கொண்டால் அம்மனிதன் வெளி உலக நிலைமைகளுக்கு அடிமையாக வேண்டும்.

உபநிடதமும் கிரேக்கத் தத்துவமும், உள்ளுணர்வு சார்ந்த அறிவுக்கும் அகநிலை அறிவுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. மேலும் சாக்ரட்டீசு, தத்துவம் தன்னை அறிதல் என்பதில் தொடங்கு கிறது என்றார். இக்கூற்று கீர்க்ககார்டின் தத்துவ நோக்கிற்கு ஒத்துள்ளது. மனிதன் என்ன செய்ய வேண்டும்? மனிதனுடைய கடமைகள் என்ன? என் பன போன்ற கேள்விகளுக்குப் பதில் அளிக்கக்கூடியது, தனிப்பட்ட ஆன்மாவும் தனி மனிதனின் தீர்மானமு மாகும். ஒரு மனிதன் தன் உள்ளுணர்வால், துணி வான முடிவுகளையும், கடினமான முடிவுகளையும் தீர்மானிக்கிறான். கீர்க்ககார்டின் 'உயிர் என்றும் இருப்பது' என்ற கொள்கையானது மனித ஆளுமை யின் உயர்ந்த தன்மையை விளக்குகிறது. கீர்க்ககார் டைப் பொறுத்தவரை மனிதனே உலகின் மையத்தில் உயர்ந்து விளங்குகிறான். அவனுக்கு இணை வேறு எவரும் ஆகார். பிரமன், கடவுள், உலகம் ஆகிய அனைத்தும் மனிதனுக்கு அடுத்து வைத்து அறியப் படுகின்றன. மனிதனின் அடிப்படைப் பண்பு அவனது சுதந்திரத்தன்மையாகும். சமுதாயமும் சமுதாய நிறு வனங்களும் மனிதனுக்காக அமைக்கப்பட்டனவே அல்லாமல், சமுதாயத்திற்காகவும் சமுதாய நிறுவ னங்களுக்காகவும் மனிதன் அமைக்கப்படவில்லை. எந்த ஒரு சமுதாயச் சட்டம் அல்லது கொள்கை மனித சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறதோ அது பயனற்றதாகும். தனி மனிதனின் வளர்ச்சிக்கு எது தடையாக உள்ளதோ, அதனை விலக்கி விடவேண் டும். இந்த நோக்கத்தை மனத்திற் கொண்டு இருத் தல் கொள்கையினர் மனிதனின் சுதந்திர நிலைக்கு முன்னுரிமை அளித்தனர்.

கீர்க்ககார்டு தத்துவம் இறைமை நூல் சார்ந்தது. தொடக்க காலத்தில் இவர் இறைமை இயலைப் படித்தவர். இவர் தனிமனிதனின் பயன், சுதந்திரம் ஆகியவைகளால் கவரப்பட்டார். இவரது பிற்காலத் தத்துவம் விரிவுபடுத்தப்பட்ட மனிதனின் கிறித்தவக் கருத்துகளாகும். இந்தத் தனிப்பண்பு வாய்ந்த மனிதன் தன்னைப் பற்றியும், தன் சுதந்திரத் தைப் பற்றியும் தெரிந்துள்ளவனாவான். இவர் தம்மை ஒரு கவிஞராக எண்ணினார். வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவர், இவரை 'மதக் கவிஞர்' எனக்குறிப்பிடுகிறார். இவரது அறவழித் தத்துவம் தனித்தன்மை வாய்ந்தது. அதாவது ஒவ்வொரு தனிமனிதனும் அறவழித் தேர்ந்தெடுப்பு களைச் சந்திக்க வேண்டியுள்ளது. மனிதன் மட்டுமே இந்தத் தேர்ந்தெடுப்புகளைச் செய்ய வேண்டும். இதற்காக முழுப் பொறுப்பையும் அவனே மேற் கொள்கிறான். தனிமனிதன் மேற்கொள்ளும் ஒவ் வொரு முடிவும் மாற்ற முடியாத ஒன்று. அதன் பின்வரும் முடிவுகளுக்கு இதுவே இன்றியமையாத

தாகிறது. முறையான, தனித்துறைக்குரிய விதத்தில் காணும் போது இவர் ஒரு தத்துவமேதை அல்லர். இவர் தத்துவத்தை விதிமுறைப்படுத்த முற்பட்டோமானால், இவரது நிலையானது தவிர்க்கமுடியாத தவறாக அமைந்துவிடும். மேலும், இவரது சிந்தனைக்குக் கேடு விளைவிப்பதாகவும் அமைந்துவிடும். இவ்வாறு இருப்பினும் இவரது 'இருத்தல் கொள்கை' என்ற தத்துவத்தின் முதன்மையான தத்துவக் கருத்துகள் அனைத்தையும் ஒன்று சேர்க்கலாம். 'இருத்தல் கொள்கையின்' மூலத் தொடக்கமே கீர்க்ககார்டு ஆவார்.

**உண்மை, கடவுள், தேர்வு**: கீர்க்ககார்டின் தத்துவத்தில் உள்ள மூன்று முதன்மையான கருத்துகள் உண்மை, கடவுள், தேர்வு என்பனவாகும். கீர்க்ககார்டின் தத்துவ இயல் சார்ந்த உண்மையின் தன்மை சாக்ரட்டீசின் முறை சார்ந்த கருத்தைக் கொண்டுள்ளது எனலாம். வெளிப்புறத்திலிருந்து தனிமனிதனிடம் புகுத்தப்படுவது உண்மை அன்று. ஆனால், உண்மை அம்மனிதனிடத்தில் எப்பொழுதும் இருப்பதாகும். கீர்க்ககார்டு, புலனாகாத கற்பனைத் திறனையும், இருத்தல் கொள்கையின் சிந்தனையையும் மிகத் துல்லியமாக வேறுபடுத்திக் காட்டுகின்றார். அருவமான சிந்தனையானது காரண காரியத் தொடர்புடைய உத்திகளின் மூலம் ஆய்வு செய்து அப்போதைய முடிவான அறிவை மட்டும் பெறுகிறது. ஆனால், இருத்தல் கொள்கையானது உண்மையான திண்மையான தனிமனிதனைப் பற்றிய உண்மையை அடைகிறது. இருத்தல் கொள்கையின் உண்மை முழு ஆர்வத்தின் விளைவானதாகும். தனிமனிதனால் அடையக்கூடிய ஓர் உயர்ந்த உண்மையாகும்.

கீர்க்ககார்டு தத்துவத்தின் முக்கியமான கருத்து தேர்வு. இவர் இரண்டுவித வாழ்க்கைக்கு இடையே எடுக்கும் தீர்மானமே தேர்வு எனக் கூறுகிறார். அவை. 1) கலை உணர்ச்சியுடைய வாழ்க்கை. அதாவது கலை, சங்கீதம் நாடகம் ஆகியவற்றில் ஈடுபாடு கொள்ளுதல். 2) அற இயல் வாழ்க்கை அதாவது வாணிகம் அல்லது தொழில், திருமணம் ஆகியவற்றில் மகிழவு அடைதல். தேர்வின் நிகழ்ச்சியை விளக்கப்போதிய உளநூல் சார்ந்த விளக்கம் தேவையில்லை. இதனைப் புரிந்து கொள்வதற்கு அனுபவ அறிவு தேவை. தேர்வின் பண்பினைச் சில அடைமொழிகளைக் கொடுத்துக் குறிப்பிடலாம். அது தனிப்பட்டது, அகநிலையுடையது, நிலையற்றது, வரம்பற்றது, மாற்ற முடியாதது, தன்னுரிமையுடையது எனப்படும்.

இருத்தல் கொள்கையினரின் சிந்தனையின் உச்ச நிலையானது கடவுளைப் பற்றிய அறிவாகும். ஒரு தனி மனிதன் தேர்வில் தனது உள்ளார்ந்த அனுபவத்தில் ஒரு கணமேனும், நிலைபேறுடைய கடவுளைப்பற்றிய அறிவை அடைவான். நிலைபேறுடைய கடவுள் வாழும் மனிதனை நோக்குகிறார் என்பது கீர்க்ககார்டின் கருத்தாகும். மனிதனுடைய நிலையற்ற வாழ்க்கையும், நிலைபேறுடைய கடவுளின் மெய்ம்மையும் அனைவரும் ஒத்துக் கொள்ளும் முரண்பாடாகும். ஆனால் அந்த முரண்பாடு, ஊகம் செய்கின்ற அறிவுடையோரிடம் மட்டும் இருக்கக் கூடியது. கீர்க்ககார்டு தெய்வத்திறனுடைவர் எனலாம். தனிமனிதன் கடவுளுடன் ஒன்றுதல் என்பது முடியக் கூடிய செயல் என்று இவர் நம்பினார். இந்த ஒன்றுதல் ஒன்பது மனிதனை முழுமையாக அழித்தல் என்பதன்று. மனிதன் இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்திய போதிலும், அவனது தனித் தன்மையை அவன் பேணிப்பாதுகாக்கிறான். கடவுள் முழுமையாகத் தனித்து விளங்குகிறார். கிறித்து, தனிமனிதனைக் கடவுளிடத்துக் கொண்டு செல்பவர் என வருணிக்கப்படுகிறார்.

செருமன் நாட்டு இருத்தல் கொள்கைத் தத்துவ மேதைகள் கீர்க்ககார்டிடமிருந்து மிகுதியாக அறிந்து கொண்டனர். இருப்பினும் இத்தத்துவத்தைத் தோற்றுவித்தவர் கீர்க்ககார்டு எனக் கூற முடியாது. ஏனெனில், இத்தத்துவத்தைச் சார்ந்த அவருடைய கருத்துகள் யாவும் நிலைத்த கொள்கையாகக் காணப்படவில்லை.

**இருப்புக்கு முந்தியது சிந்தனை**: இருப்பு, உண்மை ஆகிய இரண்டும் சிந்தனைக்கு முற்பட்டது என்பது கீர்க்ககார்டின் கருத்தாகும். உண்மை அறிவு எப்பொழுதும் அகநிலையானது. அது நேரான, உடனடியான அனுபவமாகும். அகநிலை அனைத்து அறிவிற்கும் செயலுக்கும் அடிப்படையாகும். இருப்பிற்கு முந்தையது சிந்தனை என்பதுதெகார்ட்டேயின்கூற்று இவர் கூற்றுக்குக் கீர்க்ககார்டு கடுமையான மறுப்புத் தெரிவிக்கிறார். 'நான் சிந்திப்பதால் நான் இருக்கிறேன்' என்பது தெகார்ட்டேயின் கூற்றாகும். கீர்க்ககார்டின் கருத்து இதற்கு நேர் எதிரானது. சிந்தனை என்பது உண்டு என்பதனை அறிவதற்கு முன்பே நாம் இருத்தல் வேண்டும். நாம் இருந்தால் தான் சிந்தனையே இயலுவதாகும். ஆதலின்இருப்பே சிந்தனைக்கு முந்தியது என்பது இவர் கருத்தாகும். தெகார்ட்டேயின் மேற்கோளுரையை மாற்றிக் கீர்க்ககார்டு கீழ்க்காணுமாறு கூறுகிறார். 'சிந்தனை செய்ய வேண்டும் என்றால் நான் இருத்தல் வேண்டும்'. சிந்தனைக்கு முற்பட்டது நான் என்பதாகும். என்னுள் சிந்தனை என்ற செயல் நடைபெற வேண்டுமாயின்

நான் இருத்தல் வேண்டும் என்பது இவர் கொள்கை. ஆன்மாவின் அறிவிற்குக் காரணம் சிந்தனையாயினும், இருத்தலுக்கு முந்தையது சிந்தனை என அளவை இயல் முறைப்படி கூறப்பட்டாலும், இருத்தல் கொள்கையின் கருத்துப்படி 'நான்' என்பது 'சிந்தனைக்கு' முற்பட்டது என்பது இவர் கருத்து. தத்துவத்தில் அறிவாராய்ச்சியின் அறிவிற்கு முந்தையதும், அடிப்படையானதுமானது மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சியாகும் என்பதே இருத்தல் கொள்கையினரின் அடிப்படைக்கருத்தாகும்.

கீர்க்ககார்டு,தெகார்ட்டேயிடம் கண்ட ஒரு தவறு, அவர், 'நான்' அல்லது 'ஆன்மாவைப்' புறநிலைப் பொருளாகக் கொண்டதேயாகும். ஆன்மா எனில் அறிவான் என்பதே. அது எப்பொழுதும் அறியும் பொருள் அன்று. மேலும் எப்பொழுதும் அறி பொருளுக்கு முந்தையது அறிவான். ஆன்மா ஐயப்படுதற்குரிய வெளிப்படைப் பொருள் அன்று. அனைத்து ஐயங்களும் உருவாவது ஆன்மாவிலிருந்து தான். ஆன்மா ஐயத்திற்கு அப்பாற்பட்டது. அத்துவைத தத்துவ ஞானி சங்கரர் கருத்தானது, ஆன்மாவின் அறிவுஅறிவானைப் பற்றிய அறிவாகும். அது புற அறிவிற்கு மாறுபட்டது. தெகார்ட்டே தம் ஆன்மாவையும் மற்றவர்களின் ஆன்மாக்களையும் அறியும் பொருள்களாக உணர்த்த முற்பட்டார். அது சரியானது அன்று. ஒவ்வொருவரும் தம் ஆன்மாவைப் பற்றிய தனிப்பட்ட நெருங்கிய அனுபவம் பெற்றிருப்பர். மற்றவர்களின் அனுபவத்தைப் பற்றி அறிய எந்த வழியும் கிடையாது. இவ்வாறு சிந்தனைக்கு முற்பட்டது இருத்தல் எனக்கீர்க்ககார்டு நிலை நாட்டுகிறார்

**பொதுமை ஆன்மா**: பொதுமை ஆன்மா என்ற கருத்தினைக் கீர்க்ககார்டு முற்றிலும் தாக்கினார். பல தனிப்பட்ட ஆன்மாக்களிலிருந்து பெறப்பட்ட பொதுமைத் தன்மை என்ற எண்ணத்தைத் தத்துவ அறிஞர்கள் பெற்றனர் எனக் கீர்க்ககார்டு குறிப்பிடுகிறார். எவ்வாறு பலவேறு குதிரைகளிலிருந்து 'குதிரைத் தன்மை' என்பது பெறப்படுகின்றதோ, அது போலவே பொதுமை ஆன்மா என்பதைத்தத்துவஅறிஞர்கள் பெற்றனர். இப்பொதுமை ஆன்மா என்பது புறநிலையானது; அது சிந்தனையின் விளைவு ஆகும். ஒரு திண்மையான ஆன்மா கிடையாது. சிந்தனையின் விளைவுகள் அனைத்தும் அளவை நெறித் தகுதியை மட்டும் கொண்டவை. தனிப்பட்ட உண்மைகள் மட்டுமே இருத்தல் உண்மைகள். பொதுமை என்பது கருத்துப் பொருள். எனவே, அது சிந்தனையில் மட்டும் இருப்பதாகும். சமயம், அறம் என்பதில் கருத்துப் பொருளான பொது ஆன்மா பற்றிய தத்துவ எண்ணங்களுக்கு மாறுபட்டவர் கீர்க்ககார்டு. ஏகலின் கருத்துகளான பொதுமை ஆன்மா, பரம்பொருள் ஆன்மா போன்றவற்றைக் கீர்க்ககார்டும் அவரது கொள்கையைப் பின்பற்றியவர்களும் இகழ்ந்து கூறினர். பரம்பொருள் கொள்கை உடையவர்களின் கருத்துகள், சமயத்தையும் அறத்தையும் அழிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டவை என்பது கீர்க்ககார்டின் எண்ணமாகும். அவை சமயம் அற இயல் ஆகியவற்றின் உண்மைச் சிக்கல்களைப் பிரித்து மாற்றிவிடுகின்றன. அதாவது தேர்வு, முடிவு ஆகியவற்றின் முக்கியத்துவத்தினைக் கூற முற்பட்டால், அவை வேறு திசையில் திருப்பி விடுகின்றன என்கிறார்.

ஏகலையும், கருத்து முதற் கொள்கையையும் குற்றம் காண்பதில் கீர்க்ககார்டு பின்பற்றிய உறுதியானது சாக்ரட்டீசின் வழி முறையை ஒத்திருந்தது. சாக்ரட்டீசின் செயல் விளைவு கீர்க்ககார்டின் படைப்பில் காணப்படுகிறது.

கீர்க்ககார்டின் புலன் கடந்த பொருளியலின் எண்ணங்களை முழுவதும் பாராட்டவேண்டும் எனின், அவரது 'இருத்தல்' என்ற கொள்கையை அறிய வேண்டும். கீர்க்ககார்டைப் பொறுத்தவரை இருப்பு என்பது அகநிலை. பொதுவாகத் தத்துவத்தில் ஆன்மா என்பது அறிவானுக்குச் சமமாகும். அகநிலை என்பது அறிவு நிலையாகும். ஆன்மா என்றும் இருப்பது. இது திண்மையான அகநிலை. இது அறியும் ஆன்மா அன்று. கீர்க்ககார்டின் கருத்து, உட்புறக் காட்சியில் அறியும் உளநிலை ஆன்மா என்பது கிடையாது. உட்புறக்காட்சியில் உருவங்கள், உணர்வுகள் போன்றவற்றைக் காணலாம். உட்புறக்காட்சி என்பது ஒருவிதத்தில் புறநிலையானது. எனவே, ஆன்மாவை உட்புறக்காட்சி மூலம் காண முடியாது. ஒருவன் தன் உள்ளத்தில் புறநிலை அணுகுமுறையை முற்றிலும் விலக்கிவிட்டு, ஆன்மாவை உணர்தல் வேண்டும். ஆன்மாவை உணர்வதற்கு முன் உள்ளம் என்பது மறைய வேண்டும். ஒருவன் சிந்திப்பதை நிறுத்த வேண்டும். ஏனெனில் சிந்தனை இருப்பின், அங்கு அகம், புறம் என்ற பிளவு ஏற்படும்.

**நன்னெறி சார்ந்த ஆன்மா**: கீர்க்ககார்டினால் எண்ணப்பட்ட ஆன்மா வேதாந்த, புலன் கடந்த பொருளியல் அறிஞர்களின் உணர்வு அன்று. அது நன்னெறி சார்ந்த ஆன்மா. அழகியல், அறிவாராய்ச்சியியல் ஆகியவற்றின் ஆன்மாக்கள் அனைத்தும் புறநிலையானவை. அவை வெளிப்புறச் சூழ்நிலைகளை நம்பியுள்ளன. ஆனால், நன்னெறி சார்ந்த ஆன்மா வெளிப்புறச் சக்திகளால் பாதிக்கப்படாத தனித்ததாகும்; அது தனக்குள் தோன்றியது; தன்னாட்சிக் குரியது.

நன்னெறி சார்ந்த மெய்ப்பொருளே ஒரு மனிதனிடத்தில் இருக்கக் கூடிய மெய்ப்பொருளாகும் என்பது கீர்க்ககார்டின் கருத்து. உண்மை என்பது ஒருவனுக்கு, அவனுக்குச் சொந்தமான நன்னெறி சார்ந்த உணர்வாகும். 'நன்னெறி சார்ந்த போராட்டத்திற்கு இடையே நான் அல்லற்படும்போதும், ஒரு குறிப்பிட்ட முடிவு எடுப்பதற்குத் தடுமாறி அலை பாய்ந்து இருக்கும் போதும், ஏதோ ஒன்று திடீரென என்னுள் தோன்றி ஒரு திடமான முடிவை எடுக்கின்றேன். உடனடியாகத் தோன்றிய இந்த முடிவுதான் என்னுடைய நன்னெறி சார்ந்த ஆன்மாவாகும்' என்கிறார் கீர்க்ககார்டு. பெரும்பாலானவர்களிடம் இந்த நன்னெறி சார்ந்த ஆன்மா வளர்ச்சி பெறாமல் இருக்கலாம். அதனால் ஒருவன் வெளிப்புற உதவியின்றி முடிவு செய்ய முடியாத நிலையில் இருக்கலாம். அச்சமயம் மூல காரணத்தை அறியாமல் பலவித எண்ணங்களின் மூலம் தீர்வுகாண முயற்சிசெய்கிறான். அத்தகைய மனிதர்கள் இருத்தல் என்பதன் பொருள் அறியாமல் இருக்கின்றனர். நன்னெறி சார்ந்த ஆன்மா அகநிலைத் தன்மையுடையது. அதாவது அது தனக்குத்தானே முடிவு செய்யக்கூடியது.

தனிமனிதனுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு மெய்ப்பொருள் அவனது நன்னெறி சார்ந்த மெய்ப்பொருளாகும். எனவே, உண்மையும் மெய்ப்பொருளும் உள்நோக்கிய பண்பின் அனுபவம் என்கிறார் கீர்க்ககார்டு. நன்னெறிச் செயல்கள் அனைத்தும் சமுதாயத்தின் இடையே செயற்படுவன என்றும் கூறலாம்.

'எதனை நான் நல்லது என உணர்கின்றேனோ அது எனக்கு நல்லது. மற்றவர்களுக்கும் அது நல்லது என்று நான் எப்பொழுதும் உரிமை கொண்டாட முடியாது' என்னும் கீர்க்ககார்டின் நன்னெறி நோக்கு கீதையின் நோக்கிற்கு ஒப்பாக உள்ளது எனலாம். எப்பொழுதும், எந்த இடத்திலும், 'நான் என்ன செய்ய முடியும்? என்னுடைய கடமை என்ன?' என்பன போன்ற வினாக்களே இவர்தம் கருத்துகளாகும்.

கீர்க்ககார்டின் நன்னெறிக் கருத்துகள் அனைத்தையும் சுயநலமானது எனச் சிலர் கண்டிக்க முயல்வர். அதற்குக் கீர்க்ககார்டு, 'இது நல்லது என என்னுடைய நோக்கில் காண்கிறேன். இது எனக்கு நல்லது. எது மற்றவர்களுக்கு நல்லது என என்னால் அறிய முடியாது' என்று கூறுவார். உலகில் நடைபெறுவன அனைத்தும் கடவுளின் விருப்பப்படி நடப்பன என உண்மையான கடவுள் நம்பிக்கை உள்ளவர் அறிவர். ஆதலால், மனிதன் தன்னுடையகடமையைச் செய்தல் வேண்டும். மற்றவர்கள் கடமை என்ன என்பது பற்றிக் கூறுதல் கூடாது. இது கீதையின் தத்துவத்தைப் போல் உள்ளது. 'ஆன்மிக நிலையில் நான் கடவுளுடன் தொடர்பு கொள்ளும் போது, பொது நன்மை அனைத்தையும் கடவுளிடம் விட்டு விடுகின்றேன்' எனக் கீர்க்ககார்டு குறிப்பிடுகிறார். சமுதாயத்தின் நலனுக்காக மற்றவர்களுக்கு எது நன்மை தரும் என அறிந்து செயற்பட முற்படும் மனிதர்கள், இவை அனைத்தும் கடவுள் செய்யும் செயல்கள் என்பதை மறந்து விடுகிறார்கள்.

கீர்க்ககார்டின் தனிமனிதன், காண்டு (Kant) என்ற தத்துவ அறிஞனின் தனிமனிதனைக்காட்டிலும், அறவழி வாசகங்களைத் திடமாகக் கூறுவான். ஏனெனில், அறவழி வாசகங்களைத் தேர்வு செய்து கூறுவதற்கு ஏற்பக் கீர்க்ககார்டின் கொள்கைகள் அவனுக்கு அனுமதியளிக்கின்றன. காண்டின் கருத்துப்படி இரக்கம் போன்ற உணர்வால் ஒரு செயலைச் செய்யும் போது அது நல்லதாக அமையலாம். ஆனால் அதை அறிவிற்குப் பொருத்தமானது என்ற உணர்வு அல்லது ஊக்கியை அடிப்படையாகக் கொண்டு செய்யும்-போதுதான் அது நல்லதாகும். காண்டின் கருத்துப்படி சார்பற்ற கடப்பாட்டுக்குப் பணிவதுதான் செயலை உண்மையிலேயே நற்செயலாக்கும் வழியாகும்.

சீர்திருத்தக் கிறித்தவர்களைப் பின்பற்றியவர் கீர்க்ககார்டு. இவர் ஏகலின் கொள்கையை மறுத்தவர்; தேர்வு என்ற செயலுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். பகுத்தறிவு வாதம் கூட முடிவில் தனிமனிதனின் தேர்வுக்கு முதன்மை நிலையை அளிக்கிறது. கீர்க்ககார்டைப் பொறுத்தவரை சமயஈடுபாட்டிற்கு ஒரு முன்னுரையே அறவழியாகும். சமய ஈடுபாடு பகுத்தறிவுள்ளவனுக்கு நிச்சயமாக எதிரிடையானது. ஏகல் சமயத்தைப் பகுத்தறிவு முறையில் எடுத்துரைக்க முயற்சி செய்தார். இதுவே கீர்க்ககார்டு, ஏகலிடம் கண்ட முக்கியமான தவறுகளுள் ஒன்றாகும். கிறித்தவ நம்பிக்கை வாதங்களை நம்பியுள்ளதன்று; ஆனால் தேர்வை நம்பியுள்ளது. இதுவே கீர்க்ககார்டின் கருத்தாகும் எல்.பி.

**துணை நூல்கள்**:

**Alasdair Mac Intre**, A Short History of Ethics, Routledge&Kegan Paul Limited, London, 1967.

**John Pass More**, A Hundred Years of Philosophy, Great Britain: C. Nicholls & Company Ltd. London, 1980.

Sarvapalli Radhakrishnan, History of Philosophy, Eastern and Western, George Allen&Unwin Ltd., London, 1953.

**கீர்த்தனை** கருநாடக இசையில் அமைந்துள்ள இசைப்பாடல் வகைகளுள் ஒன்றாகும். இவ்வகைப் பாடல்கள் கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் தோன்றின. கீர்த்தனை பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் மூன்று உறுப்புகள் கொண்டு அமையும். சில கீர்த் தனைகள் அனுபல்லவி இல்லாமலும் உருவாக்கப் படும். ஒரு கீர்த்தனையில் பல சரணங்கள் இடம் பெறும். அச்சரணங்கள் அனைத்தும் ஒரே மெட்டில் அமையும். கீர்த்தனையில் இசை அமைதி மிக்கிருத் தல் வேண்டும். கீர்த்தனையிலிருந்து கிருதிகள் உண் டாயின. ஆனால், கீர்த்தனைக்கும் கிருதிக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. கீர்த்தனை இசைச் சிறப்பையும், கிருதிகள் சாகித்தியச் சிறப்பை யும் அடிப்படையாகக் கொண்டவையாகும். தமிழில் கோபாலகிருட்டிண பாரதி, அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், பாபநாசம் சிவன், சுத்தானந்த பாரதி போன்றவர்கள் கீர்த்தனைகள் இயற்றியுள்ள னர். தியாகையர், முத்துசாமி தீட்சிதர் போன்றோர் முறையே தெலுங்கு, வடமொழி ஆகியவற்றில் கீர்த் தனைகளை இயற்றியுள்ளனர். ஒரு வரலாற்றைத் தொடர்ந்து கீர்த்தனைகளால் நாடகப் பாங்கில் அமைக்கும்போது அது கீர்த்தனை நாடகம் எனப் படும். தமிழில் இராமநாடகக் கீர்த்தனை, நந்தன் சரித்திரக் கீர்த்தனை முதலியன உருவாகியுள்ளன. காண்க: கிருதி; நாடகக் கீர்த்தனை. அ.மா.ப.

**கீர்த்தனை நாடகங்கள்**: தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பகுத்துப் பேசுவது நீண்டகால மரபாகும். நாடகம் என்ற பிரி வில் இசை நாடகம், கவிதை நாடகம், கீர்த்தனை நாடகம் என்பன அடங்கும். இசை வடிவில் உள்ள நாடகங்கள் அனைத்தும் இசை நாடகங்களே (Operas). ஆனால், இசை நாடகங்கள் அனைத்தும் கீர்த்தனை நாடகங்கள் ஆகா.

கீர்த்தனை வேறு; கிருதி வேறு. கீர்த்தனையின் வளர்ச்சியே கிருதி. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பில் முதன் முதலில் கீர்த்தனைகளைக் கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாளப்பாக்கம் கவிஞர்களே எழுதினர். ஆனால், ஒவ்வொரு கீர்த் தனையிலும் இம் மூன்று அங்கங்களும் இருந்து தீர வேண்டும் என்னும் இன்றியமையாமை இல்லை. கீர்த்தனையின் மரபுப்படி அதற்கு இசை அமைதி இருக்கவேண்டும் என்பது இன்றியமையாத விதி. கிருதியில் அவ்வாறில்லை. அதன் சாகித்தியங்களின் இடையில் உரைநடையும் கலந்து வரலாம்.

கிருதிக்கும் கீர்த்தனைக்கும் இடையே உள்ள சில இன்றியமையாத வேறுபாடுகள்:

| | கிருதி | | கீர்த்தனை |
|---|---|---|---|
| 1. | இசையால் நிலைபேறு உடையது. | 1. | சாகித்தியத்தால் நிலைபேறு உடையது. |
| 2. | அழகியலால் சிறப்பு அடைகிறது. | 2. | சாகித்தியத்தின் கருப்பொருளில் அமைந்துள்ள தெய்விக உணர்வால் நினைவில் நிற்கிறது. |
| 3. | கேட்போர்க்குக் கானரசம் தருகிறது. | 3. | பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட அமைவது. |
| 4. | இராக, பாவங்களின் படப்பிடிப்பு எனத் தக்கது. | 4. | இராக, பாவங்கள் ஆங்காங்கு இடம் பெற்றிருக்கும். |
| 5. | தாது என்னும் சுரம் இன்றியமையாத உறுப்பு. | 5. | பக்திச்சுவை இன்றியமையா உறுப்பு. |
| 6. | கிருதியில், புனிதமான கருப் பொருள் தான் உட்கிடக்கையாக இருக்கவேண்டும் என்பதில்லை. | 6. | புனிதமானவற்றைப் பாடுதற்கென்றே அமைந்தவை. |

| | | | |
|---|---|---|---|
| 7. | சாகித்தியத்தில் உள்ள சொற்கள், இசை வெளிப்பாட்டிற்குரிய கருவி களாகவே இதில் பயன்படுத்தப்படு கின்றன. | 7. | சாகித்தியங்கள் பக்தி பூர்வமானவை. (புரந்தரதாசர் தேவர் நாமா – சிறந்த எடுத்துக்காட்டு) |
| 8. | இசையமைதி சிக்கலானது; நுட்ப மானது. | 8. | சராசரி மனிதனும் பாடுமாறு அமைந்தது. |
| 9. | கிருதிகள் இராகங்களின் சுரங்கம்; அபூர்வ இராக ஞானங்கள் பலவற்றை வெளிப்படுத்துமாறு அமைந்தது. | 9. | அந்தத் தன்மை இல்லாதது. |
| 10. | இசையின் கன்னியழியாத் தன்மையை இதில் காணலாம். | 10. | அந்த நிலை இல்லை. |
| 11. | கிருதி குழுப்பாடல்களாக இசைக்கப் படுவதில்லை. | 11. | வழிபாட்டுப் பாடல்களாகக் குழுவின ரால் இசைக்கத் தகுதி பெற்றது. |
| 12. | பல அரிய இராகங்கள் கிருதிகளாலேயே வாழ்வு பெற்றிருக்கின்றன. | 12. | அந்த நிலை இல்லை. |

தமிழில் எழுந்த முதல் கீர்த்தனை நாடகம் சீர்காழி அருணாசலக் கவிராயர் பாடிய இராம நாடகக் கீர்த்தனையே ஆகும். இதை அவர் கி.பி. 1717–இல் எழுதினார். ஏறத்தாழ 500 பாடல்கள் இதில் உண்டு. விருத்தம், தரு, திபதை – ஆகிய பாடல் அமைப்பில் பாடப்பட்டுப் பல்வேறு பண், தாளம் ஆகியவற்றுடன் பொருத்தி இசைக்குமாறு இந்நூல் அமைந்திருக்கிறது.

தருக்கள் என்பன பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய மூன்று அமைப்புகளும் உடைய பாடல்வகை. இவை இராகங்களுடன் பாடப்பெறும். தரு கதை தழுவி வரும் பாட்டுப் பகுதி. இதன் இசை மத்திய காலத்திலே இருக்கும். இதில் பல உட் பிரிவுகள் உண்டு. இராம நாடகக் கீர்த்தனையில் வரும் தருக் களில் மிகப்பல பழமொழிகளை உள்ளடக்கியவை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

திபதைகளில் கண்ணிகள் மட்டுமே இருக்கும். இவற்றில் இசைக்கே முதலிடம் அளிக்கப்படும். இரண்டு இரண்டு அடிகளாக அமைந்த பாடற் பகுதி களைக் கண்ணி என்பர்.

அருணாசலக் கவிராயரின் அடியொற்றி இராமச் சந்திர கவிராயர் பாரத விலாசம் என்ற நாடகத்தை யும், கி.பி. 1867–இல் அரங்கப்பிள்ளை என்பார் அரிச்சந்திர விலாசத்தையும் படைத்தளித்துள்ளனர்.

அதன் பின்னர்க் கோபாலகிருட்டிண பாரதி யார் 'நந்தனார் கீர்த்தனை' என்ற பெயரில் இசை நாடகம் எழுதினார். இக்கீர்த்தனை நாடகத்தில் பல பண்களில் பாடல் உண்டு. பெரிய புராணத்தில் உள்ள திருநாளைப்போவார் புராணத்தைத் தழுவியது இந்நூல். கோபால கிருட்டிண பாரதியார் மயிலாடு துறைக்கு அண்மையில் உள்ள ஆனந்த தாண்டவபுரம் என்னும் ஊரினர்.

கீர்த்தனை நாடகங்களின் கதைக்கரு மக்கட்கு முன்னரே தெரிந்த புராணச் செய்திகளைக் கொண் டதாக இருந்தமையால் மக்கள் அதனை இசைக்கா கவே சுவைத்தனர். பின்னர் நிலைமை மாறவே கீர்த்தனை நாடகங்கள் தோன்றாமல் நின்றுவிட்டன.

தவத்திரு சங்கரதாசு சுவாமிகள் எழுதிய நாடகங் களில், பாடல்கள் நிரம்ப இருந்த போதிலும் இடை யிடையே உரையாடல்கள் இடம் பெற்றிருப்பதால் அவற்றைக் கீர்த்தனை நாடகங்கள் என்ற வகையில் அடக்க முடியாது. கவிதை நாடகங்களும், இசை நாடகங்களும் இன்றும் தோன்றிய வண்ணம் உள் ளன. இசை நாடகங்கள் நாட்டிய நாடகங்களாகப் பயன்படுகின்றன. கவிதை நாடகங்கள் படித்து இன் புறத்தக்கவையே யன்றி நடிக்கத் தகுந்தவை அல்ல. ஆனால் சில சமயங்களில் வானொலியில், கவிதை நாடகங்களை நிகழ்த்தும் முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. குறவஞ்சி, பள்ளு நாடகங்களில் இடையே

கீர்த்தனைகள் வருவதுண்டு. எனினும், இவை கீர்த்தனை நாடகங்கள் என்னும் வகைப்பாட்டில்அடங்கா; நாட்டுப்புற இசை நாடகங்கள் என்னும் வகையிலேயே இவை அடங்கும்.

கிருதிக்கும்கீர்த்தனைகட்கும் மேலே எடுத்துக்காட்டப்பட்ட 12 வேறுபாடுகளும் தடுப்புச் சுவர்களைப் போல நின்று ஒன்றை ஒன்று வேறுபடுத்துவன அல்ல. கிருதியும், கீர்த்தனையும் ஒன்றாகக் கருதத்தக்க நிலையும் உண்டு. இன்று உலக வழக்கில் கிருதி, கீர்த்தனை என்னும்சொற்கள் வேறுபாடின்றி வழங்குகின்றன. மேற்கண்ட வரைவிலக்கணப்படி பார்த்தால் தியாகையர் எழுதியவை கிருதிகள் என்னும் வகையிலேயே அடங்கும். ஆனால், உலக வழக்கில் தீட்சிதர் கிருதி, தியாகையர் கீர்த்தனை என்றே குறிப்பிடுகிறார்கள்.

நாடகக் கீர்த்தனைகள் தோன்றியமைக்கும், நாடகக் கிருதிகள் தோன்றாமைக்கும் கீர்த்தனை அமைப்பில் உள்ள நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையும், எளிமையுமே காரணம் எலைாம். சொ.ச.

**துணை நூல்**:

**பெருமாள், ஏ.என்.**, தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும், அணியகம், சென்னை-30, 1977.

**Sambamoorthy**, P., South Indian Music BOOK III, The Indian Music Publishing House, Madras, 1964.

***கீர்த்திமுகம்***, கோயில் கோபுரத்திலும் விமானத்திலும் பல இடங்களில் காணப்படும் ஓர் அழகமைப்புப் பகுதி. வடமாநிலங்களில் கீர்த்திமுகம் விமானத்தின் சாளரப் பகுதியின் உச்சியில் அமைக்கப்படும். நாகர வகைக் கோயில்களில் சுகநாசி எனப்படும் மிகப் பெரும் சாளரப் பகுதியிலும், அத்திபிருட்டக் கோயில்களில் முகப்பு வளைவின் உச்சியிலும் கீர்த்தி முகம் காணப்படுகிறது. தென் இந்தியக் கோயில்களில் விமானத்தின் இரண்டாம் தளத்துக் கூடு, சாலை ஆகியவற்றின் உச்சியிலும், சிகரத்தின் நாற்புரங்களிலும், கொடுங்கைக் கூடுகளின் முகப்பிலும் இவ்வழகமைப்பு இடம்பெறும். கோபுரத்திலும் தெய்வ மாட உச்சிகளிலும், கோபுர உச்சியின் இரு புறங்களிலும் கீர்த்திமுகம் காணப்படும். சில கோயில்களில் வாயிற் படிக்கட்டுகளின் பக்கவாட்டுச் சுவரிலும், வாயிற் காப்போர் சிற்பங்களின் சடாமகுடங்களிலும் கூடச் சிற்சில மாறுதல்களுடன் இது காணப்படும்.

கீர்த்திமுகம் பொதுவாகச் சிங்கத்தின் சாயலில் அமைந்திருப்பதால் இதற்குச் சிம்ம முகம் என்றும் பெயர் வழங்குகிறது. இதன் விழிக்கோளங்களின் புடைப்பு இருபுறமும் வளைந்து அப்பகுதிகளை இரு கொம்புகள் போல அமைக்க, விழிகளின் நடுவிலுள்ள மடிப்பு மூன்றாம் கொம்பாய் மையத்தில் நிமிர்ந்து நிற்கிறது. சில கீர்த்தி முகங்களில் (மதுரை சுந்தரரேசுவரர் கோயில் கோபுரம்)கன்னப் பகுதியின் பக்க வாட்டிலிருந்தும் கூட இரண்டு எழுச்சிகள் கொம்புகளாய்க் காணப்படுகின்றன.

கண்களுக்குக் கீழே நாசிப்பகுதி உள்ளது. இதன் பக்கவாட்டிலுள்ள கன்னப் பகுதிகள் மூச்சுக்காற்றை உள்ளிழுத்து நிறைத்துக் கொண்டு புடைத்திருப்பது போல் காட்டப்பட்டுள்ளன. கீர்த்தி முகம் என்ற பெயரிலேயே முகம் இருந்தாலும், இது ஒரு முழுமையற்ற முக அமைப்பேயாகும். இதில் கீழ்த்தாடைகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. திறந்த மேல் தாடையில் வரிசையாய்க் கோரைப் பற்கள் காணப்படுகின்றன. இப்பற்களின் கீழிருந்து இருபுறமும் புறப்படும் வளைவே கூடு, சாலை ஆகியவற்றின் சுற்றுப்புற அமைப்பாகவும், அதன் வளைவமைப்பில் உருவாக்கப்படும் வடிவங்களே மேற்புற அமைப்பாகவும் பொருந்த, இதன் மைய மாடத்தில் விமான தேவதைகளும் சாலைத் தெய்வங்களும் இடம் பெறுகின்றன.

கீர்த்தி முகத்திலுள்ள வளைவமைப்பின் மேற்பகுதி வளைந்த தீ நாக்குகள் போலத் திருவாசி வடிவத்தில் காணப்படுகிறது. இது வளைவின் இருபுற முடிவிலும் உள்ள மகரத்திலிருந்து தொடர்வதாய்க் காட்டப்பட்டுள்ளது. இந்தத் தீச்சுடர் அமைப்பை அடுத்த அரைவட்ட வரிசையில் பூதகணங்கள் ஒரு கையில் கேடயமும், உயர்த்திய மற்றொரு கையில் கத்தியும் கொண்டு காணப்படுகின்றன. அதையடுத்து யானைத்தலை வரிசையும், அதன் கீழ்ப் புலி அல்லது குதிரைத் தலை வரிசையும், அதன் கீழ் ஆட்டுத் தலை வரிசையும் காணப்படுகின்றன. இவ்வரிசைகள் சில கீர்த்திமுகங்களில் இடம் மாறியும், ஒன்றல்லது இரண்டு விடுபட்டும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. கீழ் வேளூர் முன்கோபுரக் கீர்த்திமுகத்தில் மேற்கண்ட வரிசைகள் அனைத்தும் உள்ளன. தஞ்சைப் பெரியகோயில் விமான முகப்புக் கீர்த்தி முகத்தில் பூதகண வரிசையை அடுத்து ஆட்டுத்தலை வரிசையே காணப்படுகிறது.

இந்தத் தலைவரிசைகளை அடுத்துப் பூ வேலைப்பாடுகளும், அவற்றையடுத்துச் சிறு வளைவும் அதனுள் ஒரு சதுரத் தளமும் அதன் மேல் பூ மொட்டுப்

போன்ற அமைப்பும் உள்ளன. இதன் கீழ்தான் விமான தேவதை அமையப் பெறும். இந்தச் சிறு வளைவின் இருபுறமும் இரு வீரர்கள் ஒரு கையில் கேடயமும் மற்றொரு கையில் உயர்த்திய வாளுமாய் நேர்கொண்ட பார்வையும் இடுப்புக்குக் கீழ் உடலைப் பக்கவாட்டில் திருப்பிய கோலமுமாய்க் காட்சி தருகின்றனர். இக் கீர்த்திமுகம், அமையும் இடத்திற்கேற்ப, அளவிலும் வடிவங்களின் வரிசை எண்ணிக்கையிலும் சுருங்கியும் விரிந்தும் அமைகிறது. இரா.க

**கீர்த்திவர்மன், முதலாம்** (கி.பி. 566-598): வாதாபியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த சாளுக்கிய மரபில் வந்த வேந்தனான இவன், கி.பி. 566-இல் அரியணை ஏறினான். இவன் தந்தை முதலாம் புலிகேசி மாபெரும் வெற்றி வீரனாகவும் கட்டடக் கலைஞனாகவும் திகழ்ந்தான்.

மங்களேசனின் (கி.பி. 566-598) மகாகூட கல்வெட்டு, 'வங்கம், சுங்கம், கலிங்கம், மகதம், வச்சிர மதாகம், கேரளம், கங்கம், முசாகம், பாண்டிய திரமிலா,சோழிய,அழுக,வைசந்தி' முதலான நாட்டு வேந்தர்களை முதலாம் கீர்த்திவர்மன் முறியடித்ததாகக் கூறுகிறது. இவற்றுள் சில உயர்வு நவிற்சியாக இருக்கலாம். கடம்ப வேந்தனுடைய கூட்டுப்படையை முறியடித்த இவன் கொங்கணத்து மௌரியர்களையும் நள (Nala) வேந்தர்களையும் வென்று, தனது அரசினை விரிவுபடுத்தினான். இவ்வேந்தருடைய வெற்றிகளின் விளைவாகச் சாளுக்கியரின் மேலாண்மை, மகாராட்டிர மாநிலத்தின் தென்பகுதி, கருநாடகம் தமிழ்நாடு – ஆகியவற்றின் சில பகுதிகளிலும் பரவியது. இவன் தன் தந்தையைப் போன்று பல விருதுப் பெயர்களைப் பூண்டான்.

வெற்றி வீரனாகத் திகழ்ந்து, சாளுக்கியரின் புகழைப் பரப்பிய இவன், தன் தந்தையால் தொடங்கப் பெற்ற வாதாபி நகரில் பல கோயில்களை உருவாக்கினான். இவையனைத்தும் இவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த மங்களேசனால் முடிக்கப் பெற்றன. கொங்கண வெற்றியின் விளைவாகச் சிறப்பு வாய்ந்த துறைமுகமாக இரேவதித்தீவு (இன்றைய கோவா) சாளுக்கியரின் வசம் வந்ததால் வாணிகமும் வளர்ந்தது.

தனது சாளுக்கிய அரசினை விரிவுபடுத்திய இவ்வேந்தன் கி.பி. 598-இல் இறந்தான்.

**கீர்த்திவர்மன், இரண்டாம்** (கி.பி. 745-755)வாதாபிச் சாளுக்கிய மரபின் கடைசி வேந்தன். இவனது திறமையின்மையின் காரணமாக, இவன் பல போர்களில் தோல்வியுற்றான்.

இரண்டாம் விக்கிரமாதித்தனின் மகனான இரண்டாம் கீர்த்தி வர்மன் கி.பி. 745-இல் தன் தந்தைக்குப் பின் அரியணையேறினான். அரசு கட்டிலேறுமுன்பே இவன் தன் தந்தையுடன் இணைந்து பல்லவரை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றுள்ளான்; ஆட்சிக்கு வந்த பின்னரும் பல்லவருடன் போரைத் தொடர்ந்தான். இரண்டாம் நந்திவர்ம பல்லவன், கங்கர், பாண்டியர் – ஆகியோரின் கூட்டுப் படையுடன் கி.பி. 757-இல் கீர்த்திவர்மனுடன் போரிட்டுக் கீர்த்திவர்மனை வெண்பை என்னும் போர்க்களத்தில் தோற்கடித்தான். இராட்டிரகூடத் தந்திதுர்க்கன் கீர்த்திவர்மனை வென்று, அங்கு இராட்டிரகூடரின் ஆட்சியை நிறுவினான். பின்னர் 200 ஆண்டுகளுக்கு மேலாகச் சாளுக்கிய நாடு இராட்டிரகூடரின் மேலாண்மைக்கு உட்பட்டது. ம.இ.

**கீரங்கீரனார்**: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். சங்க காலத்தில் கீரன் என்னும் ஆண்பாற் பெயர் வழக்கு மிகுதியாக இருந்துள்ளது. அப்பெயர் ஆர் என்னும் விகுதியோடு கீரனார் எனவும் வழங்கப் பட்டுள்ளது. கீரன், கீரனார் என்னும் பெயர்கள், நக்கீரன், இளங்கீரன், அல்லங்கீரனார், குட்டுவன் கீரனார், மோசி கீரனார் என்று பெயர், பண்பு, ஊர் முதலியவற்றாலாகும் முன்னடை பெற்றும் வழங்கப் பட்டுள்ளன. கீரந்தையார், கீரத்தனார், முதலிய பெயர்களும் கீரன் தொடர்பாக எழுந்தனவேயாகும். கீரன் என்னும் பெயரில் அமைந்த பலருள்ளும வேறுபாடறிய வாய்ப்பாக இவ்வடைகள் சேர்த்து வழங்கப்பெற்றன.

கீரங்கீரனார் என்ற பெயர் கீரனுக்கு மகனாகிய கீரன் என்று பொருள்படும். இவர்தம் தந்தையாராகிய கீரரும் புலவராக இருந்தார் என்று கூறுதற்குச் சான்றில்லை. கீரங்கொற்றனாரின் ஒரேபாடல் நற்றிணை 78-ஆம் பாடலாக அமைந்துள்ளது. தோழி கூற்றாக அமைந்துள்ள அப்பாடல் நெய்தல் திணையில், 'வரைவு மலிந்தது' என்னும் துறையில் அமைந்துள்ளது. பொருள் வயிற் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருவேன் எனக் கூறிய பருவம் வந்தும் வாராமையால், தலைவி மிகவும் வருத்தமுறுகிறாள். அப்போது தலைவன் தலைவியை மணத்தற்கு மணம் பேசி வருவதனை அறிந்த தோழி அச்செய்தியினை மகிழ்வோடு தலைவிக்குக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. மாலை நேர நெய்தல் நிலக் காட்சி அழகுறக் காட்டப்பட்டுள்ளது. அ.மா.ப.

**கீரங்கொற்றனார்**: இவர் இறையனார் களவியல் உரையால் அறியலாகும் இலக்கணப் புலவர்

களுள் ஒருவர். அக்களவியலுரை முதன்முதலாக மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரால் இயற்றப்பெற்று, அவர்தம் மகனுக்குக் கூற, அவ்வழியில் பல முறையினராக வந்த ஆசிரியர்களுக்குக் கூறப்பெற்று, இறுதியில் நீலகண்டனார்க்கு உரைக்கப்பட்டது என்னும் செய்தி அந்நூலில் கூறப்பட்டுள்ளது. மதுரைக் கணக்காயரின் மகனார் கீரங்கொற்றனார் எனப்படுவார் என்பதும், அவர் தம் மகனுக்குக் களவியல் உரையினைக் கூறினார் என்பதும் உரையினால் அறியப்படுகிறது. கீரங்கொற்றனார் என்ற பெயர் கீரனுக்கு மகனாகிய கொற்றனார் எனப் பொருள்படும். கீரன் என்னும் பெயர் அவர் தந்தையாகிய நக்கீரனாரைக் குறிப்பிடுவதாகலாம். ஒருகால் கீரன் ஆகிய கொற்றன் என்னும் பொருளில் கீரங்கொற்றனார் என்பதே புலவரின் இயற்பெயராக வழங்கியிருத்தலும் கூடும். காக்கைபாடினியார் என்னும் காரணப்பெயர் பின்வந்தோரால் இடுகுறி வகையால் இயற்பெயராக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கீரங்கொற்றனார் தாம் தம் தந்தையிடம் பெற்ற உரையினைத் தேனூர் கிழார் என்பவருக்கு உரைத்தார் என்பதும் அவ்வுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முத்து வேங்கட சுப்பு பாரதி தம் இலக்கணதீப நூலுள் இந்த உரை மரபுப் பெயர்ப் பட்டியலில் வேறு சில ஆசிரியர் பெயரையும் சேர்த்துள்ளார். கீரன் கொற்றனார் நக்கீரனாருக்கு மகனாவார் என்றும், அவர் தேனூர் கிழாருக்கு உரை கூறினார் என்றும் பல அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். அந்த உரை நடந்து வந்த வரலாறு பற்றி ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அ.மா.ப.

**கீரந்தையார்**: இவர் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலால் அறியப்பெறும் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர், 'தொன்முறை இயற்கையின்' எனத் தொடங்கும் பரிபாடலின்ஆசிரியராவார். கீரந்தை என்பது இவர்தம் இயற்பெயராகும். கீரனுக்குத் தந்தை என்னும்பொருளில் அமைந்த 'கீரன் தந்தை' என்னும் பெயர்கள் கீரந்தை என்று ஆயின எனக் கருதுவாருமுளர். கீரனுக்குத் தந்தை என உறவு முறையால் ஒருவரைச் சுட்டற்கமைந்த பெயர் அவ்வாறு சுட்டப்பெறுபவர்தம் செல்வாக்கினால் சிறப்பெய்திப் பின்னர் வருவோருக்கு, இயற்பெயராக அமைவதும் உண்டு. சங்க காலத்திலும் அதனை அடுத்த காலத்திலும் கீரந்தை, கீரந்தையார் என்னும் பெயர், கீரனுக்குத் தந்தை எனக் காரணங் கருதாது, இடுகுறி அளவில் இயற்பெயராகவும் வழங்கி இருத்தல் கூடும். இதனைச் சிலப்பதிகாரத்தில் கீரந்தை என்னும் ஓர் அந்தணன் பற்றிய செய்தி இடம்பெற்றிருப்பது (சிலப். கட்டுரை 42-45) கொண்டு அறியலாம்.

இவர்தம் பரிபாடற செய்யுள் திருமாலைச் சிறப்பிப்பதாக அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்துப் பொருளில் அமைந்த அப்பாடலுக்கு நன்னாகனார் இசை வகுத்துள்ளார். இவ்வாசிரியர் உலகுத் தோற்றம் பற்றிக் கூறுங்கால், பரம்பொருளிலிருந்து ஆகாயம் தோன்றி, ஆகாயத்திலிருந்து காற்றுத் தோன்றி, காற்றிலிருந்து தீத் தோன்றி,தீயிலிருந்து நீர்தோன்றி, நீரிலிருந்து நிலந்தோன்றிய அடைவு முறையினைக் குறிப்பிட்டிருப்பது இவர்தம் அறிவியற் புலமைக்குச் சான்றாயமைகிறது.

நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் என்னும் பேரெண்களைக் குறிக்கும் சொற்களை ஒருங்கே பயன்படுத்தியுள்ளார். திருமால் எங்கும் எவற்றிலும் கலந்திருக்கும் தன்மை, அவரே கண்ணன், பலதேவன் ஆகியோராகவும், பூவராக மூர்த்தியாகவும் அமைந்து தேவர்க்கருளிய பாங்கு ஆகியவற்றை ஆசிரியர் நன்கு குறிப்பிட்டுள்ளார். திருமாலிடம் இவர், 'கடும்பொடும் கடும்பொடும்பரவுதும், கொடும் பாடறியற்க எம் அறிவு எனவே' என்று வேண்டும் பகுதி(பரி.2-75, 76) இவர்தம் மெய்யுணர்வு நாட்டத்தைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**கீரந்தையார்**[2] : திருக்குறள் நூலினைச் சிறப்பிக்கும் திருவள்ளுவமாலையினைப் பாடிய புலவர்களுள் ஒருவர். 'தப்பா முதற் பாவால்' என்று தொடங்கும் திருவள்ளுவமாலைச் செய்யுள் இவரதாகும். அதில் திருவள்ளுவரைத் 'தெய்வத் திருவள்ளுவர்' என்று குறிப்பிட்டுள்ளார். மேலுமவரை 'முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்' என்று சுட்டித் திருக்குறள், வீட்டுப்பாலினை அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று பாலின் கண்ணே அடக்கிக் கூறுகிறது என்பதனையும் புலப்படுத்தியுள்ளார். இடைச் சங்கத்தைச் சேர்ந்த புலவர்களுள் கீரந்தை என்ற பெயரில் ஒருவர் இருந்துள்ளார் என்று இறையனார் களவியலுரை குறிப்பிட்டுள்ளது. அ.மா.ப.


**கீரிமலை** சிரீலங்காவின் (Sri Lanka) புனிதத் தலங்களுள் ஒன்று.இது ஓர்புகழ்மிக்க சிவாலயத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சிரீலங்காவின் வடகரையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள கீரிமலைச் சிவத்தலம் வரலாற்றுப் புகழ்மிக்கது. நகுலகிரி என்று இது முன்பு சொல்லப்பட்டது. நகுல முனிவர் என்பார் இக்குன்றின்மீது தவம் மேற்கொண்டதால், இப்பெயர் பெற்றது என்பர். இங்குள்ள சிவன் கோயில், முதல் சிங்கள வேந்தனான விசயன் கட்டிய திருத்தம்பலேச்சுரமாகும். கீரிமலைக்கு அருகிலுள்ள

மாவிட்டபுரம் கந்தசாமித் திருக்கோயிலின் திருவிழா, கீரிமலையில் ஒவ்வோராண்டும் ஆடி அமாவாசை நாளன்று நடைபெறும். இங்குள்ள கடற்கரையில் நன்னீர் ஊற்று ஒன்று கற்பாறைகளின் இடையே நீரைச் சொரிந்து கொண்டுள்ளது. இதனை ஒரு குளமாகத் தேக்கிப் பயணியர் நீராடப் பயன்படுத்து கின்றனர் ம.இ.

**கீரின்**: இது சீனாவின் துறைமுகப் பட்டினம். இதற்குச் சீலின் என்ற பெயரும் உண்டு. மஞ்சூரியா வின் கிழக்குப் பகுதியில் உள்ள கிரின் (Kirin) 1954 வரை அந்த மாகாணத்தின் தலைநகராகவும் இருந்தது (கீரின் மாகாணம்). சுங்காரி ஆறு 12 இலட்சத்திற்கு மேற்பட்டு மக்கள் வதியும் இந்நகரின் புறத்தே ஓடுகிறது. கப்பல்கள் பல இங்குக் கூடுகின்றன. பல வாணிக வழிகளும் இங்கு இணைகின்றன. மிகுந்த தொழில் வளமும் வாணிகமும் இதற்குச் சிறப்பை அளிக்கின்றன. இரசாயனத் தொடர்பான பல தாவரங்கள் இங்கு உண்டு. எண்ணெயைச் சுத்தப் படுத்தும் ஆலையும், உர உற்பத்தித் தொழிற்சாலை யும், மரத்தொழிற்சாலையும், சிமிண்டுத் தொழிற் சாலையும், சர்க்கரை ஆலைகளும் இந்நகரின் சிறப்பை மிகுதியாக்குகின்றன. புகையிலையும் இங்குப் பயிரா கிறது. தெ.பா.

**கீலங்கு** கிழக்குச் சீனக்கடலில் வடக்குத் தைவானில் (Taiwan) உள்ள ஒரு துறைமுகப்பட்டி னம். தைவானின் முக்கிய கப்பற்படைத் தள மாக உள்ள கீலங்குக்கு (Kilung) அருகில் தங்கம் வெள்ளி, செம்புச் சுரங்கங்கள் உள்ளன. கப்பற் கட்டுந் தொழில் இங்கு விரிவான முறையில் நடை பெறுகிறது. இரசாயனப் பொருள்களும் இயந்திரப் பொருள்களும் நில உரவகைகளும் கடல் சம்பந்த மான பல பொருள்களும் இங்குத் தயாரிக்கப்படுகின் றன. நிலக்கரியும் இதனருகே கிடைக்கிறது. இசு பானியர் (Spaniards) இதை கி.பி. 1626-இல் கைப் பற்றினர். பிறகு, கி.பி. 1641-இல் இது தச்சுக்கார ரின் கைக்கு மாறியது. சீனா கி.பி. 1662-இல் இதைக் கைப்பற்றிக் கொண்டது. மேற்கு நாடுகளு டன் இப்பகுதி கி.பி. 1860-ஆம் ஆண்டிலிருந்துதான் வாணிகத் தொடர்பு கொண்டது. இப்பட்டினம் கி.பி. 1895 முதல் 1945 வரை சப்பானியர் வசமிருந் தது. தெ.பா.

**கீலெளவா** அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒன் றான அவாய்த் தீவில் (Hawaii) உள்ள ஓர் எரிமலை வாய். இதன் தன்மை வியப்புக்குரியது. மௌனா லோவா எரிமலையின் கீழ்ப்புறத்தில் உள்ள இந்தக் கீலெளவா (Kilavea) ஏறத்தாழ 1112 மீட்டர் ஆழங் கொண்டது. இதன் சுற்றளவு 13 கி.மீ. இதில் கொதித்துக் கொண்டிருக்கும் கற்குழம்பு சில காலங்களில் மேலே உயர்ந்து கொப்புளிக்கும். சில காலங்களில் கீழே சென்று மறைந்து போகும். இதன் இத்தன்மையைக் காண்பதன் பொருட்டு பல்வேறு நாட்டு மக்கள் இங்கே வந்து போகின்றனர். உருகி யுள்ள கற்குழம்பு 225 மீட்டர் ஆழத்திற்கு நிறைந் துள்ளது. தெ.பா.



கீலெளவா எரிமலைவாய்

**கீவு** ஐரோப்பாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள உருசியக் குடியரசைச் சேர்ந்த ஒரு பெரிய நகரம். இதுஉக்ரேனியச்சோவியத்துச் சம உடைமைக் குடியரசின் தலைநகர். இது நீப்பர் (Dneper) ஆற்றங் கரையில் உள்ள ஒரு சிறப்புவாய்ந்த துறைமுகமாக வும் விளங்குகிறது. தொழில்துறையிலும், வாணிகத் துறையிலும், பண்பாட்டுத்துறையிலும் இது பெருமை பெற்றுத் திகழ்கிறது. இங்கு நடைபெறும் பல்வேறு தொழில்களில், ஆடை வகைகள், இராசயனப் பொருள்கள், இயந்திரப் பொருள்கள், கட்டட வேலைகளுக்கான பொருள்கள் உற்பத்தி, உலோக வேலை முதலியவை குறிப்பிடத்தக்கவை.

கீவு (Kiev) நகரின் வரலாறு தொன்மை வாய்ந் தது. இது கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலேயே ஒரு வாணிக மையமாக விளங்கியது. இசுகாண்டிநேவி யாவுக்கும் (Scandinavia) கான்சுடாண்டி நோபிளுக்கு மிடையே ஒரு வாணிக மையமாக இது நீண்டகாலம் சிறப்புற்றிருந்தது. இசுலாவு (Slavic) இன மக்கள் அப் பொழுது இங்கே குடியேறி இருந்தனர். முதன்முத லாக ஏற்பட்ட உருசிய இராச்சியத்திற்கு இதுவே தலைநகராகியது. உருசியக் கிறித்தவ சமயத்தின் தலைநகராகவும் இது விளங்கியது. இங்கு 150 க்கு மேற்பட்ட கிறித்தவக் கோயில்கள் இருந்தன. மங்

கோலியர் கி.பி. 1240-இல் இந்நகரைச் சூறையாடி அழித்தனர். கீவு கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை மங்கோலிய அரசுக்குக் கப்பங்கட்ட நேர்ந்தது. பிறகு இலிதுவேனியா (Lithuania) ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இலுதுவேனியாவும் போலந்தும் கி.பி. 1569 -இல் இணைக்கப்பட்டதால், உக்ரேனியப் பகுதியிலிருந்த கோசாக்கு மக்கள் (Cossacks) கி.பி. 1648-இல் போலந்துக்கு எதிராகக் கலகம் செய்யலாயினர். சிறிதுகாலம், கீவு உக்ரேனிய இராச்சியத்தின் மையமாக விளங்கிற்று. உக்ரென் கி.பி. 1954-இல், உருசியாவுடன் இணைக்கப்பெற்ற பிறகு கி.பி. 1686-இல் மாசுக்கோ (உருசிய) அரசு கீவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. கீவு, 1918-இல் புதிதாகத் தோன்றிய உக்ரேனியக் குடியரசுக்குத் தலைநகராகப்பெற்றது. உருசியாவில் 1918 முதல் 1920 வரை நடைபெற்ற உள்நாட்டுப் போர்க்காலத்தில், முறையே செருமனி, வெள்ளை உருசியா (White Russia) போலந்து, சோவியத்து அரசு ஆகியன கீவில் ஆதிக்கம் செலுத்தின. இரண்டாம் உலகப் போரில் செருமானியத் துருப்புகளால் கீவு மக்களுக்குப் பல இடையூறுகள் விளைந்தன; பலர் கொலையுண்டனர். அங்கிருந்த 50,000 யூதர்களும் கொலை செய்யப்பட்டனர்.பாழடைந்த கீவு,1960-க்குப் பிறகே புதிய அமைப்பைப் பெற முடிந்தது. இப்பொழுது கீவு பெரிய இருப்புப்பாதை மையமாகவும் பல்வேறு தொழில்கள் நிறைந்த பெருநகராகவும் சிறப்புற்று விளங்குகிறது. இதன் மக்கள்தொகை 2,248,000 (1981). தெ.பா.

**கீழ்நாட்டுக் கலை நிலையம் பரோடா**: பிராகிருதம், வடமொழி முதலிய பல மொழிகளில் உள்ள ஏட்டுச் சுவடிகளையும், பழைய நூல்களையும் ஒன்று சேர்த்து மக்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து அச்சிட்டு வெளியிடும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்ட இந்நிலையம், இந்தியாவில் பரோடாப் பல்கலைக் கழக நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இங்குப் பல்லாயிரக்கணக்கில் நூல்களும் ஏட்டுச் சுவடிகளும் அச்சுப் பிரதிகளும் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. நூல்கள் அளவில் பெருகியதால், மத்திய நூல் நிலையத்தின் ஒரு பகுதியாக இருந்த இந்த நூலகம், நகர எல்லைக்கு வெளியே கோடீ என்னுமிடத்தில் நிறுவப்பெற்றது. 'கீழ்நாட்டுக் கலைநிலையம்' (Oriental Institute) என்னும் பெயர் 1927-இல் இதற்கு உண்டாயிற்று. இது பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பரோடாப் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையில் அமைக்கப் பெற்றது. இராமாயணம் முதலிய வீரகாவியங்களை ஆராய்ச்சி முறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ள இந்நிறுவனத்தின் சேவை போற்றற்குரியது. இங்குப் பொருட் காட்சிச் சாலையும், மொழிபெயர்ப்புப் பகுதிகளும் உள்ளன. இதன் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மூலகாரணமாக இருந்த மன்னர் மூன்றாம் சயாசிராவின் நுண்மாண் நுழைபுலம் பாராட்டுதற்குரியது. தெ.பா.

**கீழவளைவு**: மதுரை மாவட்டத்தில் மேலூர்-திருப்பத்தூர் சாலையில் மேலூரிலிருந்து 11 கி.மீ. தொலைவில் கீழவளைவு என்னும் ஊர் அமைந்துள்ளது. இங்குள்ள மலையில் குகைகளும் சமணப் படுக்கைகளும் காணப்படுகின்றன. ஒரு குகையின் அருகில் பல சமண உருவச் சிற்பங்களும் அவற்றிற்குக் கீழே வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இங்குப் பிராமிக் கல்வெட்டு 1903-ஆம் ஆண்டிற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளுள் இதுவே முதல் கல்வெட்டாகும். நெடுவேள் என்பவரின் மகனான ஆபுத்திரன் என்பவர் கொடுத்த படுக்கை என்று இக்கல்வெட்டுக் கூறுகிறது. சு.இரா.

**கீழைப்பழுவூர்** திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள பாடல் பெற்ற புண்ணியத்தலம். கீழைப்பழுவூர் திருச்சி-அரியலூர் பெருவழியில் திருச்சியிலிருந்து 53 கி.மீ. தொலைவிலும் அரியலூரிலிருந்து 15கி.மீ.தொலைவிலும் அமைந்துள்ளது.

இவ்வூர் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் வரலாற்றுப் புகழ்மிக்க பழுவேட்டரையர் என்னும் சோழச் சிற்றரசரின் நகரங்களுள் ஒன்றாகவும் திகழ்ந்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மேலைப்பழுவூருக்குக் கிழக்கே 5 கி.மீ தொலைவில்உள்ள கீழைப்பழுவூரில், இரண்டு சிவன் கோயில்களும் ஒரு திருமால் கோயிலும் உள்ளன.

சோழர் காலக் கல்வெட்டுகளில் இவ்வூர், கீழைப் பழுவூர் பிரமதேயமான சிறுபழுவூர் எனக் குறிக்கப் பட்டுள்ளது. இவ்வூர் முன்பு ஆலமரங்கள் நிறைந்த காடாக இருந்த காரணத்தால் ஆலந்துறை எனவும் வழங்கியது. தன் தந்தையின் ஆணைக்கு இணங்கத் தன் தாயைக் கொன்ற பரசுராமன் இவ்வூரிலுள்ள திருவாலந்துறை மகாதேவரை வணங்கிச் சாபநீக்கம் பெற்றான் என்று தலபுராணம் கூறுகிறது.

வரலாற்றுப் புகழ்மிக்க இவ்வூரில், முதலாம் பராந்தகன் தன் சோழப்படை, பாண்டிய-ஈழ கூட்டுப்படைகளை கி.பி. 920-இல் வெள்ளூரில் தோற்கடித்த வெற்றிவிழாவினைக் கொண்டாடி இருக்கிறான். வெள்ளூர்ப் போரில் கலந்துகொண்ட முதன்மையான படைத்தலைவர்கள் கீழைப்பழுவூரையும்

அதனைச் சூழ்ந்துள்ள அரைசூர், பரதூர் முதலான ஊர்களையும் சார்ந்தவர்களே.

இவ்வூரில் உள்ள திருவாலந்துறை மகாதேவர் (வடமூலேசுவரர்) கோயிலும், பசுபதீசுவரர் (மறவனீசுவரம்) கோயிலும் முற்காலச் சோழர் காலத்திய கோயில்களாகும். இவற்றில் வரலாற்றுப் புகழ் மிக்க கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. திருவாலந்துறை மகாதேவர் கோயிலில் உள்ள இறைவர், திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றுள்ளார். சம்பந்தரது காலத்தில் இக்கோயிலில் பூசை மலையாள அந்தணர்களால் செய்யப்பட்டது. இத்திருக்கோயிலில் உள்ள பரகேசரிவர்மனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலம், பழுவேட்டரையன் மறவன்கண்டன் என்னும் தலைவன் இக்கோயிலைப் புதுப்பித்தான் என்பது தெரிகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதியைக் கொண்ட ஒருதளக் கற்றளியான இக்கோயிலில், தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், துர்க்கை, வீரபத்திரர் முதலான அழகிய சிற்பங்களும், திரிபுராந்தகர், சுந்தரமூர்த்தி நாயனார்-முதலான கண்கவர் செப்புத் திருமேனிகளும் கண்டுகளிக்கத்தக்கன.

இக்காலத்தில் பசுபதீசுவரம் என்றும் கல்வெட்டுகளில் மறவனீசுவரம் என்றும் குறிக்கப்படும் மற்றொரு கோயில் திருவாலந்துறை மகாதேவர் கோயிலுக்கு அருகிலேயே அமைந்துள்ளது. இங்கு முதலாம் பராந்தக சோழனின் 29,33,36-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் உள்ளன. இங்குள்ள திருமால் கோயில் காலத்தாற் பிற்பட்டது.

கீழைப்பழுவூர் ஒன்றியத்தின் தலைமையிடமான இவ்வூரில் அரசினர் மேனிலைப் பள்ளியும், ஒரு காவல் நிலையமும், ஒரு துணைப் பதிவாளர் அலுவலகமும் உள்ளன. துவரை, கம்பு, கேழ்வரகு, சோளம், கடலை, வெள்ளரிக்காய் ஆகியவை இவ்வூரில் அதிகமாகப் பயிராகின்றன. ம.இ.

**துணை நூல்**:

**Balasubramaniyam**, S.R., Early Chola Temples, Orient Longmans, New Delhi, 1975.

***கீழையூர்*** தமிழ்நாட்டில் திருச்சி-அரியலூர் சாலையில் திருச்சியிலிருந்து 48 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள ஊர். இவ்வூர் சோழமன்னன் முதலாம் ஆதித்தன் காலத்தில் எடுக்கப்பட்ட இரட்டைக் கோயில்களுக்குப் புகழ் பெற்றது. இவை இரண்டும் மேற்கு முகமாகக் காணப்படுகின்றன. ஒன்று தென்புறமாகவும் மற்றொன்று வடபுறமாகவும் உள்ளது. தென்புறமுள்ள கோயில் 'தென் வாயில் சிரீ கோயில்' என்றும், வடபுறமுள்ளது 'வடவாயில் சிரீ கோயில்' என்றும் கூறப்படுகின்றன.

தென்வாயில் கோயில் அகத்தீசுவரம், அவனிகந்தர்வ ஈசுவரம் என்று பல பெயர்களால் வழங்கப்படுகிறது. இக்கோயிலைச் சோழர் காலத்தில் குறுநில மன்னர்களாக விளங்கிய பழவேட்டரையர்கள் கட்டினர் என்பதை இங்குள்ள கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.


வடவாயில் சிரீ கோயிலை அருணாசலேசுவரர் கோயில் என்றும், சோழீசுவரர் கோயில் என்றும் கூறுகின்றனர் ஆனால் கோயிற் கல்வெட்டு 'வடவாயில்கோயில்' என்று கூறுகிறது. தி.சு.


***கீறல் காசோலை***: காசோலையை வரைந்த பின்னர் அதன் இடப்பக்க மூலையில் இரு இணைகோடுகள் வரையப்படுவதுண்டு. அவ்வாறு வரையப்பட்ட காசோலை கீறலிட்ட காசோலை (Crossed Cheque) எனப்படுகிறது. வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் தாம் பணம் பெறவேண்டும் எனக் கருதியோ தம் அனுமதி பெற்ற ஒருவர் பணத்தை வங்கியிலிருந்து பெற நினைத்தோ காசோலை வரைகிறார். காசோலைகளை வங்கியில் எவர் தருகிறாரோ அவர் பணம் பெறத்தக்க வகையில் வரையலாம். அல்லது அதில் குறிப்பிடப்பட்டிருப்பவரோ அவர் ஆணை பெற்றவரோ பெறும்படியும் வரையலாம். காசோலையை வரைபவர், அதில் குறித்தவருக்கு மட்டுமே பாதுகாப்பாகப் பணம் சென்றடைய வேண்டும் என்று எண்ணும்போது அதில் 'கீறல்' செய்யலாம். அது காசோலைக்கான தனிச்சிறப்பு. காசோலைகள் பணத்திற்கு ஈடாகப் பரவலாக எல்லோராலும், குறிப்பாக வாணிகச்சமூகத்தினரால் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. ஒருவர் யாருக்கு அதைக் கொடுக்க விரும்புகிறாரோ அவர் மட்டுமே பணம்பெறும் ஒரு வகையிலும் அதை வரைய முடியும். அதற்குக் 'கீறல்' (Crossing) முறை ஒரு கருவியாக விளங்குகிறது. கீறலாக வரையப்படும் இணைகோடுகள் '& Co' என்ற சொற்களையாவது 'A/c Payee' என்ற சொற்களையாவது 'Not Negotiable' என்ற சொற்களையாவது உள்ளடக்கி இருக்கலாம். அதற்கான எடுத்துக்காட்டுகளை வரைபடம் 2-இல் காணலாம்.

ஒரு காசோலை கீறல் செய்யப்பட்டுவிட்டால் அதனை எந்த ஒரு தனி ஆளும் வங்கியில் செலுத்திப் பணம் பெற்றுக்கொள்ள முடியாது. அதனைக் குறிப்

வரைபடம்-1.

கீறலிட்ட காசோலை




வரைபடம்-2

பிடப்பட்ட அவர், தாம் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் கொடுத்து, வங்கி மூலமே பணத்தைப் பெறமுடியும். அதாவது, ஒரு கீறலிடப்பட்ட காசோலையை அதில் குறிப்பிடப்பட்டிருப்பவரின் வங்கிக் கணக்கில் போட்டு அவரது வங்கி மூலம் பணத்தை மற்றொரு காசோலையில் எழுதிப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த முறையினால் அக் காசோலைக்குரிய பணம் ஒரு பொறுப்பு வாய்ந்த வங்கியினால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே, தவறு ஏதும் நேரிடின் பணத்தைப் பெற்றுக்கொண்ட வங்கி பதிலளிக்கக் கடமைப்படும்.


கீறலிடப்படாத காசோலையாக இருப்பின் காசோலையைச் செலுத்துபவர் யாராயிருப்பினும் அவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றுவிடலாம். எனவே, காசோலை வரைபவர் தம் பாதுகாப்பைக் கருதி அதைக் கீறலிட்ட பிறகே வழங்க விரும்புவார். ஆனால், வங்கியில் கணக்கு வைத்திருப்பவருக்கு மட்டுமே கீறலிட்ட காசோலையை வழங்க முடியும். மற்றவர் அதைக் கொடுத்துப் பணம் பெற முடியாது.

கீறலிடலைப் பலவகைகளில் வரையலாம். வரைபடத்திலுள்ள முதல் இணைகோடுகள் போன்று இரு கோடுகள் வரைவதோடு மட்டும் நிறுத்திவிடலாம். இரண்டாம்வகை போன்று இரண்டு இணைகோடுகள்

வரைந்து அதனிடையில் '& Co' என்ற சொற்களைக் குறிப்பிட்டால் காசோலையில் குறிப்பிட்டுள்ள பணத்தை ஒரு வங்கி மட்டுமே பெறவேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. காசோலையைப் பெறுபவருடைய வங்கியின் பெயர் தெரியாத நிலையில், அதை எந்த வங்கியும் பெறலாம் என்ற குறிப்பு '& Co' என்பதனால் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு காசோலையை இரு இணைகோடுகளால் கீறலிட்டு அதனிடையில் 'A/C Payee' எனக் குறிப்பிட்டால், அந்தக் காசோலை எவர் பெயருக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அவர் மட்டுமே தம் வங்கியில் செலுத்தித் தம் கணக்கில் பணத்தை வரவு வைத்துக் கொள்ள முடியும். அதனால் யாருக்குப் பணம் வழங்கப்படுகிறதோ அவரைப் பணம் சென்றடைகிறது. ஒரு காசோலையைக் கீறலிட்டு அதனிடையில் 'Not Negotiable' என எழுதினால் அதை வைத்திருப்பவர் மற்ற எவருக்குமே அதை மாற்றித்தர இயலாது.

**சிறப்புக் கீறல்**: கீறல்கள் பொதுக் கீறல் (General Crossing) எனவும், சிறப்புக் கீறல் (Special Crossing) எனவும் இருவகைப்படுகின்றன. ஒரு காசோலையைப் பொதுக் கீறல் செய்தால் எந்த ஒரு வங்கியும் அந்தக் காசோலைக்குரிய பணத்தைப் பெற்றுத் தனது வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைத்திட முடியும். ஆனால், ஒரு காசோலையைச் சிறப்புக் கீறல் செய்துவிடின் அதில் எந்த வங்கியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அந்த வங்கி மட்டுமே தனது வாடிக்கையாளருக்காகப் பணத்தைப் பெற முடியும்.




வரைபடம்-3

எனவே, சிறப்புக் கீறலில் ஒரு வங்கியின் பெயர் குறிப்பிடப்படுவது அவசியமாகிறது. சிறப்புக் கீறலுக்கான எடுத்துக்காட்டுகளை வரைபடம் 3-இல் காணலாம்.

சிறப்புக் கீறலின் சிறப்பு, அதில் ஒரு வங்கியின் பெயர் குறிப்பிடப் பட்டிருத்தலாகும். இல்லையெனில்அவை பொதுக் கீறல்கள் ஆகிவிடும். ஆனால், சிறப்புக் கீறல்களுக்கு இரு இணைகோடுகள் தேவையில்லை. காசோலையின் இடதுபக்க மேல் மூலையில் ஒரு வங்கியின் பெயரை மட்டும் குறிப்பிட்டுவிட்டால் அது சிறப்புக் கீறல் என்னும் தகுதியைப் பெறும்.

ஒரு காசோலையைச் சிறப்புக் கீறல் செய்வதனால் பணம் பாதுகாப்பாக அதற்குரியவரைச் சென்றடைகிறது. ஏனெனில், காசோலையை வரைபவர், பணத்தைப் பெறுபவர் எந்த வங்கியில் கணக்கு வைத்திருக்கிறார் என்பதை அறிந்துகொண்ட பின்னரே அதனைச் சிறப்புக் கீறல் செய்வார். பணத்தைச்சிறப்புக் கீறலில் குறிப்பிடப்பட்டிருக்கும் வங்கி மட்டுமே பெற முடியுமாதலால் அது பாதுகாப்பாக உரியவர் கணக்கில் வரவு வைத்துவிடும். காசோலையை வரைபவர், மேலும் பாதுகாப்பை விரும்பினால், சிறப்புக் கீறலில் வங்கியின் பெயருடன் 'A/C Payee' என்னும் வார்த்தைகளையும் சேர்த்துவிடலாம். அதனால் பணத்தைப் பெறும் வங்கி காசோலையில் குறிப்பிட்டுள்ள பெறுநர் கணக்கிற்காக மட்டுமே பணத்தைப் பெற்று வரவு வைக்க வேண்டிய கடமையை ஏற்றுக்கொள்கிறது. வங்கியின் பெயருடன் 'Not Negotiable' என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலம் காசோலையை வேறு எவருக்கும் புறக்குறிப்பு மூலம் மாற்றிக்கொடுப்பது தடை செய்யப்படுகிறது.அதனை மீறிக் காசோலை மாற்றப்படின் அதைப் பெறுபவர் அதனைக் கொடுத்தவருக்குள்ள உரிமைக் குறைபாடுகளுக்கு உட்பட்டே அதைக் கொள்ள நேரிடும்.

எனவே, ஒரு காசோலையைக் கீறலிடுவதன் மூலம் பணம் பாதுகாப்பாக உரியவரைச் சென்றடைகிறது. கோ.கோ.


**துணை நூல்கள்**:

Banking Law and Practice in India-M.L. Tannan, Thacker&Company Limited, Bombay, 1954.

Radhasamy, M. & Vasudevan,S.V., A Text Book of Banking, Chand & Company, New Delhi, 1974.

***கீறல் குறியீடு*** கருங்கற்சுவர்ப் பகுதிகள், உலோகப் பொருள்கள், மட்கலன்கள் ஆகியவற்

றின் மீது கீறப்படும் கோடு போன்ற குறியீடுகள். வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் இது போன்ற கோடுகளைப் பாறைச் சுவர்களில் கீறியுள்ளமை இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எட்ருசுகர் களும் தாங்கள் பயன்படுத்திய பொருள்களின் மீது இத்தகைய கீறல் குறியீடுகளை (Graffitti) வரைந்துள்ளனர். சில கல்வெட்டுகளும் கீறல் முறை யில் எழுதப்பட்டுள்ளமை அறிஞர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பாம்பி என்னும் இத்தாலிய நகரில் சிலகல்வெட்டுகள் இம்முறையில் எழுதப்பட் டுள்ளன. சிலுவையில் அறையப்பட்ட மனிதன் ஒருவ னின் தலை கழுதை போன்றும் அவனை வழிபடும் வண்ணம் மற்றொரு மனித உருவமும் இம்முறையில் இங்கு வரையப்பட்டுள்ளன. அதற்குக்கீழே அலெக் சாந்தர் தம் கடவுளை வணங்குகிறார் என எழுத் துகள் கீறப்பட்டுள்ளன. இந்தியாவில் பெருங் கற் காலத்தைக் சார்ந்த மட்பாண்டங்களின்மீது இத் தகைய குறியீடுகள் பெருமளவில் காணப்படுகின்றன. மட்பாண்டங்களைச் சூளையில் இட்டுச் சுட்டபின்னர் அதன்மீது கூர்மையான கருவிகள் கொண்டுகீறியுள்ள னர். இவை மட்கலன்களைச் செய்தவர்களின் குறியீடு என்றும், பயன்படுத்துபவர்களின் குறியீடு என்றும், கூட்டக் குறியீடு என்றும் பலவாறு அறிஞர்களால்



கீறல் குறியீடுகள்

கருத்துகள் கூறப்படுகின்றன. எசுதானி (Yazdani) என்ற அறிஞர் கருத்தெழுத்துகளின் வகையைச் சார்ந்தவை இக்குறியீடுகள் எனக் கருத்துத் தெரிவித் தார். சிந்து வெளி நாகரிகத்திலும் இக்குறியீடுகள் காணப்படுகின்றன. இவை இந்தியாவில் சிந்துவெளி நாகரிகத்தில் தோன்றிச் செப்புக்காலத்தில் பரவித் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டில் புகுந் தன என இலால் என்பவர் கருதுகிறார். இக்குறி யீடுகளில் பொதுவான குறியீடுகளாக அம்புமுனை, கோடுகள், ஆங்கில U வடிவ அமைப்பு போன்றவை விளங்குகின்றன. சு. இரா.

***கீன்சின் நுகர்வு உளவியல் விதி***: மன நிறைவைப் பெறவேண்டும் என்பது மனித இயல்பு. அதனைப் பெறப் பண்டங்களையும் பணி களையும் பயன்படுத்துகின்றனர். பணப் பொருளா தாரத்தில் (Money Economy) நுகர்வுக்காகப் பணம் தேவைப்படுகிறது. வருமானம் உயர்வாக இருந்தால் நுகர்வின் அளவும் மிகையாக இருப்பது இயல்பு. வருமானம் உயரும்போது நுகர்வின் அளவு எவ்வாறு மாறுபடும் என்பதனைப் பற்றித் தொன்மைப் பொரு ளியல் அறிஞர்களான கீன்சும், கீன்சுக்குப் பிந்திய பொருளியல் அறிஞர்களும் விளக்கியுள்ளனர். (காண்க: கீன்சும் தொன்மைப் பொருளாதார அறி ஞர்களும்). வருமானத்திற்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பை நுகர்வுச் சார்பு அல்லது நுகர்வு நாட் டம் என்பர். நுகர்வு நாட்டம் குறித்து மூன்று வகைக் கோட்பாடுகளைப் பொருளியல் குறிப்பிடுதல் மரபு. வருமானம் உயரும்போது, நுகர்வின் அளவு பெருகுகிறது. எனினும், வருமான உயர்வுக்குக் குறை வான அளவிலேயே நுகர்வின் அளவு உள்ளது என் பது கீன்சின் நுகர்வு உளவியல் விதியாகும் (Keynesian Psychological Law of Consumption). எடுத்துக்காட் டாக, உரூ. 1000/- வருமானம் பெறும் ஒருவரின் நுகர்வுச் செலவு உரூ. 800/- என்றும், அந்நிலையில் அவரது வருமானம் உரூ. 100/- உயர்கிறது என்றால் அவர்தம் நுகர்வின் அளவு உரூ.800/-இலிருந்து உரூ. 900/- ஆகக் கூடாமல் உரூ. 900/-க்குக் குறை வாகப் பெருகும் என்பது விதி.

**விதியின் எடுகோள்கள்: 1) மற்றவை மாறாதிருக் கின்றன**: மற்றவை மாறாதிருக்கின்றன என்பது பொருளியற் கோட்பாட்டு விதிகளுள் இயல்பாகக் குறிப்பிடப்படும் எடுகோளாகும் (Assumption). அதற்கு வருமானப் பகிர்வு, விலை மாற்றங்கள், மக்கள்பெருக்கம் போன்ற பிற பொருளாதார மாறி களில் எவ்வித முனைப்பான மாற்றமும் இல்லை என்பது பொருள்.

**2) பொருளாதாரம் இயல்பான நிலையில் இருக் கிறது**: தாவும் பணவீக்க நிலையோ (Gallcping Inflation), போர் நிலையோ பொருளாதார மந்த நிலையோ இல்லாமல் பொருளாதாரம் இயல்பான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**தடையற்ற முதலாளித்துவப் பொருளாதாரம்.** பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடா

திருக்கும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

**குறுகிய காலம்**: மற்றவை மாறாதிருப்பது குறுங்கால அளவில் தான். இவ்விதி செயற்படுவது இத்தகைய குறுங்கால அளவில்தான்.

இவ்விதியை மூன்று அடிப்படைகளில் குறிப்பிடலாம். அ) மொத்த வருமானம் உயரும்போது மொத்த நுகர்வு மொத்த வருமானப் பெருக்கத்தைக் காட்டிலும் குறைந்த அளவில் உயருகிறது. ஆ) நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படாத பெருகிய வருமானம் சேமிக்கப்படுகிறது. இ) வருமானம் உயரும்போது நுகர்வும் சேமிப்பும் பெருகுகின்றன.

**உள்ளார்ந்த கருத்துகள்**: குறுங்காலத்தில் நுகர்வு நாட்டம் ஏறத்தாழ மாறாதிருக்கும். எனவே, வருமானம் உயரும்போது இறுதிநிலை நுகர்வு அளவு வருமான உயர்வு அளவிற்குக் குறைவாகவே இருக்கும் $\left(\frac{\Delta C}{\Delta Y} < 1\right)$ எனவே, உற்பத்தியான பண்டங்களின் ஒரு பகுதி நுகரப்படாமல் தேங்கியிருக்கும். இந்நிலை விரும்பத்தக்கதன்று. இந்நிலையைத் தவிர்க்க முதலீட்டுச் செலவுகளைப் பெருக்க வேண்டும். நுகர்வின் அளவை எப்படியாவது பெருக்கத் தவறிவிட்டால் மூலதனத்தின் இறுதிநிலைத்' திறன் குறைந்து, முதலீடு குறைந்து, உற்பத்தியும் குறைந்துவிடும். எனவே, அரசு தலையிட்டாவது முதலீட்டுச் செலவைப் பெருக்கி இவ்விடைவெளியைத் தவிர்க்க வேண்டும்.

வாணிகச் சுழல் ஏற்படுவதற்கானதொரு விளக்கத்தையும் இவ்விதி தெளிவாக்குகிறது. பொருளாதார மலர்ச்சிக் காலத்தில் உற்பத்தியும் வருமானமும் பல்கிப் பெருகி உயர்நிலையை அடையும்போது இறுதிநிலை நுகர்வு குறைவாக இருப்பதால், தேவை குறைந்து இறக்கம் தோன்றுகிறது. அதைப்போன்று பொருளாதார மந்தக் காலத்தின் கீழ்மட்ட நிலையில் (நுகர்வு அளவு ஒரு குறிப்பிட்ட அளவுக்கும் குறையாது என்பதால்) நுகர்வுத் தேவை உயர்வாக இருப்பதால் வளர்ச்சி நோக்கித் திருப்பம் தோன்றுகிறது.

வருமானம் தொடர்ந்து மிகுந்துகொண்டே செல்லும்போது சேமிப்பு அதிகமாகி 'மிகை சேமிப்பு' என்ற விரும்பத்தகாத நிலை தோன்றிவிடலாம்.

வருமானத்தைப் பெருக்க-விரும்பும் நாடுகள் பணத்தின் அளிப்பைப் பெருக்கும்போது கீன்சின் நுகர்வு உளவியலின்படி வருமானப் பெருக்கத்திற்குக் குறைவான அளவிலேயே நுகர்வின் பெருக்கம் நிகழ்கிறது. அதனை ஈடுசெய்ய அரசு முதலீட்டுச் செலவுகளைப் பெருக்கும்போது பெருக்கி (Multiplier) ஊக்கி (Accelerator) ஆகியவற்றின் விளைவுகளினால் வருமானம் பல மடங்கு பெருகிக்கொண்டு செல்லும்.

என்.எஸ்.பா.

**துணை நூல்கள்**:

**Gupta**, R.D.. Elementary Keynesian Economics, Kalyani Publishers, Ludhiana, 1974.

**Keynes**, The General Theory of Employment, Interest and money, Harcourt Brace, New York, 1963.

**Lawrence, R. Klen**, The Keynesian Revolution, Macmillan and Company, London, 1965.

***கீன்சின் பொருளியல்***: சான் மேனார்டு கீன்சு (கி.பி. 1883-1946) 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த ஆங்கிலேயப் பொருளாதார வல்லுநர்களுள் மிகச் சிறந்து விளங்கினார். தலைசிறந்த பொருளியல் அறிஞர்களான ஆதம் சுமித்து (Adam Smith), தாவீது இரிக்கார்டோ (David Ricardo), காரல் மார்க்சு (Karl Marx) போன்ற பேரறிஞர்களுக்கு ஈடாக விளங்கிய கீன்சு தொடக்கத்தில் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்துகளை ஏற்றுக்கொண்டிருந்தார். பின்னர் உலகப் பெருமந்தம் ஏற்பட்டபோது பொருளாதார மந்தத்தையும் வேலையின்மையையும் நீக்குவதற்கான சரியான வழிமுறைகளைத் தொன்மைப் பொருளாதாரக்கோட்பாடுகள் வழங்கவில்லை என்பதை உணர்ந்து, அவர்கள் வழியிலிருந்து விலகித் தம் பொருளாதாரக் கருத்துகளை வகுத்தார். அவர் கருத்துகள் கீன்சின் பொருளியல் (Keynesian Economics) எனப்படுகின்றன. அறிஞர்களுள் சிலர் கீன்சின் பொருளியற் கருத்துகளைச் சீர்தூக்கியும் விளக்கியும் பேரளவில் வளர்ச்சியடையச் செய்துள்ளனர்.

தாமசு இராபர்ட்டு மால்தூசு (Thomas Robert Malthus), தாவீது இரிக்கார்டோ போன்றோர் தவிர ஏனைய மரபுவழிப்பொருளியலார் சே.பி.சே.யின் (J.P. Say) அங்காடி விதியில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் வருமானம், விளைவு, வேலை ஆகியவற்றை மாற்றுவதற்கு எவ்வித திறனும் இல்லாமல் பணம் வெறும் மாற்றுக் (Exchange) கருவியாக மட்டுமே பயன்படத்தக்கது என்றும், ஒவ்வோர் அளிப்பும் அதனதன் தேவையை ஏற்படுத்திக்

கொள்ளுமாதலால் பொதுவான மிகை உற்பத்தி (Surplus Production) ஏற்பட வாய்ப்பில்லை என்றும் கருதினர். இக்கருத்துகள் உலகப் பெருமந்தக் காலத்தில் பொய்த்துவிட்டன. எனவே, 1936-ஆம் ஆண்டில் கீன்சு 'பொதுக் கோட்பாடு' (General Theory) என்று சுருக்கமாகச் சொல்லப்படும் 'வேலை, பணம், வட்டி ஆகியவை பற்றிய பொதுக்கோட்பாடு' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நூலில் தம் பொருளாதாரக் கருத்துகளை வெளியிட்டார்.

**பொருளாதாரத்தின் சமநிலை:** சமநிலை (Equilibrium) என்பது அசைவுறாத ஒரு நிலை. இரு சக்திகள் இயங்கும்போது அவை ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் நிலை சமநிலை. மிகையான உயர் நிலைப் பயன்பாட்டைப் பெற்று, நுகர்வின் அளவை மிகுக்கவோ குறைக்கவோ விரும்பாதிருக்கும் நிலை நுகர்வோர் சமநிலை (Consumer's Equlibrium) எனப்படும். அதைப்போன்று மொத்த உற்பத்தி மிகையான உயர்நிலையில் இருக்கும்போது, நாட்டில் உள்ள உற்பத்தியாளர்கள் உற்பத்திஅளவைப் பெருக்கவோ குறைக்கவோ விரும்பாதிருக்கும் நிலை இருக்கும். அது நாட்டின் பொதுச் சமநிலையாகும். இச் சமநிலையைப் பெறுவது பொருளாதார அடிப்படைக்குறிக்கோள்களுள் ஒன்றாகும்.

**புதிய பொருளியல்:** பொருளாதாரம் பொதுச் சமநிலையை எவ்வாறு அடைய இயலும் என்பதை இரு வழிகளில் கீன்சு விளக்குகிறார். முதலாவது, உறுதித் தேவைக் (Effective Demand) கோட்பாட்டு அடிப்படை இரண்டாவது சேமிப்பு முதலீட்டுக் கோட்பாட்டு அடிப்படை. புதிய பொருளியல் ஆய்வு அணுகுமுறையின் காரணமாகக் கீன்சின் பொருளியற் கருத்துகளைப் புதிய பொருளியல் என்றும், பொருளாதாரப்புரட்சி என்றும் குறிப்பிடுகின்றனர்.

**குறுங்கால அடிப்படை:** கீன்சின் பொருளியல் நறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டது. மூலதனம், மக்கள்தொகை, தொழில் நுட்ப அறிவு, தொழிலாளர் திறமை போன்றவற்றில் குறுங் காலத்தில் மாற்றம் எதுவும் முனைப்பாக இருக்காது. கீன்சின் கருத்துப்படி வேலையின் அளவு பெருகினால் நாட்டு வருமானம் உயரும்; குறைந்தால் நாட்டு வருமானம் குறையும். இந்த அடிப்படையில் கீன்சின் கோட்பாட்டை வேலை வரையறைக் கோட்பாடு என்றும், வருமான வரையறைக் கோட்பாடு என்றும் குறிப்பிடுகின்றனர்.

**வேலைக் கோட்பாடு:** கீன்சின் இக் கோட்பாடு உறுதித் தேவை என்ற கருத்தின் அடிப்படையில் உள்ளது. வாங்கும் திறனுடன் கூடிய விருப்பம் தேவை. உற்பத்தியாகும் பண்டங்களுக்காகவும் பணிகளுக்காகவும் மக்கள் செலவிடும் தொகையே உறுதித்தேவை. தொழில் முனைவோரின் (Entrepreneurs) விற்பனைத் தொகையாகிய இத்தொகை யானது கூலி, ஆதாயம், வாரம், வட்டி என்ற மொத்த வேலைக்குச் சமமாகிறது. எனவே, உறுதித் தேவை (ED), நாட்டு வருமானம் (Y), நாட்டு உற்பத்தியின் மொத்த மதிப்பு (O), நுகர்வுப் பண்டங் களுக்காகவும், முதலீட்டுப் பண்டங்கள் பணிகளுக் காகவும் செலவிடப்படும் மொத்தச்செலவு (C+I), வேலை (Emp.) ஆகிய எல்லாம் ஒன்றுக்கொன்று சமமாகின்றன.


இதை

$$ED = Y = O;\ (C+I) = Emp.$$ எனலாம்.

உறுதித்தேவை = நாட்டு வருமானம் = நாட்டு விளைவு = நுகர்வு. முதலீட்டுச் செலவுகள் = வேலை.

உறுதித் தேவையை மொத்த அளிப்பும் மொத்தத் தேவையும் வரையறுக்கின்றன. கீழ்வரும் வரைபடங்கள் மூலம் மொத்த அளிப்பு (Aggregate Supply), மொத்தத் தேவை ஆகியவற்றை விளக்குதல் எளிது.

**மொத்தஅளிப்பு:** குறிப்பிட்ட அளவு தொழிலாளர்களைப் பயன்படுத்துவதற்குக் குறைந்த அளவு எவ்வளவு வருவாயைத் தொழில் முனைவோர் பெறவேண்டும் என்பதை மொத்த அளிப்பு குறிப்பிடுகிறது.




வரைபடம் - 1.

எடுத்துக்காட்டாக, OC அளவு வருவாயைத் தொழில் முனைவோர் பெறவேண்டும் என முடிவு எடுத்தால், ON அளவு தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பர். அதாவது, பல்வேறு வேலை அளவுகளில் தொழில் முயல்வோர் குறைந்த அளவு, எவ்வளவு வருவாயைக் கட்டாயமாகப் பெறுவர் என்பதை AS என்னும் மொத்த அளிப்பு வளைகோடு காட்டுகிறது. தொடக்க நிலைகளில் வேலையின் அளவு பெருகப் பெருக உற்பத்திச் செலவு மெதுவாக உயரும். அதனால், உயர் அளவுகளில் உற்பத்திச் செலவு விரைந்து பெருகும் என்பதால் AS கோடு தொடக்கத்தில் மெதுவாகவும், பின்னர் வேகமாகவும் உயருகிறது. அது ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்தபின்னர், OY அச்சுக்கு இணைகோடாக மாறிவிடுகிறது. படத்தில் $E_2$ என்ற புள்ளிக்குப் பின் AS கோடு X அச்சுக்குச் செங்குத்துக் கோடாகவும், Y அச்சுக்கு இணைகோடாகவும் மாறி விடுகிறது. அதாவது, மொத்தத் தேவையில் தோன்றும் உயர்வு குறிப்பிட்டதொரு நிலைக்குப் பின் மொத்த அளிப்பைப் பெருக்காது. இந்நிலையில் ($ON_3$ அளவில்) முழு வேலை நிறைவு நிலை (Full Employment) நிலவும்.

மொத்த அளிப்பு குறுங்காலத்தில் மாறாதிருக்கும். எனவே உறுதித் தேவையில் மாற்றத்தை ஏற்படுத்த மொத்தத் தேவையை மாற்றுதல் இன்றியமையாததாகிறது.


**மொத்தத் தேவை**: பல விலைகளில் நுகரப்படும் பண்டங்களின் அளவுகளைக் காட்டக்கூடியது தேவைப்பட்டியல். தனிப்பட்ட பண்டங்களின் அளவுகளைக் கிலோ, கண்டி (Tonne) போன்ற ஏதாவதொரு அளவையினால் குறிப்பிடலாம். ஆனால், நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின், பணிகளின் உற்பத்தி அளவுகள் எல்லாவற்றையும் ஒரேயொரு அளவையினால் குறிப்பிடுதல் இயலாது என்பதால் உழைப்பின் உள்ளீட்டு(Input) அளவைக் கீன்சு பயன்படுத்துகிறார். குறிப்பிட்ட அளவு உழைப்பாளர்களைப் பயன்படுத்தும்போது உற்பத்தியாகும் பண்டங்களை விற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் மொத்த விற்பனைத் தொகையை மொத்தத் தேவை விலை (Aggregate Demand Price) என்றார். வரைபடம் 1-இல் ON அளவு தொழிலாளர்களைப் பயன்படுத்தும்போது, எதிர்பார்க்கப்படும் மொத்தத் தேவை விலை OH. இவ்வாறு பலவிதமான வேலை நிலைகளில் உற்பத்தியாகும உற்பத்தியை விற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் விற்பனைத் தொகைகளின் அட்டவணையை அமைக்கலாம். அதனடிப்படையில் மொத்தத் தேவைக் கோட்டைப் பெறலாம். வேலையின் அளவு உயர்ந்தால் மொத்தத் தேவை விலை உயர்கிறது; குறைந்தால் குறைகிறது.

வேலையின் அளவு உயரும்போது தொடக்க நிலையில் தொழில் முனைவோர் எதிர்பார்க்கும் தொகைகள் மிக வேகமாக உயர்ந்து, பின்னர்க் குறைந்துசெல் வேகத்தில் பெருகியும் செல்வதால் மொத்தத் தேவைக் கோடு தொடக்க நிலைகளில் முனைப்பாக உயர்ந்தும், பின்னர் மெதுவாக உயர்ந்தும் செல்கிறது.

குறுங்காலத்தில் மொத்த அளிப்பு மாறாதிருக்குமாதலால், மொத்தத் தேவையை மாற்றியமைப்பதன் மூலம், அதாவது வேலையின் அளவைப் பெருக்குவதன் மூலம், உறுதித்தேவையை (நாட்டு வருமானத்தை) மாற்றியமைக்கலாம் என்பது கீன்சின் வேலைக் கோட்பாடாகும்.

**வருமானக் கோட்பாடு**: நாட்டின் வருமானத்தை மொத்தத் தேவையும், மொத்த அளிப்பும் வரையறுக்கின்றன. ஆனால், ஒரு நாட்டின் மொத்த உற்பத்தி ஆற்றல் முழுவதும் பயன்படும் வகையில் மொத்த அளிப்பு இருக்க வேண்டும் என்ற விதி இல்லை. அதாவது, மொத்தத் தேவை பெருகும்போது மொத்த அளிப்பும் பெருகுவதற்கான வாய்ப்புகள் இருக்கலாம். இருப்பினும், குறுங்காலத்தில் மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் சமமாக இருக்கின்றன.

**மொத்த அளிப்பு**: மொத்தம் உற்பத்தியான பண்டங்களும் பணிகளும் நுகரப்படுகின்றன அல்லது சேமிக்கப்படுகின்றன. எனவே $Y = C + S$. ($Y$ = நாட்டு வருமானம், $C$ = நுகர்வு, $S$ = சேமிப்பு).




வரைபடம் - 2

இப்பண்டங்களையும் பணிகளையும் பணத்தின் அடிப் படையில் குறிப்பிடும்போது அதுவே நாட்டு வருமான மாகும். படத்தில் OR கோடு 45° கோடாகும். இதுவே மொத்த அளிப்புக் கோடு. உற்பத்தியாகும் பண்டங் களும் பணிகளும் நுகரப்படுகின்றன, சேமிக்கப்படு கின்றன (Y = C + S).

**மொத்தத் தேவை**: தனியார்களும் அரசும் நுகர் வுக்காகவும் முதலீட்டிற்காகவும் பணத்தைச் செலவிட விரும்புவதை மொத்தத் தேவை எனலாம். படத் தில் நுகர்வை மட்டும் காட்டுவது C கோடு. மொத் தத் தேவையை C + I கோடு காட்டுகிறது.


மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் சம மாக இருக்கும் நிலை சமநிலை. படத்தில் E என்ற புள்ளியில் மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் சமநிலையில் உள்ளன.

குறுங்காலத்தில் மொத்த அளிப்பு மாறாதிருக்கு மாதலால் மொத்தத் தேவையை மாற்றியமைப்பதன் மூலம் (உறுதித் தேவையை) நாட்டு வருமானத்தை மாற்றியமைக்கலாம் என்பது கோட்பாடு.

**மொத்தத் தேவையை வரையறுக்கும் காரணிகள்**: முதலீட்டுத் தேவையும் நுகர்வுத் தேவையும் மொத் தத்தேவையை வரையறுக்கின்றன. நுகர்வின் அளவை வருமானமும் நுகர்வு நாட்டமும் வரையறுக்கின்றன. நுகர்வுநாட்டம் குறுங்காலத்தில் ஏறத்தாழ மாறா திருக்கும் என்பதால் குறுங்காலத்தில் வருமான மாற் றம் நுகர்வின் அளவை மாற்றுவதற்குத் துணையாக இருக்கும். முதலீட்டை நிதி முதலீடு, உண்மை முத லீடு என இருவகைப்படுத்தலாம். முன்னரே இருக் கும் அரசுக் கடன் ஆவணங்களையும் பிற நிறுவனங் களின் பங்குகளையும் வாங்குவது நிதி முதலீடு எனப் படும். புதிதாகத் தொடங்க விருக்கும் நிறுவனங்களின் பங்குகளையும் புதிதாகத் தொடங்கப்படும் அரசுக் கடன் ஆவணங்களையும் வாங்குவது உண்மை முத லீடு (Real Investment). முதலீட்டை உண்மை முத லீடு என்ற அடிப்படையில் கீன்சு விளக்குகிறார். முத லீட்டைத் தூண்டிவிடப்படும் முதலீடு (Induced in-vestment) என்றும், தானே இயங்கும் (Autonomous) முதலீடு என்றும் இருவகைப்படுத்தலாம். முன்னது ஆதாயத்தை நோக்கமாகக் கொண்டிருப்பது; பின் னது ஆதாயத்தை அடிப்படை நோக்கமாகக் கொண் டிருப்பதன்று. நாட்டில் பொருளாதார மந்தநிலை இருக்கும்போது தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப் படமாட்டா. எனவே, அரசு அதன் முதலீட்டு முயற்சி களால் பொருளாதார மந்தநிலையைத் தவிர்த்தல் வேண்டும் என்பது கீன்சின் அறிவுரை.

தனியார் முதலீட்டை வட்டிவீதமும் மூலதனத் தின் இறுதிநிலைத் திறனும் வரையறுக்கின்றன.குறிப் பிட்ட மூலதனச் சொத்திலிருந்து எதிர்பார்க்கும் வரு மானம், அம்மூலதனச் சொத்தின் விலை ஆகிய இரு காரணிகளும், மூலதனத்தின் இறுதிநிலைத் திறனை வரையறுக்கின்றன. பணநீர்மைத் (Liquidity of Money) தன்மையை விட்டுக் கொடுப்பதற்குக் கொடுக்கப்படும் ஊதியம் வட்டி என்ற கருத்தைக் கீன்சு, சமுதாயத்தில் இருக்கும் மொத்தப் பணத்தின் அளிப்பும், பணத்தைக் கையிருப்பாக வைத்துக் கொள்வதற்கான மக்களின் விருப்பமும் வட்டியை வரையறை செய்கின்றன என்று குறிப்பிட்டார். பேர நாட்டம் (Transaction Motive), முன்னெச்சரிக்கை நாட்டம், ஊக வாணிக நாட்டம் (Speculative Motive) ஆகிய நாட்டங்கள் பணக் கையிருப்பு விருப்பத்தை வரையறை செய்வனவாகவும் குறிப்பிட்டார்.


**குறைந்த வேலைச் சமநிலை**: மொத்த அளிப்பும் மொத்தத் தேவையும் எப்போதும் சமமாக இருக்கும் என்று தொன்மைப் பொருளியலார் கருதினர்.எனவே, பொருளாதாரம் எப்போதும் முழு வேலைச் சமநிலை யிலேயே இருக்கும் என்றும் அவர்கள் கருதினார்கள். ஆனால் மொத்தத் தேவை, மொத்த அளிப்பைவிடக் குறைவாக இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு என்றும், இந்நிலைதான் பொதுவாகக் காணப்படும் நிலை என்றும், இந்நிலையைக் குறைந்த வேலைச் சமநிலை (Under Employment Equlibrium) என்றும் கீன்சு கூறினார். எந்த ஒரு நிலையில் மொத்தத் தேவை மொத்த அளிப்பைப் பெருக்க இயலாதோ அந்த நிலையில் உள்ள வேலையை முழு வேலை நிலை என்று கீன்சு குறிப்பிட்டார்.




வரைபடம் - 3

கீன்சின் வேலை-வருமானக் கோட்டை அட்டவணை 1 விளக்குகிறது.

அட்டவணை 1.



மொத்த அளிப்பும் (AS) மொத்தத் தேவையும் (AD) E என்ற புள்ளியில் சமநிலையில் உள்ளன. ஆனால், இது குறைந்த வேலைச் சமநிலை ஆகும். ஏனெனில், இந்நிலையில் மொத்தத் தேவையைப் பெருக்குவதன் மூலம் மொத்த அளிப்பையும் பெருக்க முடியும். ஆனால் E, என்ற சமநிலை முழுவேலைச் சமநிலை. இதற்கு அதிகமாக மொத்தத் தேவையைப் பெருக்கும்போது மொத்த அளிப்புப் பெருகுவதற்கான வாய்ப்பு இல்லை.

**திறனாய்வு**: பொருளாதாரங்கள் யாவும் எப்போதும் முழுவேலைச் சமநிலையில் இருக்கும் என்ற பழைய கருத்தை மாற்றி, பொருளாதாரங்கள் பொதுவாகக் குறைந்த வேலைச் சமநிலையிலே இருக்கின்றன என்பதைக் கீன்சு தெளிவுபடுத்தினார்.

பொருளாதார மந்தக் காலங்களில் பணக்கூலியைக் குறைத்தால் அது நிலைமையை மேலும் கெடுத்துவிடும் என்பதைக் குறிப்பிட்டு, மக்களின் வாங்கும் திறனை மிகுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய தேவையை வலியுறுத்தினார்.

நுகர்வு நாட்டம் குறுங்காலத்தில் மாறாதிருக்குமாதலால் மொத்தத் தேவையைப் பெருக்க முதலீட்டை மேற்கொள்ளுவதன் தேவையை வலியுறுத்தினார்.

மரபு வழியினின்றும் பிறழ்ந்து செல்லத்தக்க இன்றியமையாத கண்டுபிடிப்பாகப் பெருக்கியை (Multiple) அறிஞர் பெருமக்கள் குறிப்பிடுகின்றனர்.

வேலையை வரையறுப்பதில் முதலீட்டிற்குக் கீன்சு சிறப்பிடம் அளித்தார்.

அரசுத் தலையீட்டின் (Government Intervension) தேவை, தேவைக்கேற்பப் பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டத்தைப் பயன்படுத்தவேண்டிய தேவை, பொருளாதார முன்னேற்றத்திற்கு நிதிக் கொள்கையின் சிறப்பான பங்கு போன்ற பலவற்றைக் கீன்சின் பொருளாதாரம் வலியுறுத்துகிறது.

சிறப்புகள் பல இருப்பினும் கீன்சின் கோட்பாடு நன்கு வளர்ச்சி பெற்ற தொழில்மயமான நாடுகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதென்பதால் பின்தங்கிய நாடுகளுக்கும் வளரும் பொருளாதாரங்களுக்கும் பொருத்தமற்றதாக உள்ளது என்ற குறையையும் பல பொருளியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கீன்சின் கோட்பாட்டில் குறைகள் பல இருப்பினும் அதன் நிறைகள் பல வழிகளில் பாராட்டத்தக்கனவாக இருக்கின்றன என்பது பலருடைய கருத்து.

என்.எஸ்.பா.

**துணை நூல்கள்** :


**Gupta, R.D.**, Elementary Keynesian Economics, Kalyani Publishers, New Delhi, 1974.

**Gupta, R.D.**, Keynes and Keynesian Economics, Kalyani Publishers, New Delhi, 1983.

**Hansen, A.H.**, Guide to Keynes, New Delhi, 1953.

**John Maynard** Keynes, The General Theory of Employment interest and money, Macmillan & Co., Ltd, London, 1964.


**கீன்சு, சான் மேனார்டு** தம் பொருளியற் கோட்பாடுகளாலும் நடைமுறைக் கொள்கைகளாலும் 20-ஆம் நூற்றாண்டுப் பொருளியல் வரலாற்றில் தலைசிறந்த இடத்தைப் பெற்றவர். கீன்சு சான் மேனார்டு (Keynes, John Maynard) பிரிட்டன் நாட்டுக் கேம்பிரிட்சில் (Cambridge) கி.பி. 1883-ஆம் ஆண்டு, சான் நெவில் கீன்சு (John Neville Keynes), பிளாரன்சு அடா (Florence Ada) ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தந்தையார் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகப் பதிவாளராகவும், தாயார் அப்பல்கலைக்கழக மாணவியாகவும் பின்னர்க் கேம்பிரிட்சு நகரவைத் தலைவியாகவும் (Mayor) திகழ்ந்தமையால் கீன்சு சிறந்த குடும்ப மரபுப் பின்னணியுடன் வளர்ந்து, சிறந்த கல்வி அறிவையும் உயர்ந்த சமூகப் பண்பாட்டையும் பெறறார்.



கீன்சு

கீன்சு, இளவயதிலேயே உயர்தகுதி மிக்கவராய் இதோன் (Ethon) என்னும் சிறப்புப் பொதுப் பள்ளியில் கல்வி பயில்வதற்குரிய உதவித்தொகையினைப்

பெற்றுக் கல்வி பயின்றார். பின்னர்க் கேம்பிரிட்சு நகரிலுள்ள அரசர் கல்லூரியிலும் (King's College) உயர் தகுதிக்கான உதவித் தொகையினைப் பெற்றுக் கணிதவியலில் இளங்கலைப் பட்டத்தைப் பெற்றார். இக்கல்லூரியின் புளூம்பெரி (Bloombery) எனப்படும் ஆய்வறிவாளரின் குழுவில் உறுப்பினராகப் பங்கு பெற்றுப் பல்நோக்குக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றார். அரசுப் பணியில் (Civil Service) சேர்வதற்கான தேர்வுக்காக ஓராண்டு பொருளியலைத் துணைப்பாடமாகக் கற்றார்.

அரசுப் பணியைப் பொறுப்பாக ஏற்று 1906-ஆம் ஆண்டு இந்தியா அலுவலகத்தில் (India Office) இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். அக்காலத்தில் உயர்கல்வித் தகுதிக்காகத் தம் சொந்த தனிப்பட்ட முயற்சியினால் நிகழ்தகவு தொகுத்தறி கோட்பாடு Probability & Induction Theory) பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதன் முடிவுகளை ஆய்வு ஏடாக (Dissertation) அரசர் கல்லூரிக்கு அனுப்பினார். அவ்வாய்வு முடிவுகள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. கீன்சு அங்குப் பணியாற்றவும் மேற்படிப்பைத் தொடரவும் அமர்த்தப்பட்டார். அப்போது ஆல்பிரட்டு மார்சலின் (Alfred Marshall) வேண்டுகோளுக்கிணங்கி அரசர் கல்லூரிப் பொருளியல் துறையின் பேராசிரியராக 1908-இல் பணியாற்றத் தொடங்கி, அதுமுதற்கொண்டு பொருளியல் ஆய்வுகளில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்தினார்.

கீன்சு, இந்தியா அலுவலகத்தில் பணியாற்றிய பட்டறிவை அடிப்படையாகக் கொண்டு‘ இந்தியச் செலாவணியும் நிதியும்’ (Indian Currency & Finance) என்னும் தலைப்பில் தாம் எழுதிய முதல் நூலை 1913-இல் வெளியிட்டார். அந்நூல் கீன்சின் பிற்காலத்தைய பொருளியல் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறுபாடான கருத்துகளைக் கொண்டிருந்தாலும் அவரின் புதுப் பொருளியல் கருத்து வளர்ச்சிக்கும் எழுதும் புலமைக்கும் முன்னோடியாகவும் ஊக்கத்தையளிப்பதாகவும் விளங்கியது. இந்திய நிதி மற்றும் செலாவணிக்கான மன்னர் ஆணையத்தின் (Royal Commission on Indian Finance & Currency) செயலராக (Secretary) கீன்சு 1913-இல் ஆசுடன் சேம்பர்லினின் (Austen Chamberlin) தலைமையின் கீழ்ப் பணியாற்றினார். அவ்வாணையத்தின் அறிக்கையில் கீன்சின் கருத்துகள் தலையாய இடம்பெற்றன.

முதலாம் உலகப்போர் தொடங்கியவுடன் பிரிட்டனின் கருவூலத்தில் (Treasury) பணியாற்றும்படி கீன்சு 1915-இல் அமர்த்தப்பட்டார். அந் நெருக்கடிக் காலப் பணியைப் பொறுப்புடனும் சிறப்புடனும் நிறைவேற்றிக் குறுகிய காலத்தில் பெரும் பேரும் புகழும் பெற்றார். முதலாம் உலகப்போர் முடிந்த காலத்திற்குப் பின்னரே பன்னாட்டுச் செலாவணித் துறையின் (Foreign Exchange) முழுப் பொறுப்பும் கீன்சிடம் ஒப்படைக்கப்பட்டது. பாரிசில் நடந்த சமாதான மாநாட்டில் (Paris Peace Conference) பிரிட்டனின் கருவூலப் பேராளராகக் கீன்சு பங்கேற்றார். மாநாட்டில் இவர் பிரிட்டனின் நேசக் கொள்கையை (Allied Policy) எதிர்த்தார். போரில் வீழ்ச்சியுற்ற எதிரி (Follen Foe) நாடுகளுக்குக் கருணை காட்டின சமாதான ஒப்பந்தம் (Peace Treaty) அறநெறி வழியில் பெருந்தகைமையுடையதாயினும் அந்நாடுகளுக்குப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் இழப்பீட்டுத் தொகை (Reparation) அளித்தல் கூடாது என வன்மையாகக் கண்டித்தார். அத்தகைய நடவடிக்கை ஐரோப்பிய நாடுகளுக்குப் பேரிழப்பை உண்டுபண்ணும் என்பதனை விளக்கி அக்கருத்தில் இறுதிவரை உறுதியாக நின்றார். அப்போதைய தலைமை அமைச்சர் தாவீது இலாயிடு சார்சு (David Lloyd George)தம் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளாததால்,இவர் 1919-இல் தாமாகவே அரசுப் பணியிலிருந்து விலகி மீண்டும் பல்கலைக் கழகத் துறைப் பணியில் சேர்ந்தார்.

அரசுப் பணியிலிருந்து விலகிய மூன்று திங்களுக்குள் கீன்சு,சமாதான ஒப்பந்தம் குறித்த தம் ஆய்வுக் கருத்துகளைச் ‘சமாதானத்தின் பொருளாதார விளைவுகள்’ (The Economic Consequences of the Peace) என்னும் நூலாக வெளியிட்டார். அந்நூல் குறுகிய காலத்தில் உலகளவில் விற்கப்பட்டு அக்காலத்தைய தலைசிறந்த பொருளியல் படைப்பு (Creative Masterpiece) நூலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து அரசர் கல்லூரியின் கல்விசார் பணியில் ஈடுபட்ட கீன்சு,அக்கல்லூரியின் தலைமைப்பொருளாளர் (Bursar) பொறுப்பையும் ஏற்றார். ஐரோப்பாவின் பொருளாதார நிலை என்ற மையக் கருத்தில் இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதினார். அவற்றுள் 1922-இல் வெளிவந்த ஒப்பந்தத்தின் ஒரு மறு ஆய்வு (A Revision of the Treaty) என்ற நூல் குறிப்பிடத்தக்கதாகும். இவர் 1925-இல் உருசிய நாட்டு நடனக் குழுவைச் (Ballet) சேர்ந்த இலிதியா லோபோகோவாவை (Lydia Lopokova) மணந்தார்.

முதலாம் உலகப்போர் முடிவுற்றவுடன் இவர் தம் குடும்ப உறவினரிடமிருந்து நிதி உதவி பெற்று, அயற் செலாவணி நடவடிக்கைகளிலும் (Foreign Exchange Deals) பின்னர் அயல் நாட்டுப் பொருள்களிலும் இருப்பு அங்காடிப் பிணை

யங்களிலும் (Commodities & Stock Exchange Securities) முதலீடு செய்தார். அது 1937-ஆம் ஆண்டில் 2,50,000 மதிப்பு மூலதனமுடைய ஒரு தனியார் நிறுவனமாக நிறுவப்பட்டது. அரசர் கல்லூரி நிதி நிலைமையும், கீன்சின் பொருளாளர் தலைமையின் கீழ் முதலீடு பன்முகப்படுத்தப்பட்டு உயர்நிலை அடைந்தது. பல தனியார் நிறுவனங்களுக்கு இவர், நிதி-முதலீட்டு ஆலோசகராகப் பணியாற்றினார். இலண்டனில் மூன்று முதலீட்டு அற நிலையங்கள் (Investment Trust) நிறுவினார். இலண்டனின் வணிக நிதித் துறையிலும் கேம்பிரிட்சுக் கல்வித் துறையிலும் முனைந்து செயலாற்றும் வல்லுநராக இவர் விளங்கினார்.

கீன்சு, 1920-ஆம் ஆண்டு வாக்கில் ஐரோப்பியப் பொருளாதாரச் சிக்கல்களையும் அரசின் கொள்கைகளையும் இணைத்து, அவற்றின் செயற்பாட்டுக் கொள்கைக் கோட்பாடுகளை விரிவாக எதிர்த்தும் பாராட்டியும் ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதினார். பணவீக்கத்தினால் (Inflation) நிகழக்கூடிய தீய பொருளாதார விளைவுகளை எச்சரிக்கையாக எழுதிய கீன்சின் ஆய்வுகள், அவரது பிற்காலப் பணவியல் கருத்து வளர்ச்சிக்கு அடிப்படையாக உதவின. பிரிட்டனில் முதலாம் உலகப்போருக்குப் பின்னர் மிகை வேலையின்மை நிலவியதால் கீன்சு பணவாட்டத்தைக் (Deflation) குறித்த ஆய்வுகளில் கவனம் செலுத்தினார். அவற்றின் முடிவுகள் 1923-ஆம் ஆண்டில் பணவியல் சீர்திருத்த ஆய்வுக் கட்டுரைகளாக (Tract on Monetary Reform) வெளியிடப்பட்டன. அந்த ஆய்வுகளின் மூலம் அரசின் பொதுத் துறைப் பணிகள், வேலையின்மையைக் குறைப்பதற்குப் பேருதவியாயிருக்கும் என்பதனை அறிந்தார். ஆனால், அக்கருத்துகளை அக்காலத்தைய பழமைப் பற்று மிக்க பொருளியலார் (Conservative Economists) ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் பொதுத்துறை மூலம் அரசின் செலவு பெருகுதல், தனியாரின் உற்பத்தி பெருக்குதலுக்கான முதலீட்டுப் பணத்தைப் பாதிக்கும் எனக் கருதினர். எனினும், கீன்சின் பொதுத்துறைப் பணி குறித்த கருத்தைத் தாவீது இலாயிடு சார்சு வரவேற்றார். அதனால், முன்பு கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிந்த இருவரும் ஒன்று சேர்ந்தனர்.

கீன்சு தம் வாழ்நாள் முழுவதும் தாராளக் கட்சி (Liberal Party) உறுப்பினராகவே இருந்தார். பொருளியலின் அடிப்படைக் கோட்பாடுகளில் வளர்ச்சி தேவை என்பதனை உணர்ந்து அதற்கான ஆய்வு முயற்சிகளில் 12 ஆண்டுகள் கீன்சு தம்மை முற்றிலும் ஈடுபடுத்தினார். பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றைத் தீர்க்கப் பல வழிமுறைகளைப் புதிய கோட்பாடுகளின் அடிப்படையில் (Theoretical Foundations) இரு பெரும் நூல்களில் வெளியிட்டார். அவை 1930-இல் இரு தொகுதிகளாக வெளியான பணவியல் செயற்பாட்டுக் கோட்பாடுகள் (Treatise on Money), 1936-இல் வெளியான வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு (General Theory of Employment Interest and money) ஆகிய இரு நூல்களாகும். அந்நூல்கள் கீன்சின் முந்தையகால வெயீடுகளினின்று முற்றிலும் வேறுபட்டன. ஆழ்ந்த ஆராய்ச்சி, நீண்ட காலக் கடின உழைப்பு ஆகியவற்றின் விளைவாக வெளிவந்த செறிந்த கோட்பாடுகளை இந்நூல்கள் தம்முள் அடக்கின. ஆடம் சுமித்து (Adam Smith), தாவீது இரிக்காடோ (David Recardo) போன்றோரின் கருத்துப் படைப்புக்குத் தம் ஆய்வு முடிவுகள் ஈடு கொடுக்கும் எனவும், பொருளியற் கருத்து வளர்ச்சியில் அவை ஒரு தனி இடம்பெறும் எனவும் கருதி அந்நூல்களைக் கீன்சு எழுதினமையால், அக்குறிக் கோள்களுக்குரிய கருத்துச் செறிவுடன் அவை அமைந்துள்ளன. பொருளியற் கோட்பாடுகளிலும் அவை தலைசிறந்து விளங்குகின்றன. கீன்சின் கருத்துகள் தூய பணவியல், பொதுப் பொருளியல், அடிப்படைப் பொருளியல், புரட்சிகரமான அணுகுமுறை ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தன.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் கீன்சு கருவூலப்பணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டு அமர்த்தப்பட்டார். அரசினர், பொருளியல் சார்ந்த அனைத்துக் கொள்கைகளையும் உருவாக்குவதற்குக் கீன்சைப் பொறுப்பாகக் கலந்தாலோசனை செய்தனர். பிரிட்டனின் தலைமை அமைச்சர் வின்சுடன் சர்ச்சிலும் (Winston Churchill) ஐக்கிய அமெரிக்க நாட்டுத் தலைவர் பிராங்கிலின் டி. உரூசுவெல்ட்டும் (Franklin D.Roosevelt) 1941-இல் கொணர்ந்த அட்லாண்டிக்கு ஒப்பந்தத்திற்குப் (Atlantic Treaty) பின்னர்ப் பொருளாதார மறு சீரமைப்புக் கூட்டுறவுகள் (Cooperation for Postwar Economic Reconstruction) குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது. அதனைச் செயற்படுத்தும் வகையில் கீன்சு, பன்னாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்கி அதனைக் கழிவக ஒன்றியம் (Clearing Union) எனப் பெயரிட்டார். இக்கழிவக ஒன்றியத் திட்டம் பன்னாட்டுப் பணவியல் உறவுகளை நெறிப்படுத்தவும், இரு உலகப் போர்க் காலத்திற்கிடையில் நிலவிய வேலையின்மை, பணவியற் சீர்கேடுகள், பணவாட்டம் போன்ற பொருளாதாரச் சிக்கல்களைத் தவிர்க்கவும் உதவும் எனக் கீன்சு கருதினார். கீன்சின் கழிவக ஒன்றியத் திட்டக்

கருத்துகள், பிறிதொரு வடிவத்தில் பன்னாட்டுப் பணவியல் நிதி(International Monetary Fund) என்ற பெயரில் செயற்படுத்தப்பட்டன.

கீன்சு 1942-இல் பிரிட்டனின் பாராளுமன்ற மேல் அவை உயர் மதிப்பு உறுப்பினராக (Lord Baron) அழைக்கப்பட்டுப் பணியாற்றினார். அங்கு அவர் அளித்த பல சிறப்புச் சொற்பொழிவுகள் அவருடைய நினைவுச் சின்னங்களாக (Memorial) நிலைத்து நிற்கின்றன எனப் பிரிட்டனின் பாராளுமன்ற வரலாற்றுக் குறிப்புச் சான்று பகர்கிறது. பொருளாதாரத் திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்த 1943-இல் அமெரிக்க ஐக்கிய நாடு சென்ற பிரிட்டனின் குழுவில் கீன்சும் பங்கு பெற்றார். பிரிட்டன் உட்சு (Britton Woods) மாநாட்டிலும் 1944-இல் கீன்சு பொறுப்பு மிக்க உறுப்பினராகப் பங்கு பெற்றுப் பன்னாட்டுப் பணவியல் நிதி, மறுசீரமைப்பு, முன்னேற்றம் ஆகிய வற்றிற்கான பன்னாட்டு வங்கி (International Bank for Reconstruction & Development) ஒன்று நிறுவப்படுவதற்கான அமைப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கு உறுதுணையாயிருந்தார். பிரிட்டனிலிருந்து வெளியிடப்படும் பொருளியல் ஆய்வு இதழுக்கு (Economic Journal) 1911 முதல் 1944 வரை கீன்சு பதிப்பாசிரியராகப் பணியாற்றினார்.

கீன்சின் அரசுப் பணிகளுள் மிகச் சிறந்ததாகக் கூறப்படுவது, பேச்சுவார்த்தைகளின் வழி (Negotiation) அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து பிரிட்டனுக்கு 1945-இல் பெற்ற கடன் நிதி வசதியாகும். இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய கால நெருக்கடிச் சூழ்நிலையிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் உள்ளார்ந்த நோக்கங்களை இலண்டன் புரிந்துகொள்ளாத நிலையிலும், கீன்சு பிரிட்டனுக்குச் சாதகமாகப் பேச்சு வார்த்தைகள் முடியும்படி செய்தார். பிரிட்டன்சு மாநாடு சவான்னாவில் (Savannah) நிறுவிய பன்னாட்டு வங்கியின் தொடக்கவிழாவில் பங்கு பெற்றுத் தம் இல்லம் திரும்பியவுடன் 21.4.1946-இல் கீன்சு மாரடைப்பால் காலமானார். கீன்சின் பொருளியற் கோட்பாடுகள் பிற்காலத்தில் தனித் தன்மையுடன் கீன்சிய பொருளியற் கருத்துகள் என வளர்ச்சியடைந்துள்ளன.

கீன்சின் பொருளியற் கோட்பாடுகள், கல்விசார் அறிவியல் கருத்தாக்கத்திற்கு மட்டுமன்றிப் பொதுவுடைமைக் (Communist) கொள்கையினைப் பின்பற்றாத பெரும்பாலான உலக நாடுகளனைத்திலும் பொருளாதாரக் கொள்கையாக நடைமுறையிற் செயற்படுத்தப்படுகின்றன. காண்க: கீன்சிய பொருளியற் கருத்துகள். அ.கு.சா.

***கீன்சும் தொன்மைப் பொருளியல் அறிஞர்களும்***: புதிய பொருளியற் கருத்துகளை 20-ஆம் நூற்றாண்டில் வழங்கியவர் சான் மேனார்டு கீன்சு (John Maynard Keynes) ஆவர். இங்கிலாந்து நாட்டில் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியனவாய் ஏறத்தாழ எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருளாதாரக் கோட்பாடுகள் தொன்மைப் பொருளியல் (Classical Economics) கோட்பாடுகளாகும். இவற்றிற்கு முனைப்பான எதிர்ப்புகள் 1930-ஆம் ஆண்டுக்காலம் வரை இல்லை. இவற்றைத் தோற்றுவித்து வலியுறுத்தியவர்களுள் ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall), பிகு. ஏ. சி. (Pigou A.C.) தாவீது இரிக்கார்டோ (David Ricardo) போன்றோர் தலை சிறந்தவர்களாவர்.

**தொன்மைப் பொருளியல்**: தனியார் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு இயங்கும் முறையை விளக்குவதே தொன்மைப் பொருளாதாரத்தின் நோக்கமாக இருந்தது. போட்டி நிலவும் அங்காடியில் விலைகளும் உற்பத்தி அளவுகளும் எவ்வாறு வரையறுக்கப்படுகின்றன என்பதையும் தொன்மை அறிஞர்கள் விரிவாக விளக்க முற்பட்டனர். இத்தகைய பொருளாதார அமைப்பில் நுகர்வோர் மிகையான உயர்நிலைப் பயன்பாட்டையும், உற்பத்தியாளர் மிகையான உயர்நிலை ஆதாயத்தையும் எவ்வாறு பெறுவர் என்பதையும் இப் பொருளியல் அறிஞர்கள் விளக்க முயன்றனர். ஆனால், சே.பி. சேயின் (J. P. Say) அங்காடி விதியின் மீது கொண்டிருந்த நம்பிக்கையால் நாடு தழுவிய பொருளாதாரச் சிக்கல்களை அவர்கள் விளக்க முற்படவில்லை. எடுத்துக்காட்டாக, வேலையின்மை என்பது இடைக்காலத்திற்குத் தோன்றத் தக்கதொரு சிக்கல் என்றும், அரசின் தலையீட்டைத் தவிர்த்துப் பணக் கூலியைக் குறைத்தால் அது அகன்றுவிடுமென்றும், முழு வேலைநிலையில் (Full Employment) தான் இயல்பாகப் பொருளாதாரம் இயங்கும் என்றும் குறிப்பிட்டனர்.

பிரெஞ்சு நாட்டுப் பொருளியல் அறிஞரான சே.பி.சே தம் அங்காடி விதியில் ‘ஒவ்வோர் அளிப்பும் அதனதன் தேவையை உருவாக்கிக் கொள்ளும்’ என்று குறிப்பிட்டார். இவ்விதி உண்மையானால் வேலையின்மை நிலை தோன்றாது. இவ்விதி உண்மையாக இருக்கவேண்டுமானால், சமுதாயத்தின் நுகர்வு நாட்டம் 100 விழுக்காடாக இருக்க வேண்டும். ஆனால், கீன்சின் நுகர்வு உளவியல் விதியின்படி, சமுதாயத்தின் நுகர்வு நாட்டம் 100 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கும் என்பது கீன்சின் கருத்து. எனவே,

அளிப்பு, தேவை, வேலை ஆகியன பற்றிய இக்கருத்தில் கீன்சு மாறுபட்டார்.


தொடக்க நிலையில் தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்துகளை ஏற்றுக்கொண்டிருந்த கீன்சு, உலகப் பெருமந்தக் (Great Depression) காலத்தில் அக்கருத்துகளின் பயனற்ற தன்மையை உணர்ந்து அக் கருத்துக்களினின்று வேறுபட்டார். பொருளாதாரம் தானியங்கும் தன்மையுடையது (Automatic in Nature), தன்னைத் தானே சரிசெய்துகொள்ளும் தன்மையுடையது என்ற கருத்துகளைக் கீன்சு ஏற்க மறுத்தார். தொழிலாளர்கள்தன்னிச்சையாக இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கு ஈடான அளவிற்குக் கூலியைக் குறைத்துக்கொள்ள இணங்குவார்களானால் வேலையின்மையைத் தவிர்த்துவிடலாம் என்ற ஏ.சி. பிகுவின் நிலையையும் கீன்சு ஏற்றுக்கொள்ளவில்லை. அரசு தலையிடுவதால் (Government Intervention) தான் இடைக்கால வேலையின்மை நிலை தோன்றுகிறது என்ற கருத்தை மறுப்பதோடு, வேலையின்மையைத் தவிர்க்க அரசின் தலையீடு இன்றியமையாதது என்பதனையும் கீன்சு வலியுறுத்தினார்.

**கால அளவின் தன்மை**: தொன்மைப் பொருளியல் வலியுறுத்துவது நீண்ட காலச் சமநிலை (Long Run Equilibrium). கீன்சு வலியுறுத்துவது குறுங் காலச் சமநிலை.

**சேமிப்பின் தன்மை**: சேமிப்பது நல்லது, சேமிப்பின் வழியாகவே முதலீடு பெருகுகிறது என்பது தொன்மைப் பொருளியலாரின் கருத்து. ஆனால் செலவுகளை அதிகரித்தால் (ஒருவரின் செலவு மற்றவரின் வருமானம் என்பதால்)அது உறுதித் தேவையையும் (Effcctive Demand) அதன் வழியாக வேலையையும் பெருக்கும் என்பது கீன்சின் கருத்து.


**கூலியைக் குறைத்தலும் வேலையின்மையும்** : இடைக்காலத்தில் வேலையின்மை தோன்றினால் அதைக் குறைப்பதற்குக் கூலியைக் குறைக்க வேண்டும் என்றும், அது ஆதாயத்தைப் பெருக்கி முதலீட்டையும் பெருக்கி வேலையின்மைத் தவிர்க்க உதவும் என்றும் தொன்மைப் பொருளியலார் குறிப்பிட்டனர். ஆனால், இக்கருத்து தனித் தொழில்களுக்குப்(Firms) பொருத்தமாக இருக்கலாம் என்றும், மொத்தப் பொருளாதாரத்திற்குப் பொருத்தமாக இருக்காது என்றும் கீன்சு குறிப்பிடுகிறார். கூலியைக் குறைத்தால் வாங்கும் திறன் (Purchasing Power) குறைந்து மொத்தத் தேவையும் குறைந்து வேலையின்மை பெருகிவிடும் என்று கீன்சு குறிப்பிட்டார்.

**பொருளாதாரச் சமநிலையின் தன்மை**: பொருளாதாரம் முழு வேலைநிலையில் நிலையான சமநிலையில் இருக்கும் என்ற கருத்தைத் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கொண்டிருந்தனர்.




வரைபடம்: 1

DD தொழிலாளர்களுக்கான தேவை, SS தொழிலாளர்களுக்கான அளிப்பு OW கூலியில் OQ அளவு தொழிலாளர்கள் வேலையிலிருப்பர். எக் காரணத்தாலோ கூலி OWI என அதிகரிக்குமானால் தொழிலாளர்களுக்கான தேவை OQ1 ஆகக் குறைந்துவிடும். ஆனால், அளிப்பு OQ2. எனவே, கூலி குறையத் தொடங்கும். அதுபோலக் கூலி OW2 ஆகக் குறையுமானால் OW அளவை நோக்கி உயர்ந்து செல்லும்




வரைபடம்: 2

நோக்கைப் பெறும். கீன்சு இக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. நெருக்கடி நிலை, போர் நிகழுதல் போன்ற ஒரு சில காலங்கள் தவிரப் பொதுவாகப் பொருளாதாரம் குறைந்த வேலைச் சமநிலையில் தான் இருக்கும் என்று கீன்சு குறிப்பிட்டார்.

AS என்ற மொத்த அளிப்புக் கோடும் AD என்ற மொத்தத் தேவைக்கோடும் E என்ற புள்ளியில் குறைந்த வேலைச் சமநிலையில்தான் பொதுவாகப் பொருளாதாரம் இருக்கும் என்பதும், N Nf அளவுக்கு வேலையின்மை இருந்து கொண்டே இருக்கும் என்பதும், அதைப் போக்கப் பொருளாதாரத்தில் முயற்சி நிகழ்ந்துகொண்டே இருக்கும் என்பதும் கீன்சின் கருத்து.

**பணக் கோட்பாடு**: பணம் கொடுக்கல் வாங்கலுக்கான மாற்றுக் (Medium of Exchanges) கருவியாகப் பெருமளவில் பயன்படுவதால், உற்பத்தியிலும் வருமானத்திலும் முனைப்பான மாற்றங்களைத் தோற்றுவிக்காது என்பது தொன்மைப் பொருளியலார் கருத்து. ஆனால், மதிப்பின் நிலைக்களன் என்ற பணியைப் பணம் ஆற்றுகிறது என்பதை வலியுறுத்திப் பணக் கோட்பாட்டையும், பொதுக் கோட்பாட்டையும் ஒருங்கிணைத்தார் கீன்சு.

**இயக்கநிலைப் பண்பு**: இயங்காநிலைப் (Static) பண்புடைய குறிப்பிட்டதொரு கால அளவிலான சமநிலையைப் பற்றித் தொன்மைப் பொருளியலார் கருத்துகள் அமைந்திருந்தன. ஆனால், மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் (Marginal Productivity) எதிர்காலத்தில் மாற்றங்களின் அடிப்படையில் அமைந்திருப்பதால் கீன்சின் பொருளாதாரம் இயக்கநிலைப் பண்புடையது.

**அணுகுமுறை**: முழுவேலை நிலவும் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்த தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் தனி நிறுவனங்களில் எவ்வாறு விலை, உற்பத்தி அளவு ஆகியவை வரையறுக்கப் படுகின்றன என்பதைச் சிறப்பாக ஆராய்ந்தனர். தனித்தனிப் பொருளாதார அங்கங்களின் செயற்பாட்டை ஆராய்ந்ததால் தொன்மைப் பொருளியலார் அணுகுமுறையைக் (Micro Economic Approach) கையாண்டனர். ஆனால் விலை, வேலை போன்ற நாடு தழுவிய பல பொருளாதாரச் சிக்கல்களை விளக்கியதால் கீன்சு,பேரியல் பொருளாதாரம் (Macro Economics) அல்லது தொகையினப் பொருளாதார ஆய்வு (Aggregated Economic Analysis) அணுகுமுறையைக் கையாண்டார்.

**கோட்பாட்டின் பயன்**: குறைந்த வேலை, முழு வேலை, முழு வேலைக்கும் மேற்பட்ட வேலைநிலை போன்ற எல்லா நிலைகளுக்கும் கீன்சின் பொருளியற் கோட்பாடுகள் பொருந்துவனவாக இருக்கின்றன. ஆனால்,முழுவேலைச் சமநிலைக்கு மட்டுமே பொருந்துவதாகத் தொன்மைப் பொருளியலார் கருத்துகள் அமைந்திருக்கின்றன.



**வட்டி வரையறை**: 'காத்திருத்தல்' (Waiting), 'கால விருப்பம்' (Time Preference) என்னும் செயலுக்காக வட்டி செலுத்தப்படுகிறது என்பது தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்து. பணக் கையிருப்பு விருப்பத்தை விட்டுக் கொடுப்பதற்காகச் செலுத்தப்படுவது வட்டி என்பது கீன்சின் கருத்து. சேமிப்பும் முதலீடும் சமமாகும் நிலையில் வட்டி உறுதிப்படும் என்பது தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்து. பல்வேறு வருமான நிலைகளில் பலவகையான பணக் கையிருப்பு விருப்பப் பட்டியல்கள் அமையும் என்பதைச் சுட்டிக்காட்டி இவையும் பண அளிப்பும் வட்டியை வறையறை செய்வதை விளக்கினார் கீன்சு.

**வரவு செலவுத் திட்டத்தின் இயல்பு**: சமநிலை வரவுசெலவுத் திட்டமே சிறந்தது என்ற தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்துக்குமாறாகப் பொருளாதார நிலைக்கேற்ப உபரி வரவுசெலவுத் திட்டம், சமநிலை வரவுசெலவுத் திட்டம் (Balanced Budget), பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டம் (Deficit Financing) ஆகிய முறைகளைக் கையாள வேண்டுமென்பது கீன்சின் கருத்து.

**பண அளிப்பும் விலையும்**: முழுவேலை நிலை நிலவும் என்று கருதியதால் பண அளிப்புப் பெருகும் போது விலை உயரும் என்றனர் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள். குறைந்த வேலைச் சமநிலையே பொதுவாகக் காணப்படும் நிலை என்பதை விளக்கிய கீன்சு, பண அளிப்பைப் பெருக்கினால் அது வேலையையும் வருவாயையும் பெருக்கும் என்றும், அந்நிலையில் ஏற்படும் விலைஉயர்வு விரும்பத்தக்கது என்றும், பொருளாதாரம் முழுவேலைச் சமநிலையை அடைந்தபின்னர் ஏற்படும் பணப் பெருக்கமும் பணவீக்கத்தைத் (Inflation) தோற்றுவிக்கத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

சமுதாய வளர்ச்சிக்கான வழிமுறைகளைச் சுட்டிக்காட்டும் வழிகாட்டியாகவும் பொருளாதார இயல் விளங்கவேண்டும் என்பதே கீன்சின் கருத்து.

என்.எஸ்.பா.

**துணை நூல்கள்**:


**Gupta R.D.**, Elementary Keynesian Economics, Kalyani Publishers, Ludhiana, 1974.

**Keynes**, The General Theory of Empoloyment, Interest and Money, Harcourt Brace, New York, 1936.

**Lawrence R. Klen**, The Keynesian Revolution, Macmillan and Company, London, 1965.

**கு** என்பது க என்ற எழுத்துக்குரிய முயற்சியால் வாயைக் குவித்த நிலையில் வெளிப்படும் ஒலியைக் குறிக்கும் எழுத்து ஆகும். க என்ற எழுத்திற்கு அமைந்த கட்டுரையைப் பார்க்கவும். கு தமிழில் தனிச் சொல்லாக இயங்கவில்லை. இதன் வடிவம் இரண்டு நிலைகளில் காணப்படுகிறது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டிற்கு முன் 'க'வின் நடு நேர்கோட்டில் அடியிலிருந்து வலப்புறமாக ஒரு சிறு கோட்டினால் குறிக்கப்பட்டது. இதனை கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை உள்ள குகைக் கல்வெட்டுகளில் காணலாம். குறுக்குக் கோட்டிலிருந்து ஒரு சிறு வளைகோடு கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து இழுக்கப்பட்டது. பல்லவ மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டைப் பார்க்க இந்தக் கோடு நடுக் கோட்டை அணைத்து நிற்கிறது. இந்த மாற்றம் மூன்று நூற்றாண்டுகளில் எப்பொழுது ஏற்பட்டது என்பதை அறிய இயலவில்லை. ... ... ...

இந்த வடிவம் கடைசிவரைநிலைத்து நின்றது. க முழு வளர்ச்சி அடைந்த பிறகும் இதுவே நிலைத்தது. .. ... ...



வட்டெழுத்தில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே நடுவில் உள்ள குறுக்குக் கோட்டிலிருந்து சற்று இறங்கிய நிலையில் வளைத்து எழுதப்பட்டது. செங்கம் நடுகற்களில் (கி.பி. 5.6-ஆம் நூற்றாண்டிலிருந்து கடைசி வரை) இவ்வுருவம் நிலைத்து நின்றது. ... ... ... ...

கே.ஜி.கி.

**குக்கனூர்**: இது கருநாடக மாநிலத்தில் இட்டகி என்னும் ஊருக்கு வடக்கில் உள்ளதோர் ஊர். இவ்வூர் கோயிற் கட்டடக் கலைச்சிறப்பில் புகழ் பெற்றது. இங்கு நவலிங்கக் கோயில் ஒன்றும் மகா மாயாக் கோயில் ஒன்றும் உள்ளன. இவற்றுள் மகா மாயாக் கோயில் விசயநகரப் பேரரசுக் காலத்தைச் சார்ந்தது. நவலிங்கக் கோயில் ஒன்பது கருவறைகளால் ஆனது. இக்கோயிலில் 4 மண்டபங்கள் உள்ளன. இக்கோயில் பிற்காலச் சாளுக்கியர் காலத்தைச் சார்ந்தது.




நவலிங்கக் கோயிற் சுவர்ப்பகுதி

இக்கோயிலின் சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. சரசுவதி, கங்கை, சாமுண்டி போன்ற சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. நவலிங்கக் கோயில் சிவனுக்குரிய கோயிலாக இல்லாமல் 9 தேவிகளுக்குரிய

கோயிலாக முன்பு விளங்கியது. குக்கனூரில் கல்லே சுவரர் கோயில் ஒன்றும் உள்ளது. இது சாளுக்கிய ரின் கோயிலாகும். இக்கோயில் திராவிடக் கலைப் பாணியைக் கொண்டு விளங்குகிறது. சு.இரா.


**குக்கு, சேம்சு** என்பவர் ஓர் ஆங்கில மாலுமி. இவர் இங்கிலாந்தில் யார்க்சயரிலுள்ள மார்ட்டன் என்ற கிராமத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் கி.பி. 1728-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 27-ஆம் நாளன்று பிறந்தார். போதிய கல்வி கற்காத நிலை



சேம்சு, குக்கு

யில் ஒரு பண்டசாலையில் விற்பனையாளராகச் சேர்ந்தார். இவர் கி.பி. 1746-ஆம் ஆண்டில் கப்பலில் கூலியாளாகச் சேர்ந்து, தம் இடைவிடா ஊக்கத்தா லும், விடாமுயற்சியாலும், கடலாண்மை பெற்று கி.பி. 1755-ஆம் ஆண்டு சூன் திங்களில் கடற்படை யில் சேர்ந்தார். பிரான்சுடன் இங்கிலாந்து தொடுத்த ஏழாண்டுப் போரில் ஈடுபட்டு உயர் பதவி பெற்றார். இங்கிலாந்து மாலுமி என்ற பெருமையை நிலை நாட்டத் தூய இலாரன்சு ஆற்றையும், கி.பி. 1763-ஆம் ஆண்டில் நியுபவுண்டுலாந்தின் கடலோரத்தை யும் ஆராய்ந்தார்.

சேம்சு, குக்கு (James Cook) கி.பி. 1768-ஆம் ஆண்டில் கடலாண்மைத் தலைவராக உயர்த்தப்பட் டார். பேரரசுக் கழகத்தின் (Royal Society) சார்பில் சுக்கிரனை ஆராய்கிற பொறுப்பினை ஏற்றார். பல அறிவியல் அறிஞர்களுடன் கப்பல் பயணத்தை மேற் கொண்டு பசிபிக்குப் பெருங்கடலிலுள்ள தாகீட்டித் தீவை அடைந்து அங்கு வானிலை ஆராய்ச்சி நிலை யம் ஒன்றை நிறுவினார். பின்னர்த் தென்கடலில் நெடுங்காலமாகக் கருதப்பட்டு வந்த 'தீவுப்பெருங் கண்டத்தைக்' காணப் புறப்பட்டார். இவர் கி.பி. 1770-ஆம் ஆண்டு ஏப்பிரல் 20-ஆம் நாளில் ஆசுத்தி ரேலியாவின் கிழக்குக் கடற்கரையிலுள்ள 'பாட்டனி விரிகுடாவைக்' கண்டார். அக்கடலோரத்தை நன்கு ஆராய்ந்து அப்பகுதிக்கு 'நியூசவுத்வேல்சு' எனப் பெயரிட்டார். பிறகு நியூகினி என்ற தீவை அடைந்து அங்கிருந்து நன்னம்பிக்கை முனை வழியாக இங்கி




சேம்சுகுக்கின் கடற்பயண வழிகள்

லாந்தை அடைந்து, கப்பற்படைத் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார்.

இவர் கி.பி. 1772-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 13-ஆம் நாள் தம் இரண்டாம் கடற்பயணத்தை மேற்கொண்டு, தென்பசிபிக்குப் பெருங்கடலுக்கும், தென்துருவத்திற்கும் இடையே உள்ள 'தென்கண்டத் தைக்' காணப் புறப்பட்டார். அத்தகைய கண்டம் வெறும் கற்பனையே என்பதையும் மெய்ப்பித்தார். அப்பயணத்தின்மூலம் 'அண்டார்ட்டிக்கு' வட்டத்தை முதன்முதலில் கடந்தவர் இவரே என்னும் பேறு பெற்றார். இவர் நியூகாலிடோனியா முதலிய தீவு களைக் கண்டறிந்தார். இவர் கி.பி. 1775-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் இங்கிலாந்து திரும்பினார்.

இவர் கி.பி. 1776-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் தம் மூன்றாம் கடற்பயணத்தை மேற்கொண்டு கி.பி. 1778, சனவரித் திங்களில் பெருந்தொல்லைகளுக்குள் ளாகிப் பின்னர்ப் பசிபிக்குப் பெருங்கடலிலுள்ள அவாய்த் தீவுகளில் (Hawaii) ஒன்றாகிய சாண்டுவிச்சு (Sandwich) என்னும் தீவைக் கண்டுபிடித்தார். பின் னர் அங்கிருந்து வடஅமெரிக்காவை நோக்கிப் புறப் பட்டார். குக்சுகுடா வரையில் சென்றவர் பனிக் கட்டிப் பாறைகளால் தடுக்கப்பட்டு, மேலே பயணம் செய்ய இயலாத நிலையில் மீண்டும் சாண்டுவிச்சுத் தீவுக்கே திரும்பிவிட்டார். அங்கு இவருக்கும் ஆதிக் குடிகளுக்கும் ஏற்பட்ட சச்சரவில் இவரை ஆதிக் குடிகள் கி.பி. 1779ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 14-ஆம் நாள் 'கீலக்கேகுவா' என்ற இடத்தில் கொலை செய்துவிட்டனர். அவருடன் பயணம் செய்த அதிகாரிகள் குக்குவினுடைய உடற்பாகங் களை ஒன்று சேர்த்துக் கடற்கரையில் புதைத்தனர்.

சிறந்த அறிஞரும் தீர்க்கதரிசியுமான குக்கு சாண்டுவிச்சுத் தீவு ஆதிவாசிகளின் குணநலன்களை ஆராயத் தவறிவிட்டார். எனினும், புவியியல் கண்டு பிடிப்புகளில் முதல் முறையாக அறிவியல் முறை களைப் புகுதித்தியவர் இவரே. அமெரிக்கக் குடியேற் றங்கள் தம் தாயகத்தை எதிர்த்துப் போராட்டத்தில் குதித்த நேரத்தில், வடஅமெரிக்காவில் இரண்டு பெரிய குடியேற்றங்களைக் குக்கு படைத்தது பாராட்டத்தக்கதாகும். சேம்சுகுக்கின் சிறந்த சேவை களைப் பாராட்டிப் பேரரசுக் கழகம் மிகப்பெரிய விருதையும், தங்கப்பதக்கத்தையும் வழங்கியுள்ளது. இவர்தம் புரட்சிமிகு எண்ணங்கள் இவர் பயன்படுத் திய கப்பல்களுக்கு இட்டபெயர்களான 'பெருமுயற்சி', 'தீர்மானம்', 'வீரச்செயல்', 'கண்டுபிடிப்பு' ஆகியவை களால் நன்கு விளங்கும்.

குக்கு தம் 50 ஆண்டு உலக வாழ்வில் 25 ஆண்டு களுக்கு மேல் கடலிலேயே வாழ்ந்தார். இவர்தம் ஆறு குழந்தைகளுள் மூவர் குழந்தைப் பருவத்தி லேயே இறந்துவிட்டனர். இருவர் கடற்படையிற் சேர்ந்தனர். அறுவரும் கி.பி. 1794-ஆம் ஆண்டிற்குள் காலமாகிவிட்டனர்.

உலகத்தின் 'தேசப்படத்தையே' மாற்றிஅமைத்து, தமக்குப்பின் தோன்றிய அனைத்து நாட்டு மாலுமி களுக்கும், அறிவியல் அறிஞர்களுக்கும் ஒரு வழி காட்டியாக நின்ற இவர் தமது சுற்றுப் பயணக் குறிப்பையும் 'தென் துருவம் நோக்கி உலகம் சுற்று தல்', 'பசிபிக்குப் பெருங்கடற் பயணம்' ஆகிய நூல் களில் வடித்துச் சென்றுள்ளார். பொன்.சு.

**குகன்** இராமாயணக் கதை மாந்தர்களுள் ஒருவன். இவன், கங்கையின் இரு கரைக்கும் தொன்றுதொட்டு ஓடமோட்டும் தொழிலை மேற் கொண்டவன். சிருங்கிபேரம் என்று சொல்லப்பட்ட நகரத்திலிருந்த ஆயிரம் அம்பிகளுக்குத் தலைவன்; காட்டாட்சியுடையவன்; இருண்ட மேனியன்; துடி யொடு நாய்கள் சூழத் தொடு தோல் அணிந்து இலங்குபவன்; இடிபோல் குரலும் பெற்றவன்; சின மிலாச் செங்கணும் தோலுடையும் புலிவால் அரைக் கச்சும் பலகறை கோத்த மாலையும் கொச்சைப் பேச்சும் கொண்டவன். இவன் இராமன் காடு புகுந் திருப்பதறிந்து, தேனொடு மீனும் கையுறையாகக் கொண்டு, அவனைக் காண விரும்பித் தன்னொடு சூழ்ந்து போந்த சுற்றத்தை வேறு நிறுத்தித் தான் வில், அம்பு, உடைவாள் முதலியன துறந்து, இலக்கு வன் வழிச் செவ்வி கேட்டறிந்து சென்றான். இரா மன் இடும் பணி எதுவாயினும் புரியப் போந்ததாகக் கூறினான். இவன் கொணர்ந்த தேனையும் மீனையும் உண்ணவேண்டினான். இராமன், உண்டு மகிழ்ந்த அப்போது, இவனை நோக்கிக் கங்கையைக் கடக்க நாவாய் கொடுத்துதவுமாறு வேண்டினான். இராமன் காடுபுக நேர்ந்த வரலாறு கேட்டு மனம் கவன்றான். அவர்க்குத் துணையாக இருக்க இவன் உறுதி கொண்டான். இராமன் துயில, இலக்குவன் இரவெல் லாம் இருவரையும் காத்திருந்தான். அடுத்த நாள் நாவாய் வேண்டியபோது ஒரு நாளாவது தன்கண் வைகுமாறு இராமனை வேண்டினான். இராமன் தவம் புரிந்து மீண்டும் வருவதாகக் கூறியதும், ஓடத்தில் மூவரையும் ஏற்றி, அடுத்த கரைக்கண் உய்த்துத் தானும் தன் தானையோடு உடன் போந்து, இராம னுக்கு வரும் அல்லன கடிந்து நல்லன போற்றி வேண்டுவன புரிவதாகக் கூறினான். அதுகேட்ட இராமன் தனக்கு அவன் உயிரன்னவன் என்றும், இலக்குவன் அவனுக்கு இளவல் என்றும், சீதை

கொழுந்தி, என்றும், கடல்சூழ் இடமெல்லாம் குகனுக் குரியது என்றும் கூறி மகிழ்ந்தான்.

பரதன் இராமனைத் தேடிவரும்போது அவன் படையும் சூழவருவது கண்ட குகன் இராமன்பால் பகைத்து வருகின்றான் என்று தவறாக உணர்ந்து, பெருஞ்சினத்தோடு போர்க்கோலம் பூண்டான். தன் படையை ஒருவழித் தொகுத்து, படையோடு வந் தானைக் கொன்று இராமனுக்கு அரசளிக்கப் போவ தாக வஞ்சினம் கூறினான்.

இவ்வாறு தென் கரையில் குகன் சினந்து நிற்க, வடகரையில் காத்திருக்கும் பரதனிடம் சுமந்திரன் குகன் இராமனால் நட்புக் கொள்ளப் பெற்றவன் என்றும், அவனைக் காணும் வேட்கையன் என்றும் குகன் பெற்றியைக் கூறியதும், பரதன் தன்னை வந்து அவன் காணுமுன் முந்துறச் சென்று குகனைத் தொழச் செல்ல, அவனும் அவன் உடுத்த வற்கலை யுடையையும் புழுதியாடிய மேனியையும் கரை காணாத் துயரமுற்றிருப்பதையும் தொலைவிற் கண்டு தன் கருத்தை முற்றிலும் மாற்றி, வில் கையினின் றும் நழுவ நிலைகொள்ளாது நின்று கண்டான். பரதன் இராமனையும் சத்துருக்கனன் இலக்குவனை யும் ஒத்திருப்பதைப் பார்த்து உண்மை உணர்ந்து, கங்கையைக் கடந்து வந்து பரதனைத் தொழ, அவ னும் வணங்கப் பரதன் அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். பரதன் அவன்பால் இராமனின் நிலையை உசாவி அறிந்தான். பரதன் இராமனைக் காண விழையவும் குகன் தன் நாவாய்களைத் தந்து அனைவரையும் மறுகரை சேர்த்தான். பரதன் கோசலை, சுமித்திரை, கைகேயி முதலியோரையும் அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

இராவண வதம் முடிந்து இராமன் மீளும் செய் தியை அனுமன் கூறக் கேட்டு உவந்தான் குகன். பரத்துவ முனிவன் இராமனுக்கு அறுசுவை உண வளித்துப் போற்றியபோது ஆண்டுத் தன் தானை சூழப்போந்து, தொழுது கண்ணீர் உக அழுது அடித் தலம் வீழ இராமன் எடுத்துத் தழுவி அவன் மனை மக்கள் நலமுசாவத் தான் இலக்குவன்பால் உடனி ருந்து உதவாமைக்கு நொந்தவன். இராமன் குக னைத் தன்னோடு போந்த சுக்கிரீவன், வீடணன் முதலியோர்க்கு அறிமுகம் செய்ய அனைவரும் அவ னைத் தழுவி உற்றவனானவன். அன்று இரவு இராமன் சீதையோடு உறங்கும்போது இலக்குவ னோடு பண்டொருநாள் காத்தது போல் விடியுமள வும் இமையாது காத்து நின்றவன். இராமன் அயோத்திபுகுந்து முடி புனைந்து கொண்டபோது இராமனை வணங்கி மகிழக்களிறு, மா, கனகம், தூசு பூண் முதலிய கொடுத்து விடை கொடுக்கப் பெற்ற வன். கு.தி.

**குகா, பிரசா சங்கர் (கி.பி. 1894-1961)** தலை சிறந்த இந்திய மானிடவியல் அறிஞர்; இந்திய இனங்களைப் பற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்தவர். பிரசா சங்கர் குகா (Biraja Shankar Guha) கல்கத் தாப் பல்கலைக் கழகத்தில் 1915-இல் தத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். தொடக்க காலத்தி லிருந்தே இயற்கை வரலாற்றியலிலும், பழங்குடி மக்களைப் பற்றி அறிவதிலும் ஆர்வம் கொண்டிருந்த தால், மானிடவியல் துறையில் பயிற்சி பெற விரும்பி னார். திக்சன் (R.B. Dixon) என்பாரின் உதவியால் ஆர்வர்டுப் (Harvard) பல்கலைக் கழகத்தில் சேர்ந்து 1922-இல் மானிடவியல் முதுகலையும் 1924-இல் இப் பல்கலைக் கழகத்திலேயே டாக்டர் பட்டமும் பெற்றார்.

ஆர்வர்டுப் பல்கலைக் கழகத்திலிருந்தபோது பேராசிரியர் ஊட்டன் (E.A. Hooton) உதவியுடன் உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), குற்றவியல்சார் மானிடவியல், ஐரோப்பியத் தொல் லியல், இனக்குழுவியல் (Ethnography), ஆப்பிரிக்க இனக் குழுவியல் முதலான துறைகளில் சிறப்புப் பயிற்சி பெற்றார். அதன் பின்னர்த் திக்சனுடன் சேர்ந்து அமெரிக்கத் தொல்லியல், ஆசிய இனக்குழு வியல் முதலான துறைகளில் பயிற்சி பெற்றார்.

குகா 1925-இல் இந்தியா திரும்பியவுடன் கல் கத்தாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறை யில் சேர்ந்தார். இந்திய விலங்கியல் மதிப்பாய்வில் (Zoological Survey of India) முதன்முதலில் மானி டவியல் பிரிவு தொடங்கப்பட்டதையடுத்து, இத் துறையைக் கவனித்துக்கொள்ள 1927-இல் இந்திய அரசால் குகா அழைக்கப்பட்டார். இம்மதிப்பாய்வில் ஓர் உட்பிரிவாகச் செயற்பட்டு வந்த மானிடவியற் பிரிவைப் பிரித்து, 1946-இல் இந்திய மானிடவியல் மதிப்பாய்வுத் துறையை (Anthropological Survey of India) நிறுவி உதவினார். இவர் முதன் முதல் இயக் குநராகப் பொறுப்பேற்றதுமல்லாமல், இந்திய அர சிற்கு மானிடவியல் சார்ந்த ஆலோசனைகள் வழங் கும் பொறுப்பையும் ஏற்றார். இந்தியாவில் மானிட வியல் துறை வளர்ச்சிக்கு இவர் மிகுந்த கவனம் செலுத்தினார்.

இவர்தம் அயராத பணி மானிடவியல், அறிவி யல் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு உதவினமானிட வியலில் விருப்பங் கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சி

யாளர்களின் உதவியோடும் சில இந்திய மானிடவியலாரின் உதவியோடும் இவர், 1936-இல் இந்திய மானிடவியல் நிறுவனத்தை (Indian Anthropological Institute) நிறுவினார். அதன் பின்னர் 1952-இல் அந்தமான் நிக்கோபார்த் தீவுகளில் இந்திய மானிடவியல் மதிப்பாய்வின் மண்டல அலுவலகத்தை ஏற்படுத்தி, அதன் வளர்ச்சிக்கு உதவினார். தேசிய அறிவியல் நிறுவனம் (National Institute of Sciences) 1938-இல் நிறுவப்படுதற்கும் இவர் காரணமாக இருந்தார்.

இந்தியப் பழங்குடிகளைப் பற்றியும் இந்திய இனங்கள் பற்றியும் விரிவாக ஆராய்ந்தது மட்டுமல்லாமல், குறிப்பிடத்தக்க சில ஆய்வுகளை இவர் மேற்கொண்டார். இவர் நாகர் (Nagas) பழஙகுடியினரிடம் காணப்பட்ட மனித உயிர்ப்பலி முறையை ஒழிக்கப் பாடுபட்டார். கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்தில் மானிடவியற் பிரிவு வளர்ச்சியடையவும், பீகாரில் பழங்குடி ஆய்வு மையத்தைச் சீரமைத்துச் செயற்படச்செய்யவும் முனைந்தது இவரது பணிகளுள் குறிப்பிடத்தக்கதாகும்.

குகாவின் சிறந்த பணிகளைப் பாராட்டி 1943-இல் பேரரசு ஆசியச் சங்கம் (Royal Asiatic Society) பரிசளித்து இவரைச் சிறப்பித்தது. இவர் மானிடவியலுக்கு ஆற்றிய பணிகளை ஆசிய மானிடவியல் நிறுவனங்களைச் சேர்ந்தோரும் ஐரோப்பிய மானிடவியலாரும் பெரிதும் பாராட்டினர். குகா 1961-இல் காலமானார். சீ.ப.

**குகைநமச்சிவாயர்** திருவண்ணாமலையில் வாழ்ந்தவர்; வீர சைவர். திருவண்ணாமலையிலுள்ள குகையொன்றில் நீண்ட காலம் நிட்டை கூடியிருந்தவராதலின் குகை நமச்சிவாயர் என அழைக்கப் பெற்றார். சித்துகள் புரிவதில் இவர் வல்லவராயிருந்தார். இவருடைய மாணவர் குருநமச்சிவாயர் ஆவர். இவர் குகை நமச்சிவாயருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வந்தார். அவ்வாறு பணிவிடை செய்த பெருமையாலும், பத்தி முதிர்ச்சியாலும் இவரும் அற்புதச் செயலாற்றுவதில் வல்லவரானார். தம் மாணவரின் சித்தாற்றலை அறிந்த குகை நமச்சிவாயர் ஒருநாள் அவரை அழைத்து 'ஒரு கம்பத்தில் இரண்டு யானைகளைக் கட்டக்கூடாது. ஆதலின் நீ இங்கிருந்து சிதம்பரம் சென்று அங்கு அரியபல செயல்களைச் செய்வாயாக' என்று ஆணையிட்டார். குருநமச்சிவாயர் தம் குரு தரிசனமே மிகவும் நற்பேறெனக் கருதியவர். ஆதலின், குருநாதரை விட்டுப் பிரிந்தால் தரிசனம் கிடைக்காதே என்று கவன்றார். குகை நமச்சிவாயர் 'சிதம்பரம் செல்ல விரும்பும் பொழுது காட்சி கிடைக்கும்' என்று அருள்பாலித்தார். குருவின் ஆணையை மறுத்தற்கு அஞ்சிச் சிதம்பரம் சென்றார். அங்குக் குருவை நினைக்கக் குகைநமச்சிவாயர் காட்சி கொடுத்தார். பின்னர்த் தம் குருநாதர் கட்டளைப்படி குருநமச்சிவாயர் சிதம்பரம் திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தார். நித்திய வழிபாட்டுக்காகப் பல நிவந்தங்களையும் தக்காரைக் கொண்டு ஏற்படுத்தினார்.

குகைநமச்சிவாயர் அருணகிரியந்தாதி என்னும் வெண்பா யாப்பாலான ஒரு நூலை இயற்றினார். இது காப்புச் செய்யுளுடன் 101 வெண்பாக்களையுடையது. அவை எளிமையான பாக்கள்; கருத்தாழமுள்ளவை; படிப்போரைப் பத்திவலையுட்படுத்துவன. மேலும் திருவண்ணாமலையைப் பற்றியும் அங்குள்ள இறைவனைப் பற்றியும் புகழ்ந்து 'திருவருணைத் தனிவெண்பா'. என்னும் ஒரு நூலையும் பாடியுள்ளார். இதில் 25 பாக்களுள்ளன.

குகைநமச்சிவாயர் தம் இறுதிக்காலத்தைச் சிதம்பரத்திலேயே கழித்ததாகத் தெரிகிறது. இவர் காலம் சாலிவாகன சகாப்தம் கி.பி. 1195க்கு முன் என்று குருநமச்சிவாயர் சிதம்பரம் கோவிலுக்கு நிவந்தம் ஏற்பாடு செய்த விவரத்திலிருந்து தெரிகிறது. இப்போது சாலிவாகன சகாப்தம் 1909 ஆதலின் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்குமுன் குகை நமச்சிவாயர் வாழ்ந்தவரென்று தெரிகிறது. இறுதியில் திருவருணையிலேயே இவர் குகையில் நிட்டைகூடி முத்தியடைந்தார். இரா.ச.

**குகைமறைஞான சம்பந்தர்,** கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் சிறந்த ஞானி; துறவி. சிதம்பரத்திலுள்ள குகைமடத்தில் வாழ்ந்தால் குகை மறைஞான சம்பந்தர் என்னும் பெயர் இவருக்கு ஏற்பட்டது. இவருக்குக் கண்கட்டி மறைஞான சம்பந்தர் என்ற பெயரும் உண்டு. காண்க: கண்கட்டி மறைஞான சம்பந்தர். இரா.ச.

**குகை வாழ் மக்கள்**: வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் குகைகளை உறைவிடங்களாகக் கொண்டு வசித்து வந்தனர். மலை அடிவாரங்கள் மழையோ வெயிலோ படாதவாறு இயற்கையிலேயே அமைந்திருக்கும். இயற்கையாகவே குகை போன்ற அமைப்பு மலைகளில் காணப்படும். இத்தகைய இடங்களைத் தொல்லியல் அறிஞர்கள் பார்வையிட்டு அங்கு வரலாற்றுக்கு முற்பட்ட மக்கள் விட்டுச் சென்ற கருவிகள், உணவு, எச்சங்கள், மனித எலும்புகள், அவர்கள் வரைந்த ஓவியங்கள் ஆகியவற்றைக்

கண்டுபிடித்துள்ளனர். ஆப்பிரிக்காவில் தொடக்க கால மனிதன் வாழ்ந்த குகைகள் திரான்சுவால் (Transvaal) பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன. அவை சுவார்ட்கிரன்சு (Swartkrans), இசுடெர்குபாண்டின் (Sterkfontein) போன்றவை ஆகும். இக்குகைகள் பத்து லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டவை. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட ஆசுட்ராலோபிதிகசு (Austra-lopithecus) என்ற மனித புதை படிவத்துடன் பல் வகைக் கற்கருவிகளும் காணப்பட்டன. இவற்றுடன் பல விலங்குகளின் புதைபடிவங்களும் கண்டெடுக்கப் பட்டன. இவ்விலங்குகளின் எலும்புகள் சில உடைந் துள்ளன. மனிதன் எலும்புகளின் உள்ளிருந்த மச்சை யினை உண்பதற்காக இவற்றை உடைத்துள்ளான்.

இக் காலத்தைச் சேர்ந்த குகை ஒன்று பிரான் சில் கண்டுபிடிக்கப்பட்டது. இது வல்லோன்னட்டுக் குகை (Vallonnet Cave) எனக் கூறப்படுகிறது. இங்கு விலங்கின் புதைபடிவங்களும் மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இது போன்ற குகைகளில் மனிதன் தொடர்ந்து வாழ்ந்திருக்க வில்லை. அடிக்கடி வந்து தங்கிவிட்டுச் சென்ற இட மாகவே இக் குகைகள் விளங்கின. மனிதன் வசிக்காத சில குகைகளில் விலங்குகளின் எலும்புகள் கிடைப்பதி லிருந்து குகைகள் கரடி, சிறுத்தைப்புலி போன்ற விலங்குகள் தங்குவதற்காகவும் பயன்பட்டமையை அறிய முடிகிறது.

சீனாவில் பீக்கிங்கிற்கு அருகிலுள்ள சொவ் கோட்டின் குகையில் (Choukoutein Cave) புதை படிவ மனிதனான பீக்கிங் மனிதன் வாழ்ந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இக்குகையில் கற்கருவிகளும் மனித, விலங்கு எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இம் மனிதன் மனிதனை உண்ணும் இயல்புடையவ னாக இருந்தமை இக்குகையை ஆய்வு செய்ததின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இக்குகையில் தீ உண்டாக்கியமையின் எச்சமும் காணப்படுகிறது. இம் மனிதன் தீயை உண்டாக்கி இருப்பானா? இயற்கையின் விளைவாகத் தீ ஏற்பட்டதா என்பது தெரியவில்லை. உணவைச் சமைக்கவும் இத் தீ பயன் பட்டிருக்கலாம். குறிப்பாக, கொடிய விலங்குகளை ஓட்டவும் இத் தீ பயன்பாட்டில் இருந்திருக்கலாம். இம் மனிதன் கால மாறுதலுக்கு ஏற்ப ஓர் இடத்தை விட்டுப் பிறிதோர் இடம் சென்று வாழ்ந் தான்; வேட்டையாடுதல் மரக்கறி உணவைச் சேகரித் தல் போன்ற தொழில்களைச் செய்தான்; சில காலங் கள் குகைகளில் வசித்தும் சில காலங்கள் திறந்த வெளிகளில் வசித்தும் வந்தான்.

கடைப் புத்துயிரூழியின் ஈற்றயற் காலத்தில்தான் (Upper Plestocene) குகைகள் முன்பிருந்ததைவிட மிகுதியாயின. தென ஐரோப்பா, ஆசியா, ஆப் பிரிக்கா ஆகிய கண்டங்களில் இக்காலத்தைச் சார்ந்த குகைகள் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. இக் காலத்தில் (ஏறக்குறைய 35,000 ஆண்டுகளிலிருந்து 70,000 ஆண்டுகளுக்கு முன்) நியாண்டர்தால் மனி தன் வாழ்ந்து வந்தான். பிரான்சில் இலா பெர்ராசி (La Ferrassie), யூகேசுலாவியாவில் கிரிமியாப் பகுதி யில் கீக்-கோபா (Kiik-Koba), இலெபனானில் சானி தர் (Shanidar), உசுபெகிசுத்தானில் (Uzbekistan) தெசிக்-தாசு (Teshik-Task), சீனாவில் மா-பா (Ma-pa), மொராக்கோவில் சீபல் இர்கு (Jebel Irhoud) போன்ற குகைகளிலும் மற்றும் பல குகைகளிலும் நியாண்டர்தால் மனிதன் வாழ்ந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இக் காலத்தில் தீயின் பயனை மனிதன் நன்கறிந்திருந்தான். சில இடங்களில் இக் காலத்திலும் மனிதன் மனிதனை உண்ணும் வழக் கம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. வரலாற்றுக்கு முற்பட்ட காலமான இக்காலத்தில் முதன்முதலாக மனிதனை இறந்தபின் புதைக்கும் வழக்கமும் புதை குழிகளில் படைத்த பொருள்களை வைக்கும் வழக் கமும் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாக,தெசிக்-தாசில் குழந்தை ஒன்றைப் புதைத்து அதனைச் சுற்றி ஐந்து அல்லது ஆறு வெள்ளாடுகளின் மண்டையோடுகளை வைத்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இக்கால மனிதன் இறந்தபின் மறுவாழ்வு உண்டு என நம்பி னான் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

இக்குகைகளில் கற்செதுக்குக் கருவிகள் பெருமள வில் கண்டுபிடிக்கப்பட்டன. இச்செதுக்குக் கருவிகள் மரம், தோல் ஆகியவற்றைச் சீவப் பயன்படுத்தப் பட்டன. இவற்றைத் தவிர, மும்முனைக் கருவிகளை யும் (Triangular Points) நியாண்டர்தால் மனிதன் பயன்படுத்தினான். ஆப்பிரிக்காவில் இக்காலகட்டத் தில் வாழ்ந்த குகை மக்கள் கல்லால் செய்யப்பட்ட கைக்கோடரிகளைப் பயன்படுத்தினர்.

கடைப் புத்துயிரூழியின் ஈற்றயற்கால இறுதிக் கட்டத்தில் ஏறக்குறைய இன்றிருந்து 10,000 முதல் 35,000 ஆண்டுகளுக்கு முன்பு நியாண்டர்தால் இன மக்கள் வளர்ச்சி குறைந்தது. இத்தருணத்தில்தான் இக்காலத்தில் வாழுகின்ற மனித இனம் பரவலாகத் தோன்றத் தொடங்கியது. இக்காலம் கடைப் பழங் கற்காலம் எனக் கூறப்படுகிறது. உலகத் தட்பவெப்ப நிலை மாறுதலின் காரணமாக இம்மனிதன் ஐரோப்பா, ஆசியா ஆகிய நாடுகளில் பெருமளவில் வாழ்ந்தான். இக்காலத்தைச் சார்ந்த குகைகள் பிரான்சில் ஆப்ரி பாதுது (Abri Pataud), கோம்பு

கேப்லி (Combe Capelle) போன்றவைகளும் இத்தாலியில் கிரிமால்டிக் (Grimaldi) குகையும் ஆகும்

இக்காலத்தில்தான் மனிதன் குகைகளில் ஓவியங்கள் தீட்டத் தொடங்கினான். இவ்வோவியங்கள் உள்ள குகைகளைத் தொல்லியல் அறிஞர்கள் பிரான்சு, இத்தாலி, இசுபெயின் ஆகிய நாடுகளில் கண்டுபிடித்துள்ளனர். சில குகைகளில் களிமண்ணால் செய்யப்பட்ட விலங்கின் உருவங்களும் காணப்பட்டன. வேட்டையாடி வெற்றி பெற்றதனைக் குகைகளில் உட்பகுதியில் ஓவியங்களாகத் தீட்டி மனிதன் கொண்டாடினான். மனிதன் உணவைத் தேடி ஆங்காங்குச் செல்லும் காலத்தில் குகைகள் தங்கும் இடங்களாகவும் விளங்கியுள்ளன. இக் காலத்தில் வாழ்ந்த மனிதன் புதிய உலகமான அமெரிக்காவிற்குப் பேரிங்கு நீர்ப்பிரிவில் இருந்த நிலவழியாக ஐரோப்பாவிலிருந்து இடம் பெயர்ந்தான். நியூமெக்சிகோவிலுள்ள வௌவால் குகையும் (Bat Cave) உட்டாவில் உள்ள அபாயக் குகையும் (Danger Cave) தொல்லியல் சிறப்புப் பெற்ற வட அமெரிக்கக் குகைகளாகும்.

இந்தியாவிலும் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த குகைகள் தொல்லியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் திருவள்ளூர் வட்டத்தில் உள்ள குடியம் என்ற இடத்தில் இத்தகு குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் இரண்டு அல்லது மூன்று குகைகளையே கற்கால மனிதன் பயன்படுத்தியுள்ளான். இக்குகைகளை அவன் சில காலங்களில் மட்டுமே வந்து தங்கப் பயன்படுத்தியுள்ளான் என அறிஞர்கள் கூறுகின்றனர். வரலாற்றுச்கு முற்பட்ட குகைகள் பல இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இக்குகைகளில் ஓவியங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. உத்தரப்பிரதேசத்தில் மிர்சாப்பூர், பண்டா, மகாதேவ குன்றுகளிலும் மத்திய பிரதேசத்தில் சிங்கன்பூர் ஆகிய இடங்களில் உள்ள குகைகளிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. சு. இரா.

**குங்கிலியக் கலய நாயனார்** சைவ சமயச் சான்றோர் அறுபத்து மூவருள் ஒருவர். இவர் சோழ நாட்டில் உள்ள, சிவபெருமானின் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றானதும் காலனைக் காய்ந்த இடமுமான திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். இவர் கடவூர்ப் பெருமான் திருக்கோயிலில் குங்குலியத் தூபம் இடும் பணியினைத் தமது தலையாய பணியாகக் கொண்டவர். இறைவனருளால் இவர்க்கு வறுமை வந்த காலத்திலும், தமக்குரிய நிலம் முதலானவற்றை விற்றுக் குங்குலியப் பணியைத் தவறாது செய்து வந்தார். நாயனாரின் குடும்பம் பொருளின்றிப் பசியினால் வருந்தியது. இவர்தம் அன்புமனைவியார் தம் தாலியைக் கொடுத்து உணவிற்காக நெல் வாங்கி வரும்படி வேண்டினார். அதனை எடுத்துச் சென்ற நாயனார், எதிரே குங்குலியப் பொதியுடன் வந்த வணிகனைக் கண்டு, தாலியைக் கொடுத்து உணவுப் பொருள் வாங்காமல் குங்குலியத்தை வாங்கிக் கொண்டு திருக்கோயிலுக்கே சென்று கொடுத்து விட்டு அங்கேயே இருந்தார். வீட்டில் யாவரும் அன்றிரவு பட்டினியிருக்க நேர்ந்தது. இறைவனருளால் அன்றிரவில் இவர் வீட்டில் பொன்னும் நெல்லும் குவிந்தன. இவர்தம் துணைவியார், 'எம்பிரான் அருளாம்' என்று இறைவனை வணங்கிப் போற்றித் தம் கணவர்க்கு உணவு சமைத்தார். சிவபிரான், திருக்கோயிலில் உறங்கிய கலயனார் அறியும்படி 'சால நீ பசித்தாய் நின் மனையை அடைந்து பாற்சோறு உண்டு துன்பம் தவிர்க' என்று பணித்தார். வீட்டையடைந்த நாயனார் பெருஞ்செல்வத்தைக் கண்டு தம் மனைவியாரை நோக்கி, 'வில்லொத்த நுதலாய் இந்த விளைவெலாம் என்கொல்?' என்று வினவ, அவரும் இறைவனருளால் வந்தது என்றார். கலயனார் மகிழ்ந்து, சிவனடியார்க்கு அமுதளித்தல் முதலான தொண்டினைத் தொடர்ந்து செய்து வந்தார்.

அக்காலத்தில், திருப்பனந்தாள் திருக்கோயிலில் சாய்ந்திருந்த சிவலிங்கத் திருமேனியை நிமிர்த்தி வழிபட எண்ணிய மன்னன் தன் யானைகளையெல்லாம் பூட்டி இழுக்கச் செய்து முயன்றான். திருமேனி நேர் அடையாமை கண்டு வருந்தியதைக் கலயனார் கேள்வியுற்றுத் திருப்பனந்தாளையடைந்தார். யானைகளால் இழுத்துச் சரிசெய்ய முடியாத நிலை நோக்கி, 'யானும் இவ்விளைப்புற்று எய்க்கும் இது பெற வேண்டும்' என்னும் உள்ளத்தவராய்ச் சிவலிங்கத் திருமேனியின் மீது கட்டப்பெற்ற கயிற்றினைத் தம் கழுத்தில் பூட்டி இழுத்தார். தம் அன்பர் வருத்தம் நீங்க இறைவன் நிமிர்ந்தருளினான். மன்னனும் மக்களும் அன்புக்கயிற்றால் இறைவனை வயப்படுத்த முடியும் என்பதை நேரில் கண்டுணர்ந்து அடியவரைப் போற்றினர். பின்னர்க் கலயனார் திருக்கடவூர் அடைந்து திருப்பணி செய்திருந்த நாளில், திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருக்கடவூர்க்கு எழுந்தருளினர். குங்குலியக் கலயர் மாறிலா மகிழ்ச்சி பொங்க அவ்விரு பெருமக்களையும் அடியார் திருக்கூட்டத்துடன் எதிர்கொண்டு வரவேற்றுப் போற்றித் தம்மனையில் திருவமுது செய்வித்து, அவர் தம் அருளையும் சிவபெருமான் அருளையும் பெற்று மகிழ்ந்தார். பின்பு

கடலூர்ப் பெருமான் மீது ஒன்றிய உள்ளத்துடன், தம்மாலியன்ற திருப்பணி பலவும் செய்து இறைவன் திருவடி சேர்ந்தார். பெ. சு.

*குசராத்தி*: ஓர் இந்தோ-ஆரிய மொழி. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் காணப்படும் பதினான்கு இந்திய அரசியல் மொழிகளுள் இதுவும் ஒன்று. குசராத்தி மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள குசராத்து மாநிலத்தின் அரசியல், வாணிக மொழியாகவும், பம்பாய் மக்களில் ஒரு பகுதியினரின் தாய்மொழியாகவும், கிழக்கு ஆப்பிரிக்காவில் ஒருசில இந்திய வணிகர்களின் தாய்மொழியாகவும் விளங்குகிறது. இம்மொழி ஏறக்குறைய இரண்டு கோடி மக்களால் பேசப்படுகிறது. குசராத்து என்ற சொல் குர்சரத்தா என்னும் சமசுகிருதச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். 'கூர்சரர்களின் நாடு' என இது பொருள்படும். கூர்சரர்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலிருந்து கி.பி. 400-ஆம் ஆண்டில் இந்தியாவில் வந்து குடியேறிச் சிறிதுசிறிதாகத் தெற்கே குசராத்து, கந்தேசு ஆகிய பகுதிகள்வரை பரவினர்.

குசராத்தி மொழி அளவற்ற கிளைமொழிகளைக் கொண்டுள்ளது. தென் குசராத்தி அல்லது சூரத்தி, கத்திய வாரி, வட குசராத்தி ஆகியவை குசராத்தி மொழியின் முக்கியமான கிளைமொழிகள் ஆகும். ஆனால், நிலைமொழி பரோடாவிலிருந்து அகமதாபாது வரை பேசப்படும்கிளை மொழியை ஒத்துள்ளது. குசராத்தி மொழி வழங்கும் பகுதிக்கு அருகில் கிழக்கிலும் வடகிழக்கிலும் பேசப்படும் மொழி இராசசுத்தானி. இருமொழிகளும் ஒன்றோடு ஒன்று மிக நெருங்கி இணைந்துள்ளமையால் எல்லைப்பகுதிகளில் வழங்கும் கிளைமொழிகளை எந்த மொழியின் கிளைமொழி என்று வரையறுப்பதே கடினமாக உள்ளது. கிளைமொழி வேற்றுமைகளைத் தவிர இம்மொழியில் சமூக வேறுபாட்டை ஒட்டி வகுப்பு வேற்றுமைகளும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, குசராத்தி பேசும் பார்சி மக்களும், முசுலீம்களும் பார்சி, அராபிய மொழிச்சொற்களை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால், குசராத்தி நிலைமொழியோ கடல்வழித் தொடர்பின் காரணமாக ஆசிய, ஐரோப்பியப் பகுதிகளிலிருந்து ஒரு சில சொற்களைக் கடன் வாங்கியுள்ளது. அதுவும்கத்தியவார் கடலோடிகளின் வழியாகவே மிகுதியாக வாங்கியுள்ளது.

இம்மொழி மிகப் பழைமையான இலக்கிய வரலாற்றைக் கொண்டது. கூர்சர அபப்ரம்ச காலத்திலிருந்து பழைய குசராத்தி வரை, பழைய குசராத்தியிலிருந்து இன்று வரை இடையறாத இலக்கிய வரலாற்றைக் கொண்டது. இம்மொழியின் வரலாற்றுக் காலத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவை பழைய குசராத்தி (12 முதல் 15-ஆம் நூற்றாண்டு வரை), இடைக்காலக் குசராத்தி (15 முதல் 18-ஆம் நூற்றாண்டு வரை), இன்றைய குசராத்தி எனப்படும்.

சாலிபத்திரரின் பாரதிபாகுபலி ராசா என்ற சமய வரலாற்று நூல் கி.பி. 1185-இல் இயற்றப்பட்டது. அது இம் மொழியின் மிகப் பழமையான இலக்கியமாகும். வசந்தத்தின் வருகையையும், காதலர்களின் உணர்வுகளையும் சித்திரிக்கும் இலக்கியங்களே பழைய குசராத்தி மொழியில் பெரும்பாலும் இயற்றப்பட்டன. வசந்தவிலாசம் என்னும் இலக்கியம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்டது. அதுவே இக்காலக் குசராத்தியின் மிகப் புகழ்பெற்ற நூல். பழைய குசராத்தியில் சமய நெறிகளைப் புகட்டும் பொருட்டுச் சமண முனிவர்களால் எழுதப்பட்ட கதைகளும் மிகவும் புகழ்பெற்றவை. நரசிம்மமேத்தா, மீராபாய், அக்கோ, பிரேமானந்து, தயாராம் ஆகியோர் இடைக்காலக் குசராத்தி மொழியின் மிகவும் புகழ்பெற்ற கவிஞர்கள். அக்காலத்தில் தான் சமசுகிருத இலக்கியமான காதம்பரியைத் தழுவிக் குசராத்தியில் காதம்பரி எழுதப்பட்டது. இன்றைய குசராத்தி மொழியில் கோவர்தன்ராம் திரிபாதியின் சரசுவதி சந்திர என்னும் நூல் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. 20-ஆம் நூற்றாண்டில் குசராத்தி தம் தாய்மொழி ஆனதால் காந்தியடிகள் குசராத்தி இலக்கியத்தில் தம்தாக்கத்தை ஏற்படுத்தினார். மேலும், காகா கலேல்கர், ராமநாராயண், பதக்கு, கே.எம். முன்சி ஆகியோர் இன்றைய புகழ்பெற்ற குசராத்தி மொழி எழுத்தாளர்கள் ஆவர்.

இம்மொழி மேற்கு இந்தி, இராசசுத்தானி ஆகிய மொழிகளை மிகவும் ஒத்துள்ளது. இம்மொழியில் 11 உயிரொலிகளும், 34 மெய்யொலிகளும் உள்ளன. உயிரொலிகளின் உச்சரிப்பில் இம்மொழிக்கெனச் சில பண்புகள் உண்டு. எடுத்துக்காட்டாக, மெய்யொலியை அடுத்து உயிரொலி வரும் இடங்களில் மெய்யொலி இரட்டிப்புக் குறைந்து உயிரொலி நீள்கிறது. எனவே, இந்தி மொழியின் மக்கன் என்ற சொல் மகான் என மாறும். இதுபோன்றே அராபிய பாரசீகச் சொற்களில் 'ஹ' ஒலிக்கு முன்னர் வரும் அ, இம்மொழியில் எ ஒலியாக மாறும். எடுத்துக்காட்டாக, இந்தி 'ஷஹர்' என்ற சொல் இம்மொழியில் 'ஷெஹர்' என மாறுகிறது. இந்தி மொழியைப் போலன்றி இம்மொழியில் ஆண்பால், பெண்பால், அஃறிணை என மூன்று பகுப்புகள் காணப்படுகின்றன. ஒருமை, இருமை என இருவகை எண் பகுப்பே உள்ளது.

இம்மொழிக்கென இருவகை எழுத்துமுறை உண்டு. ஒன்று தேவநாகரி. முதன்முதலில் இவ்வெழுத்துமுறையில்தான் இம்மொழி நூல்கள் அச்சடிக்கப்பட்டன. ஆயினும், இன்று இவ்வெழுத்து முறை பெரும்பாலும் கைவிடப்பட்டுவிட்டது. மற்றொன்று, தேவநாகரி எழுத்துமுறையின் அடிப்படையில் எழுந்த குசராத்தி எழுத்துமுறை. இதுவே இன்று வழக்கில் உள்ளது.
எம்.சு.

**குசராத்து:** சுதந்திர இந்தியாவில் குசராத்தி மொழி பேசும் பகுதிகளை இணைத்து 1960–ஆம் ஆண்டில் இம் மாநிலம் அமைக்கப்பட்டது. இந்திய நாட்டின் தந்தை அண்ணல் காந்தி அடிகள் இம்மாநிலத்திலுள்ள போர்பந்தர் என்ற இடத்தில் கி.பி. 1869–இல் பிறந்தார். இம் மாநிலத்தின் தலைநகர் காந்தி நகர் ஆகும். மாநிலத்தினுடைய பரப்பளவு 1,96,024 ச. கி.மீ. ஆகும். சென்ற 1981–ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி குசராத்தின் மக்கள் தொகை 3,39,60,905 ஆகும். இது இந்தியாவின் மேற்குக் கரையில் உள்ளது. வடக்கில் இராசசுத்தானமும், வடமேற்கில் பாகிசுத்தானமும், கிழக்கில் மத்திய பிரதேசமும், தெற்கில் மகாராட்டிரமும் மேற்கில் அரபிக் கடலும் இதன் எல்லைகளாக உள்ளன.



குசராத்து

அகமதாபாது, சூரத்து, வரோதரா, இராசுகாட்டு, பவநகர், சாம் நகர், நடியாட்டு ஆகியவை இம் மாநிலத்தில் உள்ள முக்கியமான நகரங்களாகும். மொத்தக் கிராமங்களின் எண்ணிக்கை 18,275 ஆகும்.

**நிருவாக அமைப்பு:** இம்மாநிலத்தின் சட்டமன்றம் ஓரவையைக் (Unicameral Legislature) கொண்டதாகும். சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 168 ஆகும். இம்மாநிலம் 24 உறுப்பினர்களைப் பாராளுமன்ற மக்கட் சபைக்கும் 11 உறுப்பினர்களை மாநிலங்களவைக்கும் அனுப்புகிறது. இம்மாநிலத்தில் மொத்தம் 20 மாவட்டங்களும் 184 வட்டங்களும் உள்ளன.

**மாநில மொழி:** இம்மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும், பல்கலைக்கழகங்களில் போதனா மொழியாகவும் இருப்பது குசராத்தி மொழியாகும். ஆனால், மைய அரசாங்கத்துடன் தொடர்பு இந்திமொழி மூலம் வைத்துக்கொள்ளப்படுகிறது.

**வேளாண்மை:** இம்மாநிலம் மிகவும் செழிப்பான கரிசல்மண் பூமியைக் கொண்டுள்ளது. இங்குத்தான் இந்தியாவிலேயே நான்கில் ஒரு பங்கு பருத்தி உற்பத்தியாகிறது. இம்மாநிலத்தில், தானிய வகைகளான நெல், கோதுமை, சோளம், பருத்தி, புகையிலை, நிலக்கடலை போன்றவை பயிரிடப்படுகின்றன. இந்த அளவு வேளாண்மை உற்பத்திக்குக் காரணம் இங்குப் பாயும் கரசுவதி, சபர்மதி, மாகி, நருமதை, தபதி ஆகிய நதிகளேயாகும்.

**பாசனம்:** இத்தனை நதிகளிருந்தும், இம்மாநிலத்தில் பாசன வசதி போதுமானதாக இல்லை. 12.5 மிலியன் எக்டேர் விளைவு செய்யக் கூடிய நிலங்களில் 1.5 மிலியன் எக்டேர் தான் பாசனவசதி பெற்றுள்ளது. இம்மாநிலத்தில் உகை அணைத்திட்டம் (தபதி ஆறு), கடானா அணைத்திட்டம் (மாகி ஆறு) நர்மதா பாசனத் திட்டம் (நர்மதா ஆறு), ஆகியவை மிகவும் முக்கியமான பாசனத் திட்டங்களாகும்.

**மீன்வளம்:** இம்மாநிலம் நீண்ட கடற்கரையைப் பெற்றுள்ளது. இங்கு மீன்பிடி தொழில் சிறப்பாக உள்ளது ஆண்டுக்கு 2,23,000 கண்டி (Tonnes) மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மீனவர்களுக்கென 168 கூட்டுறவுச் சங்கங்கள் செயற்படுகின்றன.

**காடுகள்:** இம்மாநிலக் காடுகளின் பரப்பளவு 19,535 ச.கி.மீ. ஆகும். இக்காடுகள் சுனகாத்து, தாங்க்கு பஞ்சு மகால், வதோதரா, சூரத்து ஆகிய மாவட்டங்களில் உள்ளன. தேக்கு, மூங்கில், சந்தனம், கருவேல மரம், தேன், மெழுகு முதலியவை இக்காடுகளில் கிடைக்கின்றன. இந்தியாவிலேயே சௌராட்டிராம் என்ற பகுதியில் உள்ள 'கீர்' காடுகளில்தான் சிங்கங்கள் மிகுதியாகவுள்ளன.

**தொழில்கள்**: இம்மாநிலத்தின் முக்கிய தொழில் நெசவுத் தொழிலாகும். சூரத்து, அகமதாபாது போன்ற நகரங்களில் விசைத்தறிகள் கொண்ட நெசவாலைகள் மிகுதியாக உள்ளன. இவ்வாலைகளில் ஏறக்குறைய 2,48,125 பேர் வேலை செய்கின்றனர். மேலும் சிமிண்டு ஆலை போர்பந்தரிலும் (மொத்தம் 6 சிமிண்டு ஆலைகள்),இரசாயன ஆலைகள் பரோடாவிலும் தத்தம் உற்பத்தியை மேற்கொண்டுள்ளன. புகையிலை சார்ந்த தொழில்கள் 276 உள்ளன. இயந்திரங்கள், மின்சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் 44,833 பேர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

**உற்பத்தித் திறன்**: இம்மாநிலத்தில் ஆண்டுக்கு வனசுபதி எண்ணெய் 65,500 கண்டிகள், சிமிண்டு 1,822 கண்டிகள், சோடா 93,700 கண்டிகள், பருத்தி நூல் 172.8 மிலியன் கிலோ கிராம், கந்தக அமிலம் 3,72,500 கண்டிகள், பருத்தித்துணி 1,031. 7 மிலியன் மீட்டர்கள், உப்பு 41,60,900 கண்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**பொது நிறுவனங்கள்**: இந்திய பெட்ரோ – இரசாயன நிறுவனம், எண்ணெய் மற்றும் நில வாயுக் குழு, இந்துசுத்தான் உப்பு, இந்திய எண்ணெய் நிறுவனம் போன்ற பொது நிறுவனங்கள் இங்குச் செயற்படுகின்றன.

**புதிய தொழில் திட்டங்கள்**:வதோதராவில், அணுசக்திக் குழு, அதிவேக நீர் அழுத்த நிலையத்தை அமைத்துள்ளது. மற்றும் தொலைபேசி, இயந்திர சாதனங்கள், போர்த் தளவாடங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை, உழுகருவித் தொழிற்சாலை போன்றவை உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன.

**தொழிற் பேட்டைகள்**: குசராத்துத் தொழில் வளர்ச்சி நிறுவனம் 132 தொழிற் பேட்டைகளை நடத்தி வருகிறது.

**வேலை வாய்ப்பு**: வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 3 இலட்சங்களுக்கு மேல் ஆகும். இம்மாநிலத்திலுள்ள 10674 தொழிற்சாலைகளில் ஆண்களும் பெண்களுமாக மொத்தம் 83,95,546 பேர்கள் பணி புரிகின்றனர். உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் 43,85,227 பேர்கள் ஆகும். வேளாண் கூலித் தொழிலாளர்கள் மொத்தம் 18,89,660 பேர்கள் உள்ளனர்.

**சுகாதாரமும் குடும்ப நலமும்**: படுக்கைகள் 19,881 கொண்ட 1,550 மருத்துவ மனைகள் செயற்படுகின்றன. பெண்கள் 1,63,127 பேரும், ஆண்கள் 37,467 பேரும் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**போக்குவரத்து மற்றுந் தொலைத் தொடர்பு**: இம் மாநிலத்தில் 47,420 கி.மீ. நீளச் சாலைகள் உள்ளன. இதில் 1,424 கி.மீ. தூரம் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. மாநில அளவில் 9,158 கி.மீ. சாலையையும் மாவட்ட அளவில் 10,625 கி.மீ. சாலையையும், கிராம அளவில் 15,324 கிலோ மீட்டர் சாலையையும் அரசாங்கம் கவனித்து வருகிறது.

இம்மாநிலத்தில் 5,617 கி.மீ. இருப்புப் பாதை உள்ளது. இதில் 1,156 கி.மீ. அகலப் பாதையும் 3,320 கி.மீ. குறுகிய பாதையும் அடங்கும்.

இம்மாநிலத்தில் உள்ள மொத்த அஞ்சல் நிலையங்கள் 8.415. தொலைபேசி அலுவலகங்களின் எண்ணிக்கை 1,466 ஆகும்.

**பால் உற்பத்தி**: பால் உற்பத்தியில் குசராத்து நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. அகமதாபாது, வதோதரா, பவநகர், குரத்து, சூனகாத்து, சாம்நகர், பஞ்சுமகால் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் உள்ளன. இந்தியாவிலேயே பால் பொருள் உற்பத்திக்குப் புகழ் வாய்ந்த ஆனந்து பால் நிறுவனம் இங்குத்தான் உள்ளது. ஆனந்தில், குழந்தைகள் உணவாக அமுல் பால் பவுடர், திரிக்சு சாக்லெட்டு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

**தாது வளம்**: இம்மாநிலம் தாதுவளம் நிரம்பியது. பெட்ரோலியம் இங்குக் கிடைக்கிறது. மணிக்கல் (Agate), சுண்ணாம்பு, அலுமினிய மண்வகை (Bauxite) ஆகியவை இங்குக் கிடைக்கின்றன.

**துறைமுகங்கள்**: இம்மாநிலத்தில் சிறியதும் பெரியதுமாக 51 துறைமுகங்கள் உள்ளன. இவைகளில் கண்ட்லா, ஓக்கா ஆகிய இரு துறைமுகங்கள் மிகவும் முக்கியமானவை.

**மின்சாரம்**: இங்கு ஆறுகள் அதிகம் இருப்பதால், நீர்விசை மின்சாரம் மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே, மின்சாரம் தேவைக்கு மிகுதியாக உள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்கள்**: குசராத்து மாநிலத்தில் ஒரு பகுதியாக உள்ள சொராட்டிரம் புராணச் சிறப்பு வாய்ந்தது. இம்மாநிலத்திலுள்ள பௌத்த குகைக் கோயில்களும் சமண கோயில்களும் உலகப் புகழ் பெற்றவை கசினி மாமூது என்ற

ஆப்கானிசுத்தான் அரசன் பலமுறை படையெடுத்து அழித்த சோமநாதர் கோயிலும், மற்ற இந்து கோயில்களும் சிறப்புச் சிறப்புக் கொண்டவை. இந்தியத் தந்தை காந்திஅடிகளின் நினைவில்லம் அமைந்த இராசுகாட்டும் சபர்மதி ஆற்றின் கரையில் அவரால் அமைக்கப்பட்ட சபர்மதி ஆசிரமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகும்.

**வரலாறு**: தொல்லியல் ஆய்வாளர்கள், குசராத்தைச் சிந்து வெளி நாகரிகத்துடன் (கி.மு. 3000–1500) இணைத்துள்ளனர். குசராத்து கி.பி. 1401–ஆம் ஆண்டில் ஒரு சுதந்திர சுல்தானியமாயிற்று. முகலாயப் பேரரசுடன் இப்பகுதி கி.பி. 1572–இல் இணைக்கப் பெற்றது. ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இது ஒரு குறுநில இளவரசர் நாடாக இருந்தது. இந்தியா சுதந்திரமடைந்தபின் இப்பகுதி பம்பாய் மாநிலமாக அமையப் பெற்றது. தி.கை.

**பல்கலைக் கழகம்**: குசராத்து மாநிலத்தின் அகமதாபாது நகரில், நவரங்கபுரம் என்னுமிடத்தில் 262 ஏக்கர் பரப்பளவில் குசராத்துப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இப்பல்கலைக் கழகம் 1949–இல் நிறுவப்பட்டது. இது ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் பல்கலைக்கழகமாகவும், கல்லூரிகளை இணைத்துக் கொண்டு (Affiliation) கற்பித்தலைச் செய்யும் பல்கலைக் கழகமாகவும் விளங்குகிறது. நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகள் குசராத்துப் பல்கலைக் கழகத்துடன் இணைப்புரிமை பெற்றுள்ளன. குசராத்துப் பல்கலைக் கழகத்தில் குசராத்து மொழியே பயிற்றுமொழியாக உள்ளது. ஆயினும், ஆசிரியரும் மாணவரும் ஆங்கிலம் அல்லது இந்தி மொழிகளைப் பயிற்றுமொழியாகவும், தேர்வு மொழியாகவும் பயன்படுத்துகின்றனர்.

குசராத்துப் பல்கலைக் கழகத்திலுள்ள சமூக அறிவியல் புலத்தில் சமூகவியல், அரசியலறிவியல், வரலாறு, தொழிலாளர் நலம், நிலவியல், பொருளியல் ஆகிய பாடத்துறைகளும்; அறிவியல் புலத்தில் தாவரவியல், வேதியியல், கணிதவியல், நுண்ணுயிரியல் (Microbiology),இயற்பியல், புள்ளியியல், விலங்கியல் ஆகிய பாடத்துறைகளும் உள்ளன. கல்வியியல், தத்துவம், உளவியல், தொழில்சார் வழிகாட்டல் (Vocational Guidance) ஆகியவற்றுக்கெனத் தனித்தனிப் புலமும் உண்டு. வணிக மேலாண்மை (Business Management) வணிகவியல், சட்டவியல் ஆகியவற்றுக்குத் தனித்தனிப் புலங்களும் உண்டு. மொழிப் புலத்தில் ஆங்கிலம், குசராத்தி, இந்தி, மொழியியல், பாரசீக மொழி (Persian), பிராகிருதம் (Prakrit) சமசுகிருதம் (Sanskrit) ஆகியவை உள்ளன.

குசராத்துப் பல்கலைக் கழகத்தில் புகுமுக வகுப்பு இல்லை. இங்கு இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி ஆகிய பட்டப்படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன. குசராத்துப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் முகவரி: நவரங்கபுரம், அகமதாபாது, குசராத்து மாநிலம். இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் (1982) பேராசிரியர் கே.எசு. சாசுதிரி(K .S. Shastri) இருந்து வருகிறார்.

**குசராத்து வித்தியாபீடம்**: இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் நடந்த கால கட்டத்தில், 1920–இல் அகமதாபாது நகரில் தேசிய பல்கலைக் கழகக் கல்வி நிறுவனம் (Rashtriya Vidyapith) என்னும் பெயரில் இவ் வித்தியாபீடம் நிறுவப்பட்டது. மகாத்மா காந்தியடிகள் இந்நிறுவனத்தின் முதல் வேந்தராக (Chancellor) இருந்தார். வித்தியாபீடம் 1930–ஆம் ஆண்டுவரை, மொழிகள், மருந்தியல், வரலாறு கணிதவியல், தத்துவம், அரசியல், பொருளியல், வணிகவியல், இசை போன்றவற்றில் இளங்கலைப் பட்டம் வழங்கி வந்தது.


இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் ஆசிரியரும் மாணவரும் பங்கு கொண்ட காரணத்தினால், 1930 –இலிருந்து 1935வரையும் 1942–இலிருந்து, 1945–வரையும் வித்தியாபீடம் மூடிக்கிடந்தது. இங்கு 1947–இல் மகாதேவ தேசாய் சமூகப்பணிக் கல்லூரி (Mahadeo Desai College of Social Service) என்னும் நிறுவனம் தொடங்கியபோதுவித்தியாபீடமும் நீண்டும் கல்வி கற்பிக்கத் தொடங்கியது. இச் சமூகப் பணிக் கல்லூரி, மாணவர்கள் தங்கிப் பயிலும் நிறுவனமாக உள்ளது. சமூகப் பணியில் முதுகலை, ஆராய்ச்சிப்படிப்பு ஆகியவை உள்ளன. வித்தியாபீடத்தில் இந்தி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் கல்வியியற் கல்லூரியும் (College of Education) இயங்குகின்றன. வித்தியாபீடம் பிற கல்லூரிகளை இணைத்துக் கொண்டு செயற்படும் நிறுவனம் அன்று.

பல்கலைக் கழகப் பணவுதவி ஆணையம் (University Grants Commission) 1963–இல் வித்தியாபீடத்திற்குப் பல்கலைக் கழகத் தகுதி(Deemed University) தந்தது. இதன் தலையாய நோக்கம், காந்திய சிந்தனையையொட்டிக் கல்வியின் பல பகுதிகளில் ஆராய்ச்சியும் பயிற்சியும் சோதனையும் மேற்கொள்வதேயாம். இங்குப் பயிலும் அனைத்து மாணவர்களும் சமுதாய வாழ்க்கை, சமுதாயப் பணி ஆகியவற்றில் ஈடுபடுதல் கட்டாயமாகும். வித்தியாபீடத்தில் கல்வியியல், காந்திய சிந்தனை, ஊரகப் பொருளாதாரம், சமூகப் பணி போன்ற துறைகளில் ஆராய்ச்சிக்கான வசதியுள்ளது. முன்னாள் பாரதப்

பிரதமர் மொரார்ஜி தேசாய், வித்தியாபீடத்தின் வேந்தராக இருந்து வருகிறார். எஸ்.த.

**குசானர்கள்** இந்தியாவில் பேரரசை ஏற்படுத்திய அயல் இனத்தவர்களுள் ஓர் இனத்தவராவர். குசானர்கள் (Kushanas). இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அருந்தொண்டு ஆற்றியவர்கள்.

குசானர்கள் யூ-இ (Yueh-chi) என்ற நாடோடி இனத்தைச் சார்ந்தவர்கள். முதன்முதலில் சீனாவின் பெருஞ்சுவருக்கு (Great Wall of China) அருகில் இவர்கள் வாழ்ந்து வந்தனர். ஏறத்தாழ கி.மு. 160-ஆம் ஆண்டில் இவர்கள் அங்கிருந்து ஊணர்களால் (Hunas) விரட்டியடிக்கப்படவே, இவர்கள் மேற்கு நோக்கி நகர்ந்தனர். சாகர்கள் (Sakas) வசமிருந்த பாக்ட்ரியாவைக் கைப்பற்றி அங்குக் குடியேறினார்கள். அங்கே தமது நாடோடிப் பழக்கங்களைக் கை




குசானப் பேரரசு

விட்டு நிலையான வாழ்க்கையை மேற்கொள்ளலாயினர். நாளடைவில் இவர்கள் ஐந்து இனக் குழுக்களாகப் பிரிந்தனர். அவற்றுள் ஒன்று குசானர் (Kushanas) ஆகும். குசான் இனக்குழுவின் தலைவரான குசலா காரா காட்பீசசு (Kujala Kara Kadphises) தலைமையின் கீழ் இவர்கள் மற்ற இனக்குழுக்களின் மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்தினர். வரலாற்று ஆசிரியர்கள் அவரை முதலாம் காட்பீசசு என்று கூறுகிறார்கள். இந்நிகழ்ச்சி ஏறத்தாழ கி.பி. 40-ஆம் ஆண்டில் நடந்திருக்கக் கூடும்.

முதலாம் காட்பீசசு இந்துக்குசு மலையைக் கடந்து காபூல் பள்ளத்தில் பார்த்தியர்களுக்குச் (Parthians) சொந்தமாக இருந்த பகுதிகளை வென்றார். அதையடுத்துச் சிந்து ஆற்றுக்கு மேற்கேயிருந்த அரகோசியாவைத் (Arachosia) தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். மகதராசா, மகாராசாதிராசா, சத்யதர்மாசுதிதா (Satyadharamasthita) போன்ற பட்டங்களை அவர் சூட்டிக் கொண்டார். நீண்ட ஆட்சிக்குப் பிறகு அவர் தமது 80-ஆம் வயதில் இறந்தார்.

அவரையடுத்து அவர் மகன் இரண்டாம் காட்பீசசு பட்டம் எய்தினார். அவர் சிந்து நதியைக் கடந்து தட்சசீலம் (Taxila) மற்றும் பஞ்சாபு ஆகியவற்றை வென்றார். வடமதுரை (Mathura) வரை அவர் படையெடுத்து வந்திருக்கக் கூடும் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். சீனாவிற்கும் உரோமானியப் பேரரசுக்கும் இடையே அவரது அரசு அமைந்திருந்தமையால் வாணிகம் செழித்தோங்கியது.

அவர் காலத்தில் ஏற்பட்டிருந்த வாணிக வளர்ச்சியை இப்போது கிடைத்திருக்கும் அவருடைய எண்ணற்ற நாணயங்கள் உறுதிப்படுத்துவனவாக இருக்கின்றன. அவர் சைவ வழிபாட்டை மேற்கொண்டிருக்கக் கூடும். எருதுடன் கூடிய சிவனும், திரிசூலமும் அவருடைய நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அப்பொறிப்புமகேசுவரனைக்(Maheswara) குறிப்பதாக அவரது நாணயங்கள் எடுத்து இயம்புகின்றன.

அடுத்து, பட்டம் எய்தியவர் வரலாற்றுச் சிறப்பு மிக்க கனிசுகர் (Kanishka) ஆவார். அவருக்கும் இரண்டு காட்பீசசுகளுக்கும் உள்ள தொடர்பைத் திட்டவட்டமாகக்கூற இயலாது. அவர்காட்பீசசுகளுக்கும் முன்பு ஆண்டார் என்றோ பின்னர் ஆண்டார் என்றோ திடமாகக் கூறுவதற்கில்லை. அவர் ஒரு சகாப்தத்தைத் தொடக்கி வைத்தார். அதைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் உண்டு எனினும் சக சகர்ப்தத்தை கி.பி. 78-இல் தொடங்கி வைத்துள்ளார் என்பதை ஒருவாறு அறியலாம். அவருடைய தலைநகரம் புருசபுரமாகும். (இக்காலப் பெசாவர்). காசுமீரம், பஞ்சாபு, பாட்னா வரையிலுள்ள கங்கைச் சமவெளிப் பகுதியும் மேலைச் சிந்துப் பகுதியும் மாளவம்வரையிலான பகுதிகளும் அவருடைய ஆணைக்குட்பட்டு இருந்தன. அவர் மேற்கே பார்த்தியர்களுடன் போரிட்டார். பாமீர் மலைகளைக் கடந்து சென்று கோட்டான், யார்க்கண்டு, காசுகர் ஆகியவற்றை ஆண்டுவந்த குறுநில மன்னர்களை அடக்கினார்;

அவர்களிடமிருந்து கப்பம் பெற்றார் தமது ஆட்சியின் இறுதிக்காலத்தில் அவர் சீனாவுடன் போர்புரிய நேர்ந்தது.

கனிசுகருடைய பெருமை அவருடைய போர் வெற்றிகளைவிடப்புத்தசமயத்திற்கு ஆற்றிய தொண்டுகளில்தான் விளங்குகிறது. புத்த சமயத்தினர் அவரை இரண்டாம் அசோகர் என்று புகழ்ந்துள்ளனர். அவருடைய நாணயங்களில் பலதிறப்பட்ட கடவுள் உருவங்கள் பொறிக்கப் பட்டிருப்பினும் அவர் புத்த சமயத்தைத் தழுவியிருந்தார் என்பதை அவருடைய பெசாவர் தூபி ஐயமற்ற வகையில் எடுத்துக்காட்டுகிறது. நான்காம் புத்த சமய மாநாட்டை குண்டலவனத்தில் (இக்காலச் சலந்தரில்) கூட்டினார். அதில் அசுவகோசரும் வசுமித்திரரும் முக்கிய இடம்பெற்றிருந்தனர். அக்கூட்டத்தில் புத்த சமய நூல்களுக்கு விளக்கங்கள் சமசுகிருத மொழியில் எழுதப்பட்டன. அவர் காலத்தில் மகாயான புத்த சமயமே செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆசாரியா நாகார்ச்சுனா அவர்காலத்தில் சிறந்து விளங்கிய மகாயான புத்த சமயப் போதகர் ஆவார். அவர் மத்திய ஆசியா, சீனா ஆகிய இடங்களுக்குப் புத்த சமயப் போதகராகச் சென்றார். கனிசுகர் மத்திய ஆசியா, மற்றும் சீனா ஆகிய இடங்களுக்குப் புத்த சமயப் பரப்பாளர்களை அனுப்பி வைத்தார். அவர் புத்த விகாரங்களையும் தூபிகளையும் ஆங்காங்கே எழுப்பினார். புத்த சமயத்தினராயினும் அவர் ஏனைய சமயத்தினர்களைத் துன்புறுத்தவில்லை.

கனிசுகர் இலக்கிய வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும் மிகுந்த ஆதரவை அளித்தார். அவருடைய அவையை அலங்கரித்த சிறந்த கவிஞர் அசுவகோசராவார். சாரகா (Charaka) என்ற ஆயுர்வேத மருந்துவநிபுணரும் அவர் அவையில் இடம் பெற்றிருந்தார். கனிசுகர் பல கட்டடங்களை எழுப்பினார். அவற்றுள் ஒன்று பெசாவரில் 400 அடி உயரமுள்ள மரத்தாலான கோபுரமாகும். கனிசுகபுரம் என்ற நகரத்தையும் அவர் உருவாக்கினார். சிற்பக் கலை வடமதுரையிலும், தட்சசீலத்திலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. அவர் காலத்திய சிற்பங்கள் காந்தாரா வகையைச் சார்ந்தனவாகும்.

இந்தியாவின் பண்பாடு அவர் காலத்தில் புதியதொரு ஆற்றலைப் பெற்றது. அது அயல்நாட்டுப் பண்பாட்டுக்கூறுகளைத் தன் வயப்படுத்திக் கொண்டு மேலும் செழித்து வளரலாயிற்று. சமசுகிருத மொழி வளர்ச்சிக்குப் புத்தூக்கம் அளிக்கப்பட்டது. புத்த சமயத்திற்கும் புத்துயிர் அளிக்கப்பட்டது.

கனிசுகருக்குப் பிறகு குசானர் புகழ் இந்திய வரலாற்றில் மங்கலாயிற்று. தி.ஆர்.இரா.

**குசிநகரம்** உத்தரப்பிரதேச மாநிலத்தில் தியோரியா (Deoria) மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். கௌதம புத்தர் இங்குத்தான் பரிநிருவாணம் (இறப்பு) அடைந்தார். பௌத்த சமயத் தொடர்



குசிநகரத் தூபி

பான தூபி ஒன்று சிறிது காலத்திற்கு முன்பு வரை குசி நகரில் இருந்தது. புத்தர், இந்நகரைப் பௌத்தர்களின் நான்கு புண்ணியத் தலங்களுள் ஒன்றாக அறிவித்தார். கந்தக்கு (Gandak) என்னும் சிற்றாறு இரப்தி ஆற்றுடன் கலக்குமிடத்தில் இந் நகரம் அமைந்திருந்தது. குசிநகரம் மல்லர்களின் தலைநகரமாக விளங்கியது. மல்லர்கள் புத்தரைப் பெரிதும் மதித்து அவரது கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்களாவர். அசோகர், புத்தர் இறந்தபின் இந்நகருக்கு வந்ததாகத் திவ்வியாவதனம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. குசவதி எனப்பட்ட இந்நகரம் பின்னர்க் குசிநரா என்று கூறப்பட்டது. முற்காலத் தில் இந்நகரம் பெரும் அரண்களைக் கொண்டு நான்கு நுழைவாயில்களும் 7 மதில்களும் உடையதாய் விளங் கியது. இந்நகரம் மகத அரசுடன் இணைந்தபின் தன் சிறப்பை இழக்கத் தொடங்கியது. இருப்பினும் இந்நகரத்தின் சமயச் சிறப்பு மகத அரசர்காலத்தி லும் சிறந்திருந்தது. அசோகருக்குப் பின்னர், சீனப் பயணியான யுவான்-சுவாங்கு இந்நகருக்கு வந்த பொழுது இந்நகரம் அழிந்தே காணப்பட்டது. இந் நகரத்தில் இருந்த காசியா என்ற பகுதியில் இருந்த தூபியை அலெக்சாந்தர் கன்னிங்காம் கி.பி. 1876-இல் அகழாய்வு செய்தார். அதன்பின்னர் நடத்தப் பட்ட அகழாய்வுகளால் இந்நகரத்தில் பல தொன் மைக் கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்குப் புத்தர் சிற்பங்கள் பல கிடைத்தன. அவற்றுள் கிடந்த நிலையில் இருந்த புத்தர் சிலை புகழ் பெற் றது. இச்சிலையில் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந் தன. இச்சிலையை அரிபாலர் என்பவர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் நிறுவினார். சு.இரா.

**குசுநட்சின் சுழற்சி**: பொருளாதார வளர்ச்சி ஆய்வுகளில் வளர்ச்சி வீதத்தைக் கணக்கிடும் முறைகளுள் 15 முதல் 20 ஆண்டுக்கால நிலையான போக்கையும் (Secular Trend) அவற்றினூடே நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும் (Fluctuations) குசுநட்சின் சுழற்சி (Kuznets Cycle) விளக்குகிறது. அமெரிக்கப் பொருளியல் அறிஞரான சைமன் குசுநட்சு (Simon Kuznets) அமெரிக்க ஐக்கிய நாட்டின் (U.S.A.) பொருளாதார முன்னேற்றம் (Economic Development) குறித்த விரிவான ஆய்வுகளில் ஈடுபட்டு, இக் கருவுருவை (Concept) உருவாக்கினார். அவர் இரண் டாம் உலகப் போருக்கு முந்தைய காலப் பொருளா தார நடவடிக்கைகள் குறிப்பாகக் கட்டடத் தொழில் துறையின் (Construction Industry) வேலை வாய்ப்பு, இடப்பெயர்வு, வருமானம, வட்டிவீதம், முதலீடு, விலை நிலவரம் ஆகியவற்றைப் பகுத்தா ராய்ந்து, பொருளாதாரத்தில் நீண்டகால ஏற்ற இறக்கச் சுழற்சிகளும் (Long Term Swings) நிலை யான வளர்ச்சிப் போக்கும் நிலவுவதாகவும் கண் டறிந்தார்.

கட்டடத் துறையில் மட்டுமல்லாமல் பிற பொருளாதாரநடவடிக்கைகளிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டுமல்லாமல் பிற உலக நாடுகளின் பொரு ளாதார வளர்ச்சிகளிலும் (Economic Growth) இத் தகைய மாறும் நிலையான போக்கு (Secular Swings) நிலவுவதைக் குசுநட்சின் சுழற்சி விளக்குகிறது. குசு நட்சு, தம் தொடக்க கால அடிப்படை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட காலம், முதல் உலகப் போருக்கு முந்தைய காலமாகும். அவ்வாய்வுகளின் கண்டுபிடிப் பாக கி.பி. 1873,1892,1913 ஆகிய ஆண்டுக் காலங் களில் அமெரிக்க ஐக்கிய நாடு பொருளாதாரச் செழிப்பின் (Economic Boom) உச்சக் கட்டத்தை அடைந்ததாகவும் கி.பி. 1878,1896 ஆகிய ஆண்டுக் காலங்களில் பொருளாதாரத் தேக்கமும் மந்த நிலை யும் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

குசுநட்சு, கட்டடத் துறையின் பொருளாதார நடவடிக்கைகளை ஆழ்ந்து உன்னிப்பாக ஆராய்ச்சி செய்தாரெனினும், கூடுதலாக, குறிப்பாக மக்கள் தொகையியல் காரணிகளால் (Demographic Factors) உண்டாகும் மாற்றங்கள், முதலாக்கம் (Capital Formation), வருமானம், நாட்டு மொத்த உற்பத்தி (Gross National Product-GNP) ஆகியனவற்றையும் தம் ஆராய்ச்சிக்குட்படுத்தினார். குசுநட்சின் மாறும் நிலையான வளர்ச்சி (Secular Growth Movement) என்பது பொருளாதார வளர்ச்சி வீதத்தில் காணப் படும் நீண்டகாலச் சுழற்சிகளாகும். அவை குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கையின் விரிவாக்கத்தையும் செழிப்பையும்), சுருக்கத்தையும் (மந்தத்தையும்) குறிக்காது.

ஓலீயரி (O'Leary), ஆர்தர் லூயிசு (Arthur Lewis) ஆகிய பொருளியல் அறிஞர்களும் பொருளா தார வளர்ச்சி வீதத்தில் காணப்படும் நீண்டகாலச் சுழற்சிக்குச் சான்றாக ஐக்கிய அமெரிக்க நாடு, செருமனி (Germany), பிரான்சு (France), பிரிட்டன், ஆகிய நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் புள்ளி விவர ஆய்வுகளை 1955-இல் வெளியிட்டனர். இந்நாடுகளில் முதல் உலகப்போருக்கு முந்தைய காலங்களில் மூன்று குசுநட்சின் சுழற்சிகள் நிகழ்ந்த தாக ஓலீயரியும் ஆர்தர் லூயிசும் குறிப்பிட்டுள்ளனர். குசுநட்சும் பிற அறிஞர்களும் மீண்டும் 1902-இலும் 1930-இலும் வளர்ச்சி வீதச் சுழற்சிகள் (Growth Rate Swings) காணப்படும் எனக் கூறினர். குறிப்பாக. 1921-இல் பொருளாதாரச் செழிப்பு உச்சக் கட் டத்தையடையும் எனவும், பொருளாதாரத் தேக்க மும் மந்த நிலையும் 1931-இல் நிலவும் எனவும் குசு

நட்சு வெளிப்படையாகக் கூறினார். இதற்கு அவர் பயன்படுத்திய அடிப்படை ஆய்வுக் காரணிகள் தனி ஆள் வருமானமும் (Per Capita Income) மொத்த வருமானமுமாகும்.

குசுநட்சின் சுழற்சிகள் நிகழ்வதற்கான காரணங் களைக் குசுநட்சாலும் பிற அறிஞர்களாலும் தெளி வாக வரையறுத்துக் கூற இயலவில்லை. நிலையான வளர்ச்சிவீதத்தில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளுக் கான காரணங்கள் தெளிவற்ற இருளார்ந்ததாயிருக் கிறது. ஆயினும், அச்சுழற்சிகள் மீண்டும் மீண்டும் நிகழ்வது திட்டவட்டமாகச் செயல்முறையில் தெளி வாகப் புலப்படுகிறது எனக் குசுநட்சு கூறியிருக் கிறார். மாறும் நிலையான வளர்ச்சி ஆய்வுக்கு அறி ஞர் பிரின்லி தாமசு (Brinly Thomas) 1973-இல் குசு நட்சின் கட்டடத்துறை ஆய்வை அடிப்படையாகக் கொண்டு, அத்துறையின் சுழற்சி பிரிட்டனிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் தலைகீழ்த் (Inverse) தொடர்புடைய எதிர்மாறான தொடர்பு களையுடையது எனக் குறிப்பிட்டார். அவர் முதலாம் உலகப்போருக்கு முந்தைய 70 ஆண்டு களில் மக்கள் தொகையியல் காரணிகளால் இவ் விரு நாடுகளிலும் உண்டான விளைவுகளே குச நட்சின் சுழற்சிக்குக் காரணம் என விளக்கினார். இக் காலத்தில் பிரிட்டனிலிருந்து பெருமளவில் மக்கள் வெளியேறிய இடப்பெயர்வும் (Emigration), அமெரிக்க ஐக்கிய நாட்டில் நிகழ்ந்த குடியமர்வு (Immigration) இயக்கமும் பிரிட்டனில் கட்டடப் பணித்துறை நடவடிக்கையில் வீழ்ச்சியையும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் செழிப்பையும் உண்டாக்கின. தாமசு, மேலும் தம் ஆய்வை விரி வாக்கி மாறும் நிலையான வளர்ச்சி வீதத்திற்கு மக்கள் வள முதலாக்கமும் (Man Power Capital Formation) காரணம் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

மக்கள் தொகையியல் காரணிகள், மாறும் நிலையான வளர்ச்சி வீதத்திற்குக் காரணமா யிருக்குமா என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இக்காரணியைக் கருது கோளாகக் (Hypothesis) கொண்டு ஆய்வுகளை நடத்திய ஒலீயரி, ஆர்தர் லூயிசு ஆகியோரின் அமெரிக்கா, பிரிட்டன், செருமனி, பிரான்சு ஆகிய நாடுகளின் முதலாம் உலகப்போருக்கு முந்தைய கால ஆய்வு முடிவுகளும் அதே காலத்திய மேற் குறித்த நாடுகளடங்கிய தாமசின் ஆய்வு முடிவுகளும் முரண்பாடுடையவைகளாயுள்ளன.

குசுநட்சின் சுழற்சி, இரண்டாம் உலகப்போருக்கு முந்தைய காலங்களில் நிகழ்ந்துள்ளது என்பதற்குத் தகுந்த சான்றுகள் உள்ளன. ஆயினும், அவை மீண்டும் நிகழும் என அறுதியிட்டுக் கூறுவதற்கான வரையறுக்கப்பட்ட கோட்பாடுகள் இதுவரை வெளியிடப்படவில்லை. அங்காடி அமைப்பையுடைய பொருளாதாரங்களில் (Market Oriented Economics) குறுகிய காலச் சுழற்சிகள், வளர்ச்சிப் போக்கோடு ஒட்டிக் காணப்படுகின்றன. அவை குசுநட்சின் சுழற்சி கள் போல் செழிப்பையும், மந்தத்தின் உச்சக் கட் டத்தையும் அடையும் எனக் கூற இயலாது. ஏனெ னில், உலகப்போருக்குப் பின்னர் வரலாற்றுக் காரணி களும் நிறுவன மாற்றங்களும் (Institutional Charges) தனித் தன்மையுடன் இயங்குவதாலும் பணவீக்கம், நிதி நெருக்கடி போன்ற சிக்கல்களிலிருந்து தீர்வு காணப் பல முன்னோடித் திட்டங்கள், முன் அறி விப்பு (Forcasting), தொழில்நுட்ப அறிவு போன் றவைபெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ளமையாலும், அரசுகள் பாதகமான சுழற்சி நிகழ்வுகளை முன் னறிந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பெற்றுள்ளன. குசுநட்சின் சுழற்சி யில் வலிமைபெறும் சில காரணிகள் பிற்காலத்தில் முற்றிலுமாக மாறிவிட்டன. அவற்றுள் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சென்று குடியமரும் இயக்கத் தின் கட்டுப்பாடற்ற தன்மை பின்னர் முற்றிலுமாக மாறியிருப்பது ஓர் எடுத்துக்காட்டாகும்.

குசுநட்சின் சுழற்சி நீண்டகால மாற்றங்களைக் குறிப்பிட்டாலும் அவை 15 முதல் 20 ஆண்டுக் காலத்தையே உள்ளடக்குகிறது. அதற்கும் மேலான 40 முதல் 60 ஆண்டுக்கால நீண்டகாலச் சுழற்சி களை அறிஞர் கோன்டிராட்டிபு (Kondratieff) விளக்குகிறார். அவரது கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது குசுநட்சின் சுழற்சியினை இடைக் காலச் சுழற்சி (Intermediate Cycle) எனக் கருத இடமுண்டு. வளர்ச்சிப் பொருளாதாரத்தில் வருங் கால ஆய்வுக்குப் பேரளவில் வாய்ப்புகள் உள்ளன என்பதை இவ் ஆய்வுகளின் தெளிவற்ற முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. அ.கு.சா.

**குசுரு, அமீர்** (கி.பி. 1253-1325) இடைக் கால இந்திய வரலாற்றறிஞர்களுள் தலைசிறந்தவர்; சிறந்த கவிஞர். அபுல் அசன் யமினுதீன் குசுரு (Abul Hasan Yaminuddin khusrau) எனவும் அழைக் கப்படும் இவர், கி.பி. 1253-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநிலம் எதா (Etah) மாவட்டம், படியாலி என்னுமிடத்தில், அமீர் சைபுதீன் முகமது என் பாரின் மகனாகப் பிறந்தார். குசுருவின் தந்தையார் நடு ஆசியாவிலிருந்து இந்தியாவில் குடியேறி, இமத் உல்முல்க்கு என்னும் இந்தியப் பெருஞ்செல்வரின்

மகளை மணந்தார். எனவே, குசுரு ஓர் துருக்கிய இந்தியர் (Turke Hindustani) ஆவார்.

பிறவிக்கவிஞரான இவர், ஒன்பது வயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்றார். இவர் மத்திய ஆசிய இசையிலும் இந்திய இசையிலும் வல்லவர். இவரது கீர்த்தனங்கள் குருநானக்கு, கபீர்,சந்து, நாம தேவர், வாரிசு சா (Waris shah), அப்துல் லத்தீபு -முதலான மாபெரும் ஆன்மிக வாதிகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்து வந்துள்ளன.மாபெரும் எழுத்தாளரான இவர், ஒரு பன்மொழிப் புலவர். இவர் துருக்கி, அராபி, பாரசீகம், உருது, இந்தி, சமசுகிருதம் (Sanskrit), வடஇந்திய மொழிகள் சில ஆகியவற்றை அறிந்திருந்தார். இவர் ஆப்கானிசுத்தான், ஈரான்,நடு ஆசியா, பாகிசுத்தான், இந்தியா முதலான நாடுகளைச் சேர்ந்த மக்களின் இணைப்புச் சின்னமாக விளங்கினார். சூபிக் கொள்கையினரான இவர் இந்தியாவைப் பெரிதும் நேசித்தார். தம் நூல்களின் பல இடங்களில் இந்திய நகரங்களையும், இயற்கைக் காட்சிகளையும், பழவகைகளையும் பறவைகளையும் பெரிதும் போற்றிப் புகழ்ந்துள்ளார். தாம் பிறந்த இந்தியாவை இவர் இம்மண்ணுலகில் உள்ள சொர்க்கம் என்று போற்றியுள்ளார். இந்தியரின் அறிவுத் திறனையும், கூர்த்த மதியையும், கி.பி. 1293-இல் இயற்றிய குற்றதூல்-கமால் என்னும் பாடல்தொகுதியில் பாராட்டிப் புகழ்ந்துள்ளார். தருக்கம்,சோதிடம், கணிதம், இயற்பியல் (Physical science) ஆகிய கலைகளில் இந்திய அறிஞர்கள் மேம்பட்டு விளங்குவதையும் இவர்தம் நூல்களில் சுட்டிக்காட்டுகிறார்.நெடுங்காலம் வாழ்ந்த இக்கவிஞர், கியாசுதீன் பால்பன் தொடங்கி கியாசுதீன் துக்ளக்கு ஈறாக உள்ள பதினொரு சுல்தான்களின் ஆட்சிக் காலத்தைக் கண்டவர். இச்சுல்தான்கள் இவரது திறமையைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கியுள்ளனர்.இவர் கியாசுதீன் பால்பனின் மகனான பக்ராகான், முகம்மது கானி ஆகியோர் அவையிலும், சலாலுதீன் கில்சி அலாவுதீன் கில்சி ஆகியோரது ஆட்சியிலும்அவைப்புலவராகத் திகழ்ந்தார். பாரசீகமொழியிலும், இந்திய மொழியிலும் இவர் சிறந்த கவிதை நூல்களை இயற்றிப் புகழ் பெற்றுள்ளார். இசைத்துறையிலும் இவர் தம் முத்திரையைப் பொறித்துச் சென்றுள்ளார்.

இவர் ஏறத்தாழ 99 நூல்களை இயற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்று கீழ்க்காணும் நூல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

1) கிரான் - உசு - சடைன் (Qiran-us -Sadain, கி.பி. 1289) 2) தபட் - உசு - சிகர்(Tuhfat-us-sighar - கி.பி. 1271), 3) வசட் - உல் - கயத்து (Wasat-ul Hayat - கி.பி. 1283), 4) மிப்தா உல் புதூ (Miftah ul-Futuh - கி.பி. 1291), 5) குற்றாத் உல் - கமால் (Ghurratu'l Kamal - 1294), 6) மட்லா-உல்-அன்வர், (Matla-ul-Anwar,) சிரின் - வா - குசுரு, மசுனுவா லைலா (Shirin wa khusrau, Mojnuwa Laila -கி.பி. 1299, (7) ஐநா இ சிகந்தரி (Aina - e-sikandari கி.பி. 1301), 8) கசுட் பிகிசுடு (Hasht - Bihisht கி.பி.1302), 9) கசைன் உல் புதூ (Khazoin-ul-Futuh கி.பி. 1311)11), தேவல் ராணிகிசிர்கான் (Deval Rani Khizr khan - கி.பி. 1315), 12) பகிய்யா நகிய்யா (Baqiyya Naqiyya - கி.பி. 1316) 12) நூ-சிபிர் (Nuh sipihr - கி.பி. 1318), 13) இசசு-இ-குசுரவி (Ijaz -e-khusravi-கி.பி.1319), 14) அப்சல் உல் பவீது (Afzal ul-Fawaed - கி.பி.1319), 15) துக்ளக் நாமா (Tughlaq nama- கி.பி. 1325)

நூ-சிபிர் என்னும் நூலில் இவர், சுல்தான் முபாரக்சாவின் வெற்றிகளை விளக்குவதுடன், இந்தியாவின் பண்பாட்டுப் பெருமையையும் நயம்பட விவரித்துள்ளார். இந்நூலின் மூன்றாம் அத்தியாயத்தில், அமீர் குசுரு இந்தியாவிற்கே உரிய சிறப்பான பத்து அம்சங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் பெருமையை அயல் நாடுகளுக்கு உணர்த்திய பெருமை குசுருவைச் சாரும். இவரது நூல்கள் அனைத்தும் அக்காலத்திய சமூக நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும், வரலாற்றுண்மைகளை விளக்குவதாகவும் அமைந்துள்ளன என்று பேராசிரியர் உலூனியா குறிப்பிடுகிறார். இவர் தம் நூல்களில் காலவரிசையை முறை பிறழாது கையாண்டுள்ளமை பாராட்டத்தக்கது. சில இடங்களில் இவர் வருணனைகள், உயர்வு நவிற்சியாகக் காணப்படினும், வரலாற்று முக்கியத்துவம் உடையது என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. இவர் ஓர் வரலாற்றறிஞர் என்றாலும்கூட, இவரது பெருமை ஓர் மாபெரும் கவிஞர் என்பதில்தான் அடங்கியுள்ளது. இடைக்காலத்திய வரலாற்று வரைவியலுக்கு அமீர் குசுருவின் பணி பாராட்டத்தக்க அளவில் உள்ளது. இவர் கி.பி. 1325-இல் தில்லியில் காலமானார்.

ம.இ.

**குசேலர்**, வட இந்தியாவிலுள்ள அவந்தி நகரின் அருகிலமைந்த காட்டினையடுத்த முனிவர் சேரியில் பிறந்தார். இவர் இயற்பெயர் சுதாமா என்பது. இளமையில் சாந்தீபினி என்னும் முனிவரிடம் குருகுலவாசமுறையில் பல கலைகளையும் கற்று வல்லவரானார். துவாரகையை ஆண்ட கண்ணபிரான்

இளமைப் பருவத்தில் இவருடன் பயின்றவர். குசேலர் படித்ததோடமையாது பல விரதங்களையும் நியமம் தவறாது மேற்கொண்டதால் வாழ்க்கையில் மிகவும் தூயவராய் விளங்கினார். இன்பத்தையோ துன்பத்தையோ நினைத்து மகிழ்வதோ வருந்துவதோ இவர்பாலில்லை. இவர் மேனி இளைத்தவராய்க் காணப்பட்டார். இவர் எண்ணம்,சொல், செயல்களில் தூய்மையுடையவர். எப்பொழுதும் கண்ணன் கழலிணைகளை நண்ணும் மனமுடையவராயிருந்தார். தக்க பருவத்தில் சுசீலை என்னும் மாதைத் திருமணம் செய்துகொண்டார். அப்பெண் கணவனுக்கேற்ற பதிவிரதையாவாள்; இல்லறப் பண்புகள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற உத்தமி. இவ்விருவருக்கும் இருபத்தேழு பிள்ளைகள் பிறந்தனர். குடும்பப் பெருக்கால் வறுமை நிறைந்தது.ஒருசமயம் சுசீலை தங்கள் வறுமைத் துன்பத்தைப் போக்கக் குசேலரிடம், அவர் பள்ளி நண்பராய கண்ணபிரானிடம் சென்று செல்வம் பெற்று வருமாறு வேண்டினாள். குசேலர், ‘பெருமானிடம் கேட்கத்தக்கது அழிவுறும் செல்வ்த்தையா?, அழியாத முத்திப் பேறன்றோ கேட்க வேண்டும்’ எனக் கூறி, கண்ணபிரானிடம் செல்ல விரும்பவில்லை. சுசீலை சிறிது அவலைப் பக்குவப்படுத்திக் கொடுத்துக் கண்ணபிரானைக் கண்டுவருமாறு கூறவே, ஒருவாறு துணிவு கொண்டு துவாரகைக்குச் சென்றார். வாயிற் காவலர் இவர் தோற்றம் கண்டு கண்ணபிரானைக் காண உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. பின் இரக்கங் கொண்ட ஒருவன் கண்ணனிடம் அனுமதி பெற்றுக் குசேலரை உள்ளே அனுப்பினான். அதற்குள் கண்ணபிரானே எதிர்கொண்டு அழைத்துச் சென்று குசேலருக்குச் செய்த உபசாரங்கள் அளப்பில. யாவரும் இதுகண்டு வியப்புற்றனர்.பின் தமக்கெனக் கொண்டு வந்திருக்கும் அவலை எடுத்து ஒரு பிடி கண்ணன் தம் வாயில் இட்டார். அவ்வளவில் குசேலர் வீட்டில் செல்வம் நிறைந்துவிட்டது. அது குசேலருக்குத் தெரியாது. இரண்டாம் பிடி அவலைக் கண்ணபிரான் உண்ணமுனையும்போது உருக்குமணி தேவியார் தடுத்துவிட்டார். குசேலருக்குப் போதுமான செல்வம் நிறைந்துவிட்டது என்பதற்காகவே தடுத்தார். பின் பலநாள் இருவரும் பேசி மகிழ்ந்தனர். ஒருநாள் விடைபெற்றுக் குசேலர் தம் ஊர் சென்றார். கண்ணபிரான் அவர் கையில் ஒன்றும்கொடுத்து அனுப்பவில்லை. குசேலரும் அதுபற்றி எண்ணவுமில்லை. வீட்டிற்கு வந்து பார்த்ததும் கண்ணன் திருவிளையாடல் புரிந்தது. செல்வம் குசேலர் வீட்டில் செழித்திருந்தது. செல்வத்தால் கண்ணனிடம் அன்பு குறைந்துவிடுமே என்று வருந்திய அவர் ஒரு சமயம் கண்ணனிடம் சென்று செல்வம் வேண்டாம் மீண்டும் வறுமையே வேண்டும் என்று கேட்டார். ஆனால், கண்ணபிரான் குசேலர் போன்ற உண்மை அன்பர்கள் செல்வத்தால் மதிமயங்கார் என்று எடுத்துக்கூறி அச்செல்வத்தைக் கொடுத்ததுடன், தக்க காலத்தில் அவருக்கு முத்திப் பேற்றையும் நல்கினார். இவ்வரலாறு பாகவதத்தில் ஒரு கிளைக் கதையாக உள்ளது. வல்லூர் தேவராச பிள்ளை, குசேலர் வரலாற்றைக் குசேலோபாக்கியானம் என்னும் பெயரில் தமிழில் ஒரு நூலாகப் பாடியுள்ளார்.

இரா.ச.

**குசேலோபாக்கியானம்**: இந்த நூல் குசேலரைப் பற்றிய கிளைக்கதை பற்றியதாதலின் குசேலோபாக்கியானம் எனப் பெயர் பெற்றது. குசேலன் + உபாக்கியானம் குசேலோபாக்கியானம்.உபாக்கியானம் என்னும் வடசொல்லுக்குக் கிளைக்கதை என்பது பொருள். குசேலருடைய வாழ்க்கை பாகவதத்தில் காணப்படுகின்றது. இராமாயணம், பாரதம், பாகவதம் போன்ற நூல்களில் இடப்பெற்றுள்ள கிளைக்கதைகள் பிற்காலத்தே தனி நூல்களாகத் தோற்றம் பெற்றன. நளவெண்பா, குசேலோபாக்கியானம் இவ்வகையின.

இந்நூலாசிரியர் வல்லூர் வீராசாமிப் பிள்ளை மகனார் தேவராசபிள்ளை ஆவார். சிறப்புப்பாயிரம் நூல் தோன்றிய வரலாற்றை நன்கு அறிவிக்கின்றது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணாக்கருள் ஒருவர் தேவராசபிள்ளை. நூலாசிரியர் தம் ஆசிரியப் பெருந்தகையினை மதிக்கும் மாண்பு, அவர்தம் பாக்களால் அறியத்தகும். சக ஆண்டு 1772, சௌமிய ஆண்டு, மார்கழி மாதம், இருபத்து நான்காம் நாள், ஞாயிற்றுக்கிழமை நூலரங்கேற்றம் நிகழ்ந்தது.

குசேலோபாக்கியானம் தோன்றக் காரணமாய் இருந்தோர் திருவூர் நாராயண வள்ளல் மக்கள் கோவிந்தன், சீனிவாசன் ஆகிய இருவருமாவர். ‘தேமேவு மலர் மாலைக் கோவிந்த முகில் சீனிவாசச் செம்மல்’ என்று சிறப்புப் பாயிரம் உரைக்கும்.

இந்நூல் பாயிரம், சிறப்புப் பாயிரம், குசேலர் மேற்கடலடைந்தது, குசேலர் துவாரகையைக் கண்டு தம் நகர்ப் புறம் அடைந்தது, குசேலர் வைகுந்தம் அடைந்தது ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. பாயிரம் 16 பாடல்கள். சிறப்புப் பாயிரம் 10 பாடல்கள், நூல் 746 பாடல்கள். ஆகப் பாடல் தொகை 772. காஞ்சிபுரம் வித்துவான் இராமசாமி நாயுடு அவர்கள் எழுதிய அரும்பதவுரையுடன் 1916-இல் இரண்டாம் பதிப்பாக நூல் வெளியாகி உள்ளது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சங்குப்

புலவர் அவர்களின் விளக்கவுரையுடன் இதனைச் செம்மையான பதிப்பாக 1965-இல் வெளியிட்டுள்ளது. குசேலருடைய வரலாறு இந்நூலில் உரைக்கப்படும். குசேலர் அவந்தி ஊரினர். மனைவி சுசீலை. குசேலரோடு உடன் பயின்றவன் கண்ணன். குசேலர் குழந்தைகள் இருபத்தெழுவர். வறுமையில் வாடிய குசேலர் கண்ணனைக் கண்டு பொருள் பெற விரும்பினார்; கண்ணனைக் கண்டார்; கண்ணன் அவர் எடுத்துச் சென்ற அவலை விரும்பி உண்டான். யாதும் கண்ணனிடம் கேட்காமலேயே குசேலர் ஊர் திரும்பினார்; கண்ணன் அருளால் தம் வீடும் ஊரும் செல்வத்தால் திளைத்திருத்தல் கண்டு கண்ணன் அருளைப் பெரிதும் போற்றினார்; இறுதியில் வைகுந்தம் அடைந்தார்.

சிறுகாப்பியத்திற்குரிய கூறுகளைக் கொண்டு இனிய எளிய நடையில் நூலமைந்துள்ளது. கலிவிருத்தம், கலிநிலைத்துறை, கொச்சகக் கலிப்பா, கலித்தாழிசை, ஆசிரிய விருத்தம், வெண்பா, வெண்டுறை, வஞ்சித்தாழிசை என்றினைய யாப்பு வகைகள் இடம்பெற்றுள்ளன.

செல்வம் பெருகினும் இறைவனை இடையறாது நினைத்தலே தகும் என்ற இயல்பினர் குசேலர். அதனாற்றான் இறைவனிடம் வரம் கேட்கும்போது 'செல்வம் வேண்டாம், வறுமையே போதும், செல்வம் நின் நினைவைத் தடுக்கும்' என்று கூறினார். கடவுளை நினைந்தோர் கைவிடப்படார்' என்பதற்குச் சான்றாகத் திகழ்பவர் குசேலர். அ.வி.

**குஞ்சன் நம்பியார் (கி.பி. 1705-1770):** சிறந்த மலையாள மொழிக் கவிஞர்களுள் ஒருவர். இவர் கேரள மாநிலத்திலுள்ள கிள்ளிக் குறிச்சி மங்கலம் என்னும் ஊரில் கி.பி. 1705-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் சிறுவயதில் தம் தந்தையாரின் பிறந்த ஊராகிய ஏற்றுமானூர் சென்று கல்வி கற்றார். சாக்கையார் கூத்தினுக்கு மத்தளம் வாசிப்பது இவர் குலமரபாக இருந்தது. அதனை இவர் நன்கு பயின்று அத்தொழிலை மேற்கொண்டார். மலையாள மொழியில் கவிதை இயற்றும் திறனையும் பெற்றிருந்தமையால் குடமாலூர் என்னுமிடத்திற்குச் சென்று, செம்பகச் சேரி மன்னரின் அமைச்சரது நட்பால் அவ்வரசரவையில் அவைப் புலவராக இடம்பெற்றார். பின்னர்ச் செம்பகச்சேரி திருவாங்கூரோடு இணைந்த பிறகு திருவாங்கூர் மன்னரின் அவைப் புலவரானார்.

இவர் துள்ளல் என்னும் இசை வகைப் பாடல்கள் 76 இயற்றியுள்ளார். இவர் தம் துள்ளற் பாடல்களின் வாயிலாக, மலையாளக் கவிதையில் ஒரு புதிய மாறுதலைச் செய்தார் என்று கூறுகின்றனர். இவர் காலத்திலும், அதற்கு முன்னரும் மலையாளக் கவிதை வடமொழிக்குப் பெரிதும் கடன்பட்டிருந்தது. வடமொழிச் சொற்கள் குறைவாகக் கொண்டு இனிமை பயக்குமாறு, மிகுதியாக மலையாளச் சொற்களை அமைத்து இவர் படைத்த துள்ளற் பாடல்கள் அக்காலத்தில் நல்ல மதிப்பினைப் பெற்றுத் திகழ்ந்தன. 'ஆயினும் பண்டிதர்கள் அவற்றை விழுமிய இலக்கியமெனக் கருதவில்லை. வடமொழிப் புலமையை மட்டும் மதித்துவந்த அந்தக் கால நிலையில் துள்ளல்களின் ஆற்றொழுக்குப் போன்ற சரளமான நடைக்கு அவ்வளவாக மதிப்புத் தோன்றவில்லை என்று இலக்கிய வரலாற்றாசிரியர் பி.கே. பரமேசுவரன் நாயர் குறிப்பிட்டுள்ளார்.

நம்பியாரின் துள்ளற் பாடல்கள் மிக்க நகைச்சுவை வாய்ந்தன; சமுதாயக் குறைபாடுகளை நகைச்சுவையோடு கண்டிக்கும் பாங்கின; புராண மாந்தர்களின் வாயிலாகத் தம் காலச் சமுதாயத்தின் உண்மைநிலைகளை வெளிப்படுத்தியுள்ளார். இவர் சமகாலச் சமுதாயத்தின் குறைபாடுகளை மிகவும் தைரியமாக வெளிப்படுத்தினார் என்று திறனாய்வாளர் இவரைப் பாராட்டுவர். இவர், துள்ளற் பாடல்களோடு சிரீ கிருட்டிண சரிதம், நளசரிதம், பதினாலுவிருத்தம், சாகுந்தலம், கதகளி ஆகிய பாடல்களையும் இயற்றியுள்ளார். பஞ்ச தந்திரத்திற்குக் கிளிப்பாட்டுப் பாவினத்தில் குஞ்சன் நம்பியாரின் மொழிபெயர்ப்பு ஒன்றும் உண்டு. நாராயண பிள்ளை இவர் வரலாறு பற்றி ஆராய்ந்து விரிவாக எழுதியுள்ளார். இவர் கி.பி. 1770-ஆம் ஆண்டு தம் 65-ஆம் வயதில் காலமானார். அ.மா.ப.

**துணை நூல்:**

**கோபிநாதன், இராம., பரமேசுவரன்நாயர், பி.கே.,** (தமிழாக்கம்) மலையாள இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1968.

**குட்டநாடு:** பழைய திருவாங்கூர்ச் சமஸ்தானத்தைச் சேர்ந்ததும், இந்நாள் கேரள மாநிலத்திலுள்ளதுமான கோட்டையம், கொல்லம் ஆகிய நகரங்கள் அடங்கிய பகுதி குட்டநாடு என்று வழங்கப்படுகிறது. குட்டம் என்பது குழி, அல்லது பள்ளம் எனப் பொருள்படும். பொருளடிப்படையில் ஏரி, உப்பங்கழி முதலிய நீர்நிலைகளை மிகுதியாகக் கொண்டிருத்தலால் அப்பகுதி குட்ட நாடு என வழங்கப்படுவதாகக் கூறுகின்றனர். குறிஞ்சி வளம் மிக்க மேலைக் கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ள ஏரிகள் மிக்க

தும், நன்செய் வளஞ் சார்ந்ததுமான நிலமாதலின் அச்சிறப்பால் குட்டநாடு என்ற பெயர் அமைந்திருத்தல் கூடும்.

தமிழில் கொடுந்தமிழ் என்னும் வழக்கு நிலை பெற்றபோது, செந்தமிழ் நாட்டைச் சார்ந்து பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகள் இருந்தன என்பதனை இலக்கண உரையாளர்கள் காட்டியுள்ளனர். அப்பன்னிரு நாடுகளையும், 'தென்பாண்டி' எனத் தொடங்கும் ஒரு பழைய வெண்பா குறிப்பிடுகிறது. அதில் இந்நாடு 'குட்டம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பழந்தமிழகத்துச் சேரநாடு, குட்டநாடு, குடநாடு, பொறைநாடு என்ற மூன்று பகுதியாகக் கருதப்பட்டது என்றும், அவற்றுள் குட்டநாட்டை ஆண்டவர் என்ற கருத்தில் சேரமன்னரின் ஒரு பகுதியினர் குட்டுவர்கோ, குட்டுவன் என்று அழைக்கப்பட்டனர் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் மகன் குட்டுவன் சேரல் எனப்பட்டான் (பதி. 5-ஆம் பதிகம்). குட்டநாட்டு வளத்தினையும், அங்குள்ள திருப்புலியூர் என்னும் தலத்தினையும், 'செழுநீர் வயல் குட்டநாட்டுத் திருப்புலியூர்' (திருவாய். 8-9-1) என்று திருவாய்மொழி குறிப்பிடுகிறது. அ.மா.ப.

**குட்டுவன்**: சேரவேந்தனைச் சுட்டும் பொதுப் பெயர்களுள் ஒன்றாகக் குட்டுவன் என்னும் பெயரினை நிகண்டுகள் குறிப்பிட்டுள்ளன. பண்டைய சேரநாட்டை அதன் இயல்பு நோக்கிக் குடநாடு குட்டநாடு, பொறை நாடு என்று பகுத்து வழங்கும் மரபுண்டு. குடநாட்டை ஆண்டவன் குடவன், குடக்கோ என்றும், பொறைநாட்டுப் பகுதியை ஆண்டவன் பொறை, பொறையன் என்றும் வழங்கப்பட்டமை போலக் குட்ட நாட்டுப் பகுதியை ஆண்டவன் குட்டுவன் எனப்பட்டான். குட்டநாட்டு மன்னர்கள் குட்டுவர் என்றழைக்கப்பட்டனர். அந்நாட்டு மக்களையும் குட்டுவர் என்று கூறும் மரபுள்ளது.

குட்டுவன் என்னும் பெயர் அப்பகுதியை ஆண்ட ஒரு மன்னனைக் குறிக்கும் இயற்பெயராகவும் வந்துள்ளது. மாந்தை அல்லது மரந்தை என்னும் நகருக்குரியவன் குட்டுவன் எனப்பட்டான். அவனைக் கொல்லிக்கண்ணனார் தம் குறுந்தொகைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். (குறுந். 34). கழுமலம் என்னும் நகரம் குட்டுவனுக்குரியது என்று சாகலாசனார் குறிப்பிட்டுள்ளார் (அகம். 270-9). குட்டுவன் என்பதற்குக் குட்டநாட்டை உடையோன் என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தந்துள்ளார் (சிறு. 49. நச்சர் உரை).

பதிற்றுப்பத்தின் 5-ஆம் பத்தில் தம்மால் சிறப்பிக்கப் பெற்றுள்ள கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் குட்டுவன் என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளார். பிறதொகையில் இடம்பெற்றுள்ள தம் பாடலுள் அவர் குட்டுவன் என்ற பெயராலேயே அம்மன்னனைக் குறிப்பிட்டுள்ளார். பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தின் தலைவனாகிய பல்யானைச் செல்கெழுகுட்டுவனை, அதன் ஆசிரியர் பாலைக் கௌதமனார் குட்டுவன் என்றே சுட்டியுள்ளார் (பதிற். 29-15). இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தையும், பதிற்றுப்பத்து எட்டாம் பத்தின் தலைவனுமாகிய பெருஞ்சேரல் இரும்பொறையின் ஒன்பதாம் பதிகம் குட்டுவன் இரும்பொறை என்றே குறிக்கிறது. சிலப்பதிகாரம், வஞ்சிக் காண்டத் தலைவனான சேரன் செங்குட்டுவனைக் குட்டுவன் என்று குறிக்கிறது. இவற்றால் குட்டுவன் என்னும் பெயர் தனி ஒரு சேர அரசனைச் சுட்டுவதாகவும் அம்மரபில் வந்த பிற அரசர்களைச் சுட்டும் பொதுப் பெயராகவும் அமைந்துள்ளமையினை உணர்தல் கூடும். அ.மா.ப.

**குட்டுவன் இரும்பொறை,** சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு சேரமன்னன். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தில் இம்மன்னன் குறிக்கப்பெறுகிறான். பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்து இம்மன்னனின் புகழ்பாடுகின்றது. பெருங்குன்றூர் கிழார் என்னும் பெரும்புலவர் இம்மன்னனின் போர் வேட்கை, இரவலர்க்கு இல்லையென்னாது கொடுக்கும் கொடைத்தன்மை, பொறையனின் உள்ளப் பண்பு, அகத்துறையில் அவனுக்குள்ள ஈடுபாடு முதலிய குணங்களை எடுத்துரைக்கின்றார். ஒன்பதாம் பத்தின் பதிகம் இவ்வேந்தனை 'இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறை எனப் பாராட்டுகிறது.

'இளஞ்சேரல்' என்னும் அடைமொழி இம்மன்னன் பெயருடன் ஒட்டி நிற்கிறது. சேர மன்னர்களின் பெயராகிய 'குட்டுவன்' என்பதை 'நினைவூட்டும் குடக்கோ' என்னும் பொதுப் பெயரும் இம்மன்னன் பெயரோடு சேர்த்துச் சொல்லப்பெறுகிறது. எனவே, 'இரும்பொறை' என்பான் 'குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை' எனக் குறிக்கப்பட்டமை புலனாகிறது.

'குட்டுவன் இரும்பொறைக்கு' என்றே ஒன்பதாம் பத்தின் பதிகம் தொடங்குகின்றது. இம்மன்னன் பதினாறாண்டுகள் அரசு வீற்றிருந்தான். இவன் தந்தை தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை. தாய்

வேண்மாள் அந்துவன் செள்ளை. அந்துவன் செள்ளை என்பாள் மையூர் கிழான் மகள். இரும்பொறை இந்த மையூர் கிழானை அமைச்சனாகவும் புரோகி தனாகவும் அமைத்துக்கொண்டு அரசு செய்தவன்; உறையூர்க் கோப்பெருஞ்சோழனையும், பாண்டி யன் பழையன் மாறனையும் அவனுக்குத் துணை யாக வந்த விச்சி என்பவனையும் வென்றவன். இவன் புகார்ச் சோழனை வென்றடக்கினான்; அந் நகரின்கண் இருந்த சதுக்கப் பூதத்தைக் கரூரின்கண் கொண்டுவந்து நிலைநிறுத்தினான்; அதற்கு நீராட்டு நிகழ்த்தினான். இவ்வாறான செய்திகளைப் பதிற்றுப் பத்தின் ஒன்பதாம் பதிகம் வெளிப்படுத்துகின்றது.

'நிலந்தரு திருவின் நெடியோய்' (பதிற்றுப்பத்து: 82; வரி 16)என இம்மன்னன் புகழப்படுகின்றான். அத னால், இவன் தன் நாட்டை விரிவு படுத்திய செய்தி புலனாகும். இவன் தன்னைப் பாடி வருபவர்க்கு மிகுதியான செல்வத்தை அளிப்பவன் (பதிற்: 82:12). களிறும் தேரும் தன்னைச் சூழ்ந்துவர, படை வீரர் கள் படைக் கருவிகளை ஏந்தி வர, இவ்வேந்தன் போர்க்குச் செல்லும் காட்சி காண்போர்க்கு இன்பம் தோற்றுவிக்கும்; பகைவர்க்கோ துன்பம் ஏற்படுத் தும் என இவ்வேந்தனது போர்ச் செலவினை ஆசிரி யர் சிறப்பிப்பர் (பதிற்: 83: 3-6). கபிலர் என்னும் புலவர் செல்வக் கடுங்கோ வாழியாதனைச் சிறப் பித்துப் பாடினார். அப்போது அவன் பலவூர்களைப் பரிசாக நல்கினான். அதனால், குட்டுவன் இரும் பொறை தன் படைவீரர்களை நோக்கிச் சோழவேந் தனை என் முன்னே கொண்டு வருக எனச் சொல் லிய சொல் கேட்டுச் சோழர்களுடைய படைவீரர் கள் எறிந்த வேல்கள் கபிலன் பெற்ற ஊர்களைக் காட்டிலும் பலவாகும் என ஆசிரியர் இவனுடைய போர்த் திறத்தைச் சிறப்பிப்பர் (பதிற். 85; வரி 12-13). நீரினும் தண்மையன்' (பதிற்று:86) ஆக இரும் பொறை இருக்கும் தன்மையை ஆசிரியர் சிறப்பிப்பர். சேரநாட்டின் கீழ்ப்பகுதியைக் கொங்கு நாட்டு வஞ்சி யில் (கரூர்) இருந்துகொண்டு இம்மன்னன் ஆண்டு வந்தான்; கொங்கு, சோழ, பாண்டி மண்டலங்களை வென்றான்; அவர்களுடன் ஒற்றுமை உடன்படிக்கை செய்துகொண்டான்.

இவ்விளஞ்சேரலுக்குக் குடக்கோ, குட்டுவன் என்ற பட்டங்கள் உண்டு. கொச்சி என இந்நாளில் சொல்லப்பெறும் பகுதியே பண்டு குட்டநாடு எனப் பட்டது. து.ப.

**குட்டுவன் கண்ணனார்** சங்ககாலத் தமிழ்ப் புலவர். கண்ணன் என்பது இயற்பெயர். 'ஆர்' என் னும் விகுதி சேர்ந்து (கண்ணன் + ஆர்) கண்ணனார் என அழைக்கப்பட்டார். இவரின் புலமை நலம் கருதி இவரை இங்ஙனம் அழைத்தனர். குட்டு வன் என்பது குட்ட நாட்டினன் என்று பொருள் படும். சேரமன்னர்களுக்கே குட்டுவர் என்ற பெயர் வழங்குகின்றது. குட்டுவன் என்பான் குட்ட நாட்டின் தலைவன். இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் புலவர் பெருமக்களாகிய பரணரும் (புறம். -343:9), அம்மூவனாரும் (ஐங்-178:3), நக்கீரரும் (அகம்-290:12), மாமூலனாரும் (அகம்-91:13) தங்கள் பாடலில் 'குட்டுவன்' என்றே குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது. அதனால் இப்புலவராகிய கண்ண னாரும் சேரர்தம் குடியினர் என்று கருத இடம் உண்டாகிறது.

இவர் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரு செய் யுள் (179) காணப்படுகின்றது. அப்பாடலால் இப் புலவரின் புலமைத்திறம், மதிநுட்பம் ஆகியன புலனா கின்றன. குறிஞ்சித் திணையிலமைந்த அப்பாடல், பகலில் வரும் தலைவனுக்கு இரவுக் குறி உடன்பட் டமை போலக் கூறித் தோழி வரைவு கடாவும் பாங் கில் அமைந்துள்ளது. தம் காட்டகம் வந்த தலைவ னைத் தங்கள் ஊரில் தங்கி இளைப்பாறிப் பின்னர்ச் செல்லலாம் என அன்புடன் வேண்டி நிற்கும் காட்டு நாட்டுமக்கள் பிறநிலத்தவர் மீது காட்டும் பரிவையும் பாசத்தையும் காட்டுவதாகப் பாடல் அமைந்துள்ளது. து.ப.

**குட்டுவன் கீரனார்**: இவர் சங்ககாலத் தமிழ்ப் புலவர். குட்டுவன் என்பது குட்டநாட்டினன் என்று பொருள்படும். குட்டநாடு என்பது கொடுந் தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்று. திருவிதாங்கூர் சமசுதானத்தைச் சார்ந்ததும் கோட்டயம், கொல்லம் என்னும் நகரங்களையுடையதும் ஏரிகளை மிகுதி யாகக் கொண்டதும் ஆகிய ஒரு நாடு மலைகளின் தாழ்வான இடத்தில் அமைந்தமையால் அது குட்ட நாடு எனப்பட்டது. எனவே, குட்டுவனின் குட்ட நாட்டில் உள்ளவர் இக்குட்டுவன் கீரனார். குட்டுவன் என்பது சேரர்தம் குடிப்பெயர்களுள் ஒன்று என்பது புலனாகின்றது. குட்ட நாட்டில் அரசாளும் உரிமை பெற்றுச் சிறந்திருந்தமையால் சேரர் குட்டுவர் என அழைக்கப்பெற்றமை அறியலாம்.

கீரனார் என்பது இப்புலவரின் இயற்பெயர். கீர னார் என்னும் பெயருடைய புலவர் சிலர் இருத்த லின் இவர் பெயர்க்குத் தேயப்பெயரை அடைமொழி யாக்கினர் எனலாம். புறநானூற்றுள் இவர் பாடிய தாக இடம் பெற்ற ஒரு பாடல் (புறம். 240) கையறு நிலைப் பொருண்மை உடையதாய் அமைந்துள்ளது. இவ்வொரு பாடல் மட்டுமே இவர் பாடியதாகத்

தெரிகிறது. கடையெழு வள்ளல்களுள் ஒருவன் ஆய் அண்டிரன். இவன் புலவர்பாராட்டும்புகழுடையவன். இவ் வள்ளலைப் பெரிதும் புகழ்ந்துபோற்றிமதிப்பவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார். 'மோசிபாடிய ஆய்' என இவ்வள்ளல் பெருமைப்படுத்தப்பட்டான். ஆய் நாட்டினை ஆண்ட காரணத்தால் ஆய் அண்டிரன் எனப்பட்டான். ஆய்நாடு என்பது சேரர்தம் குட்டநாட்டிற்கும் பாண்டியரின் தென்பாண்டி நாட்டிற்கும் இடைப்பட்டதாக விளங்கியது.

பெருங்கொடையும் அருந்திறலும் உடையவனாகிய ஆய் அண்டிரன் இறந்துபட்டமை குறித்து இரங்கிப் பாடினார் புலவர் குட்டுவன் கீரனார். ஆய் நாட்டிற்கு அருகில் அமைந்தது கீரனார் நாடு. தன்னைப் பாடி வருகின்ற புலவர்க்கெல்லாம் பரிசில் பொருள்களாக யானை, தேர், குதிரை ஆகியன அளிப்பான். அவற்றுடன் நாடும், ஊரும் கொடைப் பொருளாகக் கொடுக்கும் பெருங்குணமுமுடையவன். அத்தகைய வள்ளல் இறந்தமை கண்டு, அவனுக்குரிய மகளிரும் இறந்தனர். இவ்வள்ளலிடம் பரிசில் பெற்று மகிழ்ந்த இரவலர், இவ்வள்ளலின் இறப்புக் கண்டு வருந்தி வேற்று நாட்டினை நோக்கிப் பயணப்பட்டனர். வறுமை தங்களை வாட்டவும், தங்களைப் பாதுகாப்பார் இனி இந்நாட்டில் இல்லாமை கண்டு மனம் வருந்தினர் எனத் தம்மை ஒத்த புலவர்களின் மன நிலை கண்டு கீரனார் வருந்திப் பாடியுள்ளார்.

து.ப.

**குட்டுவன் சேரல்** சேரன் செங்குட்டுவனின் மகன்; குட்டநாட்டு இளவரசனாக இருந்தான். அதன் காரணமாகக் குட்டுவன் சேரல் என்றழைக்கப்பட்டான். 'மாரிவெண்கோ' என்னும் பட்டப்பெயர் இவனுக்குண்டு. தாய் இளங்கோ வேண்மாள் கோப்பெருந்தேவி. இளங்கோவேண்மாள் என்பது இளங்கோ வேளிர் மரபினள் என்று பொருள்படும். பிற்காலச் சோழர் காலத்து விளங்கிய கொடும்பாளூர் வேளிர்க்கு அமைந்த சிறப்புப் பெயர்களாக இருக்கு வேள், இருங்கோவேள் (Epi-Rep. 1908-P.879), இளங்கோவேள் (Ibid-315 of 1903) என்பனவற்றைச் சாசனங்கள் வெளிப்படுத்துகின்றன.இதனால் வேளிர் மரபும் செங்குட்டுவன் மனைவி இளங்கோவேண் மாளின் மரபும் ஒன்று என்பது பெறப்படுகின்றது.

செங்குட்டுவனைப் பாடிய புலவர் இரண்டாம் பரணர். இப்புலவரிடம் குருகுலவாசம் செய்து முத்தமிழையும் இவ்வேந்தன் முறையாகப் பயின்றனன். மொழிப் பயிற்சியோடு அரசியல், போர் முதலிய துறைகளிலும் சிறந்து விளங்கினான்.

கி.பி. 155-இல் சேரன் செங்குட்டுவன் இறந்தான். அதன்பின்னர்க் குட்டுவன் சேரல் பட்டம் எய்தினான்; வஞ்சி மாநகரில் இருந்து முடிசூடிக்கொண்டு சேர நாட்டைத் திறம்பட ஆட்சிசெய்தான்; மாரிபோன்று புலவர், பாணர், கூத்தர். விறலிகளுக்குப் பொன், மணி, பொருள், ஆடை முதலியவற்றை இடையறாது வழங்கினான்; அக்காரணத்தால் 'சேரமான் மாரி வெண்கோ' எனப் பாராட்டுப்பெற்றான்.

சேரமான் மாரிவெண்கோ, உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவரும் ஒருகாலத்தவர். இவர்கள் மூவரும் ஒருசேர இருந்தபோது ஔவையார் என்னும் பெண்பாற் புலவர் அவர்களை வாழ்த்திப் பாடியுள்ளார். இதனைப் புறநானூற்றின் 367-ஆம் பாடல்சுட்டுகின்றது. இவர்கள் மூவரும் வாழ்ந்த காலம் முறையே கி.பி. 155-213; கி.பி. 164-235; கி.பி. 145-190 என்றும் இவர்கள் மூவரையும் ஔவையார் ஒருசேரக் கண்டது கி.பி. 185க்கு மேல் கி.பி. 190க்குள் இருக்கலாம் என்றும் 'சேரர் வரலாறு' என்னும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

து.ப.

**குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை:** இவன் பதிற்றுப் பத்தினால் அறியலாகும் சேர மன்னர்களுள் ஒருவன். பதிற்றுப்பத்தில் இடம் பெறும் சேரமன்னர்கள், உதியஞ் சேரல் மரபினர் என்றும், இரும்பொறை மரபினர் என்றும் இருவகைப் படுவர். இரும்பொறை மரபில் வந்த குடக்கோ இளஞ் சேரல் இரும்பொறை, பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தின் தலைவனாவான். இவனைப் பெருங்குன்றூர் கிழார் அப்பத்தில் பாடிச் சிறப்பித்துள்ளார். இவன் தந்தை குட்டுவன் இரும்பொறை; தாய் மையூர் கிழான் வேண்மாள் அந்துவஞ்செள்ளை. பதிற்றுப் பத்துச் சேர மன்னர்களுக்கு மருமக்கள் தாய உரிமை கூறுவோர், குட்டுவன் இரும்பொறை குடக்கோ இளஞ்சேரல் இரும் பொறைக்கு மாமன் முறையினன் ஆதல் வேண்டுமென்று கூறுவர். இவ் வரசன் 16 ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான் என்று பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகம் கூறுகிறது. பெருங்குன்றூர் கிழார் தாம் பாடிய பாடல் ஒன்றில் (பதி. 88) இளஞ்சேரல் இரும்பொறையின் முன்னோர் அறுவரை அவர்தம் சிறப்புகளோடு குறிப்பிட்டு விளித்துள்ளார்.

இளஞ்சேரல் இரும்பொறை, இருபெரு வேந்தரையும், விச்சி என்பானையும் போரில் வென்றுள்ளான். இவன் பெருஞ்சோழன் என்பானையும், பாண்டியன் மாறன் என்பானையும் வென்று,

கொணர்ந்த பொருள்களை வஞ்சி நகரில் மற்றவர்களுக்கு வழங்கினான். இவன் சதுக்கப் பூதத்தினை வஞ்சி நகரின்கண் கொண்டுவந்து நிறுவி வழிபாடு நடைபெற ஏற்பாடுகள் செய்தான்.

இவன் தன் முன்னோர்களைப் போலவே வேத நூலில் நல்ல புலமை பெற்று விளங்கினான். நன்கு கற்ற தன் புரோகிதர்களையும், சரியான நெறியில் செல்லுமாறு வழிகாட்டினான். தன்மீது, பதிற்றுப் பத்தின் ஒன்பதாம் பத்தினைப் பாடிய பெருங்குன்றூர் கிழாருக்கு, 31 ஆயிரம் காணம் பொன் வழங்கினான். மேலும், அவருக்குத் தெரியாமல், அவர் வீட்டில் செல்வம் பலவும் நிரம்பச் செய்தான்.

அ.மா.ப.

**குடக்கோ நெடுஞ்சேரலாதன்**: காண்க: குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன்.

**குடகு** தென்மேற்கு இந்தியாவில் உள்ள கர்நாடக மாவட்டத்தின் ஒரு பகுதி. சதுர மைல் 1586 பரப்புள்ள குடகு (Coorg) வரலாற்றுப் பெருமை வாய்ந்த பழம் பெரும் பகுதி. இதன் தலைநகரம் மர்க்காரா. இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலேயே தலைக்காட்டுக் கங்கரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. பின்னர்த் தலைமைப் பதவிக்கு வந்த சோழர், ஒய்சளர், விசயநகர அரசர்கள் யாவரும் தத்தம் ஆட்சியைக் குடகில் நிறுவினர். பிறகு, அது கி.பி. 1834 வரையில் இக்கேரி மன்னர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மைசூரில் தமது அரசை நிறுவிய ஐதர் அலியாலும் (1780) பின் திப்புசுல்தானாலும் குடகு சூறையாடப்பட்டது. திப்புவின் செயல்களைப் பொறாத மன்னர் வீரராசன் வெகுண்டெழுந்து கி.பி. 1788-இல் அவர் படைகளைத் தோற்கடித்தார். பிறகு இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி பரவி வந்த காலத்தில், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார், குடகு மக்கள் மன்னராட்சியின் கொடுமைகளுக்குஉட்படுத்தப்பட்டிருப்பதாகக் காரணம் காட்டி அப்பகுதியைத் தாம் இணைத்துக் கொண்டனர். சுதந்திர இந்து ஆட்சி அங்கு முடிவுற்றது. மைசூர் தலைமை ஆணையர் ஒருவரின் நிருவாகம் அங்கு அமைந்தது. குடகு 1947-இல் சுதந்திர இந்திய அரசியல் அமைப்பில் 'சி' (C) பிரிவு மாநிலங்களுடன் சேர்க்கப்பட்டது. குடகு 1956-இல் மாநிலச் சீரமைப்புச் சட்டப்படி கர்நாடக மாநிலத்துடன் இணைக்கப்பட்டு, அம்மாநிலத்தின் 19 மாவட்டங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது.

குடகு மாவட்டத்தில் பலவகையான ஆதிகுடிகளைக் காணலாம். எடுத்துக்காட்டாக எரவர்கள் குடகர்கள் முதலியோரைக் குறிப்பிடலாம். குடகர்கள் குடகுமொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். இது பழைய கன்னட மொழியின் ஒரு வகையாகும்; கன்னடத்துக்கும் மலையாளத்திற்கும் இடைப்பட்டதாகும். தனக்கெனத் தனி எழுத்துகள் இல்லாத குடகு மொழி, கன்னட எழுத்துகளிலேயே எழுதப்படுகிறது. கவுடர்கள் எனப்படும் மற்றொரு ஆதிகுடியினர் துளுவமொழி பேசுவர். குடகு கர்நாடக மாவட்டத்துடன் இணைக்கப்படுவதற்கு முன்னமேயே கன்னடம் அதன் அரசாங்க மொழியாக இருந்தது.

குடகு, ஆழ்ந்த பள்ளத்தாக்குகளையும் செழிப்பான காடுகளையும் கொண்ட மலைநாடு. காப்பி (Coffee) உற்பத்தியில் மைசூருக்கு அடுத்தபடியாக உள்ளது இப்பகுதி. மழை வளம் மிக்க இப்பகுதியில் தான் காவிரி ஆறு உற்பத்தியாகிறது. மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை. இங்குக் கிடைக்கும் முக்கிய பொருள்கள் தேன், சந்தனமரம், தேயிலை இரப்பர், காப்பிக்கொட்டை, மிளகு, பிரம்பு, ஆரஞ்சு, வாழை, பாக்கு, ஏலக்காய் முதலியனவாம். தெ.பா.

**குடகுமொழி**: இம்மொழி கர்நாடக மாநிலத்திலுள்ள குடகு மாவட்டத்தில் குடகு மக்களால் பேசப்படுகிறது. இம்மொழியை 1971-ஆம் ஆண்டு மக்கட் கணிப்புப்படி 75,000 மக்கள் பேசுகின்றனர். இம்மொழிக்கு எழுத்துவடிவம் இன்மையால், கன்னட எழுத்து வரிவடிவத்தைப் பயன்படுத்திப் பாடல்கள், கதைகள் முதலியவற்றை எழுதுகின்றனர் எல்லிசு (1816) குடகினைக் கன்னட மொழியின் கிளைமொழியாகக் கருதினார். மேக்லிங்கு-என்பார் (Moegling-1855) இம்மொழியை நன்கு ஆராய்ந்து, இம்மொழி தமிழினும் மலையாளத்துடன் நெருங்கிய தொடர்புடையது என்றார். கோல் (1867), கிரேட்டர் (Graeter-1870) ஆகியோர் குடகு, மொழியை ஆராய்ந்து நூல்களை எழுதியுள்ளனர். இம் மொழி பற்றிய ஆய்வு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பெற்று, இன்று விரிந்த அளவில் உள்ளது. இம்மொழியில் வட குடகு, தென் குடகு என இரு கிளைமொழிகள் உண்டு.

குடகு மொழியில் ஏழு உயிர் ஒலியன்களும் இருபத்து நான்கு மெய் ஒலியன்களும் உள்ளன. குடகு மொழியில் ஆண்பால் விகுதிகளாக -என், -வென், -Φ, -காரன் போன்றவை உள்ளன.

உ.ம். குருப்-என் 'குரும்பர்' கொடவ்-என் 'கொடவர்,

அ-வென் 'அவன்' அடிகோ-காரன் 'சமையல் காரன்' பெண்பால் விகுதிகளாக -அள், -வள், -அதி

அசி, -சி, -இ போன்றவை உள்ளன. உ-ம். மோவ்-அள் 'மகள்' அ-வள் 'அவள்' கொடவ்-அதி 'கொடகு பெண்' சூள்-அசி 'விலைநலப்பெண்டிர்' அச்-சி 'பாட்டி'

பலர்பால் பன்மை விகுதிகளாக -அள், -வர், -யெங்கள் -யென், -வு போன்றவை காணப்படுகின்றன. உ-ம். அ-யெங்கள் 'அவர்கள்' மூ-வார் 'மூன்று பேர்' அ-யெங்கள் 'அவன் அவள்'.

பொதுப்பன்மை விகுதிகளாக -கள், - அள் குடகு மொழியில் காணப்படுகின்றன.

அக்கன்-கள் 'சகோதரிகள்'
அச்சி-அள்- 'பாட்டிகள்'

மூவிடப்பெயர் (Pronouns)

தன்மை

ஒருமை நானு 'நான்'
பன்மை நங்க 'நாங்கள்'

முன்னிலை

ஒருமை நீனு 'நீ
பன்மை நிங்க 'நீங்கள்'

படர்க்கை

அவென் 'அவன்' இவென் 'இவன்'
அவ 'அவள்' இவ' இவள்'
அய்ங்க/அவு 'அவர்கள்' இய்ங்க/இவு 'இவர்கள்'
அது 'அது' இது 'இது'

வினா இடப்பெயர் (Interrogative Pronouns)

ஏவென் 'யார்'
ஏவ 'எவள்'
ஏயிங்க/ஏவு 'யார்'
ஏது 'என்ன'

குடகுமொழியில் பத்து வேற்றுமைகள் உள்ளன, எழுவாய் வேற்றுமை தவிர, மற்ற வேற்றுமைகளுக்கு உருபு உண்டு.

இரண்டாம் வேற்றுமை உருபு: அ; உ-ம். கிண்ணன்-அ 'பையனை'. மூன்றாம் வேற்றுமை உருபு:ஒண்டு; உ-ம். கத்தின்-ஒண்டு 'கத்தியைக்கொண்டு'. உடனிகழ்ச்சி வேற்றுமை உருபு: ஓடே; உ-ம். பணத்தோடே. நான்காம் வேற்றுமை உருபு: கு மனெக்- கு 'வீட்டிற்கு' நீங்கற்பொருள் வேற்றுமை உருபு: இஞ்சி. மாடோ-இஞ்சி 'செய்யும்பொழுது'. இடவேற்றுமை உருபு: லி, அல்லி; மானெ-லி 'வீட்டில்' அவெண்-ட-அல்லி 'அவனிடம்'. நோக்கற்பொருள் வேற்றுமை உருபு: ஆய்து; நாக்-ஆய்து 'எனக்காக'. ஒப்புவமை வேற்றுமை உருபு: இஞ்சி;(அ) இன்சி: நீக்-இஞ்சி 'உன்னை விட'. உடைமைப் பொருள் வேற்றுமை உருபு: ர,ட, மரத்-ர 'மரத்தினுடைய', பய்யு-ட 'பகவனுடைய'.

**எண்ணுப்பெயர்கள்**:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒந்து | 1 | ஆரு | 6 | நூரு | 100 |
| தண்டு | 2 | ஏச | 7 | ஆயிர | 1000 |
| மூந்து | 3 | எட்டு | 8 | லட்ச | 'லட்சம்' |
| நாலு | 4 | ஒய்ம்பது | 9 | கோடி | 'கோடி' |
| அஞ்சி | 5 | பத்து | 10 | ஒந்த்-அனே ஒந்தனே 'முதலாவது' | |
| | | | | நால்-அனே நாலனே 'நான்காவது' | |

குடகு மொழியில் இறந்த காலம் (Past Tense) இறப்பல்லாக் காலம் (Non-Past) என இருவகையுண்டு. இறந்த கால விகுதிகளாக -இ (ன) -த, -ந்த என்ற மூன்றும், இறப்பல்லாக் கால விகுதிகளாக -ப, -வ என்ற இரண்டும் உள்ளன. எதிர்மறை விகுதியாக அ' உள்ளது. வினை முற்றில் திணை-பால் உள்ளன.

| | | |
|---|---|---|
| தன்மை | ஒருமை: | ë, இ (ė) |
| | பன்மை: | அ, ëது, சி |
| முன்னிலை | ஒருமை: | இய, எ |
| | பன்மை: | இர, இரி, இ |
| படர்க்கை: | | அ, ëது, சி |

(தன்மைப் பன்மைக்கும் படர்க்கைக்கும் குடகு மொழியில் ஒரே விகுதிகளைத் தான் பயன்படுத்துகின்றனர்.)

குடகு மொழியின் அமைப்பை நுணுகி ஆராயின், கன்னட மொழியைக் காட்டிலும் தமிழ்-மலையாளம் ஆகிய இரு மொழிகளோடுதான் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதை அறியலாம்.

சு.ச.

**குடநாடு**: மேற்குத் திசையினைக் குறிக்கும் குடக்கு' என்னும் சொல்லின் அடிப்படையில் இப்

பெயர் அமைந்துள்ளது. தமிழகத்தின் மேற்குப் பகுதியில் அமைந்தது என்று இப்பெயர் பொருள்படும். அங்கு வாழும் மக்கள் குடவர் எனப்பட்டனர்.

தமிழில் கொடுந்தமிழ் என்னும் வழக்கு நிலை பெற்றபோது, செந்தமிழ் நாட்டைச் சார்ந்து பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகள் வழங்கின என்பதனை இலக்கண உரையாசிரியர்கள் காட்டியுள்ளனர் (நன். 273 உரை). அப்பன்னிரு நாடுகளின் பெயர்களையும், 'தென்பாண்டி குட்டம்' எனத் தொடங்கும் ஒரு பழைய வெண்பா தொகுத்துக் கூறுகிறது. அதில் இந்நாடு குடம் என்று கூறப்பட்டுள்ளது. குடநாடு இக்காலத்தே மலபார் என வழங்கும் பகுதியினைச் சேர்ந்தது என்று கூறுகின்றனர். இதில் வாழ்பவரைக் குடவர் என்றும், அவர்களுக்கு மன்னராகத் திகழ்ந்தவரைக் குடவர்கோ என்றும், குடக்கோ என்றும் பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.

பண்டைச் சேரநாடு குட்டநாடு, குடநாடு, பொறைநாடு என்று கொள்ளப்பட்டதென்பதனையும், அவற்றை ஆண்ட மன்னர் முறையே குட்டுவன், குட்டுவர்கோ என்றும், குடவன் குடவர்கோ என்றும் பொறையன், பொறை என்றும் அழைக்கப்பட்டனர் என்பதனையும் அறிஞர்கள் நன்கு காட்டியுள்ளனர். சேர அரச மரபினைச் சார்ந்த இளங்கோவடிகளைக் 'குடக்கோ முனிசேரன்' என்று சிலப்பதிகாரச் சிறப்புப் பாயிரச் செய்யுள் குறிப்பிடுகிறது. அ.மா.ப.

**குடபுலவியனார்**: குடநாட்டைச் சேர்ந்த சங்கப்புலவர் குடபுலவியனார். விரிவான அறிவுடையவர் என்பதால் புலவியன் என்னும் பெயர் பெற்றனர் போலும்! நெடுஞ்செழியனைப் பற்றிப் பாடிய இரண்டு புறநானூற்றுப் பாடல்கள் மூலம் புறத்துறை வல்லவர் இவர் எனக் கருதமுடிகிறது.

குடபுலவியனார் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்டியதுடன் நெறிப்படுத்தியும் பாடியுள்ளார். அம்மன்னன் தலையாலங்கானப் போரில் இருபெருவேந்தரும் ஐம்பெருவேளிரும் உள்ளிட்ட எழுவரது வலிமையை வென்றான். அவன் வெற்றியைப் பாராட்டினார் குட புலவியனார்.

பாண்டியன் நெடுஞ்செழியன் மேட்டு நிலப் பகுதியில் வாழ்ந்தவன். அவனது நாடு நீர்நிலையின்றி விளைநலம் குன்றி வாடிற்று. நீர்நிலை பெருகவும் வயல் வளம் நிறையவும் வழிகூறி அரசனுக்கு உணர்த்திய அறிஞர் குடபுலவியனார்.

கடல் சூழ் உலகத்தை ஒருகுடைகீழ் ஆண்டு ஒருதான் ஆகிய உரவோன் நெடுஞ்செழியன். இனிச் செல்லும் உலகத்துச் செல்வம் விரும்பினும் உலக மன்னரை ஒருவனாகச் சென்று ஆளினும், பலர் புகழ் நல்லிசை நிறுத்த வேண்டினும் செய்யவேண்டியது நிலத்தை நீர்வளம் மிக்கதாக்குவது ஆகும் என்று பாடுகிறார். அ.அ.

**குடமூக்கிற்பகவர்** என்னும் புலவர் வாசுதேவனார் சிந்தம் என்னும் யாப்பிலக்கண நூலின் ஆசிரியர். பெயரிலிருந்தே கும்பகோணத்தைச் சார்ந்தவர் இவர் என்பது புலனாகிறது. குடமூக்கு என்பது கும்பகோணத்துக்குரிய மற்றொரு பெயராகும். பகவர் என்பது இவர் இயற்பெயர். குடவாயில் கீரத்தனார் என்பது போன்று ஊரோடு சேர்த்து இவர் பெயரை ஆன்றோர்கள் வழங்கியுள்ளனர்.

யாப்பருங்கலவிருத்திச் செய்யுளியல் புறநடைப் பகுதியுரையில் அதன் உரையாசிரியர் குணசாகரர் ஆரிடச் செய்யுளுக்கு எடுத்துக்காட்டுமுகத்தான் 'பொய்கையார் வாக்கும் குடமூக்கிற்பகவர் செய்த வாசுதேவனார் சிந்தம் முதலாகிய ஒருசார் செய்யுட்களும் எப்பாற்படுமோவெனின் ஆரிடச்செய்யுள் எனப்படும்' என்று உரை எழுதியுள்ளார். இப்பகுதியிலிருந்து குடமூக்கிற்பகவர் செய்த நூல் வாசுதேவனார் சிந்தம் என்று தெரிகிறது. அது மறைந்து போன நூல்களுள் ஒன்றாகும். யாப்பருங்கல விருத்தியின் காலம் கி.பி. 11–ஆம் நூற்றாண்டென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஆகவே, குடமூக்கிற்பகவர் கி.பி. 10–ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முற்பட்ட காலத்தினராக இருக்கலாம் என்பது புலனாகிறது. இரா.ச.

**குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன்**: பதிற்றுப்பத்தினால் அறியப்படும் ஒரு சேர மன்னன். பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின் தலைவனாகிய கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் தந்தையினை அதன் பதிகம் 'சேரநாடாகிய குடநாட்டில் உள்ளார்க்கு அரசன்' என்னும் கருத்தில் 'குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன்' என்று குறிப்பிடுகிறது. இவனுக்கும் இவன் மனைவி சோழன் மணக்கிள்ளி என்பாளுக்கும் பிறந்த மகனே செங்குட்டுவன் ஆவான். இந்த நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தில் பாடியுள்ளார். அதன் பதிகம் இவனை 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்று குறிப்பிடுகிறது. இவனுக்கும் வேளாவிக் கோமான் பதுமன் தேவிக்கும் பிறந்த ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைச் சிறப்பிக்கும்

ஆறாம் பத்தின் பதிகம், இம்மன்னனைக் 'குடக்கோ நெடுஞ்சேரலாதன்' என்று குறிப்பிடுகிறது. இவற்றை நோக்குங்கால், இம்மன்னன், பதிற்றுப்பத்தாலும் அதன் சில பதிகங்களாலும், சேரலாதன் (பதிற்.பதி. 4–1), இமயவரம்பன் (பதிற்.பதி. 3–1), இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (பதிற்.பதி. 2–13), குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன் (பதிற்.பதி. 5–2), குடக்கோ நெடுஞ்சேரலாதன் (பதிற்.பதி. 6–1) எனப் பலவாறாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை புலனாகிறது. இவனுடன் பிறந்தவனாகிய பல்யானைச் செல் கெழு குட்டுவன், மூன்றாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாக விளங்குகின்றான். காண்க: இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன். அ.மா.ப.

**குடவாயில் நல்லாதனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இப் பெயர் புறநானூற்று 242–ஆம் பாடலின் ஆசிரியர் பெயரில் காணப்படும் பாடபேதமாக டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். அப்பாடலின் ஆசிரியர் பெயர் குடவாயிற் கீரத்தனார் என்பதனை அவர்தம் பதிப்பில் குறிப்பிட்டு, அதனையே அப்பாடலின் ஆசிரியராகக் கொண்டுள்ளார். இப்புலவர் குடவாயில் என்னும் ஊரினைச் சார்ந்தவராவார். பாடபேதத்தில் புலவரின் ஊர்ப்பெயர் மாறாதிருப்பது குறிப்பிடத்தக்கது (புறம். 242). பொதுவியல் துறையிலமையும் அப்பாடல், ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைக் கையறுநிலைத் துறையில் பாடிச் சிறப்பிக்கிறது. 'வல்வேல் சாத்தன் மாய்ந்தபின்றை, முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே' என்று கூறியிருப்பதில் (புறம். 242–5,6) சாத்தன் மாய்ந்தமையால் இப்புலவர் உள்ளத்தில் தோன்றிய அவல உணர்வின் ஆழம் நன்கு புலனாகிறது. பாடபேதத்தால் இப்பெயர் கொள்ளாதவர்கள், அப்புறநானூற்றுப் பாடலின் ஆசிரியராகக் 'குடவாயில் கூத்தனார்' என்பதனைக் கொண்டு, அப்பெயரில் அமையும் பிற பாடல்களோடு அதனை ஒருங்கு வைத்து ஆராய்வர். அ.மா.ப.

**குடவாயிற் கீரத்தனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கீரத்தன் என்பது இயற்பெயர். குடவாயில் என்பது ஊரின் பெயர். இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் – திருவாரூர் நெடுஞ்சாலையில் 10 கல் தொலைவில் உள்ளது; இப்போது குடவாசல் என்று சொல்லப்படுகிறது. தேவாரம் பெற்ற தலங்களுள் இதுவும் ஒன்று. இவ்வூரின் பெயரோடு புலவர்தம் பெயரும் இணைந்து குடவாயிற் கீரத்தனார் என்றாயிற்று. சங்க இலக்கியங்களில் இவ்வூர், குடந்தை, குடந்தை வாயில் எனவும் குறிக்கப்படுகிறது. இப் புலவரே தம்மூரினை 'தண்குட வாயில்' (அகம். 44) என்றும், 'வென்வேற் கொற்றச் சோழர் குடந்தை' (அகம். 60) என்றும், 'தேர்வண் சோழர் குடந்தைவாயில்' (நற். 379) என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இவர் பாடிய பாடல்கள் எட்டுத் தொகை நூல்களுள் மட்டுமே உள்ளன. மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 18. அகநானூற்றில் பத்தும் (பாட்டு. 44, 60, 79, 119, 129, 287, 315, 345, 366, 385), குறுந்தொகையில் மூன்றும் (பாட்டு. 79, 281, 369), நற்றிணையில் நான்கும் (பாட்டு 27, 42, 212, 379), புற நானூற்றில் ஒன்றும் (பாட்டு 242) அடங்கும். பதினெட்டுப் பாடல்களுள் பன்னிரண்டு பாடல்கள் பாலைத் திணையைச் சார்ந்தனவாகும். நெய்தல் திணையில் இரண்டும், மருதம், முல்லை, குறிஞ்சி ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றும் ஆகப் பிற திணைச் செய்யுள்கள் அமைந்துள்ளன. சில பதிப்பில் அகநானூற்றின் 35–ஆம் பாடலும் இவருடையதாகப் பதிக்கப்பட்டுள்ளது.

தம்மூரினையேயன்றி, 'கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர் காவிரிப் படைப்பை யுறந்தை' (அகம். 385) என்று சோணாட்டின் காவலனையும் உறந்தையம்பதியினையும் பாராட்டியுள்ளார். இப்புலவர் தம்மையொத்த புலவர்மாட்டுப் பெரு மதிப்பு உடையவர் என்பதைத் 'தொல்லிசை நுணுங்கு நுண் பனுவற் புலவன்' (அகம். 345) என்னும் சொற்றொடர் காட்டுகிறது. கபில பரணரைப் போன்று இவரும் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தம் பாடல்களில் பதித்துள்ளார். கழுமலப் பெரும் போரும், சோழர் குடந்தையில் வைத்த பெருநிதியும், இவரால் குறிப்பிடப்படுகின்றன. பெரும்பூட் சென்னி, பொறையன், நன்னன், எவ்வி, அத்தி, பழையன், புன்றுறை, வழுதி, கணையன், கட்டி முதலியோரையும், சேர நாட்டில் இருந்த பிற குடியினரான மழவர், கொங்கர் ஆகியோரையும், அக்காலத் தமிழகத்து எல்லைப்புறத்தில் வாழ்ந்த குடியினருள் ஒருவராகிய வடுகரையும் குறிப்பிட்டுள்ளார். இதே போல் ஏழிற் குன்றம், கூடல், கழுமலம், தொண்டி முதலிய இடங்களையும் கூறியுள்ளார். ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்தபோது, மலர்ந்த முல்லைப் பூவினை விளித்து, 'இளையோர் சூடார் வளையோர் கொய்யார்' என்று வெளிப்படுத்திய புறப்பாட்டு ஓர் அவல ஓவியமாகும்.

இப்புலவர் பாடிய படைத் தலைவர்களையும், குறுநில மன்னர்களையும் நக்கீரர், பரணர், கபிலர்,

மாமூலர், வெள்ளெருக்கிலையார், தொடித்தலை விழுத்தண்டினார் போன்ற புலவர்களும் பாடி இருப்பதால் அப்புலவர்களின் காலத்தவராக இவரைக் கருதலாம். இவர் பெயர் குடவாயில் நல்லாதனார் என்றும் குடவாயிற் கீரனக்கனார் என்றும் சில ஏடுகளிற் காணப்படுகிறது. ஆர். ச.

**குடிஊழிய முறை**: இந்தியச் சமூகம் சாதி அமைப்பின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இந்த அமைப்பு முறையில் சமூகம் தொழில் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. ஆயினும், இப்பிரிவுகளிடையே ஒரு கூட்டுறவு நிலவுகிறது. இவை குறிப்பிட்ட அளவில் ஒன்றுக்கொன்று பரிமாற்ற உறவுகள் வைத்துக் கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட சாதியார் வேறொரு சாதியினருக்கு ஊழியம் புரிவதன் மூலம் இரு சாதியினருக்கிடையே பரிமாற்ற உறவுகள் நீடித்து வருகின்றன.

சாதி அமைப்பு முறையில் பொதுவாக ஒவ்வொரு சாதியினரும் ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்து வருகின்றனர். ஒரு சாதியினர் தாம் செய்யும் தொழிலைப் பிற சாதியினருக்கு ஊழியமாக வழங்குகின்றனர். இந்த ஊழியத்தைப் பெறுகிற சாதியினர் தொழில் ஊழியம் புரிகிற சாதிக்குக் கைம்மாறாக ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவு உணவுத் தானியம், பணம், பிற பொருள்கள் முதலியவற்றை வழங்கி ஆதரிக்கின்றனர். இத்தகைய இருவழிப் பரிமாற்ற உறவு முறையில் தொழில் ஊழியத்தின் அளவைக் கணக்கிடுவதோ அதற்கு அன்றாடக் கூலி வழங்குவதோ கிடையாது. இத்தகைய இருவழிப் பரிமாற்ற உறவு முறை, குடிஊழிய முறை (Jajmani system) எனக் கூறப்படுகிறது.

இந்த முறையில் தொழில் ஊழியம் புரிகிறவர்கள் 'சாதிப் பணியாளர்கள்' அல்லது 'காமின்கள்' எனப்படுகிறார்கள். ஊழியத்தை ஏற்றுக் கொண்டு ஆதரிப்போர் எசமான், ஆண்டை அல்லது சசுமான்கள் (Jajmans) எனக் கூறப்படுவர். வடஇந்தியர்கள் ஆண்டைகளைச் சசுமான்கள் என்றும், சாதிப் பணியாளர்களைக் காமின்கள் என்றும் கூறுவதால் இம்முறை வட இந்தியாவில் சசுமானிய முறை எனக் கூறப்படுகிறது.

ஊழியம் செய்வோர் தத்தம் சாதித் தொழில்களுக்கேற்பத் தம் ஆண்டைகளுக்குப் பணி புரிகின்றனர். ஆண்டையின் வீட்டில் நிகழும் சடங்குகளை நடத்திக் கொடுத்தல், மரச் சாமான்கள் செய்து கொடுத்தல், இரும்புக் கருவிகள் வடித்துக் கொடுத்தல், நகைகள் செய்தல், துணி வெளுத்தல், முடி வெட்டுதல், வீடு மற்றும் தெருவைத் துப்புரவு செய்தல், தண்ணீர் எடுத்து வருதல், தோல் பொருள்கள் செய்து கொடுத்தல், ஆடல் பாடல் மூலம் களிப்பூட்டுதல் முதலிய பணிகளைச் செய்து ஊழியம் புரிகின்றனர். இத்தகைய ஊழியத்திற்குக் கைம்மாறாக ஆண்டுதோறும் உணவு, பிற பொருள்கள் முதலியன ஆண்டைகளால் வழங்கப்படுகின்றன. பொருள்கள் வழங்கப்படும்போது ஊழியம் செய்வோர் குடும்ப அளவும் கருத்தில் கொள்ளப்படுகிறது.

குடிஊழிய முறையில் நிலவுடைமைச் சாதியினரே ஆண்டை நிலையில் இருப்பர். ஊரின் நிலங்களில் பெரும் பகுதி எந்தச் சாதியினருக்கு இருக்கிறதோ அவர்களே ஊரில் ஆதிக்கம் செலுத்தும் சாதியினராக இருப்பார்கள். பொருளாதாரத்தில் மட்டுமன்றி, அரசியலிலும் அவர்களுக்கு வலிமையும் ஆதிக்கமும் இருக்கும். அவர்கள் நிலவுடைமையை அடிப்படையாகக் கொண்டு அரசியல் வலிமைக்கு மூலாதாரமாக விளங்கும் பஞ்சாயத்து அமைப்புகளையும் தங்களுடைய ஆதிக்கத்தின்கீழ் வைத்திருப்பார்கள். உறுப்பினர் எண்ணிக்கையிலும் அவர்கள் மிகுந்து இருப்பார்கள். எண்ணிக்கைப் பலம், பொருளாதார–அரசியல் வலிமை, ஆதிக்கம் ஆகியவற்றின் காரணமாக அவர்கள் ஊரில் ஆதிக்கச் சாதியினராகவும் முதன்மைச் சாதியினராகவும் இருப்பர்.

இந்த நிலையில் இந்த ஆதிக்கச் சாதியினர் தம்மிலும் கீழானவரைத் தம் ஆதிக்கத்தின்கீழ் இருத்தி, அதிகாரம் செய்யவும், அவர்களுடைய ஊழியத்தை அனுபவிக்கவும் ஆற்றல் கிடைக்கிறது. அந்த ஆற்றலை உரிமையாகப் பயன்படுத்தித் தமக்குக் கட்டுப்பட்ட சாதியினரின் ஊழியத்தை அனுபவிக்கிறார்கள்,

இந்த ஊழியத்தை இவர்கள் ஒரு கடமையாகச் செய்கின்றனர். ஆதிக்கச் சாதியினர் இந்த ஊழியத்தை ஓர் உரிமையாகப் பெற்று அனுபவிக்கின்றனர்.

பாலின் கோலண்டா (Pauline Kolenda) அம்மையார் குடிஊழிய முறை, பொருளாதாரத்தில் மட்டுமன்றிச் சடங்கு முறையிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்கிறார். ஆதிக்கச் சாதியினர் தூய்மை நிலையிலும், ஊழியம் புரிகிற சாதியினர் தீட்டு நிலையிலும் இருப்பதாகக் கருதப்படுவதால் அவர்களிடையே ஏற்றத் தாழ்வு நிலை காணப்படுகிறது. இந்த நிலையில் ஆதிக்கச் சாதியினருக்கும் ஊழியம் புரிகிற சாதியினருக்கும் இடையே நிகழும் பரிமாற்ற உறவு தூய்மை, தீட்டு ஆகிய கருத்துகளோடு தொடர்புற்ற ஒரு சடங்கு உறவாக அமைகிறது

என்கிறார். பாலின் கோலண்டா இதற்கு எடுத்துக் காட்டாக வடமேற்கு உத்தரப்பிரதேசத்தில் உள்ள காலாப்பூர் என்ற கிராமத்தில் நிலவும் குடிஊழிய முறையை விவரிக்கிறார். இங்கு இராசபுத்திர சாதியினர் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். ஊரின் நிலங்களில் பெரும்பகுதி அவர்களுக்குச் சொந்தம். ஊர்ப் பஞ்சாயத்தும் அவர்களுடைய ஆளுகைக்குள் உள்ளது. அவர்கள் பிராமணரைப் போன்று இல்லாவிடினும் மற்றவர்களைவிடத் தூய்மையுடையவராகக் கருதப்படுகின்றனர். தூய்மையற்ற, தீட்டு என்று கருதப்படுகிற தொழிலை அவர்கள் செய்வதில்லை. முடி வெட்டுதல், முகச் சவரம் செய்தல், அழுக்குத் துணிகளைத் துவைத்தல், வீடு கட்டுதல், தண்ணீர் எடுத்து வருதல் முதலிய வேலைகளை அவர்கள் செய்வதில்லை. இந்த வேலைகளுக்காக உள்ள தொழிற் சாதியினரைத் தமக்கு ஊழியம் புரிவோராக அமர்த்திக் கொண்டு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். இந்த வேலைகளில் தண்ணீர் எடுத்து வருதல் தீட்டுத் தொழிலாக இல்லாவிடினும், இராசபுத்திர சாதியினர் அதைத் தமது தகுதிக்குக் கீழானது என்று கருதுகிறார்கள். ஆகவே, அவர்கள் தம் வீட்டுப் பெண்களைத் தண்ணீர் எடுத்துவர அனுமதிப்பது கிடையாது. இந்த வேலைக்குத் தண்ணீர் எடுக்கும் சாதியினரின் ஊழியத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். இவ்வாறே, தச்சு வேலை, மட்பாண்டங்கள் தயாரிக்கும் வேலை முதலியவற்றிலும் அவர்கள் ஈடுபடுவது கிடையாது.

ஆண்டைகள் தமது பணியாளர்களுக்குப் பெரும்பாலும் தினக் கூலி தருவதில்லை. ஆண்டுதோறும் உணவுப் பொருள்கள், துணி முதலியவற்றைக் கொடுத்துக் குடிமக்களை ஆதரிப்பார்கள். குடிமக்களுக்குத் தமது நிலத்தில் வீடு கட்டிக் கொள்ள அனுமதி கொடுத்து, வீடு கட்டுவதற்கும் வீடு பழுது பார்ப்பதற்கும் வேண்டிய மூலப் பொருள்களையும் கொடுத்து உதவுவார்கள். மேலும், இச் செயல்களுக்குப் பண உதவியும் செய்வதுண்டு. தங்களுடைய வீட்டில் சிறப்பு நிகழ்ச்சிகளும் பண்டிகைகளும் கொண்டாடப்படும் பொழுது குடிமக்களுக்குப் பரிசுகள் அளிப்பார்கள். குடிமக்கள் வீட்டில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் ஆண்டைகள் பரிசளித்துப் பாராட்டுவார்கள். குடிமக்களின் குழந்தைகளுடைய படிப்புக்கும், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கும் ஆண்டைகள் பண உதவி செய்வார்கள்.

இந்த வகையில் ஆண்டைக்கும் அவரது பணியாளர்களுக்கும் ஒரு பிணைப்பு அமைகிறது. இந்தப் பிணைப்பு தொடர்புடைய சாதிப் பணியாளர்கள் மட்டுமன்றி அவர்கள் குடும்பத்தினரையும் பின்வரும் தலைமுறையினரையும் ஆண்டையோடு இணைத்து வைக்கிறது. சாதிப் பணியாளர்களுடைய மனைவி, மக்களும் ஆண்டை வீட்டிற்கு ஊழியம் செய்வார்கள். எடுத்துக்காட்டாக, முடிவெட்டுபவன் மட்டுமன்றி அவன் மகனும் ஆண்டைக்கும் ஆண்டையின் குழந்தைகளுக்கும் முடிவெட்டிச் சேவை செய்வான். முடிவெட்டுபவனின் மனைவி ஆண்டை வீட்டுப் பெண்களுக்குப் பிள்ளைப் பேற்றுக் காலத்தில் மருத்துவம் பார்ப்பாள். இந்த உறவு பின்வரும் தலைமுறையினரிடையேயும் தொடர்ந்து நிலவி வரும். சாதிப் பணியாளர்களுடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் என்று தொடர்ந்து பின்வரும் தலைமுறையினரும் தம் முன்னோர்களுடைய ஆண்டை வீட்டுக்குத் தொடர்ந்து குடிமக்களாய் அமைந்து ஊழியம் புரிவர்.

குடிஊழிய உறவு கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார உறவாக மட்டுமன்றி, ஒரு பாசமிக்க ஒட்டுறவாகவும் இருந்து வருகிறது. இறப்பு, இழப்பு போன்ற துயர நிகழ்ச்சிகளிலும் அவர்கள் தம் தகுதிக்கேற்பப் பணி புரிவார்கள்.

சாதிப்பணியாளர்கள் தமது ஆண்டைக்குத் தொடர்பான எந்தச் செயலிலும் ஈடுபட்டு அவருக்கு ஆதரவாய் நிற்பார்கள். ஆண்டை, தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு ஆதரவாக இவர்கள் பணிபுரிவார்கள். ஆண்டை பிறருடன் ஏதாவது சண்டைச் சச்சரவில் ஈடுபட்டிருந்தால், அந்தச் சச்சரவில் தமக்குத் தொடர்பு ஏதும் இல்லாவிடினும் சாதிப் பணியாளர்கள் தமது ஆண்டைக்கு உறுதுணையாய் இருப்பார்கள். தமது ஆண்டையின் எதிரி தமது சாதியாராக இருந்தாலும் கூட இவர்கள் தம் ஆண்டையின் பக்கமே இருப்பார்கள். இத்தகைய உறவு வெறும் ஒருவழி உறவன்று. ஆண்டையும் அவ்வாறே நடந்து கொள்வார். காலாப்பூரில் ஒரு முறை தெருக் கூட்டுவோருக்கும் தோல் தொழில் செய்வோருக்கும் இடையே சச்சரவு மூண்டபோது, தெருக்கூட்டுவோரின் ஆண்டையும் தோல் தொழில் செய்வோரின் ஆண்டையும் தத்தம் சாதிப் பணியாளர்களுக்கு ஆதரவாக அந்தச் சச்சரவில் தங்களையும் ஈடுபடுத்திக் கொண்டு எதிரெதிர் அணிகளாக நின்றனர். இந்த இரு ஆண்டைகளும் இராசபுத்திரச் சாதியைச் சேர்ந்தவர்களே.

ஒரு பணியாளரின் பணியில் அவனுடைய ஆண்டைக்குத் திருப்தி இல்லாவிட்டால் ஆண்டை தன்னிச்சையாக அவனை விலக்கவோ அவனுக்குப் பதிலாக வேறொருவனைப் பணியில் அமர்த்தவோ முடியாது. பணியாளரின் சாதிப் பெரியவர் அல்லது ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர்கள் மட்டுமே இவற்றைச்

செய்ய முடியும். அவ்வாறே ஒரு குடிமகனுக்கும் தன் ஆண்டையிடம் பணிபுரிய விருப்பமில்லா விட்டால் தானாக விலக முடியாது. தன் சாதிப் பெரியவரின் மூலமாகவே விலக முடியும். அப்படித் தன்னிச்சையாக ஒரு சாதிப் பணியாளர் பணியிலிருந்து விலகிவிட்டால் பெரியவர் அவனச் சாதியிலிருந்து தள்ளி வைக்கலாம். ஆண்டையும் அவனைப் பிறர் ஏற்காதவாறு தடுக்கலாம்.

ஒரு சாதியைச் சேர்ந்தவர் செய்கிற ஊழியத்தை இன்னொரு சாதிக் குடிமகன் செய்யக் கூடாது. எடுத்துக்காட்டாக, ஒரு குயவனின் ஊழியத்தை ஒரு தச்சன் செய்யக் கூடாது. அவ்வாறே ஒரு தச்சன் ஒரு குயவனின் ஊழியத்தைச் செய்யக் கூடாது. குடி ஊழிய முறை பல ஆரக் கால்களைக் கொண்ட சக்கரம் போன்றதால், ஆரக் கால்களுக்கிடையே பூசல் ஏற்பட அனுமதிக்கப்படுவது கிடையாது.

இன்று நவீனமயமாதலின் தாக்கத்தினால் குடி ஊழிய முறை மெல்ல மெல்ல அழிந்து வருகிறது. ஆண்டை, சாதிப்பணியாளர்கள் ஆகிய இரு சாராரின் மனப்பான்மையிலும் தொழில்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அவற்றின் விளைவால் அவர்களிடையே நிலவி வரும் குடிஊழிய உறவு தளர்ந்து வருகிறது. பெருகி வருகிற கல்வி வளர்ச்சியின் காரணமாகக் குடிமக்களின் புதிய தலைமுறையினர் விழிப்புணர்வு பெற்றுப் பரம்பரையான குடிஊழிய முறை உறவுகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளுகிறார்கள். பரம்பரைத் தொழில்கள் கவர்ச்சி குன்றிப் போனதாலும் புதிய வேலை வாய்ப்புகள் தோன்றியுள்ளதாலும் சாதிப் பணியாளர்கள் தம் பழைய குலத் தொழில்களைக் கைவிட்டு, நகரங்களுக்குக் குடியேறிப் புதிய தொழில்களை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். இதன் காரணமாகக் குடிஊழிய முறை அழிந்து வருகிறது.

குடிஊழிய முறை வீழ்ச்சிக்கு ஆதிக்கச் சாதியினரும் காரணமாகின்றனர். நிலக்குடியினர் வேளாண்மையைக் கைவிடும்பொழுது அவர்களுக்குச் சாதிப் பணியாளர்களின் ஊழியம் தேவைப்படாமல் போகிறது. அந்த நிலையில் ஆண்டைக்கும் சாதிப் பணியாளர்களுக்கும் இடையே நிலவி வந்த குடிஊழிய உறவும் அறுபடுகிறது. கருநாடகத்தில் நீர்ப்பாசன வசதி கிடைக்காததால் ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஒக்கலிக நிலக்கிழார்கள் ஊரிலுள்ள தம் நிலங்களை விற்று விட்டுப் பொதுப் பணித்துறைப் பணிகளுக்கு ஒப்பந்தம் எடுத்தல், நீர்ப்பாசன வசதியுள்ள கிராமங்களில் நிலம் வாங்கி விவசாயம் செய்தல் முதலான வேலைகளில் ஈடுபட்டனர். அவர்கள் ஊரில் அவர்களைச் சார்ந்து வாழ்ந்து வந்த ஆதிகருநாடகா என்ற அரிசனக் குடிமக்களின் ஊழியம் அவர்களுக்குத் தேவைப்பாடாமல் போயிற்று. அதன் விளைவாகத் தொடக்கத்திலிருந்து ஒக்கலிக நிலக் கிழார்களுக்கும் ஆதிகருநாடகக் குடிமக்களுக்கும் இடையே நிலவி வந்த குடிஊழிய உறவு அறுந்தது.

பயிர்ச் சாகுபடி முறையை மாற்றுவதன் மூலமும் ஆண்டைகள் குடிஊழிய முறை நலிவுக்குக் காரணமாகின்றார்கள். உணவுப் பயிர்கள் பயிரிட்டு வந்த ஆண்டைச் சாதியினர் இப்பொழுது ஆதாயம் தரக் கூடிய கரும்பு, பருத்தி முதலிய பணப் பயிர்களைப் பெருவாரியாக விளைவிக்கத் தொடங்கியிருக்கின்றனர். இதனால் குடிமக்களுக்குக் கொடுக்கக் கூடிய அளவுக்கு அதிக உணவுத் தானியம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே, தம் பணியாளர்களை முன்பு போல ஆதரிக்க முடியாமற் போயிற்று. இதன் விளைவு குடிஊழிய முறை வீழ்ச்சியில் போய் முடிந்தது. இத்தகைய நிலை காலாப்பூரில் ஏற்பட்டுள்ளதாகப் பாலின் கோலண்டா கூறுகிறார். இவ்வாறு பல்வேறு காரணங்களினால் குறிப்பாக நவீன மயமாகுதலின் தாக்கத்தினால் குடிஊழிய முறை இந்தியாவில் மெல்ல மெல்ல நசிந்து வருகிறது. மரபு வழியான பரிமாற்ற உறவு முறை விலகி, ஒப்பந்த முறையிலான உறவு முறை மிகுந்து வருகிறது. சி.என்.ந.

**துணை நூல்கள்:**

**Kolenda, Pauline**, Caste in Contemporry India: Beyond Organic Soidarity, The Benjamin Cummings Publishing Company, California, 1978.

**Lewis, Oscar**. Village Life in Northern India, University of Illinois Press, Urbana, 1958.

**Wisler, William H.**, The Hindu Jajmani System, Lucknow Publishing House, Lucknow, 1958.

**குடிசைத் தொழில்கள்**: சிறு அளவில் ஒருவருடைய இல்லத்திலேயே குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு செய்யப்படும் தொழில்கள் குடிசைத் தொழில் எனப்படும். இவை உழைப்பை அடிப்படையாகக் கொண்டவை.

குடிசைத் தொழில்களுக்குப் (Cottage Industries) பெரும்பாலும் அதை நடத்துபவரின் வீடே தொழிற்கூடம். அவருடைய குடும்ப உறுப்பினர்களே உழைப்பாளர்கள். அவருடைய சேமிப்பே முதலீட்டுத் தொகை. அவரே தொழில் முனைவோர் ஆவர். உழைப்பை அடிப்படையாகக் கொண்டு உடல்

வளம், உள்ளத்தின் உறுதி, செயல்திறம் ஆகியவற்றின் துணையுடன் குடிசைத் தொழில்கள் வளர்க்கப்படுகின்றன. இவ்வாறு குடிசைத் தொழில்கள் வளர்வதால் குடும்பம் முன்னேறுகிறது, சமுதாயமும் நாடும் வளம் பெறுகின்றன.

இந்தியாவில் குடிசைத்தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் பல. அவை, பற்பொடி வகைகள், முகத்தில் பூசும்பொடி, சவர்க்கார வகைகள், ஊதுபத்தி வகைகள், பன்னீர் வகைகள், வாசனைப் பூத் தூள்கள், குளியல் பொடி, சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், குளிர் தாமரைத் தைலம், கீழாநெல்லித் தைலம், பொன்னாங்கண்ணித் தைலம், ஆமலகத் தைலம், நேத்ரானந்தத் தைலம், நவகற்பத் தைலம், கூந்தல் வளர் தைலம், வல்லாரைத் தைலம், குங்கும வகைகள், நகப்பூச்சு, உதட்டுச்சாயம், ஊறுகாய், அப்பளம், சவ்வரிசி, சேமியா, புகையிலைத் தூள், கற்பூரம், வில்லைக் கற்பூரம், முத்திரை அரக்கு,மை, வகைகள் முதலியன வாகும்.

**நன்மைகள்**: குடிசைத் தொழில்கள் நாட்டின் பொருளாதார வளச்ச்சியில் சிறப்பான பங்கு வகிக்கின்றன. வேலை வாய்ப்பை அளிக்கின்றன. மக்கள் தொகைப்பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், மூலதனப் பற்றாக்குறை போன்றவை மிகுந்த இந்திய நாட்டின் சிக்கல்களைத் தீர்க்கக் குடிசைத் தொழில்கள் உதவுகின்றன. குடிசைத் தொழில்களுக்கே உரிய சிறப்புத் தன்மைகள் நாட்டில் மிகுந்து காணப்படும் உழைப்பாளர்களை மிகையாகவும், குறைந்து காணப்படும் மூலதனத்தைக் குறைவாகவும் பயன்படுத்துவதாகும். இதனால், குடிசைத்தொழில்கள் நாட்டிற்குப் பெருமளவில் நன்மை பயக்கின்றன. வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. தகுதிக்குக் குறைந்த வேலையுள்ளோர் கூடுதல் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர். அவ்வப்போது வேலையில் ஈடுபடுவோர்க்குத் துணை வேலை கிடைக்கிறது.

இந்தியாவில் காணப்படும் செல்வக் குவிப்பு, ஏற்றத்தாழ்வான வருமானப் பங்கீடு ஆகிய இவற்றைக் குறைத்து ஓரளவு சம வருமானப் பங்கீடு செய்வதற்குக் குடிசைத் தொழில்கள் உதவுகின்றன. பெரும்பாலோர்க்கு, குறிப்பாக ஏழைகளுக்கு வேலை வாய்ப்பை அளித்து அவர்களுக்கு வருவாய் அளிப்பதன் வாயிலாகச் சம வருமானப் பங்கீட்டிற்கு வழி செய்து, நாட்டின் தலையாயக் குறிக்கோளான சமுதாய நீதியை நிலைநாட்டுவதற்குக் குடிசைத் தொழில் உதவுகிறது.

நாட்டில் மறைந்து கிடக்கின்ற உற்பத்திக் காரணிகளுக்குக் குடிசைத் தொழில்கள் உயிரூட்டி அவற்றைப் பயன்பாட்டிற்குட்படுத்துகின்றன. சிறு அளவில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் செல்வம், குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் உழைப்புத்திறன், சிறப்புத் திறமை ஆகியவற்றைச் சிறு தொழில்கள் பயன்படுத்தி, வீணாக்கப்படும் காரணிகளை உற்பத்திப் பெருக்கத்திற்கும், நாட்டின் வளத்திற்கும் சாதகமாக்குகின்றன. இக்காரணிகளைபெருமளவுத் தொழில்கள் பயன்படுத்துவதில்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சி பரவலாக அமையக் குடிசைத் தொழில்கள் உதவுகின்றன.

குடிசைத் தொழில்களே மக்களின் நேரடித் தேவைகளை நிறைவு செய்யும் நுகர்வுப் பொருட்களைப் (Consumer Goods) பெருமளவில் உற்பத்தி செய்கின்றன.

குடிசைத் தொழில்களைத் தொடங்க, பெரிய இயந்திரங்கள் இறக்குமதி செய்ய வேண்டிய இன்றியமையாமை இல்லாததால், அயற்செலாவணி தேவையில்லை.

குடிசைத் தொழில்கள் உழைப்பு, விடுதலை, தன்னம்பிக்கை, சாதனை புரிவதற்கான ஊக்கம் இவற்றை ஊக்குவிப்பதால் அவை அரசியல் சமுதாய நன்மைகளைத் தோற்றுவித்து நல்லதொரு சூழ்நிலையில் நாடு வளரத் துணைபுரிகின்றன.

**சிக்கல்கள்**: குடிசைத் தொழில்களை நடத்துவதற்கு வேண்டிய உள்ளீடு (Inputs) பொருள்கள் போதுமான அளவில் நாட்டில் கிடைப்பதில்லை. கிடைப்பனவும் நல்ல தரமானவையாக இருப்பதில்லை. குடிசைத் தொழில்களுக்குப் போதுமான கடன்வசதிகள் கிடைப்பதில்லை. குடிசைத் தொழில்கள் உற்பத்தியில் ஈடுபட பழைய வழிமுறைகளையே கையாள்கின்றனர். புதுமையான வழிகளும் தொழில் நுணுக்கங்களும் கையாளப்படவில்லை. புதிய கருவிகள் வாங்கும் அளவு சிறு தொழிலில் ஈடுபடுவோருக்கு வசதி இருப்பதில்லை. அப்படியே வாங்க இயன்றாலும் அதைக் கையாளும் முறையை அறிந்து கொள்ளும் அளவு படித்தவர்களாக இருப்பதில்லை.

குடிசைத் தொழில்கள் வேலைவாய்ப்பை அளிக்கின்றன. எனினும்பெருமளவுத்தொழில்கள் உதவுவதுபோல், உற்பத்தித் திறனைப் பெருக்கவோ, புதிய தொழில் நுணுக்க முறைகளைக் கண்டுபிடிக்கவோ உதவுவதில்லை எனத் தார் (Dhar), லிடால் (Lydall) ஆகிய இரு பொருளியல் நிபுணர்களும்

அவர்களுடைய 'பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில்களின் பங்கு'(The Role of Small Enterprises in Indian Economic Development) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், நவீன உற்பத்தி முறைகளைக் கையாண்டால் குடிசைத் தொழில் களிலும் உழைப்பாளர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தமுடியும் என்று இவர்களின் கருத்திற்கு மறுப்புத் தெரிவிப்பவர்களும் உண்டு. மேற்கு செருமனி, சப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளில் குடிசைத் தொழில்களிலும் உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் நவீன உற்பத்தி முறையின் காரணமாக உயர் வாகக் காணப்படுகின்றது.

குடிசைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற் கேற்ற அங்காடி வசதிகள் இன்றி அல்லலுறுகின்ற னர். அவர்கள் பெரும்பாலும் வட்டித் தொழிலர்களி டம் கடன்பட்டிருப்பதால் அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாயநிலையில், குறைந்த விலையில் பொருள்களை விற்றுவிடுகிறார்கள். எனவே, போதிய வருவாய் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. குடிசைத் தொழில் பெருமளவுத் தொழில்களோடு போட்டி போட்டு எதிர்த்துச் சமாளிக்க இயலுவதில்லை.

பன்னாட்டுத் திட்டக் குழுவும், குடிசைத் தொழில்கள், சிற்றளவுத் தொழில்களுக்காக அமைக் கப்பட்ட கார்வே குழுவும் (Karve Committee) குடிசைத் தொழில்கள் முன்னேற்றமடையச் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளன. அவையாவன: 1) எந்தெந்தத் தொழிலில் பழமையான திறமைக் கும் கடின உழைப்பிற்கும் சிறந்த வடிவமைப்புக்கும் தேவை இருக்கிறதோ அந்தத் தொழில்களைக் குடிசைத் தொழில்களாக தேர்ந்தெடுக்கவேண்டும். 2) பொருள்களின் தேவை பரந்த நிலையில் காணப் படும் இடத்தில் குடிசைத் தொழில்களைத் தொடங்க வேண்டும். 3) தொழில் கூட்டுறவு அமைப்புகளை அரசு ஏற்படுத்திக் குடிசைத் தொழிலில் ஈடுபடுபவர் களுக்கு உள்ளிடு பொருள்கள் கிடைக்கவும், கடன் வசதிகள் கிடைக்கவும், அங்காடி வசதிகள் கிடைக்க வும் வழிவகைகள் செய்யவேண்டும். 4) நவீன உற் பத்தி முறைகளைச் சிறுதொழில்களில் கையாள ஏற்பாடு செய்யவேண்டும். 5) நவீன கருவிகளைக் கையாளக் குடிசைத் தொழிலில் ஈடுபடுவோர் களுக்குக் கல்வி புகட்டியும், தொழில் நுணுக்கப் பயிற்சி அளித்தும் அரசாங்கம் உதவ வேண்டும். 6) குடிசைத் தொழில்களின் உற்பத்தி செய்யும் பொருள்கள் சிறந்தவையாகவும், புதிய வடிவமைப்பு உடையனவாகவும் இருக்கவேண்டும். 7) பெருமளவுத் தொழில்களோடு நேரடிப் போட்டி ஏற்படாத பொருள்களின் உற்பத்தியில் குடிசைத்தொழில்கள் ஈடுபடவேண்டும்.

**ஐந்தாண்டுத் திட்டங்களும் குடிசைத் தொழில் களும்:** குடிசைத் தொழில்களுக்கும் சிற்றளவுத் தொழில்களுக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களில் போதிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களில் இத்தொழில்கள் வளர ஒதுக்கீடு செய் யப்பட்ட தொகையின் அளவு கீழே கொடுக்கப்பட் டுள்ளது.

| ஐந்தாண்டுத் திட்டங்கள் | தொகை (உரூபாய் கோடியில்) |
|---|---|
| முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் | 42 |
| இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் | 187 |
| மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் | 241 |
| மூன்றாண்டுத் திட்டங்கள் (1966-69) | 126 |
| நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் | 243 |
| ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் | 611 |
| ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் | 1780 |
| ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் | 2753 |

உற்பத்தி, வேலைவாய்ப்பு இவை பெருக, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 1979-80-ஆம் ஆண்டிற்கு 314 கோடி உரூபாய் மதிப்புள்ள பொருள் உற்பத்தியும், 1984-85-ஆம் ஆண்டிற்கு 1000 கோடி உரூபாய் மதிப்புள்ள பொருள் உற்பத்தியும் இலக் காக வரையறுக்கப்பட்டன. குடிசைத் தொழில்கள் மூலம் 1979-80-இல் 18.2 இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், 1984-85-இல் 35.1 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் இலக்கு வரையறுக்கப்பட்டது.

இந்தியப் பொருளாதார ஐந்தாண்டுத் திட்டத் தில் குடிசைத் தொழில்கள் சிறப்பான இடம் பெற்று ஊக்கமுடன் ஆக்க வேலைகளைச் செய்து, பலருக்கு வேலைவாய்ப்புகளை அளித்து, உற் பத்தியைப் பெருக்கி, மக்களின் தேவைகளை நிறைவு செய்து நாட்டின் நலனைப் பெருக்குகின்றன. ச.கி.

**துணை நூல்கள்:**

Planning Commission, Sixth Five Year Plan 1980-85, Government of India, New Delhi, 1981.

Ruddar Datt, & K.P.M. Sundaram, Indian Economy, S. Chand and Company Limited, New Delhi, 1985.

State Planning Comission, Sixth Five Year Plan, 1980-85. Tamil Nadu Government, Madras, 1982.

**குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்:** உலகெங்கும் நகரமயமாதல் விரைவாக வளர்ந்து கொண்டு வருவதுடன் நகரங்களின் எண்ணிக்கையும் இன்று கூடிக் கொண்டே வருகிறது. அதற்கேற்ப நகர மக்கள் தொகையளவும் அதிகரித்து வருகிறது. உலக மக்கள் தொகை ஆண்டுக்கு 1.7% என்ற விகிதத்தில் வளர்ந்து வந்தபோதிலும் நகர மக்கள் தொகையானது ஆண்டுக்கு 3% என்ற விகிதத்தில் அதிகரித்து வருகிறது. உலக நகர மக்கள் தொகையானது 1900-ஆம் ஆண்டில் 220 மிலியனாகவும், உலக மொத்த மக்கள் தொகையில் 13% ஆகவும் இருந்தது. ஆனால் இந்த எண்ணிக்கை 1980இல் 1807 மிலியனாகவும், 41% ஆகவும் மாறியுள்ளது. மேலும், இது இந்நூற்றாண்டின் கடைசியில் 2000 மிலியனுக்கு மேலேயும், உலக மொத்த மக்கள் தொகையில் 50% க்கும் மேலேயும் போகக் கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நகர மக்கள் தொகை அளவு வளர்ச்சி யடைந்த நாடுகளில் மட்டுமன்றி, வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளிலும் விரைவாக வளர்ந்து வருகிறது. 'இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது' என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்டுவந்த கூற்றானது இப்பொழுது மெதுவாகத் தேய்ந்து வருகிறது. நகரங்களில் வாழும் மக்கள் தொகை இந்தியாவில் கூடிக் கொண்டே வருகிறது. நகர மக்கள் தொகை 1901-இல் 25.6 மிலியனாகவும், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 11% ஆகவும் இருந்தது. இந்த எண்ணிக்கையானது. 1981-இல் 156.1 மிலியனாகவும், 23.73% ஆகவும் உயர்ந்துள்ளது. இந்த நூற்றாண்டின் கடைசியில் நகர மக்கள் தொகை 320 மிலியனாக உயர்ந்து, நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 38-40% ஆகக் கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சிக்குக் குடிப்பெயர்ச்சி (Migration) ஒரு காரணம். கிராமங்களில் பெருகி வரும் மக்கள் தொகையினால் நிலத்தின் மீது ஏற்படுகிற அழுத்தத்தின் காரணமாகப் போதிய வேலை வாய்ப்புகள் இல்லாமல் போகின்றன. இதன் காரணமாக வேலை வாய்ப்புகளைத் தேடியும், அதிக வருமானம் ஈட்ட வேண்டும் என்பதற்காகவும் கிராமங்களிலிருந்து மக்கள் நகர்ப் புறங்களுக்கு, குறிப்பாகப் பெரிய நகரங்களுக்குக் குடி பெயர்கிறார்கள். இதே காரணங்களுக்காகச் சிறிய நகரங்களிலிருந்தும் மக்கள் பெரிய நகரங்களுக்கு வருகிறார்கள். இவ்வாறு குடி பெயர்கிற மக்களால் நகரங்களின் மக்கள்தொகை அதிகரிக்கிறது. நகர மக்களில் 40%ம் பெரிய நகரங்களில் 49%ம் இவ்வாறு வேறிடங்களிருந்து குடி பெயர்ந்து வருகிறவர்கள் என்று ஓர் ஆய்வறிக்கை கூறுகிறது.

இப்படி நகரங்களுக்குக் குடிபெயர்ந்து வருகிறவர்களுக்குத் தங்குவதற்கு இடம் கிடைப்பது ஒரு பெரும் சிக்கலாக உள்ளது. நகரங்களில் தங்குவதற்கு வீடுகள் கிடைப்பது அரிதாக இருப்பதாலும், கிடைக்கிற வீடுகளுக்கு அதிகமான வாடகையும், அதிகமான முன் பணமும் கொடுக்க வேண்டி இருப்பதாலும் குடி பெயர்ந்து வருகிறவர்களுக்கு வீட்டுவசதி ஒரு பெரும் சிக்கலாக அமைகிறது. அவர்களுடைய பொருளாதாரச் சக்திக் கேற்பச் சரியான, போதிய வீட்டு வசதி கிடைக்காமல் அவர்கள் தவிக்க நேரிடுகிறது. இதன் காரணமாக அவர்கள், உரிமையாளர்களால் பயன் படுத்தப்படாமல் இருக்கிற இடங்கள், திறந்த வெளி நிலங்கள், புறம் போக்கு நிலங்கள், விளையாட்டுத் திடல்கள், வெற்றிடங்கள் ஆகியவற்றில் குடிசைகளைப் போட்டுக் கொண்டு தங்குகிறார்கள். இவ்வாறு போடப்படுகிற குடிசைகள் எந்த வித ஒழுங்கின்றியும், திட்டமிடப்படாமலும், கண்டவாறு அமைக்கப்பட்டும் அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றன.

குடிப்பெயர்ச்சி தொடர்ச்சியாக ஏற்பட்டு, மக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்து வருகிறபொழுது, அவர்களுடைய வீட்டு வசதித் தேவையை நிறைவேற்றும் விதத்தில் குடிசைகளும் பெருகிக் கொண்டே போகின்றன. இதனால் நகரங்களில் ஆங்காங்கே குடிசைப் பகுதிகள் (Slums) ஏராளமாகத் தோன்றுகின்றன. இவ்வாறான குடிசைப் பகுதிகளில் 6 மிலியன் குடிசைகள் உள்ளன என 1985-ஆம் ஆண்டில் நடந்த ஒரு மதிப்பீட்டில் கணக்கிடப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதிகள் நகர மக்கள் தொகையில் ஒரு பெரும் பகுதியினரைத் தம்முள் கொண்டிருக்கின்றன. மாநில அரசுகள் 1981-இல் தந்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் மைய அரசு, நகரங்களின் குடிசைப் பகுதிகளில் 28 மிலியன் மக்கள் வசிக்கின்றனர் எனக் கணக்கிட்டது. ஆனால், தேசியத் திட்ட ஆணையம் (National Planning Commission) நகரங்களின் குடிசைப் பகுதிகளில் 32 மிலியனிலிருந்து 40 மிலியன் வரை மக்கள் வசிப்பதாக 1981-இல் கணக்

கிட்டுக் கூறியது. இந்த எண்ணிக்கை (28 மிலியன்) மொத்த நகர மக்கள் தொகையில் 20%ஆகும். நகரக் குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் எண்ணிக்கை 1985-ஆம் ஆண்டில் 23.1 மிலியனாக உயர்ந்ததாக மைய அரசு கணக்கிட்டுக் கூறியிருக்கிறது. மைய அரசின் இந்தக் கணக்கீட்டின் அடிப்படையில் இந்திய அரசைச் சேர்ந்த நகர, நாட்டுப்புறத் திட்ட நிறுவனம் (Town and Country Planning Organisation) 1990-இல் நகரக் குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் எண்ணிக்கை 52.2 மிலியனாக உயரும் என்று மதிப்பிட்டுள்ளது.

குடிசைப் பகுதிகள் நகர மக்கள் தொகையில் ஒரு கணிசமான பகுதியினரைக் கொண்டிருந்தபோதிலும், அவை மிகக் கேவலமான நிலையில் இருக்கின்றன. அக் குடிசைகள் மக்கள் வாழ்வதற்கு எந்த வகையிலும் தகுதியில்லாமலும் சிறியவைகளாகவும் இருக்கின்றன.

இதன் காரணமாக அவற்றில் வாழ்வோருடைய உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும் பெருங்கேடு உண்டாகிறது. மேலும் அவை, தாம் அமைந்துள்ள சுற்றுப்புறத்தின்அழகையும்,தூய்மையையும் கெடுத்து நகருக்கே ஒரு சுகாதாரக் கேடாக விளங்குகின்றன. பலவிதமான சமூகக் கேடுகளுக்கும் அவை பிறப்பிடமாக அமைந்து, சமூக நலத்தைப் பாதிக்கின்றன. எனவே, இந்த உண்மையைத் தேசியத் திட்ட ஆணையம் உணர்ந்து, முதலாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் குடிசைப் பகுதிகளை அகற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. ஆயினும் இந்திய அரசு உடனடியாக அந்தப் பணியில் இறங்கவில்லை. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் தறுவாயில் 1956 மே திங்களில் குடிசைப் பகுதி அகற்றுதல்/மேம்படுத்துதல் திட்டம்(Slum Clearance/ Improvement Scheme) என்ற திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் மாதம் 350 உரூபாய் வருமானம் உடைய குடிசைப் பகுதி மக்களை அவர்களுடைய குடிசைகளிலிருந்து அகற்றி, அந்தக் குடிசைகளையும் ஒழித்து, அவர்களுக்கு வேறிடங்களில் நல்ல, சிமெண்டுக் கட்டடம் கட்டி ஒரு குறிப்பிட்ட வாடகையில் குடியமர்த்தும் பணி நடைபெறுகிறது. ஒரு பக்கம் பல குடிசைகள் அகற்றப்படுவதும், இன்னொரு பக்கம் மிச்சமிருக்கிற குடிசைகள் திருத்தப்பட்டு மேம்படுத்தப்படுவதும் இத்திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றன.

இத் திட்டத்திற்காக மைய அரசு மாநில அரசுகளுக்கு நிதியுதவி செய்து இத்திட்டத்தை நிறைவேற்றி வைக்கிறது. ஆரம்பத்தில் மைய அரசு ஒரு



திட்டப் பணிக்கு அப்பணிக்கான மதிப்பீட்டுச் செலவுத் தொகையில் 50% கடனாகவும், 25% மானியமாகவும் மாநில அரசுகளுக்குக் கொடுத்தது. மானியத் தொகை 1966-இலிருந்து 37.5%ஆக உயர்த்தப்பட்டு, இப்பொழுது மைய அரசிடமிருந்து இத்திட்டப் பணிகளுக்காக மாநில அரசுகளுக்கு மொத்தம் 87.5% நிதியுதவி கிடைக்கிறது. மீதிச் செலவை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ளுகின்றன. இவ்வாறு மாநில அரசுகள் மைய அரசிடமிருந்து குடிசைப் பகுதி அகற்றுதல்/மேம்படுத்துதல் திட்டப் பணிகளுக்காக 34.92 கோடி உரூபாய் நிதியுதவி பெற்றன. இந்த நிதியுதவியைக் கொண்டு அவை குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்காக 67,657 குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தன.

இத்திட்டம் 1969-ஏப்ரல் முதல் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. குடிசைப் பகுதிகளை அகற்றுவதற்கும், திருத்தி மேம்படுத்துவதற்கும் ஆன திட்டப் பணிகளை இப்பொழுது மாநில அரசுகளே இயற்றுகின்றன. இந்தத் திட்டப் பணிகளுக்காக மைய அரசு கடனாகவும், மானியமாகவும் ஒரு கணிசமான தொகையைக் கொடுத்து உதவுகிறது. இந்த நிதியுதவி பொது வீட்டு வசதிக்காக ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மாநிலங்களுக்குத் தரப்படுகிறது. இந்த நிதியுதவியைக் கொண்டு மாநில அரசுகள் தம் விருப்பத்திற்கேற்பத் திட்டப் பணிகளை இயற்றி, குடிசைப் பகுதிகளை அகற்றி, அங்கு வாழ்வோருக்கு நல்ல, சிமெண்டுக் கட்டடங்களைக் கட்டி அவற்றில் வீட்டு வசதி செய்து கொடுக்கின்றன. இந்த வகையில் 1969 ஏப்ரல் முதல் 1972 டிசம்பர் வரை மாநில அரசுகள் 940.60 இலட்சம் உரூபாய் வரை செலவு செய்து 38,609 குடியிருப்புகள் குடிசைப் பகுதி வாழ்வோருக்காகக்கட்டிக் கொடுத்திருக்கின்றன. அகற்றப்படாத குடிசைப் பகுதிகளை ஓரளவு திருத்தி மேம்படுத்தியிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் உதவியைக் கொண்டு சில மாநில அரசுகள் குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் மேம்பாட்டுக்காகச் சில முனைப்பான திட்டங்களை இயற்றியுள்ளன. மேற்கு வங்காள மாநிலம் 1970 -இல் 'பசுதி மேம்பாட்டுத் திட்டம்' என்றொரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து, கல்கத்தா நகரிலுள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் பணியைச் செய்து வருகிறது.

தமிழ் நாடு அரசு 1971-இல் குடிசை மாற்று வாரியம் (Slum Clearance Board) என்ற ஒரு தனி அமைப்பை நிறுவி அதன் மூலம் குடிசைப் பகுதிகளை

அகற்றி, அங்குவாழ்வோருக்கு நல்ல, சிமிண்டுக் கட்டடங்களில் வீட்டு வசதி செய்து தரும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. சென்னையில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டம் இப்பொழுது மதுரை, சேலம், கோயமுத்தூர், ஈரோடு, திருச்சி, தேனி, போடி, ஆண்டிப்பட்டி முதலிய 42 ஊர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின்படி, பொதுவாக ஒரு குடிசைப் பகுதிக்கு அருகில் மாடியுள்ள கட்டடக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, பிறகு குடிசைப் பகுதி முழுவதும் காலி செய்யப்பட்டு, அங்கு வசிப்பவர்கள் அக்குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர். சில இடங்களில் ஒரு குடிசைப் பகுதியின் ஒரு பாதி முதலில் காலி செய்யப்பட்டு, அங்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு, அந்தப் பாதியில் வாழ்ந்த மக்கள் அவற்றில் குடியமர்த்தப்படுகின்றனர். பிறகு மறுபாதி காலி செய்யப்பட்டுக் கட்டடங்கள் கட்டப்பட்டு, மிச்சமிருக்கின்ற மக்கள் அவற்றில் குடியமர்த்தப்படுகின்றனர்.

ஒரு குடிசைப் பகுதி காலி செய்யப்படுவதற்கு முன்னர், அங்குள்ள குடிசைகள் கணக்கிடப்பட்டு, அக்குடிசைகளில் வாழ்கிறவர்களின் நிழற்படம் எடுக்கப்பட்டு, அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. அதற்குப் பிறகே குடிசை மாற்றுப் பணி நடைபெற்று, அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட மக்கள் குடியிருப்புக் கட்டடங்களில் குடியமர்த்தப்படுகின்றனர். அவர்களிடமிருந்து ஒரு குறைந்த கட்டணம் (பத்து உரூபாயிலிருந்து பதினைந்து உரூபாய் வரை) மாத வாடகையாகப் பெறப்படுகிறது.

குடிசைப் பகுதி அகற்றுதல்/மேம்படுத்துதல் திட்டம் ஒரு சிறந்த திட்டமாக இருப்பினும், அதை வெற்றிகரமாகச் செயற்படுத்துவது ஒரு பெரும் சிக்கலாகவே இருக்கிறது. இத்திட்டத்தின்படி குடிசைப் பகுதிகள் அகற்றப்பட்டுப் புதிய குடியிருப்புகள் வந்தாலும், குடிசைப் பகுதிகளின் வளர்ச்சி இதனால் நின்றுவிடவில்லை. பெருகி வருகிற மக்கள் தொகைக்கு ஏற்ப வீட்டு வசதி அமையாமற் போவதால், புதிது புதிதாக மேற்கொண்டு குடிசைப் பகுதிகள் எழுகின்றன. காலியாகிற குடிசைப் பகுதிகளிலேயே மறுபடியும் குடிசைப் பகுதிகள் ஏற்படுகின்றன. இதற்கு மேலாகக் குடிசைப் பகுதி வாழ் மக்கள் நீண்ட நாள் பழக்கத்தின் காரணமாகத் தம் குடிசைப் பகுதிகளுடன் உணர்வு பூர்வமாக அனுசரித்து ஒன்றி விடுவதாலும், புதிய குடியிருப்புகள் அவர்கள் பணி புரியும் இடங்களிலிருந்து தள்ளியிருப்பதாலும், அக்குடியிருப்புகளுக்கு வாடகைவசூலிக்கப்படுவதாலும், இன்னபிற காரணங்களாலும் தம் குடிசைப் பகுதிகளை விட்டுப் புதியகுடியிருப்புப் பகுதிகளுக்குக் குடியேற மறுக்கிறார்கள். இதனால் குடிசைப் பகுதிகள் காலியாகாமல் அங்கேயே நிலைத்து நிற்கின்றன.

குடிசைப் பகுதிகளை அகற்றுவது இயலாத காரியம் என்பதை இந்திய அரசு உணர்ந்து 1972-இல் நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலை மேம்பாட்டுத் திட்டம் (Scheme of Environmental Improvement of Urban Slums) என்ற திட்டத்தைக் கொண்டு வந்தது. இந்தத் திட்டத்தின்படி குடிசைப் பகுதிகள் அகற்றப்படாமல் அவை இருக்கின்ற இடத்திலேயே வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, அவற்றின் நிலைமைகள் சீர்திருத்தப்பட்டு, அவற்றின் சூழ்நிலை மேம்படுத்தப்படுகிறது. ஒரு குடிசைப் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு 150 பேர்களுக்கு ஒரு தண்ணீர்க் குழாயும், 20-50 பேர்களுக்கு ஒரு பொதுக் குளியலறையும், 20-50 பேர்களுக்கு ஒரு கழிவறையும், 30 மீட்டர் இடைவெளிக்கு ஒரு தெரு விளக்கும் அமைத்துத் தரப்படுகின்றன. கழிவு நீர் வெளியேறச் சாக்கடைகள் கட்டப்படுகின்றன. மழை நீர் தேங்காமலிருக்க ஓடுகால்கள் அமைக்கப்படுகின்றன. சிறிய தெருக்கள் அகலப்படுத்தப்பட்டுச் சாலைகளும் போடப்படுகின்றன. தொடக்கத்தில் ஒவ்வொரு குடிசைப் பகுதி ஆளுக்கும் 150 ரூபாய் செலவு ஆகும் வண்ணம் மேற்படி வசதிகள் குடிசைப் பகுதிகளில் செய்து தரப்பட்டன. இத்தொகை 1984-இல் 250 உரூபாயாக மாற்றப்பட்டு, பிறகு 1985-இல் 300 உரூபாயாக உயர்த்தப்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-85) குறைந்தது 10 மிலியன் குடிசைப் பகுதி வாழ் மக்களுக்காவது நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ் நிலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வசதிகள் செய்து கொடுத்துக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலையை மேம்படுத்துவது என்ற அளவில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 151. 45 கோடி உரூபாயும் ஒதுக்கப்பட்டது. ஆயினும் இத்திட்டத்திற்காகப் போதுமான நிருவாக ஏற்பாடுகள் அமைக்கப்படாமல் போனதாலும், இத்திட்டத்திற்கு ஆண்டு நிதிநிலை அறிக்கைகளில் குறைவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாலும், கட்டுமானப் பொருள்களின் விலையேற்றத்தாலும், இன்னபிற காரணங்களாலும் இத்திட்டம் குறியிட்ட 10 மிலியன் பேர்களுக்குப் பலன் அளிக்க இயலாமற் போனது. சுமார் 7 மிலியன் பேர்களுக்கே இத்திட்டத்தால் பலன் அளிக்க முடிந்தது.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1985-90) நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலை

மேம்பாட்டுத் திட்டத்தை முதலில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் நகரங்களுக்கு அமுல் படுத்துவது என்றும், அதற்குப் பிறகு மற்ற நகரங்களுக்கு அதை விரிவுபடுத்துவது என்றும் தேசியத் திட்ட ஆணையம் முடிவு எடுத்திருக்கிறது. தேர்ந்தெடுக்கப்படுகிற நகரக் குடிசைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த திட்டங்களின் மூலம் பலமுனை மேம்பாட்டைக் கொண்டு வரவும் தீர்மானித்திருக்கிறது. இத்தீர்மானத்தின்படி ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சூழ்நிலை மேம்பாட்டுத் திட்டத்தோடு, குழந்தைகளின் கல்வி வளர்ச்சி, முறை சாராக்கல்வி, ஊட்டச் சத்து, சுகாதாரம், வேலை வாய்ப்பு போன்றவற்றையும் மேம்படுத்த முயற்சி செய்து வருகிறது.

நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முழுக்க முழுக்க மைய அரசானது மாநிலங்களுக்கு நிதியுதவி அளிப்பதோடு, அதைக் கொண்டு மாநிலங்கள் எவ்வாறு நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலை மேம்பாட்டுக்கு நடவடிக்கைகள் எடுக்கின்றன என்பதையும் கண்காணிக்கிறது. இத்திட்டத்தை நல்ல முறையில் செயற்படுத்துகின்ற மாநில அரசுகளுக்குக் கூடுதலாக ஊக்கத் தொகையும் கொடுத்து உற்சாகப் படுத்துகிறது.

இத்திட்டங்கள் அல்லாமல் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Programme), சிறிய, மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சித் திட்டம் (Small and Medium Towns Development Programme), குறைந்த செலவு சுகாதாரத் திட்டம்(Low Cost Sanitation Scheme)ஆகிய மூன்று திட்டங்களின் மூலமும் நகரக் குடிசைப் பகுதிகளில் குடிநீர், கழிவறை, குளியலறை வசதிகள், சாலைகள், தெரு விளக்கு, உடல்நலம் முதலிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு மக்களின் வாழ்வு மேம்படுத்தப்படுகிறது. இவற்றில் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தில் மனைநிலங்கள், மற்றும் சேவைகள் திட்டம் (Sites and Services Scheme) என்றொரு திட்டம் இடம் பெற்றிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் திறந்த வெளி மனை நிலங்கள் சீர்படுத்தப்பட்டு, அங்குக் குறைந்த வருவாய் உடைய மக்கள் சுகாதாரமான முறையில் குடிசைகள் அமைத்துக் கொள்ள ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கப் படுகின்றன.

மேற்கண்ட மூன்று திட்டங்களும் இப்பொழுது நகர அடிப்படைச் சேவைகள் திட்டம் (Urban Basic Services Programme) என்று ஒரே திட்டமாக ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. இப்புதிய திட்டத்தின்படி முதலில் குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்களைக் கொண்டு குடிசைப் பகுதி மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்தக் குழுவினரைக் கலந்தாலோசித்து, குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுக்குத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இத்திட்டங்களுக்காகும் செலவை மைய அரசும், மாநில அரசும் உள்ளாட்சி நிறுவனமும் 2:1:1 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளுகின்றன. மாநில அரசின் மேற்பார்வையின் கீழ் உள்ளாட்சி நிறுவனம் இத்திட்டத்தை நிறைவேற்றும். ஐக்கிய நாடுகளின் அனைத்துலகக் குழந்தைகள் நிதியம்(UNICEF)என்ற நிறுவனம் இத்திட்டத்திற் கென்று 9.2 மிலியன் தாலர் (அதாவது 124.2 மிலியன் ரூபாய்) நிதியுதவி செய்ய உறுதியளித்திருக்கிறது. சி.என்.ந.

**துணை நூல்:**

Saxena, R. C., Labour Problems and Social Welfare, K. Nath & Co., Meerut, 1986.

**குடி மதிப்பு**, குறிப்பிடப்பட்ட ஒரு காலத்திற்குள் வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கை, குடும்ப வாழ்க்கை நிலை (Marital Status), வயது, பாலினம் போன்ற புள்ளி விவரங்களை முழுமையாகக் (Universal) கணக்கீடு (Enumerate) செய்து தொகுக்கப்படும் முறையினைக் குறிக்கும். இயைபிலா ஆய்வு (Random Sampling), மாதிரி ஆய்வு (Sample Survey) போன்ற முறைகளை விலக்கி ஆய்வுக்குட்படும் பகுதியின் எல்லா மக்களையும் நேர் காணல் (Interview) முறையில் கண்டும் கேட்டும் சேகரிக்கப்படும் தன்மை குடிமதிப்பின் (Population Census) சிறப்புக் கூறாகும். 'சென்சசு' என்னும் ஆங்கிலச் சொல் இலத்தீன்மொழியில் (Latin) மதிப்பீடு எனப் பொருள்படும் 'சென்சசு' (Censesu) என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும்.

குடிமதிப்பு, நாட்டு மக்களின் முழுமையான புள்ளிவிவரத் தொகுப்பு ஆகையால் அரசுக்கும் மக்களுக்கும் பலவகையில் நன்மை பயக்கிறது. குடிமதிப்பிலிருந்து பெறப்படும் மக்கள் தொகையியல் (Demographic), பொருளியல், சமூகவியல் குறித்த விவரங்கள் அவ்வத் துறைகளின் சீரமைப்பிற்கும், கொள்கைக் கோட்பாடுகளை வரையறுப்பதற்கும் உதவுகின்றன. விரிவான குடிமதிப்பில் அடங்கும் மக்கள் தொகைக் கணக்கீடு, குடியிருப்பு வசதிகள், வேளாண்மை, தொழிற்றுறை, வாணிகம், அரசுத் துறை ஆகியன பற்றிய புள்ளிவிவரத் தொகுப்புகள் அரசின் திறமைமிக்க மேலாண்மைக்கும், திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்திற்கும்,பொதுத் துறையும் தனியார் துறையும் மேற்கொள்ளும் பற்பல

ஆராய்ச்சிகளுக்கும், முன்கணிப்புத் (ForeCasting) திட்டங்களுக்கும் தேவையான அடிப்படைப் புள்ளி விவர மூல வளமாக விளங்குகின்றன. சமுதாயம், தனி மனிதன் ஆகியோரின் நடைமுறைக் காலச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் குடிமதிப்புப் புள்ளிவிவரங்கள் உதவுகின்றன.

நாட்டின் குடிமதிப்பைக் கணக்கீடு (National Census) செய்யும்போது நிகழும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகச் சில நாடுகள் எடுத்துக்காட்டு ஆய்வுமுறையைப் (Sample Survey) பின்பற்றுகின்றன. பொதுவாக, ஒரு நாட்டின் குடிமதிப்பைக் கணக்கீடு செய்வதற்கான அதிகாரம் சட்டமுறையில் (Legal Authority) வரையறுக்கப்பட்டு, அதற்கென அமைக்கப்படும் தனிப் புலத்திடமோ கழகத்திடமோ பொறுப்பு ஒப்படைக்கப்படும். அப்பொறுப்பை நிறைவேற்றத் தேவையான நிதி உதவியும் வழங்கப்படும். புள்ளி விவரங்களை ஆராய்ந்து சேகரிப்பவர்கள் (Investigators) குடிமதிப்பில் சேகரிக்க வேண்டிய விவரங்கள் அடங்கிய வினாப் பட்டியலைப் (Questionaire) பயன்படுத்தி, இல்லந்தோறும் சென்றுவிவரங்களைச் சேகரிப்பார்கள்; வேளாண்மை, தொழில், வாணிகம் போன்ற பணியிலிருப்பவர்களை அவர்களின் பணியிடங்களில் அணுகிப் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பார்கள்.

குடிமதிப்புக் கணிப்பு முறை ஓரிரவுக் கணிப்பு முறை, கணிப்புக் கால முறை என இருவகைப்படும். ஓரிரவுக் கணிப்பு முறையில் குடிமதிப்புக் கணிப்புக்கென்று திட்டமிட்டுக் குறிக்கப்பட்ட நாளன்று யார் எந்த இடத்தில் வாழ்கின்றனரோ, அவரை அந்த இடத்து ஆளாகக் கணக்கிடுவார்கள். இம்முறையினால் புள்ளிவிவரச் சேகரிப்புப்பணி எளிதாக நடைபெறுகிறது. யாரை எண்ணிக்கையில் சேர்ப்பது, விட்டுவிடுவது போன்ற குழப்பத்திற்கு இடம் இல்லை. பன்னாட்டுக் குடிமதிப்புப் புள்ளி விவரங்களை மூல வளமாகக் கொண்டு ஒப்பீட்டு ஆய்வுகளை (Comparative Analysis) நடத்த இம்முறை இக்காலத்தில் பேரளவில் பயன்படுகிறது. ஊரகங்கள், நகரங்கள் ஆகியவற்றின் காவல்துறைப் பணி, மருத்துவ வசதிகள், குடிநீர்ப் பெருக்கம், போக்குவரத்து முன்னேற்றம் போன்றவற்றின் தேவைகளைக் கணித்துத் திட்டங்களை வகுக்கவும் செயற்படுத்தவும் இக்கால நல அரசுகளுக்கு (Welfare Governments) ஓரிரவுக் கணிப்பு முறையில் சேகரிக்கப்படும் குடிமதிப்புப் புள்ளிவிவரங்கள் பயன்படுகின்றன.

ஓரிரவுக் கணிப்பு முறை நடைபெறும் நாளில் பயணம் மேற்கொள்பவரின் எண்ணிக்கை குடிமதிப்புக் கணிப்பில் சேர்க்கப்படாமல் விடுபடுகிறது. மேலும் அந்நாளில் சுற்றுலாக் காரணமாகக் குடிமதிப்புக் கணிப்பு நடக்கும் இடத்தில் தங்கும் அயல்நாட்டாரின் எண்ணிக்கையும் குடிமதிப்புப் புள்ளிவிவரத்தில் சேர்க்கப்படும். ஓரிரவுக் கணிப்புமுறையில் குறுகிய காலத்தில் முழுமையான மக்கள்தொகை எண்ணப்படுவதால் அதற்காகும் செலவும் வேலையாள்களின் எண்ணிக்கையும் மிகுதியாகும்.

கணிப்புக் கால முறையில், குறிப்பிட்ட கால அளவிற்குள் ஒரு பகுதியில் வாழும் எல்லா மக்களின் விவரங்களும் சேகரிக்கப்படும். இம்முறையினால், நாட்டில் நிலையாக வாழும் மக்களின் புள்ளிவிவரங்கள் பெறப்படுகின்றன. அப் புள்ளிவிவரங்கள் வரி விதிப்பு, கொடைகள் (Grants), சமூகப் பணிகள், மேலாண்மை போன்ற சட்டமுறை நடவடிக்கைகள், சமூக நிருவாகப் பணிகள் ஆகியவற்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்தப் பயன்படுகின்றன. எனினும் கணிப்புக் கால முறை சிக்கலானது எனவும், புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் ஆய்வாளர்களைக் குழப்பத்திற்குள்ளாக்கும் எனவும் கருதப்படுகிறது. இம்முறையில், கணக்கெடுப்புக் காலத்தில் அப்பகுதியை விட்டு நீண்டகாலத்திற்கு அயன்மையாகச் சென்றவர்கள் குடிமதிப்புக் கணக்கிலடங்காமல் விடுபடும் நிலை நிகழலாம். நாடுகள் பொதுவாக முழுமையான மக்கள்தொகையைக் கணிக்க முயல்கின்றன. எனினும், அவை பின்பற்றும் முறைகள் நாட்டுக்கு நாடு சற்று வேறுபடுகின்றன.

புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் ஆய்வாளர்களுக்குத் தனிச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. குடிமதிப்புக் கணக்கிட வரையறுக்கப்படும் காலம் 'குடி மதிப்புக் காலம்' (Census Moment) எனப்படும். வரையறுக்கப்பட்ட இக்காலக் கெடுவுக்குள் முழுமையான 'புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்காக, அதற்கு முன்னர் மாதிரிக் கணக்கீடு (Test of Sampling) நடத்தப்பட்டு நிகழக்கூடிய தவறுகள், இடர்ப்பாடுகள் ஆகியனவற்றைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசுகள் நடத்தும் குடிமதிப்பிற்கு (Official Census) மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டியது கட்டாயமாகும். அரசுகள், புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் ஆய்வாளர்களுக்கு ஊக்க ஊதியமும் பாதுகாப்பும் வழங்குகின்றன. சில சூழ்நிலைகளில் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், சமூகப் பணியாளர்கள் போன்றோர் ஊதியமின்றி இப்பணியில் ஈடுபட அமர்த்தப்படுகின்றனர்.

குடிமதிப்பு விவரங்கள் அடங்கிய வினா நிரல்கள் பாதுகாப்பாகச் சேகரிக்கப்பட்டுப் புள்ளிவிவரங்கள் நுட்பமான திட்டமிடப்பட்ட முறையில் வல்லுநர்களால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. தனியாரின் விவரங்கள் குறித்த மறைவடக்கம் (Confidential) பாதுகாக்கப்படுகிறது. தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் பொதுவான தலைப்புகளின் கீழ் மட்டுமே வெளியிடப்படும். புள்ளிவிவரங்களைத் தொகுப்பதற்கு இக்காலத்தில் கணிப்பொறிகள் (Computer) பரவலாகப் பயன்படுகின்றன.

**வரலாறு**: தொன்மைக் காலத்திலேயே குடிமதிப்பைக் கணக்கிடும் பழக்கம் வழக்கிலிருந்ததாக அறியப்படுகிறது. பாபிலோனியர்கள் (Babylonians) 5,000 ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் நாட்டு மக்களைக் கணக்கிட்டு எழுதிய களிமண் பட்டிகைகள் (Clay Tablets) தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பிரமிடுக் (Pyramid) கால எகிப்து நாட்டில் கி.மு. 2,900-ஆம் ஆண்டுகளில் சிறந்த மேலாண்மைத் திறமையுடனும் கணிதவியல் நுட்பத்துடனும் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், எகிப்தியர்களும் (Egyptians) குடிமதிப்பைக் கணக்கீடு செய்யும் அறிவு பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்று பகர்கின்றன. சீனர்கள் (Chinese) 4,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டுக் குறிப்பேடுகளைப் (Calenders) பயன்படுத்தியுள்ளமையிலிருந்து குடிமக்களை எண்ணி மதிப்பிடும் திறனும் பெற்றிருந்தனர் என்பது அறியப்படுகிறது.

பாபிலோனியர், எகிப்தியர், சீனர் ஆகியோர் வரி விதிப்பிற்கான மதிப்பீட்டைக் கணக்கிடவோ, போர்க்காலத்தில் இராணுவத்தில் வீரர்களாகச் சண்டையிடக்கூடிய வலிமைமிக்க ஆண்கள் எத்தனை பேர் உள்ளனர் என அறிவதற்காகவோ குடிமதிப்பைக் கணக்கீடு செய்தனர். அவற்றுள் போர்க்காலத் தேவையும் இராணுவ பலமும் குறித்த குறிக்கோள் எப்போதும் தலையானதாக விளங்கியது. குடிமதிப்பின் மூலம் இராணுவ பலமும் திறமையும் ஆராய்ந்தறியப்பட்டன. இக்காலத்திலும் அக் குறிக்கோளின் சிறப்பும் இன்றியமையாமையும் குறைந்து விடவில்லை எனலாம். உலக நாடுகள் அனைத்தும் குடிமதிப்பின் மூலம் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பலவகைப்பட்ட புள்ளிவிவரங்களைப் பெறுகின்றன. படை வலிமைகளின் ஒப்பீட்டு ஆய்வுக்கும் குடிமதிப்புப் புள்ளிவிவரங்கள் பயன்படுகின்றன.

இசுரவேலர் (Israelites), யூதர் (Judah) ஆகியோரின் இராணுவ வலிமையை அறியத் தாவீது அரசன் (King David) குடிமதிப்புக் கணக்கீடு செய்த முறை குறித்த குறிப்புகள் கிறித்தவத் திருமறையின் (Bible) இரண்டாம் சாமுவேல் (Samuel II), நாளாகமம் (Chronicles) ஆகிய நூல்களில் எழுதப்பட்டுள்ளன. தாவீது அரசன் தன் இராணுவத் தலைவனான யோவாபிடம் (Yoab) தாண் (Dan) முதல் பெயர்சேபா (Beersheba) வரையுள்ள இசுரவேலரின் குடியிருப்புகள் அனைத்தும் சுற்றித்திரிந்து மக்களைத் தொகையிடுமாறு ஆணையிட்டான். அவ்வாணையின்படி யோவாபு நாடு முழுவதும், ஒன்பது திங்களும் இருபது நாளும் சுற்றித்திரிந்து, இசுரவேலருள் எட்டு இலட்சம் வீரர்களும் யூதருள் ஐந்து இலட்சம் வீரர்களும் போருக்குகந்தவர்களாயுள்ளனர் என அறிவித்தான். அவ்வறிவிப்பைத் தொடர்ந்து நாட்டில் கொள்ளை நோய் நிகழ்ந்தது. அதனால் எழுபதினாயிரம் மக்கள் இறந்தனர். இத்தகைய பல நிகழ்ச்சிகளால் குடிமதிப்பைக் கணக்கிடுவது மக்களைப் படைக்கும் இறைவனுக்கு எதிரான செயல்; தீவினைக்கு வழிவகுக்கும் என யூதர்களும், அவர்கள் வழிவந்த மரபியல் கிறித்தவர்களும் நம்புகின்றனர். எல்லா நாடுகளிலும் அக்காலத்தில் மட்டுமல்லாமல் இக்காலத்திலும் குடிமதிப்பில் தங்கள் எண்ணிக்கை சேராமல் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் சிலர் ஈடுபடுவது ஆங்காங்கே காணப்படுகிறது. குறிப்பாக வரிவிதிப்பு, இராணுவம் ஆகியனவற்றை இலக்காகக் கொண்டு குடிமதிப்புக் கணக்கிடப்பட்டால் அவற்றிலிருந்து தப்பிக் கொள்வதற்காக மக்கள் பேரளவில் குடிமதிப்பிற்குட்படாமல் விலகிக் கொள்கின்றனர்.

தொன்மைக் காலத்திலிருந்து நுட்பமான குடிமதிப்புக் கணிப்பிற்கு இடையூறாகவுள்ள பிற காரணிகளுள் குறிப்பிடத்தக்கன நாடுகளிடையே அடிக்கடி நிகழும் போர்களும், ஆங்காங்கே நிகழும் கொள்ளை நோய், பஞ்சம் போன்றவையுமாகும். போர்களினால் நாடுகளின் எல்லைகளில் உண்டாகும் மாற்றங்கள், பேரளவு இடப்பெயர்வுகள் (Migration), உயிர் இழப்புகள் ஆகியவற்றால் நாட்டு மக்களின் மக்கள் தொகையில் பேரளவு மாற்றங்கள் ஏற்பட்டுக் குடிமதிப்புக் கணக்கீடுகள் பயனிழந்து விடுகின்றன. எதிர்பாராமல் நிகழும் கொள்ளைநோய், பஞ்சம், வறட்சி, நிலநடுக்கம் ஆகியவற்றால் சில சமுதாயங்கள் அழிவுறுவதால் குடிமதிப்புக் கணக்கீடுகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. இக் காரணங்களால் ஏற்கெனவே எடுக்கப்பட்ட குடிமதிப்புப் புள்ளிவிரங்களும் ஒப்பீட்டு ஆய்வுகளுக்கும், பிற இலக்குகளுக்கும் பயன்படுவதில்லை.

தொன்மைக் கால நாகரிகப் பிறப்பிற்கு உறைவிடமாகக் (Cradle of Ancient Civilization) கருதப்படும் கிரேக்க நாட்டு மக்கள்தொகை குறித்த விவரங்கள் எதுவும் அறிய மூலம் (Source of Knowledge)

இல்லாமலிருப்பதற்கு, அந்நாட்டு அறிஞர்கள் குடி மதிப்புக் கணக்கீட்டின் தேவையை உணராதிருந்தது காரணம் என வல்லுநர்களால் சுட்டிக் காட்டப்படு கிறது. அறிவியலிலும் பல கலைகளிலும் வளர்ச்சி பெற்றிருந்த கிரேக்க அறிஞர்கள் குடி மதிப்புக் கணக் கிடும் திறமையற்றவராயிருந்திலர் எனினும், அதன் பயனை அறியாதிருந்தனர். அத்தீனிய (Athens) நகர நாட்டைப் (City-State) பற்றிய குறிப்புகளில் மட்டும் அந்நகர மக்கள் தொகை பற்றிய தனித்தனி விவரங் கள் (Fragmented Data) ஆங்காங்கே காணப்படுகின் றன. அவை முழுமையும் தொடர்ச்சியற்றவை ஆன தால் ஆய்வுகளுக்குப் பயன்படுவதில்லை.

**உரோமக் குடிமதிப்பு**: இது முறைப்படுத்தப்பட்ட குடிமதிப்புக் கணக்கீடுகளுக்கு முதன்மையானதும் வர லாற்றுச் சிறப்பு மிக்கதுமாகும். உரோம நாட்டு மக்கள்தொகைக் கணிப்பிற்காக உரோம அரசு கி.மு. 435–இல் உரோமக் குடிமதிப்பு ஆணையகத்தை (Roman Censorate) நிறுவி, அது ஐந்து ஆண்டுகளுக் கொரு முறை தொடர்ந்து குடிமதிப்பைக் கணக்கிட வேண்டுமென்ற சட்டமுறையான ஆணையைப் பிறப் பித்தது. அதற்கு முன்னர் 100 ஆண்டுகளாக உரோம நாட்டில் குடிமதிப்பு நடைபெற்றதாகவும், அவற்றின் செயற்பாட்டில் காணப்பட்ட குறைகள், சிக்கல்கள், இடையூறுகள் ஆகியவற்றைத் தவிர்க்கும் நோக்கத் துடன் குடிமதிப்பை நெறிப்படுத்தும் பொறுப்பு வாய்ந்த ஆணையகம் நிறுவப்பட்டதாகவும் கருதப் படுகிறது.

உரோமக் குடிமதிப்பு ஆணையகப் பணியாளர் கள், குடிமக்களிடமிருந்து அவர்களின் பெயர், வயது, வகுப்புப் பிரிவு (Class Status), குடும்பநிலை (Family Standing), குடும்பத்தில் உறவுமுறை ஆகிய விவரங் களைப் பெறும் அதிகாரம் பெற்றனர். விதவைகள், பாதுகாவலரின் அனுமதியுடன் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டனர். அடிமைகளும், விடுதலை பெற்ற அடிமைகளும் (Freed Slaves) அவர்களின் மூல உரி மையாளர்களின் சொத்தாக எண்ணப்பட்டனர். நாட்டு மக்களின் நிலமும், தனிச் சொத்துகளும் (Personal Property) சீர்தூக்கப்பட்டும் வகைப்படுத் தப்பட்டும் (Evaluated & Classified) குடிமதிப்புக் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டன. உரோமக் குடிமதிப்பு ஆணையகத்தால் 67 குடிமதிப்புக் கணக்கீடுகள் ஐந்து ஆண்டுக்கால இடைவெளியுடன் தொடர்ந்து எடுக் கப்பட்டது வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இக் குடிமதிப்புகளின் மூலப் படிவங்கள் யாவும் அழிந்து விட்டமை பேரிழப்பாகக் கருதப்படுகிறது. அவற் றைப் பற்றிய குறிப்புகள் (References) பல வரலாற் றாசிரியர்களின் நூல்களிலும் குறிப்பாகத் திருமறை யின் (Bible) புதிய ஏற்பாட்டிலும் (New Testament) பல இடங்களில் எழுதப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து தான் உரோமக் குடிமதிப்பைப் பற்றிய விவரங்கள் அறியப்பட்டுள்ளன.

**இடைக்காலம்**: இக்காலத்தில் குடிமதிப்புக் கணிப் புச் சிறப்பிடம் பெறவில்லை. ஆங்காங்கே அவ்வப் போது அரசுகள் வரிவிதிப்பு முறையைச் சீரமைக்கும் நோக்கத்துடன் மக்கள்தொகையைக் கணக்கீடு செய் தனர். தீர்ப்பு நாளின் நூல் (Dooms Day Book) எனப்பட்ட நூலில், இடைக்காலத்தில் (Middle Ages) இங்கிலாந்தில் நடத்தப்பட்ட புகழ்மிக்க குடி மதிப்புப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சிறந்த வரி விதிப்பு முறையைச் செயற்படுத்துவதற்குத் தேவை யான அடிப்படை விவரங்களைச் சேகரிப்பதற்காக இங்கிலாந்து அரசன் கி.பி. 1085–இல் ‘இங்கிலாந்தின் விளக்கம்’ (Description of England) என்ற ஆணை யைப் பிறப்பித்துக் குடிமதிப்பைக் கணக்கீடு செய்யப் பணித்தான். அதற்கான பணிகள் கி.பி. 1085–ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 25-ஆம் நாள் தொடங் கியது. குடிமதிப்புப்புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து அறிக்கையாக கி.பி. 1087 செப்டம்பர்த் திங்களில் அரசனிடம் கொடுக்கப்பட்டது.

இக்குடிமதிப்புப் பணியில் அரசனால் அமர்த்தப் பட்ட பணியாளர்கள் நாடு முழுவதும் சுற்றி, நில உரிமையாளர்கள், அவர்கள் நிலங்கள், குடியிருப்பு கள், தனி இல்லங்கள், குத்தகையாளர்கள், பிற பற் பல பணியாளர்கள், அடிமைகள் ஆகியோரைப் பற் றிய முழுப்புள்ளி விவரங்களையும் சேகரித்தனர். அரசன், செல்வர்கள் (Lords), மத குருக்கள் ஆகி யோரின் விவரங்களும் சேகரிக்கப்பட்டன. ஊரகங்கள் சிறு நகரங்கள், மாநகரங்கள் ஆகியவற்றின் புள்ளி விவரங்கள் தனித்தனியாகப் பட்டியலிடப்பட்டன. பேரிடப்படாத ஊரகங்களுக்கும் நகரங்களுக்கும் தனிப்பெயர்கள் வழங்கப்பட்டு வகைப் படுத்தப்பட் டன. தீர்ப்பு நாள் நூலில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரத் தொகுப்பு அக்கால வசதி, நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் போற்றத் தக்க தகுதி யும் நுட்பமுமுடையதாக விளங்குகிறது. அவற்றை மேலும் நுட்பமாக ஆராய்ந்த 19-ஆம் நூற்றாண்டு மக்கள் தொகையில் வல்லுநர் ஆய்வு (Demographer) இங்கிலாந்தின் அக்கால மக்கள் தொகை இரண்டு மிலியன் எனக் குறிப்பிட்டுள்ளது.

இடைக்காலத்தில் சமயச் சார்புடன் திருச்சபை கள் (Churches) பல குடிமதிப்புக் கணக்கீடுகளை நடத்தியுள்ளன. அவற்றுள் பல முழுமையான குடி

மதிப்புக் கணக்கீடுகள் எனவும் அவை கடும் முயற்சி மிக்க திட்டங்கள் எனவும் கருதப்படுகின்றன.

வாணிகம், துறைமுகம், மாநகரங்கள், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் பெருக்கம், வளர்ச்சி ஆகியன காரணமாக மறுமலர்ச்சிக்குப் (Renaissance) பின்னர் குடிமதிப்பு பற்றிய தேவையையும் இன்றியமையாமையையும் நாடுகள் உணர்ந்தன. இருபதாம் நூற்றாண்டு ஆய்வாளர், கொள்கைகள், கோட்பாடுகள், திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கியவர்கள் ஆகியோர் குடிமதிப்புப் புள்ளிவிவரங்களை மூலவளமாகப் பயன்படுத்துவதால், முழுமையாகத் தவறுகளில்லாத திறமைமிக்க, நுண்ணிய நுட்பமுறையில் சேகரித்துத் தொகுக்கப்பட்ட புள்ளிவிவரங்களை நாடுகள் சேகரித்து வெளியிடுவதில் மிக்க கவனம் செலுத்துகின்றன. பெரும்பாலான உலக நாடுகளின் அரசுகள் குடிமதிப்பின் பயனை உணர்ந்து தொடர்ச்சியாக முழுமையான குடிமதிப்புக் கணக்கீட்டை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றன.

**அமெரிக்க ஐக்கிய நாட்டில்**: ஒரு நாட்டின் பிறப்பிலிருந்தே (From the Birth) அதன் குடிமதிப்புக் கணக்கிடப்பட்ட நாடு அமெரிக்க ஐக்கிய நாடு எனக் கூறப்படுகிறது. அந்நாட்டு அரசியல் அமைப்பின் (Constitution) முதற் பகுதி, இரண்டாம் பிரிவு (Article 1, Section 2) குடிமதிப்புக் கணக்கீடு செய்வதற்கான அதிகாரத்தைச் சட்டமுறையில் 'வரையறுக்கிறது. அதன்படி அந்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாராளுமன்றக் கூட்டம் (Congress) நடைபெறத் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் முதல் குடிமதிப்புக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். பின்னர் அது தொடர்ந்து பத்து ஆண்டுக்கொரு (Decade) முறை நடைபெற வேண்டும்.

முதலாம் அமெரிக்க ஐக்கியக் குடிமதிப்பு கி.பி. 1790-இல் நடைபெற்றது. அப்போது பயன்படுத்திய வினாநிரல் பட்டியல், குடும்பத் தலைவரின் பெயர், 16 வயதிற்கு மேற்பட்ட விடுதலை பெற்ற ஆண்வெள்ளையர்களின் (Free White Males) எண்ணிக்கை, 16 வயதிற்குக் குறைந்த விடுதலை பெற்ற ஆண் வெள்ளையர்களின் எண்ணிக்கை, விடுதலை பெற்ற பெண் வெள்ளையர்களின் எண்ணிக்கை, விடுதலையுடைய அனைத்து மக்களின் எண்ணிக்கை, அடிமைகளின் எண்ணிக்கை ஆகியன குறித்த விவரங்களைக் கொண்டிருந்தது. ஓர் அடிமை 3.5 மனிதன் எனக் (3/5 of a Person) கொள்ளப்பட்டது. அப்போதைய கணக்கீட்டின்படி 4 மிலியன் அமெரிக்கர்கள் குடிமதிப்பினுள் அடங்கினர். அக்குடி மதிப்பிற்காகச் செலவிடப்பட்ட தொகை $ 45, 000.

பிற்கால அமெரிக்க ஐக்கியக் குடிமதிப்புகளில் அவ்வப்போதுள்ள தேவைகளுக்குகந்ததாக மாற்றங்கள் செய்யப்பட்டு அறிவியல் முறையில் முன்னேற்றமடைந்த நுட்பமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சேகரிக்கப்படும் விவரங்களும் பேரளவில் பெருகியுள்ளன. குடிமதிப்புக் கணக்கீட்டுக்கான நிலையான குடிமதிப்பு ஆணையகம் (Bureau of Census) 1903-இல் நிறுவப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்கள்தொகை 1970-ஆம் ஆண்டுக் குடிமதிப்பின்படி 200 மிலியனாகும். அக் குடிமதிப்பின் கணக்கீட்டிற்கான செலவு 200 மிலியன். அமெரிக்காவின் 1980-ஆம் ஆண்டைய குடிமதிப்பின்படி அந்நாட்டு மக்கள்தொகை 229. 85 மிலியன்.

**பிரிட்டனில்**: பிரிட்டனின் (Britain) நெறிமுறைக் குட்பட்ட முழுமையான குடிமதிப்பு கி.பி. 1793-இல் வெளியிடப்பட்டது. அதனை மூலவளமாகக் கொண்டு ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட பொருளியல் வல்லுநர் தாமசு ஆர் மால்தூசு (Thomas R. Malthus) ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர்த் தம் புகழ்மிக்ச மக்கள் தொகையியற் கோட்பாட்டை (Population Theory) வெளியிட்டார். மக்கள்தொகை வளர்ச்சி இயல்பாகப் பெருக்கமுறையிலும் (Geometrical), உணவு உற்பத்திப் பெருக்கம் கூட்டிடை (Arithmetic) முறையிலும் பெருகுவது மால்தூசுக் கோட்பாட்டின் அடிப்படைக் கருவுருவாகும் (Concept). பிரிட்டனில் பத்தாண்டுக்கொரு முறை நடத்தப்படும் குடிமதிப்பு கி.பி. 1801-இலிருந்து 1966 வரை நடத்தப்பட்டது. அதன் பின்னர் ஐந்தாண்டுக்கொரு முறை குடிமதிப்புக் கணக்கீடு செய்யப்படுகிறது.

**சோவியத்தில்**: உருசியாவில் (Russia) முதன்முதலாக கி.பி. 1897-இல் நடத்தப்பட்ட குடிமதிப்பைத் தொடர்ந்து பல பேரிழப்புகள், மனித உயிருக்கும் நாட்டுக்கும் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாவன: முதலாம் உலகப்போர், போல்சுவிக்குப் புரட்சி (Bolshevik Revolution), உள்நாட்டுப் போர், அயல்நாட்டுத் தலையீடு, உலகளவில் பரவிய சளிக்காய்ச்சல், கொள்ளை நோய் (Influenza Epidemic). உலகப் போர் முடிவுற்றவுடன் 1920-இல் உருசியாவில் குடிமதிப்புக் கணக்கீடு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது எனினும் அவற்றின் முடிவான புள்ளிவிவரங்கள் வெளியிடப்படவில்லை.

சோவியத்து நாடு என்ற முறையில் முதன்முதலாக 1926-இல் குடிமதிப்புக் கணக்கீடு செய்யப்பட்டு நாட்டின் மக்கள்தொகை 147 மிலியன் என அறிவிக்கப்பட்டது. பெண்கள் ஆண்களைவிட மிகையாக

100,88 என்ற எண்ணிக்கையிலிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மீண்டும் 1937-இல் குடிமதிப்பு நடத்தப்பட்டது. அதில் பல தவறுகள் இருந்தமையால் முடிவுகள் வெளியிடப்படவில்லை. எனினும், 1937-இன் குடிமதிப்புப்படி வெளியிடப்பட்ட மக்கள்தொகை 170.4 மிலியன். ஆண் பெண் விகிதம் 100:80 ஆகும்.

பிற நாடுகளில் நடத்தப்படும் புதிய குடிமதிப்புக் கணிப்பு முறை 1959-ஆம் ஆண்டு சோவியத்து நாட்டிலும் பின்பற்றப்பட்டது. அதன்படி வெளியிடப்பட்ட நாட்டின் மக்கள்தொகை 208.8 மிலியனாகும். பின்னர் முறையே 1970-இலும் 1979-இலும் நடத்தப்பட்ட குடிமதிப்பின்படி மக்கள்தொகை 241.7 மிலியனிலிருந்து 262 மிலியனாகப் பெருகியுள்ளது.

**இந்தியாவில்**: இந்தியாவின் முதல் குடிமதிப்புக் கணிப்பு கி.பி. 1871-72-ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து 10 ஆண்டுக்கொரு முறை குடிமதிப்புக் கணிப்பு நடைபெறுகிறது. ஒப்பீட்டு ஆய்வுக்குப் பயன்படும் வகையில் 1901-ஆம் ஆண்டுக் குடிமதிப்புக் கணிப்புத் தொடக்கத்திலிருந்து 1981-ஆம் ஆண்டு வரையான புள்ளிவிவரங்கள் தொகுக்கப்பட்டு வெளியாகியுள்ளன.

இந்தியாவின் குடிமதிப்பைக் கணக்கீடு செய்யும் பொறுப்பு மைய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் குடிமதிப்பு ஆணையகத்திடம் (Census Commission) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தியக் குடிமதிப்புச் சட்டம் 1948-இல் நிறைவேற்றப்பட்டது. அதன்படி குடிமதிப்பு ஆணையரும் பதிவாளரும் (Commissioner&Registrar) குடிமதிப்பு ஆணையகத்தின் முழுப் பொறுப்பையும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். நாட்டின் மாநில அரசுகள் குடிமதிப்புக் கணிப்புக்குத் தேவையான மனித மூல வளம் (Man Power Resources), பாதுகாப்புப்போன்றவற்றை அளித்துக் குடிமதிப்பு ஆணையகத்துக்கு ஒத்துழைப்பு நல்கச் சட்டக்கூறுகள் வழி வகுக்கின்றன. சட்டப்படி, குடிமதிப்பில் சேகரிக்கப்படும் புள்ளி விவரங்களைத் தனியாரும் அரசும் பொதுநலனுக்கும் ஆய்வுகளுக்கும் முழுமையாகப் பயன்படுத்தலாம். எனினும், சேகரிக்கப்பட்ட தனியாரின் விவரங்களை நீதிமன்றங்களில் சாட்சிக்காகப் பயன்படுத்தலாகாது. தனியார் விவரங்களின் தனித்தன்மை எக்காரணத்தைக் கொண்டும் வெளியிடப்படாது. அவை மறைவாகப் பாதுகாக்கப்படும். (Confidential) குடிமதிப்புப் பணி நாடு முழுவதிலும் முழுமையாக, வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் திட்டமிட்ட வகையில் நிறை

இந்திய மக்கள்தொகை

1901-இலிருந்து 1981 வரை

| வ. எண். | ஆண்டு | மக்கள் தொகை | பத்தாண்டு மாற்றம் | மாற்றம் விழுக்காட்டில் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1901 | 238,396,327 | | | 120,791,301 | 117,358,672 |
| 2. | 1911 | 252,093,390 | + 13,697,063 | + 5.75 | 128,385,368 | 123,708,022 |
| 3. | 1921 | 251,321,213 | —772,177 | — 0.31 | 128,546,225 | 122,774,988 |
| 4. | 1931 | 278,977,238 | + 27,656,025 | +11.00 | 142,929,689 | 135,788,921 |
| 5. | 1941 | 318,660,580 | + 39,683,342 | +14.22 | 163,685,302 | 154,690,267 |
| 6. | 1951 | 361,088,090 | + 42,420,485 | +13.31 | 185,528,462 | 175,559,628 |
| 7. | 1961 | 439,234,771 | + 77,682,873 | +21.51 | 226,293,201 | 212,941,570 |
| 8. | 1971 | 548,159,652 | +108,924,881 | +24.80 | 284,049,276 | 264,110,376 |
| 9. | 1981 | 685,184,692 | +137,025,040 | +25.00 | 354,397,884 | 330,786,808 |

மூலம்: 1981-ஆம் ஆண்டுக் குடிமதிப்பு, குடிமதிப்பு ஆணையகம், 1985.

வேற்றுவதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் பெறச் சட்டம், குடிமதிப்பு ஆணையகத்திற்கு மிகையான உயர் அதிகாரங்களை (Extraordinary Powers) வழங்கியுள்ளது.

குடிமதிப்பு ஆணையகம் மைய அரசில் உள் நாட்டுத் துறை அமைச்சகத்தின் (Ministry of Home Affairs) கீழ் ஓர் அரசுத் துறையாக விளங்குகிறது. குடிமதிப்பிற்கான திட்டங்களை வரைதல், வினா நிரலை உருவாக்கல், புள்ளிவிவரங்களைத்தொகுத்தல், வெளியிடுதல் போன்ற தொடர் பணிகளைச் சிறப்பான முறையில் நிறைவேற்றக்குடிமதிப்புஆணையகத்தில் நிலையான பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். குடிமதிப்பு நடத்தப்படும் ஆண்டு, திங்கள், வார நாட்களில் மட்டும் தேவைப்படும் பல பணிகளுக்கு மைய, மாநில அரசுப் பணியாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். குடிமதிப்பு ஆணையகம் குடிமதிப்புக் கணிப்பில் ஈடுபடும் பலவகைப்பட்ட பணியாளர்களுக்கும், மாவட்டக் குடிமதிப்பு அலுவலர்களுக்கும் புள்ளிவிவரச் சேகரிப்புப் பணி, இடம், நடத்தை ஆகியன பற்றிய செறிந்த பயிற்சி (Intensive Training) அளிக்கிறது. முன்குறித்த ஆய்வுகளின்படி (Pilot Study) வினாநிரல்களை நிரப்பிச் சேகரித்த புள்ளிவிவரங்களைப் பகுத்தாராய்ந்து, சீரான (Uniform) மாற்றங்களை நடைமுறையில் செயற்படுத்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சியருக்குக் (Collector of District) கீழ் மாவட்டக் குடிமதிப்பு அலுவலர்கள் அமர்த்தப் படுவார்கள் அவர்களின் கண்காணிப்பின்கீழ் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், விருப்பத் தொண்டர்கள் (Volunteers) போன்றோர் இல்லந்தோறும் சென்று வினாநிரலைப் பயன்படுத்திப் புள்ளிவிவரங்களைச் சேகரிக்கப் பணிக்கப்படுவர். இப்பணியாளர்கள் பெரும்பாலும் அரசு ஊழியர் என்பதால் இப் பணியையும் தங்கள் பணியின் ஒரு கடமையாகக் கருதி நிறைவேற்றப் பணிக்கப்படுகின்றனர். இப்பணியில் ஈடுபடும் அரசு ஊழியரல்லாதோர் நாட்டுக்கு அளிக்கும் தொண்டாகக் கருதிப் பணியாற்றுகின்றனர். குடிமதிப்புப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பவர்களுக்கும் (Enumerators) கண்காணிப்பாளர்களுக்கும் 1951 வரை எவ்வகையான ஊதியமும் வழங்கப்படவில்லை. அதற்கு அடுத்த 1961-ஆம் ஆண்டைய குடிமதிப்பிலிருந்து புள்ளிவிவரங்களைச் சேகரிப்பவர்களுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் ஒரு சிறு தொகை மதிப்பூதியமாகக் (Honorarium) கொடுக்கப்படுகிறது.

இந்தியாவில் 1931-ஆம் ஆண்டுவரை ஓரிரவுக் கணிப்பு முறை பின்பற்றப்பட்டது. இக்கணிப்பு முறையினால் குடிமதிப்புக் கணிப்பிற்கு ஆகும் செலவும், பணியாளர்களின் எண்ணிக்கையும் மிகை எனவும் சிலர் இரு முறை எண்ணப்படுகின்றனர் எனவும் கருதப்பட்டன. மேலும் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களைச் சரிபார்க்கத் தேவையான முறைகள் உருவாக வில்லை. சமூகப் பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படவில்லை. கணிப்பு நாளை வரையறுப்பதிலும் சிக்கல்கள் காணப்பட்டன. காங்கிரசுக் கட்சி, குடிமதிப்பிற்கு ஒத்துழைப்பு நல்காததுடன் பொது மக்களும் அதன் இன்றியமையாமை, இலக்குகள் ஆகியவற்றை உணர்ந்து பொறுப்புடன் உண்மை விவரங்களைக் கொடுக்கவில்லை. பொதுவாக எல்லாக் குடிமதிப்புக் கணிப்பிற்கும் முன்னர் எடுத்துக்காட்டு ஆய்வுக் (Sample Survey) கணிப்புநடத்தி, அதன் பகுத்தாய்வின் மூலம் மாற்றங்களைப்புகுத்தி, நிகழக் கூடிய நடைமுறைச் சிக்கல்களைத்தவிர்க்கின்றனர்.

இந்தியாவின் எட்டாம் குடிமதிப்புக் கணிப்பு 1941-இல் இரண்டாம் உலகப்போரின் காலத்தில் நடைபெற்றது. அக்கணிப்பில் ஓரிரவுக் கணிப்பு முறை கைவிடப்பட்டு கணிப்புக் காலமுறை பின்பற்றப் பட்டது. பொது வினாப் பட்டியலுக்குப் (Schedule) பதில் தனி ஆள் விவர வினாத் தாளைப் (Slips) பயன்படுத்தினர். விவரங்களைச் சொற்களில் எழுதாமல் அதற்கென வகைப்படுத்தப்பட்ட குறியீடுகளில் எழுதினர். அதனால் புள்ளிவிவரத் தொகுப்பு எளிதாயிற்று. இக்கணிப்பில் முந்தைய கணிப்புகளை விடக் கூடுதலான மக்கள்தொகை விவரங்கள், ஆண் பெண் விகிதம், பிறப்பு-இறப்பு விகிதம், வயதுப் பிரிவு, கல்வியறிவு போன்றவை குறித்த விரிவான விளக்கங்கள் பெறப்பட்டன. போர் நடந்துகொண்டிருந்ததால் வேலைப்பகுப்பு பற்றிய விவரம் சேகரிக்கவில்லை. சேகரிக்கப்பட்ட விவரங்களும் முழுமையற்றனவாகவும், தரக் குறைவானவையாகவும் இருந்தன. கணக்கீடு முடிவுற்றவுடன் இரண்டு விழுக்காடு வினாநிரல்களை மறு ஆய்வு செய்தனர்.

நாடு விடுதலையடைந்த பின் 1951-இல் முதலாம் குடிமதிப்புக் கணிப்பு நடைபெற்றது. கணிப்பு அணுகுமுறையிலும், மிகுதியான புள்ளி விவரங்கள் சேகரிப்பதிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் புகுத்தப்பட்டன. குடிமக்களின் நாட்டுப் பதிவேடு (National Register of Citizen) ஊரகங்களுக்கும் நகரங்களுக்கும் உருவாக்கப்பட்டன. தனித்தாளில் சேரிக்கப் படும் விவரங்களை நாட்டுப் பதிவேட்டில் எழுதினர்.

சாதி, இனம் பற்றிய விவரங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் சேகரிக்கப்பட்டன. இடப்பெயர்வு (Migration), பொருளாதார நிலை, வேலைவாய்ப்புகள், வேலையின்மை போன்றவை குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டமை இக்கணிப்பின் சிறப்புத் தன்மையாகும். புள்ளி விவரங்களின் மறு ஆய்வின் மூலம், 11 விழுக்காடு மக்கள்தொகை குறைவாக மதிப்பிடப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து 1961-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியக் குடிமதிப்புக் கணிப்பிலும், கூடுதல் பொருளாதார, சமூகப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன.

இந்தியக் குடிமதிப்புக் கணிப்பின் நூறாண்டு நிறைவேறும் நிலையில் 1971-ஆம் ஆண்டுக் குடிமதிப்புக் கணக்கீடு செய்யப்பட்டது. இக்கணிப்பில் முதன்முதலாக நிறுவனங்களைப் பற்றிய புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன. பெண்களின் மகப்பேறு நிலை, தொழில் நுட்பக் கல்வி, நகரியல் (Urbanisation) இடப்பெயர்வு ஆகியன பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் இக்குடிமதிப்புக் கணிப்பின் சிறப்பியல்புகளாகும்.

இந்தியாவின் 1981-ஆம் ஆண்டைய குடிமதிப்பு பிப்பிரவரி, மார்ச்சு திங்களில் கணக்கீடு செய்யப்பட்டது. மார்ச்சுத் திங்கள் முதலாம் நாள் சூரிய உதயம் (Sun Rise) குடிமதிப்புக் கணிப்பின் வரையறுயக்கப்பட்ட காலமாகக்(Reference Point of Time) குறிக்கப்பட்டது. உறைவிடமற்றோர் (Homeless), பிப்பிரவரி 28-ஆம் நாள் இரவுக் கணிப்பில் சேர்க்கப்பட்டனர். பனி மிகையான பகுதிகள் அடங்கிய சம்மு-காசுமீர் (Jammu&Kashmir) இமாசலப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், சிக்கிம், அந்தமான் நிக்கோபார் ஆகிய மாநிலங்களில் மே திங்கள் 6 முதல் 10-ஆம் நாள் வரை கணக்கீடு செய்யப்பட்டது. குடிமதிப்பிற்கென வரையறுக்கப்பட்ட காலம் மே திங்கள் ஆறாம் நாளின் சூரிய உதயமாகும்.

அசாம் (Assam) மாநிலத்தின் அமைதியின்மை காரணமாக அங்குக் குடிமதிப்பு 1981-இல் நடைபெறவில்லை. நாட்டின் மொத்த மக்கள் தொகைப் பட்டியலிலும், மாநிலப் பட்டியல்களிலும் அசாம் மாநில மக்கள்தொகைக் கருத்துருவமைப்பின்படி (Projected Population) கணிப்பீடு செய்யப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளது. தொகுத்துப் பட்டியலிடப்பட்ட 1981-ஆம் ஆண்டைய இந்தியக் குடிமதிப்பின் சிறப்புத் தொடர் தலைப்புகளாவன (Tabulation Series) : 1) பொது மக்கள்தொகைப் பட்டியல்கள், 2) பொதுப் பொருளாதாரப் பட்டியல்கள், 3) சமூகப் பண்பாட்டுப் பட்டியல்கள், 4) சமூக இடப்பெயர்வுப் பட்டியல்கள், 5)சமூகக் கருவளப் பட்டியல்கள், 6) உறைவிடங்களும் உடல் ஊனமுற்றோர் மக்கள்தொகைப் பட்டியல்களும், 7) குடும்ப விவரப் பட்டியல்கள், 8) அட்டவணைப்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்கள், 9) அட்டவணைப்படுத்தப்பட்ட பழங்குடி வகுப்பினர் பட்டியல்கள், 10) ஊரகங்களும் நகரங்களும் பற்றிய குறிப்புகள். புள்ளிவிவரங்களை விரைவாகவும் விரிவாகவும் சிறந்தமுறையிலும் தொகுத்து வெளியிடக் கணிப்பொறிகள் பயன்படுத்தப்பட்டன.

இக்கணிப்பிற்குப் பயன்படுத்திய தனி ஆள் விவரத் தாளின் வினாக்களாவன: 1) பெயர், 2) குடும்பத் தலைவரோடுள்ள உறவு, 3)ஆண்/பெண், 4)வயது, 5) திருமண நிலை, 6) தாய் மொழி, 7) தெரிந்த இரு பிற மொழிகள், 8) சமயம், 9) தாழ்த்தப்பட்ட வகுப்பு/பழங்குடி, 10) சாதி, 11) எழுத்தறிவு, 12) கல்வி 13) மாணவர் பள்ளி/கல்லூரி, 14) வேலை; கடந்த ஆண்டில் குறுகிய காலம்/நீண்ட காலம், 15) கடந்த ஆண்டின் முதன்மைத் தொழில்/துணைத் தொழில், 16) வேலையின்மை/வேலை தேடுபவர், உடன் வேலை செய்ய விருப்பம்.

**மதிப்பீடு**: இந்தியா மிகப்பெரிய நாடாகப் பல மொழிகளையும் பண்பாடுகளையும் கொண்ட மக்களை உள்ளடக்குவதால் அதன் நுட்பமான, குறைகளில்லாத முழுமையான குடிமதிப்பைக் கணக்கீடு செய்வதில் எண்ணிலடங்கா நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. ஒரு நூற்றாண்டுக் காலம் வரை எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் போற்றுதற் குரியவையாகவும், பல முன்னேற்றங்களை உள்ளடக்கியும் உள்ளன. பல இடையூறுகள் அவ்வப்போது தோன்றின. பொதுவாக இந்தியக் குடிமதிப்பில் சேகரிக்கப்படும் புள்ளிவிவரங்கள் தொகுக்கப்பட்டு வெளிவர அதிக காலங் கடந்துவிடுகிறது. அதனால் அதன் பயன் குன்றிப் போகிறது.

இந்தியக் குடிமதிப்புக் கணிப்பில் திருமண நிலை, வேலை, கல்வி போன்ற பல விவரங்களைக் குறித்த சொற்களும் கருத்துகளும் தேவையான இலக்கண வரையறையுடன் குறிப்பிடப்படாததால் அவை திட்டவட்டமான தெளிவான விளக்கங்களை அளிப்பதில்லை. இவற்றோடு தொடர்பான புள்ளி விவரங்களை முழுமையாகச் சேகரிக்கவில்லை.

எனவே, வரையறுக்கப்படாத முழுமையற்ற புள்ளிவிவரங்கள் தவறான விளக்கங்களுக்கு இடமளிக்கலாம். மேலும் ஒவ்வொரு கணிப்பிலும் சில

கலைச்சொற்களுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கம், புள்ளிவிவரம் சேகரித்த முறை, இடம் ஆகியன வேறுபடுவதால் அவற்றைப் பயன் படுத்துவதில் உன்னிப்பான கவனம் தேவைப்படுகிறது.

புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் ஆய்வாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியும் ஊதியமும் போதுமான திறனையும் ஊக்கத்தையும் அளிப்பதாக இல்லை. எனவே, அவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை; சேகரிக்கும் புள்ளி விவரங்களும் பல குறைபாடுகளுடன் தரம்குறைந்து காணப்படுகின்றன. இந்திய மக்களுள் பெரும்பாலானவர்கள் கல்வியறிவற்றவர்களாகவும் பழமைப்பற்றுடையவர்களாகவும் இருப்பதால் பிறப்பு, வயது, குடும்பத்தினரின் எண்ணிக்கை போன்ற உண்மை விவரங்களைக் கொடுப்பதில்லை. காடு, மலைப்பகுதிகள், தீவுகள், முன்னேற்றமடையா ஊரகங்கள் போன்ற இடங்களில் வாழும் மக்கள் நாடோடிகள் ஆகியோரிடம் சென்று புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதில் பல மொழி, போக்குவரத்து, காலநிலை போன்ற இடையூறுகள் உள்ளன. இவற்றால் முழுமையான புள்ளிவிவரங்கள் கிடைப்பது அரிதாகவுள்ளது. பிற நாடுகளில் புதிய முறையிலான அறிவியல் அடிப்படையில், முதன்முதலாகக் கனடாவில் கி.பி. 1666-இல் குடிமதிப்புக் கணக்கீடு நடைபெற்றதாக மக்கள் தொகையியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கனடா, பத்தாண்டுக்கொரு முறை நடைபெறும் தொடர் குடிமதிப்பை கி.பி. 1871-இலிருந்து கணக்கீடு செய்கிறது, ஐசுலாந்தும் இசுவீடனும் **(Iceland &Sweden)** 18-ஆம் நூற்றாண்டில் குடிமதிப்பைக் கணக்கீடு செய்தன. பிற ஐரோப்பிய நாடுகளும் இலத்தீன் அமெரிக்க நாடுகளும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் குடிமதிப்புக் கணக்கீடு செய்வதைத் தொடங்கின. ஆசுத்திரேலியாவும், நியூசிலாந்தும் முதன்முதலாக கி.பி. 1880-இல் குடிமதிப்புக் கணக்கீட்டைத் தொடங்கின. பெரும்பாலான ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் குடிமதிப்புக் கணிப்பு 1960-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. காண்க: இந்திய மக்கள் தொகை. அ.கு.சா.

**துணைநூல்:**

**Padmanabha**, P.,Census of India, 1981, The Cenus Commission of India, New Delhi, 1985.

**குடிமல்லம்** ஆந்திரப்பிரதேசத்தில் இரேணிகுண்டாவிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர். இது கட்டடக்கலைச் சிறப்புப்பெற்றது. இங்குள்ள சிவன்கோயிலிலுள்ள சிவலிங்கத்தில் சிவன் உருவம் காணப்படுகிறது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவ்வுருவம் இரண்டு கைகளுடனும் குட்டையான யட்சன்மீது நிற்கும் நிலையிலும் உள்ளது. பெரிய குண்டலங்களும், அகலமான கழுத்தணியும், தலைப்பாகையும் (Ushnisa), கைகளில் வங்கியும் கொண்டு இவ்வுருவம் உள்ளது. இதன் வலக்கையில் ஆட்டுக்கடாவும், இடக்கையில் கோடரியும், புனித நெய்ப்பாத்திரமும் உள்ளன. இத்தகைய உருவ அமைதி வேறெங்கிலும் காணக்கிடைக்கவில்லை. குடிமல்லம் கோயில் இலாட வடிவ அமைப்புடைய கருவறையையும்,இடைக்கழி, முன்மண்டபம்



சிவலிங்கம்—குடிமல்லம்.

ஆகியவற்றையும் கொண்டுள்ளது. மண்டபத்தின் கோடியில் நந்தி காணப்படுகிறது. கோயிலின் சுவர்களில் சிவன், பிரமன், துர்க்கை, திருமால் கணேசர் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலின் கல்வெட்டுகளின்படி இது பல்லவர் காலத்திலும் விக்கிரம சோழன் காலத்திலும் (கி.பி. 1126) பழுது பார்க்கப் பட்டது. சு.இரா.

**குடிமை:** ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் அமைந்துள்ள அரசில் (State) வாழும் மக்கள் அவ்வரசின் அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் இருக்கும் உரிமைகளைப் பெற்று இருக்கும் நிலையே குடிமை (Citizenship) என்று சொல்லப்பெறும். அரசில் அல்லது அரசியல் சமுதாயத்தில் உறுப்பினராக இருப்பவரே குடியாள் (Citizen) எனப்படுவார். ஆகையால் குடிமை என்பது ஓர் அரசின் உறுப்பினராக அல்லது குடியாளாக இருப்பவர் சில உரிமைகளைப் பெற்றிருக்கும் நிலையையே குறிப்பிடுகிறது. மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டும், தற்காப்புக்காகவும் பிறரோடு கூடி வாழும் இயல்புடையவனாகையால், அந்த இயல்பினின்றும் சமூகம் (Society) தோன்றிற்று; அச்சமூகத்தில் எல்லோருடைய உரிமைகளையும் பாதுகாப்பதற்காகச் சட்ட விதிகளும் ஆட்சி அமைப்பும் தோன்றின. மனிதனுடைய எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் வாயிலாக அவனுடைய பண்புச் சிறப்புகள் (Personality) வெளிப்படுதற்கு வாய்ப்புகள் (உரிமைகள்) இருந்தால்தான் அவன் முழு வளர்ச்சி பெற்ற வாழ்க்கை வாழ்தல் இயலும்; உரிமைகளோடு கூட அவ்வுரிமைகளுக்குப் பாதுகாப்பும் (அரசாங்கமும்) இருத்தல் வேண்டும். எனவே, ஒரு நாட்டின் குடியாளுக்குச்சமூக, அரசியல், பொருளியல் உரிமைகளும், அவ்வுரிமைகளுக்குப் பாதுகாப்பாக ஓர் அரசாங்கமும் இருத்தல் வேண்டும் என்பதும், குடிமை என்பது ஓர் அரசிலே அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டுச் சில உரிமைகளுடன் வாழும் நிலை என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.


**குடிமை பெறும் வகை:** எவரெவர் குடிமையைப் பெறுதற்குரியவர் என்று சில தகுதிகளை விதித்துச் சட்டங்களின் வாயிலாக அவற்றை வரையறை செய்தற்கு அந்தந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. பொதுவாக, ஒருவர்தம் முன்னோர்கள் ஒரு நாட்டிலே வாழ்ந்து வந்த காரணத்தால், அவர் வழிவந்தோர் அந்நாட்டில் வாழும் தகுதியினடிப்படையில் அவ்வரசில் குடியாளாக இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட நாட்டில் மூதாதையர் வாழ்ந்தாலும் அவர் வழி வந்தோர் வேற்று நாடுகளில் வாழ்ந்து, பின்னர் மூதாதையர் வாழ்ந்த நாட்டின் அரசாங்க இசைவு பெற்று அந்நாட்டில் குடிமை பெறலாம். வேற்று நாட்டினர் ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட நாட்டின் குடிமையை அந்நாட்டின் அரசாங்கம் சில காரணங்களுக்காக வழங்குதலும் கூடும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சில விதிகள் இந்தியாவில் குடிமை நிலையைப் பெறுதற்கான வழிகளைக் கூறுகின்றன. இச்சட்டம் தொடங்கிய நாளிலும், அதனை ஒட்டிய முன் ஐந்து ஆண்டுகளிலும் இந்தியாவில் குடியிருந்து வந்தவராயிருப்பின், அவர் இந்தியக் குடியாளாகும் தகுதி பெறுவர். மேலும், இச்சட்டம் தொடங்கிய நாளில், பாகிசுத்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தவராக இருந்தால் அவரும்; அவர் பெற்றோருள் ஒருவர் அல்லது மூதாதையருள் ஒருவர்1935–ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்ட இந்திய நாட்டில் பிறந்தவராக இருந்தால் அவரும் இந்தியக் குடியாளாகும் தகுதி உடையவர். ஒருவர் 1948, சூலை 19–ஆம் நாளுக்கு முன்னர்ப் பாகிசுத்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து, அந்நாளிலிருந்து இந்தியாவில் வாழ்வாராயின் அவரும் குடிமை பெறலாம். ஒருவர் 1948, சூலை 19–ஆம் நாளுக்கு முன்போ பின்போ இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து, இந்திய அரசாங்க அதிகாரி ஒருவரால் அவர் இந்தியக் குடியாள் என்று பதிவு செய்யப்பட்டிருந்து, அவர் பதிவு செய்யப்படுதற்கான விண்ணப்பத்தை இந்திய அரசாங்க அதிகாரிக்கு அளித்தற்கு முன்னர்க் குறைந்தது ஆறு மாதங்களாவது இந்தியாவில் குடியிருந்தவராயிருப்பின் அவர் இந்தியக் குடியாளாவர். எவரேனும் 1947, மார்ச்சு முதல் நாளுக்குப் பின்னர்ப் பாகிசுத்தானுக்குக் குடிபெயர்ந்திருப்பின், அவர் இந்தியக் குடியாளாக மாட்டார். ஆயினும் அவ்வாறு பாகிசுத்தானுக்குக் குடி பெயர்ந்தோர் மீண்டும் இந்தியாவுக்கு நிலையாகத் திரும்பி வந்து, இந்திய அரசாங்க அதிகாரி சட்டப்படி அளித்த ஓர் இசைவு ஆணையின்படி (Permit) இந்தியாவில் நிலையாகத் தங்கினால் அவர் இந்திய குடியாளாகலாம். வேற்று நாட்டில் வாழும் இந்தியரோ அவருடைய பெற்றோருள் அல்லது மூதாதையருள் ஒருவரோ இந்தியாவில் பிறந்தும், அவர் வாழும் பிற நாட்டிலுள்ள இந்தியத் தூதுவரால் அவர் இந்தியக் குடியாள் என்று பதிவு செய்யப்பட்டும் இருப்பாராயின், அவர் இந்தியக் குடியாள் ஆவர். மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, அயல் நாட்டுக் குடிமை பெறும் இந்தியர் இந்தியக் குடிமையை இழந்து விடுவார்; இந்தியக் குடிமையை வழங்குதற்கும் நீக்குதற்குமுரிய சட்டங்களைச் செய்தற்கு இந்தியப் பாராளுமன்றத்துக்கு முழு அதிகாரமும் உண்டு.

**குடிமை உரிமைகள்:** குடிமை என்பது சமூகத்தில் ஒருவர் சில உரிமைகளும்,அவற்றுக்கு அரசாங்கத்தின் பாதுகாப்பும் பெற்றிருக்கும் நிலையைக் குறிப்பதாகையால், குடிமை என்ற கருத்தில் குடிமை உரிமைகளும் (Citizenship Rights) அடங்கியிருத்தல் வெளிப்படை. இக்கால நாகரிகத்தில் தனி ஒருவருடைய இன்ப வாழ்வுக்கு இன்றியமையாத சமூகச் சூழ்நிலைகளின்

மீது கட்டுப்பாடு இல்லாமையே சுதந்திரம் ஆகும் (Liberty) என்று பேராசிரியர் எச்.சே. இலாசுகி (Laski) கூறும் சுதந்திரக் கருத்து உரிமைகளடங்கிய குடிமைக்கு ஆதாரமாகும். உரிமைகள், சமூக உரிமைகள் (Civil Rights), அரசியலுரிமைகள் (Political Rights), பொருளாதார உரிமைகள் (Economic Rights) என மூவகைப்படும். சட்டத்தினால் ஒப்புக் கொள்ளப்பட்டும், அரசினால் பாதுகாக்கப்பட்டும் இருக்கின்ற உரிமைகளின் மொத்தத் தொகுப்பே சமூக உரிமைகளாகும்.சமூக உரிமைகளை அரசு குடிகளுக்காகத் தோற்றுவித்துக் காப்பாற்றுகிறது.எல்லா நாடுகளிலும் பெரும்பாலும் செயல்முறையிலிருக் கின்ற சமூக உரிமைகளாவன: உயிர் வாழும் உரிமை, வேலை செய்யும் உரிமை, ஆள் சுதந்திரப் பாதுகாப் புரிமை(எவரொருவரும் தகு சட்டமுறையினாலல்லா மல் – (Due Process of Law) தாக்கப்படவோ காயப் படுத்தப்படவோ சிறைப்படுத்தப்படவோ கூடாது) நற்பெயர் உரிமை, சமய உரிமை, கல்வி பெறும் உரிமை, சில விதிகளுக்கு உட்பட்டுப் பேசவும் கூட்டம் கூடவும் கருத்துகளை வெளியிடவும் உரிமை, கழகம் அமைக்கும் உரிமை, குடும்ப உரிமைகள், சொத்துரிமை, பொதுவான சமூக வாழ்வுக்குகந்த நலன்களைப் பெற உரிமை, இச்சமூக உரிமை களெல் லாம் அந்தந்த நாட்டின் சட்ட வரம்புகளுக்குட்பட்டுச் சமூக வாழ்வுக்கு இடையூறு ஏற்படாதவாறு குடிமக் களால் கையாளப்படுதல் வேண்டும்.அரசியல் உரிமை களிலே தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை, தகுதி பெற்றோர் வேட்பாளராகத் தேர்தல்களில் போட்டி யிடும் உரிமை, குறிப்பிட்ட காலங்களில் தேர்தல் களை நடத்துதற்கான உரிமை, தொழில் தகுதி பெற்றோருக்கு அரசாங்க அலுவல்களைப் பெறும் உரிமை, அரசாங்கத்தின் தவறுகளை எடுத்து இடித் துரைக்கும் உரிமை (Right to Criticise the Government) முதலியவை அடங்கும். இவ்வரசியலுரிமைகளில் பலவும் தாராளக் குடியாட்சியிலேதான் காணப்படும். வேலை செய்யும் உரிமை, நியாயமான பணிக்கால உரிமை, போதிய ஊதியம் பெறும் உரிமை, தொழிலில் தன்னாட்சி உரிமை முதலியவை ஒவ்வொருவருக்கும் அன்றாட உணவைப் பெறுதற்குரிய வாய்ப்பையும் பாதுகாப்பையும் தருதலால் அவை பொருளாதார உரிமைகளாகும். ஆகையால், குடிமை உரிமைகளும், அரசின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலும், அரசுக்குரிய வரிகளைச் செலுத்துதலும், நாட்டின் நீதிமன்றத் திலே தீர்ப்புச் சான்றாளராகவோ (Jury), சான்றா ளராகவோ பணிபுரியுமாறு அழைக்கப்படும்போது, அவ்வாறு பணிபுரிதலும், நீதிமன்றத்துக்கு மதிப்புக் கொடுத்தலும், நாட்டின் பாதுகாப்புக்காகச் சட்டம் கட்டாய இராணுவப் பணியைக் கொண்டு வருமானால், அவ்வாறு பணிபுரிதலும் குடிமையில் அடங்கிய கடமைகளாகும். பா.கு.

**குடியம்**: தமிழகத்தில் பழங்கற்கால மனிதன் வாழ்ந்த குகை உள்ள இடம். இது செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டத்தில் உள்ளது. இந்தியத் தொல்பொருளாய்வுத்துறையினர் இங்கு 1962-64-ஆம் ஆண்டுகளில் அகழாய்வு மேற்கொண்ட னர். பழங்கற்காலக் கருவிகள் இங்குள்ள குகையிலும் இதற்கடுத்துள்ள பகுதிகளிலும் பெருமளவில் கிடைத்



குடியம் குகை

துள்ளன. கற்கால மனிதன் இங்குத் தொடர்ச்சியாக வாழவில்லை: சில சமயங்களில் மட்டும் தங்குவதற் காக இக்குகையைப் பயன்படுத்தியுள்ளான். இங்கு மூன்று அகழாய்வுக் குழிகள் வெட்டப்பட்டன. குடியம்-1, குடியம்-2, குடியம்-3 என அவை பெயரிடப் பட்டன். குடியம்-1 குழி, மலைக் குகையில் அகழப் பட்டது. அகழாய்வுக் குழிகளில் இருந்து பழங்கற் காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. சு.இரா.

**குடியரசு**: காண்க: குடியரசுக் கொள்கை.

**குடியரசுக் கட்சியும் குடியாட்சிக் கட்சியும்**: குடியாட்சி நன்கு செயற்படுதற்கு அரசி யற் கட்சிகள் இன்றியமையாதவை. எல்லாவகை அர சாங்கங்களிலும் அரசியற் கட்சிகள் செயற்படு கின்றன. பாராளுமன்ற முறை அரசாங்கமோ, தலை வர் அல்லது அதிபர் முறை அரசாங்கமோ செயற்பட அரசியற் கட்சிகள் தேவை. எதேச்சாதிகார நாடுகள் கூட அரசியற் கட்சிகளின்உதவியுடன் தான் பதவிக்கு வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இரு பெரும் கட்சிகளாகக் குடியரசுக் கட்சியும்,குடியாட்சிக்

கட்சியும் (Republican Party and Democratic Party) விளங்குகின்றன.

**வளர்ந்த முறை**: கூட்டாட்சியாளர்கள் (Federalists) கட்சி கி.பி. 1800-இல் உருவெடுத்தது. அலெக்சாண்டர் ஆமில்ட்டனும் (Hamilton) சான் ஆடம்சும் இக்கட்சியின் தலைவர்களாக விளங்கினர். புதிய அரசியலமைப்பையும் கூட்டாட்சியையும் இக்கட்சி ஆதரித்தது. கருத்துவேற்றுமை காரணமாகத் தாமசு செபர்சனும், சேம்சு மாடிசனும் குடியாட்சி-குடியரசு (Democratic-Republicans) என்ற புதிய கட்சியைத் தொடங்கினர். மாநிலங்களின் உரிமைகளுக்காக இக்கட்சி வாதிட்டது. காலப்போக்கில் கூட்டாட்சியாளர்கள் கட்சிக்கு ஆதரவு குறைந்தது. கூட்டாட்சியாளர்கள் கட்சியின் இடத்தை கி.பி. 1834-இல் விக்குக் (Whigs) கட்சி பிடித்தது. விக்குக் கட்சியே 1960-இல் குடியரசுக் கட்சியாக உருவெடுத்தது. ஆண்ட்ரூ சாக்சன் குடியாட்சி - குடியரசுக் கட்சி என்ற பெயரைக் குடியாட்சிக் கட்சி என்று மாற்றினார். குடியரசுக் கட்சிக்கும், குடியாட்சிக் கட்சிக்கும் கி.பி. 1860-ஆம் ஆண்டு முதல் இந்நாள்வரை தேர்தல் போட்டிகள் நடந்து வந்திருக்கின்றன. ஆபிரகாம் லிங்கன், ஐசன் ஓவர் ஆகியோர் குடியரசுக் கட்சியின் முக்கிய குடியரசுத் தவைவர்கள் ஆவார்கள். உட்ரோவில்சன் பிராங்க்லின் உரூசுவெல்ட்டு, சான் கென்னடி, இலிண்டன் சான்சன், சிம்மி கார்ட்டர் ஆகியோர் குடியாட்சிக் கட்சியின் முக்கிய குடியரசுத் தலைவராவார்கள்.

**இரு கட்சி முறைத் தோற்றத்தின் காரணங்கள்**: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இரு கட்சி முறை தோன்றியதற்கு முக்கிய காரணம், அக்குடியரசின் தொடக்க காலத்திலிருந்தே இருபெரும் தலைவர்களான அலெக்சாண்டர் ஆமில்டனுக்கும், தாமசு செபர்சனுக்கும் இடையே தோன்றிய கருத்து வேற்றுமையாகும். மரபு வழி, மூதாதையர் வழி, பிரதேசவாரி ஆதரவு ஆகியவற்றின் அடிப்படையிலும் இரு கட்சி முறை தோன்றியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒருவர் ஒரு குறிப்பிட்ட கட்சியில் இருக்கிறார் என்றால் அதற்குக் காரணம், அவர் தகப்பனாரும், மூதாதையரும் அக்கட்சியில் இருந்தனர் என்பதனாலும் அவர் வாழும் பிரதேசத்தில் அக்கட்சி வேரூன்றியிருக்கிறது என்பதனாலும் ஆகும். கட்சி முறைக்கும், தேர்தல் முறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரே வாக்கெடுப்பில் சாதாரணப் பெரும்பான்மை காணும் தேர்தல் முறை, இரு கட்சி முறை தோன்றக் காரணமாகியது. அமெரிக்க நாடுகளில் குடியரசுக் கட்சியையும், குடியாட்சிக் கட்சியையும் தவிர்த்து, பொது உடைமைக் கட்சி, சமநிலைக் கட்சி சுதந்திர வீரர்கள் கட்சி என்ற பல்வேறு கட்சிகள் இருந்தாலும், இக்கட்சிகள் தேசிய அளவில் ஆட்சியைப் பிடிப்பதற்கான பலம் பெற்றிருக்காததால் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருகட்சி முறையே இருப்பதாகக் கருதுகின்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்று, இங்கிலாந்திலும் இரு கட்சி முறை இருக்கிறது. இங்கிலாந்திலுள்ள இரு கட்சிகளும் குறிக்கோள் அடிப்படையில் தோன்றியவை. கட்சிகளில் கடுமையான கட்டுப்பாடு உண்டு. ஆனால் குடியரசுக் கட்சியும், குடியாட்சிக் கட்சியும் குறிக்கோள் அடிப்படையில் தோன்றியவையல்ல. இரு கட்சிகளிடையே கடுமையான கட்டுப்பாடு கிடையாது. குடியாட்சிக் கட்சியின் முன்னோடியான குடியாட்சி-குடியரசுக் கட்சி 1933-ஆம் ஆண்டு வரை மாநில உரிமைகளுக்கும், தடையிலா வாணிகத்துக்கும் ஆதரவு அளித்தது. குடியரசுக் கட்சியின் முன்னோடிகளான கூட்டாட்சியாளர் கட்சியும், விக்குக்கட்சியும் கூட்டாட்சி அரசின் அதிகாரங்களைப் பெருக்குதற்கு ஆதரவு அளித்தன. குடியாட்சிக் கட்சியின் கொள்கைகளை 1933-ஆம் ஆண்டிற்குப் பிறகு, முற்போக்குக் கொள்கைகளாகவும், குடியரசுக் கட்சியின் கொள்கைகளை பழமைவாதக் கொள்கைகளாகவும் குடிமக்கள் கருதத் தொடங்கினர். அதற்கு முக்கிய காரணம் குடியாட்சிக் கட்சி, பிராங்க்லின் உரூசுவெல்ட்டின் தலைமையில் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுவதை ஆதரித்தது. உரூசுவெல்ட்டின் புதிய திட்டத்தைக் குடியரசுக் கட்சியின் முற்போக்கு வாதிகளும் ஆதரித்தனர். அதுபோலவே, குடியரசுக் கட்சியின் கொள்கைகளை, குடியாட்சிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரிப்பதுண்டு. ஆகவே, கொள்கையடிப்படையில் இரு கட்சிகளுக்குமிடையே பெரும் வேறுபாடுகள் கிடையா. இரு கட்சிகளும், மக்களாட்சி முறையையும், பிரதிநிதித்துவ அரசாங்கத்தையும் ஆதரிக்கின்றன. இவ்வாறு மிகுந்த வேறுபாடின்றி இருகட்சிகளும் இயங்கி வருகின்றன. சூழ்நிலைகளுக்கேற்ப இக்கட்சிகள் மாறி மாறி வெற்றி பெற்று நான்காண்டுக்கொருமுறை ஆட்சியைக் கைப்பற்றுகின்றன.

கே.பா.

**துணை நூல்கள்**:

James Jupp, Political Parties, Routledge & Kegan Paul, London, 1968.

Maurice Dewerger, Political Parties, Methuen & Co. Ltd., London, 1955.

Wilfred E. Binkeley, American Political Parties, Alfred A. Knopf, New York. 1968.

**குடியரசுக் கொள்கை**: குடியரசு என்பது முடியாட்சிக்கு (Monarchy) நேர்மாறான அரசியலமைப்பை உடையது என்று பொருள்படும். பண்டைக் காலத்திலிருந்தே, பரம்பரையான அல்லது வழிவழியான தாய முறையிலமைந்துள்ள ஒருவர் ஆட்சியை முடியாட்சி என்றும், குடிகளால் நேரடியாகவோ மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டுக் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருவராலோ, பலராலோ ஆளப்படும் அரசைக் குடியரசு (Republic) என்றும் வகைப்படுத்தினர். குடிகளே ஆளுபவராக உள்ளனர் என்ற கோட்பாட்டை எடுத்துக்காட்டுபவராக, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் அல்லது பலர் இருப்பதால், அவருடைய ஆட்சி முறையைக் குடியரசு என்று கூறினர். குடிகளுக்கு ஆட்சியில் பங்கு இருக்கிறதென்ற குடியாட்சிக் கருத்தும் குடியரசுக் கொள்கையில் (Republicanism) இருப்பதனால், குடியரசுக் கொள்கை சிறப்புடையதாகப் பண்டைக் கால முதலே பல அரசியற் சிந்தனையாளர்களால் கருதப்பட்டு வந்திருக்கிறது.

**மாக்கியவெல்லி**: இத்தாலியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசியற் சிந்தனையாளர் மாக்கியவெல்லி தம் 'இளவரசர்' (The Prince) என்ற நூலிலும் 'விளக்கங்கள்' (Discourses) என்ற நூலிலும் அரசுகளின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமுள்ள காரணங்களையும், அரசுகள் அழியாமல் பாதுகாத்தற்கு அரசியலறிஞர்கள் கையாளும் திறமான வழிகளையும் ஆராய்ந்து கூறியுள்ளார். அவர், அரசாங்கங்கள் பெருமளவு வலுக்காட்டாயத்தையும் (Force), சூழ்ச்சித் திறனையுமே (Craft) சார்ந்துள்ள காரணத்தால், ஆளுவோர் அரசியல் நோக்கங்களுக்காக ஒழுக்க வரம்புகளுக்கப்பாற்பட்ட வழிகளைக் கையாளுதலைப் பற்றிச் சிறிதும் கவலைப் படலாகாது என்றும், அரசாங்கத்தின் செயல் திறங்கள், அரசுகளை வலுவாக ஆக்கும் வழிகள், அவற்றின் அதிகார எல்லையை விரிவாக்குதற்கு ஏற்ற கொள்கைகள், அரசுகளின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லக்கூடிய தவறுகள் முதலியவைகளைப் பற்றியும் அவர் கூறுகிறார். தாமே தலைமை அதிகாரி என்னும் எண்ணமும் தாமே எல்லா மறிந்தவரென்ற தன்முனைப்பான போக்கும், தம் சட்ட அதிகாரத்தின் வழியாகத் தேசிய ஒழுக்கத்தையே உருவாக்கக் கூடிய செயலும் இருத்தல் வேண்டும் என்றும் கூறுகிறார்.

**சமப்படுத்துவோர் கருத்து**: இங்கிலாந்தில் அரசர் முதலாம் சார்லசுக்கும், பாராளுமன்றத்துக்கும் இடையே நடந்த உள்நாட்டுப்போரில் (Civil War கி.பி. 1642-1649) பாராளுமன்றத்தின் பக்கத்திலும், அதற்கு உதவியாக வந்த புதுமாதிரிப்படையிலும் சேர்ந்த தீவிர குடியரசுக் கட்சியாரே சமப்படுத்துவோர் (Levellers) எனப்படுவோர். குடியரசு அமைப்பே நல்லதொரு அரசாங்க அமைப்புக்கு ஏற்றதொரு வழியாகும். வயதுவந்தோருக்கு வாக்குரிமை இருந்தால்தான், மக்களுடைய ஒப்புதலின்பேரில் சட்டங்கள் இயற்றமுடியும். அதன் காரணமாக மக்கள் சட்டத்துக்குக் கட்டுப்படுதற்கு வழி உண்டாகும். சமப்படுத்துவோருடைய கருத்துகளின் போக்கிலேயே இங்கிலாந்தில் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் ஆரிங்டன் (Harrington), சான்மில்ட்டன் (John Milton), சிட்னி (Sidney), முதலிய சிந்தனையாளர்கள் குடியரசுக் கொள்கையைப் பற்றிச் சில கருத்துகளைக் கூறினர். ஆரிங்டன், குடியரசுக் கொள்கை என்பது இயற்கையின் சட்டத்திலேயே குறிப்பாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதென்றும், மக்களே இறைமை அதிகாரம் உடையவர்களென்ற கொள்கையிலும் குடியரசுக் கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதென்றும் கூறினார். சான்மில்ட்டன் என்ற ஆங்கிலக் கவிஞர் அறிவுச் சுதந்திரத்தை ஆர்வத்துடன் ஆதரித்தார். ஆய்வு முறையும், விவாதமும் உண்மையைக் கண்டறியவும், தவற்றைத் தள்ளிவிடுதற்கும் உதவுகின்றன. மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது குடியரசு அரசாங்கமே தவிர, முடியாட்சி அன்று. அரசாங்கமென்பது ஒவ்வொருவருடைய உரிமையையும் பாதுகாப்பதற்குத்தான் இருக்கிறது. அதன் பொருட்டே சட்டமும் அரசாங்க அதிகாரத்துக்கு வரம்புகளை ஏற்படுத்துகிறது. அரசாங்க அதிகாரியின் அதிகாரமானது மக்களுடைய நலனுக்காக மக்களிடமிருந்தே பெறப்படுகின்றதாகையால், கொடுங்கோலனுக்கெதிராக மக்களுடைய நலனைப் பாதுகாக்கும் உரிமை மக்களிடம் இருக்கிறது. இவை மில்ட்டனின் கருத்துகளாகும். அல்செர்னான் சிட்னி (Algernon Sidney) தாம் எழுதிய ஆய்வுக்கட்டுரைகளில் குடியரசு பற்றிய பின் வரும் சிலகருத்துகளைக் கூறுகிறார். எல்லா மக்கட்பிரிவினருக்கும் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளும் இயற்கையான உரிமை இருக்கிறது. தங்களுடைய கருத்தின்படி தகுதி உடையவர்களை அவர்கள் தங்களுடைய ஆட்சியாளராகத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமை பெற்றுள்ளனர். அரசாங்கம் தன் அதிகாரங்களை எல்லாம் மக்களிடமிருந்தே பெறுகிறது. அது அவர்களுடைய பாதுகாப்புக்காகவும் நலத்துக்காகவுமே இருக்கிறது; இந்நோக்கங்களைப் பொறுத்தமட்டில் அது அவர்களுக்கே பொறுப்புடையது.

**மாண்டசுக்கியூ கூறிய குடியரசுக் கருத்து**: பிரஞ்சு அரசியற்சிந்தனையாளருள் சிறந்த ஒருவராகிய மாண்டசுக்கியூ (Montesquieu) தமது 'சட்டங்களின்

இயல்பு' என்னும் நூலில் உரோமானியக் குடியரசில் தான் குடிமக்கள் பண்பு (Virtue) அல்லது பொது நலக் கருத்து (Public Spirit) என்பது நன்கு வளர்ச்சி யடைந்திருந்தது என்றும், உரோமானியக் குடியாள் ஒவ்வொருவருடைய தனிவாழ்வு உரிமைகளும் (Private rights), பொது வாழ்வுரிமைகளும் (Public rights) நன்கு வரையறுக்கப்பட்டுப் பழக்கத்துக்கு வந்தன என்றும், ஒவ்வோர் உரோமானியக் குடியா ளின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் நன்கு பாது காக்கக் கூடியவாறு அரசாங்க அதிகாரங்கள் அரசாங் கத்தில் குவிக்கப்படாமல், மூன்று உறுப்புகளுக் கிடையே பிரிக்கப்பட்டும், அரசாங்கமே தடை-சமன் கோட்பாட்டில் இயங்குமாறு (Principle of Checks and Balances) ...... அமைக்கப்பட்டும் இருந்தன என்றும் கூறி, பண்டைய உரோமானியக் குடியரசு தான் சிறந்த ஒரு குடியரசின் அமைப்புக்கு எடுத்துக் காட்டாக இருந்தது என்றும் அவர் சுட்டிக் காட்டு கிறார். மனித சுதந்திரம் என்பது ஓர் ஆளின் சிறந்த குடிமைப் பண்பிலிருந்து தோன்றாமல், அரசாங்கத் தைச் சரிவர அமைத்தலின் விளைவாகவே தோன்று கின்றது என்றும், அரசியலமைப்புகளைச் சரிவர அமைத்தல் என்பது அவற்றை அதிகாரப் பிரிவினைக் கொள்கையினடிப்படையில் அமைத்தலாகுமென்றும், ஆகையால் அதிகாரப் பிரிவினைக் கொள்கையினடிப் படையில் அரசாங்கங்களை அமைத்தலே குடியாளின் சுதந்திரத்துக்குத் தக்கதொரு பாதுகாப்பு ஆகுமென் றும் அவர் சில முடிபுகளைக் கூறினார். பா.சு.

**துணை நூல்கள்:**

Fletcher, F.T.H., Montesquieu and English Politics (1750-1800). London, 1939.

Gooch G.P., Politicial Thought in England: From Bacon to Halifax, London, 1946.

*குடியரசுத் தலைவர் ஆட்சி*: இங்கிலாந் தைப் போன்று நாடாளுமன்ற நிருவாக முறையை யும், அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போன்று நடு வண் கூட்டாட்சி அரசாங்கத்துக்கும் மாநில அரசாங் கங்களுக்குமிடையே அதிகாரப் பகிர்வு முறையையும் இணைத்துள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், சாதாரணச்சூழ்நிலைகளில், அரசியலமைப்புச் சட்டத் துக்கு உட்பட்டவராக விளங்கும் குடியரசுத் தலைவ ருக்கு, குறிப்பிட்ட சில நெருக்கடியான சூழ்நிலைகளில், ஒரு மாநில அரசையோ பல மாநிலங்களின் அரசு களையோ, எல்லா மாநில அரசுகளையுமோ தாமே ஏற்று, தமது நடுவண் அரசு அதிகாரிகளின் வாயிலாக நடத்துவதற்கு, பாகம் 18-இல், பிரிவு 352 முதல் பிரிவு 360 வரை மிக விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட் டுள்ளன; அவற்றைக் கையாண்டு குடியரசுத் தலை வர் நடத்தும் நேர்முக ஆட்சியே குடியரசுத் தலைவர் ஆட்சி (President's Rule) எனப்படும்.

**தனிப்பட்ட அதிகாரங்கள்**: இந்திய அரசிய லமைப்புச் சட்டம் 352-ஆம் பிரிவின்படி, இந்தியா முழுவதன் பாதுகாப்போ, அதனுடைய எந்த ஒரு நிலப் பகுதியின் பாதுகாப்போ, போர் அல்லது வெளிநாட்டுத் தாக்குதல் அல்லது உள்நாட்டுக் கல கம் முதலியவற்றால் அழிக்கப்படக் கூடுமென்ற அஞ் சத்தக்க சூழ்நிலை தோன்றுவதாகக் குடியரசுத் தலைவர் கருதுவாராயின், அவர் ஒரு நெருக்கடி நிலைப் பேரறிக்கையை (Proclamation of Emergency) விடுத்தற்கு அதிகாரம் உடையவர்; இப்பேர றிக்கையானது அவரால் விடுக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள்ளாக நாடாளுமன்றத்தின் இரு மன்றங்களினாலும் ஒப்புக்கொள்ளப்பட்டால் தான் அது செல்லுபடியாகும். குடியரசுத் தலைவர் ஆட்சியை நிறுவும் பேரறிக்கையானது நாடாளுமன் றத்தின் ஒப்புதலைப்பெற்றாலும், அது ஆறுமாத காலத்திற்குத்தான் நடைமுறையிலிருக்கும் (பிரிவு 356); அப்பேரறிக்கை தொடர்ந்து இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டால், மீண்டும் நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுமாயின், மேலும் 6 மாத காலத் துக்கு நடைமுறையிலிருக்கும். ஆனால், எந்த நெருக்கடி நிலைப் பேரறிக்கையும் 3 ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையிலிருத்தல் இயலாது. நெருக்கடிப் பேரறிக்கை நடைமுறையிலிருக்கும்போது, மாநில அரசின் நிருவாக அதிகாரமானது கையாளப்பட வேண்டிய வழிகளை நடுவண் அரசு மாநிலத்துக்கு விடுக்கலாம்; நெருக்கடிக் காலத்தில் நாடாளுமன்றம் மாநிலங்களுக்காகச் சட்டங்களைச் செய்யவும், வரி களை விதிக்கவும் அதிகாரம் உடையது (பிரிவு 354). ஏதேனும் ஒரு மாநில அரசு இந்திய அரசியலமைப்புச் சட்ட விதிகளின்படி நடைபெற இயலாதவாறு தடுக் கவல்ல ஒரு சூழ்நிலை அம்மாநிலத்தில் தோன்றியுள்ள தாக அதன் ஆளுநரிடமிருந்து குடியரசுத் தலைவர் செய்தி பெறுவாராயின், அப்போது ஒரு பேரறிக் கையை விடுத்து, மாநில அரசு அதிகாரங்களனைத்தை யும் அல்லது ஒரு சிலவற்றை அதன் ஆளுநர் அல்லது வேறெந்த அதிகாரியின் அதிகாரங்களையும் தாமே எடுத்துக் கையாளலாம். மாநிலச் சட்டமன்றம் தன் அதிகாரங்களை நாடாளுமன்றத்தின் ஆணைப்படி கையாளுதல் வேண்டுமென்று கூறலாம், நெருக்கடிக் காலத்தில் அரசியலமைப்பின் எந்தப் பிரிவையும் செயற்படாமல் நிறுத்திவைக்கலாம் (பிரிவு 356), நெருக்கடிக் காலத்தின் அரசியலமைப்பின் 19-ஆம்

விதியில் கூறப்பட்டுள்ள பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை, முதலிய அடிப்படை உரிமைகள் நிறுத்தி வைக்கப்படலாம் (பிரிவு 358). நாடாளுமன்றத்துக்கு மாநிலப் பட்டியலில் கூறப்பட்டுள்ள எந்தப் பொருளையும் பற்றிச் சட்டம் செய்தற்கு நெருக்கடிக் காலத்தில் அதிகாரம் உண்டு.

**அதிகாரங்களைப் பற்றிய சில கருத்துகள்:** வேறெந்தக் கூட்டாட்சி நாட்டிலும் காணப்படாத அளவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவரிடம் அதிகாரங்கள் பெருமளவுக்குக் குவிக்கப்பட்டுள்ள காரணத்தால், இந்தியக் கூட்டாட்சி பெயரளவில்தான் காணப்படுகிறதே தவிர நடைமுறையில் இல்லை என்றும், உண்மையில் இந்தியா ஓர் ஒற்றை அரசு நாடு தான் என்றும் (Unitary State) கூறுகின்றனர். இக்கருத்து முழுவதும் உண்மை அன்று; குடியரசுத் தலைவருக்களிக்கப்பட்டுள்ள விரிந்த அதிகாரங் களெல்லாம், ஒரு குறிப்பிட்ட காலத்தில், நெருக்கடி நிலை உள்ள காலத்துக்கு மட்டுமே அவரால் கையாளப்படுவனவாகும். மேலும் இந்தியாவை ஒரு நாடாக இணைத்த ஆங்கிலேயர் நெடுங்காலமாக, 1919-ஆம் ஆண்டு வரையிலேனும், அதை ஒற்றை அரசு நாடாகவே ஆண்டுவந்தனர்; ஆட்சித்துறையில் சில வசதிகளுக்காக அவர்கள் மாகாணங்களுக்குச் சிறிது சிறிதாகக் கூடுதல் அதிகாரங்களை வழங்கி அவற்றைத் தன்னாட்சி உரிமையுடையனவாக ஆக்கி, 1935 இல் ஒரு கூட்டாட்சி முறையை மேல்நிலையிலிருந்து கீழ் நோக்கியவாறு ஏற்படுத்தினர்; அதனால் மாகாணங்களின் மீது நடுவண் அரசின் கட்டுப்பாடு உறுதியாக இருக்கும்பொருட்டு நடுவண் அரசிடம் அதிகாரக் குவிப்பை ஏற்படுத்தினர். இந்த முறையைப் பின்பற்றியே இந்திய அரசியலமைப்புச் சட்டமும் வரையப்பட்டது. இந்திய இணையம் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும் பொருட்டும், இந்திய மாநிலங்கள் எல்லாவற்றிலும் ஒரே சீரான வளர்ச்சியும் முன்னேற்றமும் எல்லாத்துறைகளிலும் இருக்கும் பொருட்டும் இவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடுகளையுடைய இந்தியக் கூட்டாட்சி முறை நிறுவப்பட்டது. பா.சு.

**துணை நூல்கள்:**

**Gennings, Ivor**, Some Characteristics of the Indian Constitution, Oxford, 1953.

**Keith**, A. B., A Constitutional History of India, 1600-1935, Methuen, 1938.

*குடியாட்சி*: ஒருசில கோட்பாடுகளையும், ஒரு குறிப்பிட்ட அரசியல் முறையையும் குறிப்பிடுவது தான் குடியாட்சி என்ற சொல். இருப்பினும் இதற்குச் சரியான விளக்கம் அளிப்பது எளிதன்று. மக்களின் அதிகாரம் என்ற பதத்திலிருந்து தோன்றியது தான் குடியாட்சி என்ற சொல். குடியாட்சி என்பது ஒரு நடைமுறைக் கோட்பாடு(Realistic Normativism) என்று கருதப்பட்டால் இருக்கக்கூடியதொன்றை அது சுட்டிக்காட்டுகின்றது என்று கூறலாம். குடியாட்சி (Democracy) என்பது ஒரு கற்பனையளவிலான நெறிமுறை (Utopian Normativism) என்று கருதப்பட்டால் குறைபாடற்ற சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அது குறிப்பிடுகிறது என்று கூறலாம். இப்பதத்திற்கு விளக்கம் அளிக்க முயற்சி எடுத்தவர்களிடையே கருத்தொற்றுமை காண்பதற்கில்லை. கட்சிகளிடையே போட்டி காணப்படும் அமைப்பில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பெரும்பான்மையினர் சிறுபான்மையினருடைய உரிமைகளுக்கு மதிப்பளிப்பதுதான் குடியாட்சி என்பது பெரும்பாலோரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு ஆட்சி முறைகளுள் ஒன்று தான் குடியாட்சி என்று கூறும்பொழுது பிற ஆட்சி முறைகளிலிருந்து இதனை வேறுபடுத்தும் பண்புகளைச் சுட்டிக் காட்ட வேண்டியதாகிறது. எதேச்சாதிகார முறையைத் தவிர்த்துப் பிற எல்லா அரசியல் முறைகளையும் குடியாட்சி என்று குறிப்பிடுவதும் வழக்கமாகி விட்டது. ஆனால் அது பொருத்த மற்றது.

குடியாட்சி (Demokratia) என்ற சொல் கி. மு. 5-ஆம் நூற்றாண்டில்தான் முதல் முதலில் பயன்படுத்தப்பட்டது. குடியாட்சி என்பதை கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலும் ஓர் அரசியல் கோட்பாடாக மட்டுமே கருதி வந்தனர். குடியாட்சியின் சமூகப் பண்புகளை முதன்முதலில் வெளிப்படுத்தியவர் அலெக்சி த தாக்கவில்(Alexis De Tocqueville) என்ற பிரஞ்சு அறிஞர். அதன் பின்பு சமூகக் குடியாட்சி (Social Democracy) என்ற பதம் பழக்கத்தில் இருந்து வந்துள்ளது. பொருளாதாரக் குடியாட்சி (Economic Democracy) என்ற சொல்லை மார்க்சிசம் கையாண்டது. தொழிற் குடியாட்சி (Industrial Democracy) என்ற சொல்லை நடைமுறைக்குக் கொண்டு வந்த பெருமை கூட்டுறவுக் குழுச் சமவுடைமையைச் சாரும் சமூகக் குடியாட்சியும் சமநிலைக் குடியாட்சியும் (Socialist Democracy) ஒன்றல்ல. அரசால் செயற்படுத்தப்படும் ஒரு கொள்கையைத்தான் பின்னது குறிப்பிடுகிறது. குடியாட்சிப் பண்புடையதாகச் சமுதாயத்தை மாற்றும் முறைதான் சமூகக் குடியாட்சி எனப்படும். இதனை ஒரு வாழ்க்கை முறை என்றும் கூறலாம்.

அரசியலையும் நீதி சமத்துவத்தையும் குறிக்கோளாகக் கொண்டது அரசியற் குடியாட்சி (Political Democracy). தகுதிச் சமநிலையைக் காட்டுவது சமூகக் குடியாட்சி. பொருளாதாரச் சமநிலையைக் காட்டுவது பொருளாதாரக் குடியாட்சி. அரசியல் குடியாட்சி இல்லாவிடில் பொருளாதாரக் குடியாட்சியை அடைய முடியாது. ஆனால், மார்க்சியக் கோட்பாட்டின்படி பொருளாதாரக் குடியாட்சியானது அரசியல் குடியாட்சியை அகற்றுகின்றது. பொருளாதாரக் குடியாட்சியுடன் தொடர்புடையது தான் தொழிற்குடியாட்சி. தொழிற்சாலைகளுக்குள் காணப்படும் குடியாட்சி முறையைக் குறிப்பிடுவது தான் தொழிற்குடியாட்சி.

மக்களின் குடியாட்சி (People's Democracy), முற்போக்குக் குடியாட்சி (Progressive Democracy), சோவியத்துக் குடியாட்சி (Soviet Democracy) ஆகியவற்றை வகைப்படுத்துவது எளிதன்று. மக்களின் குடியாட்சி என்ற செர்ல் இரண்டாம் உலகப் போருக்குப் பின்புதான் வழக்கத்திற்கு வந்தது.

குடியாட்சி என்பதை ஆட்சிமுறையாகவும் கருதலாம். குடியாட்சி என்ற சொல்லின் பொருளுக்கு ஏற்ற முறையில் செயற்பட்ட ஆட்சிமுறை கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஏதென்சு (Athens) நகரத்தில் மட்டுமே காணப்பட்டது. அதீனிய மக்களுக்கிருந்த அதிகாரத்திற்கு இணையாக அதன் பின் எந்த மக்களுக்கும் அதிகாரம் இருந்ததில்லை. இன்றைய குடியாட்சி முறை அதனின்றும் முற்றிலும் மாறுபட்டதாகும். பங்கேற்பிற்குமாறாகப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டது தான் இன்றைய குடியாட்சி. அதிகாரப் பயன்படுத்தலுக்கு மாறாக அதிகார ஒப்படைத்தலைத்தான் இன்று குடியாட்சியில் காணமுடிகிறது. மக்களால் மக்கள் மீது செலுத்தப்படும் ஆட்சி என்று கிரேக்கக் குடியாட்சியை வருணிக்க முடியும். இந்த விளக்கம் இன்றுள்ள மக்களாட்சிகளுக்குப் பொருந்தாது. ஏனென்றால் ஆட்சி புரிவோர் ஆட்சி புரியப்படுவதில்லை. கிரேக்க முறைக் குடியாட்சி இன்றுள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்றதன்று. ஆனால், எல்லாக் காலங்களிலுமிருந்த குடியாட்சிகளிலும் குடிமக்கள், சமூக சமத்துவத்துக்கான சமூக உரிமைகளையும், ஆட்சியில் பங்கேற்றுக் கொள்ளுவதற்கு உதவும் அரசியலுரிமைகளையும் பெற்றிருந்தார்கள் என்பது காணப்படுகிறது.

ஆ.ஜா.

**துணை நூல்கள்:**

**Almond, Gabriel, A.** and **Coleman, James, S.** (Eds) - The Politics of the Developing Areas, Princeton University Press, 1960.

**Bryce, James,** Modern Democracies, 2 Vols. Macmillan, New York, 1921.

**Clegg, Hugha,** A New Approach to Industrial Democracy, Oxford, Blackwell, 1960.

## குடியாட்சிச் சமநிலைக் கோட்பாடு

என்பது சமநிலைக் கோட்பாட்டின் (Socialism) ஒரு வகை (School) ஆகும். பொதுவாகப் புரட்சி வழியிலல்லாமல், சமநிலைக் கோட்பாட்டின் குறிக்கோள்களை அடைவதற்குக் குடியாட்சி முறைகளைச் கூறும் கோட்பாடே குடியாட்சிச் சமநிலைக் கோட்பாடு (Democratic Socialism) என்று கூறப்படுகிறது. இக்கோட்பாடு அண்மையில், இரண்டாம் உலகப் போருக்குப்பின் சுதந்திரத்துடன் தோன்றிய இந்தியா போன்ற புதிய நாடுகளில் மக்களுடைய ஆதரவைப் பெற்றது. அதற்குக் காரணம், இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் ஏறக்குறைய 200 ஆண்டுகளாக, இருந்து வந்த குடியாட்சிமுறையானது அரசியல் சமத்துவம் (Politicial Equality) என்ற அடிப்படையிலமைந்து, ஓரளவேனும் பொருளியல் சமத்துவமில்லாமல், உண்மையில் செல்வர்களுடைய ஆட்சியாக (Oligarchy) இயங்கியதே ஆகும். குடியாட்சி நிறுவன அமைப்புகளுக்குப் பின்னர் உண்மையில் ஆட்சியில் உரிமை பெற்றிருந்தவர் செல்வர்களாக இருப்பின், அது உண்மையில் குடியாட்சி ஆகாது. ஆகையால், உண்மையான குடியாட்சியிலே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் பெரிதும் குறைக்கப்பட்டு, எல்லாக் குடிகளுக்கும் பெருமளவு பொருளாதார சமத்துவம் இருந்தால் தான் குடிகள் யாவரும் ஆட்சியில் சம அரசியல் உரிமையோடு பங்கு கொள்ள இயலும் என்ற கருத்து வேரூன்றிற்று. இக்கருத்தே பல புதிய சுதந்திர நாடுகளிலும், பழைய முதலாளித்துவ முறையைப் பின்பற்றிய நாடுகளிலும் ஆளுவோரால் பின்பற்றப்பட்டுத் தொழில், வாணிகத் துறைகளில் பெருமளவு செயற்படுத்தப்பட்டது.

**கோட்பாட்டின் கூறுகள்:** மக்களுக்கு அரசாங்கத்தில் பங்கு இருத்தல் வேண்டுமென்ற குடியாட்சிக் கொள்கையும், குடியாட்சி உரிமைகளைத் திறமாகக் கையாளுதற்கு உதவியாகச் சமூகத்தில் பெருமளவு ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமளிக்காத பொருளாதார சமத்துவம் இருத்தல் வேண்டுமென்ற சமநிலைக் கொள்கையும் மனித சமூக வரலாற்றின் தொடக்கத்திலேயே காணப்பட்டன. குடியாட்சியின் இயல்பும்,

வடிவமும் காலந்தோறும் மாறுபட்டன. பண்டைய ஏதென்சு நகரரசில் அடிமை வகுப்பாருக்கும், அயல வருக்கும், வணிகருக்கும், அதீனியக் குடிகளின் பெண் களுக்கும் அரசியலில் பங்கு இல்லாத வகையில் ஒரு வகைக் குடியாட்சி நடைபெற்றது. இங்கிலாந்தில் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் நிலவுடைமை யாளர்களுக்கும் வணிகருக்கும் முதல் வளமுடையோ ருக்கும் அரசியலில் பங்கு இருக்கத்தக்க வகையில் குடியாட்சி நடைபெற்றது. எவ்வாறாயினும், ஒரு நாட்டில் குடிமக்களுக்கு அரசாங்கத்தில் பங்கு இருத் தல் வேண்டுமாயின், அங்கு வயது வந்த எல்லாக் குடியாட்களுக்கும் தேர்தல்களில் வாக்கு அளிக்கவும், வேட்பாளராகப் போட்டியிடவும் குறித்த காலங்களில் தேர்தல்கள் நடத்தவும், பணித்தகுதி உடையோர் அரசாங்க அலுவல்களைப் பெறவும் உரிமை இருத் தல் வேண்டும். சமமான உரிமைகளும், பேச்சுரிமை யும், கருத்து வெளியிடும் உரிமையும், கழகம் அமைக் கும் உரிமையும் யாவர்க்கும் இருத்தல் வேண்டும். நீதிமன்றமானது நிருவாகத்தின் கிளையாகச் செயற் படாமல், அதன் கட்டுப்பாட்டினின்றும் விடுபட்டு, சட்டங்களை ஆதாரமாகக் கொண்டு பணி செய்தல் வேண்டும். செய்தியாளருக்குச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். சட்டத்தின் ஆட்சியே தவிர அங்கு ஒரு குறிப்பிட்ட ஆளின் கருத்துக்கேற்ப ஆட்சி நடைபெறு தல் கூடாது. ஒருவர் கருத்தை மற்றவர் அறியுமளவுக் குப் பொறுமைப் பண்பும், கல்வி பெறும் வாய்ப்புக ளும், சாதாரண மக்களிடத்து ஓரளவேனும் திறமை யும், பண்பும், தகுதிகளுடைய தலைவர்கள் தோன்று தற்கு வாய்ப்புகளும் இருத்தல் வேண்டும். இவையே குடியாட்சியின் கூறுகளாம்.

நாட்டின் செல்வ ஆதாரங்களும், தொழிலும், வாணிகமும் அரசாங்கத்தின் உடைமைகளாதலும், உற்பத்தியையும் பங்கிடுதலையும் தேசிய நலத்தின் பொருட்டு அரசின் சார்பாக அரசாங்கம் கட்டுப் படுத்துதலும், சமநிலைக் கோட்பாட்டின் பொருளா கும். இக்குறிக்கோள்களே சமநிலைக் கோட்பாடாக வும் இயக்கமாகவும் அமைந்துள்ளன. கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளிலும், பின்னரும் ஏற்பட்ட புதிய நாடுகள் கண்டுபிடிப்பும் குடியேற்றங்களை நிறுவும் கொள்கையும், வாணிக வளர்ச்சியும், கி.பி. 1760-1830 -ஆம் ஆண்டுகளிலேற்பட்ட தொழிற்புரட்சியும் **(Industrial Revolution)** தொழில் வளர்ச்சிக்கும் மூல தன வளர்ச்சிக்கும் வழிவகுத்தன. ஆதலின், இங்கி லாந்தில் தொழிற்சாலைகளை நிறுவி, பொருள் உற்பத்தி செய்யவும், பொருள்களை வாங்கவும், விற் கவும் கூடிய முதலாளி வகுப்புத் தோன்றிற்று. நாட் டில் யாவருக்கும் அரசியலுரிமைகள் சமமாக இருந்தா லும், உண்மையில் இவ்வுரிமைகளைப் பயன்படுத்திப் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுதற்கும், அமைச்சரவைகளை அமைத்தற்கும் முதலாளி வகுப் பாருக்கே வாய்ப்புகள் இருந்தன. அவர்கள் அரசாங்கங் களை அமைத்துத் தம்தொழில், வணிக நலன்களைப் பாதுகாத்தற்கே விரும்பிய காரணத்தால், அதற்கேற்ற சட்டச் செயன்முறைகளைக் கொண்டுவந்து, தொழி லாளர் நலனைப் புறக்கணித்தனர். அரசாங் கம் அமைதி, பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு முதலி யவை பற்றிய பணிகளைத் தவிரப் பொருளாதாரத் துறைகளில் ஈடுபடலாகாது என்ற தனியார் சுதந் திரக் கொள்கையைக் **(The Individualistic Theory or Laissez Faire)** கடைபிடித்துப் பொருளாதாரத் துறையில் சமத்துவமின்மையை உண்டாக்கினர். அச் சூழ்நிலைகளில் சமநிலைக் கோட்பாடு உருவாயிற்று. எல்லாப் பெரிய தொழில்களும், விளைநிலமும் அர சின் உடைமையாக அதாவதுசமூகம் முழுவதன் உடை மையாக ஆக்கப்படுதலும், அவையெல்லாம் ஒரு சில ருடைய நலனுக்காக அல்லாமல், பொது நன்மைக் காக ஒரு தேசியப் பொருளாதாரத் திட்டத்துக்கேற்ப நடத்தப்படுதலும் வேண்டும் என்பதும் சமநிலைக் கொள்கையின் கூறுகளாகும்.

உருசியா நாட்டில் 1917-ஆம் ஆண்டுப் பொது வுடைமைப் புரட்சிக்குப்பின் நிறுவப்பட்ட புதிய பொதுவுடைமை அரசாங்கமானது, மார்க்சின் சம நிலைத் கோட்பாட்டைச் **(Marxian Socialim)** செயற் படுத்தும் பொருட்டு, அங்குப் பொதுவுடைமைக் கட்சி ஒன்றே செயற்படவும், தேர்தல்களில் போட்டி யிட்டு அரசாங்கத்தை அமைக்கவும், தொழிலையும், வாணிகத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்திப் பல பொருளாதாரத் திட்டங்களை எதேச்சாதிகாரமான முறையில் செயற்படுத்தவும் செய்தது. அதனால் பொருளாதாரச் சமத்துவமின்மை ஓரளவு நீக்கப்பட் டது. அரசாங்கம் குடியாட்சியின் சில கூறுகளை உடையதாயிருப்பினும், அங்கு மேலை நாடுகளில் காணப்பட்ட குடியாட்சி மரபுகளாகிய அரசியற் கட்சிகளமைக்கும் சுதந்திரம், அரசாங்கத் தவறுகளை அச்சமின்றிச் சுட்டிக்காட்டும் உரிமை முதலியவை இல்லை. எனினும், பொருளாதாரச் சமநிலை ஏற்படு தற்கு அரசாங்கக் கட்டுப்பாடு பெருமளவு பொருளா தாரத் துறையில் கொண்டு வரப்படுதல் வேண்டு மென்றும், அதனைச் செயற்படுத்துதலும், குடியாட்சி மரபுகளாகிய கட்சி அமைக்கும் உரிமை, அரசாங் கத்தை மாற்றுதற்கு உரிமை முதலியவற்றின் வாயி லாக நடைபெறுதல்வேண்டுமென்றும், மேலைநாட்டுக் குடியாட்சிகள் ஒப்புக் கொண்டு, குடியாட்சிக் கூறுகளைச் சமநிலைக்கூறுகளோடு இணைத்துச்

சருவாதிகார முறையில் சமநிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்தாமல் விடுத்தன. அதனால் புதிய வகைச் சமநிலைக் கோட்பாடுகள் தோன்றின. ஆங்கில நாட்டின் குடியாட்சி மரபுகளின் வழியிலே சமநிலைக் கொள்கையின் குறிக்கோள்களை அடைதற்காகத் தொழிற்கட்சி என்னும் அரசியற் கட்சி கி.பி. 19-ஆம் நூற்றாண்டினிறுதியில் தோன்றிற்று. அது அதிக வருமானம் பெறுவோருக்கு வருமான வரி விகிதத்தை உயர்த்தியும், பல தாராள சீர்திருத்தங்களைச் செய்தும், ஓரளவு சமூக, பொருளியல் சமத்துவத்தைத் தோற்றுவித்தது. புரட்சி வாயிலாகவோ, சருவாதிகார ஆட்சியின் வாயிலாவோ சமநிலைக் குறிக்கோள்களை அடையாமல், மக்களுடைய பெரும்பான்மை ஆதரவைச் சுதந்திரத் தேர்தல்கள் வாயிலாகப் பெற்று, ஆட்சியை அமைத்துப் பல பொருளியற் சீர்திருத்தங்களைச் செய்தல் இயலுமென்று அந்நாடு எடுத்துக் காட்டிற்று.

**இந்தியாவில் குடியாட்சிச் சமநிலைக் கொள்கை:** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு குறிப்பிடத்தக்க இயல்பு, அதில் கூறப்பட்டிருக்கும் மத்திய மாநில அரசாங்கங்கள் ஆங்கிலப் பாராளுமன்றக் குடியாட்சி வகையைச் சார்ந்து இருப்பதே ஆகும். அவையெல்லாம் குடியாட்சி அரசாங்கத்தின் கூறுகளைப் பெற்றுள்ளன. அவ்வரசியலமைப்பு சமூக, அரசியல் துறைகளில் சம உரிமைகளை வழங்குவதோடு, பொருளியல் துறையில் சமத்துவத்தை நிலைநிறுத்தற்கு ஆவன செய்யுமாறு மத்திய மாநில அரசாங்கங்களுக்கு அரசு இயக்க நெறி விதிகளை (Directive Principles of State Policy) வகுத்துள்ளது. மேலும், உருசியாவில் செய்யப் படுதலைப் போல, திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி (Planned Economic Development) என்ற அதிகாரத்தை மத்திய அரசாங்கத்துக்கு அளித்துள்ளது. ஆறு ஐந்தாண்டுத் திட்டங்கள் 1951-இலிருந்து கொண்டு வரப்பட்டு மக்களால் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குப் பொறுப்பாக இயங்கும் மத்திய, மாநில அரசாங்கங்களின் வாயிலாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சி தான் நடத்திய ஆவடி மாநாட்டிலும் (1955), புவனேசுவர மாநாட்டிலும் (1964) குடியாட்சிக் சமநிலைக் கொள்கையை நிறைவேற்றுதலே தன் பணி என்று கூறிற்று. இக்கொள்கையின் விளைவாகப் பெருமளவு முதலீடு தேவைப்படுகிற பல கனரகத்தொழில்களை அரசாங்கமே முதல் போட்டு நடத்துகிறது; சிலவற்றில் பெருமளவு பங்கை அரசும், மீதியைத் தனியாரும் போடுகின்றனர்; சில தொழில்களை நடத்துதற்கு அரசாங்கம், மானிய உதவியும், குறைந்த வட்டிக்குக் கடனுதவியும் அளிக்கின்றது. அது ஏழை மாணவருக்கு இலவசக் கல்வி, மருத்துவம், வேலை, உயிர் காப்பீட்டு வசதி முதலியவற்றை அளிக்கிறது. வருமான அளவுக்கேற்பப் படி நிலைகளில் (Slab Systems) வரி விகிதத்தை உயர்த்திப் பொருளாதாரத் துறையில் சமத்துவத்தை ஏற்படுத்த முயன்று வருகிறது. பா. சு.

**துணை நூல்கள்:**

Joad, C,E.M. Introduction to Modern Political Theory, Oxford, 1924.

Coker F.W., Recent Political Thought, Appleton, 1934.

Laidler H.W., Sociol Economic Movements, Routledge & Kegan Paul, 1949.

## குடியாட்சிசார் அதிகாரக் குவிப்பு:

பொதுவுடைமைக் கட்சியின் கட்டுப்பாட்டையும் தரத்தையும் காப்பாற்றும் பொருட்டுச் சோவியத்து யூனியனின் மக்கள் தொகையில், ஒரு மிகச் சிறிய பகுதியினரே பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். கட்சியின் வலிமையானது கட்சி உறுப்பினர்களிடையே காணப்படும் கருத்தொருமைப்பாடு, கட்சிக் கட்டுப்பாடு, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் அவர்களின் வாழ்க்கை, கட்சிக் கட்டுப்பாட்டிலிருந்து பிறழாத உறுப்பினர்களின் வாழ்க்கை ஆகியவற்றில் அடங்கியிருக்கிறது. ஆகையால், சோவியத்துக் குடிமக்கள் கட்சி உறுப்பினர்களாக ஆவதற்குக் கடுமையான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சோவியத்துக் குடிமகன் ஒரு கட்சி உறுப்பினராக வரவேண்டுமெனில் திறமையும் தகுதியும் பெற்றிருத்தல் வேண்டும். உள்ளூர்க்கட்சி நிறுவனம் நடத்தும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும். குறைந்தது மூன்று ஆண்டுகளாவது மூன்று கட்சி உறுப்பினர்கள், அவர் உறுப்பினர் ஆவதற்குப் பரிந்துரை செய்து, மாவட்டக் கட்சிக்குழு அவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தால்தான் அவர் உறுப்பினராக முடியும்.

சோவியத்து அரசியலமைப்பின் 6-ஆம் விதி பொதுவுடைமைக் கட்சிக்கு மிகப் பெரிய பங்கு அளித்திருக்கிறது. இவ்விதி பொதுவுடைமைக் கட்சிக்கு மட்டும் தேர்தலில் போட்டியிட உரிமை அளித்திருக்கிறது. சோவியத்து அரசாங்கத்தில் பல்வேறு அரசாங்க நிறுவனங்கள், அரசாங்கத்தின் பணிகளைச் செய்வதற்கு வழி வகுக்கப்பட்டிருந்த போதிலும், அவை பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்களின்

கட்டுப்பாட்டில்தான் செயற்பட வேண்டும். கட்சியின் உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பல்வேறு பணிகளைச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அரசாங்க நிருவனங்களில் முக்கிய பங்கேற்றுச் செயற்படுகிறார்கள். எனவே சோவியத்து ஒன்றியத்தில் அரசாங்கச் செயல்களையும் கட்சியின் செயல்களையும் வேறுபடுத்திக் காணமுடியாது. கட்சி உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே வேறுபாடோ சச்சரவோ ஏற்படுவதில்லை.

பொதுவுடைமைக் கட்சி ஒரு கூம்பின் அமைப்பைக் கொண்டுள்ளது. அடிமட்டத்தில் கட்சிச் சிறு குழுக்கள் (Party Cells) அமைக்கப்பட்டுள்ளன. அவையே பொதுவுடைமைக் கட்சியின் அடிப்படை உறுப்புகளாகும். ஒவ்வொரு கட்சிக்குழுவும் குறைந்தது மூன்று கட்சி உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கூட்டுப் பண்ணையிலும் படைப்பிரிவிலும் இக்கட்சிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இவையே கொள்கைப் பரப்புதலின் வாயிலாகச் சாதாரண மக்களுக்கு அரசியல் அறிவைப் புகட்டுகின்றன. ஒவ்வொரு அடிப்படை உறுப்பும் ஒருசெயலரையும் நிருவாகக் குழுவையும் கொண்டுள்ளது. இவ்வடிப்படை உறுப்பு நகர அல்லது மாவட்டக் கட்சி மாநாட்டிற்குப் பேராளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. கட்சியின் அடிப்படை உறுப்புகளின் உயர் உறுப்புகளாக நகர மாநாடுகளும் மாவட்ட மாநாடுகளும் (City and District Conferences) விளங்குகின்றன. இம்மாநாடு, ஐந்திலிருந்து ஏழுபேருக்கு மிகைபடாத ஒரு செயற்குழு, செயலர் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. இவற்றிற்கு மேற்பட்ட நிலையில் கட்சி உறுப்பான வட்டார மாநாடு (Regional Conference), குடியரசுக் காங்கிரசுக்கு (Republican Congress) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. இம்மாநாடு 18 மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறது. இம்மாநாடு அல்லது காங்கிரசு அனைத்து ஒன்றிய காங்கிரசுக்குப் (All Union Congress) பேராளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. அனைத்து ஒன்றியக் காங்கிரசு ஏறக்குறைய 5000 உறுப்பினர்களைக் கொண்டது; மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை கூடுகிறது. இவ்வமைப்பு ஒரு மையக் குழுவைத் (Central Committee) தேர்ந்தெடுக்கிறது. மையக் குழு கட்சிக் கொள்கைகளைத் தேவையான திருத்தங்களுடன் செயற்படுத்துகிறது. பொதுவுடைமைக் கட்சியின் மிகவும் வலுவான உறுப்பு மையக்குழுவாகும். மையக் குழுவில் மூன்று வித அமைப்புகள் உள்ளன. அவையாவன: அரசியற் குழு (Polit bureau), செயலகம் (Secretariat), கட்சிக் கட்டுப்பாட்டுக் குழு (Disciplinary Committee). அரசியற் குழுவில் மையக் குழுவின் எல்லா அதிகாரங்களும் தேங்கிக் கிடக்கின்றன. சோவியத்து யூனியனின் கொள்கைகளை உருவாக்குவது அரசியற் குழுவாகும். பொதுச் செயலர், கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார். இதன் கூட்ட நடவடிக்கைகள் இரகசியமாகப் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. செயலகம் கட்சி உறுப்புகளுள் மிகச் செல்வாக்குப் பெற்றதாகும். இது மையக் குழுவின் தீர்மானங்களை நிறைவேற்றுகிறது. உறுப்பினர்கள் தொடர்புடைய அரசாங்கத் துறையைக் கட்டுப்படுத்துகிறார்கள். கட்சிக் கட்டுப்பாட்டுக்குழு, கட்டுப்பாட்டினைக் காக்கும் உச்ச உறுப்பாகும். கட்சி உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றுதலில் இக்குழுவின் தீர்ப்பு இறுதியானது.

பொதுவுடைமைக் கட்சி குடியாட்சிசார் அதிகாரக் குவிப்புக் (Democratic Centralism) கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. குடியாட்சிசார் அதிகாரக்குவிப்புக் கோட்பாட்டில், அடிமட்டத்திலுள்ள கட்சி உறுப்பினர் அனைவர்க்கும் விவாதங்களில் பங்கு பெறும் உரிமை இருக்கும். அதிகாரங்கள் அனைத்தும் மேல்மட்டத் தலைவர்களிடம் இருக்கும். இக்கோட்பாடு கீழ்க்காணும் நான்கு கூறுகளைக் கொண்டது.

1. மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரையிலுள்ள கட்சியின் எல்லா உறுப்புகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

2. கட்சியின் கீழ் உறுப்புகள், கட்சிக்கும், கட்சியின் மேல் உறுப்புகளுக்கும் பொறுப்புடையவை.

3. கட்சியின் கட்டுப்பாட்டு விதிகளை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் கருத்தை ஏற்க வேண்டும்.

4. கட்சியின் மேல்மட்ட உறுப்புகளின் தீர்மானங்கள் கீழ்மட்ட உறுப்புகளைக் கட்டுப்படுத்தும்.

கொள்கையைப் பற்றி இறுதியாக முடிவு செய்வதற்கு முன்னர், கட்சி அக்கொள்கையைப் பற்றி விவாதிப்பதற்கு, உறுப்பினர்களுக்கு முழு உரிமை அளிக்கிறது. ஆனால், அக்கொள்கையைப் பற்றி முடிவு எடுத்துவிட்டால், அதை உறுப்பினர்கள் அனைவரும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். கட்சி முடிவு செய்த பிறகு, கட்சி முடிவுக்கு எதிராக ஆதரவு திரட்டுவது சோவியத்து ஒன்றியத்தில் மாபெரும் குற்றமாகும். கே.பா.

**துணை நூல்கள்:**

**Leonard Schapiro**, The Communist Party of Soviet Union, New York, 1960.

**John N. Hazard**, The Soviet System of Government, Chicago, 1957.

**குடியாட்சிசார் அதிகாரப் பரவல்**: மக்களுக்காக, மக்களுடைய பிரதிநிதிகளால் ஆளப்படும் ஆட்சி குடியாட்சி என ஆபிரகாம் லிங்கன் குடியாட்சிக்கு விளக்கம் அளித்துள்ளார். குடியாட்சியுடைய நாடுகளில் அரசியலமைப்புச் சட்டம் உயர் அதிகாரம் பெற்று விளங்குகிறது. இவ்வரசியலமைப்புச் சட்டம் கூட்டாட்சியாக இருந்தால் நடுவண் அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் அதிகாரத்தைப் பிரித்து வழங்குகிறது. ஒற்றையாட்சி அமைப்புடைய அரசாக இருந்தால், நடுவண் அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்குகிறது. குடியாட்சியுடைய நாடுகள், பல்வேறு பணிகளைச் செயற்படுத்துகின்றன. இப்பணிகள் நடுவண் அரசாங்க அதிகார மூலமாகவோ, நடுவண் – மாநில அரசாங்க அதிகார மூலமாகவோ மாநில அதிகார மூலமாகவோ செயற்படுத்தப்படுகின்றன. நடுவண் – மாநில அரசாங்கங்களின் பணிகள், சட்டம் ஒழுங்கு காப்பதும், நாட்டைப் பாதுகாப்பதும், வரி வாங்குவதும், நாணயம் அச்சிட்டு வெளியிடுவதும், வெளி உறவுகளைக் கவனிப்பதுமாக இருந்த காலத்தில், நடுவண் – மாநில அரசாங்கங்கள் தத்தம் அரசாங்க அதிகாரிகள் வழியாக மேற்கூறிய பணிகளைச் செயற்படுத்தி வந்தன. ஆனால், இப்பொழுது எல்லாக் குடியாட்சி நாடுகளும் வேளாண்மை, கால்நடை, கூட்டுறவு, நீர்ப்பாசனம், குடிசைத் தொழில்கள், அடிப்படைக் கல்வி, உள்ளூர்ச் செய்தித் தொடர்பு, சுகாதாரம், மருத்துவ வசதி, உள்ளூர்த் தேவைகள் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுகின்றன. வளர்ச்சிப் பணிகளைத் திறம்படச் செயற்படுத்தப் போதுமான அளவு அதிகாரமும், குறிப்பிட்ட நிதிவசதிகளும் கொண்ட புதியதொரு ஊரக உள்ளாட்சி நிறுவன அமைப்புகளை உருவாக்குவதுதான் குடியாட்சிசார் அதிகாரப்பரவல் (Democratic Decentralisation) எனப்படும்.

**இந்தியாவில் செயற்படும் வகை**: இந்தியாவில் பல்வந்தரே மேத்தா, குடியாட்சிசார் பன்முகப்படுத்தல் அடிப்படையில் மூன்று படிநிலை அமைப்பில் புதிய உள்ளாட்சி நிறுவனங்கள் ஏற்படப் பரிந்துரை செய்தார். (காண்க: உள்ளாட்சி முறை). அவரது பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் மாவட்ட வளர்ச்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி என்ற மூன்று படிநிலை அமைப்பில் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்ற உள்ளாட்சி நிறுவனம் பெரிய அளவிலான பகுதியாகவோ சிறியஅளவிலான பகுதியாகவோ இருக்கக் கூடாது. பெரிய பகுதியாக இருந்தால் மக்களின் ஆர்வத்தை வளர்ச்சிப் பணிகளில் அதிக அளவில் ஊக்குவிக்க இயலாது. மிகச் சிறிய பகுதியாக இருந்தால் தேவையான அளவிற்குத் திறமையான பணியை வருமானக் குறைவினால் செய்ய இயலாது. குடியாட்சி பன்முகப்படுத்தல் அடிப்படையில் அமைந்த ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள் சிறந்த முறையில் செயற்பட வேண்டுமானால், உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் போதுமான அதிகாரங்களும் பொறுப்புகளும் மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் செயற்பட ஒப்படைக்கப்படவேண்டும். உள்ளாட்சி நிறுவனம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு செயற்பட, உள்ளாட்சித் தேர்தல் குறிப்பிட்ட இடைவெளிகளில் நடைபெறவேண்டும். மேற்கூறிய குறைபாடுகள் நீக்கப்பட்டால் குடியாட்சிசார் அதிகாரப்பரவல் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் சிறந்த முறையில் செயற்பட முடியும். கே.பா.

**துணை நூல்**:

**Maheshwari, S.R.**, Local Government in India, Lakshmi Agarwal, Agra, 1984.

**குடியாத்தம்** தமிழ் நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளதொரு நகரம். குடியேற்றம் என்ற சொல் மருவி குடியாத்தமாகியது. இந்நகரம் வாரந்தோறும் நடைபெறும் சந்தைக்கும் கால்நடைச் சந்தைக்கும் சிறப்பு வாய்ந்தது. இங்கு உள்ள மக்களின் முதன்மைத் தொழில் நெசவுத் தொழிலாகும். இவ்வூரிலிருந்து புகையிலை, புளி, தோல், வெல்லம், தீப்பெட்டி முதலியன தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்நகர் கி.பி.1885-ஆம் ஆண்டு முதல் நகராட்சிக் கழக நிருவாகத்தின் கீழ் வளர்ந்து வந்துள்ளது. கடந்த எண்பது ஆண்டுகளில், நகராட்சி நிறுவனம் இந்நகரின் பல முன்னேற்றங்களுக்கான வழிகளை வகுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் அடர்ந்த காடாக இருந்த இப்பகுதியில் அண்டை மாநிலங்களிலிருந்து மக்கள் குடியேறிய பிறகு இப்பகுதி ஏற்றம் பெற்றதால், இதற்கு 'குடி ஏற்றம்' என்று பெயர் அமைந்தது என்று கூறுவாருமுளர். பல்வேறு வகையான மக்கள் இங்குக் குடியேறியிருந்தும் அவர்கள் ஒருவருக்கொருவர் பகைமை கொள்ளாது ஒற்றுமையாக இருந்து வந்துள்ளதாக அறியக் கிடக்கிறது. இதைச் சுற்றியுள்ள, ஆந்திரா, கருநாடகம், கேரளம் ஆகிய மூன்று பகுதிகளிலிருந்தும் மக்கள் அக்காலத்தில் இங்குக் குடியேறியிருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது. பல மூலப் பொருள்

களை வெளியிலிருந்து கொணர்ந்து இங்கு உள்ள மக்கள், பல தொழில்களை நடத்தி வந்துள்ளனர். அத்தகைய தொழில்களில் முக்கியமாகத் தீப்பெட்டித் தொழிற்சாலை குறிப்பிடத்தக்கது. சிவகாசிக்கு அடுத்தபடியாக, சிறப்பான இடத்தை இந்நகரம் பெறுகிறது. அரை இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இத்தொழிற்சாலையால் பயன் பெறுகின்றனர். இந்த நிலையத்தில், 10,000 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கின்றனர். ஊருக்குக் கிழக்கில் ஒரு சிறப்புப் பெற்ற விநாயகர் கோயிலும் மேற்கில் கரும்புலீசுவரர் கோயிலும் விளங்குகின்றன. ஒரு காலத்தில் ஒரு கரும்புலி ஒரு குழந்தையைக் கவ்விக் கொண்டு ஓடியதாகவும், இக்கோயிலின் அருகே சென்றதும் அதை அங்கேயே போட்டுவிட்டு ஓடி விட்டதாகவும் ஒரு கதை வழங்குகிறது. கரும்புலியின் அச்செயலுக்குக் காரணமான ஈசனைக் கரும்புலீசுவரர் என்று பெயர் கொடுத்து மக்கள் வழிபாடு செய்து வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நகரம் கௌண்டன்ய மகாநதியின் இருகரைகளிலும் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் வைகாசி மாதம் நடைபெறும் கங்கை அம்மன் திருவிழா புகழ் பெற்றது. இந்நகரம் பல பேட்டைகளைக் கொண்டு விளங்குகிறது. புகைவண்டி நிலையமும் உள்ளது. இந்நகரத்தின் அருகில் உள்ள மேல் ஆலத்தூர் என்ற இடத்தில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. இந்நகரத்தைச் சுற்றி உள்ள பகுதிகளிலும் தேங்காய், கரும்பு, நெல் முதலிய பயிர் வகைகள் மிகச் சிறந்த அளவில் பயிரிடப்படுகின்றன.

இவ்வூரில் மேல்நிலைப் பள்ளிகளும் ஒரு கல்லூரியும் ஒரு பல்துறைத் தொழில்நுட்பக் கல்லூரியும் உள்ளன. விரைவாக வளர்ந்து வரும் வட்டங்களில் குடியாத்தமும் ஒன்று. இந்நகரத்தின் மக்கள்தொகை 74,408 (1981) சு.இரா.

**குடியானவர் கலகங்கள்**: சமத்துவத்தைப் பற்றித் தொழிலாளருடைய கோட்பாடு ஒன்றை முதன்முதலில் ஆங்கில வரலாற்றில் தோற்றுவித்த நிகழ்ச்சி 1381–ஆம் ஆண்டின் குடியானவர் கலகம் (Peasants' Revolt) ஆகும். இதைப்போலவே பிரான்சில் கி.பி. 1351–இல் குடியானவர் கலகமும், செருமனியில் மார்ட்டின் லூதருடைய மறுப்புச் சீர்திருத்த இயக்கம் நடைபெற்ற காலத்தில் தோன்றிய கி.பி. 1524-25–ஆம் ஆண்டுக் குடியானவர் போரும் பலவித சமூக, அரசியல் கருத்துகளையும் விளைவுகளையும் தோற்றுவித்தன,

**ஆங்கிலக் குடியானவர் கலகம்** இங்கிலாந்தின் வரலாற்றில் கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கலகமாகும். இரண்டாம் இரிச்சர்டு (Richard II) என்பவர் இங்கிலாந்தின் மன்னராக இருந்தபொழுது ஏற்பட்ட முக்கியமான நிகழ்ச்சி குடியானவர் கலகம் (The Peasants Revolt). இது 1381–இல் நடைபெற்றது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பொதுவாக அம்மன்னன் ஆட்சி விரும்பத்தக்கதாக இல்லை. மன்னன் பட்டத்திற்கு வரும்போது பதினோரு வயதினனாக இருந்ததால், ஒன்பதின்மர் குழு அரசியலை நடத்திவந்தது. இந்த ஒன்பது உறுப்பினர்களும் ஒற்றுமையாக இயங்கவில்லை. பாராளுமன்றம் தனது உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்த முற்பட்டது. ஒரு நிலையான கொள்கை அரசியலில் பின்பற்றப்படவில்லை. நாட்டின் செல்வர்கள் சுய நலத்திற்காக மக்கள் துன்புறும்வகையில் சட்டங்களை நிறைவேற்றிவந்தனர். கருங்கொள்ளை நோய் பல தொழிலாளர்களை மாய்த்துவிட்டதால் நாட்டில் உழைப்பவர்கள் எண்ணிக்கை குறைந்திருந்தது. வேளாண்மைப் பொருள்களின் விலை உயர்ந்துவிட்டது. ஏழை உழவர்கள் உயிர் வாழ்வதற்கே போராட வேண்டியதாயிற்று. பல நெருக்கடிகளுக்கு உள்ளாயிருந்த குடியானவர்கள் மீது மடாலய அதிபர்களும், பிரபுக்களும் தொழிலாளர் சட்டங்களை இரக்கமின்றி நிறைவேற்ற முற்பட்டதால் அவர்கள் நிலை மிகவும் வருந்தத்தக்கதாயிற்று. சட்டங்களை எதிர்த்துக் குடியானவர்கள் கலகம் செய்து, மடாலயங்களையும் தாக்கலாயினர். நாட்டின் பிரபுக்களும் அவர்களுக்கு உதவி செய்ய முற்பட்ட சட்ட வல்லுநர்களும் தாக்குதல்களுக்கு உட்பட்டனர். பல சட்ட அறிஞர்கள் கொலையுண்டனர்.

அக்காலத்தில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே 'நூறாண்டுப் போர்' தொடர்ந்து நடைபெற்று வந்தது. பிரான்சு நாட்டில் ஆங்கிலேயப் படையினர் படுதோல்வியடைந்து வந்தனர். போர் திறமையான முறையில் நடத்தப்படாததால் மக்களின் மனக்கசப்பு மேலும் அதிகரித்தது. போரைத் தொடர்ந்து நடத்த அரசியலாருக்குப் பொருள் தேவைப்பட்டதால் புதிய வரிகள் விதிக்கப்பெற்றன. பாராளுமன்றம் கி.பி. 1381–இல் தலைவரி ஒன்றை விதித்தது (Poll tax). அதன்படி ஏழை ஒவ்வொருவரும் ஒரு சில்லிங்கும் (Shilling), பணக்காரர் ஒவ்வொருவரும் 3 பவுன்களும் கொடுக்கவேண்டுமெனவும் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்த வரி மூலம் 1,60,000 பவுன் வசூலிப்பது என்று பாராளுமன்றம் முடிவு செய்தது. இந்த வரி குடியானவர்களைப் பெரிதும் பாதித்தது. முன்னரே மனம் நொந்து வருந்திக்கொண்டி

ருந்த குடியானவர்களுக்கு இந்த வரி ஒரு பேரிடியாக இருந்தது. ஆகவே இது அவர்கள் கலகத்திற்கு உடனடிக் காரணமாயிற்று. கி.பி. 1381-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் கென்ட்டு பகுதியிலிருந்து யார்க்சயர்(York Shire) வரையில் கலகங்கள் மூண்டன. தலைவரியை வசூலிக்கவந்த ஊழியர் கொலையுண்டனர். கென்ட்டு குடியானவர்கள் போர்க் கருவிகளைக் கொண்டு கொலைகளையும் கொள்ளைகளையும் நடத்தலாயினர். பல பண்ணைகள் தீக்கிரையாக்கப்பட்டன. பண்ணைப் பட்டியல்களும் வரிவிதிப்புப் பத்திரங்களும் கொளுத்தப்பட்டன. பல்கலைக் கழகத் திருச்சபையும் தாக்குண்டது. தனி உரிமைக்கான சான்று ஆவணங்கள் பல தீக்கிரையாயின.

குடியானவர்கள் சுற்றுப்புறப் பகுதிகளில் கலகங்களை விளைவித்துவிட்டு இலண்டன் மாநகர் நோக்கிச் சென்றனர். கென்ட்டு பகுதியிலிருந்து சென்றவர்களுக்கு வாட் தைலர் (Wat Tyler) என்பவன் தலைமை தாங்கினான். அரசரை அவருடைய தீய அமைச்சர்களின் பிடியிலிருந்து விடுபடச் செய்வதே அவர்கள் நோக்கம் என்று கூறப்பட்டது. இலண்டன் மாநகர் மக்கள் கலகக்காரர்களுக்கு உதவியாகத் தமது கோட்டை வாயிலைத் திறந்துவிட்டனர். தலைநகரிலும் கொள்கைகளும் கொலைகளும் நடைபெறலாயின. பிரபுக்களின் மாளிகைகள் சூறையாடப் பெற்றன. இளம் மன்னர் இரிச்சர்டு, கலகக்காரர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வந்தார். குடியானவர்கள் கோரிக்கைகளைக் கேட்டு, மைல் எண்ட்டு என்னுமிடத்திற்கு அவர்களை வரச்செய்து அங்குக் குறைகள் பற்றி விவாதம் நடந்தது. அரசன் அவர்களின் குறைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதி கொடுத்ததனால் பலர் தத்தம் வீடுகளுக்குத் திரும்பினர். ஆனால் வாட் தைலரும் ஆயிரத்திற்கு மேற்பட்ட முரடர்களும் கலகத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். அரசரின் வீரர்களுள் ஒருவன் வாட் தைலரை வெட்டி வீழ்த்தினான். சினம் கொண்ட கலகக்காரர்கள் அரசரைச் கொலை செய்யவேண்டுமென்று கூக்குரலிட்டு ஆரவாரம் செய்தனர். இரிச்சர்டு மன்னர் குதிரை மீது ஏறி அவர்கள் மத்தியில் சென்று, தாம் மக்களின் தலைவர், மக்களுக்கு நீதி வழங்கப்படும் என்று உரக்கக் கூறிக் கலகக்காரர்களை அமைதியுறச் செய்தார். குடியானவர்களின் கோரிக்கைகளைச் சாசனங்களின் வாயிலாக மக்களுக்கு வழங்கினான். கலகக்காரர்கள் கலைந்து சென்றனர். அரசரின் இச்செயல், பிரபுக்களின் கோபத்தை மிகுதியுறச் செய்தது. அரசன், கலகக்காரர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கியிருந்ததைப் பொருட்படுத்தாது, பிரபுக்கள் தமக்குத் தீங்கிழைத்தவர்களைத் தூக்கிலிட்டுக் கொல்ல முற்பட்டனர். பல கலகத் தலைவர்கள் இவ்வாறு கொலையுண்டனர். அரசர், தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் குறைந்த அளவு பண்ணையாள் (Villeinage) முறையையாவது அகற்ற முயன்றார். ஆனால், பாராளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் அவர் முயற்சியை ஆதரிக்கவில்லை. அரசர் வழங்கின சாசனங்கள் யாவும் சட்ட விரோதமானவை என்று அறிவித்தனர். அரசர் சட்ட சபைக்குப் பணிந்து போக வேண்டியதாயிற்று. கி.பி. 1382-இல் உயிரோடிருந்த கலகக்காரர்களை அரசர் மன்னித்த செயலைமட்டும் பாராளுமன்றம் ஏற்றுக் கொண்டது.

குடியானவர் கலகம் வெற்றிகரமான'சில பலன்களைக் கொடுத்தது என்பதை மறுப்பதற்கில்லை. இப்பெருங் கலகத்தினால் பல நிலவுடைமையாளர்கள் அச்சங்கொண்டு எதிர்காலத்தில் தங்களுடைய போக்கில் ஒரு மாறுதலைச் செய்து, குடியானவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கலாயினர். அடுத்த நூற்றாண்டில் பண்ணையாள் முறை சிறிதுசிறிதாக மறைந்து போகத் தலைப்பட்டது. பிரபுக்கள் பண்ணைகளில் உழைப்பதற்குக் கூலி ஆட்களை அமர்த்திக்கொள்ள முற்பட்டனர். பண்ணையாட்கள் காலப்போக்கில் சுதந்திரம் பெற்றனர். குடியானவர்களின் மனக்குறைகள் படிப்படியாகக் குறைந்து வந்ததால், மற்றொரு கலகத்தைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. 'முதல் மனிதராகிய ஆதாமும், அவர் மனைவியாகிய ஏவாளும் பூமியை உழுது பயிரிட்டும், நூல் நூற்றும் வாழ்க்கைப் பொருள்களைச் செய்தும் உழைத்த காலத்தில் உழைப்பாளர், பிரபு என்ற பாகுபாடு இல்லை. ஆகையால், முதல் மனிதர் காலத்திலிருந்து எல்லாரும் தொழில் செய்ய வேண்டிய சமநிலையில் உள்ளவர்களே', என்ற சமூக சமத்துவக் கருத்து இங்கிலாந்தில் வலியுறுத்தப்படுதற்கு கி.பி. 1381-ஆம் ஆண்டின் குடியானவர் கலகம் முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது.

**செருமனியில் குடியானவர் போர்** (கி.பி. 1524-25) : செருமனியில் நிலக் குடியானவர்களுக்கு நெடுங்காலமாக இருந்துவந்த சில உரிமைகளை நிலமானியப் பிரபுக்கள் தள்ளுபடி செய்து விட்டதனால், மிகவும் துன்புற்ற நிலையில் குடியானவருடைய வாழ்க்கை இருந்தது. சமயத்துறையில் எல்லாச் செயல்களையும் சீர்தூக்கி ஆராய உதவும் அளவுகோலாக இருப்பது ஒவ்வொருவருடைய மனச் சான்றும், விவிலிய நூலுமே தவிர, போப்பினுடைய தலைமை அதிகாரமோ கத்தோலிக்கத் திருச்சபையின் சட்டங்களோ வழக்கங்களோ அல்ல என்று மார்ட்டின் லூதரும், கால்வினும், சுவிங்கிளியும் கூறி, போப்பின்

தலைமை அதிகாரத்தை மறுத்துச் சீர்திருத்தக் கருத்து களைப் பரப்பிவந்தனர். இக்கருத்துகளின் விளைவாகச் சமூக சமத்துவக் கருத்துகளும், தனியாள் தீர்ப்பதி காரக்கருத்துகளும் செருமனியக் குடியானவ தொழிலா ளரிடையே வேரூன்றவே, கி. பி. 1522-23-ஆம் ஆண்டு களில் சிறு மானிய வீரர்கள் பெரிய பிரபுக்களுக் கெதி ராகக் கலகம் செய்தனர்; அதைத் தொடர்ந்து, சிறு குடியானவ தொழிலாளர் கூட்டங்கள் தென் செரு மனியில் உள்ளூர் நில உடைமையாளர் உதவியுடன் பெரிய பிரபுக்களின் வீடுகளைக் கொள்ளையடித் தனர். பெரிய பிரபுக்கள் இக்கலகத்தை ஒடுக்க உறுதி கொண்டனர். குடியானவர்களுடைய மிகையான செயல்களைக் கண்ட உலூதர், அவற்றால் தம் ஆதர வாளர்கள் பலர் பிரிதலை விரும்பாமல், அவர் நடுத் தர வகுப்பாரையும் அரசர்களையும் ஆதரித்துக் 'கொள்ளைக்கார, கொலைகாரக் குடியானவ கூட் டத்தாருக்கு எதிர்ப்பு' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்று வெளியிட்டு, குடியானவர் கலகங்களைக் கடுமையாக ஒடுக்குமாறு அரசர்களை வெளிப்படை யாகத் தூண்டினார். துரிஞ்சியா மாநிலத்தில் குடி யானவர் தலைவராகிய தாமசு மன்ட்சர் என்பவர் கொல்லப்பட்டார். மற்ற இடங்களில் குடியானவர் கள் விலங்குகளைப் போன்று ஒடுக்கப்பட்டனர்.

பிற்கால மார்க்சியக் கோட்பாட்டினர், இந்த கி.பி. 1524-25-ஆம் ஆண்டின் செருமனியக் குடியான வர் போரை ஒரு சிறு தொழிலாளர் புரட்சியாகக் கருதுகின்றனர். மற்றும் சிலர் உலூதர் கற்பித்த தனியார் நன்னெறியிலிருந்தும், தனியார் உத்தியி லிருந்துந்தான் செருமானியக் குடியானவரிடையே குருமார் ஆட்சிக்கு எதிர்ப்புத் தோன்றிற்று என்று கூறுகின்றனர்.

**குடியானவர் கலகங்களின் சிறப்புத் தன்மை**: இங் கிலாந்தில் தோன்றிய சமூக சமத்துவக் கோட்பாட் டிற்குச் சமய இயல்புடைய ஒரு வடிவம் கொடுக்கப் பட்டது; 'யாவரும் மனிதரென்ற நிலையில் ஒருவருக் கொருவர் சமமானவர்தாம்' என்ற கருத்து எளிய சாதாரண வகுப்பு மக்களிடையே ஆழமாக வேரூன்றி யதற்குக் காரணம், அவர்கள் அக்கருத்தைக் கிறித்த வக் கோட்பாடுகளாகிய சகோதரத்துவம் (Brotherhood), சமத்துவம் ஆகியவைகளோடு ஒப்பிட்டே எண்ணினர். ஒடுக்கப்பட்ட, தாழ்ந்த நிலையிலுள்ள அவர்கள் சமூக சமத்துவக் கருத்தைச் சமய உணர் வோடேயே ஆர்வத்தோடு வரவேற்றனர். இங்கி லாந்தில் கி.பி. 14-ஆம்நூற்றாண்டில் சமயச் சீர்திருத் தக் கருத்துகளைப் பரப்பிய சான் விக்ளிப்பு (John Wycliffe) என்பாருக்கும், அவருடைய ஆதரவாளர் களுக்கும், பொகீமியாவில் சமயச் சீர்திருத்தக் கருத்து களைப் பரப்பிய சான் அசு (John Huss) என்பாருக் கும் அந்தந்த நாடுகளில் தாழ்ந்த வகுப்பாரிடையே தான் வரவேற்பும் ஆதரவும் இருந்தன; மனித சட் டங்களாலும் நிறுவனங்களாலும் விதிக்கப்பட்ட சலுகை உயர்வு தாழ்வுகளும், தரங்களும் இல்லாமல், கிறித்தவர்களெல்லாரும் சுதந்திரமாகவும், சமத்துவ மாகவும் வாழுகின்ற ஒரு பொதுவுடைமை அமைப் பையே கிறித்தவ மறை நூல் (Gospel)கூறுகிறதென்ற கருத்து பொகீமியாவில் பல சமயப் பிரிவினரிடையே காணப்பட்டது. ஆகையால், அவர்களுடைய இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாக (Mass Movement) முதன் முதலாகத் தோன்றிற்று; அவ்வாறு தோன்றுதற்குக் குடியானவர் கலகமும் உதவி செய்தது.

செருமனியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோன் றிய குடியானவர் கிளர்ச்சிகளை நடுத்தர வகுப்பார் வெறுத்ததனாலும் உலூதர் தம் சமயச் சீர்திருத்தக் கருத்துகளை உலகியலரசர்களுடைய ஆதரவில்லா மல் செயற்படுத்துதல் இயலாது என்று மிகத் தெளி வாக உணர்ந்ததனாலும், குடியானவர்கிளர்ச்சிகளை நடுத்தர வகுப்பாருடைய ஆதரவோடு ஒழித்துவிடு மாறு உலூதர் அரசர்களைத் தூண்டி, அவர்களை ஆதரித்தார். இவ்வாறு சமயச் சீர்திருத்த இயக்க மானது, முன்பே தோன்றியிருந்த பொருளாதாரக் காரணிகளோடு சேர்ந்து, அரசருடைய அரசாங்கத் துக்கு உள்நாட்டுத் துறைகளிலும், அயல் நாட்டு உறவுகளிலும், வரம்பில்லாத அதிகாரத்தை உரு வாக்கி அளித்தது. தெ.பா., பா.சூ.

**துணை நூல்கள்**:

**Gooch, G.P.**, Political Thought in England from Bacon to Halifax, London, 1926.

**Hearnshaw, H.J.C.**, The Social and Political Ideas of Some Great Thinkers of the Renaissance and Reformation, London, 1925.

**Hilton R.H.** and **Mckisack, May**, The English Rising of 1381, London, 1950.

**Trevelyan, G.M.** and **Powell E.(Ed.)**, The Peasants Rising and the Lollards, London, 1899.

## குடியியல் உரிமைப் பாதுகாப்புச்சட்டம்

**குடியியல் உரிமைப் பாதுகாப்புச்சட்டம்**: இச்சட்டம் 1955-ஆம் ஆண்டு இந்திய அரசாங் கத்தால் இயற்றப்பட்டு அமலுக்கு வந்தது. இதனைச் சமூக உரிமைப் பாதுகாப்புச் சட்டம் எனவும் கூற லாம். இது பல்லாண்டு காலமாகத் தாழ்த்தப்பட்ட இனமக்களுக்கு எதிராக மற்ற இனமக்கள் புரிந்து

வந்த கொடுமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு இயற்றப்பட்டது.

**சட்டக் கூறுகள்**: தாழ்த்தப்பட்ட இனமக்கள் பொதுவீதிகளில் நடக்கவும், குடைகள், செருப்புகள், மேலாடைகள் அணிந்து செல்லவும்; பொதுக் கிணறு, குளங்களில் முறையே நீரெடுக்கவும் குளிக்கவும்; ஏனையோரோடு வீடுகட்டிக் கொள்ளவும்; பொது உணவுவிடுதி, கேளிக்கை ஆகிய இடங்களில் கலந்து கொள்ளவும் மற்ற இனமக்களால் விதிக்கப்பட்டிருந்த தடைகள் இச்சட்டத்தால் அகற்றப்படுகின்றன. இத்தகைய தடைகளை எவரும் விதிக்கும்போது அவர் இச்சட்டத்தால் தண்டிக்கப்படுவார். பொது நிறுவனங்கள் கூட இத்தகைய குற்றங்களை இழைக்கும் போது தண்டிக்கப்படுகின்றன.

ஒரு பகுதியில் வாழும் மக்கள் ஒன்றுகூடி இச்சட்டத்தில் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு குற்றத்தை இழைக்கும்போது அவர்களுக்கு எதிராக அரசாங்கம் ஒரு மொத்தத் தொகையைத் தண்டமாக விதிக்கவும் இச்சட்டம் அனுமதியளிக்கிறது. ஒரு தடவைக்குமேல் இக்குற்றங்களைச் செய்கிறவர்கள் கடுமையான சிறைத் தண்டனையும் கூடுதல் தண்டத் தொகையும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவர்.

மேலும், பொருள்களைத் தாழ்த்தப்பட்டோருக்கு விற்பனை செய்ய மறுப்பது, அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை மறுப்பது, அவர்களைத் துன்புறுத்துவது, அவமானப்படுத்துவது, வார்த்தையாலோ செய்கையாலோ அவர்களுக்குத் தொந்தரவும் இழுக்கும் உண்டுபண்ணுவது போன்றவைகளும் இச்சட்டத்தால் குற்றங்களாகக் கருதப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒருசெயலைச் செய்யும்போது, அது தாழ்த்தப்பட்டோர் என்று கருதித்தான் அந்தச் செயல் செய்யப்பட்டதாகநீதிமன்றம் கருதுதல் வேண்டும். நீதிமன்றம் அவ்வாறு கருதாமல் இருக்க வேண்டுமானால் குற்றம் செய்தவர் தமக்கு அந்த எண்ணம் கிடையாது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். ஒரு நிறுவனம் அத்தகைய குற்றத்தை இழைக்கும்போது அந்த நிறுவனத்தின் அனைத்துப் பொறுப்புத்தாரரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவர். சட்டத்தில் எந்த நீதிமன்றம் இந்தக் குற்றங்களை 'விசாரணை செய்ய வேண்டும் என்பதும் அதன் அதிகாரங்கள், வரம்புகள் என்ன என்பதும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன.

ஆர்.தா.

**குடியிருப்புகள்**: மனிதனின் அடிப்படையான தேவைகளுள் ஒன்று வீடு. குளிர், மழை, வெயில் முதலிய இடர்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், உடைமைகளையும் பொருள்களையும் வைத்துப் பாதுகாக்கவும், உண்ணவும், உறங்கவும் குடும்ப வாழ்க்கை நடத்தவும் மனிதனுக்கு வீடு தேவைப்படுகிறது.

தங்குவதற்கு வீடு என்று ஒன்று இல்லாமற் போனால், அது மனிதனுடைய உடல் நலத்தைப் பாதிக்கும். மனிதனுடைய நல்லுணர்வுகள் சிதைந்து அவன் ஒரு விலங்காக மாறக் கூடும். இந்த விலங்குணர்ச்சி அவனை ஆட்டிப்படைத்து அவனைச் சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்து சமூகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தும். இதை உணர்ந்தே ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மக்கள் குடியேற்றங்களின் மையம் (U.N. Centre for Human Settlement) மக்களுக்கு, குறிப்பாக ஏழை மக்களுக்குச் சரியான வீட்டு வசதி செய்து தரப்படாவிட்டால், அது சமூகக் கொந்தளிப்புகளை உண்டாக்கும் என்று எச்சரித்திருக்கிறது.

ஆனால், இன்று உலகில் எண்ணற்ற மக்கள் தங்குவதற்கு இடமின்றி அவல நிலையில் வாழ்கிறார்கள். ஐ. நா. மன்றம் உலகில் ஐந்து பேர்களில் ஒருவருக்குத் தங்குவதற்கு வீடு இல்லாத நிலை இருப்பதாகக் கூறுகிறது. இந்தியாவில், 1981-ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 25.3 இலட்சம் மக்கள் வீடில்லாமல் இருக்கிறார்கள். இவர்களில் 6.7 இலட்சம் மக்கள் நகர்ப் புறங்களிலும், மீதி 18.6 இலட்சம் மக்கள் கிராமப் புறங்களிலும் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கை வீடு இல்லாது, வெட்ட வெளியில், நடைபாதைகளில், தண்ணீர்த் தொட்டியின்கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

பி. டி. சின்கா (B. D. Sinha) என்பவர் ஐந்து பேருக்கு ஒரு வீடு - என்று கணக்கு வைத்துப் பார்த்தால் 1981-ஆம் ஆண்டுக் கணிப்பின்படி இருந்த மொத்த மக்கள் தொகையான 685 மிலியன் பேருக்கு 137 மிலியன் வீடுகள் இந்தியாவில் இருந்திருக்க வேண்டும்; ஆனால், 107 மிலியன் வீடுகளே இருந்தன. சுமார் 30 மிலியன் வீடுகள் கிராமப்புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் - பற்றாக்குறையாக இருந்தன என்கிறார். மிக மோசமான நிலையிலுள்ள வசிப்பதற்குத் தகுதியற்ற வீடுகளை ஒதுக்கி வைத்து விட்டுப் பார்த்தால் வீட்டுப் பற்றாக்குறை 45 மிலியன் வீடுகள் என்ற அளவில் இருக்கும் என்கிறார்.

ஆனால், தேசிய மாதிரி அளவை நிறுவனம் (National Sample Survey Organization) 1981-ஆம்

ஆண்டு கணிக்கப்பட்ட மொத்த மக்கள் தொகை யான 685 மிலியன் பேருக்கு இந்தியாவில் மொத்தம் 112.7 மிலியன் வீடுகள் இருப்பதாகவும், சுமார் 24 மிலியன் வீடுகள் பற்றாக்குறையாக உள்ளதாகவும் கணக்கிடுகிறது. இவற்றில் சுமார் 18 மிலியன் விடு கள் கிராமப் புறங்களிலும் மீதி 6 மிலியன் வீடு கள் நகர்ப் புறங்களிலும், பற்றாக் குறையாக இருக்கின்றன என்பது இந்நிறுவனத்தின் கணக்காகும். வசிப்பதற்குத் தகுதியற்ற எந்த முறையிலும் சரிப் படுத்த இயலாத நிலையில் இருக்கும் கூரை வீடுகளை யும், ஓலைக் குடிசைகளையும் நீக்கி விட்டுப் பிற வீடுகளை மட்டும் அதாவது சிமிண்டு, செங்கல் போன்றவைகளால் கட்டப்பட்ட வீடுகள், பழுது பார்த்துச் சரிப்படுத்தக் கூடிய நிலையில் இருக்கும் வீடுகள், ஆகியவற்றை மட்டும் – கணக்கில் கொண்டு இந் நிறுவனம் கூறுகிறது.

நடுவண் அரசின் பொதுப்பணிகள், மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தைச் சேர்ந்த தேசிய கட்டட நிறுவனம் (National Building Organiztion) 1985 –இல் இந்தியாவில் வீட்டுப் பற்றாக்குறை 24 மிலி யன் வீடுகள் என்ற அளவிலேதான் இருப்பதாக மதிப்பிட்டிருக்கிறது. 1981–ஆம் ஆண்டில் நிலவிய அதே விகிதாச்சாரத்திலேயே வீட்டுப் பற்றாக்குறை கிராமப் புறங்களிலும் (சுமார் 18 மிலியன் வீடு கள்), நகர்ப் புறங்களிலும் (சுமார் 6 மிலியன் வீடு கள்) நிலவுவதாகக் கூறுகிறது.

ஆக, நடுவண் அரசின் பொதுப் பணிகள், மற் றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் மதிப்பீட்டின்படி, இப்பொழுது 24 மிலியன் வீடுகள் தேவைப்படுகின் றன. இந்தத் தேவை 2000–ஆம் ஆண்டில் நான்கு மடங்குக்கு மேல் உயரக்கூடும் என மதிப்பிடப்பட்டி ருக்கிறது. இவ்வாறு வீட்டுப் பற்றாக்குறை மிகுவ தற்குக் காரணம் மக்கள் தொகைப் பெருக்கமே. இந்திய மக்கள் தொகையானது 1921–ஆம் ஆண்டில் 251.3 மிலியனாக இருந்தது. 1985–இல் 750 மிலிய னுக்கு உயர்ந்திருக்கிறது. இவ்வாறு மக்கள் தொகை தொடர்ந்து பெருகிக்கொண்டே வருவதால் வீட்டுத் தேவையும் அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் மக்கள் தொகை ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக 2.4 விழுக்காடு என்ற விகிதத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது. ஆண்டு தோறும் சுமார் 13.6 மிலியன் பேர்கள் கூடுதலாக மக்கள் தொகையில் சேருகிறார்கள். ஆண்டுதோறும் கூடுதலாக வருகிற 13.6 மிலியன் பேர்களுக்கு மட்டும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 24 இலட்சம் வீடு கள் தேவைப்படுகின்றன. இருக்கிற மிக மோசமான வீடுகளை அகற்றி விட்டு நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால் மேற்கொண்டு ஆண்டு ஒன்றுக்கு 1.92 இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும். இவ்வாறு ஆண்டுதோறும் புதிதாக மக்கள் தொகை யில் கூடுதலாகச் சேர்கிற மக்களுக்கும், ஏற்கெனவே மிக மோசமான நிலையில் இருக்கிற வீடுகளில் வசிக் கும் மக்களுக்கும் சேர்த்து மொத்தம் 43.2 இலட்சம் வீடுகள் ஆண்டு தோறும் தேவைப்படுகின்றன என்று தேசிய திட்ட ஆணையம் (National Planning Commission) மதிப்பீடு செய்துள்ளது.

இப்படிப்பட்ட ஒரு பெரும் சிக்கலைத் தீர்க்க இந்திய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டிருக் கிறது. நாட்டு விடுதலைக்கு முன்பு வீட்டு வசதி அமைத்துத் தரும் பணியில் தனிப்பட்டோருடன் தனியார் நிறுவனங்களும் ஈடுபட்டிருந்தன. அரசு ஒதுங்கியிருந்தது. விடுதலைக்குப் பின்பு மக்களுக்கு வீட்டு வசதி அமைத்துத் தரும் பணியில் தனக்குப் பெரும் பொறுப்பு உண்டு என்பதை அரசு உணர்ந்து, குடியிருப்பு (Tenement) வசதி அமைத்துத் தரும் பணியில் இறங்கியது. தொழிற்சாலை ஊழியர்களுக் கும், சமுதாயத்தில் பொருளாதார அடிப்படையில் நலிவடைந்த பிரிவினருக்கும் ஆன ஒருங்கிணைந்த சலுகை வீட்டு வசதித் திட்டத்தை 1952–ஆம் ஆண்டு அரசு இயற்றியது. அதைத் தொடர்ந்து குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம் (1954), மலைத் தோட்டத் தொழிலாளருக்கான சலுகை வீட்டு வசதித் திட்டம் (1956), குடிசைப் பகுதி அகற்றுதல் மேம்படுத்துதல் திட்டம் (1956), மைய அரசு ஊழியருக்கு வீடு கட்டக் கடன் வழங் கும் திட்டம் (1956), கிராமப் புற வீட்டு வசதித் திட்டப் பணிகளின் திட்டம் (1957), நடுத்தர வரு வாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம் (1959), மாநில அரசு அலுவலருக்கான சலுகை வாடகை வீட்டு வசதித் திட்டம் (1959), நிலம் கையகப்படுத்துதல், மற்றும் மேம்படுத்துதல் திட்டம் (1959), கிராமப் புறங்களில் நிலமற்ற தொழிலாளருக் காக வீட்டு மனைகள் மேம்படுத்துதல், மற்றும் வீடு கள் கட்டிக் கொடுத்தல் திட்டம் (1971), ஆகிய சமூக வீட்டு வசதித் திட்டங்களை இயற்றிச் செயற்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டங்களின் உதவியைக் கொண்டு இன்று இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும், ஒன்றியப் பிரதேசங்களிலும் (Union Territories) அந்தந்த அரசுகள் நகர்ப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் வாழ்கிற மக்களுக்கு வீட்டு மனைகள் அமைத்துத் தருகின்றன. சிமிண்டுக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கின்றன. மாநில, மற்றும் ஒன்றியப்

குடியிருப்புகள்







பிரதேச அரசுகள் வருவாயின் அடிப்படையில் மக்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு வருவாய்ப் பிரிவுக்கும் ஒவ்வொரு வகையான குடியிருப்புகளை 1982-ஆம் ஆண்டிலிருந்து கட்டித்தரத் தொடங்கியிருக்கின்றன. மாதம் ஒன்றுக்கு 700 உருபாய் வரை சம்பாதிப்பவர்கள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் என்றும், மாதம் ஒன்றுக்கு 701 உருபாயிலிருந்து 1500 உருபாய்வரை சம்பாதிப்பவர்கள் குறைந்த வருவாய்ப் பிரிவினர் என்றும், மாதம் ஒன்றுக்கு 1501 உருபாயிலிருந்து 2500 உருபாய் வரை சம்பாதிப்பவர்கள் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் என்றும், மாதம் ஒன்றுக்கு 2500 உருபாய்க்கு மேல் சம்பாதிப்பவர்கள் உயர்தர வருவாய்ப் பிரிவினர் என்றும் வகைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித் தனிக் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

இவ்வாறு நான்கு வகையான வருவாய்ப் பிரிவினருக்குக் குடியிருப்புகள் கட்டித் தரும் பணியைச் செய்து முடித்திட மாநில அரசுகள் வீட்டு வசதி வாரியங்களை அல்லது வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு ஆணைக் குழுக்களை அமைத்திருக்கின்றன. இந்த அமைப்புகள் மக்களுடைய வீட்டு வசதித் தேவையை அவரவர் வருவாய்த் தரத்திற்கேற்ப நிறைவேற்றித் தருகின்றன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961-ஆம் ஆண்டுத் தொடங்கப்பட்டுத் தமிழ்நாட்டில் மக்களுடைய வீட்டு வசதித் தேவையை நிறைவேற்றித் தரும் பணியில் எண்ணற்ற குடியிருப்புகளைக் கட்டி வருகிறது. இந்த வாரியம் தொடக்கத்தில் குடிசைப் பகுதி மக்களுக்காகவும் குடியிருப்புகள் கட்டித் தரும் பணியை மேற்கொண்டிருந்தது. பின், 1971-இல் குடிசைப் பகுதிகளை அகற்றிக் குடிசைப் பகுதி வாழ் மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற் கென்று குடிசை மாற்று வாரியம் என்று தனி வாரியம் ஏற்பட்ட பிறகு, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தனது பணிகளைப் பொது மக்களுக்கென அமைத்துக் கொண்டு, அவரவர் வருவாய்த் தரத்திற்கேற்பக் குடியிருப்புகளைக் கட்டி வருகிறது.

பொதுவாக, பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காகக் கட்டப்படும் குடியிருப்புகள் மாடி அமைப்பு இல்லாத, இரட்டை வீடுகளைக் கொண்ட அமைப்புகளாகக் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் சுமார் 11 சதுர மீட்டரிலிருந்து 12 சதுர மீட்டர் வரை கட்டடப் பரப்பளவு கொண்டிருக்கிறது. ஒரு பொது அறை, ஒருதனி அறை ஆகிய இரண்டே பகுதிகளைக் கொண்டிருக்கிறது. பக்கவாட்டு அறையில் ஒரு மூலையில் கழிவறையும் குளியலறையும் சேர்ந்து இருக்கின்றன. இத்தகைய வீட்டின் விலை சுமார் 17,000 உருபாய் ஆகிறது.

குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காகக் கட்டப்படும் குடியிருப்புகளும் இரட்டை வீடுகளைக் கொண்டவையாகவே கட்டப்படுகின்றன. அவை நான்கு அடுக்குக் கட்டடங்களாகவும், ஒரே அடுக்குக் கட்டடங்களாகவும் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் சுமார் 15 சதுர மீட்டரிலிருந்து 18 சதுர மீட்டர் வரை கட்டடப் பரப்பளவு கொண்டிருக்கிறது. ஒரு பல நோக்கு அறை, அதன் பக்கவாட்டில் ஓர் அறை, இவற்றுக்குப் பின்னால் வீட்டோடு இணைந்த ஒரு குளியலறை, ஒரு கழிவறை ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. இத்தகைய வீட்டின் விலை சுமார் 25,000 உருபாய் ஆகிறது.

நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காகக் கட்டப்படும் குடியிருப்புகள் தனி வீடுகளாகவும் கட்டப்படுகின்றன. அடுக்கு மாடிக் கட்டடங்களில் இரட்டை வீடுகளாகவும் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் சுமார் 28 சதுர மீட்டரிலிருந்து 36 சதுர மீட்டர் வரை கட்டடப் பரப்பளவு கொண்டிருக்கிறது. ஒரு கூடம், அதன் பக்கவாட்டில் ஒரு படுக்கை அறை இவற்றுக்குப் பின்னால் ஒரு சமையலறை, ஒரு குளியலறை, ஒரு கழிவறை ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. இத்தகைய வீட்டின் விலை சுமார் 70,000 உருபாய் ஆகிறது.

உயர்தர வருவாய்ப் பிரிவினருக்காகக் கட்டப்படும் குடியிருப்புகள் தனி வீடுகளாகக் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் சுமார் 52 சதுர மீட்டரிலிருந்து 65 சதுர மீட்டர் வரை கட்டடப் பரப்பளவு கொண்டிருக்கிறது. ஒரு முன் கூடம், அதன் பக்கவாட்டில் ஒரு விசாலமான வரவேற்பறை, இவற்றுக்குப் பின்னால் ஓர் உணவுக் கூடம், அதன் பக்கவாட்டில் ஒரு படுக்கை அறை, பின்னால் ஒரு சமையலறை, ஒரு குளியலறை, ஒரு கழிவறை என்று பல வசதிகளைக் கொண்டிருக்கிறது. இத்தகைய வீட்டின்விலை சுமார் 1,30,000 உருபாய் ஆகிறது.

நான்கு வகையான வருவாய்ப் பிரிவினருக்கு மட்டுமன்றி. அரசு அலுவலர்களுக்கும் வீட்டு வசதி வாரியம் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கிறது. அவர்களுடைய குடியிருப்புகள் அரசு அலுவலருக்கான சலுகை வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்டுச் சலுகை வாடகையில் அவர்களுக்கு விடப்படுகின்றன. அவர்களுடைய குடியிருப்புகளும் அவர்களுடைய வருவாய்த் தரத்திற் கேற்பவே கட்டப்படுகின்றன.

வீட்டு வசதி வாரியம் கட்டுகிற வீடுகள் குலுக்கல் முறையில் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இந்த ஒதுக்கீட்டு முறையில் ஒவ்வொரு வருவாய்ப் பிரிவிலும் சில குறிப்பிட்ட பிரிவினருக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வீடுகள் ஒதுக்கப்பட்டு, அதன் பிறகே குலுக்கல் நடைபெறுகிறது. (இந்த நடைமுறை அரசு அலுவலருக்கான சலுகை வாடகை வீட்டு வசதித் திட்டத்தைச் சேர்ந்த குடியிருப்புகளுக்குக் கடைப்பிடிக்கப்படுவதில்லை). ஆதி திராவிடர்கள் உள்ளிட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாசிகள் ஆகியோருக்கு 18 விழுக்காடும், மாநில அரசு அலுவலர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்கள் ஆகியோருக்கு $18\frac{1}{2}$ விழுக்காடும், நடுவண் அரசின் அலுவலர்கள், தமிழ்நாடு மின்சாரவாரியம் மற்றும் உள்ளாட்சி மன்ற ஊழியர்கள் ஆகியோருக்கு 11 விழுக்காடும், இராணுவ ஊழியர்கள், முன்னாள் இராணுவ ஊழியர்கள், பிராந்திய சேனை ஊழியர்கள், பொதுச் சிறப்புப் பொறியாளர் படை, மற்றும் இறந்து போன இராணுவ ஊழியர்களின் மனைவிகள் ஆகியோருக்கு $7\frac{1}{2}$ விழுக்காடும், சலவையாளர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கு 5 விழுக்காடும், மத்திரிக்கைத் தொழிலில் இருப்பவர்களுக்கு 3 விழுக்காடும், பொது மக்களுக்கு 37 விழுக்காடும் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாசிகள் ஆகியோருக்கான ஒதுக்கீட்டு விகிதத்திலும், சலவையாளர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கான ஒதுக்கீட்டு விகிதத்திலும் பொது மக்களுக்கான ஒதுக்கீட்டு விகிதத்திலும் கலைஞர்களுக்காக 5 விழுக்காடும், அரசியல் ஈடுபாடுகளில் அல்லலுற்றவர்களுக்காக 1 விழுக்காடும், உடல் ஊனமுற்றவர்களுக்காக 1 விழுக்காடும் முன்னுரிமையளித்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

வீடு கிடைக்கப் பெறுகிற ஒதுக்கீடுதாரர்கள் வீட்டு விலையில் ஒரு குறிப்பிட்ட பகுதியை முன்வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும். அதன் பிறகே அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீட்டைப் பெற முடியும். மீதித் தொகையை அவர்கள் குறிப்பிட்ட கால அளவுகளில் மாதத் தவணைகளாகச் செலுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, 16,700 உருபாய் மதிப்புள்ள வீட்டுக்கு (பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான வீடு) முன்வைப்புத் தொகையாக 3340 உருபாயும் 18 ஆண்டுகளில் மாதம் 136 உருபாயும் செலுத்திக் கணக்கை முடிக்க வேண்டும். வீட்டின் விலை முழுதும் செலுத்தப்பட்ட பின்னரே ஒதுக்கீட்டாளருக்கு வீடு உரிமையாக்கப்படும்.

வீட்டு வசதி வாரியம் நடுவண் அரசின் வீட்டு வசதித் திட்டங்களிடமிருந்து நிதியுதவி (மானியமும், கடனும்) பெறுவதன்றி, நடுவண் அரசு நிறுவியுள்ள வீட்டு வசதி, மற்றும் நகர மேம்பாட்டுக் கழகம் (Housing and Urban Development Corporation) என்ற அமைப்பிடமிருந்தும் நிதியுதவி பெற்று, மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருகிறது. குடியிருப்புகளுக்கு அருகில் பொழுதுபோக்குப் பூங்காக்கள், சமுதாயக் கூடங்கள், கடைகள் ஆகியவற்றையும் அமைச் ... ாடுக்கிறது. கல்விக் கூடங்கள் நிறுவுவ ... ங்களையும் (Sites) ஒதுக்கித் தரு

... க் குடியிருப்புகள் கட்டித் தருவதில் வீட்டு ... பம் மட்டுமன்றி, வேறு சில அரசு நிறுவனங்களும ஈடுபட்டிருக்கின்றன. இந்த வகையில் தமிழ்நாட்டில் குடிசை மாற்று வாரியமும், ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகமும் குடியிருப்புகள் கட்டி வருகின்றன. குடிசை மாற்று வாரியம் குடிசைப் பகுதி மக்களுக்காகவும், ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் ஆதி திராவிட மக்களுக்காகவும் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்து வருகின்றன.

பொது மக்களுக்கு வீட்டு வசதி அமைத்துத் தரும் பணியில் அரசு நிறுவனங்கள் மட்டுமன்றி, தனிப்பட்டவர்களும் (Private Builders) கூட்டுறவுச் சங்கங்களும் ஈடுபட்டிருக்கின்றனர். தனிப்பட்டவர்கள் நகர்ப்புறங்களில் கவனம் செலுத்துகிறார்கள்; மிக உயரமான, 10 அல்லது 20 அடுக்கு மாடிகள் கொண்ட புதிய குடியிருப்புகளைக் கட்டுகிறார்கள். ஒவ்வொரு தளத்திலும் இரண்டு அல்லது நான்கு வீடுகள் அமைந்துள்ளவாறு இக்குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. தனிப் பட்டவர்கள் வீட்டு வசதி, மற்றும் நகர மேம்பாட்டுக் கழகம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், வீட்டு வசதி மேம்பாட்டு நிதியுதவிக் கழகம் ஆகிய நிதியுதவிக் கழகங்களிடமிருந்து நிதியுதவி பெற்றுக் குடியிருப்புகள் கட்டுகின்றனர். வங்கிகளும் இப்பொழுது குடியிருப்புகள் கட்ட நிதியுதவி செய்கின்றன. மிகுதியான பணம் தேங்கிக் கிடக்கும் ஊழியர் வைப்பு நிதி நிறுவனமும் (Employees' Provident Fund Organizatioan). 'யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா' (Unit Trust of India) என்ற நிறுவனமும் இப்பொழுது குடியிருப்புகள் கட்டுவதற்கு நிதியுதவி செய்ய இருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் மாநில அரசின் நிதியுதவியுடன் குடியிருப்புகள் கட்டுகின்றன. நிறுவன அமைப்புகளில் பணிபுரியும் ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொண்டு, தமக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொள்ளுகின்றனர். இந்த வகையில்

அரசு அலுவலர்கள், வங்கி ஊழியர்கள், கல்விக்கூட ஆசிரியர்கள் முதலியோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொண்டு குடியிருப்புகள் கட்டிக்கொள்ளுகிறார்கள். இதற்கு மாநில அரசு நிதியுதவி செய்கிறது.

இவ்வாறே தொழிற்சாலை ஊழியர்களும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொண்டு குடியிருப்புகள் கட்டிக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய பணிக்கு நடுவண் அரசின் தொழிற்சாலை ஊழியர்களுக்கும், சமுதாயத்தில் பொருளாதார முறையில் நலிவடைந்த பிரிவினருக்கும் ஆன ஒருங்கிணைந்த சலுகை வீட்டு வசதித் திட்டம், குடியிருப்புகளின் கட்டுமானச் செலவில் 65 விழுக்காட்டைக் கடனாகவும், 25 விழுக்காட்டை மானியமாகவும் கொடுத்து உதவுகிறது. தொழிற்சாலை முதலாளிகளும் தமது ஊழியர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி (கட்டுமானச் செலவில் 50 விழுக்காட்டைக் கடனாகவும், 25 விழுக்காட்டை மானியமாகவும்) பெற்றுக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கிறார்கள். தனியார் மட்டுமன்றி, அரசு நிறுவனங்களின் நிருவாகத்தினரும் தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்றுக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, போக்குவரத்துக் கழகங்கள் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்றன.

இவ்வாறு அரசும், தனிப்பட்டவர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் நாடெங்கும் குடியிருப்புகளைக் கட்டி, மக்களின் வீட்டு வசதிச் சிக்கல்களுக்குத் தீர்வு காணப் பெரு முயற்சி செய்து வருகின்றன. ஆயினும், வீட்டு வசதிச் சிக்கல் தீராமல் 1985-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 24 மிலியன் வீடுகள் என்ற அளவில் பற்றாக்குறை நிலவுகிறது. இதற்குக் காரணம் மக்கள் தொகையின் பெருக்கத்தினால் வளர்ந்து வரும் வீட்டு வசதித் தேவைக்கு இந்த முயற்சிகளால் ஈடு கொடுக்க முடியாமற் போவதேயாகும்.

மக்கள் தொகை ஆண்டு ஒன்றுக்கு 13.6 மிலியன் அளவுக்குக் கூடும்பொழுது, அந்தக் கூடுதல் தொகைக்குச் சுமார் 24 இலட்சம் வீடுகள் தேவைப்படும் நிலை இருக்கிறது. ஐ.நா. மன்றத்தின் கணக்குப்படி, ஆண்டொன்றுக்கு 1000 பேருக்குப் 10 வீடுகள் என்ற விகிதத்தில் வீடுகள் கட்டி வந்தால்தான் இந்தச் சிக்கலைச் சமாளிக்க முடியும். ஆனால், இந்தியாவிலோ 1000 பேருக்கு ஒரு வீடு என்ற விகிதத்தில்தான் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வேகக் குறைவின் காரணமாகவே வீட்டுவசதிப் பணி, பெருகி வருகிற மக்கள் தொகைக்கு ஈடு கொடுக்க முடியாமல் நிற்கிறது. இந்த வேகக் குறைவிற்குச் காரணம் வீட்டு வசதிப் பணிகளுக்கு அரசு குறைவான நிதி ஒதுக்கீடு செய்வதே ஆகும். வளர்ச்சியடைந்த மேலை நாடுகளில் ஆண்டுதோறும் மொத்தத் தேசிய வருமானத்தில் 3.6. விழுக்காட்டிலிருந்து 7.6 விழுக்காடு வரை வீட்டு வசதிப் பணிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால், இந்தியாவில் மொத்தத் தேசிய வருமானத்தில் 1 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடுவரைதான் ஆண்டு தோறும் வீட்டு வசதிப் பணிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. சி.என்.ந.

**துணை நூல்கள்**:


**Narayan, K.** Housing India's Millions, A Pipe Dream, Mirror, Vol. XXV, No.7, 1986.

**Rao, C.H. Gopinatha.**, Shelter for the Homeless, The Hindu, 1985.

**Saxena, R.C.**, Labour Problems and Social Welfare, 15th ed. K. Nath & Co., Meerut, 1986.

**Wiebe, Paul D.**, Tenants and Trustees: A Study of the Poor in Madras, Macmillan India Ltd., Delhi, 1981.


**குடியுரிமை**: ஒரு நாட்டில் ஒருவருக்கு அரசியலும் சமூக உரிமையும் குறித்த முழுவுரிமை நிலை குடியுரிமை (Citizenship) எனப்படும். இந்திய அரசமைப்புக் குடியுரிமை குறித்து, பிரிவு 5 முதல் 11 வரையிலுள்ள பிரிவுகள் விவரிக்கின்றன. இந்திய அரசமைப்புப்படி, இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தபோது, இந்தியாவை வாழ்வகமாகக் கொண்டவர்களில் கீழ்க்காணும் நிலையில் இருந்தவர்கள் இந்தியக் குடிமக்களாகக்கருதப்பட்டனர். 1) அவர்கள் இந்தியாவில் பிறந்திருக்கும்போதும், 2) அவர்களின் பெற்றோர்களுள் ஒருவர் இந்தியாவில் பிறந்திருக்கும் போதும், 3) இச்சட்டம் தொடங்குவதற்கு முன் ஐந்தாண்டுகளுக்குக் குறைவில்லாமல் அவர்கள் இந்தியாவில் வாழ்ந்திருக்கும்போதும் இந்தியக் குடிமக்களாகக் கருதப்படுவர்.

**பாகிசுத்தானிலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்தவர்கள்**: இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த சமயத்தில், அ) இந்திய அரசாங்கச் சட்டம், 1935-இல் விளக்கியுரைத்தபடி, ஒருவர் அல்லது அவர் பெற்றோர்களுள் ஒருவர் அல்லது அவர்தம் பெற்றோரைப் பெற்றோர்களுள் ஒருவர் இந்தியாவில் பிறந்திருக்கும்போதும்; ஆ) 1948-ஆம் ஆண்டு, சூலை 19-ஆம் நாளுக்கு முன்னர் அத்தகையவர் பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்திருக்கு

மிடத்து, அந்தத் தேதி முதற்கொண்டு இந்தியாவில் தொடர்ந்து வசித்து வந்திருக்கும்போதும்; அல்லது 1948-ஆம் ஆண்டு, சூலை 19-ஆம் நாள் அன்று அல்லது அதற்குப் பின்னர் அத்தகையவர் குடிபெயர்ந்து வந்திருக்குமிடத்து, இந்த அரசலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன் இந்தியக் குடியுரிமைப் பதிவு குறித்து இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அலுவலரிடம் அரசாங்கம் குறித்துரைத்த படிவத்தில் விண்ணப்பம் செய்து, இந்தியக் குடியுரிமையைப் பெற்றிருக்கும்போதும், அவர் இந்தியக் குடிமகனாகக் கருதப்படுவார். ஆனால், அவர் குடியுரிமையைப் பதிவு செய்ய விண்ணப்பம் அளிப்பதற்கு முன் குறைந்தது ஆறு திங்களாவது இந்தியாவில் வாழ்ந்திருக்க வேண்டும்.

**பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்களுக்குள்ள குடியுரிமை**: இந்திய அரசலமைப்புச் சட்டம், பிரிவுகள் 5,6 ஆகிவற்றில் எது கண்டிருந்தபோதிலும், ஒருவர் 1947-ஆம் ஆண்டு, மார்ச்சு 1-க்குப் பிறகு இந்தியப் பகுதியிலிருந்து பாகிசுத்தான் பகுதிக்குக் குடிபெயர்ந்திருக்கும்போது, அவர் இந்தியக் குடிமகனாகக் கருதப்படமாட்டார். ஆனால், இது இந்தியாவிலிருந்து பாகிசுத்தானுக்குச் குடிபெயர்ந்து மீண்டும் இந்தியாவிற்கே திரும்பி வந்து நிலையான குடியிருப்பை அமைத்துக்கொள்ள உரிய அதிகாரியிடம் அனுமதி பெற்றிருப்பவர்களுக்கும், பிரிவு 6, கூறு (ஆ) இன்படி 1948-ஆம் ஆண்டு, சூலை 19-ஆம் நாளுக்குப் பின்னர் இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து குடிமக்களாகக் கருதப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

**இந்தியாவிற்கு வெளியில் வாழும் இந்திய வழித்தோன்றல்கள் சிலருக்கான குடியுரிமை**: இந்திய அரசலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர், இந்திய அரசாங்கச் சட்டம், 1935-இல் விளக்கியுரைக்கப்பட்டவாறு, ஒருவர் அல்லது அவர்தம் பெற்றோர்களுள் ஒருவர் அல்லது அவர்தம் பெற்றோரைப் பயந்த பெற்றோர்களுள் ஒருவர் இந்தியாவில் பிறந்து, இந்தியத் தூதுவர் அல்லது நலப்பாதுகாப்பாளரிடம் (Consular)இந்திய அரசாங்கம் குறித்துரைத்த படிவத்தில் விண்ணப்பித்துப் பதிவுசெய்துகொண்டிருக்கும்போது அவரும் இந்தியக் குடிமகனாகவே கருதப்படுவார்.

**அயல்நாட்டுக் குடியுரிமையைத் தன்னிச்சையாகப் பெற்றவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் இயலாது**: அயல் நாட்டுக் குடியுரிமையை இந்தியக் குடிமகனொருவன் தன்னிச்சையாகப் பெற்றிருக்கும்போது, அவனை அரசலமைப்புச் சட்டம், பிரிவுகள் 5,6 ஆகியவைகளின் கீழ் இந்தியக் குடிமகனாகக் கொள்ளுதல் இயலாது.

புவே.

## குடியேற்ற நாட்டு அரசாங்கம்

**குடியேற்ற நாட்டு அரசாங்கம்**: ஒரு நாடு மற்றொரு நாட்டின் ஆட்சியில் அமைந்து அதைச் சார்ந்திருக்குமானால் அச்சார்பு நாட்டுக்குக் குடியேற்ற நாடு (Colony) என்றும், அதனை ஆளும் நாடு அதைத் தனது அரசியல், பொருளாதாரக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் முறைக்குக் குடியேற்ற நாட்டுக் கோட்பாடு (Colonialism) என்றும், குடியேற்ற நாட்டின்மீது ஆளும்நாடு (அல்லது பேரரசு நாடு - Imperial Power) அமைத்திருக்கும் ஆட்சிமுறைக்குக் குடியேற்ற நாட்டு அரசாங்கம் (Colonial Government) என்றும் பெயர்.

**குடியேற்ற நாடுகள் பற்றிய கோட்பாடுகள்**: கொலம்பசு கி.பி. 1492-இல் அமெரிக்காவுக்குக் கடல் வழி ஒன்று கண்டு பிடித்ததை ஒட்டித் தங்கம் திரட்டவும், வாணிகம் செய்யவும், மீன்பிடிக்கத் தளங்கள் பெறவும், புதிய வளமான நிலங்களை இலவசமாகப் பெறவும் ஐரோப்பிய நாடுகள் (அதாவது இசுபெயின் போர்ச்சுகல், பிரிட்டன், பிரான்சு, நெதர்லாந்து முதலியவை), அமெரிக்கக் கண்டங்களில் குடியேற்ற நாடுகளை கி.பி. 1760-முதலாக நிறுவின. பிரிட்டன் கி.பி. 1783-இலும், இசுபெயின் கி.பி. 1824-இலும், போர்ச்சுகல் பிரேசிலில் கி.பி. 1825-இலும், பிரான்சு எயிட்டியில் (Haitti) கி.பி. 1825-இலும், தம் குடியேற்ற நாட்டு உரிமைகளைக் கைவிட்டு அவைகளைச் சுதந்திர நாடுகளாக ஒப்புக் கொள்ளும் நிலையை அடைந்தன. அதற்கு ஈடாகப் பிரிட்டன் கி.பி. 1757-இலிருந்து இந்தியாவிலும், திரினிடாடு (Trinidad) நன்னம்பிக்கை நாடு (Cape Colony), மோரிசு இலங்கை, மலாக்கா, ஆசுத்திரேலியா முதலியவற்றிலும், பிரான்சு இந்தோசீனாவிலும், நெதர்லாந்து இந்தோனேசியாவிலும் தம் குடியேற்றநாட்டு அரசாங்கங்களை நிறுவின. ஆப்பிரிக்கா முழுவதும் ஐரோப்பிய நாடுகளால் பங்கிட்டுக் கொள்ளப்பட்டது. இவ்வாறு ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் பசிபிக்குப் பெருங்கடல் தீவுகளிலும் ஐரோப்பியர்களால் நிறுவப்பட்ட குடியேற்ற நாட்டு ஆட்சி முறை இரண்டாம் உலகப் போர் முடியும் வரை (1939-1945) இருந்து, பின்னர் மறைந்தது. குடியேற்ற நாடுகள் எல்லாம் இறைமையுடைய சுதந்திர அரசுகளாயின. ஐரோப்பியப் பேரரசுகள் முதலில் தம் குடியேற்ற நாடுகளில் பின்பற்றிய கோட்பாட்டிற்கு வணிகக் கோட்பாடு (Mercantalism) என்று பெயர். அதன்படியே குடியேற்ற நாடுகள் பேரரசுகளால் ஆளப்பட்டன; அதன்படி குடியேற்ற நாட்டின் பொருள்வளம் தாய்நாட்டின் நலத்துக்

காகப் பயன்படுத்தப்பட்டது. குடியேற்ற நாடு தாய் நாட்டிற்கே தன் பொருள்களை ஏற்றுமதி செய்தலும், தாய் நாட்டிலிருந்தே பொருள்களை இறக்குமதி செய்தலும் வேண்டும். அது தாய்நாட்டின் தொழில்களோடு போட்டியிடக்கூடிய தொழில்களைத் தொடங்குதற்கு உரிமம் (Licence) வழங்கப்படவில்லை. அதன் பொருள்களும் தாய் நாட்டின் கப்பல்களில்தான் எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும். அயல்நாட்டுப் பொருள்களின் மீது கூடுதல் சுங்கம் விதிக்கப்பட்டது. இக்கோட்பாடு கி.பி. 1800-ஆம் ஆண்டுவரை கையாளப்பட்டது. பின்னர்த் தடையற்ற வாணிகக் கோட்பாடு (Free Trade) கையாளப்பட்டதும், குடியேற்ற நாடுகளின் துறைமுகங்கள் அயல்நாட்டு வாணிகத்துக்காகத் திறந்துவிடப்பட்டு, குடியேற்ற நாடுகளின் வாணிகத்தில் தாய்நாட்டுக்கு முன்பு இருந்த முற்றுரிமையும் (Monopoly) கைவிடப்பட்டுச் சுங்க வரிகளும் பெரும்பாலும் நீக்கப்பட்டும் குறைக்கப்பட்டும் போயின. ஐரோப்பிய நாடுகளுக்குக் கச்சாப் பொருள்களை வாங்கவும், தம் பொருள்களை விற்கவும், சந்தைகளும், தம் மூலதனத்தை முதலீடு செய்ய வாய்ப்பும் தேவைப்பட்டன. தடையற்ற வாணிகக் கோட்பாடும் பின்னர்க்கைவிடப்பட்டு, கி.பி. 1880-ஆம் ஆண்டிற்குப் பின்னர்க் காப்பு வணிகக் கோட்பாடு (Policy of Protection) பின்பற்றப்பட, மீண்டும் சுங்கக் காப்பு வரிகள் தோன்றின. பிரிட்டன் பேரரசின் வணிகச் சலுகையைப் (Imperial Preference) பெற்றது. தடையற்ற வாணிகமாயினும், காப்பு வாணிகமாயினும், குடியேற்ற நாடு மற்றொரு நாட்டினாட்சிக்குட்பட்டிருக்கும் வரையில் அதனால் பொருளியலில் தன்னிறைவு அடைதல் இயலாது என்பதைப் பேரரசு முறை தெளிவாக எடுத்துக் காட்டிற்று.

**குடியேற்ற ஆட்சிமுறை**: குடியேற்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில் அவற்றை ஆண்ட நாடுகளின் கொள்கைகளெல்லாம் ஏறக்குறைய ஒரே விளைவையே தோற்றுவித்தன. அரசியல் துறையில் குடியேற்ற நாடுகளின் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், பல்வேறு வகைப்பட்ட விளைவுகள் தோன்றின. ஐரோப்பியக் குடியேற்றங்களையுடைய குடியேற்ற நாடுகளில் (அதாவது ஆசுத்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா போன்றவற்றில்) அவற்றை ஆண்ட தாய் நாட்டில் உள்ளது போன்ற அரசியலமைப்புகளும், அரசாங்க முறைகளும் நிறுவப்பட்டு, நாளாவட்டத்தில் அவை தன்னாட்சி உரிமையுடைய நாடுகளாயின. வேறு இனமக்களையுடைய குடியேற்ற நாடுகளில்அவற்றை ஆண்ட பேரரசு நாடுகள் சூழ்நிலைக்குத் தக்கவாறும், பொதுவான சிக்கல்களைத் தீர்த்தற்குகந்த முறையிலும் அரசாங்க அமைப்புகளை ஏற்படுத்தின. ஐரோப்பியப் பேரரசுகள் முதலில் தம் குடியேற்ற நாடுகளை எதேச்சாதிகாரமாகவே ஆட்சி செய்து, பின்னர் சிறிது சிறிதாகக் குடியேற்ற நாடுகளைச் சுதந்திர நாடுகளாக ஆக்கின. ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் பசிபிக்குப் பகுதியிலும் நிறுவப்பட்ட குடியேற்ற நாடுகளில் ஐரோப்பியச் சமூகங்களினால் அவற்றிற்காகப் படிப்படியாக உருவாக்கப்பட்ட அரசாங்க முறைகளையும், சட்ட முறைகளையும் புகுத்துவது சரியன்று என்று அவைகளை ஆட்சி செய்த பேரரசு நாடுகளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அந்தந்த நாட்டுச் சூழ்நிலைகளுக்கேற்ற புதிய ஆட்சி முறைகள் உருவாக்கப்பட்டு, உயர்தர அதிகாரங்களெல்லாம் பேரரசிடம் வைக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றிலும் மத்திய அரசாங்கத்தில் ஓர் ஆளுநரும், அவருக்கு உதவியாகத் தாய் நாட்டைச் சேர்ந்த அதிகாரிகளடங்கிய ஓர் ஆட்சிக் குழுவினரும் இருந்தனர். சில குடியேற்ற நாடுகளில் அவற்றின் மக்களுடைய பேராளர்களைக் கொண்ட, ஓரளவு சட்டம் இயற்றும் அதிகாரங்களையும் உடைய பெரிய மன்றம் இருந்தது. உள்ளூர்ச் சுயாட்சி முறை பல தரங்களில் இருந்தது. குடியேற்ற நாடுகளில் நடைபெற்ற ஆட்சி 1945-ஆம் ஆண்டுவரை எதேச்சாதிகாரமேதவிர, குடியாட்சி அன்று. குடியேற்ற நாட்டு அரசாங்கமானது,குடிறேற்ற நாட்டு மக்களை மேலை நாட்டு நாகரிகத்திலீடுபடுத்தும் நோக்கத்துடன் ஆளுதல் வேண்டுமா, குடியேற்ற நாட்டுச் சமூகத்தை அதன் தன்னியல்போடு வளரச் செய்யும்வகையில் ஆளுதல் வேண்டுமா என்ற சிக்கல் இருந்தது. பொதுவாக கி.பி. 1800-ஆம் ஆண்டிற்கு முன்பெல்லாம் ஐரோப்பியரல்லாத குடியேற்ற நாடுகளை ஐரோப்பிய நாகரிகத்தில் கொண்டு வருதல் வேண்டுமென்றும், ஐரோப்பிய நாகரிகமே உலகத்தில் உயர்ந்தது என்றும் ஐரோப்பியப் பேரரசுகள் எண்ணின. ஆயினும், அவ்வாறு செய்ய இயலாதவாறு குடியேற்ற நாடுகள், பரப்பளவில் மிகப் பெரிதாக இருந்தன. அதனாலும் அவற்றில் குடியேறிய ஐரோப்பியரின் எண்ணிக்கை சிறிதாக இருந்தமையாலும், அவற்றை ஐரோப்பிய நாகரிகத்திலீடுபடுத்துதல் எளிதன்று என்று அவை உணர்ந்தன. மேலும், சுதேச(Native)நாட்டுச் சட்டங்களைக் கையாளுதலும், குடியேற்ற நாட்டுச் செயலிகளின் (Agents) வழியாக அதனை ஆளுதலும் மிக எளிதானவை என்று பேரரசுகள் நடைமுறையில் உணர்ந்தன. மேலும், அவற்றில் குடியேறும் ஐரோப்பிய மக்களினுதவியால் குடியேற்ற நாட்டு மக்களை ஆளுதல் எளிதன்று என்றும் அவை உணர்ந்தன. எனவே, பெரும்பாலான ஐரோப்பியப் பேரரசுகள்

குடியேற்ற நாட்டினரை ஐரோப்பிய நாகரிகத்தில் கொண்டு வருதற்கேற்ற ஆட்சியை நிறுவாமல், அவர்களை அவர்களுடைய செயலிகள் வாயிலாகவே ஆட்சி செய்தன. இந்தியாவிலும் இலங்கையினும் அவற்றின் சமூகத்தையும் சட்டங்களையும் படிப்படியாக ஐரோப்பிய வழியில் மாற்றியமைக்கும்பொருட்டு ஆங்கிலேய அரசாங்கம் ஆட்சி செய்தது. பின்னர் 1900-ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரடரிக்லுகார்டு பிரபு (Lord Fredrick Lugard) வகுத்த மறைமுக ஆட்சிக் கோட்பாடு (Indirect Rule) கடைப்பிடிக்கப்பட்டது. அதன்படி, குடியேற்ற நாட்டினருடைய சொந்த அரசியல், சமூக நிறுவனங்களெல்லாம் எங்கெங்கெல்லாம் இயலுமோ அவ்வவ்விடங்களில் பாதுகாக்கப்பட்டன. மத்திய அரசாங்கமானது குடியேற்ற நாட்டின் சுதேச அரசர்களின் வாயிலாகவே செயற்பட்டது.ஐரோப்பிய நாகரிகமும் குடியேற்ற நாட்டினரின் சமூகத்தில் மெள்ள மெள்ளவே பரவிற்று;எல்லாவற்றுக்கும் மேலாக, குடியேற்ற நாட்டு மக்களுடைய நலத்துக்கே ஆட்சித்துறையினர் முக்கிய கவனம் செலுத்தினர். ஆயினும், குடியேற்ற நாடுகளில் நடைபெற்ற பேரரசுகளின் ஆட்சியானது, தீமை பயப்பதாக இல்லாவிடினும், தன்னாட்சிக் குறிக்கோளைக் குடியேற்ற நாட்டவர் அடைதற்குகந்த முன்னேற்றம் உடையதாக இல்லை. தொடக்கத்தில் குடியேற்ற நாடுகளில் நடைபெற்ற பேரரசுகளின் ஆட்சி மிகவும் தீமை பயப்பதாக இருந்தது. நாளாவட்டத்தில்தான் அது மனிதப்பற்று இயல்பு உடையதாகவும் ஆக்க இயல்பு உடையதாகவும் மாறிற்று. தாய்நாட்டோடு குடியேற்ற நாடுகளை இணைத்தல் என்பதும் இயலாததாயிற்று. பொதுவாக எந்த ஓர் ஐரோப்பியப் பேரரசு நாடும் தன் ஆசிய, ஆப்பிரிக்கக் குடியேற்ற நாட்டுக்கு முழுச் சுதந்திரம் எதிர்காலத்தில் வழங்குதல் வேண்டுமென்ற குறிக்கோளோடு அதனை (1939-ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில்) ஆளவில்லை. பேரரசு நாடுகள் 1945-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தம் குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரத்தைத் தவிர வேறெதனையும் வழங்கும் நிலையில் இல்லை.

**குடியேற்ற நாட்டு ஆட்சி பற்றிய மதிப்பீடு**: தன்னாட்சி உரிமை (Self Determination) என்னும் கொள்கையினடிப்படையாலும் சட்டவகையாலும் ஒழுக்க வகையாலும் காணும்போது குடியேற்ற நாட்டுக் கோட்பாடு தீயதே ஆகும். மார்க்சிய-லெனினியக் கருத்தின்படி இந்தக் கோட்பாடு ஓர்இனத்தார் வேறொரு இனத்தாரை அடிமைப்படுத்தவும்,பொருளியலில் சுரண்டவும் வழி வகுத்தது. குடியேற்றநாட்டவரிடம் தோல்வி மனப்பான்மையும், தாழ்வு மனப்பான்மையும் வளர்ந்தன. ஐரோப்பியக் கல்விமுறை, மருத்துவவசதி, தொழில் முறைகள், அரசாங்க அமைப்புகள், அரசியலமைப்பு, அரசு வடிவம் முதலியவையெல்லாம் புகுத்தப்படவே, அவையெல்லாம் குடியேற்ற நாடுகளை ஓரளவேனும் இக்கால அரசு முறைக்கு ஒப்ப மாற்றின. அவ்வகையில் பார்க்கும் போது குடியேற்ற நாட்டு ஆட்சி ஓரளவு குடியேற்ற நாடுகளுக்கு நன்மை அளித்தது எனலாம். ஆகையால் சப்பான், சீனா போன்றவைகளைப்போல, குடியேற்ற நாடுகள் ஐரோப்பியப் பேரரசுகளினா லாளப்படாமலேயே மேற்கூறிய நலன்களையெல்லாம் நாளாவட்டத்தில் பெறுதல் கூடும் என்பது ஒருபுறம் இருக்க, பசிபிக்கு, ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளைப் பொறுத்தவரையில் அவற்றில் ஐரோப்பியப் பேரரசுகளின் ஆட்சி நடைபெற்ற மிகக் குறுகிய காலத்தில்,வியக்கத்தக்க அளவுக்கு அரசியலிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படுதற்குக் காரணமாக இருந்த காரணத்தால், குடியேற்ற நாட்டு ஆட்சிக் கோட்பாடானது எவ்வளவுதான் ஒழுக்க வகையிலே வெறுத்து ஒதுக்கத்தக்க ஒரு கோட்பாடாக இருந்தாலும், அறிவியல் முறையாகப் பார்க்கும்போது அது பயனுள்ள கோட்பாடாகக் காணப்படுகிறது. பா.சு.

**துணை நூல்கள்**:

**Fieldhouse, David Kenneth**, The Colonial Empires, New York, 1966.

**Furrivall, John**, S.. Colonial Policy and Practice, New York, 1956.

**குடியேற்றம்**: காண்க: குடியேற்ற நாட்டு அரசாங்கம்.

**குடியொப்பம்** என்பது இக்காலத்தில் பிரஞ்சுக் குடியரசு, ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து, சோவியத்து உருசியா முதலிய அரசுகளில் வாக்காளர்களே நாட்டிற்குத் தேவையான சிலவகைச் சட்டங்களைச் செய்தலில் நேரடியாகப் பங்கு எடுத்துக் கொள்ளும் வகையைக் (Referandum) குறிப்பிடுகிறது.

நேரடிச் சட்டமியற்றும் முறையின் அடிப்படையான அரசியற் கொள்கையை வகுத்தவர் உரூசோ (Rousseau) ஆவர். (காண்க:உரூசோ). இவர் வகுத்த கொள்கையின்படி, மக்களே அரசில் தலைமையான அதிகாரம் அல்லது இறைமை உடையவர்கள். அவர்களுடைய பொதுநல விருப்பந்தான் (General Will)

அரசின் சட்டமாக வடிவம் பெறுதல் வேண்டும். ஆகையால், அரசுக்குத் தேவையான சட்டங்களைச் செய்பவர் அதன் மக்களே தவிர அரசாங்கத்தின் ஓர் உறுப்பாகிய சட்டமன்றம் அன்று. மக்கள் செய்யும் சட்டத்தை நிறைவேற்றுகின்ற நிருவாகப்பணி ஒன்றுதான் (Executive Function) அரசாங்கத்துக்கு இருத்தல் வேண்டும். இவ்வாறு உரூசோ வகுத்த மக்கள் இறைமைக் கோட்பாடு (Popular Sovereignty Theory), மக்களே சட்டம் இயற்றுதலில் பங்கு எடுத்துக் கொள்ளுகிற நேர்முகக் குடியாட்சி முறையை (Direct Democracy) நடைமுறைக்குக் கொண்டுவர உதவி செய்தது.

**சுவிட்சர்லாந்தில் இது செயற்படும் முறை**: சுவிட்சர்லாந்து நாட்டில் கூட்டாட்சி அல்லது மத்திய சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டம் வாக்காளர்களால் ஒப்புக் கொள்ளப்படுதற்கோ மறுக்கப்படுதற்கோ அவர்களுடைய இறுதித் தீர்ப்புக்கு விடப்படும் முறையே குடியொப்பம் ஆகும். கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் அரசியலமைப்புத் திருத்தங்களெல்லாம் கட்டாயமாகக் குடியொப்பத்துக்கு விடப்படுதல் (Campulsory Referendum) வேண்டும். கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் சாதாரணச் சட்டங்கள் குடியொப்பத்துக்கு விடப்படுதல் வேண்டுமென்று அவை நிறைவேற்றப்பட்ட 90 நாட்களுக்குள் 30,000 வாக்காளர்கள் கையெழுத்திட்டு விருப்பம் தெரிவித்தால், (அல்லது 8 மாநிலங்கள் (Cantons) விருப்பம் தெரிவித்தால்), அவற்றின் மீது மக்கள் விருப்பக் குடியொப்பம் நடத்தப்படுதல் (Optional Referendum) வேண்டும். சுவிட்சர்லாந்து நாட்டில் இதுபோலவே மாநிலங்களிலும் கட்டாயக் குடியொப்பமும் விருப்பக் குடியொப்பமும் நடைமுறையிலிருக்கின்றன. ஐந்தாம் பிரஞ்சுக் குடியரசின் அரசியலமைப்புக்கான திருத்தங்கள் பாராளுமன்றத்தாலும், குடியொப்பத்தில் வாக்காளர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டால்தான் அவை சட்டமாக நடைமுறைக்கு வரும். மற்றச் சில சட்டங்களையும், உடன்படிக்கைகளையும் குடியரசுத் தலைவர் சட்ட மன்றத்தின் உடன்பாட்டோடு குடியொப்பத்துக்கு விடலாம். ஆசுத்திரேலிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு (1900-ஆம் ஆண்டு அரசியல்மைப்புச் சட்டம்) ஆசுத்திரேலியக் கூட்டாட்சிப் பாராளுமன்றத்தால் செய்யப்படும் திருத்தங்கள் எல்லாம் அந்நாட்டின் ஆறு மாநில வாக்காளர்களுடைய குடியொப்பத்துக்கு விடப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்டால்தான் அவை சட்டமாகும். சோவியத்து உருசிய நாட்டில் மத்திய பாராளுமன்றத்தின் ஒரு சிறு குழுவாகிய பிரிசிடியம் (Presidium) சட்டமன்றமியற்றும் சட்டங்களைத் தன் விருப்பத்தின்பேரில் குடியொப்பத்துக்கு விடலாம்.

**நேரடிச் சட்டமியற்றுவதின் நிறைகுறை**: மக்களே சட்டம் செய்தலில் பங்கு கொள்ள உரிமை இருக்கும் போது, சட்டத்துக்கு அவர்கள் மதிப்புக் கொடுக்கும் இயல்பு மிகுந்து தோன்றுகிறது. சட்டமன்றம் செய்யும் சட்டத்தைத் தடுத்தற்கு நிருவாகத்துக்கு அதிகாரம் இல்லாதபோது, மக்களுடையகுடி யொப்ப அதிகாரம் அக்குறையை நீக்குகிறது. இது அரசியலில் மக்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இது மக்களுடைய விருப்பத்தை அறிய உதவும் அளவுகோலாகவும் இருக்கிறது. இவை நேரடிச் சட்டமியற்றுவதின் நிறையாகும். இதில் சில குறைகளும் உள்ளன. மேற்கூறிய எல்லாப் பயன்களும் நடைமுறையில் வாக்காளர்களுக்குக் கிடைக்கின்றன என்று கூற இயலாது. குடியொப்ப முறையின் காரணமாகச் சுவிட்சர்லாந்தில் சட்டமன்றத்தின் பொறுப்புணர்வு மிகவும் குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. நடைமுறையில் குடியொப்பத்தில் பங்கு கொள்ளும் வாக்காளர்களின் எண்ணிக்கை, தேர்தலில் கலந்து கொள்ளுபவர்களின் எண்ணிக்கையை விடக் குறைவுதான். இது வாக்காளர்களுக்கு இம் முறையில் ஈடுபாடின்மையைக் காட்டுகிறது. பல பொருள்களின் மீது வாக்காளர்கள் சிலநாள் சென்றபின் செயலுணர்வின் வாயிலாகத்தான் ஒரு கருத்தைப் பெறுதல் இயலும். அவர்களால் அப்பொருள்களைப் பற்றிய சட்டத்தை வேண்டுமா வேண்டாமா என்று உடனடியாகத் தீர்மானித்தல் இயலாது. சுவிட்சர்லாந்தில் வாக்காளர் தொகுதி அளவிற் சிறியதாய் இருப்பதாலும், பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் வாக்காளர்களிடையே பெரும் வேறுபாடின்மையாலும், கல்வியறிவும், அரசியலில் சுதந்திரக் கருத்து வளர்ச்சியும் இருப்பதாலும், அங்கு நேரடிக் குடியாட்சி முறை வெற்றியாகச் செயற்படுகிறது.

மக்கள் வாக்கெடுப்பு என்பது (Plebicite) குடியொப்பத்தைப் போலவும், சட்டத் தன் முயற்சி உரிமையைப் போலவும், வாக்காளர்களுக்கு நேரடிச் சட்டமியற்றுதற்கு இருக்கும் ஓர் உரிமை ஆகும். மக்கள் வாக்கெடுப்பு என்பதும் குடியொப்பத்தைப் போன்று எந்த ஒரு பொருளையும் வாக்காளர்களுடைய இறுதித் தீர்ப்புக்கு விடும் ஒரு முறைதான். எனினும் குடியொப்பத்துக்கும், மக்கள் வாக்கெடுப்புக்கும் ஒரு வேறுபாடு உண்டு. குடியொப்பத்திலே சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம் மட்டும் வாக்காளர்களுடைய இறுதித் தீர்ப்புக்கு விடப்படுகிறது. மக்கள் வாக்கெடுப்பு முறையிலோ, சட்டமல்லாத வேறு எந்தப் பொதுவான பொருளும்

வாக்காளர்களுடைய இறுதித் தீர்ப்புக்கு விடப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டின் எதிர்கால அரசியல் நிலை, தேசிய சிறுபான்மையினருடைய நிலை முதலியவை எல்லாம் மக்கள் வாக்கெடுப்புக்கு விடப்படுதற்குரிய பொருள்களாம். பா.சு.

**துணை நூல்கள்:**

**Bryce**, J., Modern Democracies, Vol. II, Macmillan, 1929.

**Codding**, G.A., The Federal Government of Switzerland, Allan & Unwin, 1961.

**Sidgwick**, H., The Elements of Politics, Macmillan, 1908.

**குடியொப்பம் வேண்டல்**: காண்க: குடியொப்பம்.

**குடிவழியியல்** என்பது குடும்பத்தின் உறவுகளையும் அதன் வமிசாவளி அமைப்பையும் ஆராயும் ஒரு துறை. நுணுக்கமான குடிவழியியல் (Genealogy) ஆய்வு ஒருவரது மரபினைப் பல முன்னோர்கள் வரை தொடர்புபடுத்தி, தெளிவான வமிசாவளிப் பட்டியலை வெளிப்படுத்தும்.

ஒவ்வொருவரின் குடிவழிப் பட்டியல் பல காரணங்களுக்காக ஆராயப்படுகிறது. குடும்ப முன்னோர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் தம் மரபில் பிறந்து வளர்ந்தவர்கள் பற்றி அறியவும் குடும்பத்தின் கடந்தகால வரலாற்றை அறியவும் குடிவழியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பழங்குடிகளின் குடிவழியியல்**: தொன்மைப் பண்பாட்டைக் கொண்டுள்ள மக்கள் சிறு குழு, குலம் (Clan), பழங்குடி (Tribe) முதலான சமூக அமைப்புகளாக வாழ்ந்து வருகின்றனர். இந்த அமைப்புக்களைக் கொண்டுள்ளோர் பெரும்பாலும் ஒரு பொதுவான மூதாதையரைக் கொண்டுள்ளபடியால்அவர்களின் குடிவழிப் பட்டியலும் ஒரு குறிப்பிட்ட மூதாதையரிடமிருந்து தோன்றிய மரபு வழியினரையே பட்டியலிடுகிறது. இந்த மூதாதையர்கள் பெரும்பாலாகக் கடவுளாகவோ புராண வீரராகவோ மனிதராகவோ விலங்குகளாகவோ தாவரங்களாகவோ காணப்படுவர். பொதுவான மூதாதையரைக் கொண்டிருந்தாலும் இம்மக்கள் பல குலங்களாகவோ பல குழுக்களாகவோ பாகுபடுவர். ஒரு குலத்தைச் சேர்ந்த அனைவரும் இரத்த உறவுடையவர்கள் என்பதால் வேற்றுக் குலத்தவரையே மணக்கின்றனர். இதனால் மணத்துணையினரின் குலமும் மாறுகின்றது. தம் குலத்தவரின் அடையாளத்தைக் கணக்கிடும் பொருட்டுத் தம் குடிவழி மரபினைக் காத்து நிற்கின்றனர். அதனோடு குலங்களுக்கிடையே எழும் சமூகச் சிக்கலின் போதும், நிருவாகச் சிக்கலின்போதும், குற்றச் செயல்களுக்காகத் தண்டனை விதிக்கும் போதும் பழங்குடிகளிடையே குடிவழிப் பட்டியல் அவசியமாகிறது.

குடிவழிப் பட்டியல் குறித்த குறிப்புகள் உலகத் தோற்றம் பற்றிக் கூறும் விவிலிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. மனித இனத்தின் முதல் மனிதனான ஆதாமிலிருந்து (Adam) தோன்றி நோவா (Noah), ஆபிரகாம் ஆகியோரின் வழிவந்து 14 பழங்குடிகளாகப் பிரிந்தனர். அவர்களே எபிரேய (Hebrew) மக்களின் மூதாதையர்கள் எனக் கூறப்படுகின்றனர். அராபியப் பழங்குடி மக்களும் தங்களின் வமிசாவளியை ஆதாமிடமிருந்து தொடங்கிப் பண்டைய எகிப்தியர், கிரேக்கர், உரோமானியர், உலகிலுள்ள பிற பழங்குடியினர் ஆகியோரோடு தொடர்புபடுத்தித் தங்கள் குடிவழிப்பட்டியலை மிக நீளமாகக் கொண்டுள்ளனர்.

**மரபுரிமையும் குடிவழிப்பட்டியலும்**; ஒரு சமுதாயத்தின் அரசியலும் அதிகார நிலையும் மரபுரிமையின் அடிப்படையில் அமைந்துள்ளன. ஏனெனில், ஒரு சமுதாயத்தில் குடும்ப மரபுரிமை இதனோடு நேரடியாகத் தொடர்புற்றுள்ளது. இந்த மரபுரிமையின் அடிப்படையிலேயே குடும்பத்தின் சொத்து, அதிகாரம் ஆகிய அனைத்தும் தொடர்கின்றன. பல்வேறு நிலைகளில் மரபுரிமையின் தொடர்ச்சி வேறுபட வாய்ப்புள்ளதால் குடும்ப உறுப்பினர்களிடையே அல்லது உறவுக் குழுவினரிடையே சிக்கல் ஏற்படுகிறது. இச்சிக்கலைத் தவிர்க்கும் பொருட்டுச் சட்டவியலாரும் நடுவர்களும் குடிவழிப் பட்டியல் உதவியுடன் தீர்வு காண்கின்றனர்.

அரசியல் அதிகார அமைப்பிலும் குடிவழியியல் மிகவும் விரிவான அளவில் கையாளப்பட்டுள்ளது. பண்டைய சுமேரியர், பாபிலோனியர், எபிரேயர், எகிப்தியர், இந்தியர், சீனர் முதலான நாட்டினர் தத்தம் நாட்டின் அரச குடும்பங்களின் குடிவழிப் பட்டியலை மிகவும் விரிவாகக் குறித்து வைத்திருந்தனர். ஐரோப்பியப் பேரரசர்களும், நிலமானியச் செல்வக் குடியினரும், தத்தம் குடிவழிப் பட்டியலை விளக்கமாகக் குறித்து வைத்திருந்தனர். இக்குறிப்புகள் வரலாற்றியலாருக்கும் அரசியல் ஆய்வாளர்களுக்கும் உதவுகின்றன.

**குடிவழியியலும் சமயமும்**: அரசியல் காரணங்களுக்காகவும் சமயச் சடங்குகள் நடத்தும் மரபுரிமை அமைப்பிற்காகவும் குடிவழிப் பட்டியல் சமய நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்றது. அரசின் சட்ட உரிமையைப் பெறுவதற்காகச் சில அரசர்கள் தங்களைக் கடவுளிடமிருந்து வந்தவர்கள் என்றும், கடவுளின் நேரடிப் பேராளன் என்றும் அறிவித்துக் கொண்டனர். இத்தகைய அரசர்கள் எத்தியோப்பியா, ஐரிசு ஆகிய நாடுகளில் இருந்தனர். சூலியசு சீசர், கிறித்தவ அரசர்கள் முதலானோரும் மரபுவழி அரசர்களாகவே திகழ்ந்தனர்.

எபிரேயர்களும் சமயக் காரணங்களுக்காகக் குடிவழி மரபிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஏனெனில் அவர்கள் ஆரான் (Aaron) என்னும் மூத்த சமய குருவின் வழிவந்தவர்கள் என்று கூறிக்கொள்வர். சியா முசுலிம்களும் தங்களது மதத் தலைவர்களான இமாம்கள் (Imams) முகமதுவின் வமிசா வளியினர் என்று நம்புகின்றனர். மூதாதையர் வழிபாட்டு முறையைக் கொண்ட மக்களுக்குக் குடிவழிப்பட்டியல் இன்றியமையாதது. குறிப்பாகச் சீனர்கள், மரபுவழியில் வாழ்க்கை நடத்தும் சப்பானியர்கள், மேற்கு ஆப்பிரிக்கர்கள், மெலனீசியர் ஆகியோர் மூதாதையர் வழிபாட்டினைப் பெருமளவு கொண்டிருந்தனர். அவர்களனைவரும் தத்தம் குடிவழிப் பட்டியலைக் காத்து வந்தனர்.

அமெரிக்காவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட சமயக் கிளைக் குழுவினர் (Mormon) மரபில் குடிவழிப் பட்டியல் இன்றியமையாதது. அவர்கள் தங்கள் குடும்பங்களுக்கிடையேயான உறவுகள் இறந்த பின்னும் தொடர்வதாக நம்பினர்; சடங்குகள் செய்வதன் மூலம் மூதாதையர்களை இறைவனடி சேர்க்க இயலும் என நம்பினர். இச்சமயக் குழுவினரின் முன்னோர்கள் பலர் தங்கள் மரபில் சேராதவர்களாக இருந்ததால், சடங்குகளை மேற்கொண்டு அவர்களின் ஆவியை இறைவனிடம் சேர்க்க முனைந்தனர். இதற்கு அவர்கள் பலதலைமுறைகள் வரை தங்கள் குடிவழிப்பட்டியலைக் காத்து வந்தனர்.

**குடிவழியியல் ஓர் அறிவியல் ஆய்வு**: ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து குடிவழியியல் பற்றிய ஆய்வுகள் மிக்க அறிவியல் நோக்குடையன என்னும் கருத்து பரவத் தொடங்கியது. பல அறிஞர்கள் இந்தத் துறையில் முனைப்புடன் ஈடுபட்டனர். இதற்காகப் பல கழகங்களும் தோன்றின. இங்கிலாந்தில் தோற்றுவிக்கப்பட்ட தொல்பொருளாராய்ச்சிக் கழகம் (Society of Antiquaries, 1717), ஆர்லியன் கழகம் (Harlien Society, 1869), குடிவழியியலார் கழகம் (Society of Genealogists, 1911) முதலானவை குடிவழியியல் பற்றிய செய்திகளையும் கால்வழியியல் (Heraldry) பற்றிய செய்திகளையும் தொகுத்து வெளியிட்டன. அமெரிக்காவிலும் பல கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இக்கழகங்களைத் தோற்றுவித்தவர்கள் அமெரிக்க நாட்டுப்பற்றுக்கொண்ட சமுதாயத்தினராகவும், அமெரிக்கப் புரட்சியில் ஈடுபட்ட போர்ச் சமுதாயத்தினராகவும் இருந்தனர். அவர்கள் தோற்றுவித்த கழகங்களுள் குறிப்பிடத்தக்கவை சின்சினாட்டி கழகம் (Society of the Cincinnati, 1783) ஆகும். அமெரிக்க விடுதலையை அறிவித்த பின்னர்ப் பல நாட்டுப்பற்றுடைய சமுதாயத்தினர் பல கழகங்களைத் தோற்றுவித்தனர். அமெரிக்காவின் பல தேசிய இனத்தவருள் தங்கள் நாட்டுப்பற்றுக் கொண்டவர்களையும் போரில் ஈடுபட்ட தங்களின் சந்ததியினரின் வழிவழி வருபவர்களையும் அறிந்து கொள்வதே இதன் காரணமாகும். இதனால் இக் கழகங்கள் குடிவழிப்பட்டியலை முறைப்படுத்திப் பேணிக் காக்க முயன்றன.

**வமிசாவளியை ஆராய்தல்**: தொடக்க காலக் குடிவழிப் பட்டியல் வாய்வழி மரபினை (Oral tradition) ஒட்டி எழுதப்பட்டது. இவற்றில் வரலாற்று உண்மைகள் காணப்பட்டாலும் தொன்மக் கூறுகளும் மறுப்பு கூறவல்ல கருத்துகளும் இடம் பெற்றுள்ளன என்று பிற்காலக் குடிவழியியலார் கண்டனர்.

ஐரோப்பியர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தங்கள் குடிவழிப்பட்டியலை எழுத விரும்பியபோது வரலாற்றுச் சான்றுகளையே பெரிதும் நம்பினார்கள். இச்சான்றுகளில் சட்டப் பத்திரங்களும் நிறுவனம் சார்ந்த பத்திரங்களும் (Institutional Records) கடிதங்களும் மிகுந்திருந்தன. அரசுப் பதிவேடுகளிலிருந்தும் முக்கியமான செய்திகள் கிடைத்தன. குறிப்பாகப் பிறப்பு இறப்புப் பதிவு, குடி மதிப்பு முதலானவை பெரும் சான்றுகளாக அமைந்தன. சிறந்த நுணுக்கங்களுடன் ஆராயும் குடிவழியியல் வல்லுநர்கள் இவ்வனைத்துச் செய்திகளையும் கொண்டு சிறந்த முறையில் எழுதும் ஆய்வு முறைகளைப் பெருக்கினர். அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட ஆய்வு முறைகள் இத்துறையில் மாதிரிகளாகக் கொள்ளப்படுகின்றன.

குடிவழியை அறிய விரும்பும் ஒருவர் தம் வமிசாவளியைத் தெரிந்துகொள்ளக் கீழ்வரும் முறைகளில் முயலலாம்: 1. வமிசாவளியைக் காண விரும்பும் ஒருவர் தம் நிலையிலிருந்து தெரிந்த முன்னோர்கள் வழியே அவருக்குத் தெரியாத முன்னோர்கள்

வரை அறிய முனைதல். 2. ஒவ்வொரு மூதாதையருக்கும் ஒரு தனிப்பதிவேட்டை ஏற்படுத்துதல். ஏற்படும் ஊகத்திலிருந்து உறுதியான கருத்துகளைத் தனிமைப்படுத்துதல். இரண்டு தனிப்பட்ட ஊகங்களை ஒரு மூதாதையர் பெயருக்கே கணிக்காமல் வேறு தொடர்புடைய வமிசாவளியினருக்குத் தொடர்பு படுத்த முனைதல். 3. வாழும் உறவினர்களுடன் நேரிலோ கடிதம் மூலமோ தொடர்பு கொண்டு, இறந்த உறவினர்களைப் பற்றி முழுப் பெயரையும் பெயருக்கு முன்னால் உள்ள பெயரையும் பின்னால் உள்ள பெயரையும் அதற்கான காரணங்களையும் பெறுதல். அதனோடு அவரது பிறந்த, இறந்த நாள், இடம் ஆகியவற்றையும் அவர் வாழ்ந்த இடத்தையும் அறிந்து கொள்ளுதல். 4. கிடைக்கப் பெற்ற அனைத்துச் செய்திகளையும் பாதுகாத்து வைத்தல். 5. குடிவழிப்பட்டியலுக்காக ஆராய்பவரைப் பற்றி மேலும் தெளிவான செய்திகள் கிடைக்க அவரது குடும்பப் பத்திரங்கள், அவர் பயன்படுத்திய விவிலிய நூல், இறந்தோர்பட்டியல், உருவப்படம், பிறஒளிப்படங்கள், அவர் பிறருடன் தொடர்பு கொண்ட கடிதங்கள் முதலானவற்றை ஆராய்தல். 6. இறப்புச் சான்றிதழைப் பெற்று ஆராய்தல், அதற்கு அரசு அச்சகத்திலுள்ள படிவத்தினைப் பெற்று அதிலுள்ள விளக்கங்களுக்குச் செய்திகளைச் சேகரித்தல். 7. குடித்தொகை விவரங்களை ஆராய்தல். 8. குடிவழிப்பட்டியலை ஆராயும்போது, குறிப்பிட்ட ஒருவர் வாழ்ந்த சொந்த இடத்திற்குச் சென்று ஆராய்தல் வேண்டும். நீதிமன்றங்களின் பதிவேடுகளையும் ஆராயலாம். பிறந்தகத்தில் வாழும் குடிமக்களிடமும் தகவல் சேகரிக்கலாம்.

குடிவழியியல் பற்றிய ஆய்விற்குப் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. கால இதழ்கள் பல வெளிவருகின்றன. அதற்கெனப் பல நிறுவனங்களும் நூலகங்களும் உதவி வருகின்றன. குறிப்பிடத்தக்க முதன்மையான நூல்கள் வருமாறு: சேவேசு (Savage) எழுதிய புதிய இங்கிலாந்தில் முதல் முதலில் குடியேறியவர்களின் குடிவழியியல் அகராதி (Genealogical Dictionary of the First Settlers of New England, 1860), அமெரிக்கக் குடிவழியியல் அட்டவணை (Index to American Genealogies, 1900), தோனால்டு எல். சேக்கபு (Donald L.Jacob) எழுதிய குடிவழியியல் இதழ்களின் அட்டவணை (Index to Genealogical Periodicals, 1932-1953).

குடிவழியியல் பற்றி வெளியாகும் குறிப்பிடத்தக்க கால இதழ்கள்: புதிய இங்கிலாந்தின் வரலாற்றுக் குடிவழியியல், வாழ்க்கைவரலாற்றுப் பதிவேடு (The New England Historical and Genealogical Register); நியூயார்க்குக்குடிவழியியல்,வாழ்க்கை வரலாற்றுப்பதிவேடு (The New york Genealogical and Biographical Register) ஆகியன.

அமெரிக்காவில் குடித்தொகை மதிப்புப் பற்றிய விவரங்கள் பல இடங்களில் கிடைக்கின்றன. குறிப்பாக கி.பி. 1790 முதல் கி.பி. 1880-வரையிலான குடிமதிப்புகள் தேசிய ஆவணக் காப்பகத்தில் கிடைக்கின்றன. இதில் கி.பி. 1880-ஆம் ஆண்டிற்கான குடிமதிப்பு முதன்மையான பல செய்திகளைக் கொண்டது. இதனை அனைவருக்கும் கிடைக்கும்படி செய்துள்ளதுடன், வாசிங்டனிலுள்ள டி.ஏ. ஆர் நூலகத்தில்(D.A.R.Library) நுண்படச் சுருளாகவும் (Micro film) செய்து வைத்துள்ளனர். இவை பிற நூலகங்களிலும் நிறுவனங்களிலும் கிடைக்கின்றன. குடிவழியியல் குறிப்புகளைப் பல நூலகங்கள் பாதுகாத்து வருகின்றன. அவற்றுள் பதிப்பித்தவையும் பதிப்பிக்காதவையும் அடங்கும். சில செய்தி நிறுவனங்களும் இவற்றைச் சேகரித்துள்ளன. சேகரிப்பு நிறுவனங்களுள் சிறப்பிடம் பெற்றது மார்மன் குடிவழியியல் கழகம் (Mormon Genealogical Society) ஆகும். அமெரிக்காவிலுள்ள இக்கழகம் ஒரு குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பற்றிய வமிசாவளிக் குறிப்புகளை நுண்படச் சுருளில் படம் பிடித்து, அதனை மின்னணுக் கருவி மூலம் அட்டவணைப் படுத்தியுள்ளது. இதன் கிளைகள் 80க்கும் மேலுள்ளன. அமெரிக்காவில் குடிவழியியல் கல்வி 4 ஆண்டுகள் கற்பிக்கப்படுகின்றது.

**இங்கிலாந்து முறை**: ஆங்கிலேயர் ஒருவர் தம் மூதாதையரைக் கண்டெடுப்பதற்குரிய தொடக்க காலப்பதிவேடுகள்போதுமான அளவுச் செய்திகளைக் கொண்டிருக்கவில்லை. இலண்டன் பதிவகம் கி.பி. 1837க்குப் பிறகுள்ள செய்திகளையும் எடின்பரோ பதிவகம் கி.பி.1855 க்குப் பிறகுள்ள செய்திகளையும் சொமர்செட்டுப் (Somerset) பதிவகம் அண்மைக் காலச் செய்திகளையும் கொண்டுள்ளன. தொடக்க காலச் செய்திகள் பல கத்தோலிக்கச் சமய நிறுவனங்களிலும் பிற கிறித்துவ நிறுவனங்களிலும் கிடைக்கின்றன. இவை தவிர, இங்கிலாந்துக்குடிவழிப் பட்டியலைப் பல நூல்கள் விவரிக்கின்றன.

நம் நாட்டிலும் குடிவழிப்பட்டியல் கலை பழங்காலந்தொட்டு வளர்ந்து வந்துள்ளதைப் பல ஆவணங்கள் காட்டுகின்றன. அரசர்களின் குடிவழி, கல்வெட்டுக்களிலும் பல ஆவணங்களிலும் காணப்படுகின்றன. இவை பற்றிய செய்திகள் அரிய சுவடிகளாகவும் பல்வேறு ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இக்கால மக்களின் குடிவழியை ஆராயக்குடிமதிப்பு நூல் பெரிதும் பயன்படுகிறது.

இன்று குடிவழிப்பட்டியல் ஆராயும் கலை பெருகி வருகின்றது. இருப்பினும் இத்துறையின் ஆய்வு நெறிகள் இன்னும் சிக்கலாகவே உள்ளன. குடிவழிப் பட்டியலைப் பல தலைமுறைகளுக்குக் கொண்டு சென்று, அதனைத் துல்லியமாகக் கணிக்க முனையும் போது ஏராளமான செய்திகளைத் தொகுத்தலில் காலம் நீடிக்கிறது. தொகுத்த செய்திகளைச் சரி பார்த்துப் பின்னர்ப் பல நிலைகளில் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது. இவ்வாறு செய்து முடிக்கப் படினும் மேலும் பல சிக்கல்கள் எழுகின்றன. அறிஞர்கள் இச் சிக்கல்களைப் பெரிதும் குறைக்கும் பொருட்டுப் பல ஆய்வு முறைகளை முறைப்படுத்தி வருகின்றார்கள்.
சீ.ப.

**குடிவாரம்**: நிலவிளைச்சலில் நிலத்தைப் பயிரிடுவோருக்கு உள்ள பங்கு குடிவாரம் (Kudivaram) எனப்படும். இது மேல்வாரத்தினின்றும் வேறுபட்டது. பண்டை நாள்களில் இச்சொல் 'துண்டுவாரம்' போன்ற பல்வேறு சொல்லாட்சியில் வழங்கப்பட்டு வந்தபோதிலும், இதன் பொருள் மட்டும் என்றும் ஒரே தன்மையுடையதாகவே இருந்து வந்திருக்கிறது.
இரா.பெ.

**குடும்ப ஏற்பாடு**: இது ஒருவகை ஒத்திசைவு ஆகும். குடும்ப உறுப்பினர்கள் சொத்தினில் அவரவருக்குள்ள உரிமைகளைக் குறித்த அல்லது அவர்களிடையே எழும் கடப்பாடுகளைக் குறித்த உண்மையான சச்சரவுகளை நீதிமன்றம் சென்று வழக்கிட்டுத் தீர்த்துக் கொள்வதைத்தவிர்க்கவும், குடும்ப அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணிக் காக்கவும், குடும்பப் பெருமை, மரியாதையைநிலைநிறுத்தவும், குடும்பச் சொத்தைப் பாதுகாக்கவும், குடும்பத்தின் நன்மைக்காக ஏற்படுத்திக் கொள்ளும் ஏற்பாடு குடும்ப ஏற்பாடு (Family Settlement) எனப்படும்.

குடும்ப ஏற்பாடு குறித்த சில விதிமுறைகளை இந்திய உச்ச நீதிமன்றம், காலே எதிர் 'டெபுடி டைரக்டர் ஆப் கன்சாலிடேசன்' (AIR S.C. 807) என்ற வழக்கில் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளது.

அவையாவன:

1. குடும்ப ஏற்பாடு என்பது, குடும்பத்தின் பல்வேறு உறுப்பினர்களிடையே சொத்தினை நியாயமும் நேர்மையுமான முறையில் பங்கீடு அல்லது ஒதுக்கீடு செய்வதன் வாயிலாகக் குடும்பத் தகராறுகளையும் எதிர்பாத்தியங்களையும் தீர்த்துக் கொள்வதற்கான நல்லெண்ணத்துடன் செய்யப்படுவதாக அமைதல் வேண்டும்.

2. அவ்வாறான ஏற்பாடு தன்னிச்சையாக எழுவதாக இருத்தல் வேண்டும். மோசடி, வலுக்கட்டாயம், அல்லது தகாநிலை வற்புறுத்தம் காரணமாகத் தூண்டப்படுவதாக அது இருத்தல் கூடாது.

3. குடும்ப ஏற்பாடு வாய்மொழியாகக்கூட இருக்கலாம். குடும்ப ஏற்பாடு வாய்மொழியாக இருக்கும்போது, அதைப் பதிவு செய்ய வேண்டிய தேவையில்லை.

4. குடும்ப ஏற்பாட்டில் ஒப்பந்தப்பேச்சுகள் எழுத்து வடிவத்தில் இருப்பின், பதிவு செய்யப்படுவது இன்றியமையாததாகும்.

5. குடும்ப ஏற்பாட்டின் தரப்பினர்களுக்குச் சொத்தினில் முந்தைய உரிமை மூலம் பாத்தியதை அல்லது நலன் அல்லது சொத்தில் பாத்தியம் பெற வாய்ப்பு என்ற ஏதாவது ஓர் உரிமை இருத்தல் வேண்டும், அது மற்றவர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருத்தல்வேண்டும்.

6. அப்போதிருக்கும் அல்லது பின்னால் எழச் சாத்தியக் கூறுள்ள உண்மையான தகராறுகள் (சட்ட பூர்வ பாத்தியதைகளை உள்ளடக்காத) நல்லெண்ணத்துடன் குடும்ப ஏற்பாட்டின் மூலம் தீர்க்கப்பட்டிருந்து, அவை நியாயமும் நேர்மையுமான மூறையில் அமைந்திருந்தால், அது இறுதியானதும் தரப்பினரைக் சட்டுப்படுத்தக் கூடியதும் ஆகும்.

**குடும்ப ஏற்பாடும் இசைவுத் தீர்ப்பாளரின் முடிவும்**: சம்பந்தப்பட்டவர்களால் அல்லது நீதிமன்றத்தினால் அமைக்கப்படும் தீர்ப்பாயம் வழங்கும் ஒரு முடிவிலிருந்து குடும்ப ஏற்பாடானது வேறுபட்டது. இம்முடிவின் அடிப்படை, தரப்பினருக்குள் எழும் ஒத்திசைவு அன்று. அது அவ்வாறு அமைக்கப்பட்ட இசைவுத் தீர்ப்பாளர்கள் (Arbitrators) தங்களுக்குள் கலந்தாராய்ந்து ஒருமனமாக அல்லது பெரும்பான்மை அடிப்படையில் கொடுக்கப்படும் ஒரு முடிவாகும். ஆனால், குடும்ப ஏற்பாடானது தரப்பினர்கள் ஒன்று சேர்ந்து தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாடாகும். இசைவுத்தீர்ப்பாளரின் முடிவு, எதிர்காலத்தில் எழவிருக்கும் தகராறு குறித்தும் இருக்கக் கூடும்.

**குடும்ப ஏற்பாடும் ஒத்திசைவும்**: ஒத்திசைவு என்பது தங்களது கருத்து வேற்றுமைகளை அல்லது தங்களது பாத்தியதைகளைச் சரிப்படுத்திக் கொள்வதற்காக ஒருவருக்கொருவர் ஒப்பி உடன்படும் ஓர் உடன்பாடாகும். இத்தகைய ஒத்திசைவில் புதியவர்

சுளும் தரப்பினர்களாக இருக்கலாம். ஆனால், குடும்ப ஏற்பாட்டில் தரப்பினர்கள் குடும்பத்தின் உறுப்பினர்களாக இருத்தல் இன்றியமையாதது. ஒத்திசைவு நிகழும்போது அவர்களிடையே பூசல் ஒன்று இருத்தல் வேண்டும். ஆனால், குடும்ப ஏற்பாட்டில் அப்போதைக்கு சச்சரவு ஏதும் இருத்தல் தேவையில்லை.

மோசடி, தகாநிலை வற்புறுத்தல் போன்ற காரணங்களைக் கொண்டு மெய்ப்பித்தாலன்றிக் குடும்ப ஏற்பாட்டினைச் சாதாரணமாகத் தள்ளுபடி செய்தல் இயலாது. ஆ.ச.

**குடும்பநலத் திட்டம்**: உலக மக்கள்தொகை நாளுக்கு நாள் விரைவாகப் பெருகி வருகிறது. ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகைக் கணிப்புக் குழு (U.S. Census Bureau) கணக்கிட்டுள்ளபடி, 1950-இல் 250 கோடியாக இருந்த உலக மக்கள் தொகை 1960-இல் 310 கோடியாகவும், 1970-இல் 370 கோடியாகவும், 1980-இல் 450 கோடியாகவும் வளர்ந்திருக்கிறது. இது 1986-இல் 500 கோடியை எட்டியிருக்கிறது. மேலும் இந்த அளவு 2000-இல் 620 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ச்சி விகிதம் மாறுபடுகிறதேயன்றி அனைத்து நாடுகளிலும் இம்மக்கள் தொகைப் பெருக்கம் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. பெருகி வரும் மக்கள் தொகையினால் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. உண்ணும் உணவின் அளவு, வேலை வாய்ப்புகள், வீட்டு வசதி, கல்வி வாய்ப்புகள், மருத்துவ வசதி, வருமான நிலை, சமூக-பொருளாதார வளர்ச்சி ஆகியவை பாதிக்கப்பட்டுத் தனிநபர் வாழ்வும், தேசிய நிலையும் மங்குகின்றன. இத்தகைய சிக்கல்களைத் தீர்க்க மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே நல்ல வழி எனப் பல நாடுகள் முடிவு செய்தன. எனவே, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தப் பிறப்பைக் கட்டுப்படுத்தும் திட்டங்களே ஏற்றவை என்பதால் அத்திட்டங்களை, அதாவது 'குடும்பக் கட்டுப்பாடு' திட்டங்களை அவை தொடங்கியிருக்கின்றன.

பிறப்புக் கட்டுப்பாடு-திட்டம் பிறப்பு விகிதத்தைக் குறைத்து மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயற்பட்டாலும், அத்திட்டங்களின் பயனாகத் தாய்மார்களின் உடல்நலமும், குழந்தைகளின் நலன்களும் மேம்பாடு அடைய வழி உள்ளது. எனவேதான் பிறப்புக் கட்டுப்பாடு-திட்டம் குடும்ப நலத் திட்டம் (Family Planning Programme) என்ற பெயரைப் பெறுகின்றது.

முதன் முதலில் அரசுத் துறையில் பிறப்புக் கட்டுப்பாடு-திட்டத்தை இயற்றி நடைமுறைக்குக் கொண்டு வந்த நாடு இந்தியாதான். இது 1952-ஆம் ஆண்டில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அதைத் தொடர்ந்து 1956-69இல் 4 நாடுகளும், 1960-63-இல் 6 நாடுகளும், 1964-65-இல் 8 நாடுகளும், 1966-67-இல் 15 நாடுகளும், 1968-69-இல் 11 நாடுகளும், 1970-71-இல் 12 நாடுகளும், 1972-73-இல் 13 நாடுகளும், 1974-75-இல் 11 நாடுகளும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தொடங்கின. 1986-இல் 90 நாடுகளுக்கு மேல் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் செயற்படுத்தியுள்ளன. இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள் வளர்ந்து வரும் நாடுகளில் மட்டுமன்றி, வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூடச்செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**இந்தியா**: உலக நிலப் பகுதியில் இந்தியா 2.4 விழுக்காடு தான் உள்ளது. ஆனால் உலக மக்கள் தொகையில் இந்தியாவுக்குள்ள இடம் 15.53 விழுக்காடு ஆகும். இந்திய மக்கள் தொகை ஆண்டுதோறும் 2.5 விழுக்காடு வளர்ந்து வருகிறது. ஆனால், இம்மக்கள் தொகை வளர்ச்சி 1921க்குப் பின்னர் மிக விரைவாக அதிகரிக்கத் தொடங்கியது. 1921-இல் 25.12 கோடியாக இருந்த மக்கள் தொகை 1931-இல் 27.89 கோடியாகவும், 1941-இல் 31.85 கோடியாகவும், 1951-இல் 36.09 கோடியாகவும்,1961-இல் 43.91 கோடியாகவும், 1971-இல் 54.79 கோடியாகவும், 1981-இல் 68.52 கோடியாகவும் உயர்ந்து, 1986-இல் 76.62 கோடி அளவை எட்டியுள்ளது.

இவ்வாறு மக்கள் தொகை விரைவாக வளர்ந்து வருவதன் காரணமாக, தனிநபர் வருமானநிலை, வாழ்க்கைத் தரம், பெண்கள், குழந்தைகள், ஆகியோர் நலன்கள், முதலியன பாதிக்கப்படுகின்றன. உணவுப் பற்றாக்குறை, வீட்டு வசதியின்மை, வேலையின்மை, உடல் நலம் பேணல் மற்றும் மருத்துவ வசதிகள் பற்றாக்குறை, போக்குவரத்துச் சிக்கல் முதலிய சிக்கல்களும் தோன்றுகின்றன. இச்சிக்கல்களைத்தீர்க்க மக்கள் தொகைக் கட்டுப்பாடே சிறந்த வழி என்று முடிவு செய்து இந்திய அரசு குடும்ப நலத் திட்டம் என்ற பெயரில் குடும்பக் கட்டுப்பாடு-திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. பிறப்பு விகிதத்தைக் குறைத்து, அதன் மூலம் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி, மக்களுக்கு வளமான,

நிறைந்த வாழ்வு அளித்திடுவதையும் குறிக்கோள்களாகக் கொண்டு 1952-இல் இத்திட்டம் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

இந்தத் திட்டத்திற்கென ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் கணிசமான நிதி ஒதுக்கீடு அளிக்கப் படுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1951-56) 6.5 மிலியன் உரூபாயும், இரண்டாவது, ஐந்தாண்டுத் திட்டத்தில் (1956-61) 49.7 மிலியன் உரூபாயும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1961-66) 280 மிலியன் உரூபாயும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969-74) 3150 மிலியன் உரூபாயும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1974-78) 4973.6 மிலியன் உரூபாயும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-85) 10,000 மிலியன் உரூபாயும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-86-1990-91) 64,000 மிலியன் உரூபாயும் குடும்ப நலத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டன.

இத்தகைய பெரும் திட்டத்திற்கென வலிமையான நிர்வாக அமைப்பு ஒன்று தனியாக இயங்குகிறது. நடுவன அரசின் நல்வாழ்வு, மற்றும் குடும்ப நல அமைச்சகத்தில் குடும்ப நலத்திற்கென ஒரு முழுமையான துறை இருக்கிறது. இந்தத் துறையின் தலைமையின் கீழ் மாநிலங்களில் குடும்ப நலக் குழுக்கள் என்ற நிர்வாக அமைப்புகள் குடும்ப நலத்திட்டப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன. அவை மாவட்டக் குடும்ப நலக் குழுக்கள் மூலமாகக் குடும்ப நலப்பணிகளைச் செயலாக்கி வருகின்றன. மாவட்டக் குடும்ப நலக் குழுக்களின் கட்டுப்பாட்டில் கிராமப் புறங்களில் அமைந்திருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களும், கிளை நிலையங்களும், நகர்ப் புறங்களில் அமைந்திருக்கும் மருத்துவ மனைக் குடும்ப நலப் பிரிவுகளும் குடும்ப நலப்பணிகளைச் செய்து வருகின்றன. மாநிலக் குடும்ப நலக் குழுக்களுக்கும், மாவட்டக் குடும்ப நலக் குழுக்களுக்கும் அவற்றின் பணிகளில் கருத்துரை வழங்கி உதவிட முறையே மாநில அளவிலான வாரியங்களும் மாவட்ட அளவிலான வாரியங்களும் அமைந்திருக்கின்றன.

குடும்ப நலத்திட்டத்திற்கான கொள்கை முடிவுகளையும், இலக்குகளையும் நிர்ணயிக்க நடுவண அரசு அளவில் ஒரு தனி அமைச்சரவைக் குழு இருக்கிறது. அது நடுவண அரசு நிதியமைச்சரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாநிலங்கள் அளவிலும் குடும்பநலத்திட்டத்திற்கான இலக்குகளையும், பணிகளையும் முடிவுசெய்ய முதலமைச்சர்களின் தலைமையின் கீழ் அமைச்சரவைக் குழுக்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. பிறப்பு விகிதம், 2000-இல் ஆயிரம் பேருக்கு 21 என்றும், மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1.4 விழுக்காடு என்றும் அமைந்திட இலக்குகள் வைத்துகொண்டு குடும்பநலத் திட்டம் செயற்படுத்தப் படுகிறது. இந்த இலக்குகளை எய்திட தகுதி வாய்ந்த தம்பதிகளில் 1987-இல் 22 விழுக்காட்டினர் மட்டுமே பயன்படுத்துகின்ற நிலையை மாற்றி 2000-இல் 60 விழுக்காட்டினரைக் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக்குமாறு செய்து இந்திய மக்கள் தொகையை 100 கோடிக்குள் அடக்கி விடக் குடும்ப நலத்திட்டம் முயன்று வருகிறது. மேலும் 1987-இல் 4.2 குழந்தைகளைக் குடும்ப அளவாக கொண்டுள்ள இந்தியாவை 1995-இல் 2.3 குழந்தைகள் கொண்டதாக மாற்றுவதும் இதன் நோக்கமாகும்.

சிவப்பு முக்கோணத்தைச் சின்னமாக அமைத்துக் கொண்டு இந்தியக் குடும்ப நலத் திட்டம் மக்களுக்கு ‘இல்லற வாழ்விற்கு இரண்டு குழந்தைகள் போதும்’ என்ற இரண்டு - குழந்தை நெறியை அறிவுறுத்தி வருகிறது. திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், வெளியீடுகள், சுவரொட்டிகள் முதலிய பல்வேறு செய்தித் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும், கண்காட்சிகள், நாடகங்கள், பொம்மலாட்டங்கள், இசை நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள் முதலியவை மூலமாகவும், குடும்ப நல அலுவலர்கள் வாயிலாகவும், உள்ளாட்சி மன்றத் தலைவர்கள், ஆசிரியர்கள் போன்ற கருத்துருவாக்கத் தலைவர்கள் (Opinion Leaders) வாயிலாகவும் ‘இரண்டு-குழந்தை’ நெறியைப் பரப்பி வருகிறது.

இரண்டு குழந்தைகளோடு குடும்ப அளவை நிறுத்திக் கொள்ள மட்டுமன்றி முதல் குழந்தையைத் தாமதப்படுத்தவும், இரண்டாவது குழந்தைக்கு மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் இடைவெளி கொடுக்கவும் மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ‘முதல் குழந்தையைத் தாமதப்படுத்துங்கள். இரண்டாவது குழந்தைக்கு இடைவெளி தாருங்கள். மூன்றாவது குழந்தைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்பது அரசின் குடும்பக் கட்டுப்பாட்டு முழக்கம்.

குடும்பக் கட்டுப்பாட்டு நெறியை மக்கள் கடைப்பிடிப்பதற்காக, குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களும், வசதிகளும் எங்கும் தாராளமாக, மக்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே வழங்கப்படுகின்றன. ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. குடும்பக் கட்டுப்பாடு சேவைகள் பலன் அளிக்கத் தக்க வகையில் அமைந்திட அவை தாய்-சேய் நலச் சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

குடும்ப நலத் திட்டத்தின் கீழ், 'நிரோத்' போன்ற கருத்தடை உறைகள், 'காப்பர்-டி' போன்ற கருத் தடைக் கருவிகள், மாத்திரைகள், அறுவை மருத்துவ முறைகள் முதலிய பல்வேறு கருத்தடைச் சாதனங்கள் கணவன் மனைவிக்கு வழங்கப்படுகின்றன. அறுவை மருத்துவ முறை ஒரு சிறந்த, நிரந்தரமான, பாதுகாப் பான கருத்தடை முறை இந்திய குடும்ப நலத்திட் டம் அதைப் பெரிதும் வலியுறுத்துகிறது. அந்த முறை இலவசமாகச் செய்து கொடுக்கப்படுகிறது. அது மட்டுமன்றி, அறுவை மருத்துவம் செய்து கொள் ளும் பெண்களுக்கு 210 உருபாயும், ஆண்களுக்கு 190 உருபாயும் ஊக்கத் தொகையாகக் கொடுக்கப்படு கிறது. தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களில் அறுவை மருத்துவம் செய்து கொள்ளுகிறவர்களுக் குப் பரிசாக அரசு மருத்துவ மனைகளில் இலவச உடல் நல ஆய்வு, வீட்டு வசதி வாரிய வீட்டு ஒதுக் கீடுகளில் முன்னுரிமை, குலுக்கல் பரிசுச் சீட்டுகள் முதலியனவும் வழங்கப்பட்டு ஊக்கம் தரப்படுகிறது.

மருத்துவ மனைகளில் மட்டுமன்றி, அறுவை மருத் துவத்துக்கெனத் தனியாக முகாம்கள் அமைக்கப் பட்டு அறுவை மருத்துவ வசதிகள் செய்து கொடுக் கப்படுகின்றன. ஓர் ஆண்டிற்கு இவ்வளவு பேருக்கு (எடுத்துக்காட்டாக, 1986-87-ஆம் ஆண்டிற்கு ஆறு மிலியன் பேருக்கு) அறுவை மருத்துவம் செய்யப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அறுவை மருத்துவத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலக்கெடுவிற்குள் 36 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத் திற்குள் வருவர் என திட்டமிடப்பட்டது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இது 60 விழுக்காடாக உயர, பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகளில் மாநில அரசுகள் ஊக்கமாகச் செயல்பட நடுவண அரசு பரிசு கள் வழங்கி ஊக்கப்படுத்துகிறது குடும்பக் கட்டுப் பாட்டுப் பணிகளில், முக்கியமாக அளவை மருத்துவப் பணிகளில் முன்னணியில் வருகின்ற மாநில அரசு களுக்கு ஆண்டு தோறும் நடுவண அரசு முதற் பரி சாக 2.5 கோடி உருபாயும், இரண்டாம் பரிசாக ஒரு கோடி உருபாயும் வழங்குகிறது.

இத்தகைய முனைப்பான குடும்பக் கட்டுப் பாட்டு நடவடிக்கைகளால் 1983 மார்ச்சு வரை 15-இலிருந்து 44 வயதுக்குட்பட்ட திருமணமான பெண் களில் 25.9 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கிற நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களின் 89 விழுக்காட்டினர் அறுவை மருத்துவம் செய்து கொண்டவர்கள். 1956-இலிருந்து மார்ச் 1983 வரை சுமார் 54.3 மிலியன் குழந்தைகள் பிறப் பது தடுக்கப்பட்டிருக்கிறது. இந்நடவடிக்கைகளி னால் பிறப்பு விகிதம் 1951-இல் இருந்த ஆயிரம் பேருக்கு 41.7 என்ற அளவில் இருந்து 1984-இல் 33 என்ற அளவுக்குக் குறைந்துள்ளது.

பிறப்பு விகிதத்தைக் குறைக்க அரசு மேலும் பல வழிகளைக் கையாண்டு வருகிறது. 1971-இல் நடை முறைக்கு வந்த மருத்துவ முறைக் கருக் கலைப்புச் சட்டத்தின் கீழ்க் கருச்சிதைவைச் சட்டபூர்வமாக்கி, அரசு மருத்துவ மனைகளில் கருச்சிதைவு வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. சட்டபூர்வமான திரு மண வயதை 1978-இல் பெண்களுக்குப் 15-இலிருந்து 18 வயதுக்கும், ஆண்களுக்குப் 18-இலிருந்து 21 வய துக்கும் உயர்த்தியுள்ளது. பள்ளி, மற்றும் கல்லூரிப் பருவத்திலேயே ஆண்களுக்கும், பெண்களுக்கும் மக் கள் தொகைக் கட்டுப்பாட்டின் தேவையைப் பற்றிய உணர்வு ஏற்படுவதற்காகப் பாடத்திட்டங்களில் மக் கள் தொகைக் கல்வியைச் சேர்ந்துள்ளது. இளங் குழந்தை இறப்பு குடும்ப நல இயக்கத்தின் வெற்றிக் குத் தடையாக இருக்கும் என்பதை உணர்ந்து அரசு இளங் குழந்தைகளின் உடல் நலத்தைப் பேணி அவர் களைக் காக்க நோய்த் தடுப்பு, மற்றும் ஊட்டச் சத் துத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

இந்தியா செயற்படுத்திய பிறகு பல நாடுகள் குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை அரசுத்துறை மூலம் கொண்டுவந்திருக்கின்றன. அவடுறில் சீனா முன்னணியில் இருப்பதுடன் குடும்பக்கட்டுப்பாட்டுத் துறையில் அனைத்து நாடுகளுக்கும் முன்னால் நிற் கிறது.

**சீனா**: உலகில் சோவியத் யூனியனுக்கும், அமெ ரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் அடுத்ததாக மிகப் பெரிய பரப்பளவைக் கொண்ட நாடு சீனா. மக்கள் தொகை யளவில் உலகில் முதலில் நிற்பது அதுவே. இங்கு முழு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 1953-இல் தான் நடைபெற்றது. அப்போது மக்கள் தொகை 58.3 கோடியாக இருந்தது. இது 1957-இல் 65.7 கோடியாக உயர்ந்தது. 1964-இல் 71.7 கோடியாக வளர்ந்தது. 1974-இல் 86.6 கோடியை எட்டியது. 1984-இல் இவ்வெண்ணிக்கை 105.1 கோடியாக உயர்ந்திருக்கிறது.

பெருகி வந்த மக்கள் தொகை சீனாவுக்குப் பல சிக்கல்களைத் தோற்றுவித்ததுடன் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் குன்றச் செய்தது. மக்க ளுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி, உணவு முதலிய வசதிகளைப் போதுமான அளவில்,

அரசு அளிக்க இயலவில்லை. மக்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை அமைத்துத் தரக் கடினமாக இருந்தது. மக்கள் தொகைப் பெருக்கத்தினால் உள் நாட்டு நுகர்வு அதிகரித்து, அதன் விளைவாகப் பரந்த தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடு திரட்ட இயலாமற் போயிற்று. அதற்கும் மேலாக மக்கள் தொகைப் பெருக்கத்தினால் இயல்பாக ஏற்படும் சூழ்நிலை மாசும் ஏற்பட்டு மக்கள் வாழ்வைப் பாதித்தது.

சீனாவின் தேசியப் பேரவையில் (National Congress) 1954-இல் அதன் உறுப்பினரான சாவோ லிட்சூ என்பவர் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தினார். குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் ஆகியோருடைய உடல் நலத்தைப் பேணக் குடும்பக் கட்டுப்பாடு மிகவும் அவசியம் என்று அவர் வலிறுத்தினார். ஆனால், அவ்ருடைய கருத்தைச் செய்தித்தாள்கள் கண்டித்து எழுதின.

சீனப் பெருந்தலைவரான மா சேதுங்கு1957-இல் 'புதிய மக்கள் தொகைக் கோட்பாடு' என்ற தமது நூலில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டார். அரசும் பிறப்புக் கட்டுப்பாட்டைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு குடும்பக் கட்டுப்பாடு-திட்டத்தை 1956-இல் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. பெண்கள்,குழந்தைகள் ஆகியோருடைய நலத்தைப் பேணவும், குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் நல்ல முறையில் கல்வி வசதிகளை அமைத்துக் கொடுக்கவும், பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் பெண்கள் தடையின்றிப் பங்கு கொள்ள வழி வகுக்கவும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் கொண்டு வருவதாக அரசு அறிவித்தது.

அந்தக் கால கட்டத்தில் சீனாவில் ஒவ்வொரு பெண்ணுக்கும் சராசரியாக மூன்று குழந்தைகள் பிறந்தன. இந்த விகிதத்தில் குழந்தைகள் பிறந்து கொண்டே போனால் 1957-இல் 65.7 கோடியாக இருந்த மக்கள் தொகை 2000-இல் 141.4 கோடியாகவும், 2050-இல் 292.3 கோடியாகவும், 2080-இல் 426 கோடியாகவும் உயரக் கூடும் என்று அரசு அஞ்சியது. ஆகவே அரசு தனது குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் இரண்டு குழந்தைகள் நெறியை வலியுறுத்தியது. ஒவ்வொரு குடும்பமும் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது.

மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கப் பரவலான பிரச்சாரம் நடைபெற்றது. குழந்தை பிறப்பதைத் தடுக்கவும், குழந்தை பிறப்பதைத் தள்ளி வைக்கவும் உதவக் கூடிய கருத்தடைச் சாதனங்களைக் கடைப்பிடிக்குமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதற்காக அரசும் போதிய வசதிகளைச் செய்து கொடுத்துக் கருத்தடைச் சாதனங்கள் தாராளமாகக் கிடைக்கும்படி பார்த்துக் கொண்டது. மேலும், திருமணங்களைத் தள்ளிப் போடுமாறும் அரசு மக்களைக் கேட்டுக் கொண்டது.

இவ்வளவு தீவிரமாகச் சீன அரசு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்த போதிலும், 1958-இல் வேளாண்மை உற்பத்தியில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டு உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைத்தன. அதனால் அரசு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் முனைப்பாக இல்லை. ஆயினும் 1959, 1960, 1961 ஆகிய ஆண்டுகளில் வேளாண்மை உற்பத்தி வீழ்ச்சியடைந்து பொருளாதார நலிவு ஏற்பட்டது. அதனால் பாதிக்கப்பட்ட அரசு எக்காரணங் கொண்டும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் செயற்படுத்துவதில் தளர்வு காட்டக் கூடாது என்று முடிவு எடுத்து 1962-இல் தீவிரமான குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்தை மேற்கொண்டது.

இந்தத் தீவிரமான இயக்கத்தில் திருமணத்தைத் தள்ளிப் போடுவது மிகவும் வலியுறுத்தப்பட்டது. சட்ட பூர்வமான திருமண வயது பெண்களுக்கு 18 என்றும், ஆண்களுக்கு 21 என்றும் இருந்த போதிலும், பெண்கள் 25 வயதுக்கு மேலும், ஆண்கள் 28 வயதுக்கு மேலும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

இரண்டு-குழந்தைகள் நெறி மக்கள் தொகையைக் குறைக்க வல்லது அன்று எனக் கருதி 1980-இல் சீன அரசு 'ஒரு-குழந்தை' நெறியைக் கொண்டு வந்து ஒவ்வொரு தம்பதியும் ஒரே ஒரு குழந்தையோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியது. இந்நெறி 1985-இலிருந்து கட்டாயமாக்கப்பட்டு ஒரு தம்பதி ஒரே ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ்க் கருத்தடைச் சாதனங்களும், வசதிகளும் இலவசமாக நாடெங்கும் தாராளமாக வழங்கப்படுகின்றன. கருத்தடைச் சாதனங்கள் மக்களுக்கு அவர்கள் வசிக்கும் 'காம்யூன் களின் தலைவாகளால் விநியோகிக்கப் படுகின்றன. கருச் சிதைவும் செய்யப்படுகிறது.

'ஒரு-குழந்தை' நெறியை மீறி இரண்டு அல்லது மேற்பட்ட குழந்தைகளைப் பெறும் தம்பதிகளுக்குத் தண்டத் தொகை விதிக்கப்படுகிறது. அவர்கள் பிறருடைய கேலிக்கும், நகைப்புக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். இரண்டாம் முறை கருத்தரிக்கும் பெண்கள், அவர்கள் வேலையில் இருந்தால், அவர்கள் கருச் சிதைவு செய்து கொள்ள வற்புறுத்தப்படுகிறார்கள். அவர்கள் கருச்சிதைவு செய்து கொள்ள மறுத்தால் அவர்கள் சம்பளத்தில் 20 விழுக்காடு தண்டத் தொகையாகப் போடப்படுகிறது. குழந்தை பிறந்ததும், மேற்கொண்டு, கணவனும், மனைவியும் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுப் பிரிக்கப்படுகின்றனர்.

ஆயினும் ஒரு சில சந்தர்ப்பங்களில் இரண்டாம் குழந்தை அனுமதிக்கப்படுகிறது. அனுமதி கிடைத்த பிறகே ஒரு தம்பதி இரண்டாம் குழந்தையைப் பெற முடியும். ஆயினும் எந்தச சந்தர்ப்பத்திலும் மூன்றாம் பிள்ளைக்கு அனுமதி கிடையாது.

பெண்களுடைய திருமண வயது 18-இலிருந்து 20 க்கும் ஆண்களுடைய திருமண வயது 20-இலிருந்து 22 க்கும் உயர்த்தப்பட்டுள்ளது. ஆயினும் பெண்கள் 25 வயதுக்குக் கீழும், ஆண்கள் 28 வயதுக்குக் கீழும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை.

திருமணமான பெண்கள் திருமணத்திற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்தே குழந்தை பெற அனுமதிக்கப்படுகின்றனர். அதுவும் முதல் குழந்தை பிறந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகே இரண்டாம் குழந்தை பெற அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு 35 அல்லது 40 வயது ஆகி விட்டால் அவர்கள் குழந்தை பெற வேண்டாம் என்று வற்புறுத்தப்படுகின்றனர்.

மக்களுக்குக் கருத்தடைச் சாதனங்கள் தங்கு தடையில்லாமல் நாடெங்கும் கிடைக்க அரசு வழிவகை செய்துள்ளது. உள்ளுக்குச் சாப்பிடும்கருத்தடை மாத்திரைகள், கருத்தடை வளையங்கள் (IUD) அறுவை மருத்துவ முறைகள் முதலியவற்றை அதிக அளவில் வழங்குகிறது. மக்கள் அவற்றைக் கடைப்பிடிக்கத் தீவிர பிரசாரமும் செய்கிறது. இதற்காக ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் குடும்பக் கட்டுப்பாட்டுக் குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் குடும்பக் கட்டுப்பாட்டுச் செய்திகள் பரப்பப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் காரணமாகச் சீனாவில் திருமணமான தகுதியான பெண்களுள் 60 விழுக்காடு கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது (1980). குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் பெண்களுள் 40 விழுக்காட்டினர் அறுவை மருத்துவ முறையையே தேர்தெடுக்கின்றனர்.

இங்கு 1962-இலிருந்து தொடங்கப்பட்ட தீவிர குடும்பக்கட்டுப்பாடு இயக்கத்தின் காரணமாக 1960-இல் ஆயிரம் பேருக்கு 40 என்று இருந்த பிறப்பு விகிதம் 1979-இல் 18-ஆகக்குறைந்தது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் ஆயிரம் பேருக்கு 26 என்ற விகிதத்திலிருந்து (1970) ஆயிரம் பேருக்கு 11.7 என்ற விகிதத்திற்குக் (1979) குறைந்தது. இந்தப் பிறப்பு விகித, மக்கள் தொகை வளர்ச்சி விகித வீழ்ச்சியினால் 1984-இல் இருந்த 105.1 கோடி மக்கள் தொகையளவு 2028-ஆம் ஆண்டில் 96 கோடியாகவும், 2060-இல் 61.3 கோடியாகவும் 2080-இல் 37 கோடியாகவும் குறையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சிங்கப்பூர்**: இந்தியாவுக்கும், சீனாவுக்கும் அடுத்தபடியாகக் குடும்பக்கட்டுப்பாடு திட்டம் சிங்கப்பூரில் சிறப்பாகச் செயற்படுகிறது. மக்கள் தொகை அடர்த்தி அதிகமாகிப் போனதன் காரணமாக (ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 4000 பேர்) சிங்கப்பூர் அரசு மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தைக் கட்டுப்படுத்த 1965-இல் குடும்பக்கட்டுப்பாடு திட்டம் கொண்டு வந்தது. 2000-ஆம் ஆண்டில் மக்கள் தொகை வளர்ச்சியைப் பூச்சியத்துக்துக் கொண்டு வரும் இலக்குடன் இத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. இத் திட்டத்தின் கீழ்க் குடும்பக் கட்டுப்பாடு வசதிகளும் கருசிதைவுச் வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் 'உங்கள் குடும்பத்தைத் திட்டமிடுங்கள்' என்ற முழக்கமே எழுப்பப்பட்டது. நாளடைவில் 'உங்கள் குடும்பத்தைச் சிறியதாக வைத்துக் கொள்ளத் திட்டமிடுங்கள்' என்ற முழக்கமும் அதைத் தொடர்ந்து 'மூன்று குழந்தைகளோடு நிறுத்திக் கொள்ளுங்கள்' என்ற முழக்கமும் 1972-இல் 'இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொள்ளுங்கள்' என்ற முழக்கமும் வந்தன. சிங்கப்பூர் அரசு அன்றிருந்து இன்று வரை இரண்டு குழந்தை நெறியைப் போற்றி வருகிறது.

இரண்டு-குழந்தை நெறியை மக்களிடம் பரப்பப் பல வழிகளிலும் அரசு முயல்கிறது. பேறுகால விடுதிகளிலும், குழந்தைகள்நல மருத்துவ மனைகளிலும் பெண்களுக்கு இந்நெறி எடுத்துச் சொல்லப்படுகிறது. தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்கு இந்நெறியைப் பின்பற்றுமாறு அறிவுரை கூறப்படுகிறது.

இந்நெறியை மக்கள் கடைப்பிடிக்க அரசு பல வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அரசுப் பணிகளில் உள்ள பெண்களுக்கு முதல் இரண்டு பேறு காலங்களுக்கு மட்டுமே சம்பளத்துடன் கூடிய நான்கு வாரப்பேறு கால விடுப்பு அனுமதிக்கிறது. பேறுகாலத்திற்காக அரசு மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் பெண்களிடமிருந்து அவர்களின் கல்வி வருமான நிலையைப் பொறுத்து முதல் குழந்தைக்கு 60-இலிருந்து 300 தாலர் வரையிலும், இரண்டாம் குழந்தைக்கு 90—இலிருந்து 360 தாலர் வரையிலும், மூன்றாம் குழைந்தைக்கு120 இலிருந்து 420 தாலர்வரையிலும், நான்காம் குழந்தைக்கு 240-இலிருந்து 480 தாலர் வரையிலும், ஐந்தாம் குழந்தைக்கு 300-இலிருந்து 480 தாலர் வரையிலும், பேறுகாலக் கட்டணங்கள் பெறப்படுகின்றன.

அறுவை மருத்துவம் செய்து கொள்ள இசையும் பேறு காலப் பெண்களுக்குப் பேறுகாலக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. அறுவை மருத்துவம் செய்து கொள்ளும் ஏழை ஆண்—பெண் ஆகிய இருபால் நோயாளிகளுக்கும் உள்ளுறைக் கட்டணத்திலிருந்து விலக்கு தரப்படுகிறது. அறுவை மருத்துவம் செய்து கொள்ளும் அரசு ஊழியர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய ஒரு வாரச் சிறப்பு விடுப்பு தரப்படுகிறது. பிரசவம் அல்லது கருச்சிதைவு ஏற்பட்ட ஆறு மாதங்களுக்குள் அறுவை மருத்துவம் செய்து கொள்ளும் அரசு பெண் ஊழியர்களுக்குச் சிறப்பு மருத்துவ விடுப்பு வழங்கப்படுகிறது.

ஏதாவதொரு குடும்பக் கட்டுப்பாட்டு முறையின் மூலம் ஒரே குழந்தையோடு நிறுத்திக் கொள்ளும் குறைந்த கல்வித் தகுதியும், மாதம் 500 தாலருக்குக் குறைவான வருமானமும் உடைய ஏழைகளுக்கு அரசு 5000 தாலர் ஊக்கத் தொகையாகக் கொடுக்கிறது. ஊக்கப் பரிசு பெற்றுக் கொண்டவர்கள் பின்னாளில் இரண்டாம் குழந்தை பெற்றுக் கொண்டால் 10 விழுக்காடு கூட்டு வட்டியுடன் பரிசுத் தொகையைத் திருப்பித் தந்து விட வேண்டும்.

முதல் இரண்டு குழந்தைகளுக்கு அரசு வருமானத்தில் 5 விழுக்காட்டை வரி விலக்குச் செய்கிறது. ஆனால் மூன்றாம் குழந்தைக்கு 2 விழுக்காடு தான் வரி விலக்கு செய்யப்படுகிறது.

இரண்டு குழந்தைகள் உடையவர்களுக்கு அரசின் வீட்டு வசதி, மற்றும் மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் வீட்டு ஒதுக்கீட்டில் முன்னுரிமை தரப்படுகிறது. அவர்கள் விரும்பினால் வீட்டின் ஒரு பகுதியைப் பிறருக்கு வாடகைக்கு விடலாம். ஆனால், பெரிய குடுமபத்தைக் கொண்டவர்களுக்கு வீடுகள் கிடைத்தாலும், அவர்கள் அவற்றை மேற்கொண்டு யாருக்கும் வாடகைக்கு விடமுடியாது. அவ்வாறே குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கும் காரியத்திலும் இரண்டு குழந்தைகள் பெற்ற, அறுவை மருத்துவம் செய்து கொண்ட பெற்றோர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. எனவே அனைத்து நிலையிலுள்ள மக்களும் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க ஆர்வம் காட்டுகின்றனர். திருமணமான பெண்களில் 71 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர் (1980). 1960-இல் இருந்த 38.4 என்ற பிறப்பு விகிதம். 1970-இல் 22.1 விகிதமாகவும். 1980-இல் 17.8 விகிதமாகவும் குறைந்துள்ளது.

**பிறநாடுகள்**: மேற்கண்ட நாடுகளேயன்றி வேறு பல நாடுகளும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கடைப்பிடிக்கின்றன. அவற்றில் ஒன்று மலேசியா. நாட்டில் ஏற்பட்ட விரைவான பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் நீடித்து நிற்பதற்காக மலேசியா 1966-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வந்தது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை 1985 க்குள் 2 விழுக்காட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற இலக்குடன் இத் திட்டத்தைக் கொண்டு வந்தது. இத்திட்டத்தைச் செயற்படுத்த ஒரு தேசிய வாரியமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாரியத்தின் குடும்பக்கட்டுப்பாட்டுப்பணிகள் காரணமாகத் திருமணமான பெண்களில் 36 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர் (1980). பிறப்பு விகிதம் 1960-இல் இருந்த 44.3 (ஆயிரம் பேருக்கு) என்ற அளவில் இருந்து 1970-இல் 37 க்கும், 1980-இல் 31.9 க்கும் குறைந்துள்ளது.

இலங்கையில் 1965-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நடைமுறைக்கு வந்தது. இத் திட்டத்தைச் செயற்படுத்த நாடு முழுவதும் ஒரு விரிவான மருத்துவ-குடும்ப நல அமைப்பு இயங்குகிறது. குடும்பக் கட்டுப்பாட்டுக்கான சேவை தாராளமாகவும்,பரவலாகவும் எங்கும் கிடைக்கின்றது. திருமணமான பெண்கள் 41 விழுக்காடு குடும்பக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடித்து விடுகின்றனர் (1980). இத் திட்டத்தின் காரணமாகப் பிறப்பு விகிதம் 36.6-இலிருந்து (1960) 29.4 க்கும் (1970). பிறகு 27.6 க்கும் (1980) குறைந்துள்ளது.

தென் கொரியா 1961-இலிருந்து குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது; 1981-ஆம் ஆண்டில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை

1.6 விழுக்காடாகக் குறைக்கும் இலக்குடன் இத் திட்டத்தைக் கொண்டு வந்தது.இதற்காகக் குடும்பக் கட்டுப்பாடு, கருச்சிதைவு வசதிகளை அமைத்துக் கொடுத்திருக்கிறது திருமணமான பெண்களுள் 49.1 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாடு முறை களைக் கடைப்பிடித்து வருகின்றனர் (1980). இதன் விளைவாகப் பிறப்பு விகிதம் 38.7-இலிருந்து (1960), 30 க்கும் (1970), பிறகு 24.7 க்கும் (1980) குறைந் துள்ளது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் 1.69 விழுக்காட்டிற்கு வந்துள்ளது (1980).

பாகிசுத்தான் 1960-இலிருந்து குடும்பக் கட்டுப் பாடு திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. பிறப்பு விகிதத்தை 1983-இல் 35.5-ஆகக் குறைப்பது என்ற இலக்குடன் இத்திட்டத்தைக் கொண்டு வந்தது.அதற் காகக் குடும்பக் கட்டுப்பாடு வசதிகளையும், குறிப் பிட்ட அளவுக்குக் கருச்சிதைவு வசதிகளையும் அமைத்துக் கொடுத்திருக்கிறது. ஆயினும், நாட்டில் நிலவும் அரசியற் சிக்கல்களால் குடும்பக் கட்டுப்பாட் டில் முன்னேற்றம் ஏற்படவில்லை. திருமணமான பெண்களுள் 12 விழுக்காடு தாம் குடும்பக் கட்டுப் பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர் (1980). இருப்பினும், 1960-இல் 48.1 - ஆக இருந்த பிறப்பு விகிதம் 1970-இல் 47.3 க்கும், 1980-இல் 42.4 க்கும் மட்டுமே இறங்கியிருக்கிறது.

நேபாளம், பிறப்பு விகிதத்தை 1980-ஆம் ஆண் டில் 38-ஆகக் குறைப்பது என்ற இலக்குடன், 1966-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வந்தது. நாடு முழுவதும் குடும்பக் கட்டுப்பாடு வசதிகளையும், கருச் சிதைவு வசதிகளையும் அமைத்துக் கொடுத் திருக்கிறது. ஆயினும், பொருளாதார மந்தம் காரண மாகக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் முன்னேற இய லாமல் முடங்கிக் கிடக்கிறது. திருமணமான பெண் கள் 2 விழுக்காடு மட்டுமே குடும்பக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர் (1980). பிறப்பு விகிதம் 1960-இல் இருந்த 45.8 என்ற அளவில் இருந்து 1970-இல் 43.7 க்கும், 1980-இல் 42.6 க்கும் மட்டுமே இறங்கியுள்ளது. இப்பொழுது நேபாளத் தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு வலிமை யூட்ட மக்கள் தொகை நடவடிக்கைகளுக்கான ஐ.நா. நிதியம் (United Nations Fund for Population Activities) போர்டு நிறுவனம் (Ford Foundation) முதலிய அனைத்துலக நிதி நிறுவனங்கள் நிதியுதவி செய்து வருகின்றன.

ஈரானில் 1967-இலிருந்து குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை 1982-இல் 1.9 விழுக் காடாகக் குறைப்பது என்ற இலக்குடன் இத்திட்டம் வெளி வந்தது. ஆனால் ஈரானில் நிலவும் அரசியல் அமைதியற்ற சூழ்நிலையால் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் சரிவரக் கவனிக்கப்படாமல் இருக்கிறது. திரு மணமான பெண்களில் 4 விழுக்காட்டினர் தாம் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக் கின்றனர்.மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் 1983 இல் 3.04 விழுக்காடாக இருந்தது.

பிசித் தீவுகளில் 1962-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வரப்பட்டது. பிறப்பு விகிதத்தை 1980-இல் 22-ஆகக் குறைப்பது என்ற இலக்குடன் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் திட்டப் பணிகளில் போதுமான முன்னேற்றம் இல்லாததால் 1960-இல் 30.9 ஆக இருந்த பிறப்பு விகிதம் 1980-இல் 29.9 என்ற அளவுக்குத் தான் குறைந்தது.

தாய்லாந்து 1970-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை 1986-இல் 1.5 விழுக்காடாகக் குறைக்கும் இலக்குடன் கொண்டு வந்தது. குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களைத் தாராளமாக வழங்கி, குடும்பக் கட்டுப்பாடு திட்டம் முன்னேற வழி செய் துள்ளது. திருமணமான பெண்களுள் 39 விழுக்காட்டி னர் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக் கின்றனர் (1980). இங்கு 1970-இல் 39.4 என்ற விகிதத் தில் இருந்த பிறப்புவிகிதம் 1980-இல் 31-க்குக் குறைந் துள்ளது.

பிலிப்பைன்சு நாட்டில் 1970-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நடைமுறைக்கு வந்தது. நிகர மனித உற்பத்தி விகிதத்தை (Net Reproduction Rate) 2000-இல் 1 விழுக்காட்டுக்குக் கொண்டு வரும் இலக்குடன் இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. இத் திட்டத்தின்கீழ்க் கருத்தடை வசதிகள் கிடைக்கின் றன. ஆனால் கருச்சிதைவு அனுமதிக்கப்படுவதில்லை. திருமணமான பெண்களுள் 37 விழுக்காட்டினர் குடும் பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றனர். (1980). பிறப்பு விகிதம் 39.7-இலிருந்து (1970)35-க்குக் (1980) குறைந்துள்ளது.

வங்காளதேசம் 1971-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தது.மனித உற்பத்தி விகி தத்தை 1985-இல் 1 விழுக்காடாகக் குறைப்பது என்ற இலக்குடன் இத் திட்டத்தைக் கொண்டு வந்தது. ஆயினும், பொருளாதார மந்தம் காரணமாக மக்க ளிடையே குடும்பக் கட்டுப்பாடு கடைப்பிடிப்பதில் ஆர்வம் எழவில்லை. திருமணமான பெண்களுள் 8.9 விழுக்காட்டினர் தாம் குடும்பக் கட்டுப்பாட்டைக்

கடைப்பிடிக்கின்றனர் (1980).பிறப்பு விகிதமும் 47.7-இலிருந்து (1970) 46-க்கு மட்டுமே (1980) குறைந்துள்ளது.

ஆங்காங் 1973-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தது. அதன் விரைவான குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகளால் திருமணமான பெண்களுள் 79 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கிற நிலையும் (1980), பிறப்பு விகிதம் 1970-இல் இருந்த 20.0 என்ற அளவில் இருந்து 1980-இல் 19.2 என்ற அளவுக்கு இறங்கி வந்துள்ள நிலையும் ஏற்பட்டுள்ளன.

இந்தோனேசியா 1973-இலிருந்து குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. மூன்று-குழந்தை நெறியை இத்திட்டம் வலியுறுத்துகிறது. முதல் மூன்று குழந்தைகளுக்கு மட்டுமே பேறு கால விடுப்பும், குழந்தைகளுக்கான சலுகைப் படிகளும் (Allowances), பயணப் படிகளும் வழங்கப்படுகின்றன. பிற குழந்தைகளுக்கு இச் சலுகைகள் இல்லை. திருமணமான பெண்களுள் 24 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றனர். பிறப்பு விகிதம் 43.2-இலிருந்து (1970) 32.2-க்குக் (1980) குறைந்துள்ளது.

வியட்நாம் - 1977-இல் மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை 2000-இல் 1 விழுக்காடாகக் குறைப்பது என்ற இலக்குடன் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ்க் குடும்பக் கட்டுப்பாடு சேவைகள் தாய்-சேய் நலச் சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

மேற்கூறிய நாடுகளேயன்றி, கானா (1969), ஆப்கானிசுத்தான் (1970), கம்பூச்சியா (1977), தைவான், எகிப்து, கென்யா, பிரேசில், சிலி, கியூபா, தோங்கா முதலிய நாடுகளும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இத்திட்டங்கள் பிறப்பு விகிதத்தைக் குறைத்து, மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், பெண்கள், குழந்தைகள் ஆகியோருடைய நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும் முயலுகின்றன. சி.என்.ந.

**துணை நூல்கள்:**

**Bhende, Asha A. and Kanitkar, Tara,** Principles of Population Studies, Himalaya Publishing House, (Bombay), 1985.

**Narain, Vatsala and Prakasam C.P.,** Population Policy and Perspectives in Developing Countries, Himalayan Publishing House, (Bombay), 1983.

**Raj, Hans.,** Fundamentals of Demography (Population Studies with Special Reference to India) Surjeet Publications, Delhi , 1984.

**Thompson, Warren S. and Lewis, David T.,** Population Problems, Tata McGraw-Hill Publishing Company, (New Delhi), 1980.

## குடும்பம்

**குடும்பம்** மனிதன் தன் வாழ்க்கையில் பல்வேறு குழுக்களில் பங்கேற்றுச் செயற்படுகிறான். அவற்றுள் முதன்மையானது குடும்பம். இதில்தான் அவனுடைய வாழ்க்கையின் பெரும் பகுதி அமைகிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரை அவன் இக்குழுவோடு பிணைப்பு வைத்திருக்கிறான். அவனுடைய உடல் உள்ளத் தேவைகளைப் பெரிதும் நிறைவேற்றி, அவனுடைய வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது குடும்பமே.

குடும்பம் (Family) ஒரு சிறிய குழு. குறைந்த அளவு, இது ஓர் ஆணையும் பெண்ணையும் உறுப்பினராகக் கொண்டிருக்கும். ஓர் ஆணும் பெண்ணும் கணவன்-மனைவி என்ற ஓர் உறவு நிலையை ஏற்படுத்திக் கொள்ளும்பொழுது அவர்கள் ஒரு குடும்பமாக அமைகிறார்கள். அவர்கள் கணவன்-மனைவியாக அமைந்து ஒன்றாக ஒரே வீட்டில் வாழ்ந்து, ஒன்றாக உண்டு, சேர்ந்து வாழுகிற நிலையில் குடும்பம் அமைகிறது. இதில் அவர்களுக்கிடையே அமையும் உறவுதான், அதாவது மணவாழ்க்கை உறவுதான், அவர்கள் ஒரு குடும்பமாக அமைய அடிப்படையாக அமைகிறது. அவர்கள் ஒரே வீட்டில் சேர்ந்து வசித்தாலும், அல்லது தனித்தனியே பிரிந்து வசித்தாலும்; அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து உண்டாலும் அல்லது தனித்தனியாகச் சமைத்து உண்டு வாழ்ந்தாலும் அவர்களிடையே கணவன்-மனைவி என்ற உறவு நிலவும் வரையிலும் அவர்கள் ஒரே குடும்பமாகவே கருதப்படுவர். எனவே, இந்த உறவு முறைதான் ஒரு குழுவை ஒரு குடும்பம் என்று அடையாளங் காட்ட அடிப்படையாய் அமைகிறது.

ஒரே வீட்டில் ஓர் ஆணும், ஒரு பெண்ணும் சேர்ந்து வசித்தாலும் சேர்ந்து உண்டாலும் அவர்களிடையே கணவன்-மனைவி என்ற உறவு அமையாத நிலையில் அவர்கள் ஒரு குடும்பமாக அமைய இயலாது. அவர்கள் கணவன்-மனைவி என்ற உறவு நிலையில் இணைந்தபின்தான் அவர்கள் ஒரு குடும்பமாக ஆகிறார்கள்.

மணவாழ்க்கையைத் தொடர்ந்து குழந்தைகள் பிறக்கிறபோது, குடும்பத்தின் அளவு மட்டுமன்றி, குடும்ப உறவுகளின் எண்ணிக்கை, வகைகள் ஆகியவையும் கூடுகின்றன. கணவன்-மனைவி என்ற உறவோடு, பெற்றோர்-மக்கள் என்ற நேர் வரை உறவும், உடன்பிறந்தோர் என்ற இணை வரை உறவும் முகிழ்க்கின்றன. இந்த உறவுகள் குடும்பத்தை முழுமைப்படுத்துகின்றன. முழுமையான நிலையில் குடும்பம் என்பது கணவன்-மனைவி என்ற உறவு, பெற்றோர்-மக்கள் என்ற நேர்வரை உறவு, உடன் பிறந்தோர் என்ற இணை வரை உறவு ஆகிய பல உறவுகள் பின்னிப் பிணைந்திருக்கும் தொகுதியாக அமைகிறது. இத்தகைய உறவுகளின் பின்னலில் இணைந்தவர்களே அடிப்படையில் குடும்ப உறுப்பினர்களாக ஆகிறார்கள்.

ஓர் ஆண்-ஒரு பெண் ஆகியோர் கணவன்-மனைவியாக இணைந்து வாழ்க்கை தொடங்குகிறபொழுது உருவாகும் குடும்பம் அவர்களின் மண வாழ்க்கை முடியும்போது அல்லது அவர்கள் இறக்கும்போது அழிந்து விடுகிறது. துவக்கத்திலிருந்து முடிவு வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் குடும்பம் பல நிலைகளைத் தாண்டி வருகிறது. முதலில் இந்த ஆணும், பெண்ணும் சந்தித்துக் காதலித்து நெருக்கம் கொள்ளுகிறபோது, திருமணத்திற்கு முந்திய தொடக்கநிலை (Formative Prenuptial Stage) என்ற நிலை அமைகிறது. ஆணும் பெண்ணும் காதலில் இணைவது பொதுவாக மேலை நாட்டுச் சமூகங்களில் நிகழ்கிறது. மற்றைய சமூகங்களில் இத்தகைய நிலை அமைவதில்லை. குகி (அசாம்), முதுவர் (கேரளா) முதலிய பழங்குடிகளில் ஆணும் பெண்ணும் சந்தித்துச் கொஞ்ச காலம் வரை ஓரிடத்தில் சேர்ந்து வாழ்வது என்று தீர்மானிக்கிறார்கள். அப்படி ஒரு குறிப்பிட்ட காலம் வரை சேர்ந்து வாழ்ந்தபின் அவர்களுக்கிடையே மன ஒற்றுமை ஏற்பட்டால் இருவரும் கணவன்-மனைவியாக மணமுடிப்பது என்று முடிவெடுக்கிறார்கள். அவர்களிருவருக்கும் மன ஒற்றுமை ஏற்படாவிடில் பிரிவது என்று தீர்மானித்துப் பிரிகிறார்கள். இந்தியச் சமூகத்தில் ஓர் ஆணும் பெண்ணும் ஒன்று சேர்வதோ, ஒன்று சேர்ந்து தம்மிச்சையாக முடிவெடுப்பதோ கிடையாது. ஆணின் பெற்றோர்களும், பெண்ணின் பெற்றோர்களும் கூடிக் கலந்து பேசித் திருமணத்தை உறுதிசெய்யும் நிகழ்ச்சியை நடத்தி, அதில் அந்த ஆணையும் பெண்ணையும் கணவன்-மனைவியாக இணைப்பது என்று முடிவு செய்கின்றனர். அந்த முடிவுக்கு ஆணும், பெண்ணும் இசைகிறார்கள்.

இந்த முடிவை அல்லது சொந்த முடிவைத் தொடர்ந்து இந்த ஆணும் பெண்ணும் மணம் முடித்துக் கணவன்-மனைவியாக ஆகும்பொழுது, இரண்டாம் நிலை அமைகிறது. இந்த நிலை மணநிலை (Nuptial Stage) எனப்படும். மணமுடித்த ஆணும் பெண்ணும் ஒருவீட்டை அமர்த்திக் கொண்டு, இல்லற வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள். ஒருவருக்கொருவர் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு சேர்ந்து வாழ்கிறார்கள். உண்மையில் இந்த மண நிலையில்தான் குடும்பத்தின் தோற்றம் அமைகிறது.

மூன்றாவதாக, குழந்தை வளர்ப்பு நிலை (Child rearing Stage) என்ற நிலை அமைகிறது. இந்த ஆண் -பெண் ஆகிய இருவரின் இல்லற வாழ்க்கையின் சின்னமாகக் குழந்தைகள் பிறக்கின்றன. ஆணும் பெண்ணும் கணவன்-மனைவி என்ற தகுதிநிலையிலிருந்து தந்தை-தாய் என்ற தகுதிநிலையை அடைகிறார்கள். குடும்பத்தின்சூழ்நிலை மாறி, அதன் செயற்பாடுகளும் விரிவடைந்து, புதிய பற்றுக்கோடுகளும், புதிய பொறுப்புகளும் குடுபத்திற்கு வந்து சேருகின்றன. பிறந்த குழந்தைகளைப் பேணுதல், அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுதல், அவர்களைக் கட்டுப்பாடாக வளர்த்து ஆளாக்குதல், அவர்களுடைய எதிர்காலத்துக்கும், பொருளாதாரப் பாதுகாப்பிற்கும் ஏற்பாடு செய்தல் என்று பல பொறுப்புகள் குடும்பத்திற்கு வந்து சேருகின்றன.

பெற்றோருடைய பொறுப்பான கவனிப்பிலும் ஆதரவிலும் குழந்தைகள் வளர்ந்து தமக்கென ஓர் இல்வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்போது குடும்பம் நான்காம் நிலையான முதிர்ச்சி நிலை Maturity Stage) என்ற நிலையை அடைகிறது. இந்த நிலைக்குப் பிறகு குடும்பம் அமைத்த கணவன் மனைவியின் மரணம் வருகிறபோது குடும்பத்தின் இறுதிக் கட்டம் வந்து சேருகிறது.

இந்த நான்கு நிலைகளும் பொதுப்படையானவையே. எல்லாக் குடும்பங்களும் இந்த நான்கு நிலைகளையும் கொண்டு அமைவதில்லை. குழந்தை பிறக்காத குடும்பங்கள், மண முறிவால் அல்லது இடையில் ஏற்பட்ட கணவன் அல்லது மனைவியின் மரணத்தால் இல் வாழ்க்கை உடைந்த குடும்பங்கள் ஆகியவை மேற்கண்ட எல்லா நான்கு நிலைகளையும் கொண்டு அமைவதில்லை.

**குடும்பத்தின் சிறப்பியல்புகள்**: 1.குடும்பம் ஒரு குழுவானாலும், அது ஒரு வித்தியாசமான குழு. மற்றையக் குழுக்களில் காணப்படாத சில சிறப்பியல்புகள்

குடும்பத்திற்கு உண்டு. அவை: முதலாவதாக, குடும்பம் ஓர் உலகளாவிய குழு ஆகும். அது எல்லாச் சமூகங்களிலும், எல்லாக் காலங்களிலும் நிலவி வருகிறது. மானிட சமூகத்தின் தொடக்க காலத்திலிருந்து அது நிலவி வருகிறது.

2. சமூக நிலையமைப்பின் கருவாகக் குடும்பம் விளங்குகிறது. சொல்லப்போனால் சமூக நிலையமைப்பின் தோற்றத்திற்கே குடும்பந் தான் அடிப்படை அலகாக அமைகிறது, ஓர் ஆணும், ஒரு பெண்ணும் உணர்வு அடிப்படையில் இணைந்து ஆழமான உறவோடுகுடும்பம் அமைக்கிறபொழுது, காலப்போக்கில் அந்தக் குடும்பம் வளர்ந்து, பல கிளைகளாகப் பெருகி அவை இணைந்து ஒன்றும் நிலையில் சமுதாயம் என்ற அமைப்பு தோன்றுகிறது. பிறகு சமுதாயம் வளர்ந்து பல பிரிவுகளாகப் பெருகி, அவை இணைந்து ஒன்றும் நிலையில் தேசிய குழு என்ற சமூக அமைப்பு உருவெடுக்கிறது. இவ்வாறு சமூக நிலையமைப்பு உருவாவதற்குக் குடும்பம்தான் கருவாகஅடிப்படை அலகாக அமைகிறது. கரு வலுவாக, உறுதியாக இருக்கும் வரையில் சமூக நிலையமைப்பும் உறுதியாக விளங்கும். கரு, அதாவது குடும்ப அமைப்பு முறை சிதைந்தால், சமூக நிலையமைப்பும் கலகலகத்துச் சரியத் தொடங்கும்.

3. குடும்பம் உணர்ச்சியின் அடிப்படையில் அமைகிறது. பல வகையான ஆழமான உணர்ச்சிகளின் அடிப்படையில் அது அமைகிறது. பாலின வேட்கை, இனப் பெருக்கம், தாய்மை, குழந்தை ஆசை முதலிய உணர்ச்சிகளின் அடிப்படையில் ஆணும் பெண்ணும் இணைந்து இல் வாழ்க்கை தொடங்கக் குடும்பம் அமைகிறது. இந்த உணர்ச்சிகளோடு காதல், பிரிவு, பொறாமை, தனக்குரியது என்ற முனைப்பு, குடும்பப் பெருமை, பொருளாதாரப் பாதுகாப்பில் நாட்டம் முதலிய இரண்டாம் நிலை உணர்ச்சிகளும் சேர்ந்து, அவற்றை வலுப்படுத்தி, ஆணுக்கும் பெண்ணுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும், உடன் பிறந்தோருக்கும் இடையேயுள்ள உறவையும் பிணைப்பையும் உறுதியாக்கிக் குடும்பத்தைக் கட்டுறுதி செய்கின்றன.

4. குடும்பம் சமூக நெறிகள், சட்ட விதிகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் அமைகிறது. குடும்பம் அமையும் முறையை இந்த நெறிகளும் விதிகளும்தாம் முடிவுசெய்கின்றன. ஓர் ஆணும் பெண்ணும் உணர்ச்சிகளின் உந்துதலால் ஒன்று சேர்ந்து கணவன் மனைவியாக இணைவது அவர்களுடைய தனிப்பட்ட விருப்பார்வத்தின் விளைவானாலும், அவர்கள் இணையும் முறையைச் சமூக நெறிகளும், சட்ட விதிகளுமே முடிவு செய்கின்றன. அந்த முடிவுக்கேற்பவே அவர்கள் இணைப்பும் நிகழ்கிறது. உடன் பிறப்புகள் அல்லது பெற்றோர் மக்கள் என்ற உறவு நிலையில் இருப்பவர்கள் மண உறவு வைத்துக் கொள்வது எல்லாச் சமூகங்களிலும் முறை தகாப்புணர்ச்சி (Incest) என்று கருதப்பட்டுத் தடைசெய்யப்பட்டிருக்கிறது.வேறுசில உறவுகளும் (எடுத்துக்காட்டு: பெரியப்பா-சிற்றப்பா மக்கள், சித்தி-மகன்) மண உறவுக்குத் தக்கவையல்ல என்று பல சமூகங்களில் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அது போலவே, திருமணம் புரிபவர்களின் வயது திருமண நிலை, மன நிலை முதலியவை தொடர்பாகவும் சமூக, சட்ட அடிப்படையிலும் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இந்தக்கட்டுப்பாடுகளுக்கேற்பவே குடும்பம் அமைகிறது. குடும்பம் அமைந்த பிறகும் சமூக நெறிகளும் சட்ட விதிகளும்,கணவனும் மனைவியும் பெற்றோரும் குழந்தைகளும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை, ஆற்ற வேண்டிய கடமைகளை முடிவு செய்கின்றன. கணவனும் மனைவியும் மணமுறிவு பெற்று விலக முடிவு செய்தாலும் சமூக, சட்ட நெறிகள் கூறும் விதிமுறைகளுக்கேற்பவே மண முறிவு பெற்று விலகமுடியும். இவ்வாறு சமூக, சட்ட நெறிகள் குடும்பம் அமைவதையும், இயங்குவதையும் கட்டுப்படுத்துகின்றன. இத்தகைய நிலை வேறு குழுக்களில் அமைவதில்லை.

5. குடும்ப உறுப்பினர்களிடையே வேறு எந்தக் குழுவிலும் காணப்படாத பொறுப்புகள் உண்டு. குடும்ப வாழ்க்கையில் பல பொறுப்புகளும் கடமைகளும் உள்ளன. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கணவன்-மனைவியாக இணைகிறபோதே பல பொறுப்புகளும், பணிகளும் அவர்களுக்கு வந்து சேருகின்றன. ஒருவருக்கொருவர் உடல்,உள்ளத் தேவைகளைநிறைவேற்ற வேண்டிய பொறுப்பும், உண்மையாகவும் ஆதரவாகவும் இருக்க வேண்டிய இன்றியமையாமையும் ஏற்படுகின்றன. குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களைப் பாதுகாக்கவும், அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி அவர்களை ஆளாக்கவும் பெற்றோருக்குப் பொறுப்புகள் ஏற்படுகின்றன. இத்தகைய பொறுப்புகள் ஒரு வழியானவை அல்ல; இரு சாராருக்கும், பொதுவானவை. கணவன் - மனைவிக்கிடையே, பெற்றோர்-குழந்தைகளுக்கிடையே அமையும் பொறுப்புகள் அறநெறி அடிப்படையில் மட்டுமன்றிச் சட்டப்படியும் அமைகின்றன. இப்பொறுப்புகள் விலக்க முடியாதவை.

6. குடும்பத்திற்கு ஒரு வரையறையான அளவு உண்டு. அதனுடைய அளவு உயிரியல் காரணியால் கட்டுப்படுத்தப்படுவதால் அதன் அளவு ஒரு வரை

யறைக்குள்தான் அமைகிறது. பொதுவாக ஓர்ஆணும், ஒரு பெண்ணும் வாழ்க்கையில் இணைந்து அமைக்கும் குடும்பம் இனப் பெருக்கத்தின் மூலமாகவே தன் உறுப்பினர்களைப் பெறுகிறது. தொழிற் சங்கம், அரசியற் கட்சி, நற்பணி மன்றம், மன மகிழ் மன்றம் முதலிய மற்றைய குழுக்களைப் போல, குடும்பம் பிற குழுக்களிலிருந்து தன் உறுப்பினர்களைப் பெறுவதில்லை. குழந்தைகளுக்குத் திருமணம் நடக்கும் போது மருமக்கள் பிற குடும்பங்களிலிருந்து எடுக்கப் பட்டுக் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மணமான பிள்ளைகள் பெற்றோருடன் சேர்ந்து வாழ விரும்பினால்தான் இத்தகைய நிலை ஏற்படக் கூடும். இவ்வாறே தத்து எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் ஒழிய, ஒரு குடும்பம் பிற குழுக்களிலிருந்து உறுப்பினர்களை–குழந்தைகளை எடுக்கும் நிலை ஏற்படாது. இனப்பெருக்கம் உயிரியல் வரையறைக்குட்பட்டதால் குழந்தைகளும் ஒரு வரையறைக்குள்தான் உற்பத்தி செய்யப்படுகிறார்கள்.

7. குடும்ப முறை என்பது உலகில் எங்கும் நிலவுகிற ஒரு நிலைபேறுள்ள நிறுவனம். அது மானிட சமூகத்தின்தொடக்க காலத்திலிருந்து நீடித்து வருகிறது; மக்கள் இருக்கும் வரை அதுவும் இருக்கும். ஆனால் ஓர் ஆணும் ஒரு பெண்ணும், கணவனும் மனைவியுமாக அமையும் குடும்பம் என்ற ஒரு அமைப்பிற்கு நிலைபேறு கிடையாது. அவர்கள் ஒன்றாகக் கூடி வாழ்கிற வரை அல்லது அவர்கள் உயிரோடு இருக்கும் வரைதான் அதற்கு ஆயுள் உண்டு. இந்த வகையில் குடும்பத்திற்குத் தற்காலிகத் தன்மைதான் இருக்கிறது. அப்படித் தற்காலிகமாக இருக்கும் வரையிலும் அது ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அதன் கட்டமைப்பும் செயற்பாடும் மாற்றங்களுக்கு உள்ளாகும்.

**குடும்பத்தின் உருவகைகள்**: குடும்பம் என்பது பெரும்பாலும் கணவன், மனைவி, அவர்களுடைய குழந்தைகள் என்ற உருவில்தான் எண்ணப்படுகிறது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கணவன் மனைவியாக இணைகிற பொழுதுதான் தோன்றும் குடும்பத்தை மணவாழ்க்கைக் குடும்பம் (Conjugal Family) என்பர். இன்று கருக்குடும்பம் (Nuclear Family) என்ற சொல்லே இதற்கு மாற்றாக அதிக வழக்கில் உள்ளது. கருக்குடும்பம் மண உறவின் அடிப்படையில் அமைவதால், கணவனும் மனைவியுமே இக்குடும்பத்தின் தலையாய உறுப்பினராக அமைகின்றனர். இவர்களில் ஒருவர் இறக்க நேரிட்டாலோ மணவாழ்க்கையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டாலோ இந்நிலை மறையும்; கருக் குடும்பத்தின் வடிவம் சிதையும்.

ஒரு கருக் குடும்பத்தின் குழந்தைகள் திருமணமான பின் அவர்கள் தம் தாய் தந்தையருடனேயே ஒன்றாக ஒரே வீட்டில் உண்டு வாழ்ந்தால், அது கூட்டுக் குடும்பம் என்று அழைக்கப்படும். திருமணமான அண்ணன்–தம்பிகளும் ஒன்றாக ஒரே வீட்டில் கூட்டாக உண்டு உறைந்து வாழ்ந்தால் அத்தகைய உடன்பிறப்புக் குடும்பங்களும் கூட்டுக் குடும்பம் என்று அழைக்கப்படும். கூட்டுக் குடும்பத்தின் அடிப்படை கருக் குடும்பங்களிடையே நிலவும் இரத்த உறவுதான். இதனால்தான் கூட்டுக் குடும்பம் இரத்த உறவுக் குடும்பம் (Consanguine Family) என்று அழைக்கப் படுகிறது. கூட்டுக் குடும்பம் நேர் வரை, இணை வரை இரத்த உறவு கொண்டவர்களின் கருக் குடும்பங்களை அலகுகளாகக் கொண்டு அமைவதால், மேற்படி இரத்த உறவு கொண்டவர்களே கூட்டுக் குடும்பத்தின் தலையாய உறுப்பினர்களாக அமைகின்றனர். இவர்கள் இறக்க நேரிட்டால் அல்லது பிரிந்து சென்றால் கூட்டுக் குடும்பத்தின் வடிவம் சிதைவுறும்.

மேற்குறித்த வகைகளன்றி வேறு பல வகைகளும் குடும்பத்தில் உண்டு. மண முடிக்கிற துணைகளின் எண்ணிக்கையைப் பொறுத்துக் குடும்பம் பல உருவகைகளில் அமைவதுண்டு. ஒருவன்–ஒருத்தி என்ற ஒரு துணை மணக் குடும்பமாகவும் (Monogamous family), ஒருவனுக்குப் பல மனைவியர் என்ற பல மனைவியர் மணக்குடும்பமாகவும் (Polygynous family), ஒருத்திக்குப் பல கணவர்கள் என்ற பல கணவர் மணக்குடும்பமாகவும் (Polyandrous family) குடும்பம் அமைவதுண்டு.

திருமணத்திற்குப் பிறகு கணவன் மனைவி எங்கே தங்குகிறார்கள் என்பதைப் பொறுத்தும் குடும்ப உருவகைகள் அமைவதுண்டு. அவை தந்தையகத்துக் குடும்பம் (Patrilocal family), தாயகத்துக் குடும்பம் (Matrilocal family), தனியகத்துக் குடும்பம் (Neolocal family) என்பன ஆகும்.

குடும்ப ஆட்சி-நிருவாக முறையில் அமையும் வேறுபாடுகளை ஒட்டிக் குடும்பம் தந்தையாட்சிக் குடும்பம் (Patriarchal family), தாயாட்சிக் குடும்பம் (Matriarchal family), சமத்துவக் குடும்பம் (Equalitarian family) என்று அமைவதுண்டு. தந்தையாட்சிக் குடும்பத்தில் கணவனிடம் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு, குடும்பத்தை நிருவாகம் செய்யும் அதிகாரம் ஆகியன அமைந்திருக்கும். தாயாட்சிக் குடும்பத்தில் மனைவியிடம் இந்த உரிமைகள் அமைந்திருக்கும். சமத்துவக் குடும்பத்தில் கணவன்–மனைவி இருவருக்கும் இந்த உரிமைகள் சமமாக அமைந்திருக்கும்.

குலமுறை, சொத்துரிமை ஆகியவற்றில் அமையும் வேறுபாடுகளை ஒட்டிக் குடும்பம் தந்தை தாயக் குடும்பம் (Patrilineal family), தாய் தாயக் குடும்பம் (Matrilineal family) என்று அமைவதுண்டு. தந்தை தாயக் குடும்பத்தில் தந்தை வழியில் குலமுறை தொடரும். தந்தையிடமிருந்து ஆண்மக்களுக்குச் சொத்துரிமை போகும். இதற்கு மாறாகத் தாய் தாயக் குடும்பத்தில் தாய் வழியில் குலமுறை தொடர்வதும், தாயிடமிருந்து பெண்மக்களுக்குச் சொத்துரிமை போவதும் நிகழும்.

குழந்தைகளுக்குத் தந்தையின் பெயர் அல்லது தாயின் பெயர் சூட்டப்படுவதைப் பொறுத்தும் குடும்ப உருவகைகள் வேறுபட்டு அமைவதுண்டு. தந்தையின் பெயரைக் குழந்தைகள் ஏற்றால் தந்தை பெயர் குடும்பம் (Patronymic family) என்றும், தாயின் பெயரைக் குழந்தைகள் ஏற்றால் தாய் பெயர் குடும்பம் (Matronymic family) என்றும் பெயர் பெறும்.

**குடும்பத்தின் செயற்பாடுகள்**: குடும்பத்தில் பல உருவகைகள் இருந்தாலும், அவையெல்லாம் ஒரே வகையான பணிகளையே ஆற்றுகின்றன. அந்தப் பணிகளுள் முதன்மையானது பாலினத் தேவையை நிறைவேற்றுவது. குடும்ப எல்லைக்கு அப்பாலும் ஒருவன் தன் பாலினத் தேவையை நிறைவு செய்ய முடியும் என்றாலும் குடும்பத்தின் மூலமாகத்தான் ஒருவன் உரிமையோடு முறையாக நிலையான, உறுதியான, பாதுகாப்பான பாலினத்திருப்தியைப் பெற முடியும். முறையான வழியில்தான் ஒருவன் தன் பாலினத் தேவையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே சமூகத்தில் குடும்ப முறை நிறுவப்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். திருமணத்திற்கு முன்பே ஒருவன் பாலின உறவை வைத்துக் கொள்ளப் பெரும்பான்மையான சமூகங்கள் அனுமதிக்கின்றன (மர்டாக்). அவற்றிலும் குடும்ப அமைப்பு நிறுவப்பட்டு இருப்பது, உரிமையோடு முறையாக ஒருவன் தன் பாலினத் தேவையை நிறைவு செய்து கொள்ளக் கூடிய மையம் குடும்பமே என்பதை அவை உணர்ந்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

குடும்பத்தின் இன்னொரு முதன்மையான பணி இனப் பெருக்கம். ஒரு சமூகம் நீடித்து நிலைபெற இனப் பெருக்கம் அவசியம். குடும்பம் இனப் பெருக்கத்திற்கு வழிகோலிச் சமூகம் நீடித்து நிற்க உதவுகிறது. பாலின உறவின் விளைவாக எழும் இனப் பெருக்கம் குடும்ப எல்லைக்கு அப்பாலும் நிகழக் கூடிய உயிரியல் சாத்தியம் உண்டு. ஆயினும் குடும்ப வளையத்திற்குள் நடைபெறும் இனப்பெருக்கமே சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. குடும்ப வளையத்திற்கு வெளியே – திருமணத்திற்கு முன்னும் பின்னும் – பாலின உறவுகளை அனுமதிக்கும் சமூகங்கள் கூட அந்த உறவுகளின் விளைவாக எழும் பிறப்புகளை முறையானவை, சட்டபூர்வமானவை என்று ஒப்புக்கொள்வதில்லை. குடும்ப வளையத்திற்கு வெளியே பாலின உறவு நிகழ்ந்திருந்தாலும், குழந்தைப் பிறப்பு, திருமணம் மூலமாக அமைகிற குடும்பத்தின் எல்லைக்குள் தான் நிகழ வேண்டும் என்று விதி வகுத்திருக்கின்றன. ஆகவேதான் எல்லாச் சமூகங்களிலும் குடும்ப அமைப்பிற்குள் பிறக்கும் குழந்தைகளே முறையான, சட்டபூர்வமான பிறப்புகள் என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

சமூகமயமாக்குதல் (Socialization) குடும்பத்தின் மற்றொரு பணி. சமூகத்தில் பங்கேற்பதற்கும், சமூகத்தோடு இயைந்து நடப்பதற்கும் குழந்தைகளுக்குக் குடும்பம் பயிற்சி அளிக்கிறது. சமூகத்தில் நிலவும் நெறிகள், மரபுகள், நடத்தை முறைகள் முதலியவற்றைக் குடும்பம் குழந்தைகளுக்குக் கற்பித்துச் சமூகத்தில் எப்படி நடந்து கொள்வது என்று கற்றுக் கொடுக்கிறது.

வேறு வழிகளிலும் குடும்பம் குழந்தைகளைச் சமூகப்படுத்துகிறது. பெற்றோர்கள் தம் நடத்தைக் கோலங்களைச் செம்மைப்படுத்திக் கொண்டு, அதன் மூலம் தம் குழந்தைகளுக்குத் தம்மை முன்மாதிரியாக அமைத்துக் கொள்ளுகின்றனர். குழந்தைகள் அவர்களைப் பார்த்து அவர்களைப் போலவே தமது நடத்தைக் கோலங்களையும் அமைத்துக் கொள்ளுகின்றனர். வயது வந்ததும் அவர்கள் கணவர்களாக (அல்லது மனைவியராக), தந்தையராகப் (அல்லது தாயார்களாக) பங்காற்ற இப்பயிற்சி கை கொடுக்கிறது.

பல்வேறு உத்திகளைக் கடைபிடித்துக் குடும்பம் குழந்தைகளுக்குச் சமூக மயமாதற் பயிற்சி தருகிறது. சில வேளைகளில் அன்பாகவும், சில வேளைகளில் அதிகாரம் செலுத்தியும், பரிசுகள் (எடுத்துக் காட்டு: பாராட்டு) கொடுத்தும், தண்டனைகள் (எடுத்துக்காட்டு: கண்டித்தல்) கொடுத்தும் பயிற்சி தருகிறது.

ஒரு மனிதனின் ஆளுமை அவன் வளர்க்கப்படுகிற – சமூகமயமாக்கப்படுகிற விதத்தைப் பொறுத்து அமைகிறது. பிராய்டு (Freud), ஆட்லர் (Adler) போன்ற உளப் பகுப்பாய்வியல் அறிஞர்கள், மனிதன் குடும்பத்தில் எவ்வாறு அமைகிறானோ அவ்வாறே

சமூகத்திலும் நடந்து கொள்ளுகிறான் என்கிறார்கள். அவன் கட்டுப் பாட்டுடனும் ஒழுக்கத்துடனும் வளர்க்கப்படும்போது, அவனுடைய ஆளுமை செம்மைப்படுத்தப்பட்டு, அவன் சமூகத்தில் நல்லவனாக, ஒழுக்கமுடையவனாக விளங்குகிறான். குடும்பம் நிலை கெட்டுக் குலைந்து போனால், அந்த நிலையில் குடும்பத்தில் அவனால் நல்ல முறையில் கட்டுப்பாடாக வளர வாய்ப்பு இன்றிப் போகிறது. இக்கருத்தை ஹீலி (Healy), பிரான்னர் (Bronner) ஆகியோர் உறுதி செய்கிறார்கள். இதற்கு ஆதரவாக இளங்குற்றவாளிகள் பெரும்பாலும் நிலை குலைந்த குடும்பங்களிலிருந்து வருவதை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இந்தச் சமூகமயமாக்கும் செயல், குடும்பத்தில் மட்டுமன்றி வேறு குழுக்களிலும், எடுத்துக்காட்டாக ஒப்பார் குழு (Peer group), அண்டையம், பள்ளிக்கூடம், அலுவலகம் முதலிய குழுக்களிலும் கூட நடைபெறுகிறது. ஆனால், குடும்பத்தில் தரப்படுகிற பயிற்சியின் தன்மை, அளவு, தரப்படும் விதம், வலிமை இக்குழுக்களில் தரப்படுகிற பயிற்சிக்குக் கிடையாது. குடும்பத்தின் பயிற்சி வலிமையானது; ஆழமானது; நிலையானது. பிளாட்டோவிலிருந்து ஆல்டசு அகுசுலி வரை பல சிந்தனையானர்கள் சமூகமயமாக்கம் குடும்ப அமைப்பிலிருந்து எடுக்கப்பட்டு வேறு ஏற்பாடுகள் மூலம் தரப்பட்டால் அது வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் வலிமையானதாகவும் இருக்கக் கூடும் என்று கருதினார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் பல சோதனைகளும் அங்கங்கு நடைபெற்றன. உருசியப் புரட்சிக்குப் பிறகு சோவியத் யூனியனில் குழந்தைகளைக் குடும்பங்களிலிருந்து விலக்கிக் குழந்தைக் காப்பகங்களில் விட்டு அறிவியல் முறையில் வளர்க்கும் ஏற்பாட்டைத் தொடங்கினார்கள். ஆனால் விரைவிலேயே அந்த ஏற்பாடு குடும்ப முறைக்கு மாற்றாக அமைய இயலாது என்று கண்டறிந்து அதைக் கைவிட்டனர். மீண்டும் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பைக் குடும்பத்திடமே ஒப்படைத்தனர். இன்று அந்நாட்டில் பள்ளிக்கூடமும், குடும்பமும் சேர்ந்து குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்துச் சமூகப்படுத்தி ஆளாக்கும் பொறுப்பைச் செய்து வருகின்றன. அவ்வாறே இசுரேலிலும் ஆரம்பத்தில் குழந்தைகளைக் 'கிப்புட்சு (Kibbutz) என்ற கூட்டுப் பண்ணைகளில் இருந்த சமுதாயக் குடில்களில் விட்டு வளர்க்கும் ஏற்பாடு அமைக்கப்பட்டது. பெற்றோர்கள் ஓரிரு மணி நேரமே குழந்தைகளை வந்து பார்த்துக் கொஞ்சிட அனுமதிக்கப்பட்டனர். ஆனால், நாளடைவில் 'கிப்புட்சு' களில் வளர்ந்து ஆளான குழந்தைகளுக்குக் கிப்புட்சு' வாழ்க்கை சலிப்படையத் தொடங்கியது. இன்று அந்தந்தக் குடும்பங்களே தத்தம் குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பை ஏற்று வருகின்றன. குடும்பமே குழந்தைகளை வளர்த்து ஆளாக்கத் தக்க அமைப்பு என்ற கருத்து உறுதியாகிவிட்டது.

முதலில் குழந்தைகள் கலந்து கொள்ளும் குழு குடும்பமே. இங்கேதான் அவர்களுக்கு முறையான, சமூகமயமாகும் - பயிற்சி தரப்பட்டு, அவர்களுடைய ஆளுமை மேம்படுத்தப்படுகிறது. அவர்கள் வளர்ந்து ஆளாகிற வரையிலும் - ஆளாகிய பிறகும் கூடக் குடும்பம் தொடர்ந்து அவர்களுக்குச் சமூகமயமாதற்-பயிற்சியைத் தருகிறது. அதன் காரணமாக அவர்களின் ஆளுமை சீராக, தொடர்ச்சியாக மேம்பாடு அடைந்து, அவர்கள் நல்ல குடிமக்களாக, சமூக உறுப்பினர்களாக உருவாகின்றனர்.

அன்பு பாராட்டுதல் குடும்பத்தின் இன்னொரு பணி. பெற்றோரிடமிருந்தும், உடன் பிறந்தோரிடமிருந்தும் கிடைக்கிற அன்பு, பரிவு, அரவணைப்பு வேறு எந்தக் குழுவிலும் ஒரு குழந்தைக்குக் கிடைக்காது. பாசத்தைத் தழுவி எழுகிற இந்தத் தூய, இதமான, உணர்வுகலந்த அன்பு குழந்தையின் மன-உணர்ச்சி நிலை வளர்ச்சியடைந்து சீராக அமையச் செய்கிறது. குடும்பப் பாசமும், அன்பும் ஒருவனுக்குக் கிட்டாமல் போனால் அல்லது மறுக்கப்படுமானால் அவனுடைய மன-உணர்ச்சி நிலை பாதிப்படையும். ஒருவனுக்கு ஏற்படுகிற மனச் சிக்கல்களுக்கும், உணர்ச்சி நிலை குலைவுகளுக்கும், உடல் நிலைக் கோளாறுகளுக்கும் கூடக் குடும்பப் பாசமும் அன்பும் கிட்டாமல் போவதுதான் முதன்மையான காரணம் என்று புராம் (Fromm), சிண்ட்லர் (Schindlar) முதலிய உள மருத்துவவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். குழந்தைகள் நல்ல உணவுடன் நன்றாகப் பராமரிக்கப்பட்டாலும், அவர்களுக்குக் குடும்பப்பாசம், அரவணைப்பு, சீராட்டல் முதலியவை கிடைக்காமல் போனால், அது அவர்களின் மனநிலையைப் பாதித்து, அதன் மூலம் உடல் நலனைப் பாதிக்கும். அவர்கள் உடல் மெலிந்து, உடல் நலம் குன்றி உடல்கரைவு என்ற நோய்க்கு (இந்நோய் ஊட்டச் சத்துக் குறைவினால் ஏற்படுவது) ஆளாகி இறக்கவும் கூடும். இக்கருத்தை ஆய்வுகள் மூலம் இரிப்பிள் (Ribble) ஈவான்சு (Evans), மசுசென் (Mussen) முதலான உளவியல் வல்லுநர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். மருத்துவமனைகளிலும், குழந்தைக் காப்பகங்களிலும் வளர்க்கப்படுகிற குழந்தைகளுக்கு உணர்ச்சி நிலை மேம்பாடு அடைவதில்லை என்றும், அதன் விளைவாக அவர்கள் உடல் நலம் கெட்டு இறப்பைத் தழுவுவர் என்றும் சில ஆய்வுகள் மூலம் இசுபிட்சு (Spitz) என்பவர் தெரி

விக்கிறார். அந் நிலையங்களில் குழந்தைகளுக்குக் கவனிப்பும் பராமரிப்பும் கிடைத்தாலும், அவை கடமைக்குத் தரப்படுவதும், உணர்ச்சியில்லாமல் இருப்பதுவுமே இதற்குக் காரணம் என்கிறார். குடும்பச் சூழ்நிலையில் கிடைக்கக் கூடிய உணர்வு கலந்த அன்பும் பாசமும் இதமான அரவணைப்பும் அவர்களுக்கு அங்கே கிடைப்பதில்லை.

தாமசு (Thomas) என்ற அறிஞர் ஒரு மனித னுக்கு உள்ள அடிப்படை விருப்பங்களில் ஒன்று தன்னைப் பிறர் கவனிக்க வேண்டும் என்பது என்று கூறுகிறார். இந்த விருப்பம் ஒரு முதன்மையான மனித விருப்பம். கார்ட்டன் (Horton), கண்ட்டு (Hunt) ஆகிய அறிஞர்கள் பாலின உறவை விட மனிதனுக்கு இது மிக முக்கியமான, வலிமையான சமூகத் தேவை என்கிறார்கள். இந்தத் தேவையைக் குடும்பம் தன் அரவணைப்பு, கவனிப்பு இவற்றின் மூலம் நிறைவேற்றித் தருகிறது. திருமணமாகாமல் தனித்து வாழ்கிற மக்கள் கூட மகிழ்ச்சிகரமான, ஆரோக்கியமான வாழ்க்கை வாழக் கூடும். ஆனால் பிறருடைய அன்பும், கவனிப்பும் இல்லாமல் வாழ்கிற மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியோ ஆரோக்கியமோ நிலவாது. இந்த அன்பும் கவனிப்பும் குடும்பத்தில் மட்டும் கிடைக்கும் என்பதில்லை. நண்பர் குழாங் களில் கூட இவை கிடைக்கும். ஆனால் அவை குடும் பத்தில் கிடைக்கும் அன்புக்கும் கவனிப்புக்கும் இணையாகா.

குடும்பம் பாதுகாப்பு நல்கும் பணியும் செய்கிறது. ஓர் உறைவிடத்தை அமைத்துத் தன் உறுப்பினர் களுக்குப் புறப்பாதுகாப்புக்கிடைக்க வழி செய்கிறது. சிக்கல்கள் அல்லது இடர்கள் ஏற்படும்போது உறுப் பினர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் காக்கிறது. முக்கியமாக தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் உடற் குறை உடையவர்களுக்கும் அது பாதுகாப்பு மைய மாக இருந்து அவர்களைக் காக்கிறது. ஒரு குடும்பத் தில் இருக்கிறோம் என்ற உணர்வே குடும்ப உறுப் பினர்களுக்குப் பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கும்.

குடும்பம் ஆற்றும் மற்றொரு பணி தகுநிலை அளிப்பது. இனக்குழு, மதம், சாதி, பொருளாதார வகுப்பு ஆகிய அடிப்படைகளில் ஒருவனுக்கு அமை யும் தகுநிலை குடும்பம் மூலமாகவே அமைகிறது. குடும்பத்தின் இனக்குழுச் சார்பு, மதச்சார்பு, சாதிச் சார்பு, பொருளாதார வகுப்புச்சார்பு ஆகியவற்றுக் கேற்பக்குடும்பத்து உறுப்பினர்களின் சார்பு நிலையும் அமைகிறது. குடும்பம் சார்ந்துள்ள குழுக்களின் சமூகத் தகுநிலைக்கேற்பக் குடும்ப உறுப்பினர்களின் சமூகத் தகுநிலையும் அமைகிறது. குடும்பம் சார்ந்துள்ள குழுக்களின் சமூகத் தகுநிலை உயர்வாக அல்லது தாழ்வாக இருந்தால், அதையொட்டிக் குடும்ப உறுப் பினர்களின் சமூகத் தகுநிலையும் உயர்வாகவோ தாழ்வாகவோ அமைகிறது.

குடும்பம் ஒரு பொருளாதார அலகாகச் செயல் பட்டு உறுப்பினர்களின் உணவு, உடை முதலிய தேவைகளை நிறைவேற்றித் தருகிறது. பழங்குடிச் சமுதாயங்களிலும், கிராமச் சமுதாயங்களிலும் குடும்பத்தில் இருக்கும் ஆண் பெண் அனைவரும் வயது வேறுபாடு இல்லாமல், உழைத்துக் குடும்பத் தின் உணவுத் தேவை நிறைவுபெறச் செய்கிறார்கள். பல சமூகங்களில் ஆண்கள் செய்ய வேண்டிய பணி கள், பெண்கள் செய்ய வேண்டிய பணிகள் என்று வேலைப் பங்கீடு செய்யப்பட்டுக் குடும்பத்தின் தேவைகள் நிறைவு பெற உறுப்பினர்கள் எல்லோரும் பணி புரிகிறார்கள். இப்படிக் கூட்டாகப் பணி புரி வதன் மூலம் குடும்ப உறுப்பினர்கள் தத்தம் தேவை களை மட்டுமன்றிப் பிறருடைய தேவைகளையும் நிறைவு செய்கின்றனர்.

மனிதன் தன் வாழ்க்கையில் எவ்வளவோ குழுக் களைச் சந்திக்கிறான். அவற்றில் கலந்து கொள் கிறான். அவை அவன் வாழ்விலும், ஆளுமையிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினாலும், அந்தத் தாக் கம் நீடித்து நிற்காது. ஆனால், குடும்பத்தின் தாக் கம் நிலையானதாக, உறுதியானதாக இருக்கும்.

சி.என்.ந.

**துணை நூல்கள்:**

**Bierytedt, Robert**, Social Order, Tata McGraw-Hill Publishing Company, New Delhi, 1970.

**Goode, William J.**, The Family, Prentice-Hall of India, New Delhi, 1979.

**Horton, Paul B. and Hunt, Chester L.**, Sociology, 6th Ed. McGraw-Hill International Book Company, Auckland, 1984.

**MacIver, R.M. and Page, Charles H.** Society, In Introductory Analysis, Macmillan & Co., London, 1955.

**குடுமியா மலை** புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டையிலிருந்து விராலிமலை செல்லும் சாலையில் ஏறக்குறைய 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சமணர் படுக்கைகளும், முற்காலப் பாண்டியரின் குடைவரைக் கோயிலும், அந்தக் காலத்

தைச் சேர்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இசைக் கல்வெட்டும் இடம்பெற்றுள்ள இவ்வூர் வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது.

பாண்டியர்களின் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் இவ்வூர் திருநலக்குன்றம் என வழங்கப்பட்டுள்ளது. பிற்காலச் சோழர்களின் 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் சிகாநல்லூர் என்னும் வடமொழிப் பெயரை இவ்வூர் பெற்றுள்ளது. இன்றுள்ள குடுமியா மலை என்னும் பெயர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்தே வழக்கில் வந்தது.

இவ்வூரிலுள்ள மலையின்மேல் பிற்காலப் பாண்டியரின் முருகன் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலுக்குச் செல்லும் வழியில், சமண முனிவர்கள் தங்கியிருந்த குகைகளும் கற்படுக்கைகளும் சிதைந்த பிராமிக்கல்வெட்டும் உள்ளன.

மலையின் கிழக்குப் பகுதியில் உள்ள குடைவரையின் வாயிற்காவலர் சிற்பங்கள் பாண்டி நாட்டுத் திருமெய்யம், திருக்குன்றக்குடி ஆகிய இடங்களிலுள்ள குடைவரைக் கோயில்களின் வாயிற்காவலர் சிற்பங்களோடு ஒப்பிடத்தக்க வனப்பும் அமைப்பும் கொண்டவை. இக்குடைவரையில் உள்ள கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் பாண்டியர் கல்வெட்டுகள் இரண்டு, இக்குடைவரைக் கோயில் பாண்டியர் காலத்ததே எனக் கருத உதவுகின்றன.

குடைவரைக் கோயிலின் உள்சுவரில் கிரந்த எழுத்துகளில் 'பரிவாதினி' என்னும் கல்வெட்டுச் சொல் ஒன்று இடம்பெற்றுள்ளது. கோயிலுக்கு வெளியே தென்புறப் பாறையில் கிரந்த எழுத்துகளால் எழுதப்பட்ட 38 வரிகளைக் கொண்ட இசைக் கல்வெட்டு ஒன்றும் இடம்பெற்றுள்ளது. அண்மையிலுள்ள திருமெய்யம், மலையடிப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள குடைவரைக் கோயில்களிலும் இந்த இசைக் கல்வெட்டோடு ஒப்பிடத்தக்கவகையில்இசைக் கல்வெட்டுகள் உள்ளன.

குடைவரைக் கோயிலுக்கு முன்புறமாக கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலக் கட்டடக் கோயில் அமைந்துள்ளது. இது கலைச்செல்வங்கள் நிறைந்தது. இருக்குவேளிர், முத்தரையர், சோழர், பாண்டியர், நாயக்கர், பாணர், பல்லவரையர், தொண்டைமான் ஆகிய பல அரச குடும்பத்தாரின் கொடைகளை இக்கோயில் பெற்றுள்ளது. ஏறக்குறைய 120 கல்வெட்டுகள் இங்குள்ளன. அவை சமூக நிலைமைகளைத் தெரிவிப்பனவாக உள்ளன. இக் கோயில்ன் கருவறையின் உள்ள இலிங்கத்தில் குடுமி போன்ற அமைப்பு முன்புறம் காட்டப்பட்டுள்ளது.

குடைவரைக் கோயிலுக்கு அருகில் தெற்காகச் சௌந்தர நாயகி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் ஒரு தேவரடியாரின் பொருளுதவியால் கட்டப்பட்டது. குடுமிநாதர் கோயிலுக்கு இடப்புறமாக அகிலாண்டேசுவரி அம்மன் கோயில் உள்ளது. இவ்வம்மன் கோயிலின் முன் மண்டபத்தில் பன்னிருகால் மண்டபம் ஒன்றும், அறுகோணக் கற்பீடம் ஒன்றும் அமைந்துள்ளன. இதனை அடுத்து இருபத்து நாலுகால் சொக்கட்டான் மண்டபம் ஒன்றும் உள்ளது. இவை யாவும் பல்லவராயர் காலத்தில் கட்டப்பட்டன என்று இங்குள்ள கல்வெட்டால் அறியக்கிடக்கிறது. அறுகோணக் கற்பீடத்தில் அமர்ந்து பல்லவராயர்களும் தொண்டைமான்களும் முடிசூட்டிக் கொண்டனர் என்பர்.

குடுமிநாதர் கோயிலில் உள்ள நாயக்கர் கால வசந்த மண்டபச் சிற்பங்கள் எழில் வாய்ந்தவை. இங்குள்ள உமாசகிதர், சோமாசுகந்தர், ஆடவல்லான், சிவகாம சுந்தரி, முருகன், சண்டிகேசுவரர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், பைரவர், பிட்சாடனர் முதலான 30 செப்புத் திருமேனிகள் எழில் வாய்ந்தவையாகும். இவ்வூரின் மலை முகட்டில் 63 நாயன்மார் வணங்க இறைவன் இடப வாகனத்தில் உமையுடன் காட்சியளிக்கும் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. கோயிலின் வடக்கிலும் தெற்கிலும் அண்ணன் கிணறு, தம்பிக்கிணறு, செங்கழுநீர் ஓடை முதலிய நீர்நிலைகள் உள்ளன. இவற்றில் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. பொதுவாகக் குடுமியாமலை நெடிய வரலாற்றுத் தொடர்புடைய ஊராகும்.

சொ.சா.

**துணை நூல்கள்**:

**Meenakshi**, C., Administration and Social life Under Pallavas, Madras University, 1938.

**Thirumalai** R., Studies in Ancient Townships of Pudukottai, State Dept. of Archaeology, Madras, 1981.

**குடைவரைக்கலை**: மனிதன் கடவுளை வழிபடத் தொடங்கிய காலத்தில் முதலில் குகைகளையே கோயில்களாக ஆக்கினான். உலகில் பல்வேறு இடங்களில் குடைவரைக்கலை மிகப் பழங் காலத்திலிருந்தே நிலவிவந்தது. மத்தியதரைக்கடற் பகுதிகளில் உள்ள சில குடைவரைக் கோயில்கள் ஏறக்குறைய 7,000 ஆண்டுகளுக்கும் முற்பட்டவையாகும். இக்குடைவரைக் கோயில்கள் அழகுமிக்க



பைரவ கொண்டாவிலுள்ள குடைவரைகள்

சிற்பங்களையும் கதவுகளையும் பீடங்களையும் கொண்டு விளங்குகின்றன. இதனுள் இறந்தவர்களைப் புதைக்கும் இடுகாடும் காணப்பட்டது. எகிப்து, சீனா ஆகியநாடுகளில் கி.மு. 3000 ஆண்டுகளைச் சார்ந்த குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன. எனினும், இந்தியாவில் தான் குடைவரைக்கலை பெரிதும் வளர்ச்சி அடைந்தது.

இந்தியாவில் குடைவரைக்கலை அசோகப் பேரரசர் காலம் முதல் (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு) கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை நிலவியது. பெரிய இயற்கைப் பாறைகளைக் குடைந்து கோயில்களை அமைத்துச் சிற்பங்களை அழகுற செதுக்கும் கலையை இந்தியர் அறிந்திருந்தனர்.

இந்தியாவில் குடைவரைக் கோயில் அமைக்கும் வழக்கத்தை மௌரியப் பேரரசர் அசோகரே முதன் முதலில் ஏற்படுத்தினார். இயற்கையான பாறைகளை வெட்டியும் குடைந்தும் இக்குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. அசோகரும் அவருக்குப் பின் வந்த அவர் பேரர் தசரதனும் பீகார் மாநிலத்தில் கயாவிற்கு அருகில் பராபர், நாகார்ச்சுனா மலைகளிலும் சிதமார்கி என்ற இடத்திலும் எட்டுக் குடைவரைக் கோயில்களை அமைத்தனர். பௌத்த சமயம் தோன்றியபின் புத்த துறவிகள் தங்குவதற்காக இத்தகைய குடைவரைகள் மேற்கு இந்தியாவில் மிகுதியாக அமைக்கப்பட்டன. மேற்கிந்தியாவில் பௌத்த சமயத்தின் ஒரு பிரிவான ஈனயானத்தைப் பின்பற்றியவர்கள் பௌத்த சைத்தியங்கள், மடாலயங்கள் ஆகியவற்றை மலையைக் குடைந்து அமைத்தனர்.

மடாலயங்கள் பொதுவாக நான்கு அறைகளைக் கொண்டு விளங்கின. பௌத்த துறவிகள் படுத்துறங்குவதற்காகக் கல்மேடைகள் அவற்றில் காணப்பட்டன. நான்கு அறைகளுள் கடைசி அறை துறவிகள் தனியாகப் படிப்பதற்காக அமைக்கப்பட்டது. இவ்வறை வட்ட வடிவில் அமைக்கப்பட்டுத் தனியறையாகப் பிரிந்து காணப்பட்டது. இம்மடாலயங்களில் குளிப்பதற்கான வசதிகளும் இருந்தன. அதற்காகக் கல்தொட்டிகள் பலவும் குடையப்பட்டன. பாறைகளைச் செங்குத்தாகச் செதுக்கியபின் மேலிருந்து கீழே கட்டடத்தைச் செதுக்கி இக்குடைவரைகளை அமைத்துள்ளனர். உட்புறத்தை நடுவிலிருந்து குடைந்து கொண்டபின் அடிப்புறத்தைப் பின்னர்ச் செதுக்கினர். கல்மேடைகள் 9 அடி சதுரமானவை. பொதுவாக இவ்வகை மடாலயங்கள் நகரைவிட்டு மலைப்பகுதிகளிலேயே காணப்பட்டன. பௌத்த துறவிகள் அமைதியான சூழலில் இறைவனை வழி



அசந்தாக் குடைவரைகளின் தோற்றம்

பட இவை உதவிபுரிந்தன. ஈனயான பௌத்த மத வளர்ச்சிக் காலத்தில் பாசா (Bhaja) கோன்டென், பித்தல்கோரா, அசாந்தா பெட்சா, நாசிக் சுன்னார், கார்லே, ஒரிசா ஆகிய இடங்களில் குடைவரைகளை அமைத்தனர். இவற்றுள் பாசாவிலுள்ள குடைவரை மிகப் பழைமையானது. இது 55 அடி நீளமும் 33 அடி அகலமும் 29 அடி உயரமும் உடைய ஒரு பெரிய அறையைக் கொண்டுள்ளது. குடைவரையின் நடுவில் அழகுமிக்க விகாரைகள் காணப்படுகின்றன. கார்லே விலும் இந்த அமைப்பில் உள்ள அறை உள்ளது. இது 124 அடி நீளமும் 46.5 அடி அகலமும் 45 அடி உயரமும் உடையது. வளைவுகளை 37 தூண்கள் நெருக்கமான முறையில் சிற்பங்கள் பலவற்றைக் கொண்டு தாங்கி நிற்கின்றன.

அசந்தாவிலுள்ள 8, 9, 10, 12, 13 எண்ணுள்ள குடைவரை மடாலயங்கள் ஈனயானப் பிரிவைச் சார்ந்தவை. ஒன்பது, பத்து எண்களுள்ள மடாலய மண்டபங்களும் இக்காலத்தைச் சார்ந்தவை. இவற்றுள் 12-ஆம் குடைவரை மிக எளிமையும் ஒரே தள முடையதாகவும் உள்ளது. நடுக்கூடம் இலாட வடிவ அமைப்பைப் பெற்று உள்ளது. மகாயானப் பிரிவைச் சார்ந்த குடைவரைகள் இங்கு 23 உள்ளன. இக் குடைவரைகளின் உள்ளே புத்த சிற்பங்கள் பல கருவறைகள் அமைத்து அமைக்கப்பட்டன. சைத்தியங்களில் மடாலயங்களைவிட அழகிய சிற்பங்கள் பல இக்காலத்தில் செதுக்கப்பட்டன. குகைக் கட்டடச்

சிற்பத்திறன் வளர்ச்சி இக்காலத்தில் பெரிதும் காணப் படுகிறது. ஆந்திர மாநிலத்தில் குண்டபள்ளியி...




எல்லோரக் குடைவரை-இந்திரசபை

பௌத்த மடாலயங்கள் காணப்படுகின்றன. இவை கி.மு. 200-ஆம் ஆண்டைச் சார்ந்தவை.

எல்லோராக் குடைவரைகள் பௌத்த மதத்திற்கும் சமண மதத்திற்கும் இந்து மதத்திற்கும் உரியவை. பாறையைக் குடைந்து ஒரு முழுக் கோயிலையே இங்கு மேலிருந்து கீழ்நோக்கி செதுக்கியுள்ளனர். இக் கோயில், நந்திக்கோயில், கருவறை, அதனைச் சுற்றியுள்ள நடைகள் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகின்றது. ஆந்திர மாநிலத்தில் உள்ள உண்டவல்லி என்னும் இடத்தில் அமைந்துள்ள குடை வரையின் அமைப்பு எல்லோராக் குடை வரையின் அமைப்பை ஒத்துள்ளது.

இடைக்காலத்தைச் சார்ந்த குடைவரைகள் பல பம்பாய் நகருக்கருகில் எலிபெண்டா என்ற இடத்தில் உள்ளன. இவை இந்து சமயத்தைப் பற்றியவை இங்குள்ள சிற்பங்களுள் மகேச மூர்த்தியின் சிற்பம் மிக நேர்த்தியானது. இங்குள்ள சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை திரிமூர்த்தி, நடராசர், சிவன், பார்வதி, அர்த்தநாரீசுவரர் முதலியவை ஆகும்.

இந்து சமயக் குடைவரைகளும் சமணசமயக் குடைவரைகளும் பௌத்த சமயக் குடைவரைகளுக்குப் பிந்தியவையாகும். சாஞ்சியிலிருந்து 7 கி.மீ. தொலைவிலுள்ள உதயகிரிக் குடைவரைகள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. தக்காணத்தில் பாதாமியிலுள்ள குகைக் கோயில்கள் சாளுக்கியர் காலத்தவை. இவை இந்துக் கோயில் அமைப்பில் குடையப்பட்டுள்ளன. அய்கொளேவிலுள்ள சமணக் குடைவரைகள் பாதாமிக் குடைவரைகளின் அமைப்பை உடையவை ஆகும்.



பாதாமிக் குடைவரையின் உள் மண்டபம்.

தமிழ்நாட்டில் பல்லவர்கள் காலமே குடைவரைகளின் தோற்றக் காலம் ஆகும். முதலாம் மகேந்திர வர்மனின் காலத்தில் குடைவரைக் கோயில்கள் பல அமைக்கப்பட்டன. இவை இந்து சமயக் கடவுளர்களான பிரமன், சிவன், திருமால் ஆகியோருக்காக அமைக்கப்பட்டன. பல்லவர்காலக் குடைவரைக் கோயில்கள் தமிழகத்தில் மண்டகப்பட்டு, பல்லாவரம், வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சிராப்பள்ளி, மகாபலிபுரம் குரங்கணில் முட்டம், விளாப்பாக்கம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இக்குடைவரைக் கோயில்கள் பொதுவாக ஒரு செவ்வக வடிவிலான முகமண்டபத்தையும், இடை மண்டபத்தையும் கொண்டுள்ளன. முக மண்டபத்தில் நான்கு சதுரத் தூண்கள் உள்ளன. சுவர்களில் உள்ள மாடங்களில் தெய்வங்கள் உள்ளன. பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்கள் திருத்தாங்கல், திருப்பரங்குன்றம், ஆனை மலை, பிரான்மலை, மலையாடிக்குறிச்சி, குடுமியாமலை, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. சித்தன்னவாசலில் ஏழடிப்பட்டம் என்ற குகை 17 படுக்கைகளைக் கொண்டது; பிராமிக் கல்வெட்டை உடையது. இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டாகும். முத்தரையர் காலக் குடைவரைகள் திருவள்ளரை, நார்த்தாமலை, குன்றாண்டார்கோயில், பூவாலைக்குடி ஆகிய இடங்களில் உள்ளன.



மண்டகப்பட்டுக் குடைவரை

குடைவரைகளைத் தவிர, தமிழகத்தில் பல்லவர்களும் பாண்டியர்களும் கட்டடக் கோயில் அமைப்பில் பாறையைச் செதுக்கிக் கோயில்கள் அமைத்தனர். முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் காலத்தைச் சார்ந்த மகாபலிபுரம் இரதங்கள் (தேர்கள்) இவற்றுள் புகழ் பெற்றவையாகும். இவை எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயில் அமைப்பில் செதுக்கப்பட்டன. இதுபோன்ற செதுக்குக் கோயில் பாண்டியர் கழுகு மலையில் உள்ளது. இக்கோயில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. வட இந்தியாவிலும் இது போன்று பாறைகளைச் செதுக்கிக் கோயிலாக அமைத்துள்ளமை தெரியவருகிறது. தம்னர், மசுரூர் போன்ற இடங்களில் இவ்வகைக் கோயில்கள் உள்ளன. சு.இரா.

**துணை நூல்கள்:**

**Brown, Percy, Indian Architecture, Buddhist and Hindu Periods, Bombay, 1942.**

**Burgess, James, Notes on the Buddhist Rock temples of Ajanta and Paintings of the Baga caves Asia, Bombay, 1879.**

**குண்டலகேசி** தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது விருத்த யாப்பில் அமைந்துள்ளமையின் குண்டலகேசி விருத்தம் எனவும் வழங்கப்படும். முழுமையாகக் கிடைக்காத தமிழ் நூல்களுள் குண்டலகேசியும் அடங்கும். இந்நூற் செய்யுட்கள் பல தொல்காப்பியவுரை, யாப்பருங்கல விருத்தியுரை, வீரசோழியவுரை, நீலகேசி; சிவஞான சித்தியாருக்கு ஞானப்பிரகாசர் எழுதிய உரை ஆகியவற்றுட் காணப்படுகின்றன. இங்ஙனம் கிடைக்கும் இந்நூற் செய்யுட்களின் எண்ணிக்கை 29 என்பது ஒரு சாரார் கருத்து. எனினும் கழக வெளியீடாக அமையும் குண்டலகேசியில் 19 செய்யுட்களே காணப்பெறுகின்றன. நீலகேசி எனினும் சமண நூல் குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்ததாகும். நீலகேசிக்குச் சமய திவாகர வாமன முனிவர் எழுதிய உரையில் குண்டலகேசியின் 99 செய்யுட்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இச்செய்யுட்களின் முதற்குறிப்புகள் மட்டுமே அறியப்படுகின்றன.

குண்டலகேசி பௌத்த சமயச் சார்பு நூலாகும். அச் சமயத்திற்குப் பெரும் பகையாகவிருந்த சமண சமயத்தின் கொள்கைகளை மறுப்பதன் பொருட்டு எழுந்த சொற்போர் நூலாக இது கருதப்படும்.

இந்நூலின் ஆசிரியர் இன்னாரென அறிய இயலவில்லை. ஆனால், நாதகுத்தனார் என்பவரே அவ்வாசிரியர் எனச் சிலர் கருதுகின்றனர். நீலகேசிக்குரிய உரையில் குண்டலகேசி என்னும் பெண் ஆவணம் என்னும் நகரில் சமண ஆசிரியரான நாதகுத்தனாரோடு வாதிட்டு வென்றாள் என்னும் செய்தி காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

குண்டலகேசி என்னும் வணிகப் பெண் பௌத்தச் சார்புடையவனும் வணிக மரபினனும், களவுத் தொழிலோனுமான காளன் என்பவனைக் காதலித்து மணக்கிறாள். ஊடல் மிகுதியால் சினந்திருந்தகாலை தன் கணவனைக் கள்வன் என அவள் இகழ்ந்துரைக்கின்றாள். வெறுப்புற்ற காளன் அவளைக் கொல்லச் சூழ்ந்து வஞ்சத்துடன் ஒரு மலை முகட்டிற்குக் கொண்டேகுகிறான். அவன் வஞ்சத்தினையுணர்ந்த குண்டலகேசி தானும் ஒரு சூழ்ச்சி செய்கிறாள். இறுதியாகத் தன் காதலனை ஒரு முறை வலம் வந்து வணங்க விரும்புவதாகக் கூறி, அவன் ஒப்புதலைப் பெறுகிறாள். தன் கணவனை மலைமுகட்டினின்றும் வீழ்த்திக் கொன்றுவிடுகிறாள்.

அதன்பின் உஞ்சை மாநகர் சென்று அருகச் சந்திரன் என்னும் பௌத்தத் துறவிபால் அறம் கேட்டுணர்கின்றாள்; பல சமயத்தவரோடும் வாதிட்டுப் பௌத்த சமயத்தின்பெருமையை நிலைநாட்டுகிறாள். இது குண்டலகேசியின் வரலாறாகும்.

இன்பமும் புகழும் மனத்தூய்மையுடையவர்க்கே உரியன என்றும், புலனடக்கமே மெய்யான தவமென்றும், அவாவினை நுகர்ந்து அழிக்கலாம் என்பது எரியும் பெருந்தீயை நெய்யினால் அவிக்கலாம் என்பதனோடு ஒக்கும் என்றும், மாந்தர் நாளும் சாகும் இயல்பினர் என்றும், நாளென்னும் வாளின் வாயில் மாந்தர் தலை வைத்துள்ளனர் என்றும் இந்நூலாசிரியர் கூறும் செய்திகள் எண்ணத் தக்கனவாகும். எல்லாம் ஊழினாற்றலால் நிகழ்வனவாதலின் இழப்பின்போது வருந்தாதும், ஆக்கத்தின் போது பெரிதும் களியாதும் வாழ்தல் நன்று என்றும் அறிவுறுத்தியுள்ளார். அ.த.

**குண்டலகேசி விருத்தம்** காண்க: குண்டலகேசி.

**குண்டுகட் பாலியாதனார்**: சங்கத் தொகை நூல்களில் இடம்பெற்ற புலவர்களுள் இவரும் ஒருவர். ஆதன் என்பதுவே இவர்தம் இயற்பெயராதல் வேண்டும். 'ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு, பெயரெற்றகரந் துவரக் கெடுமே' எனத் தொல்காப்பியர் (தொல். எழுத். 348) இப்பெயரைச் சுட்டியுள்ளார். ஆதன் அவினி, ஆதன்

அழிசி, ஆதனுங்கன், ஆதனெழினி என்னும் நால்வர் புலவர்களால் புகழ்ந்து போற்றப்பெற்ற தலைவர் களாவர். இவற்றால் ஆதன் என்னும் பெயர் அந் நாளில் பெருவழக்கிற்று என்று கொள்ளலாம். இவ ருடைய பெயர் 'குண்டுகட் பாலியாதன்' என்றும் காணப்படுகிறது.

ஆதன் என்னும் இயற்பெயரை அடுத்த ஏனைய இரு முற் சொற்களும் இவருக்கு அமைந்த சிறப்பு அடைமொழிகளாகும். 'பாலி' என்பது ஊர்ப் பெய ராகும். குண்டுகண் என்றால் குழிந்து ஆழ்ந்த கண் என்பதாகும். இது உறுப்பின் உருவம் பற்றி வந்த அடை. குண்டுகட்பாலியாதனார் என்னும் பெயர் சினையாலும் இடத்தாலும் வந்த சிறப்பு அடை களைக் கொண்டது என்பது விளக்கமாகும். 'குன்றின் கண் பாலி ஆதனார்' எனப் பாடங்கொள்வாரும் உளர்.

இவர் பாடிய சங்கப் பாடல்கள் இரண்டே காணப்படுகின்றன. ஒன்று நற்றிணையிலும் (220) மற்றொன்று புறநானூற்றிலும் (387) உள்ளன. அகம் பற்றியும் புறம் பற்றியும் ஒவ்வொருபாடல் பாடித் தொகை நூல்களில் இடம்பெற்ற சிறப்புடையார் இவர்.

குறிஞ்சித் திணையில் இவர் பாடிய நற்றிணைப் பாடல், குறை நேர்ந்த தோழி தலைமகளை முகம் புக்கது, பின்னின்ற தலைமகன் கேட்பத் தலை மகளை ஓம்படுத்தது, தான் ஆற்றானாய்ச் சொல்லி யது என மூவேறு துறைகளின் பாற்படுவனவாகப் பழங்குறிப்புத் தெரிவிக்கிறது.

தலைவன் தான் மடலூர்தலை ஊரார் அறியின் அலர் தூற்றுவராதலின், அந்நிலையை எய்தும் முன் உடன்படல் வேண்டும் எனத் தோழியின் அருள் வேண்டிக் கூறியதாக உள்ளது. மடல்மாவை இப்புல வர், 'உண்ணாநன்மா' எனக் குறிப்பு மொழியால் பெற வைத்தமை தனிச் சிறப்பாம்.

இவர் பாடிய புறப்பாடல் சேரமான் சிக்கற்பள் ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதனைக் குறித்தது; பாடாண் திணையில் வாழ்த்தியல் துறை யில் அமைந்தது. செல்வக் கடுங்கோ வாழியாதன் பதிற்றுப்பத்தில் கபிலரால் ஏழாம் பத்துக் கொண்ட வன். 'செல்வக் கோமான்' என்றும் இவன் குறிப் பிடப்படுகிறான். சேரநாட்டை ஆண்ட பெருமன்னர் களுள் இவனும் ஒருவன். 'ஊழி வாழி பூழியர் பெரு மகன், பிணர்மருப்பு யானைச் செருமிகு நோன்தாள், செல்வக் கடுங்கோ வாழியாதன்' (புறம். 387: 28-30) என்று தம்மைப் புரந்த அரசன் பெயரைப் பாலியாத னார் பாடலில் சுட்டியுள்ளார். செல்வக் கடுங்கோ இப்புலவருக்கு யானை, குதிரை, பசுநிரை, உழவர் பெருமக்கள் ஆகியோரைப் பரிசிலாகத் தந்துள்ளான்.

இம்மன்னனை வாழ்த்தும்போது வஞ்சிநகரின் மதிலை ஒட்டிச் செல்லும் பொருநை மணலினும், எல்லாக் கழனிகளிலும் விளையும் நெல்லினும் பல நாள் வாழ்க என்று வாழ்த்துகிறார். மு.ச.

**குண்டுவீச்சு**: பண்டைய கிரீசு, இந்தியா முத லிய நாடுகளில் போரில் தீயை உண்டு பண்ணும் அம்பு முதலிய கருவிகள் பயன்படுத்தப் பெற்றன. இக் காலத்தில் குண்டுகள் மூலம் தீயை உண்டாக்கிப் போரில் பகைவர்களை அழிக்கின்றனர். பலவகைக் குண்டுகள், இக்காலத்தில் தயாரிக்கப்படுவதால், குண்டுவீச்சு (Bombardment) பல இடங்களில் அழிவை யுண்டாக்க நடைபெற்று வருகிறது. இரண்டாம் உல கப் போர்க்காலத்தில், செருமானியர் இங்கிலாந்தில் குண்டுகளை வீசினர். பிறகு அமெரிக்கர், சப்பானில் அணுகுண்டுகளை வீசி நாசவேலை செய்தனர். காலாட்படையினர் தமது வெற்றிக்குக் குண்டுவீச்சு முறையைக்கையாள்கின்றனர். கடற்படையினரும், விமானப்படையினரும் குண்டு வீச்சுக்கு வேண்டிய கருவிகளைத் தம்மிடம் வைத்திருந்து, தக்க சமயத் தில் பயன்படுத்துகின்றனர். மிகவும் கொடிய பின் விளைவுகள், குண்டுவீச்சினால் ஏற்படுகின்றன. அதை உணர்ந்த இக்காலத் தலைவர்கள் அம்முறையைக் குறைக்க வேண்டும், பயன்படுத்தவும் கூடாது என்று அறிவுரைகள் கூறி வருகின்றனர். குண்டு வீச்சு நிறுத் தப்படுமானால் உலக அமைதிக்கு ஏற்ற சூழ்நிலை உருவாகும். தெ.பா.

**குண்டூர்** இந்தியாவின் தென்கிழக்குப் பகுதி யில் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். இதைச் சுற்றியுள்ள 5,733 சதுர மைல் பரப்புள்ள மாவட்டத்திற்கும் குண்டூர் மாவட்டம் என்றே பெயர். குண்டூர் நகரம், இருப்புப் பாதைகள் கூடுமிடமாக வும் பருத்தி, புகையிலை, வாணிகத் தலமாகவும் விளங்குகிறது. இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரர்களால் அமைக்கப் பெற்றது. பின் னர் கி.பி. 1823-இல் இந்நகர் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. எண்ணெய் ஆலைகளும், நெல் லரைக்கும் ஆலைகளும், பருத்தியரைக்கும் தொழிற் சாலைகளும், புகையிலைத் தொழிற்சாலைகளும் இங்கு உள்ளன. இங்கு, கி.பி. 1866-ஆம் ஆண் டில் நகராட்சி அமையப்பெற்றது. இந்நகரிலி ருந்து சிறிது தொலைவில், கொண்ட வீடு மலை கள் காட்சி அளிக்கின்றன. குண்டூர் மாவட்டத்தில் உள்ள உண்டவல்லி என்னுமிடத்தில் பாறைக்குடை வுக் கோயில்கள் காணப்படுகின்றன. மாவட்டத்தின்

கிழக்கிலும் வடக்கிலும் கிருட்டிணா ஆறு எல்லைப் புற ஆறாக ஓடுகிறது. இவ்வாற்றுக் கால்வாய்களால் இப்பகுதி வளமடைகிறது. பருத்தியும் நெல்லும் புகையிலையும் மிகுதியாக உற்பத்தி ஆவதற்கு இந்தக் கால்வாய்கள்தான் காரணமாகும். முன்பு குண்டும் குழியுமாக இருந்ததால் இதற்குக் குண்டூர் என்ற பெயர் ஏற்பட்டது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. தெ.பா.

**குண்டோதரன்** என்பவன் சிவ கணங்களுள் ஒருவனாவான். சிவபெருமானுக்குக் குடைபிடிக்கும் செயலைச் செய்பவன். மதுரை மாநகரில் சக்திதேவி தடாதகைப் பிராட்டியாராக அவதாரம் செய்து சிவ பெருமானைத் திருமணம் செய்துகொள்கிறார். அத்திருமணத்தின்போது மாப்பிள்ளையான சிவபெரு மானுடன் இவனே உடனிருந்தான். திருமணத்தின் போது ஏராளமான உணவுப் பொருள்கள் சமைத்து வைக்கப்பட்டன. மணமகன் வீட்டிலிருந்து கூட்டம் வரவில்லையே என்ற ஏக்கம் கொண்ட தடாதகை சிவபெருமானிடம் முறையிட்டாள். உணவுப் பொருள்கள் எஞ்சிவிடுமே என்று அஞ்சும் நிலையை இவள் கொண்டிருக்கின்றாள் என்று எண்ணிய சிவ பெருமான், தன்னாற்றலால், குண்டோதரனின் வயிற்றுக்குள் தீவிரபசி ஏற்படும்படி செய்தார். ஊழித்தீயே தன் வயிற்றில் புகுந்தது போன்று குண்டோதரன் பசியால் வாடினான். அவனுக்கு உணவு படைக்குமாறு சிவபெருமான் கூறினார்.

குண்டோதரனுக்கு, சமைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் அனைத்தும் அளிக்கப்பட்டன. அனைத் தையும் உண்ட குண்டோதரனுக்குப் பசி அடங்க வில்லை. இவன் ஒருவன் மட்டும் என்ன தின்றுவிடப் போகிறான்? என்று ஏளனமாக நினைத்த தடா தகைப் பிராட்டியார் வியப்புமிக அடைந்தார். உணவு உண்டவனுக்கு நீர்வேட்கை ஏற்பட்டது. அவனது நீர்வேட்கையைத் தணிக்கும்பொருட்டுச் சிவபெருமான் வைகை நதியை வரவழைத்துத் தந் தார்.

மதுரை வைகை அணைக்கட்டில் இவன் உருவத் தைச் சிலையாக வடித்து வைத்துள்ளனர். அணை யின் நீர் இவன் கைகளில் வந்துவிழுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் அவனுக்கு நீர் வேட்கை தீரவில்லை என்ற குறிப்பை இச்சிலை உணர்த்துகின்றது. அங்கு, மக்களைக் கவர்ந்த சிலை யாக இவன் காட்சி தருகின்றான். திருவிளையாடல் புராணத்தில் இவன் கதை சித்திரிக்கப்பட்டுள்ளது.

குண்டோதரன் என்னும் பெயர் கத்ரு குமர னாகிய நாகனையும், திருதராட்டிரனுடைய குமர னையும் குறிக்கின்றது. இரா.குரு.

**குணக்குறி**: கருத்துக் கோடலின் மொழிப் படிவத்தை மதம் என்கிறோம். ஒரு தீர்ப்பைப் பகுத் தால் பதங்கள் கிடைக்கின்றன. ஒவ்வொரு பதத்திற் கும் இருவகைக் கருத்துண்டு. 'பசு' என்னும் பதம் மாடுகளைக் குறிப்பதோடல்லாமல், அதன் பொது வான குணங்களாகிய சாதுவான தன்மை, பால் தருதல், தெய்வத் தன்மையுடைமை போன்றவற்றை யும் குறிக்கின்றது. எனவே எந்தப் பதத்தை எடுத்துக் கொண்டாலும் அதற்குப் பொருட் குறி, குணக்குறி, ஆகிய இரு அம்சங்களும் உண்டு என்பதைக் காண லாம். ஒவ்வொரு பதமும் சில பொருள்களையும், சில குணங்களையும் குறிப்பிடும். பொருட் குறியைப் பரப்பு எனவும், குணக்குறியை உள்ளுறை எனவும் கூறுவர்

குணக்குறி (Connotation) பற்றி அளவையியல் வல்லுநர் ஒரே கருத்தைக் கொள்ளவில்லை. ஒரு பதத்தின் குணக்குறி என்றால், அப்பதத்தால் குறிக் கப்படும் பொருளின் குணங்கள் அனைத்துமா? எனும் வினா எழுகிறது. குணக்குறி என்றால் முதன்மை யான, அடிப்படையான குணங்கள் என்பது மரபு. எக்குணங்கள் இல்லாவிட்டால், ஒரு பொருளிற்கு அப்பெயரை வழங்கமாட்டோமா, அக்குணங்களே அப்பதத்தின் குணக்குறியாகும். சான்று: முக்கோணம் மூன்று நேர் கோடுகளால் அடைக்கப்பட்ட வடிவம் ஆகும்.

சிறப்புப் பெயர்களுக்குக் குணக்குறி உண்டா? இல்லையா? அல்லது அவை கருத்தில்லாப்பதங்களா? குணக்குறி என்பது அடிப்படையான குணங்கள் என் றால் இப்பெயர்களுக்குக் குணக்குறி இல்லை என சான் இசுடுவர்ட் மில் கூறுகின்றார். எனினும் பரந்த பொருளில் ஏதோ சில குணங்களைத் தெரிவித்தல் என்றால், இடுகுறிப் பெயருக்கும் குணக்குறி ஓரள வேனும் உண்டு. குணக்குறி சிறிதும் இல்லாமல் பொருட்குறி மட்டும் இருக்க இயலாது. ஒவ்வொரு பதமும் இரு தொழில் புரிபவை. குணக்குறியும், பொருட்குறியும் இணைபிரியாத இருஅம்சங்கள் ஆகும். எஸ்.இல.

**குணகாங்கியம்** என்பது கன்னட மொழியி லுள்ள ஒரு யாப்பிலக்கண நூல். இதனை மேற் கோளாக கி.பி. 11–ஆம் நூற்றாண்டினரான யாப் பருங்கலக்காரிகை உரையாசிரியர் குணசாகரர் அவ் வுரையின் தோற்றுவாய்ப் பகுதியில் காட்டியுள்ளார்.

யாப்பருங்கலப் பெருநூலின் அங்கமாக அந் நூலினை ஆக்கிய அமிதசாகரராலேயே இயற்றப் பெற்றது யாப்பருங்கலக் காரிகை என்பதாம். குண சாகரர் மகடூஉ முன்னிலை யாப்பருங்கலக் காரிகைப் பாடல்களில் உள்ளமைக்குக் குணகாங்கியம் என்னும் கருநாடகச் சந்தத்தினை எடுத்துக் காட்டுகிறார். '... குணகாங்கியம் என்னும் கருநாடகச் சந்தமே போல் மகடூஉ முன்னிலைத்தாய் ...' என்பது அவர் கூற்றாகும். யாப்பருங்கலக் காரிகையில் உள்ள 47 பாடல்களுள் 36 பாடல்கள் மகடூஉ முன்னிலை கொண்டனவாக உள்ளன.

தமிழில் இந்நூலுக்கு முற்பட்டு மகடூஉ முன்னிலையமைப்பு இல்லையோ வென்றால், சங்க காலம் முதற்கொண்டு பாடல்களில் மகடூஉ முன்னிலை யமைப்பைக் காணலாம். இலக்கண நூல்களை எடுத்துக்கொண்டால், யாப்பருங்கலக் காரிகையைப் போன்று கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த வீரசோழியம் என்னும் நூலில் உள்ள காரிகைகளிலும் மகடூஉ முன்னிலை பரவலாக உள்ளது. இங்ஙனம் தமிழ்நூல் வழக்காய் இம்மகடூஉ முன்னிலை காணப் படவும் இவ்வுரைகாரர் குணகாங்கியத்தைக் காட்டியது அது ஒரு யாப்புநூல் என்பதனாலேயேயாகும். மேலும், சமண சமயத்தினர் கன்னட மொழியில் அந் நாளில் வல்லவராயிருந்தனர். எனவே, சமணராகிய குணசாகரர் தாம் கற்ற கன்னட நூலைச் சான்றாகக் காட்டினார் என்றும் கொள்ளலாம். மு.ச.

**குணங்குடி மசுத்தான்**: சூபியக் கருத்துகளைத் தமிழில் பாடியுள்ள மிகச் சிறந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் குணங்குடி மசுத்தானும் ஒருவர் ஆவார். பாடல்களின் எளிமையும் இனிமையும் தத்துவச் சிறப்பும் காரணமாக இசுலாமியத் தமிழ்த் தத்துவப் பாடல்களில் இவருடைய பாடல்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

குணங்குடி மசுத்தானின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிர் என்பதாகும். 'குணங்குடி' என்னும் இவருடைய ஊர்ப்பெயருடன், 'இறை காதலர், என்னும் பொருளினைத் தரும் மசுத்தான் என்னும் அரபிச் சொல்லும் இணைந்து இவருடைய பெயர் குணங்குடி மசுத்தான் என வழங்குகிறது.

குணங்குடி மசுத்தான் பிறந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம் தொண்டிக்கு அருகிலுள்ள குணங்குடி என்பதாகும். இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆம். இவர் தந்தையார் 'பொன்னரிய மாலை' என்னும் இசுலாமியத் தமிழ்க் காப்பியத்தைப் படைத்துள்ள மின்னா நூறுத்தீன் என்னும் பெரும்புலவரின் வழியில் வந்த செய்கு நயினார் முகம்மது ஆவார்.

முறையே தமிழ் கற்ற குணங்குடி மசுத்தான் இசுலாமியச் சமயக் கருத்துகளையும் அரபி மொழி இலக்கிய இலக்கணங்களையும் கீழக்கரையில் வாழ்ந்த செய்கு அப்துல் காதிர் லெப்பை ஆலிமிடத்தில் கற்றார். இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் பெரும்புகழ் பெற்றவரும் 'புலவர் நாயகம்' எனப் பாராட்டப்பெறுபவருமாகிய செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர் குணங்குடி மசுத்தானுடன் உடன் கற்ற மாணவராவார். அவர் குணங்குடி மசுத்தானுடைய பாடல் தொகுதிக்கு எழுதியுள்ள முன்னுரையில், குணங்குடி மசுத்தான், 'கீழக்கரை தனில் வாழும் செய்கு அப்துல் காதிர் லெப்பை ஆலிமிடத்தில் அருளினோடு ஓதிச் சாலவும் தேறித் தாபதமுறை கொண்டு அருள்நபி இசுறத்து ஆயிரத்து இருநூற்று இருபதோடு இருநான் காண்டினில் (1813) உலகம் முற்றும் துறந்து' வெளிப்போந்தாரெனக் குறிப்பிட்டுள்ளார்.

குணங்குடி மசுத்தான் எழுதியுள்ள பாடல்கள் யாவும் 'குணங்குடி மசுத்தான் திருப்பாடல் திரட்டு' என்னும் பொதுப் பெயரில் வெளி வந்துள்ளன. இத்திரட்டில் 'முகியித்தீன் சதகம்', 'அகத்தீசர் சதகம்' என்னும் இரு சதகங்கள் உள்ளன. அவற்றுடன் 'நிராமயம்', 'பராபரம்', 'ரகுமான்', 'எக்காலம்', 'கண்மணி', 'மனோன்மணி', 'நந்தீசுவரன்' என முடியும் 749 கண்ணிகளும் அந்நூலில் உள்ளன. மேலும் 22 கீர்த்தனைகளும், ஆனந்தக் களிப்பாக 38 நான்கடிச் சிந்துகளும், 28 சந்தங்களும் அந்த நூல் தொகுப்பில் உள்ளன.

குணங்குடி மசுத்தான் பாடியுள்ள இரு சதகங்களில் முதலாவதாகிய முகியித்தீன் சதகம் 'வள்ளல் இறசூலைத் தொடர்ந்து அருள் பெறுவான் பொருட்டு முன்னிலைக் குருவாகிய முகியித்தீன் ஆண்டகையைத் தோத்திரம் செய்து குறையிரந்து பாடிய சதகம்' ஆகும். அச்சதகப் பாடல்கள் யாவும் இறசூல் வருகவே என்னும் வேண்டுகோளைக் கொண்டு முடிகின்றன. இப்புலவர் தம்முடைய ஞானகுருவிடம் தமக்கு உண்மை ஞானமளித்துத் தம்மைக் காப்பாற்றுமாறு கண்ணீர் மல்கப் பாடியுள்ள இப்பாடல்கள் இனிமை தோய்ந்த இசுலாமியத் தமிழ்ப் பக்திப் பாடல்களுக்குச் சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. இவருடைய இரண்டாவது சதகமாகிய 'அகத்தீசர் சதகம்' என்பது 'குருவருள் வேண்டி குறையிரந்து பாடிய சதகம்' ஆகும். அச்சதகப் பாடல்கள் யாவும் 'தவராச சிங்கமே வரவேண்டும் என்றனருகே

மாகுணங்குடி வாழும் மென்கைத் தீசனே மவுன தேசிக நாதனே' என முடிகின்றன.

சூபியப் புலவர்கள் இறைவனையும் ஞானகுருவி னையும் காதலியாக உருவகித்துப் பாடுவதுண்டு. குணங்குடி மசுத்தான் இறைவனைக் காதலியாக உருவகித்துப் பாடியுள்ளார். மேலும், இறைவனைத் தாயாக உருவகித்துப் பாடும் தமிழ் மரபினையும் அவர் பின்பற்றியுள்ளார். 'தாயிருக்கப் பிள்ளை தளரா தொருபோதும் நீயிருக்க நான்தளர நேரோ நிராமயமே' எனவும், 'என்னைவிட்டால் மாப் பிள்ளைமார் எத்தனையோ உன்றனுக்கே உன்னை விட்டால் பெண்ணெனக்கு உண்டோ மனோன் மணியே, எனவும் வரும் கண்ணிகளில் இவர் இறைவ னைத் தாயாகவும் காதலியாகவும் உருவகித்துப் பாடி யுள்ளமையைக் காணலாம்.

முகியித்தீன் அப்துல் காதிர் செய்லானி என்பார் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஈராக்கு நாட்டுப் பாக் தாது நகரில் வாழ்ந்திருந்த இசுலாமியச் சமயச் சான் றோர் ஆவார். அவர் ஏற்படுத்திய இசுலாமிய மெய்ஞ்ஞான வழி அவர் பெயரால் காதிரியா தரீகா எனப்படும். (தரீகா—ஞானவழி). குணங்குடி மசுத்தான் காதிரியா தரீகாவைப் பின்பற்றிய இசு லாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவராவார். எனவே, இவருடைய பாடல்களில் முகியித்தீன் அப்துல் காதிர் செய்லானியின் பெருமை மிகுதியாகப் பேசப்படும். காதிரியா தரீகாவைச் சேர்ந்த நாகூர் சாகுல் அமீது ஆண்டகையையும் இவர் புகழ்ந்து பாடியுள்ளார்.

குணங்குடி மசுத்தான் தமிழும் அரபியும் வல்லவர். சித்தர் பாடல்களில் தோய்ந்த நெஞ்சினை உடை யவர். எனவே, சூபியத் தத்துவத்தை இவர் சித்தர் பாடல் அமைப்பில் கூறியுள்ளார். இவர் தமக்கு முன்னர் வாழ்ந்திருந்த சித்தர்களின் கருத்துகளைத் தம் சமயக் கருத்துகளுக்கு ஏற்ப இணைத்துப் பாடி யுள்ளார். சித்தர்கள் பயன்படுத்துகிற குறியீடுகளை யும், கன்மம், மாயை, பதி, பசு, பாசம் போன்ற சைவ சித்தாந்தச் சார்பான சொற்களையும் இவர் பயன்படுத்தியுள்ளார். வாய்ப்பு ஏற்படும் இடங்களில் எல்லாம் இவர்தம் சமயக் கருத்துகளைத் தெளிவாக வலியுறுத்தத் தவறுவதில்லை. 'எல்லாப் படைப்பும் படைத்து இரணங்கள் ஈபவனே அல்லா ஒருவனன்றி வேறில்லை' (நலமே பெற வேண்டுமெனில், 4) எனத் தமது ஓரிறைக் கொள்கையை வலியுறுத்தியுள்ளார். 'பாலு முகம்மது பத்தியுள்ளோர்கள் பாய்ந்தெடுக்கும் வேலும் முகம்மது வேதாந்த மூல விளக்குடைய கோலு முகம்மது' (நலமே பெற வேண்டுமெனில், 11) என இவர் இறைதூதர் முகம்மதுவின் மீது தமக் குள்ள பற்றுதலைப் புலப்படுத்தியுள்ளார்.

குணங்குடி மசுத்தான் தம்முடைய ஊர்ப்பெய ரைத் தம்பாடல்களில் முத்திரைச் சொல்லாகப் பயன் படுத்தியுள்ளார். இச் சொல் 'துறக்கம்', 'நற்குணம் குடிகொள்ளுதல்' போன்ற பொருள்களில் பயன்படுத் தப் பட்டுள்ளது.

சாதாரண பேச்சு வழக்குகள் இவரால் இலக்கி யத் தரம் பெற்றுள்ளன. பேச்சு வழக்கினை மிகுதி யாகப் பயன்படுத்துவது சித்தர் பாடல்களின் பொது இயல்பாகும். சித்தர் பாடல்களின் போக்கினையே இவர் பயன்படுத்துவதால் இவருடைய பாடல்களில் பேச்சுவழக்கு மிகுதியாக ஆளப்பட்டுள்ளது.

இசுலாம் துறவறத்தை வலியுறுத்தவில்லை. இவர் துறவற வாழ்வினை விரும்பி மேற் கொண்டவர். இவர் பெண்களைப் பழித்துப் பாடு வதும், வாழ்வின் நிலையாமையை மிகுதியாக வலி யுறுத்துவது சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ எண் ணிய இவர்தம் போக்கும் பிறவும் இவர்தம் வாழ்வி லும் நூலிலும் சித்தர்களின் தாக்கம் இருந்ததை இத்தாக்கம் இசுலாமியர் சிலர் இவரை ஐயக்கண் கொண்டு பார்க்கும் அளவுக்குச் சென்றுள்ளது. பிற ருடைய நிந்தனையால் இவர் மனம் பெரிதும் புண் பட்டிருக்கவேண்டும் என்பது இவருடைய பாடல் களால் புலனாகிறது.

இனிய எளிய நடையில் கருத்துகளை வெளியிடும் பண்பும் நுண்ணிய தத்துவக் கருத்துகளைச் சித்தர் கள் போல் வழக்குச் சொற்களில் வெளியிடும் போக் கும், இவருக்கு எல்லாரிடமிருந்தும் பெருமதிப்பைத் தேடித் தந்திருக்கின்றன. இவருடைய நூல் தொகுப் பிற்குப் பாயிரம் பாடியுள்ளோரில் மிகப் பலர் இசுலா மியர் அல்லாதார் ஆவர். இவர் மீது சரவணப் பெருமாள் ஐயர் பாடியுள்ள நான்மணிமாலை என் னும் சிற்றிலக்கியம் சுவை நிறைந்ததாகும். எஸ்.ஐ.

**குணசாகரர்** யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் யாப்பிலக்கண நூல்களின் உரை யாசிரியர். இவ்விரு நூல்களின் ஆசிரியரான அமித சாகரருடைய ஆசிரியர் பெயரும் குணசாகரர் என வழங்கப்பெறும். 'குணக்கடற் பெயரோன் கொள் கையின் வழாஅ' என்னும் யாப்பருங்கலத் தொடர் இதனைத் தெரிவிக்கிறது. யாப்பருங்கலத்தில் குறிப் பிடப்பெறும் அமிதசாகரரின் ஞானாசிரியராகிய குணசாகரரும், உரையாசிரியராகிய குணசாகரருமா கிய இருவரும் தனித்தனியாக விளங்கியவர்கள்.

உரையாசிரியராகிய குணசாகரர் கி.பி.11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவார். இவர் சோழநாட்டைச் சார்ந்தவர். சமண சம

யத்தைச் சார்ந்த இவர் காட்டும் மேற்கோட் செய்யுட்கள் பலவும் அருகதேவன்வாழ்த்தாகவும் சமண சமயக் கோட்பாடுகளை விளக்குவனவா கவும் காணப்படுகின்றன.

இவர் காட்டிய மேற்கோள் நூற்பாக்கள் பலப்பல. தொல்காப்பியம், பல்காயம், காக்கைபாடினியம், சிறு காக்கைபாடினியம், அவிநயம், நற்றத்தர் யாப்பு, மயேச்சுரர் யாப்பு, சங்கயாப்பு போன்ற இலக்கண நூல்களினின்றும் மேற்கோள்களைக் காட்டியுள்ளார். அவ்வாறே சங்க இலக்கியம், சிந்தாமணி, சூளாமணி, திருக்குறள் போன்ற பல நூல்களையும் இடமறிந்து காட்டியுள்ளார். இவற்றால் இவர்தம் இலக்கண இலக்கியப் புலமைகள் வெளிப்படுகின்றன.

காரிகை நூலினைப் பகுத்து நூற்பாத் தொகை யும், கிரந்தத் தொகையும், எழுத்துத் தொகையும் கூறிச் செல்லும் முறை மிகச் சிறப்புடையது. உத்தி வகைகளைப் பொருத்திக் காட்டலும், விதப்புக் கிள விகளுக்கு விளக்கம் தருதலும் இவரது உரையில் அங் கங்கே காணலாம். சுருங்கக் கூறின் உரை எழுதுவ தற்கு இவரை ஒரு முன்னோடியாகக் கொள்ளலாம்.

சு.சு.

**குணநாற்பது** தொல்காப்பிய உரையால் அறியப்படும் ஒருநூல். இந்நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை. தலைவன் கூற்றுகளைத் தொகுத் துக் கூறும் தொல்காப்பிய நூற்பாவில் (தொல். பொருள்.146) 'நாமக் காலத்து உண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்' என்னும் பகுதிக்கு உரை வரைந்த நச்சினார்க்கினியர், நாற்பது பாடல்களைக் கொண்ட இந்நூலிலிருந்து ஒரு செய் யுட்பகுதியினை மேற்கோளாகக் காட்டியுள்ளார். 'இன்னது நடக்கும் என அறியாது, அஞ்சும் களவுக் காலத்தில் யாங்கள் வருந்தாதிருக்கக் காரணமான கடவுள் உண்டு' என்று கூறி அதனைத் தோழி ஏத் தும்போது, அது கேட்ட தலைவன் 'அதுகாறும் காத்து வந்த தெய்வம் திருமணம் வரையிலும் துன்பம் நிகழாது காக்கும்' என்று கூற முற்படுங்கால் அவன் பால் கூற்று நிகழும் என்பது நூற்பாப்பகுதியின் பொருளாகும். தொடர்ந்து விளக்கம் கூறுங்கால் 'குனி காய் எருக்கின் குவிமுகிழ் ...... தாமரை முகத் தியைத் தந்த பாலே' என்னும் குண நாற்பதில் ஏமுறு கடவுளைத் தலைவன் தானே ஏத்தியது போலல்லா மல், 'கற்புக் காலத்தில் தோழி பரவுக்கடன் கொடுக்க ஏத்தும்போது தலைவனும் ஏத்துதலாகும் என்று கூறி அதற்கு வேறொரு பாடலை மேற்கோள் காட்டு கிறார். இதனால், குணநாற்பது என்னும் நூல் அகப் பொருள் தழுவியது என்பதும், ஆசிரியப்பாவால் அமைந்த 40 செய்யுட்களைக் கொண்டது என்பதும் புலனாகின்றன 'குனி காய் எருக்கின்' என்ற செய்யு ளின், முதற் பகுதியையும் இறுதிப் பகுதியையும் மட்டுமே உரையாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார்.

அ.மா.ப.

**குணபதேயச் செப்பேடுகள்**: பல்லவர் செப பேடுகளுள் ஒன்றான குணபதேயச் செப்பேடுகள் ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத்தில் குண பதேயம் என்னும் ஊரில் சர் வால்ட்டர் எலியட்டு என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பொழுது இலண்டனிலுள்ள ஆங்கிலேய அருங்காட்சியகத்தில் இவை வைக்கப்பட்டுள்ளன. இச் செப்பேடுகள் பல்லவ மரபில் பிறந்த விசயபுத்தவர்மன் என்ப வனுடைய மனைவி சாருதேவி. என்பவள் தானம் அளித்த செய்தியைக் கூறுகிறது.

இச்செப்பேடுகள் பல்லவ அரசர் விசயகந்தவர்ம ரின் காலத்தைச் சார்ந்தவை. சாருதேவியின் கணவ ரான புத்தவர்மனுக்கும் விசயகந்தவர்மனுக்கும் உறவு என்ன என்பது தெரியவில்லை. சாருதேவி பல்லவப் பேரரசின் ஒரு பகுதியை ஆட்சி செய்து வந் தாள் என்றும் அவளுடைய கணவன் அப்பொழுது உயிருடன் இல்லையென்றும் தன் மகன் சார்பாக அவள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தாள் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ள ஆட்சி ஆண்டு சிதைந்துள்ளதால் இச்செப்பேடு வெளியிடப்பட்ட ஆண்டைக் கண்டு பிடிக்க இயலவில்லை.

குணபதேயச் செப்பேடுகளைப் பிளீட்டு (Fleet) என்பவர் இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சி (Indian Antiquary) 9-ஆம் தொகுதியிலும், உல்சு (Hultzch) இந்தியக்கல்வெட்டியல் (Epigraphica Indica) 8-ஆம் தொகுதியிலும் பதிப்பித்தனர். மூன்று ஏடுக ளைக்கொண்ட இச்செப்பேடுகள், கோக்கப்பட்ட வளையத்தின் முத்திரை முகப்பிலே நின்ற நிலையில் காளை உருவம் ஒன்று காணப்படுகிறது. முதல் ஏட்டி லும் மூன்றாம் ஏட்டிலும் உட்புறம் மட்டுமே எழுத்து கள் உள்ளன. நடுவில் உள்ள இரண்டாம் ஏட்டின் இரு பக்கங்களிலும் எழுத்துப் பொறிப்புகள் உள்ளன. மொத்தம் 16 வரிகளைக் கொண்ட இச்சாசனத்தின் முதல் ஏட்டில் சில எழுத்துகள் சிதைந்துள்ளன. இச் செப்பேடுகள் பிராகிருத மொழியில் உரைநடையில் எழுதப்பட்டுள்ளன. செப்பேட்டின் இறுதியில் இரண்டு சுலோகங்கள் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன.

சாருதேவி யாதோ ஓர் ஊரிலுள்ள ஆதுகன் என்ப வனுடைய நிலத்தில் நாலு நிவர்த்தனம் பூமியைத் தாலூரம் என்னுமிடத்தில் இருந்த கூளி மகத்தரக-

கோயிலில் எழுந்தருளியிருந்த தெய்வத்திற்குத் தானமாக அளித்தாள் என்னும் செய்தி இச்செப்பேடுகளில் கூறப்பட்டுள்ளது. செப்பேடுகளில் சொல்லப் பட்டுள்ள தாலூரம் என்னும் ஊர் எதுவென்று தெரியவில்லை. கிருட்டிணராவ் என்பார் விசய வாடா வட்டத்தில் உள்ள தாமலூரு என்னும் ஊரே தானமாக அளிக்கப்பட்ட தாலூரம் என்று கருதுகிறார். சு.இரா.

**குணம்**: தமிழிலுள்ள நால்வகைச் சொற்களுள் ஒன்றாகிய உரிச்சொல்லைப் 'பல்வகைப் பண்பும் பகர்பெயர்' (நன். 442) என்பர். ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொல், பல குணத்தை உணர்த்தும் உரிச்சொல் என்று பொருள் நிலை கருதி உரிச் சொல்லை இருபெரும் பகுப்புள் அடக்குவர்.

பண்பு உலகத்தில் உள்ள உயிர்ப்பொருள், உயிரில்லாதபொருள் என்னும் இருவகைப் பொருள்களின் தன்மைகளாம். குணம் என்பதனைப் 'பண்பு' என்னும் பெயராலும் குறிப்பிடுவர். பண்பு என்பது பெரும் பான்மையும் குணப்பண்பும் தொழிற்பண்பும் என இருவகையுள் அடங்கும்.

உயிர்ப்பொருள்களின் குணங்களாவன அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நிறை, வெறுப்பு, உவர்ப்பு, இரக்கம், நாண், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவி போன்றவையாம்.

உயிரல் பொருள் பற்றி ஆராயும்போது வடிவு, வண்ணம், செயல் முதலியன அவற்றின் குணமாக அமையும், வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரம் முதலிய பலவகை வடிவங்கள்; நல்லவாசனை, கெட்டவாசனை என்னும் இருவகை மணங்கள்; வெண்மை, கருமை, செம்மை, பசுமை, பொன்மை என்னும் ஐவகை வண்ணங்கள்; கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, உறைப்பு, இனிப்பு என்னும் அறுவகைச் சுவைகள்; வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்ம்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை என்னும் எட்டுவகையான ஊறுகள். இவையெல்லாம் உயிரல் பொருள்களிடத்து அமைந்து விளங்குகின்றன. இருவகைப் பொருள்களுக்கும், தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் என்பனவும் இவை போல்வன பிறவும் தொழிற் குணங்களாம்.

பொருள்களைக் குணி, குணம் எனப் பகுத்து உயிர்ப்பொருள், உயிரல்பொருள் என வகுத்து அவற்றின் கூறுகளையும் நுட்பமாக நோக்கி 'நாமதீப நிகண்டு' என்னும் நிகண்டு நூல் அமைந்துள்ளது திவாகரம் முதலாக வரும் பழைய நிகண்டுகளிலும் பண்பு பற்றிய பெயர் ஒருதனித் தொகுப்பாக இடம் பெற்றுள்ளமை காணலாம்.

காப்பியங்களின் குணங்களாகச் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக் குணங்களை அணியிலக்கண நூலார் குறிப்பிடுகின்றனர்.

மக்களுக்குரிய குணங்களைச் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முவகைப்படுத்துவர். இவை முறையே உத்தமம், மத்திமம், அதமம் என்னும் நிலையின.

சாத்துவிக குணத்தைச் சத்துவ குணம் என்றும் உரைப்பர். சத்துவ குணமாவது நற்காரியங்களிலே நோக்கம் கொண்டதாகும். இராசதம் இரசோ குணம் என்றும் கூறப்பெறும். ஒருவனுடைய ஊக்கச் செயல்களுக்கு இது ஏதுவாயுள்ளது. தாமத குணமாவது மந்த குணமாம். இது தமோகுணம் என்றும் சொல்லப்படும். இது காமம், வெகுளி, மயக்கம் என்னும் தீக்குணங்களுக்கு இடமாயிருப்பதாம்.

இக் குணங்கள் மூன்றும் எல்லா மனிதரிடத்தும் குடிகொண்டிருப்பனவே. நூலாசிரியர் உரையாசிரியர், போதகாசிரியர் என்னும் மூவரும் கூடச் சிற்சில சமயங்களில் முக்குண வசப்பட்டு முறைமாறி உரைப்பதும் உண்டு. இதனை, 'நூலுரை போத காசிரியர் மூவரும், முக்குண வசத்தால் முறைமறந் தறைவரே', எனச் சாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்து என்னும் நூலில் தெரிவிக்கிறார். சாத்துவிக குணமே நற்சிந்தனைக்கும் தெய்வ சிந்தனைக்கும் இடமாயிருப்பது. இது இறை வழிப்பட்ட பெரியார்களுக்கு எளிதில் இயல்வதாகும்.

குணநலனுடையாரே சான்றோர் என்னும் சிறப்புக்கு உரியவராவர். முற்றத்துறந்த பெரியாரைக் 'குணம் என்னும் குன்றேறி நின்றார்' (குறள்.29) என்று போற்றுகிறார் வள்ளுவப் பெருந்தகை. எந்தப் பொருளிலும் செயலிலும் குணமும் குற்றமும் உண்டு. குணம் குற்றம் இரண்டையும் நாடுவோர் அவற்றின் மிகைபற்றி ஒருவரை மதிப்பிடுதல் இயல்பே. மு.ச.

**குணவாகடம்**: வடமொழியில் வாக்குப்பட்டர் என்பார் செய்த மருத்துவ நூலுக்கு 'வாகடம்' என்பது பெயர். ஆனால், தமிழிலே வாகடம் என்பது

மருத்துவ நூலுக்குப் பொதுப் பெயராக வழங்குகிறது. அம்பலவாணக் கவிராயர் செய்த அறப்பளீசுர சதகத்தில் மருத்துவ இலக்கணம் கூறும் பாடலில், 'பேர்பெறும் குணவாகடம் சோதித்து மூலிகாவித நிகண்டும் கண்டு' (51) என்று மருத்துவ நூல் 'குணவாகடம்' என்று குறிக்கப்பட்டுள்ளமை காணலாம். தக்கயாகப்பரணி உரைநூலும் 'வாகடம்' என்பது வைத்திய நூல் என்றே குறிப்பிடுகிறது. பால வாகடம், பிள்ளை வாகடம், மாட்டு வாகடம், குதிரை வாகடம் என்று வரும் மருத்துவ நூற்பெயர்களை நோக்கினாலும் வாகடம் என்பது மருத்துவ நூலைக் குறிக்கும் பொதுப்பெயர் என்பது விளக்கமாகும்.

'குணவாகடம்' என்னும் பெயரில் மருத்துவ நூல் ஒன்று 1901-ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூலைப் பார்வையிட்டவர் தி. தியாகராய சுவாமிகள் என்பவராவர். இந்நூல் சித்தூர் வீராசாமி நாயுடு பௌத்திரர் வீ.ரா. கூரேசலு நாயுடுவின் சென்னைப் புரசை ஆதிவித்தியா வினோத அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1922-ஆம் ஆண்டில் குயப்பேட்டை இராசு முதலியார் என்பவரால் பார்வையிடப்பட்டுப் பிடாரித்தாங்கல் நாராயணசாமி முதலியார் குமாரர் சிதம்பர முதலியாரின் வித்தியா ரத்நாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட பதிப்பும் கிட்டியது. இதற்கும் முற்பதிப்பிற்கும் வேறுபாடு எதுவும் இல்லை.

நூல் முகப்பில், 'இதனுள் திருமூலநாயனார், அகத்தியமாமுனிவர், தேரையர் இவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பிண்டோற்பத்தியும் முதலில் வந்தனுபவிக்கும் நோய்களின் குணங்களும் நாடிப் பரீட்சைகளும் கியாழ வகைகளும் ஆகிய பாடல்கள் 421 அடங்கியிருக்கின்றன' என்று குறிக்கப்பட்டுள்ளது. நூற்பெயர் முதற்கண் 'குணவாகடம்' என்று காணப்பட்டாலும் உள்ளே 'குணவாகடத்திரட்டு' என்று பெயர் தரப்பட்டுள்ளது. திருமூலர், அகத்தியர், தேரையர் என்னும் மூவர் செய்த மருத்துவ நூல்களும் உண்மையின் 'குணவாகடத்திரட்டு' என்று பதிப்பாசிரியர் கொண்டுள்ளார் என்று கருதலாம்.

திருமூலரின் குணவாகடமும் அகத்தியரின் குணவாகடமும் விருத்தப்பாவில் அமைந்துள்ளன. தேரையரின் நூல் நேரிசை வெண்பாவில் அமைந்துள்ளது. இவற்றுள் திருமூலரின் நூல் மகளிர் கருப்பம் பற்றிய செய்தியினை முதன்மையாகக் கொண்டுள்ளது. முதற் பாடல் இந்நூல் நூற்றிருபது பாடல்கள் கொண்டது என்று கூறுகிறது. எனினும், இந்த அச்சிட்ட நூலுள் 126 பாடல்கள் காணப்படுகின்றன.



அடுத்து அகத்தியர் இயற்றிய குணவாகடம் இடம்பெறுகிறது. இது வைத்திய சாரம் (36), நோயின் சாரம் (66), அவிழ்த சாரம் (61) என மூன்று பகுதிகளாய் 163 பாடல்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் பெரும்பாலும் நாடிபார்த்தல், வாதபித்த சிலேட்டும நிலைகாணல், கர்ப்பந்தரித்தல், சூலை நோய், வாயு நோய் முதலிய நோயின் குணங்களும் அவற்றைப் போக்குவதற்கான மருந்து வகைகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

தேரையர் நூல் 133 பாடல்களுடன் அமைந்துள்ளது. இவர்தம் நூலுக்குப் பொதுத் தலைப்பாக 'நோயின் சாரம்' என்பதே காணப்படுகிறது. இது வடமொழி வாகட நூல்களை ஆராய்ந்து தமிழில் செய்யப்பட்ட நூல் எனத் தெரிகிறது. இவர்தம் நூலுள் கியாழம், பொடி மருந்து, சூரணம், எண்ணெய் முதலியனவாக உள்ள மருந்துவகைகளை விளக்குகிறார். மருந்துகளை உண்ணுவதற்கான அனுபானம் பற்றியும் உரைத்துள்ளார். இவ்வாறாகக் குணவாகட நூல்கள் நோய்நாடி, நோய்முதல்நாடி, அது தணிக்கும் வழிவகைகளையும் விவரிப்பனவாக உள்ளன.

ஓலைச்சுவடிகளிலும் இப்பெயருடைய ஏடுகள் சில சுவடி நூலகங்களில் காணப்படுகின்றன. ஆனால், இந்த ஏடுகளில் காணும் செய்திகளும் அச்சுப் புத்தகச் செய்திகளும் தொடர்பின்றியுள்ளன. நோய்களைத் தீர்க்கும் மருத்துவநூல் என்னும் பொதுப்பொருளில் 'குணவாகடம்' என்னும் பெயருடைய நூல்கள் பல உள. மு.ச.

**குணவீரபண்டிதர்** தமிழ் இலக்கணப்புலவர்களுள் ஒருவர். இவர், தொண்டை நாட்டில் களத்தூர் எனப்படும் களந்தை என்னும் ஊரில் பிறந்தவர். தமிழ் நாவலர் சரிதை இவரைப் 'பேராசிரியர்' எனக் குறிப்பிடுகிறது. 'பூவின்மேல் வந்தருளும் புங்கவன் தன் பொற்பாதம்' (நேமிநாதம்: எழுத்ததிகாரம், பாயிரம்), 'தாதார் மலர்ப்பிண்டித் தத்துவனை வந்தித்து' (நேமிநாதம்: சொல்லதிகாரம், பாயிரம்), 'மதிகொண்ட முக்குடைக் கீழ் வாமன் மலர்த்தாள் கொண்டு' (வெண்பாப் பாட்டியல்: பாயிரம்) என்று அருகனைப் புகழ்வதால், இவர், சமண சமயத்தவர் என்பது புலனாகிறது. இவர் ஆசிரியர் வச்சணந்தி முனிவர் என்பதை 'உளமலி பேரரருள் உயிர்மிசை வைத்த வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன் கொள்கையின் வழாஅக் குணவீரபண்டிதன்' (நேமிநாதப் பாயிரவுரை) என்பதால் அறியலாம். இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்.

இவர் நேமிநாதம், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல் ஆகிய இரு இலக்கண நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள், நேமிநாதம் இருபத்திரண்டாம் தீர்த்தங்கரராகிய நேமிநாதர் பெயராலும், வெண்பாப்பாட்டியல் இவர்தம் ஆசிரியர் வச்சணந்தி முனிவர் பெயராலும் இயற்றப்பெற்றனவாகும். நேமிநாதம் என்னும் நூலை இவர் இயற்றியதால் இவர் நேமிநாதர் எனவும் பெயர் பெற்றார் என்பர்.

நேமிநாதம் 'சின்னூல்' என்று பெயர் பெற்றதாகும். வீரசோழியத்தின் இலக்கணக் கூறுகளை எடுத்து மொழிவதாலும், எழுத்துகளை நெடுங்கணக்கு வரிசை எண்ணால் குறிப்பதாலும் நேமிநாதம் வீரசோழியத்திற்குப் பிற்பட்ட காலத்ததாகும். இந்நூல் எழுத்து, சொல் இலக்கணங்களை மட்டும் கூறுவதாக அமைந்துள்ளது. பாட்டியல் இலக்கணங்களை விளக்கிக் கூறுவதாகிய வெண்பாப் பாட்டியல் திரிபுவன தேவன் காலத்தில் இயற்றப்பெற்றதாக அந்நூலின் பாயிரவுரை கூறுகிறது.

இருநூல்களும் வெண்பா யாப்பில் அமைந்தவை. இலக்கணம் நூற்பா யாப்பாலன்றி வெண்பா யாப்பாலும் கூறப்படும் என்ற பேராசிரியர் (தொல்காப்பியம் மரபியல் நூற்பா 100 உரை) இலக்கணத்திற்கு இலக்கியமாகக் குணவீரபண்டிதர்தம் இருநூல்களும் அமைந்துள்ளன. சா.கி.

**குணாட்டியர்**: தமிழ்க் காவியங்களுள் ஒன்றான பெருங்கதை கொங்குவேளிர் என்பாரால் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. இவருக்கு மூலமாக அமைந்த நூல் கி.பி. 78-இல் சாலிவாகனன் அல்லது சாதவாகனனுடைய சபையிலிருந்த குணாட்டியர் என்பவரின் நூலாகும். இவர்தம் நூல் பைசாச மொழியில் அமைந்த 'பிருகத்கதா' என்பதாம். இவர் சமண சமயத்தவர்.

பின்னர் கி.பி. 5,6-ஆம் நூற்றாண்டளவில் இவர்தம் நூலைத் துர்விநீதன் என்னும் அரசன் வடமொழியிற் செய்தான் என்று தெரியவருகிறது. தமிழ்ப் பெருங்கதை இந்த வடநூலைப் பின்பற்றியிருக்கலாம் என்றும் சிலர் கருதுவர். எனினும் உதயணன் பெருங்கதைக்கு மூலமாய் அமைந்த முதல்நூல் தந்த பெருமை குணாட்டியரைச் சாரும்.

குணாட்டியரின் சரிதம் 'கதாசரித் சாகரம்' என்னும் வடமொழி நூலின் முதல் இலம்பகத்தின் ஆறாம் தரங்கத்தில் காணப்படுகிறது. பிராச்டானபுரம் என்னும் நகரத்தில் சோமசன்மா என்னும் அந்தணர் வாழ்ந்தார். இவருக்கு இரண்டு புதல்வர்களும் சுருதை என்னும் பெண்மகள் ஒருத்தியும் இருந்தனர். பெற்றோர் மறைந்தபின் சுருதை சகோதரர்களின் பாதுகாப்பில் இருந்துவந்தாள். இவள் கீர்த்தி சேனன் என்னும் நாகராசனுடைய மகனைக் கண்டு காந்தருவ மணம் செய்துகொண்டாள். இந்த சுருதை பெற்ற புதல்வனே குணாட்டியர். இவர் கான பூபதி என்பவனிடம் சகலகலைகளையும் கற்றார். பின் பட்டணத்திற்கு வந்து வணிகனொருவனுடன் தொடர்பு கொண்டு வாணிகத்தில் ஈடுபட்டு அந்த வணிகனின் மகளை மணந்துகொண்டார். செல்வச் சீமானாய் விளங்கினார். அந் நாளில் மன்னன் சாதவாகனனின் தொடர்பும் இவருக்குக் கிட்டியது. ஒருசமயம் மன்னன் தன் பெயரைப் பற்றிய விளக்கம் கேட்கலானான். அப்பொழுது இவர் உதயண சரிதமாகிய பெருங்கதையை மன்னனுக்குக் கூறினார் என்று சொல்லப்படுகிறது. மு.ச.

**குத்தகை** சொத்துரிமை மாற்றங்களில் ஒரு வகை. சொத்துரிமை மாற்றுச் சட்டம், இயல் ஐந்திலுள்ள 105 முதல் 117 வரையுள்ள பிரிவுகள் குத்தகைகள் பற்றிய சட்டவிதிகளை எடுத்துரைக்கின்றன.

சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 105 குத்தகை (Lease) என்றால் என்ன என்பதை வரையறுக்கிறது. இதன்படி, பணமாகவோ விளைபொருள் பணி அல்லது மதிப்புள்ள பிற பொருள்களாகவோ குறித்த காலந்தோறும் குத்தகை எடுத்தவர் அளிப்பதைக் குத்தகைக்குக் கொடுப்பவர் மறுபயனாகப் பெற்றுக் கொண்டு, ஓர் அசையாச் சொத்தினை அனுபவிக்கும் உரிமையைமாற்றிக் கொடுப்பது குத்தகை எனப்படும். குத்கையானது, குறிப்பிட்ட காலத்திற்கோ காலவரையின்றியோ இருக்கலாம் இவ்வாறு உரிமை மாற்றம் செய்பவர், குத்தகைக்குக் கொடுப்பவர் (Lessor) எனவும் உரிமை மாற்றம் பெறுபவர் குத்தகைக்கு எடுப்பவர் (Lessee) எனவும் சொல்லப்பெறுவர். விலையானது முனைமம் என்று சொல்லப்படும். பணம், பங்கு, பணி அல்லது அதைப் போல ஆற்றப்படுவன அனைத்தும் வாடகை என்று வழங்கப்படும்.

**குத்தகையின் சிறப்பியல்புகள்**: ஒவ்வொரு குத்தகையிலும் கீழ்க்காணும் கூறுகள் இடம்பெற்றிருக்கும். அவையாவன. அ) அசையாப் பொருளை நுகரும் ஓர் உரிமை (ஆ) அவ்வாறு நுகர்வதற்கான காலம் (இ) பணமாகவோ விளைபொருள், பணி அல்லது மதிப்புள்ள பிற பொருள்களாகவோ குறிப்பிட்ட காலந்தோறும் கொடுக்கப்படும் மறுபயன், (ஈ) உரிமை மாற்றத்தில் உரிமை மாற்றம் பெறுபவர் ஏற்றுக் கொள்ளல்.

குத்தகையின் கருப்பொருள் அசையாப் பொருளாக, மாற்றப்படக் கூடிய சொத்தாக இருத்தல் வேண்டும். குத்தகை விற்பனை போன்று முழு உரிமை மாற்றமன்று. வரையுடை உரிமைமாற்றமே. அடைமானத்தில் கடனைப் பெறுவதற்காக, அசையாச் சொத்திலிருந்து ஓர் உரிமை மாற்றப்பட இருக்கிறது. ஆனால், குத்தகையில் குறிப்பிட்ட காலத்திற்குச் சொத்தை நுகர்வதற்காக ஓர் உரிமை மாற்றப்படுகிறது. இத்தகைய உரிமை மாற்றப்படக் கூடியது, மரபுரிமையாகச் செல்லக்கூடியது.

**குத்தகைக்கும் உரிமத்திற்குமுள்ள வேறுபாடுகள்**: குத்தகையை உரிமத்துடன் (Licence) ஒப்பிடுவதன். மூலம் அதன் சிறப்பியல்புகளை நன்குணரலாம் உரிமம் என்பது இந்திய வசதியுரிமைகள் சட்டத்தின் 52-ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு சொத்தில் ஒரு செயலைச் செய்வதற்கு அல்லது தொடர்ந்து செய்வதற்கு அளிக்கப்படும் அனுமதி அல்லது அதிகாரம் தான் உரிமம் என்பது. அவ்வாறு அனுமதிக்கப்படாமல் ஒரு சொத்தின் மீது செய்யப்படும் செயல் சட்ட விரோதமாக ஆகும் தன்மை கொண்டது. இத்தகைய உரிமை வசதி உரிமையாக இருப்பதில்லை.

குத்தகையொன்றில், சொத்தில் நலன் ஒன்று ஏற்படுகிறது. ஆனால், உரிமத்தில் அவ்வாறான நலன் ஏற்படுவதில்லை. குத்தகையை ஒருவர் உரிமைமாற்றம் செய்யலாம். ஆனால், உரிமத்தை மாற்றஞ் செய்ய இயலாது. குத்தகையை நீக்குதல் முடியாது. ஆனால், உரிமத்தை நீக்கலாம். குத்தகையில் சுவாதீனம் பெற உரிமையுண்டு. ஆனால் உரிமம் பெறுவோருக்கு அத்தகைய உரிமை கிடையாது. குத்தகையாளர் அத்துமீறலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவியலும். உரிமம் பெறுவோர் அவ்வாறு செய்யவியலாது. குத்தகையைப் (சில நேரங்களில்)பதிவு செய்ய வேண்டும். ஆனால்,உரிமத்தைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. குத்தகைச் சொத்து மரபுரிமையாக அனுபவிக்கக் கூடியது. உரிமம் பெற்றவர் இறந்துவிடின் அவரது வாரிசுகளுக்கு அது செல்லாது.குத்தகைக்குக் கொடுப்பவர் சொத்தினை உரிமை மாற்றம் செய்யும்போது குத்தகை முடிவுக்கு வாராது. ஆனால், உரிமமானது முடிவுக்கு வரும். சொத்தினை அளிப்பவர் இறந்துவிடின், உரிமம் முடிவுக்கு வரும். ஆனால், குத்தகை முடிவுக்கு வாராது. தரப்பினரின் எண்ணத்தை அறிவதன் மூலம் குத்தகை, உரிமம் ஆகியவற்றின் வேறுபாடுகளை நன்கு கண்டுணரலாம்.

**குத்தகையின் வகைகள்**: ஒரு குத்தகையானது வெளிப்படையாக அல்லது உட்கிடையாகக் குறிப்பிடப்பட்ட ஒரு குறித்த காலத்திற்கு அல்லது கால வரையின்றி அனுபவிக்கக் கூடியது. நுகர்வதற்கான காலத்தை அடிப்படையாகக் கொண்டு குத்தகையைக் கீழ்க் காணுமாறு பிரிக்கலாம். அவையாவன:

1. குறிப்பிட்ட காலத்திற்கான குத்தகை (Lease for a fixed term) 2. கால முறையிலான குத்தகை Periodical Lease) 3. காலவரையற்ற குத்தகை (Perpetual Lease) 4. விருப்பமுடிவுக்குத்தகை (Tenancy-at-will) 5. கெடு முடிந்த குத்தகை (Tenancy at sufference) 6. இசைவு பெறு கெடு முடிந்த குத்தகை (Tenancy by holding over)'

குத்தகையானது உடனடியாகத் தொடங்கப்பெறுவதாகவும் எதிர்காலத்தில் ஒரு தேதியில் தொடங்கப் பெறுவதாகவும் நிச்சயம் நடைபெறக்கூடிய ஒரு நிகழ்ச்சி நடைபெறும்போது தொடங்கப்பெறுவதாகவும் இருக்கலாம். குத்தகைக்கான தேதியொன்று குறிப்பிடப்படாத போது அதை நிறைவேற்றப்பெறும் நாளிலிருந்தே அது தொடங்கும். தொடங்கப்பெறுவதற்கு நாள் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கும்போது குத்தகையின் காலத்தைக் கணக்கிடுவதற்காக அந்த நாளைச் சேர்க்கக் கூடாது. தொடங்கப்பெறும் நாளும் முடிவுக்கு வரும் நாளும் தீர்மானிக்கப்பட்டு இருக்கவேண்டும். 5 ஆண்டுகளுக்கு அல்லது 10 ஆண்டுகளுக்கு என்பதாகக் காலத்தை வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ தெரிவிக்கலாம். அக் குறிப்பிட்ட காலம் முடிவடைந்தவுடன் குத்தகையும் தானாகவே முடிவுக்கு வந்துவிடும். காலமுறையிலான குத்தகை, குறிப்பிட்ட காலங்களில் புதுப்பிக்கப்படும் குத்தகையாகும். எடுத்துக்காட்டு: மாதந்தோறும் வழங்கப்படும் குத்தகை. இது ஒவ்வொரு மாதமும் முடிவுக்கு வரும் என்பதில்லை. தக்க அறிவிப்புக் கொடுப்பதன் மூலம் முடிவுக்கு வரும். மாறுபட்ட ஒப்பந்தம் 106-ஆம் பிரிவின்படி, இல்லாதபோது வேளாண்மைச் செயலுக்காக ஒரு குத்தகை இருக்கும் போது அது ஆண்டுதோறுமான குத்தகை எனக் கருதப்படும். இக் குத்தகை முடிவடைவதற்கு முன்னதாக ஆறுமாத அறிவிப்பு கொடுப்பதன் மூலம் இது முடிவுக்கு வரும். மாதக் குத்தகையைப் பொறுத்த வரை, குத்தகை முடிவடையும்போது, முடிவடையும் நாளுக்கு 15 நாளுக்கு முன் அறிவிப்புத் தரவேண்டும். குத்தகையொன்றில் காலவரம்பு ஏதும் குறிப்பிடாமல் குத்தகை எடுத்தவர், அவரது வாரிசுகள், நிருவகிப்பவர்கள், மாற்றம் பெறுபவர்கள் ஆகியோர் பேரில் கொடுக்கப்பட்டு, (ஆண்டு) வாடகையும் குறிப்பிடப்பட்டு, சந்தை (Market) நிலவரப்படி வாடகை ஒழுங்குபடுத்தப் படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்குமானால் அது நிலையான குத்தகையாகும். பரம்பரை பரம்பரையாக அனுபவிக்கப்படும் குத்தகையும் நிலையான குத்தகையாகக் கருதப்படும்.

விருப்பமுடிவுக் குத்தகையானது, ஒருவர் தமது அசையாச் சொத்தினை, தாம் விரும்பும்வரை மற்றொருவர் குத்தகையில் இருக்கலாம் என்று கூறும்பொழுது எழுகிறது. இது, குத்தகை கொடுப்பவரின் இசைவினைப் பொறுத்தது. அவர் விரும்பும்வரை எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம். விருப்பமுடிவுக் குத்தகையைத் தரப்பினர் யார் வேண்டுமானாலும் முடிவிற்குக் கொண்டு வரலாம். நிலமேலாளர், சொத்தின் சுவாதீனத்தைக் கோருவதன் மூலமோ முறையான அறிவிப்புத் தருவதன் மூலமோ குத்தகையை மூன்றாமவருக்கு மாற்றிக்கொடுப்பதன் மூலமோ முடிவுக்குக் கொண்டு வரலாம். மேலும், இது நிலமேலாளர் அல்லது குடியாளர் இறப்பின் வாயிலாகவும் முடிவுக்கு வரும்.

கெடுமுடிந்த குத்தகை என்பது, முறையான குத்தகை ஒன்றைப் பெற்று அது முடிவடைந்த பின்னரும் குத்தகை கொடுத்தவரின் இசைவின்றிச் சொத்து சுவாதீனத்தில் இருக்கும்போது எழுகிறது. இது தொடக்கநிலையில் உண்மையில் ஓர் அத்துமீறலாக இருந்து, பின்னர் அதினின்றும் வேறுபடுகிறது. ஏனெனில், தொடக்கத்தில் அதன் சுவாதீனம் முறையானதாக இருந்து, பின்னரே அதில் தொடர்ந்து இருப்பது முறையற்றதாக ஆகிறது. இத்தகைய குத்தகையை முடிவுக்குக் கொண்டுவர அறிவிப்பு வேண்டியதில்லை. நில உரிமையாளர் எப்போது வேண்டுமானாலும் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளலாம். தரப்பினரிடையே நிலமேலாளர், நிலக்குடியாளர் என்ற எந்த உறவு முறையும் ஏற்படுவதில்லை. எனவே, கெடுமுடிந்த குத்தகையில் குத்தகை முடிந்த பின்னரும் சுவாதீனத்தில் தொடர்ந்து இசைவின்றிக் குத்தகையாளர் இருக்கிறார். ஆனால், இத்தகைய குத்தகையாளரே குத்தகை எடுத்தவரின் இசைவைப் பெற்று இருப்பாரானால் நிலைமை வேறாகும். இசைவுபெறு கெடுமுடிந்த குத்தகையென இது சொல்லப்படும்.

**குத்தகையை எவ்வாறு ஏற்படுத்துவது**: குத்தகையானது ஆண்டுக்காண்டு வழங்கப்படும் குத்தகையாகவோ ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட குத்தகையாகவோ இருக்கும்போது, அதைக் கட்டாயமாகப் பதிவு செய்யவேண்டும். ஆனால், ஓராண்டிற்கான குத்தகையில் மீண்டும் புதுப்பிக்கக்கூடிய விருப்புரிமை இடம் பெற்றிருக்குமேயானால் அதைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டியதில்லை. மாதத்திற்கு மாதம் குத்தகை, ஓராண்டிற்குக் குறைவான குத்தகை ஆகியவற்றைத் தரப்பினர் பதில் ஆவணத்தின் மூலமோ வாய்மொழி ஒப்பந்தம் மூலமோ ஏற்படுத்திக்கொள்ளலாம். வாய்மொழிக் குத்தகையில் சுவாதீனம் கொடுக்கப்படவேண்டும்.

குத்தகை ஆவணத்தில் குத்தகைக்குக் கொடுத்தவர், எடுத்தவர், சான்றாளர்கள் ஆகியோர் கையொப்பம் இடுதல் வேண்டும்.

**தரப்பினரின் உரிமைகளும் பொறுப்புகளும்**: பொதுவாகக் குத்தகைக்குக் கொடுத்தவர், குத்தகைக்கு எடுத்தவர் ஆகியோரின் உரிமைகளும் பொறுப்புகளும் ஒப்பந்த வாசகங்கள் மூலம் அல்லது வட்டார வழக்குகள் மூலம் ஏற்படுத்தப்படும். அவ்வாறு இல்லாதபோது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் விதிகளால் ஒழுங்குபடுத்தப்படும். இச்சட்டத்தின் 108-ஆம் பிரிவு இவர்களின் உரிமைகளையும் பொறுப்புகளையும் பற்றிய சட்டவிதிகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

குத்தகைக்குக் கொடுப்பவரின் பொறுப்புகள், பிரிவு 108, உட்பிரிவுகள் (எ), (பி), (சி) ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளன. அவையாவன, அ) சொத்தில் இருக்கும் முக்கிய குறைபாடுகளை எடுத்துரைத்தல் ஆ) குத்தகைக்கு எடுத்தவர்வசம் சுவாதீனம் அளித்தல் இ) அமைதியாகத் துய்ப்பதற்கான உடன்பாடு.

குத்தகைக்கு எடுத்தவரின் உரிமைகளை, பிரிவு 108, உட்பிரிவுகள் (ஈ) முதல் (ஊ) வரை உள்ளவை எடுத்துரைக்கின்றன. அவருக்குரிய உரிமைகளாவன: (அ) குத்தகை நிலச்சேர்வினைப் பெறுதல், (ஆ) குத்தகைக்கான சொத்து அழிவுறும்போது குத்தகையை முடிவுக்குக் கொண்டுவருதல், (இ) குத்தகைக்கு விடுபவர் பழுது முதலானவற்றைப் பார்க்காதபோது தானே பழுதுபார்த்தல், (ஈ) வரி முதலானவற்றைக் குத்தகைக்கு விடுபவர் செலுத்தாதபோது தானே அவற்றைச் செலுத்துதல், (உ) பதிப்பொருள்களை (Fixtures) அகற்றிச் செல்லுதல், (ஊ) தான் விளைவித்த பயிர்களின் பலன்களைப் பெறுதல், (எ) தன் உரிமையை மாற்றாக்கம் செய்தல்.

குத்தகைக்கு எடுத்தவரின் பொறுப்புகளைச் சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 108, உட்பிரிவுகள் (ஒ) முதல் (ட) வரை உள்ளவை எடுத்துரைக்கின்றன. அவருக்குள்ள பொறுப்புகளாவன: (அ) சொத்தின் மதிப்பைப் பெருமளவு அதிகரிக்கச் செய்யும் உண்மைகளை எடுத்துரைத்தல், (ஆ) வாடகைகளைச் செலுத்துதல், (இ)சொத்தினைப் பராமரித்தல், (ஈ)நில ஆக்கிரமிப்புப் பற்றிய அறிவிப்புக் கொடுத்தல், (உ) சொத்தைப் பாழ்படுத்தாமல் இருத்தல், (ஊ) குத்தகைக்குக் கொடுத்தவரின் அனுமதியின்றி எதனையும் பொருத்தாமல் இருத்தல், (எ) குத்தகை முடிந்ததும் சுவாதீனத்தைத் திரும்பவும் அளித்தல்.

**குத்தகை முடிவுறுதல்** (Termination of leases): குத்தகையொன்று பலவழிகளில் முடிவுக்கு வரலாம்,

இது பற்றிய செய்திகள் சொத்துரிமை மாற்றுச்சட்டம், பிரிவு III-இல் காணப்படுகின்றன. குத்தகை முடிவுக்கு வரும் வகைகளாவன: அ) குத்தகைக்கான காலம் முடிவுறுதல் மூலம், ஆ) குறிப்பிட்ட நிகழ்ச்சி நிகழ்வதன் மூலம், இ) குத்தகைக்குக் கொடுத்தவரின் நலன்கள் முடிவுறுவதன் மூலம், ஈ) இணைப்பின் மூலம், உ) திரும்ப அளித்தல் மூலம், ஊ) உட்கிடையாகத் திரும்ப அளித்தல் மூலம், எ) உரிமையிழப்பின் மூலம், ஏ) வெளியேற்றுவதற்கான அறிவிப்பு மூலம்.

இதில் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட உரிமையிழப்பும், வெளியேற்றுவதற்கான அறிக்கையும் குறிப்பிடத்தக்கவை. பிரிவு III, உட்பிரிவு (எ), குத்தகைக்கு எடுத்தவர் தம் செயலால் உரிமை இழப்பதைப் பற்றிக் கூறுகிறது.

கீழ்க்காணும் சூழ்நிலைகளில் குத்தகைக்கு எடுத்தவர் குத்தகையின் உரிமையை இழப்பர்.

(அ) வெளிப்படையான நிபந்தனை ஒன்றினை மீறும்போது, அதாவது, குத்தகைக்கு எடுத்தவர் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளலாம் என்ற வாசகம் இருக்கும்போது, வெளிப்படையான நிபந்தனையை மீறுதல். ஆ) குத்தகைக்கு எடுத்தவர் தம்முடைய நிலையைத் துறந்து மூன்றாமவர் பேரில் உரிமை மூலத்தை வேண்டுதல் இ) குத்தகையாளர் நொடிப்புநிலை அடையும்போது குத்தகைக்குக் கொடுத்தவர் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளலாம் என்ற வாசகம் இருக்கும்போது, நொடிப்புநிலை அடைதல்.

மேற்கூறியவை நிகழ்ந்த உடனேயே குத்தகை முடிவுக்கு வந்துவிடாது. மேற்கூறிய காரணங்களைக் கொண்டு குத்தகையை முடிப்பதாகத் தம் எண்ணத்தை வெளிப்படுத்தும் அறிவிப்பைக் குத்தகை கொடுத்தவர் அளித்தல் வேண்டும். அறிவிப்புக் கொடுத்த பின்னர்தான் குத்தகை முடிவுக்கு வரும் சொத்தைக் காப்பீடு செய்தல், பழுது பார்த்தல், உரிமை மாற்றம் செய்யாதிருத்தல், ஒழுங்காக வாடகையைச் செலுத்துதல் ஆகியவை குறித்து உடன்பாடுகள் இருக்கலாம். இத்தகைய வரைமொழி ஒப்பந்தங்கள் (Covenants) வெளிப்படையாக மீறப்படல் வேண்டும். இவ்வொப்பந்தங்கள் குத்தகைக்குக் கொடுத்தவரின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டன. குத்தகைக்குக் கொடுத்தவரது உரிமை மூலத்தை மறுப்பதன் மூலம் குத்தகையாளர் குத்தகையை இழக்க வேண்டுமெனில், அதில் மூன்று முக்கிய கூறுகள் அடங்கி இருத்தல்வேண்டும். அவை, அ) சொத்திற்கான உரிமை மூலத்தைத் தம் பேரில் கேட்டல் வேண்டும். ஆ) உரிமையை மறுப்பது நேரடியாகவும் தெளிவாகவும் இருத்தல்வேண்டும். இ) குத்தகைக்குக் கொடுத்தவர் அறியும்படி கூறியிருத்தல் வேண்டும். நொடிப்புநிலை அடைவதைச் சுட்டிக்காட்டி, குத்தகை ஒன்றை முடிவுக்கு கொண்டு வரலாம். ஆனால், நொடிப்புநிலை அடைவதாலேயே குத்தகை முடிவுக்கு வந்துவிடாது. மீண்டும் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளும் வாசகம் அதில் இடம் பெற்றிருக்கவேண்டும். மேலும் குத்தகையை முடிவுக்குக் கொண்டுவர அறிவிப்பும் தரவேண்டும். அறிவிப்புக் கொடுப்பது, சாதாரணமாக ஆண்டுக்காண்டு அல்லது மாதத்திற்கு மாதம் வழங்கப்படும் காலந்தோறுமான குத்தகைக்கு இன்றியமையாததாகும். குத்தகையை முடிவுக்குக் கொண்டு வரும் ஒவ்வோர் அறிவிப்பிலும் கீழ்க்காணும் விதிகள் இடம் பெற்றிருத்தல்வேண்டும். அ) அறிவிப்பு எழுத்து மூலமாக இருத்தல் வேண்டும். ஆ) குத்தகைக்குக் கொடுத்தவர் அல்லது அவரது சார்பாக யாரேனும் ஒருவர் அறிவிப்பில் கையெழுத்து இட்டிருத்தல் வேண்டும். இ) குத்தகையாளரிடம் தக்க முறையில் சேர்ப்பிக்கப்பட வேண்டும். ஈ) குத்தகையை முடிப்பதற்கான எண்ணத்தைத் தெளிவாக அது வெளிப்படுத்தியிருத்தல்வேண்டும். உ) ஒவ்வொரு குத்தகைக்கும் உரிய காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஊ) குத்தகை முடிவடையும்போது முடிவுறுவதாக இருத்தல்வேண்டும்.

மாதக் குத்தகையைப் பொறுத்தமட்டில் முழுமையாகப் பதினைந்து நாள்கள் முன்னறிவிப்புக் கொடுக்கப்படவேண்டும். ஆண்டுக் குத்தகையைப் பொறுத்தமட்டில் முழுமையாக ஆறுமாதம் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். குத்தகை முடிவடையும்போது அறிவிப்பில் குறிப்பிடப்படும் காலமும் முடிவடைய வேண்டும். ஆ.ச.

**குத்புதீன் அய்பெக்கு**: துருக்கியருடைய ஆட்சியை இந்தியாவில் நிறுவியவர் குத்புதீன் அய்பெக்கு (Qutb-ud-din Aibek). அய்பெக்கு துருக்கித்தானத்தில் துருக்கியப் பெற்றோர்களுக்குப் பிறந்தார். சிறு வயதிலேயே இவர் அடிமையாக்கப்பட்டார். இவரைத் திசாபூர் காசி (Qazi) வாங்கித் தமது பிள்ளைகளுள் ஒருவராக நடத்தி வந்தார். அவர்தம் பிள்ளைகளுடன் சேர்ந்து இவர் போர்ப்பயிற்சியைப் பெற்றார்; குதிரை ஏற்றத்தைக் கற்றுக் கொண்டார் எழுதவும் படிக்கவும் தெரிந்துகொண்டார். காசி இறந்தபின்னர் அவர் பிள்ளைகள் அய்பெக்கை விற்றுவிட்டனர். கசினி அடிமை அங்காடியில் இவரை முயீசு உத்தீன் (பின்னர் முகமது கோரி) விலைகொடுத்து வாங்கினார். தமது வீரச்செயல்களாலும், கம்பீரத் தோற்றத்தாலும், தாராளசிந்தையாலும் அய்பெக்கு முயீசு உத்தீனைக் கவர்ந்துவிட்டார். படிப்படியாகப்

பதவி உயர்வு பெற்று, கி.பி. 1192-இல் நடந்த தரெயின் போரில் இவர் முக்கிய பங்கை வகித்திருந்தார். அதன் பிறகு கூரம் (Kuhram) சமானா (Samana) ஆகியவற்றை நிருவகிக்கும் பொறுப்பை இவர் பெற்றார். அது முதல் இவர் இந்திய அரசியல் வாழ்க்கையில் மிகவும் நெருக்கமாகப் பிணைக்கப் பட்டுவிட்டார்.

கூரம் பகுதியின் ஆளுநர் என்ற முறையில் இவர் பல போர் நடவடிக்கைகளை முயீசு உத்தீனுடைய சார்பில் மேற்கொண்டார். அவற்றுள் முக்கியமானது ஆசுமீர்ப் படையெடுப்பாகும். ஆசுமீரை வென்று அதனை முசுலிம் ஆட்சியின் கீழ் இவர் கொண்டு வந்தார். பின்னர்க் கன்னோசி, மீரட்டு (Meerut), பரன் (Baran) தில்லி, கோல் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். முயீசு உத்தீன் கன்னோசியைத் தாக்கிய போது அவருடைய முன்னணிப் படைத் தலைவராக அய்பெக்குச் செயலாற்றினார். பின்னர் அய்பெக்கு அன்கில்வாராவை வென்றார். கலிஞ்சார் மீது கி.பி. 1202-இல் படையெடுத்து அதையும் கசுராகோவையும் கைப்பற்றினார். குவாலியர் அவரிடம் சரணடைந்தது.

முயீசு உத்தீன் கி.பி. 1206-இல் கொலை செய்யப்பட்டார். அதையடுத்து, குத்புதீன் தில்லி, இலாகூர் ஆகியவற்றின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த முயீசு உத்தீனுடைய ஆட்சிப் பகுதிகளுக்குத் தலைவராகப் பொறுப்பேற்றார். முயீசு உத்தீனுடைய மற்றொரு அடிமையான யால்டுசு என்பவர் கசினிக்கு அரசரானார். அவர் இந்துசுத்தானத்தின் மீது மேலாதிக்க உரிமை கொண்டாடி அதை நிலைநாட்டப் பஞ்சாபை நோக்கிப் படையெடுத்து வந்தார். அய்பெக்கு யால்டூசைத் தோற்கடித்துக் கசினியைக் கைப்பற்றினார். அங்கு அவர் தம் நேரத்தைக் களியாட்டங்களில் செலவிட்டு, கசினி மக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டார். அதன் விளைவாக குத்புதீன் அய்பெக்கு இலாகூர் திரும்ப வேண்டியதாயிற்று. யால்டுசு மீண்டும் கசினியின் அரசரானார். அவரிடமிருந்து மீண்டும் தொல்லைகள் வாராதவாறு அவர் மகளை அய்பெக்கு மணந்தார். முயீசு உத்தீனுடைய மற்றொரு அடிமையான குபாச்சா தமது ஆதிக்கத்தை மூல்தானில் நிறுவியிருந்தார். அவருக்குத் தம் சகோதரியை மணமுடித்து வைத்து அவரிடமிருந்து வரக் கூடிய பேராபத்தைச் சமாளித்தார். முயீசுஉத்தீனுடைய மற்றுமொரு படைத்தலைவரான பக்தியார் கல்சி தமது ஆதிக்கத்தைப் பீகார், வங்காளம் ஆகியவற்றில் ஏற்படுத்தியிருந்தார். அவரிடமிருந்தும் அய்பெக்குக்கு ஆபத்து வரவிருந்தது. நற்பேற்றின் பயனாக அவர் கொல்லப்பட்டார். அதன் காரணமாகக் கிழக்குப் பகுதிகளில் குழப்ப நிலை உருவாகியது. அதைப் பயன்படுத்திக் கொண்டு பீகாரிலும் வங்கத்திலும் அய்பெக்கு தம் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். முயீசு உத்தீனுடைய மறைவையறிந்து பல இராசபுத்திர அரசுகள் முசுலிம் ஆதிக்கத்தை எதிர்க்கத் தலைப்பட்டன. அவற்றை ஒடுக்குவது இவருடைய மற்றொரு சிக்கலாக இருந்தது. அதற்கான ஏற்பாடுகளை இவர் மேற்கொள்ளுவதற்கு முன்னர் கி.பி.1210-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 'சோகான்' (ஒருவகை போலோ விளையாட்டு) விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாரா வகையில் குதிரையிலிருந்து விழுந்து உயிர் துறந்தார்.

குத்புதீன் ஒரு சிறந்த படைத்தலைவர். எல்லாத் துருக்கியப் போர்வீரர்களைப் போல் இவரும் இரக்கமற்றவராகவும், வெறிபிடித்தவராகவும் இருந்தார். அதே நேரத்தில் அரசியல் சூழ்ச்சித் திறம்படைத்தவராகவும் விளங்கினார். இவர் ஏற்படுத்திக் கொண்ட திருமண உறவுகள் அதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. காலத்திற்கும், ஆட்களுக்கும் தகுந்தாற்போல் நடந்து கொண்டு இவர் தாம் நினைத்ததைச் சாதிக்கும் வல்லமை படைத்தவராக விளங்கினார்.

இவரிடம் பல நற்பண்புகள் குடிகொண்டிருந்தன. இவர் வள்ளலாகத் திகழ்ந்தார். இலட்சஇலட்சமாகக் கொடுப்பவர் என்பதைக் குறித்துக் காட்ட இவரை 'இலாக்பக்சு' (Lakh baksh) என்று அழைத்தனர். ஒருதலைச் சார்பற்ற நியாயத்தை இவர் வழங்கினார். இவர் காலத்தில் ஓநாயும் ஆடும் ஒரே குளத்தில் நீர் அருந்தின என்று கூறப்படுகிறது. சாலைகளில் திருடர் பயம் இல்லை. சமயப் பற்று மிக்கவராதலின் இந்துக்கள் பலரை இவர் அடிமைப்படுத்தினார். இந்துக்கோயில்கள் பலவற்றை இடித்தார். அதனால் கிடைத்த கட்டடப் பொருள்களைக் கொண்டு மசூதிகளைக் கட்டினார். ஆயினும் இந்துக்களை இவர் கருணையுடன் நடத்தினார். கலை வளர்ச்சிக்கு இவர் அருந்தொண்டு ஆற்றியுள்ளார். கசன், நைசாமி போன்ற வரலாற்று மேதைகளைஇவர் ஆதரித்தார். தில்லிக்கருகிலுள்ள குதுப்மினார் என்ற புகழ்மிக்க கட்டடத்தைத் தொடங்கியவர் இவரே என்று பலர் கூறுகின்றனர். சுருங்கக்கூறின், பெருமைக்குரியதும் நல்லதுமான பல காரியங்களை சாதித்துப் புகழடைந்தவர் என்று இவரைக் கூறுவது மிகையாகாது. முயீசு உத்தீன் இந்தியாவை வெல்லுவதற்காகத் தீட்டிய திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதே இவரது பணிகளுள் மிகச்சிறந்ததாகும். தி.ஆர்.இரா.

*குத்புதீன் பக்தியார் காக்கீ*: இந்தியாவில் தில்லிச் சுல்தானியத்தின் தலைவராக கி.பி. 1211 முதல் 1236 வரை ஆட்சிபுரிந்த இல்டூட்மீசுவின்

(Iltutmish) காலத்தில் இந்தியாவுக்கு வந்த துறவி குத்புதீன் பக்தியார் காக்கீயாவர். சுல்தான் இவரை அன்புடனும் பணிவுடனும் வரவேற்றுத் தனது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டான். இவரிடம் சில அற்புதச் சக்திகள் இருப்பதாக மக்கள் நம்பினர். கி.பி. 1189-இல் பிறந்து 1236-இல் மரணமடைந்த இவருடைய அருஞ்செயல்களைப் பற்றிப் பல கதைகள் உள. இவர் இறந்தபின் இவருடைய சமாதி முகமதிய மக்களால் போற்றி வழிபடப்பட்டது. இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் இவர் பாக்தாது நகரில் இருந்த புகழ் பெற்ற துறவியான காசா முயீனுத்தீன் என்ற துறவியுடன் நெருங்கிப் பழகிவந்தார்.

தம்மிடம் வந்தவர்க்கெல்லாம் காக்கீ எனப்பட்ட உரொட்டித் துண்டை இவர் வழங்கி வந்ததால் காக்கீ என்ற பெயர் இவருடைய பெயருடன் இணைக்கப் பெற்றது. இவர். மேற்கு ஆசியாவில் திரான்சாக்சியேனா (Transoxiana) மாநிலத்தில் உள்ள ஊசு (Ush) என்ற இடத்தில் பிறந்தவர். மக்கள் பசியற்று வாழவேண்டுமென்ற பெரும் விருப்பம் இவருக்கு இருந்தது. தெ.பா.

**குதம்பைச் சித்தர்**: காண்க: சித்தர்.

**குதர்க்கவாதம்**: கிறித்துவிற்குமுன் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளிலுள்ள சில நாடோடி கிரேக்கர்களைக் குதர்க்கவாதிகள் (Sophists) என்று அழைத்தனர். புரோட்டகோரசு (Protagoras), கிப்பியாசு (Hippias), புராடிகசு (Prodicus), திராசிமாகசு (Thrasymachus), முதலானோர் குதர்க்கவாதிகளைச் சேர்ந்தவர்களே. இவர்கள் ஏதன்சில் (Athens), வாழ்ந்தனர். இரண்டாவதாக, குதர்க்கவாதிகள் (Sophists) இயக்கம் மிகப்பெரியது. கிரேக்கமொழி பேசுபவர்கள் எல்லோரையும் அது பாதித்தது. அது இரண்டாம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது. அது பண்டைய கிரேக்க இலத்தீன் கலையின் புகழைத் திரும்பிக் கொணர முயற்சி செய்தது என்று கூறலாம். அப்பொழுது 'சோபிசுடு' (குதர்க்கவாதி) என்றால் கலைத்திறம் வாய்ந்த ஆசிரியர் என்று பெயர். தத்துவசாத்திரத்தில் அவர்களுக்கு விருப்பமில்லை. பிளேட்டோ (Plato) குதர்க்கவாதிகளைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, அவர்கள் உண்மையை நாடுபவர்களல்ல என்றும், எப்படியாவது வெற்றியடைய வேண்டும், பணம் திரட்டவேண்டும் என்னும் நோக்கங்களை உடையவர்களென்றும் கூறினார். அரிசுடாட்டில் (Aristotle) பிளேட்டோ (Plato) வழியைப் பின்பற்றிக் குதர்க்கவாதிகள் போலியான ஞானத்தைக் கொண்டு பணம் திரட்டுபவர்கள் என்று குறிப்பிட்டார். ஆனால் இருவரும் பழைய காலத்து அறவியல் கொள்கையையும் அரசியல் கொள்கையையும் குற்றம் சாட்டினர். சார்சுகிரோட் (George Grote) என்னும் சரித்திர நூல் வல்லுநர் அவருடைய நூலில் குதர்க்கவாதிகள் சிறந்த ஆசிரியர்கள் என்றும், அவர்களுடைய போதனை நன்மையளித்தது என்றும் கூறியுள்ளார். குரோட்டுக் காலந்தொட்டுக் குதர்க்கவாதிகளின் மேன்மை விளங்கியது. ஏகல் (Hegel) என்பவர் அவருடைய விரிவுரையில் இவர்களை அகவியல் கருத்துக் கொள்கையினர் (Subjective Idealists) என்று குறிப்பிட்டார்.

பிளேட்டோ குதர்க்கவாதிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர்கள் உலகினை விவரிக்கும்பொழுது புலன்களால் உணரத்தக்க அல்லது தெரிந்து கொள்ளத்தக்க முறையில் விவரிக்கின்றனர். உண்மைப் பொருள் புலன்களுக்கப்பாற்பட்டதென்றும், புலன்களாலான அறிவு உண்மையல்ல என்றும் கூறினார்.

சமூகத்திடமும், ஒழுக்கத்திடமும் இவர்கள் கொண்ட கொள்கை சிறப்பு வாய்ந்தது. தற்காலத்தைவிடப் பண்டைக்காலத்தில் எல்லாம் நன்றாக அமைந்திருந்தது என்று கூறுகின்றனர். புரோடோசோரசு என்பார் சமுதாயத்தின் அடிப்படையிலிருந்து, மனிதச் சரித்திரத்திலே ஒரு முன்னேற்றம் காணப்படுகின்றது என்கிறார். குதர்க்கவாதிகள் ஒழுங்கு விதிகள் பகுத்தறிவு அடிப்படையில் அமைய வேண்டும் என்றனர்.

இயற்கையும், மரபு ஒழுங்குகளும் நன்மையையும், தீமையையும் கண்டுபிடிக்க உதவின. இயற்கை விதிகளைத் தராசிமாகசு ஆதரித்தார். ஒவ்வொருவரும், அவரவருடைய விருப்பத்திற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். இரா.கோ.

**குதிரைத்தறியனார்**: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பாடல், 'என் ஆவது கொல் தோழி' எனத் தொடங்கும் நற்றிணையின் 296-ஆம் பாடல் ஒன்றே. இந்தப்பாடல், 'தோழியால் பிரிவுணர்த்தப்பட்ட தலைமகள் சொல்லியது' என்னும் துறையில் அமைந்த பாலைத்திணைப் பாடலாகும்.

இவர் அந்தப் பாடலில், கொடி போன்ற பூங்கொத்துகளுடன் விளங்கும் காட்சியைக் கண்முன் கொண்டு வருகிறார். பாறையின்மேல் தோரணத் தொங்கல்போல் காணப்பெறும் கொன்றை மலர்க் காட்சியை யானையின் முகபடாத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறார். மேலும் இப்பாடலில் தலைவன் செயலாற்றுவதில் விருப்பத்துடன் பிரிந்து சென்றமை குறிப்பிடப்படுகிறது. இப்பிரிவினால் நேர்ந்த துன்பத்திற்கு வருந்தி இல்லத்திலிருக்கும் தலைவியின் நிலை

மையும் அவள் பிரிவுத் துன்ப உணர்ச்சியும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

குதிரைத்தறியனார் குதிரை பற்றிய குறிப்பு எதுவும் தரவில்லை. யானை பற்றிய குறிப்பே காணப்படுகிறது. குதிரைத்தறி என்பது ஓர் ஊரின் பெயராக இருத்தல் கூடும் என்று பதிப்பாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் சுட்டியுள்ளார்.

குதிரைத்தறியனார் என்னும் பெயர் காரணப் பெயராகவும் இருத்தல் கூடும். ஓடிவரும் நீரைத்தடுத்து நிறுத்த ஆறு ஓடை முதலிய ஓட்டமுள்ள நீர்ப்பகுதிகளில் அணை அமைப்பது உண்டு. அணை கட்டுவதற்கு ஆதாரமாகப் பல மரத்தறிகளை நட்டு அவற்றின் குறுக்கே வைக்கோல் முதலியவற்றை இட்டு, மண், கல், முதலியவற்றால் நிரப்பி நீரைத் தடுப்பர். இவ்வாறு நீர்த் தடுப்பிற்குப் பயன்படும் தறிகளுக்குக் 'குதிரைத்தறி' என்பது பெயர். குதிரைத்தறி நீரைத் தடுத்து நிறுத்தும் வலிமை வாய்ந்திருப்பது போல இவரும் வலிமையுடையார் என்பதனைச் சுட்ட குதிரைத்தறியனார் என்று வழங்கப்பட்டிருக்கலாம்.

இவருடைய பெயரைக் குதிரைத்துறையனார் என்றும் மேலே சுட்டிய பெயர் தவறு என்றும் நற்றிணைக்குப்புத்துரை கண்ட ஔவை துரைசாமிப்பிள்ளை உரைக்கின்றார். ஏடுகளில் குதிரைத் திறையனார் என்றும் காணப்படுவதாக அவர் குறித்துள்ளார். இவர்தாம் கொண்ட குதிரைத் துறை என்பது குறித்துப் பேசும் போது இது கடற்கரை ஊராக இருத்தல் கூடும் என்று கருதுகிறார். தென் கன்னட மாவட்டத்தில் குதிரைத்துரை என ஓர் ஊர் உளதாகவும், இவ்வூர் காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரைப் பகுதியில் உள்ள ஒரு துறையாகலாம் என்றும் ஊகிக்கிறார். குதிரை வாணிகம் நடைபெற்ற இடமாதல் கருதிக் குதிரைத் துறை என்னும் பெயர் வந்திருக்கலாம் என்பர். இங்கே சுட்டிய பெயர்களுள் எதுவும் இயற்பெயரன்று. காரணங்கருதி வழங்கிய சிறப்புப் பெயரால் இயற்பெயர் மறைந்தது போலும் என்று எண்ண இடமுண்டு. மு.ச.

**குதிரைப்படை:** நால்வகைப் படைகளுள் ஒன்றான குதிரைப்படை, பண்டைக் காலத்திலேயே போர்களில் பயன்படுத்தப் பெற்றது. வேதகாலத்தில், குறிப்பாக இருக்கு வேத காலத்திற்குப் பிறகே குதிரைப்படைக்குச் சிறப்பு வழங்கப்பெற்றது. மகாபாரதப் போரில் குதிரைப்படை பயன்படுத்தப்பட்டது. கிரேக்கர்கள் இந்தியாவில் படையெடுத்ததின் விளைவாக ஏற்பட்ட போர்களில் குதிரைப்படை குறிப்பிடப்பட்டுள்ளது. மோரியப் பேரரசில் குதிரைப் படைகளுக்குத் தனிக்கவனம் செலுத்தப்பட்டு அது சிறப்பான முறையில் கண்காணிக்கப்பட்டு வந்தது. முகம்மதியர்கள் இந்தியாவில் படையெடுத்தபொழுது குதிரைகள் போர்களில் ஈடுபடுத்தப்பட்டன. முகலாயப்படையெழுச்சியின் போதும், வெளிநாட்டினரிடமும், இந்திய அரசுகளிடமும் போருக்கான குதிரைகள் இருந்தன. ஆங்கில ஆட்சியின் தொடக்ககாலத்தில் இந்தியாவில் குதிரைப்படை பயன்படுத்தப்பெற்றது. மிகப் பழகாலந்தொட்டே, தமிழர், குதிரைப்படையை அமைத்திருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. சீனர், சித்தியர், அசிரியர், பார்த்தியர், உரோமானியர், ஆங்கிலேயர் முதலிய யாவரும் நீண்ட காலம் குதிரைகளைப் போர்களில் பயன்படுத்தினர். நெப்போலியன் ஆலிவர் கிராம்வெல், பிரசியர் ஆகியோரிடமும் இப்படை இருந்தது. முதல் உலகப் போரிலும் குதிரைகள் ஓரளவு பயன்படுத்தப்பெற்றன. கவசத்தானியங்கி தோன்றிய பிறகு குதிரைப் படையின் சிறப்புக் குன்றலாயிற்று. இக்காலத்தில் காவல்துறையில் ஒரு பிரிவாகக் குதிரைப் படை பயன்படுத்தப்படுகிறது. விழாக்கள், போக்குவரத்து போன்றவற்றிற்கு இப்படையினர் பயன்படுகின்றனர். தெ.பா.

**குதுப்சாகி அரசர்கள் (கோல்கொண்டா)** என்னும் அரச மரபினர் தக்காணப் பகுதியை ஆண்டு வந்தனர். பாமினிப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தக்காணத்தில் ஐந்து சுல்தானியங்கள் நிறுவப்பட்டன. அவை முறையே பீராரின் இமாத்சாகி வமிசம், அகமது நகரின் நைசாம் சாகி வமிசம், பீடாரின் பரீத் சாகி வமிசம், பீசப்பூரின் ஆதில் சாகி வமிசம், கோல்கொண்டாவின் குதுப்சாகி வமிசம் ஆகும். ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுக்காலம் நிலைபெற்றிருந்த கோல்கொண்டாவின் குதுப்சாகி வமிசம் (Qutb-Shahis of Golconda) தென்னிந்திய வரலாற்றில் சிறந்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளது. கட்டடக் கலைக்கும் இலக்கியக் கலைக்கும் இவர்கள் பெருந்தொண்டு ஆற்றியுள்ளனர்.

**கூலி-குதுப்-உல்-முல்க்கு** என்னும் துருக்கியர் கி.பி. 1518-இல் குதுப்சாகி வமிசத்தைத் தோற்றுவித்தார். மற்ற நான்கு தக்காணச் சுல்தானியங்களுக்குப் பின்னரே இச்சுல்தானியம் நிறுவப்பட்டபோதிலும், இது பெரும் புகழ் பெற்றதுடன் மற்ற அரசுகளைக் காட்டிலும் நிலை பெற்றும் இருந்தது. சுல்தான்-கூலி-குதுப்-உல் முல்க்கு (SultanQuli-Qutb ul-Mulk) பாமினி அரசில் வேலைக்கு அமர்ந்தபின் தம் அயரா உழைப்பாலும் தன்னம்பிக்கையாலும் அஞ்சாமையாலும் செயல்திறத்தாலும் தம் நிலையை வலுப்படுத்திக் கொண்டார். பாமினிசுல்தான் சிகா

புதீன் முகமதிற்கு (Shihab-ud-din Mohamed) எதிராகத் தெலிங்கானாவில் ஏற்பட்ட புரட்சியையும், பீரார்க் கிளர்ச்சியையும் கோவாக் கலகத்தையும் ஒடுக்கி, குதுப்-உல்-முல்க்கு என்னும் விருதுப் பெயரினைப் பெற்றார். பாமினி சுல்தானின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் பாத்திரமான இவர் தெலிங்கானாவின் (Telangana) ஆளுநராக அமர்த்தப்பட்டார். பாமினியின் வலிமையின்மையின் காரணமாக மாநில ஆளுநர் பலர் விடுதலை பெற்றுத் தனியாட்சி நிறுவினர். குதுப் உல் முல்க்கு சுயாட்சி பெற்ற போதிலும் பாமினி சுல்தான்களின் இறைமையை ஏற்றுக்கொண்டதுடன், இறுதிவரையில் 'சா (Shah) என்னும் பட்டத்தைப் புனைந்து கொள்ளவில்லை. கோல்கொண்டா கோட்டைக்கும் வாரங்கல்லுக்கும் இடைப்பட்ட பகுதி இவரது ஆட்சிக்குட்பட்டது. கோல்கொண்டாவிற்கு அருகில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அதற்குப் பாமினி சுல்தான் பெயரால் 'முகம்மது நகர்' எனப் பெயரிட்டு, அரண்களை வலுப்படுத்தினார். இவர் கி.பி 1531-இல் இராசகொண்டா,தேவகொண்டா நகரங்களைக் கைப்பற்றினார். அச்சுதராயரைப் பங்கல் என்னுமிடத்தில் தோற்கடித்த குதுப்பு, கோட்டையைக் கைப்பற்றியதுடன் கான்புராவையும் கைப்பற்றினார். அடுத்து பீராரைச் சேர்ந்த ஆப்ட்டு தாப்பா (Haft Tappa)என்னும் பகுதியும் கைப்பற்றப்பட்டது. பலங்சிபூரில் ஒரிசாவின் கசபதி, கொண்ட பள்ளித் தலைவன், சிதாப்கான் ஆகியோரின் கூட்டுப் படையை முறியடித்து, கடற்கரைப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார். தெலிங்கானாப் பகுதியில் ஊடுருவல் செய்த அச்சுதராயர், கொண்டவீடு நாயக்கர், பெலம் கொண்டா நாயக்கர்-ஆகியோரின் கூட்டுப் படையை வென்று, குதுப்பு பெலம்கொண்டாவைக் கைப்பற்றியதுடன், இராசமுந்திரி, எல்லோரா வரையிலும் முன்னேறினார்.கொண்டபள்ளி கோட்டை கைப்பற்றப்பட்டது. பிரதாபருத்திரனும் அடிபணிந்தான்.இவற்றின் விளைவாகக் கோதாவரி ஆறு இரு அரசுக்கும் எல்லையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர்க் கோதாவரிக் கரையில் நிகழ்ந்த இறுதிப்போரில் விசயநகர வேந்தர் தோற்கடிக்கப்பட்டு, கப்பம் கட்டுவதாகவும் ஒப்புக் கொண்டார்.

இவர் தம் ஆட்சியின் இறுதிக்காலத்தில், நல்கொண்டா இராசாவின் புரட்சியை ஒடுக்கினார். அலிபரீது (Ali Barid) என்பானுடன் சமாதானம் செய்து கொண்டு, மேடக்கை இணைத்துக் கொண்டார். இவ்வாறு கூலி, கோல் கொண்டா அரசினை விரிவு படுத்தியதுடன், மற்ற நான்கு தக்காணச் சுல்தானியங்களைக் காட்டிலும் முன்னணியில் நிற்கும்படி செய்தார். நற்குணங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்த குதுப்பு கோல்கொண்டாக் கோட்டையைக் கட்டியதுடன், பல கட்டடங்கள், அரண்மனைகள், மசூதிகள் ஆகியவற்றையும் கட்டினார். தீவிர சியாவாகத் திகழ்ந்த இவர் 2.9.1543-இல் தம் மகனான சம்சித்து என்பானால் 98-ஆம் வயதில் கொல்லப்பட்டார்.

**சம்சித் குதுப்கான்** (கி.பி. 1543-1550) இவர் தம் தந்தைக்குப் பின் 2.9.1543-ஆம் ஆண்டில் அரியணை ஏறினார். குதுப்சாகி அரசின் புகழினையும் பெருமையினையும் உயர்த்த இவர் திறமையுடன் செயற்பட்டார். பீராரின் சுல்தான் அலிபரீதை முறியடித்து மேடக்குக் கோட்டையையும், கௌலாசுவைச் சூழ்ந்துள்ள நாடுகளையும் கைப்பற்றினார். அறிவாற்றல் மிக்க இவர், தக்காணச்சுல்தான்களிடையே ஏற்பட்ட போர்களில் ஒதுங்கி நின்றும், பல சமயங்களில் நடுவராக நின்றும் குதுப்சாகி அரசைத் தாக்காணத்தில் உயர்த்தினார். நோய்வாய்ப்பட்ட இவர் 22.1.1550 -ஆம் ஆண்டு இறந்தார்.

**சுபான் குலி** (Subhan Quli - 1550): தம் தந்தையின் இறப்பிற்குப்பின் கி.பி. 1550-இல் சுல்தான் ஆனார். இச்சுல்தானுக்கு எதிராகத் தௌலத் குலியும் இபுராகிமும் அரசுரிமைப் போரைத் தொடங்கினர். குழப்பம் ஏற்பட்டது. இறுதியில் சுபான் கொல்லப்பட்டார். அரசுரிமைப் போரில் வெற்றிபெற்ற இபுராகிம் குதுப்சா (கி.பி. 1550-1580) இந்துக்களின் ஆதரவையும் முசுலிம்களின் ஆதரவையும் பெற்று 27.7.1550-இல் சுல்தான் ஆனார். 'சா' என்னும் பட்டத்தையும் முதன் முதலாக இவர் சூடிக் கொண்டார். நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, மக்களுக்கு நல்லாட்சி நல்க இவர் பாடுபட்டார். குல்பர்க்காவைக் கைப்பற்ற இவர் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது. இவர் விசயநகர வேந்தன் இராமராசுக்கு உதவியாகப்படைகளை அனுப்பிக் கலகங்களை அடக்கவும், அதோனியைத் (Adoni) திரும்பப் பெறவும் உதவி புரிந்தார். இபுராகிமால், ஆட்சிக்கெதிராகக் கலகம் செய்த சகதேவராவ் ஒடுக்கப்பட்டார். இபுராகிம் கி.பி. 1563-ஆம் ஆண்டளவில் அகமது நகர் சுல்தானான உசேன் நிசாம் சாவின் மகளை மணந்ததால், கோல்கொண்டா-அகமது நகர் நட்புறவு வலுப்பெற்றது. எனவே பீசப்பூர் சுல்தானுடன் பகைமை கொண்டு, கல்யாணிக் கோட்டையை இருவரும் முற்றுகையிட்டனர். அந்நிலையில் விசயநகர வேந்தனான இராமராசு பீசப்பூருக்கு ஆதரவாகப் போரில் குதித்ததால், கோல்கொண்டா சுல்தான், விசயநகர வேந்தனுடன் சமாதானம் செய்து கொண்டான். அதன் விளைவாகக் கொண்ட பள்ளி, பனகல், கன்புரா,-ஆகிய பகுதிகளை இபுராகிம் விசய

நகர வேந்தனுக்கு வழங்கினான். விசய நகர இந்து வேந்தனின் பேராதிக்கமும் பெரும் புகழும் பெருகி, வருவது கண்ட அகமது நகர், பீசப்பூர், பீடார், கோல்கொண்டா சுல்தான்கள், தங்களுக்குள் சோலாப்பூரில் உடன்படிக்கை செய்து கொண்டு, விசயநகரத்தின் மீது படையெடுக்க ஆயத்தமாயினர். பன்னிகட்டி (Bannihatti) என்னுமிடத்தில் விசயநகரப் படைக்கும் சுல்தான்களின் படைக்கும் கி.பி. 1565 சனவரித் திங்கள் 23-ஆம் நாள் நடந்த கடும் போரில், சுல்தான்கள் பெரு வெற்றி பெற்றனர். இவ்வெற்றிக்குப் பின்னர்ச் சுல்தான்களிடையே கருத்து வேறுபாடு மீண்டும் ஏற்பட்டது.

பின்னர் இபுராகிம் தென் ஒரிசாவின் மீது படையெடுத்து இராசமுந்திரி, காசிம்கோட்டோ, சந்திரபார் - முதலான நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டார். பின்னர் இவர் விசய நகரத்தின் மீது படையெடுத்து கி.பி. 1578-இல் அகோபிலத்தையும் உதயகிரியையும், கி.பி. 1579-இல் வினுகொண்டா கச்சர்லகோட்டா, கொண்ட வீடு - முதலான கோட்டைகளையும் பிடித்துக் கொண்டார். ஆதில் சாகி அரசின் மீது படையெடுத்து சாகர், யாத்கிரி (Yadgir) முதலான பல கோட்டைகளைக் கைப்பற்றிய இபுராகிம், அகமது நகரச் சுல்தானுடன் சேர்ந்து கொண்டு பீசப்பூரையும் தாக்கினார். இபுராகிம் 5.5. 1580-இல் இறந்தார்.

குதுப்சாகி வமிசத்தின் வலிமைமிக்க சுல்தான்களுள் ஒருவராகத் திகழ்ந்த இபுராகிம், உள்நாட்டுக் கலகங்களை ஒடுக்கி நாட்டில் அமைதியை ஏற்படுத்தியதுடன், தம் அரசினை வங்காளத்தின் எல்லைவரையில் விரிவுபடுத்தினார். இவரது ஆட்சிக் காலத்தில் வாணிகம் செழித்தது. பாரசீகம், அரேபியா, துருக்கி முதலான நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் கோல்கொண்டாவுடன் வாணிகத் தொடர்பு கொண்டனர். கலையார்வம் கொண்ட இவர் கோல்கொண்டா கோட்டையை விரிவுபடுத்தியதுடன், பல அரண்மனைகளையும் கட்டடங்களையும் கட்டினார். இவரால் அணைகளும் பேரேரிகளும் கட்டப்பட்டன. பல பூங்காக்களை அமைத்தார். இவரால் கட்டப்பட்ட அணைகளுள் புட்வல் அணையும் (Budwal Dam) பேரேரிகளுள் உசைன்சாகர், இபுராகிம் பட்டணப் பேரேரி ஆகியவை குறிப்பிடத் தக்கனவாகும். முசி ஆற்றில் இவரால் கட்டப்பட்ட புராணா பூல் (Purana Pul) என்னும் பழைய பாலம் மிகப் பெரியதும் வலிமை மிக்கதும் ஆகும்.

இபுராகிம் தெலுங்கு இலக்கியத்தையும், தட்சிண உருதுவையும் பேணிப் பாதுகாத்தார். அடங்கி கங்காதரர், பண்ணகண்டி தெலிகநார்யர், கந்து கூரிருத்ரர் - முதலான தெலுங்கு கவிகளும் முல்லாகியாலி, மகமது, அகமது, பிரூசு (Firuz) - முதலான உருதுப்புலவர்களும் இவரது அவையை அலங்கரித்தனர். சமயப் பொறை கொண்ட இவரது ஆட்சியில் இந்துக்களும் உயர்பதவி பெற்றனர். இவர் கி.பி. 1580-இல் இறந்து பட்டார்.

**முகம்மது கூலிகுதுப்சா** (கி.பி.1580-1612) குதுப்சாகி வமிசத்தின் சுல்தானாக 5.5.1580-இல் பதவியேற்று 32 ஆண்டுகள் சிறப்புடன் ஆண்டார். ஐதராபாது நகரத்தை உருவாக்கிப் பூங்காக்கள், அரண்மனைகள், மசூதிகள் - ஆகியவற்றை அமைத்து, அதனை அழகு படுத்திய பெருமை குதுப்சாவைச் சாரும். நகரின் நடுவே சமி மசூதியையும் (Jami Mosque) சார்மினாரையும் அமைத்தவரும் இவரே. நகரத்தின் வெளியிலும் பல மசூதிகளை அமைத்த இவர், மக்களுக்காக மருத்துவமனையும் கட்டினார். எல்லாவற்றிற்கும் மேலாக இச்சுல்தானின் வீறார்ந்த கல்லறைமாடம் மிகுந்த கலைநுட்பம் கொண்டது.

குதுப்சாவின் ஆட்சிக்காலத்தில் மொகலாய வேந்தன் அக்பரின் தக்காணப் படையெழுச்சி கி.பி. 1596, 1597-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தது. குதுப்சா நைசாம் சாகி அரசுக்குப் படையுதவி செய்து முகலாயரை எதிர்த்தார். நைசாம் சாகி அரசின் மாலிக் அம்பருக்கு கி.பி. 1609-இல் பெரும்பொருள் கொடுத்துதவி, அகமது நகர் கோட்டையினின்றும் முகலாயர்களை விரட்டியடிக்கத் துணைபுரிந்தார். விசயநகர வேந்தனான இரண்டாம் வேங்கடரை வென்று, இவர் குட்டிகர்னால், கண்டிக்கோட்டைப் பகுதிகளைக் கைக்கொண்டார். இவ்வேந்தனது பெருமையை உணர்ந்த பாரசீகச் சுல்தானான சா அப்பாசு (Shah Abbas, கி.பி. 1587-1629) அகுசுலு சுல்தான் (Aghuzlu Sultan) என்னும் தூதுவனிடம் விலையுயர்ந்த பரிசுகளை அளித்துக் கூலி குதுப்சாவிடம் அனுப்பினான். இத்தூதுவனும் ஆறாண்டுக் காலம் குதுப்சாவின் அரண்மனையில் தங்கினான். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் மசூலிப்பட்டணத்தில் தொழிற்சாலை அமைக்கவும் குதுப்சா அனுமதி அளித்தார். ஏழைகளுக்கு இலவச உணவும் வெகுமதியும் வழங்கி இலக்கியப் புரவலராகவும், கலைக் காவலராகவும் பள்ளிகள், மருத்துவ மனைகள் கட்டிய பொதுநலப் பிரியராகவும் விளங்கிய கூலி குதுப்சா கி.பி. 1612-ஆம் ஆண்டு காலமானார்.

**முகம்மது குதுப்சா** (கி.பி. 1612-1626) கூலி குதுப்சாவிற்குப்பின் சுல்தான் பதவிஏற்று, ஐதராபாதை மேலும் அழகு படுத்தினார். அமைதிப் பணியில் நாட்டம் கொண்ட இவர் மாபெரும் கவிஞராகவும் அறிஞராகவும் விளங்கினார்; பல கவிதைகளையும் இயற்றி

னார். முகலாய அரசுடன் பகைத்துக் கொள்ள விரும்பாமல் சாசகானுடன் நட்புப் பாராட்டிய முகம்மது குதுப்சா கி.பி. 1626-இல் இறந்தார். இவரது ஆட்சிக்குப்பின் குதுப்சாகி வமிசம் வீழ்ச்சியுறத் தொடங்கியது. இச்சுல்தானுக்குப்பின் இவர் மைந்தனான அப்துல்லா குதுப்சா (கி.பி. 1626-1672) என்னும் 12 வயதுச் சிறுவன் ஆட்சிப் பொறுப்பேற்றான். முகலாய சாசகான் தக்காண சுல்தான்களை வேருடன் களைய முனைந்தான். அப்துல்லா கி.பி. 1636-ஆம் ஆண்டு முகலாயரின் மேலாண்மையை நிலையாக ஏற்றுக் கொண்டு, கப்பம் கட்ட ஒப்புக் கொண்டான். தக்காணத்தின் அரசப் பேராளராக அமர்த்தப்பட்ட ஔரங்கசீபு, தனது பேராளனாக ஒருவனைக் கோல்கொண்டா அரசவையில் அமர்த்தி, அரசகாரியங்களைக் கண்காணிக்கச் செய்தான். அப்துல்லாவிற்கும் அவன் தலைமை அமைச்சரான மீர்சும்லாவிற்கும் (Mir-Jumla) தகராறு எழுந்தது. மீர்சும்லாவின் அதிகாரம் பெருகியது. மீர்சும்லாவின் குடும்பம் அப்துல்லாவால் தண்டிக்கப்பட்டது. மீர் சும்லா மொகலாய வேந்தனுடன் இரகசியத் தொடர்பு கொண்டான். அதன் விளைவாக இளவரசர் ஔரங்கசீபின் தாக்குதலை அப்துல்லா சந்திக்க வேண்டியிருந்தது. கோல்கொண்டாவை 7.12.1656-இல் முற்றுகையிட்ட ஔரங்கசீபு பேரரசர் சாசகானின் தலையீட்டால் முற்றுகையைக் கைவிட்டான். இவ்வாறு குதுப்சாகி அரசு அப்துல்லா காலத்தில் முகலாயரின் மிரட்டலுக்கு உள்ளானது.

**அபுல் அசன் குதுப்சா** (Abul Hasan Qutb Shah- கி.பி. 1672-1687) சுல்தான் பதவியேற்று, 21.4.1672-இல் மதண்ணன், அக்கண்ணன் என்னும் இரு பார்ப்பன சகோதரர்களின் துணை கொண்டு தனது படைவலிமையைப் பெருக்கினான்; மராட்டிய சிவாசியுடனும் பாதுகாப்பு உடன்பாடு செய்து கொண்டான். குதுப்சா அரசவையில் இந்துக்களின் ஆதிக்கத்தை அனுமதித்ததாலும், சிவாசிக்கு உதவி புரிந்ததாலும், ஔரங்கசீபு அபுல் அசன் மீது தீராக் கோபம் கொண்டான். மொகலாயப் படை மூவசாம் (Muazzam) தலைமையில் கோல்கொண்டாவை முற்றுகையிட்டு, வென்று, அழிவு வேலையில் ஈடுபட்டது. அபுல் அசன் முகலாயருடன் சமாதானம் செய்து கொண்டு ஆண்டுதோறும் பெரும் பொருளைக் கப்பமாக அளிக்க ஒப்புக் கொண்டான். மீண்டும் 28.1.1687-இல் கோல்கொண்டா கோட்டை முகலாயப் படையால் முற்றுகையிடப்பட்டது. அப்துல் ரசாக்கு என்ற முசுதபாகான் (Abdur Razzaq Lari alias Mustafa Khan) கோல்கொண்டா கோட்டையைப் பெரு வீரத்துடனும் திறமையுடனும் காத்துக் கடும் போர் புரிந்தான். அபுல் அசனுக்காக வீரமரணம் அடையவும் விழைந்தான். இருப்பினும் அப்துல்லா பானியின் துரோகச் செயலால் கோட்டை எதிரியின் கரத்தில் வீழ்ந்தது. கோல்கொண்டா அரசு கி.பி. 1687-இல் முகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. அபுல் அசன் கி.பி. 1700-இல் மண்ணுலக வாழ்வை நீத்தான்.

**குதுப்சாகி அரசும் தமிழகமும்:** தக்காண அரசுகளுக்கும் தமிழகத்திற்கும் நெடுங்காலமாகவே தொடர்பு உண்டு. பாமினி சுல்தானின் படைத் தலைவனான முகம்மதுகவான் கி.பி. 1481-இல் முதன் முறையாகத் தமிழகத்தின் மீது படையெடுத்து, காஞ்சி வரை முன்னேறினான். பாமினியின் அழிவிற்குப் பின் கோல்கொண்டாவின் குதுப்சாகி அரசும் தமிழகத்தின் மீது தனது தாக்குதலை நிகழ்த்தியது. சுல்தான்களுக்கும் தமிழக வேந்தர்களுக்கும் நேரடிப் பகைமை ஏற்படாதிருந்த போதிலும், விசயநகரத்தை அழிக்க முற்பட்ட கோல்கொண்டாச் சுல்தான்கள், விசய நகரப் பேரரசனுக்கு உட்பட்ட பகுதியாக விளங்கிய தமிழகத்தின் மீதும் படையெடுத்தனர். விசயநகரப் பேரரசர்களான கிருட்டிணதேவராயர், அச்சுதராயர் ஆகியோரது ஆட்சிக் காலங்களில் தமிழகம் முழுவதும் பேரரசரது ஆட்சிக்குட்பட்டிருந்தது. தலைக்கோட்டைப் போருக்குப் (கி.பி. 1565) பின்னர் விசயநகரம் அழிக்கப்பட்டது. ஆரவீடு வமிசத்தினர் தம் தலைநகரை முதலில் பெனுகொண்டாவிற்கும், பின்னர் சந்திரகிரிக்கும் இறுதியில் வேலூருக்கும் மாற்றினர். விசயநகரத்தைத் தாக்கிய சுல்தான்கள், தமிழகத்தின் மாநிலத் தலைநகரங்களாகத் திகழ்ந்த மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர் ஆகியவற்றையும் தாக்கினர். விசய நகர வமிசத்தின் பேரரசர் வேங்கடர், தாம் இழந்த பகுதிகளை மீட்கக் கருதிக் கோல்கொண்டாவின் மீது படையெடுத்தார். வேங்கடரின் இத்தவறான செயலே தக்காணச் சுல்தான்களைத் தமிழகத்தில் படையெடுக்கத் தூண்டியது; மாறான விளைவுகளையும் ஏற்படுத்தியது. கோல்கொண்டாச் சுல்தான் கி.பி. 1590-இல் பெனுகொண்டாவை முற்றுகையிட்டான். வேங்கடர் கோல்கொண்டாவைத் தாக்கினார். கோல்கொண்டாச் சுல்தானும் அப்போது தமிழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான்.

விசய நகரப் பேரரசில் கி.பி. 1616 முதல் 1639 முடிய ஏற்பட்ட உள்நாட்டுக் கலகங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, பீசப்பூர் கோல்கொண்டாச் சுல்தான்கள் தம் செல்வாக்கைத் தமிழகத்தில் பரப்பினர். கோல்கொண்டாச் சுல்தான்,கி.பி. 1644-இல் பேரரசின் மீது படையெடுத்தான். சீரங்கன், பீசப்பூர் படையுதவியுடன் இதனைத் தடுத்தான். இருப்பினும் கோல்கொண்டாப் படையினர்

தமிழகத்தைத் தாக்கிப் பழவேற்காடு வரையில் தடையின்றி முன்னேறினர்; பெரும் பொருளைக் கொள்ளையிட்டனர்; சீரங்கனோ வேறு வழியின்றிக் கோல்கொண்டா படைத்தலைவனுக்குப் பெரும் பொருளைக் கையூட்டாகக் கொடுத்துச் சுல்தானுடன் சமாதானம் செய்து கொண்டான்.

பேரரசர் மூன்றாம் சீரங்கர் கி. பி. 1645-இல் திருமலைநாயக்கரைத் தண்டிக்க மதுரை மீது படையெடுத்தார். திருமலை நாயக்கரோ கோல்கொண்டாச் சுல்தானை வேலூர் மீது படையெடுக்கும் படி கேட்டுக் கொண்டார். கோல்கொண்டாப் படைத் தலைவனான மீர் சும்லா வேலூரைப் பிடித்தான். சீரங்கன் வேலூரை விட்டு ஓடிவிட்டான். இத்தருணத்தில் மீர் சும்லா ஆலந்தியரிடமிருந்து பழவேற்காட்டையும், பறங்கிமலையையும் கைப்பற்றினான். இப்படைத் தலைவன் கி.பி. 1647-இல் ஆங்கிலேயரின் சென்னைக் கொடைப் பத்திரத்தைப் புதுப்பித்து வழங்கினான். பின்னர்க் கோல்கொண்டாப் படை கி.பி. 1648-இல் பூவிருந்தவல்லி, காஞ்சி, செங்கற்பட்டு, செஞ்சி ஆகியவற்றின் எல்லைப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டு, காஞ்சியில் முகாமிட்டது. அடுத்து, மீர்சும்லா செஞ்சி, தஞ்சைப் பகுதிகளை. நோக்கிப் பாய்ந்தான். செஞ்சி கைப்பற்றப்பட்டது. தஞ்சை நாயக்க வேந்தன் விசயராகவனோ அச்சம் கொண்டு, மீர்சும்லாவிடம் அடிபணிந்தான். திருமலை நாயக்கர் உடனே பீசப்பூர் சுல்தானின் உதவிபெற்றுக் கோல்கொண்டாப் படையினரின் முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றார். செஞ்சியைப் பிடித்த பீசப்பூர் சுல்தான், கோல்கொண்டா படையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். பின்னர் பீசப்பூர் படை தஞ்சை, மதுரைப் பகுதிகளைத் தாக்கியது.

இவ்வாறு விசயநகரப் பேரரசினை அழித்த சுல்தான்கள், பேரரசினைப் பெனுகொண்டாவிற்கும், வேலூருக்கும் துரத்திவிட்டு, அங்கும் தம் ஆதிக்கத்தையும் அழிவு வேலைகளையும் நிலைநாட்டினர்.

ம.இ.

**துணை நூல்கள்:**

**Chopra**, **P. N.**, **Ravindran**, **T. K.** & **Subramanian**, N., History of South India, Vol II, Medieval Period, S. Chand & Co., Delhi, 1980.

**Krishnasamy**, A., The Tamil Country Under Vijayanagar, Annamalai University, 1960.

**குதுப்மினார்**: தில்லியிலுள்ள உலகப் புகழ் பெற்ற மினார். இது மசூதியுடன் இணைந்த ஒரு பகுதி ஆகும். இங்கிருந்துதான் வழிபாட்டிற்கு அழைப்பு விடப்படும். இந்தியாவில் அடிமை மரபை கி.பி. 1206-இல் நிலைநாட்டிய குத்புதீன் ஐபக்கு (Qutbudin Aibak) என்பவரால் தொடங்கப்பட்டு இவருக்குப் பின்வந்த இல்தூத்மிசு (Iltutmish) என்பவரால் குதுப்மினார் கட்டி முடிக்கப்பட்டது.

குதுப்மினார் முதலில் நான்கு தளங்களைக் கொண்டதாக விளங்கியது. பெரோசா துக்ளக் நான்காம் தளத்தைப் பழுது பார்த்துச் சீர் செய்த பொழுது நான்காம் தளத்தை இரண்டு தளமாக மாற்றினார். எனவே, இம்மினார் இப்பொழுது ஐந்து தளங்களைக் கொண்டுள்ளது. மேலும் ஒரு கல்வெட்டு, குத்புதீன் ஐபக்கின் அடிமையான பாசல் அபுல் மாலி என்பவர் இதனைக் கட்டிய கட்டட நி'புணன் என உரைக்கிறது. மற்ற மூன்று தளங்களில் உள்ள கல்வெட்டுகள் இல்தூத்மிசு பற்றிப் புகழ்ந்துரைக்கின்றன.

குதுப்மினாரைக் கட்டிய அரசர்களோ அக்காலத்தைச் சார்ந்த வரலாற்று ஆசிரியர்களோ அவர்களுக்குப் பின்வந்தவர்களோ இதைக் குதுப்மினார் என்று குறிப்பிடவில்லை. அனைவரும் இம்மினார் முகம்மது பின்சாம் (Muhammad bin Sam) என்பவரின் பெயரால் எழுப்பப்பட்டுள்ளது என்றே கூறினர். முகம்மது பின்சாம் ஐபக்கின் தலைவரான முகம்மது பின் கோரியே ஆவர். எனவே, இம்மினார் குதுப்மினார் என்னும் பெயரை எப்பொழுது பெற்றது என அறுதியிட்டுக் கூறமுடியாது.

இம்மினார் அலாவுதீன் கில்சிக் காலத்தில் பழுது பார்க்கப்பட்டதாக அமீர் குசுரு தனது தாரிக்-இ-அலாய் (Tarikh-i-Alai) என்ற நூலில் தெரிவிக்கிறார். பின்னர் முகம்மது பின் துக்ளக்கு (கி.பி. 1325 -51)தம் காலத்தில் குதுப்மினாரை மின்னல் தாக்கியதால், ஏற்பட்ட சேதத்தை கி.பி. 1332-இல் சீர் செய்தார்.

பெரோசா துக்ளக்கு குதுப்மினாரைப் பழுது பார்த்ததைத் தனது நூலான புதுகத்-இ-பெரோசாகி (Futuhat-i-Firozohahi) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர் காலத்தில்தான் மேலும் ஓர் தளம் புதிதாக 'அமைக்கப்பட்டு ஐந்து தளமாக்கப்பட்டது. சிக்கந்தர் லோடி கி.பி. 1503-இல் குதுப்மினாரின் மேல் தளத்தைச் சீர் செய்தார்.

குதுப்மினார் செந்நிற மணற்பாறை, பழுப்பு நிறக்கல், வெள்ளைச் சலவைக்கல் ஆகிய கற்பாறை வகைகளைக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. இது 72. 45 மீ. உயரத்தையும், 14. 74 மீ. குறுக்களவு கொண்ட அடிப்பாகத்தையும், 2. 75 மீ. குறுக்களவு



கொண்ட மேல் பாகத்தையும் கொண்டு கீழ் இருந்து மேலே செல்லச் செல்லக் குறுகிச் செல்கிறது. இதன் வடபுறத்தில் நுழைவாயில் உள்ளது. இதனுள் படிக் கட்டுகள் சுற்றுவழியில் **(Spiral steps)** மேலே செல் கின்றன. இது மொத்தம் 379 படிகளைக் கொண் டுள்ளது. தளங்களின் உச்சியில் அழகிய வேலைப் பாடு கொண்ட போதிகையால் தாங்கப்பட்டுள்ள மாடங்கள் உள்ளன. இது செங்குத்து குழிவரிகளைக் கொண்டு விளங்குகிறது. முதல் தளத்தில் இரு செங் குத்து வரிகளுக்கு இடைப்பட்ட பகுதி ஒன்று வட்ட மாகவும் மற்றொன்று கோண வடிவிலும் உள்ளன. மூன்றாம் தளம் வட்ட வடிவில் உள்ளது. தளங்க ளைச் சுற்றிலும் அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய கல்வெட்டுகள் இதன் வரலாற்றுச் செய்தியைப் பறை சாற்றுகின்றன.

கே.இரா.

**துணை நூல்கள்**:

Brown, Percy, Indian Architecture (Islamic Period), D. B. Taraporevala Sons & Co., Pvt. Ltd., Bombay, 1956.

Nath, R., History of Sultanate Architecture, Abhinav Publications, New Delhi, 1978.

Sharma, Y. D., Delhi and its neighbourhood, Archaeological Survey of India, New Delhi, 1974.


**குந்தி** பாண்டு என்னும் மன்னனின் இருமனைவி யருள் ஒருத்தி. யாதவகுல அரசனாகிய சூரசேன அர சனின் மகள். பிருதா என்று அழைக்கப்பட்டாள். குந்திபோசன் என்ற அரசனால் குழந்தை இல்லாத காரணத்தினால் தத்து எடுத்துக்கொள்ளப்பட்டுக் 'குந்தி' என்ற பெயருடன் அவ்வரசனால் வளர்க்கப் பட்டாள். கன்னியாக இருக்கும்பொழுதே ஒருசமயம் துருவாச முனிவருக்குப் பணிவிடை செய்து அம்முனி வரால் போற்றப்பட்டாள். அவர் அவளுக்கு உபதே சித்த மந்திரத்தின் உதவியினால் தான் விரும்புகின்ற தேவர்களின்மூலம் குழந்தையை அடையக்கூடிய பெருமையையும் அடைந்தாள். துருவாசமுனிவர் சென்றவுடன் அவர் உபதேசித்த மந்திரத்தின் ஆற்ற லைச் சோதனை செய்ய விழைந்து 'சூரிய தேவனைக்' குறித்து அம்மந்திரத்தைக் கூறின அளவில் குழந்தை யைப் பெற்றாள். அக்குழந்தை தான் 'கர்ணன்'. அப் பொழுது அவள் கன்னிப் பெண்ணாக இருந்தமையால் தன் கற்பினைப் பிறர் ஐயுறக் கூடும் என்று அஞ்சி ஒரு வருக்கும் தெரியாமல் அக்குழந்தையை ஒருபெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிடுகின்றாள். அக் குழந்தையை ஆதிரதன் என்ற தேரோட்டி பெட்டியிலிருந்து எடுத்துக் கர்ணன் என்று பெயர்சூட்டித் தன் மகனா கவே வளர்க்கின்றான். ஆகவே, கர்ணன் தேரோட்டி மகனாகவே பாரதப் போர் வரையில் எல்லோராலும் அழைக்கப்படுகிறான். குந்திபோசனால் பாண்டு மகா ராசனுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டுக் குந்தி அவ் வரசனின் முதல் மனைவியாகிறாள். மாத்திரி அவ்வர சனின் இளையமனைவி. ஒரு முனிவரின் சாபத்தினால் பாண்டு மன்னனுக்குத் தன் மனைவிகளின் மூலம் குழந்தைகளை அடைய வாய்ப்பில்லாத சமயம், குந்தி தனக்குத் துருவாச முனிவர் அருளிய மந்திரத் தைப் பற்றித் தன் கணவனிடம் கூறி, பிறகு அவர் அனுமதிபெற்றுத் தருமதேவதை (எமன்), வாயு தேவதை, இந்திரன் இவர்களை வேண்டி அம்மந்திரத் தைக் கூறி, முறையே தர்மபுத்திரன் (யுதிட்டிரன்), பீமன், அருச்சுனன் ஆகிய மூன்று குழந்தைகளை அத் தேவதைகள் மூலம் அடைகின்றாள். பிறகு அம்மந்தி ரத்தை இளைய மனைவி மாத்திரிக்கும் கூறி, அவ ளும் அச்வினி தேவதைகளாகிய இரட்டைக் கட வுளர்களைத் துதிக்க நகுல, சகாதேவன் என்ற இரு மக்களையும் அடைகிறாள். இவ்வைவருமே ஐந்து பாண்டவர்கள். பாண்டு அரசன் இறந்ததும் மாத்திரி உடன்கட்டை ஏற, குந்தி ஐவரையும் திருதராட்டிரன் குமாரர்களான துரியோதனன் முதலியவர்களால் இழைக்கப்படும் பல இன்னல்களுக்கிடையே வளர்க்கி றாள். பாரதப் போர் நடந்துகொண்டிருக்கும் பொழுது பாண்டவர்களைக் கர்ணன் துரியோதனின் தூண்டுதலின்மூலம் கொல்லக்கூடும் என்று பயந்து கர்ணனைத் தனிமையில் சந்தித்து, கர்ணன் தன் னுடைய மகன்தான் என்று கூறி, அவன் நம்பும்படி செய்து, பாண்டவர்களுடன் சேர்ந்து போர்புரியும்படி வேண்டுகின்றாள். கர்ணன் தன் இயலாமையைக் கூறி, அருச்சுனனைத் தவிர பாண்டவர்களுள் வேறெ வரையும் கொல்லமாட்டேன் என்று வாக்களித்து விட்டு, அருச்சுனன் இறந்தால் தான், தான் இறந் தால் அருச்சுனன், ஆக பாண்டவர்கள் ஐவராகவே இருப்பர் என்று கூறுகின்றான். பாரதப் போரில் கர்ணன் இறந்தவுடன் போர்க்களத்தில் குந்தி, கர்ணன் பாண்டவர்களில் மூத்தவன் என்ற உண்மையைத் தருமபுத்திரர் முதலியவர்களிடம் கூறி எல்லோருமே துன்பமடையும்படி செய்கின்றாள்.

எஸ்.ஜெ.

**குப்தர் ஆண்டு**: இது குப்தர்களால் தோற்று விக்கப்பட்ட ஆண்டுக் கணக்கீட்டு முறையாகும். குப் தப் பேரரசின் மூன்றாம் அரசரான முதலாம் சந்திர குப்தர் கி.பி. 319 அல்லது 320-இல் குப்தர் ஆண்டைத் தோற்றுவித்தார். முதலாம் சந்திரகுப்தருக்குப் பின் வந்த குப்த அரசர்கள் குப்தர் ஆண்டைப் பயன்படுத் தினர். குப்தர் காலத்தில் இவ்வாண்டு குப்தர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலும், அசாம், வங்காளம்,

ஒரிசா போன்ற பகுதிகளிலும் பயன்பாட்டிலிருந்தது. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் வடஇந்தியாவை ஆண்ட பல சிற்றரசர்களும் குப்தர் ஆண்டைப் பயன் படுத்தியுள்ளனர். வல்லபியை ஆண்ட மைத்திரேயர்கள் குப்தர் ஆண்டைப் பயன்படுத்தினர். குப்தர் ஆண்டு வளர்பிறையில் சைத்திய மாதத்தில் தொடங்குகிறது. கத்தியவார்ப் பகுதியில் வேரவல் (Veraval) கல்வெட்டில் குப்தர் ஆண்டு இறுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, கி.பி. 1264-ஆம் ஆண்டுக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள குப்தர் ஆண்டு 945 ஆகும். குப்தர் ஆண்டு 945 உடன் 319-ஐக் கூட்டினால் (945 + 319 = 1264) கிறித்து பிறந்த ஆண்டு வரும். சு.இரா.

**குப்தர் பேரரசு**: மௌரியப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு வடஇந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட சிறப்பு மிக்கபேரரசு குப்தப்பேரரசாகும். குப்தப் பேரரசர்கள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் 6-ஆம் நூற்றாண்டு வரையில் ஆட்சி புரிந்தனர். இந்தியவரலாற்றில் இவர்களுடைய காலம் பொற்காலம் எனக் கூறப்படுகிறது. இவர்களது ஆட்சியில் பேரரசு விரிவாக்கம் அடைந்தது மட்டுமன்றி இலக்கியம், கலை, கல்வி, அறிவியல், சமயம் ஆகிய எல்லாத் துறைகளும் சிறப்பு அடைந்தன.




குப்தர் பேரரசு

**முதலாம் சந்திர குப்தன்**: குப்தர்கள் சத்திரியவகுப்பைச் சார்ந்தவர்கள் என்றும் சாட்டுகள் என்றும் பல விதமாகக் கருதபபடுகின்றனர். குத கோத்திரத்தைச் சார்ந்ததாலும் அக்னிமித்திரரின் வம்சத்துடன் உறவு முறை இருந்ததாலும், இலிச்சாவி வம்சத்தின் குமார தேவியை முதலாம் சந்திரகுப்தன் மணந்து கொண்டதாலும் அவர்கள் அந்தணர்களாகவோ வைசியர்களாகவோ இருந்திருக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது. வங்காளத்திலிருந்து இவர்களின் ஆட்சி தொடங்கியது; மகதத்திலிருந்து அன்று. சில கல்வெட்டுகளிலிருந்து கடோத்கசகுப்தன் என்பவனே இவ்வம்சத்தின் முதல் மன்னனாக அறியப் படுகிறான். ஆனால் முதலாம் சந்திரகுப்தன் (கி.பி. 319–355) ஆட்சியில் இருந்து தான் குப்தர்களின் தெளிவான வரலாறு உள்ளதாக அறிஞர் ஆல்பிரூனி கூறுகிறார். ஆல்பிரூனி தான் சாகர்களின் சகாப்தத்திற்கும் (கி.பி. 78) முதலாம் சந்திரகுப்தனின் ஆட்சிக்கும் இடைப்பட்ட காலம் 241-ஆண்டுகள் என்று சரியாகக் கணக்கிட்டுக் கொடுத்துள்ளார். இவ்வடிப்படையில் தான் முதலாம் சந்திரகுப்தன் கி.பி. 319-ஆம் ஆண்டில் இவ்வமிசத்தைத் தோற்றுவித்தான் என்று தெரிகிறது.

**சமுத்திரகுப்தன்**: இவனையடுத்துச் சமுத்திரகுப்தன் (கி.பி. 355–375) ஆட்சிக்கு வந்தான். இவனது ஆட்சியின் சாதனைகளை விளக்கும் சான்று அலகாபாது கல்வெட்டாகும். அசோகனது சாதனைகளைக் குறிப்பிடும் இக்கல்வெட்டின் ஒரு பகுதியிலேயே சமுத்திரகுப்தனின் வெற்றிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனைச் சமுத்திரகுப்தனின் படைத்தலைவரும் புலவருமான அரிசேனர் வரைந்துள்ளார். அவ்வெற்றிகள் பாவாகவும் உரைநடையாகவும், 33வரிகளில் உள்ளன. இக்கல்வெட்டு வெற்றிகளை 4 பகுதிகளாகப் பிரித்து, தெற்கே தக்காணத்தின் 11 இராச்சியங்களையும், ஆரியவர்த்தத்தின் 9 மன்னர்களையும், மலைப் பகுதியின் குறுநில மன்னர்களையும், எல்லைப்புறப் பகுதிகளின் குடியரசுகளையும் இராச்சியங்களையும் வென்றார் எனக் கூறுகிறது.

கணபதி நாகசேனர், நாகநந்தர், அச்சுதர் ஆகிய மன்னர்களை வெற்றி கொண்டு மதுரா, அபிசாரா, பத்மாவதி ஆகிய பகுதிகளைச் சமுத்திரகுப்தன் கைப்பற்றினான். ஆனால் இவன் தெற்கு மண்டலத்தில் பெற்ற வெற்றிகளே புகழுக்குரியனவாகும். கோசலத்தின் மகேந்திரர், மகாகாந்தராவின் வியாக்ரராசர், கேரளாவின் மந்தராசர், பிட்டலபுரத்தின் மகேந்திரர், கொட்டூராவின் சுவாமி தத்தர், எரண்டபாலாவின் தாமனர், தேவராட்டிராவின் குபேரர், குட்டலபுராவின் தனஞ்சயர், பாலக்காவின் உர்சேனர், அவமுக்தாவின் நீலராசர், வேங்கியின் அத்திவர்மன், காஞ்சிபுரத்தின் விட்ணுகோபர்-ஆகிய மன்னர்கள் பன்னிருவரையும் வரிசையாகச் சமுத்திரகுப்தன் தோற்கடித்தான் என்று கூறப்பட்டுள்ளது.



குப்தர் நாணயங்கள்

சமுத்திரகுப்தன் இலங்கையின் மேகவர்மனுடன் அரசியல் தொடர்பு கொண்டு இந்திய நாட்டில் புத்த விகாரை ஏற்படுத்த அனுமதித்தான். இவன் எட்டு வகையான நாணயங்களை வெளியிட்டான். இசையில் வல்லவனான சமுத்திர குப்தன் வீணை வாசிப்பது போன்றதொரு நாணயத்தை வெளியிட்டான். இவன் வைணவ சமயத்தைச் சார்ந்திருந்தாலும் பிற மதங்களையும் ஆதரித்தான்.

சமுத்திரகுப்தனுக்கு மகன் இருவர் இருந்தனர். மூத்தவன் இராம குப்தன். இவனைச் சமுத்திரகுப்தன் தேர்ந்தெடுத்தான். ஆனால் சரிவர இவன் ஆட்சி புரியாததாலும், சாகர்களை அடக்க முடியாததாலும், இராம குப்தரின் தம்பி இரண்டாம் சந்திர குப்தன் சாகர்களை அடக்கி, அண்ணனையும் கொன்றுவிட்டு, அவன் மனைவி உருத்திரதேவியை மணந்துகொண்டு கி.பி.375-ஆம் ஆண்டு முதல் ஆட்சி புரியலானான் என்று கூறப்படுகிறது.

**இரண்டாம் சந்திரகுப்தன்** (கி.பி.380-413) 33 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவன் விக்கிரமாதித்தன் என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றான். மதுரா, உதயகிரி, தெகராலி ஆகிய 3 கல்வெட்டுகள் இவனது ஆட்சியின் சிறப்புக்களை எடுத்துக் கூறுகின்றன. இவன் வங்காளத்தையும் கத்தியவாரையும் மாளவத்தையும் வென்றான்; சாகர்களை அடக்கினான். முன்பு குசாணர்களுக்குட்பட்டிருந்த வடமேற்கு இந்தியப் பகுதிகளும் இவருக்குட்பட்டன.

தம் தந்தையைப் போன்றே இரண்டாம் சந்திர குப்தனும், தங்க நாணயங்களை வெளியிட்டான். ஒரு புறத்தில் கருடனும், மறு புறத்தில் இலக்குமியின் உருவமும் அதில் பொறிக்கப்பட்டன. இதனால் இவன் வைணவன் என்பது தெளிவு. இவனுக்கு நரேந்திரசந்திரா, தேவகுப்தா எனப் பல பட்டங்கள் இருந்தன. இவன் நாகவமிசத்தில் திருமண உறவு கொண்டான். தன் மகளை வாகாடகர் வமிசத்தின் இரண்டாம் உருத்திரசேனனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

இவன் தன் பேரரசை விடயாபதி, உபரிகா, மகா தண்ட நாயகா, என்று மாகாண, மாவட்ட அதிகாரிகளை நியமித்துச் சீராக ஆட்சிபுரிந்தான். விதிசா, உச்சினி, கௌசாம்பி, பாடலிபுத்திரம், காசி, பிரயாகை, வைசாலி, அயோத்தி, கயை ஆகியவை இவனது பேரரசின் சிறப்புமிக்க நகரங்களாகும்.

**பாகியான்**: இரண்டாம் சந்திரகுப்தன் ஆட்சியில்தான் பாகியான் (கி.பி.399-411) என்னும் சீனயாத்திரிகன் இந்தியாவுக்கு வந்தான். பாகியான் சூன் செங்கானு என்னும் தலைநகரை விட்டுப் புறப்பட்டுக் கோபி பாலைவனம், யார்கந்து, கோட்டான் பகுதிகள் வழியாக கி.பி. 402-இல் இந்தியாவை வந்தடைந்தான். அவன் 10 ஆண்டுகள் இந்தியாவில் தங்கினான்; ஆப்கானிசுத்தானுக்கும் சென்று திரும்பினான். புத்தரின் வாழ்க்கை வரலாற்றை அறிவதற்காகவும் பௌத்த நூல்களைத் திரட்டுவதற்காகவும் அவன் இந்தியாவிற்கு வந்தான். பாடலிபுத்திரம், கயா, காசி இராசகிருகம், கம்பினி ஆகிய இடங்களுக்கும் பாகியான் சென்றான். கிழக்கு நோக்கியும், பிறகு தெற்கு நோக்கியும் சென்று 14 நாள்கள் கடல் பிரயாணத்திற்குப் பிறகு இலங்கையை அடைந்தான். பாகியான் பல பௌத்த நூல்களைத் தன்னுடன் எடுத்துச் சென்றான். பாகியான் எழுதிய நூல் 'போகுவோசி' ('Fo-Kuo-CHI'- 'Record of Buddhist Kingdoms') என்பதாகும். சீன மொழியில் பாகியான் மொழி பெயர்த்துள்ள நூல் 'மகாபரி நிர்வாண சூத்ரா' என்பதைப் பற்றியதாகும்.

இரண்டாம் சந்திரகுப்தனை அடுத்து முதலாம் குமாரகுப்தன் (கி.பி.415-455) ஆட்சிக்கு வந்தான். இவன் சிரீமகேந்திரா, அதா மகேந்திரா, அசுவமேத மகேந்திரா, மகேந்திரகல்பா, மகேந்திரா சிம்கா ஆகிய பட்டங்களைப் பெற்றிருந்தான் இவன் ஆட்சி அமைதியும் வளமையுமுடையதாக இருந்தது. குமாரகுப்தனை அடுத்து இசுகந்தகுப்தன் ஆட்சிக்கு வந்தான் இவனுக்குப் பிறகு வேறு வாரிசு இல்லாததால் புருகுப்தன் ஆட்சிக்கு வந்தான். பிறகு நரசிம்மன் (கி.பி. 469-473) இரண்டாம் குமார குப்தன் (கி.பி. 473-

477) புத்த குப்தன் (கி.பி. 477-495) எனத் தொடர்ந்து குப்தர்கள் ஆட்சிபுரியலாயினர். அதன் பின்னர் மூன்றாம் குமாரகுப்தன், மகாசேன குப்தன், இரண்டாம் தேவகுப்தன், மாதவகுப்தன், ஆதித்ய சேனன் என்று வரிசை வரிசையாகப் பேரரசர்கள் ஆட்சிபுரிந்தாலும், இவர்கள் ஆட்சியில் குப்தப் பேரரசர்களின் பழைய பொலிவு குறைந்துவிட்டது. இரண்டாம் சீவித குப்தன் என்பவன்தான் குப்தர்களின் பேரரசில் இறுதியான மன்னனாகவும், பெயரளவில் ஆட்சி புரிந்தவனாகவும் கருதப்படுகிறான்.

குப்தர்களின் பேரரசு இறுதியாகக் கௌடர்களாலும், ஊணர்களாலும் அழிக்கப்பட்டது. புசுயமித்திரர்கள் என்பாரும் இப்பேரரசை நிலைகுலையச் செய்தனர். வெளிநாட்டு ஊணர்களின் மன்னர்களான தோரமானா, மிகிரகுலா என்போர் பல முறைகளில் குப்தப் பேரரசுப் பகுதிகளைத் தாக்கி வெற்றி கண்டனர். மாளவத்தின் மன்னன் யசோதர்மனும் இப் பேரரசு அழிவதற்குக் காரணமாக இருந்தான்.

**அரசும் சமூகமும்**: குப்தர்களுடைய ஆட்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. பேரரசின் எல்லைகள் பாதுகாக்கப்பட்டன. பேரரசர் தெய்விகப் பிறவி எனக் கருதப்பட்டார். இறையுரிமைக் கோட்பாடு ஏறத்தாழ செயற்பாட்டிலிருந்தது. அரசியல், நிருவாகம், நீதி, இராணுவ அதிகாரங்கள் ஆகியவை மன்னரிடம் இருந்தன. பேரரசருக்கு, அமைச்சர் முதலானோர் ஆலோசனைகளைக் கூறினர். நாடு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

குப்தப் பேரரசர்களது ஆட்சியில் தண்டனைகள் கடுமையாக விதிக்கப்பட்டன. குற்றவாளி யானையின் கால்களால் மிதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவான். மன்னரை எதிர்த்துச் சதி செய்தவரின் கண்கள் பிடுங்கப்பட்டன. ஆனால் மாகாண, மாவட்ட, நகர கிராம நிருவாகங்கள் செம்மையாக நடைபெற்றதால் பொதுவாகச் செழிப்புக் காணப்பட்டது. நான்கு சமுதாயப் பிரிவுகள் இருந்தன. சமுதாயக் கட்டுப்பாடு இறுகியிருந்தது. 'சதி என்னும் கொடிய பழக்கம்' இருந்தது. கைம்பெண் மறுமணம் ஆதரிக்கப் படவில்லையாயினும் பெண்களுக்கு உயர்ந்த நிலை அளிக்கப்பட்டிருந்தது.

**பொற்காலம் - இலக்கியம்**: கல்வி, இலக்கியம் ஆகியவை உயர்நிலையுற்றன. நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள் ஆகியவை ஒழுங்குபடுத்தப்பட்டன. 'பஞ்சதந்திரக் கதைகள்' இக்காலத்தில் இயற்றப்பட்டன. காளிதாசர் 'சாகுந்தலம்' என்ற நாடகத்தை இயற்றினார். உலகத்தின் முக்கியமான 100 இலக்கியப் படைப்புகளுள் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது. 'குமார சம்பவம்' 'மேகதூதம்', 'இரகுவம்சம்' 'விக்கிரம ஊர்வசியம்' முதலியனவும் காளிதாசரின் பிற இலக்கியப் படைப்புகளாகும். சூத்திரகா என்பவர் மற்றொரு குறிப்பிடத்தக்க நாடகாசிரியர்; விசாகதத்தர், 'முத்திரா ராட்சசம்' என்னும் நாடகத்தை இயற்றினார். பாரவி என்பார் 'கிராதார்ச்சுனீயம்' என்னும் நாடகத்தை இயற்றினார். 'பட்டி' என்னும் மற்றொரு புலவர் 'பட்டிகாவியம்' என்னும் காவியத்தை இயற்றினார்.

**அறிவியல்**: குப்தப்பேரரசு இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகள் மட்டுமல்லாது அறிவியல் துறையிலும் சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டது. எடுத்துக் காட்டாக இன்று உலக வழக்கில் உள்ள 1,2,3,4,5 போன்ற அரேபியர்களின் எண்களை ஆரிய பட்டர் போன்ற கணித வல்லுநர்கள் முன்பே பயன்படுத்தினர் என அறிஞர்கள் கருதுகின்றனர். இவர்கள் '0'- வின் (Zero) மதிப்பை அறிந்திருந்ததனால் ஆரிய பட்டர், வராகமிகிரர், பிரமகுப்தர் என்னும் அறிஞர்கள் கணிதத்திலும், வானசாத்திரத்திலும் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். ஆரியபட்டர் 'சூரியசித்தாந்தம்' என்ற நூலை எழுதி சூரியசந்திர கிரகணங்களின் காரணங்களை விளக்கினார். வராகமிகிரர் 'பிருகத்சம்கிதா' என்னும் வானஇயல் நூலை எழுதினார். பிரமகுப்தரும் வானநூல் ஒன்றை இயற்றினார். வராகமிகிரர் 'இயஞ்ச சித்தாந்திகா', 'பிருகத் சாதகா' ஆகிய இரு நூல்களையும் எழுதினார்; கணித சூத்திரங்கள் பலவற்றை உலகுக்கு அளித்தனர்.

**கலைகள்**: இப்பேரரசின் கீழ் நுண்கலைகள் அனைத்தும் வளர்ச்சி பெற்றன. மதுரா, வாரணாசி, பாட்னா ஆகியவை கலைகளின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. கலையும் சமயமும் இணைந்தன. சாரநாத்தில் அமர்ந்த நிலையில் உள்ள புத்தர் சிலையும், மதுராவில் நிற்கும் நிலையில் உள்ள சிலையும், சுல்தான்கஞ்சில் கம்பீரமான நிலையில் உள்ள செப்புச் சிலையும், குப்தர்காலக் கலைத்திறனை விளக்குகின்றன. கௌதம புத்தர் அழகிய சுருட்டைமுடியுடன் கம்பீரமாக நிற்பது போல் வடிக்கப்பட்ட செப்புச்சிலை உருவம், சைவ, வைணவ கடவுள்களின் உருவங்கள் ஆகியவை இக்காலத்தில் வடிக்கப்பட்டன. மதுரா, கர்வால், உதயகிரி ஆகிய இடங்களில் விட்டுணுவின் சிலைகளும், நரசிம்ம அவதாரம் போன்ற சிலைகளும் காணப்படுகின்றன.

புதுதில்லிக்கு அருகிலிருக்கும் மெகராலி இரும்புத் தூண் குப்தர்களின் கலைத் திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இத் தூணின் உயரம் 25' 8".

ஆகும்; மொத்த எடை 6 கண்டிகளாகும் (Tons). மெகராலி இரும்புத்தூண் இந்தியக் கலைஞரின் நுணுக்க வேலைப்பாட்டிற்கும் சிறப்ப மேதைத்தனத் திற்கும் சிறந்த புகழாரமாகும் எனப் பெர்சிபிரௌன் கூறுகிறார்.

சபல்பூர் மாவட்டத்தில் திக்வாவில் உள்ள விட்டுணு கோவில், பூமாராவின் சிவன் கோவில், சுதா ராமாப் பார்வதிகோவில், தேவ்கரின் தசாவதாரக் கோவில் ஆகியவை குப்தர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இவர்களின் கட்டுக் கோவில்கள் குட்டையாகவும் தட்டையாகவும் உள்ளன. உள் மண்டபங்களோ சிகரங்களோ இவற்றிற்குக் கிடையா. குகைக் கோவில்களும் இக்காலத்தில் குடைந்தெடுக்கப்பட்டன. அவைகளுள் 16, 17, 19 இலக்கமிட்ட விகார்களும் குகைகளும் குறிப்பிடத் தக்கனவாகும்.

அசந்தாக் குகையின் ஓவியங்கள் குப்தர்காலக் கலையின் முழுமைத் தன்மையையும் மிக உன்னத நிலையையும் விளக்குகின்றன. இலங்கையின் சிகிரியா, புதுக்கோட்டையின் சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் உள்ள ஓவியங்கள் போன்றே அசந்தா, பாகுக் (Bagh) குகை ஓவியங்களும் அமைந்துள்ளன. மெலிந்த இடையுடனும், அழகிய ஆடை அணிகலன்களுடனும், பின்னே வாரி முடிக்கப்பட்ட கொத்தான அழகிய கூந்தலுடனும் சித்திரிக்கப்பட்ட பெண்களின் உருவங்கள் உலகப்புகழ் பெற்ற அசந்தாக் குகைகளின் ஓவியக் காட்சிகளாகும். 1, 2, 16, 17, 19 இலக்கமிட்ட குகைகளில் சித்திரிக்கப்பட்ட காட்சிகள் பார்ப்போர் மனத்திலிருந்து என்றும் நீங்க முடியாதனவாகும். இவை போன்றே பாகுக்குகை ஓவியங்களும் பார்ப் போரை ஈர்க்க வல்லனவாகும்.

**நாணயங்கள்**: குப்தர்கள் பல நாணயங்களை வெளியிட்டுள்ளனர். முதலாம் சந்திரகுப்தர் அவரது மனைவி குமாரதேவி ஆகிய இருவரின் உருவங்களும் பொறிக்கப்பட்ட நாணயங்கள், லிச்சாவி வம்சத்துடன் கொண்டிருந்த தொடர்பு குப்தர்களின் மேன்மை ஆகியவற்றை விளக்குவதாக உள்ளன. நாணயங்களில் புலியைக் கொல்வது போன்ற காட்சியும், பெண் கடவுள் மீனின்மேல் நிற்பதுபோன்ற காட்சியும், யாழ் மீட்டுவது போன்ற காட்சியும், பெண் தெய்வமான இலக்குமியின் உருவமும், மன்னர் அசுவ மேத வேள்வி நடத்தும் காட்சியும், மன்னர் அரசியுடன் வீற்றிருப்பது போன்ற காட்சியும், போருக்குக் கோடரியை ஏந்திச் செல்வது போன்ற காட்சியும், சமுத்திரகுப்தருடைய நாணயங்களில் காணக்கிடக்கின்றன. இரண்டாம் சந்திரகுப்தரின் நாணயங்கள் சிம்மாசன நாணயங்களும், தாமரை மலரில் கடவுள் இலக்குமி வீற்றிருக்கும் நாணயங்களுமாக இருவகைப் பட்டனவாக விளங்கின. குதிரை வீரர் காட்சியைப் பொறித்த நாணயங்களை இரண்டாம் சந்திர குப்தர் வெளியிட்டார் என்றும் கூறப்படுகிறது. முதலாம் குமாரகுப்தர் இசுகந்த குப்தர் ஆகிய பேரரசர்களும் தத்தம் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். எச்.அ.

**குப்புசாமி சாத்திரி (15.12.1880 – 5.9.1943)**: குப்புசாமி சாத்திரி தஞ்சை மாவட்டத்திலுள்ள கணபதி அக்கிரகாரத்தில் 15.12.1880 அன்று பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சேதுராம ஐயர். இவர் சிறுவயது முதலே தம் பாட்டனாரிடமிருந்து வடமொழிச் சுலோகங்களைக் கற்றுத் தேர்ந்தார். இவருடைய மாமன், தமையனார் ஆகியோரும் வடமொழிப் புலமை மிக்கவர்கள். அவர்களும் சாத்திரிக்கு வடமொழிக் காவியங்களைக் கற்றுத் தந்தனர். இவ்வாறு வடமொழிப் புலமைமிக்க குடும்பச் சூழலில் வளர்ந்த காரணத்தினால் மிக விரைவிலேயே வடமொழியில் ஆழ்ந்த புலமை பெற்றார். பிற்காலத்தில் இவர் வடமொழிக்கு ஆற்றிய மிகப்பெருந் தொண்டுக்கு இச்சூழல் முதற்காரணமாய் அமைந்தது எனலாம்.

இவர் முதலில் திருவையாறு ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார்; அக்காலத்தே பழமானேரிச் (பழமாரநேரி) சுவாமிகளைக் குருவாக கொண்டு வடமொழிச் சாத்திரங்களைக் கற்றுவந்தார். பின்னர்த் திருவையாறு நீலகண்ட சாத்திரி, சந்திரசேகர சாத்திரி ஆகியோரிடமும் கற்று முறையான வடமொழிப்புலமை பெற்றார். இவர் கி.பி. 1896–இல் 'மெட்ரிகுலேசன்' தேர்வில் தேர்ச்சி பெற்றுத் தஞ்சாவூர் எசு.பி.சி. கல்லூரியில்(S.P.G. College) தத்துவம் பயின்று 1900–இல் இளங்கலைப் பட்டம் பெற்றார். அதன்பின் சாத்திரங்களைத் தொடர்ந்து கற்று 1905–இல் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

சாத்திரியின் புலமைத்திறம் பற்றிக் கேள்வியுற்ற வி. கிருட்டிணசாமி ஐயர் தாம் நிறுவிய சென்னை வடமொழிக் கல்லூரியின் முதல் முதல்வராகக் குப்புசாமி சாத்திரிகளை நியமித்தார். அக்கல்லூரியில் 1906 முதல் 1910 வரை முதல்வராக அமர்ந்து பல அறிஞர்களுக்கும் வழிகாட்டினார். பின் 1910 முதல் 1914 வரை திருவையாறு வடமொழிக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றினார். சென்னை மாநிலக் கல்லூரியின் வடமொழித்துறைப் பேராசிரியராகவும், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிநூலகக் காப்பாளராகவும் 1914 முதல் 1936 வரை அமர்ந்து வடமொழி, சுவடிப்பதிப்பு ஆகிய இருதுறைகளிலும் பெருந்தொண்டாற்றினார். இவர் 1936 முதல் 1940

வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வடமொழித் துறையில் மதிப்புறு பேராசிரியராகப் பணியாற்றினார். சாத்திரி, தம் பணிக்காலத்தில் தமிழ் அகராதிக்குழு, சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை ஆகியவற்றின் உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழக வடமொழிப் பாடத் திட்டக்குழு, கல்விப் பேரவை ஆகியவற்றின் தலைவராகவும் பணியாற்றினார்.

சாத்திரி, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகச் சுவடிகளை அடைவுபடுத்தி விளக்கத்துடன் 58 தொகுதிகளாக வெளியிட்டார். 1931-இல் வீணா வாசவதத்தா என்னும் காவியத்தையும், 1932-இல் துவன்யா லோகம் என்னும் நூலையும், 1936-இல் மண்டன மிசுராவின் பிரம்மசித்தியினையும் ஆராய்ச்சி முன்னுரைகளோடு வெளியிட்டார். பேராசிரியர் எம்.இ. ரங்காச்சாரியா உதவியுடன் பத்ய சூடாமணி என்னும் நூலையும் (1921), டி.வி. இராமச்சந்திர தீட்சிதருடன் விப்ரம விவேகா என்னும் நூலையும் (1932) பதிப்பித்தார். இந்தியத் தருக்கம் குறித்து ஒரு நூலையும், இந்தியத் தத்துவம், வடமொழி சாத்திரம் குறித்துப் பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் சுமார் 65 ஆய்வுரைகளை இவர் வழங்கியுள்ளார். சென்னை வடமொழிக் கழகத்தை 1926-இல் நிறுவி அதன் முதல் தலைவராகவும் பொறுப்பேற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் கீழ்த்திசை ஆய்வு நிறுவனம் ஏற்படுத்தி அதற்கென ஓர் ஆண்டிதழையும் தொடங்கி வைத்தார்.

காசியில் இருந்த பாரத தர்ம மகாமண்டலம் 1926-இல் இவருக்கு 'வித்யா வாசசுபதி' என்ற பட்டத்தையும், இந்திய அரசு 1927-இல் 'மகாமகோபாத்தியாய' என்னும் பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தன. இத்தகு சிறப்புப் பெற்ற வடமொழிப் பேரறிஞராக விளங்கிய மகாமகோபாத்தியாய குப்புசாமிசாத்திரி 5.9.1943-இல் காலமானார். இவர் நினைவாக 1944-இல் சென்னையில் நிறுவப் பெற்ற 'குப்புசாமி சாத்திரி ஆராய்ச்சி நிறுவனம்' இவருடைய புலமைத் தொண்டினை நினைவுறுத்திய வண்ணம் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. அ.அ.ம.

***குப்புசாமி சாத்திரி ஆராய்ச்சி நிறுவனம்* (1944)**: குப்புசாமி சாத்திரியின் நினைவாக அவர் விட்டுச் சென்ற ஆய்வுப் பணியைத் தொடர்ந்து செய்வதைக் குறிகோளாகக் கொண்டு 1944-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் 'குப்புசாமி சாத்திரி ஆராய்ச்சி நிறுவனம்' சென்னையில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் சென்னை, மைலாப்பூரில் உள்ள வடமொழிக் கல்லூரி வளாகத்தில் இந்திய அரசு நிதியுதவியுடன் இப்போது செயற்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் முதல் தலைவராக வி.எசு. சீனிவாச சாத்திரி பொறுப்பேற்று இந்நிறுவனம் கால் கொள்வதற்கு அடிப்படை அமைத்தார். அவருக்குப் பின்னர் இந்தியாவின் மிகச் சிறந்த பேரறிஞர்களான டி.ஆர். வேங்கடராமசாத்திரி, டாக்டர் எசு. இராதாகிருட்டிணன், டாக்டர் ஏ. இலக்குமணசாமி முதலியார், டி.எல். வேங்கடராம ஐயர், டி.வி. விசுவநாத ஐயர் போன்றோர் தலைவராகவும், துணைத் தலைவராகவும் அமர்ந்து இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்துள்ளனர். இந்நிறுவனம், இந்தியாவிலுள்ள கீழ்த்திசை ஆய்வு நிறுவனங்களில் சிறந்த ஒன்றாக இருப்பதற்கு முக்கிய காரணமாக டாக்டர் வி. இராகவன் அவர்களின் தொண்டு அமைந்தது. அவர் இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் செயலாளராக அமர்ந்து இதன் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றினார்.

உலகத்தின் பல பகுதிகளிலும் உள்ள அறிஞர்கள் இந்நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் நார்மன் பிரௌன், பாரிசு நகரைச் சேர்ந்த பேராசிரியர் சான் பிலியோசா ஆகியோர் இந்நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

இந்நிறுவனத்திலுள்ள நூலகத்தில் 30,000க்கும் மேற்பட்ட பல்துறை நூல்கள் உள்ளன. குப்புசாமி சாத்திரி, டாக்டர் இராதாகிருட்டிணன், வி.எசு. சீனிவாச சாத்திரி, மைசூரைச் சேர்ந்த பேராசிரியர் எம். இரியன்னா போன்ற பல பேரறிஞர்களால் அளிக்கப்பட்ட புத்தகங்களும் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கீழ்த்திசைக் கலை ஆய்வை ஊக்குவித்தல், ஆய்வாளர்கள் கலந்துரையாட அவ்வப்போது கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்கங்கள் ஆகியவற்றை அமைத்தல், ஆய்விற்கு உதவும் வகையில் நூலகத்தை அமைத்துச் செயற்படல், கீழ்த்திசை மற்றும் இந்தியவியல் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடல் ஆகியவற்றை இலக்குகளாக வைத்து இந்நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் கீழ்த்திசை ஆய்விதழை வெளியிடுவது மட்டுமன்றி, இந்நிறுவனம் இலக்கியம், சோதிடம், மருத்துவம், மதம், சாத்திரம் ஆகிய பல துறை நூல்களையும் வெளியிட்டுள்ளது. பேராசிரியர் குப்புசாமி சாத்திரியின் கட்டுரைகளையும் இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. மேலும், தொல்காப்பியர்

பகுதிகளை விளக்கக் குறிப்புகளுடன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுப் பெரும்பணி ஆற்றியுள்ளது.

இந்நிறுவனம் குப்புசாமி சாத்திரியின் நூற்றாண்டு விழாவினை 1981-இல் கொண்டாடியது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் வடமொழிப் புலமை மிக்க அறிஞர்களும் ஆர்வலர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவ்விழாவில் வடமொழி, வடமொழி இலக்கியம், சமயம், தத்துவம், சமூக அறிவியல், தமிழ் முதலான பல துறைகளிலும் ஆய்வுக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

ஆய்வு மாணவர்களுக்காக வடமொழி வகுப்புகளும் இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இந்தியவியல் தொடர்பான பல பொருள்களில் அறிஞர்களை ஈடுபடுத்தி ஆய்வுப் பணி தொடர இந்நிறுவனம் பெருந்தொண்டு ஆற்றி வருகிறது.

அ.அ.ம.

**குப்புசாமி நாயுடு, கோ.:** கோவையைத் தொழில் நகராக மாற்றியதற்கு மூலகாரணமாக விளங்கிய குடும்பங்களுள் பாப்பநாயக்கன்பாளையம் குப்புசாமி நாயுடு குடும்பம் குறிப்பிடத்தக்க ஒன்று. பாப்பநாயக்கன்பாளையம் பெரிய கோவிந்தசாமி நாயுடு உப்பிலிபாளையம் ரங்கம்மாள் ஆகியோர்க்கு மைந்தராக கி.பி. 1884-ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். இளவயதில் உப்பிலிபாளையம் ஊராட்சிப் பள்ளியிலும், பிறகு கோவை புனித அந்தோணியார் பள்ளியிலும் கல்வி கற்றார். ஆனால், பள்ளிப் படிப்பை முற்றிலும் முடிக்காமலேயே, தம் குடும்பத்திற்குச் சொந்தமாக இருந்த வேளாண்மை நிலங்களில் தம் கவனத்தைத் திருப்பினார்.



குப்புசாமி நாயுடு, கோ.

வேளாண்மைத் துறையில் மட்டும் முயல்வது போதாது என்று கருதி, வணிகத்துறைகளிலும் முயற்சி செய்ய விரும்பி, 1905-ஆம் ஆண்டு, புகையிலை வணிகத்தில் ஈடுபட்டார். சில மாதங்கள் கழித்து இவர் பருத்தி வணிகத்தில் முழுமூச்சுடன் இறங்கினார். அப்போது கோவையில் மிகச் சில பருத்தி ஆலைகளே யிருந்தன. முதலில் பருத்தியிலிருந்து கொட்டைகளை நீக்கித் தூய்மையாக்கி அதனைப் பருத்தி ஆலைகளுக்கு அனுப்புவதற்காக ஒரு பொறி நிலையத்தைத் தொடங்கினார். அதன் தொடர்ச்சியாக 1908-ஆம் ஆண்டு 'இலட்சுமி மில்சு' என்று இப்போது மிகப் புகழ் பெற்றுள்ள பஞ்சாலையை உருவாக்கினார். பருத்தி விதை நீக்கும் ஆலை மற்றும் நெசவாலைகளின்மூலம் இவர் நகரத்தின் முன்னணித் தொழில் வித்தகராக வளர்ச்சி பெறத் தொடங்கினார். இராலி, ஒல்காட்டு, படேல், சப்பான் வணிகக் குழுமம் போன்று அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த அனைத்துலக வணிக நிறுவனங்களுடன் இவர் தொழில் உறவு கொள்ளத் தொடங்கினார். முதல் உலகப் போரை ஒட்டிய கால கட்டத்தில் பருத்தி விலை வரையறையின்றி ஏறி இறங்கிக் கொண்டிருந்த வேளையில் இவருடைய கூர்மையான எதிர்கால உய்த்துணர் திட்டங்களால் பெருமளவு பொருள் ஈட்டத் தொடங்கினார். அந்த நிலையில் கோவை பருத்தி வணிகத்தைப் பம்பாயுடன் இணைத்து வளர்த்த பெருமையாளர்களின் முன்னோடி இவர். அந்தச் சமயத்தில் தொழில் மேதை சி.டி. நாயுடு (G.D. Naidu) அவர்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இவர் தொடங்கிய பருத்தி நெசவாலை படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்தபோது, அவ்வப்போது மிகவும் புதிய பொறியமைப்புகளை ஏற்று நிறுவி அதனை நவீனப்படுத்தி வந்தார். 'பைகாரா' மின் திட்டம் 1929-ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கிய பின்னர்க் கோவை தொழில் மயமாவதில் ஒரு விரைவு தோன்றியது. அதன் முதற் படி குப்புசாமி நாயுடு தொடங்கிய 'கோயமுத்தூர் காட்டன் மில்' எனலாம். இவ்வாறு இவரால் தொடங்கப்பட்ட சிறு பருத்தி நெசவாலை விரிவாக வளர்ந்து, இன்று பல பருத்தி ஆலைகள், தொழிற்கூடங்கள் வணிக நிறுவனங்கள் உள்ளடங்கிய பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ளது.

கோவையைத் தொழில் மயமாக்கிய முன்னோர்களுள் ஒருவரான குப்புசாமி நாயுடு சமூக, தேச நலன்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் 1921-இல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்; 1930-இல் தம் புதல்வர் சுந்தரத்தை வேதாரணியம் உப்புச் சத்தியாகிரகத்திற்கு அனுப்பிவைத்தார். இவர் நகராட்சி உறுப்பினராகவும் சில காலம் பணியாற்றினார்,

குப்புசாமி நாயுடு அவர்களின் தனிப் பண்பு நலன் களைப் பொறுத்தவரை குறிப்பிடத் தக்கவை அவரு டைய விடாமுயற்சியும், எதையும் சோதித்துப் பார்க் கும் ஆர்வமும் ஆகும். இவர் மற்றவர்கள் அஞ்சும் நிலை களில் துணிவுடன் செயற்படுவார்; தொழிலாளர்களி டையே சரிசமமாக இறங்கி நின்று பணியாற்றுவார்; ஏற்றத்தாழ்வு கருதாமல் அன்புடன் பழகுவார். தாமே முயன்று, தாமே உழைத்து இவர் உருவாக்கிய தொழி லமைப்பு இன்று கோடிக்கணக்கான மூலதனத்துடன், ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களுக்கு வாழ்வளித்து வருகிறது. இவர் 1942-இல் காலமானார். இவருடைய மறைவுக்குப்பிறகு இவர்தம் புதல்வர்கள் 'குப்புசாமி நாயுடு அறநிலையம்' அமைத்து, மருத்துவ மனை, கல்விச் சாலைகள் போன்ற அறச் செயல் களுக்காகக் கோடிக்கணக்கில் நிதியளித்து அறப்பணி செய்து வருகின்றனர். இரா.ச.

**குப்புசாமி முதலியார், ஆரணி** 20-ஆம் நூற்றாண்டின் இரண்டாம் காற்பகுதியில் (1926-1950) புகழ்பெற்று விளங்கிய தமிழ்ப் புதின ஆசிரியர் ஆவார். அக்காலத்தில் நடுத்தரக் குடும்ப மக்களி டையே புத்தகம் படிக்கும் பழக்கம் பரவுவதற்குப் பெருமளவு காரணமாயிருந்த எழுத்தாளர் மிகச் சில ருள் இவர் ஒருவர்.

இவர் நாகவேடு முனிசாமி முதலியார் நடத்திய 'ஆனந்த போதினி' என்னும் திங்கள் இதழின் ஆசிரி யராகப் பணிபுரிந்தார். இவ்விதழ் அக்காலத்திலேயே இருபதாயிரம் படிகள் விற்பனையாகும் அளவுக்குப் புகழ்பெற்றிருந்தது. இவர்தம் புதினங்களுள் பல இவ் விதழில் தொடர்கதையாக வெளிவந்து, பின் நூல் வடிவம் பெற்றன.

இவர் ஏறத்தாழ நாற்பது புதினங்களை எழுதி யுள்ளார். அவற்றுள் பெரும்பாலன துப்பறி கதை களே. அவற்றுள் சில பல பாகங்களைக் கொண்டு மிக நீண்ட புதினங்களாக உள்ளன. எடுத்துக்காட் டாக, இவரது 'இரத்னபுரி இரகசியம்' ஒன்பது பாகங் களையும், 'ஞான செல்வம்மாள்' ஐந்து பாகங்களை யும் கொண்டவை.

இவர், ஒருநாளில் பலமணி நேரம் எழுதும் பழக் கம் உடையவர் என்பர். இவர்தம் புதினங்கள் பெரும் பாலும் ஆங்கிலப் புதினங்களைத் தழுவி எழுதப்பெற் றவை. அவை மூலநூல்களின் மொழிபெயர்ப்பாகவோ, தமிழ்ச் சாயலை முற்றும் ஏற்றுக்கொண்ட தழுவ லாகவோ அமையாமல், 'தமிழில் எழுதப்பட்ட பிற மொழிக் கதை' என்னும் வகையில் அமைந்தன. 'ஆனந்த சிங்கு', 'கிருட்டிணா சிங்கு', 'அர்ச்சுன சிங்கும் சுந்தரும்', 'கோகர்சான்' முதலிய புதினங் களில் இடம்பெற்ற பாத்திரங்களின் பெயர்களும், அவற்றின் மொழிநடையும், அவை தமிழ்நாட்டில் நிகழ்ந்தவையல்ல என்னும் எண்ணத்தைப் படிப்ப வர்க்கு ஏற்படுத்தின.

இவர்தம் புதினங்கள் பெற்ற வரவேற்பைக் கண்ட 'ஆனந்த போதினி'யின் உரிமையாளர் ஒவ் வொரு இதழிலும் ஒரு முழுப் புதினத்தை வெளியிடும் வகையில் 'மனமோகினி' என்னும் புதியதொரு மாத இதழைத் தொடங்கினார். ஆயினும், இவ்விதழ் சிறிது காலமே வெளிவந்து நின்றுபோயிற்று.

இவர்தம் புதினங்களுள் ஒன்று இவரது பிற புதி னங்களைப் போலத் தழுவலாக இல்லாமல் நேரடி மொழி பெயர்ப்பாக அமைகிறது. அலெக்சாண்டர் தூமாசு எழுதிய 'மாண்டி கிறிசுட்டோ பிரபு' (The Count of Monte Cristo) என்னும் பிரஞ்சுப் புதி னத்தை 'மாண்டிகிறிசுடோ' என்னும் பெயரில் இவர் மொழிபெயர்த்தார்.

இவர்தம் புதினங்களில் சமுதாய, அரசியல் கருத் துகள் எவையும் இடம்பெறவில்லை. ஆயினும், கதைச் சுவை கருதி அவை மக்களால் விரும்பிப் படிக்கப் பட்டன. இவர்தம் 'மின்சார மாயவன்', 'மஞ்சள் அறையின் மர்மம்', 'கற்கோட்டை' ஆகிய புதினங்கள் இவருக்கு மிகுந்த புகழைத் தேடித்தந்தன.

குப்புசாமி முதலியார் வேதாந்த நெறியில் ஈடு பாடு உடையவர். பகவத் கீதை, கைவல்லிய நவநீதம் ஆகிய நூல்களுக்கு விளக்க உரை எழுதி வெளியிட் டுள்ளார். ந.மெ.

**குப்பைக்கோழியார்** கடைச்சங்க காலத்தே வாழ்ந்த புலவராவார். எட்டுத்தொகை நூல்களுள் சில பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அத்தகு பாடல்களில் உள்ள சிறப்பான சொற் றொடர்களைத் தேர்ந்து, அதனையே அப்பாடலா சிரியரின் பெயராக்கி வழங்கியுள்ளனர். கல்பொரு சிறு நுரையார், ஓரேருழவர், குப்பைக்கோழியார் முதலிய புலவர்கள் இம் முறையில் பெயர் பெற்றுத் திகழ்பவராவர்.

இப்புலவர் இயற்றிய ஓரேபாடல், குறுந்தொகை யில் 305-ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. நெய் தல் திணையிலமைந்த இப்பாடல்,தோழி அறத்தொடு நிற்க, தலைவி தன் ஆற்றாமை புலப்படுமாறு பாடுவ தாக அமைந்துள்ளது.

ஒரு பெண்ணின் துன்பச் சூழலை வெளிப்படுத் தும் இப்பாடலைப் பெண்பாற் புலவரே பாடியிருக்க

வேண்டும் என்பாருமுளர். பலர் கண்டு மகிழப் போர்க்கோழிகள் பயிற்சி தரப்பட்டு ஒன்றோடொன்று போர் புரிய ஏவப்படுதலுண்டு. ஆனால், குப்பையில் இரண்டு கோழிகள் சினந்து உடற்றும்போது, அவை ஏவுவாரும் காண்பாருமின்றிச் சண்டையிட்டுத் தாமே மாயும். இங்குத்தலைவி, குப்பைக் கோழிகளின் போரைத் தன் காதல் துன்பத்திற்கு உவமையாக்கித் தான் தன் துன்பம் களைவாரின்றி வருந்துவதனைக் கூறுகிறாள். அன்றாட வாழ்வில் காணும் இக் குப்பைக்கோழிகளின் போர் நிகழ்ச்சியினையும் காதல் துன்பத்தினையும் வெளிப்படுத்தும் இச்சிறந்த பாடல் இயற்றியவரின் இயற் பெயர் தெரியாமையால், இதி லமைந்த தொடராலேயே பெயரமைக்கப்பெறும் சிறப்புற்று விளங்குகிறது. குரு.கோ.

**குப்ளாய்கான் (கி.பி. 1215-1294)**: செங்கிசு கானுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்தவர்களுள் தலைசிறந்த மன்னர். இவர் சீனாவில் மங்கோலிய (யூவான்-Yuan) வமிசத்தை நிறுவியவர். செங்கிசுகானின் நான்காம் மகனான தோலு அல்லது துளே என்பானின் (Tolui or Tule) நான்காம் மகனாகத் தோன்றினார் குப் ளாய்கான் (Kublai Khan). சீனா முழுமையையும் ஆண்ட, சீனரல்லாத முதல் மன்னரான இவர், வர லாறு கண்ட வேந்தர்களுள் முன்னணியில் நிற்பவர். சீனாவை ஆண்ட மாபெரும் மன்னராக விளங்கிய போதிலும் கீழை, மேலை நாடுகளால் மட்டுமன்றி, இசுலாமிய நாடுகளாலும் பேரரசர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர். தம் முன்னோர்களைப் போன்று, கொடியவராக நடந்து கொள்ளாமல், பரந்த மனப் பான்மையுடனும் கருணை உள்ளத்துடனும் ஆட்சி புரிந்தவர். இவர் பாராட்டத்தக்க வகையில் சீனப் பண்பாட்டு வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்.




குப்ளாய்கான்

குப்ளாய்கானின் அரசியல் வாழ்வு, இவர் அண்ணனான மங்குவின் ஆட்சிக் காலத்தில் தொடங் கியது. இவர் அண்ணன் இவரை கி.பி. 1252-இல் தம் அரசின் கிழக்குப் பகுதியினுடைய சிவில், மற்றும் இராணுவ அதிகாரியாக அமர்த்தினார். இவர் கி.பி. 1253-இல் சங்கம் மாவட்டத்தின் முழுமை பெற்ற ஆட்சியாளராக அமர்த்தப்பட்டார். தொடர்ந்து பல படையெழுச்சிகளில் இவர் பங்கு கொண்டார். இவர் கி.பி. 1252-இல் கேச்வன் மாநிலத்தின் தலைநகரான செங்-டூவைக் கைப்பற்றினார். இன்று யூன்னான் எனச் சொல்லப்படும் பண்டைய தாய் அரசான நான் சோவை கி.பி. 1253-56-இல் இவர் கைப்பற்றினார் (Tai Kingdom of Nan - Chao).

கான் மங்குவின் இறப்பிற்குப் பின் (கி.பி. 1257), மங்கோலிய பிரபுக்களால் அடுத்த கானாக கி.பி. 1260-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்குப் போட்டியாகத் தானே மன்னன் என்று பறைசாற்றிக் கொண்ட இவர் தம்பி அரிக் போக்கு கி.பி. 1264-இல் தோற்கடிக்கப்பட்டான். சுங் வமிசத்தார் மீது கி.பி. 1267-இல் படையெடுத்து, கி.பி. 1273-இல் கன் ஆற்றின் (Han river) இரு கரைகளில் அமைந்த இரட்டை நகரங்களான சியாங் யாங்கு, பான் செங்கு Hsiang - Yang, Fan Ch'eng) ஆகிய இரண்டையும் கைப்பற்றினார். இப்படையெழுச்சிக்குப் பின் பாயன் (Bayan) என்னும் படைத்தலைவன் குப்ளாய்கானின் படையெழுச்சிகளில் பங்கு கொண்டு அடுக்கடுக்காகப் பல வெற்றிகளைப் பெற்றான். இவன் சுங்கு வமிசத் தலைநகரான இலினானைத் தாக்கி, அரசனைக் கைது செய்தான். அதனால், முழுமையான சீன நாட்டிற்குக் குப்ளாய்கான் மன்னரானார்.

இவரது பேரரசு கொரியா முதல் அராபியப் பாலைவனம், மற்றும் கிழக்குப் போலந்துவரைபரவி யிருந்தது. இவர் மாபெரும் மங்கோலியப் பேரரசர் என்பதனை இவரது சகோதரரான பாரசீக குலாகு ஏற்றுக்கொண்டார். மத்திய ஆசியாவின் குவாய்டு (Qaidu) மட்டுமே இவர்தம் பகைவனாக இருந்தான். குப்ளாய்கானுக்குப் பலர் அடிபணிந்தனர். அன்னம், கொரியா ஆகியவை இவருக்கு முறையாகக் கப்பம் கட்டின. இவருக்கு கி.பி. 1294-இல் காம்பூசத்தின் குமர் அரசு (Khmer Kingdom of Kambuja) அடி பணிந்தது; பர்மா இவரது மேலாண்மையை ஓரளவு ஏற்றுக் கொண்டது. சாவாநாட்டு மசபாகித்து (Majapahit) அரசு கி.பி. 1293-இல் இவருக்கு அடி பணிந்தது. இவ்விதமான படையெழுச்சிகளால் இவர் தம் நிலையை வலுப்படுத்திக் கொண்டார்.

பீக்கிங்கை முதன்முதலில் தலைநகராக்கிய பெருமை குப்ளாய்கானைச் சாரும். இவர் நிருவாகத்திலும்




குப்ளாய்கான்• மங்கோலியப் பேரரசு

மேம்பட்டு விளங்கினார். இவர் முதன்முதலாக கி.பி. 1260-இல் சீனப்பட்டங்களைத் தரித்துக் கொண்டார். தனது வமிசத்திற்கும் சீனமொழியில் தயூவன் **(Tayuan = great origin)** எனப்பெயரிட்டார்.இவரது முயற்சியால் தொன்று தொட்டு வந்த சீனப் பழக்க வழக்கங்களும் மங்கோலியப் பண்பாடும் ஒன்று கலந்தன. மதத்துறையில் இலாமைசுடு புத்தமதம் **(Lamaist Buddhism)** ஆதரிக்கப்பட்டது. மன்னர் குப்ளாய்கானும் இம்மதத்திற்கு மாறினார். புத்தசங்கத்தின் **(Buddhist Church)** தலைவராக, திபெத்தின் இலாமாவாகப் பக்சுபா(Phags Pa)அமர்த்தப்பட்டார். திபெத்திய எழுத்தினை அடிப்படையாகக் கொண்டு மங்கோலிய மொழிக்கு கி.பி.1269-இல் புதிய எழுத்துகள் உருவாக்கப்பட்டன. ஆனால், இந்த எழுத்து சீன மொழியைப் போன்று செங்குத்தாக (Vertical)எழுதப்பட்டது. மதத் துறையில் சமரசக் கருத்துடைய இவர் பிற மதத்தினருக்கும் மதசுதந்திரம் வழங்கினார்.

சீனமொழியில் ஓரளவுதான் பேசத் தெரிந்த போதிலும், இவர் சீனமொழியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.சீனப்பண்பாட்டு வளர்ச்சிக்கும் இவர் தொண்டுபுரிந்தார். சீன வரலாற்றையும், ஆட்சிக் கலையையும் **(State craft)** இலக்கியங்களையும் மங்கோலிய மொழியில் பெயர்க்க ஏற்பாடுகள் செய்தார். முதன்முதலில் கி.பி.1216-இல்ஐரோப்பியப் பயணியர் சீனாவிற்கு வருகை புரிந்தபோது,அவர்கள் தம்மைக் காண அனுமதித்ததுடன், அவர்களுடன் உரையாடுவதிலும் மகிழ்ச்சிகண்டார். சீனாவின் பெருங் கால்வாயை கி.பி. 1289-இல் செப்பனிட்டுப் புதுப்பித்து, வடக்கு - தெற்கு நேரடிப் பாதையில் மாற்றினார்.

மங்கோலியர் என்று சொன்னாலே அனைவர் மனத்திலும் பயம் தோன்றுவது உண்டு. இதற்கு மாறாகச் சேற்றிலே பிறந்த செந்தாமரையாக மணம் வீசுபவர் குப்ளாய்கான். சீனப்பெரும் பேரரசராகத் திகழ்ந்த இவர், வரலாற்றில் மாபெரும் வீரராகவும், நாடு பிடிப்பாளராகவும் மட்டுமன்றி, இலக்கிய வளர்ச்சிக்கும் பண்பாட்டு மேன்மைக்கும் உன்னதமான ஆட்சிக்கும்பாடுபட்டவர் ஆவார்.சீன வரலாற்றறிஞர்களும் கூட இவரது இலக்கியத் தொண்டையும், பண்பாட்டுத் தொண்டையும் புகழ்ந்து எழுதியுள்ளனர்.

ம.இ.

**குபேரன்,** செல்வத்திற்குத் தலைவனாகக் கருதப்படுபவன். தமிழ்ப் பண்பாட்டு இலக்கிய வரலாற்றில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதலே குபேரனுடைய செல்வச் சிறப்புப் பேசப்பட்டு வந்துள்ளது.மிகப்பெரும் செல்வம் பெற்றவனாகக் குபேரனை அனைத்து மக்களும் அறிந்துள்ளனர். குபேரனைப் பற்றிய பல செய்திகள் புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

குபேரன் என்னும் சொல் அழகற்ற தோற்றமுடையவன் (கு-அழகற்ற, பேரம்-உடம்பு) எனப் பொருள்படும். பத்ம கற்பத்தில் விசிரவசுவிற்கும் இளியிளைக்கும் மகனாகத் தோன்றியமையால் இவன் வைச்சிரவணன் என்னும் பெயரையும் பெற்றான். விசிரவசுவின் வேறொரு மனைவிக்கு இராவணன் மகனாகத் தோன்றினான். எனவே, குபேரன் இராவணனுக்குத் தமையன் என்று கருதப்படுகிறான்.

குபேரன் முன்னொரு பிறப்பில் (வராக கற்பம்) காம்பிலி நாட்டை ஆண்ட வேள்விதத்தனுக்கு மகனாகத் தோன்றினான். அப்பிறப்பியல் குணநிதி என்று அழைக்கப்பட்டான். குணநிதியும் அவன் தாயும் செல்வத்தை அழித்தமையால் கோபம் கொண்ட வேள்விதத்தன், மனைவியையும் மகனையும் நாட்டைவிட்டுத் துரத்தினான். துரத்தப்பட்ட குணநிதி ஒரு சிவன் கோயிலுக்குச் சென்றான். அங்குள்ள பொருளைக் கவர்ந்துசெல்லத் திட்டமிட்டான். அனைவரும் உறங்கிய பின் வெளிச்சத்திற்காக விளக்கைத் தூண்டினான். பொருளைக் கவர்ந்து கோயிலிலிருந்து வெளியேறும்போது, அங்குப் படுத்திருந்த ஒருவனின் கால் இடறி விழுந்தான். சமையற்காரர்களால் பிடிபட்டுக் கொலைசெய்யப்பட்டான். அன்று சிவராத்திரியானதால், அவன் சிவதரிசனம் செய்ததாலும், விளக்கைத் தூண்டியமையாலும் ஏற்பட்ட புண்ணியத்தால்.

கலிங்கநாட்டு அருந்தமனுக்கு மகனாகப் பிறந்தான். தமன் என்ற பெயர் பெற்ற அவன் சிவனை நோக்கித் தவஞ்செய்தான். இறைவன் காட்சி அளிக்க உமை யம்மையின் ஒளியைக் கண்டு கண்பார்வை இழந்தான். மீண்டும் சிவனை வேண்டிப் பொற்கண் பெற்றான். அளகை நாட்டுக்கு அரசனாகும் பேற்றைச் சிவன் அவனுக்கு அருளினான். மேலும், அவனைத் தன் தோழனாகவும், அமைச்சனாகவும் சிவன் ஏற்றான் என்று காசிகாண்டம் குபேரனது முற்பிறப்பு வரலாற் றைக் கூறுகிறது.

குபேரன் எண்திசைகளில் ஒன்றான வடதிசைக் குக் காவலனாவான் என்றும், பதினெண்கணங்களில் இயக்கர்களுக்கும் கின்னரர்களுக்கும் தலைவன் என் றும் புராணங்கள் கூறுகின்றன. இவன் செல்வத்திற் குத் தலைவனாகி இருநிதிக் கிழவன் எனவும் கூறப் பெற்றான். விசிரவசுவிற்கு மகனாகத் தோன்றியமை யால் குபேரன், வைச்சிரவணன் என்னும் பெயராலும் குறிப்பிடப்பட்டுள்ளான். வில்லிபுத்தூரார் பாரதமும் பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணமும் குபேர னைத் தனதன் என்னும் பெயரால் குறிப்பிடுகின்றன. இவன் மனைவி சித்திரரேகை என்பவள். மகன் நள கூபரன் என்பவனாவான். குதிரை, கிளி, நரன் ஆகி யவை இவனுடைய வாகனங்களாகும். புட்பக விமானம் இவனுக்குரியது. இராவணன் குபேரனுடன் போர்செய்து அப்புட்பக விமானத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவன் கட்கம் எனப்படும் ஆயுதத்தை ஏந்தியவன். சீரக்கத்தாரை தனக்குரிய மாலையாக அணிந்தவன். இவனுடைய பூந்தோட்டம் சைத்திர ரகம் என்பதாகும். அ.அ.ம.

**கும்பகருணன்** இராமாயணத்தில் இடம் பெறும் கதை மாந்தருள் ஒருவன். இவன் விச்சிரவசு என்னும் முனிவருக்கும் கைகசி என்பாளுக்கும் மக னாய்ப் பிறந்தவன். 'பேரியல் இலங்கை வேந்தன் பின்னவன் எனக்கு முன்னோன்' என்னும் வீடணன் கூற்றிலிருந்து இவன் இராவணனுக்குத் தம்பியும் வீடணனுக்கு அண்ணனுமாவான் என்பது தெரிகிறது. 'ஞாலம் அடங்க விழுங்கினாலும் நிறையாத வயிற் றன்; நெடுவரை போல் நீண்ட உருவினன்; நிமிர் கையன்; பிறை போன்ற பற்களையும், பிலத்துவாரம் போன்ற அகன்ற வாயினையும் உடையவன்; பெருத்த விழியும், பெரும் பசியும் கொண்டவன்' என்று இவன் உருவத்தோற்றத்தை உத்தர காண்டம் எடுத்துரைக் கும். 'தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக் குறின் நாள்பல கழியும்', என்பது இவன் தோற்றம் குறித்த கம்பரின் படப்பிடிப்பாகும். 'ஆறு நூறு சக டத்தடிசிலும் நூறுநூறு குடங்களும்' கும்பகருணனின் உணவாகும் என்பதினின்றும் இவனது பெரும் பசியை ஒருவாறு ஊகித்தறியலாம்.

கும்பகருணன் சிங்கக் கொடியுடையவன்; சிவ பெருமானிடமிருந்து முத்தலைச் சூலத்தைப் பெற்ற வன். 'கூற்றையும் ஆடல் கொள்ளும் திறம் வாய்ந்த வன்; தேவர்களை முதுகு கண்டவன்; ஐராவதத்தை இந்திரனோடு சுழற்றியவன்; ஐராவதத்தின் தந்தத் தைப் பறித்தவன்; உயர்ந்த தவத்தினால் உயர்ந்த வரங்களைப் பெற்றவன்' என்று இவன் பெருமைகள் கம்பரால் பேசப்படுகின்றன.

'ஊழி நாளும் உறங்குவான்' என்பது கும்பகருண னின் சிறப்பு அம்சமாகும். இவன் இளமையில் மிக்க தவம் செய்கையில், இவனுக்கு வேண்டும் வரம் நல்கும் நோக்கொடு பிரமன் தோன்றினான். அக்கடவுளிடம், 'யான் என்றும் அழியாது நித்தியனாயிருக்க வேண் டும்' என்று வரங்கேட்கத் தொடங்கியவன் தேவர்கள் வேண்டுகோளின்படி கலைமகள் சூழ்ச்சியால் 'என்றும் யான் நித்திரையுள்ளவனாக இருக்கவேண்டும்' என்று வாய்தவறிக் கேட்க, அவ்வாறே வரம் கொடுக்கப்பட் டது. அதனால் இவன் என்றும் பெருந் தூக்கம் உடை யவனானான். இவன் உறங்குவதற்கென்றே ஏழு ஓசனை அகன்றுயர்ந்த மண்டபம் கட்டப்பட்டது. அத் தகு மண்டபத்துள் ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேட னைப் போலவும், கருங்கடல் பரந்து கிடந்தாற் போல வும், உலகத்து இருளெல்லாம் ஒருங்கு திரண்டாற் போலவும், தீவினை உருக்கொண்டாற் போலவும் கிடந்து உறங்கினான் என்று இவன் துயிலுங்காட்சி கம்பரால் காட்டப்பெறுகிறது. உறங்குகிற கும்பகரு ணனை இராவணனின் பணியாட்கள் சங்கு, தாரை சின்னங்கள் கொண்டு ஒலியெழுப்பியும், குதிரைகளை மேலே செலுத்தியும் எழவில்லை. ஆயிரம் முசலப் படை கொண்டடிப்ப இறந்தவன் எழுந்தாற்போல் எழுந்திருந்தான்.

கும்பகருணன் பிறப்பால் அரக்கர்குலத் தோன்ற லாயினும் அறந்துஞ்சும் உள்ளமுடையவன்; நீலன் என்னும் வானர வீரனுடன் மற்போர் செய்யப் புகுந்த போது அவன் படை தாங்காது வெறுங்கையனாய் நிற்பதைக் கண்ட கும்பகருணன் அவன்மேல் தன் முத் தலைச் சூலத்தைச் செலுத்தாது 'போர் அறம்' காத் தான். இராவணன் சீதையைச் சிறை கொண்ட செய லில் கும்பகருணனுக்கு உடன்பாடில்லை. இத் தீச் செய்கையால் தன் அண்ணன் இராவணனின் 'வான மும் வையமும் வளர்ந்த வான்புகழ்' அழிந்ததாகவே கருதுகிறான். பிறர்மனைகவர்ந்த செயல்'அறமாகாது, உயிர்க்கேடு உண்டாக்கும்' என்று ஒருமுறைக்கு இரு முறை தன் அண்ணனை எச்சரித்து அறிவுரை கூறுகி றான். 'திட்டியின்விடமன்ன கற்பின் செல்வியை விட் டிலையோ?' 'பொலன்கொள் தோளியை நன்றென நாயக விடுதி என வரும் இவனுடைய வாய்ச் சொற்

கள் இவன்தன் அறனவில் கொள்கைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.


போர்க்களத்தில் நிகழ்ந்த கும்பகருணன் வீடணன் உரையாடல் கும்பகருணனின் சிறந்த பண்பு நலன்களைக் காட்டுகிறது. 'இராமனை அடைந்தால் அவன் அபயம் அளிப்பான்; உலக வாழ்க்கையை ஒழித்து வீடுபேறு தருவான்; எனக்கு இராமன் தந்த செல்வத்து இலங்கையும் அரசுமெல்லாம் யான் உனக்குத் தந்து உன் ஏவலின்படி நிற்பேன்' என்றெல்லாம் இராமனுடன் வந்து சேருமாறு வீடணன் கும்பகருணனுக்கு ஆசை மொழிகள் கூறுகிறான். தன் தம்பியின் கட்டுரைகளைக் கேட்ட கும்பகருணன் வாழ்நாளின் சிறுமையையும், செல்வத்தின் புன்மையையும் தன் மனத்துட் கொண்டான். தான் உறங்கி எழும் போதெல்லாம் தன்னை மதுமாமிசங்களால் ஊட்டி வளர்த்துப் பின்னர்ப் போர்க்கோலஞ் செய்துவிட்ட அண்ணன் இராவணனையும் நீள நினைந்து பார்த்தான். தான் இராமனைச் சென்றடைவதை அண்ணனுக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகமாகவே கருதினான். வளர்த்து உருவாக்கி வாழ்வு தந்த அண்ணனுக்கு உயிர்கொடாது, உயிர் கருதி, உயர்வுதரும் நலன்கருதி இராமன்பால் அடைக்கலம் புகுவதை அவனது அறவுள்ளம் விரும்பவில்லை. தன்னை வளர்த்த தமையன் திறத்துச் செய்ந்நன்றி காட்டி மரணத்தை ஏற்றுக் கொள்வதையே உண்டவர்க்குரிய செயலாக அவன் உள்ளம் கருதிற்று. அவனும் அவ்வாறே செயற்பட்டான்.

கும்பகருணன் தன் தம்பி வீடணன்பால் அளவற்ற அன்பு கொண்டவன். அண்ணன் இராவணனின் மறச் செய்கை காரணமாகத் தம்பி வீடணன் இராமன்பால் அடைக்கலம் புகுந்தது சீரிய செயலே என்பது கும்பகருணனின் கருத்து. 'உனக்கு அது தக்கது' என்னும் சொற்களில் அக்கருத்தை வெளியிட்டுள்ளான். 'வாழ்மைதான் அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ' என்று இடித்துக் கூறி, இராமன்பால் அடைக்கலம் அடைந்த வீடணனை இராவணன் மீண்டும் காண்பானாகில், தம்பியென்றும் நினையாது அருளும் செய்யாது கொல்லுவான் என்பதை உணர்ந்த கும்பகருணன், இராமனுடன் போரிட்டு இறக்கும்போது, 'உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் ஒருபொழுதும் எம்பி பிரியானாக அருளுதி' என்று இராமனிடம் அருள் வேண்டும் காட்சி, வீடணன்பால் அவன் கொண்டுள்ள பேரன்பினைத் தெரிவிக்கும்.

குணங்களால் உயர்ந்த கும்பகருணன் போர்வலியாலும் உயர்ந்து தோன்றினான். அங்கதன், அனுமன், இலக்குவன், சுக்கிரீவன், நீலன் ஆகியோரைஎதிர்த்தவன் இறுதியில் இராமனை எதிர்த்துப் போரிட்டான். தன் கைகால்கள் இழந்தான்; செவியொடு மூக்குமிழந்தான். தன் விருப்பப்படியே கடலுள் அமிழ்ந்து தன் இறப்பைத் தழுவிக் கொண்டான். வீரமும், மானமும், நன்றியுணர்வும் மிக்க ஒருவனாகக் கும்பகருணன் திகழ்கின்றான்.

இரா.செ.

**கும்பகோணம்** தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சைக்கு 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள முக்



மகாமகக் குளம் – கும்பகோணம்

கிய நகரம். இதன் தெற்கில் அரிசிலாறும், வடக்கில் காவிரியும் ஓடுகின்றன. இது தஞ்சாவூர் மாவட்டத்தி லுள்ள வட்டங்களுள் (Taluk) ஒன்றாகவும் திகழ் கிறது. இது சங்க காலத்தில் குடந்தை என்றும், சம்பந்தர், அப்பர் தேவாரங்களில் திருக்குடந்தை, திருக்குடமூக்கு என்றும் குறிக்கப்படுகிறது. பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுகளிலும் இவ்வூர் குடமூக்கு என்றே பெயர்பெற்றுள்ளது. தக்கயாகப் பரணி பாடப்பட்ட கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இவ்வூர் 'கும்பகோணம்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வூரைச் சுற்றிலும் மிக முக்கியமான சோழர்காலத் தலங்களான பழையாறை, தாராசுரம், திருபுவனம், திருவிடைமருதூர் போன்றவை உள்ளன. கும்பகோணத்தில் உள்ள பல புகழ்மிக்க கோயில்களுள் மிகத் தொன்மையானது கும்பேசுவரர் கோயில் ஆகும். இதனைச் சம்பந்தரும் அப்பரும் பாடியுள்ளனர். திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் எனத் தேவாரத்திலும், 9-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலும் கூறப்படும் நாகேசுவரர் கோயில் ஊரின் நடுவில் உள்ள பெரிய கோயிலாகும். இக்கோயில் தொடக்கத்தில் பௌத்தம் சார்ந்திருந்து பிற்காலத்தில் சைவ சமயக் கோயிலானது என்று கருதுவாரும் உளர். இக்கோயிலில் வேலைப்பாடு



சாரங்கபாணி கோயில் - கும்பகோணம்

மிக்க கல்தேர் ஒன்று உள்ளது. சம்பந்தர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் குடந்தைக் காரோணம் பற்றிப் பாடியுள்ளார். காரோணம் என்பது சைவ சமயத்தின் ஒரு பிரிவாகிய காளாமுக சைவத்தின் தலைமையிடமாகும். சோழ நாட்டில் குடந்தைக் காரோணம், நாகைக் காரோணம் என இரண்டு உள்ளன.



இராமசாமி கோயில்-கும்பகோணம்

இப்போது பாணபுரீசுவரர் கோயில் என்று சொல்லப்படும் கோயிலே முன்னாளைய சோமநாதர் கோயிலாகும். இக்கோயில் இருந்த இடம் சோமநாத மங்கலம் என கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. கும்பகோணத்தின் ஒரு பகுதியே சோமநாத மங்கலம் எனப் பெயர் பெற்றுப் பின்னாளில் அப்பெயரை இழந்தது. மேற்கூறப்பட்ட சிவன் கோயில்களைத் தவிர இவ்வூரில் அபிமுகேசுவரர், கௌதமேசுவரர், கோமேசர், ஆதிவிசுவேசுரர், காளகத்திநாதர் ஏகாம்பரேசர் கோயில்களும் உள்ளன.

இவ்வூரில் பல வைணவக் கோயில்களும் உள்ளன. அவற்றுள் சாரங்கபாணி கோயில் ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பட்ட கோயிலாகும். இது பேயாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார் போன்றோரால் பாடப்பெற்றதலமாகும். இங்குள்ள நாட்டியக் கரணச் சிற்பங்களும் கோபுரத்தின் மேற்றளத்தில் உள்ள ஓவியங்களும் அழகுமிக்கன. இக்கோயிலுக்குரிய தேர்கள் இரண்டு மரவேலைப்பாடு மிகுந்து காணப்படுகின்றன.

சிற்பச் செழுமை வாய்ந்த இராமசாமி கோயில் நாயக்க மன்னரால் கட்டப்பட்டது. இராமாயணக் கதை ஓவியங்களாக இக்கோயிலில் தீட்டப்பட்டுள்ளது. சக்கரபாணி, பூவராகர், இலக்குமி நாராயணர், வரதராசர், இராமசுவாமி, நாராயணர், வேத நாராயணர், கோபாலர் போன்ற கடவுளர்களின் கோயில்களும் இவ்வூரில் உள்ளன.

வீரசைவம் மிகச் சிறப்பான நிலையைப் பெற்று இவ்வூரில் திகழ்ந்துள்ளது. 'குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய மடந்தனில் வாழ் வீரமாயேச்சுரர் வாழியே' என்னும் தக்கயாகப்பரணிப் பாடல் வரிகள் கி.பி. 12–ஆம் நூற்றாண்டளவில் இங்கிருந்த வீர சைவ மடத்தைக் குறிப்பிடுகிறது.

இவ்வூரின் மற்றொரு சிறப்பு 12 ஆண்டுகட்கு ஒரு முறை நிகழும் 'மகா மகம்' என்னும் விழா ஆகும். மகாமகக் குளத்து நீர்பற்றி நாவுக்கரசரும் சேக்கிழாரும் குறிப்பிடுகின்றனர். இக்குளத்தைச் சுற்றிலும் 16 மண்டபங்கள் உள்ளன. அவை தஞ்சை நாயக்க மன்னர்களின் அமைச்சர் கோவிந்ததீட்சிதரால் கட்டப்பட்டவை. அவற்றுள் ஒன்றில் இரகுநாத நாயக்கர் செய்த துலாபார தானம் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. மகாமகக் குளத்தில் நீராடுவதை இந்துக்கள் புனிதமாகக் கருதுவர். இதன் பரப்பு 10 ஏக்கர்.

கும்பகோணத்தில் காவிரியின் வடகரையில் அரசினர் ஆடவர் கல்லூரி ஒன்று உள்ளது. கணித மேதை இராமானுசம், சர் சி.பி. இராமசாமி ஐயர், அல்லாடி கிருட்டிணசாமி, உ.வே.சா. போன்ற அறிஞர் பெருமக்கள் இவ்வூருடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

கும்பகோணம் பட்டு நெசவு, உலோகச் சிற்பங்கள், வார்ப்புக் கலை, பாத்திரத் தயாரிப்பு முதலிய தொழில்களுக்குச் சிறப்புப் பெற்றது. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இவ்வூரைப் பற்றித் திருக்குடந்தைப் புராணம் பாடியுள்ளார். திருக்குடந்தை மகாத்மியம் முதலாகப் பல நூல்கள் இவ்வூரின் பெயர் தாங்கிப்பெருமை பேசும் வண்ணம் பிற்காலத்தில் சிற்றிலக்கியங்களாகத் தோன்றியுள்ளன. இந்நகரத்தின் மக்கள்தொகை 132,677 (1981).

சொ.சா.

**கும்பம்**: பன்னிரண்டு இராசிகளுள் பதினொன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. 27 நட்சத்திரங்களையும் மேடம் முதல் மீனம் முடியவுள்ள 12 இராசிகளுக்கும் பங்கிட்டு வைத்தால் இராசிக்கு இரண்டேகால் நட்சத்திரம் வரும். அவ்வாறு வரிசையாக வரும்போது கும்பத்திற்கு அவிட்டம் பின்னரையும் சதயமும் பூரட்டாதி முன் முக்கால் பகுதியும் வரும். இந்த நட்சத்திரக் கணக்குக்குள் பிறந்தவர்கள் கும்பராசிக்காரர்கள் ஆவர். அந்தக் கும்பராசியில் சந்திரன் இருப்பான். அதைக் கொண்டே சோதிடர்கள் கும்பராசி என்று உடனே கூறிவிடுவர். மேலும், பிறந்த நேரத்தைக் கணக்கிட்டு அதற்குத்தக்கவாறு இலக்கினத்தைக் குறிப்பர். கும்பலக்கினம் என்றால் கும்பத்தில் 'ல' என்று குறிப்பிட்டிருப்பர். சோதிடர்கள் இலக்கினத்தைத் தான் முக்கியமாகக் கொண்டு பலன் சொல்லுவார்கள். இராசியைக் கொண்டு பலன் சொல்வது அரிது. கும்பத்திற்குக் குடம், சாடி, குடங்கர் என வேறுபெயர்கள் உள என்று சூடாமணி நிகண்டு தெய்வப்பெயர்த் தொகுதியிலுள்ள 66–ஆம் செய்யுள் குறிப்பிடுகிறது. சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் முடியப் பன்னிரண்டு மாதங்களையும் மேடம் முதலிய பன்னிரண்டு இராசிகளுக்குப் பொருத்தி, மேடரவி முதலிய பெயர்களாகக் குறிப்பிடுவது வழக்கம். அம்முறையில் மாசி மாதத்திற்குக் கும்பரவி எனச் சோதிடர் பெயர் குறிப்பிடுவர்.

கும்பலக்கினத்திற் பிறந்தவன் மனத்திடமுடையவன்; எவ்வித வருத்தங்களுக்கும் அஞ்சமாட்டான்; சரீரகனமும் கருமை கலந்த நிறமுமுடையவன்; தூல சரீரி; தன்னைப் புகழ்ந்து கொண்டேயிருப்பான்; பிறரை இகழவும் செய்வான்; குள்ளமாயிருப்பான்; சிவந்த கண்ணையுடையவன்; பொதுவாகச் சுக வாழ்க்கையுள்ளவன்; அதிகம் படிப்பில்லாவிட்டாலும் இந்த இலக்கினமுடையான் தெரிந்த அளவில் உள்ள கல்வியைக் கொண்டே புகழ்பெறுவான்; மானமுள்ளவன்; பித்த ரோகமுடையவன்; செய்ந்நன்றி மறப்பவன்; பெண்மோகமுள்ளவன். இவன் 7,11 ஆம் வயதுகளில் வாகனம் தவறுதல் முதலிய கண்டமும் திடீரென்று நோய்களால் துன்பமும் அடைவான். அதில் பிழைத்தால் 19–ஆம் வயதில் சத்துருபயம் முதலியவற்றால் கண்டம் உண்டு. அதற்கும் மேல் இந்த லக்கினத்தைச் சுபர் பார்த்தாலும் இலக்கினத்தில் சுபர் இருந்தாலும் 80 வயது வரை ஆயுளோடிருப்பான் என்று சாதகாலங்காரம் 205–ஆம் செய்யுள் குறிப்பிடுகிறது. சோதிடப்பிரஞ்ஞான தீபிகை என்னும் நூலும் பக்கம் 340–இல் மேற்கண்ட செய்திகளையே வலியுறுத்திக் கூறுகின்றது.

இரா.ச.

**கும்பமேளா**: வட இந்தியாவில் கொண்டாடப்படும் விழாக்களுள் தலைசிறந்ததும், இலட்சக் கணக்கில் மக்கள் கலந்துகொள்ளக் கூடியதுமான ஒரு விழா. இக்காலத்தில் அலகாபாது என்று கூறப்படும் பிரயாகையில் திரிவேணி கூடலில் (சங்கமத்தில்) நடத்தப்படும் விழாக்களுள் குறிப்பிடத்தக்கது கும்ப

மேளா. மாசித் திங்களில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது தொன்மையான மரபாகும். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு தடவை கும்பத்தில் குருவும் சூரியனும் இணையும் காலம், கும்பமேளா என்னும் புனிதமான காலம். கும்பத்தில் நிகழும் கிரகராசிச் சேர்க்கையின் விளைவாக இது இப்பெயர் பெற்றது. வடநாட்டிலுள்ள அரித்துவாரம், பிரயாகை, உச்சயினி, நாசிக்கு ஆகிய தீர்த்தங்களில் மக்கள் இலட்சக் கணக்கில் கூடி நீராடுவர். குரு சூரியனை ஒரு தடவை சுற்றிவரப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன. எனவே, இவ்விழா பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு தடவை சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. இந்தியாவில் இவ்விழா தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது. கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் பிரயாகையில் நடைபெற்ற கும்பமேளா விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாகவும், அதனைத் தாம் அருசவர்த்தன மன்னனுடன் நேரில் கண்டதாகவும் சீனப் பயணி யுவான் சுவாங்கு குறிப்பிட்டுள்ளார்.

ம.இ.

**கும்பல்**: ஏதேனும் ஒரு காரணத்திற்காகக் கூடுகின்ற கூட்டம் கும்பல் (Crowd) எனப்படுகிறது. ஒழுங்கான அமைப்பின்றி, அப்போதைக்கு, நேரடியாகச் சந்தித்துக் கொள்கின்ற நெருக்கமான கூட்டமாக உள்ள மக்களைக் கும்பல் என மெக் ஈவர் (Mac Iver) குறிப்பிடுகிறார். இவ்வாறே, மசும்தார் (Majumdar) என்ற அறிஞரும், எதிர் பாராத விதமாக, எந்தவித முன்னேற்பாடுமின்றி ஆர்வத்துடன் தனிப்பட்ட மனிதர்களுக்குள் உருவாகின்ற கூட்டமைப்பினைக் கும்பல் என்கிறார்.ஆனால், கிம்பால்யங்கு (Kimball Young) என்ற அறிஞர், ஒரே நோக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பல மக்கள் கூடியிருப்பது கும்பல் எனப்படுவதாகக் கூறுகிறார். தூண்டுதல்களுக்காகத் தங்களுக்குள் மறுவினை (reaction) செய்கின்ற, அப்போதைக்கு ஒன்று கூடுகின்ற ஒரு மக்கள் தொகுப்பினைக் கும்பல் எனக் கொள்ளலாமெனக் கர்ட்டன் (Hurton), கண்ட்டு (Hunt) போன்ற அறிஞர்களும் கூறுகின்றனர். கும்பலும் கும்பல் நடத்தைகளும் பல அறிஞர்களால் வேறுபட்ட பல வழிகளில் ஆராயப்பட்டுள்ளன. இருப்பினும் சில பொதுவான பண்புகளையும், நடத்தைகளையும் கும்பல் கொண்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

கூட்டு வாழ்க்கை மனித சமுதாயத்திற்கு மிக அவசியமான ஒன்று எனினும், நிலையற்ற கும்பல் அவசியமானதன்று. ஒரு நிகழ்ச்சி அல்லது சமூகத்தின் மாறுதல் அல்லது எதிர்பாராவிதமாக ஏற்படும்விபத்து போன்றவை ஒரு கும்பல் கூடக் காரணமாகும். இக்கும்பலானது சமூக நிறுவனத்திற்குள் ஏற்படுவதால், நிலையற்றதாயினும் ஓரளவிற்கு ஒற்றுமையுடன் இருக்கின்றது. மனஎழுச்சியானது (Emotion) கும்பலில் இருக்கும் மக்களுக்கு ஒரு கூட்டு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. அனைத்து மக்களுக்கும் ஒரே அளவில், ஒரே நேரத்தில் உணர்ச்சி எழுவதால் சில சமயங்களில் கும்பலின் நடத்தையானது எல்லை மீறியும் பயனற்றும் போகிறது.

கும்பல் என்பது ஒரு முறைப்படுத்தப்படாத அல்லது கட்டுப்பாடற்ற ஒரு குழுவாகும். கூடுபவர்களுக்குள் காணப்படும் இடைவினையானது (Interaction) பொதுமன எழுச்சியைக் கொண்டு செயற்படுகிறது. சில சமயங்களில் அளவுக்கு மீறிய தவறான உணர்ச்சி உடையவர்களாகவும் (Fanatic) மாறுகின்றனர். மேலும், தத்தம் ஆளுமையை இழந்து கீழ்நிலையில் இயங்குகின்றனர். அனைவரும் ஒன்றுகூடிச் செய்வதால் அவர்களிடையே பாதுகாப்பு, வலிமை அல்லது ஆற்றல் போன்றவை காணப்படுகிறது. அனைவரும் ஒரே நோக்கத்துடன் முறையான அல்லது முறையற்ற செயலைச் செய்வர். அதாவது, கூக்குரல், மெய்ப்பாட்டசைவு (Gesture), தோற்ற அமைவு (Posture) போன்ற இயல்பூக்கங்களைக் கொண்டு தாமாகவே செயற்படுகின்றனர். அந்நேரங்களில் மனிதனுடைய பகுத்தறிவு, சிந்தனை, முன்னறிவு ஆகியவை செயற்படுவதில்லை; பொதுவாகக் கும்பலிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தனது செயல்களைச் சீர் தூக்காது செயற்படுகிறான். எடுத்துக்காட்டாக, கிளர்ச்சி (Riot), வெறி (Fad), மன மாறாட்டம் (Craze), பீதி (Panic), மிரள் திறனோட்டம் (Stampede) போன்றவை கும்பலின் முக்கிய பண்புகளாகும்; இத்தகைய பண்புகளைப் பிற குழுக்களில் காண முடியாது. மக்களுடைய சிலிர்ப்பு (Thrill), இதயத் துடிப்பு மிகுதல், பூரிப்பு (Exhilaration) போன்றவை கும்பலில் மிகுந்து கொண்டிருக்கும். ஒரு கும்பலானது செயற்படத் தொடங்கினால் முடிவு காணும்வரை அதனைக் கலைக்க முடியாது. எதிர்பார்த்த முடிவினை அடைந்து விட்டால் கும்பல் கலைந்து விடும்.

பொதுவாகக் கும்பலிலுள்ள மக்கள் குறிப்பிட்ட நேரத்தில் ஒருவனைத் தலைவனாக ஏற்று அவனது கட்டளைக்கு இணங்கி நடக்கின்றனர். ஒன்று சேர்ந்து முழக்கமிடுதல், பாடுதல், ஆடுதல் போன்ற பண்புகளைக் கொண்டு கும்பலுடைய ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றனர். கும்பல் நடத்தையானது தனி மனிதனுக்கு, ஓரளவு தன்னம்பிக்கையையும் பாதுகாப்பையும் அளிக்கிறது. ஆனால், தனி மனப்பான்மை, உறுதியான பழக்க வழக்கங்கள் போன்றவைகளைக் கொண்டவர்கள் கும்பலில் கலந்து கொள்ள இயலாதவர்களாகின்றனர்.



சாதாரணக் கும்பல்



கிளர்ச்சிக் கும்பல்



வெளிப்பாட்டுக் கும்பல்



மரபுக் கும்பல்

கும்பலின் வகைகள்

பொதுவாகக் கும்பல்கள் பலவகைப்படுகின்றன சமுதாயத்தின் பிற பகுதிகளைப் பாதிக்காமல் விரைவாகத் தோன்றிக் கலையக் கூடிய கும்பல்கள் அதிகமாக உள்ளன. இவை, அப்போதைக்குரியவை; மேலும் அத்தகைய கும்பலுக்குக் குறிப்பிட்ட வரைமுறையோ பண்பாடோ இருப்பதில்லை. மக்களின் பாரம்பரிய நோக்கங்களையும் பழக்கவழக்கங்களையும் செயற்படுத்தி ஒரு குழு அல்லது ஓர் அமைப்பு நிலைபெறக் கூட்டுகின்ற கூட்டம், சூழ்நிலைக்கேற்பக் கூட்டப்படும் கும்பலாகும். எடுத்துக் காட்டாக, அரசியல் பொதுக் கூட்டங்கள், சமயச் சார்பான கூட்டங்கள். விளையாட்டையோ திரைப்படத்தையோ கண்டு களிக்கின்ற கூட்டத்தவர் பார்ப்போர்-கேட்போர் கும்பல் எனப்படுவர். வாழ்க்கையில் ஏற்படும் சோர்வு, சலிப்புப் போன்றவைகளைப் போக்குகின்ற விருந்துக் கும்பல், நடனக் கும்பல் போன்ற பொழுது போக்குக் கும்பல்கள் ஒரு வரன்முறையினை மேற்கொண்டு செயற்படுகின்றன. எழுத்துத் தேர்வு, நேர்காணல் தேர்வு போன்ற பொது நன்மைகளைப் பெறவும் கும்பலில் பங்கு கொள்கின்றனர். வெள்ளம், தீ, போர் போன்ற சூழ்நிலைகளிலிருந்து வெளியேறுகின்ற மக்கள் கூட்டம் அச்சம் கொண்ட கும்பல் (Panicky Crowd) எனப்படுகிறது. சில நேரங்களில் காண்போர் (Spectator) கும்பலிலும் மக்கள் இடம் பெறுகின்றனர். கிளர்ச்சிக் கும்பல், கொள்ளைக் கூட்டம் போன்றவை தீவிரக் கும்பல் (Active Crowd) எனப்படுகின்றன. இவை சமூக முறைப்படியான நெறிகளுக்கு அப்பாற்பட்டு விரோதம், கோபம் போன்றவைகளைக் கொண்டு செயற்படுகின்றன.

இவ்வாறான பலதரப்பட்ட கும்பல்களைச் சமூகவியல், உளவியலறிஞர்கள் 1. சமூக அமைப்பு சார் கூடும் கும்பல்கள் (Crowds leased on Social structure), 2. தற்செயலாகக் கூடும் கும்பல்கள் (Casual crowds), 3. சட்டப்புறக்கணிப்புக் கும்பல்கள் (Lawless crowds) என மூன்று வகையாகக் கூறுகின்றனர் ஒருபடித்தான கும்பல்கள் (Homogenous), பல படித்தான கும்பல்கள் (Heterogenous) எனக் கும்பல்கள் இருவகைப் படுவதாக லே போன் (Le Bon) என்ற அறிஞர் கூறுகிறார். தல்செயலாகக் காரணமின்றிக் கூடுகின்ற தெருக் கும்பல்களும் (Street crowds), சில காரணங்களுக்காகக் கூட்டப்படும் பாராளுமன்றக் கூட்டம் போன்றவைகளும் பலபடித்தான கும்பலுக்கு எடுத்துக் காட்டாகும். சாதிகள், வகுப்புகள், இனங்கள் போன்றவை ஒருபடித்தான கும்பலுக்கு எடுத்துக்காட்டாகும். எர்பர்ட்டு புளூமர் (Herbert Blumer) என்ற உளவியலறிஞர் கும்பலினைச் சாதாரணக் கும்பல் (Casual crowd), மரபுக் கும்பல் (Conventional crowd), கிளர்ச்சிக் கும்பல் (Active crowd), வெளிப்பாட்டுக் கும்பல் (Expressive crowd) என நான்கு வகைப்படுத்துகிறார்.

கிம்பால்யங்கு (Kimball young) கும்பலைச் செயற்படு கும்பல் (Active crowd), அமைதிக் கும்பல் (Inactive crowd) என இருவகைப்படுத்துகிறார். பொதுவாக, விரோதம், கோபம் போன்றவைகளைக் கொண்டு செயற்படு கும்பலின் செயல்கள் அமைந்திருக்கும். மேலும், ஒரு முறைப்படியான நெறிகளுக்கு (Norms) அப்பாற்பட்டுச் சமூகத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடும். கலகங்கள், கிளர்ச்சிகள் போன்றவைகளை இக் கும்பலில் மிகுதியாகக் காணலாம். இக் கும்பலானது, வன்முறைக் கும்பல் (Aggressive crowd), பீதி கொண்ட கும்பல் (Panicky crowd), கொள்வினைக் கும்பல் (Acquistive crowd), வெளிப்பாட்டுக் கும்பல் (Expressive crowd) என நான்கு வகைப்படுகிறது. எடுத்துக் காட்டாக, வகுப்புக் கலவரங்களில் ஈடுபடும் மக்கள் கூட்டமானது வன்முறைக் கும்பலாகும்; தீப்பிடித்த ஓர் இடத்திலிருந்து வெளியேறும் கூட்டம் பீதி கொண்ட கும்பலாகும்; ஏதேனும் ஒரு பொருளைப் பெற்றுக் கொள்வதற்காகக் கூடும் கூட்டம் கொள்வினைக் கும்பலாகும். ஏதேனும் விழா நிகழ்ச்சிகளில் ஆடல், பாடல்களை வெளிப்படுத்துவதற்காகக் கூடும் கூட்டம் வெளிப்பாட்டுக் கும்பலாகும்.

அமைதிக் கும்பல், சில அமைதியான காரணங்களுக்காகக் கூடுகின்ற கூட்டமாகும். எடுத்துக்காட்டாக, சில செய்திகளை அறிந்து கொள்ளவோ, சமயச் சொற்பொழிவுகளைக் கேட்பதற்காகவோ கூடுகின்ற கூட்டமாகும். செயற்படு கும்பலில், பல மணி நேரங்களுக்குப் பின்பும் எந்தவித மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆனால், அமைதிக் கும்பலில் சில நிமிடங்களிலேயே மாற்றம் ஏற்படும். அமைதிக் கும்பல், செய்திகளை அறிந்து கொள்வதற்காகக் கூடும் கூட்டம் (Information seeking crowd), மரபொழுங்கு சார்ந்து கூடும் கூட்டம் (Conventional crowd), பொழுது போக்கிற்காகக் கூடும்கூட்டம் (Recreational crowd), பாத சாரிகள் கூட்டம் (Pedestrian crowd) என நான்கு வகைப்படுகிறது.

இவ்வாறு கும்பல் பல பிரிவுகளாகப் பல்வேறு அறிஞர்களால் பிரித்துக் கூறப்படினும், கும்பல்களிடையே முரண்பாடுகள் அதிகமாக எழுவதில்லை. நெருக்கமான மக்கள், குறைந்த காலமே நீடிக்கின்ற தன்மை, ஒருவரையொருவர் தூண்டுதல், ஒருவரையொருவர் அறியாதிருத்தல், முறையற்ற இடைவினை (Inter-action) போன்றவை கும்பலில் பொதுவாகக் காணக் கூடிய தன்மைகளாகும்.

பூ.த.

**துணை நூல்கள்:**


**Bhusan, Vidya** and **Sach Deva D.R.**, An Introduction to Sociology, Kitab Mahal, Allahabad 1985.

**Bottomore, T.B.**, Sociology, Blackie & Son publishers Pvt Ltd., Bombay. 1978.

**Popenoe, David.**, Sociology, Prentice-Hall, Inc. New Jersey, 1977.

**Turner, Ralph H.** and **Lewis M, Killian**, Collective, Behaviour, Prentice Hall, New Jersey, 1972.


## கும்பல் நடத்தைக் கோட்பாடுகள்:

மிகுதியான அளவில் மக்கள் ஓர் இடத்தில் கூடியிருப்பது கும்பல் எனப்படுகிறது. ஆனால் கூடியிருக்கும் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது அது கும்பல் என்று வரையறுப்பது கடினம். இருப்பினும், கிம்பால் யங்கு (Kimball Young) என்ற அறிஞர் மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு பொதுவான நோக்கிற்காகக் (Common object of attention) கூடி இருந்தால் அது கும்பல் எனப்படும் என்று வரையறுக்கிறார்.

**வகைகள்:** சமூக உளவியல் அறிஞர்கள் கும்பலின் வகைகளை வேறுபடுத்திக் காட்டியிருக்கின்றனர். அவர்களுள் புளூமர் (Blumer) கும்பலை நான்கு வகைகளாகப் பிரித்திருக்கிறார். அவை:

1. சாதாரணக்கும்பல் (Casual Crowd), வீதிகளில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகளை வேடிக்கை பார்க்கும் கூட்டம்.

2. மரபுக் கும்பல் (Conventional Crowd), கால் பந்தாட்டத்தைப் பார்ப்பதற்காகக் கூடியிருக்கும் கூட்டம்.

3. கிளர்ச்சிக் கும்பல் (Acting Crowd), போராடுவதற்காகக் கூடியிருக்கும் கூட்டம்.

4. வெளிப்பாட்டுக் கும்பல் (Expressive Crowd), விழா நாள்களில் ஆடல் பாடல்களுக்காகக் கூடும் கூட்டம்.

பிரௌன் (Brown) என்ற அறிஞர் கும்பலை ஆரவாரக் கும்பல் (Active Crowd), அமைதிக் கும்பல் (Passive Crowd) என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றார்.

மேலும், ஆரவாரக் கும்பலை அவர் நான்கு வகைகளாகப் பிரிக்கிறார். அவையாவன:

1. வன்முறைக் கும்பல் (Aggressive Mob), வகுப்புக் கலவரங்களில் ஈடுபடும் மக்கள் கூட்டம்.

2. பீதி கொண்ட கும்பல் (Panicky mob), தீப்பிடித்த இடத்தில் இருந்து வெளியேறும் கூட்டம்.

3. கொள்வினைக் கும்பல் (Acquisitive mob), உணவையோ பொருள்களையோ பெற்றுக்கொள்வதற்காகக் கூடும் கூட்டம்.

4. வெளிப்பாட்டுக் கும்பல் (Expressive mob), விழா நாள்களில் தம் உணர்ச்சிகளை ஆடல், பாடல் மூலம் வெளிப்படுத்துவதற்காகக் கூடும் கூட்டம்.

அமைதிக் கும்பலைக் கிம்பால் யங்கு (Kimball Young) மூன்று வகையாகப் பிரிக்கிறார். அவை,1. செய்திகளை அறிந்து கொள்வதற்காகக் கூடும் கூட்டம் (Information seeking Audience), 2. மாற்றத்தை உருவாக்கக் கூட்டப்படும் கூட்டம் (Conventional Audience), 3. பொழுது போக்கிற்காகக் கூடும் கூட்டம் (Recreational Audience) எனப்படும்.

**பண்புகள்:** கும்பலிடையே பல்வகைப் பண்புகள் காணப்படுகின்றன. கும்பல் என்பது நிலையற்ற இயக்கம். மனிதர்கள் கூடிவாழும் கூட்டு வாழ்க்கை மனித சமுதாயத்திற்கு மிக இன்றியமையாதது. ஆனால், நிலையற்ற கும்பல் தேவையில்லை. கும்பலுக்குக் காரணம் ஒரு நிகழ்ச்சி அல்லது சமூக மாற்றம் (Social change) அல்லது தற்செயலாக ஏற்படும் விபத்துப் போன்றவையாகும்.

பொதுவாகக் கும்பல் என்பது மக்கள் ஓரிடத்தில் கூடுவதாகும். இதற்குக் கட்டுப்பாடு கிடையாது. இதில் கூடுபவர்கள் அறிமுகமோ பழக்கமோ உறவோ இல்லாதவர்கள். இதற்கென்று ஓர் அமைப்போ (Organisation) தொழிற் பகுப்போ (Division of Labour), தலைவரோ கிடையாது. இது தற்செயலானது (Casual); பெயர் தெரியாதது (Anonymous). கும்பலில் வெவ்வேறு வயதினர், வகுப்பினர், மதத்தினர், அலுவலர் கூடியிருப்பதால் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள வாய்ப்புகள் குறைவு, பெயர் வெளிவாராத நிலை சமூக விரோத உணர்வுகள் (Anti-social impulses) தோன்றக் காரணமாக உள்ளன. மிகப் பெரிய அளவிலான கும்பலும், அதிலுள்ள மக்களின் மிகுதியும் ஒருவனை மாறுபட்ட (Unusual) நிலையில் செயலாற்ற வைக்கின்றன.

கும்பலில் உள்ள மக்களிடையே மன ஒற்றுமை (Mental Homogenity) காணப்படும். அவர்களிடையே வேறுபட்ட உணர்ச்சிகள் காணப்படும். பீதியடைந்த கும்பலில் பய உணர்ச்சியும், வன்முறைக் கும்பலில்

கோப உணர்ச்சியும், பொழுது போக்குக் கும்பலில் மகிழ்ச்சி உணர்வும் மிகுதியாகக் காணப்படும். கும்பலில் உள்ள மக்கள் அறிவு அடிப்படையில் செயற் பட மாட்டார்கள். பகுத்தறிவுக் குறைபாடு இருக் கும். உணர்ச்சியின் மிகுதியால் சிந்திக்கும் ஆற் றல் குறைவாக இருக்கும். சிந்திக்கும் ஆற்றல் அத்தருணத்தில் இல்லாமற்போவதாலும், உணர்ச்சி கள் மிகுதியாக இருப்பதாலும் பொறுப்பற்ற தன்மை இருக்கும். மக்களிடையே கும்பலினால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம் பரவி இருக்கும்.

பெரும்பாலான கும்பல்களின் நடத்தைகள் சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணங்களின் பின் னணியில் இயங்குகின்றன. பல கும்பல்கள் தோன்று வதற்குக் காரணம் அவர்களின் நெடுநாளைய துயரங் களையும், இழப்புகளையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கே ஆகும். வன்முறை, இறப்பு மற்றும் கொடுமையான செயல்கள் முதலியவை கும்பலின் பண்புகள் ஆகும்.

கும்பலின் ஈர்ப்புத் தன்மையானது (Polarization) கும்பலின் வடிவத்தையும் செயலையும் (Structure and Functions) தீர்மானிக்கிறது. இவ்வகையான ஈர்ப்புத் தன்மையில்-மாற்றம் ஏற்படுகிற நேரத்தைக் கொண்டு, அந்தக் கும்பலின் செயற்பாட்டை அறிய முடியும். சிறந்த பேச்சாளர் அல்லது அரசியல்வாதி தனது நாவன்மையால், அதிக நேரத்திற்குக் கும்பல் கலைந்து விடாது ஒரு ஈர்ப்புத் தன்மையை உரு வாக்குவது அவரது திறமையைக் குறிப்பதாகும்.

**கோட்பாடுகள்**: கும்பலினால் மக்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் அறிய முடிகிறது. கும்பல் மூலமாக அவர்களுடைய உணர்ச்சிகளைக் காட்டுவதற்கு இயலுகிறது. அதன் மூலமாக அவர் கள் குறிக்கோளை அடைகின்றனர். கும்பலுக்குரிய இன்றியமையாத பண்புகள் ஒன்று சேர்ந்து முழக்க மிடுதல், பாடுதல் அல்லது ஆடுதல் என்பன ஆகும். இச்செயல்களால் ஒற்றுமை உணர்வு (Solidarity) அதிகமாகிறது. கும்பல் மக்களிடம் அசாதாரணமான நம்பிக்கையையும், பாதுகாப்பையும் உருவாக்குகிறது. கும்பலினால் இவை போன்ற சில நற்பயன்கள் விளையும் என்றாலும், அதனுடைய பல அழிவுப் பண்புகள் (Destructive Characters) சமூக உளவியல் அறிஞர்களையும், சமூகவியல் அறிஞர்களையும் கும்பலைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளத் தூண்டியுள்ளன.

**அ. கும்பல் மனக் கோட்பாடு**: மக்கள் தனியாக இருக்கும்போது இயல்பாக இருக்கிறார்கள். அதே மக்கள் கும்பலில் இருக்கும் பொழுது அவர்களுடைய நடத்தைகளும் செயல்களும் வேறுபடுகின்றன. லே போன் (Le Bon) கூற்றுப்படி, மனிதர்கள் ஓரிடத் தில் கூடிக் கும்பலாக மாறும்பொழுது அங்கே கும்பல் மனம் உருவாகிறது. இக்கும்பல் மனக் கோட் பாட்டின்படி (Group Mind Theory) கும்பலில் உள்ள மனிதன் தன்னுடைய தனித் தன்மையை (Individu-ality) இழக்கிறான். அவன் கும்பலின் பகுதியாக மாறிவிடுகிறான். கும்பலில் மனிதன் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளைத் துறந்து கும்ப லுடைய ஒட்டு மொத்த விருப்பத்திற்கு ஏற்பச் செயற்படுகிறான். உடனே கும்பல் தனக்கென்று ஒரே மாதிரியான நனவு நிலையைத் (Group Cons-ciousness) தோற்றுவிக்கிறது. இந்தக் கும்பல் நனவு நிலை தனி மனித நனவு நிலையை அடக்கி விடு கிறது. அதனால், கும்பலில் உள்ள மக்கள் கும்ப லுடைய தூண்டுதலுக்கு ஏற்றவாறு செயற்படு கிறார்கள். கும்பல் மனம் என்பது அதில் பங்கேற் றிருக்கும் அனைத்து மக்களின் கூட்டு மனநிலை ஆகாது; அது தனக்கென்று ஒரு மனநிலையை உரு வாக்கி வெவ்வேறு அளவுகளில் செயற்படும். கும்பலில் மக்களிடையே கருத்தேற்றம் (Suggestion) ஏற்படு கிறது. இந்தக் கருத்தேற்றத்தின் ஊக்குவிப்பால் கும்பலில் உள்ள மனிதன் பலவித உணர்ச்சிகளுக்கு ஆளாகிறான். அதனால் அவன் எதையும் ஆராய்ந்து அறியும் பகுத்தறிவை இழந்து செயற்படுகிறான். கும்பல் மனத்தின் செயற்பாடு, மனவெழுச்சிகள் (Emotions), வேண்டுகோள்கள் (Appeals) கருத் தேற்றம், கொள்கைக் குரல்கள் (Slogans) ஆகிய வற்றைப் பொறுத்து அமையும். இந்தக் கோட் பாட்டை லே பான் (Le Bon), எசுபிநாசு (Espinas) திராட்டர் (Trotter), தர்க்கீம் (Durkheim), மெக்டூ கல் (McDougall), ஆல்போர்ட்டு (Allport) ஆகியோர் ஆதரிக்கின்றனர். கும்பல் மனக் கோட்பாட்டை ஆத ரிக்கும் இவ்வறிஞர்கள் கும்பல் நடத்தைகளைப் பற் றிய தங்கள் விளக்கங்களை அளித்திருக்கிறார்கள்.

லே பான், செயல்நோக்கத்தை (Motive) உணர்வு நிலையுடைய செயல் நோக்கம் (Conscious Motives), உணர்வு நிலையற்ற செயல் நோக்கம (Unconscious Motives) என இரண்டாகப் பிரிக்கிறார். மனிதன் கும்பலில் இருக்கும் பொழுது உணர்வு நிலையுடைய செயல் நோக்கம் பின்னோக்கித் தள்ளப்பட்டு உணர்வு நிலையற்ற செயல் நோக்கம் முன்வருகிறது. இந்த உணர்வு நிலையற்ற செயல் நோக்கம் முன் வரும் பொழுது, அம்மனிதன் கும்பலில் மற்றவர்களின் செயலால் தூண்டப்பட்டுப் பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்கிறான்.

எசுபிநாசு, கும்பல் நடத்தைக்கு உயிரியல் கருத்து (Concept) மூலமாக விளக்கம் கொடுக்கிறார். ஓர் உயிர்ப் பொருளின் (Organism) பல உயிரணுக்கள் (Cells) ஒன்று சேர்ந்து ஓர் உணர்வு நிலையை உருவாக்குவதைப் போலக் கும்பலிலும் பல மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஒட்டு மொத்த உணர்வு நிலையை (Collective Consciousness) உருவாக்குகின்றனர் என்று கூறுகிறார்.

மனிதனுக்குக் கூடிவாழுந் தன்மை (Gregariousness) இயல்பூக்கமாகவே (Instinct) அமைந்துள்ளது. அதனால், கூட்டம் அவனுக்கு என்ன கட்டளை இடுகிறதோ அதனை ஏற்று அதன்படி நடக்க அவன் ஆயத்த நிலையில் இருக்கிறான் என்று திராத்தர் கூறுகிறார்.

கும்பலில் மனிதர்களுடைய உணர்வு நிலைகள் ஒன்று சேர்ந்து ஒட்டு மொத்த உணர்வு நிலையை உருவாக்குகின்றன. இந்த ஒட்டு மொத்த உணர்வு நிலை தனிப்பட்ட மனிதனுடைய உணர்வு நிலையிலிருந்து மாறுபட்டு இருக்கிறது. அதனால், கும்பலில் மனிதனுடைய நடத்தை மாறுபடுகிறது என்கிறார் தர்க்கீம்.

மெக் ஈவர் (McIver), இக் கும்பல் மனக் கோட்பாட்டை மறுக்கிறார். கும்பலுக்கென்று தனிமனம் (Mind) ஒன்று இருக்கமுடியாது. வெவ்வேறு மனங்கள் கும்பலில் ஒரே மாதிரியாகச் செயற்பட முடியுமே தவிர, எல்லோருடைய மனங்களும் ஒன்று சேர்ந்து கும்பல் மனம் என்று ஒன்று உருவாக முடியாது என்கிறார்.

**ஆ. உளநிலைப் பகுப்பாய்வுக் கோட்பாடு**: இ.டி. மார்ட்டின் (E.D. Martin) என்பவர் லே. பான், மெக்டூகல் ஆகியோரின் கும்பல் மனக்கோட்பாட்டை மறுத்து, கும்பலுடைய நடத்தைகளுக்கு உளவியற் பகுப்பாய்வு (Psychoanalysis) மூலமாக விளக்கம் கொடுக்கிறார். கும்பலில் இருக்கும்பொழுது மனிதன் மேல் மனநிலையை (Super ego) இழக்கிறான். அதனால், அவன் விலங்கின உணர்வுகளுக்கு இடமளித்துப் பகுத்தாராயும் தன்மை இழந்து, பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்கிறான். கும்பல் நடத்தை என்பது அப்போதைய பைத்தியத் தன்மை (Temporary Insanity) என்றும் கூறுகிறார். பைத்தியத் தன்மையும் (Insanity), பிறழ்வும் (abnormal) கும்பலின் பண்புகளாக விளங்குகின்றன என்று பிராய்டு (Freud) விளக்குகிறார்.

மார்ட்டினும், பிராய்டை ஆதரிக்கும் மற்ற உளவியல் அறிஞர்களும், கும்பல் நடத்தை என்பது அழுத்தப்பட்ட உணர்வுகள் அல்லது விருப்பங்களின் (Repressed Desires) வெளியீடு ஆகும் என்கிறார்கள். இயற்கையான மனித உணர்வுகளுக்குச் (Natural Human Impulses) செயற்கையான தடைகளைச் சமுதாயம் ஏற்படுத்துவதால் மனிதனிடத்தில் உளவிறுக்கம் (Tension) உண்டாகிறது. இவ்வித இயற்கையான மனித உணர்வுகளுக்கும் விருப்பங்களுக்கும் இருக்கும் தடையானது, மனிதன் கும்பலில் இருக்கும் பொழுது நீக்கப்படுவதால் அவனது இயல்பூக்கம் வெளிவருகிறது. இவ்வாறு, மனிதன் கும்பலில் தற்செயலாக இருக்கும் பொழுது அவனுடைய அழுத்தப்பட்ட உணர்வுகளுக்கு விடுதலை கிடைக்கிறது.

ஆனால் இக்கருத்து சில அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. கும்பல் நடத்தை, உடல் உணர்வுகள் மற்றும் விருப்பங்கள் அழுத்தப்படுவதாலேயே ஏற்படுகின்றது என்பதை மறுக்கின்றனர். அதற்கு சமூகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பு உண்டு என்பது அவர்கள் கூற்று.

**இ. தொற்றுதல் கோட்பாடு**: ஒருவருடைய செயல் மற்றொருவருடைய செயலுக்குத் தூண்டுதலாக அமைந்து அதே சமயம் கும்பல் முழுவதும் பரவுவது தொற்றுதல் எனப்படுகிறது. மற்றச் சமயங்களில் அவர்களின் செயல் சமுதாய ஏற்புடையதாக இருக்கும். கும்பலில் மற்றவர்களின் செயல்களைப் பார்ப்பதால் அவர்களிடம் கும்பலின் நடத்தைகள் தொற்றிக் கொள்கின்றன. பேகேகாட்டு (Bahehot), தார்டு (Tarde) ஆகிய அறிஞர்கள் இத் தொற்றுதல் கோட்பாட்டில் (Contagion Theory) நம்பிக்கை உடையவர்கள் ஆவர். இதையே மெக்டூகலும் கும்பலில் உள்ள மக்களின் உணர்ச்சிகள் அதைப் பார்ப்பவரிடத்து அதே விதமான உணர்ச்சிகளை இயல்பூக்கமாகத் தோற்றுவிக்கின்றன என்கிறார்.

**ஈ. குவிநிலைக் கோட்பாடு**: ஆல்போர்ட்டு (F. H. Allport) என்பவர் கும்பலின் நடத்தையை கும்பல் முழுவதையுமே வைத்து ஆராயாமல் அதில் உள்ள மனிதர்களின் உணர்வையும் பிரதிபலிப்பையும் (Impluses and Responses) கொண்டு ஆராயலாம் என்கிறார். மில்லர் (Miller) மற்றும் தோலார்டு (Dollard) என்பவர்களும் கூட்டத்தினுடைய மக்கள் எண்ணிக்கை ஆழ்ந்த பாதிப்பை அங்குள்ள மக்களிடத்தில் ஏற்படுத்துகிறது என்கிறார்கள். ஆல்போர்ட்டு 'சமூக வாய்ப்பளிபபு' (Social Facilitation) என்பதன் மூலமாகவும் இதனை விளக்குகிறார். கும்பலில் அடுத்தவர் எந்தச் செயலில் ஈடுபடுகிறாரோ அது மற்ற மக்களையும் பாதிக்கிறது. இவருடைய கூற்றுப்படி ஒருவனுடைய செயல் கும்பலில் மாறு

படுவதில்லை. அவன் தனிமையில் எவ்வாறு செயற்படுவானோ அதே செயல் கும்பலில் இருக்கும் பொழுது வேகப்படுத்தப்படுகிறது.

கும்பலில் பிரதிநிதித்துவம் அல்லாத மக்கள் குழுக்கள் ஒன்று சேர்ந்துள்ளன. ஏனென்றால், அவர்கள் சில பொதுத் தன்மைகளைக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொதுத் தன்மைகளே அவர்கள் ஒன்று சேர்வதற்கு உறுதுணையாக உள்ளன. தனிமையிலும் அவர்களுக்கு இத் தன்மைகளே இருக்கும். கும்பலில் இதே தன்மை கொண்ட பலர் கூடியதும் அவர்கள் பலமாகச் செயற்படுகிறார்கள். இக் குவிநிலைக் கோட்பாட்டின் படி (Convergence Theory) ஒரே தன்மையுடையவர்கள் ஒருங்கே ஓரிடத்தில் கூடுகிறார்கள் என்பதாகும்.

உ. **கும்பல் மேல்வரிச் சட்டக் கோட்பாடு**: கும்பலில் ஒரு மனிதனுடைய நடத்தையானது மற்றவர்களுடைய நடத்தைகளின் தூண்டுதலால் அல்லது மற்றவர்களைக் கண்மூடித்தனமாக அவன் பின்பற்றுவதனால் ஏற்படுவதில்லை எனக் கும்பல் மேல்வரிச்சட்டக் கோட்பாடு (Emergent Norm Theory) கூறுகிறது. கும்பலில் பங்கேற்பது தேவை என்று உணர்ந்த பிறகுதான் அவன் அதில் செயலாற்றத் துணிகிறான்.

செரிபு (Sherif) என்ற உளவியல் அறிஞர் கும்பல் ஏற்படும் பொழுது புதிய நெறிகளும் (Norms) விழுமியங்களும் (Values) உருவாகின்றன என்று கூறுகிறார். கும்பலில் திடீரென்று உருவாகும் இச்சட்டம் பொதுவான சமூக நெறியிலிருந்தும்,சமூக விழுமியங்களிலிருந்தும் மாறுபட்டு இருக்கிறது. கும்பலில் உள்ள மக்களும் அப்புதிய நெறியினை ஏற்று அதன்படி நடக்கின்றனர். அந்தப் புதிய நெறி அவர்களை வன்முறையில் நடக்கத் தூண்டுகிறது.

ஊ. **சமூகவியல் அணுகுமுறை**: சுமெல்சர் (Smelser) என்பவரின் கூற்றுப்படி மக்கள் சமூக நிறுவனங்கள் (Social Institutions) மூலமாகத் தங்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற இயலாது என்று உணர்ந்தபின் கும்பல்கள் மூலமாக அதை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை கொள்ளும் பொழுது, கும்பல் நடத்தை உருவாகிறது என்கிறார். கும்பல் உருவாவதைத் தீர்மானிக்கும் சில சூழ்நிலைகளையும் அவர் விவரிக்கிறார். சிறிய மரபு சார்ந்த சமுதாயத்தைவிட பெரிய நகரச் சமுதாயம் கும்பல்கள் தோன்றுவதற்குச் சாதகமாக அமையும். அதுபோல் அங்கு ஏற்படும் விலைவாசி உயர்வு,சம்பளக் குறைவு போன்ற சிக்கல்கள், கும்பல் நடத்தைகள் தோன்றக் காரணமாக உள்ளன. இப்மாதிரிச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குரிய எண்ணங்களும், கொள்கைகளும் மக்களிடையே பரவுவதும் கும்பல் ஏற்பட உதவுகிறது. இவை, மக்களை ஒருங்கிணைந்து செயலாற்றச் செய்கின்றன. இறுதியில் கும்பல் நடத்தை, சமூகக் கட்டுப்பாட்டின் ஆதரவு அல்லது எதிர்ப்பிற்குத் தகுந்தாற் போல் கூடவோ குறையவோ செய்யும் என்றும் அவர் கூறுகிறார்.

இவ்வாறாகப் பல்வேறு கோட்பாடுகள் இருப்பினும் எந்த ஒரு தனிக் கோட்பாடும் கும்பல் நடத்தைக்கு எளிதான விளக்கம் அளிக்கவில்லை. கும்பல்கள் பல்வேறு சூழ்நிலைகளால், பல்வேறு காரணங்களால் ஏற்படுவதால் அதற்கு அதிக விளக்கம் தேவையுள்ளது. சமூகம், பண்பாடு, பொருளாதாரம் தனிமனிதன் வளர்க்கப்பட்ட விதம் முதலிய வற்றைப் பொறுத்துக் கும்பல் நடத்தை அமையும். ஒருவனுக்கு வலிமையான பண்பாட்டுப்பின்னணியும், உறுதியான பழக்க வழக்கங்களும், தனித்தன்மையும் இருந்தால் அவன் கும்பலில் கலந்து கொள்வதில்லை; கும்பல் நடத்தையாலும் அவன் பாதிக்கப்படுவதில்லை. இதில் அவன் பெற்ற கல்வியறிவு பெரும் பங்கு வகிக்கிறது. கல்வி கும்பல் நடத்தைகளை முற்றிலும் நீக்க முடியாவிட்டாலும் அவற்றைக் குறைப்பதில் முக்கிய பங்கு கொண்டுள்ளது.

எஸ்.சொ.

**துணை நூல்கள்**:


**Bhatia, Hans Raj**, Elements of Social Psychology, Somaiya Publications Private Limited, Bombay, 1974.


**Bhusan, Vidya and Sach Deva D. R.**, An Introduction to Sociology, Kitab Mahal, Allahabad 1985.

**Cartwright, Dorwin and Zander, Alvin** (Ed.) Group Dynamics: Research and Theory, Row, Peterson and Company, New York, 1958.

**Goodman, Norman and Marx,Gary T.**,Society Today, Random House, New York, 1978.

**Lindzey, Gardner and Aronson, Elliot** (Ed.) The Handbook of Social Psychology, Amerind Publishing Company Pvt., Ltd., New Delhi, 1975.


**கும்மட்டம்** கட்டடங்களில் கோள அல்லது அரைக்கோள வடிவிற் காணப்படும் கூரைப்பகுதி. பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் குடிசைகளை வட்டமாக அமைத்து அதன்மேல் கும்மட்ட



பீசப்பூர் கோல்கும்பா கும்மட்டம்

வடிவில் கூரை வேய்ந்தனர். இவ்வகைக் கூரைவீடுகள் பழங்காலத்தில் இந்தியா, மத்திய தரைக்கடல் நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றில் காணப்பட்டன. இவை சிறுகுடிசை வீடுகளிலேயே முதலில் அமைக்கப்பட்டன. மெசபடோமியாவில் கும்மட்டக் கட்டடங்களே முற்காலத்தில் கட்டப்பட்டன. அசிரியர்களின் புடைப்புச் சிற்பங்களில் பல கும்மட்டங்கள் காணப்படுகின்றன. உரோமானியர்கள் மிகப்பெரிய கட்டடங்களில் கும்மட்டங்களைக் (Dome) கட்டினர். அவற்றுள் குறிப்பிடத்தக்கது உரோமானிய பாந்தியன் கோவில் ஆகும். இதன் கும்மட்டத்தைப் பெரும் சுவர்கள் தாங்குகின்றன. பைசாண்டியக் கட்டடக் கலைஞர்கள் தூண்களுக்கு இடைப்பட்ட பகுதிகளின் மேல் கும்மட்டம் அமைக்கும் முறையை முதன்முதலில் தோற்றுவித்தனர். இவர்கள் செவ்வக வடிவக் கட்டடங்களிலும் கும்மட்டங்களை அமைத்தனர். சதுர, செவ்வக வடிவுடைய அறைகள் கட்டத் தொடங்கியபின், கும்மட்டம் அமைக்கும் முறை சிறிதளவு குறைந்தது. வட்டமான கல்லறை மேல் கட்டடங்களின் மேல் கும்மட்டம் அமைப்பது தொடர்ந்து நிலவியது. அராபிய மசூதிகள், கல்லறைகள் ஆகியவற்றில் கும்மட்டங்கள் காணப்படுகின்றன. மொகலாயர்கள் இந்தியாவில் கட்டிய கட்டடங்கள், மசூதிகள், கல்லறைகள் ஆகியவற்றில் கும்மட்ட அமைப்பை வைத்துக் கட்டினர். உலகப் புகழ் பெற்ற தாசுமகாலின் கும்மட்டம் பெரும் அழகு வாய்ந்தது ஆகும்.

கான்சுடாண்டி நோபிளிலுள்ள சோபியா ஆலயக் கும்மட்டம் செவ்வகவடிவக் கட்டடத்தின்மீது அமைக்கப்பட்டது ஆகும். பாந்தியன் கோயில் கும்மட்டமும் புனிதபீட்டர் கோயில் கும்மட்டமும் பெரிய கும்மட்டங்களாகும். உலகிலேயே மிகப் பெரிய கும்மட்டமாக விளங்குவது இந்தியாவில் பீசப்பூரிலுள்ள கோல் -கும்பா கும்மட்டம் அல்லது வட்டக் கும்மட்டம் ஆகும். சு.இரா.

**கும்மி-கோலாட்டம்:** மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகிற உணர்வு கலை உணர்வு. இயல்பாகத் தோன்றி இயற்கையோடியைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகள் நாட்டுப்புறக் கலைகள். மனித உணர்வுகளுக்குக் கலைகள் வடிகால்களாக இருந்தன. உணர்ச்சியின் வெளியீடாகக் கலைகள் இருந்ததினால் கால வெள்ளத்தைக் கடந்து நின்று வாழ்ந்து வருகின்றன. நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற மக்களின் சீவ ஊற்றாகும். அவை வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன. இயற்கையோடியைந்த

கலைகள் சமயத்துடனும் பின்னர்ச் சமூகத்துடனும் இணைந்து காணப்படுகின்றன. கும்மி, கோலாட்டம் போன்றன நாட்டுப்புறக் கலைகளின்பாற்படும்.



கும்மி

பெண்கள் ஆடும் ஆட்டங்களில் கும்மியாட்டம் மிகச் சிறப்பான தொன்றாகும். 'பல பேதையரும் பெதும்பையரும் வட்டமாகச் சுற்றி வந்து பாடிக் கைகுவித்தடிக்கும் கூத்து கும்மி எனப்படும். கை குவித்தடிக்கும் விளையாட்டாதலால் கும்மி எனப்பட்டது' என்பர். 'கும்முதல்' என்ற சொல்லுக்குக் கைகொட்டுதல் என்பதுபொருள். 'குழுமி' என்ற சொல்லினின்றும் 'கும்மி' உருவானதாக அ.கி. பரந்தாமனார் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியமான அகநானூறு கும்மியைக் 'கொப்பி' எனக் குறிப்பிடுகிறது. இன்றும் இவ்வழக்கினைச் செட்டி நாட்டில் காணலாம். சீவகசிந்தாமணி கும்மியைக் 'கொம்மை' எனக் குறிப்பிடுகிறது. 'சண்முகர் கொம்மி' 'நடேசர் கொம்மி' போன்றவற்றால், கும்மிக்கு 'கொம்மி' என்ற வழக்கும் உள்ளதாகத் தெரிகிறது. சோமலெ கும்மியைக் 'கொம்மாய்' எனக் குறிப்பிடுகிறார். 'கும்மி' என்பது 'கும்மியடித்தல்' என்ற பொருளில் கையாளப்படுகிறது. 'தட்டியாங் கொட்டுதல்', 'கொண்டான் கொட்டுதல்' என்ற தென்னார்க்காடு வழக்கு கும்மியைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. 'முன்பாட்டு பின்பாட்டு' என்ற அமைப்பில் கும்மிப் பாடல்களைக் காணலாம்.

பெண்கள் ஒப்பனை செய்துகொண்டு வட்டமாக நின்று கும்மி அடிப்பர். இக்கும்மி ஆட்டத்தைக் குசராத்தின் கர்பா நடனத்துடனும் இராசசுத்தான் கும்மார் ஆடலுடனும் தொடர்புபடுத்துவர். கிராமப் புறங்களில் நடைபெறும் மாரியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன் திருவிழாக்காலங்களில் முளைப்பாலிகையைச் சுற்றி நின்று பெண்கள் கும்மியடிப்பர். பொங்கலன்றும் பெண்களின் பருவச் சடங்கின்போதும் மழைக்காக வேண்டும்போதும் பொழுதுபோக்கிற்காகவும் பெண்கள் கும்மி அடிப்பது உண்டு. செட்டி நாட்டில் இராவாண்டை போட்டு ஆடும்போதும் பெண்கள் கும்மியடிப்பர். 'கும்மிப்பாட்டை'த் தென்னார்க்காடு மாவட்டத்தினர் 'கன்னிப்பாட்டு' என்றும் கூறுவர். இத்தகைய ஆட்டங்களிற் பெரும்பாலும் கன்னிப் பெண்களே ஈடுபடுவதால், இத்தகைய பெயர் வந்திருக்கலாம் என எண்ணவேண்டி உள்ளது.

கும்மியை இரண்டு வகைப்படுத்தலாம். பெண்கள் கொட்டுவதனைக் 'கும்மி' என்றும், ஆண்கள் கொட்டுவதனை 'ஒயிற்கும்மி' என்றும் கூறுவர். ஒயில்கும்மி முழுக்க முழுக்க ஆடவர்களாலேயே ஆடப்படுவதாகும். ஆடவர்கள் தலைப்பாகை முதலியவற்றை அணிந்துகொண்டு கையில் கைக்குட்டையேந்திக் காலில் சலங்கை கட்டிக்கொண்டு ஆடுவர். பழங் கதையையோ வரலாற்றையோ இசையோடு பாடி ஆடுவர். அந்தந்த வட்டாரக் கதைகளுக்கும் முதன்மை அளிப்பர். திருநெல்வேலியில் கட்டபொம்மனுக்கும், மதுரையில் மதுரை வீரனுக்கும், கோயம்புத்தூரில் வள்ளித்திருமணத்திற்கும் முதன்மை அளிக்கின்றனர்.

ஆடலும் பாடலுமாக இருந்த கும்மி, ஆடலை விடுத்துப் பாடலளவில் நின்றது. இது சமயக் கருத்துகளை விளக்க வந்த கலைகள் பலவற்றுக்கும் பிற்காலத்தில் பயன்படுத்தப்பெற்றதைக் காணமுடிகிறது. கும்மி வடிவத்தைக் கிறித்தவ சமயத்தைப் பரப்பப் பயன்படுத்தினர். மற்றச் சமயத்தினரும் இவ்வடிவத்தைப் பயன்படுத்தினர்.

கிறித்தவக் கும்மி: அர்ச். அன்னம்மாள் திருப்பதியின் பிரசங்க வியாக்கியானக் கும்மி, கோப்பிக் கிருசிக் கும்மி, ஞானக்கும்மி.

இசுலாம் கும்மி: நாகூர் மீராசாகிபு அலங்காரக் கும்மி, ஞானப்பெண் கும்மி, சாத்திரக் கும்மி.

வரலாற்றுக் கும்மி: கட்டபொம்மன் கும்மி, சிவகங்கைச் சரித்திரக் கும்மி.

புராணக் கும்மி: அரிச்சந்திரன் கும்மி, நளன் கும்மி. மருத்துவக்கும்மி: அகத்தியர் வைத்தியக் கும்மி. விடுதலைக்கும்மி: பெண்கள் விடுதலைக் கும்மி. காலப்போக்கில் கும்மிப் பாடல்கள் இலக்கியத்தில் தனிப் பிரிவாக வளரத் தொடங்கின.

**கோலாட்டம்**: கும்மியைப் போன்றே இவ்வாட்டமும் பெண்கள் விளையாடும் ஆட்டமாகும். இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்பி ஆடுகின்ற ஆட்டம் கோலாட்டமாகும். கோலாட்டத்தை வடமொழியில் 'தண்டலாசியா' என்பர். இராசசுத்தானில் 'சுண்டியராசு' என்று கூறுவர். காஞ்சிப்புராணத்தில் 'செவ்வாய்ச்சியர் கோலாட்டம்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. கோலாட்டத்தில் பெண்கள் வட்டமாக நின்று கோல்களை முன்னும் பின்னும் திரும்பி மாறி மாறி அடித்து விளையாடுவர்.

தொடக்க காலத்தில் கண்ணனைப் பற்றிக் கோலாட்டப் பாடல்கள் பாடினர். பின்னர்ச் சமூகத்தைப் பற்றியும் அரசியல் தலைவர்களைப் பற்றியும் கோலாட்டப் பாடல்கள் எழுந்தன. இன்று, பெண்கள் விழாக்களில் கோலாட்டமில்லாத விழா இல்லையென்ற அளவிற்குக் கோலாட்டத்திற்குச் சிறப்பு ஏற்பட்டுள்ளது. சமயச் சார்புக்கலை சமூகச் சார்புக் கலையாக மாற்றம் பெற்றது. பெண்களின் வாழ்வில் நிகழும் பூப்பு, திருமணம், பிள்ளைப்பேறு போன்ற நிகழ்ச்சிகளும் கோலாட்டப் பாடல்களின் பாடுபொருளாகின்றன. இக்கலை பெண்களுக்குரிய கலையாதலால், பெண் சமுதாயத்தைப் பற்றிக் கோலாட்டப் பாடல்கள் மூலம் நன்கு அறிந்துகொள்ளலாம். இக்கோலாட்டப் பாடல்களில் தனிப்பாடல்கள் பாடிய நிலைமாறி, கதைப் பாடல்களையும் பாடுகிற நிலை உருவாகியது.

கோலாட்டத்தைக் கோலாட்டம், பின்னல் கோலாட்டம், கோலாட்டக் கும்மி என மூன்று வகையாகப் பகுக்கலாம். கோலாட்டத்தில் பெண்கள் வட்டமாக நின்றுகொண்டு கோல்களைத் திரும்பி முன்னும் பின்னும் மாறி மாறி அடித்து விளையாடுவர். கோல்களுக்கு வண்ணங்கள் பூசிச் சதங்கையும் கட்டியிருப்பர்.

பின்னல் கோலாட்டத்தில் ஆடுபவரின் கரங்கள் கயிறுகளால் பிணிக்கப் பெற்று, உயரே ஓரிடத்தில் கட்டப்பட்டு இருக்கும். பெண்கள் சுற்றச் சுற்றப் பின்னல்கள் போடப்படும். மறு ஆட்டத்தில் அவை பிரிக்கப்படும். பல்வகை வண்ணங்களாலான பின்னல் பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். பின்னல் கோலாட்டம் 'மோபோல்' நடனத்தைப் போன்றிருக்கும்.

'கோலாட்டக்கும்மி' என்ற மூன்றாம் வகையான ஒன்றும் உண்டு. இது கும்மியின் பாற்பட்டதெனினும், கோல்களைப் பயன்படுத்துவதால், கோலாட்டத்தின் வகையாகக் கூறப்படுகிறது.

கும்மியின் ஒருவகையான ஒயிற் கும்மியை ஆடவர்கள் ஆடுவதுபோல, இக் கோலாட்டத்தை ஆடவர்களும் ஆடுகின்றனர் என்பதை, 'கோடி வந்தனம் மைந்தர்கள் தந்தனம், கோலடி யாட்டம் தானாட' என்பதன் மூலம் அறியலாம். கழியாட்டம், ஆண்கள் ஆடும் கோலாட்டம் என நா. வானமாமலை கூறுவது குறிப்பிடத்தக்கது.

கோலாட்டம் சமயச் சார்புக் கலையாகத் தோற்றம் பெற்றுச் சமூகச் சார்புக் கலையாக மாற்றம் பெற்று வருகிறது.

சு.ச.

**குமட்டூர் கண்ணனார்** பதிற்றுப்பத்து என்னும் எட்டுத்தொகை நூலால் மட்டிலுமே அறியலாகும் புலவர்கள் இருவருள் ஒருவராவார். குமட்டூர் இப்புலவர்தம் சொந்த ஊராகும். இவரைப் பற்றிக் குறிப்பிடும்போது ஔவை துரைசாமிப் பிள்ளை, இப்புலவர் சேர நாட்டைச் சேர்ந்தவர் என்றும், குமட்டூர் மலபார் மாவட்டத்திலுள்ள ஓரூர் என்றும், அவ்வூர் உமட்டூர் எனவும் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். கண்ணனார் என்னும் புலவரின் வேறுபடுத்தி அறியுமாற்றால் ஊர்ப்பெயரோடு சேர்த்துக் குமட்டூர்க் கண்ணனார் என வழங்கப்பட்டார். இவர், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மீது பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தினைப் பாடிச் சிறப்பித்துள்ளார். அப்பத்தினைப் பாடியமைக்காக இமயவரம்பன் இப் புலவருக்கு, உம்பற்காட்டு 500 ஊர்களைப் பிரமதாயமாகக் கொடுத்தான். மேலும் 38 ஆண்டுகள் தென்னாட்டுள் வருவதனில் பாகமும் கொடுத்தான். பிரமதாயமாக ஊர்களைப் பெற்றமையால், இப்புலவர் அந்தண வருணத்தவர் என்பது புலனாகிறது. இப்புலவர் தம் புரவலனான சேரமன்னனைச் 'சேரலாதன்' என்று குறிப்பிட்டு விளித்துள்ளார். தம் புரவலனான சேரன், 'இமயவரம்பன்' எனப்படும் சிறப்புப்பெயரைப் பெற்றிருந்தமையினை உறுதிப்படுத்தும் வகையில் அவன் நாடு, வடக்கே இமயத்திற்கும் தெற்கே குமரிக்கும் இடைப்பட விரிந்து விளங்கிய தன்மையினை இவர், 'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம், தென்னங்குமரியோ டாயிடை மன்மீக் கூறுநர், மறம் தபக்கடந்தே' (பதி.11:21-25) என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். அம்மன்னனின் வள்ளல் தன்மைக்கு அக்குரன் என்னும் வள்ளலை உவமையாக்கியுள்ளார் (பதி.14:7). இமயவரம்பன் சினமுற்றுப் போர்செய்த பகைவர் நாடுகள் அழியும் தன்மைக்கு இயமனால் அழிக்கப்பட்டுக் கிடக்கும் உடம்பினை உவமைப்படுத்திக் 'கூற்றடூஉ நின்ற யாக்கைபோல' எனக்கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. (பதி.13:11).

அ.மா.ப.

**குமணன்** முதிரமலையைச் சார்ந்த நாட்டை யாண்ட சிற்றரசனாவான். இன்றைய பழனிவட்டத் தின் தென்மேற்குப்பகுதியும் உடுமலைப்பேட்டை வட்டத்தின் தென்கிழக்குப் பகுதியும் அடங்கிய நிலப் பரப்பே அன்றைய முதிரமலையாக இருந்ததென்பர். குமணன் கடையெழு வள்ளல்களாகிய பாரி, ஓரி, காரி, எழினி, பேகன், ஆய், நள்ளி என்பவர்க்குக் காலத் தால் பிற்பட்டவன்; வரையாது வழங்கும் கொடைத் தன்மையால் மேற்பட்டவன்.

புறநானூற்றில் குமணன் பெருமைபேசும் பாடல் கள் ஏழு. அவற்றுள் பெருஞ்சித்திரனார் ஐந்து பாடல்களையும் பெருந்தலைச் சாத்தனார் இரண்டு பாடல்களையும் பாடியுள்ளனர். பரிசில் வேண்டிப் பாடிய ஏழு பாடல்களும் குமணனின் வீரத்தின் வெற்றியையும் வறியவர்க்கு ஈயும் ஈரத்தின் பெற்றியை யும் விளக்கி நிற்கின்றன.

குமணனின் புகழ்கண்டு மனம் பொறாத தம்பி இளங்குமணன் மூத்தோனின் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதோடு அவனைக் கொன்றொழிக்கவும் முயன்றான். இந்நிலையில் காடடைந்து உயிர் வாழ்ந்துவரும் குமணனைக் கண்டு பெருந்தலைச் சாத்தனார் பரிசில் வேண்டிப் பாடிய பாட்டில் 'நற் போர்க்குமண' என்று குறிப்பதன் வாயிலாகப் போர்க் களத்திலும் அறவழியைப் போற்றிய சான்றோன் குமணன் என அறியக்கிடக்கிறது.

குமணனைக் காட்டில் கண்ட பெருந்தலைச் சாத்தனார் தம் வறுமையைச் சொல்லிப் பரிசில் வேண்டிநின்றார். அவன் அவர்க்குப் பொருள்தர இயலாத தன்னுடைய நிலையை எண்ணிப் புழுங்கி னான். தன் தலையைக் கொணர்ந்தால் பெரும் பொருள் தருவதாக இளங்குமணன் தெரிவித்திருந்த செய்தி அவன் நினைவில் தோன்றிற்று. பேருவகை கொண்டு வாளைப் புலவனிடம் தந்து தலையைக் கொய்து கொள்ளச் சொன்னான் குமணன். வாளைப் பெற்ற பெருந்தலைச்சாத்தனார் விரைந்து சென்று இளங்குமணனைக் கண்டு நடந்தவற்றை விளக்கி உடன் பிறந்தாரிடையே நிலவிய பகைமையைப் போக்கி இன்புறச் செய்தார்.

வெற்றிப் புகழ்கொண்ட வசையில்லா நற்குடி யில் பிறந்து ஈதல், இசைபட வாழ்தல் என்னும் கொள்கைக்குன்றாய் வாழ்ந்து புலவர், பாணர், கூத் தர் என்னும் முத்திறத்தாரையும் பேணுமுகத்தான் முத்தமிழையும் வளர்த்து நிலைபேறு இல்லாத இவ் வுலகத்தில் என்றும் நிலைத்து நின்றிடும் வண்ணம் தம் புகழ் நிறுவிச் சென்ற சான்றோன் குமணன் என அறிந்தின்புறலாம். சி.கு.

**குமரகுருதாச சுவாமிகள் (கி.பி. 1850 1929)** முருக பக்தர். இவர் இராமேசுவரத்திற்கு அருகிலுள்ள பாம்பன் என்னும் ஊரில் சாத்தப்பப் பிள்ளைக்கும் செங்கமலத்திற்கும் மகனாக கி.பி. 1850-இல் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அப்பாவு. நாளடைவில் இவரது ஊர்ப்பெய ரால் பாம்பன் சுவாமிகள் என்று இவர் அழைக்கப் பெற்றார். அகமுடையார் வகுப்பைச் சேர்ந்த இவர் இளமையில் முனியாண்டிப்பிள்ளை என்பவரிடம் பயின்றார். இவர் ஒழுக்க சீலராக விளங்கினார். சிவந்த மேனியும் தாழ்ந்த சடையும் உடைய இவர் கட்டமைந்த உடலமைப்புடன் கம்பீரமான தோற் றத்தைப் பெற்றிருந்தார். இதற்குக் காரணம் இளமையிலிருந்தே மற்போர், சிலம்பம், நீச்சல் போன்ற உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்ததே ஆகும். இவருக்கு முறையான பள்ளிப்படிப்பு இல்லை. இவர் தாமே தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளை யும் கற்றுப் புலமை பெற்றார்.

இவர் கி.பி. 1875-இல் காளிமுத்து என்னும் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். இவ ருக்கு மூன்று ஆண்மக்கள் இருந்தனர். இவர் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும் அதில் நாட்ட மின்றி இவரது உள்ளம் துறவறத்தையே நாடியது. இவர் உணவுக்கும் உள்ளத்திற்கும் தொடர்பு உண்டு என்னும் கொள்கையையுடையவர். அதனால், இவர் இல்வாழ்வில் இருக்கும்போதுகூட உப்பையும் புளியை யும் நீக்கி மதியம் ஒரு வேளையே உண்டார். இவர் கி.பி. 1894-இல் பிரப்பன் வலசை என்னும் ஊரில் ஊணுறக்கமின்றி 35 நாள்கள் நிட்டையிலிருந்தார். அக்காலத்தில் இவருக்கு எவ்வித ஊறுபாடும் உண் டாகவில்லை. அதிலிருந்து துறவறம் மேற்கொண் டார். முருகன்மீது அன்புகொண்ட இவர் முருகன் திருப்பெயரை ஓயாமல் உச்சரித்து வந்தார். எனவே இவர் குமர குருதாச சுவாமிகள் என அழைக்கப், பெற்றார். துறவறம் பூண்ட இவர் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள பின்னத்தூர், சென்னை ஆகிய இடங் களில் வாழ்ந்தார்.

இவர், அனைத்துச் சமயங்களையும் மதிக்கும் இயல்புடையவர். எந்தத் திருமேனியைக் காணும் போதும் இவர்தம் நினைவில் உள்ள முருகனையே எண்ணி வணங்குவார். இவர், மகாதேசோமண்ட லம் என்னும் திருச்சபை ஒன்றினை ஏற்படுத்தினார். அதில் உள்ளவர்கள் சாதி, மொழி, நாடு போன்ற பாகுபாடு இல்லாமல் முருகனை வணங்கினர். அருண கிரிநாதருக்கு முதன்முதலில் விழாவெடுக்க முயற்சி செய்தவர் இவரேயாவார். இவர் கந்தர்சட்டிக் கவ

சம் என்னும் நூலினை நாள்தோறும் ஓதிவந்தார். இவர் முருகன்மீது பல பாடல்கள் இயற்றியுள்ளார். அப்பாடல்கள் (6666) ஆறு காண்டங்களாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவை எல்லாவகைச் செய்யுட்களும் சந்தமும் அமையப் பெற்று இவரது புலமைக்குச் சான்று பகர்வனவாக உள்ளன. மேலும், இவர் குமாரசுவாமியம், திருப்பா, தகராலய ரகசியம், சிவஞான தீபம், பத்துப் பிரபந்தம், வேதவியாசம், பரிபூரணானந்தம், செக்கர் வேள் செம்மாப்பு, சிறுநூற்றிரட்டு, குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி, சேந்தன் செந்தமிழ், சண்முக சகசர நாமார்ச்சனை, செவியறிவுறூஉ, பஞ்சாமிர்த வண்ணம், சண்முகக் கவசம், பாப்பாவினம், நாலயிரத் திவ்வியப் பிரபந்த சாரம், திருவலங்கல் திரட்டு முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவரது நினைவாக மார்கழி நிறைமதிப் பிரதமையில் மயூரவாகன சேவனம் என்னும் விழா கொண்டாப்படுகிறது. இவர் சென்னையிலிருந்த போது குதிரை வண்டியில் அடிபட்டுக் காலெலும்பு முறிந்து நல்லமுறையில் குணமாகி நடந்தார் என்பதை நினைவுறுத்தும் வகையில் அவ்விழா எடுக்கப் படுவதாகக் கூறுவர். இவர் 1929-இல் காலமானார்.

வீ.சே.

**குமரகுருபர தேசிகர்**: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் பரிமேலழகர் மரபில் தோன்றியவர் என்று கூறப் பெறுகிறார். கவிபாடும் திறம் பெற்ற இவர் குற வஞ்சி இலக்கிய அமைப்பில், ஞானக் குறவஞ்சி என்னுமொரு நூலைச் செய்துள்ளார். இராமாயணத்தையும் ஆத்தும ராமாயணம் என்னும் பெயரில் எழுதியுள்ளார். இந்நூல்கள் வேதாந்தத் தத்துவச் சார்புடைய கருத்துகளைக் கொண்டனவாகும்.

அ.மா.ப.

**குமரகுருபரர்**: இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்தில், தாமிரபரணியாற்றங் கரையிலுள்ள தென் கயிலாயம் என்னும் வைகுண்டப் பதியில், வேளாண் மரபினரான சண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகவாய்த் தோன்றினார். இவர் ஐந்தாண்டு நிறைவுற்றும் பேசாமையறிந்த பெற்றோர் வருந்தித் திருச்செந்தூர் சென்று கந்தவேளிடம் வேண்டிப் பாடுகிடந்தனர். அப்போது முருகப்பெருமான் அருளால் மூங்கைத் தன்மை மாறித் திருவருளும் பேசும் ஆற்றலும் கைவரப் பெற்றார். இவர் முதன்முதலில் திருச்செந் தூர் முருகப்பெருமான்மீது 'கந்தர் கலிவெண்பா'



குமரகுருபரர்

என்னும் பிரபந்தம் பாடினார். பின்னர்த் தம் ஊரில் கோயில் கொண்டு விளங்கிய கைலாசநாதர்மீது 'கைலைக் கலம்பகம்' என்னும் நூலைப் பாடினார். சிறந்த தமிழ்ப் புலமையும் சைவ சித்தாந்த ஞானமும் இறையருளால் விரைந்து பெற்ற இவர் பிற தலங்களுக்குச் செல்ல முற்பட்டார். இவர் மதுரையம் பதி சென்று கோயில் வழிபாடுசெய்தபின் அத்தலத் துறையும் இறைவியான மீனாட்சியம்மைமீது பிள்ளைத் தமிழ் இலக்கியம் பாடினார். இந்நூலை மதுரை மன்னன் திருமலை நாயக்கன் அவையில் அரங்கேற்றும்போது, மீனாட்சியம்மை குழந்தைவடி வில்றோன்றி முத்துமாலை யொன்றை இவருக்குப் பரிசளித்தனள் என்பர். மதுரைத் தலச் சிறப்புகளை யுணர்ந்த இவர் மதுரைக் கலம்பகம் என்னும் நூலையும் பாடினார்.

குமரகுருபரர் சோணாட்டுத் தலங்களைக் காண விழைந்து முதற்கண் திருவாரூர் சென்றார். அவ்வூரில் வழிபட்டபின் 'திருவாரூர் நான்மணிமாலை' என்னும் பிரபந்தம் பாடினார். அக்காலத்தே தருமபுர ஆதினத்தில் இருந்த தலைவர் மாசிலாமணி தேசிகரை வணங்கித் துறவு மேற்கொள்ள விரும்பினார். இதற்கிடையே புள்ளிருக்கு வேளூர் சென்று வழிபட்டு அங்குறையும்முத்துக்குமாரசாமித்தெய்வத்தின் மீது பிள்ளைத்தமிழ் இலக்கியம் பாடினார். பின்னர்த் தில்லையடைந்து சிதம்பர மும்மணிக்கோவை என்ற நூலையும் நீதி நெறிவிளக்கம் எனும் நூலையும் இயற்றினார். இவர் பின்னர் தருமபுரம் அடைந்து ஆதினத் தலைவர்மீது 'பண்டார மும்மணிக்கோவை' என்னும் நூல்பாடிப் பின், துறவு வாழ்வை முறைப்படி மேற் கொண்டார்.

தருமபுர ஆதினத்தலைவர் விருப்பப்படி இவர் வடநாட்டிலுள்ள காசியம்பதியடைந்து மறைந்து கிடந்த விசுவலிங்கப் பெருமாள் திருமேனியை வெளிக் கொணர்ந்து வழிபாடியற்ற வழி செய்தார். காசியில் இருக்கும்போது 'சகலகலாவல்லி மாலை' என்னும் நூல் பாடி இறையருளால் இந்துசுத்தானி மொழியறிந்து முகம்மதிய மன்னருடன்உரையாடித் தம் திறம் காட்டினார். மன்னன் உதவியோடு கங்கைக் கரையிலுள்ள கேதார கட்டத்தில் 'குமாரசாமி மடம்' நிறுவிச் சைவம் வளரத் துணை செய்தார். இவர் காசியில் நாடோறும் புராணச் சொற்பொழிவாற்றிச் சைவத்தையும் தமிழையும் சிறப்பித்தார். இவராற்றிய கம்பராமாயணச் சொற்பொழிவைக் கேட்ட துளசிதாசர் என்ற அருளாளர் பிற்காலத்தில் தாமியற்றிய இந்தி இராமாயணத்தில் சுவாமிகளின் கருத்துகளை அமைத்துப் பாடியுள்ளார் என்பர். குமரகுருபரர் ஒரு வைகாசித் திங்களில் காசியிலேயே முத்தியடைந்தார்.

சைவத் தமிழ்ப்புலமை சான்ற குமரகுருபரர் சிறந்த தவவாழ்வு வாழ்ந்தவர். பண்டைத் தமிழ் இலக்கிய, இலக்கண நுணுக்கங்களைத் தம் நூலுள் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியம், திருக்குறள், கம்பராமாயணம் ஆகிய நூற் கருத்துகளை இவர் பலவிடத்தும் எடுத்தாண்டுள்ளார். தமிழ் அகப் பொருட் செய்திகளும் புறப்பொருட் கூறுகளும் உவமை நலத்தோடு இவர் பிரபந்தங்களில் காணப் படுகின்றன. நால்வகைப் பாக்களையும் பாவினங் களையும் பாடிய இவர் நூல்களில் உலகியற் செய்தி களையும், இசை பற்றிய நுணுக்கங்களையும் பிற உயிரினங்கள் பற்றிய உண்மைகளையும் காணலாம். இவர் வரலாற்றைச் சிறப்பித்து வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தம் புலவர் புராணத்துள் பாடியுள்ளார். இவர் தம் வாழ்க்கையினை கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 'ஆதி குமரகுரு பரசுவாமிகள் சரித்திரம்' என்று தனிப் பிரபந்த மாகப் பாடியுள்ளார்.

குரு.கோ.

**குமரப்பருவக் கல்வி**: குமரப் பருவம் குழவிப் பருவத்திற்கும் இளமைப் பருவத்திற்கும் இடைப்பட்ட பருவம். உடல் உறுப்புகளில் உயிரியல் மாற்றங்களின் விளைவால் ஏற்படும் விளைவுகள் குமரப் பருவத்தின் வெளிப்பாடுகளாகும். இனப் பெருக்கத்திற்கான பாலியல் சுரப்பிகள் சுரக்கும் இயக்கு நீரினால் முழு வளர்ச்சி அடையும் நிலையே குமரப்பருவம் எனலாம். இனப்பெருக்கப் பாலியல் வளர்ச்சி முழுமை பெற்றவுடன் குமரப்பருவம் முடிவடைகின்றது. இனப்பெருக்கத்திற்குத் தயாரான பாலியல் உறுப்பு வளர்ச்சி முற்றுப் பெற்ற நிலையே குமரப்பருவத்தின் முதிர்ந்த நிலை. குமரப்பருவ வெளிப்பாடுகள் மக்கள் வாழும் நாடுகளின் சூழ்நிலை களை ஒட்டி அமைகின்றன. எனவே, குமரப்பருவம் என்பது உடலியல், உள்ளம், உணர்வு வெளிப்பாடு கள் ஆகியவை ஒருங்கிணைந்த மாற்றுக் கூறுகளாகும்.

உடலில் மூளையோடு இணைந்த முகுளத்தின் (Hypothalamus) ஆதிக்கத்தில் உள்ள பாலினச் சுரப்பியான மூளையடிச் சுரப்பி (Pituitary) சுரத்தலால் இயக்குநீர் (Hormones) மூலம் பாலுணர்வு தொடங்குகிறது. குமரப்பருவ வெளிப்பாடு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளில் முழு வளர்ச்சி அடையத் தொடங்குகிறது.

மனித வரலாற்றில் குமரப்பருவம் எய்தும் கால அளவு ஒவ்வோர் இருபதாண்டிற்கும் ஓராண்டு குறைந்து வருவதாகக் உடற்கூற்று அறிஞர் கணக் கிட்டுக் கூறுவர். எடுத்துக்காட்டாக, 1960–ஆம் ஆண்டில் ஒரு சிறுமி தன்னுடைய 13–ஆம் வயதில் குமரப் பருவம் எய்தினாளாயின், 1980-இல் அத்தகு குமரப் பருவத்தை 12-ஆம் வயதிலேயே வேறொரு சிறுமி எய்துவாள் என்பது அவர் தம் கருத்து. குறைந்த வயதிலேயே குமரப்பருவம் அடைவதற்கு ஊட்டமிக்க சத்துணவு உண்ணும் பழக்கம் ஒரு காரணமாக இருக்க லாம் என உடற்கூற்று அறிஞர் கருதுவர். குமரப் பருவத்தின் முழுமையான வளர்ச்சி ஏறத்தாழச் சிறுவ ரிடத்தில் $12\frac{1}{2}$ முதல் 15 வயதிற்குள்ளாகவும், சிறுமியர்க்கு $10\frac{1}{2}$ முதல் 13 வயதிற்குள்ளாகவும் ஏற்படுவ தாக உடற்கூற்று அறிஞர் கூறுவர். குமரப்பருவத்தில் ஆண்பெண் இருபாலாரும் ஒருவரையொருவர் ஈர்க்கும் தன்மையைப் பெறுகின்றனர்.

பாலியல் மாற்றங்கள் ஏற்படும்பொழுது ஆண், பெண் இருவருக்கும் உணர்வுகள்பாதிக்கப்படுகின்றன. பாலியல் மாற்றங்கள் அனைவர்க்கும் பொதுவானவை என்ற எண்ணம் குமரப்பருவத்தில் இருபாலார்க்கும் குறைவாக இருத்தலே அதற்குக் காரணம். பாலு ணர்வு மாற்றங்கள் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு வயதுகளில் ஏற்படுவதுண்டு. சிலருக்கு, மிக விரைவாகவும் மற்றும் சிலருக்கு மிகத் தாமதமாகவும் ஏற்படுகிறது. இதற்குத் தனியாள் வேற்றுமையே அடிப்படை யானகாரணம். பருவ வளர்ச்சி மாறுபாடுகளில் குமரப் பருவ நிலையில் உள்ள மாணவர்களின் எண்ணப் போக்கு, சிந்தனைத்திறன், ஒருமித்த கூர்ந்து நோக்கும் திறன் ஆகியவற்றில் வேறுபாடுகள் நிறைந்து இருத்தல் இயல்பானது என்பதையும் அவர்கள் நடத்தையில் பலவித வேறுபாடுகள் தோன்றுவதும் இயல்

பானது என்பதையும் ஆசிரியர் உணர்ந்திருத்தல் மாணவர்களை நன்னெறிப்படுத்த உதவும்.

பருவ வளர்ச்சி நிலைகளில், பாலியல் உணர்வு களை நிறைவுபடுத்தத் தூண்டும் எண்ணங்கள் ஏற் படுவது இயற்கை. பாலியல் வேட்கையைத் தணிக் கும் வழிகளில் அமெரிக்கா போன்ற நாடுகளில் மாணாக்கர்கள் ஈடுபடுதல் மிகவும் சாதாரண வழக்கம். ஆனால் இந்தியச் சமுதாய அமைப்பு இவ் வகையான நெறிபிறழ் நடத்தையை ஏற்றுக்கொள்வ தில்லை. கருச்சிதைத்தல், மணம் நிகழும் முன் னரேயே வேட்கையைத் தணித்தல், திருமணம் ஆகா மல் கருத்தரித்தல் போன்ற சூழ்நிலைக் கேடுகள் மெல்ல மெல்ல இந்திய மாணவர் சமுதாயத்திலும் காணப்படுகின்றன. இச்சூழ்நிலைக் கேடுகளிலிருந்து மாணவர்களை நன்னெறிப்படுத்துதல் கல்வியின் வழியே இயலும்.

குமரப்பருவம் எய்திய மாணாக்கரிடையில் பாலி யல் பற்றிப் பேசுவதே குற்றம் என்ற எண்ண நிலை மாறவேண்டும். இவ்வாறான பாலுணர்வு, உறவு அவற்றின் விளைவுகள் போன்ற கருத்துகளைப் பெற் றோர் தம் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். மேலும், வாழ்விற்கு அடிப்படையான சிறந்த கருத்து களை ஆணித்தரமாகக் கூறுதல் வேண்டும். இத்தகு கருத்துகளைத் தம் மக்களுக்குக் கூறாவிடில், வேறு தீய சூழ்நிலைகள் ஏற்பட ஏதுவாகும்.

அறிஞர் பியாசே (Piaget) என்பவர் மாணாக்கர் கள் குமரப் பருவத்தில் அறிவுசார் நிலைகளில் (Cognitive Domain) ஒழுங்கு செயல் சார் நிலையில் (Formal Operation Period) இருப்பதாகக்கூறுவார். இந் நிலையில் நுண் கருத்துகளை அறிதலும், நுண் பொருள்களுக்கு இடையேயுள்ள உறவை முழுதும் அறிதலும், வேறுபடுத்தி அறிதலும் ஆக எந்தச் சிக் கலையும் தீர்க்க எளிதாகும் 'சிந்தித்தல் திறன்' அளிக்கவல்லது இக்குமரப் பருவம் என்பார். மேலும் இப்பருவ நிலையில்தான் வாழ்வு, குறிக்கோள் உணர்நிலை, அதன் மெய்ப்பொருள் காணும் நிலை ஆகியவை ஏற்படுகின்றன என்பார். எதிர்கால வாழ் விற்குத் தேவையான குறிக்கோள்களைச் சிந்தித்து அதனை நிறைவுபடுத்த அடிகோலுவதும் இப்பருவம் என்பார். அரசியல் பின்னணியில் காணும் பொழுதும், அரசியலில் பங்கு, முனைப்புகளின் (Activism) அடித் தளம், தானே சிந்தித்து முடிவு எடுக்கும் நிலை ஆகி யவை இப்பருவத்திலேயே ஏற்படுகின்றன என்பார். மாணவர் தாங்கள் கற்கும் பாடங்களிலிருந்து நிறைந்த அறிவுத்திறனைப் பெறுதல், தருக்க நெறிப் படி முடிவுகள் எடுத்தல், தாங்கள் கண்டும் கேட்டும் அறிந்த செய்திகளிலிருந்து ஓர் எடுகோளை (Hypothesis) அமைத்து அதனை ஆராய்ந்து முடிவு காண விழையும் சிந்திக்கும் திறனை வளர்த்தல் ஆகிய பண் புகள் இப்பருவத்தில் நிகழ்வதாகப் பியாசே கருது வார்.

அறிஞர் பிரிங்கு (Frink, 1975) என்பவர் 'குமரப் பருவத்தினர் தங்களை ஒருங்கிணைத்துச் சமுதாயத் தைப் புதிய நோக்கில் கண்டு, அச்சமுதாயத்தில் தங் களுக்கென ஓர் இடத்தைப் படைத்து, அதை மனக் கண்ணால் கண்டு களித்து, அதை அடைய முயலும் வேட்கை நிறைந்த பருவம் குமரப்பருவம் ஆகும்' என்கிறார். அறிஞர் எரிக்சனும் (Erickson), கும ரப்பருவத்தில் தங்களுக்கென ஓர் இடத்தைப் படைத்து அதைத் தங்கள் எண்ண ஓட்டத்தின்படி சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும். அவ்வாறு சீர்தூக்கி நோக்காவிடில் இயைந்து போதல் சிக்கல் (Identity Crisis) ஏற்பட்டு மனமுறிவு ஏற்பட ஏதுவாகும் என் பர். குமரப்பருவத்தினருள்ள பள்ளிச் சூழ்நிலையில், அவர்களின் போக்குப்படியே நடத்தி நல்வழியில் திருப்புதலே சாலச் சிறந்ததாகும்.

குமரப்பருவத்தினர் தம் இணைவயதினரின் (Peer Group) வலிமையையும் அதன் நிறைந்த தாக் கத்தையும் உணர்கின்றனர். அவர்களின் ஆளுமை வளர்ச்சியிலும் இணைவயதினரின் தாக்கம் மிகவும் நிறைந்த அளவில் உள்ளது. சான்றாக, அமெரிக்க நாட்டில் பெற்றோர்கள் பலர் தம் குமரப்பருவப் புதல்வர்கள் சூழ்நிலைகள் காரணமாக நெறிபிறழ் நடத்தை மேற்கொண்டு விடுவார்களோ என்றஞ்சி, வெவ்வேறு நல்ல சூழ்நிலை அமைப்புகளைக் கொண்ட பகுதிகளை நோக்கிக் குடியேறுகின்றனர். இது வெள்ளையோட்டம் (White Flight) எனக் குறிக்கப்படுகிறது.

குமரப்பருவத்தினர் தம்மிடத்திலேயே ஒருங் கிணைப்பும் தன்னம்பிக்கையும் கொள்ள வாய்ப்புகள் இல்லை எனில், தம்மொத்த கீழ்நிலைக் குழுவுடன் சேர்ந்து, அதனோடு பிரிக்க இயலாத உறுப்பாக ஆகி விடுகின்றனர். அதனால் பின்னர்க் கட்டுப் பாடின்றித் தன்னிச்சையாகச் செயற்பட்டு, அனைத் துத் தீய பழக்கங்கட்கும் உள்ளாகி வாழ்வில் கீழான பாதை நோக்கிச் சென்று விடுகின்றனர். மேலும், இத் தகைய குழுக்களுக்குப் பள்ளிக் கூடங்களே சந்திக்கும் இடங்களாக அமைந்து விடுகின்றன. எனவே, பள்ளி யின் கல்விச் சூழ்நிலையோடு, சமூகச் சூழ்நிலையை யும் கருத வேண்டியுள்ளது. இக்குமரப்பருவத்தில் மாணாக்கர்களை அன்புடன் நடத்தி அவர்தம் உணர் வுகள் நியாயமானவை என உணர்ந்து அவற்றை

நெறிப்படுத்தி அவர்களுக்கு அவர்கள் மீதே ஒரு தன்னம்பிக்கையை வளரச் செய்வது கல்வியாளரின் பெரும் பொறுப்பாகும்.

இந்திய நாட்டில் குமரப்பருவத்தினருள் ஏறக்குறைய 30 விழுக்காடு மாணவர் பள்ளிக் கூடங்களினின்றும் நீங்குகின்றனர். பள்ளியை விட்டவருள் பலர் தம் வாழ்வைச் சீர்குலைத்துக் கொள்வது மட்டுமன்றித் தன்னைச் சார்ந்துள்ள சமூகத்திற்கும் கேடு செய்கின்றனர். இப்படிப் பட்டவர்களைப் பள்ளிகளிலிருந்து நீங்காதபடி நிலைநிறுத்தும் பொறுப்பு ஆசிரியர்களிடம் உள்ளது. கல்விக் கூடங்கள் நிறைந்த அளவில்முழுதும் கட்டுக் கோப்பான அமைப்பில் சிறந்த ஆளுமையைக்குமரப்பருவ மாணாக்கர்களிடம் முழுதும் வளர்க்க இயலாதாயினும், மாணாக்கர்கள் ஆளுமைக்கு அடிப்படையான அறிவு, திறன், உணர்வுப் போக்குகள், நோக்கங்கள், மதிப்புகள் போன்ற பல்வகையான நன்னெறிகளை வளர்த்திடல் வேண்டும். இப்பண்புகளே மாணவரின் ஆளுமை வளர்ச்சிக்கு அடித்தளம். எனவே, ஆசிரியர்கள் மகிழ்ச்சியானஉளப் போக்கு நிறைந்த வகுப்பறைச் சூழ்நிலையை அமைக்க வேண்டும். மாணாக்கர்கள் தம்மையும், தம்மைச் சுற்றியுள்ளோரையும் மதிக்கும் வகை செய்திடல் வேண்டும். மாணாக்கர்கள் தங்களால் அடையத்தக்க (Goals) குறிக்கோள்களை நிறுவி, அவற்றில் நிறைவு காணும் வகையில் உதவுதல் வேண்டும்.

எஸ்.மோ.

**துணை நூல்கள்:**

**Blount and Kalusmeir,** Teaching in the Secondary School, Harper & Row, New York, 1985.

**Rutter M.,** Changing Growth in a Changing Society, Harvard, Massachusettes, 1980.

**Schofield, M.G.,** The Sexual Behaviour of Young People, Little and Brown, Massachusettes, 1965.

**குமரப்பா, ஜே.சி.** தலைசிறந்த காந்தியப் பொருளியல் அறிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர். அண்ணல் காந்தியடிகளின் பொருளாதாரக் கருத்துகளுக்கு உருவமும் உள்ளடக்கமும் கொடுத்துத் தனிப் பெரும் புகழ்பெற்றவர்.

பொருளாதார வரலாற்றுக் கருத்துத் (History of Economic Thought) தொகுப்பில் புரட்சியான கருத்துகளை வழங்கிய பெருமை இவருக்குண்டு. இவர் கொண்ட கொள்கையில் உறுதியோடு செயற்கரிய பலவற்றைச் செய்ததால் சிறப்புப் பெற்றவர். இவரது தனித்தன்மை வாய்ந்த கருத்துகளை மேலை நாட்டு அறிஞர்களும் இன்று மேற்கோளாக எடுத்துப் பயன்படுத்துகின்றனர்.



குமரப்பா, ஜே.சி.

**இளமை வாழ்க்கை:** குமரப்பா (Kumarappa, J.C.) கி.பி. 1892-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நான்காம் நாள் தம் பெற்றோருக்கு ஒன்பதாம் பிள்ளையாகத் தமிழகத்தில் தஞ்சாவூரில் பிறந்தார். அப்பொழுது இவரது தந்தை திரு. சாலமன் துரைசாமி அங்கு வருவாய்த்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவரது தாய் திருமதி எசுதர் மிகுந்த சமயப் பற்று மிக்க கிறித்தவர்.

பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் செல்லப்பா. பின்னர் இவர் குடும்பப் பெயரான கொர்னீலியசு என்பதைச் சேர்த்துச் சோசப்பு கொர்னீலியசு குமரப்பா என்று பெயர் வைத்துக்கொண்டார். அன்னையிடமிருந்து அறத்தையும் வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையையும் இவர் கற்றுக் கொண்டார்; தந்தையிடமிருந்து நேர்மைத் திறமாக வாழும் பண்பைப் பெற்றுக்கொண்டார். உயிரைவிட ஒழுக்கத்தை ஓம்பும் இயல்பு இவரது குடும்பச் சொத்து.

குமரப்பாவின் தந்தை அரசு அலுவலராக இருந்ததால் பல இடங்களுக்கும் மாறிக் கொண்டிருந்தார். அதனால் குமரப்பாவின் தொடக்கப்பள்ளி, உயர் நிலைப் பள்ளிக் கல்வி தந்தை சென்ற இடங்களில் எல்லாம் தொடர்ந்து நடைபெற்றது. இவர் படிப்பில் எப்பொழுதும் முதன்மை

யான மாணவராக விளங்கினார். தக்க வய தினை அடையவில்லை என்று கூறி பள்ளியிறுதித் தேர்வு (Matriculation) எழுதுவதனை ஓராண்டுத் தடுத்துவிட்டனர். அதனால் ஓராண்டு வீட்டில் இருந்துவிட்டுப் படிப்பைத் தொடர்ந்தார்.

இவருக்குக் கணிதத்தில் ஆர்வம் மிகுதி. பொறியி யல் வல்லுநராக வர விரும்பினார். வரலாற்றுப் பாடத்தில் குறைந்த மதிப்பெண்களே பெற்றார். தலைமையாசிரியர் எச்சரித்ததால் வரலாற்றுப் பாடத்தில் தனிக்கவனம் செலுத்திப் படித்தார். அத னால் பள்ளியிறுதித் தேர்வில் வரலாற்றில் மிகுதியாக மதிப்பெண்கள் கிடைத்தன. இது அவரது வாழ்க்கைப் போக்கையே மாற்றியது.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் குமரப்பா மேற் படிப்பைத் தொடர்ந்தார். இவர் எவ்வளவு வேண்டிக் கேட்டும் கல்லூரி முதல்வர் இவரைக் கணிதத்தைச் சிறப்புப் பாடமாகப் பயில அனுமதிக்க வில்லை. மதிப் பெண்கள் வரலாற்றுப் பாடத்தில் மிகுதியாக இருந் ததால் அதனையே கற்கும்படி கட்டாயப்படுத்தினார். குமரப்பாவும் வேறு வழியின்றி வரலாறு படித்தார்.

சென்னையில் பயின்ற பின்னர் வாணிகக் கணிதவி யலைச் சிறப்புப் பாடமாகக் கற்க 1913-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றார். ஐந்து ஆண்டுகள் செறிவான முறையில் கணக்கு வைப்பு முறையில் பயிற்சி பெற்றுப் கணக்காளராகத் (Incorporated Accountant) தேர்ச்சி பெற்றார். கணக்குத் தணிக்கையில் தனித்திறமை பெற்றவராக விளங்கினார். எப்.எசு.ஏ.ஏ. (F.S.A.A) பட்டம் பெற்ற அவருக்குப் பணி தேடி வந்தது.

அப்பொழுது குமரப்பாவிற்கு மேலை நாட்டு வாழ்க்கை முறை மிகவும் பிடித்திருந்தது. ஆதலால் இலண்டனிலேயே ஒரு நிறுவனத்தில் தணிக்கையாள ராகப் பணியாற்றத் தொடங்கினார். ஆனால் அவர் தம் அன்னையார் விரும்பி, வலியுறுத்தி அழைத்த தால் 1919-இல் தாயகம் திரும்பினார்,

பம்பாயில் முதலில் ஒரு தணிக்கை நிறுவனத்தில் சேர்ந்து பணியாற்றிய குமரப்பா, விரைவிலேயே 'கொர்னீலியசு மற்றும் தவார்'(Cornelius and Dhavar) என்ற பெயரில் சொந்தத் தணிக்கை நிறுவனத்தைத் தொடங்கி நடத்தினார். இவர் கடின உழைப்பால் நல்ல வருவாயும் பெயரும் பெற்றார்.

**சுடர்மிகும் அறிவு:** எட்டாண்டுகள் பம்பாயில் பொருள் தேடிய குமரப்பா, 1927-இல்அமெரிக்காவில் இருந்த அண்ணன் சே.எம். குமரப்பாவின் அழைப்பை ஏற்று அமெரிக்கா சென்றார். ஒரு திங்கள் அமெரிக்கா வைச் சுற்றிப் பார்த்த இவருக்கு அங்கு மேற்படிப்பைத் தொடர ஆவல் பிறந்தது. அங்குள்ள சிராகூசு பல் கலைக்கழகத்தில் (Syracuse University) சேர்ந்து பயின்றார். தனது முப்பத்தாறாம் வயதில் வாணிக நிருவாகப் (Business Administration) படிப்பில் பி. எசி. (B.Sc.) பட்டம் பெற்றார்.

இவர் பேராசிரியர், டாக்டர் பெக்கு (Dr. Wm. Peck) இவரது நுண்ணறிவைக் கண்டு பொதுநிதி யியலைத் தொடர்ந்து கற்கத் தூண்டினார்.அதன்படி கொலம்பியா பல்கலைக் கழகத்தில் (Columbia University) சேர்ந்து பொருளியலைப் பொதுவாகவும் பொதுநிதியைச் சிறப்புப் பாடமாகவும் பயின்றார்.

அங்குக் குமரப்பாவிற்குப் பொருளியலை, உலகப் பொருளியலறிஞர்களான டாக்டர் செலிக்மன் (Dr. E.R.A. Seligman) டாக்டர் தாவன்போர்ட்டு (Dr. Davanport) ஆகியோர் கற்பித்தனர். குமரப்பா, எம். ஏ. பட்டத்திற்கு எழுதிய 'பொதுநிதியும் வறுமை யும்,(Public Finance and Poverty)என்ற கட்டுரையில் இந்தியா வறுமையடைவதற்கு இங்கிலாந்தின் பொது நிதிக் கொள்கை எப்படிக் காரணமாக இருந்தது என் பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கியிருந்தார். இவ ரது பேராசிரியர் குமரப்பாவுக்கு முதல் வகுப்பு மதிப் பெண்கள் வழங்கியபோதிலும், அதிலிருந்த புரட்சி கரமான கருத்துகளினால், அதனை அமெரிக்காவில் வெளியிடக் கூடாதெனக் கூறிவிட்டார். அந்தக் கட்டுரை தான் பின்னர் குமரப்பாவையும் காந்தியடி களையும் இணைத்து வைக்கும் கருவியாக இருந்தது.

எம்.ஏ. பட்டம் 1929-இல் பெற்று இந்தியா திரும்பிய குமரப்பா, மறுபடியும் பம்பாயில் தணிக் கைத் தொழிலைத் தொடங்கினார்.

**திருப்பு முனை**: இந்தியாவில் குமரப்பா தனது ஆய்வுக் கட்டுரையான 'பொது நிதியும் வறுமையும்' என்பதனை வெளியிட விரும்பினார். அதன் புரட்சி கரமான கருத்துகளை அறிந்த நண்பர்கள் இவரைக் காந்தியடிகளை அணுகும்படி கூறினர். காந்தியடி களை 1929-ஆம் ஆண்டு மே திங்கள் ஒன்பதாம்நாள் குமரப்பா சந்தித்தார்.இந்தச் சந்திப்பு குமரப்பாவின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.

காந்தியடிகள் 'யங் இந்தியா' (Young India) இதழில் குமரப்பாவின் ஆய்வுக் கட்டுரையைத் தொட ராக வெளியிட்டார். அப்பொழுது அண்ணல், குமரப் பாவைக் குசராத்திலுள்ள சில ஊரகங்களைச் சுற்றிப் பார்த்து அங்குள்ள வறுமை பற்றிய விவரங்களைச் சேகரிக்கும்படி கூறினார்.அதற்காக அண்ணல் அமைத்

திருந்த கல்வி நிலையமான குசராத்து வித்யாபீடத்தில் (Gujarath Vidyapith) தங்கி, பணியாற்றிக் கொண்டு ஆய்வினை நடத்தினார். அங்குப் பதினெட்டு மாதங்கள் புள்ளி விவரங்களைத் திரட்டி, ஆராய்ந்து 'மதார் வட்டாரப் பொருளாதார ஆராய்ச்சி' (An Economic Survey of Matar Taluk) என்னும் அருமையான நூலை வெளியிட்டார்

காந்தியடிகளின் வேண்டுதலின்படி, 'யங் இந்தியா'வை வெளியிடுவதில் மகாதேவ தேசாய்க்கு உதவி செய்யச் சென்றார். அதே இதழில் இவரது புதிய சிந்தனைகளுக்கு வடிவம் கொடுக்க நிறைய வாய்ப்புக் கிடைத்தது. இவரது கருத்துகளைக் கண்டு அரசு அஞ்சியது. இதழுக்குத் தடை விதித்தது. எதற்கும் அஞ்சாமல் குமரப்பா தடையையும் மீறி இதழ்களை வெளியிட்டார். அதனால் பல இடையூறுகளுக்குள்ளானார். எனினும் அயராமல் தமது பணியைச் செய்து கொண்டிருந்தார்.

**தியாக வாழ்க்கை**: 'யங் இந்தியா' (Young India) இதழில் குமரப்பா எழுதிய கட்டுரைகள் அரசுக்கு எதிராக இருப்பதாக ஆங்கிலேய அரசு 1931-இல் வழக்குத் தொடர்ந்தது. வழக்கில், குமரப்பா, தாம் உண்மையெனக் கருதுவதை எழுதுவதாகக் கூறி மன்னிப்புக் கேட்க மறுத்தார். அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டி அவருக்கு ஒன்றரை ஆண்டுச் சிறைத் தண்டனை விதித்தனர். சிறை வாழ்க்கை மேலும் இவரைக் கூர்மைமிக்கவராக மாற்றியது.

சிறையிலிருந்து வெளிவந்த குமரப்பா தம் எழுத்துப் பணியைத் தீவிரமாகச் செய்தார். கனல் தெறிக்கும் இவரது எழுத்துகளைக் கண்டு மறுபடியும் அரசு குற்றம் சாட்டி 1932-இல் சிறைக்குள் தள்ளியது. மூன்றாம் முறையாக 1943-இல் 'ஊரக உத்யோகம்' என்னும் பத்திரிகையில் 'உணவுக்காகக் கல்'(A Stone for Bread) என்ற கட்டுரை எழுதியதற்காக சிறைத் தண்டனை பெற்றார். ஒவ்வொரு தடவையும் சிறையிலிருந்து புதிய ஆற்றலோடு வெளிவந்து பணியாற்றினார்.

**ஆக்கப் பணிகள்**: குமரப்பா எழுத்துப் பணியோடு அண்ணலுக்கு உதவும் வகையில் பல்வேறு ஆக்கப் பணிகளிலும் ஈடுபட்டார். பீகாரில் 1934-இல் பெரிய பூகம்பம் ஏற்பட்டு அளவற்ற மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு உதவ டாக்டர் இராசேந்திர பிரசாத்து தலைமையில் 'பீகார் மத்திய நிவாரணக் குழு' (The Bihar Central Relief Committee) ஒன்றை அமைத்தனர். அதன் உள் தணிக்கையாளராகவும், நிதித் துணைக் குழுவின் அமைப்பாளராகவும் இவர் அருந்தொண்டு புரிந்தார்.

இந்திய தேசிய காங்கிரசுக் கட்சி 1934-இல் அகில இந்திய ஊரகக் கைத்தொழிற் சங்கத்தை (All India Village Industries Association) அமைக்க முடிவு செய்தது. அதன் முழுப் பொறுப்பையும் காந்தியடிகளின் கருத்துப்படி குமரப்பாவிடம் அளித்தனர். அதன் செயலாளராகக் குமரப்பா, ஊரகத் தொழில்களின் மறு மலர்ச்சிக்கு, செயற்கரிய பணிகளைச் செய்தார்.

குமரப்பா ஆய்வு நடத்தி, வெளியிட்ட சில அறிக்கைகள் இந்தியப் பொருளாதாரக் கருத்து வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தன. அவற்றுள் ஒன்று, 1938-இல் மைய மாநிலம் (Central Province) குமரப்பாவின் தலைமையில் அமைத்த 'தொழில் ஆய்வுக் குழு' (Industrial Survey Committee) அளித்த அறிக்கை. அதைப் போன்று, வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திற்குத் தொழில் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி நடத்தி ஓர் அறிக்கை அளித்தார். அகில இந்தியக் காங்கிரசுக் கட்சி குமரப்பாவின் தலைமையில் 1947 திசம்பரில் அமைத்த 'வேளாண்மைச் சீர்திருத்தக் குழு (Agrarian Reforms Committee) 1949-இல் தன் அறிக்கையை வெளியிட்டது.

**கருத்தியல்புகள்**: குமரப்பா சிறப்புமிக்க தனித்தன்மையுள்ள கருத்தாய்வாளர். இவர் கருத்துகளின் விளைவாக அரிய நூல்கள் பல கிடைத்துள்ளன. இவரது 'இயேசுநாதரின் நடைமுறையும் கருத்துகளும்' (Practice and Percepts of Jesus) என்ற நூல் சமயத்தைப் பற்றிய இவரது ஆழ்ந்த புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அதன் கையெழுத்து மூலப் படியைப் படித்துப் பார்த்த காந்தியடிகள் இவருக்குச் 'சமய அறிஞர்' (Doctor of Divinity) என்னும் பட்டத்தை வழங்கினார்.

காந்தியப் பொருளியலுக்கு உருக்கொடுக்க இவர் எழுதிய 'ஊரக இயக்கம் ஏன்?' (Why the Village Movement?), 'காந்தியப் பொருளியல் கருத்துகள்' (Gandhian Economic Thought), 'கிளைவு முதல் கீன்சு வரை' (Clive to Keynes), 'ஊரக வளர்ச்சிக்கான ஒரு முழுமைத் திட்டம்' (An Overall Plan for Rural Development) என்னும் நூல்கள் குறிப்பிடத்தக்கன.

இவர்தம் பொருளியல் நூல்களுள் மணிமகுடமாகத் திகழ்வது 'நிலையான பொருளாதாரம்' (Economy of Permanence) என்னும் நூலாகும். இதனை அழிவற்ற செல்வம்' என்ற தலைப்பில் தமிழில்

மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர். இந்த நூலைப் படித்துப் பார்த்த காந்தியடிகள் ஊரகத் தொழில் முனைவர் (Doctor of Village Industries) என்ற பட்டத்தைக் குமரப்பாவுக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

**உலக அமைதிப் பணி**: இங்கிலாந்தில் 1948-இல் நடைபெற்ற 'போர் எதிர்ப்பாளர் மாநாட்டில் குமரப்பா பங்கு கொண்டு, உலக அமைதியை நிலைநாட்ட காந்திய வழிமுறையின் பங்கைப் பற்றி விளக்கி அரிய சொற்பொழிவாற்றினார். சீனவிற்கு 1951-இல் சென்று இந்தியாவும் சீனாவும் நட்புறவோடு வாழ முயன்றார்.

சப்பானுக்குக் குமரப்பா 1951-இல் சென்று, அங்குள்ள வேளாண்மை, குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் பற்றிய ஆய்வறிக்கையை எழுதி வெளியிட்டார். மேலும் இவர் சிங்கப்பூர், சோவியத்து உருசியா, செருமனி ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்தார்.

**இறவாப் புகழ்**: நாட்டுத் தொண்டில் ஈடுபட்டதால் திருமணம் கூடச் செய்துகொள்ளாமல் வாழ்ந்தவர் டாக்டர் குமரப்பா. கணக்குகளை வைத்துக் கொள்வதிலும், காலம் தவறாமையிலும் இவர் கண்டிப்பான காந்தியவாதியாகத் திகழ்ந்தார். இவர் தன் இறுதிக் காலத்தைக் கல்லுப்பட்டி, காந்திநிகேதன் ஆசிரமத்தில் கழித்தார். டாக்டர் குமரப்பா 1960-ஆம் ஆண்டில் நோய்வாய்ப்பட்டுச் சென்னை மருத்துவ மனையில் அண்ணல் காந்தியடிகள் அமரரான சனவரி 30-ஆம் நாள் காலமானார். மா.பா.கு.

**துணை நூல்கள்**:

**George, S.K. & Ramachandran, G.**, The Economics of Peace, The Cause and the Man, Akil Bharatha Sarva Seva Sangh, Wardha, 1952.

**Vinaik, M.**, J.C. Kumarappa and His Quest for World Peace, Navajivan House, Ahamedabad, 1956.

**குமரன், (திருப்பூர்)**: காண்க: திருப்பூர் குமரன்

**குமரிக்கோடு**, கடலாற் கொள்ளப்பெற்ற ஒரு மலைத்தொடர். பண்டைக் காலத்தில் இந்தியப் பெருங்கடலில் மூழ்கிய குமரிக்கண்டத்தில் இம்மலைத் தொடர் இருந்தது என்று ஆய்வாளர் கூறுவர். முன்னர்ப் பாண்டிய மன்னன் ஒருவன் தன்னை வேலால் எறிந்த பழம் பகையைப் பொறாத கடல், பிற்காலத்தில் பஃறுளியாற்றுடன் பலவாகிய பக்கமலைகளையுடைய குமரிக்கோட்டினையும் அகப்படுத்திக் கொண்டது. என்னும் செய்தியை, வடிவே லெறிந்த வான் பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள', எனச் சிலப்பதிகாரம் (11: 18-20) குறிப்பிடுகிறது. கடலாராய்ச்சியின்போது இந்தியப் பெருங்கடலுள் மலைத் தொடர்கள் மூழ்கிக் கிடப்பதைக் கண்டுள்ளனர். அவ்வாறு மூழ்கிய ஒரு மலைத்தொடரின் உச்சியில் காணப்படுபவையே லட்சத்தீவுகள், மாலத் தீவுகள், சாகோஸ் தீவுகளாகும் என்பர். இதனால், குமரிக்கோடு கடலில் மூழ்கியதெனும் கூற்று உறுதியடைகிறது. சீ.பா.

**குமரித் தெய்வம்** என்பது, கடலுள் மறைந்த குமரியாற்றின் கரையிலிருந்த தெய்வம் எனக் கருதப் படுகிறது. குமரியாற்றில் நீராடி இத்தெய்வத்தை வணங்கினால் தீவினை அகலும் என நம்பினர் (மணிமேகலை, 13:74). இப்பொழுது, இந்தியாவின் தென் எல்லையான குமரி முனையில் மூன்று கடல்களும் கூடுமிடத்தில் குமரியன்னையின் கோயில் உள்ளது. இது, கன்னியாய் இருந்து சிவபெருமானை அடைய எண்ணித் தவம் செய்த உமையம்மையின் கோயிலாகும்.

இங்குள்ள நீர்த்துறையில் நீராடி, பெண்டிருடன் கூடாத தவ வாழ்க்கையுடன் தம் எஞ்சிய வாழ் நாளைக் கழிக்க விரும்புவோர் இங்கு வருவர் எனப் பெரிப்புளூசு என்னும் பயண நூல் குறிப்பிடுகிறது. இக்கோயிலில் இசைத்தூண்கள் உள்ளன. சோழர் காலக் கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன.

சீ.பா.

**குமரியாறு**, கடல் கோளால் அழிந்த ஓர் ஆறு. இந்தியப் பெருங்கடலாற் கொள்ளப்பெற்ற குமரிக் கண்டத்தின் வடக்குப் பகுதியில் குமரியாறு ஓடிற்று. இந்த ஆறு இக்கண்டத்திலிருந்த எழுநூறு காவதம் தூரம் கொண்ட நாற்பத்தொன்பது நாடுகளுக்கு வட எல்லையாய் அமைந்திருந்தது என்பர். (சிலம்பு.உரை. 8: 1-2) குமரியாற்றில் நீராடுவது புனிதமெனக் கருதப் பட்டது. (சிலம்பு. 27:69). மறையவர் முதல்வன், மாடலன் இவ்வாற்றில் நீராடினான் (சிலம்பு, 15: 13-15). ஆபுத்திரனின் தாய் குமரியாற்றில் நீராடித் தன் பாவத்தைத் தொலைத்தாள் (மணிமேகலை 3-4-7).

குமரியாறு குமரிக்கோட்டில் தோன்றியிருக்கலாம் என வரலாற்றறிஞர் கருதுவர். குமரியாற்றைக் கடல் கொண்ட பின் அக்கடற்றுறை அவ்வாற்றின் பெயரால் குமரித்துறை என வழங்கப்படுகிறது என்பர்.

சீ.பா.

**குமரேச சதகம்**: சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற தமிழ் மரபை ஒட்டியும், வடமொழிப் பெயரைத் தழுவியும், திருச்சதகம் என்று மாணிக்கவாசக சுவாமிகள் எடுத்துக்காட்டிய முறையிலமைந்த சதக இலக்கியம் தமிழில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தனிவகைச் சிற்றிலக்கியமாக உருவெடுத்தது. இச்சதக இலக்கியத்திற்கு கி.பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் முறையே எழுந்த இலக்கண விளக்கப் பாட்டியல், முத்து வீரியம், சுவாமிநாதம் எனும் இலக்கண நூல்கள் இலக்கணம் வகுத்துள்ளன. 'அகப்பொருள் ஒன்றன் மேலாதல் புறப்பொருள் ஒன்றன் மேலாதல் கற்பித்து ஒரு நூறு செய்யுள் உரைப்பது சதகமாம்' என்பது முத்துவீரியம். இவ்வாறே ஏனைய இலக்கண நூல்களும் உரைக்கின்றன.

வடமொழியாளர் தங்கள் இலக்கியங்களை மகா காவியங்கள் என்றும் கண்ட காவியங்கள் என்றும் இருவகையுள் அடக்குவர். இச்சதக வகை கண்ட காவியங்களுள் அடங்கும் என்பர். வடமொழிச் சதகங்கள் தருமம், காமம், மோட்சம் என்னும் முப்பொருள்களை விளக்குவதோடு நூறு நூறு சுலோகங்களால் ஆக்கப்பெற்றவை. தரும காம மோட்ச சதகங்கள் முறையே நீதி, சிருங்கார, வைராக்கிய சதகங்கள் என வேறு பெயர்களையும் பெற்றன.

தமிழில் எழுந்த சதகங்களுள் காலத்தால் முந்தியது அவிநாசி ஆறைகிழார் இயற்றிய கார் மண்டல சதகமாகும். இது எழுந்த காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டென்பர். இச்சதக நூலிற்குப் பின்னர்ச் சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், நந்த மண்டல சதகம், ஈழ மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம் முதலியன தோன்றின. இவை யாவும் அமைப்பு முறையில் அவ்வம் மண்டலங்களின் வரலாற்றையும் சிறப்பையும் விளக்குவனவாக அமைந்துள்ளன. இதற்கு மாறாக இறைவன்மேல் வாழ்த்தாகப் பாடப் பெறுகின்ற சதக நூல்களும் உள. இவற்றுள் சிறந்த நூல்களுள் ஒன்றாகக் கருதப் பெறுவது குமரேச சதகமாகும்.

நூறு என்னும் பொருளைத் தரும் சதம் என்னும் வடசொல் ககரம் பெற்றுச் சதகம் என்றாயிற்று. எனவே, குமரேசர் என்னும் இறைவன்மீது நூறு செய்யுட்களால் ஆக்கப்பெற்ற நூல் குமரேச சதகம் ஆயிற்று. இந்நூல் திருப்புல் வயலில் எழுந்தருளியிருக்கும் குமரேசக் கடவுள்மீது வாழ்த்தாக அமைவது. இந்நூலில் ஒவ்வொரு செய்யுளின் இறுதியடியும் இறைவன் பெயரை மகுடமாகக் கொண்டு விளங்குவது. ஏனைய அடிகள் அறம், மறம், நற்பண்பு, தீப்பண்பு, பழக்க வழக்கம், ஒழுக்க முறை போன்ற கருத்துகளை விளக்குவன.

முருகனை நிகர்த்த தெய்வம் உலகில் இல்லை யெனக் கூறத் தொடங்கிய இந்நூல் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால் வருணத்தாரின் இயல்புகளையும் கூறுகின்றது. மழை பொழிவதும் நிலஞ் செழிப்பதும் அரசர் செங்கோல் நிலையும் மாதவரின் தவமும் மறையோர்களால்தான் விளக்கம்பெறும் என்று அந்தணர்க்குச் சிறப்புக் கூறுகிறது. குடிகளிடம் அன்பும் குறிப்பறியும் பண்பும் பகைவரை வெல்லும் திறனும் கொண்ட அரசரின், இயல்பினையும் இயம்புகின்றது. நாணயம், முதலுக்கு மோசம் வராது காக்கும் வணிகரின் சிறப்பு தொழிலாளர்க்கும் மற்றவர்க்கும் சீவனம் நல்கும் வல்லமைகள் ஆகியவற்றைக் கொண்ட வேளாளரின் மாண்பையும் விளக்குகின்றது.

திருப்புல் வயல் முருகன் சிறப்புகளை விளக்க எழுந்ததே இந்நூலாயினும், அதன் வாயிலாய் உலகியற் கருத்துகளையும் எடுத்தியம்புகின்றது. இலக்கண இலக்கியங்களை நன்கறிந்தவனே கவிஞன் என்பதும் நான் என்னும் செருக்கின்றி மெய்யுணர்ந்து ஐம்புலன்களையும் ஒழித்தவனே மெய்ஞ்ஞானி என்பதும் உயர்ந்த கருத்துகளாகும். பிறப்பினால் மட்டும் ஒருவர் உயர்ந்து விடுவதில்லை. தன் செயல்களின் வாயிலாய்த்தான் உயர்வும் சிறப்பும் புகழும் அடைய முடியும் என்பதை 'நல்ல குடியிற் பிறந்தாலும் அசடர் பெரியோர் ஆவரோ' எனும் தொடரால் விளக்குகின்றது.

சான்றோர் தம் நிறையில் தவறார் என்பதைச் சில உவமைகளின் வாயிலாய் இந்நூல் விளக்குவது நினைக்கத்தக்கது. தங்கம், சந்தனக் கட்டை, சங்கு, பால், மணி ஆகிய இவையெல்லாம் துன்புற்றாலும் தம் குணத்திலோ பண்பிலோ மாறுவதில்லை; அதுபோல் பெரியோர்கள் மடிந்து போனாலும் அவர்களின் தூய நிறை தவறுவதில்லை என்கிறது. குளம் கிணறுகள் தொட்டோர், நீதிமன்னர், தேவாலயம் கட்டினோர், நகரமைத்தோர், ஒப்பற்ற புதல்வரைப் பெற்றோர், சமரில் வென்ற சுத்த வீரர், தருமங்கள் செய்தோர், கொடையாளர், காவியம் செய்த கவிஞர், பத்தினிப் பெண்ணைக் கடிமணம் செய்தோர் ஆகிய இவர்களின் பூத உடல்கள் மறையினும் புகழ் உடம்புகள் மறைவதில்லை என்ற அனுபவ உண்மையையும் விளம்புகின்றது.

மேலும், கீழ்மக்கட்கு நல்லறிவு புகட்டமுடியாது என்பதும், கீழோர் என்பார் தண்டிப்பவர்க்கே அஞ்சு

வர் என்பதும், உலகப் பொருள்கள் சார்ந்ததன் வண்ணமாதலே இயல்பு என்பதும், ஊழ்வினையை வெல்வது அரிது என்பதும், வினையை எவராலும் மாற்றவியலாது என்பதும், நல்லோரின் நட்பு என்றும் வேண்டற்பாலது என்பதும், அறிவற்ற பல மக்களை விட அறிவுடை ஒருவனே மேலென்பதும், விலை மாதரை விழைவது இழிவு என்பதும், நடுவு நிலையோடு இருத்தல் வேண்டுமென்பதும், பிறர் மனையை விரும்ப லாகாது என்பதும், காலம் இடமறிந்து தொழில் புரிய வேண்டுமென்பதும், யாக்கை செல்வம் முதலியன நிலையா; அவை உள்ளபோழ்தே அறம் புரிய வேண்டுமென்பதும், தீயோர் நட்புக் கூடாவென்பதும், அடைக்கலப் பொருளைக் காக்க வேண்டுமென்பதும், சிவனை வழிபடாப் பிறவி பயனற்றது என்பதும் ஆகிய கருத்துகளையெல்லாம் சுவைபட எடுத்தியம்புவது இந்நூல். சு.ப.கோ.

**குமார கம்பணர்** விசய நகரப் பேரரசைத் தோற்றுவித்த முதலாம் புக்கரின் மகன். இவரே தமிழகத்தில் விசய நகர ஆட்சியைப் பரப்பியவர். இவர் கி.பி. 1351 முதல் 1372 வரை மகாமண்டலேசு வரராகத் தமிழகத்தில் பணியாற்றினார். கசன் கங்கு (கி.பி. 1353-1372) என்ற மதுரை சுல்தானை குமார கம்பணர் இருமுறை வெற்றி கண்டார்; சம்புவராயர் களையும் வென்றார். குமார கம்பணரின் மனைவி கங்காதேவி எழுதிய ‘மதுரா விசயம்’ என்ற நூல் அவரைப்பற்றி அறிய உதவுகின்றது.

தமிழகத்தில் ஆட்சி உரிமை இவர் கைக்கு வந்த போது நிருவாகம், கோயில்கள் ஆகியவற்றைத் தமது கட்டுப்பாட்டில் கொணர்ந்தார். தமிழகத்தில் இசு லாமியப் படையெடுப்பால் சிதைவுற்ற பல கோயில் களை இவர் புதுப்பித்தார். திருவரங்கம் அரங்க நாதரை அவ்வூரில் நிலையாக இருக்கச் செய்தார். சிதம்பரம் கோவிந்தராசர் கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு விழா நடத்தினார். இவன் மகன் சம் மண உடையாரின் திருவண்ணாமலைக் கல்வெட்டு மூலம் கி.பி. 1374-இல் குமார கம்பணர் மறைந்தா ரெனத் தெரிகிறது. மா.கா.

**குமாரகுப்தன், முதலாம் (கி.பி. 415-455)**: குப்த மன்னர்களுள் முதலாம் குமாரகுப்தன் (கி.பி. 415-455) புகழ்பெற்றவன் ஆவான். பெரும் பேரரசைக் கட்டிக் காத்த இவன் கல்வி, இலக்கிய வளர்ச்சி ஆகியவற்றிற்கு வித்திட்டான்.

இரண்டாம் சந்திரகுப்தனின் மகனான இவன் கி.பி. 415-இல் அரியணையேறினான். தன் தந்தை விட்டுச் சென்ற பேரரசை நன்முறையில் ஆண்டான். இவன் சமயத் துறையில் பரந்த கொள்கையைப் பின் பற்றினான்; விட்டுணு, சிவன், சூரியன், சக்தி, கார்த்திகேயன்-முதலான கடவுளர்க்கும், சமண புத்த மடாலயங்களுக்கும் அறக்கொடைகள் பல அளித்துள்ளான். இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில், வெள்ளி நாணயங்கள் பல வெளியிடப்பட்டன. அவற் றில் பல வடிவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இவன் அசுவமேத நாணயங்களை வெளியிட்டுள்ளதால், அசுவமேதயாகம் இவனால் செய்யப்பட்டது என்பது அறியப்படுகிறது.

இவன் வடக்கே கைலாச மலையில் இருந்து தெற்கே விந்தியக் காடுகள் வரையிலான பகுதிகளை ஆட்சி புரிந்தான் என்று பட்டயங்கள் பகர்கின்றன. அடுத்து இவனது நாணயங்கள் இந்தியாவின் பல் வேறு பகுதிகளிலும் கிடைக்கின்றன. எனவே இவன் பரந்ததோர் பேரரசினை ஆண்டான் என்பது விளங் கும்.

முதலாம் குமாரகுப்தன் சிரீ மகேந்திரன், அசீதா மகேந்திரன், சிம்ம மகேந்திரன், அசுவமகேந்திரன், மகேந்திரகர்மன், மகேந்திரகல்பன், சிரீமகேந்திர சிம்மன், மகேந்திரகுமார், மகேந்திர ஆதித்தியன்-முத லிய சிறப்புப் பெயர்களைப் பூண்டிருந்தான்.

அசுவமேத யாகம் புரிந்ததன் நினைவாகச் ‘சிரீ அசுவமேத மகேந்திரன்’ என்னும் விருதுப் பெயரை யும் ‘செயதி திவான் குமாரன்’ என்னும் விருதுப் பெயரையும் இவன் கொண்டுள்ளான். இவ்வேந்த னது ஆட்சிக் காலம் அமைதிக் காலமாக இருந்த போதிலும், அயலார் படையெழுச்சி ஒன்று இவனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் நிகழ்வுற்றது. இந்த அயலார் புசுயமித்திரர்களாகவே இருத்தல் வேண்டு மென்பது வாகாடக வேந்தன் இரண்டாம் பிருதிவி சேனருடைய பாலாக்காட்டுப் பட்டயத்தால் அறியப் படுகிறது.

குமாரகுப்தனின் ஆட்சிக்காலம் குப்த அரசின் சமயப் பண்பாட்டுச் சகாப்தத்தின் உச்சநிலையைக் கண்டது எனலாம். உலகப் புகழ் பெற்ற நாலந்தாப் பல்கலைக்கழகம் சிறப்புற்றதும், பெருங்கவிஞர் காளி தாசர் சிறப்பான பாக்கள் இயற்றியதும் இவனது ஆட்சிக்காலத்தில்தான். இவனது நாணயங்களில் வாளாளன், வில்லாளன், குதிரைவீரன், அசுவமேத யாகம், புலிக்குத்தி, மயில், யானைப் பாகன் முதலிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளதால் இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தின் கலை வளர்ச்சி நன்கு புலப்படு கிறது. இவனது ஆட்சிக் காலத்தில் பட்டு நெசவு நெய்வோர், இவனது பகுதியில் குடியேறி வளம் பெற்றனர் என்றும் தெரிகிறது.

**குமாரகுப்தன், இரண்டாம்** (கி.பி. 473-476): குப்த மரபில் தோன்றிய வேந்தன். குப்தர் அரசினை ஆண்ட இசுகந்தகுப்தனுக்குப் (Skanda Gupta) பின் ஆட்சிபுரிந்த குப்தவேந்தருள் இரண்டாம் குமாரகுப்தனும் ஒருவன்.

நரசிம்ம குப்த பாலாதித்தியனுக்கும் (கி.பி. 473) மித்திரா தேவிக்கும் மகனாகத் தோன்றிய இவன் கிழக்கிந்தியாவையும் (பூர்வ தேசம்) வங்காளத்தின் (கௌடதேசம்) வடமேற்குப் பகுதியையும் ஆண்டு வந்தான். சாரநாத்திலுள்ள புத்தரின் உருவச் சிலை இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் வடிக்கப்பட்டது. அழகே உருவான இச்சிலை உலகின் நேர்த்தியான சிலைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் வில்லாளன் உருவம் பொறிக்கப்பட்ட (Archer Type) தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டன. ம.இ.

**குமாரகுலசிங்க முதலியார்**: இவர், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; யாழ்ப்பாணத்தில் உள்ள தெல்லிப்பழை என்னும் ஊரில் கி.பி. 1826-ஆம் ஆண்டு பிறந்தார்; வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த இவர் மொழிபெயர்ப்பாளராக நீதி மன்றங்களில் பணிபுரிந்தார்; சொற்பொழிவாற்றுவதில் வல்லவராக விளங்கினார். மேலும், பதிவிரதை விலாசம் என்னும் நூலினையும் தனிப்பாடல்கள் பலவற்றையும் இயற்றியுள்ளார். இவர் கி.பி. 1884-இல் காலமானார். வீ.சே.

**குமாரசம்பவம்**: பசுவையும், பாம்பையும் வயப்படுத்துவது இசை. கற்றோர், மற்றோர்களை வசப்படுத்துவது காப்பியம். காவியம் காதலி தன் காதலனைக் கிளிபோல் மிழற்றி, குயிலெனப்பாடி, மயிலொக்க ஆடி, வயப்படுத்துவதை ஒக்கும். வடமொழியில் காவியங்களை 1. மகாகாவியம், கண்ட காவியம் எனவும், 2. பத்தியம் (செய்யுள் நடை) கத்தியம் (உரை நடை), சம்பூ (செய்யுளும்-உரையும் விரவிய நடை) எனவும், 3. காண்பது - கேட்பது எனவும் 4. காவியம், நாடகம், சந்தேசம் எனவும், 5. நாரிகேளபாகம், திராட்சாபாகம் எனவும் பிரிப்பார்கள். ஒரு காவியத்தின் சிறப்பு, கவி, கேட்பவர் அல்லது உட்பொருள், தலைவன் என்ற மூன்றினைப் பொறுத்து அமையும்.

வடமொழியில் காவிய அமைப்பு, மிகப் பழங்காலம் தொடங்கி இருந்துவருகிறது. பதஞ்சலி என்பவர் தமது மகாபாடியத்தில் காவியம் பற்றியும், பலிபந்தம் கம்சவதம் என்ற நாடகங்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். அசுவகோசன் என்பவர் தமது புத்தவதம் என்ற காவியத்தை மகாகாவியம் என்கிறார். காளிதாசனும் உதயணசரிதம் பற்றியும் பாசன், சௌமில்லகன், கவிபுத்திரன் ஆகியோர் பற்றியும் குறிப்பிடுகின்றனர். ஆனால், காளிதாசனுக்குப் பின், வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி தவிர்த்த அனைத்துக் காவியங்களும் பகல் விளக்காயின.

தமிழிற் போல், வடமொழியிலும், ஐம்பெரும் காப்பியங்கள் உண்டு. அவற்றை மகா காவியங்கள் என்பர். அவை, காளிதாசன் எழுதிய இரகுவமிசம், குமாரசம்பவம், மாகனது சிசுபாலவதம், பாரவியின் கிராதார்ச்சுனீயம், கவி அர்சனின் நைடதம் என்பன. 'தண்டி' என்ற ஆலங்காரிகரின் கொள்கைப்படி மகாகாவியங்கள்-வாழ்த்து, வணக்கம் ஆகியவற்றை முன்னுடையதாய், அறம், பொருள், இன்பம் என்ற நடைநெறித்தாய், ஒப்பற்ற தலைவனைக் கொண்டதாய், மலை, கடல், நாடு, நகரம், இருது, சூரியன், சந்திரன் ஆகியவற்றின் வருணனை கொண்டதாய், திருமணம், முடிகவிப்பு, பொழிலாட்டு, நீராட்டு, புதல்வர்ப்பேறு, புலத்தல், களித்தல், மந்திரம், தூது, செலவு, இகல் வென்றி சந்தி என்ற 12 தந்திரங்கள் கொண்டு, சருக்கம் முதலிய பிரிவுடையதாய், சொல், கருத்து, சுவை, அணி, நடை, தொனி ஆகியன நன்கு அமைந்ததாய் இருத்தல் வேண்டும். மற்றும் மகா காவியங்களுக்குச் சொல்லணி, எளிய நடை, பொருளணி, சுவை, தொனி (இறைச்சி) இவை செவ்வனே அமைந்திருத்தல் வேண்டும். அணிகளின் அரசி எனத் தக்க உவமை அணி பொருந்தி அமையவும் வேண்டும் இவை யாவும் சிதறாமல், சிந்தாமல், குமாரசம்பவத்தில் அமைந்துள்ளன. கம்பச்சித்திரம் என்பார்களே, அவ்வண்ணம், விக்கிரமாதித்யன் சபையின் ஒன்பது கவிமணிகளில், மணிகளுக்கும் மணியான காளிதாசனது இக்காவியத்தில், காளிதாச சித்திரத்தை நன்கு காணலாம். இது 17 சருக்கங்கள் கொண்ட காவியம். கம்பராமாயணம் உத்தரகாண்டம் போல, இக்காவியத்தில் பார்வதியின் திருமணம் வரையிலான 8 சருக்கங்களே காளிதாசன் படைப்பு எனவும், பின்வரும் 9 சருக்கங்களும் பின் சேர்க்கப்பட்டவை எனவும் கூறுவார்கள். அதற்கு நடை, சொல்லமைப்பு முதலியன அகச்சான்றுகள். 8-ஆம் சருக்கத்தில் வரும் சொல்லக் கூசும், பார்வதி பரமேசுவரரின் கூடல் இன்ப வருணனை, இவ்வளவு பச்சையாகக் காளிதாசனின் காவியத்தில் அமைந்திருக்க முடியாது என்பதும் ஒரு அகச்சான்று. மற்றும் பிற் பகுதிக்குப் புகழ்பெற்ற உரையாசிரியரான மல்லி

நாதர் உரை இல்லை. சீதாராமகவி என்பவரே எழுதியுள்ளார். தலைப்பிற்கிணங்கக் குமரன் பிறப்பை அறவே கவி ஏன் விட்டார் என்பதும் அறிய முடியவில்லை.

தாரகன் அரக்கனின் வதம் என்பனவாகும். காளிதாசன் காளியின் பக்தனானாலும், இவன் கருத்தைக் கவர்ந்தவர் முருகன் என்பதற்கு இரகு வமிசம் என்ற இராமகாதையில் பல அகச்சான்றுகள் உண்டு. காளிதாசன், தமக்குப் பிள்ளை இல்லாத குறையை, குமரனை நினைந்து ஆற்றிக்கொண்டார் எனலாம். இக்கதைக்கு ஆதாரம், பதினெண் புராணங்களில் மிகப் பெரியதான காந்தம் என்றாலும், தம் குருவாக ஆக்கிக்கொண்ட வால்மீகியின் இராமாயண பாலகாண்டத்தில் வரும் குமாரோற்பத்தி என்ற பகுதியைப் பெரிதும் பின்பற்றினார் எனலாம். முதல் சருக்கத்தில் இமய வருணனையும் பார்வதியின் இளமை வருணனையும் மிகவும் சிறந்திருக்கும். இமயத்தின் குகைகளில் இருள் சூழ்ந்திருப்பதை வருணிக்கும் கவி பகலவனைக் கண்டு ஓடிய இருள் இமயத்தைச் சரண் புகுந்து இதன் குகைகளில் இடம்பெற்றது என வருணிக்கும் வகையில்-இந்தியா பகைவர் அன்னியர் யாராயினும் சரண் புகுந்தவரை ஒரு நாளும் கைவிடாது என்பதைக் காட்டும் குறிப்பினைப் புலப்படுத்தி, தமது தேச பக்தியைக் காட்டினார். காளிதாசன் தம் படைப்புகள் ஆறில் குமாரசம்பவத்தைக் கடைசியில் படைத்திருக்கலாம் என்றாலும் இமயவருணனை பார்வதி வருணனை மகள் பேசும் இடம் ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கினால் முதன் முதலில் அம்பாளிடம், தான் கொண்ட பக்தியையும், முருகனிடம் தாம் கொண்ட பற்றையும் காட்டப் பக்திக் காணிக்கையாக இக்காவியத்தை எழுதி இருக்கலாம். எனவே, அறியக் கிடக்கும் 3-வது சருக்கத்தில் 'இசுதாண் வாசிரமத்தில்' இயற்கைக்கு மாறாக ஏற்பட்ட வசந்தவருணனை, காளிதாசனது இளமையின் ஓட்டத்தைக் காட்டும். 2-வது சருக்கத்தில் வரும் பிரமனைப் பற்றிய துதியைப் படித்தவர்களுக்கு, இவருடைய வேதாந்தப் புலமை நன்கு புரியும். முதல் சருக்கத்தில் இமயமலையை, மலை அரசனாக்கி, இம்மலை அரசன், மேரு மலையின், நண்பன் எனக் கூறி, இவருக்குப் பித்ருக்களின் மானசப் புதல்வி மேனா என்பவளை மனைவியாகப் படைத்துள்ளார். மேனாட்டினர்கள், இக்காவியத்தை இசைத்துப் பாடுவதும் உண்டாம். அவர்கள் காவிய அரசன் (King of Kavyos) என இந்நூலைப் போற்றுவார்கள். முதல் மங்களச் செய்யுளில் 'அத்தி என்ற சொல்லை முதல் சொல்லாகக் கொண்டு நூலைத் தொடங்குவதாலும் இந்தியாவின் பெருமைக்கு இமயம் ஒரு அளவுகோல் என்று உரைத்ததாலும், இந்தியாவைப் பிருதுவி(மண்ணுலகு) எனப் பெயரிட்டதாலும் பாரதத்தின் பாரம்பரியம் சிறப்பு ஆசுதிக்கியபுத்தியை வலியுறுத்தி, திக்நாகன் போன்ற கடவுளை ஒப்புக் கொள்ளாத புறச் சமய வாதிகளின் கருத்தை ஏற்காதவராகவும் உள்ளவர் என அறியலாம். முன்பு இந்தியாவின் பிரதம நீதிபதியாய் இருந்தவரும் சிறந்த அறிஞருமான சர். வில்லியம் சோன்ஸ் என்பவர் இக்காவியத்தை ஊன்றிப் பயின்று, காளிதாசனை இந்தியாவின் சேக்சுபியர் என்றார். கற்பனைக்குக் கம்பன் போல் உவமைக்குக் காளிதாசர் என்னும் சிறப்புண்டு; இவரும் பார்வதியின் 'ஊரு' வருணனையில் முதல் சருக்கத்தில் பண்பாடு கருதி இப்பகுதிக்குத் தானே உவமை கூறமுடியாது என்கிறார். பார்வதியின் திருமணம் ஓசதிப்பிரசுத்தம் என்ற இடத்தில் நடந்ததாக வருணிக்கையில் காளிதாசனுக்கு அளவற்ற உலகானுபவம் இருந்தது என்பதை அறியலாம். சிவபெருமானின் திருமண ஊர்வலத்தைக் காணப் பெண்களின் துடிப்பு எவ்வாறு இருந்தது என்பதை வருணிக்கையில் தன்மைநவிற்சி அணியின்எல்லைக்குச் சென்றுள்ளார். மும்மூர்த்திகளுக்குள் ஏற்றத்தாழ்வு மனப்பான்மை தமக்கு இல்லை என்பதை 7-வது சருக்கம் 44-வது செய்யுளில் தெளிவாக உரைத்துள்ளார். திருமண மண்டபத்தில் அமர்ந்திருந்த சிவபெருமான் திருமணத்துக்கு வருகை தந்த திருமால் பிரமன், இந்திரன், தேவர்கள் ஆகியோர்களை வரவேற்பதில் சிவபெருமான் நடந்துகொண்ட முறையை வருணிக்கும் வாயிலாய், தாம் சிறந்த நிருவாகி என்பதையும் காட்டியுள்ளார். 5-ஆம் சருக்கத்தில் சிவபெருமான் அழகிற்கும், அதிகாரத்திற்கும், பொருளுக்கும் ஏற்றம் தரமாட்டார்; தூயபக்திக்கே ஏற்றம் தருவார் என்பதை உணர்த்தும் வகையில், சிவபெருமான் பார்வதியின் தூயபக்திக்காகப் பார்வதியைத் தலைவணங்கினார் என்னும் இடம் மிக அருமையானது. அது மட்டுமன்றிச் சக்தி உபாசகர்களின் கொள்கையையும் சிறிது காட்டினார் எனலாம்.

என்.எஸ்.தா.

**குமாரசாமி தேசிகர்**: இவர் தொண்டை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர். வேளாண் மரபினர்க்குத் தீக்கை வழங்கியருளும் குருவாக விளங்கியவர். கசடறக் கற்றும் அதற்குத் தக நின்றும் ஒழுகியவர். சிவபூசைச் செல்வர். திருவண்ணாமலையில் ஆண்டுதோறும் நிகழ்ந்துவரும் கார்த்திகை விளக்கீட்டைக் கண்டு வழிபடும் கடப்பாடுடையவர்.

தாம் கொண்டிருந்த கடப்பாட்டின் வழி ஒழுகும் இவர், ஒருமுறை திருவண்ணாமலைக்குச் செல்

லும போது இடைவழியில் தங்க நேரிட்டது. அங்கு வழிபாடாற்றிய பூசைப் பெட்டகத்தை உடன் வந்த வர்கள் மறந்து வைத்துவிடத் திருவண்ணாமலை சென்ற தேசிகர், இறைவன் உணர்த்திய வண்ணம் சிவலிங்கத்தை இடையறாது தரித்துக் கொள்ளும் வீர சைவ ஒழுக்கத்தைப் பூண்டனர் என்பர்.

இவருக்குச் சிவப்பிரகாசம், வேலாயுதம், கரு ணைப்பிரகாசம் என்ற மூன்று ஆண்மக்களும், ஞானாம்பிகை என்னும் ஒரு பெண் மகவும் பிறந் தனர். தம்முடைய மக்களுக்குத் தாமே கல்விகற்பித் தார். இவர் மக்களுள் ஒருவரான சிவப்பிரகாசர் இளமைப்பருவத்தினராக இருக்குங்கால், ஒருநாள் கொல்லையில் எருமைக் கன்றுகள் சில நுழைந்து வாழைக் கன்றுகளைத் தின்று கொண்டிருந்த காட் சியைக் கண்டு தம் தந்தையை விளித்து, 'அப்பா, அப்பா நம்முடைய தோட்டத்திலே உள்ள வாழைக் கன்றுகளை எருமைக் கன்றுகள் சில மென்று மென்று தின்கின்றன' என இலக்கண வழுவின்றித் தூய தமி ழில் கூறினார். அது கேட்ட தந்தையார் வழுவின்றிப் பேசிய தம் மகனின் ஆற்றலைப் பெரிதும் வியந்தனர். எனினும் தம் மக்களுக்கு முழுமையாகக் கல்வி கற்பிக்கும்வரை இவர் இவ்வுலகில் வாழவில்லை. இவர் இயற்றிய நூல்களைப் பற்றி ஏதும் தெரிந்திலது. இவர் பாடிய பாடலொன்று மட்டும் கிடைத்துளது. அப்பாடல், 'கயல்வாய்த்த கண்ணி உலகீன்ற வல்லி' என்னும் தொடக்கங்கொண்டது. மீன் போன்ற கண் களை உடையவளும் உலகனைத்தும் ஈன்றவளுமான உமையம்மையை இடமாகக் கொண்டவனே! நல்லற நூல்களில் சொல்லப்பட்ட இயல்பினதாய இவ் வாழ்வை உடைய என் தந்தைக்கு, யான் மகனாகப் பிறந்ததுவும், பிறந்த எனக்கு வயல்வளம் சான்ற செல்வம் கிடைத்ததுவும், மங்கலம் என்னும் மனை மாட்சி சிறக்க வாழ்க்கைத் துணை நலம் வாய்த்தது வும், அதன் நன்கலமாய நன்மக்கட்பேறு வாய்த்தது வும் நினது திருவருள் நலம் பெற்ற அன்பர்கட்கும் அல்லாதவர்க்கும் நகை விளைக்கத் தக்கன அல்லவோ என்பது அப்பாடற் கருத்தாகும். இதனால் இறைவன் தமக்கு வழங்கிய பேறுகளனைத்தும் அவ னது பெருங் கருணைக்கு இலக்காகுமேயன்றித் தம் தகுதி அப்பேறுகளைப் பெறற்குரியது அன்று என இவர் கருதினார் என்பது, விளங்கும். இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். கு.சு.

**குமாரசாமிப் புலவர்**: இவர் யாழ்பாணத்துச் சுன்னாகத்தைச் சேர்ந்தவர். அம்பலவாணபிள்ளை, சிதம்பர அம்மையார் ஆகிய இருவருக்கும் மகனாக கி.பி. 1855-ஆம் ஆண்டு தைத்திங்கள் 18-ஆம் நாள் தோன்றியவர். இளமையில் மல்லாகம் ஆங்கிலப் பள்ளியில் பயின்று பின் முருகேச பண்டிதரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் நாகநாத பண்டிதரிடம் வடமொழியையும் கற்றவர்; கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் உடையவர்; சொற்பொழி வாற்றுதலிலும், செய்யுள் பாடுதலிலும் வல்லவர்.

இவர், சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களின் விருப்பத்திற் கிணங்க ஏழாலையில் அவர் தொடங்கிய சைவ வித்தியா சாலையில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். பல ஆண்டுகள் அப்பணியைச் சீரொடும் சிறப்பொடும் ஆற்றி வந்தார்.

இவர் கி.பி. 1892-இல் மணவாழ்க்கையை ஏற் றார். விசாலாட்சி, அம்பலவாணன், முத்துக்குமாரன் ஆகிய மூவரும் இவர்தம் மக்களாவர்.

ஏழாலையில் ஆற்றிய பணிக்குப்பின் கு. கதிர் வேல்பிள்ளை என்பவரின் அகராதித் தொகுப்புப் பணிக்குத் துணை நின்றார். பின் 1902-ஆம் ஆண்டு முதல் ஆறுமுக நாவலரின் சைவப் பிரகாச வித்தியா சாலையின் தலைமையாசிரியராகப் பணிபுரிந்துவந் தார். பாண்டித்துரைத் தேவர் தாம் நிறுவிய மது ரைத் தமிழ்ச் சங்கத்தில் இவரை ஓர் உறுப்பினராக ஏற்றார். அதன் வாயிலாகத் தமிழ்ச் சங்கப் பணிகள் பலவற்றையும் ஆற்றிவந்தார். ஈழத்திலிருந்து இரண்டு மூன்றுமுறை தமிழகத்திற்கு வந்த இவர், பல சிவப் பதிகளை வணங்கிச் சென்றார் ஒருமுறை திருவாவடு துறை ஆதினத்திற்குச் சென்றார், அதுபொழுது அவ் வாதீனத்திலிருந்த குருமூர்த்திகள் இவரைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தனர்.

இவர் எழுதிய நூல்கள் பல. அவை: 1. கம்ப ராமாயணம் பாலகாண்ட அரும்பதவுரை 2. நீதிநெறி விளக்கப் புத்துரை 3. தண்டியலங்காரப் புத்துரை 4. யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை 5. வினைப் பகு பதவிளக்கம் 6. சாணக்கிய நீதிவெண்பா 7. இலக்கி யச் சொல்லகராதி 8. தமிழ்ப் புலவர் சரித்திரம் 9. இதோபதேசம் 10. சிசுபால சரிதம் 11. இராமோ தந்தம் 12. இரகுவமிச சரிதாமிருதம் 13. சிவத் தோத்திரக் கவித்திரட்டு 14. மேகதூதக்காரிகை 15. ஏகவிருத்த பாரதாதி 16. மாவைப் பதிகம் 17. கலை சைச் சிலேடைவெண்பா அரும்பதவுரை 18. இலக் கணசந்திரிகை என்பன. இவற்றுள் மேகதூதக்காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதிவெண்பா ஆகிய மூன்றும் இவர் யாத்த மொழிபெயர்ப்பு நூல்களா கும். சிசுபால சரிதம் இவர் மொழிபெயர்த்தெழுதிய சிறந்த உரைநடைநூலாகும். இவர் எழுதிய தமிழ்ப் புலவர் சரிதத்தில் ஏறக்குறைய 400 புலவர்களின் வரலாறுகள் அமைந்துள்ளன.

இவையன்றிப் பற்பல திருக்கோயில்களில் அவ்வக் கோயில்களின் தலைவர்களின் வேண்டுகோட்கிணங் கப் பல பதிகங்களும் ஊஞ்சலும் பாடியுள்ளார். மேலும், அவ்வப்பொழுது இவர் பாடிய தனிக்கவி களும், சிறப்புக் கவிகளும், கையறுநிலைகளும் பலப் பல. மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ் இதழிற்கு இவர் வழங்கிய கட்டுரைகள் பல. இவையன்றிச் சில நூல்கள் இவரால் திருத்தப்பட்டும், உரை எழுதப்பட்டும் புதிதாக இயற்றப்பட்டும் உள்ளன. திருத்தப்பட்டவை உரிச்சொல் நிகண்டு, பழமொழி விளக்கம் என்பன. உரை எழுதப்பட்ட நூல் கலைசைச் சிலேடைவெண்பா என்பதாகும். இவர் உரையே இந்நூற்கமைந்த முதலுரையாகும். இவர் நல்ல பதிப்பாசிரியர்; மாணாக்கருக்குப் பயன் கரு தாது பாடம் சொல்வார். தாம் அறிந்த நுண் பொருள்களையெல்லாம் அவர்களுக்கு வஞ்சியாது உணர்த்துவார். இவர் தம் நூல்களை மாணாக்கர்க்குக் கொடுத்துக் கற்பிக்கும் அறநெஞ்சினர், தமிழ்க்கல்வி கற்குமாறு அனைவரையும் தூண்டியவர். எளிய உடை யும் நடையும் உடைய இவர் இலங்கை அரசால் பரி சளித்துப் பாராட்டப் பெற்றவர். தம் வாழ்நாள் முழுதும் அரிய பல தொண்டாற்றி வந்த இவர் 1922 -ஆம் ஆண்டில், தம் அறுபத்தேழாம் வயதில் கால மானார். கு.சு.

**குமாரசாமி மடம்**: காண்க: திருமடங்கள்.

**குமாரசாமி முதலியார்**, கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த யாழ்பாணத் தமிழ்ப் புலவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உடுப்பிட்டியில் உள்ள வல்லுவெட்டி என்னும் ஊரில் கதிர்காம முதலி யாருக்கும் வள்ளியம்மைக்கும் மகனாக கி.பி, 1791 -இல் தோன்றினார். சைவ வேளாளக் குடும்பத்தில் தோன்றிய இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்து விளங்கினார். இவர் மனைவி சிவ காமி. இவர் ச. குமாரசாமி முதலியாரின் மரு மகன். தமிழ்ப் பேரகராதியை ஆக்கிய கு. கதிரை வேற்பிள்ளை இவர்தம் இளைய மகனாவார். இவர் இந்திர குமார நாடகம், அருளம்பலக் கோவை, சீரு விற் சுப்பிரமணியர் பதிகம், மூவாய்ச் சித்தி விநாயகர் ஊஞ்சல், கந்தவனநாதர் ஊஞ்சல், நல்லைக் கலித் துறை முதலிய நூல்களையும் பல தனிச் செய்யுட் களையும் இயற்றியுள்ளார். இவர் கி.பி. 1874-இல் காலமானார். வீ.சே.

**குமாரசாமி ராசா, பூ.ச.**: இவர் கி.பி. 1898-இல் இராமநாதபுரம் மாவட்டம் இராசபாளையத்தில் பிறந்தார். இவர் தந்தையார் பூசப்பாடி சஞ்சீவி ராசா. ஏறத்தாழ 400 ஆண்டுகட்கு முன்பு ஆந்திராவி லிருந்து கிருட்டிணதேவராயர் காலத்தில் இராசுக்கள் தமிழகத்தில் இராசபாளையத்தில் குடியேறி நக ரமைத்துக் சிறப்புற்றனர். இவர் இளமையிலேயே தாய், தந்தையரை இழந்தார். இவருக்கு 1920-இல் திருமணம் நடைபெற்றது. மனைவி பெயர் உருக்கு மணி. இவர்கட்கு மகப்பேறு இல்லை. இவர் உயர் பள்ளிப் படிப்புடன் அமைந்துவிட்டார்.



குமாரசாமி ராசா, பூ.ச.

காந்தியடிகள் 1919-இல் தமிழகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது அவரைச் சந்தித்துக் காந்தீயத் தில் ஈடுபாடு கொண்டு காங்கிரசு இயக்கத்தில் சேர்ந் தார். இவர் ஒத்துழையாமை இயக்கத்தில் (1931) ஈடு பட்டு ஓராண்டுச் சிறைத் தண்டனையும் பெற்றார். இராசபாளையத்தில் நூற்றுக்கணக்கான தியாகிகளை உருவாக்கிய இராசா தன்னலம் சிறிதுமின்றிப் பொது நலமே குறிக்கோளாகக் கொண்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்குகொண்டார். மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர், கூட்டுறவு ஆகிய வற்றிலும் ஆர்வமுடன் ஈடுபட்டார். இவர் கூட்டுறவு இயக்கத்தின் மிகப் புகழ்பெற்ற தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்ததோடு பல நிறுவனங்களின் தலைவராகவும் விளங்கினார். இவர் இராசபாளை யத்தில் இன்று சிறப்புடன் திகழும் பூபதிராசு கூட் டுறவு வங்கியை நிறுவினார்.

இவர் மத்திய சட்டசபைக்கு 1934-இல் உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், 1938-இல் 40-ஆம் தமிழ்நாடு அரசியல் மாநாடு இராசபாளை

யத்தில் நடந்தது. வரவேற்புக் குழுத் தலைவராக இவர் திறமையுடன் செயற்பட்டார். தனி ஆள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு 1941-இல் 9 மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றார். விடுதலை அடைந்தபின் இராமநாதபுர மாவட்ட ஆட்சிக்குழுத் தலைவராக (1941) அமர்ந்து நற்பணி புரிந்தார். பழைய சென்னை மாநிலத்தில் ஆந்திரகேசரி டி. பிரகாசம் பந்துலு அவர்களின் அமைச்சரவையில் (1946) இவர் வேளாண்மைத் துறை அமைச்சரானார்.

நாடு சுதந்திரம் பெற்றபின், 1949 ஏப்பிரல் மாதம் குமாரசாமி ராசா சென்னை மாநில முதலமைச்சராகப் பதவி ஏற்றார். நீதித் துறைக்கும்நிருவாகத் துறைக்கும் இருந்த பிணைப்பை நீக்கி அவை தனித்தனியாக இயங்க இவர் வழிவகை செய்தார்.

குமாரசாமி ராசா 1952 முதல் பண்பாடு, கலை ஆகிய துறைகளில் ஈடுபட்டு அவற்றை வளர்த்தார். அதன் விளைவாகத் தம் சொந்த இல்லத்தையும் நிலபுலங்களையும் இவர் பொதுமக்கட்கு வழங்கிக் 'காந்தி கலை மன்றம்' என்னும் பண்பாட்டு மையத்தை நிறுவினார். தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட இந்நிறுவனம் 1953-இல் நிறுவப்பட்டது. இங்குச் சிறந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இராசா அவர்கள் 1954-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் ஒரிசா மாநில ஆளுநராகப் பதவி ஏற்றார். உடல் நலனை முன்னிட்டும், காந்தி கலை மன்றத்தைப் பேணி வளர்க்கும் நோக்குடனும், பதவி ஆசை சிறிதும் இல்லாத இராசா ஆளுநர் பதவியை 1954-இல் துறந்தார். பின் காந்தி கலை மன்றத்தை உருவாக்குவதற்காகத் தம் ஆற்றல், பொருள் அனைத்தையும் ஈடுபடுத்தினார்.

நேர்மையும், அறச்சார்பும் உடைய சான்றோராகத் திகழ்ந்த குமாரசாமி ராசா 1957-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் சென்னைப் பொது மருத்துவமனையில் காலமானார். பொதுநலமே உயிர் மூச்சாகக் கொண்டிருந்த இராசாவின் நினைவுச் சின்னமாகக் காந்தி கலைமன்றம் திகழ்கிறது. காந்தியடிகள், நேரு முதலிய பெருமக்களால் பாராட்டப்பட்ட இவர் தம் உருவச் சிலையைக் குடியரசுத் தலைவர் சஞ்சீவி ரெட்டி அவர்கள் 1978-இல் இராசபாளையத்தில் திறந்து வைத்துப்புகழஞ்சலிசெலுத்தினார். மு.கு.ஜெ.



காந்தி கலை மன்றம்.

**குமாரதேவர்**: இவர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் 18–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த வீரசைவத் துறவியாவார். கன்னட நாட்டின் அரச மரபில் தோன்றிய இவர் அரச வாழ்வின் வெறுமையையும், ஆன்மீக வாழ்வின் பெருமையையும் உணர்ந்து துறவு மேற்கொண்ட பெருமகனாவார். அரச வாழ்வையும் இல்லற வாழ்வையும் துறந்த இப்பெரியார் சாந்தலிங்க அடிகள் என்னும் வீரசைவப் பெரியார்பால் சார்ந்து அருளாசி பெற்றாரென்றும், அவர் கட்டளையை மேற்கொண்டு தமிழகம் போந்து புகழ்மிக்க சிவத் தலங்களுள் ஒன்றான திருமுதுகுன்றத்தில் வாழ்ந்து வீடு பெற்றாரென்றும் அறிய முடிகிறது. திருமுது குன்றத்தில் வாழ்ந்தபோது பெரியநாயகியம்மன் திருவருட்டுணையுடன் அரும் பெரும் நூல்கள் பல வற்றை இயற்றியுள்ளார்.

குமாரதேவர் இயற்றியனவாக இன்று அறியப் படும் நூல்கள் அத்துவித உண்மை, விஞ்ஞான சாரம், பிரமானுபூதி விளக்கம், மகாராசா துறவு, ஆகமநெறி அகவல், பிரமானுபூதி அகவல், வேதாந்த தசாவத்தைக் கட்டளை, வேதாந்த தரிசாரியக் கட்டளை, ஞான அம்மானை, பிரமசித்தி அகவல், உபதேசச் சித்தாந்தக் கட்டளை, சிவ தரிசன அகவல், சிவ சமரச வாத அகவல், சுத்த சாதகம், சகச நிட்டை, வேத நெறியகவல் ஆகியனவாகும்.

பொதுவாகச் சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாற்றில் இயல் கடந்த செய்திகள் பலவும் வழங்குவதுபோல் இவர் வாழ்க்கை பற்றியும் பல செய்திகள் கூறப்படுகின்றன. முற்பிறவியில் இவர் மல்லிகார்ச்சுன மலைக்கண் இருந்து சிவ பரம் பொருளை நோக்கித் தவம் செய்தாரென்பர். அதற்கு முன்பு இவர் ஐந்து உடல்களெடுத்தவரென்றும் கன்னட நாட்டில் ஏழாம் பிறப்பெடுத்தாரென்றும் இவர் பற்றிய புராணம் கூறுகிறது.

சாந்தலிங்க அடிகள் இவருடைய தகுதியை ஆராய அரிவாள் கொண்டு புல்லறுக்குமாறு கட்டளை யிட்டாரென்றும் இவரும் அதற்குடன்பட்டு அங் ஙனமே செய்தாரென்றும் கூறுவர். சாந்தலிங்கரின் அருண்மொழி பெற்றுத் திருமுதுகுன்றம் நோக்கிச் செல்லும் வழியில் சிவபெருமான் இவர்பொருட்டு மனித வுருத்தாங்கிவந்து தண்ணீர்ப் பந்தல் வைத்து நீர் வேட்கை தவிர்த்தாரென்றும் கூறுவர்.

மணிமுத்தாற்றுக் கரையிலிருந்த ஓரரச மரத் தடியில் இவர் அமர்ந்திருந்தபோது அருள்மிகு பெரிய நாயகி அன்னை ஒரு முதிய மாதுபோல் தோன்றி இவர் தலையைத் தம் மடி மீது கிடத்திப் பால முதூட்டினார் என்றும் 'நீ எப்பொழுதும் எம்மிடத்தி லேயே இருப்பாய்' என அருளினார் என்றும் கதை வழங்குகிறது.

அ.த

**குமாரதேவி** இலிச்சாவி நாட்டு இளவரசி; குப்தப் பேரரசை நிறுவிய முதலாம் சந்திரகுப்தரின் (கி.பி. 320–330) மனைவி. வைசாலியைச் சேர்ந்த இலிச்சாவி மரபு, வடஇந்தியாவில் கிறித்து சகாப்தத் தின் தொடக்க காலங்களில் மிகவும் புகழ் பெற்றிருந் தது. முதலாம் சந்திரகுப்தன் இலிச்சாவி இளவரசி யான குமாரதேவியை மணந்த பின்புதான், பெரும் புகழ் பெற்றான் என்பது அவனுடைய காசுகளில் இருந்து அறியக்கிடக்கிறது. இவன் தனது பொற்காசு களில் தன் பெயரையும் தன் மனைவியின் பெயரை யும் பொறித்தான். அதனால் தனது மனைவியின் மரபால், இவன் பெற்ற புகழை நன்கறியலாம். தன் உருவத்துடன், தன் மனைவியின் உருவத்தையும், இவன் காசுகளில் பொறித்ததால் அக்காலத்திலேயே அரசிக்கு உரிய மதிப்பு அளிக்கப்பட்டதென்பது புல னாகும்.

சந்திரகுப்தன் அண்டை அரசுகளை வெல்லவும், அரசினை நிலைப்படுத்தவும் வீரப்பெருங்குடியினரான இலிச்சாவிகள் பெருந்துணை புரிந்தனர். இவரது மக னான சமுத்திரகுப்தரும் தனது நாணயங்களில் 'இலிச் சாவி – தௌகித்ரா' (Lichchavi – dauhitra = இலிச் சாவி புத்திரியின் புத்திரன்) என்று பெருமையுடன் பொறித்துள்ளதால் குமாரதேவியின் பெருமை புல னாகும். குமாரதேவி, சாதாரண மன்னராக இருந்த தனது கணவனைப் பெருமன்னனாக ஆக்குவதில் துணைபுரிந்தாள் என்பது புலனாகும்.

**குமாரதேவி[2]** ககடவாலர் மாபினைச் சேர்ந்த மன்னன் கோவிந்த சந்திரன் (கி.பி. 1114–1155) என்பான் நான்கு மனைவியரைக் கொண்டிருந்தான். அவர்களுள் குமாரதேவி என்பவளும் ஒருத்தி ஆவாள். காண்க: ககடவாலர்.

ம.இ.

**குமார விசயகிரி வேலச் சின்னோவையன்** இவர் இன்று அண்ணா மாவட்டம் எனப் படும் பழனி வட்டத்திலுள்ள பாலசமுத்திரத்தில் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் சமீன்தாராக இருந்த வர். இவருடைய தந்தையார் விசயகிரி வேலச் சின்னோவையன், பாட்டனார் குமாரச் சின்னோவன். இவர்களனைவரும் பழனி முருகனிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தனர். இவர்கள் வேடர் பிரிவில் கண்டன் குலத்தவர் என்று கூறப்படுகிறது. கொங்கு நாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்றாகிய வையாபுரிய நாட்டில் பழனிக்கு 'விசயகிரி' என்ற பெயரும் உண்டு. 'சின்னோவள்' என்பது இவர்களது குலதெய்வம்.

ஆகவே, இம்மரபினர் 'விசயகிரி' என்னும் சொல்லைத் தம் பெயருக்கு அடையாகவும், குலதெய்வத்தின் பெயரை நினைவுறுத்தச் 'சின்னோப வையன்' என்பதைத் தம் பெயருக்குப் பின் அடையாகவும் கொண்டனர். 'சின்னோவள்' என்ற தெய்வத்தின் பெயர், தலைவன் என்று பொருள்படும் 'ஐயன்' என்ற சொல்லோடு சேர்ந்து 'சின்னோவள் ஐயன்' என்றாகிப் பின்னர் 'சின்னோவையன்' என்று மருவிற்று.

குமார விசயகிரி வேலச் சின்னோவையன் நல்ல தமிழறிவு படைத்தவர். இவர் பாடிய நூல் 'வையாபுரிப்பள்ளு'. 'சமய மாலை' என்பதும் இவர் பாடியதாகவே கொள்ளத்தக்கது. 'வையாபுரிப்பள்ளு' வெண்பா, கலிப்பா முதலிய பாக்களையும், விருத்தம், சிந்து முதலிய பாவினங்களையும் கொண்டு அமைந்துள்ளது. இந்நூல் முக்கூடற் பள்ளு நூலையே பெரும்பாலும் பின்பற்றியுள்ளது.

இந்நூலின் பல பாடல்களுக்கு இராகம், தாளம் குறிக்கப்பட்டிருப்பதால் இவர் இசையறிவு கொண்டவராக இருந்திருக்க வேண்டும். வையாபுரிப் பள்ளுவில் பழனிப் பகுதி மக்கள் அன்று வழிபட்ட சிறு தெய்வங்களைப் பற்றிய செய்திகளும், பழனி முருகனுக்கு வழிபாட்டுப் பொருள்களை அவர்கள் மகிழ்ச்சியோடு கொடுத்த செய்தியும் காணப்படுகின்றன. நெல்லின் ஐம்பத்தைந்து வகைகளைக் கூறுவதிலிருந்து இவருக்கிருந்த வேளாண்மை அறிவு வெளிப்படுகிறது. சமயமாலை அறுபது பாடல்களைக் கொண்ட சிறு நூல். இவர் பழனித் திருக்கோவிலுக்குச் செய்த திருப்பணிகள், தைப்பூசத் திருவிழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடிய நிகழ்ச்சி, சிலையமைத்தது முதலிய செய்திகள் இந்நூலில் காணப்படுகின்றன.
எம்.செ.

**குமார விட்டுணு**: தமிழகத்தில் தொண்டை மண்டலத்திலிருந்து ஆட்சி செய்த பல்லவ மன்னர்களுள் மூவர் குமார விட்டுணு என்னும் பெயரில் பல காலங்களில் ஆட்சி புரிந்தனர். **முதலாம் குமார விட்டுணு**: (ஏறத்தாழ கி.பி. 225-260) தொடக்க காலப் பல்லவ மன்னர்களுள் முதன்மையானவன். இவன் பெயரன் விசயகந்தவர்மனின் முதலாம் ஓங்கோட்டுப் பட்டயம் இதனை உறுதி செய்கிறது. இவனே பப்பதேவன் எனச் சிலர் கூறுவர்.

**இரண்டாம் குமார விட்டுணு** ஏறத்தாழ கி.பி. 460 முதல் 490 வரை ஆட்சி செய்தவன். மூன்றாம் குமார விட்டுணு என்பவன் வெளியிட்ட சேந்தலூர் செப்புப் பட்டயம் மூலம் இரண்டாம் குமார விட்டுணு என்பவன் மூன்றாம் குமார விட்டுணுவின் பாட்டனார் எனவும் புத்தவர்மனின் தந்தை எனவும், மூன்றாம் கந்தவர்மனின் மகன் எனவும் அறிய முடிகிறது.

**மூன்றாம் குமார விட்டுணு** ஏறக்குறைய கி.பி. 540 முதல் 580 வரை ஆட்சி செய்தவன்; சேந்தலூர் செப்புப்பட்டயத்தை வெளியிட்டவன். அதில் காணப்பெறும் அரசர் வரிசை மூலம் இம்மன்னன் இரண்டாம் குமார விட்டுணுவின் பெயரனென்பதும், புத்தவர் மனின் மகனென்பதும் புலனாகின்றன. காஞ்சியினின்றும் இத்தானம் வெளியிடப்பட்டுள்ளமையால், இம்மன்னன் காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னர்களின் வழித்தோன்றலென்பதும் தெளிவு. இம்மன்னன் தன்னைப் பரத்துவாச கோத்திரனென்றும், தர்ம மகாராசன் எனவும் கூறிக் கொள்ளுகிறான். மா.கா.

**குமார வியாசன்**: கன்னட மொழியின் இடைக்காலக் கவிஞர்களுள் முதன்மையான இடத்தைப் பெறுபவர் குமார வியாசன் ஆவார். இவரது இயற்பெயர் நாரணப்பன். கருநாடகத்தில் கதுகின் என்ற இடத்திற்கு அருகிலுள்ள 'கோழிவாடை' என்பது இவருடைய சொந்த ஊர் என்று கூறப்படுகின்றது. சிறந்த பக்தராகவும் யோகியாகவும் இவர் திகழ்ந்தார்.

கருநாடக வரலாற்றில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்க காலப்பகுதியாகத் திகழ்கின்றது. இந்த நூற்றாண்டில் கருநாடக மக்களின் வாழ்வும் பண்பாட்டுக் கூறுகளும், மிக உயர்ந்த நிலையினை அடைந்தன. விசயநகரப் பேரரசின் எழுச்சி காரணமாக நாட்டுச் செல்வம், வாழ்க்கை வசதிகள், படைபலம் ஆகியவை உயர்ந்தோங்கின. விசயநகரப் பேரரசு பிற சமயங்களின் வளர்ச்சிக்கும் துணையாக நின்றது. இதனால், எல்லாச் சமயங்களையும் சார்ந்த இலக்கிய வகைகள் செழித்து வளர்ந்தன. இக்காலகட்டத்தில் இலக்கியங்களின் போக்கு பொதுமக்களை நோக்கித் திரும்பியதாகவும், சட்பதி, சாங்கத்யம் முதலிய பாவடிவங்களில் நூல்கள் இயற்றும் போக்கு வளர்ந்ததாகவும் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இக்காலத்தில் இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற புராணங்களைத் தழுவிக் கன்னடத்தில் நூல்கள் இயற்றுவதில் கவிஞர்கள் பலர் ஈடுபட்டனர். அவர்களுள் முதன்மையானவர் குமாரவியாசன்.

குமாரவியாசனின் கன்னட பாரதம் 'கதுகின பாரதம்' என்றும் குறிப்பிடப்படுகின்றது. அது பத்துப்

பருவங்களும், நூற்றைம்பது சந்திகளும், 8500 பாமினி சட்பதிப் பாடல்களும் கொண்ட நூலாகும். அது 'ஆதிபருவம் முதல் கதா பருவம் வரை அமைந்தது. அந்நூலில் ,அரசர்கட்கு வீரம், அந்தணர்கட்குப் பரம வேதசாரம், யோகியர்க்குத் தத்துவ விசாரம், அமைச்சர்கட்கு அறிவுரை, பிரிந்தவர்கட்கு உவகை, கலைஞர்கட்கு அணி என்று குமாரவியாசன் குறிப்பிடுகின்றார். கதையமைப்பில் செறிவான கட்டுக் கோப்பையும், உணர்த்தும் வாழ்க்கை நோக்கில் பக்தியையும் கலந்து கூருவது குமாரவியாச பாரதத்தின் தனிச் சிறப்பாகும்

மூல நூலின் சில பகுதிகளை விரிவாகக் கூறியும் சில பகுதிகளை விட்டும் குமாரவியாசன் தம் பாரதத்தைப் படைத்திருக்கிறார்; சில பகுதிகளைத் தமது கற்பனைத் திறத்தால் புதிதாகச் சேர்த்தும் படைத்திருக்கிறார், சான்றாகச் சில பகுதிகளைக் காணலாம். வசந்த காலத்தின் வருகையை, 'கூடியிருப்பவர் கட்குச் சிறந்த வாள்முனை, பிரிந்திருப்பவர்களை எதிர்க்கும் ஈட்டி, உயர்ந்த யோகிகளின் குலதெய்வம் எனும் மலர்மயமான காலம்' என்று கவிஞர் குறிப்பிடுகின்றார். முனிவனது சாபத்தினால் மனைவியைத் தீண்ட இயலாத நிலையில் இருக்கும் பாண்டுவின் நிலைக்கு இவ்வருணனை பொருத்தமாக அமைந்திருப்பதை உணரமுடிகிறது.

சூதில் தோற்றுக் கௌரவர் சபையில் பாஞ்சாலி அவமானப்படுத்தப்படும்போது தருமனும் பிறரும் வாளாவிருக்கின்றனர். வீமன், முன்னே பாய்ந்து சென்று 'பெண்ணே! துர்ச்சாதனன் இரத்தத்தை நின் கூந்தலுக்குப் பூசுவேன். அவன் பற்களாகிய சீப்பினால் வாரிவிடுவேன். பேய்களுக்கு நின் கையால் அவன் குடல்மாலையை வழங்குவேன்' என்று சபதம் செய்கின்றான். மூலத்தைப் பின்பற்றிய இந்நூல் இப் பகுதியில் விஞ்சி நிற்கிறது. பொய்மை, வஞ்சகம், அநீதி ஆகியவற்றைக் கண்டு வெகுண்டெழும் வீர மிக்க மனநிலை இப்பகுதியில் வெளிப்படுகின்றது. 'குடல் மாலையைக் கொண்டு கூந்தல் முடிப்பது' மூலநூலில் இல்லை, ஆயின் பம்ப பாரதத்தில் இது வருகின்றது. அதிலிருந்து குமாரவியாசன் இத் தொடரை எடுத்துக்கொண்டிருக்கக்கூடும். 'பல் சீப்பினால் வாரி' என்ற பகுதியிலும் 'தந்தச்சீப்பு' என்பதைப் பயன்படுத்துவது சிலேடைநயம் பொருந்தியதாகக் காணப்படுகின்றது. இதேபோல் கீசகவதம் பற்றிய பகுதியில் பாஞ்சாலி கூறும் கூற்றுகள் மிகவும் ஆற்றல் வாய்ந்தனவாகவும் மனித உணர்ச்சிகளைக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

வாழ்க்கை வெறும் மனித சக்தியின் போராட்டம் மட்டுமன்று, மனித சக்தியும் தெய்வ சக்தியும் இணைந்த திருவிளையாடல் என்பதே பாகவத நோக்கம். இது குமாரவியாச பாரதத்தில் நன்கு வெளிப்படுகிறது. நீதிக் கருத்துகளும் கிளைக்கதைகளும் முதற்கதையுடன் இணைந்து பெருங்காடு போல் தோற்றமளிக்கும் மகாபாரதம் குமாரவியாசன் கைவண்ணத்தில் அழகிய பூஞ்சோலையாக மாற்றம் பெற்றுத் திகழ்கின்றது. புராணக் கதைமாந்தர்கள் மிகவும் எளிமைப்படுத்தப்பட்டு, சாதாரண மக்களுக்கும் நன்கு புலப்படுத்தப்படுகின்றனர். உயிரோட்டம், கற்பனை, எளிமை, புதுமை ஆகிய பண்புகளினால் குமாரவியாச பாரதம் கன்னட இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. ம.தி.

**குமாரன் ஆசான்** மலையாள இலக்கியத்தில் புனைவியல் கவிஞர்களின் வரிசையில் தலைசிறந்த இடத்தைப் பெறுகின்ற குமாரன் ஆசான் காயிக்கர என்னும் சிற்றூரில் கி.பி. 1873-இல் பிறந்தார். இவர் தந்தை பெயர் நாராயணன்; தாயார் பெயர் காளியம்மா.

குமாரன் ஆசான் சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்த பின்னர் விஞ்ஞான சந்தாயினி' எனும் சமசுகிருதப் பள்ளியில் பயின்றார். பள்ளியில் பயிலும் காலத்திலேயே நாட்டுப்புறப் பாடல் வகையைச் சேர்ந்த 'வள்ளி விவாகம்', 'உசா கல்யாணம்' போன்ற நூல்களைப் படைத்தார். சில ஆண்டுப் பள்ளிக் கல்விக்குப் பின்னர் தமது சொந்த முயற்சியால் புதுப்புது நூல்களைப் பயின்றார்; பயின்றவற்றை மாணவர்களுக்குக் கற்பிக்கவும் செய்தார். இதனால், அவருக்கு ஆசான் என்ற பெயரும் ஏற்பட்டது.

கேரளத்தில் தோன்றிய மிகச்சிறந்த சீர்திருத்தவாதியான நாராயண குருவுடன் ஆசானுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அதன் விளைவாகப் பக்திப் பாடல்கள் எழுதும் பண்பு இவரிடம் வளர்ந்தது. ஆசான் ஒரு கவிஞராக மலர்ந்த காலத்தில் அவர் தோன்றிய சமூகமான ஈழவச் சமூகம் மிகவும் பிற்பட்ட நிலையில் இருந்தது. நாராயண குரு ஈழவச் சமூக முன்னேற்றத்திற்காக இயக்க அடிப்படையில் பாடுபட்டுக் கொண்டிருந்தார்; அவருடன் இணைந்து டாக்டர் பல்பு போன்றவர்களும் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். ஆசான் இவர்களுடன் இணைந்து செயற்பட்டார். நாராயண குருவால் ஏற்படுத்தப்பட்ட எசு.என்.டி.பி. யோகம் என்ற அமைப்பின் பொதுச் செயலாளராகவும் ஆசான் தொண்டாற்றினார். ஆசான் தம் நாற்பத்தைந்தாம் வயதில் காதல் மணம் செய்துகொண்டதை அனைவரும் எதிர்க்கவே, அவர் தாம் ஏற்றிருந்த பதவியைத்

துறந்தார். தொடர்ந்து கவிதைகள் புனைந்து வந்த குமாரன் ஆசான் தம் ஐம்பத்திரண்டாம் வயதில் படகு விபத்து ஒன்றில் காலமானார்.

குமாரன் ஆசானின் தொடக்க காலப் படைப்புகள் மரபு வழியான சிந்தனைகளைத் தாங்கி நின்றன; வடமொழி இலக்கியத்தின் தாக்கத்திற்குட்பட்டிருந்தன. இவ்வகையில் ஆசானின் 'சௌந்தர்ய லகரி', மேகசந்தேசம்', 'பிரபோத சந்திரோதயம்' என்ற மொழிபெயர்ப்பு நூல்களும் 'சிவதோத்திர மாலா' என்ற வழிபாட்டுப் பாடலும் 'விசித்திர விசயம்' என்ற நாடகமும் குறிப்பிடத்தக்கன.

சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளுடன் இயக்க அடிப்படையில் ஆசான் செயற்படத் தொடங்கியவுடன் அவரது கவிதைப் போக்கிலும் மாறுதல் ஏற்பட்டது; புதிய சிந்தனைகள் கவிதைகளில் இடம் பெற்றன. 'வீழ்ந்த மலர்' என்ற கவிதை இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. தரையில் கிடக்கும் மலரின் வாழ்க்கையுடன் மனித வாழ்க்கையை ஒப்பிட்டு மெய்மையைத் தேடும் கவிஞரின் உள்ளத்தை இதில் காண முடியும். மலையாளக் கவிதையுலகில் புனைவியல் இயக்கம் (Romanticism) இக்கவிதையுடன் தொடங்குகின்றது.

மனவேட்கைகள், புலனின்பங்கள் ஆகியவை புறக்கணிக்கப்பட வேண்டியவையல்ல; அவைகளும் வாழ்வின் கூறுகளே என்பதை உணர்த்தும் வகையில் 'நளினி (1911)', 'இலீலோ (1914)' ஆகிய கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. பெரும்புலவரான ஏ.ஆர். இராசராசவர்மாவின் மறைவினையொட்டி, ஆசான் 'பிரரோதனம்' என்ற இரங்கற்பாவினைப் பாடினார்.

இராமாயணச் சீதையைப் புதிய கோணத்தில் பார்க்கும் முறையில் 'சிந்தனையில் மூழ்கிய சீதை' என்ற கவிதையையும் ஆசான் பாடியிருக்கிறார் (1919). இராமனால் காட்டுக்கு அனுப்பப்பட்டுப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு நாள் மாலை நேரத்தில் தனியே சீதை தன் வாழ்க்கையைப் பற்றிச் சிந்தனை செய்யும் முறையில் இக்காப்பியம் அமைந்திருக்கின்றது.

நடைமுறையில் காணப்படுகின்ற சமூக நிகழ்ச்சி ஒன்றின் மூலமும் புதுமைக் கருத்துகளை ஆசான் கூறுவதை 'துரவசுத்த' என்ற காப்பியத்தின் மூலம் அறியலாம்; 1921-ஆம் ஆண்டில் நடந்த மலபார் முசுலீம்களின் கலகம் இதில் பின்னணியாக அமைந்துள்ளது. இது உயர்ந்த இனத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த ஆடவனை விரும்பி மணந்து கொள்ளும் கதையைக் கூறுகிறது. இதேபோன்று, 'சண்டாள பிசுகி' என்ற கவிதையும் தாழ்ந்த இளப்பெண் புத்த துறவியாக மாறுவதைக் காட்டுகின்றது. இவ்விரண்டு கவிதைகளுமே சாதி வேறுபாடுகளைக் கண்டிக்கும் முறையில் அமைந்தவை.

குமாரன் ஆசானின் பிறிதொரு படைப்பான 'கருண' (1923) நிலைபேறுடைய இன்பம் எது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. சமயம் என்பது சமுதாயத்தை உய்விக்கும் கருவியாகத் திகழவேண்டும் என்பது இக்காப்பியத்தில் மிகவும் குறிப்பாக உணர்த்தப்படுகின்றது.

'புட்ப வாடி', 'மணிமாலை', 'வனமாலை' என்ற கவிதைத் தொகுப்புகளும் 'குழந்தையும் தாயும்' என்ற குழந்தைப் பாடலும் 'கிராமத்து மரக்கிளையில் குயில்', 'ஒரு ஈழவக் குழந்தையின் எண்ணங்கள்' போன்ற தன்னுணர்ச்சிப் பாடல்களும் 'புத்தசரிதம்' என்ற மொழிபெயர்ப்பு நூலும் குறிப்பிடத்தக்க படைப்புகளாகும்.

உலக இயக்கத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அன்பே அடிப்படை என்பது இவரது படைப்புகள் அனைத்திலும் ஊடாடிக் கொண்டிருக்கும் இழையாகும். ம.தி.

**குமாரிலபட்டர்** வடமொழி தத்துவ இலக்கிய ஆசிரியர்களுள் தலைமை சான்றவர். தென்னிந்தியாவைச் சேர்ந்த இவர், மீமாம்சை என்னும் வைதிக வழியைப் பின்பற்றித் தம் தத்துவக் கருத்துகளை எடுத்துரைத்தவர். இவரால் நிலைநாட்டப்பட்ட ஆராய்ச்சி 'பாட்டமதம்' என்னும் பெயரால் குறிக்கப்படுகிறது. இவர் புத்தசமயக் கொள்கைகளை மறுத்துக்கூறி அவர்கள் வாதங்களை முனைப்புடன் முறியடித்தவர். இவ்வகையில் இவர் சங்கராச்சாரியார், உதயணாச்சாரியார் ஆகிய இருவருடனும் ஒப்புமை கூறத்தக்கவர். இவர் குமரிலர் எனவும் துதாதிதர் எனவும் சொல்லப்படுகிறார். இவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பதனைப் பல ஆதாரங்களால் அறியலாம்.

இவர் பௌத்த நாத்திக வாதத்தை எதிர்த்து ஆத்திகத்தை நிலைநாட்டிய இலக்கிய வித்தகர். இவர் மீமாம்சை உரையாசிரியரான பிரபாகரரின் சீடர் எனவும் பௌத்த சமயச் சான்றோரான தருமகீர்த்தியின் கருத்துகளைச் சாடியவர் எனவும் அறியப்படுகிறது.

வடமொழி இலக்கிய இலக்கணங்களில் நல்ல தேர்ச்சி பெற்ற குமாரிலர் மீமாம்சையின் முதல் நூலான சைமினி சூத்திரங்களுக்குச் சபரசுவாமி

இயற்றிய நூலான பாசுயத்தின்மீது வார்த்திகம் என்னும் விரிவுரையை இயற்றினார்.

குமாரிலபட்டர், முருகப்பெருமானின் அவதாரமாகப் போற்றப்படுகிறார். சித்தாந்தியாகவும், பேரறிஞராகவும் திகழ்ந்த இவருக்குச் சீடர் பலர் இருந்தனர். இவர்களுள் மண்டன மிசிரர், சயமிச்ரர் ஆகியோர் மிகவும் குறிப்பிடத்தக்கவர். மண்டனமிசிரர் மீமாம்சையிலும் வேதாந்தத்திலும் வல்லவர். உம்வேகரும் (வடமொழிக் கவி பவபூதி) இவரது சீடராகக் கருதப்படுகிறார். உம்வேகர், குமாரிலபட்டரது சுலோகவார்த்திகத்திற்கு உரை இயற்றியுள்ளார். குமாரிலரது மகனான சயமிச்ரர் சிறந்த மீமாம்சகராகத் திகழ்ந்ததுடன், தம் தந்தையாரின் சுலோக வார்த்திகத்திற்கு உரையும் செய்துள்ளார். இவ்வுரை நூல் 'சர்க்கரிகை' எனப்படுகிறது. ம.இ.

**குமாரிலர்**: வடமொழி இலக்கிய வரலாற்றில் கி.பி. 600க்கும் கி.பி. 900க்கும் இடைப்பட்ட காலம் குமாரிலரின் காலம் என வழங்கப்பட்டதென அறிவது அம்மொழி இலக்கிய மாணவருக்குச் சுவைதரும் செய்தி. ஏனெனில் இக்காலத்தில்தான் வடமொழியில் அனைத்துத் தத்துவ சாத்திரத் துறைகளிலும் மிகப் பெரிய வல்லுநர் தோன்றினர். சிறப்பாக மீமாம்சா (Desire for Knowledge) என்ற தத்துவ சாத்திரத் துறையில், இக்காலத்தில்தான் குமாரிலர், பிரபாகர மிச்சிரர், மண்டனமிச்சிரர் (இவர் அத்துவைதக் கொள்கையைப் பின்னர்க் கொண்டார்) சாலீகநாத மிச்சிரர், வாசசுபதிமிச்சிரர் ஆகியோர் தோன்றினர். அவர்கள் தம் அரிய நூல்களால் 'பூருவ மீமாம்சை'யை வளம்பெறச் செய்தனர். மேலும் இத்துறை பட்டர்கொள்கை, பிரபாகர் கொள்கை என இரு கூறுகளாகப் பிரிவு படவும் காரணமாயினர்.

குமாரிலர் பட்டபாதர், துதாதர், குமாரர் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். அவர் மிகப் பெரிய தத்துவ சாத்திர வல்லுநர். மீமாம்சா வார்த்திகம் என்ற நூலைக் கி.பி. 620க்கும் 700க்குமிடையே இயற்றினார். அது பற்றி, பூர்வமீமாம்சா சாத்திரத்தின்வளர்ச்சிக் காலத்தை மூன்றாகப் பிரித்துக் குமாரிலருக்குமுன் காலம் எனவும், குமாரிலரின் காலமெனவும், குமாரிலருக்குப்பின் காலமெனவும் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவது வழக்கம். ஆக, குமாரிலர் மீமாம்சா சாத்திரத்தில் ஒரு நடுப்பொறுப்பாளராகக் கருதப்பட்டார். அவர் முருகக் கடவுளின் மறுவதாரமெனவும், ஆத்திக தர்சனம் என்ற வேதநெறி தத்துவ சாத்திரம் ஆகியவற்றில் திண்ணிய புலமை பெற்றவர் எனவும், பின் புத்தமதத் துறவி வேடத்தில் அம்மதகுருவினிடம் புத்தமதக் கொள்கைகளை ஐயமறக் கற்றுத் தேர்ந்து, சாபர பாடியத்தின் தருக்க வாத விளக்கவுரையான தனது சுலோக வார்த்திகத்தில் அம்மதக் கொள்கைகளைத் தகர்த்தெறிந்தார் எனவும், எனவே புத்த மதகுருவின் சாபத்தை நீக்கவும், தூய்மைபெறவும் உமித்தீயில் தம்மை எரித்தார் எனவும் பரம்பரைக் கதையொன்று கூறுகிறது. அவரும் ஆதிசங்கரரும் சமகாலத்தவர் என்றும் கூறுவர்.

தமது தந்தர வார்த்திகத்தில் அவர், பர்த்ருகரியின் வாக்யபிதீபத்தைக் குறிப்பிடுகிறார். ஆகவே பர்த்ருகரிக்குப்பிற்பட்டவர் இவர் எனத் தெரிகிறது. இட்சிங்கின் கூற்றுப்படி பர்த்ருகரி கி.பி. 650-இல் இறந்தார் என நம்பலாம். மேலும் இவர் (குமாரிலர்) மண்டனமிச்சிரரின் (கி.பி. 670-740) ஆசிரியராகக் கருதப்படுவதால் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் எனக் கருதலாம்.

பல அறிஞர் குமாரிலர் தென்னாட்டவர் எனக் கூறுவர். அதற்குச் சான்றாக அவர் தந்திரவார்த்திகத்தில் (1.3.5) பல திராவிடமொழிச் சொற்களைக் கையாள்வதாய்க் கூறுவர். அங்கு அவர் வடமொழிச் சொற்களுக்கும் திராவிட் மொழிச் சொற்களுக்கும் கருத்துவழித் தொடர்பை வலியுறுத்துகிறார். எனினும் சாலீகநாதர் (மீமாம்சை வல்லுநர்) அவரை மிச்சிரர் எனக் கூறினமையால் அவர் வடநாட்டினராய் இருக்கலாம் என்று வி.ஏ. இராமசுவாமி சாத்திரியார் கூறுவார்.

சுலோக வார்த்திகம், தந்திரவார்த்திகம், உடுப்டீகா என்பவை, சைமினி சூத்திரத்தின்மேல் சபரர் எழுதிய பாடியத்திற்கு உரைநூல்களாகும். அவை தவிர பிரகத்டீகை, மத்யமடீகை என்ற உரை நூல்களையும் இவர் இயற்றியதாக மாதவசரசுவதி கூறுவார். ஆனால், அவை இப்போது கிடைத்தற்கரியன. எஸ்.சீ.

**குமுழி ஞாழலார் நப்பசலையார்**: இவர் சங்க காலப் பெண்பாற் புலவர். இவரினும் வேறாகக் காமக்கணிப் பசலையார் (நப்பசலையார்) என்றொரு புலவர் காணப்பெறுகிறார். குமுழி ஞாழலார் நப்பசலையார் பாடிய அகநானூற்று 160-ஆம் பாடலைக் காமக்கணிப் பசலையார் பாடியதாகப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கருதுவர். குமுழி ஞாழல் என்பதை இவரது ஊர்ப் பெயர் எனச் சிலர் கருதுகின்றனர். சங்கத்தொகை நூல்களுள் இவர் இயற்றியதாக அகநானூற்று 160-ஆம் பாடல் ஒன்றே காணப்பெறுகிறது. இப்பாடல் தோழி வரைவு மலிந்து கூறியது என்னும் துறையைச் சார்ந்தது. இப்பாடலில், 'இது காறும் இரவில் வந்த தலைவனது தேர் இன்று

ஆரவாரம் மிக்க இளையரோடு அலர் கூறும் ஊர்ப் பெண்டிர் பலரும் காண, வெளிப்படையாகப் பகற் பொழுதில் வந்தமை கண்டு என் நெஞ்சம் நடுக்கம் எய்துகிறது. தோழி, உனக்கு இந்நடுக்கம் உண்டா கிறதா? என்று தலைவியிடத்து வினவுவாள் போலத் தோழி, தலைவனது வரைவு மலிவை நயம்பட உணர்த்துகிறாள்.

தலைவன் உப்பங்கழியைக் கடந்து வரும் போது, அவனுடைய தேரின் ஆழியால் அறுக்கப்பெற்ற அரும்புகளையுடைய நெய்தல், பாம்பு தன் தலையை மேலே தூக்கியதுபோல வாடி மேலெழுந்தது என்னும் இயற்கை உவமை இப்பாடற்கண் இடம்பெற்றுள் ளது. கடற்கரையில், மணல்மேட்டின் பக்கம், யாமை ஈன்று புதைத்த முட்டைகளை அவற்றினின்றும் குஞ் சுகள் வெளிப்படும் வரை ஆண் யாமை காத்தோம்பும் என்னும் யாமையியல்பை இப்புலவர் உள்ளுறை அமையப் பாடியுள்ளார், இரா.சா.

**குயூபெக்கு** கனடாவிலுள்ள மாநிலங்களுள் ஒன்று. கனடாவின் மிகப்பெரிய மாநிலமான குயூபெக்கு (Quebec), மக்கள் தொகையில் ஒண் டாரியா மாநிலத்திற்கு அடுத்தபடியாக உள்ளது. இது கல்நார் உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக் கிறது. உலக உற்பத்தியில் 80% கல்நார் இங்கு உற் பத்தியாகிறது. இங்குத் தயாரிக்கப்படும் வெண்ணெய் உலகப் புகழ் பெற்றுள்ளது. இங்கு 80% பிரெஞ்சுக் கனடியர் வாழ்ந்து வருகின்றனர். பிரெஞ்சு மொழி இங்கு மிகுதியும் பேசப்படுகிறது. இம்மாநிலத்தின் தலைநகரம் குயூபெக்கு ஆகும்,




குயூபெக்கு

அட்சன் சலசந்திக்கும் ஒட்டாவா ஆற்றுக்கும் இடையில் அமைந்துள்ள குயூபெக்கு ஒரு செழிப்பு மிக்க மாநிலம். இதன் மேற்கில் அட்சன் வளைகுடா வும் ஒண்டாரியோ (Ontario) நதியும், வடக்கில் அட்சன் சலசந்தியும், கிழக்கில் நியூபௌண்டுலாந்தும், தெற்கில் நியூ பிரன்சுவிக்கும் அமெரிக்க ஐக்கிய நாடு களும் உள்ளன. இம்மாநிலத்தின் பெரும் பகுதி மலைப்பகுதியாகும். இம்மலைப்பகுதிகளில் தாதுப் பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. புனித இலாரன்சு (St. Lawrence) தாழ்நிலப் பகுதி செழுமை மிக்கது. இங்கு மக்கள் நெருக்கமாக வாழ்கின்றனர். இலாரன்சு ஆற்றின் இருமருங்கிலும் நாட்டர்டாம் மலைத்தொடரும், இலாரன்சியன் மலைத்தொடரும் அணி செய்கின்றன. இம்மாநிலத்தின் உயர்ந்த பகுதி சேகூசு கார்டியர் மலையாகும். காசுபே தீபகற்பத்தில் உள்ள இப்பகுதி 1630 மீட்டர் உயரம் கொண்டது.

இம்மாநிலத்தில் இலாரன்சு ஆறும் அதன் துணை யாறுகளும் மட்டுமன்றி ஒட்டாவா, புனித மாரிசு, சாகனே போன்ற ஆறுகளும் பாய்ந்து வளம் பெருக்கு கின்றன. சாகனே ஆற்றில் சிப்சர் அணை என்னும் பெரிய அணை கட்டப்பட்டுள்ளது. இதில் மின்சக்தி எடுக்கப்படுகிறது. புனித சான் முதலான ஏரிகளும் இம்மாநிலத்தில் உண்டு. குயூபெக்கு மாநிலத்தில் புகழ்மிக்க, எழில்மிக்க பூங்காக்களும் உள்ளன. அவற் றுள் தேசிய வரலாற்றுப் பூங்கா இரண்டும், மாகாணப் பூங்கா நான்கும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இம்மாநிலத்தின் தட்பவெப்பநிலை இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது. தென்பகுதியைத் தவிரப்பிற இடங்களில் கோடைக்காலம் குறுகியதாகவும் மிகுந்த வெப்பமின்றியும் உள்ளது; குளிர் காலத்தில் மிகுந்த குளிராக உள்ளது. மழையளவு 86.4-114.3 செ. மீ; பனிப்பெய்வு தெற்கில் 246.4-421.6 செ. மீ. அளவும், வடக்கில் 175.3 - 327.6 செ.மீ. அளவும் உள்ளது.

இம்மாநிலத்தின் மக்கள் தொகை 5,984,000 ஆகும்; பரப்பளவு 1,540,687 ச. கி. மீ. தலைநக ரான குயூபெக்கைத் தவிர மாண்ட்ரியல், இலவல், வர்துன், திரீ ரிவர்சு, சர் புரூக்கு, அல் ஆகிய நகரங் களும்உள்ளன. பெரிய மாண்ட்ரியல் இங்குள்ள புகழ் பெற்ற துறைமுகமாகும். உள்நாட்டில் நல்ல போக்கு வரத்து வசதிகள் உள்ளன. மக்களுள் 78 விழுக்காட் டினர் நகரங்களிலேயே வாழ்கின்றனர். இங்குக்

கத்தோலிக்கரும் சீர்திருத்தக் கிறித்தவரும் (Protestants) வாழ்கின்றனர்.



மாண்ட்ரியல் நகரம்

மக்கள் தொகையுள் பெரும்பான்மையினர் வேளாண்மை, பால்பண்ணைத் தொழில், ஆடுமாடு மேய்த்தல், மீன்பிடித்தல், சுரங்கத் தொழில் முதலான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். காகிதம் தயாரிக்கும் தொழில், இரும்பு எஃகுத் தொழில், நெசவுத் தொழில் ஆகியனவும் இங்கு நடைபெறுகின்றன. கனிப் பொருள்களும் இங்கு வெட்டியெடுக்கப்படுகின்றன. பொன், துத்தநாகம் போன்ற தாதுப் பொருள்களும் இங்குக் கிடைக்கின்றன. அண்மையில் இம்மாநிலத்தின் கிழக்கே இலேப்ரடார்ப் பகுதியில் இரும்புக் கனிகள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் ஆகாய விமானங்களும் அதன் பாகங்களும் தயாரிக்கப்படுகின்றன.

இங்குக் கோதுமை, பார்லி, ஒரு வகைக் கம்பு (Rye), ஓட்சு, பழங்கள், உருளைக்கிழங்கு ஆகியன பயிர் செய்யப்படுகின்றன. தென் பகுதிகளில் பழ வகைகள் மிகுதியாக விளைகின்றன. தானியங்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு இங்கே உணவுத் தானியங்கள் மிகுதியாகப் பயிர் செய்யப்படுகின்றன.

குயூபெக்கில் பிரெஞ்சுக்காரர்களே முதன் முதலில் குடியேறினர். இப் பகுதி கி.பி. 166-இல் பிரெஞ்சு மாநிலங்களுள் ஒன்றாக ஆயிற்று. ஏறத்தாழ நூறு ஆண்டுகட்குப் பின்னர் இப்பகுதி இங்கிலாந்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆங்கிலப்படை கி.பி. 1759-இல் குயூபெக்கு நகரைக் கைப்பற்றியது. இது கி.பி. 1867-இல் கனடாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு அதன் பகுதி ஆயிற்று. பிரெஞ்சு, ஆங்கில மொழி பேசும் குயூபெக்கு மக்களிடையே நீண்டகாலம் தகராறுகள் நிலவின. இங்கு வாழ்ந்து வரும் பிரெஞ்சு மக்களுள் பெரும்பாலோர் உரோமன் கத்தோலிக்கர்கள். சில ஆண்டுகட்கு முன்பு கூடப் பிரெஞ்சுக் குடிமக்கள் குயூபெக்கில் தனிப் பிரெஞ்சு நாடு வேண்டிப் போராடினர். இங்கு 108 உறுப்பினர் கொண்ட தேசிய சபை ஒன்றுள்ளது; பிரதம மந்திரியின் தலைமையில் அமைச்சரவை ஒன்றுளது. இங்கிலாந்து மன்னரின் சார்பாளராக உதவி ஆளுநர் ஒருவர் இங்குள்ளார். இவருக்கு அதிகாரங்கள் குறைவுதான். கனடாவின் பெரிய மாநிலமாகவும், தொழில் வளமிக்க மாநிலமாகவும் திகழ்ந்துவரும் குயூபெக்கு தொழில் துறையில் வேகமாக முன்னேறி வருகிறது.

**குயூபெக்கு நகரம்**: கனடாவிலுள்ள குயூபெக்கு மாநிலத்தின் தலைநகரம்; சிறந்த துறைமுகப்பட்டினம்; சுறுசுறுப்பான வணிக நகரம். இந்நகரம் தொழில் வளர்ச்சியில் மேம்பட்டு விளங்குகிறது. புனித இலாரன்சு ஆறும், புனித சார்லசு ஆறும் கூடுகின்ற இடத்தில் புனித இலாரன்சு ஆற்றில் அமைந்துள்ள குயூபெக்கு நகரம், புதிய துறைமுகமாகவும் விளங்குவதால் உலகின் மாபெரும் துறைமுகங்களுடன் கப்பல் போக்குவரத்தைக் கொண்டுள்ளது. வட அமெரிக்காவிலேயே குயூபெக்கு நகரம் ஒன்றுதான் சுற்றிலும் தடுப்புச் சுவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அமெரிக்காவின் புகழ்மிக்க பல்கலைக்கழகங்களுள் ஒன்றான இலவால் பல்கலைக்கழகம், இந்த குயூபெக்கு நகரத்திற்கு அருகில் தான் உள்ளது. இந்நகரில் வாழும் மிகப் பெரும்பான்மையினர் (ஏறத்தாழ 92%) பிரெஞ்சு மொழியைத்தான் பேசுகின்றனர். ஆங்கில மொழியில் ஒலிபரப்பும் வானொலி நிலையங்களைக் காட்டிலும் பிரெஞ்சு மொழியில் ஒலிபரப்பும் நிலையங்களே இங்கு மிகுதி.

குயூபெக்கு நகரின் மொத்த மக்கள் தொகை 167,000 ஆகும். காகிதம் தயாரித்தல், நெசவு, இறைச்சிபதப்படுதல், காலணி (செருப்பு) தயாரித்தல், கப்பல் கட்டுதல் ஆகியவை இங்கு நடைபெறும் முக்கிய தொழில்கள் ஆகும். மரங்களும் கால்நடைகளும் இங்கிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. கேப்பு தயமண்டிலுள்ள (Cape Diamond) மேலை நகரத்தில் (Upper Town) கவின் மிகு கிறித்தவக் கோயில் ஒன்றும், உயர்ந்த கோட்டை ஒன்றும், பல வரலாற்றுப் புகழ்மிக்க, தொன்மையான கட்டடங்களும் உள்ளன. கீழை நகரமோ (Lower Town) தொழில், வாணிக மையமாகத் திகழ்கிறது. இங்குள்ள பள்ளிகள் பெரும்பாலும் உரோமன் கத்தோலிக்கப் பள்ளிகளாகவே உள்ளன.

பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் குயூபெக்கில் கி.பி. 1759-இல் நிகழ்ந்த போர்



குயூபெக்கு நகரம்

அமெரிக்க வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இங்குள்ள கவின்மிகு வீடுகளும் நேர்த்தியான, நேரான தெருக்களும், கண்கவர் கிறித்தவக் கோயில்களும் அயல்நாட்டுப் பயணிகளின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்துள்ளன. அழகிய நகரமாகவும், முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாகவும் விளங்குகின்ற குயூபெக்கு நகரம் கனடாவிற்குப் பெருமை தேடித் தருகிறது. ம.இ.

**குர்திசுத்தானம்** 115184 சதுர கி.மீ. பரப்புள்ளது. இது ஆசியாவின் மேற்குப் பகுதியில் உள்ளது. பண்டைக் காலத்தில் விளங்கிய அசீரியப் பேரரசு குர்திசுத்தானத்தையும் (Kurdistan) தன்னுள் கொண்டிருந்தது. இப்பகுதி மக்கள் குர்தியர்கள் எனப்படுவர். பலர் முகம்மதிய சமயத்தைச் சேர்ந்துள்ளனர். குர்திய மொழி மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு, கிர்க்கூக்கு (Kirkuk) என்னும் நகரில் எண்ணெய்க் கிணறுகள் உள்ளன. நாட்டின் தென் பகுதியில் வேளாண்மை செழிப்புற்றிருக்கிறது. வான் (Van), உர்மியா (Urmiah) என்னும் இரண்டு பெரிய ஏரிகள் இங்கு இருக்கின்றன. தெ.பா.




குர்திசுத்தானம் அமைவிடம்

**குரங்காடுதுறை** என்ற பெயருடைய ஊர்கள் காவிரிக் கரையின் இரு பக்கத்திலும் விளங்குகின்றன. இயற்கைக் காட்சிகளைக் காட்டும் துறைகளில் இரு குரங்காடுதுறைகளும் சிறப்புற்று விளங்குகின்றன.

காவிரியின் வடகரையில் வடகுரங்காடுதுறை, காவிரியின் தென்கரையில் குரங்காடுதுறை (ஆடுதுறை) என வழங்கப்பெறுகின்றன. தென்குரங்காடுதுறையாகிய ஆடுதுறை, கும்பகோணம் மயிலாடுதுறை வழியின் இடையில் இருக்கிறது. வடகுரங்காடுதுறை, கும்பகோணம் திருவையாறு பேருந்துச் சாலையின் இடையில் இருக்கிறது.

இவ்விரு தலங்களும் தேவாரப் பாடல்பெற்ற தலங்கள். மேலும் இவை, இராமாயணத்தில் இடம்

பெற்ற சுக்கிரீவனும் வாலியும்பூசித்த தலங்களுமாகும். தென்குரங்காடுதுறை சுக்கிரீவன் வழிபட்ட தலம்; வடகுரங்காடுதுறை வாலி பூசித்த தலம்.

வடகுரங்காடுதுறை கருவுற்ற ஒரு வணிகப் பெண்ணிற்கு இளநீர் தருவதற்குத் தென்னை மரத்தினையே குலை வணங்கச் செய்த பெருமையுடையது. தென்குரங்காடுதுறை கருவுற்ற பெண்ணிற்காக இறைவர் அப் பெண்ணின் தாயாக 'ஆபத் சகாயராக' விளங்கிய தலம்.

வடகுரங்காடுதுறை நடராசர் சபை சிறப்புடையது. இங்கு நடராசர் மூலவராகச் சிறந்த சிற்ப வேலைப்பாட்டுடன் காட்சியளிக்கிறார். தென்குரங்காடுதுறையிலும் நடராசர் சபை சிறப்புடையது.

வடகுரங்காடுதுறைக் கோயிலில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், மூன்றாம் குலோத்துங்க சோழன், விக்கிரம பாண்டியன் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் வரலாற்றுச் சின்னங்களாக விளங்குகின்றன. தென்குரங்காடுதுறைக் கோயிலிலும் செம்பியன் மாதேவியார் திருப்பணி முதலியவற்றை விளக்கும் கல்வெட்டுகள் காணப் பெறுகின்றன. வடகுரங்காடுதுறையில் இறைவர் பெயர் குலைவணங்கீசர் ஆகும். இறைவி பெயர் அழகு சடைமுடியம்மை. தென்குரங்காடுதுறையில் இறைவன் திருப்பெயர் ஆபத்சகாயர்; இறைவி பவளக் கொடியம்மை. இவ்விரு குரங்காடுதுறைகளும் இயற்கைச் சூழல் சிறப்புற்ற திருவூர்களாகும். சு.சு.

**குரவைக்கூத்து** என்பது கூத்து வகைகளுள் ஒன்று. இது விநோதக்கூத்து வகையில் அடங்கும் என்பது, 'குரவை வரியே கோலம் மூன்றும், விரவிய விநோதம் ஆகும் என்ப' என்னும் பஞ்சமரபு காப்புப் பகுதி விளக்கத்தில் காணப்படும் உரைச் சூத்திரத்தால் தெரிகிறது.

ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என்னும் இரு குரவைக் கூத்துகள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் முன்னது முல்லைநில மக்களாலும், பின்னது குறிஞ்சி நில மக்களாலும் ஆடப் பெற்றன.

ஆயர்பாடியில் கண்ணனும் பலராமனும் நப்பின்னையுடன் ஆடிய கூத்து குரவைக் கூத்து என்று சிலப்பதிகாரம் குறிக்கிறது. 'மண்ணின் மாதர்க்கு அணியாகிய கண்ணகியுந்தான் காண ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வால சரிதை நாடகங்களில் வேல்நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய குரவை ஆடுதும் யாம் என்றாள். ...... ' என்பது ஆய்ச்சியர் குரவையில் காணப்படும் குறிப்பாகும்.

இக்கூத்தினை மாதரி என்பவள் கறவை கன்றுகளின் துயர் நீங்குவதற்காக ஆடினாள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. மாதரி, கன்னியர் எழுவரை நிறுத்தி ஏழிசையின் பெயர்களாகிய குரல் முதலியவற்றை அவர்களுக்குப் பெயர்களாக இட்டாள். அவர்களுள் குரலாகியவளைக் கண்ணன் என்றும், இளியாகியவளைப் பலராமன் என்றும், துத்தம் ஆகியவளைப் பின்னை என்றும், ஏனைய நரம்புகளாகியோரை மற்றை நால்வர் என்றும் பெயரிட்டாள். அவர்கள் கற்கடகக் (நண்டு வடிவில்) கைகோத்து நின்று மாயோனைப் பாடிக் குரவை ஆடினர். இப்பகுதியில் முன்னிலைப் பரவலாகவும் படர்க்கைப் பரவலாகவும் திருமாலின் பல்வேறு சிறப்புகள் அழகுறப் பேசப்பட்டுள்ளன.

கண்ணகி கணவனுடன் விமானம் ஏறிச் செல்லக் கண்ட மலைவாழ் வேட்டுவரும், வேட்டுவிச்சியரும் அவள் பொருட்டுக் குரவைக் கூத்து நிகழ்த்தினர். இக்கூத்தில் முருகனின் வேலின் சிறப்பினை விரித்துரைக்கும் பாடல்களைப் பாடினர். மேலும், அகப்பொருட்சுவை நிரம்பிய பாடல்கள் சிலவற்றையும் முருகனோடு தொடர்புபடுத்திப் பாடியாடினர்.

குரவை என்பது தனியொருவர் ஆடும் கூத்தாக அமையாமல் குழுவாக ஆடும் கூத்தாக அமைந்துள்ளது. இக்கூத்து தெய்வத்தின் சிறப்பினைப் பரப்புவதாக இருந்துள்ளது. பண்டைத் தமிழகத்தில் பாமர மக்களிடம் பெருவழக்காக இருந்த கூத்துவகையுள் ஒன்று குரவைக் கூத்து எனலாம். தெ.ஞா.

**குரான் (குர்ஆன்)** இசுலாமியர்களின் புனித நூல். இப் புனித குர்ஆன் 114 படலங்களையும் 6666 சொற்றொடர்களையும் கொண்டது. அப்படலங்கள் அரபி மொழியில் சூரா (Sura) என்று சொல்லப்படுகின்றன. ஒவ்வொரு படலத்திற்கும் தலைப்பு உண்டு. அதுபோலவே எந்த இடத்தில் அது நபிகள் நாயகம் அவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்டது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. குர்ஆனின் சொற்றொடர் ஆயத்து(Ayat)என்று அரபிமொழியில் சொல்லப்படுகிறது. ஒன்பதாம் படலத்தைத் தவிர மற்றவை 'அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் பெயரால்' என்று தொடங்குகின்றன. படிக்கும் வசதிக்காகக் குர்ஆன் முப்பது பாகங்களாகப் (Parts) பகுக்கப்பட்டுள்ளது. அவை அச்சாவு (Ajzau) என்று அரபியில் சொல்லப்படுகின்றன.

குர்ஆனின் முதற் படலம் தவிரப் பெரும்பாலான படலங்கள் இறைவன் தன்னிலையில் கூறுவதாகவே

உள்ளன. இந்நூல், இறைவனால் முகம்மது நபி அவர்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக இறக்கப்பட்டதாகக் குர்ஆனில் (25:32) குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செயல் சிப்ரயீல் (Gabriel) என்னும் புனித தேவதூதர் மூலம் நடந்ததாகவும் அதில் சொல்லப்படுகிறது. இக் குர்ஆன் நபிகள் நாயகம் காலத்திலேயே சிலரால் எழுதப்பட்டுப் பலரால் மனனம் செய்யப்பட்டது. கலீபா அபுபக்கர் அவர்களின் காலத்தில் சைத்து இபுனு தாபித்து (Zayd-ibn Thabit) என்பவரால் இது முதலில் தொகுக்கப்பட்டது. இது பிற கலீபாக்களின் காலத்திலும் அவர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்தது. கலீபா உமரின் காலத்திற்குப் பின் இது நபிகள் நாயகத்தின் விதவை மனைவியும் உமரின் மகளுமான அப்சா (Hafsa) அவர்களிடமிருந்தது. பின்னர், இவ்வம்மையாரிடமிருந்த குர்ஆனின் நகல் தவிர மற்ற அனைத்தும் தீயிட ஆணையிடப்பட்டது.அதன்படி உதுமான் காலத்தில் பெறப்பட்ட குர்ஆனே இன்றளவும் ஒரு புள்ளிகூட மாற்றப்படாமல் அப்படியே உள்ளது. இன்று உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் குர்ஆன் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனாலும், இறைவனைத் தொழுவதற்குக் குர்ஆனில் உள்ள அரபி மொழிச் சொற்றொடர்களே உலகெங்கிலும் பயன்படுத்தப்படுகின்றன.

இறைவனின் தனித்தன்மை, எல்லாம் வல்ல ஆற்றல், நேர்மை, நீதி முதலியன குர்ஆனின் செய்திகளில் அடங்கியுள்ளன. உருவ வழிபாடும் இறைவனால் படைக்கப்பட்ட பொருள்களை வணங்குவதும் கண்டிக்கப்பட்டுள்ளன. துறக்கத்தின் சிறப்பும் நரகத்தின் கொடுமையும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவ்வுலகத்தின் இறுதி நாள் (கியாமத்) பற்றிய எச்சரிக்கையும் தீர்ப்புநாள் (Day of Judgement) பற்றிய அறிவிப்பும் செய்யப்பட்டுள்ளன. மதத்தைப் பின்பற்றுகின்ற நம்பிக்கையாளர்களுக்கு அறிவுரைகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இறைவணக்கத்தின் இன்றியமையாமை, இறைவனை வேண்டும் முறை, நோன்பு நோற்றல், தருமம் செய்தல், புனிதப் பயணம் மேற்கொள்ளல் முதலியன கூறப்பட்டுள்ளன. மேலும், கல்வியின் இன்றியமையாமை, மருத்துவம், சுகாதாரம், உரிமை இயல் (Civil code), குற்றவியல் (Criminal code), வாரிசுரிமை (Inheritance),பெண்ணுரிமை, திருமணம், மண முறிவு ஆகியன பற்றிச் செய்ய வேண்டியவைகளைச் சட்டமாகக் கூறுகிறது. கடன் கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் அவற்றைச் சாட்சிகளோடு எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்ற அதே சமயத்தில், வட்டி வாங்கக் கூடாது எனவும் குர்ஆன் கட்டளை இடுகிறது. கலப்படம், பிறர் மனை நயத்தல், திருட்டு, கொலை போன்ற குற்றங்களைக் கண்டிக்கும் குர்ஆன் அதற்கான தண்டனைகளையும் குறிப்பிடுகிறது. எச்.சா.அ.

**துணை நூல்கள்:**

**குர்சித் அகமத்**, இசுலாம் ஓர் அறிமுகம், இசுலாமிய நிறுவன வெளியீடு, சென்னை, 1982.

**Selwyn Gurney Champion & Dorathy short,** Readings from World Religions, Fawcett World Library Publication, New York, 1951.

குரு: சூரியனைச் சுற்றிவரும் கோள்களுள் புதன், சுக்கிரன் (வெள்ளி), செவ்வாய், வியாழன், சனி என்பவை சிறப்பானவை. அவற்றுள் வியாழன் என்பதையே குரு என்று குறிப்பிடுகிறார்கள். எல்லாக் கோள்களினும் இது பெரியது. எனினும் இது மிகுந்த தொலைவில் இருப்பதால் விண்மீன் போன்றே கண்ணுக்குத் தோன்றுகிறது. இது சூரியனைச் சுற்றிவர 12 ஆண்டுகள் ஆகும். எனவே, இது ஆண்டுக்கு ஓர் இராசியாக 12 இராசிகளோடும் செயற்படும். மிகவும் துல்லியமாக அளந்து கூறியவர்கள் ஒவ்வோர் இராசியோடும் 399 நாள்கள் இதன் செயற்பாடு அமையும் என்பர். இச் செயற்பாட்டினை ஒரு 'பரிவிருத்தி' என்பர். பதினொரு பரிவிருத்திகள் சூரியனைச் சுற்றிவரத் தேவைப்படும். ஒரு பரிவிருத்தியின் 399 நாள்களில் 14-ஆம் நாளில் குரு கிழக்கே தோன்றும். 139-ஆம் நாளில் வக்கிரம் (பின்னோக்கி நகருதல்) தொடங்கும். 259-ஆம் நாளில் வக்கிரம் நீங்கும்.

சோதிட நூல் குருவை வேந்தன், பிரகசுபதி என்னும் பெயர்களாலும் குறிப்பிடும். இதற்குத் தனுசு, மீனம் என்னும் இராசிகள் சொந்த வீடுகள் ஆகும். அந்த இடங்களில் இது ஆட்சி பெற்று நிற்பதாகக் கருதுவர். கற்கடத்தில் (நண்டில்) இது உச்சமடையும்; மாறாக மகரத்தில் நீசமடையும். இதற்கு மேடம், விருச்சிகம் என்னும் இடங்கள் பகை வீடுகள்; இடபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், கும்பம் என்பன நட்பு வீடுகள்.

குருதிசை 16 ஆண்டுகள் நடைபெறும். அதில் பிற கிரகங்களின் புத்தி நடைபெறும்போது பலன்கள் மாறுபடும். குருதிசைக்கு வேதகன் சூரியன்; அவன் வேறுபண்ணித் தட்டுவிப்பான். போதகன் செவ்வாய்; அவன், 'கூறும் பலனைக் கொடு' என்பான். பாசகன் சனி; அவனோ தெறுபலனைக் கூட்டுவிப்பான். காரகன் சந்திரன்; அவன் ஈட்டு பொருளை ஈவான்.

பொதுவாகக் குருவைத் தெய்வம் என்பர். தான் நின்ற இராசியில் இருந்து 5, 7, 9 என்னும் இடங்

களை இது பார்ப்பதால் நன்மை ஏற்படும். குரு பார்த்தால் கோடி இன்னல் நீங்கும். சந்திரனுக்கு 2, 5, 7, 9, 11 என்னும் இடங்களில் குரு வரும்போது வியாழ நோக்கு வந்து விட்டது; திருமணத்திற்கு ஏற்ற காலம் என்பர். இலக்கினம் அல்லது சந்திர னுக்கு 7-இல் இது இருந்தால் மணவாழ்வு நன்றாக அமையும். திருமண இடத்தில் குரு மணக்க இருந் தால் திருமகள் போல் மனைவி வாய்ப்பாள். சந்திர னுக்கு 1, 4, 7, 10 ஆகிய இடங்களில் இது நின்றால் கசகேசரி யோகம் ஏற்படும் என்பர். இலக்கினத்திற்கு 6-ஆம் இடத்தில் செவ்வாய் நிற்க, அதனைக் குரு நோக்கினால் வீட்டில் குலதெய்வம் வாழும் என்பர். குரு 4-ஆம் வீட்டில் நிற்பதைப் பல நூல்கள் பாராட்டும். குழந்தைக் காரகன் என்றும் குருவிற்குப் பெயருண்டு. குழந்தைக் காரகன் குழந்தைக்குரிய 5-ஆம் வீட்டில் நிற்றல் கூடாது. இருந்தாலும் பரி வருத்தனை, சந்திர கேந்திரம், சுபர் பார்வை முதலிய வற்றால் தீமை குறையும் என்பர். குரு, 4, 7, 10 முத லிய இடங்களுக்கு அதிபதியாக வந்தால் நன்மை தருவதில்லை என்பதும் உண்டு.

சோதிட நூல் கிரகங்களுக்கு நிறம், குலம், சுவை, அறிவு, இரத்தினம், தானியம் முதலியவற் றைக் குறிப்பிடும். அம்முறையில் இதற்குப் பொன் நிறம், அந்தணர்குலம், இனிப்புச்சுவை, ஐயறிவு, கனகபுட்பராகம், கடலை முதலியவற்றைக் குறிப் பிடும். இது சலனசக்தி, சலியா உழைப்பு, தியாகம், தன்னம்பிக்கை, கொள்கைப் பிடிப்பு, சுயமரியாதை, மானம் என்னும் குணங்களைக் காட்டும். தே.ஆ.

**குரு அர்சுன்சிங்கு (கி.பி. 1581-1606)** சீக் கிய குருவாகப் பதவியேற்ற பின்பு சீக்கிய மதம் புதுப் பொலிவும் புத்துணர்ச்சியும் பெற்றது. சீக்கியரின் வேத புத்தகமான ஆதி-கிரந்தத்தைத் தொகுத்தளித் தமை, இவரது சாதனைகளுள் முக்கியமானது. அமிர்தசரசு நகரின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்த இவர் தாரன் தாரன் (Taran Taran) கர்த் தார்பூர் - முதலான நகரங்களையும், இலாகூரில் சீக்கியக் கோயில் (Boali) ஒன்றினையும் கட்டுவித் தார். பொற்கோயிலைக் கட்டி முடித்த இக்குரு இராமதாசர் என்னும் குருவின் மகனாவார். மத குருவாக கி.பி. 1581 முதல் 1606 முடிய இருந்த இவர் சீக்கிய மதத்தைப் பரவச் செய்வதில் நாட்டம் கொண்டிருந்தார்.

ஆதிகிரந்தத்தைத் தொகுக்கும் பணியினை கி.பி. 1604-ஆம் ஆண்டில் இவர் முடித்தார். இப்புனித நூலில் சீக்கிய குருக்கள் ஐவரின் போதனைகளும் பாடல்களும், கபீர், பரீத்து, நாமதேவர், இராம தாசர்-முதலான 16 இந்து சமயப் பெரியோர்களின் போதனைகளும் அடங்கியுள்ளன. குரு அர்சுன்சிங்கு (Guru Arjan Singh) மசந்து முறையை (Masand System) அறிமுகப்படுத்தினார். அதன்படி சீக்கியர் கள் தமது வருவாயில் 1/10 பங்கினைக் குருவிற்குச் செலுத்த வேண்டும். வசூலிக்கப்பட்ட அத்தொகை பைசாகி நாளன்று அமிர்தசரசிற்கு அனுப்பப்படும்.

அக்பர் தம் ஆட்சிக் காலத்தில் இக்குருவுடன் சுமுக மான உறவு கொண்டிருந்தார். ஆனால் சகாங்கீரின் ஆட்சிக்காலத்தில் இவ்வுறவுமுறை மாறியது. முகலாய வேந்தர் சீக்கியர்களின் வளர்ச்சி குறித்து ஆத்திரம் கொண்டார். அடுத்து, தமது ஆட்சிக்கெதிராகப் புரட்சி செய்த, தம் மகனான இளவரசர் குசுரு விற்கு அர்சுன்சிங்கு நல்லாசி வழங்கியதையும், உரூ. 5000 உதவியதையும் கேட்டுச் சகாங்கீர் கடுங் கோபம் கொண்டார். இந்துக்களையும் முசுலிம்களை யும் அர்சுன்சிங்கு சீக்கிய மதத்திற்கு மாற்றிய செயல் முகலாய மன்னருக்கு எரிச்சலை மூட்டியது. எனவே சகாங்கீர், அர்சுன்சிங்கு இரண்டு இலட்சம் உரூபாய் அபராதம் கட்ட வேண்டுமென்றும், ஆதிகிரந்தத்தில் உள்ள இந்துக்களுக்கும் முசுலிம்களுக்கும் எதிரான பாடல்கள் நீக்கப்பட வேண்டுமென்றும் ஆணையிட் டார். இதனை ஏற்றுக்கொள்ள மறுத்த அர்சுன் சிங்கு, கி.பி. 1605-இல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். இக்குருவின் மரணம், சீக்கியர் களை ஆயுதம் தாங்கிய போராளிகளாக மாற்றியது. சீக்கியர் வரலாற்றில் பெரியதோர் மாற்றத்தை ஏற் படுத்திய பெருமை அர்சுன் சிங்கைச் சாரும். ம.இ.

**துணை நூல்கள்:**

**தங்கவேலு, கோ.**, இந்திய வரலாறு - பாகம் 3, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1980.

**Mahajan, V.D.**, History of India Since 1526, Chand Publications, Delhi, 1980.

**குரு அரகோவிந்தர் (கி.பி. 1606-45)** என்ற சீக்கிய குரு தம் தந்தையான குரு அர்சுன் சிங்கை அடுத்துப் பதவியேற்றார். சச்சாபாதுசா (Sachacha Padshah) என்னும் விருதுப் பெயரினைப் பூண்ட இவர், தொடக்க காலத்திலிருந்தே முகலாயர்களின் பெரும் பகைவராக இருந்தார். எப்போதும் ஆயுதம் வைத்துக் கொண்டு, முகலாயரின் கொடுங்கோன் மையை ஒடுக்க வேண்டும் என்று குரு அரகோவிந்தர் தம்சீடர்களுக்கு அறிவுரை வழங்கினார். படைவீரனின் உடையணிந்த இவர் குடை, கத்தி, கருடன் (Hawk) ஆகிய அரசச் சின்னங்களையும் அணிந்து கொண்டார். தம் ஆன்மிக மேலாண்மையையும், தனிப்பட்ட

மேலாண்மையையும் குறிக்கும் வகையில், இக்குரு இரு கத்திகளை அணிந்தார். உலோகரை (Lohgarh) வலுப் படுத்திய இவர் இறைவனின் சிம்மாசனமான அகால் தக்டையும் (Akal Takht) கட்டினார். ஆயுதம் தரித்த தொண்டர்களைப் (Volunteers)பெருமளவில் சேர்த்த அரகோவிந்தர், பணத்திற்குப் பதில் குதிரைகளையும் ஆயுதங்களையும் தமக்கு வழங்க வேண்டும் எனத்தம் சீடர்களைக் கேட்டுக் கொண்டார். சீக்கிய இனத்தைக் காக்க வேண்டுமென்றால், சீக்கியர் அனைவரும் போராளிகளாக மாறுவதைத் தவிர வேறு வழி யில்லை என்பதனை இவர் நன்கு உணர்ந்தார்.

குரு அரகோவிந்தரின் தீவிர போர்க்குணப் போக்கினை முகலாய சகாங்கீர் (கி.பி. 1605-1627) ஏற் றுக் கொள்ள மறுத்து, அவரைக்கைது செய்து, குவாலி யர் கோட்டையில் சிறை வைத்தார். வசீர்கான், மியான் மீர் ஆகியோரின் தலையீட்டால் சில ஆண்டுகளில் அரகோவிந்தர் விடுதலை செய்யப்பட்டார். பின்னர் அரகோவிந்தரும் சகாங்கீரும் பகைமைதனை மறந்து நட்புப் பூண்டனர். சாசகான் (கி.பி. 1627-1658) காலத் தில் சீக்கியர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அமிர்தசரசு, கர்த்தார்பூர் முதலான இடங்களில் முகலாய—சீக்கிய மோதல்கள் ஏற்பட்டன. இருதரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். இறுதியாகக் குரு அரகோவிந்தர் காட் டில் தஞ்சம் புகுந்தார். இவ்வாறாக இவர் சீக்கிய ரைப் போர்க்குணம் படைத்த படையினராக மாற்றி, அவர்களின் பாதுகாவலராகவும் ஆசானாகவும் விளங்கினார். பேராதிக்கம் படைத்த முகலாய மன்னன் சாசகானையே எதிர்த்ததும், தம் சீடர்களுக்கு வீரம் ஊட்டியதும், சீக்கிய வரலாற்றில் இவருக்குத் தனித்த தோர் இடத்தைப் பெற்றுத் தந்தன. ம.இ.

**குரு கீதை**: பகவத் கீதை, இரிபு கீதை, பிரம கீதை, உத்தர கீதை போலக் குருகீதையும் சிறந்த வடமொழி நூல்களில் ஒன்று. இது வியாசமுனிவர் வட மொழியில் இயற்றிய காந்த புராணத்தில், உத்தர காண்டத்தில் உமா மகேசுவரர்களின் உரையாட லாக இருநூற்று எழுபத்து நான்கு சுலோகங்களைக் கொண்டுள்ளது; மூன்று அத்தியாயங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. இந்நூல் குருவாகிய ஆசிரியரின் சிறப்பினை விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

'குருகீதை' தமிழில் தஞ்சை. வெ. குப்புசாமிராசு அவர்களால் 1910 - இல் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்நூல் நாகரி, கிரந்த எழுத்து களில் மூலமும், தமிழில் பொழிப்புரையும் கொண்டு அமைந்துள்ளது.

சூத பௌராணிகர் இருடிகட்குக் கூறியதாகத் தொடங்கி, உமையம்மை தன் கேள்வனான மகேசு வரனிடம் 'உடல் பெற்ற மனிதன் எவ்வழியினால் பிரம்ம மயன் ஆகிறான்?' என்று கேட்க அதற்கு இறைவன் மறுமொழி கூறும் பாங்கில் குருகீதை அமைந்துள்ளது.

'மாத்ரு தேவோ பவ! பித்ரு தேவோ பவ!
ஆசார்ய தேவோ பவ! அதிதி தேவோ பவ!'

என்று தைத்திரீயம் கூறுவது போல, இந்தியப் பண் பாட்டில் நல்லாசிரியன் இறைவனோடொப்பக் கருதப் படுகிறான். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்பதே நம் முன்னோர் கொள்கை. அதனையே புராணப் பாங்கில் எடுத்துக்கூறும் நூல் குருகீதை யாகும்.

நல்லாசிரியன் இலக்கணமும், ஆசிரியனைப் போற் றும் வகையும் மரபும் இந்நூலில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

குரு என்ற சொல்லில் குகரம் இருளையும், ருகரம் அதனை அழிக்கும் ஒளியையும் குறிக்கும் என்று அறிஞர்கள் காட்டியுள்ளனர்.

குருவின் பெருமை கூறும் குரூர் பிரம எனத் தொடங்கும் சுலோகம் குருகீதையில் 45-ஆம் சுலோக மாக அமைந்துள்ளது. மும்மூர்த்திகளாகவும் பரப் பிரம்மமாகவும் குருவைப் போற்றும் சிறப்பு இந்நூல் முழுவதும் காணப்படுகிறது.

தாய் தந்தையர், உற்றார் உறவினர், தெய்வம் எல்லாம் குருவே என்றும், அறிவுச்சுடர் கொண்டு வினைகளைச் சுட்டெரித்து வீடு பேறு நல்குபவர் குருவே என்றும், தெய்வம் சினந்தாலும் கடைத் தேற்றம் உண்டு, ஆனால் குரு சினந்தால் கடைத் தேற்றம் இல்லை என்றும், ஆசிரியரின் பெருமையை இந்நூல் விரித்துரைக்கின்றது.

தேனை நாடும் வண்டு பல மலர்களைத் தேடிச் செல்வது போல, அறிவை நாடும் மாணவனும் ஒரு ஆசிரியனிடமிருந்து மற்றொரு ஆசிரியனை நாடிச் சென்று பயன்பெற வேண்டும் என்றும், குளவி ஒரு புழுவைக் கொணர்ந்து கொட்டிக் கொட்டி அத னைக் குளவியாக்குவது போல (பிரமரகீட நியாயம்) ஆசிரியன் சீடனைத் தன் வடிவமாக்குகிறான் என்றும், வேத வேதாங்கங்களை எத்துணை கற்றாலும் குரு முகமாக வன்றி மெய்ப்பொருள் உணர முடியா தென்றும் கூறப்பட்டுள்ளது. மாணவரின் ஐயங்களை

நீக்கி, நல்வழி காட்டுபவனே உண்மையான குரு என்பதும், அறிவற்ற, போலியான குருவேடம் தரித்த வர்களை நம்பலாகாது என்பதும், மயக்கத்தை யுண்டு பண்ணும் தீய குருமாரைவிட்டு விலகி நல்லாசிரியர் களை நாட வேண்டும் என்பதும் தெளிவாக இந் நூலில் வற்புறுத்தப்பட்டுள்ளன.

உயர்ந்த ஒழுக்கமும், ஆன்ம நேயமும் உடைய குருவினைச் சரணடைந்து உய்யவேண்டும் என்றும், ஏழு கோடி மகா மந்திரங்களை விடக்'குரு' என்னும் இரண்டெழுத்து மந்திரமே உயர்ந்தது என்றும் இதன் கண் குறிப்பிட்டுள்ளது. குரு கீதை ஆசிரியனின் பெருமையையும் அருமையையும் உணர்த்தி, ஆசிரி யருக்கும் மாணவருக்கும் உள்ள ஆன்மிகத் தொடர் பின் சிறப்பினைவிளக்கும் நன்னூல் ஆகும். மு.கு.ஜெ.

**குருகோவிந்த சிங்கு (கி.பி.1666-1708)** புகழ் பெற்ற சீக்கிய மதகுரு ஆவார். சீக்கிய சம யத்தின் பத்தாம் குருவாகவும், கடைசி குருவா கவும் விளங்கிய குருகோவிந்த சிங்கு, ஒன்பதாம் குரு வான தேசு பகதூரின் (Tej Bahadur) மகனாவார். சீக்கியர் வரலாற்றில், இவர் சிறப்பிடம் பெறுகிறார். சீக்கியர்களை, ஒரு படைதரித்த சமூகமாக மாற்றி யதில் கோவிந்தர் பெரும்பங்கு வகிக்கிறார்.

தம் தந்தையார் அநியாயமாகக் கொல்லப்பட்ட தற்குப் பழிக்குப்பழி வாங்கக்கோவிந்தர் உறுதி பூண் டார்.சீக்கியர்களுக்குப் போர்ப்பயிற்சியளித்து, போரி டும் சமூகமாக மாற்றிக் 'கால்சா' எனப் பெயரிட் டவர் இவர். கால்சாவின் உறுப்பினர்கள் தனி உடை தரித்தனர். மேலும் அவர்கள்எப்போதும் 'க' எழுத்தில் தொடங்கும் 'பஞ்சகாரங்கள்' எனும் ஐந்து பொருள் களை உடைமைகளாகக் கொண்டிருப்பர். அவை முறையே கேசம், கிர்ப்பான் (வாள்), கச்சம் (கீழணி), கங்கம் (சீப்பு), கரம் (இரும்பு வளை) என்பனவாகும். கால்சாவில் சேரும்போது, புதிய தொடக்கச் சடங்கு ஒன்று நடத்தப் பெறும். அதனால் இதன் உறுப்பினர் கள் திருக்குடி மக்களாகக் கருதப்பட்டனர்.

குருகோவிந்தரின் காலத்திய சீக்கிய சமயம், ஔரங்கசீபின் இசுலாமியத்திற்கு நல்லதோர் எதிர்ப் பினை நல்கியது. சீக்கியர் பல வெற்றிகளையும் குவித் தனர். வட பஞ்சாபில் கிளர்ச்சி செய்த சீக்கியர்களை ஒடுக்க முனைந்த முசுலிம் அதிகாரிகளையும், இந்து அரசர்களையும் குருகோவிந்தர் கடுமையாக எதிர்த் துப் போரிட்டார்; சீக்கியரின் செல்வாக்கை நிலை நாட்டினார். அதன் விளைவாக சீக்கியரின் எண்ணிக் கையும் அதிகரித்தது.




முகலாய வேந்தன் கோவிந்தரைப் பழிவாங்க முனைந்தான். அனந்தப்பூரிலுள்ள கோவிந்தரின் இருப் பிடம் ஐந்து தடவை தாக்கப்பட்டது. இவர் பல இடங்களுக்கு ஓடியும், முகலாயர் இவரை விட்ட பாடில்லை. கோவிந்தரோ தக்காணத்திற்கு ஓடினார். இவரது இரு குமாரர் கொல்லப் பட்டனர். எஞ்சி யிருந்த இரு குமாரர்களும் கி.பி. 1705-ஆம் ஆண்டு சர்கிந்து (Sirhind) பௌச்தாரால் (Faujdar) கொலை செய்யப்பட்டனர். ஔரங்கசீபு இறந்த பின்னர் கோவிந்தர் வடநாடுதிரும்பினார். பின்னர் பகதுார்சா தனது சகோதரர்களுடன் நடத்திய வாரிசுரிமைப் போரில் கலந்து கொண்டு, கோவிந்தர் தக்காணத் திற்குப் புறப்பட்டார். கி.பி. 1708-இல் கோதாவரி நதிக்கரையில் நாதிர் முகாமில்தங்கியிருந்த போது, ஆப்கானிய சீடர் ஒருவரால் கொல்லப்பட்டார். தமது இறப்பிற்கு முன், குருபீடத்தைக் கலைத்த இவர், தம் சீடர்களைப் படைதரித்த சனநாயக அமைப்பாக மாறும்படி கேட்டுக் கொண்டார்.

'கிரந்த்' என்னும் பாடல் தொகுதி இவரால் இயற்றப் பட்டது. ஐந்தாம் குரு இயற்றிய (தொகுத்த) ஆதிகிரந்தம்சமய நூலாகவும், இவர் தொகுத்த கிரந்தம் பாராயண நூலாகவும் சீக்கியர் களால் கருதப்பட்டு வருகின்றன. ம.இ.

**குருசேவு** சோவியத்துப் பொது உடைமைக் கூட்டாட்சிக் குடியரசுநாட்டின் ஆட்சித்தலைவர் களுள்ஒருவர். இவர் 1958 முதல் 1964 வரை சோவி யத்து நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபட்டார். ஆனால் இவர் நினைத்தபடி அது முழுவதும் வெற்றியடையவில்லை. இவர் அமெரிக்காவுடன் அமைதியை விரும்பினார். இவரது காலத்தில்தான் சோவியத்து நாட்டு விண்வெளி அறிஞர் யூரி ககாரின் (Yuri Gagarin) புவியை விண் வெளிக் கலத்தின் மூலம் சுற்றினார்.

குருசேவு (Khrushchev Nikita Sergeyevich) கி.பி. 1894-ஆம் ஆண்டு உருசியாவின் தென்மேற்குப்பகுதி அருகில் உள்ள குர்சுக்கு (Kursk) நகருக்கு அருகில் கலினோவ்கா (Kolinovka) என்னும் சிற்றூரில் பிறந் தார். இவர் தந்தையார் செர்சி குருசேவு (Sergei Khru-schev) ஓர் ஏழை உழவர். இவர் வேளாண்மை செய்ததேயன்றி நிலக்கரிச் சுரங்கங்களிலும் பணி யாற்றினார். நிகிதா குருசேவு 15 வயது ஆனவுடன் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலைக்குச் சென்றார். அங்கு இயந்திரங்களைப் பழுது பார்க்கும் தொழிலில்



குருசேவு

ஈடுபட்டார். குருசேவிற்கு முதல் திருமணம் 1915-ஆம் ஆண்டு நடைபெற்றது. இவர் முதல் மனைவி குறித்து எதுவும் தெரியவில்லை. இவர் முதல் மனைவி 1920 -ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சத்தால் கொள்ளை நோய்த் தாக்குண்டு இறந்தார். இவர்களுக்கு இலியோனிடு (Leonid), என்ற மகனும், சூலியா (Julia) என்ற மகளும் பிறந்தனர்.

குருசேவு 1918-ம் ஆண்டு போல்சுவிக்குக்கட்சியில் (Bolsheviks) சேர்ந்து, 1918 முதல் 1920 வரை நடந்த உள்நாட்டுப் போரில் கலந்து கொண்டார். இவரை 1920-ஆம் ஆண்டில் பொதுவுடைமைக் கட்சி, வயது வந்தோர் பணியாளர் பள்ளிக்கு மேல்நிலைக் கல்விக்கு அனுப்பி வைத்தது. அங்குத் தான் இவர் தம் இரண்டாம் மனைவியைச் சந்திக்க நேர்ந்தது. அவர் அங்கு ஆசிரியையாகப் பணியாற்றினார். இவர்களுக்கு 1924-ஆம் ஆண்டு திருமணம் நிகழ்ந்தது. இவ்விருவருக்கும் செர்சீ (Sergei) என்ற மகனும் இராதா, எலினா (Rada, Yelena) என்ற இருபெண்மக்களும் பிறந்தனர்.

பணியாளர் பள்ளியில் 1925-இல் படிப்பை முடித்த குருசேவு 1929-இல் மாசுக்கோ (Moscow) நகருக்குச் சென்றார். அங்குப் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்து வளர்ச்சியும் புகழும் பெறத் தொடங்கினார். மாசுக்கோ நகரக் கட்சி அமைப்பின் முதற் செயலராக 1935-ஆம் ஆண்டு குருசேவு பதவி பெற்றார். சோவியத்து நாட்டுத்தலைவரான சோசப்பு இசுடாலின் (Joseph Stalin) குருசேவை 1938-இல் கீவுத் (Kiev) தீவிற்கு, உக்ரேனியப் பொதுவுடைமைக் கட்சி முதற் செயலராக அனுப்பி வைத்தார். அதற்கடுத்த ஆண்டு இசுடாலின் உயர்நிலை நிருவாகக் குழுவின் உறுப்பினராகக் குருசேவு இடம் பெற்றார்.

இரண்டாம் உலகப் போரின்பொழுது, முதலிரண்டு ஆண்டுகள் உருசியா எவ்வித நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ளாமல் ஒதுங்கியிருந்தது. செருமனி 1941 -ஆம் ஆண்டு சோவியத்தின் மீது போர் தொடுத்தது. செருமனி உக்ரைன் பகுதியைக் கைப்பற்றுவதற்கு முன்னர்க் குருசேவு அப்பகுதியிலிருந்த தொழிற்சாலைத் தளவாடங்களை அழிவினின்று காத்தார். போர்க் காலத்தில் உக்ரைனில் மறைந்திருந்து தாக்கும் போர் அமைப்பை இவர் உருவாக்கினார். இசுட்டாலின் கிராடு (Stalingrad-இன்றைய வோல்காகிராடு நகரை அழிவினின்றும் பாதுகாத்த பெருமை குருசேவைச் சாரும். இறுதியாகச் சோவியத்துப் படைகள் செருமனிப் படைகளை உக்ரைன் பகுதியிலிருந்து 1944-இல் வெளியேற்றின.

**ஆட்சியாளர்**: குருசேவு உக்ரைனிலிருந்து 1949 -ஆம் ஆண்டு மாசுக்கோவிற்குத்திரும்பினார். அங்குப் பொதுவுடைமைக் கட்சியின் மைய அமைப்புச் செயலராக நியமிக்கப்பட்டார். இசுட்டாலின் 1953-ஆம் ஆண்டு இறந்துவிடவே, சியோர்சி மாலன்காவு (Georgi Malenkov) முதன்மை அமைச்சரானார், அவ்வாண்டே செப்டம்பர் மாதம் குருசேவு சோவியத்து நாடு முழுமைக்கும் பொதுவுடைமைக் கட்சியின் செயலராக ஆனார். மாலன்காவு 1955-இல் தன் பதவியிலிருந்து விலகவே, நிகோவாய் புல்கானின் (Nikolai Bulganin) என்பவர் பதவியேற்றார்.

குருசேவு 1956-ஆம் ஆண்டு, மாசுக்கோவில் நடந்த 20-ஆம் பொதுவுடைமைக் கட்சி இரகசிய மாநாட்டில் இசுட்டாலினைக் குறை கூறினார். சோவியத்து மக்கள் இசுடடாலினின் குற்றங்களை அறிய இவர் வகை செய்தார். அதன் விளைவாக இவரது கொள்கை 'இசுட்டாலின் கொள்கை அழிப்பு' (Destalinization) எனக் கூறப்பட்டது. இசுட்டாலின் படங்களும் நினைவுச் சின்னங்களும் அதனால் அழிக்கப்பட்டன. இசுட்டாலினின்பெயரில்இருந்த பல்வேறு நகரங்களுக்கும் சிற்றூர்களுக்கும் வேறு பெயர்கள் சூட்டப்பட்டன.

பொதுவுடைமைக் கட்சியில், இசுட்டாலினை எதிர்த்ததால் அரசியல் மாற்றம் ஏறபட வாய்ப்பாக அமைந்தது. பொதுவுடைமை ஆட்சிக்கு எதிராக 1950-இல் போலந்து அங்கேரி நாட்டு மக்கள் கலகம் செய்தனர். குருசேவு படைகளை அங்கேரி அரசுக்கு எதிராக அனுப்பி வைத்தார்.

குருசேவின் வளர்ச்சியைத் தடுக்கக் காகனோவிச்சு (Kaganovich) மாலன்காவு, மாலடாவு (Molotov)ஆகியோர் ஒருங்கிணைந்து சதியாலோசனை செய்தனர். அதை அறிந்த குருசேவு தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களைக் கட்சியிலிருந்து விலக்கினார். குருசேவு 1958–ஆம் ஆண்டு மார்ச்சு 27–ஆம் நாள் சோவியத்து அரசின் தலைமையாளராகத் தம்மை அறிவித்துக் கொண்டார். அதுமுதல் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராகவும் சோவியத்து நாட்டின் தலைவராகவும் இவர் விளங்கினார்.

குருசேவு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபட்டதுடன் இரகசியப்படையின் அதிகாரங்களையும் குறைத்தார். அதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் இவர் காலத்தில் சிறிது உயர்வு அடைந்தது. சைபீரியாவில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க இவர் நடவடிக்கை எடுத்தார். நெசவுத்தொழில், வீட்டுவசதி போன்றவை இவர் காலத்தில் பெரிதும் வளர்ச்சியடைந்தன.

இவரது அயல்நாட்டுக் கொள்கை முற்றிலும் மாறுபட்டதாக விளங்கியது. குடியாட்சி நாடுகளுக்கும் பொதுவுடைமை நாடுகளுக்கும் இடையில் ஏற்படும் போர்களைத் தடுத்தல் இயலாது என்னும் இசுட்டாலின் கொள்கையை இவர் மறுத்தார். இருப்பினும் இசுட்டாலின்பிற நாடுகளுடன் கொண்டிருந்த பகைமை உறவை இவர் மறைமுகமாகப் பின்பற்றினார். இவர் மேற்கு நாடுகளுடன் சோவியத்து நாடு போர் தொடுப்பதைத் தவிர்த்தார். அதன் மூலம் பொதுவுடைமை நாடுகளிலும், பொதுவுடைமை அல்லாத நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட இவர் வழிவகுத்தார். அதனால் சீனாவின் பகைமை இவருக்கு ஏற்பட்டது. கென்னடியின் வேண்டுகோளை ஏற்றுக் கியூபா மீது தொடுக்க இருந்த ஏவுகணைத் தாக்குதல்களை இவர் கைவிட்டார். குருசேவு விண்வெளி ஆய்வுகளில் அதிக ஆர்வம் காட்டினார். சோவியத்து நாடு 1957 அக்டோபர் 4 ஆம் நாள் முதல் இசுபுட்னிக்கு (Sputnik I) என்னும் முதற் செயற்கைக்கோளை அனுப்பியது.

இவருடைய பெரும்பாலான கொள்கைகள் 1960–ஆம் ஆண்டுகளில் தோல்வியைத் தழுவின. இவரது வேளாண்மை உற்பத்திப் பெருக்கக் கொள்கை பெரிதும் தோல்வியடைந்ததுடன் தொழிற் பெருக்கமும் நலிவடையத் தொடங்கியது. பல சோவியத்துத் தலைவர்கள் இவரைக் குறை கூற முற்பட்டனர். சோவியத்துப் படைகள் கியூபாவிலிருந்து பின் வாங்கியதால் சீனாவுடன் பகைமை உண்டானதைப் பலர் குறை கூறினர். குருசேவு 1964–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15–ஆம் நாள் ஆட்சியிலிருந்தும் பொதுவுடைமைக் கட்சியிலிருந்தும் ஓய்வு பெற்றார். இவர் 1971–இல் இறந்தார். சு.இரா.

**குருஞான சம்பந்தர்**: தமிழக வரலாற்றில் ஞானசம்பந்தர் எனச் சிறப்பித்துப் பாராட்டப் பெறுபவர் மூவராவர். இம்மூவரையும் வேற்றுமை கண்டுணர அவ்வப்பெயர்களுக்கு முன் அடைமொழி புணர்க்கப்பெற்றுள்ளது. அவர் திருஞான சம்பந்தர் மறைஞானசம்பந்தர், குருஞானசம்பந்தர் என்போராவர். இவர்களுள் மூன்றாமவராகக் குறிக்கப்பெற்ற குருஞானசம்பந்தர் திருக்கயிலாய பரம்பரை, தருமபுர ஆதீனத்து முதற்குரவராவர்.

இவர் பாண்டிநாட்டு சிரீவில்லிபுத்தூரினர்; வேளாண்மரபினர். சுப்பிரமணியபிள்ளை, மீனாட்சியம்மை ஆகிய இருவரும் பெற்றோராவர். இவருக்கு வழிவழியாக வளரப்பெற்று வந்த பேரறிவும், திருவருள் உந்துதலும் முன்னிற்கலாயின. அதனால், இவர் இளமையிலேயே தமிழ், வடமொழி எனும் இருமொழியிலும் வல்லுநரானார். ஒருமுறை தம் பெற்றோருடன் மதுரை செல்ல நேர்ந்தது. அங்கயற் கண்ணி உடனாய சொக்கநாதப் பெருமானை நாளும் வழிபடும் பேறும் கிடைத்தது. பண்டை நற்றவமும், இப்பிறவித் தவமும் ஒருங்குகூட இவரிடத்து மெய்யுணர்வு தோன்றலாயிற்று. பெற்றோர் தம் ஊர் ஏகவும், இவர் அவருடன் செல்லாது திருக்கோயில் வழிபாடு ஆற்றுதலையே கடனாகக் கொண்டிருந்தார். பொற்றாமரைக் கரையில் நாளும் சிவ வழிபாடு செய்து வரும் பேருளாளர்களைக்கண்டு மகிழ்ந்ததன் வாயிலாகத் தாமும் அப்பேறு பெற எண்ணினார். ஆலவாய்ச் சொக்கனும் அவர் கருத்து ஈடேறச்சிவலிங்கத்துடன் இருக்கும் பூசைப்பெட்டகம் ஒன்றை அவருக்கு அருளினன். 'கண்ணுக்கினிய பொருளாகியே என் கரத்தில் வந்தாய், விண்ணும் பரவிடும் அற்புதமே என்ன விஞ்சை இதுதான்'எனப் பெருமிதம் எய்தி நாளும் அதனை வைத்துச் சிவவழிபாடாற்றும் கடப்பாடுடையரானார்.

சொக்கநாதப் பெருமானின் அருளாணையின் வண்ணம் திருவாரூர் சென்றார். திருக்கயிலாயத்து எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் வழங்கியருளிய ஞானத்தை வழிவழியாகப் பெற்றுவரும் மரபினருள் ஒருவராய கமலை ஞானப்பிரகாசர் எனும் அருள் முதல்வர் அங்கு வாழ்ந்துவர அவரிடம் மெய்யுணர்வு பெற்று அவர்தம் மாணாக்கராய் வாழ்ந்து வரலானார். இவர்தம் குருநாதராகிய கமலை ஞானப்பிரகாசர் நாளும் திருக்கோயில் வழிபாடு ஆற்றிவரும் கடப்பாடுடையவர். அவ்வழிபாட்டிற்குச் சென்று மீண்டு வரும் குருநாதருக்கு ஒருநாள் கைவிளக்கு

ஏந்திவரும் புண்ணியமும் பெற்றார். குருநாதர் தம் இல்லத்தில் புகுங்கால் எப்பொழுதும் கைவிளக்கு ஏந்தி வரும் பணியாளனை 'நிற்க' என்று அருளுவது போல அன்றும் அருள, குருஞான சம்பந்தரும் அப் பணிதலை நின்றார். மறுநாட்காலை குருநாதர் இவர் தம் பேரருள் விளக்கத்தைக் கண்டு வியந்து மயிலாடு துறைக்கு அண்மையில் இருக்கும் தருமபுரத்திற்குச் சென்று அங்கோர் திருமடம் அமைத்து 'நின்பால் ததும்பியிருக்கும் ஞானத்தை வழங்கி அருளுவாயாக' என அருளாணை தந்து வாழ்த்தியருளினர்.

குருவருள் வழிநின்ற சம்பந்தரும் தருமபுரம் சென்று தம் பெட்டகத்திருந்த சொக்கலிங்கத் திருமேனியை எழுந்தருளுவித்துத் திருக்கோவில் அமைத்து நாள் வழிபாடாற்றி வந்ததுடன் தம்பால் வந்தோர்க்கு ஞானத்தையும் வழங்கி வருவாராயி னர். இவரை முதற்குரவராகக் கொண்டு வளர்ந்து வரும் ஆதீனமே திருக்கயிலாய பரம்பரைத்திருத்தரும புர ஆதீனமாகும்.

இவர், எட்டு அருள் நூல்களையும் அருளியுள் ளார். அவை அவ்வாதீன வெளியீடாகப் பண்டார சாத்திரம் என்னும் பெயரில் வெளிவந்துள்ளன. அவை, 1. சொக்கநாத வெண்பா, 2. சொக்கநாதக் கலித்துறை, 3. ஞானப்பிரகாச மாலை, 4. நவரத்தின மாலை, 5. சிவபோக சாரம், 6. திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், 7. சோடச கலாப்பிரசாத சட்கம், 8. முத்தி நிச்சயம் என்பன. இவை திருவருளையும் குருவருளையும் வியந்து போற்றுவதுடன் மெய்ப் பொருளை விளக்கும் ஞானநூல்களாகவும் திகழ்கின் றன.

கு.சு.

**குருட்சேத்திரம்** குரு-பாஞ்சால நாட்டின் ஒரு பகுதி. தொடக்ககால ஆரியர்கள் இங்கு நாகரி கத்துடன் வாழ்ந்தனர். இது பாரதப்போர் நிகழ்ந்த போர்க்களம். குரு என்னும் மன்னன் பெயரால் ஏற் பட்டதே குருட்சேத்திரம். குருகுலத்தவராகக் கருதப் பெறும் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இங்கே போர் நடைபெற்றது. அப்போது கீதை பிறந்தது. எனவே, குருட்சேத்திரம் இந்துக்களின் புனிதத்தலமாகக் கருதப்படுகிறது. தில்லிக்கு அரு கில் அரியானா மாநிலத்தில், கார்குல் மாவட் டத்தில் சரசுவதி ஆற்றுக்கும் இராக்சி நதிக் கும் இடையில் அமைந்துள்ள சமவெளி. இது நிர்துக் எனவும் சொல்லப்படுகிறது. நிர்துக் என்பது துன்ப மற் றது எனப் பொருள்படும். இச்சமவெளியின் நீளம் ஏறத்தாழ 115 கி.மீ. அகலம் 49 கி.மீ. சீனப்பயணி யான யுவான்சுவாங்கு இதனை இன்பபூமி (Field of Happiness) எனக் குறிப்பிட்டுள்ளார்.

குருட்சேத்திரத்தில் 5/32 கி.மீ. நீளமுள்ள புனிதக் குளம் ஒன்றுள்ளது. இங்குக் குளிப்பதற்கான துறை (நீராடுதுறை – bathingghat) ஒன்றும் பறவைகளின் சரணாலயம் ஒன்றும் உள்ளன. இந்துக்களைத் தவிரப் பிற பயணியர்களும் கண்டுகளிக்கத்தக்கவை. குருட் சேத்திரம் என்னும் பெயரில் இருப்புப்பாதை நிலை யம் ஒன்றுள்ளது.

ம.இ.

**குருட்சேத்திரப் பல்கலைக் கழகம்**: இது தில்லி யின் வடக்கே 156 கி.மீ. தொலைவில், அரியானா (Haryana) மாநிலத்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க தும் புனிதப் பயணிகள் பலரும் வரும் நகருமான குருட்சேத்திரம் (Kurukshetra) என்னுமிடத்தில், 1956-இல் தொடங்கப்பெற்றது. தொடங்கப்பட்ட போது பிறகல்லூரிகளை இணைத்துக் கொள்ளாத தாகவும் மாணவர்கள் தங்கிப் பயிலக் கூடியதொன் றாகவும், கற்பித்தலை மட்டும் செய்யக் கூடியதாக வும் குருட்சேத்திரப் பல்கலைக் கழகம் விளங்கியது. முதன் முதலில் சமசுகிருதத் துறையுடன் மட்டுமே தொடங்கப்பட்ட குருட்சேத்திரப் பல்கலைக் கழகத் தில் இன்று பல்வேறு புலங்கள் உள்ளன.

குருட்சேத்திரப் பல்கலைக் கழகம் 1974-ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசின் சட்டத்தின்படி, மாநிலத்திலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரி களை இணைத்துக் கொண்டது. பழைய வேந்தர் (Chancellor) பெயரின் நினைவாக ஓராண்டுக்குப் பின் (1976-1977), பைரேந்திரா நாராயணன் சக்கரவர்த் திப் பல்கலைக் கழகம் (Birendra Narayan Chakra-varty University) எனப் பெயர் மாற்றம் பெற்றது. ஆயினும் ஓராண்டுக்குள் பழைய பெயரே மீண்டும் பல்கலைக் கழகத்திற்கு வைக்கப்பட்டது. இப் பல்கலைக் கழகத்துடன் இணைப்புரிமை பெற்றிருந்த 12 கல்லூரிகள் பிரிக்கப்பட்டு, மகரிசி தயானந்தர் பல்கலைக் கழகம் (Maharishi Dayanand University) என்னும் புதிய பல்கலைக் கழகம் ஒன்று 1977-இல் தோற்றுவிக்கப்பட்டது.

குருட்சேத்திரப் பல்கலைக் கழகத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் வசதியுண்டு. அறிவியல், சட்டம், பொறியியல், தொழில் நுட்பம், மேலாண்மை (Management) போன்ற பாடத்துறைகளுக்குத் தேர்வு மொழியும் பயிற்று மொழியும் ஆங்கிலமாக இருந்த போதிலும், பிற பாடத்துறைகளுக்கு இந்தியே பயிற்று மொழியாக உள்ளது.

குருட்சேத்திரப் பல்கலைக் கழகத்தில் தாவர வியல், வேதியியல், கணிதவியல், இயற்பியல், விலங் கியல், நிலவியல் ஆகிய அறிவியல் துறைகளும்,

உளவியல், அரசியலறிவியல் (Political Science), மொழியியல், மேலாண்மை, சட்டவியல், வரலாறு, தத்துவம், வணிகவியல், பொருளியல், பண்டைய இந்திய வரலாறு, பண்பாடு, தொல்லியல் ஆகிய கலைத் துறைகளும் உள்ளன. கல்வியியல், உடற்பயிற்சியியல் நூலகவியல், இசை, நாட்டியம் போன்ற துறைகளும் உள்ளன. இங்கு ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி, சமசுகிருதம், பாலி (Pali), பிராகிருதம் (Prakrit) ஆகிய இந்திய மொழிகளுக்கும், உருது பாரசீகம் ஆகிய அரசியல் மொழிகளுக்கும் துறைகள் உண்டு. உருசிய மொழி, பிரெஞ்சு மொழி ஆகியனவும் கற்பிக்கப்படுகின்றன.

பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று பல்கலைக் கழகக் கல்வியியல் கல்லூரி (University College of Education) ஆகும். மற்றொன்றில் மொழி, அறிவியல், கலைத் துறைப் பாடல்கள் உள்ளன. எஸ்.த.

**குருத்தோலை ஞாயிறு**: இயேசு கிறித்து உயிர்த்தெழுந்த நாளைக் குறிக்கும் ஞாயிற்றுக் கிழமைக்கு (Easter Sunday) முந்திய ஞாயிறு குருத்தோலை ஞாயிறு (Palm Sunday) எனப்படுகிறது. அந்நாளில் இயேசு தம் இறுதிப் பயணமாக எருசலேம் நகருக்குச் சென்றதை உலகெங்குமுள்ள கிறித்தவர்கள் திருநாளாகக் (Holy Day) கொண்டாடுகின்றனர்.

இயேசு கிறித்து (Jesus Christ) தம் பகைவரால் சிலுவையில் அறையப்பட்டு எருசலேமில் (Jerusalam) உயிரிழக்கப் போவதை முன்னறிந்து, அதனைத் தம் முடனிருந்த சீடர்களுக்கு அறிவித்தார். எனினும், அதிலிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவரிடம் தோன்றவில்லை. அதனை அவர் விரும்பாமலும் தம்மைப் பிறரிடமிருந்து ஒளித்துக்கொள்ளாமலும், தம்மை மக்களுக்காகப் பலியாகத் (Sacrifice) தந்து, தாம் நிறைவேற்ற வேண்டிய இறை பணியை முடிவுறச் செய்யக் கோவேறு கழுதைக்குட்டியின் மேலேறி, எருசலேம் நகருக்கு மகிழ்ச்சி ஆரவாரத்துடன் சென்றார். அந்நாள் ஞாயிற்றுக்கிழமையாயிருந்தது. சீடர்கள் கழுதைக் குட்டியின் மேல் தங்கள் ஆடைகளை விரித்து இயேசு கிறித்துவை அதன்மேல் உட்கார வைத்தார்கள். திரளான மக்கள் தங்கள் ஆடைகளை இயேசு கிறித்து செல்லும் வழியில் விரித்தார்கள். சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள். இயேசு கிறித்துவுக்கு முன் சென்றவர்களும் பின் நடந்தவர்களுமாகிய திரளான மக்கள் 'தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா; கருத்தரின் நாமத்தில் வருகிற இவர் அரசன், துதிக்கப்படத்தக்க மகத்துவமானவர், உன்னதத்திலே சமாதானம் ஓசன்னா' எனப் பாட்டுப் பாடி, ஓர் அரசனுக்கு அளிக்கும் வரவேற்பு அளித்தனர்.

எருசலேம் நகருக்குள் இயேசு, ஊர்வலமாக ஆரவாரத்துடன் பெரும் அளவில் மக்கள் புடைசூழச் சென்றவுடன் அந்நகர மக்கள் வியப்படைந்து, அரச கோலத்துடன் காணப்படும் இவர் யார் என்று வினவினர். பலரும் பலவகையில் இயேசுவை அறிந்து ஏற்றுக் கொண்டிருந்தனர். சிலர் இயேசுவை யூதரை (Jews) மீட்கும் அரசன் என்றும், சிலர் எலியா (Eliah) என்றும், சிலர் மேசியா (Massiah) என்றும், சிலர் தீர்க்கதரிசி என்றும் கருதினர். அந்நாளில் இயேசுவுடன் கூடஇருந்த மக்கள் இவர் இலாசரசைக் (Lazarus) கல்லறையிலிருந்து உயிரோடே எழுப்பினாரென்று கூறினார்கள். இச் செய்தி திருமறையில் (Bible) புனித யோவான் (Saint John) எழுதிய நற்செய்தி (Gospel) நூலில் 12-ஆம் பகுதி 17-ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

இயேசுவை முழுமையாய் அறியாத நிலை கண்டும், அமைதிக் காலத்தில் சமாதானத்திற்கு ஏற்றவற்றை அறியாததனால் எருசலேம் நகருக்கு நிகழவிருக்கும் அதன் பிற்கால நிலையை முன்னறிந்தும், இயேசு எருசலேம் நகருக்காகக் கண்ணீர் விட்டு அழுதார். எருசலேமுக்கு எதிரிகளினால் மக்களுக்கு வரவிருக்கும் இன்னல்களை, இயேசு மக்களுக்கு வேதனையுடன் வலியுறுத்திக் கூறினார்.

இயேசு கிறித்துவின் பிறப்புக்கு முன் சகரியா என்னும் தீர்க்கதரிசி (Prophet Zechariah) இயேசு கிறித்து அரசனாகவும் மீட்பராகவும் நீதியும் தாழ்மையும் உடையவராய்க் கழுதையின் மேலும், கழுதைக் குட்டியின் மேலும் ஏறி வருவாரென்பதை எருசலேம் மக்களுக்கு முன்பே அறிவித்தார். அதனை விளக்கமாகத் திருமறையின் பழைய ஏற்பாட்டில் சகரியா நூலின் 9-ஆம் பகுதி 9-ஆம் வசனத்தில் (Zachariah 9:9) காணலாம். இம்முன்னறிவிப்பை எருசலேம் மக்கள் நினைவு கூர்ந்து இயேசுவின் எருசலேம் நகர் வருகையைத் திருவிழாவாகக் கொண்டாடினர். இயேசு தம்மைக் குறித்தும் எருசலேம் நகரைக்குறித்தும் முன்னறிவித்த யாவும் நிகழ்ந்தன. தீர்க்கதரிசிகளின் மூலம் கூறப்பட்டவையும், திருமறையின் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருப்பவையும் நிறைவேறின. இவற்றை உலக வழக்கில் நினைவுகூரும் பல விழாக்களும் வழிபாடுகளும் (Worships) சடங்குகளும் உள. அவற்றுள் இந்நாள்வரை நிலைநிற்கும் சிறப்புடைய விழா குருத்தோலை ஞாயிறு ஆகும்.

இந்நிகழ்ச்சி நிகழ்ந்த பலத்தீனா (Palastine) நாட்டில் தென்னை, பனை, பேரீச்சம் போன்ற ஒருவகை ஒற்றைத்தடிப் புல்லின மரங்கள் (Palm Trees) மிகுதியாகக் காணப்படுவதால், அம்மரங்களின் குருத்தோலைகள் வெற்றிக்கு அடையாளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. எருசலேம் மக்கள் குருத்தோலை பிடித்து இயேசுவை வரவேற்றனர். இயேசுவின் எருசலேம் ஊர்வலத்தை அவர் வாழ்க்கைக் குறிக்கோள் நிறைவேறிய வெற்றியின் அடையாளச் சின்னமாகக் கிறித்தவர்கள் கருதினர். அதனை நினைவுகூரும் நாள் குருத்தோலை ஞாயிறாகும்.

குருத்தோலை ஞாயிறு நாளன்று உலகெங்கிலுமுள்ள கிறித்தவர்கள் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு, தங்கள் கோயிலையும் ஊரையும் சுற்றி ஊர்வலமாகச் சென்று, பாட்டுகள் பாடி இறைவனைத் துதித்து வணங்குகின்றனர். குருத்தோலை கிடைப்பதற்கரிதான இடங்களில் ஒலிவ மரக் (Olive Trees) கிளைகளையோ பிற மரங்களின் கிளைகளையோ இலைகளையோ பயன்படுத்துகின்றனர். முதன்முதலாகக் குருத்தோலை ஞாயிறு ஊர்வலம் திருவிழாவாக எருசலேம் நகரத்தில் கி.பி. 395-ஆம் ஆண்டில் நடைபெற்றதாக வரலாற்றிலிருந்து அறியப்படுகிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கி.பி. 7-ஆம், 8-ஆம் நூற்றாண்டுகளிலிருந்து இத்திருவிழாவைக் கொண்டாடும் பழக்கம் உண்டாயிற்று. அதற்கு முன்னர் அந்நாளில் குருத்தோலை ஞாயிறு வழிபாடு (Special Worship) என்று சிறப்பு வழிபாடு மட்டும் நடைபெற்றது.

உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில்(Roman Catholic Church) வழிபாட்டிற்கு முன்னர் குருத்தோலைகள் ஆசிர்வதிக்கப்பட்டுத் திருச்சபையாருக்கு (Congregation) வழங்கப்படுகின்றன. கோவில்(Church) குருவின் தலைமையில் சபையார் யாவரும் குருத்தோலை பிடித்து, இறைவன் பெருமையைப் பாடிக் கொண்டே கோவிலைச் சுற்றி ஊர்வலமாகச் சென்று, பின்னர்க் கோவிலுக்குள் சென்று வழிபடுவர். குருத்தோலைகளைத் தங்கள் இல்லத்திற்கு எடுத்துச் சென்று, அடுத்த ஆண்டுச் சாம்பல் புதன் நாள் (Ash Wednesday) வரைக்கும் பாதுகாப்பாக வைத்திருப்பர். அவ்வாறு பாதுகாக்கப்படும் குருத்தோலைகளைச் சாம்பல் புதன்கிழமையன்று எரித்து, அச்சாம்பலைப் புனிதமாகப் பயன்படுத்துவர்.

சீர்திருத்தக் (Protestant) கிறித்தவர்கள் குருத்தோலை ஞாயிறன்று கோவில்களின் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டு, இயேசு கிறித்து எருசலேம் நகரத்திற்குச் சென்றதையும் அதன்பின்னர் அங்கு நிகழ்ந்த இயேசுவின் மரணத்தையும் பின்னர் அவர் உயிர்த்தெழுந்ததையும் (Resurrection) நினைவு கூர்ந்து, இறைவனைப் போற்றித் துதித்து வணங்குகின்றனர். இவர்களும் குருத்தோலை பிடித்து, 'ஓசன்னா பாடுவோம். இயேசுவின் தாசரே' என்ற பாட்டைப் பாடி வழிபாட்டிற்கு முன்னர் ஊர்வலமாகச் செல்வர். குருத்தோலை ஞாயிறன்று உலகெங்கிலும் உள்ள கிறித்தவக் கோவில்கள் குருத்தோலைகளால் அழகு செய்யப்படுகின்றன. அவ்வோலைகளை எடுத்துச் சென்று பாதுகாப்பதால் நன்மைகள் பல பெருகுமென நம்புவாரும் உளர்.

இயேசு கிறித்து எருசலேம் நகருக்குச் சென்றதைக் குறிக்கும் குருத்தோலை ஞாயிற்றின் சிறப்பு, திருமறையின் புதிய ஏற்பாட்டின் நற்செய்தி நூல்களான மத்தேயு, மாற்கு, உலூக்கா, யோவான் ஆகியவற்றில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. அ.கு.சா.

**குரு நமசிவாயர்:** இவர்தம் இயற்பெயரும் இளமைக்கால வரலாறும் தெரிந்தில. இவர் குகை நமசிவாய தேசிகரின் மாணாக்கர்; அவருடன் திருவண்ணாமலையில் உடனிருந்து வாழ்ந்தவர். அக்காலத்து இவரிடத்து உள்ளுணர்வு மீதூர வெளிப்பட்ட சில அருஞ்செயல்கள் குறிப்பிடத்தக்கன.

தம் குருமூர்த்தியினிடத்துப் பணிவிடை செய்து கொண்டிருந்த காலத்தே ஒருநாள் தாம் ஆற்றிக் கொண்டிருக்கும் பணிகளுக்கிடையில் இவர் நகைத்தார். குகை நமசிவாயர் என்னென்று கேட்கத் 'திருவாரூரில் இறைவன் திருவுலாப்போதர நடனம் ஆடி வந்த பெண்களுள் ஒருத்தி தடுக்கி விழப் பலரும் நகைத்தனர்; யானும் நகைத்தனன்' என்றார். பிரிதோர் அமயம் இவர் தமது மேலாடையைப் பிடித்துத் தேய்த்தனர். அதுகண்ட குருநாதர் என்னெனக் கேட்க. 'தில்லை யம்பலத்தில் திரியை எலி இழுத்துச் செல்ல, அதனால் அங்கிருந்த திரை தீப்பற்ற அதனைக் கண்ட அனைவரும் அணைத்தனர்; அது கண்டு யானும் அணைத்தனன்' என்றார். குருமூர்த்திகள் இவர்தம் பரிபக்குவ முதிர்ச்சியைக் காண ஒருநாள் உணவினைக் கான்று (வாந்தியடுத்து) அதுகொண்ட தட்டினைக் கையில் கொடுத்து அதனைக் கால் படாத இடத்தில் கொட்டிவிடு என்று கூறினர். கால் படாத இடம் வயிறேயாகும் எனவும், குருவின் புனித சேடத்தை உட்கொளின் ஞானம் பெருகும் எனவும் கருதிய இவர் அதனை வாய்மடுத்தனர். அதுபொழுது இவர் தம் பக்குவத்தை அறிந்த குகை நமசிவாயர், குரு நமசிவாயர் எனப் பெயர் சூட்டினர். பின் அக் குருநாதர் குரு நமசிவாயரை நோக்கி 'நீ தில்லைக்

குச் சென்று திருத்தொண்டு செய்து வருவாயாக' எனப் பணித்தனர். அவ்வாணையைத் தலைக் கொண்ட இவர், தில்லைக்குச் சென்று திருப்பணி பலவும் செய்தருளினர். அவ்வாறு அரியபல திருப் பணிகள் செய்ததன் காரணமாகத் திருக்கோவிலில் உள்ளார் இவருக்குச் சிவிகை முதலியன வழங்கிச் சிறப்பித்தனர். திருவருள் கூட்டப் பின் திருப்பெருந் துறையினை அடைந்து அங்கு இவர் வீடுபேறடைந் தார். இவரை வீரசைவர் என்பர்.

இவர் அவ்வப்போது பாடிய தனிப்பாடல்கள் பல. அவை இனிமையும் எளிமையும் உடையன. தம் குரு மூர்த்திகளின் ஆணைவழித் தில்லைக்குச் சென்ற காலை இடையில் இவருக்குப் பசி ஏற்பட்டபோது உண்ணாமலை யம்மையை நோக்கி ஒரு பாடலும், தில்லையை அணுகிய காலத்து நான்கு கோபுரங் களும் காட்சியளிக்க அதனைக் கண்டொரு பாடலும், தில்லையை அடைந்தவர் சிவகங்கையில் நீராடிப் பின் அதன் சிறப்பைப் பற்றி ஒரு பாடலும் என்றிவ் வாறு பல பாடல்களைப் பாடியுள்ளார்.

இங்ஙனம் பல தனிப்பாடல்களைப் பாடியவர் பல நூல்களையும் அருளியுள்ளார்.அவை,1. அண்ணா மலை வெண்பா, 2. சிதம்பர வெண்பா, 3. பரம ரகசிய மாலை,4. நமசிவாயமாலை, 5. சிவச்சேத்திரக் கோவைக்கலி வெண்பா என்பன.

வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவிரிஞ்சைத் திருக்கோவிலில் காணப்படும் இரு கல்வெட்டுகளால் இவர் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனத் தெளிவாக அறிய முடிகின்றது. கு.சு.

**குருநானக்கு (கி.பி. 1469-1538)** சீக்கிய மதத்தை நிறுவியவர் ஆவார். இவர் சமய சீர்திருத்த வாதியாகவும். சமூகப் புரட்சிக்காரராகவும் விளங்கி னார். இந்து - முசுலிம் ஒற்றுமையை உருவாக்கப் பாடுபட்டார். சமரச சமயக் கொள்கையைப் பின் பற்றிய, உலகப் பெரியார்களுள் குருநானக்கும் ஒரு வராக விளங்குகிறார். இவர் பாபரின் காலத்தவர்.

மேற்குப் பஞ்சாபில் இலாகூருக்கு அருகில் உள்ள தால்வண்டி என்னும் ஊரில் கி.பி. 1469-இல் மேதகலு என்பாருக்கும் திரிப்தா என்னும் பெண்மணிக்கும் மகவாகத் தோன்றியவர் குருநானக்கு. இவருக்கு நான்கி என்னும் சகோதரி ஒருத்தி இருந்தாள். தம் ஏழாம் வயதிலேயே பூணூல் அணிந்து கொள்ள மறுத்த இவர், பள்ளியில் ஆசிரியர் கற்பிக்கும் மரபு வழிப் பாடங்களையும் வெறுத்தார். படிப்பில் அக்கறை காட்டாததால், தம் குல மரபுப்படி இவரை வணிகத்தில் ஈடுபடுத்தினார் இவரது தந்தையார். ஏழைகள் மீது இரக்கம் கொண்ட இவர், வணிகத் தில் பொருளீட்ட இயலவில்லை; தந்தையாரின் பண்ணையைக் கவனிக்கும் பணியிலும் இவர் வெற்றி பெறவில்லை; எனவே, இவரை நல்ல மனிதனாக ஆக்க எண்ணிய இவரது தந்தையார் இவருக்குப் பதினைந்தாம் வயதில் கலகனி என்னும் பெண்ணைத் திருமணம் செய்வித்தார். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான பின்னரும், இவர் உலகவாழ்வில் பிடிப் பில்லாமலேயே வாழ்ந்தார். அதனைக் கண்டு வருந்திய தந்தையார், இவரைச் சுல்தான்பூரிலுள்ள கடையில் கிடங்குப் பொறுப்பாளராக அமர்த்தினார். அப்பணியில் இவர் நேர்மையுடன் பணி புரிந்தார்.

தம் முப்பதாம் வயதில் கி.பி. 1499-இல் மெய் யுணர்வு பெற்ற இவர், பின்னர்த் துறவியாக மாறி, நாடெங்கிலும் பயணம் செய்து, மெய்யறிவை மக் களுக்குப் புகட்டினார். இத்தூய பணியில் 30 ஆண்டு கள் ஈடுபட்ட இவர்,வடக்கே கைலாச மலையிலிருந்து தெற்கே ஈழம் வரையிலும்,மேற்கே பஞ்சாபிலிருந்து கிழக்கே அசாம் (Assam) வரையிலும், இடைவிடாது பயணம் செய்து தம் கொள்கைகளை மக்களுக்குப் போதித்தார. இவர் மெக்கா, மதினா, பாக்தாது முதலான அயல் நாடுகளிலுள்ள புனிதத்தலங்களுக் கும் சென்று வந்தார்.

குருநானக்கு கர்தாபூரில் கி.பி. 1538-இல் கால மானார். தூயவரான இவரை, முகலாய மன்னன் பாபர் சிறையிலிட்டார் என்றும், பின்னர் இவரது மெய்யறிவைக் கண்டு, விடுதலை செய்து வணங்கி னார் என்றும் கூறப்படுகிறது. பல முசுலிம்கள் இவர் போதித்த நல்லுரைகளைக் கேட்டு, இவர் வழியில் நின்றனர். குருநானக்கும் கபீர்தாசரும் பாடிய கீர்த் தனங்கள் சீக்கிய மத நூலாகிய ஆதிகிரந்தத்தில் உள்ளன. இவற்றுள் இவர் பாடிய சப்சி (செபங்கள்) முக்கிய இடம் வகிக்கிறது.சீக்கியர்கள் அதனை நாள் தோறும் வழிபாட்டுப்பாடல்களாக ஓதிவருகின்றனர். இவரைப் பின் பற்றியவர்கள்' 'சீடர்கள்' அல்லது 'சீக்கியர்கள்' என்று சொல்லப்படுகின்றனர்.

**குருநானக்கின் போதனைகள்**: உலகில் ஒரே கடவுள் தான் உண்டு. அவர் பிறப்பு, இறப்பு,விருப்பு வெறுப்பு இல்லாத உண்மையின் வடிவம். அவர் சிவனாகவும் கண்ணனாகவும் பிரமனாகவும் இராமனாகவும் மட்டுமன்றி, அவர்களுக்கெல்லாம் மேலான பரம்பொருளாகவும் விளங்குகிறார். இறை வன் எல்லாமாக இருக்கும்போது, அவருக்கு உருவம் கற்பிப்பது தவறு.மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொண்டு, உலக ஆசாபாசங்களுக்கு அடிமையாகா மல், இறைவனை எப்போதும் நினைப்பவனே மெய்

யடியான் ஆவான். மற்றவர்களெல்லாம் வெளி வேடதாரிகளேயாவர். நீட்டலும் மழித்தலும் சமயச் சின்னங்களும் தேவையில்லை. ஓட்டில் ஒட்டாமல் இருக்கும் புளியம்பழம் போன்று மனிதன் பற்றற்று வாழ்ந்து,மெய்யறிவில் நாட்டம் செலுத்த வேண்டும். அல்லாவும் இராமனும் ஒருவனே. எனவே, முகம்மதி யரும் இந்துக்களும் உடன்பிறந்தோரே. மேற்கூறப் பட்டவை நானக்கின் போதனைகளுள் சில.

சீக்கிய மதத்தின் நிறுவனராகவும், சிறந்த சிந்தனையாளராகவும் புரட்சிக்காரராகவும் வாழ்ந்து காட்டியவர் குருநானக்கு ஆவர். ம.இ.

**குருநானக்கு தேவு பல்கலைக்கழகம்** பஞ்சாபு மாநிலத்தில், அமிர்தரசு (Amritsar) என்னு மிடத்தில் குருநானக்கு தேவின் (Sri Guru Nanak Dev) 500–ஆம் பிறந்த நாளின் நினைவையொட்டிப் பஞ்சாபு அரசால் நிறுவப்பட்டது. குருநானக்கு தேவு பல்கலைக் கழகத்தின் வளாகம் ஏறத்தாழ 500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. குருநானக்கு தேவு பல்கலைக் கழகம் கற்பித்தல்,ஆராய்ச்சி ஆகிய பணிகளைச் செய்வதுடன் அதன் ஆளுகை எல்லைக் குள் உள்ள கல்லூரிகளுக்கு இணைப்புரிமையும் வழங்கு கிறது.இங்கு ஆணும் பெண்ணும் பயிலலாம்.

குருநானக்கு தேவு பல்கலைக்கழகத்தின் தேர்வு மொழியாகவும் பயிற்று மொழியாகவும் ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி, உருது ஆகியவை உள்ளன. பட்ட மேற்படிப்பு, அறிவியல், கல்விப் படிப்பு ஆகியவற்றில் ஆங்கிலமே பயிற்றுமொழியாகவும்,தேர்வு மொழியாக வும் உள்ளது.

குருநானக்கு தேவு பல்கலைக்கழகத்தின், மாலை நேரக் கல்லூரி சலந்தரில்(Jalandhar) உள்ளது. இப் பல்கலைக்கழகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகள் உள்ளன. கல்வியியற் கல் லூரிகளும் இவற்றில் அடங்கும்.

குருநானக்கு தேவு பல்கலைக்கழகத்தில், கணித வியல், வேதியியல், உயிரியல், இயற்பியல் ஆகிய அறிவியல் துறைகளும், பொருளியல், சட்டவியல்,வர லாறு, நூலகவியல், உடற்பயிற்சிக் கல்வி, அரசியலறி வியல் (Political Science), உளவியல், சமூகவியல் ஆகிய கலைத் துறைகளும், ஆங்கிலம், இந்தி, உருது, பாரசீக மொழி (Urdu and Persian) ஆகிய மொழித் துறைகளும் உள்ளன. மேலும்,குருநானக்கு ஆராய்ச்சி (Guru Nanak Studies), திட்டமிடல், பட்ட மேற் படிப்பு மையம், பஞ்சாபி மொழி ஆராய்ச்சி ஆகிய துறைகளும் உள்ளன.சலந்தரிலுள்ள மண்டல மையத் தில் (Regional Centre) கல்வியியல், ஆங்கிலம்,இந்தி, சட்டம், இசை, பஞ்சாபி மொழி ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன.

குருநானக்கு தேவு பல்கலைக்கழகத்தின் சிறப் பான வெளியீடுகளாகப் 'பஞ்சாபு அரசியல் இதழ்' (Punjab Journal of Politics)சீக்கிய சமய ஆராய்ச்சி இதழ் (Journal of Sikh Studies), வேதியியல், அறிவியல் இதழ்(Journal of Chemistry and Science) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். எஸ்.த.

**குருபரம்பரை** என்பது வைணவ சமய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட ஆசாரியர்களின் மரபு ஆகும். இப்பெருமக்களைப் பற்றிய வரலாறு, ஆறா யிரப்படி குருபரம்பராப்பிரபாவம், பன்னீராயிரப்படி குருபரம்பராப்பிரபாவம், பெரிய திருமுடி அடைவு, திரிம்சத் பிரச்நோத்திரம் என்னும் நூல்களில் மணிப் பிரவாள நடையில் விளக்கமாக வரையப்பெற்றுள் ளது. பலவகைப்பட்ட குருபரம்பரைகள் உண்டு. 'குரு பரம்பரைதான் ஆசிரயண பரம்பரையும் (தஞ்சமாகப் பற்றும் வழியும்) கிரந்த பரம்பரையுமாக (நூல் வழி யுமாக) இரண்டு வகைப்பட்டிருக்கும். அதில் கிரந்த பரம்பரை சிரீபாடியாதி பரம்பரையும், திவ்வியப் பிர பந்த வியாக்கியான பரம்பரையும், இரகசிய கிரந்தப் பரம்பரையுமாக (தத்துவ நூல் வழியுமாக) மூன்று வகைப்பட்டிருக்கும்' என்று கூறப்பட்டுள்ளது. இங்ங னம் குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு வழியினரும் தமக்குரிய துறையில் கருத்துச் செலுத்தினர். எனி னும், மற்றத் துறைகளை மறந்துவிடாமல் அவற்றி லும் நிறைந்த அறிவும் ஆர்வமும் வாய்ந்தவர்களாக விளங்கினர்.

பொதுவான தஞ்சமாகப் பற்றும் ஆசாரிய மரபு (ஆசிரயண பரம்பரை) ஒன்று உண்டு. அது பரம் பொருளாகிய நாராயணனை முதலாகக் கொண்டது. எம்பெருமான், பெரிய பிராட்டியார் (திருமகள்), சேனை முதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய் யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பிகள், உடையவர் (இராமானுசர்), எம் பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திரு வீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், திருவாய் மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள் என்னும் அடைவில் குருபரம்பரை அமைந்துள்ளது. இது நன்கு தெரிந்த ஆசாரிய மரபு. இதில் எம்பார் இடத்தில் கூரத்தாழ்வானைக் கருதுவதும் உண்டு.

இவர்களுள் முதல் மூவரும் மனித இனத்தைச் சேர்ந்தவர் அல்லர். நான்காமவராகிய நம்மாழ்

வாரோ ஆழ்வார்களுக்குத் தலைவர். ஆதலால், ஆசாரிய பரம்பரை நாதமுனிகளை முதலாகக் கொண்டு தொடங்குகிறது என்பதே பொருத்த மாகும்.

இவர்களுள் நாதமுனிகள் ஆழ்வார்கள் பாசுரங் களை அரும்பாடுபட்டுத் திரட்டித் தம் மருமக்களான கீழையகத்தாழ்வாரையும் மேலையகத்தாழ்வாரை யும் துணையாகக் கொண்டு அவற்றிற்கு இசையமைத் தவர்; நியாய தத்துவம் என்னும் நூலைத் தந்தவர்; இவர் சோழநாட்டில் வீர நாராயணபுரத்தில் (காட்டுமன்னார் கோவில்) ஈசுவரபட்டருக்கு மகனா கத் தோன்றியவர். தந்தையார் இட்ட பெயர் சிரீரங்க நாதன் என்பது. இவர் யோகப் பயிற்சியில் வல்லவ ராகையால் சிரீரங்கநாத முனிகள் என்றும் சுருக்கமாக நாதமுனிகள் என்றும் குறிக்கப்பெற்றார்.

நாதமுனிகள் சீடரான உய்யக்கொண்டார் திரு வெள்ளறை என்னும் ஊரில் பிறந்தவர். இவரது பிள்ளைத் திருப்பெயர் பண்டரீகாட்சன் என்பதா கும். நாதமுனிகளால் 'உய்யக்கொண்டார்' என்று அழைக்கப்பெற்றவர். நாதமுனிகளிடமிருந்து திவ்வி யப் பிரபந்தங்களை அறிந்து உலகிற்கு அளித்தவர்.

உய்யக்கொண்டார் மாணாக்கர்களுள் ஒருவரே மணக்கால் நம்பி. இவரது இயற்பெயர் சிரீராமன். ஒருநாள் தம் ஆசாரியரின் பெண்பிள்ளைகள் இரு வரையும் நீராட்டி அழைத்துவரும் வழியில் வாய்க் கால் சேறாய்க் கிடக்கக் கண்டு தாம் படியாய்க் கிடந்து அவர்களைத் தம் முதுகிலே அடியிட்டுக் கடக்குமாறு செய்தார். தம் ஆசாரியரின் பெண் பிள்ளைகளுடைய மணற்கால் பொலிய நின்றவராத லின் மணற்கால் நம்பி என்னும் பெயர் பெற்றார். அடுத்து, ஆசாரியப் பதவியில் விளங்கிய ஆளவந்தா ருக்குத் தத்துவ உண்மைகளை இரந்துசொல்லி அவ ரைத் திருவரங்கத்துக்கு அழைத்து வந்த பெருமை இவரைச் சாரும். இவர் காவிரிக் கரையில் இன்று மணக்கால் என்று வழங்கப்பெறும் ஊரில் தோன்றிய வர்.

ஆளவந்தார், நாதமுனிகளின் பேரர்; ஈசுவர முனிகளுக்கும் சிரீரங்கநாயகிக்கும் மகனாய்ப் பிறந்த வர். இவருக்கு யமுனைத்துறைவர், யாமுனாசாரி யர், யாமுநேயர் என்னும் பெயர்களும் உண்டு. இவர் பேரறிவாளர். இவர் ஆத்மசித்தி, ஈச்வரசித்தி, சம் வித்சித்தி, ஆகமப்பிராமாண்யம்; கீதார்த்த சங்கிர கம், தோத்திர ரத்தினம், சதுச்சுலோகி, மாயாவாத கண்டனம் என்னும் எட்டு நூல்களை வடமொழியில் எழுதியுள்ளார். தமிழில் இவரது நூல் ஏதுமில்லை. இவர் ஆழ்வார் பாசுரங்களுக்குத் தந்த விளக்கங்கள் உரைகளில் போற்றிக் காக்கப்பட்டுள்ளன.

பெரிய நம்பிகள் திருவரங்கத்தில் பிறந்தவர்; இராமானுசரின் ஆசிரியர்கள் ஐவருள் ஒருவர். இவர் இராமானுசரைப் பெருமாள் கட்டளையால் மதுராந் தகத்தில் கண்டு அவருக்கு ஐந்தீக்கை செய்துவைத் தார். இவர் தாழ்ந்த குலத்தில் தோன்றிய மாறனேரி நம்பிக்குப் பணிவிடை செய்து அவருக்கு இறுதிக் கடன்களும் செய்து பெரும்புரட்சி செய்தார். தொண் டர் குலத்தில் சாதி வேறுபாட்டுக்கு இடமில்லை என்று உணர்த்தியவர்.

இராமானுசரே ஆசாரிய பரம்பரையில் நாயக மணி போல ஒளிர்பவர். இவர் திருப்பெரும்புதூரில் பிறந்தார். தந்தையார் சோமயாசியார்; தாயார் பெரிய திருமலை நம்பியின் சகோதரிகளுள் ஒருவரான காந்திமதி. இவரது தலைமையில் வைணவம் வேகமாக வளர்ந்தது. தம் மாணாக்கரான கூரத்தாழ்வா னோடு காசுமீரம் சென்று, சாரதா பீடத்திலிருந்த போதாயனரின் பிரம்மசூத்திர விளக்கவுரையினைப் படித்துவந்து, சிரீ பாடியம் என்னும் மாபாடியத்தை வரைந்தார். இவர் திருக்குருகைப்பிரான்பிள்ளானைக் கொண்டு திருவாய்மொழிக்கு உரைகண்டார். கூரத் தாழ்வான் மைந்தர் இருவர்க்கும் பராசரபட்டர் என் றும், வேதவியாசர் என்றும் பெயர் சூட்டினார். இவர், சிலர் தம் தனியுடைமையாக இருந்த திவ்வியப் பிர பந்தங்களைப் பொதுமையாக்கினார். இவர் வட மொழியில், சிரீபாடியம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், கீதாபாடியம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். இராமானுசர் வைணவத் தத்துவங்களை முறைப்படுத்தி அவற்றிற்குச் செம்மை யான வடிவம் தந்தார். சமய வளர்ச்சிக்காக எழு பத்து நான்கு ஆசாரியர்களை (சிம்மாசனாதிபதி களை) அமர்த்தினார். வைணவ சமயம், எம்பெருமா னார் தரிசனம்' என்று வழங்கப்படுவது இவரது பெருமையைக் காட்டும்.

எம்பார், இராமானுசரின் சிறிய தாயாரான சிரீ தேவிக்கும் அவர் கணவரான கமலநயன பட்டருக் கும் மகனாகப் பிறந்தவர். இவரது இயற்பெயர் கோவிந்தபட்டர். சிறிதுகாலம் சைவராயிருந்து பின்பு திரும்பவும் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். இவர் இராமானுசரை விட்டு நீங்காது நிழல்போல் இருந் தார். பராசரபட்டருக்கும் வேதவியாசபட்டருக்கும் இவரே ஆசாரியரானார். ஆழ்வார் பாசுரங்களுக்கு இவர் சொல்லியுள்ள விளக்கங்கள் இவரது சுவை யுணர்வைக் காட்டுகின்றன.

பராசர பட்டர் கூரத்தாழ்வான் மைந்தர்; சிறு வயதிலேயே பேரறிவாளராகத் திகழ்ந்தவர்; வேதாந் தாசாரியர்' என்னும் சிறப்புப் பெற்றவர்; இராமா னுசரின் பேரன்புக்கு உரியவராய்த் திகழ்ந்தவர். இவர் வடமொழியில் சிரீரங்கராச தவம்: சிரீகுணரத் தின கோசம், அட்டசுலோகி, பகவத் குண தருப் பணம், தத்துவரத்னாகரம், இலட்சுமி கல்யாணம், கிரியாதீபம், கைசிகபுராண வியாக்கியானம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவர் திவ்வியப் பிரபந் தங்களுக்கு அழகாக விளக்கம் தருபவர் என்பது 'மைவண்ண நறுங்குஞ்சி' என்னும் திருநெடுந்தாண்ட கத்திற்கு இவர் சொல்லியுள்ள விளக்கத்தால் தெரிய வருகிறது.

நஞ்சீயர் மைசூரில் உள்ள திருநாராயணபுரத்தில் மாதவர் என்னும் பெயரோடு அத்துவைத அறிஞர் களுக்குத் தலைவராய் விளங்கியவர். பட்டரால் வாதப்போரில் வெல்லப்பட்டு வைணவரானார். இவர் இல்வாழ்க்கையைத் துறந்து, திருவரங்கத்தை அடைந்து பட்டரின் திருவடிகளில் தஞ்சம் புகுந்தார். இவர் வடமொழியில் நூல் எதுவும் எழுதவில்லை. இவர், ஆழ்வார் பாசுரங்களுக்கு விளக்கவுரை கண் டது குறிப்பிடத்தக்கது. திருவாய்மொழிக்கு ஒன்பதி னாயிரப்படி என்னும் உரையினைத் தந்துள்ளார்.

நம்பிள்ளை சோழநாட்டில் நம்பூர் என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவருக்கு வரதர், திருக்கலி கன்றிதாசர் என்னும் பெயர்களும் உண்டு. திருவாய் மொழிக்கு இவரால் சொல்லப்பெற்று வடக்குத் திரு வீதிப் பிள்ளையால் எழுதி வைக்கப்பெற்ற விளக்கமே முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு ஆகும். இவர்தம் மாணாக்கர்களுள் வைணவ உரை வேந்தராகிய பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடத்தக்கவராவர்.

வடக்குத் திருவீதிப்பிள்ளையின் இயற்பெயர் திகருட்டிணர் என்பது. இவர் நம்பிள்ளை சொன்ன விளக்கவுரைகளை எழுதிவைத்தவர். பிள்ளை லோகா சாரியர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்னும் இருவரும் இவருடைய பிள்ளைகள்.

பிள்ளை லோகாசாரியர் திருவரங்கத்தில் பிறந் தவர். இவர் வைணவ சமய நுண்பொருள்களைக் குறித்துப் பதினெட்டு நூல்கள் எழுதியுள்ளார். அவை 'அட்டாதச ரகசியம்' என்று குறிக்கப்படுகின்றன. அவற்றுள் சிரீவசன பூடணம் என்னும் நூல் பெருஞ் சிறப்புக்கு உரியது.

திருவாய்மொழிப்பிள்ளை மதுரைக்கு அருகில் உள்ள குந்தீநகரம் என்னும் ஊரில் தோன்றியவர்; இயற்பெயர் திருமலையாழ்வார். இவர் சாதி வேற் றுமை பாராமல் தாழ்ந்த குலத்தவரான விளாஞ் சோலைப் பிள்ளைக்கு இறுதிக் கடன்கள் செய்தார். இவர் பெரியாழ்வார் திருமொழிக்கு ஓர் உரை அரு ளிச் செய்துள்ளார்.

ஆசாரியர்களுள் கடைசியாகத் தோன்றியவர் மணவாள மாமுனிகள். இவரது பிறப்பிடம் திருக் குருகூர். தந்தையார் திகழக்கிடந்தான் திருநாவீறு டைய பிரான் தாதரண்ணர்; தாயார் சிரீரங்கநாச்சி யார். இவர் இயற்பெயர் அழகிய மணவாளன். இவர் திருவரங்கத்தில் ஓராண்டு முழுவதும் திருவாய்மொழி ஈடு முப்பத்தாறாயிரப்படியை விளக்கிச் சொற் பொழிவு நிகழ்த்தினார். ஈடு முப்பத்தாறாயிரப் பெருக் கர் என்று போற்றப்பெற்றவர். பிள்ளை லோகாசாரி யர் நூல்களான முமூட்சுப்படி, தத்வத்திரயம், சிரீ வசனபூடணம் ஆகியவற்றிற்கும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரது ஆசார்ய இருதயத்திற்கும் இராமானுச நூற்றந்தாதி, ஞானசாரம், பிரமேய சாரம்ஆகியவற்றிற்கும் இவர் விளக்கம்எழுதியுள்ளார்; தமிழில் உபதேசரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி ஆகிய செய்யுள் நூல்களைப் படைத்துள்ளார்; பெரியவாச்சான்பிள்ளை உரை கிடைக்காமற்போன பெரியாழ்வார் திருமொழிப் பகுதிகளுக்கு இவர் உரை வரைந்துள்ளார்.

இவ்வாசாரியர்களின் பணிகளைச் சுருக்கமாகச் சொன்னால், இவர்கள் ஆழ்வார்களின் பாசுரங்களைப் பலவகையாலும் விளக்கினர்; வைணவ தத்துவங் களையும், சமய உண்மைகளையும் நெறிப்படுத்தினர்; வடமொழி வேதங்களும் திராவிட வேதமாகிய திவ் வியப் பிரபந்தங்களும் இறைநெறியில் உயிர்களை இட்டுச் செல்லும் இருமுடிபுகள் என்னும் உபய வேதாந்தக் கொள்கையினை உருவாக்கினர்; ஆழ் வார்கள் ஏற்றி வைத்த ஞானச் சுடரினைத் தங்கள் பணிகளால் கொழுந்துவிட்டு ஒளிரச் செய்தனர்.

தெ.ஞா.

**குருபாததாசர்:** நீதிச்சதகங்களுள் முன்வைத்து எண்ணப்படும் குமரேச சதகம் பாடியவர் குருபாத தாசர். திருப்புல்வயலில் உள்ள மலையின்மேல் கோயில் கொண்டிருக்கும் முருகனை முன்னிலைப் படுத்தி முந்தையோர் ஆக்கிய நீதி நூல்களின் சாரங் களை இவர் எடுத்தோதுகின்றார். இவர் தம் நீதிப் பாடல் பன்னிரு சீர் கொண்ட ஆசிரியவிருத்த மாய் எளிய தமிழில் மக்களுடன் நேருக்கு நேர் உரை யாடும் முறையில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு பாடலின் இறுதியடியும் புல்வயல் முருகனைப் போற்றும் புகழ்மாலையாக உள்ளது.

ஈற்றடியின் பிற்பகுதி 'மயிலேறி விளையாடு குகனே புல்வயல்நீடு மலை மேவு குமரேசனே' என்றே எல்லாப் பாடல்களிலும் காணப்படும். முருகனைப் பற்றிய புராணச் செய்திகள் பலவற்றை இறுதியடியில் மிகவும் உருக்கமாகக் குறிப்பிட்டுச் செல்கிறார். மேலும், இச்சதகத்தின் முதற்பாடலும் நூறாவதான இறுதிப்பாடலும் முற்றிலும் முருகன் புகழ் பாடுவன வாகவே உள்ளன.

நூலின் இறுதிப்பாடல் இந்நூல் கற்பார் பெறும் பயனை எடுத்து விளம்புகிறது. அதில் இந்நூலாசிரியரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. குருபாததாசன்என்னும்பெயரில் வரும் 'குரு' என்பது தந்தைக்குக் குருவாய் உபதேசித்த முருகப்பெருமானைக் குறிக்கும். 'குகபாததாசன்' என்று மேற்குறித்த பாடலில் பாடபேதம் கொண்டு இவர்தம் பெயரைக் 'குகபாததாசன்' என்று சிலர் கூறுகின்றனர். குகன் என்பதும் முருகன் பெயரேயாம். ஆனால், இதுவரை அச்சிட்டு வெளிவந்துள்ள நூல்களில் எல்லாம் ஆசிரியர் பெயர் 'குருபாததாசன்' என்றே காணப்படுகிறது. எனவே, இதில் மாற்றுப் பெயருக்கு இடமில்லை என்றே தோன்றுகிறது.

இந்நூலாசிரியரின் இயற்பெயர் முத்துமீனாட்சிக் கவிராயர் என்பர். திருப்புல்வயல் புதுக்கோட்டை வட்டத்தைச் சார்ந்த ஓர் ஊர். இங்குள்ள மலையின் மீது முருகப் பெருமான் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயிலை அருணகிரிநாதரும் போற்றிப் பாடியுள்ளார்.

சதக நூலுள், 'சோணாடு, வாழவந்தருள் முதல்வனே' (51) என்றும், 'சோணாடு தழைய விவண் வந்தவதரித்த முகிலே' (60) 'மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ மருவு சோணாட்டதிபனே' (68) என்றும் குறிப்பது கொண்டு,புல்வயல் அந்நாளில் சோணாட்டின் பகுதியாய் அமைந்தது என்பது தெரியவரும். இக் குருபாததாசரும் இவ்வூரைச் சார்ந்தவர் என்று கொள்ளலாம்.

இவர் வேளாள மரபினைச் சார்ந்தவர்; சைவ சமய ஈடுபாடு மிகவும் உடையவர். 'எண்ணத்தினாலொன்றும் வாராது பரமசிவ னெத்தனப்படி முடியுமாம்' (44) 'எலாம் சிவன் செயல்க ளல்லாதுன் மனச்செயலினாலும் வருமோ' (85) 'தலத்திற் சிதம்பரத்தலம்' (92 ), 'விசு வாசமுள்ள பேர்க்குற்றசிவ பத்தர் தெய்வம்' (8) 'முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினந்தவர்கள் மாநரகில் வீழ்வார்' (18) என்றும் சதகத்துள் வருகின்றன.இவர் 'மேலாகமம் சிவபுராணமவை கேளாமல் விட்ட செவி என்ன செவிகள்' (89) என்று ஆகம புராணப் பயிற்சியை வற்புறுத்துகிறார். திருநீறு வாங்கும் முறை (88) திருநீறு அணியும் முறை (87) பற்றியும் இருபாடல்கள் உள்ளன. இத்தகைய குறிப்புகளால் இவர்தம் சைவசமயப் பற்று வெளிப்படுதல் காணலாம்.

கல்வி பற்றியும் நூற்பயிற்சி குறித்தும், தமிழ் நூல்கள் சிலவற்றைப் பற்றியும் இவர் சுட்டுதலால் இவர்தம் கல்வியின் பெருக்கம் தெரியவரும். 'நிலைபெறு மிலக்கண மிலக்கிய மறிந்துசொலு நிபுண கவியே கவிஞனாம், (11) என்று கவிஞனின் இலக்கணம் தருகிறார். 'தமிழினிலகத்தியம்' (24) என்று அகத்தியர் தம் நூலை இவர் எல்லா நூல்களிலும் உயர்ந்ததாகக் குறிப்பிடுகிறார். எனவே, இவர் அகத்தியம் அறிந்த பெரும் புலவர் என்று ஊகிக்க இடமுண்டு.

முருகப் பெருமானின் புகழ் போற்றிய நக்கீரர், அருணகிரியார் ஆகியோரை இவர் சுட்டியுள்ளார். ஔவையாரின் நீதிநூல் கருத்துகளை அங்கங்கே சுட்டியதோடு ஒரு பாடலில், 'துணைகண்டு சேரிடமறிந்துசே ரென்றௌவை,சொன்னமொழி பொய்யல்லவே' (70) என்று ஔவைப் பிராட்டியாரைச் சுட்டி அவர்தம் பெருமையினைக் கூறுகிறார். திருக்குறள் முதலிய பண்டை நீதி நூற் கருத்துகளையும் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார். காலமறிதல் (69) இடமறிதல் (70) பற்றிய பாடல்களில் வள்ளுவர் இவை பற்றியுரைத்த அதிகாரப் பொருண்மை மிளிர்தல் காணலாம்.

பாடல் எந்தவகையில் அமைந்தால் சிறப்பாகும் என்பதனை 86-ஆம் பாடலில் விளக்கமுறத் தெரிவித்துள்ளார்.

'உளவனில் லாமலூ ரழியா தெனச் சொலும் உலகமொழி நிசமல்லவோ' (91)

என்று உலகமொழியாகிய பழமொழியைச் சுட்டும் இவர்தம் நூலில் நாட்டுப் பழமொழிகள் அங்கங்கே இடம்பெறுகின்றன.

பஞ்சதந்திரங்களுள் ஒன்றான மித்திரபேதம் பற்றிய கதையினை இவர் எடுத்துக் காட்டியுள்ளார் (8). மக்களுக்குப் பெரிதும் தெரியவரும் இராமாயண பாரதக் கதைகள், பிற புராணக் கதைகள் முதலியவற்றை அங்கங்கே நீதிகளுக்குச் சான்றாக எடுத்துக் காட்டுகின்றார். வழக்குச் சொற்கள் மிகுதியும் பயின்றுவரும் இவர்தம் நூல் பெரியோரும் சிறியோரும் கற்று மகிழும் வண்ணம் அமைந்துள்ளது.

சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறிக் கருத்தினையும் இவர் எடுத்தாளுதலினால் சுவாமிகள் காலத்திற்குப் பிற்பட்டு வாழ்ந்தவர் இவர் என்று கொள்ள

லாம். நூற் பொருள், நடை முதலியவற்றைப் பார்க்கும்போது குருபாததாசர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கொள்ளலாம். மு.ச.

**குருமார் அரசாங்க முறை** என்பது கிறித்தவத் திருச்சபை தோன்றி முறையான வடிவம் பெற்ற காலத்தில் தோன்றிய கருத்தாகும். ஆன்மிக நலன்களும், மனித உய்தியும் கிறித்தவத் திருச்சபையின் புனித நோக்கங்களாகுமென்றும், கிறித்தவத் திருச்சபையின் குருமாரின் நல்லுரைகளில் இப்புனித நோக்கங்களே அமைந்துள்ளன என்றும் ஒரு கொள்கை உருவாயிற்று. உலகியல் நலன்களும், அமைதி, ஒழுங்கு, நீதி முதலியவற்றை நிறுவுதலும் குடிமை அரசாங்கத்தின் பணிகளின்பாற்படும். இவ்வாறு கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போப்பு முதலாம் கெலேசியசு இருவகை அதிகாரங்களையும் பாகுபாடு செய்யவே, கிறித்தவத் திருச்சபைக்குரிய ஆன்மிக, மனித உய்திப் பணிகளைச் செய்தற்குக் குருமார் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டுமென்ற கருத்தும் தோன்றிற்று. போப்புகள் அம்புரோசும், புனித கிரிகரியும், புனித அகசுடினும் வகுத்த கருத்துகளும், முதலாம் கெலேசியசு செய்த பாகுபாடும் குருமார் அரசாங்க முறை தோன்றக் (Sacerdotium) காரணமாயின. (காண்க: கிறித்தவத் திருச்சபை). கிறித்தவத் திருச்சபைக்குரிய பணிகளைச் செய்யும் துறவிகளெல்லாம், சமூக அல்லது உலகியலதிகாரிகளால் கட்டுப்படுத்தப்படாமல்,ஆயர்களாலும் குருமாராலும் ஆளப்படுதல் வேண்டும் என்பதுதான் குருமார் அரசாங்க முறை என்பதன் பொருளாகும்.

**இடைக்கால நிலை**: இடைக்காலத்தில், இயற்கையின் சட்டம் என்பதன் செல்லுபடியாகும் தன்மையையும், அரசர்களையும் குடிமக்களையும் அச்சட்டம் கட்டுப்படுத்தும் அதிகாரம் உடையது என்ற கருத்தையும், திருச்சபையிலும் அரசிலும் நன்கு அமைக்கப்பட்ட அதிகாரிகளின் புனிதத் தன்மையையும் கிறித்தவ மறை, போப்புகளின் அதிகாரம், திருச்சபையின் மரபு முதலியவற்றுக்கு மதிப்புத் தருதல் வேண்டுமென்ற கருத்தையும், பேரரசதிகாரம், குருமார் அரசாங்கம் ஆகிய இரு இணையான அதிகாரிகளின் வாயிலாகக் கிறித்தவ நாடு (Christendom) ஒற்றுமைப்பட்டுள்ளது என்ற கருத்தையும் யாவரும் ஒப்புக்கொண்டனர். கிறித்தவ சமயநெறி, குருமார் அரசாங்கத்தையும் பேரரசதிகாரத்தையும் ஒரே ஆளிடத்தில் ஒப்படைத்தல் கூடாது என்றும், இவ்விரு வகை அதிகாரிகளுள் எவரும் எதேச்சாதிகாரமாகத் தம் விருப்பப்படி அதிகாரங்களைக் கையாளலாகாது என்றும் கருதியது. புனித தாமசும் தாந்தேயும் (Dnte) ஐரோப்பா முழுவதையும், இணைக்கப்பட்ட ஒரே கிறித்தவ சமுதாயமாகவும், அது இறைவனால் அமர்த்தப்பட்ட குருமார் அரசாங்கம், பேரரசாங்கம் என்னும் இருவகை அதிகாரிகளால் ஆளப்படுவதாகவும், அவ்விருவகை அதிகாரங்களும் முறையே திருச்சபை, பேரரசு ஆகிய இரு பெரும் இடைக்கால நிறுவனங்களில் இருப்பதாகவும் கருதினர். புனித தாமசு அக்குவினாசு குருமார் அரசாங்க அதிகாரம், பேரரசதிகாரத்தினும் உயர்ந்ததென்று கருதினார். தாந்தே பேரரசருடைய அதிகாரமானது போப்பினுடைய கட்டுப்பாட்டினின்றும் விடுபட்ட சுதந்திரமான நிலைஉடையது என்று கருதினார். திருச்சபைச் சட்ட அறிஞர்கள் (Canon Lawyers), ஆன்மிக வாழ்வில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் அதிகாரத்தைத் திருச்சபை உடையது என்ற கொள்கையைத் திருச்சபைக்குச் சட்ட வகையான மேற்பார்வை செய்யும் அதிகாரம் உண்டு (Legal Supervision) என்ற விரிவான பொருளிற் கூறினர். போப்புக்குத் திருச்சபையில் அவருடையகீழ்நிலை அதிகாரிகள்மீது அதிகாரம் உண்டு என்ற கருத்தும், பொதுவாக ஆன்மிகத் துறையாளருக்கு உலகியலதிகாரிகள் மீது ஆன்மிக, ஒழுக்கக் கட்டுப்பாட்டுத் துறைகளில் மேற்பார்வை அதிகாரம் உண்டு என்ற கருத்தும், திருச்சபைச் சட்டவல்லுநர்களால் வகுக்கப்பட்டன.

**குருமார் அதிகாரக் கொள்கை**: போப்பு மூன்றாம் இன்னசெண்டு (Innocent) கி.பி. 1196 முதல் 1216 வரை போப்பாக இருந்து மிக விரிவான அதிகாரங்களை ஆன்மிக, அரசியற் துறைகளில் கையாண்டார். அவர் சட்டவகையாகத் திருச்சபைக்கு ஆன்மிக, உலகியல் துறைகளில் உயர்தர அதிகாரம் உண்டென்று கூறி, ஒரு கொள்கையை வகுத்து, அதைச் செயற்படுத்தினார். புனித உரோமானியப் பேரரசருக்கான தேர்தல் நடைபெற்றபோது, அவர் கி.பி. 1202-இல் வெனரபிலம் என்ற ஓராணையை விடுத்து (Bull Venerabilem) அதில், தேர்ந்தெடுக்கப்படுபவர் பேரரசருக்குரிய அதிகாரங்களையும், பொறுப்புகளையும் சரியாக நிறைவேற்றக்கூடிய தகுதிபெற்றவரா இல்லையா என்று தீர்ப்புக் கூறக்கூடிய உரிமை தமக்கு உண்டென்று கூறினார். அதுபோலவே மற்ற ஐரோப்பிய நாடுகளின் அரசர்களோடு அவர் தொடர்பு கொண்டு மேலும் பல அதிகாரங்கள் போப்புக்கு உண்டென்று கூறினார். அவருடைய கருத்தின்படி, சில தனிப்பட்ட வழக்குகளிலும், சில தனிப்பட்ட ஆட்களைப் பற்றிய நிகழ்ச்சிகளிலும்,போப்புக்குத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் உண்டு. உறுதிமொழிகள் (Oaths) அல்லது வாக்குறுதிகள் (Promises) பற்றிய துறைகளிலே திருச்சபைக்குத் தீர்ப்பதி

காரம் இருக்கிறபடியால், அரசர்களுக்கிடையே செய்யப்படும் ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் உறுதிசெய்யவும், அவை பற்றிய வழக்குகளைத் தீர்த்துவைக்கவும் போப்புக்கு அதிகாரம் உண்டு. இவ்வதிகார உரிமையானது போர்முறை, அமைதிமுறை முதலியவற்றைக் கண்காணித்தற்கும், போரிடும் கட்சியாரை நடுவர் தீர்ப்புக்குக் கொண்டு வருதற்கும் உரிமையை அளித்தது. கைம்பெண்கள், இளையோர் (Minors) ஆகியோர்மீது தனிப்பட்ட கண்காணிப்பு அதிகாரம் செலுத்தப் போப்புக்கு உரிமை உண்டு. மேலும், கொள்கை மறுப்புக் குற்றங்களை (Heresy) ஒழித்தற்கும், அக்குற்றம் புரிந்தோருடைய உடைமைகளைப் பறிமுதல் செய்தற்கும், அத்தகையோரை அரசாங்க அலுவல்களினின்றும் நீக்கி விடுதற்கும், அத்துறைகளில் திருச்சபை விடுக்கும் ஆணைகளை நிறைவேற்றத் தவறும் ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்துதற்கும் போப்புக்கு அதிகாரம் உண்டு. மேலும், உலகியல் நீதிமன்றங்களில் நீதிதவறு ஏற்படுகிற வழக்குகளைப் போப்பு தமது திருச்சபை நீதிமன்றங்களில் விசாரிப்பதற்கும், பொதுவாக நீதி வழங்கும் ஆட்சிமுறையை மேற்பார்வை செய்தற்கும் அவருக்கு உரிமைகள் உண்டு. போப்பு இயேசு கிறித்துவினால் தம் பேராளராக (Vicar) அமர்த்தப்பட்ட பீட்டர் என்பவருடைய வழிவந்தவராகையால் அவருக்கு இத்தகைய மேற்பார்வை அதிகாரங்கள் எல்லாம் உலகியலதிகாரிகளின்மீது சட்டப்படியாக உண்டு என்ற கருத்தின் அடிப்படையில் போப்புகள் மூன்றாம், நான்காம் இன்னசெண்டுகள் இவ்வாறு குருமார் அரசாங்கக் கருத்தை வகுத்தனர். இவர்களுடைய கருத்தின்படி, போப்புதான் சட்ட இயலான அதிகாரங்களுக்குத் தோற்றுவாயாகவும், இறுதித் தீர்ப்பு அதிகாரத்தையுடைய நீதிமன்றமாகவும் இருக்கிறார்.

**மார்சிலியோவின் மறுப்பு**: மார்சிலியோ தாம் கூறிய அரசு பற்றிய கருத்துகளில் குடிமை அரசாங்கமும், சமய நிறுவனமும் மனிதனுடைய முழுமையான வாழ்வுக்கு இன்றியமையாதவை என்று கூறி, சமய நிறுவனத்தைப் பற்றி ஆய்வு செய்யும்போது, ஆன்மிக அதிகாரங்களையும் கடமைகளையும் வரம்பு படுத்துகிறார். (காண்க: கிறித்தவத் திருச்சபை) குடிமை அரசாங்கம் மனிதனுடைய காரணகாரியத் தத்துவ ஆய்வுக்கு உட்பட்டது. சமயமோ மறுமை வாழ்வைப் பற்றிய செயல்துறை சார்ந்ததாகையால் அது மனிதனுடைய நம்பிக்கை ஒன்றையே சார்ந்துள்ளது; அவனுடைய அறிவைச் சார்ந்திருக்கவில்லை. ஆகையால், ஆன்மிகத் துறை சார்ந்த திருச்சபையானது, உலகியல் செயல்களைப் பொறுத்தவரையிலே, உலகியல் அரசினுடைய ஒரு பாகமாகவே கருதப்படுதல் வேண்டும். இவ்வாறு மார்சிலியோ, போப்புகளும் திருச்சபைச் சட்ட அறிஞர்களும் வகுத்த குருமார் அரசாங்கக் கோட்பாட்டை மறுத்தார். மற்ற வகுப்பாரைப் போலக் குருமாரும் ஒரு குறிப்பிட்ட பணிகளை-சமயத் துறை பற்றிய பணிகளைச் செய்பவராகையால், எல்லா வகுப்பினரையும்போல அவர்களும் மனித சட்டத்தை மீறும் குற்றங்களுக்கு அரசாங்க நீதி மன்றங்களினாலேயே விசாரிக்கப்படுதல் வேண்டும். அவர்களும் மற்ற வகுப்பாரைப் போலவே சமூக அரசாங்கத்துக்கு வரி செலுத்துதல் வேண்டும். அவர்களுக்கு வரிவிலக்கு இல்லை. திருச்சபையின் அடுக்காட்சியிலுள்ள அதிகாரிகளும், அவர்களுடைய அதிகாரங்களும் மனித சட்டத்திலிருந்து தோன்றியவையாகையால், அவர்களிடையேஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை. யாவரும் சமநிலையிலுள்ளவர்களே ஆவர். விவிலிய மறை ஒன்றுதான் கடவுளுடைய வெளிப்பாட்டைக் காட்டுவது. ஆகையால், அது கூறும் நம்பிக்கைக்குரிய செய்திகளே மனித உய்திக்கு உதவுவன. போப்பின் ஆணைகள் சட்டங்களல்ல. விவிலிய புதிய ஏற்பாடு ஒன்றுதான் தெய்விகச் சட்டமாகும். ஆக்காம் நகரத்தைச் சேர்ந்த வில்லியம் என்பவரும் போப்பின் இறைமை அதிகாரக் கோட்பாட்டை மறுத்தார். கிறித்தவத் திருச்சபையில் போட்டிப் போப்புகள் பலர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பிளவுச் சூழ்நிலையில்(Great Schism) இறைமை அதிகாரம் வன்மையாக எதிர்க்கப்பட்டு, அரசியலமைப்புக்கு உட்பட்ட, பிரதிநிதித்துவ அரசாங்கக் கொள்கைக்கு ஆதரவு உண்டாயிற்று. மார்ட்டின் லூதரும், சான் கால்வினும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நடத்திய மறுப்புக் கிறித்தவச் சீர்திருத்தங்களின் விளைவாக, அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தேசிய திருச்சபைகள் தோன்றின. குருமார் அரசாங்கக் கோட்பாடு மறைந்தது. ஒரே அமைப்பாக இருந்து வந்த உரோமானியக் கிறித்தவத் திருச்சபை பிளவுற்றது. கிறித்தவத் துறவிமடங்கள் அழிக்கப்பட்டன. திருச்சபைச் சட்டமும் நீக்கப்பட்டது. ஆகையால், இடைக்காலத்தில் உலகியலரசாங்க அதிகாரங்களுக்கிருந்த தடைகளெல்லாம் நீங்கின. பா.கு.

**துணைநூல்கள்**:

**d'Entrieves, Alexander Passerin**, The Medieval Contribution to Political Thought, Oxford, 1939.

**Smith, Preserved**, The Age of the Reformation, New York, 1920.

**Ulmann, Walter**, Medieval Papalism, The Political Theories of the Medieval Canonists, London, 1949.

**குருமார் உரிமை**: காண்க: குருமார் எதிர்ப்புக் கோட்பாடு.

**குருமார் எதிர்ப்புக் கோட்பாடு**: அரசியலிலும் சமூக வாழ்விலும் கிறித்தவச் சமயகுருமாருக்கு வரம்பிகந்த செல்வாக்கு அல்லது ஆதிக்கம் இருத்தற்கு எதிர்ப்பாகக் கையாளப்பட்ட கோட்பாடே குருமார் எதிர்ப்புக் கோட்பாடு (Anticlericalism) என்று கி.பி. 19-ஆம்நூற்றாண்டில் இதற்குப் பொருள் கூறப்பட்டது. உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையைப் பின்பற்றும் நாடுகளில் குருமார் ஆதிக்கம் (Clericalism) என்பது வாத எதிர்வாதத்துக்குரிய கேள்வியாக எழுந்த காரணத்தால், குருமார் எதிர்ப்புக் கோட்பாடு என்பது, உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கு உள்ள எதிர்ப்பைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. இன்று குருமார் எதிர்ப்புக் கோட்பாடு என்பது, குருமாருடைய விசேட உரிமைகளுக்கும் (Prerogatives), அவர்களுக்கு நடைமுறையில் உள்ள ஆதிக்கத்துக்கும் எதிராகக் காட்டப்படும் எதிர்ப்பு உணர்ச்சியைக் குறிக்கிறது.

**இக்கோட்பாட்டின் வரலாறு**: குருமார் வகுப்புக்கு எதிர்ப்பு என்பது, நிறுவன அமைப்பையுடைய கிறித்தவத் திருச்சபையில் மட்டுமே காணப்படுகிற ஒரு புதிய நிகழ்ச்சி அன்று. கிறித்தவத் திருச்சபையில் தொடக்க கால வரலாற்றில், குருமாருக்கும் உலகியல் மக்களுக்குமிடையே நிலையைப் பொறுத்தவரையில் பிற்காலத்தில் ஏற்பட்டதைப் போல, மிகவும் வேறுபாடு எதுவும் இல்லாதபோது குருமாருக்கு எதிராகக் கோட்பாடு எதுவும் தோன்றவில்லை. உரோமானியப் பேரரசின் அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சமயமாகக் கிறித்தவ நெறி கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் நடுவில் தோன்றியபோது, உயர்நிலைக் குருமாருக்கு அரச அதிகாரிகளுக்குரிய அதிகாரச் சின்னங்களும், சலுகைகளும் வழங்கப்பட்டன. ஆதலின் குருமாருக்கு எதிரான கோட்பாடு தோன்றலாயிற்று.

இடைக்காலத்தில் ஐரோப்பிய மக்களிடையே பொதுவாகச் சமய நம்பிக்கை வலுவாகவும் ஆழமாகவும் வேரூன்றியிருந்த காரணத்தாலும், திருச்சபைக்கும் அரசர்கள் நிலங்களை நிலமானிய முறையில் வழங்கி இருந்ததனாலும், அரசருக்கு முடிசூட்டல், சாதாரண மக்களுக்குப் புனித நீராட்டு, திருமணம், இறுதிச் சடங்கு முதலியவைகளைச் செய்யும் உரிமைகளைக் குருமாரே பெற்றிருந்ததனாலும், கல்வி அறிவு பெற்றிருந்த காரணத்தால் குருமாரையே உலகியலாட்சிப் பணிகளில் அரசர்கள் ஈடுபடுத்தியதனாலும், கிறித்தவத் துறவிகளின் மடங்கள் கல்வித் தொண்டு, மருத்துவப் பணி முதலிய பயனுள்ள சமூகப் பணிகளைச் செய்ததனாலும், பிரான்சிசுக்கன் (Franciscans), தாமினிக்கன்(Dominican) பிரிவுகளைச் சேர்ந்த வறிய துறவிகள் ஊரூர் திரிந்து, கிறித்துவின் அருள் மொழிகளைப் பரப்பி நல்ல தொண்டு செய்த காரணத்தினாலும், கிறித்தவத் திருச்சபைக்கும், அதன் தலைவர் போப்பு, பேராயர், ஆயர் முதலிய குருமாருக்கும் செல்வ நிலையும், அரசர்களையே கட்டுப்படுத்தக் கூடிய அளவுக்கு அரசியற் செல்வாக்கும் வளர்ந்தன. தமதாணையை மீறுகிற எந்தக் கிறித்தவரையும் சமய நீக்கம் செய்யவும் அதன் விளைவாகச் சமூக ஆதரவே அவருக்குக் கிடைக்காமற் செய்யவும் கூடிய அளவுக்குக் குருமார் அதிகாரம் வளர்ந்திருந்தது. போப்பு மூன்றாம் இன்னசெண்டின் ஆட்சிக்காலமாகிய கி.பி. 1196க்கும் கி.பி. 1216க்கும் இடைப்பட்ட காலத்தில் திருச்சபைக் குருமாரின் செல்வமும், அரசியற் செல்வாக்கும் உயர் நிலையிலிருந்த காரணத்தால், அக்காலத்திலிருந்த கிறித்தவத் திருச்சபையைத் 'திருச்சபை அரசு'(Church-State) என்றே ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். கிறித்தவத் திருச்சபைக் குருமாருக்கு இவ்வளவு அதிகாரங்களும், செல்வாக்கும் பெருகிய ஒரு நிலையே அவர்களுக்கு ஓர் எதிர்ப்பையும் தோற்றுவித்தது. குருமாரின் செல்வ நிலைக்கும், அவர்தம் உரிமைகளைத் தவறாகக் கையாண்டதற்கும் மக்கள் நிலையில் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தோன்றின. குருமாருக்கு அளிக்கப்பட்டிருந்த பணிகளுக்கும், அவர்கள் நடைமுறையில் ஈடுபட்டிருந்த பணிகளுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படவே, சாதாரண மக்கள் பெரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த குருமார்களையும் ஆயர்களையும் மிகுதியாக வெறுத்து எதிர்த்தனர். இவ்வாறு இடைக்காலத்தில் தோன்றிய குருமார் எதிர்ப்பு இயக்கம் பிற்காலத்தில் தீவிர சீர்திருத்தக் கிறித்தவர்களாகிய தூய்மையாளர் முதலியோர் நடத்திய மறுப்புச் சீர்திருத்த இயக்கத்துக்கு ஒப்பாக இருந்தது. இடைக்காலத்திய குருமார் எதிர்ப்புக் கோட்பாடானது சில வேளைகளில் கொள்கை மறுப்பு இயக்கமாகவும் வளர்ந்தது, இம்மறுப்பும் மக்கள் அரசியல் உரிமையோடு இணைந்து இருந்தது.

செருமனியின் அரசர்களும் ஆயர்களும் பொகீமிய மக்களுடைய தேசிய உணர்வைப் புறக்கணித்து, அந்நாட்டைத் தங்களுடைய ஆதிக்கத்தில் கொண்டு வர முயன்றபோது, அங்குச் சான் அசு (John Hus) என்பவர் தலைமையில் சமயச் சீர்திருத்த இயக்கம் நடைபெற்றது. அந்த இயக்கத்துக்குச் சமய நோக்கம் மட்டுமல்லாமல் அரசியல் நோக்கமும் சேர்ந்திருந்தது. போப்பு ஏழாம் கிரிகரிக்கும் புனித உரோமானியப் பேரரசர் நான்காம் என்றிக்கும் கி.பி. 1077-இல் 'யார் அதிகாரம் உயர்ந்தது?' என்ற

கேள்வியில் மோதல் ஏற்பட்ட போதும்,போப்பு எட்டாம் போனிபேசுக்கும், பிரஞ்சு அரசர் நான்காம் பிலிப்புக்கும் இடையே அனானி என்ற இடத்தில் கி.பி. 1303-இல் மோதல் ஏற்பட்டபோதும் குருமார் எதிர்ப்புக் கோட்பாடு வெளிப்பட்டது.

போப்பின் தலைமையை கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் மறுத்து, விவிலியம், தனி ஆள் மனச் சான்றின் உரிமை முதலிய கொள்கைகளை வலியுறுத்தி, மார்ட்டின் லூதர், சான் கால்வின் முதலியோர் சீர்திருத்த இயக்கத்தைப் பரப்பினர். அவர்களுடைய சீர்திருத்தக் கிறித்தவ நெறியை ஏற்ற கிறித்தவர்கள் எல்லாக் கிறித்தவ மக்களுக்கும் குருவாகும் தகுதியை வலியுறுத்தியும், குருமாராகப் பட்டம் ஏற்றவர்களின் தகுதியைக் குறைத்தும் மதிப்பிட்டனர். உலூதருடைய இயக்கத்தின் விளைவாக அரசியலதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தேசிய திருச்சபைகள் (Lutharan State Churches) தோன்றின. ஆகையால், நெடுங்காலமாகப் போப்பின் தலைமையிலிருந்து வந்த ஒரே (கத்தோலிக்கத்) திருச்சபை என்ற அமைப்புச் சிதறுண்டு போயிற்று. மேலும், துறவிகளின் மடங்களும் அவற்றின் உடைமைகளும் தேசிய அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. திருச்சபைக் குருமாருக்கு என்று வகுக்கப்பட்ட சட்டமும் (Canon Law) நீக்கப்பட்டது. அதனால், இடைக்காலத்தில் அரசியலதிகாரத்துக்குத் திருச்சபையினால் ஏற்படுத்தப்பட்டிருந்த வலுவான தடைகளும் நீங்கிவிட, தேசிய அரசாங்கங்கள் தடையின்றி வளரலாயின. அறிவு வளர்ச்சிக் காலமெனப்படும் (Age of Enlightenment)கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அறிவியலடிப்படையில் எதனையும் ஆராயும் போக்கும், உலகியல் அதிகாரமும் வளரவே, குருமார் எதிர்ப்புக் கோட்பாடும் வலுவாயிற்று. இங்கிலாந்தில் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் முதலாம் சார்லசு அரசர் தோற்கடிக்கப்பட்டு முடியாட்சி ஒழிக்கப்பட்டு, தீவிர மறுப்பாளர்களான தூய்மையாளர்களால் இங்கிலாந்தில் ஒரு குடியரசு அரசாங்கம் நிறுவப்பட்ட நிலையில், அந்தச் சமயப் பிரிவினருள் ஒரு குழுவினர், அரசியல் சமத்துவக் கொள்கைகளை வலியுறுத்தி,அரசியலமைப்பில் குடியரசு இயல்பான சில சீர்திருத்தங்களைச் செய்தல் வேண்டுமென்று விரும்பினர். அவர்களுக்குச் 'சமப்படுத்துவோர்'(Levellers)என்று பெயர். அவர்களுள்ளும் தீவிரமான பொதுவுடைமைக் கருத்துகளையுடைய 'தோண்டுவோர்' (The Diggers) எனப்படுவோர் நாட்டிலுள்ள வேலியிடப்படாத பொது நிலங்களைக் கைப்பற்றிப் பயிரிட்டு, விளைச்சலை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்க முயன்றனர். மேலும் அவர்கள், சமூகத்திலுள்ள வழக்கறிஞர்கள் சட்டங்களைத் தீய நோக்கத்துக்காகப் பயன்படுத்துபவரென்றும்,குருமார் தீய சமய நெறியைக் கற்பிப்பவரென்றும், இரு சாராருமே தனியார் உடைமை முறையை ஆதரித்த கொடியோர் ஆவர் என்றும் அவர்களை வெறுத்துக் கூறினர். மேலும், குருமாரெல்லாம் மக்களிடமிருந்து வருமானத்தில் பத்திலொரு பங்கைப் (Title) பெறும் உரிமையை அரசர் அளித்ததனால் அதற்கீடாகக் குருமார் அரசர் மிக உயர்ந்தவரென்றும், அவருக்கு மக்கள் கீழ்ப்படிதல் வேண்டுமென்றும் மக்களுக்கு நல்லுரை கூறினர். அவர்களுடைய கருத்துகளை வெளியிட்ட செரார்டு வின்சுடான்லி (Gerrard Winstanley) என்பவர் கி.பி. 1652-இல் வெளியிட்ட 'சுதந்திரத்தின் சட்டம்' என்ற நூலில் பொருளாதாரச் சமத்துவத்தோடு அரசியற் சுதந்திரத்தையும், சமத்துவக் கருத்தையும் இணைத்து, ஒரு கற்பனையான குடியரசு நாட்டில் குருமாருக்கு இருக்க வேண்டிய பங்கை விவரித்துள்ளார். அவர் கூறும் குடியரசில் தேசிய கிறித்தவத் திருச்சபையானது மக்களுக்குக் கல்வி புகட்டும் நிறுவனமாக மட்டும் பணி செய்தல் வேண்டும். சமய நெறியில் இயற்கைக்கு அப்பாற்பட்ட, மறுமை போன்ற நிலை (Supernatural) என்று எதுவும் இல்லை. குருமார் தங்களுடைய உடைமைகளைக் காத்துக் கொள்ளுதற்காகவும் நோயுற்று அறியாமையில் அழுந்தியுள்ள மக்களை மகிழ்விப்பதற்காகவும், சமய உரைகளைக் கற்பிக்கின்றனர்; கற்பனைக் குடியரசில் குருமார், வாரத்தில் ஏழாம் நாளன்று, வரலாறு, பொதுப் பொருள்கள், தொழில்கள், அறிவியல்கள் முதலியவற்றைக்கற்பித்தல் வேண்டும். இயற்கையின் இரகசியங்களைஅறிதலே கடவுளின் செயலைஅறிதல் ஆகும். தெய்விகநிலை(Divinity)என்பது வலியற்ற, நோயாளி மனிதரின் கோட்பாடே தவிர வேறன்று; அது ஓர் ஏமாற்றுக் கலையே ஆகும். இவ்வாறு கூறப்பட்ட கருத்துகள் எல்லாம் குருமாரிடத்து இருந்து வந்த நம்பிக்கையைக் குறைத்தன. பிரான்சில் எதேச்சாதிகார அரசர்களுக்கு ஆதரவளித்தவர்களாகக் குருமாரைப் பற்றிய ஓர் எண்ணம் பொது மக்களிடையே வளர்ந்தது. ஆகையால், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உரோமானியக் கத்தோலிக்க நாடுகளில் தாராள அரசியற் சிந்தனையாளர்களெல்லாம் குருமார் எதிர்ப்புக் கோட்பாட்டை ஆதரித்தனர்.பிரான்சில் 1905-இல் குருமாருக்கெதிராக அரசாங்கம் பல சட்டங்களை நிறைவேற்றிற்று. இத்தாலியில் பல அரசுகளை ஒன்றாக இணைத்து, ஒரே சுதந்திர இத்தாலியை உருவாக்குதற்காக ஓர் இயக்கம் நடந்த போது (Risorgiment), போப்பினுடைய ஆட்சியிலிருந்த நடு இத்தாலிய அரசுகளுக்கு ஆதரவாக இருந்த குருமார்களுக்கும், இத்தாலிய முழு இணைப்பை ஆதரித்த கட்சியாருக்குமிடையே பெரும் பிளவு

தோன்றிற்று. இசுபெனியிலும் போர்ச்சுகல்லிலும் சுதந்திர தென் அமெரிக்கக் குடியரசுகளிலும் பல அரசாங்கங்கள் அடுத்தடுத்துக் குருமார் உரிமைகளை ஒடுக்கும் பல சட்டங்களைச் செய்துள்ளன. செருமனியில் பரப்பப்பட்ட வலுவான தேசிய உணர்வின் காரணமாகப் (Kulturkampf) போப்புக்கெதிராகவும் குருமாருக்கெதிராகவும் கருத்துகள் வளர்ந்தன.

குருமார் எதிர்ப்புக் கோட்பாடு என்பது, 20-ஆம் நூற்றாண்டில் பொதுவுடைமை, தேசிய சமநிலை முதலிய எதேச்சாதிகார முறைகள் பரப்பிய சமய மறுப்பு என்ற கருத்தோடே இணைந்தது. பொதுவுடைமைப் புரட்சியாளராகிய இலெனின், குறிக்கோட் கோட்பாட்டையும் (Idealism) குருமார் ஆதிக்கக்கோட்பாட்டையும் (Clericalism) ஒன்றாகக் கருதி, அவை இரண்டுமே ஆளுவோர் மற்றோரைச் சுரண்டுதற்காக அவருக்கு உதவியாக இருப்பவை என்று கூறினார். குருமார் ஆதிக்கக் கோட்பாட்டில் அதிகார நோக்கம் இருப்பது வெளிப்படையாக இருத்தலால் அது ஓர் உண்மையான பகையாகுமென்று கருதி, அதை வெறுத்தாரே தவிர, அதைக் கண்டு அஞ்சவில்லை. இத்தாலியில் பாசிசச் சருவாதிகாரி முசோலினி 1929-இல் போப்போடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதுபோலவே, இசுபெயினின் சருவாதிகாரி பிராங்கோவும் குருமாருக்கு அவர்கள் முன்பு இழந்துவிட்ட சலுகைகளைத் திரும்ப அளித்தார். சீர்திருத்தக் கிறித்தவ நெறியைச் சேர்ந்த நாடுகளில் தேசிய திருச்சபைகள் நிறுவப்பட்டிருந்தாலும், அவற்றில் இப்போது குருமார் எதிர்ப்புக் கோட்பாடு எதுவும் இல்லை. பல்வேறு சமயப் பிரிவுகளைச் சேர்ந்தோர் வாழும் நாடுகளில் குருமாருக்கு ஆதரவான கோட்பாடும் இல்லை; எதிர்ப்பான கோட்பாடும் இல்லை. ஐக்கிய அமெரிக்க நாட்டிலே குருமாருக்கும் உலகியல் மக்களுக்குமிடையே ஒற்றுமை இருப்பதால், அங்கும் குருமார் எதிர்ப்புக் கோட்பாடு இல்லை. அந்நாட்டில் குடியேறும் உரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் குருமார் ஆதரவாளர்களாக இருக்கின்றனர். சமய நிறுவனச் செயல்களில் உலகியல் மக்கள் முழுமையாகப் பங்கு கொள்ளுதல் வேண்டுமென்ற கருத்து அந்நாட்டில் அண்மையில் பரவி வருகிறது. ஆனால், பண்டைக் காலத்திலிருந்ததுபோல் சமய குருமார்களுக்கு இப்போது அரசியலிற் செல்வாக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. பா.சூ.

**துணை நூல்கள்:**

**Hughes, Philip,** History of the Church, London, 1948.

**Moody, Joseph,** N., Anticlericalism, Washington, 1966.

**குருவட்டி:** கருநாடக மாநிலத்தில் துங்கபத்திரை ஆற்றின் கரையில் அமைந்துள்ள சிற்றூர். கோயிற் கட்டடக் கலைக்குப் புகழ் பெற்று விளங்கும் இவ்வூரில் சாளுக்கியர் காலக் கோயில் ஒன்று உள்ளது. இங்குள்ள மல்லிகார்ச்சுனர் கோயிலின் வெளிப்புறச் சுவர்களிலும் மாடக்குழிகளிலும் அழகு மிக்க சிற்பங்கள் காணப்படுகின்றன. மாடக்குழிகளின் மேல் மகர தோரணங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சிங்கச் சிற்பத்தின் மேலே வால் போன்ற அமைப்பில் சுருள் சுருளாக வளைவுகள்


குருவட்டித் தூண் அமைப்பு

செதுக்கப்பட்டுள்ளன. தூண்களிலும் மிக நுட்பமான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இசைக் கலைஞர்களின் சிறு உருவங்களும் பூ வேலைப்பாடுகளும் தூண்களில் காணப்படுகின்றன. சு.இரா.

**குருவாயூர்**: கேரள நாட்டில் பொன்னானி வட்டத்தில் உள்ள இச்சிற்றூரில் கண்ணன் ஆலயம் மிகவும் புகழ்வாய்ந்தது. இப்பழைய கோயிலில் உள்ள கிருட்டிணன் பல்வேறு காலங்களில் பல அற்புதங் களை நிகழ்த்தியதாகக் கதைகள் குறிப்பிடுகின்றன. இந்துக்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து இங்கு வந்து போகின்றனர்.

கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாராயணபட்டாத்திரி என்னும் அறிஞர் குருவாயூர்க் கண்ணனின் மீது 'நாராயணீயம்' என்னும் அழகிய வடமொழி நூலை இயற்றினார். அதனால், இக் கோயிலின் புகழ் மேலும் பெருகியது. கோயிற் சுவர்களில் வண்ண ஓவியங்கள் காட்சி அளிக்கின்றன. குட்டிபுரம் என்ற இருப்புப்பாதை நிலையம் குரு வாயூருக்கு அருகில் உள்ளது. பேருந்துகளில் மிகுதி யான மக்கள் இங்கு வருகின்றனர். தெ.பா.

**குருகர், பாலசு**, தென்னாப்பிரிக்காவின் போர் வீரர்; அரசியல்வாதி. பால்குருகர் (Paul Kruger) அல்லது பாலசு குருகர் (Poulus Kruger) என அழைக்கப்படும் தென்னாப்பிரிக்க உழவர் கி.பி. 1825 முதல் 1904 வரை வாழ்ந்தவர். குடியான வர் வகுப்பில் பிறந்த குருகர் தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயர் பேரரசு வளர்வதைத் தடுக்கப் பாடு பட்டார். முதலில் வெற்றியும் பிறகு தோல்வியும் கண்டார்.



குருகர், பாலசு

ஐரோப்பிய வல்லரசுகள் கி.பி. 19-ஆம் நூற் றாண்டின் இறுதியில் ஆப்பிரிக்காவைப் பங்கு போட் டுக்கொண்டன. தச்சுக் கிழக்கிந்தியக் குழு (Dutch East India Company) கி.பி. 1652-இல் தனக்கெனச் சில இடங்களைத் தென்னாப்பிரிக்காவில் அமைத்துக் கொண்டது. பிறகு சிறிதுசிறிதாகத் தச்சுக்காரர் அங்கே பரவலாயினர். தச்சுக் குடியானவர்களுக்கு 'போயர்' என்ற பெயர் அமைந்தது. பிறகு ஆங்கி லேயரின் ஆதிக்கம் அங்கு வளரத் தொடங்கியவுடன் போயர்கள் வடக்கே சென்றுஆரஞ்சுஆற்றுப்பகுதியில் கி.பி. 1850-ஆம் ஆண்டுகளில், ஆரஞ்சுச்சுதந்திர அரசு, திரான்சுவால் (Pransvaal) என்ற இரண்டு போயர் குடியரசுகளை ஏற்படுத்திக் கொண்டனர். அப்பகுதி களில் கி.பி. 1867 முதல் வைரச்சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டதால், மற்ற ஐரோப்பியர்கள் குறிப் பாக ஆங்கிலேயர்கள் அங்குச் செல்ல ஆர்வம் கொண் டனர். மேலும், கி.பி. 1886-இல் தங்கச் சுரங்கமும் கண்டுபிடிக்கப்பட்டதால் ஆங்கிலேயரின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே சென்றது. கி.பி. 1870-இல் அவர் கள் எண்ணிக்கை 300,000. ஆனால் 1900-ஆம் ஆண் டில் அது 1000,000 ஆக உயர்ந்தது. ஆங்கிலேயர் கி.பி. 1871-இல் வைரச் சுரங்கங்கள் உள்ள இடங் களைத் தம்முடன் இணைத்துக் கொண்டனர். ஆரஞ்சுச் சுதந்திர நாடு அதை எதிர்த்தது. ஆனால், பயனில்லை. திரான்சுவாலும் கி.பி. 1877-இல் ஆங்கி லேயர் வசமாகியது. அங்கு இருந்த போயர்களை மகிழ்விக்க, ஆங்கில அரசு அவர்களுக்கு விருப்பமான முறையிலேயே அவர்களுடைய மொழியிலேயே ஆட்சி செய்துகொள்ள அனுமதிப்பதாக உறுதிமொழி கொடுத்தது. ஆனால், ஓராண்டுக் கழிந்தபிறகுகூட அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. போயர் கள் கிளர்ச்சி செய்யலாயினர். திரான்சுவால் குடியர சின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாலசு குருகர், போர்ப் பயிற்சியும் அரசியல் அறிவும் கொண்டவர், ஆங்கிலேயர் அவரை முறியடிக்கப் பல தந்திரங்கள் செய்தனர். உள்நாட்டு வெள்ளையரை அவருக்கு எதிராகக் கலகம் செய்யத் தூண்டினர். குருகர் ஏற்படுத்திய குடியரசைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பை ஏற்படுத்தினர். தொடர்ச்சியாக கி.பி. 1883 முதல் 1902 வரை திரான்சுவால் குடியரசுத் தலைவராக விளங்கிய குருகர் தொடக்க காலத்தில் பொறுமையாக இருந்து, ஆங்கிலே யரைப் பகைத்துக் கொள்ளாமல் சிக்கல்களைத் தீர்க்க விரும்பியிருந்தார். ஆனால், சூழ்நிலை மாறிய தால் அப்பகுதியின் இனவெறி இயக்கத்தை வலிமைப் படுத்த வேண்டியது அவருக்கு இன்றியமையாததாகி விட்டது. அப்பகுதியின் மக்களின் வீரத்திற்கும், நீண்ட காலமாகவே அவர்கள் தனித்த மக்கள் என்ற கருத் துக்கும், அவர்தம் விடுதலை ஆர்வத்திற்கும், கடுமை யான உழைப்புக்கும் குருகர் ஒரு வலிமை பொருந் திய பேராளராகக் கருதப்பட்டார்.

ஆங்கிலேயரிடமிருந்து விலகி ஒரு சுதந்திரமான குடியரசை நிறுவ வேண்டுமென்பதே அவருடைய

பேரவா. மேலும், தம் நாடு வளர்ச்சி அடைய ஏதாவது ஒரு துறைமுகம் அதற்குத் தேவை என்று அதைப் பெற முயன்றார். ஆனால், ஒவ்வொரு கட்டத்திலும் ஆங்கிலேயர் அவருடைய ஆசைக்குத் தடையாக இருப்பதை உணர்ந்தார். தென்னாப்பிரிக்காவில் வைரச் சுரங்க அதிபதியாகவும் சிறந்த போர் வீரனாகவுமிருந்த செசில் உரோட்சு (Cecil Rhodes), தாய்நாடான இங்கிலாந்தின் அனுமதியின்றியே குரூகருக்குப் பகையாகப் பல செயல்களை நிகழ்த்தி வந்தான். மேலும், சேம்சன் (Jameson) என்ற ஆங்கிலேய வீரன், கி.பி. 1895 இல் போயர் குடியரசில் படையெடுத்துச் சென்றான். ஆனால் அவனும் அவனைச் சேர்ந்த 500 பேர்களும் தோல்வியுற்றுக் கைதிகளாயினர். இந்நிகழ்ச்சியைப் பாராட்டிச் செருமானியக் கெய்சர் இரண்டாம் வில்லியம் குரூகருக்கு ஒரு தந்தியின் மூலம் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். பிற நாட்டவரின் உதவியை நாடாமல் தாமே ஆங்கிலப் படையைத் தோற்கடித்தமைக்காகக் குரூகருக்கு அந்தப் பாராட்டுக் கிடைத்தது. குரூகர் தம் நன்றியைத் தெரிவித்துக் கெய்சருக்குப் பதில் அனுப்பினார். இங்கிலாந்தின் அரசு குரூகருக்கு அளித்த விளக்கத்தில் சேம்சனின் வலுத் தாக்குதலுக்குத் தான் காரணமில்லை என்று கூறியதுடன், மேற்கொண்டு அமைதியைக் காக்கப் பேச்சு வார்த்தைகளுக்காக இங்கிலாந்துக்கு குரூகர் அழைக்கப்பட்டார். இது பிரிட்டனின் தோல்வியின் அறிகுறி என்று குரூகர் மகிழ்ச்சி அடைந்தார். அவர் மறுபடியும் திரான்சுவால் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே தம்முடைய அரசை வலிமைப்படுத்திக் கொள்ளப் பல திட்டங்கள் தீட்டினார்; தம் படையையும் பெருக்கிக் கொண்டார். தம் ஆட்சிப் பகுதியைச் சுற்றியிருந்த ஆங்கிலேயப் படைகளைத் திரும்பப் பெறவேண்டுமென்று இங்கிலாந்தை வற்புறுத்தினார். ஆனால் பயன் எதுவும் இல்லை. போயர்கள், சிறிது சிறிதாக ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புப் பகுதிகளைத் தாக்கத் தொடங்கினர். இங்கிலாந்துக்கும் போயர் குடியரசுக்கும் கி.பி. 1899-இல் போர் மூண்டது. இது போயர் போர் என்று கூறப்படும். போர் தொடங்கி 4 மாதங்கள் வரை, குரூகருக்கு வெற்றிகள் கிடைத்தன. ஆனால், விரைவில் ஆங்கிலேயப் படையின் தலைவர்கள் மாற்றப்பெற்றனர். கிட்சனர் என்னும் புதிய இராணுவ அதிகாரியின் தலைமையின்கீழ் ஆங்கிலப் படை கடுமையாகப் போரிட்டு,1900ஆம் ஆண்டு சனவரி முதல் வெற்றியடையத் தொடங்கியது. இங்கிலாந்தின் வெற்றியுடன் 1902-இல் போர் முடிந்தது. குரூகர் நாட்டைவிட்டு ஓடினார். முன்பு பாராட்டுதல் தந்தி அனுப்பிய கெய்சர் வில்லியம் தமக்குப் புகலிடம் தருவார் என்று எதிர்பார்த்தார். ஆனால் கெய்சர், இங்கிலாந்துடன் பகைமையை வளர்த்துக் கொள்ள விரும்பாததால், குரூகருக்கு ஆதரவு அளிக்கவில்லை. பிரான்சு நாட்டின் தலைநகரமான பாரிசு (Paris) குரூகரை வாழ்த்துகளுடன் வரவேற்றது. குரூகரை இழந்த திரான்சுவாலும், ஆரஞ்சுச் சுதந்திர நாடும் ஆங்கிலேயர் வசமாயின. அப்பகுதிகளுக்கு உள்நாட்டுச் சுதந்திரம் வழங்க இங்கிலாந்து சம்மதித்தது. குரூகர் இறுதியில் தோல்வியுற்ற போதிலும் அவருடைய கொள்கைகள் பாராட்டப்பெற்றன. இயன்றவரை நாட்டுக்காக உழைத்த வீரர்களின் எண்ணிக்கையில் இவர் சேர்க்கப்படுவர். இவரை நினைவுபடுத்தும் வகையில் திரான்சுவாலில் உள்ள குரூகர் தேசியப் பூங்காவையும் (பரப்பு, 20.720 ச. கி.மீ.), குரூகர்சுடார்ப்பு (Krugers dorp) என்ற நகரத்தையும் இன்றும் காணலாம். தெ.பா.

**குரோ இந்தியர்** வட அமெரிக்கப் பழங்குடிகளுள் ஓரினத்தவர். சியோவன் (Siouan) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த கிளைமொழியைப் பேசும் இவர்கள், வட அமெரிக்காவின் பெரும் சமவெளிகளில் வாழ்கின்றனர். அண்டைய பழங்குடியினரால் இவர்கள் அப்சாலூக்கு (Apsaalooke) என அழைக்கப்படுகின்றனர். இதன் பொருள் 'நீண்ட அலகுடைய பறவையின் மைந்தர்கள்' என்பதாகும். குரோ இந்தியருள் மூன்றில் இரண்டு பங்கினர் தென் கிழக்கு மாண்டனாப் (Montana) பகுதியில் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களில் வாழ்கின்றனர். இப்பகுதியிலுள்ளவர்களின் எண்ணிக்கை 6,000 க்கும் மேற்பட்டதாகும்.

குரோ (Crow) இந்தியர்கள் மேல் மிசுசவுரி ஆற்றுப் பகுதியைச் சேர்ந்த இடாட்சாப் (Hidatsa) பழங்குடியினரோடு பல நூற்றாண்டுகள் நல்லுறவு கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இடாட்சாவினரோடு பகைமை கொண்டு போரிட்டுத் தோற்றதால் மேற்கு நோக்கி நகர்ந்தனர்.

குரோ இந்தியர் சமுதாயம் மூன்று குழுக்களாகப் பாகுபடுகின்றது. இம் மூன்று குழுவினரும் முறையே மலை, ஆறு, வயிற்றில் உதைக்கப்பட்டவர்கள் என்னும் பொருள் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளனர். மூன்றாம் குழுவினர் மலைக் குழுவினரிடமிருந்து பிற்காலத்தில் தோன்றியவர்களாவர். இவர்கள் தனித்தியங்க இயலாதவர்கள்.

முற்காலத்தில் குரோ இந்தியர் வேளாண் தொழிலை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இடாட்சாவினரிடம் பகை கொண்டு பிரிந்து காட்டெருமையை வேட்டையாடி

வாழ்ந்தார்கள். பின்னர் இவர்கள் தரகுத் தொழிலை மேற்கொண்டார்கள். கிராமங்களில் வாழும் இந்தியர்களுக்குக் குதிரைகள், அம்பு, வில், துணிவகைகள், கைவினைப் பொருள்கள் முதலானவற்றைக் கொடுத்து, அவர்களிடமிருந்து துப்பாக்கிகள், இரும்புப் பொருள்கள் முதலானவற்றைப் பெற்று இடாட்சாவினர், சொசோனி (Shoshoni) இந்தியர் ஆகியோருக்குக் கொடுப்பர். இப்போது இவர்கள் எருமை, குதிரை முதலானவற்றை வளர்த்து விற்கும் ஆயர் வாழ்க்கையை நம்பியுள்ளனர். இவ்விரண்டு விலங்குகளிலிருந்தே தங்களுக்கு வேண்டிய உணவு, உடை, வீட்டுப் பொருள்கள், அலங்காரக் கைவினைப் பொருள்கள் முதலானவற்றைச் செய்கின்றனர்.

குரோ இந்தியர் முரட்டுக் குணமுடையவர்கள். இவர்கள் அண்டைய இந்தியர்களுடன் தொடர்ந்து நல்லுறவு கொண்டு வாழ்வதில்லை. அவ்வப்போது அண்டையர்களிடமிருந்து குதிரைகளைத் திருடுவதே இவர்களின் போருக்கான காரணம். இவர்கள் போர்ச் செயலில் 4 முதன்மையான கொள்கைகளைக் கொண்டுள்ளனர். அவை தம் இனத்தவர் உயிரிழக்காமல் போரிடுவது, எதிரியின் குழுவிலிருந்து போர்க் குதிரைகளைக் கைப்பற்றுவது, எதிரிகளை உயிரிழக்கச் செய்வது, எதிரிகளின் ஆயுதங்களைக் கைப்பற்றுவது முதலியனவாகும். அவ்வப்போது கி.பி. 1860 முதல் 1870 வரை நடந்த போரில் தகோட்டா (Dakota)பிளாக்புட்டு (Blackfoot) ஆகிய இந்தியர்களிடம் தோற்று நலிவடைந்ததால், அரசு இவர்களுக்கென்று ஒதுக்கிய தெற்கு மாண்டனாப் பகுதியிலுள்ள நிலங்களிற் குடியேறினர்.

இவர்களின் சமய நம்பிக்கை இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியினைப் பெற்று மக்களுக்கு உதவி செய்வதாகும்.இச்சக்தியைப் பெறுவதற்குத் தனிமையில் பல நாள்கள் உணவருந்தாமல் அகப்பைக் கோலால் (Skewer) உடலை வருத்திக் காத்திருந்தால், இச்சக்தியைப் பெறலாம் என நம்புகின்றனர். இவர்களின் சமூகத்தில் ஒருசிலரே இவ்வாறான செய்கையைச் செய்ய முனைகின்றனர். இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியைப் பெற்றவர்கள் மட்டுமே பல தாவரங்களைச் சேகரித்து மக்களுக்கு மருத்துவம் செய்கிறார்கள்; சடங்குகளை முன்னின்று நடத்துகிறார்கள். இச் சக்தியைப் பெற்றோரிடமிருந்து மருந்து வகைகளைப் பெற்று எளிய நோய்களுக்கு மருத்துவம் செய்யலாம். இவர்கள் புகையிலையைப் பயிரிடும்போது சில சமயச் சடங்குகளைச் செய்கின்றனர். இச்சடங்குகளைச் செய்வது எதிரிகளை வெல்வதற்கும் உதவுகிறது என இவர்கள் நம்புகின்றார்கள். சீ.ப.

**குரோச்சே, பெனெதெத்தோ**: சிறந்த இத்தாலியச் சிந்தனையாளராக 20-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் பாராட்டப்பட்ட இவர் வரலாற்றாசிரியராகவும், மனிதப் பற்றாளராகவும், தத்துவ ஆசிரியராகவும், ஆய்வாளராகவும், அரசியலறிஞராகவும், எல்லாவற்றுக்கும் மேலாகப்போலித்தனமான அடக்கு முறை ஆட்சியைத் துணிவுடன் எதிர்க்கக் கூடிய ஒழுக்க உறுதி படைத்தவராகவும் விளங்கினார்.

**வாழ்க்கை**: (1866-1952) இவர் இத்தாலியில் அப்ரூசியிலுள்ள (Abruzzi) நகரமாகிய பெசுக்காசரோலியில் கி.பி. 1866-இல் பிறந்தார், குரோச்சே பெனெதெத்தோ (Benedetho Croce) தம் வாழ்நாள் முழுவதையும் நேப்பிள்சு நகரத்தில் (Naples) கழித்தார். இவர் இளமைக் காலத்து கி.பி. 1883-இல் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பெற்றோரையும், ஏனைய ஆதரவாளர்களையும் இழந்து தனித்து வாழவேண்டியவரானார். இவர் மனந்தளராமல் உண்மையாக உழைத்தலே தமக்கு உய்தியைத்தருமென்று தெளிவாக உணர்ந்தார். இவர் பல்கலைக் கழகத்தில் சேராமல், தாமே வரலாறு, இலக்கியம் முதலிய நூல்களைக் கற்று ஆராயும் திறம் பெற்றார்.

இவர் தம் வாழ்நாளில் இத்தாலியை ஒரே சுதந்திர நாடாக இணைக்க எழுந்த இயக்கத்தையும் இரு உலகப் போர்களுக்குமிடைப்பட்ட காலத்தில் இத்தாலியில் தோன்றி வீழ்ந்த பாசிச வல்லந்த ஆட்சியையும் நேரில் கண்டு, ஒழுக்க இயல்பும் குடியாட்சி இயல்பும் தாராள இயல்புமுடைய அரசாங்கம் நிறுவப்படுதற்குரிய சிலகொள்கைகளை வகுத்தார். இவர் சில காலம் சமநிலைக் கோட்பாட்டையும் (Socialism), மார்க்சியப் பொதுவுடைமைக் கோட்பாட்டையும் பற்றி ஆராய்ந்து, பின் அவற்றை விடுத்தார். இவர் தனிமையில் வளரவேண்டிய சூழ்நிலையே இவரிடம் தனியார் சுதந்திரப்பற்றை உருவாக்கி உறுதியாக வளர்த்தது.

இவர் தாம் இருந்த நேப்பிள்சு நகரத்தில், பண்டைக் காலத்தில் வாழ்ந்த வீரர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி, அவர்களுடைய பண்புகளை ஆராய்ந்தார். இத்தாலி நாட்டின் உய்தியைப் பற்றியும் ஒழுக்கப்பண்பு பற்றியும் இவர் இடைவிடாமல் எண்ணிப் போலித்தனமான நாட்டுணர்வையும் அதிகாரப் பற்றையும் வெறுத்தார். இவர் 1903-இல் 'லா கிரிட்டிக்கா' ('La Critica') என்ற ஓர் ஏட்டை நிறுவி, அவ்வேட்டின் வாயிலாக அடுத்த 41 ஆண்டுகளுக்குத் தம் நூல்கள் பலவற்றை வெளியிட்டார். தம் காலத்தில் ஐரோப்பாவில் வெளி வந்த முக்கிய வரலாறு,

தத்துவ, இலக்கிய நூல்களையெல்லாம் ஆராய்ந்து மதிப்புரைகளும் எழுதினார். இவர் குறிக்கோளுக் கியைந்த நற்பண்புகள் ஒவ்வொரு இத்தாலியரிட மும் இருத்தல் வேண்டுமென்ற ஒரு கோட்பாட்டைத் தம் நூல்களின் வாயிலாக வெளியிட்டார்.

இத்தாலியில் பாசிசச் சருவாதிகாரம் தோன்றிய போது குரோச்சே அதை வன்மையாக எதிர்த்தார். முதலில் தனியாள் சுதந்திரத்திற்கு உதவியாகப் பாசிசக் கோட்பாடுஅமையுமென்று எதிர்பார்த்திருந்த குரோச்சே, அக்கோட்பாடு தனியார் சுதந்திரத்தை யும் உரிமைகளையும் தனிஆளையும் புறக்கணிக்கக் கூடிய, எதேச்சாதிகார, வல்லந்த ஆட்சிக் கோட் பாடாக மாறியதைக் கண்டு, அதிர்ச்சியடைந்து, அதை எந்த அளவிலும் ஒப்புக்கொள்ளாத முழு எதிர்ப்பாளராக மாறினார். தனியார் சுதந்திரத்தை விரும்பியோரெல்லாம் குரோச்சேயின் பாசிச எதிர்ப்புக்கு ஆதரவளிக்கவே, இவருடைய ஒழுக்க இயலான பாசிச எதிர்ப்பை ஒழித்தல் இயலா தென்று பாசிசத் தலைவர்கள் நன்குணர்ந்து கொண்டனர். இவர் தம் வரலாற்று நூல்களின் உட்பொருளை விளக்கி அவற்றை நீதி இலக்கியங் களாக அளித்தார். இவர் அவற்றின் வாயிலாகப் பாசிச இத்தாலி எவ்வாறு திசைதவறிச் செல்லுகிற தென்றும் சுட்டிக்காட்டி, நல்லொழுக்கப் பண்பும், குறிக்கோளும் இயைந்த வாழ்வே உண்மையான, விரும்பத்தக்க ஒன்று என்று எடுத்துரைத்தார். இரண்டாம் உலகப்போரில் இத்தாலி தோற்றுப் பாசிசம் ஒழிக்கப்பட்ட நிலையில், குரோச்சே தமது உள்ளார்ந்த ஆன்மிகக் கருத்துச் செல்வங் களின் வாயிலாக இத்தாலி மீண்டும் புத்துயிர் பெறு தல் வேண்டுமென்று தெளிவாகவும் உறுதியாக யாகவும் கூறினார். ஐரோப்பாவில் பல தனியார் களால் நிறுவப்பட்டுள்ள சிறந்த நூலகங்களுள் நேப்பிள்சில் குரோச்சே தம் இல்லத்தில் வைத்திருந்த நூலகமும் ஒன்று. அதில் இவர் பல நூல்களைக் கற்றும் ஆராய்ந்தும் காலம் கழித்து, 1952, நவம்ப ரில் மறைந்தார். இவருடைய வாழ்க்கை அமைதி யும் உழைப்பும் நிறைந்த ஒன்று ஆகும்.

**குரோச்சேயின் தத்துவக் கருத்துகள்:** இவர் 'ஆன்ம தத்துவம்' (Philosophy of the Spirit), 'தருக்க இயல்' (Logic), 'பொது மொழியாகவும் அறிவியலாகவும் வெளிப்படும் அழகியல் (Aesthetics as an Expression of Common language and Science) 'செயல் முறைத் தத்துவமாகிய பொருளியலும் ஒழுக்க இயலும்', ('Philosophy of the Practical; Economic and Ethic'), 'வரலாற்றின் கொள்கையும் செயல் முறையும்' (History: Its Theory and Practice), 'வரலாறு சுதந்திரத்தின் ஒரு கதை', ('History as the Story of Liberty', 1941) '19-ஆம் நூற்றாண் டின் ஐரோப்பிய வரலாறு', 'இத்தாலிய வரலாறு-1871 முதல் 1915 வரை', 'நேப்பிள்சு அரசின் வர லாறு' முதலிய நல்ல பல நூல்களை எழுதி, இத்தா லிக்கு நல்ல வழி காட்டக்கூடிய நல்லாசிரியராகப் பணிசெய்தார். இவர் ஆன்மா (Spirit) என்பதற்கு 'மனித நல்லுணர்வு' (Human-Consciousness) என்று பொருள் கொண்டு சில தத்துவக் கருத்துகளை அளித்தார்.

ஆன்மா என்பது, அழகியல், தருக்கஇயல், பொருளியல், ஒழுக்கஇயல் முதலிய துறைகளில் சுற் றிச் சுழன்று வருகிறது. பின்னர் ஆன்மாவின் நிலை கள் மறைந்துவிடாமல், அவையெல்லாம் வரலாற் றின் செயல்களாகவும் கருத்துகளாகவும் படிந்து விடுகின்றன.

வாழ்வின் எல்லா நிலைகளுக்கும் உகந்த ஒரு விதியாக வரலாறு அமைந்துள்ளது.

**இத்தாலியப் பண்புகள் என்ற கருத்து:** குறிக் கோளுக்கு இயைந்த இத்தாலியரிடம் சுதந்திரவேட் கையும் (A Passion for freedom), ஆழ்ந்த சமூகக் கடமை உணர்வும் (A profound sense of civic duty) முரண்பாடின்றி இணைந்து காணப்படும். அவரிடத் துக் கவர்ச்சியான பேச்சோ உணர்வுமிக்க கற்ப னையோ காணப்படமாட்டா. புற, அக வாழ்க்கைக் குரிய உண்மைகளே முரண்பாடின்றி இணைந்த குறிக் கோள்களாகக் காணப்படும். ஆக்க இயல்புடைய முயற்சி உடையவராக அவர் இருப்பார். எதிர் காலத்துக்குத் தாம் அளிக்க வேண்டிய கடமை உணர்வு அவரிடம் காணப்படும். அவர் இடைவிடாத, ஆக்க இயல்புடைய முயற்சியோடும், தன் குற்றம் காணும் பண்போடும் இருப்பார்.

இத்தகைய நல்ல குறிக்கோள்களையும் பண்பு களையுமுடைய இத்தாலியரால்தான் நாட்டிற்கு நல்லபணி செய்தல் இயலுமென்று வலியுறுத்திக்கட்டு ரைகளை வெளியிட்டார் நல்லாசிரியர் குரோச்சே. அதுவே இவருடைய பொதுவாழ்வுப்பணி ஆகும். ஒரே நாடாக இத்தாலியை இணைத்தவர்களுள் ஓர் அரசியலறிஞரான கவூரைப் போலவே (Cavour) குரோச்சேயும் திறமான இத்தாலிய மக்களை உரு வாக்குதற்கு வேண்டிய நற்கருத்துகளை அளித்தார்.

**தாராள அரசியற் கருத்து:** இத்தாலியில் பாசிசக் கட்சியை நிறுவி, அரசாங்கத்தைக் கட்டுப்படுத்திய சருவாதிகாரியாகிய முசோலினி, பாசிசக் கட்சிக்கு ஓர் அரசியற் கொள்கையை உருவாக்கித் தருமாறு

சியோவென்னி செண்டைல் என்பவரிடம் (Giovenni gentile) கேட்டார். அவர் தமக்குத் தெரிந்த ஒரே அரசியற் கோட்பாடாகிய, 'அனைத்து வல்லமையுமுடைய அரசு' என்ற ஏகலின் கோட்பாட்டை (Hegel's Theory of an all-powerful State) முசோலினியிடம் அளித்தார். ஏகலின் முழுக்கோட்பாட்டையும் சிறிதும் மாற்றமின்றி முசோலினி ஏற்றார். அது 'வாழ்க்கையின் எல்லாத் துறைகளின் செயல்களும் அரசுக்காகவே இருத்தல் வேண்டும்; எதுவும் அரசுக்கு மாறாக இருத்தலாகாது; எதுவும் அரசின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டிருத்தலாகாது' என்னும் சருவாதிகாரக் கோட்பாடாகும். அதைக் குரோச்சே மறுத்தார். சியோவென்னியும் குரோச்சேயும் உயர்தர ஏகலியக் கோட்பாட்டாளர்கள்; அதாவது, அரசின் இன்றியமையாமையையும், அரசின் வாயிலாகத் தனியார் முழுச்சுதந்திர ஆளாக நல்வளர்ச்சி பெறுதல் இயலுமென்பதையும் உணர்ந்து கூறிய தாராள இயல்புள்ள குறிக்கோள் அரசுக் கோட்பாட்டை (Idealistic Theory of the State) ஆதரித்தோர் ஆவர். ஆனால், இவர்கள் அரசே உயரிய குறிக்கோளென்றோ, மனிதர் அரசின் நோக்கத்துக்காகச் செயற்பட வேண்டிய ஒரு கருவி என்றோ கூறவில்லை. இவர்களுடைய கருத்து மனிதனுடைய வாழ்வே-குறிக்கோள், அதற்கேற்ற ஒரு கருவியாக இருப்பதுதான் அரசு என்பதாகும். பாசிசமானது, சமூகப் பண்பை அழிக்கும் ஆணவப்போக்கையும், உண்மையை மறைக்கும் ஆரவாரமான பேச்சுக் கலையையும் வளர்க்கிறது; மேலும், அது நேர்மையான முயற்சியை நீக்கிப் போலிமனப்பான்மையையும் கொடுங்கோன்மையையும் வளர்க்கிறது.


**குரோச்சேயைப் பற்றிய மதிப்பீடு**: குரோச்சே வாழ்வு சீர்பெறுவதற்கு உகந்த நல்ல கருத்துகளை விளக்கி இக்கால இத்தாலிய மக்களுக்கு நல்லொழுக்கம் கற்பித்த நல்லாசிரியராவார். சில முக்கிய மாறுதல்களுடன் முடியாட்சி மீட்கப்படுதல் வேண்டுமென்றும், தாராளக் கட்சியின் கொள்கைகள் மீண்டும் இத்தாலிய அரசாங்கத்தில் கையாளப்படுதல் வேண்டுமென்றும் இவர் கூறினார். புதிய இத்தாலியை உருவாக்க எண்ணிய எண்ணம் நிறைவேறாவிடினும், புதிதாகக் குடியாட்சி இயல்புகளோடு அமைக்கப்பட்ட இக்கால இத்தாலி, குரோச்சேயின் நல்லுணர்வினால் தோன்றியது என்பதில் ஐயம் இல்லை. தனித்த வாழ்விலிருந்து கொண்டே இவர், மனித வாழ்வின் இன்ப துன்பங்களையும், அவர்களுடைய முயற்சிகளையும் பரிவோடு ஆராய்ந்தார். இவருடைய இரக்க உணர்வு, மனிதருக்கு நல்வழி காட்டக்கூடிய ஆசிரியராக இவரை ஆக்கிற்று. இவர் சுதந்திரத்தைப் புனிதமானதாகவும், மனிதரின் உயர்ந்த குறிக்கோளாகவும் சருதினார். இரண்டாம் உலகப்போரினால் வலியிழந்து கிடந்த இத்தாலி நாட்டிற்கு மறுவாழ்வளிக்க உழைத்தவராகையால், இவர் இக்கால இத்தாலி நாட்டின் உயிர்ப்பைக் காட்டும் ஓர் அடையாளமாகக் கருதப்படுகிறார். பா.சு.

**துணை நூல்கள்**:

**Edward Heimann**, Freedom and Orders: Lessons from the War, New York, 1947.

**William Ebenstein**, Fascist Italy, New York, 1939.

**குரோசியசு, கியூகோ** (கி.பி. 1583-1645): பன்னாட்டுச் சட்டத்தை உருவாக்கி வளர்ச்சியடையச் செய்ததில் பெரும்பங்கு வகித்த குரோசியசு கியூகோ (Grotius, Hugo) கி.பி. 1583-ஆம் ஆண்டு ஆலந்தியுள்ள தெல்ப்ட்டு (Delft) என்னுமிடத்தில் பிறந்தார். இலைடன் (Leiden) பல்கலைக்கழகத்தில் உயர் பதவியிலிருந்த இவர் தந்தை, மகனின் கல்வியில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார். வயதிற்கு



குரோசியசு, கியூகோ

மீறிய அறிவாற்றலைக் கொண்ட குரோசியசு தம் பதினோராம் வயதில் இலைடன் பல்கலைக்கழகத்தில் மாணவனாகச் சேர்ந்தார். இவர் தம் பதினைந்தாம் வயதில் கலைக்களஞ்சியத்தில் சில பகுதிகளைத் தொகுத்துப் பதிப்பித்தார். அந்த ஆண்டிலேயே ஆலந்து நாட்டிலிருந்து பிரெஞ்சு அரசவைக்கு அனுப்பப்பட்ட உயர் தூதுக்குழுவில் உறுப்பினராகச் சென்றார். 'ஆலந்து நாட்டின் அற்புதம்' (Miracle of Holland) என்று பிரெஞ்சு அரசர் நான்காம் என்றியினால் வருணிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட குரோசியசு

பிரான்சிலுள்ள ஆர்லியன்சு (Orleans) பல்கலைக் கழகத்தில் 'டாக்டர்' பட்டத்தைப் பெற்றார். இவர் ஆலந்தின் வரலாற்றெழுத்தாளராக (Historiographer) கி.பி. 1601-இல் நியமிக்கப்பட்டார்.

குரோசியசு சட்ட வல்லுநர் (Jurist) ஆக மட்டும் விளங்கவில்லை; அரசியல் சூழ்வலி, மொழி, கவிதை, சமயம், வரலாறு ஆகிய பலதிறப்பட்ட துறைகளிலும் சிறந்த அறிஞராக விளங்கினார்.

ஆலந்து நாட்டின் 'கிழக்கிந்தியக் கம்பெனி (Dutch East India Company) கி.பி. 1604-இல் போர்ச்சுகல் நாட்டின் வணிகக் கப்பலைக் கைப் பற்றிய செயல் சட்டப்படி சரியான செயல் என நிறுவும் பொருட்டுக் குரோசியசு 'பரிசு, கொள்ளை பற்றிய சட்டங்கள்' (On the Law of Prize and Booty) என்ற நூலை எழுதினார். அந்நூலின் பன்னிரண்டாம் இயல் 1609-இல் வெளிவந்தது. மற்றப் பகுதிகள் 1868-இல் தான் வெளிவந்தன. அந்நூலில் குரோசியசு மனித குலத்தின் இயற்கைச் சட்டத்தின் (Natural Law) தன்மையை ஆராய்ந்தார். இறைவனின் விருப்பத்திலிருந்து உருவான இயற்கைச் சட்டம் நான்கு தெய்விக ஆணைகளைக் கொண்டது. அவையாவன:1.ஓர் அரசு மற்றோர் அரசைத் தாக்கக் கூடாது. 2. ஓர் அரசு மற்றோர் அரசின் உடைமைகளைக் கைப்பற்றக் கூடாது. 3. ஓர் அரசு மற்றோர் அரசுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளைப் புறக்கணிக்கக்கூடாது. 4. ஓர் அரசு மற்றோர் அரசுக்கு எதிராகக் குற்றம் புரியக் கூடாது. மேற்கூறிய நான்கு ஆணைகள் தனிமனிதனுக்கும் பொருந்தும். இந்நான்கு ஆணைகளை நீதிபதிகள் உறுதியாகக் கடைப்பிடித்துக் காப்பாற்ற வேண்டும்; செயற்படுத்த வேண்டும். அவற்றைக் காப்பாற்றிச் செயற்படுத்த நீதிபதிகள் இல்லையெனில் அவற்றைக் காப்பாற்றும் பொருட்டு அரசு போர் செய்யலாம். நாட்டின் கடல் வாணிகத்திற்கு இடையூறு செய்த போர்ச்சுகல் நாட்டின் கப்பலை ஆலந்து போர் முறையில் கைப்பற்றியது சட்டப்படி நியாயமான செயலேயாகும் எனக் குரோசியசு கூறினார். இக்கருத்தின் வழியே கடல்களில் உலக நாடுகள் அனைத்திற்கும் சம உரிமை உண்டு என்ற கோட்பாட்டைக் குரோசியசு வலியுறுத்தினார்.

இவர் கி.பி. 1610-ஆம் ஆண்டிற்குப் பிறகு உள்நாட்டில் ஏற்பட்ட சமயச் சச்சரவில் அர்மினியன் (Arminian) சமயப் பிரிவினரை ஆதரித்தார். அப்பிரிவினர் தோற்கடிக்கப்பட்டபொழுது குரோசியசும் கைது செய்யப்பட்டுப் பத்து ஆண்டுச் சிறைத்தண்டனையும் பெற்றார். ஆனால், அவர் மனைவியின் திறமையின் காரணமாக கி.பி. 1621-ஆம் ஆண்டு குரோசியசு சிறையிலிருந்து தப்பிப் பிரான்சுக்குச் சென்றார். பிரெஞ்சு அரசர் பதின்மூன்றாம் லூயி இவரை வரவேற்று இவருக்கு ஓர் ஓய்வு ஊதியத்தையும் வழங்கினார்.வறுமையில் வாழ்ந்து கொண்டிருந்த குரோசியசு ஆலந்திற்குத் திரும்பிச் செல்ல 1631-இல் செய்த முயற்சி வெற்றி பெறாமையினால், பாரிசை விட்டு வெளியேறிச் செருமனியிலுள்ள ஆம்பர்க்கு (Hamburg) நகரில் குடியேறினார். சுவீடன் நாட்டு அரசி கிறிசுடியானா (Christiana), கி.பி. 1634-இல் குரோசியசுக்குப் பிரான்சு நாட்டில் சுவீடன் நாட்டுத் தூதுவர் பதவியை வழங்கினார். அப்பதவியை ஏற்றுக் கொண்ட குரோசியசு அதில் பத்து ஆண்டுக் காலம் பணியாற்றினார். இவர் தம் பதவித் துறப்புக் கடிதத்தை அரசிற்குக் கொடுக்க ஆலந்து நாட்டு வழியாகச் சுவீடனுக்கு, கி.பி. 1645-இல் புறப்பட்டார். இவர் ஆலந்து வந்தபொழுது அன்பாக வரவேற்கப் பட்டார். சுவீடனிலிருந்து திரும்பிய பொழுது கி.பி. 1645-இல், இவர் மரணமடைந்தார்.

குரோசியசு கி.பி. 1618-ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுக்காலம் சிறையிலிருந்த பொழுது 'கிறித்தவ நெறியின் உண்மை' (The Truth of Christian Religion) என்ற நூலை எழுதினார். அந்நூல் 1622-இல் வெளிவந்தது. பிற நாட்டுச் சமயங்களினால் ஈர்க்கப்படாமலிருக்கும்பொருட்டுக் கிறித்தவச் சமயத்தின் சிறப்புக் கூறுகளை மாலுமிகளுக்கு எடுத்துக் காட்டுவதற்காக எழுதப்பட்ட அந்நூல் மிக விரைவில் பெரும் செல்வாக்கைப் பெற்றது; எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் அது மொழி பெயர்க்கப்பட்டது.

குரோசியசு எழுதிய நூல்களுள் மிகப் பாராட்டப்பட்டது 'போரும் அமைதியும் பற்றிய சட்டம்' (Law Concerning War and Peace) என்ற நூலாகும். அந்நூல் கி.பி. 1625-இல் வெளிவந்தது. அந்நூல் இதுவரை 74 பதிப்புகளையும், அளவற்ற மொழி பெயர்ப்புகளையும் கண்டுள்ளது. அந்நூலில்தான் குரோசியசு தமது 'நேரிய போர்' (Just War) என்ற அவருடைய போர் பற்றிய கோட்பாட்டை விளக்கியுள்ளார். நாடுகளுக்கிடையேயுள்ள சச்சரவுகளில் நீதிமன்றத்தின் வழியாக நீதி பெற வாய்ப்பு இல்லாத நிலை ஏற்படுமாயின்,பாதிக்கப்பட்ட நாடு நீதி பெறப் போரை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம் என்பது இவர் கருத்தாகும். ஒரு நாடு அதன் உடைமையையும் உரிமையையும் அதற்குச் சேர வேண்டியதையும் பெறப் போர் புரியலாம்; எனவே போர் என்பது, நாடுகளுக்கிடையேயுள்ள சச்சரவுகளைத் தீர்த்து வைக்கக்கூடிய நீதிமன்றம் ஒன்று இல்லாமையினால், இராணுவத்தின் வாயிலாக நடத்

தக்கூடிய ஓர் உரிமைக் கோரிக்கை வழக்கேயாகும் என இவர் கருதுகிறார். மேலும், போர் புரிவதற்கு முன்பும், போர் புரியும் போதும் அதில் ஈடுபட்டுள்ள வர்கள் மேற்கொள்ளும் செயல்கள் நியாய மானவையா நியாயமற்றவையா என்பதை நிருண யிக்கும் பொருட்டுக் குரோசியசு சில கோட்பாடுகளை யும் அந்நூலில் வகுத்துள்ளார். ஆனால், அவருடைய அக்கோட்பாடுகளைப் போரில் ஈடுபட்டுள்ளோர் எவ் வளவு தூரம் கடைப்பிடித்து மதித்துப் போர் செய் தார்கள் என்பதைத் திட்டவட்டமாகக் கூற இயலாத போதிலும், அவருடைய அந்நூல் பன்னாட்டுச் சட் டம் வளர்ச்சியடைவதில் பெரும் பங்கு வகித்துள்ளது என்பதை மறுக்க முடியாது. இன்றும் கூட வழக் கறிஞர்களும் இராச தந்திரிகளும் அந்நூலை ஆதார மாக எடுத்துக் காட்டுகின்றனர். இவர் காலத்தில் நிலவிய பன்னாட்டுக் குழப்ப நிலைகளுக்கிடையே பன்னாட்டு ஒழுக்க முறை என்ற இலட்சியத்தைத் தன்னம்பிக்கையோடு கடைப்பிடித்தவர் குரோசியசு ஆவார். சு.மு.

**துணை நூல்கள்:**

**Oppenheim, L.,** International Law: A Treatise, Vol.I, Longmans, London, 1970.

**William Knight, S.M,,** The Life and Works of Hugo Grotius, Sweet & Maxwell, London, 1925.

**குரோசியா:** ஐரோப்பாவில் அங்கேரி நாட் டின் ஒரு பகுதியாக இருந்த குரோசியா (Croatia) முதலாம் உலகப் போருக்குப் பிறகு யூகோசுலாவியாவுக் குக் கொடுக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரின் போது இட்லர் (Hitler) குரோசியாவைக் கைப்பற்றி இங்குத் தனி ஆட்சி ஏற்படுத்தினான். அப்போருக் குப் பிறகு யூகோசுலாவியாவைச் சேர்ந்த குடியரசு களுள் ஒன்றாகக் குரோசியா விளங்கலாயிற்று. இங் குள்ள குரோட்டு மக்கள் சிலாவிய (Slav) இனத்தைச் சேர்ந்தவர்கள். குரோட்டு மொழியும் செருபிய மொழியும் தொடர்புடையன.

யூகோசுலாவியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள இக் குடியரசின் பரப்பு 56,524 ச.கி.மீ. இதன் தலைநகர் சாக்ரெபு (Zagreb). குரோசியாக் குடியரசில், குரோசியாவுடன்கூட, இசுலேவோனியா (Slavonia), தால்மேசியா (Dalmatia), இசுத்திரியா வின் (Istria) பெரும்பகுதி ஆகியன அடங்கும். மேலைக் குரோசியா ஆல்ப்சு மலைத்தொடரைச் சார்ந்தும், கிழக்குக் குரோசியா சாவா, திராவா ஆறுகளை அடுத்தும் உள்ளன. கிழக்குக் குரோசியா




குரோசியா

மக்கள் பெரும்பாலும் வேளாண்மையையே மேற் கொண்டுள்ளனர். இந்நாட்டில் மூன்றில் ஒரு பகுதி காடுகள். இங்கிருந்து மரங்கள் ஏற்றுமதியாகின்றன. நிலக்கரிச் சுரங்கங்கள் இந்நாட்டில் மிகுதி. மேலும் செம்பு, அலுமினியம், பாறை எண்ணெய், இரும்பு ஆகியவை கிடைக்கின்றன. யூகோசுலாவியா முழு வதிலும் மிகுதியான அளவுக்குத் தொழில் வளமுள்ள பகுதி குரோசியாவே. சுற்றுலாப் பயணிகள் மூலம் இக்குடியரசுக்கு மிகுந்த வருமானம் கிடைக்கிறது.

**வரலாறு:** குரோசியாவில் கி.பி. 7-ஆம் நூற்றாண் டில் குரோட்டுமக்கள் குடியேறினர். அவர்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமயத்தைப் பின் பற்றினர். குரோட்டுமக்கள் (Croats) அங்குச் செல் வதற்கு முன்னர் அப்பகுதி உரோமானியப் பேரரசின் ஒரு தனி இராச்சியமாக அமைந்திருந்தது. குரோசி யாவில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உள்நாட்டுக் கலகங்கள் ஏற்பட்டதால் சீர்கேடுகள் பெருகின. அந்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அங்கேரி (Hungary) 1901-ஆம் ஆண்டில், அந்நாட் டைத் தன்னடிப்படுத்தியது. அதன்பிறகு எட்டு நூற்றாண்டுகள் அங்கேரி ஆட்சி அங்கே நிலவிய போதிலும், குரோட்டுமக்கள் தங்களுக்குத் தனிச் சட்டசபையைப் பெற்றிருந்தனர்.


அரசப் பேராளர் ஒருவர் குரோசியாவில் ஆட்சி நடத்தினார். குரோசிய நிலமானியப் பிரபுக்கள் கி.பி. 1527-இல் ஆப்சுபர்கு (Hapsburg) அரசர்களைத் தம் ஆட்சியாளராக ஏற்றுக்கொண்டனர். அதற்கு முக்கிய காரணம், உதுமானியத் துருக்கியரினால் குரோசியாவுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தடுக்க ஆப்சுபர்கு குல மன்னர்கள் இணங்கியதே யாகும். அங்கேரியின் ஆதிக்க வெறியினால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் குரோசியா துயருற்றது. அங்கேரியினால் கி.பி. 1848-இல் நிறைவேற்றப்பட்ட சில சட்டங்கள் குரோசியரின் உரிமைகளை மிகவும் பாதித்தன. ஆசுத்திரிய பிரசியப் போருக்குப் பிறகு கி.பி. 1867-இல் ஆசுத்திரியா-அங்கேரிய இரட்டை முடியாட்சி அமைந்தபின், குரோசியாவும் இசுலோவேனியாவும் ஒன்றாக இணைக்கப்பட்டு அது அங்கேரிய முடியாட்சிக்கு உட்பட்ட ஒரு சுதந்திர நாடாகியது.

முதலாம் உலகப் போரின் விளைவாக, 1918-இல் ஆசுத்திரிய-அங்கேரி அழிவுற்றபின், செருபியர், குரோட்டு மக்கள், இசுவோவினர் (Sovenes) ஆகியோரை இணைத்துப் புதிய ஒரு நாடு அமைக்கப் பெற்றது. குரோசியர், தனித்துப் போகக் கிளர்ச்சி செய்யலாயினர். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் 1941-இல் ஒரு சுதந்திரக் குரோசிய நாடு அமையப் பெற்றது. ஆனால், அது இத்தாலிய, செருமானிய இராணுவஆதிக்கத்திற்கு உட்பட்டதாயிற்று. குரோசியருள் பெரும்பான்மையினர், இத்தாலிய பாசிசக் கொள்கையை (Fascism) வெறுத்தனர். அவர்களுக்குத் தலைமை தாங்கிய சோசிப் புரோசு திட்டோ (Josip Broz Tito) குரோசிய நாட்டவர். யூகோசுலாவியா புதிதாக அமைக்கப்பட்டபொழுது அதற்குட்பட்ட ஆறு குடியரசுகளுள் குரோசியாவும் ஒன்றாகியது. தெ.பா.

**குரோட்டு சார்சு**: கிரேக்க நாட்டின் வரலாற்றை எழுதியவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் சார்சு குரோட்டு (George Grote) என்பவர் ஆவார். கிரேக்க வரலாற்றை விரிவாக 12 தொகுதிகளில் இவர் எழுதினார். அவை கி.பி. 1846 முதல் 1856 வரை உள்ள 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இதைத்தவிர கி.பி. 1856-ஆம் ஆண்டில், பிளேட்டோவும் சாக்ரட்டீசின் பிற நண்பர்களும் என்ற நூலும் இவரால் வெளியிடப்பட்டது. அரிசுடாட்டிலைப் பற்றிய இவரது நூல் முற்றுப் பெறவில்லை. இவரது மரணமே அதற்குக் காரணமாகும்.

இங்கிலாந்தில் உள்ள கென்டில்கிளேகில் (Kentil Cley Hill) என்ற ஊரில் கி.பி. 1794-ஆம் ஆண்டில், இவர் பிறந்தார். தொடக்கத்தில் இவர் ஒரு வங்கியில் பணியேற்றார். இவர் மிக ஆர்வத்துடன் பல நூல்களைக் கற்று வந்தார். இவர் சிறப்பாக, செரிமி பெந்தம் (Jeremy Bentham), சேம்சு மில் (James Mill) தாவீது இரிக்கார்டோ (David Recardo) முதலிய பொருளாதார வல்லுநர்களின் நூல்களை விரும்பிக் கற்றார். இவர் கற்றுணர்ந்த நூல்களின் விளைவாக, இவரிடம் தீவிர முன்னேற்றக் கருத்துகள் உருவாயின. அக்காலத்தில் இங்கிலாந்தின் பாராளுமன்றம் சீர்திருத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி கி.பி. 1821-ஆம் ஆண்டில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் கி.பி. 1832-இல் நிறைவேறியது. அதுமுதல் கி.பி. 1841 வரை அம்மன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே பணியாற்றினார். இலண்டன் மாநகர்ப் பல்கலைக்கழகம் இவரை கி.பி. 1862-இல் துணைவேந்தராக அமர்த்திப் பெருமையுற்றது. இவர் கி.பி. 1871-இல் மரணமடைந்தார். தெ.பா.

**குரோபர், ஆல்பிரடு உலூயி** (கி.பி.1876-1960) தலைசிறந்த அமெரிக்க மானிடவியலறிஞர்; பண்பாடுபற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்தவர்.



குரோபர்

ஆல்பிரடு உலூயி குரோபர் (Alfred Louis Kroeber) கி.பி. 1876-இல் நியூசெர்சியில் (New Jersy) ஆபோக்கன் (Hoboken) என்னுமிடத்தில் பிறந்தார்.

குரோபர் இளங்கலைப் படிப்பைக் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் பயின்றபின். டாக்டர் பட்டத்தைப் பிரான்சு போவாசின் (Franz Boas) மேற்பார்வையில் பெற்றார். மானிடவியலின் அனைத்துப் பிரிவுகளிலும் கொண்டிருந்த ஆய்வுத்திறனால் குரோபர் 20-ஆம் நூற்றாண்டின் முதற்பாதிக் காலத்தில் வாழ்ந்த அமெரிக்க மானிடவியலாருள்முதன்மையானவராகத் திகழ்ந்தார். அமெரிக்க இந்தியரின் இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology), நியூ மெக்சிகோ, மெக்சிகோ, பெரு ஆகிய இடங்களைப் பற்றிய தொல்லியல், மொழியியல், நாட்டுப்புறவியல், உறவுமுறை (Kinship), சமுதாய அமைப்பு (Social Structure) ஆகிய பரப்புகளில் குரோபரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இவரது மானிடவியல் துறை வாழ்க்கையும் அமெரிக்காவில் கல்விசார் நிலையில் மானிடவியலின் தோற்றமும் ஒரே காலத்தில் அமைந்திருந்ததால், அமெரிக்க மானிடவியலின் வளர்ச்சியில் இவரது பணிகள் அழியா இடம்பெற்றுள்ளன.

இவரது தலைசிறந்த நூலாக மதிக்கப்படுவது 1923-இல் வெளியிடப்பட்ட மானிடவியல் (Anthropology) என்னும் நூலாகும். நியூமெக்சிகோவின் தொல்லியலை (1915-20) ஆராய்ந்து, அமெரிக்காவின் முன்வரலாற்றைக் காண்பதற்குத் தெளிவான காலக் கணிப்பினை இவர் உருவாக்கினார். இந்த ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்ட பெருவியத் தொல்லியல் (Peruvian Archaeolog-1942) என்னும் நூல் அமெரிக்க முன்வரலாற்றுக் காலத்தைப் பற்றி விரிவாகக் கூறுவதாக அமைந்தது.

மொழியியல் பற்றிய ஆய்வுகளை இவர் தம் வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டார். கலிபோர்னியஇந்தியர்களிடையேமேற்கொண்ட மொழி ஆய்வுகளின் விளைவாக மொழிகளுக்குள்ளேயும் மொழிகளுக்கிடையேயும் வரலாற்றுக் காலத்தில் நிகழும் மாறுதல்களை அறிவதில் சிறந்த முறையியலையும் (Methodology) அணுகுமுறையையும் ஏற்படுத்தினார் இந்தப் பட்டறிவினால் அமெரிக்க இந்தியர்களின் கிளைமொழிகளைப் பற்றிய மதிப்பாய்வை மேற்கொண்டார். இவர் இவ்வகையான ஆய்வுகளை மேற்கொண்ட முன்னோடி என்னும் பெயர் பெற்று, கலிபோர்னிய இந்திய மொழிகளைப் பற்றி 'யோக்குட்டுகளின் கிளைமொழி மதிப்பாய்வு' (Yokuts Dialect Survey-1963) என்னும் நூலை எழுதி முடித்தார். இந்த நூல் இவரது இறப்பிற்குப்பின் வெளியிடப்பட்டது.

இவர் மானிடவியலின் தொடக்க காலத்திலிருந்தே ஆதிக்கக் கோட்பாடாக இருந்துவரும் பண்பாடு பற்றிப் பல அணுகுமுறைகளில் அதன் தன்மை, செயல்கள், இயக்கத் தன்மை முதலான அனைத்து நிலைகளையும் ஆராய்ந்தார். உலகனைத்துமுள்ள அனைத்து மக்களிடமும் உள்ள பண்பாட்டின் பொதுத் தன்மைகளைக் கண்ணுற்று, அதன்வழிப் பண்பாட்டுப் படிமலர்ச்சி (Cultural Evolution), பண்பாட்டுப் பரப்பு (Culture Area), பண்பாட்டுப் பரவல் முதலான நிகழ்வுகளைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். இவர் நூல்களுள் பண்பாட்டு வளர்ச்சியின் வெளித்தோற்றம் (Configurations of Culture Growth-1945), பண்பாட்டின் தன்மை (The Nature of Culture-1952), வடிவமும் நாகரிகங்களும் (Style and Civilizations-1957), பண்பாடு, நாகரிகங்கள் பற்றிய பெயர்ப்பட்டியல் (A Roster of Civilizations and Culture-1962)முதலியனகுறிப்பிடத்தக்கன. குரோபர் 1960-ஆம் ஆண்டு பாரிசில் காலமானார். சீ.ப.

**குரோமாக்னன் மனிதன்:** மனித இனப் படிமலர்ச்சி வரலாற்றைக் கூறும் எலும்புக்கூடுகள் உலகின் பல பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்தகைய புதைபடிவ மனித இனங்களுள் ஒன்றைச் சேர்ந்ததே குரோமாக்னன் மனித (Cro-Magnon Man) இனமாகும். இவ்வினத்தைச் சேர்ந்த மனிதனின் 5 எலும்புக்கூடுகள் தெற்குப் பிரான்சில் தார்டான் (Dordogne) மாவட்டத்திலுள்ள குரோமாக்னன் (Cro-Magnon) என்னுமிடத்தில் கண்டெடுக்கப் பட்டதால், அவ்விடத்தின் பெயரே இந்த மனித இனத்திற்குச் சூட்டப்பட்டது.

முதன்முதலில் குரோமாக்னன் மனித எலும்புக் கூடுகளை கி.பி. 1868-ஆம் ஆண்டு உலூயி இலார்டெட்டு (M. Louis Lartet) என்பவர் கண்டறிந்தார். பின்னர் உலகின் பிற பகுதிகளிலும் குரோமாக்னன் மனித எலும்புக் கூடுகள் கண்டறியப்பட்டதால், இவ்வகை மனிதர்கள் பரவலாக வாழ்ந்தனர் என்பது புலனானது. கிரிமால்டிக் (Grimaldi) குகையிலும் இவ்வகை எலும்புக்கூடு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. மண்ணியல் காலப்படி இவர்கள் ஈற்றயலூழிக் (Pleistocene) காலத்தில் வாழ்ந்தார்கள்.


குரோமாக்னன் மனிதர்கள் நல்ல உயரத்தையும் திண்மையான உடற்கட்டையும் சீரான முக அமைப்பையும் பெற்றிருந்தனர். இவர்களின் மண்டையோடு நீண்டு குறுகிய தலையமைப்பைச் (Dolichocephalic) சேர்ந்தது. மண்டையோடும் 20.3 செ.மீ. நீளத்தையும் 15.0 செ.மீ. அகலத்தையுமுடையதாகும். இம் மண்டையோட்டின் கொள்ளளவு 1660க.செ.மீ. எனக்


கீய்த்தும் (Keith) 1590 க.செ.மீ. எனப் பவுலும் (Boule) கூறுவர். மண்டையோட்டின் முன்புறப் பகுதியும் நடுப்புறப் பகுதியும் ஒழுங்காக வளர்ச்சி பெற்றிருந்தன. தி குவாட்ரிபேச்சு என்பார்(De Quatrefages) இம்மக்களை நன்கு அறிவு வளர்ச்சி பெற்று முன்னேற்றமடைந்தவர்கள் எனக் குறிப்பிடுவார். மண்டை ஓடு நீண்டு குறுகி இருந்தபோதிலும், முகம் மிகத் தட்டையாகவும் நன்கு அகன்றும், மேலண்ணம் குறுகியும் ஆழமாகவும் தாழ்வாகவும் அமைந்திருந்தன. நெற்றிப்பகுதி அகன்று தட்டையாகவும் இக்கால மனிதனுக்கு இருப்பது போன்று மேல்நோக்கி எழும்பியும் இருந்தது. முன்நெற்றி எலும்பின்கீழ்க் கண்குழிகள் மிகவும் அகலமாகவும் கண் விளிம்புகள் பெரிதாகவும் கன்ன எலுப்புகள் வலிவாகவும் எடுப்பாகவும் காணப்பட்டன. மூக்குக் குறுகி நீளமாகவும் எடுப்பாகவும் இருந்தது.

நீண்ட எலும்புகளின் உடல் தசைப் பிடிப்புகளின் பதிப்புகள் நன்கு புலப்பட்டன. அதனால் இவர்கள் உயரமுள்ளவர்களென்றும் நல்ல உடற்கட்டை உடையவர்கள் என்றும் மதிப்பிடப்பட்டார்கள். குரோமாக்னன் மனிதர்களின் உயரம் 5 அடி 6.25 அங்குலம் எனப் பொதுவாக மதிப்பிடப்பட்டாலும், பவுல் என்பார் இவர்கள் 5 அடி 11.6 அங்குலம் உயரமுடையவர்கள் எனக் கூறுவார். மேற்பகுதியை விடக் கீழ்க்கை மிக நீளமாக இருந்தது. கால்கள் சிறிது வளைந்து காணப்பட்டன. மேற்கண்ட பண்புகளை இக்காலக் காக்கேசியர்களின் (Caucasoids) பண்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, காக்கேசியர்கள் குரோமாக்னன் மனிதனிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

ஈற்றயலூழிக் காலத்தில் வாழ்ந்த குரோமாக்னன் மனிதர்கள் கற்கருவிகளைத் தயாரித்ததற்கு, அவர்களுள் பலர் ஒன்று சேர்ந்து கூட்டு முறையில் வேட்டையாடியதே காரணம் எனக் கருதப்படுகிறது. அவர்கள் மீன்பிடிப்பதிலும் கலைமான்களையும் (Reindeer) பெரிய விலங்குகளையும் யானைகளையும் வேட்டையாடுவதிலும் வல்லவர்களாக இருந்தனர் என்பதற்குக் குரோமாக்னன் குகையில் சான்றுகள் கிடைத்துள்ளன. இத்தகைய கற்கருவிகள், எலும்புகள், விலங்குகளின் கொம்புகள், தந்தத்தினாலான கருவிகள் முதலானவை குரோமாக்னன் குகைகளில் மனித எலும்புக்கூடுகளுடன் தோண்டியெடுக்கப்பட்டன. எனவே, குரோமாக்னன் மனிதர்கள் கருவிகள் செய்வதில் அவர்களுக்கு முன்பு வாழ்ந்த மனிதரை விட மிகவும் முன்னேறியவர்கள் என்பது கூறப்படுகிறது.

குரோமாக்னன் மனிதர்கள் பல குழுக்களாகச் சேர்ந்து வாழ்ந்தனர். ஒவ்வொரு குழுவிலும் சுமார் 30 முதல் 100க்கு மேற்பட்டவர்கள் இருந்தனர். அக்குழுவைச் சேர்ந்தவர்களுக்கிடையே திருமணங்களும் நடந்தன. இவர்கள் கூட்டாக நிலைத்து வாழ்வதற்குப் பல சடங்குகளை மேற்கொண்டனர். இவர்கள்





குரோமாக்னன் மண்டையோடு
அ. பக்கத் தோற்றம் ஆ. முகப்புத்தோற்றம்

அழகுப் பொருள்கள் பயன் படுத்தியதாகத் தெரிகிறது. முதன்முதலாக நகைகளைத் தயாரித்து அணிந்தார்கள். வரிசை வரிசையாக வண்ண மணிகளால் அலங்கரித்த ஆடைகளையும் தந்தத்திலான காப்புகளையும் மின் எலும்புகளாலும் துளையிட்ட பற்களாலுமான கழுத்தணிகளையும் அணிந்திருந்தார்கள். இந்த அணிகலன்கள்ஒரு குடும்பத்திலிருந்து வேறொரு குடும்பத்தை அடையாளம் காண்பதற்கும் பல குடும்பங்கள் சேர்ந்த குழுக்களிலுள்ள மக்களின் தகுதியை அறிவதற்கும் உதவின.

சடங்குகள் மட்டுமல்லாமல், முதன்முதலாக ஓவியங்கள் வரைவதிலும் சிற்பங்கள் செதுக்குவதிலும் இவர்கள் ஈடுபட்டனர். மனிதனின் படிமலர்ச்சியில் அவ்வோவியங்கள் வரலாற்றுக் காலத்திற்குமுற்பட்ட மனிதர்களின் அரிய சாதனையின் சான்றுகளாகக் கருதப்படுகின்றன. அத்தகைய ஓவியங்களையும் சிற்பங்களையும் அம்மனிதர்கள் ஒளிபடாத இடங்களான இருண்ட குகைகளின் உட்புறச் சுவர்களில் வரைந்தனர்.

குரோமாக்னன் மனிதர்களின் கலையைச் சித்திரிக்கும் குகைகளுள் பெரும்பாலானவை பிரான்சு நாட்டிலும் இசுபெயின் (Spain) நாட்டிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய குகைகள் பிரான்சில் 65 இடங்களிலும், இசுபெயினில் 30 இடங்களிலும் உள்ளன. இவற்றுள் பாதிக்கு மேல் இசுபெயின் நாட்டின் 90 மைல் நீள வடக்குக் கடற்கரை ஓரத்திலும், மற்றவைபிரான்சு நாட்டில் இலெசு எசீசு (Les Eyzies) என்னுமிடத்திலும் இலாசுகாக்சு (Lascaux) என்னுடமித்திலும் உள்ளன.

இலாசுகாக்சுக் குகையின் கூடத்தில் சிவப்பு, கறுப்பு வண்ணங்களில் மிகப் பெரிய உருவமுடைய கொம்புகள் உள்ள விலங்குகளின் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இருளடைந்த இக்குகையில் வெளிச்சம் கொண்டு பார்த்தபோது, இவ்வோவியங்கள் அனைத்தும் முப்பரிமாண வடிவத்தில் திரையில் காண்பது போன்று தோற்றமளித்தன. இக்கூடத்தின் மேற்பகுதிச் சுவரில் கறுத்து, வளைந்த கொம்புகளுடைய 4 காளை மாடுகள் கருமையான கோடுகளினால் வரையப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று,குகை ஓவியங்களிலேயே மிகப் பெரிதானது சுமார் 18 அடி நீளமானது. மேலும், 2 எருதுகள் ஒன்றோடொன்று மோதுவது போன்றும் அவற்றின் இடையில் 5 செவ்வண்ண மான்கள் இருப்பது போன்றும் உள்ள ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன.

இலெசு எசீசு என்னுமிடத்தில்'பாண்ட்-டி-காம்' (Font-de-Gaume), இலெசு காம்பரெல்லசு (Les Combarelles) ஆகிய இரு குகைகளில் மேலும் சில ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாண்ட்-டி-காம் குகையில் 200 ஓவியங்களும் செதுக்கப்பட்ட சில ஓவியங்களும் காணப்பட்டன. அவற்றுள் பெரும்பான்மையானவை சிதைந்திருந்தன. இலீ காம்பரெல்லசு குகையின் குறுகிய பாதையில் 300க்கு மேற்பட்ட செதுக்கப்பட்ட ஓவியங்கள் காணப்பட்டன. இவ்வோவியங்களை விளக்கின் ஒளியின்றிக் காண இயலாது. மேலும், இப்பகுதியில் கேப் பிளாங்கு (Cap Blanc) என்னுமிடத்திலுள்ள குகையில் குதிரைகளும் பெரிய விலங்குகளும் செதுக்கப்பட்டுள்ளன. கோக்னேக் (Cougnac) குகையில் பெரிய உருவமுடைய எல்கு (Elk) என்ற மான் கரிய கோடுகளால் வரையப்பட்டுள்ளது. அதன் முன்னங்கால்களுக்குமேல் ஒரு மனிதன் 3 ஈட்டிகளுடன் பாய்வது போன்ற காட்சியும் வரையப்பட்டுள்ளது. காமார்க்கு (Commarque) என்ற குகையின் குறுகிய கூடத்தில் பார்வை மட்டத்தில் பெரிய உருவமுடைய குதிரைத் தலை வரையப்பட்டுள்ளது.

இசுபெயின் நாட்டின் வடக்குக்கடற்கரையோரத்தில், சாண்டில்லானா-டி-மார் (Santillana De Mar) என்ற கிராமத்திலுள்ள அல்தாமிராக் (Altamira) குகை ஓவியங்களை கி.பி. 1875-ஆம் ஆண்டில் தான் மார்சலினோ-டி-சாடூலா (Don Marcelino De Sautuola) என்பவர் ஆராய்ந்து கண்டுபிடித்தார். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட இத்தகைய ஓவியக் கலையின்காலம் சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. மேற்குறிப்பிட்ட குறிப்புகள் முன்வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்தகுரோமாக்னன் போன்ற பல இனத்தவரின் திறமைக்குச் சான்றுகளாக உள்ளன. பா.ஜ.

**துணை நூல்கள்:**

**Clark, .W.E.,** LeGros, History of the Primates, British Museum of Natural History, London, 1953.

**Howells, W.,** Mankind in the Making, Doubleday & Co., Garden City, New York, 1958.

**குல்பர்கா** கருநாடக மாநிலத்திலுள்ள ஒரு மாவட்டம். இம் மாவட்டத்தின் தலைநகரமும் குல்பர்கா ஆகும். இது கல்பர்கி (Kalburgi) எனவும் சொல்லப்படுகிறது. பாமினி அரசின் தலைநகராக கி.பி. 1347 முதல் கி.பி. 1424 வரை குல்பர்காவே தொடர்ந்து இருந்தது. இங்குக் கண்ணைக் கவரும் பள்ளிவாசல்களும், அழகிய கட்டடங்களும்

கோட்டைகளும், வரலாற்றுப் புகழ் மிக்க நினைவுச் சின்னங்களும் உள்ளன. குல்பர்கா மாவட்டத்திலுள்ள கனகபுரம், புனிதப் பயணிகளின் மையமாக விளங்குகிறது. கனகபுரம தத்தாத்ரேய பீடமாக விளங்குகிறது.

பாமினி அரசின் தலைநகரான குல்பர்கா (Gulbarga) அமதுசா காலத்தில் (கி.பி. 1422-1436) பீடாருக்கு மாற்றப்பட்டது. குல்பர்காவில் பாரசீக, வடமொழி, கன்னடக் கல்வெட்டுகள் மிக்க அளவில் காணப்படுகின்றன. பாரசீகக் கல்வெட்டுகள் அதிக அளவில் காணப்படும் கர்நாடக மாவட்டங்களுள் பீசப்பூர், குல்பர்கா, தார்வாடு ஆகியன குறிப்பிடத் தக்கவையாகும். இவற்றுள் இம்மாட்டத்தைச் சேர்ந்த சாகரில் கத்ரத்து சூபி சர்மசுது (Hadrat sufi Sarmast) கல்லறையில் உள்ள கல்வெட்டில் முகம்மது மகமூது (Muhammud Mahmud) என்னும் பாமினி அரசனின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பது சிறப்பிற்குரியது.

குல்பர்காவில் காணப்படும் கட்டடங்கள் பாமினி அரசனான அல்லாவுதீன் அசன் பாமன்சாவின் ஆட்சிக் காலத்திலிருந்து (கி.பி. 1347) தொடங்குகிறது. இவ்வரசன் காலத்தில் அழகிய, பெரிய கோட்டை ஒன்று இங்குக் கட்டப்பட்டது. படைகளின் பாதுகாப்புப் பொருட்டு இக்கோட்டை கட்டப்பட்டதாகத் தெரிகிறது. அழிந்த நிலையில் காணப்படும் இக்கோட்டையைச் சுற்றிப் பெரிய அகழி ஒன்றுள்ளது. பெரும்பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள இந்த அகழியின் அகலம் சில இடங்களில் 90 அடிக்கும் அதிகமாக உள்ளது. சுவர் முழுவதும் ஆங்காங்கே அரைவட்ட வடிவிலான தொளைகள் போடப்பட்டுள்ளன. இவற்றிற்கு அருகில் சுழல்மேடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோட்டையின் நுழைவாயிலில் காவற் கோபுரங்களும் கட்டப்பட்டுள்ளன. இது போன்றபாதுகாப்புக் கோட்டைக்குள் அரச மண்டபங்களும் அரங்குகளும் அரண்மனைகளும் கட்டப்பட்டுள்ளன. இக்கோட்டைகள் மேனாட்டுப் பாணியில். சிரியாநாட்டுக் கலைஞர்களால் கட்டப்பட்டவை என்று கலைஞர் பெர்சி பிரவுன் (Percy Brown) கருதுகிறார்.

குல்பர்காவில் கி.பி. 1367-இல் பாமினி அரசரால் கட்டப்பட்ட சாமி மசூதி (Jami-Masjid) கலையழகிலும் கவர்ச்சியிலும் மிக்கது. இந்தியாவில் காணப்படும் மசூதிகளிலே இது மிகச் சிறந்ததாகும். 216 அடி நீளமும் 176 அடி அகலமும் கொண்டு, நடுவில் பெரிய முற்றம் (Courtyard) ஒன்றினையும் 63 கூடுகளையும் (domes) கொண்டு விளங்கும் இம்மசூதி தனித்த பாணியுடன் விளங்குகிறது. அமைப்பில் இம்மசூதி இசுபெயின் (Spain) நாட்டிலுள்ள கார்டோவா மசூதியை ஒத்துள்ளது. தொழுகை புரிவோர்க்கு வசதியாக முன்புறம் முற்றம் இன்றி, உட்புறத்தில் அதனைக் கட்டியது பாராட்டுக்குரியது என்று சேம்சு பெர்கூசன் (James Fergusson) கருதுகிறார்.

குல்பர்காவில் நீண்ட கடைவீதி ஒன்று, இருமருங்கிலும் பக்கத்திற்கு 61 வளைவுகள் வீதம் 122 வளைவுகளுடன் காணப்படுகிறது. இவ்வளைவுகள் முடிவு பெறும் இடங்களில், நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்ட கட்டடங்களும் நன்கு கட்டப்பட்டுள்ளன. 570 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்ட இத்துணை அழகான கடைவீதியை இந்தியாவில் வேறெங்கும் காண இயலாது. உயர்ந்த நுழைவாயிலுடன் கூடிய சரிவான சுவர்களைக் கொண்ட, பல கல்லறைக் கட்டடங்களும் இந்நகரில் காணப்படுகின்றன. இவற்றுள் 'ஏழு மன்னர் கல்லறைகள்' குறிப்பிடத்தக்கன. இவற்றுள் முற்பகுதியைச் சேர்ந்த கல்லறைகள் துக்ளக்குக் கலைப்பாணியைப் பின்பற்றியதாகத் தெரிகிறது. பின்னால் நிறுவப்பட்ட கல்லறைகளில் கி.பி. 1422-இல் மறைந்த பாமினி அரசனான தாசுதீன் பிரோசாவின் கல்லறை மிகவும் பாராட்டத்தக்க வகையில் கட்டப்பட்டுள்ளது. வெளிப்புறத்தில் இதன் நீளம் 158 அடியும், அகலம் 78 அடியும் கொண்டு, 48 அடி உயரத்துடன் சிறப்பாக விளங்குகிறது. பண்டே நவாசு மசூதி (The Bande Nawaz Darga) பேரழகுடன் கட்டப்பட்டுக் குல்பர்காவின் அணியெனத் தி கின்றது. அரசியல் துறையில் புகழ் பெற்றுள்ள குல்பர்கா கலைத்துறை வரலாற்றிலும் தனக்கெனத் தக்கதோர் இடத்தைப் பெற்றுள்ளது.

கருநாடக மாநிலத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள கல்பர்கி (குல்பர்கா) நகரம் பிற கருநாடக மாநிலத்து முக்கிய நகரங்களுடனும், பிற மாநில நகரங்களுடனும் இரயில் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. இங்குச் சில புகழ் பெற்ற கல்லூரிகளும் பள்ளிகளும் உள்ளன. ம.இ.

**குல்மார்க்கு** இந்தியாவில், சம்மு-காசுமீரில் (Jammu-Kashmir) 8500 அடி உயரத்தில் உள்ள ஓர் அழகிய இடம். கண்ணுக்கெட்டியவரையில் பூக்கள் நிறைந்து காணப்படும் பூவெளி (Meadow of Flowers), குல்மார்க்கு. காசுமீர மொழியில் மார்கு (Marg) என்றால் உயர்ந்த புல்வெளி (Upland-Meadow) என்பது பொருள். அயல்நாட்டுப் பயணியர் இங்கு வந்து இன்பமாகப் பொழுதுபோக்குவதைப் பெரிதும் விரும்புகின்றனர். ஐரோப்பிய நாட்டுச்சூழல், இங்குள்ள பூங்காக்களிலும் ஏரிகளிலும் பள்ளத்தாக்கு

களிலும் காணப்படுவதால், இது அயல்நாட்டினரைப் பெரிதும் கவர்ந்திழுக்கின்றது.

முன்பு ஆங்கில இருப்பு அலுவலரும் (British Residant)அவர்தம் அதிகாரிகளும் துணையாட்களும் குல்மார்கில் (Gulmarg) தம் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டிருந்ததால், இவ்விடத்தில் பல வசதிகளும், வசந்தமான சூழலும் ஏற்படுத்தப்பட்டன. ஐரோப்பிய முறையில் அமைந்துள்ள வரிப்பந்து மைதானம், குழிப்பந்து மைதானம், பெரிய வசதிமிக்க உணவகங்கள் (Hotels) ஆகியன இங்குள்ளதால் இங்குப் பொழுது போக்குவது மிகவும் விரும்பத்தக்கதாக உள்ளது. எனவே, இது சிறந்த கோடை காலத் தங்குமிடமாக அமைந்துள்ளது.

குல்மார்க்கில் அழகே உருவாக அமைந்துள்ள வட்டமான பாதை (Circular Path) யிலிருந்து கீழே பார்த்தால் எழிலார்ந்த காசுமீரப் பள்ளத்தாக்கு முழுவதையும் கண்டுகளிக்கலாம். சம்மு-காசுமீரின் தலைநகரான சிரீநகர் குல்மார்க்கிலிருந்து பார்ப்பதற்கு மிகவும் அழகாகத் தோன்றும். அதுவும் இரவில் பார்த்தால் சிரீநகர் மிக்க அழகாகத் தோன்றும். 26,000 அடி உயர்ந்து, பனிபடர்ந்து, அழகே உருவாகக் காணப்படும் நங்கபர்வதம் சிகரத்தை இங்கிருந்து பார்ப்பது சிறப்பாகும். இங்குச்சுவையான பழங்களும் கிடைக்கின்றன. அழகிய ஏரிகளில் படகோட்டுதல் ஒரு சிறந்தஇன்பப்பொழுது போக்காகும். இதற்கு அருகில் தான் காசுமீரின் புகழ்பெற்ற 'தால் ஏரி' உள்ளது. குல்மார்க்கிற்குச்சிறிய உந்துவண்டிகளிலும் குதிரைகளிலும் பயணம் செய்ய வசதிகள் உண்டு. வாடகைக் குதிரை மீதமர்ந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பது சுவையானது. ம.இ.

**குல்லூகபட்டர்** மனுநீதிக்கு (மனுசுமிருதி) உரை எழுதியவர். வங்காளியான இவர் வடமொழியில் இதனை எழுதியுள்ளார். மனுநீதிக்கு எழுதப்பட்ட பல உரைகளுள் இவருடைய உரையே தலை சிறந்தது என்பர். இதனால் இவர் புகழ் பெற்றுள்ளார். ம.இ.

**குலக்குறி**: சில சமூகத்தினர் ஒருசில இயற்கைப் பொருள்களிலிருந்து தோன்றியதாகவோ அதனோடு வேறு பல முறைகளில் தொடர்புற்று உள்ளதாகவோ நம்புவதால் அப்பொருள்களைத் தம் குலத்தின் குறியாகக் கொண்டுள்ளனர். குலக்குறிகளாக (Totems) விலங்குகள், தாவரங்கள், ஆறுகள், மலைகள் போன்றவை உள்ளன. குலக்குறி அமைப்பு பெரும்பான்மையாகப் பழங்குடிச் சமுதாயத்தில் மட்டுமே காணப்படுகிறது. இவர்களிடையே இவ்வமைப்பு சமுதாய வாழ்க்கையை நெறிப்படுத்தும் தன்மையைக் கொண்டுள்ளது. திருமண முறை, உறவு முறை, வழிபாட்டு முறை, உணவு முறை முதலானவை அவற்றுள் சில. குலக்குறி அமைப்புடைய ஒவ்வொரு சமுதாயத்தினரும் தமது குலக்குறி மீது கொண்டுள்ள நம்பிக்கைகள், நடைமுறைகள் முதலானவற்றை மொத்தமாகக் குலக்குறியம்(Totemism) என்று கூறலாம்.

குலக்குறி என்னும் சொற்பொருளின் தோற்றம் கிழக்கு வடஅமெரிக்காவிலுள்ள அல்கான்கின்(Algonkin) பழங்குடியினரின் ஆட்டோதீமன் (Ototeman) என்னும் சொல்லோடு தொடர்புற்றதாகும். இவர்களின் மொழியில் இச்சொல்லிற்கு'உடன் பிறந்தான்-உடன் பிறந்தாள் உறவு' (Brother-Sister Kin) என்பது பொருளாகும். இச்சொல்லின் வேர்ச் சொல்லான 'ஒத்தி' (Ote) என்பதற்கு இரத்த உறவுடையவர்கள் என்பது பொருளாகும்.

உலகனைத்திலுமுள்ள பழங்குடிகளிடையே காணப்படும் குலக்குறி அமைப்பு அவரவர் உளம் சார்ந்த மன நிலையில் எழுந்ததாகும். இதனால் ஒவ்வொரு சமூகத்தினரும் தம் குலக்குறி அமைப்பைப் பற்றிக் கொண்டுள்ள நம்பிக்கைகள் பலவாக உள்ளன. அவை, கருத்தியலாகவோ (Ideological) இறை உணர்வாகவோ (Mystical), உணர்ச்சிவயப்பட்ட நிலையாகவோ பய பக்தியுடன் போற்றும் நிலையாகவோ (Reverential) குடிவழியைக் காட்டுவதாகவோ இருக்கும்.

மானிடவியலார் குலக்குறியின் பொதுப் பண்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவர். 1. ஒரு குலக்குறியைக் கொண்ட குழுவினர் அதனைத் தம் துணைவன், உறவினன், பாதுகாப்பவன், மூதாதையர் என்று நம்புவர். இதனால் குலக்குறிக்கு மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் உள்ளதாக நம்புவர். 2. குலக்குறிகளுக்குத் தனிப்பட்ட பெயர்களோ தனிக்குறியோ வழக்கில் கொண்டிருப்பர். 3. தனி ஒருவருக்கு ஒரு குலக்குறியும், ஒரு குழுவிற்குப் பொதுவான ஒரு குலக்குறியும் காணப்படுவதுண்டு. 4. குலக்குறியைப் பொதுவாக உண்ணவோ கொல்லவோ மறுப்பர். 5. குலக்குறிக்கு முறைப்படியான வழிபாடுகள் பல செய்வர்.

குலக்குறிகளின் தோற்றம் பற்றியும் இதன்பிற செயற்பாடுகள் குறித்தும் பல அறிஞர்கள் மிகவும் விரிவாக ஆராய்ந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பிரேசர் (J. G. Frazer), இலெவி-இசுட்ராசு (Levi-Strauss), கோல்டன் வீய்சர் (A. Golden-

weiser) ஆகியோர் ஆவர். இவர்கள் அனைவரும் குலக்குறியம் பற்றிப் பல்வேறு வகைப்பட்ட கோட்பாடுகளையும் எடுகோள்களையும் உருவாக்கியுள்ளனர்.

உலகில் ஒவ்வொரு சமுதாயமும் குலக்குறியமைப்புடைய சமுதாய முறையைக் கொண்டிருந்தது என்னும் அந்நிலையைக் கடந்த பின்னரே, இன்றுள்ள நிலையை அடைந்தது என்பது மக்லீனன் கருத்து. ஆண்ட்ரூ இலாங்கு என்பார் மனிதக் குழுவினர் தாம் வாழும் சூழலில் உள்ள சிறப்பான பொருள் ஒன்று தம் வாழ்க்கைக்கு முதன்மையாக உள்ளது என்று நம்பியதால், அதனைத் தம் குலக்குறியாக ஏற்றுக் கொண்டனர் என்று குறிப்பிடுகிறார்.

பிரேசர் 1910-இல் நான்கு தொகுதிகளாக வெளியிட்ட 'குலக்குறியமும் புறமணமும்'(Totemism and Exogamy) என்ற நூல் குலக்குறி பற்றிய விரிவானதொரு ஆய்வாக இருக்கிறது. ஆங்கிலேய மானிடவியலாரான இவர் ஆசுத்திரேலிய (Australia) ஆதிக்குடிகளும் மெலனீசிய ஆதிக்குடிகளும் கொண்டிருந்த குலக்குறிகளை ஆராய்ந்துள்ளார். ஆதிக்குடியினரிடையே காணப்படும் குழந்தை பிறப்புப்பற்றிய நம்பிக்கை குலக்குறித் தோற்றத்திற்கு வழிகோலியது என்று இவர் கூறுகிறார். ஆதிக்குடிகள் தாம் வாழுமிடத்திலுள்ள ஒரு விலங்கின் ஆவியோ, ஒரு புனித வடிவமோ பெண்களின் கருப்பையினுள் நுழைவதால் அவள் கருவுறுகிறாள் என்றும், அதனால் இப்பொருள்கள் அவர்களிடையே உயிர்ப் பொருளாகவும் தெய்வத் தன்மை பெற்றதாகவும் விளங்கின என்று பிரேசர் கூறுகிறார். கருவுறுதலின் அடிப்படையில் அமைந்ததால் இக்கருத்து 'கருவுருவாக்கக் கோட்பாடு' (Conceptionalism) எனப் பெருவழக்கானது.

குலக்குறிகளின் தோற்றத்திற்கு வேறு வகையான காரணங்களும் கூறப்படுகின்றன. மூதாதையர்களுக்கும் குலக்குறிப் பெயர்களுக்கும் வேறுபாடு தெரியாமல் குலக்குறியை மதித்துப் பழங்குடியினர் மரியாதை செலுத்தினர். தொல் பழங்காலத்தில் மனிதனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒரு சில சொற்களே. ஆகவே சொற்களின் குறைபாடு காரணமாக ஒரே சொல்லைத் திரும்பத் திரும்ப வழங்க வேண்டியிருந்தது என்கிறார் எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer). குலக்குறிச் சின்னம் இயற்கைப் பொருள்களை வணங்கியதிலிருந்து தோன்றியது என்கிறார் ஆவ்பரி பிரபு (Lord Avebury). வணங்கப்பட்ட இயற்கைப் பொருளின் பெயர் முதலில் தனி ஒருவருக்கும் பின் குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது என்றும், தாவரங்களுக்கு இட்ட பெயர்களே குலக்குறியாக மாறின என்றும் இவர் கூறுகிறார்.

தம் உயிரை விலங்கினிடமோ தாவரங்களிடமோ வைக்க இயலும் என்று ஆதிக்குடிகள் நம்பிய காலம் ஒன்று இருந்தது. தம் உயிரை வேறு பொருளில் வைத்துவிட்டால் தம்மை யாராலும் அழிக்க முடியாது என்று அவர்கள் கருதினர். தம் உயிர் எந்தப் பொருளில் இருக்கின்றதோ (விலங்கு, தாவரம், மலை, குகை ஆகியவை) அந்தப் பொருள் அழிந்தால் தாமும் அழிந்துவிடக்கூடும் என்று நம்பினர். இதன் அடிப்படையில் மூதாதையரின் ஆவி விலங்கிலோ தாவரத்திலோ புகுந்திருப்பதாகக் கருதினர். எந்தப் பொருளில் புகுந்திருப்பதாகக் கருதினரோ அந்தப் பொருளே அவர்களின் குலக்குறியாக மாறியது என்று வில்கெம் சுமித்து கூறுகிறார். மூதாதையர் ஒவ்வொருவரும் தம்மை ஓர் ஆவி பாதுகாப்பதாகக் கருதினர். அவர்கள் தம்மைக் காப்பதாகக் கருதிய விலங்கின் ஆவியே அவர்களின் வழித்தோன்றல்கள் என்றும், அதுவே பிற்காலத்தில் அவர்களின் குலக்குறியாக மாறியது என்றும் சில மானிடவியலார் எண்ணுகின்றனர்.

சக்தி மிக்க சில விலங்குகளுடன் தாங்கள் தொடர் புடையவர்களானால் தங்களுக்கும் வேட்டையாடும்போது சக்தி அதிகப்படும் என்று அவர்கள் நம்பினர். வேட்டையாடும்போது ஒரு வகையான விலங்குகளைக் கொல்லாமல் விட்டால், பின்னர் அவை தங்கள் வேட்டைக்குத் துணை புரியும் என்று நம்பினர். அவையும் குலக்குறிகளாக மாறியுள்ளன. மீன்களைப் போல் தங்கள் குலம் விரிவடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டதனால், மீனைத் தங்கள் குலக்குறியாகக் கொண்டனர். பொதுவாக விலங்கு ஏதாவது ஓர் ஆற்றலைக் கொண்டிருந்தால், அந்த ஆற்றல் தங்களுக்கு வரவேண்டும் என்ற ஆசையில் அதனைத் தங்கள் குலக்குறியாகக் கொண்டனர். இக்குலக்குறி வழக்கம் வேட்டை வாழ்க்கையிலிருந்தும், பண்டைய பயிர்த்தொழில் தோன்றிய காலங்களிலிருந்தும் தோன்றி வளர்ந்தது.

குலக்குறியாக விலங்குகள், பறவைகள், மீன்கள், தாவரங்கள், சூரியன், சந்திரன், நீரோடைகள், மலைகள் முதலானவை காணப்படினும், விலங்குகளும் தாவரங்களுமே பழங்குடிகளிடம் மிகுதியான அளவு குலக்குறிகளாகக் காணப்படுகின்றன. இவர்கள் குலக்குறியாகக் கொண்ட விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் எந்தவிதமான தொந்தரவும் கொடுக்க மாட்டார்கள். குலக்குறியாகக் கொண்டவற்றைச் சில நிகழ்ச்சிகள் தவிர்த்து, பிற காலங்களில் உண்ணமாட்

டார்கள். இக்குலக்குறிகள் தம் வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பெறவும், தங்களுடைய குலம் தழைக்கவும் துணை புரிகின்றன என்று நம்புகின்றனர்.


குலக்குறிகள் ஒரு குழுவிற்குப் பொதுவாகவோ ஒருவருக்கென்று தனிப்பட்ட முறையிலோ அமையும். தெல்கிகாரியர்கள் (Dhelki Kharias) எண்வகைக் குலக்குறியமைப்புடைய புறமணக் குலங்களாகக் (Totemic Exogamous Clans) காணப்படுகிறார்கள். அவர்கள் ஆமை (Mura), பாறை (Soreng), மான் (Samad) பறவை (Charhad), பழம் (Charliha), ஒருவகைப் பறவை (Topno), புலி (Kiro), மீன் (Hansda) ஆகிய எண்வகைக் குலக்குறிகளைக் கொண்டுள்ளார்கள்.

வடஇந்தியாவில் வாழும் காமர் (Kamar) பழங்குடிகளும் காரியர்களைப் போன்றே பல புறமணக் குலக்குறிக் குழுக்களாகப் பாகுபடுகின்றனர். இவர்கள் கொண்டுள்ள குலக்குறிகளுள் புலி, ஆடு, ஆமை, முதலை, பாம்பு முதலானவை குறிப்பிடத்தக்கன. ஒரவன் (Oraon) பழங்குடிகளை விரிவாக ஆய்வு செய்த எசு.சி.இராய் (S.C. Roy) குறிப்பிடத்தக்க ஒரு சமுதாய முறையினைக் கண்டறிந்தார். அதன்படி பல குடும்பங்கள் ஒன்றிணைந்து ஒரு பொதுவான குலக்குறியைக் கொண்டு வாழும். இக்குழுவினர் எண்ணிக்கையில் மிகுதியாகும்போது பல குழுக்களாகப் பிரிகின்றனர். முந்தியதை இணைதல் (Fusion) முறை என்றும், பிந்தியதைப் பிளவு (Fission) முறை என்றும் இராய் குறிப்பிடுகின்றார். முற்காலத்தில் பல ஒரவன்கள் ஒன்றிணைந்து புலிக் குறியைக் கொண்டிருந்தனர். பிற்காலத்தில் அவர்கள் பெருகியபோது தோன்றிய புதிய குலம் ஒவ்வொன்றுக்கும் புலியின் வால், தலை, நகம், பல் ஆகியவற்றைக் குலக்குறிகளாகக் கொண்டனர். இந்தியாவில் குலக்குறியமைப்புடைய பழங்குடிகள் பரவலாகக் காணப்படுகின்றனர்.

குழுக் குலக்குறி முறை ஆப்பிரிக்கா, இந்தியா, மெலனீசியா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்காவின் சில பகுதிகள், சைபீரியா, நடு ஆசியா முதலான பகுதிகளில் வாழும் பழங்குடியினரிடையே காணப்படுகிறது.

தனி ஒருவருக்கென்று குலக்குறியும் சில பழங்குடிகளிடையே உள்ளது. தமக்கும் தாம் சார்ந்திருக்கும் உலகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட பொருள் பெருமளவு உடன் நிற்கின்றது என நம்பும் பழங்குடிகள் தனித் தனியாகக் குலக்குறிகளைக் கொண்டுள்ளனர். ஆசுத்திரேலியப் பழங்குடிகளில் இத்தகைய முறை காணப்படுகிறது.

குலக்குறியைக் கொண்ட பழங்குடியினருள் பெரும்பான்மையோர் தம் குலக்குறியினை மரத்திலோ வேறு சில வடிவங்களிலோ சித்திரித்த கம்பங்களைத் தம் குடியிருப்புப் பகுதியினுள் அல்லது தாம் விரும்பும் பகுதியினுள் நட்டு வழிபடுகின்றனர். இதனைக் குலக்குறிக் கம்பம் (Totem Pole) என்று கூறுவர். இதற்குப் பல சடங்குகள் நடத்திச் சிறப்பாக வழிபடும் முறை அமெரிக்கா, ஆப்பிரிக்கா, இந்தியா, நடுநிலக் கடல் தீவுகள் ஆகிய இடங்களில் வாழும் பழங்குடிகளிடையே பரவலாகக் காணப்படுகிறது.



குலக்குறிக் கம்பம்

குலக்குறி முறை பொதுவாகத் திருமண உறவினை நெறிப்படுத்தும் அமைப்பாகச் செயற்படுகின்றது. ஒரு குலக்குறியைக் கொண்ட குலத்தவர்கள் அனைவரும் இரத்த உறவுடையவர்கள். இதனால் இவர்கள் திருமணத் துணையை வேற்றுக் குலத்தவரிடமிருந்தே கொள்ள வேண்டும் என்பதால், இவர்களைப் புறமணக் குழுவினர் (Exogamous Groups) என்றும் கூறுவர்.

ஒரு குலக்குறிக் குழுவினர் மற்றொரு குழுவைச் சண்டையில் வென்று விட்டால், வென்ற குழுவின் சின்னம் எல்லாக் குழுக்களின் வணக்கத்திற்குரியதாக மாறிவிடும். எ-டு. யானை ஒரு குழுவின் குலக்குறி. இந்தக் குழு பெரியதாகிப் பல குழுக்களை வென்று மற்றக் குழுக்களைத் தனக்குக்கீழ்க் கொண்டு வந்தால், அது அரசாக மாறும்பொழுது யானை அதனுடைய கொடியாக மாறுகின்றது. இந்த யானை மரபு எலிக் குழுவை வென்றது. ஆகவே, எலிக்குழு யானைக் குழுவின்கீழ் வந்தது.

உறையூரில் யானைக்கும் கோழிக்கும் நடைபெற்ற சண்டையில் கோழி யானையை வென்றதாகவும், அதனால் அவ்வூருக்குக் கோழியூர் என்று பெயர் அமைந்ததாகவும் இலக்கியங்கள் கூறுகின்றன. யானையைக் கோழி வெல்வது என்பது இயலாதது. எனவே இதை கோழி, யானை ஆகியவற்றைக் குலக்குறியாகக் கொண்ட மக்களிடையே நடைபெற்ற சண்டையில் கோழிக் கூட்டத்தினர் வென்றனர் என்பது ஏற்புடையதாகும். அதிகமானஞ்சி 7 அரசர்களை வென்றான். அவர்களின் குலக்குறியைச் சேர்த்துத் தன் இலச்சினையாக அமைத்துக் கொண்டான் என்பது புறநானூற்றுப் பாடலில் வருகின்றது. உரையாசிரியர்கள் ஏழரசர் நாடுங்கூடி ஒரு நாடாய் இருந்தது; கேழல் (பன்றி), மேழி (கலப்பை), கலை (மான்), ஆளி (சிங்கம்), வீணை, சிலை (வில்), கெண்டை (மீன்) ஆகியவை அந்த ஏழு அரசர்களின் கொடிகளாகும் என்று கூறுகின்றனர். திருவானைக்காப் புராணச் செய்தியில் யானைக்கும் சிலந்திக்கும் நடைபெற்ற சண்டையில் இரண்டும் இறந்துவிட்டனவாகக் கூறப்படுகின்றது. ஆனால், இவற்றையும் குலக்குறியாகக் கொண்டால் நடைபெற்ற சண்டை உண்மையாக இருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கொங்கு நாட்டு வேளாளர்கள் குலக்குறியைக் கூட்டம் என்று கூறுகின்றனர். இப்பகுதியில் உள்ள குலக்குறியைக் கணக்கிடும் பணி மேற்கொள்ளப் பட்டது. இங்குச் சுமார் 150 குலக்குறிப் பெயர்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவர்களிடையே பறப்பன, ஊர்வன, தாவரங்கள் போன்றவை குலக்குறிகளாக உள்ளன. விலங்குகளைக் குலக்குறியாகக் கொண்டவர்களும்உள்ளனர். மேதி (எருமை), சுண்டெலி, பாண்டி (எருது), மாதங்கம் (யானை) ஆகியவற்றைச் சான்றாகக் கூறலாம். பதறி (இலந்தை) போன்ற தாவர இனங்களையும் குலக்குறியாகக் கொண்டுள்ளனர். பயிர், துவரை, வெண்டை ஆகிய செடிகளைக் குலக்குறியாகக் கொண்டவர்கள் முறையே பயிரன், துவரன், வெண்டுவன் எனறு அழைக்கப்படுகின்றனர். செங்குண்ணி என்னும் கூட்டத்தினர் செங்கூன் என்னும் மீன் வகையைக் குலக் குறியாகக் கொண்டவர்கள். முழுக்காதன் கூட்டத்தினர் காதுகுத்துவதை இழுக்காகக் கருதுகின்றனர். எனவே, இவர்கள் காது குத்தும்போது தம் குலக்குறியிடம் மன்னிப்பு கேட்பது போன்று ஒரு சடங்கைச் செய்தபின்தான் காது குத்துவார்கள்.

காடைப் பறவையைக் குலக்குறியாகக் கொண்டவர்கள் அதை வழிபடுகின்றனர். காடைவிநாயகர், காடை ஈசுவரர் ஆகிய கோயில்கள் இன்றும் கொங்கு நாட்டில் உள்ளன. இக்காடைக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் அவர்களுடைய பெயரைக் 'காடையப்பன்' என்றே வைத்துக் கொள்கின்றனர். இதைப்போல் பவளத்தைக் குலக்குறியாகக் கொண்டவர்கள் 'பவளத்தான்' என்று பெயரிட்டு அழைத்துக் கொள்கின்றனர். கண்ணன் குலத்திலிருந்து தனிக் கூட்டமாகப் பிரிந்த குலத்திற்குக் 'கண்ணந்தைக்' குலம் எனப் பெயர் அமைந்தது. கண்ணன் குலக்குறியை உடையவர்களும் ஆந்தைக் குலக்குறியை உடையவர்களும் திருமண உறவு கொண்டதால், இரண்டு கூட்டங்களின் பெயரையும் இணைத்துக் 'கண்ணந்தை' என்ற பெயர் புதியதாக உருவாகியுள்ளது என்று கூறப்படுகிறது. இவ்வாறே தாய் வழியில் இருந்த குலக்குறி, தந்தைவழிச் சமுதாயத்திற்கு மாறிச் செல்லும்போது மாறியது.

குலக்குறித்தோற்றம் பண்பாட்டின் வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளது என்றும் சிலர் கருதுகிறார்கள். ஆசுத்திரேலியாவில் புல்விதையைக் குலக்குறியாகக் கொண்ட குழு ஒன்று உள்ளது. இவர்களின் தலைவன் தம் கூட்டத்தின் சின்னச் சடங்கின் போது புல் விதைகளை அவர்களது வாயிலிட்டு நான்கு திசைகளிலும் வேகமாகத்துப்பச் செய்வான். இத்தகைய செயல் பயிர்த்தொழிலைக் கண்டுபிடிக்க உதவியிருக்கலாம். கொங்கு வேளாளரிடையேயும் பில்லன் என்று கூறுகின்ற கூட்டத்தினர் 'புல்லை'க்குலக்குறியாகக் கொண்டுள்ளனர். ஆசுத்திரேலியப் பழங்குடிகளிடையே நாயைக்குலக்குறியாகக் கொண்டவர்களும் உள்ளனர். இதைப் பார்க்கும்போது மிருகங்களைப் பழக்க இத்தகைய குலக்குறி அமைப்பு பயன் பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

வேட்டைத் தொழிலையே உணவிற்குரிய தலையாய தொழிலாக மனிதன் மேற்கொண்டிருந்த காலத்தில் தனக்கு அதிக விலங்குகள் வேட்டையில் கிடைக்க வேண்டும் என்று விரும்பினான். வேட்டைக்குச் செல்வதற்குமுன் ஒரு விலங்கை ஈட்டியால் குத்துவது போல வரைந்தான். இவ்வாறு செய்

தால் வேட்டையில் நிறைய விலங்குகள் கிடைக்கும் என்பது அவனது நம்பிக்கை. இது ஒருவகை மாய மந்திரச் சடங்கு என்பர். இதிலிருந்து ஓவியக் கலையும் சிற்பக்கலையும் தோன்றின. தங்கள் உணவுப் பொருளாகிய விலங்குகள் பெருக வேண்டும் என்பதற்காக அவ்விலங்கின் உருவங்களை மண்ணிலோ மரப்பட்டைகளிலோ குகைகளிலோ வரைந்தனர். பாறைகளிலும் மரங்களிலும் செதுக்கினர். எருமைச் சின்னத்தை உடையவர்கள் எருமை அதிகமாகப் பெருக வேண்டும் என்பதற்காக அதன் உருவத்தைத் திரும்பத் திரும்ப வரைந்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு கூட்டத்தினரும் தத்தம் சின்னத்தைப் பலமுறை வரைந்துள்ளனர். இதனால், உருவம் வரையும் நுணுக்கமும் செதுக்கும் நுட்பமும் மேலும் மேலும் வளர்ச்சியடைந்தது என்பர். வடமேற்கு அமெரிக்க இந்தியர்களிடையே குலக்குறியைப் படமாக வரையும் பழக்கம் உச்ச நிலையை அடைந்திருந்ததை அங்குள்ள அருங்காட்சியகங்கள் காட்டுகின்றன. சி.ப.,தி.சு.

**துணை நூல்கள்**:

**Frazer, J.G.,** The Golden Bough: A Study in Magic and Religion, Macmillan Co., New York, 1943,

**Goldenweiser, A.,** Anthropology, Appleton-Century Crafts, New York, 1937.

**Lowie, R.H.,** Primitive Society, Harper & Row, New York, 1961.

***குலச்சிறை நாயனார்*** பெரியபுராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவரது வரலாறு பெரிய புராணத்தில் திருநாவுக்கரசரின் வரலாற்றை அடுத்துக் காணப்படுகின்றது. 11 பாடல்கள் உள்ளன.

இவர் பாண்டி நாட்டு மண மேற்குடியில் தோன்றியவர். இவர் பிறந்த மரபு இதுவெனத் தெரியவில்லை. திருத்தொண்டத் தொகையில் இவர் 'பெருநம்பி குலச்சிறை' என்று போற்றப்படுகிறார். திருஞானசம்பந்தர் வரலாற்றிலும் இவரைப் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. ஞானசம்பந்தரின் தேவாரப்பாடல்களும் இவரது தொண்டினை வியந்து போற்றுகின்றன.

இவர், சிவபெருமான் அன்பரிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர். தாள் மிசை விழுந்து அஞ்சலி செய்யும் இயல்பினர்; திருத்தொண்டின் நெறி மாறாதவர். நான்காம் குலத்தவராயினும் சங்கரன் அன்பர் எனில் பணிந்தேத்தும் பண்பினர். அடியார் பலர் வரினும் ஒருவர் வரினும் உணவு தேடி அன்புடன் எதிர்கொண்டு வரவேற்று அமுதூட்டும் நலத்தினர். நீறணிதல் முதலிய சைவ வேடத்தால் பொலிபவரையும் ஐந்தெழுத்து ஓதும் அடியார்களையும் நாளும் பரவும் நற்குணத்தினர். தென்னவன் நெடுமாறனின் முதல் அமைச்சர். பகைவரை அஞ்சாமல் அடக்கி வெற்றி சேர்த்த வீரமுடையவர். மதுரையில் பாண்டிமாதேவியின் தொண்டு நெறிக்குத் துணையாக நின்றவர்.

சமணரின் பொய்ந்நெறி நீக்கவும், தென்னவர் நாடு திருநீற்றுப் பொலிவுடன் விளங்கவும், காழி வள்ளலின் பொன்னடி போற்றிய சிறப்பினர். இவரது தொண்டினைச் சேக்கிழார் 'முடிவில் புகழ் திருத்தொண்டு' என்று புகழ்கிறார். இவருடைய அருங்குணங்களுள் பலவற்றையும் திருஞானசம்பந்தர் தாம் பாடிய 'மங்கையர்க்கரசி' என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தில் பல திருப்பாடல்களில் போற்றியுள்ளார். ஜி.ஆர்.கி.

***குலசேகரப்பட்டினம்*** சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூர்-நாகர்கோவில் பெருஞ்சாலையில் அமைந்துள்ள முற்காலத் துறைமுகப்பட்டினமாகும். மேலைக் கடற்கரையிலிருந்து வரும் கப்பல்களில் சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் இங்குள்ள துறைமுகம் பயன்படுத்தப்பட்டது. தூத்துக்குடி பெரிய துறைமுகமாகப் பிற்காலத்தில் வளர்ந்ததால் குலசேகரப்பட்டினத்தின் புகழ் மங்கியது. இவ்வூரில் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன் கோவில் ஒன்று உள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் மானவீர வளநாட்டு குலசேகரப்பட்டினம் எனக் கூறப்படுகிறது. குலசேகரன் என்பது பாண்டிய மன்னர்களின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். அவர்களது பெயரால் இவ்வூர் குலசேகரப்பட்டினம் எனக்கூறப்படுகிறது. சு.இரா.

***குலசேகர பாண்டியன்***: சோழப் பேரரசர்களின் மேலாண்மையினை ஏற்றுப் பாண்டி நாட்டில் அரசு புரிந்துவந்த பாண்டியர்களின் வரலாற்றினை ஐயந்திரிபற அறிந்துகொள்ள இயலவில்லை. ஒரே காலத்தில் ஆட்சிபுரிந்த பல பாண்டியர்களின் கல்வெட்டுகள் பெரு மயக்கத்தை ஏற்படுத்துகின்றன. மதுரையிலும் திருநெல்வேலியிலும் பிற பகுதிகளிலுமாகப் பாண்டிய நாட்டைப் பல பாண்டியர்கள் ஆண்டு வந்தனர். கி.பி. 1162-இல் திருநெல்வேலிப் பகுதியில் முடிசூடிய குலசேகரபாண்டியன் மாறவர்மன் சீவல்லப பாண்டியனின் மகன். குலசேகரபாண்

டியனது உடன்பிறப்பான பராக்கிரம பாண்டியன் என்பான் அப்பொழுது மதுரையிலிருந்து ஆட்சி செலுத்தினான். மதுரையை ஆண்டவர் அண்ணனாகவும் திருநெல்வேலியை ஆண்டவர் தம்பியாகவும் இருந்திருக்கக் கூடும். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட பாண்டிய மன்னர்கள் ஒரே காலத்தில் ஆட்சி செய்யும் முறையானது தொன்றுதொட்டே காணப்பட்ட பாண்டி நாட்டு வழக்கமாகும்.

குலசேகரன் மதுரையிலிருந்து பாண்டிய நாடு முழுவதையும் ஆளக் கருதிப் பராக்கிரம பாண்டியன் மீது போர் தொடுத்து மதுரைநகரை முற்றுகையிட்டான். பராக்கிரம பாண்டியனோ இலங்கையின் மன்னனான முதலாம் பராக்கிரம பாகுவுக்குத் தூதனுப்பிப் படையுதவி வேண்டினான். உடனே சிங்களர் படை உதவிக்கு அனுப்பப்பட்டதாயினும் அது வருமுன்பாகவே குலசேகர பாண்டியன் மதுரையைப் பிடித்து, பராக்கிரம பாண்டியனையும் அவனது குடும்பத்தினரையும் கொன்று தீர்த்தான் (1169). இலங்கையின் தளபதியான இலங்காபுரன் என்பவன் இராமேசுவரத்துக்கருகில் கரையிறங்கி, தன்னை எதிர்த்த பாண்டியப் படைகளைப் பல போர்களில் கடுமையாக முறியடித்தான். குலசேகர பாண்டியனும் கொங்கு நாட்டுப் படையுதவியோடு பல மாதங்கள் போரிட்டு இறுதியில் தோல்வியுற்றுச் சோழநாட்டுக்கு ஓடினான். மலை நாட்டுக்குத் தப்பியோடிப் போயிருந்த பராக்கிரம பாண்டியனின் மகனாகிய வீரபாண்டியன் என்பானைச் சிங்களத்தளபதி இலங்காபுரன் அழைத்துவந்து மதுரைக்கதிபதியாக முடிசூட்டுவித்துப்பின் மதுரையையும் மீட்டு அவனிடம் ஒப்புவித்தான்.

சிங்களருக்கெதிராகச் சோழர் படைகள் குலசேகர பாண்டியனோடு புறப்பட்டன. அப்பொழுது சோழநாட்டில் பேரரசர்களாயிருந்தோர் இரண்டாம் இராசராசரும் இரண்டாம் இராசாதிராசரும் ஆவர். சோழரது படை திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பிப் பல்லவராயன் என்ற தளபதியின் கீழ் புறப்பட்டுச் சில தோல்விகளுக்குப் பின் வெற்றி பெற்று, மதுரையைக் கைப்பற்றிக் குலசேகரனை மீண்டும் அங்கு அரசனாக்கிற்று. சோழர் படை இலங்கையின் மீதும் படையெடுத்தது. இலங்கையில் பராக்கிரமபாகுவுக்கு எதிராக உள்நாட்டுப் போரையும் சோழத் தளபதிகள் தூண்டிவிட்டனர். இவற்றால் பெரும் இக்கட்டுக்குள்ளான பராக்கிரமபாகு, குலசேகர பாண்டியனைச் சோழருக்கெதிராகத் திருப்பிவிடத் திட்டமிட்டு அவனுக்கு ஏராளமான பரிசுப் பொருள்களை அனுப்பி வைத்தான். திருமண உறவும் பேசி முடிக்கப்பட்டது. உடனே சோழரது நட்பை விடுத்துச் சிங்களரது உதவியோடு சோழப் படைகளைத் தனது நாட்டிலிருந்து குலசேகர பாண்டியன் விரட்டினான். வெகுண்ட சோழ வேந்தன் அண்ணன் பல்லவராயன் என்பானின் தலைமையின் கீழ் ஒரு பெரும் படையினை அனுப்பி, மதுரையைக் கைப்பற்றிக் குலசேகர பாண்டியனுக்குப் பதிலாக வீரபாண்டியனையே அரசனாக்கினான். குலசேகர பாண்டியனுக்கு என்ன நேர்ந்தது என்பது தெரியவில்லை. இம்மன்னன் கி.பி. 1169 முதல் 1177 வரையில் மதுரை அரியணையில் இருந்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. முதலாம் குலோத்துங்க சோழரது இறுதிக்காலம் தொட்டு பாண்டி நாட்டிலிருந்து மறைந்து போயிருந்த சோழரது ஆதிக்கம் இந்நிகழ்ச்சிகளின் விளைவாக மீண்டும் நிறுவப்பட்டது. இர.ஆ.

**குலசேகர பாண்டியன் சடையவர்மன், முதலாம்**: சடையவர்மன் என்ற பட்டம் புனைந்து ஆண்ட முதலாம் குலசேகர பாண்டியன் கி.பி. 1190-இல் அரியணையேறினான். இவன் விக்கிரம பாண்டியனின் மகன் என்பது தெரிகிறது. சோழப் பேரரசர் மூன்றாம் குலோத்துங்கனுக்குக் கட்டுப்பட்ட அரசனாகவே குலசேகர பாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். கி.பி. 1216-இல் தன் தம்பியான மாறவர்மன் முதலாம் சுந்தர பாண்டியனுக்கு இவன் முடிசூட்டுவித்தான்.

சோழ ஆதிக்கத்தினின்றும் விடுபடுவதற்குப் பாண்டியர்கள் முயன்று வந்த காலம் அது. குலசேகரபாண்டியனின் தந்தையான விக்கிரம பாண்டியனை மதுரை அரியணையில் அமர்த்துவதற்குக் குலோத்துங்க சோழனே காரணமாயிருந்தான். எனினும், கொங்கு நாட்டை மீண்டும் பணிய வைத்துக் கருவூரில் விசயாபிடேகம் செய்து கொண்ட சோழ வேந்தன், அதனைத் தொடர்ந்து மதுரையில் வீராபிடேகம் செய்து கொள்ள விரும்பியதைக் குலசேகர பாண்டியன் எதிர்த்தான். அதனால் வெகுண்ட சோழ வேந்தன் மூன்றாம் குலோத்துங்கன் மதுரையின் மீது படையெடுத்தான். சோழப் 'படைகள் மட்டியூர், கழிக்கோட்டை ஆகியவிடங்களை முற்றுகையிட்டுப் பிடித்து, மறவர் படையினை விரட்டியடித்து, மதுரையில் பாண்டியனது முடிசூட்டு மண்டபத்தையும் இடித்துக் கழுதை கொண்டு உழுது, கவடி விதைத்து மகிழ்ந்தன. அந்நகரில் மூன்றாம் குலோத்துங்கன் வீராபிடேகம் செய்து கொண்டு 'சோழ பாண்டியன்' என்ற பட்டத்தையும் சூடிக்கொண்டு, வெற்றித் தூண் ஒன்றையும் நாட்டினான். எனினும், சிறிது காலத்துக்குப் பின்னர் குலசேகரனுக்கே மீண்

டும் பாண்டிய நாடு வழங்கப்பட்டது. குலசேகர பாண்டியன் சோழ ஆதிக்கத்தை மீண்டும் ஏற்றுக் கொண்டான். இதற்குப்பின் சோழரது கல்வெட்டுக்கள் பாண்டிய நாட்டில் அருகிவிட்டதைக் காணும் போது பாண்டியர்களின் நிலை வலுப்பெற்று வந்ததை உணர முடிகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழன் மதுரையில் நிகழ்த்திய அழிவு வேலையும் களியாட்டங்களும் வீராபிடேகமும், குலசேகர பாண்டியனின் தம்பியான மாறவர்மன் முதலாம் சுந்தர பாண்டியனால் அடுத்த சில ஆண்டுகளிலேயே தஞ்சையில் நிகழ்த்தப்பட்டன. எனவே, பாண்டியரின் மறு எழுச்சிக்கு அடிகோலியவன் என இக்குலசேகர பாண்டியன் குறிக்கப்படுகிறான். பல குளங்களையும் சிற்றாறுகளையும் இம்மன்னன் வெட்டியதாகத் தெரிகிறது. நில அளவையும் இவன் காலத்தில் செய்யப்பட்டது. இர.ஆ.

**குலசேகர பாண்டியன், சடையவர்மன், இரண்டாம்:** முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்யனது இறுதிக் காலத்தில் இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் என்பவன் இளவரசனாகவோ இணை அரசனாகவோ முடிசூட்டப் பெற்றான். 1237/38-இல் இவன் முடிசூட்டப் பெற்று, 1258 வரையில் நோயாளியாக வாழ்ந்தான் எனத் தெரிகிறது. இவன் தம்பிகளான இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனும் (1238-53) முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனும் இணையரசர்களாகப் பட்டமேற்றுச் சிறப்பாக ஆண்டனர். இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனைப் பற்றிய பிற செய்திகள் தெரியவில்லை. இர.ஆ.

**குலசேகர பாண்டியன், முதலாம் மாறவர்மன்:** இப்பாண்டிய மன்னன் கி.பி. 1268-இல் மணிமுடி தரித்து 1312 வரையில் அரசு கட்டிலில் இருந்தான். இம்மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனது (கி.பி. 1251-70) மகனாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனும் (1276-93) மாறவர்மன் விக்கிரம பாண்டியனும் (1283-96), சடையவர்மன் சீவல்லபனும் (1291-1316) சடையவர்மன் வீர பாண்டியனும் (1297-1342) சடையவர்மன் மூன்றாம் சுந்தரபாண்டியனும் (1303-19) இக்காலத்தில் ஆட்சி புரிந்த பிற பாண்டிய வேந்தர்களாவர். இறுதியில் கூறப்பட்ட சுந்தர பாண்டியனும் வீரபாண்டியனும் குலசேகர பாண்டியனின் மக்களென்று தெரிய வருகிறது. விக்கிரம பாண்டியன் குலசேகரனது தம்பி என்பதும் தெரிகிறது. ஐந்து பாண்டியர் ஒரே காலத்தில் ஆண்டதாகத் தெரிகிறது. வெளிநாட்டுப் பயணியான வாசபு (wassaf) என்பவரும் பாண்டிய நாட்டுக்கு இக்காலத்தில் வருகை புரிந்து இத்தகைய கூட்டு அரச முறை இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் பாண்டியப் பேரரசின் வலிமை உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில் இம்மன்னனது ஆட்சி நடைபெற்றது. சோழ நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு, மலை நாடு ஆகியவை இவனது பேரரசில் அடங்கியிருந்தன. இப்பேரரசின் கடைசி அரசனாக இம்மன்னனைக் கருதலாம். இம்மன்னனது படைகள் ஈழத்தின் மீதும் படையெடுத்துப் பெரும் பொருளைக் சொள்ளையிட்டு மீண்டன. மூன்று முறை இம்மன்னனது தூதுக் குழுக்கள் சீனாவுக்கு அனுப்பப்பட்டன. முத்துப் போன்றவை சீன மன்னருக்கு அன்பளிப்புப் பொருள்களாக அனுப்பி வைக்கப்பட்டன. வெனிசு நகரத்துப் பயணியானமார்க்கோ போலோ பாண்டிய நாட்டைக் கண்டு சென்றதும் இக்காலத்தில்தான்.

பாண்டிய அரசின் வீழ்ச்சி குலசேகர பாண்டியனின் இறுதிக் காலத்தில் நிகழ்ந்தது. வீரபாண்டியனது திறமையைக் கண்ட குலசேகர பாண்டியன் அவனையே தனது வாரிசாக நியமித்தான் என்றும், அதனால் வெகுண்ட மற்றொரு மகனாகிய சுந்தரபாண்டியன் என்பான் தந்தையைக் கொன்று மதுரையில் முடிசூட்டிக் கொண்டான் என்றும் வாசபு எழுதுகிறார். வீரபாண்டியன் போரில் தோற்றோடிப் பிற மன்னர்களின் உதவி பெற்று மதுரையை மீட்டுச் சுந்தர பாண்டியனை விரட்டியடித்தான். தோல்வியுற்ற அவன் வெளியேறி அலாவுதீன் கில்சியின் படையுறவியை நாடித் தக்காணத்தில் மாலிக்காபூரைச் சென்றடைந்து மதுரை மீது படையெடுக்குமாறு அவனைக் கேட்டுக் கொண்டான். இர.ஆ.

**குலசேகரர்:** தமிழகத்தில் பக்தி இயக்கக்காலத்தில் வைணவ நெறியையும் திருமாலின் பெருமையையும் போற்றிப் பக்திப் பனுவல்கள் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவர். இப்பன்னிரு ஆழ்வார்களும் வெவ்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த பல்வேறு குல நெறியினர். எனினும், திருமால் பெருமையினை உணர்ந்து அவன் கல்யாண குணங்களில் ஆழங்காற்பட்டு ஆழ்வார் ஆயினர். அப்பன்னிரு ஆழ்வார்களுள் சேரநாட்டரசர் குலசேகரரும் ஒருவர். அவரின் வாழ்வும் எழுத்துப்பணியும் இங்கு இடம்பெறுகின்றன.

**பிறப்பு:** இப்போதைய கேரள மாநிலத்தின் நடுப் பகுதியாகிய கோழிக்கோடு,முன்பு ஒரு நாடாக இலங்கியது. அப்பகுதியைத் திருவரதன் என்பவன் அர

சாண்டு வந்தான். நெடுநாட்களாய்ப் பிள்ளைப் பேறின்றித் துயருற்றிருந்த அம்மன்னனுக்குத் திருமாலின்அருளால் சிரீகௌத்துப ரத்தினத்தின் அமிசமாய் ஒரு 'பராபவ' ஆண்டில் மாசித் திங்கள் புனர்பூச நட்சத்திரத்தில் திருவஞ்சிக்களம் என்னும் ஊரில் குலசேகரர் அவதரித்தார் என்பர். எனினும் இவர் பிறந்த ஊர் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. கேரளநாட்டுக் கொல்லி மாநகரில் மாசித் திங்கள் புனர்பூச நட்சத்திரத்திரத்தில் பிறந்தார் என்று பின் பழகிய பெருமாள் சீயரின் குருபரம்பரை கருதுகிறது.

கருடவாகன பண்டிதரின் திவ்விய சூரி சரிதம் 'கோழிக்கோடு' எனப்பகரும். வேதாந்த தேசிகரும் மணவாள மாமுனிகளும் வஞ்சிக்களம் என உரைப்பர்.

குலசேகரர் தாய் நாதநாயகி என்றும், அவர் சேர அரசவமிசம் என்றும் ஆழ்வார்கள் அமுதமொழி இயம்புகிறது. இவர் அரச மரபினர் என்பது 'கொல்லிக்காவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குலசேகரன்' என்னும் அவர் வாய்மொழியாலேயே விளக்க முறுகிறது.

குலம் விளக்கமுறத் தோன்றினமையின் 'குலசேகரன்' எனப் பெயரிடப்பெற்றதாக இயம்புவர். இவர் 'குலசேகரப் பெருமான்' எனப் போற்றப்படுகிறார். பெரிய வாச்சான் பிள்ளை இவரைப் 'பெருமாள்' என்றும் 'சிரீகுலசேகரப் பெருமாள்' என்றும் சுட்டுவர்.

இவர் இளமையில் ஆறு சாத்திரங்கள், நான்கு வேதங்கள், அரசருக்குரிய நீதிநூல்கள், யானை, குதிரை, தேர் முதலியன பற்றிய நூல்கள் ஆகியன வற்றைத் திறம்படக் கற்று வளர்ந்தார். முறையாக இளவரசுப்பட்டமும் பெற்றார். சோழ, பாண்டியரை வென்றதனால் 'கொல்லிக் காவலன்', 'கூடல் நாயகன்' என்னும் பட்டங்கள் பெற்றார் என்பர்.

குலசேகரர் முறைப்படி இல்லறம் ஏற்றுத் திருடவிரதன், நீளாதேவி என்ற குழந்தைகளுக்குத் தந்தையானார். இவர் தம் மகன் திருடவிரதனுக்கு முடிசூட்டியபின் துறவு மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. தன் மகள் நீளாதேவியைத் திருமாலுக்கு மணம் செய்வித்ததாகவும் செய்தி உளது. இக் கருத்தை நிறுவுவதற்குத் தக்க சான்றுகள் இல்லை.

'தேட்டருந் திறல் தேனினை' என வரும் குலசேகரரது திருமொழியைத் திருக் கோயிலில் பாடுவதற்காகக் கட்டளை ஏற்படுத்தப்பட்டதை 9-ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ஒரு கல்வெட்டு குறிக்கிறது. இக்காலத்திலோ அன்றி இதற்கு முன்போ குலசேகரர் வாழ்ந்திருக்கவேண்டும். இவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டினர் என்பர், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். குலசேகரர், திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார் மூவரும் ஒரு காலத்தவர் என்று மு. இராகவையங்கார் கருதுவர். அதனால், இவர்காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்பது உறுதியாகிறது.

இவர், 'வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்' என்று பாடித் திருமாலின் திருவருள் ஒன்றையே வேண்டி வாழ்ந்தவர்; திருமாலே முழுமுதற்பொருளாய்க் கொண்டு வாழ்ந்தவர். இவரது சமய வாழ்வில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இவரது அரசியல் வாழ்விலும் சமயவாழ்வே நமக்கு மிகுதியும் கிடைத்துள்ளது. மன்னனாய் இருப்பதை விடவும் கடவுளின் தொண்டனாய் இருப்பதையே இவர் விரும்பினார்.

இவர், வாழ்வில் சில தெய்வீக நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றால் இவர்தம் பக்திச் சிறப்பும், பக்தர்பால் இவர் கொண்ட அன்பும், இறை நாட்டமும் விளங்குகின்றன. இலக்குவன் சீதையோடு இராமபிரான் அருளிய காட்சி, பாம்புக் குடத்தில் கைவிட்ட நிகழ்ச்சி ஆகியன இவர் வாழ்வில் நிகழ்ந்த தெய்விக நிகழ்ச்சிகளாகும்.

பாம்புக் குடத்தில் கையைவிட்ட நிகழ்ச்சிக்குப் பின் துறவு பூண்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும் இவர் இளமையிலேயே அரசு வெறுத்துத் திருவரங்கத்தில் திருப்பணியில் ஈடுபட்டார் என்று குருபரம்பரையும், தம் திருமகனாருக்குப் பட்டம் கட்டியபின் துறவுபூண்டார் என்று திவ்விய சூரி சரிதையும் கூறுகின்றன.

இறுதியில், திருக்குருகூர்க்கு அருகிலுள்ள பிரம்மதேசம் என்னும் ஊரை அடைந்து அங்குள்ள இராசகோபால் சுவாமி ஆலயத்தில் பல ஆண்டுகள் தொண்டு செய்து, தம் அறுபத்தேழாம் அகவையில் காலமானார்.

திருமாலிடம் பக்தி பூண்டு அதையே தம் வாழ்வின் நெறியாகக் கொண்ட குலசேகரர் தாம் இறைவனாகக் கொண்ட திருமாலை வழுத்திப் 'பெருமாள் திருமொழி', 'முகுந்தமாலை' என்பனவற்றைஅருளிச் செய்தார். பெருமாள் திருமொழி 105 பாடல்களைக் கொண்டதாய்த்தமிழிலும்,முகுந்தமாலை 40 பாடல்களைக் கொண்டதாய் வடமொழியிலும் அமைந்துள்ளன.

**பெருமாள் திருமொழி**: பெருமாள் திருமொழியில் 105 பாடல்கள் உள்ளன. பத்துப் பிரிவுகள் கொண்ட பத்துப் பதிகங்கள் இடம்பெற்றுள்ளன. கற்போர் நெஞ்சத்தை இவை நெகிழ்விக்கவல்லன. இவை, குலசேகரரின் ஆழ்ந்த பக்தியை அறிவிக்கவல்லன.

இதில் 8 திருத்தலங்கள் பாடப்பெற்றுள. அவை திருவரங்கம், திருப்பாற்கடல், திருவேங்கடம், திருவித்துவக்கோடு, திருக்கண்ணபுரம், திருவாலி, திருஅயோத்தி, தில்லைத் திருச்சித்திரகூடம் என்பன ஆகும். 'பற்றற்றார்கள் பயிலரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்' என்று பாடுவர் குலசேகரர். தயரதன் புலம்பலாக இவர் பாடும் பத்துப் பாடல்களும் நெஞ்சை உருக்கவல்லன. தேவகி புலம்பலாகப் பாடிய பாடல்கள் மகனைப் பிரிந்த தாய் ஒருத்தியின் ஏக்கத்தைப் புலப்படுத்துவனவாகும். 'நாரத பக்தி சூத்திரம்' 11 வகையான பக்தி வகைகளைக் குறிக்கிறது. அவையாவும் பெருமாள் திருமொழியில் இடம் பெற்றுள்ளன.

தன்னைத் தாயாகவும், இறைவனைத் தன் குழந்தையாகவும் கருதி, அந்த மனநிலையில் பெருமாள் திருமொழியில் தேவகி புலம்பல், தயரதன் புலம்பல், கோசலை தாலாட்டு என்னும் மூன்று பதிகங்களைப் பாடியுள்ளார்.

இவர் தம்மை நாயகி நிலையில் வைத்து, கோபியர் கண்ணனுடன் ஊடுவதும் கூடுவதுமாக அமைந்தன பெருமாள் திருமொழியின் ஆறாம் திருமொழிப் பாடல்கள். பெருமாள் திருமொழியில் பக்தியுடன் இலக்கியத்திற்குரிய கலை நலன்களும் செம்மையுடன் விளங்குகின்றன. கற்பனை, அணிநலன் சொல்நயம், திருத்தலங்களின் இயற்கையழகு, மெய்ப்பாடு, ஒலிநயம் ஆயின யாவும் சிறப்புற இடம்பெற்றுப் பெருமாள் திருமொழி ஒருசிறந்த இலக்கிய நூலாகவும் இலங்குகிறது. இவர், திருவரங்கம், திருவேங்கடம், திருவித்துவக்கோடு, தில்லைத் திருச்சித்திர கூடம், திருக்கண்ணபுரம் ஆகிய வைணவத் தலங்களின் இயற்கையழகினை அழகாக வருணித்துப் பாடுகிறார். மெய்ப்பாட்டின் வகைகளாகிய அவலச்சுவையும், வெகுளிச் சுவையும் சிறப்பிடம் பெறுகின்றன. இதில் இழவு என்பதன் பொருட்டே அவலச்சுவை தோன்றுகின்றது. தயரதன் புலம்பலும், தேவகி புலம்பலும் அவலச்சுவையாக அமைந்துள்ளன. இவ்வாறு பல நிலைகளிலும் பெருமாள் திருமொழி பக்தி நூலாகவும் இலக்கிய நூலாகவும் அமைந்து விளங்குகின்றது.

பரமபதத்தையும் இவ்வுலக இன்பங்களையும் அளிப்பவன் முகுந்தன். அப்பெருமானுக்குப் பூமாலை போல் விளங்குவதால் இந்நூல் 'முகுந்தமாலை' எனப்பெற்றது. திருமாலின் திருப்பெயர்களைப் பெரும்பாலும் இப்பாடல்கள் இயம்புவதாலும்இப் பெயர் பெற்றதெனலாம். இதை அருளியவர் குலசேகரர் என்பதில் ஐயப்பாடுகள் உள்ளன. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் முகுந்தமாலை குலசேகரர் எழுதியதல்லவென்றும் குலசேகரன் எனும் வேறு ஒரு கேரள அரசனால் இயற்றப்பட்டதென்றும் காரணங்களுடன் கூறுவர். ஆயினும், வைணவ உலகம் முகுந்தமாலை ஆசிரியர் குலசேகரரே என்று கொள்கிறது. இதில் 40 சுலோகங்கள் உள்ளன. இவையாவும் இறைவன் திருப்பெயர்களைக் கூறி அவன் புகழைப் பாடுவனவாக அமைந்துள்ளன. பொ.செள.

**குலம்**: ஒரு மூதாதையிடமிருந்து வந்தவர்கள் ஒரு 'கால்வழிக்குழு'வினர் என்றழைக்கப்படுவர். அந்த மூதாதை, ஐந்தாவது அல்லது ஆறாவது தலைமுறையைச் சேர்ந்தவராக இருப்பார் என்றும் கருதப்படுகிறது. இதுபோலவே ஒரு மூதாதையிடமிருந்து தொடரும் உறவுக் குழுவானது 'குலம்' (Clan) என்று குறிக்கப்படுகிறது. இன்ன குலம் இன்ன மூதாதையிடமிருந்து வந்ததென்று நம்பப்படுமேயன்றி அறுதியிட்டுச் சொல்ல முடியாது. ஆகவே குலங்களின் மூதாதையர்களைப் புனை கதைகள் புராணங்கள் போன்றவற்றின் வாயிலாக அறிய முடிகிறது. ஒவ்வொரு குலத்தவரும் தங்கள் மூதாதையை உயர்நிலையில் வைத்து வழிபடுவர்.

குலம் ஆண் வழியில் அல்லது பெண் வழியில் தொடர்ந்து செல்லும் இயல்புடையது. எடுத்துக்காட்டாக ஆண்வழிக்குலமுறை உடைய ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன் பூர்விகக் குடியினரான திராவிடர்களிடம் பெண்வழிக்குல முறை இருந்ததென்றும், அவர்களின் வருகைக்குப்பின் ஆண்வழிக்குல முறையாக மாறியது என்றும் கருதப்படுகிறது. ஒரு குலத்தினர் தங்களின் மூதாதையை அறிய முடியாத காரணத்தால் அவர்கள் தங்களின் முன்னோடித் தலைமுறையினர் விரும்பி வழிபட்டு வந்த கடவுளர்களைத் தாங்களும் வழிபடலாயினர். அதனால் வழிபாட்டுக் கடவுளைக் கொண்டு சில குலங்களைக் கண்டுகொள்ள முடிகிறது. இந்தியாவில் எல்லா மாநிலத்தவர்களிடமும் ஆண்வழிக் குலமுறைதான் வழக்கில் உள்ளது. ஆனால், கேரள மாநிலத்தில் மட்டும் மாப்ளா (Moplahs), முகம்மதியர் (Muslims), தீயான் (Thiyan) போன்ற சில பிரிவினரிடையே பெண்வழிக் குலமுறை இருந்து வருதலைக் காணமுடிகிறது.

குலம் என்னுஞ்சொல் 'கோத்திரம்' என்ற வடமொழிச் சொல்லால் வழங்கப்படுகிறது. இந்துக்களிடம் ஆண்களை மூலமாக வைத்தே கோத்திரங்கள் அமைந்திருக்கின்றன. ஏழு முனிவர்களாகிய, சமதக்னி, கௌதமர், பரத்துவாசர், அத்திரி, விசுவாமித்திரர், காசிபர், வசிட்டர் ஆகியோரிடமிருந்தும் அகத்தியரிடமிருந்தும் எண்வகைக் கோத்திரங்கள் தோன்றின என்று கருதப்படுகிறது. சத்திரியர்கள் (Kshatriyas) நிலையிலிருந்து பிராமணர்கள் நிலைக்கு உயர்ந்தவர்களிடம் பத்து வகைக் கோத்திரங்கள் இருக்கின்றன என்றும், ஏராளமான கோத்திரங்கள் இந்த மூல இருடிகளிடமிருந்து தோன்றினவென்றும் நம்பப்படுகிறது.

குலங்களின் தோற்றம் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்கும். எடுத்துக்காட்டாக மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள தகோமி (Dahomey) இனக் குழுவினரிடையில் சில குலங்கள் எப்படித் தோன்றின என்பதைப் பழங்கதைகள் விளக்குகின்றன. ஆற்றங்கரையில் ஒருத்தி குதிரையுடன் புணர்ந்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றதால் ஒரு குலம் உருவாயிற்றென்றும் பன்றிக்கும் பெண்ணுக்கும் பிறந்த குழந்தையிலிருந்து மற்றொரு குலம் தொடங்கியதென்றும், பெண்ணுக்கும் தேரைக்கும் பிறந்த குழந்தையிலிருந்து ஒருகுலம் வந்ததென்றும், பெண்ணுக்கும் நாய்க்கும் பிறந்த குழந்தையிலிருந்து வேறொரு குலம்தோன்றியதென்றும் சொல்லப்படுகிறது.

பல குலங்கள் ஒருங்கிணைந்து ஓர் இனக் குழுவையோ சாதியையோ உருவாக்கும். சில இனக்குழுக்களில் எல்லாக் குலங்களும் சமமான இருபிரிவுகளாகப் பிரிந்திருக்கும். ஒவ்வொரு பிரிவும் 'மாயிடி' (பாதிபாகம்) (Moiety) என்று அழைக்கப்படும். இதைப் பெரும் பிரிவாகவும், இதிலுள்ள குலங்களைத் துணைப் பிரிவுகளாகவும் கொள்ளலாம். நீலகிரி மலையில் வாழும் தோடர்கள் 'தார்த்தரோல்' (Tartharol) என்றும் 'தெய்வலியோல்' (Teivaliol) என்றும் இரு பகுதிகளாகப் பிரிந்துள்ளனர். ஆனால், சில இனக்குழுக்களில் பல குலங்கள் ஒருங்கிணைந்து இரண்டிற்கும் மேற்பட்ட பெரும் பிரிவுகளை உண்டாக்கும். இவை ஒவ்வொன்றும் குலப்பிரிவு (Phratry) எனப்படும். கோபி இந்தியர்கள் (Hopi Indians) என்ற இனக்குழுவினரிடம் பன்னிரண்டு பிரேட்ரிகள் இருப்பதாக கூறப்படுகிது.

ஒரே குலத்தில் இருப்பவர்களிடையே திருமணம் செய்வதில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் பங்காளிகளாகிவிடுவதால் திருமண உறவு விலக்கப்படுகிறது. ஒரு குலத்தினர் வேறொரு குலத்தினரிடம் திருமண உறவு வைத்துக்கொள்வர். அதாவது, ஓர் இனக் குழுவில் அல்லது சாதியில் இருக்கும் ஒரு குலத்தைச் சேர்ந்தவர் அதே அமைப்பிலுள்ள வேறொரு குலப் பெண்ணை மட்டுமே மணந்து கொள்ளவேண்டும். இது ஒரு பொதுவிதியாகவே இன்றளவும் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

குலத்திற்குப் பொதுவானதொரு குலமரபுச் சின்னம் (Totem) இருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு குலத்தில் இருப்பவர்கள் விலங்கிடமோ தாவரத்திடமோ இயற்கைப்பொருளிடமோ நம்பிக்கை வைப்பதால் அதைப்பற்றி உயர்வான எண்ணத்தை வளர்த்துக் கொள்வர். அவர்கள் தங்கள் கால்வழி விலங்கிடமிருந்தோ தாவரத்திடமிருந்தோ இயற்கைப் பொருளிடமிருந்தோ வந்திருக்கலாமென்று நம்புதற்கும் இடமுண்டு. அவர்களின் குலமரபுச் சின்னம் உயிர்வாழக்கூடியதாக இருந்தால் அதை அழிப்பதோ உண்பதோ கூடாது எனக் கருதுகின்றனர். ஆனால், அவர்களின் விழாக் காலங்களில் இத்தடை விலக்கப் படும். குலத்தினரைக் காக்கும் தேவதையாகவே இச் சின்னம் கருதப்படுகிறது. இதை அவர்கள் அணிந்து கொள்வர் அல்லது உடலில் பச்சை குத்திக்கொள்வர்.

குடும்பங்கள் பெருகித் தழைத்தோங்குவதற்குக் குலம் காரணமாகிறது. தம் பிரிவிலுள்ள எல்லோருக்கும் பாதுகாப்புத் தருவதுடன் தீமையிலிருந்து காத்துக்கொள்ளவும் அவர்களை ஒருங்கிணைக்கிறது; அவர்களிடையே உறவினை வலுப்படுத்துகிறது; எல்லோரையும் கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளுகிறது; தவறு செய்பவர்களைத் தண்டித்து நீதி வழங்குவதுடன் அவர்களை நல்வழிப்படுத்தவும் செய்கிறது. அதுவே அரசியலமைப்பாகி நிருவகிக்கும் பொறுப்பையும் ஏற்கிறது.

குலத்தினர் தங்களுக்கென ஒரு திறமையான தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். அவரே அனைவருக்கும் வழிகாட்டியாக இருப்பார். சில குலத்தினருக்கு அவரே கோயிற் பூசாரியாக (Priest) வும் இருப்பார். அவர் குலத்தினருக்கும் அவர்களின் மூதாதைக்கும் தொடர்பு உண்டாக்கக் கூடியவர் என்று கருதப்படுவார். கோ.க.

**துணை நூல்கள்**:

**Hutton**, **J.H. Caste** in India, Oxford University Press, Oxford, 1946.

**Hoebel**, **Adamson**, Man in Primitive World, McGraw Hill, NewYork, 1949.

Karve, Irawati, Kinship Organisation in India, Asia Publishing House, Bombay, 1968.

Mujumdar, K.N and T.N. Madan, An Introduction to Social Anthropology, Asia Publishing House, Bombay, 1959.

**குலாம் காதிறு நாவலர்**: இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகூரில் கி.பி.1833-ஆம் ஆண்டில் பிறந்தார்; மிகச் சிறந்த இலக்கியப் பணிகள் ஆற்றி நிறைவான வாழ்க்கை வாழ்ந்து 1908-இல் காலமானார்.

குலாம் காதிறு நாவலரின் இலக்கியப் பணியும் சமயப் பணியும் தமிழ்நாட்டோடு நின்றுவிடாது பர்மா, மலேசியா, இலங்கை என்னும் அண்டை நாடுகள் பலவற்றிலும் பரவிச் சிறந்தன. இவர் மிக நல்ல கவிஞர்; உரைநடை வல்லுநர்; சிறந்த உரையாசிரியர்; துணிச்சலுடைய பத்திரிகையாளர்; தெளிந்த மொழிபெயர்ப்பாளர்; நாவலரும் போற்றும் நாவலர்; தமிழ் மறுமலர்ச்சி இயக்க முன்னோடிகளுள் ஒருவர்; இசை ஆர்வலர்; சமயப்பற்றும் சமயப்பொறையும் மிக்கவர்; தமிழ்ப் பற்றுடைய சான்றோர்.

இவர் நாகூர்ப் புராணம் (1882), ஆரிபு நாயகம் (1894) என்னும் இருகாப்பியங்கள் எழுதியுள்ளார். நாகூர்ப் புராணத்தின் பாட்டுடைத் தலைவர் நாகூர் சாகுல் அமீது ஆண்டகை ஆவார். அக்காப்பியம் சாகுல் அமீது ஆண்டகையின் மறைவிற்குப்பின் அவருடைய அருளாற்றலால் நாகூரிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் நடைபெற்ற அற்புதச் செயல்களைப் பாடுபொருளாகக் கொண்டது. இக்காப்பியத்தில் 1350 விருத்தங்கள் உள்ளன. ஆரிபு நாயகம் என்னும் காப்பியத்தின் பாட்டுடைத் தலைவர் இசுலாமிய மெய்ஞ்ஞான வழிகளுள் ஒன்றாகிய ‘இரிபாயி தரீகா’வை நிறுவிய அகமது கபீர் ரிபாயி என்னும் சான்றோர் ஆவார். ஈராக்கு நாட்டுப் பதாயிகு நகரில் பிறந்த அகமது கபீர் ரிபாயின் அருள்வாழ்க்கை இக்காப்பியத்தின் பாடுபொருளாகும். இக்காப்பியத்தில் 2373 விருத்தங்கள் உள்ளன.

நபிகள் நாயகத்தைப் பாராட்டும் மதீனாக் கலம்பகம், குவாலியர் முகம்மது கௌது வலியுல்லாவின் பெருமையை விரித்துரைக்கும் குவாலியர் கலம்பகம், அகமது கபீர் ரிபாயின் புகழினைக் கூறும் பதாயிகுக் கலம்பகம் என்பன இவர் எழுதியுள்ள கலம்பக நூல்களாகும். நபிகள் நாயகத்தைப் புகழ்ந்து இவர் திருமக்காத் திரிபந்தாதி என்னும் அந்தாதி நூலினை எழுதியுள்ளார். சமுத்திர மாலை, தருகா மாலை, முகாசபா மாலை என்பன இவர் எழுதியுள்ள மாலை நூல்கள். அவற்றுள் நாகூர் முகம்மது நயினார் மரக்காயரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இவர் எழுதியுள்ள சமுத்திர மாலை நயம்பொருந்திய சிலேடைகள் நிறைந்து சிலேடை மாலையாகத் திகழ்கின்றது.

பிரபந்தத் திரட்டு, மதுரைக் கோவை, நான்காம் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை என்பன இவருடைய இலக்கிய நயம் செறிந்த நூல்களாகும். அவற்றுள் பிரபந்தத் திரட்டு தமிழ்ச்சுவை ததும்பும் 109 செய்யுள்களை உடைய நூல். மதுரைக் கோவை இரங்கூனில் வாழ்ந்திருந்த மதுரைப்பிள்ளை என்னும் தமிழ்வள்ளலைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட அகப்பொருள் கோவை நூல். நான்காம் தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப்படை, பாண்டித்துரைத் தேவர் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியபோது, அச்சங்கத்தை நோக்கிப் புலவர்களை ஆற்றுப்படுத்திப் பாடப்பட்ட ஆற்றுப்படை நூல்.

‘கன்சூல் கறாமத்து’, ஆரிபு நாயக வசன காவியம், திருமணி மாலை வசன காவியம், என்பன இவருடைய உரைநடை நூல்கள். கன்சூல் கறாமத்து நாகூர் சாகுல் அமீது ஆண்டகையின் வரலாறு கூறும் மிகப்பெரிய நூல். திருமணி மாலை வசன காவியம் செய்க்கு அப்துல் காதர் நயினார் லெப்பை ஆலிம் புலவருடைய திருமணி மாலைக் காப்பியத்தின் உரைநடை வடிவம்.

இவர் சீறாப்புராணத்திலுள்ள நபியவதாரப் படலத்திற்கு ‘நபியவதாரப் படலவுரை’ என்னும் உரைநூல் எழுதினார். அந்நூலினை எதிர்த்துப் பரங்கிப் பேட்டை காதர் அசனா மரைக்காயர், ‘நபியவதாரப் படல உரைகடிலகம்’ என்னும் நூல் எழுதினார். குலாம் காதிறு நாவலர் தம்முடைய கொள்கையை நிலைநாட்டி ‘உரைகடிலக நிராகரணம்’ என்னும் நூலினை வெளியிட, காதிர் அசனா மரைக்காயர் அதனை மறுத்து ‘உரைகடிலக நிராகரணச் சூறாவளி’ என்னும் நூலினை வெளியிட்டார். இது போன்று அக்காலத்தில் வாழ்ந்த நாகூர்ச் செவத்த மரைக்காயர் என்னும் புலவர் இவருடைய திருமணி மாலை வசனத்தினை எதிர்த்துத் ‘திருமணி மாலை வசனம் பார்க்க விசனம்’ என்னும் நூலினை எழுதினார். அந் நூல்கள் யாவும் அப்புலவர்களின் அறிவுப் போட்டியால் எழுந்த நூல்களாகையால் அவை அவர்களுடைய ஆழ்ந்து அகன்ற இலக்கண இலக்கிய அறிவினை விளக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

குலாம் காதிறு நாவலர் இரெய்னால்டு என் பாரின் 'உமறு' என்னும் ஆங்கிலப் புதினத்தினை அப்பெயரில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'பொருத்த விளக்கம்', 'நன்னூல் விளக்கம்' என்பன இவருடைய இலக்கணப் பயிற்சியைப் புலப்படுத்தும் நூல்களாகும். பொருத்த விளக்கத்திற்குச் சுதேச மித்திரனில் வெளியான மதிப்புரையைப் படித்து மகிழ்ந்த பாண்டித்துரைத்தேவர் நாகூருக்குச் சென்று இவரை நேரில் கண்டு நான்காம் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர அழைப்பு விடுத்தார் என்பர்.

இவர் பர்மாவில் வாழ்ந்த காலத்தில் 'வித்தியா சாரிணி' என்னும் பத்திரிகையை நடத்தினார். அப் பத்திரிகை இலங்கையிலிருந்து வெளிவந்த 'முசுலீம் நேசன்' பத்திரிகையுடன் நடத்திய இலக்கியப் போர் கள் மிக்க புகழ்பெற்றவை.

பேச்சுக்கலையில் வல்லவராகிய குலாம் காதிறு நாவலர் இந்தியா, இலங்கை, பர்மா, மலேசியா போன்ற இடங்களில் விரிவுரையாற்றி நாவலர் பட்டம் பெற்றுப் புகழ்சிறக்க வாழ்ந்தார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை இவ ருடைய ஆசிரியர்களுள் ஒருவர். இலக்கணக் கோடரி பிச்சை இபுறாகீம் புலவர், மறைமலை அடிகள் ஆகி யோர் இவருடைய மாணவர்களுள் சிலர். இவரை இவர் காலப் புலவர்கள் 'நான்காம் சங்க நக்கீரர்' எனப் பாராட்டினர். தமிழ்ச் சங்க மான்மியம் இவரைத் 'தண்டமிழ்க்குத் தாய்' எனப் போற்று கிறது.

சச்சிதானந்த மாலை, மும்மணிக் கோவை என் னும் நூல்களையும் இவர் எழுதியுள்ளதாகத் தெரி கின்றது. இவர் எண்ணற்ற தனிப்பாடல்களும், கீர்த் தனைகளும் எழுதியுள்ளார். இவர் நன் ஆரிபு நாவலர் நாகூர்ப் பிள்ளைத் தமிழ் என்னும் பெய ரில் இலக்கிய நயம் செறிந்த நூலொன்று எழுதியுள் ளார். செ.அய்.அ.

**குலுக்மேன், எர்மன் மேக்சு (1911-1975)**: தென்னாப்பிரிக்கச் சமுதாய மானிடவியலறிஞர்; அரசியல்சார் மானிடவியலுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தவர்; ஆப்பிரிக்கப் பழங்குடி களைப் பற்றி ஆராய்ந்த வல்லுநர். எர்மன் மேக்சு குலுக்மேன் (Herman Max Gluckman) சோகன்சு பெர்கில் 1911-இல் பிறந்தார்.

முதுகலைப் படிப்பிற்குப்பின் (1936-39) சூலு (Zulu) மக்களின் பண்பாட்டை ஆராய்ந்தார். பின் னர் (1939-41), வட உரொடீசியாவிலுள்ள உரோடசு இலிவிங்சுடன் (Rhodes - Livingstone) நிறுவனத்தில் உதவி மானிடவியலாராகப் பொறுப் பேற்றுப் பரோட்சி (Barotse) மக்களைப்பற்றி ஆய்வு செய்தார். அந்நிறுவனத்தின் இயக்குநராகப் பொறுப் பேற்றுப் பணிபுரிந்த காலத்தில் (1941-47) இலா (Ila) மக்களையும் தொங்கா (Tonga) மக்களையும் விரி வாக ஆராய்ந்தார். இவ்வனைத்து ஆய்வுகளின் பட்டறிவினைக் கொண்டு ஆப்பிரிக்கப் பழங்குடி களின் அரசியல் அமைப்பை ஆராய்ந்து, இரத்தச் சண்டைகளும் முரண்பாடுகளும் (Conficts) சமுதாய மாற்றத்தை இயக்கும் நடைமுறைகளைக் கண்டறிந் தார். இந்த ஆய்வு அரசியல்சார் மானிடவியலின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னோடி யாக அமைந்தது.

குலுக்மேன் ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும், மான்செசுட்டர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், பணியாற்றினார். இவர் நூல்களுள் குறிப்பிடத்தக்கவை: தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் கலகக்காரர்களின் சடங்குகள் (Rituals of Rebellion in South-East Africa, 1954), பழங்குடிச் சமுதாயத்தில் அரசியல், சட்டம், சடங்கு கள் (Politics, Law and Ritual in Tribal Society 1965), பரோட்சிச் சட்டமுறைமையியல் கருத்துகள் (The ideas in Barotse Jurisprudence, 1965) முதலி யன. இவர் 'பொறுப்பின் பங்கீடு'(The Allocation of Responsibility) என்னும் நூலின் பதிப்பாசிரியரு மாவார். இவர் எருசலத்தில் 1975-ஆம் ஆண்டு கலா மானார். சீ.ப.

**குலோத்துங்க சோழ சரிதை** என்பது முதற்குலோத்துங்கன் மேற் பாடப்பட்ட காப்பிய நூலாகும். மறைந்துபோன தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்று. இந்நூல் பற்றிய செய்திகள் மு. இராகவை யங்கார் எழுதிய சாசனத் தமிழ்க் கவி சரிதம் என் னும் நூலால் தெரியவருகின்றன.

இக்காவியத்தைப் பாடியவர் திருநாராயணப் பட்டர் என்பவராவார். இவருக்குக் 'கவி குமுத சந்திரன்' என்னும் சிறப்புப் பெயர் உண்டு. இவர் புதுச்சேரிச் சீமையில் திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்ட திருபுவனம் என்னும் ஊரைச் சார்ந்தவர். அவ்வூரிலுள்ள சிவாலய மண்ட பத்தின் தெற்குத் திருமதிலில் உள்ள முதற்குலோத் துங்க சோழனின் 27-ஆம் ஆட்சியாண்டில் பொறிக் கப்பெற்ற கல்வெட்டே இப் புலவரையும் இவர் செய்த காவியத்தையும் பற்றிய செய்திகளைத் தரு கிறது.

திருநாராயணபட்டர் பாடிய குலோத்துங்க சோழ சரிதை என்னும் காவியம் திருபுவனம் மகா சபையார் முன் அரசன் விருப்பப்படி அரங்கேற்றம் செய்யப்பெற்றது. அதற்காக ஊர்ச்சபையாரால் புலவருக்கு இறையிலியாக நிலம் பரிசளிக்கப்பட்ட செய்தியும் தெரியவருகிறது. அதனால், அந்நாளில் கற்றுவல்ல புலவர்களாலும் அரசனாலும் மதிக்கப் பெற்றதாக இச்சரிதை நூல் அமைந்திருந்தது என்பது தெரியவருகின்றது.

முதற்குலோத்துங்கனின் 27-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1097) இக்கல்வெட்டுப் பொறிக்கப்பெற்றுள்ளதால் இச்சோழமன்னன் ஆட்சியின் முற்பகுதி வரலாறுகளே இந்நூலுள் இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதலாம். குலோத்துங்கனின் கலிங்க வெற்றியைப் பாடிய செயங்கொண்டாருக்கு இவர் முற்பட்டவர் என்று கொள்ளலாம். 'புலவர்களாகிய குமுதங்கட்குச் சந்திரன் போன்றவர்' என்ற பொருளுடைய இவர் சிறப்புப் பெயரினின்று புலவர்களெல்லாரும் ஈடுபட்ட வாக்கினிமையுடைவர் இத் திருநாராயணபட்டர் என்றும்,அத்தகைய மதிப்பை அரசனாற் பெற்றுச் செயங்கொண்டார்க்கு முன்பே அவன் வாயிற் பெரும் புலவருள் ஒருவராய் விளங்கியவர் இவர் என்றும் கருதுதல் தகும்' என்று மு. இராகவையங்கார் துணிந்துள்ளார். இந்நூல் அந்நாளில் புலவர் முதலியோரால் போற்றப்பட்டுப் பெருவழக்காயிருந்தது என்று கொள்ள இடமுண்டு. வரலாற்றின் அடிப்படையில் எழுந்த இந்நூலின் மறைவு தமிழுக்கோர் இழப்பேயாகும்.

**குலோத்துங்கன், முதலாம் (கி.பி. 1070-1120)** சோழப் பேரரசை ஆண்ட மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவன். இவன் தாய் வழி உரிமையில் சோழநாட்டிற்கு மன்னனாக முடிசூடிக் கொண்டான். சோழர் குலத்திற்கும் கீழைச் சாளுக்கியக் குலத்திற்கும் நான்கு தலைமுறைகளாகத் திருமண உறவு தொடர்ந்து வந்துள்ளது. கீழைச் சாளுக்கிய விமலாதித்தன் முதல் இராசராசனின் மகள் குந்தவையை மணந்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்த இராசராச நரேந்திரன் தன் அம்மான் முதலாம் இராசேந்திரன் மகள் அம்மங்காதேவியை மணந்தான். அவர்களுக்குப் பிறந்தவனே இராசேந்திர சாளுக்கியன் என்றும் சாளுக்கிய இராசேந்திரன் என்றும் அழைக்கப் பெற்றான். அவன் கி.பி. 1043-ஆம் ஆண்டு பிறந்தான். அவனுடைய பதினேழாம் வயதில் (கி.பி. 1060) அவன் தந்தை இராசராசநரேந்திரன் இறந்து போனான். இளவரசனாகிய சாளுக்கிய இராசேந்திரன் வேங்கிநாட்டு ஆட்சியை மேற்கொள்ளவில்லை. அவன் சிறிய தந்தையாகிய விசயாதித்தன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான். அக்கால எல்லையில் தன் மாமன் வீரராசேந்திரனுக்கு உதவியாக மேலைச் சாளுக்கியரோடு நிகழ்த்திய போரில் ஈடுபட்டான். அவன் விட்டுணு வர்த்தனன் எனவும் அழைக்கப் பெற்றான்.

சோழ நாட்டில் வீரராசேந்திரன் இறந்த பின்னர் அதிராசேந்திரன் பட்டம் ஏற்றான். சில ஆண்டுகளில் அவன் நோய்வாய்ப் பட்டு கி.பி. 1070-ஆம் ஆண்டு இயற்கை எய்தினான். அந்நாளில் இளவரசனாக இருந்து பட்டம் ஏற்பதற்கு வாரிசு இல்லாமற் போகவே சோழ நாடு அல்லலுற்றது. வடபுலத்தில் இருந்த சாளுக்கிய இராசேந்திரன் சோழ நாடு அல்லலுறுவதைக் கேள்வியுற்றுச் சோழ நாட்டின் தலைநகருக்கு விரைந்து வந்தான். அங்கிருந்த அமைச்சர் படைத்தலைவர் முதலியோர் ஆட்சிப் பொறுப்பை இவனுக்கே அளிப்பதென முடிவு செய்து கி.பி. 1070 -ஆம் ஆண்டு, சூன் திங்கள் 9-ஆம் நாளில் முறைப்படி முடிசூட்டிவைத்தனர். அந்நாளில் குலோத்துங்க சோழன் என்னும் பட்டப் பெயரும் எய்தினான்.

இவன் ஆட்சியை ஏற்றபின் சோழ நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்பங்களும் கலகங்களும் நீங்கின. நாடு அமைதியாக இருந்தது. சோழப் பேரரசர்கள் இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களையும் மாறி மாறிப் புனைந்து அரசாண்டனர். குலோத்துங்கன் இராசகேசரி என்னும் பட்டம் பூண்டவன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவன் பெரும்பாலும் போர்களைத் தவிர்த்து அமைதியாக அரசாட்சி செய்வதையே விரும்பினான். எனினும் தவிர்க்க இயலாத நிலையில் மேற்கொண்ட போர்கள் சில குறிக்கத்தக்கன. இவன் இளங்கோப் பருவத்தில் சக்கரக்கோட்டமண்டலத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த தாராவர்சன் என்பவனை வென்றான். இவன் தன் இளமைக் காலத்தில் செய்த திக்கு விசயத்தில் நிகழ்ந்த போராக அது இருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். அது போன்றே இளமைக்காலத்தில் மேலைச் சாளுக்கியரோடும் போர் செய்துள்ளான். தாராவர்சனோடு போர் செய்யுங்கால் அவனுக்கு உதவவந்த சாளுக்கிய விக்கிரமாதித்தன் படையையும் வென்றுபுறங்கண்டான் என்றும் கூறுவர். சோழப் பேரரசனாக ஆட்சியை ஏற்றபின் கி.பி. 1076-ஆம் ஆண்டில் மேலைச் சாளுக்கிய மன்னன் ஆறாம் விக்கிரமாதித்தனோடு போர் செய்தான். ஐந்தாண்டுகள் படை சேர்த்து வலிமைமிகுந்து விளங்கிய விக்கிரமாதித்தன் குலோத்துங்கனிடம் தோற்றான். இப்போர் கோலார் மாவட்டத்தின் நங்கிலி என்னும் இடத்தில் நடைபெற்றது. அதில் துணைநின்ற ஒய்சள அரசன் எரியங்

கனும், கடம்பகுலமன்னன் சயகேசியும், திரிபுவனமல்ல பாண்டியனும், தேவகிரி யதுகுலவேந்தன் சேவுணனும் தோற்கும்படி செய்தான். குலோத்துங்கனுக்கு உதவியாகச் சோமேசுவரன் விக்கிரமாதித்தனை எதிர்த்து நின்று போரிட்டான். அவன்தன் தம்பியால் சிறைபிடிக்கப்பட்டுத் தன் நாட்டையும் இழந்தான். இப்போரில் எண்ணிறந்த யானைகளையும் பொருட் குவியலையும் பெற்றுக் கங்கை கொண்ட சோழ புரத்தையடைந்தான்.

இவன் ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாட்டைப் பாண்டியர்கள் ஐவர் ஆட்சி செய்துவந்தனர். முத லாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் காலத் திலும் சோழப் பேரரசுக்கு அடங்கித் திறை செலுத்தி வந்த பாண்டியர்கள் தக்க சமயத்தில் சுய உரிமை பூண்டு ஐந்து பிரிவாகப் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தனர். அவர்கள் ஐவரையும் கி.பி. 1086-ஆம் ஆண்டு போர் செய்து புறங்கண்டான் குலோத்துங் கன். அதனால் கன்னியாகுமரி வரை இவன் வயப் பட்டது. அந்நாடுகளை அவர்கட்கே திரும்பக் கொடுத் துத் திறை செலுத்தி வருமாறு கட்டளையிட்டான். பின்னர்ச் சேர மன்னர்களுடன் விழிஞம், காந்த ளூர்ச்சாலை, கோட்டாறு என்னும் இடங்களில் போர் செய்து வெற்றி பெற்றதோடு கோட்டாற்றில் நிலைப்படை ஒன்றையும் நிறுவினான்.

இவன் இருமுறை கலிங்கர்களுடன் போரிட்டுள் ளான். முதற் கலிங்கப் போர் கி.பி. 1096-இல் நடை பெற்றது. இப்போர் குலோத்துங்கன் ஆணைப்படி மகன் விக்கிரமசோழனால் நிகழ்த்தப் பெற்றது. இது தென்கலிங்கப் போர் என்று கூறத்தக்கது. இப்போரில் தென்கலிங்க வீமனைத் தோற்கும்படியாகச் செய் தான். மற்றொரு போர் கி.பி. 1112-ஆம் ஆண்டில் நடைபெற்றது. இது வடகலிங்க மன்னனாகிய அனந்த வர்மனுடன் குலோத்துங்கன் நிகழ்த்திய போராகும். குறிப்பிடத்தக்க இப்போரில் இவன் தன் கீழ்ப் பல்லவ நாட்டை ஆண்ட கருணாகரத் தொண்டைமானைப் படைத்தலைமை ஏற்குமாறு செய்து போரிடச் செய் தான். அப்போரில் கருணாகரத் தொண்டைமான் பெருவெற்றி எய்தினான். செயங்கொண்டார் என்ற புலவர் 'கலிங்கத்துப்பரணி' என்னும் நூலில் அவ் வெற்றியை மிகவிரிவாகக் கூறியுள்ளார். கலிங்கத்தை அப்பொழுது ஆண்டுவந்த அனந்தவர்ம சோழ கங் கன் தன் அமைச்சனாகிய எங்கராயன் கூறியவற்றுக் குச் செவிசாய்க்காது போரில் ஈடுபட்டுத் தோற் றான்.

குலோத்துங்கனின் ஆட்சித் தொடக்கத்தில் முன் னோர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த ஈழநாட்டை இழந் தனன் என்பது குறிப்பிடத்தக்கது. அதிராசேந்திரன் இறந்தபொழுது, சோழநாடு குழப்பமுற்றிருந்த சூழ் நிலையைப் பயன்படுத்திச் சிங்களவர் முதல் விசய பாகு என்பவனைக் கொணர்ந்து கி.பி. 1073-இல் முடிசூட்டினர். அவன் சோழப்படையைத் தக்க இடத்தில் எதிர்த்து வெற்றி பெற்று ஈழ நாடு முழு மைக்கும் தன்னை அரசனாக்கிக் கொண்டான்.

சோழரின் பிரதிநிதிகளாக அதிகமான் மரபினர் கங்கபாடி நாட்டை ஆண்டுவந்தனர். ஆனால் கி.பி. 1116-இல் போசள அரசனாகிய பிட்டிக விட்டுணு வர்த்தனன் என்பவன் அப்பிரதிநிதிகளைத் துரத்தி விட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். எனவே, சோழ ருடைய ஆளுகையிலிருந்து கங்கபாடியும் நழுவிவிட் டது. அதுபோன்றே வேங்கி நாடும் கி.பி. 1118-ஆம் ஆண்டு, பாலையா என்பவன் கைக்கு மாறியது.

சோழப் பேரரசு இவன் ஆட்சிக் காலத்தில் சில இழப்புகளைப் பெற்றிருப்பினும் வடக்கே மகாநதி முதல் தெற்கே குமரி முனை வரை பரவியிருந்தது. இவன் 50 ஆண்டுகட்கு மேலாக ஆட்சி செய்தான். இவன் சீன நாட்டுடன் நட்புறவு கொண்டிருந்தான். கி.பி. 1077-ஆம்ஆண்டுஎழுபத்திரண்டு பேர் அடங்கிய குழுவொன்று சீனநாட்டிற்குச் சென்று மீண்டது. இவன் அண்டையிலுள்ள கடல்கடந்த நாடுகளிலும் உறவு வைத்திருந்தான் எனத் தெரிகிறது.

இவன் ஆட்சிக்காலத்தில் நிலம் அளக்கப் பெற் றுத் தரம் பிரிக்கப்பட்டது. சோழ நாடு முழுமையும் அளக்குமாறு செய்து விளை நிலங்களின் பரப்புக் கேற்ப நிலவரியை ஒழுங்குபடுத்தினான். 'சுங்கந் தவிர்த்திருள் நீக்கி உலகாண்டமை' சிறப்பாகக் கல் வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ளது. எனவே 'சுங்கந் தவிர்ந்த சோழன்' என்று அழைக்கப்பெற்றான். அபயன், சயதரன், சயதுங்கன், விருதராசபயங்கரன், கரிகாலன், இராசநாராயணன், உலகுய்ய வந்தான், திருநீற்றுச் சோழன், மனுகுலதீபன், உபயகுலோத்த மன் எனப் பல பெயர்களால் அழைக்கப் பெற்றுள் ளான்.

கல்வியில் சிறந்த இவன், இசையிலும் ஈடுபாடு காட்டியுள்ளான். சிவபெருமானிடத்தில் ஈடுபாடு கொண்டவன் என்றாலும் எல்லாச் சமயங்களையும் ஒப்பநோக்கியுள்ளான். மன்னார்குடியில் உள்ள இராசகோபால சுவாமி கோயில் இவன் காலத்தில் எழுப்பப் பெற்றது. பௌத்த விகாரங்களுக்கும், சம ணப் பள்ளிகட்கும் இறையிலியாக நிலங்களை அளித் துச் சிறப்பித்துள்ளான். இவனுக்கு மதுராந்தகி, தியாகவல்லி என்னும் இருவர் பட்டத்தரசியராகத்

திகழ்ந்துள்ளனர். இவன் கி.பி. 1120-ஆம் ஆண்டில் இயற்கை எய்தினான்.

**குலோத்துங்கன், இரண்டாம்** (கி.பி. 1133-1150) சோழப் பேரரசர்களுள் ஒருவன். இவன் தன் தந்தை விக்கிரமசோழன் இயற்கை எய்தியபின், கி.பி. 1133-இல் அரியணை ஏறினான். சோழ மன்னர்களின் வழக்கப்படி 'இராசகேசரி' என்னும் பட்டம் புனைந்து கொண்டான். இவன் தில்லையம்பதியில் முடிசூடிக் கொண்டதாகத் திருமாணிக்குழிக் கல்வெட்டு கூறுகின்றது.

இவன் ஆட்சியில் நாடு அமைதியாக விளங்கியது. இவன் பல்கலை வல்லுநனாகத் திகழ்ந்தமைக்கு நாடு அமைதியாக இருந்ததே காரணம் எனலாம். இவன் தமிழ்ப் புலமை மிக்கவன். இவன் தந்தையின் அவைக்களப்புலவராக இருந்த கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரிடம் இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்றவன். அதனால் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றிருந்தான் என்பது குறிப்பிடத்தக்தது. இவன் தன் ஆசிரியர்பால் பெருமதிப்பு வைத்திருந்தான். ஒட்டக்கூத்தரும் இவன் கல்விப் பெருமையைப் பல இடங்களில் சுட்டியுள்ளார். துரக வித்தியா விநோதன், வில் விநோதன், நித்திய நீதப்பிரமோகன், ஞான கெம்பீரன்என இவனைப் பலப்படப் பாராட்டியுள்ளார். இவன் குதிரை இலக்கணம் தெரிந்தவன் எனவும், வில்லியல் இலக்கணம் அறிந்தவன் எனவும், இசைநூல் வல்லுநன் எனவும், கலைகளில் தேர்ச்சி பெற்றவன் எனவும் அறியலாம்.

ஒட்டக்கூத்தர் இவனுக்கு ஆசிரியராக மட்டுமன்றி அவைக்களப் புலவராகவும் வீற்றிருந்தார். இவன் மீது உலா ஒன்றும், பிள்ளைத்தமிழ் ஒன்றும் பாடி இவனைச் சிறப்பித்துள்ளார். அவை முறையே 'குலோத்துங்கன் உலா' எனவும், 'குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்' எனவும் வழங்குகின்றன. அந்நூல்களில் இவன் முன்னோர்களான சோழ மன்னர்களின் வரலாறுகளையும், இவன் செங்கோலின் சீர்மையையும் பாராட்டியுள்ளார்.

இம்மன்னன் காலத்தில் வாழ்ந்த மற்றொரு புலவர் தண்டியலங்கார ஆசிரியர். இவர் நூலில் காணப்படும் எடுத்துக்காட்டுப் பாக்களில் இவன் வீரம், கொடை, ஆற்றல் முதலியன புகழ்ந்து கூறப்படுகின்றன.

தில்லைக் கூத்தப்பெருமானிடம் எல்லையில்லாஈடுபாடு கொண்ட இவன். தில்லைநகர் வீதிகளைப்பெருவீதிகளாகச் செய்தான். பற்பல மண்டபங்களைக் கட்டினான். தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்னாலும், மணியாலும் அலங்கரித்தான். பேரம்பலத்தையும் உட்கோபுரத்தையும் திருச்சுற்று மாளிகையையும் திருப்பணி செய்தான்; எழுநிலைக் கோபுரங்களை எடுப்பித்தான்; சிவகாமகோட்டத்தைப் புதுப்பித்து மிகப் பெரிதாக்கினான்; தில்லைக் கோவிலிலுள்ள சிவகங்கைக்குளம் நாற்புறமும் கூடங்களோடு திகழுமாறு செய்தான்; ஆனிரைகளையும் யானைகளையும் மிகுதியாக வழங்கினான்; கோயில் திருப்பணி நடைபெறும் போது திருமால் மூர்த்தம் இடையூறாக இருப்பதாகக் கருதி அதனைப் பெயர்த்துக் கடலில் கிடத்துமாறு செய்தான். இந்நிகழ்ச்சி வைணவர்களின் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தியது. திவ்வியசூரிசரிதம், கோயிலொழுகு முதலிய நூல்களில் இந்நிகழ்ச்சி மிகைபடக் கூறப்பட்டுள்ளது. சைவ சமய குரவர் மூவரிடத்தும் இவன் பேரன்புடையவன். அவர்களின் திருவுருவங்களைத் திருவாரூர்க் கோயிலில் அமைத்துள்ளான். வழிபாட்டிற்கும் விழாவிற்கும் நிவந்தமாக இறையிலி நிலங்களை மிகுதியாக வழங்கியுள்ளான்.

கங்கை கொண்ட சோழபுரத்தை இவன் தலைநகராகக் கொண்டிருப்பினும் தில்லைத் திருப்பதியிலும் இவன் பல காலம் தங்கியுள்ளான். கீழைப்பழுவூர், பிரமதேசம், ஏமப்பேரூர் ஆகிய இடங்களிலும் இவன் சிற்சில போது தங்கி ஆட்சி செய்துள்ளான் என்பதற்குரிய சான்றுகள் காணப்பெறுகின்றன.

இவன் தந்தை விக்கிரமசோழனின் காலத்தில் சோழ நாடு எத்துணைப் பரப்புடையதாக இருந்ததோ, அதனை அப்படியே இவன் காலத்தில் காப்பாற்றி வந்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். வேங்கி நாடு இவன் ஆட்சிக்குட்டிருந்தது என்பதும் கருதத்தக்கது.

தியாகவல்லி, முக்கோக்கிழானடி என்ற இவனுடைய இருமனைவியருள் தியாகவல்லியே பட்டத்தரசியாக இருந்தனள். இவள் புவனமுழுதுடையாள் என்ற சிறப்புப் பெயருடன் குறிக்கப்படுகின்றாள். இவனுடைய மகனான இராசராசன் இவன் இருமனைவியருள் யாரிடத்துப் பிறந்தவன் என்பது தெரியவில்லை. அவனுக்கு கி.பி. 1146-ஆம் ஆண்டு இளவரசுப் பட்டம் கட்டுவித்தான். இவன் கி.பி. 1150-ஆம் ஆண்டு இயற்கையெய்தினான் என்பதற்குரிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவன் அபயன் அனபாயன், எதிரிலாப் பெருமாள், கலிகடிந்த சோழன், திருநீற்றுச் சோழன், பெரியபெருமாள் போன்ற சிறப்புப் பெயர்களால் குறிக்கப் பெற்றுள்ளான். இவற்றுள் அபயன், திருநீற்றுச் சோழன்

என்னும் பெயர்கள் இவன் பாட்டன் முதற்குலோத் துங்கனுக்கு வழங்கிய பெயர்களாகும். அனபாயன் என்னும் பெயர் இவன் பிற்காலத்தில் எய்திய பெய ராக இருக்கலாம் என்பர்.

**குலோத்துங்கன், மூன்றாம்** (கி.பி. 1178-1218) சோழப்பேரரசனாகவிளங்கியவன். இவன் இரண்டாம் இராசாதிராசனுக்குப்பின் கி.பி. 1178-ஆம் ஆண்டில் அரியணை ஏறினான். இவன் இரண்டாம் இராசாதி ராசன் மகன் என்றும், அல்லன் என்றும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. இரண்டாம் இராசாதி ராசன் கட்டிய தாராசுரம் கோயிலைக் குடுமியான் மலைக் கல்வெட்டில் இவன் குறிக்குங்கால் தன் தந் தையால் கட்டப்பட்டது எனக் குறித்திருத்தலால், இவன் தந்தை இரண்டாம் இராசாதிராசன் என முடிவு செய்வர். இவன் பரகேசரி என்னும் பட்டம் புனைந்து அரசாண்டான்.

இவன் நாற்பதாண்டுகள் சோழ நாட்டில் செங் கோல் செலுத்தியுள்ளான். இவனுடைய வீரத்தை யும் ஆற்றலையும் இறை ஈடுபாட்டையும் உணர்த்து கின்ற பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவன் பல போர்களை நிகழ்த்தியுள்ளான். இவன் பாண்டி யனுடன் மும்முறை போர் செய்துள்ளான். இவன் தந்தையால் உதவி செய்யப் பெற்ற வீரபாண்டியன், இராசாதிராசன் தனக்குச்செய்த உதவிகளை மறந்து சோழநாட்டைப் பகைத்துக் கொண்டிருந்தான். அதனால், நாட்டை இழந்த குலசேகரபாண்டியன் மகன் விக்கிரம பாண்டியன் மூன்றாம் குலோத்துங் கனிடம் அடைக்கலம் புகுந்து அரியணையில் அமர்த்த வேண்டினான். அதனால், பாண்டியனுடன் போர் செய்வது இன்றியமையாததாயிற்று. இப்போரில் வீரபாண்டியன் தோற்றதோடு, அவன் மக்களுள் ஒருவனும் இறந்தான். வீரபாண்டியனுக்கு உதவி செய்ய வந்த சிங்களப் படையும் பெருந்தோல்வியை அடைந்தது. மதுரையும் அரசும் கொண்டு வெற்றித் தூண் நாட்டி அந்நாட்டை விக்கிரமபாண்டியனுக்கு அளித்தான்.

சில ஆண்டுகள் சென்றபின், தோற்ற வீரபாண் டியன் சேர மன்னன் உதவி பெற்றுத் தன் நாட்டை மீட்க முயன்றான். அதனை அறிந்த குலோத்துங்கன் நெட்டூரில் அவ்விருவர் படையையும் முறியடித்துப் பெருவெற்றி பெற்றான். பாண்டியனுக்கு வழிவழி உரியதாயிருந்த முடியையும், வீரபாண்டியன் பட் டத்தரசியையும் கைப்பற்றினான். பெருந்தோல்வி யைத் தழுவிய வீரபாண்டியன் தன் மக்களுடன் சேரநாட்டில் அடைக்கலம் புகுந்தான். அதனால் தனக்கு இடையூறு நேரலாம் எனக் கருதிய வீர கேரளன் வீரபாண்டியனையும், அவன் மக்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு சென்று குலோத் துங்கனிடம் அடைக்கலம் புகுந்தான். அவர்களை அன்புடன் ஏற்றுப் பாண்டிநாட்டின் ஒரு பகுதியை வீரபாண்டியனுக்குக் கொடுத்து, வீரகேரளனுக்குப் பொன்னும் மணியும் உதவி ஆதரித்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போர்கள் கி.பி. 1180-இலும், 1188-ஆம் ஆண்டிற்கும் 1193-ஆம் ஆண்டிற்கும் இடையிலும் நிகழ்ந்தவை.

பாண்டி நாட்டில் குலோத்துங்கன் உதவியினால் அரியணை ஏறிய விக்கிரம பாண்டியன் இறந்தபின், சடையவர்மன் குலசேகரபாண்டியன் கி.பி. 1190 -இல் அரியணை ஏறினான். அவன் குலோத்துங்கன் செய்த உதவிகளை மறந்து பகைவர்களோடு சேர்ந்து கொண்டு தீங்கிழைக்கத் தொடங்கினான். அதனால் பெருஞ்சினங் கொண்ட குலோத்துங்கன், மட்டியூர், கழிக்கோட்டை என்ற ஊர்களில் பாண்டி நாட்டுப் படையுடன் போர் செய்ய நேர்ந்தது. பெருந்தோல்வியைத் தழுவிய சடையவர்மன், தன் தம்பியுடன் மதுரையை விட்டு ஓடிவிட்டான். மது ரையம்பதியில் சோழபாண்டியன் என்னும் பட்டம் புனைந்து வீரமாமுடி சூட்டிக் கொண்டான். சேர நாடு பாண்டி நாடு இரண்டையும் வென்றடிப்படுத் தியமையால் திரிபுவன வீரதேவன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். இம்மூன்றாம் போர் கி.பி. 1202-ஆம் ஆண்டிற்கு முன்னரே நிகழ்ந்திருத்தல் வேண் டும்.

வீரபாண்டியனுக்குச் சிங்கள மன்னன் பெரும் படை அனுப்பி உதவியதால் சிங்களர்களை எதிர்க்க வேண்டிய இன்றியமையாமை குலோத்துங்கனுக்கு ஏற்பட்டது. எனவே, ஈழநாட்டின் மீது படையெடுத் துப் போர் செய்யலானான். இது கி.பி. 1188-ஆம் ஆண்டை ஒட்டிய நிலையில் நிகழ்ந்தது. இதில் குலோத்துங்கன் வெற்றி பெற்றான் என்று கல் வெட்டுகள் கூறுகின்றன.

ஈழநாட்டுப் படையெடுப்பிற்குப் பின், கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அதன் தலைநகராகிய கருவூரைக் கைப்பற்றினான். இப் படையெடுப்பு கி.பி. 1194-ஆம் ஆண்டிற்கு முன் நிகழ்ந்திருத்தல் வேண்டும். தோல்வியுற்ற கொங்கு வேந்தன் அடைக்கலம் புகுந்து மீண்டும் நாட்டைப் பெற்று ஆளத்தொடங்கினான். இதனால் கருவூர் முடி வழங்கு சோழபுரம் என்னும் பெயர் பெறலா யிற்று.

வடபுலத்திலே ஆந்திர நாட்டில் ஆண்டுவந்த நல்ல சித்தன தேவனை இவன் போரில் சந்திக்க

வேண்டியவனாக இருந்தான். சோழர் ஆளுகைக்குட் பட்டிருந்த அவன் தனியரசாக வெளிப்படுத்திக் கொண்டதுடன் காஞ்சியம்பதியைக் கைப்பற்றினான். அவனை வென்று குறுநில மன்னன் ஆக்கியதுடன் காஞ்சியைத் தன்வயமாக்கினான். இப்போர் கி.பி. 1194க்கும் 1197க்கும் இடையில் நிகழ்ந்துள்ளது. வேங்கிமன்னனையும் இவன் வென்று அந்நாட்டைக் கைப்பற்றி உறங்கை என்னும் நகர் புகுந்தான். ஓரங் கல் மன்னன் காகதீய கணபதி என்பான் வலிமை காரணமாக மேற்கொண்ட போரைக் குலோத்துங் கன் முறியடித்தான் என்று கருதவும் இடம் உண்டு.

இவன் காலத்தில் சோழ நாடு தெற்கே குமரி முதல் வடக்கே வேங்கி நாடு வரை பரவியிருந்தது. சேர நாடு, பாண்டி நாடு, கொங்கு நாடு, கங்க நாடு தெலுங்கு நாடு போன்றவை இவன் ஆட்சியின் கீழ் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவன் காலத்தில் அமைதி நிரம்பிய நாடாகச் சோழ நாடு எல்லா வளங்களையும் பெற்றுத் திகழ்ந்தது.

இவன் நல்ல சிவநெறிச் செல்வன். இவனைச் சிற்றம்பலவாணரின் 'ஏகபக்தன்' என்று ஒரு கல் வெட்டு வருணிக்கின்றது. இறைவன் 'நம்தோழன்' என்று குறிப்பிட்டுள்ளதாகக் கூறும் செய்தியொன் றும் உள்ளது. பெரும் பொருளைச் சிவாலயங்களுக் குத் திருப்பணி செய்வதில் செலவழித்துள்ளான்.

இவனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகிய 'திரிபுவன வீரதேவன்' என்னும் பட்டம் நிலைத் திருக்குமாறு திரிபுவனவீரேச்சுவரம் என்னும் சிவன் கோவிலைத் திருவிடை மருதூருக்கு அண்மையில் தோற்றுவித்தான். மதுரையிலும் தில்லைப்பதியிலும் காஞ்சி, திருவிடைமருதூர், இராசராசபுரம், திரு வாரூர் ஆகிய இடங்களிலும் குறிக்கத்தக்க திருப்பணி கள் பலவற்றைச் செய்துள்ளான்.

இவன்தன் ஆட்சிக் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரமே தலைநகரமாக இருந்தது. பழையாறை இரண்டாம் தலைநகரமாக விளங்கியது. விக்கிரம சோழபுரத்திலும் இவன் சிலகாலம் தங்கி ஆட்சி செய்துள்ளான்.

இவன் தமிழ் வளர்ச்சியில் பெரிதும் கவனம் செலுத்தி வந்தான். வீராந்தப் பல்லவரையர் இவன் அவைக்களப் புலவராக விளங்கினார். நேமிநாதம், வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியல் ஆகிய இருநூல்களையும் செய்த குணவீரபண்டிதர் இவன் காலத்தவரே. இவன் காலத்தில் மாபாரதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. நன்னூல் செய்த பவணந்தி முனிவரும் இவன் காலத்தவரே என்பது குறிப்பிடத்தக்கது.

சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் செய்த மிகப் பெரிய தொண்டாகக் கருதத்தக்கது அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரைக் கொண்டு பெரியபுரா ணம் பாடுவித்தமையே ஆகும். இவர் குலோத்துங் கனின் அமைச்சராக இருந்தவர்.

வீரராசேந்திரன், முடிவழங்குசோழன், சோழ கேரள தேவன், திரிபுவன வீரதேவன், முடித்தலை கொண்ட பெருமாள், உலகுடையநாயனார், இரா சாக்கள் தம்பிரான், உலகுய்யவந்த நாயனார், தனி நாயகன் ஆகிய பல்வேறு சிறப்புப் பெயர்களைக் கொண்டு இவன் அழைக்கப் பெற்றான்.

இவன் ஆட்சியின் 22-ஆம் ஆண்டில் குகையிடி கலகம் ஒன்று நிகழ்ந்தது. இவ்வேந்தன் மனைவி புவனமுழுதுடையாள் என்று அழைக்கப் பெற்றாள். இவள் மகன் மூன்றாம் இராசராசன் எனத் தெரி கிறது. இவன் கி.பி. 1218-இல் இயற்கை எய்தினான்.

சு.சா.

**குவலயானந்தம்**: தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகைப் படும் என்பர். எனினும், இற்றைக்குக் கிடைத்திருக் கும் பழைமையான நூலாய தொல்காப்பியத்தில் எழுத்து சொல் பொருள் எனும் மூவகைப் பகுப்பே காணப்படுகின்றது. பொருளின் பகுதியாகச் செய்யு ளியல் அமைந்துள்ளது. உவமையியலில் கூறும் உவமை என்பதை அணியென்பாரும் பொருள் விளக் கும் கருவி என்பாரும் உளர்.

பொருளின் பகுதியாக அமைந்திருந்த யாப்பும் அணியும் காலப் போக்கில் தனித்தனி எண்ணத்தகும் சிறப்புடையவாயின. யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை, குவலயானந்தம், தண்டியலங்காரம் போல்வன இவ்வகையில் எழுந்தனவாம்.

அணியிலக்கண நூல்களுள் குவலயானந்தம் என் பதும் ஒன்றாகும். இப்பெயரில் அமைந்த அணியிலக் கண நூல்கள் இரண்டாம். அவற்றின் வேறுபாடு தெரிய குவலயானந்தம்-1, குவலயானந்தம்-2 எனக் குறிக்கலாம்.

**குவலயானந்தம்-1**: சென்னை, உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம் இதனை முதன்முதல் பதிப்பித் தது. இந்நூற்கு அமைந்துள்ள சிறப்புப் பாயிரப்பாக் களால் இந்நூல் செய்தவர் மணிவாசகர் என்பதும்,

மீமாம்சையின் பொருள் உணர்ந்து யாத்த அகத்தியமுனிவரின் சிவவியாகரணம் எனும் நூலே இதற்கு முந்துநூல் என்பதும், இதற்கு ஆசிரியர் இட்ட பெயரே குவலயானந்தம் என்பதும் விளங்குகின்றன. இதன்கண் குறிக்கப்பெற்ற சிவவியாகரணம் பற்றி ஏதும் தெரிந்திலது. வரகுண பாண்டியன் வேண்டுகோட்கிணங்க மணிவாசகர் இந்நூலைத் தமிழில் யாத்தார்.

இப்பாடற்கண் குறிக்கப்பெறும் வரகுணன் எக்காலத்து வாழ்ந்தவன் என்பது தெரியாமையால் இந்நூல் எழுந்த காலமும் தெரிந்திலது. திருவாசகம் அருளிய மணிவாசகரே இந்நூலாசிரியர் என்று சிலர் கூறும் கருத்திற்குச் சான்றுகள் இல்லை. இந்நூலின் உரையாசிரியரும் இவரேயாவர்.

இந்நூல் உறுப்பியல், அணியியல், சித்திரவியல் என மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது. இவ்வியல்களில் முறையே 150, 120, 29 நூற்பாக்கள் உள்ளன. மூன்றாம் இயலான சித்திரவியலில் 11-ஆம் நூற்பா உரையில் ‘இப்பெற்றியாவது சித்திரகவி எனப்பெறும். இவ்வகை விகற்பம் எல்லாம் மேற்சொல்லுதும்’ எனக் கூறப்பெற்றுள்ளது. இவ்வியல் முதல் நூற்பாவில் கூறியுள்ள பொருள்களை ஒவ்வொன்றாக விளக்கிவரும் ஆசிரியர், அகடன கடனம் என்பதற்கு விளக்கம் தருவதோடு அமைந்துவிடுகின்றார். அதற்குப் பின்னுள்ள பகுதிகள் விளக்கப்பெறவில்லை. இவ்வாற்றான் இந்நூல் முழுமைபெறவில்லை என்பது புலனாகின்றது.

முதற்கண் உள்ள உறுப்பியலில் சொல்லிலக்கணம் பற்றிக் கூறுகின்றார். அணியிலக்கணத்தின் உறுப்பாகச் சொல்லியலைக் கூறியிருப்பது இந்நூலின் தனித்தன்மையாகும். இதன்கண் 87 அணிவகைகள் கூறப்பட்டுள்ளன.

**குவலயானந்தம்**-2: காளிதாசர் இயற்றிய சந்திராலோகத்தை முதல்நூலாகக் கொண்டு எழுந்தநூல் வடமொழியின்கண்ணுள்ள குவலயானந்தம் என்னும் நூலாகும். இதன் ஆசிரியர் அப்பையதீட்சிதர் என்பர். அவ்வடமொழிநூலை எட்டயபுர மன்னர் இராமகுமார எட்டப்ப மகாராசர் என்பார் தம் அவைப்புலவரும், வடமொழிப் புலவருமான சங்கர நாராயண சாத்திரியாரைக் கொண்டு மொழிபெயர்க்கச் செய்தார். அவ்வாறு மொழிபெயர்த்த காலம் கி.பி. 1889-ஆகும். அம்மொழிபெயர்ப்பை அவ்வவையின்கண் இருந்த தமிழ்ப்புலவர் முகவூர் மீனாட்சிசுந்தரக் கவிராயர் என்பார் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களாக யாத்தமைத்தனர். இவ்விருவர்தம் முயற்சியால் எழுந்த நூலே இந்நூலாகும்.

இந்நூல், எட்டயபுர மன்னரின் மகனார் வேங்கடேசுவர பாண்டியன் என்பாரின் வேண்டுகோட்கிணங்க உ. வே. சீனிவாசாச்சாரியார் என்பவராலும், ஆனூர் சிங்காரவேல் முதலியாராலும் கி. பி. 1895-இல் முதன்முதல் பதிப்பிக்கப்பட்டது. எட்டயபுர மன்னரின் விருப்பத்திற்கிணங்க இந்நூல் வெளிவந்தமையின் அம்மன்னரை முன்னிலைப்படுத்திப் பாடல்கள் அமைந்துள்ளன. அம்மன்னருக்கு உரிமையானதும் முருகன் வீற்றிருப்பதுமான கழுகுமலையும், திருமால் எழுந்தருளியிருக்கும் சாத்தூரும் இந்நூற்கண் அங்கங்கே குறிக்கப்பெற்றுள்ளன. இந்நூற்கண் அமைந்துள்ள பாடல்கள் 167. இறைவிக்குரிய வணக்கத்துடன் இந்நூல் தொடங்குகிறது. சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிலையம் குவலயானந்தம் 1, 2 சந்திராலோகம் ஆகிய மூன்று நூல்களையும் சேர்த்து கி.பி. 1979-இல் பதிப்பித்துள்ளது. கு.சு.

**குவாங்சீ**: சேய்மைக் கிழக்குப் பகுதியில் சீன நாட்டின் தென் கிழக்கில் உள்ள ஒரு மாநிலம் குவாங்சீ (Kwangsi). மாநிலத்தின் தலைநகர் யுங்னிங்கு (Yung ning). சீ (Si) எனப் பெயர் பெறும் ஆற்றின் துணைநதிகள் இப்பகுதியை வளப்படுத்துவதால் வேளாண்மை வளர்ச்சியடைந்துள்ளது. மலைகள் பல இங்கு உள்ளன. இம்மாநிலத்தில் மிகுதியாகக் காடுகள் இருப்பதால், மரம் முதலிய பொருள்கள் கிடைக்கின்றன. செம்பு, தங்கம், வெள்ளி முதலியனவும் கிடைக்கின்றன. இம்மாநிலம் 1958-இல் விரிவுபடுத்தப்பெற்றுக் குவாங்சீ சுயாங்கு சுதந்திரப் பகுதி என்ற புதிய பெயரைப் பெற்றது. புதிய சுதந்திர மாநிலத்தின் பரப்பு 220,150 சதுர கி.மீ. தெ.பா.

**குவாங்சௌ (Guangzhou)**: காண்க: காண்டன் (Canton).

**குவாங்துங்கு**: செழிப்பான ஆற்றுச் சமவெளிகளைப்பெற்ற இம்மாகாணம், சீனாவின் தென்கோடிக் கடலோரத்தில் உள்ளது. பல தீவுகளைக் கொண்ட இப்பகுதியைச் சுற்றிக் கிழக்கிலும் மேற்கிலும் தென் சீனக் கடல் காணப்படுகிறது. கருங்கல் மலைத்தொடர்களும் இங்கு உள்ளன. ஆன் (Han), துங்கு (Tung), பே (Peh), சீ (Si) என்று கூறப்பெறும் நான்கு ஆறுகள் இப்பகுதியில் ஓடுகின்றன. இதன் கடற்கரை 800 கி. மீ. நீளமுள்ளது.பல சிறந்த துறைமுகங்களையும் இங்குக் காணமுடிகிறது. குவாங்துங்கின்(Kuangtung) தலைநகர், குவாங்சௌ(காண்டன்).

உப்பு, பட்டு, மீன் முதலியன வாணிகப் பொருள்களாயுள்ளன. பழவகைகள், புகையிலை, சர்க்கரை, தேயிலை, அரிசி ஆகியன உற்பத்தியாகின் றன. இதன் பரப்பு 134,272 ச.கி.மீ. தெ.பா.

**குவாசிரோப் பழங்குடி** தென் அமெரிக்கா வின் வட கோடியில் வாழும் பழமையான மக்களினக் குடியாகும். இக்குடியினர் வாழும் பகுதி கரீபியக் கடலுக்கும் வெனிசுலா வளைகுடாவிற்குமிடையே உள்ள குவாசிரோ முந்நீரகம் (Guajiro Peninsula) ஆகும். இப்பகுதி வறண்ட பாலைநிலமாகும். இங்குச் செப்டம்பர் முதல் நவம்பர் வரையிலான மூன்று மாதங்களில் மட்டுமே மிதமான மழை பெய்கிறது. இருப்பினும் இவர்கள் தென் அமெரிக்க இந்தியர் களுள் மிகுதியான எண்ணிக்கையும் வளமான வாழ் வும் உடையவர்கள். உப்புத் தயாரித்தலும் வேட்டை யாடுதலும் இவர்களின் முதன்மைத் தொழில்களா கும்.



குவாசிரோப் பெண்

இவர்களின் பகுதிக்கு இசுபானியர்களின் (Spanish) வருகை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. அதிலிருந்து ஐரோப்பியரின் குடியேற்றம் மிகுதி யானது. இப்பகுதிகளில் தங்கம் கிடைக்குமென வந்த இசுபானியர்கள், பின்னர்ப் பண்ணைகளையும், வணிகத்தையும் பெருக்கிக்கொள்ள முனைந்தனர். அவர்கள் தங்கள் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த முயன்ற அனைத்துப் பழங்குடியினரையும் அழித்தும் விரட்டியும் தங்கள் செல்வாக்கை மேலும் மேலும் வலுவாக்கிக் கொண்டனர். அனைத்துப் பழங் குடியினரையும் 50 ஆண்டுகளில் விரட்டியடித்தனர். எஞ்சி நின்ற ஒருசில பழங்குடிகளுள் குவாசிரோ வோவினரும் அடங்குவர்.

இப்போது இவர்கள் வாழும் பகுதிகளுள் பெரும் பான்மையானவை கொலம்பியாவிலும் எஞ்சியவை வெனிசுலாவிலும் உள்ளன. இசுபானியர்களின் ஆதிக் கம் முதல் இன்று வரை இவர்கள் நிலைத்து வாழ் வதற்கு இரு காரணங்கள் உள்ளன. 1. இவர்களின் மரபுசார் பொருளாதாரம். 2. புதியமாறுதல்களுக்குத் தக்கவாறு தங்களை மாற்றிக் கொண்டமை. இவர் களின் மரபுப் பொருளாதாரம் வேட்டையாடுதலும் உணவு சேகரித்தலுமாகும். இவர்கள் பாலை நிலப் பகுதியில் வாழ்ந்தாலும், சியாரா நெவதாப் (Sierra Nevada) பாலைப் பகுதிக்குத் தெற்கில் காணப்படும் மரங்கள் அடர்ந்த பகுதியில் வேட்டையாடி வாழ் கின்றனர்.

கடற்கரைப் பகுதிக்கு அருகேயுள்ள குவாசிரோ வினர் மீன்களைப் பிடித்து வாழ்கின்றனர். கடற்கரை ஒட்டிய பகுதிகள் வாழ்க்கைக்கு ஒத்திசைவானதாக இல்லை. ஏனெனில் இங்கு நன்னீர் கிடைப்பதில்லை. இதனால் ஒரு சிலர் 'சக்குவே' (Jaquey) எனப்படும் அ அடி ஆழக் கிணறுகளை வெட்டி நன்னீரைச் சேமித்து வைத்துக்கொள்கின்றனர். மரப்பலகை களைச் சுவராகக் கொண்ட இக்கிணறுகள் மழைக் காலத்தில் கிடைக்கும் நீரைப் பல மாதங்களுக்குச் சேமிக்க உதவுகின்றன. இருப்பினும் இவை கடுமை யான கோடையில் வறண்டுவிடுகின்றன. நிலையான குடியிருப்புகளைக் கொண்ட குவாசிரோவினர் இத னால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின்றனர். வெனி சுலா, கொலம்பியா அரசுகள் ஆழ்கிணறுகளையும் நீர்நிலைகளையும் அமைத்து, ஆண்டு முழுவதும் நன்னீர் கிடைக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

இவர்கள் பருவங்களுக்கேற்ப வேட்டையாடு தலையும் உணவு சேகரித்தலையும் மேற்கொள்கின்ற னர். மழைக் காலங்களில் புல்வெளி பரவலாகக் காணப்படும்போது விலங்குகளும் பரவலாகப் பல விடங்களிலும் காணப்படுகின்றன. கோடையில் நீர் நிலைகள் மிகுந்துள்ள பகுதிகளுக்குச் சென்று விடுகின்றன. அதற்கேற்பக் குவாசிரோவினரின் வேட்டை முறை அமைகிறது. விலங்குகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால், இப்போது இவர் கள் வேட்டையை மிகுதியாக நம்புவதில்லை. மலைப் பகுதிகளில் பரவலாக வாழும் சிவப்பு மான் வகையை



விரும்பி வேட்டையாடுகின்றனர்;பறவைகளும் முயல்களும் வேட்டையாடப்படுகின்றன. வில்லும் அம்பும் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.வளமான குவாசிரோவினர் துப்பாக்கியையும் வெடிமருந்தையும் கொண்டும் வேட்டையாடுகின்றனர்.'எனியா' (Enea) எனப்படும் ஒருவகைக் கிழங்கினைக் கஞ்சி செய்து உண்கின்றனர். இதனைத் தயாரிப்பது கடினம். இக் கிழங்கினை உரித்து வாட்டிப் பொடியாக்கி பின்பு வேண்டும்போது அப்பொடியினை 3 மணிநேரம் காய்ச்சிக்குடிப்பர். சிலவகைப் பழங்களையும் உண்கின்றனர். ஒரு சில பகுதிகளில் வேளாண்மை செய்கின்றனர்.

கால்நடை வளர்த்தல் இவர்களின் முதன்மைத் தொழில்களுள் ஒன்று. இசுபானியர்களிடமிருந்தும் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட நீக்கிரோ அடிமைகளிடமிருந்தும் இவர்கள் கால்நடை வளர்த்தலை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கற்றனர். மேலும், வடமேற்குப் பகுதியில் ஆண்டில் 2 மாதங்கள் உப்பு எடுத்து விற்கின்றனர்.

குவாசிரோவினர் பனை ஓலைகளையும் காட்டு மரங்களையும் கொண்டு வீடுகட்டுகின்றனர்.செல்வம் மிக்கவர்கள் கற்கள், சிமெண்டு முதலியவை கொண்டு கட்டித் தகரத்தினாலான கூரையை வேய்கின்றனர்.


இவர்கள் 30க்கும் மேற்பட்ட கால்வழியினராகப் (Lineages) பாகுபடுகின்றனர்.ஒவ்வொரு கால்வழியினரும் தமக்கென்று நிலப்பரப்பையும் குலக் குறியையும் (Totem) கொண்டுள்ளனர். இவர்களின் சமுதாயம் இரத்த உறவினர்கள் என்றும் தசை உறவினர்கள் (Flesh Relatives) என்றும் பாகுபடுகின்றது. முன்னவர்கள் தந்தை வழியைச் சேர்ந்தவர்கள். பின்னவர்கள் தாய்வழியைச் சேர்ந்தவர்கள்.இருப்பினும் தாய்வழிக் கூட்டத்தினருக்கே செல்வாக்கு மிகுதி. சொத்து தாய் மாமனிடமிருந்து மரபுவழியே செல்லும். ஏனெனில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூத்த தாய் மாமனே தலைவனாவான். ஒரு குழந்தைக்குத் தந்தையைக் காட்டிலும் தாய்மாமனே பொறுப்புமிக்கவர். அவரே அனைத்துச் செயலுக்கும் பொறுப்பேற்கிறார்.

குவாசிரோவினர் பலமண முறையைக் கொண்டுள்ளனர். திருமணத்தின்போது மணமகன் மணப்பெண்ணிற்குப் பல கால்நடைகளைப் பரிசளிக்க வேண்டும். இவர்களிடையே ஒருவகைக்கல்லினாலான கழுத்தணிக்கு மதிப்பு அதிகம். இது அவரவரின் தகுதியைக் காட்டுவதாகக் கருதப்படுகின்றது. தாய் தன் கழுத்தணியை மூத்த பெண்ணிற்கு மரபு வழியில் கொடுக்கும் பழக்கம் இவர்களிடையே உள்ளது. சீ.ப.

**குவாடல்கானல்**: ஆங்கிலேயர்களால் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பெற்ற தீவுகளில் இதுவும் ஒன்று. இது 6500 சதுர கி.மீ. பரப்புள்ளது. பசிபிக்கு மாக் கடலின் மேற்கில் அமைந்துள்ளது. குவாடல்கானலுக்கு (Guadal Cannal) வடமேற்கில் உள்ள சாலமன் தீவுடன் இது ஆங்கிலேயரால் இணைக்கப்பட்டுப் பிரிட்டனின் காப்பு நாடாக ஆக்கப்பட்டது. இத் தீவில் குறிப்பிடத்தக்க துறைமுகம் எதுவும் இல்லை. இதன் வழியாகச் செல்லும் மலைகட்குக் காவோ (Kavo) என்று பெயர். இத் தீவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டானிய வணிகர்கள் குடியேறலாயினர். அந் நூற்றாண்டின் இறுதியில் இத்தீவுக்குக் காப்பு நாட்டு நிலை அளிக்கப் பெற்றது. உலுங்கா (Lunga) ஆவோலா (Aola) என்னும் இருநகரங்கள் இப்பொழுது மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளன. 8005 அடி உயரமுள்ள ஒரு சிகரம் இத்தீவில் உள்ளது. தென்னை மிக அதிகமாக இங்குப் பயிராகிறது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் சப்பானியர் இத்தீவைக் கைப்பற்றினர். பின்னர் அமெரிக்கப்படை இதை மீட்டது (1943). குவாடல்கானலை உள்ளிட்ட சாலமன் தீவுகளுக்கு 1978-இல் பிரிட்டானிய மன்னரின் தலைமையின்கீழ் முழுச் சுதந்திரம் வழங்கப்பட்

டது. அதன்படி குவாடல்கானல், சாலமன் அரசின் ஓர் ஆட்சிப் பிரிவாகியது. காண்க: சாலமன் தீவுகள்.
தெ.பா.

**குவாடலாசாரா**: தென்னமெரிக்காவின் வடக்கில் உள்ள மெக்சிகோ நாட்டில் விளங்கும் சாலிசுக்கோ (Jalisco) பகுதியின் தலைநகருக்குக் குவாடலாசாரா (Guadalajara) என்பது பெயர். இதற்குத் தென்கிழக்கில் மெக்சிகோ நகரம் இருக்கிறது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிறுவப்பெற்ற இந்நகர், கைத்தொழிலிலும் வேளாண்மையிலும் சிறப்புற்று விளங்குகிறது. கண்ணாடிப் பொருள்கள், உலோகப் பொருள்கள், பல்வகைப் பாண்டங்கள், உரோமத்தினால் செய்யப்படும் பொருள்கள், பருத்தி முதலியன இங்கு உற்பத்தியாகின்றன. ஒரு பெரிய பல்கலைக்கழகமும் இங்கு உள்ளது. மெக்சிகோ நாட்டின் இரண்டாம் பெரிய நகரம் இதுவே.



குவாடலாசாரா (மெக்சிகோ) விலுள்ள தேவாலயம்

ஐரோப்பாவில் இசுபெயின் (Spain) நாட்டில் உள்ள மாநிலத்திற்கும் இந்தப் பெயர் இருக்கிறது. எனாரசு (Henares) ஆறு பாய்வதால் இங்கு வேளாண்மை வளர்ச்சியடைந்துள்ளது. இதன் பரப்பு சுமார் 12,190 சதுர கி.மீ. இங்கு வெள்ளி உலோகம் கிடைக்கிறது. பல வகைப் பாண்டங்களும் செய்யப்படுகின்றன. இம்மாநிலத்தின் தலைநகருக்கும் இதே பெயர் தான். இம்மாநிலம் உரோமானியக் குடியேற்றமாகச் செழிப்புற்றிருந்து, பிறகு 8-ஆம் நூற்றாண்டிலிருந்து 11-ஆம் நூற்றாண்டு வரை மூரிய மக்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. தெ.பா.

**குவாடலூப்பு** கோசுடாரிகாவின் மத்தியில் உள்ள ஒரு பட்டணம். இது 1976-ஆம் ஆண்டில் அமையப் பெற்றது. இங்கு வேளாண்மை செழித்தோங்குகிறது. குவாடலூப்பு (Gua-Da-Lupe)) சான் சோசு நகரின் புறநகர்ப் பகுதியாகும். குவாடலூப்பு என்ற பெயரை உடைய ஒரு மாவட்டம் வடக்கு மெக்சிகோவில் உள்ளது. அம்மாவட்டத்தின் பரப்பு 7,764.8 ச.கி.மீ. இது கி.பி.1891-ஆம் ஆண்டில் அமையப் பெற்றது. பிகாசு ஆறு இதன் வழியாக ஓடுகிறது. கால்நடை வளர்த்தலும் வேளாண்மையும் இங்கு முக்கிய தொழில்கள்.

இப் பெயரை உடைய மற்றொரு மாவட்டம் ஐக்கிய அமெரிக்காவில் தெக்சாசு மாநிலத்தில் உள்ளது. இதன் பரப்பு 1851.9 ச.கி.மீ. குவாடலூப்பு ஆறும் சான்மார்கோசு ஆறும் இதை வளப்படுத்துகின்றன. இது கி.பி. 1846-இல் அமைந்தது. பருத்தி, தானியங்கள், வேர்க்கடலை, கோதுமை, சோளம், பழவகைகள், முதலியன இங்கு உற்பத்தியாகின்றன. பல தொழிற்சாலைகள் இங்கு வளர்ந்துள்ளன. எண்ணெய்க் கிணறுகள் இங்கு உண்டு. வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் நடைபெறுகின்றன.

குவாடலூப்பு என்ற பெயரை உடைய ஆறு தென் கிழக்கு தெக்சாசில் தோன்றி எட்வர்டு பீடபூமி வழியாக 485 கி.மீ. ஓடி, சான் அந்தோனியா ஆற்றுடன் கலந்து பின் கடலில் கலக்கிறது.

குவாடலூப்பு (Guade loupe) என்னும் பெயரை உடைய மேற்கு இந்தியத் தீவு, பாசிட்டேர் (Basse Terre) கிராண்டேர் (Grande Terre) என்னும் இரு தீவுப் பகுதிகளைக் கொண்டது. இவையும் வேறு சில தீவுகளும் (குவாடலூப் மாகாணம் என்ற பெயருடன்) பிரான்சு நாட்டுக்கு உரியவை. இதன் பரப்பு 1,799.3 கி.மீ.

இத்தீவுக் கூட்டம், கி.பி. 1493-இல் கிறித்தபர் கொலம்பசினால் கண்டுபிடிக்கப்பட்டது. இசுபெயின் கி.பி. 1604-இல் இதைக் கைவிட்டது. இங்குப் பண்ணைகளிலும் தோட்டங்களிலும் வேலை செய்வதற்காக ஆப்ரிக்காவிலிருந்து நீக்ரோ அடிமைகளைத் தருவித்துக் கொண்டு பிரெஞ்சுக்காரர்கள் இங்குக் குடியேறினர். இவர்கள் குடியேற்றம் கி.பி. 1635-இல் தொடங்கியது. குவாடலூப்பு கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகிலேயே சிறந்த சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாகத் திகழ்ந்தது. பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளில் இது மிகவும் சிறப்புடையதாயுள்ளது. இங்கு ஆதிக்கம் செலுத்த, ஆங்கிலேயரும் போட்டியிடத் தொடங்கினர். முடிவில் கி.பி. 1815-இல் இது பிரான்சு நாட்டைச் சேர்ந்தது என்று முடிவு செய்யப் பெற்றது. இதன் தலைநகரம் பாசிட்டேர் (Basse


Terre). சுற்றுலாப் பயணிகளால் இப்பகுதி மிகுந்த வருவாயைப் பெறுகின்றது. வாழைப்பழம், காப்பி, கோகோ, அவரை ஆகியவை இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. தெ.பா.

**குவாதிமாலா** அமெரிக்கக் கண்டத்தின் நடுப் பகுதியில் உள்ளது. இதன் பரப்பு 108,889 ச.கி.மீ.பெரிய குடியரசு நாடான குவாதிமாலா (Guatemala), ஆண்டுராசு (Honduras) வளை குடாவிற்கு மேற்கிலும், பசுபிக்கு மாக்கடலுக்கு வடக்கிலும், மெக்சிகோவுக்குக் கிழக்கிலும் அமைந் துள்ளது. இதன் பீடபூமிப் பகுதியில் மலைகள் உண்டு. தெற்கில் எரிமலைகளும் இருக்கின்றன. அத னால் பூகம்பங்களும் அடிக்கடி இங்கு ஏற்படுகின்றன. இங்கு ஓடும் ஆறுகளுள் சில கரிபியன் கடலிலும் சில




குவாதிமாலா

பசிபிக்கு மாக்கடலிலும் கலக்கின்றன.'வெப்பமண்டலச் சுவிட்சர்லாந்து' என்று இதற்கு ஒரு பெயர் உண்டு. மத்திய அமெரிக்க நாடு எதையும்விட அதிகமான மக்கள் தொகை குவாதிமாலாவில் உள்ளது. இதன் மக்கள் தொகை, 6.58 மிலியன் (1984). அனேகமாக நாட்டில் பாதி மக்கள், சிவப்பு இந்திய இனத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களுடைய மூதாதையரான மாயர்கள், கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டு களுக்கு முன்னரே வியக்கத்தக்க நாகரிகத்தை அப் பகுதியில் அமைத்திருந்தனர். குவாதிமாலாவுக்கும் அமெரிக்காவுக்கும் நெருங்கிய பொருளாதாரத் தொடர்பு உண்டு. அமெரிக்கர்கள் பயன்படுத்தும் காப்பிக்கொட்டையுள் ஐந்து விழுக்காடு குவாதி மாலாவிலிருந்து வருகிறது. இந்நாட்டின் மத்திய மலைப் பகுதியில் காப்பிக்கொட்டை மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. தெற்கில் குடியானவர்கள் பருத்தி,



மாயாப்பண்பாட்டு மக்களின் நினைவுச் சின்னம்

திக்கால் (Tikal) நகரம் – குவாதிமாலா

கரும்பு ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர். தலை நகரான குவாதிமாலா நகரின் மக்கள்தொகை 1.3 மிலியன் (1983). தெ.பா.

**கல்வி**: குவாதிமாலாவில் கல்வித்தரம் மிகவும் குறைந்துள்ளது. உழைக்கும் மக்களுள் 90 விழுக் காடு மக்கள் தொடக்கக் கல்வியைக்கூட முடிக்காத வர்கள்; இவர்களுள் 0.8 விழுக்காடு மக்களே பல் கலைக்கழகக் கல்வியை முடித்தவர்கள். பள்ளிக் கல்வி ஒன்பதாண்டுப் பொதுக்கல்வி, மூன்றாண்டுப் பல்வகைப் பாடத் தொழிற் கல்வி ஆகிய இரு வகை களைக் கொண்டுள்ளது. பள்ளிக் கல்வி மூன்று நிலை களில் வழங்கப்படுகிறது. முதல் நிலையில் மழலை யர் பள்ளிக் கல்வியும், முதல் நான்காண்டுத் தொடக் கப் பள்ளிக் கல்வியும் அமையும். இரண்டாம் நிலை யில் ஐந்தாண்டுப் பொதுக் கல்வி அமையும். மூன் றாம் நிலையில், மூன்றாண்டுகளுக்கான தொழிற் கல்வி வழங்கப்படும்.

உயர்கல்வி, அரசாலும் தனியார் பல்கலைக் கழகங்களாலும் வழங்கப்படுகிறது. சான் கார் லோசு தேசிய பல்கலைக் கழகமும் (San Carlos National University) நான்கு தனியார் பல்கலைக் கழகங்களும் உயர்கல்வியின் பல்வேறு துறைகளில் கற்பித்தல், ஆராய்ச்சி ஆகியவற்றை மேற்கொள் கின்றன.

குவாதிமாலாவில் உள்ள முறைசாராக் கல்வி நான்கு குழுக்களுக்கு முதன்மையிடம் தருகிறது. அக்குழுக்கள், திறனறிவு பெறாதோர், பாதித் திறன றிவு பெற்றோர், முழுத் திறனறிவு பெற்றோர், இடைநிலைத் தொழிற் பயிற்சியாளர் ஆகியோர் ஆவர்.

குவாதிமாலா அரசு 1979-ஆம் ஆண்டுக் கணக் கின்படி, கல்விக்கான ஆண்டு வரவுசெலவுத் திட்டத் தில் 37.89 விழுக்காடு தொடக்கக் கல்விக்கும், 11.28 விழுக்காடு இடைநிலைக் கல்விக்கும் ஒதுக்கிற்று. தனி யார் பல்கலைக் கழகங்கள் மாணவர்களிடமிருந்து பெறும் பயிற்சிக் கட்டணத்தாலும், பல்கலைக் கழக உறுப்பினர்களின் நன்கொடையாலும் நடைபெற்று வருகின்றன. தேசிய பல்கலைக்கழகத்திற்கு அரசு நிதியுதவி செய்கிறது.


மழலையர் பள்ளிகளிலிருந்து மேனிலைப் பள்ளி கள் வரையில் பள்ளித் தேர்வு ஆண்டுக்கு இருமுறை நடந்து வருகிறது. ஆண்டின் இறுதியில் நடைபெறும் இரண்டாம் பருவத் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களைப் பொறுத்து, மாணவர்களின் தேர்ச்சி முடிவு செய்யப்படுகிறது.

தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி ஆசிரியர் களுக்குப் பயிற்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், மண்டலப் பொதுப் பள்ளிகளில் (Regional Normal Schools) ஆசிரியர் பயிற்சி பெறுகின்றனர். இடை நிலைப்பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கான நிறுவனத்தி னைச் சான் கார்லோசு தேசிய பல்கலைக் கழகம் நடத்தி வருகிறது.

குவாதிமாலாவின் ஊர்ப்புற மக்களுள் 80 விழுக் காட்டினர் கல்வியறிவு அற்றவர்களாக உள்ளனர். இம்மக்களுக்குக் கல்வியறிவு வழங்குவதே குவாதி மாலா கல்வித் திட்டத்தில் முதன்மையாகத் தீர்வு காண வேண்டிய சிக்கலாகக் கருதப்படுகிறது.

எஸ்.த.

**குவாம்**: பசிபிக்கு மாக்கடலின் மேற்கில் உள்ள மேரியானா தீவுக் கூட்டத்தில் (Marianas Islands) ஒன்றான குவாம் (Guam) கி.பி. 1521-இல் மெகல் லன் என்ற இசுபானியரால் கண்டு பிடிக்கப்பட்டது. இசுபெயின் (Spain), 1898-ஆம் ஆண்டு பாரிசு (Paris) உடன்படிக்கையின்படி இத்தீவை அமெரிக்க ஐக்கியக் குடியரசுக்கு அளித்தது. இரண்டாம் உலகப் போரில் (1941) சப்பான் இதைக் கைப்பற்றிக் கொண்டது. இத்தீவின் இயற்கை அமைப்பு இக்காலத்தில் இதற் குச் சிறப்பைக் கொடுத்துள்ளது. மாநிலமாக இணைத்துக் கொள்ளப்படாத ஓர் அமெரிக்கத் தீவாக இது விளங்குகிறது. மேரியானா தீவுக்கூட் டத்திலேயே இது மிகப் பெரியது. இதன் பரப்பு 541.3. சதுர கி.மீ. இதன் தலைநகரம் ஆகனா (Agana). முக்கிய துறைமுகம் ஆப்ரா (Apra). அமெ



குவாம் அமைவிடம்

ரிக்கர்களுக்கு விமானப் போக்குவரத்துத் துறையாக வும் இத்தீவு பயன்படுத்தப்படுகிறது. இதன் உட் பகுதி காடுகள் நிறைந்தது. மக்கள் மிகுதியாக வாழும் ஊர்கள் கடலோரப் பகுதிகளில் உள்ளன. அமெரிக்கர்கள் இங்குத் தம் விருப்பம்போல் சென்று வரலாம். அயலவர், சில பொதுவான கட்டுப்பாடு களுக்கு உட்பட்டு இத் தீவுக்குச் செல்லலாம். இத்தீவு, கி.பி. 1899 முதல் 1949 வரை, கடற்படை ஆட்சித் துறையின் கீழிருந்தது. பிறகு உள்ளாட்சித்துறை யின் மேற்பார்வையின் கீழ்க் கொணரப் பெற்றது. குவாம் மக்களுக்கு முழு நகர வாசி உரிமைகளும் வழங்கப்பெற்றுள்ளன. அவர்கள் அமெரிக்க சட்ட சபையின், கீழ் அவைக்கு ஒரு பேராளரை தேர்ந் தெடுத்து அனுப்பும் உரிமை வழங்கப் பெற்றுள்ள னர். தீவின் ஆட்சி முறையை இரு அவைகளையு டைய சட்டமன்றமும், ஆளுநர் ஒருவரும் கண் காணிக்கின்றனர். அச்சட்டமன்றம் அமெரிக்க மாநிலச் சட்டமன்றத்தை ஒத்த அதிகாரங்களைப்



ஆகனா நகரம்

பெற்றுள்ளது. பதினெட்டும் அதற்கு மேற்பட்டும் உள்ள வயதினர் யாவருக்கும் தேர்தலில் வாக்குரிமை உண்டு. பலமலைகளையும் ஆறுகளையும் பவளத் திட்டுகளையும் கொண்ட இத்தீவில் அடிக்கடி நில நடுக்கம் ஏற்படுவதுண்டு. தென்னை மரங்கள் இங்கு மிகுதி, கரும்பு, நெல், காப்பி முதலியன பயிராகின்றன. இதன் உள்நாட்டு மக்களில் பெரும்பாலோர் சாமரோக்கள் (Chamorros) என்ற பெயரை உடைய பூர்விகக் குடிகளாவர். தெ.பா.

**குவாயசு**: தென்னமெரிக்காவில் ஈக்குவடார் நாட்டின் தென் மேற்குப் பகுதியில் உள்ள மாநிலத்திற்கும், அங்கே பாயும் ஓர் ஆற்றுக்கும் குவாயசு (Guayas) என்பது பெயர். நீர் வளமும் நிலவளமு மிக்க இப்பகுதியில் நெல், கரும்பு, புகையிலை, காப்பி முதலியன விளைகின்றன. மாநிலத்தின் பரப்பு 21,259 ச.கி.மீ. ஆகும். தெ.பா.

**குவாயாக்கில் துறைமுகம்**: ஈக்குவடாரில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமைக்கப்பட்ட முக்கிய துறைமுகப்பட்டினம் குவாயாக்கில் (Guayaquil). இது குவாயசு மாநிலத்தின் தலைநகராகவும் விளங்குகிறது. இதை ஒட்டியே குவாயசு ஆறு ஓடுகிறது. மது தயாரித்தல், இயந்திர வேலை, மரம் அறுத்தல், கப்பல் கட்டுதல் முதலிய தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானவை- காப்பி, கோக்கோ, புகையிலை, பருத்தி முதலியன. தொழில் நுட்பக் கல்லூரியும், பல்கலைக் கழகமும் இங்கு உள்ளன. இந்நகரம் பல இன்னல்களுக்கு உட்பட்டதை வரலாற்றில் காணலாம். அடிக்கடி தீயினால் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. ஈக்வடாரில் சுதந்திரப் போராட்டம் ஏற்பட்டபோது விடுதலை வீரர்கள் கி.பி. 1821-இல் இந்நகரைக் கைப்பற்றினர். விடுதலைப் போரின் சிறப்பான கட்டம் இதுவே. தெ.பா.

**குவாயாக்கில் வளைகுடா**: பசிபிக்கு மாக் கடலில் தென்னமெரிக்காவில் உள்ள ஈக்குவடாரின் தென்மேற்கில் உள்ளவளைகுடாவிற்குக்குவாயாக்கில் (Guayaquil) வளைகுடா என்பது பெயர். குவாயசு ஆறு இங்குக் கலக்கிறது. பூனா (Puna) முதலிய பல தீவுகள் இவ்வளைகுடாவில் உள்ளன. தெ.பா.

**குவாலியர்** மத்திய பிரதேசத்தில் உள்ளதொரு நகரம். இது ஆக்ராவிற்குத் தெற்கே 100 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் குவாலியர் மாவட்டத்தின் தலைநகரமும் ஆகும். முன்பு இது மத்திய இந்தியாவிலிருந்த 25 சமசுதானங்களில் மிகப் பெரியதாக விளங்கியது. சம்பல் ஆறே இதன் வட எல்லையாக இருந்தது. குவாலியர் சமசுதானத்தை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிந்தியா மரபைத் தோற்றுவித்த இரானோசி சிந்தியா என்பவரின் மகன் மகதசி சிந்தியா கி.பி. 1784-இல் நிருமாணித்தார். குவாலியர் சமசுதானம் 1948-இல் இந்திய அரசுடன் இணைக்கப்பட்டது.

குவாலியரின் புகழுக்குக் காரணமாக விளங்குவது இங்குள்ள கோட்டையாகும். இது பழைய நகரத்தின் தெற்கிலுள்ள 90 மீட்டர் உயரமுள்ள மலைமீது கட்டப்பட்டுள்ளது. இக் கோட்டையைக் கச்சவாகு மரபின் அரசர் சுராசு சென் (Suraj Sen) என்பவர் கி.பி. 980-இல் கட்டினார் எனக் கூறுகின்றனர்.

இப்பகுதி குப்தர், ஹூணர், கச்சவாகர், பிரதிகாரர், தோமர், மொகலாயர், மராட்டியர், ஆங்கிலேயர், முதலானவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையால் இங்குப் பல பண்டைய சின்னங்கள் காணப் படுகின்றன.

இல்டுடுமிசு (Iltutmish) இந்நகரை கி.பி. 1232-இல் கைப்பற்றினார். இந்நகரத்தின் வீரர்கள் வீரத்துடன் இல்டுடுமிசுவை எதிர்த்தனர். அரண்மனைப் பெண்கள் பலர் தீக்குளித்தனர். தைமூர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின்மீது படையெடுத்த பொழுது ஏற்பட்ட குழப்பத்தில் தோமர் இனத்தவ



குவாலியர் கோட்டை

ரான பிர்சின் தேவ் என்ற சிற்றரசர் குவாலியரில் தோமர் ஆட்சியை நிறுவினார். தோமர் அரசர்களுள் தலைசிறந்தவரான மான்சிங்கு(கி.பி. 1486-கி.பி.1516) என்பவர் கலைகளில் ஆர்வம் மிக்கவராவார். இவர் குவாலியரில் உள்ள கோட்டைக்குள் பல அழகிய மாளிகைகளையும் மோதிசில் (Moti Jhil) என்ற குளத்தையும் அமைத்தார்.

தோமர் மரபின் கடைசி அரசர் பானிப்பட்டுப் போரில் தோல்வி கண்டதால் குவாலியர் மொகலாய மன்னர் பாபரின் வசம் வந்தது. அது முதல் மொகலாயரின் ஆட்சிக்குட்பட்டிருந்தஇதனை அவர்கள் சிறைக் கூடமாகப் பயன்படுத்தினர். அவுரங்கசீபின் சகோதரர் மூரத்து குவாலியரில்தான் நஞ்சிட்டுக் கொல்லப்பட்டார். மொகலாயர் வசமிருந்த இதனை கி.பி. 1784-இல் மாதவராவ் சிந்தியா என்ற மராட்டிய வீரர் கைப்பற்றி ஆட்சி செய்தார்.

குவாலியர் கோட்டைக்குச் செல்ல வடகிழக்கில் ஒரு தலைமை வழியும்மேற்கில் ஒரு வழியும் உள்ளன. வடகிழக்குப் பாதை செங்குத்தானது. இதன் வழியாக வண்டிகள் எதுவும் செல்லமுடியாது. இந்த வழியில் ஐந்து வாயில்கள் உள்ளன. குவாலியர் வாயில் அல்லது ஆலம்கிரிவாயில் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. இந்த வாயில் கி.பி. 1660-இல் கட்டப்பட்டது. இங்குள்ள இந்தோலா மகாலும் குசாரி



அத்திபோல்-குவாலியர்

மகாலும் அழகிய அரண்மனைகளாகும். குசாரி அரண்மனையில் தொல்லியல் அருங்காட்சியகம் இப்பொழுது உள்ளது.

இதனை அடுத்துள்ள இலக்குமண வாயிலின் வெளியே சதுர்புச மந்திர் என்ற திருமால் கோயில் உள்ளது. இது குடைவரைக் கோயிலாகும். இதனைக் கன்னோசி அரசர் இராம தேவர் என்பவர் நிறுவினார் என இங்குள்ள கல்வெட்டுக் கூறுகிறது. இதனை அடுத்துள்ள பாறைகளில் மாடக்குழிகள் குடையப்பட்டு இந்து, சமண சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன.



இந்தோலா நுழைவாயில்-குவாலியர்

யானை கவுனி எனக் கூறப்படும் ஐந்தாம் நுழைவாயிலின் முன்பு யானைச் சிலை ஒன்று இருந்தமையால் யானை கவுனி எனக் கூறப்பட்டது. மான்சிங்கு அரண்மனையின் கிழக்கு முகப்பில் இவ்வாயில் அரண்மனையின் ஒரு பகுதியாக உள்ளது. இந்த அரண்மனையின் முன்பக்க நீளம் 300 அடி; உயரம் 80 அடி. இதனை ஆறு வட்ட வடிவக் கோபுரங்கள் அழகு செய்கின்றன. உள்ளே பல உருவங்கள் அரண்மனையை அழகு செய்கின்றன. அரண்மனையின் உட்பகுதி இரண்டு முற்றங்களையும் அதனைச் சுற்றிப் பல அறைகளையும் கொண்டுள்ளது. மான்சிங்கு அரண்மனை கி.பி. 1490-இல் கட்டப்பட்டது. இது அழகிய வண்ணங்கள் பூசப்பட்ட இரண்டடுக்கு அரண்மனையாகும். இவ்வரண்மனையை கி.பி. 1881-இல் திருத்தி அமைத்தனர். சுவர்களில் ஓடுகளும் பல்வண்ண ஓட்டுகளும் பதிக்கப்பட்டுள்ளன. மனிதர், யானை, புலி, மயில், வாத்து, மரம் ஆகியவற்றின் உருவங்களும் சுவர்களில் பதிக்கப்பட்டுள்ளன.



தெலிகா மந்திர்-குவாலியர்

கோட்டைக் குன்றின் விளிம்பில் இரண்டு வைண வக் கோயில்கள் உள்ளன. இவற்றை மகிபாலர் என்ற அரசர் கி.பி. 1093-இல் கட்டினார். கோட்டையின் தென்புறத்தில் உள்ள தெலிகாமந்திர் கோயில் 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக் கோயில் திரா விட ஆரியக் கலைகளின் கலப்பு அமைப்பையுடைய சிற்பங்களைக் கொண்டு விளங்குகிறது. இக்கோயி லின் சிகரம் 100 அடி உயரமுடையதாகும். குவாலி யர் கோட்டையின் நடுவில் சூரசு பால் வெட்டிய சூரசு குண்டு என்ற குளம் உள்ளது. கோட்டைக்குச் செல்லும் ஊர்வாகிச் (Urwahi) சமவெளிப் பாதை யில் இரு சரிவுகளிலும் உள்ள குன்றின் புறப்பகுதி களில் சமண தீர்த்தங்கரரின் சிற்பங்கள் பல காணப் படுகின்றன. இவற்றுள் சிறப்புடையது ஆதிநாதர் சிற் பமாகும். இதன் உயரம் 57 அடி; பாதநீளம் 9 அடி. இது கி.பி.1440-இல் செதுக்கப்பட்ட சிற்ப மாகும்.

குவாலியரில் மொகலாயக் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றுகளாக விளங்குவன கவுசு (Ghaus) சமா தியும் தான்சென் சமாதியும் ஆகும். கவுசு என்பவர் ஒரு இசுலாமியப் பெரியார். தான்சென் இசைப்புல வர் ஆவார். இலசுகர் (பாசறை) என்ற புதிய நகரம் தௌலத்ராவ் என்பவர் கி.பி. 1809-இல் பாசறை அமைத்த இடத்தில்எழுந்த நகரமாகும்.இங்குச் செய விலாசம், மோதி மகால் என்ற இரு அழகிய அரண் மனைகள் உள்ளன. செய விலாச அரண்மனையின் வெளியே மகாதேவ சிந்தியாவின் உருவச் சிலையும் சான்சி இராணியின் கல்லறையும் உள்ளன. குவாலி யரில்கி.பி. 1858-இல் ஆங்கிலேயருக்கும் சிப்பாய்களுக் கும் பெரும்போர் நடைபெற்றது. சிப்பாய்கள் விரட்டி யடிக்கப்பட்டனர். எனினும் சிந்தியாவும் சான்சி இராணி இலட்சுமிபாயும் விடாமுயற்சியுடன் போரிட் டனர். இறுதியில் சான்சி இராணி இலட்சுமிபாய் கொல்லப்பட்டார். இங்குள்ள அருங்காட்சியகத்தில் பல அழகு வாய்ந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் நாட்டியமாடும் மங்கையின் சிற்பத் தொகுதி சிறப்பு வாய்ந்ததாகும்.

குவாலியர் பாண்டத் தொழிலுக்குப் புகழ்பெற் றது. இங்கு இரயில் வண்டி நிலையமும் வான வூர்தி நிலையமும் உள்ளன. குவாலியர் மாவட்டத் தின் பரப்பளவு 5241 ச.கி.மீ. ஆகும். இம்மாவட்டத் தின் மக்கள் தொகை 1107879 (1981). சு.இரா.

**குவிசுலிங்கு, விட்குன்**: ஐரோப்பாவில் நார்வே நாட்டைச் சேர்ந்த அரசியல் தலைவரானவிட் குன் குவிசுலிங்கு (Witquin Quisling) நாசி(Nazi) கட்சி யைச் சேர்ந்த தீவிர வாதி.செர்மன் நாட்டு நாசிக் கட்சி யைச் சேர்ந்த இவர் தமது தாய் நாட்டுக்கே துரோ கம் செய்யத் தயங்கவில்லை. பிரிசுட்டல் (Bristol) என்னும் ஊரில் கி.பி. 1887-இல் பிறந்து இராணுவப் பயிற்சி பெற்றபின் முதல் உலகப் போரில் பங்கு கொண்டார். நார்வே நாட்டின் அமைச்சரவையில் 1931-இல் ஓர் அமைச்சராகப் பணியேற்றார். இவர் 1932-இல் பதவியினின்று விலகி ஒரு புதிய கட்சியை உருவாக்கினார். செருமனியில் இட்லர் (Hitler) முன்னேறி வருவதைக் கண்டு, அவருடன் சேர்ந்து செயலாற்ற 1940-இல் நார்வே நாட்டின் நாசிக்கட்சிக்குத் தலைவரானார். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இட்லர் நார்வேயைப் படை பெடுத்தபொழுது குவிசுலிங்குஅவருக்கு உதவி செய் தார். இதற்குப் பரிசாகக் குவிசுலிங்கு நார்வேயின் அரசியல் தலைவரானார். இவருடைய இச்செயல் உலகம் இவரிடம் வெறுப்பைக் கொள்ளுமாறு செய் தது. குவிசுலிங்குஎன்றசொல்லுக்கே நாட்டுத்துரோகி என்னும் பொருள் ஏற்பட்டு விட்டது. இரண்டாம் உலகப்போர் முடிந்தபின் 1945-இல் நார்வேயின் புதிய அரசு குவிசுலிங்கை விசாரித்து, துரோகக் குற்றத்திற்காகக் கொலைத் தண்டனை விதித்தது. தெ.பா.


**குவின்டில்யன், மார்க்கசு பாபியன்**

'சொற்பொழிவாளருக்குரிய பயிற்சி' (Institution Oratoria) என்ற நூலை கி.பி. முதல் நூற்றாண்டி லேயே எழுதிச் சொற்பொழிவுக் கலையை ஊக்கு வித்த உரோமானிய அறிஞன். மார்க்கசு பாபியன் குவின்டில்யன் (Marcus Fabian Quintilianus) கி.பி. 35-ஆம் ஆண்டில் இசுபெயின் நாட்டில் காலகாரிசு என்ற இடத்தில் பிறந்தார். இவருக்கு ஆசிரியராக இருந்தவர் தாமித்தியசு ஆபெர் (Dominitius Aber) என்ற பெரியார். தொடக்கத்தில் கால்பா நாட்டில் கி.பி. 61 முதல் ஏழு ஆண்டுகள் அரசுப் பணி ஆற்றி விட்டு, பிறகு 20 ஆண்டுகள் உரோமாபுரியில், சொற் கலைப் பள்ளிக்குத் தலைவராக இருந்து சொற் பொழிவுக் கலையை வளர்க்க உதவினார். பன்னி ரண்டு தொகுதிகளாக உள்ள இவருடைய பெரிய நூலில் பல அரிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஆவை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன. இவர் கி.பி. 95-இல் காலமானார். தெ.பா.

**குவீபசெவு** (Kuibyshev): காண்க: கூயிபிசெவு.

**குவீன்சுலாந்து**: ஆசுத்திரேலியப் பொது வுரிமையரசின் வடகிழக்கில் அமைந்துள்ள இரண்டா வது பெரிய மாநிலம். தொடக்கத்தில் நியூ சௌத் வேல்சின் நிருவாகத்திற்குட்பட்ட இம்மாநிலம், 1859 -இல் பிரிசுபேனைத் தலைநகராகக் கொண்டு தனிக்

குடியேற்றமாக உருவாகியது; கி.பி. 1901-இல் ஆசுத்திரேலியப் பொதுவுரிமையரசின் ஆறு மாநிலங்களில் ஒன்றாயிற்று. ஆசிய நாட்டவர் இங்குக் குடியேறுவதை முன்பு வெள்ளையர் தடை செய்தனர்.




குவீன்சுலாந்து

குவீன்சுலாந்து அமைவிடம்

முதன்முதலில் போர்ச்சுகீசியரே இப்பகுதிக்கு வந்தனர். கி.பி. 1770-இல் ஆங்கில மாலுமியான சேம்சு குக்குஇதனை இங்கிலாந்தின் சார்பில் கைப்பற்றினார். 1824-இல் இங்குள்ள மோர்டன் வளைகுடாவில் கைதிகள் குடியமர்த்தப்பட்டனர்; பின்னர் 1824-இல் கைதிகள் குடியமர்த்தும் நிலை நீக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் வடமேற்கில் கார்பெண்டேரியா வளைகுடாவும் கிழக்கில் 'கிரேட் பேரியர் ரீப்' (Great Barrier Reef), இதற்கப்பால் பவழக்கடல்(Coral sea), பசிபிக்குப் பெருங்கடல் ஆகியனவும், தெற்கில் நியூ சௌத்வேல்சும் தென்ஆசுத்திரேலியாவின் ஒரு பகுதியும், மேற்கில் வடக்குப் பிராந்திய எல்லைப்புறமும் (The Northern Territory borders) எல்லைகளாக அமைந்துள்ளன. கடற்கரையிலிருந்து சிறிது தொலைவில் 1200 மைல் நீளமுள்ள பவளத்திட்டு உள்ளது. இது வாழ்வதற்கேற்ற வசந்தத்திட்டு. கடற்கரைக்கும் பவளத்திட்டுக்கும் இடையே உள்ள வளைகுடாவில் பல தீவுகளும் துறைமுகங்களும் உள்ளன. குவீன்சுலாந்தின் பெரும்பகுதி மாடு மேய்ப்பதற்கேற்ற புல்வெளிகளாகவும் மலைப்பகுதிகளாகவும் உள்ளன. கிழக்கில் பெரிய பிரிக்கும் மலைத்தொடர் (Great Dividing Range) தெற்கு வடக்காகச் செல்கிறது.



குவீன்சுலாந்தின் கால்நடை வளர்ப்பு

தென்பகுதியில் அடர்த்தியான வெப்ப மண்டலக் காடுகளும் (Tropical forests),பசிபிக் கடற்கரைப் பகுதியில் அழகிய கடற்கரைகளும் மணற்குன்றுகளும் சிறந்த துறைமுகங்களும் உள்ளன. ஆண்டுச் சராசரி மழைப்பொழிவு கிழக்குக் கடற்கரைப் பகுதியில் 3,734 மி.மீ; தென்கிழக்குப் பகுதியில் 762 மி.மீ; மேற்கே உள்ள சமவெளிகளில் 254 மி.மீ. அளவிற்குக் குறைந்தே காணப்படுகிறது. வறண்ட சமவெளிப் பகுதியில் பொங்கு நீரூற்றுகள் காணப்படுகின்றன.

குவீன்சுலாந்து மாநிலத்தின் பரப்பளவு 1727520 ச.கி.மீ. மக்கள் தொகை 1,820,000 (1970). தலைநகரான பிரிசுபோனில் இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் $\frac{1}{3}$ பங்கு வாழ்கின்றனர். குவீன்சுலாந்தின் பல்கலைக்கழகம் 1911-இல் தொடங்கப்பட்டது.

குவீன்சுலாந்தில் காடுகள் மிகுதி. எனவே மரங்கள் அதிகம் வெட்டப்படுகின்றன. இம்மாநிலத்தில் தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம், அலுமினியக் கலவை மண், வெள்ளீயம், நிலக்கரி, துத்தநாகம் ஆகியவை அதிக அளவில் வெட்டியெடுக்கப்படுகின்றன. இங்குள்ள மக்களின் முக்கிய தொழில் விவசாயமும் கால்நடை வளர்த்தலும் ஆகும். உலகிலேயே கரும்பு அதிக அளவில் பயிரிடப்படும் நாடுகளுள் குவீன்சுலாந்தும் ஒன்று. கோதுமை இங்கு அதிகம் பயிராகிறது. பார்லி, மக்காச்சோளம், நிலக்கடலை, உருளைக் கிழங்கு, பழங்கள் ஆகியனவும் பயிர் செய்யப்


படுகின்றன. மேற்கூறப்பட்டவையேயன்றிச்சர்க்கரை, பருத்தித் துணி, மது ஆகியவை உற்பத்தி செய்தல், இறைச்சி பதனிடல், தோல் பொருள்கள் செய்தல் தொழில்களும் செய்யப்படுகின்றன. இம்மாநிலத்தில் 90 விழுக்காடு வெள்ளையர் வாழ்கின்றனர்.

கட்டாய ஆரம்பக்கல்வி தரப்படுவதால் இங்கு 100 விழுக்காடு மக்களும் கல்வி பெற்றுள்ளனர். பிரிசு பேனில் பொறியியல் நிறுவனங்களும் கப்பல் கட்டும் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. குவீன்சு லாந்தில் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர்களின் செயற்குழு (Executive Council of Ministers) நிருவாகத்தைக் கவனிக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமும் உள்ளது. இங்கிலாந்து மன்னரின் சார்பில் ஆளுநர் ஒருவரும் அமர்த்தப்பட்டுள்ளார். ம.இ.

**குவெட்டா**: அரண்கள் சூழ்ந்த இராணுவ நகரான குவெட்டா (Quetta) பலுசித்தானத்தின் தலைநகர். இதற்குத் தெற்கில் கராச்சி நகர் விளங்குகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கு இராணுவ அலுவலர் கல்லூரி அமைக்கப்பட்டது. இதற்கு அருகில் நிலக்கரிச் சுரங்கம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இங்கே 1935–இல் நிலநடுக்கம் ஏற்பட்டது. மலைகள் சூழ்ந்த இப்பகுதி 1680 மீட்டர் உயரத்தில் உள்ளது.ஆப்கானிசுத்தானம்,ஈரான், மத்திய ஆசியா முதலிய பகுதிகளுக்கு இது வாணிக மையம். தெ.பா.

**குவேசோ**: சேய்மைக்கிழக்கில் சீன நாட்டில் உள்ள ஒரு மாநிலத்திற்குக் குவேசோ (Kweichow)என்பது பெயர். இதன் தலைநகரம் குவேயாங்கு (Kueiyang) என்பது. இம்மாநிலம் சீ (Sg) ஆற்றுக்கும் யாங்டீசு (Yangtze) ஆற்றுக்குமிடையே இருப்பதாலும், யாங்டீசிகியாங்கு (Yangtsekiang) ஆறும் அதன் துணை ஆறுகளும் பாய்வதாலும் மிக்க வளமுள்ள பகுதியாக வளர்ந்துள்ளது. மக்காச் சோளமும் கோதுமையும் இங்கு மிகுதியாக விளைகின்றன. தோல், மரம் ஆகியன இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. சிறந்த குதிரைகள் இங்கு அதிகமாக உள்ளன. வெள்ளி, பொன், பாதரசம், செம்பு, நிலக்கரி, இரும்பு முதலிய கனிப் பொருள்கள் கிடைக்கின்றன. மாநிலத்தின் பரப்பு 170,940 ச.கி.மீ. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே சீனர் இங்குக் குடியேறியிருந்தனர். ஆனால், கி.பி. 10–ஆம் நூற்றாண்டில்தான் அவர்கள் ஆதிக்கம் உறுதியாக அமைந்தது. மிங்கு வமிச ஆட்சியின் கீழ் இது கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் ஒரு மகாணமாக்கப்பட்டது. தெ.பா.

**குவைத்து** ஒரு சுதந்திர அரபு நாடாகும். இது பாரசீக வளைகுடாவின் மேல் மூலையில் அமைந்துள்ளது. ஈராக்கு நாடு அதனுடைய வடக்கு மற்றும் மேற்கு எல்லையாகவும், பாரசீக வளைகுடா கிழக்கு எல்லையாகவும், சௌதி அரேபியா தெற்கு எல்லையாகவும் அமைந்துள்ளன. குவைத்து (Kuwit) நாட்டின் பரப்பு 17,818 ச.கி.மீ.ஆகும். அதனுடைய மக்கள் தொகை 815,000 (1972) ஆகும். அது மூன்று ஆளுநராட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்




குவைத்து

டுள்ளது. அல் அகமதி (Al Ahmadi) அல் குவைத்து (Al-Kuwayt), ஆவல்லி (Hawalli). அவற்றுள் அல் குவைத்து மிகப் பெரிய பகுதியாகும். அது 11,230 ச.கி.மீ. பரப்புள்ளது. ஆனால், மொத்த மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு மக்கள் மட்டுமே அங்கு வாழ்கின்றனர். அடுத்தது அல்அகமதி. அது 5138 ச.மீ. பரப்புள்ளது. எட்டில் ஒரு பங்கு மக்கள் அங்கு வசிக்கின்றனர். ஆவல்லியின் பரப்பு 550ச.கி.மீ. மக்கள் தொகையில் பாதிப் பேர் அங்கு வாழ்கின்றனர். கரையோரத்தில் பல தீவுகள் உள்ளன. அவற்றுள் மிகப் பெரியவை பூபியன் (Bubiyan), அல் வர்பா (al-Warbah) ஆகியவை. அங்கு மக்கள் வசிப்பதில்லை. குவைத்து விரிகுடாவின் முகப்பில் உள்ள பாய்லகா (Faylakah) தீவில் மக்கள் வசிக்கின்றனர். மிகச்சிறிய தீவுகள் பல உள்ளன. அவற்றுள் சில புறக்காவல் நிலையங்கள் அமைக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பிற தீவுகளுக்கு மீன்பிடிப்பவர்கள் மட்டுமே செல்வர்.

அல்சாராப் பாலைநிலச் சோலையும் தென்கிழக்கு மற்றும் கடலோரப் பகுதிகளில் உள்ள சில செழிப்



குவைத்து நகரம்

பான பகுதிகளும் நீங்கலாகக் குவைத்தின் ஏனைய பகுதி பாலைவனமாக உள்ளது; மேடு பள்ளம் அதிக மாக இல்லை. அங்கும் இங்குமாகத் தாழ்ந்த குன்று களும், ஆழமற்ற பள்ளங்களும் அமைந்துள்ளன. கடற்கரைப் பகுதியில் சதுப்பு நிலங்கள் பெருவாரி யாக உள்ளன. வடக்கு, மேற்கு மற்றும் கிழக்குப் பகு திகளில் பாலைவன வடிகால்கள் உள்ளன. மழை நீர் அவற்றில் தேங்குகிறது. ஒட்டகக் கூட்டங்களுக்கு நீர் அளிக்க அவை பயன்படுகின்றன. வறண்ட பருவத்தில் (ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை) வெப்பம் அதிகம். சில நேரங்களில் வெப்ப நிலை 74° செல்சியசு ஆக உயர்ந்துவிடும். குளிர் காலம் மக்களுக்கு உகந்ததாக இருக்கும். மழை மிகக் குறைவாகப் பெய்யும். அக் டோபர் முதல் ஏப்ரல் வரை மழை பெய்யும். குளிர் காலத்திலும், வசந்த காலத்திலும் வடமேற்குக் காற்று வீசும். அது இதமாக இருக்கும். சூலை முதல் அக்டோபர் வரை தென்கிழக்குக் காற்று வீசும். அது வெப்பமாகவும் ஈரமாகவும் இருக்கும். கடுமையான புழுதிக் காற்று அடிக்கடி வீசும். ஏனைய இடங்களில் உண்மையான மண்ணைக் காண இயலாது. அந்த ஒரு சில இடங்களில் மட்டுமே பயிர் செய்யப்படு கிறது .

உலகில் மிக ஆதிக அளவில் நகர மயமாக்கப் பட்ட ஒரு சில நாடுகளுள் குவைத்தும் ஒன்றாகும். மக்கள் பெரும்பாலும் நகரங்களில் வசிக்கின் றனர். அதனுடைய தலைநகரமான குவைத்தில் 80,000 (1970) மக்கள் வசிக்கின்றனர். அதனுடைய புறநகரான ஆவல்லியில் 107,000 பேர் வாழ்கின்ற னர். வேறு பல புற நகர்கள் இப்போது தோன்றி யுள்ளன. அவற்றுள் அசு-சால்மியா (as-Salmiah) தசுமா (Dasmah), அசு-சாமியா (as-Samiah) ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும்.

குவைத்து நாடும் நகரமும், கி.பி. 18-ஆம் நூற் றாண்டில் தோன்றின. அப்போது அரேபியாவின் உட்பகுதியில் வசித்து வந்த அனிசா (Anizah) இனத் தைச் சார்ந்த பல குடும்பங்கள் தங்களுடைய நாடோடிப் பழக்கத்தைக் கைவிட்டு விட்டுப் பாரசீக வளைகுடாவின் கரையோரப் பகுதிகளில் குடியேறி னர். அங்கு அவர்கள் குவைத்து அரசை நிறுவினார் கள். அசு-சபா (as-Sabah) குடும்பத்தைச் சார்ந்த ஒருவரைச்செய்க்காக (Sheikh) நியமித்தனர். அவர் மீது துருக்கி மேலாதிக்கம் செலுத்தி வந்தது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெர்லின் பாக்தாது இரயில் பாதையைக் குவைத்துத் துறைமுகம் வரை விரிவுபடுத்த வேண்டும் என்று செர்மனி எண்ணிய போதுதான் அந்நகரம் மேலை நாடுகளின் கவனத் தைக் கவர்ந்தது. செர்மனியினுடைய திட்டங்களைத் தவிடு பொடியாக்கும் எண்ணத்துடன் பிரிட்டன் குவைத்துச் செயிக்கினுடைய நட்பை நாடியது. அதே சமயம் குவைத்தும் துருக்கியின் மேலாதிக்கத் திலிருந்து விடுபட எண்ணியது. ஆகவே கி.பி. 1899 -இல் குவைத்தும் பிரிட்டனும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. அதன்படி குவைத்தின் அயல் நாட்டுச் செயல்களைப் பிரிட்டன் கட்டுப்படுத்தி வர ஒப்புதல் அளிக்கப்பட்டது. முதலாவது உலகப் போர் 1914-இல் ஏற்பட்டபோது குவைத்தில் பிரிட் டனுடைய காப்பாட்சி ஏற்படுத்தப்பட்டது. குவைத் தும் சௌதி அரேபியாவும் 1922-இல் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டன. அதன் விளைவாக நடுநிலையான ஒரு பிராந்தியம் உருவாகியது. ஈராக்கும் குவைத்தும் 1923-இல் எல்லை பற்றிய இறுதி முடிவை மேற்கொண்டன. பிரிட்டன் குவைத் தின் விடுதலையை 1961-ஆம் ஆண்டு சூன் மாதம் 19-ஆம் நாளன்று ஏற்றுக் கொண்டது. அதையடுத்து ஈராக்குப் பிரதமர் குவைத்தை, ஈராக்கின் பிரிக்க முடியாத பகுதியாக அறிவித்தார்.

இனம், புவியியல், மற்றும் சமுதாயம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கின்றமையால் அவை இரண்டும்

ஒரே நாடாகத் திகழ வேண்டும் என்று அவர் கூறினார். ஈராக்கு தன்மீது படையெடுத்து வரக்கூடும் என்பதால் குவைத்து பிரிட்டனுடைய இராணுவ உதவியைவேண்டியது. ஆங்கிலப் படைகள் குவைத்தில் வந்திறங்கின குவைத்து அரபு சங்கத்தின் உறுப்பு நாடாக 1961-இல் சேர்த்துக் கொள்ளப் பட்டது. அதன் விளைவாகக் குவைத்தின் சுதந்திரத்தை அரபு நாடுகள் ஏற்றுக்கொண்டன. குவைத்தின் மீது ஈராக்கு கொண்டாடி வந்த உரிமை மறுக்கப்பட்டது. குவைத்து ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் உறுப்பு நாடாக 1963-இல் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதன் விளைவாக ஈராக்குக்கும் குவைத்துக்கும் இடையே ஏற்பட்டிருந்த வேறுபாடு நீங்கியது. குவைத்தின் சுதந்திரத்தை 1963 -இல் ஈராக்கு ஏற்றது.

குவைத்தின் ஆட்சி அதிகாரம் செயிக்கிடம் உள்ளது. அவர் நாட்டுத் தலைவராகவும் பிரதமராகவும் செயலாற்றுகிறார். அவருக்கு உதவியாக உள்ள அமைச்சரவையில் பத்து அமைச்சர்கள் நியமிக்கப் படுவார்கள். 4 பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அரசியலமைப்புச் சட்டம் 1962-ஆம் ஆண்டு 21 வயதுக்கு மேற்பட்ட எழுதப் படிக்கத் தெரிந்தகுவைத்துப் பெற்றோர்களுக்குப் பிறந்த ஆண்மக்களுக்கு வாக்குரிமை வழங்கியுள்ளது. சட்டமியற்றும் உரிமையைச் செயிக்குடன 50 பேர் கொண்ட சட்டமன்றமும் பகிர்ந்து கொண்டுள்ளது.

குவைத்து நாட்டின் பொருளாதாரத்தில் எண்ணெய் மிகுந்த ஆதிக்கத்தைப் பெற்றுள்ளது. உலகிலுள்ள எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் குவைத்து நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் அது இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. குவைத்து எண்ணெய் கம்பெனி 1934-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. என்றாலும் 1938-இல் தான் எண்ணெய் கிடைத்தது. இரண்டாவது உலகப் போரின் காரணமாக 1946-ஆம் ஆண்டுவரை அந்தத் துறையில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. அதன்பிறகு அந்தத் தொழில் வேகமாக முன்னேறியது. அதனுடைய எண்ணெய் உற்பத்தி 1971-ஆம் ஆண்டிற்குள், 1,000,000,000 உருள்கலன்கள் (Barrels) ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யுமளவுக்கு உயர்ந்தது. ஐரோப்பிய, அமெரிக்க, சப்பான் வணிக நிறுவனங்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளன. இவ்வணிக நிறுவனங்களிடமிருந்து குவைத்து அரசு பெற்ற ஊதியப் பங்கு (Royalties) அதனுடைய வருவாயுல் 90 விழுக்காட்டிற்கு மேல் உள்ளது. எண்ணெயுடன் இயற்கை எரிவாயுவும் உற்பத்தி செய்யப் படுகிறது. அந்த எரிவாயு மின் உற்பத்திக்கும் உர உற்பத்திக்கும், எண்ணெய் கலந்த வேதியியல் பொருள்கள் உற்பத்திக்கும் பயன்படுகிறது. இவையன்றிச் சிமெண்டு, மின்கலங்கள், மின்கம்பிகள், வண்ணச் சாயங்கள், சுண்ணாம்புக் கற்கள், கம்பளிப் போர்வைகள் ஆகிய பிற பொருள்களையும் உற்பத்தி செய்யும் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. அசு-சுஆய்பா (ash Shu aybah) தொழிற்பேட்டை இப்போது கட்டப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சி வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்காக அரசு குறைந்த வாடகைக்கு நிலத்தை அளித்து வருகிறது. சில தொழில்களுக்கு உதவித் தொகை அளித்து வருகிறது. சில பொருள்களுக்கு சுங்கவரி போன்ற வரிகளில் இருந்து விலக்களித்துள்ளது. குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவுகிறது. அரசு செலவில் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில் நுட்பம் பற்றி ஆய்வு செய்ய உதவியளிக்கிறது.

வேளாண்மை வளர்ச்சிக்குப் போதுமான வாய்ப்பு இல்லை. நாட்டின் நிலத்தில் 3விழுக்காடு அளவுதான் பயிர்செய்ய ஏற்றதாக உள்ளது. போதிய நீர் வசதி இன்மையாலும், மண் வளமற்று இருப்பதாலும், வேளாண்மை முறைகளை அறிந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும் மொத்த நிலப்பரப்பில் ஒரு விழுக்காடு நிலம் மட்டுமே பயிர் செய்யப்படுகிறது. எனவே தேசிய வருமானத்தில் அதன் பங்கு 0.2 விழுக்காடு அளவே இருக்கிறது.

இந்நாட்டில் மீன்பிடித்தல் ஒரு முக்கியமான தொழிலாகும். நான்கு பெரிய வணிக நிறுவனங்கள் இதில் ஈடுபட்டுள்ளன. மீன் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடல் உணவைப் பெட்டிகளில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குத் தேசிய தொழிற்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குவைத்து அரபுச் சமுதாயம் கட்டுக் கோப்புடன் கூடிய ஒன்றுபட்ட சமுதாயமாகும் அச் சமுதாயத்தினர் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் போல் நடந்து கொள்வார்கள். இதில் வகுப்பு வேற்றுமை கிடையாது. அவர்களுக்குப் பொதுக் கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது. உணவு, பாடநூல்கள், சீருடைகள், மருத்துவ வசதி, போக்குவரத்து அனைத்தும் இலவசமாகத் தரப்படுகிறது. பல்கலைக்கழகம் ஒன்று 1962-இல் குவைத்து நகரில் அமைக்கப் பட்டது. சமுதாய வளர்ச்சிக்கும் குவைத்து அரசு பேருதவி செய்துவருகிறது; நலிவுற்ற மக்களுக்கும்

ஊனமுற்றவர்களுக்கும் பொருளுதவி செய்கிறது. மக்களுக்கு வசதியான வீடுகளைக் கட்டித் தருகிறது.

குவைத்து அராபியர் அன்றி ஏனைய இனத்தவர்களும் இங்கு வசிக்கின்றனர். 1970 ஆம் ஆண்டுக் கணக்குப்படி அங்கு 390,000 அன்னியர்கள் வாழ்கின்றனர். அவர்களுள் 27,000 ஈராக்கியர்களும் 18,000 ஈரானியர்களும், 31,000 சோர்தானியர்களும், நூற்றுக்கணக்கான இந்தியர்களும் பாகிசுதானியர்களும், ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் வாழ்கின்றனர்.

குவைத்து மக்களுள் பெரும்பாலோர் இசுலாம் மதத்தைப் பின்பற்றுகின்றனர். சில அராபியர்களும் ஐரோப்பியர்களும், கிறித்தவ மதத்தைப் பின்பற்றுகின்றனர். இந்து சமயத்தினர்களும் இங்கு வாழ்கின்றனர். சமய சுதந்திரம் இங்கு வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான மக்கள் அரபு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். அதுவே அரசு மொழியும் ஆகும். ஆங்கிலம் இரண்டாவது அடிப்படை மொழியாக அரசுப் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருகிறது. இந்தி, உருது, பாரசீக மொழிகளும் இங்கு வழக்கில் உள்ளன. தி.ஆர்.இ.

**கல்வி**: குவைத்தில் 6 வயது முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. பாடநூல்கள், பயிற்சி ஏடுகள், சீருடை, காலணி போன்றவைகளும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி மொத்தம் 12 ஆண்டுகள்; தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, மேனிலைப்பள்ளி என ஒவ்வொரு நிலையும் மொத்தம் 4 ஆண்டுகள். பள்ளிக் கல்வியின் இறுதியில் பொதுத்தேர்வு நடைபெறுகிறது. தொடக்கப்பள்ளிக் கல்விக்கு முன்னர், ஓராண்டு மழலையர் பள்ளிக் கல்வியும் உண்டு. ஆனால் அக் கல்வி குழந்தைகளுக்குக் கட்டாயமாக்கப்படவில்லை.


குவைத்துப் பல்கலைக்கழகம் 1966-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று உயர்கல்விப் பொறுப்பை ஏற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் கலைப்புலம், அறிவியற்புலம், இசுலாமியச் சட்டவியல் (Sharia) வணிகவியல், பொருளியல், அரசியலறிவியல், பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், கல்வியியல், மதிப்பீடு மற்றும் அளவிடுதல், மொழிக்கல்வி ஆகியவற்றுக்கான புலங்கள் உள்ளன.

குவைத்து அரசு வயதுவந்தோர் கல்வியிலும் அக்கறை காட்டி வருகிறது. வயது வந்தோர் கல்வித் திட்டங்களின் உதவியால் இரவுப் பள்ளிகளில் எழுத்தறிவு கற்பிக்கப்படுகிறது. வயதுவந்தோர் கல்வித் திட்ட வகுப்புகளுக்கு 1980-81 ஆம் ஆண்டுக் கணக்கின்படி இருபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் வந்து பயின்றனர். குவைத்துப் பல்கலைக் கழகத்தில் இடைநிலைப் பள்ளி ஆசிரியர் கல்விப் பயிற்சிக்காக 1981-82-இல் கல்வியியல் கல்லூரி ஒன்றும் இயங்கி வருகிறது. எஸ்.த.

**குவோமின்டாங்கு** என்பது சீனாவில் சன்-யாட்-சென்னால் (Sun-Yat-Sen) 1912-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகும். மக்கள் கட்சி அல்லது தேசிய கட்சி என்பது இதன் பொருள். சீனாவில் 1911-ஆம் ஆண்டில் நிகழ்ந்த புரட்சியின் விளைவாக முடியாட்சி அகற்றப்பட்டு ஒரு குடியரசு அமைக்கப்பட்டது. இக்குடியரசின் தலைவராகப் பொறுப்பேற்ற சன்-யாட்-சென் குவோமின்டாங் (Kuomintong) என்ற இக்கட்சியினை அமைத்தார். பாராளுமன்ற ஆட்சிமுறையினை ஏற்படுத்துவதற்கு நாடு தழுவிய ஒரு தேசிய கட்சி தேவை என்ற உணர்வினால் இது 1912-இல் துவக்கப்பெற்றது. புதிய சீனக் குடியரசில் ஒரு உள்நாட்டுப் போரினைத் துவக்க விரும்பாத சன், யுவான்-சி-கே (Yuan-Shih-Kai) என்ற வடசீனத் தளபதியிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார். அடுத்து நடைபெற்ற தேசிய சபைக்கான தேர்தலில் குவோமின்டாங் கட்சியானது பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. ஆனால் சீனத் தேசியத்தை விரும்பாத சர்வாதிகாரியான யுவான் குவோமின்டாங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களைத் தேசிய சபையிலிருந்து அகற்றிவிட்டு, அவர்களில் பலரையும் கொன்றார். சன்னும் குவோமின்டாங் கட்சியினரும் தென்சீனாவிக்குச் சென்று கான்டன் (Canton) நகரில் ஒரு புதிய அரசினை 1917-இல் நிறுவினர். குவோமின்டாங் மாநாடு 1924-இல் கூடியபோது அக்கட்சியின் கொள்கைகள் இறுதி வடிவம் கொடுக்கப் பெற்று அறிவிக்கப் பெற்றன. தேசியம், சனநாயகம், நல்வாழ்வு என்ற 'மூன்று மக்கட் கோட்பாடுகளே' (Three Principles of the People) இக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளாக அறிவிக்கப்பட்டன. தேசியம் (Nationalism) என்பது அந்நிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து சீனநாட்டின் விடுதலையையும், சனநாயகம் (Democracy) என்பது பாராளுமன்ற முறையிலான மக்களாட்சியையும், நல்வாழ்வு (Livelihood) என்பது மக்களனைவருக்கும் பசியும் வறுமையும் இல்லாத பொருளாதார மேம்பாட்டினையும் சுட்டின. அடுத்த ஆண்டில் சன் நோயுற்று இறந்தபின் குவோமின்டாங் அரசின் படைத் தளபதியான சியாங்-கே-சேக் (ChiangKai-Shek) குடியரசுத் தலைவராகவும் கட்சியின் தலைவ

ராகவும் ஆனார். குவோமின்டாங் படைகள் வட சீனாவின் பல மாநிலங்களையும் அடுத்த இரண்டாண்டுகளில் மீட்டு, பீகிங் நகரையும் விடுவித்து அதனையே சீன தேசிய குடியரசின் தலைநகராக்கின. இதற்கிடையில் சாங்காய் (Shanghai) நகரத்து முதலாளிகளின் நிதி ஆதரவினைப் பெற்று வலது சாரியாக மாறி வந்த சியாங், குவோமின்டாங் கட்சியைப் பிளவு படுத்தி அதிலிருந்து பொதுவுடமையினர் போன்ற எல்லா இடதுசாரிகளையும் விரட்டியடித்தார். சன்-யாட்-சென்னின் மனைவியும் தோழர்களும் கூட வெளியேற்றப்பட்டனர். நீண்ட உள்நாட்டுப் போருக்குப் பின் சியாங்கின் குவோமின்டாங் அரசு 1949 செப்டம்பர்-அக்டோபரில் சீனாவிலிருந்தே விரட்டப்பட்டு, அண்டையிலுள்ள தைவான் (Taiwan or Formosa) எனப்படும் தீவில் அடைக்கலம் புகுந்தது. அமெரிக்கக் கப்பற்படைகளின் பாதுகாப்பில் அத்தீவில் குவோமின்டாங் அரசு இன்றுவரை நீடித்துள்ளது. முற்போக்கான, மக்கள் நலம் பேணும் நல்லதொரு கட்சியாக சன்னின் காலத்தில் புகழோடு விளங்கிய குவோமின்டாங் கட்சியானது சியாங்கின் தலைமையில் தன் செல்வாக்கினைப் படிப்படியாக இழந்தது. 1975 ஏப்ரலில் சியாங்-கே-சேக் காலமான பின் அவரது மகன் சியாங்-சிங்-குவோ (Chiang-Ching-Kuo) என்பவர் குவோமின்டாங் அரசின் தலைவராக ஆனார். இர.ஆ.

**குழந்தை, அ.மு.**:இன்றைய பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த ஈரோடு வட்டம் அறச்சலூரை அடுத்துள்ள ஓலவலசு என்னும் சிற்றூரில் 1906-இல் புலவர் குழந்தை பிறந்தார். தந்தையார் முத்துசாமிக் கவுண்டர்; தாயார் சின்னம்மையார். பெற்றோருக்கு இவர் ஓரே மகன் ஆவார்.



குழந்தை, அ.மு.

இவர் திண்ணைப் பள்ளிக் கூடங்களில் சில ஆண்டுகள் பயின்றார். ஒரு பாட்டைக் கேட்டால் அதே ஓசையில் புதுப்பாட்டொன்றை இயற்றும் ஆற்றலை இவர் இளம்பருவத்திலேயே பெற்று விளங்கினார். குழந்தை, தம் 12-ஆம் வயதில் பாடிய ‘கன்னியம்மன் சிந்து’ என்னும் முதல் நூல் 1918-இல் அச்சானது. முறையாக யாப்புப் பயிலாமலேயே வெள்ளக்கோயில் வீரகுமாரசுவாமி இரதோற்சவச் சிந்து, வீரகுமாரசாமி காவடிச் சிந்து, வெள்ளக்கோயில் வழிநடைச் சிந்து ஆகிய இசைநூல்களை இயற்றினார்.

இவர்தம் கவிச் சிறப்பை அறிந்த பெருமக்கள் பலர் இவரைத் தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் பயிலுமாறு தூண்டினர். ஆசிரியப் பணி ஆற்றிக்கொண்டே தகுந்த ஆசிரியர் கிடைக்காமையால் தாமே அரிதின் முயன்று தமிழ் படித்து 1934-இல் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பல பள்ளிகளில் பணியாற்றி இறுதியில் 1941-முதல் 1962 வரை பவானி கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியபோதே சமூக சீர்திருத்த மாநாடுகளில் பங்கு கொண்டார். பல விதவைகட்குத் திருமணங்களை முன்னின்று நடத்திவைத்தார். பகவத்சிங்கு போன்ற தேசிய வீரர்களின் விடுதலை வேட்கை பற்றிய பாடல்கள் பாடினார். இவர் 1938, 1948 -ஆகிய ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொண்டார்; முதியோர் கல்வி வகுப்புகள் நடத்தினார். ‘வேளாளன்’, ‘தமிழோசை’ ஆகிய இதழ்களை ஆசிரியராக இருந்து நடத்தினார்.

குழந்தை அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் முத்தம்மையார். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். திருக்குறளுக்குக் ‘குழந்தை உரை’ என்னும் புதிய உரை வெளியிட்டார். தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கும் உரை எழுதியுள்ளார். நாலடியார் முதலிய 21 நீதி நூல்களை நீதிக் களஞ்சியம் என்ற பெயரில் தொகுத்து உரை எழுதியுள்ளார்.

இவர் யாப்பதிகாரம், தொடையதிகாரம், இன்னூல் முதலிய இலக்கண நூல்களை இயற்றியுள்ளார். தொடையதிகாரம் என்ற நூலில் கும்மி, ஒப்பாரி, உடுக்கைப்பாட்டு முதலிய எல்லா வகையான சிந்துகட்கும் இலக்கணம் எழுதியுள்ளார்.

அரசியலரங்கம், நெருஞ்சிப்பழம், உலகப்பெரியோன் கென்னடி, திருநணாச் சிலேடை வெண்பா, கா மஞ்சரி, இராவண காவியம், புலவர் குழந்தை பாடல் ஆகியவை இவர் இயற்றிய செய்யுள் நூல்கள். இராவண காவியம் 5 காண்டங்களாகவும், 57 படலங்களாகவும் 3100 பாடல்களில் உருவானது. இந்நூல் 1948-இல் அரசால் தடைசெய்யப்பட்டுப் பின்னர், 1971-இல் தடை நீக்கம் செய்யப்பட்டது.

தொல்காப்பியர் காலத் தமிழர், திருக்குறளும் பரிமேலழகரும், பூவா முல்லை, கொங்கு நாடு, தமிழ் வாழ்க, தமிழக வரலாறு, தீரன் சின்னமலை, கொங்கு நாடும் தமிழும், கொங்குக் குலமணிகள், அருந்தமிழ் விருந்து, அருந்தமிழ் அமிழ்து, சங்கத் தமிழ்ச் செல்வம், ஒன்றே குலம், அண்ணல் காந்தி, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ஆகியவை இவர் எழுதிய உரைநடை நூல்கள்.

திராவிட காவியம் என்ற பெயரில் நூலொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுச் செய்திகள் முழுவதும் தொகுத்து மூன்றில் ஒரு பங்கு செய்யுள்களையும் இயற்றி முடித்துள்ளார். அப்பணி முடியாத நிலையில் புலவர் குழந்தை 1972-இல் காலமானார்.

செ.இரா.

**குழந்தை உளவியல்**: பிறந்தது முதல் குமரப்பருவம் அடையும் வரை அதாவது ஏறக்குறையப் பதினோராண்டுகள் வரையிலான காலம் குழந்தைப் பருவமாகும். இப்பருவத்தில் குழந்தையிடம் காணப்படுகின்ற பல்வேறு வளர்ச்சிகளையும் அவற்றின் முதிர்ச்சிகளையும் ஓர் ஒழுங்குமுறைப்படி அறிவதுதான் குழந்தை உளவியலின் நோக்கமாகும். குழந்தையின் உடல், ஆற்றல்கள், கற்றல் பற்றிய வளர்ச்சிச் செய்திகள் ஆகியவை குழந்தை உளவியலின் இன்றியமையாக் கருப்பொருள்களாகும்.

குழந்தைகள் உயரத்திலும் பருமனிலும் வளருவதைப் போன்றே அனுபவத்திலும் வளர்கின்றனர். குழந்தையின் வளர்ச்சி ஒரு சுறுசுறுப்பான இயக்கச் செயல்முறையாகவும், மாற்றத்தை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது. வளர்ச்சியானது சூழ்நிலை, உட்சுரப்பிகள், உடல்நலம், முதிர்ச்சி, கல்வி முதலிய பல காரணக் கூறுகளின் ஊடாட்டத்தைச் சார்ந்திருக்கிறது.

குழந்தையிடம் நடைபெறுகின்ற வளர்ச்சி மிக மெதுவாக நடைபெறுகிறது. ஆனாலும் அவ்வளர்ச்சி ஒரு தொடர்ச்சிச் செயல்முறையாக நடைபெறுகிறது. வளர்ச்சி, அனுபவங்களை ஏற்றுக் கொள்வதைச் சார்ந்திருக்கிறது. வாழ்க்கை அனுபவங்கள் வளர்ச்சியைத் தூண்டுகின்றன.

குரோ-குரோ (Crow and Crow) என்ற இரு அறிஞர்கள் குழந்தை உளவியல், வளர்ச்சி நிலையும் முதிர்ச்சியும், தனியாள் வளர்ச்சியில் சூழ்நிலையின் ஆதிக்கம், ஒரு குழந்தைக்கும் அதன் சமுதாயத்துப் பிற உறுப்பினர்களுக்கும் இடையேயுள்ள உள, சமூக இடைவினைகள் ஆகியவற்றை ஆராய்கின்றது' என்று கருதுகிறார்கள்.

குழந்தையின் வளர்ச்சி அது கருவிலிருக்கும் போதே தொடங்குகிறது. எனவே, குழந்தை பிறப்பதற்கு முன்னர் உள்ள காலத்து அனுபவங்களையும் உளவியல் ஆராய்கிறது. பிறப்பதற்கு முன் குழந்தையின் வளர்ச்சி மூன்று நிலைகளின் வழியாக ஏற்படுகிறது. முதல்நிலை கருத்தரித்தல். இது கருத்தரிக்கத் தொடங்கியதிலிருந்து இரண்டு வாரம் வரையான காலம். இரண்டாம் நிலை வளர்ச்சியுறாக் கரு. இது இரண்டு முதல் எட்டு வாரக் காலமாகும். மூன்றாம் நிலை வளர்ச்சியுற்ற கரு. இது ஒன்பது வாரம் முதல் குழந்தை பிறக்கும் வரையிலான காலம். இந்த மூன்று நிலைகளிலும் இயக்கத்தசை வளர்ச்சியும் புலனுணர்வு வளர்ச்சியும் காணப்படுகின்றன. பிறந்தது முதல் குமரப்பருவத்தை அடையும்வரையுள்ள காலத்தில் ஒவ்வொருவரும் இளம்பிள்ளைப் பருவம், குழந்தைப் பருவம் என்ற இருநிலைகளைக் கடக்கின்றனர். முதல் ஆறு ஆண்டுகள் இளம்பிள்ளைப் பருவமாகும். ஏழு முதல் பதினொன்று வரை குழந்தைப் பருவமாகும். ஒவ்வொரு நிலையிலும் வளர்ச்சியானது உடல், உளம், உளக்கிளர்ச்சி, அறநெறி, அழகுணர்வு என்ற ஐந்து செயற்பாடுகள் வழியாக ஏற்படுகின்றது. இளம்பிள்ளைப் பருவத்திலும் குழந்தைப் பருவத்திலும் முதல் மூன்று ஆண்டுகள் வளர்ச்சி நிலையெனவும், பின் மூன்று ஆண்டுகள் முதிர்ச்சி நிலையெனவும் கருதப்படுகின்றன. குழந்தை உளவியல் இவை எல்லாவற்றையும் ஆராய்கிறது.

ஒவ்வொரு குழந்தையும் ஒரு குறிப்பிட்ட இடம், சமூகம், உளவியல் ஆகியவற்றின் சூழலில் வாழ்கிறது. இந்தச் சூழல்கள் குழந்தையின் நடத்தைமுறை, வளர்ச்சி வேகம், ஆகியவற்றைப் பாதிக்கின்றன. குழந்தை உளவியல் இத்தகைய பாதிப்புகளை ஆராய்வதோடு குழந்தைகளின் பல்வேறு வளர்ச்சிக்கு இணக்கமான சூழல் எது என்பதனையும் கண்டறிய முற்படுகிறது.

ஒரு குழந்தையின் ஆளுமையிலும் வளர்ச்சியிலும் அதன் குடும்ப உறுப்பினர்கள், அண்டையிலுள்ள அயலார், விளையாடுமிடம், பள்ளி, கல்லூரி ஆகிய அனைத்தும் பாதிப்பினை விளைவிக்கக் கூடியனவாம். அத்தகைய பாதிப்பு உளவியல் அல்லது சமூகம் அல்லது இரண்டையும் சார்ந்ததாக இருக்கக்கூடும்

அல்லது சமூக இடைவினைகளெல்லாம் உளவியல் விளைவுகளைக் கொண்டதாக இருக்கும். அவற்றை யெல்லாம் குழந்தை உளவியல் ஆராய்கிறது.

குழந்தைகளின் உளச்செயல்கள் பெரியவர்களி லிருந்து வேறுபடுகின்றன. எனவே குழந்தைகளின் புலனுணர்வு, சிந்தனை, கற்றல், இசைவு, ஆளுமை, பிற உளவியற் செயல்கள், அவற்றின் மீது சூழலுக்கு உள்ள ஆதிக்கம், அதன் பயனாக விளையும் தனியாள் வேற்றுமை ஆகியவற்றையெல்லாம் குழந்தை உள வியல் மிகநுட்பமாக ஆராய்கிறது.

குழந்தைகள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. அவ்வேறுபாடு அவர்களின் நடத்தையிலும் வளர்ச்சி யிலும் காணப்படுவதோடு, அவர்களின் குடும்பப் பின் னணி, பொருளாதாரநிலை, இனவேற்றுமை, தேசிய உணர்வு, பால்வேற்றுமை, சிறப்பு ஆற்றல்கள், மன வயது, தசை இயக்க ஆற்றல்கள், ஆளுமை வளர்ச்சி, கற்றல், ஆர்வம் ஆகியவைகளிலும் வெளிப்படுகிறது. குழந்தை உளவியலார் இந்தத் தனியாள் வேற்றுமை களை ஆராய்ந்து, அவற்றிலிருந்து குழந்தைகளின் நடத்தை பற்றிய ஒரு பொதுக் கருத்தினை உருவாக் கிட முயல்கின்றனர்.

குழந்தை உளவியல் குழந்தைகளைப் பற்றி விரி வாகவும் விளக்கமாகவும் ஆராய்கிறது; குழந்தை களின் வளர்ச்சியும் நடத்தையும் பற்றிய அனைத்துக் கூறுபாடுகளையும் ஆராய்கிறது. குழந்தை உளவிய லின் பரப்பெல்லை குழந்தைகளின் ஒத்துக்கொள் ளல், உணர்ச்சி, அறிதல் ஆகியவற்றை உள்ளடக்கிய தாகும். அது, குழந்தைகளின் அறிந்து கொள்ளல், அனுபவித்தறிதல், முடிவு எடுத்தல் சார்பான செயல் முயற்சிகளையும் அவற்றுடன் தொடர் புடைய உளச் செய்திகளையும் பகுத்தறிகிறது. குழந்தையின்மீது மரபுநிலையும் சூழலும் செய்யும் ஆதிக்கத்தினையும், மாறுபட்ட சூழல் குழந்தையின் நடத்தையிலும் வளர்ச்சியிலும் ஏற்படுத்தும் மாற் றங்களையும் குழந்தை உளவியல் ஒப்பாய்வு செய் கின்றது.இளம் குழந்தையின் நடத்தை, மனவளர்ச்சி, உடல்வளர்ச்சி, தசை இயக்க முதிர்ச்சி, பேசும்திறன், முதிர்ச்சி, மனவெழுச்சியின் முதிர்ச்சி, சமூகத் தொடர்பின் முதிர்ச்சி, சமயத் தொடர்பான செயல் களின் வளர்ச்சி, அழகு, சுவையறிவு மலர்ச்சி, விளை யாட்டு ஈடுபாடுகள், அக்கறைகள்(Interests),ஆளுமை முதிர்ச்சி (Personality Development), குழந்தை பெற் றோரிடமும் ஆசிரியர்களிடமும் நடந்து கொள்ளும் முறைகள், குழந்தைப் பருவச் சிக்கல்கள், உளநலம், பெற்றோர் குழந்தையினை நடத்தும் முறைகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும் குழந்தை உளவியல். இதில் பின்வரும் முறைகள் மனங்கொள் ளத்தகும்.

**வாழ்க்கை வரலாற்று முறை:** இம் முறையில் பெரும்பாலும் குழந்தையின் தாயே ஆய்வாளராக அமர்ந்து குழந்தையிடம் காணப்படும் சிறப்பான நடத்தைகளைக் காலவரிசையாகக் குறிப்பேட்டில் பதிந்து வைத்திடுவார். எந்த மாதம் அல்லது வய தில் குழந்தை முதன் முதலாகப் பேசத் தொடங்கி யது, எப்போது நடக்கத் தொடங்கியது என்பன போன்றவற்றைக் குறித்து வைத்திடுவார்.

**கூராய்வு முறை**: கூராய்வாளர் ஏற்றதொரு சூழ் நிலையைத் தேர்ந்தெடுத்து, ஒரு தொழில் நுட்பத் தினையும் உருவாக்கிக் கொண்டு குழந்தையின் பல் வேறு துலங்கல்களைப் பதிவு செய்திடுவார். அதில் புள்ளி விவரங்கள் மிகவும் இன்றியமையாதனவாகும். சரிபார்க்கும் பட்டியலும் (Checklist) பயன்படுத்தப் படுகிறது. சமுதாய அளவாய்வு (Community Survey) முறையும் பெரிதும் உதவுகிறது. சூழல்பாகுபாடு (Situational Analysis) முறையினைக் கொண்டு ஒரு குழந்தை பல சூழல்களில் எவ்வாறு செயலாற்று கிறது என்று கண்டறிந்து ஒப்புநோக்கப்படுகிறது. ஒரு குழந்தை ஒரே மாதிரியான தூண்டல்களுக்கு வீட்டிலும் பள்ளியிலும் எவ்வாறு துலங்குகிறது என்று ஒப்புநோக்கப்படுகிறது.

**சோதனை முறை**: இம்முறையில் சில குழந்தை கள் கட்டுப்படுத்திய குழுவினராகவும் (Controlied group), மற்றும் சிலர் சோதனைக் குழுவினராகவும் (Experimental group) செயற்படுவர். அவ்விரண்டு குழுவினரும் தொடக்கத்தில் ஏறத்தாழ ஒரே தன்மை யுடையவராக இருப்பர். கட்டுப்படுத்திய குழுவினரின் நடத்தை ஒரு மூல அளவாகப் (Standard) பயன்படு கிறது. அவ்விரண்டு குழுவிலிருந்தும் ஒவ்வொருவரை எடுத்து ஓர் இணையாக்கி (Pair), பின்னர் அவ்விணை யில் ஒருவரைச் சோதனைக்குட்படுத்துவர். அவரி டம் காணப்படும் நடத்தைகளைப் பதிவு செய்து கொள்வர். பின்னர்ச் சோதனைக்குட்பட்ட குழந் தையின் நடத்தையினைச் சோதனைக்குட்படாத குழந்தையின் நடத்தையுடன் ஒப்பிடுவர்.

**உளநோய் நீக்கு முறை**: இது உளப்பகுப்பாய்வு முறையினுள் ஒன்றாகும். இம்முறையில் நோயாளி யிடமிருந்து பல்வேறு வகையான செய்திப் பொருள் கள் திரட்டப்படுகின்றன. அம்முறையில் மிகவும் சிறப்பானது தனியாள் வரலாற்று முறையாகும். அதற்கான செய்திகளைப் பல மூலங்களிலிருந்தும்

திரட்ட வேண்டும். அதன் அடிப்படையில் பல இடை வேளைகளில் பேட்டிகள் நடத்திச் செய்திகளைப் பெற வேண்டும். பேட்டியின்போது பேட்டியாளர் சில செய்திகளைச் சொல்லி அதற்குப் பேட்டியாளர் தரும் விடைகளைப் பெற்றுச் செய்திகளைத் திரட்ட லாம். அவை, தனியாள் வரலாற்றுச் செய்தி களுக்குத் துணைச் செய்திகளாகும். அவையனைத் தையும் ஒரு கோவையாகச் சேர்த்துப் பார்த்து அவற்றின் பின்னணியிலுள்ள புனை கொள் கையை (hypothesis) உருவாக்குகின்றனர். அதற்காக மிகுதியான குழந்தைகளை ஆராய்தல் இன்றியமை யாதது ஆகும்.

**தரவீடு அளவுகோல், வினாத்தொகுதி முறைகள்**: குழந்தைகளிடமிருந்து செய்திகளைச் சேகரித்து வகைப்படுத்துவதற்கு இந்த முறைகள் பெரிதும் உதவு கின்றன. நடத்தையின் குணவியல்புகளை அளவிடு வதற்குத் தரவீடு அளவுகோல் முறை சிறந்ததாகும். குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட பண்பின் அடிப்படை யில் வரிசைப்படுத்தப்படுகின்றனர். குறிப்பிட்ட பண் பினை மிகுதியாகக் கொண்டிருக்கும் குழந்தை முத லானதாகவும், மிகக் குறைவாகப் பெற்றிருக்கும் குழந்தை கடைசியானதாகவும், மற்றக் குழந்தை கள் அவற்றின் பண்புக்குத் தக இடையில் ஓர் இடத் தினவாகவும் வரிசைப்படுத்தப்படும். தரவீடு செய் வோர் எல்லாக் குழந்தைகளையும் புறநிலையிலி ருந்து தரவீடு செய்திடுதல் வேண்டும்.

குழந்தைகளின் நடத்தை, ஆர்வம், கற்றல், ஊக் கிகள் போன்ற எல்லா வகையான வளர்ச்சி நிலை களையும் பற்றி வினாக்கள் தயாரித்து, அவைகளைத் தொகுதியாக அச்சிட்டு ஆய்வாளர் பயன்படுத்து வார். அவர் குழந்தைகளை அணுகி அவ்வினாக் களுக்கு விவரங்களைத் திரட்டுவார். அவ்விவரங் களுக்குத் தக்க புள்ளிவிவர விளக்கம் தரப்படு கிறது. அதன் அடிப்படையில் பொதுக் கருத்துக்கள் உருவாக்கப்படும். கி.இரா.

**துணை நூல்கள்**:


**Crow, L.D.** and **Crow, A.**, Child Development and Adjustment. The Macmillan Co., New York, 1963.

**Dorothy, Rogers**. Child Psychology. Brocks Cole Publishing Company, California, 1969.

**Hurlock, E.B.**, Child Development, McGraw-Hill Book Co., New York, 1959.


**குழந்தைக் கவிராயர்** கி.பி. 18-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மிதிலைப் பட்டி என்னும் ஊரைச் சேர்ந்தவர். தந்தை மங்கை பாகக் கவிராயர் என்பவராவார். தந்தையும் இவர் தம் முன்னோர்களும் கல்வியறிவிற் சிறந்தவர்களாக விளங்கினர். இவர்தம் முன்னோர்கள் மாமல்லபுரத் தில் தங்கி வாழ்ந்தவர்கள். அம்முன்னோர்களில் ஒரு வரான சிற்றம்பலக் கவிராயர் வெங்களப்ப நாயக்கர் மீது குறவஞ்சி ஒன்று பாடினார். அதற்குப் பரிசாக அவர் இவருக்கு மிதிலைப்பட்டியை மடப்புறமாக அளித்தார். மிதிலைப்பட்டியைப் பெற்றபின் இவர்தம் மரபினர் அங்கேயே வாழ்ந்து வருகின்றனர். இவர் தந்தை நத்தம் பெருநிலக்கிழாராகிய இம்முடிலிங் கைய நாயக்கர் மகன் சொக்கலிங்க நாயக்கர் மீது வருக்கக் கோவை என்னும் நூலினைப் பாடினார். அதற்குப் பரிசாகப் பூசாரிப்பட்டி என்னும் ஊரைப் பெற்றார்.

இவர் நத்தம் பெருநிலக்கிழாரிடம் சென்று தம் பல்லக்கில் சிங்கம்பிடாரி என்னும் ஊர் வழியே வந்து கொண்டிருந்தார். அவ்வழியில் அந்தணப் பெண்கள் சிலர், கள்வர்கள் தங்கள் தாலியுட்பட அனைத்துத் தங்க அணிகலன்களையும் கைக்கொண்டு தங்களையும் துன்புறுத்தியதாக இவரிடம் வந்து முறையிட்டனர். இவர் அவ்வூரில் உள்ள ஐயனார்மீது 'அண்டர்தொழும்' எனத் தொடங்கும் செய்யுளைப் பாடினார். அதன் விளைவாகக் கள்வர்கள் கண் பார்வை இழந்தனர் என்றும் பின்னர்த் திருடிய நகை களை அவ்வூர்த் தலைவரிடம் தந்து தங்கள் பிழை பொறுக்க வேண்டினர் என்றும் கூறுவர்.

இவர் மான்விடுதூது என்னும் நூலினையும் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். மான்விடுதூது என்பது சிவகங்கைச் சமத்தானப் பிரதானியான தாண்டவராயப் பிள்ளை மீது பாடப்பட்டதாகும். அதனால், மனமகிழ்ந்த தாண்டவராயப் பிள்ளை பல பரிசுகளும் ஆயிரம் கல நெல்லும் நன்கொடையாக அளித்துள்ளார் எனத் தெரிகிறது. மேலும், அவர்மீது பல தனிப்பாடல்களும் பாடிப் பரிசுகள் பெற்றுள் ளார். கல்வியிற் சிறந்தவரும் இசைப்பயிற்சியுடைய வரும் தமிழ்ப் புலவரை ஆதரிக்கும் இயல்புடையவரு மான தாண்டவராயப்பிள்ளை இவரைக் 'குழந்தைக் கவிராயர்', 'நாவலர்தாரு', 'வாணர் புரவலன்' முத லிய புகழுரைகளால் போற்றியுள்ளார். தாண்டவ ராயப்பிள்ளையின் தமையனாராகிய இராமகிருட் டிணப்பிள்ளையையும் நத்தம் சமீன்தார் ஒருவரையும் புதுக்கோட்டை அரசர் திருமலைத் தொண்டைமான்

என்பவரையும் பல தனிப்பாடல்களால் சிறப்பித்துள் ளார். வீ.சே.

**குழந்தைக் கொலை:** குழந்தை பிறந்தவுடன் கொல்வது, பருவமடைவதற்குமுன் குழந்தைகளைக் கொல்வது, இயற்கைச் சூழலில் அப்படியே பிறந்த குழந்தையை இறக்கவிடுவது, குழந்தைகளை உயிர்ப்பலியிடுவது ஆகியனவே குழந்தைக் கொலை (Infanticide) எனக் கூறப்படும். உலகின் பல்வேறு சமுதாயங்களில் சமய நம்பிக்கைகள், மரபு முதலானவற்றின் அடிப்படையில் பல காரணங்களுக்காகப் பெண் குழந்தைகளைக் கொலை செய்வதும் ஆண் குழந்தைகளைக் கொலை செய்வதும் வழக்கத்திலிருந்தன.

பிறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட மிகத் தொன்மையான முறையே குழந்தைக் கொலை எனக் குறிப்பிட்டாலும், வேறு சில முதன்மையான காரணங்களுக்காகவும் இம்முறை வழக்கிலிருந்தது. சில சமுதாயத்தினரிடையே குழந்தைக் கொலைக்கு உயிர்ப்பலி முறையும் காரணமாகும். தாம் வணங்கும் கடவுள்களைத் திருப்திப்படுத்துவதற்காக முதல் குழந்தையைக் கொல்லும் முறை இந்தியாவில் சில சமுதாயத்தினரிடையே கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை காணப்பட்டு வந்துள்ளது. விவிலியத்திலிருந்தும் பண்டைய எகிப்து, கிரேக்கம், உரோம் முதலானவற்றின் வரலாற்றிலிருந்தும் பல சடங்குகளில் முதல் குழந்தையைக் கொலை செய்யும் முறை பற்றி அறிய முடிகிறது. தொன்மையான எபிரேயப் (Hebrew) பழங்குடியினரிடையே மேற்கூறிய காரணத்திற்காகக் குழந்தையைக் கொல்லும் பழக்கமிருந்தது. சிலரிடையே இரட்டைக் குழந்தைகள் பிறப்பு, பிறக்கும் குழந்தைகள் சாதாரணமாக இல்லாமல் ஏதாவது உடற்குறையுடனோ அதிகப்படியான உறுப்புகளுடனோ பிறத்தல், குழந்தைகள் பற்களுடன் பிறத்தல், இரண்டு மூன்று குழந்தைகள் ஒரே நேரத்தில் பிறத்தல் முதலானவற்றுடன் தொடர்புற்ற மூடநம்பிக்கைகளும் குழந்தைக் கொலைக்குக் காரணமாகும். சில சமுதாயங்களில் சமய, சமுதாயக் காரணங்களுக்காகவும் குழந்தைக் கொலை மேற்கொள்ளப்பட்டது.

தென்னிந்தியாவில் தேவையற்றது எனக் கருதியும் பழிவாங்கும் செயல்களுக்காகவும் குழந்தைக் கொலை நடைபெற்றுள்ளது. மேலும், சோதிடர் குழந்தை பிறந்த நேரம் கொடியது என்றால், உடனே அக்குழந்தையைக் கழுத்தை நெரித்துக் கொல்லும் பழக்கமும் காணப்பட்டது. வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழங்குடியினர் உணவு சேகரிக்கும் பொருட்டுப் பல்வேறு இடங்களுக்குச் செல்பவர்களாக உள்ளமையால், அவர்களின் குடும்பங்கள் வெவ்வேறு இடத்தில் பிரிந்து விடுகின்றன. இதனால் முதியோரும் குழந்தைகளும் தனியாக இருக்க நேரிடுகிறது. அந்நிலையில் குழந்தைகளுக்கு உணவு ஏதும் கிடைக்காத போது, அவற்றின் காப்பாளரோ பெற்றோரோ குழந்தையைக் கொலை செய்தனர். கணவன் மனைவி சண்டை, தகாப்புணர்ச்சியின் விளைவால் எழும் சண்டை முதலானவற்றின் போது குழந்தைகளைக் கொல்வது கள்ளர் (Kallars) பழங்குடியினரின் வழக்கமாக இருந்தது. தம் எதிராளியை இங்ஙனம் குழந்தைக் கொலையினைச் செய்யத் தூண்டுவதற்காகவும் இம்முறை அவர்களிடையே மேற்கொள்ளப்பட்டது.

கோலரிப் (Colleries) பெண்களிடையே சண்டை அல்லது கருத்து வேறுபாடு ஏற்படும்போது, வலுச் சண்டைக்கு வந்தவரைப் பழிவாங்கும் வகையில் தங்கள் சொந்தக் குழந்தையை வலுச் சண்டைக்கு வந்தவரின் வீட்டு வாயிலில் வைத்துக் கொல்லும் வழக்கமிருந்தது என்னும் குறிப்பு மதுரை மாவட்டக் கையேட்டில் காணப்படுகிறது. இங்ஙனம் தன் குழந்தையைக் கொன்ற பின், அப்பெண் தன் பொருள்களுடன் அருகிலிருக்கும் கிராமத்திற்குச் செல்ல முற்படுகிறாள். அவள் செல்வதை அண்டைப் பகுதியில் வாழ்பவர்கள் தடுக்க முற்படும் போது சண்டை அல்லது குழப்பம் ஏற்படுகிறது. இதன் விளைவு கிராமப் பெரியவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. விசாரணையின்போது குழந்தை கொலையாவதற்குக் காரணமாக இருந்த பெண்ணின் கணவன், அவையினர் அறியா வகையில் தன் இல்லத்திற்குச் சென்று, தன் குழந்தைகளுள் ஒன்றைக் கொணர்ந்து, அவையினர்முன்பு அக்குழந்தையைக் கொல்கிறான். இச்செயலால் அவர்களால் ஏற்பட்ட குழந்தைக் கொலைப்பழி தீர்க்கப்பட்டது என்று பஞ்சாயத்துத் தலைவரால் அறிவிக்கப்படுகிறது. இங்ஙனம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாங்களாகவே குழந்தையைக் கொல்லவில்லையெனில், அங்ஙனம் செய்ய அவர்களுக்கு 15 நாள்கள் கெடு அளிக்கப்படுகிறது. அவ்வமயம் அவையில் உள்ளோருக்கான உணவுக்கு ஆகும் செலவுகளைக் குற்றம் சாட்டப்பட்டவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் மரபிருந்தது. இச்செலவுகளைத் தவிர்ப்பதற்காகக் குற்றம் சாட்டப்பட்டவர்களே முன்வந்து குழந்தைக் கொலையினை மேற்கொண்டனர்.

பெண்குழந்தைக் கொலை செய்ப்பூரில் அதிக அளவில் காணப்பட்டது என்பார் தர்சுட்டன் (Thur-

ston). குழந்தைக் கொலையினால் செய்ப்பூர் அரசர் பெருமளவில் வருவாய் கிடைக்கப் பெற்றார் எனவும் இவர் கூறியுள்ளார். பெண்குழந்தை பிறந்ததும் தாசரி (Dasari) அக்குழந்தையைக் கொல்லவேண்டும் என்றவுடன், குழந்தையின் பெற்றோர் வட்ட அமீனி டம் (Taluk Amin) குழந்தையைக் கொல்வதற்கான உரிமை பெறக்குறிப்பிட்ட தொகையினைச் செலுத் தினர். ஒவ்வோர் ஆண்டும் குழந்தையைக் கொல்லும் உரிமை பெறுவதற்காக உரூ. 300/- அமீனால் அரச ருக்குச் செலுத்தப்பட்டுள்ளது என்று தர்சுட்டன் குறிப்பிட்டுள்ளார்.

ஒரிசாவில், கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த கந் தர் (Khond) பழங்குடியினரிடையே பெண் குழந்தை யைக் கொலை செய்யும் பழக்கம் இருந்தது. அதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஒரு காலத்தில் ஒரு பெண் முழு உலகையும் ஆட்டிப்படைத்ததைப் பழிவாங்கும் நோக்கத்தாலும், பெண்கள் மிகத் தொல்லை கொடுப்பவர்களாதலால் அவர்கள் உல கில் இல்லாதிருத்தல் நலமென்று கருதியதாலும், பெண்களுக்கு மணம் புரிய அதிக அளவில் பணம் அளிக்க வேண்டியுள்ளதாலும், பெண்குழந்தைக் கொலைவழி ஆண்களின் எண்ணிக்கையை மிகுதி யாக்கலாம் என்று எண்ணியதாலும் பெண் குழந்தை கள் கொல்லப்பட்டன.

கோண்டு (Gond) பழங்குடியினரிடையே சமய நம்பிக்கைகளுக்காகவும் குழந்தைக் கொலை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவர்களின் நம்பிக்கையின் படி, சூரியக் கடவுள் நல்லவற்றையும் பூமிக்கடவுள் தீயவற்றையும் படைத்தனர். சமுதாயத்திற்குத் தீங்கு விளையாமல் இருப்பதற்குப் பெண் குழந்தைகள் பிறப்பு குறைக்கப்பட வேண்டும் என்பது சூரியக் கட வுளின் கருத்து என்று இம்மக்கள் கருதியமையால், இவர்களிடையே பெண்குழந்தைக் கொலை நடை பெற்றது எனவும் கூறப்படுகிறது. மேலும், இறந்த வர்களின் ஆவி தாங்கள் முதலில் பிறந்த குடும்பத்தி லேயே மீண்டும் பிறக்கும் என்னும் கருத்தும் இவர் களிடையே நிலவியது. இருப்பினும், குழந்தை பெற்ற ஏழாம்நாள் செய்யப்படும் சடங்குவழி மட்டுமே இறந் தோரின் ஆவி மீண்டும் அக்குடும்பத்தின் ஓர் உறுப் பினராக ஏற்றுக் கொள்ளப்படும் என்பது இவர்கள் நம்பிக்கை. எனவே, பெண் குழந்தை பிறந்து ஏழு நாட்கள் ஆவதற்கு முன்னரே அது கொல்லப்படுவ தால், குடும்பத்தில் மேலும் பெண் குழந்தை பிறக்கா மல் தடுக்கப்படுவதாக நினைக்கின்றனர். கோண்டு பழங்குடியினர் ஒவ்வொருவரும் தங்களுக்கு ஆண் குழந்தையே இருக்க வேண்டும் என்று விரும்புவதால், அவர்களிடையே பெண் குழந்தைக் கொலை நடை பெற்றது.

இலம்பாடிகள் எவ்வித பயணத்தை மேற்கொண் டாலும் அதற்கு முன்னர்ச் சிறு குழந்தையொன்றை நிலத்தில் கழுத்துவரை புதைத்து, பாரமுடைய மாட்டு வண்டியை அதன்மீது ஏற்றிக் கொன்றனர். இச் செயலால் அவர்கள் பயணம் வெற்றிகரமாக அமையும் எனக் கருதியதால் குழந்தைக் கொலையை மேற்கொண்டனர்.

தோடர்களிடையே காணப்பட்ட பெண் குழந் தைக் கொலைக்கு அவர்களின் வறுமைநிலையே காரணமாகும். அவர்கள் நோய்வாய்ப்பட்ட அல்லது உடல் ஊனமுற்ற குழந்தைகளைக் கொல்வதைப் பாவச் செயலாகக் கருதுகின்றனர். ஒரு குடும்பத்தில் ஒன்று அல்லது இரு பெண்குழந்தைகளுக்கு மேலிருந் தால், அவற்றிற்குப்பின் பிறக்கும் பெண் குழந்தை கள் கொல்லப்படுகின்றன. பெண் குழந்தை பிறந்த வுடன் கேலாச்சி (Kelachi) என்று அழைக்கப்படும் வயதான பெண்மணி ஒரு துணியைக் கொண்டு பிறந்த குழந்தையின் மூக்கு, காது, வாய் ஆகிய வற்றை இறுக்கி, மூச்சுத்திணறச் செய்து கொல்கிறாள். இச்செயலுக்காக அப்பெண்மணிக்கு நான்கு அணா பரிசாக அளிக்கப்படுகிறது. இச்சமுதாயத்தினரிடையே பெண் குழந்தைக் கொலை பண்டைக் காலந் தொட்டே நடைபெற்று வந்துள்ளது.

ஒரு சில நிகழ்ச்சிகளைத் தவிர்த்து இப்போது இந்தியாவின் அனைத்துப் பழங்குடியினரும் குழந்தைத் கொலையைக் கைவிட்டு விட்டனர். இதற்குக் கார ணம் ஆங்கிலேயர்கள் குழந்தைக் கொலையைக் தடுத்துச் சட்டம் இயற்றிக் கடுமையாகச் செயற்படுத் தியதேயாகும். இக்காலச் சமுதாயங்களில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்குக் கருத்தடை, கருச்சிதைவு முதலானவை எளிமையாகக் கையாளப் படுகின்றன. ம.ந.பு.

## குழந்தைகள் சத்துணவுத் திட்டம்:

வளர்ந்து வரும் நாடுகளில் சத்துணவின்மை மிகப் பரவலாக நிலவுகிறது. இந்தியாவில் சத்துணவின்மை மிக அதிகமான அளவில் நிலவுகிறது. ஐந்து வயதுக் குட்பட்ட குழந்தைகளில் ஏறத்தாழ 95 விழுக்காடு குழந்தைகளுக்குச் சத்துணவு கிடைப்பதில்லை.

இந்தச் சத்துணவின்மை குழந்தைகளின் உடல் நலனுக்கும் மன நலனுக்கும் ஊறுவிளைவிக்கிறது. அவர்களுடைய ஆயுளைக் குறைத்து இறப்புக்கு வழி கோலுகிறது. ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நிதியம் (United Nation's Children's Fund) செய்துள்ள

மதிப்பீட்டின்படி, இந்தியாவில் ஆண்டுதோறும் ஐந்து வயதுக்குட்பட்ட, ஒன்றரை இலட்சம் குழந்தைகள் சத்துணவின்மை காரணமாக இறக்கிறார்கள்.

சத்துணவின்மை இரண்டு வழிகளில் குழந்தைகளின் நலத்திற்குக்கேடு செய்கிறது. சத்துணவின்மை காரணமாக 'குவாசியார்கார்' (Kwashiorkor), உடல் கரைவு (Marasurus), குரல்வளைச் சுரப்பி வீக்கம் (Goitre), வீக்கநோய் (Beriberi) குழந்தைக் கணை (Rickets) முதலிய நோய்கள் வருகின்றன. மேலும் வாந்திபேதி (Diarrhoea), தொற்று நீர்க்கோவை (Epidemic Dro sy), சீழ்ப் புண் (Ulcer), சிறுநீரகத்தில் கற்கள் உருவாகும் நோய் (Urinery lithiasis) நீரிழிவு, சொறி சிரங்கு, பிற தோல் நோய்கள், கண் பார்வைக் குறைவு,கண் நோய்கள் முதலியன ஏற்படவும் இது காரணமாக அமைகிறது. இந்நோய்களில் குறிப்பாக வாந்திபேதி குழந்தைகளின் இறப்புக்கு நேரிடையாக வழிவகுத்து அவர்களைச் சாவுக்குழியில் தள்ளுகிறது. சத்துணவின்மை மறைமுகமாகவும் உடல்நலத்தைக் கெடுக்கிறது. குழந்தைகளின் உடல் வலிமையையும், அவர்களுடைய நோய் எதிர்ப்பாற்றலையும் குறைத்து அவர்களின் உடல் நலம் கெட வழி வகுக்கிறது.

இவ்வாறு குழந்தைகளின் உடல்நலக் குறைவுக்ும், இறப்புக்கும் காரணமாக அமைகிற சத்துணவின்மை நிலையை அகற்றப் பல திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளன. வளர்ந்து வரும் நாடுகளில் சத்துணவின்மை பெரும் சிக்கலாக அமைந்திருக்கிறது. இதைச் சமாளிக்க அந்த நாடுகளில் ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நிதியம்,குழந்தைகளின் சத்துணவின்மை நிலையைப் போக்கவும் அவர்களுக்குப் பால், ரொட்டி முதலிய உணவுப்பொருள்கள் அடங்கிய சத்துணவு அளிக்கவும் நிதியுதவியும், அறிவுரையும் வழங்கி வருகிறது.

**தேசிய அளவிலான திட்டம்**: இந்தியாவில் சத்துணவின்மைக்கு எதிராகத் தேசிய அளவிலும், மாநிலங்கள் அளவிலும் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கியின் உதவியுடன் ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் நாடு முழுவதும் நடுவண அரசினால் 1980 மே மாதத்திலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், 6 மாதம் முதல் 36 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்குச் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டப் பணிகள் 'பால்வாடி' என்ற சமுதாயச் சத்துணவு மையங்களின் மூலம் நடைபெறுகின்றன. இப்பொழுது (1987) நாடெங்கும் 9,000 மையங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மையமும் ஒரு சமுதாயச் சத்துணவுப் பணியாளரின் பொறுப்பிலுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 6 மாதம் முதல் 36 மாதம் வரையுள்ள குழந்தைகள் எடைபார்க்கப்பட்டு, ஊட்டச்சத்துக் குறைவாக உள்ள குழந்தைகள் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பால், சத்து நிரம்பிய ரொட்டி முதலியன அளிக்கப்படுகின்றன. மேலும் வேர்க்கடலை, கோதுமை, கேழ்வரகு, வெல்லம், பொரிகடலை ஆகியவற்றால் செய்த சத்து நிரம்பிய 'லட்டு' கொடுக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை வைட்டமின் 'ஏ'-யும், நான்கு மாதத்திற்கொருமுறை வயிற்றுப் பூச்சி நீக்கும் மருந்தும் தரப்படுகின்றன. குழந்தைகளை நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு உரிய சிகிச்சை பல்நோக்கு நலவாழ்வுத்துறைப் பணியாளர்களால் தரப்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சி, ஒரு சுகாதார அட்டைமூலம் கண்காணிக்கப்படுகிறது. இத்திட்டம் பள்ளி செல்லும் வயது அடையாத (5 வயதுக்குட்பட்ட) குழந்தைகளுக்கும் விரிவு படுத்தப்படஉள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சூலுற்ற மகளிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும்கூடச் சத்துணவு (பால், ரொட்டி முதலியன) வழங்கப்படுகிறது. தாயின் ஊட்டச்சத்தைப் பொறுத்தே குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையும் அமைவதால் இத்திட்டம் தாய்மார்களையும் கவனிக்கிறது.

**மாநிலங்கள் அளவிலான திட்டங்கள்**: மாநிலங்களும் தத்தம் பங்குக்குக் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றன. குசராத் மாநிலத்தில் 1984 நவம்பர் 19-ஆம் தேதியிலிருந்து தொடக்கநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவாகச் சத்துணவு வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 30 இலட்சம் குழந்தைகள் இத்திட்டத்தின்மூலம் இலவசமாகச் சத்துணவு பெறுகிறார்கள். இதற்காக மத்திய அரசு ஆண்டுதோறும் சுமார் 43 கோடி உரூபாய் செலவிடுகிறது. பீகாரிலும் இத்தகைய திட்டம் 1984 நவம்பர் 14-ஆம் தேதியிலிருந்து நடைமுறையில் இருந்துவருகிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் தொடக்கநிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவாகச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 37 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டத்தில் சில காலம் குழந்தைகளுக்கு முட்டையும், பாலும் வழங்கப்பட்டு வந்தன. இதனால்

திட்டத்தின் செலவினம் அதிகரித்ததால்இப்பொழுது மாநில அரசு இவ்விரண்டு பொருள்களையும் அளிப்பதை விட்டுவிட்டு, அரிசிச் சோறும் காய்கறிகளும் அடங்கிய உணவை மட்டும் அளித்து வருகிறது.

கேரளாவில் தொடக்கநிலைப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு மதிய உணவுத்திட்டம் என்ற திட்டத்தின் கீழ்ச் சத்துணவு வழங்கப்படுகிறது.

**தமிழ்நாட்டுத் திட்டம்**: தமிழ்நாட்டிலும் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் செயற்பட்டு வருகிறது. மற்றெல்லா மாநிலங்களையும்விடத் தமிழ்நாட்டில்தான் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் சிறப்பாகவும் முனைப்பாகவும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி, ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நிதியம் முதலிய அனைத்துலக அமைப்புகள் இத்திட்டத்தைப் பாராட்டிப் புகழ்மாலை சூட்டி இருக்கின்றன.

காமராசர் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் இருந்த காலத்தில் மதிய உணவுத்திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டு, அதன் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இது 1952-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் இது மக்கள் திட்டமாகச் செயற்பட்டது. முழுக்க முழுக்க ஊரிலுள்ளவர்களே வசூல் செய்து பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளித்தார்கள். தொடக்கத்தில் 4,400 தொடக்கப் பள்ளிகளில் 1,20,000 மாணவர்களுக்கு ஊரிலுள்ளோர் உணவு அளித்தார்கள். பிறகு அரசே இத்திட்டத்தை மேற்கொண்டது. ஒரு குழந்தைக்கு 15 பைசா என்ற கணக்கில் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.



குழந்தைகள் சத்துணவு மையம்

இந்த மதிய உணவுத் திட்டத்தின் விரிவாக்கமாக 1982 சூலை மாதம் 1-ஆம் தேதியிலிருந்து எம்.ஜி.ஆர். அரசு 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்' என்றொரு திட்டத்தைக் கொண்டு வந்தது. 1986-இல் இத்திட்டத்தின் பெயர் 'முதலமைச்சர் கல்வி சத்துணவுத் திட்டம்' என்று மாற்றம் செய்யப்பட்டது.

இத்திட்டம் முதலில் (1982) கிராமப்புறங்களில் தொடங்கப்பட்டது. பிறகு 1982 செப்டம்பர் 15-ஆம் தேதியிலிருந்து நகர்ப்புறங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டம் மூன்று கட்டங்களில் குழந்தைகளுக்காகச் செயற்படுத்தப்படுகிறது. முதல் கட்டத்தில் இரண்டு வயதிலிருந்து ஐந்து வயதுக்குட்பட்ட, பள்ளி செல்லும் வயது அடையாத குழந்தைகளுக்குச் சத்துணவு தரப்படுகிறது. அத்துடன் அவர்களுக்கு மருத்துவ உதவியும் தரப்படுகிறது. கிராமப் புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அதிகாரிகளும், நகர்ப்புறங்களில் நகராட்சிச் சுகாதார அதிகாரிகளும் இந்தக் குழந்தைகளின் உடல்நலத்தைக் கவனித்து வேண்டிய மருத்துவ உதவிகளைச் செய்கிறார்கள். சத்துணவு, மருத்துவ வசதி மட்டுமன்றி மழலையர் கல்வி வசதியும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

இரண்டிலிருந்து ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு குழந்தைநல மையங்கள் மூலம் தரப்படுகிறது. இப்பொழுது (1987) கிராமப் புறங்களில் மாநிலச் சமூகநலத் துறையின் 23,040 குழந்தை நல மையங்களும் நகர்ப்புறங்களில் 5,500 மையங்களும், ஒருங்கிணைந்த குழந்தை நல மேம்பாட்டுத் திட்டத்தின் மையங்களும் (பால்வாடிகள்) இத்திட்டத்திற்கெனச் செயற்பட்டு இளங் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கின்றன. ஒவ்வொரு மையமும் ஒரு பெண் அமைப்பாளரின் பொறுப்பில் செயற்படுகிறது. அமைப்பாளருக்கு உதவிட ஒவ்வொரு மையத்திலும் இரண்டு பெண் உதவியாளர்கள் (ஒருவர் சமையற்காரர், மற்றொருவர் ஆயா) உள்ளனர். இப்பணிகளுக்குப் பெரும்பாலும் கைம்பெண்களும் ஆதரவற்றவர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

இரண்டாம் கட்டத்தில் ஆறு முதல் பத்து வயதுக்குட்பட்ட பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு

அந்தந்தப் பள்ளிகளைச் சேர்ந்த சத்துணவு மையங்களின் மூலம் சத்துணவு தரப்படுகிறது. இந்தச் சத்துணவு மையங்கள் சமூகநலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இவை பெண் பணியாளர்களின் பொறுப்பில் செயற்படுகின்றன.

மூன்றாம் கட்டத்தில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவு தரப்படுகிறது. இந்தத் திட்டம் 1982-இல் தொடக்கப்பட்டபோது, இந்தத் திட்டத்தின்கீழ் இரண்டு வயதிலிருந்து பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் சத்துணவு தரப்பட்டது. 1984 செப்டம்பர் 15-ஆம் தேதியிலிருந்து உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ்ச்சத்துணவு தரும் ஏற்பாடு செய்யப்பட்டது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அவர்களுடைய பள்ளிகளைச் சேர்ந்த சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் இப்பொழுது (1987) இரண்டிலிருந்து ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் 2 இலட்சமும், ஆறு வயது முதல் பத்து வயது வரையுள்ள பள்ளி செல்லும் குழந்தைகள் 46 இலட்சமும், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 16 இலட்சமும் ஆக மொத்தம் 84 இலட்சம் குழந்தைகள் சத்துணவு பெற்றுப் பயன் அடைந்து வருகின்றனர். இவர்களுக்குச் சேவை செய்திட மொத்தம் 65,000 சத்துணவு மையங்கள் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் செயற்பட்டு வருகின்றன.

இத்திட்டம் தொடங்கப்பட்டபோது சத்துணவு ஓராண்டில் இருநூறு நாள்களுக்கு மட்டுமே குழந்தைகளுக்குத் தரப்பட்டது. பிறகு ஆண்டின் 365 நாள்களிலும் சத்துணவு வழங்கும் ஏற்பாடுநடைமுறைக்கு வந்து இப்பொழுது நாள்தோறும் மதிய வேளையில் குழந்தைகளுக்குச் சத்துணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும் தரப்படும் சத்துணவில் 80 கிராம் அரிசிச் சோறும், 10 கிராம் பருப்பும், 50 கிராம் காய்கறிகளும், மசாலைப் பொருள்களும், 5 கிராம் எண்ணெயும் அடங்கியிருக்கின்றன. இந்த அளவு உணவின் அடக்கச்செலவு 44 காசு.

இந்தச் சத்துணவின்மூலம் ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 411 கலோரி சக்தி கிடைக்கிறது என்று ஊட்டச்சத்து வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள். இத்திட்டத்தின்மூலம் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் சத்துணவு எந்த அளவில் அவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்கி, அவர்களின் ஊட்டச்சத்து நிலை உயர்ந்திட உதவுகிறது என்பதைக் கோயமுத்தூர் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியின் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. சத்துணவு உண்ணும் குழந்தைகளின் எடை இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் பெண்களைப் பொறுத்த அளவில் 1.50 கிலோவிலிருந்து 2.63 கிலோ வரையும், ஆண்களைப் பொறுத்த வரையில் 1.54 கிலோவிலிருந்து 2.75 கிலோ வரையும் கூடியுள்ளதென்பதை அந்த ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன. இந்த எடைக்கூடுதல் இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் (Indian Council of Medical Research) நிருணயித்துள்ள தரங்களைவிட அதிகமாகவே இருக்கிறதென்பதை ஆய்வுகள் நடத்திய கோயமுத்தூர் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி கூறுகிறது. எடை மட்டுமன்றி, உயரமும் சத்துணவினால் அதிகரித்துள்ளதென்பதை அந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அரசும் தன் பங்குக்கெனச் சத்துணவின் விளைவு பற்றி ஓர் ஆய்வு நடத்தியது. இத்திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் 1982-இல் ஆயிரம் குழந்தைகளுள் 120 குழந்தைகளுக்குச் சொறி சிரங்கு, வீக்க நோய் போன்ற வைட்டமின் 'பி' சத்துக் குறைவினால் ஏற்படும் நோய்கள் இருந்தன. திட்டம் தொடங்கிய மறு ஆண்டில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் மேற்கண்ட நோய்கள் ஆயிரம் குழந்தைகளில் 12 குழந்தைகளுக்கு மட்டுமே இருந்தமைகண்டறியப்பட்டது.

ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகள் பெரும்பாலும் குறைந்த வருவாய்க் குடும்பங்களைச் சேர்ந்திருந்தனர். மேலும், அக்குழந்தைகளில் பெரும்பான்மையானவர்களுக்கு இத்திட்டத்தில் கிடைக்கும் மதிய உணவுதான் முழு உணவாக அமைந்திருந்தது.

தமிழ் நாடு அரசு இத்திட்டத்திற்கு முதன்மையளித்து இதைச் செயற்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டதிற்கென அரசு ஒதுக்கிடும் நிதியளவைக் கொண்டு இதற்கு அளிக்கப்படும் சிறப்பை அறியலாம். திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் 1982-இல் அரசு இத்திட்டத்திற்கு 120 கோடிஉரூபாய் ஒதுக்கீடு செய்து செலவிட்டது. இந்தச் செலவினம் இப்போது 200கோடி உரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இத்திட்டத்தின் செயற்பாட்டைக் கண்காணிக்க அரசு மாநில அளவில் ஓர் உயர்மட்டக் குழுவையும், மாவட்டங்கள் அளவில் மாவட்டக் குழுக்களையும் நியமித்துள்ளது. இக்குழுக்கள் திட்டத்தின் செயற்பாட்டை நெறிப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்றன.

இந்தத் திட்டம் பொதுவாக எல்லாக் குழந்தைகளுக்கும் பயனளிக்கிறது என்றாலும் குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் குழந்தைகளுக்கு இது பெரும் பயனைத் தருகிறது. ஒரு வேளை கூட முழு உணவு பெற இயலாத குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளே இத்திட்டத்தினால் பெரிதும் பயனடைகிறார்கள் என்பதும், ஊட்டச்சத்து பெறுகிறார்கள் என்பதும் இத்திட்டத்தின் சமூக, பொருளாதாரச் சிறப்பை உணர்த்தும். தமிழ்நாடு அரசு இத்திட்டத்தின் இன்றியமையாமையை நடுவண் அரசுக்கு உணர்த்தி இதைப் பிரதமரின் இருபது அமிசத் திட்டத்தில் சேர்க்கச் சொல்லி வலியுறுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் ஆகியவற்றுடன் இணைத்துக் குழந்தைகளின் உடல்நல மேம்பாட்டிற்கு ஒரு முழுமையான ஒருங்கிணைந்த திட்டத்தைச் செயற்படுத்த எண்ணியுள்ளது. இதற்காக ஆண்டுதோறும் 400கோடி உருபாய் தேவைப்படும் என்பதை மதிப்பிட்டு, உலக வங்கியின் நிதியுதவியைக் கோர முடிவெடுத்துள்ளது.

**துணை நூல்:**

தமிழ்நாடு மாநில ஆட்சி அறிக்கை, 1984-85.

சி.என்.ந.

**குழந்தைகள் பூங்காப் பள்ளி**: செருமனி நாட்டைச் சேர்ந்த புரோபல் (Froebel) இளம்சிறார்களுக்கு அளித்த பரிசுதான் குழந்தைப் பூங்காப் பள்ளி (Kindergarten School).

புரோபலின் கல்வித் தத்துவம் ஒருமை விதியினை அடிப்படையாகக் கொண்டது. அனைத்து உயிர்களும் இறைவனிடமிருந்தே தோற்றுவிக்கப்படுகின்றன இறைவன் என்னும் ஒருமையிலிருந்து பிரிந்த இரு மாறுபாடுகளே மனிதனும் இயற்கையும். ஆகவே மக்களைச் சுற்றியுள்ள அனைத்துப் பொருள்களும் ஒன்றொடொன்றுதொடர்புடையனவே. கதிரவனின் கதிர்களில் பல்வேறு வண்ணங்கள் உண்டெனினும் அவை ஒன்றாகத் தோன்றுவது போன்று, மாறுபாடுள்ள பொருள்களில் ஒருமையையும். ஒருமையில் மாறுபாடுகளையும் காண்பதே இந்த ஒருமைவிதித் தத்துவமாகும்.

புரோபல் வாழ்க்கையை, மனித வளர்ச்சியை, ஒரு தொடர் பரிணாம முன்னேற்றமாகக் கருதுகிறார். உள்ளார்ந்த செயல்திறனால் மட்டுமே உண்மையான வளர்ச்சி ஏற்படும். குழந்தைகளுக்குத் தாங்களாகவே கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்படும்போது அவர்கள் தம் எண்ணங்களை திறந்த மனத்தோடு செயலாக்குகின்றனர். உள்ளார்ந்த செயலால் மட்டுமே சிறு குழந்தைகள் அவர்களது இயற்கைத் தத்துவத்தை உணர்ந்து தனித் தன்மையை வளர்த்துக் கொள்ள இயலும்.

புரோபல் தம் கல்விக் கோட்பாட்டில் சமூகத் தொடர்பினை அதிகமாக வலியுறுத்துகிறார், சமூக இயல்பினைப் பெற்ற குழந்தையே தனது உள்ளார்ந்த செயல் திறன், தற்பொருள் விளக்க ஆற்றல், அக உணர்வு, ஆக்க உணர்வு, தனித்தன்மை ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள இயலும். குழந்தை சமுதாயத்தோடு ஒன்றி வாழும் போதுதான் முறையான, உண்மையான கல்வியைக் கற்க இயலும். குடும்பம், பள்ளி, கோயில்,சமுதாயம் ஆகிய சமூக நிறுவனங்கள் குழந்தைகளின் தனித்தன்மை வளர்ச்சியுறப் பெரிதும் உதவுகின்றன என்பது அவரது கருத்து.

மனித வளர்ச்சிப் பருவங்களாகிய குழவிப் பருவம் (Infancy), குழந்தைப் பருவம் (Childhood), இளமைப் பருவம் (Boyhood), குமரப்பருவம்(Adolescence) ஆகியவற்றின் அடிப்படையில் கல்வியும் வளர்ச்சி அடைகிறது. ஆகவே, மனித வளர்ச்சிப் பருவத்திற்கேற்ற கல்வியை அளிப்பதுதான் சிறந்தது. அப்போதுதான் குழந்தை தன் நிலையினை அறிந்து, தன்தனித்திறனுக்கேற்றவாறு செயற்பட இயலும்; அதன் வளர்ச்சியும் முழுமை பெறும் என்பது புரோபலின் கல்வித் தத்துவமாகும்.

புரோபல் தாம் அளித்த கல்விக் கோட்பாடுகளின்படி 1837-ஆம் ஆண்டு செருமனியில் பிளாங்கின்பர்கு என்ற இடத்தில் ஏற்படுத்திய சிறார்களுக்கான பள்ளியே குழந்தைப் பூங்காப் பள்ளி. ‘கிண்டர்கார்டன்’ (Kindergarten) என்ற செருமானியச் சொல்லுக்குக் ‘குழந்தைகளின் பூங்கா’ என்பது பொருள். ஆசிரியரை ஒரு தோட்டக்காரருக்கும், குழந்தைகளை இளம் நாற்றுகளுக்கும் ஒப்பிட்டுக் கூறுகிறார் புரோபல். தோட்டக்காரரைப்போல் தம்மிடம் தரப்பட்டுள்ள இளம் பயிர்களாகிய சிறார்களைக் கண்ணும் கருத்துமாக நாற்றங்காலாகிய குழந்தைப் பூங்காவில் காத்து, அதன் வளர்ச்சிக்கு உதவிட வேண்டும். இளம் பயிர் இயற்கையாகவே வளரும் தன்மை பெற்றிருத்தல் போன்றே குழந்தைகளும் இயற்கையாக வளரும் தன்மை பெற்றுள்ளனர். ஆகவேதான் புரோபல் குழந்தைகளை இளம் பயிர்களுக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

**விளையாட்டின் முக்கியத்துவம்**: ஒரு முழுமையான கல்விப் பயிற்சியினைக் குழந்தைகள் பெறுவ

தற்கு விளையாட்டு உறுதுணையாக உள்ளது. புரோபல் விளையாட்டின் தன்மையைக் கீழ்க்காணுமாறு விளக்குகிறார். 'விளையாட்டு என்பது குழந்தைப் பருவத்தில் மனிதன் செயற்படுத்தக்கூடிய ஒரு தூய்மை நிறைந்த ஆன்மிகச் செயலாகும். மனிதனுக்கே உரித்தான உள்மனத்தில் மறைந்து கிடக்கும் இயற்கை வாழ்வின் முழுமைத் தத்துவமாகவும் விளையாட்டு திகழ்கிறது. ஆகையால் அது மகிழ்ச்சி, சுதந்திரம், மனநிறைவு,அகப்புற அமைதி, உலகத்தோடு சமாதானம் ஆகியவற்றைக் கொடுக்கிறது. விளையாட்டினால் குழந்தையின் அறிவு மட்டுமல்லாது உடல் வளர்ச்சியும் தூண்டப்படுகிறது. விளையாட்டின் வழியே குழந்தை இவ்வுலகினை அறிகிறது. குழந்தையின் அறிவாற்றலையும் ஆக்க உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு விளையாட்டு பேருதவியாக இருக்கிறது. குழந்தையின் ஆற்றலை வெளிக்கொணர்வதுதான் புரோபல் கல்வி முறையில் ஒரு முக்கியமான கூறாகும்.

**விளையாட்டுக் கருவிகளும், பொருள்களும்**: புரோபலின் குழந்தைப் பூங்காப் பள்ளி மூன்று முறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது.

1. புரோபல் கண்டுபிடித்த விளையாட்டுக் கருவிகளைப் பயன்படுத்துதல்.
2. அவர் பாடல்களைப் பாடுதல்.
3. பல்வேறு கல்விப் பயனுள்ள விளையாட்டுகளை விளையாடுதல்.

புரோபலின் விளையாட்டுக் கருவிகள் மிக நுணுக்கமாகக் குழந்தைகளின் கற்பனையையும் ஆக்கத்திறனையும் ஊக்குவிக்கும் வகையில் வரையறுக்கப்பட்டவையாகும். மிக எளிதான செயல்களிலிருந்து கடினமான செயல்களுக்குக் குழந்தைகளை மெதுவாக, அவர்களின் ஆற்றலுக்கேற்றவாறு இட்டுச் செல்ல உதவுபவை அவை. காகிதம், அட்டை, மணல், களிமண், மரத்தூள் போன்றபொருள்களும் குழந்தைகள் விளையாடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. விளையாடும்பொழுது அவை குழந்தைகளின் ஆக்கத்திறனும்மனவெழுச்சிகளும் வெளிப்படப் பேருதவியாய் உள்ளன என்பது அவர் கருத்து.

**பரிசுகள்**: புரோபல், குழந்தைகள் விளையாட்டின் வழியே வளர்ச்சியடைய வேண்டும் என்னும் நோக்கோடு அவர்களுக்கு ஏழு வகையான பரிசுகளை அளித்துள்ளார் அவற்றை வைத்து விளையாடுவதையும் மற்றச் செயல்களில் ஈடுபடுவதையும் 'தொழில்கள்' (Occupations) என்று கூறுகிறார்.அவரது முதல் பரிசு உலகில் உள்ள எல்லாக் குழந்தைகளும் இயல்பாக எவ்வித வேறுபாடுமின்றி விளையாடக் கூடிய பந்தாகும்.பந்து, உலகின் ஒருமையைக் காட்டுவதோடு அண்டத்திலுள்ள எல்லாப் பொருள்களின் தன்மையாகவும் உருவமாகவும் உள்ளது. அவர் பயன்படுத்திய பந்து, கட்டை, துணி, இரும்பு, கம்பளி ஆகிய பொருள்களால் ஆனது. இவ்வகைப் பந்துகளைப் பயன்படுத்தி விளையாடும் குழந்தைகள் திசை, பொருளின் தன்மை, தூரம், காலம் போன்றவைகளையும் கற்றுக் கொள்கிறார்கள்.

இரண்டாம் பரிசு பந்து, கனசதுரம் (Cubes), உருளைகள் (Cylinders) போன்ற பல்வேறு உருவ அமைப்புள்ள அடுக்குக் கட்டைகள் (Blocks) அடங்கியவை. இப்பொருள்களனைத்தையும் சில குறிப்பிட்ட முறைகளில் பயன்படுத்தும்போது பல்வேறு உருவ அமைப்புகளையும், வெளிப்புற அமைவுகள், தன்மைகள் ஆகியவற்றையும் அறிய முடிகிறது. மேலும் இப்பொருள்களைக் கொண்டு விளையாடும்போது தோன்றும் பகுத்தாயும் பண்புகள், குழந்தைகளின் கற்பனையும் ஆக்க உணர்வும் வளர வழிவகுக்கின்றன.

மூன்றாம் பரிசும், மற்ற நான்கு பரிசுகளும் கனசதுரத்தின் பல்வேறு பகுப்புகளாகும். இவை அனைத்தையும் வைத்து விளையாடும்போது உலகின் பல்வேறு நிலைகளையும் தன்மையையும் குழந்தைகள் அறிய இயலுமென்று புரோபல் கருதினார்.

முதல் பாடம் எட்டு அடுக்குக் கட்டைகளைக் கொண்டு தொடங்கும். குழந்தைகள் இவற்றை ஓர் உருவமாகவும், நான்கு சரிவிகிதப் பிரிவுகளாகவும், தங்கள் மனநிலை, திறமைக்கேற்ப அழகிய அமைப்புகளாகவும் உருவாக்க அறிவுறுத்தப் படுகின்றனர். அதனால், வாழ்க்கை, அறிவுத்திறம், அழகுணர்ச்சி ஆகியன வளர்ச்சியடைய வாய்ப்பளிக்கப்படுகிறது. அதனோடு குழந்தைகளின் இயக்க வளர்ச்சியினையும் தூண்டக் கூடியதாக அமைகின்றது.

**கற்பிக்கும் முறை**: தானாக, சுதந்திரமாகச் செய்யும் செயல்களினால் குழந்தைகள் எளிதாகவும் விரைவாகவும் கற்றுக் கொள்கிறார்கள். உள்மனத்தில் உள்ளதை வெளிக்கொணரும் வகையிலேயே கல்வி முறை அமைந்திட வேண்டுமே ஒழிய கட்டாயமாக எதையும் புகுத்துதல் கூடாது. செயல்வழிக் கற்பதே உண்மையான, நிலையான கல்வியாகும். செயற்படும் திறனையும் கற்கும் ஆர்வத்தையும் வளர்த்தோமே

யானால், பிற்காலத்தில் கற்கும் திறனும் ஆர்வமும் தாமாகவே வளர்ச்சியடையும் என்பதுதான் புரோபலின் கொள்கை. ஆகவே, வண்ணம் தீட்டுதல், படம் வரைதல், பாசிமணி கோத்தல், காகிதம் வெட்டுதல், தையல், நெசவு ஆகிய செயல்களை மையமாகக் கொண்டும் குழந்தை உளவியலை அடிப்படையாகக் கொண்டும் அவரது கற்பிக்கும் முறை அமைந்தது.

**தாய்மார்களின் பாடல்கள்**: குழந்தைகள் எப்போதுமே ஓடியாடி மற்றவர்களோடு சேர்ந்து உற்சாகமாக விளையாடும் தன்மையுடையவர்கள். இந்த உண்மையைக் கண்டறிந்த புரோபல் அவரது குழந்தைப் பூங்காப் பள்ளியில் குழந்தைகளை வட்டமாக நிறுத்திப் பாடல்கள் பாடுவதை ஊக்குவித்தார். அந்தப் பாடல்கள் தாய்மார்கள் பாடக்கூடியதாக அமைந்ததன் காரணமாக அவற்றைத் 'தாய்மார்களின் பாடல்கள்' (Mothers' Songs) என்று கூறினார். தாய்மார்கள் பாடுவதையும் அவர் ஊக்குவித்தார்.

**கதை சொல்லுதல்**: குழந்தைப் பூங்காப் பள்ளியில் புராணக் கதைகள், கற்பனைக் கதைகள், வனதேவதை பற்றிய கதைகள், நீதிக் கதைகள் போன்று பல்வேறு வகையான கதைகளைச் சொல்லுவதை (Story Telling) புரோபலின் கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது. அவர் குழந்தைகளின் மனத்தில் எழக்கூடிய, கதைகள் கேட்கவேண்டுமென்ற ஆர்வத்தை மதித்துத் தம் பள்ளியில் அதற்குரிய இடத்தினை அளித்தார். கதைகளின் மூலமாகப் பண்டைக்காலப் பண்பாடுகளையும், வீர வரலாறுகளையும், குழந்தைகள் அறிந்து கொள்கிறார்கள். அவர்களின் கற்பனைத் திறன் வளர்வதற்கும் அவை பேருதவியாக அமைகின்றன. குளிப்பது உடலுக்குப் புத்துணர்ச்சி அளிப்பது போன்று, கதை கேட்பது உள்ளத்திற்குப் புத்துணர்ச்சி அளிக்கின்றது; அறிவாற்றல், சக்தி ஆகியவை வளர்வதற்கு உதவுவதோடு குழந்தைகளின் நியாய உணர்வுகளையும் வளர்க்கிறது. 'விளையாட்டு உடலுக்கு ஊக்கத்தை அளிப்பது போன்று கதை உள்ளத்திற்கு ஊக்கத்தை அளிக்கின்றது' என்பவை புரோபலின் நிலையான கருத்துகளாகும்.

புரோபலின் கல்விக் கொள்கைகளும் செயல்களும் இன்றைக்கும் பள்ளி முன்பருவக் கல்வியில் சில மாறுதலோடு பயன்படுத்தப்படுவதைக் காணலாம். இந்தியாவில் மட்டுமல்லாது வளர்ந்து வரும் மேலை நாடுகளிலும் புரோபல் குழந்தைப் பூங்காப் பள்ளிகள் அமைக்கப்பட்டுத் திறம்பட நடைபெறுகின்றன. ஆனால் அவர் அளித்த பரிசுகளையும், செயல்களையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமையாது இன்றைய நிலைமைக்கு ஏற்றவாறு சிறு மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. புரோபலின் கல்விக் கொள்கைகளும் பரிசுகளும், மாறுபட்டவையாக இருந்தாலுங்கூட, இப்போதும் சிறு குழந்தைகளைக் கவரக் கூடியதாகவும், செயல்களையும் உணர்வுகளையும் தூண்டக் கூடியதாகவும், மகிழ்விக்கக்கூடியதாகவும் உள்ளன.

ஞா.ப.

**துணை நூல்கள்**:


Pringle, M.K., and S. Naidoo, Early Child Care in Britain, Gordon and Breach, London, 1975.

Somerset, G., Parent Involvement in Early Childhood Education, Wellington Playcenbe Association, Wellington, 1976.


## குழந்தைத் திருமணம்

**குழந்தைத் திருமணம்**: தொழிற்சாலைகள் சட்டம், 1948 பதினான்கு வயதுக்கு உட்பட்டவர்களைக் குழந்தைகள் என்று கூறுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 24-ஆம் பிரிவும் 14 வயதுக்கு உட்பட்டவர்களைக் குழந்தைகள் என்றே கூறுகிறது. 14 வயதுக்கு உட்பட்டவர்கள் குழந்தைகளாகக் கருதப்படுவதால் அவர்களுக்கு நடக்கும் திருமணம் குழந்தைத் திருமணம் எனப்படுகிறது. 1929-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் ஆரம்பத்தில் 14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு நடைபெறும் திருமணத்தைக் குழந்தைத் திருமணம் என்று அறிவித்து, அத்தகைய திருமணங்களைத் தடை செய்தது.

குழந்தைத் திருமணம் சட்ட பூர்வமாகத் தடை செய்யப்பட்ட போதிலும் இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள் இன்றும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது 10-இலிருந்து 14 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளில் கிராமப் புறங்களில் 13.2 விழுக்காட்டினர் மணமானவர்களாகவும், 0.1 விழுக்காட்டினர் விதவைகளாகவும் இருந்தது கண்டறியப்பட்டது. தில்லியிலும், பீகாரிலும் 1971-ஆம் ஆண்டில் நடந்த சிற்றாள் பெண்கள் பற்றிய ஓர் ஆய்வில் அவர்களில் 43.3 விழுக்காட்டினர் 10 வயதுக்கு முன்னரும் 90 விழுக்காட்டினர் 15 வயதுக்கு முன்னரும் திருமணம் முடித்திருந்தனர் என்று கண்டறியப்பட்டது. சமூக மேம்பாட்டுக் கழகம் (Council of Social Development) என்ற அமைப்பைச் சேர்ந்த சுர்சீத் கவுர் என்பவர் அரியானாவிலும், தமிழ்நாட்டி

லும் 1972-ஆம் ஆண்டில் ஓர் ஆய்வு நடத்தினார் அதில் அரியானாவில் கிராமப் புறங்களில் பெண்களில் 56.8 விழுக்காட்டினரும், தமிழ்நாட்டில் 25 விழுக்காட்டினரும் 14 வயதுக்கு முன்னரே திருமணம் முடித்துவிட்டிருந்தது கண்டறியப்பட்டது. 1975-இல் இந்திய அரசால் அமைக்கப்பட்ட பெண்கள் தகுநிலை பற்றிய ஆய்வுக்குழு (Committee on the Status of Women) பல மாநிலங்களில் குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றிருந்ததைக் கண்டறிந்தது. பீகாரில் தர்பங்கா மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் பால்வாடி ஒன்றில் மூன்று வயதுக் குழந்தை ஒன்றுக்குத் திருமணமாகியிருந்ததையும், இந்தூரில் ஒரு தொழிற்சாலையைச் சேர்ந்த குழந்தைகள் காப்பகத்தில் 18 மாதம் கூட ஆகாத ஒரு குழந்தைக்குத் திருமணமாகி யிருந்ததையும் அது கண்டறிந்தது.

இன்றும் (1986-இலும்) குழந்தைக் திருமணங்கள் ஏராளமாக நடைபெற்று வருவதைச் செய்தித்தாள்கள் எடுத்துக்காட்டி வருகின்றன. குறிப்பாக இராசசுத்தான், உத்தரப்பிரதேசம், பீகார் முதலிய மாநிலங்களில் குழந்தைத் திருமணங்கள் பல்லாயிரக் கணக்கில் நடைபெற்று வருவதை அவை எடுத்துக்காட்டுகின்றன. (பார்க்க: இந்தியா டுடே, சூன் 15,1986).

குழந்தைத் திருமணங்களில் பெரும்பாலானவை 10-இலிருந்து 14-க்கு உட்பட்ட வயதுக் குழுவில் நடைபெறுகின்றன. ஏழு, எட்டு வயது நிரம்பாத சிறுமிகள் கூடப் பத்து, பன்னிரண்டு வயதுடைய பையன்களுக்கு மணமுடிக்கப்படுவதும் பெருமளவில் நடைபெறுகிறது. கைக் குழந்தைகள் கூட மணப் பெண்களாக அலங்கரிக்கப்பட்டு மணமுடிக்கப் படுகிறார்கள். இராசசுத்தான் மாநிலத்தில் 1986 சூன் திங்களில் நடைபெற்ற ஒரு திரள் குழந்தைத் திருமணத்தில் (Mass Child Marriage) 11 மாதம் கூட நிரம்பாத ஒரு கைக் குழந்தைக்குத் திருமணம் நடைபெற்றது. இவ்வளவுக்கும் மேலாக, வயிற்றில் வளரும் குழந்தைகளுக்குக் கூடத் திருமணம் நிச்சயம் செய்யப்படுகிறது.

பொதுவாக, குழந்தைத் திருமணங்கள் திரளாக நடைபெறுகின்றன. ஒரே நேரத்தில், 50, 60 என்று திருமண இணைகளுக்கு மணம் செய்து வைக்கப்படுகிறது. ஊரில் ஒரு பொதுத் திருவிழா வரும்பொழுது அந்த விழா நாளில் ஏராளமாகக் குழந்தைத் திருமணங்கள் நடைபெறுகின்றன. இராசுசுத்தான் மாநிலத்தில் 'ஆகா தீசு' (Akha Teej) என்ற விழா வருகிற நாளில் ஏராளமான குழந்தைத் திருமணங்கள் கோலாகலத்துடன் நடத்தப்படுகின்றன.

வயது வந்தோர்களுக்கு நடைபெறும் திருமணத்தைப் போலவே குழந்தைத் திருமணங்களும் நடைபெறுகின்றன. புரோகிதர் வந்து மந்திரங்கள் ஓதித் திருமண நிகழ்ச்சியை நடத்துவது, மணப் பெண்ணுக்கு மணமகன் தாலி கட்டுவது, மணமக்கள் வேள்வித் தீயை வலம் வருவது, மணவிழாவுக்கு வந்த விருந்தினர்களுக்குச் சிறப்பான விருந்து அளிப்பது முதலிய எல்லாத் திருமண அம்சங்களும் குழந்தைத் திருமணங்களில் இடம் பெறுகின்றன. மணமகனுக்கு வரதட்சிணை தருவது, பெண்ணுக்குச் சீர்வரிசை தருவது ஆகியனவும் குழந்தைத் திருமணங்களில் உண்டு.

ஆனால் திருமணம் முடிந்ததும் மணப்பெண் கணவன் வீடு செல்லும் வழக்கம் பொதுவாகக் குழந்தைத் திருமணங்களில் இல்லை. மணப்பெண் வயதுக்கு வரும் வரை அவள் தன் பெற்றோர் வீட்டிலேயே இருப்பாள். வயதுக்கு வந்ததும் கணவன் வீட்டுக்குக் கொண்டு போய் விடப்படுவாள். அங்கு முதலிரவுச் சடங்கு (வட இந்தியாவில் 'கௌனா' சடங்கு எனப்படும்) நடந்து திருமணம் முழுமையடையும். ஆனால் வங்காளத்தில் திருமணம் முடிந்ததும் குழந்தை மணப்பெண் கணவன் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவாள். கணவன் ஓரளவு வயது முதிர்ச்சியடைந்ததும் மனைவி வயதுக்கு வராமலிருந்தாலும் அவர்கள் உடலுறவு கொள்வர்.

திருமணம் ஆன பிறகு, அது முழுமையடைவதற்கு முன்னர், கணவன் நடந்த திருமணத்தை ஒப்புக்கொள்ளவோ மனைவியை ஏற்றுக் கொள்ளவோ மறுத்தால் குழந்தை-மனைவியின்பாடு திண்டாட்டம்தான். அவளுடைய மாமனார், மாமியார் அவளைத் தமது இன்னொரு பையனுக்குக் கட்டி வைக்க முன் வந்தால், சிக்கல் ஏதும் இல்லை. ஆனால் அவர்கள் அவளை மருமகளாக ஏற்க மறுத்தால் அதிகச் சிக்கலாகிவிடும். ஊர்ப் பஞ்சாயத்து கூடி அந்தக் குழந்தையின் மாமனார், மாமியாருக்கு அபராதம் விதிக்கும். (மேற்கு இந்தியாவில் வாழும் படேல்களிடையே இந்த அபராதம் 40,000 ரூபாய் வரை இருக்கும்) இந்த அபராதத்தைப் பெண் வீட்டாரிடம் வாங்கிக் கொடுத்து விட்டு, ஊர்ப் பஞ்சாயத்து நடந்த திருமணத்தை விலக்கி வைக்கும். பிறகு பெண் வீட்டார் தம் பெண்ணுக்கு வேறு மாப்பிள்ளையைத் தேடிப் போவர். ஆனால் உயர் சாதியினரிடையே (பிராமணர், இராஜபுத்திரர்கள் போன்றவர்கள்) கணவனால் நிராகரிக்கப்பட்ட குழந்தை – மனைவிக்கு மறுமண வாய்ப்பில்லை. சமூகக் கட்டுப்பாடுகள் அத்தகைய மறுமணத்தை

ஆதரிப்பதில்லையாதலால் அவள் கடைசி வரை பெற்றோரின் பாதுகாப்பில்தான் வாழ நேரிடும்.

ஒரு குழந்தை-மனைவி விதவையாகும்போதும் இதே நிலைமைதான். பொதுவாக உயர் சாதியின ரிடையே ஒரு குழந்தை-மனைவி விதவையாகி விட் டால் அவளுக்கு மறுமண வாய்ப்பில்லை. காலம் முழுவதும் பெற்றோரைச் சார்ந்துதான் அவள் வாழ வேண்டும். படேல் சமுதாயத்தில் ஒரு குழந்தை விதவை யானால் அதற்கு மறுமணம் நடத்தப்படுவது கிடை யாது. ஒரு வயதானவனுக்கு, அதுவும் மனைவியை இழந்து நிற்கும் ஒருவனுக்கு வயது வேறுபாடு பார்க்காமல் மனைவியாக ஒப்படைத்து விடுகின்ற னர். இதற்குச் சடங்கு ஏதும் கிடையாது. மேற்கு இந்தியாவில் வாழும் மற்றொரு வகுப்பினரான வைணவர்களிடையே குழந்தை விதவைகளுக்கு வேறு வகையில் மாற்று ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர் களிடையே ‘தேவர்பட்டா’ என்றொரு வழக்கம் உண்டு. அவ்வழக்கத்தின்படி அவர்கள் இறந்த கணவனின் தம்பிக்குக் குழந்தை விதவையைக் கட்டி வைக்கின்றனர்.

**குழந்தைத் திருமணத்தின் தோற்றமும், வளர்ச்சி யும்:** இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள் வேத காலத்தில் நடைபெறவில்லை. அவை தர்மசூத்திரங் களின் காலத்தில்தான் (கி.மு. 600-இலிருந்து கி.மு. 100 வரை) ஏற்பட்டன. தர்மசூத்திரங்கள் பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடைபெற வேண்டும் என்றும், பெற்றோர்கள் தம் பெண் மக்களை அவர் கள் வயதுக்கு வருமுன்னரே மணமுடித்துக் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தின. கோபில கிருகிய சூத்திரம், மாணவ கிருகிய சூத்திரம், இரண்டியகேசி கிருகிய சூத்திரம் முதலிய தர்ம சூத்திரங்கள் ‘பெற் றோர் தம் பெண் மக்கள் பிறந்த மேனியராக (‘நக் னிகா’க்களாக) இருக்கும்போதே, அதாவது அவர்கள் பூப்பெய்துவதற்கு முன்னரேயே அவர்களைத் திரு மணம் செய்து கொடுத்துவிட வேண்டும்’ என்று கூறு கின்றன. பௌதாயன தர்ம சூத்திரம் என்ற நூலும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது; ‘ஒரு தகப்பன் தன் மகளை அவள் சின்னக் குழந்தையாக (‘நக்னிகா’ வாக) இருக்கும்போதே திருமணம் செய்து கொடுத்து விட வேண்டும். அப்படி இயலாமல் போனாலும், அவள் பூப்பெய்திய பிறகு, மூன்று மாதவிலக்குகளுக் குள் அவளுக்குத் திருமணம் செய்துவிட வேண்டும்’. இவ்வாறு தர்ம சூத்திரங்கள் பெண்களுக்கு இளம் வயதிலேயே அவர்கள் பூப்பெய்துவதற்கு முன்னரே திருமணம் செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத் தின. இந்தக் கடமையிலிருந்து வழுவிய பெற்றோர் கள் பெரும் பாவம் செய்தவர்கள் ஆவர் என்றும், மறு பிறவியில் அவர்கள், புழு, பூச்சிகளாகப் பிறப்பர் என்றும் தர்மசூத்திரங்கள் கூறுகின்றன.

தர்ம சூத்திரங்களுக்குப் பின் வந்த தர்ம சாத்திரங் களும் குழந்தை மணத்தை வலியுறுத்தின. நாரதரும் பிருகசுபதியும் தத்தம் நூல்களில் பெண்களிடத்தில் வயதுக்கு வருவதற்கான அறிகுறிகள் புலப்படத் தொடங்கும்போதே உடனடியாக அவர்களுக்குத் திரு மணம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி யுள்ளனர். அப்படிச் செய்யத் தவறுகிற பெற் றோர் பெரும் பாவம் செய்தவர்களாவார்கள் என்று கூறியுள்ளனர். தர்ம சூத்திரங்கள், தர்ம சாத்திரங்கள் ஆகியவற்றின் இத்தகைய விதியே குழந்தைத் திருமணத்திற்கு இந்தியாவில் அடிப்படை யாக அமைந்தது.

பேராசிரியர் கே.எம். கபாடியா இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள் ஏற்பட்டதற்குக் கீழ்க் காணும் காரணிகள் துணை நின்றன என்று கூறு கிறார். முதலாவதாக வருவது கன்னித் தன்மை நெறி. தொடக்கத்தில் கன்னித் தன்மை ஒரு மரி யாதைக்குரிய சின்னமாகக் கருதப்பட்டு வந்தது. பெண்கள் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் பெறு வதற்கு அது ஒரு காரணியாக இருந்தது. காலப் போக்கில் கன்னித் தன்மை திருமண நிறுவனத்தில் இடம் பெற்று, திருமணத்திற்குரிய அடிப்படைத் தகுதிகளில் முதன்மையானதாக அமைந்தது. அப் படிப்பட்ட நிலையில் பெற்றோர்களுக்குத் தம் பெண் களின் கன்னித் தன்மையைக் காத்து, அவர்களைக் கன்னியராக மண முடித்துக் கொடுக்க வேண்டிய- நிலைமை ஏற்பட்டது. பெண்களை இளம் வயதி லேயே - அவர்கள் பூப்பெய்துவதற்கு முன்னரேயே- திருமணம் செய்து கொடுத்து விட்டால், அவர்கள் கன்னியராகவும் தூய்மையானவராகவும் கணவன் வீடு செல்ல முடியும். அவர்கள் பூப்பெய்திய பிறகு வீட்டில் இருந்தால் பாலின உணர்வால் உந்தப்பட் டுப் பாலின எண்ணங்களை வளர்த்துப் பாலின நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடலாம். அதன் விளை வாக அவர்களுடைய கன்னித் தன்மை அழிவது மட்டுமன்றி, அவர்களுடைய திருமண வாய்ப்புகள், குடும்பத்தின் பெருமை முதலியவற்றிற்குக் கேடு விளையவும் கூடும். இத்தகைய நிலையைத் தவிர்க் கக் குழந்தைத் திருமணம் உதவியதால், பெற்றோர் கள் தம் பெண்களை இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுக்க முற்பட்டனர்.

இரண்டாவதாக அமைவது நிகழ்ச்சிச் (சடங்குக்) கோட்பாடு. கருவில் உற்பத்தியாவதிலிருந்து இறப் புக் கட்டம் எய்தும் வரை ஒரு மனிதன் தன் வாழ்

வுச் சுழலின் ஒவ்வொரு நிலையிலும் ஏதாவதொரு சிறப்பு நிகழ்ச்சிக்கு உட்படுகிறான். பிறப்புக்கு முன்னரும் பின்னரும் 'கர்ப்பதானம்' (கருத்தரிக்கச்செய்யும் சடங்கு), 'பும்சவனம்', (ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுவது), 'சீமந்தோன்னயனம்' (கருவுற்ற ஏழாம் மாதத்தில் நடைபெறுவது), 'சாத கர்மம்' (குழந்தை பிறந்ததும் நடைபெறுவது), 'நாமகரணம்' (குழந்தைக்குப் பெயர் சூட்டுதல்),'நிட்கிராமணம்' (குழந்தையை முதலில் வெளியே எடுத்துவரும்பொழுது செய்யப்படுவது), 'அன்னப்பிராசனம்' (குழந்தைக்கு முதன் முதலாக அரிசிச் சோறு ஊட்டுதல்), 'கர்ண வேதம்' (குழந்தைக்குக் காது குத்துதல்), 'சூடாகரணம்' (குழந்தைக்கு மொட்டையடித்தல்) முதலியன நடைபெறும். குழந்தை வளர்ந்ததும் 'வித்யாரம்பம்' (கல்வித்தொடக்கம்), 'உபநயனம்' (பூணூல் போடுதல்), 'வேதாரம்பம்' (முதலில் வேத பாடம் படித்தல்), 'கேசாந்தம்' (தலை முடி வெட்டுதல்), 'சமாவர்த்தனை' (பிரமச்சரிய நிலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது நடைபெறும் சடங்கு) என்று பல சடங்குகள் நடைபெறும். பிறகு திருமணச் சடங்கு, அதற்குப் பிறகு மக்கள் வாழ்க்கை முடியும்போது செய்யப்படும் 'அந்த்தியேட்டி' (இறுதிக் கடன்கள்) ஆனால், இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், மேற்குறித்த 16 நிகழ்ச்சிகளும் ஆண்களுக்கு உரியவை. பெண்களுக்கு அவை கிடையாது. திருமணம் மட்டுமே அவர்களுக்கு உரியது.

திருமணம் மட்டுமே பெண்களுக்குரியதாக அமைந்த நிலையில் அது பெண்களின் வாழ்வில் மிகுந்த சிறப்புப் பெற்றுள்ளது. எப்படியாவது அவர்கள் வாழ்வில் திருமணம் இடம் பெற்று விட வேண்டும் என்பதற்காகப் பெற்றோர் தம் பெண்களை இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுத்து, அவர்கள் வாழ்வில் இடம் பெறச் செய்தார்கள். பூப்பெய்துவதற்கு முன்னரே பெண்கள் காலமாகி விட்டால், திருமணம் அவர்கள் வாழ்வில் இடம் பெறாமல் போகக் கூடிய நிலை ஏற்படும் என்பதற்காகப் பெற்றோர், தம் பெண்களை அவர்கள் சிறிய குழந்தைகளாக இருக்கும் போதே திருமணம் செய்து கொடுத்தனர்.

மூன்றாவதாக, அகமண (Endogamy) விதியும் மேற்கூறிய காரணிகளோடு சேர்ந்து கொண்டு குழந்தைத் திருமணத்திற்கு வழி கோலியது. தொடக்கத்தில் வருணாசிரம முறை இருந்தபோது, கீழ் வருணத்துப் பெண்கள் தம்முடைய வருணத்திலும், உயர் வருணங்களிலும் திருமணம் செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ('அனுலோமா') இருந்தது. அந்த நிலையில் திருமண வாய்ப்புஎல்லை பரந்திருந்ததால் பெண்ணுக்கு மணமகன் கிடைப்பது கடினமாக இல்லை. மணமகன் எளிதில் கிடைத்தான். ஆனால், நாளடைவில் வருணம் ஒவ்வொன்றும் பல சாதிப் பிரிவுகளாகப் பிரிந்து சாதி முறை வளர்ந்த போது, சாதிக்குள்ளேயே மணமுடிக்கும் அகமண முறை ஏற்பட்டது. அதனால் மணமகன் கிடைக்கும் பரப்பெல்லை சுருங்கிச் சாதிக்குள்ளேயே மணமகனைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு சாதியின் பரப்பெல்லை குறைந்த அளவானதால், அதில் இருக்கும் ஆண் மக்களின் எண்ணிக்கையும் குறைவாக இருந்தது. அதன் காரணமாகப் பெற்றவர்களிடையே தம் பெண்களுக்குத் தகுந்த ஆண்மக்களைத் தேடுவது ஒரு சிக்கலாயிற்று. இது கடும் போட்டியில் கொண்டு போய் விட்டு விட்டது. பெண்ணைப் பெற்றவர் தம் பெண்ணுக்கான மணமகனைத் தேடுவதில் கடும் போட்டியில் இறங்கினார். கிடைக்கிற பையனுக்குத் தம் பெண்ணை விரைவாகக் கட்டிக் கொடுத்து மணமகன் தேடும் சிக்கலைத் தீர்த்தார். அதனால் பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடைபெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

அடுத்து, ஒருதுணை மண (Monogamy) விதியும் குழந்தைத் திருமணத்திற்கு வழி வகுத்தது. ஒருவன் ஒருத்தியைத் தான் மணமுடிக்க வேண்டும் என்ற விதி சமூகத்தில் நிலை நிறுத்தப்பட்டபோது, எங்கே பின்னாளில் தம் பெண்ணுக்கு (ஒருதுணை மண விதியின் காரணமாக) மணமகன் கிடைக்காமற் போய் விடுமோ என்று அஞ்சிப் பெற்றோர் கிடைக்கிற பையனுக்குத் தம் பெண்ணை இளம் வயதிலேயே மண முடித்தனர். எல்லா இளைஞர்களுக்கும் திருமணமாகிப் போன நிலையில், ஒரு துணை மண விதியின் காரணமாக, அவர்களால் மணமாகாத பெண்களைத் திருமணம் செய்து கொடுக்க இயலவில்லை. அந்த நிலையில் அப்பெண்கள் மணம் செய்வோர் கிடைக்காமற் கன்னியராகவே காலங்கழிக்க நேரிட்டது. ஆகவே, அத்தகைய நிலை ஏற்படலாகாது என்பதற்காகப் பெற்றோர்கள் எவ்வளவு விரைவாகத் தம் பெண்களை மணஞ் செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக மணஞ் செய்து கொடுத்தனர்.அதன் விளைவு பெண்கள் இளம்வயதிலேயே திருமண நிலையை அடைய நேர்ந்தது.

குழந்தைத் திருமணம் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கு மதிப்பு ஏற்பட்டதால் அது வளர்ந்தது. பூப்பெய்துவதற்கு முன்னரேயே ஒருபெண்ணைக் கட்டிக் கொடுப்பது சாத்திர அடிப்படையில் அமைந்ததால் அது குல ஒழுக்கமாகவும் மதிப்புடையதாகவும்

கருதப்பட்டு, அதற்குச் சமூகத்தில் ஒரு மதிப்பு ஏற்பட்டது. அப்படிப்பட்ட திருமணங்களை நடத்துவது ஒரு குடும்பத்திற்கு மதிப்பாகவும் பெருமையாகவும் அமைந்தது. அந்த நிலையில் குழந்தைத் திருமணங்கள் மேலும் ஊக்கம் பெற்று வளரத் தொடங்கின.

தொடக்கத்தில் உயர் சாதியினரே குழந்தைத் திருமணங்களை நடத்தி வந்தனர். குடும்பப் பெருமைக்குரிய காரணியாகக் குழந்தைத் திருமணம் அமைந்தபோது, உயர் சாதியினரைப் பின்பற்றிக் கீழ்ச் சாதியினரும் குழந்தைத் திருமண முறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். அவர்கள் ஒருபடி மேலே போய்க் குழந்தை வயிற்றில் இருக்கும்போதே திருமணம் உறுதி செய்தனர். அவர்களுக்குக் குழந்தைத் திருமணம் ஒரு சிக்கலாக அமையவில்லை. அவர்களிடையே விதவை மணம் அனுமதிக்கப்பட்டிருந்ததால், குழந்தை-மனைவிகள் விதவைகளானாலும், அதனால் சிக்கல் ஏதும் எழவில்லை. குழந்தை விதவைகள் மீண்டும் இயல்பாக மணமுடிக்கப்பட்டனர்.

**குழந்தைக் திருமணத்திற்கு எதிரான இயக்கம்:** குழந்தைத் திருமணப் போக்கிற்கு எதிரான கருத்துகள் 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் எழத் தொடங்கின. புதிய கல்வியின் காரணமாகத் தோன்றிய அறிஞர்கள் குழந்தைத் திருமணம் நாகரிக உலகிற்குப் புறம்பான ஒரு சமூகத் தீமை என்று உணர்ந்து, அதற்கு எதிரான இயக்கத்தைத் தோற்றுவித்தனர். பிரம்ம சமாசம் என்ற சமூகச் சீர்திருத்த அமைப்பை உருவாக்கிய (கி.பி. 1828)இராசா ராம் மோகன்ராய், ஈசுவர சந்திர வித்யாசாகர் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகள் குழந்தைத்திருமணத்திற்கு எதிராகக் கருத்துப் பரப்பினர்; அரசிடம் மனுக்கள் தந்தனர். ஈசுவர சந்திர வித்தியாசாகரின் இடைவிடாத போராட்டத்தின் காரணமாக,அரசு கி.பி.1860 -இல் இசைவு வயதுச் சட்டம் (Age of Conjent Act) என்றொரு சட்டத்தைக் கொண்டு வந்து, 10 வயதுக்குக் குறைவான பெண்களை மணவாழ்க்கையில் ஈடுபடுத்தக் கூடாது என்று விதித்தது. கி.பி. 1860-இல் இயற்றப்பட்ட இந்தியக் குற்றவியல் சட்டம் (Indian Penal Code) 10 வயதுக்குக் குறைவான பெண்களை மணவாழ்க்கையில் ஈடுபடுத்தினால், அது வற்புறுத்திக் கற்பழித்ததைப் (Rape) போன்றது என அறிவித்து, அதனை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக அறிவித்தது.

பிரம்ம சமாசத்தைப் பின்பற்றி மகாராட்டிராவில் எழுந்த (கி.கி. 1867) பிரார்த்தனைச் சமாசம் என்ற சமூகச் சீர்திருத்த அமைப்பு, சமூகச் சீர்திருத்தவாதிகளான நீதியரசர் எம்.சி. இரானடே, ஆர்.சி. பண்டார்கர் ஆகியோருடன் சேர்ந்து குழந்தைத் திருமணத்திற்கு எதிராகத் தீவிர இயக்கத்தைத் தொடங்கியது. இவர்களோடு, பேக்ராம்சி மேர்வான்சி மலபாரி என்ற ஒரு பார்சிப் பெரியவரும் குழந்தைத் திருமணத்திற்கு எதிரான இயக்கத்தில் ஈடுபட்டு அதை முடுக்கி விட்டார். அவர் குழந்தைத் திருமணத்திற்கு எதிராக ஆங்கிலத்தில் குழந்தைத் திருமணமும் கட்டாய விதவை நிலையும் (Infant Marriage and Enforced Widowhood) என்றொரு சிறுநூலை வெளிக்கொணர்ந்தார்; அரசுக்கு மனுக்கள் போட்டார். அவருடைய இடையறாத போராட்டத்தின் காரணமாக கி.பி. 1892-இல் இசைவு வயதுச் சட்டமும், இந்தியக் குற்றவியல் சட்டமும் திருத்தப்பட்டுப் பெண்களுக்கான மணவாழ்க்கை வயது 10-இலிருந்து 12க்கு உயர்த்தப்பட்டது.

மேற்கண்ட சமூகச் சீர்திருத்த முயற்சிகளின் காரணமாக நாடெங்கும் குழந்தைத் திருமணம் பற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. குழந்தைத் திருமணம் பற்றி நாடு முழுதும் பேசப்பட்டது. இதையொட்டி கி.பி. 1891-இல் மன் மோகன் கோசு என்பவர் வங்காளச் சட்ட மன்றத்தில் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நடைபெறும் திருமணங்களைச் செல்லாதவையாக ஆக்குமாறு ஆங்கில, இந்திய அரசை வேண்டி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். ஆனால், அதற்குப் போதிய ஆதரவில்லாமற் போனதால் அது நிறைவேறாமற் போயிற்று.

மைசூர் உள்நாட்டு அரசு கி.பி. 1894-இல் குழந்தைத் திருமணத்திற்கு எதிராக ஒரு சட்ட நடவடிக்கை எடுத்தது. எட்டு வயது நிரம்பாத பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பது சட்டப்படி குற்றம் என்றும், அக்குற்றத்திற்கு ஆறு மாதச் சிறைத் தண்டனை அளிக்கலாம் என்றும் அறிவித்தது. பரோடா உள்நாட்டு அரசு 1904-இல் இளம் வயதுத் திருமணத் தடைச் சட்டம் (Early Marriage Prevention Act) என்றொரு சட்டம் கொண்டு வந்து, ஒரு பெண்ணிற்கான திருமண வயது குறைந்தது 12-ஆக இருக்க வேண்டும் என்று விதித்தது. இந்தூர் உள்நாட்டு அரசு 1918-இல் ஆண்களுக்குத் திருமண வயது குறைந்தது 14-ஆகவும், பெண்களுக்கு 12-ஆகவும் இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றியது.

இவ்வாறு தனித்தனியாகக் குழந்தைத் திருமணத்தைக் கட்டுப்படுத்தச் சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவே தவிர, நாடு தழுவிய அளவில் மத்திய ஆங்கில அரசு,குழந்தைத் திருமணம் பற்றிய எந்தச் சட்ட நடவடிக்கையையும் மேற்

கொள்ளாமல் வாளா இருந்தது. அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை மத உணர்வுகளைக் கிளறி ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையை ஏற்படுத்தி விடுமோ என்று அரசு அஞ்சியதால் வாளா இருந்தது. இலாலாகிரிதாரிலால் என்பவர் 1921-இல் 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத் திருமணம் செய்வதைத் தடை செய்யச் சட்டம் கொண்டு வருமாறு அரசை வேண்டினார். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் ஆங்கில அரசு தனியார் யாராவது இது பற்றி மத்திய சட்டப் பேரவையில் மசோதா கொண்டு வந்தால் அதை ஆதரிப்பதாகத் தெரிவித்தது. அதன்படி 1922 பிப்பிரவரி மாதத்தில் இராய் பகதூர் பக்சி சோகன்லால் என்பவர் மத்திய சட்டப் பேரவையில் பெண்களுக்கு மணவாழ்க்கைக்கான குறைந்த வயதை 14 என்று உயர்த்த ஒரு மசோதா கொண்டு வந்தார். இந்த மசோதா மாகாண அரசுகளுக்கு அவற்றின் கருத்தை அறிய அனுப்பப்பட்டபோது சில மாகாணங்கள் தெளிவாக ஒன்றும் கூறவில்லை. சில மாகாணங்கள் - பீகார், ஒரிசா, மத்திய மாகாணங்கள், பேரார், வங்காளம் ஆகியவை - மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. பம்பாய் மாநிலமும், உத்தரப் பிரதேசமும் மட்டுமே மசோதாவை ஆதரித்தன. அதனால் ஆங்கில அரசு பின்வாங்கி, 1922 செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற கூட்டத் தொடரில் மேற்கண்ட மசோதாவை மத்திய சட்டப் பேரவையில் அனுமதிக்கவில்லை. அதன் காரணமாக மசோதா வீழ்ந்தது. மீண்டும் 1924-இல் மத்திய சட்டப் பேரவையில் சர் அரிசிங் கவுர் என்பவர் மேற்கண்ட மசோதாவை ஒட்டி மற்றொரு மசோதாவைக் கொண்டு வந்தார். ஆனால், அரசாங்கம் அதை ஏற்காமல், 1925 செப்டம்பரில் வேறொரு மசோதா கொண்டு வந்து, பெண்களுக்கு மணவாழ்க்கைக்கான குறைந்த வயதை 13 என்று அறிவித்தது.

இதில் திருப்தி அடையாத சர் அரிசிங் கவுர் மீண்டும் 1927-இல் மேற்படி வயதை 14 என்று உயர்த்த அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். அரசு இக்கருத்தை ஆராய்வதற்காக இசைவு வயதுக் குழு என்ற குழுவைச்சோசி (Joshi) என்பவருடைய தலைமையில் அமைத்தது. அந்தக் குழு இச்சிக்கலை ஆராய்ந்து பெண்களுக்கு மணவாழ்க்கைக்கான வயது குறைந்தது 15-ஆக இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தது. இந்த வயதுக்கு முன்னால் மணவாழ்க்கை நடைபெறக் கூடாது என்றால் அதற்குச் சிறந்த வழி, 14 வயதுக்குக் கீழ் உள்ள பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பதைத் தடை செய்து தண்டிப்பது தான் என்று அந்தக் குழு கருத்துரை வழங்கியது. அந்தக் கருத்துரையின்படி 1927 செப்டம்பர் 15-இல் இராய் சாகிப் அர்பிலாசு சாரதா என்பவர் மத்திய சட்டப் பேரவையில் குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Child Marriage Restraint Act) என்ற மசோதாவைக் கொண்டு வந்தார். அரசு அதை ஆதரிக்க அது 1929 செப்டம்பர் 28-இல் சட்டமாக நிறைவேறியது. அந்தச் சட்டத்தின்படி பெண்களுக்குக் குறைந்த அளவு திருமண வயது 14 என்றும், ஆண்களுக்கு 18 என்றும் நிருணயிக்கப்பட்டது. அச்சட்ட விதியை மீறி நடக்கும் திருமணங்கள் குழந்தைத் திருமணங்களாகும் என்றும், அத்தகைய திருமணங்களை நடத்துபவர்களுக்கு 1000 ரூபாய் அபராதம் அல்லது ஒரு மாதச் சிறைத் தண்டனை அல்லது இவ்விரண்டும் விதிக்கப்படும் என்றும் அச்சட்டம் கூறியது. அச்சட்டம் நாடு முழுமைக்கும் பொதுவாய் அமைந்தது.

அந்தச் சட்டம் 1929 செப்டம்பரில் நிறைவேற்றப்பட்டாலும், ஆறு மாதம் கழித்து 1930 ஏப்பிரல் முதல் தேதியிலிருந்துதான் நடைமுறைக்கு வந்தது. இந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு பெற்றோர்கள் அவசரம் அவசரமாகத் தம் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைத்தனர். இந்த ஆறு மாத இடைவெளிக் காலத்தில் மட்டும் 12 மிலியனுக்கு மேற்பட்ட அளவில் 13 வயதுக்குட்ட பெண் குழந்தைகளுக்குத் திருமணம் நடந்தேறியது.

1949-இல் அந்தச் சட்டம் திருத்தப்பட்டுப் பெண்களின் குறைந்த திருமண வயது 15-ஆக உயர்த்தப்பட்டது. மீண்டும் 1976-இல் இச்சட்டம் திருத்தப்பட்டுப் பெண்களின் குறைந்த திருமண வயது 18 என்றும், ஆண்களின் குறைந்த திருமண வயது 21 என்றும் உயர்த்தப்பட்டன.

குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் குழந்தைத் திருமணங்களைக் கட்டுப்படுத்த முனைகிறதேயன்றி, அதை மீறி நடக்கிற திருமணங்களைச் செல்லாதவையாக ஆக்கவில்லை. மேலும், அத்தகைய திருமணங்களைக் குறை கூறும் மனுக்கள் வந்தாலொழிய அரசு அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கலாகாது என்றும் அச்சட்டம் கூறுகிறது. இந்தக் குறைபாடுகளின் காரணமாக இன்றும் குழந்தைத் திருமணங்கள் எண்ணற்றன நடைபெற்று வருகின்றன. எல்லாத் திருமணங்களையும் சட்டப்படி பதிவு செய்ய வேண்டும் என்று சட்டம் வந்தாலொழியக் குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் மீறப்படுவதைத் தடுக்க இயலாது.

இந்தியாவில் மக்கள் தொகை பெருகி வருவதற்கும், விரைவான விகிதத்தில் அது வளர்ந்து வருவ

தற்கும் குழந்தைத் திருமணங்களும் ஒரு காரணம். அதற்கு மேலாகப் பேறுகாலப் பெண்களின் இறப்பு விகிதமும் (4.5/1000–1976), ஓராண்டு நிரம்பாத குழந்தைகள் இறப்பு விகிதமும் (114/1000–1980) மிகுதியாக இருப்பதற்கும் குழந்தைத் திருமணங்கள் ஓரளவு காரணம். சி.என்.ந.

**துணை நூல்கள்:**

Kapadia, K.M. Marriage and Family in India, 3rd ed, Oxford University Press, Bombay, 1966.

O' Malley, L.S.S., India's Social Heritage, Indian ed. Vikas Publishing House, New Delhi, 1976.

**குழந்தைத் தொழிலாளர்:** தொழில் மயமாக்கம் பல விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றுள் ஒன்று குழந்தைகள் வேலையில் ஈடுபடுத்தப் படுவது. குறிப்பாக, சட்டத்தினால் ஒழுங்குபடுத்தப் படாத தொழில் துறைகளில் குழந்தைகள் மிகுதியான எண்ணிக்கையில் வேலையில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

குழந்தைகள் தொழிற்சாலைகளில் வேலையில் ஈடுபடுத்தப்படுவது தொழிற் புரட்சிக் காலத்தில்தான் தொடங்கிற்று. தொழிற்புரட்சியின் காரணமாகத் தொழிற்சாலைகள் மிகுந்த அளவில் தொடங்கப்பட்டதும், அவற்றுக்கு அளவற்ற தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். அந்தத் தேவையைச் சமாளிக்கக் குழந்தைகளும் தொழிலாளர்களாக வேலையில் அமர்த்தப்பட்டனர். முக்கியமாக, குறைந்த ஊதியத்தில் குழந்தைகள் வேலைக்குக் கிடைத்ததால் தொழிலதிபர்கள் அவர்களை மிகுதியாக வேலையில் சேர்த்துக் கொண்டனர். அப்பொழுது நிலவிய வறுமையின் தாக்குதலினால் பெற்றோர்கள் தம் குழந்தைகளை வருமானத்திற்காக வேலைக்கு அனுப்ப வேண்டிய நிலை இருந்தது.அதைப் பயன்படுத்தித் தொழிலதிபர்கள் மிகுதியான குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு எடுத்துக் கொண்டனர். தொழிற்சாலைகள் மீதும், அவற்றின் வேலை நிலைமைகள் மீதும் அரசாங்கக் கட்டுப்பாடு ஏதும் அந்தக் காலத்தில் இல்லாததால், தொழிலதிபர்கள் குழந்தைத் தொழிலாளர்களைத் தமது விருப்பம் போல நடத்தினர்; குறைந்த ஊதியம் கொடுத்தனர்; அதனையும் ஒழுங்காகக் கொடுப்பதில்லை. கடினமானவேலை நிலைமைகளில் அவர்களை வேலை செய்யச் செய்தனர். கால வரையறை இல்லாமல் விருப்பம் போல நீண்ட நேரம் அவர்களை வேலை வாங்கினர். அவர்களுடைய சக்திக்கு மீறிய வேலைகளிலும் அவர்களை ஈடுபடுத்தி வேலை வாங்கினர்.

தொழில் மயமாக்கம் இந்தியாவில் ஏற்பட்டதும், இந்தியத் தொழிலதிபர்களும் அவ்வாறே குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தி அவர்களைக் கடுமையாக வேலை வாங்கினர். இந்தியத் தொழிலாளர் நிலை பற்றி 1931–ஆம் ஆண்டு ஆராய வந்திருந்த தொழிலாளர் பற்றிய அரசாய்வு ஆணையம் (Royal Commission on Labour) பல நகரங்களில் எண்ணற்ற குழந்தைகள் தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்ததைக் கண்டறிந்தது. அவர்களில் ஐந்து வயது கூட நிரம்பாத குழந்தைகள் இருந்தனர். குழந்தைத் தொழிலாளர்களுடைய வேலை நிலைமைகளைப்பற்றிக் குறிப்பிட்ட பொழுது, அவ்வாணையம் 'குழந்தைத் தொழிலாளர்கள் மிகக் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர்; சிறிய தவறுகளுக்குக் கூட அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டது; அவர்கள் ஒரு நாளைக்கு 10–இலிருந்து 12 மணி நேரம் வரை வேலை வாங்கப் பட்டனர்; அவர்களுக்குப் போதிய உணவு இடைவேளையோ, வாராந்திர விடுமுறை நாள்களோ வழங்கப்படவில்லை; ஒரு நாளைக்கு இரண்டு அணாக் கூட (சுமார் 12 பைசாக்களுக்குச் சமம்) அவர்களுக்கு ஊதியமாக வழங்கப்படவில்லை' என்று தெரிவித்தது.

**குழந்தைத் தொழிலாளர் பற்றிய சட்டங்கள்:** குழந்தைகளைத் தொழிற் சாலைகளில் வேலைக்கு நியமிப்பதைக் கட்டுப்படுத்தச் சட்ட முறைப்படி அரசு எந்த முயற்சியும் கி.பி. 1881–ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளவில்லை. பம்பாய்ப் பருத்தித் துறையில் முதன்மை ஆய்வாளராகப் பணியாற்றிய படைத் தலைவர் (Major)) மூர் என்பவர் இந்தியத் தொழிற் சாலைகளின் நிலைமைகளை கி.பி. 1874–ஆம் ஆண்டு ஆராய முற்பட்டபொழுது, பம்பாய்ப் பஞ்சாலைகளில் எண்ணற்ற குழந்தைகள் வேலையில் அமர்த்தப்பட்டிருந்ததைக் கண்டார். அவர்களுள் பெரும் பகுதியினர் எட்டு வயதுக் கூட நிரம்பாதவர்களாய் இருந்தனர். அவர்கள் அனைவரும் காலையிலிருந்து மாலை வரை வேலை செய்து வந்தனர். அரை மணி நேரம் மட்டுமே அவர்களுக்கு உணவு இடை வேளை விடப்பட்டது. அவர்களுக்குச் சரியான விடுமுறை கூடத் தரப்படவில்லை. இந்த உண்மைகளைப் படைத் தலைவர் மூரின் ஆய்வறிக்கை வெளிப்படுத்தியதும், தொழிற்சாலை நிலைமைகளை ஆராயும் போக்கு பரவத்தொடங்கியது. மூரைத் தொடர்ந்து பம்பாயில் நாணயத் தொழிற்சாலை அமைச்சராக இருந்த பல்லார்டு, தேசிய இந்தியச் சங்கம் என்ற அமைப்பை நிறுவிய செல்வி கார்ப்பெண்டர் ஆகியோரும் களத்தில் குதித்து, இந்தியத் தொழிற்சாலை நிலைமை

களை ஆராய்ந்தனர். அவர்களுடைய ஆய்வறிக்கைகள் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய செய்திகளை வெளியிட்டு நாட்டில் ஒரு விவாத அலையை ஏற்படுத்தின. அதன்விளைவாகக் குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதைக் கட்டுப்படுத்தச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் நாடெங்கும் எழுந்தது.

சோரப்சி சாபுர்சி பெங்காலி என்ற சமூக நலப் பணியாளரின் முயற்சியினாலும், பிற சமூக நலத் தொண்டர்களின் தூண்டுதலாலும் குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலையில் அமர்த்துவதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. தொழிற் சாலைகள் சட்டம் என்ற ஒரு சட்டத்தை கி.பி. 1881–ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்தது. இச்சட்டம் 7 வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தது. இச்சட்டம் 7 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை அனுமதித்தபோதிலும் 7–இலிருந்து 12 வயதுக் குட்பட்ட குழந்தைகளின் வேலை நேரம் ஒரு நாளைக்கு 9 மணி நேரத்திற்கு மேல் போகக் கூடாது என்று பணித்தது.அவர்களுக்கு ஒரு மணி நேர ஓய்வு இடைவேளையும், மாதத்திற்கு நான்கு நாள் விடுமுறையும் இச்சட்டத்தின் மூலம் கிடைத்தன. இச் சட்டம் கி.பி. 1891–ஆம் ஆண்டு திருத்தப்பட்டு, தொழிற்சாலைகள் சட்டம், 1891 நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் 9 வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தொழிற் சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தது; குழந்தைகள் 9க்கு மேலும் 12 வயதுக்குக் கீழும் உள்ளவர்கள் ஒரு நாளைக்கு 7 மணி நேரம் வரைதான் வேலையில் ஈடுபடுத்தப் பட வேண்டும் என்றும், இரவு 8 மணியிலிருந்து காலை 5 மணி வரை அவர்கள் வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் விதித்தது.

இச்சட்டம் 1911–ஆம் ஆண்டு மேலும் திருத்தப் பட்டது. தொழிற்சாலைகள் சட்டம், 1911 முந்தைய சட்டத்தைப்போலத் தொழிற்சாலைகளில் வேலைக் குச் சேரும் வயதை 9 என்று முடிவுசெய்ததுடன், 9–இலிருந்து 12 வயதுக்குட்பட்டவர்கள் வேலைக்குச் சேர்ந்தால் அவர்கள் தாம் வேலைக்குச் சேரத் தகுதியானவர்கள் என்று வயதுச் சான்றிதழும்,மருத்துவச் சான்றிதழும் தர வேண்டும் என்றும், அவர்கள் கடுமையான மேற்பார்வையின் கீழ்தான் வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் இச்சட்டம் பணித்தது. அவர்கள் பஞ்சாலைகளில் ஒரு நாளைக்கு 6 மணி நேரமும், பிற தொழிற்சாலைகளில் 7 மணி நேரமுந்தான் வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் இச்சட்டம் பணித்தது; மேலும் அவர்கள் இரவு 7–மணியிலிருந்து காலை 5.30 மணி வரை வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் விதித்தது.

இச்சட்டம் 1922–ஆம் ஆண்டு திருத்தப்பட்டுத் தொழிற்சாலைகளில் வேலைக்குச் சேரும் வயதை 9–இலிருந்து 12–க்கு உயர்த்தியது; 12–இலிருந்து 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு நாளைக்கு 6 மணி நேரத்திற்கு மேல் வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும், ஒரு நாளைக்கு அரை மணி நேர ஓய்வு இடைவேளை தரப்பட வேண்டும் என்றும் பணித்தது.

மீண்டும் 1934–இல் திருத்தப்பட்டதில் 12இலிருந்து 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு நாளைக்கு 5 மணி நேரந்தான்வேலையில் ஈடுபடுத்தப்படவேண்டும் (ஓய்வு நேரத்திற்கும் உணவு இடைவேளைக்கும் ஆன 2½ மணி நேரம் நீங்கலாக) என்றும், இரவு 7 மணியிலிருந்து காலை 6 மணி வரை வேலையில் ஈடு படுத்தப்படக் கூடாது என்றும் விதித்தது.

தொழிற்சாலைகள் சட்டம்,1948 தொழிற்சாலைகளில் வேலைக்குச் சேரும் வயதை 14 என்று விதித்தது; 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலையில் அமர்த்துவதைத் தடை செய்தது; 15 வயதிலிருந்து 17 வயதுக்குட்பட்டவர்கள் வேலைக்குச் சேர அனுமதியளித்தது. அச்சட்டம் அவர்கள் வயதுச் சான்றிதழும், மருத்துவச் சான்றிதழும் கொடுத்துத்தான் வேலைக்குச் சேர வேண்டும் என்றும், ஒரு நளைக்கு 4½ மணி நேரந்தான் (உணவு இடைவேளைக்கான அரை மணி நேரம் நீங்கலாக) வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும், ஆபத்தான வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும், இரவு 7 மணியிலிருந்து காலை 6 மணி நேரம் வரை வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் விதித்தது.

சுரங்கங்களிலும் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்ததால், சுரங்கங்கள் பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டன. முதல் இந்தியச் சுரங்கங்கள் சட்டம் என்ற சட்டம் 1901–ஆம் ஆண்டு இயற்றப்பட்டது அச்சட்டம் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சுரங்கங்களில் வேலைக்குச் சேருவதைத் தடை செய்தது. அச்சட்டம் 1923-ஆம் ஆண்டு, வேலைக்குச் சேரும் வயதை 13 என உயர்த்தியது. மீண்டும் 1935–ஆம் ஆண்டு திருத்தப்பட்டு, 13 வயது 15–ஆக உயர்த்தப்பட்டது. பின், அச்சட்டம் விலக்கப் பட்டு, இந்தியச் சுரங்கங்கள் சட்டம், 1952 நடைமுறைக்கு வந்தது. அதன்படி 15-இலிருந்து 17 வயதுக்

குட்பட்டவர்கள் சுரங்கங்களில் வேலைக்குச் சேர அனுமதியளித்தது. அவர்களுடைய வேலை நேரம் ஒரு நாளைக்கு 4½ மணி நேரம் இருக்க வேண்டும் என்று நிருணயித்தது. அவர்கள் நிலத்தடிச் சுரங்கப்பணி களிலும், இரவுப் பணிகளிலும் (மாலை 6 இலிருந்து கலை 6 மணி வரை) ஈடுபடுத்தப்படக் கூடாது என் றும் அச்சட்டம் விதித்தது.

மலைத் தோட்டங்களிலும் குழந்தைத் தொழி லாளர்கள் பணியாற்றியதால் 1951-இல் மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் என்ற சட்டம் இயற்றப்பட்டு, அது 12 வயதுக்குட்பட்ட குழந்தை கள் மலைத் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப் படுவதைத் தடை செய்தது.

அச்சட்டங்களேயன்றி, வேறு பல சட்டங்களும் குழந்தைத் தொழிலாளர்களை அமர்த்துவதைக் கட்டுப்படுத்தின. இந்திய வாணிகக் கப்பல்துறைச் சட்டம் 1923-இல் இயற்றப்பட்டது. அது பயணிகள் மற்றும் வாணிகக் கப்பல்களில், 14 வயதுக்குட்பட்ட வர்களை வேலையில் அமர்த்துவதைத் தடை செய்தது.

வட இந்தியாவில் பெற்றோர்கள் தாம் பணி புரியும் முதலாளிகளிடம் தாம் வாங்கிய கடனுக்குத் தம் பிள்ளைகளைத் தொழிற்சாலைகளில் காலவரை யறையில்லாமல் வேலை செய்ய அடைமானம் வைப் பார்கள். இத்தகைய போக்கு சமுக்காள விரிப்பு, பீடி ஆகிய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உண்டு. தென்னிந்தியாவிலும் தீப்பெட்டித் தொழிலாளர்களிடையே இவ்வகைப் போக்கு உண்டு. இந்தவழக்கத்தை 1933 ஆண்டுக் குழந்தைகள் சட்டம் தடை செய்தது. இச்சட்டம் 15 வயதுக்குட்பட்டவர்களைக் குழந்தைகளாகக் கருதி அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது.

குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுதல் சட்டம் 1938-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அச் சட்டம் இரயில்வேக்களில் பயணிகள், பொருள்கள் அல்லது தபால்களை அனுப்புவது, துறைமுக வேலை கள்ஆகியவற்றில் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பணியில் அமர்த்துவதைத் தடை செய்தது. குழந்தை கள் 15-இலிருந்து 17 வயதுக்குட்பட்டவர்கள் பணி யாளர்களாக அமர்த்தப்பட்டால், அவர்களுக்கு ஒரு நாளைக்குக் குறைந்தது 12 மணி நேரம் தொடர்ச்சி யாக ஓய்வு இடைவேளை தரப்பட வேண்டும் என் றும், அந்த 12 மணி நேரத்தில் 7 மணி நேரம் இரவு 10-இலிருந்து காலை 7 மணி வரைக்குள்ள காலத்தில் அமைய வேண்டும் என்றும் பணித்தது.

கடைகளிலும் உணவு விடுதிகளிலும் பிற வணிக நிறுவனங்களிலும் குழந்தைகள் வேலை செய்வது தடை செய்யப்பட்டு இருக்கிறது. மாநிலங்கள் இதற் காகத் தனித் தனியாகச் சட்டங்கள் இயற்றியுள்ளன. தமிழ்நாடும் உத்தரப்பிரதேசமும் 14 வயதுக்குட்பட் டவர்களையும், மகாராட்டிரமும் ஆந்திரப் பிரதேச மும் 12 வயதுக்குட்பட்டவர்களையும் இத்தகைய சட்ட முறையிலான தடையின் கீழ்க் கொண்டுவந்தி ருக்கின்றன.

பொதுவாக மாநிலங்கள் தொழில் துறையிலும், வாணிகத் துறையிலும் 14 வயதுக்குட்பட்ட சிறார் களைக் குழந்தைகள் எனத் தீர்மானித்து, அவர்களை வேலையில் ஈடுபடுத்துவதைத் தடை செய்கின்றன.

இவற்றுக்கு மேலாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 24-ஆம் பிரிவு '14 வயதுக்குட்பட்ட எந்தக் குழந்தையும் எந்த ஒரு தொழிற்சாலை அல்லது சுரங்கத்தில் வேலையில் அமர்த்தப்படவோ வேறு எந்த ஓர் ஆபத்தான வேலையில் ஈடுபடுத்தப் படவோ கூடாது' என்று கூறுகிறது. 39 (ஈ) பிரிவு 'இளம் வயதுக் குழந்தைகளின் நலமும் வலிமையும் பாதிக்கப்படக் கூடாது' என்றும், 'குடிமக்களைப் பொருளாதாரத் தேவைக்காக அவர்களுடைய வயதுக்கு அல்லது சக்திக்கு ஒவ்வாத பணிகளில் ஈடு படுத்தக் கூடாது' என்றும் கூறுகிறது.

**குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையளவு**: இவ்வாறு அரசியலமைப்புச் சட்டமும், மத்திய, மாநில அரசுகளின் சட்டங்களும் 14 வயதுக்குட்பட்ட குழந் தைகளைத் தொழிற்சாலைகள், சுரங்கங்கள், வணிக நிறுவனங்கள் முதலியவற்றில் வேலைக்கு அமர்த்து வதைத் தடை செய்த போதிலும், மிகப்பல குழந்தைகள், வேலை செய்யத் திறமையும், உடல் வலிமையும் இல்லாத நிலையிலும் இவ்விடங்களில் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அதற்கு முதன்மை யான காரணம் குழந்தைகள் எளிதாகவும் மலிவாக வும் வேலைக்குக் கிடைப்பதுதான். குறைந்த 'ஊதியம் கொடுத்து, அவர்களிடமிருந்து நிறைய உழைப்பைப் பெற முடியும்.

அனைத்து நாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation) உலகில் பல்வேறு துறைகளில் 52 மிலியன் குழந்தைகள் தொழிலாளர் களாகப் பணியாற்றுவதாக 1978-ஆம் ஆண்டில் கணக் கிட்டுள்ளது. இவர்களுள் 3 மிலியன் தென் அமெரிக் காவிலும், 10 மிலியன் ஆப்பிரிக்காவிலும், 29 மிலியன் தெற்கு ஆசியாவிலும், 9 மிலியன் கிழக்கு ஆசியாவிலும், மீதி 1 மிலியன் வளர்ச்சியடைந்த

நாடுகளிலும் பணியாற்றுகின்றனர். 38 மிலியன் ஆசியக் குழந்தைத் தொழிலாளர்களில் 17 மிலியன் (44.7 விழுக்காடு) இந்தியாவில் உள்ளனர்.

இந்த 17 மிலியன் குழந்தைத் தொழிலாளர்கள் இந்திய மொத்தத் தொழிலாளர் தொகையில் 8 விழுக்காடு இருக்கிறார்கள். இவர்களில் 79.4 விழுக்காட்டினர் வேளாண்மை வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். வேளாண்மைத் தொழிலாளர் பற்றிய ஆய்வின்படி (1956-57), வேளாண்மைத் தொழிலாளர்களில் குழந்தைத் தொழிலாளர்கள் 7.7 விழுக்காடு உள்ளனர். இவர்கள் வயது வந்தோரைப் போலவே நிலத்தை உழுவதிலிருந்து அறுவடை செய்வதுவரை எல்லாப் பணிகளிலும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஊதியம் பணமாக அல்லது உணவுத் தானியமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால், அவர்கள் செய்யும் வேலையின் அளவுக்கேற்ப ஊதியம் இருப்பதில்லை.

மீதியுள்ள குழந்தைத் தொழிலாளர்களில் ஏறத்தாழ 12 விழுக்காட்டினர் தொழில் துறையில் பணிபுரிகின்றனர். இந்தப் 12 விழுக்காட்டில் 7 விழுக்காடு தொழிற்சாலைகள், சுரங்கங்கள், கற்சுரங்கங்கள் முதலியவற்றிலும் மீதி 5 விழுக்காட்டினர் குடிசைத் தொழில்கள், கைவினைத் தொழில்கள் முதலியவற்றிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

தொழிற்சாலைகள் சட்டம் போன்ற தொழில்-தொழிலாளர் சட்டங்களின் ஆளுமையின் கீழ் வரும் தொழிற்சாலைகளில், வயதைக் கூட்டிக் காட்டியோ பெயர்களைப் பதிவேடுகளில் எழுதாமலோ குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டு விடுகின்றனர். மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் குழந்தைத் தொழிலாளரின் எண்ணிக்கை 1971-ஆம் ஆண்டு 0.05 விழுக்காடுதான். அதுவும் இரசாயனங்கள், இரசாயனப் பொருள்கள், உலோகமல்லாத தாதுப் பொருள்கள் ஆகியவை தொடர்பான தொழிற்சாலைகளில்தான் அவர்கள் பெரும்பாலும் காணப்படுகின்றனர்.

சுரங்கங்களிலும் குழந்தைத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை ஓரளவு இருக்கிறது. இந்தியச் சுரங்கங்கள் சட்டம் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளைச் சுரங்கங்களில் வேலைக்கு அமர்த்துவதைத் தடைசெய்தபோதிலும், மொத்தச் சுரங்கத் தொழிலாளர் தொகையில் குழந்தைத் தொழிலாளர்கள் 2.5 விழுக்காடு இருக்கிறார்கள்.

தொழில் துறையில் குழந்தைத் தொழிலாளர்கள் மிகுதியாக இருப்பது சட்டங்களின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் வாராத தொழிற்சாலைகளில்தான். பீடி, சமுக்காள விரிப்பு, முந்திரி, தீப்பெட்டி, அப்ரகம் (Mica), அவலரக்கு (Shellac), கண்ணாடி வளையல் முதலியவை அத்தகைய தொழிற்சாலைகளாகும்.

பீடித் தொழிற்சாலைகள் நாடு முழுவதும் பரவிக் கிடக்கின்றன. இவற்றில் மிகப்பல குழந்தைகள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பீடி இலைகளைச் சுருட்டிப் பீடியாக்குவதற்குத் தளிர் விரல்களே ஏற்றவை என்பதால் குழந்தைகள், முக்கியமாக 5-இலிருந்து 7 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். இவர்கள் நாள் ஒன்றுக்கு 10-இலிருந்து 12 மணி நேரம் வரை வேலை செய்கிறார்கள். ஆயினும் பெறும் ஊதியமோ மிகக் குறைவு.

சமுக்காள விரிப்புத் தொழிற்சாலைகள் உத்தரப் பிரதேசம், சம்மு&காசுமீர், பஞ்சாபு ஆகிய மாநிலங்களில் மிகுதியாக உள்ளன. இத்தொழிற்சாலைகளில் சுமார் 1.5 இலட்சம் அளவுக்கு 6-இலிருந்து 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வேலை செய்கிறார்கள். நாள்தோறும் அவர்கள் 12 மணி நேரம் வேலை செய்தாலும், 3-இலிருந்து 10 உருபாய் வரையிலான ஊதியமே அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. கேரளாவிலும், தமிழ்நாட்டிலும் முந்திரித் தொழிற்சாலைகளில் கணிசமான அளவுக்குக் குழந்தைத் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். இம்மாநிலங்களில் முந்திரித் தொழிற் சாலைகளின் மொத்த ஊழியர்களில் முறையே 13.2 விழுக்காடும் 4.7 விழுக்காடும் குழந்தைகளே.

குழந்தைத் தொழிலாளர்கள் மிகுதியாகக் காணப்படும் மற்றொரு தொழில் தீப்பெட்டித் தொழில். தமிழ் நாட்டில் சிவகாசிப் பகுதியில் மட்டும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் சுமார் 45,000 குழந்தைத் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் 8-இலிருந்து 12 வயதுக்குட்பட்டவர்கள். 3 வயது நிரம்பாத குழந்தைகள் கூடத் தொழிலாளர்களாகப் பணி புரிகிறார்கள். இவர்களுடைய வேலை நிலைமைகள் பரிதாபமானவை. ஒரு நாளைக்குப் 11-இலிருந்து 13 மணி நேரம் வரை இவர்கள் வேலை செய்கிறார்கள். சில வேளைகளில் 16 மணி நேரம் கூட இவர்கள் வேலை செய்வதுண்டு. ஆனால், இவர்களுக்குக் கிடைக்கிற ஊதியமோ ஒரு நாளைக்குச் சராசரியாக 2 உருபாய் மட்டுமே.

அப்ரகம், அவலரக்குத் தொழிற்சாலைகளிலும் இதே நிலைதான் காணப்படுகிறது. நாட்டில் உள்ள

அப்ரகத் தொழிற்சாலைகளில் மொத்தத் தொழிலாளர்களில் 30 விழுக்காடும் அவலரக்குத் தொழிற்சாலைகளில் 10 விழுக்காடும் குழந்தைகளே. அவர்களுள் பெரும்பான்மையோர் 6-இலிருந்து 10 வயதுக் குட்பட்டவர்கள். அவர்களுடைய வேலை நேரம் மிகுதி. ஊதியம் குறைவு; வேலை நிலைமைகளும் கடின மானதாகும்.

குழந்தைத் தொழிலாளர்கள் கணிசமாகக் காணப்படும் மற்றொரு தொழில் கண்ணாடி வளையல் உற்பத்தி, உத்தரப் பிரதேசத்தில் பெரோசாபாத்து நகரில் மட்டும் 8000-இலிருந்து 9000 அளவுக்குத் தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் 35 விழுக்காடு 12வயது கூட நிரம்பாத குழந்தைகள். அவர்களுக்கு எந்த வேலைப் பாதுகாப்பும் இல்லை. கொதிக்கிற கண்ணாடிக் குழம்பைக் கையாளுகிற அவர்களுக்குக் கண்ணாடியோ கையுறையோ செருப்போ எதுவும் கொடுக்கப்படுவது கிடையாது. கொதிக்கிற உலைகளுக்கு அருகில் கடுமையான வெப்பச் சூழலில் பணி புரிந்தாலும் அவர்களுக்கு எந்தவிதபாதுகாப்புச் சாதனமும் தரப்படுவதில்லை. அவர்கக்ளுகு ஒரு நாளைக்குக் கிடைக்கும் ஊதியம் 9 உரூபாய்தான்.

மலைத் தோட்டங்களிலும் குழந்தைகள் அதிகமாக வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். மலைத் தோட்டப் பணியாளர்களில் 10.4 சதவீதம் குழந்தைகளே என 1950-51 ஆம் ஆண்டு நடந்த ஓர் ஆய்வு கூறுகிறது. அதுவும் அவர்களில் 12-இலிருந்து 14 வயதுக்குட்பட்டவர்களே மிகுதி (54-இலிருந்து 63 விழுக்காடு வரை). அவர்கள் பெரும்பாலும் களையெடுத்தல், உரமிடுதல், நாற்றங்கால்களைப் பேணுதல், தேயிலை, காப்பிக் கொட்டை பறித்தல் முதலிய வேலைகளைச் செய்கிறார்கள்.

மரவேலை, மரச் சாமான்கள் செய்தல், அச்சுத் தொழில், புத்தகக் கட்டுதல், தோல் பதனிடுதல், தோல் பொருள்கள் செய்தல், கம்பளம் சுத்திகரித்தல், இரப்பர் பொருள்கள் செய்தல், துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல், சலவை செய்தல், கட்டுமானப் பணி, சாலைகள், பாலங்கள் அமைக்கும் பணி முதலியவற்றிலும் குழந்தைகள் வேலை செய்கிறார்கள். மேலும் எண்ணற்ற அளவுக்குக் குழந்தைகள் வீடுகள், உணவகங்கள், சிற்றுண்டி விடுதிகள், தங்கும் விடுதிகள், உண்டுறை விடுதிகள், கடைகள் முதலியவற்றில் வேலைக்கா ரர்களாகவும், இரயில்/பேருந்து நிலையங்கள், சந்தைகள் முதலியவற்றில் சுமை தூக்கும் கூலிகளாகவும் பணியாற்றுகிறார்கள். செய்தித்தாள் விற்றல், சில்லரைச் சாமான்கள் விற்றல், ஓட்டை உடைசல்களைச் சரி செய்தல், குப்பைக் காகிதங்கள் பொறுக்கி விற்றல் முதலிய சில்லரை வேலைகளிலும் கூட மிகப்பல குழந்தைகள் ஈடுபடுகிறார்கள்.

**வேலை நிலைமைகள்**: இவ்வாறு பல துறைகளிலும் குழந்தைகள் மிகுதியாகப் பணியாற்றுகிறார்கள். சென்னை, மதுரை, கோவை முதலிய ஊர்களில் நடந்த சில ஆய்வுகளின்படி, பெரும்பாலும் ஒரு நாளைக்கு 10 மணி நேரத்திற்கு மேல் இவர்கள் வேலை செய்கிறார்கள். 31.6 விழுக்காடு குழந்தைத் தொழிலாளர்கள் 10-இலிருந்து 11 மணி நேரம் வரையிலும்; 23 விழுக்காட்டினர் 12-இலிருந்து 13 மணி நேரம் வரையிலும்; 12 விழுக்காட்டினர் 14 இலிருந்து 16 மணி நேரம் வரையிலும் வேலை செய்கிறார்கள்.

ஒரு பக்கம் குழந்தைத் தொழிலாளர்களுக்கு வேலை நேரம் கூடுதலாக இருக்க, மற்றொரு பக்கம் அவர்களுக்கு ஓய்வு இடைவேளை மிகக் குறைவாக இருக்கிறது. பொதுக் கூட்டுரிமை மற்றும் குழந்தை மேம்பாட்டுத் தேசிய கழகம் (National Institute of Public Corporation and Child Development) என்ற அமைப்பு பம்பாயில் நடத்திய ஓர் ஆய்வில் 8 விழுக்காடு குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஓய்வு இடைவேளை கிடைப்பதில்லை; 33 விழுக்காட்டினருக்கு அரை மணி நேர ஓய்வு இடைவேளைதான் கிடைக்கிறது; 46 விழுக்காட்டினருக்கு 1-இலிருந்து 2 மணி நேரம் வரை ஓய்வு இடைவேளை கிடைக்கிறது; 5 விழுக்காட்டினருக்குக் குறிப்பிட்ட நேரம் என்றில்லாமல் அவ்வப் பொழுது சற்று ஓய்வு இடைவேளை கிடைக்கிறது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர்களில் 53 விழுக்காட்டினருக்கு எந்த விடுமுறையும் கிடையாது. மீதியுள்ளவர்களில், 11 விழுக்காட்டினருக்கு விடுமுறைக்குப் பதிலாகத் தற்காலிக விடுப்பும், 5.2 விழுக்காட்டினருக்கு ஈட்டிய விடுப்பும் (Earned Leave), 28 விழுக்காட்டினருக்கு நோய்க்கால விடுப்புந்தான் தரப்படுகின்றன. நோய்க்கால விடுப்புப் பெறுவோருக்குச் சில வேளைகளில் ஊதியம் கொடுக்கப்படுவதுண்டு; பல வேளைகளில் கொடுக்கப்படுவது கிடையாது.

ஊதிய நிலைமையும் இவ்வாறே குறைவாக உள்ளது. கல்கத்தாவில் 1985-இல் உளவியல் மற்றும் கல்வி ஆராய்ச்சிக் கழகம்(Institute of Psychological and Educational Research) என்ற அமைப்பு, பம்பாயில் நடத்திய ஓர்ஆய்வில் குழந்தைத் தொழிலாளர்

கள் வயது வந்த தொழிலாளர்கள் பெறும் ஊதியத்தில் 10 சதவீதந்தான் பெறுகிறார்கள் என்று கண்டறியப்பட்டது. தில்லியில் நடந்த ஓர் ஆய்வின்படி, குழந்தைத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குக் குறைந்த அளவு 60 உரூபாய்க்கும் குறைவாகத்தான் ஊதியம் கிடைக்கிறது என்பதும், அதிகமாக 80 உரூபாய்தான் கிடைக்கிறது என்பதும் கண்டறியப்பட்டன.

**காரணங்கள்**. குழந்தைகள் பொதுவாக 6 வயதிலேயே தொழிலாளர் வேலைக்கு வந்து விடுகிறார்கள். பொதுக் கூட்டுறவு மற்றும் குழந்தை மேம்பாட்டுத் தேசிய கழகம் பம்பாயில் நடத்திய ஆய்வில் 30 விழுக்காடு குழந்தைத் தொழிலாளர்கள் 6-இலிருந்து 9 வயதுக்குள்ளும், 27 விழுக்காட்டினர் 13-இலிருந்து 15 வயதுக்குள்ளும் வேலைக்குச் சேருகிறார்கள் என்பது கண்டறியப்பட்டது.

இப்படி இளம் வயதிலேயே குழந்தைகள் வேலைக்கு வரக் காரணம் முக்கியமாகக் குடும்ப வறுமையே. குடும்ப வருமானம் போதாத நிலையில், அந்த வருமானத்தைப் பெருக்கக் குழந்தைகளும் வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். சென்னைச் சமூகப் பணிக் கல்லூரி 1977-ஆம் ஆண்டில் சென்னையில் நடத்திய ஓர் ஆய்வில், 55 விழுக்காடு குழந்தைத் தொழிலாளர்கள், மாத வருமானம் 300 உரூபாய்க்கும் குறைவான குடும்பங்களிலிருந்து வருகின்றனர் என்றும், குழந்தைத் தொழிலாளர்களில் 72 விழுக்காட்டினர் தம் குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காகவே வருகின்றனர் என்றும் தெரிய வந்தது. வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்ந்து கொண்டே போகும் நகரங்களில் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை மிகுந்து வரும் போக்கு இதை உறுதி செய்கிறது. எடுத்துக்காட்டாக, தில்லியில் 1961-இல் 10, 500-ஆக இருந்த குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை 1971-இல் 14,800-ஆக உயர்ந்தது.

**விளைவுகள்**: குழந்தைகள் தொழிலாளர்களாக வேலைக்கு வருவதால் குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைக்கிறார்கள். தொழிலதிபர்களுக்கு இது ஒரு வகையில் நன்மையாகும். பெற்றோர்களுக்குத் தம் பிள்ளைகள் வேலைக்குப் போய் ஊதியம் பெற்று வருவதால், குடும்பத்தின் வருமானம் கூடுகிறது. வறுமையின் கடுமை குறைகிறது.

ஆனால் இடர்ப்படுவதோ அந்தக் குழந்தைத் தொழிலாளர்கள்தாம். சிறு வயதிலேயே வேலைக்குப் போவதால் அவர்களுடைய உடல் வலிமை தேய்ந்து உடல் நலம் கெடுகிறது. மேலும், நல்டுவாழ்வைக் கெடுக்கும் சூழ்நிலைகளில் பணிபுரிவதால் நோய்த் தாக்குதலுக்கும் ஆளாகிறார்கள். மேற்கு வங்காளத்திலுள்ள மூர்சிதாபாத்து என்னும் நகரில் நடந்த ஒரு நல ஆய்வில் 10-இலிருந்து 14 வயதுக்குட்பட்ட பீடித் தொழிலாளர்களில் 9 விழுக்காட்டினருக்கு நாள்பட்ட மார்புச் சளி நோயும் (Bronchitis) 10 விழுக்காட்டினருக்கு இரத்தச் சோகை நோயும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்குக் கல்வி வாய்ப்புப் பறிபோய் விடுவதால், அவர்கள் நல்ல ஆளுமை கொண்டவர்களாக விளங்க முடியாமற் போகிறது. அவர்கள் கல்வி அறிவு பெறமுடியாது வளர்ந்த நிலையில் அவர்களை உள்ளடக்கிய தொழிலாளர் தொகை பொதுவில் திறமையும் ஆற்றலும் குறைந்ததாக இருக்க நேரிடுகிறது. குறைவான ஊதியத்தில் குழந்தைகள் வேலைக்குக் கிடைப்பதால், தொழிலதிபர்கள் இலாப நோக்கில் வயது வந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தாமல், குழந்தைகளுக்கு அதிக அளவில் வேலை கொடுக்கிறார்கள். அதன் காரணமாக வயது வந்தவர்களுக்கு உரிய வேலை வாய்ப்புக் கிடைக்காமல் அவர்களிடையே வேலையின்மை நிலை ஏற்படுகிறது. ஒரு மதிப்பீட்டின்படி, குழந்தைத் தொழிலாளர்களின் குறுக்கீட்டினால் இந்தியாவில் 15 மிலியன் வயது வந்தவர்களுக்கு வேலை கிடைக்காமற் போகிறது. அவர்களுடைய வேலையின்மைச் சிக்கலால் சமூகம் கொந்தளிப்புக்கு ஆளாக நேரிடுகிறது.

இத்தகைய விளைவுகளை நோக்குமிடத்து, குழந்தைகள் தொழிலாளர்களாக ஆவதைத் தடுக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. இதற்கு இரு வழிகள் இருக்கின்றன. ஒன்று ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஓரளவு நல்ல முறையில் குடும்ப வாழ்க்கை நடத்தப் போதுமான ஊதியமும், சமூகக் காப்புறுதி வசதிகளும் செய்து தரப்படவேண்டும். இரண்டாவதாக, அரசியலமைப்புச் சட்டம் 45-ஆம் பிரிவு வலியுறுத்துவதைப் போல, 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளித்து, அவர்களைப் பள்ளிகளில் கல்விகற்கச் செய்ய வேண்டும். சி.என்.ந.

**துணை நூல்கள்**:

**Bhagoliwal, T.N.**, Economics of Labour and Industrial Relations, Sahitya Bhawan, (Agra), 1985.

**Gangrade. R. D.**, A Grim Tale of Poverty and exploitation, Indian Express, Madurai ed., 1978.

Mauroria, C.B., and Mauroria, Satiya, Industrial Labour, Social Security and Industrial Peace in India, Kitab Mahal, Allahabad, 1984.

Tyagi, B.P., Labour Economics and Social Welfare, 3rd ed. Jai Prakash Nath & Co., Meerut 1982.

**குழந்தை நலம்**: ஒரு குழந்தையின் நலம் அது வளரும் சுற்றுப்புறச் சூழ்நிலையையும், வளர்க்கப்படும் முறையையும், உணவையும், நோய்த்தடுப்பு –நோய் நீக்கும் மருத்துவ முறைகளையும் பொறுத்து அமைகிறது. இவற்றில் ஏதாவது ஒன்றில் குறை ஏற்பட்டாலும் அதன் விளைவாகக் குழந்தையின் உடல்நலம் குன்றுகிறது.

**சுற்றுப்புறம்**: சுற்றுப்புறம் தூய்மையாக இருந்தால் ஒழியக் குழந்தை நலமாக வளரமுடியாது. குப்பையும் கூளமுமாகத் தூய்மையற்றுக் காற்றோட்டமில்லாமல், நலவாழ்வுக்குக் கேடுவிளைவிக்கும் சுற்றுப்புறச் சூழ்நிலையில் எந்தக் குழந்தையும் நலமாக வளரமுடியாது. இத்தகைய சூழ்நிலையில் எந்தக் குழந்தையும் அது எப்படி வளர்க்கப்பட்டாலும் நலமாக இருக்கமுடியாது. தூய்மையற்ற சுற்றுப்புறச் சூழ்நிலை தொற்றுநோய்க் கிருமிகளுக்கு இடம்கொடுத்து, நோய்கள் பெருகவும், அதனால் குழந்தைகளின் உடல்நலம் கெடவும் வழிவகுக்கும்.

**வளர்ப்பு முறை**: குழந்தையின் நலத்திற்குக் குளியல் மிகவும் தேவை. ஆயினும் அது பிறந்ததும் தொப்புள்கொடி விழும்வரை அதைக் குளிப்பாட்டக் கூடாது. அப்படிக் குளிப்பாட்டினால் தொப்புள் கொடி நனைந்து தொப்புளில் சீழ் உண்டாகிக் குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டு அதன் உடல்நலம் கெடக்கூடும். ஆகவே, தொப்புள்கொடி விழும்வரை ஈரத்துண்டால் தினமும் குழந்தையைத் துடைத்து விடுவது நல்லது.

குழந்தையைக் குளிப்பாட்டும்போது இளஞ்சூடான வெந்நீரில் குளிப்பாட்டுவது நல்லது. காற்றோட்டமான இடத்தில் குளிப்பாட்டவேண்டும். குளிப்பாட்டும்போது நீர் குழந்தையின் காது, மூக்கு, வாய் இவற்றினுள் போய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குழந்தையைத் தூங்க வைக்கும்போது, அதற்கெனத் தனிப் படுக்கை இருத்தல் அவசியம். அந்தப் படுக்கை காற்றோட்டம் உள்ள இடத்தில் அமைவது இன்னும் அவசியம். குழந்தைக்குத் துணியால் தொட்டில் கட்டி அதில் தூங்க வைக்கும் பழக்கம் இந்தியாவில் இருந்துவருகிறது. இது எளிய முறைதான். ஆயினும் இதனால் குழந்தைக்குப் பல தீங்குகள் உண்டாகக்கூடும். குழந்தை இதில் தாராளமாகப் படுத்துப்புரள முடியாது. குப்புறக் கவிழ்ந்துவிட்டால் புரளமுடியாமற் போய்க் குழந்தை மூச்சு முட்டி இறக்கக்கூடும். இதில் தூங்குவதால் குழந்தைக்குப் போதிய காற்றோட்டம் கிடைக்காது. மேலும் குழந்தை இதில் நெஞ்சையும் உடலையும் குறுக்கிக் கொண்டுதான் படுக்கமுடியும். இதனால் குழந்தையின் நுரையீரல்கள் விரிவடைய முடிவதில்லை. அதனால் மார்பில் சளி உண்டாகி மூக்கடைப்பு ஏற்படும். ஆகவே, குழந்தையை ஒரு பிரம்புத் தொட்டிலில் இட்டுப் படுக்கவைப்பது நல்லது. ஏனெனில் அதன் நான்கு பக்கங்களிலிருந்தும் காற்று வர வழியுண்டு. மேலும், அதில் குழந்தை புரண்டு படுக்கப் போதிய இடம் இருக்கும். பிரம்புத் தொட்டிலினுள் ஒரு சிறிய மிருதுவான மெத்தையைப் போட்டுக் குழந்தையைப் படுக்கவைப்பது நல்லது.

**உணவு**: பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால்தான் சிறந்த உணவு. அதில்தான் இயற்கையின் பல சத்துகள் அடங்கியுள்ளன. இச்சத்துகள் குழந்தையின் நலத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுகின்றன. மேலும் தாய்ப்பால் எப்பொழுது வேண்டுமானாலும் கொடுப்பதற்கு உடலின் சூட்டோடு தயாராக இருக்கிறது. இது மற்றப் பால்களைப் போலக் கிருமிகளால் தாக்கப்படுவதில்லை. ஆகவே, தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு வாந்தி, பேதி முதலிய நோய்கள் வருவதில்லை. படை, செரிமானமில்லாக் கோளாறு ஆகிய துன்பங்களும் வருவதில்லை.

குழந்தை பிறந்து சுமார் 12 மணி நேரம் சென்றவுடன் தாய்ப்பால் கொடுக்கத் தொடங்கலாம். சாதாரணமாகத் தாய்மார்களுக்கு நான்கு நாள்கள் கழித்துத்தான் மார்பில் பால் சுரக்கும். இந்த நான்கு நாள்கள் வரை முதல்தாய்ப்பால்(Colostrum) என்னும் திரவம் வெளிவரும். இது மஞ்சள் நிறத்தில் இருக்கும். சில தாய்மார்கள் குழந்தையின் உடலுக்கு இந்தத் திரவம் நன்மைபயக்காது என்று கருதுகிறார்கள். இது தவறு. இத் திரவத்தில் புரதச்சத்து அதிகமாக உள்ளது. தாய்ப்பாலைவிட இதில்தான் புரதச்சத்து அதிகம். எனவே, இத்திரவத்தைக் குழந்தைகளுக்குக் கொடுப்பது மிக நல்லது.

தாய்ப்பால் கொடுக்கமுடியாமற் போனால், குழந்தைக்குப் பசும்பால் கொடுப்பது நல்லது. பசும்பாலை நன்றாகக் கொதிக்கவைத்துத் தரவேண்டும்.

ஏனெனில், பசும்பாலில் காச நோய்க் (Bovine T.B.) கிருமிகள் உண்டு. அதைக் கொதிக்க வைப்பதால் அக்கிருமிகள் அழிந்துவிடும். பாலில் உள்ள புரதச் சத்தும் நன்கு கரைந்து எளிதில் செரிக்கும். பால் கொடுக்கப் பயன்படும் புட்டியையும் வெந்நீரில் நன்றாகக் கழுவிச் சுத்தம்செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைக்கு மூன்று மாதம் ஆனதும் அதற்குப் பழச்சாறு கொடுத்து வருவது அவசியம். சாத்துக்குடியில் ஊட்டச்சத்து 'சி' நிறைய இருக்கிறது. இதைப் பழச் சாறாகக் குழந்தைக்குக் கொடுப்பது நல்லது. பழச்சாற்றினால் குழந்தைக்கு மலச்சிக்கல் ஏற்படாமல் இருக்கும்.

பொதுவாக, தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு மலச்சிக்கல் உண்டாகாது. ஏனெனில், தாய்ப்பாலில் குழந்தைக்குத் தேவையான உணவும் தண்ணீரும் மலமிளக்கும் தன்மையும் உள்ளன. ஆனால், தாய்ப்பால் குடிக்காத குழந்தைகளுக்கு மலச்சிக்கல் உண்டாக வாய்ப்புண்டு. காரணம், தாய்ப்பாலில் உள்ள சத்துகளும், அதன் மலமிளக்கும் தன்மையும் மற்றப் பாலில் இருப்பதில்லை.

பேதி மருந்து கொடுத்து மலச்சிக்கலைப் போக்கும் வழக்கம் இந்தியத் தாய்மாரிடத்தில் இருக்கிறது. ஆனால், பேதி கொடுப்பதனால் குடல் அதிக வேகமாகச் செயற்படும். குடலிலுள்ள செரிக்கப்படாத உணவுகளோடு செரிக்கப்பட இருக்கிற உணவுகளும் சேர்ந்து வெளியே தள்ளப்படும். இதனால், குழந்தைகளுக்குச் சக்தி குறையும். மேலும், உடல் உறுதிக்குத் தேவையான உயிர் உப்புச் சத்துகளும் (Electrolites) மலத்துடன் வேகமாக வெளியே தள்ளப்படும். இதனால், குழந்தைகளின் உடல் நலம் பாதிக்கப்படும். குடலும் அழன்று தளர்ந்துவிடும்.

ஆதலால், குழந்தைக்குப் பேதிமருந்து கொடுக்காமல் இருப்பது நல்லது. குழந்தைக்கு அடிக்கடி தண்ணீரும், நாள்தோறும் காலையிலும் மாலையிலும் இரண்டு அல்லது மூன்று அவுன்சு ஆரஞ்சுப்பழச் சாறும் கொடுத்து வந்தால் மலச்சிக்கல் வாராது. ஆரஞ்சுப்பழச்சாற்றில் உள்ள ஊட்டச்சத்து 'சி' மலமிளக்கும் தன்மை கொண்டதால் அது மலச்சிக்கல் வாராமல் தடுக்கும்.

நான்காம் மாதம் முதல் குழந்தைக்குக் காய்கறிகளைக் கொதிக்கவைத்து எடுக்கப்படும் சாற்றுடன் பருப்புச் சோறும் சேர்த்துச் சிறிது உப்பு, மிளகு சேர்த்துச் சுமார் இரண்டு அவுன்சு வரை மதியம் கொடுக்கவேண்டும். இது குழந்தையின் உடல் நலத்திற்கு ஏற்றது. குழந்தைக்கும் இதனால் நல்ல பசி உண்டாகும்.

நான்கு மாதம் முதல் குழந்தைக்கு இரும்புச் சத்து உள்ள நன்மருந்து (Tonic) அல்லது சொட்டு மருந்து கொடுக்கவேண்டும், குழந்தையின் இரத்த விருத்திக்கு இது தேவை. தாய்ப்பாலிலும் பசும் பாலிலும் இந்தச் சத்துக் குறைவாகவே உள்ளது.

குழந்தைக்கு ஆறுமாதம் முடியும்போது பல் முளைக்கத் தொடங்கிவிடும். அப்பொழுது அரிசிக் கஞ்சியைப் பாலுடனோ தயிருடனோ சேர்த்துக் கொடுக்கத் தொடங்கலாம். பின்னர்க் கடைந்த பருப்பு, கடைந்த கீரை, குழைந்த காய்கறிகள், எலும்புச் சாறு, இட்லி, இடியப்பம், வாழைப்பழம் என்று ஒவ்வொன்றாகச் சேர்க்கத் தொடங்கலாம்.

வளரும் குழந்தைக்குத் தினமும் ஓரிரு கரண்டி மீன் எண்ணெய் அல்லது மீன் எண்ணெய் 'நன்மருந்துகள்' கொடுப்பது நல்லது. ஊட்டச்சத்துச் சொட்டு மருந்துகளும் கொடுப்பது நல்லது.

**குழந்தை நோய்கள்**: குழந்தைக்கு நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. பொதுவாகக் குழந்தைக்கு ஏற்படும் நோய்கள் இருவகையானவை. ஒன்று, தொற்று நோய்கள். மற்றொன்று, ஊட்டச்சத்துக் குறைவு நோய்கள். கிருமிகள் தொற்றுவதால் பரவும் நோய்கள் தொற்று நோய்கள். உணவில் உடல்நலத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான ஊட்டச்சத்துகள் குறைந்தோ இல்லாமலோ இருந்தால் அவற்றால் ஏற்படும் நோய்கள் ஊட்டச்சத்துக் குறைவு நோய்கள் எனப்படும்.

இளம் வயதில் ஏற்படும் காசநோய், கக்குவான், இருமல், தொண்டை அடைப்பான் நோய், இரண சன்னி, அம்மை, மணல் வாரி, அம்மைக் கட்டு, காலரா, நச்சுக்காய்ச்சல் (Typhoid), இளம்பிள்ளை வாதம், சொறி சிரங்கு முதலியன தொற்று நோய்களுள் முக்கியமானவை. ஒரு நோயாளியிடமிருந்து வெளிவரும் கிருமிகள் குழந்தையைத் தொற்றுவதால் இந்நோய்கள் உண்டாகும். குழந்தையின் உடல் மென்மையாக இருப்பதால் இக்கிருமிகள் குழந்தையின் உடலில் மிக எளிதாகத் தொற்றிக்கொள்ளுகின்றன. இதனால், குழந்தையின் உடல்நலம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது.

**இளம் வயது காசநோய்**: பொதுவாக, காச நோய் பெரியவர்களைவிடக் குழந்தைகளையே அதிகமாகத் தாக்குகிறது. இந்தியாவில் நூற்றுக்கு 35 குழந்தைகள்

காச நோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றன என்று ஓர் ஆய்வு கூறுகிறது.

இந்நோய் ஒரு குழந்தையைத் தாக்கும்போது முதலில் அதன் நுரையீரலைத் தாக்குகிறது. அங்கிருந்து நிணநீர்ச் சுரப்பிகளைப் (Lymph Glands) பாதித்துப் பிறகு இரத்தத்தில் கலந்துவிடுகிறது. குழந்தைக்கு நோய்த்தடுப்புச் சக்தி குறைவாக இருந்தால் இந்நோய் மூளை, சிறுநீரகம், கல்லீரல், எலும்புகள், கழலைகள், மூட்டுகள் ஆகியவற்றையும் பாதிக்கிறது.

தொடக்கத்திலிருந்து குழந்தைக்குப் பால், தயிர், மீன் எண்ணெய் முதலியன கொடுத்து வந்தால் குழந்தை உடல்நலத்தோடு இருப்பதால் இந்த நோயும் அதை அணுகுவதில்லை. பாலில் காசநோய்க் கிருமிகள் உண்டு. எனவே, அதைக் காய்ச்சித்தான் குழந்தைக்குத் தரவேண்டும்.

இந்நோய் வாராமல் தடுக்கவும், ஒருவேளை வந்தாலும் அது உடலைப் பாதிக்காதவகையில் உடலில் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொள்ளவும் தடுப்பு ஊசி மருந்தைக்(B.C.G. Vaccine) குழந்தைக்குச் சோதனை செய்து போடவேண்டும். குழந்தை பிறந்தவுடன் இதைப் போடுவது நல்லது. இதன் தடுப்புச் சக்தி சுமார் பத்து ஆண்டுகள் வரை இருக்கும். ஆகவே, சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை சோதனை செய்து தடுப்பு ஊசி போடுவது நல்லது.

**கக்குவான்**: இந்த நோய் எளிதாகக் குழந்தைகளுக்குத் தொற்றிக்கொள்ளக் கூடியது. இந்த நோய் பீடிக்கும் குழந்தைக்குத் தொடர் இருமலும், சளியும் உண்டாகும். மூச்சு இழுப்பு ஏற்படும். வாந்தியும், சில நேரங்களில் இருமலினால் நுரையீரல்கள் அழன்று சளியில் இரத்தமும் வரும். மேலும், நுரையீரல்கள் அழற்சியுறுவதால் சளிக்காய்ச்சல் (Pneumonia), நுரையீரல் சலக்கட்டு (Lung Abscess), காசநோய் போன்ற நோய்கள் எளிதில் ஏற்படும்.

குழந்தைக்கு இந்நோய் வந்தவுடன் அதற்குக் கனமான உணவுகள் தரக்கூடாது. சிறு அளவில் உணவு கொடுக்க வேண்டும். தகுந்த மருத்துவ உதவி அளிக்க வேண்டும். இந்நோய் வந்தவுடன் அதைக் குணப்படுத்த வழி தேடுவதைவிட வாராமல் தடுப்பதே சிறந்த முறையாகும். இந்நோய்க்கும், இரண சன்னி நோய்க்கும் (Tetanus) தொண்டை அடைப்பான் நோய்க்கும் சேர்த்து முக்காப்பு மூலம்(Triple Antigen) என்ற தடுப்பு ஊசி போட்டால் இம்மூன்று நோய்களையும் ஏற்படாமல் தடுத்துவிடலாம்.

குழந்தை பிறந்து இரண்டு மாத முடிவிலும், பிறகு மூன்று, நான்கு மாத முடிவிலுமாக மூன்று தடவைகள் இந்தத் தடுப்பு ஊசியைக் குழந்தைக்குத் தொடர்ந்து போடவேண்டும். பிறகு குழந்தைக்கு ஒன்றரை வயது ஆனவுடன் நான்காம் தடவையாக இதே ஊசியைப் போட்டுவிட்டால் குழந்தைக்கு நீண்ட காலத்திற்கு நல்ல பாதுகாப்பு உண்டாகும்.

**தொண்டை அடைப்பான் நோய்**: இந்நோய் ஓர் ஆபத்தான நோயாகும். இது இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு உண்டாகும். இந்நோய் வந்த குழந்தைக்குக் காய்ச்சல், சளி, இருமல், தொண்டை வலி முதலியன தோன்றும். மேலும், குழந்தையின் வாயிலிருந்து எச்சில் தொடர்ந்து வடியும். குழந்தை, உணவு உட்கொள்ள இயலாது அவதியுறும். குழந்தை சுவாசிக்கும்போது 'கொர் கொர்' என்ற சத்தம் உண்டாகும்; மூச்சு விடமுடியாமல் அவதிப்படும்.

மேலும் தொண்டை அடைப்பான் நோய்க் கிருமிகளிலிருந்து ஒருவித நச்சுப்பொருள் (Toxin) தோன்றுகிறது. இந்த நச்சுப்பொருள் இரத்தத்தில் கலந்து குழந்தையின் உடலை வலிமையைக் குன்றச் செய்வதுடன் எந்த நேரத்திலும் இதயத்தைத் திடீரென்று தாக்கி இதயம் வேலை செய்யாமல் நிறுத்தி விடும்

குழந்தைகளுக்குத் தொண்டை அடைப்பான் நோய் (Diphtheria) வாராமல் தடுத்து விடலாம். முக்காப்பு மூலம் ஊசிமருந்தைப் போட்டு இந்நோய் வாராமல் தடுத்துவிடலாம். இந்த ஊசிமருந்தை நான்கு முறை போடவேண்டும்.

**இரண சன்னி**: உடலில் காயங்கள் ஏற்பட்டாலும் தொப்புள், காது, மூக்கு, தொண்டை முதலியவற்றில் இரணம் ஏற்பட்டாலும் இரண சன்னி என்னும் கொடியநோய் ஏற்பட வழியுண்டு. இரண சன்னி நோய்க் கிருமிகள் தூசி மூலம் பரவக்கூடியவை. இவை உடலில் ஏற்படும் காயங்களிலும் இரணங்களிலும் உறைந்து பெருகி, ஒருவித நச்சுப் பொருளை உற்பத்தி செய்து, நோயாளியின் இரத்தத்தில் கலந்துவிடும். இரத்தத்தின் மூலம் மூளைக்கும் பரவிவிடும். அதனால், உடல் முழுவதும் விறைத்தாற்போல அடிக்கடி குழந்தைக்கு வலிப்பு உண்டாகும். வாயும் கெட்டியாக மூடிவிடும். வாய் திறக்க இயலாது. வயிறும் கடினமாக ஆகிவிடும். இந்த சன்னியால் வலிப்பு மேலும் மேலும் மிகுந்து குழந்தை மூச்சுவிட முடியாமல் ஒரே வலிப்பில் மூச்சு நின்றுவிடக் கூடிய அபாயமும் ஏற்படும்.

இந்நோய் வந்துவிட்டால் குணப்படுத்துவது மிகவும் கடினம், ஆகவே இதை முன்கூட்டியே தடுப்பது

தான் நல்லது. 'முக்காப்பு மூலம்' என்ற ஊசி மருந்தினால் இதைத் தடுக்கலாம்.

**அம்மை**: குழந்தை பிறந்த மூன்று மாதத்திற்குள் அதற்கு அம்மை குத்திவிட வேண்டும். பின்பு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை குழந்தைக்கு அம்மை குத்துவது நல்லது. இப்படிச் செய்தால் குழந்தைக்கு நீண்டநாள் பாதுகாப்புக் கிடைக்கும். இவ்வாறு குழந்தைக்கு அம்மை குத்தாமல் விட்டுவிட்டால் பிற்காலத்தில் அம்மை உண்டானால், அது மிகக் கடுமையாவதுடன் கண் பார்வையைக் கெடுத்து, முகத்தை அழகிழக்கவைத்து உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடும்.

**மணல்வாரி**: இந்நோய் ஏற்பட்டால் குழந்தைக்கு சளிக் காய்ச்சலும் காதில் சீழ் வடிதலும் ஏற்படலாம். ஆகவே, இந்நோய் கண்ட குழந்தையைத் தனி அறையில் வைப்பது நல்லது. அம்மை குத்துவதன் மூலம் இந்நோய் வாராமல் தடுக்கலாம்.

**அம்மைக்கட்டு**: அம்மை நோய்களைப் போல அம்மைக்கட்டு (Mumps)நோயும் ஒருவகை நுண்ணிய கிருமிகளால் (Mumps Virus) ஏற்படுகிறது. இந்நோய் ஆண் குழந்தைகளைத் தொற்றியிருந்தால் அதிகக் கவனம் தேவை. சரியான சிகிச்சையும் அவசியம். ஏனெனில், இந்த நோய் அவர்களின் அண்டங்களைத் (Testes) தாக்கி, அவர்களின் ஆண்மையைப் பாதிக்கும். தவிர மூளை, சிறுநீரகம், கணையம், இருதயம், கண், காது, நரம்பு மண்டலம் ஆகியவற்றையும் இந்நோய் பாதிக்கும்.

**காலரா**: இது தண்ணீர் மூலம் பரவக்கூடிய தொற்று நோயாகும். தண்ணீர் மட்டுமல்லாமல் திறந்து வைக்கப்பட்ட, ஈக்கள் மொய்த்த உணவுகளின் மூலமும் இது உண்டாகிறது. இதன் அறிகுறி, வாந்திபேதி அதிகமாக இருப்பதாகும். இந்நோய் பரவியுள்ள காலங்களில் குழந்தைகளுக்குத் தண்ணீரைக் கொதிக்கவைத்துப் பின்பு கொடுக்க வேண்டும். காய்கறிகள், கீரை, பழங்கள் முதலியவற்றைத் தூய்மையான நீரில் கழுவியபிறகே பயன்படுத்த வேண்டும். உணவுகளைப் பாதுகாப்பாக மூடிவைக்க வேண்டும். உணவுகளைச் சுடச்சுடக் கொடுப்பது நல்லது. குழந்தைக்கு நோய் உண்டாகிவிட்டால் தகுந்த மருத்துவ உதவி கொடுக்க வேண்டும்.

குழந்தைக்கு ஆறு மாதய ஆனவுடன் காலரா தடுப்பு ஊசி போட்டுக் காலரா நோய் வாராமல் தடுக்கலாம். இதன் தடுப்புச் சக்தி சுமார் ஆறு மாதங்களுக்குத்தான் இருக்கும். எனவே, ஆறு மாதத்திற்கு ஒரு முறை காலரா ஊசி போடுவது நல்லது

**நச்சுக் காய்ச்சல்**: காலராவைப் போல இதுவும் தண்ணீர் மூலமும், ஈக்கள் மொய்த்த உணவுகளின் மூலமும் ஏற்படுகிறது. இந்நோய் வந்தால் பேதி ஏற்படுவதுடன் மலச்சிக்கலும் உண்டாகும். வயிறு வீங்கி, மண்ணீரல் பருத்துத் தொடர்ந்தாற்போல் காய்ச்சல் ஏற்படும்.

நச்சுக் காய்ச்சல் நோய் வந்த குழந்தைக்குத் திரவ உணவுதான் தரவேண்டும். தகுந்த மருத்துவ சிகிச்சை தருவதுடன் காய்ச்சல் விட்டு ஐந்து நாள்கள் வரை பால், பழச்சாறு, குளுகோசு முதலியன கொடுக்க வேண்டும். நச்சுக்காய்ச்சல் வாராமல் இருக்கக் குழந்தைக்கு ஆறு மாதம் ஆனவுடன் தடுப்பு ஊசி போடலாம். பின்பு ஓராண்டு கழிந்ததும் மற்றோர் ஊசி போடலாம்.

**இளம்பிள்ளை வாதம்**: இந்நோய் பெரும்பாலும் ஒரு வயதிலிருந்து ஐந்துவரை உள்ள குழந்தைகளைத் தாக்குகிறது. இந்நோய் வந்தபின் மருத்துவம் செய்து குணப்படுத்துவது என்பது மிகவும் கடினமானது. எனவே, இளம்பிள்ளை வாதம் (Polio) வராமல் பாதுகாத்துக் கொள்வதே சிறந்த முறையாகும்.

இளம்பிள்ளை வாத நோயைத் தடுக்கக் குழந்தைக்குத் தடுப்பு மருந்து போட வேண்டும். இது ஊசியாகவும் (Salk Vaccine) குடிக்கும் சொட்டு மருந்தாகவும் (Sabin Oral Vaccine) கிடைக்கிறது. குழந்தை பிறந்த மூன்று மாதங்களில் முதல் தடவையும், அதன்பின் ஒன்றரை மாதம் கழித்து இரண்டாம் தடவையும், மேலும் 6 அல்லது 9 மாதங்கள் கழித்து மூன்றாம் தடவையும் இம்மருந்தைக் கொடுத்துவிட்டால் குழந்தைக்கு இந்நோயிலிருந்து நல்ல பாதுகாப்பு ஏற்பட்டுவிடும். குழந்தையின் ஐந்தாம் வயதில் கடைசி முறையாகவும் இம்மருந்தைத் தரலாம்.

ஊசிமருந்தைவிடச் சொட்டு மருந்து மிகவும் சக்தி வாய்ந்தது. எனவே, அதைப் பயன்படுத்துவதே நல்லது. குழந்தைகளுக்கு முக்காப்புமூலம் ஊசி போடும் பொழுது அதனுடனேயே சொட்டுமருந்தைக் குழந்தையின் வாயில் ஊற்றிவிடலாம்.

**சொறிசிரங்கு**: இது சிரங்குப் பூச்சியால் (Itch-mite) உண்டாகிறது. இப்பூச்சி தோலைக் குடைந்து கொண்டு உடலுக்குள் செல்லும். இதனால் உடலில் கொப்புளங்கள் தோன்றி அரிப்பு எடுக்கும். அவற்றைச் சொரியும் போது சீழ் உண்டாக்கும் கிருமிகள் உள்ளே நுழைந்து கொப்புளங்கள் சீழ் பிடிக்கும். இந்தவகைச் சிரங்கு ஒட்டுவாரொட்டியாகும். சிரங்கு வந்தவர்களிடம் பழகினால் அது பிறர்மீது எளிதில்

ஒட்டிக்கொண்டு பரவிவிடும். குறிப்பாகக் குழந்தைகள்மீது எளிதாக ஒட்டிக்கொள்ளும்.

சொறி சிரங்கைப் போக்குவது மிகவும் கடினம். எனவே, நாடோறும் குழந்தையின் உடை, படுக்கை, தலையணை உறை முதலியவற்றைக் கொதிநீரில் போட்டுச் சுத்தம் செய்து காயவைக்க வேண்டும். குழந்தைக்கு இந்நோய்க்குரிய களிம்பையும் போட்டு வரவேண்டும்.

வேறுசில நோய்களும் குழந்தைகளைத் தாக்குகின்றன. அவற்றுள் ஈரல்கட்டி, அக்கி, படர் தாமரை, மஞ்சட் காமாலை, மூளைக் காய்ச்சல் முதலியன குறிப்பிடத் தக்கவையாகும். இவை மட்டுமன்றி வயிற்றுப் பூச்சிகளும் குழந்தையின் நலத்தைக் கெடுக்கின்றன. குழந்தையின் வயிற்றில் (குடலில்) சில பூச்சிகள் சேருவதுண்டு. அவற்றுள் கொக்கிப் பூச்சி (Hook Worm), நாக்குப் பூச்சி (Round Worm), நாடாப் பூச்சி (Tape Worm), கீரிப் பூச்சி (Thread Worm) முதலியன முக்கியமானவை.

**கொக்கிப்பூச்சிகள்**: காலில் செருப்பில்லாமல் குழந்தைகள் வெறும் காலுடன் நடக்கும்போது இவை கடித்து உடம்பினுள் சென்றுவிடுகின்றன. இவற்றின் வாயில் கொக்கி போன்ற பற்கள் இருக்கின்றன. இவற்றின் உதவியால் இப்பூச்சிகள் குடலில் தொற்றிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சுகின்றன. அதனால் சோகை பிடித்து, உடல் இளைத்து, வயிறு பெருத்துவிடுகிறது. இவை வெளிவிடும் ஒருவகை நச்சுப்பொருள் இரத்த உற்பத்தியைத் தடுக்கிறது. இதனால் நாக்கு, கண் முதலியன வெளுத்துவிடுகின்றன.

நலவாழ்வு முறைகளைக் கையாண்டு இப்பூச்சிகளை வாராமல் தடுக்கலாம் குழந்தைக்குக் காலணிகளை மாட்டிக் கழிப்பிடங்களுக்குப் போகச் செய்யலாம். இவை தாக்கினால் இரத்தவிருத்தி ஊசி, நன்மருந்து, முதலியவற்றைப் பயன்படுத்தி உடல்நலத்தைச் சீராக்கலாம்.

**நாக்குப்பூச்சிகள்**: இவை 4முதல் 9அங்குலம் வரை நீளமாக இருக்கும்; மண் புழுப் போன்றிருக்கும். இவை தூய்மையற்ற இடங்களில் தோன்றுகின்றன. தூய்மையற்ற உணவு அல்லது தண்ணீரின் மூலம் குழந்தைகளின் உடலுக்குள் சென்று பெருகிவிடுகின்றன. இவற்றால் குழந்தைகள் உடல் மெலிந்து, வயிறு பெருக்கும்; தோல் உலர்ந்து, சுருக்கங்கள் ஏற்படும்; மூச்சில் துர்வாடை வீசும்; பசி குறையும்; தூக்கம் கெடும்; முகம் வீங்கிக் கடைசியில் காய்ச்சல், இருமல், வயிற்றுப் போக்கு முதலிய நோய்களும் ஏற்படக்கூடும். இப்பூச்சிகள் வாராமல் தடுக்கக் குழந்தைகளுக்கு நலவாழ்வு முறைப்படி தூய்மையாக உணவு தயாரித்துச் சூடாகக் கொடுக்கவேண்டும்.

**நாடாப்பூச்சிகள்**: இவை மெல்லிய பட்டை நாடாவைப் போல் இருக்கும். இறைச்சி உண்பவர்களையே பொதுவாக இப்பூச்சிகள் தாக்கும். இவை குடலில் தோன்றினால் உடல் இளைக்கும். அதிகப் பசி அல்லது பசியின்மையுடன் வயிற்று வலியும் பேதியும் உண்டாகும்.

இவற்றை நீக்க முயல்வதைவிடத் தடுத்து நிறுத்துவதே சிறந்தது. ஏனெனில், இவற்றை நீக்கக்கூடிய சரியான மருந்து இன்னும் வரவில்லை. ஆகவே, குழந்தைக்கு இறைச்சி தரும்போது அதை நன்றாகக் கொதிக்க வைத்துச் சமைத்துக் குழந்தைக்குத் தர வேண்டும். குழந்தையைக் கண்ட இடங்களில் மலம் கழிக்க விடக்கூடாது.

**கீரிப்பூச்சிகள்**: இவை மிகவும் சிறியனவாக $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ அங்குலம் நீளமாகக் குடலில் தங்கியிருக்கும். ஆசனவாயை விட்டு வெளியே வந்து அதையொட்டி முட்டையிட்டு மிகுந்த அரிப்பை உண்டாக்கும், குழந்தைக்கு இது வாராமல் தடுக்கவேண்டுமானால். சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்கவேண்டும். குழந்தையைச் சுகாதார முறைப்படி வளர்க்க வேண்டும். அதற்குச் சத்தான உணவுகளைத் தர வேண்டும்.

**மாலைக் கண், கண் நோய்கள், பார்வைக்குறைவு**: இவை ஊட்டச்சத்து 'ஏ' குறைவினால்தான் பெரும்பாலும் உண்டாகின்றன. ஆகவே, குழந்தைக்கு ஊட்டச்சத்து 'ஏ' மிகுதியாகவுள்ள பால், காய்கறிகள், ஈரல், கீரை முதலியவற்றை நாடோறும் உணவில் சேர்த்துக் கொடுக்கவேண்டும். மேலும் குழந்தைக்குக் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் ஒரு கரண்டி மீன் எண்ணெய் கொடுத்துவருவது நல்லது. எல்லா ஊட்டச்சத்துகளும் கொண்ட சொட்டு மருந்து அல்லது நன்மருந்து கொடுக்கலாம்.

**குழந்தைக்கணை**: போதுமான அளவு ஊட்டச்சத்து 'டி' கிடைக்காவிட்டால் இந்நோய் உண்டாகும். இது எலும்புகள் வளருவதைப் பாதிக்கும். இந்நோயினால் எலும்புகள் திடமிழந்து, குழந்தையின் கால்கள் வளைந்துவிடும். இடுப்பு பலவித கோணல்களுடன் காட்சியளிக்கும். நெஞ்செலும்புகள் இறுகி நெஞ்சுக்கூடு உண்டாகும். மூட்டுகள் பெரிதாகத் தோன்றும். நாடோறும் குழந்தைக்கு மீன் எண்ணெய் கொடுத்தால் அல்லது வெயில் முழுக்குச் செய்வித்தால் இதைத் தடுக்கலாம்.

**பல் எயிறு வீக்கநோய்**: 'சி' ஊட்டச்சத்துக் குறைவினால் இந்த நோய் ஏற்படும். இந்த நோயின் அறிகுறிகள் குழந்தைக் கணையைப் போல 6 மாதத்திலிருந்து 2 வயதுக்குள் தோன்றுகின்றன. குழந்தை எப்பொழுதும் சிடுசிடுத்த முகத்துடன் இருக்கும். கை, கால்களைத் தொட்டால் உடனே அலறத் தொடங்கும். இந்நோயின் காரணமாக இரத்தக்குழாயின் சுவர்கள் வலுவிழந்து, இரத்தக்கசிவு ஏற்படும். கசிந்த இரத்தம் தேங்கி அந்த இடங்களில் வலியும் வீக்கமும் காணப்படும். பெரும்பாலும் மூட்டுகளில் இந்தக் கசிவு ஏற்படுவதால் கை, கால்களை அசைக்க முடியாத அளவிற்கு வலி (Pseudo Paralysis) இருக்கும்.

உணவில் உள்ள ஊட்டச்சத்துகள் மேற்கூறிய நோய்களை வாராமல் தடுப்பதோடு மட்டுமன்றி மற்ற நோய்களும் வாராமல் தடுத்துக் குழந்தையின் நலத்துக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்றன. எனவே, குழந்தையின் உணவில் போதுமான அளவில் புரதச்சத்து, தாதுப்பொருள்கள், இரும்புச்சத்து, முதலிய ஊட்டச்சத்துகள் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தாலே குழந்தையின் நலமும் வளர்ச்சியும், பாதுகாப்பாகவும் உறுதியாகவும் அமையும். – சி.என்.ந.

**துணை நூல்கள்**:

**ஆச்சார், எஸ். டி**, வளரும் குழந்தை, தமிழாக்கம். மணிகுமாரி நாகப்பன், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1960.

**இராம ராவ், யு**. குழந்தை வளர்ப்பும் நோய்த்தடுப்பும், புது இலக்கியப் புத்தகம், சென்னை, 1975.

**திருஞானம், டி**, குழந்தையும் வளர்ப்பு முறையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1971.

**ஹேமா சௌந்தரராசன்**, ஆரோக்கியமாகக் குழந்தை வளர்க்க வழிகள், ஹேமா பதிப்பகம், சென்னை, 1984.

## குழந்தைப் பாடல்

**குழந்தைப் பாடல்**: குழந்தைகளுக்காக மற்றவர் பாடும் பாடல்களும், குழந்தைகள் தாமே பாடும் பாடல்களும் குழந்தைப்பாடல் எனப்படும். பாட்டு இனிய இசை பொருந்தியதாகும். இன்னிசை கற்றாரையும் கல்லாரையும் ஒருங்கே பிணிக்கவல்லது. விலங்கு, பறவைகளும் இசைக்கு உருகும் இயல்பின. பயிரினங்களும் இசையால் செழிப்புறும் என்று அறிவியலார் கண்டு காட்டியுள்ளனர். அதனால், குழந்தைகள் இன்னிசை கேட்டு இன்புறுவது இயற்கையே. தாயின் இதயத் துடிப்போசை, கருவில் வளரும் குழவிக்குத் தாலாட்டாக அமைகிறது என்று அறிஞர் குறிப்பிடுவர். அவ்வகையில் இசை கேட்டு வளர்ந்து பிறந்த குழந்தை, பின்னர்த் தாய் இசைக்கும் இசை கேட்டு இன்புறுகிறது.

அழுகிற குழந்தையை அமைதிப்படுத்த அதன் தாய் பாடுகிறாள். அந்த ஓசை கேட்டுக் குழந்தை உறங்குகிறது. குழந்தையை உண்ணச் செய்தல், ஓடியாடச் செய்தல், உறங்கச் செய்தல் முதலிய எல்லாவற்றிற்கும் அதன் தாய் இசையினையே பயன்படுத்துகிறாள். அப்பாடல் பொருளுள்ள சொற்கள் கொண்டதாக இல்லாமலும் இருக்கும். ஆனால், அது இனிய ஓசையைக் கொண்டிருக்கும். அதுவே தாலாட்டாகவும் பிற குழந்தைப் பாடலாகவும் உருப்பெற்றது. குழந்தையைத் தாய்மார் தொட்டிலிலிட்டு ஆட்டும்போது, தம் இதழ் குவித்து நாவினால், குலவையிடுவது போல ஒலி எழுப்புவர். மேலும், 'ஆராரோ ஆரிரரோ' என்று தொடங்கிப் பொருள் பொதிந்த தொடர்களை இசைப்பர். இவ்வகைப் பாடல்கள் இராக தாள அமைப்பொடு பொருந்தா திருப்பினும், இனிய ஓசை நயம் மிகுந்து கேட்கும் குழந்தைகளின் உள்ளங்களைக் கவர்ந்து, அவர்களைத் தம்வயப்படுத்தும் ஆற்றல் கொண்டவை.

தங்கள் தாய்மார் எழுப்பும் ஓசைநயமிக்க பாட்டொலிகளைக் கேட்ட மழலையர் தாமும் அது போன்ற ஒலிகளை எழுப்புவர். சற்று வளர்ந்த நிலையில் அந்த ஒலியோடு சில சொற்களையும் சேர்த்து ஒலிக்க முற்படுவர். அந்நிலையில் நன்கு பயிலாத அவர்களின் வாயிலிருந்து வரும் சொற்கள் முழு வடிவம் பெறாது சிதைந்தும் திரிந்தும் வெளிவரும். அதனை மழலை மொழி என்றும், குதலை மொழி என்றும், நிரம்பா மொழி என்றும் கூறுவர் அந்நிலையில், சோறு, சோச்சி என்றும் பால், பாச்சி என்றும் பிறவாறும் மாற்றமடையும். அத்தகைய சொற்கள் நிரம்பாத நிலையிலேயே பெற்றோர்களுக்ும் மற்றவர்களுக்கும் கழி பேரின்பம் பயக்கும். மழலைச் சொல், குழலினும் யாழினும் மிக்க இன்பம் பயக்கவல்லது என்பது வள்ளுவர் கருத்தாகும்.

மழவிளம் பருவத்துக் குழந்தைகளுக்காகப் பாடப்படும் பாடல், அக்குழந்தைப் பருவத்திற்கேற்ற சொற்கள் கொண்டனவாய், ஏற்ற பொருள் உடையனவாய் அமைதல் வேண்டும். வளரும் குழந்தையின் பருவங்களுக்கேற்ப அவர்களுக்காகப் பாடப்பெறும் பாடல்களும் சொல்லிலும் பொருளிலும் தரவளர்ச்சி

உடையனவாக அமைதல் வேண்டும். அவ்வாறமையும் குழந்தைப்பாடல்கள் ஏட்டில் எழுதப்படாமல் பாட்டி மார் தம் பேரக் குழந்தைக்குக் கூறுவனவாய்த் தலைமுறை தலைமுறையாகச் செவிவழி வளரும் செல்வமாக விளங்கி வருகின்றன. சிறிய குழந்தைகள் பெரிய குழந்தைகளிடம் அத்தகைய பாடல்களைக் கேட்டு இன்புற்றுப் பின்னர் தாம் வளர்ந்த நிலையில் தம்மினும் சிறிய குழந்தைகளுக்கு அதனைப் பாடியும் வழங்குகின்றனர்.

இவ்வாறமையும் குழந்தைப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களின் பண்புகள் சிலவற்றைக் கொண்டு அமையும். அப்பாடல்களின் ஆசிரியர் யார் என்று எவரும் அறியார். அப்பாடல்களில் ஒருமுறை வந்த சொல்லும் தொடரும் பொருளும் அடுத்தடுத்து வருவதுண்டு. அப்பாடல்களில் காணப்படும் பொருள் காரண காரிய முறையில் அமைதல் வேண்டும் என்ற நியதியும் இல்லை. ஆனால், குழந்தைகளைக் கவரவல்ல எளிய இனிய இன்னோசை தவறாது இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

குழந்தைப் பாடலில் அவர்கள் வாழ்வில் நாள் தோறும் காணும் காக்கை, குருவி, கிளி, பசு போன்றனவும், மலர்கள், மரஞ்செடிகள் போன்றனவும், அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, அப்பா, அம்மா போன்றவர்களும் இடம்பெறுவர். இசையால் கவரப்பட்ட குழந்தைகள் பாடலில் ஈடுபட்டுப் பாடும்போது அவர்கள் தாங்களே காக்கையாய், குருவியாய், மலராய், மற்றவையாய் மாறி மகிழ்ச்சியடைவதனைக் காணலாம்.

குழந்தைகளுக்கு முன்னிரவு நேரத்தில் இன்பந் தருவனவற்றுள் வானத்து வெண்ணிலா முதலிடம் பெறுகிறது. இரவில் தாய்மார்கள் தம் குழந்தையை உண்பிப்பதற்கு இந்த நிலாக்காட்சி, காலங் காலமாக உதவி வந்துள்ளது.

நிலாநிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா, மல்லிகைப்பூ கொண்டுவா
நடுவீட்டில் வையே நல்லதுதி செய்யே'

என்ற நிலாப்பாட்டை எல்லாத் தமிழ்க் குழந்தைகளும் கேட்டிருக்கும். தாய்மார் குழந்தையை மடியில் அமர்த்தி, அதன் பிஞ்சுக் கரத்தை விரித்து 'உந்து உந்து காசு' என்று பாடி மகிழச் செய்யும் காட்சியை இன்றும் காணலாம்.

'காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா
குருவி கொண்டைக்குப் பூக் கொண்டு வா'

என்பது போலப் பாடித் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை இன்புறுத்துவர்.

'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக்கிளியே சாய்ந்தாடு
அன்னக் கிளியே சாய்ந்தாடு
ஆவாரம் பூவே சாய்ந்தாடு'

என்று தம் குழந்தையை ஆடச் சொல்லி அழகு பார்க்கும் தாயின் குழந்தைப்பாடலில் கிளி, அன்னம், குயில், குத்துவிளக்கு போன்றன இடம்பெற்றுக் குழந்தைகளை இன்புறுத்துகின்றன.

'கை வீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் திங்கலாம் கைவீசு,

என்று கைவீசச் சொல்லும் பாட்டில் அக்குழந்தைகள் கைவீசி இன்புறும் காட்சியினைக் காணமுடியும். இங்குப் பாடுவோரும் கேட்போரும் இன்புறுகின்றனர்.

இனிய ஓசையுடைய குழந்தைப் பாடல்களின் சிறப்பினை உணர்ந்த புலவர்களும் அவ்வகையில் குழந்தைகளுக்கான பாடல்களைப் பாடமுற்பட்டனர். செவிவழிச் சென்று சிந்தையில் பதியும் பாடலின் கருத்தும் சிறப்பானதாக அமையுமாயின், அது அக்குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த நிலையில் அவர்களின் சிந்தையினைச் செம்மை செய்வதில் பேருதவியாக அமையும் என உணர்ந்த சான்றோர்கள், அரிய கருத்தினை உள்ளடக்கிய வகையில் தமது குழந்தைப் பாடலை-குழந்தை இலக்கியத்தை-உருவாக்கினர். 'அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈவது விலக்கேல்' என்றும், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் அமைந்த இலக்கியங்களெல்லாம், குழந்தைப் பாடலின் அடிப்படையில் அமைந்தனவாகும்.

தமிழில் இருபதாம் நூற்றாண்டுக் கவிதை இலக்கியத்தில் குழந்தைப் பாடல்களுக்குத் தோற்றுவாய் செய்து அதனைச் சிறக்கச் செய்த பெருமை பாரதியாருக்குண்டு.' ஓடி விளையாடு பாப்பா-நீ ஓய்ந்திருக்கலாகாதுபாப்பா' என்றுதொடங்கும் அப்பாட்டு, குழந்தைக் கவிதை இலக்கியத்தில் தலைசிறந்ததாக உள்ளது. அது குழந்தைகளின் உளவியல் அறிந்து அதற்கேற்பச் சிறிது சிறிதாக அவர் உளங்கொள்ளுமாறு வீட்டன்பு, நாட்டன்பு, இறையன்பு, மானிடநேயம் ஆகியவற்றை இனிய இசைத் தேனில் குழைத்து வழங்கப் பெற்றுள்ள அரிய குழந்தைப் பாடற் படைப்பாகும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பல அரிய குழந்தைப் பாடல்களைப் பாடித் தந்துள்ளார். அவர் பாடியுள்ள பசு, கடிகாரம் கிளி, நாய், கோழி என்ற பல பாடல்களும் குழந்தைப் பாடல்களின் மாட்சி நிறைந்தனவாக அமைந்துள்ளன.

'காகம் கரைந்தது காலையும் ஆயிற்று
கனியுதிர் காவினைப் பாராய்

கண்ணே நீ எழுந்தோடி வாராய்' என்ற காலைப்பாட்டு கவிதையின்பம் மிக்குச் சிறக்கிறது ஓர் ஆறு தன் வரலாறு கூறும் பாங்கில்,

கல்லும் மலையும் குதித்து வந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி எங்கும் நான்

இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்' என்று தொடங்கும் பாடலில் சலசலவென்று இனிய ஓசையோடு ஆறு ஓடும் அழகிய காட்சியினைக் கவிமணி காட்டியுள்ளார்.

ஒரு கதையினைக் குழந்தைப் பாடலில் அமைத்து அதன்வழியாக அரிய உண்மையினை உணர்த்தும் இலக்கிய உத்தியினையும் கவிமணி சிறப்பாக உருவாக்கியுள்ளார். 'அப்பம் திருடின எலி', 'நெற்பானையும் எலியும்' என்னும் அவர்தம் கதை பொதி குழந்தைப் பாடல்கள் அவ்வகையிலமைந்த சிறந்த பாடல்களாகத் திகழ்கின்றன.

'சூரியன் வருவது யாராலே, சந்திரன் வருவது யாராலே' என்று கேட்கும் நாமக்கல் கவிஞரின் குழந்தைப்பாட்டு குழந்தைகளுக்கு இயற்கையை உணர்த்தி இறைவனைக் காட்டும் சிறப்பினைக் கொண்டுள்ளது. பாரதிதாசன் போன்ற கவிஞர்களும் குழந்தைப் பாடல்கள் பல பாடியுள்ளனர். குழந்தைப் பாடல் இயற்றிய சிறப்பால் அழ.வள்ளியப்பா 'குழந்தைக்கவிஞர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றுத் திகழ்கிறார். இன்று தமிழகத்தில் பல புலவர்கள் குழந்தைப் பாடல்கள் இயற்றியுள்ளனர். குழந்தைகளுக்கெனக் கதைகளும் புதினங்களும் இயற்றப்படுகின்றன. தமிழின் பல துறைகளில் உரையும் பாட்டுமாய் அமையும் குழந்தை இலக்கியம் சிறப்பாக இன்று வளர்ந்து வருகிறது. குழந்தைகளுக்கெனச் சில வார, பருவ, திங்கள் இதழ்களும். தமிழில் நடைபெற்று வருகின்றன. அ.மா.ப.

## குழந்தை முன்னறிவுச் சோதனை

இளம் சிறார்களின் மனநிலையினையும் ஆளுமையினையும் கண்டறியப் பயன்படுகிறது. இச்சோதனையில் பத்து அட்டைகள் உள்ளன. ஒவ்வோர் அட்டையிலும் விலங்குகளின் படங்கள் அச்சிடப்பட்டிருக்கும். இந்த விலங்குப் படங்களைப் பார்த்துக் குழந்தைகள் தங்கள் மனத்தில் தோன்றியவற்றையெல்லாம் ஒரு கதை போலச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லும்போது குழந்தைகள் தங்களின் ஆளுமைத் தன்மைகளை வெளிப்படுத்துகின்றனர். அந்த விலங்குப் படங்களைப் பார்த்து ஒரு கதை புனையும்போது, குழந்தைகள் தங்களையடுத்த சுற்றுப்புறச் சூழலில் தாம் பெற்ற அனுபவம் அல்லது பெற்றோர்–சிறுவர், பெற்றோர்–பெற்றோர் உறவு பற்றிய மனக்கிளர்ச்சி எதிர்வினைகளை வெளிக்காட்டுகிறார்கள்.

குழந்தை முன்னறிவுச் சோதனையைப் பயன்படுத்திக் குழந்தைகளின் ஆளுமைத் தன்மையினை அறிய முயலும்போது முன்னறிவு பற்றிய கருத்து, குழந்தை எவ்வாறு பார்க்கிறது, சிந்திக்கிறது என்பதைக் காட்டிலும் எதனைப் பார்க்கிறது, எதனைச் சிந்திக்கிறது என்பதில்தான் அதிக நாட்டம் காட்டப்படுகிறது. இச்சோதனை, தாம் அனுபவம் பெற்றிட வாய்ப்பாயிருந்த சூழ்நிலைகளுக்குக் குழந்தைகள் காட்டும் எதிர்வினைகளைப் பற்றி அறியும் ஒரு மருத்துவக் கருவியாகப் பயன்படுகிறது. நன்கு அறிமுகமான தொகுதிகளைச் சுற்றியே சிறுவர்களின் துலங்கல்கள் இருக்கின்றன. அத்துடன் அவை அவர்களின் குழந்தைத்தனமான வெறுப்புணர்ச்சிகளையும், உளக்கிளர்ச்சியான கருத்துகளையும் வெளிக்காட்டுகின்றன.

பல்வேறு சமயங்களுக்குத் தக்கவாறு அளிக்கப்படும் விலங்குப் படங்களுக்கு ஏற்ற முன் மாதிரித் துலங்கல்களும் விளக்கமும் அச்சோதனையுடன் கிடைக்கும் குறிப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன சான்றாக, அட்டை ஒன்றில் ஒரு கங்காரு தலைக் குல்லாய் அணிந்து, ஒரு கூடையில் பால் குப்பியை வைத்துக் கொண்டு, தன் அடிவயிற்றுப் பையில் பலூனைப் பிடித்துக் கொண்டுள்ள ஒரு குட்டிக் கங்காருவைச் சுமந்து செல்வதைப் போன்றும், அருகில் சற்று வளர்ந்த கங்காரு மிதிவண்டி ஓட்டிச் செல்வதைப் போன்றும் உள்ளன. இப்படத்தைக் கண்ணுறும் குழந்தை தனது உடன்பிறப்புப் போட்டி மனப்பான்மை அல்லது குழந்தையின் பிறப்புப் பற்றிய ஆர்வத்தினை வெளிக் காட்டலாம். தாய்க்கும் குழந்தைக்குமிடையேயான உறவு இங்கு ஒரு காரணியாகின்றது. குழந்தையின் பொதுவான நடத்தைத் துலங்கல் பற்றிக்–கையேடு பின்வருமாறு கூறுகின்றது. சில சமயங்களில் வளர்ந்த பெரிய குழந்தை தன்னைக் கங்காருவின் பையிலுள்ள குட்டியுடன் இணைத்துப் பார்க்கிறது. இதன் வாயிலாகத் தான். தன் தாயுடன் மிக இணைந்து இருந்திட விரும்பித்

தன் எண்ணங்களில் பின்னோக்கிச் செல்கிறது. உண்மையில் இளைய குழந்தையானது தன்னைப் படத்திலுள்ள பெரிய கங்காருவுடன் இணைத்துப் பார்க்கிறது. அதன் வாயிலாகத் தனக்குள்ள விடுதலையுணர்வையும் ஆதிக்கவுணர்வையும் வெளிக்காட்டுகிறது. தாய்க் கங்காருவின் கையிலுள்ள கூடை உணவூட்டல் செயலினைக் குறிக்கும். சில நேரங்களில் அபாயத்திலிருந்து விலகி ஓடுவதைப் போன்று ஒரு கருத்து இதன் வாயிலாக வெளிப்படலாம். ஒருவர் தம் பட்டறிவுகொண்டு நோக்கினால் இது தாய்-தந்தை உறவு, பாலுணர்வு, தாய்மைப்பேறு ஆகிய செயல்கள் பற்றிய நனவிலி அச்ச உணர்வினைக் காட்டுவதாகும். கி.இரா.

**துணை நூல்**:

Crow, L.D, and Crow,A.. Child Development and Adjustment, The Macmillan Company, New york, 1962.

**குழந்தை மையக் கல்வி**: இத்தாலி நாட்டுப் பெண் கல்வியாளரான மரியா மாண்டிசோரி (Maria Montessori) உருவாக்கிய குழந்தைப் பருவக் கல்வித் திட்டம், மாண்டிசோரி கல்வி முறை எனப்படும். இது ஒரு குழந்தை மையக் கல்வி முறையாகும். மாண்டிசோரி உருவாக்கிய கல்வித் திட்டம் அப்படியே மாற்றம் செய்யப்படாமல் ஐரோப்பா, தென் அமெரிக்கா, இந்தியா, பிற ஆசிய நாடுகள், ஆசுத்திரேலியா போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாண்டிசோரி உருவாக்கிய கல்வி முறை சிற்சில புதிய மாறுதல்களுடன் பயன்படுத்தப்படுகிறது.

**மாண்டிசோரி கல்வித் தத்துவம்**: குழந்தை எதையும் எளிதில், விரைவில் புலன்கள் வழியே புரிந்து கொள்ளும் தன்மை கொண்டது. குழந்தைக்குப் பிறப்பு முதல் ஆறு வயது வரையும், 7 வயதிலிருந்து 18 வயது வரையும் கொண்ட இரு பருவங்கள் முக்கியமானவை. முதற் பருவத்தில் (பிறப்பிலிருந்து 6 வயது வரை) பஞ்சானது நீரினை உறிஞ்சுவது போல, புறத்தேயுள்ள தூண்டல்களைக் குழந்தை எளிதில் கிரகித்துக் கொள்கிறது. இவ்வயதுக் குழந்தையின் அறிவு வளர்ச்சி, அதனுடைய இயக்கச் செயல்கள் புறப் பொருள்களினால் புலன் பயிற்சி, நாள்தோறும் வாழ்வியலில் பயன்படக் கூடிய செய்தொழில் திறன்கள் ஆகியவற்றைப் பொறுத்துள்ளது. இரண்டாம் பருவத்தில் (7-18) உள்ளவர்கள் மிகுதியான கிரகிக்குந் திறனை இழந்துவிடுவர். பள்ளித் திறன்களாகிய எழுதுதல், படித்தல், கணக்குப் போடுதல் போன்ற முறையான திறன்களைப் பெறுகின்றனர். முதற் பருவத்தில் பெற்ற புலன்திறன்களின் அடிப்படையில் புலனறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

**மாண்டிசோரியின் ஐந்து கற்பித்தல் விதிகள்**: 1. குழந்தைகள் உண்மையாகவே ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, அக்குழந்தைகளால் தொடர்ந்து மனக் கவனத்தைச் செலுத்த முடியும். 2. குழந்தைகள் எதிலும் ஓர் ஒழுங்கினை அல்லது முறையை விரும்புகின்றனர். குறிப்பாக, தாங்கள் ஏற்கனவே நன்கு கற்றறிந்த ஒன்றைத் திருப்பிச் செய்வதையோ சொல்லுவதையோ மிகுதியாக விரும்புகின்றனர். 3. வேலையை (எழுதுதல், படித்தல்) விட விளையாட்டையே மிகுதியாக விரும்புகின்றனர், கற்பித்தற் கருவிகளை விட (பாட நூல்கள், கற்பலகைகள்) விளையாட்டுப் பொம்மைகளை மிகுதியாக விரும்புகின்றனர். 4. பரிசு அல்லது தண்டனை கொடுத்துக் குழந்தைகளை உற்சாகப்படுத்துவது தேவையற்றது. 5. ஒவ்வொரு குழந்தைக்கும் மிகுந்த தன்மானம் உள்ளது.

**மாண்டிசோரி கல்விமுறை**: ஆசிரியரின் பணி ஒரு வழிகாட்டியாக இருப்பதே. குழந்தை கற்பதற்கான நல்ல சூழலை அமைத்துத் தருவதும், குழந்தைகள் தாமே பயன்படுத்திக் கற்றுக் கொள்ளும் வகையில் சிறப்பான கற்பித்தற் கருவிகளை (Didactic Materials) வழங்குவதும் ஆசிரியரின் வழிகாட்டும் பணிகளாம்.

**கல்வித் தொகுதியமைப்பு**: மாண்டிசோரி நான்கு வகையான கல்வி, கல்வித் தொகுதியமைப்பில் (Curriculum) இடம்பெற வேண்டும் என்பார், அவை 1. இயக்கமுறைக் கல்வி (Motor Education), 2. புலனுணர்வுக் கல்வி 3. மொழிக் கல்வி 4. பள்ளிக் கற்றல் என்பனவாம்.

**இயக்க முறைக் கல்வி**: இதில் வாழ்க்கையில் அடிப்படையாகப் பயன்படக்கூடிய செயல்கள் கற்பிக்கப்படுகின்றன. தனியொருவருக்குப் பயன்படக் கூடிய செயல்களான பித்தான் கட்டுதல், காலணிகளுக்கு நூல் கட்டுதல், சட்டைகளை மடித்துப் பழகுதல் போன்ற செயல்கள் கற்பிக்கப்படும். தன்னைச் சுற்றியுள்ள சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல், பெருக்குதல், துவைத்தல், செடிகள், வீட்டுவிலங்குகள் ஆகியவற்றைப் பாதுகாத்தல் போன்றவற்றிற்குத் தேவையான திறன்கள் கற்பிக்கப்படும். இச் செயல்களைக் குழந்தைகள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் செய்து முடிக்கப் பழக்கப்படுவர். குழந்தைகள் எளிதில் பயன்படுத்தத்

தகுந்தவாறு கருவிகள் வழங்கப்படும். பீன்சு பயறு கள், அரிசி போன்றவற்றை மற்றொரு பாத்திரத்திற் குச் சிந்தாமல் மாற்றிப் பழகுவர்.

**புலனுணர்வுக் கல்வி**: குழந்தையின் ஐம்புலன் களில் ஒவ்வொரு புலனுக்கும் பயிற்சி தரும் வகை யில் கற்பித்தல் கருவிகள் தயாரித்து அளிக்கப்படும். எடுத்துக்காட்டாக, வண்ணநிற மாத்திரைகள் கறுப்பு நிறத்திலிருந்து வெள்ளை நிறம் வரை வரிசையாக அடுக்கிக் காண்பிக்கப்படும். ஒலி மிகுந்த உருளைகளிலிருந்து (Sound Cylinders) ஒலி குறை வான உருளைகள் வரை வரிசையாக்கி ஒலியெழுப் பப்படும். சதுரக் கட்டைகளால் பெரிய கோபுர அமைப்புடைய கட்டட அமைப்பிலிருந்து சிறிய கட்டடங்கள் வரை அடுக்கி வைக்கப்படும். குழந்தை களின் பார்வை, செவித்திறன்கள் ஆகியன நன்கு பயிற்சியளிக்கப்பட்டு வளர்க்கப்படுதல் கவனச் சிதை வின்றிச் செயல்களைச் செய்ய உதவும்.

**மொழிக் கல்வி**: சொற்களுக்கு (Verbalisation) அதிக முக்கியத்துவம் தரப்படுவதில்லை. ஒரு வகுப் பில், ஆசிரியர் ஒரு பொருளின் பண்பை மட்டும் கூறு வர். (எ-டு). 'இது கனமானது' என்று கையிலுள்ள இரும்புக் குண்டைக் காட்டுவார். அடுத்த வகுப்பில் 'கனமான ........க் கொடு'என்று கூறிக் கையிலுள்ள பொருள் 'இரும்புக்குண்டு' என அறிய வைப்பார். மூன்றாம் நாள், 'இதுஎன்ன?' என்று ஆசிரியர் கேட் கும்போது, குழந்தை பொருளின் பெயரையும் பண்பையும் சொல்லக் கற்றிருக்கும்.

**பள்ளிக் கல்வி**: குழந்தை கற்கும் இயக்க முறைக் கல்வி, புலனுணர்வுக் கல்வி, மொழிக் கல்வி ஆகியன அக்குழந்தையைக் கல்விக்கு ஆயத்தப்படுத்துவன வாகக் கருதப்படுகின்றன. இம்மூன்றும், குழந்தையின் படித்தல், எழுதுதல், கணக்குப் போடுதல் போன்ற திறன்களுக்கு அடிப்படையாக அமைகின்றன.எழுதப் பயின்ற பின்னரே படிக்கவும், படிக்கப் பழகிய பின்னரே கணக்குப் போடவும் வரிசைப்படி கற்பிக்கப் படுதல் வேண்டும்.

பள்ளியில் குழந்தைகள் பகல் நேரத்தில் தாம் விரும்பிய பொருளை எடுத்து விளையாடவும் வைக்க வும் சுற்றுப் புறச் சூழலைப் பற்றிய கவனம் இருப்பது இன்றியமையாதது. பள்ளிச் சூழலில் குழந்தையானது மதிப்பு, இணக்கம், ஆக்க முயற்சி ஆகிய பண்பு களை ஆசிரியரின் நடத்தையைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுமாறு பள்ளிச்சூழலை ஆசிரியர் அமைத்துத் தருதல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட கல்வி முறைகள்,செயல் கள் ஆகியன மாண்டிசோரியால் ஏற்படுத்தப் பட்டவை. சிற்சில மாறுதல்களோடு அமெரிக்க நாட் டில் மாண்டிசோரி கல்விமுறை பின்பற்றப்படுகிறது. இந்நாட்டில் குழந்தையின் சமூக வளர்ச்சி, மன வெழுச்சி ஆகிய பண்புகளை வளர்க்கும் விதத்தில், கற்பனை வளமிக்க கதைகள், பங்கேற்பு நாடக மாதிரிகள் (Role-Plays), ஓவியங்கள் ஆகியன கற் பிக்கப்படுகின்றன. மேலும், மொழிக் கல்வியில், குழந்தை நாள்தோறும் மிகவும் பயன்படுத்தக் கூடிய சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றுக்கு முதலிடம்தரப்படுகிறது.மாண்டிசோரியால்தயாரிக்கப் பட்ட சில கற்பித்தற் கருவிகள், இக்காலத்திற்கு ஏற்றாற் போல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

மாண்டிசோரி கல்வி முறையானது, குழந்தை களின் நடத்தை, வகுப்பறைக் கல்வி வளர்ச்சி ஆகிய வற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது; குழந்தை களுக்கு மகிழ்வூட்டும் அறிவு வளர்ச்சிப் பாடத் திட்டத்தைக் கொண்டுள்ளது எனக் கல்வியாளர்கள் புகழ்கின்றனர். இம்முறையால், குழந்தைகளிடம் சமுதாய ஒத்துழைப்புணர்வு, பார்த்துப் பழகுதல் போன்றவை வளர்வதில்லை. குழந்தைப் பருவத் திலேயே எழுதவும் படிக்கவும் பழகுவது முறையான கற்பித்தலறிவியல் அன்று என்று குறை கூறப்படு கிறது. இவ்வகையான கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் இன்று உலக முழுவதும் மாண்டிசோரி கல்விமுறை வளர்ந்து பரவி வருதல், இம்முறையின் சிறப்பினையும் பயன்படு தன்மையினையும் நன்கு விளக்கும். எஸ்.த.

**துணை நூல்கள்**:

**Montessori**. M., The Montessori Method, Schocken, New York, 1964.

**Rambusch**, N., Learning How to Learn: An American Approach to Montessori, Helicon Press, Baltimore, Maryland, 1962.

**குழந்தை மொழி**: மக்களின் வாழ்வில் பிறந்து மக்களால் வளக்கப்பட்டு மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்தி வரும் கலை, மொழி யாகும். குழந்தை, மொழி கற்கும் திறன் குறித்து இன்னும் முழுமையாக ஆராயப்படவில்லை என்றே கூறலாம். குழந்தைகள் பேசுந்திறனோடு பிறப்ப தில்லை.தாய்மொழியை முறையான பயிற்சியின்றியே கற்றுக் கொள்கிறது. குழந்தையின் அம்மொழி கற்கும் ஆற்றல் இன்னும் ஒரு புதிராகவே உளது எனலாம். உளவியலார்களும் (Psychologists) மொழியியலாளர் களும் (Linguists) குழந்தை மொழி பற்றித் தனித்

தனியே ஆராய்ந்துள்ளனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

உளவியலாளர்கள், குழந்தையின் இம்மொழி பெறு செயல் வேறு பல செயல்களுக்கு ஆதாரமாகின்றன என்று கருதினர். இதன் அடிப்படையில் ஆய்வுகள் தொடங்கப்பட்டும், முடிவு மட்டும் பலரும் ஏற்க முடியாத நிலையிலேயே உள்ளது. உளவியலாளரும் மொழியியலாளரும் ஒருங்கிணைந்து ஆய்வு நடத்தாமல் தனித்தனியே ஆய்வு நடத்தியமையால் முடிந்த முடிபுக்கு வர இயலாமற் போய்விட்டது. குழந்தையின் மன வளர்ச்சியையும் அம்மனவளர்ச்சியில் மொழியின் வளர்ச்சியையும் தொடர்பு படுத்தி ஆராயாது, தனித்தனியே செயற்பட்டு வந்தனர். உளவியலார் மொழியைப் பற்றிய புதிய கருத்துகளை உளங்கொள்ளாமையும், மொழியியலார் உளவியல் அடிப்படையில் மொழியை விளக்காமையும் இது தீர்க்கப்படாத சிக்கலாக இருப்பதற்கு அடிப்படையான காரணங்களாகும். இவ்விரு துறைகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டால், தீர்வு காணமுடியும் என உளவியல் மொழியியலாளர்கள் (Psycho Linguists) கருதுகின்றனர்.

ஒரு குழந்தை மொழியைக் கற்கும் முறையிலும் மொழியியல் அறிஞன் மொழியை ஆராயும் நிலையிலும் சில ஒற்றுமை வேற்றுமைகளைக் காணலாம். ஒரு மொழியைப் பேசுவோரிடம் உள்ள அம்மொழியைப் பற்றிய அறிவை இலக்கணம் என்பர். இவ்வறிவு ஒரு மொழியைப் பேசுகின்ற எல்லோருடைய மனத்திலும் ஆழமாகப் பதிந்துள்ளது. மொழியியலாளன் ஒரு மொழியை ஆராய்வதற்கு அணுகுகின்ற முறையும் குழந்தை ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதற்கு அணுகுகின்ற முறையும் ஓரளவு ஒற்றுமையுடையது எனக் கூறலாம். இவ்விரண்டிலும் மொழி செயற்படுவதை அறிவதே நோக்கமாகும். குழந்தை எவ்வாறு மொழியமைப்பைக் கற்றுக்கொள்கிறது என்பதற்கான ஆதாரங்களோ கோட்பாடுகளோ இதுவரை கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

குழந்தைக்கு மொழி இயற்கையாகவே கைவரப் பெறுகிறது என்றும், அது குழந்தைக்கு இயல்பாகவே அமைகின்ற தேவை என்றும் பிளேட்டோ, பித்தகோரசு (Pythagorus) போன்ற கிரேக்க அறிஞர்கள் கூறுகின்றார்கள். சில கொள்கைகளும் நோக்கங்களும் இயற்கையாகவே ஒருவர் மனத்தில் உருவாகின்றன; அவை, இயற்கையிடமிருந்து நேரடியாக மக்கள் பெற்ற பரிசுகள் என்ற பகுத்தறிவு வாதம் உளவியலை அடிப்படையாகக் கொண்டதாகும். இலெய்பினிசு (Leibniz) என்ற அறிஞரும் ‘முன்னரே நம் மனத்தகத்தே உருவாகாத எந்தவொரு கருத்தையும் புறச்சூழ்நிலையில் கற்றுக்கொள்ளமுடியாது’ எனக் கூறுவது பிளேட்டோவின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். எந்த மொழிக்கும் பொருந்துகின்ற வரைபடம் இயற்கையாகவே குழந்தையின் மன வளர்ச்சியில் அமைந்துவிடுகின்றது என்கின்றனர்.

எட்வர்டு சப்பீர் (Edward Sapir) போன்ற மொழியியல் அறிஞர்கள், ‘மொழி குழந்தைக்கு இயற்கையாகவே கைவரப்பெறுகிறது’ என்னும் கருத்தை வன்மையாக மறுக்கின்றனர். மொழியைப் பேசுவது சமுதாய மற்றும் பண்பாட்டுத் தொடர்புடைய செயலாகும். குழந்தை தானாகப் பேசத் தொடங்குவதற்குமுன் பிறர் பேசுகின்ற பேச்சைப் புரிந்து கொள்கிறது. ஒருவர் பேசுவதைப் போன்று பேசல் ‘போலச் செய்தல்’ (Imitation) என்பதன்பாற்படும். இந்தப் பண்பு குழந்தையிடத்தில் அமைந்துள்ளது. ‘போலச் செய்தல்’ என்னும் இவ்வாற்றலே குழந்தையின்மொழிவளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது. எகிப்து மன்னனொருவன் ஒரு குழந்தையை மக்களிடத்தும், மற்றொரு குழந்தையை ஆட்டுக்கிடையிலும் வளர்க்கச்செய்தான். மக்களிடையே வளர்ந்த குழந்தை பேசக் கற்றது; ஆட்டுக் கிடையில் வளர்ந்த குழந்தை பேசக் கற்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அதேபோன்று தமிழர் ஒருவருக்குப் பிறந்த குழந்தையை ஆங்கிலேய மக்களிடையே வளர்த்தால், அது ஆங்கில மொழியைத்தான் பேசும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இச்சான்றுகளால் மொழி சமூகத்துடன் தொடர்புடையது என்னும் எட்வர்டு சப்பீரின் கருத்து வலிமை யுறுவதைக் காணலாம்.

ஒவ்வொரு குழந்தையின் மனத்திலும் ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதற்கென ஒரு வழிமுறை இயல்பாகவே அமைந்திருக்கிறது. இவ்வழிமுறைதான் ஒரு பொதுவான இலக்கண அமைப்பைக் குழந்தையின் மனத்தகத்தே உருவாக்குகிறது. இவ்வுருவாக்கம் குழந்தையின் அறிவுக்கு அப்பாற்பட்டது. அதை அறியாமலேயே உள்ளத்தினுள் உருவாகிப் புடமிட்டிருப்பது என்றுகூடக் கூறலாம்.

சுற்றுப்புறச் சூழ்நிலையில் பேசும் பேச்சையெல்லாம் குழந்தை தன் மனத்தகத்தே கொள்கின்றது. குழந்தை சொல்லையும் சொற்றொடரையும் கேட்கும்போது அவை மொழியில் வழங்குமாற்றை உன்னிப்பாகக் கவனிக்கிறது. ஒலிமுறைக்கு முதன்மை அளிக்காமல் இலக்கண விதிக்கே முதன்மை அளிக்

கிறது. 'அம்மா அப்பா' என்ற கூட்டுப்பெயரைக் கேட்ட குழந்தை 'அண்ணன் தம்பி' எனப் பேசத் தொடங்குகிறது. சொற்களையும் சொற்றொடர் களையும் பேசுவதற்கு முன், பிறர் பேச்சை நன்கு புரிந்து கொள்கிறது.

குழந்தை மொழி கற்றலில் ஒப்புமையாக்கம் (Analogy) சிறப்பான இடம் பெறுகிறது. போலச் செய்தல் மொழி வளர்ச்சிக்கு அடிப்படை என்பது கூறப்பட்டது. தாம் கற்ற சிலவற்றைக் கொண்டு மற்றவற்றை அமைத்துக் கொள்வதை ஒப்புவமை யாக்கம் என்பர். எடு என்பதற்கு இறந்தகால வடி வம் எடுத்தார் என்பதை அறிந்த குழந்தை, கொடு என்பதற்குக் கொடுத்தார் என அமைத்துக்கொள் கிறது. வீடு, வீட்டுக்கு, காடு, காட்டுக்கு போன்ற வற்றில் உள்ள 'கு' உருபைப் பயன்படுத்த அறிந்த வுடன் அவன், அவனுக்கு என்பதுபோல நான், நானுக்கு எனப் பேச முற்படுகின்றது. ஒப்புமையாக் கப்படி அது சரி என்றாலும் மொழி மரபுக்கு முக் கியத்துவம் அளிப்பதால், காலப்போக்கில் 'நானுக்கு' என்பதை 'எனக்கு' எனத் திருத்திப் பேச முற்படு கின்றது. இதேபோன்று ஆங்கிலக் குழந்தைகளும் இறந்தகால வடிவங்களை ஒப்புமையாக்க மூலம் பேசுவதைக் காணலாம். பெரும்பாலான ஆங்கில வினைவடிவங்களில் இறந்தகாலம் காட்ட 'ed' என்பதை இணைப்பதுண்டு (எ-டு. Walk, Walk-ed, talk, talk-ed). இதனையறிந்த ஆங்கிலக் குழந்தை 'go' என்பதன் இறந்தகால வடிவமாக 'go-ed' என்றே முதலில் கூறுகின்றது. பின்னர் மொழி மர புக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டி, 'went' எனத் திருத்திக் கூற முற்படுகின்றது. இவ்வாறு குழந்தை மொழியில் ஒப்புமையாக்கம் முக்கிய இடம் பெறு கிறது.

குழந்தை, மொழி கற்கும், நிலையை அழுநிலை, செங்கீரை நிலை, பேச்சுநிலை என்று மூவகையாகப் பாகுபடுத்துகிறார் டாக்டர் மு. வரதராசனார். அழு நிலைப் பருவத்தில் பசிக்கும்போது அழுது தனது தேவையைச் சுட்டிக்காட்டுகின்றது. குழந்தையின் அழுகையைப் பசி அழுகை, உடல்நோவு அழுகை என உளவியலார் இருவகையாகப் பகுக்கின்றனர். இத னால், பேச்சு உறுப்புக்கள் ஆற்றல் பெறுகின்றன பின்னர்ச் செங்கீரைப் பருவத்தில் ஆ, மா என்ற ஒலிகளைப் பேசத் தொடங்குகிறது. உயிர், மெய் யோடு கூடிய உயிர் போன்றவற்றைப் பேசத் தொடங்குகிறது. அடுத்த நிலையில் பெற்றோர்கள் பேசுவதுபோல், குழந்தை பேசத் தொடங்குகிறது.

குழந்தை மொழி கற்கும் திறனைப் பின்வருமாறு பட்டியலிட்டுக் காணலாம்:

| | | |
|---|---|---|
| முதல் மாதம் | — | அழுநிலை |
| இரண்டாம் மாதம் | — | மற்றவர் ஒலியைக் கேட்டல் |
| மூன்றாம் மாதம் | — | ஒலிகளை எழுப்பல் |
| நான்காம் மாதம் | — | 'போலச் செய்தலை'ப் பின்பற்றல் |
| ஐந்தாம் மாதம் | — | உயிர் ஒலியோடு மெய் ஒலியும் ஒலிக்கக் கற்றல் |
| ஆறாம் மாதம் | — | மழலைப் பேச்சு. மழலை மொழியில் உயிர் எழுத்துக்கும் மெய் எழுத்துக்கும் வேறுபாடு தெரிகின்றது. நன்கு பேசத் தொடங்குவதற்கு முன்னர் உள்ள பேச்சு நிலையையே 'மழலை' என்பர். |
| ஏழாம் மாதம்<br>எட்டாம் மாதம் | — | குழந்தையின் மழலைமொழியில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒலியன்களையும் சொற்றொடர்களையும் பகுத்தறியும் திறன் கைவரப் பெறுகின்றது. |
| ஓராண்டு | — | வார்த்தைகளை ஓரளவு பிழையின்றிப் பேச முற்படுதல் |
| பன்னிரண்டு முதல்<br>பதினெட்டு மாதங்கள் வரை | — | ஒரு சொல் சொற்றொடர்களைப் (One Word Sentence) பேசத் தொடங்குதல் |

| | | |
|---|---|---|
| இரண்டு ஆண்டு | — | சொற்கோவை குழந்தை மொழியில் பெருகுகின்றது. |
| மூன்று ஆண்டு | — | சொற்களின் தொகை பெருகல், வாக்கியங்களும் பெருகல், ஏன், எதற்கு என வினா எழுப்பும் பருவம். |
| ஐந்து ஆண்டு | — | மொழியிலுள்ள் அனைத்து ஒலியன்களையும் வேறு படுத்தவும் சொற்றொடர் அமைப்புப் பற்றியும் இலக்கண அமைப்புப் பற்றியும் குழந்தை தெளிவாகத் தெரிந்து கொள்கிறது. ஆக்கெட்டு(Hockett) என்னும் மொழியியற் பேரறிஞர் இவ்வயதினை 'மொழியியல் முதிர்ச்சி' என்பர். இவ்வயதிற்குப் பின்னர்ப் பிற மொழி கற்பது கடினம் என்கிறார்' இவ்வயதில் குழந்தை மொழியைப் பற்றி நன்கு அறிந்து பேசுகின்றது.எனவேதான், இவ்வயதினைப் பள்ளிக் கேற்ற வயது என்பர். குழந்தையின் பெற்றோர் பேசும் மொழியும் சுற்றுப்புற மொழியும் ஒன்றாக இருந்தால் அந்த மொழியைக் குழந்தை எளிதில் கற்றுக்கொள்ளும். |

குழந்தை முதலில் ஓரசைச் சொற்களாகவே (Monosyllabic Words)பேசும். 'ரகர', 'றகர', 'ழகர', 'லகர', ஒலிகளைக் குழந்தைகள் ஒலிக்க இயலாமையைப் பின்வரும் சான்றுகள் காட்டுகின்றன.

| | | |
|---|---|---|
| குருவி | — | குவ்வி |
| பருப்பு | — | பப்பு |
| செருப்பு | — | செப்பு |
| முறுக்கு | — | முக்கு |
| குழந்தை | — | கோந்தே |
| எலி | — | எரி |

இப்படிப்பட்ட இயல்புகளை உலகெங்கிலுமுள்ள குழந்தை மொழியிற் காணலாம். ஆங்கில மொழியில் கூட 'Very' என்பதை ஆங்கிலக் குழந்தைகள் 'veki' என்றே உச்சரிக்குமாம். இத்தகைய இயல்புகளை அரபி, மராத்தி, கொமன்சே, கில்யக்கு, இசுபானீசு போன்ற மொழிகளிலும் காணமுடிகிறது. 'Rabbit' என்பதை 'Wabbit' என்றே குழந்தைகள் உச்சரிக்கின்றன. 'சக்தி' என்பதை 'தத்தி' என்றே குழந்தைகள் உச்சரிப்பதை அனுபவ வாயிலாக அறியலாம். தமிழகக் குழந்தைகள் மொழிமுதல் உயிர் எழுத்தைத் தொடக்க நிலையில் ஒலிப்பதில்லை.

| | | |
|---|---|---|
| அம்மா | — | ம்மா |
| அப்பா | — | ப்பா |
| அத்தை | — | த்தை |

இதேபோன்று மொழிமுதல் மெய்ம்மயக்கங்களை (Initial Consonant Clusters) உச்சரிப்பதிலும் இடர்ப்பாடு இருப்பதை அறியலாம். இரண்டு மெய்ம்மயக்கங்கள் வரின், ஒற்றை மெய்யாக உச்சரிக்கின்றனர். குழந்தை மொழியில் அசை அமைப்பு (Syllabic Pattern) evev என்ற அமைப்பில் உள்ளது. பின்னர் வளர்ந்த நிலையில் eveev என்ற அமைப்பில் உள்ளது.

மூவிடப்பெயர்களில் குழந்தை 'நான்' 'நீ' போன்றவற்றைத்தான் முதலில் கற்றுக்கொள்கின்றது. தொடக்கநிலையில் வேற்றுமை உருபின்றியே வாக்கியங்களை அமைத்துக்கொள்கின்றது. தொடக்க நிலையில் ஒருமை, பன்மை வேறுபாட்டையும் காணமுடியாது. வினைச் சொல்லோடு கால இடைநிலை, திணை, பால் விகுதிகளை இணைத்துக் கூறல் பிற்கால வளர்ச்சியாகும். குழந்தை மொழியில் நேற்று, இன்று வேறுபாடு காணமுடியாது. 'என்று' 'என்பது' போன்றவற்றைப் பின்னர்த் தான் கற்றுக் கொள்கின்றது. காலங்களில் நிகழ்காலத்தைத் தான் முதலில் பயன்படுத்துகின்றது. சிறப்பு விதிகளைக் காட்டிலும் பொதுவிதிகளைத் தான் முதலில் பயன்படுத்துகின்றது. சில நேரங்களில் தொலைபேசி மொழி போன்றிருக்கும். முக்கியமான சொற்களை மட்டுமே குழந்தை பேசும். சூழ்நிலையையொட்டிப் பொருள் புரிந்துகொள்ளவேண்டும். குழந்தை மொழியில் அடுக்குத்தொடரையும் மிகுதியாகக் காணலாம்,

குழந்தை மொழிக்கே உரிய சொற்கோவைகளும் உண்டு. குழந்தையுடன் உறவாட நினைத்தால் அச் சொற்கோவைகளைப் பயன்படுத்த வேண்டும்.


| | |
|---|---|
| ஆய் | 'அழுக்கானவை, மலம்' |
| பூச்சாண்டி | 'பயமுறுத்தும் உருவம்' |
| பாச்சி | 'பால், முலை' |
| மியா | 'பூனை' |
| புவ்வா, உவா | 'உணவு' |
| உச்சா | 'மூத்திரம்' |

குழந்தை ஒரு மொழியைக் கற்றுக்கொண்டது என்று கூறினால், கணக்கிட முடியாத சொற்றொடர்களைச் சில விதிகளின்கீழ்க் கற்றுக்கொண்டது என்று பொருளாகும். பல்வேறு விதிகளை ஆதாரமாகக் கொண்டு எத்தனையோ பல்வேறுபட்ட சொற்றொடர்களை ஆக்கிக்கொள்ள முடிகிறது. இத்தகைய விதிகள் குழந்தையின் உள்ளத்தில் பல்கிப் பெருகுவதே மொழியின் வளர்ச்சியாகும். மேலும் மேலும் மொழி வளர்ச்சியடைய, குழந்தைக்குச் சமுதாயம் பள்ளிக்கூடமாகத் திகழ்கின்றது. சு.ச.

**குழல்**: இயற்கை ஏற்படுத்திய இனிய ஒலிகளைப் பலமுறை கேட்டுப் பழகிய முதல் மக்கள் கூட்டம், அவ்வொலிகளைத் தானே செயற்கையாகவும் எழுப்ப முடியும் என உணர்ந்து கொண்டது. அம்முயற்சியின் விளைவுகளே இசைக் கருவிகள் எனலாம். இத்தகைய இசைக் கருவிகளில் காலத்தினால் பழையவை காற்றுக் கருவிகள் என்பர்.

இக்காற்றுக் கருவிகளின் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவமே ஊதும் குழல்கள். பல்வேறு நாடுகளில் பல வடிவங்களில் இத்தகைய ஊதும் இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன என அறிய முடிகிறது. சான்றாகக் கிரீசில் முற்காலத்தில் பான் (Pan) என்ற ஒரு தெய்வம் மலைச் சரிவு நாடுகளில் வசித்து வந்ததாகவும், அது இடுப்பிற்குக் கீழ் ஆடு போன்ற உருவம் கொண்டதாகவும், எப்பொழுதும் துளைகளுடன் கூடிய ஊது கருவி ஒன்றினை இசைத்ததாகவும் கிரேக்க இலக்கியங்கள் கூறுகின்றன.

இது தவிர, சுவிட்சர்லாந்து நாட்டின் மலைப் பகுதிகளிலும் பல்கேரியா, உருமேனியா, யூகோசுலேவியா ஆகிய நாடுகளின் பல பகுதிகளிலும் மலை



குழல்

யினில் ஆடு, மாடு மேய்ப்போர் தங்களின் பொழுது போக்கிற்கும் ஆடு மாடுகளை ஒன்று சேர்த்தற்கும் ஊதுகருவியைப் பயன்படுத்தினர் எனத் தெரிகிறது. இந்தியாவில் ஊதும் சோளத்தட்டைகளின் இணைப்புப் போன்ற ஓர் இசைக்கருவி இருந்ததை கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காஞ்சித்தூபியின் சிற்பங்களிலும் அசந்தா ஓவியங்களிலும் காண முடிகிறது.

குழலிசைக் கருவிக்கு மூங்கிலே சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. பர்மா, இந்தோனேசியா, சீனா, அசாம் போன்ற பகுதிகளில் மூங்கிலால் வெவ்வேறு விதமான இசைக்கருவிகள் செய்யப்பட்டாலும் இப்தியாவில் அசாம் நீங்கிய பிற பகுதிகளில் 'மூங்கில்' குழலிசைக்கு மட்டுமே உரியதாகக் கொள்ளப்படுகின்றது.

குழல் என்னும் காற்றிசைக் கருவியில் காற்று அதிர்வடைவதன் மூலம் இசை உண்டாகிறது. இயற்கையில் வண்டுகள் துளை செய்த மூங்கில் குழல்களில் காற்றுப் புகுந்து வெளிவரும்பொழுது ஏற்பட்ட இனிய ஒலியே குழலிசைக் கருவியின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும்.

கொம்புகள், எலும்புகள், மூங்கிற் குழாய்கள் எனக் குழலிசைக் கருவியின் வளர்ச்சியைக் கூறுவர். இன்றும் இலடாக்குப் பகுதியில் மனிதனின் தொடை எலும்பே கொம்புக் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவிலும் எருமை மாட்டின் கொம்பு ஊது குழலாகப் பயன்பட்டது. தொல்பொருள் ஆய்வினர் சிந்துச் சமவெளிப் பகுதியிலிருந்து பறவை வடிவமான ஊது குழல்களைக் கண்டு எடுத்துள்ளனர். சங்குகளும் ஊது கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. வேதகால இலக்கியங்களில் வேணு, நாடி என்னும் காற்றுக் கருவிகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

ஊது குழல்களில் பக்கவாட்டில் ஊதி வாசிக்கும் குழல்கள் இந்தியாவில் மிகுதி. 15 செ.மீ. முதல் 60 செ.மீ. வரை நீளமுள்ள இவை மூங்கிலால் செய்யப் படுகின்றன.

அசாம் பகுதியில் தரமான குழல்கள் செய்யப்படு கின்றன. அவை மரத்தினாலும் உலோகங்களினா லும் செய்யப்படுகின்றன. அவற்றில் நான்கிலிருந்து ஆறு வரை விரல் துளைகள் காணப்படும்.

வட இந்தியர், குழலைப் பன்சீரி என்பர். இது 20 செ.மீ. முதல் 65 செ.மீ. வரை நீளமுடையதாக இருக்கும். இதில் 4 முதல் 8 துளைகள்வரை உள் ளன. இவ்வகைக் குழல்களில் சிறந்தவை எனக் கருதப் படும் 'அல்கோசா' என்னும் குழல் இராசசுத்தானிலும் 'சதாரம்' என்னும் குழல் பஞ்சாபிலும் பயன்படுத்தப் படுகின்றன. அல்கோசா என்பது இரட்டைக் குழல் கள். அதன் இரண்டு அலகுகளையும் வாயில் வைத்து ஊதவேண்டும்.

தங்கம், வெள்ளி, சந்தனக் கட்டை, இரும்பு, வெண்கலம் போன்றவற்றால் இவ்விசைக் கருவி செய்யப்பட்டாலும் மூங்கிலில் செய்யப்பட்ட குழல் களே சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், அவற்றில் 'இசை'யின் ஒலி மிகத் தெளிவாக அமை வதாக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இக் குழல் ஆயர் குழலென்றும், நெடுங்குழலென் றும், இசையரங்குகளில் பயன்படுத்தப்படுபவை என் றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**ஆயர் குழல்**: நீளம் குறைந்தும் சற்று அகன்றும் உள்ள குழல். மூங்கிலின் கனம் கொஞ்சம் அதிக மானது. கிளாரினெட்டில் உள்ளதைப் போன்ற வாய்த்துளை கொண்டது. இதில் எட்டு விரல் துளை கள் உள்ளன. ஒலி தாழ்ந்தும் இனிமையுடனும் இருக்கும். இது குன்றுப் பகுதியில் ஆடு மேய்ப் போர் பயன்படுத்தும் இசைக் கருவி.

**புல்லாங்குழல்**: இசையரங்குகளில் பயன்படுத்தப் படுபவை; $2\frac{1}{2}$ கட்டை கொண்டவை; எட்டுத் துளை கள் உடையவை.

**நெடுங்குழல்**: நீண்ட குழல்; ஒரு சில விரல் துளைகளே கொண்டவை; தாழ்ந்த ஒலியைத் தரு பவை.

**குழலின் பிறமொழிப் பெயர்கள்**: வடமொழி, இந்தி ஆகியவற்றில் பன்சீரி, பன்சி, வேணு, வம்சி, முரளி என் றும்; தமிழில் குழலென்றும் கூறப்படுகிறது. கன்னடம் –கோலவி, தெலுங்கு-பில்லன குரோவி, மலையாளம் –குழல்.

**குழல் பற்றிய பண்டைய நூற் செய்திகள்**: பரத ரின் நாட்டிய சாத்திரத்தில் இசைக் கருவிகளைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில் குழல் பற்றிய செய்தி யும் உள்ளது. குழல் பற்றிய செய்தி கி.பி. 13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்கீத ரத்னாகரத்திலும் காணப்படுகிறது.

வேத கால இலக்கியங்களில் வேணு, 'நாடி' ஆகிய இசைக்கருவிகள் பற்றிய குறிப்பு உள்ளது.

வடமொழி நூல்களான பாகவதம், இரகுவமிசம், நாராயணம் போன்ற நூல்களிலும் குழலின் இனிமை கூறப்படுகிறது.

தமிழிலக்கியங்களில் சங்க நூல்களான பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, சங்கம் மருவியகால நூலான சிலப்பதிகாரத்திலும், பல்லவர் காலத்தின் பக்தி இலக்கியங்களான தேவாரம், திவ்வியப் பிர பந்தம் ஆகியவற்றிலும் சேக்கிழாரின் பெரியபுராணத் திலும் குழலிசைக் கருவி பற்றிய செய்திகளும் அக் கருவி இசைக்கப்பட்ட முறையும் கூறப்படுகின்றன.

**குழல் பற்றிக் கிடைக்கும் பிற சான்றுகள்**: பௌத் தர்களின் சமயச் சார்பான இசைப்பாடல்களை இசைக்க இக்கருவி பயன்பட்டது என்பதைச் சாஞ்சி யின் சிற்பச் சான்றுகள் அறிவிக்கின்றன. காந்தாரக் கலைச் சிற்பங்களிலும், அசந்தா, எல்லோராக் குகை களின் ஓவியங்களிலும் குழற் கருவியைக் காண முடி கிறது. இக்கருவி சாய்வாய், குறுக்காய் வாயின் பக் கத்தில் வைத்து வாசிக்கப்பட்டமையை அச்சிற்பங் களும் ஓவியங்களும் அறிவிக்கின்றன.

'குழலின் இசை' இனிமை வாய்ந்தது என்பதைத் தமிழ் இலக்கியங்கள் பல மிகத் தெளிவாகக் காட்டு கின்றன. யாழும் இனிய இசை கொண்டதாயினும், யாழிற்கும் முன்னதாக நிற்கும் சிறப்பைக் குழ லுக்குக் கொடுத்தனர்.

'குழலினிது யாழினிது என்ப' – 'குறள்'

'குழல்வழி நின்றது யாழே' – 'சிலம்பு'

**அடியார்க்கு நல்லார் தரும் குழல் பற்றிய செய்தி கள்**: குழல்–வங்கியம். இதனைச் செய்ய மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என ஐந்தும் உதவும்.

நல்ல நிலத்தில் வளர்ந்த இம்மரங்களின் ஆண் டினைத் தெரிந்துகொண்டு (இளையதும் ஆண்டு

முதிர்வுமின்றி) பெரிய மரத்தை வெட்டி நிழலிலே ஆறவிட்டு ஓராண்டு சென்ற பின் இலக்கண முறைப் படி இசைக்கருவியைச் செய்தல் வேண்டும் என்பார்.

**குழலினைச் செய்யும் முறை**: இந்தியாவின் தென் பகுதியில் குழல்கள் ஒரே அளவினைக் கொண்ட குறுக்களவு உள்ளனவாகவும், விரல் துளைகளைக் கொண்டவையாகவும், உருளை வடிவத்தில் ஒரு பக்கம் கணுவினால் மூடப்பட்டனவாகவும் காணப் படுன்றன. வாய்த் துளையின் குறுக்களவு விரல்துளை யின் குறுக்களவினைவிடச் சிறிதளவு பெரியதாய் இருக்கும்.

உலோகத்தால் செய்யப்பட்ட குழல்களில் குழ லின் இறுதிப் பகுதி 'கார்க்கி' னால் அடைக்கப்படு கிறது. குழலின் உட்பகுதி மென்மையாக இருத்தல் இன்றியமையாதது. வாய்த்துளையும், விரல் துளை களும் ஒரே நேர் கோட்டில் அமைக்கப்படுகின்றன. வாய்த்துளை 'முகாந்தரம்' என்றும் வாய்த்துளைக்கு அருகிலுள்ள முதல் துளை 'தாரந்தரம்' என்றும் அழைக்கப்படுகிறது. மரங்கள் தவிர தந்தம், கண் ணாடி, பீங்கான் ஆகியவற்றிலும் குழலினைச் செய் யும்முறை உள்ளது.

தென் பகுதிகளில் மூங்கிலில் செய்யப்படும் குழல் கருவிகளே பெரிதும் வழக்கில் உள்ளன. இம் மூங்கி லில் தண்டுகள் நேராகவும், சுத்தமாகவும், வழுவழுப் பாகவும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மூங்கில் தண்டில் சிறு கீறலோ, வெட்டுப்பகுதியோ மேடு பள்ளங்களோ இருத்தல் கூடாது. நல்ல தரமான மத்திம கனமுடைய தண்டுடனும் அம் மூங்கில் குழல் அமைய வேண்டும். இத்தகைய குழல் களே நீண்ட காலம் உழைக்கக் கூடியதாய் இருக்கும்.

பச்சை மூங்கில் குழாய்களை நன்கு தேர்ந்து எடுத்து, பின்பு அதைத் தணலில் பதம் செய்து, அதிலுள்ள ஈரத்தன்மை அகற்றப்பட்டவுடன், அதற்கு எண்ணெய் தேய்த்து, அம்மூங்கிலைப் பக்கு வப் படுத்திக் குழலைச் செய்வதே நன்று.

**குழலிசைப்பதற்குரிய அடிப்படை நுணுக்கங்களா வன**: 1. மூச்சு விடுதலைக் கட்டுப்படுத்துதல், 2. உதடுகளின் அசைவுகளைக் கட்டுப்படுத்துதல், 3. விரல்களின் அசைவுகளைக் கட்டுப்படுத்துதல், 4. நாக்கின் அசைவுகளைக் கட்டுப்படுத்துதல், 5. இடையீடற்ற பயிற்சி.

குழலிசைப்போர் நன்கு நிமிர்ந்த நிலையில் அமர்ந்திருந்தால் காற்று தடையின்றி வெளிப்பட இயலும். தகுந்த ஆசிரியரின் துணையுடன் இசைக் கும் முறையினை அறிந்து இசைக்கும்போது குழ லிசை மிக இனிய இசையாக அமைவதை உணர லாம். இந்திய நாட்டில் இசைக் கருவிகளுக்கும் இறைக்கும் தொடர்பு காட்டப்படுவதை இக்குழலி லும் காணலாம். டி. எம். பொ.

**குழற்றத்தனார்**: இவர் சங்ககாலப் புலவர். தத்தனார் என்பது இவரது இயற்பெயர். குழல் என்பது புல்லாங்குழலைக் குறிக்க, அச்சொல் இவரது இசை வல்லமையைக் குறிக்கும் அடைமொழியாக இருக்கலாம் என்று சிலர் கூறுவர். இவர் பாடியதாகச் சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு பாடல் (குறுந். 242) மட்டுமே காணப்படுகிறது.

செவிலி கூற்றாக அமைந்த அப்பாடல், தலை வனும் தலைவியும் இல்லறம் நடத்தும் பாங்கினை அழகாக எடுத்தியம்புகிறது. தலைவனும் தலைவியும் என்றும் பிரிவின்றி இருத்தலையும், மன்னன் ஏவிய பணியாக இருந்தாலும் அதனை விரைவில் முடித்துத் திரும்புகிற இயல்புடையவனாகத் தலைவன் இருத்த லையும் செவிலி நற்றாய்க்கு எடுத்துக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. ச.செ.

**குழு** என்பது ஒருவருக்கொருவர் செய்தித் தொடர்பு கொண்டு இணைந்திடும் மக்களின் தொகுப்பைக் குறிக்கிறது. பொதுவான பற்றுக் கோடுகளைக் கொண்ட மக்கள் தங்களுக்குள் செய் தித் தொடர்பு கொண்டு உணர்வு நிலையில் இடை வினை புரியும்போது அங்குக் குழு உருவாகிறது. இப்படி உருவாகும் குழு ஒரு புலனீடான அமைப்பை யும், ஒழுங்கமைதியையும் பெற்று விளங்கும்.

குழு மக்களின் தொகுப்பு ஆயினும், எல்லா மக்கள் தொகுப்புகளும் குழுக்களாகா. பேருந்துக் காக ஒரு நிறுத்தத்தில் மக்கள் கூடி நின்றாலும் அத் தொகுப்பு ஒரு குழு ஆவது கிடையாது. ஏனெனில், அவர்களுக்கு இடையே உரையாடலோ செய்தித் தொடர்போ, இடைவினையோ ஏற்படுவதில்லை. ஆயினும், அவர்களுக்கிடையே உரையாடலோ இடைவினையோ ஏற்பட்டால் அது குழுவாகக் கூடிய வாய்ப்பு உண்டு. இவ்வாறே ஒரு புகை வண்டிப் பெட்டியில் செல்லும் பயணிகள் ஒரு குழு வாக அமைவது கிடையாது. ஏனெனில், அவர்களுக் குள் உணர்வு நிலையுடனான இடைவினை இருப்ப தில்லை. ஆனால், அவர்கள் அத்தகைய இடை வினையை மேற்கொள்ளும்போது அவர்கள் ஒரு குழு வாக மாறக்கூடும். இந்த வகையில் புகைவண்டியில் அடிக்கடி பயணம் செய்கின்ற மாணவர்கள் அல்லது

தொழிலாளர்கள் தமது நெருக்கமான இடைவினை யின் காரணமாகக் குழுவாக அமைகின்றனர்.

எனவே, குழுவின் முதன்மையான இயல்பு உடல் நெருக்கம் ஆகாது; ஒரு உணர்வு நிலையுடனான இடைவினையே ஆகும். எனவே தான், தாங்கள் அனைவரும் ஒரே பிரிவினர் என்ற உணர்வுடன் இடைவினை புரிகின்ற மக்களைக் கொண்ட அமைப் பைக் குழு என்று தர்னர் (Turner) கில்லியன் (Killian) ஆகிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒரு குழுவின் மிக முக்கியமான அமிசம் அதனு டைய உறுப்பினர்களிடையே நிகழ்கின்ற உணர்வு நிலையுடனான இடைவினையே என்பது தெளிவு. இது மட்டுமன்றி வேறுசில அமிசங்களும் குழுவிற்கு உண்டு. அதன் உறுப்பினர்களுக்குப் பொதுவான பற்றுக்கோடுகள் இருக்கும். மேலும், சமூக அறிவியற் களஞ்சியம் குறிப்பிடுவதைப் போல, அதற்குச் சில பொதுவான குணங்களும், அதனைப் பிறர் அடை யாளம் காணுகின்ற அளவில் ஒரு தனித்தன்மையும் அமைந்திருக்கும்.

குழு என்பதற்கு குறிப்பிட்ட வரையறுத்த அளவு கிடையாது. இருவருக்கு மேல் எந்த அளவி லும் எண்ணிக்கை இருக்கலாம். குழுவிற்கு என்று சில பொதுவான நெறிகளும், விதிகளும் இருக்கக் கூடும். அவற்றை அனைவரும் ஏற்றுக் கொண்டு அவற்றிற்கேற்ப முறையோடு நடந்து கொள்வர். மேலும் ஒரு குழுவில் குறிப்பிட்ட செயற்பாடுகளும், உரிமைகளும் அமைந்திருக்கும்.

பொதுவாக, குழு இடைக்காலத்திற்காகவோ நிரந்தரமாகவோ இருக்கலாம். சில குழுக்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் செயற்படும். கால வரம்பு முடிந்ததும் அவற்றின் இயக்கமும் முடிந்து விடும். எடுத்துக்காட்டு, ஒரு விசாரணைக் குழு. சில குழுக்கள் காலவரையின்றி நீடித்து இயங்கும். எடுத் காட்டு, அரிமா சங்கம், சுழற் கழகம்.

**குழு உறுப்பினனாக மாற வேண்டியதன் முக்கி யத்துவம்**: மக்களாகப் பிறந்த அனைவருமே சமூகத் தைச் சார்ந்து ஏதாவது ஒரு குழுவிலேயே வாழுகின் றனர். முற்றிலும் தனிமைப்பட்ட மனிதனை உலகில் காண்பது மிக அரிது. மனிதன் குடும்பம் என்ற குழு வின் உறுப்பினராகத் தனது வாழ்வைத் தொடங்கி, நண்பர்கள், உறவினர்கள், அரசு போன்ற பல குழுக் களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றான். சமூக விலங்கு என்ற முறையில் கூடிவாழும் இயல்பு மனித னுடன் இயற்கையாக அமைந்துள்ளது. குழுவாக வாழுகின்ற தன்மையினை மனிதன் இயற்கை யிலேயே கொண்டிருக்கிறான். எனவேதான் அரிசு டாட்டில் (Aristotle) என்ற அறிஞர், மனிதனைச் சமூக விலங்கு என்று கூறுகிறார். சி.இ.எம். சோடு (C.E.M. Joad) என்ற அரசியலறிஞர், ஆதிகாலத்தில் வாழ்ந்த நியாண்டர்தால் மனிதனுடைய வாழ்க்கை வரலாறும், மனிதன் ஆதிகாலத்திலேயே குழுவாகக் கூடி வாழுகின்ற தன்மையினைக் கொண்டிருந்தான் என்பதை விளக்குவதாகக் கூறுகிறார். மேலும், ஆதி காலத்து மக்கள் வாழ்ந்திருந்த குகைகளில் காணப் படும் தடயங்களும், சுவரோவியங்களும், மற்றவை யும் மனிதன் பிறருடன்கூடிக் குழுவினனாக வாழ்ந் திருக்கிறான் என்பதைக் காட்டுகின்றன. இதிலிருந்து மனிதன், எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் ஆதி காலம் முதற் கொண்டு இன்று வரை ஏதாவது ஒரு குழுவில் கூடிவாழ்ந்திருக்கிறான் என்பது தெளிவாகி றது.

இவ்வாறான சமூகவியல்பு (Sociability) காரண மாக மட்டுமன்றித் தனது தேவையின் காரணமாகவும் மனிதன் ஒரு குழுவில் சேர்ந்து வாழுகிறான். மேலும் ஒருவன் மனிதனாக விளங்க வேண்டுமானால்-மனித குணங்களும், இயல்புகளும் அவனிடம்ஏற்பட வேண்டு மானால் அவன் சமூகத்தில்-சமூக உறவுகள் நிலவு கின்ற ஏதாவதொரு குழுவில் இணைந்து வாழ்ந்தாக வேண்டும்.

ஒரு குழுவினனாகச் சமூகத்தில் இருந்து வாழ வேண்டிய தேவை, அதாவது பிறருடன் சமூக உறவு கள் வைத்துக் கொண்டு வாழ வேண்டிய தேவை மனிதனுக்கு இருக்கிறது. ஒரு தனி மனிதனாக இருந்து அவனால் தன் தேவைகள் அனைத் தையும் நிறைவேற்றிக் கொள்ள இயலாது. பிறருடைய ஒத்துழைப்பு, கூட்டுறவு, உதவி, துணை யில்லாமல் அவனால் சுயமாகத் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. எனவே, மனிதன் ஒரு சமூகத்தைச் சார்ந்து அல்லது சமூகத்துடன் இயைந்து குழுவினனாக வாழ வேண்டியது இன்றிய மையாததாகின்றது. மெக் ஈவர் (Mac Iver) என்னும் அறிஞர் குறிப்பிடுவதைப் போல மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பு ஆகியவை தேவைப் படுகின்றன. சுகம் தேவைப்படுகிறது; வாழ்க்கை வாய்ப்புகள், வசதிகள் தேவைப்படுகின்றன. இவ்வா றான அனைத்துத் தேவைகளையும் மனிதன் சமூகத் தைச் சார்ந்து அதனுடைய உதவியினால் பெறுகி றான். எடுத்துக்காட்டாக, குழந்தையாக இருக்கும் பொழுது அவனுக்குக் குடும்பம் என்ற குழுவிலுள்ள பெற்றோரின் கவனிப்பும், வளர்ப்பும் தேவைப்படு வதைக் கூறலாம். பின் வயதான காலத்தில் பிறரின் உதவிகள் அவனுக்குத் தேவைப்படுகின்றன. ஒருவன்

தன் வாழ்க்கை முழுவதும் சமூகத்திலுள்ள ஏதாவதொரு குழுவினைச் சார்ந்தும், அதன் உறுப்பினராய் அமைந்தும் வாழ்கிறான்.

அறிவு வளர்ச்சி, சிந்திக்கும் திறன் ஆகியவை ஏற்படவும், உணர்ச்சிப் பக்குவம் பெறவும் பிறருடைய தொடர்பு ஒருவனுக்குத் தேவைப்படுகிறது. பிறருடன் குழுவாக வாழ்வதால் அவன் பிறரோடு ஒத்துப்போகும் குணம், சகிப்புத் தன்மை, பொறுப்புணர்ச்சி ஆகிய தன்மைகளைப் பெற்று உணர்ச்சிப் பக்குவம் அடைகிறான். மேலும், குழு இடைவினையின் மூலம் உளம் மற்றும் ஆளுமை வளர்ச்சியையும் அடைகிறான். பிறரைப் பின்பற்றுதல், ஒன்றுதல் ஆகிய செயல்களைச் செய்வதன் மூலம் ஒருவன் ஒரு குழுவில் உறுப்பினராக நிலைபெற்று ஆளுமை வளர்ச்சியையும் உளவியல்சார் முதிர்ச்சியையும் அடைகிறான். எனவே, ஒருவன் மனிதனாக விளங்கவும்,மனித குணங்களும், இயல்புகளும் பெறவும் அவன் சமூகத்தில், சமூக உறவுகள் நிலவுகின்ற ஏதாவதொரு குழுவில் சேர்ந்து வாழ்ந்தாக வேண்டும்.

**குழுக்களின் வகைகள்**: சமூகவியல் அறிஞர்கள் குழுக்களைப் பல வழிகளில் வகைப்படுத்துகின்றனர். சி.எச்.கூலே என்ற அறிஞர் தம் 'சமூக நிலைய அமைப்பு'(Social Organization)என்னும் நூலில் குழுக்களை முதல்நிலைக் குழுக்கள் (Primary Groups), இரண்டாம் நிலைக் குழுக்கள் (Secondary Groups) என இரு வகையில் பகுத்துக் கூறியுள்ளார். அளவு, ஒத்துழைப்புத் தன்மை, அமைப்பு முறை, உறவுகள் ஆகியவற்றைக் கொண்டு இவர் குழுக்களைப் பிரிக்கிறார்.

ஏதாவதொரு குழு ஒரு குழந்தை முதன் முதலில் தனது வாழ்க்கையைத் தொடங்குகின்ற குழுவாகவும், சமூக மயமாதலுக்கு இன்றியமையாத குழுவாகவும் இருந்தால் அக்குழு முதல் நிலைக் குழு ஆகும் என்கிறார் கூலே. முதல் நிலைக் குழுக்களில் உறவுகள் நேருக்கு நேராக, நெருக்கமாக, ஆழமாக உணர்ச்சியுடன்கூடி நிலையாக இருக்கும். அவற்றில் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உதவி, தோழமை பொதுவான விவரங்களைப் பற்றி விவாதம் செய்வது போன்றவற்றிற்காக நேருக்குநேர் சந்தித்துக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக, குடும்பம்,விளையாட்டுக் குழு அண்டையங்கள் ஆகியவற்றில் இத்தகைய நிலைமை நிலவுதலைக் கூறலாம்.

'நாம் என்ற உணர்வு' (We feeling) முதல் நிலைக் குழுக்களில் மேலோங்கியிருக்கும் என்று கூறுகிறார். அந்த அடிப்படையிலேயே அவர் முதல் நிலைக் குழுக்களையும், இரண்டாம் நிலைக் குழுக்களையும் வேறுபடுத்துகிறார். ஆனால், அனைத்துக் குழுக்களிலும் சில கோணங்களில் உறுப்பினர்கள் தம்மிடையே 'நாம் என்ற உணர்வினைக் கொண்டிருப்பர். எனவே, இந்த 'நாம்' என்ற உணர்வினை கொண்டு முதல் நிலைக்குழுக்கள், இரண்டாம் நிலைக் குழுக்கள் எனப் பிரிக்க இயலாது. மேலும், இந்த உணர்வு நேருக்கு நேர் தொடர்பு கொள்வதால் மட்டும் வருவதில்லை



முதல் நிலைக் குழு



இரண்டாம் நிலைக் குழு

நெருக்கு நேர் தொடர்பு கொள்ளாமலேயே இருவர் நெருங்கிய நண்பர்களாக இருத்தல் கூடும். எ.டு. பேனா நண்பர்கள்.

கிங்சுலீ டேவிசு (Kingsley Davis) என்னும் அறிஞர், பொதுவாக முதல்நிலைக் குழுக்கள் உடலளவில் நெருக்கமான உறவுகளையும், சிறிய அளவையும், நிலைத்த தன்மையையும் கொண்டிருக்கும் என்று கூறுகிறார். ஆனால்,இவை அனைத்தும் ஒரே நேரத்தில் இருக்க வேண்டியதில்லை. மேலும் ஒரு முதல் நிலைக் குழுவில் உடலளவில் நெருக்கமான உறவுகள் அமையாமலும் போகலாம். எடுத்துக்காட்டாக, முதல் நிலைக் குழு உணர்வினைக் கொண்டுள்ள ஓர் அன்பான குடும்பத்தில் சில உறுப்பினர்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வேறிடத்தில் இருப்பதற்கு வாய்ப்புள்ளமையினைக் கூறலாம்.

இவ்வாறே ஒரு முதல்நிலைக் குழு சிறியதாக இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. ஒரு குழு எந்த அளவிற்குச் சிறியதாக அமைகிறதோ, அந்த அளவிற்கு அது நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக்கும். அது விரிவடையுமாயின், தொடர்பு குறைய நேரிடும். எடுத்துக்காட்டாக, ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தில் அடிக்கடி சண்டை, பூசல்கள் ஏற்பட்டுத் தொடர்புகளின் நெருக்கம் குறையக் கூடுவதைக் குறிப்பிடலாம்.

நெருங்கிய தொடர்பு, சிறிய அளவு, நீடித்த தன்மை ஆகியவை முதல்நிலைக் குழுவின் இன்றியமையாத் தன்மைகளாக விளங்குகின்றன. அக்குழுவிலுள்ள உறுப்பினர்களின் உறவுகள் இயற்கையாக அமைவனவாகும். அவை ஒப்பந்த அளவில் அமைவதில்லை. அவை ஆள் தொடர்புடையனவாகவும் (Personal), தன்னியலார்ந்தனவாகவும் (Spontaneous) உணர்ச்சி அடிப்படையிலும் (Sentimental) இருக்கும். மேலும், அவை உறுப்பினர்களின் உள்ளார்ந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தக் கூடிய வகையில் அமைந்திருக்கும். அவை நிலையானவையாக நீடித்திருக்கும். ஆயினும், அத்தகைய உறவுகள் என்றும் சுமுகமாக இருக்க வேண்டும் என்பதில்லை. அவை சில வேளைகளில் முரண்பாடும், பூசலும் கொண்டு அமையக் கூடும்.

குறிப்பிட்ட காரணங்களுக்காகவும், அக்காரணங்களுக்காக அதன் உறுப்பினர்கள் தங்கள் பங்கினைச் செலுத்துவதற்கு ஆர்வம் காட்டுவதற்காகவும் உருவாக்கப்படுகின்ற குழு இரண்டாம் நிலைக் குழு ஆகும். இரண்டாம் நிலைக் குழுக்களில் உறவுகள் பொதுவாக நேருக்கு நேராக இரா. அப்படியே இருந்தாலும் அவை நெருக்கமாக, ஆழமாக, உணர்ச்சி அடிப்படையில் இருக்கமாட்டா. மேலோட்டமாகவும் நிலையற்றனவாகவும் அவை இருக்கும். எடுத்துக் காட்டு, வணிக நிறுவனங்கள், கல்லூரிகள். அரசியற் கட்சிகள், பொழுது போக்கு மன்றங்கள் போன்றவை இத்தகைய தன்மைகளைக் கொண்டு இரண்டாம் நிலைக் குழுக்களாக விளங்குகின்றன.

இரண்டாம் நிலைக் குழு அதிகமான காலம் நீடித்திருக்கக் கூடும். எனினும் அக் குழுவிலுள்ள உறுப்பினர்களின் தொடர்பு, உறவு போன்றவை பொதுவான நோக்கில் இரா. அவை இயற்கையாக இராமல் ஒப்பந்த அளவிலானவையாக இருக்கும்.

இவ்வாறு முதல் நிலைக் குழுக்களிலிருந்து இரண்டாம் நிலைக் குழுக்கள் வேறுபட்டிருந்தாலும் அவை முதல் நிலைக் குழுக்களின் இயல்பைப் பெற்று விளங்குகின்றன. 'நாம்' என்ற உணர்வு முதல் நிலைக் குழுக்களின் இயல்பு. அது இரண்டாம் நிலைக் குழுக்களிலும் இடம் பெறுகின்றது. மேலும், பல வேளைகளில் முதல் நிலைக் குழுக்களோடு இரண்டாம் நிலைக் குழுக்களும் சமூகத்தில் ஒன்றுபட்டுச் செயல் புரிகின்றன.

சம்னர், குழுக்களை அகக் குழுக்கள் (In-groups) புறக் குழுக்கள் (Out-groups) எனப் பிரிக்கிறார். தம் குழுக்கள் என ஒருவர் உரிமை கொள்கின்ற எந்தக் குழுக்களும் அகக் குழுக்களாகக் கருதப்படுகின்றன. அவருக்குத் தொடர்பற்ற, அந்நியமான, அவர் சாராத குழுக்கள் புறக் குழுக்கள் எனப்படுகின்றன.

சாண்டர்சன் (Sanderson) என்ற அறிஞர், சமூகக் குழுக்களை விருப்பாற்றலுக்குட்பட்ட குழுக்கள் (Voluntary groups), விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட குழுக்கள் (Involuntary groups) எனப் பிரிக்கிறார். விருப்பாற்றலுக்குட்பட்ட குழுவின் உறுப்பினர்கள் அக் குழுவில் இயல்பாகத் தோன்றிய உறுப்பினர்கள் அல்லர். அத்தகைய குழுக்கள் அவ்வப்போது உறுப்பினர்களோடு உண்டாக்கப் படுகின்றன. அவை மனிதர் தமது சொந்த விருப்பத்திற்கேற்ப இணைகின்ற குழுக்களாகும். அவற்றில் உறுப்பினரான பின்னர் எந்நேரத்திலும் வெளிவர அவர்களுக்குச் சுதந்திரம் உண்டு. எடுத்துக்காட்டாக, பங்குதாரர் குழு, இசைக்குழு, விளையாட்டுக் குழு போன்றவை விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட குழுக்களாதலைக் கூறலாம்.விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட குழுக்கள் உறவு முறையின் (Kinship) அடிப்படையில் உருவானவையாகும். அவற்றில் ஒருவர் குழுவை விட்டு விலகி வர முடியாது. அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டா

லும் அவற்றில் உறுப்பினராகஇருந்தே தீர வேண்டும். எடுத்துக்காட்டு, சாதி, குடும்பம் போன்ற குழுக்கள். பிரதிநிதிகளின் குழுக்கள் பிரதிநிதிகளாக வருபவர்களை உறுப்பினராகக் கொண்டவையாகும். சில அமைப்புகளால் மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டோ, நியமனம் செய்யப்பட்டோ பிரதிநிதிகளாகச் சேருவது பிரதிநிதிகளின் குழுவாகும். எடுத்துக்காட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

தானீசு (Tonnies), என்பார் சமுதாயங்கள் (Communities) சங்கங்கள் (Associations) என குழுக்களை இரு வகைப்படுத்துகிறார். மேலும், குழுக்கள் பெரியகுழுக்கள் சிறிய குழுக்கள் என்றும் பெரும்பான்மைக் குழுக்கள் சிறுபான்மைக் குழுக்கள் என்றும், கிடைநிலைக் குழுக்கள் (ஒரே விதமான தகுநிலையினை உடையவர்கள்) நெடுநிலைக் குழுக்கள் (பலவிதமான தகுநிலைகளை உடையவர்கள்) என்றும். திறந்த வெளிக் குழுக்கள் (யார் வேண்டுமானாலும் சேரக் கூடிய குழுக்கள்) மூடப்பட்ட குழுக்கள் (குறிப்பிட்ட சிலரே சேரக் கூடிய குழுக்கள்) என்றும், நிரந்தரமான, குழுக்கள் இடைக்காலக் குழுக்கள் என்றும், தன்னுரிமையுடன் இயங்கும் குழுக்கள் பிறவற்றைச் சார்ந்து இயங்கும் குழுக்கள் என்றும், முரண்பாட்டுக் குழுக்கள் (சமூகத்தின் வழக்கடிபாடுகள், நாட்டவர் வழக்குகளிலிருந்து வேறுபட்ட நெறிகளைக் கொண்ட குழுக்கள்) என்றும், மாதிரிக் குழுக்கள் (ஒருமனிதன் தான் பிற்பற்றுவதற்கு மாதிரியாக எடுத்துக் கொண்ட குழுக்கள்) என்றும் பல வழிகளில் குழுக்கள் வகைப்படுத்தப்படுகின்றன. பூ.த.

**துணை நூல்கள்:**

**Cooley, Charles Horton**, Human Nature and the Social Order, Schocken, New York, 1964.

**Horton, Paul B., Chester L. Hunt**, Sociology, Mc Graw Hill International Book Company, Japan 1981.

**Stewart, Elbert W.**, Sociology, The Human Science, Mc Graw Hill Book Company, New York, 1972.

**குழு அறிவுரை பகர்தல்:** தொடர்ந்து நிகழ்கிற அல்லது அப்போதைய இடர்ப்பாடுகளிலிருப்போருக்குக் குழு அறிவுரை பகர்தல் பரிந்துரைக்கப்படுகிறது. ஒருவரின் எண்ணத்தையும் நடத்தையினையும் மாற்றியமைக்கக் குழு அறிவுரை பகர்தல் முயல்கிறது. குழு அறிவுரை பகர்தலானது சிறிய, ஒன்றிய குழுக்களுக்கு மட்டுமே பொருந்தும்.

குழு இடைவினை, குழு ஒருமைப்பாடு, குழுத் தலைமை, தலைமைவகைகள் முதலிய இயக்கப்பண்புகளைக் குழு அறிவுரை பகர்தல் பயன்படுத்துகிறது. இது 1930 – 40 ஆகிய ஆண்டுகளில் சேகப்பு மரினோ (Jacob Marino) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இது குழுவிலுள்ள ஒவ்வோர் உறுப்பினரின் தனிப்பட்ட இடர்ப்பாடுகளைக் கண்டறியவும், அவற்றிற்குரிய தீர்வு காணவும் வழிவகுக்கிறது.

குழு அறிவுரை பகர்தல் என்பது, சராசரி மனிதர்களுக்கு அறிவுரை பகர்கின்ற நுணுக்கப் பயன்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற ஓர் இயக்கச் செயல்முறையாகும். குழு உறுப்பினர்களின் வளர்ச்சி கல்விச் சூழலிற் சிறந்த முறையில் பங்கேற்கும் வகையில் அவர்களது மனப்பான்மை, மதிப்புகளை மாற்றிடும் முயற்சி ஆகியவற்றில் அறிவுரையாளருடன் குழு உறுப்பினர்கள் தம் இடர்களையும் உணர்வுகளையும் விவாதிக்கின்றனர். அறிவுரை பகரும் குழு என்பது, மருத்துவம் சாரா அமைப்பில் பயிற்சி பெற்ற அறிவுரையாளருடன் 6 முதல் 10 வரையிலான உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

குழு அறிவுரையின் அறிவுரை நாடி வருபவர்கள் தங்களை உண்மையிலேயே வருத்துகின்றனவற்றையும், குழப்பத்திற்கு உள்ளாக்குவனவற்றையும் பற்றிக் கலந்தாலோசிக்கவும், விரும்புகின்ற புதிய நடத்தையை வரையறை செய்யவும், தேவையானால் சில மனிதர்களின் திறமைகளைப் பின்பற்றவும், புதிய நடத்தைகளைக் கடைப்பிடிக்கவும் விரும்பி வருகின்றனர்.

கொள்கை நெறிப்படுத்தும் இயல்பினையும் செயல்முறையினையும் அடிப்படையாகக் கொண்டு அறிவுரை பகர்குழுவினைப் பலவாகப் பிரிக்கலாம் அவை ஒற்றைக் குழுக்கள், இரட்டைக் குழுக்கள் தொடர் (மாரத்தான்) குழுக்கள், தடுத்தாளும் குழுக்கள் எனப் பலவகைப்படும். அறிவுரையாளர் எண்ணிக்கை, திறந்த அல்லது மூடிய குழுக்கள், குழுவின் அளவு, குழு அடக்கம் மற்றும் குழுத் தெரிவு, இயலமைப்பு, சந்திப்பு நேரம் என்பனவற்றின் அடிப்படையில் குழு அறிவுரை பகர்தல் அமைய வேண்டும்.

**அறிவுரையாளர் எண்ணிக்கை:** ஒருவருக்கு மேற்பட்ட அறிவுரை பகர்பவர்களைக் கொண்டிருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அறிவுரையாளர்கள் இருவர் இருப்பின், குழுவின் எல்லா உறுப்பினர்களையும் சந்திக்கவும் அவர்கள் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் புரிந்து கொள்ளவும் முடியும். சில நேரங்களில் இவர்களுள் ஒருவர் எளிய செயல்

களை அறியலாம். மற்றொருவர் சற்றுக் கடினமான செயல்களையோ உறுப்பினரின் கருத்துகளையோ உணர்ந்து தொகுத்து வெளியிடுபவராக இருந்து செயற்படலாம்.

**திறந்த அல்லது மூடிய குழுக்கள்**: ஒரு குழு, திறந்த குழுவா மூடிய குழுவா என்பதை அறிவுரையாளர் முடிவு செய்கிறார். மூடிய குழுவானது ஒரு குறிப்பிட்ட நிலையான கால வரையறைக்குள் செயலாற்றுகிறது. மூடிய குழுவுடன் செயலினைத் தொடங்குகின்ற அறிவுரையாளர் வேறு சில உறுப்பினர்களை வைத்திருப்பார். இவர்கள் உறுப்பினர்கள் வாராத இடத்தை நிரப்ப அனுமதிக்கப்படுவர். புதிய உறுப்பினர்களைச் சேர்த்தே ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. திறந்த குழுவின் சந்திப்பு முடிவு செய்யப்பட்ட அல்லது முடிவுசெய்யப்படாத கால அளவினதாய் இருக்கும். திறந்த குழுவில் உறுப்பினர்கள் விலகும்போது மற்றைய உறுப்பினர்களுக்குப் பிரிவுணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பார்கள் என்று அறிவுரையாளர் கருதினால் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுவர்.

**குழுவின் அளவு**: குழு அறிவுரை பகர்தலுக்குக் குழுவின் அளவு இன்றியமையாதது ஆகும்.. அறிவுரை பெறுவோரின் அறிவு முதிர்ச்சி,ஒத்துப்போகும் இயல்பு, இடர்கள் பற்றிக் கலந்தாலோசிக்கும் பண்பு முதலிய பல காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அமைவது குழுவின் அளவு ஆகும். ஆய்வாளர்கள் பரிந்துரை செய்கின்ற அளவானது குமரப்பருவத்தினருக்கு 6-இலிருந்து 8 பேர் ஆகும். எண்ணிக்கை 6-ஐ விடக் குறைவாக இருக்கும்போது நடத்தை வகைகள் மிகக் குறுகியனவாகவும், பங்கேற்க வேண்டும் என்ற உந்துதலினால் பதற்றம் அதிகமாகவும் இருக்கும். எண்ணிக்கை அதிகமாய் இருப்பின் கையாளுதல் எளிதாய் இராது.

**மாணவர் தெரிவு**: வகுப்பு ஆசிரியர், தலைமை ஆசிரியர் ஆகியோர் பிரிவினை பேசும் மாணவர்களையும், மந்தமான மாணவர்களையும், இடர் செய்யும் நடத்தை கொண்ட மாணவர்களையும் அடையாளம் காட்ட உதவிபுரிகின்றனர். இடர்ப்பாடுகள் கொண்ட மாணவர்கள் யார் யாரென்பதைக் கண்டறியப் பள்ளித் திரள் பதிவேடுகளையும் மற்றும் தேவையான பதிவேடுகளையும் நாடலாம். குழுக்கள் ஒருபடித்தரமாக இருக்க வேண்டும்.

**இயலமைப்பு**: ஒருவருக்கொருவர் இடையேயான செயற்பாட்டிற்குக் குழுவின் இயலமைப்பு இன்றியமையாதது ஆகும். குழு அறிவுரை பகர்தல் வழக்கமான வகுப்பறைகளிலோ சிறு அலுவலக அறைகளிலோ அமைக்கப்படலாம். 6 முதல் 8 மாணவர்களைக் கொண்ட குழுவிற்கான அறையானது 5 மீ. நீளமும் 5 மீ. அகலமும் உள்ளதாகவும், வெளியிலிருந்து ஒலி முதலியவை கருத்தினைச் சிதறடிக்காத முறையில் அமைந்ததாகவும் இருக்க வேண்டும்.

**சந்திக்கும் காலஇடைவெளியும் எண்ணிக்கையும்**: குழு அறிவுரைத் தொடரின் நேரம் அறிவுரை பெறுகின்ற மாணவர்களின் வயதினை அடிப்படையாகக் கொண்டு அமையும். குமரப் பருவத்தினருக்கு 35-இலிருந்து 45 மணித்துளிகள் குழு அறிவுரை வழங்க உகந்த கால அளவு ஆகும்.

**தலைமை வகைகள்**: குழுத் தலைமைப் பண்புகளுள் அறிவுரையாளரின் வழிப்படுத்தும் தன்மை ஒரு வகையானதாகும். குழு சார்ந்த தலைமைப் பண்புகளில் குழுவின் வளர்ச்சிக்கும், வழிப்படுத்துதலுக்கும் அதன் உறுப்பினர்களுடன் பொறுப்பினை அறிவுரையாளர் பகிர்ந்து கொள்கிறார்.

**கட்டமைப்பு**: குழுக் கட்டமைப்பில் திறன் படைத்த அறிவுரையாளர் குழு, உறுப்பினர்களை வேலை செய்ய ஊக்குவிக்க முயல்கிறது. குழுக் கட்டமைப்பில் திறமை குறைந்த அறிவுரையாளர்கள் குழு உறுப்பினர்களின் எதிர்ப்பிற்குக் காரணமாகிறார்கள். அறிவுரை பகர்தல் 15-இலிருந்து 20 வாரங்களுக்கு, வாரத்திற்கு ஒரு வகுப்பு என அமைத்துக் கொண்டால் மிக்க பயனுள்ளதாக அமையும்.

ஒரு குறிப்பிட்ட பள்ளியின் தேவையை அடிப்படையாகக் கொண்டு குழு அறிவுரை பகர்தலின் தொடரை முடிவு செய்தல் வேண்டும் என்பது இன்றியமையாததாகும்.நடத்தையில் அல்லதுமனப்பாங்கில் கண்டறியக் கூடிய வேறுபாடுகள் குறைவாக இருக்கும்போது, அறிவுரை வழங்கும் தொடக்க காலத்தில் ஒரு குறிப்பிட்ட நடத்தையிலேயே கருத்தாய் இருத்தல் கூடாது. ஏனெனில் குழு அறிவுரை பகர்தலில் செயல் மாற்றத்தின் வேகம் மிகவும் குறைவு.

**குழு அறிவுரை பகர்தலின் நன்மைகள்**: அ) குழு அறிவுரை பகர்பவர் அதிகப்படியான மாணவர்களுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. ஒரே நேரத்தில் பல மாணவர்களுடன் தொடர்பு வைத்திருத்தலினால் அறிவுரையாளரின் தாக்கம் மாணவரிடையே மிக்க பயனுள்ளதாய் இருக்கிறது. ஆ) குழு அறிவுரையினால் குமரப்பருவத்திலுள்ள மாணவர்களிடையே மிகுந்த ஒத்துழைப்பினை வளர்க்க முடிகிறது.

**குழு அறிவுரை பகர்தலின் குறைபாடுகள்**: பத்து வயதிற்குக் கீழான மாணவர்களிடையே குழு அறிவுரை பகர்தல் என்பது ஒவ்வாதது. ஏனெனில், அவர்கள் தம் குறைகளைத் திறம்பட எடுத்துச் சொல்ல முடியாது. குழு அறிவுரை பகர்தலுக்குப் பேச்சுத் திறன், கேள்வித்திறன், வேலைத்திறன் ஆகியவை அவசியமாகின்றன. ஈ.ஞா.வே.

**துணை நூல்கள்**:

**Bordin,E.S.**, Psychological Counselling, Appletion-Century-Crofts, New York, 1968.

**Burks,H.M.**, and **B. Steffbre**, Theories of Counselling. McGrew-Hill, New York. 1929.

**குழு அனுபவமும் சமூகமயமாதலும்**: சிறு குழந்தை தன் உடல் சார்ந்த தேவைகளுக்காக, ஒரு தான்தோன்றித்தனமான சிறிய உயிரினமாகத் தான் இந்த உலகத்தில் பிறக்கிறது. பின், மிக விரைவில் நடவடிக்கைகள், விழுமியங்கள், விருப்பு-வெறுப்புகள், கொள்கைகள், நோக்கங்கள், எதற்கும் விடையளிக்கும் முறைகள் போன்றவற்றையும், மற்றும் 'தான் ஒரு மனிதன்' என்ற ஆழமான கருத்தையும் கொண்ட ஒரு மனிதனாக மாறுகிறது. அனைவரும் இதைச் சமூக மயமாதல் (Socialisation) என்ற செயற்பாங்கின் மூலம் பெறுகின்றனர். இதனை மனித ஆளுமையுடன் ஒருவன் விலங்குத் தன்மையிலிருந்து மனிதத் தன்மைக்கு மாறுகிற நிலையைக் கற்கின்ற செயற்பாங்கு எனலாம். சமூகக் குழுக்களின் வாழ்க்கை முறை, வரையறைகள், வழக்காறுகள் போன்றவற்றுக்குத் தக்கவாறு மனிதன் பொதுவாகத் தன்னை மாற்றிக் கொள்கிறான். பல சூழ்நிலைகளில் தன்னை மற்றவர்கள் பாராட்டவும், போற்றவும், அனுமதிக்கவும் எடுத்துக் கொள்ளும் முயற்சியே சமூகமயமாதல் எனக் கில்லின் மற்றும் கில்லின் (John L. Gillin and John P. Gillin)போன்றோர் கூறுகின்றனர். வெளிப்படையாகக் கூறுவதென்றால், தான் வாழுகின்ற ஒரு குழுவின் நெறிகளை ஒருவன் உள்ளத்தில் கொண்டு, மனிதனுக்குள்ள ஒப்பற்ற தான் (Self) என்ற தன் முனைப்பை உருவாக்கிக் கொள்கின்ற செயற்பாங்கு-சமூகமயமாதல் எனப்படுகின்றது.

வாழ்க்கையின் தொடக்கத்திலேயே தான் யார் என்ற தன் நினைவு யாருக்கும் வருவதில்லை. ஓர் உடல் சார்ந்த உயிரினமாக இருப்பதன்றி உணர்வுள்ள மனிதனாக இருப்பதில்லை. பின்பு, அந்தச் சிறுகுழந்தை, அதனுடைய உடலைப் பற்றிய எல்லையினை உணர்த்துகின்ற;மக்களைப் பற்றி அடையாளம் அறியவும், அறிந்து பேசவும் தொடங்குகிறது. முதன் முதலாக, எந்த ஆணையும் தந்தையாகவும், எந்தப் பெண்ணையும் தாயாகவும் நினைத்துக் கொண்டிருக்கும்; ஆனால், மிகவிரைவிலேயே அந்தக் குழந்தை ஒவ்வொரு மனிதனைப் பற்றியும், அவனது தகுநிலையையும், தன்மையையும் அறிந்து பிரித்துப் பார்க்கிறது எனக் கூலி, பெயின் (Cooley and Bain) ஆகிய அறிஞர்கள் கூறுகின்றனர். பல காலம் கடந்து குழு அனுபவங்களும், சமூக அனுபவங்களும் உருவான பின்பு, ஒரு குழந்தை, அவன் அல்லது அவளது வகையின் உருவத்தை (Image) அறிந்துகொள்கிறது; தான் என்ற உருவத்தை உண்டாக்கிக் கொள்கிறது. ஒரு மனிதனுடைய தான் என்ற உருவத்தைப் பற்றிய சில எண்ணங்களைப் பெறுவதற்கான ஓர் அறிவார்ந்த வழியென, 'இருபது கேள்விகள் சோதனை'யை (Twenty Questions Test) குன் (Kuhn), மெக்பார்ட் லேண்டு (McPartland) போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். நான் யார் (Who am I?) என்ற வினாவுக்கு விடையளிப்பவரின் மனத்தில் உருவாகும் இருபது விடைகளுக்கான கேள்விகள் அடங்கியதே அச்சோதனையாகும். ஒருவனுக்குத் தான் என்ற நிலை உருவாவது, ஆளுமை வளர்ச்சியில் மிக இன்றியமையாத தனிச் செயற்பாங்காகும். குழு அனுபவம் என ஒன்று ஏற்பட்டபின்னரே அவனுக்கு ஆளுமை வளர்ச்சியும்,சமூகமயமாதலும் உருவாகிறது.

சில குறிப்பிட்ட அளவு வரை, ஆளுமையானது உடல் வளர்ச்சிச் செயற்பாங்கைச் சார்ந்திருக்கிறது. ஆனால், ஆளுமை வளர்ச்சியானது சமூகத் தனிமர்களால் (Social Isolates) காட்டப்படுவதைப் போன்று தானே வெளியாகிற இயற்கையான நிலைச் சக்தி அன்று. ஒவ்வோர் ஆண்டும் பல நேரங்களில் குடும்பம் என்ற குழுவிலிருந்து ஒதுக்கப்பட்ட, விலக்கப்பட்ட குழந்தைகளைப் பற்றிய செய்திகளைப் பல செய்தித்தாள்கள் வெளியிடுகின்றன. அவர்கள், எப்பொழுதும் உளநலமற்றவர்களாகவும், சமூகத்திற்கு எதிரானவர்களாகவும் இருப்பார்கள். சிங்கு (Singh), சிங்கு (Zingg), குரோட்டு (Krout) போன்ற அறிஞர்கள் கூறுவது போலக் குடும்பங்களை விட்டுக் காட்டிற்கு விலங்குகளால் தூக்கிச் செல்லப்பட்டவர்கள், காட்டு நிலையில் இருந்ததாகத் தான் செய்திகள் கிடைக்கின்றன. விலங்குகளால், அவர்கள் வளர்க்கப்பட்டதாகச் சமூக அறிவியலாளர்கள் கருதுகின்றனர். இதிலிருந்து மனிதன், வளருகின்ற சூழ்நிலையைப் பொறுத்து அவனது ஆளுமை வளர்கிறது, உருவமைகிறது எனத் தெரிகிறது. இவ்வாறு, குடும்பம், சமூகம் போன்ற குழுக்களின் அனுபவங்க்ளினாலேயே ஒருவனது ஆளுமை அதிகமாக வளர்கிறது. 'தான்' என்ற

தனிமையைக் குழுவிலே உணர்ந்த மனிதன், குடும்பம், நண்பர்கள் மற்றும் இன்னபிற குழுக்களைத் தனது குறிப்பீட்டுக் குழுக்களாகவும் (Reference Group), மாதிரிகளாகவும் கொண்டு தன் கொள்கைகள், எண்ணங்கள், நெறிகள் ஆகியவற்றை அமைத்துக் கொள்கிறான். எனவே, குழு அனுபவமும், சமூகமய மாதலும் இணைந்தே நடக்கின்ற ஒரு நிகழ்வு என்பது உண்மையாகும். காண்க: சமூகம், சமூகமய மாதல். பூ.த.

**துணை நூல்கள்:**


**Horton, Paul B., and Chester, L. Hunt,** Sociology, McGraw-Hill International Book Company, Japan, 1980.

**Ogfurn, William F. and Meycer F. Nimkoff,** A Hand Book of Sociology, Eurasia Publishing House Pvt., Ltd., New Delhi, 1979.


**குழு இடைவினை:** இது, குழு உறுப்பினர்களிடையேயுள்ள தொடர்புகள், செயல்களைக் குறிப்பதாகும். பேசுதல், கற்பித்தல், உதவி செய்தல், மன நிலைகளை மாற்றுதல் அல்லது மனவெழுச்சிகளை எழுப்புதல் போன்றவையால் குழு உறுப்பினர்கள் பிறரிடம் செல்வாக்குச் செலுத்துகின்ற செயற்பாங்கினைக் குறிக்கின்ற சொல் குழு இடைவினை (Group Interaction) எனப்படுகிறது. பொதுவாக இடைவினை என்பதே குழு இடைவினைதான். இடைவினை குழு அமைப்புகளில்தான் பொதுவாக நிகழும்.

ஆதி காலத்திலிருந்தே மனிதன் ஏதாவது ஒரு குழுவில் வாழ்ந்தே வந்திருக்கிறான். இக் கருத்தை அரிசுடாட்டில் (Aristotle) என்ற கிரேக்கத் தத்துவ அறிஞர் 'மனிதன் ஒரு சமூக விலங்கு' என்று கூறுவதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்னும் கூற்றுகளுக் கேற்ப மனிதன் பண்டைக்கால முதல் தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட்டு ஒரு குழுவில் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளான். குழு, அக் குழுவிலுள்ள மக்களுக்குப் பகைவர்களாலும் தீய ஆற்றல்களாலும் ஏற்படும் இன்னல்களை எதிர்த்துப் பாதுகாப்பு அளித்தது. சில வேளைகளில் மனிதனின் மேன்மை என்னும் உள்ளுணர்வு மக்கட்குலத்தைப் பாதுகாக்க அல்லது உயர்த்த முற்படுகின்றது. சான்றாக ஒரு குழுவின் உறுப்பினர்கள் ஒரு சிக்கலைத் தீர்க்க தங்களது மேன்மைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவார்கள்.

குழு இடைவினையின் மூலமே ஒரு மனிதனுடைய ஆளுமை அதிகமாக உருவாகிறது. பிறர் தன்னை அடையாளம் கண்டு கொள்வதற்கும், பிறர் மாதிரி நடிப்பதற்கும் புதிய விழுமியங்களை அறிந்து கொள்ளவும் மனிதன் குழுவில் சேர்ந்து வாழ வேண்டியவனாக இருக்கிறான். மேலும், ஒரு குழுவில் உறுப்பினனாக இருப்பது ஆளுமை வளர்ச்சிக்கும் மன முதிர்ச்சிக்கும் மிகவும் தேவையானதாகும். ஆனால், குழுவின் சிறப்பு சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபடலாம். எடுத்துக்காட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளை விடச் சப்பானில் குழுப்பற்று(Group Loyalty)–பணிக்குழுவைப் (Working Group) பொறுத்தவரை மிக்க முதன்மையானதாகக் கருதப்படுவது. சில சமூகங்களில் குழுவினனாக இருப்பது வலியுறுத்திக் கூறப்படுகிறது. தனித் தன்மை சிறப்பற்றதாக அல்லது தீயதாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டு, சப்பானியப் பணியாட்கள் பணியாற்றும் பொழுது தங்களுக்குள் ஒரு நெருங்கிய குழுவாகவே மாறிவிடுவதாகும். ஒரு தொழிற்சாலையை விட்டு மற்றொன்றிற்குச் செல்வதையே பெரிய அவமானமாகக் கருதுகின்றனர்.

பிறருடன் கூடி வாழும் இயல்பு (Sociality) மனிதனுக்குள்ளேயே அடங்கியிருக்கிறது. மற்றவர்களுடன் அவன் தொடர்பு கொள்ளும்போது அது வெளிப்படுகிறது. இந்த இயல்பு இருப்பதாலேயே அவன் பிறருடன் உறவு கொண்டு ஒரு சமூகமாகக் கூடி வாழுகிறான். எனவே, எப்பொழுதும் என்றும் ஏதாவதொரு குழுவில் சேர்ந்து இணக்கமாக வாழுகிறான். குழுக்கள் சமூக இயைபு காரணமாகவே இயங்குகின்றன. இச் சமூக இயைபு (Sociability) நெருங்கிய நட்பு, பிறருக்காகப் பொறுப்பேற்கும் தன்மை, மதிப்பான மனநிலை, தேவையான உதவி செய்யும் மனப்பாங்கு போன்ற உணர்வுகளைக் கொண்டுள்ளது. இந்த இயல்பு காரணமாக மட்டுமன்றித் தேவையின் காரணமாகவும் மனிதன் குழுவாகவும் சமூகமாகவும் வாழுகிறான். ஏதேனும் ஒரு குழுவில் இடைவினை கொண்டு சமூகத்தில் வாழ வேண்டிய தேவை அவனுக்கு இருக்கிறது. ஒரு தனியனாக இருந்து தம் எண்ணற்ற தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இயலாது. பிறருடைய ஒத்துழைப்பு, கூட்டுறவு, உதவி, துணையில்லாமல் அவனால் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. எனவே, ஒரு குழுவாகச் சமூகத்துடன் இயைந்து வாழ வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றான். மெக் ஈவர் (Mac Iver) குறிப்பிடுவதைப் போல மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பு ஆகியவை தேவைப்படுகின்றன. சுகம், வாழ்க்கை வாய்ப்புகள், வசதிகள் தேவைப்படுகின்

றன. அவன் இவ்வாறான உடல் சார்ந்த தேவைகளுக்காக மட்டுமன்றி ஆளுமைவளர்ச்சிக்காகவும் சமூகத்திலுள்ள ஏதாவது குழுவினைச் சார்ந்து, ஒரு குழுவினனாக வாழுகிறான். மக்கள் குறிப்பிட்ட உளவியல் சார் தேவைகளை நிறைவேற்றவும்,தோழமையினால் உண்டாகும் மகிழ்ச்சியினைப் பெறவும் பிறருடன் இடைவினை கொள்கின்றனர். மிகக் குறைந்த மக்களே தனிமையில் வாழ விரும்புகின்றனர். குறிப்பிட்ட அளவிலான சமூகஇயைபு வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். தனிமைப்படுத்தப் பட்டவர்கள் அல்லது பிறருடன் மிகக் குறைந்த அளவு உறவினை உடையவர்களே அதிகமாகத் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனத் தர்க்கைம் (Durkheim) கி.பி. 1897-இல் தாம் எழுதிய 'தற்கொலை' (Suicide) என்ற நூலில் கூறுகிறார். சமூக இயைபுடனான உளவியல் சார் தேவைகளை அலசி ஆராய்ந்த இராபர்ட்டு வீசு (Robert S.Weiss) என்ற அறிஞர்கூட, சாதாரண நண்பர்களும், மிக நெருங்கிய நண்பர்களும் சமூக இயைபிற்கு இன்றியமையாதவர்கள் என்று கருதுகிறார்.

மக்கள், அவர்கள் சார்ந்திருக்கின்ற குழுக்களில் வெறும் கைப்பாவையாக இருக்க வேண்டியதில்லை. இடைவினைச் செயற்பாங்கினில் அவர்கள் ஒரு தரப்பினராக இருந்து தாம் பங்கேற்கும் குழுவில் செல்வாக்குச் செலுத்தியும், குழுவினால் செல்வாக்குச் செலுத்தப் பட்டும் இருப்பர். தாங்களாக ஒருவருக்கொருவர் சில நேரங்களில் போட்டி மனப்பான்மையுடனும், சில நேரங்களில் ஒற்றுமையுடனும் இடைவினை கொள்கின்றனர். சில நேரங்களில் ஆர்வமுள்ளவர்களைப் போன்று மிகத் தீவிரமாகவும், சில நேரங்களில் தீவிரமின்றியும் குழுவில் பங்கு கொள்வார்கள். ஆனால், வாழ்நாள் முழுவதும் அதிக அளவில் தங்களுக்காகப் பல, பிற குழுக்களுடன் தொடர்பு கொள்கின்றனர்.

ஒரு குழுவானது, மக்களுக்குச் சில தேவைகளை உருவாக்குவதுடன், குறிப்பிட்ட வழிகளில் உரிமைகளையும் கட்டுப்படுத்துகிறது. பொதுவாக, குழுவினைத் தவிர்த்து மக்கள் தாமாக எந்த முடிவினையும் எடுப்பதில்லையென ஆச்சு (Asch) என்ற அறிஞர் கூறுகிறார். கிசுலர் (Kissler) என்ற அறிஞரும் தங்களது குழுவின் மனநிறைவிற்காக மக்கள் எப்பொழுதும் தங்கள் சொந்தக் கருத்துகளைக் கைவிட்டு விடுவதாகக் கூறுகிறார். இரண்டாம் உலகப் போரின் போது செருமானியப் படையைப் பற்றி ஆராய்ந்த சில்சு (Shills), சானோவிட்சு (Janowitz) ஆகிய இருவரும் நண்பர்களுடன் நெருக்கமான உறவு கொள்வது குழுப் பற்றினையும், போரிடும் தன்மையையும் அதிகரிக்கச் செய்யும் என்று கூறுகின்றனர்.

இவ்வாறு இடைவினை புரிகின்ற மனிதன் பல தரப்பட்ட குழுக்களில் பங்கேற்று வாழுகிறான். அவை முதல் நிலைக் குழுக்களாகவோ இரண்டாம் நிலைக் குழுக்களாகவோ இருக்கக்கூடும். அகக் குழுக்களாகவோ புறக் குழுக்களாகவோ இருக்கக் கூடும். விருப்பாற்றலுக்கு உட்பட்ட குழுக்களாகவோ விருப்பாற்றலுக்கு உட்படாத குழுக்களாகவோ, பிரதிநிதிகள் குழுக்களாகவோ இருக்கக்கூடும். சிறிய குழுக்களாகவோ பெரிய குழுக்களாகவோ இருக்கக்கூடும் நெடுநிலைக், குழுக்களாகவோ கிடைநிலைக் குழுக்களாகவோ இருக்கக்கூடும்.

இவ்வாறு, குழுக்கள் மக்களிடையே உறவு, தொடர்பு ஆகிய இடைவினைகளைக் கொண்டு பல வழிகளில் செயற்படுகின்றன. அரிசுடாட்டிலின் கூற்றுக்கேற்ப மனிதனும் இன்றுவரை பல இடைவினைகளைச் செய்து ஏதாவது ஒரு குழுவில் வாழ்ந்து வருகிறான். காண்க: குழு. பூ.த.

**துணை நூல்கள்:**

**Durkheim Emile.**, Suicide, John Spaulding and George Simpson (Trans), Free Press, New York, 1966.

**Horton, Paul B., Chester L. Hunt.**, Sociology, Mc Graw-Hill International Book Company, Japan, 1981.

**Stowart. Elbert W.**, Sociology: The Human Science, Mc Graw-Hill Book Company, U.S.A., 1978.

**குழு இயங்கியல்**: உளவியல் சார்ந்த குழுவினராக உள்ள மக்களின் அமைப்பு, செயல்முறைகள் ஆகியவற்றின் தோற்றம், மாற்றம் போன்றவற்றை அறிந்துகொள்ள ஆராய்கின்ற சமூக உளவியலின் ஒரு பகுதி குழு இயங்கியல் (Group Dynamics) எனப்படுகிறது. இது ஒவ்வொருவருடனும் குழு உறுப்பினர்கள் கொண்டுள்ள தொடர்புகளைப் பற்றி ஆராய்கிறது.

ஒரு குழுவின் தோற்றம், மாற்றம் போன்றன தாமாகவோ, விலக்க முடியாத காரணத்தாலோ ஏற்படுவதில்லை. அவை அதன் உறுப்பினர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றவும், சிக்கல்களைத் தீர்க்கவும் எடுக்கின்ற முயற்சிகளின் விளைவாகும். இவ்வாறான இறுக்கமான நிலையினைக் குறைக்கவும், இதன் உறுப்பினர்களிடையே பொதுவாகக்

காணப்படும் சிக்கல்களைத் தீர்க்கவும், உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் மறு உருவமைதல், இணங்குதல், மறு இணங்குதல் போன்ற செயல்களைச் செய்கின்ற ஓர் இயங்கு குழு உள்ளது.

குழு இயங்கியல் ஆய்வானது குழு உருவாவதைப் பாதிக்கின்ற பலவிதமான காரணிகளை விளக்குகிறது. இவற்றில், போட்டி, ஒத்துழைப்பு போன்றவை சமூக உறவுகளை உருவமைப்பதில் இன்றியமையாத தாகக் கருதப்படுகின்றன. சுற்றுப்புறச் சூழலை முழுவதுமாகச் சார்ந்தில்லாவிட்டாலும், சமூக உறவுகள் தங்களுக்குள் இயக்கத்தைக் கொண்டுள்ளன. மக்கள் ஒன்றாகக் கூடி ஒருவருக்கொருவர் இடைவினை கொள்ளும் பொழுது புதிய செயற் பாங்குகள் உருவாகின்றன. இச்செயற் பாங்குகள் இயற்கைச் சுற்றுப்புறங்களிலும், சோதனை முறைநிலைகளிலும் ஆராயப்படுகின்றன.

சமூகத்தில் வெளிப்படையாகச் செயற்படும் நிலைகளில் பல குழுக்கள் உருவாகின்றன. ஒரு குழு ஒருவர் அல்லது இருவரால் ஆட்சி செய்யப்படலாம் அல்லது அதன் அனைத்து உறுப்பினர்களாலும் ஆட்சி செய்யப்படலாம். அக்குழுவின் தலைமை மக்களாட்சியையோ அதிகார வர்க்கத்தையோ ஆதரிப்பதாக இருக்கலாம். மேலும் அது நிலையில்லாததாகவோ, நிலைத்து நிற்கக் கூடியதாகவோ இருக்கலாம். குழு உறுப்பினர்கள் தோழமையுடனோ பகையுணர்வுடனோ இருக்கலாம். இவற்றில் எக்காரணிகள் குழு வாழ்க்கையை உருவாக்குகின்றன, எவ்வாறு அக்காரணிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்ற கேள்வி அனைவரின் மனத்திலேயும் எழக்கூடியது. இப்பகுதியில் சமூகவியல் அறிஞர்கள் அதிகமாக ஆய்வு செய்து வருகின்றனர். மேலும், தங்களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு விரும்புகின்ற அமைப்புகளாலும் இந்த ஆய்வுகள் தூண்டப்படுகின்றன. சமூக நிறுவனங்கள் பல, அவற்றின் தலைவர்கள் நற்பயன் அளிக்கக் கூடியவர்களாகவும் உறுப்பினர் குழுவில் ஆழ்ந்து பங்கு பெறுவோராகவும் இருப்பதை விரும்புகின்றன. அரசாங்க அமைப்புகளும், அவற்றின் ஊழியர்களைத் திறமைமிக்கவர்களாகவும், மக்களின் தேவைக்குப் பொறுப்புடன் விடைகூறுவோராகவும் இருக்க வேண்டுமென விரும்புகின்றன. சீர்திருத்தவாதிகளும் புரட்சிவாதிகளும் தாங்கள் திரட்டுவதற்கு விரும்புகின்ற குழுக்களை, ஒன்றுபடுத்துதல், ஒழுங்குபடுத்துதல் போன்வற்றிற்காக அறிந்து கொள்ள விரும்புகின்றனர். இந்த நடைமுறைத் தேவைகளுக்காக ஆய்வாளர்கள் 'குழு இயங்கியல்' அல்லது 'சிறு குழு ஆய்வு' (Small-group Research) என்ற துறையினை ஏற்படுத்தி ஆராயத் தொடங்கினர். தலைமையைப் பற்றியும் குழுவின் இடைவினை முறைகளைப் பற்றியும் தீவிரமாக ஆராய்ந்தனர்.

தலைமையைப் போன்றே குழு இயங்கியல் ஆய்வுகள் குழு நடவடிக்கைகளில் ஏற்படும் இடைவினைகளை அறிகின்றன. குழு உறுப்பினர்களுக்குத் தெரியாமல், அவர்கள் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும்போது அவர்களுடைய இடைவினைகளைப் பார்த்தல், விவாதங்களைப் பதிவு செய்தல் போன்றவற்றைச் செய்கின்றன. பொதுவாகக் குழுக்கள், அவை உருவாகியிருக்கும் குறிப்பிடத்தக்க வழி, அவர்களது பொதுவான பண்பாட்டுப் பின்னணியின் தாக்கம் போன்றவற்றால் சிக்கல் நிறைந்தவையாக இருக்கும். இதுபோன்ற சிக்கலான நிலைகளில் குழுக்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை விரிவாக அறிந்து கொள்ள இவ்வாய்வு முறைகள் பயன்படுகின்றன. மேலும், சிறு குழு ஆய்வினை விரும்புகின்றவர்கள், சிறு குழுக்களின் நடவடிக்கைகளை அறியும்போது, விரிவான சமூகங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது என நம்புகின்றனர். சிறு குழுக்களின் பரிசோதனை ஆய்வுகள் மூலம் பெரிய அளவு சமூகச் செயல் முறைகளைப் (Large scale Social Processes) பற்றி நன்கு அறிய முடிகிறது எனக் கர்ட் லெவின் (Kurt Lewin)என்ற உளவியல் அறிஞரும் கூறுகிறார். அவர் குழு இயங்கியல் ஆய்வு மையத்தில் தன் மாணவர்களையும், தோழர்களையும் ஆய்வு செய்த தன் மூலம் பின்வருமாறு விளக்குகிறார்: ஒரு குழுவின் தன்மையானது, அதன் உறுப்பினர்களின் ஒற்றுமை அல்லது வேற்றுமை ஆகாது; அவர்கள் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை ஆகும். குழு என்பதனை 'ஓர் இயங்குகின்ற முழுப்பொருள்' (Dynamic whole) என வருணிக்கலாம். அதாவது ஒரு துணைப் பகுதியின் நிலையில் ஏற்படும் மாற்றம், பிற துணைப் பகுதியின் நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். மேலும் அக்குழுவின் துணைப் பகுதி உறுப்பினர்கள் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை, நெருக்கமில்லாத மக்கள் பகுதியினைப் பின்னிப் பிணைந்துள்ள பகுதியாக அனைத்து வழிகளிலும் மாற்றுகிறது.

ஒருவரையொருவர் சார்ந்திருப்பதுடன் குழுவின் உறுப்பினர்கள் அக் குழுவுடன் முழுவதுமாக ஒன்றியுள்ளனர் எனப் பிரெஞ்சு (French) என்ற அறிஞர் சுட்டிக்காட்டுகிறார். தெட்சு (Deutsch) என்ற அறிஞர், ஒரு வரையொருவர் சார்ந்திருப்பது, ஒத்துழைத்தல் என்பதைவிட, மிகுதியான போட்டி வாய்ந்தது எனக் கூறுகிறார். எனவேதான் தங்களுக்குள் ஒற்றுமையுடன் முன்னேற்றுவதற்காக ஒருவரையொருவர் சார்ந்து

அறிந்து கொள்கின்ற உறுப்பினர்களின் கூட்டுத் தொகுப்பே குழு எனப்படுகிறது.

**தலைமை:** குழுத் தலைமை என்பது, ஒரு நிருவாகக் குழுவின் இயக்குநர்கள் மற்றும் பிற அதிகாரிகளைக் கொண்ட ஒழுங்குபட்ட அமைப்பினையோ அல்லது ஒழுங்கற்ற அமைப்பினையோ கொண்டதாக இருக்கலாம். ஒரு குழு, அதன் புதிய தலைவர்களை ஏற்றுக் கொள்ளவோ, எதிர்க்கவோ செய்யலாம். ஆனால், தலைமை என்பது அனைத்துக் குழுவிலும் உள்ள ஒரு முக்கிய உறுப்பாகும். குழுவின் நடத்தையினை அத்தலைமையே உருவமைக்கிறது.

உடல்பலம், அழகு, திறமை, நுண்ணறிவு, அரியவான வழி முறைகளை அறிந்திருத்தல், மக்களைத் திறமையாக இயக்குகின்ற திறன் போன்றவை பல வேறுபட்ட குழுக்களில் தலைமையினை அடைவதற்கான அடிப்படைத் தேவைகளாகும். தலைவர்கள் பொதுவாக, பேசுவதிலும் மிகத் திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்கள்; தம் கருத்துகளைக் குழுவினர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகவும், அவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பவராகவும் இருப்பார்கள். தலைவர்கள் பொதுவாக, குழுவின் அனைத்து உறுப்பினர்களாலும் தெரிந்து கொள்ளப்பட வேண்டும். மேலும், குழுவினருடன் வேறுபடாமல், அக்கூட்டத்தில் ஒருவனாக இருந்து செயலாற்ற வேண்டும்.

**செய்தித் தொடர்பு முறைகள்:** தங்கள் உறுப்பினர்களுடன் செய்தித் தொடர்பு கொள்வதன் மூலம் குழுக்கள் இயங்குகின்றன. செய்தித் தொடர்பு என்பது, வெறும் மொழியினைப் பேசுகின்ற செயல், அச்சிடுகின்ற முறைகள், செய்திகளை அறிவதற்காகப் பயன்படுத்துகின்ற ஒலிப்பதிவுப் பொருள்கள் போன்றவை மட்டுமல்ல; குழுவின் அமைப்பு, அதன் உறுப்பினர்களின் புற மற்றும் சமூக உறவுத் தொடர்புடைய செயலுமாகும். எந்தக் குழுவும் அதன் செய்திகளை அதன் உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்ளச் சில வழிகளைக் கையாள வேண்டும். பொதுவாக, செய்திகளை வெளியிடுவதற்குப் பல எளிய வழிகள் உள்ளன. ஆனால், அனைத்து முறைகளும் குழுவினர்களின் உறவுகளில் ஒரே விளைவுகளை உருவாக்குவதில்லை.

ஒரு சிக்கலைத் தீர்க்கக் கூடிய குழுவில், வேறுபட்ட முறைகளிலான செய்தித் தொடர்புகளின் செல்வாக்கைப் பற்றிப் பவிலாசு (Bavelas) என்ற அறிஞர் ஆராய்ந்தார். சக்தி வாய்ந்த தொடர்புகள் எவ்வாறு தனிமனிதர்களின் மனநிறைவைப் பெருக்குகின்றன. அவன், தன்னைப் பற்றி எளிதாக வெளிக்காட்டவும் பிறருடைய எண்ணத்தைப் பெறவும் எவ்வாறு முடிகிறது என்பவற்றை அறிய இவரது ஆய்வு பயன்படுகிறது. மேலும், புளூம் (Bloom) என்ற அறிஞர், கல்லூரியில் விரிவுரை செய்யும் முறைக்கும் (Lecture method) விவாத முறைக்கும் (Discussion method) உள்ள வேறுபாட்டை ஆராய்ந்து, விரிவுரை செய்தல் முறையில் மாணவர்கள் பெரிய குழுவினராக இருப்பினும் மனப்பாடம் செய்து கொள்கின்றனர் என்றும், விவாத முறையானது, தனிமனிதனின் சொந்த நினைவினைத் தூண்டுகிறது என்றும் கூறுகின்றார். மேற்கூறிய இரு அறிஞர்களின் ஆய்வுகளும் நடைமுறைச் சிக்கல்களுக்கு உதவக் கூடிய சிறு குழு ஆய்வுகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

இவ்வாறு குழுவினர்களுக்குள் கொண்டுள்ள சமூக இடைவினைகளை விளக்குகின்ற ஒரு பொதுவான சொல்லே குழு இயங்கியலாகும். இக்குழு இயங்கியல் பற்றிய ஆய்வானது ஒரு குழுவின் அளவினைப் பொறுத்து ஏற்படும் நடத்தை, முடிவெடுத்தல் ஆகிய செயற்பாங்குகளின் விளைவுகளை ஒன்று திரட்டிக் கூறுகிறது என ஆர்னோ விட்டிங்கு (Arno F. Witting) என்ற அறிஞர் கூறுகிறார். பொதுவாக, குழுவின் அளவைப் பொறுத்து சமூக இடைவினைகளும் மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக இரட்டையர் குழுக்கள் (Dyads) அல்லது இருவருக்குள் நடைபெறுகின்ற சமூக இடைவினைகள் பொதுவாகக் கூட்டுறவானதாகவும் நன்மை தருவனவாகவும் இருக்கும்; மூவர் கொண்ட குழுக்கள் (Triads) நிலையில்லாமலும் உட்புறப் போட்டியினைப் பெருக்குவதாகவும் இருக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. பூ.த.

**குழு உள மருத்துவம்** இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற பொழுது இராணுவத்தில் உளவியலார் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால் தொடங்கப்பட்டது. பல தொல்லைகளைத் தீர்ப்பதில் உபயோகமாக இருப்பதைக் கண்டு பொது வாழ்க்கையில் இது ஒரு மருத்துவமுறையாக ஒப்புக் கொள்ளப்பட்டது. காலங்காலமாகச் சிறிய நோயாளிகள் குழு ஒன்றுக்கு மருத்துவமனைச் சூழலில், நோயாளிகளின் வயது, தேவைகள், திறமைகளுக்குத் தகுந்தபடியும், மருத்துவரின் முனைப்பை (Orientation) உத்தேசித்தும் இது அளிக்கப்பட்டு வந்தது. இதன்மூலம் பல நோயாளிகளுக்கு ஒரேநேரத்தில் சிகிச்சை அளிக்க இயல்வதோடு, ஒரு நோயாளிக்குச் சிகிச்சையளிப்பதில் ஒரு மருத்துவக் குழுவின் முழுத் திறமையையும், பயன்படுத்தவும் இயலும். மதத் தலைவர்களும், தத்துவ

ஞானிகளும் இம்முறையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். பண்டைய மத மருத்துவர்கள் தங்களைப் பின்பற்றுபவர்களுக்கு உள்ள மனக்கவலைகளைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும், இந்தக் குழு முறைகளைப் பயன்படுத்தி வந்தனர். குழு உள மருத்துவ முறைகள் பல உள்ளன. அவற்றுள் முக்கியமானவை பற்றிக் கீழே காணலாம்

1. **போதனை முறைக் குழு மருத்துவம்**: இது ஒரு குழுவாக நோயாளிகளைக் கூட்டி அவர்களுக்கு விரிவுரைகள் மூலமும், படம் முதலியவற்றைக் காட்டுதல் மூலமும், பின்பு அது பற்றிக் குழு-கலந்துரையாடல் நடத்துதல் மூலமும் சிகிச்சையளிப்பதாகும்.

2. **மித மிஞ்சிய குடிக்கு ஆட்பட்டவர்களின் குழு**: இது மித மிஞ்சிய குடிக்கு ஆட்பட்டவர்களுக்கு அதை விட்டொழிக்க உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இக்குழு கூடுவது அவர்களுக்குரிய தொல்லைகளைப் பற்றிப் பேசுவதற்கும், இந்தப் பழக்கத்தை விட்டொழித்தவர் தமக்குக் கிடைத்த நலன்களைப் பற்றிக் கூறுவதற்குமாகும். ஒருவர்க்கொருவர் உதவிக் கொள்வதும், நம்பிக்கையளித்துக் கொள்வதும் ஒரு குழுவில் சேர்ந்து இருப்பதனால் முடியும் என்ற கோட்பாட்டில் இது அமைந்துள்ளது.

3. **உளநிலை நாடகம்**: இது கடமைக் கூறு ஆற்று முறைகளைப் (Role Playing Techniques) பின் பற்றி அமைந்தது. நோயாளிக்கு ஏற்படும் தொல்லைகளின் களத்தை ஒரு நாடகமாக உருவாக்கி மற்ற நோயாளிகளும், பணியாற்றும் அலுவலர்களும் உற்சாகப்படுத்தி ஓர் அரங்கு போன்ற இடத்தில் சேர்ந்து நடிப்பார்கள். இந்த முறை நோயாளி தன்னுடைய கவலைகளையும் கோபதாபங்களையும் சுதந்திரமாக வெளிப்படுத்தவும் உணர்ச்சி அழுத்தங்களிலிருந்து அவன் விடுபடவும் ஒரு வாய்ப்பை அளிக்கிறது. உணர்ச்சிகளை வெளிப்படுத்த உதவுவதும் புரிந்து கொள்ளும் சக்தியை அதிகப்படுத்துவதும், அடுத்தவர்களுடன் பழகும் திறமையை மேம்படுத்துவதும் இந்த முறையின் குறிக்கோள்களாகும்.

4. **வாழ்க்கை நடைமுறைப் பாகுபாடு**: இந்த முறை மக்களின் ஆளுமைகள் மூன்று வகையான தன்னிலை அல்லது தன்னுணர்வுகள் (Ego stages) கொண்டன என்ற எண்ணத்தின் அடிப்படையில் உருவானது. அவையாவன: குழந்தை, வயது வந்தோர், பெற்றோர். ஒருவன் மற்றவனிடம் இவை ஏதாவதொன்றிற்கான தன்னுணர்வைக் கொண்டு பழகி வந்தால் இருவருக்கும் உள்ள நடைமுறை நன்றாக என்றும் நடைபெற்று வரும். இருவரில் எவரொருவரும் மாற்றி வேறொரு தன்னுணர்வைக் காட்டுவாராயின் இருவருக்கும் இடையிலான நடைமுறை மாறுபாடடைந்து பிணக்குகள் வளரும். மருத்துவர், குழு உறுப்பினர்களிடையே ஏற்பட்ட மாறுபாடான நடைமுறையை ஆராய்ந்து ஒவ்வொருவரும் மற்றவரிடம் பகிர்ந்து கொள்ளும் பொழுது ஏற்றுள்ள தன்னுணர்வு நிலையைப் புரிந்து கொள்ள உதவுவார். பிறரிடம் நடந்து கொள்ளுகிற போது தந்திரத்தையும் சூதையும் நீக்கிச் செயற்படச் செய்தலும், அதிகமான உண்மைநிலை, மனிதர்களுக்கிடையேயான திருப்தி அளிக்கவல்ல உறவையும், வாழ்க்கை முறையையும் உருவாக்கலும் இந்த மருத்துவத்தின் குறிக்கோள்.

5. **குடும்ப மருத்துவம்**: இந்த மருத்துவ முறை குடும்ப இயக்கத்திலேதான் மனிதனின் தொல்லைகள் தொடங்குகின்றன என்ற எண்ணத்தை வலியுறுத்துகிறது. ஆகவே, சிகிச்சையும் குடும்ப உறுப்பினர்களை ஒரு குழுவாகச் சந்திக்க வைத்து நடைமுறைப் படுத்தப்படுகிறது. குடும்ப பந்தமும், குடும்பத்தின் மேல் வைத்துள்ள பற்றும் பலமுள்ளதாக இருந்தால் இந்த மருத்துவம் மிகவும் பலனுள்ளதாக இருக்கும்.

6. **எர்கார்டு தருக்கங்கள் பயிற்சி மருத்துவம்**: இது பலநூறு மக்கள் ஒரு சிற்றுண்டிச் சாலையின் நடன அரங்கில் வார இறுதி நாள்களில் கூடித் தங்களைப் பற்றிய நல்ல நம்பிக்கை வளரப் பயிற்சி எடுத்துக் கொள்ளுதலாகும். அவர்கள் தொடர்ச்சியாக அறுபது மணி நேரத்திற்குக் கடினமான ஆசனங்களில் உட்கார்ந்தோ, நின்றோ, தரையில் படுத்தோ மனிதர்களே மனித நடத்தைக்கு காரணமானவர் என்ற இ.எஸ்.டி. (Erhard Seminars Training Programme) செய்தியினை உணர்ந்து கொள்வார்கள். இந்தப் பயிற்சிக் காலங்களை ஒரு பயிற்சியாளர் எதிர்எதிர் பயிற்சிக் கடமைக் கூறு ஆற்று முறைகள், கட்டாயப் படுத்தப்பட்ட ஒருமுனைப் படுத்தல் ஆகியவற்றை பயன்படுத்தி நடத்துவார்.

7. **சங்கடம் எதிர் நோக்கும் குழு மருத்துவம்**: முப்பது வருடங்களுக்கு முன்பு பெதெல், மெய்ன் போன்ற இடங்களில் தேசியப் பயிற்சிச் சாலைகளில் உணர்ச்சிப் பயிற்சி மற்றும் டி. குழு ஆகியவற்றிலிருந்து சில சங்கடம் எதிர்நோக்கும் குழுக்கள் (Encounter Groups) உருவாயின. மற்றவை கலிபோர்னியாவிலுள்ள எசலன் சங்கம் சைனனான் மற்றும் அதுபோன்ற வளர்ச்சி மையங்களில் வளர்ந்த மாதிரிகளிலிருந்தும் உருவாயின.

**அமைப்பும் குறிக்கோள்களும்**: சங்கடம் எதிர் நோக்கும் குழு ஒன்று அல்லது இரண்டு குழுத் தலைவர்களையும் ஆறு முதல் பன்னிரண்டு உறுப்பினர்களையும் கொண்டது. இதன் சூழ்நிலை அதிகப்படியான சுதந்திர நடமாட்டத்தையும், நடவடிக்கையையும் அளிக்கவல்லது. குழுவின் தன்மையையும், நோக்கத்தையும் பொறுத்து அதனுடைய தனிப்பட்ட குறிக்கோள்கள் நிருணயமாகின்றன. உணர்ச்சித் தொல்லைகளைப் புரிந்து உணர்ந்து அதைச் சரியான முறையில் சமாளிக்கும் உத்திகளை அடைவதற்கு உதவ, வலிமையளிக்கும் குழு அனுபவத்தை உறுப்பினர்களுக்கு அளிப்பதுதான் இதன் குறிக்கோள். இது தனிமனித உள மருத்துவத்தைக்காட்டிலும் மிகுதியாகச் சமூகத்தின் உண்மை நிலையை உணர்த்துகிறது. சங்கடம் எதிர்நோக்கும் குழுத் தலைவர்களுக்குச் சில பொறுப்புகள் உள்ளன. அவை 1. குழு உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்தலும் குழுக் கூட்டங்களைக் கூட்டுதலும், 2. ஒவ்வொரு உறுப்பினரும் தாம் பாதுகாப்பான சூழ்நிலையில் இருப்பதாக எண்ணித் தம்மைச் சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொண்டு மற்றவர்களுடன் உறவு கொள்ளப் புது வழிமுறைகளைக் கடைப்பிடிக்க முயலும் சூழ்நிலை உருவாக்குதல், 3. தம்முடைய உணர்வுகளை வெளிப்படையாகவும், உண்மையாகவும் வெளிப்படுத்தியும் மற்றவர்களின் கோப உணர்ச்சிகளைத் தற்காப்பு முறையில் விடையளிக்காமல், அப்படியே ஏற்றுக் கொண்டு ஒரு முன் மாதிரியாக இருத்தல், 4. தன்னை அலசிப் பார்க்கும் விதத்தைவிட விளக்கிப் பார்ப்பது நல்லது என அதற்கு ஊக்கமளித்தல், 5. குழு உறுப்பினர்களிடையே ஏற்படும் மோதல்களை அவர்களுக்கு உதவும் யோசனைகளாக மாறும்படி பார்த்துக் கொள்ளுதல், 6. குழுவிற்கு வழிகாட்டல் தேவைப்படும் போது அறிவுரை தரும் விபரமறிந்தவனாகச் செயற் படுதல் போன்றவையாகும்.

**குழு வழிமுறை**: தன்னை மறைத்துக் கொண்டுள்ள முகமூடியைக் கழற்றி வைப்பது, சுதந்திரமானதும் உண்மையானதுமான உணர்வு வெளிப்பாடு, குழுவின் கலந்துரையாடல்களிலிருந்து வெளிப்படும் முடிவுகள் ஆகியவற்றிற்கு அழுத்தம் கொடுப்பது இந்த மருத்துவத்தின் கொள்கை.இதை அடைய மற்ற உறுப்பினர்கள் தங்களுடைய உண்மையான, நல்ல அல்லது கெட்ட உணர்வுகளைத் தக்கசமயத்தில் வெளிப்படுத்த வேண்டும். ஒரு தொல்லையின் உச்சகட்ட நிலைக்குத் தேவையான ஆதரவும், பிரியமும் அக்குழுவிலேயே வளர்ந்து வரும். வாய்மொழியில்லாத உத்திகளை ஆயத்தப்படுத்தும் சந்திப்புகளில் உபயோகப்படுத்துகின்றனர். அவை கண்ணோடு கண், தொடுவதன் மூலம் உணர்த்துவது, நம்ப வைக்கும் பயிற்சிகள்.பாதி அளவிலான அல்லது முழு அளவிலான உடை அவிழ்த்தல் போன்றவை வாய்மொழியிலான உத்திகள் எனப்படுபவை, ஒருவர் நடுவில் அமர்ந்திருக்க அவரைப் பற்றிய குறை நிறைகளை மற்றவர்கள் யோசிக்காமல் அள்ளி வீசுதல் ஆகும்.

சில குழுக்கள் ஆயத்தப்படுத்தும் சந்திப்புகள் வைத்துள்ளன. மற்றவை, குழு இணக்கத்தின் போக்கில் ஏற்பட விடுகின்றன. எது சரியானது என்பதற்கு முடிவான சாட்சியம் இல்லை.

**குழுவிலிருந்து விடை பெறுதலும் உண்மையான வாழ்வுக்குத் திரும்புதலும்**: குழுவின் கடைசிச் சந்திப்பு, குழு உணர்வு எவ்வாறு இருந்தது என்றும், அது எவ்வகையில் வாழ்க்கை நடைமுறைக்கு உதவ முடியும் என்றும் அலசிப் பார்க்க உபயோகப் படுத்தப்படும். சிலருக்குத் தொடர்ந்து உதவுகிற சந்திப்புகள் அமைத்துக் கொடுக்கப்படும். அதிகச் சிக்கல்களை எதிர்நோக்கும் குழுக்களுக்கு நிருணயிக்கப்பட்ட முடிவு நாள் என்று ஒன்றும்கிடையாது.

**குழு உள மருத்துவ முறை ஓர் ஆய்வு**: இந்த மருத்துவ முறையின் உண்மையான பாதிப்புப் பற்றிய அறிவியல் புள்ளி விவரங்களில்லாமை, குழுத்தலைவர்களுக்குத் தேவையான அளவு பயிற்சி இல்லாமை, குழு உறுப்பினர்களைச் சரியாகத் தெரிந்தெடுக்காமை, குறுகிய நேர மாற்றம் ஏற்படும் வாய்ப்பும், அது நடைமுறை வாழ்க்கையில் உதவாமற் போதலும், குழுவினால் ஆராயப்பட்டு ஆனால் சரியாகத் தீர்த்து வைக்கப்படாத சில தனிப்பட்ட தொல்லைகள் வளர்ந்து விடும் நிலைமை, குழு உறுப்பினர்களிடையே ஏற்படும் பால் ஈடுபாடு அவர்களுடைய திருமணத்தைப் பாதித்தல் மற்றும் குழு அனுபவம் சில உணர்ச்சித் தடுமாற்றங்களுக்குக் காரணமாய்ச் சுட்டிக் காட்டப்படும் நிலை ஆகியவை இந்த மருத்துவ முறை நன்மை பயப்பது என்ற கருத்துக்கு வர இயலாத தன்மையை உருவாக்கினாலும் சில திட்டங்கள் ஏற்கப்பட்டு நடைமுறைப் படுத்தப் பட்டால் இது தனிமனித உள மருத்துவத்தை விட மிகவும் ஏற்புடையதாக இருக்கும் என நம்பலாம். குழு உணர்வு பல சிக்கல்களை, ஒன்றுமில்லாமல் செய்து விடுகிறது. எம்.இ.

**துணை நூல்கள்**:

**Coleman, J.C.**, Abnormal Psychology and Modern Life, Dp. Taraporewala Sons & Co,Bombay. 1977.

**Kisker ,G.W.,** The Disorganised Personality Mc-Graw Hill Kogakusha Ltd, New Delhi, 1977.

**Shanmugam, T.E.,** Abnormal Psychology, Tata McGraw Hill publishing Co., Ltd, New Delhi. 1981.

**குழு ஒழுங்குணர்வு:** ஒரு சில கடமைகள் அல்லது சிக்கல்களுக்காக மேற்கொள்கின்ற முயற்சிகள் நன்மையே தரக்கூடும் என்று நம்பிக்கை கொள்வது மனஉறுதி அல்லது ஒழுங்குணர்வு(Morale) எனப்படுகிறது. குழு ஒழுங்குணர்வு (Group Morale) என்பது தனித்தனி உறுப்பினர் தம் ஒழுங்குணர்வின் கூட்டுக் கலவையாகும். இது பெருமளவுக்கு ஒட்டும் தன்மையின் (Cohesiveness) செயலாகும்; ஒரு குழுவானது பிறரைக் கவரும் வண்ணம் இல்லாவிடில், அதனுடைய நோக்கங்களோ, உறுப்பினர்களோ, இரண்டுமோ ஒதுக்கப்பட்டு விடக்கூடிய வாய்ப்பு உண்டு. பொதுவாக குழுவிலும், சமூகத்திலும் ஒரு பொறுப்புணர்வுடன் ஒழுங்குணர்வு ஏற்படுத்தப்படுகிறது. எனவே பொறுப்பு (Commitment), பொறுப்புணர்வு (Responsibility) போன்றவை ஒழுங்குணர்விற்கு முதன்மையான காரணிகளாக இருக்கின்றன.

மனிதனின் நடத்தையைக் குறிப்பிட்ட வகையில் மாற்றுகின்ற குழு ஒழுங்குணர்வானது, குழு மன உறுதி எனக் குறிக்கப்படுகிறது. குழுவின் மீது,அதன் உறுப்பினர்கள் கொண்டிருக்கும் மதிப்புப் பற்றிய பொதுவான அளவினை ஒழுங்குணர்வு குறிக்கிறது. குழுவின் உறுப்பினனாக இருப்பதற்கு மனிதன் தரும் முதன்மையினைப் பொறுத்தே இது அமையும். குழுவின் உறுப்பினர்கள் அதிகமாக மதிக்கப்படும் பொழுது குழுவானது தன் நெறிகளைச் (Norms) செயற்படுத்த இயலுகிறது. குழுவினனாக இருப்பதை மனிதன் அதிகமாக விரும்புவதால் அவன் அக்குழுவின் தேவைகளை நிறைவு செய்யக் கடினமாக உழைப்பான். மாறாக, அவன் குழுவின் உறுப்பினனாக இருப்பதை விரும்பாவிட்டால் குழுவின் நெறிகளைப் பின்பற்ற மாட்டான். குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒருவருக்கொருவர் ஆழ்ந்து ஒன்றியிருந்த போதிலும் (Identification), குழுவின் செயல்களுக்கு அனைவரும் தங்களுடையமுழுத்திறமையாலும் உதவியளிக்கின்றனர் என்று ஒவ்வொருவரும் உணர்ந்தபோதிலும், குழுச் செயல்கள் அனைத்தும் விரும்பப்படுகின்ற பயனைத் தருபவை என்ற பொதுவான உடன்பாடு இருந்தால் மட்டுமே ஒழுங்குணர்வு மிகுந்திருக்கும்.

குழு உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு, பூசல் இன்னபிற வடிவங்களில் அவர்களிடையே முரண்பாடு இருந்தாலும், குழுத்தலைவர்களின் நோக்கங்களிலோ திறமைகளிலோ அவநம்பிக்கை இருந்தாலும், குழுவின் எதிர்காலம் பற்றிய நிலையற்ற தன்மை, குழு நெறிகளின் உண்மை நிலை பற்றிய ஐயம் இருந்தாலும் உறுப்பினர்களின் ஒன்றுதல் வலுவற்றுப்போய் ஒருவித ஒழுக்கச் சிதைவு தோன்றும் என இலெபயர் (Lapiere) பிரான்சு வொர்த்து (Fransworth) ஆகிய அறிஞர்கள் கூறுகின்றனர். ஒரு குழுவில் ஒழுக்கச் சிதைவு இருக்கும் பொழுது.கிளைக் குழுக்கள் தங்களுக்கெனக் கிளைத் தலைவர்களைக் கொண்டு சிறு குழுக்களை (Cliques) அமைத்து விடுகின்றன. அத்தலைவர்கள் தங்களுக்குள்ளும் எதிர்ப்பைத் தெரிவிப்பவர்களாக இருக்கலாம். இது முழுக் குழுவின் திறமையைக் குறைக்கின்றது. மற்ற காரணிகளுக்காகச் செயற்படும் ஒரு குழுவானது அந்நேரத்தில் மிகுந்த கட்டுப்பாட்டோடும், இணைப்போடும் இருப்பது எளிதாக இயலுகிறது. எடுத்துக் காட்டாக, இரண்டாம் உலகப் போரின் போது நடந்த ஆய்வுகள், பயிற்சி முகாமில் மிக உயர்ந்த ஒழுங்குணர்வு உடையவர்களாகத் தரப்படுத்தப்பட்ட காலாட்படைப் பிரிவினர் கூட போர்க்களத்தில் ஒற்றுமை குலைந்து இருந்தமையினைக் காட்டின.

குழு அடைவதற்கான ஒரு நேரிடையான குறிக்கோள் இருத்தல், குழு உறுப்பினரிடத்தில் ஒருமித்து நிற்கும் உணர்ச்சி, குழுவிற்கு வரும் அபாயத்தைத் தெரிந்திருத்தல், நிலைமைகளைச் சீர்திருத்தி இலக்குகளை அடைய முடியும் என்ற திடநம்பிக்கை, குழுவின் குறிக்கோளை நோக்கி முன்னேறுவதை அறிந்திருப்பது போன்ற ஐந்து காரணிகள் நல்லதொரு ஒழுங்குணர்வுக்கு இன்றியமையாதனவாகும் என வாட்சன் (Watson) என்ற அறிஞர் கூறுகிறார்.

பொதுவாக வெற்றி ஒரு குழுவின் ஒழுங்குணர்வை முன்னேற்றவும், துன்பம் அதனைக் குறைக்கவும் செய்கிறது. செழுமையான குடும்பத்தின் உறுப்பினர்கள் சமூகப் பொருளாதார அளவில் குடும்பம் முன்னேறும் போது ஊக்கத்தோடும், நம்பிக்கையோடும், ஒற்றுமையாக உழைப்பார்கள். இது போலவேகேளிக்கைக் குழு (Club) வளரும் பொழுது, அதன் உறுப்பினர்கள் மிகுந்த ஊக்கத்தோடு இருப்பார்கள் களத்தில் வெற்றியடைந்துள்ள படை ஒன்று அடுத்த செயலில் நுழையும் பொழுது, தோல்வியடைந்து இருக்கும் படையைக் காட்டிலும் மிகுந்த ஆர்வத்தோடு நுழையும் என்பது தெளிவு. ஆனால், மிகுந்த ஒழுங்குணர்வும் வெற்றியும் ஒரே முறையில் இணைந்தவை என முடிவு செய்ய முடியாது. மிகுந்த ஒழுங்குணர்வு வெற்றிக்குக் கொண்டு செல்லலாம். சிறந்த வெற்றியின் காரணமாக மனிதன் தன்

நிலையை இழப்பதற்குக் காரணமாதல் போன்றே ஒரு குடும்பம் அல்லது ஒரு படையின் ஒழுங்குணர்வுச் சிதைவிற்கும், அதன் ஆதாரங்களின் சிதைவிற்கும் காரணமாகிறது. இதுபோன்றே இன்னல்கள் நிறைந்த ஒரு குடும்பமானது தன்னுடைய இடர்களுடன் இணைந்து போகப் பெருமளவு போராட வேண்டி உள்ளது. ஆங்கிலேயர் இரண்டாம்உலகப் போரில் தன்கிர்க்கில் (Dunkirk) பின் வாங்கிய போது, அவர்களின் ஒழுங்குணர்வு அதிகமாயிற்று.பரந்து நின்ற செருமானியப் (German) படையைப் பின்னர் அவர்களால் வெற்றி கொள்ள இயன்றது.

இவ்வாறாக வெற்றி அல்லாத பிற காரணிகளும் குழு ஒழுங்குணர்வை உறுதி செய்வதில் இடம் பெற்றுள்ளன. இக்காரணிகளுள் குழுவின் பரம்பரை வழக்கங்களும், அதன் தலைவரின் நடத்தையும் மிக முக்கியமானவையாகும். துன்பத்தில் (In the face of adversity), நீண்ட பழமையோடும் சிறந்த பரம்பரை வழக்கங்களோடும் உள்ள குழுவானது மிகுந்த ஒழுங்குணர்வைப் பாதுகாக்கும். அக் குழுவின் உறுப்பினர்கள் சமூக வயப்படுத்தப்பட்டும், அவர்கள் உயரிய பரம்பரை வழக்கங்களை மதிக்கக் கற்பிக்கப்பட்டும் இருப்பதே இதற்குக் காரணமாகும். மாறாக, புதிதாகத் தோன்றிய குழு துன்ப வயப்படும் பொழுது எளிதாக ஒழுக்கச் சிதைவினை அடையலாம். சமூகமயமாகாத நிலை இதற்கு ஒரு காரணியாகும்.

குழு ஒழுங்குணர்வைப் பாதிப்பதில், தலைமை முதன்மையிடம் பெறுகிறது. நீண்டதொரு பரம்பரையினைப் பெற்றுள்ள குழுக்களில் தலைமை, புதிதான குழுக்களைப் போன்று சிறப்பாக மதிக்கப் பெறாமல் அமையலாம். வெற்றியிலும், தோல்வியிலும் குழு ஒழுங்குணர்வை நிலை நிறுத்த, தலைவன் சிறப்பானதொரு பங்கு வகிக்க வேண்டியவனாக உள்ளான். ஒழுக்கச் சிதைவானது, குழு வெற்றியின் போதும் தோல்வியின் போதும் நிகழலாம். இவ்வொழுக்கச் சிதைவினைத் தடுப்பதில் பரம்பரையைப் போன்றதொரு முதன்மையான பங்கினைத் தலைவன் வகிக்கிறான்.

மிகுந்த ஒழுங்குணர்வோடு (High Morale)கூடிய ஒரு குழுவின் செயல்களில் பங்கு பெறுதல், குழுவின் உறுப்பினர்களைத் தூண்டவும், மனநிறைவடைவிக்கவும் செய்கிறது. இதற்கு மாறாக, ஒழுக்கச் சிதைவையுடைய ஒரு குழுவின் செயல்களில் பங்கு பெறுதல், அச்சம் தோன்றச் செய்கிறது. மக்கள் தங்கள் முழு முயற்சியுடன் ஈடுபடவும், விருப்போடும், ஊக்கத்தோடும் குழுநெறிகளுக்கு இணங்கவும் செய்வர். பொதுவாகக் குழுக்கள், ஒழுங்குணர்வைப் பல தரங்களிலே கொண்டுள்ளன. உட்குழுக்கள் (In-Groups) மிகுந்த அளவிலான ஒழுங்குணர்வைத் தங்களுக்காகவும், குறைந்த அளவிலான ஒழுங்குணர்வை வெளிக் குழுக்களுக்காகவும் (Out-groups) கொண்டுள்ளன. மிகுந்த ஒழுங்குணர்வுள்ள ஒரு குழுவானது அதனை ஒன்றுபடுத்தி வைத்துக்கொள்ள அதிகமான உள்ளார்ந்த வலிமையைக் கொண்டுள்ளது. இது, தகராறுகள், மோதல்கள் போன்றவை இல்லாமல்,உறுப்பினர்களை அமைதியாக ஒருங்கிணைத்துச்செயற்படவும், நினைக்கவும் செய்கிறது. மேலும், குழு நலமானது வளர்ச்சியுறுவதற்கு உறுப்பினர்களின் பொதுவான விருப்பத்தைக் கொள்ளவும், தலைவனுக்கு உண்மையாகத் தங்களை உரிமைப்படுத்தவும் செய்கிறது. குழு ஒழுங்குணர்வானது, பங்கு கொள்கின்றவர்களை, இட்ட வேலைச் சூழ்நிலையை அதிகமாகச் சார்ந்திருக்கச் செய்வதைவிட, இட்ட வேலையிலிருந்து அவர்கள் விலகிச் சென்றால் என்ன நடைபெறும் என்பதை எண்ணுவதில் அதிகமாகச் சார்ந்திருக்கிறது. அதிகமான ஒழுங்குணர்விற்கு வெற்றி என்பது ஒரு அடிப்படையான காரணியாகும்.

தாழ்ந்த ஒழுங்குணர்வானது (Low Morale) உண்மையிலேயே இடரானதாகும். ஏனெனில், அந்த நிலையில் உறுப்பினர்களுக்குப் பொறுப்புணர்வும், அந்த நிறுவனம் மூழ்குகின்ற நிலையில் அதை நிலை நிறுத்துகின்ற முயற்சியும் குறைவாக இருக்கும். கடினமான விதிமுறைகள் ஒழுங்குணர்வை உயர்த்தும் என நம்புவது தவறான எண்ணமாகும். மனிதனுடைய ஆசைகள், தேவைகள், விருப்பங்கள் போன்றவையும் குழு ஒழுங்குணர்வுக்குக் காரணிகளாகக் கணக்கில் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் குறிப்பிட்ட அளவு மனநிறைவுகொள்ள வில்லையெனின், ஒழுங்குணர்வை அவனிடம் எதிர்பார்க்க முடியாது.மிகுந்தஒழுங்குணர்வுடன் குழுக்களில் கலந்து கொள்வது மிகவும் விரும்பத்தக்கதாகவும், குறைந்த ஒழுங்குணர்வுடன் குழுக்களில் பங்கு கொள்வது வெறுப்புண்டாக்குவதாகவும் இருக்கும்.மிகுந்த ஒழுங்குணர்வானது, நம்பிக்கை, தன்னம்பிக்கை, தைரியம் போன்றவற்றை எழுப்புகிறது. தாழ்ந்த ஒழுங்குணர்வானது, அக்கறையின்மை, கவலை, களைப்பு, தோல்வி, அச்சம் போன்றவற்றை ஏற்படுத்துகிறது.

பூ.த.

**துணை நூல்கள்:**

**Lapiere and Fransworth,** Social Psychology, Mc Graw Hill, New York, 1949.

**Lindgren, Henry Clay.,** An Introduction to Social Psychology, Wiley Eastern Ltd, New Delhi, 1973.

**Watsen, J.B.,** Civilian Morale, Houghton Mufflin, Boston, 1942.

**குழுக்கள்:** பண்டைய நாளில் நிருவாகம் செவ்வனே நடைபெறும் பொருட்டுப் பல்வகையான அவைகள் செயற்பட்டு வந்தன. இவை அரசனின் தலையீடின்றித் தன்னிச்சையாகச் செயற்பட்டன. இவற்றுள் வணிகக் குழுக்களும் தொழிற் குழுக்களும் குறிப்பிடத்தக்கவை. இக் குழுக்களுக்கென்று சில விதிமுறைகளும் இருந்தன. அவற்றை மீறி நடப்பவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

**வணிகக் குழுக்கள்:** வாணிகம் செய்யும் பொருட்டுக் காடுகளையும், மலைப் பகுதிகளையும் கடந்து சென்ற வணிகர்கள் காட்டு விலங்குகள், ஆறலை கள்வர்கள் ஆகியோரிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும்பொருட்டுக் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். எனவேதான், சங்க இலக்கியங்கள் இவர்களை 'வணிகச் சாத்து' என்று குறிக்கின்றன. பிரான்மலைக் கல்வெட்டு ஏறுசாத்து, இறங்குசாத்து என்று கூறுகின்றது. ஐரோப்பிய நாடுகளில் திருடர்களின் கொடுமையைத் தாங்காமலும், வளர்கின்ற நகரத்தின் தேவையை நிறைவு செய்யும்பொருட்டும், வேலையாட்களின் பற்றாக்குறையினாலும் குழுக்கள் ஏற்பட்டன. ஐந்நூற்றுவர், நகரத்தார், வலஞ்சியர், மணிக்கிராமத்தார், சங்கரபாடியார், செட்டி, செட்டிவீரபுத்திரர், அஞ்சுவண்ணத்தார், கொங்காள்வார்கள் போன்றவை சில குறிப்பிடத்தக்க வணிகக் குழுக்களாகும்.

ஐந்நூற்றுவர் பற்றிய கல்வெட்டுகள் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் இருந்து கிடைக்கின்றன. இவர்கள் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் கிடைக்கின்ற கல்வெட்டுகளிலிருந்து வடஇந்தியாவில் உள்ள அகிச்சத்தரா (Ahichchhatra) என்ற இடத்தில் இருந்து வந்தனர் என்று தெரிகின்றது. கருநாடகத்தில் இவர்களுடைய கல்வெட்டுகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் மற்ற இடங்களை விட மிகுதியாகக் கிடைக்கின்றன. கருநாடக மாநிலத்தில் அகிச்சத்தரா என்னும் ஊர் ஒன்றும் உள்ளது. வடஇந்தியாவில் இவர்களுடைய கல்வெட்டுகள் குறைந்த அளவில் கிடைப்பதாலும் பிற்காலத்தில் கிடைக்கின்ற காரணத்தாலும் இவர்கள் கருநாடகப் பகுதியில் இருந்து வந்தவர்கள் என்றே கொள்ளலாம். கல்வெட்டுகள் இவர்களை 'நானாதேச திசையாயிரத்தைந்நூற்றுவர், திசையாயிரத்தைந் நூற்றுவர், ஐந்நூற்றுவர்' என்று குறிக்கின்றன. எனவே, ஆயிரம் திசைகளுக்கும் போய் வாணிகத் தொழில் நிகழ்த்திய ஐந்நூற்றுவர் என்றும் இவர்களைக் கொள்ளலாம். இவர்களுடைய குழுவில் 500 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்கள் வணிகக் குழுவின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்தனர். ஐந்நூற்றுவரின் கல்வெட்டுகள் இந்தியாவில் மட்டுமன்றி இலங்கை, சுமத்திரா போன்ற வெளிநாடுகளிலும் கிடைக்கின்றன. இவர்கள் 500 என்பதை ஒரு புனிதமான எண்ணாகக் கருதியிருக்க வேண்டும். இவர்களுக்கென்ற தனி மெய்க்கீர்த்தி ஐந்நூற்றுவர் மெய்க்கீர்த்தி என்று கூறப்படுகிறது.

நகரத்தார் என்போர் பெரிய நகரங்களிலிருந்து கொண்டு வாணிகம் செய்து வந்தனர். இவர்கள் காஞ்சிபுரம், மாமல்லபுரம், நந்திபுரமாகிய பழையாறை, மயிலாப்பூர் போன்ற பல நகரங்களில் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. சாலிய நகரத்தார், சங்கரபாடி நகரத்தார், வாணிய நகரத்தார் போன்றவர்கள் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். சாலிய நகரத்தார் துணி வணிகர்கள். இவர்களுள் இரண்டு பிரிவினர் உள்ளனர். இவர்கள் பத்மசாலியர், பட்டுச்சாலியர் எனப்படுவர். இவர்கள் ஆந்திராவில் துணி வாணிகத்தில் சிறந்து விளங்கினர். நாயக்க மன்னர்கள் கைக்கோளர்களால் நெய்யப்பட்ட துணிகளை விரும்பாத காரணத்தால் ஆந்திராவில் உள்ள சாலியர்களைக் கொண்டு வந்து தமிழ் நாட்டில் குடியமர்த்தினர். தமிழ்நாட்டில் சங்ககாலம் தொட்டுச் சாலியர்கள் இருந்துள்ளனர், தஞ்சை, சிதம்பரம் ஆகிய இடங்களில் சாலிய நகரத்தார்களுக்கென்று தனி வீதிகள் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. சாலிய நகரத்தார்கள் கோயிலுக்குத் தேவையான துணிகளை நெய்துகொடுத்தனர். பல கோயில்களுக்குத் தானமும் செய்தனர்.

எண்ணெய் வணிகர்கள் 'சங்கரபாடியார்' எனப்பட்டனர். இப்பெயர் வந்ததற்குப் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. சங்கரம் என்பது சாதியின் பெயர் என்றும், அவர்கள் வாழ்விடமாகிய பாடி என்பது சேர்ந்து சங்கரபாடி என வந்ததென்றும் கூறுவது ஏற்புடையது அன்று. இவர்கள் செக்கில் இருந்து எண்ணெய் எடுத்தனர். பேச்சு வழக்கில் இது மாறி, பாடி என்பது சேர்ந்து சங்கரபாடியாயிற்று என்பது ஏற்புடையதாகத் தெரிகிறது. இவர்களைப் பற்றிய குறிப்புகள் உத்தரமேரூர், தில்லை, திருவாலங்காடு கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. வாணிய நகரத்தார்கள் இவர்களில் இருந்து சிறிது வேறுபட்டவர்கள். இவர்களும் எண்ணெய் வணிகர்களாவர்.

மணிக்கிராமத்தார் என்ற குழுவினர் தலைநகரங்களிலும் கடற்கரைப் பட்டினங்களிலும் வெளிநாடு

களிலும் வாணிகம் நடத்தியவர்கள் என்று கல்வெட்டு கள் கூறுகின்றன. உறையூர் மணிக்கிராமம், காவேரிப் பூம்பட்டினத்து மணிக்கிராமம், கொடும்பாளூர் மணிக்கிராமம், இளங்கோ பட்டினத்து மணிக்கிராமம் போன்றவை கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட் டுள்ளன.

வளஞ்சியர்கள் என்பவர்களும் வணிகக் குழுவினர் ஆவர். கல்வெட்டுகளில் இவர்கள் 'தென்னிலங்கை வளஞ்சியர்' என்று குறிக்கப்படுகின்றனர். இதிலிருந்து இவர்கள் இலங்கையில் இருந்து தமிழ்நாட்டிற்குக் குடியேறி ஊர்களில் தங்கி வாணிகஞ் செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இலங்கையில் இவர்களுடைய கல்வெட்டுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவர்கள் புத்தமதத்தைச் சார்ந்தவர்கள். தஞ்சைப் பகுதியில் உள்ள திருவேள்விக் குடிக் கோயிலில் ஒரு பகுதியை இவர்களே கட்டி உள்ளனர் என்று தெரிகிறது. நன்னிலம் பகுதியில் உள்ள கோயிலுக்குக் காசு தான மும் இவர்கள் செய்தனர்.

அஞ்சுவண்ணத்தார் பற்றித் தமிழ்நாட்டில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது. களவியற்காரிகை என்னும் நூலின் உரை யாசிரியர் கூறும் சில குறிப்புகளைக் கொண்டு இவர் கள் முகம்மதியராக இருத்தல் வேண்டும் என்று சதாசிவ பண்டாரத்தார் எண்ணுகிறார். கீழக் கடற் கரைப் பகுதியிலும், நாகப்பட்டினத்திலும் இவர்கள் வாணிகம் நடத்தி வந்துள்ளனர் என்று தெரிகிறது. (காண்க: அஞ்சுவண்ணம்).

வணிகர்கள் தங்களுடைய பொருள்களைப் பாது காக்கவும், வழித்துணையாக வருவதற்கும் வீரர்களை வைத்திருந்தனர். செட்டிபுத்திரர்கள், முனை வீரர் கள், எரிவீரர்கள், கொங்காள்வார்கள் போன்றவர் கள் வணிகர்களுடன் காணப்படுகின்றனர். 'எரி' என்றால் 'வழி' என்று பொருள் உள்ளது. ஆகவே, இவர்கள் 'வழியில் வணிகர்களுக்கு உதவிய வீரர்கள்' என்று கொள்ளலாம். இவர்கள் இருந்த இடங்கள் எரிவீரப்பட்டினம் எனப்பட்டது. செட்டி என்று அழைக்கப்படுகின்ற வணிகர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை: இவர்களுடன் சென்ற வீரர்கள் செட்டி வீரபுத்திரர் கள் எனப்பட்டனர்.

**தொழிற்குழுக்கள்**: முதலில் சாதி அடிப்படையில் தொழிற்குழுக்கள் அமைந்திருந்தன. அதாவது, ஒரு குறிப்பிட்ட தொழிலை ஒரு குறிப்பிட்ட சாதியினரே செய்து வந்தனர். அவர்களுடைய சாதியில் மற்றவர் கள் சேர்க்கப்படவில்லை.

இடைக் காலத்தில் வணிகக் குழுக்கள் இரண்டா கப் பிரிந்து வணிகக் குழுக்கள், தொழிற்குழுக்கள் என்று மாறின. கைவினைஞர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களைத் தாங்களே விற்பனை செய்து உயிர் வாழவேண்டியிருந்தது. இவர்கள் வணிகர் களுடன் போட்டியிட்டுப் பொருள்களை விற்பனை செய்தனர். தனிமனிதனாக நின்று வாணிகம் செய்ய வேண்டி இருந்ததாலும் சமூகத்தில் இவர்கள் கீழ்த் தரமாக மதிக்கப்பட்டதாலும் இவர்கள் குழுக்களாகச் சேர்ந்தனர். பலதரப்பட்ட கைவினைஞர்கள் தங்களு டைய உரிமையைக் கேட்டு வாங்கி உள்ளனர். இத் தகைய நிலையில்இவர்கள் குழுக்களாக இணைந்தனர். இரதக்காரர்கள், கீழ்க்கலனை, சித்ரமேழி பெரிய நாட்டார், கைக்கோளர்கள் போன்றோர் இவர் களுள் குறிப்பிடத்தக்கவர்.

பல தொழிலைச் செய்கின்ற கைவினைஞர்கள் சோழர் காலத்தில் இரதக்காரர்கள் என்று சொல்லப் பட்டனர். இதில் தச்சர், கொல்லர், மணிவினைஞர், தட்டார், ஓவியர், வண்ணக்கம்மியர் போன்றவர்கள் இருந்தனர். இவர்களைக் கல்வெட்டுகள் 'அறுவகைத் தொழில் நால்வகை இரதக்காரர்கள்' என்று குறிப் பிடுகின்றன. இவர்கள் தேர் (இரதம்) செய்தவர்கள் என்பதனால் இப்பெயர் பெற்றிருக்கலாம். இவர்கள் தங்களுக்கென்று முதலையைக் கொடியாகக் கொண் டிருந்தனர். அந்தணர்களும் சத்திரியர்களும் வைசியர் களும் தமக்குத் தேவையான பொருள்களை இவர் களிடமிருந்தே பெற்றனர். இரதக்காரர்கள் கட்டடக் கலை, தேர் போன்றவை செய்தல், மண்டபங்கள் கட்டுதல், விலை உயர்ந்த மணிகள், முத்து ஆகியவை செய்தல் ஆகியவற்றில் கைந்தேர்ந்தவர்களாக விளங் கினர் என்பது முதலாம் குலோத்துங்கனின் கல்வெட் டிலிருந்து தெரியவருகிறது.

சிதம்பரம் கல்வெட்டுகளில் கீழ்க்கலனை என்ற பிரிவு ஒன்று காணப்படுகிறது. இதில் கைவினைஞர் களான தச்சர், கொல்லர், தட்டார், கோலியர், (செருப்புத் தொழிலாளர்)போன்றவர்கள் உள்ளனர். இதில் வணிகர்கள் அடங்கவில்லை. இந்நகரின் நிரு வாக அமைப்பிற்கும் கீழ்கலனை அங்கத்தினருக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. கம்மாளர் கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் தங்களுக்குச்சில அடிப்படை உரிமைகள் வேண்டுமென்று வேண்டியுள் ளனர். இவர்கள் திருமணக் காலங்களில் இரட்டைச் சங்கு ஊதிக்கொள்ளவும், செருப்பு அணிந்து கொள் ளவும், அனுமதி வேண்டிப் பெற்றுள்ளனர். கம்மாளர்

கள் தங்களுடைய உரிமையை ஓர் அமைப்பின் மூல மாகக் கேட்டுப் பெற்றுள்ளனர்.

சித்திரமேழி பெரியநாட்டார் என்பவர்கள் உழவு தொழில் செய்து வந்தவர்கள். மேழி என்றால் கலப்பை என்று பொருள். ஆதலின் அலங்கரிக்கப் பட்ட கலப்பையையுடைய நாட்டவர் என்று பொருள் கொள்ளப்படுகிறது. இவர்கள் 'பூமி புத்தி ரர்' என்றும் 'நாட்டு மக்கள்' என்றும் குறிப்பிடப் பட்டனர். இவர்களுடைய கொடி மேழிக் கொடி யாகும். இவர்களுடைய கல்வெட்டில் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. தமிழ் நாட்டில் இவர்கள் கல் வெட்டுகள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன. கருநாடகத்தில் கி.பி. 10-ஆம் நூற் றாண்டிலிருந்தே உள்ளன. இவர்கள் உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்யும்பொருட்டு வணிகர்களுடன் தொடர்பு வைத்துள்ளனர். எனவே தான், வணிகக் கல்வெட்டுகளில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

வலங்கை, இடங்கைப் பிரிவுகளைச் சார்ந்தவர் கள் சோழர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த னர். இடங்கைப் பிரிவில் பெரும்பாலும் வணிகர்க ளும், கைவினைஞர்களும் இருந்தனர். இடங்கைப் பிரிவைச் சார்ந்த 98 பிரிவினர்களும் ஒரு தாய் மக்க ளாக இருக்க வேண்டுமென்று கி.பி. 12-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று கூறுகிறது. காண்க: இடங்கை வலங்கை. தி.சு.

**துணை நூல்கள்**:

**சதாசிவ பண்டாரத்தார், தி.வை.**, பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1974.

**Appadorai, A.**, Economic Condition in South India, Vols. I & II, Madras University, Madras, 1936.

**Indrapala, K.**, Some Medieval Mercantile Communities of South India and Ceylon, Madras University, Journal of Tamil Studies, Vol. II. No. 2, Madras, 1970.

**Subrahmanya Aiyer, K.V.**, Largest Provincial Organisations in Ancient India, Coimbatore, 1984.

**குழுக் கற்பித்தல்** முறையானது இரண்டாம் உலகப் போரின்போது தொடங்கப்பட்டுப் பின்னர்ப் பரவியது. தொடக்கத்தில் இம் முறையானது கவர்ச்சி யற்றிருந்தது. ஆனால், இன்று இதன் தேவை மிகுந்து விட்டது. மாணவர்களின் எண்ணிக்கையும் கல்விச் செலவினங்களும் உயர்ந்தபடி இருப்பதனால் குழுக் கற்பித்தல் (Team Teaching) முறைபற்றி வெளிநாடு களில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

மாணவனைத் தனியாக இயங்கவிடும்போதோ மாணவக் குழுவுடன் செயற்படச் செய்யும்போதோ ஏற்படும் கற்றலைவிட ஆசிரியக் குழுவின் மேற் பார்வையில் செயற்படும்போது அவர்களின் அடைவு மதிப்பெண் அதிகமென்பது பல ஆராய்ச்சிகளால் அறியப்பட்டுள்ளது. இதன் விளைவாக அண்மைக் காலத்தில்தான் ஆசிரியர்கள் அதிக அளவில் கூட் டாகச் செயற்படுவது மிகுந்துள்ளது. இன்று குழுக் கற்பித்தலானது கூட்டுறவு முயற்சியாக ஆகி வரு கிறது. அதனோடு முன்பு போல ஓர் ஆசிரியர் எல் லாப் பாடங்களையும் திறம்படத் தெரிந்து கொள் வதோ கற்பிப்பதோ முடியாது போகிறது என்பதைப் பெரும்பாலான ஆசிரியர்கள் உணரத் தொடங்கி விட்டனர்.

அமெரிக்க நாட்டில் குழுக் கற்பித்தல் முறை யானது பத்து (1972-1982) ஆண்டுகளில் 43 விழுக் காட்டிலிருந்து 67 விழுக்காட்டிற்குப் பரவலாக்கப் பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் இந்த அளவிற்குப் பரவலாக்கப்படவில்லை. குழுக்களி லிருந்து செயற்பட்ட ஆசிரியர்கள் குழுக்கற்பித்தலைப் பெரும்பாலும் விரும்புகின்றனர். குழுக்களில் இருக் கும் ஆசிரியர்கள் எப்பொழுதும் போலவே மாணவர் களுடனும் உடனுழைக்கும் ஆசிரியர்களுடனும் உறவுகளை வைத்துக் கொள்கின்றனர். இதனால் குறிப்பாகப் பள்ளி நிருவாகத்தில் பெரும் மாற்றம் ஏதும் ஏற்படுவதில்லை. ஆனால், உயர் வகுப்புகளில் நிருவாகமானது குழுக்கற்பித்தல் முயற்சியினால் தனிப்பட்டவர் கற்றலுக்கான பல சிறந்த அமைப்பு களை உருவாக்கித்தர முடிந்திருக்கிறது. அதனோடு ஆசிரிய ஒத்துழைப்பினை, குழுக்கற்பித்தல் நிகழும் பள்ளிகளில் சற்று எளிமையாகப் பெற முடிகிறது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர் கள் அல்லது கல்வி வல்லுநர்கள் ஒன்றாகச் சேர்ந்து திட்டமிட்டுக் கூட்டுப் பொறுப்புடன் சில தலைப்பு களுக்குப் பாடத் திட்டத்தை வகுத்து, குறிப்பிட்ட கால வரையறைக்குள் சிறப்பாகக் கற்பிப்பதற்கான நிருவாக முயற்சிதான் குழுக் கற்பித்தல் என்பது. பல மாணவர்களுடன் சேர்ந்து தாம் விரும்பிய வற்றைப் பெற்றோர், கல்வியாளர்கள், உளவியல், ஆசிரியர், கல்வித் திட்டம் அமைப்பவர், நிருவாகி,

நண்பர்கள் ஆகியோர் உதவியினால் சுற்று வட்டாரத்தில் இருக்கும் பொறுப்புகளைக் கொண்டு கற்பதும், வெவ்வேறு வகுப்பு மாணவர்களைக் கூடச் சேர்த்துக் கொள்வதும், வெவ்வேறு பாடங்களைச் (கணிதமும் அறிவியலும், மொழியும் வரலாறும், தாவர இயலும் ஓவியமும் போல) சேர்த்துக் கற்பதும் உண்டு. ஆசிரியர் குழுவில் இரண்டு, மூன்று பேர் அல்லது எட்டு, பத்துப் பேர் இருக்கலாம். வாரம் ஒரு முறையோ இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையோ திட்டமிடலாம். பயிற்றுவோரின் அண்மைக்காலப் பட்டறிவைப் பொறுத்துச் சில வேளைகளில், அன்றாடத் திட்ட மாற்றங்களும் இருக்கக் கூடும். தொடக்கப் பள்ளிகளிலுள்ள குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஏறக்குறைய பெரும்பகுதிப் பாடங்களைச் சில குழுக்கள் போதிக்கும். பிறிதொரு குழுவானது குறிப்பிட்ட செயல்களுக்குப் பொறுப்பாகலாம். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு பாடத்திற்கோ இரண்டு பாடங்களுக்கோ குழுக் கற்பித்தல் இருக்கலாம். சுருங்கச் சொன்னால், வெவ்வேறு ஆற்றல்களைப் பெற்ற ஆசிரியர்களை ஒன்றுபடுத்தி மாணவர் நலனுக்காகக் கல்வித் திட்டத்தையும் கற்பிக்கும் முறையையும் உயர்த்தும் முயற்சிதான் குழுக் கற்பித்தல் ஆகும்.

**நிறைகளும் குறைகளும்**: சீராகத் திட்டமிடலே கற்பித்தலின் வெற்றிக்கு அடிப்படை ஆகும். கற்றல் ஏற்படாததற்குக் காரணம் சரியாகத் திட்டமிடப் படாததே. கல்வியின் தரமானது கற்பித்தலின் தன்மையைப் பொறுத்தது. கற்பித்தலின் விளைவு ஆசிரியர்களின் இயங்கு தன்மையைப் பொறுத்தது. மாணவர்களைப் போலவே ஒவ்வோர் ஆசிரியரும் ஆர்வம், ஆற்றல், செயல்முறை ஆகியவற்றில் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். இந்த ஆசிரியர்கள் ஒரே வகையான அன்றாட வகுப்புகளிலிருந்து ஏற்படும் சலிப்பிலிருந்து மாணவர்களுக்கு விடுப்புத் தர வேண்டும். அதனோடு ஆசிரியர்களிடமிருந்து மட்டுமல்லாமல் தாமாகவும், உடன்பயில்வோரிடமிருந்தும் கற்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்க முடியும். இன்று அமெரிக்காவில் மாற்றுக் கல்விக் கூடங்கள் (Alternate Educational Institutes) 10,000 உள்ளன. அவற்றுள் குழுக் கற்பித்தல் முறையைப் பின்பற்றுவன பற்பல. அங்கெல்லாம் மாணவர் வளர்ச்சி பள்ளியின் உள்ளும் புறமும் கணக்கில் கொள்ளப்படும். ஆசிரியரின் ஆதிக்கத்தைத் தணிக்க வந்தவை இத்தனிப் பள்ளிகள்.

குழுக் கற்பித்தலில் நிறையத் திட்டமிட வாய்ப்பு இருப்பதே அதனைச் சிறப்பிக்கிறது. அதனால் பலவாறு சிந்திக்க வேண்டியுள்ளது. அதனால் விழிப்பு உணர்வு மிகுகிறது. சேர்ந்து கற்பிக்கும் போது பல ஆசிரியர்களுக்கு நிறைய ஓய்வு கிடைக்கிறது. இவர்களுக்குத் தத்தமக்கான ஆக்கச் செயலில் ஈடுபட நிறைய வாய்ப்பும் கிடைக்கிறது.

சிறு குழுக்களில் உரையாடுவது எல்லோராலும் முடியும். மாணவர்களுக்குத் தனிச் சுதந்திரம் கிடைப்பதோடு ஒரு குறிக்கோள் தெளிவாக முன் நிற்கும். பலவகைக் கருத்து மாற்றங்களும் இடம் பெறும் இவற்றின் விளைபொருள்களாக ஒத்துழைப்பு, செல்வாக்கு, சிக்கல்களைத் தீர்க்கும் வழி, நட்பு, நெருக்கம் முதலியன இயல்பாக ஏற்பட்டுவிடும். மாணாக்கர் குழுவில் ஐயந்தெளிதல் மிகவும் எளிமையாகவும் வேகமாகவும் நிலையானதாகவும் நிகழ்கிறது. அதே நேரத்தில் இச்சிறு குழுக்களுக்கிடையே நல்லதோர் போட்டியும் ஏற்படுகிறது. காலச் சேமிப்பும் மக்களாட்சி அமைப்பும் பெற்றபின் மாணாக்கர்–ஆசிரியர்களின் தேவைகளைத் தீர்த்து வைக்கும் கல்வித்திட்டம் இது. ஆசிரியர்களின் மூலந்தான் மாணவர்களின் கற்றல் என்பதைப் பொய்ப்பிக்கும் கற்றல் முறை இது. பொதுவாகக் கற்பிக்கும் முறையில் மாணவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுதான் முக்கியமாக இருக்கும்; ஆனால்குழுக் கற்பித்தலில் மாணாக்கர்களை நம்புவதுதான் தலையாய நோக்கமாகும்.

கூட்டாகக் கற்றாலும், பலர் சேர்ந்து செயற்பட்டாலும் கற்பவர்கள் தத்தமக்கு ஏற்றாற்போலத் தான் புரிந்து கொள்கின்றனர். பலருடைய ஒத்துழைப்பு நல்லதெனினும், ஆற்றல் குறைந்தோரும் ஊக்கமில்லாரும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆற்றல் அற்றவரையும் ஒத்துழைப்புத் தாராதவரையும் வைத்துக் கொண்டு குழுக்கற்பித்தலை நடத்த முடியாது என்பது ஒரு பெருங்குறையாகும். ம.பெ.

**துணை நூல்கள்**:

**Rogers, V.R.**, Teaching in the British Primery School, The Macmillan Co., 60-84, London, 1972.

**Tanner, D.**, Secondary Education Perspectives & Prospects, The Macmillan Co., 468-469, 1972,

***குழுத் தீவுகள்***: பிரெஞ்சுப் பாலினீசியாவைச் சேர்ந்த குழுத்தீவுகள் தென்பசிபிக்கு மாக்கடலில் உள்ளன. குழுத்தீவுகள் (Society Islands) குக்குத் தீவுகளுக்குக் கிழக்கிலும் மார்குசாசு (**Marqwesas**) தீவுகளுக்குத் தென்மேற்கிலும் அமைந்துள்ளன. இவை ஆங்காங்குப் பரவலாக அமைந்துள்ள 14 தீவுகளின்

கூட்டமாகும். இப்பதினான்கில் எட்டுத் தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இத்தீவுக் கூட்டத்தை இரு பிரிவுகளாக 96 கி.மீ.நீளம் கொண்ட ஒரு கால்வாய் பிரிக்கிறது. அவைகளுள் ஒன்றுக்குக் காற்றுத் திசைத் தீவுகள்(Windward Islands)என்றும், மற்றொன்றுக்குக் காற்றுத் திசைக்கு அயற்பட்ட தீவுகள் (Leeward Islands) என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இவற்றைத் தவிர அண்மையில் உள்ள வேறு சில தீவுக் கூட்டங்களும் பிரெஞ்சுப் பாலினீசியப் பகுதியில் அடங்கும். இத்தீவுகள் யாவும் கி.பி. 1843-ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சுக் காப்பரசுக்கு உட்பட்டிருந்தன. இவை கி.பி. 1880-82 ஆண்டுகளில் பிரான்சுடன் இணைக்கப்பட்டன. பிரான்சின் கடல் கடந்த நிலப்பகுதி (Overseas Territory) என்ற பெயர் 1958-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இவற்றுக்கு வழங்கப்பெற்றது.

காற்றுத் திசைத் தீவுகளில் மக்கட்டொகை 101,392 (1977); பரப்பு 1174 கி.மீ. காற்றுத் திசைக்கு அயற்பட்ட தீவுகளில் மக்கட்டொகை 16,311 (1977).

குழுத் தீவுகளில் பெரும்பாலும் எரிமலை வெடிப்பது வழக்கம் அங்குள்ள உயரமான மலைகளுள் ஒன்று ஒரோ-ஒஹனா என்பதாகும். அது 7,339 அடி உயரமாகும். அது தாகிதிப் (Tahiti) பகுதியில் உள்ளது. அத்தீவுகளின் தட்பவெப்ப நிலை ஒரே சீராக இல்லாவிட்டாலும், வெப்பம் கடுமையாக இருந்த போதிலும் அவ்விடம் உடல்நலத்திற்கு உகந்ததே. அங்குப் பல்வேறு தாவரங்கள் காணப்படுகின்றன. வாழைமரங்கள் அங்குத் தொடக்க கால முதல் பயிரிடப்பட்டு வருகின்றன. வழக்கமாக எல்லா இடங்களிலும் வாழைக் குலைகள் கீழ்நோக்கி வரும்; ஆனால், அங்கு மேல்நோக்கித்தான் செல்லும். இது விந்தையிலும் விந்தையாகும்.

குழுத் தீவுகளின் பழமையான மக்கள் பாலினீசியர்களாவர். அவர்களது உணவுப் பொருள்கள்,பழங்கள், உருளைக்கிழங்குகள் முதலியனவாகும். அவர்கள் பலபழமரங்களையும், செடி கொடிகளையும், பருத்தி, கரும்பு ஆகியவைகளையும் பயிரிடுகிறார்கள். தாகிதியுள்ள பாபீதியில் அவர்களது அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

போர்ச்சுகீசிய மாலுமிகளுள் ஒருவரான பெட்ரோ பெர்னாண்டசு தெ கியூராசு (Petro Fernandes de cuyros) என்பவர் அப்பகுதியினை கி.பி. 1606-ஆம் ஆண்டில் பார்வையிட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சாமுவேல் வாலிசு என்பவர் கி.பி. 1767-ஆம் ஆண்டில் அத்தீவுகளை இங்கிலாந்துக்குக் கிடைக்கும்படி செய்தார். உலூயி ஆண்டாயின் தெ பொகைன்வில் (Louvis Antoine de Bougainville) பிரான்சுக்குக் கிடைக்க வேண்டும் என்று கி.பி. 1768-ஆம் ஆண்டு முயற்சி செய்தார். சேம்சு குக்கு என்பவர் கி.பி. 1769-ஆம் ஆண்டில் அதைக் கைப்பற்றிக் குழுத் தீவுகள் என்று பெயரிட்டார். இது முதலில் காற்றுத் திசைக்கு அயற்பட்ட கூட்டத்திற்கு வழங்கப்பட்டது. பின்னர்க் குழுத் தீவுகள் என்பது எல்லாத் தீவுக் கூட்டங்களுக்கும் பொதுவாக வழங்கப்பட்டது. நா.ஜெ.

**குழும உளவியல்**: தனியார் நடத்தைக்கும் சமுகக் குழுவிற்குமிடையே ஏற்படும் சிக்கல்கள் போராட்டங்கள் பற்றிய இயலே குழும உளவியல் (Community Psychology) ஆகும். சமூகக் குழு அளவில் பெரிதாகும்போது, தனியாள் வேற்றுமைகள் மதிக்கப்பெறுவதில்லை. குழு உறுப்பினர் என்ற முறையில் ஒருவன் வலிமை பெற்றாலும், குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, சில வேற்றுமைகளை மறந்துவிட வேண்டியுள்ளது. குழும உளவியல், இவ்வாறான வேற்றுமைகளைக் களைந்திட வேண்டிய செயல்முறைமைகளையும், மாற்று வழிகளையும் பற்றித் தெளிவாக்கும் ஓர் இயலாகும், ஒரு சமூகத்தில் உள்ள பொருள்கள், கல்வி பெறும் வாய்ப்புகள், உள வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அனைத்தையும் பெற அனைவருக்கும் உரிமை உண்டு என இது வலியுறுத்துகிறது. சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில், குறிப்பாக உளவியலாளர்கள் எங்கெங்குப் பங்கு பெற முடியுமோ, அங்கெல்லாம் மாற்றங்களைச் செய்திட முயலும் ஓர் இயலாகும். இது கல்வித் துறையில், மருத்துவத் துறையில், நீதித்துறையில், மாற்றங்களைச் செய்து, அவற்றின் வழியாகக் குழும உறுப்பினருக்குப் பலனைப் பெற்றுத் தருவதற்கான வழி முறைகளை எடுத்துக் கூறுகிறது. மனித வள மேம்பாடு, அரசியற் செயல்முறைகள், அறிவியல் முறைகள் ஆகியவற்றின் உயர்வுக்கு வழிவகுத்துச் சமூக உயர்வுக்குரியனவற்றை எடுத்துரைப்பது குழும உளவியலின் நோக்கமாகும். ஜி.இரா.

**துணைநூல்**:

**Rappaport**, J., Community Psychology, Values, Research and Action. Holt, Rinehart and Winston, New York, 1977.

**குழு மணம்**: பல ஆண்கள் ஒருத்தி அல்லதுபல பெண்களையோ பல பெண்கள் ஒருவன் அல்லது பல

ஆண்களையோ மணம் செய்துகொள்ளும் முறை குழு மணம்(Group Marriage) எனக் கூறப்படும். இவ் வகைத் திருமணங்கள் மிகச் சில சமூகத்தினரிடமே காணப்படுகின்றன. உலகெங்கிலுமுள்ள பல பழங் குடிகளின் பண்பாட்டினை வகைப்படுத்தி ஆராய்ந்த முர்தாக்கு (Murdock) குழுத் திருமணம் பிற சமூகத் தினரைக் காட்டிலும் பிரேசில் நாட்டின் கயின்காங் குச் (Kaingang) சமூகத்தினரிடமே பெரும்பான்மை யாகக் காணப்படுகிறது என்பார். இச்சமூகத்தினரின் நூற்றாண்டுக் காலக் குடிவழிப் பட்டியலைக் கண் டறிந்து ஆய்வு செய்ததில், 8 விழுக்காட்டினர் குழு மணத்தையும் மீதமுள்ளோருள் 14 விழுக்காட்டினர் பல கணவர் மணமுறையையும்(Polyandry),18 விழுக் காட்டினர் பல மனைவி மண முறையையும் (Polygyny), 60 விழுக்காட்டினர் ஒரு துணை மணமுறை யையும் (Monogamy) கொண்டுள்ளனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் நீல கிரித் தோடர்களிடையேயும் குழு மணம் இருந்தது அவர்களிடையே இருந்த பெண் குழந்தைக் கொலை முறையை ஆங்கிலேய அரசு தடுத்ததால் அவர் களிடம் பெண்களின் எண்ணிக்கை மிகுந்துள்ளது. இதனால் அவர்களின் மணமுறையும் மாறியுள்ளது.

மேற்குத்திபேத்தில் பல கணவர் மணமுறையைக் கொண்ட குடும்பங்களுள் நடக்கும் ஒரு சில திரு மணங்கள் குழுமண முறையாக உள்ளன. பல சகோ தரர்கள் ஒரு மனைவியை மணந்து வாழ்க்கை நடத்துவார்கள். அவர்களின் மனைவிக்குக் குழந்தை பிறவாமல் போயின் அவளை மலட்டுத் தன்மை யுடையவள் எனக் கருதி, அச்சகோதரர்கள் வேறொரு பெண்ணை மணந்து இரு மனைவிகளு டன் வாழ்வார்கள். குழுமண முறை மார்குவசான் (Marguasan), இலங்கையின் கண்டியர்கள்(Kandyans) முதலானோரிடமும் உள்ளது. குழுமணம் பண்டைய அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் வேறு முறையில் காணப்பட்டது. உறவினரல்லாச் சிலர் ஒருத்தி அல் லது பல பெண்களை மணந்து கொண்டு வாழ்ந்தனர். குழு மணம் சமுதாயப் படிமலர்ச்சியில் தொடக்க நிலை எனப் படிமலர்ச்சியியலார் மதிப்பிடுவர். இம் முறை பால்பொதுவுடைமைக் கருத்தையும் கொண் டது என சமுதாயவியலார் கூறுவர். சீ.ப.

**குழும மனநலம்**: பிறருடன் இணக்கமான உறவுகொண்டு, குழுமத்தின் நெறிகளுக்கு உட்பட் டுச் சமூக நலனுக்காக, ஏற்புடைய குறிக்கோள் களைக் கொண்டு வாழ்வது மன நலமாகும். ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது ஊரில் வாழும் மக்களுக்கு அல்லது குழும உறுப்பினர்களுக்கு மனநலம் குன் றாத வகையில், மனப் போராட்டங்களைக் களைய வும், பூசல்களைக் குறைக்கவும் வழி வகைகளைக் கையாள்வது குழும மனநலத்தின் நோக்கமாகும். இதற்கு அரசும், மனநலவியலாளர்களும் ஒருங் கிணைந்து செயல்படவேண்டும். குழுமம் என்பது பள்ளி மாணவர்களையோ, ஒரு குறிப்பிட்ட சமூகத் தினரையோ, முதியவர்களையோ, சிறைக் கைதி களையோ, திருமணமாகாத பெண்களையோ குறிப் பிடுவதாக இருக்கலாம். அவர்களின் நலவாழ்விற் காக, மனநல மேம்பாட்டிற்காக, ஆற்றும் பணிகள் குழும மனநலப் பணிகளாகும். குழுமமனநலத்திற் காக, மனவெழுச்சிப் போராட்டங்களை அகற்றுவ தற்கான நடவடிக்கைகளை எடுப்பதும், குறிக்கோள் களை அடைவதற்கான சாத்தியக் கூறுகளைச் செய்து தருவதும் இதில் அடங்கும். மனித மேம் பாட்டு வளர்ச்சிக்கான வழிமுறைகளைச் செய்து தருவது மறுவாழ்வு அளிப்பது, சமூகத்திற்கும் நாட் டிற்கும் பயனுள்ள குடிமகனை உருவாக்குவது முத லியன இதன் நோக்கமாக அமையும். ஜி.இரா.

**துணை நூல்:**

Kolb, L. C., Modern Clinical Psychiatry - Saunders Co., Philadelphia, 1977.

**குழு மனக் கோட்பாடு** கும்பல் நடத்தை என்ற சிக்கலான நிகழ்வினை விளக்குகிற ஓர் எளிய கோட்பாடாகும். மக்கள் ஓரிடத்தில் கூடிக் குழுவாக மாறும் பொழுது ஏற்படும் குழு மனநிலையைப் பற்றி இக் குழுமனக் கோட்பாடு (Group Mind Theory) விளக்குகிறது. பொதுவாக, ஒருவன் தனி மனித னாக இருப்பதை விட, ஒரு குழுவாக இருக்கும் பொழுது அவனது நடத்தைகளும், செயல்களும் மாறுபடுகின்றன. இக்கோட்பாட்டின்படி ஒரு குழுவி லுள்ள மனிதன் தன் தனித்தன்மையை (Individuality) இழந்து, குழுவின் ஒரு பிரிவாக மாறி, குழு உணர்வினை வளர்த்துக் கொள்கிறான். அக் குழு உணர்வானது, தனிமனித உணர்வினை நீக்கி குழு வினுடைய தூண்டுதலின்படி அவனைச் செயல்பட வைக்கிறது. தனி மனித மனமானது மாறி, அனைத்து உறுப்பினர்களுக்கும் ஏற்படுகின்ற பொது வான ஒரு மனவெழுச்சி (emotion)யுடன் அவன் செயலாற்றுகிறான்.

இக் கோட்பாட்டின்படி, குழு மனநிலையில் ஏற் படும் மனவெழுச்சிகள், வேண்டுகோள்கள் (Appeals), கொள்கைக் குரல்கள் (Slogans), கருத்தேற்றங்கள் (Suggestions) போன்ற கூறுகளை குழுவிலுள்ள

அனைவரும் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய செயலானது பகுத்தறிவுடையதாக இருக்காது; அதிக அளவு மனவெழுச்சியினால் ஏற்படுவதாக இருக்கும். இது, உடனடியாக ஏற்படக்கூடிய சில எண்ணங்களின் அடிப்படையில் எழுகின்ற ஒழுங்கற்ற மனநிலை யாகும். எனவே, அதிக அறிவுடையதாக இருப்ப தற்கு வாய்ப்பில்லை. செயலானது, மிக எளிதாகத் தூண்டப்பட்டு, ஒரு மயக்கநிலையில் நிகழ்வதாக அமையும். இச் சூழ்நிலையில், ஒருவனுக்கு அவன் தனி மனிதனாக இருக்கும் பொழுது அமையும் நடத்தை மாறுகிறது. அவன் பகுத்தறிவின்றி குழுவின் மனப் படி செயலாற்றுகிறான்.

**பிளாட்டோவின் கோட்பாடு**: பிளாட்டோ(Plato) என்ற கிரேக்க அறிஞர், குழு மனக் கோட்பாட்டைப் பற்றிக் கூறும் பொழுது - மக்கள் சமூகம் என்பது பெரிய அளவிலான ஒரு மனம்(A Mind 'Writ large') என்கிறார். மனித மனமானது மூன்று பிரிவுகளாக உள்ளதாகவும், அதற்கேற்ப தத்துவவாதிகளான ஆட்சியாளர்கள் (Philosopher – rulers), போர் வீரர்கள் (Warriors), பணியாட்கள் (Workers) என மூன்று வகுப்பினராகப் பிரித்துக் கூறுகிறார். இவர் பொதுவாக, மனித மனத்துடன் மக்கள் தொகுதி யினை ஒப்பிட்டுக் கூறுகிறார். ஆனால், குடியரசு (Democracy) என்ற நூலில் மட்டும் – சமூகமானது சர்வாதிகாரம் பொருந்திய ஒரு தலைவனுக்கு உட் பட்டுள்ளதாகக் கூறுகிறார்.

இது போலவே, 18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கேகல் (Hegal) என்ற புதிய சிந்தனையாளரும் அரசி னால் (State) வெளிக்காட்டப்படுகின்ற சமூகமானது வரலாற்றுச் செயற்பாங்கில் ஒரு உயிர்ப் பொருளாக அமைகிறது எனக் கூறுகிறார். அந்த உயிர்ப் பொருள் தனிமனிதனன்று. உலகிலுள்ள அனைத் துப் படைப்புகளின் தொகுப்பு. அதற்கென்று ஒரு மனம் அமைகிறது. அந்த நிலையில் அந்தத் தொகுப் பில் உறுப்பினனாக இடம் பெறுகின்ற மனிதனுக்கு அந்தத் தொகுப்பின் மனமே அமைகிறது என்று கேகல் கூறுகிறார். கிரீன் (J.H. Green), பிராட்லி (F.H. Bradley), போசன் குயிட்டு (B. Bosanquet) போன்ற ஆங்கில நாட்டுக் கொள்கைவாதிகளும், ராய்சு (J. Royce), எமர்சன் (R.W. Emerson) போன்ற செர்மன் நாட்டுக் கொள்கை வாதிகளும் இதே கருத்தினையே கொண்டிருக்கின்றனர்.

**இலே பானின் கோட்பாடு**: இலே பான் (Le Bon) என்ற அறிஞர் ஒரு குழுவில் அதன் அனைத்து உறுப் பினர்களுடைய உணர்வுகளும் எண்ணங்களும் ஒன் றாகவும், ஒரே கோணத்திலும் இருக்கும் எனத் தாம் எழுதிய கும்பல்கள் (Crowds) என்ற நூலில் கூறுகிறார். ஒரு குழுவில் அவர்களுடைய தன்னு ணர்வு ஆளுமை (Conscious Personality) அழிந்து கூட்டு மனம் உருவாகிறது எனக் கூறுகிறார். இவ் வாறு ஒரு குழுவிலுள்ள பல்வேறுபட்ட மக்கள் தனிப் பட்ட முறையில் எதையும் எண்ணுவதில்லை; குழு மனத்தின் மூலம் நினைக்கின்றனர், செயலாற்று கின்றனர் என்று இலே பான் கூறுகிறார் ஒரு குழுவில் மக்கள் கூடும் பொழுது, அவர்களது சுய அறிவானது கூட்டு அறிவின் ஒரு பகுதியாகிறது. தனிமனித அறிவினால் உருவாக்க முடியாதவற்றை, அக் கூட்டு அறிவானது தனது சொந்த வழியில் எண்ணுகிறது என்பது லே பானின் கருத்தாகும்.

தன்னுணர்வற்ற எண்ணங்கள் (Unconscious Motives) ஒரு குழுவில் மிகத் தீவிரமாகச் செயலாற்று வதாகவும், எனவே அவனது தன்னுணர்வுத் தூண்டுதல் மறைவதாகவும்இலேபான் கூறுகிறார். ஒருவன் தனிமைப்படுத்தப்படும் பொழுது, அவன் பண்படுத்தப்பட்ட மனிதனாகவும், ஒரு குழுவில் இருக்கும்பொழுது, இயல்பூக்கத்தினால் செயலாற்று கிற நாகரிகமற்ற மனிதனாகவும் இருக்கிறான் எனக் கூறுகிறார்.

**எசுபிநாசின் கோட்பாடு**: பிரெஞ்சுத் தத்துவ வாதியான எசுபிநாசு (Espinas), ஓர் உயிரியல் அறிஞருமாவார். இவர், உயிரியல் கருத்துகளின் அடிப்படையில் குழு மனத்தைப் பற்றிக் கூறுகிறார். ஒரு மனிதனிடத்தில் அவனது உயிர்ப்பொருளின் பல் வேறுபட்ட உயிர்மங்கள் (Cells) இணைந்து தன்னு ணர்வு நிலை உருவாவது போல, ஒரு சமூகத்தில் கூட்டு உணர்வு நிலையானது (Collective Conscious-ness) பல மக்களின் தன்னுணர்வுநிலை ஒருங்கி ணைந்து உருவாகிறது. இத்தகைய சமூகத் தன்னு ணர்வு நிலையே (Social consciousness) குழுமனம் என இவர் கூறுகிறார். இத் தன்னுணர்வு நிலை யானது அனைத்துக் குழுக்களிலும் உள்ளது; இது வெளியிலிருந்து தாக்கப்படும் பொழுது எதிர்த்துக் குரல் கொடுப்பதால் நிலைத்து நிற்கிறது என எசுபி நாசு கூறுகிறார்.

**திராட்டரின் கோட்பாடு**: மனிதனுடைய சமூக நடத்தையானது அவன் குழுவினனாக வாழும் இயல் பூக்கத்தின் அடிப்படையில் உருவாகிறது என திராட் டர் (Trotter) கூறுகிறார். அனைத்து மக்களுக்கும் கூடிவாழும் தன்மை (Gregariousness) இயல்பூக்க மாகவே அமைந்துள்ளது. மனிதனுடைய இக்கூடி வாழும் தன்மை அவனுடைய மன அமைப்பினைச் செயற்படுத்துகிறது. குழுவினுடைய உத்தரவுகளை

எந்தவித விவாதமும் இன்றி ஏற்று அவன் செயல் படுகிறான். குழுவிற்கு வெறுப்புண்டாக்குகிற எந்தச் செயலையும் செய்வதற்கு அவன் விரும்புவதில்லை. அதற்கேற்ப, அவனது சமூக நடத்தையானது மரபு வழி இயல்பூக்கத்தையும் உண்டாக்குகிறது எனக் கூறுகிறார்.

**தர்க்கைமின் கோட்பாடு**: பிரெஞ்சு அறிஞரான தர்க்கைம் (Durkheim) குழு நடத்தையினைக் கூட்டு உணர்வு நிலையின் (Collective Consciousness) மூலம் விளக்குகிறார். மக்கள் ஒரு குழுவாகக் கூடி அவர்களுக்குள் கருத்துக்களையும், எண்ணங்களையும் பரிமாறிக் கொள்ளும் பொழுது ஒரு ஒட்டு மொத்தமான கூட்டு உணர்வுநிலை உருவாக்கப்படுகிறது. இந்த உணர்வு நிலையின் மறு பெயர் தான் மனம் என தர்க்கைம் கூறுகிறார்.

ஓர் இரசாயனக் கலவையானது பலவேறுபட்ட கூறுகளின் கலவையாக இருப்பினும், அதனுடைய தன்மைகள் பல்வேறுபட்ட கூறுகளின் தன்மைகளிலிருந்து மாறுபட்டுள்ளன. அதுபோல, சமூக உணர்வு நிலையும் பல் வேறுபட்ட மக்களின் உணர்வு நிலைகளின் ஒரு தொகுப்பாக இருப்பினும், அதனுடைய தன்மைகள் - தனிமனிதர்களுடைய உணர்வுநிலைகளின் தன்மையிலிருந்து மாறுபட்டுள்ளது. மேலும், சமூக உணர்வு நிலையானது தனிமனித உணர்வு நிலையைக் காட்டிலும் உயர்வானது, பரந்தது என இவர் கூறுகிறார்.

**மெக்டுகலின் கோட்பாடு**: மெக்டுகல் (Mc Dougall) என்பவர் 'குழுமனம்' (The Group Mind) என்ற நூலில் குழு மனத்தைப் பற்றி ஒரு விளக்கமான கருத்தை வெளியிடுகிறார். இக் கருத்து குழுமனக் கோட்பாட்டில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இவர் எசுபிநாசு, தர்க்கைம் போன்ற அறிஞர்களின் கூட்டு உணர்வு நிலை பற்றிய கோட்பாட்டைக் குறை கூறுகிறார். அதற்குப் பதிலாக, குழுமனக் கோட்பாட்டை எடுத்துக் கூறுகிறார். இவர், அனைத்துக் குழுக்களும் அவற்றிற்கென்று தனியான மனம் ஒன்றினைக் கொண்டுள்ளன என்கிறார். அத்தகைய குழு மனம் குழுக்களிலுள்ள அனைத்துத் தனிப்பட்ட உறுப்பினர்களின் மனங்களின் ஒட்டுமொத்த கூட்டன்று. அதற்கு மேற்பட்டது. அது தனிப்பட்டவர்களின் மனத்தினில் செல்வாக்குச் செலுத்துகிற சக்தியினைக் கொண்டுள்ளது. எனவே, ஒருவன் ஒரு குழுவில் உறுப்பினனாக ஆகும் பொழுது, தனிப்பட்ட அவன் எண்ணம் மாறி, குழுவின் எண்ண ஓட்டம் அவனுடன் அமைகிறது என்கிறார். ஆயினும் குழு மனத்தின் நுண்ணறிவு (Intelligence) பொதுவாக மிகக் குறைந்திருக்கும். எனவே, சிந்தனை குறைந்து, மனவெழுச்சியுடையதாகவும், எளிதில் மயங்கக் கூடியதாகவும் குழு மனம் அமையும் என இவர் கூறுகிறார்.

இவ்வாறு குழுவின் நடத்தையினையும் செயலினையும் பற்றி குழு மனக் கோட்பாடு விளக்கினாலும், மெக்ஈவர் (MacIver) என்ற அறிஞர், குழு மனம் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என இக்கோட்பாட்டை மறுக்கிறார். ஒரு மனம் என்பது இவைகளுக்கு அப்பாற்பட்டு இருந்து குழு உறுப்பினர்களின் மனத்தினைக் கட்டுப்படுத்துகிறது. ஒரு குழுவின் மனம் எதுவாகவும் இருக்கலாம் என நினைக்க முடியாது; ஆனால் உறுப்பினர்களின் மனம் ஒரே வழியில் சிந்தித்து, ஒரே மாதிரியான செய்கைகளையே செய்கிறது. குழுவிற்கெனத் தனிமனம் ஒன்றும் இருக்க முடியாது. பலவேறு மனங்கள் குழுவில் ஒரே மாதிரியாகச் செயல்பட முடியுமே தவிர அனைவருடைய மனங்களும் ஒன்று சேர்ந்து குழு மனம் என்ற ஒன்று உருவாக முடியாது எனக் கூறுகிறார். பூ.த.

**துணை நூல்கள்:**

**Gisbert Pascual**, Fundamentals of Sociology, Orient Longmans, Calcutta, 1965.

**Goodmam, Norman and Mary, Gary T.**, Society Today, Random House, New York, 1978.

**Lindgern, Henry Clay.**, Introduction to Psychology, Wiley Eastern Ltd., New Delhi, 1973.

*குழு மனப்பான்மை*: இயற்கையிலேயே மனிதன் பிறரோடு கூடி வாழும் இயல்புடையவனாக இருக்கின்றான். ஆதிகாலத்தில் அவன் காட்டு மிராண்டியாக வாழ்ந்த நிலையிலும், பிறரோடு கூடியே வாழ்ந்திருக்கின்றான். ஆதிகாலத்து மக்கள் வாழ்ந்திருந்த குகைகளில் காணப்படுகின்ற தடயங்களும், சுவரோவியங்களும், பிறவும் மனிதன் பிறரோடு கூடியே வாழ்ந்திருந்தான் என்பதைக் காட்டுகின்றன. பிறரோடு கூடி வாழும் இயல்பு (Sociality) மனிதனுக்குள் அடங்கியிருக்கிறது. மற்றவர்களோடு அவன் தொடர்பு கொள்ளும் பொழுது, அது வெளிப்படுகிறது. அந்த இயல்பு இருப்பதனாலேயே அவன் பிறரோடு உறவு கொண்டு சமூகமாகவோ குழுவாகவோ கூடி வாழ்கிறான். இவ்வியல்பு, குழு மனப்பான்மை (Gregariousness) எனப்படுகிறது. மனிதன் தனித்து வாழ்பவன் அல்ல. தனிமையை நாடிச் சென்றாலும், அவன் இயல்பாகிய பிறரோடு கூடி வாழும்

இயல்பை விட்டுவிட முடியாது. இதன் காரணமாகவே, அவன் எப்பொழுதும், ஏதாவதொரு குழுவில் சேர்ந்து வாழ்கிறான். தன்னுள் இருக்கும் சமூகவியல்பு காரணமாக மட்டுமன்றி, தேவையின் காரணமாகவும் மனிதன் சமூகத்தில் அல்லது ஒரு குழுவில் சேர்ந்து வாழ்கிறான். மேலும், ஒரு குழுவில் சமூகஉறவுகள் வைத்துக் கொண்டு வாழ வேண்டிய தேவை மனிதனுக்கு இருக்கின்றது.

செயல்களைத் தொடங்குவதற்கும், அதனை முடிப்பதற்குமான ஒரு உட்காரணி அல்லது காரணம் செயல் நோக்கம் (Motive) எனப்படுகின்றது. இது தான், மனித நடத்தை, அனுபவம் போன்றவைகளுக்கு அடிப்படைக் காரணமாகும் அனைத்து முதன்மையான மனித நடத்தைகளும் இதனால் இயக்கப்படுகின்றன. எனவே, இது செயல், சிந்தனை, உணர்வுநிலை, உணர்விற்கு முந்தையநிலை, உணர்வற்ற நிலை போன்ற அனைத்தையும் தனது உறுப்புகளாகக் கொண்டுள்ளது.

செயல்நோக்கம் தான், நமது செயல்களுக்கும் நடத்தைகளுக்கும் வழிகாட்டியாக உள்ளது. ஆனால் இது மாறுகின்ற இயற்கை நிலையையும் பழைய அனுபவங்களையும் பொறுத்திருக்கிறது. இச்செயல் நோக்கத்தை 1. உளப் பண்புக் கூறு (Psychogenic), 2. சமூகப் பண்புக்கூறு (Sociogenic) என இருபிரிவுகளாக உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அதிகமான செயல்நோக்கங்கள், நேரிடையாகவோ மறைமுகமாகவோ உண்டு பண்ணுகின்றவரின் இயற்கை மற்றும் இயற்பியல்நிலைகளுடன் தொடர்பாக உள்ளன. இச் செயல் நோக்கங்கள், முதல்நிலை மற்றும் உளப் பண்புக் கூறு செயல் நோக்கங்கள் எனப்படுகின்றன. ஆனால், இது தவறான கருத்தாகும். ஏனென்றால் அனைத்துச் செயல்நோக்கங்களும் உளப்பண்பின் அடிப்படையில் உருவாவதில்லை. சில செயல்நோக்கங்கள் சமூக நிலைகள் மற்றும் சமூக விளைவுகளினால் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக, குழுமனப்பான்மை. அந்தச் செயல் நோக்கம் வெளிப்படையாகத் தெரியக்கூடிய சமூகப் பண்புக்கூறு செயல் நோக்கமாகும். இதை, நமது மனம், உணர்ச்சி, எண்ணம், இவைகளோடு தொடர்பில்லாத செயல்நோக்கம் என உட்ஓர்த்து (Wood Worth) என்ற உளவியல் அறிஞர் கூறுகின்றார். மேலும், சமூக நடத்தையின் அடிப்படைக் கொள்கைகளில், தனிக்கவனமுள்ள இயல்பூக்கமான குழுமனப்பான்மை அல்லது கூடி வாழும் இயல்பு பற்றிய கோட்பாட்டை மெக்டுகல் (W.Mc.Dougall) என்ற அறிஞர் முதன்முதலாக எடுத்துக் கூறினார்.

குழு மனப்பான்மையானது, அடிப்படையிலேயே பிற மனிதர்களின் தூண்டும் தன்மைக்கான ஒரு பிரதிபலிப்பு ஆகும். அன்பு, வெறுப்பு, குறிக்கோள், பயம், பிறரைப் பற்றிய எண்ணம் போன்றவைகளை உள்ளடக்கும் பிரிவுகளை, பலவேறு வழிகளில் குறிக்கின்றது. 'தான்' (Self) என்ற கருத்தைச் சுற்றி நாம் கட்டுகின்ற நினைவாற்றல் மற்றும் ஆளுமையின் அமைப்பு ஆகியவைகளில் குழு மனப்பான்மை உட்படுகின்றது. பிறரைப் போன்று திரும்பவும் செய்வதற்கு மனிதன் கற்கின்றான். மிகச்சிறிய குழந்தையாய் இருக்கும் பொழுதே தாயின் அன்பு, வெப்பத்தன்மை, அழுத்தம், தொடுஉணர்ச்சி, சிரிப்பு போன்றவைகளுக்குத் தக்கவாறு இயங்குகின்றான். இவ்வாறு அன்பு, வெறுப்பு, பயம் மற்றும் குறிப்பிட்ட மனிதர்களிடம் குறிப்பிட்ட நிலைகளில் விருப்பம் கொள்வது போன்றவைகளுக்குத் தக்கவாறு இயங்குவதற்கு மனிதன் கற்றுக்கொள்கிறான்.

அனைத்து விலங்குகளும், மக்களைப் போலப் பலதரப்பட்ட பிரதிபலிப்புகளைக் கற்க முடியாது. மனித இனமானது, பூனைகள், நாய்கள், குதிரைகள் மற்றும் பிற விலங்குகளுடன் பாரம்பரியத் தன்மையின் ஆற்றல்களில் வேறுபட்டாலும், மனிதர்களிடையே குழுமனப்பபான்மைக்கான பாரம்பரியத் தன்மையில் மாற்றம் இல்லை என்பது நமக்குத் தெரிந்ததாகும். குழுமனப்பான்மையில், மனித சமூமானது விலங்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சமூக ஊடாட்டத்திற்கான தகுதிகள், அதிகத் திறமைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. பாரம்பரியக் குணமானது குழுமனப்பான்மையின் ஒரு காரணியாகும் என, புலால் உண்ணும் விலங்கினங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தெளிவாகிறது. எடுத்துக்காட்டாக, பூனைகளையும், கலைமான்களையும் ஒப்பிடும் பொழுது, கலைமான்கள் பொதுவாக ஆயிரக்கணக்கில் ஒன்றாகக் கூடி இருக்கின்றன; ஆனால், பூனைகள் ஒரு சிறிய குடும்பக் குழுக்களாக வாழ்கின்றன. பூனைகள் இறைச்சி உண்பதால் அவற்றின் குழுக்களின் அளவு சிறியதாக இருப்பது விலக்க முடியாததாகிறது. ஆனால், தழை உணவு உட்கொள்வது, கலைமான்களைப் பெரிய கூட்டமாக வாழச் செய்கிறது.

குழு மனப்பான்மை மனநிலையானது, ஒரு குழுவினனாக அதன் உறுப்பினர்களுடன் வாழவேண்டும் என்ற ஆசையை ஒரு மனிதனுக்குள் உருவாக்குகிறது. ஆடுகள், மாடுகள் போன்ற விலங்குகளிடையே உள்ள இந்தஒருங்கிணைந்த மற்றும் ஒன்றாகக் கூடுகின்ற நடத்தையானது குழு மனப்பான்மை மனநிலையின் அமைப்பாகும். ஆனால், அனைத்து விலங்குகளுக்கும் இந்த மனநிலை இருக்காது. அது

போலவே, இந்த குழு மனப்பான்மையினை அனைத்து மனிதர்களிடமும் காண முடியாது. சிலர் குழுவாக வாழ்வதற்கும், சிலர் ஒரு சில காரணங்களுக்காக மட்டும் குழுவாக உருவாகவும், வேறு சிலர் குழுவாக அமைய விரும்பாமலும் உள்ளனர்.

குழு மனப்பான்மையானது கற்பிக்கப்படுகின்றது; மற்றும் சமூகம் அல்லது குழு நலன்களுக்காக வளர்க்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் குழுவாக இருந்தால், அவனுக்கு உணவு, தண்ணீர், இடம், பாதுகாப்பு போன்றவை எளிதாகக் கிடைக்கும். மேலும், சமூகத்தில் அவனுக்குப் பல நன்மைகள் கிடைக்கவும், பிற மனநிலைகளைத் திருப்திப்படுத்தவும், குழுவினராக இருந்தால் முடியும். இவ்வாறான ஒரு குழுமனப்பான்மைச் செயல் நோக்கமானது, ஓர் உள்ளார்ந்த, மற்றும் மனத்தளவிலான செயல் நோக்கமன்று. இது கற்பிக்கப்பட்டு அமைவது; பிறரால் உருவாக்கப்படுவது. பூ.த.

**குழு வாழ்க்கை:** மனிதன் கூடி வாழும் இயல்பையுடையவன். சமூகத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் பல வகைகளில் இணைந்தே வாழுகின்றனர். பிறருடன் கூடி வாழும் இயல்பு அவனுக்குள்ளேயே அடங்கியிருக்கிறது. அவன் இயல்பினால் மட்டுமின்றி தேவையின் காரணமாகவும் பிறரோடு சேர்ந்தே ஒரு குழுவாகவோ சமூகமாகவோ வாழ்கிறான். ஒருவன், தனிமனிதனாக இருந்து தனது எண்ணற்ற தேவைகளை நிறைவேற்ற இயலாது பிறருடைய ஒத்துழைப்பு, கூட்டுறவு, உதவி, துணை ஆகியவையின்றி அவன் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றுவது மிகக் கடினமாகும். எனவே, இத்தகைய கட்டாயத்தின் காரணமாகக் குழுவாக வாழ வேண்டிய நிலை மனிதனுக்கு நேரிடுகிறது. இவ்வாறு ஒரு குழுவிலோ அல்லது ஒரு சமூகத்திலோ தன்னை இணைத்து வாழ்கின்ற வாழ்க்கை, குழு வாழ்க்கை (Group Life) எனப்படுகிறது.

பொதுவாக, மனிதனுக்கு உணவு, உடை உறைவிடம் போன்றவை தேவைப்படுகின்றன, பாதுகாப்பு தேவைப்படுகிறது. சுகம், வாழ்க்கை வாய்ப்புகள், வசதிகள் போன்றவை தேவைப்படுகின்றன. இவற்றை அவன் தனிமனிதனாக இருந்து பெற முடியாது; குழு வாழ்க்கையிலே தான் பெற இயலும். குழந்தையாக இருக்கும் பொழுது குடும்பம் என்ற குழுவிலே வாழ்க்கையைத் தொடங்குகிறான். பின் சமூகம் என்னும் குழுவுடன் சார்ந்து, தன் வாழ்க்கையை நடத்துகிறான். ஒருவனது வாழ்க்கை முழுவதும் சமூகத்திலுள்ள ஏதாவதொரு குழுவினைச் சார்ந்து வாழ்கிறான். தேவைகளே, ஒருமனிதனைக் குழுவினனாக, ஒரு சமூகமாக வாழத் தூண்டுகின்றன.

ஒரு மனிதனின் உடல் சார்ந்த வளர்ச்சிக்காக மட்டுமன்றி, ஆளுமை (Personality) வளர்ச்சிக்காகவும் குழு வாழ்க்கை அவனுக்குத் தேவைப்படுகிறது. குழுவினனாக வாழும் வாய்ப்பு ஒருவனுக்கு அமையாமல் போனால், அவனை மனிதனாகக் காட்டக் கூடிய பண்புகளும் ஆற்றல்களும் வெளிப்படாது. இந்த உண்மையை, காட்டு நிலையில் இருந்தவர்கள் (Ferals), ஓநாய்க் குழந்தைகள், தனிமர்கள் (Isolates) ஆகியோருடைய வரலாறுகள் உறுதிப்படுத்துகின்றன. எனவே மனித குணங்களும், இயல்புகளும், ஒருவனிடம் ஏற்பட வேண்டுமெனில், அவன் சமூகத்தில் சமூக உறவுகள் நிலவும் ஏதாவதொரு குழுவில் வாழ்ந்தாக வேண்டும். ஒருவன், தான் யார் என்பதை உணரவும், மன வளர்ச்சி பெறவும் சமூகத் தொடர்பு மிக அவசியமாகும். உணர்ச்சிகளை அடக்கிப் பிறருடன் ஒத்துப் போகும் குணம், சகிப்புத் தன்மை, பொறுப்புணர்ச்சி ஆகியவை ஏற்பட்டு உணர்ச்சிகள் பக்குவமடைகின்றன.

குழுக்கள், சமூக குழுக்களைப் போன்று உடனடியாகவும், நேராகவும், நன்மை செய்கின்றன. பாதுகாப்புக்கான வேலையைக் கவனிப்பதற்கென ஏற்படுத்தப்பட்ட குழு போன்று மறைமுகமாகவும், நெருங்கிய தொடர்பில்லாமலும் இருக்கின்றன. எனவே குழுக்கள், தனது உறுப்பினர்களின் மீதான விளைவுகளுக்கான முக்கியமான காரணிகளாக இருக்கின்றன. ஒரு தனிமனிதன், தான் சேர்ந்துள்ள மக்களைப் போலவே, உருவாகின்றான். எனவே தான் அனைத்துத் தாய்மார்களும், மாலை நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும்கூடத் தங்கள் குழந்தைகள் தெருவிலே கெட்டுத் திரிகின்றவர்களுடன் சேரக் கூடாது என்பதில் கண்ணும்கருத்துமாய் இருக்கின்றனர்; முடிந்தால் தனியாகப் படிப்பதற்கும் (Tuition) அனுப்பி விடுகின்றனர். குழுவே, சிறுகுழந்தைகளின் ஆளுமையை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. குழு இடைவினை (Group-Interaction) அமைப்பாலும், தன்னைப் பிறருடன் அடையாளம் கண்டு அவர்களைப் பார்த்துக் கற்று நடப்பதாலும் அவனது நடத்தையானது நன்றாக அமைவதற்கும், கெட்டுப் போவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

ஒத்துழைத்தல், தகராறு செய்தல், அன்பு கொள்ளுதல், துணை புரிதல் மற்றும் பிறரைப் போன்று நடித்தல் போன்ற குழுச் செயற்பாங்குகள் ஆளுமை வளர்ச்சி அல்லது மாற்றத்திற்கான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவை அனைத்தையும் விலங்குகளி

டமும் காணலாம்; ஆனால், மனிதர்களிடையே பண்பாடு ஏற்படுத்துகின்ற வழிகளில் அந்த நடவடிக்கைகள் உருவாகின்றன. எனவே, மனிதர்கள் விலங்குகளைப் போலக் கடிப்பதோ உதைப்பதோ இழுப்பதோ, உராய்வதோ கிடையாது. சமூகம் அல்லது குழுப் பண்பாடு கற்றுத்தருகின்ற பாடங்களைப் பொறுத்து நடக்கின்றனர்.

**குழு வாழ்க்கைக்கான அடிப்படைக் காரணிகள்**: குழு என்பது ஒருவருக்கொருவர் செய்தித் தொடர்பு கொள்ளும் மக்களைக் குறிக்கும் என சான் கூபர் (John Cuber) என்ற அறிஞர் கூறுகிறார். ஒரு குழுவிற்கு அடிப்படை செய்தித் தொடர்பே ஆகும். ஒரு குழுவிற்கு என்று குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட நெறிகளும், விதிகளும் இருக்கும். இவற்றை அனைவரும் ஏற்றுக் கொண்டு அவைகளுக்கேற்ப முறையோடு நடந்து கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்களுக்குப் பொதுவான பற்றுகளும் நடவடிக்கைகளும் இருக்கும்.

இயற்கைச் சூழ்நிலைகளைக் கட்டுபடுத்த மனிதன் கற்றுக் கொள்கிறான். வீடுகளில் செயற்கையான வெப்பநிலையினை ஏற்படுத்துவது போன்ற சில குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகளைச் செய்கிறான். இயற்கைச் சூழல்களில்-வனவளம் பெருக்குதல், வனவளத்தை அழித்தல், சதுப்புநிலமாக்கல், புதிய கால்வாய்களில் ஆறுகளைத் திருப்புதல் போன்ற மாற்றங்கள் செய்யப்படுகின்றன. மனிதனால், இயற்கை உருவாக்குகின்ற சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தாலும், அதன் விளைவுகளையாவது கட்டுப்படுத்த முயல்கிறான்; அதில் சில வெற்றிகளையும் கண்டிருக்கிறான். தொழில்நுட்பத்திலும், அறிவியலிலும் எவ்வளவோ வளர்ச்சிகள் ஏற்பட்டிருப்பினும் மனிதன் நிலவியல் தொடர்பான சில சிக்கல்களைத் தான் உடைத்தெறிய முடிந்துள்ளது. எனவே குழு வாழ்க்கையிலே சூழ்நிலை மிக முக்கியக் காரணியாகிறது.

மக்களுக்கான உயிரியல் தேர்வும் (Biological Selection) மாற்றமும் (Mutations) பல நூற்றாண்டுகளாக இருக்கலாம். ஆனால் குறிப்பிடும் படியான உயிரியல் மாற்றங்கள் மனிதனுடைய பிறவிக் குணங்களில் ஏற்படவில்லை. பிறவிக் குணம்என்பது ஒரு பெரிய நிலைப்படுத்துகிற சக்தியாகும். காலப்போக்கில் பிற அனுபவங்களால் அதில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பாரம்பரியக் குணமானது மனிதனுக்குள்ளேயே அடங்கியிருக்கிறது.

சமூகத்தில் மிக விரைவாக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதால் மனிதன் மேம்பட்ட இனத்தின் கீழ்வந்து கொண்டிருக்கின்றான். அந்த மாற்றங்கள் மனிதனுக்கு, உயிரியல் தன்மையினால் ஏற்படுபவை அல்ல; தொழில் நுட்பம், சமூகம் ஆகியவைகளின் கண்டுபிடிப்புகளால் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மேலும், இப்புதிய காலத்தில், மேலான இனங்கள் பல இயற்கையாக உருவாவதால் பல வகைகளிலும் அடிக்கடி அம்மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால், இது போன்ற கண்டுபிடிப்புகளைத் தடுக்க இயலாதுஎன ரேமண்ட் போசுடிக்கு (Raymond Fosdick) என்ற அறிஞர் கூறுகிறார். குடும்ப வாழ்க்கை, வாணிபம், அரசாங்கம்: சமயம் போன்றவைகளில் தாக்கங்களை ஏற்படுத்தி, நகரங்களை உருவாக்குகின்ற நீராவி இயந்திரத்தின் கண்டுபிடிப்பால் ஏற்படும் விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியாது. மேற்கத்திய பண்பாட்டின் இறக்குமதியைத் தடுக்க முடியவில்லை. எனவே குழுவிலேயும் பண்பாட்டின் தாக்கம் ஏற்படுகிறது.

குழு வாழ்க்கையின் அடிப்படைக் காரணிகளான மேற்கூறிய நிலம் சார்ந்த சூழ்நிலைகள் பிறவிக் குணம், பண்பாடு, குழுக்கள் போன்றவைகளால் ஏற்படும் சிக்கல்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப மனிதன் வாழ வேண்டியுள்ளது. அதற்கேற்ப, அவனது ஆளுமையும் அமைகின்றது. அவ்வாறு இல்லையெனின், அவன் சார்ந்துள்ள குழுவினால் விலக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்டவனாகின்றான். பூ.த.

**துணை நூல்கள்**:

**Horton, Paul B., and Chester L. Hunt.**, Sociology Mc Graw-Hill International Book Company, Japan, 1980.

**Ogburn, William F. and Meyer F. Nimkoff.**, A Hand Book of Sociology, Eurasia Publishing House, Pvt. Ltd, New Delhi, 1979.

**குள்ளர்கள்**: இக்கால மானிடவியலில் பயன்படுத்தப்படும் குள்ளர்கள் (Pygmies) என்னும் சொல் சராசரியாக 150 செ.மீ. உயரத்திற்குக் குறைவான ஆண்களைக் கொண்ட இனக் குழுவினரைக் குறிக்கும்.

குள்ளர்கள் இன்று உலகின் பல பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களுள் சில குழுவினர் 150 செ.மீ. உயரத்தைக் காட்டிலும் சிறிது உயரமானவர்களாக உள்ளனர். இவர்கள் ‘சற்று உயரமான குள்ளர்கள்’ (Pygmoids) எனக் கூறப்படுவர். மானிடவியலார் பொதுவாகக் குள்ளர்களை ஆப்பிரிக்கக் குள்ளர்கள்



இம்புத்திக் குள்ளர்கள்



காங்கோ இளைஞன்

என்றும், ஆசியக் குள்ளர்கள் என்றும் இருவகைப் படுத்துவர். முன்னவர்களை நீக்ரில்லோவினர் (Negrillos) என்றும், பின்னவர்களை நீக்ரிட்டோவினர் (Negritos) என்றும், இனவியல் வழக்கினர் குறிப்பிடுவர்.

ஆப்பிரிக்கக் குள்ளர்கள் பெரும்பான்மையாக வெப்ப மண்டல மழைக் காடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் ஒரு காலத்தில் நடு ஆசியா முழுவதிலும் வாழ்ந்திருந்தனர் எனச் சில அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர். இன்று வாழும் குள்ளர்கள் காமரூன் (Cameroon), காங்கோ (Congo), காபன் (Gabon), உருவாண்டா (Rwanda), செயர் (Zaire), புருண்டி (Burundi) ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றனர். கலகாரிப் பாலை நிலத்திலுள்ள புசுமன் (Bushmen) பழங்குடிகளும் குள்ளர்களாவர். செயர் நாட்டின் இத்தூரிக் காடுகளில் (Ituri Forest) வாழும் மக்களினத்தவர்களே ஆப்பிரிக்கக் குள்ளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை இம்புத்திக் குள்ளர்கள் (Mbuti Pygmies) என்று பொதுவாகக் கூறுவர். இவர்கள் பம்புத்திக் குள்ளர்கள் (Bambuti Pygmies) என்றும் சிலரால் கூறப்படுவர். இவர்களின் எண்ணிக்கை 150,000க்கும் மேலானதாகும்.

ஆசியக் குள்ளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அந்தமான் பழங்குடிகளாவர். இங்கு வாழும் பழங்குடிகளுள் ஓங்கி (Onge) ஆண்கள் சராசரியாக 148 செ.மீ. உயரத்தையும் பெண்கள் 139 செ.மீ. உயரத்தையும் உடையவர்கள். காண்க: ஓங்கி.

பெரும்பாலான குள்ளர்கள் 4 அடி முதல் 4 அடி 8 அங்குலம் வரை (122 முதல் 142 செ.மீ.வரை) உயரமுடையவர்களாக உள்ளனர். செம்பழுப்பு நிறத்தையும், மிகவும் அடர்ந்து சுருண்ட மயிரையும், அகன்று உருண்ட தலையையும், தட்டையான முகத்தையும் கொண்டு இவர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் கால்கள் குட்டையானவை; கைகள் நீண்டவை, வயிறு முன்புறமாக நீண்டது.

குள்ளர்களின் மேற்கண்ட உடற்பண்புகளுக்கான காரணத்தை உறுதியாகக் கூறமுடியவில்லை. தாங்கள் வாழும் இடத்திற்கேற்பத் தகவமைந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அங்கேயே வாழ்ந்து வருவதே, இவர்களின் குட்டையான உயரத்திற்குக் காரணமெனச் சில வல்லுநர்கள் கூறுவர். குட்டையான உடலும் உடலின் நிறமும் காடுகளில் இவர்களை உருமறைத்துக் காட்டுவதோடு, வேகமாகவும் அமைதி



ஒங்கிப் பெண்

யாகவும் செல்ல வசதியாக உள்ளன. இவர்களின் வேட்டைத் தொழிலுக்கு இத்தகவமைப்பு உதவு கிறது. இவர்களைச் சில உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologists) ஆப்பிரிக்கப் புவிசார் இனம் (Geographical Race)என்றும், சிலர் தனி இன மென்றும் வகைப்படுத்துவர்.

இம்புத்திக் குள்ளர்கள் வேட்டைத் தொழிலை யும் உணவு சேகரித்தலையும் முதன்மைத் தொழில் களாகக் கொண்டுள்ளனர். ஆண்கள் மான்வகைகள், பறவைகள், காட்டெருமைகள், யானைகள், குரங்கு கள் முதலான விலங்குகளை வேட்டையாடுகின்றனர். பொதுவாக விலங்குகளைப் பெரிய வலை கொண்டு மடக்கி, பின்னர் அம்பு கொண்டு கொல்கின்றனர். சில வேட்டையாளர்கள் நச்சு தோய்ந்த அம்புகளைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடுகின்றனர். எபிக் (Efe) குள்ளர்கள் அம்பு, வில் ஆகியவற்றைக் கொண்டே வேட்டையாடுகின்றனர். பெண்களின் தொழில் காட்டுப் பொருள்களைச் சேகரித்தலாகும். பொதுவாகப் பழங்கள், கொட்டைகள், கிழங்குகள், காய்கள், காளான்கள் முதலியவற்றைச் சேகரித்து உணவுக்குப் பயன்படுத்துகின்றனர்.

பெரும்பாலான இம்புத்திக் குள்ளர்கள் 100க்கும் குறைவான எண்ணிக்கையுடைய சிறு குழுவாக(Band) வாழ்கின்றனர். தந்தைவழிச் சமூக அமைப்பைக் கொண்ட இக் குழுவில் 10 முதல் 25 குடும்பங்கள் உள்ளன. காட்டில் ஒவ்வொரு சிறு குழுவிற்குமென வரையறுக்கப்பட்ட வாழும் பரப்பு உண்டு. இப் பரப்புகளிலேயே வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் இவர்கள் மேற்கொள்கின்றனர்.

பெரும்பாலான குள்ளர்களிடையே தலைவ னைக் கொண்ட முறையான அரசியலமைப்பு இல்லை. முதியவர்கள் அடங்கிய ஆட்சிக் குழுவும் இவர்களிடம் இல்லை. அன்றாடச் சிக்கல்களையும் பொது நடைமுறைகளையும் அனைவரும் பேசி முடி வெடுக்கின்றனர்.

இம்புத்திக் குள்ளர்களின் ஒவ்வொரு தந்தை வழிக் குழுவினரும் தம்மை இரத்த உறவுடையவர் களெ‌ன நம்புவதால், இவர்களின் குழு புறமணக் குழு (Exogamous Group) ஆகிறது. இதனால், ஒரு குழு வினர் வேற்றுக் குழுவினரிடமிருந்து மணத்துணை யைப் பெறுகின்றனர். பொதுவாகத் தமக்கைப் பரி மாற்ற (Sister Exchange) மணமுறையை இவர்கள் கொண்டுள்ளனர். சில குள்ளர்கள் பல மனைவி மண முறையைக் கொண்டுள்ளனர்.

வாழ்க்கையின் அனைத்துச் செயல்களையும் வன தேவதை இயக்குகிறது என நம்புவதால் இவர்கள் இத்தேவதையை முதன்மையான சடங்குகளில் வழி படுகின்றனர். குள்ளர்கள் பருவமடையும் சடங்கினை ஆண், பெண் இருபாலாருக்கும் நடத்துகின்றனர். இவர்கள் இச்சடங்கின்போது பல பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர்.

குள்ளர்களின் வாழ்க்கை நிலை இக்காலத்தில் சற்று மாறி வருகிறது. இவர்கள் தம் அண்டைய பகுதியினரோடு தடையின்றிப் பழகுகின்றனர்; தம் அண்டைய பழங்குடியான பண்டு (Bantu) இன மக்க ளிடம் பொருள் பரிமாற்றம் செய்து கொள்கின்ற னர். செயர், உருவாண்டா, புருண்டி ஆகிய பகுதி களில் வாழும் துவாப் (Twa) பழங்குடிகளோடும் துட்சி (Tutsi), உட்டு (Hutu) முதலான பழங்குடி களோடும் தொடர்பு கொண்டு வருவதால், குள்ளர்

களின் வாழ்க்கை முறையில் பெரிய மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இதற்குக் காரணமாக உள்ளது குள்ளர்களின் மொழியேயாகும். இவர்களுக்கென்று தனிமொழி இல்லை. தம் அண்டைய பகுதிகளிலுள்ள குள்ளர்கள் அல்லாதாரின் மொழியையே இவர்களும் பேசுகின்றனர். சீ.ப.

**குளம்பனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். குளம்பன் என்பது இப்புலவரின் பெயராகும். குளம்பு என்னும் ஊரைச் சார்ந்தவர் என்பதால் குளம்பனார் எனப் பெயர் பெற்றார் என்பர். அங்ஙனமாயின் இப்பெயர் ஊர் பற்றி வந்த பெயராகும். குளம்பன் என்பது குழம்பன் என்றும் வழங்கும் என்பர். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் (நற். 288) மட்டுமே காணப்படுகிறது. தோழி கூறுவதாக அமைந்த இப்பாடல், தலைவன் சிறைப்புறமாக இருக்க, தோழி தலைமகளுக்கு உரைப்பது போலக் கூறி விரைந்து தலைவியை மணமுடிக்குமாறு தலைவனைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. இப்பாடல் தலைவனின் பிரிவால் தலைவியின் உடல் மெலிந்த நிலையை அறியாத தாய் அம்மாற்றத்திற்கு யாது காரணம் என்று குறி கேட்கும் நிகழ்ச்சியைத் தோழி விளக்குவதாக அமைந்துள்ளது. ச.செ.

**குளம்பாதாயனார்**: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். தாயனார் என்பது இவர்தம் இயற்பெயர். குளம்பா என்னும் அடைமொழியின் விளக்கம் புலப்படவில்லை. குளம்பாதயானார் என்றும் பாடவேறுபாடு காணப்படுகிறது. இவர் பெயரைக் குளம்பந்தாயனார் எனக் கொண்டு, குளம்பன் மகன் தாயனார் என்பது குளம்பந்தாயனார் என வந்தது என்றும், குளம்பன் என்னும் இயற்பெயர் மக்கள் முறையில் வரு மொழியாகத் தாயனார் என்னும் பெயர் வரவே குளம்பனில் அன் சாரியை கெட்டு அம்மென்னும் சாரியை பெற்றுக் குளம்பந்தாயனார் என வந்தது என்றும் தொல்காப்பிய வழிகாட்டி ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை விளக்குவர் (புறம். 253 முன்னுரை). இதற்குப் பொருத்தமாகக் குளம்பனார் என்ற மற்றொரு புலவர் பெயரையும் காட்டுவர்.

இப்புலவர் பாடியதாகப் புறநானூற்றின் 253–ஆம் பாடல் ஒன்றே உள்ளது. இப்பாடல் முதுபாலை என்னும் துறையைச் சார்ந்தது. சுரத்திடையே கணவனையிழந்த அரிவையின் புலம்பலைக் கூறுவது இத்துறையின் இலக்கணமாகும். ‘என திறத்து அவலங் கொள்ளற்க; நீ மாய்ந்தபின் வளைகழித்த என் கையைத் தலைமேலே ஏற்றிக்கொண்டு நின் சுற்றத்திடத்தே செலுத்தச் செல்வேனோ, இன்னும் இறந்துபடினல்லது? நின் உரையைக் கூறுவாயாக’ என்று மாய்ந்த கணவனை நோக்கி மனைவி மொழிவதாக இப்பாடல் உள்ளது. வளைகழித்த வறிய கைக்குப் பட்டை ஒழித்த பசிய மூங்கிலை இப்புலவர் உவமை கூறுவது நயமிக்கது. இரா.சா.

**குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்**: சோழமன்னர்களைச் சுட்டும் பெயர்களைத் ‘தொகுத்துக் கூறும் நிகண்டுகள் பலவும் ‘கிள்ளி’ வளவன்’ ஆகிய இரு பெயர்களையும் தவறாது, குறிப்பிடுகின்றன. இவ்விரு பெயர்களையும் சோழமன்னர்களைக் குறிக்கும் பட்டப் பெயர்களாகக் கருதுகின்றனர். இப்பெயர்கள் தனித்த நிலையில் சோழமன்னரைக் குறிக்கும் பொதுப் பெயர்களாகவும் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிள்ளி என்னும் பெயர், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருங்கிள்ளி என்று முன்னடை பெற்றுத் தனி ஒரு அரசனைக் குறிக்கவும்வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே திருமாவளவன் கரிகால் வளவன் என்று முன்னடை பெற்று, வளவன் என்ற பெயரும் தனி ஒரு மன்னனைக் குறிக்கும் பெயராக வழங்கப்பட்டுள்ளது. ‘கிள்ளி, வளவன்’ ஆகிய இரு பெயரும் ஒட்டி ஒன்றாய் நின்று ஒரு சோழ மன்னனுக்கு இயற்பெயராகவும் வழங்கப்பெற்றுள்ளது. கிள்ளி வளவன் என்ற பெயரில் விளங்கிய பலருள் வேறுபடுத்திச் சுட்டுவதற்காக, அவன் காலத்திற்குப் பின்வந்தோர் ‘குளமுற்றத்துத் துஞ்சிய’ என்னும் முன்னடை சேர்த்து வழங்கியுள்ளனர்.

ஒரு மன்னனை அவன் பெயர் கொண்ட மற்றவர்களினின்றும் பிரித்துக் காட்ட, அவன் இறந்த இடத்தை முன்னடையாகக் கொள்வதும் ஒரு மரபாகும் என்பதனைப் பழந்தமிழ் வேந்தர்கள் சிலருடைய பெயர்களால் அறியலாம். இம்மன்னன் குளமுற்றம் என்னுமிடத்தில் இறந்து பட்டவன் என்பது இவன் பெயரால் தெரிகிறது. இவன் புலவர்கள் போற்றும் புரவலனாகத் திகழ்ந்ததோடு, சிறந்த புலவனாகவும் விளங்கியுள்ளான். இவன் சங்க காலத்தில் விளங்கிய அரசப் புலவர்களுள் ஒருவன் என்னும் சிறப்பினைப் பெற்றுள்ளான்.

இவனது ஒரே பாடல் புறநானூற்றில் (புறம். 173) இடம் பெற்றுள்ளது. பாடாண்டிணை, இயன்மொழித் துறையில் அமைந்துள்ள அப்பாடலில் இவன் சிறுகுடி என்னும் ஊருக்குத் தலைவனும், சிறந்த வள்ளண்மை உடையவனுமாகத் திகழ்ந்த பண்ணன் என்பவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளான். ‘யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய’ என்று வாழ்த்திய வாழ்த்தில் (புறம்.173–1) அரசப் பெருந்

திருவில் தன்னினும் குறைந்த நிலையிலுள்ள ஒருவரை அவர் தகுதி உணர்ந்து போற்றும் இம்மன்னனின் பண்பு நலம் புலனாகிறது.

இம்மன்னனை ஆடுதுறை மாசாத்தனார் (புறம். 227), ஆலத்தூர் கிழார், (புறம். 34, 36, 69), ஆவூர் மூலங்கிழார் (புறம். 38, 40), இடைக்காடனார் (புறம். 42), ஐயூர் முடவனார் (புறம். 228), கோவூர் கிழார் (புறம். 41, 46, 70, 386), எருக்காட்டூர் தாயங்கண்ணனார் (புறம். 397), நல்லிறையனார் (புறம்.393), மாறோக்கத்து நப்பசலையார் (புறம். 37, 39, 226), வெள்ளைக்குடி நாகனார் (புறம். 35) ஆகிய புலவர் பெருமக்கள் வாகை, பாடாண், வஞ்சி, பொதுவியல் முதலிய துறைகளில் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இவர்களுள் மாறோக்கத்து நப்பசலையார் (புறம். 226), ஆடுதுறை மாசாத்தனார் (புறம். 227) ஆகியோர் இம்மன்னன் இறந்தபின்னர்க் கையறு நிலைத் துறையிலும், ஐயூர் முடவனார் (புறம். 228) ஆனந்தப்பையுள் துறையிலும் பாடி இரங்கியுள்ளனர். ஐயூர் முடவனார் தாமான்தோன்றிக்கோனைச் சிறப்பித்துப் பாடிய புறப்பாடலில் (புறம். 399) 'காவிரிக் கிழவன் மாயா நல்லிசைக் கிள்ளிவளவன்' என்று இவனைக் குறிப்பிட்டுள்ளார். பாண்டி மன்னனின் படைத்தலைவன் பழையன் மாறனொடு போர் செய்தவன் என்று நக்கீரன் குறிப்பிடும் கிள்ளிவளவன் (அகம். 346) இம்மன்னனேயாதல்வேண்டும்.

இவன், விரும்பியதனை முடிக்கும் பேராற்றல் வாய்ந்தவன் என்பதனைச் 'செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் வெண்டிங்களுள் வெயில் வேண்டினும், வேண்டியது விளைக்கும் ஆற்றலை' என்று ஆவூர் மூலங்கிழார் கூறுவதிலிருந்து (புறம்: 38-78-79) அறிய முடிகிறது. காலனும் தான் கவர வேண்டிய உயிரைக் கவர்தற்குக் காலம்பார்த்திருப்பான். இவனோ, காலம் கருதாது சென்று பகைவரை அழிக்கும் பெருவீரன் என்பதனைக் கோவூர்கிழார் 'காலனும் காலம் பார்க்கும்; பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத்து அடூஉம் வெல்போர் வேந்து' என்று (புறம். 41: 1-3) குறிப்பிட்டுள்ளார். தமிழ் மூவேந்தர்களுள்ளும் அரசு என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது கிள்ளிவளவனுடையதேயாகும் என்னும் கருத்தில் 'முரசு முழங்குதானை மூவருள்ளும், அரசெனப்படுவது நினதே' என்று (புறம். 35: 3-4) இவன் ஆட்சிச் சிறப்பினை வெள்ளைக்குடிநாகனார் பாராட்டியுள்ளார்.

இவனது கொடைப் பண்பினைப் பலரும் சிறப்பித்துள்ளனர். தம்மைப் பாடிவரும் பாணர்களுக்கு நீங்காத செல்வம் நிறைக்கும் இயல்பினன் இவன் என்பதனை 'அமலைக்கொழுஞ்சோறார்ந்த பாணர்க்கு அகலாச் செல்வம் முழுதும் செய்தோன்' (புறம். 34: 14, 15) என்று ஆலத்தூர் கிழார் குறிப்பிட்டுள்ளார். இவன்பால் பரிசின் மாக்கள் சென்று பரிசில் பெறுவது, காட்டில் விறகு சேகரிக்கச் சென்றோர் பொற்குவையினை எதிர்பாராமல் பெற்றதுபோலாது, உறுதியானதாகும்' என்பதை 'விறகொய்மாக்கள் பொன் பெற்றன்னதோர், தலைப்பாடன்று அவன் ஈகை' எனக் கோவூர்கிழார் காட்டியுள்ளார். (புறம். 70:17-18).

இவன் சான்றோர்களாகிய புலவர் பெருமக்கள் கூறும் அறிவுரைகளை ஏற்றுச் செயற்பட்டுள்ளான். ஒருசமயம் நாட்டில் நிலவிய பஞ்ச நிலைமையினை இவனுக்கு எடுத்துக் கூறிப் 'பகடு புறந்தரும் உழவர் பெருமக்களுக்கு உறுதுணையாகவேண்டும்' என்று வெள்ளைக்குடிநாகனார் வேண்டியபோது, அதனை ஏற்று அம்மக்களுக்கு வரிவிலக்குச் செய்து உதவியுள்ளான் (புறம்.35). பிறிதோரமையம், தன் பகைவனான மலையமானின் மக்களை யானையால் இடறச் செய்ய முற்பட்டபோது, கோவூர்கிழார் நிலைமையினை நன்கெடுத்துக்கூறிக் 'கேட்டனையாயின் வேட்டது செய்ம்மே' என்றபோது, இவன் மனம் திருந்தி அம்மக்களைக் கொல்லாது விடுத்தான் (புறம்.45).

இரவலர்க்கு ஈதல், பகைவரை அடுதல், அவையகத்து முறை செய்தல் ஆகிய பண்புகள் இயல்பாக, மரபு வழியே இவன்பால் அமைந்து சிறக்குமாற்றினை மாறோக்கத்து நப்பசலையார் நன்கு காட்டியுள்ளார். மேலும், மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய வாடா வஞ்சி வாட்டிய இவனது வீரச் சிறப்பினை அப்புலவர் சிறப்பித்தமை கொண்டு இவனது பெருவீரத்தை நன்குணரலாம் (புறம்.39).

இவன் இறந்தபோது 'நனிபேதையே நயனில் கூற்றம் விரகின்மையின் வித்து சுட்டு உண்டனை' என்று ஆடுதுறை மாசாத்தனாரும் (புறம்.226) 'பானைவனையும் வேட்கோவே, இம்மன்னனைக் கவிப்பதற்குக் கலம் செய்ய விரும்பினால், நிலம் திகிரியாகவும் பெரியமலை மண்ணாகவும் கொண்டு வனையுமளவுப் பெரிதாகச் செய்ய வேண்டுமே அதுநும்மால் முடியுமா' என்னும் கருத்தில் ஐயூர் முடவனாரும் (புறம்:228) கூறி இரங்கும் பாடல்கள் இவன் பண்புகள் பலவற்றையும் புலப்படுத்துவதோடு, அவ்வகையிலமையும் கையறுநிலை இலக்கியங்களுள் சிறந்தனவாகவும் விளங்குகின்றன. அ.மா.ப.

**குளித்தலை** தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டம். இது 2340ச.கி.மீ.

பரப்புள்ளது. இப்பகுதியில் சில குன்றுகள் இருக்கின்றன. புகையிலை மிகுதியாக இங்குப் பயிராகிறது. வட்டத் தலைநகரின் பெயர் குளித்தலை. இப்பகுதியின் வடக்கில் காவேரி ஆறும், வடமேற்கில் அமராவதி ஆறும் ஓடுகின்றன. தெ.பா.

**குளுக்கான், கிளைடு** (1905-1960) ஓர் அமெரிக்க மானிடவியலறிஞர்; மானிடவியலில் சில கோட்பாடுகளுக்குப் புதுவிளக்கம் கொடுத்தவர். இவர் ஐயோவாவில் (Iowa) லி மார்சு (Le Mars) என்னுமிடத்தில் 1905 ஆம்-ஆண்டு பிறந்தார். கிளைடு கே மாபன் குளுக்கான் (Clyde Kay Maben Kluckhohn) இளங்கலைப் படிப்பை விசுக்கான்சின் (Wisconsin) பல்கலைக்கழகத்தில் பெற்றார்; பின்னர் வியன்னா, ஆக்சுபோர்டு ஆகிய பல்கலைக்கழகங்களிலும் பயின்றார்; ஆர்வர்டுப் (Harvard) பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டத்தைப் பெற்றார்.

குளுக்கான் மேற்கொண்டு நவசோப் (Navajo) பழங்குடிகளைப் பற்றி ஆராய்ந்தார். அது இவரை மானிடவியலின் பல பிரிவுகளில் மிகுந்த ஈடுபாடு கொள்ளச் செய்தது. இந்த ஆய்வின் அடிப்படையிலேயே இவர் பண்பாட்டு மானிடவியல் பிரிவில் சிறந்த பங்களிப்பைச் செய்தார். நவசோ இனக்குழுவியல் (Ethnography) பற்றி அறிய 1922-இல் தொடங்கிய இவரது ஆய்வு பண்பாடு பற்றிய கோட்பாடுகள், பண்பாட்டின் கோலங்கள் (Culture Patterns), முழுமையுறா மதிப்பு முறைகள் (Partial-Value Systems) முதலான கோட்பாடுகளுக்கு விளக்கம் காண உதவின.

பண்பாட்டைப் பற்றி, குளுக்கான் எழுதிய 'மனிதனை அறியும் கண்ணாடி' (Mirror for Man) என்னும் நூல் 1947க்கான மக்ராகில் (McGraw-Hill) பரிசினைப் பெற்றது. உலகம் முழுவதிலுமுள்ள பண்பாடுகளுக்கிடையில் காணப்படும் பல்வேறு வழக்கங்களிலும் அடிப்படையில் ஒருமித்த மனித மதிப்புகள் காணப்படுகின்றன என்னும் கருத்தினை இந்நூலில் இவர் விளக்கியுள்ளார்.

குளுக்கானின் சிறந்த நூல்களுள் சில: நவசோ சூனியம் (Navajo Witchcraft, 1944), சடங்கு நிகழ்ச்சிப் பாடல்களுள் நவசோ வகைப்பாடு (Navajo Classification of their Song Ceremonials), நவசோ பாடல்முறைக்கு ஓர் அறிமுகம் (Introduction to Navajo Chant Practice) என்பன. பின்னிரண்டு நூல்களும் ஆர்.எல்.வெய்மேன் (R.L.Wyman) துணையுடன் எழுதப்பட்டவை. குளுக்கான் நியூமெக்சிகோவில் சாண்டா பே (Santa Fe) என்னுமிடத்தில் 1960-ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

**குளுசு**: ஐரோப்பாவில் உருமேனியா நாட்டின் மத்திய பகுதியின் மேற்கில் உள்ள ஒரு நகரம். இது திரான்சில்வேனியோப் (Transylvania) பகுதியில் உள்ளது. குளுசு (Cluj) நகரம் சோம்சுல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளதால், வேளாண்மை இங்குச் சிறந்து விளங்குகிறது. தாதுப் பொருள்கள் பல இப்பகுதியில் கிடைக்கின்றன. இயந்திரப்பொருள்கள், உலோகப் பொருள்கள், மின்சார சாதனப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், ஆடை வகைகள் தோலாலாகிய காலணிகள் முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரம் ஒரு சிறந்த கல்வி மையமாகவும் விளங்குகிறது. பல்கலைக் கழகம் உட்படப் பல கல்வி நிலையங்கள் இங்கு உள்ளன.



குளுசு நகரம்

இந்நகரத்தில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் செருமானியர் குடியேறினர். இதை அமைத்தவர்கள் செருமானியக் குடியேற்ற மக்களேயாவர். இடைக்கால ஐரோப்பாவில் இது ஒரு சிறந்த வாணிக மையமாகவும் பண்பாட்டுப் புகழ் வாய்ந்ததாகவும் இருந்தது. அங்கேரிய (Hungary) மன்னன், இந்நகருக்குச் சுதந்திரம் வழங்கினான். இது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் திரேன்சில்வேனியாப் பகுதியில் ஒரு சிறந்த சமய, பண்பாட்டு மையமாக வளர்ந்திருந்தது. இது, ஆசுத்திரியா-அங்கேரியுடன் கி.பி. 1867-இல் இணைக்கப்பட்டுப் பிறகு 1920-இல் உருமேனியாவுக்கு வழங்கப்பெற்றது. இரண்டாம் உலகப்போரில் அங்கேரியப் படைவீரர்கள் இந்நகரில் புகுந்து சிறிது காலம் தங்கியிருந்தனர்.

இன்று உருமேனியாவின் ஒரு மாவட்டமாக விரிவடைந்துள்ள குளுசின் பரப்பு 6650 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 1980- ஆம் ஆண்டுக் கணக்

கெடுப்பின் படி 733,504. இதன் தலைநகரின் பெயர் குளுசு-நபோகா (Cluj-Napoca). இந்நகரின் மக்கள் தொகை 283,647 (1980). தெ.பா.

***குற்ற அறிக்கை***: குற்றஞ்சாட்டப்பட்டோர், சாட்சிகள் ஆகியோரின் பெயர் விவரம், இழைக்கப் பட்ட குற்றத்தின் தன்மை ஆகியவற்றை உள் ளடக்கியதாய்ப் புலனாய்வுக்குப்பின் காவல் அலு வலரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அறிக்கை, குற்ற அறிக்கை (Charge Sheet) எனப் படும்.

**குற்ற அறிக்கையில் அடங்கியிருக்க வேண்டியவை**: 1) குற்ற அறிக்கை, மாநில அரசால் குறித் துரைக்கப்பட்ட படிவத்தில் அமைந்திருத்தல் வேண் டும். 2) இதில் – அ) முதல் புகார் வரப்பெற்ற நாள், நேரம்; ஆ) முறையீடு செய்தவர் அல்லது முதல் புகார்கொடுத்தவர் பெயர், முகவரி; இ) குற்ற வாளி பெயர், முகவரி; ஈ) குற்றவாளி காவலில் உள்ளார்; அல்லது பிணையில் விடுவிக்கப்பட் டிருக்கிறார் என்பது பற்றிய விவரம்; உ) குற்றம் நடந்த நாள், நேரம்; ஊ) சாட்சிகளின் பெயர், முகவரி; எ) குற்றந்தொடர்பாகக் கைப்பற்றப்பட்ட பொருள்கள் ஆயுதங்கள் அடங்கியபட்டியல்; ஏ) குற்ற வாளிக்கு எதிரான வழக்குப் பற்றிய சுருக்கம்; ஐ) குற்றம் எவரால் இழைக்கப்பட்டது என்பது பற்றிய விவரம்; ஒ) குற்றவாளி சட்டத்தில் எந்தப் பிரிவுகளின் கீழ்க் குற்றமிழைத்துள்ளார் என்பது; ஓ) பிரிவு 170-இன் கீழ்க் குற்றவாளி கைது செய்யப் பட்டுக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளாரா என்பது 3) குற்ற அறிக்கையில் காவல்நிலையப் பொறுப்பு அலுவலர் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும். 4) குற்ற அறிக்கை குற்றவாளி, பிணையாளர் (Surety) ஆகியோரிடமிருந்தும், சில வழக்குகளில் சாட்சிகள் முறையிடுவோர் ஆகியோரிடமிருந்தும் பெறப்பட்ட முறிகளை (Bonds) உடன்கொண்டதாக இருத்தல் வேண்டும்.

குற்ற அறிக்கை, காவல்துறைப் புலனாய்வின் இறுதி நடவடிக்கையாகும். இது, புலனாய்வின் முடி வையும் வழக்கு விசாரணையின் தொடக்கத்தையும் குறிக்கிறது. காவல்துறையினர் இறுதி அறிக்கையைக் (Final Report) கொடுத்த பின்னர் மீண்டும் புலனாய் வைத் தொடங்குதல் முடியாது. ஆனால், வழக்குப் பற்றி புதிய விவரம் ஏதேனும் கிடைக்குமாயின் இறுதி அறிக்கைக்குப் பின்னரும் புலனாய்வைத் தொடங்கலாம். பு.வே.

**துணை நூல்**:

Krishnamurthi, K., Police Diaries & Statements, Etc., Law Book Company, Allahabad, 1980.

***குற்ற இளைஞர் பள்ளி***: இளங்குற்றவாளி களைக் காவலில் வைப்பதற்கும் தொழிற்பயிற்சி அளிப்பதற்கும் குற்றங்களை மேற்கொண்டு செய் யாது தடுப்பதற்கும் சீர்திருத்துவதற்கும் அரசாங்கத் தால் நிறுவப்பட்டது குற்ற இளைஞர் பள்ளி (Borstal School) எனப்படும்.

**பள்ளியின் மேலாண்மை**: இப்பள்ளி, கண்காணிப் பாளர், பார்வையாளர் குழு ஆகியவற்றின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இது மேலாண்மைக் குழு என்று சொல்லப்படுகிறது. இப்பள்ளி அவ்வப்போது ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. இத்த கைய பள்ளி சிறுமிகளை மட்டும் ஏற்றுக்கொள்வதற் குரிய பள்ளியாக இருக்குமிடத்து, அது, பெண் ஆய் வாளர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. இப்பள்ளி களை எல்லாக் காலங்களிலும் ஆய்வு செய்வதற்கு, இதன் தலைமை ஆய்வாளர், ஆய்வாளர், உதவி ஆய்வாளர்ஆகியோருக்கு அதிகாரமுண்டு. உள்ளுறை வோர் நலவாழ்வு குறித்து அரசாங்கத்தால் இதற் கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பதிவு பெற்ற மருத்துவர், தலைமை ஆய்வாளர், மேலாளர் ஆகி யோருக்கு அறிவிப்புச் செய்த பின்னர் இப்பள்ளியின் சுகாதாரநிலைபற்றி ஆய்வை மேற்கொள்ளலாம்.

**ஒப்புதல் திரும்பப் பெறுதல்**: இப்பள்ளியின் விதி கள், மேலாண்மை அல்லது கண்காணிப்புச் சீர்கெட் டிருக்கும் நிலையில், அரசாங்கம் இப்பள்ளிக்குக் கொடுத்த ஒப்புதலளிப்பைத் திரும்பப் பெறும்.

**ஒப்புதலளிப்பைத் திரும்பப் பெறுதல் அல்லது வேண்டாமென விடுதலின் விளைவு**: குறிப்பிட்ட தேதியிலிருந்து பள்ளிக்கான ஒப்புதலளிப்புத் திரும் பப் பெறுதல் நடைமுறைக்கு வரும் என்று அரசாங் கம் மேலாண்மைக்கு அறிவித்த பின்னரும், ஒப்புதல ளிப்பை மேலாண்மையே வேண்டாமென அறிவித்த பின்னரும், இப்பள்ளியில் குழந்தைகள் அல்லது இளங் குற்றவாளிகள் எவரையும் நிருவாகம் ஏற்றுக் கொள்வதென்பது கூடாது. ஆனால், அரசாங்கம் வேறுவிதமாகக் கட்டளை பிறப்பிக்கின்ற வரை, இப் பள்ளியிலுள்ள குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தல், பயிற்சி அளித்தல், உறைவிடம் அளித்தல், ஆடை வழங்கல், உணவளித்தல் போன்றவற்றிற்கான பொறுப்பை இதன் மேலாண்மையே ஏற்கவேண்டும். பு.வே

**குற்ற உடந்தை**: காண்க: உடந்தை.

**குற்ற உளவியல்**: உளவியல் துறைகளுள் குற்ற உளவியல் ஒன்றாகும். குற்றம் செய்பவரின் மனப்பாங்கு, குற்றத்திற்கான காரணங்கள் ஆகியவற்றை ஆராய்வது இதன் நோக்கமாகும். சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது வழிமுறைகளிலிருந்து பிறழ்ந்து செயற்படுவது குற்றமாகும். குற்றங்கள் பிறருக்குப் பெருந்தீங்கு விளைப்பனவாகவோ சிலநேரங்களில் வெளியே தெரியாதனவாகவோ இருக்கும். பெருங்குற்றம், சிறுகுற்றம் என அது இரு வகைப்படும். கொலை, கொள்ளை போன்றவை பெருங்குற்றமாகும்.

சிறுவர்களிடையேயும் குற்றத்தன்மை காணப்படுகிறது. சிறுவயதில் குற்றமிழைத்திட்டோர் பெரியவரான பின்னும் குற்றம் செய்பவராக இருப்பதில்லை. அதுபோலவே குற்றவாளிகள் அனைவரும் சிறுவயதில் குற்றம் செய்பவராகவும் இருந்ததில்லை. எப்படியாயினும் குற்றத்தின் தன்மை, அதற்கான தூண்டல், குற்றத்திற்கான காரணிகள் ஆகியவை ஒரே தன்மையானவை எனலாம்.

குற்ற நடத்தைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் கொடிய வறுமை, பெற்றோரிடையே அடிக்கடி ஏற்படும் மோதல்கள், அன்பற்ற வாழ்க்கை, கட்டுப்பாடற்ற குடும்ப வாழ்க்கை வீட்டில் கடுமையான கட்டுப்பாடு, சிறுவரிடம் வெறுப்புணர்ச்சி, தீய நட்பு, தீய திரைப்படங்கள், தீய செய்தி ஏடுகள், தீய புத்தகங்கள் போன்றவை வலுவான காரணங்களாகும். இவை தவிரப் பாரம்பரியம் குற்றத்தையே தொழிலாகக் கொள்ளுதல், குற்றம் செய்வதற்கு ஏதுவான அமைப்பில் இருத்தல் போன்றவையும் குற்ற நடத்தைக்கு வித்திடுகின்றன.

குற்ற நடத்தைக்குப் பாரம்பரியமே வலுவான காரணமாகப் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கருவுருதலின்போது XY என்ற உயிரணுக் கோள்களுடன் மற்றுமொரு Y வகை உயிரணுக்கோள் (XYY) இணைந்திடின் அவ்வாறு உருவாகும் குழந்தை வளர்ந்து பெரியவனானபின் குற்ற நடத்தையுடையவனாக இருப்பான் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அத்தகைய குழந்தை அசாதாரண உயரமுடையவனாகவும், நுண்ணறிவில் இயல்புநிலைக்குச் சற்றுக் குறைந்தவனாகவும் பிறரைத் தாக்கும் தன்மை சற்று மிகுதியாக உடையவனாகவும் இருப்பான். மூளைச் சிதைவு, தடைப்பட்ட மூளை வளர்ச்சி, வயது முதிர்ச்சியால் ஏற்படும் மூளைச் சீர்கேடு போன்றவை குற்ற நடத்தையின் காரணங்களாகும்.

குற்றம் செய்தலையே தொழிலாகக் கொண்டுள்ளவரின் மன அமைப்பில் எத்தகைய நெறிப்பிறழ்ச்சியும் காணப்படுவதில்லை. ஆனால், குற்றம் செய்தலுக்கான காரணம் மாறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக, மனச்சீர்கேட்டினால் குற்றமிழைப்பவன் எவ்விதப் பயன் கருதியும் செய்வதில்லை. ஆனால், குற்றம் செய்தலைத் தொழிலாகக் கொள்பவன் பொருளாதாரக் காரணங்களுக்காக அதனை மேற்கொள்கிறான். அப்படிப்பட்ட குற்றவாளி ஏதேனும் ஒரு குறிப்பிட்ட குற்றத்தில் திறமையும் தேர்ச்சியும் பெற்று, அதில் தனக்கென ஒரு தனி வழியினையும் மேற்கொள்கிறான். அவன் குறிக்கோள் விரைவிலும் பாதுகாப்பான வழியிலும் பொருள் ஈட்டுவதேயாகும். எனவே, அவன் பிறரைத்தாக்க முயல்வதில்லை; காரணம் அது அவனை எளிதில் காட்டிக் கொடுத்துவிடும்.

தண்டனை ஒன்றுதான் குற்ற நடத்தையைத் தடுத்திடும் வழியெனப் பலர் கருதுகின்றனர். ஆனால் தண்டனைதான் குற்ற நடத்தையைத் தூண்டிவிடும் காரணமாகும் என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். எனவே, குற்றம் இழைத்த காரணம், சூழ்நிலை ஆகியவற்றை அறிந்து அவனது நடத்தை சமூகத்தில் எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் என விளக்கிச் சட்டத்தின் இன்றியமையாமையை எடுத்துக் கூறி அவனது மனநிலையினை அறிவியல் அடிப்படையில் திருத்திச் சீர்படுத்த வேண்டும். அதற்கெனச் சீர்திருத்தப் பள்ளிகள் உள்ளன. குற்றவாளிகளைச் சுற்றி இருப்போர் அக்கறையுடனும், தொண்டு மனப்பான்மையுடனும் செயற்பட்டால் குற்றவாளிகளைச் சீர்திருத்துவது எளிது. குற்றங்களும் சமுகத்தில் குறைந்திடும். கி.இரா.

**துணை நூல்கள்**:

**வைத்தியநாதன், பி.கே.,** கல்வி மனவியலும் குழந்தைக் கல்வியும், பாகம்-1, சாந்தா வெளியீட்டகம், சென்னை, 1985.

**Coleman. J.C.,** Abnormal Psychology and Modern Life (5th Ed). Taraporevala and sons & Co., Pvt., Ltd, Bombay, 1976.

**குற்றச்சாட்டு**: குற்ற வழக்கின் தொடக்க நிலையில் எதிரி இன்னின்ன குற்றங்களை இழைத்துள்ளாரென்று குற்றவழக்குத் தொடுப்பு அடிப்படையில் நடுவர் குற்றஞ்சாட்டுவது குற்றச்சாட்டு (Charge) எனப்படும்.

**குற்றச்சாட்டுப் படிவம்** 1) எதிரி இழைத்த குற்றம் 2) குற்றத்தின் பெயர்; 3) சட்டம் குற்றத்திற்கான பெயரை இன்னதென்று குறிப்பிடாத நிலையில் எந்த அளவிற்குஅக்குற்றத்திற்குரிய இலக்கணத்தை உரைத்தால், குற்றச்சாட்டைப் பற்றி எதிரிக்கு அறிவிப்பதாகுமோ, அந்த அளவிற்கான அறிவிப்பு; 4) எந்தச் சட்டம் அல்லது சட்டப்பிரிவுக்கு எதிராகக் குற்றமிழைக்கப்பட்டிருக்கிறதோ அந்தச் சட்டம், பிரிவு; 5) குற்றம் நிகழ்ந்த காலம், இடம், ஆள் பற்றிய விவரம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

குற்றச்சாட்டு குற்றத்தை விவரிப்பதற்குப் பயன்படுத்துகிற சொற்கள், அக்குற்றம் எந்தச் சட்டத்தின்படி தண்டிப்பதற்குரியதோ அந்தச் சட்டம்அவற்றிற்குத் தந்திருக்கின்ற பொருளில் இருத்தல்வேண்டும்.

**நீதிமன்றம் குற்றச்சாட்டில் மாறுதல் செய்தல்**: நீதிமன்றம் தீர்ப்புப் பகருவதற்கு முன்னர் எந்த வேளையிலும் குற்றச்சாட்டில் மாறுதல் செய்யலாம். செய்யப்படும் மாற்றம், விசாரணையில் எதிரி எதிர்வாதம் புரிவதற்கோ அரசுதரப்பு வழக்கை மேல் நடத்துவதற்கோ எதிரானதாக இல்லாத நிலையில் நீதிமன்றம் தன் விருப்பம்போல், அக்குற்றச்சாட்டை மூலக் குற்றச்சாட்டாகக் கொண்டு, விசாரணையைத் தொடங்கும்.

**தனிப்பட்ட குற்றங்களுக்குத் தனித்தனியான குற்றச்சாட்டுகள்** குற்றம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனிக் குற்றச்சாட்டுகள் இருக்கும்போது, அவை தனித் தனியே விசாரிக்கப்படுதல் வேண்டும். ஆனால், எதிரி ஒருங்கிணைவாக விசாரிப்பதற்கு எழுத்து வடிவில் விண்ணப்பம் அளித்திருக்கும்போது, அது ஒருங்கிணைவாக விசாரிக்கப்படுதல் அவசியமாகும்.

**இழைக்கப்பட்டது எந்தக்குற்றம் என்பதில் ஐயம்**: பல்வேறு குற்றங்களில் இழைக்கப்பட்ட குற்றம் எது என்பதில் ஐயம் ஏற்படும் போது, எதிரி அத்தகைய குற்றங்கள் அனைத்தையுமோ ஏதேனுமொன்றையோ செய்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுவார்.

**ஒருங்கிணைவாகக் குற்றஞ்சாட்டப்படுதற்குரியவர்**: பின் வருபவர்கள் ஒருங்கிணைவாகக் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்படுவதற்குரியவராவர்; 1) சம்பவமொன்றில் ஒரே குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்; 2) குற்றமொன்றை இழைத்தவர்களும் உடந்தையாக இருந்தவர்களும்; 3) பிரிவு 219-இன்படி ஒன்றுக்கு மேற்பட்ட ஒரே வகையான குற்றங்களைப் பன்னிரண்டு திங்களுக்குள் கூட்டாகச் சேர்ந்து செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்; 4) ஒரே சம்பவம் நடைபெறும்போது வெவ்வேறு குற்றங்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப் பட்டவர்கள்; 5) திருட்டு, அச்சுறுத்திப் பறித்தல், ஏமாற்றுதல், கையாடல் ஆகிய குற்றங்களுள் ஒன்றைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்; 6) பொருளொன்றின் அனுபோகம் மேற்சொன்னவர்களால் செய்யப்பட்ட அத்தகைய குற்றம் .எதனாலும் மாற்றல் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்தப் பொருளைப்பெற்றுக் கொண்டிருந்ததாக அல்லது தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்ததாக அல்லது அதை மாற்றம் செய்வதிலோ மறைத்து வைப்பதிலோ உதவி செய்ததாக அல்லது பின்னதாகச் சொல்லப்பட்ட குற்றம் எதற்கும் உடந்தையாக இருந்ததாக அல்லது அதைச் செய்ய முயற்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்; 7) திருட்டுப் பொருளைப் பொறுத்து, இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவுகள் 411,414 ஆகியவைகளின் கீழ்க் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், 8) கள்ள நாணயத் தொடர்பாக இந்தியத் தண்டனைச் சட்டம், இயல் 12-இன் கீழ்க் குற்றமொன்றைச் செய்ததாக அல்லது உடந்தையாக இருந்ததாக அல்லது முயற்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்.

**குற்றச்சாட்டுகளைத் திரும்பப்பெறுதல்**: எதிரி ஒருவருக்கு எதிராக ஒன்றுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டு, அவற்றில் ஒன்று அல்லது மேற்பட்டவற்றிற்காக அவர் தண்டிக்கப்படும் நிலையிலுள்ளபோது, முறையிடுபவரோ குற்றவழக்கை நடத்தும் அலுவலரோ குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தின் இசைவுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். பு.வே.

**குற்றச்சிக்கல்**: சிக்கல் என்பது பெரும்பாலும் மனவெழுச்சி பற்றிய சிக்கல்களையே குறிக்கும். யூங் எனும் உளப்பகுப்பாளர் முதலில் இச்சொல்லைப் பயன்படுத்தினார். பின்னர்ப் பல்வேறு துறைகளிலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. பொதுவாக மனவெழுச்சி கலந்த, அமுக்கப்பட்ட அல்லது ஆழப் புதைக்கப்பட்ட கருத்துகள், எண்ணங்கள் ஆகியவற்றினைக் குறிக்கச் சிக்கல் எனும் சொல்லைப் பயன்படுத்துகிறோம். அடிமனத்தில் கொண்டுள்ளதை இது வலியுறுத்தும். பிராய்ட் எனும் உளவியல் அறிஞர், குழந்தையின் வாழ்க்கையில் இருமுகப் போக்கினால் இத்தகைய சிக்கல்கள் இயற்கையாகவே ஏற்படுகின்றன என்கிறார். ஆட்லர் எனும் உளவியலாளர் ஆளுமை வளர்ச்சியில் தாழ்வுணர்ச்சி பற்றி விவரிக்கிறார். பெற்றோர்களும், பெரியவர்களும் குற்றம் என்று கூறும் சில செயல்களைப் பிறர் செய்யச் சொல்லும்போதும், மத போதனைகள் நடத்தைக்கு மாறாக இருக்கும்போதும், இக்குற்றச் சிக்கல் (Guilt

Complex) எழுகிறது. இது சொல்வேறு செயல்வேறு பட்டநிலையின் தன்மையால் விளையும் சிக்கலாகும்.
ஜி.இரா.

**துணை நூல்கள்:**

**Gallagher, J.R.** and **Harris, H.I.**, Emotional Problems of Adolescents, Oxford University Press, 1958.

**Lazarus, R.S.**, Personality and Adjustment, Prentice Hall, 1968.

**குற்றஞ்சாட்டப்பட்டவர்**: அவ்வப்போது அமலிலுள்ள எந்தச் சட்டத்தின்படியும் தண்டிப்பதற்குரிய குற்றங்களை இழைத்திருப்பதாகக் காவல்துறையினரால் கைதுசெய்யப்படுபவர், குற்றஞ்சாட்டப்பட்டவர் (Accused) ஆவர். சான்றியல் சட்டப் பிரிவுகள் 24, 26 ஆகியவற்றில் குற்றஞ்சாட்டப்பட்டவர் (Accused Person) என்று குறிப்பிடப்படுபவரும் இதில் அடங்குவர்.
பு.வே.

**குற்றம்**: அவ்வப்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி தண்டிப்பதற்குரிய எந்தச் செய்கையைச் செய்தாலும் 'குற்றம்' (Crime) எனப்படும். ஒருவரது செயல் அல்லது நடத்தையைக் குற்றமென்று கண்டறிவதற்குப் பின்வரும் தன்மைகள் அதில் அடங்கியிருத்தல் வேண்டும். அவை: 1) சமுதாயத்திற்குத் தீங்கு பயப்பனவாய் இருத்தல்வேண்டும்; 2) அரசால் தடைசெய்யப்பட்டனவாயிருத்தல் வேண்டும்; 3) தண்டனைக்குரியனவாய் இருத்தல் வேண்டும்.

**குற்றம் பற்றி அறிஞர் பெருமக்கள் கூற்று**: குற்றம் என்பதைப் பேராசிரியர், குட்கார்ட்டு (Good hart), சட்டத்தால் தண்டனை விதித்துத் தடுக்கப்படும் நடத்தை அல்லது அரசால் தண்டிக்கப்படும் செயல் என்றும்; ஆல்சுபரி (Halsbury), சட்டமுரணான செய்கை அல்லது தவறுகை என்றும்; பொங்கர் (Bongar), சமுதாயத்திற்கு எதிரான ஒரு செய்கை என்றும்; மைகேல் (Michael), ஆல்டர் (Alder) ஆகியோர், குற்றவியல் சட்டத்தால் தடைசெய்யப்பட்ட நடத்தை என்றும்; பி.எ. உரோட்லே (B.A. Wrotley) சட்டம், ஒழுக்கம் (Morality), சமுதாய சக உறுப்பினர் நலன் ஆகியவற்றிற்கு எதிரான தீங்கிழைப்பு என்றும்; இரசல் (Russel), மனித நடத்தையின் விளைவு என்றும் குறிப்பர்.
பு.வே.

**துணை நூல்:**

**Atchuthen Pillai P.S.**, Criminal Law, N.M. Tripath Private Limited, Bombay, 1983.

**குற்றமன்னிப்பு**: குற்றவியல் நீதிமன்றங்களில், குற்றவாளி ஒருவருக்குக் குற்ற வழக்குத் தொடுப்பிற்கு முன்னர் அல்லது தண்டனைக்குப் பின்னர் வழங்கப்படும் மன்னிப்பு, குற்றமன்னிப்பு (Pardon) எனப்படும்.

குற்றமன்னிப்புக் குறித்த செய்திகள், இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவுகள் 72 மற்றும் 161-இலும்; குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவுகள் 306 மற்றும் 307-இலும் காணப்படுகின்றன.

**உடன் குற்றவாளி குற்றமன்னிப்புப் பெறுதல்**: குற்றமொன்றைச் செய்வதற்குக் காரணமாயிருந்த பலருள், உடன் குற்றவாளி (Accomplice) ஒருவருக்கு எத்தகு சூழ்நிலையில் மன்னிப்பு அளிக்கலாம் என்பதற்கான நடைமுறையை 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 306-ஆம் பிரிவு தெளிவாக்குகிறது. இப்பிரிவுப்படி குற்ற மன்னிப்பளிப்பதன் நோக்கம் என்னவெனில், சாட்சிக் குறைவின் காரணமாகக் குற்றவாளிகள் தப்பித்து விடாதபடி உண்மையான சாட்சியங்களைப் பெறுவதற்கேயாகும்.

உடன் குற்றவாளியின் சாட்சியத்தை ஏற்பதற்கு முன் நடுவர் பின்வரும் வகைகளில் உளநிறைவடைதல் வேண்டும்.

1. உடன்குற்றவாளி, குற்றத்தின் ஒரு தரப்பினராகவோ தொடர்புடையவராகவோ குற்றத்தைத் தூண்டியவராகவோ இருத்தல் வேண்டும்.

2. தனக்குத் தெரிந்தவரையில் சூழ்நிலைகளை முழுமையாகவும் நிறைவாகவும் கூறவேண்டும்.

3. குற்றம், அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படக் கூடியதாகவோ ஏழாண்டுகளுக்கு மேற்பட்டதாகவோ கடுஞ்சிறைத் தண்டனை அளிக்கக் கூடிய குற்றமாகவோ இருத்தல் வேண்டும்.

4. குற்றமேற்ற சாட்சி மன்னிப்பை ஏற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. அவர், அதன்பின்பு சாட்சியாக விசாரிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

**குற்றமன்னிப்பு வழங்குதற்கு அதிகாரம் உடையவர்கள்**: இந்திய அரசமைப்புச் சட்டப்படி, இந்தியக் குடியரசுத் தலைவரும் மாநில ஆளுநர்களும்; குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி நீதிபதிகளும், நீதித்துறை நடுவர்களும் குற்றமன்னிப்பு வழங்க அதிகாரமுடையவர்களாவார்கள்.

**குற்ற மன்னிப்புப் பெறுவதற்குரியவர்**: 1. குற்றம் புரிவதில் நேரடியாகப் பங்கேற்றவர், 2. குற்றம் புரிவதில் மறைமுகமாகப் பங்கேற்றவர், 3. குற்றம் புரிவதில் உடனொத்துச் செயற்பட்டவர் ஆகியோர் குற்ற மன்னிப்புப் பெறுதற்கு உரியவராவார்.

**எப்பொழுது மன்னிப்பு வழங்கலாம்**? தலைமை நடுவர் அல்லது மாநகர் நடுவர் எவரும், 1) புலன் விசாரணையின் எந்தக்கால நிலையிலும் 2) விசாரணைக்கு முன்பான கேள்வி விசாரணையின்போதும், 3) விசாரணையின் போதும் மன்னிப்பு வழங்கலாம். முதல் வகுப்பு நடுவருக்குப் புலன் விசாரணையின் போது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் கிடையாது.

**எத்தகைய வழக்குகளில் மன்னிப்பு வழங்கலாம்**? 1) அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும் குற்றங்கள், 2) ஏழாண்டுக் காலமோ மேற்பட்ட காலமோ கடுஞ்சிறைத் தண்டனை வழங்கக் கூடிய குற்றங்கள், 3) 1952-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம் (Criminal Law Amendment Act, 1952 (46 of 1952) என்ற சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சிறப்பு நீதிபதியால் விசாரிக்கக் கூடிய குற்றங்கள் ஆகியவற்றின் கீழ் எழும் வழக்குகளில் மன்னிப்பு வழங்கலாம்.

**குற்ற மன்னிப்பினை ஏற்றுக் கொள்வதால் ஏற்படும் விளைவுகள்**: குற்றமேற்ற சாட்சி மன்னிப்பினை ஏற்றுக் கொண்டவுடன் அவருக்கு உட்கிடையான விடுவிப்பு கிடைக்கிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, வழக்குத் தொடரும் கட்சியினரின் சாட்சியாக அவர் மாறிவிடுகிறார்.

குற்றமேற்ற சாட்சி, குற்றம் புரிந்ததற்கான அனைத்துச் சூழ்நிலைகளையும் ஒளிவு மறைவின்றிச் சாட்சியத்தில் கொடுத்தல் வேண்டும். அவர் சாட்சி கூற மறுத்தாலோ உண்மைகளை மறைத்துப் பொய் சாட்சி புகன்றாலோ குற்ற மன்னிப்பினை இழந்து, குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 308 (1)-இன் கீழ் விசாரிக்கப்படுவார். இப்பிரிவின்படி, குற்றமன்னிப்பிற்கான நிபந்தனையைக் குற்றமேற்ற சாட்சி மீறும்போது அரசுதரப்பு வழக்குரைஞர் (Public Prosecutor) சான்றிதழ் வழங்கி அவர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடுக்கலாம். குற்றமேற்ற சாட்சியின் மீது 308-ஆம் பிரிவின்படி வழக்குத் தொடுக்கப் பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அவை,

1. குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவுகள் 306 மற்றும் 307-இன்படி முறையே நடுவரும், அமர்வு நீதிமன்ற நீதிபதியும் (Sessions Judge) அவருக்குக் குற்ற மன்னிப்பு வழங்கியிருத்தல் வேண்டும். 2. குற்றமேற்றசாட்சி, குற்ற மன்னிப்பினை ஏற்றுக் கொண்டிருத்தல் வேண்டும். 3. அவர் பிரிவு 306(4) (எ)-இன்படி ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். 4. (அ) இன்றியமையாதவைகளை மறைப்பதன்மூலம், (ஆ) பொய்சாட்சிப் புகல்வதன்மூலம் அவர் நிபந்தனையை மீறினார் என்று அரசுத் தரப்பு வழக்குரைஞர் சான்றிதழ் வழங்கியிருத்தல் வேண்டும்.

**இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழ்க் குற்ற மன்னிப்பு**: இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 72-இன்படி இராணுவ நீதிமன்றம் வழங்கிய தண்டனை பேரிணைய செயலாட்சித் தொடர்புடைய சட்டத்திற்கு முரண்பட்ட வகையில் இழைத்த குற்றங்களுக்காக வழங்கப்பட்ட தண்டனை, மரணதண்டனை ஆகியவற்றினின்று குற்றவாளி ஒருவரை மன்னித்து விடுதலையளிக்க இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. செயலாட்சித் தொடர்புடைய சட்டத்திற்கு முரண்பட்ட வகையில் பிரிவு 161-இன்படி இழைத்த குற்றங்களுக்கான தண்டனைகளை மன்னித்து விடுதலையளிக்கும் அதிகாரம் மாநில ஆளுநருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அ.பி.பொ.

**துணை நூல்கள்**:

**Durga Das Basu**, Constitution of India, Prentice Hall of India Private Limited, New Delhi, 1983.

**Ratanlal & Dhirajlal**, The code of Criminal Procedure, 1973, Wadhwa Sales Corporation, Nagpur, 1982.

**குற்றமனம்**: குற்றச் செயலைத் தூண்டும் கருத்து குற்றமனம் (Mens Rea-Guilty Mind) எனப்படும். குற்றத்திற்குக் குற்றமனம், குற்றச்செயல் என்ற இரு அடிப்படைக் கூறுகள் தேவையாகும். குற்றமனம் இல்லாத செயலைச் சட்டம் தண்டனைக்கு உரியதாக ஆக்குவதில்லை. எ-டு: 1. நரியொன்றுக்கு வைத்த குறி தவறிச் சென்று பார்வைக்குப் படாத நிலையில் புதருக்குள் பதுங்கியிருந்தவர் மீது பட்டு அவர் இறந்துவிடுகிறார்; இவ் வெடுத்துக் காட்டில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டிருக்கும் போது, அவர்தம் செயல் குற்றமாவதில்லை. 2. கோடரி கொண்டு மரம் வெட்டிக் கொண்டிருக்கும்போது, சற்றும் எதிர்பாராத விதத்தில் கோடரியின் கணை கழன்று சென்று அருகில் நின்றவர் மீது வீழ்ந்து ஒருவரைக்

கொன்றுவிடுகிறது; குற்றஞ்சாட்டப்பட்டவர் தக்க கவனத்துடன் செயற்பட்டிருக்கும் போது, அவர்தம் செயல் குற்றமாவதில்லை.

குற்றமனம் ஆங்கிலக் குற்றவியல் சட்டத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்தியத் தண்டனைச் சட்டத்திலும் குற்றங்களுக்கு இலக்கணம் கூறும் சட்டப் பிரிவுகளில் அந்தந்தக் குற்றங்களுக்கு வேண்டிய குற்றமனம் கூறப்பட்டுள்ளது. பு.வே.

**குற்ற முறையீடு**: தெரிந்த அல்லது தெரியாத ஒருவர், குற்றமொன்றைச் செய்திருக்கும்போது, வழக்கு மன்ற நடுவர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி அக் குற்றம் புரிந்தவரின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, வாய்மொழியாக அல்லது வரைமொழியாகக்கொடுக்கப்படும் முறையீடு, குற்ற முறையீடு (Complaint) எனப்படும்.

**காவல் அறிக்கை குற்றமுறையீடாதல்**: குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி காவல் அறிக்கை (Policc Report) குற்ற முறையீடாகாது. எனினும், காவல் அலுவலர் ஒருவர், ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்த பின்பு நடத்திய புலனாய்விலிருந்து பிடி ஆணை வேண்டாக் குற்றமொன்று (Non-cognizable offence) செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருமிடத்து, அந்த அறிக்கை குற்ற முறையீடாகக் கருதப்படும்.

குற்ற முறையீட்டில் அடங்கியிருக்க வேண்டியவை: 1. சாட்டுரை வாய்மொழியாக அல்லது வரைமொழியாக இருத்தல் வேண்டும்; 2. தெரிந்த அல்லது தெரியாத ஒருவர் குற்றமிழைத்திருத்தல் வேண்டும்; 3. இது, நடுவரிடம் செய்யப்படுதல் வேண்டும்; 4) இது, குற்றத்துறை நடுவர் நடவடிக்கை எடுப்பதற்குரிய நோக்கத்தோடு அமைந்திருத்தல் வேண்டும்.

குற்ற முறையீட்டிற்கென்று தனியே படிவங்கள் (Forms) கிடையாது. அது, உரிமையியல் வழக்கின் வழக்குரையினைப் (Plaint) போன்றே அமைத்திருத்தல் வேண்டும்.

திருமணம், அவதூறு தொடர்புடைய குற்றங்கள், இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 195 முதல் 197 வரையிலுள்ள குற்றங்கள் தவிர்த்து, ஏனைய குற்றங்கள் குறித்துப் பொதுவாக எவர் வேண்டுமானாலும் குற்றமுறையீடு செய்யலாம். பு.வே.

**துணை நூல்**:

**Ratanlal & Dhirajlal**, The code of Criminal Procedure, 1973, Wadhwa sales corporation, Nagpur, 1982.

**குற்றமேற்ற சாட்சி**: குற்ற வழக்கொன்றில் மற்றக் குற்றவாளிகளுக்கு எதிராக, குற்றச் செயலின் விவரம் பற்றித் தனக்குத் தெரிந்தது அனைத்தையும் முழுமையாகவும் மெய்மையாகவும் சாட்சியம் கூற வேண்டும் என்ற நிபந்தனையுடன், அதிகாரம் பெற்ற நடுவர் ஒருவரால் மன்னிப்பு அளிக்கப்படும் உடன் குற்றவாளி, குற்றமேற்ற சாட்சி (Approver) என்று சொல்லப்படுகிறார்.

உடன்குற்றவாளி ஒருவர் மன்னிப்பு அளிக்கப்பட்டு, குற்ற மேற்ற சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படுவது, அமர்வு நீதிமன்றத்தால் அல்லது 1952-ஆம் ஆண்டு குற்றச்சட்டத் திருத்தச் சட்டத்தின்படி (Criminal Law Amendment Act, 1952) (46 of 1952) தோற்றுவிக்கப்பட்ட சிறப்பு நீதிபதியின் நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க குற்ற வழக்குகளிலும்; ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனையாலோ அதைக் காட்டிலும் கடுமையான தண்டனையாலோ தண்டிக்கப்படக் கூடிய குற்ற வழக்கிலும் மட்டிலுமே முடியும்.

குற்றவியல் நடுவர் ஒருவர் இவ்வாறு உடன் குற்றவாளி ஒருவருக்கு மன்னிப்பு அளித்து, சாட்சியாக ஏற்கின்றபோது, அதற்கான காரணத்தையும் மன்னிப்பு அளிக்கப்பட்டவர் அம் மன்னிப்பை ஏற்றுக்கொண்டாரா என்பதையும் பதிவு செய்தல் வேண்டும். பதிவின் நகல் கேட்டு உடன் குற்றவாளி விண்ணப்பித்திருக்கும் போது, அதை அவருக்குக் கட்டணமின்றி அளித்தல் வேண்டும்.

குற்றமேற்ற சாட்சி, குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் நடுவரின் நீதிமன்றத்திலும், அடுத்து நடக்கும் விசாரணையிலும் சாட்சியாக விசாரிக்கப்படுவார். அவர், ஏற்கெனவே பிணையில் (Bail) விடுவிக்கப்பட்டிருந்தாலன்றி, விசாரணை முடியும் வரை காவலிலேயே வைத்து விசாரிக்கப்படுவார். பு.வே.

**குற்றவழக்குத் தொடுப்பு**: குற்றஞ்சாட்டப்பட்டவரை விசாரிப்பதற்குக் குற்றவியல் நடுவர் மன்றம் மேற்கொள்ளும் நடவடிக்கை அல்லது ஒரு வழக்கை அல்லது சட்ட நடவடிக்கையை நடத்துதல் குற்றவழக்குத் தொடுப்பு (Prosecution) எனப்படும்.

குற்றவழக்குகள் இருவகைப்படும். அவை யாவன: 1) காவல் துறையினர் விசாரித்து நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பும் வழக்கு; 2) காவல் துறையினர் நீதிமன்ற அனுமதியின்றி விசாரிக்கத்தகாத வழக்கு. கொலை, கலகம், தீ வைத்தல், கற்பழித்தல், கொள்ளை, திருட்டு, பயங்கர ஆயுதங்களினால் காயம் விளைவித்தல் போன்றவை முதல் வகையையும், கையூட்டுப் பெறுதல், தேர்தல் தொடர்புடைய (ஆள்மாறாட்டம் நீங்கலாக)குற்றங்கள் போன்றவை இரண்டாம் வகையையும் சாரும்.

குற்ற நிகழ்வுகள் குறித்து ஒருவர் தகவல் அளிக்கும் போது,காவல்துறையினர் குற்றம் நடந்த இடங்களைப் பார்வையிடுவதும், வரைபடம் தயாரிப்பதும் குற்றத்தைப் பார்த்தவர்களைக் கேட்டறிந்து வாக்கு மூலங்களைத் தயாரிப்பதும் அவசியமாகும்.

குற்றம் சாலைவிபத்துகள் தொடர்புடையதாக இருக்கும் போது, விபத்து நடந்த இடம், சாலை அமைப்பு, விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் சக்கரப் பதிவுகள், விபத்துக்குள்ளானவரின் உடல் கிடந்த இடம் வரைபடத்தில் குறிப்பிடப்படுதல் இன்றியமையாதது.இவ்வழக்குகளில் தொடர்புடைய வாகனத்தை முடியுமானால் உடனடியாகக் குற்றம் நடந்த இடத்திலேயே வாகன அதிகாரியைக் கொண்டு தடைக் கருவி,சக்கரங்கள் ஆகியவை என்ன நிலையில் உள்ளன என்பதை ஆய்தல் வேண்டும். சாலையில் எச்சரிக்கை கொடுக்கும் அமைப்பு சரியாக இருந்ததா, இல்லையா என்பதையும்; ஓட்டுநர் உரிமம் பெற்றவரா இல்லையா என்பனவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும். ஓட்டுநர் விபத்துச் சமயத்தில் குடிபோதையில் இருந்ததாகத் தெரிந்தால், அவரை மருத்துவ ஆய்வுக்கு அனுப்புதல்வேண்டும். விபத்து இரவு நேரத்தில் நிகழ்ந்திருக்கும்போது, விபத்து நடந்த இடத்தில் மின்சாரக் கம்பம் இருந்ததா என்பதையும் வாகனத்தில் மின் விளக்குகள் சரியாக உள்ளனவா என்பதையும் பார்த்துப் பதிவு செய்தல் வேண்டும்.

கொலைக் குற்றங்களில் கொலையுண்ட உடலைக் கைப்பற்றி அதன் மீதுள்ள காயங்களைப் பதிவு செய்தல் வேண்டும். மரணத்தின் விளைவை மேலும் நுட்பமாகக் கண்டறிவதற்குக் காவலர் பாதுகாப்புடன் மருத்துவ ஆய்வுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். ஒருவரது மரணம் நஞ்சூட்டலின்பேரில் நடந்திருக்கும் போது, காவல் துறையினர் இறந்தவரின் உடலைக் கைப்பற்றிய இடத்தில் நஞ்சுப்பொருள்கள் வைத்திருந்த புட்டிகள் எவையேனும் கிடந்தால் அதைக் கைப்பற்றுதல் வேண்டும். ஒருவர் நஞ்சூட்டலின் பேரில் தான் இறந்திருக்கிறார் என்பதை மேலும் உறுதிப்படுத்திக் கொள்கின்றவிதத்தில் இறந்தவரின் குடலில் நச்சுப் பொருள்கள் இருப்பதாகக் கருதுகின்ற பகுதியைச் சுத்தமாகச் சேகரித்து வேதியியல் ஆய்வாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

குற்றம், கூட்டுறவு அமைப்புகளில் கையாடல், பொய்யாவணம் புனைதல் தொடர்புடையதாக இருக்கும்போது கூட்டுறவுக் குற்றப்புலனாய்வுத் துறையும், கையூட்டுப் பெறுதல் தொடர்புடையதாக இருக்கும் போது, கையூட்டு ஊழல் தடுப்பு நடவடிக்கைத் துறையும், நீதிமன்றத்தில் பொய்சாட்சி சொல்லுதல், பொய்யாவணங்கள் என்று தெரிந்தே பொய்யாவணத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்காக நீதிமன்றமும் வழக்குத் தொடுக்கும்.

ஆர்.பா.

**குற்றவாளிப் பழங்குடிகள்**: குற்றத் தொழில்களையே வாழ்க்கைத் தொழிலாக ஏற்றுக் கொண்டு வாழும் பழங்குடியினரைக் குற்றவாளிப் பழங்குடிகள் (**Criminal Tribes**) என வரையறை செய்வர். ஆங்கிலேயர் காலத்திய இந்திய அரசாங்கம் கி.பி. 1871-இல் ஒரு சட்டமியற்றி, இந்தியாவில் குற்றத் தொழில் புரிந்து வந்த பழங்குடியினரைப் பட்டியலிட்டு, அவர்களைக் குற்றவாளிப் பழங்குடிகள் என அறிவித்தது. மேலும், அரசு இவர்களின் செயல்களையும் நடைமுறைகளையும் உற்று நோக்கக் காவற்படையினரிடம் கேட்டுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து 1911-இல் வெளியிடப்பட்ட மக்கள் தொகை மதிப்பிலும் குற்றவாளிப் பழங்குடியினர் பட்டியலையும் இவர்களது எண்ணிக்கையினையும் குறிப்பிட்டனர்.

இந்தியாவில் நடைபெறும் குற்றச் செயல்களின் பொருளாதார, சமுதாய நிலை பற்றி எய்க்கர்வால் (**Haickerwal**) குறிப்பிடும்போது, நீண்டகாலமாகக் குற்றத் தொழில்களையே முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழும் இந்தியக் குற்றவாளிப் பழங்குடிகள் ஐரோப்பியக் குற்றவாளி நாடோடிகளைப் போன்று பொதுவாக நாடோடிகளாக இருந்து வருகின்றனர் என்றும், நாடோடி வாழ்க்கை முறையே இவ்வகைச் செயல்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது என்றும் சுட்டுவார்.

இந்தியாவின் குற்றவாளிப் பழங்குடியினரை 1911-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி மூவகையாகப் பிரித்தனர். மரபு வழியில் குற்றத் தொழிலைச் செய்து, இன்று நேர்மையான தொழில் புரிவோர் முதல் வகையினர் என்றும், நிரந்தரக் குடியிருப்புக்களைக் கொண்டு, அப் பகுதியில் புறப் பகட்

டான தொழில்களை மேற்கொண்டு தொலை விடங்களில் சென்று திருடுதல் கொள்ளையடித்தல் முதலான செயல்களைச் செய்யும் குழுவினரைக் இரண்டாம் வகையினர் என்றும், நாடோடிகளாகத் திரிந்து, தமக்கு வாய்ப்பு கிடைக்கும் காலத்தில் திரு டுவதையும் கொள்ளையடித்தலையும் மேற்கொள் ளும் இயல்புடையோரை மூன்றாம் வகையினர் என் றும் வகைப்படுத்தினர். கில்லின் இலீயிசு (Gillin Lewis) இந்தியக் குற்றவாளிப் பழங்குடிகளைக் கிரா மங்களில் நிரந்தரமாக வசிப்பவர் ஒரு வகையினர் என்றும், நாடோடியாகத் திரியும் இனத்தவர் மற் றொரு வகையினர் என்றும் குறிப்பிடுவார்.

உருத்செளலி கேவன் (Ruthshoule Cavan), சோர் டான் (Jordan), கேவன்(T.Cavan) ஆகியோர் குற்றத் தொழிலை மேற் கொண்ட பழங்குடிகள் இந்தியா முழுவதும் காணப்படுகின்றனர் எனக் கூறினர். குர்யே (G.S.Ghurye) இந்தியக் குற்றவாளிப் பழங் குடிகளைக் குறிப்பிடும்போது, இவர்கள் அனைவரும் இந்துக்களின் நம்பிக்கைகள், சமய நெறிகள் முத லானவற்றைப் பின்பற்றுகின்றனர் என்றும் குறிப்பிடு வார். இயல்நிலைக் கொள்கைக் குழுவினரைச் சேர்ந்த இலாம்புரோடோ (Lombrodo), பெர்ரி (Ferri), கார பெல்லோ (Garofello) முதலானோர் குற்றவியல் செயல்கள் மரபு வழியைச் சார்ந்தவை; இவற்றைப் பல சந்ததியினருக்குப் பின்பே அடியோடு மாற்ற இயலும் என்பர். பிசுவாசு (Biwas), கில்லின் (Gillin) முதலான குற்றவியல் வல்லுநர்களும் வரலாற்றியல் வல்லுநருள் ஒருவரான புரூசும் (Bruce) குற்றத் தொழிலின் போக்கிற்கு மிகவும் பின்தங்கிய பொரு ளாதாரமே காரணம் எனக் குறிப்பிடுவர். இந்தியக் குற்றவாளிப் பழங்குடிகளை ஆராய்ந்த சிம்காத்திரி (Y.C.Simhadri) இச்செயல் புரியும் இந்தியப் பழங் குடிகள் வலுவான உடலையும் திடமான மனத்தை யும் பல இரகசியப் பேச்சுக் குறிகளையும் கொண்டு செயற்படுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்திந்திய அளவில் 1949-இல் அமைக்கப் பட்ட ஆய்வுக் குழு இந்தியாவில் 136 குற்றவாளிப் பழங்குடிஇனத்தவர்கள் உள்ளனர் என மதிப்பிட்டது. இவர்களின் எண்ணிக்கை 3.5 மிலியன் என அக் குழுவினர் மதிப்பிட்டனர். அப்போதைய மாநில வகைப்பாட்டின்படி, இவர்கள் உத்தரப் பிரதேசத் தில் 1,668,845-உம், பம்பாயில் 623,809-உம், சென் னையில் 595,490-உம் மைசூரில் 210,321-உம், மத்தி யப் பிரதேசத்தில் 76,722-உம். பஞ்சாபில் 76,564-உம், பீகாரில் 13,311-உம். பெப்சில் (Pepsu) 3,953-உம், மேற்கு வங்கத்தில் 2,598-உம், சௌராட்டிரத்தில் 2,308-உம் இருந்தனர்.

இந்திய அரசு கி.பி. 1871-இல் இயற்றிய குற்ற வாளிப் பழங்குடிகள் சட்டம் இவர்களைக் ஓரிடத் தில் நிலைநிறுத்திக் கடுமையாகக் கண்காணித்துத் திருத்துவதற்காக இயற்றப்பட்டது. பின்னர், 1908-இல் குற்றவாளிப் பழங்குடியினர் குடியேற்றச் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் இச்சட்டத்தின் மூலம் எதிர்பார்த்த விளைவு ஏற்படவில்லை. இதனால் 1911-இல் சில மாறுதல்களுடன் இச் சட்டத் தினைத் திருத்தினர், சுதந்திரத்திற்குப் பின், சில சமூக நல நிறுவனங்களைச் சார்ந்த முன்னோடிகள் குற்றவாளிப் பழங்குடிச் சட்டம் இந்திய மக்களை அவமதிப்பதாக உள்ளது எனக் கூறினர். இதனை யடுத்துப் பல மாநிலங்கள் இச் சட்டத்தைக் கை விட்டன. சென்னை அரசு இதனைச் செயற்படுத்திய முதல் மாநிலமாகும்.

இரட்சணியப் படையினர் இவர்களைத் திருத்து வதில் பெரும் பங்காற்றினர். இருப்பினும், அரசு இவர்களைக் ‘கண்காணிக்கப்பட வேண்டிய பழங்குடி யினர்’ (Notified Tribe) என்றும், பின்னர்க் ‘கண் காணிக்கத் தக்க பழங்குடியினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடிகள்’ (Denotified Tribes) என் றும் சட்டமுறையில் அறிவித்தது. இன்றும் இவ் வகைப் பழங்குடியினரை முன்னாளைய குற்றவாளிப் பழங்குடிகள் (Ex-Criminal Tribes) என்றே பொது வாகக் குறிப்பிடுவர். அண்மைக் காலங்களில், குறிப் பாக ஆந்திர, தமிழக அரசுகள் கண்காணிக்கப் பட வேண்டிய பழங்குடியினர் பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட அனைத்துப் பழங்குடியினரையும் அட்டவணைப் படுத்தப்பட்ட பழங்குடிகளாக ஏற்றுக்கொண்டு, பல நல்வாழ்வுத்திட்டங்களை இவர்களுக்காகச் செய்து வருகின்றன. ஜே.பா.

**துணை நூல்கள்**:

**Ghurye**, **G.S.**, The Aboriginals: So Called and their Future, Popular, Bombay, 1969.

**Majumdar**, **D.N.**, Races and Cultures of India, Asia Publishing House, Bombay, 1961.

**Simhdari**, **Y.C.**, The Ex-Criminal Tribes of India, National. New Delhi, 1979.

## குற்றவியல் அரசு வழக்குரைஞர்

1973-ஆம்ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 24-இன்படி நியமனஞ் செய்யப்பட்ட எவரும் மற்றும் அவரது ஏவலின்படி செயற்படுகின்ற எவரும் குற்றவியல் அரசு வழக்குரைஞர் (Public Prosecutor)

எனப்படுவர். குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்: (1) மைய அரசால் நியமிக்கப்படும் குற்றவியல் அரசு வழக்குரைஞர்; (2) 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 24 (1)-இன் கீழ் மாநில அரசால் நியமிக்கப்படும் குற்றவியல் அரசு வழக்குரைஞர்; 3) குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்; 4) 1973-ஆம் ஆண்டு குற்றவியல்நடைமுறைச் சட்டம் பிரிவு 24 (2)-இன் கீழ்மாநில அரசால் நியமிக்கப்படும் கூடுதல் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள் 5) மைய அரசால் நியமிக்கப்படும் சிறப்புக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்; 6) 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 24 6)-இன் கீழ் மாநில அரசால் நியமிக்கப்படும் சிறப்புக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்; 7) 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 25-இன் கீழ் மாநில அரசு அல்லது மாவட்ட நடுவரால் நியமிக்கப்படும் குற்றவியல் அரசு உதவி வழக்குரைஞர்; 8) குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 பிரிவு 2 (ப)-இன் கீழ்க் குற்றவியல் அரசு வழக்குரைஞர் ஏவலின்படி செயற்படும் குற்றவியல் அரசு வழக்குரைஞர் என எண் வகைப்படுவர்.

**குற்றவியல் வழக்குரைஞர்கள் நியமனம்: உயர்நீதி மன்றக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்:** மைய, மாநில அரசுகள் உயர்நீதிமன்றங்களில் அரசு தரப்பில் வழக்குகளையும், பிற நடவடிக்கைகளையும் நடத்தும் பொருட்டு உரிய உயர்நீதிமன்றங்களுடன் கலந்தாலோசித்து, உயர்நீதிமன்றங்களுக்குரிய குற்றவியல் அரசு வழக்குரைஞர்களை நியமிக்கின்றன.

**அமர்வு நீதிமன்றக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்:** அமர்வு நீதிமன்ற நீதிபதியுடன் மாவட்ட நடுவர் கலந்தாலோசித்துத் தயாரித்த பட்டியலை அடிப்படையாகக்கொண்டு மாவட்டந்தோறும் மாநில அரசு குற்றவியல் அரக வழக்குரைஞர் ஒருவரையும் மற்ற கூடுதல் குற்றவியல் அரசு வழக்குரைஞராக ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களையும் நியமிக்கிறது.

**குற்றவியல் அரசு உதவி வழக்குரைஞர்கள்:** குற்றத்துறை நடுவர்களின் நீதிமன்றங்களின் குற்ற வழக்குகளை நடத்தும் பொருட்டு, மாநில அரசு மாவட்டந்தோறும் குற்றவியல் அரசு வழக்குரைஞர்களை நியமிக்கிறது.

**தகுதி:** உயர்நீதிமன்றத்திற்கும் அமர்வு நீதிமன்றத்திற்கும் குற்றவியல் அரசு வழக்குரைஞராக அல்லது கூடுதல் குற்றவியல் அரசு வழக்குரைஞராக நிறமிக்கப்படுபவர், குறைந்தது ஏழாண்டுகள் வழக்குரைஞராகப் பணியாற்றியிருத்தல் வேண்டும். மேற்சுட்டிய நீதிமன்றங்களில் சிறப்புக் குற்றவியல் அரசு வழக்குரைஞராக நியமிக்கப்படுபவர் பத்து ஆண்டுகளுக்குக் குறைவில்லாமல் வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்திருத்தல் வேண்டும். பு.வே.

**துணை நூல்:**

**Ratanlal & Dhirajlal**, The code of Criminal Procedure, 1973, Wadhwa Sales Corporation Nagpur. 1982.

**குற்றவியல் சார்ந்த பொறுப்பு நிலை:** இந்தியச் சட்டங்களின்படி எல்லாத் தணிக்கையரும் சட்டங்களுக்குட்பட்டு நடக்கவேண்டும். அவ்வாறு சட்டத்தில் உள்ளபடி தணிக்கையர் நடக்கத் தவறினால் ஏற்படுவதுதான் குற்றவியல் சார்ந்த பொறுப்பு (Criminal Liability) எனவும், குற்றவியல் பற்றிய பொறுப்பு எனவும் கூறப்படுகின்றன. குற்றவியல் பொறுப்பு, தணிக்கை செய்யும்போது ஏற்படும் கவனமின்மை (Neglect) சட்டத்திற்குப் புறம்பானது என்று தெரிந்தும் மோசடி, சதிசெய்தல் போன்ற காரணங்களினால் ஏற்படுகிறது. இந்திய நிறுவனச் சட்டம் பிரிவு 628-இன்படி தவறான அறிக்கை தரும் எவருக்கும் இரண்டு ஆண்டுவரை சிறைத் தண்டனையோ, தண்டமோ (Fine), இரண்டும் சேர்த்தோ வழங்கப்படும். இந்த விதி தணிக்கையருக்கும் பொருந்தும்.

ஒரு தணிக்கையாளர் குற்றவியல் சார்ந்த பொறுப்பில் சிக்கியிருந்தால் கீழ்க்காணுபவை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவையாவன: (1) கொடுக்கப்பட்ட தகவலில் (Statement) உண்மை மறைக்கப்பட்டிருத்தல். (2) தணிக்கையர் தெரிந்தே அத் தவற்றைச் செய்திருத்தல். (3) இந்திய நிறுவனச் சட்டத்தின்படி, கொடுக்கப்பட்ட தகவல், இருப்புநிலைக் குறிப்பு (Balance Sheet), ஆவணம் (Document) ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டிருத்தல். கீழ்க்காணும் நிலைகளில் நிறுவனத் தணிக்கையர் குற்றவியல் சார்ந்த பொறுப்புக்கு ஆளாகிறார்:

(1) நிறுவனச் சட்டத்தின்படி தேவைப்படும் பட்டியல், அறிக்கை, தகவலறிக்கை போன்றவை ஆவணத்தில் முக்கியமானவை எனத் தெரிந்தும் அச் செய்தியைச் சேர்க்கத் தவறினாலும், பொய் என்று அறிந்தும் அதைச் சேர்த்திருந்தாலும் அக்குற்றத்திற்காக இரண்டாண்டு சிறைத் தண்டனை அளிக்கப்படலாம்.

(2) பிரிவு 227,229,233-இன்படி பங்குரிமையாளருக்கு (Shareholders) அறிக்கையளிக்கத் தவறினால்

(உள்ளமறிந்து செய்த தவறு) உருபாய் ஆயிரம் வரை தண்டம் செலுத்தவேண்டும்.

(3) ஆவணங்களில் அழித்தல், சிதைத்தல், திருத்தல், பொய்ப்படுத்துதல் (Falsification) பொய்யான நோக்கில் கணக்குப்பதிவேடுகளில் பதிவு செய்தல் போன்ற குற்றத்திற்காக ஏழு ஆண்டுச் சிறைத்தண்டனையும் தண்டமும் விதிக்கப்படலாம்.

(4) பொய்யும் மோசடியும் கொண்ட தகவலறிக்கையை (Prospectus) வெளியிட அனுமதி அளித்திருந்தால் அதற்காக 2,000 முதல் 5,000 ரூபாய் வரை தண்டம் விதிக்கலாம் அல்லது இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கலாம்.

(5) நிறுவன அமைப்பு, தோற்றுவிப்பு, மேலாண்மை ஆகியவற்றில் தணிக்கையருக்குப் பங்கு இருக்குமாயின் அக் குற்றத்திற்காக உரூ. 5,000 வரை தண்டம் விதிக்கலாம்.

(6) நேர்மையற்ற முறையில் முக்கிய செய்திகளை மறைத்தோ தெரிந்தும் அலட்சியமாகவோ பொய்யான வாக்குறுதி அளித்தோ, பிறரைப் பணம் முதலீடு செய்யத் தூண்டும் தணிக்கையருக்கு ஐந்தாண்டு சிறைத்தண்டனையோ பத்தாயிரம் உரூபாய் தண்டமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கலாம்.

இந்திய நிறுவனச் சட்டத்தின்படி குற்றவியல் பொறுப்புத் தணிக்கையர் மாற்றீடோ ஈட்டுறுதியோ (Relief, Indemnity) பெறலாம். (1) குற்றவியல் வழக்குகளில் தணிக்கையருக்குச் சாதகமாகத் தீர்ப்பு இருந்து, அதனால் அவர் குற்ற விடுதலை (Acquittal) அல்லது விடுவிப்புப் (Discharge) பெற்றால், குற்றச் சாட்டுகளைக் காத்துக்கொள்ளும் பொருட்டு அவர் மேற்கொண்ட நிறுவனங்களுக்கு ஈட்டுறுதி அளிக்கலாம். நீதிமன்றம் மாற்றீடு அளித்தாலும் தணிக்கையருக்கு ஈட்டுறுதி வழங்கப்படலாம். இது நிறுவனச் செயல்முறை விதிகளின்படி அமையவேண்டும். (2) தணிக்கையர் நேர்மையானவர் என நீதிமன்றத்திற்குத் தோன்றினால் அவருக்குக் கவனமின்மை, கடமை மீறுகை (Breach of Duty), முறைப்பிழை (Misfeasance) அல்லது பொறுப்புரிமை மீறுகை (Breach of Trust) ஆகியவை காரணமான வழக்குகளுக்கு ஒரு பகுதிக்கு அல்லது முழுமையாக மாற்றீடு வழங்கலாம். (3) தணிக்கையருக்கு ஏற்படும் பொறுப்பை, அவருக்குச் சாதகமாகத்தீர்ப்பு வழங்கப்பட்டாலும் அல்லது குற்ற விடுதலை அல்லது விடுவிப்பு அளிக்கப்பட்டாலும் கம்பெனியின் சொத்துகளிலிருந்து ஈடு கட்டலாம்.

எனவே, தணிக்கையர் குற்றவியல் பொறுப்புச் சாராதவராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மேற்கண்ட தண்டனைகள் மூலம் அவர் தண்டிக்கப் படுவார். பி.இரா.

**துணை நூல்**:

Tandon, B.N., A Handbook of Practical Auditing, S. Chand and Company, New Delhi, 1970.

**குற்றவியல் தத்துவம்**:சட்டங்கள் செய்வது; அவைகளை மீறும்போது எத்தகைய பின்விளைவுகள் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டுவது; குற்றம் ஏன், யாரால், எப்படி, எங்கெங்கே செயப்படுகிறது; குற்றம் புரியும்போது குற்றவாளியின் மனநிலை, குற்றம் புரிகிற சூழ்நிலை, குடும்பச் சூழ்நிலை, குற்றவாளியின் வயது, உடல் அமைப்பு, பால் வேறுபாடு, நாடு, இனம், கல்வி, பண்பாடு, சமயம், மொழி, குடியேற்றம், ஆட்சி அமைப்பு முறை போன்றவைகளை ஆய்வது; குற்றவாளி மேற்கொண்டு குற்றச் செயலில் ஈடுபடாமல் இருக்கத் தண்டனையைக் குறைப்பது; கல்வி புகட்டுவது; அறுவைச் சிகிச்சையைக் கொண்டு குற்றஉணர்வைப் போக்குவது; குற்ற மன்னிப்பு அளிப்பது; குற்றவாளி இளைஞராக இருக்கும் நிலையில் சீர்திருத்தப் பள்ளியில் வைத்திருப்பது; குற்றவியல் நீதிமன்றம், குற்றவியல் வழக்குரைஞர், வழக்கு மன்றப் பணியாளர், காவல் துறை அதிகாரிகள், சிறை அதிகாரிகள் ஆகியோர்கள் கடமைகளையும் பணிக்கூறுகளையும் ஆராய்ந்து அறிந்து குற்றங்களைத் தடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுவது; தண்டனை முறைகள் பற்றி ஆராய்ந்து அறிந்து குற்றங்களைக் குறைப்பது போன்றவை குற்றவியல் தத்துவத்தின் (Criminology) அடிப்படை நோக்கங்களாகும்.

**குற்றவியற் பிரிவுகள்: சமுதாயவியல் சட்டம்**: இதன்கண் குற்றவியற் சட்டம் எந்தெந்தச் சூழ்நிலையில் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதைப் பற்றிய அறிவியல் பகுப்பாராய்ச்சி (Scientific Analysis) அடங்கியுள்ளது. சமுதாயத்தின் வளர்ச்சியுடன் குற்றவியல் சட்டத்தின் வளர்ச்சியையும் இதில் காணலாம். ஆனால், குற்றவியல் நூலில் இதை அதிகமாகச் சேர்த்துக் கொள்வதில்லை.

**குற்றத்திற்கான காரண காரிய ஆராய்ச்சித் துறை**: இது குற்றம் புரிவதற்கான அடிப்படைக் காரணக் கூறுகளைப் பற்றி ஆராய்ந்து அறிவதாகும். குற்றவியல் தத்துவத்தில் இதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

**தண்டனையியல்:** இது, குற்றங்களின் வரையறைகள், விளக்கங்கள், நீதிவிசாரணை, தண்டனை வகைகள், தடுக்கும் முறைகள்,குற்றவாளிகளைச் சீர்திருத்தும் வழிமுறைகள், சிறைச் சீர்திருத்தம் செய்தல், தண்டனையை காலத்திற்கேற்றவாறு மாற்றியமைத்தல் ஆகியவற்றைப் பற்றி ஆராய்ந்து அறிகிறது. குற்றங்களைத் தடுப்பதற்கு இவ்வாராய்ச்சி பெரிதும் பயன்படுகிறது.

**குற்றமும் குற்றவியல் சட்டமும்:** ஒரு காலத்தில், சமுதாயத்திற்கு எதிராக அல்லது சமுதாயத்தினால் விலக்கப்பட்ட அல்லது சமுதாயத்தால் தடுக்கப்பட்ட செயல்களைச் செய்வது குற்றம் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால், இன்று குற்றச்சட்டத்தை மீறுவது தான் குற்றம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஆதலின், குற்றச் சட்டத்தை மீறுகிறவன் குற்றவாளி எனப்படுகிறான். ஆகவே, குற்றச் சட்டத்தால் தடுக்கப்படாதவை அல்லது குற்றச் சட்டத்தில் குறிப்பிடப்படாத செயல்கள், குற்றச்செயல்கள் ஆக மாட்டா. ஒரு செயல் எவ்வளவு பாவச் செயலாக இருந்தாலும் பழித்துக் கூறக்கூடியதாக இருந்தாலும் அறத்திற்கு முரண்பாடாக இருந்தாலும் அது குற்றச் சட்டத்தால் தடைசெய்யப்படாத வரையில் அல்லது கட்டுப்பாடு விதித்துத் தண்டனை வழங்கப் படாத வரையில் குற்றமாகாது. ஆகவே, ஒரு செயல் குற்றமாக (Crime) இருக்க வேண்டும் என்றால், அச் செயல் குற்றச் சட்டத்தினால் தடை செய்யப்பட்டிருக்க வேண்டும். அதை மீறினால் அதற்குரிய தண்டனை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். தடை, தண்டனை ஆகிய இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். வெறும் தடை விதித்துத் தண்டனை இல்லையென்றாலும், தடை இல்லாமல் தண்டனை விதிப்பதாக இருந்தாலும் அவை குற்றங்களாகக் கருதப்படமாட்டா.

**குற்றவியல் சட்ட வரையறை:** குற்றவியல் சட்டத்திற்குப் பின்வருபவைகள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. அவையாவன: 1. அரசியல் தன்மை (Politicality),2. தெளிவாக உரைத்தல் (Specificity), 3. ஒரு சீராக்குதல் (Uniformity), 4. தண்டனை வழங்குதல் (Penal Sanction).

1. **அரசியல் தன்மை:** குற்றவியல் சட்டத்திற்கு அரசியல் தன்மை முக்கிய ஆக்கக்கூறாகும்.

2. **தெளிவாக உரைத்தல்:** சட்டத்தைத் தெளிவாகக் கூறுதல் வேண்டும். உரிமையியல் சட்டத்திலும் குற்றச் சட்டத்திலும் அது தெளிவு படுத்தப்படுதல் வேண்டும். குற்ற மனத்தோடு குற்றச் செயல் புரிவது குற்றமென்று சட்டம் கூறுகிறது. அதற்குத் தண்டனையையும் வழங்குகிறது. குற்ற மனமின்றி ஒருவருக்குத் தீங்கு விளைவிக்கும்போது அவருக்கு இழப்பீடு (Damage) அளித்தல் வேண்டும்.

3. **ஒரு சீராக்குதல்** குற்றச் சட்டத்தின் மற்றொரு முக்கிய அமைப்பு. இதன்மூலம் சாதி, சமயம், மொழி, இனம், பண்பாடு, ஆண், பெண், உயர்ந்தவன், தாழ்ந்தவன், வேண்டியவன், வேண்டாதவன், கற்றவன், கல்லாதவன் என்ற பாகுபாடின்றிக் குற்றம் புரிந்த அனைவருக்கும் குற்றவியல் சட்டம் தண்டனை வழங்குகிறது. ஆனால், நடைமுறையில் பல வேறுபாடுகள் இருந்து வருகின்றன. (எ.கா.) அயல் புணர்ச்சியில் (Adultery) பெண்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை. அவர்களுக்குத் தண்டனையும் அளிக்கப்படுவது இல்லை. அது போன்றே முகம்மதியர்களுக்கு இருதுணைமணம் (Bigamy) என்ற குற்றம் பொருந்துவதில்லை. அவர்கள் நான்கு மனைவிகள் வரை திருமணம் செய்து கொள்ள முகம்மதியச் சட்டம் அனுமதிக்கிறது.

4. **தண்டனை வழங்குதல்:** தண்டனை வழங்குதல் குற்றவியல் சட்டத்தின் முக்கிய கூறாகும். சட்டத்தை மீறும்போது தண்டனை இல்லை என்றால் அது குற்றவியல் சட்டமாக இருக்க முடியாது. தண்டனை சிறைத் தண்டனையாகவோ தண்டத்தொகையாகவோ அல்லதுஇரண்டும் கலந்ததாகவோ இருக்கலாம். தண்டனை என்பது குற்றவாளி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுச் சட்டக் கூறுகளின் அடிப்படையில் தண்டனை அளிக்கப்படல் வேண்டும். குற்றவாளிக்கு எதிராகத் தனிப்பட்டவர் எவரும் எந்த நடவடிக்கையை எடுத்தாலும் அது தண்டனையாகாது. நீதிமன்றத்தின் தீர்ப்புத்தான் குற்றவாளியைக் கட்டுப்படுத்தும். தனியொருவரின் தீர்ப்பு யாரையும் கட்டுப்படுத்தாது.

குற்றவியல் சட்டத்தின் வளர்ச்சியைப் பற்றிப் பல்வேறு கொள்கைகள் கூறுவன பின்வருவனவாம்.

**முதற்கொள்கை:** இக் கொள்கை, தீங்கியற் சட்டத்திலிருந்தே குற்றவியல் சட்டம் தோன்றியிருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. முதலில் தனியொரு மனிதன் பாதிக்கப்பட்டபோது தீங்கியற் சட்டத்தால் பரிகாரம் தேடிக் கொண்டான். பின்னர், குடும்ப உறுப்பினர் பாதிக்கப்பட்டபோது குடும்பம் தலையிட்டு அதற்குப் பரிகாரம் தேடியது. குடும்பம் பாதிக்கப்பட்டபோது குழு தலையிட்டுக் குடும்பத்திற்குத் தேவையான பரிகாரத்தைக் கண்டது. குழுவிற்குத் தீங்கு ஏற்பட்டபோது அந்தச் சமுதாயம் இணைந்து பரிகாரம் காண முற்பட்டது. அந்த முயற்சியின் வளர்ச்சியே குற்றவியல் சட்டமாக உருப்

பெறக் காரணமாக இருந்தது என்று இக் கொள்கை உரைக்கின்றது.

**இரண்டாம் கொள்கை**: மக்களுக்குப் பகுத்தறிவு வளர்ந்ததால், ஒருங்கிணைந்து வாழக் கற்றுக் கொண்டார்கள்; சமுதாயம் வளர்ச்சி அடைந்தது; சமுதாயம் வளர்ச்சியடையவே குற்றவியல் சட்டம் தோன்றியது என்கிறது இக் கொள்கை.

**மூன்றாம் கொள்கை**: இக் கொள்கை, மக்களின் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் எழுந்தது குற்றவியல் சட்டம் என்கிறது. தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வந்த வழக்கங்களை மீறியவர்கள் சமுதாயத்தின் பகைவர்களாகக் கருதப்பட்டு வந்தார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தவும் அவர்கள் செய்த செயல்களுக்குப் பரிகாரம் தேடவும் மக்கள் முயன்றார்கள். அந்த முயற்சியின் அடிப்படையில் சமுதாயத்திற்கு எதிரான செயல்கள் எவையெவை எனத் தொகுக்கப்பட்டன. அந்த விதிமுறைகளை மீறுபவர்கள் குற்றவாளிகள் என்று கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள்.

**நான்காம் கொள்கை**: இக் கொள்கை, சமுதாயத்திலுள்ள போட்டியின் காரணமாகவும், ஒரு குழுவிற்கும் மற்றொரு குழுவிற்கும் ஏற்பட்ட முரண்பாடுகளின் அடிப்படையிலும், ஒரு குழு மற்றொரு குழுவை அடக்கி ஒடுக்க எடுத்த நடவடிக்கையின் அடிப்படையிலும் எழுந்ததே குற்றவியல் சட்டம் என்று உரைக்கின்றது.

**குற்றங்களை வகைப்படுத்தல்**: குற்றங்களின் விளைவுகளைப் பொறுத்துக் குற்றங்கள் மூன்று விதமாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன:

1. அரசாங்கத்திற்கு அல்லது அரசனுக்கு எதிரான குற்றம்,
2. பெருங்குற்றம் (Felony),
3. சிறுகுற்றம்.

இந்தியாவில் குற்றவியல் மேற்கூறிய முறையில் குற்றங்களைப் பகுக்கவில்லை. நடைமுறைச் சட்டப்படி, பிணையில் விடாக் குற்றம் (Non-Bailable offence) பிணையில் விடக்கூடிய குற்றம் (Bailable offence) பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடிய குற்றம் (Cognisable offence) பிடியாணையின் பேரில் கைது செய்யக்கூடிய குற்றம் (Non-cognisable offence) என்றே குற்றங்கள் வரையறை செய்யப்பட்டிருக்கின்றன.

பாங்கர் (Bonger) என்ற குற்றவியல் வல்லுநர் குற்றவாளிகளின் உள்நோக்கத்தைக் கொண்டு குற்றங்களைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்துகின்றார். அவை 1. பொருளாதாரக் குற்றம் (Economic Crime) 2. அரசியல் குற்றம் (Political Crime), 3. பால் உணர்ச்சிக் குற்றம் (Sexual Crimes), 4. பல்வகைக் குற்றங்கள் (Miscellaneous crime) எனப்படும்.

**குற்றவியல் சட்டத்தின் பண்புக் கூறுகள்**: 1. குற்ற மனத்தோடு குற்றச் செயல் இணைந்திருந்தால் தான் குற்றமாகும்; குற்றமனமின்றேல் குற்றச்செயல் இல்லை. 2.இறந்தகாலச் செயல்களைத் தண்டிக்கின்ற தன்மை தண்டனைச் சட்டத்திற்கு கிடையாது. அதாவது இறந்த காலத்தை உட்படுத்துகின்ற குற்றவியற் சட்டங்களை இயற்றுவதற்குச் சட்டமன்றத்துக்கு எப்பொழுதும் உரிமை கிடையாது. 3. செயல் நோக்கம் நல்லதாக இருந்தாலும் குற்றத்தைக் கருதிச் செய்யும்போது, அது குற்றமேயாகும். 4. குற்றங்கள் தண்டனைச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டிருத்தல் வேண்டும். அதை மீறினால் எவ்வளவு தண்டனை என்பதையும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். 5. சில குற்றங்களைத் தண்டிப்பதற்குக் குற்றமனம் தேவையில்லை. (எ.கா.) கலப்பட உணவுப் பொருள்கள் விற்பனை. ச.நா.

**குற்றவியல் நடைமுறைச் சட்டம்**: குற்றவியற் சட்டத்தினை அமுலாக்குவதற்கான ஒரு சீரிய கருவியாகக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் விளங்குகிறது. குற்றங்களை விவரித்தும் அதற்கான தண்டனைகளை விவரித்தும் கூறுகின்ற தண்டனைச் சட்டங்கள் இக்குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (Code. of Criminal Procedure) துணையின்றி இயங்கா. எனவே, இச்சட்டம் மிகுந்த சிறப்புப் பெறுகிறது.

இந்தச் சட்டமானது குற்றங்களைக் கண்டு பிடிக்கவும், குற்றம் விளைவித்திருக்கலாம் என்று ஐயப்படுபவர்களைக் கைது செய்யவும், சான்றுகளைச் சேகரிக்கவும், ஐயத்தின் பேரில் கைது செய்தவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றத்தினை மெய்ப்பிக்கவோ ஆதாரமற்றதாகத் தீர்மானிக்கவோ உதவுகிறது. குற்றம் மெய்ப்பிக்கப்பட்டபோது குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தகுந்த தண்டனையும் இதன் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது.

இச்சட்டத்தின் கீழ் இயங்குகின்ற நிருவாக இயந்திரம், மிகுந்த அதிகாரங்களைப் பெற்று விளங்கினாலும் அதனைத் தவறான முறையில் செயற்படுத்த முடியாத அளவில் அது செப்பம் செய்து அளிக்கப்

பட்டிருக்கின்றது. கீழ்க்காணும் மூன்று காரணங்களினால் இச்சட்டம் மிகுந்த சிறப்புப் பெறுகிறது:

1. இது மற்றெந்தச் சட்டங்களையும் போல் அல்லாது எப்பொழுதும் பெருவாரியானவர்களைக் கட்டுப்படுத்துவதாக அமைகிறது.
2. வேறெந்தச் சட்டத்தையும் விட மனித நேயம் இதன் உள்ளுறைப் பொருளாக அமைந்துள்ளது.
3. இது குற்றவியற் சட்டங்களுக்கு உறுதுணையாய் நின்று விளங்குவதாலும், இதன் தோல்வி குற்றவியற் சட்டங்களைப் பெரிதும் பாதிக்கும் என்ற காரணத்தாலும், இதனைச் செயற்படுத்துவதில் ஏற்படும் தாமதமும், இதனைப் பொருள் கொள்வதில் ஏற்படும் நிலையற்ற தன்மையும் மிகச் சிறப்பாக இயற்றப்பட்ட தண்டனைச் சட்டத்தைக்கூடப் பயனற்றதாக ஆக்கி விடுவதாலும்.

1973-**ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டம்**: இப்போது நமது நாட்டில் நடைமுறையில் இருக்கும் இச்சட்டமானது சம்மு மற்றும் காசுமீரைத் தவிர இந்தியாவின் மற்ற எல்லாப் பகுதிகளிலும் நடைமுறையில் இருக்கிறது. நாகாலாந்தில் நிலவி வரும் வினோதமான சூழ்நிலையின் காரணமாக அங்குள்ள பழங்குடிகள் வாழும் பகுதிகளில் இச்சட்டம் செயற்படுத்தப்படவில்லை.

ஏனைய பகுதிகளில் குற்றவியற் சட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற ஒவ்வொரு புலன் விசாரணையிலும், வழக்கு மன்ற விசாரணையிலும் இச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது. எனினும், சில குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்போது அதன் சிறப்பியல்புகளைக் கருத்தில் கொண்டு இச்சட்டத்தில் இடம் பெறாத சில நடைமுறை விதிகளைப் பயன்படுத்துதலும் உண்டு.

இச்சட்டமானது நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்டது என்ற போதிலும் ஒரு மாநிலத்தின் சட்டமன்றம், இதில் அம்மாநிலத்தின் தேவைக்கு ஏற்றவாறு மாற்றங்களை ஏற்படுத்தலாம். குற்ற நடைமுறைச் சட்டமானது ஒருங்கியல் அதிகாரப் பட்டியலில் இடம் பெறுவதால் இது இயலுவதாகிறது.

குற்றவியற் சட்டங்களை நிருவகித்திடும் நிருவாக எந்திரத்தின் ஆள்வரை எல்லைகளையும் இது விளக்குகிறது. அதன்படி ஒரு மாநிலமானது ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட குற்றவியற் பிரிவினைக் கொண்டோ விளங்கும். ஒவ்வொரு குற்றவியற் பிரிவும் (Sessions) ஒரு மாவட்டத்தையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டத்தையோ ஆள்வரையாகக் கொள்ளும். எத்தனை குற்றவியற் பிரிவுகள் ஒரு மாநிலத்தில் அமைய வேண்டும் என்பதை மாநில அரசு அதற்கான உயர் நீதி மன்றத்திடம் கலந்து ஆலோசித்து முடிவு செய்யும்.

பெருநகர்களில் குற்றவியல் நிருவாகத்தின் பெருகிவரும் தேவைகளைக் கருத்திற் கொண்டு பெருநகரக் குற்றவியல் நிருவாகம் தனிக்குற்றவியற் பிரிவாக இயங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. பத்து இலட்சம் பேர்களுக்கு மேல் வசிக்கின்ற நகர்களைப் பெருநகர்கள் என இச்சட்டம் விவரிக்கிறது. மாநில அரசானது பெருநகர்க் குற்றவியல் நிருவாகத்தின் ஆள்வரையைக் குறைக்கவோ கூட்டவோ அதிகாரம் பெற்று விளங்குகிறது.

**பிடிஆணை வேண்டும், வேண்டாக் குற்றங்கள்**: இச்சட்டம் குற்றங்களை இரண்டு வகையாகப் பிரிக்கிறது. அவையாவன: அ. பிடிஆணை வேண்டாக் குற்றங்கள், ஆ, பிடிஆணை வேண்டும் குற்றங்கள்.

எவ்வகைக் குற்றங்களுக்காக ஒருகாவல் துறை அதிகாரி இச்சட்டத்தின் முதற் பட்டியலின் படியோ வேறு சட்டத்தின்படியோ பிடி ஆணை பெறாது கைது செய்யமுடியுமோ அவ்வகைக் குற்றங்களைப் பிடிஆணை வேண்டாக் குற்றங்கள் என்றும், எவ்வகைக் குற்றங்களுக்கெல்லாம் காவல்துறை அதிகாரி பிடிஆணை பெற்றுத்தான் கைது செய்யவேண்டுமோ அவைகளைப் பிடிஆணை வேண்டும் குற்றங்கள் என்றும் இச்சட்டம் கூறுகிறது.

பிடிஆணை வேண்டும் குற்றங்களையும் வேண்டாக் குற்றங்களையும் தேர்வு செய்து அறிந்து கொள்ளுமுகமாக இச்சட்டம் யாதொரு விதியையும் தரவில்லை. மாறாக இன்னின்ன குற்றங்களுக்குப் பிடியாணை வேண்டும்; இன்னின்ன குற்றங்களுக்குத் தேவையில்லை என்பதை இச்சட்டத்தின் முதலாம் அட்டவணை காட்டுகிறது.

பல்வேறு நோக்கங்களைக் கருத்திற் கொண்டு குற்றங்கள் இவ்வாறு வகைப்படுத்தப்பட்டாலும் கடுமையான குற்றங்கள் அனைத்தும் பிடியாணை வேண்டாக் குற்றங்களின் கீழ்த்தரப்பட்டிருக்கின்றன. அதனால் பிடிஆணை வேண்டாக் குற்றங்களைக் கண்டுபிடித்து அவற்றிற்குத் தண்டனை வாங்கித் தருவது காவல்துறை அதிகாரிகளின் சட்டப்படியான கடமை ஆகிறது. பிடிஆணை வேண்டும் குற்றங்களில் நீதிமன்ற நடுவரின் ஆணையின் பேரிலேயே 'காவல் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

**பிணைவிடு, பிணைவிடாக் குற்றங்கள்**: குற்றவியல் நடைமுறைச் சட்டம் குற்றங்களைப் பிணை

விடு குற்றங்களென்றும் பிணைவிடாக் குற்றங்கள் என்றும் இருவகைப்படுத்துகிறது. இச்சட்டத்தின் 2 (அ) பிரிவு பிணைவிடு குற்றங்கள் என்றால் என்ன என்பதை விவரிக்கின்றது. அதன்படி 1 ஆம் பட்டிய லில் பிணைவிடு குற்றங்கள் என்று காட்டப்பட்டவை களும் வேறு சட்டங்களின்படி பிணைவிடத் தகுந்த குற்றங்களும் இவ்வகையைச் சாரும். பட்டியலில் இடம் பெறா ஏனைய குற்றங்கள் பிணைவிடாக் குற்றத்தின் பாற்படும். 1 ஆம் பட்டியலின்படி பட்டி யலில் இடம் பெறாத, ஆனால் 3 ஆண்டுகளும் அதற்கு மேலும் தண்டனை பெறக்கூடிய குற்றங் கள் பிணைவிடாக் குற்றங்கள் ஆகின்றன.

குற்றம் சாட்டப்பட்டுக் கைதாகிய ஒருவர் பிணை விடு குற்றம் ஒன்றினைச் செய்ததாகக் கைதாகியிருந் தால் பிணை பெறுவது அவரது உரிமை ஆகிறது. ஆனால் பிணைவிடாக் குற்றம் ஒன்றிற்காகக் கைது செய்யப்பட்டவர் பிணையை உரிமையாகக் கேட்டுப் பெறமுடியாது. பிணை தரும் அதிகாரம் பெற்றவர் கள் விரும்பினால் மட்டுமே பிணை பெற முடியும்.

**பிடி ஆணை வழக்கும் அழைப்பாணை வழக்கும்**: வழக்குகளின் தன்மைக்கு ஏற்ப வழக்குகளையும் இச் சட்டம் இருவகையாகப் பிரிக்கிறது. அவையாவன: அ. பிடி ஆணை வழக்கு ஆ. அழைப்பாணை வழக்கு.

மரண தண்டனையோ ஆயுட் சிறைத் தண் டனையோ இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனையோ வழங்கும்படி அமையக் கூடிய அனைத்து வழக்குகளும் பிடியாணை வழக்கு எனப் பெயர் பெறும். ஏனைய வழக்குகள் அனைத்தும் அழைப்பாணை வழக்குகள் ஆகும். பிடியாணை வழக்குகளிலும் அழைப்பாணை வழக்குகளிலும் வெவ் வேறு விதமான விசாரணை முறைகள் பின்பற்றப்படு வதனால் இத்தகைய பாகுபாடு தேவையாகிறது. மேலும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு முதலில் பிடி யாணை அனுப்ப வேண்டுமா? அழைப்பாணை அனுப்ப வேண்டுமா? என்பது ஒரு வழக்கு பிடி யாணை வழக்கா, அழைப்பாணை வழக்கா என்று காண்பதன் மூலமே தீர்மானிக்கப்படுகிறது.

**இச்சட்டத்தின் கீழ்ச் செயல்புரிவோர்**: காவலர், அரசு குற்றவியல் வழக்குரைஞர், குற்றம் சாட்டப் பட்டவரின் வழக்குரைஞர், குற்றவியல் நடுவர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், சிறைச்சாலை அதிகாரி கள் மற்றும் சீர்திருத்தப் பணியாளர்கள் போன்றோர் களே இச்சட்டத்தின் கீழ்ச் செயல் புரிவோர்களாகக் காட்டப்படுகின்றனர்.

**சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**: குற்றவியல் நடை முறைச் சட்டம், குற்றவியற் சட்டத்தை நிருவகிக்கும் நிருவாக எந்திரத்தை உருவாக்குவது மட்டுமன்றிக் குற்றம் சாட்டப் பட்டவர்கள் இயற்கை நீதியின் படி முழுமையானதும் நியாயமானதுமான விசார ணைக்கு உட்படுத்தப்படுவதற்கான உத்தரவாதத் தையும் அளிக்கிறது. எனவே, இதில் அடங்கியுள்ள விசாரணைத் தொடர்பான நடை முறைகளே இச்சட் டத்தின் சிறப்பு அம்சமாக மிளிர்கின்றன.

விசாரணைக்கு முன்னே நிகழும் குற்ற நிகழ்வு குறித்த செய்தி, அதைத் தொடர்ந்து குற்றம் சாட் டப்பட்டவர்களென ஐயப்பட்டவர்களைக் கண்டு பிடித்தல், அவர்களைக் கைதுசெய்தல், அவர்கள் மீது குற்றம் சுமத்து முகமாகச் சான்றுகளைச் சேக ரித்தல் போன்ற அத்தனையும் இதில் இடம் பெறும் விதிகளின் படியே நடத்தப்படுகின்றன.

இச்சட்டத்தின்படி விசாரணை என்பது, குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றத்திற்குப் பொறுப்புடையவர் அல்லது பொறுப்புடையவர் அல்லர் என்ற தீர்வு நிலையில் முடிவு பெறும். எனினும், விசாரணை நீதி மன்றத்தின் தீர்ப்பில் தவறு ஏதும் இருக்குமேயானால் அதனை அதற்கு மேல் நிலையில் அமைந்திருக்கும் நீதிமன்றங்கள் சீராய்வு செய்யலாம். எனவே சீராய்வு குறித்த விதிகளையும் இச்சட்டத்தில் காணலாம்.

இச்சட்டத்தின்படி தரப்பட்ட எந்த ஒரு தீர்ப் பையும் நிறைவேற்ற ஆங்காங்கே விதிகள் காட்டப் படுகின்றன. அவ்விதிகளின் படியே தீர்ப்புகள் நிறை வேற்றப்பட வேண்டும்.

இது தவிர, குற்றம் நிகழ்வதைத் தடுப்பதற்கான சிலவிதிகளும், பொதுத் தொல்லைகளை அகற்றுவதற் கான விதிகளும் இதில் இடம் பெறுகின்றன.

**சீவனாம்சம்**: மனைவி, மக்கள் முறையே தம் கணவனாலும் தந்தையாலும் கைவிடப்பட்ட பொழுதும், பெற்றோர்கள் தம் மக்களால் கைவிடப் பட்ட பொழுதும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து சீவனாம்சம் பெறுவதற்கான விதிமுறைகளும் இச் சட்டத்தில் இடம்பெறுகின்றன. ம.கா.

## குற்றாலக் குறவஞ்சி

**குற்றாலக் குறவஞ்சி**: இந்நூல் திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவரால் எழுதப்பெற்ற நாடக நூலாகும். இந்நூல் 'குறவஞ்சி நாடகம்' என் றும் பெயர் பெறுகின்றது. இந்நூலாசிரியர் திருநெல் வேலி மாவட்டத்தில் தென்காசிக்கு அண்மையிலுள்ள மேலகரம் என்னும் ஊரில் பிறந்தவர். இந்நூல் முத்து விசய ரங்க சொக்கநாத நாயக்கர் காலத்துக் குற் றாலநாதர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது.

இந்நூல் எளிய கதைப் போக்கினைக் கொண்டது. குற்றாலநாதரின் திருவுலா எழுச்சியைக் குறித்து முன்னரே கட்டியங்காரன் கூறுகின்றான். திருவுலா தொடங்கிற்று; வானவரும் முனிவரும் தொடர்ந்தனர்; பல்லியங்கள் இசைத்தன; மூவர் தமிழும் நான்மறைகளும் முழங்கின; 'ஐவர் நாயகன் வந்தான்; அமரர் நாயகன் வந்தான்; தெய்வ நாயகன் வந்தான்' என்று அடியவர்கள் ஆரவாரஞ் செய்யக் குற்றாலநாதர் உலா வருகின்றார். திருவுலாக் காண எழுபருவ மகளிரும் எழுந்துவந்தனர். இறைவனுடைய வடிவழகில் ஈடுபட்ட அப்பெண்கள் தம் சிந்தை பறிபோக உலாவைத் தொடர்ந்தனர். பந்தாடிக் கொண்டிருந்த வசந்தவல்லி என்பாளும் திருவுலாக் காண எழுந்தோடி வந்தாள். இறைவனின் திருமேனி அழகு கண்டு தன் தோழியிடம், 'இச்சித்தர் யார்?' என்றாள். அவளும் 'இவர் திரிகூடநாதர்; குறும்பலா ஈசர்' என்றாள். இறைவனின் அருங் குணங்களைக் கேள்வியுற்ற வசந்தவல்லி அவர்மீது காதல் கொண்டாள். தன் தோழியைக் குற்றாலநாதரிடம் தூதுவிட்டாள். தூது சென்றவள் திரும்பும் முன்னே, வசந்தவல்லி, கூடலிழைத்துக் குழைந்து உருகினாள். இந்நிலையில்தான் குறவஞ்சியாகிய குறத்தி வந்தாள். வசந்தவல்லி குறத்தியை அழைத்துக் குறிகேட்கலானாள். குறத்தியும், 'அம்மே! திரிகூடநாதர்மேல் காதல் கொண்டாய்' என்றாள். வசந்தவல்லியும் மகிழ்ந்தவளாய்க் குறத்திக்குப் பரிசில்கள் பல தந்து அனுப்பினாள். அந்தக் குறத்தியின் பெயர் சிங்கி. அவளைத் தேடிக்கொண்டு அவள் கணவனாகிய குறவன் (சிங்கன்) புறப்பட்டான். சிங்கியைக் காணாது தவித்தவனாய்த் தன் தோழன் நூவனிடம் அவள் பற்றி வினவ, அவனும் திருக்குற்றாலத் தெருவில் சென்று தேடுமாறு கூறினான். சிங்கனும் குற்றாலத் திருவீதியில் அவளைக் கண்டு உரையாடி மகிழ்ந்தான். பின்னர் இருவரும் குற்றால நாதரைப் பாடிப் பரவி இன்பம் அடைந்தனர். இவ்வாறு இந் நாடகக் கதை முடிகிறது.

குற்றாலக் குறவஞ்சி சைவ சமய நூல். நூலாசிரியரும் சைவ சமயத்தைச் சார்ந்தவர். எனவே, இந் நூலாசிரியர் அச்சமயத்தின்பாற் கொண்டுள்ள ஈடுபாடு நூலில் சிறந்த இடத்தைப் பெறுகின்றது. குறவஞ்சித் தமிழைப் பாட, 'ஐந்து கைவலான்' காவல் அமைக என அவர் பாடியுள்ள கடவுள் வணக்கப் பாடற் கருத்துகளும், குற்றாலநாதரை அவர் பலபடப் பாராட்டிப் பாடிப் பரவும் பாங்கும் அவர்தம் சமயப் பற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். சிவ பெருமான் தோன்றி எழுந்துள்ள பலாமரத்தின் கிளைகளையும், அம்மரத்தின் பிற உறுப்புகளையும் நான்கு மறைகளாகவும், சிவலிங்கத்தின் தோற்றமாகவும் கண்டு மகிழும் ஆசிரியர்தம் சமயப் பற்று போற்றுதற்குரியது. மேலும், இந்நூலாசிரியர் சைவ சமயக் குரவர்கள் நால்வர்பாலும் நீங்காப் பற்றுடையவர் என்பதை இந்நூலால் அறியலாம். சமய குரவர் நால்வர்தம் அருட்செயல்களைக் கடவுள் வணக்கப் பாடல்களுள் பாடி மகிழ்வர். சிவபெருமானைத் 'தொண்டாடும் சுந்தரருக்குத் தோழர்' என்று கூறிச் செல்வர். குற்றாலநாதர் நாள் வழி பாட்டில் 'மூவர் சொன்ன திருப்பாட்டு' இடம்பெறுவதை எடுத்துக்கூறுவர். மூவர்கள் வடிசெய் தமிழ்த் திரு மறைகள்' பாடிவரக் குற்றாலநாதர் உலா வருவதை நினைவு கூர்வர். மதுரையைக் கைப்பற்றிச் சைவத்தை அகற்ற நினைத்த சமணர்களைக் கழுமரத்தில் ஏற்றுதற்கு வையை ஆற்றில் தாம் எழுதிய தேவாரத் திருவேட்டை எதிர்த்துப் போகும்படி செய்த ஞானசம்பந்தருக்கு அக்காலத்தில் இடப்பட்ட முத்துப்பந்தர் வந்தாற்போல வெண்ணிறக் கொக்குக் கூட்டங்கள் வந்தன என்று ஞானசம்பந்தரின் சைவ சமயச் சேவையைப் பாராட்டுவர். சிவபெருமானைத் 'தருகாழி மகனார்க்குத் தகப்பனார்' எனக்கூறி ஞான சம்பந்தர் முருகன் அவதாரம் என்னும் கொள்கையைத் தாமும் ஏற்றுக்கொள்வர்.

குற்றாலக் குறவஞ்சி வரலாற்றுச் செய்திகளைத் தன்னுட் கொண்ட நூலாகும். இந்நூலாசிரியரைப் போற்றிப் பாதுகாத்த கிளுவைச்சின்னணைஞ் சாத்தேவன் என்பானும் குற்றாலநாதர்மீது அந்தாதி பாடிய பிச்சைப் பிள்ளையும், குற்றாலத் திருக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகளும், பற்பல கட்டளைகளுக்காகக் கோயிலுக்கு நன்செய் நிலங்களை விட்டுக் கொடுத்த சான்றோர் பலருடைய பெயர்களும் இந் நூலில் இடம்பெறுகின்றன.

குற்றாலக் குறவஞ்சியில் குறிசொல்லும் குறத்தி வாயிலாக ஆசிரியர் குற்றால மலைவளம், நாட்டு வளம், தலப்பெருமை ஆகியவற்றை எடுத்துக் கூறுவர். குற்றாலக் குறவஞ்சி ஓசை நயம், சொல்லழகு, பொருளழகு நிறைந்த கருத்துக் கருவூலம். 'இருண்ட மேகஞ்சுற்றிச் சுருண்டு சுழியெறியுங் கொண்டையாள், குழை ஏறி யாடிநெஞ்சைச் சூறை யாடும்விழிக் கெண்டையாள்' என்று வசந்தவல்லியின் அழகின் சிறப்பும், 'செங்கையில் வண்டு கலின் கலின் என்று செயம்செயம் என்றாட, இடை சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு தண்டை கலந்தாட' என்று வசந்தவல்லி பந்தாடும் பாங்கும் சிறந்த ஓசை நயத் தோடு எடுத்துக்கூறப்பட்டுள்ளன. 'அஞ்சு தலைக்குள் ஆறுதலை வைத்தார் எனது மனத்தில் அஞ்சு தலைக் கோர் ஆறுதலை வையார்' என்று வசந்தவல்லி வருந்திக் கூறும் பகுதியில் சொல்லழகோடு கூடிய

முரண் அழகைக் காண முடிகின்றது. மேலும், இந் நூலில் சிறந்த உவமைகளும், அணிவகைகளும், குறச் சாதியினரின் பழக்கவழக்கங்களும், அவர்தம் சொல் லாட்சிகளும் இடம்பெற்று நூல் வளம்பெறத் துணைசெய்கின்றன. இரா.செ.

**குற்றாலம்**: தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட் டத்தில் உள்ள ஒரு சிறிய ஊர். தேவாரப் பாடல்கள் பெற்ற ஒரு தலம். அப்பர், சம்பந்தர், சுந்தரமூர்த்தி ஆகிய மூன்று தேவார ஆசிரியர்களும் இவ்வூரில் உள்ள சிவபெருமானைப் போற்றிப் பாடியுள்ளனர். அக்காலத்தில் இவ்வூர் திருத்துருத்தி எனச் சொல்லப் பட்டது. மிருதுமுகுளகுசாம்பிகையுடன் கூடிய உக்த வேதீசுவரப் பெருமானின் திருக்கோயில் இங்கு 5 நிலைக் கோபுரத்துடன் காட்சியளிக்கிறது. பெரிய புராணத்தில் சேக்கிழார், சுந்தரமூர்த்தி நாயனார் தாம் கொடுத்த வாக்கை மீறியபடியால் உடல் நோய் வந்துறப் பெற்றார் என்று குறிப்பிடுகிறார். அந்நோய் இக்குற்றாலத்தில் மறைந்தது என்றும் கருதப்படுகிறது. இவ்வூரிலிருந்து ஏறக்குறைய 9கி.மீ. தொலைவில் திருமயிலாடுதுறை என்னும் ஊர் உள் ளது. குற்றாலத்தில் காவிரி ஆறு ஓடுவதால் நிலம் செழிப்புற்றுள்ளது. இது குத்தாலம் எனவும் குறிக்கப் படுகிறது.



குற்றாலம் நீர்வீழ்ச்சி

**குற்றாலம்**[2]: குற்றாலம் அல்லது திருக்குற்றா லம் எனப்படும் மற்றொரு ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இதைச் சுற்றியுள்ள வட்டத் திற்குத் தென்காசி என்று பெயர். இங்கு உள்ள நீர்வீழ்ச்சிகள் காரணமாக, மக்கள் கோடைக் காலத் தில் வெளியூர்களிலிருந்து இங்கு வந்து தங்குகின்றனர். மேற்கு மலைத் தொடரில் இது அமைந்துள்ளது. இயற்கைக்காட்சி, காண்போர் உள்ளத்தை மகிழ் விக்கத் தக்கதாக உள்ளது. சித்திராநதி எனப்படும் சிற்றாறு, குற்றால மலையைக் கடந்து பல நீர்வீழ்ச்சி களாக விழுந்து பிறகு ஒன்று கூடுகிற காட்சி மிகவும் களிப்பு ஊட்டுவதாக உள்ளது. இந்த ஆறு 200 அடி உயரத்திலிருந்து கீழே விழுவதைப் பார்க்கும்பொழுது பாபிலோனியாவின் பண்டைய தொங்குந்தோட்டம் நினைவுக்கு வரக்கூடும். குற்றால அருவியில் குளிப் பதற்காகவே பலர் இங்கு வருகின்றனர். குற்றால நாதர் கோயிலும் மக்களை மிகவும் ஈர்க்கிறது. மலைப்பகுதியில், கிராம்பு,ஏலக்காய் முதலிய பொருள் கள் விளைகின்றன. குற்றால அருவியைத்தவிர, ஐந் தருவி, சண்பகஅருவி, தேனருவி முதலிய பெயர்களை யுடைய வேறுசில அருவிகளும் உண்டு. குற்றாலத்தல புராணம், குற்றாலக்குறவஞ்சி ஆகிய இரண்டையும் திரிகூடராசப்ப கவிராயர் இயற்றியுள்ளார். இவை யாவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய சிறப்பு வாய்ந்தவை. குற்றாலநாதர் கோயிலில் காணப்படும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள், பாண்டிய அரசர்களைக் குறிப்பிடுகின்றன. பண்டைய பெருமை யும் பார்க்க இனிய காட்சிகளும் நிறைந்த இத்திருக் குற்றாலம் ஒரு தனிநகர அமைப்பாக நிலவுகிறது. தெ.பா.

**குறட்டி வரதையன்**: இவர் கல்வெட்டு கூறும் புலவர். வடஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் அமைந்துள்ள திருவலம் என்ற ஊரில் உள்ள ஈசுவரர்கோயிலின் கருவறைச் சுவரில் உள்ள கல்வெட்டு குறட்டி வரதையன் பற்றிக் கூறுகிறது. திருத்தீக்காலி வல்லத்துக் கோயில் உண்ணாழிகை அதிகாரிகள் குறட்டி வரதையன் என்ற புலவர் திரு வலம் கோயில் சிவபெருமான் மீது பாடிய திருவல்லை யந்தாதிக்காக 100 குழி நிலத்தை இறையிலியாக அளித்தனர். இச்செய்தியே இக்கல்வெட்டில் கூறப் பட்டது. இன்றைய திருவலம், கல்வெட்டில் திருத்தீக் காலி வல்லம் அல்லது வாணபுரம் என்று கூறப்பட் டுள்ளது. குறட்டி வரதையன் கி.பி. 17, 18-ஆம் நூற் றாண்டைச் சார்ந்தவராகலாம். இப்புலவருக்கு இவ்

விறையிலி நிலத்தைப் பிரமாதீச ஆண்டு ஐப்பசித் திங்கள் 22-ஆம் நாள் பரிசாக அளித்துள்ளனர். குறட்டி என்பது இவரது ஊரின் பெயர். இவ்வூர் தென் ஆர்க்காடு மாவட்டம் திருத்தலூர்ப் பக்கத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது. சு.இரா.

**குறத்திப்பாட்டு** தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. தலைவியால் காதலிக்கப்பட்ட தலைவன் இன்னவன் என்றும், அவனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் தலைவி அடைதல் உறுதி என்றும் குறத்தி குறி தேர்ந்து சொல்வதாகப் பாடப்படுவதற்குக் குறத்திப்பாட்டு என்பது பெயர். இப்பாடல் பெரும்பாலும் குறத்தி தன் குடிப்பெருமை கூறி, முறத்திலிட்ட நெல்லை எண்ணிப் பார்த்துக் குறி கூறும் பாங்கிலேயே அமைந்து விளங்கும். இதன் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியலும் தொன்னூல் விளக்கமும் விரித்துக் கூறுகின்றன. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலத்திலும் நிகழ்ந்தனவற்றையும் நிகழ்வனவற்றையும் அறிந்து திறமையாகக் குறத்தி குறி உரைத்த வகையினைப் பாடுவது குறத்திப்பாட்டு, என்று பன்னிருபாட்டியல் இதன் இலக்கணத்தை வரையறுக்கிறது. தொன்னூல் விளக்கமும் இவ்வகையிலேயே இப்பாட்டின் இலக்கணத்தைக் கூறுகிறது. இதனைப் பின்பற்றிக் குறம் என்னும் இலக்கியமும், குறவஞ்சி, குளுவநாடகம் போன்ற பிற இலக்கிய வகைகளும் தோன்றியுள்ளன. இக்குறத்திப் பாட்டைப் பின்பற்றி முழுக்க முழுக்கக் குறவர்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும், சிவபெருமான் பெருமைகளைக் கூறுவதாகவும் முதலில் எழுந்த நூல் திரிகூடராசப்ப கவிராயர் எழுதிய குற்றாலக் குறவஞ்சியாகும். இந்நூலைப் பின்பற்றிச் சரபேந்திரபூபால குறவஞ்சி நாடகம், கும்பேசர் குறவஞ்சி நாடகம், அர்த்தநாரீசுவரக் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி என்பவை தோன்றின. இக் குறவஞ்சி இலக்கியங்கள் குறவஞ்சி நாடகங்கள் என்று சொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். குற்றாலக் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி போன்றவை இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளன. சரபேந்திரபூபால குறவஞ்சி தஞ்சையில் அரசாண்ட சரபோசி மன்னர்மீது பாடப்பட்டுள்ளது. எனவே, கடவுளரையோ வள்ளல்களையோ செல்வர்களையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்படும் மரபு குறவஞ்சி இலக்கியங்களுக்கும் உண்டு என்பது புலப்படும். இக்குறவஞ்சி இலக்கியங்கள் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. ஆசிரியப்பா, வெண்பா, தரவுகொச்சகம், கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் போன்ற பாவகைகளோடு சிந்து, கீர்த்தனை, கண்ணிகள் போன்ற இசைப்பாடல்களும் விரவி இவ்விலக்கியங்கள் ஆக்கப்பட்டுள்ளன. இவ்விலக்கியத்தின் கூறுகள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கிய அகச்செய்யுள்களிலும் விரவிக் கிடக்கின்றன. ச.செ.

**குறம்**: குறிகூறும் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் எழுந்த சிற்றிலக்கிய வகைகளுள் குறம் ஒன்றாகும்.

சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணங் கூறும் பாட்டியல் நூல்கள் 'குறம்' என்னும் சிற்றிலக்கிய வகைக்கு இலக்கணம் கூறவில்லை. பன்னிரு பாட்டியலில் 'குறத்திப்பாட்டு' என்னும் சிற்றிலக்கிய வகையின் இலக்கணமாகப் பின்வரும் இரண்டு நூற்பாக்கள் அமைந்துள்ளன 1. 'இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும், திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே' 2. 'அதுவும் அதனோ ரற்றே'. முக்காலமும் நோக்கிக் குறி கூறுதலே குறத்திப்பாட்டு என்பதும், முன்னர்க் கூறிய உழத்திப் பாட்டைப் போன்று, குறத்திப்பாட்டும் பத்துப் பாடல்களால் அமைந்திருக்கும் என்பதும் இந் நூற்பாக்களால் பெறப்படுகின்றன. குறவஞ்சி இலக்கியம் தோன்றியதற்குப் பின் எழுந்த தொன்னூல் விளக்கம் குறத்திப்பாட்டின் இலக்கணமாகக் குறவஞ்சி நிகழ்ச்சிகளையே தொகுத்துரைக்கிறது.

தொல்காப்பியர் கூறும் வனப்பு எட்டனுள் ஒன்றான விருந்து என்பதன் இலக்கணம், 'விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' (தொல்.செய்.நூ.231) என்பதாகும். 'விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறி போய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது' என்னும் இந்நூற்பாவின் கருத்து, பல சிற்றிலக்கிய வகைகளுக்கு அடிகோலியது. இவ்வகையில், 'கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும், ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும் (தொல்.களவியல்.நூ. 25:3–4) எனத் தொல்காப்பியம் கூறும் குறிவகையினை அடியொற்றிப் பல புதிய கூறுகளுடன் குறம், குறவஞ்சி ஆகிய இலக்கியங்கள் தோன்றின.

களவுக் காலத்துத் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை கண்டு செவிலித்தாயும், நற்றாயும் கட்டு வைத்தும் கழங்கு வைத்தும், வெறியாட்டு எடுத்தும் குறி பார்த்த செய்தியை மேற்கூறிய களவியல் நூற்பா அடிகள் உணர்த்தி நிற்கின்றன.

பின்னர்த் தோன்றிய கலம்பகங்களில் 'குறம்' என்னும் ஓர் உறுப்பு இடம்பெறலாயிற்று. குறத்திதம் குறிச்சிறப்பு, குடிச்சிறப்பு, குறி கூறும் முறை, நன்னிமித்தம் பார்த்தல் ஆகியவற்றுள் ஒன்றோ

இரண்டோ கூறித் தலைவன் விரைவில் வந்து சேர்வான் என்று கூறுவதாகக் கலம்பகக் குறம் உறுப்பு அமைந்துள்ளது.

பிற்காலத்தில் குறம் என்பது தனி இலக்கிய வகையாக வளர்ந்தது. முதலில் தோன்றிய குறம் மதுரை மீனாட்சியம்மை குறம். இதில் சங்க இலக்கிய அகவன் மகள் தலைவனது மலையைப் பற்றிப் பாடுவதுபோல் குறத்தி தன் மலைவளம் பாடுவதாக அமைத்துள்ளார் புலவர். மேலும், அவர் நெற்குறி, நன்னிமித்தம் ஆகிய சங்க இலக்கியச் செய்திகளோடு கைக்குறி, மெய்க்குறி பார்த்தல், குடியியல்பு உரைத்தல் ஆகிய கலம்பகச் செய்திகளை இணைத்து, 'இறப்பு நிகழ்வு எதிர்வு எனும் முக்காலமும் திறப்பட உரைப்பது குறத்திப்பாட்டே' என்னும் குறத்திப் பாட்டின் இலக்கணத்தைப் பின்பற்றி, ஒரு புதிய இலக்கிய வகையைப் படைத்துள்ளார். குறிகூறும் வழக்கம் சங்ககாலம் முதலாகப் படிப்படியாக வளர்ச்சி பெற்று, கலம்பகத்தில் குறம் என்னும் உறுப்பாக இடம்பெற்று, பின்னர்க் குறம் என்னும் தனியொரு இலக்கிய வகையாக மலர்ந்து குறவஞ்சியைத் தோற்றுவித்தது.

இதுவரை ஏட்டுச் சுவடியாகவும், காகிதப் பிரதியாகவும் நூல் வடிவாகவும் பிற வகைகளிலும் தெரிய வரும் குற இலக்கியங்களாவன: 1. மதுரை மீனாட்சியம்மை குறம், 2. தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறம், 3. திருக்குருகூர் மகிழ் மாறன் பவனிக்குறம், 4. தர்மாம்பாள் குறம், 5. வேதாந்தக் குறம், 6. அகண்ட வெளிக்குறம், 7. துரோபதை குறம்' 8. மின்னொளியாள் குறம், 9. வித்துவான் குறம், 10. இலக்கணையார் குறம், 11. குற மாது அல்லது சொர்க்கக் குறம் அல்லது மாதுக்குறம், 12. ஞானக்குறம், 13. பிசுமில் குறம், 14. திருவரமுனி ஞானக்குறம், 15. அம்பலக்குறம், 16. விதுரர் குறம், 17. வேதபுரீசர் குறம், 18. நெல்லை நாயகர் குறம்.

குறம் என்னும் இலக்கிய வகையின் இலக்கணம் எந்தப் பாட்டியல் நூலிலும் கூறப்பெறவில்லை. ஆயினும் அறிஞர் சிலர், குறத்திற்கும் இவ்வகையிலமைந்த குறவஞ்சிக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை ஆங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளனர். 'ஒரு குறத்தி குறி கூறுவதாக அமையும் பிரபந்தம் குறமென்று வழங்கும்' என்பர் உ.வே. சாமிநாதையர். 'குறத்தி ஒருத்தியின் கூற்றோடு வேறு பலர் கூற்றுக்களும் உள்ள நூல் குறவஞ்சி எனப்படும்' என்பர் மொ.அ.துரை அரங்கசாமி. மீனாட்சியம்மை குறம் அல்லாத பிற குறங்களில் குறத்தியின் கூற்றோடு வேறு பலர் கூற்றுகளும் இடம் பெற்றுள்ளன. வித்துவான் குறம், பிசுமில் குறம் ஆகியவற்றில் குறத்தி வரவில்லை; குறியும் கூறவில்லை. பிசுமில் குறம், குறம் என்னும் இலக்கிய வகையுள் அடங்காது என்னும் கருத்தும் நிலவுகிறது.

சில குறங்கள் பாட்டுடைத் தலைவரது பெயரால் வழங்கப் பெறுகின்றன. திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம், நெல்லை நாயகர் குறம், வேதபுரீசர் குறம் ஆகியன இவ்வகையைச் சாரும். மதுரை மீனாட்சியம்மை குறம், மின்னொளியாள் குறம், இலக்கணையார் குறம் ஆகியன பாட்டுடைத் தலைவியின் பெயரைச் சார்ந்து வழங்குவன ஆகும். குறத்தியின் இயற் பெயரால் வழங்கப்பெறும் குறங்கள் இரண்டு. அவையாவன: துரோபதை குறம், தருமாம்பாள் குறம். ஞானக்குறம், வேதாந்தக் குறம்,அகண்ட வெளிக்குறம் ஆகியன பொருள் அடிப்படையில் பெயர் பெற்றுள்ளன.

பெரும்பான்மையான குற இலக்கியங்கள் விநாயகர் காப்புடன் தொடங்குகின்றன.மகிழ்மாறன் பவனிக்குறம் நம்மாழ்வாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டிருப்பதால் கருடேசன் காப்புடன் தொடங்குகிறது. இலக்கணையார் குறம் சைன மரபிற்கேற்ப, அருக தேவர், வாசுதேவி ஆகியோரை வணங்கித் தொடங்குகின்றது.

மீனாட்சியம்மை குறத்திலும், மகிழ்மாறன் பவனிக் குறத்திலும் குறத்தியர் 'பொதிய மலைக் குறத்தி நானே' என்று தம்மைத் தாமே அறிமுகப் படுத்திக் கொண்டு வருகின்றனர். துரோபதை குறத்தில் துரோபதையும், மின்னொளியாள் குறத்தில் அருச்சுனனும், இலக்கணையார் குறத்தில் சீவகனும், தருமாம்பாள், அகண்ட வெளிக்குறம் ஆகியவற்றில் பார்வதி தேவியும், வேதாந்தக் குறத்தில் பரமாத்மாவும் குறத்தி வேடம் அணிந்து வருவதாகக் கூறப் பட்டுள்ளது.

குறத்தி, குறி சொல்லத் தொடங்குமுன் தரை மெழுகிக் கோலமிட்டுப் பிள்ளையார் உருப்பிடித்து வைத்து, நிறைகுடம் வைத்து, அறுகம்புல் சார்த்தி, நிறை நாழி நெல்லளந்து வைத்து, விளக்கேற்றி, மா,பலா, வாழை ஆகிய முக்கனிகளைப் பரப்பி வைத்து, வடை, அப்பம், அவல், கடலை முதலியவற்றுடன் சர்க்கரை, எள்ளுருண்டை, பொரி ஆகியவற்றைப் படைத்துப் பின்னர்த் தன் குல தெய்வங்களை மனத்துள் எண்ணிக் குறி கூறத் தொடங்குகிறாள்.

'இறப்பு நிகழ்வெதிர் வென்று முக்காலமும் திறப்பட உரைப்பது' என்னும் பன்னிரு பாட்டியல் இலக்

கணத்திற்கு ஏற்பக் குறத்தில் வரும் குறத்தி, 'வரு காலம், நிகழ்காலம், கழிகாலம் மூன்றுமொக்க வகுத்துப் பார்த்துத் தருகாலந் தெரிந்துரைப்பது எளிது; அரிதன்று எங்கள் குறச் சாதிக்கு' என்கிறாள். பின்னும் அவள், 'நான் சொல்லும் குறி மோசமானால் அப்பால் இந்த உலகத்தில் யாருடைய வார்த்தையும் பொருளற்ற பரிகாசச் சொல்லேயாகும்' என்றும் தன் குறிச்சிறப்பை எடுத்தோதுகிறாள்.

பல்லி சொற்குறி, பத்தினிப் பெண்கள் வாக்காகிய விரிச்சி, தும்மல், ஆந்தையின் குரல் ஆகியவற்றால் நன்னிமித்தம் உண்டாதலைக் கூறியவள், கட்டுப் பார்த்தல் எனப்படும் நெற்குறியைப் பற்றியும் எடுத்துரைக்கிறாள். 'இந்நாழி நெல்லையும் முக்கூறு செய்து ஓர் கூற்றை இரட்டைப்பட எண்ணினபோது ஒற்றைப்பட்டதம்மே. உனக்கு முன் வெள்ளிமலைப் பிள்ளையார் வந்துதித்தார். உனக்கினி எண்ணின காரியம் இமைப்பினிற் கைகூடும்' என்றுரைத்துத் தலைவியை வாழ்த்திச் செல்வதுடன் குறம் நிறைவுறுகின்றது.

'பொதுமக்களைக் கவர்ந்த இலக்கிய அமைப்பில் வரலாறு, வைத்தியம் போன்ற செய்திகளைக் கூறுவது பிற்கால ஆசிரியர்களிடையே வழங்கிய ஒரு வழக்கம் என்று அறிஞர் குறிப்பிட்டுள்ளார். மருத்துவம், வரலாறு மட்டுமன்றித் தத்துவம், சமயம் தொடர்பான கருத்துகளைக் கூறுவதற்கும் அவ்வக் காலத்துப் புகழ்பெற்ற இலக்கியவகைகளைப் புலவர்கள் கையாண்டுள்ளனர் என்பதற்குக் குற இலக்கியம் சான்று பகர்கின்றது. ஜி.டி.நி.

**குறமகள் இளவெயினியார்:** இவர் சங்க காலத்தில் வாழ்ந்தபெண்பாற் புலவர்களுள் ஒருவர்; புறம் 157-இல் ஏறைக்கோனைப் பாடியுள்ளார். குறமகள் என்பதால் இவர் குறிஞ்சி நிலத்தைச் சார்ந்தவராதல் கூடும். பெண்பாலைச் சுட்டும் வகையில் 'எயினி' என்று அழைக்கப்பட்டார். இளமையிலேயே புலவராய்த் திகழ்ந்தமையின் 'இளவெயினி' என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டார்.

இவர் குறவர் குடியைச் சார்ந்தவர் என்பதற்கு இவர் பாடலிலேயே சான்று காணப்படுகிறது. தம் பாடலில் ஏறைக்கோனை 'எம்மோன்' என்று பாராட்டி அவனைச் 'குறமகன்' என்று இவரே குறிப்பிடுவதால் இப்பாடலாசிரியரும் குறவர் குடியைச் சார்ந்தவர் என்று கருதலாம்.

நற்றிணை 263-ஆம் பாடலுக்குரிய 'இளவெயினனார்' என்ற சான்றோர் ஒருவரும், நற்றிணை 357-ஆம் பாடலுக்குரிய 'குறமகள் இளவெயினி' என்னும் பெண்பாற்புலவர் ஒருவரும் நற்றிணைப் புலவர் வரிசையில் காணப்பெறுகின்றனர். புறநானூற்றுப் புலவர் வரிசையில் பேய்மகள் இளவெயினி என ஒருவர் உளர். இதனால் குறவர் குடியினர் பலர் புலவர்களாய்த் திகழ்ந்தனர் என்பது தெரியவருகிறது.

நற்றிணைப் புலவர் வரிசையில் உள்ள குறமகள் இளவெயினியும் புறநானூற்றில் வரும் இளவெயினியும் (குறமகள்) ஒருவரே என்ற கருத்து உண்டு. ஆயினும் இருவரும் வேறுவேறு என்று கொள்ளுவதற்குப் பெரிதும் இடம் உண்டு.

இவர் 'நின்குறிப்பு எவனோ தோழி என்குறிப்பு, என்னோடு நிலையா தாயினும் என்றும், நெஞ்சுவடுப் படுத்துக் கெடஅறி யாதே' (நற்: 357) என்று 'குறிப்பு' என்னும் சொல்லை அடுக்கிப் பாடிய சிறப்பால் 'குறிப்பெயினியார்' என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். 'குறிப்பெயினியார்' என்பது ஏடெடுத்து எழுதுவோரால் 'குறியெயினி' என்று எழுதப்பட்டிருக்கலாம். அதனால், இவர் பெயர் 'குறமகள் குறியெயினியார்' என்று அமைந்திருக்க வேண்டும் என்று நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் கூறுகிறார்.

'குறவர்'என்ற குடியைக்குறிக்கும் பொதுச்சொல் கொண்டு இருவரையும் ஒருவரே என்று கொள்வது நேரிதாகாது; குறவர்என்ற சொல்மட்டுமன்று,'எயினி' என்ற சொல்லும் அக்குடியையே குறிக்கும்; குடியைக் குறிக்கும் பெயர் பெற்றிருப்பதால் இருவரையும் ஒருவராகக் கொள்ளின், பேய்மகள் இளவெயினியையும் குறமகள் இளவெயினியாகக் கொள்ளவேண்டும். குறமகள் இளவெயினி, பேய்மகள் இளவெயினி, குறமகள் குறிப்பெயினி, இளவெயினி என அவர்களின் பெயர்களுள் சில சொற்களை அவர்கள் பாடியபாடல்களின் இயல்புகளுக்கேற்ப மாற்றி வழங்கியுள்ளனர் என்று தெரியவருகிறது. அதனால் இருவரும் வேறு வேறானவர் எனலே தக்கதாகும்.

இவர் ஏறைக்கோனைப் பாராட்டிய பாட்டில் சிறந்த பல குணங்கள் ஏறைக்கோன் ஒருவன் இடத்திலேயே உள்ளன; பிறர் எவரிடத்திலும் அவற்றை முழுமையாகக் காண முடியாது என்று கூறினார்; அவ்வாறு கூறுமுகத்தான் நல்லோர்பால் இருக்க வேண்டிய நற்குணங்கள் இவை இவை என்று உலகத்தோர்க்கு எடுத்துரைத்துள்ளார். ந.த.

**குறமகள் குறியெயினி** சங்க காலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவர். பாலைத்திணை மக்களை எயினர், எயினி என்று அழைப்பது மரபு. எனினும்,

இவர் பெயரில் குறமகள் என்ற அடை சேர்ந்திருப்ப தால் பாலைத்திணைப் பெயர் என்று அதனைக் கொள்வதற் கிடமில்லை. குறவர் இனத்தில் குறி கூறிச் சிறப்பு எய்திய குடியில் பிறந்தமையால் குற மகள் குறியெயினி என்று அழைக்கப்பட்டிருக்கவேண் டும் எனக் கொள்ளலாம். இவர் பாடியதாக நற்றி ணையில் ஒரு பாடல் (நற். 357) மட்டுமே காணப் படுகிறது. குறமகள் என்பதற்கு ஏற்ப இவரது பாட் டில் குறிஞ்சிக் கருப்பொருள்கள் அமைந்து விளங்கக் காணலாம். அப்பாடலில் தலைவியின் ஆற்றுதல் ஒழுக்கம் எடுத்துரைக்கப்படுகிறது. தலைவன் விரைந்து தலைவியை மணந்து கொள்ளாது காலம் தாழ்த்துகிறான். அதுகண்ட தோழி தலைவியை ஆற்றுவிக்க முயல்கிறாள். அதனை அறிந்த தலைவி, தன் பழைய நிகழ்வுகளை எடுத்துக்கூறி 'ஆற்றுவேன்' என்கிறாள். ச.செ.

**குறவஞ்சி** தொண்ணூற்றாறு வகையான சிற் றிலக்கியங்களுள் ஒன்றாகும். இது தலைவன் உலா வருதலைக் கண்டு காமுற்று வருந்தும் தலைவிக்குக் குறிகூறுதல் என்ற செய்தியினைக் கொண்டமைந்த இலக்கியம். 'குறப்பெண்' எனப் பொருள்படும் குற வஞ்சி என்னும் பெயர் பின்னர்க் குறத்தி பற்றி அமைந்த இலக்கிய வகைக்குப் பெயராயிற்று. பழந் தமிழ் மக்கள் கட்டு, கழங்கு, வெறியாட்டு ஆகிய வற்றின் மூலம் குறி பார்த்தமை பற்றித் தொல்காப் பியம் கூறுகிறது. சங்க இலக்கியத்திலும் வேலன், அகவன் மகள் போன்றோர் குறிபார்த்தனர் என்பது கூறப்படுகிறது. நச்சினார்க்கினியர் குறி பார்க்கும் பெண்ணைக் 'கட்டுவிச்சி' என்பர். பிற்காலத்தில் 'குறத்தி' எனக் குறிக்கத் தொடங்கினர் எனலாம்.

குறமும் குறவஞ்சியும் மிகவும் ஒத்துக்காணப் படும் இலக்கிய வகைகளாகும். நாடகத் தன்மை மிகு தியும் அமைந்த ஒரு சிற்றிலக்கிய வகையான 'குற வஞ்சி' 'குறவஞ்சிநாடகம்' என்றும் கூறப்படுகிறது. சைவம், வைணவம், கிறித்தவம் ஆகிய சமயக் கட வுளர், அரசர் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவ ராகக் கொண்டு குறவஞ்சி நூல்கள் தோன்றியுள் ளன. முதன்முதலில் தோன்றிய குறவஞ்சி சைவ சம யத்திற்கு ஏற்றம் தரும் வகையிலமைந்த 'திருக்குற் றாலக் குறவஞ்சி' ஆகும். அதன் ஆசிரியர் திரிகூட ராசப்ப கவிராயர் ஆவார். பாட்டுடைத் தலைவன் திருக்குற்றாலநாதராகிய சிவபெருமானும், காதல் கொள்ளும் தலைவி வசந்தவல்லியும் ஆவர்.

குறவஞ்சியின் அமைப்பில் முதலில் பாயிரம் காணப்படும். இப்பகுதி கடவுள் வணக்கம், நூற் பயன், அவையடக்கம், நூற்காரணம் போன்றவற் றைக் கொண்டது. விநாயகர் காப்பு முதன்மையா னது. தொடர்ந்து முருகன், கலைமகள் ஆகியோர் மீதும், சைவம், வைணவம் ஆகிய சமயங்களின் சிறப் பிற்காக எழுந்த குறவஞ்சிகளில் அவ்வச் சமயக் கட வுளர், சமயாசாரியர், ஆழ்வார்கள் ஆகியோர்மீதும் காப்புச் செய்யுள்கள் அமைந்திருக்கும். பெத்லகேம் குறவஞ்சி என்னும் கிறித்தவ சமயநூலில் அச்சமயக் கடவுட் கொள்கையை ஒட்டிய கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 'தோடை யம்' என்னும் பகுதி இடம் பெறும். அதுவும் ஒரு வகையில் கடவுள் வாழ்த்தேயாகும். அடுத்து, மங்க ளம் என்னும் பகுதியும், தொடர்ந்து 'கணபதி வருகை' 'கட்டியங்காரன் வருகை' ஆகியனவும் இடம்பெறும். கட்டியங்காரன் பாட்டுடைத் தலைவரை மட்டும் அறி முகப்படுத்துவான். அவரது பவனியின் போது தலைவி யும் பிற பெண்களும் மயங்குவர். கடவுளரைப் பாட் டுடைத் தலைவராகக் கொண்ட குறவஞ்சிகளில் புரா ணச் செய்திகள் மிகுதியாக இடம்பெறும்.

தலைவன் உலா வரும்போழுது பெண்கள் தங் கள் வேலைகளை விட்டுவிட்டு வந்து தலைவனின்



குறவஞ்சி

அழகில் மயங்கி வாடுவர். அதன் பின்னர்த் தலைவி தலைவனைக் கண்டு மயங்கிக் காமுற்றுப் புலம்புவாள். வசந்தவல்லி, சுந்தரவல்லி, தேவமோகினி, இராச மோகினி போன்ற பெயர்கள் தலைவியரின் பெயர்களாக உள்ளன; வல்லி அல்லது மோகினி என்று முடியும் பெயர்களை ஆசிரியர்கள் விரும்பித் தம் குறவஞ்சித் தலைவியர்க்கு வைத்துள்ளனர் எனத் தோன்றுகிறது.

தலைவியின் கேசாதிபாத வருணனை எல்லாக் குறவஞ்சிகளிலும் உண்டு. தலைவன் உலாவரும் பொழுது தலைவி பந்தடித்து விளையாடுதல், பாடுதல், சோலையில் ஊஞ்சலாடுதல் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றில் ஈடுபட்டிருப்பாள். அப்பொழுது தலைவனைக் கண்டு மையல்கொண்டு மயங்கி வீழ்ந்து, பின்னர் எழுந்து, நிலவு, மன்மதன், தென்றல் ஆகியவற்றைப் பழித்து, பின்னர்த் தோழியைத் தலைவனிடம் தூதுவிடுப்பாள். அவள் மீள்வதற்குள் தலைவி கூடலிழைத்துக் காண்டலும் உண்டு.

இக்கட்டத்தில்தான் குறத்தி தலைவன் புகழ், வாசல் வளம் ஆகியவற்றைப் பாடி வருவாள். அவளிடம் தலைவி பெயர், ஊர் பற்றி வினவ அவள் தன் மலைவளம், அதன் சிறப்பு, நாட்டுவளம், மக்களின் நன்னெறிச் சிறப்பு, தலமகிமை, நதிகளின் உயர்வு, தன் சாதி குலப்பெருமை, குடி இயல்பு, தொழில், கிளைச்சிறப்பு ஆகிய பலவற்றைக் கூறுவாள்.

அதைத் தொடர்ந்து, குறி சொல்லுதலில் தன் திறமை, தான் முன்பு குறிசொன்னதற்குப் பெற்ற பரிசுகள், தன் முன்னோர் குறி சொல்லலில் பெற்றிருந்த சிறப்புப் போன்றவற்றையும் கூறுவாள். குறி சொல்லுமுன் குறத்தி தரைமெழுகிக் கோலமிட்டும், தூபதீபம், தேன் தினைமாவு வைத்தும், நிறைநாழி முத்தை அளந்து வைத்தும், பிள்ளையார் உருப் பிடித்து வைத்தும் தலைவியைக் குறிகேட்கச் சொல்லுவாள். குறத்தி தன் குலதெய்வங்களைப். போற்றிப் பரவிவிட்டுக் கைக்குறி, மெய்க்குறி உரைத்து, உணவு உடை போன்றவற்றை வேண்ட, தலைவியும் சிறந்த பரிசுகள் நல்குவாள்.

குறத்தியின் கணவன் சிங்கன் பறவைவேட்டையாடுதலில் வல்லான். அதைக்கூடச் சரியாகச் செய்ய வியலாமல் சிங்கியைத் தேடி அலைந்து தன் கையாளான குளுவன் உதவியோடு அவளைக் கண்டு ஐயத்தோடு வாதம் புரிந்து பின்னர் இருவரும் ஒன்று சேர்வர். இறுதியில் வாழ்த்தும் மங்களமும் இடம்பெறும்.

'குறவஞ்சியின் முற்பகுதியில் சீவான்மா பரமாத்மாவைத் தேடுதல் எனப்படும் மதுரபக்தியாகிய பேரின்பத்தையும் பிற்பகுதியில் குறவன் குறத்தி காதலாகிய சிற்றின்பத்தையும் காணமுடிகிறது என்றும், பேரின்பத்திற்கும் சிற்றின்பத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்குகிறாள் குறத்தி என்றும், இவ்விலக்கிய வகையினைத் தத்துவ வடிவில் சிலர் பொருள் விளக்கம் செய்துகூறியுள்ளனர். ச.வே.

**குறி கூறல்**: காண்க: குறத்திப் பாட்டு.

**குறிஞ்சிப்பாட்டு**: பத்துப்பாட்டுள் இது எட்டாம் பாட்டாகும். பத்துப்பாட்டுள், பாட்டெனச் சிறப்பித்துச்சொல்லப்படுவன குறிஞ்சிப் பாட்டும் முல்லைப் பாட்டுமேயாம். குறிஞ்சிப்பாட்டு அகப்பொருட் கூறுகள் நிரம்பியது. குறிஞ்சித் திணைக்குரிய முதல் கரு உரிப்பொருள்களை முழுவதுமாகப் பெற்று, 261 அடிகளாலமைந்த இந்நெடும்பாட்டு 'பெருங்குறிஞ்சி' எனவும் உரையாசியர்களால் சிறப்பித்துக் குறிப்பிடப் பட்டது.

இது 'குறிஞ்சி பாடக் கபிலர்' எனச் சிறப்பிக்கப் பட்ட கபிலரால் புனையப்பட்டது. இப்பாடலினடியில் 'ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது', என்று குறிக்கப்பட்டுள்ளது. இது 'அறத்தொடு நிலை' என்னும் துறையமைந்தது. தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றதாதலின், இது தோழி கூற்றுப் பாடலாகும். அன்று ஆரிய மன்னர் சிலர் தமிழறிவுடையராயிருந்து, தமிழின் மேன்மையை அறிய அவாவி நின்றனர். அவர்கட்குத் தமிழின் சிறப்பையும், தமிழுக்கே சிறப்புரிமையுடையதாகிய அகத்திணையின் மாண்பையும் உணர்த்துவதற்காகக் கபிலர் இவ்வகத்திணைப் பாடலைப் பாடி அளித்தார். குறுந்தொகை 184-ஆம் பாடல் 'ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன்' பாடியதாகக் காணப்படுகிறது. அதன்மூலம் அன்று ஆரிய அரசருட் சிலர் தமிழில் பாப்புனையுமளவு தமிழ்மொழியை நன்கு கற்றிருந்தனர் என்பது புலனாகிறது. எனவே, 'தமிழ் அறிவித்தற்கு' என்றால், 'தமிழ் இலக்கியம், அதன் பொருள், அஃதுணர்த்தும் பண்பாடு, நாகரிகம் என இத் தனிச் சிறப்புகளை உணர்த்துவதற்கு' என்பது பெறப்படுகிறது.

கபிலர் 'அறத்தொடு நிலை'த்துறை அமைய இப்பாடலைப் பாடியதன் நோக்கம் மிக ஆழமானது. அறத்தொடு நிலை என்பது களவை வெளிப்படுத்துவதாகும். நொதுமலர் எனப்படும் பிறரால் வரையப் படாமல், தன் மனத்தால் காதலிக்கப்பட்டவனையே மணப்பதுதான் ஒரு பெண்ணுக்கு வாழ்வறமாகும். தலைவி தோழிக்குக் கூறிய உண்மையைத் தோழி செவிலிக்குக் கூற, அவள் நற்றாய்க்கும், நற்றாய்

தந்தை தமையன்மார்க்கும் கூறுவர் என்பது அறத்தொடு நிற்றலின் வரையறை. தோழி செவிலிக்கு வெளிப்படுத்துவதையே புலவர்கள் விரித்துப் பாடுவர்.

வடநூன் முறைப்படியான 'கந்தருவம்' தன்னளவில் ஒரு திருமண முறையாகும். தமிழில் களவு தன்னளவில் திருமணமாகாது; கரணம் பெற்றுக் கற்பில் முடியும்போதுதான் போற்றப்படும். கற்பில் முடிவுறாத களவைத் தமிழில் ஏற்பதில்லை. இவ்வேறுபாட்டு வளர்ச்சி நிலையைச் சுட்டுவதால், இப்பாட்டு ஆரிய அரசனுக்கு வடநூன் முறையின் வேறுபட்ட தமிழ்மரபை உணர்த்துவதாகிறது. ஒப்பியல் நோக்கை அடிப்படையாகக் கொண்ட இப்பாட்டு, அதற்கான விளக்கத்தை நன்கு அழுத்தம் பெற எடுத்துரைக்கிறது. தலைவன் 'நாடு அறி நன்மணம் அயர்'வதாக (232) உறுதி கூறுகிறான்.

இப் பாட்டுப்பொருள் களவில் இயற்கைப் புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி, இடந்தலைப்பாடு, ஆற்றூறு அஞ்சுதல், தலைமகன் தலைமகளைத் தெளித்தல் போன்று பல்வேறு துறை நிகழ்ச்சிகளால் பின்னப்பட்டு, 'அறத்தொடுநிலை' என்ற தலைமை நிகழ்ச்சியுடன் இயைபுபடுத்தப்பட்டுள்ளது.

இப்பாடலின் தொடக்கமும் முடிவும் இடையிலுள்ள நிகழ்ச்சிப் பின்னலும் சொல்லாட்சியும் உவமையும் ஏனைய ஒவ்வொன்றும் உளவியலுக்கேற்ப, இயல்பாக அமைந்துள்ளன. 'அம்மா உன் வருத்தத்தைத் தீர்க்கவே முயல்கிறேன்' என்பதுபோல் தொடங்கி, 'இவள் கண்ணீர்விட்டு அழுது உடல்நலம் கெடுவதைப்பார்' என முடிவதில், இவளை இவள் விரும்பியவனுக்கே மணம் முடித்துவைக்கவேண்டும் என்ற அழுத்தம் சொல்லாமல் சொல்லப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகள் காரண காரிய முறையுடன் இயைபுபடுத்தப்பட்டுள்ளன. எல்லாம் ஊழ்வினையால் தாமாக நடந்துவிட்டது என்பதை உளவியல் நுட்பத்தோடு, இதைவிடச் சுருக்கமாகக் கூறமுடியாது. தோழியின் நாவன்மைக்குச் சிறந்த காட்டான இப்பாடலை 'உளவியற்பாட்டு' என்றே சிறப்பித்துக் கூறும் வண்ணம் இதன் இலக்கிய நலன்கள் அமைந்துள்ளன.

தினைப்புனத்தில் மகளிர் 99 வகைமலர்களைத் தொகுத்ததாக வரும் பகுதி இதன் சிறப்பாகும். ஒரு கண்காட்சியில் மட்டுமே இத்தனை மலர்களைக் காணமுடியும். தலைமகன் வருணனை, மாலை வருணனை போல்வனவும் பொருந்திய உவமைகளும் கொண்ட இந்நெடும்பாட்டுக் கதைப்பாடல்-காப்பியப் பாடல்போல் அமைந்து, தமிழில் காப்பிய வளர்ச்சியின் முன்னோடியாகத் திகழ்கிறது. தலைவியின் உள்ளத் தூய்மை, தோழியின் சதுரப்பாடும் நாவன்மையும், தலைவனின் பெருமிதம், தாயின் பாசவுணர்வு போல்வனவும், அருவி நீரைக் குடித்துச் சத்தியம் செய்தல், நாடறி நன்மணம் நிகழ்த்துதல் போன்ற பழக்கவழக்கங்களும் இப்பாடலால் புலனாகின்றன. சுருக்கமாகத் தமிழர் நாகரிக மதிப்பினை அறிய உதவும் சிறந்த இலக்கிய உரைகல்லாகக் குறிஞ்சிப்பாட்டு திகழ்கிறது.

தலைவன் முதன்முதல் தலைவியைக் கண்டபோது கொண்ட விருப்பத்தை 'ஆ காண் விடையின் அணிபெற வந்து' (136) என்றவர், பின்னர் அவளை ஊரருகே கொண்டுவந்து விட்டதைக் கூறுமிடத்து 'துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து' (235) என்று கூறியுள்ளமையால் காணப்படும் உவமைத் தொடர்ச்சி கபிலரின் திறனுக்குச் சான்று பகர்கிறது. 'ஓரரசனுக்கு இது கூறப்பட்டதாதலின் அவனுக்கேற்ப, தோழியின் நிலையை, 'இகன் மீக்கடவும் இருபெரு வேந்தர், வினையிடை நின்ற சான்றோர்போல' (27-28) என விளக்கியும், நாய்களுக்கு உவமை கூறுகையில், 'முனை பாழ் படுக்கும் துன்னருந் துப்பில், பகை புறம் கண்ட பல்வேல் இளைஞரின்' (128-129) எனச் சொல்லியும், மாலைக் காலம் பலவகை நிகழ்ச்சிகளை முன்னிட்டுக் கொண்டு வருதலை, 'சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத் துனைஇய மாலை துன்னுதல் காணூஉ' (229-230) என உவமைகொண்டு அறிவித்தும் அரசர்களையும் வீரர்களையும் பற்றிய செய்திகளை ஆசிரியர் எடுத்தாண்டமை பாராட்டற்பாலதாம்', என்று முனைவர் உ. வே. சாமிநாதையர் தம் பத்துப் பாட்டுப் பதிப்பு முகவுரையில் கூறுதல் குறிப்பிடத் தக்கது.

இராம.பெ.

## குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம்:

வாதி ஒருவர் தமக்கு எதிர்வாதியால் பாதிப்பு, இடையூறு, இழப்பு, அநீதி, அவதூறு எதுவும் ஏற்படும்போது நீதிமன்றத்தை அணுகிப் பரிகாரம் வேண்டுவதை உள்ளடக்கியது குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம் (Specific Relief Act) எனப்படும். இத்தகைய உரிமைகள் இருவருக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாகவோ உறவின் காரணமாகவோ தங்களுக்குள்ள குடிஉரிமையின் அடிப்படையிலோ எழலாம். இத்தகைய உரிமைகளின் அடிப்படையில் எழுகின்ற வழக்குகள் குடிமக்களுக்கிடையிலும் அல்லது குடிமக்களுக்கும் அரசுக்கும் இடையிலும் அல்லது அரசு சார்புடைய மன்றங்கள், வாரியங்கள் போன்ற அமைப்புகளுக்கிடையிலும் நிகழலாம்.

**1963-ஆம் ஆண்டு குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம்**, இந்தியச் சட்ட ஆணையத்தின் (Law Comi-

ssion of India) பரிந்துரையின் பேரில், 1963-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இது, பழைய 1877-ஆம் ஆண்டுச் சட்டத்தில் இருந்த சில பிரிவுகளை விலக்கிச் சில பிரிவுகளுடன் புதிய வடிவம் கொண்டுள்ளது.

இச்சட்டம், 1964-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இச்சட்டப்படி வாதி ஒருவர், 1) தம் அனுபோகத்திலிருந்து இழந்த சொத்தை மீட்கவும், 2) ஒப்பந்தத்தை நிறைவேற்றவும், ஒப்பந்த நிபந்தனைகள்படி குறிப்பிட்ட வகைப் பரிகாரங்களை வேண்டவும், 3) ஒப்பந்தங்களை நீக்கவும், 4) ஆவணங்களைத் திருத்தவும் நீக்கவும், 5) குறிப்பிட்ட வகை உரிமையின் பேரில் அறிவிப்புச் செய்து தீர்ப்பு வேண்டவும், உறுத்துக் கட்டளைகள் (Injunctions) பெறவும் முடியும்.

**பகுதி 1** இச்சட்டத்தின் பெயரையும், சட்ட அளாவுகையையும் நடைமுறைக்கு வரும் தேதியையும் இச்சட்டத்தில் பயன்படுத்தப்படும் சில சொற்களுக்கான விளக்கங்களையும் தருகிறது.

பிரிவுகள் 5,6 தன் அனுபவத்தில் உள்ள அசையாச் சொத்தை உரிமையியல் நடைமுறைச் சட்டத்தை ஒட்டிப் பெற வகை செய்கின்றன. பிரிவுகள் 7,8 ஒருவர், தாம் இழந்த குறிப்பிட்ட அசைவியல் சொத்தைத் திரும்பப் பெற வகை செய்கின்றன.

**இயல் 2**: இவ்வியலின் 9 முதல் 25 வரையுள்ள பிரிவுகள் ஒப்பந்தங்களை நிறைவேற்றவும் குறிப்பிட்ட பரிகாரங்களை வேண்டவும், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தையும் (Civil Procedure Code) இந்திய ஒப்பந்தச் சட்டத்தையும் அனுசரித்துப் பரிகாரம் வேண்டவும் வகை செய்கின்றன.

**இயல் 3**: இவ்வியல் திருத்தத் தொடர்புடையது. பிரிவு 26 ஆவணங்களையும் ஒப்பந்தங்களையும் மாற்றுவதற்கு வகை செய்கிறது. மோசடி அல்லது தரப்பினர் தம் தவறுகையால், ஒப்பந்தம் அல்லது ஆவணம் உண்மையான கருத்தை வெளிப்படுத்தாத போது அதைத் திருத்தம் செய்வதற்கு இச் சட்டப் பிரிவு வகை செய்கிறது.

**இயல் 4**: இவ்வியல் ஒப்பந்த நீக்கத் தொடர்புடையது. தரப்பினர் இருவர்க்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை, இந்திய ஒப்பந்தச் சட்டத்தை அனுசரித்து, ஒப்பந்தத்தில் காணப்படும் சில அடிப்படைக் குறைபாடுகளின் காரணமாக அவற்றை நீக்குவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வியலில் அடங்கியுள்ள பிரிவுகள் 27 முதல் 29 வரையில் உள்ளனவாகும். இவ்வியலில் அடங்கியுள்ள மற்றொரு பிரிவு 30 ஆகும். அப்படி ஒப்பந்தம் நீக்கப்படும்போது அதனால் பயன்பெற்றவர் இழந்தவருக்கு நேர்மையின் அடிப்படையில் சரியான ஈடு செய்யவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

**இயல் 5**: இவ்வியல் ஆவணங்களை நீக்குதல் தொடர்புடையது. தரப்பினர் ஒருவருக்குப் பாதகமான சூழ்நிலையில் ஆவணமொன்று எழுதப்பட்டிருக்கும்போது, இந்த இயலின் 31-ஆம் பிரிவின்கீழ், அத்தரப்பினர் உரியபரிகாரத்தைப் பெறுவர்.

**இயல் 6**: இவ்வியல் உரிமையை அறிவிக்கும் தீர்ப்புத் தொடர்புடையது. இதன்கண் பிரிவுகள் 34,35 அடங்கியுள்ளன. ஒருவருக்குள்ள தகுதி, உரிமை, ஒரு நீதிமன்றத்திற்குள்ள உளத்தேர்வை (Discretion) வெளிப்படுத்துதல், அவற்றின் விளைவு ஆகியவற்றைப் பற்றி இவை உரைக்கின்றன.

**பகுதி 3**: இப்பகுதி பொதுவான உறுத்துக்கட்டளைகளைப் பற்றி உரைக்கின்றது. இப் பகுதியில், பிரிவுகள் 36, 37 ஆகியவை அடங்கியுள்ளன. இப்பிரிவுகள் நீதிமன்றங்கள் இடைக்காலமாகவும் நிலையாகவும் விதிக்கும் உறுத்துக்கட்டளைகளைப் பற்றி உரைக்கின்றன.

**இயல் 8**: இதன்கண் பிரிவுகள் 38 முதல் 44 வரை அடங்கியுள்ளன. பிரிவு 38 உம் அதன் உட்பிரிவுகளும் நீதிமன்றம் நிலையான உறுத்துக் கட்டளைக்குத் தரும் காரணங்களை விளக்குகின்றன. இதன்படி, வாதிக்கு எதிர்வாதியால் சட்ட விரோதமாகவும் ஒப்பந்தத்தை மீறியும் ஏதேனும் இழப்பு அல்லது துன்பம் ஏற்படும்போது வாதி, நிலையான உறுத்துக் கட்டளை வேண்டி நீதிமன்றத்தை அணுகலாம்.

**செயலுறுத்துக்கட்டளை**: பிரிவு 39, செயலுறுத்துக் கட்டளையைப் பற்றி விளக்குகின்றது இதன்படி, எதிர்வாதி ஒரு கடமையைச் செய்ய வற்புறுத்தப்பட்டிருக்கும்போது, அதை அவர் செய்யாமல் தவறும்போது அந்தத் தவற்றைத் தடுக்கவும் கடமையைச் செய்யவும் வாதி, இவ்வுறுத்துக் கட்டளை வேண்டி நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம்.

1) உறுத்துக்கட்டளை வேண்டி வழக்குத் தொடர்ந்துள்ளபோது, அவ்வுறுத்துக் கட்டளையைத்தடைசெய்ய வேண்டும் நிலையில், 2) உரிமை வேண்டும் நீதிமன்றத்திற்குக் கீழ் அல்லாத நீதிமன்ற நடவடிக்கையை நிறுத்தவேண்டும் நிலையில்,3) ஒருவர் சட்டஅமைப்பு முறையை நாடுவதைத் தடை விதிக்க வேண்டும் நிலையில், 4) குற்ற இயல் நீதிமன்றத்தில்

நடவடிக்கை எடுப்பதைத் தடுக்க வேண்டும் நிலையில், 5) ஒப்பந்தத்தை மீறாமல் தடுக்கும் போது அது சரியாகச் செயற்படுத்த முடியாமற் செய்யும் நிலையில், 6) தொல்லையைத் தடுக்கும் போது அது தொல்லைதான் என்று தெளிவாகத் தெரியாத நிலையில், 7) வாதி அனுமதி அளித்துவிட்ட ஒப்பந்த மீறலைத் தடுக்கும் நிலையில், 8) ஒப்பந்த முறிவு தவிர்த்த மற்றையவற்றில், வாதி வேண்டும்பரிகாரம் வேறு அமைப்பு மூலம் பெற முடியும் என்கின்ற நிலையில், 9) வாதி அல்லது அவர்தம் முகவர் (Agent)நடப்பால் நீதிமன்றத்தின் உதவி அவர்களுக்கு கிடைக்காத நிலையில், 10)வாதிக்குத் தான் தொடுத்துள்ள வழக்கில் தனக்கு ஏதும் அக்கறை (Interest) இல்லாத நிலையில், நீதிமன்றம் உறுத்துக்கட்டளை வழங்காது. துரை.பா.

**குறிப்புப் பொருள்**: ஒரு சொல்லின் அகராதிப் பொருள், சுட்டுப்பொருள் (Denotative Meaning) குறிப்புப் பொருள் (Connotative Meaning), வருகை நிலை (Range of Application) என்னும் மூன்று கூறுகளை உடையது. ஒரு சொல்லின் பொருண்மைக் கூறுகளுள் (Semantic Components) எவை அடிப்படையாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடியனவாகவும்,பொதுவானவையாகவும் அமையப் பெற்றுள்ளனவோ அவையே சுட்டுப்பொருண்மைக் கூறுகள் (Denotative Components) எனப்படும். இக்கூறுகளால் உணர்த்தப்பெறும் பொருளே சுட்டுப்பொருள் எனப்படும். சுட்டுப்பொருளே கருத்துப் பரிமாற்றத்திற்கு அடிப்படையாக அமையும்.

'சொல்', 'கூறு' என்னும் இரண்டு சொற்களில் அடிப்படைப் பொருண்மை (சொல்லுதல்-to say) ஒன்றாக அமைந்துள்ளது. இவ்வடிப்படைப் பொருண்மை சுட்டுப் பொருண்மை எனப்படும். 'கூறு' என்னும் சொல்லில் 'சொல்லுதல்' என்னும் சுட்டுப் பொருண்மை தவிர, 'பகுதி பகுதியாகச் சொல்லுதல் என்னும் சிறப்புப் பொருளும் காணப்படுகின்றது. இச்சிறப்புப் பொருண்மையே குறிப்புப் பொருளாகும். குறிப்புப் பொருள் குறிப்புப் பொருண்மைக் கூறுகளால் (Connotative Components) உணர்த்தப் பெறும்.

குறிப்பிட்ட சொற்களைப் பயன்படுத்தி நகை, அச்சம், இளிவரல் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு அச்சொற்களின் சுட்டுப்பொருள் போதுமானதாக அமையவில்லை என ஒருவர் கருதும் நிலையில், அவரால் சொற்களுக்குக் குறிப்புப்பொருள் சேர்க்கப்படுகின்றது, குறிப்புப் பொருள் சொற்களைப் பயன்படுத்துவோரின் வெளிப்பாட்டுத் திறனையும் நடையியல் வேறுபாட்டினையும் வெளிப்படுத்தும் வகையில் அமையும்.

காண் கலை (Visual Art), கேட்புக் கலை (Music) போன்ற பிற கருத்துப் பரிமாற்ற அமைப்புகளிலும் குறிப்புப் பொருள் உண்டு.

சுட்டுப்பொருள் எப்பொழுதும் நிலையாகவும், மையக்கூறாகவும் (Central) அமைந்திருக்கக் குறிப்புப் பொருளோ நிலையற்றதாகவும் புறக்கூறாகவும் (Peripheral) அமைந்திருக்கும். குறிப்புப்பொருள் முதல் நிலையில் தனிமனிதனால் அறிமுகம் செய்யப் பெற்றுப் பின்னர் அதனைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் அது மொழியில் நிலைபெற்று விடும்.

குறிப்புப் பொருள் காலத்திற்கேற்பவும், சமூகத்திற்கேற்பவும், தனிமனிதனுக்கேற்பவும் மாற்றம் பெறுதலுண்டு. தமிழில் 'அன்பளிப்பு' என்னும் சொல்லுக்குக் காலப்போக்கில் 'அன்பு இன்றிக் கட்டாயமாகப் பெறுதல்' என்னும் குறிப்புப் பொருள் சமுதாயச் சூழல் காரணமாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

நடையியல் வேறுபாடுகள், கிளைமொழிச் சொற்கள், கொச்சை வழக்குகள், இடக்கரடக்கல், மங்கலம் போல்வன குறிப்புப் பொருள் தருவன.

அகராதி ஆக்கத்தில் பல பொருள் ஒரு சொல்லின் (Polysemantic Word)அடிப்படைப் பொருளையும் ஆக்கப்பொருளையும் (Derived Meaning) வேறுபடுத்தக் குறிப்புப் பொருள் பெரிதும் பயன்படுகின்றது.

குறிப்புப் பொருள் பண்பாட்டின் அடிப்படையிலும், தனிமனித அனுபவங்களுக்கு ஏற்பவும் அமையப்பெறும். குறிப்புப்பொருள் வரன்முறைப் படுத்தப்பட்டதன்று. மேலும், இதற்கு ஒரு குறிப்பிட்ட வரம்பு கிடையாது. எனவே, ஒரு சொல்லுக்குக் குறிப்புப்பொருளை மென்மேலும் சேர்த்துக் கொண்டே செல்லுதல் இயலும். ஏ.ஆ.

**துணை நூல்கள்:**

**Lehrer, Adrienne**, Semantic Fields and Lexical Structure, Amsterdam, North Holland, 1974.

**Weinreich, Uriel**, Lexicographic Definition in Descriptive Semantics, Problems In Lexicography

PP.25-44, Indiana University Press, Bloomington, 1967.

**Zugusta, Ladislav,** Manual of Lexicography, Mouton and Company, The Hague, 1971.

**குறிப்புவினை**: தமிழ் இலக்கண நூல்கள் வினைச்சொற்களைத் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரண்டாகப் பகுத்துக் கூறும். தெரிநிலை வினை வினையின் பண்புகளாகிய காலம், தொழில் நிகழ்வு ஆகியவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தும். காலம், தொழில்நிகழ்வு ஆகிய வினைக் கூறுகளைக் குறிப்பாக உணர்த்தும் வினையே குறிப்புவினை (Appellative verb) எனப்படும். குறிப்புவினைகளில் வினைநிகழ்வுப் பொருண்மையும், காலப்பொருண்மையும் இல்லை என்று கருதி இவற்றைப் பெயர்ச்சொற்களாகக் கொண்டு, குறிப்புவினை என்ற பகுப்புத் தேவையில்லை எனக் கருதும் தமிழ் அறிஞர்களும் உள்ளனர்.

உயர்திணையில் உடைமை (கச்சினன்), நிலம் (நாடன்), ஒப்பு (புலியன்னன்), பண்பு (கரியன்) போன்றவற்றின் அடிப்படையிலும் அன்மை (அலன்), இன்மை (இலன்), உண்மை (உளன்), வன்மை (வல்லன்) போன்ற சொல்லடிகளைக் கொண்டும் குறிப்பு வினைகள் தோன்றுமெனவும், அஃறிணையில் இன்று, இல, உடைய, உடைத்து, அன்று, அல்ல என்னும் சொற்களும், பண்புகொள்கிளவியும் (கரிது),பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும் (குறுந்தாட்டு) ஒப்பொடு வருஉம் கிளவியும் (அன்னது) குறிப்பு வினைகளாகச் செயற்படும் எனவும் இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

குறிப்புவினைகள் மூவிட வேறுபாடு உடையனவாகவும், திணைபால் வேறுபாடு உடையனவாகவும் அமைந்துள்ளன. இலக்கண நூல்கள் பெரும்பான்மையும் குறிப்புவினைகள் அமையும் நிலையினையே சில பெயர் வகைகளுக்கும் கூறியுள்ளன. உரையாசிரியர்கள் சிலர் இத்தகு பெயர்களுக்கும் குறிப்பு வினைகளுக்கும் ஒரே வடிவத்தினை எடுத்துக்காட்டுகளாகக் கொடுத்துள்ளமை, குறிப்பு வினைகளுக்கும் பெயர்களுக்குமிடையே மயக்கத்தினை ஏற்படுத்தியது.

அமைப்பு நிலையில் குறிப்புவினையடி தெரிநிலை வினையடி போன்று ஏவலாகச் செயற்படுதலில்லை; கால உருபுகளை ஏற்பதும் இல்லை. பயன் நிலையில் இது பயனிலையாகச் செயற்படவல்லது. குறிப்பு வினைகளுள் சில வினையெச்சங்களால் தழுவப் பெறும். குறிப்புவினையடிகள் சிலவற்றிலிருந்து எச்ச வடிவங்களும் ஆக்கம் பெறுதலுண்டு.

குறிப்பு வினைகளைப் பெயரடியிலிருந்து (Nominal Stem) தோன்றுவன (கையன்), பெயரடையடியிலிருந்து (Adjectival Stem) தோன்றுவன (இனியது), குறைவினையடியிலிருந்து (Defective Verbal Stem) தோன்றுவன (இல்லை) என மூன்றாகப் பகுத்தல் இயலும். இவை அனைத்தும் முற்றுவினைகளாகச் செயற்படும். குறைவினையடியிலிருந்து குறிப்பு வினையெச்சம் (இன்றி), குறிப்புப் பெயரெச்சம் (இல்லா) ஆகியனவும், பெயரடையடியிலிருந்து குறிப்புப் பெயரெச்சமும் (நல்ல) ஆக்கம் பெறும்.

மூவகைக் குறிப்பு வினைகளில் பெயரடையடியிலிருந்து தோன்றிய குறிப்புவினைகள் சில வினையடைகளாலும் (ஆற்ற இனிது), குறைவினையடியிலிருந்து தோன்றிய குறிப்புவினைகள் பல வினையெச்சத்தாலும் (வந்து இலன்) தழுவப் பெறுதலுண்டு.

குறிப்பு வினைகளைப் பெயர்ப் பயனிலைகளாகச் சிலர் கருதுகின்றனர். 'இது மரம்', இவன் கரியன்' ஆகியவற்றில் காணப்பெறும் 'மரம்', 'கரியன்' என்னும் பயனிலைச் சொற்களிடையே வேறுபாடு உண்டு.

தெரிநிலை வினைமுற்றுகள் எச்சமாவது போன்று 'கரியன்' என்னும் பயனிலை வடிவம் கரிய' என எச்சமாக மாற்றம் பெறுகிறது. ஆனால், 'மரம்' என்னும் பயனிலை வடிவம் எச்சமாக மாற்றம் பெறுவதில்லை. 'ஆகும்' என்னும் ஆக்கவினையின்' 'ஆகிய, என்னும் எச்ச வடிவமே 'மரம்' என்பதனை எழுவாயுடன் இணைக்கத் துணைபுரிகிறது.

| | |
|---|---|
| இராமன் வந்தான் | வந்த இராமன் |
| இவன் கரியன் | கரிய இவன் |
| இது மரம் | மரம் ஆகிய இது |

பெயரடி, பெயரடையடியிலிருந்து தோன்றிய குறிப்புவினைகள் அமைப்பு நிலையில் குறைவினையடியிலிருந்து தோன்றிய குறிப்பு வினைகளினின்றும் வேறுபட்டுக் காணப்படுவதாலும், இவற்றிலிருந்து வினையெச்ச வடிவங்கள் ஆக்கம் பெறாமையாலும், குறிப்புவினைகள் அனைத்தையும் உள்ளடக்கும் ஓர் இலக்கணம் அமையப்பெறவில்லை. ஏ.ஆ.

**குறியிறையார்**: சங்க இலக்கியங்களில் குறியிறையார் பாடியதாக ஒரே ஒரு பாடல் காணப்படுகிறது. குறுந்தொகையில் 'வரைவிடை ஆற்றாளாகிய கிழத்தியை ஆற்றுவிக்கும் தோழி தலைமகனை இயற்பழித்துக் கூறுவதாக அமையும் பாடல் அது

(குறு.394). ஏட்டுப் பிரதிகளில் குறையிறையார் என்றும் இவர் பெயர் காணப்படுகிறது.

முன்பெல்லாம் தலைவன் அடிக்கடி வந்து தலைவியுடன் களித்து மகிழ்ந்து விளையாடியிருக்கிறான். இப்போது அவன் வரைவிடை வைத்துப் பிரிந்து சென்றுவிட்ட நிலையில் அவனுடைய பிரிவே தலைவிக்குத் தாங்கமுடியாத துயரத்தைத் தந்துவிடுகிறது; இந்த நிலையினைத் தோழி இவ்வாறு கூறுவதாகக் குறியிறையார் பாடுகிறார்: 'யானைக் குட்டிகள், குறுகிய கைகளையுடைய குறவர் குழந்தைகளோடு சுற்றிச் சுற்றி ஓடி வந்து மகிழ்ச்சியளித்து விளையாடின; பிற்காலத்தில் அவை வளர்ந்த பின்னர்க் குறவர்களின் தினைப்புனங்களை அழித்துத் துயரத்தைத் தந்ததைப்போல முன்னர் நகைத்து விளையாடி மகிழ்ச்சிதந்த தலைவன் இப்போது பிரிவுத் துயரைத் தருகிறான்'.

'குறியிறைப்புதல்வர்' என்று இப்பாடலில் வந்துள்ள தொடரைவைத்துக் குறியிறையார் என்று இவர் பெயர் அமையலாயிற்று. 'நறவு மலிபாக்கம்', 'கயந்தலைக் குழவி', 'மறுவந்தோடி' போன்ற நுட்பமான தொடர்களை இவர் தம் பாடலில் நயம்படக் கையாண்டுள்ளார். இரா.ச.

**குறியீட்டு அளவையியல்**:அரிசுட்டாட்டில் என்னும் தத்துவ அறிஞர் தாம் முதன் முதலில் குறியீடுகளை (Symbols) அளவையியலில் பயன்படுத்தினார். நவீன அளவையியலில் குறியீடுகள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதால், அதனைக் குறியீட்டு அளவையியல் (Symbolic Logic)அல்லது கணித அளவையியல் (Mathematical Logic) எனலாம. அனைத்துச் சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் குறியீடுகளே ஊடிழைகளாகவும், பாவு நூல்களாகவும் இருக்கின்றன. அவை சிந்தனைக்கும் அறிவியலுக்கும் உயிர்நாடியாகவும் விளங்குகின்றன' எனச் சார்லசு சான்டர்சு பியர்சு கூறுகின்றார். குறியீட்டு அளவையியல் உரைசார் அளவையியல், பயனிலை சார் அளவையியல் என இரு வகைப்படும்.

**மொழியின் வரம்பு**: சொற்கள் தெளிவும் விளக்கமும் இன்றி உள்ளன. எனவே, சொற்கள் மூலம் எம்மொழியினாலும் சிக்கலான கருத்துகளைத் தெளிவாக வெளியிட இயலவில்லை. அளவையியல், மொழியைச் சிந்தனையின் கருவியாகவும், சாதனமாகவும் கருதுகின்றது. எனினும், அதன் சிறப்பான ஈடுபாடு மொழியில் இல்லை; சிந்தனையில்தான். சில சமயங்களில் ஒரு சொற்றொடர் அமைப்பே பல்வேறு தொடர்புகளை வெளியிடுவதற்குப் பயன்படுகிறது. 'காந்தி அகிம்சைவாதி ஆவர்' 'அனிதாவும் கலாவும் ஒரே வயதினர் ஆவர்'என்ற உரைகளிலுள்ள, ஆவர்' என்ற சொல், இரண்டு இடங்களிலும் வெவ்வேறு பொருளைத் தெரிவிக்கின்றது.முதல் சொற்றொடரில் பயனிலைப் பண்பை எழுவாய் பெற்றுள்ளதையும், இரண்டாம் சொற்றொடரில் சமநிலையையும், குறிப்பிடுகிறது. எனவே, 'ஆவர்' என்னும் ஒரே இணைப்பு, சமநிலை, இருப்பு, உள்ளடங்குதல் போன்ற பல தொடர்புகளை உணர்த்துகின்றது.

'மனிதர்கள் அனைவரும் பகுத்தறிவுடையவர் ஆவர்'. 'கோட்சே காந்தியைக் கொன்றவன் ஆவான்' 'கமலாவின் பேனா நன்றாக இருக்கிறது' என்பன போன்றசொற்றொடர்கள் ஒரே இலக்கண அமைப்பில் இருந்தாலும், அவை அடிப்படையில் வேறுபட்ட உறவுகளை வெளியிடுகின்றன. இதுபோன்ற கூற்றுக்களிலிருந்து மொழியின் திருத்தமின்மையை அறியலாம். எனவே, அளவையியலின் கூற்றுகளை அல்லது உரைகளை வெளியிடுவதற்குக் குறியீடுகளே சிறந்த சாதனம்.

**பயன்**: குறியீட்டு அளவையியல் மொழியின் மூலம் பெறும் பொருளடங்கிய சொற்றொடர்களைக் கொண்டல்லாமல், குறியீடுகளைக் கொண்டே விளக்குவதாகும், அது அனைத்து அனுமானங்களையும் குறியீடுகளாக மாற்றி அவைகளின் ஏற்புடைமையை ஆராய்கின்றது. குறியிடுகளின் மூலம் சிக்கலான அனுமானங்களையும் சுருக்கமாகவும், ஐயத்திற்கு இடமில்லாமல் மிகவும் தெளிவாகவும் கூற முடிகிறது.

கணிதத்தில் குறியீடுகள் அதிக அளவில் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக, $அ^7$ என்னும் குறியீட்டு முறை இல்லாவிடில், இக்கருத்தை வெளியிட அ×அ×அ×அ×அ×அ×அ, என எழுத வேண்டும். இதனை மொழியின் மூலமே வெளியிடவேண்டும் என்றால் எவ்வளவு கடினம் என்பது விளங்கும். இக்கருத்தை வலியுறுத்தும் நோக்குடன் பெர்ட்ரண்ட்டு இரசல் 'மரபுவழி அளவையியல் சிந்தனையை விலங்கிட்டு இருந்தது என்றும், ஆனால் நவீன குறியீட்டு அளவையியல்அதற்கு இறகுகளைக் கொடுத்திருக்கிறது' என்றும் கூறுகிறார்.

உரைகளின் வடிவத்தைக் குறியீடுகள் தெளிவாக வெளியிடுகின்றன. இவ்வாறு கூறும்போது ஓர் உரையிலுள்ள 'மாறிகள்' யாவை? என்றும், 'மாறிலிகள்' யாவை? என்றும் எளிதாக அறியலாம். குறியீடுகள் தேவையற்ற சிந்தனையைக் குறைக்கவும் பயன் படுகின்றன.

**மாறியும் மாறிலியும்**: உரைகளின் அமைப்பைக் குறியீடுகள் மூலம் எழுத உரைசார் அளவையியலில் உள்ள குறியீடுகள் இருவகைப்படும். அவைகளை மாறி எனவும், மாறிலி எனவும் கூறுவர்.

மாறிகள் எனப்படுவது பதிலீட்டுக் குறிகள் ஆகும். (பி.கியூ), (பி ⊃ கியூ) (பி ∨ கியூ) போன்ற சூத்திரங்களில் வரும் பி, கியூ போன்ற எழுத்துகள் மாறிகள் எனப் படும் இந்த எழுத்துகள் ஒரு கூட்டு உரையில் இருக்கும் தனி உரையையும் அல்லது தனித்து வரும் உரைகளையும் தெரிவிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக, 'மல்லிகை மணம் உடையது ஆகும்' என்னும் உரையை. 'பி' எனக் கூறலாம். இது போல 'மழை பெய்தது, அதனால் சாலை ஈரமாகியது' என்பதனை (பி ⊃ கியூ) எனக் குறிக்கலாம். இங்கு 'பி' என்பது 'மழை பெய்தது' என்பதையும், 'கியூ' என்பது சாலை ஈரமாகியது' என்பதனையும் குறிக்கின்றன. 'அர்ச்சனாவும், அனிதாவும் விருந்திற்கு வந்திருந்தனர்' என்பதனை (பி.கியூ) எனக் குறிக்கலாம், 'அர்ச்சனா விருந்திற்கு வந்திருந்தாள்' என்பதை 'பி' எனவும், 'அனிதா விருந்திற்கு வந்திருந்தாள். என்பதை 'கியூ' எனவும் குறிக்கலாம். எனவே 'பி', 'கியூ', 'ஆர் போன்ற எழுத்துகள் எந்தத் தனி உரையினையும் குறிக்கலாம். அதனால்அவற்றின் பொருள், உரைக்கு உரை மாறும் என்பது விளங்குகிறது, இவைகளை 'மாறி' எனக் குறிப்பிடலாம். ஆனால் 1.1, '⊃'. '∨', '≡', '~', போன்ற குறியீடுகளின் பொருள் மாறுவதில்லை. இக் குறிகளை 'மாறிலி' எனக் குறிப்பிடுவர்.

சாதாரண சொற்றொடர்களைக் குறியீடுகளை யுடைய சொற்றொடர்களாக அல்லது சூத்திரங்களாக மாற்ற மாறிலிகளின் பொருள் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

மாறிலிகள் அனைத்தும் மேலே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கு ஏற்ற சொற்களை மட்டுமே குறிப்பவை எனக் கருதக்கூடாது. மொழியில் பல சொற்கள் அதே கருத்தைத் தெரிவிப்பவையாக இருக்கலாம். அவைகளையும் கருத்திற் கொண்டே மொழிபெயர்க்கவேண்டும். மாறிலிகள் அனைத்துமே எதிர்மறை, உட்கிடை, இணைப்புப் போன்ற உரைகளின் பொருளினைக் குறிப்பவைகளே தவிரச் சொற்கள் அல்ல. எஸ்.இல.

| மாறிலிகள் | பொருள் | பொருளுக்கு ஏற்ற சொற்கள் |
|---|---|---|
| ~ | எதிர்மறை | இல்லை, அல்ல, கிடையாது, அல்லர் |
| ⊃ | உட்கிடை அல்லது சார்பு | ஆல், எனின், இன், ஆனால் |
| ∨ | விகற்பம் | அல்லது (மூன்றாம் நிலையுடன்) |
| ∧ | பிரிவு | அல்லது (மூன்றாம் நிலையில்லாமல்) |
| . | இணைப்பு | ஒடு, உடன், உம் |
| ≡ | சர்வசமம் | ஒன்றே, மட்டுமே |

**துணை நூல்கள்:**

**Balasubramanian, P.**, Symbolic Logic and Its Decision Procedures, University of Madras, Madras, 1980

**Copi M.,** Griving Symbolic Logic, Macmillan & Co., New York, 1979.

**Stebbing, L.S.**, A Modern Introduction to Logic, Methuen & Co. London, 1961.

**குறியீட்டு எண்கள்** பல்வகைப் பண்டங்களின் விலைகளிலும், பணிகளுக்காகின்ற செலவுகளிலும் ஏற்படுகின்ற மொத்த விளைவைச் சுருக்கிக் கூறும் புள்ளியியல் முறையைக் குறிக்கும். பணத்தின் மதிப்பை அளவிடவும், விலைவாசியிலும் உற்பத்தியிலும், உற்பத்தித் திறனிலும்ஏற்படும் மாற்றங்களைப்

புள்ளியியல் அடிப்படையில் தணிக்கவும், ஒப்பிடவும், குறியீட்டு எண்கள் (Index Number) பயன்படுகின்றன.

தனி ஒரு பொருளின் உற்பத்தி அளவையும், விலையை மட்டுமன்றிப் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் தொகுப்பையும் அவற்றின் மதிப்பையும் அளவிடுவதற்கு இவ்வெண்கள் பயன்படுகின்றன. நிலவுகின்ற மாறுதலை மேல்நோக்காகப் பார்த்தவுடன் அறிவுறுத்தும் பணியை மேற்கொண்டதே குறியீட்டு எண்ணாகும்.

தொழிலாளர்களின் மெய்யான ஊதியம் (Real Wage) பண வீக்கத்தினால் பாதிக்கப்படுவதை ஓரளவிற்காவது ஈடுசெய்யும் அளவில் அவ்வப்போது விலை மாற்றம், ஈட்டுப்படி உதவித்தொகை, ஊதிய உயர்வு போன்றவை வழங்குவதற்கு ஓர் அடிப்படையாகக் குறியீட்டு எண்கள் பயன்படுகின்றன. அரசு ஊழியர்கள் முதல் ஆலைத் தொழிலாளர்கள் வரை விலை மாற்ற ஈட்டுப்படி எப்போது உயர்த்தப்படவேண்டும், எந்த அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்பன நுகர்வோர் விலை குறியீட்டு எண்களின் (Consumer's Index Number) உயர்வைச் சார்ந்து உள்ளன. குறியீட்டு எண்கள் தொழிலாளர்களின் ஊதிய விகிதத்துடன் தொடர்பு கொண்டுள்ளன என்பது அவற்றின் சிறப்புத் தன்மையாகும்.

விலை, இடத்திற்கு இடமும் காலத்திற்குக் காலமும் மாறுபடுகின்றது. இத்தகைய விலை மாறுபாட்டை அறுதியிட்டுத் தெரிந்துகொள்வதற்கு விலை விகிதங்கள் (Price Relatives) உதவுகின்றன. நடப்பு ஆண்டின் விலையை ஓர் அடிப்படை ஆண்டின் விலையுடன் ஒப்பிடும்பொழுது விலைவிகிதம் கிடைக்கிறது.

Pn — நடப்பு ஆண்டின் விலை

Po — அடிப்படை ஆண்டின் விலை

விலை விகிதம் $\left(\frac{Pn}{Po}\right) 100$

ஒரு பொருளின் விலை 1986-இல் உரு. 2/-ஆகவும் 1980-இல் அப்பொருளின் விலை உரு. 1/-ஆகவும்இருக்குமானால், விலை விகிதம் $\frac{2}{1} \times 100 = 200$. அடிப்படை ஆண்டில் இருந்ததைவிட நடப்பு ஆண்டில் மேற்கூறப்பட்ட பொருளின் விலை இரண்டு மடங்கு உயர்ந்து விட்டது என்று பொருள். அதாவது அப்பொருளை வாங்குவதற்குத் தொடக்கத்தில் தேவைப்பட்டதைப் போல இரண்டு மடங்கு தொகை பின்னர்த் தேவைப்படுகிறது என்பதாகும்.

குறிப்பிட்ட பிரிவு மக்களோ குறிப்பிட்ட அளவு வருமானம் ஈட்டுவோரோ அன்றாட வாழ்க்கையில் நுகர்விற்காகப் பயன்படுத்தும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் விலை விகிதங்களைக் கணக்கிடும் பொழுது நுகர்வோர் குறியீட்டு எண்கள் கிடைக்கின்றன. இதனை வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்கள் (Cost of living Index Number) எனக் கூறுவர். அடிப்படை ஆண்டில் இவர்கள் நுகரும் பண்டங்களின் விலைத்தொகுப்பு 100 ஆகக் கருதப்படும். நடப்பு ஆண்டில் அந்த அளவு, அந்தத் தரம் உடைய பண்டங்களின் விலைத்தொகுப்பு 200 ஆக இருப்பின், வாழ்க்கைச் செலவு இரண்டு மடங்காக உயர்ந்து விட்டது எனலாம் அல்லது குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்தைக் கடைப்பிடிப்பதற்கு அடிப்படை ஆண்டில் தேவைப்பட்டதைப் போல இருமடங்கு தொகை தேவைப்படுகிறது என்றும் கூறலாம்.

நடைமுறையில் குறியீட்டெண்கள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன என்பதைச் சில எடுத்துக்காட்டுகளின் வாயிலாக விளக்கலாம். அட்டவணை 1-இல் 1980-இலும் 1986-இலும் குறிப்பிட்ட ஆறு பண்டங்களின் விலை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சாதாரணக் குறியீட்டு எண்கள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன என்பதை அட்டவணை எண் 2 விளக்குகிறது. அட்டவணை 1-இல் குறிப்பிட்ட அளவு பண்டங்களின் விலைகள், அடிப்படை ஆண்டிலும் நடப்பு ஆண்டிலும் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் அட்டவணையில் அவை விலைவிகிதங்களாக (விழுக்காடாக) மாற்றப்பட்டுள்ளன. அடிப்படை ஆண்டான 1980-இல் 100-ஆக இருந்த விலை குறியீட்டு எண் நடப்பு ஆண்டான 1986-இல் 200-ஆக உயர்ந்துள்ளது.

குறியீட்டு எண் $\frac{600}{6} = 100\left(\frac{1200}{6}\right) = 200$

$$Pon = \Sigma \frac{\frac{Pn}{Po}}{N} \times 100$$

$$= \frac{1200}{6}$$

$$= 200$$

இக் குறியீட்டு எண்களில் வாழைப்பழத்தின் விலை இரண்டு மடங்காக உயர்ந்து இருப்பதும்,

அட்டவணை -1

| வ.எண். | பண்டங்கள் | அடிப்படை ஆண்டு 1980 (Po) | நடப்பு ஆண்டு 1986 (Pn) |
|---|---|---|---|
| | | (விலை உருபாயில்) | |
| 1. | அரிசி (கிலோகிராம்) | 3.00 | 4.50 |
| 2. | நல்லெண்ணெய் | 15.00 | 37.50 |
| 3. | எரிவாயு (Gas) | 30.00 | 60.00 |
| 4. | உருளைக்கிழங்கு (கிலோ கிராம்) | 1.00 | 2.00 |
| 5. | வாழைப்பழம் | 0.20 | 0.40 |
| 6. | சர்க்கரை (கிலோகிராம்) | 2.00 | 4.00 |

அட்டவணை -2

| வ.எண். | பண்டங்கள் | அடிப்படை ஆண்டு 1980 (விலைவிகிதங்கள்) | நடப்பு ஆண்டு 1986 $\left(\frac{Pn}{Po}\right) 100$ |
|---|---|---|---|
| 1. | அரிசி (கிலோகிராம்) | 100 | 150 |
| 2. | நல்லெண்ணெய் | 100 | 250 |
| 3. | எரிவாயு (Gas) | 100 | 200 |
| 4. | உருளைக்கிழங்கு (கிலோ கிராம்) | 100 | 200 |
| 5. | வாழைப்பழம் | 100 | 200 |
| 6. | சர்க்கரை (கிலோகிராம்) | 100 | 200 |
| | மொத்தம் | 600 | 1,200 |

எரிவாயுவின் விலை இரண்டு மடங்காக உயர்ந்து இருப்பதும் அவை சீரான அளவு சிறப்பிடம் பெற்றிருப்பதாக எடுத்துரைக்கப் படுகின்றன. இக் குறையைக் களைவதற்கு நிறை (Weight) இடுதல் தேவைப்படுகிறது. வாங்கப்படும் பொருள்களின் 'அளவு' நிறையாகப் பயன்படுத்தப்பட்டுக் கணிக்கப் படும் குறியீட்டு எண்கள் 'நிறையிட்ட குறியீட்டு எண்கள்' (Weighted Index Number) எனப்படும்.

அடிப்படை ஆண்டில் வாங்கிய பண்டங்களின் அளவு நிறையாக எடுத்துக்கொள்ளப்பட்டால் அம் முறையில் கணிக்கப்படும் குறியீட்டு எண்கள் 'இலாசுபரசு' குறியீட்டு எண்கள் எனப்படும். மேலே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள அந்தப் பொருள்களுக்கு அட்டவணை -3-இன் மூலம் குறியீட்டு எண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலாசுபரசு குறியீட்டு எண்கள்

$$= \frac{\Sigma\, PnQo}{\Sigma\, PoQo} \times 100 \quad \frac{532.50}{285.00} \times 100$$

$$Pon = \frac{\Sigma\, PnQo}{\Sigma\, PoQo} \times 100$$

$$= \frac{532.50}{285.00} \times 100$$

$$= \mathbf{186.84}$$

அட்டவணை 3-இல் அடிப்படை ஆண்டின் (1980) விலையை (Po) அந்த ஆண்டில் வாங்கப்பட்ட அளவினால் (Qo) பெருக்கி (PoQo) அவற்றின் தொகுப்பு (PoQo) 285 பெறப்பட்டிருக்கிறது. பின்னர் நடப்பு ஆண்டின் விலையை (Pn) முன்பு வாங்கப்பட்ட அந்த அளவால் (Qo) பெருக்கி (PnQo) அவற்றின் தொகுப்பு (PnQo) 532.50 எனக் கணக்கிடப்படுகிறது. 'இலாசுபரசு' குறியீட்டு எண்கள் என்பவை அளவால் (Quantity) நிறையிடப்பட்ட விலை விகிதங்களின் தொகுப்பாகும்.

இலாசுபரசு குறியீட்டு எண்களைக் கணிக்கும் பொழுது அடிப்படை ஆண்டில் நுகரப்பட்ட பண்டங்களின் அளவு நடப்பு ஆண்டில் எவ்வித மாற்றமும் அடையவில்லை என்ற எடுகோளில் (Assumption) அடங்குகிறது. இம்முறையில் காலப்போக்கில் நுகர்வு அளவில் ஏற்பட்ட மாற்றங்கள் கணக்கிலடங்காமற் போகலாம். இக்குறையைக் களைவதற்காகப் பாசுசே குறியீட்டு எண்கள் (Paasche's Index Numbers)

அட்டவணை-3

| | அடிப்படை ஆண்டு 1980 | | நடப்பு ஆண்டு 1986 | | |
|---|---|---|---|---|---|
| பண்டங்கள் | விலை Po | அளவு Qo | விலை Pn | PoQo | PnQo |
| 1. | 3.00 | 50 | 4.50 | 150.00 | 225.00 |
| 2. | 15.00 | 5 | 37.50 | 75.00 | 187.50 |
| 3. | 30.00 | 1 | 60.00 | 30.00 | 60.00 |
| 4. | 1.00 | 10 | 2.00 | 10.00 | 20.00 |
| 5. | 0.20 | 10 | 10.00 | 10.00 | 20.00 |
| 6. | 2.00 | 5 | 4.00 | 10.00 | 20.00 |
| | | | Σ PoQo | 285,00 | 532.50 |

அட்டவணை-4

| பண்டங்கள் | அடிப்படை ஆண்டு 1980 (Po) விலை | (Qo) அளவு | நடப்பு ஆண்டு 1986 (Pn) விலை | (Qn) அளவு | PoQo | PnQn |
|---|---|---|---|---|---|---|
| 1. | 3.00 | 75 | 4.50 | 75 | 225.00 | 337.50 |
| 2. | 15.00 | 7 | 37.50 | 7 | 105.00 | 262.60 |
| 3. | 30.00 | 2 | 60.00 | 2 | 60.00 | 120.00 |
| 4. | 1.00 | 15 | 2.00 | 15 | 15.00 | 30.00 |
| 5. | 0.20 | 80 | 0.40 | 80 | 16.00 | 32.00 |
| 6. | 2.00 | 8 | 4.00 | 8 | 16.00 | 32.00 |
| | | | | | 437.00 | 814.10 |

பரிந்துரைக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் நுகரப் படும் பண்டங்களின் அளவு (Qn) நிறையாக எடுத் துக்கொள்ளப்படுகின்றன. இந்த அடிப்படையில் அட்டவணை 4-இல் பாசுசே குறியீட்டு எண்கள் கணிக்கப்பட்டுள்ளன.

'பாசுசே' குறியீட்டு எண் $= \frac{\Sigma PnQn}{\Sigma PoQn} \times 100$

$$= \frac{814}{437} \times 100$$

$$= 186—27$$

பாசுசே குறியீட்டு எண்ணில் அடிப்படை ஆண் டின் குறியீடுகள் மிகைப்படுத்தப்படுகின்றன. எனவே, பிசர் (Fisher) என்பவர் உருவாக்கிய குறியீட்டு எண் களில் இக்குறைபாடுகள் களையப்பட்டுள்ளன. அதை 'விழுமிய குறியீட்டு எண்' (Ideal Index Number) என்று குறிப்பிடுகின்றனர். பிசரின் விழுமிய குறியீட் டெண், 'இலாசுபரசின்' குறியீட்டெண், பாசுசே குறி யீட்டெண் ஆகியவற்றின் பெருக்குச் சராசரியே ஆகும். இவ்வகையில் குறியீட்டெண் கண்டுபிடிக்க

இவர் அமைத்த சமன்பாடு

$$= \sqrt{\frac{\Sigma PnQo}{\Sigma PoQo} \quad \frac{\Sigma PnQn}{\Sigma PoQn}} \times 100$$

இச்சமன்பாட்டில் அடிப்படைக் காலத்தின் பண்ட நுகர்வு அளவுகளும், நடப்புக் காலத்தின் பண்ட நுகர்வு அளவுகளும் பயன்படுத்தப்படுவதால் இது மிகச் சிறந்த குறியீட்டுச் சமன்பாடாகக் கருதப்படு கிறது.

அட்டவணை-4 இல் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் மற்றும் விலைகளைக் கொண்டே பிசரின் சமன்பாட்டைப் பின்பற்றிக் குறியீட்டெண் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறியீட்டு எண் $= \sqrt{\frac{\Sigma PnQo}{\Sigma PoQo} \quad \frac{\Sigma PnQn}{\Sigma PoQn}} \times 100$

$$= \sqrt{\frac{532.50}{285.00} \quad \frac{814.00}{437.00}} \times 100$$

$$= \sqrt{1.868 \times 1.863} \times 100$$

$$= \sqrt{3.48} \times 100$$

$$= 1.865 \times 100$$
$$= \mathbf{186.55}$$

குறியீட்டெண்களின் உதவியால் நாட்டு வருமானம் மற்றும் தனி ஆள் வருமானம் (Per Capita Income) ஆகியவற்றில் காலப் போக்கில் ஏற்படுகின்ற மாற்றங்களை விழுக்காடு அடிப்படையில் எல்லோரும் புரிந்துகொள்ளுமளவிற்கு வெளியிட முடியும். அட்டவணை-6-இல் நாட்டு வருமானமும் தனி ஆள் வருமானமும் உருபாய் மதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. அட்டவணை-7ல் இவை குறியீட்டு எண்களாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வட்டவணையில் நாட்டுவருமானம், தனி ஆள் வருமானம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் புரிந்துகொள்வதும், ஒப்பிட்டுப் பார்ப்பதும் எளிதாக இருக்கும். இதுவே குறியீட்டு எண்களின் மிக முக்கிய பயனாகும்.

அட்டவணை-5

| பண்டங்கள் வ.எண். | அடிப்படை ஆண்டு நடப்பு ஆண்டு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Po | Qo | Pn | Qn | PoQo | PnQn | PoQn | PnQo |
| 1. | 3.00 | 50 | 4.50 | 75 | 150.00 | 337.50 | 225.00 | 225.00 |
| 2. | 15.00 | 5 | 37.50 | 7 | 75.00 | 262.50 | 105.00 | 187.50 |
| 3. | 30.00 | 1 | 60.00 | 2 | 30.00 | 120.00 | 60.00 | 60.00 |
| 4. | 1.00 | 10 | 2.00 | 15 | 10.00 | 30.00 | 15.00 | 20.00 |
| 5. | 0.20 | 50 | 0.40 | 80 | 10.00 | 32.00 | 16.00 | 20.00 |
| 6. | 2.00 | 5 | 4.00 | 8 | 10.00 | 32.00 | 16.00 | 20.00 |
| | | | | | 285.00 $\Sigma$ PoQo | 814.00 $\Sigma$ PnQn | 437.00 $\Sigma$ PoQn | 532.50 $\Sigma$ PoQo |

அட்டவணை-6

| ஆண்டு | நாட்டு வருமானம் (உரு. கோடியில்) | தனி ஆள் வருமானம் (உருபாயில்) |
|---|---|---|
| 1950-51 | 16,730 | 466 |
| 1955-56 | 19,950 | 508 |
| 1960-61 | 24,250 | 559 |
| 1965-66 | 27,100 | 559 |
| 1968-69 | 30,510 | 589 |
| 1973-74 | 36,030 | 621 |
| 1978-79 | 46,550 | 717 |
| 1984-85 | 57,020 | 772 |

அட்டவணை-7

| ஆண்டு | நாட்டு வருமானம் குறியீட்டு எண்ணில் | தனிஆள் வருமானம் குறியீட்டு எண்ணில் |
|---|---|---|
| 1950-51 | 100 | 100 |
| 1955-56 | 119 | 109 |
| 1960-61 | 145 | 120 |
| 1965-66 | 162 | 120 |
| 1968-69 | 182 | 126 |
| 1973-74 | 215 | 133 |
| 1978-79 | 278 | 154 |
| 1984-85 | 341 | 166 |

எம்.தி.

**துணை நூல்கள்:**

**Gupta**, S.P., Statistical Methods, Sultan Chand & Sons, New Delhi, 1985.

**Murray R. Spiegel**, Statistics, I editon, Schaum's Outline Series, Singapore, 1981.

***குறியீடுசார் மானிடவியல்:*** ஒரு பண்பாட்டிலுள்ள குறிகளுக்கும் அப்பண்பாட்டின் உறுப்பினர்களுக்குமிடையே உள்ள உறவுகளைப் பற்றி ஆராயும் மானிடவியல் உட்பிரிவே குறியீடுசார் மானிடவியல் (Symbolic Anthropology). ஒவ்வொரு பண்பாட்டிலும் எண்ணிலடங்காக் குறிகளும் (Symbols) குறியீடுகளைச் சார்ந்த சைகை முறைகளும் உள்ளன. இவை அவ்வப் பண்பாடுகளோடு ஒன்றிய கூறுகளானாலும் அம்மக்களின் நடத்தைமுறைகளை (Behaviour Patterns) விளக்குந் தன்மையன. இதனாலேயே குறிகளைப்பற்றிய ஆய்வுகள் மூலம், பல்வேறு பண்பாடுகளிலும் குறியீடுகளுக்கும் மக்களுக்கும் உள்ள இடைவினைகளையும் (Interactions) அதை எவ்வாறு மக்கள் இளம் பருவத்திலிருந்து கற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் அறியமுடிகிறது. குறியீடுசார் மானிடவியல் சிலவேளையில் குறியியல்சார் மானிடவியல் (Semiotic Anthropology) என்றும் வழங்கப் பெறும்.

குறிகளைப் பற்றி அறியும் மானிடவியலாரின் ஆர்வம் 100 ஆண்டுகளுக்கும் முன்னர், பழம்பெரும் மானிடவியல் அறிஞர்களான மக்லீமன் (McLeman,) தைலர் (Tylor) ஆகியோரின் காலத்திலேயே தோன்றி விட்டது. தொடக்க காலத்திலிருந்தே பலதுறை அறிஞர்கள் குறிகளைப் பற்றி ஆராய்ந்து வந்துள்ளனர். மொழியியலாரும் மானிடவியலாரும் இதில் முதலிடம் பெறுகின்றனர். இருப்பினும் இலக்கியவியல், தத்துவவியல், கலையியல், சமயவியல் முதலானவற்றைப் பற்றி ஆராயும் அறிஞர்களும் இதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

குறிகள், அவைகள் சார்ந்துள்ள பண்பாட்டில் ஏதோ ஒன்றைக் குறிப்பதாக அமைந்துள்ளன. இவை உள்ளார்ந்த மனத்தின் வெளிப்பாடாக உள்ளன; உலகளாவிய நிலையில் மனிதர்களின் உளப்பாங்கினை வெளிப்படுத்துவதாக உள்ளன; விலங்குகளிடத்தும் மக்களிடையேயும் தொடர்புகொள்ளும் சாதனமாகவும், மொழியின் ஒரு பகுதியாகவும், பண்பாட்டின் கூறுகளாகவும் உள்ளன. அதனால் வாழ்க்கைப் பாங்கின் ஒரு முதன்மையான கூறாகக் குறிகள் திகழ்கின்றன. குறியீட்டமர்வு (Symbolism) இலக்கியங்களிலும், கலைப் பொருள்களிலும், சமய வழிபாடுகளிலும், சடங்கு முறைகளிலும் பெருமளவு காணப்படுகிறது. தத்துவவியலாரும் மொழியியலாரும் குறியீடு என்னும் கருத்தாக்கத்தை முறைப்படுத்தும்போது அதனைக் கருத்தியல் (Abstract) அளவில் நிருணயம் செய்கின்றனர். ஆனால், மானிடவியலார் ஒரு பண்பாட்டில் குறிகள் எவ்வாறு சிறப்பிடம் பெற்றுள்ளன, ஒவ்வொரு குறியைப் பற்றியும் அம்மக்கள் கொண்

டுள்ள கருத்துகள் என்னென்ன? அவற்றின் செயல் முறைகள் பண்பாட்டின் ஒவ்வொரு நிறுவனத்தோடும் எவ்வகையான தொடர்புகளைப் பெற்றுள்ளன? அக் குறிகளோடு அம்மக்கள் கொண்டுள்ள நடத்தை முறைகள் என்னென்ன? அன்றாட வாழ்வில் மக்கள் குறியீடுகளைக் கொண்டு எவ்வகையான செயல் களைச் செய்கின்றனர்? அவற்றைச் சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்கள் புரிந்துகொள்ளும் முறை எவ் வாறு உள்ளது என்பன போன்ற பலவற்றை மானிட வியலார் முதன்மையாக ஆராய்கின்றனர்.

தொன்மைப் பண்பாடுகள் முதற்கொண்டே குறி களின் அமைப்பு அந்தந்தப் பண்பாட்டோடு வளர்ச்சி பெற்று வந்துள்ளது. ஒரு குறிக்கு ஒருவகையான பொருளை அச் சமுதாயம் அமைத்துக்கொள்ளும் முறை நெடுங்காலமாக வளர்ச்சி பெற்று வந்திருக் கிறது. அது அச்சமுதாயத்தின் அமைப்பைப் பெரிதும் ஒத்துள்ளது. பெரும்பாலான சமுதாயங்களில் 'தந்தை என்னும் தகுதி பெறும் ஆடவரின் கட்டளைகளுக்கு அக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கட்டுப்படுகிறார் கள். அவர் கூறும் வார்த்தைகள் மதிக்கப்படுகின்றன. அவரை மையமாகக் கொண்டே அனைத்துச் செயற் பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே சமுதாயத்தில் ஒவ்வொருவரின் செயல்களும் அவர் களின் செயல் தகுதியைப் பொறுத்து அமைவ தால் ஒருவரின் செயல் தகுதிக்கேற்ப மற்றவர் கள் அவருடன் தொடர்புகொள்ளும் முறையும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. வெண்ணிற ஆடை உடுத்தி, வெண்ணிறத் தலைத் தொப்பி அணி வோரே செவிலித் தாய் என்றும்,காக்கிச்சட்டையுடன் தலைத்தொப்பியும் அடையாளக்குறிகளும் (Badges) அணிந்து கொண்டவர்கள் காவலர்கள் என்றும் கருதி, ஒருவர்தம் செயல்களை நெறிப்படுத்திக்கொள்ள முடி கிறது. இவ்வாறான பல குறிகள் ஒவ்வொரு சமுதா யத்திலும் பல செயல்முறைகளைக் கொண்டுள்ளன.

இக்காலச் சமுதாயத்தில் குறிகளின் பங்கு இன்றி யமையாததாக உள்ளது. குறிப்பாக, ஓர் எடுத்துக் காட்டு மூலம் இதனை விளக்கலாம். போக்கு வரத்து மிகவும் பெருகியுள்ள இன்றைய நகரச் சமுதாயத்தினரிடையே அவற்றை ஒழுங்குபடுத்து வதற்கு மிகுதியான எண்ணிக்கையில் போக்குவரத் துக் காவலர்களை ஈடுபடுத்த முடியாது. அதனால், சாலைகளில் பல கருவிகளைப் பொருத்தி அவற்றின் மூலம் பல குறிகளைப் பயன்படுத்திப் போக்கு வரத்தை ஒழுங்குபடுத்துகின்றனர். இதில் பயன்படுத் தப்படும் குறிகள் மக்கள் அனைவரும் அறிந்தவையே. இவ்வாறு பல்வேறு முறைகளில் ஒவ்வொரு பண் பாட்டிலும் குறிகள் முக்கிய பங்கு பெற்றுள்ளன.

மானிடவியலார் தாம் ஆராயும் பண்பாட்டி லுள்ள குறிகளின் உள்ளார்ந்த பண்புகளையும் வெளிப்படையான பண்புகளையும் ஆழ்ந்து அறியும் முறையில் தங்களை நெறிப்படுத்திக் கொண்டுள்ள னர். குறியீடுகள், அந்தந்தப் பண்பாட்டின் சிந்தனை முறைகளையும் அவற்றின் புறச் செயல்களையும் வெளிப் படுத்தக்கூடியன என்பதை நன்கு அறிந்தவர் கள் மானிடவியலார். பண்பாடு பற்றிய அனைத்து நிறுவனங்களின் அமைப்புகளும் செயல்முறைகளும் எந்தெந்த வகையான சமுதாய அமைப்புகளில் எவ் வெவ்வாறு செயற்படும் என்பதைக் கொள்கையள விலும் நடைமுறை அளவிலும் பண்பாட்டிடை (Cross-Cultural) நிலையில் மானிடவியலார் நன்கு அறிந்துள்ளனர். இவர்களின் முறையியல் மூலம் குறி கள் பற்றிய பல ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. சில மானிடவியலார் பிறருக்குக் குறிகள் என்று தோன்றாதவற்றையும் குறிகள் என வகைப்படுத்தி அவற்றின் முறைகளை விளக்கியுள்ளனர்.

மானிடவியலறிஞரான சினீடர் (Schneider)உறவு முறைகளைக் குறிப்பிடும் சொற்களையே குறியீடுகள் என்று குறிப்பிடுவார். அவர் மக்கள் பயன்படுத்தும் சொற்கள் மூலமாகவும் குறிகளைக் காணவேண்டு மென்ற ஆழ் நிலையினை உணர்த்துவார். கிளிப் போர்டு கீர்ட்சு (Clifford Geertz) குறிகளைப் பற்றி ஆராயும்போது அவை சமுதாயத்திலுள்ள உறுப்பினர் களின் புற உடல், மன வடிவம், சமுதாய நிகழ்ச்சி கள் முதலானவற்றை வடிவமைக்கின்றன எனக் கூறு வார். எனவே, அவற்றை உற்றுநோக்குவது மூலமும் குறிகளின் தன்மைகளை அறியலாம் என்பார்.

அமைப்பியல் மானிடவியலின் (Structural (Anthropology) தந்தையான இலெவி இசுட்ராசு Levi - Strauss) தொன்மங்களுக்கும் (Myths) அதி லுள்ள குறிகளுக்கும் உள்ள உறவுகளைக் கண்டறிந் தார். அதன்மூலம் தொன்மங்களை வடிவமைக்கும் ஏதோ ஒரு பொது அமைப்பு (Structure) உள்ளதென் பதை உணர்ந்தார். அவை குறியீடுகளுடன் மிகவும் தொடர்புள்ளவை என மதிப்பிட்டார். அதனால் இலெவி-இசுட்ராசைச் சிலர் குறியியலாளர் (Semio- logists) எனவும் குறிப்பிடுவர்.

அண்மைக் காலங்களில் மானிடவியலார் இரண்டு முதன்மையான கருத்துகளை மையமாகக் கொண்டே குறிகளையும் அவைசார்ந்த பண்பாட்டையும் ஆராய் கின்றனர். ஒன்று, ஒரு பண்பாட்டில் குறியீட்டாக்கம் (Symbolization) எவ்வாறு நிகழ்கிறது? அது குறியீடு சாராத பிற பண்பாட்டுக் கூறுகளோடு எவ்வாறு தொடர்பு பெற்றுள்ளது என்பதாகும். மற்றொன்று

குறியீடுகள் நிகழ்த்தும் செயல்கள் என்னென்ன? அவை தனி மனிதர்களோடும், பல தனிமனிதர்கள் சேர்ந்த குழுவினரோடும் பெறும் பங்கென்ன? அவை சமுதாயத் தேவைகளை நிறைவடையச் செய்யும் பணியில் எவ்வாறு பங்கேற்றுள்ளன என்பவையாகும்.

பி.சு.

**துணை நூல்கள்.**

**Firth, Raymond**, Symbols: Public and Private, George Allen & Unwin Ltd., London, 1975.

**Honnigman**, J. J., The Development of Anthropological Ideas, The Dorsey Press, Illinois, 1976.

**Taylor, B. Robert**, Cultural Ways, Allyn and Bacon, Boston, 1980.

**குறுக்கீடு**: இரு மொழிகளுக்கிடையே தொடர்பு (Contact) ஏற்படும்பொழுது ஒரு மொழியின் கூறுகளின் வருகையால் மற்றைய மொழியின் அமைப்பில் ஏற்படும் மாற்றமே குறுக்கீடு (Interference) எனப்படும். குறுக்கீடு இரு மொழிகளுக்கிடையேயும் ஒரு மொழியின் கிளை மொழிகளுக்கிடையேயும் ஒரு கிளைமொழியின் வகைகளுக்கிடையேயும் நடைபெறுதல் இயலும்.

தனி மனிதன் பேச்சின்கண் காணப்பெறும் குறுக்கீட்டிற்கும் மொழியின்கண் காணப்பெறும் குறுக்கீட்டிற்குமிடையே மிகுந்த வேறுபாடு உண்டு. மொழியின்கண் காணப்படும் குறுக்கீடு காலப்போக்கில் நிலைபெற்று மொழியின் உறுப்பாக மாறிவிடும். ஒலியன் நிலை (Phonological Level), உருபன் நிலை (Morphological Level), தொடரியல் நிலை (Syntactical Level) ஆகிய மூன்று நிலைகளிலும் மொழியியல் கூறுகள் அன்றி, மொழியியல் அல்லாக் கூறுகளின் காரணமாகக் குறுக்கீடு நடைபெறுதலுண்டு. ஒருவர் இருமொழியாளராக (Bilingual) இருக்கும் நிலையில் சமுதாயத் தாக்கம் காரணமாகக் குறுக்கீடு பெரிதும் நடைபெறலாம்.

இருமொழிகளை ஒப்பிட்டாய்வதன் வழி இம்மொழிகளில் காணப்பெறும் குறுக்கீட்டின் அளவைக் கண்டறிதல் இயலும். ஒரு மொழி பிற மொழியினின்றும் கடன்வாங்கிய கூறுகளைக் கண்டறிவதினின்றும் குறுக்கீட்டின் அளவைக் கண்டறியும் முறை முற்றிலும் மாறுபட்டது.

குறுக்கீடு ஒலியின் குறுக்கீடு (Phonic Interference) இலக்கணக் குறுக்கீடு (Grammatical Interference,) சொல் குறுக்கீடு (Lexical Interference) என மூன்று வகைப்படும்.

**ஒலியின் குறுக்கீடு**: ஒலியின் குறுக்கீடு ஒரு மொழியின் ஒலிகளைப் பிறிதோர் மொழியைப் பேசும் ஒருவர் எங்ஙனம் கேட்டு அவற்றை ஒலிக்கின்றார் என்பதனை விவரிக்கும். ஒலியின் குறுக்கீடு மரபு நிலையில் ஒலிப் பதிலீடு (Sound Substitution) எனக் குறிப்பிடப்பெற்றது. இருமொழியாளர் பிறமொழி ஒலிகளைத் தம் மொழியின் ஒலிகளோடு இணைத்துக் கண்டு ஒலிக்கும் நிலையில் ஒலியின் குறுக்கீடு நடைபெறுகிறது. இந்நிலையில், இருமொழியாளரின் முதல் நிலை மொழியின் (Primary Language) ஒலியியல் விதிகளுக்கேற்ப இரண்டாம் நிலை மொழியின் (Secondary Language) ஒலிகள் மாற்றம் பெறுவதுண்டு.

ஒலியின் குறுக்கீடு நான்கு வகைப்படும். ஒலியின் குறை வேறுபடுத்தல் (Uuder diffferentiation of Phonemes) என்பது முதல் வகையாகும். இரண்டாம் நிலை மொழியிலுள்ள இரண்டு ஒலிகள் முதல் நிலை மொழியிலுள்ள ஓர் ஒலிக்குப் பதிலீடு செய்யும் நிலையில் இக் குறுக்கீடு நடைபெறுகிறது. தமிழர் ஒருவர் ஆங்கிலத்திலுள்ள W (Water), V (Cover) ஆகிய இரண்டு ஒலிகளையும் தமிழிலுள்ள வகரத்திற்குப் பதிலீடு செய்தல் ஒலியின் குறைவேறுபடுத்தலுக்குத் தக்க சான்றாகும்.

ஒலியின் மிகைவேறுபடுத்தல் (Over Diferentiation of Phonems) என்னும் இரண்டாம் வகை ஒலியின் குறுக்கீட்டில் இரண்டாம் நிலை மொழியிலுள்ள ஓர் ஒலி முதல்நிலை மொழியிலுள்ள இரண்டு ஒலிகளுக்குப் பதிலீடு செய்யப்பெறும். ஈண்டு முதல்நிலை மொழியின் ஒலியின் வேறுபாடுகள் இரண்டாம்நிலை மொழியில் திணிக்கப்பெறுகின்றன. தமிழர் ஒருவர் ஆங்கிலத்திலுள்ள 'l' ஒலிக்குத் தமிழிலுள்ள லகரத்தையும் (Cell) ளகரத்தையும் (Flower) பதலீடு செய்தல், ஒலியின் மிகை வேறுபடுத்தலின் பாற்பட்டதாகும்.

மூன்றாம் வகை ஒலியின் குறுக்கீடு ஒலிவேறுபாட்டு மறுபரிசீலனை (Reinterpretation of Distinctions) எனப்படும். ஈண்டு முதல்நிலை மொழிக்கேற்ப இரண்டாம் நிலை மொழியின் ஒலிவேறுபாட்டுக் கூறுகள் மாற்றியமைக்கப்பெறும். இக்குறுக்கீடு, இருமொழியாளர் இரண்டாம் நிலை மொழி ஒலியினங்களின் பயின்றுவரும் முதன்மையற்றசிலகூறுகளுக்கு முதலிடம் அளிக்கும் நிலையில் நடைபெறுகிறது.

சுவைசெர்துவிச்சு (Schwyzertusch) மொழியில் ஒலி நீட்சி (Length), மயக்கம் (Gemination) போன்றவை மிகைக் கூறுகளாகவே (Redundant Features) கருதப்படுகின்றன. உரோமான்சு (Romansh) மொழியாளர் இக்கூறுகள் தம் மொழியில் சிறப்பிடம் பெறுகின்றமையால் இவற்றிற்கு முதலிடம் தந்து சுவைசெர்துவிச்சு மொழி ஒலிகளைத் தம் மொழி ஒலிகளுக்கேற்ப மாற்றியமைத்தல் ஒலி வேறுபாட்டு மறுபரிசீலனைக்குத் தக்க சான்றாகும். சுவைசெர்துவிச்சு மொழியிலுள்ள /'Fil.i/ என்னும் சொல் உரோமான்சு மொழியில் /'Filli/ என இடம்பெறுகிறது.

நேர் ஒலி பதிலீட்டு முறை (Actual Phone Substitution) என்பது நான்காம் வகை ஒலியின் குறுக்கீடாகும். ஈண்டு இரண்டு மொழிகளில் ஒலிகளுக்கிடையே காணப்படும் நுண்ணிய வேறுபாடுகள் கண்டறியப்பெறாமல், இரண்டுமொழிகளிலும்இணையான ஒலிகள் இருப்பதாகக் கருதப்பெற்று, ஒலிகள் பதிலீடு செய்யப்பெறுகின்றன.

உரோமான்சு மொழியிலுள்ள /b/ ஒலியும் சுவைசெர்துவிச்சு மொழியிலுள்ள /B/ ஒலியும் இணையான ஒலிகளாகக் கருதப்பெற்று, ஒலிப்பதிலீடு செய்யப்பெறுகின்றன. /b/ ஒலி எப்போதும் ஒலிப்புடை ஒலியாகவும் /B/ ஒலி சில சூழல்களில் மட்டுமே ஒலிப்புடை ஒலியாகவும் செயற்படுவதால், இவ்வொலிகளுக்கிடையே காணப்பெறும் வேறுபாடு ஒலிப் பதிலீட்டு நிலையில் (/' l ae B a/ – /'l cbe/) ஒலியின் குறுக்கீடாக அமைகிறது.

**இலக்கணக் குறுக்கீடு**: ஒரு மொழியின் இலக்கண மையக் கூறுகளான (Grammatical Core), சொல் வகைகள் (Parts of Speech), இலக்கணக் கூறுகள் (Grammatical Categories), செயலிகள் (Functors), தொடர்-தொடர்வகைகள் (Construction and Construction types) ஆகியவை பிறிதோர் மொழியில் வந்து வழங்கும் நிலையில் இலக்கணக் குறுக்கீடு நடைபெறுகிறது.

பிற வகைக் குறுக்கீடுகளைக் காட்டிலும் இலக்கணக் குறுக்கீடு மிகவும் குறைந்த அளவே நடைபெறும். இலக்கணக் குறுக்கீட்டின் காரணமாக மொழியின் இலக்கண அமைப்பில் மாற்றம் ஏற்பட்டு இலக்கண மாற்றம் (Grammatical Change) நடைபெறுகிறது.

தமிழ்மொழியில் முன்னொட்டுகள் (Prefixes) கிடையாது. ஆனால் வடமொழியிலிருந்து சில எதிர் மறை முன்னொட்டுக்கள் தமிழில் வந்து வழங்கியமை (அநீதி, அவச்சொல்) இலக்கணக் குறுக்கீட்டிற்குத் தக்க சான்றாகும். ஈண்டு வடமொழியிலுள்ள செயல் வகையினைச் சார்ந்த முன்னொட்டு, இலக்கணக் குறுக்கீட்டின் காரணமாகத் தமிழ் மொழியின் இலக்கண மைய அமைப்பில் இலக்கண மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இதனைப் போன்று சொல்வகை நிலையிலும், இலக்கணக் கூறுகள் நிலையிலும், தொடர்நிலையிலும் இலக்கணக் குறுக்கீடு நடைபெறுதலுண்டு.

**சொல் குறுக்கீடு**: ஒரு மொழியின் சொற்கள் பிறிதோர் மொழியின் சொற்களஞ்சியத்தில் (Lexicon) வந்து வழங்கும் நிலையில் சொல் குறுக்கீடு நடைபெறுகிறது. இக்குறுக்கீடுதான் அனைத்து வகைக் குறிக்கீடுகளிலும் மிகவும் எளிதாக அறியக் கூடியதும் விரைவில் நடைபெறக் கூடியதுமாக அமைந்துள்ளது. தேவை கருதியும் உயர்வு நோக்கம் கருதியும் சொல் குறுக்கீடு நடைபெறுகிறது.

தேவை கருதி ஆங்கில மொழியிலுள்ள தொலைக் காட்சி (Television), ஏவுகணை (Rocket) போன்ற சொற்களும், உயர்வு நோக்கம் காரணமாக (அம்மா) 'மம்மி' (அப்பா) 'டாடி'போன்ற சொற்களும் தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் வந்து வழங்குவது சொல் குறுக்கீட்டின் பாற்படும்.

சொல் குறுக்கீட்டினால் புதிய சொல்லாக்கம், சொற்பொருளில் மாற்றம், மொழிபெயர்ப்பு, ஒலி பெயர்ப்பு போல்வன நடைபெறுதலுண்டு. இக்குறுக்கீட்டின் காரணமாக மொழியின் சொற்களஞ்சியத்தில் சொற்களஞ்சிய மாற்றம் (Lexical Change) நடைபெறும்.

மொழித் தொடர்பால் பிறமொழிச் சொற்கள் தரும் பொருள் இழி வழக்கமாக அமையும் நிலையில் அதே வடிவுடையதன்றிப் பொருள் ஒற்றுமையுடைய முதல்மொழிச் சொற்கள் வழங்குவதற்குத் தடை ஏற்படும். இத்தகைய தடை எதிர் குறுக்கீடு (Negative Interference) எனப்படும்.

மலையாளத்தில் மயிர் என்னும் சொல் இழிவழக்காக அமைந்துள்ளமை காரணமாகத் தமிழிலும் அது தடைசெய்யப்பட்டுள்ளமையால் தமிழ், மலையாள இருமொழியாளர் 'முடி' என்ற சொல்லையே பயன்படுத்துவது எதிர் குறுக்கீட்டிற்குச் சிறந்த சான்றாகும்.

ஏ.ஆ.

**துணை நூல்**:

Weinreich, U., Languages in Contact-Findings and Problems, Mouton & Co., 1953.

**குறுக்கு விசாரணை** காண்க: சான்றாளர்:

**குறுகியகால நடைமுறை:** தலைமை நீதித்துறை நடுவர், பெருநகர் நடுவர், உயர்நீதி மன்றத்தால் இதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப் பட்டுள்ள முதல் வகுப்பு நடுவர் எவரும், தாம் பொருத்தமெனக் கருதும் விதத்தில், 1) மரண தண்டனையோ ஆயுள்தண்டனையோ இரண்டாண்டு களுக்கு மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனையோ விதிப்பதற்குரியன வல்லாத குற்றங் கள்; 2) பொருள்களின் மதிப்பு இருநூறு உருபாய்க்கு மேற்படாத நிலையில், இந்தியத் தண்டனைச் சட்டம் (45/1860), பிரிவுகள் 379,380, 381-ஆகிய வற்றின் கீழ்த் திருட்டுக்குற்றம்;3)பிரிவு 411-இன்கீழ்த் திருட்டுப் பொருளைப் பெறுதல் அல்லது தொடர்ந்து வைத்திருத்தலாகிய குற்றம்;4)பிரிவு 414-இன் கீழ்த் திருட்டுப் பொருளை மறைத்து வைப்பதற்கு அல்லது விற்றுவிடுவதற்கு (Disposal) உதவியாயிருக்கும் குற்றம்; (5) பிரிவுகள் 454,456 ஆகியவற்றின் கீழான குற்றங்கள்; (6) பிரிவு 504-இன் கீழ் அமைதிக் குலைவைத் தூண்டிவிடும் கருத்துடன் செய்யப்படும் அவமதித்தலாகிய குற்றம்; மற்றும் பிரிவு 506-இன் கீழ் அவமதித்தலாகிய குற்றம்; 7) மேற்சொன்ன குற்றங்களுள் எவையேனும் ஒன்றுக்கு உடந்தையா யிருத்தலாகிய குற்றம்; (8) அத்தகைய முயற்சி குற்றமாக இருக்கும்போது, மேற்சொன்ன குற்றங் களுள் ஏதேனும் ஒன்றைச் செய்ய முயற்சி செய்தலா கிய குற்றம்; (9) எந்தச் செய்கையைப் பொறுத்து 1871-ஆம் ஆண்டு கால்நடை அத்துமீறல் சட்டம் பிரிவு20-இன்படிமுறையீடு ஒன்றைச் செய்து கொள்ள லாகுமோ அந்தச் செய்கையினால் உண்டான குற்றங்கள்;10)இரண்டாம்வகுப்பு நடுவர்ஒருவர்,உயர், நீதிமன்றம் அதிகாரம் அளித்ததன்பேரில், அபராதம் மட்டும் விதிப்பதற்குரிய அல்லது அபராதத்துடனோ அபராதம் இல்லாமலோ ஆறு திங்களுக்கு மேற் படாத காலத்துக்குச் சிறைத் தண்டனை விதிப்பதற் குரிய குற்றம்;11)அத்தகைய செய்கைக்கு உடந்தை யாக இருக்கும் குற்றம் அல்லது அதைச் செய்வதற் கான முயற்சி செய்த குற்றம் ஆகியவற்றைக் குறுகிய கால நடைமுறையில் (Summary Trial) விசாரித்து முடிக்கலாம்.

**நடைமுறை:** இந்நடைமுறை அழைப்பாணை வழக்கு (Summons case)அடிப்படையில் நடைபெறும். நடுவர், மாநில அரசு குறித்துரைக்கும் படிவத்தில் பின்வரும் விவரங்களை நீதிமன்ற மொழியில் பதிவு செய்வார். அவை, (1) வழக்கின் வரிசை எண், (2) குற்றமிழைத்த தேதி, (3) அறிக்கை அல்லது முறை யீட்டின் தேதி, (4) முறையிடுபவர்(எவரேனுமிருப்பின் அவரது பெயர், (5) குற்றஞ்சாட்டப்பட்டவர் பெயர், பெற்றோர், உறைவிட விவரம்,(6) முறையீடு செய்யப் பட்டுள்ள குற்றம் மெய்ப்பிக்கப்பட்டுள்ள குற்றம் (ஏதேனுமிருப்பின்) பிரிவு 260, உட்பிரிவு (1) கூறுகள் (ii), (iii), (iv) ஆகியவற்றின் கீழ் வரும் சூழ்நிலை களில் எந்தச் சொத்தைப் பொறுத்துக் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதோ, அந்தச் சொத்தின் மதிப்பு, (7)குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாதுரை, (விசாரணை ஏதேனுமிருப்பின்), (8) முடிபு, (9) தண்டனை அல்லது வேறு அறுதியான கட்டளை, (10) நடை முறை முடிவடைந்த தேதி ஆகியனவாம்.

**தீர்ப்பு:** இந் நடைமுறையில் நடுவர், தீர்ப்பினைச் சாட்சியத்தின் சாரத்தோடு முடிபுக்கான காரணங் களைச் சுருக்கமாகக் குறிக்கும் பாங்கில் நீதிமன்ற மொழியில் அமைத்து வெளியிடுவார். இதில் வழங்கப் படும் தண்டனைத் தீர்ப்பு மூன்று திங்களுக்கு உட் பட்டதாக இருக்கும். பு.வே.

**குறுங்கீரனார்** என்பவர் சங்க காலப் புலவ ராவார். இவரது இயற்பெயர் கீரன் என்பதாகும். குறுகிய வடிவம் கொண்டு விளங்கியதால் குறுங்கீர னார் எனப்பட்டாராதல் வேண்டும். உருவத்தை அடையாகக் கொடுத்துப் பெயர் வழங்கும் மரபுசங்க காலத்தில் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, உடலின் குறுமை குறித்துத் தமிழ் வளர்த்த பெரு முனியும் பாண்டியன் ஒருவனும் முறையே குறு முனி என்றும் குறுவழுதி என்றும் பெயர் வழங்கப்பட்டுள்ள னர். அதுபோலவே, கீரனார் என்னும் இயற்பெயரின ரான இவரும்குறுங் கீரனார் ஆயினார். இவரது ஒரே பாடல் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது. (குறு. 382). அப்பாடல் தன்னம்பிக்கையின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

கார்காலத்தில் வருவேன் என்று சொல்லிய தலைவன் வரவில்லை; கார்கால மலர்கள் மலரத் தொடங்கின. தலைவன் சொன்ன சொல்லைக் காப்பாற்றாதவன் என்று கூறுவது போலத் தோழி தலைவியைப் பார்க்க, தலைவி தோழியின் மன நிலையை உணர்ந்தவளாய், புதிதாகப் பெய்த மழையைக் கார்காலம் என்று நம்பிய கார்காலச் செடிகள் பூக்கத் தொடங்கின; நம் காதலர் 'பொய் புகலார்' என்று தன்னம்பிக்கையோடு கூறுகின்றாள். ஆ.கா.

**குறுங்குடி மருதனார்** சங்கப் புலவர்களுள் ஒருவர். மருதனார் என்னும் இயற்பெயர் வாய்ந்த இப்புலவர் பாண்டிய நாட்டிலுள்ள குறுங்குடி என் னும் ஊரினராதலின் குறுங்குடிமருதனார் என்றழைக்

கப்பெற்றார். மாங்குடி மருதனார் என வேறொரு சங்கப் புலவரும் இங்ஙனம் பெயர் பெறுதல் காண லாம். அகநானூறு (4), குறுந்தொகை (344) ஆக இவர் பாடியனவாக இரு பாக்கள் உள்ளன. இரு பாக் களும் முல்லைத் திணையையே புனைகின்றன.

முல்லையின் கூர்நுனியரும்புகள் தோன்றவும் இல்ல மரத்தின் முகையொடு கொன்றை முகைகள் மலரவும், மான்கள் பள்ளத்தில் துள்ளவும், முல்லை நிலத்தில் நீரில்லா வருத்தம் நீங்கவும் மேகம் மழை பெய்து கார்ப் பருவம் செய்தது என முல்லைக்குரிய பெரும்பொழுது புனையப்பெற்றுள்ளது (அகம்.4). காளையோடு மேய்ந்த பசு மடியில் பால் நிறைந்த நிலையில் கன்றினை நினைத்துப் பால் சோர, ஊரி லுள்ள கன்றிடத்தே மீளும் துன்பமிகு மாலைக் காலம் என முல்லைக்குரிய சிறுபொழுதும் இப்புலவ ரால் புனையப்பெற்றுள்ளது (குறு. 344). வினை முற்றி மீளும் தலைவனின் அருளுள்ளத்தை இப்புலவர் 'பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த தாதுகண் பறவை பேதுறல் அஞ்சி மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன்' என்று கூறுவதன் வாயிலாகச் செவ் வியின் புலப்படுத்தியுள்ளார் (அகம். 4). தோழி தலை வியைப் பருவம் காட்டி வற்புறுத்தியமை கூறும் இவர்தம் அகப்பாடலைப் பேராசிரியர் நோக்கு என் னும் செய்யுளுறுப்பிற்குக் காட்டாகத் தந்து நயங் காட்டி விளக்குவர் (தொல்காப்பியம் செய்யுளியல் 104-உரை). முல்லை என்னாது வைந்நுனை என்றத னால் அவை அரும்பியது அணித்து என்பது பெறப் பட்டது. சின்னாள் கழியின் வைந்நுனையாகாது மெல்லெனுமாகலின். இல்லமும் கொன்றையும் மெல் லென்ற பிணியவிழ்ந்தன என்றான், கரிந்த துணை அவை முதல் கெடாது முல்லை யரும்பிய காலத்து மலர்ந்தமையின். 'இரும்பு திரித்தன்ன மருப்பு என்ற தூஉம் நீர்தோய்ந்தும் வெயிலுழந்த வெப்பந் தணிந் தில; இரும்பு முறுக்கிவிட்ட வழியும் வெப்பம் மாறாது விட்டவாறு போல வெம்பா நின்றன இன் னும்' என்றவாறு, இங்ஙனம் அப்பாடல் அடிகளுக்குப் பேராசிரியர் நயந் தோன்ற விரித்துச்செல்வர்.

இரா. சா.

**குறுங்கோழியூர் கிழார்,** சங்கக்காலப் புலவர்; குறுங்கோழியூர் என்னும் ஊரினராகக் கரு தப்படுகிறார். 'கோழி' என்பது உறையூரைக் குறிக் கும். குறுங்கோழியூர் என்பதை உறையூரைச் சார்ந்து விளங்கிய ஒரு பகுதியாகக் கொண்டு, இவர் சோழ நாட்டைச் சார்ந்தவர் என்பர் சிலர். இவர் தாம் பாடிய மூன்று பாடல்களிலும் சேரமன்னன் ஒருவ னையே பாடியிருத்தலின் இவர், சேர நாட்டைச் சார்ந்தவராக இருக்கவும் வாய்ப்புண்டு என்பாரும் உளர். இவர் ஊர் குறுங்கோளியூர் எனவும் வழங்கப் பட்டுள்ளது.'பெயரிலுள்ள கிழார்' என்பது வேளாளர் என்பதைக் குறிக்கும். இவ்வேளாளப் புலவர் தம் ஊர்ப் பெயராலும் குடிப் பெயராலும் வழங்கப்பட் டமையால் இவருடைய இயற்பெயர் மறைந்ததோ எனக் கருத வேண்டியுள்ளது.

இவர் இயற்றிய மூன்று பாடல்களும் புறநானூற் றில் இடம் பெற்றுள்ளன (17, 20, 22). இவரால் பாடப்பட்டவன் யானைக் கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னன் ஆவான். இவ ருடைய மூன்று பாடல்களும் அவனைப் பற்றியே அமைந்துள்ளன. சங்ககாலத்தில் புகழ்பெற்று விளங்கிய பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனால் சிறை பிடிக்கப்பட்டுத் தன் ஆற்றலால் தானே சிறையிலிருந்து விடுபட்டு, மீண்டும் தன் ஆட்சியை நிலைநாட்டுகிறான் சேரன் என்னும் செய்தியை இவர்வழி அறிய முடிகிறது. அச்சேரனுடைய முன்னோரின் ஆட்சிச் சிறப்பையும், அவனுடைய செங்கோலின் தன்மையையும், காவல் சிறப்புகளையும்இவர் நயம்பட எடுத்துரைத்துள்ளார்.

யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறை என்னும் பெயரை, 'வேழநோக்கின் விறல் செஞ்சேய்' என்றும், 'மாந்தரஞ்சேரலிரும்பொறை' என்றும் தம் பாடலில் (22) குறித்துள்ளார். அவனது கைவண்மையை, 'நிற்பாடிய வயங்குசெந்நா, பின் பிறர் இசை நுவலாமை, ஓம்பாது ஈயும் ஆற்றல் எங்கோ' (22) என்று சிறப்பிக்கும் அடிகள் குறிப்பிடத் தக்கவை. இவர் தெற்கே குமரியையும் வடக்கே இம யத்தையும் கிழக்கிலும் மேற்கிலும் கடலையும் தமிழ் நாட்டின் எல்லைகளாகக் குறித்துள்ளார். மு.செ.

**குறுஞ்சீர் வண்ணம்** தொல்காப்பியம் கூறும் 20 வண்ணங்களுள் ஒன்று. சீரில் அமையும் எழுத்துகள் காரணமாகப் பெயர்பெற்ற வண்ணங் களுள் இது ஒன்றாகும். குற்றெழுத்துப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணம் என்று இளம்பூரணர் கூறி, 'உறுபெய லெழிலி தொகுபெயல் பொழிய' எனத் தொடங்கும் பழம் பாடலினை மேற்கோள் காட்டியுள்ளார். இப்பாடற் சீர்களில் குற்றெழுத்து களே பயின்று வந்துள்ளன. அதனால் குற்றெழுத்துப் பயின்று வரும் சீர்களையுடைய வண்ணம் குறுஞ் சீர் வண்ணம் என்பதே இளம்பூரணர் கருத்தாகத் தெரிகிறது. நச்சினார்க்கினியர் இதனை மிறைக்கவி என்று குறிப்பிட்டுள்ளார். திவாகரம் பிங்கலம் ஆகி யன இவ்வாறமையும் செய்யுளைக் குகைச் செய்யுள் என்று கூறுகின்றன. அ.மா.ப.

**குறுந்தொகை:** இது, அகனைந்திணை பற்றி அகவல் யாப்பினானியன்ற செய்யுள்களடங்கிய சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகும். ஏனைய நற்றிணை, அகநானூறு ஆகியவற்றிலுள்ள செய்யுட்களினும் அடியளவாற் குறைந்த செய்யுள்கள் கொண்டது பற்றி இந்நூல் குறுந்தொகை எனப்பெயர் பெற்றது. இதன்கண், பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய முருகன் பற்றிய வாழ்த்துச் செய்யுள்நீங்கலாக 401 அகவல்கள் அடங்கியுள்ளன. இந்நூலும் நற்றிணை, அகநானூறு ஆகியன போல் 400 செய்யுள்களையே கொண்டிருந்தது என்றும், ஏடெழுதுவோரால் ஒன்று மிகையாகச் சேர்க்கப்பட்டதென்றும் கருதப்படுகிறது.

குறுந்தொகை நான்கடிச் சிறுமையும், எட்டடிப் பெருமையும் கொண்ட செய்யுள்களைக் கொண்ட நூலெனப் பொதுவாகக் கொள்ளப்பட்டாலும், 307, 391 எண் கொண்ட செய்யுள்கள் ஒன்பதடிகளால் அமைந்துள்ளன. இவற்றுள் முன்னது சில ஏடுகளிற் காணப்படவில்லையாதலின் இதனை மிகைச் செய்யுளெனக் கொள்ளலாம்.

இந்நூற்கண்ணமைந்த செய்யுள்களை அடியளவு கொண்டு பாகு பாடு செய்து கண்டால் எண்ணிக்கை பின்வருமாறு அமையும்.

| 4அடி | 5அடி | 6அடி | 7அடி | 8அடி | 9அடி |
|---|---|---|---|---|---|
| 39 | 93 | 92 | 102 | 73 | 2 |

இந்நூற்கண்ணமைந்த செய்யுள்களைப் பாடிய சான்றோர் பாரதம் பாடிய பெருந்தேவனார் நீங்கலாக 205 பேராவர். இதனைப் பூரிக்கோ என்னும் புலமைச் சான்றோர் தொகுத்தாரென்பர். தொகுப்பித்த புரவலன் பெயர் இதுகாறும் அறியப் பெற வில்லை.

இந்நூலின் 165 செய்யுள்களைப் பண்டை உரையாசிரியப் பெருமக்கள்மேற்கோளாகஆண்டுள்ளனர்.மிக்க அளவில் மேற்கோளாகக் காட்டப்பட்ட நூல் இதுவேயாகும். தி.சௌ. அரங்கசாமி ஐயங்கார் 1915–இல் இதற்கு உரையெழுதியுள்ளார். இதன் மூலத்தை மட்டிலும் 1933–இல் வித்துவான் சோ. அருணாசல தேசிகர் வெளியிட்டார். இந்நூலைச் செவ்விய முறையில் ஆய்ந்து அரிய ஆராய்ச்சியுடன் கூடிய உரையுடன் 1937–இல் வெளியிட்ட பெருமை டாக்டர். உ.வே. சாமிநாதையரவர்களைச் சாரும்.

நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப் பாயிரத்தின் வாயிலாக, இதற்குப் பேராசிரியர் ஓர் உரை வகுத்தார் என்றும், அவ்வுரை இதன் 380 செய்யுள்களுக்கு மட்டுமே அமைந்திருந்தது என்றும், எஞ்சிய 20 செய்யுள்களுக்கு நச்சினார்க்கினியர் உரை வகுத்தார் என்றும் அறிய முடிகிறது. இவ்விருரைகளும் இன்று கிட்டாதொழிந்தன. திரு.மு. சண்முகம் பிள்ளை, கி.பி. 1986–ஆம் ஆண்டில் தம் புதிய உரையோடு இந்நூலைத் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

இந்நூற் செய்யுள்களைத் திணை வகையாற் பகுப்பின் குறிஞ்சிக்கு 147, நெய்தற்கு 71, பாலைக்கு 90, முல்லைக்கு 45, மருதத்திற்கு 48 எனவமையும். கூற்றுவகையாற் பகுப்பின், தலைவற்கு 61, தலைவிக்கு 180, தோழிக்கு 141, தாய்க்கு 9, பரத்தைக்கு 5, ஏனையோர்க்கு 5 எனவமையும்.

ஔவையார், அள்ளூர் நன்முல்லையார், வெள்ளி வீதியார் முதலான 13 பெண்பாற் புலவரின் செய்யுள்கள் இதன்கண் அமைந்துள்ளன. பொருளைச் சிறப்பித்தும், அரிய உவமைகளைப் படைத்தும் பெருமை பெற்ற புலவர் பலர் இந்நூலால் அறியப்படுகின்றனர். நெய்தற் கார்க்கியார், பாலைபாடிய பெருங் கடுங்கோ, மடல் பாடிய மாதங்கீரனார், கோவேங்கைப் பெருங்கதழ்வன், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்போர் தம் சிறப்புப் பெயரையும் இயற் பெயரையும் உடன்கொண்டோராவர். அரிய உவமைகளை ஆண்டமையாற் பெயர் பெற்ற புலவர்கள் பதின்மூவர் அறியப்படுகின்றனர். செம்புலப் பெயனீரார், நெடுவெண்ணிலவினார், குப்பைக்கோழியார், ஓரேருழவனார் ஆகியோர் அவருட் சிலராவர்.

உண்மைக் காதல் பிறவிதொறும் தொடர்ந்து வருவது என்பதனை இந்நூல் நன்கு விளக்குகிறது (2, 49, 57, 199,). இளம்பருவத்தில் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்ட ஆண் மகனையும் பெண்மகளையும் காதலராக்கிய விதியை (பாலை) வாழ்த்துவதாக ஒரு செய்யுள் அமைந்துள்ளது (229). பிரிவரிதாகிய தண்டாக்காமம் பிரிவினால் இடையூறுறுதலினும் உயிர் போதல் நன்றென ஒரு செய்யுள் பேசுகிறது (57). உற்றின்புறாவிட்டாலும் கண்டின்புறும் காதலியையும், பணிவிடை செய்து தோள்வீங்கும் காதலியையும் இந்நூல் காட்டுகிறது (60,61).

பண்டைத் தமிழருடைய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவை இந்நூற்கண் புலவர்களால் இனிதே விளக்கப்படுகின்றன. அவர்கள் மறுமையுலகத்தினைப் புத்தேள் நாடு, பெரும்பெயர் உலகம், உயர்நிலை உலகம் எனப் பாராட்டினர் (101,83,361).

பெண்கொலை புரிந்தோர் நீங்காத நிரயத்தில் விழுவர் என்று நம்பினர் (292).

பண்டைத் தமிழர் சகுனத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர். ஒந்தியும், குருகும் சகுனங்களாக மதிக்கப்பட்டன (140,260) காக்கை கரைதலை விருந்தின் வருகைக்குரிய நிமித்தமாகக் கொண்டனர் (210).

திருமணத்தின் பொழுது பறையும் சங்கும் முழக்குவதும், திருமணத்தின் பின் பெண்ணின் சிலம்பைக் கழித்தலும், பிறையைத் தொழலும் பண்டை மரபுகளிற் சிலவாகும் (15,7,307). 'உள்ளது சிதைப்போர் உளர் எனப்படாஅர்' (283), 'வினையே ஆடவர்க்குயிரே' (135), 'இல்லோன் இன்பம் காமுற்றாங்கு' (120), 'சான்றோர் புகழும் முன்னர் நாணுப' (252), இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு' (283) முதலான இந்நூலின் பொருள் பொதிந்த தொடர்கள் நினைவிலிருத்தத் தக்கனவாகும்.

இந்நூற்கண் 87 செடிகொடி வகைகளும், 28 விலங்குகள், புழு பூச்சிகளும், 22 பறவைகளும் இடம் பெற்றிருப்பதனை உ.வே.சாமிநாதையர் எடுத்துக் காட்டியுள்ளார்.

அகுதை, அஞ்சி, பாரி, நள்ளி முதலான வள்ளல் களையும், அரலைக் குன்றம், ஏழிற் குன்றம், கொல்லி, பறம்பு, பொதியில் முதலான குன்றங்களையும், ஆர்க்காடு, உறையூர், தொண்டி, பாடலி முதலான நகரங்களையும் இந்நூல் குறிப்பிட்டுள்ளது. புலவர் பெயர்களோடு இணைந்த ஊர்கள் ஏறத்தாழ 36 இந்நூலால் அறியப்படுகின்றன. அவற்றுள் ஆலங்குடி, ஆலத்தூர், உறையூர், கருவூர், காவிரிப் பூம்பட்டினம், கடலூர், செல்லூர், மதுரை, மாங்குடி முதலியன இன்றும் அவ்வப் பெயர்களில் நிலைபெற்றுள்ளன.

அ.த.

**குறுநினைவு:** குறுநினைவு என்பதனைக் குறுகிய கால நினைவு என்றே கொள்ளலாம். நினைவு மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாம் பார்ப்பதை அல்லது புலன்கள் மூலம் உணர்வதை முதல்வகையாகவும், குறுகிய கால நினைவை இரண்டாம் வகையாகவும், நீண்ட கால நினைவை மூன்றாம் வகையாகவும் உளவியலார் வரிசைப் படுத்தி உள்ளனர்.

வெளிச் சூழலில் உள்ள அளவற்ற தூண்டுதல் காரணிகளுள் ஏதேனும் ஓர் உணர்ச்சி தூண்டப்பட்டால் அந்த நிகழ்வு குறுகிய கால நினைவில் பதிவாகிறது. அந்த நிகழ்வு ஏற்பட்டு முப்பது வினாடிகள் வரை அது நினைவில் தங்குகிறது. மீண்டும் அந்த நிகழ்வு தூண்டப்படாவிட்டாலோ திரும்ப அந்த நிகழ்வை நாம் நினைவு படுத்திக் கொள்ளாவிட்டாலோ, பத்து முதல் பன்னிரண்டு வினாடிகளில் அது நினைவில் இருந்து அழிந்து விடுகிறது. மக்கள் கண்ணால் பார்ப்பதை வாய் மூலம் சொல்லிப் பார்த்தோ காது மூலம் கேட்டோ நினைவில் தங்க வைத்துக்கொள்கின்றனர்

எடுத்துக்காட்டாக, 'திடசித்த மனிதன்' என்பதை ஒருவன் பல வகையாகப் பகுத்து நினைவில் நிறுத்திக்கொள்கிறான். அவன் திடம், சித்தம், மனிதன் என மூன்று வகையாகப் பகுத்துக் காணுகிறான். இவ்வாறு இந்தச் சொற்றொடரை ஒரு முறை வாய்விட்டுச் சொல்லிப் பார்க்கிறான். அது செவி வழியாக அவனுக்குக் கேட்கிறது. எனவே, அவன் நினைவில் 'திட சித்த மனிதன்' என்று மூன்றாகப் பகுக்கப்பட்ட ஒரு சொற்றொடர் தங்குகிறது. இது 'ஒலி விதி' எனப்படுகிறது.

'திகடதமிரதபவரல' என்ற சொற்றொடரை நினைவில் நிறுத்த ஒருவன் ஒவ்வொரு எழுத்தாகப் படித்து ஒன்று சேர்த்துச் சொல்கிறான். ஒரு முறை திரும்பச் சொன்ன போதும் அந்தப் பத்துக்கு மேற்பட்ட எழுத்துகளை அவனால் நினைவில் நிறுத்த இயலுவதில்லை. ஆனால், 'திகட தமிர தபவரல' என்று பிரித்துச் சொல்லும் போது, மூன்று அளவுகளாகப் பிரித்துக் காட்டப்படுகிறது. இந்த எழுத்துகளின் பொருள் ஒருவனுக்கு விளங்காவிட்டாலும் பகுக்கப்பட்ட மூன்று குறி அளவுகளாக உள்ளமையால், எளிதாகவும் பொருள்படவும் சொற்றொடரைப் பிரித்துப் பேசி நினைவில் நிறுத்திக் கொள்ள முடிகிறது.

மில்லர் என்ற உளவியலார் ஏழுக்கும் மிகுதியாகப் பகுக்கப்பட்ட சொற்றொடரின் பகுதியை ஒருவரால் சரிவரப் படிக்கவோ நினைவில் நிறுத்தவோ இயலாது என ஆராய்ச்சி மூலம் உணர்த்தினார். எனவே, ஏழு என்ற இந்த எண்ணை 'மந்திர எண்' என்று அவர் குறிப்பிடுகிறார்.

தொலைபேசி எண்கள் எந்த ஓர் ஊரிலும் நகரிலும் ஏழுக்கு மேற்பட்டதாக இல்லை. இது இங்கு மிக முக்கியமான குறிப்பு. ஏழுக்கு மேற்பட்ட எண்கள் இருப்பின் அவை ஒன்றுக்கு மேற்பட்ட பகுப்புகளாகப் பகுக்கப்படும். எ-டு. 25786, 662321, 256 – 343 – 2794. அது போன்றே அரசு போக்குவரத்துத் துறை அலுவலகங்களில் பதிவு செய்யப்படும் அனைத்து இயந்திர ஊர்திகளும்ஏழு அலகுகளுக்கு மேற்பட்டதாக இராது. எடுத்துக்காட்டு TMN 8436.

பத்துப் பன்னிரண்டு சொற்றொடர்களைச் சேர்ந்தாற் போலக் குறுகிய கால நினைவிற் கொண்டு வருவது இயலாது. அந்தப் பத்து, பன்னிரண்டு சொற்களையும் இணைக்கும் அல்லது பிரிக்கும் காரணிகளைக் கண்டறிந்து, அதன் பிறகு அதை நினைவில் நிறுத்துவது எளிதாகும். எடுத்துக்காட்டாக கிழக்கு, மேற்கு, ஆழம், பரப்பு, குளிர், இலையுதிர், அகலம், கோடை, நீளம், வடக்கு, வசந்தம். தெற்கு என்ற சொற்களைக் கீழ்க்காணுமாறு பிரிக்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வடக்கு<br>தெற்கு<br>கிழக்கு<br>மேற்கு | திசைகள் | வசந்தம்<br>கோடை<br>இலையுதிர்<br>குளிர் | காலங்கள் | நீளம்<br>அகலம்<br>ஆழம்<br>பரப்பு | பரிமாணம் |

இதன்மூலம் நாம் நான்கு திசைகளையும், காலங்களையும், பரிமாணங்களையும் நினைவு கூர்வது எளிதாகும். இதில் மூன்று அலகுகள் மட்டுமே நினைவு கூரத் தேவையானதாக உள்ளது.

ஒரு குழந்தை 'அ' என்றோ 'ஆ' என்றோ உடனே தெரிந்து கொள்வதில்லை. வரிவடிவம் மூலம் ஓர் எழுத்தை ஒலிக்கக் கற்றுக் கொண்ட குழந்தை மீண்டும் மீண்டும் அந்த எழுத்தைக் கூறுவதால், அந்த எழுத்து நினைவில் பதிகிறது. அந்த எழுத்துக்கும் வடிவம் கிடைக்கிறது.

கண்ணால் காண்பதைக் காட்டிலும், காதால் கேட்கும் ஒலி குறுகிய கால நினைவில் அதிக அளவு தங்குகிறது. இதற்குக் காரணம் ஒருவர் செவியுறும் ஒலியை மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்து பார்ப்பது தான் என உளவியலார் கருதுகின்றனர்.

**வரிசைக் கிரமப் பாதிப்பு**: சொற்றொடர்களை நினைவு கூரும் போது வரிசையாக உள்ள முதல் எழுத்துகளை நினைவு படுத்திக் கொண்டால் முழு சொற்றொடர்களையும் எளிதில் நினைவு கூரலாம் என்பது வரிசைக் கிரமப்பாதிப்பு எனப்படும். எடுத்துக்காட்டாக,

**அ**கில **உ**லகத்**த**மிழ் **இ**லக்கிய,
**இ**லக்கணக் **க**ழக **வெ**ளி **யீ**ட்டுப் **ப**திப்பாசிரியர்

என்று பிரித்து நினைவில் நிறுத்த முயலுகின்றனர்.

சுருக்கமாக, குறு நினைவில் சென்று சேரும் செய்தி மீண்டும் நினைவு படுத்தப் படாவிட்டால், மறக்கப்படுகிறது. அப்படியே நினைவு படுத்தப்பட்டாலும், புதிய செய்திகள் குறுநினைவுக்கு வருவதன் மூலம் பதிவான பழைய செய்திகள் கீழ்த் தள்ளப் படுகின்றன அல்லது மறக்கப்படுகின்றன. நன்கு, மீண்டும் மீண்டும் திரும்பச் சொல்லப்படும் செய்திகள் நீண்டகால நினைவிற் சென்று பதிவாகின்றன.

குறுநினைவில் 'ஈடியேடிக் நினைவு' என்ற கிரேக்க மொழி வழக்க நினைவு ஒரு வகைப்படும். ஈடியேடிக் நினைவு என்பதைப்புகைப்பட நினைவு அல்லது பார்த்ததும் பதிவாகும் நினைவு என்று குறிப்பிடலாம். சுவாமி விவேகானந்தர் ஒரு நூலின் ஒரு பக்கத்தைப் பார்த்தாரானால், அதை அப்படியே திரும்பச் சொல்லும் மிகப் பெருந்திறமை பெற்றிருந்தார். ஈடியேடிக் நினைவிற்குச் சுவாமி விவேகானந்தரின் நினைவுத்திறன் ஓர் எடுத்துக்காட்டாகும்.

சுருங்கக் கூறின், மூன்று வகை நினைவுகளில் குறுநினைவு இரண்டாம் கட்டத்தைச் சார்ந்ததாகும். ஒவ்வொரு சொற்றொடரையும் அதன் பொருளுக்கேற்பப் பகுத்துப் பிரித்து நினைவிற் கொள்ளவேண்டும். ஏழு என்ற மந்திர எண் ஏழுஅலகுகளுக்குமேல் ஒருவரால் எதையும் சாதாரணமாக நினைவில் நிறுத்த இயலாது என்பதை உணர்த்துகிறது. இதை மில்லர் என்ற உளவியலார் ஆய்ந்து அறிவுறுத்தினார். மிகுதியான சொற்றொடர்களை அதன் தன்மை குணங்கள் ஆகியவற்றின் மூலம் சிறு அலகுகளாகப் பிரித்து நினைவில் வைக்கவேண்டும். வரிசைக் கிரமப் பாதிப்பும் புகைப்பட நினைவும் குறுநினைவைச் சார்ந்த மற்ற வகைகளாகும்.

இரா.வே.

**குறும்பனை நாடு** தொல்பழங்காலத்தில் விளங்கிப்பின்னர்க் கடல்கோள்களால் அழிந்துபட்டன வாகக் கருதப் பெறும் நாடுகளுள் ஒன்று. இந்நாடு பற்றிய குறிப்பு, சிலப்பதிகார உரையாளராகிய அடியார்க்கு நால்லார் உரையில் இடம்பெற்றுள்ளது. (சிலப். வேனில். 1-2, உரைக்குறிப்பு). 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்' என்னும் தொடரிலுள்ள (சிலப். வேனில்.1) தொடியோள் பௌவம் என்பதனை விளக்குங்கால் அடியார்க்கு நல்லார், இக்

காலத் தமிழகத்தின் தென்னெல்லையாக விளங்கும் கன்னியாகுமரி முனைக்குத் தெற்கே உள்ள இந்து மாக்கடலின் பெரும் பகுதி பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னர் நிலப்பரப்பாக இருந்தது என்றும், கடல், கோள்களால் அந்நிலப்பரப்பு அழிந்து கடலாகியது என்றும் குறிப்பிட்டுள்ளார். அப்பகுதியில் இருந்த பெருநிலப்பரப்புக் கடல்கோள்களால் அழிவுண்டதனை இசுகாட் எலியட்டு (W. Scott Elliot) போன்ற மேலைநாட்டு ஆய்வாளர்களும் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் அதனை 'இலெமூரியா' (Lemuria) என்னும் பெயரால் வழங்கினர். தமிழ் மக்கள் அதனைக் குமரிக் கண்டம் என்றனர்.

முதற் சங்க காலத்தில் விளங்கி இப்பொழுது அழிந்துபட்ட நிலப்பரப்பில் இருந்த 49 நாடுகளைப் பற்றி அடியார்க்கு நல்லார் கருத்து வருமாறு: தென் பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னும்ஆற்றிற்கும், குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூறு காதத் தொலைவு பரப்புள்ள நிலப்பகுதி இருந்தது. அதில், ஏழ்தெங்கநாடு, ஏழ் மதுரை நாடு ஏழ்முன் பாலைநாடு, ஏழ்பின் பாலைநாடு,ஏழ்குன்ற நாடு, ஏழ்குணக்காரைநாடு, ஏழ்குறும்பனை நாடு என்ற நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன. மேலும் அங்குக் குமரியும் வட பெருங்கோடும் இருந்தன. அவையெல்லாம் கடல்கோளால் அழிந்தன. அதனால் அப்பகுதி தொடியோன் பௌவம் (குமரியாகிய பௌவம்) என்று வழங்கப்பட்டது.

அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் ஏழ் தெங்க நாடுகள் முதலிய அனைத்து நாடுகளும் நெடுங் காலத்திற்கு முன்னரே அழிந்துபட்டமையால், அதன்கண் ஒரு தொகுதியாகக் கூறப்படும் ஏழ்குறும்பனை நாடுகள் பற்றிப் பெயரளவல்லது பிறிதொன்றும் அறியக்கூடவில்லை. ஏழ்குறும்பனை நாடு என்றமையால் அந்நாடு ஏழு பிரிவினைக் கொண்டிருந்தமை புலப்படுகிறது. இக்காலத்துச் சில ஆராய்ச்சியாளர்கள், இப்போதைய இந்து மாக்கடலில் இந்நாடுகள் இருந்த அமைப்புப் பற்றி வரைபடம் அமைத்துக் காட்டியுள்ளனர். அ.மா.ப.

**குறும்பியன்** சங்க இலக்கியத்தால் அறியலாகும் ஒரு வீரன். பரணர் தம் அகநானூற்றுப் பாடலொன்றில் (அகம்.262) அன்னிமிஞிலி பற்றிய செய்தியினை உவமையாக்கிக் கூறுங்கால் இப்பெயரைக் குறிப்பிட்டுள்ளார். 'மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன், செருவியல் நன்மான் திதியன்' என வரும் தொடரிலுள்ள இச்சொல்லை உரையாசிரியர்கள் பலவாறாகக் கொண்டு விளக்கியுள்ளனர். அவை வருமாறு: 1. குறும்பியன் ஒரு வீரன்; திதியனொடு சேர்ந்தவனாவான். முதுகோசர், தன் தந்தைக்குச் செய்த கொடுமைக்குப் பழிவாங்கும் நினைவில் அன்னி மிஞிலி சூளுரைத்து, அதனைக் குறும்பியனுக்கும் திதியனுக்கும் கூற, அவர்களால் முதுகோசர் அழிந்தமை அறிந்து சினம் மாறி மனம் மகிழ்ந்தான் என்பது.

2. குறும்பியனாகிய திதியன் எனக் கொண்டு, குறும்பியனைத் திதியனுக்குரிய வேறு பெயராகப் பொருள் காண்பது. அப்போது, மறங்கெழுதானைக் கொற்றக் குறும்பியனாகிய திதியன் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். இதில் குறும்பியனும் திதியனும் ஒருவரேயாவர்.

3. குறும்பியன் என்பதனை, குறும்பினை உடையவன் என்னும்பொருளில், திதியனுக்கு அடைமொழியாக்கிக் கூறுவது. பாட்டிலமைந்துள்ள தொடரமைதியினை நோக்குங்கால், குறும்பியன் ஆகிய திதியன் என்னும் கருத்தில், குறும்பியன் என்னும் பெயரைத் திதியனின் வேறு பெயராகக் கொள்ளுவது ஏற்புடையதாகத் தெரிகிறது. அ.மா.ப.

**குறுவழுதியார்** கடைச் சங்கமருவிய புலவருள் ஒருவர். வழுதியார் என்பதனாற் பாண்டியன் மரபைச் சேர்ந்தவர் என்று அறியலாம். இவர் பாடியதாக அகநானூற்றின் 150-ஆம் பாடல் அமைந்துள்ளது. இவர் இப்பாடலில் நெய்தல் திணையைப் பாடியுள்ளார்.

தலைவன் தலைவியை உரிய காலத்தில் மணக்காமல் களவின்பமே விரும்புகின்றான். அந்நிலையில் தலைவன் ஒருமுறை பகலில் தலைவியைக் காண வருகின்றான். தோழி தலைவியை ஓரிடத்தில் விட்டுவந்து தலைவனைக் கண்டு தலைவிக்குக் காதல் மிகுதியாகிவிட்டது. எனவே நீ விரைவில் அவளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறுகிறாள் எனக் கூறும் பாங்கில் இப்பாடலை எழுதியிருக்கிறார். க.இரா.

**குறுவேட்டுவச் செய்யுள்**: இது யாப்பருங்கல உரையால், பெயரளவில் அறியலாகும் ஒரு நூல். இக்காலத்தில் இறந்துபட்ட இந்நூல் எப்பொருள் பற்றியமைந்தது என்பது போன்ற எந்த விவரமும் அறியக் கூடவில்லை. பாவினங்களுள் வடமொழிச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் கலந்து வந்தால் எவ்வாறு கொள்வது என்பதனை விளக்கும்போது, அவ்வாறமைந்த சில நூல்களின் பெயரை உரையாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். அவை குறுவேட்டுவச் செய்யுள், உலோக விலாசனி, பெருவளநல்லூர்ப் பாசாண்டம் ஆகியனவாகும்.

வேற்றுமொழிச் சொற்கள் தமிழ்ச் செய்யுள்களில் விரவி வந்தால், அவற்றையும் தமிழ்ச் சொற்களைப் போலவே கருதி அலகிட்டு, பாச்சார்த்தி வழங்க வேண்டும் என்பது யாப்பருங்கல உரையாசிரியர் கருத்து. அதற்கு அவர், 'செந்தமிழ்ச் செய்யுள் தெரிந்துணர்ந்து செந்தமிழ்க்கண், வந்த வட மொழியை மாற்றாதே'-சந்தம் வழுவாமல் கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு கொண்டால் 'தழுவாது நிற்கும் தமிழ் உண்டோ' என்றும்கூறி வினவும், ஒரு வெண்பாவினை எடுத்துக் காட்டாகத் தந்துள்ளார்.

அ.மா.ப.

**குறைச் சொற்கள்**: சொல்திரிபு உருபுகளை (Inflectional Affixes) ஏற்றுவாரா அடிச்சொற்கள் ஒருநிலைச் சொற்கள் (Particles) எனப்படும். ஒரு நிலைச் சொற்கள் பெரும்பாலும் குறைச்சொற்களாக (Clitics) அமையப் பெறுதலுண்டு. இதனை அடியொற்றியே தமிழ் இலக்கண நூல்கள் குறிப்பிட்டுள்ள ஒருநிலைச் சொற்கள் அனைத்தையும் குறைச் சொற்களாக இக்கால மொழியியலார் சிலர் கருதுகின்றனர். ஒருநிலைச் சொற்களுக்கும் குறைச்சொற்களுக்குமிடையே சில வேறுபாடுகள் காணப்படுதலின் குறைச்சொற்களை ஒருநிலைச் சொற்களின் ஒரு வகையாகக் கருதுவதே ஏற்புடையது.

ஒரு மொழியில் காணப்பெறும் பல்வேறு இலக்கண வடிவங்களுள் (Grammatical Units) குறைச்சொல்லும் ஒன்றாகும். பல மொழிகளில் குறைச்சொற்கள் காணப்பெறவில்லை. அமைப்புநிலையில் குறைச் சொற்கள் கட்டுடை ஒருநிலைச் சொற்களாக (Bound Particles) அமையப்பெறும். குறைச்சொற்கள் தனித்துச் செயற்படுதலின்றிப் பிற தனி வடிவங்களோடு இணைந்து வாக்கியங்களின் பல்வேறு இடங்களில் வரும்.

ஒட்டுகளைப் போன்று கட்டுடைச் சொல்லாக (Bound Word) அமைந்துள்ள குறைச்சொல் பெரும்பான்மை சொல் வகைகளோடு (Parts of Speech) இணைந்துவர, ஒட்டுகள் குறிப்பிட்ட சொல்வகைகளோடு மட்டுமே வரும். சான்றாகத் தமிழில் வேற்றுமை உருபுகளாகிய ஒட்டுகள் பெயர்ச்சொற்களோடும், கால இடைநிலைகளாகிய ஒட்டுகள் வினைச்சொற்களோடும் இணைந்து வரும்.

குறைச்சொற்கள் பெயர்ச்சொற்களோடும் வினைச்சொற்களோடும் (தலைவன் – ஓ; கண்டான் – ஏ) வருதலுண்டு. ஒட்டுகளைப் போன்று இவை இலக்கணப் பொருளைச் சுட்டுவதில்லை. குறைச் சொற்கள் சொல்முடிப்பு உருபுகளுக்குப் பின்னர் (கண்ணன் – ஐ – ஏ) வரும். ஒட்டுகள் அனைத்தும் சொல்லியல் கூறுகளாக அமைய, குறைச்சொற்கள் தொடரியல் கூறுகளாக அமைந்துள்ளன.

குறைச்சொற்கள் ஏனைய சொற்களைப் போன்று தனித்து வழங்குதல் இல்லை; வாக்கியங்கள் அமையத் துணைபுரிவதும் இல்லை. குறைச் சொற்கள் கட்டு வடிவங்களாக இருப்பினும் வருகை முறையில் (Distribution) பிற கட்டுடை வடிவங்களினின்று வேறுபட்டு ஒட்டுகளுக்கும் சொற்களுக்கும் இடைப்பட்ட நிலையில் அமைவதால் இவை அரை கட்டிலாச் சொற்கள் (Semi Free Words) எனப்படும்.

குறைச்சொற்கள் ஒலியன் நிலையில் தாம் இணைந்து வரும் வடிவங்களோடு சொல்லியல் அமைப்புகள் ஆக்கம் பெறத் துணை புரிவதில்லை. 'அச்சிறுவீடு' என்பதில் 'அ' என்னும் குறைச்சொல் தான் சார்ந்து வரும் 'சிறு' என்னும் வடிவத்தோடு சொல்லியல் அமைப்பு ஆக்கம்பெறும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

குறைச்சொற்களுக்கும் இவை சிறப்பித்து வரும் வடிவங்களுக்குமிடையே பிற வடிவங்கள் வரவியலும் என்பதால் இவற்றிற்கு ஓரளவு தனித்த வருகை (Freedom) உண்டு எனலாம். குறைச்சொற்கள் எப்போதும் தொடர்களையே அண்மையுறுப்பாகப் பெற்றமையும்.

குறைச்சொற்களைப் பிற கட்டிலா வடிவங்களோடு அவை கொண்டுள்ள தொடர்பு அடிப்படையில் இரண்டாகப் பகுக்கலாம். கட்டிலா வடிவங்களின் கட்டுடை மாற்றுவடிவங்களாக அமையும் குறைச்சொற்கள் முதல் வகையாகும். தமிழில் இத்தகைய குறைச்சொற்கள் இல்லை. ஆங்கில மொழியில் உள்ள 'The', 'Will' என்பன இத்தகைய குறைச் சொற்களுக்குத் தக்க எடுத்துக் காட்டுகளாகும். வரி வடிவ நிலையில் இவை தனித்து எழுதப்பெறும்.

கட்டிலா வடிவங்களோடு தொடர்பின்றி அமையும் குறைச்சொற்கள் இரண்டாம் வகையாகும். வரிவடிவ நிலையில் இவை பிற சொற்களோடு இணைத்து (அம்மரம்) எழுதப்பெறும். தமிழ்மொழியின் கண் காணப்பெறும் அனைத்துக் குறைச்சொற்களும் (ஆ,ஏ,ஓ முதலியன) இவ்வகையினவாகும்.

மேலும், குறைச்சொற்களை அவற்றின் வருமிடத்தினை அடிப்படையாகக் கொண்டு, முதல் நிலைக் குறைச்சொற்கள் (Proclitics) இறுதிநிலைக் குறைச்சொற்கள் (Enclitics), இடைநிலைக் குறைச்

சொற்கள் (Inclitics) என மூன்றாகப் பகுத்தல் இயலும்.

சொல்லின் முதல் நிலையில் வரும் குறைச்சொற்கள் முதல்நிலைக் குறைச்சொற்கள் எனப்படும். தமிழில் இக்குறைச்சொற்கள் சுட்டு முதல்நிலைக் குறைச்சொற்கள் (Demonstrative Proclitics) எனவும் (அக்கடல்மீன்), வினா முதல்நிலைக் குறைச்சொற்கள் (Interrogative Proclitics) எனவும் (எம்மனிதன்) இருவகைப்படும்.

இறுதிநிலைக் குறைச்சொற்கள் எப்பொழுதும் சொல்லின் இறுதியில் வரும். தமிழில் காணப்பெறும் பெரும்பான்மையான குறைச்சொற்கள் இவ்வகையின வாகும். இவை பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் ஆகியவற்றை அடுத்து (இராமன் – உம்; வந்தான் – ஓ) வரும்.

இடைநிலைக் குறைச்சொற்கள் அடிச்சொல்லுக்கும் விகுதிக்குமிடையேயும் இரு ஒட்டுகளுக்கிடையேயும் வருதலுண்டு. தமிழில் இத்தகைய குறைச்சொற்களுக்குத் தக்க சான்றுகள் இல்லை. ஏ.ஆ.

**துணை நூல்கள்:**

**Israel, M.**, A Note on Clitics with Special Reference to Tamil' Journal of Madurai University Vol. 2, No. 2, 1970.

**Pike, K.L.**, Phonemics, University of Michigan Press, Michigan, 1947.

**Zvelebil, K.**, How to Handle the structure of Tamil?, Archiv Orientalni, Vol. 30, (1962), pp. 116–142.

**குறைந்த பொருளாதார வளர்ச்சி** என்பது இருபதாம் நூற்றாண்டு உலகஅரங்கில் மிகையாக எழுதப்பட்டும் பேசப்பட்டும் வரும் ஒரு சிறப்புக் கருத்தாக விளங்குகிறது. மனித இனத்துள் பாதிக்கு மேற்பட்டோர் குறைந்த பொருளாதார வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இக்கருத்து இரண்டாம் உலகப் போருக்குப் பிறகுதான் உயர்ந்த இடத்தைப் பெற்றது. பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகள் இக் கருத்தோடுள்ள சிக்கல்களைப் பற்றி ஆராயத் தொடங்கின. அதற்கான காரணங்களாவன: 1) குறைந்த பொருளாதார வளர்ச்சிக்கு (Under Development) உரிய காரணங்களை ஆராய வேண்டும் என்பது. 2)குறைந்த வளர்ச்சி, வளர்ந்த நாடுகளுக்கே ஒரு பயமாக அமையுமாதலின் வளர்ச்சியைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணமும். குறைந்த பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய அக்கறையும் கருத்துத் தொகுப்பும் பெருகின.

குறைந்த பொருளாதார வளர்ச்சியினைப் பல வகையாகக் குறிப்பிடுகின்றனர். வளர்ச்சியடையாமையையும் (Undevelopment) குறைந்த வளர்ச்சியையும் ஒன்றாகக் கருதுவதுண்டு. ஆனால் இரண்டிற்கும் வேறுபாடுகள் உண்டு. வளர்ச்சியடையாமை என்பது வளர்ச்சிக்குத் தேவையான காரணிகளான வளங்கள் இல்லாமையால் ஏற்படுவது. ஆனால் குறைந்த பொருளாதார வளர்ச்சி என்பது வளங்கள் இருந்தும் ஏற்படக்கூடியது. 'பின்தங்கிய' (Backward) 'வறிய' (Poor), 'வளர்ந்துவரும்' (Developing), 'மூன்றாம் உலக நாடுகள்' (Third World Countries) ஆகிய சொற்றொடர்கள் குறைந்த பொருளாதார, வளர்ச்சியினைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

குறைந்த பொருளாதார வளர்ச்சியின் அறிகுறிகளாகப் பலவற்றைக் கூறலாம். நாட்டில் நிலவும் தனி ஆள் (Per Capita) வருமானத்தைக் கொண்டும் அதன் வளர்ச்சி வீதத்தைப் பொறுத்தும் குறைந்த பொருளாதார வளர்ச்சியினை அறியலாம். ஏதேனும் ஒரு தனிஆள் வருமானத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு வளர்ச்சியினை அளக்கலாம். நாட்டின் உண்மையான தனிஆள் வருமானம் அடிப்படை வருமானத்தைவிடக் குறைவாக இருந்தால்,அது குறைந்த பொருளாதார வளர்ச்சி என்று கூறப்படுகிறது.வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, சுவிட்சர்லாந்து ஆகியவற்றின் தனி ஆள் வருமானத்தை ஒப்புநோக்கிக் குறைந்த வளர்ச்சியினைக் கண்டு கொள்ளலாம்.

ஆனால் தனிஆள் வருமானத்தை மட்டும் கொண்டு குறைந்த பொருளாதார வளர்ச்சியினைச் சுட்டிக்காட்டுவதில் பல சிக்கல்கள் உள்ளன. தனி ஆள் வருமானம் நாட்டின் மொத்த வருவாயையும் (Gross National Income) மக்கள் தொகையையும் கொண்டு வரையறுக்கப்படுகிறது. ஆனால் இந்த இரண்டையும் அளப்பதில் பல புள்ளிவிவரச் சிக்கல்கள் உள்ளன. அவைகளைத் தவிர்த்துக் கணக்கிடப்படும் தனி ஆள் வருமானம்தான் வளர்ச்சியை அளக்க உண்மையாகப் பயன்படும். தனி ஆள் வருமானம் மிகையாக உள்ள நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகள் என்றும் கூறிவிட முடியாது. எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடான சவுதி அரேபியாவில் தனி ஆள் வருமானம் உயர்வாக உள்ளது. ஆனால் அவை குறைந்த பொருளாதார வளர்ச்சி உடையனவாக உள்ளன. ஏனெனில் வளர்ச்சிக்குரிய பிற அடையாளங்கள் அங்கு இல்லை. எனவே தனிஆள்

வருமானக் குறைவைக் குறைந்த பொருளாதார வளர்ச்சியின் ஓர் உறுப்பாகத் தான் எடுத்துக்கொள்ள முடியுமே தவிர, அதையே வளர்ச்சியின்மையாகக் கருதமுடியாது.

குறைந்த பொருளாதார வளர்ச்சியில் நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சி (Growth of Population) பொருளாதார வளர்ச்சியை விட மிகுதியாகஇருக்கும். எடுத்துக்காட்டாக 1960–67 ஆண்டுகளில் குறைந்த. வளர்ச்சியடைந்த நாடுகளின் நாட்டு வருமான வளர்ச்சி 5 விழுக்காடாக இருந்தது. ஆனால், மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 2.5 விழுக்காடாக இருந்த தால் தனி ஆள் (Per Capita) வருமானம் 2.5 விழுக் காட்டில் வளர முடிந்தது.

மிகுதியாக உள்ள மக்கள்-நிலப்பரப்பு, விகிதத்தை (Ratio of Population to Land Area) வைத்தும் குறைந்த பொருளாதார வளர்ச்சியை அறியலாம். நாட்டில் உள்ள நிலப்பரப்பை விட மக்கள் தொகை மிகுதியாக இருப்பின் பொருளாதார வளர்ச்சி குறைய வாய்ப்புண்டு. மக்கள் அடர்த்தி (Density of Population) மிகுதியாக ஏற்பட்டு நெரிசல் தோன்று கிறது. தேவையான குடியிருப்புகள் கிடைப்பதில்லை. வீட்டுச் சிக்கல் பெருகுகிறது. நிலப்பரப்புக் குறை வினால் மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை மிகுதியாக உற்பத்தி செய்ய முடிவதில்லை. நிலப் பரப்பை விட மக்கள்தொகை மிகுதியாக உள்ளதால், எல்லோருக்கும் வேலைவாய்ப்பும் கிடைப்பதில்லை நிலம் துண்டாடப்பட்டுத் திறமையான உற்பத்தி முறை உருவாக முடிவதில்லை. இக்காரணங்களால் பொருளாதார வளர்ச்சி குறைகிறது.

முதலாக்கக் (Capital Accumulation) குறைவும், அதிக வட்டிவீதமும் குறைந்த பொருளாதார வளர்ச் சியின் அறிகுறிகளாகும். குறைந்த தனிஆள் வரு மானம், குறைந்த சேமிப்பையும், குறைந்த முதலாக் கத்தையும் உண்டுபண்ணுகிறது. முதலாக்கக் குறை வினால் தொழில் முதலீடு, தனியார் முதலீடு, வேளாண்மை முதலீடு ஆகியன குறைந்து உற்பத்தி குறைந்து, வேலையின்மை ஏற்பட்டு வளர்ச்சி குன்று கிறது. முதல் தேவைக்கான (Demand for Capital) முதலாக்கம் குறைவாக உள்ளதால் முதலின் விலை யான (Price of Capital), வட்டிவீதம் உயர்ந்து காணப்படுகிறது. இந்த உயர்ந்த வட்டிவீதத்தால். தொழில்முனைவோர் கடன்வாங்கி முதலீடு செய்யத் தயக்கம் கொள்வர்.

முதலாக்கக் குறைவினை, மூலதன அளிப்பிற்கும் பிற உற்பத்திக் காரணிகளின் அளிப்பிற்கும் உள்ள விகிதத்தைப் பொறுத்தும் விளக்கலாம். குறைந்த பொருளாதார வளர்ச்சி என்பது குறைந்த மூலதனம் பிற காரணிகளுக்கு எந்த விகிதத்திலிருக்கிறதோ (Ratio of Capital to other factors)அதைப்பொறுத்து அமைகிறது. உற்பத்தித் துறையில், மூலதனமானது பிற உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, தொழில் முனைவோன் ஆகியோருடன் ஒரு குறிப் பிட்ட விகிதத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில், பிற காரணிகளின் உற்பத்தித் திறன் பாதிக்கப்படும். எடுத்துக்காட்டாக உழைப்பாள ரோடு மூலதனப் பொருளான (Capital Good) இயந் திரம் பயன்படும்போது, உழைப்பாளரின் உற்பத்தித் திறன் உயருகிறது; இல்லையெனில் குறைகிறது. மூலதனம் இல்லையெனில், வேலையின்மை ஏற்பட வும் ஏதுவாகிறது.

தொழில் உற்பத்திக்கும் நாட்டின் மொத்த உற் பத்திக்கும் உள்ள விகிதத்தைப் (Ratio of industrial Output to Total Output) பொறுத்தும் குறைந்த வளர்ச்சியைக் காணலாம். இந்த விகிதம் குறைவாக உள்ளதால் வளர்ச்சி குறைகிறது. அதாவது வேளாண்மைப் பொருள் உற்பத்தியின் விகிதம் மொத்த உற்பத்தியில் அதிக பங்கினை வகிக்கிறது. இது தொழில்துறையின் வளர்ச்சியின்மையைக் காட்டு கிறது. இது குறைந்த வளர்ச்சிக்குக் காரணமாகவும் விளைவாகவும் இருக்கிறது.

குறைந்த பொருளாதார வளர்ச்சியின் பிற அறி குறிகளாவன: வறுமை, வாட்டம்,வருமான ஏற்றத் தாழ்வு, கல்வி அறிவின்மை, துப்புரவற்ற சூழ்நிலை கள், சுகாதார வசதிக் குறைவு, வேலையின்மை, தொழிலாளி உற்பத்தித் திறன் குறைவு, காரணிகள் இடம் பெயராமை (Immobility of factors),குறைந்த தொழிற் சிறப்புத் தேர்ச்சி(Specialization) பொருளா தார அறியாமை, குருட்டு நம்பிக்கையுள்ள சமூக முறை, எதற்கும் பயனில்லாச் சாதிமுறை, கூட்டுக் குடும்ப முறை, தொழில் முனைவோன் குறைவு, தொழில் நுட்பப் பின்னிலை, திறம்படாத் தொழி லாளிகளின் மலிவு, வளர்ச்சிக்கு உதவாக் கல்விமுறை, ஊக்கக் குறைவு, குறைந்த மின்திறனும் எரி சக்தி யும், குறைவான சாலைகள், இரயில் பாதைகள், அரசுச் சேவைகள், சீரற்ற செய்தித் தொடர்பு,வங்கி கள், வளர்ச்சி அடையாத பண அங்காடி.

குறைந்த பொருளாதார வளர்ச்சிக்கு மிகமுக்கிய காரணம் நாட்டில் உள்ள வளர்ச்சிக்கேற்ற இயல் திறனைப் (Potential for Economic Growth) பயன் படுத்தாதது ஆகும். இயற்கை வளம், மனித வளம் ஆகியவை இருந்தும், பல காரணங்களால் அவை

முழுதும் பயன்படாமலோ, தவறாகப் பயன்பட்டோ இருக்கலாம். அதனால் வளங்களிலிருந்து கிடைக்கக் கூடிய உற்பத்தி குறைகிறது. பொருளாதார அமைப்பு ஒருங்கமையாததால், அங்காடி, அரசு அமைப்புகள் வளராமல் உள்ளதால் வளங்கள் முழுமையாகப்பயன் படுவதில்லை. நிறுவன முறை வளர்ச்சி (Instituting Growth) பெற்றால் உள்நாட்டில் உள்ள வளங்கள் முழுவதும் வளர்ச்சி பெறுவதோடு அயல்நாட்டு வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ளவும் உதவும். குறைந்த பொருளாதார வளர்ச்சியையுடைய நாடுகள் வளர்ச்சியைப் பெருக்குவதற்காகப் பல முயற்சிகள் எடுக்கின்றன. அவற்றுள் திட்டமிடுதல் (Planning)மிக முக்கிய முயற்சியாகக் கருதப்படுகிறது. மு.இரா.

**துணை நூல்கள்:**

**Bernstein, H.**, Underdevelopment and Development, Penguin Book Ltd., England,1973.

**Jhingau, M.L**,. The Economics of Development and Planning, Vikas Publishing House, New Delhi, 1979.

**Kay. G.**, Development and Under Development, Macmillan, London, 1975.


**Kindleberger, C.P. and Herrick, B**, Economic Development McGraw-Hill, New Delhi, 1977.

**குறை வளர்ச்சி நாடுகள்**: பொருளாதார வளர்ச்சி உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும், பகுதிகளிலும் ஒரே சீராக இல்லை. சில நாடுகள் வளர்ச்சியின் மேலோங்கிச் செல்வம் மிகுந்த நாடுகளாகவும் (Rich Nations), பல நாடுகள் குறைந்த வளர்ச்சியுடன் வறுமையில் வாட்டமுறும் நாடுகளாகவும் உள்ளன. எளிய நாடுகளை (Poor Nations)- குறைவளர்ச்சி உடைய நாடுகளைப் பின்தங்கிய நாடுகள் (Under Developed Countries) என்றும், உதவிவேண்டும் நாடுகள் என்றும் குறிப்பிடுவர். அமெரிக்கா, சுவிட்சர் லாந்து (Switzerland), மேற்குச் செருமனி (Germany) சப்பான், சோவியத்து உருசியா, இங்கிலாந்து போன்ற நாடுகள்வளர்ச்சியடைந்த நாடுகள் என்றும், இந்தியா, சீனா, பர்மா, நேபாளம், பாகிசுத்தான், பங்களா தேசம், இலங்கை ஆகிய நாடுகள் குறை வளர்ச்சி உடைய நாடுகள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. குறை வளர்ச்சியுடைய நாடுகளை இக்காலத்தில் வளரும் நாடுகள் என்றும் குறிப்பிடுவர்.

குறை வளர்ச்சி உடைய நாடுகள் பலவற்றிலும் நீடித்த, கொடிய வறுமை காணப்படுகிறது. நாட்டுப் புறம், நகர்ப்புறம் ஆகியவற்றிலுள்ள மக்களுள் ஏறக் குறைய 50 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உழல்கின்றனர். அந்நாடுகளில் உள்ள மிகக் குறைந்த தனிஆள் வருமானமும் (Per Capita Income) ஏற்றத்தாழ்வுள்ள வருமானப் பங்கீடும் (Unequal Distribution of Income)வறுமைக்குக் காரணங்களாக விளங்குகின்றன. இந்நாடுகளில் வருமானம் ஒருசிலர் கைகளில் குவிந்து காணப்படுகிறது. பெருந்தொழில் முனைவோர் (Enterpreneurs), நிலக் கிழார்கள், வணிகர் ஆகியோர் பெருமளவில் வருமானத்தைப் பெற்று ஆடம்பர வாழ்க்கை வாழ்வார்கள். நாட்டின் பெரும் பாலான வேளாண்மைத் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளிகள், கைவினைஞர்கள் (Artisans) ஆகியோர் மிகக் குறைந்த வருமானத்தைப் பெறுவர்கள். இவ்வகைச் சீரற்ற வருமானப் பங்கீடும் வறுமைக்குக் காரணமாகிறது.

பெரும்பாலான மக்கள் குறைந்த வருவாய் பெறுவதனால் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை பெரும்பாலோர்க்குக் கிடைப்பதில்லை. மக்கள் நுகர்வில் (Consumption) உணவுதான் தலையாய பங்கை வகிக்கிறது. குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழும்மக்கள் தங்கள் வருமானத்தில்80விழுக்காட்டை உணவுக்காகச் செலவிடுகின்றனர். ஆற்றலை வழங்கக் கூடிய கறி, முட்டை, மீன், பால் போன்ற பொருள்கள் உணவில் தேவையான அளவு சேர்வது கிடையாது. அதனால் அன்றாடம் தேவைப்படும் உணவுச் சத்தின் அளவை இம்மக்கள் பெறமுடிவதில்லை. இது அவர்களது உற்பத்தித் திறனைக் கெடுக்கிறது.மேலும் இந்நாட்டிலுள்ள மக்களுள் பெரும்பாலோர் துப்புரவற்ற சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் (Insanitary Conditions) வாழ்கின்றனர். பாதுகாக்கப்பட்ட குடிநீர் சரிவரக் கிடைப்பதில்லை.தேவையான மருத்துவ வசதிகளும் குறைவு. வளர்ச்சியடைந்த நாடுகளில் 544 ஆள்களுக்கு ஒரு மருத்துவர் இருக்கும்போது பங்களா தேசு போன்ற நாடுகளில் 10,940 ஆள்களுக்கு ஒரு மருத்துவர்தான் உள்ளார். இச் சூழ்நிலைகளினால் பிறக்கும் 10 குழந்தைகளுள் 2 குழந்தைகள் பிறந்த முதல் ஆண்டிலும், மற்றொரு குழந்தை பிறந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளும் இறக்கின்றன. பெரும்பாலான மக்கள் கல்வியின் மேன்மையை உணராததனால், அறியாமையுள்ளவர்களாக இருக்கின்றனர். இந்நாடுகளில் தீய வறுமைச் சுழற்சி (Vicious Circle of Poverty) ஏற்படுகிறது. உணவு, சுகாதாரம், கல்வி ஆகியன இன்மையால் மக்களின் உற்பத்தித்திறன் குறைவாக (Low Productivity) இருக்கிறது.அதனால் குறைந்த வருமானம் ஏற்படுகிறது; சேமிப்புக் குறைகிறது; நுகர்வு குறைகிறது; முதலீடு குறைகிறது;


அதனால் உற்பத்தித் திறன் குறைகிறது. இச் சுழற்சியைப் பின்வரும் வட்ட வரைபடம் விளக்குகிறது.




வறுமை நச்சுச்சுழல் அளிப்புப் பகுதி

குறை வளர்ச்சியுடைய நாடுகள் பெரும்பாலும் வேளாண்மை நாடுகளாகவே இருக்கும். நாட்டின் உயிர்நாடியாகவும் முதுகெலும்பாகவும் அச்சாணியாகவும் விளங்கும் வேளாண்மை இந்நாடுகளின் மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்கு வாழ்வளிக்கிறது; நாட்டு வருமானத்தில் பாதியை அளிக்கிறது; தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களைத் தருகிறது; அயல்நாட்டு வாணிகத்திற்கும் உள்நாட்டுப் போக்குவரத்து வளர்ச்சிக்கும் உறுதுணையாயிருக்கிறது.

வேளாண்மை அவ்வளவு தலையாய பங்கு வகித்தபோதும், இந்நாடுகளில் உள்ள வேளாண்மைத்துறை மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிட்டு ஆராயும் போது தனிஆள் உற்பத்தித் திறனும் (Per Man Productivity) தனி ஒரு ஏக்கர் நிலத்தின் உற்பத்தித் திறனும் (Per Acre Productivity) இந்நாடுகளில் மிகக் குறைந்து காணப்படுகின்றன, இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் உற்பத்தி முறைகள் பழமையானவை. வேளாண்மையினர் பழமைவிரும்பிகள், உற்பத்திக்கு உதவாத நிலங்கள், நிலச் சீர்கேடுகள், வேளாண்மையினரின் வறுமை, வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான ஊக்கக் குறை ஆகிய வற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். வேளாண்மையினரிடையே தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஊக்கக்குறைவு மிகுதியாகக் காணப்படுகிறது. வேளாண்மையினர் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பயிர்களைத்தான் (Food Crops) மிகுதியாகப் பயிர் செய்கின்றனர். வருமானம் மிகுதி




வறுமை நச்சுச் சுழல் தேவைப் பகுதி

யாகக் கொடுக்கும் பணப் பயிர்களைக் (Cash Crops) குறைந்த அளவிலேயே பயிரிடுகிறார்கள். எனவே, வேளாண்மையிலிருந்து மிகுதியான அளவு வருமானமோ சேமிப்போ கிடைக்க வாய்ப்பில்லை. இதுவும் நாட்டின் வறுமைக்கு ஒரு காரணமாகும்.

குறை வளர்ச்சியுடைய நாட்டில் இரட்டை நிலையும் (Dualism) காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நகர்ப்புறப் பொருளாதாரமும் ஊரகப் பொருளாதாரமும் ஒன்றாகக் காணப்படும். அதுபோல அங்காடிப் பொருளாதாரமும் (Market Economy), வாழ்க்கைப் பொருளாதாரமும் (Subsistence Economy)ஒன்றாகக் காணப்படும். இவ்விரு வகை அமைப்புகளின் இயல்புகள் ஒன்றுகொன்று மாறுபட்டவை. ஒன்று நகரிலும் நகரைச் சுற்றிய சூழ்நிலையிலும், மற்றொன்று ஊரகங்களிலும் காணப்படுவன. ஒன்று வளர்ச்சியுற்றது; மற்றது வளர்ச்சி குறைந்தது. ஒன்றில் வசதியான வாழ்வுக்குத் தேவைப்படும் போக்குவரத்து வசதிகள், வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி ஆகியன மலிந்தும், மற்றொன்றில் அடிநிலை வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் மட்டும் காணப்படும். தொழில் அடிப்படையில் ஒருபுறம் புதிய தொழிற்சாலை அமைப்பும், மற்றொருபுறம் பின்தங்கிய வேளாண்மை அமைப்பும் காணப்படும். நிதித் துறையில் ஒருபக்கம் வளர்ச்சியடைந்த பண அங்காடியும் (Developed Money Market) மற்றொரு பக்கம் வளர்ச்சியடையாப் பண அங்காடியும்

(Undeveloped Money Market) காணப்படும். முதல் அங்காடியில் வளர்ச்சியடைந்த மைய வங்கியும் (Central Bank), வாணிக வங்கிகளும் (Commercial Banks), கூட்டுறவு வங்கிகளும் (Co-Operative Bank) பிற நிதி நிலையங்களும் (Financial Institutions) காணப்படும். இப் பண அங்காடியில் கடன், குறைந்த வட்டிவீதத்தில் எல்லாவகை உற்பத்திக் காரணங்களுக்கும் அளிக்கப்படும். பண அங்காடி, அரசின் கொள்கைக்குத் தகுந்தவாறு இயங்கும். வளர்ச்சியடையாப் பண அங்காடியில் தனியார் வங்கிகளும், மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் வட்டித் தொழிலரும், இலேவாதேவிக்காரர்களும், நிலக்கிழாரும் இருப்பர். இவர்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட மாட்டார்கள். மக்களின் பணத் தேவையைப் பயன்படுத்திக்கொண்டு உயர்ந்த வட்டி பெறுவர்.

இவ் விரட்டை நிலையில் வளமும் வறுமையும் இணைத்து இருக்கும். நிலவளம், நீர்வளம், கனி வளம், சக்திவளம், காடு வளம் ஆகியவை இந்நாடுகளில் மிகுந்து காணப்படும். ஆனால் அவ்வளங்கள் பயன்படுத்தப்படாமலோ (Unutilised) குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டோ (Under Utilisation) தவறாகப் பயன்படுத்தப்பட்டோ இருக்கலாம். ஏனெனில், அவ் வளங்களைப் பயன்படுத்தத் தேவையான தொழில் நுட்ப அறிவு(Technical Knowledge), மூலதன வசதி, கருவிகள் ஆகியன இந்நாடுகளில் இருப்பதில்லை. அதன் விளைவாக நாட்டிலுள்ள வளங்கள் வளர்ச்சிக்கு முழு அளவிலும் முறையாகவும் பயன்படுவதில்லை.

பெருகிவரும் மக்கள்தொகையும் அதன் மிகுதியான வளர்ச்சி வீதமும் (Growth Rate) இந்நாடுகளில் காணப்படுகின்றன. உலகத்திலேயே மக்கள் தொகை மிகுதியாக உள்ள நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகளான சீனாவும், இந்தியாவும் ஆகும். மக்கள்தொகையில் சீனா முதல் இடத்தையும், இந்தியா இரண்டாம் இடத்தையும் வகிக்கின்றன. இந்தியாவின் மக்கள்தொகைப் பெருக்க விகிதம் ஆண்டுக்கு 2.5 விழுக்காடாக உள்ளது. மக்களின் நலன் கருதி அரசு செய்துவரும் மருத்துவ வசதிகளினால் பல கொடிய நோய்கள் ஒழிக்கப்பட்டு, மக்களின் இறப்பு வீதம் குறைந்துள்ளது. ஆனால், மக்களின் அறியாமை, குறைந்த வாழ்க்கைத்தரம், குழந்தைத் திருமணம், விரும்பத்தகாத பழக்க வழக்கங்கள் ஆகியவற்றினால் பிறப்புவீதம் குறையாமல் மிகுந்த அளவில் இருக்கிறது. அதன் விளைவாக மக்கள் தொகை பெருகுகிறது. இவ்வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சியைவிட மிகுதியாக இருப்பதால், தனிஆள் (Per Capita) வருமானம் குறைந்து வாழ்க்கைத் தரம் குறைந்துவிடுகிறது. வளர்ச்சியின் பலன்கள் முழு அளவில் மக்களுக்குக் கிடைப்பதில்லை.

குறை வளர்ச்சியுடைய நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் மிகுதியாக இருப்பதால், வேலையில்லாத் திண்டாட்டமும் விலைவாசி ஏற்றமும் பற்றாக்குறைகளும் பதுக்கல்களும் கேடான அயல்நாட்டுச் செலுத்துநிலையும் (Unfavourable Balance of Payment), சார்புப் பளுவும் (Dependency Load) தோன்றுகின்றன என்று பலரும் குறிப்பிடுகிறார்கள். மேலும், குடும்பத்தின் வருவாயில் பெரும்பகுதியை நுகர்விற்குச் செலவிட வேண்டியுள்ளதால் சேமிப்பின் அளவு கேடுறுகிறது.

குறை வளர்ச்சியுடைய நாடுகளில் மக்கள் தொகைக்கு ஏற்ப நிலப்பரப்பு இல்லாததால் வேளாண்மைத்துறையில் மக்கள் கூட்டம் மிகுந்து காணப்படுகிறது. எனவே, நிலம் துண்டாடப்பட்டு வேளாண்மை வளர்ச்சி குறைகிறது. மக்கள்தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் உழைப்பாளர் எண்ணிக்கைப் பெருக்கத்தினாலும், உழைப்பாளர் தொகைக்கு ஏற்ப வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் பொருளாதார வளர்ச்சி ஏற்படாததாலும் நகரங்களிலும் கிராமங்களிலும் வேலையின்மை(Unemployment) காணப்படுகின்றது. நகரத்தைப் பொறுத்தவரை, உழைப்பாளர் பெருக்கத்திற்கு ஏற்பத் தொழிற்றுறை வளர்ச்சி அடையாததால், வேலையின்மை வெளிப்படையாகத் தோன்றுகிறது. ஊரகங்களில் வேலையின்மையும், குறைந்த வேலைவாய்ப்பும்(Under Employment), கிராமங்களில் மறைமுக வேலையின்மையும் (Disguised Unemployment) மிகுதியாகக் காணம்படுகின்றன. கல்வி முறை நாட்டின் வளர்ச்சிக்கு உகந்த தொழிற்கல்வியாக இல்லாமல், ஏட்டுக் கல்வியாக இருப்பதால் படித்த அனைவரும் தொழில் நிலையங்களில் வேலை பெறமுடிவதில்லை. எனவே, வேலைசெய்யத் திறமும் விருப்பமும் இருந்தும் படித்த இளைஞர்கள் பலருக்கு நகரங்களில் வேலை கிடைப்பதில்லை.

நிலமற்ற, எண்ணிக்கையற்ற தொழிலாளிகள் ஊரக வளர்ச்சிக் குறைவினால் வேலையே இல்லாமல் சோம்பித் திரிவர். பருவத்தை நம்பியுள்ள வேளாண்மைத் தொழிலில் ஆண்டு முழுவதும் வேலை கிடைப்பதில்லை. நாற்று நடுதல், அறுவடை செய்தல் போன்ற காலங்களில் வேலையும், பிற காலங்களில் வேலையின்மையும் தோன்றும். ஊரகங்களில் உள்ள குடும்பங்களில் வேலையில்லாதவர் மிகுதியாக இருப்பதால் அவர்கள் அனைவரும் வேளாண்மையில் ஈடுபட்டிருப்பர். ஆனால், அனைவரும் உற்பத்திக்குத்

துணைசெய்ய மாட்டார்கள். தேவைக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினரின் இறுதிநிலை உற்பத்தி (Marginal Productivity) சூனியமாக இருக்கும். அவர்கள் வேளாண்மையில் வேலைசெய்வது போலத் தோன்றினாலும், உண்மையில் அவர்களால் வேளாண்மை உற்பத்திக்கு எவ்வகைப் பயனும் கிடையாது. இச் சூழ்நிலையைத்தான் மறைமுக வேலையின்மை என்று கூறுவர்.

குறை வளர்ச்சியுடைய நாடுகளில் தொழிலாளிகளின் குறைவான உற்பத்தித் திறன், காரணிகளின் இடம் பெயராமை(Immobility of Factors of Production), திறமைமிக்க தொழில் முனைவோரின் பற்றாக் குறை, குறைந்த தொழிற் சிறப்புத் தேர்ச்சி (Specialisation), பொருளாதார அறியாமை, குருட்டு நம்பிக்கையுள்ள சமூக முறை ஆகியவற்றைப் பொருளாதார இழிநிலையின் அறிகுறிகளாகக் கூறலாம். இந் நாடுகளிலுள்ள சாதிமுறையும் (Caste System), கூட்டுக் குடும்ப முறையும் (Joint Family System) நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன. மக்களுள் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்; புதியதை வரவேற்க அஞ்சுபவர்கள்; தலைவிதியை (Fatalism) நம்புபவர்கள்.

மூலதனப் பற்றாக்குறை, குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் இயல்பாக அமைகிறது. உண்மையில் இந்நாடுகளை 'மூலதன வறுமை நாடுகள்' (Capital Poor Countries) என்றும், 'குறைந்த சேமிப்பும் குறைந்த முதலீடும் உடைய நாடுகள்' (Low Saving-and Low Investing Countries) என்றும் கூறலாம். இந்நாடுகளில் ஒருசில பணக்காரர்களால்தான் சேமிக்க முடிகிறது. இந்தச் சேமிப்பும் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படும் உற்பத்தித் திறன் கொண்ட முதலீட்டிற்குப் பயன்படுவதில்லை. மாறாகத் தங்கம் அணிகலன்கள், அரிய கற்கள், ஆடம்பரப் பொருள்கள் உண்மைச் சொத்துகள் (Real Estates) ஆகியவற்றை வாங்குகிறார்கள். அயல்நாட்டவரின் ஆடம்பர நுகர்வைப் பின்பற்றவேண்டுமென்ற உந்தலில் சேமிப்பை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்துகின்றனர். அரசுத் துறையாலும் தனியார் துறையாலும் பல காரணங்களால் சேமிப்பைப் பெருக்க முடியவில்லை.

பின்தங்கிய தொழில்நுட்ப முறையும் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் பெரிதும் காணப்படும். தொழில்நுட்பப் பின்னிலைக்கான அறிகுறிகளாவன: குறைந்த கூலி வீதம் இருந்தும் மிகுந்த சராசரிச் செலவு இருத்தல், உயர்ந்த மூலதன உற்பத்தி விகிதம் (Capital Output Ratio), உற்பத்தித் திறன் குறைவு, திறமையற்ற தொழிலாளிகளின் (Unskilled Labour) மலிவு. தொழில்நுட்ப வளர்ச்சிக் குறைவினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் கேடுறுகிறது.

குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் பெரும்பாலும் அயல்நாட்டு வாணிகச் சார்பு உடையனவாகவும் (Foreign Trade Oriented) உள்ளன. இந்நாடுகள் (நில) மூலதனப்பொருள்களை (Primary Products) ஏற்றுமதி செய்து, நுகர்வுப் பொருள்களையும் இயந்திரங்களையும் இறக்குமதி செய்கின்றன. அதனால், நாட்டிற்குப் பல்வகை இழப்புகள் ஏற்படுகின்றன. மேலும், இவ் வாணிகத்தால் பயன் எதுவும் ஏற்படுவதில்லை. அயல்நாட்டு மூலதனம் (Foreign Capital) இந்நாடுகளுக்கு வந்து, இந்த நாடுகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் வகைகளில் செயற்படுகிறது.

குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் இயல்புகளே இந்நாடுகளின் வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக அமைந்துள்ளன எனக் கூறப்படுகிறது. மு.இரா.

**துணை நூல்கள்:**

**Kindleberger, C.P. and Herrick,B.,** Economic Development, McGraw-Hill, New Delhi, 1977.

**Lkun,B., Richardson,R.W.,** Studies in Economic Development, Holt, Rinehart and Winston, London, 1964.

**Nurks, R.,** Problems of Capital Formation in under-developed Countries, Oxford University Press, Bombay, 1974.

**Schumpeter,J.A.,** The Theory of Economic Development, Oxford University Press, London, 1969.

**Sinron Kuznets,** Economic Growth and Structure, Oxford and IBH Publishing Co., New Delhi, 1974.

**Thingan,M.L.,** The Econnmics of Development and Planning, Vikas Publishing House, New Delhi, 1979.

**குறைவு எண்:** ஒரு சட்டமன்றம், அல்லது நீதிமன்றம், அல்லது வணிகக் கழக இயக்குநர்குழு (Board of Directors) முதலிய ஏதாவதொன்றின் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் கூடியிருப்பின், மற்ற உறுப்பினர்கள் வாராவிட்டாலும், அந்த மன்றம் அல்லது கழகம் கூடிச் சட்டப்படி பணி செய்வதற்குத் தகுதியுடையதாகக்

கருதப்படுகிறது. இவ்வாறு ஒரு மன்றம் செயற்படு தற்குத் தக்க குறைவான எண்ணிக்கையில் அதன் உறுப்பினர்கள் கூடி இருத்தற்குக் குறைவெண் கூடுதல் (Quorum) என்று பெயர்.

பொதுவாக எந்த ஒரு மன்றத்தின் அமைப்பையும் அதிகாரங்களையும் பணிகளையும் கூறும் எந்த ஒரு விதியிலும், அம்மன்ற உறுப்பினர் சிலர்கூடிச் சட்டப்படி செயலாற்றுதற்கான குறைவெண்ணும் குறிக்கப்பட்டிருக்கும். பொதுவாகச் சட்டமன்றங்கள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் முதலியவை சட்டப் படியாகக் கூடிச் செயலாற்றுதற்கான குறைவெண்ணும் அந்தந்த மன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒருபங்கு என்று குறிக்கப்பட்டுள்ளது; சில மன்றங்களில் இதைவிடச் சிறிது கூடுதலாகவோ சிறிது குறைவாகவோ குறைவெண் இருத்தல்கூடும். இந்தக் குறைவெண்ணுக்கும் குறைவாகவே உறுப்பினர்கள் கூடி இருப்பின், அப்பொழுது அவர்களுடைய மன்றம் செயற்படுதல் இயலாது. அவ்வாறு செயற்பட்டாலும், அதனுடைய முடிபுகள் சட்டப்படி எவரையும் கட்டுப்படுத்தமாட்டா.

இங்கிலாந்தில் இக்குறைவெண்முறை நீதித்துறையில் கையாளப்படுகிறது. ஆங்கில அமைதி நீதிபதிகள் (Justices of the Peace) ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் கூடியிருந்தால்தான், அவர்கள் ஒரு குற்ற இயல் நீதிமன்றமாக அமைந்து செயற்படுதல் இயலும், தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் ஊர்மன்றங்கள் செயற்படுதற்கு அதன் உறுப்பினர்கள் அதில் குறைவறக் கூடி இருந்தனரென்று கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. பா.சு.

**குன்சுரு, இருதயநாத்து**: பண்டித இருதயநாத்து குன்சுரு (Pandit Hirday Nath Kunsru) ஒரு சிறந்த சமூகத் தொண்டர்; கல்வியாளர்; சட்டமன்றவியல் அறிஞர் (Parliamentarian); நூலாசிரியர். இவர் கி.பி. 1887-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் நாளன்று ஆக்ராவில் அசூதிய நாத்து என்பவருக்குப் பிறந்தார். காசுமீரப் பார்ப்பன வகுப்பைச் சார்ந்த இவர் குடும்பத்தினர் பல தலைமுறைகளாக ஆக்ராவில் வாழ்ந்து வந்தவர்கள்; செல்வர்கள்; கடவுள் பற்று, அறச் சிந்தனை, நேர்மை ஆகிய குணங்களுக்குப் பெயர் பெற்றவர்கள். குன்சுருவின் தந்தை ஒரு பெரிய வழக்கறிஞர். அவர் இந்தியத்தேசிய காங்கிரசின் தொடக்க கால வரலாற்றில் முக்கியமான பங்கை வகித்தவர்.

குன்சுரு தம் படிப்பை ஆக்ராவில் தொடங்கினார். இவர் 1905-இல் அறிவியல் துறையில் இளங்கலைப் பட்டம் (B.Sc.) பெற்ற பின்னர் இலண்டன் பொருளியல் பள்ளியில் (London School of Economics) படித்து பி.எசி (B.Sc.) பட்டம் பெற்றார். பின்னர் ஆக்ராவில் எல்.எல்.டி. (L.L.D.) பட்டம் பெற்றார்.

இளம் வயதிலேயே பொது நல வாழ்க்கையில் ஈடுபட்ட இவர் இந்தியத் தேசிய காங்கிரசில் சேர்ந்தார். கோபாலகிருட்டிண கோகலேயின் தூண்டுதல் பேரில் இந்தியாவின் தொண்டர்கள் கழகத்தில் (Servants of Indian Society) சேர்ந்தார். அக்கழகத்தின் உறுப்பினர் என்ற முறையில் இவர் அரும்பெரும் பணியாற்றினார். இவர் 1936-இல் அக்கழகத்தின் ஆயுட்காலத் தலைவரானார். அக்கழகத்தின் உயரிய நோக்கங்களே இவரது வாழ்நாள் முழுவதும் இவரை முன்னின்று நடத்தி வந்தன. சாதிக் கொடுமையை இவர் வன்மையாக எதிர்த்து வந்தார்; தீண்டாமையை அகற்ற அரும்பாடுபட்டார்; சமுதாயத்தில் புரையோடிக் கிடந்த பல தீமைகளை எதிர்த்துப் போரிட்டார். இலக்னோவில் 1924-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் கூடிய தேசிய சமூக மாநாட்டில் இந்து சமுதாயத்தில் மணவிலக்குப் (Divorce) பழக்கத்தை நடைமுறைக்குக் கொடுண்வர வேண்டும் என்ற தீர்மானத்தை இவர் ஆதரித்துப் பேசினார். மேல் சபையில் 1943-இல் கொண்டு வரப்பட்ட இந்து வாரிசுச் சட்டத்தை இவர் ஆதரித்தார்; இந்துப் பெண்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும் என்று வாதிட்டார்.

**கல்விப்பணி**: கல்வி முன்னேற்றத்திற்கும் இவர் பாடுபட்டார். அலகாபாதுப் பல்கலைக்கழகம், காசி இந்துப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நிருவாகக் குழுக்களில் இவர் இடம் பெற்றிருந்தார். அலகாபாதுப் பல்கலைக் கழகத்தைத் திருத்தியமைப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழுவில் (Select Committee) இவர் உறுப்பினராக இருந்தார். உத்தரப் பிரதேச அரசு 1926-இல் அமைத்த இடைநிலைக் (Intermediate) கல்விக் குழுவில் இடம் பெற்ற இவர் அக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த கல்வி முறையை வன்மையாகக் கண்டித்தார். அந்நிய ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து நடக்கக்கூடிய குடிமக்களை உருவாக்கும் வகையில் அது அமைந்திருந்தது என்பதைச் சுட்டிக்காட்டினார். சுதந்திர மக்களை உருவாக்கத்தக்க முறையில் கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கைக்குரலை எழுப்பிய இவர் தாய் மொழியில் பாடங்களைக் கற்றுத் தரவேண்டும் என்றும், ஆங்கிலமும் கட்டாயப் பாடமாகப் போதிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். பள்ளிகளில்

தொழிற் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை இவர் ஆதரித்தார். தொடக்க கல்வியைப் பரவலாக்க வேண்டும் என்று இவர் வாதாடினார். புதுதில்லியில் உள்ள சாப்ரூ இல்லத்தில்(Sapru House) இந்திய உலகச் செய்திகள் மன்றத்தை (Indian Council of World Affairs) நிறுவினார். அதனுடைய ஆதரவின் கீழ்ப் பன்னாட்டுப் பாடப் பள்ளி (School of International Studies) என்ற ஓர் ஆய்வு நிறுவனம் தொடங்கப்பட்டது. பின்னர் அமைக்கப்பட்ட சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அது இணைக்கப்பட்டது.

**அரசியல் வாழ்க்கை**: அரசியற் செய்திகளில் ஒரு முற்போக்குவாதியாக விளங்கிய இவர் இந்தியாவிற்குத் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்று வாதாடினார். அதே நேரத்தில் அது பொதுச் செல்வ நாட்டமைப்பிலும் (Commonwealth) தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்று கூறினார். தன்னாட்சி பெற இந்தியர்கள் அரசியலமைப்போடு ஒத்த முறைகளைக் கையாள வேண்டும் என்பதை இவர் வலியுறுத்தினார். பாமர மக்களைச் சேர்த்துக் கொண்டு போராடுவதை இவர் விரும்பவில்லை. அமைதிப் போராட்டத்திலும் இவருக்கு நம்பிக்கையில்லை. இலக்னோவில் 1916–ஆம் ஆண்டில் நடைபெற்ற காங்கிரசுக் கூட்டத்தில் எசு.என். பானர்சி முன்மொழிந்த தன்னாட்சித் தீர்மானத்தை இவர் வழிமொழிந்தார். மாண்டேகு சேம்சுபோர்டு சீர்திருத்தங்களையொட்டி 1919–ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்குச் சென்ற தேசிய முற்போக்குக் கட்சியினுடைய (National Liberal Fedarations) தூதுக் குழுவில் இவர் இடம் பெற்றிருந்தார்.

இவர் 1920–இல் காங்கிரசை விட்டு விலகினார். காங்கிரசு மக்கள் இயக்கமாக மாற்றப்படுவதை இவர் விரும்பாமையே அதற்குக் காரணமாகும். காங்கிரசில் இருந்து விலகிய பிறகு இவரும் இவரைப் போன்ற மிதவாதிகளும் சேர்ந்து தேசிய முற்போக்குக் கூட்டமைப்புக் கட்சியைத் (National Liberal Federation) தொடங்கினார்கள். விரைவில் இவர் அக்கட்சியில் ஆதிக்க நிலையை எய்தினார். அதனுடைய இரண்டு ஆண்டுக் கூட்டங்களுக்கு இவர் தலைமை தாங்கினார். மாண்டேகு சேம்சு போர்டு சீர்திருத்தங்களைப் பற்றி விசாரணை நடத்துவதற்கென அமைக்கப்பட்ட மட்டிமான் (Muddiman) குழுவின் முன்னர் இவர் தம் கட்சியின் சார்பில் சாட்சியம் கூறினார்.

இவர் 1921–23–ஆம் ஆண்டுகளில் உத்தரப் பிரதேசச் சட்ட சபையின் உறுப்பினராகப் பணியாற்றினார். இவர் 1927 முதல் 1930 வரை இந்தியச் சட்டசபையில் உறுப்பினராக இருந்தார். இவர் 1935–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி 1937–இல் கூட்டப்பட்ட மத்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய விடுதலைக்குப் பின்னரும் இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். சட்டமன்ற இயலறிஞர் என்ற முறையில் இவர் பெரும் புகழ் ஈட்டியுள்ளார். இவருடைய பேச்சை மரியாதையுடனும் ஆர்வத்துடனும் ஏனைய உறுப்பினர்கள் கேட்டுவந்தனர். விடுதலைக்கு முன்னர்ச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் முக்கியத்துவம் அளித்து வந்த சிக்கல்களுள் இந்தியப் படைத்துறை சாராப்பணி மற்றும் இராணுவப் பணி ஆகியவற்றை இந்தியமயமாக்குவது ஒன்றாகும். கல்கத்தாவில் 1940–ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய முற்போக்குக் கூட்டமைப்புக் கட்சி மாநாட்டில், பாதுகாப்புத் துறையினை அரசப் பேராளரின் நிருவாகக் குழுவில் உள்ள இந்திய உறுப்பினரிடம் ஒப்படைக்கும்படியும் வலியுறுத்தினார்.

மற்றொரு சிக்கல் அயல்நாடுகளில் குடியேறிய இந்தியர்களைப் பற்றியதாகும். கெனியா, பிசி, அவாய், இலங்கை, மலாயா ஆகிய இடங்களில் இந்தியர்கள் சரிவர நடத்தப் பெறவில்லை என்பதைச் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டினார். நைரோபியில் 1929-இல் நடைபெற்ற முற்போக்குக் கூட்டமைப்புக் கட்சிக் கூட்டத்தில் அயல்நாட்டில் வாழும் இந்தியர்களின் பரிதாப நிலையைப் பற்றிய தீர்மானத்தை முன் மொழிந்தார். அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைப் பற்றி 1939–இல் மலேசியாவில் பேசினார்.

மற்றொரு சிக்கல் இந்தியாவைத் தொழில்மயமாக்குவது பற்றியதாகும். தொழில் ஆய்வுக் குழு (Commission) ஒன்று 1944–இல் அமைக்கப்பட வேண்டும் என்றும், அதில் இந்தியர்கள் பெரும்பான்மையான இடத்தைப் பெறவேண்டும் என்றும், அவர்களுள் பெரும்பாலோர் அரசு அதிகாரிகளாக இருத்தல் கூடாது என்றும் மேல்சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

இவர் ஒரு முற்போக்குவாதியாக இருந்தமையால் தனிமனிதருடைய தனித்தன்மையை அரசு மதித்து நடக்க வேண்டும் என்று கூறியதோடு அதைக் குலைக்கக் கூடிய அடக்கு முறைச் சட்டங்களையும் கண்டித்தார்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காக்க அயராது உழைத்த இவர் அந்த ஒருமைப்பாட்டை மேலிருந்து

மாநிலங்கள்மீது சுமத்துவதை விரும்பவில்லை. மாநிலங்களின் மனமுவந்த ஒத்துழைப்பின் அடிப் படையில் அதை உருவாக்க வேண்டும் என்று இவர் கூறினார்.

மொழி வாரி மாநிலங்களைப் அமைக்கும்போது மொழியின் காரணமாகச் சிறுபான்மையினர் நிலையை அடைந்துவிட்ட மக்களின் உரிமைகளைக் காக்க இவர் நல்ல பல கருத்துகளைக் கூறினார்.

நாட்டின் பாதுகாப்புக்கெனப் பலம் பொருந்திய படையை உருவாக்க வேண்டும் என்பது இவரது எண்ணம். அதனால், இவரைப் போர் வெறியர் என்று கூறமுடியாது. உலக அரங்கில் இந்தியா சிறந்த இடம் வகிக்க இராணுவ பலம் பேருதவியாக இருக்கும் என்பது இவருடைய கருத்தாகும்.

அயல்நாட்டுச் செய்திகளில் கூட்டுச் சேராக் கொள்கையை இவர் எதிர்த்தார். இந்திய அரசின் கூட்டுச் சேராக் கொள்கை கூட்டுச் சேருவதற்கு ஒரு போர்வையாக அமைந்துள்ளதேயொழிய உண்மை யான கூட்டுச் சேராத் தன்மையை அக்கொள்கை பெற்றிருக்கவில்லை என்பதே இவருடைய கருத்து. சீனாவை அமைதிப்படுத்துவதற்காக இந்தியா தனது உரிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது என இவர் வாதிட்டார்.

**வகித்த பதவிகள்**: இவர் அலகாபாதிலுள்ள சேவா சமிதியின் பொதுச் செயலராகவும் உத்தரப் பிரதேச அரிசன சேவா சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். சாரண இயக்கத்தில் சேர்ந்திருந்த இவர் இரயில்வே விசாரணைக் குழு மற்றும் மாநிலச் சீரமைப்புக் குழு ஆகியவற்றில் உறுப்பினராக இருந் தார். ஆசுத்திரேலியாவில் 1938-இல் நடைபெற்ற ஆங்கிலேயப் பொதுச்செல்வ நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய தூதுக் குழுவில் இவர் இடம் பெற்றிருந்தார்.

சிறந்த எழுத்தாளராகவும் விளங்கிய இவர் இந்தியாவின் தொண்டன் என்ற பத்திரிக்கையில் பல கட்டுரைகள் எழுதி வந்தார். இந்தியாவில் அரசுப் பணிகள் (Public Services in India) என்ற தலைப் பில் நூல் ஒன்றை எழுதியுள்ளார். இவருடைய சேவைகளைப் பாராட்டும் வகையில் இந்திய குடியரசுத் தலைவர் இவரை மாநிலங்கள் அவைக்கு நியமித்தார். இந்திய அரசு இவருக்குப் பாரத இரத்தினா என்ற விருதை வழங்கியது. ஆனால் அவையிரண்டையும் இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயுள் முழுவதும் அறிவாளியாக விளங்கிய இவர் பாமர மக்களின் தலைவராக விரும்பவில்லை. தம் சேவைகளைப் பிறர் பாராட்ட வேண்டும் என்று எண்ணாத இவர் அரசியல் சூதாட்டத்தில் விருப்பம் கொள்ளவில்லை.

தி.ஆர்.இரா.

**குன்மிங்கு**: சீன நாட்டின் தெற்கில் யுனான் (Yunnan) மாநிலத்தின் தலைநகராகவும், ஒரு சிறந்த இராணுவத்தளமாகவும் விளங்கும் குன்மிங்கு(Kunming) பர்மாவுக்குச் செல்லும் வழியில் உள்ளது. உப்பு, தேயிலை, மென்மயிர், மணி முதலியன இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. சிறந்த வாணிக மையமாக விளங்கும் இந்நகரின் தெற்கில் தியன் (Tign) என்னும் பெரிய ஏரி அமைந்துள்ளது. நிலக்கரிச் சுரங்கங்கள் இங்கு இருப்பதால் இந்நகர் பெரிய தொழில் மைய மாக வளர்ந்துள்ளது. இதன் சிறப்பு 1910-ஆம் ஆண்டு முதல் பல்வேறு வகைகளில் பெருகியுள்ளது. பல இரசாயனப் பொருள்கள், இயந்திரங்கள், காகி தம், சிமிண்டு முதலியனவும் இங்கு உற்பத்தியாகின் றன.

தெ.பா.

**குன்றக்குடி**: தமிழ்நாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் திருப்பத் தூர் வட்டத்தில் உள்ளதோர் ஊர். இது குன்னக் குடி என்றும் குன்றாக்குடி என்றும் கூறப்படும். இவ் வூரில் உள்ள குன்றின் அடிவாரத்தில் தெற்கு நோக் கியவாறு மூன்று குடைவரைக் கோயில்கள் உள்ளன இவை கி.பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை; இக்குடைவரைக் கோயில்களில் சோழர் பாண்டியர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக் குன்றின்மேல் சுப்பிரமணியர் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலின் மேற்கில் இயற்கையாக அமைந்த குகை உள்ளது. ஞானியார் மடம் என்று இங்குள்ள வர்களால் சொல்லப்படும் இவ்விடத்தில் நாகம், அனுமான், அமர்ந்த நிலையில் உள்ள சமண தீர்த்தக் கரர் ஆகியோர் உருவங்களும் பிராமிக் கல்வெட்டும் உள்ளன. 'உபியூர் ஆதன் சாத்தன்' என்று இக்கல் வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு ஆகும். சு.இரா.

**குன்றத்தூர்** தமிழகத்தின் செங்கற்பட்டு மாட்டத்தில் உள்ளதோர் ஊர். செங்கற்பட்டு மாவட் டத்திலுள்ள திருப்பெரும்பூதூர் என்னும் வட்டத் திலுள்ள இவ்வூரினைச் சென்னையிலிருந்து பேருந்து வழியாகச் சென்றடையலாம். காஞ்சியிலிருந்து சென்னை செல்லும் வழியில் பல்லாவரத்திற்கு மேற்கே 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வூரை மக்கள் இக்காலத்தில் குன்னத்தூர் என்று வழங் குவர். இவ்வூரில் பெரியபுராணம் இயற்றிய சேக் கிழார் பிறந்த வீடு ஒரு கோயிலாக அமைக்கப் பட்டுள்ளது. ஆண்டுதோறும் இங்குச் சேக்கிழாருக்குக்

குருபூசை விழா நடைபெற்று வருகிறது. இவ்வூரில் இரண்டு சிவன் கோயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று திருநாகேச்சரம் என்று வழங்கப்படுகிறது. அது சேக்கிழாரால் கட்டப்பெற்றதாகும். அருகிலுள்ள குன்றின் மீது முருகன் கோயில் அமைந்துள்ளது. ஊரின் எல்லையிலுள்ள பாலறாவாயர் எனப்படும் குளம் குடிநீர்க் குளமாகப் பயன்படுகிறது. சேக்கிழார் சுவாமிகள் புராணத்தினை இயற்றிய உமாபதி சிவாசாரியார் இவ்வூரைக் குறிப்பிடும்போது, பாலாற்றால் வளம் பெறும் தொண்டை நாட்டிலுள்ள, புலியூர்க் கோட்டத்துக் குன்றை வள நாட்டுக் குன்றத்தூர் என்று குறிப்பிட்டுள்ளார் (சேக்கிழார் சுவாமிகள் புராணம். 11). மேலுமவர் இவ்வூரினைச் 'செல்வமலி குன்றத்தூர்' என்று (சேக்கிழார் சுவாமிகள் புராணம்.7) சிறப்பித்துள்ளார். இவ்வூரில் ஓர் அரசாங்க மேனிலைப் பள்ளி உள்ளது. இப்பகுதியில் உலுங்கி நெசவு சிறப்பாக நடைபெறுகிறது.

தொல்லியல் சிறப்புப் பெற்ற இவ்வூரில் 1956, 1957-ஆம் ஆண்டுகளில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறையின் தெற்குச் சரகம் வி.டி.கிருட்டிணசாமி (V.D. Krishnaswamy) என்பவர் தலைமையில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகழாய்வுகள் இங்கிருந்த பெருங் கற்கால ஈமச் சின்னப்பகுதிகளிலும் நத்தப்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வூரில் பரல்குவியல் வட்டம் (Cairn circle), கற்பதுக்கையோடு உள்ள திட்டை(Dolmenoid cist), பரல்குவியல் (Cairns) போன்ற பெருங் கற்காலச் (Megalithic period) சின்னங்கள் உள்ளன. இவற்றையும் நத்தப் பகுதியையும் அகழ்ந்ததில் மட்கலன்களும், ஈமப் பேழைகளும் மணிகளும், வளையல்களும், சுடுமண் பொம்மைகளும், பொன்னாலான ஊசியும், மூன்று செப்புக் காசுகளும் கிடைத்தன.

இவ்வூரில் பெருங்கற்காலப் பண்பாடும் அதற்கு அடுத்து வரலாற்றுக் காலப் பண்பாடும் நிலவியமை அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

அ.மா.ப. & சு.இரா.

**குன்றம் பூதனார்**: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். பூதனார் என்னும் இயற்பெயர் பெற்ற இப்புலவர் திருப்பரங்குன்றத்தைப் பாடிய பின்னரே குன்றம் பூதனார் ஆகியிருக்கலாம் என உ.வே. சாமிநாதையர் கருதுவர். நற்றிணை 29-ஆம் பாடலைப் பாடிய பூதனாரும் இவரும் ஒருவரே எனச் சிலர் கருதுவர். இவர் பாடியனவாகப் பரிபாடலில் இருபாடல்கள் (9,18) உள்ளன.



பெருங்கற்காலச் சின்னம் - குன்னத்துார்

பரிபாடலில் இவர் பாடிய இருபாடல்களும் செவ்வேளையே குறிப்பன. செவ்வேளின் அடியுறை இன்பத்தையே வேண்டி இரு பாடலையும் முடித்த லின் அவ்விறைவனிடத்து இவர்க்குள்ள ஈடுபாடு புலப்படும். நான்மறை விரித்து நல்லிசை விளக்கும் வாய்மொழிப் புலவரை விளித்து அவர்க்குத் தமிழ் அகத்திணைக் களவு நெறியின் சிறப்பினை அறிவுறுத்து கின்றார் (9). அப்பாடலில் கற்பினும் களவு சிறந் தமைக்குக் காரணம் காட்டுகிறார். இப்புலவர் காதற் காமம் என ஒரு சொல்லைப் படைத்து அது காமத் தினும் சிறந்தது என்று கூறுவர். 'விருப்போரொத்த மெய்யுறு புணர்ச்சி' என அத்தொடர்க்குப் பொருள் விளக்கம் செய்துள்ளார். களவு கற்பு வாழ்க்கை முறைகளை வள்ளி தேவசேனையரிடத்தே பொருத்தி இவர் நாடகப் பாங்கில் பாடிய முறை நயஞ்சான் றது. செவ்வேளிடம் ஊடல் காரணமாக வள்ளி தேவ சேனை இருவரும் அவர்தம் தோழிமாரும் கிளிகளும் பொருத திறனை நயமுறச் சித்திரித்துள்ளார். முருகன் தன் தேவிமாரது ஊடலுரிமையை நயந் தமையை இப்புலவர், 'கற்பிணை நெறியூடுஅற்பிணைக் கிழமை, நயத்தகு மரபின் வியத்தகு குமர' (பரி. 9:81,82) எனப் பாடுகிறார். பரங்குன்றத்து இயல்பாக மயிலின் அழகை நோக்கிநின்ற கானவனிடத்து அவன் வேறொருத்தியின் அழகோடு அதனை ஒப் பிடுவதாகக் கருதிக் காதலி ஊடுதலையும், பின்னர் அவன் அவளது ஊடல் உணர்த்துதலையும் (18) நன்கு புனைந்துள்ளார்.

குறிஞ்சித் திணைக்குரிய முதல், கரு, உரி என்ற முப்பொருள்களையும் செவ்வனே அமைத்து நயமுறக் கூறியிருத்தலை நோக்கும்பொழுது இவர் அத் திணையைப் பாடுவதில் வல்லவர் என்று தெரிகிறது என்பர் உ.வே.சாமிநாதையர். பரங்குன்றம் இமயத் தையும் செவ்வேளின் ஊர்தியாகிய யானையையும் ஒக்கும் என்று கூறியுள்ளார். பரங்குன்றத்திலுள்ள சோலை, சுனை, அருவி, காந்தள், தினை, மயில் முதலியன அழகுறப் புனைவப்பெற்றுள்ளன. பரங்குன் றின் சுனைப்பக்கத்தே ஆடல், பாடல், சூது, பிற கலைகள் என்னுமிவற்றில் போட்டியிட்டு வாகை சூடியவரெல்லாம் வெற்றிக்கொடி நாட்டி உவந்த னர். இங்ஙனம் பரங்குன்ற நிகழ்ச்சிகள் பற்றி இப் புலவர் விரிவாகச் சித்திரித்துள்ளார். இரா.சா.

**குன்றன் சிற்றம்பலமுடையான்** என்பவர் இடைக்காலத் தமிழ்ப் புலவருள் ஒருவராவார். புதுக்கோட்டைப் பகுதியைச் சார்ந்த நாங்குப்பட்டி யென்னும் ஊரிற் கிடைக்கும் கி.பி. 11–ஆம் நூற் றாண்டுக்குரிய கல்வெட்டொன்றில் இவரைப் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.இவர் தொண்டை நாட்டில் பிறந்து சோணாட்டில் பல காலம் வாழ்ந்தவராக அறியப்படுகிறார்.முதற் குலோத்துங்க சோழனுடைய 13–ஆம் ஆட்சியாண்டிலேற்பட்ட மேற்சொன்ன கல் வெட்டு இவரைச் 'செயங்கொண்ட சோழ மண்டலத் துக் களத்தூர்க் கோட்டத்துமருதத்தூரரான குன்றன் சிற்றம்பலமுடையான்' எனச் சுட்டுகிறது.

சோணாட்டின் பகுதிகளுள் ஒன்றான உறத்தூர்க் கூற்றத்தில் இருந்த பையூரில் வேதவனமுடையான் என் னும் தலைவனொருவன் வாழ்ந்திருந்தான். தம் புர வலனாகவிருந்த இவனை இப்புலவர் பாராட்டிப் பாடினார். புலவரைப் பாராட்டி'இரும்பூதி' என்னும் ஊரை இத்தலைவன் முற்றூட்டாக வழங்கினான். சிவபெருமான்பால் பேரன்பு பூண்டொழுகிய புலவர் பெருமான் அவ்வூரை உறத்தூர்க் கூற்றத்துக் கோயில் கொண்டிருந்த சிவபெருமானுக்குத் தான மாக வழங்கினார். 'பையூருடையான் வேதவனமுடை யானை நான் கவிபாடிப், பாடின கவிக்கு எனக்குப் பரிசில் தந்த தன் காணியான குடிக்காடு இரும்பூதி, என்பது கல்வெட்டுப் பகுதியாகும்.

இக்கல்வெட்டில் இப்புலவர் தம் புரவலரின் பெருமையைப் போற்றிப் பாடிய வெண்பாவொன் றும் பொறிக்கப்பெற்றுள்ளது. அது 'வாளை வயிறு நிறைய மடற்கமுகம்' எனத் தொடங்குகிறது. இப் புலவர் இயற்றியனவாகப் பிற தனிப்பாடல்களோ நூல்களோ கிடைத்தில. வேத வனமுடையானைப் பற்றி இப்புலவர் பாடிய பிற செய்யுள்களோ நூல் களோ இதுகாறும் அறியப்பட்டில. அ.த.

**குன்றியனார்** சங்க காலப்புலவர்களுள் ஒருவர். சங்கப்பாடல்களுள் அகநானூற்றில் 2 பாடல் களும், நற்றிணையில் 2 பாடல்களும் குறுந்தொகை யில் 6 பாடல்களும் பாடியுள்ளமையால் அகப் பொருள் பற்றிப் பாடுவதில் வல்லவர் இவர் என லாம். அகப்பொருளில் நெய்தல் திணையை மிக விரும்பியவர். ஐந்திணைப் பாடல்களுள் நெய்தல் திணையில் 5 பாடல்களும் மருதத்திணையில் 2 பாடல்களும் குறிஞ்சித் திணையில் 2 பாடல்களும் பாலைத்திணையில் ஒரு பாடலும் இவரால் பாடப் பெற்றுள்ளன.

தலைவி கூற்றாகவும் தோழி கூற்றாகவும் தலை வன் கூற்றாகவும் இவர் அகப்பாடல்கள் அமைந்துள் ளன 'தலைவனது பிரிவை ஆற்ற மாட்டாமல் தலைவி மாலைப்பொழுது கண்டு மிக வருந்து கிறாள். தலைவனிடம் சென்ற நெஞ்சம் அவர் அருளாது போயினும் திரும்பி வாராமல் அங்கேயே இருக்கட்டும் என்கிறாள் தோழி (அகம் 40). களவுக்

காதல் கற்புக் காதலாக மாறுவதை ஒரு தலைவி மூலம் காட்டியுள்ளார். 'கடற் சேர்ப்பனை யானும் காதலிக்கிறேன்; என் தாயும் எங்கள் காதலை விரும்புகிறாள்; என் தந்தையும் அவனுக்கே மணம் முடித்துக் கொடுக்க விரும்புகிறார்; அம்பல் வெளிப் பட ஊரார் அவனுடன் தலைவியைச் சேர்த்தே பேசுவர்; எனவே வரைவு எளிதாயிற்று' என்கிறாள் தோழி (குறுந். 51). வெறியாடலை விலக்கி மணம் பேசவேண்டும் என்று மற்றொரு பாடல்மூலம் கூறுகி றார். 'தலைவன், புன்கண் மாலையைக் கண்டும் தலைவியை நினையாமல் அகன்றான்; அப்பிரிவால் உண்டாகிய காமநோய் வேறுபாடு முருகு அணங்கிய தால் வந்ததென்று ஊரார் கூறுவர். தலைவிக்கு ஏற் பட்ட நோயை வேறொன்றால் வந்ததென்று அய லார் பழி கூறுதல் பண்புடைமையன்று' என்று தோழி தலைவன் கேட்குமாறு கூறுகிறாள் (நற்.117).

பரதவர் எளிதில் பெற்ற பெருமீனை விற்றுக் கள்ளுண்டு மகிழுங் காட்சியைக் கடற்கரையின்கண் காட்டியுள்ளார். குளிர்ச்சியான முண்டக மலர் நூலறுந்த கோவையினின்றும்முத்துக்கள் சிதறிக் கிடப் பனபோல் கடற்கரையில் கிடக்கும் காட்சி இவர் கருத்தைக் கவர்ந்துள்ளது.

மருதத்திணையில் ஊடற்காட்சிகளை வெகு நுணுக்கமாக அமைத்துள்ளார் குன்றியனார். தலை வன் ஊர்த்துறையில் பரத்தையருடன் விளையாடி னான். அதனால், அந்நீர்த்துறை அழகுபெற்றது. ஆனால், அவன் மணந்த தோள் மெலிவுற்றது. வெண் சிறுகடுகு போன்ற சிறுஞாழல் பூவுடன் மருதத்தின் பழம் பூவும் சேர்ந்து அவர் ஊரிலுள்ள நீர்த்துறை அழகாயிற்று என்பதால் தலைவனின் பரத்தையர் தொடர்பு சுட்டப்பட்டுள்ளது (அகம். 50).

இரவுக்குறி விரும்பிய தலைவனிடம் தோழி பேசுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. அதில் தேரின் மணி ஒலிக்கு விளரிப் பண்ணினை உவமை கூறியுள்ளார். தலைவனைப் பிரிந்ததலைவியின் வருத் தத்திற்கு, தேர்ச்சக்கரம் ஊர்ந்தமையால் உப்பங்கழி யில் நலிவுற்ற நெய்தல் மலரினை உவமை காட்டியது நயமிக்கதாக உள்ளது (குறுந். 336). அ.ம.

**குன்றுதோறாடல்**: இது முருகப் பெருமானு டைய ஆறுபடைவீடுகளுள் ஒன்றாகும். திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், திருவேரகம், திருவாவினன் குடி, குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகியன முருகக் கடவுளுக்குரிய ஆறுபடை வீடுகளாகக் கூறப் படுகின்றன. குன்றுதோறாடல் என்பது திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேர கம் போல குறிப்பிட்ட ஒரு தலத்தைக் குறிப்பதாக இல்லை. இது கடவுள், குன்றுகள் அனைத்திலும் எழுந்தருளியுள்ளார் என்னும் கருத்தினைக் குறிப்ப தாக உள்ளது. 'மன்றுதொ றாடிய வள்ளல் காமுறக் குன்றுதொ றாடிய குமரற் போற்றுவாம்' என்னும் கந்தபுராண வாக்கு குமரனின் குன்றுதோறாடும் இயல்பினைச் சுட்டுவதாக உள்ளது. மன்றுதொறும் ஆடுகின்றான் சிவபெருமான்; குன்றுதொறும் ஆடுகின் றான் அவன் குமரன் என்பது பாடற் கருத்து.

தொல்காப்பியத்தில், 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று குறிப்பிடப்படுகிறது. இதன் பொருள் 'சேயோன் எனப்பெறும் முருகன் விரும்பி உறைகின்ற மலை நிலங்கள்' என்பதாகும். மலை நிலக் கடவுளாத லின் அவன் குறிஞ்சிக் கிழவன் எனவும் கூறப்படுகின் றான். மலையாண்டி என்ற பெயரும் வழக்கில் உண்டு. பழந்தமிழர் முருகக் கடவுளுக்குப் பெரிதும் மலைகளிலும், மலையின் பாங்கரிலுமே திருக்கோயில் களை அமைத்தனர். 'காடும் காவும் கவின்பெறு துருத்தியும் ஆறும் குளனும் வேறுபல்வைப்பும் 'ஆகிய அனைத்திடங்களும் அவன் உறையும் இடங்களே எனக் கொண்டு பிறவிடங்களிலெல்லாம் அவனுக்குத் திருக்கோயில் எடுத்து வழிபடும் மரபு தோன்றியது.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் குன்றுதோறா டலை முருகக் கடவுளுக்குரிய ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். 'குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே' என்னும் அவர் வாக்கினை நோக்குங்கால் குன்றுதோறாடல், என்பது குன்றங் கள் அனைத்திலும் அவன் அமர்ந்து விளையாடும் இயல்பு சுட்டும் பெயராக விளங்குந்தன்மை புலப் படும். வேட்டுவப் பெண்களுடன் வேலன் ஆடுவது குறித்து நக்கீரர் குன்றுதோறாடல் என்ற பகுதியில் இயம்புகின்றார்.

குன்றுதோறாடலை அருணகிரிநாதரும் ஒரு குறிப்பிட்ட இடமாகக் கொள்ளவில்லை என்பதனை, 'பதியெங்கிலுமிருந்து விளையாடிப் பல குன்றிலு மமர்ந்த பெருமாளே' எனவும், 'பருவரை துணிய ஒரு கணை தெரிவ பலமலை யுடைய பெருமாளே' என வும், 'குன்று தோறாடல் மேவு பெருமாளே' என வும் வரும் அவர் திருவாக்கால் உணரலாம். இர.கி.

**குன்றூர் கிழார் மகனார் கண்ணத்த னார்**, சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய தாக நற்றிணையில் (332) ஒரு பாடலும், குன்றூர் கிழார் மகனார் பாடியதாகப் புற நானூற்றில் (338) ஒரு பாடலும் காணப்படுகின்றன. இவ்விரண்டு

பெயர்களும் ஒரு புலவரையே குறிப்பனவாகக் கருத லாம். குன்றூர் கிழார் மகனார் என்பதால் குன்றூர் என்னும் ஊரின் தலைவனுக்கு மகன் என்று இவரைக் கொள்ளலாம். கண்ணத்தன் என்பது இவருடைய இயற்பெயர்; சோழநாட்டைச் சேர்ந்த போந்தை என்னும் ஊரின் தலைவனாகிய நெடு வேளாதன் என்பவனை இப்புலவர் பாடியிருப்பதால் இப்புலவர் சோழநாட்டைச் சேர்ந்தவர் என்று கருத இடமுண்டு. இவரைப் பற்றிய பிற செய்திகள் கிடைக்கவில்லை.

'பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி களவுக் காலத்து வற்புறுப்பத் தலைவி கூறுவதாக' இவர் பாடிய பாடல் நற்றிணையில் அமைந்துள்ளது. 'தலைவன் நாள்தோறும் வந்து களவுப் புணர்ச்சியில் ஈடுபட்டுச் செல்கிறான்; எனினும், தலைவியின் உடல் மெலிந்துகொண்டே வருகிறது; 'இது எதனால்' என்று கேட்கும் தோழியிடம் தலைவி இவ்வாறு கூறு கிறாள்: 'மலைப்பிளவுகளுக்கிடையே, குட்டிகளை ஈன்ற பெண்புலியின் பசியினை நீக்குவதற்காக இரை தேடி ஆண்புலி அலைந்துகொண்டிருக்கும் கொடிய வழியில் என்னைக் காணும் ஆவலுடன் இரவில் தலைவன் வந்து கொண்டிருப்பதை எண்ணும்போது எப்படிக் கவலையுறாமல், உடம்பு மெலியாமல் என் னால் இருக்கமுடியும்?'.

தலைவியை முதல்நாளில் கண்டபோது எவ்வளவு விருப்பத்துடன் நாடி வந்தானோ, அதே அளவு விருப்பத்துடன் தலைவன் வருகிறான் என்பதனைத் 'தலை நாள் அன்ன பேணலன்' என்று நுட்பமாக இப்புலவர் பாடியுள்ளார்.

இவருடைய புறநானூற்றுப்பாடல், ஒரு தலை வனின் மகள் மணப்பருவமெய்திய நிலையில், தகுதியுடைய மணமகன் பெண்கேட்க வருமாறு கூறும் வகையில், காஞ்சித்திணை, மகட்பாற் காஞ்சித்துறை யில் அமைந்துள்ளது. 'போந்தை என்னும் நகரத்திற் கொப்பான சீர்பெற்றவளாகிய இவளை வலிமை வாய்ந்த மூவேந்தர் மூவரும் வந்தாலும், தன் தகுதிக் கேற்பத் தன்னை வணங்கார்க்கு மணமுடித்துத் தர மாட்டான் இவளுடைய தந்தை' என்று பாடுகிறார் இப்புலவர்.

கண்ணத்தனார் நுட்பமான உவமைகளைக் கையாளுவதில் வல்லவர். நாள்தோறும் முயங்கி இன்பம் துய்த்தும் தலைவனை எண்ணி ஏங்கும் தலை வியின் நிலைக்கு நீரில் இறங்கி நின்று குவளை மலர் களைப் பறித்துக்கொண்டிருப்பவர் நீர்வேட்கையால் அவதிப்படுவதை உவமை கூறியுள்ளார். செழிப்பு மிகுந்த போந்தை நகரைத் தலைவியின் சீருக்கு ஒப்புமை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 'ஏர் உழுத வயல்கள், நீர் நிறைந்த கழனிகள், நெல் நிறைந்த வீடுகள், பொன் நிறைந்த தெருக்கள், வண்டுகள் நிறைந்த சோலைகள் – முதலியன கொண்ட போந்தை' என்று போந்தை நகரின் செழிப்பை இவர் வருணிப்பது நயம் மிக்கதாகும். இரா.சந்.

**குனார் மிர் தால்** சுவீடனின் மிகச்சிறந்த பொருளாதார நிபுணர்களுள் ஒருவர். இசுடாக்கு கோம் (Stockholm) பள்ளியின் முக்கியமான இவர், தம் பொருளியல், அரசியல், சமூகக் கோட்பாடுகளால் 20–ஆம் நூற்றாண்டுச் சிந்தனையாளர்களுள் தலை சிறந்த இடத்தைப் பெற்றார். மிர்தால் (Gunnar-Mirdal) கி.பி. 1898–ஆம் ஆண்டு சுவீடனில் உள்ள கசுடாப்சு தால்கார்லியா (Gustafs Dalecarlia)என்னு மிடத்தில் காரல் பீட்டர் சன்(Carl. A. Petterson), அன்னா சோபியா கார்ல்சு டாட்டர் (Anna Sofia Carlsdotter) ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவர் ஆல்வா ரெய்மர் (Alva Reimer) என்னும் பெண்ணை 1924–ஆம் ஆண்டு மணந்து ஒரு புதல்வனை யும் இரண்டு புதல்வியரையும் பெற்றார்.

மிர்தால், இசுடாக்கோம் பல்கலைக்கழகத்தில் பயின்று, 1923–ஆம் ஆண்டு சட்டத்துறையில் டாக்டர் பட்டமும் (Doctor of Jurisprudence), 1927–ஆம் ஆண்டு பொருளியல் துறையில் டாக்டர் பட்டமும் பெற்றார். இவருடைய அறிவு மேன்மையும், ஆழ்ந்த மனிதாபிமானமும், பல்துறை ஆராய்ச்சியும் சிறந்த பொருளியல் வல்லுநராக மட்டுமல்லாமல், இவரை உலகச் சமூகச்சீர்திருத்தவாதியாகவும் (World Social Reformer) திகழச் செய்தன.

மிர்தால், இசுடாக்கோம் பல்கலைக்கழகத்தில் பொருளியல் விரிவுரையாளராக 1927–ஆம் ஆண்டு முதல் தம் பணியைத் தொடங்கினார். பின்னர்ப் பேராசிரியராக 1931–ஆம் ஆண்டிலும், அரசியல், பொருளியல், நிதித்துறைப் பேராசிரியராக 1933–50 1960–67 ஆகிய ஆண்டுகளிலும் பணியாற்றினார். செனிவாப் (Geneva) பல்கலைக்கழகத்தில் உதவிப். பேராசிரியராக 1930–31–ஆம் ஆண்டிலும், இசுவீடன் அரசாங்கத்தின் ஆலோசகராக 1933–ஆம் ஆண்டி லும், மேல் சட்டசபையின் அங்கத்தினராக 1934 –ஆம் ஆண்டிலும், கார்டுகின், ஆர்வார்டு (Harvard) பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக 1938–ஆம் ஆண்டிலும், அமெரிக்க நீக்ரோக்களின் சிக்கல்களை ஆராயும் இயக்குநராகக் (Director) கார்னீசுக் கழ கத்தில் (Carnegie Corporation) 1938–43–ஆம் ஆண் டிலும் பணியாற்றினார். பிறகு சுவீடனின் வாணிகத் துறையில் அமைச்சராக 1945-47–ஆம் ஆண்டிலும் ஐரோப்பாவில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொரு ளாதாரக் குழுவின் தீர்மானங்களை நிறைவேற்றும்

செயலாளராக (Executive Secretary in U.N. Eco. Commission for Europe) 1947–57–ஆம் ஆண்டிலும் பணியாற்றினார். பன்னாட்டுப் பொருளாதார ஆய்வுத்துறையை இசுடாக்கோம் பல்கலைக்கழகத்தில் 1961–ஆம் ஆண்டு இவர் நிறுவினார். இவர் சிறப்புப் பேராசிரியராக (Distinguished Professor) நியூயார்க்குப் பல்கலைக்கழகத்தில் 1974–75–ஆம் ஆண்டிலும் கலிபோர்னியா, விசுகான்சின் பல்கலைக்கழகங்களில் 1977–ஆம் ஆண்டிலும் பணியாற்றினார். தெக்சாசுப் (Texas) பல்கலைக்கழகத்தின் தான்சன் (Thonson) பள்ளியின் பொது நடவடிக்கைத் துறையின் சமாதானப் பேராசிரியராக 1978–ஆம் ஆண்டில் பணியாற்றினார்.

மேற்கூறிய பணிகளைத் தவிரச் சுவீடனின் அரசு அறிவியல் கல்வித் துறை (Royal Swedish Academy of Sciences), அங்கேரியின் அறிவியல் கல்வித்துறை (Hungerian Academy of Sciences), அமெரிக்கக் கலை, அறிவியல் கல்வித் துறை (American Academy of Arts & Sciences), பிரிட்டானியக் கல்வித் துறை ஆகியவற்றின் சிறப்பு வல்லுநராகப் பணியாற்றினார். இவர் சிறப்பு உறுப்பினராக (Honorary Member) அமெரிக்கப் பொருளியல் அமைப்பிலும் (American Economic Association), அமெரிக்க மக்களாட்சி அமைப்பிலும் (Americans for Democratic Action) பதவி ஏற்றிருந்தார்.

மிர் தால் ஆற்றிய சமூகப், பொருளாதார, அரசியல் பணிகளையும் ஆராய்ச்சிகளையும் பாராட்டிப் பல்வேறு பல்கலைக்கழகங்களும், சங்கங்களும் பட்டங்களும் சிறப்புப் பட்டங்களும் அளித்துள்ளன. ஆர்வார்டு பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பரிசினை 1947–ஆம் ஆண்டிலும், நான்சிப் பல்கலைக்கழகத்தின் பரிசினை 1950–ஆம் ஆண்டிலும், அப்பரிசினையே கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் 1954–ஆம் ஆண்டிலும், நியூயார்க்கில் உள்ள சமூக ஆராய்ச்சிப் பள்ளியில் 1956–ஆம் ஆண்டிலும் இலீட்சுப் பல்கலைக் கழகத்தில் 1957–ஆம் ஆண்டிலும், செருமனியின் ஐக்கிய குடியரசுக்கான சமாதானப் பரிசினை 1970–ஆம் ஆண்டிலும் பெற்றார். பிரெடரிக் வான் கையாக்கு என்பவருடன் பொருளியல் துறையின் நோபல் பரிசினை 1974–ஆம் ஆண்டில் இவர் பெற்றார்.

மிர் தால் பல துறைகளின் அறிவையும் பெற்றிருந்தமையால் பலவகையான நூல்களை வெளியிட்டுள்ளார். மிர் தாலின் படைப்புகள் பிற பொருளாதார வல்லுநர்களின் படைப்புகளிலிருந்து சற்று மாறுபடுவதற்குக் காரணம் அவரது படைப்புகளுள் பெரும்பாலானவை செய்முறை ஆராய்ச்சியை (Empirical Research) அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டமையாகும். அவை சமூக, பொருளாதார, அரசியல் உட்பட வளர்ந்துவிட்ட, பின்தங்கிய நாடுகளின் (Developed & Under Developed Countries) சிக்கல்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.

மிர் தால், எதிர்பார்க்கப்படும் அங்காடி நிலவரங்கள், தொழில் நுட்ப வளர்ச்சிகளால் விலை வரையறை, ஆதாயம், மூலதன மதிப்பு மாறுதல் ஆகியவற்றை ஆராய்ந்து, அதனைப் ‘பொருளாதார மாற்றத்தின்கீழ் விலை வரையறைச் சிக்கல்’ (The Problem of Price Formation Under Economic Change) என்னும் தலைப்பில் 1927–ஆம் ஆண்டு வெளியிட்டார். பொருளாதாரக் கோட்பாடுகளைக் கொண்டு அரசியல் முடிவுகளைப் பெறமுடியும் என்பதைப் ‘பொருளாதாரக் கோட்பாட்டின் வளர்ச்சியில் அரசியல் தன்மை’ (The Political Element in the Development of Economic Theory) என்னும் நூலில் 1930–ஆம் ஆண்டிலும், சுவீடனின் பணத்தொடர்பான மாற்றுமுறைச் சிக்கல்களைப் பற்றிப் ‘பண நெருக்கடியில் சுவீடனின் பாதை’ (Sweden’s Path through the Monetary Crisis) என்னும் நூலில் 1931–ஆம் ஆண்டிலும், ‘நீண்டகாலச் சிக்கலின்போது குடியிருப்பு ஒரு சமூகத் திட்டச் சிக்கல்’ (The Question of Housing as a Social Planning Problem During the Crisis and in the Long-Run), ‘வரவு, செலவுத் திட்டத் தெளிவுரை’ (An Explanation of Conjucture & Public Budgeting) சுவீடனின் கூலி, நாட்டு வருமானம், ‘பெருகும் குடியிருப்புகளின் புள்ளியியல், அதோடு தொடர்பு கொண்ட அரசியல் சிக்கல்களுக்கான கேள்விகள்’ (An Examination of the Need for an Enlarged Housing Statistics and other Related Political Questions) ஆகிய நூல்களை 1933–ஆம் ஆண்டிலும் வெளியிட்டார். பின்னர் ‘மக்கள்தொகை நெருக்கடி’ (Crisis in the Population Question) என்னும் நூலை 1934–ஆம் ஆண்டிலும், ‘சமூகத்திலும் சமூக அறிவியலிலும் உள்ள நெருக்கடிகள்’ (The Crisis in Society & the Social Sciences) என்னும் நூலை 1935–ஆம் ஆண்டிலும், ‘மக்கள் தொகைச் சிக்கலின் கருத்து வேறுபாடு’ (Controversy in the Population Question) என்னும் நூலை 1936–ஆம் ஆண்டிலும், ‘மறு அமைப்புக் காலத்தில் வேளாண்மைக் கொள்கை’ (The Agricultural Policy During Reorganization) என்னும் நூலை 1938–ஆம் ஆண்டிலும் வெளியிட்டார்.

பேரியல் இயக்குநிலைப் பகுத்தாய்வினை (Macro Dynamic Analysis) எதிர்நோக்கும் மாறக்கூடிய எண்ணாகக் கொண்டு, விக்செலின் வட்டிக் கொள்கையை மாற்றுக் கொள்கையாகப் ‘பணச் சமநிலை’

(Monetary Equilibrium) என்னும் நூலை 1939-ஆம் ஆண்டிலும், 'அமெரிக்காவுடன் தொடர்பு' (In Touch With America) என்னும் நூலை ஆல்வா மிர்தாலு டன் 1941-ஆம் ஆண்டிலும், 'உலக மையத்தில் அமெரிக்கா' (America in the Middle of the World) என்னும் நூலை 1943-ஆம் ஆண்டிலும், அமெரிக்க நீக்கிரோ மக்களின் சிக்கல் பற்றிய 'அமெரிக்கத் தடு மாற்றம்' (American Dilemma) என்னும் நூலை 1944-ஆம் ஆண்டிலும், 'புதிய குடியரசு' (Modern Democracy), 'சமாதான நல் நம்பிக்கைக்கு எதி ராக எச்சரிக்கை'(Warning Against Peace Optimism) ஆகியனவற்றை 1944-ஆம் ஆண்டிலும் மிர்தால் வெளியிட்டார்.

இங்குக் கூறப்பட்ட படைப்புகளைத் தவிரத் தொழிற்றுறை, அறிவியல் பொருளாதாரக் கொள்கை, பன்னாட்டு வாணிகம், பொருளாதார வளர்ச்சி, பின் தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கான சிக்கல்கள் ஆகியன வற்றைப் பற்றியும் மிர்தால் ஆராய்ந்துள்ளார். 'சக்தி வாய்ந்த பன்னாட்டு ஒத்துழைப்புக்கு உளவியல் இடையூறுகள்' (Psychological Impediments to Effective International Co-operation) என்னும் நூலை 1952-ஆம் ஆண்டிலும், 'பன்னாட்டுப் பொருளாதா ரம்: சிக்கல்களும் தோற்றங்களும்' என்னும் நூலை 1956-ஆம் ஆண்டிலும், 'பொருளாதாரக் கொள்கை யும் பின்தங்கிய மண்டலமும்' (Economic Theory and Under Developed Regions) என்னும் நூலை 1957-ஆம் ஆண்டிலும், 'வளமான நிலம், ஏழை; செழுமைக்குப் பாதை' (Rich Lands and Poor; The Road to Prosperity) என்னும் நூலை 1958-ஆம் ஆண்டிலும், 'பொரு ளாதாரத் திட்டமும் அதன் பன்னாட்டுக் கருத்துகளும் நல அரசுக்கு அப்பாற்பட்டவை' (Eco-Planning & Its International Implications Beyond the Welfare State) என்னும் நூலை 1960-ஆம் ஆண்டிலும், 'சுவீடன் நாட்டு உதவிகளின் சிக்கல்கள்' (The Problem of Sweden Aids) என்னும் நூலை 1961-ஆம் ஆண்டி லும், 'நாமும் மேலைநாட்டு ஐரோப்பாவும்' (We & Western Europe), என்னும் நூலை 1962, 1971-ஆம் ஆண்டுகளிலும் 'செல்வச் செழிப்பும் அறை கூவலும் (Challenge to Affluence) என்னும் நூலை 1963-ஆம் ஆண்டிலும், 'உலகத்தின் தீமைகள்' (Our Evil World) என்னும் நூலை 1964-இலும், 'அமெரிக்க ஐக்கிய நாடும் வியட்நாம் போரும்' (U.S.A. & Vietnam War) என்னும் நூலை 1967-ஆம் ஆண்டிலும், 'சமூக ஆராய்ச்சியின் நோக்கம்' (Objectivity in Social Research) என்னும் நூலை 1969-ஆம் ஆண்டிலும் இவர் வெளியிட்டார். நாடுகளின் வறுமைத் தன்மையை விளக்கும், 'ஆசிய நாடகம்' (Asian Drama, 3 Volumes) என்னும் நூலை 1968-இலும், 'உலக வறுமையின் அறைகூவல்' (Challenge of World Poverty) என்னும் நூலை 1972-இலும், 'இயல்புக்கு எதிரான பொருளா தார ஆய்வுக் கட்டுரை' (Against the Stream : Critical Essays on Ecomics) என்னும் நூலை 1973-ஆம் ஆண்டிலும், பொருளாதார வளர்ச்சியும் சூழ்நிலை அமைப்பும்' (Environment & Economic Growth) என்ற நூலை 1976-ஆம் ஆண்டிலும் வெளியிட்டார்.

இவற்றைத் தவிரச் சொற்பொழிவுகள் பல வற்றை மிர்தால் நிகழ்த்தியுள்ளார். 'சுவீடனின் மக் கள் சிக்கல்' பற்றி 1935-இலும், 'குடியாட்சியின் சிக் கல்கள்' பற்றி 1940-இலும், 'அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியும் எதிர்பார்ப்பும்' பற்றி 1944-இலும், போராட்டத்திற்குப் பின் பொருளா தாரச் சிக்கல்' பற்றி 1944-இலும், 'பல அரசாங்கக் கழகத்தின் உண்மைநிலை, பொய்த்தோற்றம்' பற்றி 1955-இலும், 'நாட்டு, சருவதேசப் பொருளாதாரம்' பற்றி 1957-இலும் இவர் சொற்பொழிவாற்றினார்.

உலகப்போருக்குப் பிந்தைய பொருளாதாரச் சிக்கல்கள் பற்றி 1944-ஆம் ஆண்டிலும், 'பல அரசி யல் அமைப்பின் உண்மை, பொய்த்தோற்றம்' பற்றி 1955-இலும் இவர் சொற்பொழிவாற்றினார்.

இவருடைய படைப்புகளுள் தலைசிறந்தது 'பொரு ளாதாரக் கொள்கையும்பின்தங்கிய மண்டலங்களும்' (Economic Theory & Under Developed Regions) ஆகும். 'ஆசிய நாடகம்' என்னும் நூல் மிர்தாலின் நினைவுச் சின்னமாக விளங்குகிறது. குறிப்பாக, அந் நூலில் குடியேற்ற நாடுகளாக இருந்து விடுதலை பெற்ற தெற்கு ஆசியநாடுகளின் சமூகப் பொளாதா ரச் சிக்கல்கள் ஆழ்ந்து ஆராயப்பட்டு, அவற்றின் முன்னேற்றத்திற்கான திட்டக் கோட்பாடுகள் வலியு றுத்தப்பட்டுள்ளன. மிர்தாலின் 'அமெரிக்கக் குழப் பம்' என்னும் நூல் நடைமுறையற்ற கொள்கைகள் புராணக் கதைகள் போன்றவற்றைத் தவிர்த்துச் சமூக, அறிவியலின் ஆய்வுக் கோட்பாடுகளை வெளிப் படுத்துகிறது.

மிர்தால் நாடுகளின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார். குறிப்பாகப் பின்தங்கிய நாடுகளின் சிக்கல்களை ஆராய்ந்து அவற்றை ஒழிக்கத் தேவை யான கூறுகளையும் இவர் ஆராய்ந்தார். மிர்தால், சமூக, பொருளாதார அரசியல் துறையிலும் ஈடு பாடு கொண்டு செவ்வனே தம் பணிகளை ஆற்றி, அத்துறைகளிலும் பலகோட்பாடுகளை உருவாக்கி, உலகப்புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர் மட்டு மல்லாமல் உலகச் சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். இந்தியா, 1982-ஆம் ஆண்டின் சவகர் லால் நேருவின் சிறப்புப் பரிசினை (Jawaharlal Nehru Award)மிர்தாலுக்கும் அவர் மனைவிக்கும் அளித் துப்பாராட்டியது.

ஜீ.வ.


**கூ** என்னும் எழுத்து 'கு'வைப் போலவே வாயைக் குவித்துப் பின் நீட்டியதால் வரும் ஒலியைக் குறிக்கும் எழுத்தாகும். க, கு என்ற எழுத்துகளுக்குரிய குறிப்பைப் பார்க்க.

குயிலின் கூவும் ஒலியைக் குறிக்கும் தனிச்சொல்லாக இவ்வெழுத்துப் பயன்படுகிறது. செய்யுளில் சீரசைகளை அலகிடும்பொழுது நேர்நிரை அசையில் 'கூவிளம் என்னும் வாய்பாட்டில் நேரசையைக் குறிக்க கூ என்ற எழுத்து வழங்குகிறது.

**இதன் வடிவம்**: நடுக்கோட்டில் வலப்புறம் இழுக்கப்படும் கோட்டால் இது குறிக்கப்படுகிறது. இந்த உருவம் தொடர்ந்து கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் 'க'வின் இக்கால உருவம் தோன்றும் வரை மாறுபாடின்றி இருந்து வந்தது. இது, கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் இராசநாராயண சம்புவராயனின் குன்றத்தூர்க் கல்வெட்டில் 'க'வின் குறுக்குக் கோட்டோடு உகரமாக இணைந்து நின்றது. பிறகு, விசயநகர மன்னன் அச்சுத தேவராயனின் சீரங்கக் கல்வெட்டில் இன்று காணப்படும் வடிவம் தோன்றிற்று. ... ... ...








வட்டெழுத்தில் கி.பி. 8–ஆம் நூற்றாண்டு வரை 'க'வின் குறுக்குக் கோட்டில் இணைக்கப்பட்ட வளைந்த கோடு சுருங்கி மற்றொரு வளைந்த கோடு இணைக்கப்பட்டு வந்தது. செங்கம் நடுகற்கள் (கி.பி. 5–முதல் கி.பி. 8–ஆம் நூற்றாண்டு வரை) பாண்டியன் பராந்தக வரகுணன் செப்பேடுகள் (கி.பி. 8–ஆம் நூற்றாண்டு) முதலியவற்றில் காணப்படுகிறது. பிறகு கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் கேரளத்துக் கொல்லூர் மடம் செப்பேடுகளில் காணப்படுவதைப் போல் ஒரு வளைகோடும் அதை ஒட்டி ஒரு நேர்கோடும் வரையப்பட்டன. இதுவே, வட்டெழுத்தின் மறைவு வரை நிலைத்து நின்றது.





கே.ஜி.கி.

**கூக்கிளகுகிளான்**: ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வரலாற்றில் நீக்கிரோக்கள் சிக்கல் பல்வேறு அரசியல், பொருளாதார, சமூக இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்து வந்துள்ளது. குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆபிரகாம் லிங்கன் (கி.பி. 1860) ஒரு பெரிய உள்நாட்டுப் போரையே நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. போர் நீக்கிரோ அடிமைச் சிக்கலைத் தீர்த்துவிடவில்லை. அரசியல் சட்டப்படி நீக்ரோக்களின் அடிமை முறை ஒழிக்கப்பட்டது. ஆனால், பல வெள்ளையர்களின் உள்ளப்பாங்கு மாறவில்லை. கறுப்பு அடிமைகளாக இருந்த நீக்கிரோக்கள் உரிமை பெற்றுத் தமக்குச் சமமாக எழுச்சி பெறுவதை அவர்கள் வெறுத்தனர். அரசியல் சட்டப்படி சுதந்திரம் பெற்ற அவர்களை மறைமுகமாக அடக்கி ஆள அவர்கள் முற்பட்டனர். அதற்காகச் சில மாநிலங்களில், குறிப்பாகத் தென் மாநிலங்களில், பல தந்திர முறைகள் கையாளப்பட்டன. அவற்றுள் ஒன்று கூக்கிளகுகிளான் (Kuklux–klan) என்னும் இரகசிய இயக்கம். இந்த இயக்கம் கி.பி. 1865–ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, நீக்

கிரோக்கள் அச்சுறுத்தப்பட்டனர். அவர்களுக்கு அனுகூலமாக இயற்றப்பட்ட சீர்திருத்தங்கள் செயன்முறையில் இயங்காமல் இருக்க இந்த இயக்கத்தினர் பல தந்திரச் செயல்களை இரகசியமாகக் கையாண்டனர். அதனால், நீக்கிரோக்கள் பலருக்கு இடுக்கண்கள் தொடர்ந்து இருந்துவரலாயின. அமெரிக்க நடுவண் அரசு கி.பி. 1871–ஆம் ஆண்டில் இயற்றிய சட்டப்படி அந்த இரகசிய இயக்கம் அடியோடு கலைக்கப்பட வேண்டியதாயிற்று.

இச்சட்டத்தை விரும்பாத சிலர் மீண்டும் கிளர்ச்சி செய்யத்தக்க தருணத்தை எதிர் நோக்கியிருந்தனர். முதலாம் உலகப் போர் தொடங்கியவுடன் அவர்களுக்குச் சில வாய்ப்புகள் கிடைத்தன. நீக்கிரோக்களை வெறுத்தவர்களும், வெளிநாட்டவர்களை விரும்பாதவர்களும், யூதர்களை விரட்ட விரும்பியவர்களும், கத்தோலிக்கர்களை வெறுத்தவர்களும் ஒன்றுகூடி ஒரு புதிய இயக்கத்தை 1915–இல் தோற்றுவித்தனர். இதற்கு இரண்டாம் கூக்கிளசுகிளான் என்பது பெயர். கூக்கிளசு என்ற சொல்லுக்கு வட்டம் என்பது பொருள். வட்டம் வட்டமாக, இரகசிய முறையில் அவர்கள் செயலாற்றியதால் அப்பெயர் அமைந்தது. இரண்டாம் இயக்கம் முதல் இயக்கத்தைவிட வலிமை வாய்ந்ததாகவும் நாடு தழுவியதாகவும் இருந்தது. நிறவெறியர்களும் குறுகிய நாட்டு மனப்பான்மையுடையோரும் இதற்கு ஆதரவு அளித்தனர். இயக்கத்தினர் தேர்தல்களிலும் போட்டியிட்டனர். தேர்தலில் முதலில் அவர்களுக்கு வெற்றி கிடைத்த போதிலும், 1928–இல் தோல்வியே கிடைத்தது. இயக்கம் வலிமை குன்றியது. அந்த இயக்கம் 1944–இல் கலைக்கப்பட்டது.

மூன்றாம் முறையாக, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, இந்த இயக்கம் வளரத் தொடங்கியது. ஆனால், ஆதரவு கிடைக்கவில்லை. மூன்றாம் இயக்கத்தின் அடிப்படைக் குறிக்கோள் யூதர்களுக்குத் துன்பம் இழைப்பதே ஆகும். அவ்வியக்கத்தினரைப் பெரும்பான்மையினரான அமெரிக்கர்கள் கண்டித்தனர். குடியாட்சி முறைக்கும் நாட்டின் அமைதிக்கும் அவர்கள் ஊறு செய்யக்கூடும் என்று நம்பிய அமெரிக்கர்கள் அவ்வியக்கத்தை எதிர்த்தனர். அதனால் மீண்டும் அது வலிமை குன்றிவிட்டது. தெ.பா.

**கூகைக் கோழியார்**: கூகைக் கோழியார் என்பவர் சங்கப் புலவருள் ஒருவராவார். 'வாடா மாலை' எனத் தொடங்கும் இவர்தம் பாடல் புறநானூற்றின் 364–ஆம் பாடலாக உள்ளது. 'மறப் போர் வல்ல தலைவனே!' என்று ஒரு தலைவனை விளித்துச் சுடுகாட்டின் இயல்பையும், வாழ்வின் நிலையாத் தன்மையையும் அவனுக்கு எடுத்துக்கூறி அறநெறியில் நிற்குமாறு அறவுரை பகர்வதாக அப் பாடல் அமைந்துள்ளது.

சுடுகாடு இறந்தோர் பிணங்களைக் குவிக்கும் எண்ணற்ற தாழிகளைக் கொண்டது. அங்குக் காணப்படும் முதுமரப் பொந்துகளில் கேட்போர் திடுக்கிட்டு அஞ்சும்படி இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கும் பேராந்தை எனப்படும் கூகைக் கோழிகள் நீங்காத தன்மையது. 'இத்தகு சுடுகாட்டைச் சென்று அடைவதற்கு முன்னர், நின்னைப் பாடிவரும் விறலிக்குப் பொன்னரி மாலையையும், பாணனுக்குப் பொற்றாமரைப் பூவையும் தந்து, மதுவையும் ஊனையும் நாளும் உண்டும் தின்றும் இரவலர்க்குக் கொடுத்தும் அறஞ்செய்து மகிழலாம் வருக' என அத்தலைவனைப் புலவர் அழைப்பதாகப் பாடல் அமைந்துள்ளது.

புலவரின் இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடியுள்ள பாடல் யார்மேல் பாடப்பட்டது என்ற குறிப்பும் கிடைக்கவில்லை. சுடுகாட்டில் குரலெழுப்பும் கூகைக்கோழியைப் பற்றித் தம் பாடலில், 'முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும், கூகைக் கோழியானாத், தாழிய பெருங்காடு எய்திய ஞான்றே' என்று குறிப்பிட்டுள்ள நயத்தினைக் கருதி இப்புலவர் கூகைக் கோழியார்' என்ற பெயரினைப் பெற்றார். இப்புலவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்துள்ளது பெருங்காஞ்சித் துறையிலமைந்த இப்பாடல் ஒன்றேயாகும். இரா.செ.

**கூச்சு பிகார்** இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் உள்ள ஒரு மாவட்டம். இதன் தலைநகரின் பெயரும் கூச்சுபிகார் (Cooch Behar). இம்மாவட்டத்தின்பரப்பு 3386 சதுர கி.மீ. மக்கட்டொகை 1,771,643 (1981). முன்னர் இது ஒரு தனிக் குறுநில அரசாக விளங்கியது. 1950–ஆம் ஆண்டில் மேற்கு வங்காளத்துடன் இணைக்கப்பட்ட பிறகு அம்மாநிலத்தின் 16 மாவட்டங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இச்சமவெளியில் ஓடும் பிரமபுத்திர ஆற்றுடன் திசுடா (Tista) ஆறு கலக்கின்றது. இதன் முக்கிய விளைபொருள்களாவன: புகையிலை, சணல், நெல், தலைநகரமாகிய கூச்சுபிகார் கல்கத்தா நகருக்கு வடக்கில் 424 கி.மீ. தொலைவில் உள்ளது. தெ.பா.

**கூசுடோசா** இத்தாலிய வரலாற்றில் சிறப்புப் பெறும் ஒரு சிறு ஊர். இத்தாலியில் வெரோனா (Verona) மாநிலத்தில் உள்ள கூசுடோசாவில் (Custozza) கி.பி. 1848–ஆம் ஆண்டில் இத்தாலியப்புரட்சியின் போது ஒரு தலைவராகப் போரிட்ட சார்டீனிய மன்னனை வல்லாட்சிப் பேரரசு நிறுவியிருந்த ஆசுத்

திரியா தோற்கடித்தது. மறுபடியும் கி.பி. 1866–ஆம் ஆண்டில் இத்தாலியப் படைகள் ஆசுத்திரியாவிடம் இதே இடத்தில் தோல்வியுற்றன. ஐரோப்பிய வரலாற்றில் இப் போர்கள் சிறப்பானவை. தெ.பா.

**கூட்டரசு நிதி**: மாநில அரசுகள் தங்களின் தனித்தன்மை இழக்காமல் பொருளாதார வளர்ச்சிக்குகந்த வகையில் அதிகாரங்களை மைய அரசோடு பங்கிட்டுக்கொள்ளும் முறையைக் கூட்டரசு அமைப்பு எனலாம். மைய மாநில அரசுகளின் நிதி உறவுகளை விளக்குவதே கூட்டரசு நிதி (Federal Finance). கூட்டரசு அமைப்பு முறையின் சில அடிப்படையான கருத்துகள் பல நூற்றாண்டுகளாகப் பேசப்பட்டு வந்தாலும் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில்தான் அவை செயல்வடிவம் பெற்றன எனக் கூறலாம். அமெரிக்க நாட்டில் 1787–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியற் சட்டம் கூட்டரசுக் (Federl Government) கோட்பாட்டை முதன்முதலாக உலகிற்கு அறிமுகம் செய்தது. ஆனால், அவ்வரசியல் சட்டத்தில் கூட்டரசு (Federal) என்ற சொல் காணப்படவே இல்லை.

பல்வேறு மொழிகள், இனங்கள், நாகரிகங்கள், சமயங்கள், பண்பாடுகள் போன்ற வேறுபட்ட இயல்புகளையுடைய மக்களை ஒருங்கிணைத்துச் செல்லும் சிறந்த அமைப்பாகக் கூட்டரசு அமைப்பு உருவானது. கூட்டரசு அமைப்பு அமெரிக்கா, ஆசுத்திரேலியா (Australia), கனடா (Canada), சுவிட்சர்லாந்து, செருமனி (Germany) போன்ற நாடுகளில் கி.பி. 19–ஆம் நூற்றாண்டிலும், 20–ஆம் நூற்றாண்டிலும் வலுப்பெற்றது. இந் நாடுகளில் உருவான கூட்டரசு அமைப்பு முறையைத் தொன்மைக் கூட்டரசுகள் (Classical Federations) எனக் குறிப்பிடுகின்றனர். பிற்காலத்தில் சிறப்பாக 1945–ஆம் ஆண்டிற்குப் பின்னர் உருவான கூட்டரசுகளைப் புதிய கூட்டரசுகள் (New Federations) என்கின்றனர். இந்தியா, பாகிசுத்தான் (Pakistan), மலாயா, மலேசியா, நைசீரியா, உரொடீசியா, நியாசாலாந்து, மேற்கு இந்திய நாடுகள் ஆகியவற்றில் புதிய கூட்டரசு அமைப்பு முறை உருவாகியது. கூட்டரசு அமைப்பு முறை அரசின் பல்வேறு உறுப்புகளிடத்தில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கும் தன்மையைப் பெற்றுள்ளது. அதிகாரங்களைப் பிரித்து அளிப்பதைக் கூட்டரசு அமைப்பு முறையின் அரசியல் சட்டம் உறுதிப்படுத்துகிறது. கூட்டரசு அரசியல் சட்டங்கள் (Federal Constitutions) அரசின் பல்வேறு உறுப்புகளின் நிதி அதிகாரங்களையும் சமூகப் பொருளாதாரப் பணிகளையும் தெளிவாக அறிவிக்கின்றன.

கூட்டரசு நிதி அமைப்பு முறை நாட்டுக்கு நாடு பல மாற்றங்களுடன் பல வகைகளில் இயங்கி வருகிறது. இங்கிலாந்து நாட்டை நாடாளுமன்ற மக்களாட்சியின் (Democracy) தாய் என்று குறிப்பிடுவது போன்று, அமெரிக்க நாட்டைக் கூட்டரசு அமைப்பின் தந்தை என்று குறிப்பிடுகின்றனர். ஐக்கிய அமெரிக்கக் குடியரசு (United States of America) கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகப் பலவகை மாறுதல்களை உட்படுத்தியதால் கூட்டரசு அரசியல் சட்டம் நடைமுறையில் செயற்பட்டு வருகிறது.

அமெரிக்க நாட்டின் கூட்டரசு நிதி அமைப்பில் நிதிவளம் பெருக்கும் செலவு செய்யும் அதிகாரங்கள் மத்திய (Federal), மாநில (State), உள்ளாட்சி. (Local)அரசுகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பிற நாடுகளில் அதிகாரங்கள் மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டரசு நிதி அமைப்பில் வரி விதிப்பு அதிகாரம், பொதுச் செலவு, பொதுக்கடன் போன்ற நிதியியல் பிரிவுகள் முதன்மையான பங்கினை வகிக்கின்றன.

முதல் உலகப் போருக்கு முன்வரை மாநில அரசுகளே மிகுந்த நிதி அதிகாரங்களைப் பெற்றிருந்தன. மத்திய அரசு சில பொருளாதார, சமூகப் பணிகளையும், வரி விதிக்கும் அதிகாரங்களையும் பெற்றிருந்தது. அக்கால கட்டங்களில் தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் (Classical Economist) செல்வாக்கு மிகுதியாக இருந்ததால் அரசுகள் குறைந்த பொதுச்செலவையும் குறைந்த வரி விதிப்பையும் மேற்கொண்டிருந்தன. உலகப் போர்க் காலத்தில் பலவகைப் பணிகளை மத்திய அரசு மேற்கொண்டது. குறிப்பாக நாட்டுப் பாதுகாப்பு, பொருளாதார ஆக்க நடவடிக்கைகளுக்காகும் பொதுச்செலவு ஆகியன பெருகின. இப்பணிகள் காரணமாக மத்திய அரசிற்கு நிதி வளங்கள் தேவைப்பட்டன. எனவே, மாநில அரசுகளிடமிருந்த பல வரி விதிக்கும் அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொண்டது. இவ்வாறான அதிகார மாற்றம் எல்லாக் கூட்டரசு அமைப்புகளிலும் ஏற்படத் தொடங்கியது.

உலகளவில் 1930–ஆம் ஆண்டில் நிலவிய உலகப் பொருளாதாரப் பெருமந்தநிலை (Great Depression) பொருளாதாரக் கோட்பாடுகளில் திருப்பு முனையை உருவாக்கியது. சான் மேனார்டு கீன்சு(John Maynard Keynes) என்ற பொருளாதார அறிஞர் பொதுச் செலவைப் பெருக்குவதன் மூலம் பொருளாதார மந்த நிலையைப் போக்கிவிடலாம் என்ற கருத்தை முன்மொழிந்தார். அவர் கருத்துப்படி அமெரிக்காவில் பொதுச்செலவு பெருகியதால் பொருளாதார மந்த நிலை கட்டுப்படுத்தப்பட்டது. அதன் எதிரொலியாக

எல்லா நாடுகளிலும் பொதுச்செலவுகள் மிகுந்தன. பொதுச்செலவு கூடுதல் ஆனதால் பல புதிய வரி களை மத்திய மாநில அரசுகள் விதிக்கத் தொடங் கின. நலப் பொருளியல் (Welfare Economics) என்ற தத்துவத்தை எல்லா நாடுகளுமே கடைப்பிடிக்கத் தொடங்கின. அக்கருத்தின்படி மக்களுக்குத் தேவை யான சில அடிப்படை வசதிகளை அரசுகள் செய்து தரவேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டது

நாளடைவில் பொதுநலம், கல்வி, வேளாண்மை தொழில், போக்குவரத்து, சமூகநலப் பணிகள் ஆகிய வற்றிற்காகப் பொதுச்செலவைப் பெருக்கவேண்டிய கட்டாயம் அரசுகளுக்கு ஏற்பட்டது. மாநில அரசு கள் மக்களுடைய நெருங்கிய தொடர்பைப் பெற்றிருப் பதால் பல சமூகப் பொருளாதாரப் பணிகளை மக் கள்தொகை வளர்ச்சிக்கேற்ப விரிவுபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் காரணமாக மாநில அரசுகளின் நிதியமைப்பில் பற்றாக்குறை காணப் பட்டது.மத்திய அரசு காலப்போக்கில் பல நிதி அதி காரங்களை மாநிலங்களிடமிருந்து எடுத்துக்கொண்ட தனால் மாநில அரசுகளுக்கு நிதி உதவிகளை மத்திய அரசு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய நிதி உதவிகள் கூட்டரசு நிதியமைப்பில் கூட்டரசுக் கொடைத்தொகை (Federal Grants) என்றும், பண உதவித்தொகை (Subsidies) என்றும் குறிப்பிடப்படு கின்றன. கூட்டரசு அமைப்பு முறையைக் கடைப் பிடிக்கும் எல்லா நாடுகளிலும் மத்திய உதவித்தொகை யின் பங்கு பெருகிவருகிறது.இவ்வுதவித் தொகையை அளிப்பதன் முலம் மாநில அரசுகளின் பணிகளையும், அதிகாரங்களையும் மத்திய அரசு மறைமுகமாக எடுத்துக்கொள்கிறது என்ற குறையும் கூட்டரசு நாடுகளில் நிலவி வருகிறது.

கூட்டரசு நிதியமைப்பில் மத்திய அரசும் மாநில அரசுகளும் பலவகை வரிகளை விதிப்பதால் நடை முறையில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. மாநிலத் திற்கு மாநிலம் வரிகள் வேறுபடுகின்றன. மத்திய அரசு விதிக்கும் சில வரிகளை மாநில அரசுகளும் விதிக்கின்றன. அதனால் மக்களுக்கு வரிச்சுமை யும் தொல்லையும் ஏற்படுகின்றன. அமெரிக்க நாட்டில் இன்றும் சில மாநிலங்களில் வருமான வரியையும், நிறுவன வரியையும் மாநில அரசுகளும், மத்திய அரசும் விதிக்கின்றன. அதன் காரணமாக வரிவிதிப்பு முறையில் நாடு முழுவதற்கும் ஒரே சீரான நிலை இருப்பதில்லை. இவைபோன்ற சிக்கல் களை ஆய்வதற்கும், மாநில அரசுகளின் நிதிப் பற் றாக்குறையைப் போக்குவதற்கும் கடந்த இரு நூற் றாண்டுகளில் அமெரிக்க நாட்டில் பல ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவ்வப்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

அமெரிக்க மத்திய, மாநில அரசுகளின் நிதித் தொடர்பு ஆலோசனைக் குழு (Advisory Commission on Inter Governmental Relations) 1980-ஆம் ஆண்டில் மைய, மாநில நிதி உறவுகளைப் பற்றி ஆய்வு செய்து தனது அறிக்கையை வெளியிட்டது. கனடா நாட்டிலும் மத்திய மாநில உறவுகளில் ஏற் படும் சிக்கல்கள் பல வல்லுநர் குழுக்களின் பரிந் துரைகள் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன. மத்திய மாநில அரசுகள் தங்களிடையே வரி ஒப்பந்தங்கள் செய்துகொள்கின்றன (Tax Agreements). ஆசுத்திரே லியா நாட்டில் மாநிலங்கள் 1925-ஆம் ஆண்டு கடன் சுமையால் பெரிதும் இடருக்குள்ளாயின. ஆசுத்திரே லியா, கடன் அவை (Australian Loan Counsil) என்ற அமைப்பை 1927-ஆம் ஆண்டில் உருவாக்கி, மாநில அரசுகளின் கடன் சுமையைக் குறைத்தது. பின்னர் 1934-ஆம் ஆண்டிலிருந்து ஆசுத்திரேலியா வில் கொடைக்குழு (Australian Grants Commission) என்ற அமைப்புச் செயற்படத்தொடங்கியது. அக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் பலவகைச் சமூக, பொருளாதாரப் பணிகளுக்கு மாநிலங்களின் தேவைகளை ஒட்டி மத்திய அரசு கொடைத்தொகை கள் வழங்குகிறது.

இவ்வாறு பலவகைப் பரிந்துரைகளைப் பல குழுக் கள் செய்தாலும், பல நாடுகளில் மாநில அரசுகள் தங்கள் நிதிப்பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டி, மேலும் மேலும் நிதி வளங்களை வேண்டுகின்றன. கூட்டரசு அமைப்பை ஆய்வு செய்யும் வல்லுநர்கள் பலர் கூட்டரசு முறை, கூட்டுறவுக் கூட்டரசு முறை யாக மாறியுள்ளது (Co-operative Federation) எனக் கருதுகின்றனர். இம்முறையின் கீழ் அரசின் பல்வேறு உறுப்புகள் நாட்டு நலனுக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் ஒருங்கிணைந்து செயற்படு தல் இன்றியமையாததாகிறது. நாட்டுப் பொருளா தாரச்சிக்கல்களான பணவீக்கம், பணக்கட்டுப்பாடு, சீரான வரிக்கொள்கை, பொருளாதார வளர்ச்சி போன்ற பொருளியல் கொள்கைகளுக்காகக் கூட்டரசு நிதியும் மாறி வரும் கூட்டரசு அமைப்பின் தன்மைக் கேற்ப மாறிவருகிறது.

இந்தியாவில் முழுமையான கூட்டரசு நிதி யமைப்பு முறை உள்ளது எனக் கூற இயலாது. வியர் (Wheare), குனார் மிர்தால் (Gunnar Myrdal) போன்ற அரசியல் பொருளாதார மேதைகள் இந்தி யாவில் இயங்குவது அரைக் கூட்டரசு முறையாகும் எனக்கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தியக் கூட்டரசு

நிதி அமைப்பானது 1935–ஆம் ஆண்டு வெள்ளையர் ஆட்சி உருவாக்கிய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. காங்கிரசுப் பேரியக்கத்தின் தலைவர்கள் 1935–ஆம் ஆண்டு இச்சட்டம் நடைமுறையில் வந்தபோது கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். மக்களாட்சி முறைக்கும் கூட்டமைப்புக் கோட்பாட்டிற்கும் இச்சட்டத்தின் பல பிரிவுகள் எதிராக அமைந்துள்ளன எனவும் குறிப்பிட்டனர்.

இந்திய அரசியல் அமைப்புக் குழு கூடியபோது கூட்டரசு நிதியைப் பற்றிய வேறுபட்ட கருத்தாய்வுகள் பல எழுந்தன. இருப்பினும் 1935–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தில் உள்ள நிதிப் பிரிவுகள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டன. டி.டி. கிருட்டிணமாச்சாரி, கே.சந்தானம், ஏ.இராமசாமிமுதலியார் போன்ற அறிஞர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என வலியுறுத்தினர். ஆனால், இந்திய அரசியல் அமைப்புக் குழு ஒரே ஒரு மாற்றத்தை மட்டும் செய்தது. இச்சட்டம் 1950–ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தபோது இந்திய அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்ட 280–ஆம் பிரிவே அந்த மாறுதலாகும். இப்புதிய பிரிவின்படி ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நிதிக்குழு (Finance Commission) ஒன்று குடியரசுத் தலைவரால் அமர்த்தப்படுகிறது. அக்குழு மாநில அரசுகளின் நிதிப் பற்றாக்குறையை ஆய்வு செய்து, மத்திய அரசின் நிதி வளங்களிலிருந்து மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கும் நெறிமுறைகளைப் பரிந்துரைக்கும்.

இந்தியாவில் 1987–ஆம் ஆண்டு வரையிலும் எட்டு நிதிக் குழுக்கள் தங்கள் பரிந்துரைகளை வழங்கியுள்ளன. மத்திய அரசும் அப் பரிந்துரைகளை ஏற்று மாநில அரசுகளுக்கு நிதி வளங்களைப் பிரித்துக் கொடுக்கிறது. இருப்பினும், மாநில அரசுகள் நிதிப் பற்றாக்குறையுடன் செயற்பட்டு வருகின்றன. இந்திய அரசியல் சட்டத்தின் பல பிரிவுகளின் அடிப்படையில் மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பணிகளை மாநில அரசுகள் செயற்படுத்துகின்றன. பெருகிவரும் மக்கள் தொகை, ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏற்படும் பல புதிய செலவுகள் ஆகியன மாநில அரசுகளின் நிதிப் பற்றாக்குறைக்கு முக்கிய காரணங்கள். மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து கடன் தொகைகளையும் பெற்றுள்ளன. எனவே, கூட்டரசு நிதியமைப்பில் பல குறைபாடுகள் இருப்பதாகப் பல மாநில முதலமைச்சர்களும், அரசியல் பொருளியல் அறிஞர்களும் கூறுகின்றனர். இந்நிலையைப் பற்றி ஆய்வதற்கு ஏற்கெனவே பல ஆய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு அரசு 1971–ஆம் ஆண்டு மத்திய மாநில அரசுகளின் உறவை வல்லுநர்கள் மூலம் ஆய்வு செய்து ‘இராசமன்னார் குழு அறிக்கை’யை வெளியிட்டது. பின்னர் 1977–ஆம் ஆண்டு மேற்கு வங்க அரசும் பலவகை அறிவுரைகளும் கருத்துகளும் அடங்கிய வல்லுநர் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. பஞ்சாபில் உள்ள அகாலிதளக் கட்சி 1973-ஆம் ஆண்டு அனந்தபூர் சாகிபில் கூடி மாநிலச்சுயாட்சி வேண்டும் அனந்தபூர் சாகிபு முடிவை நிறைவேற்றியது. கர்நாடக அரசு, 1983–ஆம் ஆண்டு தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டிக் கூட்டரசு நிதியமைப்பு முறையில் பல மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. இம்மாநாட்டிற்குப் பிறகு மத்திய, மாநில உறவுகளை ஆராயவும், கூட்டரசு நிதியமைப்பு முறையில் உள்ள குறைகளை மறு ஆய்வு செய்யவும், இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி திரு. சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை மத்திய அரசு 1983–ஆம் ஆண்டு அமர்த்தியது.

சர்க்காரியா குழு நாட்டின் மாநிலங்களுக்குச் சென்று அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், பொருளாதார வல்லுநர்கள் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டு அறிக்கை வெளியிடவிருக்கிறது. இராசீவு காந்தி-லோங்கோவால் ஒப்பந்தப்படி 1985–ஆம் ஆண்டில் அனந்தப்பூர் சாகிபு முடிவுகள் சர்க்காரியா குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவ்வாறு இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் கூட்டரசு நிதி அமைப்பு பலவகைத் திருத்தங்களையும் மாற்றங்களையும், அந்நாடுகளின் அரசியல், சமூகப் பொருளாதாரச் சூழல்களுக்கேற்ப உருவாக்கி வருகிறது. எனவே கூட்டரசு நிதி அமைப்பு இயங்கு நிலைக் (Dynamic) கோட்பாடாக உள்ளது எனலாம். மு.நா.

**துணை நூல்கள்:**

**Hicks, U.K., & Others**, Federalism and Economic Growth in Under Developed Countries, George Allen J. Unwnill, 1961.

**Jagannath Mishra**, New Dimension of Federal Finance in India, Vikas Publishers, New Delhi, 1985.

**May. R.J.**, Fiscal Federalism and Fiscal Adjustment, Oxford University Press, 1969.

**Richard A. Musgrave**, Essays in Fiscal Federalism, The Brooking Institution, Washington, 1965.

**கூட்டன்பர்கு**: ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தின் வளர்ச்சிக்கு உதவிய செயற்கரிய செய்த

பெரியோர்களுள் ஒருவரான கூட்டன்பர்கு (Gutenberg) கி.பி. 1400-ஆம் ஆண்டில் செருமனியில் மெயின்சு (Mainz) என்னும் ஊரில் பிறந்தார். அப்பொழுது அந்நாட்டின் அரசியலில் பல சீர்கேடுகள் இருந்தமையால் மக்கள் அல்லலுற்றனர். அவ்வாறு அல்லலுற்றவர்களில் இவரும் ஒருவர். இவர் தம் தாயாருடன் ஊரைவிட்டே ஓட வேண்டியதாயிற்று. இவர் கி.பி. 1420-இல் இவருடைய பொருள்களையும் பகைவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். தம் வாழ்க்



கூட்டன்பர்கு

கையை நடத்த வேண்டி ஏழையான கூட்டன்பர்கு பல நாடுகளில் சுற்றினார். ஆலந்து, சுவிட்சர்லாந்து, இத்தாலி முதலில் நாடுகளில் அலைந்தார். பின்னர் கி.பி. 1439-இல் செருமனிக்கு வந்து இசுதிராசுபர்க்கு (Strasbourg) என்ற இடத்தில் அச்சிடும் முறையைக் கண்டு பிடிப்பதில் தமது முழுக்கருத்தையும் செலுத்தினார். அதில் வெற்றியும் கண்டார். தம் சொந்த ஊருக்கு கி.பி. 1448-இல் திரும்பிச் செல்வர் ஒருவருடன் கூட்டுச்சேர்ந்து தாம் கண்டுபிடித்த அச்சு முறையை விரிவாக்கி, 'அச்சடிப்பதற்கான ஒரு புதிய இயந்திரத்தை உருவாக்கினார். மாசரின் விவிலிய நூல் (Mazarin Bible) முதன்முதலாக அச்சேறியது. கூட்டன்பர்கு கி.பி. 1468-இல் காலமானார். தெ.பா.

**கூட்டாட்சி ஆட்சித்துறை**: அமெரிக்க ஐக்கிய நாட்டின் கூட்டாட்சி ஆட்சித்துறைத் (Federal Executive) தலைவராகக் குடியரசுத் தலைவர் விளங்குகிறார். அமெரிக்க அரசியலமைப்பின் இரண்டாம் விதி, ஆட்சித் துறை அதிகாரங்கள்அனைத்தையும் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கிறது. குடியரசுத் தலைவர் அமெரிக்கக் கூட்டாட்சிச் சட்ட மன்றத்திற்குப் பொறுப்புடையவரல்லர். இவர் அமைச்சரவையின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதில்லை. இவர் நான்காண்டுகளுக்குத் தேர்வாளர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இருபத்திரண்டாம் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின்படி, எந்த ஒருவரும் இரண்டு தடவைக்குமேல் குடியரசுத் தலைவர் பதவியை வகிக்க முடியாது. இவரைப் பதவிக்காலம் முடிவதற்கு முன்பு சாதாரண முறையில் பதவியிலிருந்து நீக்க முடியாது. இவரைக் குற்ற விசாரணை மூலம் கொள்ளை, தேசத் துரோகம் போன்ற பெரிய குற்றங்களுக்காகத் தான் பதவியிலிருந்து நீக்கமுடியும். இவர் சாதாரண நீதி மன்றங்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவரல்லர்.

அமெரிக்க அரசியலமைப்பின் முதலாம் விதியின் இரண்டாம், மூன்றாம் பிரிவுகளிலிருந்தும், அமெரிக்கக் கூட்டாட்சிச் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களிலிருந்தும், அரசியல் முறைசார்ந்த பழக்கவழக்கங்கள் வழக்காறுகள் ஆகியவற்றிலிருந்தும், தலைமை நீதிமன்றம் அரசியலமைப்பிற்கு அளித்துள்ள விளக்கங்களிலிருந்தும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தம் அதிகாரங்களைப் பெறுகிறார். இவரது அதிகாரங்களை ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்கள், சட்டமன்றத் துறை சார்ந்த அதிகாரங்கள், நீதித் துறை சார்ந்த அதிகாரங்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

**ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்கள்**: அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆட்சித் துறைத் தலைவராகக் கூட்டாட்சியின் சட்டமன்றச் சட்டங்களையும் வெளிநாட்டு உடன்படிக்கைகளையும், அரசியலமைப்புச் சட்டத்தையும், நீதிமன்ற முடிவுகளையும் செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளார். இவர்அமெரிக்கக் கூட்டாட்சியின் முப்படைத் தளபதியாக, முப்படையிலுள்ள உயர்நிலை அதிகாரிகளை ஆளவையின் (Senate) ஒப்புதலுடன், அலுவலில் அமர்த்தும் அதிகாரம் பெற்றிருக்கிறார். ஆளவையின் ஒப்புதலுடன் கூட்டாட்சி நிருவாக அதிகாரிகளை நியமிக்கிறார். இவை யாவும் குடியரசுத் தலைவரின் ஆட்சித் துறை சார்ந்த அதிகாரங்களில் அடங்கும்.

**சட்டமன்றத் துறை சார்ந்த அதிகாரங்கள்**: இந்தியக் குடியரசுத் தலைவரைப் போன்று, சட்டமன்றத்தைக் கூட்டவும், ஒத்திப்போடவும், கலைக்கவும், அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் இல்லாவிடினும், இவர் சட்டமன்றத்துறை சார்ந்த பிற பல அதிகாரங்களைப் பெற்றுள்ளார். சட்டமன்றம் இயற்றும் ஒவ்வொரு சட்ட முன் வரைவும் குடியரசுத் தலைவரின் கையொப்பத்தையும், இசைவையும் பெற்ற பிறகே சட்டமாகிறது. இவர் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்குச் செய்திகள் அனுப்பவும், இவர்

விரும்பும் நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளார். இதைத் தவிரச் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தினைக் கூட்டிச் சில வேளைகளில் சட்டங்களை இயற்றச்செய்வதும் உண்டு. குடியரசுத் தலைவரின் நேரடிப் பார்வையில் அமெரிக்க வரவு செலவுத் திட்டம் வரையப்படவும் நடைமுறைப்படுத்தவும்படுகிறது. அமெரிக்கக் கூட்டாட்சிச் சட்டமன்றம் வரவு செலவுத் திட்டத்தைத் திருத்த அனைத்து அதிகாரங்களைப் பெற்றிருந்த போதிலும், கொடுக்கப்பட்ட அதே வடிவத்தில், வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிவிடுவதால்நீதியின் மேலாண்மைக்குப் பொறுப்புடையவராகக் குடியரசுத் தலைவர் கருதப்படுகிறார்.

**நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள்**: ஆளவையின் ஒப்புதலுடன் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளை அமர்த்தும் அதிகாரத்தை இவர் பெற்றுள்ளார். அதைத் தவிர நீதித்துறை வழங்கிய தண்டனையிலிருந்து மன்னிப்பளிக்கவும், குற்றத் தண்டனையை ஒத்திப் போடவும், தள்ளிவிடவும் அதிகாரம் பெற்றுள்ளார். இவை யாவும், குடியரசுத் தலைவரின் நீதித்துறை சார்ந்த அதிகாரங்களில் அடங்கும்.

இந்தியக் குடியரசுத் தலைவர், அமெரிக்கக் குடியரசுத் தலைவரைப் போல மேற்கூறிய எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்த போதிலும், அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில்தான் செயற்படுதல் வேண்டும். ஆனால் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் மேற்கூறிய எல்லா அதிகாரங்களையும் தாமே பயன்படுத்துவதால், உலகிலேயே அதிக அதிகாரம் பெற்ற தலைவராகக் கருதப்படுகிறார். அமெரிக்கக்குடியரசுத் தலைவர் தம்முடைய பல அதிகாரங்களை ஆளவையின் ஒப்புதலுடன் செயற்படுத்த வேண்டியிருப்பினும், 'ஆளவையினர் அன்புரிமைக் கோட்பாட்டின்' (Senatorial Courtesy) வாயிலாக இவர் தம்முடைய அதிகாரங்களை எந்தவித தடையுமின்றிச் செயற்படுத்த முடிகிறது.
கே.பா.

**துணை நூல்கள்**:

**Charles A. Beard**, American Government and Politics, The Macmillan Company, New York, 1955.

**Jean Blondel.**, An Introduction to Comparative Government, Weidenfeld and Nicolson, London, 1969.

**கூட்டாட்சி எதிர்ப்பாளர்**: அமெரிக்காவில் இருந்த பிரிட்டன் குடியேற்ற நாடுகள் தாம் பிரிட்டனோடு நடத்திய சுதந்திரப் போரில் (கி.பி. 1775 –1783) வெற்றி பெற்று, தங்களை ஒரு கூட்டாட்சி நாடாக அமைத்துக் கொண்டு, ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பையும் வரைந்துகொண்டு, அந்தக் கூட்டாட்சி அரசியலமைப்பை கி.பி. 1787, 1788–ஆம் ஆண்டுகளில் உறுப்பு மாநில அரசுகளின் ஒப்புதலுக்கு (Ratification) விடுத்த போது, அக்கூட்டாட்சி அரசியலமைப்புக்கு உறுப்பு மாநில அரசுகள் ஒப்புதல் அளித்தல் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்த கூட்டத்தவரே 'கூட்டாட்சி எதிர்ப்பாளர்' (Anti Federalists) என்று அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாற்றில் சொல்லப்படுகின்றனர்.

**எதிர்ப்பாளர் இயக்கத்துக்குக் காரணம்**: ஐக்கிய அமெரிக்கக் கூட்டாட்சி அரசியலமைப்பிலே கூட்டாட்சி அரசாங்கத்துக்கு இன்றியமையாத பொருள்களாகிய போக்குவரத்துத் துறைகள், செய்தித் துறைகள், அயல் நாட்டு உறவுகள், போர், அமைதி, அயல் நாட்டு வாணிகம், தரை, கடல், வான் படைகள் முதலியவையெல்லாம் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டவையாக அரசியலமைப்புச் சட்டத்திலே ஒதுக்கப்பட்டு, எஞ்சிய அதிகாரங்களெல்லாம் மாநிலங்களுக்கு விடப்பட்டிருந்தன. அதைக் கண்டு, இத்தகைய அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டால், மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் வரம்பின்றி வளர்ந்து, உறுப்புமாநிலங்களின் உரிமைகளும், தனியார் சுதந்திரமும் அழிந்து விடுமென்று இந்த எதிர்ப்பாளர்கள் அஞ்சியதனால் தான், இவர்கள் கூட்டாட்சி அரசியலமைப்புக்கு ஒப்புதலளித்தல் கூடாதென்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

**எதிர்ப்பாளரின் செயல்கள்**: எதிர்ப்பாளர்களுடைய எதிர்ப்பை மீறித் தேவைப்பட்ட அளவு பெரும்பான்மை வாக்குகளுடனே, உறுப்பு மாநிலங்கள் கூட்டாட்சி அரசியலமைப்புக்கு ஒப்புதலளித்ததால், கூட்டாட்சி அரசியலமைப்பு கி.பி. 1789–ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. அவ்வாண்டு முதல் மத்திய கூட்டாட்சி அரசாங்கமும் செயற்படத் தொடங்கவும், கூட்டாட்சிச் சட்டமன்றமாகிய காங்கிரசில் (Congress), கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் ஓர் எதிர்க்கட்சியாக இருந்து செயற்படலாயினர். அரசாங்கக் கருவூலச் செயலராக இருந்த அலெக்சாண்டர் ஆமில்ட்டன் (Alexander Hamilton) என்பார், மத்திய அரசாங்கத்தில் அதிகாரக் குவிப்பை ஏற்படுத்துதற்காகக் கொண்டுவந்த சட்டங்களையெல்லாம் எதிர்ப்பாளர்கள் எதிர்த்து, அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்துக்கு மிகத் துல்லியமான விளக்கம் அளிக்கப்படுதல் வேண்டுமென்று விண்ணப்பம் செய்தனர். மத்திய அரசாங்கம் வாங்கியிருந்த கடன்களைத்

தீர்ப்பதற்காக ஆமில்ட்டன் கொண்டு வந்த சில நல்ல திட்டங்களையும், மாநில அரசுகளின் கடன்களைக் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்றுத் தீர்த்தல் வேண்டுமென்று கூறும் அவருடைய திட்டத்தையும், வங்கியைத் தேசிய உடைமையாக்குதற்கும், சுங்கவரிகளை ஒழுங்குசெய்து கூட்டாட்சி அரசாங்கத்துக்கு வருமானத்தைத் திரட்டுதற்கும் அவர் கொண்டுவந்த திட்டங்களையும் இக்கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் எதிர்த்தனர். அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளுக்கு அவற்றின் எழுத்துவடிவத்திலுள்ள பொருளைத் தான் கொடுத்தல் வேண்டுமென்றும், அரசியலமைப்பின் பிரிவுகளுக்குள்ள பொருளை விரிவாக்குதல் கூடாதென்றும் அவர்கள் கூறினர்.

**விளைவுகள்**: கூட்டாட்சி அமைப்பை நிறுவினால், மிக்க வலுவான மத்திய அரசாங்கம் தோன்றுமென்றும், அதன் விளைவாக அமெரிக்காவிலும் பிரிட்டனிலிருந்ததுபோன்று ஓர் எதேச்சாதிகாரம் தோன்றுதல் கூடுமென்றும், மாநில அரசுகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாத மாநில உரிமைகளும் தனியார் சுதந்திரமும் அழிந்துவிடுமென்றும் புதிதாகச் சுதந்திரம் பெற்ற மாநிலங்களிலே பரவலாக ஓர் அச்சம் காணப்பட்டது. தம் வாணிக உரிமைகளை ஆங்கிலேய அரசாங்கம் ஒடுக்க முயன்றதனால்தான் அரசியல் சுதந்திரத்துக்காகவும் குடியேற்ற நாடுகள் புரட்சியும் போரும் செய்யவேண்டிய கட்டாயம் தோன்றிற்று என்று மாநிலங்கள் நன்கு உணர்ந்திருந்ததனால், அவற்றினிடையே இத்தகைய அச்சம் ஏற்பட்டது இயல்பே. ஆயினும் தம் உரிமைகளுக்காகவும், சுதந்திரப் பாதுகாப்புக்காகவும் தாம் கி.பி.1775-83 போரில் கூட்டாக இணைந்த இணைப்பு நீடித்து உறுதியாக இருத்தல் வேண்டுமென்றும் மாநிலங்கள் தெளிவாக உணர்ந்தன. ஆகையால், கூட்டாட்சி சிதறுண்டு போகாமல் உறுதியாக இருத்தல்வேண்டுமாயின், கூட்டாட்சி எதிர்ப்பாளர்களால் எடுத்துக் காட்டப்படுகின்ற, மாநிலங்களிடையே இருந்த அச்ச உணர்ச்சியை நீக்கும்பொருட்டுச் சில உரிமைகளைத் தெளிவாக வெளியிட்டு, அவற்றைக் கூட்டாட்சி அரசியலமைப்போடு திருத்தத்தின் (Amendment) வாயிலாக இணைத்தல் நல்லதென்று கூட்டாட்சி ஆதரவாளர்கள்* எண்ணினர். ஆங்கிலப் பாராளுமன்றம் கி.பி. 1689-இல் தனியாள் சுதந்திரம், சமத்துவம் முதலிய மக்களுடைய ஆதார உரிமைகளைக் குறிப்பிட்டு, உரிமைகள் அறிக்கையை, (உரிமைகள் மசோதாவை-Bil! of Rights) நிறைவேற்றியதுபோல, அமெரிக்கக் குடிமக்களுடைய அடிப்படை உரிமைகளையெல்லாம் விவரமாகக் குறிப்பிட்டு, அவற்றை ஓர் உரிமைகள் மசோதா வடிவத்தில் (Bill of Rights) வரைந்து, அவற்றை அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் 10 திருத்தங்களின் வாயிலாக அவர்கள் சேர்த்தனர். அதனால், கூட்டாட்சி எதிர்ப்பாளரிடையேயும், மாநிலங்களிடையேயும் வேரூன்றி இருந்த, உரிமைகள் அழியக் கூடுமென்ற அச்சம் பெரிதும் நீங்கிற்று. மேலும், இக்கட்சியாளர்களைக் கூட்டாட்சி அரசாங்கத்தோடு தொடர்புகொள்ளுமாறு செய்யும் பொருட்டு, இக்கட்சியைச் சேர்ந்த தாமசு செபர்சன் (Thomas Jefferson), சேம்சு மாடிசன் (James Madison), எட்மண்டு ரண்டால்பு(Edmund Randolph) முதலியோரெல்லாம் அரசாங்கத்தில் பொறுப்பான பதவிகள் கொடுக்கப்பட்டனர். செபர்சன் அரசாங்கச் செயலராக இருந்தார். அவர் தாம் ஒரு கூட்டாட்சி எதிர்ப்பாளரென்று கூறப்படுதலை மறுத்தார். அவர் பிரெஞ்சுப் புரட்சியாளருடைய குடியரசுக் கருத்துகளை வரவேற்று ஆதரித்தார். அவர் ஆமில்ட்டனுடைய ஆதரவாளர்களை 'முடியரசாளாகள்'(Monarchists) என்று குற்றம் சாட்டினார். ஆயினும், குடியரசு ஆதரவாளரும், கூட்டாட்சி எதிர்ப்பாளரும் ஒரே பிரிவைச் சேர்ந்தவரேயாவர். ஐரோப்பாவில் பிரெஞ்சுப் புரட்சி அரசாங்கத்துக்கெதிராக மற்ற ஐரோப்பிய நாடுகள் போரைத் தொடங்கியபோது, அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதலாம் குடியரசுத் தலைவரான சார்சு வாசிங்டன்(George Washington) இப்போரில் ஐக்கிய அமெரிக்க நாடு எக்கட்சியிலும் சேராமல் நடுவுநிலைமையை மேற்கொண்டுள்ளது என்று கி.பி. 1793-இல் அறிவித்தார்; அதனால், கூட்டாட்சி எதிர்ப்பாளரும், குடியரசாளரும் ஒன்றாக இணைந்து, குடியரசுக்கட்சி (Republican Party) என ஆயினர். இக்குடியரசுக் கட்சியே பிற்காலத்தில் குடியாட்சி இயல்புடைய குடியரசுக் கட்சி (Democratic Republican Party) எனப்பட்டது. பா.சு.

**கூட்டாட்சிக் கோட்பாடு**: அரசியலமைப்பு மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கங்களுக்கும் அளித்துள்ள அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையில் இன்றைய அரசுகளைக் கூட்டாட்சியுடைய அரசுகள் எனவும், ஒன்றிய ஆட்சியுடைய அரசுகள் எனவும் இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்றிய ஆட்சியுடைய அரசுகளில் மத்திய அரசாங்கம் எனவும், மாநில அரசாங்கங்கம் எனவும் இருவகை அரசாங்கங்கள் இல்லை. அரசியலமைப்பானது மத்திய அரசாங்கத்திடம் எல்லா அதிகாரங்களையும் வழங்குகிறது. உள்ளாட்சி நிறுவனங்களும் மாவட்ட அலுவலகங்களும், மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகாரங்களைப் பெறுகின்றன. மத்திய அரசாங்கம் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கும், மாவட்ட அலுவலகங்களுக்கும் தான் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கூட்டவோ குறைக்கவோ அதிகாரம் பெற்றிருக்கிறது.

கூட்டாட்சியுடைய அரசுகளில் மத்திய அரசாங்கம் எனவும், மாநில அரசாங்கங்கள் எனவும் இருவகை அரசாங்கங்கள் உண்டு; மத்திய அரசாங்கமும்,மாநில அரசாங்கங்களும் அரசியலமைப்பிடமிருந்து தங்கள் அதிகாரங்களைப் பெறுகின்றன. எனவே, மாநில அரசாங்கங்களின் அதிகாரங்களைக் கூட்டவோ குறைக்கவோ மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. அரசியலமைப்புத் திருத்தத்தாலேயே மாற்ற இயலும்.

**கூட்டாட்சியின் தோற்றம்:** நாட்டின் ஒருமைப்பாட்டையும், மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் ஒப்பந்தம், உடன்படிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பல அரசுகள் ஒன்று சேர்ந்து புதிய அரசை ஏற்படுத்துவது கூட்டாட்சி எனப்படும். பாதுகாப்பையும் முன்னேற்றத்தையும் கருதி அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய கூட்டாட்சிகள் உருவெடுத்தன. பதின்மூன்று குடியேற்ற அரசுகள் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக ஒருங்கிணைந்து கி.பி. 1789-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்னும் புதிய கூட்டாட்சி அரசைத் தோற்றுவித்தன. ஆறு குடியேற்ற அரசுகள் ஒன்று சேர்ந்து 1901-ஆம் ஆண்டு ஆசுத்திரேலியக் கூட்டாட்சியை நிறுவின. பரந்த நிலப்பரப்புடைய ஒன்றிய அரசு, வேற்றுமையின் அடிப்படையில் ஒற்றுமையை ஏற்படுத்தக் கருதி, மத்திய அரசிலிருந்து மாநிலங்களைப் பிரித்து அரசியலமைப்பின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் அதிகாரங்கள் வழங்கிக் கூட்டாட்சியை ஏற்படுத்தலாம். அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட கூட்டாட்சிகளே இந்தியக் கூட்டாட்சியும், சோவியத்துக் கூட்டாட்சியுமாகும். கூட்டாட்சி என்பது புதிதாகத் தோன்றியதன்று. உலோம்பார்டு சங்கம் (Lombard League), நெதர்லாந்துக் கூட்டமைவு (The Netherlands Confederations) ஆகியவை கூட்டாட்சிக் கோட்பாட்டின் (Federalism) அடிப்படையில் உருவானவையாகும.

**கூட்டாட்சி அமைப்புக்குத் தேவையானவை:** கூட்டாட்சியுடைய அரசுகள் ஒற்றுமையுடனும் முரண்பாடுகள் இன்றியும் செயற்பட வேண்டும். தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குள் விருப்பத்தோடு இயங்க வேண்டும். ஆகையால், கூட்டாட்சி அமைவதற்குச் சில கட்டுப்பாடுகளும் சூழ்நிலைகளும் இருத்தல் வேண்டும். கூட்டாட்சியை உருவாக்க நினைக்கும் அரசுகள் ஒன்றையொன்று ஒட்டியதாக இருக்க வேண்டும். தங்கள் இறைமையை விட்டுக் கொடுக்கவும், இணையவும் விருப்பம் இருக்க வேண்டும். அச் சமயத்திலேயே தங்களின் தனித் தன்மையைக்காக்கவும் பேணவும் ஆர்வமுள்ளவைகளாகவும் இருக்க வேண்டும். கூட்டாட்சி அரசை உருவாக்கும் அரசுகளிடையேயும், அதன் மக்களிடையேயும் இன உணர்வு இருக்க வேண்டும். மக்களிடையே குறுகிய மனப்பான்மை இருக்கக் கூடாது. சிறிய வேற்றுமைகளைப் பெரிதுபடுத்தக் கூடாது. கூட்டாட்சியை ஏற்படுத்தக் கருதும் அரசுகளிடையே பெருமளவு ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது. ஒரே அளவு பொருளாதார வசதி பெற்றிருக்க வேண்டும். அவற்றிடையே வேற்றுமைகள் மிகுதியாக இருத்தல் கூடாது. பெருமளவு ஏற்றத்தாழ்வுகள் இருந்தால் வலிமையுடைய அரசு, வலிமையற்ற அரசின் மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்தும். கூட்டாட்சி அமைக்க விரும்பும் அரசுகள் மத்திய, மாநில அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படிந்து செயற்பட வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மதிப்பளிக்க வேண்டும். இப்பண்பாடுகள் மக்களிடையே வளரக் கல்வியறிவும், அரசியல் விழிப்புணர்ச்சியும் இருக்க வேண்டும்.

**கூட்டாட்சியின் அடிப்படைக் கூறுகள்:** கூட்டாட்சி அரசுகளுக்குச் சில அடிப்படையான கூறுகள் உண்டு. அவைகளுள் ஒன்று எழுதப்பட்ட அரசியலமைப்பு. ஓர் அரசியலமைப்பின் அடிப்படையில் கூட்டாட்சி உருவாகிறது. இவ்வரசியலமைப்பு மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கிறது; மக்களுடைய உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கிறது. ஆகையால், இவ்வரசியலமைப்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். மக்களுடைய உரிமைகளையும், மாநிலங்களுடைய அதிகாரங்களையும் பாதுகாக்கும் அரசியலமைப்பு நெகிழாத தன்மையுடையதாக இருக்க வேண்டும். அதாவது, கூட்டாட்சி அரசியலமைப்பு எளிதாகத் திருத்தப்படும் வகையில் அமைந்திருக்கக்கூடாது. அவ்வாறு திருத்தப்பட வேண்டுமெனில் அத்திருத்தங்களைக் கூட்டாட்சிப் பகுதிகளான பெரும்பான்மை மாநிலங்களும், கூட்டாட்சிப் பகுதியில் வாழும் பெரும்பான்மை மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே ஏற்படக்கூடிய தகராறுகளை விசாரிக்கவும், மத்திய அரசாங்கமோ மாநில அரசாங்கங்களோ ஆட்சித் துறையோ அரசியலமைப்புக்கு எதிராகச் சட்டம் செய்தாலும், செயற்பட்டாலும், அவற்றின் அதிகாரங்கள் செல்லா என்று கூறவும், அவற்றின் அதிகாரங்களைப் பாதுகாக்கவும் தனித் தன்மையுடைய நீதித்துறை கூட்டாட்சிக்கு மிகவும் இன்றியமையாத் தேவையாகும். கூட்டாட்சியின் பகுதிகளாக விளங்கும் மாநிலங்கள் ஒரே அளவு நிலப் பரப்பையும் மக்கள் தொகையையும் வளத்தினையும் கொண்டிருக்கா. அளவிலும், வளத்திலும் மற்றும் மக்கள் தொகையிலும் சிறிய மாநிலங்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் வகையில், மத்திய சட்டமன்றத்தின்

மேலவையில் சமச்சீர்மை அளிக்கப்பட வேண்டியது கூட்டாட்சி அமைவதற்கு வேண்டிய ஒரு தேவையாகும். கூட்டாட்சி அரசின் மத்திய சட்ட மன்றத்தின் கீழவையானது மக்கள் தொகை அடிப்படையில் அமைக்கப்பட்டிருப்பதால் அங்குச் சமச்சீர்மை அளிக்க இயலாது. கூட்டாட்சியின் மிக முக்கிய கூறாகக் கருதப்படுவது அரசியலமைப்பில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப் பங்கீடாகும். அரசியலமைப்பு கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்களை மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே மூவகையாகப் பங்கிட்டளிக்கிறது. ஒன்று கூட்டாட்சியின் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரங்களை ஒதுக்கிவிட்டு எஞ்சிய அதிகாரங்களை மாநில அரசாங்கங்களுக்கு வழங்குவது. இம்முறை அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், சுவிட்சர்லாந்திலும், பின்பற்றப்படுகிறது. மற்றொன்று அரசியலமைப்பு, மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரங்களை ஒதுக்கிவிட்டு எஞ்சிய அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திற்கு வழங்குகிறது. இம்முறை கனடா, இந்தியா நாடுகளில் நிலவுகிறது. பிறிதொன்று,அரசியலமைப்பு, அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் மூன்று பட்டியல்களில் அதிகாரத்தை வழங்குவதாகும். மத்தியப் பட்டியலிலுள்ள அதிகாரங்களின்மீது மத்திய அரசாங்கம் சட்டம் செய்யலாம்; மாநில அதிகாரப் பட்டியலிலுள்ள அதிகாரங்களின் மீது மாநில அரசாங்கம் சட்டம் செய்யலாம். பொதுவான பட்டியலிலுள்ள அதிகாரங்களில் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் சட்டம் செய்யலாம். பொதுப் பட்டியலிலுள்ள அதிகாரங்களில் முரண்பாடுகள் தோன்றினால் மத்திய அரசாங்கத்தின் சட்டமே செல்லுபடியாகும். இம்முறை இந்தியாவில் பின்பற்றப்படுகிறது. பொதுவாக அதிகாரப் பங்கீட்டில் மத்திய அரசாங்கத்திற்குக் கூட்டாட்சி முழுவதற்குமாக முக்கியத்துவம் வாய்ந்த துறைகளான அயல்நாட்டுறவு, பாதுகாப்பு, அயல்நாட்டு வாணிகம், நாணயம் அச்சடித்தல் முதலியவை ஒதுக்கப்படுகின்றன. உள்ளாட்சி சார்ந்த துறைகளான கல்வி, சட்டம், ஒழுங்கு பேணுதல், வீதிகள் சாலைகள் அமைத்துப் பாதுகாத்தல், சுகாதாரம் முதலியவை மாநில அரசாங்கங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

சிறிய அரசுகளுக்குத் தனித்தன்மையையும் சுயேச்சையையும் பாதுகாப்பையும் கூட்டாட்சி அரசு வழங்குகிறது. சிறிய அரசுகளின் பிரிவு மனப்பான்மைக்கும், ஒருமுகக் குவிப்பிற்கும் இடையிலான ஒரு சமநிலையைக் கூட்டாட்சி ஏற்படுத்தித் தருகிறது. கூட்டாட்சி அரசில் மக்களின் சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது; மத்திய அரசாங்கம் வல்லாட்சிப் பாதையில் செல்லாதவாறு மாநிலங்கள் தடுக்கின்றன. இக்கூட்டாட்சி அரசு பெரிய நாடுகளுக்கு மிகவும் பொருத்தமுடையது. கூட்டாட்சி அரசிலுள்ள நலன்களை உணர்ந்து உலகில் கூட்டாட்சி அரசுகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. உலக அரசுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து உலகக் கூட்டாட்சியை நிறுவுதல் வேண்டுமென உலக அறிஞர்கள் கருதுகிறார்கள். இவையாவும் கூட்டாட்சிக் கோட்பாடு வலுப்பெற்று வருவதைப் புலப்படுத்துகின்றன.

கே.பா.

**துணை நூல்கள்:**

**Herman Finer.**, Theory and Practice of Modern, Government, Asia Publishing House, Bombay 1961.

**Wheare,K.C.**, Federal Government, Oxford, New York, 1947.

**கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம்:** சுவிட்சர்லாந்து நாட்டின் உயர்நீதிமன்றமாக விளங்குவது கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம் (Federal Tribunal Switzerland). இத்தலைமை நீதிமன்றத்தில் இருபத்தெட்டு நீதிபதிகளும் பதினைந்து துணைநீதிபதிகளும் பணிபுரிகின்றனர். இந்நீதிபதிகளும் துணை நீதிபதிகளும் ஆறு ஆண்டுக்காலத்திற்குச் சுவிட்சர்லாந்துக் கூட்டாட்சியின் சட்ட மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களைத் திரும்பவும் கூட்டாட்சிச் சட்டமன்றம் தேர்ந்தெடுக்கலாம். தலைமை நீதிமன்றத்தின் தலைவரையும் துணைத் தலைவரையும் கூட்டாட்சிச் சட்டமன்றம் இரண்டாண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும், துணைத் தலைவரும் அப்பதவிகளுக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சட்டமன்றத்தின் உறுப்பினராகவோ அமைச்சரவையின் உறுப்பினராகவோ அரசாங்கப் பணியாளராகவோ பதவி வகிக்க முடியாது. இதைத் தவிரத் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள் தகுதி பற்றி எதுவும் கூறப்படவில்லை.

கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம் உரிமையியல், குற்றவியல் பொதுச் சட்டங்கள் ஆகியவை குறித்த அதிகாரங்களைப் பெற்றிருக்கிறது. கூட்டாட்சிக்கும் கூட்டாட்சியின் உறுப்புகளான மாநிலங்களுக்கும் (Cantons) இடையே எழும் வழக்குகள், எண்ணாயிரம் பிராங்குகளுக்குக் குறையாத மதிப்புள்ள, கூட்டாட்சியோ மாநிலங்களோ ஒருபுறமும், கூட்டு நிறுவனங்

களோ, தனிப்பட்டவர்களோ மற்றொரு புறமும் தொடர்ந்த வழக்குகள், இருபதினாயிரம் பிராங்குகள் மதிப்புக்குக் குறையாத தனிப்பட்டோர் தொடரும் வழக்குகள் முதலியவற்றில் இத்தலைமை நீதிமன்றம் முதல்நிலை அதிகார வரம்பும், இறுதிநிலை அதிகாரவரம்பும் பெற்றிருக்கிறது. குற்றவியல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தலைமை நீதிமன்றத்தின் அதிகாரம் முதன்மையானதும் முழுமையானது மாகும். கூட்டாட்சிக்கெதிராகப் புரியும் குற்றங்களையும் தேசத்துரோகக் குற்றங்களையும், கூட்டாட்சி அதிகாரங்களுக்கெதிராகப் புரியும் வன்முறை சம்பந்தப்பட்ட வழக்குகளையும், அரசியற் குற்றங்களையும் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம் விசாரிக்கிறது. கூட்டாட்சி அதிகாரிகள் புரியும் குற்றங்களை விசாரிக்கும் அதிகாரத்தையும் இத்தலைமை நீதிமன்றம் பெற்றிருக்கிறது. இது தவிர மாநில நீதிமன்றத்தின் மேல்முறையீட்டையும் இத்தலைமை நீதிமன்றம் விசாரணை செய்கிறது.

கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்தில் பொதுச் சட்டம், ஆட்சித் துறை நீதிமன்றம் (Court of Public and Administrative Law), இரு உரிமையியல் நீதிமன்றங்கள் (Civil Courts), நொடிப்பு நீதிமன்றம் (Court of Bankruptcy), தலைமைக் குற்றவழக்கு நீதிமன்றம் (Court of Penal Cassation), குற்றச்சாட்டு நீதிமன்றம் (Court of Arraignment), குற்றவியல் நீதிமன்றம் (Criminal Court), கூட்டாட்சித் தண்டனை நீதிமன்றம் (Federal Penal Court) என்று பல பிரிவுகள் உள்ளன.

சுவிட்சர்லாந்து நாட்டில் சட்டங்கள் செய்வதிலும், சட்டங்களை ஏற்பதிலும் பொதுமக்களுக்குப் பங்குள்ள காரணத்தால், அர்சியலமைப்பிற்கு விளக்கமளிக்கவும், கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் செய்யப்படும் சட்டங்களைச் செல்லாது எனக் கூறவும், அமெரிக்கக் கூட்டாட்சித் தவலமை நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருப்பது போலச் சுவிட்சர்லாந்துக் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. கே.பா.

**துணை நூல்கள்.**

**Codding, G.A.**, 'The Federal Goverment of Switzerland, Houghton Mifflin, 1961.

**Jean Blondel**, "An Introductihn to Comparative Government, Weidenfeld and Nicolson, London, 1969.

**கூட்டாட்சி முதல்வர்**: சுவிட்சர்லாந்து நாட்டில் கூட்டாட்சி முதல்வர் மிக முக்கிய பங்கு வகிக்கிறார். சுவிட்சர்லாந்து நாட்டின் அரசியலமைப்பின் 105-ஆம் விதி கூட்டாட்சி முதல்வரைக் (Federal Chancellor) கூட்டாட்சி அரசியலிலுள்ள மிக இன்றியமையாத அதிகாரியாகக் குறிப்பிடுகிறது. கூட்டாட்சி முதல்வர் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் நான்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கும் கூட்டாட்சி ஆட்சித் துறைக் குழுவுக்கும் பொதுச் செயலாளராகப் பணிபுகிறார். இவர் கூட்டாட்சி ஆட்சித் துறைக் குழுவின் நேரடி மேற்பார்வையில் பணிபுரிகிறார். எல்லாச் சுருக்கெழுத்துப் பணிகளையும், மொழிபெயர்ப்புப் பணிகளையும் இவர் செய்கிறார். இவர் கூட்டாட்சித் தேர்தல்களை நடத்திவைக்கிறார். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குடிமக்கள் சட்டங்களை மக்களே முன்மொழிதலை மக்கள் தொடக்கம் என்கின்றனர். மக்கள் தொடக்கம் சம்பந்தப்பட்ட பணிகளைக் கூட்டாட்சி முதல்வர் செயற்படுத்துகிறார். கூட்டாட்சியின் சட்டங்கள் சரியாக இருக்கின்றனவா என்பதையறிய அதற்குக் கூட்டாட்சி முதல்வரின் கையொப்பம் இருத்தல் வேண்டும். ஆகையால், கூட்டாட்சி அரசின் எல்லாச் சட்டங்களும் கூட்டாட்சி முதல்வரின் கையொப்பத்தைப் பெறுதல் வேண்டும். மேற்கூறிய பல்வேறு காரணங்களுக்காகக் கூட்டாட்சி முதல்வர் மிக முக்கிய அதிகாரியாகக் கருதப்படுகிறார்.

மேற்குச் செருமனியில் 1949-ஆம் ஆண்டு முதல் பாராளுமன்ற முறை அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. மேற்குச் செருமனி ஒரு கூட்டாட்சி நாடாகும். குடியரசுத் தலைவர் பெயரளவில் ஆட்சித்துறைத் தலைவராக விளங்குகிறார். உண்மையான அதிகாரங்கள் பெற்ற ஆட்சித்துறைத் தலைவராகத் தலைமை அமைச்சர் (Chancellor) செயற்படுகிறார். மேற்குச் செருமனியில் தலைமையமைச்சரே, கூட்டாட்சி முதல்வர் எனப்படுகிறார். கூட்டாட்சி முதல்வர் குடியரசுத் தலைவரால் அமர்த்தப்பட்டுக் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மற்ற அமைச்சர்களைக் கூட்டாட்சி முதல்வரின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் அமர்த்துகிறார். நாட்டின் முக்கிய கொள்கைகளை வகுப்பதிலும், செயற்படுத்துவதிலும் கூட்டாட்சி முதல்வர் சிறந்த பங்கு வகிக்கிறார். மற்ற அமைச்சரவை உறுப்பினர்கள் பல்வேறு துறைகளுக்கும் தலைமையுடைய அதிகாரிகளாகச் செயற்படுகின்றனர். இவர்களைக் கூட்டாட்சி முதல்வர் தம்விருப்பப்படி பதவியிலிருந்து நீக்கிவிடவும் செய்யலாம். கூட்டாட்சி

முதல்வர் மேற்குச் செருமனிநாட்டு அரசியலில் மிக முக்கிய தேசிய தலைவராகக் கருதப்படுகிறார்.

கே.பா.

**துணை நூல்கள்:**


**Codding, G.A.,** The Federal Government of Switzerland, Houghthin Mifflin, 1961.

**Jeaen Blondl,** "An Introduction to Comparative Government, Weidenfeld and Nicolson, London, 1969.


**கூட்டாண்மை**: முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்பந்தச் சட்டத்தின் ஒரு கூறாக மட்டும் இருந்து வந்த கூட்டாண்மை (Partnership), வணிக வளர்ச்சியின் காரணமாக, 1932-ஆம் ஆண்டிற்குப் பிறகு தனித்ததொரு கூட்டமாக உருப்பெற்றது.

இந்தியக் கூட்டாண்மைச்சட்டம், பிரிவு 46-இன் படி, 'இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வாணிகம் அல்லது தொழிலைக் கூட்டாக நடத்திக் கிடைக்கும் ஆதாயத்தைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வதென உடன்படுவது' கூட்டாண்மை எனப் படும்.

**கூட்டாண்மையின் இன்றியமையாக் கூறுகள்**: கூட்டாண்மையில் இரண்டு அல்லது அதற்கு மேற் பட்டவர்கள் கருத்தொருமித்து உடன்பாடு செய்து கொள்ளுதல் வேண்டும். செலவினங்கள் போக எஞ்சி யுள்ள நலனை, அதாவது நிகர நலனைப் பங்கிட்டுக் கொள்ள ஒப்பந்தம் ஏற்பட்டிருத்தல் வேண்டும். சட்ட நெறிக்குகந்த தொழிலை நடத்துவதற்கான ஒப்பந்த மாக அது இருத்தல் வேண்டும்.

தொழில் ஒன்றினை அனைவரும் இணைந்தோ அனைவர் சார்பில் அவருள் எவரேனும் ஒருவரோ நடத்தலாம். தொழிலில் ஏற்படும் விளைவுகள் அனைத்துக் கூட்டாளிகளையும் பாதிக்கும். கூட்டாண் மைத் தொழிலில் நடைபெறும் எச்செயலுக்கும் நடத்தும் கூட்டாளி ஏனைய கூட்டாளிகளைக் கட்டுப் படுத்த முடியும். அது போலவே ஏனைய கூட்டாளி களும் அந்த ஒரு கூட்டாளியினைக் கட்டுப்படுத்த இயலும்.

**கூட்டாளிகளின் வகைகள்**: கூட்டாளிகள், 1) மெய் நிலைக் கூட்டாளி, 2) இயக்கமற்ற அல்லது உறங்கும் கூட்டாளி, 3) பெயரளவேயான கூட்டாளி, 4) நலன் களுக்குமட்டுமான கூட்டாளி 5) கீழ்க் கூட்டாளி, 6) முரண்தடையால் கூட்டாளி அல்லது அதிகாரப் போலி அல்லது உரிமைப்போலிக் கூட்டாளி என அறு வகைப்படுவர்.

முகவரியத் தத்துவத்தின் அடிப்படையில் மற்றக் கூட்டாளிகளின் செயலுக்குக் கட்டுப் படுகின்ற வெளித் தோற்றமான கூட்டாளி மெய்நிலைக் கூட்டாளி (Actual Partner) எனப்படுவர். கூட்டாண்மை நடத் தும் தொழிலில் தீவிர பங்கு கொள்ளாமல், ஆனால் நிறுமத்தின் கடன்களுக்கு மற்றக் கூட்டாளிகளுக்குச் சமமாகப் பொறுப்பேற்கும் கூட்டாளி இயக்கமற்ற அல்லது உறங்கும் கூட்டாளி (Dormant or sleeping Partner) எனப்படுவர். தொழிலில் மூலதனம் போடா மல், தம் பெயரை மட்டும் நிறுமத்திற்கு அளித்து தொழிலில் கிடைக்கும் ஆதாயத்தில் பங்கு பெறா மல், ஆனால் நிறுமத்தின் கடன்களுக்கு மற்றக் கூட் டாளிகளுடன் சேர்ந்து பொறுப்பாகின்ற கூட்டாளி, பெயரளவேயான கூட்டாளி (Nominal Partner) ஆவர். நிறுமத்தின் இழப்புகளுக்குத் தம்மை உட் படுத்திக் கொள்ளாமல் ஏனைய கூட்டாளிகளுடன் உட் கிடை உடன்பாடு செய்துகொண்டு, மூலதனத்தில் தம் பங்கினைச் செலுத்துகின்ற கூட்டாளி நலன்களுக்கு மட்டுமான கூட்டாளி (Partner for Profit only) ஆவர். தம்முடைய தனிப்பட்ட நலனில் பங்கேற்க மூன்றாம்நிலையில் உள்ள ஒருவருடன் உடன்பாடு செய்து கொள்ளும் கூட்டாளி, கீழ்க்கூட்டாளி (Sub Partner) எனப்படுவார். ஆனால், இவர் நிறுமத்தின் கூட்டாளியாக மாட்டார். எழுத்தால், சொல்லால் செயலால் ஒருவர் தம்மைக் கூட்டாண்மை ஒன்றின் கூட்டாளியாக அறிவித்துக் கொள்ளும்போது அல்லது கூட்டாளியாக அறிவிக்கும்படியான அளவில் தெரிந்து அனுமதித்திடும்போது அத்தகையவர் முரண்தடை யால் கூட்டாளி அல்லது அதிகாரப்போலி அல்லது உரிமைப்போலிக் கூட்டாளி (Partner by Estoppel of Partner Holding out) என்று சொல்லப்படுவார்.

**காலவரையறை**: கூட்டாண்மையில் காலக்கெடு அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்போது, அக்காலக்கெடு முடிவடைந்ததும் கூட்டாண்மை முடி வுறும். கூட்டாண்மையில் காலக்கெடு முடிவு செய் யப்படாதநிலையில், அது விருப்பமுறிக் கூட்டாண்மை (Partnership at will) எனப்படும்.

**கலைப்பு**: எந்தவொரு கூட்டாளியும் நிறுமத்தைக் கலைக்க விரும்பினால் ஏனைய கூட்டாளிகளுக்கு அத் தகைய எண்ணத்தை எழுத்து மூலம் அறிவித்து அதைக் கலைக்கலாம்.

**இளவர்**: இளவருடன் ஒப்பந்தம் மேற்கொள்ளு தல் இயலாதென்பது பொதுவிதி எனினும், இந்தியக்

கூட்டாண்மைச் சட்டம், பிரிவு 30-இன்படி அனைத்துக் கூட்டாளிகளின் ஒப்புதலுடன், கூட்டாண்மையின் பயன்களை அடையக் கூட்டாளிகளில் ஒருவர் இளவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தத்திற்குப் பிறகு இளவர் நிறுமச் சொத்தின் இலாபத்தில் பங்கு பெறவும் பற்று வரவுக் கணக்கினைப் பார்க்கவும் நகல் எடுக்கவும் உரிமை உடையவராயிருப்பார். நிறுமத்தின் கடன்களுக்கு நிறுமத்தின் சொத்து இலாபத்தில் இருக்கும் பங்கு அளவுக்கே அவர் கடன்பட்டவராவார். உரிமை வயதடைந்தபின், அவர் ஆறுமாத காலத்திற்குள்ளாக நிறுமத்தில் கூட்டாளியாகச் சேரவோ கூட்டாண்மையிலிருந்து விலகிக் கொள்ளவோ முடிவு செய்யலாம். அத்தகைய எண்ணத்தை அவர் பொது அறிவிப்பு (Public Notice) ஒன்றன் மூலம் தெரியப்படுத்துதல் வேண்டும். அவ்விதம் செய்யத் தவறும்போது, உரிமை வயது அடைந்து ஆறு மாதம் கழித்து, அவர் கூட்டாண்மையின் ஒரு கூட்டாளியாகவே கருதப்படுவார்.

**பதிவு**: கூட்டாண்மைச் சட்டம் கூட்டாண்மையைப் பதிவு செய்யக் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால், கூட்டாண்மை பதிவாகாததால் ஏற்படும் உரிமை இழப்புகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் கூட்டாண்மையைப் பதிவு செய்வதன் தேவையை உட்கிடையாக வலியுறுத்துகிறது. கூட்டாண்மை ஒன்று பதிவு செய்யப்படாதபோது, கூட்டாளி ஒருவர் கூட்டாண்மைச் சட்டத்தின் அடிப்படையில் அளிக்கப்பட்ட உரிமையினை அல்லது ஒப்பந்தத்தினால் ஏற்படும் உரிமையினை நிறைவேற்றிக் கொள்ளவோ, நிறுமத்திற்கெதிராக அல்லது யாதொரு கூட்டாளிக்கு எதிராக வழக்குத்தொடுக்கவோ இயலாது. அதுபோலவே கூட்டாண்மையும் ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில்ஏற்படுகின்ற உரிமையினை நிறைவேற்றிக் கொள்ள யாருக்கும் எதிராக வழக்கிடவும் வேண்டுகோள் ஒன்றுக்கெதிராக எதிரிடை வாதம் செய்யவும் இயலாது.

**கூட்டாளியின் கடமைகள்**: கூட்டாளியான ஒருவர் பொது நன்மையை உள்ளடக்கி உண்மையாகத் தம் கடமைகளை ஆற்றுதல் வேண்டும். நம்பக உறவின் அடிப்படையில் கூட்டாண்மை எழுவதால் கூட்டாளிகளிடையே நல்லெண்ணம் நிலவவேண்டும். உள்ளபடியான பற்றுவரவுக் கணக்கினை ஏனைய கூட்டாளிகளுக்கு அறிவிப்பதுடன், நிறுமத்தின் பெயரைப் பயன்படுத்தியோ நிறுமத்தின் தொழில் தொடர்பினாலோ நிறுமத்தின் சொத்தினைப் பயன்படுத்தியதனாலோ அடைந்த உள்ளார்ந்த நலன்களை உள்ளடக்கிய அனைத்து நலன்களுக்கும் பற்று வரவு வைத்தல் வேண்டும். தொழில் தடுப்பு ஒப்பந்தம் (Restraint in Trade) பொதுவாகச் செல்லுபடியாகாது எனினும், கூட்டாண்மையில் கூட்டாளிகளிடையே ஏற்படுத்தப்படுகின்ற அத்தகைய ஒப்பந்தமும் செல்லுபடியாகும். நிறுமத்தின் தொழிலுக்குப் போட்டியாகக் கூட்டாளி ஒருவர் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தக்கூடாது. அப்படி நடத்தியிருந்தால் அதனால் பெறப்பட்ட பலன்களை நிறுமத்திற்கே அவர் அளித்துவிடவேண்டும்.

ஒத்த பொறுப்புரிமை (Mutual Trust) மீது ஏற்படுகின்ற உறவாகக் கூட்டாண்மை இருப்பதால், கூட்டாளி ஒருவர் தம் பங்கினை மூன்றாம் பேருக்கு உரிமை மாற்றம் செய்ய இயலாது. அப்படி உரிமை மாற்றம் செய்யும்போது, அது கூட்டாண்மைக் கலைப்புக்கு வழி செய்யும். கூட்டாண்மை உடன்பாட்டில் அளிக்கப்பட்ட அதிகாரங்களைத் தவிர, மீறிச் செய்கின்ற செயல்களினால் ஏற்படுகின்ற இழப்புக்களுக்குப் பொறுப்பாயிருந்த கூட்டாளி ஏனைய கூட்டாளிகளுக்கு இழப்பீடு அளித்தல் வேண்டும்.

**கூட்டாளியின் உரிமைகள்**: கூட்டாண்மைச் சொத்துகளுக்கு ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டு உரிமையாளர் ஆவார். கூட்டாண்மை அடைகின்ற நலனில் கூட்டாளி விகிதாச்சார உரிமையுடையவர் ஆவார். நிறுமத்தை இழப்புக்குள்ளாக்காமல் தடுக்க எந்தவொரு கூட்டாளியும் நியாயமான செயல்களைச் செய்யலாம். நிறுமத்தின் எந்த ஒரு ஏட்டினையும் அவர் சோதனையிட உரிமை உடையவராவார். கூட்டாளி ஒருவர் ஏனைய கூட்டாளிகளின் இசைவுடன் கூட்டாண்மையினின்று ஓய்வு பெறவும் செய்யலாம். அ.ர.ச.

**கூட்டாண்மை ஆவணம்**: ஒரு கூட்டு வாணிகம், வாய்மொழி அல்லது எழுத்து மூலம் உண்டாகும் ஒப்பந்தத்தின் மூலம் அமைந்திடலாம். பிரான்சு, இத்தாலி போன்ற நாடுகளில் இவ்வொப்பந்தம் எழுத்து மூலந்தான் இருக்கவேண்டும். ஆனால் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் எழுத்து மூலம் இருக்கவேண்டிய இன்றியமையாமையில்லை. தவறான கருத்துகளையும், தேவையற்ற வழக்காடுதல்களையும் தவிர்க்கும்பொருட்டு இவ்வொப்பந்தம் எழுத்து மூலம் இருப்பது நல்லது. அவ்வாறு எழுத்து மூலம் எழுதப்படும் ஒப்பந்தம் கூட்டாண்மை ஆவணம் அல்லது ஒப்பந்தம் (Partnership Deed) எனப்படுகிறது. இந்திய வரிவில்லை அல்லது முத்திரைத்தாள் (Stamp) சட்டத்தின் கீழ்ப் போதிய வரிவில்லையுடன் முத்திரையுள்ள தாளில் இவ்வொப்பந்தம் எழுதப்படவேண்டும். ஒவ்வொரு கூட்டாளியும் இதன் படி (Copy) ஒன்றை வைத்துக்

கொள்ளலாம். நிறுவனத்தின் அமைப்பு ஆவணத்தைப் போல இது ஒரு பொது ஆவணம் அன்று. அதை அறிந்த அயலார்களைத்தான் அது கட்டுப்படுத்தும்.

கூட்டாண்மை ஆவணம் கீழ்க்காணுபவைகளை உள்ளடக்கி இருக்கவேண்டும்:

1. நிறுவனத்தின் பெயர், கூட்டாளிகளின் பெயர். களும், முகவரிகளும்.
2. தொழிலின் தன்மை - தொழில் செய்யுமிடம்.
3. கூட்டு வாணிகத்தின் தொடக்க நாள்.
4. கூட்டாண்மையின் காலம்.
5. ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கிய முதலின் மதிப்பு; எதிர்காலத்தில் நிதியினைப் பெறும் வழி முறைகள்.
6. கூட்டாளிகள் ஆதாய - இழப்புப் பகிர்ந்துகொள் ளும் விகிதம்.
7. கூட்டாளி, முதல்-கடன் மீது செலுத்தவேண்டிய வட்டிவீதம்-எடுப்பு மீது வட்டி பெறுவதாக இருந்தால் அதன் விழுக்காடு.
8. கூட்டாளிகளுக்குச் செலுத்தப்படும் ஊதியம், கழிவு முதலியன.
9. கணக்குகளை வைத்திருக்கும் முறை, தணிக்கை ஏற்பாடு, கையிருப்புப் பணத்தைப் பாதுகாக்கும் முறை போன்றவை.
10. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள், அதி காரங்கள், பொறுப்புகள் முதலியன.
11. ஒரு கூட்டாளியின் சேர்க்கை, விலகல், இறப்புப் போன்ற காலங்களில் பின்பற்றப்படும் விதிமுறை கள்.
12. மோசடி, கடமையிலிருந்து வழுவுதல் போன்றவை களுக்காகக் கூட்டாளியை வெளியேற்றுதல்.
13. கூட்டாண்மைத் தொழிலுக்குப் போட்டியாகத் தொழில் நடத்துதல் அல்லது வேறு தொழில் நடத்துதல்.
14. கூட்டாண்மையைக் கலைத்திடும் சூழ்நிலைகள்.
15. கூட்டாளிகளிடையே ஏற்படும் சிக்கல்களை நடு வர் தீர்ப்பு முறையில் (Arbitration) தீர்த்துக் கொள்ளுதல்.

மேற்கூறிய கூட்டாண்மை ஆவணத்தின் தன்மை களையும், கட்டுப்பாடுகளையும், விதிமுறைகளையும் கூட்டாளிகளின் ஒருங்கிணைந்த இசைவு மூலம் மாற்றி அமைத்திடலாம். அத்தகைய இசைவு வெளிப் படையாகவும் உட்கிடையாகவும் இருக்கலாம்.

கே.என்.இரா.

**துணை நூல்கள்:**

**Kuchhal**, M.C., Mercantile Law, Vikas Publishing House Private Limited, New Delhi, 1981.

**Reddy**, **P.N. & Gulshan**, S.S., Principles of Business Organisation and Management, Eurasia Publishing House Private Limited, New Delhi, 1978.

**கூட்டாண்மைக் கணக்குகள்:** கூட்டு நிறு வனத்தின் கணக்குப் பதிவுமுறை(Accounting System) தனி வணிகத்தை ஒத்தே அமைந்துள்ளது. எனினும், சில சரிக்கட்டுதல்கள் (Adjustments) உள்ளன. கூட் டாளிகளின் முதல் மீது வட்டி கணக்கிடப்பட வேண்டி யிருக்கலாம். எடுத்துக்காட்டாக, சேரன் சோழன் ஆகிய இருவரும் கூட்டாளிகள் (Partners). இவ்விரு வரும் ஆதாய இழப்பைத் தங்களிடையே சமமாகப் பகிர்ந்து தம் முதல் தொகை மீது 5% வட்டி பெறு கின்றனர். இவர்கள் முதல் தொகை 1.1.85-இல் முறையே உரூ. 10,000, உரூ. 5,000 ஆகவும், அவ் வாண்டில் ஏற்பட்ட நிகர ஆதாயம் உரூ. 5,000 ஆக வும் இருப்பின், அவர்கள் பெறும் மொத்தத் தொகையை அட்டவணை 1-இல் கணக்கிடலாம். அதுபோன்றே கூட்டாளிகளின் எடுப்புத் தொகையின் மீதும் வட்டி வசூலிக்கப் படலாம். எடுப்புத்தொகை (Drawing Amount) எடுத்த நாள்களைப் பற்றிய விவரம் ஏதும் தரப்படாதபோது அரையாண்டுக்கு வட்டி கணக்கிடப்படுகிறது.

விழுக்காட்டுத் தவணை முறைப்படி (Average Due Date) இவ்வட்டியைக் கணக்கிடுதல் மிக எளி தாகும். சான்றாக, கூட்டு நிறுவனத்திலுள்ள ஒருவர் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் உரூ. 500 எடுக் கிறார் என்றால், அவரது எடுப்புத் தொகையின் மீது வட்டி கணக்கிடப்படும். அவரது ஆண்டு மொத்த எடுப்புத் தொகையான உரூ. $500 \times 12 =$ உரூ. 6000-த்தின் மீது $6\frac{1}{2}$ மாதங்களுக்கு வட்டி கணக்கிட் டால் போதுமானது. எடுப்பின் மீது வட்டி $6000 \times 6/100 \times 13/24 =$ உரூ. 195 ஆகும்.

இக்கூட்டு நிறுவனத்தின் மற்றொரு கூட்டாளி மாத இறுதியில் உரூ.500/- எடுக்கிறார் எனக் கொண் டால், வட்டி மொத்த எடுப்பின் மீது $5\frac{1}{2}$ மாதங் களுக்குக் கணக்கிடப்படுகிறது. அவரது எடுப்பின் மீது

**ஆதாய இழப்புப் பகிர்வு கணக்கு**

அட்டவணை-1

| ப | | | வ |
|---|---|---|---|
| | உரு. | | உரு. |
| முதல் மீது வட்டி | | ஆதாயம் | |
| சேரன் ... 500<br>சோழன் ... 250 | 750 | கீ/கொ | 5000 |
| நிகர ஆதாயம்<br>சேரன் ... 2125<br>சோழன் ... 2125 | | | |
| | 4250 | | |
| | 5000 | | 5000 |

**ஆதாய இழப்புப் பகிர்வு கணக்கு**

அட்டவணை-2

| | உரு. | | உரு. |
|---|---|---|---|
| முதல் மீது வட்டி: | | ஆதாயம் | 10000 |
| பாண்டியன் ... 1500<br>பல்லவன் ... 1000 | 2500 | எடுப்பு மீது வட்டி<br>பாண்டியன் ... 300<br>பல்லவன் ... 200 | 500 |
| முதல் கணக்கு – நிகர ஆதாயம் மாற்றப்படுகிறது.<br>பாண்டியன் ... 4000<br>பல்லவன் ... 4000 | 8000 | | |
| | 10500 | | 10500 |

வட்டி 6000 × 6/100 × 11/25 = உரூ. 165 ஆகும். ஆதாய இழப்புப் பகிர்வு கணக்கில் எடுப்பு மீது வட்டி அட்டவணை 2-இல் உள்ளவாறு வரவு வைக்கப்படும். (கற்பனைத் தொகைகள்.) நிருவாகத்தில் பங்குபெற்று உழைக்கும் கூட்டாளிக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இவ்வூதியம் தவிர்த்த தொகையையே ஆதாயமாகப் பகிர்ந்து கொள்வர்.

இவைபோன்ற சரிக்கட்டுதல்கள் கூட்டாளிகளின் முதல் கணக்கில் சேர்க்கப்படும். கூட்டாளி ஒருவரின் முதல் கணக்கில் அவர் போடும் முதல், நிகர ஆதாயம், ஊதியம், முதல் மீதான வட்டி ஆகியன வரவு வைக்கப்படும். இவை அவர்தம் முதல் தொகையை உயர்த்துகின்றன. எடுப்பு, எடுப்பு மீதான வட்டி, இழப்பு ஆகியன பற்று வைக்கப்படுகின்றன. இவை அவருடைய முதல் தொகையைக் குறைக்கின்றன.

எனவே, கூட்டாளியின் முதல் தொகை ஆண்டுத் தொடக்கத்தில் ஒன்றாகவும், இறுதியில் ஒன்றாகவும் மாறிக்கொண்டே இருக்கும். இதனை மாறும் முதல் **(Fluctuating Capital)** எனக் கூறுகின்றனர். எடுத்துக்காட்டாகக் கண்ணனும் முருகனும் 3:1 விகிதத்தில் ஆதாய இழப்பைப் பகிர்ந்து கொள்கின்றனர் என்றால், 1.1.85-இல் அவர்களின் முதல் கணக்கு முறையே உரூ. 20000-உம், உரூ.10000-உம் ஆகும். கண்ணனுக்கு ஆண்டு ஊதியம் உரூ. 3000. முதல் மீது 5% வட்டி கணக்கிடப்படுகிறது. கண்ணன் 1985-இல் எடுத்துக்கொண்டது உரூ. 3000. முருகன் எடுத்தது உரூ. 2000. எடுப்பு மீது 2% வட்டி வசூலிக்கப்படுகிறது. இச் சரிகட்டுதல்களுக்கு முன்னர் ஏற்பட்ட ஆதாயம் உரூ. 10000 எனில், கூட்டாளிகளின் முதல் கணக்கு அட்டவணை 3-இல் உள்ளவாறு எழுதப் படும்.

### ஆதாய இழப்புப் பகிர்வு கணக்கு

அட்டவணை-3

| | உரூ. | | உரூ. |
|---|---|---|---|
| கண்ணனின் ஊதியம் | 3000 | ஆதாய இழப்புக் கணக்கு | 10000 |
| முதல் மீது வட்டி | | எடுப்பு மீது வட்டி | |
| கண்ணன் 1000 | | கண்ணன் 60 | |
| முருகன் 500 | | முருகன் 40 | |
| | 1500 | | 100 |
| முதல் கணக்கு-நிகர ஆதாயம் மாற்றப்படுகிறது. | | | |
| கண்ணன் 4200 | | | |
| முருகன் 1400 | | | |
| | 5600 | | |
| | 10100 | | 10100 |

### கண்ணனின் முதல் கணக்கு

| | உரூ. | | உரூ. |
|---|---|---|---|
| 1985 | | 1985 | |
| எடுப்பு க/கு மாற்றம் | 3000 | இருப்பு கீ/கொ | 20000 |
| எடிப்பு மீது வட்டி | 60 | ஊதியம் | 3000 |
| இருப்பு கீ/இ. | 25140 | முதல் மீது வட்டி | 1000 |
| | | ஆதாய இழப்புப் பகிர்வு க/கு. | 4200 |
| | 28200 | | 28200 |

**முருகனின் முதல் கணக்கு**

| | உரு. | | உரு. |
|---|---|---|---|
| 1985 எடுப்பு க/கு | 2000 | 1985 இருப்பு கீ/கொ | 10000 |
| எடுப்பு மீது வட்டி | 40 | முதல் மீது வட்டி | 500 |
| இருப்பு கீ/இ. | 9860 | ஆதாய இழப்புப் பகிர்வு க/கு. | 1400 |
| | 11900 | | 11900 |

**கண்ணனின் முதல் கணக்கு**

| 1985 | உரு. | 1985 | உரு. |
|---|---|---|---|
| திச. 31 இருப்பு கீ/இ | 20000 | சனவரி 1 இருப்பு கீ/கொ | 20000 |
| | 20000 | | 20000 |
| | | 1986 | |
| | | சனவரி 1 இருப்பு கீ/கொ | 20000 |

**கண்ணனின் நடப்புக்கணக்கு**

| 1985 | உரு. | 1985 | உரு. |
|---|---|---|---|
| திச. 31 எடுப்பு | 3000 | திச. 31 ஊதியம் | 3000 |
| ,, எடுப்பு மீது வட்டி | 60 | முதல் மீது வட்டி | 1000 |
| ,, இருப்பு கீ/இ | 5140 | ஆதாய இழப்புப் பகிர்வு க/கு. | 4200 |
| | 8200 | | 8200 |
| | | இருப்பு கீ/இ | 5140 |

முதல் தொகை மாறாதிருக்க வேண்டுமென்று கூட்டாளிகள் விரும்பும்போது இச் சரிக்கட்டுதல்கள் அனைத்தும் கூட்டாளிகளின் நடப்புக் கணக்கிலேயே (Current Account) செய்விக்கப்படுகின்றன. இவ்வகை முதல் கணக்கை நிலை முதல் (Fixed Capital)கணக்கு எனக் கூறுவர். எடுத்துக்காட்டில் உள்ள கண்ணனின் நிலைமுதல் கணக்கும், நடப்புக் கணக்கும் அட்டவணை 4-இல் உள்ளவாறு தோன்றும். புதிய கூட்டாளிகள் சேர்க்கப்படும்போதும், பழைய கூட்டாளிகள் விலகும்போதும், நிறுவனம் கலைக்கப்படும் போதும் கணக்குப் பதிவில் பல்வேறு மாற்றங்கள் உண்டாகும்.

**கூட்டாளி சேர்க்கை:** புதியவர் ஒருவரைக் கூட்டாளியாகச் சேர்ப்பது கூட்டாளிச் சேர்க்கையாகும் (Admission of Partner). அவ்வாறு சேர்க்கும்போது ஆதாய இழப்பு விகிதத்தில் மாறுதல் ஏற்படும். எடுத்துக்காட்டாகப் பாண்டியன், பல்லவன் இருவரும் 3:2 என்ற விகிதத்தில் ஆதாயத்தைப் பங்கிடுகின்றனர். அவர்கள் தீரன் என்னும் புதிய கூட்டாளியை $\frac{1}{4}$ பங்கு கொடுத்துச் சேர்த்தால் புதிய ஆதாய விகிதம் உண்டாகும். அது அமையும் முறையாவது:

மொத்த ஆதாயம் 1 எனக் கொண்டால் 1/4 பங்கு தீரனுக்கு. எஞ்சியுள்ள 1- 1 /4 = 3/4 பங்கை, பான்

டியன் 3/5 × 3/4 = 9/20 என்ற விகிதத்திலும், பல்லவன் 2/5 × 3/4 = 6/20 என்ற விகிதத்திலும், பிரித்துக்கொள்வர். தீரனின் பங்கு 5/20 (1/4 பங்கு). புதிய ஆதாய விகிதம் 9:6:5 ஆகும்.

புதிய கூட்டாளியின் வரவால் பழைய கூட்டாளிகளின் ஆதாயம் குறைந்து விடுகிறது.இந்த இழப்பை ஈடுகட்டப் பழைய கூட்டாளிகளுக்குப் புதியவர் வழங்கும் தொகையை வாணிக நற்பெயருக்காக (Good Will) வழங்கும் தொகை எனக் கூறுவர். நிறுவனம் எய்தியுள்ள நிலையும் அது ஈட்டும் ஆதாயமும் பழைய கூட்டாளிகளின் அயரா உழைப்பின் விளைவே. எனவே, புதிய கூட்டாளி முதல் தவிர்த்து வாணிக நற்பெயர்த் தொகையையும் கொண்டு வருகிறார்.

புதிய கூட்டாளி வாணிக நற்பெயரைப் பணத் தொகையாகக் கொண்டுவர இயலாதபோது, வாணிக நற்பெயர் ஏடுகளில் உண்டாக்கப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் வாணிக நற்பெயரை மாற்றுப் பதிவின் மூலம் நீக்கியும் விடலாம். எடுத்துக்காட்டாக வைகை, பொன்னி இருவரும் 3:2 என்ற விகிதத்தில் ஆதாய இழப்பைப் பங்கிட்டுக் கொள்கின்றனர். காவிரி என்பவர் $\frac{1}{4}$ பங்கு தரப்பட்டுச் சேர்க்கப்படுகிறார். கூட்டு நிறுவனத்தின் வாணிக நற்பெயர் உரூ. 20000 என மதிப்பிடப்படுகிறது. வாணிக நற்பெயருக்கான பதிவுகள் முனைமம் முறையிலும் (Premium Method), மதிப்பீட்டு முறையிலும் (Revaluation Method), குறிப்பு மதிப்பீட்டு முறையிலும். (Memorandum Revaluation Method) எழுதப்படும். (அ) வாணிக நற்பெயரைப் பணத்தொகையாகக் கொண்டுவருவது முனைமம் முறை எனக் கூறப்படுகிறது. இம்முறையில் புதியவர் தன் பங்கிற்கான வாணிக நற்பெயரையே பணத்தொகையாகக் கொண்டுவருவார். கூறப்பட்டுள்ள எடுத்துக்காட்டில் காவிரி கொண்டுவரும் முனைமத் தொகை. $\frac{1}{4} \times 20000$ = உரூ. 5000 ஆகும்.

| | | | உரூ. |
|---|---|---|---|
| 1) | பணத்தொகை க/கு ப | ... | 5000 |
| | வாணிக நற்பெயர் க/கு | ... | 5000 |

(வாணிக நற்பெயருக்காகக் காவிரி கொணர்ந்தது)

| | | | | உரூ. |
|---|---|---|---|---|
| 2) | வாணிக நற்பெயர் க/கு ப | ... | 5000 | |
| | வைகை முதல் க/கு | ... | | 3000 |
| | பொன்னி முதல் க/கு | ... | | 2000 |

(வாணிக நற்பெயர்த் தொகையை வைகை, பொன்னி முதல் கணக்கில் வரவு வைக்க.)

வாணிக நற்பெயர் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் பழைய கூட்டாளிகளுக்கு ஏற்படும் 'இழப்பு விகிதத்தில்' (Sacrificing Ratio) வரவு வைக்கப்படுகிறது. பழைய விகிதம் – – புதிய விகிதம், இழப்பு விகிதமாகும். இவ்விழப்பு விகிதம் எடுத்துக்காட்டில் 3:2 என்னும் பழைய விகிதமாகவே இருக்கக் காணலாம். புதியவர் சேர்ந்த பின்பும் பழைய கூட்டாளிகள் தமக்கிடையே உள்ள ஆதாய விகிதத்தை மாற்றாதிருக்கும் போதே இவ்வாறு ஏற்படும். எனவே, புதிய கூட்டாளியான காவிரி சேர்ந்த பின்பு முற்றிலும் புதிய 7:5:4 என்ற ஆதாய விகிதத்தில் கூட்டாளிகள் தம் ஆதாயத்தைப் பங்கிட்டுக் கொள்கின்றனர் என வைத்துக்கொண்டால், இழப்பு விகிதம்.

$$\text{வைகை} = 3/5 - 7/16 = \frac{48-35}{80} = 13/80$$

$$\text{பொன்னி} = 2/5 - 5/16 = \frac{32-25}{80} = 7/80$$

13:7 என்று ஆகும். காவிரி கொணரும் தொகையை இவ்விகிதத்தில் வைகையும் பொன்னியும் பிரித்தெடுத்துக் கொள்வர்.

புதிய கூட்டாளி வாணிக நற்பெயர்த் தொகையைப் பணத்தொகையாகக் கொண்டுவர இயலாத போது நற்பெயர்த் தொகை ஏடுகளில் எழுப்பப்படுகிறது.

**மதிப்பீட்டு முறை**: இம்முறையில் முழு அளவுத் தொகையும் பற்று வைக்கப்பட்டுப் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகளும் பழைய விகிதத்தில் வரவு வைக்கப்படுகின்றன.

| | | உரூ. | உரூ. |
|---|---|---|---|
| வாணிக நற்பெயர் க/கு ப | ... | 20000 | |
| வைகை முதல் க/கு | ... | | 12000 |
| பொன்னி முதல் க/கு | ... | | 8000 |

(வாணிக நற்பெயர் ஏடுகளில் எழுப்பப்பட்டு முதல் கணக்குகளில் 3:2 விகிதத்தில் வரவு வைக்கப்படுகிறது).

வாணிக நற்பெயர், ஏடுகளில் எழுதப்பட்டு உடன் நீக்கப்படுதல் மறு மதிப்பீட்டு முறை எனப்படு

கிறது. இம்முறையில் புதிய கூட்டாளி உட்பட அனைத்துக் கூட்டாளிகள் கணக்கிலும் புதிய ஆதாய விகிதத்தில் பற்று வைத்து வாணிக நற்பெயர் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

| | | உரு. | உரு. |
|---|---|---|---|
| வைகை முதல் | க/கு ப ... | 9000 | |
| பொன்னி முதல் | க/கு ப ... | 6000 | |
| காவிரி முதல் | க/கு ப ... | 5000 | |
| வாணிக நற்பெயர் க/கு | ... | | 20000 |

(வாணிக நற்பெயர் புதிய ஆதாய விகிதத்தில் நீக்கப்பெறுகிறது).

புதிய கூட்டாளி ஒருவர் சேரும்போது சொத்துகளையும் பொறுப்புகளையும் மறு மதிப்பீடு செய்ய வேண்டியது தேவையாகிறது. இதற்காக மறு மதிப்பீட்டுக் கணக்கு (Revaluation Account) ஒன்று தொடங்கப்படுகிறது. சொத்துகளில் ஏற்படும் உயர்வும், பொறுப்புகள் நீங்குவதால் ஏற்படும் ஆதாயமும் மறு மதிப்பீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. சொத்துகளில் ஏற்படும் மதிப்பிழப்பும், பொறுப்புகள் கூடுவதால் ஏற்படும் இழப்பும் இக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. இறுதியில் மறு மதிப்பீட்டால் ஏற்படும் ஆதாய இழப்பு பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு மாற்றப்படுகிறது.

எடுத்துக்காட்டாக மனையணியத்தின் விலை உரு. 1000 குறைந்தும், கட்டடத்தின் விலை உரு. 2000 உயர்ந்தும், கடனீந்தோருக்குத் தரவேண்டிய தொகை உரு. 3000 குறைந்தும், இழப்பு ஈட்டுக்கான புதிய பொறுப்பு உரு. 1500 ஏற்பட்டும் இருந்தால், மறு மதிப்பீட்டுக் கணக்கில் அட்டவணை 5-இல் உள்ளவாறு பதிவுகள் ஏற்படும்.

இதுபோன்ற இருப்புநிலைக் (Balance Sheet) குறிப்பிலுள்ள காப்பு (Reserve) போன்ற பிரிக்கப் படாத ஆதாயத் தொகைகளைப் பழைய கூட்டாளிக் கணக்குகளின் பழைய ஆதாய விகிதத்தில் (Old Profit Sharing Ratio) வரவு வைத்தல் வேண்டும். இதற்குத் தேவையான பதிவு

காப்பு க/கு ப

பழைய கூட்டாளிகளின் முதல் க/கு

**கூட்டாளி விலகல்**: கூட்டாளி ஒருவர் நிறுவனத்தைவிட்டு விலகும்போது (Retirement of Partner) அவருக்குச் சேரவேண்டிய தொகையைக் கணக்கிட வேண்டும். அவர் போட்ட முதல், ஆதாய இழப்பில் அவருக்குச் சேரவேண்டிய பங்கு, பிரிக்கப்படாத ஆதாயத்தில் அவரது பங்கு ஆகியவற்றுக்கு வாணிக நற்பெயர்த் தொகை, மறு மதிப்பீட்டு ஆதாய இழப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கணக்கிடுதல் வேண்டும். மறு மதிப்பீட்டுக் கணக்கு ஒன்று தொடங்கி

அட்டவணை-5

**மறு மதிப்பீட்டுக் கணக்கு**

| | | உரு. | | உரு. |
|---|---|---|---|---|
| மனை அணியம் | | 1000 | கட்டடம் | 2000 |
| இழப்பு ஈட்டுக்கான பொறுப்பு | | 1500 | கடனீந்தோர் | 3000 |
| முதல் கணக்குகள் | | | | |
| (ஆதாயம் மாற்றப்படுவது) | | | | |
| அழகன் ... | 1250 | | | |
| அரசன் ... | 1250 | | | |
| | | 2500 | | |
| | | உரு. 5000 | | உரு. 5000 |

ஆதாய இழப்பை எல்லாக் கூட்டாளிகளுக்கும் பழைய ஆதாயப் பகிர்வு விகிதத்தில் பிரித்தல் வேண்டும்.

**வாணிக நற்பெயர்த் தொகை பதிவு செய்யப்படும் முறைகளாவன:** அ) வாணிக நற்பெயர் ஏடுகளில் உருவாக்கப்படுதல், ஆ) வாணிக நற்பெயர் உருவாக்கப்பட்டு நீக்கப்படுதல், இ) விலகும் கூட்டாளியின் பங்கு மட்டும் உருவாக்கப்பட்டு நீக்கப்படுதல், ஈ) வாணிக நற்பெயர்க் கணக்கை ஏடுகளில் கொணராமல் எஞ்சியுள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மூலம் சரிசெய்தல்.

**எடுத்துக்காட்டு:** பாரதி, கம்பன், வள்ளுவன் என்னும் மூவரும் 4:3:2 என்ற விகிதத்தில் ஆதாய இழப்பைப் பங்கிடுகின்றனர். கம்பன் நிறுவனத்திலிருந்து விலகுகிறார். நிறுவனத்தின் நற்பெயர்த் தொகை உரூ. 10800 என மதிப்பிடப்பட்டு நற்பெயருக்கான பதிவுகள் எவ்வாறு செய்யப்படும் என்பதனை விளக்குவதற்குப் புதிய ஆதாய விகிதம் 5:3 எனக் கொள்க:

அ) நற்பெயர் ஏடுகளில் உருவாக்கப்படும்போது

| | | | உரூ. | உரூ. |
|---|---|---|---|---|
| வாணிக நற்பெயர் | க/கு | ப | ... 10800 | |
| பாரதியின் முதல் | க/கு | | ... | 4800 |
| கம்பனின் முதல் | க/கு | | ... | 3600 |
| வள்ளுவனின் முதல் | க/கு | | | 2400 |

(வாணிக நற்பெயர் ஏடுகளில் உருவாக்கப்பட்டு முதல் கணக்கில் 4:3:2 என்ற விகிதத்தில் வரவு வைக்கப்படுகிறது.)

ஆ) நற்பெயர் உண்டாக்கப்பட்டுநீக்கப்பெறும்போது

| | | | | உரூ. | உரூ. |
|---|---|---|---|---|---|
| i. | வாணிக நற்பெயர் | க/கு | ப | 10800 | |
| | பாரதியின் முதல் | க/கு | | | 4800 |
| | கம்பனின் முதல் | க/கு | | | 3600 |
| | வள்ளுவனின் முதல் | க/கு | | | 2400 |

(வாணிக நற்பெயர் ஏடுகளில் உருவாக்கப்படுகிறது.)

| | | | | உரூ. | உரூ. |
|---|---|---|---|---|---|
| ii. | பாரதியின் முதல் | க/கு | ப | 6750 | |
| | வள்ளுவனின் முதல் | க/கு | ப | 4050 | |
| | வாணிக நற்பெயர் | க/கு | | | 10800 |

(வாணிக நற்பெயர் எஞ்சியுள்ள கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் வரவு வைக்கப்பெற்று நீக்கப்பெறுகிறது.)

இ) விலகும் கூட்டாளியின் பங்கு மட்டுமே உருவாக்கப்பட்டு நீக்கப்பெறும்போது

| | | | | உரூ. | உரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | நற்பெயர் | க/கு | ப | 3600 | |
| | கம்பனின் முதல் | க/கு | | | 3600 |
| 2. | பாரதியின் முதல் | க/கு | ப | 1950 | |
| | வள்ளுவனின் முதல் | க/கு | ப | 1650 | |
| | நற்பெயர் | க/கு | | | 3600 |

விலகும் கூட்டாளியின் நற்பெயர்த்தொகையை மட்டும் ஏடுகளில் எழுதும்போது அத்தொகைகளை மற்றக் கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் 'ஆதாய விகிதத்தில்' பற்று வைத்து நீக்கிவிட வேண்டும். ஆதாய விகிதம் 'புதிய விகிதம்-பழைய விகிதம்' எனக் கணக்கிடப்படுகிறது.

ஈ) வாணிக நற்பெயர்க் கணக்கை ஏடுகளில் கொணராமல் எஞ்சியுள்ள கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மூலம் சரிசெய்தல்.

| | | | உரூ. | உரூ. |
|---|---|---|---|---|
| பாரதியின் முதல் | க/கு | ப | 1950 | |
| வள்ளுவனின் முதல் | க/கு | ப | 1650 | |
| கம்பன் முதல் | க/கு | | | 3600 |

**கூட்டு நிறுவனக் கலைப்பு:** கூட்டு நிறுவனத்தைக் கலைக்கும்போது (Dissolution of Firm) சொத்துகள் அனைத்தையும் விற்றுக் கடன்களை அடைத்த பின்னர்,பணத்தொகை எஞ்சியிருக்குமாயின் முதல் தொகைகளைத் திரும்ப வழங்க வேண்டும். இவற்றுக்காகத் தீர்வுக்கணக்கு (Realisation Account) ஒன்று தொடங்கப்படுகிறது. கையிருப்புப் பணம், வங்கியிருப்புத் தவிர எஞ்சிய சொத்துகள் அனைத்தும் இக்கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன. பொறுப்புகள் வரவு வைக்கப்படுகின்றன. சொத்துகளை விற்ற தொகையை வரவுப் பக்கத்திலும், பொறுப்புகளைச் செலுத்திய தொகையைப் பற்றுப்

அட்டவணை-6 **தீர்வுக் கணக்கு**

| | உரூ. | | | உரூ. |
|---|---|---|---|---|
| கட்டடம், நிலம் | 50000 | கடனீந்தோர் | | 25000 |
| பொறி இயந்திரங்கள் | 40000 | ஐயக்கடன் காப்பு | | 1500 |
| சரக்கிருப்பு | 20000 | வங்கி-சொத்துகள் | | |
| கடனாளிகள் | 15000 | விற்றது. | | |
| வங்கி-கலைப்புச்செலவு | 1500 | நிலம் | 60000 | |
| வங்கி-கடனீந்தோர் | 20000 | பொறி இயந்திரம் | 45000 | |
| முதல் கணக்குகள் உரூ. | | | | |
| வேந்தன் 8000 | | சரக்கிருப்பு | 20000 | |
| மன்னன் 6000 | | | | |
| அரசன் 4000 | | கடனாளிகள் | 13000 | |
| | 18000 | | | 138000 |
| உரூ. | 164500 | உரூ. | | 164500 |

பக்கத்திலும் எழுதவேண்டும். இறுதியில் ஏற்படும் ஆதாய இழப்பு கூட்டாளிகளின் முதல் கணக்குகளுக்கு மாற்றப்படும். தீர்வுக் கணக்கு, நிறுவனத்தின் பேரேடுகளில் அட்டவணை 6-இல் உள்ளவாறு தோன்றும்.

நிறுவனத்தின் சொத்துகளையும் பொறுப்புகளையும் நிறுவனம் ஒன்றுக்கு விற்கும்போதும் கூட்டு நிறுவனம் கலைக்கப்படும். நிறுவனத்திடமிருந்து விலையாகப் பெறப்பட்ட பங்குகளையும், கடன் ஆவணங்களையும் கூட்டாளிகள் தமக்குள் பிரித்துக் கொள்வர்.

கூட்டாளிகளுள் ஒருவர் நொடிப்பு நிலை (Insolvency) எய்தினால் அவரால் ஏற்பட்ட இழப்பை ஏனைய திறமைமிக்க கூட்டாளிகள் (Solvent Partners) தம் முதல் விகிதத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இம்முதல் தொகை விகிதத்தைக் கணக்கிடும் முறை குறித்து கார்னர்-முர்ரே வழக்கில் நடுவர் சாய்சு தெளிவாகக் கூறியுள்ளார். முதலில் திறமைமிக்க கூட்டாளிகள் ஒவ்வொருவரும் தங்களுடைய தீர்வு இழப்பைப் பணத்தொகையாக்க வேண்டும். அதன் பின்னரே அவர்களது முதல் தொகை விகிதத்தைக் கணக்கிட வேண்டும். இயல்பாக ஏற்படும் வணிக இழப்பு, ஆதாய இழப்புப் பகிர்வு விகிதத்திலேயே பிரித்துக்கொள்ளப்படும். எனவே, நொடித்துப்போன கூட்டாளியின் முதல் பற்றாக்குறையைப் பிற கூட்டாளிகள் தத்தம் முதல் விகிதத்திலேயே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இத் தீர்ப்பின் முடிவாகும்.

வை.ந.

## கூட்டாண்மை நிறுவனக் கலைப்பு

கூட்டு வாணிகத் தொழில் முடிவுறுவதைக் குறிக்கும். நிறுவனத்தின் அலுவல்கள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டால் அதன் கூட்டாளிகள் தொழிலைத் தொடர்ந்து நடத்த விரும்பாமல் அக்கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படுகிறது. எனவே, கூட்டாண்மை நிறுவனக் கலைப்பு (Dissolution of Partnership Firm) என்பது நிறுவனத்தின் ஆயுட்கால முடிவாகும். கூட்டாண்மை முறிந்து போய்விடும் நிலை குறிப்பாகக் கலைப்பு எனப்படும்.

நிறுவனக் கலைப்பிற்கும் (Dissolution of Firm) கூட்டு வாணிகக் கலைப்பிற்கும் (Dissolution of Partnership) வேறுபாடு உண்டு. கூட்டாளிகளிடையே கூட்டாண்மை முறிந்துவிட்டால் அது நிறுவனக் கலைப்பாகாது. நிறுவனம் அதே பெயருடன் தொடர்ந்து பணியாற்றும். கூட்டாளிகளின் மறுசேர்க்கை ஏற்படும். இத்தகைய சூழ்நிலையில் திரும்ப

அமைக்கப்பட்ட கூட்டு வாணிகம் தோன்றுகிறது. 'எழிலகம்' என்ற நிறுவனத்தில் அ, ஆ, இ ஆகியோர் கூட்டாளிகளாக இருக்கின்றனர். இ என்பவர் ஓய்வு பெற்றுவிட்டார். அ, ஆ என்ற இருவரும் எழிலகம் என்ற நிறுவனத்தின் தொழிலைத் தொடர்ந்து நடத்த விழைகின்றனர். முதலில் மூன்று கூட்டாளி களைக் கொண்டிருந்த நிறுவனத்தில் பின்னர் இரண்டு கூட்டாளிகள் இருக்கின்றனர். எனவே, நிறு வனம் திருத்தி அமைக்கப்படுகிறது.

நிறுவனக் கலைப்பு ஏற்படும் நிலைகள்ாவன: 1) எல்லாக் கூட்டாளிகளும் இசைந்தால் கூட்டு நிறு வனம் கலைக்கப்படும். 2) ஒரு கூட்டாளியைத் தவிர ஏனைய கூட்டாளிகள் நொடித்தவர் என்று தீர்மா னிக்கப்பட்டால் கூட்டுக் கலைந்து போகும். 3) நிறு வனம் நடத்தும் தொழில் சட்டமுறையற்றதாகிவிட் டால் அது கலைக்கப்படும். 4) கலைப்பு அறிக்கை யைக் கட்டாயமாக வெளியிட்டபோதும் கலைக்கப் படும்.

கூட்டு வாணிகக் கலைப்புத் தோன்றும் வகைக ளாவன: 1) குறிப்பிட்ட காலத்திற்கு என்று அறுதி யிட்டுத் தொடங்கப்பட்ட கூட்டு நிறுவனம் அக்காலம் முடிந்ததும் கலைந்துவிடும். 2) குறிப்பிட்ட ஒரு வாணிக முயற்சிக்காக ஏற்படுத்தப்பட்ட வாணிகம் அம்முயற்சி முடிந்தவுடன் கலைந்து போகும். 3) கூட் டாளி ஒருவர் இறந்துவிட்டால் கூட்டு வாணிகம் கலைந்துவிடும். 4) ஒரு கூட்டாளி நொடித்துவிட்டா லும் கூட்டு வாணிகம் கலைந்துவிடும். 5) ஒரு கூட் டாளி ஓய்வு பெற்றாலும் கூட்டு வாணிகம் கலைந்து விடும்.

இந்நிலைகளில் ஒப்பந்தக் கூறுகள் வேறுபட்டால் கூட்டாளிகள் தங்கள் வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரங்களைப் பயன்படுத்தி நிறு வனத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குகந்ததாக ஒப் பந்தத்திற்கு உயிர் ஊட்டலாம்.

**நீதிமன்றத்தின் மூலம் கலைப்பு:** ஒரு குறிப்பிட்ட கூட்டு வாணிக நிறுவனம் குறிக்கப்பட்ட எந்தக் காரணங்களுக்காகவும் கலைக்கப்படாவிட்டால் நீதி மன்றத்தின் உதவி நாடப்படுகிறது. நீதிமன்றம் அந் நிறுவனக் கலைப்பிற்காகக் கட்டளை இடும் சூழ்நிலை களாவன: 1) கூட்டாளியொருவர் உளச் சமநிலை (Mental Balance) இழந்து விட்டால் கலைப்பு ஏற் படும். கூட்டாளியின் பைத்தியநிலை காரணத்தா லேயே நிறுவனக் கலைப்பு ஏற்படுகிறதென்று சொல் வதற்கில்லை. மற்றக் கூட்டாளி அல்லது கூட்டாளிகள் இவ்வடிப்படையில் கலைப்பிற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் கொடுப்பது அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது. 2) கூட்டாளி ஒருவர் கூட்டாளி என்ற முறையில் செயலாற்றும் தகுதியை நிலையாக இழந்து விட்டாலும் கலைப்பு ஏற்படும். 3) கூட்டாளி ஒருவர் தீய நடத்தை என்னும் குற்றத்திற்கு ஆளாகிவிட்டா லும் கலைப்பு ஏற்படும். அத்தீய நடத்தையால் நிறு வனத்தின் தொழில் ஒருசார்பாகப் பாதிக்கப்பட்டால் தான் கலைப்பு ஏற்படும். கார்மிக்கேலுக்கும் ஈவான் சிற்கும் (Carmichael Vs. Evans) நடந்த வழக்கில் பயணச்சீட்டு இல்லாமல் ஒரு கூட்டாளி பயணம் செய்ததே நிறுவனக் கலைப்பிற்கான தீய நடத்தைக் குப் போதுமான மூலம் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. 4) கூட்டாளி ஒருவர், கூட்டு வாணிக ஒப் பந்தத்தை வேண்டுமென்றே அடிக்கடி மீறினாலும் அவமதித்தாலும் தொழில் நடத்துவதற்கு முடியாமல் போய்விடுகிறது. நிறுவனத் தொழிலில் ஏற்படும் இத் தடையால் நிறுவனக் கலைப்பு ஏற்படுகிறது. 5) கூட்டாளி ஒருவர், தமது பங்கை மூன்றாம் ஆள் ஒருவருக்குப் பிற கூட்டாளிகளின் ஒப்புதலின்றி மாற்றிவிட்டாலும் கலைப்பு ஏற்படும். 6) நிறுவனத் தின் தொழிலை இழப்பில்தான் நடத்தமுடியும் என்ற நிலை ஏற்பட்டாலும் நிறுவனம் கலைக்கப்படும். 7) இறுதியாக நிறுவனக் கலைப்பு ஏற்படுவது நியாய மானதாகவும் நேரடியானதாகவும் நீதிமன்றத்திற் குத் தோன்றினால் கலைப்பிற்கு அது கட்டளை பிறப்பிக்கும். நியாயமான, நேர்மையான என்ற சொற்கள் பொருள் பொதிந்து, கருத்தாழம் மிகுந்து காணப்படுவதால் மிகவும் எச்சரிக்கையுடன் கலைப் பைப் புகுத்தவேண்டும். இதை இறுதி வரையறை யாக வைத்துக்கொள்ள வேண்டும். விருப்பப்படியான கூட்டாண்மையாக இருந்தால் யாராவதொருகூட் டாளி நிறுவனக் கலைப்பு எண்ணத்தைப் பிற கூட்டாளிகளுக்கு அறிக்கை மூலம் தெரிவித்து நிறுவ னத்தைக் கலைக்கலாம்.

**கலைத்தலின் பின்விளைவு:** கலைத்தலுக்குப் பின் கூட்டு வாணிகம் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியாது. ஆனால், கலைப்பிற்கு வேண்டிய காலவரை யறை முடியும்வரை தேவை ஏற்பட்டால் தொழில் நடத்தலாம். நிறுவனச் சொத்துகளைத் திரட்டிக் கடன்களைக் கொடுத்துவிட்டு, ஏதாவது உபரித் தொகை இருந்தால் அதைக் கூட்டாளிகளிடையே பிரித்துக் கொடுப்பது இன்றியமையாதது. நிறுவனக் கலைப்புப் பற்றிப் பொது அறிக்கை கொடுத் தாலொழியப் பொறுப்புகள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும். நிறுவனச் சொத்து நிறுவனக் கடனை அடைப்பதற்குப் பயன்படுத்துவதைக் கூட் டாளிகள் வற்புறுத்தலாம். புதிய ஒப்பந்தங்களை ஏற் படுத்தக் கூடாது; புதிய வாணிகமும் தொடங்கக்

கூடாது. எஞ்சிய கூட்டாளிகள் கலைப்பதற்குத் தேவையான காலக்கெடு வரை வாணிகத்தை நடத்தும் உரிமையைப் பெற்றுள்ளார்கள். இறந்த கூட்டாளியின் சொத்து அவர் இறந்ததற்குப் பின் நிறுவனப் பொறுப்புகளுக்கான பொறுப்பாகாது. இறுதியில் நிறுவனத்தின் எல்லாச் சொத்துகளும் திரட்டப்பட்டு விற்கப்படுகின்றன.

கூட்டு வாணிக நிறுவனத்தின் சொத்து என்பது அது தொடங்கப்பட்டபோது அல்லது தோன்றிய பொழுது உள்ள எல்லாச் சொத்துகளையும் நாளடைவில் வாணிகம் நடந்துகொண்டே இருக்கும்போது வாங்கப்பட்ட சொத்துகளையும் குறிக்கும். இச் சொத்துகள் அனைத்தும் நிறுவனத் தொழிலுக்காகக் கூட்டாளிகளால் கையாளப்படுகின்றன. வாணிக நற்பெயர் (Goodwill) என்பது நிறுவனத்தின் தொழில் பொதுமக்களிடையே பெறும் பாராட்டுரையாகும். அது கண்ணுக்குப் புலனாகாத சொத்து. எனவே அதற்குப் பணமதிப்புத் தேவைப்படுகிறது. நிறுவனக் கலைப்பு ஏற்பட்டுக் கணக்குகள் தீர்க்கும்பொழுது, நற்பெயரையும் பிற சொத்துகளோடு சேர்த்து கூட்டாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கும் தன்மை பெற்றுள்ளது. அதையும் விற்கலாம்.அது விற்கப்படும்பொழுது, அதன் முழு உரிமையும் அதனை வாங்குவோருக்குச் சேர்வதால் அவர் நிறுவனப் பெயரைப் பயன்படுத்திப் பழைய வாணிகத்தை நடத்திச் செல்லலாம். விற்றவர் போட்டி வாணிகம் நடத்தத் தடங்கல் இல்லை. ஆனால், கூட்டு வாணிகச் சட்டத்தின் பிரிவு 55 (2) வாங்குவோருக்குச் சில பாதுகாப்பு அளிக்கிறது. அதாவது, வாங்குவோர் நற்பெயரை வாங்கும்போது சில தடைகள் விதிக்கலாம்.அதன்படி விற்போர் நிறுவனப் பெயரைப் பயன்படுத்த முடியாது. பழைய நிறுவனத் தொழிலைத் தானே நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளலாம். இவற்றின் விளைவாக வாங்குவோர் விற்போரிடம் அதே வகையான வாணிகத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குப் போட்டியாக நடத்தக்கூடாது என்று ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.அவ்வொப்பந்தம் நியாயமானதாக இருந்தால் அது ஒரு வாணிகத் தடையீடாகாது.

கூட்டு வாணிக நிறுவன அலுவல்கள் ஒரு முடிவிற்கு வரும்வரை நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் கூட்டாளிகளின் செயல்களும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். அதன்பின்னர் அவர்கள் அதிகாரம் மறைந்துவிடும். கணக்குகள் தீர்க்கும்பொழுது ஏதாவது இழப்பு ஏற்பட்டால், முதலில் அவ்விழப்பை ஆதாயத்திற்கெதிராகவும், பின்னர் மூலதனத்திற்கெதிராகவும் எழுதிக் கழித்திட வேண்டும். இவ்வாறு செய்தும் இழப்பு ஏற்பட்டால் அதைக் கூட்டாளிகள் தங்கள் ஆதாய இழப்புப் பகிரும் விகிதத்தில் பிரித்துக்கொள்ள வேண்டும்.நிறுவனத்தின் சொத்துகள், மூன்றாம் ஆளுக்குக் கொடுக்கவேண்டிய கடன்களுக்கும் கூட்டாளிகள் நல்கிய கடன்களுக்கும் போய்ச் சேரும். பின்னர்க் கூட்டாளிகளின் மூலதனங்களைத் திரும்பிக் கொடுக்கவும் அவை பயன்படும். உபரித்தொகை ஏதாவது இருந்தால் அதை ஆதாயமாகக் கூட்டாளிகள் தமக்குள் பிரித்துக் கொள்வார்கள். நொடித்த அல்லது வகையற்ற கூட்டாளி இருப்பாரேயானால், வகையுள்ள கூட்டாளிகளுக்குச் சுமை கூடும். அவர்களின் முழு மூலதன இருப்பும் திரும்பக் கிடைக்காமல் ஒரு பகுதியை இழக்க நேரிடும்.

கூட்டு வாணிகக் கடனும் தனிக்கடனும் கலந்த கூட்டுக் கடன்கள் இருந்தால், நிறுவனச் சொத்தைப் பங்கீடு செய்துகொள்வதற்குச் கடனீந்தோர் களிடையே போட்டி ஏற்படும். எனவே, இக்குழப்பத்தைத் தவிர்ப்பதற்குச் சட்டம் சில வரையறைகளை விதித்துள்ளது. அதன்படி நிறுவனக் கடனை அடைப்பதற்கு நிறுவனச் சொத்துகள் பயன்படும். நிறுவனச் சொத்தின் உபரி தனிக்கடனைத் தீர்க்கப் பயன்படும். அதேபோல் கூட்டாளிகளின் தனிச் சொத்தின் உபரி, நிறுவனக் கடனைத் தீர்க்கப் பயன்படும்.

கே.என்.இரா.

**துணை நூல்:**

Kuchal, M.C., Mercantile Law, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1981.

**கூட்டாண்மை நிறுவனத் தணிக்கை:** கூட்டாண்மையில் பல கூட்டாளிகள் (Partners) சேர்ந்து தொழில் செய்வதால் ஆதாயம், இழப்பு ஆகியவற்றைப் பகிர்வதில் கருத்து வேறுபாடுகளும் மனக் கசப்பும் உண்டாகும். அவற்றைத் தவிர்க்கக் கூட்டாண்மை நிறுவனத் தணிக்கை (Audit of Partnership Firm) உதவுகிறது.

கூட்டாண்மையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு தொழிலை நடத்தி அதில் வரும் ஆதாய இழப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்காக ஓர் ஒப்பந்தம் உருவாகிறது. இந்த ஒப்பந்தம் எழுத்து மூலமாகத்தான் இருக்கவேண்டும் என்ற தேவையில்லை. எடுத்துக் கொண்ட தொழிலை எல்லோரும் சேர்ந்தோ ஒருவர் மற்றவர் சார்பிலோ மேலாண்மை செய்யலாம். இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932-இன்படி கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் தணிக்கை செய்யப்படவேண்டும் என்று கூறப்பட வில்லை எனினும், கூட்டாண்மை நிறு

வனங்கள் தங்கள் தொழில் அல்லது வர்ணிகத்தைத் தொடங்கும் முன்னரே கணக்குகளைத் தணிக்கை யாளர் மூலம் சரிபார்க்க வேண்டும் என்ற ஒரு வரை யறையை ஏற்படுத்திக் கொள்கின்றன.

**தணிக்கையால் ஏற்படும் நன்மைகள்:** 1) யாரா வது ஒருவர் கணக்குகளைப் பதிவு செய்து பேரேட்டில் அவற்றை நிலையாகப் பாதுகாப்பதால் கூட்டாளி களின் இடையே எந்த ஒரு பிணக்கமும் ஏற்படாது. 2) இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932-இல், நிரு வாகத்தில் தலையிடாத கூட்டாளி (Sleeping Partner) பற்றிய தகவல் ஏதும் இல்லை. கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் வாணிகத்தில் பங்கு கொள்ளாமல் இருக்கும் கூட்டாளிகள் அந்த நிறுவனத்தில் எந்தத் தவறும் நடக்கவில்லை என்று திருப்தி அடைவார் கள். 3) தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் மூலம் ஒரு கூட்டாளியின் இறப்பு, விலகல், புதிய கூட்டாளி யின் சேர்ப்பு ஆகிய செயல்கள் நடக்கும்போது வாணிக நற்பெயரை (Goodwill) மதிப்பிடலும் கணக்குகளைத் தீர்த்து வைத்தலும் எளிதாக முடி யும். 4) சில சமயங்களில் கணக்குகளைச் சரிபார்க்கத் தணிக்கையாளர் புதிய வழிமுறைகளை எடுத்துச் சொல்வார்.

ஒருகூட்டாண்மை நிறுவனத்தில் புதிதாக அமர்த் தப்பட்ட தணிக்கையர் கவனிக்க வேண்டியவை:

1. தணிக்கையர் விதிமுறைகளைப் பற்றித் (Instructions). தெரிந்துகொள்ளவேண்டும். அவருடைய பணி அமர்தல் ஆணை (Appointment Order) விதிமுறைகள் பற்றிய விவரங்கள் கொடுக்கப் படாவிடில் உடனடியாக அவற்றை எழுதிப் பெற் றுக் கொள்ளவேண்டும். தணிக்கையர் இந்நிறு வனப் பகுதிநேரத் , தணிக்கையரா (Partial Audit), முழு நேரத் தணிக்கையரா (Complete Audit) எனத் தெரிந்துகொள்ள வேண்டும். தணிக் கையர் கணக்குகளை ஆணை முறையின்படி முழுமையாகத் தணிக்கை செய்யாவிடில் அதன் விளைவுகளுக்கு அவரேபொறுப்பு ஆவார்.
2. தணிக்கையரால் செய்யப்படும் தணிக்கை, வரு மான வரி (Income Tax) தொடர்புள்ளதாயிருந் தால் மத்திய வருவாய் வாரியத்தின் மூலம் (Central Board of Revenue) கொடுக்கப்பட் டுள்ள படிவத்தில் அறிக்கையை அனுப்பவேண் டும். அந்தப் படிவத்தில் தணிக்கையர் கீழ்க் காணுவனவற்றைக் குறிப்பிட வேண்டும்.
   - அ. தணிக்கையர் வேலை செய்தநிலை.
   - ஆ. நிறுவனத்தின் புத்தகங்கள் (Records) சரியா கவும் ஒழுங்காகவும் இருந்தநிலை.
   - இ. தணிக்கையருக்கு வேண்டிய எல்லா விவரங் களும் விளக்கங்களும் பெற முடிந்த நிலை.
   - ஈ. தணிக்கையர் கணக்குகளை வற்புறுத்தலின் றிச் சரி செய்து கொடுத்தநிலை.
3. கவனமாகக் கூட்டாண்மை ஆவண ஒப்பந்தத் தைப் (Agreement) படித்தநிலை.
4. கூட்டாளிகளின் அதிகாரங்களையும் கடமைகளை யும் (Duties and Responsibilities) அறிந்து கொண்டநிலை.
5. எந்தக் காலத்திற்கும் கணக்குகள் உண்டாக்கப் படும்படி இருந்த நிலை.
6. கூட்டாளி ஒவ்வொருவரும் வழங்கிய முதல்.
7. ஆதாய இழப்புகளைக் கூட்டாளிகள் பகிரும் விகி தம்.
8. எடுப்புக் குறித்த விதிகள் (Drawings), எடுப்பின் மீது வட்டி வசூலிப்பது, முதல் மீது வட்டி அளிப் பது.
9. நிறுவன ஆவணத்தில் சந்தேகம் இருந்தால் அதனை எழுதியவருடன் வழக்கறிஞர் (Pleader) கலந்தாலோசிப்பது.
10. வேறு வாணிகம் தொடங்கப்பட்டாலோ மற் றொரு பதிவு நிறுவனத்துடன் இணைத்தாலோ (Amalgamation) கணக்குகள் சரிவரச் செய்யப் பட்டுள்ளனவா என்பதைத் தணிக்கையர் கவ னிக்கவேண்டும்.
11. குறிப்புப் புத்தகத்தைச் (Minute Book) சரி பார்க்க வேண்டும்.
12. என்னென்ன புத்தகங்கள் பாதுகாக்கப்படுகின் றன என்ற ஓர் அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. இந்தக் கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்யப் பட்டுள்ளதா இல்லையா என்று பார்க்கவேண் டும்.
14. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதன் கிளை அமைப்புகள் இருந்தால், அக்கணக்குகளை இவர் தணிக்கை செய்ய வேண்டுமா இல்லையா என்று தெரிந்துகொள்ள வேண்டும்.
15. கூட்டாண்மை நிறுவனம் மூன்றாமவர்களுடன் ஏற்படும் ஒப்பந்தத்தைச் சரிசெய்தல் வேண்டும்.
16. ஒரு கூட்டாளி இறப்பு அல்லது விலகலின்போது

கணக்கு எவ்வாறு எழுதப்பட்டுள்ளது எனக் கவனிக்க வேண்டும்.

17. கூட்டு நிறுவனம் கலைக்கப்படும்போது(Dissolution) செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் பற்றிய குறிப்பு.

18. ஒரு கூட்டாளியின் இறப்பு மற்றும் விலகலின் போது நிறுவனத்தின் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது ஆகிய எல்லா நடவடிக்கைகளையும் தணிக்கையர் கவனிக்க வேண்டும்.

**தணிக்கையாளரின் பணி அமர்வு:** தணிக்கையர் கூட்டாண்மை நிறுவனத்தின் மூலமாக அமர்த்தப்பட வேண்டும். தணிக்கையர், நிறுவனத்தில் தலையிடாக் கூட்டாளிகளின் தணிக்கையராக (Auditor on behalf of Sleeping Partners) அமர்த்தப்படலாம். இவ்வகைக் கூட்டாளி முதலீடு போடுவது, ஆதாயம் பெறுவது மட்டுமே செய்வார். அவருடைய பொறுப்புகள் வரையறுக்கப்படவில்லை (Unlimited liability).அவர் வாணிகத்தில் தலையிட மாட்டார். பிற கூட்டாளிகள் வாணிகத்தை ஒழுங்காகக் கவனிக்காவிட்டால் அவர் ஆதாயத்தை இழந்துவிடுவார். எனவே, அவர் பிற கூட்டாளிகளின் அனுமதியுடன் தமக்கெனத் தணிக்கையாளரை அமர்த்தலாம்.

விலகும் கூட்டாளியின் தணிக்கையராக (Auditor on behalf of a Retiring Partner) தணிக்கையர் அமர்த்தப்படலாம். ஒரு நிறுவனத்தில் கூட்டாளி விலக வேண்டியிருந்தால் அவர் ஒரு தணிக்கையாளரைப் பணி அமர்த்தலாம். இத் தணிக்கையர் எவ்வாறு சொத்துகள் மதிப்பிடப்பட்டன, எங்ஙனம் கணக்குகள் சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வார்.

நோய்வாய்ப்பட்ட கூட்டாளியின் சார்பாகத் தணிக்கையாளர் (Auditor on behalf of the representative of a Diseased Partner) அமர்த்தப்படலாம். நோய்வாய்ப்பட்ட கூட்டாளி அல்லது இறக்கும் தறுவாயில் உள்ள கூட்டாளி தன்னுடைய பேராளராக ஒரு தணிக்கையரைப் பணியில் அமர்த்தலாம். இத் தனிக்கையர் ஆதாயம், நற்பெயர் மதிப்பீடு ஆகியன பற்றி ஆராய்வார்.

அயல்நாட்டில் நிலையாகத் தங்கியிருக்கும் கூட்டாளி தன் சார்பில் தணிக்கையரை (Auditor on behalf of a partner who is permenantly resident abroad) அமர்த்தலாம். ஒரு கூட்டாளி ஒரு நிறுவனத்தில் இருந்து விலகியவுடன் அவர் தம் பங்கு மூலதனத்தைத் (Share capital) திரும்பப் பெறாமல் அயல்நாட்டில் சென்று தங்கிவிடலாம். அக்காலத்தில் அவர் ஒரு தணிக்கையாளரைத் தம் பேராளராகப் பணி அமர்த்தலாம். அத் தணிக்கையர் அவர் வகைக் கூட்டாளிகளுக்குக் கிடைக்கும் ஆதாயம், முதல் மீதான வட்டி முதலியவற்றைச் சரிபார்ப்பார்.

**தணிக்கையாளர் அறிக்கை:** கூட்டாண்மை நிறுவனக் கணக்குகளைத் தணிக்கையர் மிகத் தெளிவான முறையில் தணிக்கை செய்து, அதில் கண்ட குறைகளைத் தணிக்கையாளர் அறிக்கையில் (Auditor's Report) சுட்டிக்காட்ட வேண்டும். தமது கடமையினைக் கருத்திற்கொண்டு, தெளிவாக ஐயத்திற்கு இடங்கொடாத வகையில் தணிக்கை அறிக்கையினைக் கூட்டாண்மை நிறுவனத்திற்கு அனுப்பவேண்டும். இவ்வறிக்கை ஒன்றைக் கொண்டுதான் நிறுவனத்தைப் பற்றிப் பொதுமக்கள் அறிந்துகொள்வர். பி.இரா.

**கூட்டாண்மைப் பதிவு:** நிறுவனங்களைப் பதிவு செய்து கொள்வதற்கு இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் வகை செய்கிறது. சட்ட முறைப்படி கூட்டு நிறுவனத்தைப் பதிவு செய்யாவிட்டால் அதன் பலன் மிகவும் கடுமையாகவிருக்கும். எனவே, ஒவ்வொரு நிறுவனமும் பதிவுசெய்ய முன் வருகிறது. இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைமுறைக்கு வந்தது. அச் சட்டத்தின் பகுதி 7-இல் பிரிவுகள் 56 முதல் 71வரை உள்ளவை பதிவு செய்யும் முறைகள் பற்றிய விவரங்களைத் தருகின்றன.

மாநில அரசுகள் நிறுவனப் பதிவாளரை ஒவ்வொரு மாநிலத்திலும் அமர்த்தி அவர்களின் பணி எல்லையை வரையறுத்தன. அவ்வெல்லைக்குள் அவர் அதிகாரம் செல்லுபடியாகும். அப்பதிவாளர் நிறுவனப் பதிவு அட்டவணை ஒன்று வைத்துக் கொள்ள வேண்டும். பதிவு செய்வதற்காக நிறுவனங்கள் அனுப்பும் விண்ணப்பத் தாள்களைப் பெற்றுச் செயலாற்றும் உரிமை அவருக்குண்டு. அவர் பதிவு செய்ய அனுமதிக்கவும் மறுக்கவும் உரிமை பெற்றுள்ளார்.

கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய விரும்புகிறவர்கள் குறிப்பிட்ட விண்ணப்பத் தாளில் தேவையான விவரங்களை எழுதிக் குறிப்பிட்ட பணம் செலுத்திப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். அவ்விண்ணப்பத்தில் நிறுவனத்தின் பெயர், தொழில் நடக்கும் இடம், கூட்டாளிகளின் முழுப் பெயர், முகவரிகள், நிறுவனத்தின் கால எல்லை, தலைமை இடம், தொழில் நடக்கும் பிற இடங்கள் போன்ற விவரங்களைக் கொடுத்தல் வேண்டும். விண்ணப்பத் தாளில் எல்லாக் கூட்டாளிகளும் கையெழுத்திட

வேண்டும் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பேராளர்கள் கையெழுத்திட வேண்டும். பதிவு அளித்தவுடனே அவ்விவரங்களை நிறுவன அட்டையில் குறித்துக்கொள்ள வேண்டும்.

அட்டவணையில் எழுதிய விவரங்கள் யாவும் நிறுவனம் பற்றிய உண்மைகளைக் கூறும் சான்றாகும். இவ்விவரங்களில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டால் அவைகளைப் பதிவாளருக்கு அறிவித்து அட்டவணையைத் திருத்த வேண்டும். பதிவாளரே தம் முயற்சியால் அவைகளைச் சரிசெய்து விடலாம்; அல்லது கூட்டாளிகள் அவைகளைத் திருத்துவதற்காக விண்ணப்பஞ் செய்யலாம்; அல்லது நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க அவர் அதைத் திருத்தி விடலாம் உரிய கட்டணம் செலுத்துவோருக்கு அட்டவணையைப் பார்வையிடவும் அதன் விவரங்களைக் குறிப்பெடுத்துக் கொள்ளவும் பதிவாளர் அனுமதிக்கிறார். விவரங்களை எழுதுபவர் தமக்குத் தெரிந்தே பொய்க் கூற்றுகளை விண்ணப்பத்தில் எழுதுவதைக் கூட்டாளிகள் அனுமதிக்கக் கூடாது. பொய்க் கூற்று இருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால் அவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கப்படும். தண்டனையானது மூன்று மாதச் சிறை வாழ்க்கையாக இருக்கலாம் அல்லது தண்டனைக்கீடான பணமாகவும் இருக்கலாம் அல்லது இரண்டும் சேர்ந்தும் இருக்கலாம்.

பதிவு எப்பொழுது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். வழக்குத் தொடுத்துவிட்டாலும் பரவாயில்லை. அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டுப் பதிவு செய்ய வேண்டலாம். புதிய வழக்கு பின்னால் தொடுக்கலாம். மேற்கூறிய சட்டக் கட்டுப்பாடுகள் அனைத்தும் வற்புறுத்தப்பட்டுச் செயலாற்றப்பட்டால் யார் கூட்டாளி, யார் கூட்டாளி இல்லை என்ற கடினமான வினாவிற்கு எளிதாக விடை கிடைக்கும்.

**பதிவு செய்யாமையின் விளைவு**: இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் 69-ஆம் பிரிவு பதிவு செய்யாததின் விளைவை விளக்குகிறது. ஒரு நிறுவனம், பதிவு செய்யாவிட்டாலும் நிறுவன அட்டவணையில் கூட்டாளிகளின் பெயர்கள் காணப்படாவிட்டாலும் நிறுவனத்தின் மீது எந்தக் கூட்டாளியும் வழக்குத் தொடுக்க முடியாது. ஒப்பந்தத்தால் எழுந்த எந்த உரிமையையும் வேண்டிப் பிற கூட்டாளிகள் மீது வழக்குத் தொடுக்க இயலாது. ஒப்பந்தத்தால் தோன்றிய உரிமையை நிலை நாட்டும்படி மூன்றாம் ஆட்கள் மீதும் வழக்குத் தொடுக்க முடியாது. எதிர் ஈட்டு (Set off) உரிமையை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது. ஒப்பந்த உரிமையை நிலைநாட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (Civil Court) வழக்குப் போட இயலாது. ஆனால் இவற்றால் பிற உரிமைகள் பாதிக்கப்படமாட்டா. எடுத்துக்காட்டாக, நிறுவனக் கலைப்பிற்காக வழக்குத் தொடுக்கும் உரிமையையும், கலைக்கப்பட்ட நிறுவனத்தின் கணக்குகளைக் கேட்கும் உரிமையையும், கலைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துகளை விற்பதற்கான உரிமையையும் பதிவு பெறாததால் ஏற்படும் விளைவு பாதிக்காது. அதேபோல் நொடிக்கப்பட்டவரின் சொத்தை விற்கும் உரிமையைப் பெற்ற அதிகாரியின் (Official Assignee) அதிகாரத்தையும் இது கட்டுப்படுத்தாது. அயல்நாட்டு நிறுவனங்கள் தொழில் நடத்தும் இடங்கள் இந்தியாவில் இல்லை என்றால் சட்ட உடன்பாடுகள் அயல்நாட்டு நிறுவனத்தையும் அதன் கூட்டாளிகளையும் பாதிக்கமாட்டா. நூறு உரூபாய்க்குக் குறைந்த எந்த எதிர் ஈட்டிற்கும் இச்சட்டம் பயன்படாது. கே.என்.இரா.

**துணை நூல்கள்:**

**Kuchhol, M.C.,** Mercantile Law, Vikas Publishing House (P) Ltd., New Delhi, 1981.

**Reddy, P.N., and S.S. Gulshaw,** Principles of Business Organization and Management, Eurasia Publishing House (P) Ltd., New Delhi, 1978.

**கூட்டாளி வகைகள்** கூட்டாண்மை நிறுவனங்களில் பங்கேற்கும் பலவகைக் கூட்டாளிகளைக் குறிக்கும். உழைக்கும் கூட்டாளி, உழைக்காத கூட்டாளி, பெயரளவுக் கூட்டாளி (Nominal Partner) முரண்தடைப்படி கூட்டாளி, அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி, ஆதாயத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி, பொறுப்பு வரைறுக்கப்பட்ட கூட்டாளி, உதவிக் கூட்டாளி எனப் பல்வகைக் கூட்டாளிகள் (Kinds of Partners) கூட்டு வாணிகத்தில் (Partnership Firm) காணப்படுகின்றனர்.

**உழைக்கும் கூட்டாளி**: கூட்டாளிகள் அனைவரும் ஒப்பந்தம் செய்து கொண்டாலும், அவர்களுள் உழைக்கும் கூட்டாளிகள் தாம் (Active & Working Partners) முன் நின்று மேற்பார்வை செய்து கூட்டு வாணிகத் தொழிலை நடத்துவர். நிருவாகத்தில் இவர்கள் முக்கிய பங்கெடுத்துக் கொள்கின்றனர். உழைக்கும் கூட்டாளிகள் செய்யும் மிகுதியான வேலைக்கு ஊதியம் பெறுகின்றனர். கூட்டு வாணிக நிறுவனச் செயலுக்காக ஏற்கும் பொறுப்பு மட்டும் எல்லாக் கூட்டாளிகளையும் சார்ந்ததேயாகும்.

**உழைக்காத கூட்டாளி**: முதல் மட்டும் அளித்து விட்டுத் தொழில் நடத்துவதில் பங்கேற்காதவரை

உழைக்காத கூட்டாளி (Dormant or Sleeping Partner) என்று குறிப்பிடுவதுண்டு. கூட்டு வாணிக ஒப்பந்தத்தில் இவர் பெயர் இடம் பெறுவதில்லை. மூன்றாம் மனிதர்களுக்கு உழைக்காத கூட்டாளியும் கூட்டாளி தான் என்று தெரியவந்தால் அவர்களுக்கு இவர் பொறுப்பாளியாவார்.

**பெயரளவுக் கூட்டாளி:** முதலும் வழங்காது தொழில் நடவடிக்கைகளில் பங்கும் கொள்ளாது தம் பெயரையும் நாணயத்தையும் கூட்டு வாணிகத்தில் பயன்படுத்திக்கொள்ளச் சில கூட்டாளிகள் அனுமதிப் பதுண்டு. அவர்களைப் பெயரளவுக்குக் கூட்டாளி என்று சொல்வதுண்டு. அவர்களுக்கு ஆதாயத்தில் பங்கு பெறும் உரிமை இல்லை. ஆனால் கூட்டு வாணிக நிறுவனத்தின் செயல்களுக்கு இவர் பொறுப் பாளியாவார். வழக்குத் தொடர்பான காரியங் களைத் தவிர்த்துப் பிற கூட்டு வாணிகக் காரியங் களுக்கு இவர் பொறுப்பாகமாட்டார்.

**அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி:** உண்மை யில் கூட்டு வணிகத்தின் கூட்டாளியாக இல்லாத ஒரு வர், தாம் ஒரு கூட்டாளியென்று மற்றவர் நம்புமாறு நடந்து கடன் வாங்கினால் அந்நிறுவனத்தின் சார்பாக அவர்தான் அக்கடனை அடைக்கவேண்டும். இத் தகைய கூட்டாளியை அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி (Partner by holding out) என்று கூறுவர்.

**முரண்தடைப்படி கூட்டாளி:** தாம் ஒரு கூட்டாளி இல்லை என்றறிந்தும் ஒருவர் தம்மைக் கூட்டாளி என்று மற்றவர் நம்புமாறு நடந்தும், அவர்கள் பேசு வதை மறுக்காமல் அனுமதித்தும் வருகிறார் என் றால், அந்நிலையில் மூன்றாம் ஆள் ஒருவர் இவரிடம் கூட்டு வாணிகத்திற்காகக் கடன் வழங்கினால் சட்டப் படி அக்கடனை இக்கூட்டாளிதான் மூன்றாம் ஆளுக்குத் தர வேண்டும். அவ்வாறு முரண்தடைப் படி கூட்டாளி (Partner by Estoppel) தாராத நிலை யில் மூன்றாம் மனிதர் இவர் மீது நிறுவனத்திற்காகக் கொடுத்த கடனை வசூல் செய்ய வழக்குத் தொடுக்க லாம். அதற்கு எடுத்துக்காட்டாக ஓய்வு பெற்ற கூட்டாளி தான் ஓய்வு பெற்ற செய்தியைப் பொது அறிக்கைமூலம் (பிரிவு 72-ன் படி) தெரிவிக்காமல் இருக்கும்போது, அவரை மூன்றாம் மனிதர் அப் போதுள்ள கூட்டாளி என்றே நம்புகின்றார். அத்த கைய கூட்டாளி எல்லாச் செயல்களுக்கும் பொறுப் பாளி ஆவார். ஆனால், நிறுவனத்தின் ஆதாயத்தில் அவருக்குப் பங்கில்லை. அவருக்கு இன்னல் மட்டு முண்டு. ஆனால் ஆதாயத்தில் ஒரு காசுக் கூடக் கிடைக்காது.

இசுகார்பிக்கும், சார்டினுக்கும் நடந்த வழக்கில் அ, ஆ என்பவர்கள் 'இ' நிறுவனம் என்ற பெயரில் வாணிகம் செய்தார்கள். ஈ என்பவர் அந்நிறுவனத் தில் சேர்ந்தார். அ என்பவர் ஓய்வு பெற்றார். ஆனால், பொது அறிக்கை விடவில்லை. அப்பெயரி லேயே அந்நிறுவனம் தொடர்ந்து செயலாற்றி வந் தது. ஒரு கடனீந்தோர் அ, ஆ, ஈ என்பவர்களுக் கெதிராக அ என்பவரையும் கூட்டாளியாக நினைத்து வழக்குத் தொடர்ந்தார். அ என்பவர் முரண்தடை அல்லது மறுக்காமை (Estoppel) என்ற அடிப்படை யில் பொறுப்பாளி ஆகிறார் என்று நீதிமன்றம் கருத்து வழங்கிவிட்டு மேலும் சொன்னதாவது: கடனீந்தோர்கள் உண்மைக்கும் முரண்தடைக்கும் வேறுபாடு அறிந்து, அவர்கள் வழக்குத் தொடர்வ தற்கு அ, ஆ அல்லது ஆ, ஈ ஆகியோர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அ, ஆ, ஈ என்று அனைவ ரையும் தேர்ந்தெடுக்கக் கூடாது. காரணம் 'ஈ'யுடன் 'அ' கூட்டாளியாக இருக்கவில்லை.

**ஆதாயம் மட்டும் பெறும் கூட்டாளி:** இழப்பை ஏற்கும் பொறுப்பில்லாமல் ஆதாயத்தை மட்டும் பகிர்ந்துகொள்ளச் சில கூட்டாளிகள் கட்டுப்பாடுகள் விதிப்பதுண்டு. அவர்களை ஆதாயம் மட்டும் பெறும் கூட்டாளிகள் (Partners in Profits only) எனக் குறிப்பதுண்டு. பிற கூட்டாளிகளிடையே அவர் ஆதா யத்தை மட்டும் பெறுகிறார். ஆனால், எவ்வித ஐயமு மின்றி மூன்றாம் மனிதர்களுக்கு அவர் பொறுப்பாளி யாகிறார். தொழிலின் நிருவாகத்தில் அவருக்குப் பங்கில்லை.

**பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டாளி:** இத்த கைய கூட்டாளி இங்கிலாந்து நாட்டில்தான் உண்டு. அந்நாட்டு வரையறுத்த கூட்டாண்மைச் சட்டப் படி ஒரு கூட்டு வாணிகத்தில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொதுக் கூட்டாளிகளும் ஒன்று அல்லது மேற்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டாளி களும் (Limited Partners) இருக்கலாம். பொதுக் கூட்டு வாணிகத்தில் காணப்படும் வரையறுக்கப் படாப்பொறுப்பு இங்குள்ள பொதுக் கூட்டாளிகளுக் குண்டு. ஆனால், வரையறுத்த கூட்டாளிக்குள்ள பொறுப்பு அவர்கள் வழங்கிய மூலதனத்தின் அள விற்கு மட்டுமேயாகும். இக் கூட்டாண்மை கட்டாய மாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இக் கூட்டாளி களுக்குத் தொழில் நிருவாகத்தில் பங்கு பெறும் உரிமை இல்லை. அவர்கள் முதலீடு செய்த முதலைக் கூட்டாண்மையுள்ளவரை திரும்பப் பெற முடியாது. தனியார் நிறுவனம் ஏற்படுத்தி வரையறுத்த பொறுப் புப் பெறும் நிலைமை 1908-ஆம் ஆண்டு முதல் ஏற் பட்டுவிட்டதால், மிகச்சில வரையறுத்த கூட்டு வாணி

கங்களே இங்கிலாந்தில் செயற்படுகின்றன. இந்தியாவில் இத்தகைய கூட்டாண்மைகள் இல்லை.

**உதவிக் கூட்டாளி:** ஒரு நிறுவனத்தின் ஆதாயத்தைப் பெறும் ஒரு கூட்டாளி அந்த ஆதாயத்தை மற்றொருவரோடு பகிர்ந்து கொள்ளலாம். இக் கூட்டாளிக்கும் மற்றொருவருக்கும் இடையே உதவிக் கூட்டாண்மை தோன்றுகிறது. அந்த மற்றொருவரை உதவிக் கூட்டாளி (Sub-Partners)என்று சொல்லலாம். அவர்கூட்டு வாணிகத்தின் கூட்டாளியாக மாட்டார். பிற கூட்டாளிகளுக்குள்ள எவ்வகை உரிமையும் இவருக்கில்லை. கே.என்.இரா.

**துணை நூல்:**

**Kuchhol M.C.,** Mercantile Law, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1981.

**கூட்டு இயல்:** புரட்சி முறைகளைத் தவிர்த்துச் சமநிலைக் கொள்கைகளை அமைதியான முறைகளின் மூலம், அரசு தனது வளத்தினையும் வலுவினையும் பயன்படுத்திச் சமுதாயத்தில் உரிய மாறுதல்களை ஏற்படுத்துவதே கூட்டு இயலின் (Collectivism) அடிப்படை இயல்பாகும்.

கூட்டு இயல் தனி மனித நலக் கோட்பாட்டிற்கு எதிரானதாகும். தனி மனித நலனைக் காட்டிலும் பொதுச் சமுதாயத்தின் பரவலான நலனே கூட்டு இயலில் பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. தனி மனித நலன்களின் முரண்பாடுகள் கூட்டு இயலில் தவிர்க்கப்படுகின்றன. கூட்டு இயல், ஒருவரை ஒருவர் சுரண்டி வாழும் தனி மனிதனின் முற்றுரிமையை இல்லாமல் ஆக்குகிறது. தனி மனிதனைக் காட்டிலும் சமுதாயம் சிறப்பிடம் பெறுகிறது. சமுதாய நலனுக்குப் பாதகமான தனி மனித ஆதாய நோக்கம் தகர்த்தெறியப்படுகிறது. கூட்டியல் என்பது சமுதாயத் தேன்கூடு போன்றதாகும். எல்லோரது உழைப்பும் பொதுநலனை உருவாக்கும் சமுதாயமாகக் கூட்டியலின் மூலம் அமையப்பெறுகிறது.

கூட்டு இயல் முதலாளித்துவத்திலிருந்து மாறுபட்டது. முதலாளித்துவத்தினால் ஏற்படும் பொருளாதாரச் சீர்குலைவுகள் இதனால் சரிசெய்யப்படுகின்றன. மிகப் பெரிய ஆதாயங்களினால் ஏற்படும் உபரி மதிப்பு (Surplus Value) கூட்டியலில் சமுதாயத்தினர் அனைவருக்கும் பங்கிட்டு அளிக்கப்படுவதால், முதலாளித்துவப் போக்கினால் ஏற்படும் பொருளாதாரச் சிக்கல்கள் கூட்டியலில் சீர்செய்யப்படுகின்றன. கூட்டியலில் அரசு மனித சக்தியினைச் சமுதாய நலம் கருதி முழுமையாகப் பயன்படுத்துகிறது. மனித உழைப்பு விரையமாக்கப்படாமல் சீராகவும் சிறப்பாகவும் பொருளாதார வளர்ச்சி கருதி நாட்டின் முன்னேற்றத்திற்காக முழுமையாகப் பயன்படுத்தப் படுவதால், நிறைவுடைய வேலைவாய்ப்புக் (Full Employment) கொள்கை நடைமுறைப்படுத்தப்பட ஏதுவாகிறது. அமைதியான, புரட்சியுள்ள மாற்றங்களுக்கு உட்படாத, இயற்கையோடு இணைந்த, இயல்பான சமநிலைச் சமுதாய அமைப்பு (Socialistic Society) முறையினை மனித சக்தியின் மூலம் உருவாக்குதலே கூட்டியலின் தலையாய இலட்சியமாகும்.

தங்கு தடையற்ற பொருளாதார, சமுதாய அமைப்பு முறைகளில், பெரும்பாலும் போட்டிச் சூழ்நிலைகள் நிலவுகின்றன. வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் போட்டியின் காரணமாகப் பணம் பெரிய அளவில் வீணாக்கப்படுகிறது. அதுவே சீரான அரசின் கொள்கைகளுக்கு உட்படும்போது வளர்ச்சிக்குத் தேவையான முதலீடு உருவாக்கிடக் காரணமாகிறது. சேமிப்பும் முதலீடும் குறைந்த அளவில் உள்ள நாடுகளில் அரசின் கொள்கைகள் பொருளாதார நலனை உருவாக்கிடத் தேவைகளாகின்றன. எனவே, முதலீட்டினைக் கருத்திற் கொண்டு, போட்டியின் காரணமாக விளைகின்ற பண விரயங்கள் கூட்டியலில் தவிர்க்கப்படுகின்றன.

போட்டிச் சூழ்நிலைகள் தவிர்க்கப்படுவதற்குக் கூட்டியலில் அரசின் நிருவாகம் காரணமாகிறது. உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றின் அடிப்படையில் பொருளாதாரம் முழுமையும் அரசின் நிருவாகக் கொள்கைகளால், கூட்டியலில் கட்டுப்பாட்டிற்கு உள்ளாகிறது. சமநிலை அல்லாத சமுதாய அமைப்பினை மாற்றி, இருக்கின்ற சமுதாயத்தின் தீமைகளை அகற்றுவதே கூட்டியலின் முக்கிய கொள்கையாகும். சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்குத் தனி மனிதனின் சொத்துடைமைகளே பெரிதும் காரணமாகின்றன. எனவே, கூட்டியலில் தனி மனிதனுக்குச் சொத்துடைமைகள் இல்லாமற் செய்யப்படுகின்றன. இயற்கையின் வளம் முழுமையும் எல்லோருக்கும் எல்லாமுமாய், பொதுவாகச் சீராகப் பயன்படுத்தப்பட்டு நியாயமான பகிர்விற்கு உள்ளாக்கப்படுகிறது.

நிலத்தின் வளங்களையும், வேளாண்மை மூலப் பொருள்களையும் அரசின் உடைமைகளாக்கி, அவை மக்களைச் சென்றடைவதே கூட்டியலின் முக்கிய நோக்கமாகும். போட்டியின்றிச் சமுதாயத்திற்குத் தேவையான இன்றியமையாத பொருள்கள் அனைத்தையும் ஒரு திட்டத்திற்கு உள்ளாக்கி வேற்றுமை இல்லாத சமுதாய அமைப்பினை உருவாக்குவது கூட்டியலின் கொள்கைகளுள் அடங்குகிறது.

கூட்டியலில், தொழிலில் ஈடுபடுவோருக்கு நியாய மான ஊதியத் திட்டம் உருவாக்கப்படுகிறது. வேளாண்மையையும் தொழில்துறைகளையும் மக்கள் பேராளர்கள் அடங்கிய குழுக்கள் வரையறுக்கின்ற கொள்கைகளுக்கேற்ப உருவாக்குதல் இதன் அடிப் படையாகும். வேறுபாடுகளுக்கு உட்படும் சமுதாய அமைப்பின் பொருளாதாரச் சூழ்நிலைகளை மாற்றி அமைத்தல் சிறப்பான வழிமுறையாகும். ஊதியம் அளித்தது போக மீதமுள்ள உபரி நிதியினைச் சமு தாயத்தினர் அனைவருக்கும் பொதுவாகப் பயன் படுத்திடும் கொள்கையைக் கூட்டியல் வலியுறுத்து கிறது.

வாழ்வியலின் இன்றியமையாத் தேவைகளைச் சமுதாயத்தினர் பெற்றிடும் ஊதியங்களே வரையறுக் கின்றன. ஒவ்வொரு தொழிலாளிக்கும், அவனுடைய வாழ்விற்கு ஏற்ற அளவு வசதிகள் பெறுவதற்கு வேண்டிய ஊதியம் கிடைக்கவில்லையாயின், அவன் எப்போதும் துயரத்திலேயே மூழ்கியிருப்பான். எனவே அடிப்படை ஊதியத்தைச் சட்டமுறைகளின்படி வழங் குதல் கூட்டியலின் ஊதியக் கோட்பாடாகும்.

கூட்டியலில் அமைப்பு முறைகளில் வேலையில் லாமையை நீக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை களுள் ஒன்றாகின்றது தவிர்க்க முடியாத காரணங்க ளால் தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட இயலா மற் போகின்றபோது, அவர்களுக்கு இன்றியமை யாத பொருள்களை அளித்து உதவுவதும் அரசின் கடமையாகிறது.

கூட்டியல் அமைப்பு முறைகளில், பயிர்த்தொழிற் பண்ணைகள் மக்கள் பேராளர்களால் நடத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு பயிர்த்தொழில் பண்ணையை யும் நடத்துவோர் அப்பண்ணையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் பேராளர்களாக இருத்தல் வேண் டும். பேராளர் குழுக்கள் இவ் வுரிமைகளைக் கையாள் வதில் குறிப்பிட்ட சிலரின் விருப்பத்திற்கு மட்டும் உள்ளாகிச் சீர்குலையாது இருப்பதற்கு வேண்டிய கட்டுப்பாடுகள் அமைக்கப்படுதல் வேண்டும்.

புதிதாக அறிவியல் ஆராய்ச்சியின் பயனாக, இயற்கை வளங்களைப் பொருளாதார நலனுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் பயன்படுத்துதல் கூட் டியல் அரசாங்கத்தின் மிக முக்கிய பணியாகும். சமுதாய வாழ்விற்கு இன்றியமையாத நலன்களைச் சட்டப்படி உருவாக்குதல் அரசின் கடமையாகும். பொருளாதார முன்னேற்றமும் சமுதாய நியாயமும் கூட்டியலின் தலையான நோக்கங்களாகும். வி.ஏ.

**துணை நூல்கள்:**

**Abba P. Lerner**, The Economics of Control, The Macmillan Company, New York, 1944.

**Gregory Grossman**, Economic Systems, Prentice-Hall of India, New Delhi, 1979.

**Paul R. Gregory**, and **Robert C. Stuart**, Soviet Economic Structure and Performance, Harper & Row Publishers, New York, Eyanstan, San Francisco, London, 1974.

**William Fellner**, Modern Economic Analysis, Mc Graw-Hill Book Company, INC, New York, Toronto, London, Kogakusha Company Ltd., Tokyo, 1964.

**கூட்டு இராணுவ நடவடிக்கை**: முப் படைகளும் (தரைப்படை, கடற்படை விமானப்படை கள்) கூட்டாகச் சேர்ந்து போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கூட்டு இராணுவ நடவடிக்கை என்பது பெயர். இரண்டாம் உலகப் போரில் இம் முறை கையாளப்பட்டதால், போர் முறையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. நிலப்படையையும் கடற்படை யையும் கி.பி. 1585-ஆம் ஆண்டில் ஒருங்கிணைத்து மேற்கு இந்தியத் தீவுகளில் ஒரு கூட்டு இராணுவ அமைப்பை ஏற்படுத்தி, வெற்றிகள் பெற்ற திரேக்கு (Drake), ஈண்டுக் குறிப்பிடத்தக்கவர். பின்னர் அந்த முறை வளரலாயிற்று. தெ.பா.

**கூட்டுக்கவர்ச்சிஅரசியக்கம்**: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தெற்கு, மேற்கு-மத்திய மேற்குப் பகுதிகளில் வாழ்ந்த வேளாண்குடித் தலைவர்களால் தொடங்கப்பட்ட இயக்கந்தான் கூட்டுக்கவர்ச்சி அரசியக்கம். சமுதாயத்தின் அடிமட்டத்தில் நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்தத் தீவிர இயக்கத்தின் குறிக்கோள். இந்த இயக் கத்திலிருந்து தொடங்கியதுதான் கூட்டுக் கவர்ச்சி அரசியக்கக் (Populists) கட்சி. இக்கட்சி கி.பி. 19 -ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கப்பட்டது. இருப்புப்பாதைப் போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்குதல், இலவசமாக வெள்ளி நாணயம் தயாரித் தல், ஏக போக உரிமைகளைத் தள்ளுபடி செய்தல், வருமான வரியைச் சீரமைத்தல் ஆகியவை இக்கட்சி யின் கொள்கைகள். அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பொதுநலனுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற வாதம் இன்றும் குடியானவர்களிடையேயும் நகர்ப் புறங்களில் வாழும் வறியோரிடையேயும் காணப் படுகிறது. ஆ.ஜா.

**துணை நூல்கள்:**

**Barry, N.P.**, An Introduction to Modern Political Theory, Macmillan, 1986.

**Debnam G.**, The Analysis of Power, Macmillan, 1986.

**கூட்டுக் குடும்பம்**: ஒரே வீட்டில் உறைந்து, ஒருங்கே சமைத்து உணவை உண்டு, கூட்டுச்சொத்து, பொது வழிபாடு ஆகியவற்றைக் கொண்ட, ஏதேனும் ஒரு வகையில் உறவினராகவுள்ள ஒரு குழுவே கூட்டுக்குடும்பம் எனப்படுகிறது. இதில் உறைவிடமும் உணவும் சொத்தும் அடிப்படைப் பண்புகளாகக் கொள்ளப்படுகின்றன. சில அறிஞர்கள் அடிப்படைக் குடும்பத்தை விடக் கூட்டுக் குடும்பம் (Joint Family) அதிகமான தலைமுறையினரைக் கொண்டது; அவர்கள் பொதுவாகச் சொத்து, வருமானம் மட்டுமன்றி ஒவ்வொருவரும் மற்றவர்களோடு சில உரிமைகளாலும் கடமைகளாலும் ஒன்றுபட்டவர்கள் எனக் கருதுகின்றனர்.

மேற்கண்டவற்றோடு, கூட்டுக் குடும்பமானது –சமூக, பொருளாதாரத் துறையில் தன்னிறைவுள்ள ஒரு குழு; இது வாழ்க்கையின் முக்கிய முடிவுகளை மேற்கொள்கிறது; அன்றாடத் தேவைகளோடு ஆயுட்காலத் தேவைகளையும் நிறைவு செய்கிறது; அன்புப் பிணைப்புகளையும் ஆழ்ந்த நம்பிக்கைப் பற்றுதல்களையும் (Deep Loyalties) கொண்டுள்ள ஓர் ஏரி; சமூக, பொழுதுபோக்கு, சமயச் செயல்களுக்கான ஒரு மையம் எனத் தெய்லரும் (Tylor) அவரது கூட்டாளிகளும் வலியுறுத்துகின்றனர்.

பீல்சு (Beals) ஆய்சர் (Hoijer) என்போர் கூட்டுக் குடும்பம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படைக் குடும்பங்களை உள்ளடக்கியது என்று கூறுகின்றனர். இவ்வடிப்படைக் குடும்பத்தினர் தாய் வழியிலோ தந்தை வழியிலோ இணைக்கப்பட்டிருப்பர். அதைப் போல, பெற்றோரும் மக்களுமாகவோ உடன்பிறப்புகளாவோ அமைவர். பொது உறையுள் மட்டுமல்லாது, சமூகப் பொருளாதாரக் கடமைகளும் இவர்களது வழக்கமான நெறிகளாகும்.

சாதாரணமாகக் கருக் குடும்பத்தைவிடக் கூட்டுக் குடும்பம் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட பெரிய குழுவாகவே இருந்துள்ளது. வேளாண் சமூகங்களிலும் வேளாண் குடும்பங்களிலும் ஓர் இயல்பான அமைப்பாகக் கூட்டுக்குடும்பம் காணப்படுகிறது. எனினும், வேறு தொழில்களை மேற்கொள்ளும் மக்க



கூட்டுக் குடும்பம்

ளிடையேயும், நகரங்களில் உறைவோரிடையேயும் கூட்டுக் குடும்பத்தைக் காணலாம்.

**செயல்கள்:** குழந்தைகளைப் பெறுதல், அவர்களை வளர்த்துச் சமூக உறுப்பினராக ஆக்குதல் (Socialization) மற்றும் பொருளாதார, சமய, பொழுதுபோக்கு, பண்பாட்டுச் செயல்களோடு ஒரு பாதுகாப்பு அமைப்பாகவும் கூட்டுக் குடும்பம் இருக்கிறது. குழந்தை பெறுதல் என்பது பல்வேறு சமூகங்களிலும் திருமணமாகிக் குடும்ப அமைப்புக்குள் நடைபெறுவதாகவே அமைந்துள்ளது. அவ்வாறு இல்லையேல் சமூக மதிப்பை அது இழந்துவிடுகிறது. மனிதனுக்கு ஒரு குழுவின் அல்லது சமூகத்தின் பண்பாட்டைக் கற்றுக் கொடுத்து விதிகளுக்குட்பட்டு நடக்கும் ஒரு சமூக உறுப்பினராக அவனை மாற்றும் பல்வேறு குழுக்களில் குடும்பம் இன்றியமையாத ஒன்றாக இருந்து வந்துள்ளது.

உறுப்பினர்கள் ஒரே தொழிலில் ஈடுபட்டு அதனின்று கிடைக்கும் வருமானத்தை ஒரு சேரச் சேர்த்து வைக்கும் அமைப்பாகவும் குடும்பம் அமைகிறது; அதுபோலவே வருவாயின் வேறுபாட்டை ஒதுக்கித் தத்தம் தேவைக்கேற்பச் செலவு செய்யவும் வகை செய்கிறது (Unit Production and Consumption) முன்னோர் வழிபாடு மட்டுமன்றிப் பொதுவாக ஒரு வழிபாட்டு மையமாகவும் கூடிப் பொழுதுபோக்கும் இடமாகவும் பண்பாட்டுக் கூறுகளை நடத்தும் ஒரு குழுவாகவும் அமைகின்றது. குழந்தைகளுக்கும் முதியோருக்கும் விதவைகளுக்கும் இயலாதோருக்கும் பாதுகாப்பு அளிக்கும் ஒரு சமூக அமைப்பு குடும்பம். கடைசியாக, சமூக விதிகளைச் செயற்படுத்தி மக்களை நெறிப்படுத்தும் சமூகக் கட்டுப்பாட்டு அமைப்பாகவும் இது இயங்குகிறது.

**நன்மைகள்:** கூட்டுக் குடும்பத்தில் ஒவ்வொருவரும் தத்தம் தேவைகளைத் தாமே நிறைவு செய்ய வேண்டிய அவசியமில்லை. அக்குடும்பத்தவர்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு ஒத்துழைக்கும் பாங்கை அதிகமாகக் காணலாம். இதனால் தேர்ந்த முறையில் செயற்பட வழி ஏற்படுகிறது. மேலும், செலவைக் குறைக்கும் (Economy) முறையிலும் கூட்டுக்குடும்பம் செயற்படுகிறது. பிற சமூகங்களில் அரசு மேற்கொள்ளும் சமூகப் பாதுகாப்பை இக்குடும்பமே மேற்கொண்டு வருகிறது. வேளாண் குடும்பங்களில் நிலங்கள் சிறு சிறு துண்டுகளாகச் சிதறிப் போகாமல் தடுக்கவும் உதவுகிறது.

**குறைகள்:** சோம்பிக் கிடப்போருக்கும் பாதுகாப்புக் கிடைப்பதால் உடல் உழைப்புக் குறைய வாய்ப்புள்ளது. ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டுக்குள் இயங்குவதால் ஒவ்வொருவரும் தத்தம் மனப்பாங்குக்கும் செயல்திறனுக்கும் ஏற்பச் செயற்பட்டுத் தம் முழு ஆளுமை வளர்ச்சி பெறத் தடையாக உள்ளது. ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் இருந்து செயற்படுவதால் கணவன் மனைவிக்குத் தேவையான தனிமை (Privacy) கிடைத்தல் அரிது. கூட்டுக் குடும்பம் என்ற குடையின் கீழ்ப்பொதுவாக இவர்கள் அதிகமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின்றனர் எனப் பலரும் எண்ணுகின்றனர்.

**மாற்றங்கள்:** கூட்டுக் குடும்பம் உடைந்து வருவதாகப் பல ஆதாரங்கள் கூறுகின்றன. மேலை நாடுகளில் குடும்பம் என்னும் சொல்லுக்கு கருக்குடும்பமே பொருளாகக் கொள்ளும் அளவிற்குக் கூட்டுக் குடும்பம் மறைந்து விட்டது. தொழில் மயமாதல், நகர்மயமாதல், செய்திப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான முன்னேற்றம், வேளாண்மையிலும் கிராமத் தொழில்களிலும் ஏற்பட்டுள்ள தொய்வு, புதிய சட்டதிட்டங்கள், புதிய சமூகக்கோட்பாடுகள்ஆகியவை இம்மாற்றங்களுக்குக் காரணிகளாகக்கொள்ளப்படுகின்றன.

மேலை நாடுகளில் தொடங்கிய இம்மாற்றங்கள் ஏனைய நாடுகளுக்கும் பரவத் தொடங்கியுள்ளன. இந்நாடுகளிலும் காலப் போக்கில் கூட்டுக் குடும்பம் மறைந்தொழியும் என்ற எண்ணம் அண்மைக் காலத்தில் பரவலாகக் காணப்பட்டது.

மேலை நாடுகளில் புதிய மாற்றங்கள் மின்னல் வேகத்தில் ஏற்படுகின்றன. பல்வேறுபட்ட தொழில்கள் பெருகுகின்றன. ஒரே இடத்தில் ஒரே தொழிலில் ஈடுபடும் வாய்ப்பு மங்குகிறது. இவற்றுள்பல, கல்வித் தகுதியை அடிப்படையாகக் கொண்டவை. வெவ்வேறு தொழில்களில் ஈடுபடுவதன் விளைவாக உடன்பிறப்புகளுடனோ பெற்றோருடனோ வசிப்பதற்கான வாய்ப்புக் குறைகிறது. தனித்தனியே தத்தம் மனைவி மக்களுடன் வாழும்.சூழ்நிலை ஏற்படுகிறது.

மேலை நாடுகளில் இம்மாதிரியான சமூகங்களில் தனித்துவம் (Individualism) மேலோங்கி நிற்கக் காணலாம். திருமணமானதும் ஒவ்வொருவரும் தனிக்குடும்பம் அமைக்கின்றனர். பெற்றோருக்கும் உடன் பிறந்தோருக்கும் எவ்வகையிலும் கடமைப்பட்டவர் அல்லர் என்னும் எண்ணம் பரவியுள்ளது. அவரவர் முயற்சிக்கும் வாய்ப்புக்கும் ஏற்பவே வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். முதியோரைப் பேணும் பணியை அரசோ அதற்கான நிறுவனங்களோ மேற்கொண்டு வருகின்றன. எனவே

இன்றைய புதிய குடும்ப அமைப்பானது மக்களைப் பெறுதல், நட்புணர்வு ஆகிய இரண்டு பணிகளை மட்டுமே செய்து வருவதாக ஆக்பர்ன் (Ogburn) என்ற அறிஞர் குறிப்பிடுகிறார். ஒரு நிறுவனமாக இருந்த குடும்பம் ஒரு தோழமைக் குழுவாக உருவெடுத்துள்ளதாக இலாக்கு (Locke) பர்கசு (Burgess) ஆகிய சமூகவியலறிஞர்கள் எண்ணுகின்றனர்.

ஆயினும், போலந்து நாட்டு உழவர் குடும்பங்களைப் பற்றி உலகச் சமூகவியல் மாநாட்டுக் குறிப்பு மாறுபட்ட ஒரு கருத்தைத் தெரிவிக்கிறது. இரண்டாம் உலகப் போருக்கு முன் பொருளாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு, சமூகக் கட்டுப்பாடு போன்ற பணிகளில் உள்ளூர்ச் சமுதாயம் குடும்பத்தின் பணிகளைப் பகிர்ந்து கொண்டதோடு அதற்கு உதவியும் செய்தது. நகர–தொழில் ச்மூகத்தில் உள்ளூர்ச் சமுதாய அமைப்பு முறியும்போது, அது மேற்கொண்ட பணிகளைப் பொதுத்துறை நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. எனவே, பெரும்பாலும் உள்ளூர்ச் சமுதாயமும் குடும்பத்திற்கு அப்பாற்பட்ட உறவுமுறைக் குழுக்களும் ஆற்றி வந்த பணிகளையே புதிய நிறுவனங்கள் ஏற்று வருகின்றன. குடும்பம் செய்துவந்த அடிப்படைப் பணிகள் பலப்பட்டுள்ள (Intensification) உணர்ச்சி இணக்கம் (Integrative–Expressive functlon) கல்வி ஆகிய பணிகளுக்கு இக்காலப் பெற்றோர் அதிக நேரத்தையும் குடும்ப வளத்தையும் தர வேண்டியுள்ளது.

மேலும், தொழில் மயமாகாத காலத்திலும் எல்லாக் குடும்பங்களுமே ஒன்றாக வாழ்ந்து ஒன்றாக உழைக்கும் கூட்டுக் குடும்பங்களாக இருந்ததில்லை. நிலமற்ற உழவர்களிடையேயும் தொழிலாளர்களிடையேயும், கைநுணுக்கத் துறையிலும் இளைய தலைமுறையினர் அவரவர் தனிமுயற்சியால் பொருளீட்டி வாழ்ந்து வந்துள்ளனர். இந்தியாவிலும் போலந்திலும் மற்றப் பல சமூகங்களிலும் இக்கூற்று உண்மையாகுமெனச் சமூகவியலார் அண்மைக் காலத்தில் ஏற்றுக் கொண்டுள்ளனர். பெரும்பாலான குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக இருந்திருக்கலாம்; ஆனால், வேறு பல குடும்ப அமைப்புகளும் சம்பிரதாய சமூகங்களில் இருந்து வந்துள்ளன. போலந்தில் அறுபத்தேழு விழுக்காடு முதியோர்கள் தம் மக்களுடன் ஒரே இல்லத்தில் வசிக்கின்றனர் என பிட்ரோசுக்கி (Piotrowski) கூறுகிறார். இக்குடும்பங்கள் மூன்று தலைமுறையினரைக் கொண்டவை. பகுதிநேர வேளாண்மையினர், கிராமத் தொழிலாளர்கள், நகரை ஒட்டிக் கிராமத்தினர் மற்றும் சில நகரமக்களிடையே இந்த மூன்று தலைமுறைக்குடும்பங்கள் புத்துணர்வு பெற்று வருகின்றன. இதனால் பகுதி நேர வேளாண்மைக் குடும்பங்களில் கணவன், மனைவி இருவருமே பண்ணையிலும் பண்ணைக்கு வெளியேயும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும், தாத்தாவும், பாட்டியும் பேரன் பேத்திகளை வளர்க்கவும் வழி உள்ளது. அதேபோல் மூத்த தலைமுறையினர் பண்ணையையும் இல்லத்தையும் கவனித்துக் கொள்ளும்போது இளைய தலைமுறையினர் வேறு பணிகளில் ஈடுபட்டுக் குழந்தைகளையும் பேணுகின்றனர். பெண்டிர் இல்லத்தை விட்டு வேறு பணிகளுக்குச் செல்லத் தொடங்கியதன் முக்கிய விளைவாகும் இது.

ஆயினும் இப்புதிய மூன்று தலைமுறைக் கூட்டுக் குடும்பம் சம்பிரதாய சமூகத்தில் காணப்பட்ட இத்தகு குடும்பத்தினின்றும் வேறுபட்டது எனச் சிலர் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, மார்கோசுகா (Markowska) என்னும் அம்மையார் முந்தைய குடும்பம் மூத்த ஆண்களின் அதிகாரத்தில் இருந்தது; இவர்கள் இளையோரின் விதியை விடப் பண்ணை நிருவாகத்திற்கே முதன்மை தந்தனர்; அவர் தம் தேவைகளை ஒரே குடும்பத்தில் உழைத்து உண்டு உறைவதன் மூலமே நிறைவு செய்ய முடிந்தது. இக்காலக் கூட்டுக் குடும்பம் இளைய தலைமுறையின் கட்டுப்பாட்டில் உள்ளது; அவர்கள் வேறு பணிகளில் ஈடுபட முடிகிறது; முதியோர் பண்ணையையோ இல்லத்தையோ நிருவகிக்கின்றனர்; குழந்தைகளைப் பேணுகின்றனர். எனவே, இதனை மாறுபட்ட கூட்டுக்குடும்பம்(Modified Extended Family) என்றே கூற வேண்டும்.

பொதுவான உறைவிடமே கூட்டுக்குடும்பத்தின் அச்சாணி என்னும் கருத்தை இப்போது ஏற்க மறுக்கின்றனர். இந்தியச் சமூகத்தில் தொழில் காரணமாக வெவ்வேறு இடங்களில் வசித்தபோதும் அடிக்கடி ஒன்று கூடி உறவாடி வருகின்றனர். தேவையையும் வாய்ப்பையும் பொறுத்து ஒருவருக்கொருவர்–பெற்றோரும் பிள்ளைகளும், அல்லது உடன் பிறந்தோர்களும் பொருளாதார உதவி செய்கின்றனர். மூதாதையர் இறந்த நாள்களை ஒரு சமயச் சடங்காகக் கொண்டாடுவதற்காக ஒன்று சேருகின்றனர். நிலமோ வீடோ பொதுச் சொத்தாகக் கொண்டுள்ளனர். எனவே, இத்தகு மனித உறவுகளின் தன்மையைக் கொண்டே குடும்பத்தை அறிய வேண்டும் என தேசாய் (Desai), கபாடியா (Kapadia) மற்றும் பலர் கூறுகின்றனர். பொதுவான உறையுள் குறைந்து வந்தாலும் கூட்டுக் குடும்ப உணர்வு உள்ளதா இல்லையா என்பதைக் கொண்டு இக்காலக் குடும்பத்தைப் பகுக்க வேண்டும் என்பது இவர்கள் கருத்தாகும்.

இந்தியாவிலுள்ள மகுவா கிராமத்தில் தனியே உறையும் குடும்பங்களில் 95 விழுக்காடு-சிறிதளவோ, கூடுதலாகவோ கூட்டுக் குடும்ப உணர்வு மிகுந்துள்ளது. இந்த உணர்வு கிராமங்களை விடச் சிறு நகரங்களில் அதிகமாக உள்ளதாகக் கபாடியா கூறுகிறார். தில்லியிலுள்ள அகர்வால் (Agarwal) சமூகத்தில் நான்கில் மூன்றுபேர் கூட்டுக் குடும்பங்களில் வாழ விரும்புகின்றனர்.

வேளாண் சமூகங்களில் பொது உறையுளை அடிப்படையாகக் கொண்ட கூட்டுக் குடும்பங்கள் பரவலாகக் காணப்பட்டன. அடிப்படைப் பொருளாதார, சமூக மாற்றங்களால் இப்போது உறையுள் மாறியதைக் கொண்டு கூட்டுக் குடும்பமே மறைந்து வருவதாகக் கருதினர் சமூகவியல் அறிஞர்கள். ஆனால், வளர்ச்சியடைந்த மேலை நாடுகள் போலன்றிப் பிற சமூகங்களில் நெருங்கிய உறவினர்கள் தனித்தனியே குடியிருந்தாலும் கூட்டுக்குடும்பத்தின் மற்றப் பல கூறுகள் மறையாததோடு அவற்றுள் சில கூறுகள் உறுதிப்பட்டும் வருவதை அண்மைக் கால ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. சில சமூகங்களில் பொது உறையுள் மீண்டும் வேரூன்றத் தொடங்கியுள்ளது. எனவே, கூட்டுக் குடும்பம் உலகெங்கிலும் மறைந்து வருகிறது என்னும் கூற்றுக்குப் போதிய ஆதாரமில்லை. யு.ஆர்.கா.

**துணை நூல்கள்:**


**Beals, Ralph L and Harry Hoijer**, An Introduction to Anthropology, The Macmillan Co., New York, 1959.

**Burgess E.W. and H. Locke**, The Family, New York, 1953.

**Desai, I. P.**, Some Aspects of Family in Mahuva, Asia Publishing House, New York, 1964.

**Shah, A. M.**, The Household Dimension of the Family in India, Orient Longman, New Delhi 1973.

**Taylor, Carl C.**, Douglas Ensminger, Helen Johnson, and Joy Zean, India's Roots of Democracy, oriented Longmans Ltd., Bombay, 1965.


**கூட்டுப் பகுப்பாய்வு** மக்கள் தொகையியலில் திருமணம், பிறப்பு, இறப்புப் போன்ற நிகழ்ச்சிகளுள் ஒரு நிகழ்ச்சி நடக்கக்கூடிய வாய்ப்பு நேரம் முதற்கொண்டு அந்நிகழ்ச்சி நடந்து முடியும் நேரம் வரை உள்ள கால இடைவெளி பற்றிய ஆய்வுகளைக் குறிக்கும். 'கூட்டு' (Cohort) என்பது வாழ்க்கைக் காலத்தில், முக்கியமான நிகழ்ச்சியினைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் அனுபவித்த தனி ஆள்களின் தொகுப்பு. இதனைப் பொதுவாக ஒரு குறிப்பிட்ட காலத்தில் திருமணம், பிறப்பு, இறப்புப்போன்ற உயிரியல் நிகழ்வுகளுள் (Vital events) ஒன்றை அனுபவித்தவர்களின் குழு என்று வரையறுக்கப்படுகிறது. இவற்றுள் எந்த நிகழ்ச்சி ஆராயப்படுகிறதோ அந்நிகழ்ச்சி நிகழும் வாய்ப்பு நேரம் தொட்டு அந்நிகழ்ச்சி நடந்த நேரம்வரை உள்ள கால இடைவெளியை ஆய்வு செய்தல், கூட்டுப் பகுப்பாய்வின் (Cohort Analysis) முக்கிய நோக்கமாகும்.

எடுத்துக்காட்டாக $E_2$ என்னும் ஆய்வுக்குரிய நிகழ்ச்சி $E_1$ என்ற நிகழ்ச்சிக்குப் பிறகுதான் ஏற்படக்கூடும் எனக் கொண்டால் $E_1$ நிகழும் நேரம் $T_1$, $E_2$ நிகழும் நேரம் $T_2$, கூட்டுப் பகுப்பாய்வு $t=T_2-T_1$. கூட்டுப்பகுப்பாய்வு குறிப்பிட்ட இடைவெளிக் காலத்தின் பரவலையும் அதன் திணையியல் நிலை அளவுருக்களையும் (Parameters) பற்றி ஆராய்கிறது. இவை எவ்வாறு $T_1$- ஐப் பொறுத்து மாறுபடுகின்றன என்பதனையும் ஆய்வு கருத்திற் கொள்கிறது. ஒரு கூட்டின் ஒட்டுமொத்த நடக்கையை எடுத்தியம்பும் திணையியல் நிலை - அளவுருக்களைக் கொண்டு பல கூட்டுகளின் நடக்கையை ஒப்பாய்வு செய்ய முடியுமாதலால் திணையியல் நிலை-அளவுருக்களைக் கொண்டு நிகழ்வுகளின் பரவல்கள் ஒப்பாய்வு செய்யப்படுகின்றன.

கூட்டுப் பகுப்பாய்வு பற்றிய கருத்துகள் நீண்ட காலத்திற்கு முன்னரே வரலாறு, செய்தித்துறை ஆகியவைகளில் பயன்படுத்தப்பட்டுத் 'தலைமுறை' (Generation)என்ற பெயரில் அமைக்கப்பட்டு வந்தது. 'தலைமுறை' என்ற சொல் பல விளக்கங்களை உள்ளடக்குவதால் எளிதில் தவறான பொருள் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. தலைமுறை என்னும் சொல் கால இடைவெளி, வரலாற்றுக் காலத்தின் அடையாளம் (Identification of an Era), இனப் பெருக்கத் தொடர்பு, பெற்றோர் குழந்தை உறவு ஆகிய மக்கள் தொகையியலின் (Demography) கூறுகள் ஆகிய பலவற்றையும் குறிக்கும். இறுதியில் 'கூட்டு' என்ற சொல்லானது காலத்தால் அல்லது நிகழ்வு நேரத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு தொகுதியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

கூட்டுப் பகுப்பாய்வு முறை இக்காலத்தில் அறிவியலிலும் வாழ்வியலிலும் அவற்றின் பல உட்துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக மக்கள்தொகையியல், கொள்ளைநோய் இயல்(Epide-

miology) மருத்துவ இயல், தொழில்துறையியல், தரக் கட்டுப்பாட்டு இயல் ஆகிய ஆய்வுகளில் பரவலாகப் பயன்படுகிறது.

**கொள்ளைநோய் இயல்:** கூட்டுப் பகுப்பாய்வு முறை கொள்ளைநோய் இயலின் நோய்த் தொடர்புடைய, நோய்க்குக் காரணமான கருது கோள்களைப் (Hypothesis) பற்றி ஆராய்ச்சி செய்ய உதவுகிறது கொள்ளைநோய் இயலில் கூட்டுப் பகுப்பாய்வின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளாவன: அ) நோய்களின் தோற்றம், குணநலன்கள், ஆகியவற்றைக் கொண்டு மக்கள், குழு அல்லது குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ஆ) பின்னர், காலப்போக்கில் இக் குழு அல்லது குழுக்களில் ஏற்படும் நோயின் அடுக்கு நிகழ்வுகள் கண்காணிக்கப்படுகின்றன.

கொள்ளைநோய் இயல் துறையில் நிகழ்ச்சியின் நேர்ச்சியின் (Occurrence of an event)அடிப்படையில் இறந்தகால (Restrospective) எதிர்காலக் (Prospective) கூட்டுப் பகுப்பாய்வுகள் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இறந்தகாலப் பகுப்பாய்வுகளில் ஆய்வுக்கான நிகழ்ச்சிகள், அனைத்துக் காரணங்களும் விளைவுகளும் ஆய்வில் சேர்க்கப்படுவதற்கு முன்னரோ அல்லது ஆய்வு நடத்தப்படுவதற்கு முன்னரோ நடைபெற்றவையாகும். எதிர்காலப் பகுப்பாய்வுகளில் நோய்க்கான காரணங்கள் ஆய்வு தொடங்கப்படுவதற்கு முன் நிகழ்ந்தோ நிகழாமலோ இருக்கலாம். ஆனால், நோய் தாக்கப்பட்டிருக்கக் கூடாது. ஆய்வாளர், ஆய்வுக்குட்படும் உறுப்பினர்களிடையே அந்நோய் தோன்றும்வரை காத்திருக்க வேண்டும்.

**மக்கள்தொகை இயல்:** கூட்டுப் பகுப்பாய்வு முறை மக்கள்தொகை இயலில் விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. சிறப்பாகக் கருவளம், இறப்பு நிலை (Mortality) ஆகிய ஆய்வுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இறப்பு நிலைத் துறையில் கூட்டுப் பகுப்பாய்வு முறை பெரும்பாலும் ஆயுள் அட்டவணையை (Life Table) அமைக்கப் பயன்படுத்தப் படுகிறது. இயற் கூட்டு (Natural Cohort) அல்லது 'தலைமுறை ஆயுள் அட்டவணை' ஒரே காலத்தில் பிறந்தவர்களின் இறப்பை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் அவ்வாய்வு இறப்பின் காரணமாக எத்தனை உறுப்பினர்கள் குறைந்துள்ளனர் என்று மதிப்பிடுகிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் இறப்புகளைக் கொண்டு வயதுக் குறியீடிட்ட இறப்பு வீதங்கள் (Indexed Mortality Rate) கணிக்கப்படுகின்றன. இவ்வாறு கணிக்கப்பட்ட இறப்பு வீதங்களைப் பயன்படுத்தி ஒரு கருதுகோள் கூட்டில் (Hypothetical Cohort) எழுதப்படும் இறப்புச் செய்திகளை ஆயுள் அட்டவணையாகத் தொகுக்கும்போது அதனைச் செயற்கைக் கூட்டு (Synthetic Cohort) அல்லது 'தொடர் செயற்கை ஆயுள் அட்டவணை' (Synthetic Cohort Life Table) எனக் கூறுகின்றனர்.

கருவளத்துறையில் (Fertility) கூட்டுப் பகுப்பாய்வு ஒரு புதிய தொடக்கமேயாகும். ஒரே ஆண்டில் பிறந்த மகளிரை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய மகப்பேற்று அனுபவத்தைப் பகுப்பாய்வு செய்யுங்கால் அதைக் கூட்டுக் கருவளப் (Cohort Fertility) பகுப்பாய்வு என்பர். பிறப்பால் மட்டுமல்லாமல் திருமணத்தாலும் கூட்டுகளை வரையறுக்க முடியும். திருமணங்களும்மகப் பேறும் பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்படுதலால், கூட்டுக் கருவளப் பகுப்பாய்வு கூட்டுகளின் நடக்கையையும் நிகழ்ச்சிகளையும் மாறுபடும் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளின் பாதிப்புகளையும் பிரித்தறியப் பயன்படுகிறது.

கூட்டுப் பகுத்தாய்விற்குத் தேவையான புள்ளி விவரங்கள் நான்கு முறைகளில் சேகரிக்கப்படுகின்றன. அவையாவன: அ) பதிவேடுகள், ஆ) கூட்டுப் பகுப்பாய்வில் உள்ள தனி ஆட்களால் கொடுக்கப்படும் புள்ளி விவரங்கள், இ) மருத்துவ ஆய்வுகள், இறப்பு ஆய்வுகள் ஆகியன மூலம் பெறப்படும் புள்ளி விவரங்கள், ஈ) கூட்டுப் பகுப்பாய்வில் உள்ள ஆள்கள் வேலை செய்யும் அல்லது வாழும் சூழ்நிலைகளைப் பற்றிய புள்ளி விவரங்களும் அச் சூழ்நிலைகளிலிருந்து பெறப்படும் புள்ளி விவரங்களும்.

வாழ்நேரப் (Survival Period) பகுப்பாய்வில் கூட்டில் உள்ள தனிப்பட்ட ஆள்களுக்கு வேறுபட்ட கால அளவில் வீழ்ச்சி (Failure) நேரக்கூடும். தனி ஆளுக்கு ஒரே ஒருமுறை தான் வீழ்ச்சி நேரும். வீழ்ச்சிக்கான நேரத்தை அளவிடத் தேவையானவை: அ) வரையறுக்கப்பட்ட ஐயமற்ற தொடக்க காலம், ஆ) ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்தை அளக்கப் பயன்படும் 'அளவை', இ) வீழ்ச்சி என்பதன் விளக்கமான பொருள்.

வீழ்ச்சிக்காலம் சரியாக வரையறுக்கப்பட முடியாத குறைவுபட்ட விவரங்கள் தடைநேர்ந்த புள்ளி விவரங்கள் (Censored Data) எனப்படுகின்றன. இத் தடைகள் நொடிப்பொழுதில் நிகழ்வதால் தடை நேர்ந்த காலம் பதிவு செய்யப்படவேண்டும். தடை நேர்ந்த புள்ளிவிவரங்களைக் கூட்டுப் பகுப்பாய்வில் பயன்படுத்தும் முறைகள் வகைப்படுத்திப் பகுத்தாயப்

படுகின்றன. தடைநேர்ந்த புள்ளிவிவரங்களைக் கூட்டுப் பகுப்பாய்வில் பயன்படுத்தாவிடில் ஆய்வின் கண்டுபிடிப்பில் பிழை ஏற்படக்கூடும். இப்பிழையின் அளவு, வீழ்ச்சிக்கும் தடைக்கும் உள்ள தொடர்பின் திறனைப் பொறுத்துள்ளது.அதுமட்டுமன்றி ஆய்வின் கண்டுபிடிப்பில் தேர்திறத்தாலும் (Selectivity) பிழைகள் நிகழக்கூடும். இது முக்கியமாக இறந்தகாலப் பகுப்பாய்வில் ஏற்படக்கூடியது. எடுத்துக்காட்டாக இரண்டாம் குழந்தைப் பிறப்புக்கும் மூன்றாம் குழந்தைப் பிறப்புக்கும் இடையே உள்ள இடைவெளியை ஆய்வு செய்யும்போது, கணக்கெடுப்பின் போது மூன்றாம் குழந்தை பெறாத பெண்கள் விடுபடக்கூடும். இப்படி விடுபட்டவர்களின் மக்கட்பேறு இடைவெளிகள் விடுபடாதவரின் மக்கட்பேறு இடைவெளிகளிலிருந்து எவ்வளவு வேறுபட்டிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆய்வின் கண்டு பிடிப்பில் பிழை நிகழக்கூடும்.

இக்காலத்தில் 'வீழ்ச்சி மாதிரிப் படிவங்கள் (Hazard Models) கூட்டுப் பகுப்பாய்வை நடத்தப்' படுத்தப்பயன்படுகின்றன. மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் வீழ்ச்சி வீதமானது மாதிரி வீழ்ச்சி வீதத்தின் குறிப்பிடப்பட்டபங்கு என்று கருதிக் கொள்வதாகும். அது திணையியல் நிலையளவுரு கொண்டோ கொள்ளாமலோ இருக்கலாம் மாதிரி வீழ்ச்சி வீதம் குறிப்பிடப்படாத மாதிரிப் படிவங்கள் திணையியல் நிலை அளவுரு இல்லாப் படிவங்களாகும். மாதிரி வீழ்ச்சி வீதத்தின் சார்பமைப்பு (Functional Form) குறிப்பிடப்பட்டால் பெறப்படுவது திணையியல் நிலை அளவுரு மாதிரிப் படிவமாகும்.

என்.த.

**துணை நூல்கள்:**

**Charles Worth, B.,** Evoluation in age structured Populations, Cambridge University Press, Cambridge, 1980.

**Cox, D.R.** and **Oakes, D.,** Analysis of Survival Data, Champman and Hall, London, 1984.

**Kalbfleish, J.D.** and **Prentice, R.L.,** The Statistical Analysis of Failure time data, Wiley,Newyork, 1980.

**MacMahon, N.** and **Pugh. T.F.,** Epidemiology: Principles and Methods, Little Brown Company, Boston, 1970.

**கூட்டுப் பங்கு நிறுவனக் கணக்குகள்:** பலர் ஒன்று கூடி ஒரு பொது நோக்கத்திற்காக முதல் செலுத்தி உருவாக்கும் வாணிகஅமைப்பு கூட்டுப்பங்கு நிறுவனம் அல்லது நிறுமம் (Company) என்று கூறப் படுகிறது. நிறுவனத்தின் முதலில் (Capital) உறுப்பினர்களுக்கு உரிய பகுதி, பங்குகள் (Shares) எனப் படுகிறது. இப்பங்குகள் மாற்றக்கூடியவை. நீண்ட ஆயுளும், வரையறு பொறுப்பும் (Limited liability) உடைய கூட்டுப்பங்கு நிறுவனங்கள் (Joint stock Companies) சட்டத்தின் கண்களில் தனி ஆள் தன்மை பெற்றவை. இவை தம் பெயரிலேயே சொத்துகளை வாங்கவும் பயன்படுத்தவும் விற்கவும் இயலும்.

இந்திய நிறுவனச் சட்டம் 209-ஆம் பிரிவின்படி நிறுவனத்தின் நிலையை உண்மையாகவும், சரியாகவும் காட்டுவதற்குத் தேவையான கணக்குகள் அனைத்தையும் ஒவ்வொரு நிறுவனமும் வைத்திருக்க வேண்டும். தனி நிறுவனங்கள் பங்குகளைப் பொது மக்களுக்கு வெளியிட இயலாது. பொது நிறுவனமே விவர அறிக்கையின் (Prospectus) மூலம் தமது பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய அழைப்பு விடுக்கும்.

கூட்டுப்பங்கு நிறுவனங்கள் தங்கள் பங்குத்தொகை முழுவதையும் ஒரே சமயத்தில் பெறுவதில்லை.அவை பல தவணைகளாகப் பெறப்படுகின்றன. முதலில் பங்கு விண்ணப்பத்துடன் (Share Application) சிறிது தொகையும், பின்னர்ப் பங்கு ஒதுக்கீட்டின் போது (Share Allotments) சிறிது தொகையும் பெறப்படுகிறது. எஞ்சியுள்ள தொகை அழைப்புகளின் பெயரில் பெறப்படுகிறது. இத்தொகைகள் அனைத்தும் பங்குமுதல் கணக்குக்கு (Share Capital)மாற்றப் படுகின்றன. இவற்றுக்கான பதிவு முறைகளாவன;

அ) வங்கி க/கு ப
பங்கு விண்ணப்பக் க/கு
(விண்ணப்பத் தொகை பெற்றது)

ஆ) பங்கு விண்ணப்பக் க/கு ப
பங்கு முதல் க/கு
(விண்ணப்பத் தொகையை முதல் கணக்கிற்கு மாற்ற)

இ) பங்கு ஒதுக்கீட்டுக் கணக்கு ப
பங்குமுதல் கணக்கு
(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது; முதல் கணக்கிற்கு மாற்றியது)

ஈ) வங்கி க/கு ப
பங்கு ஒதுக்கீட்டுக் கணக்கு
(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது)

உ) பங்கு முதலாம் அழைப்புக் கணக்கு ப
பங்கு முதல் கணக்கு
(பெறவேண்டிய முதலாம் அழைப்புத் தொகை பங்குமுதல் கணக்கிற்கு மாற்றியது)

உ) வங்கி க/கு ப
பங்கு முதலாம் அழைப்புக் கணக்கு
(முதலாம் அழைப்புத் தொகை பெற்றது)

எ) பங்கு இறுதி அழைப்புக் க/கு ப
பங்கு முதல் கணக்கு
(இறுதி அழைப்புத் தொகை பெற வேண்டியது)

ஏ) வங்கி க/கு ப
பங்கு இறுதி அழைப்புக் க/கு
(பங்கு இறுதி அழைப்புத் தொகை பெற்றது)

கூட்டுப்பங்கு நிறுவனங்கள் நேர்மைப் பங்குகள் (Equity Shares), முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares) என இருவகையான பங்குகளை வெளியிடும் போது அவற்றைத் தனித்தனிக் கணக்கேடுகளில் பதிவு செய்யவேண்டும். உறுப்பினர்கள் அழைப்புத் தொகை (Call Account) செலுத்தத் தவறும்போது நிலுவையிலுள்ள அழைப்புத் தொகை அமைப்பு நிலுவைக் (Calls in Arrear) கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. எடுத்துக்காட்டாகச் சில பங்கு களின் மீது இறுதி அழைப்புத் தொகை பெறப்பட வில்லையாயின், கீழ்க்காணும் பதிவு செய்யப்படும்.

வங்கி க/கு ப
அழைப்பு நிலுவை க/கு ப
பங்கு இறுதி அழைப்புக் க/கு
(இறுதி அழைப்புத் தொகை பெற்றதும் நிலுவையும்)

நிலுவையின் மீது 5 விழுக்காடு வட்டி வசூலிக்கலாம். இருப்புநிலைக் குறிப்பில் (Balance Sheet) பங்கு முதல் தொகையிலிருந்து அழைப்பு நிலுவை கழித்துக் காண்பிக்கப்படுகிறது. இதுபோன்ற சில உறுப்பினர் கள் தாம் செலுத்தவேண்டிய தொகையை முன் கூட்டியே செலுத்தும்போது அத் தொகையை முன் கூட்டிச் செலுத்தப்பெற்ற அழைப்புக் கணக்குக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தொகையின் மீது 6 விழுக்காடு வட்டி கொடுக்கப்படலாம்.

வங்கி க/கு ப
முன்கூட்டிச் செலுத்தப்பெற்ற அழைப்பு க/கு
(அழைப்புத் தொகை முன்கூட்டிச் செலுத்தப் பெற்றது)

இருப்புநிலைக் குறிப்பில் 'பங்குமுதல்' என்னும் தலைப்பின்கீழ் 'முன்கூட்டிச் செலுத்தப்பெற்ற அழைப்புத் தொகை' (Calls in Advance) தனியே காண்பிக்கப்படுகிறது.

கூட்டுப்பங்கு நிறுவனம் தன்னுடைய பங்குகளை அவற்றின் பெயரளவு மதிப்பிலும் அதிகத் தொகை யில் வெளியிடலாம். எடுத்துக்காட்டாக, உரூ. 100/- மதிப்புள்ள பங்கு ஒன்றினை உரூ. 105/-க்கு வெளி யிடலாம். மிகுதியாகப் பெற்ற உரூ. 5/- முனைமக் கணக்குக்கு எடுத்துச் செல்லப்படும். பங்கு முனைமத் தொகையை இந்திய நிறுவனச் சட்டம் பிரிவு 78-இல் சொல்லப்பட்ட நோக்கங்களுக்கு மட்டுமே பயன் படுத்திக் கொள்ளலாம். ஆதாயத்தை மிகுதியாக ஈட்டிடும் நிறுவனமே பங்குகளை முனைத் தொகை யில் வெளியிட இயலும். பெயரளவு மதிப்பிலும் குறைந்த விலைக்குப் பங்குகளை வெளியிடுதல் தள்ளு படியில் வெளியிடுதல் எனப்படுகிறது. எடுத்துக்காட் டாக உரூ. 100/- மதிப்புள்ள பங்கு ஒன்றினை உரூ. 98/-க்கு வெளியிடலாம். இத் தள்ளுபடி 10 விழுக்காட்டுக்கு மிகக் கூடாது.

அழைப்புத் தொகை செலுத்தாத பங்குரிமை யாளர்களின் பங்குகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. அவர்கள் செலுத்திய தொகையும் திருப்பிக் கொடுக் கப்பட மாட்டாது. இவ்வகை ஒறுப்பிழப்பு (Forfeiture) செய்வதால், வெளியிட்ட முதல் குறைகிறது. இதற்கான பதிவுமுறையாவது:

பங்கு முதல் கணக்கு ப (அழைக்கப்பட்ட முதல்)
ஒறுப்பிழப்புப் பங்கு க/கு (இதுவரை பெற்ற தொகை)

எடுத்துக்காட்டாக உரூ. 10/-மதிப்புள்ள நேர்மைப் பங்குகள் வெளியிடப் படுகிறதென்றால் 100 பங்குகள் வாங்கும் ஒருவர் விண்ணப்பத் தொகை உரூ. 2/-உம், ஒதுக்கீட்டுத் தொகை உரூ. 3/-உம், முதல் அழைப்புத் தொகை உரூ. 3/-உம் செலுத்துவார். இறுதி அழைப் புத் தொகை உரூ. 2/- செலுத்தாததால் அவரது பங்குகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இதற்கான பதிவு வருமாறு:

| | | |
|---|---|---|
| பங்கு முதல் கணக்கு ப | 1000 | |
| பங்கு இறுதி அழைப்பு க/கு | | 200 |

| | | | |
|---|---|---|---|
| ஒறுப்பிழப்புப் பங்கு | க/கு | | 800 |

(100 பங்குகளைப் பறிமுதல் செய்தது)

ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட பங்குகளை மீண்டும் வெளியிடும்போது, தள்ளுபடி செய்து வெளியிடலாம். இத்தள்ளுபடித் தொகை பங்குகள் மீது முன்னரே பெறப்பட்ட தொகைக்குக் குறைவாக இருக்கக் கூடாது. சான்றாக, எடுத்துக்காட்டில் ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட பங்குகள் 100-ம் மீண்டும் வெளியிடப் பட்டால் பங்கு ஒன்றுக்கு உரூ. 8/- வரையே தள்ளுபடி செய்யப்பட்டு வெளியிடலாம். புதிய பங்குகள் பங்கு ஒன்றுக்கு உரூ. 2/- செலுத்தினால் போதுமானது. பங்கு ஒன்று உரூ. 7/- தள்ளுபடி செய்யப் பட்டு வெளியிடப்படுமானால் எழுதவேண்டிய பதிவுகளாவன:

| | | | |
|---|---|---|---|
| வங்கி | க/கு ப | 300 | |
| ஒறுப்பிழப்புப் பங்கு | க/கு ப | 700 | |
| பங்கு முதல் | க/கு | | 1000 |

(பங்கு உரூ. 10/-வீதம் 100 பங்குகள் வெளியிடப் பெற்றன. பங்கு ஒன்றுக்கு உரூ. 7/-வீதம் ஒறுப் பிழப்புப் பங்கில் பற்று வைக்கப்பட்டது).

| | | | |
|---|---|---|---|
| ஒறுப்பிழப்புப் பங்கு | க/கு ப | 100 | |
| முதல் காப்பு | க/கு | | 100 |

(ஒறுப்பிழப்புப் பங்குகளை வெளியிட்டபின் இருக்கும் ஆதாயத்தை முதல் காப்புக் கணக்குக்கு மாற்றல்).

முன்னுரிமைப் பங்குகளின் வெளியீடும், மீட்பும், கடனீட்டு ஆவணங்கள் வெளியீடும், மீட்பும் இம்முறையில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு கூட்டுப்பங்கு நிறுவனமும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அதன் நிதிஆண்டுக்குரிய ஆதாய-இழப்புக் கணக்கினையும், இருப்பு நிலைக் குறிப்பினையும் வெளியிட வேண்டுமென இந்திய நிறுவனச் சட்டத்தின் 210-வது பிரிவு கூறுகிறது. ஆதாய இழப்புக் கணக்கிற்கென எந்த ஒரு குறிப்பிட்ட படிவத்தையும் சட்டம் வகுக்கவில்லை. ஆதாய இழப்புக் கணக்குக்குப் பின் ஆதாய இழப்புப் பகிர்வுக் கணக்கு ஒன்று உருவாக்கப்படுகிறது. ஆதாயம் எவ்வாறு பலவகைகளில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது என்பதனை அது உணர்த்தும்.

கூட்டுப்பங்கு நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு நிறுவனச் சட்டத்தின் அட்டவணை-6 பகுதி-1இல் குறிப்பிட்டுள்ள படிவத்திலேயே உண்டாக்கப் படுதல் வேண்டும். சொத்துகளும், பொறுப்புகளும் அதில் குறிப்பிட்டுள்ளபடியே பல்வேறு தலைப்புகளின் கீழ் அடுத்தடுத்து எழுதப்பட்டிருக்க வேண்டும். மாதிரிப் படிவம் பக். 897-இல் காண்க.

1986-ஆம் ஆண்டுக்கான ஆதாய இழப்புப் பகிர்வுக் கணக்கு (கற்பனைத் தொகைகளுடன்)

| | | | |
|---|---|---|---|
| கடன் ஆவண மீட்புக்கு ஒதுக்கியது ... | 6,00,000 | இருப்பு கீ/கொ (சென்ற ஆண்டு இருப்பு) ... | 50,000 |
| காப்புக்கு மாற்றியது ... | 2,00,000 | | |
| பங்காதாயம் ... | 1,50,000 | ஆதாய இழப்பு க/கு (நடப்பாண்டின் ஆதாயம்) ... | 10,00,000 |
| இருப்பு கீ/இ (மீதி இருப்பு நிலைக் குறிப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது) ... | 1,00,000 | | |
| உரூ. | 10,50,000 | உரூ. | 10,50,000 |

**அ) அழைக்கப்பட்ட பங்குகளின் பங்குத்தொகை**

கழி: அமைப்பு நிலுவை

கூட்டு: ஒறுப்பிழப்புச் செய்யப் பட்ட பங்குகள்

**ஆ) காப்பும் மிகுதியும்**

1. முதல் காப்பு
2. முதல் மீட்புக் காப்பு க/கு
3. பங்கு முனைமக் கணக்கு
4. பிற காப்பு
   கழி: ஆதாய இழப்பு க/கு பற்றிருப்பு
5. ஆதாய இழப்புக் கணக்குகளின் வரவிருப்பு

**இ) பிணைக் கடன்**

1. கடனீட்டு ஆவணங்கள்
2. வங்கிக் கடன்
3. பிற கடன்

**ஈ) பிணையில்லாக் கடன்**

1. தவணைக்கால வைப்பு
2. வங்கியிடமிருந்தும் பிறரிடமிருந் தும் பெற்ற கடன்

**உ) நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்கும்**

**1) நடப்புப் பொறுப்புகள்**

அ) ஏற்புகள்

ஆ) கடனீந்தோர்

**அ) நிலைச் சொத்துக்கள்**

1. வணிக நற்பெயர்
2. நிலம்
3. கட்டடம்
4. குத்தகை
5. பொறிவகை
6. மனைத்துணைப் பொருள்
7. புனைபொருள் உரிமை
   வாணிகக் குறி
8. கால்நடை
9. ஊர்தி

**ஆ) முதலீடுகள்**

1. அரசு கடன் ஆவணங்கள்
2. பங்குகள், கடன் ஆவணங்கள் பிணை முறிகள்
3. நிலையியல் சொத்துக்கள்

**இ) நடப்புச் சொத்துகளும் கடனும் முன்பணமும்**

**1) நடப்புச் சொத்துகள்**

அ) முதலீடு மீது கூடியுள்ள வட்டி

ஆ) பண்டங்களும், உதிரி உறுப்பு களும்

இ) விடுகருவிகள்

ஈ) சரக்கிருப்பு

உ) வேலை முற்றாப் பொருள்

ஊ) கடனாளிகள்
கழி: ஒதுக்கு

எ) ரொக்கம்

ஏ) வங்கியிருப்பு

**2) கடன்**

அ) துணை நிறுவனங்களுக்குக் கட னும் முன்பணமும்

ஆ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு

இ) முன்கூட்டிச் செலுத்திய செலவு கள்

ஈ) சுங்க அலுவலகம் துறைமுகம் போன்றவற்றில் வைத்துள்ள இருப்புகள்

இ) உரிமைகோராப் பங்காதாயம்

ஈ) பிற பொறுப்புகள்

2) **ஒதுக்கு**

அ) வரி ஒதுக்கு

ஆ) திட்டமிடப்பட்டுள்ள பங்காதாயம்

நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு, நிறுவனத்தின் நிதி நிலைமையை உண்மையாகவும் நேர்மையாகவும் எடுத்துரைக்க வேண்டும். சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட்டியும், குறைத்தும் மதிப்பிடக் கூடாது. மறைவான காப்பு (Reserve) ஏதும் கூடாது.

வை.ந.

**துணை நூல்கள்:**

**Chakraborty, M.**, Advanced Accountancy, Oxford University Press, Calcutta, 1978.

**Gupta R.L.**, Advanced Accountancy, Sultan Chand and Sons, New Delhi, 1986.

**Shukla M.C. & Grewal T.S.**, Advanced Accounts, S. Chand and Company, New Delhi, 1986.

**கூட்டுப்பண்ணை**, சிதறிக்கிடக்கும் சிறு சிறு வயல்களை ஒன்று சேர்த்து உருவாகும் பெரிய நிலப் பரப்பில் சாகுபடி செய்யும் முறையினைக் குறிக்கும். நிலங்களைச் சாகுபடி செய்வதில் பல முறைகள் நிலவி வருகின்றன. அவைகளில் கூட்டுப் பண்ணை முறை (Collective Farm) முக்கியமானதாகும். இதனால் உற்பத்தியும், உற்பத்தித்திறனும் பெருகுவதோடு அதிக முதலீடு செய்வதற்கும் வாய்ப்புகள் பெருகுகின்றன. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் தோன்றியதே கூட்டுப் பண்ணை முறையாகும். கூட்டுறவு இயக்கம், அதில் பங்குகொள்ளும் ஒவ்வொருவரும் நேர்மையுடன் உழைக்க முன்வர வேண்டும் என்பதனை உள்ளடக்குகிறது. 'நாம் பிறருக்காகவும், மற்றவர்கள் நமக்காகவும் பாடுபட வேண்டும்' என்ற அடிப்படைத் தத்துவத்தில் வளர்ச்சியடைந்தது தான் இக்கூட்டுறவு இயக்கம்.

கூட்டுறவுப் பண்ணை முறையினை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1) கூட்டுப் பண்ணை, 2) கூட்டுறவுப் பொதுப் பண்ணை 3) கூட்டுறவு மேம்பாட்டுப் பண்ணை, 4) கூட்டுறவுக் குத்தகைக்

ஈ) **பல்வகைச் செலவினம்**

1) தொடக்கச் செலவு

2) பங்கு வெளியீடு, கடனீட்டு ஆவண வெளியீட்டுக் கழிவு அல்லது தரகுத் தொகை

3) பங்கு வெளியீட்டு, கடனீட்டு ஆவண வெளியீட்டுத் தள்ளுபடி

உ) ஆதாய இழப்புக் க/கு

காரர்கள் பண்ணை. இவை நான்கிலும் மிகவும் முக்கியமானது கூட்டுப்பண்ணையாகும். கூட்டுப்பண்ணைச் சாகுபடியில் உறுப்பினர்கள் தங்களுடைய நிலங்களை ஒன்றாக இணைத்து சாகுபடியை மேற்கொள்கின்றனர். நிலத்தின் உரிமையைக் குடியானவர்கள் விடுவதில்லை. நிலம் அவர்களுக்கே சொந்தம் அதன் விளைபொருளைப் பங்கிடுவதற்குக் கூட்டுறவுக் குழு முடிவுகளை வரையறுக்கிறது. ஒவ்வொருவரும் அன்றாட வேலைக்குக் கூலி பெறுவர்.

கூட்டுறவு முறையில் பயிர் செய்யப்படும் விளைபொருளை உறுப்பினர் பிரித்துக் கொள்கின்றனர். விளைபொருளைப் பிரித்துக் கொள்ளும்போது உழவர்களின் சொந்த நிலத்தின் அளவு, மண் வளம், உற்பத்தித் திறன் ஆகியன கணக்கிடப்படுகின்றன. இம்முறையில் பெரும் ஆதாயத்தைக் கொண்டு உறுப்னர்கள் ஊக்க ஊதியம் (Bonus) பெறுகின்றனர். கூட்டுறவு முறையிலும் உழவர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் நில உரிமையை இழப்பதில்லை. உழைப்பிற்கு ஏற்ற கூலி கொடுக்கப்படுகிறது.

**உலக நாடுகளில்**: கூட்டுப்பண்ணை முறை சோவியத் உருசியா, சீனா, இசுரேல், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மெக்சிகோ, செருமனி, எகிப்து, யூக்கோசுலாவியா போன்ற நாடுகளின் வேளாண்மைத் துறையில் சிறப்புற்று விளங்குகிறது. கூட்டுப்பண்ணைகளின் செயற்பாடுகளில் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் பல இருப்பினும், அடிப்படைக் கொள்கைகளில் கருத்து வேறுபாடுகள் இல்லை. சில நாடுகளில் நிலம் கூட்டுறவுக் கழகங்களுக்குச் சொந்தமாக உள்ளது. பல நாடுகள் வேளாண்மைத் துறையில் தலைசிறந்து விளங்குவதற்குக் காரணம் அங்கு நிலவும் கூட்டுப் பண்ணை முறையாகும். கூட்டுப்பண்ணை முறையில் வேளாண்மை உற்பத்திப் பெருகுகிறது. பெரிய எந்திரங்களைப் பயன்படுத்துவதால் உற்பத்திச் செலவு குறைந்து மிகுதியான ஆதாயம் கிடைக்கிறது. அதனால் உழவர்களின் வாழ்க்கைத்தரம் உயருகிறது.

**இந்தியாவில்**: இந்திய வேளாண்மை வளர்ச்சி பெற்றுச் சிறப்புறக் கூட்டுறவுப் பண்ணை முறைதான் சிறந்ததெனப் பலர் கருதுகின்றனர். எவ்வகையான வற்புறுத்தலும் கட்டாயமும் இன்றிக் கூட்டுறவு முறையில் வேளாண்மைத்தொழில் செய்யப்பட்டால் தான், ஊரகப் பொருளாதாரம் முன்னேற்றமடையும். இந்திய நான்காம் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் இந்தியாவில் மொத்தம் 8600 கூட்டுறவுப் பண்ணைக் கழகங்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் 2.2 இலட்சம் உறுப்பினர்கள் இருந்தனர். சுமார் 9.7 இலட்சம் ஏக்கர் நிலத்தை இக் கழகங்கள் அந்தந்தப் பகுதியில் ஒன்று சேர்த்துச் சாகுபடி செய்து வந்தன. இக் கழகங்களில் 4200 மட்டும் நல்ல முறையில் இயங்கி வந்தன. கூட்டுறவுப் பண்ணைகள், பால்பண்ணை, கால்நடை வளர்த்தல், பயிர்த் தொழில் தொடர்பான ஏனைய தொழில்கள் ஆகிய வற்றை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ஒவ்வொரு பண்ணைக்கும் உரூ.5000 ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பண்ணைத் தொடர்பான ஒவ்வொரு அரசாங்கத் துறையும் இதற்கான உதவியை வழங்குகின்றது.

**நன்மைகள்**: கூட்டுப் பண்ணை முறையினால் 1) உற்பத்தி பெருகுகிறது. 2) புதிய விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் உண்டாகின்றன. 3) வேளாண்மை எந்திரமயமாக்கப்படுகிறது. 4) வாய்க்கால் வரப்புத் தகராறுகள் மிகுதியாகக் குறைவதால் நீர்ப்பாசனம் நல்ல முறையில் நடைபெறுகிறது. 5) ஆதாயம், இழப்பு மக்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதால் இடர்தாங்கல் (Risk bearing) குறைகிறது.

**தீமைகள்**: கூட்டுப் பண்ணை முறையினால் நன்மைகள் பல இருப்பினும் சில தீமைகளும் உள்ளன. 1) சில நாடுகளில் உழவர்களின் நில உரிமை பறிக்கப்படுகிறது. 2) எல்லோரும் சேர்ந்து உற்பத்தியில் ஈடுபடுவதாலும், எல்லோரும்சேர்ந்து வேலை செய்வதாலும் தனிப்பட்ட வகையில் அக்கறையும் கவனமும் செலுத்தப்படுவதில்லை. இதனால் மொத்த உற்பத்தி குறைகிறது. 3) மொத்த உற்பத்தியைப் பகிர்ந்தளிப்பதில் நியாயமான தீர்வு முறை செயற்படுவதில்லை. அதனால் வேளாண்மை செய்வோர் சிலர் பாதிக்கப்படுகின்றனர்.

**கூட்டுப்பண்ணை செயற்படத் தடைகள்**: 1) கூட்டுப் பண்ணைகள் வேளாண்மையினரின் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தோன்றினாலும், அது செயற்படத் துவங்கும்பொழுது பல சிக்கல்கள் எழுகின்றன. 2) நிலம் உள்ளவர்கள் கூட்டுப் பண்ணைகளுக்குத் தங்கள் நிலங்களையும், நிலமற்றவர்கள் தங்கள் உழைப்பையும் மட்டுமே அளிப்பர். அவர்களுக்கு இடையே மொத்த உற்பத்தியைப் பங்கீடு செய்வது கடினமாகும். 3) கூட்டுப் பண்ணையில் ஓரளவு எந்திரங்களைப் புகுத்த வேண்டியது இன்றியமையாததாகிறது. பலர் வேலையை இழக்க நேரிடுகிறது. 4) கூட்டுப் பண்ணை முறை இந்திய நாட்டு மக்களின் கோட்பாடுகளுக்கும், மன நிலைக்கும் ஒத்து வர இயலாத முறை எனக் கருதப்படுகிறது.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் வெற்றி காணாத துறை ஏதேனும் உண்டெனின், அது கூட்டுப்பண்ணையும், கூட்டுறவுப் பண்ணைத் துறையும் எனக் கூறலாம். கடந்த பல ஆண்டுகளாக அரசும் தனியார் இயக்கங்களும் கூட்டுறவுப் பண்ணை முறையைப் பரப்ப எவ்வளவோ முயற்சிசெய்தும் உரிய பயன் கிடைக்கவில்லை. மத்திய அரசின் கூட்டுறவுத் துறை இதைத் தன் ஆய்வு அறிக்கையில் ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித்துள்ளது. கூட்டுறவுப் பண்ணை முறையினால் ஏற்படக்கூடிய நன்மைகளை இந்திய வேளாண்மையினர் ஏற்றுக்கொள்ளாமல், இருப்பதே தோல்விக்குக் காரணமாகும். நாட்டிலுள்ள கூட்டுறவுப் பண்ணை அவர்களது ஐயங்களை நீக்கக்கூடிய அளவுக்குத் திறம்படச் செயற்படுமேயானால், எதிர்காலத்தில் கூட்டுப் பண்ணை முறை வலுப்படும்; வளமை சேர்க்கும் எனக் கருதப்படுகிறது. காண்க: இந்தியக் கூட்டுறவு இயக்கம். வி.எ.

**துணை நூல்கள்**:

**Bhatnagar**, K.P., Nigam, N.S., **Bhagoilwal**, T.N. Hajela, T.N., Co-Operation in India and Abroad, Kishore Publishing House, Kaunpur, 1967.

**Kulkarni**, K.R., Theory and Practice of Co-operation in India and Abroad. The Co-operators Book, Bombay, 1965.

**Mamoria** C.B., **Saksena**, R.D., Co-operation in India, The Law Printing Press, Allahabad, 1960.

**கூட்டுப் பாதுகாப்பு**: ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் கூடித் தங்களது பாதுகாப்புக் குறித்துச் செய்து கொள்ளும் ஏற்பாடு அல்லது நடவடிக்கை கூட்டுப் பாதுகாப்பு (Collective Security) எனப்படும். உலகில் நாடுகளிடையே அமைதியை ஏற்படுத்த இத் திட்டம் உதவுவதாக அமைவதுடன் நாடுகளிடையே

அதிகாரச் சமநிலையை (Balance of Power) ஏற்படுத்தவும் இது உதவும். நாடுகள் பல வகைப்பட்டனவாய், வலிமையிலும் வேறுபட்டனவாய் இருப்பதால், ஒரு வல்லரசோ சில நாடுகளின் கூட்டோ, வேறு ஒரு நாட்டின் மீது படையெடுக்க முயற்சி செய்யுமாயின், அத்தகைய நிலைமையில் தாக்குதலுக்கு இலக்காகும் நாடு வேறு சில நாடுகளுடன் நட்பு ஒப்பந்தம் செய்து கொண்டு கூட்டுப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொள்வது முறை. உலகின் சில நில அடிப்படையிலும் இந்தக் கூட்டுப் பாதுகாப்பு முறை அமையலாம். அனைத்து நாடுகள் அரங்கில் இரு வல்லரசுகள் எழுந்து, அவை தனித்தனியே அண்மையில் குடியேற்ற நாட்டு முறையினின்றும், விடுதலை பெற்ற சிறு நாடுகளைத் தங்களிடம் சேர்த்துக்கொண்டு தங்களை வளர்த்துக் கொள்ள முயலும்போது, சிறிய நாடுகள் கூட்டுப் பாதுகாப்புக்காகக் கூட்டுச் சேரும் நிலை ஏற்பட்டது.

**கூட்டுப்பாதுகாப்பு செயற்படுதல்:** இக்கூட்டுப் பாதுகாப்பு எனப்படுவது புதிய கோட்பாடோ ஏற்பாடோ அன்று. நாடுகளிடையே கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் இது போன்றதொரு முயற்சி தொடங்கப்பட்டது. முதல் உலகப் போரின்பின் இம்முறை பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் கூறுகள் சில கி.பி. 1815-ஆம் ஆண்டு உடன்படிக்கையில் இடம்பெற்றன. சுவிட்சர்லாந்து நாட்டை நடுநிலை நாடாக எல்லா வல்லரசுகளும் கி.பி. 1815-இலும், பெல்சியத்தை கி.பி. 1839-இலும், இலக்சம்பர்க்கை கி.பி. 1867-இலும் ஏற்றுக் கொண்டன. பின்னர், சருவதேச சங்க உடன்படிக்கையிலும், 1928-29-ஆம் ஆண்டு கெல்லகு பிரியண்டு (Kellog Briand Pact) உடன்படிக்கையிலும் கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் தெளிவாக்கப்பட்டது.

இது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்திலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. உறுப்பு நாடுகள் தங்களது சிக்கல்களுக்கு அமைதி வழியில் தீர்வு காணவும் ஏனைய நாடுகளின் இறையாண்மை, எல்லைப்புற ஒற்றுமைக்கு மதிப்பளிக்கவும் இணங்கியுள்ளன. கூடுமானவரை போரைத் தவிர்த்திடவும், போர் தவிர்க்கவியலாத நிலையில் தற்காப்பு நடவடிக்கைகளைக் கூட்டாகவும், ஐ.நா. சபையின் இணக்கத்துடனும், அதன் அதிகார முறைக்கு ஏற்பவும், மேற்கொள்ளலாம் என அப்பட்டயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுத் தற்காப்புக்காகப் போர் செய்யவும் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நாடுகளிடையே எழும் சிக்கல்களை ஐ.நா. மூலம் தீர்வு காணவும், ஆக்கிரமிப்பாளர்களை, மற்ற நாடுகள் யாவும் கூட்டாகச் சேர்ந்து முடிவு செய்து முறியடிக்கவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஐ.நா. சபையின் கூட்டுப் பாதுகாப்பில் விளக்கப்பட்டுள்ளன. கொரியாச் சிக்கல் கூட்டுப் பாதுகாப்பு முறையினால் தீர்வு செய்யப்பட்டதை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இம்முறையின் அடிப்படை விதி யாதெனில், நாடுகளிடையே அதிகார உறவு முறைகளை அவற்றின் இறைமைநிலை பிறழாதவாறு, ஓரளவு வரையறுக்கப்பட்ட குறிக்கோள் எல்லைக்குள், சில நாடுகள் கூடிக் கூட்டாகப் பாதுகாப்பு அளித்தல் என்பதாகும்.

இக்காலத்திய உலகியலில், அறிவியல், தொழில் வளர்ச்சியின் காரணமாக எந்த ஒரு நாடும் தனித்துத் தன்னிறைவுடன் இயங்குதல் இயலாது என்ற நிலையில், நாடுகளிடையே ஒன்றுக்கொன்று சார்புணர்வு கொள்ளுதல் இன்றியமையாததாகி விட்டது. இந்த நிலையில், உலக அளவில் அமையும் கூட்டுத் தற்காப்பு முறையில் அமைதி காக்கவும், தாக்குதலை எதிர்க்கவும் வேண்டிய நிலை தோன்றியுள்ளது. ஆகவே, எந்த ஒரு தனி நாட்டையும் பிறிதொரு நாடு தாக்குமானால், அது மற்ற (கூட்டு சேர்ந்த) எல்லா நாடுகளையும் தாக்கியதாகக் கொள்ளப்படும். இந்தக் கொள்கை உலக நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வடஅட்லாண்டிக்கு, வார்சா ஒப்பந்தங்களிலும் இதுகாணப்படுகிறது. இதுவரை இந்த முறை, எந்த நோக்கங்களுக்காக ஏற்பட்டதோ அதற்கு முரணாகத்தான் செயற்பட்டுள்ளது என்பது வரலாற்றால் அறியக் கிடக்கிறது. தி.க.

**கூட்டுப்பேரம்,** தொழில் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான தொழில் அமைதியை நிலவச் செய்ய நிருவாகமும் தொழிலாளரும் தங்களிடையே ஏற்படுத்திக்கொள்ளும் உறவுமுறையினைக் குறிக்கும். கூட்டுப் பேர முறை (Collective Bargaining) முதலாளிக்கும், தொழிலாளிக்கும் இடையில் நட்பு மனப்பான்மை வளர வாய்ப்பளிக்கிறது. தொழிலாளர் நலத்தைப் பேணிக் காக்கும் வகையில் அரசும் நிருவாகமும் தொழில் துறையை அமைக்க வேண்டும். முதலாளி தொழிலாளிக்கிடையில் ஏற்படும் தகராறுகள், வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் போன்ற சிக்கல்கள் தொழில் அமைதியின்மைக்குக் காரணமாகின்றன. அவற்றால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. முதலாளி தொழிலாளிக்கிடையில் மனக்கசப்பு ஏற்படுகிறது. வெற்றியோ, தோல்வியோ எப்பகுதியினருக்கும் ஏற்படாமல் தொழில் தகராறுகளுக்கான காரணங்களை அறிந்து அவை வருமுன் காப்பதே சிறந்த தொழிற்றுறையின் கூறாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத்

தீமை விளைவிக்கும் தொழில் அமைதியின்மையை நீக்கும் கொள்கையை அரசு சட்டமுறையில் பின் பற்ற வேண்டும்.

கூட்டுப் பேர முறையில் தொழிலாளரும், நிருவாகமும் மனந்திறந்து தங்களுடைய நிலையை எடுத்துச்சொல்லமுடியும். தனியொரு தொழிலாளரால் தீர்வு காணமுடியாத சிக்கல்கள் கூட்டுப் பேர ஒப்பந்தம் மூலம் தீர்வு காணப்படுகின்றன. ஊதியப் பணி நேரம், விடுப்பு வசதிகள், ஊக்க ஊதியம் (Bonus) கூடுதல் நேர ஊதியம் பற்றிய முடிவு செய்யக் கூட்டுப் பேர முறையே சிறந்ததாகும். தொழிலாளர்களும் நிருவாகமும் பேச்சு மூலம் ஒப்புக் கொள்ளும் உடன்பாடுகள் எழுத்து மூலமாக ஒப்பந்தம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன. அவை எப்பொழுதும் நிருவாகத்தையும், தொழிலாளரையும் கட்டுப்படுத்துகின்றன. அதனால் நிருவாகமோ, தொழிலாளரோ தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்க முடியாமல், இரு சாரார்களுடைய நோக்கங்களும் பாதுகாக்கப்படுகின்றன.

கூட்டுப் பேர முறை வெற்றி பெறச் சில கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன. குறிப்பாகத் தொழிற் கழகம் (Trade Union) வலுவானதாக இருக்க வேண்டும். தொழிலாளர் அனைவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஒரு தொழிற்சாலையில் பல கழகங்கள் இருப்பதைக் காட்டிலும் வலுவான கழகம் ஒன்று இருப்பது நல்லது (One Union in One Industry). தொழிற்கழகம் நாட்டுச் சட்டமுறைப்படி அரசாலும் நிருவாகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையுடையதாய் அறிந்தேற்புப் (Recognition) பெற்றிருக்க வேண்டும்.

கூட்டுப் பேர முறை செயற்பட அரசு, முதலாளி, தொழிலாளி, பொதுமக்கள் அகியோருக்குப் பொறுப் புணர்ச்சியும் கூட்டுறவும் இன்றியமையாத தேவையாகும் நிருவாகம் பரந்த மனப்பான்மையுடையதாகவும், தொழிற் கழகப் பேராளர்களாகவும் இருக்கவேண்டும். இருசாராரிடையும் சிக்கல்களைப் பற்றிய முழுத் தன்மையையும் புரிந்துகொள்ளும் மனப்பான்மையும், அதற்கான முயற்சியும் நிலவ வேண்டும். தொழிலாளர்களும், நிருவாகத்தினரும் பிறர் கருத்துகளுக்கு மதிப்பு அளிக்கவேண்டும். தொழிற்கழகத் தலைவர்கள் விவரம் தெரிந்தவர்களாகவும், கூட்டுப் பேரத்தின் வரம்பு பற்றிய தெளிந்த கண்ணோட்டமுடையவர்களாகவும் இருக்க வேண்டும். இவ்வியல்புகள் நிலவினால்தான் கூட்டுப் பேர முறையில் தொழில் தகராறுகளைத் தீர்க்க இயலும். தொழில் அமைதியைப் பாதுகாக்கச் சட்ட மியற்றுவதைக் காட்டிலும் பேச்சுவார்த்தை மூலமும், கூட்டுப் பேர முறையிலும் தொழில்தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதே சிறந்தது எனத்தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்ட அறிஞர் வி.வி. கிரி 1952–இல் கூறினார். தொழில் அமைதி காக்கும் இம்முறையை 'கிரி வழி' என்றனர். அவர் தொழிலமைச்சராகவும் இந்தியக் குடியரசுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கூட்டுப் பேர முறை பற்றி தேவிட்சன் (David-son), தாபு (Dobb) போன்ற அறிஞர்களும் கூறியுள்ளனர். அண்மைக் காலத்தில் பெல்நர் - கார்டர் கூட்டுப் பேரமுறை மிகச் சிறந்ததெனக் கருதப்படுகிறது. மிகுதியான வேலைவாய்ப்பு, உயர்ந்த கூலி வீதம் ஆகிய இரண்டும் தொழிற் கழகத்தின் நோக்கமாக இருப்பின் அது நிருவாகத்தின் ஆதாயத்தை மிகுந்த அளவில் குறைக்கும். எனவே, நிருவாகமும், தொழிற் கழகமும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து இறுதி நிலைக் கூலியும் (Marginal Wage), இறுதிநிலை உற்பத்தியும் (Marginal Revenue Product) சீராக (Equal) இருக்கும் நிலையில் கூலியை வரையறுக்கின்றனர். அதைவிடக் கூலிவீதம் கூடுதலாக இருக்க வேண்டுமென்று தொழிற்கழகம் விரும்பினால், அதற்கேற்ப வேலை வாய்ப்புகளைக் குறைக்க நிருவாகத்தை பெல்நர் – கார்டர் கூட்டுப் பேர முறை அனுமதிக்கிறது. கார்டர் கருத்துப்படி நிருவாகத்தின் விருப்பு (Preference) தொழிலாளியின் விருப்பு இரண்டையும் இருசாராரும் புரிந்து ஓர் உடன்பாட்டுப் பேரத்தைச் செய்துகொள்ள வேண்டும். அதனை நிறைவுப் பேர நிலை எனக் கூறுகின்றனர்.

**தொழிற்கழகமும்கூட்டுப் பேர முறையும்**:தொழிற் கழக இயக்கம், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், வேலை நிலைகளைச் சீராக்கவும், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும் தோன்றி வளர்ந்தது. பிரிட்டனிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் தோன்றிய தொழிற்புரட்சியின் விளைவாகத் தொழிற் கழகங்கள் தோன்றி வளர்ந்தன. அவற்றைத் தொடர்ந்து எல்லா நாடுகளிலும் தொழிற் கழகங்கள் வளர்ச்சியடையலாயின. உழைக்கும் உழைப்பாளர்களின் வாழ்வில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியும் அவற்றின் நடவடிக்கைகளும் இக்காலத்தில் மிக முக்கியமான இடத்தினைப் பெற்றிருக்கின்றன.

தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் தொழிற் கழகங்களால் கூலியைக் கூட்ட முடியாது எனக் கூறினர். கூலி கூடினால் ஆதாயம் குறைந்து அதனால் சேமிப்பும் முதலீடும் குறையும். அதன் விளைவாக

வேலை வாய்ப்பும் குறையுமெனக் கருதினர். உற்பத்திக் காரணியிலும், செய்பொருள் அங்காடியிலும் நிறைவுப்போட்டி (Perfect Competition) நிலவுமென்று கருதினர். ஆனால், நடைமுறையில் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கருதியதுபோல உற்பத்திக் காரணியான உழைப்பாலும், பொருள்களின் விற்பனையாலும் நிறைவுப் போட்டி நிலவவில்லை. பொருள் விற்பனையில் நிறைகுறைப் போட்டி (Imperfect Competition) நிலவுவதையும் உழைப்புக் கூலியை வரையறுப்பதில் தொழிற்சங்கங்களின் பணியையும், கூட்டுப் பேரமுறையின் பங்கையும் பொருளியல் வல்லுநர்கள் 1930-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த்தான் பொருளியல் கோட்பாடுகளில் பயன்படுத்தினர்.

நடைமுறையில் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கின்ற பொருளுக்குரிய தேவை, நெகிழ்ச்சியற்றதாக (Inelastic) இருக்கவேண்டும். அப்பொழுதுதான் கூலியைக் கூட்டி பொருளின் விலையைக் கூட்ட முடியும். கூலி மிகுதி கேட்கின்ற குறிப்பிட்ட உழைப்பிற்குரிய தேவை நெகிழ்ச்சியற்றதாக இருக்க வேண்டும். அக்குறிப்பிட்ட உழைப்பு கிடைக்கா விட்டால் உற்பத்தி நடைபெறாது என்ற நிலை இருக்க வேண்டும். தொழிலாளர்களின் ஆக்கத்திறனைக் கூட்டிக் கூலியைக் கூட்டலாம். தொழிலாளர்களுக்குத் தக்க பயிற்சியும் வாய்ப்புகளும் அளிக்கும் பணி செய்யும் சூழ்நிலைகளை நன்கு அமைத்துத் தொழிலாளர்களின் ஆக்கத்திறனை வளர்க்க, தொழிற் சங்கங்கள் முதலாளிகளைக் கட்டாயப்படுத்தலாம்.

**இந்தியாவில்**: முதல் உலகப் போருக்குப் பின்னரே இந்தியாவில் தொழிற் கழகங்கள் வளர்ச்சியடையலாயின. முதன் முதலில் நெசவுத் தொழிலாளர் கழகத்தை 1918-இல் வாடியா (Wadia) சென்னையில் ஆரம்பித்தார். அனைத்திந்தியத் தொழிற்கழகக் காங்கிரசு (A.I.T.U.C.) 1920-இல் தொழிற் கழகங்களின் நடவடிக்கைகளை ஒருங்கமைக்கவும், வளர்ச்சியைத் தூண்டவும் தொடங்கப்பெற்றது. தொழிற்கழகச் சட்டம் 1948-இல் திருத்தப் பட்டது. தொழிற் கழகங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டும். வேலைநிறுத்தம் பற்றிய விவரங்கள் விதிகளாய் எழுதப்பட்டிருக்க வேண்டும். எந்த ஒரு தொழிற்கழகத்தையும் முதலாளிகள் ஏற்றுக்கொள்ளவில்லையெனில், அதைப்பற்றிய முடிவு செய்ய தொழிலாளர் நீதிமன்றங்கள் அமைக்கப்படும். தொழிற்கழகச் சட்டம் 1950-ஆம் ஆண்டில் வெளி ஆள்களையும், தொழிற்கழக உறுப்பினராக அனுமதிக்கலாம் எனக் கூறியது. காங்கிரசுக் கட்சியால் இந்திய தேசிய தொழிற்சங்கக்காங்கிரசு (I.N.T.U.C). 1947-இல் ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு அரசியல் கட்சிகளும் தொழிற்சங்க அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

தொழிற் கழகங்களில் அரசியல் ஆதிக்கம் மிகுந்த அளவில் உள்ளது. தொழிலாளர் நலனைவிட அரசியல் ஈடுபாடு கூடுதலாக உள்ளது. தொழிற் கழகத் தலைவர்களுக்கு வெளி ஆசை இருப்பதால் தொழிலாளர்களின் சிக்கல்களை அவர்களால் முழுமையாக உணர முடியவில்லை. தொழிற்கழகங்களின் நிதி வசதிக் குறைவு, மதம், இனம், வாழ்வு முறை, மொழி போன்ற வேறுபாடுகள் தொழிலாளர்களுக்கிடையில் வேறுபாடுகளை வளர்க்கின்றன. இக்குறைபாடுகள் நீங்கத் தொழிலாளர்களுக்கிடையிலிருந்து தொழிற் கழகத் தலைவர்கள் உருவாக வேண்டும். வலுவான தொழிற்கழகம் மதிப்பு மிக்கது என்பதைத் தொழிலாளிகளும் முதலாளிகளும் உணர வேண்டும். தொழிற்கழகங்கள் 'உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகள்' என்பதை உணரச்செய்ய வேண்டும்.

**இந்தியாவில் தொழில் தகராறுகள்தீர்வு**: தொழில் தகராறுத் தீர்வில் கூட்டுப் பேர முறை மிகச் சிறந்ததாகும். அதனைச் செயற்படுத்தத் தொழிற்கழகங்கள் பலம் வாய்ந்தவையாகவும், ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும். பேரத்திற்கான ஆற்றல் எல்லாத் தொழிலாளர்களும் ஒருமித்த குரலில் சிக்கல்களை எழுப்புவதில் அடங்கியுள்ளது. அக்குரல் முதலாளியின் அக்கறையையும் அரசின் கவனத்தையும் ஈர்க்கும். தொழிலாளர்கள் நல்வாழ்விற்காகவும் பல்வேறு பணி முன்னேற்றத்திற்காகவும் வகையான தொழிலாளர் சட்டங்கள் (Labour Laws) இந்தியாவில் இயற்றப்பட்டனஎன்றால் அதற்கு வலுவான கூட்டுப் பேர முறையே காரணமாயிருந்தது, இக்காலத்தில் தொழிலாளர்கள் நிருவாகத்தில் பங்கு பெறவேண்டுமென்ற எண்ணம்பரவியுள்ளது.கூட்டுப் பேரத்தின் மூலமாகப் பல்வேறு நிறுவனங்களில் கூட்டு ஒப்பந்தங்கள் (Collective Agreements) செய்யப்படுகின்றன. கூட்டு நிருவாகக்குழுக்கள் பலதொழிற்சாலைகளில் அமைக்கப் பட்டுள்ளன.

கூட்டுப் பேர முறையால் உழைக்கும் உழைப்பாளரின் வாழ்வில் வியக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாளியும் தொழிலாளியும் தங்களது தொழில் தகராறுகளைச் சமாதானமாகப் பேசித் தீர்த்துக்கொள்வது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாயிருக்கும். வி.எ.

**துணை நூல்கள்:**

**Alfred, W.Stonier and Douglas C.Hague.**, A Text Book of Economic Theory, Unwin Brothers Ltd., London, 1968.

**Chamberlin, E.H.**, Towards A More General Theory of Value, University Press, New York, 1966.

**Hanson J.L.**, A Text Book of Economics, Mac Donald Evans Ltd., 1966.

**Richard G. Lipsey**, An Introduction to Positive Economics, Willian Clowed and Sons Ltd., London, 1965.

**கூட்டு முயற்சி**, கூட்டுறவு அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. மனித நடவடிக்கைகள் எத்துறையைச் சார்ந்திருப்பினும் அவை செயற்படும் அமைப்பின் தேவை ஆழ்ந்து உணரப்படும் என்பது வெளிப்படை. பொருளியல் நடவடிக்கைகளில் கூட்டுறவு அமைப்பைச் சார்ந்த கூட்டு முயற்சி (Joint Venture) சிறந்த பங்கு வகிக்கிறது. இந்தியப்பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்பாக வேளாண்மையும் தொழில் முன்னேற்றத்தில் கூட்டுறவும் தனி இடத்தை வகிக்கின்றன. மக்கள் தங்களின் பொருளாதார உயர்வுக்காகத் தாமாகவே முன்வந்து சமநிலை அடிப்படையில் உருவாக்கும் அமைப்பு கூட்டுறவு. அதில் ஒவ்வொருவரும் தமக்காகவும் பிறருக்காகவும் தமது திறமையையும் வளத்தையும் தம்முடைய நிருவாகத்தின் கீழ்க்கொண்டுவந்து, ஆதாயமோ இழப்போ எதுவானாலும் பொதுவாகவே ஏற்றுக் கொள்வர்.

எல்லோரும் ஒன்றுபட்டுத் தம் உழைப்பையும் செல்வத்தையும் பயன்படுத்தித் தங்கள் எதிர் காலத்தை ஒளிமயமாக அமைத்துக் கொள்வதற்கான தத்துவத்தைக் கூட்டுறவு என்ற சொல் விளக்குகிறது. இத்தகைய கூட்டுறவு அமைப்பை உடையன கூட்டு முயற்சியும் கூட்டுரிமையும் (Co-ownership) ஆகும். இவற்றுள் கூட்டு முயற்சி, உரிமையின் அடிப்படையிலான வடிவமைப்புகளுள் ஒன்றாகவிளங்கும்(Types of Organisation) கூட்டாண்மையின் உட்பிரிவின் (Partnership) கீழ் வகைப்படுத்தப்படுகிறது.

கூட்டாண்மை அல்லது கூட்டு வாணிகம் (Partnership) என்பது தனி வாணிகத்தின் குறையைப் போக்குவதற்காகத் தோன்றியதாகும். கூட்டு வாணிகம் வரையறாக் (Unlimited) கூட்டு, வரையறுக்கப் பட்ட (Limited) கூட்டு என இருவகைப்படும். வரையறாக் கூட்டு வாணிகம் கூட்டு முயற்சி, விருப்பத்தின் அடிப்படையிலான கூட்டு வாணிகம் (Partnership at will), குறிப்பிட்ட தொழிற் கூட்டு வாணிகம் (Particular Partnership) என மூவகைப்படும்.

வாணிக நோக்குடன் குறிப்பாக ஆதாயக் குறிக்கோளுடன் ஒருவர் மற்றொருவருடன் செய்துகொள்ளும் ஒப்பந்தமே கூட்டு முயற்சியாகும். கூட்டுச் சேர்பவர்கள் தங்களிடம் உள்ள முதலைப் போட்டு ஒரு முயற்சியில் ஈடுபட்டு அதன் ஆதாய இழப்பைக் குறிப்பிட்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்வர். இக்கூட்டு முயற்சி குறிப்பிட்ட கால வரையறைக்குட்பட்டதாகும். வெற்றியோ தோல்வியோ இக்கால வரையறைக்குட்பட்டேசெயற்படும். இவ் வாணிக ஒப்பந்தத்தை யாரும் அதன் காலம் முடியுமுன் மீறிச் செல்ல இயலாது. ஒப்பந்தக் காலம் முடிவுற்றதும் கூட்டு முயற்சியினால் பெறப்பட்ட ஆதாயம் அவரவர்கள் பங்கீட்டு விகிதப்படி பெறப்படும்.

கூட்டு முயற்சியில் கூட்டாளிகளின் பொறுப்பு வரையறையற்றது. அவர்களது திறமை, நிருவாக ஆற்றல், உழைப்பு அனைத்தும் ஒன்று திரட்டப்படுகிறது. கூட்டாளிகளுள் ஒருவர் குழுவின் தலைவராகவும், நிருவாகியாகவும் செயற்படுவார். கூட்டு முயற்சி அமைப்பில் ஒரு கூட்டாளியின் மறைவு மிகையான பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. கூட்டு முயற்சிக்கு அடிப்படை, நம்பிக்கையும் நல்லெண்ணமுமாகும். கூட்டாளி தம் நடவடிக்கைகளினால் நேர்மையையும் நியாயத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். வாணிகத்திலிருந்து இரகசியமாக ஆதாயம் தேடக்கூடாது.

கூட்டு முயற்சி அமைப்பை எளிதில் அமைக்கலாம்; எளிதில் கலைக்கலாம். கை முதல், திறமை, ஆற்றல் ஆகியவற்றை ஒன்றுதிரட்டவும், போட்டியைத் தவிர்க்கவும் கூட்டு முயற்சி வாய்ப்பளிக்கிறது. கூட்டு முயற்சியில் கிடைக்கும் ஆதாயம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படுவதால் அவர்களைக் கடினமாக உழைக்கத் தூண்டும் ஊக்கம் அவர்களிடையே தானாகவே உண்டாகிறது.

கூட்டுறவு என்பது மத நம்பிக்கையைப் போன்றது. இது ஓர் அமைப்பு மட்டுமன்று. மக்களின் இதயத்திலும் உள்ளத்திலும் எழுகின்ற ஓர் ஊக்க உணர்வுமாகும். கூட்டு முயற்சியும் இத்தகைய ஊக்க உணர்வை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகிறது.

வி.எ.

**கூட்டுரிமை**, சொத்துகளின் உரிமையை விட்டுக் கொடாமலும் வாணிக நோக்குடன் செயற்

படாமலும் சொந்த நலனைப் பாதுகாக்கும் அமைப்பைக் குறிக்கும். கூட்டுரிமை என்பது வாணிக அடிப்படையில் செயற்படும் அமைப்புகளினின்று மாறுபட்டதாகும். வாணிக அமைப்புகளில் காணப்படும் ஆதாய நோக்கம் கூட்டுரிமையில் (Co-ownership) கிடையாது. எனினும் இக் கூட்டுரிமைக்கும் அடிப்படையாக விளங்குவது கூட்டுறவுக் கோட்பாடுகளே ஆகும்.

கூட்டுறவு குறித்துக்கால்வெர்ட்டு கெரிக்கு மற்றும் சர் டார்லிங்குகூறிய கருத்துகள் கூட்டுரிமைக்கும் பொருந்தும். வாணிக நோக்கம் இல்லாமல் சொந்த நலனுக்காக ஒருவருக்கு மேற்பட்டவர் ஒரு சொத்துக்கு உரிமை பெறும்பொழுது அது'கூட்டுரிமை' எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக இரண்டு பேர் சேர்ந்து ஒரு காரை சொந்தப் பயன்பாட்டிற்காக வாங்கும் பொழுது அது 'கூட்டுரிமை'யாகிறது. ஆனால், அதே கார் வாடகைக்கு விடப்பட்டு அதன் மூலம் வரும் வருமானம் கூட்டுரிமையாளர்களிடையே பங்கிடப்படும்பொழுது கூட்டுரிமை (Co-ownership), கூட்டாண்மை (Partnership) யாகிவிடுகிறது. ஏனெனில் இங்குக் கூட்டுரிமை வாணிகத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

கூட்டுரிமையில் உரிமைக்கு மட்டுமே இடமுண்டு. வாணிகத்திற்கு இடமில்லை. ஆனால் கூட்டு வாணிகத்தில் இவை இரண்டும் உள்ளன. ஒப்புக்கொண்ட ஒப்பந்தம் அல்லது சட்டத்தின் அடிப்படையைக் கொண்டது கூட்டுரிமை. சமூக நிலை அல்லது உறவு நிலையில் இது ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, பெற்றோர் சொத்துகளுக்குப் பிள்ளைகள் உரிமை பெறும்போது அங்குக் கூட்டுரிமை உருவாகிறது. கூட்டுரிமையில் கூட்டு வாணிகத்தைப் போல் ஆதாய இழப்புக் கணக்கீடு வாணிக முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை. ஆதாய இழப்பு, பங்கீடு செய்யப்பட வேண்டும் என்ற இன்றியமையாமையும் கூட்டுரிமையில் இல்லை.

கூட்டுரிமையில் அவரவர் சொத்துக்குத்தான் அவரவர் பொறுப்பாவர். சொத்து முழுமைக்கும் ஒருவர் பொறுப்பாகமாட்டார். கூட்டுச் சொத்து நிருவாகத்தில் ஒருவர் நடவடிக்கையைப் பிற கூட்டுரிமையாளர் கட்டுப்படுத்துவதில்லை. கூட்டுரிமையில் ஒருவர் அவருக்குச் (தமக்குச்) சேரவேண்டிய பங்கினைப் பிரித்துக் கொள்ளலாம். ஆனால் அவருடைய பங்கினை மற்றவர்களுக்கு விற்பனை செய்ய விரும்பினால் பிற கூட்டுரிமையாளர்களின் அனுமதியைப் பெறவேண்டுமென்ற தேவை ஏற்படுகிறது.

உறவுநிலையில் ஏற்படும் கூட்டுரிமை முறையில், கூட்டுக் குடும்பத்தின் கடனைத் திரும்பச் செலுத்துவதற்காகவோ குடும்பச் செலவுக்காகவோ ஒதுக்கப்பட்ட சொத்தின் மீது கூட்டுரிமையாளருக்குக் குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறும் வரை எந்த உரிமையும் கொண்டாட வாய்ப்பில்லை. கூட்டுரிமையாளர்கள் தனித்தனியாகச் செலவு செய்யலாம். அதற்கான கணக்கும் வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தனி உரிமையாளரும் தனித்தனியே செய்யும் செலவின் மொத்தம், வருவாயிலிருந்து கழிக்கப்பட்டு ஆதாயம் பகிர்ந்து அளிக்கப்படும்.

கூட்டுரிமையில் ஒரு கூட்டுரிமையாளரின் இறப்பு பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. வயது வரம்பு ஏதும் கூட்டுரிமையில் இல்லை. கூட்டுரிமையாளர் பிற கூட்டுரிமையாளருக்குக் கடமைப்பட்டவர் அல்லர். இவ்வாறாகக் கூட்டுரிமை என்பது வாணிக அடிப்படையிலான பிறதொழில் அமைப்புகளினின்று மாறுபட்டு, சொந்தநலன் அடிப்படையைக்கொண்ட அமைப்பாக விளங்குகிறது.

கூட்டு முயற்சி (Joint Venture), கூட்டுரிமை ஆகியவற்றுக்கு அடிப்படையான கூட்டுறவு, ஒரு வாழ்க்கைத் தத்துவத்தையும் தனக்கே உரிய ஒரு குறிக்கோள் பணித் திட்டத்தையும் உடையது. கூட்டு முயற்சி தொழில், வாணிகம் ஆகியன செய்யும் முறையாகவும், வாழ்க்கை நெறியாகவும் உள்ளது. அது ஓர் அமைப்பு முறையாகவும் உயிர்த் தத்துவமாகவும் இணைந்திருக்கிறது. அது ஓர் செயற்பாட்டு முறையாகவும் ஓர் அறநெறிச் சக்தியாகவும் இணைந்துள்ளது. அது, பொது நன்மைக்காகத் தன் வளங்களைக் கூட்டாகச் சேர்க்க உதவும் ஒரு பொருளாதாரச் செயற்பாட்டு முறை. இவ்வாறு மனிதர்கள் ஒன்று சேர்ந்து, செயற்பட்டுத்தனி ஆள் ஆதாயம் என்னும் வெறும் பொருளாதார நோக்கத்திற்கு மேலானதும் அதற்கு அப்பாற்பட்டதுமான ஒரு சமுதாய அறநெறி மதிப்பைக் கூட்டு முயற்சி அளிக்கிறது. வி.எ.

**கூட்டு வாணிகச் சட்டம்**: இந்தியக் கூட்டு வாணிகச் சட்டம் (Indian Partnership Act)1932-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. வாணிகம் செய்வதற்குச் சிலர் கூட்டுச் சேருவது கூட்டு வாணிகம் (Partnership Business) எனப்படும். இந்தியக் கூட்டு வாணிகச் சட்டத்தின் பிரிவு-4, கூட்டு வாணிகத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. அதன்படி 'அனைவரும் அல்லது அனைவர் சார்பில் அவருள் யாராவது நடத்தும்ஒருவர்தொழிலில் வரும் ஆதாயத்தினை எல்லோரும் பங்கிட்டுக் கொள்வது என்று உடன்

பட்டவர்களிடையே எழும் தொடர்பு, கூட்டு வாணிகம்' எனப்படும்.

**சிறப்புக் கூறுகள்:** 1) கூட்டு வாணிக ஒப்பந்தத்தால் எழும் தொடர்பு, கூட்டாகச் சேர விரும்புவோர்கள் செய்துகொள்ளும் உடன்பாட்டினால் விளைவது ஆகும். ஆள்களின் தகுதி நிலையால் கூட்டு வாணிகம் தோன்றுவதில்லை. 2) கூட்டு வாணிகம் ஒரு தொழிலை நடத்துவதற்காகத்தான் ஏற்பட வேண்டும். 3) கூட்டு வாணிகம் நடத்திடக் குறைந்தது இரண்டு ஆள்கள் தேவை. இரண்டு ஆள்கள் மட்டுமிருந்தால் ஒருவரின் இறப்பு அல்லது மீறுகை ஏற்பட்டால் கூட்டு வாணிகம் கலைப்பிற்கு வந்துவிடும். எனவே, கூட்டுவாணிகம் தொடர்ந்து நடைபெற இரண்டுக்கு மேற்பட்ட ஆள்கள் தேவை. 4) கூட்டு வாணிகத்தைக் கூட்டாளிகள் அனைவரும் சேர்ந்து நடத்தலாம்; அல்லது அனைவரின் சார்பிலும் அவருள் யாரர்வது ஒருவர் நடத்தலாம். கூட்டாளிகள் ஒவ்வொருவரும் மற்றவருக்கு முகவர் (Agent) என்ற நிலையில் தொண்டாற்றலாம். கூட்டு வாணிகத்தில் முகவர் ஒரு சிறப்பிடம் வகிக்கிறார். 5) கூட்டாளிகளின் நோக்கம் தொழிலில் கிடைக்கும் ஆதாயத்தைப் பங்கிட்டுக் கொள்வதேயாகும். 6) கூட்டு வாணிகத்தில் கூட்டாளிகளின் சொத்து, உழைப்பு, திறமை ஆகியவைகளை ஒன்றாக்கிச் செயலாற்ற வேண்டும். 7) கூட்டாளிகள் சட்டமுறையிலான தொழிலையே நடத்த வேண்டும்.

குறிப்பிட்ட சில ஆள்களிடையே கூட்டு வாணிகத் தொடர்பு இருக்கிறதா இல்லையா என்றறிய அவர்கள் தொழிலில் ஏற்படும் ஆதாய இழப்பைப் பகிர்ந்து கொள்ள உடன்பாடு இருக்கிறதா என்று அறியவேண்டும். அத்தகைய உடன்பாடிருந்தால் அது கூட்டு வாணிகம் எனக் கொள்ளலாம்.

கூட்டு நிறுவனம் என்பது சட்டப்படி ஒரு தனி மனிதரன்று. கூட்டாளிகளைச் சேர்த்துக் கூறும் சொல்தான் நிறுவனம் என்பது. நிறுவனத்திற்கென்று தனி இயக்கம் இல்லை. கூட்டாளிகள் இல்லாமல் கூட்டு நிறுவனம் இல்லை. கூட்டு வாணிக நிறுவனத்திற்குக் கூட்டாளிகள் இல்லாமல் தனித் தன்மை இல்லை.

கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்படாதது (Unlimited). கூட்டு நிறுவனக் கடன்களை அடைக்க அதன் சொத்துகள் பற்றாத நிலையில் கூட்டாளிகளின் சொந்தச் சொத்துக்களையும் விற்று நிறுவனத்தின் கடன்களை அடைக்கவேண்டி நேரலாம்.

முகவர் கொள்கையைக் கூட்டு வாணிகத்தில் பின்பற்றுவது மிகவும் முக்கியமான செயலாகும். முகவர் சட்டத்தின் விரிவாக்கம் கூட்டு வாணிகச் சட்டமாகும். ஒவ்வொரு கூட்டாளியும் முதல்வராகவும், முகவராகவும் (Agent) இணைந்து செயலாற்றுகிறார்கள். காக்சுக்கும் இக்மேனுக்கும் (Hox Vs Hickman) நடந்த வழக்கில், கடனீந்தோர்களுக்குள் கூட்டு வாணிகம் எழவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இங்குக் கடன் கொடுத்தோர்களின் நன்மை கருதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வாணிகம் பாதுகாவலர்களால் நடத்தப்பட்டு வந்தது. ஆட்களின் விருப்பத்தையும் முக்கிய பொருளாக எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே இவ்வழக்கில் பாதுகாவலர்கள் கூட்டாளிகளின் (கடன் கொடுத்தோர்களின்) முகவர்கள் அல்லர். எனவே கடன் கொடுத்தோர்களைப் பொறுப்பேற்க வேண்டாம் என்று நீதிமன்றம் கருத்து வழங்கியுள்ளது.

கூட்டாளிகள் இல்லாமல் கூட்டு வாணிகத்திற்குத் தனித் தோற்றமில்லை. கூட்டு வாணிகத்தின் பேரில் வழக்குத் தொடர வேண்டுமானால் எல்லாக் கூட்டாளிகளையும் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களாக எடுத்துக்கொள்ள வேண்டும். பணியாற்றுவதற்காகக் கூட்டு வாணிக நிறுவனம் ஒரு பெயரை வைத்துக் கொள்ளலாம். இருந்தாலும் அரசர்கள், அரசிகள் தொடர்பான பெயர்களை வைத்துக்கொள்ளக் கூடாதென்று சட்டம் கூறுகிறது.

கூட்டு வாணிகம் அமைப்பதற்குப் பொது ஒப்பந்தக் (Gneral Contract) கோட்பாடுகள் பயன்படுகின்றன. கூட்டு வாணிகத்திலும் அளிப்புக் கூற்று, ஏற்பு, கருத்தொருமிப்புப்போன்றவை ஏற்பட வேண்டும். ஒப்பந்தத் தகுதி பெற்றுள்ள கூட்டாளிகள்தான் கூட்டுவாணிக ஒப்பந்தம் செய்யவேண்டும். அவ்வொப்பந்தம் மறு பயனை (Consideration) உடையதாக இருக்க வேண்டும். பொதுவாக ஓர் ஆள் கூட்டாளியாவதற்குச் சட்ட திட்டங்கள் தடையாக இருந்தால் அவற்றையே போதுமான மறுபயனாகக் கருதிக் கூட்டு வாணிகத்தைக் கொண்டுவர அவர் முயற்சி செய்ய வேண்டும். கே.என்.இரா.

**துணை நூல்:**

**Kuchhal**, M.C., Mercantile Law, Vikas Publishing House Private Limited, New Delhi, 1981.

**கூட்டு வாணிகம்:** தொழிலமைப்பின் வடிவங்களில் தனி வாணிகத்திற்கு அடுத்தது கூட்டு வாணிகம் (Partnership Business) ஆகும். தனி வணி

கர் தன்னால் மட்டும் தொழில் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் தன்னுடன் வெளியாள்களைச் சேர்த்துக் கொள்கிறார். அவ்வாறு செய்யும்போது கூட்டு வாணிகம் தோன்றுகிறது. எனவே, தனி வாணிகத்தின் கிளைப்புத் தான் கூட்டு வாணிகமாகும். தொழிலில் வெற்றி பெறுவதற்குத் தேவையான திறமைகள், குணநலன்கள் யாவும் ஒருவரிடமே இருப்பது அரிது. மூலதனம் (Capital) உள்ளவரிடம் திறமையும், திறமையுள்ளவரிடம் முதலும் இருப்பது கடினம். எனவே, முதல் திறமை தொழில் நுட்பஅறிவு ஆகியவையுடைய பலர் ஒன்றுகூடி வாணிகம் செய்வது நல்லது. அப்பொழுதுதான் கூட்டு வாணிகத்திற்கேற்ற பெருமளவு முதல், நிருவாகம், சிறப்புத் தேர்ச்சி, பணிப்பகிர்வு, இழப்புப் பகிர்வு,பொறுப்புப் போன்றவைகள் தோன்ற முடியும்.

**இலக்கணம்**: இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932–ஆம் ஆண்டைய 4–ஆம் பிரிவின்படி அனைவருமோ அவர்கள் சார்பில் ஒருவரோஒரு தொழிலை நடத்தவும். அதில் ஏற்படும் ஆதாயத்தைப்பகிர்ந்து கொள்ளவும் உடன்பட்டால் அவர்களிடையே ஏற்படுவது கூட்டாண்மையாகும். அவர்கள் செய்திடும் வாணிகம் கூட்டு வாணிகமாகும். கூட்டாண்மையில் சேருபவர்கள் தனித்தனியாகக் 'கூட்டாளிகள்' என்றும், தொகுப்பாக 'நிறுவனம்' (Firm) என்றும் அழைக்கப்படுகின்றனர். கூட்டு வாணிகம் எந்தப் பெயரில் தொழில் நடத்துகிறதோ அது 'நிறுவனப் பெயர்' (Firm Name) எனக் கூறப்படுகிறது.

**சிறப்பியல்புகள்**: **ஒப்பந்த உறவு**: கூட்டு வாணிகம் ஒப்பந்தத்தால் எழுவது. இந்த ஒப்பந்தம் வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ இருந்திடலாம். மேலும் கூட்டாளிகளின் நடத்தைகளிலிருந்து வெளிப்படும் உட்கிடையாகவும் (Implied) இருக்கலாம். கூட்டாளிகளிடையே நிலவும் உறவு ஒப்பந்த உறவாகும் (Contractual Relationship). பிறப்பு நிலையால்தோன்றுவது ஒப்பந்தஉறவாகாது.ஒப்பந்தத் தகுதியுடையவர்கள்தான் கூட்டாளியாக முடியும். எனவேதான், இளவர் (Minor) கூட்டாண்மை அமைக்க முடியாது. அவருக்கு ஒப்பந்தம் செய்திடும் தகுதியில்லை.ஆனால் பயன் கருதிக் கூட்டு வாணிகத்தில் அவரைக் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

**இருவர் வேண்டும்**: கூட்டாண்மை அமைப்பதற்குக் குறைந்த அளவு இருவர் வேண்டும். இந்திய நிறுவனச் சட்டத்தின் 11–வது பிரிவின்படி வங்கித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கூட்டு வாணிகத்தில், உயர்ந்த அளவு 10 கூட்டாளிகளும், பிற தொழிலில் ஈடுபட்டிருக்கும் கூட்டு வாணிகத்தில் உயர்ந்த அளவு 20 ஆள்களும் கூட்டாளிகளாக இருக்கலாம்.

**தொழில் செய்ய வேண்டும்**: கூட்டாண்மை ஒப்பந்தம், ஏதாவது ஒரு தொழில் நடத்துவதற்காக இருக்க வேண்டும். ஆதாயம் ஈட்டுவதற்காகச் சரக்கு உற்பத்தி செய்தாலோ, சரக்கு விற்றாலோ, பிற பணிகள் புரிந்தாலோ அது ஒரு தொழிலாகும். வாடகைக் கார் ஒன்றை இருவர் வாங்கினால் அது கூட்டு வாணிகமாகும். ஆனால் அதை அவர்கள் சொந்தப் பயனுக்காக வாங்கினால் அது கூட்டாண்மையாகாது.

**ஆதாயத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்**: தொழில் நடத்துவதே ஆதாயத்தைப் பகிர்ந்து கொள்வதற்குத்தான். ஆதாய நோக்கம் இல்லாத செயல் தொழிலாகாது. ஆதாயத்தை ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பங்கு பிரித்துக்கொள்ள வேண்டுமென்ற ஒப்பந்தந்தான் கூட்டாண்மையின் முக்கிய கூறாகும். ஆனால், சில சமயம் மேலாளர்,கடனாளர் போன்றோர் ஆதாயத்தில் ஒரு பங்கு பெறுகிறார்கள். அவர்கள் கூட்டாளியல்லர். அவர்கள் அக்கறையும், கூட்டாண்மையின் அக்கறையும் ஒன்றானவையல்ல. அதுபோலவே கூட்டாளிகள் இழப்பையும் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

**கூட்டாளிகள் அனைவரும் அல்லது அனைவர் சார்பாக ஒருவரும் தொழிலை நடத்துதல்**: கூட்டாண்மையின் மேலாண்மையில் பங்குகொள்ள அனைத்துக் கூட்டாளிகளுக்கும் உரிமையுண்டு. சில காரணங்களால் அவர்கள் எல்லோரும் நிருவாகத்தில் பங்கு கொள்ள முடியாதபோது அவர்கள் சார்பாக ஒருவர் பங்கேற்கிறார். ஒவ்வொரு கூட்டாளியும் ஒரே சமயத்தில் முதல்வராகவும் (Principal), முகவராகவும் (Agent) விளங்குகிறார். கூட்டாண்மையின் சார்பில் ஒரு கூட்டாளி செய்யும் செயலால் பிற கூட்டாளிகளுக்கு முகவராகவும், அவர்கள் செய்யும் செயல்களுக்கு அவரும் பொறுப்பாவதால் முதல்வராகவும் விளங்குகிறார்.

**கூட்டு வணிக நிறுவனம் ஒரு சட்டமுறையான ஆள் அல்ல**: கூட்டு வணிக நிறுவனத்திற்குத் தனி ஆளுமையோ தோற்றமோ இல்லை. கூட்டாளிகளுக்குள்ள உரிமை, கடமை, பொறுப்பு அதற்கில்லை.

**உட்கிடை அதிகாரம்**: கூட்டாளிகள் செய்யும் ஒவ்வொரு செயலும் நிறுவனத்தின் சார்பாகச் செய்யப்படுவதாகக் கொள்ள வேண்டும். எனவே, அயலார் கூட்டாளிகள் செய்யும் ஒவ்வொரு காரியமும் நிறுவனத்திற்காகவே செய்யப்படுவதாக எடுத்துக்கொள்ள

வேண்டும். கூட்டாளிகள் பெற்றிடும் இவ்வதிகாரத் திற்கு உட்கிடை அதிகாரம் (Implied Authority) என்று பெயர். இவ்வதிகார வரம்பை மீறும் ஒவ்வொரு கூட்டாளியும் அதனால் ஏற்படும் இழப்பிற் குப் பொறுப்பாக வேண்டும்.

**வரையறாப் பொறுப்பு**: நிறுவனத்தின் கடன்களுக் குக் கூட்டாளிகள் மொத்தமாகவும், தனித்தனியாக வும் பொறுப்பாளியாவார்கள். தாங்கள் போட்ட முத லுக்கு மேலும் தனிப்பட்ட சொத்துகளை விற்று நிறுவனத்தின் இழப்பைச் சரிக்கட்ட வேண்டும். இத்த கைய பொறுப்பிற்கு வரையறாப் பொறுப்பு (Unlimited Liability) என்று பெயர்.

**முதலீடு செய்தல்**: ஒவ்வொரு கூட்டாளியும் முத லீடு (Investment) செய்ய வேண்டும். என்றாலும் சிலர் பணமின்மையால் தங்கள் திறமை, ஆற்றல், கூர்மதி போன்றவைகளை முதலுக்குப் பதிலாக அளிப்பதைச் சட்டம் அனுமதிக்கிறது.

**முதல் மீது வட்டி**: கூட்டு வாணிகத்தில் முதலீடு செய்யாமல் அப்பணத்தை வேறு எங்காவது முதலீடு செய்தால் வட்டி கிடைக்கும். அதை ஈடுகட்ட நிறுவ னம் கூட்டாளிகளுக்கு அவர்களின் முதலுக்காக வட்டி கொடுக்க வேண்டும். அதுபோல் அவர்களின் எடுப்பு (Withdrawal) மீது அவர்கள் வட்டி செலுத்த வேண்டும்.

**கூட்டாளியின் கடன் மீது வட்டி**: முதலைத் தவி ரக் கூட்டாளிகள் நிறுவனத்திற்குக் கடன் கொடுப்ப துண்டு. அவ்வாறு தரும் கடனுக்கு நிறுவனம் வட்டி யளிக்க வேண்டும். பெரும்பாலும் வட்டி விழுக்காடு எவ்வளவு என்பது குறிப்பிடப்படுவதுண்டு. இல்லை யேல் 6 விழுக்காடு வட்டி அளிக்கவேண்டும்.

**ஆதாயப் பகிர்வு விகிதம்**: கூட்டாண்மை ஒப்பந் தத்தில் ஆதாய இழப்புப் பகிர்வு விகிதம் குறிக்கப்பட வேண்டும். அதனைப் பற்றிய குறிப்பு இல்லையென் றால் சமமாக அவைகளைப் பிரித்துக்கொள்ள வேண் டும். ஆதாய விகிதமும் முதல் விகிதமும் ஒன்றாக இருக்கவேண்டிய இன்றியமையாமையில்லை.

**ஊதியம்**: நிறுவனத்திற்காக முழு நேரத்தையும் செலவிடும் கூட்டாளிகளுக்கு மாத அல்லது ஆண்டு, அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது. ஆதலின் அது கூட்டாண்மை ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்க வேண்டும்.

**கூட்டாளி சேர்ப்பும் விலகலும்**: உயர்ந்த அளவு கூட்டாளிகள் பற்றிச் சட்டம் விதித்துள்ள உச்ச வரம்பை மீறாத நிலையில் கூட்டாளிகளைச் சேர்த் திடலாம். அதற்கு அனைத்துக் கூட்டாளிகளின் இசைவும் வேண்டும். அதேபோல் ஒரு கூட்டாளி கூட் டாண்மையிலிருந்து விலக விரும்பினால் விலகிட லாம்.

**ஒருமனமான இசைவு**: எந்தக் காரியத்தைச் செய் தாலும் கூட்டாளிகளின் ஒருமனமான இசைவுடன் தான் செய்ய வேண்டும். கூட்டாளிகளைச் சேர்த்தல், தொழில் மாற்றம், கொள்கைகளைப் பற்றிய முடிவு எடுத்தல் போன்றவை பற்றித் தீர்மானிக்க இது மிக வும் தேவை.

**போட்டித் தொழில்**: நிறுவனத்திற்குப் போட்டி யாகக் கூட்டாளிகள் தொழில் துவங்கி நடத்தக் கூடாது. அவ்வாறு நடத்தினால் அதில் வரும் ஆதா யத்தை நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டும். ஆனால் இழப்பை மாற்றிட முடியாது.

**இயன்ற அளவு நன்னம்பிக்கை**: ஒருவருக்கொருவர் கொண்டுள்ள நம்பிக்கைதான் கூட்டாண்மையின் உயிர்நாடி. எனவே ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மை நடவடிக்கைகளில் நேர்மை, நாணயம், நன்னம்பிக்கை போன்றவைகளை மனத்திலிருத்திச் செயலாற்ற வேண்டும்.

**உரிமையை மாற்றக் கூடாது**: ஒவ்வொரு கூட் டாளியும் நிறுவனத்தில் தான் பெற்றுள்ள நல உரி மையை மற்றக் கூட்டாளிகளின் இசைவின்றி அயலா ருக்கு மாற்றக்கூடாது. அயலாரைத் தன்னிடத்தில் அமர்த்தக் கூடாது.

**நன்மைகள்**: கூட்டு வாணிகத்தைத் தோற்று விப்பது மிகவும் எளிமை. இதில் அதிக முத லும் கடன் வசதியும் உண்டு. பலரின் இணைந்த ஆற்றலும் ஆர்வமும் கிடைத்திடும். காலப்போக் கிற்கேற்ப இயக்க நெகிழ்வு உண்டு. சொந்த நலனுக்கும், கூட்டாண்மை நலனுக்கும் வேறுபாடுண்டு. சிறுபான்மையோரின் நலன் பாதுகாக்கப்படுகிறது. ஆதாயப் பகிர்வு மட்டுமல்லாமல் இழப்புப் பகிர்வும் உண்டு. விருப்பமில்லையென்றால் கூட்டாளிகள் வில கிடலாம்.

**குறைகள்**: வரையறாப் பொறுப்பு மிகுந்த குறை பலமாகக் கருதப்படுகிறது. கூட்டாண்மைக்கு நிலைத்த வாழ்வு இல்லை. கூட்டாளிகளின் விலகல், இறப்பு. பித்தநிலையடைதல் போன்றவைகளால் கூட்டாண் மைக்கு முடிவு ஏற்படுகிறது. உட்கிடை அதிகாரம் கூட்டாளிகளுக்கு ஆபத்தை விளைவிக்கிறது. நடைமுறையில் பெருமளவில் நிதி மூலவளத்தைப்

பெறமுடியாது. கூட்டாளிகள் தங்கள் பங்கைப் பிறர்க்கு மாற்ற இயலாது. இதனால் மக்களிடையே ஆதரவு குறைவு. இவ்வகை அமைப்பு, சிறு தொழில்களுக்குத்தான் உகந்தது. பெருமளவுத் தொழில்கள் தொடங்கிடக் கூட்டு வாணிகம் தகுந்ததன்று.

கூட்டு வாணிகச் சட்டம், நிறுவனத்தின் பதிவு, கலைப்பு, கூட்டாளி வகைகள், கூட்டாண்மை ஆவண உள்ளடக்கம் பற்றிய விவரங்களை விளக்குகிறது. காண்க: கூட்டு வாணிகச் சட்டம். கே. என். இரா.

**துணை நூல்கள்:**


**Bhushan, V, K.**, Fundamentals of Business Organisation and Management. Sultan and Sons, New Delhi, 1983.

**Guruswamy, R.**, Elements of Commerce, Geetha Publications, Madurai, 1973.

**Vinayakam, N.**, S. Chand, Company, New Delhi, 1982.


**கூட்டுறவு** மக்களிடையே இயல்பாக உண்டாகும் உணர்வு. வீட்டளவிலும் உலகளவிலும் மக்கள் கூடி வாழ்வது இன்றியமையாதது என்பது எல்லோராலும் நன்கு உணரப்பட்டுள்ளது. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை உண்டாகும், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு போன்ற கருத்துகள் தொன்றுதொட்டு இந்தியாவில் வழக்கிலிருந்து வருகின்றன. கூட்டுறவு (Co-operation) என்ற சொல் எதனைக் குறிக்கின்றது என்பதைத் தெளிவாகக் கூறுவது எளிதன்று. சில நாடுகளில் அது அரசு உருவாக்கிய அமைப்பாகவும், சில நாடுகளில் தன்னியலான அமைப்பாகவும் காணப்படுகிறது.

இக்காலத்தில் மக்களால் ஓர் அமைப்பாகவும் இயக்கமாகவும் உள்ள கூட்டுறவுத் துறை, 19-ஆம் நூற்றாண்டின் உடைமையுரிமையியலைச் (Ownerism) சார்ந்து வளர்ச்சியடைந்தது. சிறப்பாகக் கூட்டுறவின் கொள்கைகளும் கோட்பாடுகளும் பண்புகளும் உடமையுரிமையியலை அடிப்படையாகக்கொண்டவை. கூட்டுறவு இயக்கம் சமுதாய நிலைமைகளைச் சீராக்கும் ஒரு கருவியாக மட்டுமன்றிச் சமுதாயத்தைப் புதுப்பித்தலுக்கான ஒரு முழுமையான செயல் முறைத் திட்டத்தைத் தோற்றுவிக்கத் தொடங்கப் பட்ட ஒரு கருத்துக் கோட்பாட்டைக் குறிப்பதும் ஆகும்.

வெளிப்படையாகக் கூட்டுறவு என்பது பலர் சேர்ந்து, ஒன்றுபட்டுத் திட்டமிட்டுச் செயற்படும் ஒரு முறை என்று பொருள்படும். கூட்டுறவு பற்றிப் பல்வேறுபட்ட பொருள் விளக்கங்கள் கூற முயலப் பட்டிருக்கின்றன. மிகப் பழமையான ஒரு பொருள் விளக்கத்தின்படி கூட்டுறவு என்பது ஏதாகிலும் ஒரு முயற்சியைப் பலர் சேர்ந்து ஒன்றுபட்டு, அது தொடர்பான எல்லோரிடத்தும் நேர்மையான ஈடுபாடும் கண்காணிப்பும் கூடிய, ஒரு தன்முனைப்பான, திட்டமிட்டுச் செயற்படும் முறையாகும். கூட்டுறவு, வாழ்க்கைக் கோட்பாட்டையும் தனக்கே உரிய குறிக்கோளையும் உடையது. கூட்டுறவு, வாணிகம் செய்யும் ஒரு முறையாகவும், வாழ்க்கை முறையை நெறிப்படுத்தும் இயக்கமாகவும் இணைந்திருக்கிறது.

டாக்டர் எலீனர் கியூ என்னும் நூலாசிரியர் 'ஒவ்வொருவரின் நன்மைக்காகவும் தாமே விரும்பி கூட்டு முயற்சியாக மேற்கொள்ளும் குழு அமைப்பு கூட்டுறவு' என்று கூறியுள்ளார். செல்வர்கள் அல்லது செல்வாக்கு மிகுதியுள்ள ஆள்கள் மட்டுமே பெறக்கூடிய பொருள்சார் நலன்களைத் தனிப்பட்ட செல்வாக்கற்ற மனிதன் பிறருடன் ஒன்று சேர்ந்து ஒழுக்கம், வளர்ச்சி, ஒருவருக்கொருவர் உதவி ஆகிய பண்புகள் மூலம் பெறவும், அவற்றின் வழித்தன் இயல்பான திறனை முழு அளவிற்கு வளர்த்துக் கொள்ளவும் கூடும் என்ற கருத்தைக் கூட்டுறவு தன்னுள் அடக்குகிறது என மாக்லன் கூறியிருக்கிறார். இவ்விளக்கம் தனிப்பட்ட எளிய செல்வாக்கற்ற ஒரு மனிதன், கூட்டுறவைக் கடைப்பிடித்து எவ்வாறு வாழ்வை வளப்படுத்திக் கொள்ளலாம் என்பதைக் குறிக்கின்றது. பொதுத் தேவைகள் கொண்ட தனி ஆள்கள், அவற்றை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டுத் தம் விருப்பப்படி குழுக்களைத் தோற்றுவிக்க உதவும் பெரும் இயக்கமே கூட்டுறவு எனக் கூட்டுறவாளர்களுள் தலைசிறந்தவராகக் கருதப்படும் வி. எல். மேத்தா கூறியுள்ளார்.

கூட்டுறவு ஏழை மனிதனின் ஒரு நிறுவனமாகக் கருதப்படுகிறது. சிறு குடியானவர்களை மையமாகக் கொண்ட பொருளாதார அமைப்பிற்கு இன்றியமையா ஓர் இயக்கமாகக் கூட்டுறவு செயற்படுகிறது. உறுப்பினர்களின் நலனைக் காப்பதே கூட்டுறவு இயக்கத்தின் தலையாய கடமையாகும். மக்களாட்சி (Democratic) முறையில் கூட்டுறவுத் துறையின் மேற்பார்வை அமைகின்றது. தனி உறுப்பினரின் தனித்தன்மை, உரிமை ஆகியவை கூட்டுறவில் போற்றிக் காக்கப்படுகின்றன. உறுப்பினர்களின் கருத்தை அறிந்து அவர்களின் எண்ணப்படி செயற்படும் தகுதி உள்ளவர் கூட்டுறவுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

கூட்டுறவு இயக்கம், அதன் அடிப்படைக் கொள்கைகளின் இயல்பில் ஒரு பொருளாதார இயக்கமாக மட்டுமல்லாமல், சமுதாய ஒழுக்கப் பண்புடன் தொடர்புகொண்ட ஓர் இயக்கமாகவும் இருக்கிறது. சிக்கனமும், தன்னிறைவுக்கு வழிகாட்டும் தன்னுதவியும் இவ்வியக்கத்தால் வளர்க்கப்படுகின்றன. இஃது உண்மையான ஒரு மக்கள் நல அரசை அமைப்பதற்கு உதவும் தன்னலமும், தன்னலமற்ற பொது நலமும் சேர்ந்த இணைப்பாகும். அறிஞர் கால்வெர்ட்டின் கருத்துப்படி கூட்டுறவு, ஒரு பொதுவான தேவையை நிறைவு செய்வதற்காக மனிதர்கள் சமநிலை அடிப்படையில் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றிப் பொருளாதார நன்மைகளையும் அதற்கும் மேலான ஒரு தன்னலமற்ற ஒழுக்கத்திறத்தையும் வளர்ப்பதற்கான வாய்ப்பை அளிக்கிறது. எனவே கூட்டுறவு, மக்களிடையே ஒரு சமயப் பற்றாக இருக்கிறது. சமுதாயத்தின் நலனிற்காகத் தனி ஆள் நலன்களைத் தாழ்த்திக் கொள்வதற்கு எழும் விருப்பத்தில் தான் உண்மையான கூட்டுறவு உணர்ச்சி அமைந்திருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தின் இக்கல்வி நெறிசார் ஒழுக்கப் பயன்கள் நாட்டுப் பற்றுள்ளவர்களையும் பொதுநல உணர்ச்சி உள்ளவர்களையும் ஈர்க்கின்றன. கூட்டுறவு இயக்கம் குடியானவர்கள், கைவினைஞர்கள் ஆகியவர்களின் உள்ளார்ந்த தொழில் வாணிகத் திறமையினை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாயத் தலைவர்களையும் உருவாக்குகிறது. அது சமுதாயப் பண்புகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

நாணயமும் நம்பிக்கையும் கூட்டுறவில் கட்டாயமானவையாகின்றன. ஒன்றுபட்டுத் திட்டமிட்ட முயற்சியின் மூலம் பெறக்கூடிய மேம்பட்ட வாழ்க்கை வாய்ப்புத் திறக்கப்படுகிறது. வெறும் பொருளாதார ஆதாயத்தைத் தனக்காகத் தேடிக்கொள்வதற்கும் மேலாகப் பல இலக்குகள் இருக்கின்றன என்பதனைக் கூட்டுறவில் தனிப்பங்கு பெறுபவர் உணருகின்றனர். கூட்டுறவு, மக்கள் மனத்தில் நம்பிக்கையையும் முன்னேற்ற இலட்சியங்களையும் புகுத்தி வாழ்க்கையின் மீது அவர்களின் கண்ணோட்டத்தைப் புரட்சிகரமாக்குகிறது. கூட்டுறவு அரசியல் சார்பற்ற நெறியாகும். கூட்டுறவு அரசு, சமயச் சார்பற்ற இயக்கம் ஆகும்.

கூட்டுறவு இயக்கம் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் வேரூன்றியுள்ளது. நாட்டுக்கு நாடு கூட்டுறவு இயக்கத்தின் செயற்பாடுகள் வேறுபடுகின்றன. முதலாளித்துவ நாடுகளில் தனி மனிதரின் ஆதிக்கத்தை உற்பத்தித் துறையில் குறைக்கும் வண்ணம் கூட்டுறவுத்துறை உருவாகிறது. இங்கிலாந்தில் நுகர்வோரின் இன்னல்களைத் தீர்ப்பதற்கென்றே இவ்வியக்கம் தோன்றியது. இவ்வியக்கத்தின் வரன்முறைகள் இன்னதென்று திட்டமாக வரையறுக்கப்படவில்லை. சில நெறிமுறைப் பாதைகள் வகுக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டுக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட முகப்புரையில் சிக்கனம், தன்னுதவி, ஒருவருக்கொருவர் உதவி ஆகிய பண்புகளை உறுப்பினர்களிடையே வளர்த்தல் போன்றவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

நியாயமும் நேர்மை நெறியும் கூட்டுறவுக் கோட்பாடுகளில் மிகச் சிறந்தவை எனக் கருதப்படுகின்றன. உழைப்புக்கு நியாயமான ஊதியம், முதலுக்கு நியாயமான வட்டி, ஆதாயத்தில் பங்கு ஆகிய ஒவ்வொரு நிலையிலும் கூட்டுறவில் நேர்மை நெறி தலையாய இடம் பெறுகிறது.

பொருளாதார, சமுதாய தொழில்நுட்ப வளர்ச்சியில் கூட்டுறவு முறை வழியாகப் பெறக்கூடிய நன்மைகள் எண்ணிலடங்கா. நிலவளமும் நீர்வளமும் பெருக்கவும், சேமிப்பை வளர்க்கவும், தொழில் துறையை முன்னேற்றமடையச் செய்யவும், மண்வளம் சிறக்கவும் பால்வளம் பெருகவும் விளைபொருள்களை அங்காடியிலிடவும் நுகர்வுப் பண்டங்களைச் சீராகப் பகிர்ந்தளிக்கவும், குடிசைத் தொழில்கள் ஓங்கவும், கைவினைப் பொருள்களின் விற்பனை பெருகவும் கூட்டுறவுத் துறை பயன்படுகிறது. இவ்வளவு ஆழ்ந்தும், அகன்றும் வளர்ந்துள்ள கூட்டுறவு, தன்னாட்சி, அடிப்படையிலும் மக்களாட்சி முறையிலும் குடிமக்கள் பயிற்சி பெறஉதவி வலிமை வாய்ந்த மாபெரும் உலக இயக்கமாக வளர்ந்தோங்கியுள்ளது.

இந்தியாவில் கூட்டுறவு என்பது ஒரு புதிய அமைப்பு அன்று. ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்பது கூட்டுக் குடும்ப அமைப்புகளில் தொன்று தொட்டு இருந்து வரும் கூறாகும். இந்தியக் கூட்டுறவுத் துறை அரசின் உதவியோடு நிலையாக உள்ளது.

காண்க: இந்தியக் கூட்டுறவு என். இரா.

**துணை நூல்:**

**Memoria, C.B**, Agricultural Problems of India, Kitab Mahal, Allahabad, 1984.

***கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள்:*** கூட்டுறவு இயக்கத்தின் அடிக்கல்லாக விளங்குவது ஊரகங்களிலுள்ள வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள் (Co-operative Credit Societies) ஆகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய வேளாண்மையினரின் வாழ்க்கை நிலை வறுமை மிக்கதாக இருந்தது. அறியாமையும் வறுமையும்

ஒன்று சேர்ந்து, அவர்கள் வாழ்வில் இருள் பரப்பின. பெரும்பான்மையான வேளாண்மையினரின் உடைமையான சிறிய நிலப்பரப்பில் புதிய முறைகளைக் கையாண்டு பயிர் செய்யமுடியாத நிலை நிலவியது. வேளாண்மையினர் கடன் கொடுப்போரின் பிடியில் சிக்குண்டு அல்லலுற்றனர். கடன் சுமையிலிருந்து வேளாண்மையினரை மீட்டு, அவர்தம் வாழ்வு வளம்பெற உதவுவதற்கே இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் தோற்றம் முதற்கொண்டு கடன் வழங்கும் துறை, கூட்டுறவு இயக்கத்தில் தலையாய இடம் பெற்றுத் திகழ்கிறது.

இந்தியக் கூட்டுறவுக்கடன் நிதி நிறுவனங்கள் சட்டம் 1904-இல் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, நாடெங்கிலும் வேளாண்மைக் கடன் நிதி நிறுவனங்கள் நிறுவப்பட்டன. இந்நிறுவனங்கள் இரய்பீசன் (Raiffeision) நிறுவன அமைப்பினைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. இவற்றின் சிறப்புக் கூறுகளாவன: நிறுவனத்தின் செயல் எல்லை சிறிய பரப்பாக இருந்தது. பங்குகளின் மதிப்பு மிகவும் சிறிய தொகையாக வரையறுக்கப்பட்டது. உறுப்பினர் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக (Limited Liability) இருந்தது. பிரித்துப் பகிர்ந்துகொள்ளக் கூடாத நிலையான காப்பு நிதியொன்றை ஒவ்வொரு நிறுவனமும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விதிக்கப்பட்டது. உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் அளிக்கப்பட்டது. நிறுவாக அலுவலர்களின் பணி, ஊதியம் ஏதுமின்றிப் பெறப்பட்டது. ஆதாயம் ஈட்டுவது தவிர்க்கப்பட்டது. குறிப்பிட்ட நிறுவனம் வைப்புகள் திரட்டும் அளவு, கடன்கள் வாங்கும் அளவு, தனி ஆள் பெறக் கூடிய உச்சக் கடன் அளவு முதலியன வரையறுக்கப்பட்டன. உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்திலும் நற்பண்பு வளர்ச்சியிலும் நிறுவனம் கருத்துச் செலுத்தியது. ஓர் ஊரகத்திற்கு ஒரு நிறுவனம் என்ற ஒரு பொது விதியினை மாநிலங்கள் குழு பரிந்துரைத்தது. இவ்வடிப்படையில் நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. இந்தியாவிற்கு இதுவே உகந்தது என்று அக்காலத்தில் கருதப்பட்டது. நாளடைவில் கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாடுகளில் பலகுறைகள் இருப்பது அவற்றின் நடைமுறைகளிலிருந்து அறியப்பட்டது.

சிறிய அளவில் கூட்டுறவு நிறுவனங்கள் செயற்படுவது பயன் தரக்கூடியதன்று என்று 1946-இல் கருதப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி குன்றியிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமென ஆராய்ச்சியாளர்கள் கருதினர். இதற்கிடையே பல நோக்குக் கூட்டுறவுகளை (Multi Purpose Co-Operatives)அமைத்துச் சீரிய வேளாண்மை, சீரிய தொழில், சீரிய வாழ்வு பெறப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண்மைக்கு வேண்டிய பொருள்களை வழங்கவும், உறுப்பினரின் விளைபொருளைச் சேர்த்துப் பதப்படுத்தவும், அவற்றை அங்காடிக்குக் கொண்டுசெல்லவும் கூட்டுறவுகள் பொறுப்பேற்றன. இக்கூட்டுறவுகள் முதன்முதலில் பரோடா மாநிலத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டதைக் கண்ணுற்ற இந்தியச் சேமவைப்பு வங்கி (Reserve Bank of India), 1947-ஆம் ஆண்டு ஓர் அறிக்கை மூலம் நாடெங்கிலும் பல்நோக்குக் கூட்டுறவு அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தது.

ஊரகக் கடன் விசாரணைக் குழுவும் 1954-இல் பெரிய அளவுக் கூட்டுறவு நிறுவனங்கள் நிறுவப்பரிந்துரைத்தது. அதனைத் தொடர்ந்து ஊரக வங்கிகள் அமைப்பது நிறுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் இன்னும் ஒரு சில இடங்களில் ஊரக வங்கிகள் செயற்படுகின்றன. தமிழகத்தில் பெரிய அளவு கூட்டுறவு நிறுவனங்கள் வரையறுத்த பொறுப்புடன் வேளாண்மை வங்கிகள் (Agricultural Co-Operative Banks) என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றன.

இந்தியாவில் கூட்டுறவு, வேளாண்மையினருக்குக் கடனளிக்கும் நிறுவன அமைப்பாக உருவெடுத்து விரைவாக வளர்ச்சியடைந்தது. இந்நிறுவனங்கள் 1950-51-ஆம் ஆண்டில் அளித்த கடன் தொகை 23 கோடி உரூபாயாக இருந்தது. அதுவே 1960-61-இல் 202 கோடி உரூபாயாகவும் 1970-71-இல் 578 கோடி உரூபாயாகவும், 1983-84-இல் 2100 கோடி உரூபாயாகவும் உயர்ந்தது.

வணிக வங்கிகள் 1970-ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களுக்குக் கடனளிக்கும் முறையினைக் கொணர்ந்தன. இத்திட்டம் 13 மாநிலங்களில் நடைமுறையிலுள்ளது. மேலும் 1980-ஆம் ஆண்டு வரையில் 24 வணிக வங்கிகள் 683 கிளைகள் மூலம் 2,870 வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களுக்கு 18 கோடி உரூபாய் கடனளித்துள்ளன.

| ஆண்டு | வழங்கப்பட்ட கடன் (இலட்சம் உரூபாயில்) |
|---|---|
| 1981-82 | 85.74 |
| 1982-83 | 108.00 |
| 1983-84 | 130.57 |
| 1984-85 | 135.37 |
| 1985-86 | 191.98 |

**இந்தியாவில் கூட்டுறவுக் கடன்நிதி நிறுவனங்கள்**

| | 1950–51 | 1960–61 | 1970–71 | 1982–83 |
|---|---|---|---|---|
| **வேளாண்மைக் கடன்நிதி நிறுவனங்கள்** | | | | |
| நிறுவனங்களின் எண்ணிக்கை | 105 | 212 | 161 | 94 |
| கொடுக்கப்பட்ட கடனின் அளவு (உரூபாய் கோடிகளில்) | 23 | 202 | 578 | 2,100 |
| **மையக் கூட்டுறவுக்கடன் நிதி நிறுவனங்கள்** | | | | |
| நிறுவனங்களின் எண்ணிக்கை | 505 | 390 | 341 | 340 |
| கொடுக்கப்பட்ட கடனின் அளவு (உரூபாய் கோடிகளில்) | 83 | 350 | 890 | 850 |
| **மாநிலக் கூட்டுறவுக் கடன்நிதி நிறுவனங்கள்** | | | | |
| சங்கங்களின் எண்ணிக்கை | 15 | 21 | 25 | 28 |
| கொடுக்கப்பட்ட கடனின் அளவு (உரூபாய் கோடிகளில்) | 42 | 260 | 750 | 1,550 |

மூலம்: — Government of India 'Report of the Ministry of Agricultural Department of Co-operatives 1974-75 and 1984-85, Delhi.

**பயிர்க்கடன் திட்டம்**: கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களின் சிறப்புத் திட்டங்களுள் குறிப்பிடத் தக்கது பயிர்க்கடன் திட்டமாகும். பெரிய அளவு கடன் நிதி நிறுவனங்கள் பயிர்க்கடன் திட்டத்தைச் செயற்படுத்த மிகவும் உகந்தவையெனக் கருதப்படுகிறது. பயிர்க்கடன் திட்டத்தின் முக்கிய கூறுகளாவன: 1) கடன் வழங்கப்படுவது உற்பத்தி நோக்குள்ள செயல்களுக்கு மட்டுமே. தக்க பிணை கிடைத்திருக்கிறது என்ற காரணத்திற்காக மட்டும் கடன் அளிக்கப்படுவதில்லை. 2) கடனுக்குப் பிணையாக அமைவது விளைவிக்கவிருக்கும் பயிரேயாகும். நிலமோ அல்லது வேறு நிலையான சொத்தோ பிணையாகத் தரப்பட வேண்டுமென்பதில்லை. 3) பயிரிடத் திட்டமிட்டுள்ள பயிர்வகையை யொட்டி கடன் அளவு வரையறுக்கப்படும். 4) அறுவடையான பயிரை விற்று அதன்வழி கிடைக்கும் தொகையைக் கொண்டு கடன் அடைக்கப்பட வேண்டும். 5) முடிந்த வரை கடனைப் பொருளாக அளிப்பது விரும்பத்தக்கது. வேளாண்மையினர் பிணையாகத் தர எவ்வளவு நிலம் வைத்திருக்கின்றனர், எவ்வளவு சொத்து வைத்திருக்கின்றனர் என்று கணக்கிடாமல் எவ்வளவு நிலம் பயிரிடப்படும், அதற்குத் தேவைப்படும் கடனளவு, விளைவிக்கும் பயிரைக் கொண்டு கடனை அடைக்கும் திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, வழங்கப்படுவதே பயிர்க்கடன் திட்டத்தின்சிறப்பாகும்

**கடன், அங்காடி விற்பனை இணைப்பு**: கூட்டுறவுக் கடன்நிதி நிறுவனம் வழங்கும் பயிர்க்கடனைப்

பயிரை விற்று வரும் தொகையைக் கொண்டு அடைப்பது பயிர்க்கடன் முறையின் அடிப்படையாகும். கடனை வழங்கும்நிறுவனத்துடன்தொடர்புள்ள ஒரு நிலையத்தின் வழிப்பயிரை விற்பனை செய்தால் கொடுத்த கடனை எளிதாகப்பெறலாம். கடன் வாங்கும் உறுப்பினர் தமது விளைபொருளை அங்காடியில் விற்பனை செய்யும் நிறுவனத்தின் வழி விற்பனை செய்ய ஒப்புதல் அளித்து அதற்கான ஓர் உடன்பாட்டில் கையொப்பமிட வேண்டும். விற்பனைத் தொகையிலிருந்து தலைமை நிறுவனத்திற்குத் தாம் திருப்பியளிக்க வேண்டிய கடன் தொகையைக் கழித்துக் கொள்ளவும் நிறுவனத்திற்கு உறுப்பினர் அனுமதி அளிக்கவேண்டும்.

**கடனைப் பொருளாக அளிப்பது**: பயிர்க் கடன் திட்டத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மிகுதியான அளவுக்குக் கடனைப் பொருளாக அளிக்க வேண்டுமென்று கருதப்பட்டது. வீரிய விதைகள், இராசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்ற பொருள்களைக் கடனாக வழங்குவதன் வழி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் இத்திட்டம் இணைந்து செயற்படுகிறது. அதனால்உரொக்கமாகக் கடனைப் பெற்றுக்கொண்டு பின்னர் அதனைப் பயிர்ச் செலவுக்குப் பயன்படுத்தாது வீணடிக்கக் கூடிய வாய்ப்பும் தவிர்க்கப்படுகிறது.

**தமிழகத்தில்**: தமிழகத்தில் உள்ள வேளாண்மையினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கென ஏறக்குறைய மூன்று ஊரகங்களுக்கு ஒரு நிறுவனம் என்ற வீதத்தில் 4,655 வேளாண்மைப் பணி நிறுவனங்களும், 183 தலைமைக் கூட்டுறவு நிலவள வங்கிகளும் இயங்கி வருகின்றன.

தமிழகக் கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்பாகத் தலைமை வேளாண்மைப் பணிக் கூட்டுறவு நிறுவனங்கள் விளங்குகின்றன. இவ்வகை நிறுவனங்களின் எண்ணிக்கை 4,655 ஆகும். இவை பயிர்ச் செலவிற்காகக் குறுகிய காலக் கடன்களையும், வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்காக இடைக்காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. வேளாண்மைப் பணிக் கூட்டுறவு நிறுவனங்களைத் தன்னிறைவுள்ள நிறுவனங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டத்தின் கீழ், தன்னிறைவு அடையாத நிலையில் உள்ள 327 நிறுவனங்களில் 142 நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் 104 புதிய நிறுவனங்கள் பதியப்பட்டன. எஞ்சியுள்ள 185 நிறுவனங்களையும், தன்னிறைவுள்ள நிறுவனங்களாக மாற்றியமைக்கும் திட்டமும் செயற்படுத்தப்பட உள்ளது. தன்னிறைவுள்ளனவாக அமைக்கப்பட்ட 183 தலைமைக் கூட்டுறவு நிலவள வங்கிகள் நில மேம்பாட்டிற்காகவும் இதர பல்வகைப்படுத்தப் பட்ட காரணங்களுக்காகவும் நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகின்றன. 1979-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரையில் 88.32 கோடி ரூபாய் அளவிற்கான குறுகிய காலக் கடன்கள்,இடைக்காலக் கடன்களாக மாறின.

**தமிழகக் கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கிய கடனின் அளவு (உரூபாய் கோடிகளில்)**

| 1977-78 முதல் 1984-85 வரை | | | |
|---|---|---|---|
| ஆண்டு | குறுகிய காலக் கடன்கள் | நீண்ட காலக் கடன்கள் | மொத்தம் |
| 1977-78 | 127.13 | 12.28 | 139.41 |
| 1978-79 | 102.65 | 11.24 | 113.89 |
| 1979-80 | 42.70 | 8.85 | 51.55 |
| 1980-81 | 21.52 | 4.76 | 26.28 |
| 1981-82 | 77.20 | 5.52 | 82.72 |
| 1982-83 | 67.18 | 14.35 | 81.53 |
| 1983-84 | 75.34 | 15.42 | 90.76 |
| 1984-85 | 110.80 | 20.37 | 131.17 |

மூலம்:

1) தமிழ்நாடு அரசு 'கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கம்' கோரிக்கை எண். 23, 1986-87.

2) தமிழ்நாடு அரசு 'கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கம்' கோரிக்கை எண் 14, 1978-79.

கூட்டுறவு நிறுவன உறுப்பினர்களுக்குக் கடன ளித்து நிதியுதவி வழங்கல் கூட்டுறவு மைய வங்கி களின் முக்கிய பணியாகும். கூட்டுறவு நிறுவனங்களில் மிகப் பெரும்பான்மையாக இருப்பது வேளாண்மைக் கடன் நிதி நிறுவனங்களாகும். எனவே, கூட்டுறவு மைய வங்கிகள் வழங்கும் கடன்கள் வேளாண்மைக் கடன்களாகவே இருப்பதில் வியப்பில்லை.

கூட்டுறவுக் கடன் இயக்கத்தில் பெரும் சிக்க லாக விளங்குவது தவணை தவறிய கடன்களாகும். இந்த நிலை மாற மைய வங்கிகளின் கண்காணிப்பு ஒழுங்குகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டில், ஏழை மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கடன்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

என்.இரா.செ.

துணை நூல்கள்:

**Memoria, C.B.**, Agricultural Problems in India, Kitab Mahal, Allahabad, 1984.

**Srivastava, Sivaleor Jha, S.K. Agarwal, Jagdish, Prakash, R.S. Kapurta**, Agricultural Economics and Co-Operation, S. Chand & Co., Delhi, 1970.

**கூட்டுறவுச் செயற்பாங்கு:** இருவர் அல் லது இருவருக்கு மேற்பட்டோரிடையே ஏற்படும் சமூக இடைவினைகளின் மூலம் அனைத்துச் சமூக அமைப்புகளும் உருவாக்கப்படுகின்றன. இச் சமூக இடைவினைகளின் மூலமே, தங்களிடமும், பிறரிட மும் என்ன எதிர்பார்க்கவேண்டும் என்பதை மக்கள் கற்கின்றனர். சமூகத்தில் பிறருடன் இணைந்து வாழ்வதற்கு இதன்மூலமே செய்தித் தொடர்பு களைப் பரிமாறிக் கொள்ள மக்களால் இயலுகிறது. இவ்வாறு இடைவினை கொள்கின்ற மனிதர்களிடம் கூட்டுறவு (Co-operation), பூசல் (Conflict), போட்டி (Competition), கட்டாயப்படுத்துதல் (Coercion), பரிமாற்றம் (Exchange) போன்ற சமூகச் செயற் பாங்குகளை அதிகமாகக் காணலாம் என போப் பினோ (Popenoe) என்ற அறிஞர் கூறுகிறார். இதில் கூட்டுறவு என்பது சமூகச் செயற்பாங்கிலே அடிப் படையான வகையாகும்.

பொதுவாக, சில இலக்குகளைப் பெறப் பல் வேறு தனிமனிதர்களோ, தனி மனிதர்களைக் கொண்ட பல்வேறு குழுக்களோ ஒருவருக்கொரு வர் ஒத்துழைப்புத் தருவர். ஒன்றுபட்ட செயல்கள் புரியும் பொழுது ஒத்துழைப்பு இருக்கலாம். ஒருவ ரோடு ஒருவர் கலந்து கொள்ளுதல் இல்லாது குழு வாழ்க்கை அமைய முடியாது. ஒருவருக்கொருவர் அருகில் வசிப்பதால் மட்டுமே சமூக வாழ்க்கை அமையாது. பல்வகைக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி உறவாடி, சண்டை யிட்டு இப்படியாகப் பல செயல்களில் ஈடுபடும் பொழுதுதான் சமூக வாழ்வு தொடங்குகிறது.

சமூகவியலில் கூட்டுறவுச் செயற்பாங்கு என்பது, தனி மனிதர்கள் ஒன்று சேர்ந்தோ இரண்டு குழுக் கள் ஒன்று சேர்ந்தோ, ஏதேனும் ஒரு செயலையோ குறிக்கோளையோ அடைய எடுக்கும் முயற்சியாகும். அதாவது, தனிமனிதர்கள் அல்லது குழுவினர் பொது வான செயல்கள், நோக்கங்களுக்காகத் தங்களுக் குள் செய்து கொள்கின்ற இடைவினையானது கூட் டுறவுச் செயற்பாங்கு எனப்படுகிறது. பொதுவான நோக்கங்களுக்காக மக்கள் ஒன்று கூடிப் பணிபுரிகின்ற நடத்தை கூட்டுறவு எனப்படுவதாக ஆக்பர்ன் (Ogburn), நிம்கோப்பு (Nimkoff) போன்ற அறிஞர் கள் கூறுகின்றனர்.

இக்கூட்டு முயற்சியும் ஒத்துழைக்கும் மனப் பாங்கும் சிறுவயது முதற்கொண்டு தோன்றுகின்றன. குடும்பத்தில் இடைவினை கொள்ளும் பொழுது மிகுந்து வளர்கிறது. நன்றாக வளர்ந்த பின்பு மேலும் அதிகமாகிறது. நல்ல குறிக்கோள், ஒத்துழைப்பால் அடையப் போகும் பல நற்பலன்களை அறிந்திருத் தல், கூடி வேலை செய்யும் பொழுது கிடைக்கும் பலனையும் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற நம் பிக்கை, ஒத்துழைக்க வேண்டியதற்கான திறமை ஆகியவை கூட்டுறவு மனப்பாங்கு வளரத் தேவை யானவையாகும். இந்நற்பண்புகள் காணுமிடத்து, கூட்டுறவு வெற்றியடைய வாய்ப்புண்டு.

பொதுவான செயல்கள் அல்லது நோக்கங்களை மக்கள் கூட்டுறவின் மூலமே நிறைவேற்றிக் கொள் கின்றனர். அவ்வாறு அன்றித் தனியனாக நிறை வேற்றிக் கொள்வது கடினம் அல்லது இயலாத காரியமாகும். சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு ஒத்துப் போகவும், சுற்றுப் புறத்தில் உள்ள வெள்ளம், பஞ் சம், கொடிய வியாதி போன்ற ஆபத்துக்களைச்

சமாளிக்கவும் மக்கள் குழுக்களாகவோ சமூகமாகவோ இணைந்து வாழ்கின்றனர். தனிமனிதனின் தேவை களைத் திறமையாக நிறைவுசெய்யவும், பிற சமூகங் களிலிருந்து வரும் ஆபத்துக்களிலிருந்து ஒருவருக் கொருவர் பாதுகாப்புக் கொடுக்கவும் ஒன்றாகச் சேருகின்றனர். குறைந்த அளவாவது கூட்டுறவு முயற்சியில்லாமல் சமூகமானது இயங்குவதே இய லாத காரியமாகும்.

கூட்டுறவு என்பது நெருங்கி வாழும் குழுவில் அமையும் பழக்க வழக்கங்களால் மனிதனிடம் தோன்றுவதாகும். போட்டி, பொறாமை, எதிர்ப்பு போன்றவை குழுவின் வாழ்வில் தோன்றிய போதி லும் கூட்டுறவும் அதே குழுவில் தான் எழுகிறது. குழுவினுடைய ஒற்றுமைத் தன்மையானது ஒருவருக் கொருவர் உதவி செய்தல், பிறருக்கு நன்றி செலுத் தல் ஆகிய பண்புகளால் வெளிக் காட்டப்படுகிறது. ஒரு குழுவிற்கு எதிராக மற்றொரு குழு உள்ளது எனக் கருதப்படும் நேரத்தில் அக் குழுவினரிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அதிகமாக இருக்கும். கூட்டுறவு பல விதமான கட்டுப்பாடுகளை விதிக் கிறது. மற்றவர்களுடன் சேர்ந்து உழைக்கும் பொழுது தன்னிச்சையாக ஏதும் செய்ய முடியாது. தன்னிச் சையாகச் செயல்புரிய முற்படும்போது ஒத்துழைப்பு, கூட்டுமுயற்சி ஆகியவை போய்விடுகின்றன. மேலும், போட்டி ஏற்படவும் வாய்ப்புள்ளது. கூட்டுறவில் - 'தான்' என்ற உணர்வுக்கு இடமேயில்லை.

கூட்டுறவு 1. இயற்கையான கூட்டுறவு (Spontaneous Cooperation), 2. பாரம்பரியக் கூட்டுறவு (Traditional Co-operation), 3. வழிகாட்டுகிற கூட்டுறவு (Directed Co-operation), 4. ஒப்பந்தக் கூட்டுறவு (Contractual Co-operation) என நான்கு வகைப்படுவதாக நிசுபெட்டு (Robert A. Nisbet) என்ற அறிஞர் கூறுகிறார். மேலும் 1. பற்றுறுதி 2. ஒருவரையொருவர் சார்ந்திருத்தல், 3. ஒற்றுமை யுணர்வு, 4. நிர்ப்பந்த நிலை, 5. எதிர்மறைக் கூட் டுறவு எனப் பல வகைகளில் கூட்டுறவின் வடிவங்கள் காணப்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

**கூட்டுறவும் பண்பாடும்**: மனிதன் ஒரு சமூகப் பிராணியாதலால் ஒரு சமூகத்தில் வாழுகின்ற உணர் வினைத் தன்னுள் இயற்கையாகவே அவன் கொண்டி ருக்கின்றான். மனிதன் குடும்பம் என்ற குழுவில் வாழ்ந்து அவனுக்குப் பிறருடன் ஒத்துழைக்கும் எண் ணம் ஏற்படுகிறது. குடும்ப உறவு மட்டுமன்றி, விளையாட்டுக் குழு, ஒப்பார் குழு, பள்ளிக் கூடம் போன்ற மற்ற அனைத்துக் குழுக்களிலும் மற்றவர் களுடன் ஒத்துழைத்து வாழுகிறான். தனி மக்களி டையேயும், குழுக்களிடையேயும் ஒரு குறிக்கோளை அடையவே கூட்டுறவு ஏற்படுகிறது. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனை வர்க்கும் தாழ்வு' என்ற பாரதியாரின் கருத்து சிறு குழந்தையின் மனத்தில் பதியும் படி கற்பிக்கப்படும் பொழுது, குழந்தை கூட்டுறவு முயற்சியினால் பல நன்மைகள் அடையலாம் எனத் தெரிந்து கொண்டு அவ்வழியில் நடக்க முயலுகிறது. மேலும், நாட்டில் வளர்ந்து வரும் கூட்டுறவு இயக்கங்களும், கூட்டுற வின் இன்றியமையாத் தேவையினை மக்களுக்கு உணர்த்துகின்றன.

பூ.த.

## கூட்டுறவுப் பண்ட சாலை

**கூட்டுறவுப் பண்ட சாலை**: கூட்டுறவுப் பண்டக சாலை (Co-operative Stores) பொருள் களின் கொடுக்கல் வாங்கலுக்கான ஓர் அமைப்பாக இயங்குகிறது.

நியாய விலையை (Fair Price) நிலைப்படுத்த வேண்டும் என்பதனை இலக்காகக் கொண்டு, கூட் டுறவுப் பண்ட சாலைகள் வளர்ச்சியடைந்தன. இப்பண்ட சாலைகளில் பொருள்களை வாங்கு வோருக்கு ஆதாயத்தில் பங்கு கொடுக்கும் முறை பின்பற்றப்படுகிறது. இம்முறையைக் கிளாட்சுடன் (Gladston) 19-ஆம் நூற்றாண்டின் தலை யாய பொருளாதாரக் கண்டுபிடிப்பு எனக் கூறி னார். இந்தியாவில் கூட்டுறவுப் பண்ட சாலை களைப் 'போர்க்காலத்தின் குழந்தைகள்' எனக் குறிப்பிடுகின்றனர். போர்க்காலங்களில் இன்றியமை யாப் பொருள்களைப் பங்கிடும் முறையில் கூட்டுறவு அங்காடிகள் சிறப்பாகச் செயலாற்றின. கூட் டுறவுப் பண்ட சாலைகள் செயலாற்றியமையால், வேளாண்மை விற்பனை, உற்பத்தியோடு தொடர் புடையது என்பதை இந்திய வேளாண்மையினர் உணர்ந்தனர். இக்கருத்தை இந்தியக் கூட்டுறவு இயக்கத் திட்டக் குழுக்களின் ஆய்வு அறிக்கைகளி லும் காணலாம்.

கூட்டுறவுப் பண்ட சாலைகள் உலக நாடுகள் பலவற்றில் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன. அமெரிக்க நாட்டில் உற்பத்தியாகும் பழம் காய்கறியில் 90 விழுக்காடும், உலர்ந்த பழங்களில் 95 விழுக்காடும், அரிசியில் 40 விழுக்காடும் கூட்டுறவு அங்காடிகளின் வழி விற்கப்படுகின்றன. தென்மார்க் கில் (Denmark) பால்பண்ணைகளுக்கு அனுப்பப்படும் பாலில் 85 விழுக்காடும், வெண்ணெய் உற்பத்தியில் 79 விழுக்காடும் கூட்டுறவுப் பால் பண்ணைகள் வழி நடைபெறுகின்றன. சப்பான் (Japan) நாட்டு அரசுக்கு அளிக்கப்படும் அரிசியில் 90 விழுக்காட்டைக் கூட்டுறவுகள் அளிக்கின்றன. மற்றும் அங்காடியில்

விற்கப்படும் கோதுமையில் 80 விழுக்காடும், உருளைக் கிழங்கில் 50 விழுக்காடும் கூட்டுறவுகள் வழி விற்கப் படுகின்றன. கனடாவின் 50 விழுக்காட்டு வேளாண்மையினர் கூட்டுறவுப் பண்ட சாலையில் உறுப்பினராக இருக்கின்றனர்.

**கூட்டுறவுப் பண்ட சாலையின் சிறப்பு நோக்கங் களாவன:** விளைபொருளுக்கு நியாய விலை பெறு தல், தேவையற்ற இடைத்தரகரை ஒழிப்பது, உறுப் பினருக்குத் தேவையான நிதி வழங்குவது, தரமான பொருளை உற்பத்தி செய்யுமாறு வேளாண்மை யினரை ஊக்குவிப்பது, விலையை நிலை பேராக்கம் செய்வது, கடனைப் பண்ட சாலையுடன் இணைத் துக் கூட்டுறவுக் கடன் இயக்கத்திற்கு உறுதுணை யாக நிற்பது, வேளாண்மைத் தொழிலுக்குத் தேவை யான விதை, கருவிகள் போன்றவற்றை வழங்குவது, அரசின் முகவராகக் கொள்முதல் போன்ற பணி களை மேற்கொண்டு விலை ஆதரவுக் கொள்கை யினைச் செயற்படுத்துவது, உறுப்பினர்களிடையே தன்னுதவி, சிக்கனம், சீரிய வேளாண்மை முறை ஆகியவற்றைப் பரப்புவது ஆகியவையாகும்.

இந்தியாவில் சில மாநிலங்களில் மட்டும் மாவட்ட நிலையில் மையப் பண்ட சாலைகள் செயற்பட்டு வருகின்றன. பண்ட சாலைகளின் அடித்தளத்தில் இயங்கி வருவது தலைமைப் பண்ட சாலையாகும். சில மாநிலங்களில் மண்டிகள் உள்ள இடங்களில் அவை அமைந்துள்ளன. பொதுவாக வாணிகத் துறை யில் சிறப்பு அங்காடி என்று கருதப்படும் இடங்களில் தலைமைப் பண்ட சாலைகள் அமைவது இன்றியமை யாததாகக் கருதப்படுகிறது.

**தலைமைப் பண்ட சாலைகள் ஆற்றும் முக்கிய பணிகளாவன:** தமதுஉறுப்பினர்களின் வேளாண்மைப் பொருள்களை விற்றல், விளைபொருளைப் பிணை யாக ஏற்றுக்கொண்டு உறுப்பினர்களுக்கு முன்பணம் வழங்குதல், அவர்களுக்குத் தேவையான பொருள் களைக் கிடைக்கச்செய்தல்.

இந்தியாவில் பல மாநிலங்களில் அரசினர் கூட்டுறவு நியாய விலைக் கடைகளை நிறுவியுள்ளனர். அரியானா (Hariyana) மாநிலத்தில் நியாயவிலைக் கடையனைத்தும் கூட்டுறவு இயக்த்தினரால் நடத்தப் படுகின்றன. மைசூரில் 80 விழுக்காடு நியாயவிலைக் கடைகளும் ஒரிசா, குசராத்து,கேரளம், மகராட்டிரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் 50 விழுக்காட்டு நியாய விலைக்கடைகளும் கூட்டுறவுக்கு ஒதுக்கப்பட் டுள்ளன.

தமிழ்நாட்டில் 1987-இல் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்ட சாலைகளாலும், தலைமைப் பண்ட சாலைகளாலும் நடத்தப்படும் 30 சிறப்பு அங்காடிகளும் (Super Market) 188 நவீன பெரிய அளவிலான சில்லரை அங்காடிகளும் இயங்கி வருகின்றன. கூட்டுறவுத் துறை 1437 புதிய கடை களை 1.9.84 முதல் 31.12.84க்குள் உருவாக்கி யுள்ளது. இது 'ஊரகத்திற்கு ஒரு கடை' எனும் திட் டத்தின்கீழ்ச் செயற்படுத்தப்படுகிறது. ஆகவே 12,596 ஊரகக் கூட்டுறவுக் கடைகள் நடத்தப்படுகின்றன.

**சிறப்பு அங்காடிகளும், சிறப்புச் சிற்றங்காடி களும் செய்த விற்பனை:** தமிழகத்தில் 1987-இல் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்ட சாலைகள், முதன்மைக் கூட்டுறவுப் பண்ட சாலைகள் ஆகிய வற்றின்கீழ் 30 பல்பொருள் சிறப்பு அங்காடிகளும், 191 நவீன சில்லரை அங்காடிகளும் இயங்கி வருகின்றன. இவ்வங்காடிகள் 1984-85-ஆம் ஆண்டில் 95.50 கோடி உருபாய் அளவிற்கு விற்பனை செய்துள்ளன. புதிதாக ஐந்து நவீன சில்லரை அங்காடிகள் திறக்க 1985-86-ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. பல் பொருள் அங்காடி ஒன்று 1985-86-ஆம் ஆண்டில் அமைப்பதற்கும், மூன்று பெரிய அளவிலான சில்லரை அங்காடிகள் அமைப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. 1986-87-ஆம் ஆண்டில் மேலும் ஐந்து நவீன சில்லரை அங்காடிகள் அமைக்க வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

| ஆண்டு | கூட்டுறவு வழி விற்பனை செய்யப்பட்ட வேளாண்மைப் பொருளின் மதிப்பு (கோடி உருபாயில்) |
|---|---|
| 1980-81 | 86.87 |
| 1981-82 | 89.98 |
| 1982-83 | 121.30 |
| 1983-84 | 99.76 |
| 1984-85 | 117.16 |
| 1985-86 | 146.29 |

**விளை பொருள் விற்பனை:** தமிழகத்தில் 114 கூட்டுறவு விற்பனை நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவை உறுப்பினர்களின் வேளாண்மை விளை பொருள்களை விற்பனை செய்வதன் வாயிலாக அவர்கள் நியாயமான வருமானம் பெறத் தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. வேளாண்மை விளை

பொருள்களை 1985-86-ஆம் ஆண்டில் 125 கோடி உரூபாய்க்கு விற்பனை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1986-ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை விற்பனை செய்யப்பட்ட வேளாண்மை விளைபொருள்களின் மதிப்பு 104.89 கோடி உரூபாய் ஆகும். அதனை 1986-87-ஆம் ஆண்டில் 135 கோடி உரூபாய்க்கு மேலும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகக் கூட்டுறவு, நூற்பாலைகளுடன் இணைந்து நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தியை 1985-8-ஆம் ஆண்டில் 19.27 கோடி உரூபாய் அளவிற்கும், நடப்புக் கூட்டுறவு ஆண்டில் திசம்பர் மாதம் வரையில் 5.07 கோடி உரூபாய் அளவிற்கும் கொள்முதல் செய்தது.

**காய்கறி விற்பனை வசதி:** காய்கறி பயிரிடுவோருக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதுடன் நுகர்வோருக்குத் தரமான காய்கறிகள் நியாயமான விலைகளில் வழங்கப்படவேண்டும் என்ற நோக்குடனும், சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையாலும் தமிழகத்தில் 516 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனை நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**பதனப் பிரிவுகள்:** விளைபொருள்களைப் பதனிடும் வசதிகளைக் கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ள உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த செலவில் அளிக்க விற்பனை நிறுவனங்களுக்கு அருகிலேயே பதனிடும் பிரிவுகளைக்கூட்டுறவு நிறுவனங்கள் நிறுவியுள்ளன. இதற்காக அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடனாகவும் நிதி உதவிகளைப் பெறுகின்றன.

நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்களின் கூட்டமைப்பு 3039 கல்லூரி மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்ட சாலைகள், 301 தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர் பண்ட சாலைகள், 15 மகளிர் கூட்டுறவுப் பண்ட சாலைகள் உட்பட 3,848 தலைமைக் கூட்டுறவுப் பண்ட சாலைகளையும் அவற்றின் 550 கிளைகளையும், 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்ட சாலைகளையும் அவற்றின் 1,686 கிளைகளையும் தமிழக மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும் கொண்டுள்ளது. நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்களின் சில்லரை விற்பனையின் மதிப்பு 1984-85-ஆம் ஆண்டில் 285 கோடி உரூபாயிலிருந்து 1985-86-ஆம் ஆண்டில் (31.1.86 முடிய) 505 கோடி உரூபாய்க்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் 1984-85-ஆம் ஆண்டில் செய்த சில்லரை விற்பனையின் மதிப்பு, நாடு முழுவதிலும் உள்ள நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் அடைந்த விற்பனையின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்காகும் என்பது குறிப்பிடத்தக்கது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டு இலக்கான 450 கோடி உரூபாய்க்கும் அதிகமாக 1986-87-ஆம் ஆண்டில் 500 கோடி உரூபாய்க்கு நுகர்பொருள் சில்லரை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுப் பண்ட சாலைகள் நெருக்கடி காலத்திலும் பற்றாக் குறை காலத்திலும் இன்றியமையாப் பொருள்களை நியாயமான விலைக்கு வழங்குகின்றன. இவை தனியார் கடைகளின் விலையைக் குறைக்கும் அளவிற்கு அங்காடியில் சிறப்பிடம் பெற்று மேலும் வளர்ந்த வண்ணமிருக்கின்றன. ஆனால், இந்தியாவில் இவ்வியக்கத்தை அரசே கட்டிக்காக்க வேண்டியுள்ளது. இவ்வியக்கம் இன்னும் நாட்டில் நன்கு வேரூன்றவில்லை 'கூட்டுறவு தோல்வியடைந்துள்ளது. ஆனால் கூட்டுறவு தழைக்கவேண்டும்' என்பது அனைத்திந்திய ஊரகக்கடன் நிதிக் குழுவின்பரிந்துரையாகும். என்.இரா.

**துணை நூல்கள்:**

Government of India, Planning Commission, Draft Sixth Five Year Plan (1980-85) Delhi, 1980.

Government of India, Report of the Co-operative Planning Committee, Delhi, 1946.

**Memoria, C.B.**, Agricultural Problems of India, Kitab Mahal, Allahabad, 1984.

**Samiuddin, Mahfoozur Rahman**, Co-operative Sector in India, Alfred, Calcutta, 1983.

**Srivastava, Sivakarjna, S.K., Agarwal Jagdish Prakash, R.S. Kaporia**, Agricultural Economics and Cooperation, S. Chand & Co., Delhi, 1970.

**கூட்டுறவுப் பண்ணை:** நிலம், மக்கள் வலிமை, பிறவளங்கள் ஆகியவற்றை ஒன்று திரட்டிக் கூட்டாக வேளாண்மை செய்யும் முறைக்குக் கூட்டுறவுப் பண்ணை என்று பெயரிட்டனர். நிலத்தை ஒன்றுதிரட்டிப் பொது நலனுக்காக நிருவாகம் செய்வது கூட்டுறவு வேளாண்மையின் உட்கருத்து. வேளாண்மையின் பல்வேறு முடிவுகளைச் செய்யும் அதிகாரம் தனி ஆளிடமிருந்து எல்லா வேளாண்மையினருக்குமுரிய பொது உரிமையென்று மாற்றப்படுவதே கூட்டுறவுப் பண்ணையின் சிறப்புத் தன்மையாகும்.

**கூட்டுறவுப் பண்ணையின் முக்கிய கூறுகளாவன:** உறுப்பினர்கள் தமது நிலத்தை ஒன்றாகத் திரட்டு கின்றனர். ஆள் வலிமையையும், பிற வளங்களையும் கூட ஒன்று சேர்க்கின்றனர். நில உரிமை, உறுப்பின ரிடமே இருந்து வருகிறது. உறுப்பினர்கள் தாமே விரும்பி நிறுவனத்தை உருவாக்கி அதைக் கூட்டுறவு முறையில் நடத்தி வருகின்றனர். கூட்டாகப் பயிர்த் தொழில் செய்யத் தாம் வழங்கியுள்ள நில அளவைப் பொறுத்தும் தம் உழைப்பைப் பொறுத்தும் உறுப்பி னர்கள் ஊதியம் பெறுகின்றனர். நிருவாகம் கூட் டாக நடைபெறுகிறது. பண்ணை வேலைகள், திட் டங்கள் ஆகியன கூட்டுறவு நிறுவனத்தால் வகுக்கப் படுகின்றன. அத்திட்டத்தின்படி உறுப்பினர் ஒவ் வொருவரும் தமக்கிடப்பட்ட வேலைகளைச் செய் கின்றனர். பெருமளவில் வேளாண்மை மேற்கொள்ள கூட்டுறவுப் பண்ணை வகை செய்கிறது.

இந்திய வேளாண்மைச் சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமான பெருமளவு வேளாண்மை முறை கூட் டுறவு வேளாண்மை முறைதான் என்று அனைத்திந் தியக் கூட்டுறவுத் திட்டக்குழு 1945-ஆம் ஆண்டு உறுதி யாகக் கூறியது. வேளாண்மையினரின் நில உரிமை யைப் பறிக்காது, பயிர் செய்யக் கூடிய நிலப் பகுதி களின் பரப்பை மிகுதிப்படுத்த கூட்டுறவு வேளாண்மை முறை வகை செய்கிறது. கூட்டுறவு வேளாண்மை நிறுவனங்கள் நான்கு வகைப்படும்.

1) **கூட்டுறவு வேளாண்மைப் பண்ணை நிறுவனம்:** இது முன்னேற்றப்படுத்தப்பட்ட முறைகளைப் புகுத் துவதற்கான நிறுவனம். அதன் உறுப்பினர்கள் அத னால் விதிக்கப்பட்ட ஒரு சாகுபடித் திட்டத்தைப் பின்பற்றுவதற்கு இசைகின்றனர். ஆனால் பிற துறைகளில், ஒவ்வொருவரும் தன்னிச்சையாகச் செயற்படுவர் எனினும் விதைகளையும், உரங்களை யும் கொள்முதல் செய்வதற்கும், வினளபொருள் களை விற்பனை செய்வதற்கும், பிறவற்றுக்கும் கூட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். இத்துறை களில் உறுப்பினர்களுக்குக் கூட்டுறவு மேலாண்மைப் பண்னை நிறுவனமும் (Cooperative Administrative Farm) உதவலாம்.

2) **கூட்டுறவு குத்தகைப் பண்ணை நிறுவனம்:** இது முற்றுரிமை நிறுவனமாகவோ குத்தகை நிறுவன மாகவோ நிலத்தைச் சொந்தமாகப் பெறுகிறது, இந் நிறுவனம் நிலத்தைச் சிறு நில உடமைகளாக வகுத்து அவை ஒவ்வொன்றையும் நிறுவனத்தின் உறுப்பினரும் தம் குடும்பத்துடன் நிலத்தில் குடியிருப் பவராகவுமுள்ள தனி ஆளுக்குப் பயிரிடுவதற்காகக் குத்தகைக்கு வழங்குகிறது. அவர் நிறுவனத்திற்குத் தம் நில உடைமைக்கான குத்தகைத் தொகை யைச் செலுத்தவேண்டும். நிலங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அரசு நிலங்களாக இருப்பின் அவர் நிலத் தீர்வையையும், பிற தீர்வைகளையும் செலுத்த வேண்டும். தம் சொந்தக் கணக்கில் அவர் நிலங்க ளைச் சாகுபடி செய்து, சாகுபடியின் ஆதாயத்தைத் தமக்கே வைத்துக் கொள்ளலாம். கூட்டுறவுக் குத்த தகைப் பண்ணை நிறுவனம் கடன்கள், விதைகள், உரங்கள், கருவிகள் முதலியவற்றை அவருக்கு வழங் குதல் மூலமாகவும், அவருடைய சாகுபடித் தொழி லில் அவருக்கு உதவுகிறது.

3) **கூட்டுறவுக் கூட்டுப் பண்ணை நிறுவனம்:** நில முடையவர்களால் தங்கள் நிலங்கள் ஒன்றாகத் தொகு கப்பட்டு, அந்நிலங்கள் கூட்டுறவுக் கூட்டுப் பண்ணை நிறுவனத்தால் Co-operative Joint Farming) சாகு படி செய்யப்படுவதற்காக ஒப்படைக்கப்படுகின்றன. ஆனால் அவர்கள் தங்களுடைய நில உரிமையைத் தங்களிடமே வைத்துக்கொள்கின்றனர். நிலங்களின் சாகுபடி, நிறுவனத்தால் அதன் கணக்கில் செய்யப் படுகிறது. நிலமுடையவர்கள் பண்ணையில் விருப்ப மிருந்தால் வேலை செய்யலாம். அத்தகைய சூழ் நிலையில் அவர்கள் நடப்புக் கூலியைப் பெறுவர். அவர்கள் பிற தொழிலாளர்களுக்கும் கூலிக்கு வேலை செய்யலாம். சாகுபடி வசதிக்குத் தக்கவாறு, நிலங்கள் பகுதிகளாக எல்லைகள் எப்படியிருந் தாலும் உரிமை அடிப்படையில் வகுக்கப்படுகின்றன. செலவுகள் போக, தொகுக்கப்பட்ட நிலங்களிலி ருந்து கிடைக்கும் வருமானம் நிறுவனத்தின் ஆதாய மாக அமைகிறது. ஒவ்வோர் உறுப்பினரும் தம்மால் கொடுக்கப்பட்ட நிலத்தின் மதிப்பு விகிதத்தில் ஆதா யத்தில் ஒரு பங்கைப் பெறுவதற்கு உரிமை பெற்றுள்ளார். ஒவ்வோர் உறுப்பினரும் தம் நிலப் பகுதியின் மீது செய்யப்படும் முன்னேற்றத்திற்கான செலவுப் பணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும்.

4) **கூட்டுறவுத் தொகுப்புப் பண்ணை நிறுவனம்:** இது முற்றுரிமையாகவோ குத்தகை உரிமையாகவோ நிலத்தை வைத்துக்கொள்வதுடன் இதர எல்லா உற்பத்திக் காரணிகளையும் கூட்டுப் பொறுப்பின் கீழ் வைத்துக்கொள்ளும், கூட்டுறவுத் தொகுப்புப் பண்ணை நிறுவனத்தின் (Co-Operative Collective Farming) உறுப்பினர்களால் நிறுவனத்திற்கு மாற் றப்படுதல் மூலம் பெற்ற நிலங்களைச் சொந்தமாக வைத்துள்ளது. நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட நிலத் தின் மதிப்பிற்கு ஈடான பங்குகள் உறுப்பினர்களுக்கு நிறுவனத்தால் ஒதுக்கப்படுகின்றன. நிலங்களை நிறு வனத்தின் உறுப்பினர்கள் கூலி பெற்று நிறுவனத்தின் கணக்கில் சாகுபடி செய்கின்றனர். நிலத்தின் விளை

பொருள்கள் நிறுவனத்திற்குச் சொந்தமாகும். செலவுகள் போக எஞ்சிய ஆதாயம் பிற கூட்டுறவு நிறுவனத்தைப் போன்று தேர்வு செய்யப்பட்டு உறுப்பினர்களுக்கு அவர்கள் ஈட்டும் கூலிகளின் அடிப்படையில் மிகை ஊதியமாக வழங்கப்படும்.

கூட்டுறவுப் பண்ணையானது ஒழுங்காக இல்லாத நில உடைமைகளை ஒழுங்குடையவையாகவும் தன்னிறைவாகவும் உள்ள பகுதிகளாக மாற்றியமைத்தது. அதன் மூலம் கால்நடை உழைப்பு, மனித உழைப்பு ஆகியவற்றின் உச்சப் பயன்பாட்டை அடைய முடிகிறது. அது உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இதர பண்ணைக் கருவிகளின் உச்சப் பயன்பாட்டையும் உறுதிப்படுத்துகிறது. பூச்சிக்கொல்லி, விதைகள், விதை, தானியம் போர் அடிக்கும் இயந்திரங்கள், தானியம் புடைக்கும் இயந்திரங்கள் போன்ற கருவிகள் தனிக் குடியானவர்களால் சொந்தமாக வாங்கிப் பயன்படுத்த இயலாத மேம்படுத்தப்பட்ட கருவிகளைக் கூட்டுறவுப் பண்ணைகள் பயன்படுத்துகின்றன. போதிய கடனைப் பெறமுடியாத சிறு குடியானவர்கள் கூட்டுறவுப் பண்ணைகளில் சேர்வதன் மூலம் தேவையான கடனைப் பெறமுடியும்.

கூட்டுறவுப் பண்ணையானது உறுப்பினர்களின் அறிவியல் அறிவை ஒன்று தொகுத்து அவற்றைச் செயற்பாட்டில் புகுத்துவதற்கு வகை செய்கிறது. இப் பண்ணைகளின் மூலம் குடியானவர்கள் நிறுவன உறுப்பினர்களாவதால் புதிய தொழில் நுட்பங்களைத் தொடங்கி வைப்பதற்கும் அவற்றைக் குடியானவர்களுக்குக் கற்பிப்பதற்கும் அரசு வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு மிக எளிதாக உள்ளது. ஆகையால் கூட்டுறவுப் பண்ணைகளில் மேலான பண்ணைத் தொழிலும் அதன் விளைவாக உற்பத்திப் பெருக்கமும் உண்டாகின்றன. கூட்டுறவுப் பண்ணை, உற்பத்திப் பெருக்கத்தை விளைவிக்கும் மேலான ஒரு வேளாண்மைத் திட்டமாகும். பண்ணைத் தேவைகளின் பகிர்வு மேலான முறையில் செயற்படுவதற்கு உதவுகிறது. விளைபொருள்களைக் கூட்டு விற்பனை செய்வதன் மூலம் பொருள்களின் விற்பனைக் காலத்தில் ஏற்படும் இடைநிலையாளர்களின் சுரண்டலும் நீக்கப்படுகிறது. மிகுதியான எண்ணிக்கையில் படித்த வாலிபர்கள் இந்நிறுவனங்களில் தங்களுக்குப் பொருத்தமான பல்வேறு தொழில்களில் வேலை பெற வாய்ப்புப் பெறுகின்றனர். மேலும் ஊரகத்தின் கூட்டுறவு வாழ்க்கை வளர்ச்சிக்கும், உள்ளூர்த் தலைமை வளர்ச்சிக்கும், சமுதாயத் தலைமை வளர்ச்சிக்கும் கூட்டுறவுப் பண்ணைகள் உதவுகின்றன.

கூட்டுறவுப் பண்ணைகளில் சில குறைகளுமுண்டு என வல்லுநர்கள் கருதுகின்றனர். பண்ணைத் தொழிலில் ஒவ்வொரு குடியானவரும் அவர் குடும்பமும் வயல்களில் வேலைசெய்து தங்கள் உழைப்பைப் பற்பல வழிகளில் அளிக்கின்றனர். ஆனால் அவர்கள் கூட்டுறவுப் பண்ணைகளில் வேலை செய்தால் அவர்கள் உழைப்பிற்காகக் கூட்டுறவு நிறுவனம் பணம் செலுத்த வேண்டியிருக்கும். ஆதலால் நிறுவனத்திற்குக் கூடுதலாகச் செலவு ஏற்படுகிறது. குடியானவரும் அவர் குடும்பமும் கூட்டுறவுப் பண்ணையில் கூலிக்காக வேலை செய்யும்பொழுது அவர்களின் உழைப்புத் தரமும் விளைவும் தங்கள் சொந்தப் பண்ணைகளில் அவர்கள் வேலை செய்யும்பொழுது இருப்பதைக் காட்டிலும் மிகக் குறைவாக இருக்கும். ஏனென்றால், தங்கள் சொந்தப் பண்ணைகளில் வேலை செய்யும்பொழுது உடைமை உணர்ச்சியில் எழும் அக்கறையுடன் அவர்கள் வேலை செய்கிறார்கள். இக் காரணியானது கூட்டுறவுப் பண்ணையில் செய்யப்படும் சாகுபடியின் செலவையும் உயர்த்தும்.

ஆள் முறையில் நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டால் மேற்பார்வையும் மிகுந்து பயன் உறுதியாகவும் செலவு ஒன்றும் இல்லாமலும் இருக்கும். ஆனால் ஒரு கூட்டுறவுப் பண்ணையில் மேற்பார்வைக்கு ஊதியம் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. மற்றும் அதே சமயத்தில் மேற்பார்வையும் தனி ஆள் பண்ணைத் தொழிலைப் போன்று அவ்வளவு பயன் உறுதியாக இருக்கமுடியாது. ஏனென்றால் கூட்டுப் பண்ணையின் மேற்பார்வையாளர்கள் நில உடைமையாளர்கள் போன்று அக்கறை கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. மேலும், அவர்கள் ஊதியம் பெறும் அல்லது ஊதியம் பெறமுடியாத நிருவாகிகளாய் உள்ளனர்.

கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பதற்கு மிகுதியான எண்ணிக்கையில் மக்கள் முன் வருவதற்குத் தடையாக நிற்கின்ற சில நடைமுறைச் சிக்கல்கள் கூட உள்ளன. ஒரு கூட்டுறவுப் பண்ணையில் சேர்வதால் ஒருவர் தன்னுரிமையை (Independence) இழக்கின்றார். கூட்டு முடிவுகளுக்கும் கூட்டுச் செயல்களுக்கும் சாதகமாகத் தம் செயற்பாட்டை அவர் விட்டுக்கொடுத்துவிட வேண்டியிருக்கிறது. தனி ஆள் பண்ணையில் வருமானத்தின் செலவு, விலைப் பொருள்களின் அளவு, குடியானவரால் அளிக்கப்பட்ட உழைப்பின் அளவு ஆகியன நேரடியான விலையாக உள்ளன. ஆனால், கூட்டுறவுப் பண்ணையில் தன் உழைப்பு அளிப்பின் மீது கூட்டுறவு நிருவாகம் அல்லது மற்ற உறுப்பினர்கள் வழங்கும் மதிப்பைத்தான் அது சார்ந்துள்ளது.

ஊரகப் பொருளாதாரத்தைச் சீரமைக்கக் கூட்டுறவு வேளாண்மை முறை பின்பற்றப்பட வேண்டுமென முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் கால அறிக்கை கூறியது. சிறு வேளாண்மையினரும் நடுத்தர வேளாண்மையினரும் தாமே விரும்பி ஒன்றுகூடி வேளாண்மைக் கூட்டுறவுகளை அமைக்க ஊக்குவிக்கப் பட வேண்டும். இதுகுறித்து அவர்களுக்கு உதவியும் அளிக்கப்பட வேண்டும். குறைந்தது இவ்வளவு நிலமிருந்தால்தான் கூட்டுறவு நிறுவனம் அமைக்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கவேண்டும். நிதி, தொழில் நுட்பம், அங்காடியிடுகை முதலிய வசதிகள் அளிப்பதில் வேளாண்மை நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அரசினருக்குச் சொந்தமான சாகுபடி செய்யக் கூடிய நிலங்களைக் குத்தகைக்கு விடுவதில் கூட்டுறவு வேளாண்மை நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். தரிசு நிலமாக இருப்பின் அதனைச் சாகுபடிக்குக் கொண்டுவரத்தக்க உதவி வழங்கப்பட வேண்டும்.

கூட்டுறவு நிறுவனம் செயற்பட்டுக் கொண்டிருக்கும்வரை நேரடியாகச் சாகுபடி மேற்கொள்ளாத உறுப்பினர்கள் நலனுக்குப் புறம்பான நில உரிமைகள் உருவாகலாகாது. இக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசுகள் கூட்டுறவுப் பண்ணை முறையை வளர்க்கத் திட்டங்களை வகுக்குமாறு திட்டக்குழு கருத்து வெளியிட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நாட்டில் ஓராயிரம் கூட்டுறவு வேளாண்மை நிறுவனங்கள் ஓரளவுக்கு வளர்ச்சி கண்டன. பல நிறுவனங்கள் அரசினரின் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளை ஏய்க்கும் பொருட்டு அமைக்கப்பட்டதாகவும், சில சங்கங்கள் அரசினர் அளிக்கும் சலுகைகளைப் பெற நிறுவப்பட்டதாகவும் காணப்பட்டன. பொதுவாகக் கூறினால், கூட்டுறவு வேளாண்மை நிறுவனங்கள் வேரூன்றி வளரவில்லை.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கூட்டுறவு வேளாண்மை மேலும் வலியுறுத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னோடித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். நில உச்சவரம்புத் திட்டங்களின் காரணமாக உபரியாகக் காணப்படும் வேளாண்மைகளைக் கூட்டுறவு முறையில் வேளாண்மை செய்யவேண்டும். சரிவர இயங்காத வேளாண்மை நிறுவனங்களைச் சீராக இயங்கும்படி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பழங்குடி மக்கள் தங்களுடைய பொது உரிமைப் பழக்கப்படி வேளாண்மை செய்து வருமிடங்களில் வேளாண்மை, கூட்டுறவு முறையில் அமைக்கப்பெற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கூட்டுறவு வேளாண்மையினைப் பற்றி விரிவான பயிற்சித் திட்டம் கொண்டு வரப்படவேண்டும். தனி ஆள்கள் கொண்ட குழுக்களுக்குக் கூட்டுறவு முறையில் வேளாண்மை நிறுவனங்கள் அமைக்க எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

கூட்டுப் பண்ணை (Collective) முறை உருசிய (Russia) நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இப் பண்ணைகள் புதிய இயந்திரங்களைக் கொண்டு நவீன வேளாண்மை முறைகளின்படி கூலிக்கு வேலை செய்யும் உழைப்பாளிகளைக் கொண்டு நடத்தப்படுகின்றன. என்.இரா.

**துணை நூல்:**

**Memoria C.B.** Agricultural Problems of India, Kitab Mahal, Allbahabad, 1984.

***கூடல் சங்கமத்துப் பரணி***: இக்காலத்து இறந்து பட்டதாகக் கருதப்படும் தமிழ்நூல்களுள் ஒன்று, வீரராசேந்திரன் என்னும் சோழ மன்னன் கூடல் சங்கமம் என்னுமிடத்திற்குப் படையெடுத்துச் சென்று, தன்பகைவரை வென்றான். அவ்வெற்றிச் சிறப்பினைப் புகழும் வகையில் கூடல் சங்கமத்துப் பரணி அவன்மீது பாடப்பட்டது. கூடல் சங்கமம் என்பது, துங்கபத்திரையும் கிருட்டிணா ஆறும் கூடுமிடத்திலுள்ளதாகும். பரணி என்னும் இலக்கியம் ஆயிரம் யானைகளைப் போர்க்களத்தில் அழித்துவென்றவர் மீது பாடப்படுவதாகும். அப்பிரபந்தம் பெரும்பாலும் தோற்றோர் நகர்ப் பெயரோடு சார்த்தி வழங்கப்படும். கூடல் சங்கமத்துப் பரணியில் சிறப்பிக்கப்பட்ட வீரராசேந்திரன் கூடல் சங்கமம் என்னுமிடத்தில் எதிரிகளின் யானைகள் பலவற்றைத் தன் யானையின்மீது இவர்ந்து சென்று அழித்தான் என்னும் செய்தியினைக் 'கூடல், சங்கமத்துக் கொள்ளும் தனிப் பரணிக்கு எண்ணிறந்த, துங்க மதயானை துணித்தோனும்' என்று விக்கிரம சோழன் உலாவும் (விக். 22), 'பாட அரிய பரணி பகடொன்றின் கூடல் சங்கமத்துக் கொண்டகோன்' என்று இராசராச சோழனுலாவும் (இராச.25) கூறுகின்றன. கூடல் சங்கமத்துப் பரணி இக்காலத்தில் கிடைக்காமையால் அதனைப் பற்றிய பிற செய்திகள் அறியக் கூடவில்லை. அ.மா.ப.

***கூடலூர் கிழார்***, சேரநாட்டைச் சேர்ந்த கூடலூரில் வாழ்ந்த சங்ககாலப்புலவர். இவரது இயற்பெயர் தெரியவில்லை. சேரநாட்டில் கூடலூர், மாந்தை ஆகிய ஊர்களை இவர் பாடல்களால் அறியலாம். இவர் அகப்பொருள் பற்றி மூன்று பாடல்

களும், புறப் பொருள் பற்றி ஒரு பாடலும் பாடியுள்ளார். இவருடைய அகப்பொருட்பாடல்கள் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளன. குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய திணைகள் இவரால் பாடப்பெற்றுள்ளன. இவர் ஆனந்தப்பையுள் என்னும் துறையில் புறநானூற்றில் ஒருபாடல் (229) இயற்றியுள்ளார். கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் மறைவுபற்றியது அப்பாடல்.

அகப்பொருளில் தோழி கூற்றாக வருவன இரு பாடல்கள் ஆகும். குறிஞ்சித் திணைப்பாடல் வெறியாடலைச் சுட்டுகிறது. தலைவியின் மேனி வேறுபாடு கண்டு தாய் முதலியோர் வெறியாட்டெடுக்கின்றனர். அதனை அறிந்தாள் தோழி. தலைவி கதிர்த்தினை காக்குங்கால் அவளுக்கு அசோகப் பெருந்தழை உதவி அவளுடன் அளவளாவிச் சென்றான் தலைவன். அதனை அறியாது அலரி மாலையை முருகனுக்குச் சூட்டி வெறியெடுத்தலால், இவ்வார வார ஊர் மயக்கமுற்றது எனக் கூறுவதன் வாயிலாகத் தோழி, தலைவியின் காதலை வெளிப்படுத்துகிறாள் (குறுந் 214.)

மற்றொரு பாடல் நெய்தல் திணையில் அமைந்தது. களவு மணத்தால் கலந்த தலைவியை இல்லக் காப்பில் வைத்தனர் பெற்றோர். அதனைத் தோழி தலைவிக்குத் தெரிவிப்பதாகப் பாடலைக் கூடலூர் கிழார் அமைத்துள்ளார். கடல் அலைகள் மீன்களைப் பெயர்த்துச் செல்வதனால் வெள்ளிய நாரைக் கூட்டம் இருப்பிடம் அறிந்து வந்து அயிரை மீனை உண்ணும் ஊர் மாந்தை. தலைவனுடன் இருக்கும் காலத்தில் மிக நன்மையைத் தந்தது. தலைவனைப் பிரிந்து தனியே தங்கிய போது வருத்தம் தருகின்றது என்கிறாள் தோழி. கடல் அலை மீனைப் பெயர்த்தாலும் நாரை அம்மீன் உள்ள இடத்தே சென்று அம்மீனை உண்டது போல் தாயார் முதலியோர் இல்லில் வைத்துக் காப்பினும் தலைவன், தலைவி இருக்குமிடம் வந்து கண்டு இன்புறல் வேண்டும் என உள்ளுறை அமைத்துள்ளார் (குறுந் 166). தலைவியின் கற்பு மேம்பாட்டினைக் காட்டும் முல்லைத் திணைப் பாடல் சிறந்த கருத்தமைந்தது. முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மெல்விரலைக் கழுவாது ஆடையில் துடைத்துக் கொண்ட தலைவிதன் குவளைக்கண் தாளிப்புப் புகை மணக்கத் தானே துழாவிப் புளிக்குழம்பு சமைக்கிறாள். அதனைத் தலைவன் இனிதென மகிழ்ச்சியாக உண்பதைக் கண்டு வந்த செவிலித்தாய், தலைவி தன் தலைவனுக்கு வேண்டியவற்றை அவன் மகிழும்படி செய்து வருவதாக நற்றாய்க்குச் சொல்கிறாள் (குறுந். 167).

கோச்சேரமான் இறக்குங் காலத்தை முன்னரே கணித்தறிந்தவர் கூடலூர்கிழார். இவரது வான நூற்புலமையைப் புறநானூற்றுப் பாடலால் அறியலாம். மன்னனை இழந்து தவித்த மக்கள் துயரம் ஆனந்தப்பையுள் துறையில் காட்டப்பட்டது.

இவர் காலத்தில் ஒருநாள், மேடராசி பொருந்திய கார்த்திகை நாள் நள்ளிரவு, முடப்பனை போன்ற அறுமீன் தொகுதி, அனுடநாளில் குளம் போன்ற வடிவுள்ள புனர்பூசத்துக் கடைசியில் வெள்ளி எல்லையாக விளங்கிற்று. பங்குனி மாதத்து முன் பதினைந்து நாளில் உச்சமாகிய உத்தரமீன் அவ்வுச்சியில் இருந்து சாய, அதற்கு எட்டாம் மீனாகிய மூலம் அதற்கெதிரே எழ, உத்தரத்திற்குமுன் எட்டாம் மீனாகிய மிருகசீரிடம் இருக்க, ஒரு விண்மீன் கீழ்த்திசையிலோ வடதிசையிலோ போகாது மிகுந்த பிரகாசத்துடன் எரிந்து நிலத்தில் வீழ்ந்தது. இது அரசர் போன்றார்க்குத் தீயது காட்டும் குறி எனப் புலவர் உணர்ந்தார். அதனால் கோச்சேரமான் நோயற்றிருக்க வேண்டும் என விரும்பினார். ஆனால் அவர் அஞ்சியபடியே ஏழாம் நாளில் அம்மன்னன் இறந்தான். அவன் மறைவால் ஏற்பட்ட அவலத்தை உள்ளம் உருக இவர் உரைத்துள்ளார். (புறம். 229).

**கூடலூர்ப் பல்கண்ணனார்** என்பார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். பல்கண்ணன் என்பது இவரது இயற்பெயர். தாம் பிறந்த ஊரினை கூடலூர்) அடைமொழியாகக் கொண்டுள்ளார். நற்றிணை நூலில் இவர் இரு பாடல்களைப்(200,380) பாடியுள்ளார்.

இவர் நீர்நாட்டிலுள்ள கூடலூரினராகவேண்டும்; மருதத்திணையிற் பாணனை மறுத்துக்கூறுந்துறையையே சிறப்பித்துப்பாடியுள்ளார் என்று பாடினோர் வரலாற்றில் நற்றிணையின் பதிப்பாசிரியராகிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை தாம் பதிப்பித்த 'சங்க இலக்கியம்' என்னும் நூலில் கூடலூர்ப் பல்கண்ணனார் நற்றிணையில் 1200-ஆம் பாடலை மட்டுமே பாடியுள்ளதாகப் பதிப்பித்துள்ளார். கூடலூர்ப் பல்கண்ணனார் பாடியதாகப் பின்னத்தூரார் குறிப்பிடும் நற். 380-ஆம் பாடலைக் கடலூர்ப் பல்கண்ணனார் பாடியதாக வையாபுரிப் பிள்ளை பதிப்பித்துள்ளார். நற்றிணையின் பிற

பதிப்புகளில் கடலூர்ப் பல்கண்ணனார் என்னும் புலவர் பெயர் காணப்படாமையால் இருபாடல்களும் கூடலூர்ப் பல்கண்ணனாரால் பாடப்பட்டன எனக் கொள்வது தக்கதாகும்.

மருதத்திணை என்பது ஊடலும் ஊடல் நிமித்தமும் பற்றிய ஒழுகலாறாகும். தலைவன் பரத்தையால் ஊடல் கொண்ட தலைவியின் ஊடலைத் தணிக்கும் வாயிலாக அனுப்பப்பெற்ற பாணனைமறுத்துரைக்கும் பாங்கிலமையும் துறையினைப் பெரிதும் சிறப்பித்துப் பாடியுள்ளார் கூடலூர்ப் பல்கண்ணனார். இப்பாடலில் பாணனுக்கு வாயில் மறுக்கும் தோழியின்கூற்றில் 'நொச்சிமாலையைச் சூடிக் கொண்டு ஊரில் நடக்கும் திருவிழாவை வீடுதோறுஞ்சென்று கூறிப் போவது குயவனின் கடமை' என்னும் பழந்தமிழ்ப் பழக்கத்தினையும் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார் நற் 200). சி.கு.

**கூடற்சங்கமம்** வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த இடம்; ஆந்திர நாட்டில் உள்ளது. இதன் பழைய பெயர் என்ன என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் இதனை அக்காலப் பெயர் கூட்டலி என்றும், சிலர் கரந்தை என்றும் கருதுகின்றனர். கிருட்டினா ஆறும் துங்கபத்திரா ஆறும் கூடுமிடமாதலால் இதற்கு ஒரு தனிச்சிறப்பு இருந்துவந்திருக்கிறது. இந்த இடத்தைப் பற்றிக் குறிபிடும் நூல்களுள் கலிங்கத்துப்பரணியும், பெருந்தொகையும் முக்கியமானவை. கல்வெட்டுகளிலும் இதைப்பற்றிய குறிப்புகள் உள. சோழர்களுக்கும் மேலைச்சாளுக்கியர்களுக்கும் இவ்விடத்தில் போர் நிகழ்ந்தது. வீரராசேந்திர சோழன், மேலைச் சாளுக்கியரை கி.பி. 1064-இல் தோற்கடித்ததாக அறியப்படுகிறது. தெ.பா.

**கூடாரப்பண்டிகை** யூதர்களால் கொண்டாடப் பெறும் இலை உதிர்கால விழா. இவ்விழா 9 நாள்கள் நடை பெறும். இவ்விழாக் காலத்தில் கூடாரம் போல அமைக்கப் பெற்ற ஒரு இடத்தில் சேர்ந்து உண்ணும் பழக்கம் யூதர்களுக்கு உண்டு. அதனால், இது கூடாரப் பண்டிகை எனப் பெயர் பெறுகிறது. யூதர்கள், பண்டைக் காலத்தில் எகிப்திலிருந்து பாலத்தீனத்திற்கு வரும் வழியில் காடுகளில் கூடாரம் அமைத்துத் தங்கினார், அந்த நாள்களை நினைவு கூரும் வகையில் இந்த விழா கொண்டாடப்பெறுகிறது. யூதர் வாழ்வின் உலாவியற் பருவ நினைவூட்டு விழா நாள் (Feast of Tahernacles) என்று இது சொல்லப்படும். யூத மொழியில் சுக்கோத்து என்றால் கூடாரம். ஆகவே, இவ்விழா சுக்கோத்து என்றும் சொல்லப்பெறும். அவர்களுடைய காலக்கணிப்பு முறைப்படி திசிரி (Tishri) திங்களின் நடுப்பகுதியிலிருந்து இந்த விழா தொடங்கும். தெ.பா.

**கூடுதல் ஆதாயம்**: காண்க:அடைமான உரிமை.

**கூத்துகள்**: தமிழ் முத்தமிழ் என்று வழங்கப் பெறும். முத்தமிழின் கூறுகள் இயல், இசை, கூத்து என்பன. வரி வடிவத்தில் இதயத்திற்கு இன்பம் பயப்பது 'இயல்' என்றும், ஒலிநயத்துடன் பாடப் பெறும்பொழுது இசையுடன் இயைந்தது 'இசை' என்றும், மெய்ப்பாடுகளினால் வெளிப்படுத்தப் பெறுவது 'கூத்து' என்றும் வழங்கப்பெறும்.

பெரும்பாலான நாடுகளில் ஆடற் கலையும் நடிப்புக் கலையும் ஒருங்கே வளர்ந்தன எனலாம். தமிழகத்தில் அத்தகைய நிலை இருந்ததைக் 'கூத்து' என்னும் சொல் விளக்கி நிற்கின்றது. கூத்து என்னும் சொல்லை விளக்குகையில் அபிதான சிந்தாமணி, 'பாவ ராக தாள வகை கொண்டு பதத்தால் பாட்டிற்கு இயைய நடிப்பதாம்' என்று குறிக்கும். சிலப்பதிகாரத்தில் தான் முதன்முதலில் கூத்து என்பது நாடகம் என்று வழங்கப்பெற்றது என்பர். காலப்போக்கில் நாடகம் என்னும் சொல்லே நிலைபெற்று, இயல் இசை நாடகம் என்னும் முக்கூறுகளில் இயன்றது தமிழ் என்று குறித்தனர்.

சங்க கால மக்கள் வாழ்வில் வழிபாடு என்பது இன்றியமையா இடத்தினைப் பெற்றிருந்தது. இறைவனை வழிபடுகையில் மக்கள் ஆடியும் பாடியும் வழிபட்டனர். இறைவனையும் கூத்தாடும் நிலையிலே கண்டு மகிழ்ந்தனர். இதனை,'பல்லுருவம் பெயர்த்து நீ கொடுகொட்டி யாடுங்கால்' என்னும் கலித்தொகையின் கடவுள் வாழ்த்து அடியும், குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே (217) என்னும் திருமுருகாற்றுப்படையின் அடியும் விளக்கும்.

சங்க இலக்கியம், வழிபாட்டு நிலையில் மட்டுமன்றிப் பொழுதுபோக்கு நிலையிலும் தொழில் அடிப்படையில் கூத்துகள் நிகழ்த்தப்பெற்றன என்று சுட்டுகின்றது. சங்ககால மக்களிடையே குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாட்டு ஆகியன பெருவழக்கில் இருந்தமை அறியமுடிகின்றது. மேலும், அக்கால மக்களிடையே ஆரியக்கூத்து, பாவைக்கூத்து, உரற்கூத்து, கொடுகொட்டிக்கூத்து, பாண்டரங்கக் கூத்து, கபாலக்கூத்து. வாளமலைக் கூத்து, துடிக்கூத்து, கழல் நிலைக்கூத்து, வள்ளிக்கூத்துப் போன்ற கூத்துகளும் நடைபெற்றன என்று குறிப்பர். கூத்தர், பொருநர்

போன்ற சொற்கள் தொழில் அடிப்படையில் கூத்துகள் நடைபெற்றன என்பதனைக் குறிக்கும்.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் கூத்துகள் குறித்த விரிவான செய்திகள் காணப்பெறுகின்றன. ஆயினும், அக்கால கட்டத்தில் தோன்றிய ஏலாதி போன்ற சில பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் கூத்தினை இழித்துக் கூறும் கொள்கைகள் காணப்பெறுகின்றன.

இடைக்காலத்தில் இறைவன் முன்பும் அரசர் முன்பும் பொழுது போக்கிற்காகச் சிலவிடங்களிலும் கூத்து நிகழ்த்தப்பெற்றது. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுந்த காலகட்டத்தில் அக்காப்பியத்தில் காணப் பெறும் இசை, கூத்து ஆகியன குறித்த விளக்கங்கள் தெளிவாயின. அடியார்க்கு நல்லார் உரையினை இவ் வகையில் தலையாயது என்று கூறலாம்.

நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்றாகக் கூத்து இப்பொழுது கருதப்படுகின்றது. தமிழ்நாட்டின் கவினுறு கலையான கூத்து அருகி வரினும் அதன் சிறப்புக் குறையவில்லை என்று கருதலாம்.

கூத்துகள், அகக்கூத்துகள் புறக்கூத்துகள் என்று பாகுபடுத்தப்பட்டன. அரசர் முன் நிகழ்த்தப்பெற்ற கூத்துகள் 'வேத்தியல்' என்றும், அல்லாதன 'பொதுவியல்' என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருந்ததைச் சிலப்பதிகாரம் குறிக்கும்.

சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் பல்வேறு பாகுபாடுகளையும் பல்வகைக் கூத்துகளையும் சுட்டுகின்றார். அவற்றுள் சாந்திக் கூத்து, விநோதக்கூத்து என்னும் பிரிவும் அவற்றின் வகைகளும் கருதத்தக்கன.

அ. சாந்திக்கூத்து (ஆடுபவன் பொறுமையாக-சாந்தமாக-ஆடுவதால் பெயர் பெற்றது).

1. சொக்கம் (108 கரணங்களை உடையது).
2. மெய் (தொழிற் கூத்து என்று வழங்கப் பெறும்).
3. அவிநயம் (கைகாட்டி ஆடுதல்).
4. நாடகம் (கதை தழுவி வருதல்).

ஆ. விநோதக் கூத்து (வேந்தரும் குறுநில மன்னரும் பகைவென்ற இடத்தில் ஆடுவது).

1. குரவை (காமம், வென்றி போன்றவற்றைக் குறிக்க ஆடுவது; வழிபாட்டிற்காக ஆடுவதும் உண்டு).
2. கல்நடம் (கழாய்க் கூத்து என்று வழங்கப் பெறும்).
3. குடக்கூத்து (கரகாட்டம் போல்வது என்று கொள்ளலாம்).
4. கரணம் (படித்த ஆடல்).
5. நோக்கு (பாரம், தன்மை மாயம், ஒருங்கே அமையப்பெற்றது).
6. தோற்பாவை (தோலில் பாவை செய்து ஆட்டுவிப்பது).

இவையன்றி வென்றிக்கூத்து(மன்னனின் உயர்ச்சி, மாற்றான் ஒடுக்கம் கூறுவது), விநோதக்கூத்து, வசைக்கூத்து (பலவகை உருவங்களைப் பழித்துக் காட்டுவது) போன்றவற்றையும், பதினோர் ஆடல் களையும் (பாண்டரங்கம், கொடுகொட்டி, அல்லியம், மல், குடம், துடி, குடை, பேடு, மரக்கால், பாவை, கடையம்) குறிப்பிடுகின்றார்.

இக்காலத்தில் காணப்பெறும் கூத்து வகைகளுள் பாவைக்கூத்து, தெருக்கூத்து, கணியான் கூத்து ஆகியனவற்றைக் கதை சார்ந்தவை என்றும், புரவியாட்டம், சாமி ஆட்டம், கழியாட்டம், காலடியாட்டம், கரகாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், ஒயிலாட்டம் போன்றவற்றைக் கதை சாராதவை என்றும் பாகுபடுத்துவர்.

சங்க காலத் தமிழர்தம் வாழ்வில் வழிபாடு மிகுந்திருந்தது; அவ்வழிபாட்டில் கூத்து பெரும் பங்கு வகித்திருந்தது. கூத்துகளில் குரவைக்கூத்து என்னும் குழுக்கூத்து வழிபாட்டிற்குப் பயன்பட்டது. கலித்தொகையின்'குரவை கூறிஇ யாம் மரபுளிபாடி, தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்' (103: 75-76) என்னும் அடிகள் வழிபாட்டிற்குக் குரவைக்கூத்து ஆடப்பட்டதைக் குறிக்கின்றன.மேலும் குரவைக் கூத்திற்கு முன்னர்த் தோன்றிய துணங்கைக் கூத்து கொற்றவை முன் ஆடப்பட்டது என்றும் தெரியவருகின்றது.

வெறியாட்டு என்னும் கூத்து முருகப் பெருமானை நினைந்து ஆடப் பெறும் கூத்து வகையாகும். இவ்வகைக் கூத்தினை ஆடுவோர் இறைவன் (முருகன்) தம்மீது வந்து வெளிப்படுவான் என்று எண்ணி ஆடுவர். வெறியாடுபவர் கையில் வேலை வைத்துக்கொண்டு கூத்தாடுவர். அவ்வாறு ஆடுபவரை வேலன் என்று குறிப்பிடுவர். வெறியாட்டின் மரபையும் குரவைக்கூத்தின் இயல்பையும் மதுரைக் காஞ்சியில். 'அருங்குடி வேலன் முருகொடு வளைஇ... நின்ற குரவை, எனவரும் அடிகள் புலப்படுத்தும்.

ஐங்குறுநூற்றின்கண் காணப்பெறும் ‘வெறிப் பத்து’ என்னும் தலைப்பின் கீழ் அமைந்த பாடல்கள் யாவும் வெறியாடுதல் குறித்தவை ஆகும். அக நானூற்றில் ‘வெண்மையான பனந்தோட்டினில் கடம்ப மலரினைச் சூடி,தாளத்தோடு முருகக்கடவு ளின் பெரும் புகழினைத் துதித்து, வேலன் வெறியாடு வான்’ என்று வழிபாட்டு முறை சுட்டப் பெற்றது (அகம். 28-16-19). வெறியாட்டின் பொழுது உயிர்க் கொலை புரிதலைக் குறுந்தொகை குறிக்கும் (குறுந் 263-17).

சமயம் தழுவிய கூத்துகளாகக் குரவை, துணங்கை, வெறியாட்டு ஆகியன மட்டுமன்றிக் கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலம், வள்ளிக் கூத்து, பாவைக்கூத்து போன்றவற்றையும் குறிப்பர். இவற்றுள் கொடு கொட்டி, பாண்டரங்கம், கபாலம் குறித்த செய்திகள் கலித்தொகையின் கடவுள்வாழ்த்து வாயிலாகவும் வள்ளிக்கூத்து, பாவைக்கூத்து குறித்த செய்திகள் அடியார்க்கு நல்லார் உரை வாயிலாகவும் தெரிய வருகின்றன.

தலைமகனும் தலைமகளும் சந்தித்துக்கொள் வதற்குக் கூத்து நிகழ்ச்சிகள் வழிவகுத்தன. குரவைக் கூத்து நிகழ்ச்சியில் ஆம்பற் குழலை ஏற்றவாறு இசைத்து, அதன் வாயிலாகத் தலைமகன் தலைமகள் குறி அறிவித்துக் கொண்டதைக் கலித்தொகை சுட்டுகிறது (கலி. 108:61-63).

காதலர்கள் தங்கள் காதலை உறுதிப்படுத்திக் கொள்வதற்குக் கூத்து நிகழ்ச்சிகள் கருவியாக அமைந் தன (அகம் 336: 15-16). ஊடலுக்கும் கூடலுக்கும் கூத்துவழி வகுத்ததைக் கலித்தொகைப் பாடல்கள் (கலி 66,73) வாயிலாக அறியலாம். கூத்து வகைகளில் ஒன்றான வெறியாட்டு வாயிலாகக் காதல்நிலை புலப்பட்டு விடும் என்று காதலர் பொதுவாக அதனை விரும்புவதில்லை என்று குறிப்பிடுவர்.

சங்க கால மக்கள் ஓய்வு நேரங்களில் காலத்தை இனிதே கழிப்பதற்குக் கூத்தினைப் பயன்படுத்தினர். முல்லைநில மக்கள் தங்கள் எருதுகளைத் தொழுவில் சேர்த்த பின்னர்க் கூத்துகளை நிகழ்த்தினர் (கலி. 103); நெய்தல் நில மக்கள் மதுவுண்டு கூத்தாடினர் என்பதனைப் புறநானூற்றுப் பாடலொன்று (புறம். 24) புலப்படுத்தும். இவையன்றிக் கலிநடம், குடக் கூத்து, உரக்கூத்து போன்றவையும் பொழுதுபோக் கில் பயன்படுத்தப்பட்ட கூத்துகளாகும்.

சங்க காலத்தில் விளையாடல்களாக இருந்த வற்றுள் சில அக்காலத்திலேயே கூத்து வடிவம் பெற்றன; சில காலம் கடந்து கூத்து வடிவம் பெற்றன. சங்க காலத்தில் தழூஉ என்னும் விளை யாட்டுப் பின்னர்க் குரவைக் கூத்தாகவும், பாவை என்னும் விளையாட்டுத் தோற்பாவைக் கூத்தாகவும், கயிறு பாணி கலி நடமாகவும், பந்து என்னும் விளை யாட்டுக் கந்துகவரியாகவும் மல்லாடல் கரணக் கூத் தாகவும் வல்லு நோக்குக் கூத்தாகவும், குடப்பறை குடக் கூத்தாகவும் வள்ளைப்பாட்டு வள்ளிக் கூத் தாகவும் வடிவம் பெற்றன என்று குறிப்பிடுவர்.

சங்க காலக் காதல் வாழ்வில் கூத்துகள் இடம் பெற்றிருந்ததைப் போன்றே, வீரம் வெளிப்படும் போர்களிலும் கூத்துகள் இடம் பெற்றிருந்தமையை இலக்கியங்கள் சுட்டுகின்றன.

போர் செய்வதற்குப் புறப்படும் அரசன் பகை யரசனை வெற்றி கொள்ளப் போவதாகச் சொல்லி ஆடும் குரவை வெறிக்குரவை என்று கூறப்பெறும் (புறம், 21:20-23). முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை என்னும் இருவகைக் கூத்துகளை இலக்கண நூலார் சுட்டுவர்.

போரில் பெற்ற வெற்றிக்காக ஆடும் துணங் கைக் கூத்தைப் பதிற்றுப்பத்து புலப்படுத்துகின்றது 45:10-12). வெறியாட்டு, வள்ளிக்கூத்து, வாளமலை, துடிக்கூத்து, கழல்நிலை போன்றவற்றையும் போர்க் கூத்துகள் என்று குறிப்பர்.

கூத்து விரும்பப்பட்டதால் கூத்தர் பெருகினர்; கூத்தர் பெருகியதால் அவர்களுள் பிரிவுகள் தோன்ற லாயின; கூத்துகள் தொழில் முறையில் நடத்தப்பட் டன; போட்டிகள் நடந்தன.

பரிபாடல் கூத்துப் போட்டிகளைப் போர்களுக்கு உவமித்துக் கூறும் (பரி 7: 72-3).தொழில் முறைப் போட்டிகள் புதிய வகைக் கூத்துகள் தோன்றுவதற்கு வழிவகுத்தன. கூத்துகளில் ஒருத்தர்கூறிய கூத்துகள் கருங்கூத்துகள் என்று சொல்லப்பட்டதாகக் கலித் தொகை கூறும்

**கூப்பர், சான் மாண்ட்கோமரி (கி.பி. 1881 -1949)** ஓர் அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியலார்; சமுதாயவியலார்;உரோமன் கத்தோலிக்க குரு. இவர் எல்லைசார் மக்களைப் பற்றிய ஆய்வு முறைகளுக் குப் புதிய அணுகுமுறைகளை வகுத்தார். கூப்பர் (John Montgomery Cooper) அமெரிக்காவில் இராக் வில்லி (Rockville) என்னுடத்தில் கி.பி. 1881-இல் பிறந்தார்.

வாசிங்டனிலுள்ள கத்தோலிக்கப் பல்கலைக்கழ கத்தில் 1905-ஆம் ஆண்டு பகுதிநேர விரிவுரையாள

ராகச் சேர்ந்தது முதல் இடம்விட்டு இடம் பெயரும் மக்களைப் பற்றி ஆராய்வதில் ஈடுபட்டார். தியரா தெல் பியூகோ (Tierra del Fuego) பகுதிப் பழங்குடி களைப் பற்றிய இவரது முதல் ஆய்வு (1917) இவரது வளர்ச்சிக்கு வேரூன்றியது. இதன்பின்னர்ச் சமுதாய வியல் இணைப் பேராசிரியராகவும், பின்னர்க் கத் தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் தோற்றுவிக்கப்பட்ட மானிடவியல் துறையின் முதல் பேராசிரியராகவும் (1934–49) பணியாற்றினார்.



கூப்பர்

இவர் எல்லைசார் மக்களைப் பற்றிய அணுகு முறைகளுக்குப் புத்தொளி கொடுக்க விரும்பினார். எனவே, இவர் தென் அமெரிக்காவின் தென் பகுதிப் பழங்குடிகளின் பொருள்சார் பண்பாடு, சமுதாய வழக்கங்கள், மாயவித்தை, சமயம் முதலான அனைத்துப் பரப்பிலும் ஆய்வினை மேற்கொண்டார்.

இவர்தம் அனைத்து ஆய்வுகளிலும் ஒவ்வொரு பழங்குடியின் மக்கள் தொகை பல்வேறு இடங்களிலும் வரலாற்றுக் காலந்தொட்டுப் பரவியுள்ளது பற்றி ஆராய்ந்ததன் மூலம், எல்லைசார் மக்கள் பற்றிய கொள்கை நிலைக்குத் தெளிவான விளக்கம் கொடுத் தார்.

தென், வட அமெரிக்க இந்தியர்கள் பிற்காலத் தில் இடப்பெயர்ச்சி அடைந்தபோது, பல காரணங் களால் அவர்கள் விரும்பாத பகுதிகளுக்குத் தள்ளப் பட்டனர். எனினும், அவர்கள் முற்கற்காலப் பண் பாட்டின் எச்சங்களை இன்றளவும் கொண்டுள்ளனர். ஒதுக்க நிலை பெற்ற ஒரு பண்பாட்டினர் தொடர்ந்து தம் நிலையை மாற்றுவதில் முயன்றும் வெற்றி பெற இயலாத நிலையை வரலாறு காட்டுகிறது. இந்த எல்லைசார் பண்பாட்டுத் தொடர்ச்சி, முற்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சி எனப் பண்பாட்டு வர லாற்றியல் ஆய்வுகளில் உறுதிப்படுத்த முடியும் என் பார் கூப்பர்.

கூப்பர் தொல்மனிதன் (Primitive Man) என்னும் மானிடவியல் ஆய்விதழின் நிறுவனராவார். இவர் அமெரிக்க இந்தியப் பழங்குடிகளைப் பற்றியும் எல்லைசார் மக்களைப் பற்றியும் பல நூல்கள் எழுதி யுள்ளார். இவர் வாசிங்டனில் 1949-இல் கால மானார். சீ.ப.

**கூமாசி**: ஆப்பிரிக்காக் கண்டத்தின் மேற்கில் கோல்டுகோசுட்டுப் பகுதியில் உள்ள கூமாசி (Kumasi) நகரம் கி.பி. 1896-இல் ஆங்கிலேயரால் கைப்பற்றப் பெற்றது. அதற்கு முன்னர் அங்குக் குடியேறி வாழ்ந்து வந்த மக்களின் பெயர் அசாந்தி (Ashanti). இதற்குத் தென்கிழக்கில் 184 கி.மீ. தொலைவில் ‘ஆக்ரா’ என்ற பெயருள்ள சிறப்பு வாய்ந்த நகர் உள்ளது. அசாந்தி என்ற போக்குவரத்தும் இங்கு மிகப் பெருகி யுள்ளது. இது கி.பி. 1700-இல் தோற்றுவிக்கப் பெற்றது. தெ.பா.

**கூமா மாட்டா**: சப்பான் நாட்டில் கியூசுத் (Kyushu) தீவின் நடுப்பகுதியில் உள்ள ஒரு நகரம் கூமா மாட்டா (Kumamoto). இதன் தலைநகரின் பெயரும் இதுவே. இதனருகில் சிராக்காவா (Shira-kawa) ஆறு ஓடுகிறது. இந்நகரம் கி.பி. 16-ஆம் நூற் றாண்டிலேயே அமைக்கப் பெற்றது. நெல் விளைவு மிகுதி. இங்குள்ள பௌத்த கோயில் சிறப்பு வாய்ந் தது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு கோட்டை யும் இங்கு உள்ளது. மூங்கிலும் பானைக் கலங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தெ.பா.

**கூயிபிசெவு**: சோவியத்து உருசியாவுக்குரிய கூயிபிசெவு (Kuibyshev) வால்கா ஆறு ஓடும் பகுதியில் இருப்பதால் மிகவும் வளம்பெற்றுள்ளது. வேளாண்மை யும் கால் நடை வளர்ப்பும் முக்கிய தொழில்கள். இதன் தலைநகரின் பெயரும் கூயிபிசெவு. இது கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட் டது. இதன் பழைய பெயர் சமாரா (Samara). மாசுக்கோ நகருக்கும் இதற்கும் உள்ள இடைவெளி 880 கி.மீ. சமாரா ஆறு இதன் வழியாக ஓடுகிறது. இங்குள்ள பல்கலைக் கழகம் சிறப்பு வாய்ந்தது. தெ.பா.

**கூர்க்கப் போர்**: நேப்பாள நாட்டில் கூர்க்கா என்ற மலை நாட்டுப் பகுதியினரான கூர்க்கர்கள், நேப்பாளத்திலே தங்கள் ஆட்சியை, கி.பி. 18-ஆம்

நூற்றாண்டில் நிறுவினர். அக்காலத்தில் நேப்பாளத்தின் தெற்கே கங்கைச் சமவெளியில் ஆட்சிபுரிந்து வந்த ஆங்கிலேயருக்கும் கூர்க்கர்களுக்கும் எல்லைத் தகராறு காரணமாகப் போர்கள் மூண்டன. நேப்பாள அரசின் எல்லையைப் பெருக்கிக் கொள்ள விரும்பிய கூர்க்கர்கள், ஆங்கிலேயருக்குச் சொந்தமான சில இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கில-கூர்க்கப் போர் கி.பி. 1814-இல் தொடங்கியது. தொடக்கத்தில் மலைநாட்டவரான கூர்க்கர்களை ஆங்கிலப்படை வெல்ல முடியவில்லை. அடுத்த ஆண்டில் ஆக்டர்லோனி என்ற ஆங்கிலப் படைத் தலைவன், பல இடங்களில் கூர்க்கர்களைத் தேகற்கடித்து வெற்றிபெற்றான். இருசாராருக்குமிடையே கி.பி.1816-ஆம் ஆண்டில் சகௌலி என்னுமிடத்தில் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி ஆங்கிலேயர் விரும்பிய பல இடங்களைக் கூர்க்கர்கள் அளித்தனர். நேப்பாளத்தலைநகர் காட்மாண்டுவில், ஓர் ஆங்கிலப் பேராளர் அமர்த்தப்பட்டுக் கூர்க்கர்களின் செயல்களைக் கண்காணித்து வரலானார். அதற்குப் பிறகு இருசாராரும் நட்புறவுபூண்டிருந்தனர். தெ.பா.

**கூர்க்கர்கள்** : நேப்பாளத்தில்வசிக்கும் மக்களைக் கூர்க்கர்கள் என்று பொதுவாக அழைக்கின்றனர். இவர்கள் இராசபுத்திர மரபைச் சார்ந்தவர்கள். இந்தியாவின் மீது முகம்மதியர் படையெடுத்து வந்த போது இராசபுத்திரர் பலர் நேப்பாளத்திற்கு ஓடினார்கள். அப்போது நேப்பாளத்தில் மல்லர்கள் (Mallas) ஆதிக்கம் பெற்றிருந்தனர். மல்லர்களுடைய ஆட்சி காட்மண்டு, பாட்டன் (Patan), பட்கோயன் (Bhagaon) ஆகிய இடங்களில் நிறுவப்பட்டிருந்தது. நேப்பாளத்தின் மேற்கு, கிழக்குத் திசைகளில் உள்ள மலைப் பகுதிகளில் பல சிறு அரசுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நேப்பாளத்திற்குச்சென்ற இராசபுத்திரர்கள் திரபியா சா (Drabya Shah) என்பவரின் தலைமையில் மைய நேப்பாளத்தில் உள்ள கூர்க்க நகரையும், அதைச் சுற்றியுள்ள பகுதியையும் கைப்பற்றிக்கூர்க்கர் அரசை நிறுவினார்கள். அது முதல் அவர்கள் கூர்க்கர்கள் என்றழைக்கப்பட்டனர். அவர்களின் வழி வந்த பிரிதிவி நாராயண சா (Prithvi Narayan Shah) என்பவர் மல்லர்களைத் தோற்கடித்துக் கூர்க்கர் அரசை மேலும் விரிவுபடுத்தினார். காட்மண்டு பள்ளத்தாக்கு கி.பி. 1769-இல் கைப்பற்றப்பட்டது. அதையடுத்துத் தலைநகரம் காட்மண்டுக்கு மாற்றப்பட்டது. ஏனைய சிற்றரசுகளும் அதனுடன் இணைக்கப்பட்டு இன்றைய நேப்பாள அரசு உருவாக்கப்பட்டது. அது கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிக்கிம் முதல் சட்லெசு வரை பரவியிருந்தது. கூர்க்கர்கள் போர் புரிவதில் மிகுந்த விருப்பம் கொண்டவர்கள். அவர்கள் 1788-92 ஆண்டுகளில் சீனாவுடன் போர் மேற்கொண்டனர். சீக்கியத் தலைவரான இரஞ்சித்து சிங்குடன் கி.பி. 1809 முதல் 1811 வரை போர் புரிந்தனர். அதன் விளைவாக அவர்கள் காங்கிரா (Kangra) மாவட்டத்தை இழந்தனர். ஆங்கிலேயர்களுடன் கி.பி. 1814-இல் அவர்கள் போர்புரிய நேர்ந்தது. ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளைக் கூர்க்க அரசு ஏறத்தாழ 700 மைல்கள் தொட்டுக் கொண்டிருந்தது. அதன் காரணமாகக் கூர்க்கர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே அடிக்கடி எல்லைத் தகராறுகள் ஏற்பட்டன. அந்த நிலையை ஆங்கிலத் தலைமை ஆளுநர் மோய்ரா பிரபு (Lord Moira) அனுமதிக்க விரும்பவில்லை. எனவே, சர்ச்சைக்குரிய மாவட்டங்களில் ஆங்கிலப் படைகளை நிலைநிறுத்த மோய்ரா பிரபு முற்பட்டார். அதனால் போர் ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் மலைப் பகுதிகளில் போக்குவரத்தை மேற்கொள்ளுவது கடினமாக இருந்தது. கூர்க்கர்கள் போர்த் திறமைக்குப் பேர் பெற்றவர்கள். ஆகவே, தொடக்கத்தில் ஆங்கிலேயர்கள் தோல்வி கண்டனர். ஆனால், விரைவில் அவர்கள் வெற்றி வாகை சூடினர். மேய்ரோ பிரபு போர் ஏற்பாட்டைத் தாமே கவனிக்கலானார். அவர் திறமைவாய்ந்த படைத் தலைவராகையால் அவருடைய போர் ஏற்பாடு வெற்றிக்கு வழி தேடியது. மேலும், ஆக்டர்லோனி (Ochterllony) போன்ற சிறந்த படைத் தலைவர்களின் சேவை ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தது. கூர்க்கர்கள் 12,000 பேர்களுக்கு மேல் தங்கள் படையில் சேர்க்க இயலவில்லை. ஆங்கிலேயர்கள் 34,000 பேர்கள் கொண்ட படையுடன் போரிட்டனர். மேற்கூறிய காரணங்களால் கூர்க்கர்கள் தோல்வி காணலானார்கள். எனவே, அவர்கள் கி.பி. 1816-இல் அமைதி நாடினார்கள். அவ்வாண்டில் ஏற்படுத்தப்பட்ட சகௌலி உடன்படிக்கையின் (Treaty of Sagauli) காரணமாக அவர்கள் கார்வால் (Garhwal), குமாயோன் (Kumaon), தாராயின் (Tarai) பெரும் பகுதி ஆகியவற்றை ஆங்கிலேயருக்கு அளித்தனர்; சிக்கிமிலிருந்து வெளியேறவும் இசைந்தனர். ஆங்கிலப் பிரதிநிதி (Resident) ஒருவரைத் தங்களுடைய தலைநகரில் இருக்கவும் அனுமதி வழங்கினார்கள். அப்போது ஆங்கிலேயருடன் ஏற்படுத்தப்பட்ட நட்புறவு தொடர்ந்து நீடித்து வந்தது. திபெத்துடன் கி.பி. 1854-இல் கூர்க்கர்கள் போரிட்டனர். கூர்க்கர்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தத் திபெத்தியர்கள் சீனர்களைத் தங்கள் நாட்டுக்குள் வரவழைத்துக் கொண்டனர்.

கூர்க்கர்களின் போர்த்திறத்தை ஆங்கிலேயர்கள். பெருமளவில் பயன்படுத்திக் கொண்டனர். இந்தியப் படையில் கூர்க்கர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. பின் கி.பி. 1860-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி இங்கிலாந்து அரசு நேப்பாளத்

தில் தன் படைக்கு ஆள் சேர்க்க அனுமதி பெற்றது. கூர்க்கப் படைகள் 1962-இல் இங்கிலாந்தில் இறக்கப் பட்டன. ஆங்கில மண்ணில் முதல் முதலாக நிலை நிறுத்தப்பட்ட அயல்நாட்டு கூலிப் படைவீரர் கூர்க் கர்களேயாவர்.

நேப்பாளத்தில் இருந்த பழங்குடிகளான மங்கோலிய இனத்தவர்களுடன் கூர்க்கர்கள் இரண்டறக் கலந்துவிட்டனர். இவர்கள் காசு (Khas) என்ற ஒரு வகை இராசசுத்தான் மொழியைப் பேசுகின்றனர். இந்து சமயத்தைப் பின்பற்றுகின்றனர். இக்காலக் கூர்க்க நகரில் கூர்க்க மக்களின் புரவலராகக் கருதப் பெறும் கூர்க்காநாத்தினுடைய ஆலயம் புகழ் மிக்கு விளங்குகிறது. தி.ஆர்.இரா.

**கூர்சரப் பிரதிகாரர்**: இராசபுதனத்தின் மையப் பகுதியில் தமது ஆட்சிப் பகுதியினைக் கூர் சரர் என்போர் உருவாக்கினர். எனவே, அப்பகுதி குசராத்ரா எனப்பட்டுக் குசராத்து என்றாயிற்று. அங்கிருந்து அவர்கள் படிப்படியாக உச்சயினி, அவந்தி, கன்னோசி போன்ற பகுதிகளுக்குக் குடிபெயர்ந்தனர்; அவ்வாட்சியாளர்களுள் அரிச்சந்திரன் என்பவன் முதலாமவனாவான். அவனும் அவன் வழித் தோன்றல்கள் மூவரும் கி.பி. 550 முதல் 640 வரை ஆட்சி செய்த பின்னர், அம்மரபினர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பிரதிகாரர் என்ற பெயரில் வலிமை பெற்றுச் சிறக்கலாயினர்.

கூர்சரப் பிரதிகார மன்னருள் வலிமைபெற்ற முதல் மன்னன் முதலாம் நாகபட்டர். இம்மன்னர் கி.பி. 733 முதல் 758 வரை ஆட்சி செய்த தந்தி துர்க்கன் என்ற இராட்டிரகூட மன்னனால் வெல்லப் பட்டு அவனது இரணிய கருப்ப வேள்வியைக் காவல் செய்தவர். இராட்டிரகூடருக்கும் சாளுக்கியருக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டம் காரணமாக நந்திபுரி, சோதிபுரி, மாளவம், இராசபுதனம், குசராத்து ஆகிய பகுதிகளின் மேலாளரென இவர் செயற் பட்டார். இவருக்குப்பின் காக்குக்கா, தேவராசா போன்றோரின் சிறிது கால ஆளுகைக்குப் பின்னர், வச்சராசன் என்ற வலிமைமிக்க ஆட்சியாளர் கி.பி. 778 முதல் 806 வரை அரசோச்சினார். அவர் காலத்தில் விரிநிலைக் கொள்கை பின்பற்றப்பட்டது. கன்னோசியின் பண்டி மற்றும் வங்கத்தின் பால மன்னர்கள் வெல்லப்பட்டார்கள். வத்சராசனின் மகன் இரண்டாம் நாகபட்டர் கி.பி. 806 முதல் 831 வரை ஆட்சியாளரானார். வலிமை, திறமை காரணமாக ஆட்சியினைத் தங்கவைத்துக் கொண்டபோதிலும், இராட்டிர கூட மன்னன் மூன்றாம் கோவிந்தனால் தோற்கடிக்கப்பட்டார். அவர் மகன் இராமபத்திரனின் மூன்றாண்டுக் கால ஆட்சிக்குப் பின்னர், மிகிர போசன் கி.பி. 842 முதல் 885 வரை ஆட்சிபுரிந்தார். அவருக்குப்பின், பலர் ஆட்சி புரிந்தனர். ஆனால், கி.பி. 912 முதல் 944 வரை ஆட்சி செய்த மகிபாலன் என்பவரின் ஆட்சிக்குப்பின் அவர்கள் அழிவுப்பாதையில் அடியெடுத்துவைத்து, விரைவில் அழிந்துபட்டனர். சாளுக்கியர், சந்தேளர், சேதிகள், பாரமாரர்கள், காகமானர்கள் போன்ற உள்நாட்டு எதிரிகளாலும், கசினி முகமது போன்ற அயல்நாட்டவர் படையெடுப்பாலும் அப்பேரரசின் அழிவு உறுதி செய்யப்பட்டது. ஆயினும், மேற்குப்பகுதி வழியாக ஏற்பட்ட அயலவர் ஊடுருவல்களிலிருந்து இந்தியாவைக் காத்த பெருமை அவர்களுக்கு உண்டு. அவர்களது எழுச்சியால் முகம்மதியர்களின் எழுச்சி கட்டுப்படுத்தப்பட்டு ஒத்திவைக்கப்பட்டதெனலாம். மா.கா.

**கூர்சுக்கு**: ஐரோப்பாவில் சோவியத்து உருசியாவுக்குச் சொந்தமான கூர்சுக்கு (Kursk) நடு உருசியப் பீடபூமியில் உள்ளது. சேம் (Seim) ஆறும் வேறுசில சிற்றாறுகளும் இப்பகுதியை வளப்படுத்துகின்றன. உருளைக்கிழங்கு, கோதுமை, ஓட்சு, கேழ்வரகு முதலியன மிகுதியாகப் பயிராகின்றன. காடுகள் மிகுதி. சுண்ணாம்புக் கல், மணற்கல் குன்றுகள் பல இங்குக் காணப்படுகின்றன. இதன் தலைநகருக்குக் கூர்சுக்கு என்றே பெயர். இங்கு இயந்திரப் பொருள்கள், மெழுகுவர்த்தி, சோப்பு, கடுவெறிய நீர்க்கலவை (Spirit), தோல் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன. தசுக்கோர் (Tuskor) ஆறும் சேம் ஆறும் இங்குக் கலக்கின்றன. இங்கு ஒரு பெரிய இருப்புப் பாதை நிலையம் உள்ளது. மங்கோலியர் கி.பி. 1240-ஆம் ஆண்டில் இப்பகுதியை அழித்தனர். பிறகு கி.பி. 1586-இல் இப்பகுதி புதிதாக அமைக்கப் பெற்றது. இதன் மக்கள் தொகை 413,000 (1984). தெ.பா.

**கூர்மபுராணம்**: இது கௌர்மபுராணம் எனவும் வழங்கப்படும். இது, பிராமீ, பாகவதீ, கௌரீ, வைணவீ என்று நான்கு சங்கிதைகள் கொண்டது. ஆயினும், இப்புராணம் இப்போது பிராமி என்னும் ஒரே சங்கிதை கொண்டதாகவே காணப்படுகிறது. இப்புராணம் 6000 சுலோகங்களைக் கொண்டது. பாகவதம், வாயு முதலிய புராணங்களில் குறித்தபடி இப்புராணம் 18000 சுலோகங்கள் கொண்டதாகும். மற்றைய மூன்று சங்கிதைகளையும் சேர்த்துக் கண்டால் அவ்வெண்ணிக்கை ஏற்புடையதாகலாம்.

இப்புராணம் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்படுகிறது. முதற்பிரிவின் தொடக்கத்தில் தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடையுங்கால் மத்தான மந்தரமலை அமிழ்ந்துவிடாதபடி ஆமையுருவிற்

றோன்றி, அதைத் தாங்கி நின்று உலகைக் காத்தருளிய திருமாலின் தோத்திரப் பாடல் அமைகிறது. பாற்கடலினின்று தோன்றிய இலக்குமி அவர் தேவியானாள். இருடிகள் 'யார் அத்தேவி' என வினவ, தனது மேலான சக்தியே அத்தேவி எனப் பகர்ந்தார் திருமால். முன்பிறவியில் 'இந்திரத்துயும்னன் என்ற பெயருடன் புகழ்பெற்று ஓர் அரசனாய் இருந்தவன், திருமாலிடம் பக்தியால் ஓர் அந்தணனாகப் பிறந்து, சிவ தத்துவத்தை நன்றாக அறிந்துகொள்ள விரும்பினான். இலக்குமி பிராட்டி அவனுக்குத் திருமாலைக் காட்டியருளினாள். அவன், அவ்வாறே திருமாலை ஆக்கல், காத்தல் கடவுளாக மட்டுமன்றி, அவரே சிவன், மகாதேவன் என்றும், உலகத் தாய் தந்தையர் என்றும் நினைத்து வழிபட்டான். முடிவில் திருமால் ஆமை உருவிற்றோன்றி அவனுக்கு அருளினார்' என்று இந்நூல் கூறுகிறது. தொடக்கம் முதல் முடிவு வரை சிவனே முழுமுதற் கடவுள் என இப்புராணம் விளக்குகிறது. ஆனால், உண்மையில் 'முக்கடவுளரும் ஏற்றத்தாழ்வின்றி ஒருவரேயாவார் என்பதையும் வலியுறுத்துகிறது. 'பரமேசுவரி' என்னும் பெரும் சக்தி பெண் தெய்வமாகக் கூறப்படுகிறது. அச்சக்தியைச் சிவபெருமானின் தேவி எனக் கூறி, 8000 போற்றிப் பெயர்களால் புகழ்ந்து பாடுகிறது இப்புராணம்.

திருமாலும் சிவனும் ஒருவரே; இலக்குமியும் பார்வதியும் ஒருவரே; வேறு அல்லர் என்று காட்டுவது இப்புராணத்தின் தனித்தன்மையாகும். இவ் உண்மையை நிலைநாட்டக் கார்த்தவீரியனின் மைந்தர்கள் வாதிட்ட கதையைக் கூறுகிறது. அவர்களுள் சிலர் திருமாலைச் சிறந்தவர் எனவும், மற்றவர் சிவனே சிறந்தவர் எனவும் வாதிட்டனர். பின் சப்த இருடிகள் முடிவுசெய்தபடி, அவரவர் விரும்பி, வழிபட்ட கடவுளர் எவராயிருப்பினும் அவர் அவர்களுக்குச் சிறந்த கடவுளாவார் என்பதை ஏற்றுக் கொண்டனர்.

உலகத் தோற்றம், சமயம், தத்துவம், சரித்திரம், புவியியல், கோளியல் முதலியவை பற்றிய செய்திகளும் இப்புராணத்தில் கூறப்பட்டுள்ளன. சமயம், நீதிநெறி ஆகியவை பொறுத்தவரை அவரவர் தொழில்,தகுதிகளுக்கேற்பக் கருமத்தை -கடமையைச் சரிவரச் செய்யவேண்டுமென வலியுறுத்துகிறது. திருத்தலங்கள் பற்றிய அரிய பல செய்திகளையும் வருணிக்கிறது. இப்புராணம் சாங்கியம் என்ற தத்துவத்தைப் பின்பற்றுகிறது. சூரிய-சந்திர வமிசத்து அரச குடும்பங்களையும், அவரைச் சார்ந்த பல கதைகளையும் வருணிப்பது இதன் மற்றொரு அம்சமாகும். இதன்கண் அமைந்த 'புவனகோசம்' என்ற பகுதி ஏழு தேசங்களையும், அங்குள்ள மிருகங்கள், மரம் செடி கொடிகள், மலைகள், ஆறுகள் ஆகியவற்றையும் விரிவாக வருணிப்பதைக் காணலாம். விண்வெளிக் கோளியல் என்ற முனைப்பில் நட்சத்திர மண்டலம், கோள்கள் அமைப்பு, சூரியன் தேர், பன்னிரண்டு ஆதித்தர்களின் தொழில், சூரியனின் ஏழு கதிர்களின் தன்மை ஆகியவை இப்புராணத்தில் இடம்பெறுகின்றன. காசி, பிரயாகை (அலகாபாத்து) ஆகிய திருத்தலங்களின் பெருமைகளும் வருணிக்கப்படுகின்றன.

இரண்டாம் பகுதியில் பொதுவாக புராண இலக்கணங்களான சருக்கம், பிரதிசருக்கம், வமிசம், மன்வந்தரம், வமிசானுசரிதம் என்ற ஐந்தும் வருணிக்கப்படுவதைக் காணலாம். எனினும், குறிப்பாகப் பாசுபதம், விபூதி, ஈச்வரம் என்ற யோக நிலைகள் பற்றியும், அவரவர் கருமத்தினைச் செய்யத் தவறினால், செய்யப்படவேண்டிய பிராயச்சித்தம் என்ற கழுவாய் முறை தருமசாத்திரங்களைப் போன்று இங்குக் கூறப்படுவது தனித்ததொரு அம்சமாகும். இன்னும், ஈசுவர கீதை, வியாசகீதை முதலிய அரிய பகுதிகளின் மூலம் தியானம், கர்மானுட்டானம் ஆகியவற்றால் இறையுணர்வைப் பெற வாய்ப்புள்ளதை வலியுறுத்தும்.

இப்புராணம் அதிவீரராமபாண்டியரால் (கி.பி. ஆம்-16.நூ.) தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

எஸ்.சீ.

**கூரகுலோத்தமதாசர்:** சிரீவைணவ குரு பரம்பரையில் இராமானுசருடைய முதன்மைச் சீடர் கூரத்தாழ்வான். அவருடைய குமாரர் மகாமேதாவியான பராசரபட்டர். அவருடைய சீடர் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி உரையருளிய நஞ்சீயர். அவருடைய சீடர் திவ்வியப் பிரபந்தங்களுக்குத் தம் சீடர்கள் வழியாகப் பேருரைகள் அமையக் காரணமாயிருந்த நம்பிள்ளை. அவரது 'ஈடு' என்னும் திருவாய்மொழிப் பேருரையை ஏடுபடுத்தியவர் அவர்தம் சீடரான வடக்குத் திருவீதிப்பிள்ளை. அவர்தம் மூத்தகுமாரர் பதினெட்டு இரகசிய நூல்களை அருளிய பிள்ளை லோகாசாரியர். அவருடைய முதன்மைச் சீடர் 'கூரகுலோத்தமதாசர்'. இவர் திருவரங்கத்தில் பூர்வசிகை (முன்குடுமிச்சோழிய) சிரீவைணவ அந்தணர் மரபில் கொண்டின்ய கோத்திரத்தில் ஓர் ஐப்பசி மாதத் திருவாதிரையில் தோன்றினார். இவருக்கு வைணவ தீட்சையான பஞ்ச(ஐந்து) சமசுகாரங்களும், நித்யானுசந்தானங்களும் சாதித்தருளிய ஆசாரியர் வடக்குத் திருவீதிப் பிள்ளை ஆவார். திருவாய்மொழி முதலான திவ்வியபிரபந்தங்

களும், அவற்றின் பேருரைகளும், சிரீபாடியம் சுருதப் பிரகாசிகை முதலான வடமொழி வேதாந்த நூல் களும் உபதேசித்தருளியவர் பிள்ளை லோகாசாரியர். இரகசியங்களையும், அவற்றின் பொருள்களையும் உபதேசித்தருளியவர் பிள்ளை லோகாசாரியரின் தம்பி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆவார். பிள்ளை லோகாசாரியர் காலமாகுந் தறுவாயில் தம் முதன்மைச் சீடரான கூரகுலோத்தம தாசரை அழைத்து 'நம்முடைய சீடரான 'திருமலை யாழ்வார்' என்னும் திருவாய்மொழிப்பிள்ளை மதுரை இராசப் பிரதிநிதியாயிருக்கிறார். அவரை உபதேசித்துத் திருத்தித்திருவரங்கத்தில் அடுத்தபடி மதத் தலைவராக ஆக்க வேண்டும்' என்று கட்டளை யிட்டார். அதன்படி இவரும் தாமே வலியச் சென்று திருவாய்மொழிப் பிள்ளையைத் திருத்திப் பணி கொண்டு திருவாய்மொழிப் பிள்ளையைத் திருவரங்கத்தில் மதத் தலைவராக்கினார். இச்செயலாலே இவர் 'உதாரர்' (வண்மை மிக்கவர்) என்று புகழப்பெற்றார். இந்தத் திருவாய்மொழிப் பிள்ளையே பிற்காலத்தில் திருவரங்கத்தில் பெரிய மதத் தலைவராய் விளங்கிய மணவாள மாமுனிகளுக்கு ஆசாரியரானார். எஸ்.கி.

**கூரத்தாழ்வான் (கி.பி. 11-ஆம் நூ.):** இவர் இராமானுசரின் முதன்மை மாணாக்களுள் ஒருவர். காஞ்சி நகரின் வடமேற்கில் உள்ள கூரம் என்னும் ஊரில் பிறந்தவர். அதனை யொட்டியே கூரத்தாழ்வான் என்று குறிக்கப்பெற்றார். இவருக்குத் திருமறு மார்பன் (சிரீவத்சாங்கர்) என்பது பெயர். இவருக்குத் தந்தை 'அநந்தர்' என்னும் திருப்பெயரையுடைய கூரத்தாழ்வார்; தாயார் பெருந்தேவி நாயகி. இவர் இராமானுசருக்கு எட்டு ஆண்டுகள் முன் பிறந்தவர்.

இவர் தமது செல்வம் அனைத்தையும் துறந்து மனைவி ஆண்டாளோடு இராமானுசரின் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றி வாழ்ந்தார். இவருக்கு மனைவியாக வாய்த்த ஆண்டாளும் பேரறிவோடு திகழ்ந்தார். ஆழ்வான் தம் ஐயங்களை ஆண்டாளைக் கேட்டுத் தெளிவுபெற்றார் என்பர். வைணவ உலகத்தில் நீங்கா இடத்தைப் பெற்றுள்ள பட்டரும் சீராமப் பிள்ளையும் இவருடைய மக்களாவர். இவருக்குப் பெண்பிள்ளைகளும் இருந்தனர் என்னும் குறிப்புத் திருவிருத்த உரையில் (பாட்டு 99-உரை) காணப்படுகிறது. இவர் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திருவரங்கக் கோயிற் பணியில் இருந்தவர்களுக்குத் தலைவராய் விளங்கிய திருவரங்கத்தமுதனார் ஆவார். அவர் இராமானுசரைச் சார்ந்து தம்மைத் திருத்தி அவர் திருவடிகளுக்கு உரியவராகும்படி செய்யத் தக்கார் ஒருவரை நியமிக்க வேண்டினார். இராமானுசர் அப்பணியைக் கூரத்தாழ்வானிடம் ஒப்படைத்தார். இவரும் ஆறு திங்கள் அமுதனாருடன் கூடியிருந்து அவரைப் பக்குவராக்கி இராமானுசரிடம் அழைத்துச் சென்றார். அப்பொழுது இராமானுசர் அமுதனாரைக் கூரத்தாழ்வானுடைய திருவடிகளைத் தஞ்சமாகக் கொள்ளுமாறு பணித்தார். இவ்வமுதனார் தம் தாயார் காலமான பொழுது அவருக்கு நீத்தார் கடன் செய்தார். அதில் இராமானுசரின் கட்டளைப்படி கூரத்தாழ்வான் கலந்துகொண்டு, உணவு உண்டு, கோயில் திறவுகோலைப் பெற்றுவந்து இராமானுசரிடம் தந்தார். அதனால், கோயில் பொறுப்பு அமுதனாரிடமிருந்து இராமானுசர் கைக்கு மாறியது.

இராமானுசர் பிரம்மசூத்திரத்திற்கு உரை வரையக் கருதிக் காசுமீரம் சென்று, அதற்குப் போதாயனர் எழுதிய விளக்கத்தைப் படித்தார். இராமானுசர் முதல் பாகத்தைப் படித்துக்கொண்டிருந்தபோது கூரத்தாழ்வான் எஞ்சிய பகுதிகளை எல்லாம் படித்தறிந்து, அவர் சிரீபாடியம் எழுதியபோது உசாத் துணையாய் அமைந்து உதவினார்.

முதற்குலோத்துங்கன், இராமானுசரை, 'சிவத்துக்கு மேல் பரம் பொருள் இல்லை' என்பதனை ஏற்றுக்கொள்ளச் செய்யும்பொருட்டு, அவரை அழைத்துவரத் திருவரங்கத்துக்கு ஆட்களை ஏவினான். இராமானுசர் அரசவைக்குச் சென்றால் அவருக்குத் தீங்கு நேரும் என்று கருதிய கூரத்தாழ்வான் அவருடைய உடைகளைத் தாம் அணிந்து பெரிய நம்பி என்பவரோடு அரசவைக்குச் சென்றார். இராமானுசர் மைசூருக்குத் தப்பிச் சென்றார். கூரத்தாழ்வான் மன்னன் கூறிய கருத்தை ஏற்றுக் கொள்ளாமையால் தண்டனை பெற்றுத் தம் கண்களை இழந்தார். அதனால் 'தரிசனத்துக்காகத் (தம் சமயத்துக்காக) தரிசனத்தைக் (கண்களை) கொடுத்தவர்' என்னும் பெருமை பெற்றார்.

கூரத்தாழ்வான் நான்கு மறைகளையும் கற்றுத் துறைபோகியவர்; ஆழ்வார்கள் பாசுரங்களில் தோய்ந்து உருகிய நெஞ்சினர். ஆழ்வார்கள், பாசுரங்களுக்குப் பல முறை விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார் என்பதற்குரிய குறிப்புத் திவ்வியப் பிரபந்த உரைகளில் காணப்படுகிறது. 'ஆழ்வான் ஒருருவிலே பணித்தானாம்' (2:10:4 – 36) 'என்னுமாம் ஆழ்வான் ஒருருவிலே' (1:5:11 – 24) என்று திருவாய்மொழி உரைகளில் வருவன இதற்குச் சான்றுகளாகும்.

இவர் வடமொழியில் சிரீவைகுண்டத்தவம், அதிமானுடத்தவம், சுந்தரபாகுத்தவம், வரதராசத்தவம்,

சிரீதவம் என்னும் புகழ்வாய்ந்த ஐந்து தோத்திர நூல்கள் இயற்றியுள்ளார்.

இவர் இராமானுசருக்கு முன்பே காலமானார்.

தெ.ஞா.

**கூரம் செப்பேடுகள்**: இவை பல்லவ மன்னன் முதலாம் பரமேசுவரவர்மனால் வெளியிடப்பட்டவை யாகும். கூரம், பரமேசுவர மங்கலம் என்னும் பகுதி களை அந்தணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட தைக் கூறுவதால் இச்செப்பேடுகள் கூரம் செப்பேடு கள் எனப்பட்டன.

இச்செப்பேட்டுத் தொகுதி ஏழு ஏடுகளைக் கொண்டது. அவை ஒரு வளையத்தில் கோக்கப்பட் டுள்ளன. அதன் முகப்பில் வட்ட வடிவமான $2\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவு கொண்ட முத்திரை உள்ளது. இம்முத்திரையில் ஓர் ஆசனத்தில் இடப்புறம் நோக் கிப் படுத்திருக்கும் எருதுவின் உருவமும் அதன்மேலே பிறைச் சந்திரனும், இலிங்கமும் காணப்படுகின்றன. முத்திரையைச் சுற்றி வட்டமாக எழுத்துகள் பொறிக் கப்பட்டுள்ள போதிலும் அவை தெளிவாக இல்லை.

இச்செப்பேடு வடமொழியிலும் தமிழிலும் எழு தப்பட்டுள்ளது.

**வடமொழிப் பகுதி**யின் முதல் இரண்டு பதிகங்கள் சிவபெருமானுக்கு வணக்கம் கூறும் முகத்தான் கடவுள் வாழ்த்தாகவும், பின்வருபவை பல்லவ மரபின் புகழைக் கூறுவதாகவும் பல்லவமரபு வழியைக் கூறுவ தாகவும் அமைந்துள்ளன.

இச்சாசனத்தில் பல்லவ அரசர்கள் முதலாம் பரமேசுவரவர்மன், அவன் தந்தை இரண்டாம் மகேந் திரவர்மன், பாட்டன் முதலாம் நரசிம்மவர்மன் ஆகி யோரைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. இச் செப்பேடு முதலாம் மகேந்திரவர்மன் சாளுக்கிய மன்னன் முதலாம் விக்கிரமாதித்தியனோடு போரிட்டு வெற்றி கண்டமையைத் தெளிவுறக் கூறுகின்றது.

முதலாம் நரசிம்மவர்மன் சோழ, சேர, களப்பிர பாண்டியர்களைப் பலமுறை தோற்கடித்தான் என் றும், சாளுக்கியமன்னன் இரண்டாம் புலிகேசியைப் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங் களில் புறமுதுகிட்டு ஓடச் செய்தான் என்றும், வாதாபியை அழித்தான் என்றும் இச்செப்பேடுகள் கூறுகின்றன. முதலாம் பரமேசுவரன் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனோடு நடத்திய போரைப் பற்றியும் இச்செப்பேடு கூறுகின்றது.



ஊற்றுக்காட்டுக் கோட்டத்தில் நீர் வேளூர். என்ற அவாந்தர நாட்டில் உள்ள கூரம் என்ற கிரா மத்தில் வித்யாவிநீத பல்லவாதிராசன், தன் பெய ரால் எழுப்பிய வித்யாவிநீத பல்லவ பரமேசுவரகிரு கத்தில் எழுந்தருளிவித்த சிவபெருமானுக்குப் பூசை முதலியவற்றிற்கும், பாரதம் படிப்பதற்கும் மணவிற் கோட்டத்துப் பன்மா அவாந்தர நாட்டில் உள்ள சிற்றூரைப் பரமேசுவரமங்கலம் என்னும் பெயரில் தேவதானமாகவும் பிரமதேயமாகவும் வழங்கினான். இதற்குப் பொறுப்பாளராக உத்தரகாரணிகளான மகாசேநந்தன் என்பாரையும், பூசைமுதலிய தேவ காரியத்திற்குக் கூரத்தாசாரியர் மகன் அனந்தசிவா சாரியாரையும், புல்லசர்மன் என்பாரையும் நியமித்து ஆணை பிறப்பித்தான்.

**தமிழ்ப் பகுதி**: இதில் இரண்டு நிகழ்ச்சிகள் குறிப் பிடப்படுகின்றன. ஒன்று கூரத்தில் சிவாலயம் எடுத் தது. மற்றொன்று பரமேசுவரமங்கலம் என்னும் சிற் றூரைப் பிரமதேயமாக்கியது.

இம்மன்னன் கோயில் எழுப்பவும், ஏரிதோண்ட வும், கோயிலிலேயே வழிபாடு செய்பவர்களுக்கு இருக்க மனையும் தோட்டமும் வகுக்கவும் ஐந்தே கால்பட்டி நிலத்தை விலைகொடுத்து வாங்கிய செய் தியை இப்பகுதி குறிப்பிடுகிறது.

மணவிற்கோட்டத்துப் பன்மாநாட்டுப் பரமேசுவர மங்கலத்து எல்லைக்குள் அகப்பட்ட நிலம் முழுவதை யும் இருபத்தைந்து பங்காக்கி, இருபது பங்குகளை அந்தணர்களுக்குப் பிரமதேயமாக அளித்தான். மீதி ஐந்து பங்கில் மூன்று பங்கு, கூரத்தில் எழுப்பிய சிவன்கோயிற் பூசை முட்டின்றி நடைபெறுவதற்கும் ஒரு பங்கு பாரதம் படிப்பதற்கும் ஒதுக்கப்பட்டன. கோயில் திருப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மூன்று பங்கு களை அனந்தசிவாசாரியார், புல்லசர்மா் ஆகிய இரு வரும் சரிஅளவாக வழிவழியாக அனுபவித்துக் கோயில் வழிபாட்டினை நடத்தி வருதல் வேண்டும் என நிருணயிக்கப்பட்டது.

நிலம் வழங்கப்பெற்றகூரம் காஞ்சிபுரத்திற்கு அருகிலும், பரமேசுவர மங்கலம் மதுராந்தகம் வட் டத்தின் கிழக்குப் பகுதியிலும் உள்ளன. இங்குச் சிவன் கோயில் ஒன்று பல்லவர் கல்வெட்டுகளுடன் உள்ளது.

இச்செப்பேடு இப்போது சென்னை அருங்காட்சி யகத்தில் உள்ளது.


கே.இரா.

**துணை நூல்:**

**Subramanian, T.N.**, Thirty Pallava Copper-plates, The Tamil Varalatru Kazhagam, Madras, 1966.

**கூரா**: மின்சக்தி உற்பத்தி செய்ய மிகவும் பயன்படும் கூரா (Kura) ஆறு தெற்கு ஐரோப்பிய உருசியக் குடியரசில் உள்ளது. திரான்சுகாக்கேசியாவின் (Transcaucasia) மிகப் பெரிய ஆறு இதுவே. துருக்கியில் உள்ள கார்சு (Kars) என்ற இடத்திற்கு வடமேற்கில் உள்ள மலைகளில் இது தோன்றுகிறது; காசுப்பியன் கடலில் கலக்கிறது; அசர்பைசான் (Azerbaidzhan) பாக்கு (Baiku) முதலிய பகுதிகளின் வழியாக ஓடுகிறது. அலசான் (Alazan), அராக்சு (Araks) என்னும் இரண்டு ஆறுகள் இதனுடன் கலக்கின்றன. இதன் நீளம் 1530 கி.மீ. தெ.பா.


**கூராசாவோ**: தென்னமெரிக்காவின் வடக்கில் உள்ள தச்சு (Dutch) மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றான கூராசாவோ (Curacao) 1444 ச.கி.மீ. பரப்பை உடையது. இசுபானியர் (The Spanish) கி.பி. 1499-இல் இதைக் கண்டுபிடித்தனர். ஆனால், கி.பி. 1527க்குப் பின்னரே அவர்கள் அங்குக் குடியேறினர். தச்சுக்காரர் (The Dutch) கி.பி. 1634-ஆம் ஆண்டில் அதைக் கைப்பற்றிக் கொண்டனர். தச்சுக்காரரின் ஆதிக்கத்தின்கீழ் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இத்தீவின் வாணிகம் பெருகியது. அவர்கள் இதைத் தமது வாணிகப் பொருள்கள் சேமிப்பு இடமாகப் பயன்படுத்தினர். அடிமை முறை கி.பி. 1863-இல் அகற்றப்பட்டதற்குப் பிறகு இதன் சிறப்புக் குன்றியது, இங்கு 20-ஆம் நூற்றாண்டில் பாறை எண்ணெய்த் தொழில்தொடங்கப்பட்டதன் விளைவாக இத்தீவின் சிறப்பு மறுபடியும் ஓங்கலாயிற்று. எண்ணெய்ச்சுத்திகரித்தலும், மது தயாரித்தலும் இங்கு நடைபெறும் முக்கிய தொழில்கள். பலவகையான பழங்களும் இங்குக் கிடைக்கும். இதற்குத் தென் கிழக்கில் உள்ள வெனிசூலாவிலிருந்து எண்ணெய் இங்கு அனுப்பப்படுகிறது. கூராசாவோ தடையற்ற வாணிகம் நடைபெறும் சுதந்திரத் துறைமுகமாகும். இனப்போராட்டமும் கலகங்களும் 1969-இல் இங்கு மிகுதியாக நடைபெற்றன. கப்பற்கட்டுதல், சிமிண்டு உற்பத்தி, ஓடுகள் தயாரித்தல், சாயப்பொருள்கள் தயாரித்தல் முதலிய தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. சுற்றுலாப் பயண வளர்ச்சித் தொழிலும் இங்கு நடைபெறுகிறது. தெ.பா.



கூராசாவோ துறைமுகம்

**கூரிடீவா** தென்னமெரிக்காவில் பிரேசில் நாட்டில் உள்ள பாரானா அரசின் தலைநகரம். இங்குப் புகையிலை, மாட்டிறைச்சி,தேயிலை முதலிய முக்கியமான ஏற்றுமதிப்பொருள்கள் கிடைக்கின்றன. இங்கு ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறது. கூரிடீவாவைத் தலைநகராகக் கொண்ட பாரானா மாநிலத்தின்ச.பரப்பு 199,554 கி.மீ. இந்நகரம் கி.பி.1654-இல் நிறுவப் பெற்றது. ஆனால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை மக்கள் கவனம் அதிகமாக இங்குச் செல்லவில்லை. பின்னர்ச் செருமானியர், இத்தாலியர், இசுலாவியர் (Slavs) இங்குப்போய் அதன் வளத்தைப் பெருக்கினர். தெ.பா.

**கூரில் தீவுகள்** உருசியாவுக்குச் சொந்தமான 32 தீவுகள் அடங்கிய ஒரு தீவுக் கூட்டம். இவை பசிபிக்கு மாக்கடலில் சப்பான் நாட்டிற்கருகில் அமைந்துள்ளன. இவற்றிற்குக் கூரில் (Kuril) தீவுகள் என்பது பெயர். இவை காம்சட்கா பீடபூமிக்கும் ஆக்கெய்தோ (Hokkaido) தீவுக்கும் இடையில்




கூரில் தீவுகள்

உள்ளன. இங்குக் காடுகளே அன்றி எரிமலைகளும் உள்ளன. இத்தீவுகள் சிலவற்றில்தான் மக்கள் வாழ் கின்றனர். கூரில் தீவுகளின் பரப்பு 15,590 ச.கி.மீ. சப்பானின் தோல்விக்குப் பிறகு (1945) நேசக் கட்சி யின் ஒப்புதலுடன் இத்தீவுகள் உருசிய அரசுடன் இணைக்கப்பட்டன. தெ.பா.

**கூருணர்ச்சிக்குழு**: புலனுணர்வு, மன ஒரு மைப்பாடு, மனத்தின் விழிப்புநிலை, உடல் ஆகிய வற்றின் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, அவற்றில் ஆர்வமுடையவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமையும் ஒரு கூட்டமைப்பே கூருணர்ச்சிக் குழு (Sensitivity Group) எனப்படும். உறுப்பினர்கள் தம் கருத்துகள், மன உணர்வு போன்றவற்றை ஒரு வருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் எதிர்ப்படு குழு வாக (Encounter Group) இது செயற்படுகின்றது. பொதுவாக, உள்ளம் அல்லது உடலால் ஊனமுற்ற வர்களும் அதன் விளைவாகப் புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களுக்கு ஆட்பட்ட வர்களும் இக்குழுவில் இடம் பெறுவர். மனம், உடல் போன்றவற்றில் அடைந்துள்ள ஊனத்தினைக் குணப் படுத்தி, முழுநிறைவுடைய மக்களாகத் தம் உறுப் பினர்களை இக் கூருணர்ச்சிக்குழு பண்படுத்து கின்றது.

இக் குழு பயிற்சிக் குழு (T. Group) எதிர்ப்படு குழு போன்ற வெவ்வேறு பெயர்களில் செயற்படுகின்றது. கலந்துரையாடல், இடைவினை (Interaction)போன்ற உளவியல் முறைகளைப் பயன்படுத்தி, மனிதனின் தனித்தனி உணர்வு நிலைகளைக் கூர்மையாக வளம் படுத்துகின்ற 'கூருணர்ச்சித் திறன் பயிற்சி' இங்கு அளிக்கப்படுகின்றது. மேலும், இங்கு மன எழுச்சி (Emotion) மனநிலை (Attitude) போன்றவை பற்றிய கல்வி அளிக்கப்படுகிறது. இதில் பங்கு பெறுவோர் தன்னுணர்வு (Self awareness) பெறுவதோடு ஒருவர் மற்றவர்மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் வளர்த் துக் கொள்கின்றனர்.

கற்கும் திறனைத் தூண்டுவதற்கான வழி முறை களை அறிவதற்குக் கல்வி கற்றவர்களிடம் முதன் முதலாக இக்குழு தோன்றியதாகக் கோலம்பிவுசுக்கி (Golembiewski), பிலம்பெர்கு (Blumberg) போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். பின்னர், நிருவாகி கள் -தொழிலாளர்கள், காவலர்கள்-இளைஞர்கள், கறுப்பர்-வெள்ளையர் போன்ற பகைமைக் குழுவினர் ஒருவரையொருவர் அறிந்து, நல்லுறவு கொள்வதற் கான முயற்சிகள் இக் குழுவின் மூலம் மேற்கொள்ளப் பட்டன. பகைமைக் குழுவினரை எதிர் எதிராகச் சந்திக்கச் செய்து, திறமையாக உளவியல் முறை களைக் கையாளுவதன் மூலம் ஒருவரையொருவர் அறிந்து கொண்டு எளிதாகத் தங்கள் தவறான எண்ணங்களை விட்டுவிட வழிவகுக்கிறது எனப் பூமா (Bouma) என்ற அறிஞர் கூறுகிறார். இக் கூருணர்ச்சிக் குழுவின் செயற்பாங்கில் சிறிது வளர்ச்சியுடன் எதிர்ப் படு குழு செயற்படுகிறது.

இக்குழு பேச்சற்ற செய்தித் தொடர்பினையும் (Non-Verbal Communication) உணர்வுகளையும் ஏற் படுத்துவதன் மூலம் ஒரு மனிதனுடைய அறிவு நிலையை அதிகரிக்கச் செய்கிறது. இக்குழுவில் பல முறை கலந்து கொள்வதால் தங்கள் மனத்தளவில் நன்கு ஒத்துப் போகக் கற்றுக் கொள்கின்றனர். எளிய செயல்களுடனான தொடர்பினைத் தாங்கள் இழந் திருப்பதாகக் குழுவினர் உணர்கின்றனர். அவர் களுடைய உணர்வுகளை எழுப்புவதற்குப் பலவகை



கூருணர்ச்சிப் பயிற்சி முறைகள்

யான பயிற்சி முறைகள் இங்கு அளிக்கப்படுகின்றன. தங்கள் உடல்கள்பற்றி அதிகமாக உணர்ந்து கொள்வது, பிறரை நம்புவதற்கான மக்களின் திறமையை வளர்ப்பது போன்றவற்றிற்காகப் பல பயிற்சி முறைகளைப் பயன்படுத்தி இக்குழு உறுப்பினர்களின் உணர்வுகளை எழுப்புகிறது.

இக் குழு பொதுவாக, ஒன்று அல்லது இரண்டு குழுத் தலைவர்களையோ, ஆறு முதல் பன்னிரண்டு உறுப்பினர்களையோ கொண்டதாக இருக்கலாம். கூருணர்ச்சியையும் பழக்க நடகைப் பயிற்சியையும் (Attitudinal Training) வளர்ப்பது போன்ற பலவகை யான தேவைகளை மனத்தில் இக்குழு உருவாக்கு கிறது. இக்குழுவினால் நடத்தப்படும் பயிற்சி முறை குழு உளமருத்துவ முறையிலிருந்து (Group Psycho-theraphy) அதிகமாக வகுக்கப்படுகிறது. இம் முறை பல சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பயனுள்ளதாக இருப்பதைக் கண்டு, பொது வாழ்க்கையிலும் ஒரு மருத்துவ முறையாக ஒப்புக் கொள்ளப்பட்டது.இதன் மூலம் பல நோயாளிகளுக்கு மருத்துவம் செய்ய ஒரு குழுவின் சக்தியைப் பயன்படுத்த இயலும். எனவே, இரண்டாம் உலகப்போரின்போது உளவியலார்களின் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால், இராணுவப் பயிற்சி முகாம்களில் இக்குழு உள மருத்துவம் முதன் முதலாகத் தொடங்கப்பட்டது. பின்னர்க் கலிபோர்னியாவில் 1960-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட எசலன் நிறுவனம் (Esalen Institute of California) சைனனான் போன்ற மையங்களில் இக்குழுமுறை வெற்றியுடையதாக வளர்ச்சியுற்றதைக் கண்டு, பல குழுப் பயிற்சி முகாம்களும் நிறுவனங்களும் வாணிக நோக்கத்தில் உலக முழுவதும் தொடங்கப்பட்டன.

பூ.த.

**கூலர், ஒல்புகேங்கு (கி.பி.1887-1967)**: இவர் உள்ளுணர்வுக் கல்வி (Insight Learning) என்னும் கற்றல் கொள்கையினை வெளியிட்ட உளவியல் அறிஞர். இவர் முழுமை உளவியல் (Gestalt Psychology)கொள்கை உருவாக்கத்திற்குப் பெரும்பணி செய்துள்ளார். முழுமை உளவியல் அறிஞர்களின் கூற்றுப்படி, நடத்தையினைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், அதைத் திட்டமான, முழுமையான நடத்தைக் கோலமாகப் (Pattern) பார்க்க வேண்டுமே தவிரத் தனித்தனிப் பகுதியாகப் பார்க்கக் கூடாது. மனிதக் குரங்குகளை (Apes) வைத்துக் கூலர் செய்த ஆராய்ச்சி, கற்றலுக்குப் புலன் ஒழுங்கும் (Perceptual organisation), உள்ளுணர்வும் (Insight) இன்றியமையாதவை எனக் காட்டியது. எசுடோனியாவில் (Estonia) உள்ள இரேவல் (Reval) என்னும் ஊரில் பிறந்த ஒல்புகேங்கு கூலர் (Wolfgang Kohler) குழந்தையாயிருந்த போதே அவர் பெற்றோர் செருமனி நாட்டில் குடியேறினர். அந்நாட்டிலேயே பயின்ற கூலர் அங்கேயே 1935-ஆம் ஆண்டு வரை கற்பித்து வந்தார். பின்னர், ஐக்கிய அமெரிக்க நாட்டில் குடியேறிக் கல்வி உளவியல் ஆய்வுகளை மேற்கொண்டார்.

எஸ்.த.

**கூலி** என்ற சொல் பொருளியலில் உடல் உழைப்பிற்கு அல்லது சிந்தனை உழைப்பிற்கு அல்லது இரண்டிற்கும் உள்ள ஊதியம் என்ற பொருளில் பயன்படுகிறது. ஆனால், நடைமுறையில் உடல் உழைப்பிற்கு ஈடாகக் கொடுக்கப்படுவதை நாள் ஊதியக் கூலி என்றும், மாத அடிப்படையில் வழங்கப்படும் ஊதியத்தைச் சம்பளம் என்றும் கூறுவர்.

**பணக்கூலியும், உண்மைக்கூலியும்**: கூலியைப் பணக் கூலி, உண்மைக் கூலி என இருவகைப்படுத்துவர். கூலி பணமாகக் கொடுக்கப்படின் அதைப் பணக்கூலி (Money Wage) என்றும், பொருளாகக் கொடுக்கப்படின் அதைப் பொருட் கூலி (Wage in Terms of Goods) என்றும் கூறுவர். கூலி பொருளாகக் கொடுக்கப்படும்போதும், பணத்தின் வாங்கும் திறனைக் குறிக்கும் போதும் அதனை மெய்க்கூலி அல்லது உண்மைக் கூலி (RealWage) என்றும் கூறுவர்.

பணக்கூலி உயரும் காலங்களில் எல்லாம், அதே விகிதத்தில் மெய்க்கூலியும் உயர்ந்து செல்லவேண்டும் என்ற நியதி இல்லை. பொருளின் விலை மாற்றத்திற்கேற்ப உண்மைக்கூலி மாற்றம் அமையும். பணக்கூலியும் விலை நிலையும் ஒரே விகித அளவில் மாறினால், பணக்கூலியும் மெய்க்கூலியும் மாறாதிருக்கும்; பணக்கூலி மாற்ற விகிதத்தைவிட மிகுதியாக விலைநிலை மாற்ற விகிதம் அமைந்தால் மெய்க்கூலி குறையும். எனவே, வாழ்க்கைத்தர (Standard of Living) நிலை வீழ்ச்சி அடையலாம். இதற்கு மாறான நிலையில் மெய்க்கூலி அல்லது வாழ்க்கைத் தரம் உயரும்.

தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உணவு, பழக்கவழக்கங்கள், மரபியல்புகள், தட்பவெப்பநிலை போன்ற காரணிகளால் மாற்றமடையும் என்றாலும், குறிப்பாக, பணக்கூலியும் விலை நிலை மாற்றங்களும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை வரையறை செய்கின்றன. மெய்க் கூலியை வரையறுக்கும் காரணிகளே வாழ்க்கைத் தரத்தையும் வரையறை செய்கின்றன.

**காலக் கூலியும் பணி அளவுக் கூலியும்**: பணியின் கால அளவை அடிப்படையாகக் கொண்ட 'கால

அளவுக் கூலி' (Time Wage), என்றும் முடிந்த பணியின் விளைவை அடிப்படையாகக் கொண்ட 'பணி அளவுக் கூலி' (Piece Wage) என்றும் கூலியை இரு வகைப்படுத்தலாம்.

பணியின் அளவைவிடப் பணியின் தரத்திற்குச் சிறப்பிடம் தரப்படுவதால் ஊக்குவிப்புடன் தொடர்புடைய கால அளவுக் கூலி முறையையே நிருவாகத்தினர் விரும்புகின்றனர்.

முடிக்கப்படும் பணிகளைத் திட்டவட்டமாக அளவிடும் வாய்ப்புகள் இருப்பினும், பணி அளவுக் கூலி முறையின் காரணமாகத் தொழிலாளர்களின் மெய்யான கூலி நாளடைவில் குறைந்துவிடுகிறது என்பதும், ஒப்பந்த அடிப்படையில் வரையறுக்கப்படும் கூலி வீதம் விலைநிலை உயரும் வேகத்தில் உயர்வதில்லை என்பதும், எனவே, தொழிலாளர்கள் பணி அளவுக் கூலி முறையினால் சுரண்டப்படுகிறார்கள் என்பதும் கூறப்படுகின்றன.

இந்தியாவில் பெரும்பாலான ஆலைத் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள் போன்றவர்களுக்குக் கால அளவுக் கூலி முறையிலேயே ஊதியம். வழங்கப்படுகிறது. இம்முறையில் ஒப்புமையான கூலி வீதங்கள் (Relative Wage Rates) ஓர் அடிப்படையிலும், விலைவாசி உயர்வால் வீழ்ச்சி அடையும் மெய்க்கூலியை ஈடுசெய்வது மற்றோர் அடிப்படையிலும் வரையறுக்கப்படுகின்றன.

ஒப்புமையான கூலி வீதங்கள் (Relative Wage Rates) அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை அவ்வப்போது அமர்த்தப்படும் ஊதிய ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப மாற்றி அமைக்கப்படுகின்றன. ஆலைத் தொழிலாளர்களுக்கும் வங்கி ஊழியர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் ஒப்புமைக் கூலி விகிதங்கள் வரையறுக்கப்படுகின்றன. இத்தகைய ஒப்புமைக் கூலி விகிதங்கள் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை மறு ஆய்வு செய்யப்படுவது மரபு. அவ்வமயம் ஊதியக் கட்டமைப்புகள் மாற்றியமைக்கப்படுகின்றன.

**விலைமாற்ற ஈட்டுப்படி**: ஒரு குறிப்பிட்ட பிரிவுத் தொழிலாளர்களுக்கு அரசாங்கமோ நிருவாகமோ ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத்தரத்தை நிலைபெறச் செய்யும் நோக்கத்துடன், அவ்வப்போது ஏற்படும் விலைநிலைமாற்றத்தை ஈடுசெய்து வருகின்றது. இதற்காக வழங்கப்படும் தொகையைக் கிராக்கிப்படி, அகவிலைப்படி, விலைமாற்ற ஈட்டுப்படி (Dearness Allowance) என்று குறிப்பிடுவர். பெரும்பாலான அமைப்புகளில் விலை உயர்வை அளவிடும் வாழ்க்கைத்தர அளவுக் குறியீட்டு எண்கள் அல்லது நுகர்வோர் குறியீட்டு எண்கள், தொழிலாளர்கள் குறியீட்டு எண்கள் போன்ற குறியீட்டு எண்களுடன் இணைத்து இப் படிகள் வரையறுக்கப்படுகின்றன. விலை உயர்வுக்கேற்ப ஈட்டுப்படியும் உயரும்.

**கூலிக் கோட்பாடுகள்**: கூலி எவ்வாறு வரையறுக்கப்படுகிறது என்பதற்கான அறிஞர் பலரின் விடைகள் கூலிக் கோட்பாடுகள் எனப்படுகின்றன அவற்றுள் சில வருமாறு:

**பிழைப்பு ஊதியக் கூலிக் கோட்பாடு**: இதனைக் கூலியின் இரும்பு விதி (Iron Law of Wages) என்றும் பிழைப்பு ஊதியக் கூலிக் கோட்பாடு (Subsistance Theory of Wages) என்றும் குறிப்பிடுவர். இது தொன்மைப் பொருளியலாளரின் கருத்துக் கோட்பாட்டைச் சார்ந்தது. இதற்கு மால்தசின் (Malthus) மக்கள்தொகைக் கோட்பாடு அடிப்படையாக உள்ளது. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் வீதங்கள் நீண்ட காலத்தில் பிழைப்பு மட்ட நுகர்வு அளவுக்குப் போதுமானதாக அமையும் என்பது கருத்து. பிழைப்பு மட்டம் என்பது ஒரு தொழிலாளி தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாத்துக்கொண்டு, குடும்பத்தின் இன்றியமையாத தேவைகளை மட்டும் நிறைவு செய்துகொள்ளப் போதுமானதாக உள்ள நுகர்வு அளவு. பேரியல் பொருளியல் ஆய்வு (Macro Economic Analysis) அளவில் நாட்டின் மொத்த உழைப்பாளிகளின் அளிப்பை (Supply) மாறாத அளவில் நிலைபெறச் செய்யும் கூலிவீதம் பிழைப்பு மட்டக் கூலியாகும்.

நடைமுறையில் பிழைப்பு மட்டக் கூலியைவிடக் கூடுதலாகவோ குறைவாகவோ அங்காடிக் கூலி வீதங்கள் இருக்கலாம். அங்காடிக் கூலி வீதம் அதிகமாக இருந்து, கூடுதலான செல்வத்தையும் வாழ்க்கை வசதிகளையும் ஏற்படுத்துமானால், அதன் விளைவாக மக்கள்தொகைப் பெருக்கம் ஏற்பட்டுத் தொழிலாளர் அளிப்பு உயரும்; தொழிலாளரின் தேவை மாறாத நிலையில் அளிப்புப் பெருகுவதால் கூலி வீதங்கள் வீழ்ச்சியுறும். நடப்புக் கூலிவீதங்கள் பிழைப்பு மட்டத்தை அடையும்வரை கூலி வீதங்கள் இவ்வாறு குறையும். மாறாக, அங்காடிக் கூலி வீதங்கள் பிழைப்பு மட்டத்தைவிடக் குறைவாக இருக்குமானால், அதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும். அதாவது, தொழிலாளர் அளிப்புக் குறைந்து கூலி வீதங்கள் உயரும். நீண்ட காலத்தில் தொழிலாளர்கள் பிழைப்பு மட்டக் கூலியை மட்டுமே பெற முடியும் என்பது இக்கோட்பாட்டின் முடிவு.

தொன்மை அறிஞர்களால் ஆதரிக்கப்பட்ட போதிலும் அ) மால்தசின் மக்கள்தொகைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; ஆ) கூலி வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்படவில்லை; இ) பிழைப்பு மட்டம் என்பது நிலையான தொன்றன்று; ஈ) தேவைப் பக்கத்தை முற்றிலும் புறக்கணித்திருக்கிறது என்பன போன்ற காரணங்களால் இக்கோட்பாடு ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

**வாழ்க்கைத் தரக் கோட்பாடு**: பிழைப்பு மட்டம் என்பதை நீக்கி வாழ்க்கைத் தரம் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினர். ஒரு தொழிலாளியின் கூலியானது அவ்வகைத் தொழிலாளரிடையே நிலவும் வாழ்க்கைத் தர மட்டத்திற்கேற்ப அமையும். ஒரு தொழிலாளியும் அவரது குடும்பமும் உயிர் வாழ்வதற்குத் தேவையான பிழைப்பு மட்டத்தை நிலை நிறுத்துவதுடன் அவ்வகைத் தொழிலாளர்கள் பொதுவாக அனுபவிக்கும் வாழ்க்கைத் தரத்தைக் கடைப்பிடிக்கும் வகையில் கூலியானது அமையும். அதாவது, வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாத பொருள்களோடுகூட ஓரளவு கல்வி, தேவையான ஓய்வு, குறிப்பிட்ட அளவு வசதிப்பொருள்கள் ஆகியனவும் கூலியினால் பெறத்தக்க அளவில் கூலியின் அளவு அமையும் என்பது கருத்து.

வாழ்க்கைத் தரம் கூலியினால் வரையறுக்கப்படுகிறது என்பது உண்மை. ஆனால், கூலியை முழுமையாக வாழ்க்கைத் தரமே வரையறுக்கிறது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத கருத்து. அ) வாழ்க்கைத் தரம் கூலியை வரையறுக்கும் காரணிகளில் ஒன்றுதான், ஆ) கூலி வேறுபாடுகளை விளக்கவில்லை, இ) உழைப்பின் தேவையைப் புறக்கணிக்கும் ஒரு புறச் சார்புடைய கோட்பாடு என்ற பல குறைகளைச் சுட்டிக்காட்டி இக் கோட்பாட்டை இக்கால அறிஞர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

**கூலி நிதிக் கோட்பாடு**: பண்டங்களின் உற்பத்திக்கு நீண்டகாலம் பிடிக்கிறது. எனவே, இப்பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு முன்பே அல்லது உற்பத்தி செய்யும்போது அல்லது விற்பனை செய்வதற்கு முன்பே மூலதனத்தின் ஒரு பகுதியைத் தொழிலாளர்களுக்குக் கூலியைக்கொடுப்பதற்கென்று உற்பத்தியாளர்கள் ஒதுக்கிவிடுகிறார்கள். இவ்வாறு ஒதுக்கப்படும் நிதி கூலி நிதி (Wages Fund) யாகும். இது தொழிலாளர்களின் மொத்தத் தேவையின் பண மதிப்பாகும். ஆகவே, கூலியானது இக் கூலி நிதிக்கும் வேலைசெய்ய விழையும் தொழிலாளரின் மொத்த அளிப்பிற்கும் உள்ள விகிதமாக அமையும்.

கூலி நிதி சேமிப்பிலிருந்து தோன்றுகிறது எனவே, கூலி நிதி மாறாதிருந்து தொழிலாளரின் எண்ணிக்கை அதிகரிக்குமானால் கூலியின் பொது மட்டம் குறையும்; தொழிலாளரின் எண்ணிக்கை குறையுமானால் கூலியின் பொதுமட்டம் மிகுதியாகும். எனவே, கூலி நிதிக்கும் தொழிலாளரின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் மாறும்போது, கூலியின் பொதுமட்டமும் மாறுபடுகிறது.

கூலி நிதி என்ற கருத்து கற்பனையானது; உண்மை நிலைக்குப் பொருத்தமற்றது; கூலியும் இலாபமும் ஒரே நேரத்தில் மிகுவதற்கான வாய்ப்புகள் உண்டு; கூலி வேறுபாட்டிற்கான விளக்கம் எதுவுமில்லை என்ற பல குறைகளைச் சுட்டிக்காட்டி இக்கோட்பாட்டை மறுப்பவர்களும் உண்டு. கடும் குற்றச்சாட்டுகளை எதிர்க்க இயலாமல் இக் கோட்பாட்டைக் குறிப்பிட்ட சே. எசு.மில்(J.S. Mill) என்பவரே இக்கோட்பாட்டை வலியுறுத்தாமல் விட்டுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மிச்ச உரிமையர் கோட்பாடு**: அமெரிக்கப் பொருளியல் பேராசிரியர் வாக்கர் (Walker) என்பாரின் கருத்துப்படி வாரம், வட்டி, இலாபம் ஆகிய ஊதியங்களைச் செலுத்தியபின் எஞ்சி நிற்பதே தொழிலாளர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்படத்தக்கது. தொழிலாளர்களின் திறமைக்கேற்பக்கூலி மிகுதியாகப் பெற வாய்ப்புண்டு என்பது இவண் உள்ளார்ந்திருக்கும் கருத்தாகும்.

இக் கோட்பாட்டைப் பொருளியல் அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நடைமுறையில் மிச்சமனைத்தும் தொழில் முனைவோர்க்குச் செல்கிறதே தவிரத் தொழிலாளர்களுக்கல்ல. எஞ்சியதே கூலியாகக் கொடுக்கப்படும் என்றால் ஊதிய உயர்வு என்பது பொருளற்றதாகி விடுகிறது. மேலும், இக்கோட்பாடு உழைப்பின் அளிப்பைப் பற்றி எதுவும் கூறவில்லை.


**கூலியின் இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு**: நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களும் பணிகளும் எந்த அடிப்படையில் உற்பத்திக் காரணிகளுக்கிடையே பகிர்ந்து அளிக்கப்படுகின்றன என்ற கேள்விக்குப் பதிலாக அமைந்த கோட்பாடே இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு (Marginal Productivity Theory of Wages) ஆகும். இது ஒரு பொதுப்படையான பகிர்வுக் கோட்பாடாக விளங்குகிறது. ஒரு காரணியின் உற்பத்திக்குக் கொடுக்கப்படும் ஊதியம் அக் காரணியின் இறுதிநிலை உற்பத்

தித் திறனால் வரையறுக்கப்படுகிறது என்று இக் கோட்பாடு கூறுகிறது. இக் கோட்பாட்டைச் சீராக அமைத்தவர் அமெரிக்க நாட்டுப் பேராசிரியரான கிளார்க்கு (J.B. Clark) என்பவர் ஆவர்.

ஒரு காரணியின் இறுதிநிலை உற்பத்தித்திறன் அக் காரணியின் தேவையை வரையறுக்கும் சக்தியாக விளங்குகிறது. உற்பத்திக் காரணிகளின் அளிப்பு எந்த அளவில் இருப்பினும், அவை அனைத்தையும் ஆக்க முறையில் உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கு அவற்றின் இறுதிநிலை உற்பத்தித்திறனே காரணமாக உள்ளது. இக்கோட்பாடு, 1) காரணி அங்காடியிலும் (Factor Market), பண்ட அங்காடியிலும் (Product Market) நிறைவுப் போட்டி (Perfect Competition) நிலவுகிறது; 2) முழு வேலை நிலவுவதால் உழைப்பின் எல்லா அலகுகளின் கூலியும் சமமாக இருக்கிறது; 3) உழைப்பாளர்கள் எல்லோரும் சமமான திறமை உடையவர்கள்; 4) உழைப்பின் அலகுகள் ஒரே தன்மையுடையவை; எனவே, பதிலீடு செய்யத்தக்கவை: 5) உற்பத்தியில் குறைந்து செல் விளைவு விதி செயற்படுகிறது; 6) உற்பத்திக் காரணிகள் எளிதில் இடம் பெயரத் தக்கவை என்ற பல எடுகோள்களின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.

உற்பத்தியாளருக்கு எவ்வளவு அதிகப் பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டும் என்பதைக் காட்டிலும், எவ்வளவு அதிக இலாபம் கிடைக்கிறது என்பதில்தான் அதிகமான அக்கறை இருக்கும். எனவே, தொழிலாளர்களை உற்பத்தியில் ஈடுபடுத்தினால், கிடைக்கும் இறுதிநிலை வருவாய் அவர் கொடுக்கும் கூலிக்கு அதிகமாக இருக்கும்வரை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டே செல்வார். கூலியும் இறுதிநிலை வருவாயும் சமமாகும்போது உற்பத்தியை அந் நிலையில் நிறுத்திக்கொண்டு உச்ச நிலை மொத்த இலாபத்தைப் பெறுவார்.

இக்கோட்பாட்டின்படி உற்பத்தியாளர் அ) காரணியின் விலைக்கு இறுதிநிலைவருவாய் (Marginal Revenue) சமமாக இருக்குமாறு பார்த்துக்கொள்வார்; ஆ) $\frac{MPA}{PA} = \frac{MPB}{PB} = \ldots\ldots \frac{MPn}{Pn}$ என்றிருக்குமாறும் பார்த்துக்கொள்வார். (MP என்பது காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறனையும், P என்பது காரணியின் விலையையும், A,B, ... n என்பன காரணிகளையும் குறிக்கின்றன). (2) குறிப்பிட்ட தொரு நிலையைப் பெறும் வரை விலை அதிகமாக உள்ள காரணிக்குப் பதிலாக மலிவான காரணியைப்பதிலீடு செய்வார்.




வரைபடம் 1.


வரைபடம் 1-இல் குறைந்துசெல் இறுதிநிலை உற்பத்தித்திறன் அடிப்படையில் தொழிலாளர்களின் தேவையை DD என்னும் தேவைக்கோடு காட்டுகிறது. தொழிலாளர்களின் அளிப்புக் கோடு NS. இவை வெட்டிக் கொள்ளும் புள்ளியான E-இல் கூலி வீதம் வரையறுக்கப்படுகிறது எனவே, OW என்பது சமநிலைக் கூலி ஆகும். இக் கூலி வீதத்தில் முழு வேலைநிலை (Full Employment Level) ஏற்படுகிறது.

இக் கோட்பாட்டிற்கு அடிப்படையாக உள்ள எடுகோள்களில் (Assumptions) சில நடைமுறைக்கு ஒவ்வாதனவாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, தொழிலாளர்கள் அனைவரும் ஒரே சீரான ஆற்றல், திறன் உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கும் எளிதில் தொழிலாளர்கள் இடம்பெயரக் கூடியவர்களாகவும் கருதப்படுகிறார்கள். பொருள்கள் அங்காடியிலும், காரணிகள் அங்காடியிலும் நிறைவுப் போட்டி நிலவுவதாகக் கருதப்படுகிறது. அரசுகள் பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடுவதில்லை என்ற எடுகோளும் குறிப்பிடத்தக்கது. எனவே, இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாடு முழுமையான கோட்பாடாக அமையவில்லை.

**கழிவு நீக்கிய உற்பத்தித்திறன் கோட்பாடு:** பொருள் விற்பனையாவதற்கு முன்பே தொழிலாளர் கூலியைப் பெறுவதால் தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தித்திறனின் முழு மதிப்பிற்கும் கூலி கொடுக்கப்படுவதில்லை என்றும், இறுதிப் பொருளை விற்கும்

காலம் வரையிலும் முன்பணமாகக் கொடுக்கப்படும் கூலிப் பணத்திற்கு நடப்பு வட்டி போட்டு அதைக் கழித்து வரும் இறுதிநிலை உற்பத்தி மதிப்பே கூலி யாகக் கொடுக்கப்படுகிறது. என்றும் அமெரிக்கப் பொருளியல் அறிஞரான தாசிக்கு (Tausigg) குறிப் பிட்டார். ஆனால், கழிவு நீக்கிய உற்பத்தித்திறன் கோட்பாடு (Discounted Marginal Productivity Theory) எனப்படும் இக்கோட்பாடு தெளிவற்ற, எளி தில் அறிந்துகொள்ள முடியாத, உண்மை நிலைக்குப் புறம்பான கோட்பாடு என்று குறை சொல்லப்படு கிறது.

**கூலியின் தேவை அளிப்புக் கோட்பாடு:** உழைப் பிற்கான தேவை தொழிலதிபர்களிடமிருந்து வரு கிறது. உழைப்பின் அளிப்புத் தொழிலாளர்களிட மிருந்து வருகிறது. தொழிலாளரை வேலைக்கு அமர்த்துவதால் அவரிடமிருந்து எவ்வளவு வரு வாயை எதிர்பார்க்கலாம் என்று உற்பத்தியாளர் தோராயமாகக் (Approximate) கணக்குப் போட்டுக் கொள்கிறார். வாழ்க்கைச் செலவுகள் எவ்வாறிருக் கின்றன என்று தொழிளாளர்கள் கணக்குப் போட்டுக் கொள்கிறார்கள். எனவே, பேராசிரியர் எவலின் தாமசு குறிப்பிடுவது போல, நீண்ட காலத்தில் தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தித் திறன் பிறந்த தேவையும், வாழ்க்கைத் தர மட்டத்தினால் நிருண யிக்கப்படும் அளிப்பும் சமமாகும் நிலையில் கூலி நிரு ணயிக்கப்படும். படம் 2 இதனைக் காட்டுகிறது.




வரைபடம்-2

**தொழிற்சங்கங்களும் கூலியும்:** பலங்குறைந்த பேர ஆற்றல் (Bargaining Power) உழைப்பின் இயல்புகளுள் ஒன்று. இவ்வியல்பினால் ஏற்படத்தக்க இழப்பினின்றும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தொழிலாளர்கள் கூட்டுப்பேரம் (Collective Bargain-ing) எனப்படும் தொழிற்சங்கங்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். கூலியை உயர்த்தினால், இலாபம் குறைந்து, அதன் வழியாக முதலீடும் உற்பத்தியும் குறைந்து, வேலையின்மை பெருகிவிடும் என்பதால், தொழிற் சங்கங்கள் கூலியை உயர்த்தமுடியாது என்பது தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கருத்து. ஆனால், 1930-ஆம் ஆண்டுகளுக்குப் பின் இக்கருத்து மாறிவிட்டது.

**கூலி வேறுபாடு:** திறமை வேறுபாடு, கல்வி, பயிற்சி வேறுபாடு, இடப்பெயர்ச்சி, வேலையின் சமு தாய மதிப்பு, வேலையின் தன்மை, முன்னேறும் வாய்ப்பு, பால் பாகுபாடு (Sex Difference) என்ற பல அடிப்படைகளில் உழைப்பிற்குக் கொடுக்கப்படும் கூலி இடத்திற்கு இடம், வேலைக்கு வேலை, காலத் திற்குக் காலம் மாறுபடுவதை நடைமுறையில் காண லாம். நன்கு அமைக்கப்பெற்றுள்ள தொழிலாளர் சங்கங்கள் செயற்படும் தொழில்களில் கூலியின் அளவு உயர்ந்தும், அதற்கு மாறான நிலைகளில் கூலியின் அளவு குறைந்தும் காணப்படுகிறது.

**குறைந்த அளவு கூலி:** தொழிலாளர்களின் உழைப்பிற்கு ஈடான தொகை கூலி. இக் கூலியின் அளவு நாட்டிற்கு நாடு, தொழிலுக்குத் தொழில், காலத்திற்குக் காலம் வேறுபடுகிறது. சில கட்டுப் பாடுகளின் அடிப்படையில் கூலியின் அளவை 1) குறைந்த அளவு கூலி (Minimum Wage), 2) வாழ்க்கைக் கூலி (Living Wage), 3) நேர்மைக் கூலி (Fair Wage) என மூவகைப்படுத்தலாம். இவற் றுள் மிக உயர்ந்த மட்டத்தில் வாழ்க்கைக் கூலியும் அடிமட்டத்தில் குறைந்த அளவு கூலியும் அமைகின் றன. நேர்மைக் கூலி என்பது குறைந்த அளவுக் கூலியைவிடக் கூடுதலாகவும், வாழ்க்கைக் கூலியை விடக் குறைவாகவும் இருக்கும்.

இந்தியாவில் தொழிலாளர் அமைப்பு இல்லாத சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்ற துறை களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் கூலி வீதங் கள் மிகமிகக் குறைவாக இருப்பதால், அவற்றை நெறிப்படுத்துவதற்காக நாட்டிலுள்ள தொழில்கள் அனைத்திலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு கூலி கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் எனவும், அதனைச்செயற்படுத்தக் குறைந்த அளவு கூலிச் சட்டம் இயற்ற வேண்டும் எனவும் உணரப்பட்டது.

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு 1928-இல் நடத்திய கூட்டத்தில், உறுப்பு நாடுகள் ஒவ்வொன் றும் குறைந்த அளவு கூலியை வரையறுக்கும்

அமைப்பை ஏற்படுத்தி, அதைச் செயற்படுத்த வேண்டுமென்ற முடிவை நிறைவேற்றியது. அதன் அடிப்படையில் 1948-இல் இந்தியாவில் குறைந்த அளவு கூலிச் சட்டம் இயற்றப்பட்டது.

நாடு விடுதலை பெற்றவுடன் 1947-இல் தொழிலாளர்களுக்கு நேர்மைக் கூலி வழங்கும் நோக்குடன் கூலிச் சிக்கல்களை ஆழ்ந்து ஆராய ஒரு குழு நிறுவப்பட்டது. அக்குழு தனது பரிந்துரையில், 'தொழிலாளர் அனைவருக்கும் நேர்மைக் கூலி அளிக்க வேண்டுமென்ற கருத்து வரவேற்கத் தக்கது என்றாலும், தொழிலாளர் அனைவருக்கும் முதற்கண் குறைந்த அளவு கூலியை வழங்கவேண்டியது கட்டாயமான ஒன்றாகும்' எனக் குறிப்பிட்டது.

இக்குழுவின் கருத்துப்படி பிழைப்பு மட்டக் கூலியை (Subsistance Wage) விட உயர்ந்த அளவில் சட்டப்படியான குறைந்த அளவு கூலி (Statutory Minimum Wage) அமையவேண்டும். தொழிலாளரின் குடும்பத்தினரைப் பாதுகாப்பதற்கான போதுமான கூலி பிழைப்பு மட்டக் கூலி எனப்படும். ஆனால் சட்டப்படி வரையறுக்கப்படும் குறைந்த அளவுக் கூலி, தொழிலாளர் குடும்பத்தின் கல்வி. மருத்துவ வசதிகளுக்கும், பிற இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானதாக இருக்க வேண்டும். இக் குறைந்த அளவுக் கூலி ஆலையின் நிதி மூல வளம், கூலி கொடுக்கும் ஆற்றல் (Capacity of the Industry) ஆகியவற்றின் அடிப்படையில் அமையாது. இச்சட்டப்படி வரையறுக்கப்பட்ட கூலியைக் கொடுக்கக்கூடிய நிலையில் ஆலை இருந்தாலும் இல்லாவிட்டாலும் குறைந்த அளவு கூலியைக் கொடுக்கவேண்டும் என்பது கட்டாயமாகிறது.

சராசரி நிலையில் உள்ளதொரு வாழ்க்கைத் தரத்தை மேற்கொள்ளுமளவிற்காவது உழைப்பாளர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்ற இக் கருத்தையொட்டி, வேளாண்மைத் தொழில், கடைகள், சிறு நிறுவனங்கள், கட்டடத் தொழில், பிற அமைப்புகள் முதலியவற்றுள் உள்ள தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு கூலியை அவ்வப்போது உள்ள பொருளாதார நிலைகளுக்கேற்றவாறு அரசு நிருணயம் செய்கிறது.

குறைந்த அளவு கூலி என்பதை ஓரளவுக்குச் சட்டத்தின் மூலம் நிருணயித்துவிடலாம் என்றாலும், நடைமுறையில் அதனைச் செயற்படுத்தும்போது பல சிக்கல்கள் தோன்றவும் வாய்ப்புகள் உண்டு. கூலி அதிகமெனக் கருதும் தொழில் முயல்வோர், தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், வேலையில்லாமலிருப்பதைவிட ஏதாவது கூலியைப் பெறுவது மேல்என்றெண்ணிப் பதிவுப் புத்தகங்களில் எழுதுவது ஒன்றும் நடைமுறையில் நடப்பது ஒன்றும் ஆன ஒழுங்கீன நிலை தோன்றவும் வாய்ப்புகள் உண்டு.

**வாழ்க்கைக் கூலி**: வாழ்க்கைக் கூலி என்பது ஒரு குறிக்கோட் கூலியாகக் கருதப்படுகிறது. இக்கூலி தொழிலாளர்களுக்கும், அவரது குடும்பத்தார்க்கும் போதிய அளவு உணவு, உடை, உறைவிட வசதிகளுக்கு வகை செய்ய வேண்டும். தொழிலாளர் குழந்தைகளின் படிப்பு, பாதுகாப்பு, முதுமைக்காலக் காப்பு ஆகிய வசதிகளுக்கு உறுதி அளிப்பதாகவும் இருக்கவேண்டும். வாழ்க்கைக் கூலி இக்காலச் சமுதாய அமைப்பில் சராசரித் தொழிலாளர் ஒருவரின் இயல்பான விருப்பங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூலவளத்தை அளிக்கக் கூடியதாயிருக்க வேண்டும்.

**நேர்மைக்கூலி**: நேர்மைக் கூலி என்பது குறைந்த அளவுக் கூலியைவிட உயர்வாகவும், வாழ்க்கைக் கூலியைவிடக் குறைவாகவும் இருக்கும். இவ்விரண்டு எல்லைகளுக்கும் உட்பட்டதாக நேர்மைக் கூலி வரையறுக்கப்படுகிறது. அதன் வரையறையில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் இயல்புகளாவன: 1) தொழிலாளரின் உற்பத்தித் திறன், 2) ஒரு தொழிலில் நிலவும் கூலி அளவு அதனையொத்த வேறு தொழிலில் அதே ஊரிலோ அடுத்துள்ள ஊர்களிலோ நிலவும் கூலி அளவு, 3) நாட்டு வருமானம்; அதன் பகிர்வு மற்றும் 4) நாட்டுப் பொருளாதாரக் கூட்டமைப்பில் இத்தொழிலின் இடம் ஆகியவற்றின் அடிப்படையில் நேர்மைக்கூலி அளவு நிருணயிக்கப்படும்.

என். எஸ். பா, எம்.தி.

**துணை நூல்கள்:**

**Bnahamanada, P.R.**, Productivity in the Indian Economy, Himalaya Publishing House, Bombay, 1982.


**Kapoor, N.D.**, Handbook of Industrial Law, Sultan Chand and Sons, New Delhi, 1984.

**Krishnasamy S.**, Handbook of Labour Laws, Sendhil Publication, Madras, 1984.

**Locke Anderson, WH**, Ann Putallaz, William G. Shephered, Economics, PHI - EEE Series, New Delhi, 1986.

**Michael R Edgmand**, Macro Economics, PHI - EEE Series, New Delhi, 1983,

**கூலி,சார்லசு கார்டன்**: அமெரிக்கச் சமூகவியல் அறிஞரான இவர், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சமூகவியலைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவராவார். இவர், கி.பி. 1864–ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 17 ஆம் நாள் மிச்சிகனிலுள்ளஆன் ஆர்பர் (Ann Arbor, Michigan) என்ற இடத்தில் பிறந்தார். இவரது தந்தை தாமசு மெக் இன்டையர் கூலி (Thomas Mc Intyre Cooley), மிச்சிகன் பல்கலைக்கழகத்திலுள்ள சட்டத் துறையின் முதல் தலைவராகவும் (Dean), மிச்சிகன் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், மாநில வர்த்தகத் துறையின் தலைவராகவும் பதவி வகித்தவர். சார்லசு கார்டன் கூலி (Charles Horton Cooley), தம் 18 ஆம் வயதிலிருந்து கடைசிக் காலம் வரையில் தம் நோக்கங்கள், படித்த நூல்களின் மீது கொண்டுள்ள எதிர் வினைகள், தம்மைச் சுற்றியுள்ள உலகங்களைப் பற்றிய திறனாய்வுகள், தம் சமூகவியல் ஆய்வுகள் போன்றவைகளை வெளியிடுவதற்காக இதழ் (Journal), ஒன்றினைத் தொடங்கினார். அந்த இதழ்தான், இவர் எழுதிய 'வாழ்க்கையும் மாணவனும்' (Life and the Student) என்ற கடைசி நூலின் அடிப்படையாகும். தனிமனிதன், சமூகம் ஆகிய இரண்டின் வளர்ச்சியும் முதல் நிலைக் குழுக்களில் ஏற்படும் அனுபவ ஆழத்தினைப் பொறுத்தது எனவும், அது போன்ற குழுக்களில், தனிமனிதர்கள் தங்களுடைய மாறுபட்ட சூழ்நிலைக்கேற்பத் தகவமைத்தலையும் (Orientation), சமூகமானது ஒழுக்கச் செயல்களுக்கான ஒரு மாதிரியையும் பெறுகின்றது எனவும் கூறுகிறார்.



கூலி, சார்லசு கார்டன்

கூலி, தம் அறிவியல் அறிவினைத் தார்வின் (Darwin), சேம்சு பிரைசு (James Bryce), வில்லியம் சேம்சு (William James) போன்ற சமூகவியல் சாராத மூன்று அறிஞர்களிடமிருந்து பெற்றார். இவர் முதலில் மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் பொறியியலாளர் பட்டம் பெற்று வரைவாளராகப் பணியாற்றினார். ஆனால், அப்பணியில் விருப்பம் கொள்ளாததால் வாசிங்டன் சென்று அரசியற் பொருளாதாரம் கற்றார். பின் அங்கிருந்து திரும்பி கி.பி. 1890–ஆம் ஆண்டு மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு விரிவுரையாளராகப் பணியாற்றினார். ஆனால், அதற்குமுன்பே இசுபென்சர் (Spencer) என்ற சமூகவியல் அறிஞரின் எழுத்துகளைப் படிக்க ஆரம்பித்தார்; சமூகவியலிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இதுவே, இவரைச் சமூகவியலில் முனைவர்(Ph.D.) பட்டம்பெறத் தூண்டியது. சமூகவியல் துறையில் கி.பி. 1894–ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றுச் சமூகவியலைக் கற்பித்தார். ஆல்பர்ட்டுசாபல் (Albert Schaffle), காம்டே (Comte) கம்புலோவிச்சு (Gumplowicz), மெயின் (Maine) இலூயிசு என்றி மார்கன் (Lewis Henry Morgan), தார்டே (Tarde) போன்ற அறிஞர்களைப் பற்றி ஆர்வமுடன் படித்தறிந்தார். வார்டு (Ward), கிட்டிங்சு (Giddings) போன்ற அறிஞர்கள் தந்த ஊக்கம் இவரது வாழ்க்கைக்குப் பெரிதும் உதவியாக அமைந்தது.

கூலியின் ஆய்வுப் படைப்புகளில் 'மனித இயல்பும் சமூக ஒழுங்கும்' (Human Nature and Social Order), 'சமூக நிலை அமைப்பு' (Social Organization), 'சமூகச் செயற்பாங்கு' (Social Process) ஆகியவை முக்கியமானவையாகும். இந்நூல்களில் உயிரினப் பார்வையில் சமூகம், சமூக வாழ்வில் மனித அறிவு போன்றவற்றை விளக்குகிறார். மேலும் மனிதனைப் பற்றியும், அவன் பிறருடன் கொள்ளும் நுட்பமான உறவுகளைப் பற்றியும் கூறுகிறார். மேலும் இவற்றில் 'தான்' (Self) என்ற கருத்திற்கு முதன்மை தருகிறார். 'நான்' (I) என்ற சொல்லைப் பற்றி ஆராயும் பொழுது மட்டுமே 'தான்' என்பதை அறிய முடியும் என்கிறார். உடலானது மனிதனுக்கு உட்பட்டது எனினும், அது 'தான்' என்பதின் ஒரு சிறிய பகுதி தான்; ஏனெனில், மனிதன் தனது விழுமியங்கள், எண்ணங்கள், சாதனைகள், சொத்துகள் போன்றவற்றை, உடலைவிட அதிகமாக மனத்தில் வைத்துப் போற்றுகின்றான் எனக் கூறுகிறார். கூலி 'சமூக அமைப்பு' என்ற நூலில் மக்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்தாலும் மனித அறிவின் முக்கியத்துவத்தை இவர் கைவிடவில்லை. சமூகம் என்பது அறிவுக்

கலவை; இது செய்தித் தொடர்பினால் இணைக்கப் பட்டுள்ளது எனக் கூறுகிறார். இவரைப் பொறுத்த வரை, மனித அறிவானது – குடும்பம், ஒப்பார் குழு, அண்டையம் போன்ற முதல் நிலைக் குழுக்களின் நெருங்கிய உறவில் உருவாகிறது. நிறுவனங்களைப் பற்றிய இவரது எண்ணங்களைத் தம் விவாதங் களின் மூலம் 'சமூகச் செயற் பாங்கு' என்ற நூலில் விளக்குகிறார். பொருளாதார விழுமியமானது தன் னாட்சி மனிதர்கள் தேர்ந்தெடுக்கின்ற தடையற்ற சந்தையின் (Free Market) விளைவினால் மட்டும் ஏற்படுவதில்லை; எண்ணம், செயல் போன்றவை களின் ஒரு முக்கியமான அமைப்பிலிருந்து நேரிடு கிறது எனக் கூறுகிறார்.

கூலி, வாழ்க்கை முழுவதும் அமைதியாக, சிக்க லற்ற முறையில் வாழ்ந்தார். நிருவாகம் செய்வதில் நாட்டம் கொள்ளாது படித்தல், எழுதுதல், கற்பித் தல் போன்றவைகளை இவரது அன்றாடப் பணி களாகக் கொண்டிருந்தார். இவர் ஒரு சமூகவியல் முறையினை உருவாக்கவில்லை யெனினும் பல வழி களில் இத்துறைக்குச் சிறப்பு உண்டாக்கினார். இவ் வாறு சமூகவியலுக்குத் தொண்டுகள் பல ஆற்றிய இந்த அறிஞர் 1929–ஆம் ஆண்டு காலமானார். பூ.த.

**கூலிட்சு, கால்வின்:** அமெரிக்க ஐக்கிய நாட்டின் முப்பதாம் குடியரசுத் தலைவராக 1923 முதல் 1929 வரை பதவி வகித்தவர் சான் கால்வின் கூலிட்சு (John Calvin Coolidge). இவர் கி.பி. 1872-ஆம் ஆண்டில் பிளிமௌத்து என்னுமிடத் தில் பிறந்தார். பழமைப் பற்றுக் கொண்ட குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இவரது ஆட்சிக்காலத்தில் அமெரிக்கா சிறப்புக் குன்றியிருந்தமைக்கு முக்கிய காரணம், அப்பொழுது அந்நாட்டில் ஏற்பட்டிருந்த பெரும் பொருளாதார மந்தம் என்று கூறலாம். உள்துறை, வெளித்துறை அலுவல்களில் அமெரிக்க அரசாங்கம் மந்தமாக இருந்தது என்று பலர் குறை கூறியுள்ளனர். புதிய இங்கிலாந்து மரபுவழி வந்த கூலிட்சு, சிக்கனம், அடக்கம், ஆரவாரமின்மை முதலிய நற்பண்புகளைப் பெற்றிருந்தார். நார்த் தாம்டனில் தமது சட்டத் தொழிற் பணியை கி.பி. 1897–இல் முடித்துக் கொண்டு பல பொதுப் பணி களை இவர் மேற்கொண்டார். கி.பி. 1899–இல் நகர மன்ற உறுப்பினராகவும், பின் மசாசுசட்சு சட்ட மன்ற உறுப்பினராகவும், நார்த்தாம்டன் நகரத் தந்தையாகவும், நடுவண் அரசு மேல்சபை (Senate) உறுப்பினராகவும், துணை நிலை ஆளுநராகவும், பதவிகள் பலவற்றை இவர் திறம்பட ஆற்றியபடியால் மாநிலக் குடியரசுக் கட்சி இவர்பால் தம் கவனத் தைச் செலுத்தியது. அக்கட்சியின் கொள்கைகள் தமது இயல்புக்கு ஒத்து இருந்தபடியால் இவர் அக் கட்சியில் இணைந்தார். விரைவில் தேசிய அளவில் இவரது ஆற்றல் வெளிப்பட்டது. இவர், மசாசுசட் சின் ஆளுநராக இருந்தபொழுது, பாசுட்டன் (Boston) நகரில் காவலர்கள் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதை அறவே வெறுத்த கூலிட்சு, தமது கொள்கை யைப் பின்வரும் சொற்கள் மூலம் தெளிவாக்கினார். 'பொது மக்கள் பாதுகாப்புக்குப் பகையாக வேலை நிறுத்தம் செய்வதென்பது எந்தக் காலத்திலும், எவ் விடத்திலும், எவராலுமே ஏற்றுக் கொள்ளக் கூடாத ஒன்று' என்றார். சட்டத்தைக் காப்பாற்றுவதற்கான அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இவர் தவறவில்லை.



கூலிட்சு, கால்வின்

இவர் 1920–இல் குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். கூலிட் சின் முந்நிலை மீட்சிக் குறிக்கோள் வெற்றி அடைந் தது. தம்முடன் தேர்தலில் நின்று வெற்றி பெற்ற குடியரசுத் தலைவர் வாரன் ஆர்டிஞ்சுடன் (Warren Hardinge) ஒத்துழைத்து நற்பெயர் பெற்றார். அமைச் சர் குழுக் கூட்டங்களில் இவருக்கு முன்பு துணைக் குடியரசுத் தலைவர் கலந்து கொள்வதில்லை. ஆனால், கூலிட்சு அம்முறையை மாற்றித் தாமும் அமைச்சர்குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

குடியரசுத்தலைவர் ஆர்டிஞ்சு 1923-இல் மரண மடைந்ததால், சட்டப்படி கூலிட்சுக்கு நாட்டுத் தலைவர் பதவி கிடைத்தது. பொருளாதாரச் சீர் கேடுகள் நிறைந்த அக்காலத்தில் இவரது ஆற்றல்

காரணமாக அமைதி நிலவியது. தொழிலதிபர்கள் துறையில் அரசு தலையிடவில்லை. நாட்டில் வரிகளைக் குறைப்பதற்கு அரசு நேர்மையுடனும் திறமையுடனும் செயற்பட வேண்டுமென்பது கூலிட்சின் கொள்கை. வெளிநாட்டுப் பொருள்கள்மீது வரிகளை அதிகரித்து, உள்நாட்டுத் தொழில்களை வளர்க்கும் கொள்கை இவரால் ஆதரிக்கப் பெற்றது. முதல் உலகப் போரில் பங்கு கொண்ட போர் வீரர்களுக்குப் பரிசுகள் கொடுத்து ஊக்க வேண்டுமென்ற கொள்கையை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அயல்நாட்டு அலுவல்களிலும் அமைதிக் கொள்கையையே இவர் விரும்பினார். இயன்றவரை அமெரிக்கா தனித்து இயங்க வேண்டுமென்றே இவர் விரும்பினார். போர்ப் படைக் குறைப்புக்கு இவருடைய ஆதரவு மிகுதியாக இருந்தது. நாடு சிக்கல்களில் மாட்டிக் கொள்வதை இவர் எதிர்த்தார். இத்தகைய கொள்கைகளினால் அமெரிக்காவை எதிர்நோக்கியிருந்த பல பொருளாதாரச் சிக்கல்களை இவர் காலத்தில் தீர்த்து வைக்க இயலவில்லை. ஓய்வு பெற்ற கூலிட்சு தம் வரலாற்றை 1929-இல் வெளியிட்டார். மேலும், தம் தத்துவங்களை விளக்கிப் பல கட்டுரைகளை எழுதினார். எந்நிலையிலும் அமைதியை நாடிய குடியரசுத் தலைவர்களுள் கூலிட்சும் ஒருவர். தெ.பா.

**துணை நூல்கள்:**

White, W.A., A Puritan in Babylon: The Story of Calvin Goolidge, New York, 1938.

Fuess, C.M. Calvin Goolidge, The Man from Vermont, New York, 1940.

***கூலிப்படைத்தலைவர்கள்***: ஐரோப்பிய வரலாற்றில் இத்தாலி நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள் பல படிப்பினைகளை மக்களுக்கு வழங்குகின்றன. குறிப்பாக, கி.பி.15-ஆம் நூற்றாண்டில் அந்த நாடு ஒற்றுமையின்றிச் சிதறிக் கிடந்தது. ஒரு காலத்தில் அந்நாடு உரோமபுரியின் ஆட்சியின்கீழ் உலகிலேயே சிறப்புற்றிருந்த ஒரு பேரரசை நிறுவியிருந்தது. ஆனால், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் அதன் நிலைமை வருந்துதற்குரியதாய்விட்டது. பல குறுநில அரசுகள் அந்நாட்டில் ஏற்பட்டு அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. அயல்நாட்டினர் ஆதாயம் தேடினர். இந்நிலையில் கூலிக்காகச் செயலாற்றும் சில படை வீரர்கள், தத்தம் விருப்பப்படி கூலி பெற்றுக்கொண்டு, பல கட்சியினருக்கு ஆதரவு அளித்ததன் மூலம் தமது ஆதிக்கத்தையே நிறுவினர். இத்தாலிய கூலிப்படைத் தலைவர்கள் (Condottiere) சில இயக்கங்களின் ஆதிக்கத்தையும் பெற்றிருந்தனர். இவர்களுள் ஒருவனான ஆட்டெண்டோலோ இசுபார்சா (Attendolo Sforza) என்பவன் மிலான் குறுநில அரசின் மன்னனாக அமர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. தெ.பா.

***கூலியும் வேலையும்***: கூலி, பணக்கூலி(Money Wages), உண்மைக் கூலி (Real Wages) என இரு வகைப்படும். (காண்க: 'கூலி'.) உண்மைக் கூலி வேலைவாய்ப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாட்டின்படி தொழிலாளர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கு உண்மைக் கூலி சமமாக உள்ள நிலையில் தான் வேலை அளிப்பு (Supply of Labour) வரையறுக்கப்படுகிறது. எனவே, MR=RW=SL. MR இறுதிநிலை உற்பத்தித்திறன் (Marginal Productivity), RW உண்மைக்கூலி (Real Wage), SL-வேலை அளிப்பு (Supply of Labour).

தொன்மைப் பொருளியற் கோட்பாட்டில் வேலைவாய்ப்புகளின் தேவை உண்மைக்கூலியுடன் எதிர் விகிதத்தில் (Inverse Proportion) தொடர்புடையதாகக் கருதப்பட்டது. மேலும், அளிப்பு, தேவையில் ஏற்படும் மாறுபாடுகள் ஆகியன காரணமாகக் கூலி வீதங்கள் கூடவோ குறையவோ கூடும். ஆனால், நடைமுறையில் கூலி வீதங்களைக் குறிப்பாக, பணக்கூலி வீதங்களைக் குறைக்க இயலாது; பணக்கூலியை உயர்த்த முடியுமேயன்றிக் குறைப்பது என்பது இயலாத காரியம். இக்கருத்தையே கீன்சு (Keynes) வலியுறுத்தினார். பொருளாதார மந்தம் (Economic Depression) நிலவும் காலங்களில் பொதுவாகத் தேவை குறையும். பொருள்களின் விலையும் வீழ்ச்சி அடையும். அந்நிலையில் கூலி வீதங்கள் மட்டும் வீழ்ச்சி அடையாமலிருக்கும். அதனால், முழு வேலை நிலையைப் (Full Employment) பாதுகாக்க முடியாமல் வேலையின்மை பெருகும்.


பொருளியற் கோட்பாடுகளின் கூடுதலான வேலைவாய்ப்புகள் குறைந்த அளவு உண்மைக் கூலியின் அடிப்படையில்தான் நிலவ இயலும். மந்தக் காலத்தில் பணக்கூலி வீதத்தைக் குறைக்கலாம் எனத் தொன்மைப் பொருளியற் கோட்பாடு கூறுகிறது. நடைமுறையில் பணக்கூலி வீதத்தைக் குறைப்பதற்குத் தொழிற்சங்கங்கள் (LabourUnions) இடந் தருவதில்லை. அதனைத் தொழிலாளர் ஒப்புக்கொள்வதுமில்லை. எனவே, பணக்கூலி வீதம் மாறாத நிலையில், விலை உயர்வை ஏற்படுத்துவதன் மூலம் உண்மைக் கூலி வீதம் குறையும்; அப்போது வேலைவாய்ப்புப் பெருகும் என்ற கருத்தைக் கீன்சு

வலியுறுத்தினார். இவ்வாறு, தொன்மைப் பொருளிய லாரும் கீன்சிய பொருளியல் வல்லுநர்களும் (Keynesian Economists) உண்மைக் கூலியைக் குறைப்பதன் மூலம் வேலைவாய்ப்புப் பெருகும் என்ற ஒரே கருத்தை நிலைநாட்டியுள்ளனர். ஆனால், உண்மைக் கூலியை எவ்வாறு குறைப்பது என்பதில்தான் அவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தொன்மைப் பொருளியல் கருத்தினர் பணக்கூலியைக் குறைப்பதன் மூலம் மெய்க்கூலியைக் குறைக்கலாம் என வலியுறுத்தினர். கீன்சிய பொருளியல் கருத்தினர் விலை ஏற்றத்தை உண்டாக்குவதன் மூலம் உண்மைக் கூலி தானாகவே குறைந்துவிடும் என உறுதியாகக் கருதினர்.

வாணிகச் சூழலின் (Business Cycle) ஒரு கூறாக உள்ள 'மந்த'க்காலங்களில் வேலைவாய்ப்பைப் பெருக்கும் வகையில் பணப் புழக்கத்தைப் பெருக்கும் அரசின் கூடுதல் செலவினங்கள், பற்றாக்குறை நிதியாக்கம் போன்றவை பரிந்துரைக்கப்படுகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வேலைவாய்ப்பு எப்பொழுதெல்லாம் குறைவுற்றதோ அப்போதெல்லாம் பணவீக்க நிலையைத் (Inflation) தோற்றுவித்து வேலைவாய்ப்பைப் பெருக்கும் முறை ஒரு சிறந்த பொருளாதாரக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அனைத்து மேலை நாடுகளிலும் விலைவாசியை உயர்த்தும் வண்ணம் பணவீக்கக் கொள்கை பரவலாகப் பின்பற்றப்பட்டதால், விலைவாசி உயரும் வீதத்திற்கும் வேலையின்மை வீதத்திற்கும் எதிர்மறையான தொடர்பு உள்ளது என்னும் கோட்பாட்டை பிரிட்டனைச் சார்ந்த பிலிப்சு (A.W. Phillipps) உருவாக்கினார்.

பிலிப்சு என்பவரின் கருத்துப்படி பணவீக்கத்தின் ஒரு கூறாகக் கூலி வீதம் உயர்த்தப்படுகிறது. கூலி வீதங்கள் உயர்வதால் மீண்டும் பணவீக்கம் ஏற்படும் என்பதையும் கவனிக்க வேண்டும். கூலி உயர்வும் (அதாவது பண வீக்கமும்) வேலைவாய்ப்பின்மையும் எதிர்விகிதத் தொடர்பு உடையன என்னும் கருத்தையே வரைபடம் 1 பிலிப்சு வளைகோடு விளக்குகிறது. பணக்கூலி உயர உயர, வேலையின்மை வீதம் குறைந்து செல்வதையே பிலிப்சு வளைகோடு தெளிவாக்குகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஏறக்குறைய 20 ஆண்டுகள் வரை இக்கோட்பாடு நடைமுறையில் மிகவும் சிறப்புற்று விளங்கியது. அக்காலத்தில் விலை உயர்வானது அனைத்து நாடுகளிலும் ஒரே சீராக ஏற்படவில்லை; ஆண்டுதோறும் தொடர்ந்தும் ஏற்படவில்லை. ஆனால், 1970-ஆம் ஆண்டளவில் நிலைமை மாறிவிட்டது. ஆண்டு





வரைபடம்-1.

தோறும் 10 விழுக்காட்டிற்கும் மேலாக விலைவாசி உயர்ந்தது; அனைத்துப் பொருள்களின் விலையும் எல்லா நாடுகளிலும் உயர்ந்து சென்றது. ஆண்டு தோறும் ஏற்படும் விலை உயர்வு காரணமாகத் தொழிலாளர்கள் தங்களுடைய உண்மைக் கூலி வீழ்ச்சி அடைவதை உணர்ந்து, அதைத் தவிர்க்கவும் கட்டுப்படுத்தவும் முயன்றனர். அதனால், கூலி ஒப்பந்தங்கள் ஏற்படும்போது, விலை உயர்வின் காரணமாகத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியுறாமல் இருப்பதற்காக விலைவாசி உயர்வை ஓரளவிற்கோ முழுமையாகவோ ஈடுசெய்யும் வகையில் விலை மாற்ற ஈட்டுப்படி வழங்கும் முறை உருவாக்கப்பட்டது. உயர்ந்து கொண்டே செல்லும் விலைவாசி காரணமாக அடிப்படைக் கூலி வீதங்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது திருத்தி அமைக்கும் முறையும் செயற்படுத்தப்பட்டது.

உண்மைக் கூலி முழுமையாகப் பாதிக்கப்படாமல் இருக்கத் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டதால், பிலிப்சு வளைகோட்டின் கருத்து பிற்காலத்தில் செயற்படவில்லை. விலை உயர்வு ஏற்பட்டபோதிலும் வேலையின்மை நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லை என்ற நிலை உருவாகியது. பணவீக்க நிலையும் வேலையின்மையும் ஒன்றுக்கொன்று எதிரானவை, ஒவ்வாதவை என்ற நிலை மாறி இரண்டும் ஒரே காலகட்டத்தில் நிலவும் பயனளிக்கும் கூறுகள் எனப்பட்டன. இந்நிலை அனைவருக்கும் ஓர் அதிர்ச்சியை அளித்தது. இதனைத் தேக்க வீக்க நிலை (Stagflation) என்றனர். வேலையின்மையை அகற்றுவதற்காக விலை உயர்வை ஏற்படுத்தும் வீக்க நடவடிக்கைகள் பயனற்றுவிட்ட

தைச் செயற்படுத்தும் வகையில் பொருளாதாரத் தேக்கமும் விலை உயர்வும் இணைந்த தேக்க வீக்க நிலை உண்டானது.

நடைமுறையில் இக்காலத்தில் பிலிப்சு வளை கோட்டின் கோட்பாடு செயற்படாமல் போனதற்குக் காரணம் இக்கோட்பாட்டில் சொல்லப்பட்ட விலை உயர்வு அல்லது வீக்கம் திடீரென்று முற்றிலும் முன் கூட்டி எதிர்பாராத வகையில் நிகழ்கிறது என்று கருதி அதனை ஓர் எடுகோளாகக் கொண்டதுதான். இந்நிலைமை 1970 க்குப் பின் முற்றிலும் மாறிவிட்டது. நடப்பு ஆண்டில் மட்டுமன்றி, எதிர்வரும் ஆண்டுகளிலும் விலைஉயர்வு ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கும் மனநிலை பரவலாகக் காணப்படுவதால், பிலிப்சு வளைகோடு மேல்நோக்கி இடம் பெயர்கிறது. அதனால் குறிப்பிட்ட வேலையின்மை வீதத்துடன் முன்பு இருந்ததைக் காட்டிலும் கூடுதலான விலைவீதத்தில் வேலையின்மை பரிமாற்றம் செய்யப்படுகிறது. இக்கருத்தையே வரைபடம் 2 வலியுறுத்துகிறது.




வரைபடம்-2

இவ்வாறு ஒவ்வோராண்டும் விலை உயர்வு ஏற்படக் கூடும் என்ற மக்களின் பொதுவான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் பிலிப்சு வளைகோட்டை மேல் நோக்கி இடம்பெயரச் செய்கிறது. இதன் அடிப்படையில் தான் நாட்டில் உள்ள இயல்பான வேலையின்மை நிலை (Natural Rate of Unemployment) தொடர்ந்து நீடிப்பதையும், ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய விலை உயர்வு அல்லது வீக்கம் பணக்கூலி வீதத்தை மட்டுமே உயர்த்துகிறது. என்பதையும் அறிய முடிகிறது ம.தி.

**துணை நூல்கள்:**

**Gupta R.D.**, Keynes Post Keynesian Economics, Kalyani Publishers, New Delhi, 1983.

**Locke W.H. Andreson & Others**, Economics, Prentice-Hall of India Pvt. Ltd., New Delhi, 1986.

**Michael R. Edgmand**, Macro Economics, Theory and Policy, Prentice-Hall of India Pvt. Ltd. New Delhi, 1985.

***கூழங்கைத் தம்பிரான்*** 170 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ப் புலவர். கூழை என்றால் குறள் எனப் பொருள்படும். இவரது கைத்தலம் கூழையடைந்தமை பற்றி இவர் இப்பெயர் பெற்றார் தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சிபுரமே இவர் பிறந்த ஊர்; சைவ வேளாளர் குலத்தவர் ஆவார்; தமிழ் இலக்கண, இலக்கியங்களில் வல்லவர்; சைவ சித்தாந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்; யாழ்ப்பாணத்துச் செல்வரும் வள்ளலுமான வைத்தியலிங்கஞ்செட்டியாரின் நண்பர் ஆவார். இவர் அவர் ஆதரவில் வண்ணார்பண்ணையில் வாழ்ந்தார். அங்கு இருபாலை நெல்லையப்ப முதலியாருக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தார். இவர் சில தனிச் செய்யுள்களும் இரட்டை மணி மாலை முதலிய தொடர்நிலைச் செய்யுள்களும் பாடினார்.

திருவிரட்டை மணிமாலை காப்புச் செய்யுளில் சித்தி விநாயகர் வணக்கம் பாடியுள்ளதால் இவர் சைவ சமயத்தில் ஈடுபாடுடையவர் என்பது தெளிவு. ஓசை நயமான பாடல்கள் பாடுவதில் வல்லவர். இவரதுஇரட்டை மணிமாலை முரட்டுக் காளையை அடக்கும் முச்சரடு கோத்தாற் போல அமைந்தது என்று உவமை மூலம் விளக்குகின்றார். பிற புலவர்களுக்கெல்லாம் இரட்டை மணிமாலை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை உணர்த்தும் வகையில் அது அமைந்தது.

ஆசிரிய விருத்தத்தில் இவர் பாடிய ஒரு தனிநிலைச் செய்யுளில் சிவலிங்கங்களின் சிறப்புகள் பேசப்பெறுகின்றன. தஞ்சை மாவட்டத்திலுள்ள வைத்தீசுவரன்கோயில் சுவாமியும் அம்பாளும் அப்பாட்டில் போற்றப்படுவதால் இவர் பல தலங்களுக்கும் சென்று பாடியுள்ளார் என்று அறிய முடிகிறது.
பி.தெ.

***கூழிக்கொற்றனார்***, குறுந்தொகை 276-ஆம் பாடலைப் பாடிய சங்கப் புலவர். கோழிக்கொற்றன்

என்றும், கோளிக் கொற்றன் என்றும் இவர் குறிப்பிடப்பெற்றுள்ளார். கூளிக்கொற்றன் என்ற பாடபேதமும் காணப்படுகிறது. கொற்றன் என்பது தமிழில் அமைந்த பழங்காலப் பெயராகும். பழந் தமிழ் இலக்கண நூல்களில் சான்று காட்டும் பொதுப் பெயர்கள் வரிசையில் சாத்தனும் கொற்றனும் இடம்பெறுவது இயல்பு. இவர்பாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகையின் நானூறு பாடல்களுள் ஒன்றாக அமைந்துள்ளது.

தோழியால் சேட்படுத்தப்படும் தலைவன் இனி மடல் ஏறி வழக்குத் தொடுத்துத் தலைவியை மணம் புரிவேன் என்று முன்னிலைப் புறமொழியாகப் பேசும் அகப்பாடலை இப்புலவர் இயற்றியுள்ளார். மூங்கில் போன்ற தோள் உடையவள் தலைவி என்று கூறும் உவமை மிகப் பழங்காலத்தது. மடல் மா ஏறுதல், தொய்யில் எழுதும் முறை, சான்றோர் அவைச் சிறப்பு, செங்கோல் மன்னன் ஆட்சி போன்றவை பாடலில் இடம்பெறுவதால் பழமையைப் போற்றுபவர் இவர் எனத் தெளியலாம். முறையுடை அரசன் செங்கோல் அவையம் எனக் கூறுவதால் இவர் காலத்திலிருந்த மன்னராட்சி முறை விளங்கும். இவர் கோரைப்புல் சூழ்ந்த குளத்தைக் காட்டுகிறார். பஞ்சாயக் கோரையால் பாவை செய்தல் பற்றியும் இவர் கூறியுள்ளார். பி.தெ.

**கூழைத் தன்மை** சத்துணவுக் குறைவின் காரணமாகவோ, இயக்குநீர்ச் சுரப்பிகளின் அளவுக் குறைவின் காரணமாகவோ, பரம்பரைத் தன்மை காரணமாகவோ ஏற்படும் வளர்ச்சிக் குறை. இதனால் உடல் வளர்ச்சி குன்றிய நிலை கூழைத்தன்மை (Dwarfism) எனப்படுகிறது. கால், கை அளவுகளும் தலையின் அளவும் உடல் வளர்ச்சி அளவிற்குப் பொருந்தாதிருக்கலாம். உடல் உறுப்புகள் சீராக அமையப்பெற்று, வளர்ச்சிமட்டும் அதாவது உயரம் மட்டும் குறைந்திருக்கும் கூழைத்தன்மையினரைக் குள்ளர்கள் (Midget) என்பர். கேடயச் சுரப்பி குறைந்து அதன் காரணமாக வளர்ச்சி தடைப்பட்ட கூழைத் தன்மையினர் மூளை வளர்ச்சியும் குன்றியவர்களாக இருப்பர். இந்நிலையைச் சீர் செய்யமுடியும். ஆனால், இளமையிலேயே தக்கபடி நடவடிக்கை எடுக்காவிடில் இக்குழந்தைகள் பெரியவர்களாகும் போது 'கூழைமை' நிலையை அடைவர். இந்நிலையில் உடல்–உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிகள் தடைபட்டு விடுகிறது. தூம்பற்ற மூளையடிச் சுரப்பிக் குறைவினாலும் இந்நிலை உண்டாகிறது. ஜி.இரா.

**கூளப்பநாயக்கன் காதல்**: இந்நூல் சுப்பிரதீபக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. காமச் சுவை நிரம்பிய இந்நூல் காப்புச் செய்யுளுடன் 'பொன்மாது' எனத் தொடங்குகின்றது; 374 கண்ணிகளைக் கொண்டது. நூலுள் கடவுள் வாழ்த்தாகக் கணபதியும் கலைமகளும் முருகப் பெருமானும் வாழ்த்தப்படுகின்றனர். திருவிளையாடற்புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவரைக் கவிஞர் தம் ஆசிரியராக ஏற்றுக் கொண்டு குருவணக்கமாக அவரைப் பாடிப் பரவுகின்றார்.

இந்நூற் கதைக்கு நாகம கூளப்பநாயக்கன் தலைவனாவான். அவன் நிலக்கோட்டையைச் சிறப்பாக ஆண்டு வந்தபோது ஒருநாள் வேட்டைக்குச் செல்லவேண்டுமென்று அவனுக்கு ஆவல் எழுந்தது. வேட்டைக்குச் சென்றவன் தன்னுடன் வந்தோர் விட்டுப்பிரியத் தனிமையில் ஒரு பூங்காவை அடைகின்றான். அங்குத் தோழிகள் விட்டுப்பிரியத் தனிமையில் பூப்பறிக்க வந்த நவரத்தினமாலை என்பாளைக் காணுகின்றான். கண்டவன் அவள்மீது காதல் கொண்டு கந்தருவ மணம் செய்துகொள்கிறான். தன்னுடன் வந்தோர் தன்னைத் தேடிவர நவரத்தின மாலையை விட்டுப் பிரிந்து அவர்முன் தோன்றி நிலக்கோட்டையை வந்து அடைகிறான். நவரத்தின மாலையும் தலைவனைக் காணாது தன்வீடு அடைகின்றாள். தன் மகளின் உடல் மெலிவுக்குரிய காரணங்களை அவள் தோழிகள் வாயிலாகக் கேட்டறிந்த அவள் தாயும் மகிழ்ந்தவளாய் அவளைப் பல்லக்கில் ஏற்றித் தோழி குணமாலையோடு நிலக்கோட்டைக்கு அனுப்புகிறாள். நாகமநாயக்கனும் நவரத்தினமாலையும் காதலர்களாய்க் கூடிக் கலந்து இன்புற்றுப் பூதலத்தார் வாழ்த்தப் புதல்வர்களைப் பெற்றெடுத்து வளமாக வாழ்ந்தார்கள். மேற்கண்ட கதை நிகழ்ச்சியை உள்ளடக்கிய இந்நூல் கூளப்பநாயக்கன் வாழ்த்தோடு இனிது முடிவுறுகின்றது.

பாட்டுடைத் தலைவனுக்குத் தசாங்கம் பொருந்தியிருக்க வேண்டும் என்பது இலக்கணமாகும். அம்முறையில் இந்நூலின் பாட்டுடைத் தலைவனாம் நாகம கூளப்ப நாயக்கனின் பன்றிமலை, குடவநதி, பாண்டி நாடு, ஒன்பது ஊர்கள், முல்லைமாலை, வாகுநடைப் புரவி, கொடுமைக் குஞ்சரம், குடை, முரசு, ஆணை ஆகியயாவும் முறையாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஆசிரியர் தன்னைப் போற்றிப் பாதுகாத்த வள்ளல் நாகம நாயக்கனின் சிறப்புகளைப் பலபடப் பாராட்டுகின்றார். நாகம கூளப்ப நாயக்கன் சின்னம கூளப்பநாயக்கனின் மகனாவான்; திருமலை நாயக்கனின் மருமகன்; நிலக்கோட்டையை ஆண்டவன்; கலைமகள் புகழும் வல்லக்காவார் குலத்தைச் சார்ந்தவன்; சொக்கநாதர்

மீனாட்சி அருள் பெற்றவன்; நாராயணனை வணங்கும் பெற்றியன் என்றெல்லாம் அவன் தன்மைகள் எடுத்துக் கூறப்படுகின்றன. 'மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும், சோமரவி பொய்த்தாலும் சொன்ன மொழி பொய்யாதான்' என்றும், 'அண்டர் தருவுக்கும் அருங்காம தேனுவுக்ும், கொண்டல் தனக்கும் கொடை பயிற்று செங்கரத்தான்' என்றும்(31, 32) அவனுடைய வாய்மைப் பண்பும், வள்ளல் தன்மையும் சிறப்பிக்கப்படுகின்றன. மேலும், நவரத்தினமாலை பற்றிய வருணனையும், அவள் உறுப்புநலன்கள் குறித்த வருணனையும் இந்நூலுள் இடம் பெற்றுக் கற்பார்க்குக் காமச் சுவையைத் தந்து நிற்கின்றன.

இந்நூல் எதுகை மோனை ஓசை நயங்களைக் கொண்டது. உவமைகள் இந்நூலுள் சிறப்பிடத் பெறுகின்றன. இதனுள் கற்பனைக் காட்சிகள் கருத்தைக் கவர்வனவாகும். அன்று மாயமானைப் பின் தொடர்ந்து ஓடிய இரகுராமனைப்போல் நாகம நாயக்கனும் இம்மானைப் பின்தொடர்ந்து ஓடினான் என்று கூறப்பட்டுள்ளது. இந்நூல் மணிப்பிரவாள நடையில் அமைந்து காணப்படுகிறது. எதுகை மோனை நயங்கருதியும், ஓசை நயங் குறித்தும் ஆசிரியர் இக்கலப்பு நடையைக் கையாளுகிறார் எனக் கருதலாம்.

இரா.செ.

**கூளப்பநாயக்கன் விறலிவிடுதூது** என்னும் நூல் சுப்பிரதீபக் கவிராயரால் இயற்றப்பட்டது. காமசாத்திர நுட்பங்கள் பலவற்றை உள்ளடக்கிய இந்நூல் கலிவெண்பா அமைப்பில் அமைந்தது. காப்புச் செய்யுளுடன், 'கார்பூத்தமேனி' எனத் தொடங்கும் இந்நூல் 1095 கண்ணிகளைக் கொண்டது. சில கண்ணிகளில் சொற்கள் சிதைந்து காணப்படுகின்றன.

நிலக்கோட்டைச் சமத்தானாதிபதி நாகம கூளப்ப நாயக்கன் என்னும் வள்ளலால் இவ்வாசிரியர் ஆதரிக்கப்பட்டதை இந்நூல் சிறப்பாக விரித்துரைக்கிறது. இத்தூது நூலில் இடம்பெறும் தலைமைப் பாத்திரம் அட்டாவதானி என்னும் அந்தணன் ஆவான். அவன் மிகுந்த பெண்ணாசை கொண்டவன். அதனால், அவன் தன் மனைவியின் கோபத்துக்கு ஆளாகி வீட்டைவிட்டு வெளியேறி மதுரைக்கு வந்து ஒரு தாசியின் வலையில் வீழ்ந்து கைப்பொருள் அனைத்தையும் இழந்து, பலவகைத் துன்பத்திற்குள்ளாகி இறுதியில் அறிவுத் தெளிவுபெறுகிறான். தெளிவு பெற்ற அவன் வள்ளல் நாகம கூளப்பநாயக்கனை அடைந்து பொருள் பெற்றான் என்றும், அதன்பின் அவதானி தன் வீடுதிரும்ப எண்ணம் கொண்டான் என்றும், தன் வீட்டையடையும்போது சினங்கொண்ட தன் மனைவி தன்னை எப்படி வரவேற்பாளோ என்ற தயக்கம் ஏற்பட்டதால், ஊடல்தீர்க்கும் வாயில்களுள் விறலியும் ஒருத்தியாதலின் அவ்விறலியிடம் தன் வரலாற்றைக் கூறி, அவளைத் தன் மனைவியிடம் தூது செல்லுமாறு கேட்டுக் கொண்டான் என்றும் கூறும் பாங்கில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

பாட்டுடைத் தலைவனாகிய கூளப்ப நாயக்கனை ஆசிரியர் பலபடப் பாராட்டுகிறார். அவன் 'விந்தை மிடிதீர வெற்றிப் பயிரேற்றி வந்து கொலுவிருக்கும் வாள்வீரன்' நாகேந்திரன், இன்சொல்லன் என்றும், கல்வி ரசம் பருகும் கல்வியாளன் என்றும், கருணை உலவும் முகத்தினன் என்றும், செந்தமிழுக்கு நல்கும் செங்கையன் என்றும் சிறப்பிக்கப்படுகிறான். அவன் ஆட்சியில் 'வஞ்சமும் பொய்யும் பறந்தோடின; புண்ணியமும் தண்ணளியும் மெய்யும் கலந்து விளையாடின; வானம் வழங்கியது; வள்ளல்கள் தானம் வழங்கத் தவம் ஓங்கியது' என்றெல்லாம் தம் வள்ளலின் ஆட்சிச் சிறப்பைப் புகழ்ந்துரைக்கிறார். கூளப்பநாயக்கனின் சமத்தானமாகிய நிலக் கோட்டையைச் சார்ந்த ஒன்பது ஊர்களின் சிறப்புகள், அவனுக்குட் பட்ட பன்றிமலையின் சிறப்பு, குடவநதி, அவன் சூடியிருந்த பூந்துளவமாலை, வெண்குதிரை, கம்பீரமான குஞ்சரம் ஆகியவற்றின் சிறப்புகளும் இந் நூலுள் எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும், அவதானிக்காகத் தூது செல்லும் விறலியின் குரலினிமை, சொல்வன்மை, அழகு முதலியனவும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

இந்நூல் எதுகை, மோனை நயம், பிற அணி நயங்கள் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. உவமைகள் இந்நூலுள் சிறப்பிடம் பெறுகின்றன. கூளப்பநாயக்கன் அன்ன சத்திரத்தில் அளிக்கப்படும் உணவை உண்டு வருபவர்கள் வயிறு பெருத்திருப்பதைப் போல மதுரைத் தாசி மாணிக்கமாலையின் கருப்பமுற்ற வயிறும் பெருத்து வளர்ந்தது என்றும், நாகேந்திரன் புகழைச் சொல்வாணர்கள் வளர்ப்பது போல் மாணிக்கமாலை தன் மகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தாள் என்றும் கூறப்படுவனவற்றுள் இடம்பெறுகிற உவமைகள், இவ்வாசிரியர் தம்மைப் போற்றிப் புரந்த வள்ளலிடம் கொண்டிருந்த நன்றியுணர்வைப் புலப்படுத்துகின்றன.

இத்தூது நூல் மணிப்பிரவாள நடையினைக் கொண்டது. மணிப்பிரவாள நடையினதாயினும் இந் நூலின் நடை பயில்வோரை இன்புறுத்தும் பாங்கில் அமைந்துள்ளது.

இரா.செ.

**கூற்றங்குமரனார்** சங்க இலக்கியப் புலவர்களுள் ஒருவர். குமரன் என்பது இவரது இயற்பெயராகும். தந்தையின் பெயர் கூற்றன் என்பதாம். கூற்றனுடைய குமரன் ஆதலின் கூற்றங்குமரன் ஆனார். தாம் பிறந்த ஊர்ப் பெயரையோ, மேற்கொண்ட தொழில் பற்றிய பெயரையோ, தந்தையின் பெயரையோ தம் பெயருடன் இணைத்துக்கொண்டனர் அக்காலப் புலவர் பெருமக்களுட் சிலர். அவ்வரிசையில் தந்தையின் பெயரைத் தம் பெயருடன் இணைத்துக்கொண்டவரே கூற்றங்குமரனார் ஆவார்.

இவர் குறிஞ்சித் திணைப் பாடலைப் பாடியுள்ளார். அகப்பொருள் கிளவித்துறைகளுள் ஒன்று முகம்புகு கிளவியாகும். அத்துறையில் அமைந்த பாட்டொன்றே இவரது நற்றிணைப் (244) பாட்டாகும்.

மலைச்சாரலில் கூதிர்காலத்தில் மலரும் கூதாளிப்பூ மலர்ந்துள்ளது. அம்மலரில் வண்டு மொய்க்கும் ஓசை கேட்டு அசுணமா ஆராய்கிறது என்று இயற்கையைக் கூறுவதுபோலத் தலைவியின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார் புலவர். நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள்யாவும் அமையப் பாடல் அமைத்துள்ளார். உயர்ந்த மலைநாட்டுத் தலைவனின் தழுவலால் ஏற்பட்ட நோயை அவன் மார்பாகிய மருந்துதான் குணப்படுத்தவேண்டும் என்று தலைவி தோழிக்கு எடுத்துக்கூறி, விரைவில் மணம் செய்துகொள்ளவும், தாய் வெறியாட்டு நிகழ்த்தாமல் பாதுகாக்கும்படியும் கூறுகிறாள் வருத்தம் பற்றிய வெகுளி மெய்ப்பாடு தலைவி கூற்றில் அமைந்துள்ளது.
பி.தெ.

**கூற்றுப் பாகுபாடுகள்:** உள்ளச் செயலாகிய தீர்ப்பின் விளைவை ஒருவர் சொற்கள் மூலம் வெளியிடுவதைக் கூற்று அல்லது உரை என்பர். ஒன்றின் உண்மை அல்லது இன்மையைக் கூறுவதே கூற்றின் சிறப்பியல்பு ஆகும். ஒன்றைப் பற்றி உடன்பாடாகவோ, எதிர்மறையாகவோ கூறப்படுவதே கூற்று (Proposition) என்பது தத்துவ மேதை அரிசுடாட்டிலின் கருத்தாகும். கூற்றுகள் அனைத்தும் சொற்றொடர்கள் ஆகும்; ஆனால் சொற்றொடர்கள் அனைத்தும் கூற்றாகா. மரபு வழிமுறை, இக்கால முறை எனஇரு முறைகளில் கூற்றுகளை வகைப்படுத்துவர்.

**மரபு வழிமுறை:** மரபுவழி அளவையியலில் கூற்றுகளை மூன்று வகைகளாக – சார்பற்ற கூற்று, சார்புற்ற கூற்று, விகற்பக் கூற்று எனப்பிரிப்பர்.

**சார்பற்ற கூற்றும் அதன் பாகங்களும்:** 'காகம் கருமையானது', 'பஞ்சு இலேசானது' போன்றவை எவ்வித நிபந்தனையுமின்றி, உறுதியாக உரைப்பதால் இவற்றைச் சார்பற்ற கூற்று எனலாம். எதைப் பற்றிக் கூறுகிறோமோ அது எழுவாய். எழுவாயைப் பற்றி என்ன சொல்கிறோமோ அது பயனிலை எனப்படும். இவை இரண்டையும் இணைக்கின்ற தீர்ப்பின் குறியே 'இணைப்பு' ஆகும். இது இருக்கிறது, ஆகும், இல்லை, அன்று என்ற சொற்களை உடையது. கூற்றில் எழுவாய், பயனிலை என்ற இரு பதங்களே உள்ளன. 'இணைப்பு' தீர்ப்பின் அடையாளமே ஆகும். அது கூற்றின் பாகமாகாது. இணைப்பு காலத்தையோ இருப்பையோ விளக்குவதில்லை. எனவே, காலத்தைப் பற்றிய குறிப்பை இணைப்பிலிருந்து பிரித்துப் பயனிலையுடன் சேர்த்து எழுதவேண்டும்.

**சார்பற்ற கூற்றின் வகைகள்:** சார்பற்ற கூற்றுகளை அவற்றின் தன்மை அடிப்படையில் உடன்பாட்டு உரைகள், எதிர்மறை உரைகள் எனவும் இரு வகையாகப் பிரிக்கலாம். பயனிலையின்பண்பு எழுவாய்க்கு உள்ளதை உடன்பாட்டு உரைகள் கூறுகின்றன. எதிர்மறை உரைகள் எழுவாயும், பயனிலையும் வேறுபடுவதைக் கூறுகின்றன. உடன்பாட்டு உரைகள் 'எ-ப ஆகும்' என்ற அமைப்பைக்கொண்டது. 'எ-ப அன்று' என்ற அமைப்பைக் கொண்டது எதிர்மறை உரை.

அளவு பற்றிச் சார்பற்ற உரைகளை நிறைஉரை, குறை உரை என இருவகைப்படுத்துவர். எழுவாயின் பரவலைக் கொண்டு ஓர் உரையின் அளவு தீர்மானிக்கப்படுகிறது. பயனிலை, எழுவாய்ப் பதம் முழுவதையும் உறுதியாகக் குறிக்குமேயானால், அது நிறை உரை ஆகும். மாறாக, பயனிலை எழுவாயின் ஒரு பகுதியை மட்டும் குறிப்பிட்டால் அது குறை உரை ஆகும்.

**நால்வகை உரைகள்:** அளவு (Quantity), தன்மை (Quality) ஆகிய இரண்டையும் கலந்து சார்பற்ற உரைகளை நான்கு வகைப்படுத்தலாம்.

1. உடன்பாட்டு நிறை உரை (Universal Affirmative Proposition)-குறியீட்டு வடிவம்: எ/எல்லாம்/ப/ ஆகும். 'ஆ',
   சான்று: மனிதர் அனைவரும் இறப்பவர் ஆவர்.
2. எதிர்மறை நிறை உரை (Universal Negative Proposition) – எ/எதுவும்/ப/அன்று. 'ஈ'.
   சான்று: குதிரை எதுவும் கொம்புடையது அன்று
3. உடன்பாட்டுக் குறை உரை(Particular Affirmative Proposition)-சில /எ/ப/ஆகும். 'ஐ'.
   சான்று: சில மலர்கள் வெண்மையானவை ஆகும்.

4. எதிர்மறை குறை உரை (Particular Negative Proposition) - சில/எ/ப/அல்ல. 'ஓ' சான்று: சில பாம்புகள் நஞ்சுடையவை அல்ல.

சில உரைகள் சிறப்புப் பதத்தை எழுவாயாகக் கொண்டிருக்கின்றன. சான்று: திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியவர் ஆவார். தமிழகத்தின் தலைநகர் சென்னை ஆகும். இவைபோன்ற உரைகள், சிறப்பு உரைகள் எனப்படும்.இவ்வுரைகள் ஒரு குறிப்பிட்ட பொருளை முழுமையாகக் கூறுகின்றன. ஆகவே, சிறப்பு உரைகளை நிறையுரைகளாகவே கொள்ளவேண்டும்.


**'சில'**: அளவையியலில் 'சில' என்பது 'சிலவற்றை யாவது' என்றும், ஒருவேளை 'அனைத்தையும் கூட' என்றும் பொருள்படும். 'சில மட்டுந் தான்' எனக் கருதலாகாது. இவ்விரண்டில் இடத்திற்கு ஏற்ற கருத்தைக் கண்டு கொள்ள வேண்டும்.

**நிபந்தனை உரை**: ஒரு நிபந்தனைக்குட்பட்டு ஒரு செய்தியை வெளியிடுவது நிபந்தனையுரை எனப்படும். 'நன்கு பயின்றால், தேர்வு பெறலாம்' என்னும் உரையில் 'தேர்வு பெறப்பட்டது' எனக் கூற வில்லை. ஆனால் 'நன்கு பயின்றால்' என்னும் நிபந்தனை நிறைவு பெற்றால் 'தேர்வு பெறுதல்' என்னும் விளைவு ஏற்படும் என்று உரைக்கப்படுகிறது. முன் சொல்லியதைச் சார்ந்தே, பின் சொல்லியது இருக்கின்றது. முன் சொல்லியதை ஏது (காரணம்) என்றும், பின் சொல்லியதைக் காரியம் என்றும் கூறுவர்.

**விகற்ப உரை**: ஒரு பொருளை மாறுபட்ட பல வற்றுள் ஒன்றாக உணர்த்தும் கூற்றை விகற்ப உரை என்பர். விகற்ப உரையில் இரண்டு அல்லது மேற்பட்ட விகற்பங்கள் அல்லது பிரிநிலைகள் காணப் படும். சான்று: நாணயத்தின் ஒரு பக்கம் தலை அல்லது பூ. இங்கு உறுதியாக ஒன்றைக் கூறவில்லை ஆனால் சில விகற்ப உரைகள் திட்டமான அறிவை. அளிக்கின்றன. சான்று: ஒரு பொருள் திரவம் அல்லது திடம் அல்லது வாயு ஆகும். ஒரு பொருளின் இயல்புகளின் தொடர்பை ஒழுங்குபடுத்தி இவ்வுரை உணர்த்துகிறது.

ஏற்புடைய விகற்ப உரையில் விகற்பங்கள் ஒன்றை ஒன்று விலக்குவதுடன், உரையின் விகற்பங்கள் அல்லது பிரிநிலைகள் சேர்ந்து அப்பொருளை நிரப்புந் தன்மை வாய்ந்ததாக ஆக்கவேண்டும். சான்று: அக்கோடு நேரானது அல்லது வளைவானது. இவ்வுரையில் பிரிநிலைகள் ஒன்றை ஒன்று தழுவாமல்

**மரபுவழி அளவையியலில் கூற்றுப் பாகுபாடு**



உள்ளன. கோடு நேராக இருந்தால்,அது நிச்சயமாக வளைவாக இராது. மேலும், இவ்வுரையிலுள்ள இரு பிரிநிலைகளையும் சேர்த்தால் 'கோடு' என்னும் முழுப் பொருள் கிடைக்கின்றது.

**இக்கால அளவையியல் கூற்றுப் பாகுபாடு**: இக்கால அளவையியலில் கூற்றுகளை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். (அ) தனிக் கூற்றுகள், (ஆ) கூட்டுக் கூற்றுகள், (இ) பொதுக் கூற்றுகள்.

**(அ)தனிக் கூற்றுகள்**: தனிக் கூற்று என்பது முழுமையான கருத்தினைக் கொண்டதும், கருத்துச் சிதைவு ஏற்படாமல் அதனை மேலும் சில கூற்றுகளாகப்பிரிக்க முடியாததுமான கூற்று எனலாம். சான்று: 'இளங்கோ ஓர் ஆசிரியர்' என்ற கூற்றை முழுமையான கருத்தைக் கொண்ட தனிக்கூற்றுகளாகப் பிரிக்க இயலாது. எனவே, தனிக்கூற்றுகளின் தனித் தன்மையை விளக்க அளவையியல் வல்லுநர் பெர்ட்ரண்டு இரசல் அவற்றை அணுக்கூற்றுகள் எனக் கூறுகிறார். தனிக் கூற்றுகளை அணுக்கூற்றுகள் எனக் கூறுவதுபோலவே கூட்டுக் கூற்றுகளை மூலக் கூறுக் கூற்றுகள் என்பர்.

தனிக்கூற்றுகள் நான்கு வகைப்படும்.

1. **எழுவாயற்ற உரைகள்** சான்று: மகிழ்ச்சி! திருடன்!, தீ! போன்றவை. இவைகளில் எழுவாய் இல்லாவிடினும் இவை தனிக்கூற்றுகளே. இச்சொற்கள் செய்தியை வெளியிடுகின்றன.

2. **எழுவாய்-பயனிலைக் கூற்று**: பயனிலை குண நோக்கில்அமைந்த கூற்றுகளை எழுவாய்-பயனிலைக் கூற்றுகள் என்பர். சான்று: சந்தனம் நறுமண முடையது. இங்கு 'நறுமணம்' குணநோக்குடையது. எழுவாய்க்குப் பயனிலைப் பண்பு இருப்பதை இக்கூற்று கூறுகிறது.

3. **இன உறுப்புக் கூற்றுகள்**: சான்று: 'வெள்ளி ஓர் உலோகம்'. வெள்ளி உலோக இனத்தினைச் சேர்ந்தது என்ற பொருளை உடையதாக இருப்பதால் இது இன நோக்கு.

ஒரு கூற்றின் பயனிலை எழுவாயின் குணத்தைக் குறிக்குமேயானால் அதை எழுவாய்-பயனிலைக் கூற்று எனல் வேண்டும். ஆனால் எழுவாய் பயனிலை இனத்தின் உறுப்பாக (வகையாக) அமையும் போது இன உறுப்புக் கூற்று எனப்படுகிறது.

4. **தொடர்பு கூற்றுகள்**: 'கோட்சே காந்தியைக் கொன்றான்', 'சுதா, அனிதாவிடம் கடன்பட்டிருக்கிறாள்'. முதல் கூற்று இரண்டு பதங்களை உடையது. இரண்டாம் கூற்று மூன்று பதங்களைக் கொண்டது. 'கடன் படுதல்' என்ற தொடர்புக்குக் கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவர், கடன் என மூன்று பதங்கள் இருக்கவேண்டும். தொடர்பு கூற்றுகளில் தொடர்பு ஒரு பதத்திலிருந்து மற்றொரு பதத்திற்குச் செல்கிறது. எந்தப் பதத்திலிருந்து தொடர்புசெல்கிறதோ அதனைத் தொடர்பு அளிக்கும் பதம் என்பர். எந்தப் பதத்தினைத் தொடர்பு சென்று அடைகிறதோ அதனைத் தொடர்பினைப் பெறும் பதம் என்பர்

**(ஆ) கூட்டுக் கூற்றுகள்**: தனிக் கூற்றுகளின் சேர்க்கையால் ஏற்படுபவை கூட்டுக் கூற்றுகள் எனப்படும். தனிக் கூற்றுகளைப் பி, கியூ, ஆர் என்ற குறியீடுகளால் குறிப்பிடுவது மரபு. இவற்றின் எதிர் மறை **பி**, **கியூ**, **ஆர்** எனக் குறிப்பிடப்படும். **பி** என்றால் பி அன்று என்று பொருள்.

**இணைப்புக் கூற்றுகள்**: இரு தனிக் கூற்றுகளை 'உம்' என்ற சொல்லைக் கொண்டு இணைப்பதால் 'இணைப்புக் கூற்றுகள்' கிடைக்கின்றன. சான்று: 'பசு ஒரு விலங்கு', 'குதிரை ஒரு விலங்கு' என்ற இரு தனிக் கூற்றுகளையும் இணைத்துப் 'பசுவும் குதிரையும் விலங்குகள் ஆகும்' எனக் கூறுவது.

**உட்கிடைக் கூற்றுகள்**: மரபுவழி அளவையியலில் காணப்படும் நிபந்தனைக் கூற்றைப் போன்றவை உட்கிடைக் கூற்றுகள். சான்று: மழை பெய்தால் சாலை ஈரமாகும். இக்கூற்று நிபந்தனையைக் கொண்டு வருவதால் நிபந்தனையே ஒரு தனிக் கூற்றாகவும், அந்நிபந்தனையைப் பின்பற்றினாலோ மீறினாலோ ஏற்படும் விளைவினைக் கூறும் பகுதியே ஒரு தனிக் கூற்றாகவும் காண முடிகிறது.

**விகற்பக் கூற்றுகளும், பிரிவுக் கூற்றுகளும்**: 'இது அல்லது அது, என்ற சொற்றொடர், 'இது எனில் அது இல்லை', 'அது எனில் இது இல்லை' என்னும் இரு பொருள்கொண்டது எனக் கருதப்படுகிறது. ஆனால், இதுவும்அதுவும்' என்ற மூன்றாம் நிலையும் இருக்கலாம் என்பதை மறக்கலாகாது. சான்று: அலமாரியில் உள்ள புத்தகங்கள் ஆங்கிலம் அல்லது தமிழ். இங்குத் தமிழ்ப் புத்தகங்கள் என்றால் ஆங்கிலப்புத்தகங்கள் இல்லை எனக் கருதலாகாது. 'இதுவும் அதுவும்' என்ற மூன்றாம் நிலையைச் சார்ந்ததாகும். ஏனென்றால், இக்கூற்றில் இரு தனிக் கூற்றுகளும் ஒன்றையொன்று விலக்குபவைகளாக இல்லை; தழுவியே உள்ளன.

'நாணயத்தின் ஒரு பக்கம் பூ அல்லது தலை' என்னும் கூற்றைக் கவனித்தால், பூ என்றால் தலையாக இருக்க இயலாது. ஏதாவது ஒன்றாகத்தான் இருக்கமுடியும். 'இது எனில் அது இல்லை', 'அது எனில் இது இல்லை' என்பது இக்கூற்றுக்குப் பொருந்தும்.

இவ்விரு பொருள் வேறுபாட்டினைக் கருதிக் கூற்றுகளை விகற்பக் கூற்றுகள் எனவும், பிரிவுக் கூற்றுகள் எனவும் பாகுபாடு செய்வர். விகற்பக் கூற்றுகளில் 'இதுவும் அதுவும்' என்ற நிலை காணப்படும். ஆனால் பிரிவுக் கூற்றில் இந்நிலை யிராது.

**பொதுக் கூற்றுகள்**: காந்தி குசராத்தி ஆவார். தமிழர்கள் இந்தியர் ஆவர் என்ற இரண்டு கூற்றுகளும் அமைப்பில் ஒன்றாக இருப்பினும், அவற்றில் உள்ள பதங்களின் உறவில் வேறுபாடு இருக்கின்றது. முதல் கூற்றில் ஒரு தனி மனிதர் ஓர் இனத்தின் உறுப்பினர் எனக் கூறப்படுகிறது. இது இன உறுப்பினர் உறவைக் குறிப்பிடுகிறது. ஆனால், இரண்டாம் கூற்று இன நோக்கில் அமைந்துள்ளது. இது போன்ற கூற்றுகளைப் பொதுக்கூற்றுகள் எனலாம். பொதுக்கூற்று அளவு கூறப்பட்ட கூற்று ஆகும். பொதுக்கூற்றுகள் ஓர் இனத்தின் உறுப்பினர்கள் அனைவரையுமோ சிலரையோ உள்ளடக்குவதையோ விலக்குவதையோ பற்றிய செய்தியைத் தெரிவிக்கின்றன.

எஸ்.இல.

**துணை நூல்கள்**:

**அப்புள்ளாச்சாரி, கி.ர.**, ஐரோப்பிய அளவையியல், அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை–18.

**Balasubramaniau, P.**, Symbolic Logic and its devi-sions Procedures, University of Madras, 1980.

**Kahane. H.**, Logic and Philosophy, Wadsworth, California 1973.

## கூற்றுவ நாயனார்:

பெரியபுராணத்தில் இடம்பெறும் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர். திருத்தொண்டத் தொகையில் இவர் 'ஆர் கொண்ட வேற்கூற்றன் களந்தைக் கோன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். இதனால் இவரது வீரத்தியல்பும் பிறப்பிடமும் உணர்த்தப்படுகின்றன. சேக்கிழார் 'குலவுநீற்று வண் கூற்றுவனார்' எனக் கூறுவது இவரது சைவநெறி ஈடுபாட்டைப் புலப்படுத்தும். நம்பியாண்டார் நம்பி இவரை 'ஓதம் தழுவிய ஞாலம் எல்லாம் ஒருகோலின் வைத்தான்' என்றும், 'நாதன் திருவடியே முடியாகக் கவித்தான்' என்றும் கூறும் குறிப்புகளே பெரிய புராணத்தில் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

இவர் களந்தை என்னும் ஊரினர்; பகைவர் படைகளைத் தோள்வலியால் வென்ற வீரம் மிக்கவர்; ஈசன் தன்னாமம் திகழும் நாவினர். ஈசன் அடியார் பாதம் பரவிப் பணிந்தேத்தும் பண்பினர்; அரன் அருளால் அவனி எல்லாம் அடிப்படுத்தியவர்; பொருள் வளத்தால் பொலிவுறுங்கால் நால்வகைப் படையுடன் விளங்கியவர். பகையரசர்களைப் போர்க்களங்களில் வென்று வாகை கொண்டு அவர்களின் நாடுகளைத் தம்மடிப்படுத்தியவர். இவர் மன்னர்க்குரிய திருவெல்லாம் பெற்றும், முடி ஒன்று மட்டும் பெறாது விளங்கினார்.

இவர் மகுடம் புனைய விரும்பித் தில்லைவாழ் அந்தணர்களை வேண்டினார். அவர்கள் 'சோழகுலத் தவர்க்கன்றி மற்றோர்க்கு முடிசூட்டோம்' என்று கூறிச் சேரநாட்டிற்குச் சென்று விட்டனர். உரிமையாக வழிபாடு செய்யும் சிறப்பைத் தம்மில் ஒரு குடியினர்க்குத் தந்து, பெருமைக்குரிய முடியைக் காவல் புரியுமாறு செய்து, தில்லைவாழ் அந்தணர் சேரநாடு எய்தியதால் கூற்றுவ நாயனார் மனம் தளர்ந்து தில்லைப் பெருமான் கழல் பணிந்தார்.

அடியேனுக்கு முடியாக உமது மலர்ப்பாதம் வேண்டும் என்று நினைந்து உருகிய கூற்றுவர்க்கு அன்று இரவு இறைவன் பாதமலரளிக்க, அதனைத் தாங்கி உலகாண்டார். அம்பலத்துள் ஆரா அமுதத் திரு நடஞ் செய் இறைவனார்க்குப் பல்வேறு பூசனைகள் செய்து, அவர் திருவடிகளைச் சேர்ந்து பேரின்பப் பெரு வாழ்வு பெற்றார். ஜி.ஆர்.கி.

## கூன், கார்லட்டன் இசுடீவன்சு (1904-1981)

அமெரிக்க மானிடவியலறிஞர். பண்பாட்டு மானிடவியல், உடல்சார் மானிடவியல், தொல்லியல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க ஆய்வுகள் புரிந்த கார்லட்டன் இசுடீவன்சு கூன் (Carleton Stevens Coon) அமெரிக்காவில் வேக்பீல்டு (Wakefield) என்னுமிடத்தில் 1904–ஆம் ஆண்டு பிறந்தார்.

ஆர்வர்டுப் பல்கலைக் கழகத்தில் முனைவர்ப் பட்டம் பெற்ற (1928) கூன், அப்பல்கலைக் கழகத்திலேயே மானிடவியல் துறையில் (1926–1948) பணியாற்றினார். இரண்டாம் உலகப் போரின்போது ஆப்பிரிக்காவில் போர்த்திற நடவடிக்கைக்குப் பயன்படத்தக்க

முறையில் நடைபெற்ற அலுவலகத்தில் பணியாற்றினார். பின்னர்ப் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்திலுள்ள இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) அருங்காட்சியகத்தின் காப்பாட்சியராகவும், அத்துறையின் பேராசிரியராகவும் பொறுப்பேற்றுப் (1948-1963) பணியாற்றினார்.

கூன் தொடக்க காலத்தில் உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) துறையில் ஈடுபாடு கொண்டு, மனித படிமலர்ச்சியைக் கண்டறிவதில் முனைந்தார். இத்துறையில் இவர்கண்டறிந்த ஆய்வுகளுள் முதன்மையானவை இரண்டு. முதலாவது 1939-இல் வட ஆப்பிரிக்காவில் 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நியாண்டர்தல் மனித எலும்புக் கூடுகளைக்கண்டறிந்து ஆராய்ந்தது. இரண்டாவது, ஈரானில் ஒட்டுக் (Hotu) குகையில் 75,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனின் மூன்று எலும்புக் கூடுகளைக் கண்டறிந்து ஆராய்ந்தது,

இவர் வரலாற்றுக்கு முற்பட்ட மனித இனத்தவரின் வேளாண் வாழ்க்கை முறையைக் கண்டறிவதில் முனைந்தார். இதற்காக மத்திய கிழக்கு, பட்டகோனியா, இந்தியா முதலான பகுதிகளில் இம்மக்களைப் பற்றிய தரவுகளைச் சேகரித்து ஆராய்ந்தார். அதன் பயனாக, மனித இனங்களின் தோற்றத்தையும் அதன் வேறுபாடுகளையும் பற்றித் தெளிவாக இரண்டு நூல்களை இவர் எழுதினார். இனம் பற்றி அறிய விழைந்த மானிடவியலாருக்கு அந் நூல்கள் வழிகாட்டியாக அமைந்தன.

கூன் நூல்களுள் குறிப்பிடத்தபிக்க சில வருமாறு: காரவன்: மத்திய கிழக்கு நாடுகளின் கதை (Caravan: The Story of the Middle East, 1951), மனிதனின் கதை (The Story of Man, 1954), இனங்களின் தோற்றம் (The Origin of Races, 1962), வாழும் மனித இனங்கள் (The Living Races of Man - 1965), வேட்டையாடும் மக்கள் (The Hunting Peoples, 1971). கூன், 1981-ஆம் ஆண்டு மறைந்தார். சீ.ப.

**கூன் லூன் மலைகள்** சீனக் குடியரசு அமைப்பில் உள்ள சிங்கியாங்கு உய்கூர் (Sinkiang Uihur), திபெத்து ஆகிய தன்னாட்சி பெற்ற மண்டலங்களிலும், சிங்காய் (Tsinghai) என்ற மாநிலத்திலும் பரவியுள்ளன. சோவியத்துக் குடியரசில் உள்ள பாமீர் முடிச்சுகளில் இருந்து கிழக்கு நோக்கிச் சீன-திபெத்திய மலைத்தொடர்கள் வரை 1675 மைல்கள் நீண்டுள்ளன. இவை ஆசியாவில் உள்ள மிக நீளமான மலைத் தொடர்கள். உலகில் உள்ள மிக உயரமான பல மலைத்தொடர்களை இவை இணைத்துள்ளன. திபெத்துப் பீடபூமியிலிருந்து அவற்றை நோக்கும்போது அவை மிக உயரமாகக் காணப்படுவதில்லை. அவற்றின் சராசரி உயரம் 3500 முதல் 5000 அடியாக உள்ளது. அதற்குக் காரணம் திபெத்தின் பீடபூமியே. அது ஏறத்தாழ 16,000 அடி உயரத்தில் இருப்பதேயாகும். வடக்கிலுள்ள தரிம் (Tarim), அல சான் (Ala Shan) சமவெளிகளிலிருந்து நோக்கும் போது அவை மிக உயரமாகக் காணப்படுகின்றன; ஏறத்தாழ 15,000 அடி உயரத்தில் இவை அமைந்துள்ளன.

பொதுவாக, இவை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பரந்து கிடக்கின்றன. ஆனால்ஓர் இடத்தில் அவை வடமேற்கு-தென்கிழக்கிலிருந்து தென்மேற்கு-வடகிழக்காகவும் சென்று, மீண்டும் வடமேற்கு-தென்கிழக்கு நோக்கிச் செல்கின்றன. ஏறத்தாழக், கூன்லூன் மலைகள் (Kun Lun) யாவும் இணைகோடுகள் போன்ற மலைத்தொடர்களாக அமைந்துள்ளன. திபெத்துக்கு அருகே உள்ள மலைத்தொடர்கள் மிகவும் உயரமானவை. குறுகிய பள்ளத்தாக்குகள் அவற்றைப் பிரிக்கின்றன.

கூன்லூன் மலைகள் யாவும் ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. அவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: அவை கிழக்குப்பகுதி, மேற்குப்பகுதி. கிழக்குப் பகுதி மிகப் பெரியது; மேற்குப் பகுதி மிகச் சிறியது. மேற்குப் பகுதியானது பாமீரில் தொடங்கி கோடான் கேரியப் (Khotan Kheria) பகுதியில் முடிவடைகிறது. மேற்குப் பகுதியில் மூன்று மலைத்தொடர்கள் உள்ளன. அதன் தெற்குப் பகுதி சா-லி-கோயெர் (Sha-li-ko'erh), தா-சி-கூ-எர்-கான் (Ta-Shi-K'u-erh-Kan), அசில் (Agyl) மற்றும் சுகெடா (Sugottag) மலைத்தொடர்களைக் கொண்டுள்ளது. அதன் வடக்குப் பகுதியில் திசுநாபு (Tiznaf), சாண்டுசுதாசு (Sandzhutaj) ஆகிய மலைத்தொடர்கள் உள்ளன. உட்பகுதியில் முசுதாகோ ஆதே (Mu-ssu-t'a-lo-a-te), தோக்தா கோரம் (Tokhta koram), கரன்குதாக்கு (Karangu-tag) மலைத்தொடர்கள் உள்ளன.

கூன்லூன் மடிப்பு மலைகளும் கற்களும் கெர்சினியன் காலத்தைச் (Hercynian age) சார்ந்தவை. அதாவது 230,000,000 முதல் 250,000,000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியனவாகும். உட்பகுதியிலுள்ள பள்ளங்கள் அண்மைக் காலத்தனவாகும்.

இம் மலைகளில் உற்பத்தியாகும் ஆறுகள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்று பெரிய ஆறுகள். அவை காரகோரம் மலைத்தொடரில் தொடங்கி கூன்லூன் மலைகளைப் பிளந்துகொண்டு செல்கின்

றன. மற்றொன்று, சிறிய ஆறுகள். அவை ஓரங்களில் உள்ள சரிவுகளில் பாய்கின்றன. கெசு (Gez) யார்க் கண்டு (Yarkond), காலாகாசி (Ka-la-K'a-Shih), யு-லுங்-கா-சி (Yu-Lung-Kga-Shih), கோலியா(Ko-li -ya), கா-லா-மு-லான் (Ha-la-mu -land) மற்றும் செ-எர்-சென் (Ch'e-erh-ch,en) ஆகியவை நீளமான, வளைந்து வளைந்து செல்லும் நதிகளாகும். இந்த ஆறுகளுக்கு வேண்டிய நீரைப் பெரும்பாலும் பனி மலைகள் தருகின்றன. மழை நீரும் அவ்வப்போது அவற்றிற்குக் கிடைக்கிறது. ஆகவே, நீரோட்டம் பருவ காலங்களைப் பொறுத்து இருக்கிறது. கோடை யில் நீரோட்டம் மிகுதி.

இம் மலைகளின் மேற்பரப்பு ஆண்டின் பெரும் பகுதியில் போதிய ஈரப்பதத்தைப் பெறுவதில்லை. ஆகவே, அங்கு மிகக் குறைவான வேகத்தில் மண் தோன்றுகிறது. மண் வளமற்றதாகவும் இருக்கிறது. பாமீர் மலைகளுக்கருகிலும், கிழக்குக் கூன்லூன்பகுதி களிலும் மட்டுமே பழுப்பு நிற மண் காணப்படுகிறது அங்குத் தாவர வளர்ச்சி ஏனைய இடங்களைவிட மிகுதியாக உள்ளது.

கூன்லூன் மலைகள் மைய ஆசியாவில் இருப்ப தால் இந்திய, மற்றும் பசிபிக்குக் கடல்களில் தோன் றும் பருவக் காற்றினால் ஏற்படும் நன்மை இவற்றிற்கு கிடைப்பதில்லை. அதற்கு மாறாக உள்நாட்டுக் காற் றினுடைய பாதிப்புக்கு இவை உட்பட்டுள்ளன. அதன் விளைவாக ஆண்டு, மற்றும் நாள் வெப்பநிலையில் பெருத்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. அடிக்கடி இங்குப் பெருங் காற்று வீசுகிறது.

சரியானமண்வளமற்றதன்மை, ஈரப்பதம் போதிய அளவு இன்மை, போதிய வெப்பமின்மை போன்ற காரணங்களால் தாவரங்கள் இங்குச் சரியாக வளரு வதில்லை. தாவரங்கள் குட்டையாகவும், கனத்த இலைகளை உடையனவாகவும் இருக்கின்றன. தாவ ரங்களால் மூடப்பட்டிருக்கும் பகுதி மிகமிகச் சிறிய தாகும். கூன்லூனின் பெரும் பகுதிகளில் பாலை வனத்திற்குரிய நிலைமைகள் காணப்படுகின்றன. மலையடிவாரத்தில் வெப்பமான பாலைநிலமும், உச்சியில் குளிர்ச்சியான பாலைநிலமும் உள்ளன. கூன்லூன் மலைகளின் மேற்கு ஓரத்திலும் கிழக்கு ஓரத்திலும் அடர்ந்த காடுகளைக் காணலாம்.

விலங்குகளும் இங்கு மிகுதியாக இல்லை. இருக்கும் விலங்குகளும் விதவிதமாக இருப்பதில்லை. பாமீர் மலைகளுக்கு அருகிலும், கிழக்குப் பகுதிகளிலும் விலங்குகளின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளது. பல வகைப்பட்ட விலங்குகளான ஆடு, கழுதை, யாக்கு, எருமை, முயல், ஓநாய், கரடி போன்றவற்றை இங்குக் காணலாம்.


கூன்லூனின் பெரும் பகுதியில் மனிதன் வாழ்வ தில்லை. ஆற்றுச் சமவெளிகளில் மட்டுமே மனிதன் வாழ்கிறான். உய்கூர் (Uighur) என்ற இனத்தவர்கள் இங்கு மிகுதி. அவர்கள் தரிம் (Tarim) வடிநிலத் தின் ஓரத்திலுள்ள மலையடிவாரத்தில் வாழ்கின்ற னர். தாசிக்குகளும் (Tajiks) மங்கோலியர்களும் முறையே மேற்குப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் வாழ்கின்றனர். வேளாண்மையும் ஆடு வளர்ப்பும் அவர்களுடைய முக்கிய தொழிலாகும். அவர்கள் கோதுமை, பார்லி ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர்.

இப்பகுதியில் போக்குவரத்து மிகமிகக் கடினம் இங்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துக்கு மூன்று சாலைகளே உகந்தனவாக உள்ளன. அவற் றுள் ஒன்று தரிம் வடிநிலத்தில் தெற்கு ஓரத்தில் செல்கிறது. மற்ற இரண்டு சாலைகள் திபெத்துக்குச் செல்கின்றன.

கூன்லூன் மலைகளில் பலவகைத் தாதுப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தங்கம், ஈயம், துத்தநாகம், இரும்பு, செம்பு, நிலக் கரி குறிப்பிடத்தக்கனவாகும். எண்ணெயும் இங்குக் கிடைப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆனால், அவற்றை முழு அளவிற்குப் பயன்படுத்த இயலவில்லை. குடிநீர் வசதியின்மை, மக்கள் நடமாட் டம் இன்மை, போக்குவரத்து வசதியின்மை போன் றவை அதற்கு முக்கிய காரணங்களாகும்.


தி.ஆர்.இரா.

**கெ** ககர மெய்யோடு எகரத்துக்குரிய முயற்சியும் கலந்தால் இந்த ஒலி தோன்றுகிறது. க என்ற மெய்யெழுத்துக்கும் எகரத்துக்கும் கொடுக்கப் பட்ட குறிப்புகளைப் பார்க்கவும். வாயைத் திறந்து அடித் தொண்டையிலிருந்து எழும்பும் ககர ஒலியோடு இளித்த நிலையில் சற்று எடுப்பாக வெளிப்படும் ஒலியே கெ என்று சொல்லலாம்.


**உருவம்:** பண்டைக் காலத்தில் மொழி பற்றிய முன்னறிவினால் மட்டும் உணரக்கூடிய வகையில் எகர ஒகரங்களுக்கு வேற்றுமை காட்டாமல் எழுதி வந்தார்கள். எகர ஒகர உயிர்மெய் எழுத்துகளுக்கும் புள்ளி இட வேண்டு மென்ற தொல்காப்பிய வழக்கைப் பின்பற்றி எழுதாததால் வந்த பயனே இது. முதலில் ககரத்திற்குத் தலையிலிருந்து இடப் புறம் இழுக்கப்படும் கோடு எகர ஒகரங்களைக் குறிப்பதாயிற்று. இவ்வுருவம் தமிழ்நாட்டில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை மாறிய தாகத் தெரியவில்லை. ... ... ... 

அடுத்த நிலையில் இடப் புறம் இழுக்கப்பட்ட இந்தக் கோடு வளைவாக எழுதப்பட்டது. கெ என்ற எழுத்துக்கு இவ்வுருவம் காணப்படாவிடினும் மகேந்திரபல்லவனின் ஆறாம் நூற்றாண்டு (செங்கை) வல்லம் கல்வெட்டில் காணப்படும் செ பொ என்பவற்றின் வளர்ந்த உருவம் கெகரத்திற்கும் அமை வதாகக் கொள்ளலாம் என்று உய்த்துணர இடமுண்டு. ஆக, கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அரச்சலூர்க் கல்வெட்டு வரை காணப்பட்ட பழைய நேர் கோடு ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னால் வளைந்த கோடாக மாறிற்று என்று தெரிகிறது. ... ... ... 

இந்த எடுத்துக்காட்டுகளை நோக்கும்பொழுது புள்ளியிடும் வழக்கம் இல்லையோ என்று தோன்றலாம். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவ பர மேச்சுவரவர்மனின் கூரம் செப்பேடுகளில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியும் மதுரை வைகைப் படுகைப் பாண்டியன் சேந்தனின் வட்டெழுத்துக் கல்வெட் டில் எகர ஒகர உயிர்மெய் எழுத்துக்களுக்கு மிகத் தெளிவாகப் புள்ளிகளும் இடப்படிருக்கின்றன. அவ்வாறே எட்டாம் நூற்றாண்டு தஞ்சை மாவட்டம் செந்தலைமுத்தரையர் கல்வெட்டிலும், திருச்சி மாவட்டம் திருவெள்ளறை நாலுமூலைக் கேணியில் தந்திவர்மன் கல்வெட்டிலும் புள்ளிகள் தெளிவாகக் காணப்படுகின்றன. ... ... ... 

வட்டெழுத்தில் எகர மேறிய ககர உயிர்மெய்யெழுத்தின் உருவத்தை இங்கே கண்டுகொள்ளவும். இவை மதுரை மாவட்டத்து ஆனைமலைப் பாண்டியர் கல்வெட்டில் காணப்படும். (தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள், 14-ஆம் தொகுதியில் நிழற்படங்களைப் பார்க்கவும்). ... 

இடப்புறம் இழுக்கப்பட்ட வளைகோடு தனித்து எழுதப்பட்டு எகர ஏகாரங்களைக் குறிப்பிடலாயிற்று. இவற்றை மேற்குறிப்பிட்ட செந்தலைக் கல்வெட்டிலிருந்து படிப்படியாகக் ககர மெய்யிலிருந்து பிரிந்து பதினான்காம் நூற்றாண்டில் விசயநகர மன்னன் அச்சுததேவராயனின் திருவரங்கக் கல்வெட்டு வரை எழுதப்பட்டு வந்தது. இந்த வளைகோடு தொடக்கத்தில் சுழிக்கப்பட்டதுபோல எழுதப்பட்டது. இது கொம்பு என்ற பெயரால் குறிக்கப்படுகிறது. ... ... ...



கே.ஜி.கி

**கெட்டிசுபர்கு:** அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள பென்சில்வேனியா மாநிலத்தைச் சேர்ந்த ஓர் ஊர். கெட்டிசுபர்கு அல்லிகனி மலைத் தொடரின் அடிவாரத்திலுள்ளது. இந்த ஊரின் நிலப்பகுதி சேன் கெட்டிசு (Jane Gettys) என்பவருக்குச் சொந்தமாக இருந்தது. அவர் கி.பி. 1780-ஆம் ஆண்டு அளவில் அங்கு ஓர் ஊரையே உருவாக்கிவிட்டார். அதனால்தான் இதற்குக் கெட்டிசுபர்கு என்ற பெயர் ஏற்பட்டது. இங்குப் பழத்தோட்டங்களும், பழங்களைப் பதனிடும் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. மரச்சாமான்கள் செய்தல், துணிகள் நெசவு, தோற்பொருள்கள் செய்தல், காகிதப் பொருள்கள் செய்தல் முதலிய தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. இவ்வூர் அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஒரு முக்கிய படைத்தளமாக விளங்கியது. இங்குத்தான் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் இலிங்கன் வரலாற்றுப் புகழ் பெற்ற 'கெட்டிசுபர்குச் சொற்பொழிவை' ஆற்றினார். போரில் இறந்தவர்களை அடக்கம் செய்த இடமும் (Gettysburg National Cemetery), அவர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட பூங்காவும் (National Military Park) போரின் நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. இங்கு ஒரு பெரிய கலை, அறிவியல் கல்லூரியும் (Gettysburg College) ஒரு கிறித்தவ சமயக் கல்லூரியும் (Theological Seminary) இருக்கின்றன; பல பொருட்காட்சி நிலையங்களுமிருக்கின்றன. இவ்வூரின் அருகிலுள்ள ஒரு பண்ணையில் தான் முன்னாள் குடியரசுத்தலைவர் ஐசன்ஹவர் தாம் ஓய்வு பெற்றபின் வாழ்ந்துவந்தார். மு.அ.




கெட்டிசுபர்குத் தேசிய நினைவுப் பூங்கா

**கெட்டேல், சேம்சு மக்கீன் (கி.பி.1860-1944):** உளத்திறன் சோதனைகள், தனியாள் வேற்றுமைகள் (Individual Differences), உளவியற் பரிசோதனை முறைகள், கல்வி,வணிகம், தொழிற்சாலைகள், விளம்பரம் ஆகியவற்றில் உளவியற் பயன்பாடு ஆகியவை குறித்துச் சிறப்பான ஆராய்ச்சிப் பணி செய்த அமெரிக்கநாட்டு உளவியலறிஞர்; கல்வியாளர். அறிவியல் ஆர்வம் மிகக் கொண்டவர் சேம்சுமக்கீன் கெட்டேல் (James Mckeen Cattell). இவர் அறிவியல் இதழ்களுக்கும், உளவியற் கட்டுரை ஏடுகளுக்கும் ஆசிரியராகவும் இருந்தவர்.

ஈசுட்டன் (Easton) நகரில் பிறந்த கெட்டேல், அங்குள்ள கல்லூரியில் பயின்றார். இவர் பின்னர்ச் செருமனியிலுள்ள பல்கலைக் கழகங்களில் பயின்றார். பிற்காலத்தில் புகழ் வாய்ந்திருந்த சோதனை உளவியலறிஞர் (Experimental Psychologist) வில்கெல்ம் உண்டு (Wilhelm Wundt) என்பவரும் கெட்டேலுடன் பயின்றார். அமெரிக்காவுக்குச் சென்ற கெட்டேல் சிறிது காலம் பால்டிமோரிலுள்ள (Baltimore) பல்கலைக் கழகம் ஒன்றில், இசுடேன்லி ஆல் (Stanley Hall) என்பவருக்கும் மாணவராயிருந்தார். அப்போது தான் உளத்திறன் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ள ஆர்வம் ஏற்பட்டது.

மீண்டும் செருமனி சென்ற கெட்டேல் உண்டு என்பாருடன் சேர்ந்து உளவியற் சோதனை பல செய்து வெற்றி கண்டார். செருமனியிலுள்ள இலெப்சிகு (University of Leipsig) பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் (Ph.D.) கி.பி. 1886இல் பெற்றார். பின்னர் 1888-இல் பிலடெல்பியாவிலுள்ள (Philadelphia) பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில்



கெட்டேல் சேம்சு மக்கின்

(University of Pennsylvania) முதல் உளவியற் பேரா சிரியரானார். அங்கு உளவியல் ஆய்வகம் நிறுவிய கெட்டேல், கல்லூரி மாணவர்களுக்காக நிறைய உளத்திறன் அளவீட்டுச் சோதனைகள் பல உருவாக் கினார்.

கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் கி.பி. 1891-இல் உளவியல் தலைமைப் பேரராசிரியர் பதவி யேற்றார். அங்கும் தன் வாழ்நாளில் பெரும்பகுதி நேரத்தை உளவியற் சோதனை ஆக்கத்தில் செல வழித்தார். இவர் காலத்தில் அங்கு நூற்றுக்கணக் கான உளவியலறிஞர்களுக்குப் பயிற்சி தரப்பட் டது. உளவியல் ஆய்வு (Psychological Review) என் னும் இதழை 1894-இல் தொடங்கினார். இவர் 1900-இல் தொடங்கிய அறிவியல் மாத இதழுக்கு (Scientific Monthly) 1943 வரை ஆசிரியராக இருந்து வந்தார். முதல் உலகப்போரில் அமெரிக்காவின் கொள்கையை வெளிப்படையாகக் குறை கூறிப் பேசியதால் 1917-இல் கொலம்பியாப் பல்கலைக் கழ கத்திலிருந்து நீக்கப்பட்டார். பின்னர் 'அமெரிக்க நாட்டு இயற்கைவாதி' (American Naturalist) 'பள்ளியும் கலையும்' (School And Art) என்னும் இதழ்களின் ஆசிரியராக இருந்து வந்தார். தொழிற் சாலை, கல்வி, வணிகம் ஆகியவற்றுக்கு உதவும் வகையில் பயனறிவு உளவியல் (Applied Psychology) ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக 1921-இல் உள வியற் கழகம் (Psychological Corporation) ஒன்றை இவர் நிறுவியது குறிப்பிடத்தக்கது. இலங்காசுட்டரில் (Lancaster) 1944-இல் இவர் காலமானார். எஸ்.த.

**கெடிலம் ஆறு** தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது. பெண்ணையாறு, கெடிலம் ஆகிய இருஆறுகள் இம் மாவட்டத்தின் வழியாகப் பாய்ந்து கடலில் கலக்கின்றன. கூடலூர் என்ற பெயர், இந்த இரண்டு ஆறுகளும் ஓரிடத்தில் கூடுவ தனால் ஏற்பட்ட பெயராகும். இந்த ஆற்றில் அடிக்கடி பெரும் வெள்ளம் ஏற்படுவதனால் பெருஞ் சேதம் ஏற்படுகிறது. இந்த இரண்டு ஆறுகளும் ஒன்று கூடியதனால் கி.பி. 1884-இல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு அந்த நகரை 24 மணி நேரத் திற்கு அச்சத்திற்குள்ளாக்கியது. அ.உ.செ.

**கெடுபிடிப் போர்**: பன்னாட்டு உறவுகளில் ஓர் அரசியல் கொள்கையின் கீழ் அணிதிரண்ட நாடுகளுடன் ஏனைய கொள்கையைக் கடைப்பிடிக் கும் அணி நாடுகள் எப்போது வேண்டுமானாலும் போர் தொடுக்கலாம் என்னும் கெடுபிடி நிலையை உருவாக்குவது 'கெடுபிடிப் போர்' (Cold war) எனப் படும்.

வெர்சே உடன்படிக்கைக்குப் பிறகு, ஐரோப்பிய நாடுகள், ஒரு குறிப்பிட்ட கால கட்டம் வரை உருசிய நாட்டை, அது கடைப்பிடித்து வந்த மார்க்சியக் கோட்பாட்டின் காரணமாக விரும்பத்தகாத ஒரு நாடாகவே நடத்தி வந்தன. உலகப்போர்க் காலத் தில் போர்க்கால உறவுகள் காரணமாக ஐரோப்பிய நாடுகள் உருசியாவை நெருங்கி வந்தாலும் போரின் முடிவுக்குப் பின்னர் பழைய நடவடிக்கைகளையே தொடர்ந்தன. புதியநாடுகள் ஏனைய நாடுகளுடன் நட்புறவு கொள்ள விழைந்தபோது ஐரோப்பிய அணியிலோ உருசிய அணியிலோ சேர்ந்து கொள்ள வேண்டியநிலை உருவானது. இரு அணிகளும் எதிர் எதிராகவே நின்று போர்க்கால உறவு போன்ற ஓர் உறவினைப் போர் நடத்தாமலேயே உருவாக்கின. கொள்கை முறையிலான இப்போரினை மக்களாட்சிக் கும் எதேச்சாதிகாரத்துக்கும் நடக்கும் போர் என் றும், சுதந்திர நாடுகளுக்கும் மார்க்சிய நாடுகளுக்கும் நடக்கும் போர் என்றும் ஐரோப்பிய நாடுகள் அறி விப்புச் செய்தன.

இக்கெடுபிடிப்போரின் காரணமாக முதலில் இடுக்கணுற்றது ஐ.நா. நிறுவனமாகும். இக்கெடு பிடிப்போர் ஐ.நா.வின் நோக்கங்களையே செயற் படுத்தவிடாது செய்தது. அதற்கான முக்கிய கார ணம் இரு வல்லரசுகளுக்கிடையே நிலவி வந்த கொள்கை முறையிலான நம்பிக்கையின்மையேயாகும். அதன் காரணமாக ஐரோப்பிய முதலாளித்துவ நாடு கள் எடுக்க விழையும் எந்த முடிவுகளையும் தகர்ப் பதையே முழுநேர வேலையாகக் கொண்டிருந்தது உருசியா. மற்ற ஐரோப்பிய முதலாளித்துவ நாடு களும் தாங்கள் இந்த நோக்கத்தில் உருசியாவுக்குச்


சற்றும் சளைத்தவை அல்ல என்ற முறையிலேயே நடந்து கொண்டன. ஐ.நா.வின் பாதுகாப்புச் சபை (Security Council) இந்தக் கெடுபிடிப் போரின் காரணமாகச் சில முக்கியமான தருணங்களில் செயற் பட முடியாது தத்தளித்தது. அதனால், சில நாடுகள் ஐ.நா.வின் உறுப்பினராக முயன்றும் ஐ.நா. வின் உறுப்பினர் ஆக முடியவில்லை. (எ-டு) இந்தோனே சியா.

இப்போது நடந்து கொண்டிருக்கும் வல்லரசு களுக்கிடையிலான ஆயுதப்போட்டிக்குக் காரணமாக விளங்குவது இந்தக் கெடுபிடிப் போரே. இன்றைய கெடுபிடிப் போரில் ஈடுபடுகின்ற இரு அணிகளில், ஓர் அணியின் தலைமை அமெக்காவிடமும் மற்றோர் அணியின் தலைமை உருசியாவிடமும் இருப்பதால், தத்தமது அணிகளுக்கு மிகுதியான அளவு உறுப்பினர் களைச் சேர்ப்பதே இவர்களது வேலையாக இருக் கிறது. இந்த நோக்கில்தான் அமெரிக்காவும் உருசியா வும் தத்தம் புதிய அயல்நாட்டுக் கொள்கைகளை வகுத்துள்ளன. இக்கொள்கை முறையிலான சச்சரவில் தான்மட்டும் ஈடுபடாது, தன்னுடைய நட்பு நாடு களையும் அதில் இணைத்துவிடுவதால் இரண்டு அணி நாடுகளும் ஒன்றுக்கொன்று மோதிப் போரிடா மலேயே போருக்கு இணையான சூழலைத் தோற்று விக்கின்றன. இச்சூழல் மாற வேண்டுமானால், ஆயுதக் குவிப்பு மறைந்து ஆயுதக்குறைப்பு ஏற்பட வேண்டும். ஆயுதங்களுக்குச் செலவிடும் பொருளை நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடவேண்டும். ‘கெடு பிடிப்போர்’ நிலை அகல இந்தப்பணி உடனடியாகத் தொடங்கப்படுவது இன்றியமையாததாகும். ம.கா.

**கெண்டகி** அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 50 மாநிலங்களில் ஒன்று. இது பதினைந்தாம் மாநிலமாக கி.பி. 1792-இல் இணைந்தது. கெண்டகியின் (Kentucky) பரப்பு 40,395 சதுர கி.மீ. இது அமெரிக்க நாட்டின் மத்தியப் பகுதியின் தெற்கில் உள்ளது. இதன் தலைநகர் பிராங்க்பர்ட்டு (Frankfort). வடக் கில் ஒகியோ ஆறு, இதை இல்லிநாய், இந்தியானா, ஒகியோ ஆகிய மூன்று மாநிலங்களிலுமிருந்து பிரிக் கிறது.

அமெரிக்காவில் அலிகெனி மலைத்தொடருக்கு மேற்கில் உள்ள கெண்டகி (Kentucky) மாநிலம் புகையிலைக்கும், மதுவுக்கும், பந்தயக் குதிரைகளுக் கும் பெயர் பெற்றது. இங்குத் தங்கச் சுரங்கங்களும் வளமான நிலங்களும் பல காடுகளும் உள்ளன. தொடக்க காலத்தில் பல மரங்கள் வீணாக வெட் டப்பட்டதால் மரவளம் குன்றியது. அமெரிக்காவின் நிலக்கரிச் சிறப்புப் பெற்ற மாநிலங்களில் இதுவும் ஒன்று. பல இயற்கைக் காட்சிகளும், பூங்காக்களும், நினைவுச் சின்னங்களும் நிறைந்துள்ள இம்மாநிலத் திற்குச் சுற்றுலாப் பயணிகள் மிகுதியாக வருகின் றனர்.

இப்பகுதியில் 15,000 ஆண்டுகட்கு முன்னரே சிவப்பு இந்தியர்கள் வாழ்ந்திருக்கக்கூடும் என்று அறி ஞர்கள் கருதுகின்றனர். ஐரோப்பிய வெள்ளையர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இங்கே புகுந்தபொழுது பல இந்தியக் கூட்டத்தினர் அவர் களை எதிர்த்தனர். இறுதியில் தோல்வியடைந்தனர். கெண்டகி என்ற சொல் ‘நாளைய நன்னிலம் என்ற பொருளையுடைய ஒரு வார்த்தையினின்று தோன்றியது. கெண்டகி மாநில மக்கள், அமெரிக்க நாட்டு வரலாற்றில் பல சேவைகளைப் புரிந்துள்ள தைக் காணலாம். அயலவர் அமெரிக்காவில் நுழை




கெண்டகி

வதைத் தடுப்பதற்காக கி.பி. 1798-இல் இயற்றப் பட்ட கூட்டாட்சி அரசுச்சட்டத்தைக் கெண்டகி வன்மையாக எதிர்த்தது. இங்கிலாந்துக்கு எதிராக 1812-இல் நடைபெற்ற போரை மிகவும் ஆதரித்தது. இங்கு அடிமை முறை நிலவியபடியால் அமெரிக்க உள்நாட்டுப் போருக்குப் பிறகும் இனக்கலவரங்கள் அடிக்கடி நிகழ்ந்தன.

மாநில அரசு கி.பி. 1891-ஆம் ஆண்டு அரசிய லமைப்புப்படி அமைந்துள்ளது. மாநில ஆளுநர் நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படு கிறார். இரண்டு அவைகளையுடைய சட்டமன்றம் சட்டங்களை இயற்றுகிறது. மேலவை (Senate) 38, உறுப்பினர்களையும், கீழ்அவை(பேராளர் அவை) 100 உறுப்பினர்களையும் கொண்டுள்ளன. மேலவை உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகட்கு ஒருமுறையும், கீழ்அவையினர் இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆட்சி முறைக்காகக் கெண்டகி 120 வட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இதன் மக்கள்தொகை 3,386,000 (1975). மாநிலத்தின் பரப்பு 104,623 ச.கி.மீ. மாநிலத்தின் இலக்குக்குறிச் சொற்றொடர் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; பிளவுபட்டால் வீழ்ச்சியே' என்பதாகும். பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் இங்கு உள்ளன.

**கெண்டகி**: இது ஓர் ஆறும் ஆகும். கெண்டகி மாநிலத்தின் நடுப்பகுதியில் ஓடும் வடக்கு போர்க்கு (North Fork), தெற்கு போர்க்கு ஆறுகளும் இணைந்து கெண்டகி ஆற்றை உருவாக்குகின்றன. இதன் நீளம் 416.7 கி.மீ. நாவாய்ப் போக்குவரத் துக்கு ஏற்றதாக இந்த ஆறு அமைந்துள்ளது.

தெ.பா.

**கெப்லர் சோகான்சு** (கி.பி. 1571-630) இவர் சமய சித்தாந்தத்தைக் கற்றதுடன் அறிவியலிலும் ஆர்வம் காட்டினார். இவர் மூன்று கோள்களின் ஒழுங்கு முறைகளைக் (Planetary Laws) கண்டுபிடித் தார். நிலக்கணக்கியலில் தொடர்ச்சிக் கொள்கையை யும் (Principles of Continuity) தொலைநோக்கியை யும் கண்டுபிடித்தார்.

கெப்லரின் (Kepler Johannes) மூன்று கோள் களின் ஒழுங்கு முறைகள் கோள்கள் சூரியனைச் சுற்றி நீள் வட்ட வடிமாகச் சுழல்கின்றன என்று கூறுகின்றன. மேற்கூறிய மூன்று ஒழுங்கு முறைகளும் சிந்தனையின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். அவற்றை முதல் இயற்கை விதிகள் என்ற கூறலாம் கெப்லர் வான்நூலில் இயலகைச் சக்திகள் என்ற கருத்துக் கொள்கையைப் புகுத்தினார். உலகம் ஞாயிற்றை மையமாகக் கொண்டு சுழல்கிறது என்ற கருத்தினை வலியுறுத்தினார். அதற்குக் காரணம் இயற்கையும், புலன்கடந்த நுண்பொருள் தன்மையு மாகும். புலன் கடந்த நுண்பொருள் காரணத்தையும்



கெண்டகி மாநிலத்திலுள்ள கம்பர்லாந்து நீர்வீழ்ச்சி

இவர் விளக்கினார். அதாவது, நிலையான சூரியன், நட்சத்திரங்கள் ஆகியவற்றுக்கிடையேயுள்ள இடைவெளியைத் தந்தையாகிய இறைவனுக்கும், மகனுக்கும், புனித ஆவிக்கும் உவமை கூறினார். மேற்கூறிய உவமையை நீண்ட நாள்கள் இவர் நம்பினார். பிறகு நிலையான நட்சத்திரங்கள் அசைகின்ற நட்சத்திரங்களாயின. எனவே, அவை கோள்கள் என்று கூறினார் சூரியன்மேற்கூறிய கோள்களின் நடுவில் அமைந்திருக்கிறது. சூரியன் அசையாமலிருந்தாலும், மற்றவைகளை இயக்குகின்றது. கடவுள் படைத்தலைப் புனித ஆவி மூலமாகச் செய்வது போல, சூரியன் தன்னுடைய சக்தியை அசைகின்ற பொருள்கள் மேல் செலுத்துகின்றது.

புனித ஆவியானது அசையாமலிருக்கிற சூரியனுக்கும் நட்சத்திரங்களுக்குமுள்ள இடைவெளியை நிரப்புவது மட்டுமல்லாமல் ஒரு செயற்படும் கருத்தாவாக அமைகின்றது. இதற்குமுன் யாரும் சூரியனிடம் இத்தகைய ஒரு சக்தியிருப்பதாக நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இயக்கத்தைப் பற்றிப் பேசும்போது சூரியனின் அருகிலிருக்கும் கோள்கள் விரைவாகச் சுழல்கின்றன. தொலைவில் உள்ள கோள்கள் மெதுவாகச் சுழல்கின்றன. சூரியனிடமிருந்து செல்லுகின்ற சக்தி முதலில் வேகமாகவும், வலிமையாகவும் செல்கிறது. கடைசியில் செல்லச்செல்ல வேகமும், வலிமையும் குறைந்துவிடுகின்றன. கெப்லர் அரிசுடாட்டிலின் கொள்கையான உலகப் பொருள்கள் உலகின் மையத்தை நோக்கிச் செல்வதால் பளுவாகவும், நெருப்புத் தொடர்பான பொருள்கள் உலகின் எல்லைக்கோட்டை நோக்கிச் செல்வதால் இலேசாகவும் இருக்கின்றன என்ற கருத்தினை எதிர்த்தார். ஆனால், பொருளின் எடைக்குறைவு இயற்கையாகவோ, வெப்பத்தினாலோ ஏற்படும் என்று இவர் கூறினார். இரா.கோ.

**கெம்பே கௌடா (கி.பி. 1513-1569)**: பெங்களூர்ப் பகுதியை ஆட்சி புரிந்த குறுநில மன்னர். விசயநகரப் பேரரசுக்குப் பணிந்து அதன் குறுநில மன்னர்களாக இருந்து, அதன் வீழ்ச்சிக்குப் பின்னர்த் தலைதூக்கத் தொடங்கி, படிப்படியாக முன்னேற்றமடைந்த அரச மரபினருள் கௌடாக்கள் (Gowdas) ஒரு சாரார் ஆவர்.

பெங்களூர் நகரை நிறுவியவரின் மூதாதையர்கள் தொடக்கத்தில் தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்கள். இரணபைர கௌடா (Ranabhaira Gowda) என்ற ஒருவர் காஞ்சி மாநகரை விட்டு வெளியேறி, தேவனகள்ளி (Devanahalli) என்ற கிராமத்திற்கு அருகில் குடியேறினார். அவர் தம் இளைய மகன் செயகௌடா (Jaya Gowda) என்பவர் இப்போதைய பெங்களூர் நகருக்கு அருகில் எலகங்கா என்ற இடத்தில் குடியேறினார். அவருக்கு அடுத்து, கிட்டே கௌடா (Gidde Gowda), கெம்பேநஞ்சே கௌடா (Kempenanje Gowda) ஆகியோர் குறுநில மன்னர்களாக (கி.பி. 1433-1513) ஆட்சி நடத்தி வந்தனர். தொடக்கத்தில் இவர்கள் வேளாண்மை செய்வோராக இருந்து, படிப்படியாகக் குறுநில அரசர்களாக உயர்ந்திருக்க வேண்டும். அக்குடும்பத்தைச் சார்ந்தோர் ஒவ்வொருவரும் கெம்பே கௌடா என்ற பெயரைப் பூண்டிருந்தனர். தம் குல தேவதையான கெம்பம்மாவின் (Kempamma) பெயரையே அவர்கள் சூட்டிக் கொண்டனர்.

கெம்பே நஞ்சே கௌடாவின் மகன் கெம்பே கௌடா என்பவர் கி.பி. 1513-முதல் கி.பி. 1569 வரை ஆட்சி புரிந்தார். பெங்களூர் நகரை நிறுவிய புகழ் அவருக்குரியதாகும். பெங்களூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பற்பல கோயில்களை எழுப்பினார். அவற்றில் இன்றும் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. அவர் கி.பி. 1537-இல் மண் கோட்டை ஒன்றைக் கட்டினார். பின்னர் அக்கோட்டையை ஐதர்அலி பழுது பார்த்து மீண்டும் உறுதியாகக் கட்டி முடித்தார். அவர் மகன் திப்பு சுல்தான் அதை மேலும் சிறப்பாக மாற்றி அமைத்தார். கெம்பே கௌடா கி.பி. 1550-இல் பெங்களூருக்கு 40 கி.மீ. தொலைவில் உள்ள சிவகங்கா என்னும் குன்றைக் கைப்பற்றிக் கொண்டார்.

தம் பதவிக் காலத்தில் பெரும் அதிகாரத்தைப் பெற்று ஆட்சி நடத்தி வந்த கெம்பே கௌடா தம் பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களை அச்சிட்டார். தம் சுதந்திரத்தை நிலைநாட்ட முற்பட்ட பொழுது சிறையடைக்கப்பட்டார். ஆனால், பெரும் கப்பத் தொகையைச் செலுத்தி விடுதலை பெற்றார். இவர் கி.பி. 1569-இல் உயிர் நீத்தார். அ.உ.செ.

**கெமர் அரசு**: இன்று கம்பூச்சியா என வழங்கும் பகுதியில் முற்காலத்தில் கெமர் என்ற மக்களின் நாகரிகம் நிலவியது. அந்த நாகரிகச் சின்னங்கள் சிலவற்றை இன்றைய கம்பூச்சியக் காடுகளில் காணலாம்.

முதல் கெமர் அரசு பூ-நான் (Fu-Nan or Fou-nan) என்ற சீனப் பெயரால் கி.பி. முதல் நூற்றாண்டில் நிலவியதாகத் தெரியவருகிறது. இது கெமர் சொல்லான நாம் (Phnom) என்பதிலிருந்து வந்ததாக இருக்கலாம். கெமர் மொழியில் நாம் (Phnom) என்பது மலை எனப் பொருள்படும்.

பூ-நான் அரசு சீனாவோடும் இந்தியாவோடும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. இந்திய முறையில் அரசு அமைந்திருந்தது. இந்தியாவோடு தொடர்ந்து கொண்டிருந்த தொடர்பால் பூ-நான், கலை, அறிவியல், கலைப்பொருள் நுண்ணறிவு ஆகிய வற்றை இந்தியாவிடமிருந்து பெற்றது எனினும் சமுதாய அமைப்பு, வாழ்க்கை நடைமுறை, நம்பிக்கைகள் ஆகியவற்றில் கெமர், வேளாண் மக்கள் பண்பைக் கொண்டிருந்தது.

உள்நாட்டு அரசவமிசங்களுக்கிடையே ஏற்பட்ட போர்களால் பூ-நான் அரசு கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பின்பாதியில் வீழ்ச்சியுற்றது. அதனை அடுத்துச் சென்லா (Chen-la) என்ற அரசு, கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மேகாங்குப் பள்ளத்தாக்கில் பூம் பாசக்கு (Phum Basac) என்ற இடத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

செயவர்மன் II (கி.பி. 802-850), அங்கோர் (Angkor) பகுதியில் தலைநகரை ஏற்படுத்தினார். அங்கே அவரும் அவரை அடுத்து ஆட்சிக்கு வந்தவர்களும் பெரிய நினைவுச் சின்னங்களைக் கட்டினர்.

கெமர் பேரரசின் அதிகார வளர்ச்சி இரண்டாம் சூரியவர்மன் (கி.பி. 1113-1150) காலத்தில் உச்சக் கட்டத்தை அடைந்தது. அங்கோர் வாட்டு (Angkor Wat) என்ற கோயிலை அவர் கட்டுவித்தார். அதனுடைய அழிவுகளை இன்றும் காணமுடிகிறது. அவர் படைகள் மேற்கே வடக்குச் சையாம் வரையிலும் தெற்கே பான் டான் (Bon Don) வளைகுடா வரையிலும் வடக்கே செந்நதி (Red River) பாயும் கழிமுகப் பகுதியான தோங்கிங் (Ton King) வரையிலும் அதிகாரம் செலுத்தின. கெமரின் வலிமை அவர்களுடைய சீரான நீர்ப்பாசன அமைப்புகளால் பயிரிடப்பட்ட அரிசியாலும் கடவுளை அரசன் என்ற நிலையில் மதித்துக் கட்டுப்பாடோடு இருந்தாலும் உணரப்பட்டது.

வலிமையற்றவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதால் உள்நாட்டில் நிலையற்ற தன்மை ஏற்பட்டு அண்டை நாட்டவர் படையெடுப்புகளுக்கு நாடு இலக்காயிற்று. மேலும் புத்தசமயம் பார்ப்பன சமயத்தை எதிர்த்த போது அவர்களது நிலை சங்கடமாயிற்று. எனினும், ஏழாம் செயவர்மன் (கி.பி. 1181-1218) தன்னுடைய முன்னோர்களைக் காட்டிலும் பேரரசினை விரிவு படுத்தினார். ஆனால், கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டுகளில் பேரரசு விரைந்து வீழ்ச்சியுற்றது. கம்போடியா கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மேற்கு வடக்குப் பகுதிகளைத் தாய்லாந்திடம் இழந்தது. கிழக்கே மெகாங்குக் கழிமுகப் பகுதியில் வியட்நாமியர் ஊடுருவல் ஏற்பட்டது.

காலப்போக்கில், கம்போடிய அரசர்கள் தாய்லாந்து அரசரான அயூதயாவின் (Ayutthaya) மேலாண்மையை ஒத்துக்கொள்ள வேண்டியிருந்தது. கம்போடியா, அண்டை நாடுகளின் கையில் சிக்குண்டு தவித்தது. போர்ச்சுகீசியர், இசுபானியர் தவிர, வேறு எந்த ஐரோப்பிய ஆதிக்கமும் 19-ஆம் நூற்றாண்டு வரை கம்போடியாவில் ஏற்படவில்லை. தெற்கு வியட்நாமில் கி.பி. 1862-இல் பிரெஞ்சுக்காரர்கள் ஆதிக்கம் ஏற்படுத்திய பிறகு கம்போடியாவிலும் ஆதிக்கம் செலுத்த முற்பட்டனர். சியாமின் சம உரிமையைப் பிரான்சு நிராகரித்தது. பிரெஞ்சுக்காரர்கள் கி.பி. 1863-இல் நாரோதம் (முதலாம்) என்ற கம்போடிய மன்னனைக் கட்டாயப்படுத்தி பிரான்சின் பாதுகாவலர் ஆட்சிக்கு இசைவைப் பெற்றனர். கம்போடியாவின் மேற்குப் பகுதியையும் கி.பி. 1794-முதல் பாட்டம் பாங்கு, சியாம் ரீபு ஆகிய பகுதிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த சியாம், கி.பி. 1867-இல் மீண்டும் அவைகளைப் பெற்றிருக்க உத்திரவாதம் அளிக்கப்பட்டபோது, கம்போடியாவில் பிரெஞ்சுப் பாதுகாவலர் ஆட்சியைச் சியாம் ஒத்துக்கொண்டது. காலப்போக்கில் கம்போடியாவின் ஆட்சி முறைகளில் பிரான்சு தலையிட்டது.

அரச பரம்பரையினரின் அதிகாரத்தைத் தான் பறித்ததை எதிர்த்து எழுந்த கிளர்ச்சியைப் பிரான்சு ஒடுக்கியது. நாம் பென் (Phnom-Penh) என்ற இடத்திற்குத் தலைநகர் கி.பி. 1866-இல் மாற்றப்பட்டது. கம்போடியா, இந்தோ-சீனாவின் அரசப்பிரதிநிதி (Governor General) ஆட்சிக்கு கி.பி. 1887-இல் உட்படுத்தப்பட்டது. கம்போடிய அரசர் நாரோதம் இறப்பிற்குப் பிறகு அவர் மைந்தருக்கு அறியணையைத் தராமல் அவர் தம்பி சிசோவாத்துக்கு (Sisowath) அறியணையைத் தந்தனர். சிசோவாத்தை அடுத்து அவர் புதல்வர் மோனிவாங்கு (Moni Wong) 1927-இல் அரியணையைப் பெற்றார்.

கம்போடியாவிற்கு 1947-இல் ஒரு புதிய அரசியல் சாசனம் தரப்பட்ட போது, அதற்கு உட்பட்ட ஓர் முடியரசாக அது மாறியது. அரசர் மோனி வாங்கின் இறப்பிற்குப் பிறகு (1941) அவர் பேரர் நாரோதம் சியநுக்கு ஆட்சிக்கு வந்தார். அவர் பொதுவுடைமையை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டார். இரண்டாம் உலகப்போரின் போது கெமர் ஐசரக்கு (Khmer Issarak) என்ற கம்போடியக் கட்சி ஏற்படுத்தப்பட்டது. இது ஆரம்பத்தில் சப்பானியருக்கு எதிராகவும் பிரான்சுக்குச் சாதகமாகவும் செயல்பட்டது.

கெமர் ஐசரக்குப் போருக்குப் பிறகு தேசியத்திற்கும் முடியாட்சிக்கும் துணையாகச் செயற்பட்டு வந்தது. வியட்நாமுக்குப் பிரெஞ்சு ஐக்கியத்தில் 1949- இல் சுதந்திரம் கொடுக்கப்பட்டபோது கம் போடியாவும் 1949-இல் போராடாமலேயே அத்தகுதியைப் பெற்றது.

அனாமியர்களின் (வியட்நாமிசு) ஆதிக்கம் 1950-இல் புதிய உருப்பெற்றது. வட வியட்நாமின் வியட்மின் பொதுவுடைமைக் கொள்கைவாதிகள், கம் போடியாவில் பல சிறிய பொதுவுடைமைக் குழுக்களை ஏற்படுத்தி, அவற்றைக் கெமர் ஐசரக்கோடு இணைத்தனர். இலாவோசிலும் அதைப் போலவே குழுக்களை ஏற்படுத்தி அவற்றின் ஐக்கியத்தின் மூலம் பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றுவதற்குப் பதிலாக உள்நாட்டுப் புரட்சியை ஏற்படுத்தினர்.

பிரெஞ்சுக்காரர்களுக்கும் வியட்மின்களுக்கும் இடையே ஏற்பட்ட கொரில்லாப் போர், கம்போடியாவில் பரவி. அதன் விளைவாக அங்கு வட வியட்நாமிகளின் ஊடுருவல் ஏற்பட்டது. இக்குழப்பங்களால் உலக நாடுகளின் கவனம் ஈர்க்கப்பட்டு, 1954-இல் செனிவா கூட்டம் நடந்தது. வியட்மின் மற்றும் கம் போடியாவிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் வெளியேற ஒப்புக்கொண்டனர்.தென்கிழக்கு ஆசியக்கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தப்படி (1954) கம்போடியாவின் எல்லைகள் உறுதி செய்யப்பட்டன.

நாரோதம் சியநுக்கு 1955-இல் ஆட்சியைத் துறந்தவுடன் அவர் தந்தை நாரோதம் சூரமாரிட்டு அரியணை ஏறினார். முன்னாள் மன்னர் நாரோதம் சியநுக்கு பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தினார். தேர்தலில் நாரோதம் சியநுக்கின் ஆதரவாளர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டதால் 1955-இல் இவர் பிரதமரானார்.

இவர் பிரதமரானவுடன், பிரெஞ்சு ஐக்கியத்திலிருந்து கம்போடியாவை முழுவதுமாக விடுவித்தார். அது 1955-முதல் முழுமையான சுதந்திர நாடாக மாறியது. வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரையில் நடுநிலை வகித்தது. அரசர் நாரோதம் சியநுக்கு சூரமாரிட்டு 1960-இல் இறந்தார்.

நாரோதம் சியநுக்கு மீண்டும் அரசுக்குத் தலைவர் ஆனார். கம்போடியா 1960-இல் தன்னுடைய முதல் 5 ஆண்டுத் திட்டத்தைச்செயற்படுத்தியது. இக்காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐக்கிய சோவியத் துக் குடியரசு நாடுகள், சீனா, செக்கோசுலாவாகியா, பிரான்சு,சப்பான் ஆகியநாடுகளின் உதவிகிடைத்தது, கம்போடியா 1961-இல் தன் அண்டை நாடுகளான தாய்லாந்து, தெற்கு வியட்நாம் ஆகிய நாடுகளுடன் எல்லைத் தகராறுகளைக் கொண்டிருந்தது. அதனால் 1954-ஆம் ஆண்டுச் சட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் கூட்டத்தை மீண்டும் கூட்டி, கம்போடியா தன் நடுநிலைக் கொள்கையினையும், எல்லைகளையும் காத்துக் கொள்ள முயன்று தோல்வி கண்டது. இளவரசர் நரோதம் சியநுக்கு 1963-இல் அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத் துறை கம்போடியாவில் கலகத்தை ஏற்படுத்துகிறது என்று கூறி, அவ்வாண்டின் இறுதியிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருளாதார, இராணுவ,பண்பாட்டு உதவிகளைப் புறக்கணித்தார்.

கம்போடியா 1964-67 ஆண்டுகளில் பிரான்சு, சீன நாடுகளோடு கொண்ட உறவில் வளர்ச்சி காணப்பட்டது. ஆனால், வியட்நாம் போரினால் கம்போடியாவின் எல்லைப்புறக் கிராமங்களில் ஏற்பட்ட இழப்புகளின் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடுகளோடும், தெற்கு வியட்நாமோடும் கம்போடியாவிற்கு மனக் கசப்பு ஏற்பட்டது. கம்போடியாவிற்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இடையேயான அரச உறவுகள் 1965-இல் முறிந்தன.

வளர்ந்து வந்த பொருளாதார நெருக்கடியாலும், வியட்நாம் போர்களில் மறைமுகமாக அதிகம் ஈடுபட்டதாலும், இளவரசர் சியநுக்கு (Prince Sihanouk) 1970-இல் ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறக்கப்பட்டார். கம்போடிய அரசு, கெமர் (Khmer) குடியரசாக மாறியது. அமெரிக்கா, வட வியட்நாம் நாடுகளின் நேரடித் தாக்குதல்கள் 1973-இல் முடிவுக்கு வந்தன. எனினும், கெமர் குடியரசுப் படைகள் அமெரிக்கப் படைக் கருவிகளையும்,பொருளாதார உதவிகளையும் கொண்டு தேசிய கம்போடிய ஐக்கிய முன்னணியோடு உள்நாட்டுப் போரை நடத்தியது.

தலைநகரான நாம்பென் (Phnom Penh) னைக் கைப்பற்றக் கெமர் ரோக்கு முயன்று தோல்வி கண்டது. மேலும், அது குடியரசுப் படைகள் முற்றுகையிட்ட போது, 1975-இல் ஐந்து ஆண்டுகளாக நடத்தி வந்த உள்நாட்டுப்போரை முடித்துக் கொண்டது.

கெமர் ரோக்கு கடுமையான ஆயுதப்படை கொண்ட ஆட்சியொன்றை 1975-இல் நிறுவியது. உலகத்தோடு இருந்த தொடர்பினை துண்டித்துக் கொண்டதோடு, வெளிநாட்டவர்களை வெளியேற்றினர். மாநகரங்களிலும், நகரங்களிலும் வாழ்ந்த மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டு வயல்களில் வேலை செய்யச் செய்தனர்.

இவ்வரசு வியட்நாமியரால் 1975 முதல் பல தொல்லைகளுக்கு உட்பட்டு 1977-78-இல் பெரும்

போரில் சிக்கியது. நாம்பென் (Phnom-Penh) வட வியட்நாமியரால் 1979-இல் கைப்பற்றப்பட்டது. பிரதமர் போல் பாட்டு (Pol Pot) தப்பியோடினார். போல் பாட்டு 30,000 கொரில்லாக்களோடு 1982-இல் கம்பூசியாவில் வியட்நாமியரை எதிர்த்துப் போரிட்டார்.

கெமர் ரோக்கு 1982-இல் பொதுவுடைமைக் கொள்கைகளைக் கைவிட்டதாகவும்,பொதுவுடைமை கட்சியைக் கலைத்துவிட்டதாகவும் அறிவித்து, சன் சேனின் (Son Sann) கம்பூசிய மக்கள் தேசிய ஐக்கிய விடுதலை முன்னணியோடும், இளவரசர் சியநுக்கின் பிரிவோடும் சேர்ந்தது.

இவ்வரசு ஐக்கிய நாடுகளின் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள கூட்டரசின் தலைவர் இளவரசர் நாரோதம் கியநுக்கு (Prince Norodom Sihanouk); துணைத் தலைவர் பெயர் கியூ சாம்பன் (Khieu Samphan); பிரதமர் பெயர் சன்சான் (Son Sann). மொத்த மக்கள் தொகை 6,682,000 (1981). மேட்டுப் பகுதிகளிலும் வடகிழக்குப் பகுதிகளிலும் கெமர்லோ (Khmer Loeu) என்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர்.

தலைநகரான நாம் பென் (Phnom-Penh), மேகாங்கு (Mekong) தோன்லி சேயு (Tonle Sap)நதிகளின் சங்கமத்தில் உள்ளது. பாட்டம் பேங்கு (Battam Bang) மற்றொரு பெரிய நகரம். கெமர் (Khmer) அரசு மொழியாகும். இலண்டனிலும் வாசிங்டனிலும் கம்போடியாவின் தூதரகங்கள் மூடப்பட்டதைப் போலவே, இப்போது இங்கிலாந்து மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தூதரகங்கள் கம்போடியாவிலும் மூடப்பட்டுவிட்டன. இர .ஆ.

**கெமரோவோ** உருசிய சோவியத்துக் கூட்டமைப்புக் குடியரசின் ஒரு பகுதி. இதன் பரப்பளவு 95,500 ச.கி.மீ. 'தாம்' (Tom) ஆறு ஓடும் பகுதியில் இது உள்ளது. ஆசியாக்கண்டத்தில் அமைந்துள்ள இக் கெமரோவோ (Kemerovo) குடியரசு 1953-ஆம் ஆண்டில் அமையப் பெற்றது. அதற்கு முன்னர் இது நோவொசிபிர்சுக்கு (Novosibirsk) நிலைப்பகுதியின் தென்கிழக்கு மாவட்டமாக இருந்தது. இதன் தெற்கில் மலைகளைக் காணலாம். 'தாம்' ஆற்றைத் தவிரச்சுலிம் (Chulym) ஆறும், அதன் துணையாறுகளும் இப்பகுதியை வளப்படுத்துகின்றன. பல காடுகளும் இங்கே உள்ளன. சோவியத்து அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாகப் பொருளாதாரத் துறையில் இப்பகுதி மிகவும் முன்னேறியுள்ளது. இப்பகுதி மக்களில் 87 விமக்காட்டினர் 1982-இல் நகர்ப்புறத்தைச் சார்ந்தோராகவும், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டவர்களாகவுமிருந்தனர். நிலக்கரிச் சுரங்க வேலை மிகச் சிறப்பாக இங்கு நடைபெறுகிறது. வேளாண்மை, வடக்குப் பகுதியில் காணப்படுகிறது. இரும்பு, எஃகு உற்பத்தி, சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. உலோக வேலையும் மர வேலையும் உயர்நிலை எய்தியுள்ளன. இதன் மக்கள் தொகை 495,000 (1983). ஒரு சிற்றூராக இருந்த இந்நகர், நிலக்கரிச் சுரங்க வளர்ச்சி காரணமாக விரைவில் முன்னேறி இன்று ஒரு தலைசிறந்த நிலக்கரி மையமாகவும் தொல் வளம் மிக்க ஒரு நகராகவும் திகழ்கிறது. சுரங்க வேலைப் பயிற்சிக்காகவும் ஆசிரியப் பயிற்சிக்காகவும் தனி நிலையங்கள் இந்நகரில் உள்ளன. தெ.பா.

**கெய்சர் வில்லியம் -முதலாம் (கி.பி. 1797 -1888)**: இவர் பிரசிய நாட்டு அரசரான மூன்றாம் பிரடரிக்கு வில்லியத்தின் மகன். இவர்தம் மூத்த சகோதரரான நான்காம் பிரடரிக்கு வில்லியம் பிரசியாவின் அரசராகப் பட்டமேற்ற பொழுது (கி.பி. 1840) அவருக்கு வாரிசுகள் இல்லாததால் முதலாம் வில்லியம் பட்டத்து இளவரசராக நியமிக்கப் பெற்றார். செருமனியில் நடந்த புரட்சிகளைக் (கி.பி. 1847-49) கடுமையாக அடக்கியதில் இவருக்குப் பெரும் பங்குண்டு. அரசரான தன் அண்ணன் பிரசிய நடுத்தர வகுப்பினருக்குச் சில அரசியல் உரிமைகளைப் புரட்சிக் காலத்தில் நல்கியதும் கி.பி. 1850-இல் பிரசிய (Prussia) அரசியலமைப்பு ஒன்றினை ஏற்றுக் கொண்டதும் முதலாம் வில்லியத்துக்கு



கெய்சர் வில்லியம்

விருப்பமில்லை, 'துப்பாக்கியை விரும்பும் இளவரசர்' என்று இவரை மிதவாதிகள் அழைத்தனர். அரசர்களின் தெய்விக உரிமைக் கோட்பாட்டில் இவருக்கு முழு நம்பிக்கை உண்டு.

அரசர் நான்காம் பிரடரிக்கு வில்லியம் கி.பி. 1857-இல் மனநோய் கண்டு ஆட்சி செய்ய முடியாத நிலையில், பிரதிநிதியாக (Regent) நியமிக்கப்பட்டு நிருவாகப் பொறுப்பினை முதலாம் வில்லியம் மேற்கொண்டார். தன் அண்ணன் இறந்ததும் கி.பி. 1861-இல் பிரசியாவின் அரசராகவும் இவர் ஆனார். வான் ரூன் (Von Roon) என்பவரைப் போர் அமைச்சராகவும் ஆட்டோ வான் பிசுமார்க்கு என்பவரைத் தலைமை அமைச்சராகவும் கொண்டிருந்த இவர், படைகளை வலுப்படுத்துதல், போர்களுக்குத் தயாரிப்புகள்ளச் செய்தல், பிரசிய நாடாளுமன்றத்தின் உரிமைகளைப் பறித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு ஊக்கமளித்தார். பிரசியாவில் இம்மூவரும் ஒன்று கூடி வல்லாட்சி நடத்தினர். நாடாளுமன்றம் செல்லாக் காசாக்கப்பட்டது. விரைவிலேயே பிசுமார்க்கின் செல்வாக்கு வளர்ந்தது. அவரது விருப்பத்தின் படியே தென்மார்க்கின் மீதும் (கி.பி. 1864) ஆசுத்திரியாவின் மீதும் (கி.பி. 1866) போர்கள் தொடுக்கப் பெற்றன. இப்போர்களின் போது ஆசுத்திரியாவை ஆதரித்த பல செருமானியச் சிற்றரசுகளைப் பிரசியப்படை கைப்பற்றி இணைத்துக் கொண்டது. வடக்குச் செருமனி இணைப்பரசின் (North German Confederation) தலைவர் என கி.பி. 1866-இல் முதலாம் வில்லியம் தம்மை அறிவித்துக் கொண்டார். பிரான்சுடன் போரிட்டு வென்று, தென் செருமானிய அரசுகளையும் இணைத்துக் கொண்டு, ஐக்கிய செருமனியின் பேரரசர் (கெய்சர்) என்று வெர்சாய் அரண்மனையில் கி.பி. 1871-இல் முதலாம் (பேரரசர்) வில்லியம் முடிசூட்டிக் கொண்டார். அரசர் வில்லியம், கெய்சர் (பேரரசர்) வில்லியம் ஆனார். சீசர் என்ற இலத்தீன் சொல்லின் செருமானிய வடிவமே கெய்சர் என்பது. கெய்சர் வில்லியத்தின் மரணம் வரையில் (கி.பி. 1888) பிசுமார்க்கின் ஆட்சியே செருமெனியில் நடைபெற்றது. இவர் கி.பி. 1861 முதல் கி.பி. 1870 வரை பிரசிய அரசர் என்றும், கி.பி. 1871 முதல் 1888 வரை செருமானியப் பேரரசர் என்றும் ஆட்சி செலுத்தினார். இர.ஆ.

**கெய்சர் வில்லியம், இரண்டாம்** (கி.பி. 1859-1941): முதலாம் கெய்சர் வில்லியத்தின் மகனான மூன்றாம் பிரடரிக்கு என்பவர் மரணப்படுக்கையிலிருந்த படியே 99 நாள்கள் செருமெனியின் கெய்சராக இருந்து காலமானபின், பிரடரிக்கின் மகனான இரண்டாம் கெய்சர் வில்லியம் கி.பி. 1888-இல் பேரரசர் ஆனார். தாமே நேரடியாக ஆட்சி புரிய விரும்பி, கி.பி. 1890-இல் பிசுமார்க்கைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து இம்மன்னர் விலக்கினார். அரசர்களின் தெய்விக உரிமைக் கோட்பாட்டில் இவருக்கு முழுநம்பிக்கை இருந்தது.



கெய்சர் வில்லியம் இரண்டாம்

இங்கிலாந்துடன் நட்புச் செய்துகொள்ள நினைத்து இம்மன்னர், பிசுமார்க்கின் காலத்து உருசிய-செருமானிய உடன்படிக்கையை கி.பி. 1890-இல் மேலும் புதுப்பிக்க மறுத்து, உருசியாவைப் பகைத்துக் கொண்டார். பிரிட்டனுடனான ஓர் ஒப்பந்தத்தின்படி கிழக்கு ஆப்பிரிக்காவில் சான்சிபார் (Zanzibar) தீவினைப் பிரிட்டனுக்குக் கொடுத்துவிட்டு, எல்லை அருகிலிருந்து எலிகோலந்தைச் (Heligoland) செருமனி பெற்றது (கி.பி. 1890). அதனால், உருசியாவும் பிரான்சும் கி.பி. 1893-இல் ஒரு தற்காப்பு உடன்படிக்கை செய்து கொண்டன. செர்மானியக் கடற்படை மற்றும் தரைப்படைப் பெருக்கத்தைக் கண்டுகவலையுற்ற பிரான்சும் இங்கிலாந்தும் 1904-இல் ஒரு நேச உடன்படிக்கை செய்து கொண்டன. இதில் உருசியாவும் 1907-இல் சேர்ந்து கொண்டது. இத்தகைய பலதரப்பட்ட ஒப்பந்தங்களும் அணிகளும் போர் அபாயத்தை அதிகரித்து வந்தன. ஆசுத்திரியாவின் பட்டத்து இளவரசர் பிரான்சிசு பெர்டினாண்டு, செராசிவோ நகரில் 1914-இல் கொலையுண்ட போது, ஆசுத்திரியாவைச் செர்பியாவின் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு தூண்டியவர் கெய்சர்

வில்லியமே. இதனால், முதலாம் உலகப் போருக்கு இவர் வழிவகுத்தார். இப்போரில் 1917 முதல் ஏற்பட்ட பெருந் தோல்விகளின் விளைவாக இவரது ஆட்சி ஆட்டங் கண்டது. செருமானிய மக்களும் கடற்படையும் கிளர்ச்சி செய்ததன் விளைவாக 1918–இல் கெய்சர் இரண்டாம் வில்லியம் முடிதுறந்து நெதர்லாந்தில் குடிபுகுந்தார். செருமெனியில் முடியாட்சி முடிவுற்றது. கெய்சர் வில்லியம் நெதர்லாந்திலேயே 1941 வரையில் தொடர்ந்து வாழ்ந்து காலமானார். இவருக்குப் பின் செருமெனி குடியரசாயிற்று. இர.ஆ.

**கெய்ரோ**: எகிப்து நாட்டின் தலைநகர். நீல நதிக்கரையிலுள்ள கெய்ரோத் துறைமுகம், அந்த ஆற்றிலுள்ள சமாலிக்கு (Zamalik), இராடா (Rawdah) என்னும் இரண்டு தீவுகளுடன் பாலங்களால் இணைக்கப்பட்டுள்ளது. ஆடை வகைகள், உணவு வகைகள், இரசாயனப் பொருள்கள், மருந்து வகைகள், நெகிழி (Plastics), உலோகங்கள் ஆகியவை கெய்ரோவில் (Cairo) உற்பத்தியாகின்றன. இந்நகரின் தென்கிழக்குப் பகுதியில் உரோமானியக் கோட்டை நகரான பாபிலன் இருந்தது. அப்பகுதிக்குப் பழைய கெய்ரோ என்று பெயர். பாத்திமீடிய (Fatimid) அரசர்கள் கி.பி. 969–இல் கெய்ரோவைத் தலைநகராக்கினர். பாத்திமீடிய அரசு, கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் சலாதினால் (Saladin) முடிவுறச் செய்யப்பெற்றது. இம்மன்னனால், சிலுவைப் போர் வீரர்களிடமிருந்து கெய்ரோவைப் பாதுகாக்க ஒரு கோட்டை, கி.பி. 1179–இல் கட்டப் பெற்றது. அதை இன்றும் காணலாம். பின்னர் வந்த மாம்லுக்கியர் (Mamelukes) ஆட்சியில் கெய்ரோ செழிப்புற்று விளங்கியது. கவின்கலைகள் பொருந்திய கட்டடங்கள் பல அங்கு எழுந்தன. ஆனால் கி.பி. 1517–இல் உதுமானியப் பேரரசால் வெல்லப்பட்ட பிறகு கெய்ரோவின் பெருமை குன்றலாயிற்று. பிரெஞ்சு மாவீரன் முதலாம் நெப்போலியன் கி.பி. 1798–இல் இதைக் கைப்பற்றியபொழுது அங்கு ஏறத்தாழ 250,000 மக்கள் இருந்ததாகத் தெரிகிறது, ஆங்கிலேயரும் துருக்கியரும் இணைந்து கி.பி. 1801-இல் பிரெஞ்சுப் படைகளை அங்கிருந்து விரட்டினர். மீண்டும் உதுமானியத் துருக்கியர் ஆட்சி கெய்ரோவில் அமைந்தது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நேச நாடுகள் தங்களுடைய மத்திய கிழக்குத் தலைமை அலுவலகத்தை இவ்விடத்தில் அமைத்திருந்தன. இங்கு ஒரு போர்க்கால மாநாடும் 1943–இல் நடைபெற்றது.

எகிப்தும் சிரியாவும் அமைத்துக் கொண்ட ஐக்கிய அரேபியக் குடியரசு, 1958 முதல் 1961 வரை கெய்ரோவையே தலைநகராகக் கொண்டது. இப்பொழுது கெய்ரோ ஒரு புதிய நகரமாக விளங்குகிறது. இதன் பழைய பகுதிகளில் புகழ்பெற்ற மசூதிகளும் அரண்மனைகளும் நகர நுழைவாயில்களும் உள்ளன. இவை யாவும் கட்டடக்கலைச் சிறப்புப் பெற்றவை. மேலும், கி.பி. 970–இல் கட்டப்பட்ட அல்–அசார் பல்கலைக்கழகம் இங்கு உள்ளது. உலகிலேயே குரான் கல்வியைப் பொறுத்தவரை, மிகப் பெரிய நிறுவனம் இப்பல்கலைக் கழகமே. இதற்கு அண்மையில் கெய்ரோ பல்கலைக்கழகம் உள்ளது, பல அருங்காட்சியகங்கள் இங்கு இருக்கின்றன. ஈண்டு உள்ள எகிப்திய தேசிய அருங்காட்சியகத்தில், பண்டைய எகிப்தியக் கலையை விளக்கும் பல பொருள்கள் உள்ளன. நீல நதியில் நீர் அளவை எடுக்கப் பயன்படும் நீர் அளவைக் கருவி மையம் கி.பி. 716–இல் அமைக்கப்பெற்றது. அது இராடாத் தீவில் (Rawdah Island) உள்ளது. தெ.பா.

**கெயிக்வாடு மகாராசா சாயாசிராவ்**: பரோடா மன்னரான கெயிக்வாடு மகாராசா மால்கர் ராவை, கி.பி. 1875–ஆம் ஆண்டு ஆங்கிலேய உயர் அலுவலருக்கு (British Resident) நஞ்சு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் காரணமாக இந்தியத் தலைமை ஆளுநரான நார்த்து புரூக்கு பிரபு, பரோடா மன்னர் பொறுப்பிலிருந்து பதவி நீக்கம் செய்தார். கெய்க்வாடு அரச குடும்பத்தைச் சார்ந்தவரும் மகாராணி சாம்னாபாயினால் தத்து எடுத்து வளர்க்கப்பட்டவருமான 13 வயது நிரம்பிய சாயாசி ராவ் என்பவர் பரோடாவின் மன்னராக்கப் பட்டார். கெயிக்வாடு மகாராசா சாயாசிராவின் இளமை (Minority) காரணமாகப் பரோடா நாட்டின் நிர்வாகம் ஆங்கிலேயே அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவரப்பட்டது. இருந்தபோதிலும், சாயாசி ராவ் கி.பி. 1882–ஆம் ஆண்டு அரசுப் பொறுப்பேற்கும் வரை மாதவராவ் என்பவர் கெய்க்வாடு மகாராசா சாயாசிராவின் பகர ஆளுநராக (Regent) இருந்து வந்தார்.

கெய்க்வாடு மகாராசா சாயாசிராவின் ஆட்சிக் காலம் பரோடாவில் ஒரு புதிய நூற்றாண்டை உருவாக்கியது. தன் அரசாங்க நிருவாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அச் சீர்திருத்தங்கள் ஆங்கிலேயே நிருவாக நெறிமுறைகளைக் கொண்டதாக அமைந்திருந்தன. நாட்டிலுள்ள அனைத்து நிலங்களும் அளக்கப்பட்டு, நில வரி விதிக்கப்பட்டது. இவர் நிலவரி வசூலிக்கும் முறையையும் மாற்றி அமைத்தார். மக்களுக்கு மிகுந்த அளவில் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன.

சாயாசிராவ், தம் நாட்டில் அனைத்துக் கிராமங்களிலும் உள்ளாட்சி (Local Self-Government) முறையை ஏற்படுத்தினார். 1904-ஆம் ஆண்டு உள்ளாட்சிச் சட்டம் கொண்டு வந்தார். அதன் விளைவாக மாவட்டக் கழகங்களும் (District Boards) சார் மாவட்டக் கழகங்களும் (Sub-District Boards அமைக்கப்பட்டன. சுமார் 10,000 மக்கள் தொகையுள்ள நகரங்கள் அனைத்திலும் நகர மன்றங்கள் ஏற்படுத்தினார். இவைகளில் நியமன உறுப்பினர்களும் (Nominated Members) அரசு அலுவலர் அல்லாத உறுப்பினர்களும் (Non-official Members) இடம் பெற்றிருந்தனர். உள்ளாட்சி மற்றும் நகராட்சி மன்றங்களில் தேர்தல்முறை கொண்டு வரப்பட்டது.

சாயாஜி ராவ், நீதித் துறையையும், காவல் துறையையும் பிரித்து அதன் நிர்வாகங்களை மாற்றி அமைத்தார். நாட்டின் தகவல் வழிகாட்டும் துறையை ஏற்படுத்தினார். திறமை வாய்ந்த அதிகாரிகளையும் நிருவாகிகளையும் சாயாசிராவ், தாமே தேர்ந்தெடுத்ததன் மூலம், நாட்டின் நீதி நிலைமை மேம்பாடு அடையச்செய்தார்.

சாயாசி ராவ் கல்வியில் சிறந்து விளங்கினார். பரோடா கல்வியில் சிறந்த சிற்றரசாக இருக்கக் காரணமாக இருந்த இவர், பரோடாக்கல்லூரியை ஆரம்பித்தார்; பெண்களுக்கெனத் தனிப் பயிற்சிக் கல்லூரியும் கி.பி. 1890-இல் கலாபவன் என்ற தொழில் நுட்ப நிறுவனமும் ஆரம்பிக்கப்பட்டன. பரோடாவில் உள்ள அம்ரோலி தாலுகாவில் கி.பி. 1893-ஆம் ஆண்டுகட்டாய இலவசக் கல்வி முறையைக் கொண்டுவந்தார். இத்திட்டத்தை 1904-இல் அனைத்து வட்டங்களுக்கும் விரிவுபடுத்தினார். சாயாசி ராவ் கி.பி. 1877-இல் இரண்டு மருத்துவமனைகளையும் கி.பி. 1894-இல் பரோடாவில் ஒரு அருங்காட்சியகத்தையும் (Museum) அமைத்தார்.

சமுதாயத்தில் காணப்பட்ட தீண்டாமை, சதி, பெண்குழந்தையைக் கொல்லுதல் (Female Infanticide) ஆகியசீர்கேடுகளை அகற்றச் சட்டங்கள் இயற்றினார்.விதவைத் திருமணச் சட்டம், குழந்தை மணத் தடுப்புச் சட்டம் ஆகியவை முறையே 1901, 1904-ஆம் ஆண்டு கொண்டு வந்தார். கல்வி,சமுதாயச் சீர்திருத்தம் போன்றவற்றில் ஆங்கிலேய இந்தியப் பகுதிகளை விட, பரோடா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தது. எனவே, ஆங்கிலேய அரசுப் பேராளர்களும் சாயாசிராவ் நிருவாகத் திறமையைக் கண்டு வியப்படைந்தனர். தி.கை.

**துணை நூல்கள்;**

**Burton, Sir, W.P.** The Princes of India, London, 1934.

**Rice, Stanley,** Life of Sayaji Rao III, Maharaja of Baroda, Oxford, 1931.

**கெர்ச்சு** தென்கிழக்கு ஐரோப்பிய உருசியக் குடியரசில் உள்ள ஒரு நகரம். இது கிரிமியா முந்நீரகத்தில் உள்ளது. கருங்கடலை அடுத்த கெர்ச்சு (Kerch) முந்நீரகத்தின் கிழக்குக் கோடியில் கெர்ச்சு நீரிணைப்பில் அசோவுக்(Azov) கடலுக்கும், கருங்கடலுக்குமிடைப்பட்ட நிலப்பகுதியில் இருப்பதால், சிறப்புவாய்ந்த ஒரு துறைமுகமாக வளர்ந்துள்ளது. தொழிலும் இங்கு வளர்ந்துள்ளது. இரும்பு எஃகு ஆலைகள், இயந்திரப் பொருள்கள் உற்பத்தி சாலைகள், கப்பல் கட்டுமிடங்கள், மீன் வளத் தொழிற் சாலைகள் முதலியன இங்கு உள்ளன.

இந்நகரம், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில், மிலேதசுவிலிருந்து (Miletus) வந்த கிரேக்கக் குடியேற்ற மக்களால் நிறுவப் பெற்றது. இது கி.மு.5-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.4-ஆம்நூற்றாண்டுவரை பாசுபரசு (Bosporus) அரசின் ஐரோப்பியப் பகுதிக்குத் தலைநகராக விளங்கியது; பாந்தசு (Pontus) நாட்டு 6-ஆம் மித்திரடேட்சு (Mithridates) மன்னன் கி. மு. 110-இல் இதனை வென்றான். பிறகு உரோமாபுரியின் ஆட்சியும், அதற்குப்பின் பைசாண்டியப் பேரரசின் ஆட்சியும் இங்கு ஏற்பட்டன. கி.பி.13-ஆம் நூற்றாண்டில் சினோவாவைச் (Genoa) சேர்ந்த ஒரு வாணிக கேந்திரமாக இது விளங்கியது. கிரிமியாப் பகுதியிலிருந்த தாத்தர்கள் (Tatars) கி. பி. 1475-இல் இதைக்கைப்பற்றினர். உருசிய-துருக்கிப் போரின் விளைவாக (கி.பி. 1771) இந்நகரம் உருசியர் வசமாகியது.

இந்நகரில் பண்டைக்காலச் சின்னங்கள் பல உள. குறிப்பாக, மிதர்டேட்டசு குன்றில் அவற்றைக் காணலாம். இங்குக்கிடைத்த பழங்காலப்பொருள்களை கி. பி. 1826-ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற அருங்காட்சியகத்தில் காணலாம். கிரேக்க-சிதிய(Graeco Scythian) கலைப் பண்பை அறிய இவை உதவும். தெ. பா.

**கெரி** அயர்லாந்துக் குடியரசின் தென்மேற்கில் உள்ள ஒரு வட்டம்.கெரியின் (Kerry) பரப்பு 4, 700,9 ச. கி. மீ. இங்குப் பல தொடர்ச்சியான மலைகள் நிறைந்த முந்நீரகங்கள் உள்ளன. அட்லாண்டிக்கு மாக்கடல் வரை அவை பரவியுள்ளன. வேளாண்மை, மக்களின் முக்கிய தொழில். உருளைக்கிழங்கும்



கெரி

புல்லரிசிப் பயிர்வகையும் (Oats) பயிராகின்றன. ஆடு மாடு வளர்த்தல், பால் பண்ணை ஆகியதொழில்களும் நடைபெறுகின்றன. இங்குப்பல கற்கோட்டைகள், வட்டக் கோபுரங்கள் மாளிகைகள், (dolmens, abbeys) முதலியனவற்றைக் காணலாம். மக்கள்தொகை 112,772 (1971). தெ. பா.

**கெல்சென் ஏன்சு** சட்ட இயல் தத்துவ ஞானி யாவார். இவர் கி.பி. 1881–ஆம் ஆண்டு பிரேகு (Prague) என்னுமிடத்தில் பிறந்தார். வியன்னாவிலும் (Vienna) கொலோனிலும் (Cologne) செனீவாவிலும் (Geneva) சட்டமும், சட்ட இயல் தத்துவமும் (Legal Philosophy) பயிற்றுவித்த பின்னர், 1940-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று பல பல்கலைக் கழகங் களில் விரிவுரை நிகழ்த்தினார். கெல்சென் ஏன்சு (Kelsen Hans) கலிபோர்னியா (California) பல் கலைக்கழகத்தில் அரசியல் துறையில் (Political Science) 1945–ஆம் ஆண்டு பேராசிரியரானார். அதன் பிறகு ஓய்வு பெற்றார். அரசியல் நேர்காட்சி வாதத் தில் (Legal Positivism) ஒரு சிறந்த வல்லுநராகத் திகழ்ந்த இவர் ஒரு சட்டக் கொள்கையை வகுத்தார். இவர்சட்டத் தொடர்பான கருத்துக்களையும் (Concept of Law) சட்டப் பாடங்களையும், சட்டத் தொடர்பான பொறுப்புகளையும், சட்டக் கொள்கை களின் அமைப்புகளையும் சட்டங்கள் இயற்றுதலையும் பற்றி ஆராய்ந்தார். இவருடைய கொள்கைகள் இரண்டு காரணங்களால் சிறப்புற்றன. ஒன்று எந்தக் கூட்டத் தாருடைய கொள்கைகளுக்கும் இடம் அளிக்க வில்லை. மற்றொன்று சமூகத் தொடர்பான சட்டங் களுக்கோ, அரசியல், பொருளாதார, வரலாற்றுத் தொடர்பான கட்டுப்பாடுகளுக்கோ சிறப்பிடம் அளிக் கவில்லை.

சட்ட ரீதியான கொள்கைகள் பகுத்தறிவிற்குப் பொருத்தமான, தெளிவான, சட்டக் கருத்துக்களை அறிவதற்குத் துணை புரிகின்றன. சட்டம் சார்ந்த அறிவியல் ஒருவகையான ஒழுக்கப்படிவம் என்று கூற லாம். சட்ட ரீதியான அறிவியல் எப்பொழுதும் கொள் கையினை வற்புறுத்தும்.

ஒரு செயலின் பொருளில்தான் அதனைச் செய்ய வேண்டிய முறை அடங்கியிருக்கின்றது. ஒரு செயலின் அகப்பொருளையும் (Subjetive) புற நிலை மெய்மை சார்ந்த தன்மையையும் (Objective) பிரித்துணர்தல் வேண்டும். ஒரு தண்டனையை நிறை வேற்றுபவர் தன்னுடைய கோடரியால் எதிரியைக் கொல்வதுமல் லாமல், முறையவையின் (Court) ஆணையையும் நிறைவேற்றுகிறார். கட்டாயமாகச் செய்யவேண்டும் என்ற கொள்கையில் வரையறை செய்தல், அனுமதி கொடுத்தல், அதிகாரமளித்தல் முதலியன அடங்கும்.

சட்டத் தொடர்பான முறைகள் பிற சமூக விதி களிலிருந்து மாறுபட்டவை. சட்டப் படிவங்களும் (Norms) சில அறிவிப்புகளும் சட்டங்களைச் செயற் படுத்த சில நிபந்தனைகளை விதிக்கின்றன முதல் நிகழ்ச்சிக்கும் தொடர்நிகழ்ச்சிக்கும் குற்றம் பற்றிய தொடர்பு இருக்கும். கெல்சென் ஓர் ஒழுங்கமைப்புக் குள்ளே அமைந்திருக்கும் படிவங்களுக்கிடையேயுள்ள தொடர்பை விவரிக்கிறார். மேலும் அவற்றுக்கிடை யேயுள்ள வேறுபாடுகளையும் விளக்குகிறார். அடிப் படைப் படிவத்தின் கருத்தினை வைத்துக் கொண்டு பலவித படிவங்களின் ஒருங்கிணைப்பு எப்படி ஒரு அமைப்பிற்குள் காணப்படுகிறது என்பதனை விளக்கு கிறார்.

ஒரு சிறந்த கொள்கையில் சட்டத்திற்கும் அரசிற்கு முள்ள வேறுபாடு மறைந்துவிடுகிறது. மேலும் பொது விதிக்கும் தனிமனிதனுக்குரிய சட்டத்திற்கும் புதிய விளக்கம் கூறப்பட்டது. தனியாணை (Sovereignty) கருத்துக்கொள்கை நல்ல முறையில் ஆராயப்பட்டது. நாடுகளிடைப்பட்ட சட்டம் பேணிக்காக்கப்பட்டது. நாடுகளிடைப்பட்ட சட்டத்திற்கும், பல்வேறுபட்ட நாடுகளின் சட்டத்திற்குமுள்ள தொடர்பைப் பற்றிய ஒருமைக் கொள்கையை இவர் கடைபிடித்தார்.

கெல்சென் இயற்கைச் சட்டத்தின் கொள்கை களைக் குற்றங்காண்பவராதலால், இயற்கை விதி களும். நேர்நிலையான விதிகளும் (Positive Law) ஒன் றாக இணைந்திருக்க முடியா என்று கூறுகிறார். இயற்கை விதிகளும், நீதித் தொடர்பான கருத்துக் களும் அறிவியல் இல்லாத புலன்கடந்த மெய்ப்பொ ருளியல் அடிப்படையில் அமைந்திருக்கின்றன. நேர்

காட்சிவாதக் கொள்கைக்கும் (Positivism), அளவையியல் செயல் ஆராய்ச்சித்திறன் கொள்கைக்கும் (Logical Empiricism) கெல்சன் மனவெழுச்சி வயப்பட்ட தோற்றத்தை (Emotive Origin) அளிக்கிறார்.

இரா. கோ.

***கெல்செென் கிர்க்கென்*** மேற்கு செருமெனியின் மேற்புறத்தில் வடக்கு உரைன் வெசுட்டு பாலியா (North-Rhine West Phalia) வில் உள்ள துறைமுகப் பட்டினம். புகழ்பெற்ற உரூர் மாவட்டத்தில் (Ruhr District) இது ஒரு பெரிய தொழில் மையம். நிலக்கரிச் சுரங்கங்கள் இங்கிருப்பதால், பல தொழில்கள் பெருகியுள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் சிறப்பாக, இரும்பு, எஃகு, இரசாயனப் பொருள்கள், கண்ணாடி, ஆடைகள் முதலியவை குறிப்பிடத்தக்கன. கெல்சன் கிர்க்கென் (Gelsen Kirchen) ஒரு சிற்றூராக இருந்தது. நிலக்கரிச் சுரங்கங்கள் அங்கே கண்டுபிடிக்கப்பட்டவுடன் மிக விரைவான வளர்ச்சியைப் பெற்றது. இதன் மக்கள் தொகை 327,591. (1974).

தெ.பா.

***கெல்ட்டுகள்***: இங்கிலாந்து நாட்டில் ஐபீரியர்களுக்குப் பிறகு, அங்கு புகுந்து வாழ்க்கை நடத்திய பழங்குடிகளுக்குக் கெல்ட்டுகள் (Celts) என்று பெயர். உரோமின் சூலியசு சீசர், கி.மு. 55-இல் இங்கிலாந்தில் படையெடுப்பதற்கு முன்பே கெல்ட்டுகள் அங்கே வாழ்ந்தனர். இவர்கள் பேசிய மொழி இன்றும் பிரிட்டனின் சில இடங்களில் பேசப்படுகிறது. இவர்கள் ஐபீரியர்களைத் தோற்கடித்து அவர்களைத் தம் பழக்கவழக்கங்களை மேற்கொள்ளுமாறு செய்தனர். கெல்ட்டுகளுக்கும் ஐபீரியர்களுக்கும் மணவினை உறவும் இருந்தது. இப்பொழுது பிரிட்டனில் உள்ள பலர், கெல்ட்டுக்களின் கால்வழியில் வந்தவர்கள் என்று கூறப்படுகிறது. கெல்ட்டுகள் அயர்லாந்திலும், இசுக்காட்லாந்திலும் (Scotland) வேல்சிலும் (Wales) இங்கிலாந்திலும் பரவியிருந்தனர். இம்மக்கள், தங்களுக்கு முன்பு அங்கு இருந்தவர்களை விட வலிமை வாய்ந்தவர்களாகவும் நாகரிகம் மிக்கவர்களாகவும் விளங்கினர். உலோக வேலை (Metal Work) இவர்களுக்குத் தெரிந்திருந்தது. இவர்கள் தங்கள் போர்க்கருவிகளை முதலில் வெண்கலத்தாலும் பிறகு இரும்பினாலும் செய்துவந்தனர். ஆடை அணிகலன்கள் அவர்களால் விரும்பப்பட்டன. பானை வேலையின் சிறப்பை இவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆடுமாடுகளே இவர் தம் தலையாய சொத்துகள். குதிரைச் சவாரி செய்வதில் இவர்கள் வல்லவர்கள். தலைவர்கள், போருக்குரிய தேர்களில் தான் போர்களுக்குச் செல்லுவது வழக்கம். இவர்களிடம் தைரியம், அடக்கம், உற்சாகம் முதலிய பண்புகள் இருந்தபோதிலும் விடாமுயற்சி இல்லாதவர்களாகவும், ஒருவரைஒருவர் ஐயப்படும் தன்மைபெற்றவர்களாகவுமிருந்தனர். பரவியிருந்த பல இல்லங்களில் இவர்கள் வாழ்க்கை நடைபெற்று வந்தது. பகைவர்கள் இவர்களைத் தாக்கும்பொழுது ஓடி ஒளிந்துகொள்ளும் தன்மை இவர்களிடம் இருந்தது. அதற்காகவே பள்ளங்கள் அமைத்தும் கனமான சுவர்கள் எழுப்பியும் தக்க இடங்களை அமைத்தும் வைத்திருந்தனர். சமயப் பற்று மிகுதியாகப் பெற்றிருந்த கெல்ட்டுகள் பல கடவுளரை வணங்கினர். ஆனால், கடவுளர்க்குக் கோயில் எதுவும் கட்டவில்லை. குன்றுகளின் உச்சியிலாவது தோப்புகளிலாவது கூட்டு வழிபாடு நடத்தினர். இவர்களின் சமய குருமார்களாகிய துரூயிடுகள் (Druids) அதிகாரம் மிக்கவர்கள். சில சமயங்களில் அவர்கள் நரபலி கொடுத்தனர்; விலங்குகளையும் பலி தந்தனர். பொதுவாகச் சமயத்துறையில் பல மூடப்பழக்கங்கள் நிலவின. கெல்ட்டுகள் தம் குருமார்களிடம் மிகவும் அச்சமும் பணிவும் கொண்டிருந்தனர். ஆன்மா அழியாத ஒன்று என்ற கோட்பாட்டை அக்குருமார் மக்களுக்குப் போதித்தனர். பாட்டுகளையும் செய்யுள்களையும் கெல்ட்டுகள் விரும்பினர். இவர்கள் பல தனித்தனிக் கூட்டங்களாகப் பிரிந்து, தனித்தனித் தலைவர்களின் கீழ் வாழ்க்கை நடத்தினர். இவர்களுக்கிடையே போர்கள் அடிக்கடி நிகழ்ந்தன. தெற்கில் வாழ்ந்த கெல்ட்டுகளுக்குப் பிரிட்டானியர் (Britons) என்ற பெயர் இருந்ததால் அத்தீவுக்குப் பிரிட்டன் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

கெல்ட்டுகள், பிரிட்டனில் மட்டுமல்லாது கால் (Gaul) என்று சொல்லப்பட்ட இக்காலப் பிரான்சிலும் காணப்பட்டனர். உரோமாபுரியின் பெருந்தலைவர் சூலியசு சீசர், கால் நாட்டில் படையெடுத்தபொழுது பிரிட்டனில் உள்ள கெல்ட்டுகள் கால் நாட்டு கெல்ட்டுகளுக்கு உதவி செய்தனர். சீசர் இச்செயலுக்காகப் பிரிட்டனில் உள்ள கெல்ட்டுகளைத் தண்டிக்க விரும்பியே பிரிட்டனில் கி.மு. 55-இல் படையெடுத்தார். முதற் படையெடுப்பின்போது அவரிடம் போதுமான போர்வீரர்கள் இல்லாததால் 'கால்' நாட்டுக்குத் திரும்பிப் பெரும்படையுடன் கி.மு. 54-இல் மீண்டும் பிரிட்டன்மீது படையெடுத்தார். பிரிட்டானியர் தோல்வியுற்றனர்; உரோமாபுரிக்குக் கப்பம் கட்ட உடன்பட்டனர். ஆதலின் அவர்கள் தம் பழைய வாழ்க்கையையே மீண்டும் மேற்கொள்ளும்படி விடப்பட்டனர். பிரிட்டானியர் சில ஆண்டுகட்குப் பிறகு, உரோமானியர் தம்மை மறந்துவிட்டனர் எனக் கருதி மறுபடியும் உரோமுக்குப் பகையாகக் கால் மக்களுக்கு உதவி செய்ய முற்

பட்டனர். அதனால் சினங்கொண்ட உரோமப் பேரரசன் கிளாடியசு (Claudius) மறுபடியும் ஒரு படையைப் பிரிட்டனுக்கு அனுப்பினான். பிரிட்டானியர் வீரத்துடன் போரிட்டனர் எனினும் வெற்றிக் கொள்ள இயலவில்லை. உரோமானியர் பிரிட்டனின் தெற்குப் பகுதியை உரோமப் பேரரசின் ஒரு மாகாணமாகச் செய்தனர். வடபகுதியைப் பற்றி அவர்கள் கருத்துச் செலுத்தவில்லை. ஆயினும் தெற்குப் பிரிட்டனையும் வடக்குப் பகுதியையும் பிரிப்பதற்காக ஒரு வலிமையான கோட்டைச் சுவரை எழுப்பினர். அதன்மூலம் வடக்குப்பகுதி மக்களால் தங்கள் மாகாணமான பிரிட்டனுக்கு இடையூறு ஏற்படாமல் செய்து கொண்டனர். உரோமானியர் எழுப்பிய கோட்டைச்சுவருக்கு வடக்கில் இருந்த கெல்ட்டுகள் உரோமிடமிருந்து இடையூறு இல்லாமல் இனிது வாழ்ந்தனர். இசுகாட்லாந்து (Scotland) என்று இப்பொழுது கூறப்படும் வடக்குப் பகுதியில் இருந்த கெல்ட்டுகள் 'கெலிடோனியர்' என்ற பெயர் பெற்றனர். இவர்தம் நாடு கலிடோனியா எனப் பெற்றது. பிறகு இம்மக்களுக்குப் பிக்டுகள் (Picts) எனப்பெயர் ஏற்பட்டது. பிக்டுகள் என்றால் வண்ணம் பூசிய மக்கள் என்று பொருள். கெலிடோனியர்கள் தங்கள் உடம்பில் ஒளிபொருந்திய வண்ணங்களைத் தீட்டிக் கொண்டிருந்ததால் அப்பெயர் நிலைத்துவிட்டது.

தெற்குப் பிரிட்டனில் உரோமர் ஆட்சி மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் நிலைத்திருந்தது. அவர்கள் ஆட்சி மக்களால் விரும்பப்பட்டது. பல நன்மைகளை அந்நாட்டு மக்கள் பெற்றனர். கிறித்தவ மதம் அங்குப் பரவியபொழுது பிரிட்டானியரும் கிறித்தவராயினர். பழைய கடவுளர் வழிபாடு மறையலாயிற்று. பாட்ரிக்குத் துறவி (St. Patrick) முதலிய சமயப் பரப்பாளர் மூலம் பிரிட்டானியர், அயர்லாந்திலிருந்த கெல்ட்டுகளையும் கிறித்தவர்களாகச் செய்தனர்.

உரோமப் பேரரசு அயலவரால் தாக்கப்பட்டு கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடையத் தொடங்கியதும் கி.பி. 410-இல் பிரிட்டனிலிருந்த உரோமானியப் படை திரும்ப அழைக்கப்பட்டது. பிரிட்டானியர் தனியே விடப்பட்டனர். வடக்கிலிருந்து பிக்டுகள் அவர்களைத் தாக்கலாயினர். அயர்லாந்திலிருந்த கெல்ட்டுகள் பிரிட்டனுக்குத் தொல்லைகள் தரலாயினர். அயர்லாந்துக் கெல்ட்டுகள், தம்மை இசுகாட்சுகள் (Scots) என்று கூறிக்கொண்டனர். இவர்கள் பிரிட்டனுக்கு வடக்கே சென்று பிக்டுகள் வாழ்ந்த பகுதியை வென்று, அதற்கு இசுகாட்லாந்து என்ற பெயரைத் கொடுத்தனர். செருமன் நாட்டிலிருந்து ஆங்கிலேயர், சாக்சானியர் முதலியோர் அக்குழப்ப நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டனில் புகுந்து போரிட்டனர். பல பிரிட்டானியர் மேற்கே ஓடி வேல்சுப் பகுதியில் தங்கி வேல்சு மக்கள் என்ற பெயரைப் பெற்றனர். ஆங்கிலேயரின் வருகைக்குப் பின் எஞ்சியிருந்த சில பிரிட்டானியர், ஆங்கிலேயரின் நாகரிகத்தையே பின்பற்றத் தொடங்கி அவர்களுக்கு அடிமைகளாயினர். எதிர்ப்புக்கு இடமாக இருந்த பிரிட்டானிய வேல்சு, தொடர்ந்து நடந்த போர்களால் துண்டாடப்பட்டது. பிரிட்டனில் ஆங்கிலோ-சாக்சானியர் ஆதிக்கம் நிலைத்தது. தெ.பா.

**கெல்டர்லாந்து** ஐரோப்பாவில் நெதர்லாந்து நாட்டின் மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு மாநிலம். இதன் பரப்பு 5009.02 ச.கி.மீ. இதற்குக் கிழக்கில் மேற்குச் செருமனி இருக்கிறது. இதன் தலைநகர் ஆர்ன்கெம் (Arnkem). இது வேளாண்மை சிறந்த ஒரு மாநிலம். வால் (Wall) மாசு (Maas), ஐசெல் (Yssel) ஆகிய மூன்று ஆறுகள் இங்குப் பாய்கின்றன. புகையிலை, பழம், கோதுமை விளைகின்றன. காகித உற்பத்தியும் பஞ்சாடை உற்பத்தியும் முக்கிய தொழில்கள். கெல்டர்லாந்து (Helderland) கி.பி. 1473-இல் பர்கண்டி மன்னன் சார்லசினால் வெல்லப்பட்டது. ஆப்சுபர்கு (Hapsburg) குலத்தினரின் ஆட்சி கி.பி. 1543-இல் இங்கு ஏற்பட்டது. இசுபெயினுக்கு எதிராக கி.பி. 1579-இல் ஏற்பட்ட உட்ரெக்ட்டு ஐக்கியத்தில் (Union of uttrecht) கெல்டர்லாந்து இணைந்ததும் இதன் ஒரு பகுதி கி.பி. 1715-இல் பிரசியாவுக்கு வழங்கப்பட்டது. இதன் மக்கள் தொகை 1,735,780 (1982). தெ.பா.

**கெல்லக்கு, பிராங்கு பில்லிங்குசு:** அமெரிக்க ஐக்கியக் குடியரசின் வரலாற்றில் அயல் உறவு அமைச்சர்கள் (Secretary of State) பலரைக் காணலாம். சிலர் போர் விருப்பம் கொண்டவர்கள்; சிலர் அந்தரங்கமாகப் போரை விரும்பினாலும் மேடைப் பேச்சுகளில் 'அமைதி' நாட்டம் உடையவர்களாக நடித்ததுண்டு. உண்மையிலேயே மனம், சொல், செய்கைகளினால் உலக அமைதிக்காகப் பாடுபட்ட ஒரு சிலருள், கெல்லக்கு பிராங்கு பில்லிங்சு (Kellogg Frank Billings) ஒருவர். இவர் கி.பி. 1856-இல் பிறந்தார். இவர் 1925 முதல் 1929 வரை அரசியல் செயலாளராகப் பணிபுரிந்தார். நெருக்கடியான நேரத்தில் உலக அமைதிக்காகப் பாடுபட்ட காரணத்தால் 1929-ஆம் ஆண்டு நோபெல் பரிசு இவருக்குக் கிடைத்தது. நியூயார்க்கில்பாட்சுடேம் (Potsdamm) என்ற இடத்தில் பிறந்து, உச்ச நீதிமன்ற வழக்குரைஞராகவும், மேல் சபையின் (Senate) உறுப்பினராகவும், இங்கிலாந்துக்கு அரசியல் தூதுவராகவும்



கெல்லக்கு பிராங்கு பில்லிங்சு.



கெல்லர், எலன்

பல்வேறு துறைகளில் பணியாற்றிய பிறகு, அரசியல் செயலாளராகப் பதவி வகித்து, பிறகு சருவதேச நீதிமன்றத்திலும் தொண்டாற்றிய பெருமை இவருக்கு உண்டு. உலக நாடுகள் தம் கருத்து வேறுபாடுகளை அகற்றிக் கொள்ள போர் முறையைக் கையாளக் கூடாது என்பதே இவர் கூறிவந்த அறிவுரை. இவர் 1937-இல் இறந்தார். தெ.பா.

**கெல்லர், எலன் (கி. பி. 1880-1968)** உடல் ஊனத்தை வெல்ல முடியும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர். இவர் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபோதே மூளைக்காய்ச்சல் என்னும் கொடிய நோயால் தாக்கப்பெற்றார். அதனால், பார்வையையும் கேட்கும் திறனையும் இழந்தவரானார். அதன் விளைவாகக் கெல்லருக்கு (Hellen Keller) பேச்சுத் திறனும் இல்லாமல் போய் விட்டது. இத்தகைய உடல் ஊனங்கள் இருந்த போதிலும், அவற்றையெல்லாம் வென்று மற்ற உடல் ஊனமுற்றோருக்கு உதவியதால் கெல்லர் உலகப்புகழ் பெற்றவரானார்.

ஆன் சுல்லிவன்(Anne Sullivan கி.பி. 1866-1936) என்பவரே கெல்லரின் ஆசிரியை ஆவார். அவர் பாசுட்டன் (Boston) நகரிலுள்ள பெர்க்கின்சு பார்வையற்றோர் பள்ளியில் (Perkins Institution for the Blind) பணியாற்றியவர். குழந்தையாக இருந்த கெல்லருக்குத் தொடு உணர்வுகள் வழியாக ஆன்சுல்லிவன் முதலில் எழுதக் கற்பித்தார். இதற்காகச் சுல்லிவன் சில பொருள்களைச் செய்து, ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் எழுத்தைக் குறியீடாகப் பயன்படுத்தினார். விரைவில் கெல்லர் ஒவ்வொரு பொருளையும் ஒரு குறிப்பிட்ட எழுத்துடன் இணைத்துப் பார்க்கக் கற்றுக் கொண்டார். மூன்றாண்டுகளில் அனைத்து எழுத்துகளையும் பொருள்களின் உதவியால் கற்றுத் தேறினார். இவருக்கென்றே தனியாக வடிவமைக்கப்பட்ட தட்டச்சுப் பொறியில் கெல்லர் எழுத்து வேலைகள் அனைத்தையும் செய்து கொண்டார்.

கெல்லருக்குப் பத்து வயது வரும் வரையிலும் பேச்சுத்திறன் வரவில்லை; ஊமையைப் போல் சைகைகள் மூலமே கெல்லர் பேசி வந்தார். காது கேளாதோர் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவரின் உதவியால் கெல்லர் பேச்சுப் பயிற்சிகள் செய்து வந்தார். நான்காண்டுகளில் கெல்லர் நன்கு பேசவும் கற்றுக்கொண்டார். கெல்லருக்குப் பதினாறு வயது வந்தபோது, கல்லூரியில் சேர்ந்து 1904-ஆம் ஆண்டு பட்டமும் பெற்றார். கெல்லரின் கல்லூரி நாட்களில், சுல்லிவன் கெல்லருடனே தங்கிக் கொண்டு, வகுப்பறையில் குறிப்பெடுத்தல், ஆசிரியரின் விரிவுரைகளை கெல்லருக்கு விளங்குமாறு செய்தல் போன்ற பணிகளைச் செய்துவந்தார்.

கல்லூரிப் படிப்பை முடித்த பின் எலன் கெல்லர் பார்வையற்றோர், பார்த்தலும் கேட்டலும் இழந்தோர் ஆகியோரது மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டும் என ஆர்வம் கொண்டார். இவர் அமெரிக்க நாட்டுப் பார்வையற்றோர் நிறுவனத்திலும், வெளிநாட்டுப் பார்வையற்றோருக்கான அமெரிக்க நிறுவனத்திலும் பெரிதும் ஈடுபட்டுப் பணியாற்றினார். எலன் கெல்லர் அறக்கட்டளை நிதி (Helen Keller Endowmemt Fund)ஒன்றினை இரண்டு மிலியன் தாலருடன் தொடங்கினார். இவருடைய சேவையைப்

பாராட்டி, படங்கள் ஆய்வு நிறுவனம் (Pictorial Review Company) ஒன்று இவருக்கு 5,000 தாலர் பரிசு ஒன்றினைத் தந்து பாராட்டியது.

பிற்காலத்தில் எலன் கெல்லர், வளர்ச்சியடையாத நாடுகளிலும், போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளிலும் உள்ள பார்வையற்றோரின் நலத்தில் மிக்க அக்கறை காட்டியவராக விளங்கினார். உலகின் ஐந்து கண்டங்களில் உள்ள 25க்கும் மேற்பட்ட நாடுகளில் ஓயாது பயணம் மேற்கொண்டு பார்வையற்றோர் நலனுக்காகப் பாடுபட்டார். இரண்டாம் உலகப் போரின்போது, போரில் பார்வையிழந்த வீரர்களுக்குக் கல்வி புகட்டினார். எலன் கெல்லர் எந்த நாட்டுக்குச் சென்றபோதிலும் புதிய ஊக்கத்தையும் வலிமையையும் பார்வையற்றோருக்கு அளித்து வந்தார். இவருக்கு உலகின் மதிப்புமிக்க பரிசுகள் பல கிடைத்தன.

எலன் கெல்லரின் நூல்கள் பல, உலகின் 50 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. கெல்லர் முதன்முதலில் (1903) எழுதிய நூல் 'எனது வாழ்க்கை' (The Story of My Life) என்பதாகும்.

எஸ்.த.

**கெல்லர் திட்டம்**: இது தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையாகும். இத்திட்டம் உளவியல் வல்லுநர் கெல்லராலும் (Keller) அவர்தம் உடன் ஆய்வாளர்களாலும் 1960-ஆம் ஆண்டு கல்லூரி வகுப்புகளில் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு தனி மாணவரும் தாம் பயிலும் பாடத்தில், பாடக் குறிப்புகளைத் தம் இயல்பான படிக்கும் திறனுக்கேற்ற அளவில், கற்றல் நோக்கங்களை நிறைவுபடுத்தும் வகையில், தாம் கற்கும் பாட விவரங்களில் முழுதறி திறன் (Mastery Level) அடைய வழி வகுக்கும் ஒரு கற்பித்தல் முறையாகும்.

தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையில் நடத்தப்படும் வகுப்பில், மாணாக்கர்களின் வயதொத்த நிலையில் உள்ள ஒரு 'பயிற்றுநர்' (Proctor), கற்றலில் ஓர் உயிர்த் துணையாகப் (Living Aid) பயன்படுத்தப்படுகிறார். மாணாக்கரின் கற்றல் திறனை (Performance) சிறு அளவிலான அறிவுப் புதிர்களால் (Unit Quiz) மதிப்பிடல், வகுப்பில் சிறந்த மன மொத்த சூழ்நிலையைத் தோற்றுவித்து உதவிடல் போன்ற பணிகளைப் 'பயிற்றுநர்' செய்கிறார். பல் துறையைச் சார்ந்த பல ஆசிரியர்களும் மாணாக்கர்களும், 1960-ஆம் ஆண்டு முதல் சிறப்படைந்துள்ள இப்புதிய பயிற்றுவித்தல் முறையில் பயின்றுள்ளனர்.

அமெரிக்க உளவியல் வல்லுநர்களான பிரெடு கெல்லர் (Fred Keller) கில்மர் செர்மன் (Gilmur Shermon) ஆகியோரும் பிரேசிய உளநூல் வல்லுநர்களான கரோலினர் (Caroliner), உரோடோல் போஅசி (Rodol Fo Azzi) ஆகியோரும் பிரேசியா என்ற பல்கலைக்கழகத்தில், 1963-இல் உளவியல் மாணாக்கர்கட்கு எனத் தொடங்கப்பட்ட வகுப்புகளில் கெல்லர் திட்டத்தைப் புகுத்தினர். கெல்லரும் உடனாய்வாளர்களும் முதன் முதலில் 1964-ஆம் ஆண்டு இம்முறையில் கல்விப் பயிற்சி அளித்தனர். 'ஆசிரியரே சென்று வருக' (Good Bye Teacher) என்ற தலைப்பில், இப்பயிற்சி முறை பற்றி 1968-ஆம் ஆண்டு கட்டுரை வெளியிட்டனர்.

பிரடெரிக்கு பர்க்கு (Frederich Burk) என்பவரால் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சான்பிரான்சிசுகோ மாநிலப் பள்ளியில் இத்திட்டத்திற்கான கரு தோற்றம் பெற்றது. தொடக்க நிலைப் பள்ளியில் தனி மாணவர் பயிற்றுவித்தல் முறை தொடங்கப்பட்டது. மனப்பாட முறைகளும் வீட்டுப்பாட முறைகளும் தள்ளப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக இம்முறை பயன்படுத்தப்பட்டது. பர்க்கு-என்பாரின் மாணாக்கரான கார்லிட்டன் வாசுபர்ன் (Carleton Washburne) வின்னேட்கா திட்டத்தை (Winnetka Plan) 1920-ஆம் ஆண்டு செயற்படுத்தினார். இவ்வாறாகத் தொடங்கிய இம்முறைக்கு உளவியலறிஞர் இசுகின்னர் (Skinner) 1954-ஆம் ஆண்டு புத்துயிர் அளித்தார். 'கற்றல் அறிவியலும் கற்பித்தல் கலையும்' என்ற நூலில் நிரல்வழிப் பொறிகளில் கற்போர் தம்நோக்கப்படி, தம் விருப்பப்படி கற்றால், கற்றல் சிறந்த முறையில் நிலவும் என்பதை நிலைநாட்டினார்.

எத்துணைக் கடினமான பாடப்பொருளாக இருப்பினும் 'எளிதான நிரல்வகையில் கற்றால், கற்றல் எளிதாக்கப்படும்' என்பது இசுகின்னரின் அடிப்படைக் கோட்பாடாகும். இவ்வகையான நிரல்களில் சட்டம் (Frame) ஒரு வாக்கியத்திலோ ஒரு பத்தியிலோ அமையலாம். நிரல் வழிக் கற்றல் அமைப்புகள் (Programmed Devices) கற்போருக்கு உடன் விளைவு கூறலை (Feedback) அளிக்கின்றன. அதனால் முழுதறி கற்றல் (Mastery Learning) ஏற்பட்டுள்ளதா இல்லையா என அறிய முடிகிறது. ஆனால், சில சோதனைச் செயல்களில் நிரல் வழிக் கற்றலின் அமைப்பைப் பயன்படுத்த இயலவில்லை. எனினும், 1960-ஆம் ஆண்டு அளவில் தனிமாணவர் பயிற்றுவித்தல் முறையில் ஆர்வம் அதிக அளவில் ஏற்பட்டது.

அறிஞர் இசுகின்னரின் சிற்சில பகுதிகள், வழி வழி முன்னேற்றம் (படிப்படி முன்னேற்றம்), கற்போர் செயல்கள், தொடர்ந்த மதிப்பீடு, விளைவு கூறல், கற்றலில் முழுதறி நிலை போன்ற பல்வேறு நிலைகள், இசுகின்னரின் தனி மாணவர் பயிற்றுவித்தல் ஆகியவற்றில் மென்மேலும் ஆய்வுகள் நடத்த வழிவகுத்தன. இவ்வகையாக, இசுகின்னரின் நண்பரும் உடனாய்வாளருமான பிரெடு கெல்லர் (Fred Keller) தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையை உருவாக்கினார்.

'ஆசிரியரே சென்று வருக' என்ற 1968-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தம் கட்டுரையில் கெல்லர், மரபு வழிப் போதனைத் திட்டங்களில் இருந்து வேறுபட்ட ஐந்து அடிப்படை நோக்கங்களைக் கொண்ட ஒரு புதிய கற்பித்தல் முறையைக் கண்டார். அவ்வடிப்படை நோக்கங்கள் 1. பாடத்தில் முழுதறி திறமை பெறுதல். 2. தனிமாணவர் நிலைக்கு ஒத்த பாட வெளியீடுகள். 3. மாணாக்கர்களைத் தூண்டவும் ஆர்வப்படுத்தவும் வல்ல விரிவுரைகள். 4. செய்திகளைப் பரப்பவல்ல அச்சிடப்பட்ட பாடக் கையேடுகள். 5. அறிவுப் புதிர்களைத் (Quizzes) தீர்க்கவும் மதிப்பிடவும் வல்ல பயிற்றுநர் பணி முறைகள்ஆகியனவாம்.

கெல்லர் திட்டப்படி மாணாக்கர்கள் அச்சிடப்பட்ட பாடக்கையேடு ஒன்றைப் பெறுவர். முதல் அலகில் கற்றல் எவ்வாறு நிகழ வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கும். பாடக் கையேட்டில் அலகைத் தொடங்குவதற்கு முன்னர்க் குறிக்கோள்கள் குறிக்கப்பட்டு இருக்கும். படித்தல் வழிமுறைகள், பாடக் கேள்விகள் ஆகியன கொடுக்கப்பட்டு இருக்கும். இக்கையேட்டின் உதவியால் மாணாக்கர் எங்கு வேண்டுமானாலும் கற்கத் தொடங்கலாம், ஓர் அலகை முடித்து அடுத்த அலகில் கற்பதைத் தொடங்குவதற்கு முன்னர் முந்திய அலகில் முழுதறி திறன் பெற்றிருத்தல் வேண்டும். முழுதறி திறன் அடையாதவர் ஓர் அலகை முடித்து அடுத்த அலகிற்குச் செல்ல முடியாது. ஒவ்வோர் அலகிலும் முழுதறிதிறன் அடைதற்குக் காலஎல்லை வரையறுப்பது இல்லை. மாணாக்கர்கள் அவர்களாகவே முழுதறி திறன் அடைந்துவிட்டோம் என்று தெளிந்து தங்களைத் தேர்வுக்கு உட்படுத்தல்வேண்டும்.

இத்திட்டத்தில் கற்பித்தல் பணியில் ஆசிரியர்களும் பயிற்றுநர்களும் ஈடுபடுகின்றனர். மேலும், ஆசிரியர்கள் மாணாக்கர்கட்குத் தேவையான பாடப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்துப் பாடக் குறிப்பேடுகள் தயாரித்து, மேலும் தேர்வுகள் அமைத்துத் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர் இக்கல்வி முறையில் ஆசிரியர்கள் மிகக் குறைந்த அளவிலேயே விரிவுரை ஆற்றுகின்றனர். பயிற்றுநர் தயாரிப்புத் தேர்வுகள் நடத்தி, மாணாக்கரின் தயார் நிலை நிறைவளிக்கிறதா இல்லையா என்று தேர்விடுகின்றார். மாணாக்கர் நிலைகளில் முழுதறி திறன் அடைந்தவர்களைப் பயிற்றுநராக நியமிக்கின்றனர். மேலும் இவர்கள் மாணாக்கர்கட்கு மீள்பார்வை, குறைதீர் வகுப்புகள் (Remedial Class) ஆகியவற்றை நடத்துகின்றனர்.

கியூளிக்கு (Kulick, 1979) என்று அறிஞர் 'மரபு வழிப் பயிற்றுமுறை' 'தனி மாணவர் பயிற்றுவித்தல் முறை' ஆகிய இரு பயிற்றுவித்தல் முறைகளையும் ஒப்பிட்டு ஆய்வு நிகழ்த்தினார். அவர்தம் ஒப்பீட்டாய்வில் 75கட்டுரைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றுள் 61 கட்டுரைகள் ஆய்வுக்கு மாணாக்கரின் இறுதித்தேர்வு மதிப்பீட்டு எண்களை ஒப்பிட்டன இந்த 61 ஆய்வுகளில் 57 ஆய்வுகள், தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையால் போதிக்கப்பட்ட மாணாக்கர்களின் தேர்வு மதிப்பெண்கள், மரபு வழிப் பயிற்று முறையால் பெற்ற மதிப்பெண்களை விட அதிகமாக இருந்தன. மதிப்பெண் வேறுபாடுகளும் குறிப்பிடத் தக்கனவாக இருந்தன. ஓர் ஆய்வில் கூட மரபுவழிப் பயிற்றுவித்தல் முறையால் பெற்ற மதிப்பெண்கள் அதிகம் என்று வெளிப்படுத்த இயலவில்லை. இந்த 61 ஆய்வுகளும், தனிமாணவர் பயிற்றுவித்தல் முறையானது கற்பித்தல் திறனை மேன்மேலும் வளர்ப்பதைச் சுட்டின. ஒரே ஆசிரியர் குழுவினரைக்கொண்டு இவ்விருவகைப் பயிற்றுமுறைகளைக் கொண்டு சோதனை செய்ததில் தனிமாணவர் பயிற்றுவித்தல் முறை சிறந்ததென்று காணப்பட்டது. மேலும் நினைவுகூர்தல் (Retention) அதாவது நினைவில் இருத்தி வைக்கக் கூடிய திறன் தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையில் பயிலும் மாணாக்கர்களிடம் அதிகம் வெளிப்படுதலைக் கண்டனர். மேலும் இவர்களின் தேர்ச்சித்திறன், மரபு வழிப் பயிற்றுவித்தல் முறையின் மாணாக்கர்களைவிட மிகுதியாக இருப்பதைக் கண்டனர்.

தெக்சாசுப்(Texas) பல்கலைக்கழகத்தில் தொழில் நுணுக்கக் கல்வி பயிலும் மாணாக்கர்களிடம் 'தனி மாணவர் பயிற்றுவித்தல் முறை'க்கு ஆதரவு எவ்வாறு இருந்தது என ஆய்ந்ததில், 70 விழுக்காடு மாணாக்கர்கள் சிறந்தது என்றும், 20 விழுக்காடு மாணாக்கர்கள் பரவாயில்லை என்றும், 10 சதம் மாணாக்கர்கள் விரிவுரை முறையே சிறந்தது எனவும் கருத்துக் கூறினர். கெல்லர் திட்டத்தின் தலையாய பண்புகள் முழுமைத் தன்மை அடைவு, சிறுசிறு

அலகுகளாகப் பிரிக்கப்பட்ட தன்மை, உடனுக்குடன் மீள் நோக்க விளைவுகூறலுக்கு உதவும் அறிவுப் புதிர்ப் பயிற்சி, விளைவுகூறலுக்கான தேவை நிலை ஆகிய நான்குமாகும்.

கியூளிக்கு (1978) என்பவர் 90 விழுக்காடு என்ற குறியீட்டளவை முழுதறிதிறன் நிலை என எடுத்துக் கொண்டு, புதிர் தேர்வுகளில் தோல்வி அடையும் மாணாக்கர்கட்கு விளைவுகூறல் உடனடித் தேவை எனவும், இவ்வாறாக விளைவுகூறலில் உடனடிக் கவனம் செலுத்துவதே முழுதறி திறன் அடைதற்கு உரிய நிலை எனவும் கண்டார். சிறிய எளிய அலகு களில் மாணாக்கர்கட்கு நிறைந்த அளவில் ஒவ்வொரு குறியீட்டளவையும் அடைதற்கு, அறிவுப் புதிர்கள் நிறைந்த பயிற்சி அளிக்கலாம். மாணாக்கர்களும் சிறுசிறு அலகுகளைச் சிறப்புடன், செறிவுடன் முடிக்க இயலும் என்றும், அவ்வப்போது மாணாக்கர்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்புகள் அளிக் கலாம் எனவும் கியூளிக்கு கண்டார். விளைவுகூற லைத் தாமதப்படுத்துவதால் மாணாக்கரின் கற்றல் நிலைகள் மாறுபடுகின்றன எனவும், தாமதப்படுத்தப் பட்ட விளைவுகூறலால் அவர்களின் கற்றல் தரம் குறைந்துவிடுகின்றது எனவும் அவர் கண்டார்.

அறிவுப்புதிர் முறைகட்கும் விளைவுகூறல் முறை கட்கும் வாய்ப்புகள் தருதலால், மாணாக்கர்கள் கற்றலை நிலைநிறுத்திக் கொள்ளக் கூடிய திறன் வளர்வதாகக் கண்டறியப்பட்டது. ஆனால், தனி மாணவர் பயிற்றுவித்தலில் சில காரணிகள் தெளி வான முடிவுகளைத் தரவில்லை. எடுத்துக்காட்டாக பயிற்றுநரிடமிருந்து எந்த அளவிற்கு உதவிகள் கிடைக்கின்றன? அவ்வகை உதவியின் அளவு எந்த அளவிற்கு மாணாக்கர்களின் ஒட்டுமொத்தமான தேர்ச்சித்திறனை வளர்க்கின்றது என்பதை அறிய இயவில்லை. எஸ்.மோ.

**துணை நூல்கள்**:

**Keller** F.S. and, J.G. Sherman, PSI: The Keller Plan Handbook: Essays on a Personalised System of Instruction, Benjamin, California, 1974.

**Sherman**, J.G., Personalised System of Education: 41 Germinal Papers, Benjamin, California, 1974.

**கெலோன்** மேற்குச் செருமனியின் மேற்புறத் தில் உள்ள ஒரு நகரம். இரைன் ஆறு (Rhine) இதற்கு அருகில் ஓடுகிறது. கெலோன் (Cologne) நகரைச் சுற்றியுள்ள பகுதிக்கு வடக்கு இரைன் வெசுட்டு பாலியா (North Rhine-Westphalia) என்பது பெயர். வாணிகத்திற்கும் தொழில் வளர்ச்சிக்கும் இப்பகுதி பெயர் பெற்றது. பல இருப்புப் பாதைகள் இந்நகரில் கூடுகின்றன; பல சாலைகள் சந்திக்கின்றன. இங்கு உற்பத்தியாகும் முக்கிய பொருள்கள் இரும்பு, எஃகு, பெரும் இயந்திர சாதனங்கள், இரசாயனப் பொருள் கள், ஆடைகள் முதலியனவாம்.




கெலோனிலுள்ள தேவாலயம்

ஒரு காவற்படை கொண்ட கோட்டையாக கி.மு. முதல் நூற்றாண்டில் இருந்த கெலோன் கி.பி. 50-இல் பேரரசர் கிளாடியசால் ஓர் உரோமானிய மாநிலமாக அமைக்கப்பெற்றது. இந்நகரம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் பிராங்கியரின் ஆதிக்கத் திற்கு உட்பட்டது. காலப் போக்கில் இங்கிருந்த சமய குருமார்களின் அதிகாரங்கள் பெருகின. உரோமன் கத்தோலிக்கப் பேராயர்கள் இளவரசர் களாக விளங்கினர். கெலோன் கி.பி. 1288க்குப் பிறகு சுயாட்சியுடன் வளரலாயிற்று. அது கி.பி. 1475-இல் ஒரு சுதந்திரப் பேரரசு நகரம் என அறிவிக்கப் பட்டது. இது பதினாறாம் நூற்றாண்டு வரை வாணிகத்துறையில் உயர்நிலையில் விளங்கியது. அங்கு வாழ்ந்த யூதர்கள் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் வெளியேற்றப் பெற்றனர். இந்நிகழ்ச்சி அந்நகரின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாயிற்று. சமயச்சீர்திருத்த

வாதிகள் பல இன்னல்களுக்கு உட்படுத்தப்பெற்றனர். பிரெஞ்சுக்காரர் கி.பி. 1794-இல் இந்நகரைக் கைப் பற்றிக் கொண்டனர். பிறகு, 1815-இல் பிரசியா (Prussia) இதைப் பெற்றது. அதன்பின் மீண்டும் இந் நகர் செழித்தோங்கத் தொடங்கியது. இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் இந்நகரம் மிகுந்த அழி பாடுகளுக்கு இலக்காகியது. போருக்குப் பிறகு நகரம் புதிய உருவாக்கம் பெற்றது. இதன் மக்கள் தொகை 972,900 (1981). தெ.பா.

**கென்சிங்டன் வரிவடிவக்கல்** இசுகாண்டி நேவிய வரிவடிவத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு. சுவிட்சர்லாந்திலுள்ள மின் (Minn) என்ற இடத்



கென்சிங்டன் வரிவடிவக்கல்

திற்கு அருகிலுள்ள கென்சிங்டன் (Kensington)என்ற ஊரில் இக்கல்வெட்டு கிடைத்தது. இதனை ஓலாபு ஓமன் (Olof Ohman) என்னும் வேளாளர் கி.பி. 1898-இல் தம் நிலத்திலிருந்து கண்டுபிடித்தார். இக் கல்வெட்டு கி.பி. 1362-ஆம் ஆண்டைச் சார்ந்தது. சுவீடன் நாட்டைச் சார்ந்த ஒரு குழுவும் நார்வே நாட்டைச் சார்ந்த வைகிங்குகளும் (Vikings) தாங் கள் வாழ்ந்த பகுதியைவிட்டு வின்லேண்டு (Vinland) (இன்றைய அமெரிக்கா) பகுதியில் குடியேற மேற்கு நோக்கிப் பயணம் மேற்கொண்டதைப் பற்றி இக்கல் வெட்டுக் குறிப்பிடுகிறது. அறிஞர்கள் சிலர் இக்கல் வெட்டுப் பொய்யானது எனக் கருதினர். அறிஞர்கள் பலர் இது உண்மைச் செய்திகளைக் கூறும் கல் வெட்டே ஆகும் எனக் கூறினர். இக் கருத்து வேறு பாடு இன்றளவும் சிக்கலாகவே உள்ளது. கென்சிங்டன் வரிவடிவக்கல் (Kensington Rune Stone) இன்று மின்னிலுள்ள அலெக்சாந்தியாவில் வணிக நிறு வனத்தின் வசம் உள்ளது. இக்கல்லின் உருவ நேர்படி (replica) ஒன்று வாசிங்டன்.டி.சி.யில் தேசிய அருங் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு 91 செ.மீ. நீளமும், 14 செ.மீ. கனமும், 104 கி.கி. எடையும் உடையது. சு.இரா.

**கென்ட்டு**: இங்கிலாந்தின் ஒரு மாவட்டமான கென்ட்டு (Kent) ஆதிகாலத்தில் ஒரு தனி அரசாக இருந்தது. இங்கிலாந்தின் தொடக்க கால வரலாற் றில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஏழு ஆங்கில சாக் சானிய அரசுகளில் இதுவும் ஒன்று. பிரிட்டன் தீவில் குடியேறிய ஆங்கிலோ-சாக்சானியர் முதலில் கெண்ட்டு பகுதியில் தங்கினர். உரோமிலிருந்து முதன் முதலாக போப்பாண்டவரின் சமயக்குழு இங்குத்தான் அனுப்பப் பெற்றது.

எங்கெசுடு (Hengest), ஆர்சா (Horsa) என்ற இருவரும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் கெண்ட்டுக்கு வந்து சேர்ந்தனரென்றும், பின் எங்கெசுடுவின் ஆட்சி ஆரம்பமாயிற்று என்றும் அறியக் கிடக்கிறது. பின்னர் ஏதல்பர்ட்டு என்ற அரசன் அம்பர் ஆற்றிற்குத் (Humber) தெற்கில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் அரசனாக அமர்ந்து ஆட்சி புரிந்தான். அவன் மனைவி பெர்தா (Bertha) என்பவள்,கிறித்தவ மதத்தைச் சேர்ந்திருந்தாள். அது காரணமாகவே, கி.பி. 597-இல் போப்பாண்டவர் மகா கிரிகிரி கென்ட்டுக்கு அகசுதீன் தலைமையில் ஒரு சமயப் பரப்புக் குழுவை அனுப்பியதாகத் தெரிகிறது. ஏதல் பர்ட்டு கிறித்தவ சமயத்திற் சேர்ந்தான். சமயப் பரப்புக் குழுவினருக்குத் தனது நாட்டில் கேண்டர்பரி என்ற இடத்தில் தங்கும் வசதிகளை அளித்தான். அக்காலந்தொட்டு. இங்கிலாந்தின் சமய வரலாற்றில் கேண்டர்பரி சிறப்பான இடத்தைப் பெறுகிறது.


தலைமைக் கண்காணியாரின் அல்லது பேராயரின் (Bishop) பீடமாகக் கேண்டர்பரி விளங்கலாயிற்று. கென்ட்டு சிறிது காலம் மெர்சியா என்ற நாட்டின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பிறகு கி.பி. 825-இல் வெசக்சு (Wessex) நாட்டின் அரசன் எக்பர்ட்டு மெர்சிய ஆட்சியை அழித்துவிட்டுத் தனது ஆதிக்கத்தைக் கென்ட்டில் நிறுவினான். அது முதல் கென்ட்டு வெசக்சின் ஒரு மாகாணமாகவே இருப்ப தாயிற்று. இங்கிலாந்து முழுவதும் கி.பி.10-ஆம் நூற் றாண்டின் இடைப் பகுதியில் மேற்குச் சாக்சானி யரின் ஆளுகையின் கீழ் வந்தது.

கென்ட்டு மக்களுக்கு சூட்டுகள் (Juts) என்பது பெயர். அவர்கள் மற்றக் கூட்டத்தினரான ஆங்கிலே

யரிடமிருந்தும், சாக்சானியரிடமிருந்தும் சில வகைகளில் வேறுபாட்டிருந்தனர். காலம் செல்லச் செல்ல இவ்வேறுபாடுகள் மறைந்து ஆங்கில தேசிய இனம் உருவாயிற்று.

இப்பொழுது இங்கிலாந்தின் ஒரு மாகாணமாக உள்ள கென்ட்டின் மொத்தப் பரப்பு 3,731 ச.கி.மீ. இது 14 மாவட்டங்களை உடையதாக இருக்கிறது. ஏறத்தாழப் பதினைந்து இலட்சம் மக்கள் இங்கு வாழ்கின்றனர். தெ.பா.

**கென்னடி, இராபர்ட்டு** ஒரு வழக்கறிஞர். இவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடி



கென்னடி, இராபர்ட்டு

யின் சகோதரர்; கென்னடி குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட மிகவும் கடுமையாக உழைத்தவர்; அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசுத் தலைமை வழக்குரைஞராகப் (Attorney-General)பதவி வகித்தவர்; குடியுரிமைகளுக்குப் (Civil Rights) பாடுபட்டவர்; குடியரசுத் தலைவர் கென்னடி இறந்த பின்பு நியூயார்க்குத் தொகுதி மேல்சபை (Senate) உறுப்பினராக 1964-இல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; கலிபோர்னியா பூர்வாங்கத் தேர்தலில் (1968) ஈசின் மேக்கார்த்தியை வென்றவர். இவர் 1968-இல் கொல்லப்பட்டார். ம.இ.

**கென்னடி, சான் பிட்செரால்டு** அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முப்பத்தைந்தாம் குடியரசுத் தலைவர். இவர் அமெரிக்கக் குடியாசுத் தலைவர்களுள் மிகவும் இளையவர்; முதல் கத்தோலிக்கர். இவர் மிகக் குறுகிய காலமே பதவியில் இருந்த போதிலும், உலக முழுவதிலும் நற்பெயர் பெற்றவர். உலக அரங்கில் அமெரிக்காவின் புகழை இவர்



கென்னடி

உயர்த்த விரும்பினார். அமெரிக்க நீக்கிரோக்களுக்கும் சம உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்ற விருப்பம் உடையவராயிருந்தார். உலக வரலாற்றில் இவரது பதவிக்காலம் ஒரு மறக்கவியலாத காலமாகும். இந்தியப் பிரதமர் பண்டித சவகர்லால் நேருவும், சோவியத்து நாட்டு அதிபர் குருச்சேவும், சான் பிட்செரால்டு கென்னடியும் (John Fitzgerald Kennedy) சம காலத்தவர்களாக இருந்து அரசியல் விவகாரங்களில் பங்கு கொண்டனர்.

மசாசுசெட்டு மாநிலத்தில் புரூக்லின் என்னும் ஊரில் சோசப்பு பேட்ரிக்கு கென்னடிக்கும் உரோசு பிட்செரால்டு கென்னடிக்கும் 1917-இல் மகனாகப் பிறந்த கென்னடி, இளமைக்காலத்தில் நல்ல கல்வி பயின்றார். இவர் 1940-இல் ஆர்வர்டு பல்கலைக் கழகத்தில் (Harvard) 'ஆனர்சு' (Honours) பட்டம் பெற்றார். இரண்டாம் உலகப்போரின்போது கப்பற்படையில் பணிபுரிந்தார். சப்பானியரால் தாக்கப்பட்டு இரண்டாக உடைந்த ஒரு படகை (P.T. Boat) தன் முதுகில் ஏற்பட்ட பலத்த காயத்தையும் பொருட்படுத்தாமல், யாருக்கும் ஆபத்து இன்றிக் கரைசேர்த்தார். இவரது சாதனையைப் பாராட்டும் வகையில், இவருக்குக் கடற்படையின் பரிசு (Navy and Marine Corps Medal) அளிக்கப்பட்டது. இவர் 1946-ஆம் ஆண்டு அமெரிக்கப் பேராளர் அவைக்குத் (House of Representatives) தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த அவைக்கு இவர் மீண்டும் 1948,50-ஆம் ஆண்டுகளில் தேர்வு பெற்றார். இவர் 1952-இல் மேல் சபைக்குத் (Senate) தேர்ந்தெடுக்கப்பட்டார். சாக்குலின் பூவிர் என்னும் மங்கையை 1953-இல் வாழ்க்கைத் துணையாகப் பெற்றார்.



படகில் கென்னடி

துணைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் (1956) மக்களாட்சி வேட்பாளராகத் தேர்வு செய்யப்படா விட்டாலும், 1960-இல் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு மக்களாட்சிக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடத் தேர்வு செய்யப்பட்டார். இத்தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் இரிச்சர்டு நிக்சனைத் தோற்கடித்தார்.

துடிப்புள்ளமும், பொதுநல ஆர்வமும், பரந்த மனப்பான்மையும் கொண்ட கென்னடி, பல சமுதாய முற்போக்கு நலச் சட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக்காங்கிரசிற்கு நிருவாகத்தலைமை அளித்தார். தியோடர் உரூசுவெல்ட்டு, உட்ரோவில்சன், பிராங்கிலின் டி ரூசுவெல்ட்டுமுதலான குடியரசுத் தலைவர்கள் பின்பற்றிய முன்னேற்றக் கொள்கையை, இவரும் பின்பற்றிப் புத்துயிர் ஊட்டினார். பதவியேற்றவுடன் 'புதிய எல்லை'க் (New Frontier) கொள்கையைச் செயற்படுத்துவதாக மக்களுக்கு உறுதியளித்தார். தொழிலாளர், விவசாயிகளின் நலனுக்காகச் சட்டங்கள் இயற்றி, நீக்கிரோக்கள் மற்றும் இந்தியர்களின் குடிமைஉரிமைகளைப்பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். பொருளாதார மீட்சிக்கும், வெளிநாட்டு உதவிக்கும், தேசியப் பாதுகாப்பிற்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது.

**உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்:** தொழிலாளர்களின் ஊதிய விகிதத்தை உயர்த்தவும், வேலையில்லாதோர்க்கு நீண்டகால இழப்பீட்டுத் தொகை வழங்கவும், மீதமுள்ள உணவுப் பொருள்களை இந்தியா உட்படப் பிற்பட்ட நாடுகளின் ஏழைகட்கு வழங்கவும், இவர் காங்கிரசைக் கேட்டுக் கொண்டார். குறைவான சம்பளம் பெறுவோருக்கு மருத்துவ உதவி அளிக்கவும் இன ஒருமைப்பாட்டை வளர்க்கவும் இவர் திட்டங்கள் தீட்டினார். ஐசன்ஓவரைப் போன்று இவரும் தென்மாநிலப் பள்ளிகளில் ஒருமைப்பாட்டை வளர்க்க இராணுவத்தைப் பயன்படுத்தினார். பள்ளிகளில் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யவும், அறுபத்து ஐந்து வயதிற்கு மேம்பட்ட வயோதிகர்கட்கு மருத்துவ வசதி அளிக்கவும் கென்னடி நிருவாகம் திட்டங்கள் வகுத்தது. ஆனால் இவற்றைக் காங்கிரசு ஏற்கவில்லை. காங்கிரசு ஒத்துழைக்காததால் இவரால் சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தஇயலவில்லை. அமெரிக்க இளைஞர்களைக் கொண்டு அமைதிப்படை (Peace Corps) ஒன்றை 1961-இல் நிறுவி, உலக முழுவதிலும் உள்ள முன்னேற்றமடையாத நாடுகளில் வேலை செய்யவும் கற்பிக்கவும் அனுப்பினார்.

**அயல்நாட்டுக் கொள்கை:** அயல்நாட்டு விவகாரங்களில் இவர் முன்னோக்குக் கொள்கையைக் கடைப்பிடித்தார். தகராறுகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று இவர் அறிவித்தபோதிலும், கம்யூனிச ஆதிக்கங்களுக்கு எதிராகக் கடினப் போக்கையே பின்பற்றினார். காசுட்ரோவின் பொதுவுடைமை ஆதரவு அரசை 1961-இல் கவிழ்க்க கியூபாவின் மீது தாக்குதல் மேற்கொண்டார். நாடு கடத்தப்பட்ட கியூபானியர்களும் அகதிகளும் இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு, கியூபாவைக் கைப்பற்ற அனுப்பப்பட்டனர். ஆனால் தோற்கடிக்கப்பட்டனர். உலக நாடுகள் கியூபா மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்தன. கோபமுற்ற கென்னடி காசுட்ரோவைப் பதவிலிருந்து இறக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் இயலவில்லை. இந்நிலையில் கியூபா அதிபர் உருசியாவின் துணையை நாடினார். இதனையே 'தக்க வாய்ப்பாகக் கொண்டு குருச்சேவு கியூபாவில் பயங்கரமான ஏவுகணைகளையும் அணுகுண்டுகளையும் குவித்தார். கென்னடியோ கியூபாவை விட்டு உருசியர்களை வெளியேற்றுவதில் கண்டிப்பாக இருந்தார். அமெரிக்கப் படைகள் கியூபாவிற்கு அருகில் முற்றுகையிட்டன. உருசியர்கள் பணிந்தனர்; ஆயுதங்களைப் பின்வாங்க இசைந்தனர். இது அமெரிக்காவிற்கு மாபெரும் வெற்றியேயாகும்.

பொதுவுடைமை ஆட்சியைத் தகர்க்கும் நோக்குடன் தைவானின் சியாங்கே சேக்கு அரசிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த இவர், சீனாவுடன் கொண்ட தொடர்பில் ஆக்கிரமிப்புக் கொள்கையையே பின்பற்றினார். பொதுவுடைமை நாடுகளால் அச்சுறுத்தப்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார, இராணுவ உதவிகளை அளித்தார். இந்தியா முதலான வளர்ச்சி பெறாத நாடுகளின் முன்னேற்றத்திற்கு ஏராளமாகப் பண உதவி செய்தார். காங்கோவிலிருந்து கதாங்கா தனியாகப் பிரிந்து செல்வதைத் தடை



கென்னடி இறுதியாகச் சென்ற ஊர்தி அருகில் அவரது துணைவியார்

செய்வதில் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட முயற்சிகளுக்குக் கென்னடி ஆதரவு நல்கினார். கென்னடி நிருவாகம் ஐக்கிய நாடுகளின் பெருமையையும் புகழையும் உயர்த்தியது. சீனா இந்தியாவின் எல்லைப் பகுதியில் ஆக்கிரமிப்பு நிகழ்த்தியபோது (1962) கென்னடி இந்தியாவிற்கு உதவி செய்தார். சீனா உடனே பின்வாங்கியது. கென்னடி உருசியா, இங்கிலாந்து நடுகளுடன் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் 1961-இல் கையெழுத்திட்டார்.



ஆசுவால்டும் (நடுவில் உள்ளவன்) அவனைச் சுட்ட சேக் ரூபியும் (கையில் துப்பாக்கி வைத்திருப்பவன்)

உலக அரங்கில், தனது சலியாத உழைப்பாலும், விடாமுயற்சியாலும் குறுகிய காலத்தில் பெரும் புகழ் பெற்ற கென்னடி, ஆசுவால்டு (Oswald) என்பவனால் 1963-இல் சுட்டுக் கொல்லப்பட்டார். ம.இ.

**கென்னடி,சோசப் பேட்ரிக்கு (கி.பி. 1888-1969):** இவர் அமெரிக்காவில் ஒரு செல்வர். இவர் 1937 முதல் 1940 முடிய இங்கிலாந்தில் தூதராகப் பணிபுரிந்தார். இவர் மனைவி உரோசு பிட்செரால்டு கென்னடி ஆவார். இத்தம்பதியினருக்கு ஒன்பது குழந்தைகள் பிறந்தனர். இவர்களுள் அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் கென்னடியும் ஒருவர். இவர் தம் குழந்தைகளை அரசியலில் ஈடுபடுத்த வேண்டும் என்று விரும்பினார். ம.இ.


**கென்னப்பு, அர்னால்டு வான் (கி.பி. 1873-1957)** இனக்குழுவியல், நாட்டுப்புறவியல் ஆகியவற்றில் வல்லுநர். இவர் செருமனியில் உர்டம்பர்க்கில் பிறந்தவர். கென்னப்பு (Arnold Van Gennep) பிரான்சில் கல்வி பெற்றவர்; பல மொழிகளைக் கற்றவர். அதனால், இவர் இனக்குழுவியல் (Ethnography) ஆய்வுகளிலும் நாட்டுப்புறவியல் ஆய்வுகளிலும் மொழியியல், தத்துவம் ஆகிய துறைகளின் கருத்துகளை ஈடுபடுத்தி ஆய்வு செய்ய முடிந்தது.

கென்னப்பின் ஆய்வுகளுள் முதன்மையானது தகுதிப் பெயர்ச்சிச்சடங்குகள் (The Rites of Passage, 1909) பற்றியதாகும். ஒவ்வொரு பண்பாட்டினரும் பிறப்பு முதல் இறப்பு வரை தங்கள் வாழ்க்கைப் பருவத்தின் மாற்றத்தின்போது நடத்தும் சடங்குகள் பல வகையான செயல்களைக் காட்டுகின்றன என அவ்வாய்வில் இவர் சுட்டுகிறார். அதாவது, ஒருவர் குழந்தைப் பருவத்திலிருந்து குமரப்பருவம் அடையும்போதும் குமரப்பருவத்திலிருந்து முதிர்ந்த ஆண் நிலையடையும்போதும் நிகழ்த்தப்படும் சடங்குகள், ஒருவரை ஒரு சமூகத்தகுதி நிலையிலிருந்து விடுத்து, மற்றொரு நிலைக்கு மாற்றுகின்றன.இதற்கு இடைப்பட்ட நிலையில் ஒருவர் பெறும் தகுதிக்காகவும் பல சடங்குகள் நடத்தப்படுகின்றன. அதனால் இச்சடங்குகளைத் தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள் (Seperation rites), புதிய தகுதியைப் பெறும் முன்னர் நிகழ்த்தப்படும் சடங்குகள் (Transitional rites), புதிய தகுதியை ஏற்கும் சடங்குகள் (Inclusion rites) எனப் பாகுபடுத்துவார். இச்சடங்குகள் அனைத்தும் அவரவர் பண்பாட்டின் குறியீட்டமர்வைக் (Symbolism) காட்டுகிறது. ஒரு சமுதாயத்தினர் மாயவித்தை நிகழ்ச்சியின் பால் கொண்டுள்ள நம்பிக்கைகளையும் அதற்கான சடங்குகளையும் வகைப்படுத்தி, அவற்றின் செயற்பாடுகளையும் இவர் விளக்கினார்.

ஐரோப்பிய நாட்டுப்புறவியலைப் பெருமளவு ஆய்வு செய்த பெருமை கென்னப்பிற்கு உண்டு. நாட்டுப்புற இலக்கியங்களையும் வழக்கங்களையும் வாழும் பண்பாட்டுக் கூறுகள் என்றும், அவற்றை ஆராய்வது பண்பாட்டு வரலாற்றை அறிவதற்கு மட்டுமன்றி, வாழ்க்கையின் ஒவ்வொரு நிறுவனத்தின் செயற்பாங்குகளை அறியவும் உதவும் என்றும் இவர் குறிப்பிட்டார். ஏனெனில், இவர் காலத்தைய

ஐரோப்பிய அறிஞர்கள் நாட்டுப்புற இலக்கியங்களும் அவர்களுடைய வழக்கங்களும் கடந்த கால மரபுகள் என்றும், வரலாற்றின் எச்சங்கள் என்றும் கூறிவந்தனர். இவர் அதற்கு மறுப்புக் கூறியதுடன் நகர மக்களிடையே மறைந்து வரும் பண்பாட்டுக் கூறுகளையும் நகரப் பண்பாட்டின் வளர்ச்சி பிற பகுதிகளுக்கு பரவும் முறைகளையும் விவரித்தார். கென்னப்பு நாட்டுப்புறவியல் பற்றிய செய்திகளைப் பெருமளவு சேகரித்து வெளியிட்டார்; பல தனி நூல்களையும் (Monographs) நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் வெளியிட்டார். இவர் 1957-இல் காலமானார். சீ.ப.

**கெனியா:** ஆப்பிரிக்காக் கண்டத்தில் எத்தியோப்பியாவுக்குத் தெற்கிலும் உகாண்டாவுக்குக் கிழக்கிலும், தான்சானியாவுக்கு வடக்கிலும், சோமாலிக் குடியரசுக்கும் இந்தியப் பெருங்கடலுக்கும் மேற்கிலும் உள்ள கெனியா (Kenya) 582,600 ச கி.மீ. பரப்பைக் கொண்டது. இந்நாடு 1963-ஆம் ஆண்டு திசம்பர்




கெனியா

பன்னிரண்டாம் நாள் சுதந்திரம் பெறும் வரை ஆங்கிலேயக் குடியேற்ற நாடாக இருந்தது. கிழக்கு ஆப்பிரிக்கக் காப்பு நாடு என்பது இதன் அக்காலப் பெயராகும். கெனியா 1920 முதல், குடியேற்ற நாடு என்ற பெயருடன் ஆங்கிலேய மன்னராட்சிக்கு உட்பட்டிருந்தது. பிரிட்டனும் இத்தாலியும் 1924-இல் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி, அப்பகுதியில் உள்ள சூபா ஆறும் (Juba) அதைச் சுற்றியுள்ள பகுதியும் இத்தாலிக்கு வழங்கப் பெற்றன. பிரிட்டனும் எத்தியோப்பியாவும் 1947-இல் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கெனியாவின் வடக்கு எல்லை உறுதி செய்யப்பட்டது.

கெனியாவில் ஆப்பிரிக்கர்களைத் தவிர ஆசியர்களும் ஐரோப்பியர்களும் அரேபியர்களும் வாழ்கின்



கெனியா தலைநகரம் நைரோபி

றனர்' நாற்பதுக்கும் மேற்பட்ட ஆப்பிரிக்கப் பிரிவினர் அங்கே உள்ளனர். கெனியாவுக்கு 1963-ஆம் ஆண்டு சூன் மாதம் உள்நாட்டுச் சுதந்திரம் வழங்கப் பெற்றது. திசம்பர் மாதத்தில் முழுச் சுதந்திரத்தையும் அந்நாடு பெற்றது. அது 1964-இல் குடியரசாகியது. மேல்சபை, கீழ்சபை இரண்டும் 1966-இல் ஒன்றாக இணைக்கப்பட்டுத் தேசிய சட்டசபை என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது. கெனியா - ஆப்பிரிக்க தேசிய ஐக்கியக் கட்சி ஒன்றே அரசியல் ஆதிக்கம் பெற்றுள்ளது. 1979-இல் நடைபெற்ற தேர்தலில், 157 சட்டசபை இடங்களுக்கு 800 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். நாட்டின் தலைநகர் நைரோபி (Nairobi). தலைநகர்ப் பகுதி தவிர வேறு ஏழு மாநிலங்கள் இக்குடியரசில் அமைந்துள்ளன. சுவாகிலி (Swahili) மொழியே அரசியல் மொழியாக இருந்த



கெனியாவிலுள்ள ஒரு சிற்றூரின் தோற்றம்

போதிலும் ஆங்கிலம் பொதுப் பழக்கத்திலும் இருந்து வருகிறது. ஐ.நா. சபையிலும் வேறு சில பன்னாட்டு அமைப்புகளிலும் கெனியா ஓர் உறுப்பு நாடாக உள்ளது. சமயத்துறையில் மக்களின் பழைய ஆப்பிரிக்க வழிபாட்டு முறை அங்கு மங்கிக் காணப்பட்ட போதிலும் கிறித்தவசமயம் மிகுதியாக அங்கு முன்னேறியுள்ளது. தெ.பா.

**கல்வி முன்னேற்றம்**: மழலையர் பள்ளிக் கல்வி (Pre-school Education) 1979-முதல் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் மழலையர் கல்வி தனியார் நிறுவனங்களில் கற்பிக்கப்பட்டு வந்தது. தொடக்கப்பள்ளிக் கல்வி மொத்தம் ஏழாண்டுகள். இக்கல்வி கெனியாவில் கட்டாயமாகவும் இலவசமாகவும் உள்ளது. தொடக்கப் பள்ளிகளில் நாட்டு மொழிகளே பயிற்றுமொழியாக உள்ளன. பள்ளி வகுப்பறை, ஆசிரியர்கள் தங்குமிடம் போன்ற வசதிகளைப் பள்ளிகள் அமைந்திருக்கும் இடத்திலுள்ள சமுதாயமே செய்து தருகிறது. பள்ளி நிருவாகம், ஊதியம் போன்றவற்றை அரசு கவனித்துக் கொள்கிறது.

கெனியாவிலுள்ள இடைநிலைப்பள்ளிகளில் சேருவதற்கு, நுழைவுத் தேர்வு எழுதி வெற்றி பெறுதல் வேண்டும். அங்கு இடைநிலைக் கல்வியின் கால அளவு மொத்தம் ஆறாண்டுகள். இவற்றுள் முதல் நான்காண்டுக் கல்வி முடிந்தவுடன் மாணவர்கள் பொதுத் தேர்வு எழுதுகின்றனர். வெற்றி பெற்றவர்கள், இறுதி ஈராண்டுகளான மேனிலைக் கல்வி (Advanced level) பெறுகின்றனர்.

கெனியாவில் உயர்கல்வியானது, நைரோபிப்பல்கலைக்கழகத்தாலும் (University of Nairobi) அதனது உறுப்புக் கல்லூரியான கெனியாட்டா பல்கலைக் கழகக் கல்லூரியாலும் (Kenyatta University College) வழங்கப்படுகிறது. மேலும் உயர் கல்வியில் வயதுவந்தோர் கல்வி நிறுவனமும் (Institute of Adult Studies) வளர்ச்சிசார் கல்வி நிறுவனமும் (Institute of Development Studies) எழுத்தறிவின்மையை ஒழிக்கக் கல்வி வழங்குகின்றன. மேலும் வயது வந்தோர் கல்வியில் ஈடுபட்டுள்ளோருக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. பல்கலைக்கழகப் பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

கெனியாவில் தனியார் பல்கலைக்கழகங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக, 1970-இல் நைரோபியில் நிறுவப்பட்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பன்னாட்டுப் பல்கலைக் கழகம் (The United States International University) தொழில், வணிகம் தொடர்பான கல்விப் பாடங்களை முழுநேரமாகவும், பகுதி நேரமாகவும் வழங்குகிறது. உயர்கல்வியில் ஆங்கிலமே பயிற்றுமொழியாக உள்ளது.

கெனியாவின் தேசிய தொழில்நுட்பப் பள்ளிகளும் (Polytechnics), சில மேனிலைப் பள்ளிகளும் தொழிற்கல்வி வழங்குகின்றன. நைரோபி, மொம்பாசா (Mombasa) என்னுமிடங்களில் தேசியதொழில்நுட்பப் பள்ளிகள் உள்ளன.

கெனியா தனது ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ஏறத்தாழ 20 விழுக்காட்டினைக் கல்விக்காகச் செலவு செய்கிறது. கெனியாவில் கல்வியாராய்ச்சியானது, கெனியா கல்வி நிறுவனம் (Kenya Institute of Education) வளர்ச்சிசார் கல்வி நிறுவனம் (Institute of Development of Studies) கல்வியாராய்ச்சி மையம் (Bureau of Educational Research) ஆகியவற்றால் நடத்தப்படுகிறது. கல்வி நிருவாகம், கல்விப் பொருளியல், மாணவர் சேர்க்கை, மாணவர் மதிப்பீடு, கற்பித்தல், அரசியற் கல்வி போன்ற பகுதிகளில் கல்வியாராய்ச்சி நடைபெற்றுள்ளது. எஸ்.த.

**கே** கெ என்ற எழுத்துக்குரிய குறிப்பைப் பார்க்க கெ, கே என்ற இரண்டிற்கும் வேறுபாடு காண்பிக்கப்படாமலே எழுதப்பட்டு வந்தது. கெகரத்திற்குப் புள்ளி முறையாக இடப்படாததால் மொழி அறிவைக் கொண்டே அந்த வேறுபாட்டை அறிந்து வந்தார்கள்.

இதன் உருவத்தைப் பொறுத்தவரையில் கெகரத்துக்குச் சொல்லப்பட்டவையெல்லாம் இதற்கும் பொருந்தும்.

கே என்ற எழுத்தின் இக்கால வடிவம் வீரமாமுனிவரால் வழங்கப்பட்டதாகக் கருதப்பட்டாலும், திருச்சி மாவட்டம் சந்தாசாகிபின் கல்வெட்டுகளில் காணப்படுவதைப் போல வழக்கிலிருந்ததையே அவர் குறிக்கிறார் என்று தோன்ற இடமுண்டு.

கே.ஜி.கி.

**கேககசுத்தீவுகள்**: இங்கிலாந்திற்கு உட்பட்ட மேற்கு இந்தியத் தீவுகளைச் சேர்ந்த இவற்றிற்குத் தருக்கசு, மற்றும் கேகசுத் தீவுகள் என்பது பெயர். கிராண்டு தர்க்கு (Grand Turk), இவற்றின் தலைநகர். பிரிட்டனைச் சார்ந்துள்ள இத்தீவுகள் 430 ச.கி.மீ. நிலப்பரப்பை உடையன. இங்கு முப்பதுக்கும் மேற்பட்ட தீவுகளும் கரையணைந்த சிறு தீவுகளும் உள்ளன. இவற்றுள் ஆறு தீவுகளில் மக்கள் வாழ்கின்றனர். நில அமைப்பைப் பொறுத்தவரை இத்தீவுகள் பகாமாத் தீவுகளின் தென்கிழக்குத் தொடர்ச்சி என்றே கூறலாம். இவற்றின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் உப்பு. இவற்றை கி.பி. 1512-இல் கண்டுபிடித்தவர் பான்சி-டி-லெயோன் (Pance-de-Leon) என்பவராவார்.

தெ.பா.

**கேசவ சந்திர சென்** வங்க மாநிலத்தில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமயச்சீர்திருத்தச் செம்மல். கல்கத்தாவில் உயர்குடியில் பிறந்த இவர் கி.பி. 1839-ஆம் ஆண்டில், பிரமசமாசத்தில் சேர்ந்தார். பிரமசமாசத்தைக் தோற்றுவித்த இராசாராம் மோகன்ராய் காலமாகிவிட்ட பிறகு, அவ்வியக்கத்தை நடத்தும் பொறுப்பினை இவர் தேவேந்திர நாத்துடன் ஏற்றார். இவருடைய தணியாத பக்தியும் உணர்ச்சிமிகு ஆர்வமும் ஆற்றல்மிகு பேச்சுத்திறனும் இவ்வியக்கத்திற்கு எண்ணற்ற உறுப்பினர்களை ஈர்த்துத் தந்தன.

தேவேந்திரநாத்து பழைய பழக்கவழக்கங்களில் ஒருசிலவற்றை அப்படியே மேற்கொண்டார். ஆனால் கேசவசந்திரசென் மிகப் புரட்சிகரமான கருத்துகளை - 'கலப்புத்திருமணம்', 'விதவைமறுமணம்', 'பெண் கல்வி', 'குழந்தைத் திருமணத் தடுப்பு', 'பலதாரத் தடுப்பு' போன்றவைகளையே கற்பித்தார். எனவே இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு உண்டாயிற்று. தேவேந்திரநாத்து இவரைச் சமாசத்திலிருந்தே நீக்கிவிட்டார். உடனே கேசவ சந்திரசென்னும், அவர்தம் சீடர்களும் பிரமசமாசத்தைவிட்டு வெளியேறி கி.பி. 1866-ஆம் ஆண்டில் 'இந்திய பிரமசமாசம்' என்ற இரண்டாம் இயக்கத்தைத் தொடங்கினர். இந்த இயக்கத்தில் கிறித்துவக் கோட்பாடுகளை நுழைக்க இவர் விரும்பினார். இவர் கி.பி. 1870-ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்றபோது அங்குள்ள கிறித்தவ நிறுவனங்கள் அனைத்தும் இவருக்கு நல்வரவேற்பை அளித்தன. மீண்டும் இந்தியா திரும்பியதும் இவர் இயக்கக் கிளைகளைப் பெருக்கி, மக்களுக்குத் தொண்டு புரிந்தார். இவர் பம்பாய், சென்னை போன்ற மாநிலங்களுக்கும் சென்றுதம் கருத்துகளைப் பரப்பினார்.

இவருடைய புதிய இயக்கமும் கி.பி. 1878-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பிளவுபட நேர்ந்தது. இவர்தம் 14 வயது நிரம்பிய மகளுக்கும் கூச்பிகார் நாட்டு இளவரசனுக்கும் இந்து சமயப்படி திருமணம் என்றவுடன் இவர் சீடர்கள் இவருக்கு எதிராகக்

கொதித்தெழுந்தார்கள். அவர்கள் மூன்றாம் இயக்கத்தை கி.பி. 1878-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ஆம் நாளில், 'சாதாரண பிரமசமாசம்' என்ற பெயரில் தொடங்கினர். கேசவசந்திர சென் இழந்த பெருமையை மீண்டும் பெறுவதற்குப் புதிய முறையில் ஒழுங்கமைத்து, 'நவ விதான்' என்ற பெயரில் தம் இயக்கத்தை அறிவித்தார். இப்புதிய இயக்கத்தில் உலகத்து அனைத்துச் சமயக் கோட்பாடுகளும் கொள்கைகளும் அடங்கியிருப்பதாகவும், தாமே இந்த உலகச் சமயத்தின் திருநாவுரையர் எனவும் தெளிவு படுத்தினார்.

கேசவ சந்திரசென் கி.பி. 1884-ஆம் ஆண்டு, சனவரித் திங்களில் காலமானார். இவர் மரணத்திற்குப் பிறகு, இயக்கத்திற்குத் தக்க தலைவர் இல்லாததால் அது பல்வேறு கூறுகளாக்கப்பட்டுக் கடைசியில் அடிச்சுவடுகூடத் தெரியாமல் மறைந்துவிட்டது. எனினும், இவர் இயக்கக் கோட்பாடுகளின் பெயராலும், இவர்தம் தளராத முயற்சியாலும், உழைப்பாலும், இந்திய அரசு கி.பி. 1872-ஆம் ஆண்டுச் சட்டம் 3-ஆம் பிரிவுப்படி 'குழந்தைத் திருமணத் தடுப்பு', விதவைத் திருமணம்', 'பலதாரத் திருமணத் தடுப்பு', 'கலப்புத் திருமணம்' ஆகியவைகளை நிறைவேற்றியுள்ளது.

கேசவ சந்திர சென் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார். இவர்கி.பி. 1863-ஆம் ஆண்டில் 'பிரம சமாசத்தின் நிலையான கோட்பாடுகள்' என்ற நூலையும் கி.பி. 1883-ஆம் ஆண்டில் 'புதிய சம்கிதா' என்ற நூலையும் வெளியிட்டுத் தம்முடைய எண்ணங்களை அனைத்து உலக மக்களுக்கும் தெளிவுபடுத்தினார்.

பொன்.சு.

**கேசவதாசு**, கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்திக் கவிஞராவார். இந்தி மொழி இலக்கிய வரலாற்றில் இவரைப் பக்தி காலத்தவர் என்பாரும், இரீதி காலத்தின் முதற் கவிஞர் என்பாரும் உளர். பார்ப்பன குலத்தைச் சார்ந்த இவர் தம் தந்தை காசிநாத்து என்பவராவார். வடமொழிக் கல்வியில் சிறந்து விளங்கிய குடும்பத்தில் பிறந்தவராதலின் கேசவதாசும் அம்மொழியை நன்கு கற்றுத் தேர்ந்திருந்தார். ஓர்ச்சா நாட்டு மன்னன் இந்திரசித் சிங்கின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தார். இவர் புலமையையும் பெருமையையும் கண்டுணர்ந்த மன்னன் இக்கவிஞரைப் போற்றிப் பாதுகாத்ததோடு தன் ஆசிரியராகவும் ஏற்றுக் கொண்டு சிறப்பித்தான். இவர் அரசவைக் கவிஞராக விளங்கிய காரணத்தால் அரசவைச் செல்வாக்கோடு, வறுமையொழிந்து வளமாக வாழ்ந்தார்.

கேசவதாசு வடமொழி இலக்கண இலக்கியங்களில் புலமை மிக்கவர். வடமொழியில் இவருக்கிருந்த பரந்துபட்ட அறிவினை நன்குணர்ந்த இந்திமொழி அறிஞர்கள், சூரதாசர், துளசிதாசர் ஆகியோருடன் இவரையும் ஒப்ப வைத்து மதித்துப் போற்றினர். இந்தி மொழி இலக்கிய வானில் சூரதாசரை ஞாயிற்றுக்கும், துளசிதாசரைத் திங்களுக்கும், கேசவதாசை விண்மீன் கூட்டங்களுக்கும் ஒப்புமை கூறுவர்.

கேசவதாசு கவிப்பிரியா, இரசிகப்பிரியா, இராமச்சந்திரிகா, விஞ்ஞான கீதா, இரத்தினபாவனி, வீரசிங்தேவ் சரிதம், சகாங்கீர் - சசு - சந்திரிகா ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். முதல் இரண்டு நூல்களிலும் ஒன்பான் சுவைகள், யாப்பு அணி இலக்கணங்கள் காவிய இலக்கணம் ஆகியவற்றின் விளக்கங்களும், வருணனைகளும் இடம் பெறுகின்றன. பின் இரண்டு நூல்களிலும் வீரசிங்தேவு, சகாங்கீர் ஆகிய மன்னர்களின் குணநலன்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. 'இராமச்சந்திரிகா' ஒரு பிரபந்த காவியமாகும். இந்நூல் கவிஞரின் மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படுகின்றது. இந்நூலே கவிஞரின் புகழுக்குக் காரணமாகவும் அமைந்தது என்பர். இந்நூலுள் கவிஞர் இராமனை மிகச் சிறந்த அரசன் என்ற அளவிலேயே அவனுடைய பண்பு நலன்களைப் புகழ்ந்துரைக்கின்றார்.

கேசவதாசு காலத்தில் இந்திமொழி இலக்கிய வளத்தோடு முழுமையான வளர்ச்சி பெற்றிருந்தது. அந்நிலையில் தம் வடமொழிப் புலமை கராணமாக வடமொழி இலக்கிய இலக்கணக் கொள்கைகளைக் குறிப்பாக, சந்த இலக்கணம், அணியிலக்கணக் கொள்கைகளை இந்திமொழி அறிஞர்க்கு அறிமுகப்படுத்தினார். கவிப்பிரியா, இரசிகப்பிரியா ஆகிய இரு நூல்களும்வடமொழி இலக்கியங்களின் அடிப்படையில் எழுதப்பட்டன என்பர். சிற்சில இடங்களில் பாமகர், தண்டி போன்ற பழங்கால வடமொழி ஆசிரியர் தம் காவியங்களில் இடம்பெறும் இலக்கண இலக்கியக் கொள்கைகளை முழுமையாக எடுத்துத் தம் இலக்கியங்களில் இடம் பெறச் செய்தார். 'அணியின்றிக் கவிதைகள் அழகுபெறா' என்னும் இவருடைய கொள்கை இவர்தம் காவியப் படைப்புக்களில் வலியுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் கேசவதாசு கவிஞர் என்பதிலும் இலக்கண இலக்கிய ஆசிரியராகவே கற்பார் முன் காட்சி தருகின்றார் என்ற கருத்தும் உண்டு.

கேசதவாசு வடமொழிப் புலமை மிக்கவர். இவர் வடசொற்களையும், அரபி, பார்சி, புந்தேளகண்டி ஆகிய மொழிச் சொற்களையும் தம் கவிதைகளில்மிகுதியாகக் கையாண்டார் என்றும், கவிதைக்கு

உயிராகக் கருதப்படும் உணர்ச்சி நடையை விடுத்துச் செயற்கை நடையை மேற்கொண்டார் என்றும், அவை காரணமாக இவர்தம் கவிதைகளும் காப்பியங் களும்சுவையற்று வளங்குன்றிக் கற்பார்க்குக் கடுநடை யாகக் காணப்பட்டன என்றும் இவர்பால் குறை காண்பாரும் உண்டு. இருப்பினும் அரசவைக் கவிஞ ராக இருந்தமையின் இவர்தம் நூல்களில் அரசுத் தொடர்புடைய வருணனைகள்,போர்க்களவருணனை கள், காப்பியங்களில் இடம்பெறும் பாத்திரங்களின் வாத விவாதங்கள் முதலியன சிறப்பாக இடம்பெறு கின்றன. இரா.செ.

**கேசவனார்** சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பரிபாடல் 14-ஆம் பாடல் முருகனைப் பற்றியது. அப்பாடலுக்கு 'நோதிறம்' என்னும் பண் வகுக்கப்பெற்றுள்ளது. பண் வகுத்தவரும் இவரே.

'கேசவன்' என்பது திருமாலைக் குறிக்கும் பெயர் களுள் ஒன்று. சோழ பரம்பரையைச் சார்ந்த ஓர் அரசனுக்கும் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. இப் பெயருக்கு 'நிறைமயிருள்ளோன்' என்பது பொருளா கும்.

வைணவச் சார்பான 'கேசவனார்' என்னும் பெயர் கொண்ட இவர், முருகனைப் பரவும் பாடலைப் பாடிப் பண்ணும் அமைத்துள்ளமை இவர் தம் உள்ளத்தே நிலவிய கடவுட் பொதுமை உணர் விற்குச் சான்றாகிறது. இவர் காலம் சங்க காலம் எனப்படும்.

கேசவனார் பாடல் 32 அடிகளைக் கொண்டுள் ளது. கிடைத்துள்ள பரிபாடல்களில் இதுவே சிறியது. பருவங் கண்டு அழிந்த தலைமகள் கேட்ப, முருக வேளைப் பரவுவளாய், அப்பருவத்தே தலைமகன் வரும் என்பதுபடத் தோழி தலைவியை வற்புறுத்தும் பாங்கில் பாடல் அமைந்துள்ளது.

இந்தப் பாடலில் ஆசிரியர் முருகனுக்குரிய அறு படை வீடுகளுள் ஒன்றாகிய திருப்பரங்குன்றத்தின் அழகையும் சிறப்பையும் முருகப் பெருமானின் பெருமையையும் போற்றிப் பாடியுள்ளார்.

கார்காலத்தில் பெருமழை பெய்தலால் நீர் நிறைந்த சுனைகளில் மலர்கள் மலர்கின்றன. கடம்ப மலரில் தாதூதும் வண்டின் குரல் பண்போல் அமைந்துளது;மலைவளர் மூங்கில் மகளிர்தம் தோள் களைப்போல் தோன்றியது; குயில்கள் கூவும் குர லொலி தலைவியரைத் தனியே விட்டுப் பிரிந்துறை தலைவர் தம்மைத் 'தலைவர்காள்! இனியும் தாமதம் செய்யன்மின்; விரைந்து வந்தெய்துக' எனக் கூவி அழைப்பதுபோலுள்ளது; கொன்றை மலர்க்கொடிப் பூக்கள் பொன்னாலாகிய மாலை களைப் போன்றன என்றிவ்வாறு கூறும் செய்திகள் கேசவனாரது உவமைத் திறத்தை விளக்குவதோடு, இசையுணர்வையும் புலப்படுத்துகின்றன.

அழுகையுடைய பேதை மகளிர்க்குத் தாய்மார் கள் புலி புலியென்று கூவிக் காட்டுமாறு, பாறையில் வேங்கை மலர்கள் பரந்து சிதறிக் கிடந்தன என்று சொல்வது இவர்தம் கற்பனை வளத்தைக் காட்டு கிறது. மலர்ந்த காந்தளின் மணம் நிறை இதழ்கள் எங்கும் பரந்து எழில் நிறைந்துள்ளது என்று கூறிப் பரங்குன்றின் கார்கால இயற்கைச் சூழலைப் பாடு கின்றார்.

முருகன் சூரபன்மனைக் குலத்தோடு அழித்த வேற்படையையுடையவன் என்று அவன் வீரத்தைக் கூறுவதோடு, முருகனுக்கு வள்ளிமேல் இருக்கும் காதலை மனத்திற்கொண்டு 'நறுமலர் வள்ளியும் நயந்தோய்' என்று உருவகித்துக் கூறும் பாங்கு அழ குடையது.

பாடுவார் பாட்டின் பயனானவன்; திருவவதாரம் செய்தபோதே இந்திரன் முதலியோர் அஞ்சிய சிறப் புடையவன்; அந்தணர் உரைக்கும் அறநெறி நின்ற அழகுடையவன் என்று முருகனின் சிறப்புகளைப் பாராட்டியுள்ளார். மேலும், முருகனை, சுடர்ப்படை யோய், நறும்புகை நனியமர்ந்தோய், வள்ளிப்பூ நயந்தோய், பாட்டமர்ந்தோய், சீருடையோய், அந்த ணர் அறனமர்ந்தோய் என்று அவன் பண்புகள் புலப் படுமாறு சுட்டி விளித்திருப்பது குறிப்பிடத்தக்க தாகும். 'துன்னித் துன்னி வழிபடுவதன்பயம், இன்னு மின்னுமவை யாகுக, தொன்முதிர் மரபினின் புகழி னும் பலவே' என்று பாடலின் இறுதியில் அமைந்த வேண்டுதல், ஆசிரியர் உலகியற் பயன் கருதாது, முருகன்பால் கொண்டுள்ள தன்னலமற்ற அன்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. ந.த.

**கேசான், மனாவெல் உலூயி**: தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பிலிப்பைன்தீவுகளின் சுதந்திரத்திற் காகப் பாடுபட்ட இவர், உலூசான் தீவில், கி.பி. 1878-இல் பிறந்து, வழக்கறிஞராகப் பணியாற்றி, பின்னர்த்தமது மாநிலமான தாயாபாசு (Tayabas) பகுதியின் ஆளுநராகப் பணியாற்றிச்சட்டசபை உறுப் பினராகவும்,பிலிப்பைன் ஆணையராகவும் பணிபுரிந்து, அதன்பின் நாட்டு விடுதலை இயக்கத்திற் சேர்ந்து அருஞ் செயலாற்றினார். பிலிப்பைன் சுதந்திரப் போராட்டம் 1934-இல் முடிவுற்றது. இவர் முயற்சி களின் விளைவாக அமெரிக்கச் சட்டசபை ஒரு புதிய சட்டத்தை, 1934-இல் நிறைவேற்றியது. அதன்படி 10 ஆண்டுகள் வரை பிலிப்பைன்சு பொதுநல அரசாக

(Commonwealth) அமெரிக்கரின் கண்காணிப்பின் கீழ் இருப்பது என்றும், பிறகு முழு விடுதலை பெறுவ தென்றும் உறுதி செய்யப்பட்டது. புதிய பிலிப் பைன்பொதுநல அரசுக்குக் கேசான் முதல் தலைவரா னார். அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டிருக்கவே இவர் விரும்பினார். இரண்டாம் உலகப் போரில் சப்பான் 1942-இல்பிலிப்பைன் தீவுகளைத் தாக்கிய பொழுது இவர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டி யிருந்தது. நியூயார்க்கில் 1944-இல் இவர் கால மானார். தெ.பா.

**கேட்சுகெடு** இங்கிலாந்து நாட்டின் வடகிழக் கில் தைன் (Tyne) ஆற்றங்கரையில் உள்ள ஒரு வட்டம். புகழ்வாய்ந்த நியூகேசில் (New Castle) இதற்கு எதிர்ப்புறத்தில் உள்ளது. இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள், கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலேயே இங்கு வளர்ச்சியடைந்துள்ளன. கேட்சுகெடு (Gateshead) நகரில் உற்பத்தியாகும் பொருள்களுள் இரயில் வண்டி இயக்குப் பொறிகள் (Locomotives) இரும்பு, எஃகுப் பொருள்கள், பலவகை ஆடைகள், கண்ணாடி, கம்பிவடங்கள் (Cables), இராசாயனப் பொருள்கள் முதலியவை குறிப்பிடத்தக்கன. மாவு அரைத்தல், கப்பல் கட்டுதல், இருப்புப்பாதைத் தொடருக்குத் தேவையான பொருள்கள் செய்தல், கட்டுமானத் தொழில் (Packing) முதலிய பல வேலை கள் இங்கு நடைபெறுகின்றன. இதற்கு அண்மையில் நிலக்கரிச் சுரங்கங்களும், கற் சுரங்கங்களும், இருப்ப தால் தொழில் பெருகியுள்ளது. இந்நகரம் மிகப் பழ மையான ஒன்று. ஆங்கிலோ-சாக்சானியர் காலந் தொட்டு இது சிறிது சிறிதாக வளர்ச்சி அடைந்துள் ளது. இதன் மக்கள்தொகை 222000 (1976). தெ.பா.

**கேட்டை** என்பது அசுவினி முதல் இரேவதி முடியவுள்ள இருபத்தேழு விண்மீன்களுள் பதினெட் டாவதாகும். ஒவ்வொரு நாண்மீனுக்கும் கணம், தெய்வம், மரம், விலங்கு, பறவை முதலியவற்றைக் குறிப்பிடுவர். அந்நிலையில் கேட்டைக்கு அரக்கர் கணம், இந்திரன் தெய்வம், பராய் என்னும் மரம், கலைமான் விலங்கு, சக்கரவாகம் பறவை என்று சோதிட நூலோர் குறிப்பிடுவர். கேட்டை என்னும் நாண்மீனுக்குரிய வேறுபெயர்கள் சேட்டா, இந்திர னாள், வேதி, செந்தழல், எரி என்னும் ஐந்துமாகும். மேலும் கேட்டை என்றால் வல்லாரையும் குறிக்கும் எனச் சூடாமணி நிகண்டு தெய்வப் பெயர்த்தொகுதி யில் 75-ஆம் நூற்பா கூறுகிறது.

தக்கனுக்கு 27 நாண்மீன்களும் 27 பெண்களாகப் பிறந்தனர் என்றும், அப்பெண்களை அவன் சந்திர னுக்கு மணமுடித்துக் கொடுத்தானென்றும் புராணங் கள் கூறும். ஆகவே, கேட்டையின் கணவன் சந்திர னாவான் என்பது புராண வழக்கு. கேட்டை நாண் மீனில் பிறந்தவர்கள் பற்றி, 'கெட்ட குடிக்குக் கேட்டை நல்லது', 'கேட்டையிற் பிறந்தவன் கோட்டை கட்டி ஆள்வான்' என இரு பழமொழிகள் வழங்குகின்றன. ஆதலின், கேட்டை மிகச்சிறப் பைத் தராவிடினும் மிக இழிவையும் தராநிலையில் சம மதிப்பைத்தரக் கூடிய மத்திய பலன் தரும் வகையைச் சார்ந்தது.

கேட்டை நாளில் பிறந்தவன் தூய்மையான அறி வுள்ளவன்; இறைவனிடம் அன்புள்ளவன்; யாசிக்கும் நிலை ஏற்படாதவன்; உடன்பிறந்தோரை ஆதரிக்கும் நேசமுடையவன், அரசர் அல்லது தலைவர் நட்பைச் சம்பாதித்துக் கொள்ளும் தன்மையன்; கேள்விஞான, மிக்கவன்; உடலின் வலப்பக்கம் மறு வாய்க்கப்பெற்ற வன் என்னும் நற்குணங்களுடன், கடுஞ்சொல்லன், கோபமுள்ளவன், உணவுப்பிரியன் என்னும் தீக்குணங் களையுமுடையவன் எனச் சாதகாலங்காரம் 116-ஆம் செய்யுள் குறிப்பிடுகிறது.

போகர் பஞ்சபட்சி சாத்திரம் என்னும் நூலில் கேட்டையில் பிறந்தவர்களுக்கு நேரும் இழப்புப் பற் றிய நிமித்தங்களையும் அவர்கள் பற்றிய வருங்காலச் செய்திகளையும் 211, 212-ஆம் செய்யுள்கள் விளக்கிக் கூறுகின்றன. இரா.ச.

**கேட்டோ** என்பவர் உரோமானிய அரசியல் அறிஞர். பண்டைய உரோமானிய வரலாற்றில். மூத்த கேட்டோ, இளைய கேட்டோ என்னும் இரு அரசியல் வல்லுநர்களைக் காணலாம். மூத்த கேட்டோ கி.மு. 234 முதல் கி.மு. 149 வரை வாழ்ந் தவர். இவரது முழுப்பெயர் மார்க்கசு போர்சியசு



கேட்டோவும் அவரது மனைவியும்
(சிற்பம் உரோமம்)

கேட்டோ (Cato). இவர் ஓர் எளிய வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்து, இளமையிலேயே போர்ப்பயிற்சி பெற்று, உரோமுக்கும் கார்த்தேசுக்குமிடையே நடைபெற்ற போர்களில் பங்குபெற்றார். உரோமானியத் தலைவர்கள் இவரது ஆற்றலைப் பாராட்டினர். பல பதவிகள் ஒன்றன்பின் ஒன்றாக இவருக்கு வழங்கப்பெற்றன. கி.மு.204-இல்பொதுநிதிக் காப்பாளராகவும்,கி.மு. 198-இல் முறை வழங்கும்அதிகாரியாகவும், கி.மு. 195-இல் நலக்காப்பாளர்' (Consul) எனப்படும் உயர் அதிகாரியாகவும் பணியாற்றினார். சார்டினியாவின் ஆளுநராக இவர் பணியாற்றிய பொழுது இவர் கடைப்பிடித்த நீதிக்கொள்கையும் சிக்கனக் கொள்கையும் பாராட்டற்குரியன. காப்பாளர் பதவியிலிருந்த பொழுது இசுபெயின் (Spain) நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கண்டார். அக்காலத்தில் இருந்த ஒரு சட்டத்தின்படி உரோமானியப் பெண் எவரும் ஒரு 'அவுன்சு' எடையுள்ள நகை அணிந்து கொள்ளக் கூடாது. அச்சட்டத்தை நீக்குவதற்கான முயற்சி நடைபெற்ற பொழுது அம்முயற்சியை வன்மையாகக் கண்டித்தார் கேட்டோ. எனினும், இவரது கண்டனக் குரல் பயனளிக்கவில்லை. கி.மு. 191-இல் தர்மாபிலே என்ற போர்க்களத்தில் இவர் காட்டிய வீரம் குறிப்பிடத்தக்கது. கி.மு. 184-இல் இவர் நெறிமுறைக் கண்காணிப்பாளர் (Censor) பதவியிலிருந்த பொழுது மிகுந்த புகழைப் பெற்றிருந்தார். தம் கடமையை நிறைவேற்றுவதில் இவர் யாருக்கும் அஞ்சவில்லை; நெறிமுறைகளைக் காக்க வஞ்சனைஇன்றிச் செயலாற்றினார்; பகட்டான ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க முற்பட்டார்; ஒழுக்கத்திலிருந்து வழுவியவர்கள் ஆளவை உறுப்பினர்களாக இருந்தபோதிலும், அவர்களுக்கென விதிவிலக்கு எதுவும் அளிக்காமல் ஒரே நீதியைப் பின்பற்றினார். கி.மு. 157-இல் கார்த்தேசு (Carthage) நாட்டுக்கு இவர் சென்றபொழுது, அதன் செல்வ வளத்தைக் கண்டு வியப்புற்றார். உரோமுக்குத் திரும்பியதிலிருந்து இவர், 'கார்த்தேசு நிலைத்திருக்கும்வரை, உரோம் பாதுகாப்பாக இருக்க முடியாது' என்பதை அடிக்கடி வன்மையாக முழங்கி வந்தார். கார்த்தேசை அழிக்க வேண்டுமென்ற இவருடைய கூக்குரலின் விளைவாக, மூன்றாம் பியூனிக்குப் போரில் (Punic Wars) அந்நகரம் முற்றிலும் அழிக்கப்பட்டது.

கேட்டோ ஒரு போர் வீரர் மட்டுமல்லர்; சிறந்த உரோமானிய உரைநடை எழுத்தாளரும் ஆவார். இத்தாலிய வரலாற்றை முதன் முதல் இலத்தீன் மொழியில் எழுதிப் புகழ் பெற்றவர் இவரே. இவர் எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தது போற்றற்குரியது. எனினும், அளவு கடந்து அக்கொள்கையை இவர் பின்பற்றியது பலரால் விரும்பப்படவில்லை. இவருடைய ஒழுக்க நெறி வளைந்து கொடுக்கக் கூடியதாக இல்லை. ஆளவை உறுப்பினர் ஒருவர், தம் மனைவியைத் தம் பெண் தம்முடன் இருக்குபோது முத்தமிட்டாரென்ற காரணத்திற்காக, அவருக்குத் தண்டனை கொடுக்க கேட்டோ தவறவில்லை. அக்காலத்திய தீய நெறிகளை இவர் வன்மையாகக் கண்டித்து வந்தார். ஏழையாகப் பிறந்த இவர், தனது ஆற்றலினாலும் நற்குணங்களினாலுமே முன்னணிக்கு வந்தார். பண்டைய உரோமானியப் பண்பாட்டை விரும்பிப் போற்றிய இவர் கிரேக்கப் பண்பாட்டால் அது மாறிவிடக் கூடாது என்பதை வற்புறுத்தி வந்தார். கிரேக்கப் பண்பாடு இத்தாலியில் பரவுவதைத் தடுக்க இவர் விரும்பினார். அம்முயற்சியின் தோல்வியை இவர் தமது முதுமைப் பருவத்திலுணர்ந்து, தாமே கிரேக்க இலக்கியத்தைக் கற்கத் தொடங்கினார். வேளாண்மை மிகவும் மேன்மை வாய்ந்த தொழில் என்று கருதிய இவர், அதை வளர்க்க அரும்பாடுபட்டார். ஆனால், இவர் ஆதரித்த வேளாண்மை, பெரிய நிலச்சுவான்தார்கள் அடிமைகளைக் கொண்டு நடத்தும் முறையைச் சேர்ந்தது. இம்முறை இறுதியில் உரோமானியரின் பொருளாதார நிலையையே சீர்குலைத்தது. உரோமில் உழவர்களுக்குத் தானியங்கள் இலவசமாக வழங்கப்பட்ட பொழுது, அது தவறு என்று கேட்டோ பறைசாற்றினார். அதனால், இத்தாலிய உழவர்கள், தத்தம் கடமைகளை விட்டு, உரோமாபுரி நோக்கிப் பயணத்தை மேற்கொள்வார்கள் என்பதே இவரது வாதம்.

பழைமை விரும்பியாகிய இவர், கிரேக்கப் பண்பு எதையுமே எதிர்த்தது இவரிடம் இருந்த முக்கிய குறைபாடாகும். இவர் கொள்கை தோல்வியுற்ற போதிலும், எத்தகைய விளைவுக்கும் இவர் அஞ்சாது தமது கடமையை நிறைவேற்றினார். இவர் பல நூல்கள் எழுதிய போதிலும், வேளாண்மையைப் பற்றிய இவர் நூல் ஒன்றுதான் எஞ்சியுள்ளது.

**இளையகேட்டோ** கி.மு. 95 முதல் 46 வரை வாழ்ந்தார். இவர்கி.மு. 65-இல் உரோமா புரியில் பண்டாரகராக(Quaestor)பதவி வகித்து, நீதித்துறை வல்லுநர் என்ற புகழை அடைந்தார். பின்னர் நடுவர் (Tribune) என்ற பதவியையும் வகித்துச் சிறப்புற்றார். பொது நிதிக் காப்பாளராக இருந்த பொழுது பல சீர்திருத்தங்கள் இவரால் செய்யப் பெற்றன. கி.மு. 63-இல் இவர் காட்டிலைனுக்கு எதிராக இருந்த சிசரோவுக்குத் துணைபுரிந்தார். சூலியசு சீசர், கிராசசு, பாம்பே (Pompey) ஆகியோர் அமைத்த முதல் முக்கூட்டரசு ஏற்படுவதற்குக் கேட்டோ உதவினார். சீசரும் பாம்பேயும் பகைவர்களானவுடன் சீசருக்கு

விரோதமாகப் பாம்பேயின் கட்சியில் இணைந்தார். கி.மு 49-இல் உரோமில் மூண்ட உள்நாட்டுப் போருக்குக் கேட்டோவின் செயல்களைக் காரணமாகக் கூற லாம். உண்மையான குடியரசுவாதியாகிய கேட்டோ உரோமில், குடியரசின் வீழ்ச்சியைக் கண்டு கலங்கி, அதன் பொருட்டுத் தாம் தமது மயிரை மழித்துக்கொள் வதில்லை என்று சூளுரை எடுத்துக் கொண்டார்; தமது கட்சியின் தோல்வியைக் கண்டபின் வட ஆப் பிரிக்காக் கண்டத்திற்கு ஓடினார். அங்கே யூட்டிக்கா வைக் காக்கும் படைத்தலைமை இவருக்குக் கிடைத் தது. கி.மு. 46-இல் தாப்சசில் பாம்பே படைகளின் தோல்வியைப் பொறுக்க இயலாமல் அந்த இடத்தி லேயே தற்கொலை புரிந்து கொண்டார். ஆங்கில அறிஞர் அடிசன் எழுதியுள்ள 'கேட்டோ' என்ற நூல், இவருடைய முடிவுக் காலத்து நிகழ்ச்சிகளை நாடக முறையில்கூறுகிறது. இவர் தன்னலமற்ற ஒரு தியாகி. ஆனால், முந்திய கேட்டோவைப் போலவே இவரும் தீவிரக் கொள்கைகளை உடையவராக இருந்தார். இவர் அக்காலத்து நடை உடை பாவனைகளைப் பின்பற்றவில்லை. கேட்டோவுக்கு ஆளவை மன்ற அதிகாரத்தில் மிக்க நம்பிக்கை உண்டு. அதன் தீர் மானங்கள் அறிவுக்கூர்மை வாய்ந்தவை என்பது இவர் கருத்து. ஆனால், வீழ்ச்சியுறும் உரோமா புரியை இவரால் காப்பாற்ற இயலவில்லை. தெ.பா.

# பொருளடைவு



அக்காமின் வில்லியம் 474
அக்கியாதி 323
அக்ரா 301
அகக் குழுக்கள் 774
அகமணம் 157, 747
அகவியலார் கருத்துக் கொள்கையினர் 615
அகிம்சை 109
அச்சம் கொண்ட கும்பல் 638
அசத்கியாதி 322
அசிந்திய பேதா பேதக் கியாதி 324
அஞ்சுவண்ணத்தார் 787
அட்லாண்டிக்கு-நடுநிலக் கடலினத்தவர் 3
அண்ணாமலை ரெட்டியார் 266
அதிகாரங்கள் 560, 561
அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி 886
அந்தாதி 466
அந்தோணி 443
அநிர்வசனீய கியாதி 322
அபிக் ஞான சாகுந்தலம் 288
அபிநவ அன்யத கியாதி 323
அபுல் அசன் குதுப்சா 619
அம்மானை 466
அம்மை 759
அம்மைக்கட்டு 759
அமெரிக்க ஐக்கியக் குடிமதிப்பு 551
அமைதிக் கும்பல் 638, 639
அயர்லாந்து 263
அரங்கசாமி ஐயங்கார், செள 840
அரிசுடாட்டில் 420, 615, 778
அழகு 71, 72
அழைக்கப்பட்ட பங்குகளின் பங்குத்தொகை 897
அறவியல் 68
அறிவுவழிக் கொள்கை 64
அன்யத கியாதி 323
அனுபவ வழிக் கொள்கை 65
ஆகமம் 153
ஆங்கிலக் குடியானவர் கலகம் 567, 568
ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்கள் 865
ஆண்டை 539, 540
ஆத்ம கியாதி 323
ஆதாயம் 221
ஆதாயம் மட்டும் பெறும் கூட்டாளி 886
ஆதிநந்தவனப் பிரளயம் 463
ஆதிநந்தவனப் பிரளய மீட்சி 464
ஆபாசவாதம் 30
ஆமிட்டிக்கு இனத்தவர் 4
ஆயர்குழல் 770
ஆயுள் காப்பீடு 121
ஆர்மீனிய இனத்தவர் 4
ஆர்வக் கொள்கை 250
ஆல்பரி பிரபு 702
ஆல் பைன் இனத்தவர் 4
ஆழ நுனிகள் 45
ஆளவந்தார் 681
ஆன்மா 70, 692
இங்கிலாந்து முறை 582
இசுடாலின் கொள்கை அழிப்பு 674
இசுபந்தம் 30
இசுபார்ட்டா 364, 365
இசுலாம் கும்மி 644
இடங்கை 788
இணக்கம் 45
இத்தாலியப் பண்புகள் 692
இந்தியக் குடிமதிப்பு 552-555
இந்திய-திராவிட இனத்தவர் 4
இந்தியாவில் குடியாட்சிச் சமநிலைக் கொள்கை 564
இந்தியாவில் குடும்பநலத் திட்டம் 584-586
இந்தியாவில் தொழில் தகராறுகள் தீர்வு 902
இந்தியாவிற்கு வெளியில் வாழும் இந்தியவழித் தோன்றல்கள் குடியுரிமை 576
இந்தோனேசியாவில் குடும்பநலத் திட்டம் 591
இயக்கமுறைக் கல்வி 764, 765
இயல்புடைத் தத்துவம் 331, 332
இயலமைப்பு 776
இயேசு காவியம் 464
இரகுவம்சம் 287
இரட்சணிய யாத்திரிகம் 464
இரட்டைக் காப்பீடு 124
இரண்டாம் குமாரவிட்டுணு 662
இரண்டாம் சந்திரகுப்தன் 624
இரண்டாம் செஞ்சி 395
இரண்டாம் நிலைக் குழுக்கள் 773, 774
இரண்டாம் மதுரை 397
இரணசன்னி 758
இரத்த உறவுக் குடும்பம் 594
இராகமாலிகா கீதம் 484
இராசாராம் மோகன்ராய் 748
இராமசாமி கோயில் 635
இராமானுசர் 681
இரு உலோக நாணய முறை 338
இரு கட்சி முறை 558
இருது சம்காரம் 288

இருப்புக் கொள்கை 487-489
இலக்கணக் குறுக்கீடு 837
இலக்கண கீதம் 484
இலக்குமி கர்ணன் 243
இலங்கையில் குடும்பநலத் திட்டம் 589
இலம்பாடி 738
இலாப்பு இனத்தவர் 4
இலிங்தோ 22
இளம்பிள்ளை வாதம் 759
இளம்வயது காசநோய் 757, 758
இளவர் 871, 872
இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு 934, 935
இறுதிநிலை விதிகள் 217, 218
இறையியல் 468
இறையுண்மை 70
இனப்பெருக்கம் 595
ஈட்டுறுதி 124
ஈரான்-ஆப்கானிய நடுக்கடல் இனத்தவர்கள் 3
ஈரானில் குடும்பநலத் திட்டம் 590
உண்மைக் கூலி 932, 940, 941
உணவு 756
உதவிக் கூட்டாளி 887
உய்யக்கொண்டார் 681
உயர் குருமார் கழகம் 471, 472
உரிமம் 611
உருப் படிவப் பணம் 7
உருவ நிருணயக் கோடு 45
உரைநடை 467
உரோமக் குடிமதிப்பு 550
உலக அரசு 355
உழைக்காத கூட்டாளி 886
உழைக்கும் கூட்டாளி 885
உழைப்பு 197
உளநிலை நாடகம் 782
உளநிலைப் பகுப்பாய்வுக் கோட்பாடு 641
உளநோய் நீக்கு முறை 735
உற்பத்தி முறை 194
ஊரகப் பொருளியல் 104
ஊழ்வினை 823
எகிப்தியர் 549
எசுபிநாசின் கோட்பாடு 792
எட்மண்டு பர்க்கு 330, 331
எதிர்ப்படு குழு 931
எபிரேயப் பழங்குடி 737
எம்பார் 681
எமிலியன் புகசாவு 83
எர்கார்டு தருக்கங்கள் பயிற்சி மருத்துவம் 782
எர்பர்ட்டு இசுபென்சர் 702
எர்பர்ட்டு புளூமர் 638
எரிக்சன் 649
ஏகாம்பரநாதர் கோயில் 42
ஏதென்சு 365,366
ஐந்தாண்டுத் திட்டங்கள் 543
ஐயக் கொள்கை 332
ஐயனார் 351
ஒட்டக்கூத்தர் 715
ஒத்திசைவு 583, 584
ஒதுக்கு 88
ஒப்பந்த ஆவணம் 124
ஒருதுணை மணக் குடும்பம் 594
ஒருதுணை மணம் 747
ஒருபடித்தான கும்பல்கள் 638
ஒலியின் குறுக்கீடு 836, 837
ஒழுங்கற்ற மாற்றங்கள் 247
ஒழுங்குணர்வு 784
ஓங்கிப் பழங்குடி 797, 798
கக்குவான் 758
கட்டமைப்பு 776
கடற் காப்பீடு 122
கடன் 897
கடன் அங்காடி விற்பனை இணைப்பு 911
கடன் வழிபாடு 149
கடனைப் பொருளாக அளித்தல் 912
கதர் 104
கதை சொல்லுதல் 744
கந்தபுராணம் 284
கந்தர் பழங்குடி 738
கபிலர் 822
கர்ட்டன், கண்ட்டு 636
கருக் குடும்ப்ம் 594
கருத்தியல்புகள் 652, 653
கலம்பகம் 465
கலைத்தலின் பின்விளைவு 881
கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை 763
கழிவுநீக்கிய உற்பத்தித்திறன் கோட்பாடு 935, 936
கள்ளர் 737
கன ராக கீதம் 484
கா 1
**காக் கானீ** 2
**காக்கி நாடா** 2
**காக்கேசிய இனம்** 2
**காக்கை பாடினியம்** 4
**காக்கை பாடினியார்** 4
**காக்கை பாடினியார் நச்செள்ளையார்** 5
**காகசசு** 5
**காகத்தியர்** 5
**காகத்தியா பல்கலைக்கழகம்** 6
**காகாசீமா** 6

காகிதச் செலாவணித் திட்டம் 6
காகுத்தவர்மன் 9
காங்காங்கில் குடும்ப நலத் திட்டம் 591
காங்கிரசு 10
காங்கிரா 10
காங்கிரா ஓவியங்கள் 10
காங்கேயத் தேவர் 243
காங்கேயம் 11
காங்கேயன் 11
காங்கோ 13
காங்கோ (பெல்சியம்)[2] 14
காங்கோ ஆறு 14
காங்வா ஒப்பந்தம் 15
காசல் 16
காசல்-நகரம் 16
காசாக்குடிச் செப்பேடுகள் 16
காசா பிளாங்கோ 17
காசான் 17
காசி 17
காசிக் கலம்பகம் 18
காசிக்கலியன் கவிராயர் 19
காசி கண்டம் 19
காசி-செயந்தியா மலைகள் 20
காசிப் பழங்குடி 20
காசிபர் 23
காசிபன் கீரன் 23
காசிம் படைப்போர் 24
காசிம் புலவர் 24
காசி மொழி 25
காசியசு கயசு 26
காசி ராம் தாசு 26
காசி விசுவநாத முதலியார் 26
காசி வித்தியாபீடம் 27
காசுக்கனி 27
காசுகாயன் 27
காசுட்டில் 27
காசுட்டில்லா இராமன் 28
காசுட்டு ரோமா 28
காசுப்பியன் கடல் 28
காசுமீர்ப் பல்கலைக்கழகம் 29
காசுமீர சைவம் 29
காசுமீரம் 31
காசுமீரி மொழி 31
காசுத்து, லாயாசு 33
காசோலைகள் 33
காஞ்சன மாலை 35
காஞ்சனன் 36
காஞ்சி 36
காஞ்சிப் புராணம் 36
காஞ்சிபுரம் 38
காஞ்சி மகாத்மியம் 43
காட்கில், என். வி. 44
காட்கில், தனஞ்சயா இராமச்சந்திரா 44
காட்சி நுனிகள் 44
காட் சுகி, காரல் 45
காட்ட காட்டு 47
காட்டலான் மொழி 47
காட்டலோனியா 47
காட்டாவீட்சி 48
காட்டானியா 48
காட்டு நாயக்கர் 48
காட்டுப்பாடி (காட்பாடி) 50
காட்டு மன்னார் கோயில் 51
காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் 51
காட்டெரிப்பு வேளாண்மை 51
காட்டெருமை நடனம் 53
காட்டேரி 55
காட்மண்டு 55
காட்ரிங்டன், இராபர்ட்டு என்றி 56
காட்வின் ஆசுட்டின் 57
காட்வின், வில்லியம் 57
காடர் 59
காடவர் 60
காடவராயர் 60
காடவராயனான ஆளப்பிறந்தான் 61
காடிசு 61
காடுவெட்டி 61
காண்டகார் 61
காண்டர்பரி 62
காண்டார் 63
காண்டு, இம்மானுவேல் 63
காண்டேகர், வி. ச. 73
காண்டேசு 74
காண்போர் கும்பல் 638
காணாபத்தியம் 74
காணிக்காரர் 74
காத்தவராயன் 77
காத்தியர் 78
காதம்பரி 79
காதரின் 80
காதரின்-தி-மெடிச்சி 85
காதா சப்த சதி 85
காதிரிகா தரீகா 606
காந்த புராணம் 87
காந்தருவதத்தை 87
காந்தளூர்ச் சாலை 88
காந்தாரக் கலை 89
காந்தாரம் 90

காந்தாரி 90
காந்தி ஆசிரமம் 90
காந்தி-இர்வின் உடன்படிக்கை 91
காந்தி கிராம ஊரக நிறுவனம் 91
காந்தி கிராமம் 93
காந்தி சேவா சங்கம் 94
காந்தி நிகேதனம் 94
காந்தி நினைவு நிதி 95
காந்தி பிள்ளைத்தமிழ் 96
காந்தி புராணம் 97
காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் 97
காந்தியடிகள் (மோகனதாசு கரம்சந்து காந்தி) 98
காந்தியடிகள் பல்கலைக்கழகம் 102
காந்தியப் பொருளியற் கருத்துகள் 102
காந்தியம் 109
காப்கா, குர்த்து 110
காப்கா பிரான்சு 110
காப்சியன் பண்பாடு 111
காப்பாளர் 112
காப்பியக்குடி 114
*காப்பியங்கள்* 463
காப்பியஞ்சேந்தனார் 114
காப்பியம் 114
காப்பியாற்றுக் காப்பியனார் 117
காப்பீட்டு நிறுவனங்களின் தணிக்கை 117
காப்பீடு 121
*காப்புத் தீர்வைக் கொள்கை* 126
*காப்புத் தீர்வை வாரியம்* 130
காப்புப் பொருளியல் 131
*காப்பும் மிகுதியும்* 897
காப்லான் மோர்டி சை மேனா ஏம் 134
*காபட்-சான்* 135
காபா 136
காபிகான் 137
காபிரிசுத்தான் 137
காபூர், மாலிக்கு 137
காபூல் 138
காபூன் 139
காபெட்டு வில்லியம் 139
காம்டன் 140
காம்பன் சூல்சு 140
காம்பியா 140
காம்பியா ஆறு 142
காம்பிரே 142
காம்பெட்டா 142
காம்பே விரிகுடா 142
காம்பேனியா 142
காம்போசம் 143
காமக்கணிப் பசலையார் 143
காமச்சட்கர் 143
காமஞ்சேர் குளத்தார் 144
காமதேவன் 144
காமதேனு 145
காமர் 703
காமரச மஞ்சரி 146
காமராசர், கு. 146
காமராசர் மாவட்டம் 148
காமன் பண்டிகை 148
காமாட்சி 149
காமா, வாசுகோட 149
காமிகாகமம் 153
காமியோ, மானுவேல் 154
*காய்கறி விற்பனை வசதி* 916
காயத்திரி மந்திரம் 154
காயம் 155
காயல் 156
காயல்பட்டினம் 156
காயன் பழங்குடி 157
கார் எட்டு 157
கார்க்கி 158
கார்க்கி மாக்சிம் 158
கார்க்கிமிசு 159
கார்க்கு 160
கார்கோடர்கள் 160
கார்கோவு 161
கார்சிகா 162
கார்ட்டர், ஓவர்டு 162
கார்ட்டியே சாக்குவிசு 163
கார்ட்டீசிய இருமைக்கொள்கை 163
கார்ட்டூம் 164
கார்ட்டெசு, எர்னாண்டோ 164
கார்ட்டெல் 165
கார்டன், சார்லசு சார்சு 166
கார்டா ஏரி 167
கார்டிபு 167
கார்டியன் முடிச்சு 167
கார்டிலியர் கழகம் 167
கார்டினர், ஏ.சி. 168
கார்டோபா[1] 169
கார்த்த வீரியார்ச்சுனன் 169
கார்த்திகேய முதலியார், மாகறல் 170
*கார்த்திகேயன்* 172
கார்த்திகை 171
கார்த்திகை விரதம் 171
கார்த்திகை விளக்கு 172
கார்த்தேசு 172
கார்நாக்கு 174
கார் நாற்பது 175

கார்பன்டோரியா வளைகுடா 177
கார்பூ 177
கார்பேத்தியன் மலைகள் 177
கார்மண்டல சதகம் 177
கார்மண்டலம் 178
கார்மேகக் கோனார், ஆ. 179
கார்லசுருகே 179
கார்லிசுட்டுப் போர்கள் 180
கார்லே 180
கார்லைல், தாமசு 182
கார்வே, ஐராவதி 182
கார்னிசு மொழி 183
கார்னியாடிசு 183
காரகல்லாவின் ஆணை 184
காரகோரம் 186
காரகோர மலைத்தொடர் 186
காரடையான் நோன்பு 187
காரண-காரிய நியதி 187
காரணங் கற்பித்தல் 188
காரணப் பெயர் (மரபிலக்கணம்) 190
காரணப்பெயர் (மொழியியல்) 189
காரணாகமம் 191
காரணிப் பகுப்பாய்வு 191
காரணி வருமான அணுகுமுறை 193
*காரணி வருமான முறை* 194
காரணை விழுப்பரையர் 196
காரல் 196
காரல் மார்க்சின் பொருளியற் கோட்பாடுகள் 196
காரல் மார்க்சு 199
காரல் மார்க்சு இசுடாட்டு 204
காரவேலன் 204
காரன்வால் 205
காரன்வாலிசு, சார்லசு (பிரபு) 205
காராதாசு 206
காராபுரி 207
காரி 207
காரி கிழார் 208
காரிசன் வில்லியம் இலாயிடு 208
காரிந்து (கொரிந்தோசு) 209
காரி நாயனார் 210
காரியாசான் 210
காரியார் 210
காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி 211
காரி ரத்தினக் கவிராயர் 211
காருகுறிச்சி அருணாசலம், ப. 211
காரு 212
காரெகிடோர் 212
காரைக்கால் 212
காரைக்காலம்மையார் 213
காரைக்குடி 214
*காரோணம்* 634
கால் இசுடேன்லி கிரான்விலே 215
கால்சா 215
கால்சிடன் 216
கால்டர்-இக்சுவின் நலப் பொருளியற் கோட்பாடு 216
கால்டன், சர் பிரான்சிசு 220
கால்டாரின் பேரியல் பகிர்வு கோட்பாடு 220
கால்டியா 223
கால்டுவெல், இராபர்ட்டு 223
கால், பிரான்சு சோசபு 224
கால்பெர், சான்-பா தீசித்து 225
கால்மார் 229
கால்மார் ஐக்கியம் 229
கால்மிக்சு 229
கால்வழி 229
*கால்வழிக் குழுவினர்* 709
கால்வின் கோட்பாடு 230
கால்வெசுட்டன் 233
கால்வே 233
கால இயக்க ஆய்வுகள் 233
காலக்கணிப்பு முறைகள் 236
*காலக்கூலி* 932, 933
காலகார மூர்த்தி 241
காலகேசி 241
காலச்சூரி ஆண்டு 242
காலச்சூரியர் 242
காலசோகர் 243
காலட்சேபம் 244
காலடி 244
காலத்தொடர் ஆய்வு 244
காலப்பாணி 248
காலப்புலன் காட்சி 251
காலப் பெட்டகம் 250
காலம் 252
காலம்சார் தொழில் 254
காலரா 759
கால வரையறை 256
காலா இனத்தவர் 256
காலாட்சு 256
காலாட்படை 256
காலி 256
காலிக்குப் போர்கள் 257
காலிங்கர்கோன் 257
காலிங்கராயன் கால்வாய் 258
காலிடான் 258
காலிடோனியா 259
காலிபங்கன் 259
காலிபோலி 262

**காலின்சு, மைக்கேல்** 262
**காலினின்கிராடு** 263
**காலினின், மிக்கேல் இவனோ விச்சு** 264
**காலுப்பி பாசுகுவேல்** 264
**காலெறி கடிகையார்** 265
**காவட்டனார்** 265
**காவடிச் சிந்து** 266
*காவல் அலுவலர்களின் கடமைகள்* 267
**காவல் துறை** 267
**காவல் வைப்பு** 268
**காவற் கப்பல்** 270
*காவற்படை அமைப்பு* 267
*காவற்படை நிருவாகம்* 267
**காவற் பெண்டு** 270
**காவன் முல்லைப் பூதனார்** 270
**காவா குச்சி** 271
**காவிரி** 271
**காவிரிப் பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்** 274
**காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்** 275
**காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்** 275
**காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்** 276
**காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்** 276
**காவிரிப் பூம்பட்டினம்** 276
**காவேரிப்பாக்கம்** 281
**காழித் தாண்டவராயர்** 281
**காளத்தி** 281
**காளமேகம்** 282
**காளி** 282
**காளிகா தாண்டவம்** 285
**காளிங்கர்** 286
**காளிதாசன்** 287
**காளியமர்த்தனர்** 288
**காளையார்கோயில்** 289
**கான், அக்கீம் அசுமல்** 290
**கான் கானன் அப்துல் ரகீம்** 290
**கான் சாசு** 291
**கான்சாசு ஆறு** 292
*கான் சாசு நகரம்* 292
**கான்சு** 293
**கான்சுடண்டைன்** 293
**கான்சுடண்டைன் கொடை** 293
**கான்சுடன்சு அவை** 295
**கான்சுடன்சு ஏரி** 295
**கான்சுடாண்டி நோபிள்** 295
**கான் செப்சியான்** 296
**கான்பூர்** 296
**கான்பூர்ப் பல்கலைக்கழகம்** 296
**கான்யூட்டு** 296
**கான்வாப் போர்** 297
**கானக்கிரி** 297
**கானல்வரி** 297
**கானா** 300
**கானாசாவா** 303
**கானாட்டு** 303
**கானிக்சுபர்கு** 303
**கானிங்குபிரபு** 303
**கானோசி ஆங்கிரே** 304
**கி** 305
**கிங்குத் தீவுகள்** 306
**கிங்குமார்ட்டின் லூதர்** 306
**கிங்சுட்டன்** 308
**கிச்சனர் பிரபு** 308
**கிசிர்கான்** 310
**கிட்சின் சுழற்சி** 310
**கிட்டப்பா, எஸ்.ஜி.** 311
**கிட்டர் ஆல்பிரடு** 312
**கிட்டிங்சு, பிராங்லின் என்றி** 312
**கிட்டூர் ராணி சென்னம்மா** 313
**கிடங்கில்** 315
**கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்** 315
**கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்** 315
**கிடங்கில் குலபதி நக்கண்ணனார்** 316
**கிடாம்பி ஆச்சான்** 316
**கிடினியா** 316
**கிப்சன் பாலைவனம்** 316
**கிப்பன் எட்வர்டு** 317
**கிப்போர்டு, எட்வர்டு வின்சுலோ** 318
**கிபன் முரணுரை** 319
**கிபு** 320
**கிம்பர்லி** 321
**கிம்பால்யங்கு** 636,638
**கிம்புருடர்** 321
**கியாசுதீன் துக்ளக்கு** 321
**கியாதி வாதம்** 322
**கியூசு** 324
**கியூபா** 324
**கியூம், ஆலன் ஆக்டேவியன்** 327
**கியூம், தாவீது** 327
**கியூளிக்கு உலூதர் கேல்சே** 332
**கியோட்டோ** 333
**கியோவா இந்தியர்** 333
**கிர்கிசு சோவியத்துப் பொதுவுடைமைக் குடியரசு** 334
**கிர்தார்** 335
**கிர்னார்** 335
**கிரகடாவோத் தீவு** 335
*கிரகணப் பாதை* 236
**கிரகவர்மன்** 336

கிரசெம்சு விதி 336
கிரணியம் 338
கிரந்த எழுத்துகள் 339
கிரந்தம் 338
கிரநோபிள் 340
கிரனடா 340
கிராசகு மார்க்கசு லைசீனியசு 341
கிராசினோ யார்சுக்கு 342
கிராண்டு உலிசசு சிம்சன் 342
கிராண்டு கால்வாய் 344
கிராண்டு சர் சேம்சு ஒப்பு 344
கிராப்னர், இராபர்ட்டு பிரிட்சு 344
கிராம்வெல், ஆலிவர் 345
கிராம்வெல், இரிச்சர்டு 347
கிராம தானம் 347
கிராம தேவதைகள் 350
கிரி, வி.வி. 352
கிரி கிரி (ஏழாம்) 353
கிரிகிரி ஆண்டுக் குறிப்பேடு 354
கிரிசிப்பசு 354
கிரிசுபி, பிரான்செசுகோ 356
கிரிப்சு, சர் இசுடாபோர்டு 356
கிரிப்பன் பெல்டு 358
கிரிமால்டி மனிதன் 358
கிரிமியா 360
கிரிமியாப் போர் 361
கிரீசசு 362
கிரீசு 362
கிரீட்டு 380
கிரீவ் இசுகிஇவான் வாசிலிவிச்சு 381
கிரீன், டி.எச். 381
கிரீன் நதானியல் 383
கிரீன்லாந்து 384
கிரீன்விச்சு 385
கிருகிய சூத்திரங்கள் 386
கிருட்டிணகிரி 386
கிருட்டிண சயந்தி 388
கிருட்டிணசாமி அய்யங்கார், எஸ். 388
கிருட்டிணசாமி அய்யர், அல்லாடி 390
கிருட்டிணசாமி ஐயர் (திருப்புகழ்மணி) 390
கிருட்டிணசாமி நாயுடு,ரா. 391
கிருட்டிணதாசு கவிராசு 392
கிருட்டிண தேவராயர் 392
கிருட்டிணப்ப நாயக்கர், (முதலாம், செஞ்சி) 395
கிருட்டிணப்பர், துபாக்கி 398
கிருட்டிண பாகவதர் 398
கிருட்டிண பிள்ளை, ஈ.வீ. 399
கிருட்டிணபிள்ளை, எச்.ஏ. 399
கிருட்டிணபிள்ளை, சங்கம் புழ. 400
கிருட்டிணமாச்சாரி, டி.டி. 401
கிருட்டிணமாச்சாரி, வி.டி. 402
கிருட்டிணமூர்த்தி, ரா. 402
கிருட்டிணமூர்த்தி, ஜே. 402
கிருட்டிணமேனன், வி.கே. 404
கிருட்டிணராசு சாகரம் 406
கிருட்டிணன் 406
கிருட்டிணன், என்.எசு. (கலைவாணர்) 408
கிருட்டிணா ஆறு 411
கிருட்டிணாட்டமி 412
கிருதி 492
கிருபளானி, ஜே.பி. ஆசாரிய 412
கிரெட்னகிரீன் 414
கிரெம்ளின் 414
கிரென்வில் சர் இரிச்சர்டு 415
கிரென்வில், சார்சு 415
கிரென்வில் பிரபு 417
கிரேக்கசு, கையசு 417
கிரேக்கசு, தைபீரியசு 418
கிரேக்க மொழி 372
கிரேக்கோ 422
கிரேசி 423
கிரேட்சு 423
கிரே நோபிள் 425
கிரேபெல்ட்டு 425
கிரேனடா 425
கில்சிட்டு 427
கில்லட்டீன் 427
கில்லின், கில்லின் 777
கிலாபத்து இயக்கம் 428
கிலி 428
கிலிமன்சாரோ 429
கிழக்கிந்தியத் தீவுகள் 430
கிழக்கிந்திய வணிகக் குழு 430
கிழக்கு ஆப்பிரிக்க உயர் ஆணையம் 431
கிழக்கு ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கி 432
கிழக்குத் தொடர்ச்சி மலைகள் 432
கிழக்குப் பால்டிக்கு இனத்தவர் 4
கிள்ளி 432
கிள்ளி மங்கலங்கிழார் 433
கிள்ளி மங்கலங்கிழார் மகனார் சோகோவனார் 433
கிள்ளிவளவன் 433
கிளமெண்டு 434
கிளர்ச்சிக் கும்பல் 638, 639
கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி 436
கிளர்ச்சி நிலைமை 437
கிளவு, ஆன் செமினா 439
கிளாசுகோ 439
கிளாசுட்டர் 440

| | |
|---|---|
| **கிளாட்சுட்டன், வில்லியம் ஈ வார்ட்டு** | 440 |
| **கிளாரெண்டன், எட்வர்டு ஐடு** | 441 |
| **கிளியோ பாத்திரா** | 442 |
| **கிளெசவிட்சுகார்ல், வான்** | 443 |
| **கிளெமென்சோ, சார்சு** | 443 |
| **கிளைக் கணக்குகள்** | 444 |
| **கிளைசுதனிசு அரசியலமைப்பு** | 448 |
| **கிளைடு** | 449 |
| **கிளை மொழி அகராதி** | 450 |
| **கிளை மொழிப் பாகுபாட்டுக் கோடு** | 451 |
| **கிளை மொழியியல்** | 453 |
| **கிளை வங்கி முறை** | 456 |
| **கிளை வழி உறவுமுறை** | 459 |
| **கிளைவு, இராபர்ட்டு** | 459 |
| **கிளோவிசு** | 461 |
| *கிறிசு தாயணம்* | 463 |
| **கிறிசுதியன், முதலாம்** | 461 |
| **கிறித்தவ இலக்கியங்கள்** | 462 |
| *கிறித்தவக் கும்மி* | 644 |
| **கிறித்தவத் தத்துவம்** | 467 |
| **கிறித்தவத் திருச்சபை** | 468 |
| **கிறித்துச் சர்ச்சு** | 476 |
| **கிறித்து மான்மியம்** | 464 |
| *கிறித்து வெண்பா* | 464 |
| **கின்னரர்** | 476 |
| **கினி** | 477 |
| **கினி கெழு** | 478 |
| **கினிபிசௌ** | 479 |
| **கினி வளைகுடா** | 479 |
| **கீ** | 480 |
| **கீசு மரபினர்** | 480 |
| **கீசெர்லிங்கு எர்மான் அலெக்சாண்டர் இராப்வான்** | 481 |
| **கீசோ பிராங்காய்** | 481 |
| **கீட்சு, சான்** | 482 |
| **கீட்டோ** | 483 |
| **கீதம்** | 483 |
| **கீதாஞ்சலி** | 484 |
| **கீ தீவு** | 485 |
| **கீதை** | 485 |
| **கீர்க்க கார்டு** | 487 |
| **கீர்த்தனை** | 492 |
| *கீர்த்தனை நாடகங்கள்* | 492 |
| **கீர்த்தி முகம்** | 494 |
| **கீர்த்திவர்மன், முதலாம்** | 495 |
| **கீரங்கீரனார்** | 495 |
| **கீரங் கொற்றனார்** | 495 |
| **கீரந்தையார்** | 496 |
| *கீரிப் பூச்சிகள்* | 760 |
| **கீரிமலை** | 496 |
| **கீரின்** | 497 |
| **கீலங்கு** | 497 |
| **கீலௌவா** | 497 |
| **கீவு** | 497 |
| **கீழ்க்கலனை** | 787 |
| **கீழ்நாட்டுக் கலை நிலையம், பரோடா** | 498 |
| **கீழ வளைவு** | 498 |
| **கீழைப் பழூவூர்** | 498 |
| **கீழையூர்** | 499 |
| **கீறல் காசோலை** | 499 |
| **கீறல் குறியீடு** | 501 |
| **கீன்சின் நுகர்வு உளவியல் விதி** | 502 |
| **கீன்சின் பொருளியல்** | 503 |
| **கீன்சு, சான் மேனார்டு** | 508 |
| **கீன்சும் தொன்மைப் பொருளியல் அறிஞர்களும்** | 511 |
| **கு** | 514 |
| **குக்கனூர்** | 514 |
| **குக்கு, சேம்சு** | 515 |
| **குகன்** | 516 |
| **குகா, பிரசா சங்கர்** | 517 |
| **குகை நமச்சிவாயர்** | 518 |
| **குகை மறைஞான சம்பந்தர்** | 518 |
| **குகைவாழ் மக்கள்** | 518 |
| **குங்கிலியக் கலிய நாயனார்** | 520 |
| **குசராத்தி** | 521 |
| **குசராத்து** | 522 |
| *குசராத்து வித்தியாபீடம்* | 524 |
| **குசானர்கள்** | 525 |
| **குசி நகரம்** | 526 |
| **குசுநட்சின் சுழற்சி** | 527 |
| **குசுரு, அமீர்** | 528 |
| **குசேலர்** | 529 |
| **குசேலோபாக்கியானம்** | 530 |
| **குஞ்சன் நம்பியார்** | 531 |
| **குட்ட நாடு** | 531 |
| **குட்டுவன்** | 532 |
| **குட்டுவன் இரும்பொறை** | 532 |
| **குட்டுவன் கண்ணனார்** | 533 |
| **குட்டுவன் கீரனார்** | 533 |
| **குட்டுவன் சேரல்** | 534 |
| **குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை** | 534 |
| **குடக்கோ நெடுஞ்சேரலாதன்** | 535 |
| **குடகு** | 535 |
| **குடகு மொழி** | 535 |
| **குட நாடு** | 536 |
| **குடபுலவியனார்** | 537 |
| **குடமுக்கிற் பகவர்** | 537 |
| **குடவர்கோமான் நெடுஞ்சேரலாதன்** | 537 |
| **குடவாயில் நல்லாதனார்** | 538 |

குடவாயிற் கீரத்தனார் 538
குடி ஊழிய முறை 539
குடிசைத் தொழில்கள் 541
குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் 544
குடிசை மாற்று வாரியம் 545, 547
குடிப்பெயர்ச்சி 544
குடிமதிப்பு 547
குடிமதிப்பு ஆணையகம் 552, 553
குடிமதிப்புக் காலம் 548
குடிமல்லம் 555
குடிமை 556
குடிமை உரிமைகள் 556, 557
குடிமை பெறும் வகை 556
குடியம் 557
குடியரசு 557
குடியரசுக் கட்சியும் குடியாட்சிக் கட்சியும் 557
குடியரசுக் கொள்கை 559
குடியரசுத் தலைவர் ஆட்சி 560
குடியாட்சி 561
குடியாட்சிச் சமநிலைக் கோட்பாடு 562
குடியாட்சிசார் அதிகாரக் குவிப்பு 564
குடியாட்சிசார் அதிகாரப் பரவல் 566
குடியாத்தம் 566
குடியானவர் கலகங்கள் 567
குடியியல் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 569
குடியிருப்புகள் 570
குடியுரிமை 575
குடியேற்ற ஆட்சி முறை 577
குடியேற்ற நாட்டு அரசாங்கம் 576
குடியேற்ற நாட்டு ஆட்சி பற்றிய மதிப்பீடு 578
குடியேற்ற நாடுகள் பற்றிய கோட்பாடுகள் 576
குடியேற்றம் 578
குடியொப்பம் 578
குடியொப்பம் வேண்டல் 580
குடிவழியியல் 580
குடிவழியியலும் சமயமும் 581
குடிவாரம் 583
குடும்ப ஏற்பாடு 583
குடும்ப நலத் திட்டம் 584
குடும்பம் 591
குடும்ப மருத்துவம் 782
குடுமியா மலை 597
குடைவரைக் கலை 598
குண்டலகேசி 602
குண்டலகேசி விருத்தம் 602
குண்டுகட் பாலியாதனார் 602
குண்டுவீச்சு 603
குண்டூர் 603
குண்டோதரன் 604
குணக்குறி 604
குணகாங்கியம் 604
குணங்குடி மசுத்தான் 605
குணசாகரர் 606
குண நாற்பது 607
குணபதேயச் செப்பேடுகள் 607
குணம் 608
குணவாகடம் 608
குணவீர பண்டிதர் 609
குணாட்டியர் 610
குத்தகை 610
குத்புதீன் அய்பெக்கு 613
குத்புதீன் பக்தியார் காக்கீ 614
குதம்பைச் சித்தர் 615
குதர்க்க வாதம் 615
குதிரைத் தறியனார் 615
குதிரைப் படை 616
குதுப்சாகி அரசர்கள் (கோல்கொண்டா) 616
குதுப் சாகி அரசும் தமிழகமும் 619, 620
குதுப்மினார் 620
குந்தி 622
குப்தப் பேரரசும் சமூகமும் 625
குப்தர் ஆண்டு 622
குப்தர் கால அறிவியல் 625
குப்தர்கால இலக்கியம் 625
குப்தர் காலக் கலைகள் 625
குப்தர்கால நாணயங்கள் 626
குப்தர் பேரரசு 623
குப்புசாமி சாத்திரி 626
குப்புசாமி சாத்திரி ஆராய்ச்சி நிறுவனம் 627
குப்புசாமி நாயுடு, கோ 628
குப்புசாமி முதலியார், ஆரணி 629
குப்பைக் கோழியார் 629
குப்ளாய்கான் 630
குபேரன் 631
கும்பகருணன் 632
கும்பகோணம் 633
கும்பம் 635
கும்பமேளா 635
கும்பல் 636
கும்பல் நடத்தைக் கோட்பாடுகள் 639
கும்பல் மனக் கோட்பாடு 640
கும்பல் மேல்வரிச் சட்டக்கோட்பாடு 642
கும்மட்டம் 642
கும்மி 644
கும்மி கோலாட்டம் 643
குமட்டூர் கண்ணனார் 645
குமணன் 646

குமரகுருதாச சுவாமிகள் 646
குமரகுருபர தேசிகர் 647
குமரகுருபரர் 647
குமரப் பருவக் கல்வி 648
குமரப்பா, ஜே.சி. 650
குமரன், (திருப்பூர்) 653
குமரிக்கோடு 653
குமரித் தெய்வம் 653
குமரியாறு 653
குமரேச சதகம் 654
குமார கம்பணர் 655
குமாரகுப்தன், முதலாம் 655
குமாரகுலசிங்க முதலியார் 656
குமார சம்பவம் 656
*குமாரசம்பவம்* 287, 288
குமாரசாமி தேசிகர் 657
குமாரசாமிப் புலவர் 658
குமாரசாமி மடம் 659
குமாரசாமி முதலியார் 659
குமாரசாமி ராசா, பூ.ச. 659
குமாரதேவர் 661
குமாரதேவி 661
குமார விசயகிரி வேலச் சின்னொவையன் 661
குமார விட்டுணு 662
குமார வியாசன் 662
குமாரன் ஆசான் 663
குமாரிலபட்டர் 664
குமாரிலர் 665
குமுழி ஞாழலார் நப்பசலையார் 665
குயூபெக்கு 666
*குயூபெக்கு நகரம்* 667
குர்திசுத்தானம் 668
குரங்காடுதுறை 668
குரவைக் கூத்து 669, 922, 923
குரான் (குர் ஆன்) 669
குரு 670
குரு அர்சுன் சிங்கு 671
குரு அரகோவிந்தர் 671
குரு கீதை 672
குரு கோவிந்த சிங்கு 673
குருசேவு 673
குரு ஞானசம்பந்தர் 675
*குருட்சேத்திரப் பல்கலைக் கழகம்* 676
குருட்சேத்திரம் 676
குருத் தோலை ஞாயிறு 677
குரு நமசிவாயர் 678
*குருநானக்கின் போதனைகள்* 679, 680
குரு நானக்கு 679
குரு நானக்கு தேவு பல்கலைக் கழகம் 680
குரு பரம்பரை 680
குருபாததாசர் 682
குருமார் அரசாங்க முறை 684
குருமார் உரிமை 686
குருமார் எதிர்ப்புக் கோட்பாடு 686
குருவட்டி 688
குருவாயூர் 689
குரூகர், பாலசு 689
குரோ இந்தியர் 690
குரோச்சே, பெனெதெத்தோ 691
*குரோச்சேயின் தத்துவக் கருத்துகள்* 692
குரோசியா 695
குரோசியா, கியூகோ 693
குரோட்டு சார்சு 696
குரோபர், ஆல்பிரடு உலூயி 696
குரோமாக்னன் மனிதன் 697
குல்பர்கா 699
குல்மார்க்கு 700
குல்லூகப்பட்டர் 701
குலக்குறி 701
*குலக்குறிக் கம்பம்* 703
*குலக் குறியம்* 701
குலச்சிறை நாயனார் 705
குலசேகரப்பட்டினம் 705
குலசேகர பாண்டியன் 705
குலசேகர பாண்டியன் சடையவர்மன், முதலாம் 706
குலசேகர பாண்டியன் முதலாம் மாறவர்மன் 707
குலசேகரர் 707
குலம் 709
குலாம் காதிறு நாவலர் 711
குலுக்மேன், எர்மன் மேக்சு 712
குலோத்துங்க சோழ சரிதை 712
குலோத்துங்கன்,முதலாம் 713
குவலயானந்தம் 717
குவாங்சீ 718
குவாங்சௌ 718
குவாங்துங்கு 718
குவாசிரோப் பழங்குடி 719
குவாடல் கானல் 720
குவாடலாகாரா 721
குவாடலூப்பு 721
குவாதிமாலா 722
குவாம் 723
குவாயசு 724
குவாயாக்கீல் துறைமுகம் 724
குவாயாக்கீல் வளைகுடா 724
குவாலியர் 724
குவிசுலிங்கு, விட்குன் 727
குவிண்டியல்யன், மார்க்கசு பாபியன் 727

குவிநிலைக் கோட்பாடு 641
குவீபசெவு 727
குவீன்சுலாந்து 728
குவெட்டா 729
குவேசோ 729
குவைத்து 730
குவைத்து நாட்டின் கல்வி 732
குவோமின்டாங்கு 732
குழந்தை, அ.மு. 733
குழந்தை உளவியல் 734
குழந்தைக் கணை 760
குழந்தைக் கவிராயர் 736
குழந்தைக் கொலை 737
குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 738
குழந்தைகள் பூங்காப் பள்ளி 742
குழந்தைத் திருமண எதிர் இயக்கம் 748
குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் 749
குழந்தைத் திருமணத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 746
குழந்தைத் திருமணம் 744
குழந்தைத் தொழிலாளர் 750
குழந்தைத் தொழிலாளர் பற்றிய சட்டங்கள் 750,751
குழந்தை நலம் 756
குழந்தைப் பனுவல்கள் 467
குழந்தைப் பாடல் 761
குழந்தை முன்னறிவுச் சோதனை 763
குழந்தை மையக் கல்வி 764
குழந்தை மொழி 765
குழல் 769
குழலினைச் செய்யும் முறைகள் 771
குழற்றத்தனார் 771
குழு 771
குழு அறிவுரை பகர்தல் 775
குழு அனுபவமும் சமூகமயமாதலும் 777
குழு இடைவினை 778
குழு இயங்கியல் 779
குழு உள மருத்துவம் 781
குழு ஒழுங்குணர்வு 784
குழுக்கள் 786
குழுக்கற்பித்தல் 788
குழுத் தீவுகள் 789
குழும உளவியல் 790
குழு மணம் 790
குழும மனநலம் 791
குழு மனக் கோட்பாடு 791
குழு மனப்பான்மை 793
குழு வழி முறை 783
குழு வாழ்க்கை 795
குள்ளர்கள் 796
குளம்பனார் 799
குளம்பாதாயனார் 799
குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் 799
குளித்தலை 800
குளுக்கான், கிளைடு 801
குளுசு 801
குற்ற அறிக்கை 802
குற்ற இளைஞர் பள்ளி 802
குற்ற உடந்தை 803
குற்ற உளவியல் 803
குற்றச்சாட்டு 803
குற்றச்சிக்கல் 804
குற்றஞ் சாட்டப்பட்டவர் 805
குற்றம் 805
குற்ற மன்னிப்பு 805
குற்ற மனம் 806
குற்ற முறையீடு 807
குற்றமேற்ற சாட்சி 807
குற்ற வழக்குகள் 808
குற்ற வழக்குத் தொடுப்பு 807
குற்றவாளிப் பழங்குடிகள் 808
குற்றவியல் அரசு வழக்குரைஞர் 809
குற்றவியல் சட்டம் 812
குற்றவியல் சட்ட வரையறை 812
குற்றவியல் சார்ந்த பொறுப்புநிலை 810
குற்றவியல் தத்துவம் 811
குற்றவியல் நடைமுறைச் சட்டம் 813
குற்றாலக் குறவஞ்சி 815
குற்றாலம் 817
குறட்டி வரதையன் 817
குறத்திப் பாட்டு 818
குறம் 818
குறமகள் இளவெயினியார் 820
குறமகள் குறியெயினி 820
குறவஞ்சி 465,821
குறள் நூல்கள் 466
குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம் 823
குறிப்புப் பொருள் 825
குறிப்பு வினை 826
குறியிறையார் 826
குறியீட்டு அளவையியல் 827
குறியீட்டு எண்கள் 828
குறியீடுசார் மானிடவியல் 834
குறுக்கீடு 836
குறுக்கு விசாரணை 838
குறுகிய கால நடைமுறை 838
குறுங்கீரனார் 833
குறுங்குடி மருதனார் 888

குறுங்கோழியூர் கிழார் 839
குறுஞ்சீர் வண்ணம் 839
குறுந்தொகை 840
குறுநினைவு 841
குறும்பனை நாடு 842
குறும்பியன் 843
குறுவழுதியார் 843
குறுவேட்டுவச் செய்யுள் 843
குறைச் சொற்கள் 844
குறைந்த அளவுக் கூலி 936, 937
குறைந்த பொருளாதார வளர்ச்சி 845
குறைவளர்ச்சி நாடுகள் 847
குறைவு எண் 850
குன்சுரு, இருதய நாத்து 851
குன்மிங்கு 853
குன்றக்குடி 853
குன்றத்தூர் 853
குன்றம்பூதனார் 854
குன்றன் சிற்றம்பலமுடையான் 855
குன்றியனார் 855
குன்றுதோறாடல் 856
குன்றூர் கிழார் மகனார் கண்ணித்தனார் 856
குனார் மிர்தால் 857
கூ 860
கூக்கிளசுகிளான் 860
கூகைக் கோழியார் 861
கூச்சு பிகார் 861
கூசுடோசா 861
கூட்டரசு நிதி 862
கூட்டன்பர்கு 864
கூட்டாட்சி அமைப்பு 868
கூட்டாட்சி ஆட்சித் துறை 865
கூட்டாட்சி எதிர்ப்பாளர் 866
கூட்டாட்சிக் கோட்பாடு 867
கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம் 869
கூட்டாட்சி முதல்வர் 870
கூட்டாட்சியாளர்கள் 558
கூட்டாட்சியின் தோற்றம் 868
கூட்டாட்சியின் முக்கிய கூறுகள் 868, 869
கூட்டாண்மை 871
கூட்டாண்மை ஆவணம் 872
கூட்டாண்மைக் கணக்குகள் 873
கூட்டாண்மை நிறுவனக் கலைப்பு 880
கூட்டாண்மை நிறுவனத் தணிக்கை 882
கூட்டாண்மைப் பதிவு 884
கூட்டாளி சேர்க்கை 876
கூட்டாளி வகைகள் 885
கூட்டாளி விலகல் 878, 879
கூட்டு இயல் 887
கூட்டு இராணுவ நடவடிக்கை 888
கூட்டுக் கவர்ச்சி அரசியக்கம் 888
கூட்டுக் குடும்பம் 889
கூட்டுக் கூற்றுகள் 947
கூட்டு நிறுவனம் 905
கூட்டுப் பகுப்பாய்வு 892
கூட்டுப்பங்கு நிறுவனக் கணக்குகள் 894
கூட்டுப்பங்கு நிறுவனம் 894-896
கூட்டுப் பண்ணை 898
கூட்டுப் பாதுகாப்பு 899
கூட்டுப் பேரம் 900
கூட்டு முயற்சி 903
கூட்டுரிமை 903
கூட்டு வணிகம் 903
கூட்டு வாணிகச் சட்டம் 904
கூட்டு வாணிகம் 905
கூட்டுறவு 908, 913, 914
கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள் 909
கூட்டுறவுக் குத்தகைப் பண்ணை நிறுவனம் 917
கூட்டுறவுக் கூட்டுப் பண்ணை நிறுவனம் 917
கூட்டுறவுச் சங்கங்கள் 574, 575
கூட்டுறவுச் செயற்பாங்கு 913
கூட்டுறவுத் தொகுப்புப் பண்ணை நிறுவனம் 917
கூட்டுறவுப் பண்டசாலை 914
கூட்டுறவுப் பண்ணை 916
கூட்டுறவும் பண்பாடும் 914
கூட்டுறவு வேளாண்மைப் பண்ணை நிறுவனம் 917
கூடல் சங்கமத்துப் பரணி 919
கூடலூர் கிழார் 919
கூடலூர்ப்பல்கண்ணனார் 920
கூடற் சங்கமம் 921
கூடாரப் பண்டிகை 921
கூடிவாழும் இயல்பு 778
கூடுதல் ஆதாயம் 921
கூத்துகள் 921
கூப்பர், சான்மாண்ட் கோமரி 923
கூமாதி 924
கூமா மாட்டா 924
கூயிபிசென் 924
கூர்க்கப் போர் 924
கூர்க்கர்கள் 925
கூர்சரப் பிரதிகாரர் 926
கூர்சுக்கு 926
கூர்மபுராணம் 926
கூரகுலோத்தமதாசர் 927
கூரத்தாழ்வான் 928
கூரம் செப்பேடுகள் 929
கூரா 930
கூராசாவோ 930

கூராய்வு முறை 735
கூரிடீவா 930
**கூரில் தீவுகள்** 930
**கூருணர்ச்சிக் குழு** 931
**கூலர், ஒல்பு கேங்கு** 923
**கூலி** 932
கூலி-குதுப்-உல்-முல்க்கு 616
**கூலி, சார்லசு கார்டன்** 938
கூலி, சி. எச். 773, 777
**கூலிட்சு, கால்வின்** 939
கூலி நிதிக் கோட்பாடு 934
**கூலிப்படைத் தலைவர்கள்** 940
கூலியின் தேவை அளிப்புக் கோட்பாடு 936
**கூலியும் வேலையும்** 940
கூழங்கைத் தம்பிரான் 942
**கூழிக் கொற்றனார்** 942
**கூழைத் தன்மை** 943
**கூளப்பநாயக்கன் காதல்** 943
**கூளப்பநாயக்கன் விறலிவிடுதூது** 944
**கூற்றங்குமரனார்** 945
**கூற்றுப் பாகுபாடுகள்** 945
**கூற்றுவ நாயனார்** 948
**கூன், கார்லடன் இசுடீவன்சு** 948
**கூன் லூன் மலைகள்** 949
**கெட்டிசுபர்கு** 951
**கெட்டேல், சேம்சு மக்கீன்** 951
**கெடிலம் ஆறு** 952
**கெடுபிடிப் போர்** 952
**கெண்டகி** 953
**கெப்லர் சோகான்சு** 954
**கெம்பே கௌடா** 955
**கெமர் அரசு** 955
**கெமரோவோ** 958
**கெய்சர் வில்லியம்-முதலாம்** 958
**கெய்ரோ** 960
**கெயிக்வாடு மகாராசா சாயாசிராவ்** 960
**கெர்ச்சு** 961
**கெல்** 615
**கெல்சென் ஒன்சு** 962
**கெல்சென்கிர்க்கென்** 963
**கெல்ட்டுகள்** 963
**கெல்டர்லாந்து** 964
**கெல்லக்கு, பிராங்குபில்லிங்குசு** 964
**கெல்லர், எலன்** 965
**கெல்லர் திட்டம்** 966
**கெலோன்** 968
**கென்சிங்டன் வரிவடிவக்கல்** 969
**கென்ட்டு** 969
**கென்னடி, இராபர்ட்டு** 970
**கென்னடி, சான் பிட்செரால்டு** 970
**கென்னடி, சோசப் பேட்ரிக்கு** 972
**கென்னப்பு வர்னால்டு வான்** 972
**கெனியா** 973
**கேகசுத் தீவுகள்** 975
**கேசவ சந்திரசென்** 975
**கேசவதாசு** 976
**கேசவனார்** 976
**கேசான், மனாவெல் உலூயி** 977
**கேட்சு கெடு** 977
**கேட்டை** 978
**கேட்டோ** 978
கைலாசநாதர் திருக்கோயில் 41
கொக்கிப் பூச்சிகள் 760
கொடுங்காயம் 155
கொள்ளைக் கூட்டம் 638
கொள்ளைக்கெதிரான காப்பீடு 123
கொள்ளை நோய் இயல் 893
கோண்டுப் பழங்குடி 738
கோத்திரம் 710
கோயர் 54
கோலரிப் பழங்குடி 737
கோலாட்டக் கும்மி 645
கோலாட்டம் 645
சங்கடம் எதிர்நோக்கும் குழு மருத்துவம் 782
சங்கரபாடியார் 786
சஞ்சாரி கீதம் 484
சட்டக் கூறுகள் 570
சட்டப் புறக்கணிப்புக் கும்பல்கள் 638
சட்டமன்றத்துறை சார்ந்த அதிகாரங்கள் 865
சடங்குக் கல்யாணம் 77
சண்முகம்பிள்ளை, மு. 840
சத்கியாதி 323
சதசத் கியாதி 324
சதுர்புசமந்திர் 726
சம்சித் குதுப்கான் 617
சமத்துவக் குடும்பம் 594
சமத்துவக் கோட்பாடு 355
சமநிலை 504
சமப்படுத்துவோர் 559,687
சமயம் 203
சமுத்திரகுப்தன் 623
சமூக அமைப்புசார் கூடும் கும்பல்கள் 638
சமூக இயைபு 778,779
சமூக நிலையமைப்பு 593
சமூக நெறிகள் 593
சமூகமயமாதல் 595,596,777

சமூக வருமானம் 194
சமூகவியல் அணுகுமுறை 642
சமூகவியல்பு 772
சயபிட வினயாதித்தியன் 161
சர் அரிசிங் கவுர் 749
சாண்டர்சன் 774
சாதாரணக் காயம் 155
சாதாரணக் கும்பல் 638,639
சாதி அமைப்பு முறை 539
சாந்திக் கூத்து 922
சார்சுகிரோட் 615
சார்பற்ற அற ஆணை 68-71
சார்பற்ற கூற்று 945
சாரங்கபாணி கோயில் 634
சிக்கல் 804
சிங்கப்பூரில் குடும்பநலத் திட்டம் 588,589
சித்திரமேழிப் பெரியநாட்டார் 788
சிந்தனை 489,490
சிலப்பதிகாரம் 300
சிவ சூத்திரங்கள் 30
சிற்றிலக்கியங்கள் 465
சிறப்பு அங்காடிகள் 915
சிறு குழு ஆய்வு 780
சிறு குழுக்கள் 789
சிறுபஞ்சமூலம் 210
சிறு பனுவல்கள் 466
சீவனாம்சம் 815
சீனர்கள் 549
சீனாவில் குடும்பநலத் திட்டம் 586-588
சுட்டுப்பொருள் 825
சுடர்மணி 464
சுபான் குலி 617
சுவர்க்க நீக்கம் 464
சுவிசேடப் புராணம் 464
சுவிட்சர்லாந்தில் குடியொப்ப முறை 579
சுழலும் மாறுதல்கள் 247
சுற்றுப்புறம் 756
சூலியசு சீசர் 442,443
செய்தித் தொடர்பு முறைகள் 781
செயலுறுத்துக் கட்டளை 824,825
செயற்படு கும்பல் 638,639
செயற்பாட்டுக் கொள்கை 188
செருமனியில் குடியானவர் போர் 568,569
செலவீட்டு முறை 194
செலாவணிக் கோட்பாடு 9
செனோபோன் 421
சொல் குறுக்கீடு 837
சொறி சிரங்கு 759
சோடு, சி.இ.எம். 772
சோதனை முறை 735
சோதிட நூல் 670,671
சோர்வு நிலைமை 438
சோவியத்துக் குடிமதிப்பு 551
ஞானாதிக்கராயர் காப்பியம் 464
ஞானானந்த புராணம் 464
தக்குபல்லி துக்கன 43
தகோமி 710
தண்டனை 803
தண்டனையியல் 812
தணிக்கையர் 883,884
தணிக்கையாளர் அறிக்கை 884
தந்தை கால்வழி 230
தந்தை தாயக் குடும்பம் 595
தந்தை பெயர்க்குடும்பம் 595
தந்தையாட்சிக் குடும்பம் 594
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 573,574
தமிழகத்தில் கூட்டுறவுக் கடன் 912,913
தர்க்க இயல் 331
தர்க்கைம் 779
தர்க்கைமின் கோட்பாடு 793
தர்சுட்டன் 737,738
தர்னர், கில்லியன் 772
தரவீடு அளவுகோல், வினாத்தொகுதி முறைகள் 736
தலைமுறை வேறுபாடு 252
தலைமை 776,781
தலைமைப் பண்டசாலை 915
தலைமையகம் 446,447
தற்கால அளவையியல் கூற்று 947
தற்செயலாக்க் கூடும் கும்பல்கள் 638
தன்னிறைவு 355
தனிக் கூற்றுகள் 947
தனிநிலை அறிவு ஆய்வு 65,66
தனியாள் விபத்துக் காப்பீடு 123
தாய் கால்வழி 230
தாய் தாயக் குடும்பம் 595
தாய் பெயர்க் குடும்பம் 595
தாய்மார்களின் பாடல்கள் 744
தாய்லாந்தில் குடும்பநலத் திட்டம் 590
தாயாட்சிக் குடும்பம் 594
தாராள அரசியற் கருத்து 692,693
தாழ்ந்த ஒழுங்குணர்வு 785
தானிசு 775
திராட்டரின் கோட்பாடு 792
திராய் 378
திரு அவதாரம் 464
திருச்செல்வர் காவியம் 463
திருவாக்குப் புராணம் 463
திருவாய்மொழிப் பிள்ளை 682

திறந்த அல்லது மூடிய குழுக்கள் 776
தீக் காப்பீடு 122
தீவிரக் கும்பல் 638
துர்லப வர்த்தனர் 160,161
தெய்விக நிலை 687
தெருக் கும்பல்கள் 638
தெல்சிகாரியர்கள் 703
தென் கொரியாவில் குடும்பநலத் திட்டம் 589, 590
தேக்க வீக்க நிலை 941
தேம்பாவணி 463
தேவிசு, கிங்கலீ 774
தைனாரிக்கு இனத்தவர் 4
தொண்டை அடைப்பான் நோய் 758
தொல்காப்பியர் 818
தொழிலாளர் இழப்புக் காப்பீடு 123
தொழிற்கழகமும் கூட்டுப் பேரமுறையும் 901
தொழிற் குழுக்கள் 787, 788
தொழிற்சாலைகள் சட்டம் 751, 752
தொற்றுதல் கோட்பாடு 641
தொன்மைப் பொருளியல் 511, 512
தோடர்கள் 738, 791
தோண்டுவோர் 687
நச்சினார்க்கினியர் 840
நச்சுக் காய்ச்சல் 759
நஞ்சீயர் 682
நடப்புச் சொத்துகள் 897
நடப்புப் பொறுப்புகள் 897
நடுநிலக் கடலின் முதுகுடிகள் 3
நம்பிக்கைக் காப்பீடு 123
நம்பிள்ளை 682
நம்மாழ்வார் 680, 681
நற்றிணை 820
நன்மை 184
நாக்குப் பூச்சிகள் 760
நாகூர்ப் புராணம் 711
நாகேசுவரர் கோயில் 634
நாடகங்கள் 466
நாடாப் பூச்சிகள் 760
நாணயங்கள் 337, 338
நார்டிக்கு இனத்தவர் 3
நிபந்தனை உரை 946
நியதி பிறழாக் கொள்கை 187
நிலமானிய முறை 201
நிலைச் சொத்துகள் 897
நிலை முதல் 876
நிலையற்ற கும்பல் 636
நீண்டகாலப் போக்கு 245
நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் 866
நீதிமன்றத்தின் மூலம் கலைப்பு 881
நெடுங்குழல் 770
நெய்தலங்கானல் 278
நேபாளத்தில் குடும்பநலத் திட்டம் 590
நேர்மைக் கூலி 937
பகவதி 351
பட்டினப்பாக்கம் 278
படிவம் 244, 245
பணக் கூலி 932
பணக் கோட்பாடு 513
பணி அளவுக் கூலி 932, 933
பதனப் பிரிவுகள் 916
பதிவு 872
பதிவு செய்யாமையின் விளைவு 885
பயிர்க் கடன் திட்டம் 911
பல் எயிறு வீக்க நோய் 761
பல கணவர் மணக் குடும்பம் 594
பலபடித்தான கும்பல்கள் 638
பல மனைவியர் மணக் குடும்பம் 594
பலவகைச் செலவினம் 898
பழங்குடிகளின் குடி வழியியல் 580
பள்ளிக் கல்வி 765
பாகிசுத்தானில் குடும்பநலத் திட்டம் 590
பாகிசுத்தானிலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்தவர்கள் 575, 576
பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்களுக்குள்ள குடியுரிமை 576
பாகியான் 624
பாணபுரீசுவரர் கோயில் 634
பாபிலோனியர்கள் 549
பாரம்பரியம் 803
பாரிசு ஒப்பந்தம் 361
பாலியல் உணர்வு 649
பாலினீசிய இனத்தவர் 4
பிசித் தீவுகளில் குடும்பநலத் திட்டம் 590
பிணைக்கடன் 897
பிணையில்லாக் கடன் 897
பியாசே 649
பிரடெரிக்கு லிசுட்டு 131
பிரபஞ்சம் 67, 68
பிரம்மசமாசம் 748
பிரிங்கு 649
பிரிட்டன் குடிமதிப்பு 551
பிரிட்டனின் முறை 457
பிலிப்பைன்சு நாட்டில் குடும்பநலத் திட்டம் 590
பிழைப்பு ஊதியக் கூலிக் கோட்பாடு 933
பிள்ளைத்தமிழ் 465
பிள்ளை லோகாசாரியர் 682
பிளேட்டோ 419, 615
பிளேட்டோவின் கோட்பாடு 792

பின்நிகழ்வை-முன்நிகழ்வு உள்ளடக்கும் கொள்கை 187, 188
பின்னல் கோலாட்டம் 645
பீதி கொண்ட கும்பல் 638, 639
புராணக் கும்மி 644
புரோபல் 742, 743
புல்லாங்குழல் 770
புலனுணர்வுக் கல்வி 765
புவிசார் இனங்கள் 3
புறக் குழுக்கள் 774
பூங்காவனப் பிரளயம் 464
பெண்கள் தகுநிலை பற்றிய ஆய்வுக்குழு 745
பெந்தம் 330
பெயரளவுக் கூட்டாளி 886
பெரிய நம்பிகள் 681
பெருங்காப்பியம் 116
பெருமாள் திருமொழி 709
பொதுக் கூற்றுகள் 948
பொதுமை ஆன்மா 490
பொதுவுடைமை 420
பொதுவுடைமைக் கட்சி 565
பொதுவுடைமைச் சமூகம் 201
பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டாளி 886
போதனை முறைக்கு மருத்துவம் 782
போர்க் கூத்துகள் 923
மக்கள்தொகை 544
மக்கள்தொகை இயல் 893
மகாமகம் 635
மங்கோலிய வமிசம் 630, 631
மசும்தார் 636
மணல்வாரி 759
மண வாழ்க்கைக் குடும்பம் 594
மணவாள மாமுனிகள் 682
மணிக்கிராமத்தார் 786, 787
மதிப்பீட்டு முறை 877, 878
மரபுக் கும்பல் 638, 639
மரபுரிமையும் குடிவழிப் பட்டியலும் 580
மரபுவழி அளவையியல் கூற்று 945, 946
மரியா மாண்டிசோரி 764
மருதத் திணை 856, 921
மருவூர்ப்பாக்கம் 278
மலேசியாவில் குடும்பநலத் திட்டம் 589
மறு காப்பீடு 124
மனம் 163, 164
மனவெழுச்சி 636
மாக்கிய வெல்லி 559
மாண்டசுக்கியூ 559
மாணவர் தெரிவு 776
மாதவி 299
மார்க்கண்டேயன் 241
மார்சிலியோ 473, 474, 685
மாரியம்மன் 350, 351
மாலை 466
மாலைக்கண் 760
மாற்றுரிமைச் செலாவணி 7
மாற்றுரிமையற்ற செலாவணி 7
மாறியும் மாறிலியும் 828
மாறும் முதல் 875
மிகுந்த ஒழுங்குணர்வு 785
மிகை மதிப்பு 198, 202
மிச்ச உரிமையர் கோட்பாடு 934
மிதமிஞ்சிய குடிக்கு ஆட்பட்டவர்களின் குழு 782
முக்தபிட லலிதாதித்யன் 161
முகம்மது குதுப்சா 618
முகியித்தீன் அப்துல்காதிர் செய்லானி 606
முத்து மீனாட்சிக் கவிராயர் 683
முதல்நிலைக் குழுக்கள் 773,774
முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 740-742
முதலாக்கக் குறைவு 846
முதலாம் குமார விட்டுணு 662
முதலாம் சந்திரகுப்தன் 623
முதலாம் மதுரை 397
முதலாளித்துவப் போட்டிக் கோட்பாடு 198,199
முதலாளித்துவம் 201
முதலீடுகள் 897
முரண் தடைப்படி கூட்டாளி 886
மூன்றாம் குமாரவிட்டுணு 662
மெக் ஈவர் 636,772,778
மெக்டூகலின் கோட்பாடு 793
மெய்யியல் 468
மேக சந்தேசம் 288
மேலாண்மைச் செலாவணித் திட்டம் 7
மைசீனியா 378
மொழிக் கல்வி 765
மொழியின் வரம்பு 827
மொழி வழக்கு மாறுபாடு 252
மோட்டார் விபத்துக் காப்பீடு 123
யானைகவுனி 726
யோசேப்புப் புராணம் 463
வங்காள தேசத்தில் குடும்பநலத் திட்டம் 590
வடக்குத் திருவீதிப் பிள்ளை 682
வணிகக் குழுக்கள் 786,787
வரலாற்றுக் கும்மி 644
வருக்கப் போராட்டம் 202,203
வருமானக் கோட்பாடு 505
வலங்கை 788
வளஞ்சியர்கள் 787

வளர்ப்புமுறை 756
வன்முறைக் கும்பல் 638,639
வாணிக நற்பெயர்த் தொகை 877
வாழ்க்கைக் கூலி 937
வாழ்க்கைத் தரக் கோட்பாடு 934
வாழ்க்கை நடைமுறைப் பாகுபாடு 782
வாழ்க்கை வரலாற்று முறை 735
விகற்ப உரை 946
விநோதக் கூத்து 922
விபரீத கியாதி 323
வியட்நாமில் குடும்பநலத் திட்டம் 591
விருப்பமுறிக் கூட்டாண்மை 871
விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட குழுக்கள் 774
விருப்பாற்றலுக்குட்பட்ட குழுக்கள் 774
விலைமாற்ற ஈட்டுப்படி 933
விழிப்பு நிலை 403
விளைபொருள் விற்பனை 915,916
வீழ்ச்சி மாதிரிப் படிவங்கள் 894
வெள்ளையோட்டம் 649
வெளிப்பாட்டுக் கும்பல் 638,639
வெறியாட்டு 922,923
வேலைக்கோட்பாடு 504
வேலைப்பகுப்பு 420
வைகுந்தப்பெருமாள் கோயில் 41

# கலைச்சொற் பட்டியல்

## தமிழ்—ஆங்கிலம்

| | | |
|---|---|---|
| அடைமான உரிமை | ... | Subrogation |
| அடையாளப் பணம் | ... | Token Money |
| அதிகப் பற்று | ... | Over Draft |
| அரசியலறிவியல் | ... | Political Science |
| அரசு வேண்டாக் கோட்பாடு | ... | Anarchism |
| அழைப்பாணை வழக்கு | ... | Summons Case |
| அறக் காப்பாளர் | ... | Trustee |
| அறிவு ஆய்வியல் | ... | Epistemology |
| அனுமதிக்கப்பட்ட பிணையங்கள் | ... | Approved Securities |
| ஆணையச் செலாவணி | ... | Fiat Currency |
| ஆணையுறுதி ஆவணம் | ... | Affidavit |
| ஆவணம் | ... | Charter |
| ஆழ நுனிகள் | ... | Depth Cues |
| ஆட் கொணர்விக்கும் நீதிப்பேராணை | ... | Writ of Habeas Corpus |
| இடையரசு | ... | Buffer State |
| இணக்கம் | ... | Adaptation |
| இந்திய மைய இருப்பு வங்கி | ... | Reserve Bank of India |
| இயற்கைப் பொருளியற் கோட்பாடு | ... | Physiocracy |
| இயைபிலா ஆய்வு | ... | Random Sampling |
| இரத்தவழி உறவு | ... | Consanguinity |
| இரு உலோக நாணய முறை | ... | Bimetalism |
| இருப்பு அங்காடி | ... | Stock Market |
| இழப்பீட்டுத் தொகை | ... | Reparation |
| இறுதிநிலைக் குறிப்பு | ... | Balance Sheet |
| இறைமை | ... | Sovereignty |
| இறையியல் | ... | Theology |
| இனக்குழுவியல் | ... | Ethnography |
| ஈட்டுறுதி | ... | Indemnity |
| உதவித் தொகை | ... | Subsidy |
| உரிமம் | ... | Licence |
| உரிமையியல் | ... | Civil Code |
| உரிமையியல் நடைமுறைச் சட்டம் | ... | Civil Procedure Code |
| உருவ நிருணயக் கோடு | ... | Contour |
| உலோகக் காசுகள் | ... | Metallic Money |
| உள்ளீடு | ... | Input |
| உற்பத்திச் செலவின் தாக்க ஆய்வு | ... | Cost-Effectiveness Analysis |
| உற்பத்திச் செலவுப் பயன்பாட்டு ஆய்வு | ... | Cost-Benefit Analysis |
| உற்பத்தியாளர் உபரி | ... | Producer Surplus |

| | | |
|---|---|---|
| உறுத்துக் கட்டளைகள் | ... | Injunctions |
| ஊக்கிகள் | ... | Motives |
| ஊக வாணிகம் | ... | Speculation |
| எடுகோள்கள் | ... | Assumptions |
| ஏகாதிபத்தியம் | ... | Imperialism |
| ஐயக் கொள்கை | ... | Scepticism |
| ஒட்டும் தன்மை | ... | Cohesiveness |
| ஒப்பந்தக் கூலி | ... | Indentured Labourer |
| ஒப்பந்தக் கோடு | ... | Contract Curve |
| ஒப்பார் குழு | ... | Peer Group |
| ஒருமுனைத் தீர்வை | ... | Single Column Duty |
| ஒருமை நிலைக் கொள்கை | ... | Monodology |
| ஒழுங்கமையாத் துறை | ... | Unorganised Sector |
| கட்டண வீதங்கள் | ... | Premium Rates |
| கட்டுப்பாட்டுக் குழு | ... | Control Group |
| கருவுரு | ... | Concept |
| கல்விக் கழகம் | ... | Academy |
| காகிதச் செலாவணித் திட்டம் | ... | Paper Currency Standard |
| காசோலை | ... | Cheque |
| காப்பு இருப்பு நிதி | ... | Cash Reserve Fund |
| காப்புத் தீர்வை | ... | Protective Tariff |
| காப்புத் தீர்வை வாரியம் | ... | Tariff Board |
| காரணி | ... | Agent |
| காரணிப் பகுப்பாய்வு | ... | Factor Analysis |
| கால அளவுக் கூலி | ... | Time Wage |
| கால இயக்க ஆய்வுகள் | ... | Time and Motion Study |
| காலப் பெட்டகம் | ... | Time Capsule |
| காவல் வைப்பு | ... | Remand |
| கிளர்ச்சி | ... | Riot |
| கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி | ... | Manic Depressive Psychosis |
| கீறல் காசோலை | ... | Crossed Cheque |
| குடி ஊழிய முறை | ... | Jajmani System |
| குடிப் பெயர்ச்சி | ... | Migration |
| குணக்குறி | ... | Connotation |
| குத்தகை | ... | Lease |
| குழு இடைவினை | ... | Group Interaction |
| குழு இயங்கியல் | ... | Group Dynamics |
| குற்ற அறிக்கை | ... | Charge Sheet |
| குற்றச்சாட்டு | ... | Charge |
| குற்றஞ் சாட்டப்பட்டவர் | ... | Accused |
| குற்றம் | ... | Crime |
| குற்ற முறையீடு | ... | Complaint |
| குற்றமேற்ற சாட்சி | ... | Approver |
| குற்றவழக்குத் தொடுப்பு | ... | Prosecution |
| குற்ற விடுதலை | ... | Acquittal |

| | |
|---|---|
| குற்றவியல் | Criminal Code |
| குற்றவியல் அரசு வழக்குரைஞர் | Public Prosecutor |
| குற்றவியல் சார்ந்த பொறுப்பு | Criminal Liability |
| குற்றவியல் தத்துவம் | Criminology |
| கூட்டாண்மை | Partnership |
| கூட்டு இயல் | Collectivism |
| கூட்டுரிமை | Co-ownership |
| கூட்டுறவுக் குழுச் சமவுடைமை | Guild Socialism |
| கூற்று | Proposition |
| கெடுபிடிப் போர் | Cold war |
| கேட்புப் பொறுப்புகள் | Demand Liabilities |
| கொடுங்கோலாட்சி | Tyranny |
| கொள்கைக் குரல் | Slogan |
| சமநிலைக் குடியாட்சி | Socialist Democracy |
| சமயச் சார்பான அரசு | Theocracy |
| சமுதாயம் | Community |
| சார்பமைப்பு | Functional Form |
| செயல்சார் உளப்பிணி | Functional Psychosis |
| செயலறிவுக் கோட்பாடு | Empiricism |
| செயற்பாட்டுக் கொள்கை | Activity Theory |
| செல்வச் சிறு குடியாட்சி | Oligarchy |
| சேமிப்பு வைப்பு | Savings Deposit |
| தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள் | Rites of Passage |
| தடையிலா வாணிகம் | Laissez Faire |
| தவணை வைப்பு | Time Deposit |
| தனி ஆள் வருவாய் | Per Capita Income |
| தனிமையில் இருப்பதால் ஏற்படும் கிலி | Monophobia |
| தனி வங்கி | Unit Bank |
| தாய் கால்வழி | Matrilineage |
| தாய்வழி மரபு | Matrilineal Descent |
| தாயாட்சிக் குடும்பம் | Matriarchal Family |
| தாரா கணக் கருதுகோள் | Nebular Hypothesis |
| தீர்ப்பாணை | Court Order |
| தேக்க வீக்க நிலை | Stagflation |
| தேசிய விரிவாக்கத் திட்டம் | National Extension Scheme |
| தேவை வைப்பு | Demand Deposit |
| தொடர்நிலை வைப்பு | Recurring Deposit |
| தொற்றுதல் கோட்பாடு | Contagion Theory |
| நடத்தைக் கொள்கை | Behaviourism |
| நடப்பு வைப்பு | Current Deposit |
| நடுநிலைக் கோட்பாடு | Stoicism |
| நடைமுறைக் கணக்கு | Current Account |
| நரம்புப் பிறழ்வு | Neurosis |
| நாள்பட்ட காசோலை | Stale Cheque |
| நிகர உற்பத்தி | Net Product |

| | |
|---|---|
| நிலமானிய முறை | ... Feudal System |
| நிறுமம் | ... Company |
| நுகர்வோர் உபரி | ... Consumer Surplus |
| நுண்ணினங்கள் | ... Micro-races |
| நுண்ணினத் திட்டம் | ... Micro-planning |
| நுண்படச் சுருள் | ... Micro-film |
| நேர்க் காட்சிக் கொள்கை | ... Positivism |
| நேர்மைப் பங்குகள் | ... Equity Shares |
| நொடிப்பு நிலை | ... Insolvency/Bankruptcy |
| நோக்கவியல் தீர்ப்பு | ... Teleological Judgement |
| பங்குரிமையாளர் | ... Share holder |
| பண்பாட்டுப் பேறு | ... Acculturation |
| பண நீர்மைத் தன்மை | ... Liquidity of Money |
| பணவாட்டம் | ... Deflation |
| பணவியல் ஆணையகம் | ... Monetary Authority |
| பணவீக்கம் | ... Inflation |
| பதிலீட்டு வீதங்கள் | ... Rate of Substitution |
| பல் மனைவி மணமுறை | ... Polygyny |
| பலதுணை மணம் | ... Polygamy |
| பாதுகாப்புப் பிணைய வைப்பு | ... Security Deposit |
| பிணை | ... Bail |
| பிணையில் விடக்கூடிய குற்றம் | ... Bailable Offence |
| பிணையில் விடாக் குற்றம் | ... Non-bailable Offence |
| பிரகடனச் சட்டம் | ... Declaratory Act |
| பிரபுக்களாட்சி | ... Aristocracy |
| புலன் கடந்த மெய்ப் பொருளியல் | ... Metaphysics |
| புலன்களால் உணர்தல் | ... Cognition |
| புறக்குழு | ... Out-group |
| புற மதிப்பு | ... Face Value |
| புனைவியல் இயக்கம் | ... Romanticism |
| பூசல் | ... Conflict |
| பெருங்குற்றம் | ... Felony |
| பொறுப்பு | ... Commitment |
| பொறுப்புகள் | ... Liabilities |
| போட்டி | ... Competition |
| போலிகள் | ... Paralogisms |
| மணிக்கல் | ... Agate |
| மதிப்புக் கோட்பாடு | ... Theory of Value |
| மதிப்பு முடிவுகள் | ... Value Judgement |
| மந்தநிலை | ... Depression |
| மாற்று ஒப்புறுதித் தாள் | ... Under Writing Paper |
| மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் | ... Negotiable Instruments Act |
| மாறாத் தன்மை | ... Constancy |
| மாறிகள் | ... Variables |
| மிகை மதிப்பு | ... Surplus Value |

| | | |
|---|---|---|
| முதலாளித்துவம் | ... | Capitalism |
| முதலீட்டுத் திட்டங்கள் | ... | Inventory Investment |
| முரண்பாட்டாளர் | ... | Dissenter |
| முற்கோள் | ... | Thesis |
| முறைப் பிழை | ... | Misfeasance |
| முன்னிலை மீட்சி | ... | Restoration |
| முன்னுரிமைப் பங்குகள் | ... | Preference Shares |
| மெய் விளக்கியலார் | ... | Sophists |
| மேலாண்மை | ... | Supremacy |
| வணிகவியற் கோட்பாடு | ... | Mercantalism |
| வருமானச் சுழல் ஓட்டம் | ... | Circular Income Flow |
| வரைமொழி ஒப்பந்தம் | ... | Covenant |
| வழக்குக் குறிப்பேடு | ... | Case Diary |
| வழக்குரை | ... | Plaint |
| வழியிடை ரொக்கம் | ... | Cash-in-Transit |
| வாணிக நற்பெயர்த் தொகை | ... | Goodwill |
| வாரிசுரிமை | ... | Inheritance |
| விட்டுக் கொடுக்கும் நிறுவனங்கள் | ... | Ceding Companies |
| விடுவிப்புச் சீட்டுகள் | ... | Discharge Voucher |
| விண்மீன் குழுக்கள் | ... | Constellations |
| விளைவு கூறல் | ... | Feed Back |
| வேண்டுகோள் | ... | Appeal |

# ஆங்கிலம்—தமிழ்

| | | |
|---|---|---|
| Academy | ... | கல்விக் கழகம் |
| Acculturation | ... | பண்பாட்டுப் பேறு |
| Accused | ... | குற்றஞ் சாட்டப்பட்டவர் |
| Acquittal | ... | குற்ற விடுதலை |
| Activity Theory | ... | செயற்பாட்டுக் கொள்கை |
| Adaptation | ... | இணக்கம் |
| Affidavit | ... | ஆணையுறுதி ஆவணம் |
| Agate | ... | மணிக்கல் |
| Agent | ... | காரணி |
| Anarchism | ... | அரசு வேண்டாக் கோட்பாடு |
| Appeal | ... | வேண்டுகோள் |
| Approved Securities | ... | அனுமதிக்கப்பட்ட பிணையங்கள் |
| Approver | ... | குற்றமேற்ற சாட்சி |
| Aristocracy | ... | பிரபுக்களாட்சி |
| Assumptions | ... | எடுகோள்கள் |
| Bail | ... | பிணை |
| Bailable Offence | ... | பிணையில் விடக்கூடிய குற்றம் |
| Balance Sheet | ... | இறுதிநிலைக் குறிப்பு |
| Behaviourism | ... | நடத்தைக் கொள்கை |
| Bimetalism | ... | இரு உலோக நாணய முறை |
| Buffer State | ... | இடையரசு |
| Capitalism | ... | முதலாளித்துவம் |
| Case Diary | ... | வழக்குக் குறிப்பேடு |
| Cash-in-transit | ... | வழியிடை ரொக்கம் |
| Cash Reserve Fund | ... | காப்பு இருப்பு நிதி |
| Ceding Companies | ... | விட்டுக் கொடுக்கும் நிறுவனங்கள் |
| Charge | ... | குற்றச்சாட்டு |
| Charge Sheet | ... | குற்ற அறிக்கை |
| Charter | ... | ஆவணம் |
| Cheque | ... | காசோலை |
| Circular Income Flow | ... | வருமானச் சுழல் ஓட்டம் |
| Civil Code | ... | உரிமையியல் |
| Civil procedure Code | ... | உரிமையியல் நடைமுறைச் சட்டம் |
| Cognition | ... | புலன்களால் உணர்தல் |
| Cohesiveness | ... | ஒட்டும் தன்மை |
| Cold War | ... | கெடுபிடிப் போர் |
| Collectivism | ... | கூட்டு இயல் |
| Commitment | ... | பொறுப்பு |
| Community | ... | சமுதாயம் |
| Company | ... | நிறுமம் |
| Competition | ... | போட்டி |

| | | |
|---|---|---|
| Complaint | ... | குற்ற முறையீடு |
| Concept | ... | கருவுரு |
| Conflict | .. | பூசல் |
| Connotation | ... | குணக்குறி |
| Consanguinity | ... | இரத்தவழி உறவு |
| Constancy | .. | மாறாத் தன்மை |
| Constellations | ... | விண்மீன் குழுக்கள் |
| Consumer Surplus | ... | நுகர்வோர் உபரி |
| Contagion Theory | ... | தொற்றுதல் கோட்பாடு |
| Contour | ... | உருவ நிருணயக் கோடு |
| Contract Curve | ... | ஒப்பந்தக் கோடு |
| Control group | ... | கட்டுப்பாட்டுக் குழு |
| Co-ownership | ... | கூட்டுரிமை |
| Cost-benefit Analysis | ... | உற்பத்திச் செலவுப் பயன்பாட்டு ஆய்வு |
| Cost-effectiveness Analysis | ... | உற்பத்திச் செலவின் தாக்க ஆய்வு |
| Court Order | ... | தீர்ப்பாணை |
| Covenant | ... | வரைமொழி ஒப்பந்தம் |
| Crime | ... | குற்றம் |
| Criminal Code | ... | குற்றவியல் |
| Criminal Liability | ... | குற்றவியல் சார்ந்த பொறுப்பு |
| Criminology | ... | குற்றவியல் தத்துவம் |
| Crossed Cheque | ... | கீறல் காசோலை |
| Current Account | ... | நடைமுறைக் கணக்கு |
| Current Deposit | ... | நடப்பு வைப்பு |
| Declaratory Act | ... | பிரகடனச் சட்டம் |
| Deflation | .. | பணவாட்டம் |
| Demand Deposit | ... | தேவை வைப்பு |
| Demand Liabilities | ... | கேட்புப் பொறுப்புகள் |
| Depression | ... | மந்த நிலை |
| Depth Cues | ... | ஆழ நுனிகள் |
| Discharge Voucher | ... | விடுவிப்புச் சீட்டுகள் |
| Dissenter | ... | முரண்பாட்டாளர் |
| Empiricism | ... | செயலறிவுக் கோட்பாடு |
| Epistemology | ... | அறிவு ஆய்வியல் |
| Equity Shares | ... | நேர்மைப் பங்குகள் |
| Ethnography | ... | இனக்குழுவியல் |
| Face Valve | ... | புற மதிப்பு |
| Factor Analysis | ... | காரணிப் பகுப்பாய்வு |
| Feed back | ... | விளைவு கூறல் |
| Felony | ... | பெருங்குற்றம் |
| Feudal System | ... | நிலமானிய முறை |
| Fiat Currency | ... | ஆணையச் செலாவணி |
| Functional Form | ... | சார்பமைப்பு |
| Functional Psychosis | ... | செயல்சார் உளப்பிணி |
| Goodwill | ... | வாணிக நற்பெயர்த் தொகை |

| | | |
|---|---|---|
| Group Dynamics | ... | குழு இயங்கியல் |
| Group Interaction | ... | குழு இடைவினை |
| Guild Socialism | ... | கூட்டுறவுக் குழுச் சமவுடைமை |
| Imperialism | ... | ஏகாதிபத்தியம் |
| Indemnity | ... | ஈட்டுறுதி |
| Indentured Labourer | ... | ஒப்பந்தக் கூலி |
| Inflation | ... | பணவீக்கம் |
| Inheritance | ... | வாரிசுரிமை |
| Injunctions | ... | உறுத்துக் கட்டளைகள் |
| Input | ... | உள்ளீடு |
| Insolvency/Bankruptey | ... | நொடிப்பு நிலை |
| Inventory Investment | ... | முதலீட்டுத் திட்டங்கள் |
| Jajmani System | ... | குடிஊழிய முறை |
| Laissez Faire | ... | தடையிலா வாணிகம் |
| Lease | ... | குத்தகை |
| Liabilities | ... | பொறுப்புகள் |
| Licence | ... | உரிமம் |
| Liquidity of Money | ... | பண நீர்மைத் தன்மை |
| Manic Depressive Psychosis | ... | கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி |
| Matriarchal Family | ... | தாயாட்சிக் குடும்பம் |
| Matrilineage | ... | தாய் கால்வழி |
| Matrilineal Descent | ... | தாய்வழி மரபு |
| Mercantalism | ... | வணிகவியற் கோட்பாடு |
| Metallic Money | ... | உலோகக் காசுகள் |
| Metaphysics | ... | புலன் கடந்த மெய்ப் பொருளியல் |
| Micro-film | ... | நுண்படச் சுருள் |
| Micro-planning | ... | நுண்ணினத் திட்டம் |
| Micro-races | ... | நுண்ணினங்கள் |
| Migration | ... | குடிப்பெயர்ச்சி |
| Misfeasance | ... | முறைப் பிழை |
| Monetary Authority | ... | பணவியல் ஆணையகம் |
| Monodology | ... | ஒருமை நிலைக் கொள்கை |
| Monophobia | ... | தனிமையில் இருப்பதால் ஏற்படும் கிலி |
| Motives | ... | ஊக்கிகள் |
| National Extension Scheme | ... | தேசிய விரிவாக்கத் திட்டம் |
| Nebular Hypothesis | ... | தாரா கணக் கருதுகோள் |
| Negotiable Instruments Act | ... | மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் |
| Net product | ... | நிகர உற்பத்தி |
| Neurosis | ... | நரம்புப் பிறழ்வு |
| Non-bailable offence | ... | பிணையில் விடாக் குற்றம் |
| Oligarchy | ... | செல்வச் சிறு குடியாட்சி |
| Out-group | ... | புறக்குழு |
| Over-draft | ... | அதிகப் பற்று |
| Paper Currency standard | ... | காகிதச் செலாவணித் திட்டம் |
| Paralogisms | ... | போலிகள் |
| Partnership | ... | கூட்டாண்மை |

Peer group ... ஒப்பார் குழு
Per Capita Income ... தனி ஆள் வருவாய்
Physiocracy ... இயற்கைப் பொருளியற் கோட்பாடு
Plaint ... வழக்குரை
Political Science ... அரசியலறிவியல்
Polygamy ... பலதுணை மணம்
Polygyny ... பல மனைவி மணமுறை
Positivism ... நேர்க் காட்சிக் கொள்கை
Preference Shares ... முன்னுரிமைப் பங்குகள்
Premium Rates ... கட்டண வீதங்கள்
Producer Surplus ... உற்பத்தியாளர் உபரி
Proposition ... கூற்று
Prosecution ... குற்றவழக்குத் தொடுப்பு
Protective Tariff ... காப்புத் தீர்வை
Public Prosecutor ... குற்றவியல் அரசு வழக்குரைஞர்
Random sampling ... இயைபிலா ஆய்வு
Rate of substitution ... பதிலீட்டு வீதங்கள்
Recurring Deposit ... தொடர்நிலை வைப்பு
Remand ... காவல் வைப்பு
Reparation ... இழப்பீட்டுத் தொகை
Reserve Bank of India ... இந்திய மைய இருப்பு வங்கி
Restoration ... முன்னிலை மீட்சி
Riot ... கிளர்ச்சி
Rites of Passage ... தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள்
Romanticism ... புனைவியல் இயக்கம்
Savings Deposit ... சேமிப்பு வைப்பு
Scepticism ... ஐயக் கொள்கை
Security Deposit .. பாதுகாப்புப் பிணைய வைப்பு
Share holder ... பங்குரிமையாளர்
Single Column Duty ... ஒருமுனைத் தீர்வை
Slogan ... கொள்கைக் குரல்
Socialist Democracy ... சமநிலைக் குடியாட்சி
Sophists ... மெய் விளக்கியலார்
Sovereignty ... இறைமை
Speculation ... ஊக வாணிகம்
Stagflation ... தேக்க வீக்க நிலை
Stale cheque ... நாள்பட்ட காசோலை
Stock Market ... இருப்பு அங்காடி
Stoicism ... நடுநிலைக் கோட்பாடு
Subrogation ... அடைமான உரிமை
Subsidy ... உதவித் தொகை
Summons case ... அழைப்பாணை வழக்கு
Supremacy ... மேலாண்மை
Surplus Value ... மிகை மதிப்பு
Tariff Board ... காப்புத் தீர்வை வாரியம்

| | | |
|---|---|---|
| Teleological Judgement | ... | நோக்கவியல் தீர்ப்பு |
| Thesis | ... | முற்கோள் |
| Theocracy | ... | சமயச் சார்பான அரசு |
| Theology | ... | இறையியல் |
| Theory of Value | ... | மதிப்புக் கோட்பாடு |
| Time and Motion Study | ... | கால இயக்க ஆய்வு |
| Time Capsule | ... | காலப் பெட்டகம் |
| Time Deposit | ... | தவணை வைப்பு |
| Time wage | ... | கால அளவுக் கூலி |
| Token Money | ... | அடையாளப் பணம் |
| Trustee | ... | அறக் காப்பாளர் |
| Tyranny | ... | கொடுங்கோலாட்சி |
| Under Writing Paper | ... | மாற்று ஒப்புறுதித் தாள் |
| Unit Bank | ... | தனிவங்கி |
| Unorganised Sector | ... | ஒழுங்கமையாத் துறை |
| Value Judgement | ... | மதிப்பு முடிவுகள் |
| Variables | ... | மாறிகள் |
| Writ of Habeas Corpus | ... | ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணை |

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு
அச்சகம்